# கிறிஸ்துவின் வாழ்க்கை



## *Life of* **CHRIST**

# கிறிஸ்துவின் வாழ்க்கை

[தமிழாக்கம்]

பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்களினால்,
இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கின தொகுதி.

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை ........................................ 1

வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காலவரிசையின் படியான
கிறிஸ்துவின் வாழ்க்கை ............ 2 - 10

இயேசுவின் ஊழியத்திற்கு முன்பு ........................... 11 - 64

இயேசுவின் ஊழியத்தினுடைய ஆரம்பம் .................... 65 - 127

கலிலேயாவில் நடந்த இயேசுவின் மாபெரும் ஊழியம் ............ 128 - 397

யூதேயாவில் நடந்திட்ட, இயேசுவின் பின்நாள் ஊழியம் .......... 398 - 486

யோர்தானுடைய கிழக்குப் பகுதிகளில் உள்ள
இயேசுவினுடைய பிந்தைய ஊழியம் .............. 487 - 572

எருசலேமில் இயேசுவின் இறுதி ஊழியம் ...................... 573 - 738

# விரிவான பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 1

வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள
காலவரிசையின் படியான கிறிஸ்துவின் வாழ்க்கை . . . . . . . . . . . . 2

## இயேசுவின் ஊழியத்திற்கு முன்பு

1. கிறிஸ்துவின் முன்னோடி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R1915 12
2. இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R4939 15
3. மகா பெரிய தீர்க்கத்தரிசி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R4940 18
4. ஒவ்வொரு மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி . . . . . . . R2408 21
5. அந்த வார்த்தை மாம்சமாகி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R2555 28
6. மகிமையான அறிவிப்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R3700 35
7. ஆலயத்தில் அர்ப்பணிப்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R4942 41
8. நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள் . . . . . . . . . . . . . . . . . . . . R3702 44
9. எகிப்துக்குத் தப்பி ஓடுதல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R1681 48
10. இயேசுவானவர் ஞானத்திலும்,...விருத்தியடைந்தார் . . . . . . . . . . . . R2558 50
11. யோவான்ஸ்நானனின் பிரசங்கம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R2562 55

## இயேசுவின் ஊழியத்தினுடைய ஆரம்பம்

12. அர்ப்பணிப்பைப் பின்தொடர்ந்த சோதனைகள் . . . . . . . . . . . . . . . . R2565 66
13. கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல் . . . . . . . . . . . . . . . . R4112 77
14. கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் . . . . . . . . . . . . . . . . . . . R4115 84
15. நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R3484 94
16. இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல் . . . . . . . . . . . . . . . . . . . . . R1695 100
17. மறுஜென்மகாலமும் இராஜ்யமும். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R4124 101
18. கலிலேயாவின் தீர்க்கத்தரிசி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R4556 110
19. மொண்டுகொள்ள பாத்திரமில்லையே, கிணறும்... . . . . . . . . . . . . . . R2574 113
20. தாகத்துக்குத் தா . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . R4130 119

| | | |
|---|---|---|
| 21. விசுவாசத்திற்கான பலன் அளிக்கப்பட்டது .................... | R2424 | 129 |
| 22. போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது ........ | R3300 | 134 |
| 23. மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ................................ | R3307 | 142 |
| 24. வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் .................. | R3726 | 148 |
| 25. அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார் ....... | R4979 | 156 |
| 26. பாவமன்னிப்பு .................................................. | R3728 | 160 |
| 27. இயேசு அவனை நோக்கி, எனக்குப் பின்சென்று வா... ......... | R2590 | 168 |
| 28. இரக்கத்தின் வீடு ............................................. | R3500 | 176 |
| 29. இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகள் ............... | R2433 | 184 |
| 30. ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும் ................ | R3752 | 190 |
| 31. பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் ................................ | R1521 | 199 |
| 32. நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு ....... | R2585 | 215 |
| 33. உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சமும் .......... | R2099 | 229 |
| 34. உங்கள் நீதி ..................................................... | R3243 | 232 |
| 35. உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல ............. | R4558 | 236 |
| 36. ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும் ....................... | R5021 | 240 |
| 37. தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள் ............. | R4566 | 244 |
| 38. இராஜரிகப் பிரமாணம் - பொன்னான சட்டம் ................. | R2589 | 247 |
| 39. நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து, கவனியுங்கள் ............ | R3746 | 254 |
| 40. இயேசுவுக்குள் உயிர்த்தெழுதலின் வல்லமை ................. | R3754 | 263 |
| 41. நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய... ........... | R2620 | 270 |
| 42. அறிவு, பொறுப்புகளை அதிகரிக்கின்றது ....................... | R2623 | 276 |
| 43. இரண்டு விதமான பாவிகள் ..................................... | R2625 | 284 |
| 44. முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் ................. | R4608 | 289 |
| 45. வார்த்தைகளில் நீதிமான்...(அ)...குற்றவாளி என்று... ............. | R1937 | 292 |
| 46. என் தாயார் யார்? என் சகோதரர் யார்? ..................... | R943 | 298 |
| 47. நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள் ......................... | R4634 | 299 |
| 48. கோதுமை மற்றும் களைகள் .................................. | R4635 | 302 |
| 49. இராஜ்யத்தின் காட்சிகள் ...................................... | R4636 | 305 |
| 50. இராஜ்யம் ஒரு பரிசு ........................................... | R5047 | 308 |
| 51. எதிராளியானவன் மீது வல்லமை/அதிகாரம் ................... | R4577 | 311 |
| 52. ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம் ................... | R4588 | 314 |
| 53. அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு ............ | R2635 | 317 |
| 54. பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது ...................... | R4593 | 321 |

| | | |
|---|---|---|
| 55. விலை அதிகமுள்ள பேரம் ................................ | R3325 | 325 |
| 56. அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் ........ | R3779 | 331 |
| 57. "ஆண்டவரே என்னை இரட்சியும்" என்று...பேதுரு... ............ | R4618 | 339 |
| 58. ஜீவ அப்பம் நானே ...................................... | R2651 | 341 |
| 59. மாம்சம் மற்றும் இரத்தம் ................................ | R611 | 348 |
| 60. நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே ................ | R1710 | 352 |
| 61. தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல ...... | R5096 | 355 |
| 62. கிறிஸ்து ஜீவனையும், அழியாமையையும்... .................... | R3337 | 359 |
| 63. அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார் ................. | R5103 | 366 |
| 64. வானத்திலிருந்து ஓர் அடையாளம் .......................... | R5111 | 370 |
| 65. மாபெரும் கேள்வி ........................................ | R5120 | 374 |
| 66. மறுரூபம் .............................................. | R1761 | 378 |
| 67. எல்லாம் கூடும் ......................................... | R5128 | 380 |
| 68. இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் ............ | R2660 | 383 |
| 69. ஏழெழுபது தரம் மன்னித்தல் .............................. | R5134 | 388 |
| 70. அக்கினியைக் கட்டளையிட உமக்குச் சித்தமா? ............... | R4701 | 391 |
| 71. அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள் ........... | R5370 | 394 |


## யூதேயாவில் நடந்திட்ட, இயேசுவின் பின்நாள் ஊழியம்


| | | |
|---|---|---|
| 72. கூடாரப்பண்டிகையின் போது ............................ | R2437 | 399 |
| 73. கூடாரப்பண்டிகை ....................................... | R3508 | 405 |
| 74. மெய்யாகவே விடுதலையாவீர்கள் .......................... | R2438 | 413 |
| 75. நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் ......... | R4148 | 421 |
| 76. எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல் ...................... | R5362 | 429 |
| 77. எனக்குப் பிறன் யார்? .................................. | R3803 | 433 |
| 78. சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல் ..................... | HG 80 | 441 |
| 79. அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி ........ | R5377 | 443 |
| 80. பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ! ......................... | R5389 | 447 |
| 81. நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை ............... | R5390 | 451 |
| 82. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ ................... | R5396 | 455 |
| 83. எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக... ........... | R3354 | 459 |
| 84. காவல் கோபுரத்தின் ஒரு கண்ணோட்டம் ................... | R748 | 466 |
| 85. ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள் ............ | R5405 | 469 |

| | | |
|---|---|---|
| 86. மேய்ப்பன், வாசல், மந்தைகள் | R4157 | 473 |
| 87. நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து | R2441 | 481 |


## யோர்தானுடைய கிழக்குப் பகுதிகளில் உள்ள இயேசுவினுடைய பிந்தைய ஊழியம்


| | | |
|---|---|---|
| 88. இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப்... | R1951 | 488 |
| 89. பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும்...சம்பாஷணைகள் | R3831 | 490 |
| 90. ஏற்க மறுக்கப்பட்ட இராஜ விருந்து | R2701 | 497 |
| 91. சீஷத்துவத்திற்கான விலை | R5425 | 502 |
| 92. காணாமல் போனவர்களுக்கான தெய்வீக அக்கறை | R2706 | 507 |
| 93. ஊதாரி மகனுடைய திரும்பி வருதல் | R1459 | 512 |
| 94. அநீதியுள்ள உக்கிராணக்காரன் | R2715 | 516 |
| 95. ஐசுவரியவான் நரகத்திற்கும்...ஏழை பரலோகத்திற்கும் | R5444 | 523 |
| 96. நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | R5445 | 529 |
| 97. நான் அவனை எழுப்பப்போகிறேன் | R4160 | 535 |
| 98. ஒன்பது பேர் எங்கே? | R5453 | 544 |
| 99. மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது | R5455 | 549 |
| 100. தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | R3841 | 554 |
| 101. ஒட்டகமும், ஊசியின் காதும் | R4658 | 561 |
| 102. திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள் | R5473 | 565 |
| 103. பெரியவன்-ஊழியக்காரன் | R4668 | 570 |


## எருசலேமில் இயேசுவின் இறுதி ஊழியம்


| | | |
|---|---|---|
| 104. மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | R3534 | 574 |
| 105. நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | R1794 | 584 |
| 106. கிறிஸ்துவாகிய காந்தம்—நான் எல்லாரையும்... | R2757 | 587 |
| 107. தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன | R4678 | 594 |
| 108. கலியாண விருந்து | R5510 | 597 |
| 109. சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள் | R4686 | 602 |
| 110. பிரதான கற்பனைகள் | R5521 | 606 |
| 111. புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் | R3867 | 609 |

| | | |
|---|---|---|
| 112. அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக ...................... | R2764 | 617 |
| 113. செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை .................. | R2606 | 625 |
| 114. கடைசி இராப்போஜனம் ................................ | R3363 | 631 |
| 115. சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் .................... | R4711 | 637 |
| 116. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் ........... | R2453 | 641 |
| 117. வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத்... ............ | R2455 | 646 |
| 118. மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி ............... | R3544 | 651 |
| 119. வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி .......................... | R4164 | 662 |
| 120. நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் ............. | R3551 | 671 |
| 121. கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல் ................ | R5358 | 681 |
| 122. கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் ........................ | R2467 | 684 |
| 123. மாபெரும் பிரதான ஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் .......... | R2469 | 692 |
| 124. உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி .................. | R5552 | 697 |
| 125. பிலாத்துவின் முன் நல்ல அறிக்கை ....................... | R2470 | 702 |
| 126. பிலாத்துவுக்கு முன்பாக இயேசு .......................... | R1809 | 708 |
| 127. கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் .................. | R1815 | 709 |
| 128. இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் .......... | R3374 | 712 |
| 129. சபையின் ஏற்படுத்துதல் ................................ | R5587 | 725 |
| 130. அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு... ..................... | R5588 | 730 |
| 131. நமது கர்த்தருடைய பரமேறுதல் .......................... | R1415 | 735 |



*நட்சத்திரத்தால் வழிநடத்தப்பட்ட சாஸ்திரிகள்*

இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்குமுன் சென்றது. (மத் 2:9)

# முன்னுரை

இயேசு தம்முடைய பின்னடியார்களாகும்படிக்குத் முதலில் சீஷர்களை அழைத்தபோது, அவர்களுடைய வாழ்க்கை முறையில் ஆச்சரியமான மாறுதல்களை அவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்தது. அவர்கள் தங்களுடைய வாழ்வைத் தனிப்பட்ட விதத்தில் பலிச் செலுத்தும்படிக்குத் தங்கள் மீனவ வாழ்க்கையையும், வரி வசூலிக்கும் ஆயக்கார வாழ்க்கையையும் விட்டுவிட வேண்டியிருந்தது. ஆண்டவரின் பாதத்தருகே உட்கார்ந்து, அவரிடமிருந்து நேரடியாகக் கற்றுக்கொள்வது என்பது அருமையான அனுபவமாக அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். அவருடைய பழக்கவழக்கங்களையும், அவர் ஜனங்களை கையாண்ட விதத்தையும் கற்றுக்கொண்டது, ஆதி கிறிஸ்தவ திருச்சபையை வழிநடத்துபவர்களாக அப்போஸ்தலர்கள் வளர்ச்சி அடைந்தபோது, அவர்களுக்கு மாதிரியாக விளங்கினது. அவர்கள், இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பதோடு மாத்திரமல்லாமல், அவர் எவ்விதம் அர்ப்பணிப்பின் ஜீவியத்தை ஜீவித்தார் என்பதைக் குறித்துச் சாட்சிக் கொடுப்பதும் அவசியமாய் இருந்தது. அவருடைய குரலின் தொனிக் கூட, அந்த மூத்த சகோதரர்களின் இருதயங்களிலும், மனங்களிலும் தாக்கத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

இயேசுவோடு கூட வாழ்ந்தவர்களுக்கு அவருடைய ஜீவியம் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தினதோ, அதே விதமான தாக்கத்தை இன்றும் அடைய முடியும் என யாரால் எதிர்ப்பார்க்க முடியும்? அவர் வியாதியஸ்தர்களோடும், தேவைகள் உடையவர்களோடும் எவ்வாறு உருக்கத்துடன் தொடர்பு கொண்டார் என்று விவரிக்கும் வார்த்தைகளை மாத்திரமே நம்மால் வாசிக்க முடியும். எனினும், ஒவ்வொரு நிகழ்வுகளின் சூழ்நிலைகளை நம்மால் காண முடியாது. நாம் கொடுக்கும் விவரங்கள் நம்மால் முடிந்த இரண்டாம் தரமான விவரங்களே ஆகும். ஆகவே, நவீன கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தருடைய நோக்கத்திற்கு என்று பலிச் செலுத்துவதும், பயபக்தியுடன் இருப்பதும் மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்றது. ஆனால், சுவிசேஷ யுகத்தின் முடிவில் காணப்படும் நாமோ, நம்மால் முடிந்தமட்டும் இங்கு நம்முடைய இரட்சகரை அறிந்துக்கொள்ள, புரிந்துக்கொள்ள பிரயாசப்படுகின்றோம். கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு விசேஷ ஏற்பாடுகள் பண்ணியுள்ளதினிமித்தம், நாம் மிகுந்த நன்றியுடன் காணப்படுகின்றோம். மீண்டும் வந்திருக்கும் நம்முடைய கர்த்தர், "உண்மையும் விவேகமுமுள்ள அந்த ஊழியக்காரனின்" பேனா/மைக்கூடு வழியாக திரளான சத்தியங்களை வழங்கியுள்ளார். இயேசுவைப் பற்றின முழுமையான அறிவு நமக்கு இல்லையென்றாலும், இதற்கு ஈடாகவும், இதற்கு மேலாகவும், அவருடைய மீட்பின் வேலையைக் குறித்த, ஆழமான அறிவு நமக்குக் கிடைத்துள்ளது. இந்த அறிவு மிகவும் உண்மையாய் ஊழியம் செய்திட்ட ஆதி கிறிஸ்தவர்களின் பலியின் ஜீவியத்தைப் போன்ற ஜீவியத்தை, நாமும் ஜீவித்திட நம்மையும் தூண்டிட வேண்டும்.

தெய்வீகத் திட்டத்தைக் குறித்து முழுமையாகப் புரிந்துக்கொள்ள நாம் முற்படுகையில், இயேசுவின் வாழ்க்கை குறித்துக் கற்றுக்கொள்ளாமல் தேவனுடைய திட்டத்தின் எந்த அறிவும் முழுமையாவது இல்லை என்ற உணர்வுக்கு நாம் வருவோம். இதன் காரணமாக நாம் ஒவ்வொருவரும் அவருடைய வாழ்க்கையைக் குறித்த ஒவ்வொரு அம்சத்தைக் குறித்தும் முழுமையாக அறிந்துகொள்வதே ஞானமான காரியமாக இருக்கும். "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துப் போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என அப்போஸ்தலர் சபைக்கு எச்சரிக்கின்றார் (எபிரெயர் 12:3). நம்முடைய கர்த்தரை நினைத்துக்கொள்வதைக் காட்டிலும், நம்முடைய ஜீவியத்திற்கு வேறெந்த வழிக் காட்டியும் இல்லை, மேன்மையான கல்வி ஆராய்ச்சியும் இல்லை. நாம் எப்படி ஜீவிக்க வேண்டும் என்றும், எப்படி ஊழியம் செய்ய வேண்டும் என்றும், எப்படித் தேவனுக்கேற்ற குணநலன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் நமக்குக் கற்றுக்கொடுத்துள்ளார். நாம் "அவரை நினைத்துக்கொள்கையில்" இந்தக் கட்டுரையானது புதுச் சிருஷ்டிக்கும், முழு விசுவாச வீட்டாருக்கும் உதவியாக இருக்கும் என்பதே நம்முடைய நம்பிக்கை ஆகும்.

# வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள
# காலவரிசையின் படியான கிறிஸ்துவின் வாழ்க்கை

## இயேசுவின் ஊழியத்திற்கு முன்பு

| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கி.மு. 3 | எருசலேம், தேவாலயம் | யோவான்ஸ்நானனுடைய பிறப்பு சகரியாவுக்கு முன்னறிவிக்கப்பட்டது | | | 1:5-25 | |
| 2 | கி.மு. ~2 | நாசரேத்; யூதேயா | எலிசபெத்தைப் பார்க்க வந்த மரியாளுக்கு, இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது | | | 1:26-56 | |
| 3 | கி.மு. 2 | யூதேயா மலை தேசம் | யோவான்ஸ்நானனுடைய பிறப்பு; பின்பு, அவருடைய வனாந்தர வாழ்க்கை | | | 1:57-80 | |
| 4 | கி.மு. 2 அக்டோபர் | பெத்லகேம் | ஆபிரகாம் மற்றும் தாவீதின் சந்ததியாக வந்த இயேசுவின் பிறப்பு (வார்த்தை, உண்டாக்கப்-பட்டவைகளெல்லாம் இவர் மூலமே உண்டாக்கப்பட்டது) | 1:1-25 | | 2:1-7 | 1:1-5, 9-14 |
| 5 | | பெத்லகே-முக்கு அருகில் | தூதன் நற்செய்தியை அறிவித்தல்; மேய்ப்பர்கள் குழந்தையைப் பார்த்தல் | | | 2:8-20 | |
| 6 | | பெத்லகேம்; எருசலேம் | இயேசு விருத்தசேதனம் பண்ணப்படுதல் (எட்டாம் நாள்), ஆலயத்துக்குக் கொண்டுவருதல் (நாற்பதாவது நாள்) | | | 2:21-39 | |
| 7 | கி.மு. 1 (அ) கி.பி. 1 | எருசலேம்; பெத்லகேம்; நாசரேத் | வானசாஸ்திரிகள்; எகிப்துக்குப் போதல்; குழந்தைகள் கொல்லப்படுதல்; இயேசு திரும்புதல் | 2:1-23 | | 2:39-40 | |
| 8 | கி.பி. 12 | எருசலேம் | பஸ்காவில் பன்னிரண்டு வயதான இயேசு; வீட்டுக்குத் திரும்புதல் | | | 2:41-52 | |
| 9 | 29, வசந்த காலம் | வனாந்தரம்; யோர்தான் | யோவான்ஸ்நானனின் ஊழியம் | 3:1-12 | 1:1-8 | 3:1-18 | 1:6-8, 15-28 |

## இயேசுவின் ஊழியத்தினுடைய ஆரம்பம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 29, இலையுதிர் காலம் | யோர்தான் நதி | இயேசுவின் ஞானஸ்நானமும் அபிஷேகமும்; தாவீதின் சந்ததியில் மனுஷனாகப் பிறந்தும் தேவனுடைய குமாரனாக அறிவிக்கப்பட்டவர் | 3:13-17 | 1:9-11 | 3:21-38 | 1:32-34 |
| 11 | | யூதேயா வனாந்தரம் | இயேசுவின் உபவாசமும், சோதனையும் | 4:1-11 | 1:12-13 | 4:1-13 | |

| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | | யோர்தானுக்கு அப்புறமான பெத்தானியா | இயேசுவைப் பற்றின யோவான்ஸ்நானனின் சாட்சி | | | | 1:15, 29-34 |
| 13 | | மேல் யோர்தான் பள்ளத்தாக்கு | இயேசுவின் முதல் சீஷர்கள் | | | | 1:35-51 |
| 14 | | கலிலேயாவின் கானா; கப்பர்நகூம் | இயேசுவின் முதலாம் அற்புதம்; அவர் கப்பர்நகூமுக்குச் செல்லுதல் | | | | 2:1-12 |
| 15 | 30, பஸ்கா | எருசலேம் | பஸ்கா பண்டிகை; தேவாலயத்திலிருந்து வியாபாரிகளை விரட்டுதல் | | | | 2:13-25 |
| 16 | | எருசலேம் | நிக்கொதேமுவுடன் இயேசுவின் உரையாடல் | | | | 3:1-21 |
| 17 | | யூதேயா; அயினோன் | இயேசுவின் சீஷர்கள் ஞானஸ்நானம் கொடுத்தல்; யோவான் சிறுகுதல் | | | | 3:22-36 |
| 18 | | திபேரியா | யோவான் சிறையில் அடைக்கப்படுதல்; இயேசு கலிலேயாவுக்குச் செல்லுதல் | 4:12; 14:3-5 | 1:14; 6:17-20 | 3:19-20; 4:14 | 4:1-3 |
| 19 | | சமாரியாவின் சீகார் | கலிலேயாவுக்குப் போகையில்; இயேசு சமாரியர்களுக்குப் போதித்தல் | | | | 4:4-43 |

## கலிலேயாவில் நடந்த இயேசுவின் மாபெரும் ஊழியம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | 30 | கலிலேயா | "பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" முதல் முறையாக அறிவித்தல் | 4:17 | 1:14-15 | 4:14-15 | 4:44, 45 |
| 21 | | நாசரேத்; கானா; கப்பர்நகூம் | சிறுவனைக் குணமாக்குதல்; நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசித்தல்; புறக்கணிக்கப்படுதல்; கப்பர்நகூமுக்குச் செல்லுதல் | 4:13-16 | | 4:16-31 | 4:46-54 |
| 22 | | கப்பர்நகூமுக்கு அருகேயான, கலிலேயக் கடல் | சீமோன் மற்றும் அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் அழைக்கப்படுதல் | 4:18-22 | 1:16-20 | 5:1-11 | |
| 23 | | கப்பர்நகூம் | அசுத்த ஆவி பிடித்தவனைக் குணப்படுத்தல், மேலும் பேதுருவின் மாமி மற்றும் அநேகர் | 8:14-17 | 1:21-34 | 4:31-41 | |
| 24 | | கலிலேயா | இப்பொழுது அழைக்கப்பட்ட நால்வருடன் கலிலேயாவுக்கான முதல் பயணம் | 4:23-25 | 1:35-39 | 4:42, 43 | |
| 25 | | கலிலேயா | குஷ்டரோகி குணப்படுத்தல்; இயேசுவிடம் திரளானோர் கூடுதல் | 8:1-4 | 1:40-45 | 5:12-16 | |
| 26 | | கப்பர்நகூம் | திமிர்வாதக்காரன் குணப்படுத்தல் | 9:1-8 | 2:1-12 | 5:17-26 | |

| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 27 | | கப்பர்நகூம் | மத்தேயு அழைக்கப்படுதல்; ஆயக்காரர்களுடனான விருந்து | 9:9-17 | 2:13-22 | 5:27-39 | |
| 28 | | யூதேயா | யூதேய தேவாலயத்தில் போதித்தல் | | | 4:44 | |
| 29 | 31, பஸ்கா | எருசலேம் | விருந்துக்குச் செல்லுதல்; மனுஷனைக் குணப்படுத்தல்; பரிசேயர்களைக் கடிந்துக்கொள்ளுதல் | | | | 5:1-47 |
| 30 | | எருசலேமில் இருந்து திரும்புதல் (?) | ஓய்வு நாளில் சீஷர்கள் கதிர்களைக் கொய்தல் | 12:1-8 | 2:23-28 | 6:1-5 | |
| 31 | | கலிலேயா; கலிலேயக் கடல் | ஓய்வு நாளில் கை குணப்-படுத்தல்; கடற்கரைக்குத் திரும்புதல்; குணப்படுத்தல் | 12:9-21 | 3:1-12 | 6:6-11 | |
| 32 | | கப்பர்நகூமுக்கு அருகேயான மலை | பன்னிருவரும் அப்போஸ்தலர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் | | 3:13-19 | 6:12-16 | |
| 33 | | கப்பர்நகூமுக்கு அருகே | மலைப் பிரசங்கம் | 5:1 -7:29 | | 6:17-49 | |
| 34 | | கப்பர்நகூம் | படைத்தலைவனுடைய வேலைக்காரனைக் குணப்படுத்தல் | 8:5-13 | | 7:1-10 | |
| 35 | | நாயீன் | விதவையின் மகனை எழுப்புதல் | | | 7:11-17 | |
| 36 | | கலிலேயா | சிறையிலிருக்கும் யோவான் சீஷர்களை இயேசுவினிடத்தில் அனுப்புதல் | 11:2-19 | | 7:18-35 | |
| 37 | | கலிலேயா | பட்டணங்கள் கடிந்துக் கொள்ளப்படுதல்; குழந்தைகளுக்கு வெளிப்படுதல்; நுகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுதல் | 11:20-30 | | | |
| 38 | | கலிலேயா | பாவியான ஸ்திரீயால் பாதம் அபிஷேகம் பண்ணப்படுதல்; கடனாளிகளைப் பற்றின உவமை | | | 7:36-50 | |
| 39 | | கலிலேயா | பன்னிருவருடன், கலிலேயாவுக்கான இரண்டாம் போதனை பயணம் | | | 8:1-3 | |
| 40 | | கலிலேயா | அசுத்த ஆவி பிடித்தவனைக் குணமாக்குதல்; பெயெல்செபூலோடு தொடர்புள்ளதாகக் குற்றப்படுத்தல் | 12:22-37 | 3:19-30 | | |
| 41 | | கலிலேயா | வேதபாரகர்களும், பரிசேயர்களும் அடையாளம் தேடுதல் | 12:38-45 | | | |
| 42 | | கலிலேயா | இயேசுவின் சீஷர்கள் அவருடைய நெருங்கின உறவினர்கள் | 12:46-50 | 3:31-35 | 8:19-21 | |
| 43 | | கலிலேயக் கடல் | விதைப்பவன், களைகள், மற்றவைகள் பற்றின உவமை; விளக்கம் | 13:1-53 | 4:1-34 | 8:4-18 | |

| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 44 | 31 | கலிலேயக் கடல் | ஏரியைக் கடக்கையில் புயலை அமர்த்துதல் | 8:18, 23-27 | 4:35-41 | 8:22-25 | |
| 45 | | கதரேனர், கலிலேயக் கடலுக்குத் தென்கிழக்கு | அசுத்த ஆவி பிடித்த இருவர் குணப்படுத்தல்; பன்றிக்கூட்டத்திற்குள் அசுத்த ஆவி புகுதல் | 8:28-34 | 5:1-20 | 8:26-39 | |
| 46 | | அநேகமாக கப்பர்நகூம் | யவீருவின் மகள் எழுப்பப்படுதல்; ஸ்திரீ குணப்படுதல் | 9:18-26 | 5:21-43 | 8:40-56 | |
| 47 | | கப்பர்நகூம் (?) | இரு குருடர்கள் மற்றும் ஓர் அசுத்த ஆவி பிடித்த ஊமை குணப்படுத்தல் | 9:27-34 | | | |
| 48 | | நாசரேத் | வளர்ந்த பட்டணத்திற்கு மீண்டும் வருதல் மற்றும் மறுபடியும் புறக்கணிக்கப்படுதல் | 13:54-58 | 6:1-6 | | |
| 49 | | கலிலேயா | கலிலேயாவுக்கு மூன்றாம் பயணம், அப்போஸ்தலர்கள் அனுப்பப்பட்டதன் மூலம் விரிவடைந்தது | 9:35 - 11:1 | 6:6-13 | 9:1-6 | |
| 50 | | திபேரியா | யோவான்ஸ்நானன் தலை துண்டிக்கப்படுதல்; ஏரோதின் குற்ற உணர்-வினால் உண்டான பயம் | 14:1-12 | 6:14-29 | 9:7-9 | |
| 51 | 32, பஸ்கா-வுக்கு சமீபம் | கப்பர்நகூம் (?); கலிலேயக் கடலுக்கு வ.கி. | உபதேச பயணத்திலிருந்து அப்போஸ்தலர்கள் திரும்புதல்; 5000 பேர்ப் போஷிக்கப்படுதல் | 14:13-21 | 6:30-44 | 9:10-17 | 6:1-13 |
| 52 | | கலிலேயக் கடலுக்கு வ.கி; கெனேசரேத்து | இயேசுவை இராஜாவாக்க முயற்சித்தல்; அவர் கடல் மீது நடத்தல்; குணப்படுத்தல் | 14:22-36 | 6:45-56 | | 6:14-21 |
| 53 | | கப்பர்நகூம் | "ஜீவ அப்பத்தை" அடையாளப்படுத்துதல்; சீஷர்களில் அநேகர் பின்வாங்குதல் | | | | 6:22-71 |
| 54 | 32, பஸ்கா-வுக்குப் பின் | அநேகமாக கப்பர்நகூம் | தேவனுடைய வார்த்தையை வெறுமையாக்கும் முன்னோரின் பாரம்பரியங்கள் | 15:1-20 | 7:1-23 | | 7:1 |
| 55 | | பேனிக்கியா; தெக்கப்-போலி | தீரு, சீதோனுக்கு அருகாமையில்; பின்பு தெக்கப்போலிக்கு; 4000 பேர்ப் போஷிக்கப்படுதல் | 15:21-38 | 7:24 - 8:9 | | |
| 56 | | மக்தலா | சதுசேயர்களும் பரிசேயர்களும் மீண்டும் அடையாளம் தேடுதல் | 15:39 - 16:4 | 8:10-12 | | |
| 57 | | கலிலேயக் கடலுக்கு வ.கி; பெத்சாயிதா | பரிசேயர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரித்தல்; குருடன் குணப்படுத்தல் | 16:5-12 | 8:13-26 | | |
| 58 | | பிலிப்புச் செசரியா | இயேசுவே கிறிஸ்து, மரணம், உயிர்த்தெழுதலை முன்னறிவித்தல் | 16:13-28 | 8:27 - 9:1 | 9:18-27 | |

| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 59 | | அநேகமாக எர்மோன் மலை | பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் முன்பு மறுரூபப்படுதல் | 17:1-13 | 9:2-13 | 9:28-36 | |
| 60 | | பிலிப்புச் செசரியா | சீஷர்கள் குணப்படுத்த முடியாத அசுத்த ஆவி பிடித்தவனைக் குணப்படுத்தல் | 17:14-20 | 9:14-29 | 9:37-43 | |
| 61 | | கலிலேயா | தன்னுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து மீண்டும் முன்னறிவித்தல் | 17:22, 23 | 9:30-32 | 9:43-45 | |
| 62 | | கப்பர்நகூம் | வரிப்பணம் அற்புதத்தின் மூலம் கொடுக்கப்படுதல் | 17:24-27 | | | |
| 63 | | கப்பர்நகூம் | இராஜ்யத்தில் பெரியவன்; குறைகளைத் தீர்த்தல்; இரக்கம் | 18:1-35 | 9:33-50 | 9:46-50 | |
| 64 | | கலிலேயா; சமாரியா | கூடாரப்பண்டிகைக்காக கலிலேயாவை விட்டுப் போதல்; சுவிசேஷ ஊழயத்-திற்காக அனைத்தையும் புறம்பாக்குதல் | 8:19-22 | | 9:51-62 | 7:2-10 |

## யூதேயாவில் நடந்திட்ட, இயேசுவின் பின்நாள் ஊழியம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 65 | 32 | எருசலேம் | கூடாரப்பண்டிகையில் ஜனங்களிடையே இயேசுவின் போதனை | | | | 7:11-52 |
| 66 | | எருசலேம் | பண்டிகைக்குப் பின்பு போதித்தல்; குருடன் குணப்படுதல் | | | | 8:12 - 9:41 |
| 67 | | அநேகமாக யூதேயா | 70 பேர் போதிக்க அனுப்பப்படுதல்; அவர்கள் திரும்புதல், அறிக்கை | | | 10:1-24 | |
| 68 | | யூதேயா; பெத்தானியா | நல்ல சமாரியன் உவமை; மார்த்தாள், மரியாளின் வீட்டில் | | | 10:25-42 | |
| 69 | | அநேகமாக யூதேயா | மீண்டும் மாதிரி ஜெபம் போதித்தல்; கேட்பதில் உறுதியாய்த் தரித்திருத்தல் | | | 11:1-13 | |
| 70 | | அநேகமாக யூதேயா | பொய்யான குற்றத்தை மறுத்தல்; தண்டிக்கப்படும் சந்ததியைக் காண்பித்தல் | | | 11:14-36 | |
| 71 | | அநேகமாக யூதேயா | பரிசேயர்களின் மேஜையில், மாயக்காரர்களாக இயேசு கண்டித்தல் | | | 11:37-54 | |
| 72 | | அநேகமாக யூதேயா | தேவனுடைய கண்காணிப்புக் குறித்த செய்தி; உண்மையுள்ள உக்கிராணக்காரன் | | | 12:1-59 | |
| 73 | | அநேகமாக யூதேயா | ஓய்வு நாளில் கூனியான ஸ்திரீயை குணப்படுத்தல்; மூன்று உவமைகள் | | | 13:1-21 | |
| 74 | | எருசலேம் | பிரதிஷ்டை பண்டிகையில் இயேசு; நல்ல மேய்ப்பன் | | | | 10:1-39 |

## யோர்தானுடைய கிழக்குப் பகுதிகளில் உள்ள இயேசுவினுடைய பிந்தைய ஊழியம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 75 | 32 | யோர்தானுக்கு அப்பால் | அநேகர் இயேசுவை விசுவாசித்தல் | | | | 10:40-42 |
| 76 | | பெரியா (யோர்தானுக்கு அக்கரையிலுள்ள ஒரு பட்டணம்) | எருசலேம் நோக்கி போகையில், கிராமங்-களிலும், பட்டணங்-களிலும் போதித்தல் | | | 13:22 | |
| 77 | | பேரியா | இராஜ்யத்தில் பிரவே-சித்தல்; ஏரோதின் அச்சு-றுத்தல்; பாழான வீடு | | | 13:23-35 | |
| 78 | | அநேகமாக பெரியா | ஒரு பரிசேயனின் வீட்டிலிருந்து பாடங்கள் | | | 14:1-24 | |
| 79 | | அநேகமாக பெரியா | சீஷத்துவத்தின் விலையை எண்ணுதல் | | | 14:25-35 | |
| 80 | | அநேகமாக பெரியா | காணாமற்போன ஆடு, காணாமற்போன காசு, கெட்ட குமாரன் பற்றின உவமைகள் | | | 15:1-32 | |
| 81 | | அநேகமாக பெரியா | அநீதியான உக்கிராணக்காரன், ஐசுவரியவானும் லாசருவும் பற்றின உவமைகள் | | | 16:1-31 | |
| 82 | | அநேகமாக பெரியா | மன்னிப்பும் விசுவாசமும்; அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | | | 17:1-10 | |
| 83 | | பெத்தானியா | மரித்தோரிலிருந்து இயேசுவினால் லாசரு எழுப்பப்படுதல் | | | | 11:1-46 |
| 84 | | எருசலேம்; எப்பிராயீம் | இயேசுவுக்கு விரோதமாகக் காய்பா ஆலோசித்தல்; இயேசு பின்வாங்குதல் | | | | 11:47-54 |
| 85 | | சமாரியா; கலிலேயா | கலிலேயாவுக்கு, சமாரியாவின் வழியாகப் போகையில் போதித்துக் குணப்படுத்தல் | | | 17:11-37 | |
| 86 | | சமாரியா (அ) கலிலேயா | தொந்தரவு செய்யும் விதவை, பரிசேயர் மற்றும் ஆயக்காரர்கள் உவமை | | | 18:1-14 | |
| 87 | | பெரியா | பெரியா வழியாக கீழ்நோக்கி வருதல்; விவாகரத்துப் பற்றிப் போதித்தல் | 19:1-12 | 10:1-12 | | |
| 88 | | பெரியா | குழந்தைகளை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதித்தல் | 19:13-15 | 10:13-16 | 18:15-17 | |
| 89 | | பெரியா | ஐசவரியமான வாலிபன்; திராட்சத்தோட்டத்தின் வேலைக்காரன் | 19:16 - 20:16 | 10:17-31 | 18:18-30 | |


| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 90 | | அநேகமாக பெரியா | தன்னுடைய மரணம், உயிர்த்தெழுதலைக் குறித்து மூன்றாவது முறையாக இயேசு முன்னறிவித்தல் | 20:17-19 | 10:32-34 | 18:31-34 | |
| 91 | | அநேகமாக பெரியா | இராஜ்யத்தில் யாக்கோபு மற்றும் யோவானின் உட்காருதல் பற்றின விண்ணப்பம் | 20:20-28 | 10:35-45 | | |
| 92 | | எரிகோ | எரிகோவின் வழியாகக் கடக்கையில், இரண்டு குருடர்களை அவர் குணப்படுத்தல்; சகேயுவைச் சந்தித்தல்; ராத்தல் பற்றின உவமை | 20:29-34 | 10:46-52 | 18:35 - 19:28 | |

## எருசலேமில் இயேசுவின் இறுதி ஊழியம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 93 | கி.பி. 33, நீசான் 8 | பெத்தானியா | பஸ்காவுக்கு ஆறு நாள் முன்பு பெத்தானியாவுக்கு வருதல் | | | | 11:55 - 12:1 |
| 94 | நீசான் 9 | பெத்தானியா | குஷ்டரோகியான சீமோனின் வீட்டில் விருந்து; இயேசுவை மரியாள் அபிஷேகம் பண்ணுதல்; இயேசுவையும் லாசருவையும் பார்க்க யூதர்கள் வருதல் | 26:6-13 | 14:3-9 | | 12:2-11 |
| 95 | | பெத்தானியா - எருசலேம் | எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றி பிரவேசம் | 21:1-11, 14-17 | 11:1-11 | 19:29-44 | 12:12-19 |
| 96 | நீசான் 10 | பெத்தானியா - எருசலேம் | கனிகொடாத அத்திமரம் சபிக்கப்படுதல்; ஆலயத்தை இரண்டாவது முறையாகச் சுத்தப்படுத்துதல் | 21:18, 19, 12, 13 | 11:12-17 | 19:45, 46 | |
| 97 | | எருசலேம் | பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்கள் இயேசுவைக் கொல்லத் திட்டமிடுதல் | | 11:18, 19 | 19:47, 48 | |
| 98 | | எருசலேம் | கிரேக்கர்களுடனான கலந்துரையாடல்; யூதர்களின் அவிசுவாசம் | | | | 12:20-50 |
| 99 | நீசான் 11 | பெத்தானியா - எருசலேம் | கனிகொடாத அத்திமரம் பட்டுப்போனதாகக் காணப்படுதல் | 21:19-22 | 11:20-25 | | |
| 100 | | எருசலேம், தேவாலயம் | இயேசுவின் அதிகாரம் பற்றின கேள்வி; இரண்டு குமாரர் பற்றின உவமை | 21:23-32 | 11:27-33 | 20:1-8 | |
| 101 | | எருசலேம், தேவாலயம் | பொல்லாத தோட்டக்காரர் மற்றும் கலியாண விருந்து பற்றின உவமைகள் | 21:33 - 22:14 | 12:1-12 | 20:9-19 | |

| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 102 | | எருசலேம், தேவாலயம் | வரி, உயிர்த்தெழுதல், நியாயப்பிரமாணம் குறித்த கேள்விகள் | 22:15-40 | 12:13-34 | 20:20-40 | |
| 103 | | எருசலேம், தேவாலயம் | மேசியாவின் வருகை மீதான கேள்விகளுக்கு இயேசுவின் பதில் | 22:41-46 | 12:35-37 | 20:41-44 | |
| 104 | | எருசலேம், தேவாலயம் | பரிசேயர் மற்றும் வேதபாரகர்களின் குற்றப்படுத்தும் கண்டனம் | 23:1-39 | 12:38-40 | 20:45-47 | |
| 105 | | எருசலேம், தேவாலயம் | விதவையின் காசு | | 12:41-44 | 21:1-4 | |
| 106 | | ஒலிவ மலை | எருசலேமின் வீழ்ச்சியைக் கணித்தல்; இயேசுவின் பிரசன்னம்; அமைப்புகளின் முடிவு | 24:1-51 | 13:1-37 | 21:5-38 | |
| 107 | | ஒலிவ மலை | பத்துக் கன்னிகைகள், தாலந்துகள், வெள்ளாடு செம்மறி ஆடுகள் பற்றின உவமைகள் | 25:1-46 | | | |
| 108 | நீசான் 12 | எருசலேம் | இயேசுவின் மரணத்தை மதத்தலைவர்கள் திட்டமிடுதல் | 26:1-5 | 14:1, 2 | 22:1, 2 | |
| 109 | | எருசலேம் | இயேசுவைக் காட்டிக்கொடுக்க பிரதான ஆசாரியர்களோடு யூதாஸ் பேரம்பேசுதல் | 26:14-16 | 14:10, 11 | 22:3-6 | |
| 110 | நீசான் 13 | எருசலேமுக்கு அருகிலும், எருசலேமிலும் | பஸ்காவுக்கான ஆயத்த ஏற்பாடு | 26:17-19 | 14:12-16 | 22:7-13 | |
| 111 | நீசான் 14 | எருசலேம் | பன்னிருவரோடு பஸ்காவைப் புசித்தல் | 26:20, 21 | 14:17, 18 | 22:14-18 | |
| 112 | | எருசலேம் | அப்போஸ்தலருடைய பாதங்களை இயேசு கழுவுதல் | | | | 13:1-20 |
| 113 | | எருசலேம் | யூதாஸ் காட்டிக்கொடுப்பவனாக அடையாளம் காணப்பட்டு வெளியே அனுப்பப்படுதல் | 26:21-25 | 14:18-21 | 22:21-23 | 13:21-30 |
| 114 | | எருசலேம் | பதினொரு பேருடன் நினைவு கூருதலின் இராப்போஜனம் ஏற்படுத்துதல் | 26:26-29 | 14:22-25 | 22:19, 20, 24-30 | [1 கொரி. 11:23-25] |
| 115 | | எருசலேம் | பேதுருவால் மறுதலிக்கப்படுவதும், அப்போஸ்தலர்களின் சிதறடிப்பும், முன்னறிவிக்கப்படுதல் | 26:31-35 | 14:27-31 | 22:31-38 | 13:31-38 |
| 116 | | எருசலேம் | தேற்றரவாளன்; பரஸ்பர அன்பு; உபத்திரவம்; இயேசுவின் ஜெபம் | | | | 14:1 - 17:26 |
| 117 | | கெத்செமனே | தோட்டத்தில் வியாகுலம்; இயேசு காட்டிக்-கொடுக்கப்பட்டுக் கைதுச் செய்தல் | 26:30, 36-56 | 14:26, 32-52 | 22:39-53 | 18:1-12 |

| வ. எண் | நாள் | இடம் | சம்பவம் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|---|---|---|
| 118 | | எருசலேம் | அன்னா, காய்பா, ஆலோசனை சங்கத்தார் முன்பு சோதிக்கப்படுதல்; பேதுரு மறுதலித்தல் | 26:57 - 27:1 | 14:53 - 15:1 | 22:54-71 | 18:13-27 |
| 119 | | எருசலேம் | துரோகியான யூதாஸ் தன்னைத்தானே நான்றுகொள்ளுதல் | 27:3-10 | | [அப். 1:18-19] | |
| 120 | | எருசலேம் | பிலாத்துவுக்கு முன்பு, பின்பு ஏரோது, பின்பு மறுபடியும் பிலாத்துவினிடம் | 27:2, 11-14 | 15:1-5 | 23:1-12 | 18:28-38 |
| 121 | | எருசலேம் | பிலாத்துவினால் விடுவிக்க முயற்சித்த பின்பு, மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தல் | 27:15-30 | 15:6-19 | 23:13-25 | 18:39 - 19:16 |
| 122 | ~ பிற்பகல் 3 வெள்ளி | கொல்கொதா, எருசலேம் | சிலுவையின் மீதான இயேசுவின் மரணம் மற்றும் தொடர்பான சம்பவங்கள் | 27:31-56 | 15:20-41 | 23:26-49 | 19:16-30 |
| 123 | | எருசலேம் | சிலுவையிலிருந்து இயேசுவின் சரீரம் இறக்கப்பட்டு அடக்கம் பண்ணப்படுதல் | 27:57-61 | 15:42-47 | 23:50-56 | 19:31-42 |
| 124 | நீசான் 15 | எருசலேம் | பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்கள் கல்லறைக்குக் காவலாளி-களை அமர்த்துதல் | 27:62-66 | | | |
| 125 | நீசான் 16 | எருசலேம் மற்றும் அதன் அருகில் | இயேசுவின் உயிர்த்தெழுதலும், அந்த நாளுக்குரிய சம்பவங்களும் | 28:1-15 | 16:1-8 | 24:1-49 | 20:1-25 |
| 126 | | எருசலேம் கலிலேயா | பின்பு சம்பவித்த இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடுகள் | 28:16-20 | [1 கொரி 15:5-7] | [அப்.1:3-8] | 20:26 - 21:25 |
| 127 | சீப் (இய்யார்) 25 | பெத்தானியா-வுக்கு அருகேயான ஒலிவ மலை | அவருடைய உயிர்த்தெழு-தலுக்குப் பின்னான நாற்பதாவது நாளில்; இயேசு பரத்துக்கு ஏறுதல் | [அப். 1:9-12] | | 24:50-53 | |



*போதகர்களுடன் (நியாயசாஸ்திரிகளுடன்) இயேசு*

அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்றார். (லூக் 2:49)

# பாகம்-1

# “இயேசுவின் ஊழியத்திற்கு முன்பு...”

**R1915**

# "கிறிஸ்துவின் முன்னோடி"

## லூக்கா 1:5-17

"நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கத்தரிசி எனப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணு... அவருக்கு முன்னாக நடந்து போவாய்."-லூக்கா 1:76,77

இந்தப் பரிஜயமான சம்பவத்தைக் கவனிக்கையில், கர்த்தர் தம்முடைய மாபெரும் வேலையிலுள்ள பல்வேறு பாகங்களுக்கென்று, தாம் தெரிந்துக்கொண்ட பாத்திரங்களை ஆயத்தமாக்குவதில் காட்டும் மாபெரும் அக்கறையைக் குறித்து நாம் நினைப்பூட்டப்படுகின்றோம். ஆபிரகாமின் வாழ்க்கையானது விசுவாசத்திற்கும், பொறுமைக்குமான நீண்ட கால பயிற்சியாக இருந்தது; காரணம் அவர் விசுவாசத்தின் தகப்பனாக வேண்டும் என்பதேயாகும். மேலும், அவர் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருப்பவர்களுக்கும், புதிய உடன்படிக்கையின் கீழ் வருபவர்களுமான அவருடைய சகல ஜனங்களுக்கும் பொருத்தமான மாதிரியாய் இருப்பதற்கும், தேவனுக்கேயுரிய தகப்பன் ஸ்தானத்திற்கு நிழலாய் இருப்பதற்கும், ஆபிரகாமின் வாழ்க்கையானது விசுவாசத்திற்கும், பொறுமைக்குமான நீண்டகால பயிற்சியாக இருந்தது (ரோமர் 4:11-17).

மோசே, இஸ்ரயேலை வழிநடத்தும் தலைவனாக இருப்பதற்கும், இஸ்ரயேலுக்கு நியாயப்பிரமாணத்தை வழங்குவதற்கும், இஸ்ரயேலை நியாயம் விசாரிப்பதற்கும் விசேஷமாக ஆயத்தம் பண்ணப்பட்டார். மோசே இழிவான அடிமைத்தனத்தின் கீழும், மரணத்தீர்ப்பின் கீழும் பிறந்திருந்தாலும், இவர் தேவ வழிநடத்துதல் மூலம் பாதுகாக்கப்பட்டு, பதுக்கி மறைத்து வைக்கப்பட்டு இராஜ குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டார். அங்கு இவருடைய எதிர்கால வேலைகளுக்குப் போதுமான கல்வியறிவு வழங்கப்பட்டது. பின்னர், இவர் 40 ஆண்டுகள் மந்தைகளை மேய்க்கும்படி அனுமதிக்கப்பட்டார். இக்காலக்கட்டத்தில் தெய்வீகக் கிருபையினால் இவருடைய குணநலன்கள் பக்குவப்படுத்தப்பட்டது. மேலும் இவருடைய உணர்ச்சிவசப்படும் மனப்பான்மையும் பக்குவம் அடைந்தது. இவ்வாறாக தேவன் இஸ்ரயேலுக்குப் பயிற்சியளிக்கப்பட்டவரும், அனுபவசாலியுமான ஒருவரையே வழி நடத்தும் தலைவனாகக் கொடுத்தார். இதைப் போன்ற, ஆயத்தமாக்குதல்கள் மற்றவர்களின் விஷயத்திலும் கூட நடைப்பெற்றுள்ளது என்பதை, நம்மால் வேதாகம பதிவுகளிலும், வரலாறுகளிலும் பார்க்கக்கூடும். சாமுயேலின் விஷயத்தைப் பாருங்கள்; ஜெபத்தினால் பிறந்த இவர், குழந்தை பருவம் முதல் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டு, ஏலியின் பராமரிப்பின் கீழ்க் கர்த்தருக்கான ஊழியத்தில் பயிற்றுவிக்கப்பட்டார். சிறு பருவத்திலே அழைக்கப்பட்ட பவுல், நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் போதிக்கப்பட்டுத் தேவன் பேரில் வைராக்கியம் உள்ளவராக இருந்தார். பக்தி வைராக்கியத்தில் தேவனுக்கு ஊழியம் செய்வதாக எண்ணிக் கொண்டு, பவுல் அறியாமையில் பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தார்.

யோவான் ஸ்நானன் கூட ஓர் உதாரணமாவார். மற்றவர்களின் வாழ்க்கையில் நடந்தது போன்று, இவருடைய வாழ்க்கையிலும் ஆயத்தமாக்கும் விஷயங்கள், இவர் பிறப்பதற்கு முன்னதாகவே இவருடைய பெற்றோர்களின் இருதயத்தில் ஆரம்பித்தது. "அவர்கள் இருவரும் கர்த்தர் இட்ட சகல கற்பனைகளின் படியேயும், நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள்" (வசனம்-6). வரலாற்றின் பக்கங்களில் இடம்பெறும் சீர்த்திருத்தவாதிகளைக் கவனித்துப் பாருங்கள். மேலும், அவர்களுக்குரிய அல்லது அவர்களுக்கு முன்பு உள்ள வேலைகளைக் குறித்து, அவர்கள் அறியாதிருக்கையிலேயே அவர்களை ஆயத்தமாக்கப்படுவதில் உள்ள வழிநடத்துதல்களையும் கவனித்துப் பாருங்கள். சுவிசேஷ யுகத்தின் சபையை, அவர்களின் ஆயிரவருட யுகத்திற்குரிய வேலைக்கென்று கர்த்தர் எவ்வாறு ஆயத்தப்படுத்துகின்றார் என்பதையும் கவனித்துப் பாருங்கள். மேலும், வரவிருக்கின்ற இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தினுடைய வேலைகளுக்கென்று முற்பிதாக்களை எவ்வாறு கர்த்தர்

ஆயத்தப்படுத்தினார் என்பதையும் கவனித்துப் பாருங்கள். மேலும், அவரால் "தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள்" அனைத்தையும் கவனித்துப் பாருங்கள். "தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள் அனைத்தும் நியமிக்கப்பட்டுள்ள வேலைக்கென்று ஆயத்தமாக்கப்பட்ட பாத்திரங்களாகவே எப்போதும் இருக்கின்றனர். மேலும், பாத்திரம் தன்னைத்தானே ஆயத்தம் பண்ணாமல், தேவனே ஆயத்தம் பண்ணுகின்றார் என்கிற உண்மையானது, தெரிந்துக்கொள்ளப்பட்டவர் தான் செய்ய வேண்டிய வேலையை அறிந்துக்கொள்வதற்கு முன்னதாகவே, அவரில் ஆயத்தம் பண்ணும் விஷயங்கள் ஆரம்பித்து விடுகின்றதிலிருந்து விளங்குகின்றது.

தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரத்திற்கான, கனத்திற்குரிய ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேவன் ஆயத்தப்படுத்த விரும்பும் முக்கியமான விஷயம் இருதயத்தில் பரிசுத்தமாகும். அதாவது, தேவன் பேரிலும் அவருடைய நீதியின் பேரிலும், சத்தியத்தின் பேரிலும் பயபக்தி கொள்ளச் செய்வதும், மற்றும் பரிசுத்த மற்றதும், அசுத்தமானதுமான யாவற்றின் பேரிலும் வெறுப்புக் கொள்ளச் செய்வதுமாகும். "கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதன் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்" (ஏசாயா 52:11). கர்த்தருடைய வேலைகளில்............ சில பாகங்கள் தேவனுடைய ஞானத்திற்கும், வல்லமைக்கும் கனம் சேர்த்திட்டாலும், அவைகளில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வித கனமும் சேர்ப்பதில்லை. சத்துருக்களுடைய கோபத்தைக்கூடத் தேவனை மகிமைப்படுத்தும்படிக்குத் தேவன் மாற்ற வல்லவராக இருக்கின்றார். மேலும், தம்முடைய நோக்கத்திற்காக தீமையை, நன்மையாக மாற்றவும் தேவன் வல்லவராக இருக்கின்றார். உதாரணமாக, சாத்தான் மற்றும் தீமை செய்கிறவர்களுடைய தீமையான உபாதிகள் தெய்வீக வல்லமையினால் தேவனுடைய நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டு, தேவனுடைய சில நோக்கங்களுக்காக ஊழியம் செய்கின்றனவாக ஆகிவிடுகின்றன. மேலும், சில சமயம் தேவனுடைய பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், சிலசமயம் உலகத்தின் விஷயங்களில் சீர்த்திருத்தம் கொண்டுவரவும் உதவுகின்றன.

யோவான் ஸ்நானனுடைய பிறப்பு முதல், அவருடைய இருதயமானது தேவனுக்கும், பரிசுத்தத்திற்கும் இசைவாகக் காணப்படத்தக்கதாக, அவர் பிறப்பதற்கு முன்பாக அவரிடத்தில் செயல்பட்ட தெய்வீக ஆதிக்கமானது அவரை நடத்தினது. மேலும், அவர் வயது வந்த போது, நீண்ட நாட்களாய் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட மேசியாவை, அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வேலைக்கு ஆயத்தமாகத்தக்கதாக, அவரது வாழ்க்கையின் பயிற்சியானது அவரை வழிநடத்தினது (வசனம்-15). அவரைக் குறித்து, "அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாய் இருப்பான்" என்று கூறப்பட்டுள்ளது. ஆம், யோவான் ஸ்நானன் மாபெரும் மனுஷனாகவும், ஒரு மாபெரும் பிரசங்கியாகவும், ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசியாகவும் இருந்தார். இவர் தீர்க்கத்தரிசிகள் எல்லோரிலும் பெரியவர் என்று இயேசு, மத்தேயு 11:11-ஆம் வசனத்தில் குறிப்பிடுகின்றார் என்றாலும், இவர் மனுஷருடைய பார்வையில் மகா பெரியவராகத் தென்படவில்லை. இவர், ஒருபோதும் ஏரோதின் அரண்மனையில் விருந்தினராக அழைக்கப்பட்டதில்லை என்றாலும், ஏரோதின் சிறைச்சாலைகளில் இவர் ஒரு கைதியாகக் காணப்பட்டார். இவர் யூதமத ஆலயங்களில் புகழ்மிக்க பேச்சாளராக இருக்கவில்லை என்றாலும், இவர் வனாந்தரத்திலே எழும்பும் கூக்குரலாகக் காணப்பட்டார். இவர் இரத்தாம்பரத்தினாலும், மெல்லிய பஞ்சு நூலினாலும், வஸ்திரத்தினாலும் தன்னைச் சிங்காரிக்கவும் இல்லை, தினந்தோறும் ஆடம்பரமாகச் செலவழிப்பவராகவும் இவர் இருக்கவில்லை. மாறாக, இவர் ஒட்டகத்தின் மயிரினாலான வஸ்திரத்தையும், தோல் கச்சையையும் தரித்தவராகவும், காட்டுத் தேனையும், வெட்டுக்கிளியையும் புசித்தவராகவுமே காணப்பட்டார். ஒரு சில காலங்கள் திரளான ஜனங்கள் இவருடைய பிரசங்கத்தினால் கவரப்பட்டு இருந்தாலும் கூட, வெகு சீக்கிரத்தில் இவர் ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு, இராஜாவினால் சிறை வைக்கப்பட்டு, இறுதியில் சிறைக்குள் சிரச்சேதம் பண்ணப்பட்டார்.

எனினும், யோவான் உண்மையிலேயே ஒரு மாபெரும் மனுஷனாக இருந்தார்; காரணம் அவர், "கர்த்தருடைய பார்வையில் மகா பெரியவராக இருந்தார்." பட்டணத்தைக் கைப்பற்றுகிறவனைப் பார்க்கிலும் தன்னுடைய சொந்த ஆவியை தெய்வீக வார்த்தையின் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளுக்கு இசைவாக ஆளுபவனே பெரியவன் என்ற விதத்தில்தான், யோவான் ஸ்நானனும் பெரியவராக இருக்கின்றார் (நீதிமொழிகள் 16:32). பிறப்பிலும், சூழ்நிலைகளிலும் எளிமையான மனுஷனாகக் காணப்பட்டவரும், தன்னுடைய

பெற்றோரின் உடன்பிறந்தோரின் மகனாகக் காணப்பட்டவருமான **நாசரேத்தூரின் இயேசுவை**, மேசியாவாக ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரே வேலைக்கு என்று, தனது சகல மாம்சீக விருப்பங்களையும், நோக்கங்களையும்/இலட்சியங்களையும் அடக்கிவிட்டார். இயேசுவை அறிமுகப்படுத்தும் தனது வேலையை, தான் நிறைவேற்றின பின்னரே ஜனங்கள் சேர்க்கப்படுவார்கள் என்று யோவான் அறிந்திருந்தார் (ஆதியாகமம் 49:10). இப்படிச் செய்வதில் யோவான் பிரியமாக இருந்தார். மேலும், மாம்சத்தின்படி தனது உறவினனான இயேசுவுக்கு இவ்வேலையைச் செய்ததினிமித்தமும் தெய்வீக நோக்கத்தில், தீர்க்கத்தரிசனத்தில் தனக்கு உள்ள பங்கை நிறைவேற்றினபோதும் இவருடைய சந்தோஷம் சம்பூரணமாயிற்று என்று தெரிவித்தார் (யோவான் 3:29). எளிமையான நாசரேத் ஊரானாகிய இயேசுவில், யோவான் தன்னுடைய விசுவாசக் கண்களினால், தேவனுடைய குமாரனைக் கண்டபடியால் யோவான் ஜனங்களை நோக்கி, “என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல” என்றும், “இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” என்றும், “அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்” என்றார் (லூக்கா 3:16; யோவான் 1:29, 3:30).

இந்த எளிமையும் (சாந்தமும்), முழுமையான சுயத்தின் தியாகமும் மற்றும் தேவனுடைய நீதியான சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற இவருடைய ஒரே நோக்கமுமே/தெளிவான நோக்கமுமே யோவானைப் பெரியவராக்கிற்று. கர்த்தர் இவரைப் பயன்படுத்தத்தக்கதான இம்மாதிரியான இருதயத்தின் மனப்பான்மை இவரிடம் இருந்தபடியால், தீர்க்கத்தரிசிகள் எல்லோரிலும் இவர் பெரியவராகவும், மிகவும் கனம் பொருந்தினவராகவும் இருக்கும் சிலாக்கியம் இவருக்குக் கிடைத்தது. மேலும், இஸ்ரயேலுக்கும், உலகத்திற்கும் தேவனுடைய அபிஷேகம் பெற்ற குமாரனை, மீட்பரை, முழு உலகத்தின் எதிர்கால இராஜாவை அறிமுகப்படுத்துவதற்குத் தெரிந்துக்கொள்ளப்பட்ட சிலாக்கியம் இவருக்குக் கிடைத்தது. இவ்வாறாக, யோவான் ஸ்நானன் மாபெரும் மனுஷனாகவும், நீதி மற்றும் சத்தியத்தின் மாபெரும் பிரசங்கியாகவும், தீர்க்கத்தரிசிகள் எல்லோரிலும் பெரியவராகவும், தேவனுடைய இராஜ்யத்தில் பூமிக்குரிய பாகத்தின் சுதந்தரவாளிகளில் ஒருவராகவும் ஆனார்.

“கர்த்தருடைய பார்வையில் பெரியவனாக” இருக்க நாடும் ஒவ்வொருவருக்கும் இங்கு எவ்வளவு நன்மைக்கு ஏதுவான பாடங்கள் காணப்படுகின்றது. இது அப்போஸ்தலரின் ஞானமான எச்சரிப்பை நமக்கு நினைப்பூட்டுகின்றது. அதாவது, “ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்” (1 பேதுரு 5:6). சிலுவையின் பாதையும், தாழ்மையின் பாதையும், அவமானத்தின் பாதையும், சுயத்தைத் தாழ்த்தும் பாதையுமே கிரீடத்திற்குரிய பாதையாகவும், தேவனிடத்திலிருந்து மாத்திரமே வரும் உண்மையான கனத்திற்கு நேரான பாதையாகவும் இருக்கின்றது. பூமியிலிருந்து கடந்துபோய்விட்ட சீசர்கள், ஏரோதுகள், அலெக்ஸ்சாண்டர்கள், நெப்போலியன்கள், யூதமத பரிசேயர்கள், வேதபாரகர்கள், வேத பண்டிதர்கள், ரபீகள் ஆகிய பூமியின் மகா பெரியவர்களின் கனம் இப்பொழுது எங்கே போயிற்று? போப்புகள், கண்காணிகள், போப்பின் மன்ற உறுப்பினர்கள் மற்றும் இவர்களுடைய நாட்களில் பொருமையாய்ச் செழித்தோங்கின பாதிரிகளின் கனம் எங்கே? இவர்கள் அனைவரும் வெறுமையான நிலைக்கு வந்துள்ளனர். மேலும், இவர்கள் ஆயிரம் வருடத்தில் நியாயத்தீர்ப்பின் நாளில் வெட்கமடைந்து, இவர்களின் கனம் உரிந்து போடப்படும் நிலமைக்கு வருவார்கள். ஆனால், “கர்த்தருடைய பார்வைக்கு முன்பாக மகா பெரியவர்களாகக் காணப்படுகிறவர்களாகிய” அந்த உண்மையுள்ளவர்கள், இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் வல்லமையிலும், மகிமையிலும், கனத்திலும் உயர்த்தப்படுவார்கள்.

“உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்” என்ற பாடம் நம்முடைய இருதயத்திற்குள் நிலைத்து நிற்பதாக (லூக்கா 22:26). இப்போது தாழ்த்தபடுவதற்குப் பொறுமையோடு ஒப்புக்கொடுப்போமாக மற்றும் உண்மையுள்ள யாவருக்குள்ளும் வெளிப்படப்போகும் மகிமைக்காகச் சந்தோஷத்துடனும், நம்பிக்கையுடனும் காத்திருப்போமாக. இது பலன்கள் கொடுக்கப்படுவதற்கான காலமாகவோ, இடமாகவோ இராமல், ஒழுங்குகள் கற்றுக்கொள்வதற்கும், ஊழியம் செய்வதற்கும், குணலட்சணங்களை வளர்த்துக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் உயர்த்தப்படுவதற்கு ஏதுவான ஆயத்தமாக்குதல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், கறைதிரையற்றவர்களாக நம்மை

நிறுத்துவதற்கு ஆயத்தமாக்குவதற்கும், நம்முடைய மீட்பரோடு உடன்சுதந்தரர்களாகும்படிக்கு ஆயத்தமாக்குவதற்குமே இது இடமாகவும், காலமாகவும் உள்ளது.

16 மற்றும் 17-ஆம் வசனத்திற்குரிய விளக்கங்களை அறிந்துக்கொள்வதற்கு வேதாகம பாடங்கள் (Volume) இரண்டாம் தொகுதி, 8-ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

---

**R4939**

# "இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள்"

## லூக்கா 1:5-23

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்." - எபிரெயர் 11:6.

இன்றைய பாடத்தில் நாம் மீட்பரின் முன்னோடியும், அவரைக் குறித்து அறிவிக்கிறவருமாகிய யோவான் ஸ்நானன் பிறக்கும் வரையிலான காலப்பகுதியில், தேவன் கொடுத்திட்ட வாக்குத்தத்தங்களையும், தேவனுடைய செய்கைகளையும் (வழி நடத்துதல்களையும்) ஆராயப்போகிறோம்.

இயேசு பிறப்பதற்கு 4000 வருடங்களுக்கு முன்பாக, ஸ்திரீயின் வித்து, சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தேவன் அறிவித்தார். உரைக்கப்பட்ட இந்தப் மறைப்பொருளானது, உலகத்திலுள்ள பாவமும், அதன் சகல தீமையான விளைவுகளும் ஏற்ற காலத்தில் அழிக்கப்படும் என்பதையும், இவைகளைத் தேவனுடைய வல்லமையானது, கீழ்ப்படியாத ஏவாளிடமிருந்து தோன்றிய ஓர் அருமையான குமாரன் வாயிலாக செய்யும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது என்பதை நாம் இப்பொழுது உணர்ந்துக் கொள்கின்றோம். இவ்வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்குரிய அடையாளம் இல்லாமல், பல நூற்றாண்டுகள் கடந்தோடிவிட்டன. நம்முடைய இனமானது மிகுந்த சீர்க்கேட்டிற்குள்ளும், மிகுந்த அவநம்பிக்கையான நிலைக்குள்ளும் கடந்து போய்விட்டது. இப்படியாக இருக்கையில் சேத்தின் வம்ச வழியில் ஏனோக்கு பிறந்தார். "இவர் தேவனோடு சஞ்சரித்தார்," மேலும் இவர் தெய்வீக வாய்த்தலமாகப் பயன்படுத்தப்பட்டு மற்றுமொரு தீர்க்கத்தரிசனத்தை உரைத்தார். அதாவது, "இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும் அவர்களில் அவபக்தியுள்ளவர்கள்...பரிசுத்தவான்களோடும் கூட கர்த்தர் வருகிறார் என்றும் முன்னறிவித்தார்" (யூதா 14, 15).

உலகத்திற்கு மீண்டும் ஒரு புதிய நியாயத்தீர்ப்பின் வாய்ப்பைக் கொடுக்கப்போகிறதற்கான தேவனுடைய பெருந்தன்மையான/இரக்கம் நிறைந்த நோக்கத்தைக் குறித்து அவர் இன்னும் வெளிப்படுத்த சித்தம் கொள்வதற்குள், இன்னும் ஓராயிரம் வருடங்கள் கடந்துவிட்டது. இப்படியாக இருக்கையில் உலகத்திற்கான (சுவிசேஷத்தை) நம்பிக்கையைக் குறித்து இன்னும் வெளிப்படையாக/அதிகமாக தேவன் தம்முடைய நண்பனாகிய ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார். தேவன் ஆபிரகாமிடம் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கான தம்முடைய நோக்கத்தையும், மனுக்குலத்தின் மீதான இவ்வாசீர்வாதம் ஆபிரகாமின் சந்ததி மூலமாகவே வரும் என்பதையும் அறிவித்தார். "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதியாகமம் 12:3).

ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்ட இவ்விஷயங்களைப் பரிசுத்தவானாகிய பவுல், முதலாம் சுவிசேஷ செய்தி என்றார்; காரணம், மற்றவர்கள் மூலம் அறிவிக்கப்பட்ட தீர்க்கத்தரிசனங்கள் மனிதனுக்குரிய மீட்பைத் தெளிவாகக் காட்டவில்லை. ஏனோக்கின் மூலம் கொடுக்கப்பட்ட விஷயங்கள் மனுக்குலத்திற்கு ஆசீர்வாதம் வரும் என்பதைத் தெளிவாகக் காட்டவில்லை. ஆனால் ஆபிரகாமின் மூலம் கொடுக்கப்பட்ட செய்தியோ மிகத்

தெளிவாக இருந்தது; அதாவது, “உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” என்பதாகும் (கலாத்தியர் 3:8).

தேவன் தாம் கொடுக்கப்போகிற ஆசீர்வாதத்தை மாத்திரம் அறிவிக்காமல், தேவன் அதற்கு ஆணையிட்டும் கொடுத்தார் என்பதைப் பரிசுத்தவானாகிய பவுல் நமக்கு நினைப்பூட்டுகின்றார். தேவன் ஆணையிட்டுக் கொடுக்க வேண்டும் என்பது ஆபிரகாமுக்குத் தேவையில்லை. ஆபிரகாம் முழுமையாக விசுவாசித்தார். ஆனால் பரிசுத்தவானாகிய பவுல் சொல்வது போன்று தேவன் நமக்காகவே ஆணையிட்டுக் கொடுத்தார். இவ்வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலானது நீண்டகாலம் தாமதிக்கப்போவதினால், இதன் மேல் விசேஷித்த கவனம் கொண்டுள்ள நாம், தெய்வீக ஏற்பாட்டில் ஏதோ சில மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதோ என்று அஞ்சக்கூடும். ஆகையால், “நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் (நற்செய்திகள், வாக்குத்தத்தங்கள்) பற்றிக் கொள்ளும்படி, அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு (சபை), இரண்டு மாறாத விசேஷங்களினால் (தேவனுடைய வார்த்தை மற்றும் தேவனுடைய ஆணையிடுதல்கள்) நிறைந்த ஆறுதல் உண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்” என்று ஆணையிட்டுக் கொடுத்ததற்கான நோக்கத்தைக் கூறி பரிசுத்தவானாகிய பவுல் நமக்கு உறுதியளிக்கின்றார் (எபிரெயர் 6:18-20). ஆகையால் அப்போஸ்தலனின் வார்த்தைகளிலிருந்து ஆபிரகாமின் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கை இன்னும் நிறைவேறவில்லை என்பதை நாம் காண்கின்றோம்; என்றாலும் அந்த வாக்குத்தத்தமே நம்முடைய விசுவாசத்திற்கான நங்கூரமாகவும் காணப்படுகின்றது.

## “ஆபிரகாமின் சந்ததிக்கான தேடல்”

இஸ்மயேல் வாக்குத்தத்தின் சந்ததியாயிராமல், ஈசாக்கே சந்ததியாக இருந்தார். மேலும், ஏசாவும் வாக்குத்தத்தத்தின் சந்ததியாய் இராமல், யாக்கோபே சந்ததியாக இருந்தார். இறுதியாக யாக்கோபின் குடும்பம் முழுவதும் ஆபிரகாமின் சந்ததியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏற்ற வேளையில் அவர்கள் எல்லோரும் மோசேக்குள்ளாகக் கடலிலும், மேகத்திலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டார்கள். மேலும், சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவர்கள் வாக்குத்தத்தத்தின் சுதந்தரர்கள் ஆனார்கள். நியாயப்பிரமாணத்திற்கு அவர்கள் கீழ்ப்படிந்தால், இவர்கள் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வார்கள். மேலும், இதன் மூலம் இவர்கள் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கான வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் வேலைக்கு தேவனுடைய கருவிகளாக இருக்கமுடியும்.

மரணத் தீர்ப்பின் கீழ்ப் பரிபூரணமற்றவர்களாக இருக்கும் மற்றவர்களைப் போன்று இவர்களும் (இஸ்ரயேலர்களும்) பூரணமற்றவர்களானபடியால், இவர்களால் தேவனுடைய பூரணமான நியாப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாமல் போனதால், மீதமான மனுக்குலத்தைப் போன்று இவர்களும் மரித்தார்கள்; காரணம், இவர்களும் பாவிகளே. “உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை” என்று இயேசு கூறினார். மேலும், “எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை” என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகின்றார் (ரோமர் 3:20). எனினும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய முயற்சித்த யூதர்கள் மாபெரும் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்கள். எப்படியெனில், சிலர் மாயக்காரர்களாய் இருந்து, இருதயத்திலிருந்து ஜெபம் ஏறெடுக்காதவர்களாய் இருந்தாலும் கூட, சிலர் கபடற்ற உண்மையான இஸ்ரயேலர்களாகவே இருந்தார்கள்.

“கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களின்” இருதயப்பூர்வமான நேர்மையைத் தேவன் அங்கீகரித்து, பெந்தெகொஸ்தே நாளன்று, உண்மையுள்ள ஊழியக்காரராகிய மோசேயின் வீட்டாரிலிருந்து, உண்மையுள்ள புத்திரராகிய கிறிஸ்துவின் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கும் சிலாக்கியத்தினைத் தேவன் இவர்களுக்குக் கொடுத்தார் (எபிரெயர் 2:5, 6). “(கிறிஸ்துவின்) அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் வைத்து...தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்” (யோவான் 1:12). இயேசு, தமது ஜீவனை பலிச் செலுத்தி மரணத்திலிருந்து தெய்வீகச் சுபாவத்திற்கு உயிர்த்தெழுப்பப்பட்டு,

தூதர்களுக்கும், கர்த்தத்துவங்களுக்கும், வல்லமைகளுக்கும் மேலாக, தேவனுடைய வலது பாரிசத்தின் இடத்திற்கும் உயர்த்தப்பட்டு, தம்முடைய அடிச்சுவட்டில் நடக்க விரும்பும், "உண்மையுள்ள இஸ்ரயேலர்கள்" யாவருக்கும் பரிந்துப் பேசும்படி இயேசு வந்த பின்னர்தான், இவர்கள் புத்திரசுவிகாரத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

## ‘‘கிருபை நிறைந்த மற்ற வாக்குத்தத்தங்கள்’’

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் ஆபிரகாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் (பிரதானமாக மாம்ச சந்ததிக்கும்) உரியதாகும். இதன் காரணமாக, யூத யுகம் முழுவதும் இவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலம் தங்களை ஆபிரகாமின் வித்தாகும்படி தகுதிபடுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, இவர்களிடம் தீர்க்கத்தரிசனத்தின் வாயிலாக தேவன் பேசிக் கொண்டிருந்தார். மோசே மத்தியஸ்தராக இருந்த உடன்படிக்கையைக் காட்டிலும் மேலான உடன்படிக்கையை இவர்களோடு இறுதியில் தாம் பண்ண சித்தம் கொண்டுள்ளார் என்பதைத் தேவன் இவர்களுக்கு வெளிப்படுத்தினார். புதிய உடன்படிக்கையின் கீழ்த் தேவன் இவர்களின் பாவங்களையும், மீறுதல்களையும்/அக்கிரமங்களையும் எடுத்துப்போடுவார் என்பதை இவர்களிடம் கூறினார். ஆனால், அவைகளை எப்படி எடுத்துப் போடுவார் என்பதைக் கூறவில்லை; அதாவது, இவர்கள் வருடந்தோறும் செலுத்தி வருகிற பலிகளைக் காட்டிலும், "விசேஷித்த பலிகளின்" புண்ணியத்தினால் பாவங்கள் எடுத்துப் போடப்படும் என்பதைக் கூறவில்லை.

இந்தப் புதிய உடன்படிக்கைக்கு மோசேயைக் காட்டிலும் பெரிய ஒரு மத்தியஸ்தர் இருப்பார் என்பதையும், தேவன் அவர்களுக்குக் கூறி உறுதியளித்தார். இந்த மத்தியஸ்தரைக் குறித்து மோசே தீர்க்கத்தரிசனம் உரைத்ததாவது, "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார் அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 3:22, 23). இஸ்ரயேலர்கள் தெய்வீகப் பிரமாணங்களைப் பரிபூரணமாய்க் கைக்கொள்ளும் நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்கும், பூமி அனைத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாக இவர்களைத் தேவன் பயன்படுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்கும், இவர்களுக்கு அந்த மாபெரும் மத்தியஸ்தரே உதவுவார் (எரேமியா 31:31).

இஸ்ரயேலர்கள் புதிய உடன்படிக்கைக்காகவும், அதன் மேலான மத்தியஸ்தருக்காகவும் ஏங்கினார்கள். அந்த மத்தியஸ்தரை மேசியா அல்லது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அழைத்தனர். இந்த மகிமையான மேசியாவைக் குறித்த அதாவது, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரைக் குறித்த தேவனுடைய செய்தியை மீண்டும் கவனியுங்கள். அவர் கூறுவதென்னவெனில், "இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான். அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார் இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார், அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்" (மல்கியா 3:1-3).

இவ்விதமாக வரவிருக்கிற மேசியாவைக் குறித்து, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை மாத்திரமல்லாமல், இன்னுமாக அவர் வரும் காலங்களில் வாழ்பவர்களுக்கு விசேஷமான சோதனைகள், இடர்பாடுகள் இருக்கும் என்பகைவள் குறித்த அறிவிப்புகளையும் இஸ்ரயேலர்கள் பெற்றிருந்தார்கள். லேவியின் புத்திரர் மீதும்,

இஸ்ரயேலின் மீதும், மற்றும் இவர்கள் வாயிலாக பூமியின் சகல ஜாதிகள் மேல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரப் போகிற ஆபிரகாமின் வித்திலுள்ள மகா பெரியவரைப் பெற்றெடுக்க அதாவது, சர்ப்பத்தின் தலையை நசுக்கப்போகிற ஸ்திரீயின் வித்தைப் பெற்றெடுக்கும் கனத்திற்காக இஸ்ரயேலர்களில் உள்ள ஒவ்வொரு தாய்மாரும் ஏங்கினார்கள்.

இந்த வாக்குத்தத்தங்கள் தொடர்ந்துக் கொண்டிருந்து, யோவான் ஸ்நானனின் பிறப்பில் உச்ச நிலையை அடைந்தது. யோவான் ஸ்நானன் மேசியாவாய் இராமல், மேசியாவைக் குறித்து முன்னறிவிக்கிறவராகவே இருந்தார். யோவான் ஸ்நானன் மனித தகப்பன் இல்லாமல் அற்புதவிதமாகப் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர் அல்ல. மாறாக, இவருடைய பிறப்பு விசேஷித்த தேவதூதரால் அறிவிக்கப்பட்டது. சகரியாவின் விசுவாசம் ஒருவேளை சோதிக்கப்பட்டிருந்தாலும், ஒன்பது மாத அளவு ஊமையாக இருந்த அனுபவம், அவருடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துவதற்கு அவருக்கு உதவிற்று. இவ்விதமாக, மனுஷர்களுடைய மீட்பராக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்புவதற்கு முன்பு, தேவன் வழியை ஆயத்தம் பண்ணினார்.

---

**R4940**

# "மகா பெரிய தீர்க்கத்தரிசி"

## லூக்கா 1:57-80

"இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக...தமது ஜனத்தை சந்தித்து, மீட்டுக்கொண்டு..." - லூக்கா 1:68, 74

"ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனும் இல்லை. ஆகிலும் தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாய் இருக்கிறவன், அவனிலும் பெரியவனாய் இருக்கிறான்" என்று யோவான் ஸ்நானனைக் குறித்து இயேசு கூறினார் (லூக்கா 7:28). இந்த வார்த்தைகள் வரவிருக்கிற மேசியாவைக் குறித்தும், மீட்பரோடு அவருடைய ஆயிரவருட அரசாட்சியிலும், மகிமையிலும் பங்குக் கொள்வதற்கென ஓர் உண்மையுள்ள வகுப்பாரைப் பாவிகள் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளும் மாபெரும் வேலையின் ஆரம்பத்தைக் குறித்தும், அறிவிக்கும் தீர்க்கத்தரிசிகளில், யோவானே கடைசியானவர் என்பதை நமக்கு காட்டுகின்றது. யோவான் ஸ்நானன் இராஜ்யத்தின் (ஆவிக்குரிய) வகுப்பாரில் ஒருவராக இருக்க முடியாது. மீட்பரின் பலிச் செலுத்தப்படுவதற்கு முன்பும், பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்கள் வந்து சிலரை இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவரோடு உடன்சுதந்திரர்களாகும்படிக்கு ஏற்றுக்கொள்வதற்கு முன்பும், யோவான் ஸ்நானனின் மாபெரும் வேலை நிறைவேறி முடிந்துவிட்டது. யோவானே இவைகளைப் புரிந்துக்கொண்டிருந்தபடியால், "மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அவர் அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்கு சம்பூரணமாயிற்று" என்று கூறினார் (யோவான் 3:29).

### யோவான் - "தேவனுடைய தயவு"

காபிரியேல் தூதனின் தூது செய்திக்கு இசைவாக யோவான் ஸ்நானன் பிறந்தார். பிறந்த எட்டாம் நாளில் அவர் விருத்தசேதனம் பண்ணப்பட்டு, பெயரிடப்பட்டார். குடும்ப உறவினர்கள் குழந்தைக்கு தகப்பனுடைய பெயரைச் சூட்ட வேண்டும் என்று வலியுறுத்தியபோதும், குழந்தையின் தகப்பனும், தாயும் யோவான் என்றே பெயரிட்டார்கள். மேலும், உடனடியாகச் சகரியாவின் ஊமை நிலையும் மாறிவிட்டது. சகரியாவின் விசுவாசம் வலுவூட்டப்பட்டது. காபிரியேல் கூறிய பெயரைச் சகரியா கூறியதின் மூலம் தனது சகல சந்தேகங்களையும், தான் மேற்கொண்டுள்ளதை சகரியா வெளிப்படுத்தினார். யோவான்

என்ற பெயர் அருமையான அர்த்தத்தைக் கொண்டுள்ளது; அதாவது "தேவனுடைய தயவு" என்பதாகும்.

தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவரைக் குறித்து அறிவிக்கவும், மேசியா வெளிப்படும்போது கடுமையான சோதனைகளும், பரீட்சைகளும் ஏற்படும் என்று மல்கியா தீர்க்கதரிசி மூலம் அறிவிக்கப்பட்ட விஷயங்களுக்கு ஜனங்களை ஆயத்தமாக்கும் தேவனுடைய தூதனாய் இருக்கும் நோக்கம் தவிர, வேறு எவ்வித நோக்கமும் யோவான் கொண்டிராதது குறிப்பிடத்தக்கதாகும். மல்கியா தீர்க்கத்தரிசி கூறினது போல, மேசியா வெளிப்படும்போது, "அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து... வெள்ளியைப் போலவும் புடமிடுவார்" (மல்கியா 3:3). ஆகையால்தான் யோவான் ஊழியம் புரிகையில், "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்றும், நற்செய்தியை நம்புங்கள் என்றும், மனந்திரும்புங்கள் என்றும், இராஜ்யத்தில் பங்கடையும் படிக்கு ஆயத்தமாகுங்கள் என்றும் அறிவித்தார்.

எதிர்ப்பார்க்காத வண்ணம் சோதனைகள் வந்தது. மேசியா பூமிக்குரிய ஆஸ்திகளுடையவராகவோ, பிரபலமானவராகவோ பிறக்கவில்லை. மேலும் மேசியாவின் அனுபவங்களும், போதனைகளும் நியாயப்பிரமாண வல்லுநர்கள் எதிர்ப்பார்த்த வண்ணமும் இருக்கவில்லை. இயேசுவின் காலக்கட்டத்தில் உள்ள மாய்மாலங்களையும், தப்பறைகளையும் இயேசு எதிர்த்த காரியம், சிலர் மேல் புடமிடும் நெருப்பின் தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களை நிஜமான லேவியர்களாக அதாவது, அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாக மாற்றிவிட்டது. அவர்களில் அநேகர் நிஜமான ஆசாரியர்களாக மாறி, மீட்பரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து தங்களுடைய சரீரங்களை ஜீவப்பலியாக ஒப்புக்கொடுத்தார்கள்.

## "சகரியாவின் தீர்க்கத்தரிசனம்"

"தீர்க்கத்தரிசனமானது, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள்" என்று பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த தீர்க்கத்தரிசிகளைக் குறித்துப் பரிசுத்தவானாகிய பேதுரு நமக்கு தெளிவாகக் கூறுகின்றார். மேலும் தீர்க்கத்தரிசிகள், தங்களால் கொஞ்சமாகப் புரிந்துக்கொள்ளப்பட்டதும், எதிர்க்காலத்தில் மாத்திரமே முழுமையாக வெளிப்படுகிறதுமான ஆழமான சத்தியங்களைக் கூறினார்கள் என்பதையும், பரிசுத்த பேதுரு குறிப்பிடுகின்றார். சகரியாவின் தீர்க்கத்தரிசனத்திலும் இது உண்மையே. "இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்; தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி, உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும், நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று, அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்; ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார். நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கத்தரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய். அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான். அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" (லூக்கா 1:68-80). 73 முதல் 75 வரையிலான வசனப்பகுதி, இத்தீர்க்கத்தரிசனத்தின் முதல் பகுதியாகும். நிறைவேறப் போகிற விஷயங்கள் நிறைவேறி விட்டது போன்ற பாணியில் இங்குத் தீர்க்கத்தரிசனத்தில் கூறப்பட்டுள்ளது. யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு ஆறு

மாதம் முன்னதாகவே பிறந்துவிடுவதால், இந்தத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்ட காலத்தில் இயேசு ஏற்கெனவே கர்ப்பத்தில் உருவாகிவிட்டார் என்பதை நாம் அறிந்துக்கொள்கின்றோம். ஆரம்பித்துள்ள விஷயங்கள் இன்னும் நிறைவேறித் தீரவில்லை என்றபோதிலும், நிறைவேறிவிட்டது போன்ற பாணியில் பரிசுத்த ஆவியானது, இங்குக் கூறுகின்றது. அதாவது, "அவர் தமது ஜனத்தை சந்தித்து மீட்டுக் கொண்டு" என்பதாகும். இங்கு வரும் மீட்பு என்ற வார்த்தையானது, இயேசு ஞானஸ்நானத்தில் தம்முடைய ஜீவனை அர்ப்பணித்தது முதல் கல்வாரியில் தமது பலியை நிறைவேற்றியது வரையிலான மீட்பின் வேலையை மாத்திரம் உள்ளடக்காமல், மனுக்குலத்தை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் முழு வேலையையும் கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது.

இந்தச் சுவிசேஷ யுகத்தில் நம்முடைய இனத்திலிருந்து ஒரு சிறு வகுப்பார் தெரிந்துக்கொள்ளப்பட்டுச் சீர்த்திருத்தப்பட்டுள்ளனர். ஆனால், மேசியாவின் ஆயிரவருட அரசாட்சி முழுவதுமே, ஆதாமும் அவருடைய சந்ததியும் தங்களுக்கு முன் வைக்கப்படும் தெய்வீகக் கிருபையை ஏற்க மனதாய் இருக்கும் பட்சத்தில் அவர்கள் பாவம் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்து/வல்லமையிலிருந்து மீட்டுக் கொண்டுவருவதற்கே பயன்படுத்தப்படும் என்று வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது. ஆகவே, கர்த்தர் நீண்ட காலத்திற்கு முன்பு வாக்களித்துள்ள மகா பெரும் ஆசீர்வாதங்கள் ஆரம்பிக்கும் காலம் அப்போது வந்துவிட்டதால் கர்த்தரைத் துதிப்பதே, (சகரியாவின்) தீர்க்கத்தரிசனத்தின் முதலாம் பாகத்தினுடைய முக்கியத்துவமாகும்.

## "சத்துருக்களிடமிருந்து விடுதலை"

தீர்க்கத்தரிசனத்தின் இரண்டாம் பாகம் 69, 70, 71, 72, 74-பிற்பகுதி ஆகிய வசனங்களில் காணப்படுகின்றது. இது தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய சத்துருக்களின் வல்லமையினின்று விடுவிக்கப்படுவதைக் குறிக்கின்றது. இங்கு மற்றவர்கள் அல்ல, தேவனுடைய ஜனங்களே சத்துருக்களிடமிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று வரும் கருத்து முக்கியமானது. வேண்டும் என்றே செய்யாமல் விழுந்துபோன மாம்சத்தின் இச்சை, ஐஸ்வரியத்தின் மயக்கம், இவ்வுலகத்தின் அதிபதியானவன் குருடாக்கி வைத்த நிலை போன்ற காரணங்களினால் பொல்லாங்குச் செய்கிற அநேகர் சத்துருக்களாக இன்று போல், கடந்த காலங்களிலும் இருந்துள்ளனர்.

மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியில் குருடாக்கப்பட்ட சகல கண்களும் திறக்கப்படும்போதும், செவிடாக்கப்பட்ட சகல காதுகளும் திறக்கப்படும்போதும், தேவனுடைய குணலட்சணங்களின் மகிமை குறித்ததான அறிவு தெளிவாக வெளிப்படுத்தப்படும்போதும், பாவத்தின் அகோரம் முழுமையாக வெளிப்படுத்தப்படும்போதும் இப்பொழுது சாத்தானின் விருப்பப்படி அடிமையாக்கப்பட்டவர்கள், இம்மானுயேலுக்கு முன்பாக முழங்காலிட்டு தேவனுக்கு மகிமை சேர்ப்பார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தற்போதைய காலக்கட்டத்தில் இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களே "சிறுமந்தையாக" இருக்கின்றார்கள்; ஆனால், அவருடைய மகிமையான ஆளுகையின்போது, அவர் மற்றொரு மந்தையைச் சேர்த்துக் கொள்வார். "இந்த தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்" என்று இயேசு கூறியுள்ளார் (யோவான் 10:16).

"ஒரே (தொழுவமும்) மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" என்ற வார்த்தைகள் தொழுவத்திலுள்ள ஆடுகள் அனைத்தும் ஒரே சுபாவத்தில்தான் இருக்கும் என்று பொருள் படுவதில்லை. மாறாக பரலோகத்திலும், பூமியிலும் உள்ள சகலமும், இறுதியில் ஒரே தலையின் (மேய்ப்பனின்) கீழ்க் கொண்டுவருவதே தேவனுடைய திட்டமாக இருக்கின்றது என்று அப்போஸ்தலர் நமக்குக் கூறுகின்றார் (எபேசியர் 1:9). இந்தச் "சகலமும்" என்பதில் மணவாட்டியாகிய சபை பிரதானமானவர்களாய், அதாவது திவ்வியச் சுபாவம் எனும் தளத்தில் காணப்படுவார்கள். இவர்களுக்கடுத்த வரிசையில், திரள் கூட்டத்தினரும், சேராபீன்களும், தேவதூதர்களும் வருவார்கள். மேலும் மீட்கப்பட்டு, மனுஷீகப் பூரணத்திற்குச் சீர்ப்பொருத்தப்பட்ட மனுக்குலம் தெய்வீகத் தொழுவத்தினுடைய கடைசி வரிசையில் இடம்பெறுவார்கள்.

கடைசியில் சகல தேவனுடைய ஜனங்களும் விடுவிக்கப்படும் சத்துருக்களைக் குறித்துப் பரிசுத்தவானாகிய பவுல் நமக்குக் கூறுகின்றார். சாத்தான் ஒரு சத்துரு ஆவார்; இவர் ஆயிரம் வருஷமளவும் கட்டி வைக்கப்பட்டு இறுதியில் அழிக்கப்படுவார். பாவமாகிய சத்துருவும், மேசியாவின் இராஜ்யத்தில் பல்வேறு கட்டங்களில் வெளியேற்றப்படும். "பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்" என்று நாம் வாசிக்கின்றோம். மரணம் கல்லறைக்குப் போகும். பிற்பாடு ஆதாமின் மரணம் என்ற ஒன்று இருப்பதில்லை. அதன் வல்லமையின் கீழ் எவரும் இருப்பதும் இல்லை. உயிர்த்தெழுதலின் வல்லமையானது அனைவரையும் விடுவித்துவிடும். வேண்டுமென்றும், துணிந்தும் பாவம் செய்கிறவர்களே இரண்டாம் மரணத்துக்கும் செல்வார்கள். இரண்டாம் மரணம் ஒரு சத்துரு அல்ல.

## "ஆயத்த வேலைகள்"

இந்தத் தீர்க்கத்தரிசனத்தின் மூன்றாம் பாகமானது, சகல சத்துருக்கள் அழிக்கப்படுவதற்கு முன்பும், தகுதியுடையவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் தேவனுடைய புத்திரர்களாக உயர்த்தப்படுவதற்கு முன்பும், நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு வேலையைக் குறித்து நமக்குக் கூறுகின்றது. இது லூக்கா 1:76-79 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வசனங்கள் யோவான் ஸ்நானன் எவ்வாறு கர்த்தருடைய விசேஷித்த ஊழியக்காரனாகிய இயேசுவின் முன்னோடியாக இருப்பார் என்றும், எப்படி இயேசுவின் மாபெரும் வேலைக்கு வழியைச் செம்மையாக்குவார் என்றும் கூறுகின்றது. தேவனுடைய ஜனங்களாக ஏற்கெனவே காணப்படும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு, இரட்சிப்புப் பற்றின அறிவை வழங்குவதும், அத்தகையவர்களுக்கு இந்த யுகத்திற்கான "பரம அழைப்பை" காட்டுவதுமே, இயேசுவின் மாபெரும் வேலையாகும். ஆகவே மேசியாவின் யுகத்தில், நீதியின் சூரியனானது மனுக்குலத்தின் மீதான இருளை அகற்றப் போவதற்கு முன்பு, சபை இப்பொழுது தேவனுடைய தயவினால் "விடிவெள்ளி நட்சத்திரத்தை" கண்டு, அதனால் வெளிச்சமூட்டப்பட்டுள்ளனர். தற்காலத்திலுள்ள இந்தக் குறைவான வெளிச்சம்/சிறு வெளிச்சமானது, பரிசுத்தமாக்கும் வல்லமையுடன் விசுவாசிகளின் இருதயத்திற்குள் பிரகாசித்து, அவர்களுக்குள் ஏற்படுத்தும் சத்தியத்தின் பேரிலான பக்தி வைராக்கியம் எனும் நெருப்பை, பற்றி எரிய வைக்கின்றது. இவர்கள் தங்களிடத்தில் உள்ள இந்த ஒளியை மரணத்தின் நிழலின் கீழ் இருப்பவர்கள் மேல் பிரகாசிக்கின்றனர். புதிய யுகம் வருவதற்கு முன்பு வரையிலும், துன்பத்தின் காலத்தில் பரிசுத்தவான்கள் காணப்படுகையில், அவர்களுடைய பாதங்கள் இந்த "விடிவெள்ளியினால்" சமாதானத்தின் பாதையிலேயே வழி நடத்தப்படுகின்றது.

---

**R2408**

# "ஒவ்வொரு மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி"
## யோவான் 1:1-14

"அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது."- யோவான் 1:4

ஆதியாகமம் புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பூமியின் சிருஷ்டிப்பினுடைய காலக்கட்டத்தில் லோகோஸ் எனும் வார்த்தை, தேவனோடு இருந்தார் என்பதை நாம் அறிவோம். மனிதனாக பிறப்பதற்கு முன்னதாக இருந்த நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு "வார்த்தை" என்ற பெயர் மிகவும் பொருத்தமானதாகும். "வார்த்தை" என்பது கிரேக்க வார்த்தையாகிய லோகோஸின் மொழிப்பெயர்ப்பாகும். இதற்கு "வெளிப்படுத்தல்" என்னும் துல்லியமான வார்த்தையும் வழங்கபடலாம். ஏனெனில், உலகங்கள் உண்டாவதற்கு முன்பு காணப்பட்ட பரம பிதாவின் துணைவரான இவர் (லோகோஸ்), தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருக்கின்றார். மேலும் இவர் தெய்வீகச் சித்தம், மனது, நோக்கம் மற்றும் குணங்களின் முற்றும் முழுமையான வெளிப்பாடாகவும் இருக்கின்றார். இந்த முதற்பேறானவரைக் குறித்து, "இவர் தேவனுடைய ரூபமாயிருக்கிறார்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (பிலிப்பியர் 2:6). மேலும், இவர் தேவனுக்குச் சமமாய் இருக்க விரும்பாமல், தேவனுக்கு அடிமையாக இருக்கவே விரும்பினார் என்றும் கூறுகின்றார். மேலும், லோகோஸ்

மாம்சமாகி, மனுஷனாகிய கிறிஸ்துவாக வந்தக் காரியமானது, அவருடைய கீழ்ப்படிதலுக்கும், தாழ்மைக்கும், அடிமையாய் இருக்க விரும்பும் நிலைமைக்கும் ஆதாரமாய் விளங்குகின்றது. மேலும், இதே தாழ்மை மற்றும் கீழ்ப்படிதலின் காரணமாக, மரணம் வரையிலும் அதாவது, சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகவே பிதாவுக்குக் காணப்பட்டார். மேலும், இதன் காரணமாகவே, பிதாவாகிய தேவன் உயிர்த்தெழுதலில் அவருக்கு திவ்வியச் சுபாவத்தை அளித்து, தமக்கு அடுத்த ஸ்தானத்தைக் கொடுத்து, தம்முடைய சிங்காசனத்திலும், தம்முடைய மகிமையிலும், தம்முடைய வல்லமையிலும், தம்முடைய சுபாவத்திலும் அவரை பங்காளியாக வைத்து, எல்லா தூதர்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள், நாமங்களுக்கு மேலாக அவரை உயர்த்தினார். இயேசு மனிதனாக பிறப்பதற்கு முன்பு இருந்த நிலையைக் காட்டிலும் மேலாக அவரை உயர்த்தினார்.

தேவனுடைய ஒரே பேறான குமாரன், பூமியில் இருந்தபோதும், லோகோஸாக இருந்த போதும், இவர் பிதாவாகிய தேவனுக்கு நிகரானவர் என்று வேத வாக்கியங்கள் எங்காகிலும் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், இவர் இப்பொழுது உயர்த்தப்பட்ட நிலையில் இருக்கிறார் என்றும், தெய்வீகச் சுபாவத்தில், மகிமையில் மற்றும் பூமியிலும், வானத்திலும் உள்ள சகல அதிகாரங்களின் பங்காளியாக இருக்கின்றார் என்றும் வேதவாக்கியங்கள் கூறுகின்றது. மேலும், "பிதாவை கனம் பண்ணுகிறதுபோல, எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்று நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம் (யோவான் 5:23). நம்முடைய மீட்பர், மாம்சத்தில் வருவதற்கு முன்பு ஆவிக்குரிய ஜீவியாக, தூதர்களுக்கு மேலானவராக (பிரதானமானவராக) இருந்தது பற்றிய விஷயங்களே நம்முடைய பாடமாக இன்று உள்ளது. மேலும், இவராலேயே அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டது என்பதையும் இப்பாடம் நமக்கு உறுதிப்படுத்துகின்றது… "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." ஆகவே, பிதாவாகிய தேவனின் சிருஷ்டிப்பு வேலையில் உள்ள ஒவ்வொரு தளத்திலும் லோகோஸ் "எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி" இவருக்கு பங்களிக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம் (கொலோசெயர் 1:18).

வேதத்தை ஆராயும் அநேக மாணவர்கள், யோவான் எழுதின சுவிசேஷத்தின் முதலாவது வசனத்தைத் தவறாகப் புரிந்துக்கொண்டு, தவறான கருத்துக்குள் இடறிவிழுந்து விடுகின்றனர். அதாவது, இவ்வசனம் லோகோஸ் தேவனுக்கு முழுமையாகச் சமமானவர் என்ற கருத்தை தெரிவிப்பதாகக் கருதிவிடுகின்றனர். அதாவது, வார்த்தையை/வெளிப்பாட்டை/செய்தியை அனுப்பினவருக்கு (பிதா), வார்த்தையானவர் (இயேசு) முற்றும் சமமானவர் என்று கருதிவிடுகின்றனர். இது நியாயமான கருத்தல்ல, மேலும் இது, "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது"; "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்ற நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் சாட்சிக்கும் எதிர்மாறாக இருக்கின்றது (யோவான் 5:30, 14:28).

பழைய ஏற்பாட்டில் தேவன் என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, யேகோவா தேவனுக்கு நிகரான வார்த்தை இல்லை என்று வேத பண்டிதர்கள் ஒத்துக்கொள்கின்றனர். அதன் அர்த்தம் "வல்லமையுள்ளவர்" ஆகும். சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவன் தவிர மற்றவர்களாகிய தேவதூதர்களுக்கும், மாபெரும் மனுஷர்களுக்கும், பொய்த் தேவர்களுக்கும், "வல்லமையுள்ளவர்" என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. யேகோவா என்ற நாமம் சர்வவல்லவருக்கு மாத்திரம் உரியதாகும். மேலும், இவருக்கு மற்ற அனைத்து ஏலோகீம்களும் (தேவர்கள் - வல்லமையுள்ளவர்கள்) கீழ்ப்பட்டவர்களே ஆவர். புதிய ஏற்பாட்டில் வல்லமையுள்ளவர் என்று அர்த்தம்கொள்ளும் **theos** (தியோஸ்) என்ற வார்த்தை ஏலோகீமுக்கு (elohim) நிகரான வார்த்தையாகும். புதிய ஏற்பாட்டில், இவ்வார்த்தையாகிய **theos** (தியோஸ்) யேகோவா தேவனைக் குறிக்க அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டாலும், சிலசமயம் மனுஷனைக் குறிக்கவும், சில சமயம் பொய்த் தேவர்களைக் குறிக்கவும், நமது கர்த்தர் இயேசுவை அநேகந்தரம் குறிக்கவும்

பயன்படுத்தப்பட்டுள்ளது. யோவான் எழுதின சுவிஷேசத்தின் முதல் வசனத்தில், யேகோவா தேவனின் லோகோஸாகிய, அவருடைய ஒரே பேறானவரை, அதாவது தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாய் இருப்பவரைக் குறிப்பிடுவதற்கு **theos** என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. (வெளிப்படுத்தல் 3:14). இந்த இரண்டு தேவன்களுக்கும் வித்தியாசம் கிரேக்கில் கண்டுபிடிப்பது எளிது. எப்படியெனில் theos என்ற வார்த்தை யேகோவாவைக் குறிக்கும் இடத்தில் அதற்கு முன்பு கிரேக்க சுட்டிடைச்சொல் வரும். மேலும் theos, லோகோஸ்/இயேசுவைக் குறிக்கும் இடத்தில் அதற்கு முன்பு கிரேக்க சுட்டிடைச்சொல் வராது.

(எ. கா.) “In the beginning was the Logos, and the Logos was with the God (யேகோவா தேவன்), and the Logos was a God (இயேசு). The same was in the beginning with the God (யேகோவா தேவன்).” – Emphatic Diaglott.

இது மிகச் சரியான மொழிப்பெயர்ப்பாகும். “நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்” என்று இயேசு கூறியுள்ளார் (யோவான் 8:42). குமாரன் தகப்பனாக இருக்க முடியாது. மேலும், குமாரனுக்கு ஆரம்பம் இல்லை என்று சொல்ல முடியாது, ஏனெனில், குமாரன் என்கிறபோது, தகப்பனிடமிருந்து வந்த ஒரு ஜீவியாகும். வேதவாக்கியங்களை இவ்வாறு நிதானித்துப் பார்க்கும்போது, அவைகள் இசைவான கருத்தைத் கொடுக்கின்றது. ஆனால், வேதவாக்கியங்கள் தவறான கண்ணோட்டங்களில், தவறான உபதேசங்களின் அடிப்படையில் பார்க்கப்படும்போது, சத்திய வெளிச்சம் இருளாகவே காணப்படும். மேலும், அனைத்தும் தேவனுடைய இரகசியமாய் காணப்படாமல், அக்கிரமத்தின், இருளின், தப்பறையின் இரகசியமாகவே காணப்படும்.

“அவருக்குள் ஜீவன் இருந்தது.” மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளேயே ஜீவன் இருந்ததே ஒழிய, மற்ற எவரிடமும் ஜீவன் இல்லாத காரியம், மனுக்குலமிடமிருந்து நமது கர்த்தர் கொண்டிருக்கும் வேறுபட்ட நிலையைக் காட்டுகின்றது. இயேசுவைத் தவிர மீதமான முழு மனுக்குலமிடம், மரணம் கிரியை செய்து கொண்டிருந்தது. ஆதாம் கீழ்ப்படியாமைக்குள் கடந்துபோய், தனக்குள் இருந்த ஜீவனை இழந்தது முதல் அவருடைய சந்ததி முழுவதின் மேலும் மரணம் ஆண்டு கொண்டது. ஆகவே, ஆதாமினால், தனக்குப் பின்வரும் சந்ததிக்கு மரிக்கும் நிலையையே பகிர்ந்து அளிக்க முடிந்தது. கிறிஸ்து பாவிகளுக்கு விலகினவராகவும், பரிசுத்தமுடையவராகவும், குற்றமற்றவராகவும், மாசில்லாதவராகவும் இருந்தபடியால், இவருக்குள் இருந்த ஜீவன் இவரை இரட்சகராக்கிற்று. இவரை பிதா, நம்முடைய இனத்திற்கு நம்பிக்கையின் ஒளியாக அனுப்பினார். இயேசு, மனிதனாக வருவதற்கு முன்போ அல்லது மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக வந்தபோதோ, ஏதோ ஒருவிதத்தில் தம்முடைய ஜீவனுக்குரிய உரிமையை இழந்திருப்பாரானால், நம்முடைய நம்பிக்கையின் ஒளி அழிந்து போயிருக்கும். ஆனால், அவர் ஜீவனுக்குரிய உரிமையைப் பெற்றிருந்தபடியால், இயேசு, பிதாவின் திட்டத்தின்படி தம்முடைய ஜீவனை நம்பொருட்டாக ஒப்புக்கொடுத்தார். அதாவது, பாவத்தினால் ஆதாம் இழந்த ஜீவனுக்கு சரிநிகர் பலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அதாவது, ஆதாமின் மரணத் தீர்ப்பில் பங்கடைந்த அனைவருக்கும் சரிநிகர் பலியாக/விலைக்கிரயமாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்ட அவர் இப்பொழுது மனுக்குலம் முழுவதற்கும் ஒளிக்கொடுப்பவராகவும், நம்பிக்கை கொடுப்பவராகவும், ஜீவன் கொடுப்பவராகவும் மாறிவிட்டார். மரித்துக் கொண்டிருக்கின்ற இந்த உலகத்திற்கு அளிக்கப்பட்ட இந்த மாபெரும் ஒளி மற்றும் ஜீவனுக்காக, தேவனை ஸ்தோத்தரிப்போம். இந்த ஒளி/வெளிச்சம் மனுஷர்களின் இருளின் மத்தியில் பிரகாசித்து மனுஷர்களால் புரிந்துக்கொள்ளப்படாமலும், ஏற்றுக்கொள்ளப்படாமலும் இருந்தாலும், இதுவே “உலகத்தில் வந்து, ஒவ்வொரு மனிதனையும் பிரகாசிப்பிக்கிற” உண்மையான, மெய்யான ஒளியாக இருக்கின்றது. ஆகவே இயேசு மாம்சத்தில் இருந்தபோது, அவரோடுகூட இருந்த யூதர்கள், இந்த ஒளியைப் புரிந்துக்கொள்ளமலும், ஏற்றுக்கொள்ளாமலும் இருந்ததும், இன்றளவும் உலகம் இந்த ஒளியைப் புரிந்துக்கொள்ளாமல் இருப்பதும் ஒரு பொருட்டல்ல. எப்படி இருப்பினும், இவரே மெய்யான ஒளியாக இருக்கின்றார். மேலும், பிதாவுடைய ஏற்றக் காலங்களில், அவருடைய மாபெரும் திட்டத்தை நிறைவேற்றி முடிப்பார். இந்தத் திட்டத்திற்கு

இயேசுவே மையமாகவும், வெளிப்பாடாகவும், வார்த்தையாகவும் இருக்கின்றார். உலகத்தில் வந்து பிறந்த ஒவ்வொரு மனுஷனையும் இயேசு வெளிச்சமூட்டுவார். ஒருவரும் போதிய அறிவு இல்லாத காரணத்தினால் நித்தியஜீவனை இழந்துவிடாதபடிக்கும், ஒருவரும் இருளிலேயே வலுவிழந்து போகாதபடிக்கும், ஏற்றக் காலத்தில் அனைத்துக் குருடாக்கப்பட்ட கண்களும் திறக்கப்படும்; மேலும், அனைத்துச் செவிடான காதுகளும் திறக்கப்படும்; மேலும், குருடாய் இருந்தவன், அப்பொழுது தேவன் ஏற்படுத்தின பிரபுவும், இரட்சகருமான அந்த மாபெரும் ஒளியைத் தெளிவாகக் காண்பான். இயேசுவின் மூலமே ஒருவன் பிதாவிடம் சேர முடியும் (ஏசாயா 35:5; யோவான் 8:12, 14:6).

"இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடியிருப்பதினால்" சிறுபான்மையானவர்களே இதுவரையிலும், இந்த ஒளியைப் பார்த்துள்ளனர் (ஏசாயா 60:2). இயேசுவின் உண்மையுள்ளவர்கள், பொக்கிஷமானவர்கள், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள், இந்த இருளான காலக்கட்டத்தில் மெருகூட்டப்பட்டு, அவரோடுகூட மகிமையடைந்து, மனுக்குலத்தை வெளிச்சமூட்டும் மாபெரும் வேலையில் அவரோடுகூட உடன்பங்காளிகள் ஆகும்போது, மகிமையான ஆயிரம் வருஷம் அரசாட்சியின் நாளில், இந்த மாபெரும் ஒளி தேவனுடைய இராஜ்யத்தில் சூரியனைப் போல் பிரகாசிக்கும் என நாம் காத்திருக்கின்றோம். மேலும், இயேசுவும், சபையும், ஆபிரகாமின் வித்தாக இருந்து, மனுக்குலத்தை வெளிச்சமூட்டுவதின் மூலமாகவும், நித்திய ஜீவன் பெற்றுக்கெள்ளத்தக்கதாக தேவனிடம் கிட்டிச் சேர்வதற்குமான வாய்ப்புகளின் மூலமாகவும், பூமியன் குடிகளை ஆசீர்வதிக்கும்போது, இந்த மாபெரும் ஒளி, தேவனுடைய இராஜ்யத்தில் சூரியனைப் போல் பிரகாசிக்கும் என நாம் காத்திருக்கின்றோம் (மத்தேயு 13:43; ரோமர் 8:17; கலாத்தியர் 3:16, 29; ஆதியாகமம் 22:17, 18).

தற்காலத்தில் இந்த மாபெரும் ஒளியின் சிறு வெளிச்சத்தையாகிலும் கண்டவர்கள் எவ்வித சாக்குப்போக்கையும் அளிக்க முடியாது. யார் யாருடைய கண்கள் காண்கின்றதோ, காதுகள் கேட்கின்றதோ அவர்கள் பாக்கியவான்கள். மேலும், இத்தகையவர்களுக்கு அதிக பொறுப்புகளும் உண்டு. மேலும், இவர்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்திற்கு இசைவாக இவர்கள் நடக்கவில்லையெனில் அதிக "அடிகளும்" இவர்களுக்கு உண்டு (லூக்கா 12:47, 48).

அப்போஸ்தலன் இங்கு ஒளியையும், ஒளியின் செய்தி தூதுவனையும் கவனமாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். யோவான் ஸ்நானனைக் குறித்து நமது கர்த்தர், "அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருக்கிறான்" என்று கூறுகின்றார் (யோவான் 5:35). ஆங்கில மொழிப்பெயர்ப்பில் Shining Lamp (விளக்கு) என்பதற்குப் பதிலாக Shining Light என்று தவறாக மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது (தமிழ் மொழிப்பெயர்ப்பு சரியாக உள்ளது). நமது கர்த்தர் வெளிச்சம்/ஒளி என்று பேசப்படும் இடங்களில் முற்றிலும் வேறுப்பட்ட கிரேக்க வார்த்தையான **"phos"** பயன்படுத்தப்படுகின்றது. பரிசுத்த ஆவியில் கர்த்தரோடு பங்குக்கொள்கின்ற கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் குறித்துப் பேசப்படும்போது, இதே கிரேக்க வார்த்தை **"phos"** பயன்படுத்தப்படுகின்றது. இந்தத் தமது சரீரத்தின் அங்கங்களை, சபையின் அங்கங்களைக் குறித்துக் கர்த்தர் பேசுகையில், "நீங்கள் உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றீர்கள்" என்றார். இங்கும் இதே கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப்படுகின்றது. இதே கிரேக்க வார்த்தையான **"phos"** பயன்படுத்தப்பட்டுள்ள வேதவாக்கியங்கள் பின்வருமாறு: மத்தேயு 6:23; லூக்கா 16:8; 2 கொரிந்தியர் 6:14; ரோமர் 13:12; எபேசியர் 5:8; 1 பேதுரு 2:9; 1 யோவான் 1:7. கிறிஸ்துவுக்கும், யோவானுக்கும் இன்னும் ஒரு வித்தியாசம் உள்ளது. என்னவெனில், நமது கர்த்தர் லோகோஸாக, வார்த்தையாக இருக்கின்றார். ஆனால், யோவான் ஸ்நானனோ வார்த்தையாக இருக்காமல், "வனாந்தரத்தின் கூக்குரலாக" மாத்திரமாகவே இருக்கின்றார்.

லோகோஸ் மாம்சமானபோது, மனுஷனாகிய கிறிஸ்து இயேசு ஆனார். அவர் தமக்குள் இருந்த பிதாவாகிய தேவனின் வல்லமையினால் தாம் சிருஷ்டித்த உலகத்திற்குள் வந்தபோது, உலகம் அவரை அறிந்துக்கொள்ளவில்லை; மேலும், தமது சொந்த ஜனங்களுக்கு அவர் தம்மை விசேஷமாக வெளிப்படுத்தினபோது, அவர்களும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படியாக இருந்தபோதிலும் சிலர் அவரை ஏற்றுக்கொண்டார்கள்.

இப்படியாக அவரை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்; அதாவது, தேவனுடைய புத்திரராகும் சிலாக்கியத்தினாலும், வல்லமையினாலும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இக்காலத்திற்கு முன்புவரை தேவனுடைய ஊழியர்கள்/வேலைக்காரர்கள் மற்றும் நண்பர்கள் ஸ்தானமே மிக உயரிய ஸ்தானமாகக் காணப்பட்டது. இங்கு நாம் யூத யுகத்திலிருந்து, கிறிஸ்தவ யுகத்திற்கு மாறும் யுக மாற்றத்தைக் காணலாம். மேலும், இந்த மாற்றத்தை நம்முடைய கர்த்தரே செய்தார். நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய தீர்ப்பின் கீழ் இருந்தவர்களை மீட்கவும், ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தம் எல்லார் மேலும் வந்த மரணத் தீர்ப்பின் கீழ்க் காணப்படும் மனுக்குலம் முழுவதையும் மீட்கவும் இயேசு வந்தார்.

இந்த ஈடுபலியானது, தெய்வீக நீதிக்கு செலுத்தப்படாத வரையிலும் குற்றவாளிகளால், தகப்பன் ஆதாமினால் ஆதியில் அனுபவிக்கப்பட்ட புத்திரர் ஸ்தானத்திற்கு வர முடியாது. ஆதாம் பாவியானபோது, அவரும், அவருடைய சந்ததியும் இந்த ஸ்தானத்தை இழந்து போனார்கள். உலகத்திற்கு அனுப்பப்பட்ட மாபெரும் ஒளியின் வேலையானது, மனுஷனுடைய ஜீவனை மீட்பதோடு அல்லாமல், மனுஷனை வெளிச்சமூட்டுவதாகவும், புத்திரராக விருப்பமுள்ள யாவரையும், அந்த ஸ்தானத்திற்கு மீட்க வேண்டியதாகவும் இருந்தது. ஆனால், இந்த வேலை இன்னும் நிறைவடையவில்லை. இவ்வேலை சிறிதளவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது; ஏனெனில், அவருடைய சொந்த ஜனத்தாரில் ஒரு சிறு கூட்டமே உண்மையான ஒளியை ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும், எல்லா பாஷைக்காரரிலும், எல்லா ஜாதியாரிலும், ஒரு சிறுமந்தை மாத்திரமே அவரையும், அவருடைய ஆசீர்வாதத்தையும் (புத்திரர் ஆகும் ஸ்தானத்தையும்) ஏற்றுக்கொண்டுள்ளனர். மீதியான பெருங்கூட்டம், சாத்தானினால் குருடாக்கப்பட்டபடியினால், 2 கொரிந்தியர் 4:4-ஆம் வசனத்தில் அப்போஸ்தலர், விளக்குவதுபோல் மெய்யான ஒளியைப் பார்க்கக்கூடாத வண்ணம் தடுக்கப்பட்டுள்ளனர்.

ஜனங்களைக் காரிருள் மூடியிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் அழைக்கப்பட்டவர்கள், பரம அழைப்புக்குள்ளாக அழைக்கப்பட்டுள்ளனர். பரம அழைப்பைப் பெற்றவர்கள், மனித சுபாவத்தைத் திரும்பப் பெறுவதற்கோ, பாவத்தினால் இழந்த ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களைத் திரும்பப் பெறுவதற்கோ அல்லாமல், லோகோஸோடு ஒரு ஐக்கியம்/உறவு கொள்வதற்கு, அதாவது, அவருடைய ஒளியில் பங்காளிகளாகவும், மனுக்குலத்தை ஆசீர்வதித்து வெளிச்சமூட்டும் எதிர்கால வேலையில் அவரோடு பங்காளிகளாகவும் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தேவனுடைய புத்திரர்கள், விஷேசமான புத்திரர்கள் ஆவார்கள். பாவம் செய்வதற்கு முன்பு ஆதாம் இருந்த புத்திர ஸ்தானத்தைக் காட்டிலும், இவர்கள் வேறுபட்ட புத்திரர் ஆவர். (லூக்கா 3:38). இவர்கள் தேவதூதர்களாகிய புத்திரர்கள் இருக்கும் தளத்திற்கு மேலான தளத்தில், தேவனுடைய புத்திரர்களாக இருக்கும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதாவது, தேவனுடைய சுதந்திரர்களாக, லோகோஸின் உடன் சுதந்தரர்களாக, லோகோசுடன் தெய்வீகச் சுபாவத்தில் பங்காளிகளாக இருக்கும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதாவது, தூதர் சுபாவத்திற்கும் மற்ற அனைத்துச் சுபாவத்திற்கும் மேலான திவ்வியச் சுபாவத்திற்குப் பங்காளிகளாக அழைக்கப்பட்டுள்ளனர் (2 பேதுரு 1:4, ரோமர் 8:17).

தேவனுடைய புத்திரர்களாகும் இந்த அதிகாரம், பாவிகளுக்கு அருளப்படாமல், நீதிமான்கள் ஆக்கப்பட்டவர்களுக்கு, அதாவது, அவருடைய நாமத்தை விசுவாசித்து, விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு அருளப்பட்டுள்ளது. இவர்கள் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்; ஆனாலும், இவர்கள் மாம்சத்தின் பிள்ளைகள் ஜெநிப்பிக்கப்பட்ட நிலையில் ஜெநிப்பிக்கப்படவில்லை; அதாவது இரத்தத்தினாலும் ஜெநிப்பிக்கப்படவில்லை; எவ்விதமான மாம்ச சித்தத்தினாலும் இவர்கள் ஜெநிப்பிக்கப்படவில்லை. சத்தியத்தின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இவர்களுக்குச் சத்தியமானது, மாம்சீக கருவிகள் மூலம் வழங்கப்பட்டாலும் மனிதனுடைய சித்தத்தினால், இவர்களுடைய ஜெநிப்பிக்கப்படுதல் நடக்க முடியாது; மாறாக, எந்த அளவிற்கு மாம்ச சித்தம் இவர்களால் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, தேவனுடைய சித்தம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ, அந்த அளவின்படியே ஜெநிப்பித்தல் நடக்கும். "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" (யாக்கோபு 1:18). கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இந்தப்

புதுச் சிருஷ்டிகள் (தேவனுடைய புத்திரர்கள், கிறிஸ்துவின் உடன்சுதந்திரர்கள்) பிதாவின் நோக்கத்திற்கும், சத்தியத்திற்கும் பாடுகள் சகிக்க விரும்பத்தக்கதாகவும், லோகோஸ் போன்று சகோதரர்களுக்காக தங்களுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்கும்படி விரும்பத்தக்கதாகவும் (அவருடைய வார்த்தை மற்றும் கிருபையின் மூலம்) தேவனுடைய ஆவியை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். மேலும் இவர்கள் இந்த யுகத்திற்கான தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாக கிறிஸ்து மூலம் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான பரிசுத்தமான, ஜீவப்பலிகளாக தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமெனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவ்வாறாக இவர்கள் கிறிஸ்துவுடன் பாடுப்படும்போது, இவர்கள் இறுதியில் இயேசுவோடு இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாகவும், பிதா அவருக்கு வாக்களித்த வல்லமையிலும், மகிமையிலும், இராஜ்யத்திலும் அவரோடு உடன்சுதந்திரர்களாக இருப்பார்கள் (ரோமர் 8:17, யோவான் 1:11-12).

யோவான் 1:14-ஆம் வசனமும், 5-ஆம் வசனத்தின் அதே கருத்தையும் மற்றுமொரு கோணத்தில் கொடுக்கப்படுகின்றது. "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்." சிலர் இவ்வசனத்தை தவறாகப் புரிந்துக்கொண்டுள்ளனர், அதாவது, பிதாவாகிய தேவனுடைய ஒரே பேறான குமாரன் ஆவியின் ஜீவியாக உலகத்தில் வந்து, ஒரு மாம்ச சரீரத்திற்குள் குறிப்பிட்ட காலம் குடியிருந்து, அந்தச் சரீரம் சிலுவையில் அறையப்பட்ட பின்னர், ஆவி சரீரத்திலிருந்து போய்விட்டது என்கின்றனர். இக்கருத்து அநேக வேதவாக்கியங்களை அவமாக்குகின்றது. இக்கண்ணோட்டத்தில் பார்த்து, அநேகர் நமது கர்த்தர் ஆவிக்குரிய ஜீவியாக மாத்திரம் இருந்துள்ளார் என்றும், ஒருபோதும் அவர் மனுஷனாகவில்லை என்றும், மனிதனைப் போன்று காட்சியளித்தாரே ஒழிய, உண்மையான மனிதனாக அவர் இருக்கவில்லை என்றும் கருதுகின்றனர். இக்கண்ணோட்டத்தில் பார்க்கையில் நமது கர்த்தர், பிதாவிடம் ஏறெடுத்த ஜெபங்கள், அவருடைய வனாந்தர சோதனைகள், அவருடைய கண்ணீர்கள், மரணத்தின்போது அவர் கூக்குரலிட்டது அனைத்தும் போலி/நடிப்பு எனக் காட்டிவிடுகின்றது. மேலும், இக்கண்ணோட்டத்தின்படி அவர் மனித நிலைக்கு அப்பாற்பட்ட ஆவியின் ஜீவியாக இருப்பதினால் அவரால் பாடுபடவும் முடியாது, பரீட்சிக்கப்படவோ, சோதிக்கப்படவோ முடியாது. மேலும் இக்கண்ணோட்டத்தை வைத்து பார்க்கும்போது, அவர் உண்மையில் மரிக்காமல், மரித்ததுபோல் காட்சியளித்தார் என்றாகிவிடும். மேலும், அவர் குடியிருந்த மாம்சம் சிலுவையில் அறையப்பட ஆரம்பிக்கப்பட்ட மாத்திரத்தில், ஆவியின் ஜீவியாக இருந்த லோகோஸ், சரீரத்திலிருந்து வெளியேறி, கண்களுக்குப் புலப்படாமல், கல்வாரியில் நடந்திட்ட சோகக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவராகிவிடும்.

காளை மற்றும் ஆட்டின் பலிகளின் மூலம் 16 நூற்றாண்டுகளுக்கு மேலாக தேவன், பாவங்களுக்கான போலித்தனமான பலியையும், நாடகமான மரணத்தையும் நிழலாய்க் காட்டவில்லை. ஆதாமின் மரணத் தீர்ப்பு என்பது நிஜமான தீர்ப்பாகும். உண்மையான தண்டனையாகும், மேலும் பாவங்களிலிருந்து விடுவிக்கும்படி, மனிதனாகிய இயேசு கிறிஸ்துவினால் நம்பொருட்டுக் கொடுக்கப்பட்ட பலியும், அதாவது, ஈடுபலியும் நிஜமானதேயாகும் (1 தீமோத்தேயு 2:5-6). ஐஸ்வரியனாக இருந்த அவர், நம் பொருட்டுத் தரித்திரர் ஆனார் என்று நமக்கு அப்போஸ்தலர் உறுதியளிக்கின்றார். அவர் தாழ்வான சுபாவத்தின் போர்வையைப் போர்த்திக் கொண்டு, தரித்திரர் போன்று நடிக்கவில்லை. அவர் உண்மையில் தரித்திரர் ஆனார். அவர் தமது மேலான சுபாவத்தின் கனத்தையும், மகிமையையும் விட்டு, தம்மை முழுமையாகத் தாழ்த்தி, மாம்ச சுபாவம் எடுத்தார். அவர் விழுந்துபோன மாம்ச சுபாவத்தையோ, பாவ சரீரத்தையோ எடுக்காமல், பாவம், மரணம் மற்றும் வீழ்ச்சியற்ற மனுஷ சுபாவத்தை எடுத்தார்.

இக்கருத்து 14-ஆம் வசனத்திற்கு இசைவாய் உள்ளது. "அவர் மாம்சமாகி" என்பது, சொல்லர்த்தமாக அவர் மாம்சத்தில் வந்ததை/மாம்சமானதை காட்டுகின்றது. இப்படியாக, அவர் தம்மைத் தாழ்த்தினபடியால்தான், அவர் நம் மீட்பராக முடிந்தது, மேலும், மனிதனின் மீறுதலுக்காக தம்மை ஈடுபலியாக தேவனுக்குக் கொடுக்கவும் அவரைத் தகுதியாக்கிற்று. ஒரு மனுஷனாலே பாவம் வந்ததுபோல, ஒரு மனுஷனாலே உயிர்த்தெழுதலும் வந்தது." மனிதன் மரணத் தீர்ப்பிற்குள் சென்றபடியால், ஒரு தேவதூதனுடைய ஜீவனோ அல்லது பிரதான தூதனுடைய ஜீவனோ அல்லது மற்ற எந்த ஜீவனோ, மனுஷனுடைய ஜீவனுக்கு

சரிநிகர் பலியாக முடியாது. வேறு எந்த ஜீவனும் ஆதாமையும், அவருடைய சந்ததியையும், மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிக்க முடியாது. மிருகங்கள் பாவத்திற்கு விலகினவைகளாக இருப்பினும், பாவ மனுஷனுக்குச் சரிசமமான சுபாவத்தில் இராததினால், மனுஷனுக்குரிய ஈடுபலியாக தெய்வீக நீதியினால் ஏற்றுக்கொள்ள முடியாது. லோகோஸ் ஆவியின் சுபாவத்திலிருந்து, மனுஷ சுபாவத்திற்கு மாற்றப்படும்போது மரிக்கவில்லை, மாறாக, "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக" இருக்கும் போதுதான் மரித்தார், அவர் தம்முடைய ஜீவன் முழுவதையும், எழுதியிருக்கிறபடியே ஒப்புக்கொடுத்தார். அவர் தமக்கென்று எதையும் பிடித்து வைத்துக் கொள்ளவில்லை.

"அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" (மத்தேயு 13:44, 46). "கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்"( ஏசாயா 53:10). "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18). "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம் மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" (ரோமர் 6:9).

"அவருடைய மகிமையைக் கண்டோம்" (யோவான் 1:14). யாருடைய கண்கள் இவ்வுலகத்தின் அதிபதியினால் குருடாக்கப்படவில்லையோ, அவர்கள் அவருடைய பூரணத்தையும், சிறப்பையும், அவருடைய பண்புகளையும் கண்டார்கள். மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் இந்த மகிமைகள், அவர் ஆதாமின் பாவ சந்ததியில் உள்ளவர் அல்ல என்பதையும், சகல மனுக்குலத்திற்கும், பாவத்திற்கும் அப்பாற்பட்டவர் என்பதையும் காட்டிற்று. மேலும், அவர் பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்டவர் என்றும், கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவர் என்பதையும் காட்டிற்று. அவர் உலகத்தில் இருந்ததுபோல, நாமும் உலகத்தில் இருக்கின்றோம் என்கிறார் அப்போஸ்தலர். நாம் சுபாவத்தில் பாவிகளைப் போன்றும், கோபாக்கினையின் பிள்ளைகள் போன்று இருப்பினும், கிருபையினால், நாம் ஒரு புதிய சுபாவத்திற்குள் மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம். நம்முடைய இருதயங்களில் கிரியை செய்து, நம்மை வெளிச்சமூட்டி, சுத்திகரித்து, பரிசுத்தமாக்கும் இந்தக் கிருபையானது, நம்மைப் படிப்படியாக "மகிமையிலிருந்து மகிமைக்கு" மாற்றி, தேவனுடைய ஒரே பேறான குமாரனும், நம்முடைய மீட்பரும், கர்த்தருமாய் இருப்பவரின் சாயலுக்கு அதிகமதிகமாக ஒப்பாக்குகின்றது. "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதுமான மாபெரும் இரட்சிப்பிற்காக தேவனுக்கும், ஆண்டவருக்கும் இப்போதும், சதாகாலங்களிலும் துதி உண்டாவதாக" (எபிரெயர் 2:3).

**R2555**

# “அந்த வார்த்தை மாம்சமாகி”

## லூக்கா 2:1-16

"அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக: ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்." மத்தேயு 1:21

நம்முடைய அருமையான மீட்பரைக் குறித்து, வேத வாக்கியங்களின் வெளிச்சத்தில் ஆழமாக அறியும்போது, அந்த அளவிற்கு நாம் அவரை ஏற்றுக்கொள்வோம், அன்பு செய்வோம் மற்றும் அவருடைய சாயலைப் பெற நாடுவோம். கூர்ந்து மிகவும் கவனிக்கத்தக்கதான அவருடைய வாழ்க்கையைப்போல், வேறு எவருடைய வாழ்க்கையும் இருந்ததில்லை. இப்படியாகக் கூர்ந்து கவனிக்கையில் அருமையான குணலட்சணங்களை அவரிடத்தில் காணமுடியும். ஆனால், இயேசுவின் வாழ்க்கை கூர்ந்து கவனிக்கப்பட்டதுபோல், வேறு எவருடைய வாழ்க்கையாகிலும் கவனிக்கப்பட்டால் பலவீனங்களும், பாவமும், கீழான தன்மைகளுமே காணப்படும்.

நான்கு சுவிசேஷப் பதிவுகளிலேயே, யோவான் மாத்திரம்தான், நமது கர்த்தரின் பரலோக ஜனனத்தைக் குறித்துக் கூறுகின்றார், மேலும், அவர் மாம்சமாக்கப்படுவதற்கு முன்பு அவர் ஆவிக்குரிய ஜீவியாக, பிதாவோடு, அவருடைய மகிமையில் பங்குக் கொண்டவராக, பிதாவாகிய தேவனோடு, தேவனாக இருந்தார் என்று நமக்குக் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், எல்லா சுவிசேஷகர்களும் "அவர் மாம்சமாக்கப்பட்டார்" என்ற கருத்தில் தெளிவாக இருக்கின்றனர். மாறாக, அவர் ஓர் ஆவிக்குரிய ஜீவியாகவே இருந்துவிட்டு, மனுஷர் முன் காட்சியளிக்கத்தக்கதாக, மாம்ச தோற்றம் எடுத்ததாகச் சுவிசேஷகர்கள் கூறவில்லை. மேலும், அவர்கள் ஆவிக்குரிய ஜீவியாக இருந்த லோகோசுக்குள் இருந்த ஜீவன், மனுஷனாகிய இயேசுவின் ஜீவனாயிற்று என்றும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தார் என்றும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராகவும், யூதர்களின் அனைத்துச் சூழ்நிலைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் கீழ்ப்பட்டவராகவும் இருந்தார் என்றும் கூறுகின்றனர். யோசேப்பின் வம்ச வரலாறை மத்தேயு அவர்கள் கொடுக்கின்றார். இயேசு, யோசேப்பின் குமாரன் இல்லை என்பது தெளிவானதாக இருந்தாலும், அவரை அவர் குமாரனாக தத்தெடுத்துக் கொண்டபடியால் அவர் வழியில் வந்தவர் என்று குறிப்பிடப்படலாம். மரியாள் மூலம் வந்த வம்ச வரலாறை லூக்கா அவர்கள் குறிப்பிடுகின்றார்; இப்படியாக, நமது கர்த்தர் மாம்சத்தில் நம்முடைய இனத்தோடு இணைக்கப்பட்டார், மேலும் நாத்தானின் மூலம், தாவீதுடைய இராஜ வம்சத்திற்கும் இணைக்கப்பட்டார்.

நமது கர்த்தர் பிறந்திட்ட காலம், அநேக கோணங்களில் பார்க்கும்போது சாதகமானதாக இருந்தது என்பதையும், இந்த முக்கியமான சம்பவம் நிறைவேறுவதற்கென, உலகத்தின் விஷயங்கள் ஆயத்தம் பண்ணப்பட்டதிலும் தெய்வீக ஞானம் செயல்பட்டது என்பதையும் காணலாம். என்னவெனில், (1) நேபுகாத்நேச்சரின் அரசாட்சியில் உலகத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று ஆரம்பித்த ஆவியானது இதற்கு அனுகூலமாயிருந்தது. அதாவது, மனுக்குலத்தின் பல்வேறு ஜாதிகள் தொடர்புக் கொள்வதற்கும், தங்கள் கருத்துக்களை விரிவாக்குவதற்கும் ஏதுவாயிற்று. (2) இதன் காரணமாக ஜனங்கள் ஒரு தேசத்திலிருந்து இடம் பெயர்ந்து, மற்றத் தேசத்திற்குப் போனது, எல்லாரையும் பரந்த நோக்கமுடையவராக ஆக்கிற்று. (3) சிறைப்பிடிக்கப்பட்டதினால், பாபிலோனுக்குள் சென்ற யூதேயா மற்றும் இஸ்ரயேல், இவ்விதமான புதிய (பாபிலோனுடையச்) சூழ்நிலைகளுக்குப் பழகிப்போனபடியால், கோரேஸ் மன்னன், அவர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பலாம் என்று வாய்ப்பு வழங்கினாலும் சொற்பமானவர்களே அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். பல மில்லியன்களாக இருந்த கோத்திரத்தார்களில், 50,000 பேரே புறப்பட்டுப் போனார்கள். புறஜாதிகள் மத்தியில் இருந்திட்ட யூதர்கள் தொலைந்துப் போகவும் இல்லை, ஆபிரகாமின் உடன்படிக்கை மீதான தங்கள் அனைத்து நம்பிக்கைகளையும் புறக்கணித்துப் போடவும்

இல்லை. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முற்றிலும் உண்மையற்றவர்களாகவும் ஆகிவிடவும் இல்லை. எனினும், இந்த விஷயங்களிலெல்லாம், அவர்கள் கவனக்குறைவாக இருந்தனர்; ஆதாயத்தைதின் மீதே அதிகம் விருப்பம் கொண்டிருந்தனர்; உத்தம இஸ்ரயேலர்களுக்கான ஆவியை வளர்த்துவதில் ஓய்ந்திருந்தனர். எனினும், அவர்கள் குடியிருந்த தேசத்தார் மீது தங்களுடைய செல்வாக்கைப் பெற்றிருந்தனர். மேலும், ஒரே தேவன் மீதும், உலகத்தின் இரட்சகராக, தேவனுடைய குமாரனாக வரவிருக்கிற மேசியாவின் மீதுமான இஸ்ரயேலர்களின் நம்பிக்கை, மற்றவர்களுக்குச் சாட்சியாகவும் விளங்கிற்று. (4) கிரேக்க சாம்ராஜ்யம் ஜெயங்கொள்ளும் காலம் வந்தபோது, இச்சாம்ராஜ்யம் நாகரிகம் அடைந்த உலகத்திற்கு, உயரிய இலக்கியங்களை அறிமுகப்படுத்தினபடியால் அப்பொழுது கிரேக்க மொழி, நாகரிகம் அடைந்த உலகத்தின் இலக்கிய மொழியாக அமைந்தது. (5) ரோம சாம்ராஜ்யம் உலகத்தைக் கைப்பற்றி, வல்லமையின் உச்சக்கட்டத்தில் இருக்கும்போது, உலகளாவிய சமாதானம் இருந்தது. இது சுவிசேஷத்தை அறிவிப்பதற்குச் சாதகமான காலமாகவும், அதன் (சுவிசேஷத்தின்) பிரதிநிதிகள், தேசம் விட்டுத் தேசம் போவதற்குப் பாதுகாப்பாகவும் இருந்தது. (6) இஸ்ரயேலும் அறிவு ரீதியாக, ஒழுக்க ரீதியாக, மத ரீதியாக நல்ல உயரிய நிலையை அடைந்துவிட்டது; மேலும் வேத வாக்கியங்கள் மேசியாவின் வருகைக்காக அனைத்து மனுஷர்களும் காத்திருந்தார்கள் என்றும் நமக்குக் கூறுகின்றது (லூக்கா 3:15).

இந்த ஏற்றவேளையில்தான், தெய்வீக முன்னேற்பாட்டின்படி, ரோம சக்கரவர்த்தியான அகஸ்துராயர் தனது இராஜ்யபாரத்தில் வரி திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்த ஆணையானது, வரி விதிப்பாகக் காணப்படாமல், வரிக்கான பெயர்ப் பதிவாக இருந்தது. இன்றைய காலங்களில் வரி விதிப்பவர்கள் அனுப்பப்படுவதுபோல் அன்று இராமல், ஒவ்வொரு ஆண் குடிமகனும், தனது குடும்பத்தைப் பற்றியும் தலைமை அலுவலகத்தில், தன்னைப் பற்றியும் பதிவு செய்ய வேண்டும். இதுவே யோசேப்பும், அவருக்கு நிச்சயிக்கப்பட்ட மனைவியாகிய மரியாளும், அதாவது, இயேசுவின் தாயும், தங்களின் சொந்த பட்டணத்திற்குத் திரும்பி வருவதற்குக் காரணமாயிற்று; ஏனெனில், அவர்கள் இருவரும் தாவீதின் பட்டணமாகிய பெத்லகேமைச் சார்ந்தவர்கள் ஆவர். இவ்விதமான முன்னேற்பாடுகளின் வாயிலாக தீர்க்கத்தரிசியினால் முன்னுரைக்கப்பட்டதுபோல, தாவீதின் மாபெரும் வாரிசு பெத்லகேமில் பிறக்கும்படி, மரியாளும், யோசேப்பும் அங்குக் கொண்டு வரப்பட்டார்கள் (மீகா 5:2).

தெய்வீக ஏற்பாட்டில் நமது இரட்சகரின் பிறப்பிற்கும், சுவிசேஷ செய்தி புறப்படுவதற்கும் பண்ணின ஆயத்தங்களை இந்தச் சிறு சம்பவங்கள் மூலம் அறியும்போது, கர்த்தருடைய ஜனங்களின் விசுவாசம் பலப்படுத்தப்படுகின்றது. கடந்த காலத்தின் இந்தச் சிறு சம்பவங்களில் கூடத் தேவன் காட்டின அக்கறையை உணரும்போது, இன்னும் எதிர்க்காலத்தில் நிறைவேற போகிற அவருடைய திட்டத்திற்கான அவருடைய ஏற்பாடுகள், மற்றும் ஞானத்தின் மீதான நம்பிக்கை நமக்கு உறுதி அடைகின்றது. அதாவது, பெத்லகேமில் பிறந்த அவரில் மையம் கொண்டுள்ள மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் எதிர்க்காலத்தில் நிறைவேறப் போகிறதில் உள்ள அவருடைய ஏற்பாடுகள் மற்றும் ஞானத்தின் மீதான நம்பிக்கை உறுதியடைகின்றது. மேலும், தெய்வீகத் திட்டத்தில் உள்ள பெரிய விஷயங்களில், தெய்வீக வழிநடத்துதல்களை, முன்னேற்பாடுகளைக் காண்கையில், அவருடைய ஜனங்களின் தனிப்பட்ட விஷயங்களிலும் அவருடைய வழிநடத்துதல்கள், முன்னேற்பாடுகள் இருக்கும் என்ற விசுவாசம் ஏற்படுகின்றது. நமது இரட்சகரின் பிறப்புத் தொடர்பான சிறு விஷயங்களிலும், தேவன் இவ்வளவு ஒழுங்குகள் செய்துள்ளார் என்றால், அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகளின் அனைத்து விஷயங்களை ஒழுங்குப்படுத்த அவர் விருப்பமும், வல்லமையும் உள்ளவராக இருப்பார் என்பதை அதிகமதிகமாக உணர்ந்து கொள்வோமாக. நாம் பாவிகளாக இருக்கும்போதே, தேவன் நம்மை இவ்வளவாக அன்புகூர்ந்து, நமது மீட்புக்காக இவ்வளவு அக்கறைகொண்டு, காரியங்களைச் செய்வாராகில், இப்பொழுது அவருக்கு அந்நியரும், பரதேசியுமாய் இராமல், அவருடைய புத்திரர்களாய், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாகியுள்ள பரிசுத்தவான்களாகிய நமக்கு, இன்னும் அதிகமாய்ச் செய்வார். மேலும், அவரை அன்பு செய்கிறவர்களுக்கு, அவருடைய நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக சம்பவிக்கும் என்று அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளப்படி அவருடைய அன்பிலும், அவருடைய வழிநடத்துதல்களின் மேலும் திடன்கொள்ளுவோமாக (ரோமர் 5:8-10, 8:28).

யோசேப்பையும், மரியாளையும், பெத்லகேமிற்குக் கூட்டிக்கொண்டு வந்த ராயனுடைய அதே ஆணையானது, தாவீதின் அநேகம் குடும்பங்களையும் பெத்லகேமிற்குக் கூட்டிக்கொண்டு வந்தது. ஆகையால்தான் யோசேப்பும், மரியாளும் பெத்லகேமிற்கு வந்தபோது, வழிப்போக்கர் விடுதிகளும், வாடகை அறைகளும், வாடிக்கையாளர்களால் நிறைந்திருந்ததைக் காண்கின்றோம். மேலும், பிரயாணம் செய்பவர்கள் தங்குவதற்கான ஆயத்தம் பண்ணும் (பொருட்களை) விஷயங்களைச் சொந்தமாக வைத்து எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்தது. மேலும், தங்களுடைய சொகுசுக்கு ஏற்ப விடுதிகளின் பிரகாரத்தில் தங்குவதற்கான அறைகளையும் ஏற்படுத்துவார்கள். ஆகையால்தான் யோசேப்பும், மரியாளும் வெளியே தங்கினார்கள். குழந்தையாகிய இயேசு பிறந்தபோது, தொழுவமானது, அவருக்கு மிகவும் சௌகரியமான இடமாயிற்று.

பெத்லகேம் ஊர் இன்றளவும் இருக்கின்றது. ஆனாலும், அன்று இருந்தது போன்று இன்று இல்லை; கலாச்சாரமும் இப்பொழுது கொஞ்சம் மாறுப்பட்டுள்ளது. அங்கு இருக்கும் ஒரு குகையானது, குழந்தையாய் பிறந்த இயேசு கிடத்தப்பட்ட இடம் என்று கருதப்படுகின்றது. அங்கு இப்பொழுது ஒரு கத்தோலிக்க திருச்சபை கட்டப்பட்டு, தொடர்ச்சியாக திருப்பலி நடத்தப்பட்டு வருகின்றது. இப்படியாக, விக்கிரக வழிபாடு போன்றதாகி விட்ட விஷயங்களுக்காக அனுதாபப்படுகின்றோம். அவருடைய சரீரத்திற்குரிய பயபக்தி நம்மிடம் இருக்கின்றது என்றாலும், அவர் சரீரம் கடந்து சென்ற அனைத்து அனுபவங்கள் மீது, அதாவது, அர்ப்பணிப்பு முதல் மரணம் வரை அவர் சரீரம் கடந்து சென்ற அனுபவங்கள் மீது ஆழமான கவனம் நமக்கு இருக்கின்றது என்பது உண்மை என்றாலும்............நமது இரட்சகர் சஞ்சரித்து நடந்த பரிசுத்த பூமியின் மீதோ அல்லது அவர் குழந்தையாகக் கிடத்தப்பட்ட பரிசுத்தமான தொழுவத்தின் மீதோ அல்லது அவருடைய பரிசுத்தமான தாயார் மீதோ நமது கவனம் இருப்பதில்லை. மாறாக உயிர்த்தெழுந்த நமது கர்த்தர் மீதும், பூரணமாக்கப்பட்ட ஆவிக்குரிய புதுச் சிருஷ்டியின் மீதும், மனுக்குலம், தூதர்கள், அதிகாரங்கள் மற்றும் கர்த்தத்துவங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டு எல்லா நாமத்திற்கு மேலாக உயர்த்தப்பட்டு பிதாவுக்கு அடுத்து, அவருடைய வல்லமையின் வலக்கரத்திற்கு உயர்த்தப்பட்டவர் மீதுமே அதிக கவனம் நமக்கு ஏற்படுகின்றது. "ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்” (2 கொரிந்தியர் 5:16). உயிர்த்தெழுப்பப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தரும், இரட்சகருமானவரைப் பற்றின அறிவானது, அவருடைய பூலோக வாழ்க்கையின் விஷயங்களை காட்டிலும் மேற்பட்டதாக நமக்குக் காணப்படுகின்றது. எனினும், அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையும் கூட நம்முடைய கவனத்தை ஈர்க்கின்றதாகவும், நமக்கு நன்மை பயப்பிக்கிறதாகவும் இருக்கின்றது.

பெத்லகேமுக்கு வந்திருந்த ஜனங்கள், தங்களுடைய பட்டணத்தில் வந்திருப்பவர் யார் என்று தெரிந்திருந்தால், அதாவது, அவர் பரலோக வாசல்களில் இருந்து வந்தவர் என்றும், லோகோஸாகிய அவர் மாம்சமாக்கப்பட்டார் என்றும், தம்முடைய ஜனங்களுடைய பாவங்களிலிருந்து, அவர்களை விடுவிக்கும்படி வந்துள்ளார் என்றும் அறிந்திருந்தார்களானால், எவ்வளவு சந்தோஷத்துடன் அவரை, அவர்களுடைய வாடகை விடுதி அறைகளில் வரவேற்று, அவைகளில் வசதியான அறைகளை அவருக்குக் கொடுத்திருப்பார்கள். ஆனால், அவரை அவர்களுக்குத் தெரியவில்லை; ஆகவே அவருக்குப் பணிவிடைச் செய்யும் மாபெரும் இந்த வாய்ப்பை இழந்து போனார்கள். அதுபோலவே ஒவ்வொரு பட்டணங்களிலும், ஊர்களிலும் கர்த்தருடைய ஜனங்களாகிய உண்மையான பரிசுத்தவான்கள் இருக்கின்றார்கள்; இவர்களை வரவேற்று, இவர்களுக்கு மேன்மையானவைகளைக் கொடுக்கக் முடிகின்றவர்களும் அதே பட்டணங்களில்தான் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் இவர்களைப் (பரிசுத்தவான்களை) பரம பிதா மற்றும் இயேசுவின் செய்தியாளர்கள் என்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்ததா? இல்லை, அப்போஸ்தலர் கூறுகிறதுபோல, "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை” (1 யோவான் 3:1). எந்தச் சீஷனும் கர்த்தரைக் காட்டிலும் பெரியவன் அல்ல, ஆகவே, தேவனுடைய ஸ்தானாபதிகளாக அன்பின் ஊழியங்களுக்கு நாம் செல்லும்போது, தேவனுடைய வழிநடத்துதல்கள், முன் ஏற்பாடுகள் நமக்காக செயல்படும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம்; ஆனாலும், ஐசுவரியமாக இல்லாமல் எளிமையான நிலைகளிலேயே இருக்கும் என நாம் எதிர்ப்பார்க்கலாம். இப்படியான சூழ்நிலைகள் நமக்கு வரும்போது, நமது கர்த்தரின் அனுபவங்களில் கொஞ்சம் பெற்றுள்ளோம் என்று உணர்ந்து களிகூர வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கெனப் பெற்றுக்கொள்ளும் சகல வாய்ப்புகளையும், தெய்வீகக் கிருபைகளாகக் கருதி, அவைகளை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகும்போது, அதாவது, அது எவ்வளவு ஏழ்மையான சூழ்நிலைகளாக அனுமதிக்கப்பட்டாலும், அதற்கு ஆயத்தமாகும்போது, இதற்கு ஏற்ப ஆசீர்வதிக்கப்படுவார்கள். இங்கு யோசேப்போ, மரியாளோ, இயேசுவோ அல்லது பிறப்பின் சூழ்நிலைகளைப் பதிவு செய்திட்ட சுவிசேஷகர்களோ, சீஷர்களோ, தெய்வீக ஏற்பாட்டினால் வழங்கப்பட்ட இந்தச் சூழ்நிலைக் குறித்துக் குற்றச்சாட்டோ, அதிருப்தியின் குறிப்பைக் குறிப்பிடுவதையோ நம்மால் பார்க்க முடியாதது குறிப்பிடத்தக்கதாகும். எந்த அளவுக்கு ஒருவர் அதிருப்திக் கொண்டிருந்திருப்பாரோ, அந்த அளவிற்கு தெய்வீக ஏற்பாடுகளானது அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாய் இராது.

அன்று பெத்லகேமுக்கு அருகாமையில் உள்ள இடங்களில் ஆயர் வாழ்க்கை முறை இருந்தது; இன்று அவ்விடம் மந்தைகளினால் நிறைந்துள்ளன. அக்காலத்தில் மேய்ப்பர்கள், தங்கள் மந்தைகளைக் கள்வர்களிடமும், காட்டு மிருகங்களிடமும் இருந்து பாதுகாக்கும் வண்ணமாக, இரவு நேரங்களில், மந்தைகளோடு இருப்பது வழக்கமாயிருந்தது. இந்த இடத்தில்தான், இராஜா ஆவதற்கு முன்னதாக தாவீது, ஒரு மேய்ப்பனாக தனது மந்தைகளைப் பாதுகாக்கும் விதத்தில் ஒருமுறை சிங்கத்தையும், மற்றொருமுறை கரடியையும் கொன்று போட்டார். மேய்ப்பவர்கள் படிப்பு அறிவு இல்லாத ஜனங்களாக இருந்தாலும், அவர்கள் சிந்திக்கிற ஜனங்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் மந்தைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் வேளைகளில், ஆலோசனைகள் மற்றும் பேச்சுச் சம்பாஷணைகளின் மூலமாக போதுமான ஞானம்/அறிவைச் சம்பாதித்து வைத்திருந்தார்கள். ஆகவே, மேய்ப்பர்கள் என்பவர்கள், அறிவாற்றல் உள்ளவர்களாகவும், சிந்திக்கிற ஜனங்களாகவும் இருந்தார்கள். வணிகம் மற்றும் இயந்திரங்களின் மேல் மூழ்கியிருப்பவர்களைக் காட்டிலும், இவர்களுடைய மனங்கள் மேலானவைகளைப் பார்க்கின்றது. தேவன் தமது நிழலான இராஜ்யத்தில், இராஜாவாக கனப்படுத்தின மேய்ப்பன் ஒரு மாபெரும் கவிஞன் (தாவீது) ஆவார். இவர் மந்தையை மேய்த்துக் கொண்டிருக்கையில், பெரும்பான்மையான நேரத்தை அமைதியான சிந்தனைக்குக் கொடுத்துள்ளார்; மிகவும் அருமையான இவருடைய சங்கீதங்களில் ஒன்று, பிதாவாகிய தேவன்தாமே, அவருடைய ஜனங்களுக்கு மேய்ப்பன், அதாவது, அவர் பராமரிக்கும் அவருடைய மந்தைக்கு அவர் தாமே மேய்ப்பன் என்றும் கூறுகின்றது (சங்கீதம் 23). இப்படியாக சிந்திக்கிற மனுஷர்களிடத்தில், அதாவது, தாவீதின் சங்கீதம் மற்றும் அவைகள் வெளிக்கொணரும் மேசியாவின் நம்பிக்கை பற்றி நன்கு அறிந்த மனுஷர்களிடம் , கர்த்தர் தமது குமாரன் மாம்சமாக்கப்பட்ட செய்தியை, முதலாவதாக அனுப்பினார்.

தூதர்கள் தோன்றினதையும், அவர்கள் தோன்றின பிரகாசத்தினால் ஏற்பட்ட பயத்தைக் குறித்ததான விவரங்கள் இயல்பானதும், எளிமையானதுமாகும். ஆவிக்குரிய சுபாவத்தில் உள்ள தேவதூதனின் பிரசன்னத்தில் நிற்கின்றோம் என்ற எண்ணம், மனுக்குலத்தில் உள்ள எவருக்கும்/ அனைவருக்கும் பயத்தையும், நடுக்கத்தையும் கொண்டு வரும். இந்தப் பயம் நியாயமானதே; ஏனெனில், விழுகையின் மூலம் தங்களுடைய பலவீனங்களை உணர்ந்தவர்கள், தெய்வீக நீதிக்குப் பயப்படுவது நியாயமானதேயாகும். தேவனிடமிருந்து இரக்கம் வேண்டும் என்று அனைவரும் உணர்ந்துள்ளனர். ஆகவேதான், மேய்ப்பர்கள் மத்தியில் பரலோக (தூதர்கள்) வாசிகள் தோன்றினபோது பயந்தார்கள், ஆனால், தேவதூதர் கொண்டு வந்த செய்தியோ, நீதியைக் குறித்தோ அல்லது குற்றச்சாட்டைக் குறித்தோ இராமல், தெய்வீக இரக்கம் குறித்ததாக இருந்தது. "பயப்படாதிருங்கள் இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று ஆறுதலாகக் கூறினார். இந்தக் கிருபையான வார்த்தைகளைக் கேட்டதினிமித்தம் அவர்களிடமிருந்த பயம் நீங்கி, சந்தோஷம் வந்தது என்று கூற முடியுமா? நிச்சயமாக இல்லை. அன்று முதல் இன்று வரை, புரிந்துக்கொள்ளுதலின் செவிகளினால் இந்த உண்மையான சுவிசேஷத்தின் செய்தியைக் கேட்காமல், வெறுமனே காதுகளால் கேட்பவர்களுக்கும் இதே நிலைதான்.

பல காலங்களாக/யுகங்களாக அநேக தேவனுடைய ஜனங்கள் மத்தியில் தொனித்துக் கொண்டிருக்கும் இந்தச் செய்தி எவ்வளவு தவறுதலாகவும், கவலைக்கிடமாகவும் புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், எவ்வளவு சொற்பமான

ஜனங்கள் அதை உணர்ந்துள்ளனர்; கேட்டு மகிழ்ச்சியும் அடைந்துள்ளனர். அனைத்துப் பல்வேறு சபைகளும், அதன் ஆயிரக்கணக்கான ஊழியர்களும், பல ஆயிரம் ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும், தேவ தூதர்களின் இச்செய்திக்கு முற்றிலும் எதிராக இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாக இருக்கின்றது. இவர்களுடைய முரண்பாடுகள், இவர்களுடைய உணர்வுகளையும், இவர்களுடைய இருதயங்களையும் பாதிப்பதோடு அல்லாமல், நமது அருமையான இரட்சகரின் ஊழியத்திற்குரிய மாட்சிமையின் பத்துப் பாகத்தில், ஒன்பது பாகத்தையும் திருடிப்போடுவதோடு கூட, நம்முடைய இரக்கம் நிறைந்த பரம பிதா, கிறிஸ்து இயேசு மூலம் அருளின இரட்சிப்பை, தவறாகக் காட்டுவதன் வாயிலாக பிதாவின் நாமத்திற்கும் தூஷணமாகிவிடுகின்றது.

சுவிசேஷம் என்ற பெயரில் குருடாக்கப்பட்ட கிறிஸ்துவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கும் பழியான/குற்றமான செய்தியைக் குறித்து ஒருவேளை சிலர் ஆச்சரியப்படலாம், அதிர்ச்சியும் அடையலாம். "சுவிசேஷம்" என்ற வார்த்தையானது "நற்செய்தி" என்ற வார்த்தையிலிருந்து வருகின்றது. நித்திய வேதனை என்னும் மோசமான செய்தியே, தெய்வீகச் செய்தி எனவும், தீர்ப்பு எனவும் மனுக்குலத்தின் பெரும்பாலானவர்களுக்கு, பிரகடனம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள், தாங்கள் மனிதர்களுக்குக் கொண்டு செல்லும் செய்திகளில் தெய்வீகக் குணலட்சணங்களும், (தெய்வீக) அரசாங்கமும் எவ்வளவு தவறாகக் காட்டப்படுகின்றது என்பதைத் தெரியாமல் இருக்கின்றனர் என்று நாம் விசுவாசிக்கின்றோம். அவர்கள் சுவிசேஷத்தை வேண்டுமென்றே தவறாய்க் காட்டாமல், அப்போஸ்தலர் குறிப்பிடுவது போன்று மாபெரும் எதிராளியானவனால் குருடாக்கப்பட்டதினாலேயே செய்கின்றார்கள். இந்தக் குருட்டுத் தன்மையானது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலம் வெளிப்பட தேவனுடைய தயவின் மகிமையான வெளிச்சத்தை உணர்ந்து கொள்ளாதபடிக்குத் தடை செய்தது (2 கொரிந்தியர் 4:4).

நம்முடைய பாடத்தின் பத்தாம் வசனத்தை, அனைத்து உண்மையான கிறிஸ்துவர்களையும் படிக்க வைக்க முடிந்தால், அதன் முக்கியத்துவத்தின் ஆழத்தைப் பார்க்க வைக்க நம்மால் முடிந்தால், அது கிறிஸ்துவ மண்டலத்தின் போதகங்களை உடனடியாகப் புரட்சிக்குள்ளாக்கிவிடும். ஆனால், நமது கர்த்தர் கூறியிருக்கிற வண்ணம், தெய்வீகத் திட்டத்தின் சில ஆழமான விஷயங்கள் இவ்வுலகத்தின் ஞானிகளுக்கும், விவேகிகளுக்கும் மறைக்கப்பட்டுத் தாழ்மையுள்ளவர்களுக்கு, அதாவது, குழந்தைகளுக்கு மாத்திரம் வெளிப்பட்டுள்ளது. புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்ற அனைவரும், தேவனுடைய அன்பின் ஆழத்தையும், அகலத்தையும், நீளத்தையும், உயரத்தையும் ஓரளவுக்கு புரிந்துக்கொள்ள முடிபவர்களும், இவ்விஷயத்தைப் பொறுத்தமட்டில் உலகத்திடம் காணப்படும் அறியாமையும், அவர்களைக் குருடாக்கின மாபெரும் எதிராளியானவனின் எதிர்ப்பும் தொடர்ந்து நீடிப்பதில்லை என்றும், கர்த்தருடைய ஏற்ற வேளையில் மறைந்து விடும் என்பதில் களிகூருவார்கள். அதாவது, கல்வாரியில், உலகத்தின் மீட்பிற்காக மரித்தவர், பழைய சர்ப்பமாகிய பிசாசை, சாத்தானை, ஆயிரம் வருட அரசாட்சியில் ஜாதிகளை மோசம் போக்காதபடிக்கு கட்டி, தமது மகிமையான இராஜ்யத்தை ஆரம்பிக்கும்போது, இவைகள் அனைத்தும் மறைந்து விடும் என்பதில் களிகூருவார்கள். அக்காலத்தில் அனைவரும் தெளிவாகக் காண்பார்கள். இக்காலத்தில் சிலர் மாத்திரமே தெய்வீகக் குணநலன் மற்றும் திட்டம் குறித்துப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றுள்ளனர் என்று அனைவரும் அக்காலத்தில் உணர்ந்து கொள்வார்கள். மேலும், தேவதூதர் மூலம் கொடுத்திட்ட செய்தியின் ஒவ்வொரு வார்த்தையும் மெய் என்று அக்காலத்தில் உணர்ந்துக் கொள்வார்கள். பெத்லகேமில் பிறந்த இரட்சகரின் மூலம் ஏற்படும் பிரம்மாண்டமான விளைவுகள், மாபெரும் பிதாவினால் அனுப்பப்பட்ட செய்தியை உறுதிப்படுத்தியது என்று உணர்ந்துக் கொள்வார்கள். மகா சந்தோஷத்தின் நற்செய்தியானது இறுதியில் ஜனங்களுக்கு உரியதாகும். ஜனங்கள் வெளிச்சமூட்டப்படுவதற்கும், ஆசீர்வதிக்கப்படுவதற்கும் எவ்விதமான தடையும் இல்லாமற்போவதினால், அனைவரும் சத்தியத்தை அறியும் அறிவிற்குள் வருவார்கள்; மேலும், நமது கர்த்தராகிய இயேசுவின் ஈடுபலியின் நிமித்தம் உண்டான மாபெரும் இரட்சிப்பினால் அனைவருக்கும் அருளப்படும் கிருபையையும், இரக்கத்தையும் மற்றும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பையும் அனைவரும் பெற்றுக்கொள்வார்கள்.

தேவதூதன், தான் கொண்டு வந்த மாபெரும் நற்செய்தியை இன்னுமாக விளக்கினார்; அதாவது இரட்சகரும், மேசியாவுமானவர் பிறந்துள்ளபடியால், உரைக்கப்பட்ட அனைத்து நற்செய்திகளும் நிறைவேற போகின்றது என்றார். இஸ்ரயேலால் நீண்ட காலமாய் எதிர்ப்பார்க்கப்பட்டவரும், ஆபிரகாமின் வாக்களிக்கப்பட்ட சந்ததியுமானவருக்குள் இஸ்ரயேல் ஆசீர்வதிக்கப்பட்டு, கனத்திற்கும், மேன்மைக்கும், கூட்டுறவிற்கும் உயர்த்தப்படுவதோடு, அவருக்குள் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும். தேவதூதர் முன்வைத்த செய்தியின் வரிசையானது, தெய்வீக ஏற்பாட்டின்படியே என்பதை கவனிக்கக்கடவோம். ஆகவே இதே வரிசையைத்தான், சபையை அழைக்கும்படி கர்த்தரால் ஸ்தானாதிபதிகளாக பயன்படுத்தப்பட நாடுபவர்கள் பயன்படுத்த வேண்டும். முதலாவதாக சந்தோஷத்திற்குக் காரணமான தெய்வீகக் கிருபை/தயை மற்றும் ஆசீர்வாதம் பற்றியதான அறிவிப்பும் மற்றும் இறுதியில் இவ்வாசீர்வாதமும், சந்தோஷமும் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் உரியதாகும் என்று முன்வைக்கப்படுகின்றது. இரண்டாதாக, இவைகள் அனைத்தும் சம்பவிக்கும் விதம் விசேஷமாக விவரிக்கப்பட்டுள்ளது; அதாவது, ஓர் இரட்சகர், ஒரு விடுவிக்கிறவர் மூலம் சம்பவிக்கும் என்று விவரிக்கப்பட்டுள்ளது. தமது ஜனங்களைப் பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து விடுவித்து, நித்திய ஜீவன் மற்றும் ஆசீர்வாத்திற்குள்ளும் கொண்டு வர வேண்டுமெனில், அவர் முதலாவதாக அவர்கள் அனைவரையும், அவர்களின் பாவங்களிலிருந்து விடுவிக்க வேண்டும். நமது பாவங்களிலிருந்து நமக்கு வரும் இரட்சிப்பானது, ஆதாமின் பாவத்தின் விளைவாக வந்த தண்டனைக்கு, நம்பொருட்டாக கடன் திருப்பிச் செலுத்தப்பட்டதை மாத்திரம் குறிக்காமல், அதைத் தொடர்ந்து மனிதன் நீதியான விஷயங்களினால் போதிக்கப்பட்டு, பாவத்திலிருந்து தூக்கி எடுக்கப்படுவதையும் குறிக்கின்றது. இப்படியாகப் பாவத்திலிருந்து தூக்கிவிடப்படுவதற்கு, ஒவ்வொரு மனுஷனும் தன்னால் முடிந்த மட்டும், விருப்பத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்பது எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஆகவே மனுக்குலத்திற்கு வரும் அனைத்துக் கிருபை தொடர்பான போதனைகளும் இரட்சிப்பின் தத்துவத்தோடு இசைந்திருக்க வேண்டும்; அதாவது இரட்கசகர் மாம்சமாக்கப்பட்டார் என்றும், மாம்சம் நம்முடைய பாவங்களுக்காகப் பலிச் செலுத்தப்பட்டது என்றும், இரட்சகர் மகிமையடைந்தார் என்றும், அவருடைய சபை தெரிந்துக்கொள்ளப்பட்டு பின்னர், ஏற்ற காலத்தில் தெய்வீகத் திட்டத்தின்படி இரட்சகர் தமது சபையோடு நீதியின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும், விழுகையின் மூலமாகவும், அதைத் தொடர்ந்து மனுக்குலத்தை மாபெரும் எதிராளியானவன் குருடாக்கி, தவறாய் நடத்தியதின் மூலமாகவும், அவர்கள் கடந்து சென்ற அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் இழிவுகளிலிருந்து அவர்களைத் தூக்கியெடுப்பதற்கு இரட்சகர் தமது நீதியின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும் உள்ள இரட்சிப்பின் தத்துவத்தோடு கிருபை தொடர்பான அனைத்துப் போதனைகளும் இசைந்திருக்க வேண்டும். நமது கர்த்தருடைய நாமமாகிய இயேசுவின் அர்த்தம் **இரட்சகர்** என்றும், சபையாகத் தெரிந்துக்கொள்ளப்படும் அனைவரும் மணவாளனின் ஆவியைப் பெற்றுக்கொள்ள/பெற்றிருக்க வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். **தம்மையே பலிச்செலுத்தும் அளவிற்கு, பாவத்தை வெறுத்த தன்மையே, அவருடைய ஆவியாக இருந்தது**. நாமும் "பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தஞ்சிந்த (மரிக்க) வேண்டும்" (எபிரெயர் 12:4).

பின்னர் தேவதூதுர், மேய்ப்பர்களிடம், இந்த மாபெரும் பூமியின் இராஜா எவ்வளவு எளிமையான சூழ்நிலைகளில் பிறந்துள்ளார் என்பதையும் தெரிவித்தார்; அதாவது, துணிகளில் பொதிந்துக் குழந்தையானது முன்னணையில் கிடத்தப்பட்டிருக்கும் என்றார். இது இயேசுவை அடையாளம் கண்டு கொள்ள மாத்திரமாகச் சொல்லப்படாமல், பிரமாண்டமான மாபெரும் இறுதி பலன்கள், எளிமையான ஆரம்பத்தைத்தான் கொண்டிருந்தது என்பதை எடுத்துக்காட்டி சொல்லப்பட்டது. தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு பாகமும் இப்படியாக இருக்க, நம்முடைய பறைசாற்றுதலும் இப்படியாகவேதான் இருக்க வேண்டும். நாம் எதிர்கால மகிமை, மகத்துவம் மற்றும் பிரமாண்டத்தை மாத்திரம் அறிவிக்காமல், தற்கால தாழ்மையான, அவமானமான சூழ்நிலைகளையும் நாம் எடுத்துக் கூற வேண்டும். நமது இரட்சகர் நமது பாவங்களுக்காக மரிக்கும் பொருட்டு, மனுஷர் மத்தியிலே மனுஷனாக, எளிமையான கோலம் எடுத்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களும்" அவருடைய அடிச்சுவடுகளில், அவரைப் போன்ற அவமானத்தின் சூழ்நிலை மத்தியில் கடந்து செல்ல வேண்டும் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும்; அதாவது, அவரோடுகூட ஆளுகை செய்ய வேண்டுமெனில்,

அவரோடு கூடப் பாடுபட வேண்டும்; அவரோடுகூட ஜீவிக்க வேண்டுமெனில், அவரோடுகூட மரிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இவ்வாறே தீர்க்கத்தரிசிகளும், கிறிஸ்து (தலை + சரீரம்) மகிமை அடைய வேண்டுவதற்கு முன்பு, அவர் படவேண்டிய பாடுகளைக் குறித்துக் கூறியிருக்கின்றார்கள் (1 பேதுரு 1:11). "சிலுவை இல்லையெனில் கிரீடம் இல்லை" என்பதே கேட்கச் செவியுள்ள யாவருக்கும் உரிய பாடமாகும். ஆகவே, நாம் நம்மையே தாழ்த்தி, அவருடைய பலத்தக் கரத்திற்குள் அடங்கி, அவமானத்தின் ஒவ்வொரு அடிகளிலும் களிகூருவோம்; இதினிமித்தம் ஏற்றக்காலங்களில் நாம் நமது தேவனுடைய குமாரனாகிய நமது கர்த்தரின் மகிமையில் பங்கடையத்தக்காகவும், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கான மாபெரும் வேலையில் கர்த்தரோடு பங்கடையத்தக்காகவும் நம்மை உயர்த்துவார்.

எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தும் நற்செய்தியைத் தேவதூதன், மேய்ப்பர்களுக்கு கூறின பின்பு, தேவதூதன் புறப்பட இருக்கையில், பரம சேனையும் தோன்றி, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்று பாடினது அருமையான காட்சியாகும். இது ஏற்கெனவே கொடுக்கப்பட்ட சுவிசேஷச் செய்தியை மீண்டும் கூறினதாகும். அந்தப் பாடல் குழந்தையாக இப்போது பிறந்திருக்கிறவர், நிறைவேற்றப்போகிற வேலையானது, பிதாவாகிய தேவனுக்கு மேலான கனத்தையும், மகிமையையும் சேர்க்க உதவும் என்று அறிவிக்கிற விதமாக இருந்தது; மேலும் இயேசுவினால் இந்த வேலை நிறைவேற்றப்படும்போது, நன்மையான தெய்வீகச் சித்தம் பூமியில் வரும் என்றும், இதைத் தொடர்ந்து சமாதானம் வரும் என்றும் அறிவிக்கும் விதத்தில் இருந்தது. மேலும் இவைகள் அனைத்தும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாகவும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதமாகவும் அமையும். ஆனால் இவைகளுக்கெல்லாம், முரண்பாடாக, கிறிஸ்துவ மண்டலத்தில் தவறான கூற்றுகள் காணப்படுகின்றது. கிறிஸ்துவ மண்டலத்தின் போதனைகள் நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஈடுபலியையும், அதைப் பிதா ஏற்றுக்கொண்டு, மனுக்குலத்தின் மீதான தீர்ப்பு மாற்றப்பட்டதையும் கருத்தில் கொள்ளாமல், பெரும்பான்மையான மனுக்குலம் நித்திய காலம் வரையிலும் தேவனுக்கு எதிராகத்தான் இருப்பார்கள் என்றும், அவர்கள் வாதிக்கப்படுவதினால், தேவனுடைய நாமத்தைத் தொடர்ந்துத் தூஷிக்கிறவர்களாகவும் இருப்பார்கள் என்றும், இரட்சகரை அறிந்துக்கொள்வதற்கோ அல்லது அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்வதற்கோ முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு ஒருபோதும் கொடுக்கப்படாது என்றும் போதிக்கின்றார்கள். இப்படியான ஒரு திட்டம் உன்னதத்தில் உள்ள தேவனுக்கு மகிமை சேர்க்கும் என்று நினைப்பது எவ்வளவு விநோதமாக இருக்கின்றது!

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருவரும், சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கும், பாவத்தை விட்டுவிடுவதற்கும், புதிய உடன்படிக்கையின் கீழ் நீதிக்கேதுவான புதிய ஜீவினை ஏற்றுக்கொள்வதற்கும், கிறிஸ்துவின் வாயிலாக தேவனிடமிருந்து, வாய்ப்பு பெற்றுக்கொள்வார்கள் என்றும், யாரெல்லாம் இந்த நீதியின் ஒழுங்குகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்க மறுக்கின்றார்களோ, அத்தகையவர்கள் ஜனத்தில் இராதபடிக்கு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் என்றும் தெளிவாக வேதவாக்கியங்கள் காட்டும் விஷயங்களை ஒருவர் ஏற்றுக்கொள்ள மறுப்பது எவ்வளவு விநோதமான காரியமாகும். பாவத்தில் ஜீவிப்பிதற்கும், தேவனுக்கு எதிராக செயல்பட்டு இருப்பதற்கும் அக்காலத்தில் ஒருவரும் அனுமதிக்கப்படுவதில்லை. அப்பொழுது மனுஷர் மத்தியில் முழுமையான சமாதானம் காணப்படும்.

சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக, தேவன் கொடுக்கும் ஒரே வழி, அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகும். இதற்காகவே நமது அன்பான மீட்பர், "உம்முடைய இராஜ்யம் வருவதாக;உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்துள்ளார். இது முழுமையான சமாதானத்தைக் குறிக்கின்றது. எந்த மனுஷனையும் கட்டாயப்படுத்தாமல், நித்தியஜீவன் மற்றும் சமாதானம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிறிஸ்து மூலம் அளிக்கப்படும் அல்லது இந்தத் தெய்வீகத் தயவை ஏற்றுக்கொள்ள ஒருவன் மறுத்தால் அவன் இரண்டாம் மரணத்தில் சங்கரிக்கப்படுவான் என்றே வேதவாக்கியங்கள் கூறுகின்றது.

தேவனுடைய கிருபையைக் குறித்து, மேய்ப்பர்கள் கேட்டபோது, இரட்சகரைச் சந்தித்து, மரியாதை செலுத்தினதின் மூலம் அக்கிருபையின் மீதான தங்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். அதைப் போலவே தேவனுடைய கிருபையைக் கேட்டு, அதை ஏற்றுக்கொள்ளும் இருதயம் உடையவர்கள், கர்த்தரை நாடி, அவருக்கு பயபக்தியாய் இருந்து, தங்களுக்கு அறிவிக்கப்பட்ட கிருபையின் செய்தியைப் பறைச்சாற்றி, அவருடைய நோக்கங்களுக்காக ஊழியம் செய்வார்கள். நம்மில் ஒவ்வொருவரும் இப்படியாகச் செய்து, கர்த்தருடைய சந்தோஷத்தையும், அவருடைய மாபெரும் சுவிசேஷத்தின் புரிந்துக்கொள்ளுதலையும் அதிகதிகமாய் நம்முடைய இருதயத்தில் பெருக்கிக்கொள்வோமாக.

---

**R3700**

# "மகிமையான அறிவிப்பு"

## லூக்கா 2:1-20

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்." (வசனம் 11)

கிருபையிலும், அறிவிலும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் வளர, வளர, அவர்களுக்கு, பெத்லகேமின் புல்வெளிகளில் மேய்ப்பவர்களுக்குத் தேவதூதர்களால் கூறப்பட்ட செய்தியானது மிகமிக விலையேறப் பெற்றதாக ஆகிவிடுகின்றது. யுகங்களைக் குறித்த தெய்வீகத் திட்டத்தின் மீதான புரிந்துக்கொள்ளுதலின் காதுகள் மற்றும் கண்கள் படிப்படியாகத் தெளிவாகும்போது, பெத்லகேமில் கொடுக்கப்பட்ட அந்தத் தீர்க்கத்தரிசன செய்தியானது ஒட்டுமொத்த சுவிசேஷத்தின் சுருக்கம் எனத் தேவனுடைய பிள்ளைகள் உணர்ந்து கொள்வார்கள். நமது இரட்சகரின் பிறப்பு எனும் மாபெரும் சம்பவத்தின் மீது நம்முடைய கவனமும் அடிக்கடி ஈர்க்கப்படுகின்றது. இரட்சகரின் பிறப்பு டிசம்பர் மாதம் 25-ஆம் தேதி அன்று சம்பவிக்கவில்லை என்பதோ அல்லது கர்த்தர் அநேகமாக அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி அன்று பிறந்திருப்பார் என்பதோ முக்கியமல்ல. அத்தகைய மகாபெரியவரின் பிறப்பு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், மனுக்குலத்திற்கு மிகவும் பெரிய விஷயமானபடியால், அவர் நம்முடைய இனத்திற்குச் செய்துள்ள விஷயங்களை உணர்ந்துள்ள யாவராலும் எல்லா நாளிலும் நினைவுகூரப்பட்டு, கொண்டாடப்பட வேண்டும். 4000 வருடங்களுக்கு மேலாக தெளிவில்லாமல் காணப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்கள், அன்று மனுக்குலத்திற்கு அருளப்பட்டது; மேலும், இது ஏதேன் தோட்டத்தில், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையின் நிமித்தம் உலகத்தின் மீது வந்த மாபெரும் பாவத்தின் சாபம் மற்றும் மரணம் இறுதியாக மாற்றப்படும் என்பதைச் சுட்டிக்காட்டித் தெரிவித்தது; மேலும் சாபத்திற்குப் பதிலாக ஜீவனைப் பெறுவதற்கான ஆசீர்வாதம் கர்த்தரால் அருளப்படும் என்பதையும் தெரிவித்தது. இந்தச் செய்தியானது, விசேஷமாய் உடன்படிக்கைப் பண்ணினவர்களும், தெய்வீகத் தயவை பெற்ற ஜனங்களுமாகிய யூதர்கள் மத்தியில், நமது கர்த்தரின் பிறப்பினுடைய காலப்பகுதி வரையிலும், அநேக நிழல்கள் மற்றும் வாக்குத்தத்தங்கள் வாயிலாக அருளப்பட்டு வந்தது. யூதர்கள் வாணிக நோக்கத்துடன், நாகரிக உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்டிருந்தார்கள், ஆகையால், ஒரே தேவன் மீதான விசுவாசமும், மேசியாவின் மூலமான இஸ்ரயேலின் மீட்பு பற்றின விசுவாசமும் கொஞ்சமோ, அதிகமோ அனைத்து ஜனங்கள் மத்தியிலும் காணப்பட்டது; ஆகையால்தான், நம்முடைய கர்த்தர் பிறந்த காலக்கட்டத்தில், "மக்கள் மீட்பரை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்" என்று வாசிக்கின்றோம் (லூக்கா 3:15, திருவிவிலியம்). இந்த எதிர்ப்பார்ப்பு, தானியேலின் தீர்க்கத்தரிசனத்தின் அடிப்படையில் ஜனங்கள் மத்தியில் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை. தானியேலின் தீர்க்கத்தரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலம், நமது கர்த்தர் முதிர்ச்சியை அடைந்து, ஊழியத்திற்கென்று தம்மை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டு, மாபெரும் நிஜமான பிரதான ஆசாரியனாகவும், இஸ்ரயேல் மற்றும்

உலகத்தின் மீதான மாபெரும் நிஜமான இராஜாவாகவும் அபிஷேகிக்கப்பட்ட காலப்பகுதியான, அவரின் 30-ஆம் வயதின் வருடத்தையே குறிக்கின்றது என்பதை நாம் இப்பொழுது தெளிவாக அறிந்துள்ளோம்.

## "பெத்லகேமிலிருந்து நாசரேத்துக்கு..."

முற்காலங்களில் கனம் வாய்ந்த பட்டணங்களும், இழிவான பட்டணங்களும் காணப்பட்டன. பெத்லகேம், கனம் வாய்ந்த பட்டணங்களில் ஒன்றாகவும் மற்றும் நாசரேத், கனம் குறைந்த பட்டணங்களில் ஒன்றாகவும் அக்காலங்களில் கருதப்பட்டது. பெத்லகேம் இஸ்ரயேலின் பிரியமான இராஜாவாகிய தாவீதின் பட்டணமாகக் கருதப்பட்டது. நமது கர்த்தரின் தாயாகிய மரியாளும், அவளுடைய புருஷனாகிய யோசேப்புமாகிய இருவரும் தாவீதின் வம்சத்தில் வந்தவர்கள் என்று வேதவாக்கியங்கள் விவரிக்கின்றன. மேலும், மேசியா, பெத்லகேமில் பிறப்பார் என்று முன்பு உரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனம் தற்செயலாய் அங்கு நிறைவேறினது போலவும் தோன்றலாம் (மீகா 5:2). ரோம சாம்ராஜ்யம் முழு உலகத்தையும் அக்காலக்கட்டத்தில் ஆளுகை செய்து கொண்டிருந்தது. யூதர்கள், ரோமர்களுக்குக் கீழ்ப்பட்டு இருந்தபோது, கீழ்ப்பட்டிருக்கும் நிலையிலிருந்து தங்களை விடுவித்து, உலகத்தின் மீதான ஆளுகையில், ஆளுகை செய்யும் வகுப்பாராய், தங்களை ஏற்படுத்தப் போகும் மேசியாவுக்காக, மன அமைதியிலில்லாமல் காத்திருந்தார்கள். அகுஸ்து ராயர், ரோம மாபெரும் சக்கரவர்த்தியாக இருந்த காலக்கட்டத்தில், வரி முறைமையைக் கொண்டு வருவதற்கென, உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட கட்டளை பிறப்பித்தார். இந்த இராஜ கட்டளைக்கு இணங்க, யோசேப்பும், மரியாளும் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்ய, தங்கள் சொந்த ஊருக்குப் போனார்கள் என்றும், இவ்விதமாக இயேசு பெத்லகேமில் பிறந்தார் என்றும் லூக்கா அவர்கள் பதிவு செய்துள்ளார். இதே கட்டளைக்கு இணங்க, அநேக ஜனங்கள் பிரயாணம் செய்தபடியால், அங்கு, இடம் நெருக்கடி ஏற்பட்டதின் விளைவாக, விடுதிகளின் தொழுவங்கள் கூடத் தங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. யோசேப்பும், மரியாளும், தாமதமாக வந்தபடியால், எளிமையான தொழுவங்களில் தங்க வேண்டியதாயிற்று. இவ்வாறாக உலகத்தையே ஆளுகை செய்யப் போகிற இராஜ்யத்தை உடைய மகிமையின் இராஜா, மாம்சத்தில் வந்து தொழுவத்தில் பிறந்து, கால்நடைகளின் தீவனப்பெட்டியில் கிடத்தப்பட்டார்.

## "தேவதூதர்களும், மேய்ப்பர்களும்"

யுகங்களைக் கடந்த செய்தியான, மேசியாவாகிய இயேசுவின் பிறப்பு குறித்த செய்தியை, சர்வ வல்லமையுள்ளவரிடமிருந்து தேவதூதர்கள் மூலமாகப் பெற்றுக்கொண்ட மேய்ப்பர்கள் நற்பண்புகள் உடையவர்களாக இருந்திருக்க வேண்டும். முதலாவதாக ஒரு தேவதூதன் மேய்ப்பர்களுக்குத் தோன்றி, அவர்களுடைய பயங்களைப் புறம்பாக்கும் விதமாக, "பயப்படாதிருங்கள், நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்றார். மனித மனங்களில், ஓங்கி நிற்கும் உணர்வுகளில் ஒன்று "பயமாகும்." அதிலும் விசேஷமாக, கர்த்தரிடத்திலிருந்து வெளிப்படுத்தல்கள் வரும்போது பயம் ஏற்படுவது உறுதியே. மனுஷர்கள், அதாவது மனுக்குலத்திலேயே, உயர்ந்த பண்புகள் உள்ள மனுஷர்களும் கூடத் தாங்கள் பூரணமற்றவர்கள் என்றும், சர்வ வல்லமையுள்ளவர் பூரணமானவர் என்றும், அவருடைய பிரமாணங்கள் பூரணமானவைகள் என்றும் உணர்ந்துள்ளனர். உலகமானது, தங்கள் மீது ஒரு சாபத்தை அல்லது குற்றச்சாட்டைச் சர்வ வல்லமையுள்ளவர் வைத்துள்ளார் என்பதை உணர்ந்துள்ளனர்; மேலும், தங்களிடத்தில் இன்னும் பாவம் பெருகிக் கொண்டிருப்பதால், இன்னும் ஒரு சாபமோ அல்லது குற்றச்சாட்டோ தங்கள் மேல் வந்துவிடும் என்று பயந்து விடுகின்றனர். இன்றும், தெய்வீகக் குணம் மற்றும் திட்டம் அறிந்த சிலர் தவிர, மற்ற அனைவரிடமும் இவ்வச்சம் காணவேப்படுகின்றது. ஆகவேதான் பொதுவாக உலகம், மதத்தை வெறுக்கின்றது மற்றும் உலகம் மதத்தை விலக்கி வைக்க விரும்புகின்றது; காரணம் குற்றமனசாட்சி, மற்றும் குற்றம் சாட்டப்படுவோம் என்ற அச்சமேயாகும். அப்போது தேவதூதர்கள் செய்தது போன்று, இன்றும் தேவனுடைய பிள்ளைகள், உலகத்தின் அச்சத்தைப் போக்க வேண்டும், அதாவது, அவர்களுடைய அச்சத்திற்குத் தேவன் அப்பாற்பட்டவர் என்றும், ஆதாமின் கீழ்ப்படியாமை மற்றும் தீர்ப்பின் மூலம் வந்த சாபமாகிய மரணத்திலிருந்து உலகமாகிய அவர்களை மீட்கும் அளவு, தேவன் அன்பு கொண்டுள்ளார் என்றும் அறிவித்து அச்சத்தைப் போக்க வேண்டும். "நற்செய்தி"

என்பதற்கு, வேறொரு மொழிப்பெயர்ப்பில் "சுவிசேஷம்" என்று இடம்பெறுகின்றது. சுவிசேஷம் என்பது நற்செய்தி, எனும் கருத்து எவ்வளவு அருமையாக இருக்கின்றது. ஆனால் தேவனுடைய திட்டத்தைப் புரிந்துக்கொள்ளாத, அநேக கிறிஸ்துவர்கள் தேவனுடைய வார்த்தைகளையும், குணலட்சணங்களையும் தவறாகப் புரிந்துக்கொண்டு, இருண்ட யுகத்தின் பல்வேறு செய்திகளுக்கு "சுவிசேஷம்" என்ற பெயரைச் சூட்டி, மனுக்குலத்திற்கான பங்காக உத்தரிக்கும் ஸ்தலம் மற்றும் நித்தியமான சித்திரவதைக் காணப்படுகின்றது என்று போதிக்கின்றார்கள். அந்தோ பரிதாபம்! இந்தத் தவறான கருத்துகளிலிருந்து நாம் விலகி, சுவிசேஷமே, நற்செய்தி என்ற கருத்தை ஏற்றுக்கொள்வோம். தேவதூதன், இந்த நற்செய்தி, எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் செய்தி என்று விவரித்தார். ஆ! தேவனுக்கு நன்றி. நாம் இதுவரை புரிந்துக்கொண்டவைகளைக் காட்டிலும் தேவனுடைய திட்டம் அகலமாகவும், ஆழமாகவும், உன்னதமாகவும், பிரமாண்டமாகவும் இருக்கின்றது. சுவிசேஷமானது, தற்போது கேட்கிறதற்குச் செவியும், காண்பதற்குக் கண்களும் உள்ள சிறு கூட்டத்திற்கு மாத்திரம் நற்செய்தியாய் இராமல், தேவனுடைய ஏற்றக் காலத்தில் அனைத்து ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷமாக இருக்கும். ஆதாமின் ஒவ்வொரு சந்ததியாரும், அவருடைய விழுகையிலும், விழுகையின் விளைவாக வந்த மரணச் சாபத்திலும், பங்கடைந்ததுபோல, நமது கர்த்தரால் கையளித்ததும், கல்வாரியில் நிறைவேற்றினதுமாகிய மாபெரும் மீட்பின் பலியில், மனுக்குலத்தின் ஒவ்வொருவரும் பங்கடைவார்கள். நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய திட்டம், நிறைவேறித் தீரும்போது, அது எல்லா ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறதாக இருக்கும். மேலும் இந்தச் செய்தி, நமது கர்த்தர் பிறந்த உடனே கொடுக்கப்பட்டது; காரணம், இவர் மூலமே தெய்வீக நோக்கம் மற்றும் திட்டத்தின் மகிமையான அனைத்து விஷயங்களும் இறுதியில் நிறைவேற்றப்படும் என்பதேயாகும்.

## "செய்திக்கான காரணம்"

என்றென்றும் மாறாத தேவன், சாபத் தீர்ப்பை ஒருகாலத்தில் அளித்தவர், காரியங்களை மாற்றி, சாபத்திற்குப் பதிலாக, ஆசீர்வாதத்தை அளிக்கப் போகிறதற்கான காரணம் என்ன? என்று அறிய விரும்பும் ஜனங்களுக்கு, பதிலாகவும் இச்செய்தி காணப்பட்டது. தேவதூதன் அங்குத் தெய்வீகத் திட்டத்தின் கோட்பாட்டைக் கூறினார், அதாவது, "இன்று கர்த்தராகிய கிறிஸ்து (மேசியா) என்னும் இரட்சகர் உங்களுக்குப் பிறந்திருக்கிறார்" என்பதே ஆகும் (லூக்கா 2:11). இங்குத் தேவன், எப்படி நீதியுள்ளவராகவே இருந்து, இயேசுவை ஏற்றுக்கொள்ளும் பாவிகளை நீதிமான்களாக்குபவராகவும் இருப்பார் என்ற முழுச் சுவிசேஷத்திற்கான திறவுகோல் இருக்கின்றது. இங்கு வரும் "இரட்சகர்" என்ற வார்த்தையின் அர்த்தம் ஜீவன் கொடுப்பவராகும். மேலும், பாவத்தின் சம்பளம் மரணமாக இருக்க, இது மனுக்குலத்தின் மீது சாபமாக இருக்க, பிறந்திருக்கும் இந்த மேசியா, மனுக்குலத்திற்கு மீண்டும் ஜீவன் கொடுப்பதின் மூலம், மரணத் தீர்ப்பிலிருந்து மீட்டுக்கொள்வார் என்னும் கருத்து எவ்வளவு அருமையாக இருக்கின்றது. அவர் எப்படி ஜீவன் கொடுப்பார் என்பது அப்போது விவரிக்க அவசியப்படவுமில்லை, ஆனால், இப்போது புதிய ஏற்பாட்டு விளக்கத்தின் வெளிச்சம் காரணமாக, நம்முடைய கர்த்தர் தமது ஜீவனைச் சுயமாய் விரும்பி வந்து ஒப்புக்கொடுத்து, அநீதிமான்களுக்காக, நீதிமானாகிய அவர் மரித்து, ஆதாம் மற்றும் அவர் மேல் வந்த தீர்ப்பைச் சுதந்தரித்துக் கொண்ட அவரின் சந்ததிக்கும் எதிராய் இருந்த தெய்வீக நீதி கோரின விஷயங்களைத் திருப்திப்படுத்தினார் என்பதைப் புரிந்துக்கொள்கின்றோம். இயேசுவின் பிறப்பில் ஆரம்பித்த நம்முடைய இரட்சிப்புக் குறித்ததான தெய்வீகத் திட்டத்தை, நாம் ஆழமாக பார்க்க ஆரம்பிக்கையில், தேவதூதர் சேனைகள் போன்று நாமும், பரலோகத்தில் இருக்கும் தேவனுக்குத் துதிகளையும், மனுப்புத்திரரின் பிள்ளைகள் மீது அவர் காட்டின அவருடைய இரக்கத்திற்கு நன்றிகளையும் உரத்தக் குரலில் தெரிவிக்க ஆவல் கொள்வோம். பெத்லகேமில், குழந்தையாக பிறந்தவர் எதிர்க்காலத்தில்தான் இரட்சகர் ஆவார் என்றாலும், இயேசு முப்பது வயதை அடையும் வரை, அபிஷேகிக்கப்பட்டவராக ஆக முடியாது என்றாலும், அவர் முப்பதாவது வயது அடைந்தும், இன்னும் 3½ ஆண்டும் தம்முடைய ஜீவனை படிப்படியாக தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தாலும், அவருடைய பலிக் கல்வாரியில்தான் நிறைவடையும் என்றாலும், அவர் மூன்று நாட்களுக்குப் பிற்பாடுதான் உயிர்த்தெழும்புவார் என்றாலும், பின்பு நாற்பது

நாட்களுக்குப் பின்னரே பரலோகம் திரும்புவார் என்றாலும், பத்தொன்பது நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடே ஆசீர்வாதங்கள் செயல்முறைப்படுத்தப்படும் என்றாலும், தெய்வீகத் திட்டம் முதலாவதாக துளிர்விட ஆரம்பித்தபோதே தேவதூதர்கள் மகிழ்ந்து பாடினார்கள். தேவதூதர்கள் இரட்சிப்பைக் குறித்த தெய்வீகத் திட்டம் முதலாவதாக துளிர் விட ஆரம்பித்த போதே மகிழ்ந்து, பாடினதுபோல, தெய்வீகத் திட்டத்தின் முடிவைக் குறித்து விசுவாசம் கொண்டிருக்கும் அனைவராலும், குமாரனும், நமது கர்த்தருமானவர் மூலம் உன்னதமான தேவனுக்குத் துதிகளைச் செலுத்தவும் முடியும், சந்தோஷப்படவும் முடியும்.

## "நம்பிக்கையினால் இரட்சிக்கப்படுதல்"

தேவதூதன் இந்தச் செய்தியைக் கொடுத்து 19-நூற்றாண்டுகளுக்கு மேலாகியும், விசுவாச கண்கள் மற்றும் செவிகள் உடைய "சிறுமந்தையினருக்கு" விசுவாசத்தினால் சில விஷயங்கள் நிறைவேறியுள்ளதே தவிர, மற்றபடி நிறைவடையவில்லை. ஆனால் மாபெரும் சித்திரவதையைக் குறித்த செய்தியானது, இன்று கிறிஸ்துவின் நாமத்தில் பரப்பப்பட்டுள்ளது. இது தெய்வீகத் திட்டத்திற்கு அவமானமாகவும், தெய்வீகக் குணலட்சணங்களுக்கு கனவீனமாகவும் காணப்படுகின்றது. (சித்திரவதை, நரகம் முதலியவைக் குறித்த) இந்தச் செய்தி சந்தோஷத்தைக் கொண்டு செல்வதற்குப் பதிலாக, அனைவருக்கும், அதிலும் விசேஷமாக இரக்க மனமுள்ளவர்களுக்குக் கவலையையும், கஷ்டத்தையும் கொண்டு சென்றது. உண்மையைச் சொல்லப் போனால், கர்த்தர் இயேசுவைக் குறித்த தவறான செய்தியோ அல்லது சரியான செய்தியோ, எதுவும் அனைத்து ஜனங்களின் கவனத்திற்கும் சென்று சேரவில்லை. இன்றும், அதாவது 19-நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் கூட, மனுக்குலத்தில் ஒரு சிறு பகுதியினர் மாத்திரமே, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளும் கொடுக்கப்பட்ட அவருடைய நாமத்தை அறிந்திருக்கின்றார்கள்; "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" (அப்போஸ்தலர் 4:12). கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருக்குள் இன்று களிக்கூர்ந்து, தங்களுடைய இருதயங்களுக்குள் ஆரம்பிக்கப்பட்ட தேவனுடைய இரட்சிப்பு, இனி முழு வானங்களுக்குக் கீழாக நிறைவேற்றப்படும் என்று விசுவாசத்தினால் பார்க்கிறவர்களுக்கு (சபை) வரும் இரட்சிப்பைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இதைக் குறித்துத்தான் "நம்பிக்கையினால் இரட்சிக்கப்படும்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன?" (ரோமர் 8:24). நாம் உண்மையாக இரட்சிக்கப்படவில்லை, நாம் இன்னமும் பாவம், வலி, விழுகை, மரணம் ஆகியவற்றினால்தான் சூழப்பட்டிருக்கின்றோம், மரணச் சாபம் இன்றும் மாற்றப்படவும் இல்லை. கர்த்தருடைய ஜனங்கள் இன்று விசுவாசத்தினாலே, நம்பிக்கையினாலே இரட்சிப்பைப் பெற்றிருக்கின்றார்கள். எதிர்க்காலத்தில் வரும் இரட்சிப்பு, மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் மற்றும் உண்மையுள்ளவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள தெய்வீகச் சுபாவம், கனம், மகிமையில் பங்கேற்பது பற்றியதான எதிர்ப்பார்ப்பு மிகவும் பலமாகவும், மிகவும் தெளிவாகவும் இருப்பதினால், இந்த எதிர்ப்பார்ப்பை உடையவர்கள் சோதனைகள், இடர்பாடுகள் மத்தியிலும், மனுக்குலத்தின் மீது காணப்படும் சாபத்தினால் வந்த பெலவீனங்கள் மற்றும் சாதகமற்ற சூழ்நிலைகள் மத்தியிலும் சொல்ல முடியாத அளவு சந்தோஷம் அடைய முடியும்.

## "நற்செய்தியைக் குறித்த ஒரு தீர்க்கதரிசனம்"

தேவதூதன் வாயிலாகக் கொடுக்கப்பட்ட செய்தியானது, ஆயிரவருட யுகத்தின்போது, சபைக்காகவும், உலகத்திற்காகவும் நிறைவேற்றப்படப் போகின்ற நல்விஷயங்களைக் குறித்த தீர்க்கதரிசனமே ஆகும். சபை முதலாம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும். முதலாம் உயிர்த்தெழுதல் என்பது, சாத்தான் கட்டப்பட்ட நிலையில், முழு உலகத்தின் மீது சத்தியம் மற்றும் நீதியின் செல்வாக்குக் காணப்படும் ஆயிரவருட யுகத்தின்போது, கிறிஸ்துவோடு ஜீவித்து, ஆளுகை செய்யும் பரிசுத்தவான்களுக்கு உரியதாகும். ஆயிரவருட யுகத்தின் விடியலில் சபையின் விடுதலை சம்பவிக்கும் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றது; "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்" (சங்கீதம் 46:5). நமக்கு முன்பு

வைக்கப்பட்டுள்ள சுவிசேஷத்தில் உள்ள மகிமையான நம்பிக்கையில் நாம் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், ஆதாமின் சந்ததியரை நேசித்து, அவர்களைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்த இயேசுவின் மூலம், முழு மனுக்குலமும் அரவணைக்கப்பட்டு, ஆசீர்வாதம் கொடுக்கப்படத்தக்கதாக தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம், ஆழமும், அகலமும், உயரமும், நீளமுமாக இருக்கின்றது என்று நாம் உணர்ந்து சந்தோஷம் அடைகின்றோம். ஆயிரவருட யுகத்தின்போதுதான், தேவதூதன் வாயிலாகக் கொடுக்கப்பட்ட தீர்க்கத்தரிசனம் நிறைவேறும். மேலும் நம்மை, தம்முடைய பலியினால் மீட்டுக்கொண்ட மாபெரும் இரட்சகர், இராஜாவாக, மகியைமான மேசியாவாக நின்று, மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் சீர்த்தூக்கி, ஆசீர்வதிக்கும் பொருட்டு, உலகத்தில் தம்முடைய நீதியின் ஆளுகையை ஸ்தாபிப்பார். இதற்கு இசைவாகவே, அப்போஸ்தலரின் வார்த்தைகள் காணப்படுகின்றது; அதாவது, "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" (அப்போஸ்தலர் 3:19-21). ஒருவேளை உலகத்தின் கிரியை அல்லது புண்ணியம் அல்லது நீதியன் அடிப்படையில்தான் உலகத்திற்கு இரட்சிப்பு என்று கர்த்தர் ஏற்படுத்தியிருந்தால், நாம் உண்மையில் பயப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதற்கு மாறாக, தேவன் எதிர்க்காலத்திற்குரிய ஆசீர்வாதத்தை நம்முடைய தகுதியின் அடிப்படையில் ஏற்படுத்தாமல், அவருடைய குமாரனின் தகுதி மற்றும் பலியின் அடிப்படையிலேயே ஏற்படுத்தியுள்ளார். "ஜீவன் கொடுக்கும் (இரட்சகர்) மேசியாவாகிய கர்த்தர் உங்களுக்காகப் பிறந்திருக்கின்றார்" என்பதே தேவதூதன் மூலம் கொடுக்கப்பட்ட செய்தியாக இருந்தது. தற்கால சுவிசேஷ யுகத்தின் சோதனைகள் மற்றும் பாடுகள், இப்போது மனுக்குலமிடமிருந்து முன்னதாகவே பிரித்துச் சேர்க்கப்படும் சிறுமந்தையின், நலன் கருதி தெய்வீக மேற்பார்வையின் கீழ் நடக்கின்றது என்பது எவ்வளவு சந்தோஷத்தை அளிக்கின்றது. தேவனுடைய அருமையான குமாரனும், நம்முடைய கர்த்தரும், நம்முடைய நம்பிக்கையும், நம்முடைய மணவாளனுமாய் இருக்கிறவருடைய குணலட்சணத்திற்கு ஒப்பாகும்படிக்கு, பரிசுத்த ஆவியின் கனிகள் நம்மில் வளருவதற்கு அவசியமான மெருகூட்டுதலையும், செதுக்குதலையும் தற்கால பாடுகள் மற்றும் சோதனைகள் அளிப்பதை நாம் பார்க்கின்றோம். ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, மணவாட்டியாகும்படிக்கு உலகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் விரைவில் நிறைவடைந்து, மகிமையில் பிரவேசிப்பார்கள் என்ற காரியம் எவ்வளவு மகிழ்ச்சியாய் உள்ளது. இவர்கள் தங்கள் கர்த்தரும், ஆண்டவருமானவருடன் உலகத்தை ஆசீர்வதித்து, சீர்த்தூக்கும் காரியத்தைச் செய்யும் சிலாக்கியத்தைப் பெற்றிருப்பது எவ்வளவு அருமையான காரியமாக இருக்கின்றது. இத்தகைய உன்னதமான கனம் அல்லது சிலாக்கியம் அல்லது ஆசீர்வாதத்தை வேறு யாரால் பெற்றிருக்க முடியும்.

## "தேவதூதனின் பாடல்"

தேவதூதன் நற்செய்தியை அறிவித்த பின்னர், பரம சேனையும் மேய்ப்பர்களுக்குத் தோன்றி, "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று கூறி, தேவனைத் துதித்தார்கள். இதுவும் கூட ஒரு தீர்க்கத்தரிசனமே. இது தேவனுடைய ஏற்ற வேளையில் நிறைவேற்றப்படும் என்றும், இதன் நிறைவேறுதல் சமீபித்திருக்கிறது என்றும் நாம் விசுவாசிக்கின்றோம். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு இன்னும் மகிமை சேரவும் இல்லை, பூமியிலே மனுஷர் மத்தியில் சமாதானம் இன்னும் வரவுமில்லை. தற்போது எதிர்மாறாகவேதான் காணப்படுகின்றது. தேவனுடைய நாமம் இன்று தூஷிக்கப்பட்டு வருகின்றது. தேவனுடைய நாமமானது, கேலியாக தெய்வீக நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களால், பேய்களைத் தெய்வமாகக் கருதி அவைகளை வழிபடும் புறஜாதிகளால் மாத்திரம் தூஷிக்கப்படாமல், கிறிஸ்துவ ஜனங்களினாலும் தினந்தோறும் தூஷிக்கப்படுகின்றது. தூஷணம் என்பது ஒருவரைக் கனவீனப்படுத்தி, தவறாய்க் காட்டுதலாகும். நாம் அனைவரும் ஒரு காலங்களில் தெய்வீக நாமத்தைத் தவறாய்க் காட்டினதின் மூலம் அவரைத் தூஷித்துள்ளோம். இதற்குத் தேவன் நம்மேல் இரக்கமாய் இருப்பாராக. ஒரு காலத்தில் தேவனுடைய குணலட்சணத்தையும், தெய்வீகத் திட்டத்தையும் தவறாய்க் காட்டியிருந்தோம்; மேலும்,

பாவத்தில் பிறந்த தமது திரளான சிருஷ்டிகளை, நித்தியத்திற்கும் சித்திரவதை செய்யும்படிக்கு அன்பு, இரக்கம், நீதி மற்றும் சத்தியமுள்ள தேவன் திட்டம் போட்டுள்ளார் என்றும் தவறாய் அவரைக் குறித்துக் காட்டியிருந்தோம். நாம் அறியாமையில் இவகைளைச் செய்தபடியால், தேவன் நம்மேல் இரக்கமாய் இருக்கின்றார். இதுபோல அறியாமையில் தேவனைத் தவறாக காட்டிக் கொண்டிருக்கிற மற்றவர்கள் மீது நாமும் இரக்கம் காண்பித்து, அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, அவர்கள் தேவனுடைய அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை உணரத்தக்கதாக நம்முடைய பிரயாசங்களைத் தொடர்ந்து செய்வோமாக! பூமியில் மனுஷருக்குச் சமாதானமும், நன்மையும் என்று உரைக்கப்பட்ட வார்த்தைகள், இரட்சகரின் பிறப்பில் நிறைவேறவில்லை என்பதினால், இது ஒரு தீர்க்கத்தரிசனம் என்றும், ஆயிரவருட அரசாட்சியின்போது நிறைவேறும் என்றும் காட்டுகின்றது. கர்த்தருடைய ஜனங்களுக்குக் கூடப் பூமியில் சமாதானம் இல்லை. கர்த்தருடைய ஜனங்களின் இருதயத்தில் காணப்படும் சமாதானம், அவர்கள் கர்த்தர் மீதும், அவர் வாக்களித்துள்ள மகிமையான விஷயங்களின் மீதுமான விசுவாசத்தின் அடிப்படையிலேயே உள்ளது. நம்முடைய கர்த்தரும், அப்போஸ்தலர்களும் கூட, தற்காலத்தில் தேவபக்தியாய் நடப்பவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள் என்றும், ஒரு மனுஷனுடைய சத்துருக்கள் அவன் சொந்த வீட்டாரே என்றும் கூறியுள்ளார்கள் (2 தீமோத்தேயு 3:12). நாம் குழப்பமடையாமல், இவைகள் அனைத்தும் நிறைவேறும் கிறிஸ்துவின் நாளிற்காக விசுவாசக் கண்களின் பார்வையோடு, காத்திருப்போம். கிறிஸ்துவின் நாளில்தான், கர்த்தருடைய மகிமையின் அறிவினால் நிரம்பி, சமாதானம் பூமியில் காணப்படும். அக்காலக்கட்டத்தில் தெய்வீகத் தயவு வந்து, தவித்துக் கொண்டிருக்கும் முழு மனுக்குலத்தின் மீது இருக்கும் சாபத்தை மாற்றிப் போடும் (ரோமர் 8:22). ஆயிரவருட அரசாட்சி ஆரம்பித்த உடனே இந்தத் தீர்க்கத்தரிசனம் நிறைவேறாமல், யுகத்தின் முடிவில், மனுஷ ஜாதி பாவம், வியாதி, வலி, துன்பம் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்தும், ஆதாம் இழந்த அனைத்திலிருந்தும் மீண்டுமாக இராஜ்யத்தின் முறைமைகளால் தூக்கப்படும்போது நிறைவேறும். அதுவரையிலும் உன்னதத்தில் தேவனுக்கு மகிமையும் சேராது, பூமியிலே சமாதானமும் மனுஷர் மத்தியில் காணப்படுவதில்லை. கிறிஸ்து மூலமாய் வெளிப்பட்டுள்ள தேவனுடைய நீதியையை மனுக்குலம் கண்ட பின்னர், முழு மனுக்குலமும் தெய்வீக அன்பையும், தயவையும் ஏற்றுக்கொண்டுவிடும் என்றும் நாம் எண்ணி விடக்கூடாது. மாறாக, நித்தியஜீவனைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களும், தெய்வீகத் தயவை ஏற்றுக்கொள்ளாத ஒரு வகுப்பாரும் இருப்பார்கள் என்றும், அவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவாகப் போதிக்கின்றன. இப்படி ஆயிரவருட யுக முடிவின்போது சாத்தானும், துணிகர பாவிகளும் அழிக்கப்படுவார்கள்; மேலும், அப்போது வானத்திலும், பூமியிலும் உள்ள யாவரும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனையும், ஆட்டிக்குட்டியானவரையும் என்றென்றைக்கும் துதிக்கும் காலமாக இருக்கும் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்க் கூறுகின்றது. வேதவாக்கியங்களில் முன்வைக்கப்பட்ட தெய்வீகத் திட்டத்தின்படி, மாபெரும் இரட்சிப்பின் திட்டம் நிறைவடையும்போது, மீட்கப்பட்ட மனுக்குலம், இறுதியில் ஓசன்னா! உன்னதத்தில் தேவனுக்கு மகிமை, பூமியில் மனுஷர் மத்தியில் சமாதானம் என்று ஆர்ப்பரிப்பார்கள்.

## ‘‘மகிமையிலிருந்து, மாட்டுத்தொழுவத்திற்கு...’’

நமது கர்த்தரின் பிறப்புக் காலம் தெளிவாக நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். இதைக் குறித்து, 2-ஆம் Volume-இல் நாம் விரிவாக பார்த்துள்ளதால், அதை மீண்டுமாக பார்க்க போவதில்லை. அகஸ்து ராயனின் கட்டளைபடி, ஒவ்வொரு குடும்பமும், கோத்திரமும் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். யோசேப்பும், மரியாளும், தாவீதின் வம்ச வழியைச் சார்ந்தவர்கள் ஆனபடியால், தாவீதின் பட்டணமாகிய பெத்லகேமுக்குச் சென்றார்கள். பெத்லகேம் மலையருகே உள்ள சிறிய பட்டணமாகும். அந்தத் தேசத்தின் விடுதிகள், நம்முடைய விடுதிகளிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். அவைகளுக்கு வரவேற்பறை இல்லாமல் பிரகாரம் இருக்கின்றது. தேவையான எவ்வித சாமான்களும் இல்லாத பெரிய அறைகள் பிரயாணிகளுக்குக் கொடுக்கப்படும். பிரயாணி தனக்குத் தேவையான படுக்கை விரிப்புகள், உணவுகள், பொருட்கள், தங்களுடன் கொண்டு வந்து அவ்வறைகளில் பயன்படுத்துவதுண்டு. குதிரைகள், ஒட்டகங்கள் முதலியவைகளுக்குக் கீழ்த்தளத்தில் கொட்டில்கள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் கூட்ட நெருக்கடியின்போது, மேல் அறைகள் அனைத்தும் நிரம்பி இருக்க, கொட்டில்கள் கூடத் தங்குவதற்குப்

பயன்படுத்தப்பட்டது. லோகோஸாய் இருந்தவர் உலகத்திற்கு வந்தபோது, மிகவும் எளிமையான தொழுவத்தில் பிறந்தார் (யோவான் 1:2). தேவதூதர்கள் கூறினதைக் கேட்ட மேய்ப்பர்கள், அங்கு வந்து குழந்தையைக் கண்டு, பின்னர், புறப்பட்டுப் போய் உண்மையை அறிவித்தார்கள். ஆனால் மரியாளோ பெருமையடித்துக் கொள்ளாமல், தேவனுடைய ஏற்ற வேளைக்காகக் காத்திருந்தாள்.

---

**R4942**

# "ஆலயத்தில் அர்ப்பணிப்பு"

## லூக்கா 2:22-39

"தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்." - லூக்கா 2:31, 32.

இயேசு பிறந்து, நாற்பது நாட்கள் ஆனவுடன், யோசேப்பும், மரியாளும் அவரை ஆலயத்தில் அர்ப்பணிக்கும் பொருட்டாக, எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள முதற்பிறப்பிற்குச் செய்ய வேண்டிய வழக்கத்தின்படி அவருக்கும் செய்யப்பட்டது. முழுத் தேசத்திலும் உள்ள முதற்பேறானவர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டபோது முதற்பேறானவர்கள், தேவனுடைய பணிக்கென்று விசேஷமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு கோத்திரமாகிய லேவியர்களுக்கு அடையாளமாக இருப்பதினால், இந்த முறைமை ஒவ்வொரு தாய்க்குப் பிறக்கும் தலைச்சன் பிள்ளைக்கும் பொருந்தும். முதற்பேறான பிள்ளை தேவனுக்கும், அவருடைய பணிகளுக்கும் விசேஷமாக அர்ப்பணிக்கப்பட வேண்டும்.

இந்த முக்கியத்துவம், இந்தச் சுவிசேஷ யுகத்தில் சேர்க்கப்படும் தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையானது, முதற்பேறானவர்களின் சபை என்று அழைக்கப்படுவதிலிருந்து விளங்குகின்றது. மேலும் நம்மைக் குறித்துத் "தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பேறானவர்கள்" என்று பரிசுத்தவானாகிய யாக்கோபு கூறுகின்றார் (யாக்கோபு 1:18). சபை முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பரலோக மகிமைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர், திரும்பக்கொடுத்தலின் முறை மூலம், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதித்து, பூமிக்குரிய தளத்தில் தேவனுடைய புத்திரர்களாகும் வாய்ப்பை மனுக்குலத்திற்கு அளிக்கக் கூடிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் (அப்போஸ்தலர் 3:19-21).

விசுவாசிகளின் முன்னிலையில், சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தேவனுக்கு அர்ப்பணிக்கும் வழக்கத்தை நாம் பார்த்திருக்கின்றோம். இப்படிச் செய்வதினால், பிள்ளைகள் மேல் நன்மைக்கு ஏதுவான செல்வாக்கே காணப்படும். அதாவது, பிள்ளைகள் எதிர்க்காலத்தில் தங்கள் பெற்றோர்கள் கர்த்தருக்கு மிகச் சிறந்ததை அர்ப்பணித்ததின் மூலம் வெளிப்பட்ட அவர்களின் பராமரிப்பு, அன்பு மற்றும் பக்தியை எதிர்க்காலத்தில் உணர்ந்துகொள்வார்கள். இப்படியாகப் பிள்ளைகள் கர்த்தருக்குத் தங்களை அர்ப்பணிப்பது தொடர்புடைய விஷயத்தில் அனுகூலமான தாக்கத்தினை அடையப் பெற்றிருப்பார்கள்.

மேலும் தங்களிடத்திலுள்ள சிறந்ததை கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் பெற்றோர்களும், மிகப்பெரிய ஆசீர்வாதத்தைத் தங்களுக்கு வருவித்துக் கொள்கின்றார்கள். சோதனைகளும், போராட்டங்களும் நிச்சயமாக வரும். ஆனால், அதன் மத்தியிலும், அவர்களுடைய பிள்ளைகள் தேவனுக்கு உரியவர்களே ஆவார்கள். மேலும் இவர்கள், உம் சித்தமே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினால், மற்றவர்களால் அறிந்துக்கொள்ள முடியாத சமாதானத்தையும், ஆவியில் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வார்கள். இது பிள்ளைகள் பகுத்தறிவு மற்றும் தீர்மானம் பண்ணக்கூடிய வயதை அடையும்போது, அவர்களுடைய தனிப்பட்ட அர்ப்பணிப்பிற்கு அவர்களைத் தகுதியாக்கிடாது என்றாலும்,

பெற்றோர்களுடைய ஆசீர்வாதமான செல்வாக்கானது, பிள்ளைகள் வயதில் முதிர்ச்சியடைகையில் சத்தியம் மற்றும் நீதியின் விஷயத்தில், தேவனுக்குள் சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவியாகக் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

குழந்தையாய் இருந்த இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணிக்க வந்தபோது, வயது முதிர்ந்த தீர்க்கத்தரிசி ஒருவர் வந்து குழந்தையைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டு, தேவனைத் துதித்தார். இவருக்கு, ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற சமீபமாயிருக்கிறது என்றும், இஸ்ரயேலின் இரட்சகரைப் பார்க்காமல், தான் மரிப்பதில்லை என்றும் தேவன் ஏதோ விதங்களில் வெளிப்படுத்தியுள்ளார். ஏதோ ஒரு தெய்வீக வல்லமையினால், வயது சென்ற இந்தத் தீர்க்கத்தரிசி, இயேசுவை அடையாளம் கண்டுகொண்டு, "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது" என்றார் (லூக்கா 2:29-32).

## "இஸ்ரயேலில் அநேகர் விழுகிறதற்கும், எழுந்திருக்கிறதற்கும் விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், நியமிக்கப்பட்டவர்"

சிமியோன், மரியாளிடம், இக்குழந்தை, "இஸ்ரயேலில் அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரயேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்" என்று தீர்க்கத்தரிசனமாகக் கூறினார். எத்துணை அருமையான தீர்க்கத்தரிசனம்! இது, "அநேகர் விழுவதற்கு ஏதுவாக நமது கர்த்தர் இடறுவதற்கான கல்லாகவும், தவறுவதற்கான கன்மலையாகவும் இருக்கின்றார்" என்ற பரிசுத்தவானாகிய பவுலின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது. மேலும் இடறினவர்கள் எழுந்திருப்பார்கள் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகின்றார். "அப்படியானால் என்ன? இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றையத்தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்" (ரோமர் 11:7). தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய கிறிஸ்துவின் சபை முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நிறைவடையும்போது, இந்தத் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் வாயிலாக தெய்வீகக் கிருபையானது, மாம்சீக இஸ்ரயேலர்களிடத்திற்குத் திரும்பும் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் கூறியுள்ளார்; "...பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்" (ரோமர் 11:25-33).

முன்குறிக்கப்பட்ட தெரிந்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை நிறைவடைவதற்கு, "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள்" போதுமான எண்ணிக்கையில் இராதபடியால் அழைப்பானது, ஆபிரகாமின் மாம்சீக சந்ததியைத் தாண்டி, இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஒவ்வொரு ஜாதிகளிலிருந்தும், பாஷைக்காரரிலிருந்தும் சேர்த்துக்கொள்ளும்படிக்கு கடந்துச் சென்றது. இஸ்ரயேலர்களுக்கு ஆசீர்வாதங்கள் கடந்துபோவதற்கு முன்பும், மீதமுள்ள மனுக்குலம், மனித பூரணத்தை அடையும்பொருட்டுச் சீர்த்தூக்கப்படுவதற்கு முன்பும் சபை முழுமை அடைய வேண்டும்.

பரிசுத்தமான ஸ்தீரியாகிய அன்னாள் என்னும் தீர்க்கத்தரிசியானவள், ஒரு நூற்றாண்டுக்கு மேலாக எருசலேமில் குடியிருந்து, ஆலயத்தின் பிரகாரங்களில் காணப்பட்டாள். பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்ட அவளும், குழந்தையை அடையாளம் கண்டுகொண்டு, தேவனைத் துதித்து, ஆபிரகாமின் வாக்குத்தத்தினுடைய நிறைவேறுதலுக்காக, அதாவது, இஸ்ரயேலின் ஆறுதலுக்காகக் காத்திருக்கும் மற்றப் பரிசுத்தமானவர்களிடம் இதை அறிவித்தாள்.

குழந்தையாய் இருந்த இயேசுவைக் கண்டதற்கே நன்றியும், துதியும் ஏறெடுத்தார்கள் என்றால், இயேசுவை அவருடைய முப்பதாவது வயதில், தம்மை மரணம் வரையிலுமான ஜீவப்பலியாக அர்ப்பணித்ததைப் பார்த்தவர்கள் எவ்வளவு அதிமாய் நன்றியை ஏறெடுத்திருப்பார்கள். இவ்வயதில் தம்மை அவர் அர்ப்பணிக்கும்போது அவர், தாம் திவ்வியச் சுபாவத்திலுள்ள புதுச் சிருஷ்டி ஆகுவதற்குப் பரிசுத்த ஆவியினால், மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளார் என்பதை உணர்ந்திருந்தார். மேலும், இயேசு தமது 3 ½ வருட ஊழிய காலத்தின்போது தமது அர்ப்பணிப்பின் பலியை நிறைவேற்றுவதில் காண்பித்த உண்மையைக் கண்டவர்கள் இன்னும் அதிகமாய்த் தேவனைத் துதித்திருப்பார்கள். மேலும், அவர் தமது ஓட்டத்தைக் கல்வாரியில் நிறைவு செய்து, மரண நிலையிலிருந்து மூன்றாம் நாள் உயிர்ப்பிக்கப்பட்டு, தாம் முன்பு சந்தோஷமாய் இருந்த பரத்திற்கு நாற்பது நாட்களுக்கு பின் எடுத்துக் கொள்ளப்பட்டதைப் பார்த்தவர்கள், மனுஷனுக்கான இரட்சிப்பின் தெய்வீகத் திட்டம் நடந்தேறுவதை உணர்ந்து இன்னும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

பெந்தெகொஸ்தே நாளன்று, ஜெநிப்பிக்கும் வல்லமையாகப் பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொண்டவர்களும், தாங்கள் தேவனுடைய புத்திரராக்கப்பட்டுள்ளதை உணர்ந்து கொண்டவர்களும் அதிகம் பாக்கியவான்கள் ஆவர், "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17).

## "விழுகையும், மீண்டும் எழுந்திருத்தலும்"

இயேசுவின் சீஷர்களாகிய சொற்பமானவர்கள் தவிர மற்றப்படி, முழு இஸ்ரயேல் தேசமும், இயேசு, தேவனால் அனுப்பப்பட்டவர் என்று அடையாளம் கண்டுகொள்வதற்குத் தவறி, இடறினார்கள். பத்து அல்லது பதினைந்தாயிரம் பேரே பதிவுகளின்படி அவருடைய சீஷர்களாக இருந்திருக்கலாம். "ஆதலால் அவர்கள் போய், பின்னிட்டு விழுந்து, நொறுங்கும்படிக்கும், சிக்குண்டு பிடிபடும்படிக்கும்" (ஏசாயா 28:13). பரிசுத்தவானாகிய பவுல், ஏசாயா தீர்க்கத்தரிசியின் வார்த்தையை மேற்கோள் இட்டாலும், பின்னர் சுவிசேஷ யுகத்தில் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரின் எண்ணிக்கை நிறைவடையும்போது, இஸ்ரயேல் மீண்டுமாக தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். அப்போது இஸ்ரயேல், தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்ளும் காலம் வரும். ஏசாயா 8:15; ரோமர் 11:9-11 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்.

மேலும் பரிசுத்த பவுல், இஸ்ரயேலுக்கு ஏற்பட்டுள்ள மனக்கடினம், நிரந்தரமானது இல்லை என்றும், புறஜாதிகள் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை நிறைவடையும் வரையிலுமே காணப்படும் என்றும் கூறியுள்ளார். அப்பொழுது, இடறிப்போன இஸ்ரயேலர்கள் மீட்கப்படுவார்கள் என்று கூறியுள்ளார். இதுவே, அவர்களுடைய எழுதலாகும். இதுவே, மாம்சீக இஸ்ரயேலோடு தேவன் பண்ணும் உடன்படிக்கை என்றும், அவர்கள் பாவம் அகற்றப்படும் என்றும், சபையின் இரக்கத்தின் மூலம், இஸ்ரயேலர்கள் இரக்கம் பெறுவார்கள் என்றும் பரிசுத்த பவுல் அறிவித்துள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், சபை, முதலாம் உயிர்த்தெழுதலில் மகிமை அடையும்போது, பின்னர் தெய்வீக ஆசீர்வாதம் இஸ்ரயேலை நோக்கி வந்து, பின்னர், பூமியின் குடிகள்மேல் கடந்து செல்லும். எல்லார் மேலும் இரக்கமாய் இருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார் (ரோமர் 11:25-32).

**R3702**

# “நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள்”

## மத்தேயு 2:1-12

"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா.” - நீதிமொழிகள் 23:26

யூதர்களுக்கு இராஜாவாக புதிதாய்ப் பிறந்த குழந்தையாகிய இயேசுவை, வெள்ளைப்போளம், தூபவர்க்கம் மற்றும் பொன்னாகிய பரிசுப் பொருட்களோடு பார்க்க நாடி முயற்சித்த கிழக்கிலுள்ள சாஸ்திரிகள் பற்றியே நம்முடைய இன்றைய பாடம் அமைகின்றது. இச்சம்பவத்திலிருந்து மாபெரும் மேசியாவிற்குரிய நம்முடைய கடமைகள் மற்றும் அவைகளைப் புதுப்பித்தல் பற்றியும், அவைகளைப் பெருக்கிக் கொள்வது பற்றியும் சில விலையேறப்பெற்ற ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாரம்பரிய கண்ணோட்டத்தின்படி மூன்று நபர்கள் என அனுமானிக்கப்படும் சாஸ்திரிகள், எருசலேமுக்கு வந்தார்கள், மேலும் இவர்கள் வந்து, யூதர்களுக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். செய்தி பரவினபோது, பரிசுத்த நகரம் முழுவதும் பரவசம் உண்டாயிற்று; காரணம் பல நூற்றாண்டுகளாக வாக்களிக்கப்பட்டுள்ள மேசியா, தீர்க்கத்தரிசனங்களின்படி வருவதற்குரிய சமயமாய் அக்காலம் இருந்தது. மேலும் மனுஷர்கள், மேசியாவின் வருகைக்காக அப்போது காத்திருந்தார்கள் என்றும் வாசிக்கின்றோம். இந்த எதிர்ப்பார்ப்பு, பெர்சியாவிலிருந்து மேசியாவுக்கு வணக்கம் செலுத்த வந்த சாஸ்திரிகளினால் உச்சக்கட்டம் அடைந்தது. செய்தி பரவி, இறுதியில் அரண்மனை வட்டாரத்துக்குள் வந்து, பின்னர் ஏரோதின் செவிகளுக்கு எட்டினது. தன்னுடைய முக்கியத்துவத்தைப் புறம்பாக்கிப் போடுபவராகவும், இராஜாவுக்குரிய கனத்தைப் பங்குப்போடுபவராகவும் இருக்கும் யார் மீதும் பொறாமை கொண்டவராகவும் ஏரோது இருந்தார் என்பதில் ஐயமில்லை. மேலும் ஏரோது, தான் இராயனுடைய அரசாட்சியில் அவருடைய பிரதிநிதி போன்று இருப்பதினாலும், தான் ரோம சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பு வேலையில் அமர்த்தப்பட்டுள்ளதினாலும், தன்னுடைய கட்டுப்பபாட்டின் கீழ் இருக்கும் தேசத்தில், இராயனுக்கு எதிரான நாமத்தில் எவ்விதமான இராஜாவும் எழும்பாமல் பார்த்துக் கொள்வது தனது கடமையெனக் கருதியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

### ‘‘பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம்’’

ஆகவே ஏரோது, சாஸ்திரிகளை வரவழைக்க ஆள் அனுப்பினார். அவர்களுடைய தேடுகையில் தனக்கும் ஆர்வம் உள்ளதுபோல போலியாக பாவனை பண்ணி, இத்தனை தொலைதூரத் தேசத்தில் இருக்கும் அவர்கள், மேசியாவைக் குறித்து எப்படி அறிய வந்தார்கள் என்றும், குழந்தையைக் கண்டுபிடிக்கும் இடத்தை அவர்கள் எப்படி அறிந்துக்கொண்டார்கள் என்றும் அவர்களிடம் கேள்வி கேட்டார். அவர்கள் கிழக்கில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டதாகக் கூறினார்கள். கிழக்கில் உள்ள மாகிகள் வான சாஸ்திரிகளாக இருந்தபடியால் அவர்கள் தனிப்பட்ட நபர் மற்றும் தேசத்தினுடைய வரலாற்றை நட்சத்திரத்திலிருந்து அறியக்கூடியவர்களாக இருந்தார்கள். மனுஷர்கள் மற்றும் தேசங்களுடைய சரித்திரத்தை எந்த அளவுக்குக் கர்த்தர் நட்சத்திரங்களுடைய ஏற்பாடுகளில் எழுதியிருப்பார்/வைத்திருப்பார் என்பதைக் குறித்து நாம் முடிவு எடுக்க வேண்டாம். ஆனால் உலகத்தாரைப் பொறுத்தமட்டில் நட்சத்திர மண்டலங்கள் சங்கீதக்காரன் விவரிப்பது போன்று தேவனுடைய மாபெரும் புத்தகமாக இருக்கின்றது; "இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கின்றது” (சங்கீதம் 19:2). நம்மிடத்தில் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகள் இருக்கிறபடியால் நாம் மனுஷனுடைய பாரம்பரியத்தையோ, கட்டுக்கதைகளையோ, வான சாஸ்திரிகளின் உதவியையோ நாட அவசியமில்லை; காரணம், "அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வசனமும் நமக்கு உண்டு: பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்” (2 பேதுரு 1:19).

வான சாஸ்திரத்தில் எந்த அளவிற்கு உண்மை இருக்கும் என்பதை நாம் அறிய முற்படாமல், கிழக்கிலுள்ள சாஸ்திரிகள் மேசியாவின் பிறப்பை அறிந்துக்கொள்வதற்கும், அவர் எந்த நாட்டை சார்ந்தவர் என்று அறிந்துக்கொள்வதற்கும் அவர்களை வழிநடத்தின அந்த விசேஷமான நட்சத்திரத்தின் தோன்றுதலில் உண்மை உள்ளது என்று மாத்திரம் உறுதியடைகின்றோம். கர்த்தர் அவர்களை, சொப்பனத்தில் தோன்றி எச்சரித்தது போன்று, வேறு விதங்களிலும் இக்காரியங்களைக் குறித்ததான கூடுதல் விவரம் கொடுத்திருக்க வேண்டும். சாஸ்திரிகளுடைய மேசியாவின் தேடுதலில் ஆர்வம் கொண்டுள்ளது போன்று, ஏரோது போலித்தனம் பண்ணினான். ஏரோது தனக்கு உதவி செய்யும்படி, யூதேயாவின் ஞானிகளை அழைப்பித்தார். இவர்கள் வானசாஸ்திரிகள் அல்ல, இவர்கள் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கத்தரிசனங்களையும் கற்றுத்தேர்ந்தவர்களாகிய பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் ஆவர். அவர்களிடம் மேசியா எங்கே பிறப்பார் என்று தீர்க்கத்தரிசிகள் முன்னுரைத்துள்ளார்கள் என்று ஏரோது கேட்டார். இதற்கு "யூதேயாவின் பெத்லகேம்" என்பது அவர்களுடைய பதிலாக இருந்தது. இந்தப் பட்டணம் ஆறு மைல் தூர தொலைவில் இருந்தபடியால், கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் புறப்பட்டுச் சென்றார்கள். சாஸ்திரிகள் தாங்கள் குழந்தையைக் கண்ட பின்பு, இராஜாவும் வந்து குழந்தையைப் பணிந்து கொள்ளத்தக்கதாக, குழந்தையைப் பார்த்த இடத்தைத் திரும்பி வந்து அறிவிப்போம் என்று வாக்களித்துச் சென்றார்கள். ஆனால், ஏரோதோ இந்தத் தகவலைப் பயன்படுத்தி குழந்தையாய் இருக்கும் இயேசுவை அழிக்க முற்படப் போகின்றார்.

பெத்லகேமுக்குப் போகும் வழியில், அவர்களுக்கு கிழக்கில் தோன்றின வியக்கத்தகு நட்சத்திரம், மீண்டும் தோன்றி குழந்தையும், அதன் தாயும் இருக்கும் வீட்டிற்கு வழிகாட்டினது. அந்த நட்சத்திரம் வெளிச்சம் அல்லது தீபந்தம் போன்று தோன்றியிருக்கும். பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த **பேராசிரியர் சார்லஸ் ஏ. யங்** அவர்கள், நட்சத்திரங்கள் திடீரென வானத்தில் தோன்றி, பின்னர் மிகவும் பிரகாசமடைவதும், பின்னர் ஓரிரு வருடங்களில் மங்கி போவதும் அரிதான சம்பவம் அல்ல என்று குறிப்பிடுகின்றார். இப்படியான நட்சத்திரம் 1901-ஆம் ஆண்டில் கூடத் தோன்றியுள்ளது. ஆனால் ஒரு பிரகாசமான நட்சத்திரம் தோன்றினது என்பதே நம்முடைய கருத்தாக இருக்கின்றது.

## "கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள்"

"**டேக்டியஸ், சுய்டோஜஸ்** மற்றும் **ஜோசப்பஸ்** போன்ற வரலாற்று ஆசிரியர்கள், கிழக்குப் பகுதிகள் முழுவதிலும் அச்சயமத்தில், யூதேயாவில் ஒரு வல்லமையான முடியரசு தோன்றி, உலகம் முழுவதையும் ஆளுகை செய்யும் என்ற கருத்துத் தீவிரமாகக் காணப்பட்டது என்று நமக்கு தெரிவிக்கின்றார்கள்" - **பரரார்.**

"இக்காலக்கட்டத்திற்குச் சற்று முன்பு வாழ்ந்த வரலாற்று ஆசிரியராகிய **விர்ஜில்** அவர்கள், பரலோகத்திலிருந்து ஒரு குழந்தை வந்து, பாவத்தை எடுத்துப்போடுவார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது என்று தெரிவிக்கின்றார்" - **ஜேகோபஸ்.**

"**கன்பியுசியஸ்** என்பவரும் இத்தகைய இரட்சகர் தோன்றுவார் என்று தீர்க்கத்தரிசனம் உரைத்துள்ளார், மேலும், இவருடைய பின்னடியார்களின் பிரதிநிதி இரட்சகரைத் தேடிப் போவார் என்றும் கூறியுள்ளார். இதுவே புத்த மதம் சீனாவில் அறிமுகமாவதற்கான காரணமாயிற்று." - **ஆபோட்.**

"இவர்கள் அனைவரையும் காட்டிலும் **சொராஸ்டர்** என்பவர் மிகவும் தெளிவாகத் தீர்க்கத்தரிசனம் உரைத்துள்ளார். சொராஸ்டர் எரேமியாவின் சீஷனாக இருந்தபடியால், அவரிடமே இவர் மேசியாவைக் குறித்த விஷயங்களை அறிந்து, அவரைக் குறித்துத், தன்னுடைய சீஷர்களிடம் பேசியுள்ளார் என்று **நெஸ்டோரியர்கள்** கூறுகின்றார்கள்" - **பெர்சிய சமயப் பிரச்சாரர்.**

பெர்சியா, உலகத்தின் பிரதான நாடாக இருக்கும் சமயத்தில் தானியேலும், அவருடன் கூட இருந்த மற்ற மூன்று எபிரெயர்களாகிய அனனியா, மீஷாயேல் மற்றும்

அசரியா பெர்சியாவில் பிரபுக்களாகவும், அங்குள்ள ஞானிகளுடன் நெருக்கமான தொடர்பும் கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். இவர்கள் வாயிலாக, இயேசுவைக் குறித்த தீர்க்கத்தரிசனம் வம்சாவழியாக வந்தது என்பதையும் நாம் புரிந்துக்கொள்ளலாம். ஆகவே, மேசியாவினுடைய பிறப்பின் காலம் தொடர்பான தானியேலின் தீர்க்கத்தரிசனங்கள் சொராஸ்டரின் சீஷர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். இன்னுமாக யூதர்கள் சிதறடிக்கப்பட்டுப் பல்வேறு இடங்களில் காணப்பட்டார்கள். இவர்களிடம் தேவனால் நீண்ட காலத்திற்கு முன்பு வாக்களிக்கப்பட்டுள்ள, மாபெரும் மேசியாவைக் குறித்த நம்பிக்கையும் இருந்தது.மேலும், இஸ்ரயேலுக்கு மாத்திரம் அல்லாமல் பூமியின் குடிகள் அனைத்தின் மேலும் ஆசீர்வாதம் கொண்டு வருபவர் என்று இந்த மேசியாவைக் குறித்துத் தீர்க்கத்தரிசனம் வழங்கப்பட்டிருந்தது.

## "வெள்ளைப்போளம், தூபவர்க்கம் மற்றும் பொன்"

தேவன் தம்முடைய நற்செய்தியை அறிவிப்பதற்கு தூதுவர்களாகத் தெரிந்துக்கொண்டவர்கள், ஞானிகளாய் மாத்திரம் இராமல் பயபக்தியுள்ள, விசுவாசமுள்ள புருஷர்களாகவும் இருந்தார்கள். மேலும், யூதேயா மற்றும் எருசலேமில் உள்ள ஜனங்களை விழித்தெழுப்பப்பண்ணுவதற்கும், மாபெரும் இராஜாவைக் குறித்து அறிவிப்பதற்கும் தேவன் கிழக்கிலிருந்து, தூதுவர்களைத் தெரிந்துக்கொண்டது, விதிவிலக்கான விஷயமல்ல. அவர்கள் புறஜாதி மனுஷர்களாகவும், தேவன் வழிநடத்தினவர்களாகவும், வாக்களித்த ஜனங்களைச் சார்ந்தவர்களாகவும் இல்லாதிருந்தும், அவர்களும் நல்ல மனுஷர்களாகவும், பயபக்தியுள்ள மனுஷர்களாகவும், பூமியின் மீது வரவிருக்கின்ற சமாதானத்தின் ஆசீர்வாதத்தைக் குறித்து அறிய விரும்புகிறவர்களாகவும் இருந்தார்கள். எந்த ஜாதியராய் இருந்தாலும், மனுஷர்கள் மத்தியிலேயே நல்ல சித்தம் கொண்ட மனுஷர்களைக் கர்த்தர் தமது பிரதிநிதிகளாக, தூதுவர்களாகத் தெரிந்துக்கொள்ள பிரியம் கொள்வார்.

கிறிஸ்துவ மண்டலத்தில் உள்ள அநேகர், இந்த ஞானமுள்ள சாஸ்திரிகளாகிய புறஜாதி மனுஷர்களிடமிருந்து அநேக முக்கியமான பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மனுப்புத்திரர்களுக்கு வெளிப்படும் தேவனுடைய இரக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு, தவறான தேசப்பற்று எதுவும், இந்தச் சாஸ்திரிகளுக்கு இடையூறாக இருக்கவில்லை. மேலும், அவர்கள் இரட்கசரைக் கண்டபோது, அவரைச் சூழ்ந்திருக்கும் எளிமையான சுற்றுச்சூழலைக் கண்டும் அவர்கள் ஐயங்கொள்ளவில்லை. அவர்கள் மூன்று விதத்தில் அவரை வணங்கினார்கள், அதாவது, 1) அவர்கள் அவர் முன் சாஷ்டாங்கமாக விழுந்து சரீரப்பிரகாரமாகத் தங்களுடைய பயபக்தியை வெளிப்படுத்தினார்கள். 2) அவர்கள் தங்களுடைய இருதயத்தில் அவரை வணங்கி, தங்களுடைய சந்தோஷத்தையும், நம்பிக்கையையும் நாவினால் வெளிப்படுத்தினார்கள். 3) அவர்கள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, இராஜாவுக்குப் பொருத்தமான மூன்று அன்பளிப்புகளை அவருக்குக் கொடுத்தார்கள். வெள்ளைப்போளம், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கும் தன்மையையும், தூபவர்க்கமானது துதியையும், பொன்னானது கீழ்ப்படிதலையும் அடையாளப்படுத்துகின்றது.

## "உங்கள் சரீரங்களைத் தேவனுக்கேற்ற ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பதே, உங்கள் புத்தியுள்ள ஆராதனையாக இருக்கும்"

மாபெரும் மேசியாவைக் குறித்தும், அவருடைய ஊழியத்தைக் குறித்தும் மிகக் குறைவான அறிவும், வெளிச்சமும் கொண்டிருந்த அந்த உண்மையான புறஜாதி மனுஷர்களிடம் காணப்பட்ட பயபக்தியின் ஆவியை நம்மோடு ஒப்பிடும்போது நமக்கு வெட்கம் வருகின்றது. ஏனெனில், தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரைக் காண்பதற்கு அவர்களைக் காட்டிலும் பிரகாசமான வெளிச்சத்தை நாம் பெற்றிருக்கின்றோம்; மேலும், அவருடைய நட்சத்திரத்தை மிகத் தெளிவாக நாம் கண்டிருக்கின்றோம்; மேலும், தீர்க்கத்தரிசனங்களின் வாயிலாக நாம் அவரிடம் வழிநடத்தப்பட்டிருக்கின்றோம். மேலும், நாம் அவரைக் குழந்தை பருவத்தில் பார்த்ததோடு அல்லாமல், நம்முடைய பாடுகள், கஷ்டங்களை ஏற்றுக்கொண்டு சுமப்பதற்கும், தம்முடைய ஆத்துமாவைப் பாவத்திற்கான பலியாக ஒப்புக்கொடுப்பதற்குரிய பூரணராக அவரைப் பார்த்திருக்கின்றோம்; அதாவது,

அவருடைய தழும்புகளினால் நாம் குணமாவதற்கு உரிய பூரணராக அவரைப் பார்த்திருக்கின்றோம். நம்மை இப்படியாக நேசித்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மைச் சம்பாதித்தவரின் பாதங்களில் எவ்விதமான பலிகளைச் சமர்ப்பிக்கப் போகின்றோம்? மேலும், பரலோகத்தில் இருப்பவரின் சத்தத்தின் வாயிலாக, மனுக்குலத்திற்கும், நமக்கும் மகா கிருபைகளை அருளின மாபெரும் இராஜாவிற்கு - எவ்விதத்தில் நம்முடைய சரீரங்களை முழுமையாய் அர்ப்பணித்து, எவ்விதத்தில் ஆழமான பயபக்தியோடு நம்முடைய முட்டுகளை மடக்கி வணக்கம் தெரிவிப்போம்? நாம் நம்முடைய வெள்ளைப்போளத்தை அவருக்கு அர்ப்பணித்துள்ளோமா? கசப்பான அனுபவத்தின் பட்சத்திலும் அவருக்கு ஊழியம் செய்யும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளோமா? அவரோடுகூடப் பாடு அனுபவிக்கும் பட்சத்தில், இராஜாவாகிய அவரைக் கனப்படுத்துவதில் சந்தோஷத்தை வெளிக்காட்டியுள்ளோமா? வெளித்தோற்றமாய் இல்லாமல், இருதயத்தில் அவரை வணங்கி உள்ளோமா? வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இருதயப்பூர்வமான நன்றியை, துதியைத் தூபவர்க்கமாக அவருக்கு செலுத்தியுள்ளோமா?

நம்முடைய பூமிக்குரிய பொருட்களாகிய, நம்முடைய பொன்னை அவருடைய பாதங்களில் சமர்ப்பித்துள்ளோமா? நம்மிடத்தில் உள்ள அனைத்தும் மற்றும் நாம் பலிச்செலுத்தும் அனைத்தும், மகா இராஜாவாகிய இம்மானுயேல் ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் குறைவானவைகள் என்பதை நாம் உணர்ந்துள்ளோமா? இப்படியாக நம்முடைய தற்போதைய மனப்பான்மை காணப்படுகின்றதா? மேலும், இதே மனப்பான்மை இனிவரும் நாட்களிலும் நம்முடைய தற்கால பயணம் முடியும் வரையிலும் நீடித்து நம்மிடம் காணப்படுமா?

"உங்கள் சரீரங்களை, பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதே புத்தியுள்ள ஆராதனை" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள், கர்த்தரிடத்தில் நாம் முதலாவதாகச் செய்துகொண்ட அர்ப்பணிப்பை மாத்திரம் குறிக்காமல், தினந்தோறும் சுயத்திற்கு மரிப்பதையும், நாளுக்குநாள், கர்த்தருடைய ஊழியங்களில் ஜீவித்து, நம்முடைய சரீரத்திலும், ஆவியிலும் அவரை மகிமைப்படுத்துவதையும் குறிக்கும் பலியின் உடன்படிக்கையாக இருக்கின்றது. ஆரம்பத்தில் நம்மிடம் காணப்பட்ட இந்த மனப்பான்மை எதிர்க்காலத்திலும் காணப்படுமா? ஞானத்திலும், அன்பிலும், ஊழியத்திலும், ஆராதிப்பதிலும், வளருவதில் நாம் தொடருவோமா? நம்முடைய கிருபையான பரலோக இராஜாவுக்கு, அதாவது, சீக்கிரத்தில் தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறவருக்கு, அவருடைய சிங்காசனத்தில் நாம் உட்காருவதற்கும், அவருடைய மகிமையில் பங்கடைவதற்கும், நாம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாக மனுக்குலத்தின் மீது ஆசீர்வாதங்களைப் பொழியும் மாபெரும் வேலையில் அவரோடு பங்கடைவதற்கு நம்மை அழைத்தவருக்கு, நம்மிடத்தில் உள்ள கொஞ்சமானவைகளை அவர் பாதத்தில் வைக்கும் சிலாக்கியத்தில் நாம் வளருவோமா?

## "என் மகனே, உன்னுடைய இருதயத்தை எனக்குத் தா"

நம்முடைய பொன்னான ஆதார வசனத்தை இங்கு நினைவுகூருவது நல்லது. இது குமாரர்கள் ஸ்தானத்தில் வராத பாவிகளுக்குப் பொருந்துவதில்லை. பாவிகளுக்கு ஒரு செய்தி உள்ளது; அதாவது, மனந்திரும்புவதற்கான ஓர் அழைப்பு உள்ளது; அதாவது, பாவத்தைத் துறந்து, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வரும் நீதிமானாக்கப்படுதலை ஏற்றுக்கொள்வதற்கான அழைப்பு உள்ளது. ஆனால் யார் பாவங்களுக்காக மனம் வருந்தி, பின்னர் மனந்திரும்பின ஓர் ஜீவியம் வாழ முயற்சித்து, முந்தைய தவறுகளிலிருந்து மீண்டு வந்து, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசம் வைத்து, தேவனுடைய குமாரனின் மரணம் மூலம் தேவனோடு ஒப்புரவாகிக் காணப்படுகின்றார்களோ, அத்தகையவர்களுக்கே, "என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா" என்ற நம்முடைய ஆதார வசனம் பொருந்தும்.

நாம் நம்முடைய இருதயங்களைக் கொடுப்பது என்பது நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் முழுமையாகக் கொடுப்பதை அடையாளப்படுத்துகின்றது. சாஸ்திரிகள் கொடுத்த மூன்று அன்பளிப்புகளும், "என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா" என்ற சுருக்கமான வாக்கியத்திற்குள் அடங்கிவிடுகின்றது. யார் ஒருவர் தனது இருதயத்தைக் கர்த்தருக்கு முழுமையாகவும், தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாமல்

கொடுக்கின்றார்களோ, அவர்கள் இராஜாவுக்கு மகிமை சேரும் வண்ணமாக அவருடைய ஊழியத்தில் பயன்படும்படி தன்னுடைய சரீரத்தை, தன்னுடைய ஆராதனையை, பயபக்தியை, துதியை, தனது பூமிக்குரிய பொக்கிஷங்களை, நேரத்தை, திறமையை, செல்வாக்கை, பணத்தை மற்றும் எல்லாவற்றையும் கொடுக்கின்றவாகளாக இருக்கின்றனர்.

இவ்விதமான முயற்சிகளை எடுக்காதவர்கள், உடனடியாக எடுக்கும்படி வலியுறுத்துகின்றோம். அப்போஸ்தலர் கூறுகின்றதுபோல, இதுவே நம்முடைய புத்தியுள்ள ஆராதனையாக இருக்கின்றது. தேவன் நம்முடைய ஊழியங்களை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பமுள்ளவராக இருக்கின்றார் என்றும், நம்முடைய அன்பான மீட்பரின் நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பட்டுள்ள நாம், நம்மையே ஒப்புக்கொடுக்கும் நமக்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியும்போது, புத்தியுள்ள ஜனங்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

கர்த்தருடைய கிருபையை ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு, தங்களுடைய சரீரங்களை ஜீவபலியாக ஏற்கெனவே ஒப்புக்கொடுத்து, தங்களுடைய இருதயங்களை ஏற்கெனவே கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறவர்களுக்கு நாம் நினைப்பூட்ட விரும்புவது என்னவெனில், பலிப்பீடத்தின் மேல் ஒருமுறை வைக்கப்பட்ட உங்கள் பலி, அங்கேயே காணப்பட வேண்டும். மேலும், அது பலிப்பீடத்தின் மீது காணப்படுவது வரையிலும், அதிகமதிகமான சந்தோஷத்தோடு ஊழியம் செய்யப்பட வேண்டும். பலிச் செலுத்துவதற்கான ஒவ்வொரு வாய்ப்புகளும் அதிகமதிகமாக உணர்ந்துகொள்ளப்படவும் வேண்டும் மற்றும் புத்திக்கெட்டாத தேவ சமாதானமானது இருதயத்தை ஆளும் அனுபவங்கள் அதிகமதிகமாய்க் காணப்படவும் வேண்டும். மேலும், தேவன் தம்மையும், தமது குமாரனையும் அன்பு செய்கிறவர்களுக்கென்று வைத்திருக்கம் மகிமையான விஷயங்களுக்கு, ஆவியின் கிருபைகள் மூலம் அதிகமதிகமாய் நாம் ஆயத்தம்பண்ணப்படவும் வேண்டும் என்பதேயாகும்.

---

**R1681**

# “எகிப்துக்குத் தப்பி ஓடுதல்”

## மத்தேயு 2:13-23

"கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.”
சங்கீதம் 121:8

இப்பாடத்தில் கவனிக்க தகுந்த ஐந்து விசேஷமான கருத்துக்கள் உள்ளது. அவை,

1) தேவனுடைய தொலைநோக்குப் பார்வை மற்றும் முன்னேற்பாடு. தேவனிடம் காணப்படும் எதிர்க்காலத்தைப் பற்றின அறிவு, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாகும். எல்லைகளுடைய மனங்களுக்கு, எல்லைகளே இல்லாத மனதின் ஆழத்தை கற்பனை செய்து பார்க்க முடியாது. பிதாவாகிய தேவனுடைய ஞானம் மற்றும் அறிவு, அவருடைய அரசாட்சியில் உள்ள நெருக்கடிகளைத் தீர்க்க மிக வல்லமையுள்ளது என்று அறிந்துக்கொள்ளும் சிலாக்கியம் ஆறுதலாய் இருக்கின்றது. மேலும், மனுஷனுடைய கோபமோ, இருளின் அனைத்து அதிகாரங்களோ, கொஞ்சம் கூடத் தெய்வீகத் திட்டத்தைக் குலைத்துப் போட முடியாது என்பதை அறிவதும் ஆறுதலாய் உள்ளது. மேலும், இதே வல்லமைதான் அவருடைய ஆவிக்குரிய குமாரனை மாம்ச சுபாவத்தில் மாற்றினது; அதனோடு கூட இயேசு தம்மைக் காத்துக்கொள்ள முடியாத குழந்தைப் பருவம் முதல் உலகதிற்கான மீட்பிற்காக அவர் தம்மைப் பலிச் செலுத்த நியமிக்கப்பட்ட காலம்வரை அனைத்து எதிராளிகளிடமிருந்து அவரைப் பாதுகாக்கவும் செய்தது.

2) தேவதூதர்களின் ஊழியத்தை நாம் மறுபடியும் கவனிக்கிறோம். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபிரெயர் 1:14) "தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேதுரு 1:12). ஆம், உண்மையில் அவர்கள் எந்த வேலையையும் செய்ய ஆயத்தமாய் இருக்கின்றார்கள்.

3) கர்த்தருடைய தூதனின் ஆலோசனைக்கும், எச்சரிப்புக்கும் யோசேப்பு மற்றும் மரியாள் காண்பித்த விசுவாசம் மற்றும் உடனடிக் கீழ்ப்படிதல் கவனிக்கப்படத்தக்கது. அவர்கள் கேள்வி கேட்கவோ அல்லது தயக்கமோ காண்பியாமல், கர்த்தருடைய கட்டளைக்கு உடனடியாக கீழ்ப்படிந்தார்கள். எகிப்துக்கு அவர்கள் புறப்பட்ட போதும், பாலஸ்தீனியாவுக்கு அவர்கள் திரும்பிய போதும் கர்த்தருடைய ஆசீர்வாதமும், பாதுகாப்பும் அவர்களோடு இருந்தது. மேலும் புதிய இராஜாவாகிய அர்கெலாயுவின் அதிகாரத்தினிடமிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கும் போதும், எருசலேமுக்கு அருகாமையில் உள்ள பெத்லகேமுக்குச் செல்வதற்குப் பதிலாக, நாசரேத்துக்குப் போகும் போதும், யோசேப்பு மற்றும் மரியாள் தாங்கள் இஸ்ரயேல் தேசத்தில் எங்குக் குடியிருக்க வேண்டும் என்பதைக் குறித்த தேவனுடைய வழிநடத்துதலை அலட்சியப்படுத்தவில்லை.

4) இந்தச் சூழ்நிலையில், அநேக தீர்க்கத்தரிசனங்களின் நிறைவேறுதலை நாம் காணலாம், அதாவது, அ) எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" என்பதாகும். இந்தத் தீர்க்கத்தரிசனம் இரண்டு அர்த்தங்களை உடையதாகும். இந்தத் தீர்க்கத்தரிசனம் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட இஸ்ரயேலையும், ஏரோதின் மரணத்திற்குப் பின்பு தேவனுடைய குழந்தையாகிய இயேசு, எகிப்திலிருந்து புறப்பட்டு வருவதையும் குறிக்கின்றது (யாத்திராகமம் 4:22, 23; மத்தேயு 2:15). மேலும், எகிப்து உலகத்தையும் அடையாளப்படுத்துகின்றது. கிறிஸ்துவும் தேவனுடைய முழுச் சபையும் அழைக்கப்பட்ட, வாக்களிக்கப்பட்ட சந்ததியாய் இருக்கின்றார்கள். ஆ) நாசரேத்துக்கு வந்து குடியேறின சம்பவம், மற்றொரு தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தது, "நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கத்தரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்தேயு 2:23). பெத்லகேமில் குழந்தைகள் கொல்லப்பட்ட சம்பவமும், தீர்க்கத்தரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது (எரேமியா 31:15; மத்தேயு 2:17, 18). இந்தத் தீர்க்கத்தரிசனங்கள் அனைத்தும் சகலத்தையும் அறிந்திருக்கும் தேவனுடைய அறிவைச் சுட்டிக்காட்டுகின்றது.

5) குழந்தையாய் இருந்த மீட்பரைப் பாதுகாக்க தேவன் எடுத்துக்கொண்ட பாதையும், முறையும், எவ்வித ஒழுங்குகளையும் மீறவில்லை என்பதும் கவனிக்கப்படத்தக்கது. தேவனுடைய கரத்தில் அனைத்து வல்லமைகள் இருந்தபோதிலும், அவர் ஏரோதைக் கொன்று போடவோ, அவனது அதிகாரத்தில் இடைபடவோ முற்படவில்லை. இத்தகைய அதிகாரங்களைத் தடைபண்ணுவதற்கான காலம், இன்னும் வரவில்லை. உலகத்தின் இராஜ்யங்களுக்கான காலமானது, புறஜாதியாரின் காலம் நிறைவேறும் அளவு நீடிக்கப்பட்டுள்ளது. இவைகள் தெய்வீகத் திட்டத்தை இடையூறு பண்ணாத வரையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இடையூறு பண்ணும் பட்சத்தில், தேவன் அதற்குத் தடை விதிக்கின்றார் அல்லது நன்மைக்கு ஏதுவாக மாற்றுகின்றார்.

ஆனால், இங்குத் தேவன், இரட்சிப்பின் திட்டத்திற்கு மையமாக இருக்கும் தம்முடைய குமாரனைப் பாதுகாப்பதற்காகத் தலையிட்டார். ஆனால் இந்தக் குமாரன், உலகத்தின் மீட்பிற்காக தம்மைப் பலிச் செலுத்தும் காலம் வந்தபோது, இவ்வுலகத்தின், இருளின் அதிகாரிகளுடைய வழித் திறக்கப்பட்டது. பின்னர், அவர்கள் தேவனுடைய குமாரனைச் சிலுவையில் அறையும்படி அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஏனெனில், அநேகருக்கான ஈடுபலியாக தம்மை ஒப்புக்கொடுக்கவே அவர் உலகத்திற்கு

அனுப்பப்பட்டிருந்தார். அவருடைய வேளை வந்தபோது, அதிகாரிகள் அனுமதிக்கப்பட்டார்கள் (மத்தேயு 20:28; யோவான் 2:4, 7:6; லூக்கா 22:53). இராஜாவுடைய கோபத்துக்கு தப்பித்துக்கொள்ள முடியாத குழந்தைகள் குறித்த அழுகையும், புலம்பலும், தவிக்கும் சிருஷ்டிகளுக்கு அடையாளமாக இருக்கின்றது. இது, "திரும்பக் கொடுத்தலின் காலங்கள்" வரும் வரையிலும் நன்மைக்கென்று அனுமதிக்கப்படும் விஷயங்களுக்கு அடையாளமாக இருக்கின்றது.

நம்முடைய ஆதார வசனம், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய, கர்த்தருடைய ஜனங்களுக்குரிய விசேஷித்த வார்த்தையாகும். புதுச் சிருஷ்டிகளாகிய அவர்கள், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் வரையிலும், அவர்கள் தேவனால் பாதுகாக்கப்படுவார்கள்.

---

**R2558**

# "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும் விருத்தியடைந்தார்"

## லூக்கா 2:41-52

"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்." லூக்கா 2:52

நமது கர்த்தராகிய இயேசுவின் மழலை பருவம், குழந்தை பருவம் மற்றும் வாலிப பருவத்தைக் குறித்து அநேக விநோதமான கற்பனைகள் செய்யப்பட்டுள்ளது; மேலும் இக்கற்பனைகளின் மேல் நமக்கு யாதொரு அக்கறையும் இல்லை. வேத மாணாக்கர்களோ வேதாகமத்தின் பதிவுகளை மாத்திரமே சார்ந்திருந்து, உண்மையாய் இராத கட்டுக்கதைகள் மற்றும் கற்பனைகளின் மேல் கவனம் செலுத்தாமல் இருக்க வேண்டும். நமது இரட்சகரின் முழுமையான வாழ்க்கை குறித்து, நாம் தெரிந்திருப்பது அவசியம் என்று தேவன் கண்டிருந்தாரானால், அவர் சந்தேகமின்றி, பதிவுகள் செய்யப்பட ஏற்பாடு பண்ணி இருந்திருப்பார். ஆனால், நமது கர்த்தரின் ஆரம்பகட்ட வாழ்க்கையில் கவனிக்கத்தகுந்த அல்லது புகழத்தக்க பாத்திரமாக எதுவும் இல்லை என்று நாம் கருதிவிடக்கூடாது; மாறாக ஆரம்பக்கட்ட வாழ்க்கையின் பதிவுகள் புறக்கணிக்கப்படுவதன் மூலம், யோர்தானில், பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தைத் தொடரும் 3 ½ வருட இயேசுவின் வெளிப்படையான ஊழியக்காலமே, விசேஷமானதாகக் காட்டப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், மனுஷனாகிய இயேசுவின் வார்த்தைகள் மற்றும் கிரியைகள் நமக்கு முக்கியமானதாகவோ மற்றும் பாடங்கள் கற்பிக்கிறதாகவோ இராமல், பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் அபிஷேகிக்கப்பட்ட இயேசுவின், அதாவது, கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளும், செய்கைகளுமே நமக்கு முக்கியமானதாகவும், படிப்பினையாகவும் அமைகின்றது. எனினும், இயேசுவின் குழந்தை பருவம் மற்றும் வாலிபப் பருவம் குறித்து, வேதவாக்கியங்களில் பதிவு பண்ணப்பட்டுள்ள சிறு வரிகளின் எல்லைக்குள்ளாகவே நம்மை நிறுத்தி, சில விலையேறப்பெற்ற மற்றும் உதவிகரமான பாடங்களை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

நமது கர்த்தருடைய முதல் பன்னிரண்டு வருடங்கள் குறித்து நமக்கு எதுவும் தெரியவில்லை. தெய்வீக வழிநடத்துதலின்படி அவருடைய தாயும், வளர்ப்புத் தகப்பனும், ஏரோதின் கைக்கு இயேசுவைத் தப்புவிக்க, எகிப்துக்குப் போனது மாத்திரம் நமக்குத் தெரியும். ஏரோதின் மரணம் வரையிலும், அவர்கள் எகிப்திலேயே சில மாதங்கள் தங்கியிருந்து பின்னர், கலிலேயாவில் உள்ள நாசரேத்துக்குத் திரும்பினார்கள். யூதர்களின் பாரம்பரியத்திற்கு ஏற்ப, தாவீதின் குடும்பத்தில், ஓர் இராஜா தோன்றுவதைக் குறித்தே ஏரோது பயந்தார். மேலும் ஏரோது, தாவீதின் சந்ததியாகவோ, யூதர்களின் சந்ததியாகவோ இராமல், யாக்கோபின் சகோதரனாகிய ஏசாவின் சந்ததியாக இருந்தபடியால், ஏரோது, தான்

இராஜாவின் ஸ்தானத்திலிருந்து புதிய இராஜாவினால் தள்ளப்படுவேனோ என்று பயந்தார். கிழக்கிலிருந்து சாஸ்திரிகள், புதிதாய்ப் பிறந்த யூதருடைய இராஜா எங்கே? என்று கேட்டு வந்தபோது, ஏரோது, அவர்கள் குழந்தையைக் கண்டுபிடித்தவுடன் தனக்கும் வந்து அறிவிக்க வேண்டும் என்று கூறினார். ஏரோது, தானும் வந்து புதிய இராஜாவைக் கண்டு வணங்க விரும்புவதாக நடித்தார். ஆனால், சாஸ்திரிகள் தெய்வீக வழிநடத்துதலினால், ஏரோதின் வேண்டுகோளை நிராகரித்தார்கள். ஏரோது, பெத்லகேமில்தான் பிறப்புச் சம்பவிக்கும் என்ற சில விஷயங்களைச் சேகரித்து, இரண்டு வயதுக்கு உட்பட்ட அனைத்து ஆண் பிள்ளைகளையும் கொன்றுபோடக் கட்டளையிட்டார். இதன் விளைவாக புதிய இராஜாவும் கொல்லப்படுவார் என்று கருதினார். இந்தக் கட்டளையின்படி அநேக குழந்தைகள் கொல்லப்பட்டார்கள் என்று நாம் கருத முடியாது; காரணம், பெத்லகேமின் ஜனத்தொகை மிகவும் குறைவாக இருந்தபடியால் இக்குறிப்பிட்ட வயதுள்ள ஆண் குழந்தைகளும் சொற்பமான எண்ணிக்கையிலேயே காணப்பட்டார்கள்.

நம்முடைய ஆதார வசனம், இயேசு மற்றக் குழந்தைகளைப் போன்று, சரீரத்திலும், மனதிலும் படிப்படியாகவே வளர்ந்தார் என்பதை நமக்குக் கூறுகின்றது. இயேசு சிறுவனாக இருக்கும்போது ஞானியாக, போதகராக, சுகமளிக்கிறவராக இருந்தார் என்று நாம் கற்பனை செய்து கொள்ளக்கூடாது. எனினும் மற்றப் பூரணமற்ற சிறுவர்களைக் காட்டிலும், பூரணச் சிறுவனாகிய இயேசு பல்வேறு விஷயங்களில், வளர்ந்த நிலையில் காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

மரியாளும், யோசேப்பும், தேவபக்தி உள்ள ஜனங்கள் என்பதை நமது பாடத்தின் ஆதார வசனப்பகுதியின் முதல் வசனம் எடுத்துக்காட்டுகின்றது; அதாவது "அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள்" என்பதாகும் (வசனம்-41). பஸ்காவை இவ்விதமாக அனுசரிக்கும் - நியாயப்பிரமாணமானது, மிகவும் பக்தியுள்ள யூதர்களாலேயே தவறாமல் கடைபிடிக்கப்பட்டது. சிலர் கூறுவதுபோன்று மரியாள் பாவம் இல்லாதவள் என்றும், அற்புதவிதமாய்க் கருவுற்றாள் என்றும் நாம் எண்ணக் கூடாது. மாம்சத்தில் இயேசுவின் தாயாக, மரியாள் தெரிந்துக்கொள்ளப்பட்டு, எல்லா ஸ்திரீகளுக்கும் மேலாக கர்த்தர், மரியாளைக் கனப்படுத்தின விஷயமே, மரியாளின் உயர்ந்த குணலட்சணங்களையும், இருதயத்தில் கொண்டிருந்த பரிசுத்தத்திற்கும் ஆதாரமாகின்றது. உயர்ந்த குணலட்சணங்கள் இல்லாத எவரையும் கர்த்தர் விசேஷமாகக் கனப்படுத்தி, ஆசீர்வதித்து, பயன்படுத்துவார் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது.

யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும், யூதர்களுடைய கலாச்சாரத்தின்படி, பன்னிரண்டு வயதை அடையும் ஒவ்வொரு சிறுவனும், "நியாயப்பிரமாணத்தின் குமாரன்" என்று கருதப்படுகின்றான். மேலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவன் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியவானகவும் இருக்கின்றான். நம்முடைய பாடத்தின் சம்பவத்தில், இயேசு பன்னிரண்டு வயதை அடைந்தவராகக் காணப்படுகின்றார். இளமைப் பருவத்தில் மத விஷயங்களில் கவனம் செலுத்துவதற்கு, குழந்தை பருவத்திலேயே பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று இங்கு அனைத்துத் தேவபக்தியுள்ள பெற்றோர்களுக்கும் படிப்பினை உள்ளது. ஆரம்பக்கட்ட படிப்புகளில் தேர்ச்சிப் பெற்றுப் பன்னிரண்டு வயதை அடையும் பிள்ளைகள், உயர்க்கல்வி கற்க ஆயத்தமாயிருக்கின்றார்கள்; ஆனால், மேலான ஆவிக்குரிய மதரீதியான பாடங்களைக் கற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லை என்று சில பெற்றோர்கள் கருதுகின்றனர்; இது மிகவும் தவறாகும். இந்த வயதில் குழந்தைகள் உயர்க்கல்விக்கு ஆயத்தமாக இருப்பதற்கான காரணம், அவர்கள் ஆரம்பக்கட்ட கல்வியின் விஷயத்தில் நன்கு போதிக்கப்பட்டிருப்பதினாலேயே ஆகும்; மேலும், குழந்தைகள் மத விஷயங்களில் உயர்தரமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள இவ்வயதில் ஆயத்தமாக இல்லையெனில், இதற்குக் காரணம் அவர்கள் ஆரம்பக்கட்ட ஆவிக்குரிய மத விஷயங்களினால் போதிக்கப்படாததேயாகும்; அதாவது குழந்தைகளுக்குத் தேவனால் நியமிக்கப்பட்ட போதகர்களாகிய பெற்றோர்கள் ஆரம்பக்கட்ட பயிற்சிக் கொடுக்கத் தவறினதேயாகும். எந்தக் கிறிஸ்துவ பெற்றோரும் ஒழுக்க ரீதியிலும், மத ரீதியிலும் தங்களுடைய பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் பொறுப்பை நிராகரிக்கக்கூடாது.

பஸ்கா பண்டிகை, ஏழு நாட்கள் நீடித்ததாய் இருப்பினும், தூர தேசங்களிலிருந்து பயணப்பட்டு வந்தவர்கள், பிரதானமான அனுசரிப்புகள் நிறைவேறும் இரண்டு நாட்கள் மாத்திரமே தங்கியிருப்பது வழக்கம். மரியாளும், யோசேப்பும் பண்டிகையின் மூன்றாம் நாள் தங்களுடன் இருந்தவர்களோடு திரும்பும் பிரயாணத்தை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். பிரயாணத்தில் ஸ்திரீகள், வரிசையில் முன்பாகச் செல்வதும், அவர்களுக்கு பிறகு ஆண்கள் செல்வதும், பிள்ளைகள் தாய் அல்லது தகப்பனோடு பிரயாணிப்பதும் வழக்கமாக இருந்தது. ஒருநாள் பிரயாணம் மேற்கொண்டார்கள், மற்றொரு நாள், எருசலேமுக்கு திரும்பி வர பிரயாணம் மேற்கொள்ளப்பட்டது; மூன்றாம் நாள், பட்டணம் முழுவதும் இயேசுவைத் தேடுவதில் செலவிடப்பட்டுள்ளது. இறுதியில் அவர்கள் இயேசுவைத் தேவாலயத்தில், நியாயப்பிரமாண வல்லுநர்கள் மத்தியில் கண்டுபிடித்தார்கள். அக்காலங்களில் புத்தகங்களைப் படிப்பதைக் காட்டிலும், வாய்மூலம் கொடுக்கப்பட்ட போதனைகளிலிருந்து, அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், நியாயப்பிரமாணத்தில் வல்லுநர்களாய் இருந்தவர்கள் கேட்க மனதாய் இருக்கும் யாவருக்கும், அதிலும் விசேஷமாக பஸ்கா வாரங்களில் போதித்துக் கூற ஆயத்தமாய் இருந்தார்கள். அநேக வாலிப புருஷர்கள் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆசிரியர்கள் பாதி வளைவு/வட்ட நீண்ட இருக்கைகளில் (bench) இருப்பது வழக்கமாக இருந்தது; மேலும் இவர்களுக்கு முன்பு முதிர்ந்த மாணாக்கர்களுக்குத் தாழ்வான இருக்கைகள் கொடுக்கப்பட்டிருந்தது; மேலும் இளைய மாணாக்கர்கள் தரையில், அதாவது, அவர்களின் பாதத்தருகே உட்கார்ந்திருந்தார்கள். பவுல் வாலிபனாக இருக்கும்போது கமாலியேலின் பாதத்தருகே உட்கார்ந்து, கற்றுக்கொண்டதை நாம் வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 22:3). கமாலியேல், பவுலின் நாட்களில் வாழ்ந்த பிரதானமான நியாயசாஸ்திரி ஆவார்.

சிறுவனாக இருந்த இயேசு, துணிவுடன், அவருடைய நாட்களில் வாழ்ந்த கல்விமான்கள் முன்பு சென்று, அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள் என்றோ, தகுதியற்ற போதகர்கள் என்றோ, தம்மைப் பிரகடனப்படுத்தவோ, இன்றைய பிஞ்சிலே முதிர்ந்த, சரிவர பயிற்றுவிக்கப்படாத வாலிபர்கள் போன்று செய்ய முற்பட்டார் என்றோ நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. மாறாக, சிறுவனாக இருந்த இயேசுவிடம் சீரான மனநிலை இருந்தது என்றும், தாம் இந்த உலகத்தில் சொற்ப காலமே வாழ்ந்துள்ளார் என்றும், மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்க்கையில் சொற்பமான/சிறிதளவே ஜீவியத்தில் அனுபவங்கள் பெற்றுள்ளார் என்றும், தமக்கு எல்லாம் தெரியாது என்றும், தாம் அறிந்துக்கொள்வதற்கு அநேக கேள்விகள் இருக்கின்றது என்றும் உணர்ந்து, "மோசேயின் ஆசனத்தில்" வீற்றிருக்கும் போதகர்களிடமிருந்து திருப்திகரமான பதில்களைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையில், வாஞ்சையுடன், கேள்வி கேட்டார் என்றே நாம் எண்ணவேண்டும்.

எப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டார் என்பது குறிப்பிடப்படவில்லை, எனினும் காலத்தையும், சூழ்நிலையையும் பார்க்கையில் மத ரீதியிலான விஷயங்களையே அவர் கேட்டிருக்க வேண்டும். யூத சந்ததியில் வந்த தம்மைப் பற்றின மாபெரும் கேள்விகள் இயேசுவின் மனதில் உதிக்க ஆரம்பித்துவிட்டது. இந்த யூத சந்ததியாகிய, ஆபிரகாமின் சந்ததியோடுதான், தேவன் சில மாபெரும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அருளியுள்ளார்; அதாவது, மேசியாவின் கீழ் இவர்கள் பிரதானமான ஜாதியாராக உயர்த்தப்பட்டு, இவர்கள் பூமியின் குடிகளை ஆசீர்வதித்து, இவர்கள் மூலம் மனுக்குலம் முழுவதும், தேவனைப் பற்றின அறிவிற்குள் வந்து, அவருக்குச் சேவை செய்யும் நிலைக்குக் கொண்டுவரப்படுவார்கள் என்பது பற்றிய வாக்குத்தத்தங்கள் இவர்களுக்கு அருளப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் நம்பிக்கை குறித்ததான கேள்விகளினால் இயேசு நிரம்பிக் காணப்பட்டார். மேலும் வேதவாக்கியங்கள், நிறைவேறும் விஷயங்களில் அவருக்குச் சில முக்கிய பங்கு இருக்கின்றது என்று, இயேசு தமது தாயின் மூலம் அறிந்திருப்பார் என்பதில் நமக்கு ஐயமில்லை. நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கத்தரிசனங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தப்பட்ட விஷயங்களில், பரமபிதா தமக்கு நியமித்துள்ள பங்கைக் குறித்து அறிந்துக்கொள்ள, இயேசு விரும்பித் தேடினார்.

தெய்வீக விஷயங்களைக் குறித்து அறிந்துக்கொள்ள, இயேசுவுக்கு அவருடைய வீட்டிலேயே வேதாகமம் இல்லை என்றாலும், இயேசுவுக்குத் தம்முடைய சிறிய ஊராகிய நாசரேத்தில் உள்ள ஒரு சிறிய ஜெப ஆலயத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. ஓய்வுநாள்தோறும் அவர் நியாயப்பிரமாணங்களையும், சங்கீதங்களையும், தீர்க்கத்தரிசனங்களையும் வாசிக்கக் கேட்டார். இவ்விதமான விஷயங்களினால் நிரம்பப்

பெற்றிருந்த வாஞ்சையுள்ள மனதைக்கொண்ட சிறுவனாகிய இயேசு, எருசலேம் மாநகருக்கு முதல்முறையாக வந்தபோது, அவரைத் தேவாலயமும், அதன் பிரகாரத்தில் நிறைவேற்றப்பட்ட பலிகளும் கவர்ந்தது. இங்குத்தான் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனம் பற்றின மாபெரும் கேள்விகள், அக்காலத்தில் வாழ்ந்த திறமிக்க போதகர்களால் விவாதிக்கப்பட்டது. இயேசு, வேதஆராய்ச்சியில் ஆழமான விருப்பமும், உற்சாகமும் காட்டினபடியால், அவர் பூமிக்குரிய காரியங்களை மறந்துவிட்டார். பரலோக பிதாவுக்கு அடுத்த விஷயமாகிய தெய்வீகத் திட்டத்தைக் குறித்து ஆராய்வதில் மிகவும் ஆவல் கொண்டிருந்தார். அதாவது, தாம் முக்கியப் பங்கு வகிக்கப்போகும் தெய்வீகத் திட்டத்தைக் குறித்து, ஆராய்வதில் மிகவும் ஆவல் கொண்டிருந்தார்.

இயேசுவின் வயதில் காணப்பட்ட மற்றச் சிறுவர்களைக் காட்டிலும், அவருடைய கேள்விகள் மிகவும் ஆழமானதாகவும், நியாயமானதாகவும் இருந்தது. அவர் தன்னடக்கத்தோடு கேள்விகள் கேட்டதில், நியாயப்பிரமாண வல்லுநர்கள் ஆழமாகக் கவரப்பட்டிருப்பது இயல்பேயாகும். இந்தப் பண்டிகைகளில், விருந்தோம்பல், தூரத்தேசத்திலிருந்து வந்தவர்களுக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்டது. இயேசுவும், புதிதாய்க் கிடைத்த நண்பர்களினால் நன்கு உபசரிக்க/கவனிக்கப்பட்டிருப்பார்.

மரியாளும், யோசேப்பும், இயேசுவைக் கண்டுபிடிக்கும்போது, இயேசு, போதகர்கள் பேசும் காரியங்களைக் கேட்கிறவராகவும், அவர்களிடம் கேள்வி கேட்கிறவராகவும் இருந்தார் என்று பதிவுகள் தெரிவிக்கின்றது. இங்கு மூப்பர்களிடமும், போதகர்களிடமும் வாலிபர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான விலையேறப்பெற்ற படிப்பினைகள் காணப்படுகின்றது. இயேசு போதகர்களால் போதிக்கப்பட்டபோது, போதகர்களும் இயேசுவினால் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஒருவேளை, அவர்கள் உண்மையில் மாபெரும் மனுஷர்களாக இருப்பார்களானால், யாரிடமும், குழந்தையிடமும் கூடப் போதகம் பெற்றுக்கொள்ளத்தக்கதாகத் தாழ்மையான மனம் கொண்டிருப்பார்கள். அந்த வேதப்பகுதியில் இயேசுவிடம் கூடச் சில கேள்விகள் அவர்கள் கேட்டார்கள் என்று வாசிக்கிறோம். மேலும், "அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்" (லூக்கா 2:47) என்றும் வாசிக்கின்றோம். கேள்வி கேட்கும் விஷயத்தில் இரு சாராரிடமும் பணிவும், மரியாதையும் காணப்பட்டது. இயேசு பணிவுடனும், மரியாதையுடனும் போதகர்களிடம் கேள்வி கேட்டபோது, அவருடைய மனதின் ஆழமும், தெளிவான புரிந்துக்கொள்ளுதலும், நியாயமான விவாதமும் வெளிப்படுத்தப்பட்டபடியால், அவர்களை இயேசுவிடம் மறுகேள்விகள் கேட்கத் தூண்டியது.

இவ்விதமான கேள்வி அணுகுமுறையையே, சத்தியத்தில் உள்ள அருமையான நண்பர்களுக்கு ஏற்றதும், ஞானமுமான ஒன்று என நாம் பரிந்துரைக்கின்றோம். கர்த்தருடைய சில அன்பான ஜனங்கள், மற்றவர்களிடம், அதிலும் விசேஷமாகக் கல்வியறிவு உள்ளவர்களிடம் தெய்வீகத் திட்டத்தைப் பேசும் விஷயத்தில் அதிக அளவு தன்னம்பிக்கையும், அதிக உறுதியும் கொண்டு, தங்களுடைய செல்வாக்கைப் பெரிதளவில் நாசமாக்கிப் போட்ட சம்பவங்களை நாம் பார்த்திருக்கின்றோம். சாந்தகுணம் என்பது பொக்கிஷம் போன்றதாகும்; மேலும், அது சத்தியத்திற்கு உதவியாகவும், தாங்கி நிற்கிறதாயும் காணப்படுகின்றது. எல்லா பலத்துடனும் சத்தியம் முன்நிறுத்தப்படட்டும், ஆனாலும், தாழ்மை மற்றும் சாந்தத்துடனும் நிறுத்தப்படட்டும்; சத்தியத்தை முன்வைப்பதற்குக் கேள்வி முறை மிகவும் ஆற்றல் மிக்கதாகும்.

யோசேப்பும், மரியாளும், தங்களுடைய சிறு குமாரன், அந்நாட்களில் வாழ்ந்த மாபெரும் போதகர்களின் மத்தியில் நின்று அவர்களின் கவனத்தைப் பெற்றுக்கொண்டவராகக் காணப்பட்டதைக் குறித்து ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். தங்களைக் கவலைக்குள்ளாக்கி, அவரைத் தேட வைத்ததற்காக, இயேசுவைக் குறித்து அவரது பெற்றோர்கள் விசனத்தை வெளிப்படுத்தியதாக எவ்வித பதிவுகளும் இல்லை. தனியே இருக்கையில் மரியாள் மாத்திரம், இயேசு கூட்டத்தோடு வராததற்கு, அவரைக் கடிந்து கொள்கின்றாள். எனினும், இதை அவள் மிகவும் அன்பாகவும், தன்னடக்கத்துடனும் செய்கின்றாள். இது, இயேசுவின் கீழ்ப்படிதலைக் குறித்து (மறைமுகமாக) நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

"மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே" என்று மரியாள் கூறின வார்த்தைகளை எடுத்துக் கொண்டு, சிலர், யோசேப்புதான் இயேசுவின் தகப்பன் என்று மரியாள் அறிக்கை பண்ணுகின்றாள் என்று கூறுகின்றனர்/கேள்வி கேட்கின்றனர். இதற்கான நம்முடைய பதில், இல்லை என்பதேயாகும். சில நியாயமான யூகங்கள், என்னவெனில், யோசேப்பு மரியாளை ஏற்றுக்கொண்டபோது, அவளுடைய குமாரனாகிய இயேசுவையும் ஏற்றுக்கொண்டதால் யோசேப்பு, இயேசுவின் வளர்ப்புத் தகப்பன் ஆகிவிட்டார்; ஆகவே, இவ்விதமான சூழ்நிலைகளில் இயேசு, யோசேப்பைப் பெற்றோரில் ஒருவராகக் கருதி, அவரைத் "தகப்பன்" என்று அழைக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டார். மேலும், இயேசுவின் அற்புதவிதமான கர்ப்பம் தரித்தல், குறித்து அவருடைய குடும்பத்தில் மிக நெருக்கமானவர்களுக்குத் தவிர, வேறு எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை, மேலும் பன்னிரண்டு வயதையுடைய இயேசுவிடம் இவ்விஷயங்கள் கலந்து உரையாடுவதற்கு அதிக வாய்ப்பும் இல்லை, ஏற்றதாகவும் இருந்திருக்காது.

சிறுவனாக இருந்த இயேசுவின் மனம், தம்முடைய பரமபிதாவின் மேலும், அவருடைய திட்டத்தின் மேலும் தமக்கு உள்ள பொறுப்புகளை, கடமைகளைக் குறித்து ஆராய்ந்துக் கொண்டிருக்கையில், தம்முடைய பதிமூன்றாம் வருடத்தில், தாம் "நியாயப்பிமாணத்தின் குமாரனாக" ஆகியுள்ளபடியால், இந்த வருடத்தில் தம்முடைய பணிகள் ஆரம்பிக்குமோ, இல்லையோ என்று சிந்தித்திருக்கலாம். இதன் அடிப்படையிலேயே, போதர்களிடமும் இயேசுவினால் கேட்கப்பட்ட கேள்விகள் அமைந்திருக்க வேண்டும். மேலும், ஆசாரிய ஊழியத்தின் நிழல்கள், தாம் முப்பதாவது வயதை அடையும் வரையிலும் பணிகளை ஆரம்பிக்க முடியாதது என்பதைச் சுட்டிக்காட்டியதையும் இயேசு உணர்ந்து முடிவிற்கு வந்திருப்பார். மரியாளின் கடிந்து கொள்ளுதலுக்கு, இயேசுவின் பதில், "நான் என் பிதாவுக்கு அடுத்த விஷயங்களில் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்று இருந்தது; அதாவது, "நான் நியாயப்பிரமாணத்தின் குமாரனுக்குரிய வயதை அடைந்துள்ளதால், என் பரமபிதா மற்றும் அவருடைய வார்த்தைகள் மற்றும் திட்டங்கள் மீது எனக்குச் சில கடமைகள் இருக்கின்றது என்று நீங்கள் அறியீர்களா?" என்ற விதத்தில் பதில் கூறினார். பின்னர், உடனே போதகர்களுடன் விவாதித்த விஷயங்களை நினைவுகூர்ந்ததுபோல, பேச்சை நிறுத்தி, பெற்றோர்களின் விருப்பங்களுக்கு இணங்கி, அவர்களோடு நாசரேத்துக்குப் பிரயாணம் புறப்பட்டது போன்று காணப்படுகிறது. இயேசு, "அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்" என்ற வார்த்தைகள், அவருடைய முப்பதாம் வயது வரை சாதாரணமாகவே அவர் ஜீவியம் பண்ணினதை எடுத்துக் காட்டுகின்றது. மரியாளும், யோசேப்பும் இயேசுவானவர் இயல்புக்கு மிகவும் அப்பாற்பட்டவர் என்று தெளிவாக உணர்ந்திருந்தாலும், அவர்களால் சூழ்நிலைகளை முழுமையாகப் புரிந்துக்கொள்ளவும் முடியவில்லை; இயேசுவின் வார்த்தைகளினுடைய முக்கியத்துவத்தை முழுமையாகக் கிரகித்துக்கொள்ள முடியவும் இல்லை என்றாலும், மரியாள் இயேசுவைக் குறித்த விஷயங்களை, சாட்சிகளைத் தன்னுடைய இருதயத்திலே பொக்கிஷமாக வைத்துக் கொண்டாள். மரியாளின் உதடுகளிலிருந்துதான், நம்முடைய பாடத்தின் விஷயங்களை லூக்கா அவர்கள் பெற்றிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இயேசுவின் இளம் பிராயத்திலேயே, யோசேப்பு இறந்துவிட்டார் எனவும், அவருக்குப் பின்னர், குடும்பத்தைத் தாங்குவதற்கு என்று இயேசு தச்சன் வேலையை எடுத்துக் கொண்டார் என்றும் பாரம்பரியம் கூறுகின்றது. "இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லாவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்" (மாற்கு 6:3). இவ்வசனத்தில் யோசேப்பு குறிப்பிடப்படவில்லை. நமது கர்த்தரின் ஊழியம் தொடர்பான விஷயங்களில், அவருடைய தாயாரும், அவருடைய சகோதர சகோதரிகளும் அநேகம் முறை குறிப்பிடப்பட்டாலும், யோசேப்பு குறிப்பிடப்படவே இல்லை. சுமார் 18-வருடங்களாக, அதாவது இந்தச் சம்பவம் நடந்தது முதல், அவருடைய ஞானஸ்நானம் வரையிலுமான இடைப்பட்டக் காலத்தில், இயேசுவின் வாழ்க்கையானது, ஜீவியத்தின் சாதாரணமான/பொதுவான கடமைகளை நிறைவேற்றுவதிலேயே கழிந்தது. இது நமது கர்த்தர் பொறுமையை வளர்த்ததைக் குறித்த படிப்பினையை நமக்குக் கொடுக்கின்றது. நமது கர்த்தர் பிதாவின் நேரம் வரும் வரையிலும், தமது ஊழியத்தை ஆரம்பிக்கும் வரையிலும் பொறுமையோடு காத்திருந்தார். இதற்கிடையில்

தம்மால் முடிந்தமட்டும் பிதாவின் சித்தத்தையும், திட்டத்தையும் அதிகமதிகமாக அறிந்துக்கொள்வதற்குக் கற்றுக்கொண்டிருந்தார். மேலும், பரிசுத்தஆவியின் ஞானஸ்நானத்திற்காகப் பொறுமையோடு காத்திருந்தார்; அதாவது, சூழ்நிலைகளை முழுமையாகப் புரிந்துக்கொள்வதற்கும் மற்றும் தமக்கும், தெய்வீகத் திட்டத்திற்கும் இடையே உள்ள உறவைப் புரிந்துக்கொள்வதற்கும், உதவக்கூடியப் பரிசுத்தஆவிக்காக பொறுமையோடு காத்திருந்தார். அவருடைய பின்னடியார்களுக்கு இங்கு எத்துணை பாடம் காணப்படுகின்றது. "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" (யாக்கோபு 1:14). "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபிரெயர் 10:36). நாமும் தெய்வீகத் திட்டத்தைத் துரிதப்படுத்த முயற்சிக்கக் கூடாது என்றும், மாறாக அதன் நிறைவேறுதலுக்காக பொறுமையோடு காத்திருக்க வேண்டும் என்றும், கர்த்தருடைய நியமிக்கப்பட்டுள்ள வேளை வந்துள்ளது எனவும், இவ்வேலைக்காக நம்மை அழைத்துள்ளார் எனவும் நாம் உறுதியடையாமல், எந்த வேலையையும் கர்த்தருக்காக நாம் செய்ய/ஆரம்பிக்கக் கூடாது என்றுமுள்ள பாடங்கள் நமக்கு உள்ளது. மேலும் நாம் நமது கர்த்தர் போன்று, நேரம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நம்முடைய கைக்கு நேரிடுவதை செய்ய வேண்டும்; அதாவது கர்த்தர் நம்மை அழைத்த வேலையை முழுப் பெலத்தோடு செய்ய வேண்டும். தேவனுடைய ஞானத்திற்கு இசைவாக, நம்முடைய பணிவான வேலைகள் காணப்படும்போதுதான், அவைகள் கனமுள்ளதாகக் காணப்படும்.

முப்பது வயதிற்கு கீழ் உள்ளவர்கள் ஊழியம் புரியக்கூடாது என்ற எல்லையை இடும், நியாயப்பிரமாணத்தின் கீழ் நாம் பிறக்காததைக் குறித்துச் சந்தோஷமடைகின்றோம். தெய்வீக விஷயங்களைப் புரிந்துக்கொள்ளும் வயதிலேயே, கர்த்தருடைய ஊழியத்திற்கென்று, நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும் சிலாக்கியத்தை, கிருபையின் உடன்படிக்கை நமக்கு அருளுகின்றது. பூரண புருஷனுக்குரிய சரீர மற்றும் மன வளர்ச்சி வரும் வரையிலும் காத்திருப்பதற்குப் பதிலாக, நாம் உடனடியாக இராஜரிக ஆசாரிய கூட்டமாக நமது வேலையை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். மேலும் நாம் ஊழியம் புரியும், அதே சமயத்தில், வளருவதற்கும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது" என்ற வசனங்களின் விஷயங்களை மறக்காமல் இருப்போமாக (2 பேதுரு 1:5-8). "சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்" (1 கொரிந்தியர் 14:20).

---

**R2562**

# "யோவான் ஸ்நானனின் பிரசங்கம்"

## லூக்கா 3:1-17

**"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்."**

அநேக வேதாகம விளக்கவுரையாளர்கள், யேவான் ஸ்நானனின் ஊழியம் கி.பி. 26-இல் ஆரம்பமானது என்று கூறுகின்றனர்; மேலும் இதற்கான ஆதாரமும் அவர்களிடத்தில் இல்லை. ஆதலால், இப்படியான யோவானின் ஊழியத்தின் ஆரம்ப வருடத்தைக் குறித்துக் கணிப்பது முற்றிலும் நியாயமற்றக் காரியம் என்பதை எல்லோரும் மனதில்

கொள்ளக்கடவோம். நமது கர்த்தர், அவருடைய உறவினராகிய யோவான் ஸ்நானனைக் காட்டிலும், ஆறு மாதத்திற்கு இளையவர் என்று வேதவாக்கியங்களிலிருந்து தெளிவாகப் புரிந்துக்கொண்டாலும், திபேரியுராயன் இராஜ்யபாரம் பண்ணின 15-ஆம் வருஷத்திலே, யோவான் ஸ்நானன் தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார் என்ற வேதாகம பதிவுகள் போன்று, வேறு எந்த வேதவாக்கியங்களும் நமது கர்த்தருடைய மற்றும் யோவான் ஸ்நானனின் வரலாற்றைப் பொதுவான வரலாற்றோடு இணைப்பதில்லை என்ற விஷயம் மறக்கப்படக்கூடாது. இயேசு தமது ஊழியத்தை கி.பி. 29-ஆம் வருடத்தில் ஆரம்பித்தார் என்பதற்குப் பதிலாக, கி.பி. 27-ஆம் வருடத்தில் ஆரம்பித்தார் என்று கூறுபவர்கள், யோவன் ஸ்நானனின் ஊழியம், கி.பி. 26-ஆம் வருடத்தில் ஆரம்பமானது என்று கூறுகின்றனர், மேலும் தங்களுடைய இந்தக் கூற்றை, லூக்கா 3:1-ஆம் வசனத்திற்கு இசைவாகக் கொண்டுவர வேண்டுமானால், இவர்கள் வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, திபேரியுராயனின் இராஜ்யபாரத்தின் வருடம், 15-ஆம் வருடமாக இராமல், மாறாக 13-ஆம் வருடம் எனக் குறைத்துக் கூற வேண்டிய கட்டாயத்திற்குள் ஆகிவிடுகின்றனர். இந்தப் பாடத்தைக் குறித்ததான விவாதத்திற்கு இரண்டாம் தொகுதியில் பக்கம் 47 (தமிழில்) பார்க்கும்படிப் பரிந்துரைக்கின்றோம்.

யோவானைக் குறித்துப் பார்க்கையில், அவர் பிறப்பின் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார் என்று எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கென்று, கிறிஸ்தவர்கள் ஜெநிப்பிக்கப்பட்டது போன்று, இவரும் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார் என்று நாம் தவறாய்ப் புரிந்துக்கொள்ளக்கூடாது; காரணம் யோவான், பரிசுத்தஆவியினால் ஜெநிப்பித்தல் நடைபெறும் சுவிசேஷ யுகத்தில் வாழாமல், யூத யுகத்தில் வாழ்ந்தவராய்க் காணப்பட்டார். ஆகையால்தான் நமது கர்த்தர், இவரைக் குறித்துக் கூறுகையில், யோவானை விடப் பெரிய தீர்க்கத்தரிசி எழும்பவில்லை என்றாலும், தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாய் இருப்பவன் யோவானைக் காட்டிலும் பெரியவனாய் இருப்பான்; அதாவது, புத்திரர் வீட்டாரில் சிறியவனாய் இருப்பவன், பணிவிடைக்காரர் வீட்டாரில் உள்ள பெரியவனைக் காட்டிலும் உயர்வான தளத்தில் காணப்படுவான் என்று கூறினார் (மத்தேயு 11:11; எபிரெயர் 3:5, 6). "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று அப்போஸ்தலர் விவரிக்கின்றார் (யோவான் 7:39).

மேற்கூறப்பட்டவைகளுக்கு இசைவாக, யூத யுகம் முழுவதும் காணப்பட்ட மற்றத் தீர்க்கத்தரிசிகள் பரிசுத்த ஆவியின் கீழ்க் காணப்பட்டதுபோல, யோவானும் தன்னுடைய பிறப்பு முதல் பரிசுத்த ஆவியினால், பரிசுத்த வல்லமையினால் அல்லது தேவனிடத்திலிருந்து வந்த தாக்கத்தினால் நிரப்பப்பட்டவராக இருந்தார் என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். யோவான், இயேசுவைப் போன்று பரிசுத்தமாகப் பிறக்காவிட்டாலும், அவர் பரிசுத்த ஆற்றலின் கீழ்ப் பிறந்ததால், இவர் செய்ய வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டுள்ள ஊழியத்திற்குத் தேவையாக இயல்பான பண்புகள் அவரிடத்தில் வளர்வதற்கு ஏதுவாயிற்று . ஆனால் அதற்கென்று ஒரு மனுஷனுடைய தனிப்பட்ட சித்தங்களில்/விருப்பங்களில் தெய்வீகக் குறுக்கிடுதல் காணப்படும் என்று நாம் எண்ணிவிடக்கூடாது; காரணம், பவுலும், தான் விசேஷமான வேலைக்கென்று, விசேஷமான ஊழியக்காரனாக தன்னுடைய பிறப்பு முதல் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டதாக நமக்குக் கூறுகின்றார் (கலாத்தியர் 1:15). எனினும், பவுல் தன்னுடைய சொந்த சித்தத்தின்படி நடக்கும் சுயாதீனத்தில், கர்த்தர் குறுக்கிடவில்லை. அவர் குருடாக்கப்பட்டு, சபையைத் துன்பப்படுத்தும் நிலைக்கும் கூட அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும், தமஸ்குவுக்குப் போகிற வழியில், கர்த்தர் அவரைக் கடிந்துகொண்டாலும், இச்சம்பவம், கர்த்தர், பவுலின் சித்தத்தில் குறுக்கிட்டதாக இராமல், அவருடைய குருட்டுதன்மையை, அறியாமையை மாத்திரம் மாற்றிவிடுவதாகவும், தன்னுடைய உண்மையான சித்ததை/விருப்பத்தை பவுல் செயல்படுத்துவற்கு அனுமதிப்பதாகவே இருந்தது. இதைப் போலவேதான் ஒவ்வொரு காலக்கட்டத்தில் காணப்பட்ட கர்த்தருடைய ஜனங்களும், ஆரம்ப குழந்தை பருவம் முதல், அவர்களுடைய சித்தங்கள் குறுக்கிடப்படாமல் தெய்வீக நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விசேஷமான கருவிகள் ஆகுவதற்கே தெய்வீகப் பராமரிப்பின் கீழ் விசேஷமாக வைக்கப்பட்டும், வழிநடத்தப்பட்டும் அவர்களின் அனுபவங்கள் வனையப்பட்டும் காணப்படுகின்றனர்.

"அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு இஸ்ரயேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" என்ற பதிவுகளைத் தவிர,

குழந்தை பருவம் முதல் வாலிப பருவம் வரையிலான யோவானின் வாழ்க்கையைக் குறித்து நமக்கு எவ்வித பதிவுகளும் இல்லை (லூக்கா 1:80). யோவான், மணற்பாங்கான பாலைவனத்தில் காணப்படாமல், வனாந்தர பகுதிகளில் அதாவது, விவசாயத்திற்கென்று பண்படுத்தப்படாத பகுதிகளில் காணப்பட்டார். அநேகமாக, அவருடைய பிறப்பின்போது, அவருடைய பெற்றோர்கள் காணப்பட்ட "மலைநாட்டில்" அவர் காணப்பட்டிருக்க வேண்டும். யோவான் தனது ஊழியத்திற்குப் பயிற்சி எடுக்கும் வண்ணமாக, கர்த்தருடைய ஏற்பாடு, யோவானுடைய பெற்றோர்களின் வாழ்க்கையில் சில ஒழுங்குகளைச் செய்து; சில சூழ்நிலைகளின் நிமித்தமாக அவர்கள் இப்படியான வனாந்தர பகுதியில் வீடு குடியிருக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்க வேண்டும். இந்தச் சூழ்நிலைகளில் மற்றவர்களோடு தொடர்பு கொள்ளும் நிலை குறைவாகக் காணப்பட்டாலும், யோவானுக்கு நியமிக்கப்பட்டுள்ள பணிக்கு அவர் தகுதியாவதற்கான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வனத்தில் தங்குவது யோவானுக்கு ஏற்றதாக இருந்தது. "தேவனை அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்பது கிறிஸ்துவுக்குள் காணப்படும் ஒவ்வொருவருக்கும் பொருந்தும்.

விசேஷமான வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து, அனைத்துக் கிறிஸ்தவர்களும் பரம பிதாவின் வழிநடத்துதலின்மேல் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இவர்கள் தங்களுக்குத் தெய்வீக ஏற்பாடுகள் கொடுக்கும் விஷயங்களில் திருப்தியாய் இருக்க வேண்டும் என்பதையும் நினைவுகூர வேண்டும். மேலும், தங்களுடைய கைக்குக் கிட்டியதையெல்லாம் செய்து முடித்த பின்னர், அமைதியற்றவர்களாகவோ, எரிச்சலை உடையவர்களாகவோ, திருப்தி இல்லாதவர்களாகவோ, தேவனுக்கும், அவருடைய முன்னேற்பாடுகள்/பராமரிப்பிற்கும் எதிராக முறுமுறுக்கிறவர்களாகவோ இராமல், மனநிறைவோடு காணப்பட வேண்டும். "கர்த்தரை நம்பி நன்மை செய்" (சங்கீதம் 37:3). கர்த்தர் நம்மை சில விசேஷமான பணிகளுக்காகத் தனிப்பட்ட விதத்தில் ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கலாம், மேலும், அந்த அனுமதிக்கப்பட்ட அனுபவங்கள் மாத்திரமே, நம்மை அந்தப் பணிக்காக ஆயத்தம் பண்ணவும் முடியும். மகிமையான ஆயிரம் வருட அரசாட்சியில் நம்முடைய அருமையான மீட்பரோடு, உடன் சுதந்திரர்கள் ஆகுவதற்கென்று "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை" தேவனே ஆயத்தம் பண்ணுகின்றார் என்று வேதவாக்கியங்களிலிருந்து நாம் அறிந்திருக்கின்றோம். மேலும் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு" ஏதுவாக நம்முடைய பரிபூரணமற்ற தன்மைகளின் நிமித்தம், நமக்கு அதிகமான வனைதல்கள், செதுக்குதல்கள் மற்றும் மெருகூட்டுதல்கள் தேவைப்படுகின்றது (கொலோசெயர் 1:12). மேலும், நம்முடைய சொந்த பூரணமற்றத் தன்மைகளையே நம்மால் அறிய முடியாதபோது, நமக்கு உதவியாய் இருக்கும் அனுபவங்களையும் கூட நம்மால் அறிந்துக்கொள்ள முடியாது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சிலசமயம், நம்மை மற்றவர்கள் பார்க்கிற விதத்தில், நம்மை நாம் பார்ப்பது கூடக் கடினமாக இருக்கும்போது, தெய்வீகக் கண்ணோட்டம் நம்மைப் பார்க்கும் விதத்தில் நாம் நம்மைப் பார்ப்பது, மிகவும் கடினமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தேவன் மீதான விசுவாசம் இங்கு வர வேண்டும். "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவான் 5:4).

யோவான், தன்னை இஸ்ரயேலுக்கு "காண்பிக்கும்" காலமானது, அவர் தமது 30-வது வயதை அடைந்தபோது வந்தது. அப்போது யோவானுக்குத் தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று; இதன் விளைவாக அவருடைய ஊழியம் ஆரம்பமானது. இவ்விஷயத்தை, சுவிசேஷ யுகத்தில் வாழும் நமக்குப் பொருத்துவது போன்று, யோவானின் விஷயத்தில் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. தீர்க்கத்தரிசிக்கு வருவதுபோன்று தேவனுடைய வார்த்தை யோவானுக்கு வந்தது. "யோவானைக் காட்டிலும் பெரிய தீர்க்கத்தரிசி எழும்பினதில்லை" என நமது கர்த்தர் அவரைத் தீர்க்கத்தரிசியெனக் குறிப்பிடுகின்றார். அனைத்துத் தீர்க்கத்தரிசிகளின் விஷயத்திலும் நடந்ததுபோல, யோவானின் ஊழியம் ஆரம்பிப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்று தேவன், யோவானுக்குத் தெளிவாகவும், உறுதியாகவும் உணர்த்தினார். இந்தத் தன்னுடைய ஊழியத்திற்கு இசைவாக யோவான், யோர்தான் நதிக்கு அருகே உள்ள அடர்த்தியான இடங்களில் தங்கி, மனந்திரும்புதலைப் பிரசங்கித்து வந்தார்; அதாவது ஜனங்கள் மனந்திரும்ப வேண்டும் என்று பிரசங்கித்தார்; மேலும் மனந்திரும்புதலை அறிக்கை பண்ணினவர்களுக்கு, யோர்தானில் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். இதன் காரணமாகவே, யோவான் ஞானஸ்நானத்திற்குப் போதுமான ஆழம் உடைய

தண்ணீர்களுக்காகத் தேடினார். உதாரணத்திற்கு, "சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்" (யோவான் 3:23).

ஜனங்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால், அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று யோவான் பிரசங்கித்ததாக, பதிவுகளிலிருந்து நாம் தவறாக யூகித்து விடக்கூடாது. இப்படியாக அர்த்தம் கொள்வது என்பது வேதவாக்கியங்களின் ஒட்டுமொத்த சாட்சிக்கும் எதிர்மாறாகக் காணப்படும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பதே வேதவாக்கியங்களின் சாட்சியாக இருக்கின்றது.

ஆனால், பொதுவாக இவ்விஷயங்கள் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது. மாறாக, பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ஆயத்தம் பண்ணுதலை அல்லது மனம் வருந்துதலை அடையாளப்படுத்தும் ஞானஸ்நானத்தைக் குறித்தே யோவான் பிரசங்கித்தார் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். பாவங்கள் நீக்கப்படுவதற்கான காலம் இன்னும் வரவில்லை. மேலும், மனந்திரும்புதலின் மூலமும், ஞானஸ்நானத்தின் மூலமும், பாவங்கள் மன்னிக்கப்படும் என்று அறிவிப்பதற்கு யோவானுக்கு அதிகாரமும் இல்லை, அதிகாரம் கொடுக்கப்படவும் இல்லை. யோவானால் இப்படிப்பட்ட விஷயங்களைக் கூற முடிந்திருந்தால், நமது கர்த்தர் இயேசு உலகத்தில் வந்து, இஸ்ரயேலர்களுக்காகவும், பூமியின் குடிகளுக்காகவும் தம்மை ஈடுபலியாக கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று நிரூபணம் ஆகியிருக்கும். மனந்திரும்புதலும், தண்ணீரில் மூழ்குவதும், பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, ஒருவேளை போதுமானதாய் இருந்தால், இஸ்ரயேலர்களுக்குத் தேவன் நீண்ட காலமாக வாக்களித்துள்ள மாபெரும் இரட்சகர் அவசியமேயில்லை. மாறாக, ஜனங்கள் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு விருப்பம் கொள்வதற்கும், தேவனுடன் முழுமையாக ஒப்புரவாகிக்கொள்ள விருப்பம் கொள்வதற்கும், மேலும் இவைகள் அனைத்தையும் நிறைவேற்றும் இரட்சகரை எதிர்ப்பார்ப்பதற்கும் ஏதுவாக, ஜனங்களை மனந்திரும்ப ஆயத்தம் பண்ணும் ஆரம்பக்கட்ட வேலையே யோவானின் பணியாகவும், பிரசங்கமாகவும் இருந்தது என்று நாம் எடுத்துக் கொண்டால், எல்லாம் இசைவாய்க் காணப்படும்.

பாவத்தை மன்னிக்கும் இவ்வேலையானது, யோவானுடைய நாட்களுக்குப் பின்னாக உள்ள எதிர்க்காலத்திற்குரியதாகவும், கிறிஸ்துவினால் நிறைவேற்றப்படக் கூடியதாகவும் உள்ளது. இவ்வேலை, ஆயிரம் வருடத்திற்குரிய வேலையாக இருக்கின்றது. இந்த ஆயிரம் வருட காலத்தில் பாவம் மன்னிக்கப்படுகின்றது; மேலும், பாவம் அகற்றப்படுகின்றது; மேலும் புதிய உடன்படிக்கையின் கீழ், கிறிஸ்துவுக்குள்ளான தேவக் கிருபையை ஏற்கிற யாவரும் முழுமையாக ஒப்புரவாக்கப்படுவார்கள் (அப்போஸ்தலர் 3:19-21). அக்காலத்தில், அதாவது சாதகமான சூழ்நிலைகள் காணப்படும்போது, "மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்" என்ற வேதவாக்கியம் நிறைவேறும்; அக்காலத்திற்கு முன்பு இது நிறைவேறுவதில்லை (லூக்கா 3:5).

யோவான் ஸ்நானனுடைய வேலை இஸ்ரயேலர்களுக்கு உட்பட்டதாக இருந்ததே ஒழிய, புறஜாதியாருக்கு உரியதாய் இல்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். இஸ்ரயேலர்களுக்கு யோவான், மாம்சத்தில் வரும் மேசியாவிற்குரிய முன்னோடியாக அல்லது எலியாவாக இருந்து, அந்தத் தேசத்தார் இயேசுவை இராஜாவாக ஏற்றுக்கொள்வதன் மூலம் தேவனுடைய இராஜ்யத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாக, அவர்களின் அறுவடை காலத்தில் அவர்களைத் தூண்டிவிடுபவராகக் காணப்பட்டார். ஆனால், யோவான் தன்னுடைய தேசத்தாருக்குப் புரிந்த ஊழியத்தில், அதிகம் வெற்றிக் காணவில்லை; மிகச் சொற்பமானவர்களே பலன் அடைந்தார்கள். யோவானின் சாட்சியை நம்பி, அச்சாட்சியை நல்லதும், உண்மையும், மனம்திரும்புதலும் கொண்டுள்ள தங்களுடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்ட அந்தச் சொற்ப ஜனங்களால் மாத்திரமே, இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கும், அவர் மூலம் தேவன் அளிக்கும் பாவமன்னிப்பை உணரவும், ஏற்றுக்கொள்ளவும் முடிந்தது. யோவானுடைய போதகத்தைப் புறக்கணித்த மீதமுள்ள தேசத்தார், மனந்திரும்பாத இருதய நிலையில் காணப்பட்டப்படியால், அவர்கள் இயேசுவிற்காக ஆயத்தமாக இல்லை, மேலும் அவருடைய இரத்தத்தின் மூலம் வந்த பாவ

மன்னிப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளாததால், ஒரு தேசமாக அவர்கள் புறக்கணிக்கப்பட்டு, முற்றிலுமாகத் தள்ளப்பட்டுவிட்டனர்.

மாம்சத்தில் வந்த இயேசுவை, மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு, எலியாவைப் போன்று யோவான் அறிமுகப்படுத்தி, இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கும், அவரால் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஆயத்தமாயிருக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைச் சேர்த்துக் கொண்டது போன்று, தெய்வீகத் திட்டத்தில் யோவானைக் காட்டிலும் மாபெரும் நிஜமான எலியா இருக்கின்றார் எனவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவைக் காட்டிலும் (மாம்சம்), மாபெரும் (ஆவிக்குரிய) கிறிஸ்து இருக்கின்றார் என்று நாம் பார்க்கின்றோம். மாபெரும் கிறிஸ்து, ஆவிக்குரியவர் ஆவார். அதாவது, "வானத்திலிருந்து வந்த கர்த்தர்" ஆவார் - "கர்த்தரே ஆவியானவர்." மேலும், இந்த மகிமையடைந்த ஆவியின் ஜீவியாக இருக்கும் கர்த்தர், தமது சரீரமாகிய சபைக்குத் தலையாக இருக்கின்றார். மேலும் இந்தச் சரீரத்தின் அங்கங்கள், முதலாம் உயிர்த்தெழுதலில், அவரைப்போல் ஆக்கப்பட்டு, அவருடைய மகிமையிலும், அவரிலும் பங்கடைவார்கள். மேலும் அவரும், இவர்களும் மகாபெரும் மேசியாவாகக் காணப்பட்டு, மாபெரும் வல்லமையையும், ஆளுகையையும் எடுத்துக் கொண்டு, மனுஷர் மத்தியில் தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, பரலோகத்தில் எப்படிப் பிதாவின் சித்தம் நிறைவேற்றப்படுகின்றதோ, அப்படியே பூமியிலும் நிறைவேற்றப்பட செய்வார்கள் (மத்தேயு 6:10). மனுக்குலத்திற்கு, (தலை மற்றும் சரீரம் உள்ளடங்கிய) ஆவிக்குரிய கிறிஸ்து, மாபெரும் கிறிஸ்து அதிகாரத்தில் வருவதே, இரண்டாம் வருகையாக இருக்கும்; அதாவது, தவிக்கும் சிருஷ்டிகளை விடுவிப்பதற்கான, தேவபுத்திரர்களின் வெளிப்படுதல் ஆகும் (ரோமர் 8:17-19). நமது கர்த்தர், மாம்சத்தில் வந்த முதலாம் வருகை மிக முக்கியமானதுதான். பாவத்திற்காகப் (முதலாம் வருகையில் வந்து) பலிச் செலுத்தப்படவில்லை என்றால், தலையாகிய இயேசு மகிமையான இராஜ்யத்தின் வல்லமையோடு இரண்டாம் வருகையில் வருவதும் மற்றும், அவரோடுகூட அவருடைய சரீரமும் மகிமையடைந்த அங்கங்களாக இருப்பதும் முடியாது என்றாலும், முதலாம் வருகையைக் காட்டிலும் (சரீரமாகிய சபையோடு) தலையாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்பது மிக உன்னதமான தளத்திலேயே காணப்படுகின்றது.

இவ்விரண்டு சம்பவங்களுக்கும் இடையே உள்ள தொடர்பைப் புரிந்துக்கொண்ட பின்னர், மற்றொரு அம்சத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அதாவது, முதலாம் வருகையின் ஆசீர்வாதங்கள், பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்டது போன்று, இரண்டாம் வருகையின் ஆசீர்வாதங்களும் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கே (கிறிஸ்துவ மண்டலம்) கொடுக்கப்பட்டது. மாம்சீக இஸ்ரயேலர்களை ஆயத்தம் பண்ணும் விதமாக அவர்களுக்கு ஒரு முன்னோடி அனுப்பப்பட்டதுபோன்று, அனைத்து பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை இரண்டாம் வருகைக்கு ஆயத்தம் பண்ணும் விதமாக, இரண்டாம் வருகைக்கு முன்னதாக ஒரு மாபெரும் முன்னோடியானவர் வர வேண்டும். ஆவிக்குரிய கிறிஸ்துவின் முன்னோடியாக இருக்கும் இந்த மாபெரும் எலியா, அநேக அங்கங்களை உள்ளடக்கியவர் என்று ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம். இந்த எலியா வகுப்பினருக்கு, மாம்சத்தில் இருந்த இயேசு தாமே தலையாகக் காணப்பட்டார். ஆனால், இந்த உண்மையான பின்னடியார்கள், அவரோடு மகிமையடையும்போது, மகிமையடைந்த கிறிஸ்துவின் அங்கங்களாகக் காணப்படுவார்கள். இவர்கள் மகிமையடைந்த கிறிஸ்துவின் அங்கங்கள் ஆகுவதற்கு முன்பும், தங்களுடைய பூமிக்குரிய ஜீவியத்திலும் எலியா வகுப்பாரில் அங்கங்களாக இருந்திருக்கின்றார்கள். நீதியின் கோட்பாடுகளையும், உண்மையான பரிசுத்தத்தின் கோட்பாடுகளையும் முன்வைத்து, நடத்தை மற்றும் வார்த்தையின் மூலம் சகல மனுஷரையும் மனந்திரும்புதலுக்கு நேராக நடத்துவதற்கு ஏதுவான புத்திமதிகளைக் கொடுத்து, அனைவரையும் இரண்டாம் வருகைக்கு ஆயத்தம் பண்ணுவது, அதாவது மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கும், பாவங்கள் நிஜமாய் அகற்றப்படுவதற்கும், ஒவ்வொரு வளைந்த பாதைகள் நேராக்கப்படுவதற்கும், குணலட்சணங்களின் பள்ளத்தாக்கைச் சமப்படுத்துவதற்கும், பெருமையின் மலைகள், தாழ்மை எனும் சமவெளிகள் ஆக்கப்படுவதற்கும் அதாவது, மாம்சமான யாவரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக்குவதுமே இந்த எலியா வகுப்பாரின் ஊழியமாகும்.

நிழலான எலியாவாகிய யோவான் ஸ்நானனின், சாட்சி தோல்வியைத் தழுவினதைப் போன்று, இந்த மாபெரும் நிஜமான எலியாவின் சாட்சியும் தோல்வியைத் தழுவும் என

வேதவாக்கியங்கள் தெளிவாகக் குறிப்பிடும் விஷயங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மாம்சத்தில் காணப்படும் சபையானது, கர்த்தர் பூமியின் மீதான இராஜ்யத்தில் வருவதற்கென, அவருக்குச் செம்மையான பாதைகளை ஏற்படுத்துவதில் வெற்றிக் கொள்ளவில்லை. மிகச் சொற்பமானவர்களே செவிசாய்த்துள்ளனர்; மீதமுள்ள பெரும்பான்மையான ஜனங்களிடத்திலும், இராஜ்யத்திற்குக் காத்திருக்கின்றோம் என்று அறிக்கைப் பண்ணுகிற (கிறிஸ்துவ) ஜனங்களிடத்திலும், இச்செய்தி தோல்வியையே சந்தித்தது. இரட்சகருக்காகவும், முதலாம் வருகையின் மூலம் அவர் அவர்களைச் சந்திக்கும் காலத்தை அறியாமலும், ஆயத்தமாய் இராமலும் காணப்பட்ட மாம்சீக இஸ்ரயேலர்கள் மீது வந்தது போன்று, இந்த யுகத்தின் முடிவில், அல்லது அறுவடையின் காலக்கட்டத்தின்போது கிறிஸ்துவ மண்டலத்தின் மீது உபத்திரவங்கள், நாசங்கள், அழுத்தங்கள் வந்திட்டாலும், இறுதியில் தேவனுடைய அனைத்து நல்நோக்கங்களும் நிறைவேறித் தீரும். இந்த ஆயத்தமில்லாத நிலைகள் ஒன்றும், மேசியாவின் வேலையைத் தடைப்பண்ணுவதில்லை. முதலாம் வருகையின்போது, அவர் உண்மையுள்ள அனைத்து இஸ்ரயேலர்களையும் சேர்த்து, புதிய யுகத்திற்குள்ளாக நடத்தினார். அதைப்போலவே, இப்பொழுதும் அவர் தெரிந்துக்கொள்ளப்பட்ட "சிறுமந்தையினரை" தம்மிடத்தில் சேர்த்துக் கொண்டு, தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். இந்த இராஜ்யம் முழுமையாக எல்லாவற்றையும் ஆளும். <u>இந்த இராஜ்யமானது,</u> ஒவ்வொரு வளைந்த நெளிந்த பாதைகளைச் செம்மையாக்கி, நீதி மற்றும் பரிசுத்தத்தின் பாதையைச் சமப்படுத்தி, இந்தப் பாதையை, சாத்தானின் வஞ்சனை மற்றும் தப்பறைகள் எனும் தடுக்கலின் கற்கள் அற்ற "பெரும்பாதையான" வழியாக ஆக்குகின்றது (ஏசாயா 35:8, 9). சத்தியத்தின் அறிவிற்குள்ளாகக் கொண்டு வரப்பட்ட முழு மனுக்குலமும், திரும்பக்கொடுத்தலின் காலங்களில் இந்த மகிமையான கீழ்ப்படிதலின் பெரும்பாதையில் பிரவேசித்து, தகப்பனாகிய ஆதாமின் மீறுதலினால் அவரும், அவருடைய சந்ததியும் இழந்துபோனதும், கிறிஸ்து தம் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததிக்காகவும் மீட்டுக் கொண்டதுமானவைகளைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். மாம்சமான யாவரும், நமது தேவனின் இரட்சிப்பைக் காண்பார்கள்; ஏனெனில், உண்மையான ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததியாராகிய கிறிஸ்து மற்றும் அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் மூலம், தேவன் பூமியின் குடிகளுக்கு அளித்த ஆசீர்வாதம் இதுவே ஆகும் (கலாத்தியர் 3:16, 29).

யோவானிடம், விநோதமான தோற்றமும், மிக எளிமையான பேச்சுகளும் காணப்பட்டாலும், ஆரம்பத்தில், அவருடைய ஊழியம் மிகப் பிரபலமாகக் காணப்பட்டது. அவரிடம் திரளான ஜனக்கூட்டம் வந்தது. அப்படி வந்தவர்கள் மத்தியில், சிலர் சரியான நிலையில் இல்லாததால், அவர்கள் மனந்திரும்பினதற்கான அடையாளம் வெளிக்காட்டாத வரையிலும் அவர்களை ஏற்றுக்கொள்ள, யோவான் மனதாய் இருக்கவில்லை. இத்தகையவர்களை அவர் "விரியன் பாம்புக்குட்டிகளே" அன்று அழைக்கின்றார்; இது மிகவும் கடினமான வார்த்தையாகும். இன்றைய காலத்துக் கர்த்தருடைய ஜனங்கள், இவ்விதமான வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக, அந்தக் காலக்கட்டத்தில் இவ்விதமான கடினமான கடிந்துக் கொள்ளுதலைக் கொடுக்கும்படி, தீர்க்கத்தரிசியான யோவான், தெய்வீக விதத்தில் வழிநடத்தப்பட்டார் என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். சுவிசேஷ யுகத்தில் கர்த்தருடைய ஜனங்கள் சாந்தத்துடனும், பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும் பேச வேண்டும் என்று போதிக்கப்பட்டிருக்கின்றார்கள்; "எதிர்ப்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்" (2 தீமோத்தேயு 2:25, 26). "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" (2 தீமோத்தேயு 4:2). முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகள் இவ்வாறு பேச அனுமதிக்கப்பட்டது போன்று, கர்த்தருடைய ஜனங்கள் இப்படியாகப் பேசுவதற்கு விசேஷமான வழிநடத்தல் இல்லாதது வரையிலும், சாந்தத்துடனேயே பேச வேண்டும். முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகள் இவ்வாறு பேசுவதற்கு அனுமதிப் பெற்றது போன்று, தற்காலத்தில் எவருக்கும் அனுமதிக் கொடுக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம்.

"வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?" என்று யோவான் தனக்குச் செவிசாய்ப்பவர்களுக்குக் கூறினதை, நாம் நித்தியத்திற்குரிய சித்திரவதை பற்றின உபதேசத்தை அவர் போதித்தார் என்றோ அல்லது அதை ஜனங்கள் விசுவாசித்திருந்தார்கள் என்றோ புரிந்துக்கொள்ளக்கூடாது. அவருடைய வார்த்தைகள் இதைப் பற்றினது என்றும் நாம் எண்ணக்கூடாது. வேதவாக்கியங்களில் ஒன்றும் இவ்விதமாகப் போதிப்பதில்லை. இன்னும் கொஞ்ச காலத்தில் வெளிப்படப்போகும் மேசியாவை, இஸ்ரயேல் ஜனங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், உண்மையான மனந்திரும்புதலுடனும், ஞானஸ்நானத்தினாலும் அவருக்கு ஆயத்தமாகவில்லையெனில், அவர்கள்மேல் வரவிருக்கிற உபத்திரவத்தைக் குறித்தே, யோவான் "வருங்கோபம்" என்று தீர்க்கத்தரிசனமாக உரைத்தார். நமது கர்த்தரும், அப்போஸ்தலனாகிய பவுலும் கூறினதுபோல, இஸ்ரயேல் ஜனங்கள், மேசியாவைப் புறக்கணித்த காரணத்தினால் அந்தத் தேசத்தார் மீது "கோபம்" வந்தது (லூக்கா 21:23; ரோமர் 9:22; 1 தெசலோனிக்கேயர் 2:16). அக்கோபம் அவர்கள் மேல் கொழுந்து விட்டு எரிந்து; கி.பி. 69 முதல் கி.பி. 70-இல் தேசமே குலைந்துப் போயிற்று, மேலும் அவர்கள் அக்கோபத்தின் கீழே காணப்படுவதால், அவர்கள் மீண்டுமாகத் தங்களை ஒரு தேசமாக ஸ்தாபிக்க முடியவில்லை.

யோவான் பிரசங்கிக்கும் போது, அவருக்கு ஒரு கஷ்டம் இருந்தது; அதென்னவெனில், யோவானுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், தாங்கள்தான், தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட மகிமையடைதலுக்கு உரியவர்களும், தேவனால் விசேஷமாகத் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுமானவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர். மேலும், உலகத்தில் வேறெந்த சிறந்த ஜனங்களும் இல்லாததால், சிறந்தவர்களாகிய தங்களைவிட்டு, வேறு எவரையும் தேவன் தெரிந்தெடுக்க மாட்டார் என்ற அனுமானமும் காணப்பட்டது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு அவர் சிலரைத் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்றும், தாங்கள் நியாயப்பிரமாணத்திற்கு வெளிப்புறமாக அதிகம் கீழ்ப்படிபவர்களாக மாத்திரம் இராமல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் மாம்ச சந்ததியாயும் இருக்கின்றோம் என்றும் இவர்கள் எண்ணினார்கள். இதைப் போலவே பரிசுத்தத்திற்கடுத்த உபதேசத்திற்கும், கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணித்தலுக்கடுத்த போதனைக்கும் எதிரான கோட்பாடுகளே இன்றைய கிறிஸ்துவமண்டலம் முழுவதும் காணப்படுகின்றது. இஸ்ரயேல் ஜனங்களிடம் காணப்பட்ட அதே தவறுதான், கிறிஸ்துவமண்டலத்திடமும் காணப்படுகின்றது. கிறிஸ்துவ ஜனங்களின் மனதில் ஒரு தவறான கோட்பாடு ஏற்பட்டு, அது கர்த்தரின் தயவைப் பெற பரிசுத்தம் அவசியப்படாது என்று அவர்களைச் சிந்திக்க நடத்தினது. இவர்களுடைய கோட்பாடின் விஷயமாவது:- "உலகத்தில் உள்ள ஆயிரத்து 600 மில்லியன் ஜனத்தொகையில், - 300 மில்லியன் ஜனங்கள் மாத்திரமே கிறிஸ்துவர்கள் என்று அறிக்கை பண்ணியுள்ளனர்; இந்த 300 மில்லியன் ஜனங்களில் கிரேக்க, ரோம கத்தோலிக்கர்களும், குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர். தேவன், நிச்சயமாக சிலரை ஏற்று/எடுத்துக்கொள்ள விரும்புவார். ஒருவேளை அவர் எல்லா வகை கிறிஸ்துவர்களை எடுத்துக்கொண்டாலும், அவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படும். ஒருவேளை பிசாசிடம் இருப்பவர்களைக் காட்டிலும் அதிகம் எண்ணிக்கை வேண்டும் என்பது மாத்திரம் தேவனுடைய நோக்கமாக இருக்குமாயின், தங்களைக் கிறிஸ்துவர்கள் என்று அறிக்கை பண்ணியும், கொஞ்சம் மாத்திரமே நல்லவர்களாக இருப்பவர்களையும் கூட அவர் புறக்கணியாமல், ஏற்றுக்கொள்வார். இப்படியாகக் கர்த்தருக்கு முன்பு பரிசுத்தம் கொண்டிருப்பதும், வார்த்தையிலும், எண்ணத்திலும்,கிரியையிலும் பரிசுத்தம் கொண்டிருப்பதும் தெய்வீகத் தயவைப் பெற அவசியப்படாது என்று அனுமானித்து, இவர்கள் எல்லையை/வரம்பை மீறுகின்றனர்". "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்"என்றும், "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்கக் கூடாது" என்றதுமான வாக்கியங்கள், இத்தகையவர்களுக்கு மிதமிஞ்சினதாய்த் தோன்றுகின்றது; மேலும் இவ்வசனங்கள் புறக்கணிக்கப்படவும்படுகின்றது, இல்லையேல், "பரிசுத்தம்" என்ற வார்த்தையின் அர்த்தம் இவர்களைப் பொறுத்தமட்டில், வெளிப்படையாக அல்லது கொடூரமான தீங்குச் செய்யாமையைக் குறிக்கின்றதாகும்.

ஆகவே, நிஜமான எலியா, பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு ஊழியம் புரியும்போது சந்தித்த அதே பிரச்சனைகளையே, யூதர்களின் நிஜமான எலியாவும் சந்தித்தார் என்று நாம் பார்க்கின்றோம். ஆனால், யோவானின் பதிலைக் கவனித்துப் பாருங்கள்; அவர் நிபந்தனைகளை மிகவும் கண்டிப்புடன் கூறினார்; அதாவது, தேவன்

உங்களை ஏற்றுக்கொள்ளும் கட்டாயத்தில் இருக்கின்றார், இல்லையேல் அவர் உரைத்த வார்த்தைகள் விருதாவாய்ப் போய்விடும் என்று எண்ணி, நீங்களே உங்களை ஏமாற்றிக்கொள்ளாதீர்கள்; மேலும், உங்களைக் காட்டிலும் பரிசுத்தமான ஆபிரகாமின் பிள்ளைகளை, தேவனால் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் காரணத்தினால், அவர் உங்களைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, நீங்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம். தேவன் வல்லமையிலும், ஆதாரத்திலும் எல்லையில்லாமல் விளங்குபவர் ஆவர். ஒருவேளை தேவைப்படுமாயின், இந்தக் கல்லுகளிலிருந்தும் கூட, அதாவது, ஆபிரகாமின் சந்ததியாகும் வாய்ப்புக்குத் தூரமாயும், ஆபிரகாமின் சந்ததியின் பாதங்களுக்கு கற்கள் போன்றும் இருப்பவர்கள் மத்தியிலிருந்து, ஆபிரகாமுக்கு பிள்ளைகளை எழுப்ப தேவனால் கூடும் என்று யோவான் ஸ்நானன் கூறினார். மேலும், இதே பதிலைத்தான் நாமும் இன்று, "கிறிஸ்துவ மண்டலத்தாருக்கு" அளிக்கின்றோம்; அதாவது, இவ்வுலகத்தின் அதிபதியினால் இன்னமும் குருடாக்கப்பட்டவர்களும், தேவனையும், அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும், அவர்களின் உண்மையான குணலட்சணங்களையும் அறியாதவர்களுமாய்க் காணப்படுகின்ற தங்களைக் கிறிஸ்துவர்கள் என்று அறிக்கை பண்ணுகிறவர்களான மாய்மாலமான கிறிஸ்தவர்களை, தேவன் முழுமையாகப் புறக்கணிக்கின்றார்; காரணம், அவர்களுடைய இருதயத்தில் பரிசுத்தமும் இல்லை, கர்த்தருக்கென்று தங்களை முழுமையாக அர்ப்பணிக்கவும் இல்லை என்பதினாலேயே ஆகும் என்று நாமும் பதிலளிக்கின்றோம். நமக்கு எக்காளம் போன்ற சத்தம் இருக்குமாயின், நாம் மில்லியன் கணக்காகக் காணப்படும் பெயரளவிலான கிறிஸ்துவ மண்டலத்தாருக்கு, அவர்களது உண்மையான நிலைமையை எடுத்துக் கூறியிருப்போம்; அவர்களும் கேட்பதற்கென்று தங்கள் செவிகளை, விருத்தசேதனம் பண்ணி, மனந்திரும்பி, மகா உபத்திரவக் காலத்திற்குள் பிரவேசிக்கக் கட்டாயப்படுத்தப்படாமலேயே, வரவிருக்கின்ற மகிமையான விஷயங்களுக்கு ஆயத்தப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு நாம் பின்வருமாறு நிச்சயமளித்திருக்க முடிந்திருக்கும்; அதாவது தேவன், தாம் நிர்ணயித்துள்ள தெரிந்துக் கொண்டவர்களைக் கண்டுபிடிப்பார் என்றும், அந்த முழுமையான எண்ணிக்கை நிறைவடைய இப்பொழுது அண்மையில் உள்ளது என்றும், இந்தத் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய "சிறுமந்தையிடமே" இராஜ்யத்தைக் கொடுப்பது, பிதாவுக்குப் பிரியமாய் இருக்கின்றது என்றும், இவர்கள் தங்கள் மகிமையடைந்துள்ள கர்த்தராகிய தலையோடு சேர்ந்து மகிமை அடையும்போது, பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கென, ஸ்தாபிக்கப்பட்ட இராஜ்யம் வெளிப்படும் என்றும் நாம் நிச்சயமளித்திருக்க முடிந்திருக்கும். ஆனால், ஒரு ஜாதியாரும் பார்த்திராத மகா உபத்திரவக் காலத்தின் மூலமே அவர்களுக்கு இராஜ்யம் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய நிலையில் அவர்கள் காணப்படுவதினால், நாம் அவர்களுக்காக, ஆழ்ந்த அனுதாபம் கொள்கின்றோம் (தானியேல் 12:1, மத்தேயு 24:21).

யோவான் ஸ்நானன் இப்படியாக பேசிக் கொண்டிருக்கையில், தான் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த யூதர்களுக்கு, அவர்கள் தேசம் மீது நியாயத்தீர்ப்பு வர சமீபித்துள்ளது என்று கூறினார். கோடாரியானது, மரத்தினுடைய வேர்களின் மீது வைக்கப்பட்டுள்ளது. உத்தம இஸ்ரயேலன் அல்லாத எவனும்/ஒவ்வொரு இஸ்ரயேலனும் வெட்டப்பட்டு, அந்த யுகத்திற்கு வரப்போகிற உபத்திரவமாகிய அக்கினியில் போடப்படுவான். தேசமே அழிவுக்குள்ளாகப் போய்விடும். யூத ஜனங்கள் மத்தியில் நமது கர்த்தரின் 3½ வருட ஊழியமும், இறுதியில் அவர், அவர்களைப் புறக்கணிக்கும் விஷயங்களும், கனிகொடாத அத்திமரத்தின் உவமையில் வெளிப்படுகின்றது; மேலும், இது யோவான் ஸ்நானகன் மேலே கூறியுள்ள விஷயங்களுக்கு இசைவாய்க் காணப்படுகின்றது. "அப்பொழுது அவர் ஓர் உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்: அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்" (லூக்கா 13:6-9).

யோவான், சரியான விதத்தில் பயத்தை ஏற்படுத்தினார். மீறுபவர்கள் முன், சத்தியத்தை முன்வைப்பதற்குச் சரியான விதமும், தேவன் மீதான சரியான பயத்தை ஏற்படுத்துவதற்கும், அவர்களுக்குரிய தண்டனையை முன்வைக்கும் விதமும் உள்ளது. ஆனால், இந்தப் பயம், பயமுறுத்தும் நித்தியத்திற்குரிய சித்திரவதையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இந்தத் தவறான உபதேசங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இன்று அனைத்து இறையியல் போதனைகளிலும் காணப்பட்டு, சிலரைப் பைத்தியமாகவும், சிலரை நாத்திகராகவும் மாற்றியுள்ளது, அநேக பரிசுத்தவான்கள் நமது தேவனுடைய திட்டத்தையும், உண்மையான குணலட்சங்களையும் உணர்ந்து கொள்ள முடியாத நிலைக்குப் போகவும் செய்துள்ளது. வரவிருக்கிற கோபத்தைக் குறித்து முன்வைக்கும்போது, நமது தேவனுடைய குணலட்சணங்களைத் தவறாய்க் காட்டாத வண்ணம் முன்வைப்போமாக. தேவனுடைய பரிசுத்தமான நாமத்தைத் தூஷிப்பவர்களை, அவர் தவறு செய்தவர்களாகவே பார்க்கின்றார்.

யோவானின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள், தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்க ஆரம்பித்தபோது, அவர்கள் நீதி, இரக்கம், அன்பு, தாராளம் முதலியவற்றைக் காட்ட வேண்டும் என்றும், வன்செயல், பயமுறுத்திப் பிடுங்கும் விஷயங்களைத் தவிர்த்து, தங்களிடத்தில் உள்ளவைகளில் திருப்திக்கொள்ளவேண்டும் என்றும் போதித்தார். இது அருமையான ஆலோசனையாகும் ; மேலும், இவைகளைப் பின்பற்றினவர்கள், <u>கர்த்தராகிய இயேசுவையும்</u>, அவருடைய இரத்தத்தின் மூலம் வரும் பாவமன்னிப்பு மற்றும் இதன்மூலம் பிதாவுடன் ஒப்புரவாகுதல் குறித்ததான <u>நற்செய்தியையும்</u> ஏற்றுக்கொள்ளத்தக்கதான, சரியான இருதயம் மற்றும் மனநிலையில் காணப்பட்டிருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதுபோல இந்த யுகத்தின் முடிவில், "கிறிஸ்துவ மண்டலத்தின்" மீது வரப்போகும் கோபத்தைக் குறித்து நம்மிடம் எவராகிலும் கேட்டால், நாம் என்ன செய்ய வேண்டும்? நீதியை, உண்மையை, அன்பை, இரக்கத்தை நடப்பித்து, கர்த்தரிடத்தில் நம்பிக்கைகொண்டு, அவருடைய வழிகளில் நடக்க நாடுங்கள் என்பதே அவர்களுக்குரிய நமது பதிலாகும் அல்லது "தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள், நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள் அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்" என்று அவர்களுக்குக் கூறுவோம் (செப்பனியா 2:3). மேலும் இப்படியாக நீதியானவைகளை நாடுபவர்கள் நமது இராஜாவையும், அவருடைய இராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்ள/வரவேற்க ஆயத்தமாய் இருப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம். மேலும், இந்த அறுவடையின் காலத்தில் சிலர் தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்தாமல், கிரீடத்திற்கு அபாத்திரமாய்ப் போகிறவர்களாக இருப்பார்கள். கர்த்தரோ, தமது தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக இப்படி அபாத்திரமாய்ப் போனவர்களின் இடத்தில், அவர்களுக்குப் பதிலாக, மேற்கூறிய நீதியைத் தேடுபவர்களில் சிலரைத் தெரிந்துக்கொள்ளப் பிரியப்படுவார்.


யோவான், சத்தியத்தை முன்வைத்த விதம் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தபடியால், இவர்தான் வரவிருக்கிற மேசியாவாக இருப்பாரோ, இல்லையோ என்று ஜனங்கள் சிந்திக்கத் தொடங்கினர். ஆனால் யோவானோ, தான் மேசியாவுக்கு மிகவும் கீழானவர் என்றும், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கும் சிறு வேலைக்குரிய கனத்தைப் பெறுவதற்குக் கூட, தான் பாத்திரவான் அல்ல என்று கூறி, அவர்களின் சிந்தனையை மாற்றிப்போட்டார். மேசியாவின் அம்சத்தைச் சிறிதளவில் அவர்களுக்கு அவர் வெளிப்படுத்தின பின்பு, மேசியாவின் வேலை குறித்தும், தன்னுடைய வேலையைக் காட்டிலும், மேசியாவின் வேலை பெரியது என்றும், அவரை ஏற்றுக்கொள்பவர்கள், பெரிதான ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வார்கள் என்றும் கூறினார். "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத்தேயு 3:11).

அவர்கள் அவருடைய யுகத்திற்குரிய அறுவடை காலத்திற்கு வந்துள்ளனர் என்றும், இப்பொழுது ஒரு பிரித்தெடுத்தலை அதாவது, உண்மையான கோதுமை, பதரிலிருந்து பிரித்தெடுக்கப்படுதலை எதிர்ப்பார்க்கலாம் என்றும், அவர்களுக்கு யோவான் விளக்கினார்.

கோதுமையைப் பதரிலிருந்து பிரிக்கத்தக்கதாக, தூற்றுக்கூடையினால் புடைத்து எடுப்பதற்கு, இஸ்ரயேலுடனான நமது கர்த்தரின் வேலையை, யோவான் அடையாளப்படுத்திக் காட்டினார். எவ்வளவு அழுத்தம் மிக்கதாக அந்த உதாரணம் காணப்பட்டது! எவ்வளவு அருமையான உண்மை! நமது கர்த்தர் அந்த ஜனங்களிடமிருந்து, அனைத்து உண்மையான கோதுமையையும் சேகரித்துக் கொண்டார் என்பது உண்மையே. எந்த ஒரு கோதுமை மணியும் தொலைந்துப் போகவில்லை என்பதில் நாம் நிச்சயம் கொள்ளலாம். அனைத்துக் கோதுமை மணியும் அவருடைய களஞ்சியமாகிய பாதுகாப்பான இடத்தில், அதாவது, இன்னுமொரு மேலான யுகத்திற்குள் சேர்க்கப்பட்டுவிட்டது. இவர்களே, சுவிசேஷ யுக சபையின் முதல் அங்கங்கள் ஆவர். இந்தக் கோதுமை வகுப்பார் மீதே, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி வந்து, அது முதல், உண்மை சபையோடு பரிசுத்த ஆவிக் காணப்பட்டது. கோதுமை புடைக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்டு, களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பின்னர், காலம் வந்தபோது அணைக்க முடியாத அக்கினியால், பதர் சுட்டெரிக்கப்பட்டது. ஒன்றினாலும் தடுக்க முடியாத உபத்திரவக் காலமாக அவர்களுக்கு அது இருந்தது. இஸ்ரயேல் தேசத்தின் அழிவைத் தடுக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அவைகள் அனைத்துமே தோல்வியையே தழுவினது என்றும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். ரோம சக்கரவர்த்தி, அந்தத் தேசத்தைப் பாதுகாக்கவும், அங்கு ஒழுங்குகளை ஏற்படுத்தவும் விரும்பி, ரோம படைகள் அவர்களை அழிப்பதற்கு அல்லாமல், அவர்கள் மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்த அங்குச் சென்ற போதும் கூட, தோல்வியே வந்தது. கர்த்தர் தாம் கொழுத்தி விட்ட அக்கினியானது எந்த வல்லமையினாலும் அணைக்கப்படாமலும் இருக்க வேண்டும் என்றும், அக்கினியானது அதன் முழு வேலையையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் கட்டளையிட்டபடியால், அது அப்படியே செய்திற்று.

இப்படியாகவே, இந்தச் சுவிசேஷ யுகம் முடிவடையும் போது வரும் மகா உபத்திரவத்தின் அக்கினியும் காணப்படும். இந்த அக்கினிக்குள், கிறிஸ்துவ மண்டலத்தாரின் "களை" வகுப்பாரும் போடப்படுவார்கள். மகா உபத்திரவமாகிய இந்தக் கோபத்தின் நாளில் அநேகர் மரித்துப் போனாலும், அனைத்து ஜீவன்களின் அழிவாக அது காணப்படுவதில்லை. எனினும், அது குழப்பம் என்ற அக்கினியின் மூலம், பூமிக்குரிய அரசாங்கத்தையும், சபை அமைப்புகளையும் முழுமையாக அழித்துப்போடும். தற்கால அமைப்பின் முழு அழிவைக் கொண்டு வரும் இந்த அக்கினியை எதுவும் அணைத்துப் போட்டுவிட முடியாது. ஆனால் இந்த அக்கினியானது, தற்கால அமைப்புகளின் வஞ்சனைகளையும் மற்றும் தப்பறைகளையும் முழுமையாகப் பட்சித்துப் போட்ட பின்னர், இது தேவன் தமது வரவிருக்கிற இராஜ்யத்தின் மூலம் வரும் மாபெரும் ஆசீர்வாதங்களுக்குரிய ஆயத்தங்களைச் செய்து காணப்படுவதினால், தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த அக்கினியும், அதைத் தொடரும் ஆசீர்வாதங்களும் விசேஷமாகச் செப்பனியா 3:8, 9-ஆம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்."

---



*ஆலயத்தில் கொள்ளுகிரவர்களும் விற்கிறவர்களும் வெளியே துரத்தப்படுதல்*

என்னுடைய வீடு ஜெபவீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்றார். (லூக் 19:46)

# பாகம்-2

# “இயேசுவின் ஊழியத்தினுடைய ஆரம்பம்...”

R2565

# "அர்ப்பணிப்பைப் பின்தொடர்ந்த சோதனைகள்"

## மத்தேயு 3:13-4:11.

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்."

யோவான் பிரசங்கித்தும், ஞானஸ்நானமும் கொடுத்தும் கொண்டிருக்கையில், ஆறு மாதங்களுக்குப் பின்னர், அதாவது, கி.பி. 29-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத அளவில், கலிலேயாவில் வசித்துக் கொண்டிருந்த இயேசு, அவருடைய 30-வது பிறந்தநாள் சமீபித்து வருகையில், யோவானைக் கண்டுபிடிக்கவும், அவரிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும், விரைவாகத் தமது பொதுப்படையான ஊழியத்தை ஆரம்பிக்கவும் வேண்டி புறப்பட்டார். அவர் தமது ஜனங்களுக்கு ஆசாரியனாகவும், இராஜாவாகவும் இருக்கப் போகிறார். அதாவது, மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்தின்படி இருக்கப் போகின்றார். மேலும், நியாயப்பிரமாணத்தின்படி ஒருவர் ஆசாரியர் ஆகுவதற்கு 30-வயதையாகிலும் அடைந்திருக்க வேண்டும். ஆகவேதான் இந்த வயதை அடையும் வரை, இயேசு தமது ஊழியத்தை ஆரம்பிக்க முடியாமல் இருந்தார். ஆனால், அந்தச் சமயம் வந்தபோதோ, அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கான சுயாதீனம் அவருக்கு இருந்தது.

இயேசு, தமது உறவினனான யோவான் ஸ்நானனோடு நன்கு பழக்கம் கொண்டிருந்திருக்க வேண்டும்; இவரும், இயேசுவின் நேர்த்தியான ஜீவியத்தையும், குறைவற்ற குணலட்சணங்களையும் அறிந்திருப்பார். ஆகையால்தான், இயேசு தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வரும்போது ஆச்சரியம் அடைகின்றார். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு யோவான் எதிர்ப்பார்த்த ஜனங்கள் பாவமுள்ள வகுப்பாரே ஆவர். "நான் உம்மிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டி இருக்க, நீர் என்னிடத்தில் வரலாமோ?" என்ற அர்த்தத்தில் யோவான் இயேசுவைத் தடை பண்ணினார். இயேசுவிடம் பாவம் இல்லாதக் காரணத்தினால், இவ்விதமான ஞானஸ்நானம் இயேசு எடுப்பது சரியல்ல என்று யோவான் எண்ணினார். ஏனெனில், யோவானின் ஞானஸ்நானம், கிறிஸ்தவனின் ஞானஸ்நானமாக இராமல், மனந்திரும்புதலின் ஞானஸ்நானமாக மாத்திரம் இருந்தது (அப்போஸ்தலர் 19:4, 5-ஆம் வசனங்களைப் பார்க்கவும்).

நமது கர்த்தர், தாம் ஒரு புதிய ஞானஸ்நானத்தை அறிமுகப்படுத்தப் போகிறார் என்றோ, அது பாவிகளுக்குரியதாய் இராமல், பரிசுத்தமானவர்களுக்கு உரியது என்றோ, இந்தப் புதிய ஞானஸ்நானம் எவ்விதத்திலும், பாவம் சுத்திகரிப்படுவதைக் குறிக்காமல், மற்றவர்களுடைய பாவங்களுக்கான பலியின் மரணத்தையே அடையாளப்படுத்துகின்றது என்றோ, யோவானுக்கு எடுத்துக்கூற முற்படவில்லை. அது கிறிஸ்துவ ஞானஸ்நானத்தைக் குறித்து விளக்குவதற்குரிய ஏற்றக் காலமல்ல. ஒருவேளை விளக்கியிருந்தாலும், அது யோவானையும், சுற்றி நின்று கேட்டவர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தி, எவ்வித பயனும் அளித்திருந்திருக்காது; காரணம் புதிய ஞானஸ்நானமானது பெந்தெகொஸ்தே நாள் முதல் ஆரம்பிக்கவிருக்கும் புதிய யுகத்திற்குரியதாகும். இன்று பெரும்பான்மையான கிறிஸ்துவ ஜனங்கள், நமது கர்த்தரால், முதலாவது அடையாளமாகப் பண்ணப்பட்ட கிறிஸ்துவ ஞானஸ்நானமாகிய புதிய ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள தவறி, இன்றளவும் பாவமன்னிப்புக்கென்று, யோவானுடைய ஞானஸ்நானத்தை அனுசரித்துவரும் விஷயத்தின் மீது இங்கு, நமது விசேஷமான கவனத்தைத் திருப்புவது நல்லது என நாம் எண்ணுகின்றோம்.

நமது கர்த்தராகிய இயேசு பரிசுத்தரும், பாவமில்லாதவரும், மாசற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமானபடியால், கழுவப்படுவதற்கு அவரிடத்தில் எந்தப் பாவமும் இல்லை என்றும், இதன் காரணமாக மனந்திரும்புதலுக்கு ஏதுவான யோவானின் ஞானஸ்நானம், இயேசுவுக்கு பொருத்தமற்றது/அர்த்தமற்றது என்றுமுள்ள வேதவாக்கியங்களின் அடிப்படையிலான கருத்தை, சீஷர்களாகிய நமது நண்பர்கள்

மறுப்பதில்லை. ஆகவே பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானத்தை, நமது கர்த்தர் இயேசு எடுத்துக்கொள்வது என்பது பொருத்தமானதாய் இருக்காது; பாவமன்னிப்புக்குத்தான் ஞானஸ்நானம் என்று யோவான் புரிந்துவைத்திருந்தார். ஆனால் அவருக்குள் பாவம் இல்லாதபடியால், அவர் எடுத்துக்கொண்ட ஞானஸ்நானம், புதிய வகை/ஒழுங்கின்படியான ஞானஸ்நானம் ஆகும். இவ்விதமான ஞானஸ்நானம், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு, அவருடைய பின்னடியார்களால் பின்பற்றப்பட்டது (அப்போஸ்தலர் 19:4, 5). கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளுக்கு மாத்திரமே உரியது. மாறாக, அவிசுவாசிகளுக்கும், பாவிகளுக்கும் உரியதல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும். கிறிஸ்துவின் மேல் கொள்ளும் விசுவாசமே, நீதிமானாக்குவதற்குரிய வல்லமையாக இருக்கின்றது. அவருடைய இரத்தத்தின் மேலான நமது விசுவாசத்தின் காரணமாக நாம் நீதிமானாக்கப்படுகின்றோம். நாம் நீதிமானாக்கப்பட்ட பிறகே, நாம் கிறிஸ்தவனுக்குரிய ஞானஸ்நானத்திற்குத் தகுதியடைகின்றோமே ஒழிய நீதிமானாக்கப்படுவதற்கு முன்பு அல்ல; மேலும் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கும்போது, நம்மிடத்தில் கழுவுவதற்கு எந்தப் பாவமும் இருப்பதில்லை. ஏனெனில், "விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான்" (அப்போஸ்தலர் 13:39). ஞானஸ்நானம் என்பது கர்த்தருக்கு எதைக் குறிக்கின்றதாய் இருந்ததோ, அப்படியாகவே ஒரு கிறிஸ்துவ விசுவாசிக்கும் காணப்படுகின்றது; அதாவது, பரம பிதாவின் சித்தத்திற்கு, தனது சித்தத்தை, தனது ஜீவனை/வாழ்க்கையை, தனக்குள்ள யாவற்றையும் முழுமையாக ஒப்புக்கொடுப்பது ஆகும்; அதாவது அர்ப்பணிப்பதாகும். இப்படியாகக் கிறிஸ்துவன் ஒப்புக்கொடுக்கும்போது, அவன் உலகத்திற்கும், பூமிக்குரிய நம்பிக்கை மற்றும் இலட்சியங்களுக்கும் மரித்துப் போனவனாகக் காணப்படுகின்றான், மேலும், புதிய ஜீவியத்தில் நடப்பதற்கும், பின் போகப்போக உண்மையான ஜீவனை அடைவதற்கும், அவன் கர்த்தரோடு, மீட்பரோடு, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கெனத் தேவனுக்குள் ஜீவனுடையவனாகிறான். இவைகள் அனைத்தும் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்தப்படுகின்றது.

பாவமில்லாத நமது கர்த்தர், இன்னொருவரால் நீதிமானாக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆகையால், புருஷனுக்குரிய வயதை அடைந்தபோது, பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கெனத் தம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுத்தார். அவருடைய அர்ப்பணிப்பின் போதே, அவருடைய பூமிக்குரிய ஜீவன், முழு உலகத்திற்கான பாவத்திற்காகப் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது; இதை அவர் தண்ணீரில் மூழ்கின விஷயம் அடையாளப்படுத்துகின்றது. அவருடைய மீதமுள்ள 3 ½ வருடத்தின் ஜீவியம் ஏற்கெனவே, பலிப்பீடத்தின் மேல் வைத்தாகிவிட்டது. அவர் தம்முடைய பலிப் பட்சிக்கப்பட மாத்திரமே 3 ½ வருடம் காத்திருந்து, இறுதியில் "எல்லாம் முடிந்தது" என்று கூக்குரலிட்டார். இதுபோலவே தம்முடைய உண்மையுள்ள, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை அனைவரையும் தம்முடன் உடன்பலிச் செலுத்துகிறவர்களாகவும், இறுதியில் இராஜ்யத்தில் உடன்சுதந்திரர்களாக இராஜரிக ஆசாரிய கூட்டமாவதற்கென அழைத்துள்ளார். இயேசுவின் ஞானஸ்நானமானது, பாவங்களுக்கான அவருடைய பலியின் மரணத்தை அடையாளப்படுத்தினது போன்று, கிறிஸ்தவனின் ஞானஸ்நானமும், (அவர்கள் முதலாவது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தின் புண்ணியத்தினால் எல்லாவற்றிலிருந்து விடுதலையாகி) அவன் கர்த்தரோடு அவருடைய பலியில் பங்குக்கொள்வதை அடையாளப்படுத்துகின்றது. நமது கர்த்தருடைய விஷயத்தில், அவருடைய அர்ப்பணிப்பைத் தொடர்ந்து உடனடியாக ஓர் அடையாளம் வெளிப்படுகின்றது, இதுபோலவே, அவருடைய பின்னடியார்களின் அர்ப்பணிப்பைத் தொடர்ந்து, உடனடியாக அடையாளத்தின் அர்த்தத்தை எவ்வளவு வேகமாக உணர்கின்றார்களோ, அவ்வளவு வேகமாக அடையாளம் வெளிப்பட வேண்டும். இந்த அடையாளத்தின் அர்த்தமானது, பல நூற்றாண்டுகளாக மறைக்கப்பட்டுள்ளது/தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நமது கர்த்தரின் அர்ப்பணிப்பு, மற்றும் அர்ப்பணிப்பின் அடையாளமாகிய ஞானஸ்நானம் நிறைவேறியவுடன், அவருடைய பலித் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்பதற்கான நிரூபணம் வெளிப்பட்டது. அதாவது, அவருக்கு வானங்கள் திறக்கப்பட்டன. கர்த்தருக்கு, பிதாவுடன் உறவு இருக்கின்றது என்பதை உறுதிபடுத்துகிறதாகவும், அவர் மனுஷனாக இருக்கும்போதுள்ள அனுபவங்களையும், லோகோஸாக இருக்கும்போதுள்ள அனுபவங்களையும் ஒன்றுபடுத்துகிறதுமான, பரலோக தரிசனம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர், இவரே என் நேசகுமாரன் என்ற சத்தம் கேட்டது. மேலும்,

தெய்வீக ஆசீர்வாதமானது, புறாவைப் போல இயேசுவின் மேல் இறங்கி வருவதை யோவானும், இயேசுவும் கண்டார்கள் (யோவான் 1:34). சுற்றி இருந்த ஜனங்கள் வானங்கள் திறக்கப்பட்டதையோ, குரலைக் கேட்டதாகவோ, புறாவைக் கண்டதாகவோ, நமக்கு எதுவும் கூறப்படவில்லை, மாறாக இயேசுவும், யோவானும் மாத்திரமே இவைகளையெல்லாம், கண்டும், கேட்டும் இருந்தார்கள் என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விஷயங்களுக்குச் சாட்சியாக இருப்பதற்கே, இவைகளைப் பார்க்கும் சிலாக்கியம் யோவானுக்கு அளிக்கப்பட்டது.

புறா என்பது, யூதர்கள் மத்தியில் ஓர் அருமையான அடையாளமாகும், அது சமாதானம் மற்றும் இரட்சிப்புக்குரிய ஒரு சின்னமாகும். நோவா அனுப்பின புறாவும், அதன் வாயில் இருந்த ஒலிவ கிளையும், சகல நாகரிகமான ஜனங்கள் மத்தியிலும் அடையாளமாக திகழ்கின்றது. தெய்வீக ஆசீர்வாதத்திற்கான வெளிப்படையான அடையாளம், புறாவாக இருந்தது என்றாலும், பரிசுத்த ஆவிதான் அந்தப் புறா என்றோ, அல்லது, பரிசுத்த ஆவியின் உருவம் புறா என்றோ நாம் அனுமானிப்பது தவறாகும். பரிசுத்த ஆவி என்பது வேதவாக்கியங்களின்படி தெய்வீக வல்லமையாக இருக்கின்றது. புறா என்பது சாந்தமும், அமைதியுமான ஆவிக்கு மிகப் பொருத்தமான அடையாளமாக இருக்கின்றது, மேலும் இத்தகைய ஆவி என்பது கர்த்தருக்குரிய பரிசுத்தத்தின் ஆவியை உடைய அனைவரிடமும் காணப்படக் கூடிய அலங்காரத்தில் ஒன்றாகும். நமது கர்த்தர் அனுபவித்த இம்மாதிரியான அனுபவங்கள், அவருடைய பின்னடியார்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் எதிர்ப்பார்க்கவும் கூடாது. அதாவது, வானம் திறப்பதையும், சத்தம் கேட்பதையும், புறாவையும் எதிர்ப்பார்க்கக் கூடாது. பெந்தெகொஸ்தே நாளன்று சபைக்காக வந்த பரிசுத்த ஆவி இந்த யுகம் முழுவதும் உள்ள முழுச் சபைக்கும் உரியதாகும். பெந்தெகொஸ்தே நாளன்று, அது வெளிப்படையாக வந்தது. இப்படிப்பட்ட வெளிப்படையான வெளிப்படுத்தல்கள், ஆரம்பத்தில் அவசியமாய் இருந்தது, காரணம் பரிசுத்த ஆவியின் விஷயத்தில், நாம் நமது சொந்த கற்பனைகளையோ அல்லது மற்ற மனுஷர்களுடைய கற்பனைகளையோ பின்பற்றவில்லை என்ற நிச்சயத்தைப் பெற்றுக்கொள்வதற்கேயாகும். முதலில் அடையாமாக வெளிப்படுத்தின விஷயங்களை, இப்பொழுது நாம் நிஜமாக பெற்றிருக்கின்றோம். மனந்திரும்புதலுக்கு ஏதுவான நம்பிக்கைக் கொண்ட அனைவரும் தங்கள் பாவங்களிலிருந்து நீதிமானாக்கப்பட்டிருக்கிறார்கள், பின்னர், அவர்கள் தங்களைக் கர்த்தருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திற்குள் ஒப்புக்கொடுக்கும்போது, ஆவிக்குரிய விஷயங்களைப் புரிந்துக்கொள்வதற்கு ஏதுவாக, பரலோக விஷயங்களைக் காண்பதற்கு ஏதுவாக தங்களின் மனங்கள் திறக்கப்படும் விதத்தில், வானங்கள் இவர்களுக்குத் திறக்கப்படுகின்றது; “நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்” (ரோமர் 6:31; கொரிந்தியர் 2:10). மேலும், அவர்கள் விசுவாசத்தின் மூலம் பிதாவின் குரலைக் கேட்கின்றனர்; அதாவது, அவர்கள் கிறிஸ்துவின் மூலம் தம்மிடத்தில் வந்ததினாலும், இவ்விதமாக தங்களுடைய ஜீவியத்தைத் தமக்கென்று அர்ப்பணித்ததினாலும், அவர்கள் தமது நேசகுமாரனுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நேசகுமாரர்களாக இப்பொழுது காணப்படுகின்றார்கள் என்று பிதா கூறுவதை, விசுவாசத்தினால் கேட்கின்றனர். மேலும் அவர்கள் தங்கள் இருதயங்களில் சமாதானமும், சாந்தமும், பரிசுத்தமும் பெற்றிருப்பதின் வாயிலாகப் பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கின்றார்கள். அவர்கள் அதிகமதிகமாக ஆவியில் நிரப்பப்படும்பொழுது, இந்த ஆவியின் ஆசீர்வாதங்கள் அதிகமதிகமாய் அவர்களுக்கு நிஜமாகுகின்றது.

ஆவிக்குரிய ஞானஸ்நானத்தின் காரணமாக, பிரகாசிக்கப்பட்ட இயேசுவினிடத்தில் உள்ள ஆவியானது, அவரை யோவானிடமிருந்தும், ஜனக்கூட்டத்தாரிடமிருந்தும் விலகி, அமைதியான சூழ்நிலைக்குப் போகும்படி வழிநடத்தினபடியால், இயேசு வனாந்திர பகுதியைத் தெரிந்துக்கொண்டார். மாற்கு தனது சுவிசேஷத்தில், இயேசு தமது ஆவியில் வனாந்தரத்தற்குப் போகும்படித் தூண்டப்பட்டார் என்று எழுதியுள்ளார். அந்த நேரத்தில், நமது கர்த்தருடைய மனதில் மிகப் பெரிய அழுத்தம் காணப்பட்டது என்று நாம் எண்ணுகின்றோம். நம்முடைய முந்தைய பாடங்களில், இயேசு, மிகச் சிறிய பிராயத்திலேயே பிதாவின் வேலை குறித்தும், அதைத் தாம் எவ்வாறு செய்ய வேண்டும் என்பது குறித்தும் எருசலேமில் போய் ஆராய்ச்சிப் பண்ணினார் என்று நாம் பார்த்துள்ளோம். மேலும், தாம் 30 வயதை அடையாத வரையிலும், பிதாவின் வேலையைச் செய்ய முடியாது என்று நியாயபிரமாணத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதன் விளைவாக, அவர் பின்வாங்கி தமது

பெற்றோர்களுடன் தங்கி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்றும் நாம் பார்த்தோம். சுமார் 18-ஆண்டுகளாக, இயேசு காத்திருந்த தருணம் வந்தது. இயேசு, தமது ஊழியம் எவ்விதத்திலும் கால தாமதமாகிவிடக் கூடாது என்ற எண்ணத்தில், கூடுமான அளவு சீக்கிரமாகத் தம்மை அர்ப்பணிக்கும் பொருட்டு, துரிதமானார். இயேசு, பதற்றத்துடன் தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்குப் பதிலாக, தற்போது கிடைத்துள்ள பரிசுத்த ஆவியின் வெளிச்சம் காரணமாக, தாம் கடந்து செல்ல வேண்டிய பாதையைத் திட்டவட்டமாக அறிந்துக்கொள்ள வேண்டும் என்றும், தமது ஊழியத்தை ஆரம்பிக்கும்போதே தவறு இழைக்கக் கூடாது என்றும், பிதாவின் சித்தத்திற்கு இசைவாக ஊழியம் செய்யத்தக்கதாக, பிதாவின் சித்தம் எது என அறிந்துக்கொள்ள வேண்டும் என்றும் உணர்ந்தார். இத்தகைய நோக்கங்களானது, அவர் சிந்திப்பதற்கும், ஜெபம் பண்ணுவதற்கும், தாம் இதுவரையிலும் கற்றறிந்தும் கூட, சரிவர புரிந்துக்கொள்ளாமல் இருந்த பல்வேறு வேதவாக்கியங்கள் இப்பொழுது தாம் பெற்றுள்ள பரிசுத்த ஆவியினால் அவைகள் வெளிச்சமாகிற காரணத்தினால், அவைகளை மீண்டும் சிந்தனை செய்வதற்கு ஏதுவாக, அவரைத் தனிமையில் இருப்பதற்கு ஏவிற்று.

சகல கர்த்தருடைய ஜனங்களும் கூட, தங்களைத் தெய்வீக ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த பிற்பாடு, அவர்கள் தனித்து வந்து பிதாவோடு சம்பாஷிக்கவும், எவ்விதத்தில் தங்களுடைய ஜீவியங்களை அங்கீகரிக்கத்தக்க விதத்தில் அவருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதைக் குறித்து, அவருடைய வார்த்தைகளைக் கற்று அறிந்துக் கொள்வதற்காகவும், அவர்களுடைய புதிய மனம், புதிய ஆவி ஏவவேண்டும். இப்படியாகச் செய்யப்படுமாயின் எத்தனை ஜீவியங்கள் இன்று காணப்படும் நிலையைவிட முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்பட்டிருக்கும்! எத்தனை தவறுகள் தடுக்கப்பட்டிருக்கும்! இவைகளைக் குறித்து நமது கர்த்தர் உவமைகள், ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளார், அதாவது, யார் ஒருவன் தனது சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்ற முற்படுகின்றானோ, அவன் முதலாவதாக உட்கார்ந்து, செல்லும் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும்; அதாவது, பிதாவின் சித்தம் என்ன என்றும், பிதாவின் சித்தம் செய்வதன் விளைவு என்ன என்றும் கற்றுக்கொள்வதாகும். ஒருவேளை, தேவனுடைய ஏதேனும் ஓர் அருமையான பிள்ளை தனது அர்ப்பணிப்பின் ஆரம்பக்கட்டத்திலேயே, சரியான பாதை எது என்று அறிந்துக்கொள்ளும் முயற்சியைப் புறக்கணித்தால், அத்தகையவருக்கு நமது அருமையான போதகரின் மாதிரியையே முன்வைக்கின்றோம். சகல விஷயங்களிலும் இருப்பது போன்று, இவ்விஷயத்திலும் ஞானமாய் இருந்த நமது போதகரிடம், தெளிந்த புத்தியுள்ள ஆவி இருந்ததோடு அல்லாமல், தெளிந்த மனமும் இருந்தபடியால் அந்த ஆவி தெளிந்த மனதில், பூரணமாய்ச் செயல்பட்டது. தெய்வீகச் சித்தமானது என்ன என்று அறிந்துக்கொள்ளும் விஷயத்தில், நாம் நமது போதகர் போன்று தனித்திருக்கவில்லை. நமக்குச் சகோதர சகோதரிகள் இருக்கின்றார்கள், அவருக்கோ யாருமில்லை, அவரே முதலில் ஓடிய முன்னோடியாக இருக்கின்றார். இத்தகைய சகோதர சகோதரிகளிடமிருந்தும் நாம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம். விசேஷமாக நம்முடைய மூத்த சகோதரராகிய இயேசுவின் முன்மாதிரி மற்றும் அவருடைய வார்த்தைகளின் உதவியும் கூட நமக்கு உள்ளது. மேலும், பிதாவின் ஊழியம் செய்வதற்கென்றுதான் நாம் அர்ப்பணித்துள்ளோம் என்பதையும், பிதாவின் திட்டம் மற்றும் அதிலுள்ள நம்முடைய பங்கு என்ன என்று புரிந்துக்கொள்ளத்தக்கதாக, சகோதர சகோதரிகள் மாத்திரமே உண்மையாய் நமக்கு உதவி செய்ய முடியும் என்பதையும் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. சில வேளைகளில் சகோதரர்கள் தங்களுடைய திட்டங்களை நமக்கு முன்வைத்து அவைகளுக்கு நேராக நம்முடைய அர்ப்பணிப்புக் காணப்படத்தக்கதாக, இடறலாகவும் காணப்படுவார்கள் என்பதையும் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

நமது கர்த்தருக்கான சோதனைகள் இக்கட்டத்திலிருந்து ஆரம்பமாகுகின்றது. "அவர் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருந்தார்" (எபிரெயர் 4:15). சிறுவனாய் இருந்த இயேசு அல்லது வாலிபனாக இருந்த இயேசு சோதிக்கப்படாமல், "நம்மைப்போல்" இருந்த போதே அவர் சோதிக்கப்பட்டார். நமது கர்த்தருடைய அர்ப்பணிப்பைத் தொடர்ந்த அவருடைய சோதனைகள், உலகத்தின் மேல் வரும் சோதனைகள் போன்று இராமல், சபைக்கு வரும் சோதனை போன்று இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நம்முடைய அர்ப்பணிப்பின் காலமுதல், நாம் கிறிஸ்துவுக்குள்ளான புதுச் சிருஷ்டிகளாகக் கருதப்படுவதுபோன்று, நமது கர்த்தரும், யோர்தானில் தம்மை அர்ப்பணித்தது முதல் புதுச் சிருஷ்டியாகவே கருதப்பட்டார்.

இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்கள் சோதிக்கப்படுவதும், பரீட்சிக்கப்படுவதும் போன்று, அர்ப்பணிக்கப்பட்ட இயேசுவும், சோதிக்கவும், பரீட்சிக்கவும் பட்டார். இதற்கான கூடுதல் நிரூபணங்களை, நமது கர்த்தருடைய சோதனையின் முறையைக் கவனிக்கையிலும், அவருடைய சோதனைகளை, அவருடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களின் சோதனையோடு ஒப்பிடுகையிலும் நாம் பார்க்கலாம். அநேகர், ஏன் தாங்கள் கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணித்ததற்கு முன்பு சோதனை வராமல், அர்ப்பணித்தப் பின்னரே வருகின்றது என யோசிக்கலாம்; ஏனெனில், இவர்கள் தங்களுடைய அர்ப்பணிப்புக்குப் பிற்பாடு, எதிராளியானவன் தங்களைவிட்டு ஓடிப் போவான் என்றும், தங்களுக்குக் கொஞ்சம் அல்லது ஒரு சோதனையுமிராது என்றும் எண்ணி, தெய்வீக ஏற்பாடுகளை முற்றிலும் தவறாய்ப் புரிந்துக்கொள்கின்றார்கள். அர்ப்பணித்தவர்களுக்கு வரும் சோதனைகள் அல்லது குணலட்சணத்திற்குரிய பரீட்சைகள், அர்ப்பணிக்காதவர்களுக்குத் தகுந்தவைகள் அல்ல. தற்போதைய காலம் உலகத்திற்குரிய நியாயத்தீர்ப்பின் நாளாய் இராமல், சபைக்குரிய பரீட்சை காலமாகவே இருக்கின்றது.

நமது கர்த்தருக்கான சோதனைகள், முழு நாற்பது நாள் அளவும் காணப்பட்டது போன்று தோன்றாலம்; ஆனால், கூறப்பட்டுள்ள மூன்று சோதனைகளும் விசேஷமாக, அவருடைய சோதனை காலத்தின் இறுதியிலேயே வந்தது. நாம் கொஞ்சம் கற்பனை செய்து பார்க்கலாம்... நமது கர்த்தர் தனிமையான வனாந்தரத்தில், தம்மைக் குறிக்கும் பல்வேறு தீர்க்கத்தரிசனங்களைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்திருப்பார். எப்படி ஒரு கலைஞன் முதலாவதாகக் கட்டிடத்தின் எல்லைக் கோடுகளை வரைந்து, பின்னர் உள்அமைப்பைப் படிப்படியாக வரைவாரோ அப்படியே, இயேசுவும் தம்மைக் குறிக்கும் பல்வேறு தீர்க்கத்தரிசனங்களை இணைத்துக் கொண்டிருந்திருப்பார். வேதவாக்கியங்களிலிருந்து, நமது கர்த்தருக்கு முன்பாகக் காணப்பட்ட எல்லை கோடுகளின் வரைப்படம் இராஜ்யமாக இருந்தது. இவர் இராஜாவாகவும், ஆபிரகாமின் சந்ததியாகவும் இருக்க வேண்டும். மேலும், இவருடைய கிருபையான ஆளுகையின் கீழும், ஞானமான போதனைகளின் கீழும், பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். இந்தக் குறிப்புகள் அவருடைய மனதிற்கு முன்பாக ஏற்கெனவே தெளிவாகக் காணப்பட்டது. ஆனால் மற்ற அம்சங்கள் அதனதன் ஸ்தானத்தில் சரியாகப் பொருத்தப்பட வேண்டும். ஜனங்களின் பாவங்களுக்காக ஆசாரியன் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற காரியத்தை அடையாளப்படுத்தும் நியாயப்பிரமாணத்தின் நிழல்களை அவர் எப்படி நிறைவேற்ற வேண்டும்? நித்தியத்திற்கான ஆசாரிய கூட்டத்தின் நிழல் எப்படி நிறைவேற்றப்பட வேண்டும்? நிழலில் ஆபிரகாம், பிதாவுக்கு அடையாளமாகவும்; ஈசாக், தமக்கு அடையாளமாகவும் இருக்கும் பட்சத்தில், ரெபேக்காள் அடையாளப்படுத்தும் இஸ்ரயேல் வகுப்பார் எப்படி வருவார்கள்? (மாம்சீக) இஸ்ரயேலர்கள் தம்மை ஏற்றுக்கொண்டு, ரெபேக்காள் வகுப்பார் ஆவார்கள் எனில், பலிச்செலுத்துப்படுவதன் அவசியம் தான் என்ன? எப்படிப் பலிச் செலுத்த வேண்டும்? என்ற கேள்விகள் இயேசுவின் மனதில் தோன்றினது. இன்னுமாக இஸ்ரயேல் கடற்கரை மணலைப்போன்று இருப்பினும் சொற்பமானவர்களே அங்கீகரிக்கப்படும் நிலைக்கு வருவார்கள் எனச் சில தீர்க்கத்தரிசனங்கள், உரைக்கும்போது, மகிமையான இராஜரிக ஆசாரியக்கூட்டம் நிறைவடையத்தக்கதாக, தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள்களின் முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கை எப்படிக் கண்டுபிடிக்கப்படும் என்ற விஷயங்களும், அவருடைய மனதை அழுத்தி இருக்க வேண்டும். மேலும், எவ்விதத்தில் பூமியின் குடிகள் மேல் ஆசீர்வாதம் வரும் என்றும், ஒருவேளை தாம் பிரதான ஆசாரியனாகவும், தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்கள் இராஜரிக ஆசாரியர்களாகவும் இருப்பார்களேயானால், அனைவரும் நீதியின் நிமித்தம் பாடுபட்டு, பலியாக மரிக்க வேண்டுமோ? என்ற கேள்விகளும், அவருடைய மனதை அழுத்தி இருக்க வேண்டும்.

இப்படியாக ஒவ்வொன்றையும் சிந்தித்து, அங்கும் இங்குமாக ஜெபத்துடனும், பொருத்திப் பார்ப்பதற்கு அநேகமாக முழு 40 - நாட்களும் தேவைப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் அனுமானிக்கலாம். மேலும், இவைகளின் மத்தியில் சோதனைகளும் கலந்திருக்க வேண்டும்; உதாரணமாக, மகிமைக்கு முன்பாக கிறிஸ்து பாடுபட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் தீர்க்கத்தரிசனங்கள் மற்றும் நிழல்களில் உள்ள விஷயங்களின் அவசியம் என்ன? என்ற கேள்விகள் சோதனைகளாக அமைந்திருக்கலாம். வேதவாக்கியங்களை நேர்மையற்ற விதத்தில் புரட்டி, தம்மைத்தாம் வஞ்சித்து, தெய்வீக எல்லைக்கோட்டிற்கு முழுமையாய் இசைவு இராத வழியைத் தெரிந்துக்கொள்வதற்கான சோதனைகளும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இம்மாதிரியான ஆலோசனைகள் ஒன்றன் பின்பு ஒன்றாக

அவருக்கு முன்பாகத் தோன்றினாலும், அவைகளை நமது கர்த்தர் உடனடியாகப் புறம்பாக்கினார் என்று நாம் நம்புகின்றோம். நமது கர்த்தர், தாம் பிதாவின் சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்றும், நிர்ணயிக்கப்பட்ட விதத்திலேயே, தாம் அனுப்பப்பட்ட வேலையை நிறைவேற்ற வேண்டும் என்றும் முழுத் தீர்மானம் கொண்டு காணப்பட்டார்.

அவருடைய ஆராய்ச்சி மிக ஆழமாகவும், அதேசமயம் பிதாவோடும், அவருடைய பிரமாணங்களோடும் ஐக்கியம் கொள்ளவேண்டும் என்ற அவருடைய விருப்பம் உண்மையுமாகவும் இருந்தபடியால், இதற்காகவே அவர் 40 நாளையும் செலவிட்டார். நமது கர்த்தர் மிகவும் ஆழமாக இவைகளில் மூழ்கினபடியால், உணவைக்கூட அவர் யோசிக்கவில்லை. பிற்பாடே அவருக்குப் பசி உண்டாயிற்று.

இந்த வேத ஆராய்ச்சி மற்றும் ஜெபத்தின் இறுதிக்கட்டத்தில்தான் நமது கர்த்தர், உபவாசத்தினால் பலமிழந்தபோது, எதிராளியானவன், மூன்று சோதனைகளினால், அவரைத் தாக்கினான்.

"பிசாசு” என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதற்கான மூல வார்த்தை (**Diabolos**) டையபோலஸ் ஆகும். பிரதான வஞ்சகன், வேத வாக்கியங்களில் பிசாசுகள் என்று பன்மையில் சொல்லப்படும், விழுந்துபோன தூதர்களிடமிருந்து பிரிக்கப்பட்டே பேசப்பட்டிருக்கும். இங்கும், பிசாசுகளின் அதிபதியானவனே பேசப்படுகின்றான்; இவனையும், இவனுடைய வல்லமையைக் குறித்தும் நமது கர்த்தர் கூறியுள்ளார். சாத்தான், மனித உருவத்தில், நமது கர்த்தருக்கு முன்பு தோன்றியிருப்பான் என்று நாம் அனுமானித்துக் கொள்ள கட்டாயம் ஏதும் இல்லை. அவன் தனிப்பட்ட விதமாக தோன்றியும் இருந்திருக்கலாம், இல்லாமலும் இருந்திருக்கலாம். ஒருவேளை அவன் தன்னைத் தனிப்பட்ட விதத்தில் வெளிப்படுத்தி இருப்பானானால், அவன் தன்னை ஒளியின் தூதனாகிய, சிறந்த தோற்றத்தில் வெளிப்படுத்தி இருக்க வேண்டும். நமது கர்த்தர் மனிதனாக வருவதற்கு முன்பு, பிதாவுடைய பிரதிநிதியாக/கருவியாக இருந்து, லூசிபரைச் சிருஷ்டித்தார் என்பதையும் நம்மால் நினைவுகூர முடிகின்றது. மேலும் சாத்தான், உன்னத தளத்தில் இருந்த தூதன் என்றும், மனுக்குலத்தின் கீழ்ப்படிதல், அன்பு மற்றும் அனுதாபத்தைத் திருடினதின் மூலம், அதிகாரத்தைப் பறிக்க முயன்று, பூமியின் மீது அதிகாரம் பெற்றுக் கொள்ள இவர் முயன்றதே இவருடைய பாவம் என்றும், இச்செயல்பாடுகளின் காரணமாக இவர், தெய்வீகக் கண்டனத்தைப் பெற்றுக் கொண்டார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். மேலும் நமது கர்த்தர் தம்மை அர்ப்பணம் செய்ததையும், விழுந்துபோன மனுஷ ஜாதியை மீட்கும் வேலையைப் பிதா இவரிடம் கொடுத்துள்ளார் என்பதையும் ஓரளவு சாத்தான் அறிந்திருந்தபடியால், சாத்தான் இயேசுவிடம் சென்று அவரைச் சந்திப்பது பொருத்தமாய் இருக்கும் என்று நாம் அனுமானித்துக் கொள்ளலாம். இவர் (சாத்தான்) தன்னை, இயேசுவின் நண்பர் போன்றும், கர்த்தர் மேலும், கர்த்தருடைய வேலையின் மேலும் தனக்கு மிகுந்த அக்கறை இருப்பது போன்றும், மனுக்குலத்தின் மீது வந்த பாவத்திற்குரிய தண்டனை குறித்தும், சீர்க்கேடு குறித்தும், தான் கண்டு வேதனைபட்டது போன்றும், அதிர்ச்சியடைந்தது போன்றும் வெளிப்படுத்தி இருக்கலாம் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். மேலும், பாவப்பட்ட மனுக்குலமானது அதன் பிரசவ வேதனைகளில் இருந்தும், தவிப்பிலிருந்தும், மரிக்கும் சூழ்நிலைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்கு ஏறெடுக்கப்படும் பிரயாசங்களில், நான் உண்மையில் மகிழ்ச்சிக் கொள்வேன் என்பது போன்றும், சாத்தான் தன்னை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். தான் உலகத்தில் நிலவும் சூழ்நிலைகளை முழுக்க அறிந்தவர் ஆனபடியாலும், மீட்பின் வேலை வெற்றியடைவதில் தான் விருப்பம் கொண்டுள்ளவர் ஆனபடியாலும், மனுக்குலத்தினுடைய பலவீனங்களை மற்றும் எண்ணங்களை முழுமையாய் தான் அறிந்தவர் ஆனபடியாலும், நமது கர்த்தர் இயேசு நிறைவேற்ற விரும்புகிறதும், கவனம் செலுத்துகிறதுமான திட்டத்திற்கான, ஆலோசனகளை அளிப்பதற்கு, தான் தகுதியான நிலையில் இருக்கும் நண்பன் போன்று சாத்தான் வெளிப்படுத்தினார்.

## "தனிப்பட்ட இலாபத்திற்காக, ஆவிக்குரிய கிருபைகளைப் பயன்படுத்துவதற்கு ஏதுவான சோதனை"

நமது இரட்சகர் மேற்கொண்டுள்ள மாபெரும், உன்னதமான வேலையை, அவர் செய்ய வேண்டுமெனில், அவர் தமது சரீர ஆரோக்கியத்தைச் சரிவர பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும், சாப்பிடாத காரணத்தினாலேயே அவர் பெலவீனப்பட்டிருக்கின்றார், ஆகையால் சாப்பிட வேண்டும் என்றும், நமது இரட்சகர் மீது உள்ள தன்னுடைய தனிப்பட்ட அக்கறையைச் சாத்தான் முதலாவதாக வெளிப்படுத்தினான். இயேசுவினுடைய தற்போதைய வல்லமை, அதாவது சமீபத்தில் பெற்றுக்கொண்ட தெய்வீக வல்லமையைக் குறித்துச் சாத்தான் அவருக்கு நினைப்பூட்டி, இயேசு இப்பொழுது தமது தேவைகளைச் சந்தித்துக்கொள்ள ஆற்றல் உள்ளவராகவும், கற்களை அப்பமாக மாற்றுவதற்கு, ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும் என்று நினைப்பூட்டினான். ஆகவே இயேசு தம் மீது இறங்கி வந்துள்ள புதிய வல்லமையைத் தமக்குத் தாமே பரிசோதித்துக் கொள்ளும்படி ஆலோசனை வழங்கினான். இதைக் காட்டிலும் தந்திரமான சோதனை வேறு இருக்குமோ? இப்படிச் செய்வதன் விளைவாக, அவருடைய பசி தணிந்து, சரீரம் பலமடைவதோடு அல்லாமல், சாத்தானும் மனம் திரும்பியுள்ளவர் போல் தோன்றும். சாத்தான் ஒரு காலத்தில் செய்து வந்த தீயக் கிரியையை மாற்றி போடுவதற்கென, இயேசுவோடு கூடச் சேர்ந்து வேலை புரிய, அவன் விருப்பமுள்ளவனாக இருக்கின்றான் என்பது போன்று இயேசுவுக்குத் தோன்றும். இது ஒரு கடுமையான சோதனையாகும்.

இதைப் போன்ற சோதனைகள், அர்ப்பணம் பண்ணியுள்ள சகல ஜனங்களுக்கும் வரும். ஆனாலும் இயேசுவுக்கு வந்தது போன்று, அப்படியே வராமல், அவருக்கு வந்த பிரகாரமே/வந்த முறை போன்றே வரும். அதாவது பிதாவுடன் கிடைத்துள்ள புதிய உறவையும், அதன் காரணமாக வரும் வல்லமைகளையும், நமது பூமிக்குரிய முன்னேற்றத்திற்கு, சௌகரியத்திற்குக் கொஞ்சம் பயன்படுத்துவதற்கு ஏதுவான ஆலோசனைகள் வாயிலாக இச்சோதனைகள் வரலாம். அதாவது இந்தப் புதிய உறவு மற்றும் அதன் காரணமாக வரும் வல்லமைகளை, நாம் தேவனால் தயவும், கனமும் பெற்றுள்ளோம் என மனுஷருக்கு முன்பாக பிரகாசிக்கத்தக்கதாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவான ஆலோசனைகள் வாயிலாக, சோதனைகள் வரலாம். மேலும் இவைகளைப் பயன்படுத்தி, பணம் ஈட்டுவதற்கு நாடத் தூண்டும் ஆலோசனைகள் வரலாம். நண்பன் போன்று காட்டிக் கொண்ட சாத்தானையும், அவரது உலக பிரகாரமான ஆலோசனைகளையும் நமது கர்த்தர் எப்படி எதிர்த்தார் என்று நாம் அனைவரும் ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். இயேசு தமது ஆவிக்குரிய வல்லமையை, தமது பூலோக தேவைகளைச் சந்திப்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று கொடுக்கப்பட்ட ஆலோசனைகளை அப்படியே புறக்கணித்து விட்டார். (அப்போஸ்தலர் 8:18-24) ஆவிக்குரிய வரங்கள், சீமோனிடம் பணத்திற்காக விற்கப்படாதது போன்று, ஆவிக்குரிய வரங்களானது, பூமிக்குரிய சௌகரியங்களை அடைய பயன்படுத்தப்பட முடியாது. ஆனால் இயேசு இவைகளையெல்லாம் விரிவாய்ப் பேசாமலும், தம் பட்சத்தில் கொடுக்கப்பட்ட வல்லமையை, பூமிக்குரிய மதிப்பற்ற விஷயங்களுக்கு பயன்படுத்த எண்ண முடியாத அளவிற்குத், தாம் மிகவும் பரிசுத்தமுள்ளவராய் இருக்கின்றார் என்று பெருமை பாராட்டாமலும் இருந்து, வேதவாக்கியங்களின் வார்த்தைகளைப் பயன்படுத்தி, எதிராளியானவனுக்கு எளிமையாய் பதில் அளித்தார்; அதாவது மனுஷனுடைய ஜீவன் என்பது, அவன் சாப்பிடும் உணவின் மீது முழுமையாய்ச் சாராமல், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் விஷயத்தின் மீதே சார்ந்திருந்தது என்று பதிலளித்தார். இப்படியாகவே, கர்த்தருடைய ஒவ்வொரு பின்னடியார்களும், தங்களுக்குள் ஆவிக்குரிய விஷயங்களைத் தியாகம் செய்து, பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் சொகுசுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எழும்பும் ஒவ்வொரு கேள்விகளுக்கும், பதில் கூற வேண்டும். அநேக கர்த்தருடைய, சகோதர, சகோதரிகளுக்கு, எதிராளியானவன் சோதனையை முன்வைக்கும் விதமானது, "ஒருவேளை நீ சத்தியத்தை ஆழமாயப் பின்பற்றினாய் என்றால், சத்தியத்திற்கு அடுத்த வேலைகளில் நீ வைராக்கியத்துடன் செயல்படத்தக்கதாகச் சத்தியத்தின், பரிசுத்த ஆவியை அனுமதிப்பாயானால், சீக்கிரம் உணவு இல்லாத நிலைக்கு வந்து விடுவாய். ஏனெனில் உன் மத்தியில் காணப்படும் உலக ஜனங்கள் இப்படிப்பட்ட (சத்தியத்தின்) விஷயங்களை அங்கீகரிப்பதில்லை. உன்னை வேலையிலிருந்து விட்டுவிடுவார்கள், அல்லது கடை வியாபாரத்திலிருந்து உன்னை அகற்றி/வெளியேற்றிவிடுவார்கள் அல்லது நீ அவர்களுடைய போதகராய் இருக்கக் கூடாது

என்று பதவி நீக்கம் செய்துவிடுவார்கள். அல்லது உன்னுடன் ஐக்கியம் கொள்வதை நிறுத்திவிடுவார்கள். மேலும் இப்படியாக நிகழும் பட்சத்தில், இந்தத் தற்கால ஜீவியத்திற்குரிய விஷயங்களுக்கு, நீ திண்டாட வேண்டியதுதான் என்பதேயாகும்." நிழலில் ஏசா, ஒரு பானை கூழுக்காக, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விற்றுப்போட்டது போன்று செய்யாமல், தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை மதிக்கிற யாவரையும், காத்துக்கொள்வதற்கு தேவன் வல்லவராக இருக்கின்றார் என்பதே சரியான பதிலாகும். அதாவது தற்காலத்தில் சில சொகுசுகளை இழக்க நேரிட்டாலும், தேவனுடைய வார்த்தைகளின்படி ஜீவிப்பவர்கள், இறுதியில் மிக மேன்மையான நித்தியத்திற்குரிய ஜீவனை, மேன்மையான மகா மகிமையோடு பெற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் என்பதே சரியான பதிலாகும்.

நமது கர்த்தருடைய இப்படிப்பட்ட உறுதியான பதில், சோதனைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்தது. மேலும் இந்த விதத்தில் மீண்டும் சோதனையைத் தொடர்வதில், எதிராளியானவன் சோர்வடைந்துப் போனான். நம்முடைய விஷங்களிலும் இப்படியாகவே காணப்படும். ஒருவேளை நாமும் சோதனையை எதிர்க்கும் விஷயத்தில், உறுதியுடன் காணப்படுவோமேயானால், அந்தச் சோதனை நேரத்தில் மாத்திரமல்லாமல், பின்வரும் சோதனைகளிலும் நம்முடைய குணலட்சணங்கள் பலம் பெருகுகின்றது. மேலும் நமது உறுதியைக் கவனிக்கும் நமது எதிராளியானவனும், உறுதியான குணலட்சணங்களும், தீர்க்கமான தீர்மானங்களும் உள்ள நபர்களுக்கு இத்தகைய ஆலோசனையை வழங்குவது பிரயோஜனமற்றது என அறிவான். ஆனால் ஒருவேளை நமக்குள் எழும்பும் சாத்தானின் ஆலோசனைகளுக்கு, கேள்விகளுக்கு மீண்டும் மீண்டுமாக எதிர்த்து விவாதம் செய்யப்படுமாயின், பேசப்படுமாயின், சாத்தானும் கூடுதலான வாக்குவாதங்களையும், நியாயங்களையும் முன்வைப்பான்; இப்படியாகப் போகும் பட்சத்தில் நாம் விவாதத்தில் சாத்தானால் மேற்கொள்ளப்படும் அபாயமும் ஏற்படுகின்றது. ஏனெனில் பிசாசு ஒரு தந்திரமான எதிராளி என்றும், அவனுடைய தந்திரங்கள் நாம் அறியாதது அல்லவே என்றும் அப்போஸ்தலரால் குறிப்பிடப்படுகின்றது. கர்த்தருடைய ஆவிக்கும், வார்த்தைக்கும், உடனடியாகவும், உறுதியாகவும் கீழ்ப்படிவதே, எல்லா சகோதர சகோதரிகளுக்கும் உரிய பாதுகாப்பான வழியாகும்.

## "அங்கீகரிக்கப்படாத முயற்சிகளின் மூலம் தேவனைச் சோதித்துப் பார்த்தல்"

எதிராளியானவன் தன்னுடைய முதலாம் முயற்சியில் தோல்வியடைந்தவுடன், தன்னைக் குறித்து இயேசு என்ன எண்ணிக்கொள்வார் என்று கூடக் கருதாமல், உடனடியாகப் பேச்சை மாற்றிவிட்டான். எதிராளியானவன் கர்த்தருக்கு முன்பு வைத்த இரண்டாம் சோதனையும், அவருடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களுக்கும் பொருந்தும். இச்சோதனை கொலை செய்தல், திருடுதல் போன்ற துணிகரமானவைகளைச் செய்யத் தூண்டுகிறதாய் இராமல், தேவன் திட்டமிட்டப்படிச் செய்யாமல், வேறு வழியில் கர்த்தர் வேலையைச் செய்வதற்கான சோதனையாக இருந்தது. அதாவது அங்கீகரிக்கப்படாத வழியில், நற்பலன்களைக் கொண்டு வருவதற்கெனத் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீக வல்லமைகளைத் தவறாய் இயேசு பயன்படுத்துவதற்கு ஏதுவான சோதனையாக இருந்தது.

சாத்தான், நமது கர்த்தர் இயேசுவை, எருசலேமில் உள்ள ஆலயத்தின் உப்பரிகையில் கொண்டுச் சென்றான். கர்த்தரை அவர் சரீர பிரகாரமாக கூட்டிச் செல்லாமல், மன ரீதியாகக் கூட்டிச் சென்றான். நாம் எப்படிச் சரீர ரீதியாக இல்லாமல், மனரீதியாக பல்வேறு இடங்களுக்குச் சென்று அங்குக் குறிப்பிட்ட விஷயங்களைச் செய்கின்றோமோ, அதைப் போன்ற அனுபவமே இயேசுவுக்கு உண்டாயிற்று. இப்படியாக அவருக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது..... "நீர் மிக விரைவாக இஸ்ரயேல் ஜனங்களின் மத்தியில் முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்வதற்கென, நான் (சாத்தான்) உமக்கு ஒரு நல்ல ஆலோசனை வழங்க முடியும். நீரும் அதில் பிரியப்படுவீர். ஏனெனில், நான் சொல்லும் வழிமுறை, வேதவாக்கியங்களில் உள்ள ஒரு வழியாகும். மேசியா தம்முடைய வருகையின் போது, இப்படியாகச் செய்வார் என்று தீர்க்கத்தரிசனத்தின் மூலம் முன்னறிவிக்கப்பட்டுள்ளதை நான் கண்டுபிடித்துள்ளேன். மேலும் இப்படியாகச் செய்யும் பட்சத்தில், இதை ஜனங்கள்

தீர்க்கத்தரிசியான தாவீதின் வார்த்தைகள் நிறைவேறியுள்ளன என்று உடனடியாக அடையாளம் கண்டுக்கொண்டு, உம்முடைய நோக்கத்தை உடனடியாக ஏற்றுக்கொள்வார்கள். நீரும் ஜனங்களின் தலைவனாகவும் ஆகிவிட முடியும். பின்னர் உம்முடைய வேலையும் பிரம்மாண்டமாய் நடக்கும். மேலும் நான் ஏற்கெனவே சொன்னது போன்று, இந்த வேலை முன்னேற்றம் அடைகையில் நான் களிகூருவேன். ஏனெனில் 4000 வருடங்களாக நான் பார்த்துக் கொண்டிருக்கும் சீர்க்கேட்டின் நிமித்தம் என் இருதயம் பாரம் அடைந்துள்ளது. என்னுடைய ஆலோசனை என்னவெனில், நீர் இன்னோம் பள்ளத்தாக்கை நோக்கியும், பல ஆயிரம் பக்தியுள்ள யூதர்கள் கூடியுள்ள ஆலயத்தின் பிரகாரத்தையும் நோக்கியுள்ள ஆலயத்தின் உப்பரிகையிலுள்ள தெற்குப் பாகத்திற்கு போய் 600 அடி உயரத்தில் இருக்கும் அப்பகுதியிலிருந்து தாழக் குதித்து, சேதம் எதுவும் அடையாமல் எழும்பும். உன்னதமானவருடைய வல்லமை உம்மேல் இருக்கின்றது என்றும், நீர் மெசியா என்பதை விவரிக்க நீர் ஏறெடுக்கும் வேறு எந்தப் பிரயாசத்தைக் காட்டிலும், இப்படிச் செய்வது, உடனடியாகப் பலனைக் கொடுக்கும். நான் கூறும் இவ்விஷயங்கள் வேதவாக்கியங்களில் இடம் பெறுகின்றது." "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்" (மத்தேயு 4:6).

இப்படியான சோதனைகளையே, சாத்தான், இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்டுள்ள பின்னடியார்களுக்கும் முன்வைப்பான். எப்படியெனில், "உலகத்திற்கு முன்பும், பெயர்க் கிறிஸ்துவ சபைகளுக்கு முன்பும் ஒரு மாபெரும் நடிப்பைக் காட்டி, கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து எளிமையாகப் பிரசங்கிப்பதைப் பார்க்கிலும் வேறு எதாவது விதத்தில், அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்பு. உடனடியாக, மாபெரும் வெற்றியை அடைவதற்குச் சுபாவத்தின்படியான மனுஷனை ஈர்க்கத்தக்கதாக சில மாபெரும் வேலைகளைச் செய்யத்தக்கதாக, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், வல்லமைகளையும் பயன்படுத்து. ஆவிக்குரிய வகுப்பாருக்கு, ஆவிக்குரிய விஷயங்களை முன்வைப்பதில், நீ எளிமையான, அமைதியான, கவனத்தை ஈர்க்காத வேலையைச் செய்வதற்குப் பதிலாக வேறு வேலையைச் செய். இப்படியான எளிமையான வேலைகளை ஆவிக்குரிய வகுப்பாருக்கு நீ செய்யும்போது, பெரும்பான்மையான ஜனங்கள் உன்னை அங்கீகரியாமல், உன்னை ஒதுக்கி விடுவார்கள், மேலும் உன்னை விநோதமானவனாகவும் கருதுவார்கள், மேலும் நீ அநேகருடைய அனுதாபத்தை இழப்பதோடு அல்லாமல், கிறிஸ்துவ மண்டலத்தில் முக்கியமானவர்களுடைய எதிர்ப்பைக் கூட நீ விசேஷமாக பெற்றுக்கொள்ள நேரிடும்" என்று சாத்தான் கூறினான்.

மீண்டும், நமது கர்த்தர் தீர்க்கமாக, "உன்னுடைய தேவனாகிய கர்த்தரை நீ பரீட்சைப் பாராதிருப்பாயாக என்று எழுதியிருக்கிறது" என்றார். நாம் விசுவாசித்து நடப்பதற்குப் பதிலாக, தரிசித்து நடக்கும்படி சாத்தான் நம்மைச் சோதிப்பான். நாம் தொடர்ந்து தேவனைச் சோதித்துப் பார்க்கும்படியாகவும், அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவருடைய தயவு மற்றும் பாதுகாப்புக் குறித்த விஷயங்களில், பார்வைக்கு தெரியும் விதத்தில் தேவன் விவரித்துக் காட்ட வேண்டும் என்று நாடும்படியாகவும் சாத்தான் நம்மைச் சோதிப்பான். சொல்லர்த்தமான இயேசுவின் பாதங்களையோ, சொல்லர்த்தமான கற்களையோ, சொல்லர்த்தமான தேவதூதர்களையோ குறிக்காத வேத வாக்கியத்தைச் சாத்தான் இங்குத் தவறான அர்த்தத்தின் விதத்தில் முன்வைப்பதை நாம் பார்க்கின்றோம். அவ்வசனத்தில் இடம்பெறும் பாதங்கள், இன்றைய காலத்தில் உள்ள கிறிஸ்துவின் பாத அங்கங்களுக்கு அடையாளமாகவும், கற்கள் இடறுதலுக்கு ஏதுவான உபதேசங்களுக்கும், தேவதூதர்கள், தற்கால அறுவடையின் காலத்தில், பாத அங்கங்களை அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப வேதவாக்கியங்களின் ஆலோசனைகளை, புத்திமதிகளைக் கொடுத்துத் தாங்குவதற்கென நியமிக்கப்பட்டுள்ள தெய்வீகச் சத்தியத்தின் ஊழியக்காரர்களுக்கும் அடையாளமாய் இருக்கின்றது (சங்கீதம் 91:11, 12).

# "சமாதான உடன்படிக்கையின் விளைவாக விரும்பின நற்பலன்களை அடைவதற்கு ஏதுவான சோதனை"

நம்முடைய கர்த்தருடைய மாபெரும் வேலையில் சாத்தான், தான் சேர்ந்து பணி புரிய விரும்புவதாக காட்டினதே, அவன் முன்வைத்த மூன்றாம் சோதனையாகும். அவன் அவரை மனதில், உயர்ந்த மலைசிகரத்திற்குக் கொண்டு சென்றான்; உலகத்தின் சகல இராஜ்யங்களையும், அதன் மகிமைகளையும் காணத்தக்கதான சொல்லர்த்தமான உயர்ந்த மலை எருசலேமிலும், உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை. சாத்தான் நமது கர்த்தரை மிக உன்னதமான அடையாள மலையின் (இராஜ்யம்) மேல், மனரீதியாகக் கொண்டு நிறுத்தினான். உலகம் முழுவதுமான அவனுடைய வல்லமையையும், சகல ஜாதிகள் மற்றும் தேசங்கள் மீது பரந்த அளவில் காணப்படும் அவனுடைய ஆதிக்கத்தையும், சாத்தான் இயேசுவக்குச் சித்தரித்துக் காட்டினான். சாத்தானை, "இவ்வுலகத்திற்கு அதிபதி" என்று நமது கர்த்தரே கூறியுள்ளார். இப்படியாகச் உலகத்தின் மீதான தனது வல்லமையையும், செல்வாக்கையும், இயேசுவின் மனதில் சாத்தான் கொண்டு வந்ததற்கான நோக்கம், நமது மீட்பருக்குச் சாத்தானின் நட்பும், உதவியும் எவ்வளவு முக்கியமானது என்றும், இயேசுவின் வேலையினுடைய வெற்றிக்குச் சாத்தான் மிக முக்கியமானவன் என்றும் புரிய வைப்பதற்கே ஆகும். மேலும், சாத்தான் தன்னை இந்தச் சூழ்நிலைகளில் நண்பன் போன்று காட்டி, இயேசுவின் பிரயாசங்களை வரவேற்பது போன்றும், அவரோடு சேர்ந்து பணிபுரிய ஆயத்தமாய் இருப்பது போன்றும் கூறுவது எவ்வளவு நலமான காரியமென, இயேசு புரிய வேண்டும் என்பதற்கேயாகும்.

மேசியா, விசேஷமாக இஸ்ரயேலின் இராஜாவாக இருந்து, இஸ்ரயேலை ஆசீர்வதிப்பார் என்று சாத்தான் நமது கர்த்தருக்குச் சுட்டிக்காட்டினான். ஆனால் இஸ்ரயேலைக் காட்டிலும் மிகப் பெரிய இராஜ்யத்திற்கு, இயேசுவை இராஜாவாகப் பரிந்துரைப்பதே சாத்தானுடைய விவாதத்தின் மையக்கருத்தாகும்.

பூமியின் சகல தேசங்களையும் உள்ளடக்கின இராஜ்யத்தையே சாத்தான், கர்த்தருக்குப் பரிந்துரைத்தான். மேலும் இயேசு முழு உலகத்தின் மீது ஆதிக்கம் கொள்ளலாம், தேவனால் நியமிக்கப்பட்ட ஆசீர்வாதமான திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம், ஆனால் இவைகள் அனைத்திற்கும் ஒரே ஒரு நிபந்தனை என்னவெனில், எந்த இரரஜ்யமோ, ஆளுகையோ, அதிகாரமோ ஸ்தாபிக்கப்பட்டாலும், அவைகள் அனைத்தும் சாத்தானை அங்கீகரிக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தான். சாத்தான் தன்னுடைய ஆதி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாதகமான வாய்ப்பு இது எனக் கருதினான். செத்துக் கொண்டும், சீர்க்கேடு அடைந்துக் கொண்டும் இருக்கின்ற சந்ததியின் மீதான ஆளுகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது, சாத்தானின் ஆதி நோக்கமாக இராமல், நன்கு வெளிச்சமூட்டப்பட்ட, அருமையான ஜனங்களின் மீதே தான் ஆண்டவனாக அல்லது ஆளுகை செய்பவனாகவே இருக்க வேண்டும் என்பதே சாத்தானின் ஆதி நோக்கமாக இருந்தது. ஆகவே தேவன் திட்டமிட்டுள்ள சகல கிருபையான வேலைகள் நிறைவேற்றப்படுவதில் சாத்தான் விருப்பம் உள்ளவனாக இருந்தான். மேலும் மனுக்குலம் தொடர்பான விஷயத்தில் அவன், பிரதானமானவனாக அடையாளம் கண்டு கொள்ளப்படும் பட்சத்தில், சாத்தான் தன்னையே சீர்த்திருத்திக் கொள்ளவும், சீர்த்திருத்தத்தின் தலைவனாகவும் இருக்க விரும்பினான். இப்படியாகத்தான், நமது கர்த்தர் அவனை ஆராதிக்க, பணிய வேண்டும் என்று, அதாவது தனது செல்வாக்கையும், வேலையில் தனது ஒத்துழைப்பையும் கர்த்தர் அங்கீகரிக்க வேண்டும் என்று விரும்பினான். மாறாக தன்னைத் தேவன் போல் நினைத்து, தன் முன் இயேசு முழங்காலிட்டு வணங்க வேண்டும் என்று சாத்தான் எதிர்ப்பார்க்கவில்லை என்று நாம் அனுமானிக்கின்றோம்.

சாத்தானுடைய இருதயத்தில் எவ்வித உண்மையான சீர்த்திருத்தம் இல்லை என்றும், அவன் விழுந்து போக ஆரம்பிக்கும் போது, அவனிடத்தில் காணப்பட்ட அதே சுயத்தை நாடுதல் மற்றும் பேராசைகளே இன்னமும் காணப்படுகின்றது என்றும் நமது கர்த்தர் முழுமையாக உணர்ந்து கொண்டு, பிதாவுக்கு முன் நேர்மையற்ற உணர்வுகளைக் கொண்ட ஒருவரிடம், மேற்கொண்டு இவைகளைக் குறித்துக் கர்த்தர் விவாதிக்க விரும்பாத விஷயம், சாத்தானின் கடைசி சோதனைக்கு அவர் கொடுத்தப் பதில் காட்டுகின்றது. ஆகவேதான்,

"எனக்கு பின்னிட்டு போ" அதாவது "என்னை விட்டு விடு சாத்தானே என்றார். நீ என்னுடைய வேலையில், என்னோடு ஒத்துழைக்க மாட்டாய்; தெய்வீகச் சித்தத்திற்கு முழு இசைவாகவே என்னுடைய வேலை உள்ளது; நீ முன்வைக்கும் விஷயங்களானது, உலகை கைப்பற்றும் விஷயமாகவும், தனிப்பட்ட என்னுடைய பாடுகள் இல்லாமல், நீதி மற்றும் ஆசீர்வாதத்தின் ஆளுகையையும் துரிதமாக ஸ்தாபித்தாலாகவும் இருப்பதினால், இப்படியாக தெய்வீகச் சித்தத்திற்கு முரண்பாடாக உள்ள காரியங்களுக்கு என்னால் கூட்டுச் சேரமுடியாது; என்னால் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது; உன்னதமான பிதாவையே என்னால் பூமிக்கும், வானத்திற்குமுரிய ஆண்டவராக அங்கீகரிக்க/அடையாளம் கண்டு கொள்ள முடியும்; ஆகவே பிதா உன்னை, ஆளுகையின் ஸ்தானத்திற்கு நியமித்தால் ஒழிய, மற்றபடி உன்னை, என்னால் அங்கீகரிக்க முடியாது; நீ உன்னுடைய தற்போதைய பேராசையின் ஆவிகளை விடாதது வரையிலும், உன்னைத் தேவன் ஆளுகை செய்ய நியமிக்க மாட்டார் என்தை நான் அறிவேன்; "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று எழுதியிருக்கிற வார்த்தையின் பிரகாரமாகவே நான் செயல்படுவேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

இடுக்கமான வழியாக இயேசுவைப் பின்தொடருகிறவர்களுக்கு, நம்முடைய கர்த்தருடைய இந்த மூன்றாம் சோதனை ஓர் உதாரணமாகும் என்பதை நாம் புரிந்துக் கொள்கின்றோம். சாத்தான், தன்னுடைய பல்வேறு பிரதிநிதிகளின் வாயிலாகப் பரிசுத்தவான்களோடு தொடர்ந்து பேசுகின்ற காரியமாவது, "நீங்கள் நாடும் விஷயத்தைக் கர்த்தருடைய வழியில் செய்வதைப் பார்க்கிலும் மிக வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கக் கூடிய வேறு வழி இங்கு இருக்கின்றது; கொஞ்சம் வளைந்து கொடுங்கள்; உலகத்தின் ஆவியோடு கொஞ்சம் ஒத்துப் போங்கள்; தேவனுடைய வார்த்தைகளுக்கும், கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் மாதிரிக்கும் மிகவும் இசைவாகச் செல்ல வேண்டாம்; உங்களுடைய செல்வாக்கைச் செலுத்த வேண்டுமெனில், நீங்கள் உலகத்தார் போன்று அதிகம் இருக்க வேண்டும், ஆகவே கொஞ்சம் அரசியலுடன் கலந்துக்கொள்ளுங்கள், கொஞ்சம் சமுதாயத்துடன் கலந்து கொள்ளுங்கள்; கொஞ்சம் ஆரவாரமாகவும், குற்றங்குறைவுகளுடனும் காணப்படுங்கள்; இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக தற்கால சத்தியத்தின் எந்த வெளிச்சத்தையும், மரக்காலின் கீழ் வையுங்கள்; இப்படியெல்லாம் இருந்தால் மாத்திரமே நீங்கள் செல்வாக்குப் பெற்றிருக்க முடியும். மேலும் மனுஷர் மத்தியில், நீங்கள் விரும்பியவைகளைச் சாதிக்கவும் முடியும்." ஆனால் நாம் கர்த்தருக்கும், அவருடைய திட்டத்திற்கும் உண்மையாய் இருந்து, நம்மால் முடிந்தவைகளைச் செய்ய வேண்டும் என்றும், நமது அருமையான கர்த்தர் கூறுகின்றார். மேலும் பிதாவுடைய திட்டம் சிறப்பான திட்டமாக மாத்திரம் இராமல், அவருடைய மாபெரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய ஒரே திட்டம் என்றும் நாம் உணர்ந்து அமைதலாய் இருக்க வேண்டும். மேலும் அவருடைய திட்டத்தில் நாம் உடன் வேலையாட்களாக இருப்போமானால், அவரையே நம்முடைய ஒரே ஆண்டவராக, அங்கீகரித்து கொண்டவர்களாகக் காணப்பட்டு, அவருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரே நோக்கம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

பிதா தமக்கு நியமித்துள்ள வழியாகிய, சுயத்தை வெறுக்கும் வழி, இடுக்கமான வழி தவிர வேறு எந்த வழியையும் நமது கர்த்தர் ஏற்றுக்கொள்வதற்கு முற்றும் மறுத்த விஷயமே மாபெரும் வெற்றியாகும். கர்த்தர் பிதாவின் ஆவிக்கும், அவருடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் முற்றிலும் உண்மையுள்ளவராக இருப்பதினாலும், இயேசுவினிடத்தில், எதிராளியானவனுக்குச் சாதகமான ஒன்றையும் காண முடியாத காரணத்தினாலும் எதிராளியானவன், அவரை விட்டுப் போனான். இப்படியாக பரீட்சை முடிந்தபோது, பரிசுத்த தேவதூதர்கள் வந்து, நமது கர்த்தருக்குப் பணிவிடை செய்தார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். அதாவது கர்த்தர், தெய்வீக வல்லமையைத் தம்முடைய தேவைகளுக்குப் பயன்படுத்த மறுத்ததின் நிமித்தம் தேவதூதர்கள் அவருக்கு தேவையான புத்துணர்ச்சியின் விஷயங்களைக் கொடுத்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவைகள் நமது கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயங்களிலும் நடக்கின்றது. சோதனையை ஜெயங்கொள்ளும் போது, கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதமும், ஆவியின் ஐக்கியமும், இருதயத்தில் புத்துணர்வும், மற்றும் அடுத்தப் பரீட்சைக்கு நம்மைப் பலப்படுத்துவதற்கு ஏதுவான, தெய்வீகத் தயவினை உணர்ந்து கொள்ளுதலும் வருகின்றது.

இங்குள்ள மற்றுமொரு பாடம் என்னவெனில், சோதனை என்பது பாவமில்லை. நாமும் நம்முடைய கர்த்தரின் மாதிரியை, உண்மையான இருதயம் மற்றும் நோக்கத்துடன் பின்பற்றி, பிதாவின் சித்தத்தை மாத்திரம் நாடுகிறவர்களாக இருப்போமாகில், நாமும் நமது கர்த்தர் போன்று, "பாவமில்லாமல் சோதிக்கப்படுவோம்." சோதனைக்குள் நாம் விழும்போதே பாவம் ஏற்படுகின்றது. காரியம் தவறு என்று தெரிந்தும் ஏற்படும் தயக்கம், சோதனையின் வீரியத்தை அதிகப்படுத்தும் என்பதை நாம் மறந்து விட வேண்டாம். தவறான பாதைகள் மற்றும் வழிகளுக்குள் நாம் செல்லத்தக்கதாக, சாத்தான் பிரயாசம் எடுக்கும் சோதனைக்காரனாக இருக்கின்றான், ஆனால் தேவனோ, "எந்த மனுஷனையும் சோதிப்பதில்லை" (யாக்கோபு 1:13). தேவன், எதிராளியைக் கொண்டும், அவனுடைய பிரதிநிதிகளைக் கொண்டும் தமது ஜனங்களைச் சோதிக்கும்படி அனுமதித்தாலும், தமது ஜனங்கள் கண்ணியில் சிக்க வேண்டும் என்பது அவருடைய நோக்கம் அல்ல, மாறாக தீமையை எதிர்ப்பதின் நிமித்தம் இத்தகைய பரீட்சைகளும், சோதனைகளும் அவர்களைப் பலப்படுத்தி, குணலட்சணங்களைப் பலப்படுத்துவதற்கேயாகும். நாம் திராணிக்கு மேலாக சோதிக்கப்பட மாட்டோம் என்றும், நம்முடைய சோதனைகளில் கூட நாம் தப்பித்துக் கொள்வதற்கான போக்கும் கொடுக்கப்படும் என்றும் வேதவாக்கியங்களில் இடம்பெறும் வாக்குத்தத்தங்களை, நாம் பலப்படுவதற்கு ஏதுவாக நினைவுகூரக் கடவோம்.

இந்த வாக்குத்தத்தங்களின் விஷயங்களை நாம் சுதந்தரித்துக் கொள்வதற்கு, நமக்கு விசுவாசம் மாத்திரமே அவசியப்படுகின்றது. மேலும் நாம் எந்த அளவுக்கு இத்தகைய விஷயங்களில் நமது விசுவாசத்தைக் காட்டுகின்றோமோ, அவ்வளவாக, கர்த்தரிடத்திலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் நாம் பலம் அடைவோம். இவ்விதமாக தெய்வீகக் கிருபையினாலும், ஆண்டவருடைய உதவியினாலும் நாம் ஜெயங்கொண்டவர்கள் ஆக முடியும், அதாவது நம்மை அன்புகூர்ந்து, அவருடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் நம்மை வாங்கினவருடைய உதவியினால் நாம் ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் ஆக முடியும். 2 கொரிந்தியர் 12:9; 1 கொரிந்தியர் 10:13; எபேசியர் 6:10; ரோமர் 8:37-39 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.

---

**R4112**

# "கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல்"

## யோவான் 1:19-34

"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (வசனம் 29).

நமது கர்த்தர் தம்முடைய முன்னோடியைக் குறித்து, "யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை" என்று கூறுகின்றார் (லூக்கா 4:28). தீர்க்கத்தரிசி என்ற வார்த்தையின் அர்த்தமாவது, "அதிகாரப்பூர்வமாய் அறிவிப்பவர்/பிரகடனம் செய்பவர்" ஆகும். எனினும் எதிர்க்காலத்தில் சம்பவிக்கும் விஷயங்களை மாத்திரம் அறிவிப்பவர்தான் தீர்க்கத்தரிசி என்று எடுத்துக்கொள்ளவுங்கூடாது. தரிசனங்கள் அறிந்துக்கொள்வதும் மற்றும் எதிர்க்காலத்திற்குரிய விஷயங்களை முன்னறிந்துகொள்வதுமாகிய தன்மைகளை உடையவர்களான ஞானதிருஷ்டிக்காரர் குறித்தும், தீர்க்கத்தரிசிகள் குறித்தும் வேதவாக்கியங்களில் நாம் பார்க்கின்றோம். தீர்க்கத்தரிசி என்பவர் போதிப்பவர் அல்லது பிரகடனம் செய்பவர்/அறிவிப்பவர் ஆகும். எனினும், அநேக உதாரணங்களில், இந்த இரண்டு பண்புகளும் சேர்ந்து ஒரே நபரிடத்தில் காணப்படுவதை நாம் பார்க்கலாம். யோவான் ஸ்நானனின் விஷயத்திலும் இப்படியாகவே உள்ளது. இவர் ஜனங்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்கான முக்கியமான செய்தியைக் கூறினதோடு, வரவிருக்கின்ற காரியங்களையும் கூறின தீர்க்கத்தரிசியாக இருந்தார். உதாரணமாக, இவர் நமது கர்த்தர்தான், உலகத்தின் பாவத்தை எடுத்துப் போடுகின்ற தேவ ஆட்டுக்குட்டி என்று முன்னறிவித்தார் என நாம் பார்க்கின்றோம். இன்னுமாக, கர்த்தர் தம்முடைய ஜனங்களைப் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியாலும் ஞானஸ்நானம் பண்ணுவார் என்றும் இவர்

அறிவித்தார் என்று நாம் பார்க்கின்றோம். யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி எவனும் இல்லை. காரணம், இவரைப்போன்று வேறு எவரிடத்திலும் கர்த்தருக்கான இப்படிப்பட்ட முக்கியமான பணி கொடுக்கப்படவில்லை. அநேகர் மேசியாவின் வருகைக் குறித்தும், அவர் கன்னிகையிடம் பிறப்பார் என்பது குறித்தும், கொல்லப்படபோகின்ற ஆட்டைப்போல் அவரும் நடத்தப்படுவதைக் குறித்தும், அவர் சிலுவையில் அறையப்படுவதைக் குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதல் முதலியவைகள் குறித்தும் முன்னறிவித்திருந்தாலும், தேவனுடைய குமாரனாகிய, மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவைக் குறித்து நேரடியாக முதலாவது அறிவிக்கும் மிகக் கனம் வாய்ந்த ஊழியம் யோவானுக்கே கொடுக்கப்பட்டது.

யோவானுக்குக் கொடுக்கப்பட்ட இந்தக் கனம் வாய்ந்த ஸ்தானத்தைக் குறித்து நாம் எண்ணும் அதேசமயத்தில், இக்காரியத்தைக் குறித்த ஆண்டவரின் வார்த்தையையும் நாம் நினைவுகூர வேண்டும்; "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத்தேயு 11:11). இவ்வசனத்தில், அப்போஸ்தலர்களுக்கும் மற்றும் இவர்களின் வார்த்தைகளின் மூலம் கர்த்தரை நம்பி, விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் வாயிலாக கர்த்தரோடு முக்கியமான உறவை ஏற்படுத்திக் கொண்ட அனைவருக்குமுள்ள கனம் விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய ஸ்தானாபதிகளாக இருக்கும் இக்கனத்தைக் குறித்து நாம் எந்தளவுக்கு உணர்கின்றோமோ, அந்தளவுக்கு நமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்களைப் பயன்படுத்துவதில் உண்மையாய் இருப்போமாக. மாம்சத்தில் வந்த கர்த்தரைப் பிரகடனப்படுவத்துவது யோவானுக்குக் கிடைத்த கனமாகும். மனுஷகுமாரனுடைய வந்திருத்தல் குறித்தும், பூமியிலுள்ள சகல குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக ஸ்தாபிக்கப்படவிருக்கும் அவருடைய மகிமையான ஆளுகையைக் குறித்தும் பிரகடனம் செய்ய அனுமதிக்கப்பட்டிருப்பது, நமக்கான மேன்மையாகும். சிறையில் அடைக்கப்படுவதும், மரிப்பதும், சிரச்சேதம் பண்ணப்படுவதும் தேவனுடைய அனுமதியாய் இருக்கும் பட்சத்தில் அதிலும் உண்மையாய் இருப்போமாக.

"பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறபடியால் மனந்திரும்புங்கள்" என்று யோவான் அறிவித்தார்; அதாவது, பரலோக இராஜ்யத்திற்காக ஆயத்தமாகுங்கள், சீர்ப்பொருந்துங்கள் என்று அறிவித்தார். நமது கர்த்தர் இஸ்ரயேல் ஜனத்தாருக்கு அறுவடையாளராக இருந்து, கோதுமையைப் புடைத்து, பதரை அக்கினியில் போட்டுவிடுவார் என யோவான் முன்னறிவித்தார். "அவர் (உங்களில் சிலரை) பரிசுத்த ஆவியினாலும் (உங்களில் மற்றவர்களை) அக்கினியினாலும் ஞானஸ்நானம் அருளுவார்" என்ற வார்த்தைகளையும், மேற்கூறிய கருத்தின் அடிப்படையிலேயே கூறினார். அந்தத் தேசத்தார் மத்தியில் நமது கர்த்தர் ஓர் அறுவடை வேலையைப் பண்ணினார், இதைக் குறித்து, "நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன்" என்று தம் சீஷர்களிடத்தில் கூறினார் (யோவான் 4:38). இந்தத் தீர்க்கத்தரிசனங்கள் அப்படியே நிறைவேறியது. யோவான் 4:38-ஆம் வசனத்தின் வார்த்தைகளை நமது கர்த்தர் கூறின பிரகாரமே, அவர் இஸ்ரயேல் தேசத்திடத்தில் ஓர் அறுவடை வேலையை நிகழ்த்தினார். மூன்றரை வருடங்களாக அந்தத் தேசத்தாரிலுள்ள முதற்பலன்களைத் தமது சீஷர்களாக அறுத்து, சேகரித்தார். மேலும், இவர்கள் மீதே பெந்தெகோஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது. பிற்பாடு பதர் சுட்டெரிக்கப்படுவதற்கு முன்பு அதாவது, அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுக்கப்படும் காரியமாகிய எருசலேம் பட்டணமும், அதன் ஆலயமும், அதன் அனைத்தும் முற்றிலும் அழிக்கப்பட்டு கி.பி. 70-ஆம் ஆண்டில் தேசம் சிதறடிக்கப்படுவதற்கு முன்பு அப்போஸ்தலர்கள், மீதமானவர்களைச் சேர்த்துக் கொண்டார்கள். இதுபோலவே, இந்த யுகத்தின் அறுவடை காலத்தில் வாழ்ந்து கொண்டு, மனுஷ குமாரனின் வந்திருத்தலைக் குறித்து, அறிவிக்கிறவர்களுமாகிய நாமும் கூடப் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய கிறிஸ்தவ மண்டலத்தில் தற்போது அறுப்பு பணி நடந்து கொண்டிருக்கின்றது என்றும், கோதுமை மணிகள் அனைத்தும் திரைக்கு அப்பால் களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், உலகத்தின் மீது, அதிலும் விசேஷமாகக் களை வகுப்பார் மீது, ஒரு ஜாதியார் மீதும் வந்திராத மகா உபத்திரவக் காலம் ஒன்று வரும் என்றும் அறிந்திருக்கின்றோம். அதாவது, பூமியின் சகல குடிகளையும்

ஆசீர்வதிப்பதற்குரிய மேசியாவின் இராஜ்யமானது வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிக்கப்படுவதற்கான தெய்வீக ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று நாம் அறிந்திருக்கின்றோம்.

## "நாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள்"

இராஜ்யத்தில் பங்கடைவதற்குப் பாவம் தடையாக இருக்கும் என்றும், ஆகையால் அனைவரும் மனந்திரும்பி, தேவனோடு ஒப்புரவாக நாட வேண்டும் என்றும் யோவான் அறிவித்த விஷயம், தேவனுடைய பரிசுத்தமான ஜனங்கள் என்று தங்களையே கருதிக் கொண்டிருந்த சிலராகிய பரிசேயர், சதுசேயர், அவிசுவாசிகள் மற்றும் விமர்சகர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவர்களில் சிலர் செவிசாய்த்து, தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, சீர்ப்பொருந்தி வந்தாலும், வேறு சிலர் யோவானுடைய போதனைகள், அத்துமீறினவைகளாகவும், ஏற்றுக்கொள்ள முடியாதவைகளுமாகவும் இருக்கின்றது என மறுத்தார்கள். ஆபிரகாமின் சந்ததியாருக்கு, தேவன் இராஜ்யத்தை வாக்களித்துள்ளார் என்று அவர்கள் வாக்குவாதம் பண்ணினார்கள். தங்களையல்லாமல் வேறெவரும் ஆபிரகாமின் சந்ததி இல்லை என்றும், தங்களையல்லாமல் வேறெவரும் பரிசுத்தமானவர்கள் இல்லை என்றும், தங்களையல்லாமல் வேறெவரும் தகுதியானவர்கள் இல்லை என்றும், யூதர்களாகிய தாங்கள் பரிசுத்தமாய் இருக்கிறார்களோ, இல்லையோ, தங்களுக்கே இராஜ்யத்தின் வாக்குத்தத்தங்கள் சொந்தமானவைகள் என்றும் வாக்குவாதம் பண்ணினார்கள். ஏழைகளும், பாவிகள் என்று தங்களைக் குறித்து ஒத்துக்கொண்டவர்களும் மாத்திரமே யோவானின் சாட்சியை உண்மையில் ஏற்றுக்கொண்டார்கள். ஒருவேளை அந்தத் தேசத்தார் அனைவரும் யோவானின் செய்திக்குச் செவிசாய்த்து, அதை ஏற்றுக் கொண்டிருப்பார்களானால், அவர்களனைவரும் இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்திருந்திருப்பார்கள். ஆகவே, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, நமது கர்த்தரின் சீஷர்களாகி, அவருடைய உயிர்த்தெழுதலின் பிற்பாடு, அவரைக் காணும் சிலாக்கியத்தையும் பெற்றிருந்த சுமார் 500 சகோதர சகோதரிகளில், பெரும்பாலானோர் யோவானின் செய்தியைக் கேட்டு, செவிசாய்த்து வந்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமென நாம் அனுமானிக்கின்றோம். மேலும், பெந்தெகோஸ்தே நாளன்று நடந்த சம்பவங்களினால் விசுவாசம் வைத்தவர்களிலும் கூட, பெரும்பாலானோர் யோவானின் செய்தியைக் கேட்டு, மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தை அவரிடம் பெற்றுக்கொண்டு, ஜீவியத்தில் சீர்ப்பொருந்தினவர்களே என்றும் நாம் அனுமானிக்கின்றோம். இவ்வாறாக உண்மையுள்ள இருதயம் உடையவர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்களாகவோ அல்லது குறைந்தவர்களாகவோ இருப்பினும், ஏழைகளாகவோ அல்லது ஐசுவரியவான்களாகவோ இருப்பினும், இவர்கள் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகத் தெய்வீக ஏற்பாடுகளும்,பிரதிநிதிகளும் இணைந்து செயல்பட்டனர்.

## "நமது கர்த்தருடைய முன்னோடி"

யோவான் ஸ்நானன், மாம்சத்தில் வந்த நமது கர்த்தருக்கு முன்னோடி ஆவார். அதாவது, நமது கர்த்தர் சரியான விதத்தில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக, அவரைக் குறித்து அறிவிப்பதற்கும், வழியைச் செவ்வைப்படுத்துவதற்குமே யோவான் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், மேசியாவின் இராஜ்யத்திற்குரிய ஆயத்த வேலையை, வழியைச் செம்மைப்படுத்தும் வேலையைக் குறித்த தீர்க்கத்தரிசனத்தில் சொல்லப்பட்ட அனைத்தையும் யோவான் நிறைவேற்றவில்லை. "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவைச் சமமாக்கப்படும்" (ஏசாயா 40:3-4).

## "நிஜமான எலியா"

வேதாகமப் பாடங்களில் இரண்டாம் தொகுதியிலுள்ள (2nd Volume) 8-ஆம் அத்தியாயத்தில், நாம் சில விஷயங்களை முன்வைத்ததைக் குறித்து, நம் வாசகர்களுக்கு நினைப்பூட்டுகின்றோம். அதென்னவெனில், மாம்சத்தில் வந்த இயேசுவை மாம்சத்தில்

இருந்த யோவான் அறிமுகப்படுத்தி, முன்னோடிக்குரிய பணியை இவ்விதமாக நிறைவேற்றினதுபோல, இந்தச் சுவிசேஷ யுகத்தில் மாம்சத்தில் இருக்கும் சபையானது நிஜமான எலியாவாக இருக்கின்றார்கள். இவர்களது பணி, மகிமையின் இராஜாவாகிய கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அறிவித்து, அவருடைய ஆயிரம் வருஷம் அரசாட்சிக்கு வழியைச் செம்மைப்படுத்துவதாகும். இதைக் குறித்த செய்திகளை நீங்கள் அனைவரும் இரண்டாம் தொகுதியில் பெற்றிருப்பதினால், இதைக் குறித்த விளக்கத்திற்குள் நாம் போவதில்லை.

நடந்து கொண்டிருக்கின்ற தீர்க்கத்தரிசனத்தை நாம் பார்ப்போம்:-

யோவானுடைய ஊழியம், சொற்ப காரியங்களையே நிறைவேற்றியுள்ளது. அவருடைய ஊழியம் இரண்டு வருடங்களுக்கும் குறைவாகவே நீடித்தது. மேலும், அவருடைய ஊழியம் ஒரு தேசத்தில் சொற்பமான ஜனங்களிடத்திற்கே சென்று சேர்ந்தது. ஆனால், அதே செய்தியைதான் நிஜமான யோவானும், நிஜமான எலியாவுமாகிய மாம்சத்தில் இருக்கும் கிறிஸ்துவின் சபையானது உலகத்திற்குச் சாட்சி பகிர்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். உலகம், வனாந்தரமான நிலையிலுள்ளது என்பதும், இதன் குழப்பத்தை மாற்றி ஒழுங்கிற்குக் கொண்டு வருவதற்கு மாபெரும் இராஜா அவசியம் என்பதே அந்தச் செய்தியாகும். இச்செய்தியைக் கேட்பவர்கள், விருத்தசேதனம் உள்ளவர்களாக நடந்து, வனாந்தரத்தில் ஒரு நேரான வழியை வரவிருக்கிற இராஜாவுக்கு ஒரு பெரிய வழியை உண்டாக்க வேண்டும் என்பதே இச்செய்தியின் சாராம்சமாகும். இன்னுமாக ஆயிரம் வருஷம் அரசாட்சியில் இயேசுவும், சபையும் செய்யப் போகின்ற ஆளுகையின் முழு நோக்கமும், பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்கு உலகத்தை ஆயத்தப்படுத்துவதேயாகும். மேலும், உலகம்/பூமி பிதாவினால் பாவத்தினிமித்தம் தண்டிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட வனாந்தரமாக இருப்பதற்குப் பதிலாக, மீண்டும் அவருடைய பசுமையான பாதப்படி ஆகிவிடும் என்று தீர்க்கத்தரிசனம் விளக்குகின்றது.

இந்தத் தீர்க்கத்தரிசனத்தில் மாம்சத்திலுள்ள சபையின் வேலை மாத்திரம் குறிப்பிடப்படாமல், ஆயிரம் வருஷம் அரசாட்சியில் மகிமையிலிருக்கும் சபை மற்றும் கிறிஸ்துவின் வேலை கூடச் சுட்டிக்காட்டப்படுகின்றது/முன்னறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, "பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு" (ஏசாயா 40:4); அதாவது, தாழ்த்தப்பட்டவர்கள் சீர்க்கேட்டிலிருந்து தூக்கி எடுக்கப்படுவதைக் குறிக்கின்றது. பாவத்தின் ஆளுகை காலத்தின் கீழ் உன்னதமான செல்வாக்கை உடையவர்களாக வாழ்ந்தவர்கள், நீதியின் இராஜ்யத்தில் தாழ்த்தப்படுவார்கள் எனும் விஷயம் அடையாள மொழியில், "சகல மலையும், குன்றும் தாழ்த்தப்படும்" என்று இடம்பெறுகின்றது. பாவம் மற்றும் பூரணமற்ற தன்மையின் தற்காலத்திலுள்ள மாபெரும் விஷயங்கள் நேராக்கப்படும்/சரிச் செய்யப்படும்; மேலும், கரடுமுரடானவைகள் சமமாக்கப்படும்; இப்படியாக, சகலமும் திரும்பக் கொடுக்கப்படும் காலங்களின் வேலையினுடைய விளைவாக, இறுதியில் உலகத்தின் மனுக்குலமானது, தெய்வீகச் சித்தத்திற்கும், அன்பின் தெய்வீகப் பிரமாணத்திற்கும் இசைவாக வந்து, தெய்வீகப் பிரசன்னத்திற்கு நேராக திரும்புவதற்கு ஆயத்தமாய் இருப்பார்கள். இக்காரியங்களை, "என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்" என்ற வார்த்தைகள் அடையாளப்படுத்துகின்றது (ஏசாயா 60:13).

## "பின்னே நீ யார்?"

யோவான் ஸ்நானனிடம் கேட்கப்பட்டக் கேள்விகள் பின்வருமாறு: "நீர்தான் மேசியாவோ?" இல்லையேல்; "நீர் எலியாவோ?" இல்லையேல்; மோசேயினால் கூறப்பட்டுள்ள தீர்க்கத்தரிசி நீர்தானோ? இல்லையேல் (அப்போஸ்தலர் 3:21, 23). "பின்னே நீர் யார்?" ஏன் நீர் இப்படியாக வந்து, அதிகாரத்துடன் பேசுகின்றீர்?" இக்கேள்விகளுக்கான யோவானின் பதில், "நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமே;" "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்" என்பதாகும் (லூக்கா 3:5,16). இவ்விதமாக, மேசியாவின் மகத்துவத்தைக் கூறி, அவரோடு

தன்னை ஒப்பிடுகையில் தான் எவ்வளவு முக்கியத்துவம் அற்றவன் என்றும் யோவான் கூறுகின்றார். யோவான் அடையாளப்படுத்தும் நாமும் மகிமையான இராஜ்யம் குறித்து அறிவித்தல் தொடர்புடைய நமக்கான சிலாக்கியத்தின் விஷயத்தில், தாழ்மை சிந்தைக்கொள்ள வேண்டும். நம்மிடம் வேறு சிந்தை காணப்படுமாயின், இது நம்மை அவருடைய பிரதிநிதி மற்றும் ஸ்தானாபதிக்குரிய நிலைக்கு அபாத்திரராக்கிவிடும்.

இயேசு தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு ஒப்புக்கொடுக்கத்தக்கதாக மாம்சத்தில் காணப்பட்டார். இப்பொழுதுதோ அவர் ஆவிக்குரிய ஜீவியாக நிற்கின்றார். எனினும், அன்று போல் இன்றும் அவர் அடையாளம் கண்டுக்கொள்ளப்படவில்லை. அன்று கபடற்ற இஸ்ரயேலர்கள் மாத்திரம் அவரை அடையாளம் கண்டுக் கொண்டார்கள். இன்றும் அறுவடை முடிவடைவதற்கு முன்னதாக அனைத்து ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் அவருடைய வந்திருத்தல், பரோசியா அடையாளம் கண்டுகொள்ளப்படும். விலையேறப் பெற்ற சத்தியத்தின் இந்த முத்துக்கள் உலகத்திற்கு முன்பாகவோ, அர்ப்பணம் பண்ணாதவர்கள் முன்னதாகவோ போடுவது நல்லதல்ல. கர்த்தருடைய வந்திருத்தல், தற்போது நடந்து கொண்டிருக்கும் அறுவடை வேலைகள், கோதுமைகள் விரைவில் களஞ்சியத்தில் சேர்க்கப்படும் மற்றும் களைகள் மீது விரைவில் உபத்திரவத்தின் நெருப்புக் கொளுத்தி விடப்படும் என்பது போன்றதான சத்தியங்கள் நீதியின் மீது பசிதாகம் உள்ள கபடற்ற இஸ்ரயேலர்களுக்கே உரியதாகும். ஆனால், இந்தச் சத்தியங்கள் அனைத்துப் புத்தியுள்ள கன்னிகைகளுக்கு ஏற்ற கால சத்தியங்களாகவும் அமைகின்றது.

## "இதோ தேவ ஆட்டுக்குட்டி"

நமது கர்த்தரின் வல்லமையும்/பலமும், மகத்துவமும், "யூத கோத்திரத்து இராஜ சிங்கம்" என்ற அடையாள வார்த்தையினால் காட்டப்படுகின்றது. இவ்வடையாளம் ஆயிரம் வருஷம் அரசாட்சியில் இருக்கும் அவருடைய வல்லமையை எடுத்துக்காட்டுகின்றது. ஆனால், ஆட்டுக்குட்டி என்ற அடையாளம் அவருடைய பூமிக்குரிய ஊழியத்தையும், நமது பாவங்களுக்கான அவருடைய பலியையும் எடுத்துக்காட்டுகின்றது. அவர் ஒவ்வொரு விஷயங்களிலும், இறுதியில் மரணம்வரை,அதாவது சிலுவையின் மரணப் பரியந்தம், பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தக் காரியங்களானது, ஆட்டுக்குட்டியின் அம்சங்களுக்கு ஒப்பாகக் காணப்படுகின்றது. நமது பாவங்களுக்காக அவர் தம்மை ஒப்புக்கொடுத்த காரியம் தெய்வீக ஏற்பாட்டின்படி, பிதாவின் திட்டப்படி நடந்த காரணத்தினால் அவர் தேவ ஆட்டுக்குட்டியாகிறார். மனுஷனுடைய மீட்பராகும்படி, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார் என்றும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற குமாரன் மகிழ்ச்சியாயிருந்தார் என்றும் வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்த அனைத்து அருமையான கருத்துக்களும் "தேவ ஆட்டுக்குட்டி" என்ற இந்த வார்த்தைக்குள் அடங்குகின்றது. மேலும், இவ்வடையாளம் நம்முடைய பாவங்களுக்காக பலிச் செலுத்தப்படுவதின் அவசியம் குறித்ததான கருத்துக்களை நமக்கு நினைப்பூட்டுகின்றது. மேலும், பலிச் செலுத்தப்படாமல் வேறு எந்த விதத்திலும் ஆட்டுக்குட்டியினால், உலகத்தின் பாவத்தைச் சுமக்கவோ, எடுத்துப் போடவோ முடியாது. தேவனுடைய கிருபையால் அவரை நம்முடைய மாபெரும் போதகராகவும், மேய்ப்பனாகவும் காண்பதோடு அவர் நம்பொருட்டு நம் பாவங்கள், தண்டனைகள் நீக்கம்/ரத்து செய்யப்படுவதற்காகப் பலியாகத் தம்மை ஒப்புக்கொடுத்ததின் வாயிலாக தேவனுடைய ஆட்டுக்குட்டியாகவும் இருந்தார் என்பதையும் காணத்தக்கதாக நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டிருப்பதினால் மகிழ்ச்சியடைகின்றோம். இயேசுவை, தேவ ஆட்டுக்குட்டி என்றும், பாவம் சுமப்பவர் என்றும் அடையாளம் கண்டு கொள்கின்றவர்கள் மாத்திரமே இந்தச் சுவிசேஷ யுகத்தின் விசுவாசிகளுக்கு அருளப்படும் விசுவாசத்தினாலுண்டாகும் நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் பெற்றுக்கொண்ட நீதியின் வஸ்திரத்தை யாரொருவர் இழந்து விடுகின்றரோ, அவர் அனைத்தையும் இழந்து விடுவார் என்ற உண்மையையும் நாம் மறந்துவிட வேண்டாம்.

## "உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடுதல்"

தெய்வீக வார்த்தைகள் எவ்வளவு அருமையாகவும், துல்லியமாகவும் காணப்படுகின்றது. யோவான் ஒரு யூதனாக இருந்தபடியால் தன்னுடைய வார்த்தைகளின்

முழு விவரத்தையும் புரிந்துக் கொண்டிருப்பார் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது; காரணம், யூதர்கள் மேசியா முதலில் யூதர்களுடைய பாவங்களை எடுத்துப் போடுவார் என்றும், பின்னர் தாங்கள் தேவனுடைய இராஜரிக ஆசாரியக் கூட்டமாக இருந்து, உலகத்தை நீதியில் சீர்த்திருத்துவார்கள் என்றுமே விசேஷமாக எதிர்ப்பார்த்தார்கள். ஆனால், யோவான் உரைத்த வார்த்தைகள் யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பையும் மிஞ்சி விட்டது; அதாவது, புறஜாதியாரும் இவ்வார்த்தைகளில் உள்ளடங்குகின்றனர். இப்படிப்பட்ட தீர்க்கதரிசனமான வார்த்தையை உரைக்கும்படி நடத்தின பரத்திலிருந்து உண்டான ஞானத்தை இன்றைய காலத்து ஜனங்களும் கூடப் புரிந்துக்கொள்வதற்கு அரிதாக இருக்கின்றது. உலகத்தின் பாவங்கள் ஒருபோதும் எடுத்துப் போடப்படவில்லை என்றும், ஆதாமின் மீறுதல் காரணமாகவும், தனிப்பட்டப் பாவத்தின் காரணமாகவும் வந்த பாவ பாரத்தின் கீழ் உலகம் நித்திய சித்திரவதைக்குள் மூழ்கிவிடும் என்றுமுள்ள பொதுவான கருத்துக்கள் இன்று நிலவுகின்றது. உலத்தின் பாவத்தை எடுத்துப் போட்ட தேவ ஆட்டுக்குட்டியான இரட்சகரைக் குறித்து இன்றைய பெயர்க் கிறிஸ்தவ மண்டலமும், அதன் சபைகளும் எதுவும் அறிந்திருக்கவில்லை. அந்தோ! பாவப்பட்ட குருடான கிறிஸ்தவ மண்டலம்! இவர்கள் இவ்வசனத்தையும், இதற்கு ஒத்த மற்ற வசனங்களையும் வாசித்திருந்தாலும், அவைகளுக்குள் காணப்படும் உண்மையான ஆசீர்வாதங்களை அடையவேயில்லை/புரிந்துகொள்ளவில்லை. “எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது” (1 தீமோத்தேயு 2:6). “நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்” (1 யோவான் 2:2) என்ற அப்போஸ்தலர்களின் வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம். “பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது” என்று கர்த்தர் சொன்னது உண்மையே (ஏசாயா 55:9). தேவன் பழிவாங்குகிறவராக இராமல், மனுஷனுடைய சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட அருமையான திட்டத்தையுடைய மாபெரும் தேவனாய் இருக்கிறபடியால் நாம் மகிழ்கின்றோம். “இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு.......................சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துக்கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்” (எபேசியர் 3:14, 15, 18-19); நாம் புரிந்துக்கொள்ளுதலின் கண்களோடு பார்க்கையில் மேற்கூறிய அப்போஸ்தலரின் ஜெபத்தினுடைய நிறைவேறுதலைக் கண்டுக்கொள்ளலாம்.

## “அவருடைய வேலையின் பிரதிபலன் அவர் முன்பாக வருகின்றது”

ஆட்டுக்குட்டி வந்திருந்தாக யோவான் ஸ்நானன் கூறியிருந்தபோதிலும், உலகத்தின் பாவத்தைப் போக்கும் வேலையானது எதிர்க்காலத்திற்குரிய வேலையாக இருக்கின்றது. இந்த வேலை இன்னும் நிறைவேறி முடியவில்லை. நமது கர்த்தர் ஆட்டுக்குட்டியாக மரித்தார். அவருடைய பலியும் பிதாவுக்குத் திருப்தியாய் இருந்தது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, மகிமைக்கும், வல்லமைக்கும் உயர்த்தப்பட்ட விஷயங்கள், பிதா இயேசுவின் பலியில் திருப்தியடைந்ததற்கான நிரூபணங்களாக இருந்தது. ஆனால், தெய்வீகத் திட்டத்தின்படி, உலகத்தின் பாவத்தை எடுத்துப்போடும் வேலையானது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1) தேவனுடன் ஒப்புரவாகும்படியும், மன்னிப்பை அடையும்படியும், உண்மையும் நீதியுமான விஷயங்களோடு இசைவுக்குள் வருவதையும் விரும்பும் இருதயங்களிலிருந்து பாவத்தை எடுத்துப்போடுதல் ஆகும். இவர்கள் விசுவாசிகள் என்று அழைக்கப்படுகின்றனர். மேலும், இவர்களுடைய பாவங்கள் எடுத்துப்போடப்பட்டதாகவும் **கருதப்படுகின்றது**; அதாவது, அப்போஸ்தலரும், தீர்க்கத்தரிசியும் கூறுகிறப் பிரகாரம் கிறிஸ்துவின் நீதியினிமித்தம் உண்டான வஸ்திரத்தினால், தேவனுடைய பார்வைக்கு முன்பு இவர்களுடைய பாவங்கள்

**மூடப்பட்டுள்ளது.** மேலும், இவர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடிக்கும்போது அதாவது, நித்தியத்திற்குரிய ஜீவனுக்குள் பிரவேசிக்கத் தகுதியுள்ள உண்மையானவர்கள் என்ற நிலை வரும்போதே இவர்களுடைய பாவம் **முற்றிலும் அகற்றப்படுகின்றது.** இவர்களுக்கு அருளப்படும் புதிய சரீரத்தில் கறைகள் இருப்பதில்லை. மூடுவதற்குப் பாவமும் இருப்பதில்லை, அனைத்துமே அகற்றப்பட்டிருக்கும். பின்னர் உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக, கிறிஸ்துவும், அவருடைய மணவாட்டியாகிய மகிமையடைந்த சபையின் ஆளுகை, ஆயிரம் வருஷம் அரசாட்சியில் ஆரம்பிக்கும். அதாவது, பரலோகத்தின் இராஜ்யம், நீதியின் ஆளுகை ஆரம்பிக்கும். 2) ஆனால், இந்த ஆளுகை ஆரம்பிப்பதற்கு முன்பு...18-நூற்றாண்டுகளுக்கு முன்பாக உலகத்தை மீட்டுக்கொண்ட தேவ ஆட்டுக்குட்டியானவர், தமது பலியின் புண்ணியத்தையும், தம்முடைய சரீர அங்கமாகிய சபையின் பலியையும் சேர்த்துப் பிதாவுக்கு முன்பு, சகல ஜனங்களுக்குரிய மாபெரும் பாவநிவாரண நாளின் இரண்டாம் பலியாகச் செலுத்துவார் (லேவி. 16-ஆம் அதிகாரம்).

கர்த்தர் பரலோகத்திற்குச் சென்று தம்முடைய பலியை ஒப்படைத்து, அதைப் பிதா ஏற்றுக்கொண்டு, விசுவாச வீட்டாராகிய சபையின் மீது ஆசீர்வாதம் வந்திறங்கினது போன்று, இந்த யுகத்தின் முடிவில் மாபெரும் பிரதான ஆசாரியனால் செலுத்தப்படும் இரண்டாம் பலியும், சகல ஜனங்களுக்கான பாவங்களுக்காகப் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படும். பின்னர் தெய்வீக மன்னிப்பும், ஆதாமின் பாவம் மற்றும் பெலவீனங்கள் விலக்கப்படுதலும் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அருளப்படும். துணிகரமான தவறுகளுக்கே சிட்சைகள் வழங்கப்படும் (லூக்கா 12:47-48). ஆசீர்வதிப்பதற்காகவும், தூக்கிவிடுவதற்காகவும், கர்த்தர் மற்றும் அவருடைய கிருபையான திட்டங்கள் குறித்ததான அறிவிற்குள் கொண்டு வரப்படுகிற யாவருக்கும் உதவுவதற்காகவுமே ஆயிர வருஷம் அரசாட்சியின் சகல செல்வாக்குகளும் செயல்படுத்தப்படும். அடிகள், சிட்சைகள் கூட, நீதியின் விஷயங்களில் உலகத்தைத் திருத்துவதற்கும், உதவுவதற்குமேயாகும். இப்படியாக, ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில், உலகத்தின் பாவத்தை எடுத்துப் போட்ட தேவ ஆட்டுக்குட்டி மூலம், மனுக்குலத்திற்கான அருமையான, கிருபையான ஆசீர்வாதங்களும் நிறைவுபெறும். பொல்லாதவர்கள், ஜனத்தின் மத்தியில் இராதபடிக்கு அழிக்கப்படுவது தவிர, மற்ற யாவரும் மனித பூரணத்தை அடைவார்கள் (அப்போஸ்தலர் 3:23).

## “யோவானுடைய உண்மையுள்ள சாட்சி”

யோவானின் செய்தியில் எவ்வித சுயநலமும் இல்லை. சுயநலமே, அநேக கர்த்தருடைய ஜனங்கள் முன்னேற முடியாமலும், மற்றவருக்கு ஆசீர்வாதமாயும், சத்தியத்திற்குச் சாட்சியுமாய் கர்த்தரால் பயன்படுத்த முடியாத வண்ணம் இடறிவிழுதலின் கல்லாகக் காணப்படுகின்றது. இயேசு தன்னிலும் பெரியவர், தன்னைக்காட்டிலும் அவரே முக்கியமானவர், காரணம், இயேசு (தன்னிலும் முதன்மையானவராக) தனக்கு முன்பாகவே காணப்பட்டார் என்று யோவான் அறிவித்தார். இயேசு யோவானைக்காட்டிலும் (முதன்மையானவராக) முன்னதாக இருந்ததற்கான காரணம், இயேசு பிதாவோடு மனுஷனாக வருவதற்கு முன்னதாகவே இருந்தார் என்பது மாத்திரமல்லாமல் அவர் பரிபூரணமாயும் இருந்தார்; ஆனால் யோவானோ மற்ற மனுஷரைப் போன்று பூரணமற்ற மாம்சமானவராகவே காணப்பட்டார்.

"நானும் அவரை அறியாதிருந்தேன்” (யோவான் 1:31) என்று யோவான் கூறின வார்த்தைகளிலிருந்து, யோவானுக்கு, இயேசுவோடு பழக்கமில்லை என்று நாம் தவறாய்ப் புரிந்துக்கொள்ளக்கூடாது; காரணம், அவர்கள் உடன் உறவினர்கள் என்று பதிவுகள் தெரிவிக்கின்றது. மாறாக, இயேசுதான் மேசியா என்று அவர் அறிந்திருக்கவில்லை. யோவான் இயேசுவைத் தனது உறவினராகவும், அருமையான சிறுவனாகவும், அருமையான புருஷனாகவும் அறிந்திருந்தார். மேலும், அவர் பாவமில்லாதபடியால், தான் கொடுக்கும் ஞானஸ்நானத்தை எடுக்கக்கூடாது என்றளவில்தான் இயேசுவைக் குறித்து அறிந்திருந்தார். ஆனால், தமது ஞானஸ்நானத்தின் மூலமே, தம்மால் பிதாவின் சித்தம் நிறைவேற்ற முடியும் என்றும், எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டும் என்று கூறி வற்புறுத்தினதாலேயே, யோவான் அவரைத் தண்ணீரினால் ஞானஸ்நானம் பண்ணினார். அத்தருணத்தில்தான், இயேசுவே மேசியா என்று யோவான் தேவனிடத்திலிருந்து அடையாளம் பெற்றுக்கொண்டார். யோவான், தான் மேசியாவையும், அவருடைய இராஜ்யத்தையும்

அறிவிக்க வேண்டும் எனவும், யார் மேல் பரிசுத்த ஆவி புறா போல் இறங்குகின்றதோ, அவரே மேசியா என்று அறிந்துக்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தார். ஆனாலும், தான் ஞானஸ்நானம் கொடுக்கும் ஒருவரிடத்தில்தான் இவ்வடையாளம் வெளிப்படும் என்று யோவான் எதிர்ப்பார்க்கவில்லை. கர்த்தர் மேல் ஆவி இறங்கின போது, யோவான் பிரமிப்படைந்து, இயேசுதான் மேசியா, தேவ ஆட்டுக்குட்டி, தேவனுடைய குமாரன் என்று ஜனங்களுக்கு அறிவித்தார். இயேசுவே பிதா என்று அறிவிக்காமல், அவரைத் தேவனுடைய குமாரன் என்றே யோவான் அறிவித்தார். இப்படியே இயேசுவும், அப்போஸ்தலர்களும் அறிவித்தார்கள். மேலும், இதற்கு இசைவாக நம்முடைய சாட்சியும் காணப்பட வேண்டும். இயேசு சபைக்காக ஜெபம் பண்ணினபோது அதாவது, பிதாவும், தாமும் ஒன்றாய் இருப்பதுபோல, சபையும் ஒன்றாய் இருப்பார்களாக என்று ஜெபம் பண்ணினதின் வாயிலாக விவரித்தவைகளை அதாவது, பிதா யாரென்றும், குமாரன் யாரென்றும், அவர்களுக்கிடையே நிலவின உறவையும், ஒற்றுமையையும், நாம் புறக்கணித்து விடக்கூடாது. அவர்கள் இருவரும் ஒருவரல்ல. மாறாக, இருதயத்திலும், நோக்கத்திலுமே ஒன்றுபட்டிருந்தார்கள்.

---

**R4115**

# “கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல்”

## யோவான் 1:35-51

"நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் எழுதியிருக்கின்றவரைக் கண்டோம்...அவர் நாசரேத்தூரரானுமாகிய இயேசுவே.” யோவான் 1:45

"இயேசு தம்மை அர்ப்பணிக்கும் விதமாக, ஞானஸ்நானத்தின் வாயிலாக அடையாளத்தில் வெளிக்காட்டினபோது, அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட காரியமானது யோவான் ஸ்நானனுக்கு, இவர்தான் மேசியா என்று அடையாளங்காட்டின விஷயங்களைக் குறித்து நாம் கடந்த பாடத்தில் பார்த்தோம். இதற்குப் பின்னரே இயேசு தாம் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியின் வெளிச்சமூட்டுதலால் தெய்வீகத் திட்டத்தையும், அதில் விசேஷமாக தமது பங்கைக் குறித்துக் கற்றுக்கொள்ளும்படி, வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் தனிமையில் காணப்பட்டார். இதனோடு கூட எதிராளியானவனிடமிருந்து பரீட்சைகளும், சோதனைகளும் வந்தது. மேலும், கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டியதும், பரிசுத்த ஆவி இப்போது அவருக்குக் காட்டின வழியிலிருந்தும், வேறுபட்ட வழிகள் குறித்ததான ஆலோசனைகளும் எதிராளியானவனிடமிருந்து இயேசுவுக்கு வந்தது. நமது கர்த்தர் இச்சோதனைகளை வெற்றிகரமாக ஜெயங்கொண்டு, மரணம் வரையிலான சுயத்தைப் பலிச்செலுத்தும் 3½ வருட ஊழியத்தை ஆரம்பித்தார். பின்னர் யோவான், ஞானஸ்நானம் கொடுத்தும், பிரசங்கித்தும் கொண்டிருக்கும் பகுதிகளுக்குப் போனார். இயேசு யோவானிடம் எவ்வளவு ஐக்கியம் பின்னர் கொண்டிருந்தார் என்பது பற்றியோ, எவ்வளவு காலம் அவ்விடங்களில் தங்கியிருந்தார் என்பது பற்றியோ நமக்குப் பதிவுகள் இல்லை. சில விஷயங்கள்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயேசு வனாந்தரத்திற்குப் போவதற்கு முன்பு, பரிசேயரும், வேதபாரகரும், யோவானிடம் நீர்தான் மேசியாவோ, இல்லையோ என்று கேள்வி கேட்டு, அவரிடமிருந்து பதிலைப் பெற்றுக்கொண்டார்கள். யோவான், தான் மேசியா அல்ல என்றும், தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்றப் போகின்ற மாபெரும் மேசியாவின் கீழான வேலைக்காரனாக இருப்பதற்குக் கூடத் தான் பாத்திரமற்றவன் என்றும் தைரியமாய்ச் சாட்சிப் பகர்ந்தார். இயேசு வனாந்தரத்திலிருந்து திரும்பி வந்த பின்னர், யோவான் பிரசங்கித்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் மத்தியில் சஞ்சரித்தார். இத்தருணத்தில்தான், "இவரே உலகத்தின் பாவத்தைப் போக்குகின்ற தேவ ஆட்டுக்குட்டி” என்று யோவான் வெளிப்படையாக அறிக்கையிட்டார். இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, அவர் மேல் பரிசுத்த ஆவியானது புறாவைப்போல் இறங்கின சாட்சியையும், யோவான்

பெற்றிருந்தார். அந்நாளில்தான் யோவான் தன்னுடைய இரண்டு சீஷர்களோடு நின்று கொண்டிருக்கையில், சற்றுத் தொலைவில் நடந்துச் சென்றுக் கொண்டிருந்த இயேசுவைச் சுட்டிக்காட்டி, "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று கூறினார்.

## "எனக்குப் பின் ஒருவர் வருகின்றார்"

யோவான் ஸ்நானனிடத்தில் காணப்பட்ட எளிமையும், நேர்மையும் குறிப்பிடத்தக்கதாகும்; காரணம் இத்தகைய தன்மைகள் அரிதானவைகளாகும். உயர் பண்புகளுடையவர்கள் மத்தியிலும் கூடப் பெரும்பான்மையானவர்கள், யோவானிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலைக்குப் பாத்திரமற்றுப் போகும் வண்ணமாக சுயநலமும், பேராசையும் கொண்டுள்ளனர். பெரும்பான்மையானவர்களுக்குத் தங்களுடைய ஸ்தானம், வேலை மற்றும் மதிப்புக் குறித்த விஷயங்களை உயர்வாகப் பாராட்டிப் பேசுவதைத் தவிர்ப்பது என்பது கூடாத காரியமாகும். ஆனால், யோவான் தன்னைப்பற்றி முற்றிலும் நினைக்காமல், மேசியாவை அறிவிக்கும் வனாந்தரத்தின் கூக்குரல் பற்றின தனது பொறுப்பை மாத்திரமே நினைவில் கொண்டிருந்தார். தனக்கென்று கனத்தையும், தனிச்சிறப்புகளையும் நாடாமல் தவிர்த்து, சகல இருதயங்களுடைய பயபக்தியைக் கர்த்தருக்கு நேராகத் திருப்பினார். இதுவே கர்த்தருடைய கனம் வாய்ந்த அனைத்து ஊழியர்களின் சரியான மனப்பான்மை என்று ஒவ்வொருவனும் தன்னுடைய இருயத்தில் நிலைநிறுத்தக்கடவன். நாம் எந்தளவுக்கு இந்த ஊழியத்தில் உண்மையாயிருந்து, நமக்காக அல்லாமல் நமது ஆண்டவருக்குத் துதியையும், கனத்தையும் சேர்க்கவும் நாடி, தெய்வீகத் திட்டமானது மையம் கொண்டுள்ள அவரைச் சுட்டிக்காட்டுகின்றோமோ, அவ்வளவாய் நாம் கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டு, பரலோக இராஜ்யம் மற்றும் மகிமையில் பங்கடையும் பலனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதான ஆவியையும், குணலட்சணங்களை வெளிப்படுத்துகிறவர்களாயும் இருப்போம். ஒருவேளை நாம் இந்த ஆவியை விருத்திச் செய்து நம்முடைய இருதயங்களில் அவைகளைக் கொண்டிராவிட்டால், நாம் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களாகிவிடுவோம். மகா வல்லமையும், கனமும், மகிமையும், அழியாமையும் நம்பிக்கையுடன் நமக்கு அளிக்கப்படுவதற்கும், நாம் தகுதியற்றவர்களாகி விடுவோம். "குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" (யோவான் 5:23). "என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார். தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்கா 9:26; 14:11).

## "சகல ஜனங்களும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்"

"அக்காலத்தில் மக்கள் மீட்பரை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மேசியாவாக இருப்பாரோ என்று எல்லோரும் தங்களுக்குள் எண்ணிக்கொண்டிருந்தார்கள்" (லூக்கா 3:15, திருவிவிலியம்). அந்தக் காலக்கட்டத்தில் ஒட்டுமொத்த யூத தேசமும் மேசியாவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தனர் என்று வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இதற்குத் தொடர்பாகவே, நமது கர்த்தருடைய பிறப்பின் காலக்கட்டத்தில், பெத்லகேமில் குழந்தைகள் கொல்லப்படுதல் சம்பவமும், சாஸ்திரிகளினுடைய வருகை சம்பவமும் நிகழ்ந்தது.

<u>டாக்டர் பரார் அவர்களின் கட்டுரையில் இடம்பெறும் வரிகள்:-</u>

**டேக்டியஸ், சுயடோனிஸ்** மற்றும் **ஜோசபஸ்** என்பவர்கள் மூலம் நாம் அறிந்துக்கொள்வது என்னவெனில், அந்தக் குறிப்பிட்ட காலத்தில், யூதேயாவில் ஒரு வல்லமையுள்ள முடியரசு தோன்றி உலகம் முழுவதிலும் ஆளுகை செலுத்தும் என்ற முற்காலத்துத் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல் குறித்த பேச்சு, கிழக்குப் பகுதி முழுவதிலும் காணப்பட்டது.

இந்தப் பொதுவான/பரவலான எதிர்ப்பார்ப்பிற்கு இசைவாகவே, யோவான் மேசியாவின் இராஜ்யம் சமீபித்துள்ளது என்றும், அதில் பங்கடைய ஆயத்தமாய் இருக்கும்

யாவரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவைகளுக்காக மனம் வருந்தி, சீர்ப்பொருந்த வேண்டும் என்றும், இதை அடையாளத்தில் தெரிவிக்கும் வண்ணமாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்றும் பிரசங்கித்தப்போது, திரளான ஜனக்கூட்டம் கவரப்பட்டார்கள். இந்தப் பாவ மன்னிப்பின் விஷயம் யூதருக்கு மாத்திரம் பொருந்துகிறதாய் உள்ளது. மேலும், இது வருடந்தோறும் செலுத்தப்படும் காளை மற்றும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தினால் ஈடு செய்யப்பட்டது. அவர்களுடைய நிஜமான/ஆதி பாவத்திற்குரிய மனந்திரும்புதலைக் குறிக்கின்றதாய் இராமல், மாறாக நியாயப்பிரமாணத்துக்கு எதிராக செய்யப்பட்ட சகல தனிப்பட்ட மீறுதல்கள் குறித்த மனந்திரும்புதலாக இருக்கின்றது. ஜனங்கள் எந்தளவுக்கு யோவானின் செய்தியை விசுவாசித்து, அதன்படிச் செயல்பட்டார்களோ, அவ்வளவாய் அவர்கள் இயேசுவின் ஊழியத்திற்கும், இன்னுமாக சுவிசேஷத்தின் சத்தியத்திற்கும் ஆயத்தமாய் இருந்தார்கள். ஆகவேதான், கர்த்தருடைய சீஷர்கள் ஏதோ விதத்தில் யோவானுக்கும், அவருடைய பிரசங்கத்திற்கும் அங்கீகரிப்புக் கொடுத்தவர்களாக இருந்தார்கள். இப்படியாக யோவான் ஸ்நானனுடைய சீஷர்களுக்கு மேசியா யார் என்று முதலாவதாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டது. மேலும், இயேசுவின் சீஷர்களாகுவதற்கான கதவும் அவர்களுக்கு முன்பாகத் திறக்கப்பட்டது.

## "இயேசுவோடு ஐக்கியம் வைக்க நாடுதல்"

"இதோ தேவ ஆட்டுக்குட்டி" என யோவான் ஸ்நானனால் உணர்த்தப்பட்ட இரண்டு சீஷர்களும் தாங்கள் யோவானால் சுட்டிக்காட்டப்பட்ட மேசியாவைக் கண்டுபிடித்துவிட்டபடியால், உடனே அவருடன் ஐக்கியங்கொள்ள நாட வேண்டிய நேரம் வந்துவிட்டது எனவும், கூடுமானமட்டும் விரைவில் அவருடைய ஊழியத்திலும் சேர வேண்டுமெனவும் முடிவு பண்ணினார்கள். அந்த இரண்டு சீஷர்களும் தன்னை விட்டுப் பிரிந்து போவதைக் குறித்து, யோவான் ஸ்நானனும் எவ்வித கண்டனமும் தெரிவிக்கவில்லை. அந்த இரண்டு சீஷர்களில் ஒருவருடைய பெயர் அந்திரேயா என்று பதிவு செய்யப்பட்டுள்ளது; மற்றவர் யோவான் என்று அனுமானிக்கப்படுகின்றது. சுவிசேஷ புஸ்தகத்தை எழுதின இந்த யோவான், தன்னுடைய பெயரைக் குறிப்பிடாமல் தன்னை அறிவிப்பதில் தன்னடக்கமுடையவராகக் காணப்பட்டார். வேறு ஓர் இடத்திலும் கூட யோவான் தன்னை, "இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த சீஷன்" என்று குறிப்பிடுகின்றார். இந்தத் தன்னடக்கம் எவ்வளவு அருமையாக இருக்கின்றது. மேலும், இத்தன்மையானது அவரது (யோவானின்) குணலட்சணங்கள் மீது அனைவரையும் எவ்வளவாய்க் கவருகின்றது. யோவான் ஒருவேளை தாழ்மையில்லாத மனுஷனாக இருந்திருப்பாரானால், இயேசுவைச் சந்தித்த விஷயத்தைக் குறித்து எழுதும்போது, தான் முதலாவதாக இயேசுவைப் பின்தொடர எண்ணம் கொண்டிருந்ததாகவும், தன்னோடுகூட அந்திரேயா வரும்படிக்கு அழைத்ததாகவும் குறிப்பிட்டிருந்திருப்பார். யோவானுடைய இந்தத் தன்னடக்கமான குணலட்சணம் நம்மை அவர்பால் கவருவதோடல்லாமல், அவர் எழுதியிருப்பவைகளின் மேல் நம்பிக்கைக் கொள்ளவும் வழிவகுக்கின்றது.

அந்த இரண்டு சீஷர்களும் கர்த்தரைத் தைரியமாய் அணுகி, "ஐயா நாங்கள் யோவான் ஸ்நானனின் சீஷராய் இருக்கும் மதிப்புடையோர்" என்று தங்களை அவரிடம் அறிமுகம் செய்வதற்குப் பதிலாக, அவர்கள் காட்டின தன்னடக்கம் இன்னும் அதிகமாக முன்மாதிரியாக அமைகின்றது. இவர்கள் இருவரும் அமைதலுடன் அவரைப் பின்பற்றி, கர்த்தர் எங்கே தங்கியிருக்கிறார் என்றும், அவருடன் பழகுவதற்குத் தாங்களே தடையாக இருக்காத வண்ணம், தொடர்புகொள்ளும் வாய்ப்பு எப்படிக் கிடைக்கும் எனச் சிந்தித்தவர்களாக இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். அவர்களுக்கு அவர் மேல் இருந்த பயபக்தியும், தங்களைக் குறித்துக் கொண்டிருந்த தன்னடக்கமான எண்ணமும் அவர்களைத் தவறு செய்வதிலிருந்து தவிர்த்தது. இப்படியாக அவர்கள் இயேசுவைப் பின்தொடர்ந்தபோது, தாம் தங்கியிருந்த இடத்தை நோக்கிப் பிரயாணித்த இயேசு அவர்களிடத்தில் திரும்பி, "என்ன தேடுகிறீர்கள்" என்று கேட்டார். இதை இன்றைய நடைமொழியில் சொல்ல வேண்டுமெனில் ... நான் ஏதேனும் உதவி உங்களுக்குச் செய்ய வேண்டுமா?" என்பதாகும். பரவசத்தில் "ரபீ நீர் எங்கே தங்கியிருக்கின்றீர்" என்று மாத்திரமே அவரிடம் கேட்டார்கள். "வந்து பாருங்கள்" என்பது நமது கர்த்தரின் பதிலாக இருந்தது. அவர்களும் அவருடன் சென்று, மீதமான நாள் முழுவதும் அவர்கள் என்ன கேட்டிருப்பார்கள் என்றும்,

அவைகளுக்கு நமது கர்த்தருடைய பதில் என்னவாக இருந்திருக்கும் என்பதை நாம் கற்பனை செய்துகொள்ளலாம். காரணம், இது குறித்து எவ்விதமான பதிவுகளும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இயேசுவைக் குறித்து யோவான் ஸ்நானனிடம் கேட்ட விஷயங்களைக் கர்த்தரிடம் கூறி, அவருடைய எதிர்க்கால வேலை மற்றும் இராஜ்யம் குறித்து அவரிடம் கேட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. நிச்சயமாக கொஞ்சங் காரியங்களையே அவர்களிடம் கூறியிருந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. காரணம், நமது கர்த்தர், "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று கூறியுள்ளார் (யோவான் 16:12).

## “புதிய சிருஷ்டிக்கான படிப்பினைகள்”

இங்கு நமக்கு அநேக படிப்பினைகள் உள்ளது. (1) சீஷர்கள் அவரை அணுகின விதத்தில் வெளிப்பட்ட தாழ்மை, (2) தேவன் தங்களுக்கு அருளியுள்ள யாவற்றையும் பெற்றுக்கொண்டு, தங்களுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும் என்றதான அவர்களுடைய சரியான இலட்சியம். யோவானின் சீஷர்களாய் இருப்பதிலிருந்து, இயேசுவின் சீஷர்களாக முன்னேறுவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்தினார்கள். (3) கர்த்தருடன் ஐக்கியங்கொள்வதற்கும், நன்கு பழக்கம்கொள்வதற்கும் இடையூறற்ற விதத்தை அவர்கள் கையாண்ட முறை. (4) நமது கர்த்தர் அவர்களைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு அவர்களை விருந்தோம்பல் பண்புடன் தமது வீட்டிற்கு அழைத்த விஷயம். (5) முழுச் சத்தியத்தையும் அவர்களிடம் சொல்லாதபடிக்கு அவர் கொண்டிருந்த ஞானமான நடக்கை. அவர் பரலோக விஷயங்களையோ, பூமிக்குரிய சோதனைகளையோ, பாடுகளையோ அவர்களிடம் உடனடியாக அப்போது கூறவில்லை. குழந்தைகளுக்குப் பால் ஆகாரமும், நன்கு வளர்ந்தவர்களுக்குக் கனமான ஆகாரமும் என்று அப்போஸ்தலர் பரிந்துரைத்துள்ள வேதவாக்கியங்களின் வரிசைப்படி இயேசு செயல்பட்டார்.

இந்தப் பல்வேறு படிப்பினைகளைக் கர்த்தருடைய அனைத்து அருமையான பின்னடியார்களும் ஏற்றுக்கொள்வதும், இவைகளை அனுபவிப்பதும், இவைகளைச் செயல்படுத்துவதும் எவ்வளவு அவசியமாய் உள்ளது! நம்மில் எத்தனை பேர் ஞானமில்லாமல், வைராக்கியம் கொண்டவர்களாகக் காணப்பட்டு, புதிதாய்ச் சத்தியத்திற்குள் வந்தவர்களுக்குப் பலமான ஆகாரம் கொடுத்துள்ளோம். மேலும், இப்படியாகச் செய்யப்பட்ட காரியங்கள் பின்வாங்கிப்போகச் செய்யவில்லை என்றாலும், எத்தனை பேருக்கு இடையூறாக இருந்தது. நாம் அனைவரும் மாணவர்களே, நாம் சர்ப்பத்தைப் போல் ஞானமுள்ளவர்களாகவும், புறாவைப் போல் கபடற்றவர்களாகவும் இருக்கக் கற்றுக்கொள்வோமாக. சத்தியத்திற்கு ஆயத்தமாய் இருப்பவர்களைத் தவிர, ஆயத்தமற்ற நிலையில் இருப்பவர்கள் முன்பு முத்துக்களைக் காட்டாதிருப்போமாக!

## “என்ன தேடுகிறீர்கள்?”

இந்தக் கேள்வியில் விசேஷித்த அழுத்தம் உள்ளது. அவருடைய தோழமையை முதலாவதாக நாடின அந்த இருவரின் எண்ணங்களை விழித்தெழப்பண்ணவே இந்தக் கேள்வியை நமது கர்த்தர் கேட்டிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. இது நம்மில் ஒவ்வொருவரும், நம்மையே கேட்க வேண்டிய கேள்வியாகும். மேலும், தற்கால சத்தியத்தின் மீது நாட்டம் காண்பிக்கும் சகலரிடமும் இது கேட்கப்பட வேண்டிய முக்கியமான நல்ல கேள்வியாகும். நாம் என்ன தேடுகின்றோம், நாம் எதற்காக நாடிச் செல்கின்றோம்? உலகம் எதைத் தேடுகின்றது என நாம் அறிவோம்; அதாவது, உலகமானது ஆஸ்தி, மேன்மை, புகழ், சௌகரியம் முதலியவைகளை நாடுகின்றது. கர்த்தரிடம் திரும்பின அநேகரிடமும் கூட இன்னமும் உலகத்தின் ஆவி இருப்பதை நாம் அறிவோம். இத்தகையவர்கள் கர்த்தருடைய சீஷர்களாகவும் இருக்க விரும்புவார்கள், அதேசமயம் உலகப் பிரகாரமான இலட்சியங்கள் மற்றும் எதிர்ப்பார்ப்புகளையும் கொண்டிருக்க விரும்புவார்கள். ஆண்டவர் அன்று அவர்களிடம் கேட்ட கேள்வி நம் ஒவ்வொருவரிடமும் கேட்கப்பட்டதுபோல் நாம் செவிசாய்க்க வேண்டும். நீங்கள் என்ன தேடுகின்றீர்கள்? நம்முடைய ஆண்டவருக்கு நமது பதிலை இருதயத்திலும், ஜெபத்திலும் தெரிவிப்போமாக. மேலும், நாம் பதிலளிப்பதற்கு முன்னதாக, நம்முடைய பதில் உண்மையுள்ளதா என்று நிதானிப்போமாக. ஏனெனில், நாம்

நம்மையே ஏமாற்றிக்கொள்ளலாம். ஆனால், நாம் பதிலளிக்கப்போகும் அவரை ஏமாற்ற முடியாது. நாம் தேவனுடைய இராஜ்யத்தையும் தேட வேண்டும் என்பது சரியே; அந்த இராஜ்யத்துடன் கூட, மாபெரும் கனமும், மகிமையும் தெய்வீக ஏற்பாட்டினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்திருந்து, மகிமை, கனம் மற்றும் அழியாமையை நாடுவதும் சரியே. ஆனாலும், தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுவது சம்பந்தமாக நமது ஆண்டவர் வேறொரு இடத்தில் பேசின விஷயங்களையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். அதென்னவெனில், நாம் முதலாவதாகத் தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேட வேண்டும் என்பதேயாகும்.

அநீதியான பாதையின் வழியாக இராஜ்யத்தை அடையமுடியாது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அநீதி, அக்கிரமம், நியாயமற்ற நிலைமை, சுயநலம், சுயதிருப்தி ஆகிய வழிகள் வேறு திசைகளுக்கே வழிநடத்துகின்றது. மேலும், கர்த்தருக்கு துன்பங்கள் வந்ததுபோல, தற்காலத்தில் தேவபக்தியாய் நடக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று ஆண்டவர் தமது வார்த்தையின் மூலமும், முன்மாதிரியின் மூலமும் நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். ஊழியக்காரனும் தனது கர்த்தரைக்காட்டிலும், உலகத்தின் தயவை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்ப்பார்க்கக்கூடாது. ஆகவே, நாம் இராஜ்யத்தைத் தேடுவது என்பது, சுயத்தை வெறுக்கும் இடுக்கமான வழியைத் தெரிந்தெடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; அதாவது, பாவத்திற்கு எதிராக சிலுவையின் நற்போர் சேவகராக நாம் போராடும் விஷயத்தில், அவரிடத்திலான நமது உண்மையினிமித்தம், உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனிடமிருந்து எதிர்ப்பு வருமென்ற முழுமையான அறிவுடன், கர்த்தரின் கீழ் நம்மை ஒப்புவித்துவிடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். யாரெல்லாம் கர்த்தரை உண்மையாய், நேர்மையாய், சுயநலமில்லாமல், தந்திரமில்லாமல் தேடுகிறார்களோ, அவர்களே அவரைக் கண்டடைந்து, அவருடன் ஐக்கியங்கொண்டு, அவருடைய உண்மை சீஷர்களாகி, இறுதியில் அவருடைய இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்திரரும் ஆவார்கள்.

## "முதலாவது தனது சகோதரனைக் கண்டு"

யோவான் ஸ்நானன் சொன்னதைக் கேட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்தவர்களில் ஒருவர் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா ஆவார். ஒரு வேதாகம மொழியாக்கத்தில் இரண்டு சீஷர்களுமே தங்களது சகோதரர்களைச் சந்திக்க தேடினார்கள் என்றும், அந்திரேயாதான் முதலாவதாக தனது சகோதரனைக் கண்டடைந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு நமக்கு ஒரு பாடம் உள்ளது, அதென்னவெனில், சத்தியத்தின் சேவையை ஆரம்பித்த ஆரம்பக்கட்டத்தில், இந்தச் சீஷர்கள் தங்களுடைய சொந்த சகோதரரிடத்திற்கு முதலாவது சென்றார்கள். இது அவர்களுடைய இருதயத்தில் சகோதர சிநேகம் இருந்ததைக் காட்டுகின்றது. மேலும், இயேசுவின் சீஷர்களாக இருப்பதற்குப் பாத்திரவானாக இருக்கும் யாவரிடமும் இது காணப்பட வேண்டும். மேலும், இது மத ரீதியிலான விஷயங்களில் அவர்களுடைய சகோதரர்கள் மீது அவர்களுக்கு இருந்த செல்வாக்கையும் காட்டுகின்றது. ஆகவே, நாமும் முதலாவது நமக்குச் செல்வாக்கு இருக்கும் சொந்தமானவர்கள் மத்தியில் நற்செய்தியை அறிவிப்போமாக. ஒருவேளை சாதகமான நிலைகள் ஏற்படாவிட்டாலும் நாம் சோர்ந்து போக வேண்டாம். கர்த்தர் தம்முடைய சீஷர்களாகத் தெரிந்துக்கொண்டவர்களில் அநேகர் கனமும், செல்வாக்கும் உடையவர்களாயிராமல், இழிவானவர்களாகவே இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் உறுதியளித்துள்ளதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

கர்த்தரோடு ஐக்கியங்கொள்வதற்கான சிலாக்கியத்தை அவர் நமக்கு அருளியுள்ளதான காரியமோ, அவர் நம்மில் வெறுக்க முடியாத ஏதோ ஒன்றை நாம் பெற்றிருக்கின்றோம் என்றும், அதை அவர் தமது சத்தியம் மற்றும் கிருபையினால் வனைய விரும்பினதால், நம்மை எடுத்துக் கொண்டார் என்றும், இறுதியில் அதை முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தின் மூலம், பிதாவின் முன்பு அருமையானதாகவும், குற்றமற்றதாகவும் ஒப்புவிப்பார் என்றதுமான நிச்சயத்தை அருளுகின்றது. மீண்டுமாக நமக்குச் சொந்தமானவர்கள் மத்தியில் அன்பு செலுத்தி, நம்மால் முடிந்த மட்டும் அவர்கள் சத்தியத்திற்குள் நடத்தப்பட உதவுவதற்குரிய கடமையை நாம் நினைப்பூட்டுகின்றோம். இது சகோதர சகோதரிகள் மத்தியில் காணப்படுகின்ற ஒழுங்காய் இருக்கிறதுபோல, கணவன்

மனைவிக்கு இடையேயும், பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையேயும் காணப்பட வேண்டும். ஒருவேளை மனைவியானவள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டிருந்தால், கூடுமானமட்டும் அதைத் தனது கணவனின் கவனத்திற்குக் கொண்டுவருவதே அவளுடைய முதல் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். ஒருவேளை கணவனானவன் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டிருந்தால், அதை அவன் தனது மனைவியின் கவனத்திற்குக் கொண்டு வருவதையே அவன் தனது முதல் சந்தோஷமாகவும், சிலாக்கியமாகவும் கருத வேண்டும். இப்படியே பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையேயும் இருக்க வேண்டும். ஆனால், தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்குள் வந்தவர்கள் மத்தியிலும் கூட நேர்த்தியான, இயல்பான இவ்வழிமுறை கடைபிடிக்கப்படாததைக் குறித்து நாம் ஆச்சரியமடைந்ததை தெரிவிக்கின்றோம்.

கணவனானவன் மனைவியின் நலன் கருதி, அவளுக்குச் சத்தியம் கற்றுக்கொள்ள நேரம் கிடைக்கத்தக்கதாக, வீட்டுக் காரியங்களை ஒழுங்குப்படுத்துவதில் அவளுக்கு உதவி செய்வானாக. சத்தியத்திற்குள் மனைவி வந்திருந்தால், அவளது கணவனும் கூட சத்தியத்தைக் கற்றுக்கொள்ளும் சிலாக்கியம் மற்றும் ஆசீர்வாதங்கள் முதலியவைகளில் பங்கடையத்தக்கதாக, கணவனுக்குச் சாதகமாய் அமையத்தக்கதாகக் காரியங்களை ஒழுங்கு செய்வதில் மிகவும் கவனம் செலுத்துவாளாக. "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்." அதாவது, அவர்கள் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக, அதிலும் விசேஷமாக அவர்களின் மேலான ஆவிக்குரிய நலன் கருதி, எல்லாவற்றிற்கும் மேலான சந்தோஷத்திற்குள் அவர்களும் கொண்டு வரப்படத்தக்கதாக, உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். "மனைவிகளே உங்கள் புருஷர்களைக் கனம் பண்ணுங்கள்." அதாவது, அவர்களைப் புரிந்துக்கொண்டவர்களாக இருந்து, அவர்களுக்கும் அனைத்து நன்மையானவைகளும் கிடைக்க வேண்டும் என்று விரும்பி, அவர்களுக்கு உதவி செய்வதற்காக உங்கள் சிறப்பான செல்வாக்கைப் பயன்படுத்துங்கள்.

## "நாங்கள் மேசியாவைக் கண்டோம்"

இந்தச் செய்தியை அவர்களுடைய சகோதரருக்கு அறிவித்தார்கள். மேசியா என்ற எபிரெய வார்த்தைக்குரிய கிரேக்க வார்த்தை கிறிஸ்துவாகும். அவர்கள் நெடுங்காலத்திற்கு முன்னதாகவே மேசியா வாக்களிக்கப்பட்டிருந்தார் என்பதை அறிந்திருந்தார்கள். மேலும், பல்வேறு போராட்டங்களின் மத்தியிலும் அவர்களுடைய முழுத் தேசமும் அவருடைய வருகைக்கும், அவர்களுடைய இராஜாவாக வந்து, அவர் அவர்களுக்கு அளிக்கப் போகும் ஆசீர்வாதங்களுக்கும் ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், நம்பிக்கையுள்ளவர்களாகவும், எதிர்ப்பார்த்திருந்தவர்களாகவும் இருந்தார்கள். மேலும், அவர் அவர்களைச் சகல தீமைகளிலிருந்தும் விடுவித்து, தேவனுடைய வல்லமையினால் அவர்களை உலகத்தின் ஒளியாக உயர்த்துவார் என்றும், இவ்விதமாக அவர்கள் மூலம் சகல தேசங்கள் மீதும் ஆசீர்வாதங்கள் பொழியப்படும் என்றும் அவர்கள் எதிர்ப்பார்த்திருந்தார்கள். சாயங்கால வேளையை இயேசுவோடு செலவழித்த அந்த இருவரும் இயேசுவே, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் ஸ்நானனால் உரைக்கப்பட்ட வார்த்தைகள் மெய் என்று உறுதியடைந்தார்கள்.

பேதுரு (இவர்களின்) இச்செய்தியை எப்படி ஏற்றுக்கொண்டார் என்று விவரிக்கப்படவில்லை. எனினும், பேதுரு இவ்விஷயத்தைக் குறித்துக் காணவும், அறிந்துக்கொள்ளவும், முடிவெடுக்கவும் வேண்டி துரிதமாய்ப் புறப்பட்டு வந்திருப்பார் என்று நம்மால் அவருடைய நடத்தைகள் வைத்து யூகிக்க முடிகின்றது. இயேசு எவ்விதமான நிரூபணத்தை அவருக்குக் கொடுத்தார் என்பது பற்றி விவரிக்கப்படவில்லை. எனினும், அவர் இயேசுவை விசுவாசித்து அவருடைய சீஷராகி, ஒரு புதிய நாமத்தையும் பெற்றுக்கொண்டார். அவருக்கு யோனாவின் குமாரனாகிய சீமோன் என்பது நாமமாயிருந்தது. ஆயினும், அவர் சீஷராக சீமோன் பேதுரு என்று அழைக்கப்பட்டார். அதன் அர்த்தமாவது கல் ஆகும். இவ்வாறாக இயேசு இந்த மனுஷனாகிய பேதுரு, எதிர்க்காலத்திலுள்ள மகிமையான ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களில் ஒன்றாக தாம் அடையாளங்கண்டு கொண்டதைச் சுட்டிக்காட்டினார். இவ்வாலயத்தைக் குறித்துதான், பேதுரு பிற்பாடு 1 பேதுரு 2:4, 5-ஆம் வசனங்களில் விவரிக்கின்றார்.

## "கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து"

அடுத்த நாளில் இயேசு கலிலேயாவுக்குப்போக மனதாயிருந்து, போகிற வழியில் பிலிப்புவைக் கண்டு, தம்முடைய பின்னடியாராக வரும்படி அவரைத் தனிப்பட்ட விதத்தில் அழைத்தார். பின்னர் பிலிப்பு, நாத்தான்யேலை கண்டடைகின்றார். இந்த நாத்தான்யேல் வேதவாக்கியங்களில் பர்த்தொலொமேயு என்றும் அழைக்கப்படுகின்றார்.

சீஷர்களைக் கண்டுபிடிக்கும் இச்சம்பவமானது பெத்தாபராவிலே நடந்தது (யோவான் 1:28). மேலும், இங்குதான் இயேசு தங்கியிருந்தார் என்று நாம் பார்க்கின்றோம். ஆய்வாளர்கள் இந்தப் பெத்தாபராவை, பெத்தானியா என்று அழைப்பதினால், நமது கர்த்தர் தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பே மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவின் குடும்பத்தோடு பழக்கம் கொண்டிருந்தார் என்ற அனுமானம் காணப்படுகின்றது. மேலும், சீஷர்கள், யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து, இந்தப் பெத்தாபராவிற்கு/பெத்தானியாவிற்கு யோர்தான் நதியைக் கடந்து சென்றிருக்க வேண்டும் என்ற அனுமானமும் காணப்படுகின்றது. நமது கர்த்தர், யோவான் ஸ்நானனின் பிரசங்கத்தினால் கூட்டிச் சேர்க்கப்பட்டுள்ள மிகுந்த உண்மையுள்ளவர்களில் சிலரைக் கண்டுபிடிக்கும்படி, யோவான் சஞ்சரித்துக் கொண்டிருந்த இடங்களில் தங்கியிருந்தார் என்பது உறுதியான காரியமாகும்.

யோவான், யாக்கோபு, அந்திரேயா, சீமோன் பேதுரு, பிலிப்பு மற்றும் நாத்தான்யேலாகிய சீஷர்கள் கலிலேயாவிலிருந்து வந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கக் காரியமாகும். (யூதாஸ் மாத்திரம் யூதேயாவிலிருந்து வந்தவராக இருக்கின்றார்). இந்த மனுஷர்கள் தங்கள் வீடுகளிலிருந்து, இத்தனை தொலைதூரத்தில் வந்து, என்ன பண்ணிக்கொண்டிருந்தார்கள்? இவர்கள் யோவானுடைய பிரசங்கத்தை கேட்ட திரளான ஜனங்களில் சிலராகக் காணப்பட்டவர்கள் என்றும், இவர்கள் வரவிருக்கிற மேசியாவின் மீது ஆழமான விருப்பம் கொண்டவர்களானபடியால், நீண்ட பிரயாணம் மேற்கொண்டு, யோவான் என்ன சொல்கின்றார் என்பதைக் கேட்பதற்கும், மேசியாவின் வழியை ஆயத்தம் பண்ணுவதற்காக யோவானோடு, அவரின் சீஷராகச் சேர்ந்துகொள்ளவும் தங்கள் வியாபாரங்களை/வேலைகளை விட்டு வந்தவர்கள் என்றும் நாம் அனுமானிக்கின்றோம். ஒருவகையான சத்தியத்தின் ஊழியத்தைக் கொண்டு, பிற்காலத்தின் முழுமையான இன்னொரு ஊழியத்திற்காக எத்துணை அருமையாக நமது கர்த்தர் நமது இருயத்தை ஆயத்தப்படுத்துகின்றார். "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்" (யோவான் 17:6). இவ்வசனம், இந்தச் சீஷர்கள் இயேசுவிடம் வருவதற்கு முன்னதாகவே, தேவனுக்குப் பயப்படுகின்ற, அர்ப்பணிக்கப்பட்ட மனுஷர்களாய் இருந்தார்கள் என்பதற்கு இசைவாய் உள்ளது. இதிலுள்ள நமக்கானப் படிப்பினை என்னவென்றால், ஒருவேளை நமக்கு வரும் ஒவ்வொரு சத்தியத்திற்கும் நாம் உண்மையுடனும், வைராக்கியத்துடனும் இருந்து அதன்படிக் கிரியைக் காட்டுவோமானால், நாம் இன்னும் அதிகமான வேறு சத்தியங்களுக்கு ஆயத்தமாக்கப்படுவோம். இந்த மனுஷர்களிடம் அர்ப்பணிப்பு ஆவி இல்லையெனில், இவர்கள் ஒருவரும் யோவானோடு, அவருடைய ஊழியத்தில் சேரும்படித் தங்கள் வேலைகள் அனைத்தையும் விட்டுவந்தும் இருக்கமாட்டார்கள், இயேசுவின் மதிப்பிற்குரிய அப்போஸ்தலர்களாகுவதற்குத் தயாராகவும் இருந்திருக்க மாட்டார்கள்.

## "நீர் என்னை எப்படி அறிவீர்?"

நாத்தான்யேலுடைய அழைப்புப் பற்றின சம்பவம் மிகவும் சுவாரசியமானதாகும். பிலிப்புவும் நமது கர்த்தரின் செல்வாக்கின் கீழ் வந்து, அவருடைய சீஷராயிருப்பது பாக்கியமான சிலாக்கியம் என்றும், இயேசுதான் நீண்டகாலமாக எதிர்ப்பார்க்கப்பட்ட மேசியாவென்றும் உணர்ந்துகொண்டார். இந்த முழுமையான நம்பிக்கையுடன் பிலிப்பு தனது நண்பனாகிய நாத்தான்யேலைச் தேடிச்சென்றார். தன்னைப்போல் இந்த நாத்தான்யேல் கர்த்தரைச் சேவிப்பதற்கும், மேசியாவின் இராஜ்யத்திற்கென ஆயத்தமாய் இருப்பதற்குமான

விருப்பத்தில் ஒரே சிந்தைக் கொண்டுள்ளவர் என்று பிலிப்பு அறிந்திருந்தார். பிலிப்பு, நாத்தான்யேலைக் கண்டவுடன், "நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கத்தரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்" (யோவான் 1:45). நாத்தான்யேல் ஆழமாய் யோசிக்கும் அறிவாற்றல் கொண்ட மனுஷன் ஆவார். அவர் தனது நண்பனாகிய பிலிப்பு ஏதோ ஒரு காரியத்தை எதுவும் யோசிக்காமல் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும், ஒரு மாயத்தோற்றத்தினால்/ஏமாற்றுக்காரனால் வஞ்சிக்கப்பட்டுள்ளார் என்றும் எண்ணி, "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா?" என்று தனது மறுப்பைத் தெரிவித்தார். அதாவது, "அந்தப் பட்டணமே ஓர் இழிவான பட்டணமாக இருக்க, அவ்விடத்திலிருந்து எவ்வித கனம் நிறைந்த மாபெரும் மனுஷர்கள் வர முடியாது. இதுவரையிலும் நாம் அறிந்திருக்கிறபடி அப்பட்டணத்தைக் குறித்து எவ்விதத் தீர்க்கத்தரிசனங்களும் தெரிவிக்கவில்லை. பிலிப்புவே நீர் கூறும் (இயேசு எனும்) மேசியாவைக் குறித்து எனக்குத் தவறான அபிப்பிராயமே ஏற்பட்டுள்ளது" என்ற விதத்தில் நாத்தான்யேல் கூறினார்.

இப்படியே கர்த்தர் மகிமைப் பொருந்தின இராஜாவாக தமது இரண்டாம் வருகையில் வருவதை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்ற கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் மத்தியிலும் சிலர் காணப்படுகின்றார்கள். இந்த இரண்டாம் வருகையைக் குறித்த சத்தியங்களை நாம் கண்டுபிடித்துள்ளோம் என்றும், நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசிகளும் நாம், அறுவடையின் காலத்தில் அதாவது, மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தின் நாட்களில் (Parousia) இருக்கிறோம் என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது என்றும், நாம் அவர்களிடம் எடுத்துரைக்கும்போது, நமது வைராக்கியத்தையும், உற்சாகத்தையும் பார்த்து ஏளனஞ்செய்து, நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று நமக்கு ஆலோசனை வழங்குவதுண்டு. மேலும், பிரசன்னத்தைக் குறித்த (Parousia) செய்தி எங்கிருந்து வருகின்றது? என்று கேள்வி கேட்கின்றார்கள். மேலும், இக்கேள்விக்குப் பதிலாக, நாம் இச்செய்தி மகான்களிடமிருந்தோ, ஞானிகளிடமிருந்தோ, தற்காலத்திலுள்ள வல்லவர்களிடமிருந்தோ, சாஸ்திரிகளிடமிருந்தோ வராமல், எளிமையானவர்களிடமே இருந்து வருகின்றது என அறிவிக்கும்போது, அவர்களுடைய மறுகேள்வி, "இத்தகைய எளிமையானவர்களிடமிருந்து என்னத்தை எதிர்ப்பார்க்க முடியும்?" என்பதாகக் காணப்படுகின்றது; அதாவது, நாம் பரிசேயர், வேதபாரகர் மற்றும் நியாயப்பிரமாணிக்கர்களின் செய்தியைக் கேட்க வேண்டும் என்று அறிவுறுத்துவதுபோல் கூறுவதுண்டு.

அத்தகைய சந்தேகப்படும் சகோதரர்களுக்கு, பிலிப்பு நாத்தான்யேலுக்குக் கொடுத்த பதிலாகிய, "வந்து பார்" என்பதையே நாமும் தெரிவிப்போமாக. அதாவது, வந்து தேவனுடைய வார்த்தையைக் கொண்டு, சோதித்து, ஆராய்ந்துப் பாருங்கள். பிலிப்போடு நாத்தான்யேல் உடனடியாகச் செல்லவில்லை. பிலிப்பு சோர்வடைந்து, தனது வழியில் போயிருக்க வேண்டும். காரணம், தான் தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரனாக உயர்வாகக் கருதிய ஒருவர், செவிசாய்க்கவும், ஆராய்ந்துப்பார்க்கவும் விருப்பமற்றவராகக் காணப்படுகின்றார் என்பதினாலேயே ஆகும். பிலிப்புவின் இவ்வழைப்புக்கு உடனடியாகச் சம்மதம் அளிக்காததற்கு, சில காரணங்கள் நாத்தான்யேல் கொண்டிருந்தார். நாத்தான்யேல் இவ்விஷயத்தை மிக முக்கியமாகக் கருதினார். காரணம் இவ்விஷயம் தனது நலனை மாத்திரம், பாதிப்பதோடல்லாமல், தனது நண்பர்களின் நலனையும், கர்த்தருடைய நோக்கத்தைப் பொதுவாக பாதிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது என்றும், தானும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்றும் எண்ணினார். நாத்தான்யேலிடம், பிலிப்பு வந்து இவைகளைக் குறித்துக் கூறுவதற்கு முன்பே, அவர் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டும், இவைகளைக் குறித்துச் சிந்தித்துக்கொண்டும், ஜெபம் பண்ணிக்கொண்டும் இருந்தார். மேலும், தான் கண்ணிகள் மற்றும் வஞ்சனைகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், தனது தீர்மானங்கள்/தீர்ப்புகள் கர்த்தரால் வழிநடத்தப்பட வேண்டுமென்றும், தான் எந்த ஏமாற்றுக்காரனாலும் வஞ்சிக்கப்படக்கூடாது என்றும் நாத்தான்யேல் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். நாத்தான்யேல், தான் நாடின கர்த்தருடைய ஆசீர்வாதங்கள்மேல் சார்ந்தவராக, இவ்விஷயத்திலுள்ள நன்மை, தீமைகளை அறிந்திட முயற்சித்து, தனது தவறான அபிப்பிராயங்கள் அனைத்தும் நீங்கின பிற்பாடு, கொஞ்சம் காலந்தாமதமாகப் பின்பற்றிச் செல்லலாம் என்றிருந்தார்.

இப்படியாக, நம்முடைய அனைத்து அருமையான நண்பர்களும் காணப்பட்டால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். கர்த்தருடைய உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரர்களாகிய நாமும் நாத்தினியேல் செய்ததுபோல, கர்த்தரையும், அவருடைய பாதுகாப்பையும், வழிநடத்துதலையும் நாடி, பின்னர் தேவனுடைய வார்த்தையைக்கொண்டு அனைத்தையும் ஆராய்வோமாக! சிலர் நாத்தான்யேலின் இந்த வழிமுறையை உடனடியாக கைக்கொள்ள மாட்டார்கள் என்றாலும், உண்மையாய் ஜெயங்கொள்பவர்களின் வகுப்பாரிலுள்ள அனைவரும் இறுதியில் இவ்வழிமுறையைக் கையாண்டு, வழிநடத்தப்பட்டு, தற்கால சத்தியத்தின் தொடர்புக்குள் வந்து, நமது கர்த்தருடைய பிரசன்னத்தையும் (Parousia), உணர்ந்துக்கொள்வார்கள், இன்னுமாக அவர் செய்துகொண்டிருக்கும் (சபையின்) அறுவடை வேலையையும், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கென இராஜ்யத்தில் மகிமையில் தம்மோடு பிரகாசிக்கத்தக்கதாக முதிர்ந்த மணிகளைக் களஞ்சியத்தில் அவர் சேர்த்துக் கொண்டிருக்கும் வேலையையும் உணர்ந்துகொள்வார்கள். (மத்தேயு 13:43).

## "உங்கள் கண்களும், காதுகளும் பாக்கியமுள்ளவைகள்"

நமது கர்த்தர், நாத்தான்யேலை வரவேற்ற காரியத்தை, குற்றங்கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் அவரை அணுகின வேதபாரகர்கள், பரிசேயர்கள் மற்றும் நியாயப்பிரமாணிக்கர்கள் சிலரைக் கர்த்தர் வரவேற்றதோடு நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இத்தகையவர்களோடு அவர் உவமைகளிலேயே பேசினார். மேலும், அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றோ, புரிந்துக்கொள்வார்கள் என்றோ கர்த்தர் எதிர்ப்பார்க்கவில்லை; ஆனால், நாத்தான்யேல் போன்றவர்களிடம், அவர்களுடைய இருதயங்களைத் தமது ஞானத்தினால் அறிந்துக்கொண்டவராக மிகவும் கிருபையாக இருந்தார். நம்மால், இருதயங்களை அறிந்துக்கொள்ள முடியாத காரணத்தினால், நாம் (இயேசுவைப்போல்) இப்படியாகச் செயல்படக்கூடாது. உத்தம இஸ்ரயேலர்களே நன்கு செவிசாய்த்து, அழைப்பை ஏற்றுக்கொண்டு பரிசைப் பெற்றுக்கொள்வார்கள் என்ற போதிலும், நாம் அனைவரிடமும் பொறுமையாயும், மரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும்; சத்தியத்திற்குச் செவிசாய்த்தாலும், சாய்க்காவிட்டாலும் அவர்கள் சத்தியத்தைப் புரிந்துக்கொள்வதற்காக நம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

இயேசு மற்றும் அவர் அருகே நின்றவர்கள் அருகில் நாத்தான்யேல் வருவதற்கு முன்னமே, நாத்தான்யேல் கேட்கத்தக்கதாக, "இதோ கபடற்ற உத்தம இஸ்ரயேலன்" என்று ஆண்டவர் கூறினார். எத்துணை அருமையான பாராட்டு! சிறுமந்தையில் ஒருவராகவும், அப்போஸ்தலர்களில் ஒருவராகவும் இருப்பதற்கு நாத்தான்யேல் பாத்திரமாக இருந்ததில் ஆச்சரியமல்லவே! பிலிப்பும், நாத்தான்யேலோடு போராடியிருக்க வேண்டும்; வந்து பார்க்கும்படி வேண்டியும் இருந்திருக்க வேண்டும். நாத்தான்யேலுடைய தேசத்தார் அபாத்திரமாய்ப் போய்விட்ட ஆசீர்வாதங்களுக்கு, இவருடைய இருதயத்தின் உத்தமமானது, இவரை அதற்குப் பாத்திரமாக்கிற்று. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைப்பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:11-12). கர்த்தர் தம்மை ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான மனநிலையில் இருந்தவர்களுக்கு உதவினார். மேலும், அவர்கள் விசுவாசங்கொள்ளவும் உதவினார்; அவர்களின் நம்பிக்கையை உற்சாகமூட்டும் வண்ணமாக, அவர்களில் ஒருவரிடம் (ஒருமுறை), "அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றும் கூறினார் என்பதை நாம் நினைவுகூருகின்றோம் (யோவான் 20:27).

தான் உண்மையும், உத்தமுமுள்ள இஸ்ரயேலன் என்றும், தேவன் உண்மையுள்ளவர்களுக்கென்று வைத்துள்ள யாவற்றையும் தான் நாடுகிறவன் என்றும், நாத்தான்யேல், தன்னைப்பற்றி உணர்ந்துகொண்டாலும், (இயேசுவின்) இந்தச் சாட்சியில் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஏனெனில், இவ்வார்த்தைகள் முகஸ்துதிக்காகவும் பேசப்பட்டிருக்கலாம் என்று கருதினார். ஆகவே, கர்த்தரைக் குறுக்கிடும் வண்ணமாகவே,

"நீர் என்னை எப்படி அறிவீர்?" என்று கேட்டார். அதாவது, "நீர் பேசின இந்த வார்த்தைகளை எந்த அதிகாரத்தில் பேசினீர்? நாம் இதற்கு முன்பாக சந்தித்ததுப்போல் எனக்கு ஞாபகமில்லையே" என்ற விதத்தில் கூறினார். அதற்கு "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்" என்பதே, இயேசுவின் பதிலாக இருந்தது (யோவான் 1:48). அத்திமரத்தின் தாழ்வான கிளைகளுக்குக் கீழாக, தான் எவ்வாறு தவழ்ந்து சென்று, மறைவில் பரம பிதாவை நோக்கி ஞானத்திற்காகவும், மேசியாவைக் குறித்த சரியான நிரூபணத்திற்காகவும் ஜெபம் பண்ணினதை நாத்தான்யேல் நினைவுகூர்ந்தார். யாரொருவர் தன்னுடைய அந்த ஜெபத்தை அறிந்திருந்தாரோ, அவரால் அதற்குப்பதிலும் கொடுக்க முடியும், தம்மை வெளிப்படுத்தவும் முடியும். மேலும், அத்தகையவர் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மேசியாவாக இருக்க வேண்டுமென்று நாத்தான்யேல் உணர்ந்தார். நாத்தான்யேலின் விசுவாசம் செயல்பட ஆரம்பித்தது, உடனே, "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரயேலின் ராஜா என்றார்" (வசனம் 49).

நமது கர்த்தர் இன்றும் இப்படியாகத்தானே செய்கின்றார். இன்று காலங்கள் மற்றும் வேளைகளைக் குறித்தும், தெய்வீகத் திட்டத்தின் அம்சங்கள் குறித்தும், அறுவடை வேலைகள் தொடர்பான காரியங்கள் குறித்ததுமான வெளிச்சத்திற்கு, விசுவாசத்திலும், ஜெபத்திலும் நடத்தப்படுவது உண்மைதான் அல்லவா? மேலும் இத்தகையவர்கள் கர்த்தரால் விசேஷித்த விதமாக உதவி பெறப்படுவதும் உண்மைதான் அல்லவா? மேலும், சத்தியம் இவர்களுடைய மனங்களில் விசேஷித்த விதமான தெளிவில் காட்டப்படுவதும் உண்மைதான் அல்லவா? அதேசமயம் அறிவு பெற்றுக்கொள்ள வேண்டும் (curiosity) அதாவது, சத்தியம் கேட்டும் அதிலிருந்து விலக விருப்பம் கொண்டுள்ளவர்கள் இருளில் விடப்படுவதையும் நாம் பார்க்கின்றோமே. கர்த்தர் தமது முதலாம் வருகையின்போது சீஷர்களாகத் தெரிந்துக்கொண்டவர்கள் மத்தியில், இத்தகைய அருமையான பண்புகளை நாம் உணர்ந்துக்கொள்ளும்போது, இதே பண்புகளை நம்மில் விருத்திச் செய்வதற்கும், தேவனிடத்தில் உண்மையும், விசுவாசமும், சாந்தமும் கொண்டுள்ளவர்களாகக் காணப்படுபவர்களின் கவனத்திற்குச் சத்தியத்தைக் கொண்டு செல்வதற்கு நமது விசேஷித்த முயற்சிகளைச் செலுத்துவதற்கும் நாட வேண்டும்.

## "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்"

நாத்தான்யேல் தனது விசுவாசத்தை அறிக்கைச் செய்த மாத்திரத்தில், நமது கர்த்தர் அவரிடம் இதுவரை நாத்தான்யேல் அறிந்துக்கொண்ட விஷயங்கள், அவர் தமது சீஷராக இருந்து படிப்படியாக அறிந்து, புரிந்துக்கொள்ளப் போகின்ற இன்னும் மேலான காரியங்களுக்கு முன்பாக ஒன்றுமில்லை எனக் கூறினார். இது இன்று நம்முடைய விஷயத்திலும் உண்மையாய் இருக்கின்றதல்லவா? கர்த்தரையும், தெய்வீகத் திட்டத்தையும் நாம் அறிய ஆரம்பித்த ஆரம்பக் காலங்களில் நமது இருதயத்தை நிரப்பின சந்தோஷம், நம்பிக்கை, எதிர்ப்பார்ப்புகள் ஆகியவை, போகப் போக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுக்கு வெளிப்படுத்தபடுகின்ற ஐசுவரியமான கிருபை, அன்பு மற்றும் இரக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறியதாகவே காணப்படுகின்றது. நமது ஆவிக்குரிய பார்வை விரிவடையும்போது, நமது புத்திக்கு எட்டாத தேவ அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை விரிவாகப் பார்க்க முடிகின்றது (எபேசியர் 3:18-19).

நாத்தான்யேலிடம் நமது கர்த்தர் கூறின நிஜமான யாக்கோபின் ஏணியாக, இயேசுவை விசுவாசத்தினால், நம்மால் பார்க்க முடிகின்றது. யாக்கோபு தனது தரிசனத்தில் பூமியிலிருந்து, வானத்துக்கு ஓர் ஏணி இருப்பதையும், தொடர்பு பரிமாற்றங்கள் காணப்படுவதையும் பார்த்தார். வெளியாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தெய்வீகத் திட்டத்தின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும்போது, நமது கர்த்தரும், அவரோடுகூடச் சபையும், ஆயிரம் வருஷம் அரசாட்சியில் தேவனுக்கும், மனுக்குலத்திற்குமிடையே தொடர்பு ஏணியாக இருந்து, பூமியின் குடிகளனைத்தும் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாகக் கிருபையின் பரிமாற்றங்களாக இருப்பார்கள். மேலும், இவர்கள் மூலமாக கர்த்தருடைய ஆசீர்வாதமும், மகிமையும் பூமிக்குக் கொண்டுவரப்படும். இப்பொழுதும் தேவனுடைய மனித சிருஷ்டிகள் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளப்பட்ட முதற்பலனானவர்கள், சேர்க்கப்பட்டு, தேவனுடைய

சுதந்திரர்களாகவும், இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரர்களாகவும், கண் இமைக்கும் முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மறுரூபத்தின் வாயிலாகத் தேவனிடத்தில் ஏறிப்போவார்கள்.

---

**R3484**

# "நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது"

## யோவான் 2:1-11.

"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்."

கலிலேயாவிலுள்ள கானா ஊரே நாத்தான்யேலின் சொந்த ஊராக இருந்தது. இவர் சமீபத்தில் நமது கர்த்தருடைய சீஷர்களின் எண்ணிக்கைக்குள் வந்திட்ட ஒருவராக இருந்தவர். அச்சமயத்தில் இயேசுவை மேசியாவாக அங்கீகரித்திட்ட ஆறு பேரில் இவரும் ஒருவராக இருந்தார். நாத்தான்யேல், நமது கர்த்தரையும், மற்றச் சீஷரையும் கானா ஊரில் ஒரு கலியாண விருந்துக்கு தன்னுடைய விருந்தினர்களாக அழைத்திருந்தார். இயேசுவின் தாயாகிய மரியாளும் அந்த விருந்துக்கு வந்திருந்தாள். மேலும், மரியாள் திராட்சரசம் குறைவுபட்டதை முன்கூட்டியே அறிந்துக்கொண்ட காரியமானது, மரியாள் அந்தக் குடும்பத்தாருக்கு நெருங்கிய நண்பராக இருந்தாள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது என்பதில் நமக்கு ஐயமில்லை. மேலும், இப்படிப்பட்ட (திருமண) தருணங்களில் யூதர்கள் தங்கள் விருந்தினர்களுக்கும், அண்டை வீட்டாருக்கும் மற்றும் விருந்து சாலைக்குள் வந்து பந்தியில் பங்குக்கொள்ளும்படி மணவாளனுடைய பெயரில் வற்புறுத்தி அழைக்கப்படும் வழியில் போய்க்கொண்டிருப்பவர்களுக்கும் (பற்றாக்குறையின் காரணமாக) போதுமானளவு பந்தியில் உணவு கொடுக்க முடியாமல் போகும் சம்பவமானது, யூதர்களுடைய விருந்தோம்பலின் பாரம்பரியத்தை மீறி விடுவதாகும். இப்படி, விசேஷமான விருந்தினர்களாக அழைக்கப்பட்டவர்களுக்குள் இயேசுவும், அவருடைய சீஷர்களும் அடங்கியிருந்தார்கள்.

நம்முடைய ஆண்டவரின் தாய், திராட்சரசம் குறைவுபட்டதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததின் காரணமாக, மரியாள் ஓர் அற்புதத்தை எதிர்ப்பார்த்தாள் என்ற ஊகம் நிலவிக்கொண்டிருக்கிறது. இக்கருத்தை நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது. காரணம், அற்புதமான விதத்தில் திராட்சரசம் உண்டாக்கப்பட்ட இச்சம்பவத்தின் அன்றே இயேசுவின் அற்புதங்கள் ஆரம்பமானது என்று குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நாம் ஊகிப்பது என்னவெனில் மரியாள் தனது மகனுடனான நீண்டகால நெருங்கிய தொடர்பு மற்றும் அவரைச் சார்ந்து இருந்ததன் விளைவாக அனைத்துச் சம்பவங்கள் மற்றும் அனைத்துத் தருணங்களிலும் அவரிடம் வெளிப்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் புத்திகூர்மை/திறமையையும் மற்றும் அருமையான முடிவுகள் எடுக்கும் திறமையையும் ஏற்கெனவே அறிந்திருந்தவளாக இருந்தாள். அன்று திராட்சரசம் பற்றாக்குறையின் பிரச்சனையானது மரியாளால் தீர்வுகாண முடிகிற நிலைக்கு மிஞ்சி/அப்பாற்பட்டதாகக் காணப்பட்டது. மேலும், நடுத்தர வர்க்கத்தில் வாழ்கிற அனைவரின் விஷயங்களும் இப்படியாகவே உள்ளது; மேலும், அநேகமாக, திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கென மணவாளன் தன்னால் செலவழிக்க முடிந்த யாவையும் செலவழித்திருக்க வேண்டும். அநேகமாக, கலியாண விருந்தில் நம்முடைய கர்த்தருடைய வருகையை எதிர்ப்பார்த்திருந்தவர்களாகிய பெருமளவிலான அயலகத்தார்களும் கூட அவர் நிமித்தமாக அழைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும்; அதாவது, நாத்தான்யேல் மூலமாகவும், மற்றவர்கள் மூலமாகவும், கேள்விப்பட்டிருந்த அந்த விருந்தினரைப் பார்ப்பதற்காக அவர்கள் அழைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும்.

## "குடும்பத்தாரிடத்தில் இயேசுவின் நட்பிணக்கம் (sociable)"

இச்சம்பவத்தின் பதிவானது, நம்முடைய ஆண்டவருடைய சமுதாயப் பழக்கவழக்கம் பற்றின சிறியதொரு கண்ணோட்டத்தை நமக்குத் தருகிறது. மேலும், இது சந்நியாசிகள்

மற்றும் கன்னியாஸ்திரிகளின் வாழ்க்கை மூலம் காட்டப்படும் கடுமையான துறவு வாழ்க்கை போன்றவைகள் அவருடைய போதனையிலோ அல்லது வார்த்தையிலோ அல்லது உதாரணத்திலோ காணப்படவில்லை என்பதை நமக்கு உறுதியளிக்கக் கூடியதாய் இருக்கின்றது. ஒழுக்கம் மற்றும் மத/சமயக் கோட்பாடுகளையுடைய ஜனங்கள் (community) மத்தியில் நிலவிக்கொண்டிருக்கும் சாதாரணமான சமுதாயச் சூழ்நிலைகளின் மத்தியில்தான், கர்த்தர் தம்முடைய அர்ப்பணிப்பின் ஜீவியத்தை ஜீவித்தார். மேலும், நமது கர்த்தர் இப்படிப்பட்ட தருணங்களில் பங்குப்பெற்றபோது, அவர் கூத்தாடினார் என்றோ/வரம்புமீறி விருந்தில் களியாட்டம், குடிப்போதை கொண்டார் என்றோ அல்லது கோமாளிக்கூத்து நடத்தினார் என்றோ சொல்வதற்கு எவ்விதமான குறிப்புகளும் இல்லை. மாறாக, இம்மாதிரியான (திருமண விழாவின்) தருணங்களுக்குரிய வரம்பு மீறாத/சரியான/நியாயமான சந்தோஷங்களிலும், தோழமை அனுபவ சந்தோஷங்களிலும் மற்றும் சமுதாயத்தினால் அங்கிகரிக்கப்படும் நடத்தைகளிலுமே அவர் பங்குக் கொண்டார் என்று அனுமானிப்பதே நியாயமாய்த் தோன்றுகின்றது. மேலும், அவருடைய இந்த நடத்தையானது, அவருடைய பின்னடியார்களுக்கென அவர்தாமே கட்டளையிட்ட வார்த்தைகளுக்கு இசைவாகவே உள்ளது. அதாவது, "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்" என்பதாகும்.

ஒவ்வொரு வீட்டையும் இயேசு விருந்தினர்போல் சந்தித்துச் செல்வது அவ்வீட்டிற்குச் சிறப்பாயிராமல் அவ்வீட்டை அவர் சொந்த வீடாகக் கருதி தங்குவதே அவ்வீட்டிற்குச் சிறப்புச் சேர்க்கின்றதாய் இருக்கும். ஒருவேளை கர்த்தர் இப்பொழுது மாம்சத்தில் காணப்பட்டிருப்பாரானால் அவர் எப்படிப்பட்ட நிலைமைகளிலுள்ள இடங்களுக்குச் சென்றிருப்பார் என நமக்கு நியாயமாகத் தோன்றுகிறதோ, அப்படியான நிலைமைகளிலுள்ள இடங்களுக்குக் கர்த்தருடைய பின்னடியார்களாகிய நாமும் செல்ல விரும்புவது நம் ஜீவியத்திற்குப் பாதுகாப்பாய் இருக்கும். இன்னுமாக, ஒருவேளை நமக்குப் பதிலாகக் கர்த்தர் ஓரிடத்தில் காணப்பட்டிருந்திருப்பாரானால், அவர் இன்னின்ன வகையில் பேசி இருந்திருப்பார் அல்லது செயல்பட்டிருந்திருப்பாரென நாம் நியாயமாக எதிர்ப்பார்க்கும் விஷயங்களையே, நாமும் பேசுவதும், செயல்படுத்துவதும் நமக்கான சட்டமாக வைத்துக்கொள்வது பாதுகாப்பானதாய் இருக்கும். நமது அருமையான ஆண்டவர் எங்கெல்லாம் கடந்து சென்றாரோ அங்கெல்லாம் விசேஷமாக நாத்தான்யேல் போன்று கபடற்ற உத்தம இருதயமுடைய இஸ்ரயேலர்களுக்கு ஆசீர்வாதங்கள் கடந்து சென்றன என்பதில் நமக்கு நிச்சயமே.

சீஷன் என்ற வார்த்தை மாணாக்கன் (அ) கற்றுக்கொள்பவன் என்ற பொருளைக் கொடுக்கின்றது என்றும், கர்த்தருடைய ஜனங்கள் அனைவருமே, அவருடைய சீஷர்கள் (கர்த்தருடைய ஜனங்கள், எல்லாரும் அப்போஸ்தலர்களாக இல்லாவிட்டாலும்) என்றும் நாம் நினைவுகூரும்போது, ஒவ்வொரு சீஷனும் கர்த்தரை அடையாளப்படுத்துகிறதாக நமக்கு தோன்றுகின்றது; அதாவது, நாம் அவருக்குப் பிரதிநிதிகளாக (அ) "ஸ்தானாதிபதிகளாக" இருக்கின்றபடியினால், நாம் எங்குப் போகிறோமோ அங்கே அவரும் போகிறார். இக்கருத்தை சிந்தையில் கொண்டவர்களாக நாம் ஒவ்வொருவரும், அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் விஷயத்தில் அதாவது, நம்முடைய மகிமையின் கர்த்தரை நாம் ஒவ்வொருவரும் சரியான விதத்தில் அடையாளப்படுத்தத்தக்கதாக எத்துணை ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். இதற்காகவே உதடுகளினால் மாத்திரமல்ல, "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" என்று உள்ளத்திலிருந்தும் ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். மெய்யாகவே, "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17). "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." ஆனால், எல்லா தருணங்களிலும் நம்முடைய கடமையோ ஒரே விதமாகவே உள்ளது; மனுஷர் நம்முடைய நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவை மகிமைபடுத்தும்படி, நம்முடைய வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்க வேண்டும் என்பதே அவருடைய போதனையாக இருக்கிறது.

# "இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக"

கர்த்தரிடமிருந்து சீஷர்கள் வாயிலாக கடந்துவரும் செல்வாக்குக் குறித்த ஒரு குறிப்பானது, கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பி வைத்தபோது பேசின வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. வீட்டினுள் நுழையும் முன், "இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று அவர்கள் சொல்ல வேண்டும். ஆனால், அதற்கென்று நாம் ஒரு கட்டிடத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பதாக வெளிப்படையாகவும், சம்பிரதாயமாகவும் இப்படிப்பட்ட அறிக்கையைச் செய்ய வேண்டும் என்று இதனை ஒரு கட்டளையாக நாம் கருதிவிடக்கூடாது. மாறாக, இது கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனம் ஒவ்வொருவருடைய இருதயபூர்வமான மனோபாவமாக இருக்க வேண்டும் என்றே அறிவுறுத்தப்பட்டுள்ளதென நாம் நம்புகிறோம்; அதாவது, தாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம், தங்களோடு தொடர்புகொள்ளும் ஏகமாய்த் தவித்துக்கொண்டிருக்கும் பாவப்பட்ட சிருஷ்டியின் இருதயங்களைப் தாங்கள் புத்துயிர் அடையச்செய்து, தூக்கி நிலைநிறுத்தும் போது, சமாதானமும், ஆசீர்வாதமும் தங்களோடுகூடக் கடந்துவர வேண்டும் என்பதே இவர்களுடைய விருப்பமும், முயற்சியும், குறிக்கோளுமாயிருக்க வேண்டும்.

இவ்வுலகில் சண்டைகளை வளர்ப்பதற்கென்றே அநேகம் பேர் உள்ளனர். அத்தகையவர்கள் ஏதாவது ஒரு வீட்டின் வாசலுக்குள் பிரவேசிப்பார்களேயானால், அவர்கள் அதை உணர்கிறார்களோ அல்லது பேசுகின்றார்களோ இல்லையோ, அந்தச் சுவர்களுக்குள் சண்டையே மிஞ்சுகின்றது. கோபம், பகைமை, வெறுப்பு, மற்றும் சண்டை ஆகியவற்றால் அவர்களுடைய இருதயம் நிறைந்திருப்பதால், அதன் மிகுதியிலிருந்து அதிருப்தியும், சந்தோஷமின்மையும் வெளிப்படுகிறது. பகைமையிலும், சண்டையிலும் தங்கள் ஆத்துமாவைக் கசப்பான நிலையில் (ஒரு காலத்தில்) வைத்திருந்தவர்கள், இப்பொழுது அதினின்று மாறி கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடக்க அதாவது, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பதற்குத் தங்கள் மனங்களில் தீர்மானித்திருப்பவர்கள், மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளைக் களைந்து போட்டிருப்பவர்கள், அன்பின் ஆவியினால் நிறையப்படுவதற்கு, நிச்சயமாக சிலகாலம் செல்லும்; இதற்கு இடைப்பட்ட காலத்தில் அதாவது, இவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் ஆசீர்வாதங்கள் பெருகுவதற்கு ஏதுவாக இவர்கள் சந்தோஷம், சமாதானம் மற்றும் ஆவியின் கனிகளால் நிரப்பப்படுவதற்கு முன்பு இவர்களிடத்தில் சிலகாலம் தீமை பேசுதல், புறங்கூறுதல், தீமையான கட்டுக்கதைகள், முகாந்திரமின்றி தீமையைக் கற்பனை செய்தல், இரக்கமின்மை, வார்த்தையில் மற்றும் நடத்தையில் பணிவின்மை, பொறுமையின்மை, போன்ற காரியங்கள் வெளிப்படும்.

இப்படிப்பட்டவர்களுடைய செல்வாக்கானது, இவர்கள் கிறிஸ்துவுக்குள் மாணாக்கர்களாக இருந்திட்டாலும், அது மாம்சத்திற்குரிய செல்வாக்காய்/தாக்கமாய் இருக்கிறபடியினால், அது ஆவிக்குரிய வளர்ச்சிக்குப் பெருமளவில் தீங்கு விளைவிக்கக்கூடியதாகவும், பல்வேறு கிருபைகளின் வளர்ச்சியைத் தடைசெய்யக்கூடியதாகவும், கர்த்தருடைய சரியான பாதைகளைத் தேடிக்கொண்டிருக்கும் மற்றவர்களுடைய இருதயங்களிலும், தங்கள் சொந்த இருதயங்களிலும், சமாதானம் மற்றும் சந்தோஷத்தைக் குலைத்துப்போடக்கூடியதாகவும் இருக்கும். கர்த்தருடைய பின்னடியார்களாகிய நமக்கான பாடம் என்னவெனில், பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்புவதும், கோபம், பொறாமை, மற்றும் பகைமையிலிருந்து அன்புக்குத் திரும்புவதும் மாத்திரமல்ல, இருதயம் அன்பினால் நிறைத்து வைத்திருக்கப்பட வேண்டும். அப்பொழுது அன்பு, சந்தோஷம், மற்றும் சமாதானத்தின் நிறைவினால், நம்முடைய வாய் பேசும்; மேலும், நம்முடைய நடத்தை, கர்த்தருடனான நம்முடைய உறவையும், அவருக்கொத்த சாயல் அடைந்ததையும் வெளிக்காட்டக்கூடும்; அதாவது, நாம் இயேசுவோடு இருக்கின்றோம் என்றும், அவரால் போதிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் மனுஷர் நம்மைக் குறித்து அறிந்துக்கொள்ளக்கூடும்.

# "உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக"

நம்முடைய கர்த்தர் தம்முடைய தாயின் ஆலோசனைக்கு அளித்த மாறுத்தரம், சற்று அன்பற்றதாகவும், கடுமையானதாகவும் காட்சியளிக்கின்றது. காரணம், இது மொழிப்பெயர்ப்பின் விளைவாக ஏற்பட்டதாகும். இது "ஸ்திரீ " என்று அர்த்தம் கொடுக்கும் மூல கிரேக்க வார்த்தையின், அருமையான தோற்றத்தைக் கொடுக்கவில்லை. வார்த்தை ஒன்றுதான், உதாரணத்திற்கு, எகிப்தின் இராணிக்கு ரோம ஆளுநர் பாராட்டுத் தெரிவிக்கும் பேருரையில் பயன்படுத்தின வார்த்தையாவது, "ஓ பெண்ணே, திடன்கொள்" என்பதாகும். "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்ற பிரமாணத்தின் கட்டளையை நம்முடைய கர்த்தர் தம்முடைய வார்த்தையினாலோ அல்லது கிரியையினாலோ ஒருபோதும் மீறவில்லை என்பதில் நாம் உறுதிகொள்ளலாம். அவருடைய வார்த்தைகள் மற்றும் நடக்கைகள் எல்லாவற்றிலும் அவர், தம்முடைய போதனைகள், போதித்த விதமாகவே சாந்தத்திற்கும், பெருந்தன்மையோடு கூடிய இரக்க மனப்பான்மைக்கும், பொறுமை மற்றும் அன்புக்கும் ஒரு மாபெரும் மாதிரியாக இருந்தார்.

"எனக்கும் உனக்கும் என்ன?" என்ற சொற்றொடரின் சரியான அர்த்தமாவது,..."எனக்கு கட்டளையிட முயற்சி செய்யாதீர்கள்; ஏற்றச்சமயம் வரும்போது என்ன செய்யவேண்டும் என்பதை நான் அறிவேன்" என்பதாகும். அநேகமாக மரியாள், திராட்சரசம் குறைவுபடும் காரியத்தை (மற்றவர்களிடமிருந்து) மறைக்க எண்ணினாள்; இயேசுவோ இதற்கு நேர்மாறாக, தாம் நிகழ்த்துவதாக இருந்த அற்புதம், விருந்துக்கு அழைத்த மணவாளனுக்கு உதவியாயிராமல், விருந்துக்கு வந்திருந்த ஒட்டுமொத்த ஜனக்கூட்டமும், வேலைக்காரார் மூலம் அறிந்துக்கொள்ளும்போது அது அவர்களுக்கு மிகப்பெரிய ஒரு பாடமாக இருக்கும் என்பதையும் உணர்ந்தவராக இருந்தார். ஆகையால், இயேசு புதியதை பழையவையோடு கலப்பதன் மூலமாக இந்த அற்புதம் குறைத்து மதிப்பிடப்பட்டுப் போய்விடாதிருக்கும்படிக்கு, பரிமாறுதல் குறைவுபடும்வரை மாத்திரமல்லாமல், முற்றிலும் திராட்சரசம் இல்லாமல் தீர்ந்துப்போகும் வரையிலும் காத்திருந்தார்.

"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்" என்று மரியாள் வேலைகாரரிடம் கூறின வார்த்தையிலிருந்து, மரியாள் அந்தக் குடும்பத்தில் மிக நெருங்கின உறவுமுறையாள் என்பது மேலும் தெளிவாகிறது. வேலைக்காரர்களுக்கும், இப்படிப்பட்ட கட்டளைகள் அவசியமாக இருந்திருக்கும்; இல்லையென்றால், அவர்கள் விருந்தினர்களில் ஒருவரிடமிருந்து கட்டளைப் பெறுவதற்கு இடமளித்திருக்கமாட்டார்கள். கர்த்தர், வேலைகாரர்களுக்கு என்ன கட்டளையிடுவார் என்ற அறிவை மரியாள் அநேகமாக பெற்றிருக்கவில்லை. ஆனால், முன்பு குறிப்பிட்டுள்ளபடி தன்னுடைய குமாரனுடைய திறமை மற்றும் ஞானத்தின்மேல் மரியாளுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. விருந்தினர்களின் களிப்பினிமித்தம் திராட்சரசம் தீர்ந்துப்போனபடியாலும், அவ்விருந்தினர்களில் ஒருவராக இயேசு இருந்தபடியினாலும், தேவையைப் பூர்த்தி செய்ய விருப்பமாய் அவர் இருப்பார் என்று மரியாள் எண்ணினாள்.

விருந்துக்கு அழைத்த மணவாளனினால் முன்னேற்பாடு செய்யப்பட்டு, அதில் இயேசுவும் அவருடைய சீஷரும் குடித்த திராட்சரத்தைக் குறித்தும், இதைத் தொடர்ந்து, கர்த்தர் உண்டுபண்ணினதும், பின்னர் அவர் குடித்த திராட்சரசத்தைக் குறித்தும் இங்கு ஒரு கேள்வி எழுகிறது. அது வெறும் புளிப்பில்லா திராட்சரசமே என்று குறிப்பிட நமக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஆனால், (அங்கிருந்த) எல்லா சூழ்நிலைகளும் எதிர்மாறாய்த் தோன்றுகின்றது; அதாவது, கொஞ்சம் மதுபானம் இருந்தது என்று போதிக்கும் வண்ணமாக இருந்தது. திராட்ச ரசத்தைப் புளிக்க வைப்பதின் வாயிலாக உருவாகும் மது "லைட் வைன்ஸ்" என்று அழைக்கப்படுகின்றது. முதலில் பரிமாறப்பட்ட திராட்சரசத்தைப் பார்க்கிலும், இயேசு உண்டாக்கின திராட்சரசம் நன்றாக இருந்ததாக பந்திவிசாரிப்புக்காரன் தெரிவித்தக் கருத்தானது, இந்தக் கோட்பாட்டை ஆதரிப்பது போன்று நமக்குத் தோற்றமளிக்கிறது. ஆனாலும், சுவையையோ (அ) பகுத்தறிவையோ இழக்குமளவு ஜனங்கள் குடித்து வெறித்து போதையில் இல்லாததையும் சுட்டிக்காட்டுகிறது.

நம்முடைய கண்ணோட்டத்தில், தற்போதைய நிலைகளுக்கும், நம்முடைய கர்த்தர் வாழ்ந்த காலத்திற்குமிடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. வெதுவெதுப்பான சீதோஷண நிலையில் இருக்கும் தேசத்தின் ஜனங்கள், இக்காலத்தில் நாம் தண்ணீர், டீ/ தேனீர், காபி,... அருந்துவது போன்று, "லைட் வைன்ஸ்" அருந்துவதைப் பழக்கமாக வைத்திருந்தனர். இதனால் அவர்களுக்கு எவ்வித தீங்கு விளைவிக்கும் காரியங்களும் ஏற்பட்டிருக்கவில்லை. இவ்விதமாகவே தற்காலத்திலும், ஐரோப்பாவின் சில பகுதிகளிலுள்ள ஜனங்களைக் குறித்தும் சொல்லப்படுகிறது. இயேசுவின் நாட்கள் பரபரப்புகள் இல்லாத காலம். மேலும், ஜனங்கள் எல்லாவற்றிலும் நிதானமாகவே இருந்தார்கள். நம்முடைய காலங்களில், எல்லாம் (எல்லா வேலைகளும்) அழுத்தங்களின் கீழும், பரபரப்புடனும் செய்யப்படுவதினால் மதுபானங்கள் பல்வேறு விதங்களில் தீமையாகவே இருக்கின்றது. ஆகையால், தற்போது ஜனங்கள் மதுபானத்தை மிதமான அளவிலும் கூடப் பயன்படுத்தக் கூடாமல் இருக்கின்றார்கள்.

வேதவாக்கியங்கள் மதுவைத் தவிர்த்துவிடு என்று சொல்லுவதினால் மாத்திரம் அல்லாமல் மேற்கூறிய காரணங்களுக்காகவும் மதுவைத் தவிர்க்க வேண்டும். அதாவது, தற்கால துயரங்களினாலும், அதிகம் மனஅழுத்தம் ஏற்படுவதினாலும் குடிபழக்கம் ஏற்படுவதற்கான அதிக ஆபத்து இருப்பதே மது தவிர்க்க வேண்டும் என்பதற்கான காரணம் ஆகும். ஒருவேளை கர்த்தர் நம்முடைய சூழ்நிலைகளின் மத்தியில் இன்று மாம்சத்தில் இருந்திருப்பாரானால், அவர் மிக மிதமான உணவு, பான பழக்கம் உடையவராக இருந்திருப்பார். மேலும், எதையும் தவிர்க்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாதிருந்தும் விழுந்துபோன பெலவீனமான இனத்தின் மீது அவருக்குக் காணப்படும் அன்பு மற்றும் அனுதாபம் காரணமாக, அவர்களுக்கு இடறலின் கல்லாக இருக்கும் எதையும் அவர் தவிர்க்கக்கூடிவராக இருப்பார் என்று நாம் விசுவாசிக்கின்றோம்.

## "தண்ணீர் ஜாடிகள் முழுமையாக நிரப்பப்பட்டது"

முற்காலங்களில் இருந்தவர்கள், நீர்க்குழாய்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள்,...போன்ற சாதனங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆனால், குடும்பத்தினரின் பயன்பாட்டிற்காக தண்ணீர் ஜாடிகள் என்று அழைக்கப்படும் பெரிய மண்பாண்டங்களில், தண்ணீர் வைத்திருப்பார்கள். திருமண விருந்தின்போது, கூடுதலான அளவு தண்ணீர் தேவைபட்டிருக்கும் பட்சத்தில், அண்டை வீட்டாரிடமிருந்து அநேகமாக போதுமான ஜாடிகள் இரவலாக வாங்கப்பட்டிருக்க வேண்டும். அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு அளவுகள் கொண்டதாக, ஆனால் அதிக கொள்ளளவு கொண்டதாக இருந்தது. அவைகள் பல்வேறு அளவுகளில் இருந்தாலும், அவைகள் அனைத்தும் பெரிய அளவு கொண்டவைகளாகும்...இரண்டு கற்சாடிகள் என்பது 18 முகத்தலளவையாகும் (gallon – சுமார் 4-1/2 litre) மற்றும் மூன்று கற்சாடிகள் என்பது 27 முகத்தலளவையாகும் அல்லது ஒவ்வொரு கற்சாடியும், ஒன்பது முகத்தலளவு கொண்டதாகும். விசேஷமாக வீட்டுச் சாமான்களைத் துலக்கவும், விருந்தினர்களின் கைகள் மற்றும் பாதங்களைக் கழுவுவதற்கும் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவது வழக்கமாக இருந்தது. ஆகவேதான், இவ்வளவு அதிகமான அளவு தண்ணீர் அவசியமாக இருந்தது.

அற்புதம் நடப்பிப்பதற்கான ஏற்ற சமயம் வந்தபோது, நம்முடைய கர்த்தர், தண்ணீர் கொண்டுவந்து 6 ஜாடிகளின் விளிம்புவரை நிரப்பும்படி கட்டளையிட்டார். சாதாரணமான தண்ணீர் ஜாடிகள் பயன்படுத்தப்பட்டதின் விளைவாக, அற்புதத்திற்கான காரணம் பொடிகள் கலக்கப்பட்டதாக இருக்குமோ என்று எழும்பும் ஐயங்கள் நீங்கிற்று. மேலும், தண்ணீர் ஜாடியின் விளிம்புவரைத் தண்ணீர் நிரப்பப்பட்ட விஷயமும், நமது கர்த்தர் ஏதோ ஒன்றைத் தண்ணீரில் கலந்துவிட்டார் என்ற ஐயங்கள் எவருக்கும் எழும்பாதவண்ணம் ஆக்கிப்போட்டது. அன்றியும், இவ்விதமாக விளிம்புவரைத் தண்ணீர் உயர்ந்திருந்ததினால், அது கலப்படமற்ற தெளிவான தண்ணீராக இருந்ததைக் காணமுடிந்திருக்கும்.

தண்ணீர், திராட்சரசமாக மாறின சம்பவம் கணப்பொழுதில் ஏற்பட்டதென்பது தெளிவாகிறது. இதன் காரணமாகவே, உடனடியாக நம்முடைய கர்த்தர், புதிதான திராட்சரசம் பரிமாறப்படுவதைப் பந்திவிசாரிப்புக்காரன் அறிந்துக்கொள்ளும்படி முதலாவது, திராட்சரசத்தை மொண்டு அவருக்குப் பரிமாறும்படி அவர்களுக்குக் (வேலைக்காரருக்குக்)

கட்டளையிட்டார். பந்திவிசாரிப்புக்காரன், விருந்துக்கு அழைத்த மணவாளனிடம்,...நாவானது திராட்சரசத்தின் தரத்தை மிகத் துல்லியமாகக் கண்டுபிடிக்கும் வண்ணம் வழக்கமாக நல்ல தரம் வாய்ந்த இரசமானது முதலாவதாகப் பரிமாறப்பட்டிருக்க வேண்டும் என்றும், முதலில் பரிமாறப்பட்டதைப் பார்க்கிலும் புதிய திராட்சரசமோ மிக உயர்தரமாக இருந்தது என்றும் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். இயேசு உண்டுபண்ணின மிகச்சிறந்த திராட்சரசத்திற்கு இது ஒரு சாட்சி. சாதாரண விருந்தில் பரிமாறப்படும் சாதாரண திராட்சரசமானது, நல்ல தரம் வாய்ந்த திராட்சரசமாகக் கருதப்படும் என நாம் நினைக்க இயலாது; அல்லது மற்றொருவகையில், இயேசு உண்டுபண்ணின திராட்சரசத்தில் அதிகம் மதுபானம் கலக்கப்பட்டு, அதைப் பயன்படுத்துபவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியதாக இருந்திருக்கும் என்றும் நாம் ஆலோசிக்கக்கூடாது.

ஆனால், அந்த ஜாடிகள் சுத்தமான நீரினால் விளிம்புவரை நிரப்பப்பட்டிருந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு; அவை அடையாளமானவைகள் ஆகும்; அவை, தற்காலத்திலுள்ள கர்த்தருடைய ஜனங்களை அடையாளப்படுத்துகிறது. வேதாகமத்தில் பயன்படுத்தப்படும் தண்ணீர், ஜீவனுக்கு ("ஜீவத்தண்ணீருக்கு") அடையாளமாக உள்ளது. இது குறிப்பாக இயல்பான வாழ்க்கையை (அ) மனித வாழ்க்கையை எடுத்துக்காட்டுகிறது. உதாரணத்திற்கு வெளிப்படுத்தல் 22:17-இல், ஆவியும் மணவாட்டியும், ஆயிரவருட யுகத்தின்போது, உலக மனுமக்களிடம், "வந்து, ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" என்று சொல்வதாக அடையாள பாஷையில் கொடுக்கப்பட்டுள்ளது. இது திரும்பக்கொடுத்தலின் வேலையை அடையாளப்படுத்துகிறது. அதாவது, மரணத்தின் வல்லமையிலிருந்து மனுக்குலத்தை மீண்டும் உயிர்ப்பித்து, திரும்பக்கொடுக்கப்படும் ஜீவனை அடையாளப்படுத்துகிறது.

## "மண்பாண்டங்களில் பெற்றிருக்கும் நம்முடைய பொக்கிஷம்"

இந்த மண்பாண்டங்களில், முதலாவதாக திராட்ச ரசம் பெருமளவில் தீர்ந்துபோனதாக இருந்தது. ஒவ்வொரு பாண்டத்திலும், மீதியாக ஒன்றுமே இருக்கவில்லை. மனித குடும்பத்தின் அங்கங்களான நம்மைப் பொறுத்தவரையில், விழுகையினிமித்தமாக நம்முடைய உயிராற்றல்கள் நன்கு நலிவடைந்ததாக உள்ளது. யூதர்களோ, நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்த் தேவனுடைய கிருபை பெற்ற ஜனங்களாக, ஒரு குறிப்பிட்டளவே நீதிமானாக்கப்பட்டவர்களாக இருந்தனர்; மாறாக முழு அளவில் அல்ல; அதாவது, ஜீவனுக்கேதுவாக நீதிமானாக்கப்படவில்லை. ஜாடிகளில் தண்ணீர் விளிம்புவரை நிரப்பப்பட்ட சம்பவம், கர்த்தருடைய பின்னடியார்களாக மாறுபவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டதாக கருதப்படும் அனைத்து மனித உரிமைகளுக்கும், சிலாக்கியங்களுக்கும் மற்றும் ஜீவனுக்கும் ஏதுவான முற்றும், முழுமையான நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்துகிறது. அப்போஸ்தலர் கூறுவதுபோல, "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்."

ஆனால், இந்த உருவகம் இன்னுமாக, இந்த நீதிமானாக்கப்பட்ட வாழ்க்கையின் மறுரூபமாகுதலை, அதாவது, அற்புதவிதமான மாற்றத்தின் மூலமாக ஒரு புதிய சுபாவத்தை அளிப்பதை நமக்குக் காண்பிக்கின்றது. இதைக் குறித்துதான், நம்முடைய மனங்கள் புதிதாக்கப்படுகிறதினாலே மறுரூபமாக்கப்படும் போது, நாம் புதுச் சிருஷ்டியாக மாறுகிறோம் என்று அப்போஸ்தலர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

ஆகையால், தண்ணீர் திராட்சரசமாக மாறினது, நீதிமானாக்கப்பட்ட நிலைக்கு மாற்றப்பட்டவர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புதுச் சிருஷ்டியாக ஆகுவதை அடையாளப்படுத்துகிறது. தண்ணீர் நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்தும் என்பதால், திராட்சரசம், விசுவாசத்தின் மூலமாகவும், ஒரு முழு அர்ப்பணிப்பின் மூலமாகவும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு, அதாவது ஆவிக்குரிய குடும்பத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப் படுபவர்களுக்கு அளிக்கப்படும் மேலான ஆவிக்குரிய சந்தோஷங்களை அடையாளப்படுத்துகிறது. மெய்யாகவே இந்தச் சந்தோஷங்கள், வருங்காலங்களில் நிஜமாகக் கிடைக்கப்போகும் அளவிற்கு தற்போது இருப்பதில்லை; அப்போஸ்தலர்

அறிக்கையிடுவதுபோல அவற்றை, நம்பிக்கையின் சந்தோஷங்களாகவும், எதிர்ப்பார்ப்பின் சந்தோஷங்களாகவும் இந்த மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். எனினும் வருங்காலங்களில், நமது கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின்படி, கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் ஒரு பங்காக, புதிய பாத்திரங்கள், பொற்பாத்திரங்கள் நமக்குக் கொடுக்கப்படும்; அதாவது, நம்முடைய சந்தோஷங்கள், கிருபைகள் யாவும் முழுமையான அளவு உணர்ந்து, புரிந்துக்கொள்ளப்படும் பரிபூரண நிலைமைகள் நமக்குக் கொடுக்கப்படும். கடைசி இராப்போஜனத்தின்போது, நம்முடைய கர்த்தருடைய அறிக்கையில் இதற்கான ஒரு குறிப்பு உள்ளது. அதாவது, தற்போது அவருடைய பாடுகளின் பாத்திரத்தில் பானம் பண்ணி, சுயத்தைப் பலிச்செலுத்துகிறவர்கள், வருங்காலங்களில் நவமான திராட்சரசத்தில், திவ்யச் சுபாவத்தில், இராஜ்யத்தில் ஜீவன் மற்றும் சந்தோஷங்களில் அவரோடுகூடப் பங்குக்கொள்வார்கள்.

யோவான் 2:11...என்ற நமது பாடத்திற்குரிய ஆதார வசனப்பகுதியின் கடைசி வசனத்திற்கு இசைவாக திராட்சரசத்தின் ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது. மேலும், அந்த நமது கர்த்தரின் அற்புதமானது, வரவிருக்கிற அவருடைய மகிமையையும், அவருக்கு உண்மையாய் இருந்தவர்களுக்கு அவர் அளிக்கப்போகும் ஆசீர்வாதங்களையும் வெளிப்படுத்துகின்றது.

---

**R1695**

# "இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல்"

## யோவான் 2:13-25

"என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்" - யோவான் 2:16.

நமது கர்த்தர் செய்த இந்தக் காரியத்தைக் குறித்துப் பதிவு செய்த மற்றச் சுவிசேஷகர்கள், இந்தச் செயல்பாட்டின் பல்வேறு பதிவுகளை அவருடைய ஊழியத்தின் முடிவு காலத்தில் நிகழ்ந்ததாக தெளிவாகப் பொருத்தியுள்ளனர். அதேசமயம் யோவான் இங்கு இதை அவருடைய பொது வேலையின் (public work) துவக்க காலத்தில் நடந்த சம்பவங்களோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்; இருந்தபோதிலும் அந்த ஒரு சம்பவம் அனைவராலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றச் சுவிசேஷங்களைப் போலவே, யோவான் சுவிசேஷ புஸ்தகத்தின் கடைசி வசனம், அவரைத் தேடிக்கொண்டிருந்த பகைமை உணர்வுகொண்ட ஏராளமான எதிரிகளைக் காண்பித்து, இப்படிப்பட்ட மனநிலை அவருடைய ஊழியத்தின் துவக்க காலத்தில் காணப்படவில்லை என்பதாகக் காட்சியளிக்கிறது.

இயேசுவின் அதிகாரப்பூர்வமான இந்தச் செயல்பாடு, அவருடைய ஊழியத்தின் இறுதியில் நிழல் போன்ற ஒரு புதுமையான பொருத்தத்தைக் கொண்டிருந்தது. இச்சம்பவமானது, "இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்..." என்ற தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாக, அவர் எருசலேமுக்குள் வெற்றி ஆரவாரத்தோடு நுழைந்ததைத் தொடர்ந்து உடனடியாக நிகழ்ந்தது (சகரியா 9:9). மேலும், தேவாலயத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவம், இஸ்ரயேலின் இராஜா என்ற நியாயமான உரிமையின் அடிப்படையிலான அதிகாரத்தின் விளைவாகவே நிகழ்ந்தது என்பது ஓர் ஊகமாக இருந்தது; ஆயினும், அந்த உரிமை யூதர்களால் நிராகரிக்கப்பட்டது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11). பின்பு, அவர்கள் தங்களிடத்திலிருந்த தேவனுடைய கிருபையைப் புறக்கணித்து, அதற்குத் தங்களைத் தகுதியற்றவர்களாக்கினதைப் பார்த்த அவர், புறஜாதிகளிடமாகத் திரும்பி, தம்முடைய நாமத்திற்கென்று ஒரு ஜனத்தை அவர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுத்தார். இந்தத் தெரிந்தெடுத்தலுக்குச் சுவிசேஷ யுகத்தின் பதினெட்டு நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. மேலும், அந்த மாம்சீக இஸ்ரயேல் வீட்டாரும், இந்த ஆவிக்குரிய இஸ்ரயேல் வீட்டாருமாகிய சுவிசேஷ சபை ஒன்றுக்கொன்று நிழலும், பொருளுமாகக் காணப்படுகின்றனர்; அதாவது, சூழ்நிலைகள் மற்றும் காலம் விஷயத்தில்,

தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். அவருடைய சிலுவை மரணத்திற்குச் சற்றுமுன் நடந்த சம்பவமாகிய இந்த ஆலயத்தைச் சுத்திகரித்தல், நிஜத்தில் அதற்குச் சரிநிகரான சுவிசேஷ யுகத்தில் 1878-ஆம் வருஷம் துவங்கியதாக ஆராய்ந்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது (ஆங்கிலத்தில் பார்க்கவும் vol 2, பக்கம் 239). அதாவது, சரீரத்தின் அங்கங்களாவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவிக்குரிய ஆலயத்திலிருந்து, அதாவது, அவருடைய சரீரமாகிய அர்ப்பணிக்கப்பட்ட சபையிலிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர். மேலும், தகுதியும், உத்தம இருதயமும் உள்ளவர்கள் இதற்கு ஏற்றவர்களாக ஆசீர்வதிக்கப்பட்டனர்.

சிறு கயிறுகளினால் உண்டாக்கப்பட்ட சாட்டையானது, இங்குச் சுத்திகரிப்பின் வேலையை நிறைவேற்றக்கூடிய கிறிஸ்துவின் இசைவான போதனைகளைக் குறிக்கும் பொருத்தமான சின்னமாக இருக்கின்றது.

எந்த அதிகாரத்தினாலே அவர் இவைகளைச் செய்தார் என்பதற்கான அடையாளம் என்ன என்று கேட்கப்பட்டபோது, இயேசு தம்முடைய எதிர்க்கால வல்லமையை அதாவது அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்னான அதிகாரத்தைச் சுட்டிக்காண்பித்தார் (வசனங்கள் 18-21). அத்தருணத்திலேயே அந்த வேலையின் நிஜத்தை ஆரம்பிக்க, அவருக்கு அதிகாரம் இல்லாதிருந்தது. அவர் செய்த காரியம் வெறும் நிழலானதே. அது சபையுடைய பிரயோஜனத்திற்கே அல்லாமல் மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்காக அல்ல.

வசனங்கள் 23-25 (Diaglott). இந்தச் சமயத்தில் ஜனங்கள் அவருடைய அற்புதங்களினால் பெருமளவில் கவரப்பட்டவர்களாகக் காணப்பட்டு, அவருக்கு முன்பாக ஓசன்னா! என்று ஆர்ப்பரித்து, அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்வதற்கும், உடனடியாக அவரை இராஜாவாக அறிக்கை செய்வதற்கும் தயாராக இருந்ததாகக் காணப்பட்டாலும், இயேசு அவர்களை நம்பவில்லை (மத்தேயு 21:9-11). காரணம், அவர் அவர்களுடைய இருதயத்தின் நிலையில்லா தன்மையை அறிந்திருந்தார். மேலும், அவர் ஆவிகளைப் பகுத்தறியும் திறன் பெற்றிருந்தபடியால், எந்த மனுஷனும், தன்னை அவருக்கு நிரூபித்துக் காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. காரணம், அவர்களுக்குள் இருந்ததை அவர் அறிந்திருந்தார் (லூக்கா 20:41-47).

"என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்" என்ற இந்தப் பொன்னான வசனமானது, உண்மை ஆலயமாக, அதாவது அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட வீட்டாராக இருப்பதாக அறிக்கையிடுகிற அனைவராலும் அதிக கவனம் கொடுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. தேவனுடைய ஆலயம் சுத்திகரிக்கப்பட்டு, புடைக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படக்கூடிய இக்காலத்தில், தேவனுடைய பரிசுத்த காரியங்களை எவ்விதத்திலாவது வியாபாரமாக்கும்படி நோக்கங்கொண்டிருக்கும் எவரும் தேவனுடைய ஆலயத்தில் தரித்திருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

---

**R4124**

# "மறுஜென்மகாலமும் இராஜ்யமும்"

## யோவான் 3:1-21

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" - யோவான் 3:16.

கிறிஸ்தவ மண்டலமெங்கும் பொதுவாக நிலவி வரும் தவறான மற்றும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டிராத கருத்துக்களையும், வேத விளக்கங்களையும் இப்பாடமானது

சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகிறது. ஆச்சரியமென்னவெனில் (தேவ வார்த்தை அல்லாத) மற்றக் காரியங்களில் நன்கு பகுத்தறியும் ஆற்றல்கொண்டிருக்கும் ஜனங்கள், தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் வெளிப்படும் நியாயங்களை/அறிவைப் புறக்கணித்துவிடுகின்றனர். இவ்விஷயத்தைக் குறித்து நிலவிவரும் விளக்கம் என்னவெனில், இயேசு ஒரு சபையை ஸ்தாபிக்க இருந்ததாகவும், அதை அவர் தேவனுடைய இராஜ்யம் என்று அழைப்பதாகவும், எவ்விதத்திலேயும் அது உலக இராஜ்யத்தின் சாயலையோ அல்லது எவ்வித உலகத்தின் ஆளுகையோடு தொடர்போ பெற்றிருக்கவில்லை என்று நிக்கொதேமுவுக்குக் கற்பித்தார் என்பதும் ஆகும். மேலும், அவருடைய சபையை நிக்கொதேமு, இராஜ்யமாகக் கருதும் விதத்தில் நமது கர்த்தர் பேசினார் என்றும் கருதப்படுகின்றது, காரணம், தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்பட்டிருப்பதுபோல, பூமியிலேயும் செய்யப்படும்படியாக, இறுதியில் அந்த இராஜ்யம் பூமியெங்கும் பரம்பி இருக்கும்/ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் என்பதினாலாகும். இவர்களுடைய இந்தக் கருப்பொருளை இன்னும் அதிக அர்த்தமற்றதாக்குவதற்கு இவர்கள், ஒருவர் முதலாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாவிட்டால் இந்த இராஜ்யத்தைப் புரிந்துக்கொள்ளவோ அல்லது அதற்குள் பிரவேசிக்கவோ கூடாது என்று நமது ஆண்டவர் இங்கு அறிக்கையிட்டதாகத் தெரிவிக்கின்றனர். இதைப் பற்றின அர்த்தமற்றக் காரியங்கள் அனைத்தையும் இப்பொழுது கவனியுங்கள்.

ஏறத்தாழ பத்தொன்பது நூற்றாண்டுகளாக, உலகத்திலுள்ள கத்தோலிக்கர், புராட்டஸ்டண்டு ஆகிய இருவருடைய மொத்த எண்ணிக்கைக் கிட்டதட்ட 400-மில்லியன் ஆகும். இவர்களுக்குள் கிறிஸ்தவ மண்டலத்தார் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்களாகிய சகல நாகரிகமான தேசங்களிலுள்ள தரைமட்டமானவர்களும், முரட்டுத்தனமானவர்களும், கடினமானவர்களும் அதாவது கெட்டவர்களும், கீழான சூதாட்டப்பழக்கம் உள்ளவர்களும், மாசுடையவர்களும் (கிறிஸ்தவர்கள் என்ற பெயரைத் தரித்துக்கொண்டு) உள்ளடங்குகின்றனர். மீதியானோர் அதாவது, கர்த்தர் இயேசுவைக் குறித்து ஒருபோதும் கேள்விப்பட்டிராதவர்களோ அல்லது கேள்விப்பட்டும் அவரை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களோ பன்னிரண்டாயிரம் மில்லியன் கணக்கானவர்கள். இன்று புறஜாதிகளின் எண்ணிக்கையோ, அநேகமாக, கர்த்தர் நிக்கொதேமுவோடு பேசிக்கொண்டிருந்த காலகட்டத்தில் இருந்த ஒட்டுமொத்த பூமியின் ஜனத்தொகையைப் பார்க்கிலும் பலமடங்கு அதிகரித்துள்ளது. உலகம்தான்/உலகத்தார்தான் இராஜ்யமா? நிச்சயமாக இல்லை! ஆனால் இன்று நாம், "கிறிஸ்தவ மண்டலம்" என்று அழைக்கப்படக்கூடிய 400 மில்லியன் மக்களை உற்று நோக்கி, நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று அவர்கள் தங்களைக் குறித்து அறிக்கை செய்துக்கொண்டிருக்கும் திரைக்குப் பின்னாகக் காணப்படும் அவர்களின் உண்மையான தோற்றம் என்ன என்று நாம் முடிந்தளவு நன்றாக நிதானித்துப் பார்ப்போமாக. அவர்களில் எத்தனைபேர் மறுபடியும் பிறந்ததாகவும், மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டதாகவும், பரத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டவர்களாகவும், பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலைப் பெற்றுக்கொண்டதாகவும் அறிக்கை செய்துள்ளனர். உண்மையைச் சொல்லப்போனால், ஒருவரும் இல்லை; சந்தேகமின்றி, நமது கர்த்தருடைய நாளில் இருந்ததுபோலவே ஒரு "சிறு மந்தை" மட்டுமே.

இப்பாடத்தைக் குறித்து எவருக்கேனும் சந்தேகம் இருப்பின் அவர், புதுப் பிறப்பு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்தல் என்பதைக் குறித்து தனது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் அயலகத்தார் மத்தியில் விசாரிக்கக்கடவர்கள். பின்னர் அவர்கள் ஒரு முழு அர்ப்பணிப்பு அல்லது தேவனுக்கென்றும், அவருடைய பணிக்கென்றும் நம்முடைய நேரம், பெலன் மற்றும் நமக்குண்டான அனைத்தையும் தத்தம்செய்தல் குறித்தும், ஜெநிப்பித்தல் மற்றும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுதலின் மூலம் அடையாளப்படுத்தப்படும் இருதயத்தின் மாற்றம் குறித்தும், நீங்கள் விளக்கிக் காண்பித்த பிறகு உங்களுடைய நண்பர்கள் மற்றும் அயலகத்தார்களில் எத்தனைபேர் முழு ஈடுபாட்டோடு அர்ப்பணித்துள்ளனர் அல்லது பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளனர் என்று வினவுங்கள். இராஜ்யத்தைக் குறித்த இந்தப் பொதுவான (கிறிஸ்தவமண்டல) கண்ணோட்டத்தில் மாபெரும் தவறு இருக்கின்றது என்றும், இந்தப் பொதுவான (கிறிஸ்தவமண்டல) கருத்தின்படி நமது கர்த்தர் பேசவில்லை என்றும், இது ஏற்றுக்கொள்ள முடியாத விளக்கம் என்றும் நீங்கள் தெளிவுடன் காணப்படுவீர்களானால், உங்களுக்கு நமது விளக்கத்தின் மீது இவ்வளவு கேள்விகள்/சந்தேகங்கள் எழும்ப வாய்ப்பில்லை.

இவ்விஷயத்தைக் குறித்த பொதுவான (கிறிஸ்தவ மண்டலத்தாரின்) கருத்து முற்றிலும் தவறு என்ற முழு நிச்சயத்துடன் நாம் சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கும், மூடநம்பிக்கைகளிலிருந்து சத்தியம் நம்மை விடுவிப்பதற்கு ஏதுவாகவும், சத்தியம் நமக்கு வெளிச்சத்தையும், சந்தோஷத்தையும், உதவியையும் கொண்டு வருவதற்கு ஏதுவாகவும் இப்பொழுது தெளிந்த சிந்தையுடன் நம்முடைய இந்தப் பாடத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் ஜெபத்துடனும், கவனத்துடனும் கவனிப்போமாக.

## “நிக்கொதேமுவும், பிரதான போதகரும்”

யூதர்களுக்குள்ளே செல்வாக்குமிக்க மனிதனாகவும், ஆலோசனை சங்கத்தில் ஓர் அங்கத்தினராகவும், பரிசுத்தத்தின் மாதிரியாக அதாவது, தேவனுக்கான அர்ப்பணிப்பில் மாதிரியாக பரவலாக அறியப்பட்டிருந்த பரிசேயனாகிய நிக்கொதேமு, இயேசுவைச் சந்திக்க இரவில் வந்தார். இவர் இராக்காலங்களில் வந்ததற்கான காரணம் இவருடைய பயமாயிராமல், இவர் மற்றவர்கள் மற்றும் தனக்கான நலன்/நன்மைக் குறித்து, கொண்டிருந்த முன்யோசனையினாலேயே இரவில் வந்தார். அவர் இராக்காலத்தில் வந்ததன் காரணம், அநேகமாக, போதகருடன் தனிப்பட்ட முறையில் பேசுவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவே ஆகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர் மிகுந்த பயபக்தியும், நற்பண்புள்ளவராகவும் காணப்பட்டார். இவர் நமது ஆண்டவரை ரபீ அல்லது ஆண்டவர் என்று அழைத்து இயேசு தேவனிடத்திலிருந்து வந்த ஆண்டவர் என்றும், தேவனுடைய ஊழியக்காரர் என்றும், இயேசுவின் அற்புதங்கள் வாயிலாக இயேசுவின் மீதான, தேவனுடைய பிரியம் வெளிப்படுத்தப்பட்டது என்றுமுள்ளவைகளின் மீதான தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இராக்கால உரையாடலின் ஒரு சிறிய பகுதியே கொடுக்கப்பட்டுள்ளது. யோவானும், அவருடைய சீஷரும், அதைத்தொடர்ந்து இயேசுவும் அவருடைய சீஷரும் போதித்து வந்த தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து அறிந்த நிக்கொதேமு, அதைக் குறித்தே கேள்வி கேட்க வந்திருக்கவேண்டும் என நாம் நியாயமாக ஊகிக்கலாம். வேத வாக்கியங்களின் மாணவராக இருந்த நிக்கொதேமு, தேவனுடைய இராஜ்யத்தை எதிர்ப்பார்த்துக் காத்திருக்க வேண்டும் என்பதையும், அது இஸ்ரயேலின் ஆசீர்வாதம் மற்றும் எடுப்பித்துக் கட்டுதலுக்குமான தேவனுடைய ஏற்பாடு என்பதையும், இறுதியாக, “பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்று ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாகவும் காணப்படும் என்பதையும் அறிந்திருந்தார். இயேசுவின் மீது நம்பிக்கைக்கொண்டிருந்த இவர், இந்த இராஜ்யத்தைக் குறித்த விவரங்களைக் கற்றுக்கொள்ள விரும்புவதற்கான காரணம், யோவான் ஸ்நானனோ அல்லது இயேசுவோ, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படப்போகிற விதம் குறித்த எவ்விஷயத்தையும் வெளிப்படுத்தவில்லை என்பதாகும்; அதாவது, (இராஜ்யத்திற்கு) போர் வீரர்கள் எங்கிருந்து ஆயத்தம் பண்ணப்படப்போகிறார்கள் என்றும், எவ்விதம் அவர்கள் பயிற்சியளிக்கப்படப்போகிறார்கள் என்றும், எங்கிருந்து போராயுதங்கள் கொண்டுவரப்பட்டு, அதற்குத் தேவையான சாதனங்கள் வாங்குவதற்குப் பெருந்தொகை திரட்டப்படும் என்றுமுள்ள எவ்விஷயத்தையும் வெளிப்படுத்தவில்லை என்பதாகும். இக்கேள்விக்கான நமது கர்த்தருடைய பதில், “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்பதாக இருந்தது.

ஓர் இராஜாவையும், ஒரு மகிமையான பரிவாரத்தையும், முன்பிருந்த எந்த இராஜாவைப் பார்க்கிலும் அதிக பிரமாண்டமான இராஜாவாக, மனுஷர் மத்தியில் பரலோக அதிகாரம் மற்றும் வல்லமையைப் பெற்றிருக்கும் மேசியாவை இராஜாவாக எதிர்ப்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த நிக்கொதேமுவுக்கு, (இயேசுவின் பதிலால்) ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை நம்மால் உணரமுடிகின்றது. ஒருவர் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காண இயலாது என்று சொல்லப்பட்டபடியினால், அவருக்கு ஏற்பட்ட குழப்பத்தை இப்பொழுது நிதானித்துப்பார்ப்போம். அவருடைய ஆழ்ந்த சிந்தையில் பெருங்குழப்பம் ஏற்பட்டிருப்பதை, “ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்?” என்ற அவருடைய மறுமொழியின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. “இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான். மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால்

பிறப்பது ஆவியாயிருக்கும்" என்ற நமது கர்த்தருடைய பதிலைக்கொண்டு இக்கருப்பொருள் மீது அவர் ஒரு சிறிய வெளிச்சத்தைப்பெற ஆரம்பித்தார்.

மிகச் சொற்பமான வார்த்தைகளிலிருந்து, நிக்கொதேமு சில "பலமான ஆகாரத்தைப்" பெற்றுக்கொண்டார். இவ்வறிக்கையிலிருந்து, அந்த இராஜ்யம் மாம்சத்துக்குரிய (அ) பூமிக்குரிய இராஜ்யமாக இராமல், ஓர் ஆவிக்குரிய இராஜ்யமாக, ஒரு பரலோக இராஜ்யமாக இருக்கும் என்பதை அவர் புரிந்திருக்க வேண்டும். மாம்சத்தின்படியான இயற்கையான பிறப்பு என்பது, ஒரு புதிய பிறப்பை, ஓர் ஆவிக்குரிய பிறப்பை விளக்கிக்கூறும் அடையாளமே என்பதை அவர் நன்கு உணர்ந்திருக்கக்கூடும். மேலும் தேவனுடைய இராஜ்யம், எந்தப் பூமிக்குரிய இராஜ்யத்தைப் பார்க்கிலும் உயர்ந்த தளத்திலிருக்கும் என்றும், அது பொதுவான மனுக்குலத்தால் காணக்கூடாததும், நுழையமுடியாததும், அதன் அங்கத்தினராக முடியாததுமான ஓர் ஆவிக்குரிய இராஜ்யமாக இருக்கும் என்றும் கர்த்தர் குறிப்பிடுவதாக நிக்கொதேமு புரிந்துக்கொண்டிருக்க வேண்டும். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவியினால் பிறக்கக்கூடியவர்கள் மட்டுமே உண்மையில் அந்த ஆவிக்குரிய இராஜ்யத்தைப் பார்க்கவும், அதற்குள் நுழையவும்கூடும். ஆனால் நமது கர்த்தர், "ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால்" என்றும் கூறுகிறார். தண்ணீர் என்றதும், பாவங்களுக்கான மன்னிப்பாகவும், மனந்திரும்புதலுக்கான அடையாளமாகவும் யோவான் ஸ்நானனும், அவருடைய சீஷர்களும் பிரசங்கித்துக்கொண்டிருந்த தண்ணீர் ஞானஸ்நானம் குறித்து அநேகமாக நிக்கொதேமுவின் சிந்தைக்கு வந்திருக்கும். பெந்தெகொஸ்தே நாள்முதல் இன்றுவரை வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கோ, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் மற்றும் போதனையின் கீழ்த் தேவனுடைய ஆழங்களின் மீதான புரிந்துக்கொள்ளுதல் கொடுக்கப்பட்டுள்ளது; அதாவது, நமது கர்த்தர் குறிப்பிட்டுள்ள தண்ணீருக்கு இன்னும் ஆழமான அர்த்தமுள்ளது என்று புரிந்திருக்கின்றோம். அடையாளமான தண்ணீர், "சத்தியத்தை" அடையாளப்படுத்துவதாகவும், பரிசுத்த ஆவியினாலே நம்முடைய ஜெநிப்பித்தல் என்பது, அப்போஸ்தலர் கூறுகிறபடி, "சத்திய வசனத்தினாலே" ஜெநிப்பிக்கப்படுதலை அடையாளப்படுத்துவதாகவும் நாம் காண்கிறோம் (யாக்கோபு 1:18). அப்போஸ்தலனாகிய பவுலும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் அறிக்கையிடும்போது, "தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" என்றார். இக்காரியங்கள் அனைத்தையும் ஒன்றுசேர்க்கும்போது, நாம் பெறும் கருத்து என்னவெனில், நம்முடைய மறுஜென்மம் (அ) பரிசுத்த ஆவியினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் மற்றும் பரிசுத்த ஆவியினாலே புதிதாக்கப்படுதலாகிய இரண்டும், தெய்வீகச் செய்தியாகிய சத்தியத்தின் செயல்பாட்டினால் விளையும் சுத்திகரிப்பினால் வருகின்றது. இக்காரியம், இஸ்ரயேலரின் ஆசரிப்புக்கூடார ஊழியத்தில் அழகாக அடையாளப்படுத்தப்படுகிறது. எப்படியெனில், ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு, தண்ணீர் தொட்டியில் தங்களைச் சுத்திகரித்துக்கொள்வது போன்று, புதுச் சிருஷ்டிகள் ஆகுவதற்கு முன்பு தண்ணீர் அடையாளப்படுத்தும் தேவனுடைய வார்த்தையினால், சத்தியத்தினால் அதாவது, புதிதாக்கும் தண்ணீரினால் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டும். இப்படியாகவே, நாம் கர்த்தரிடத்திலான ஓர் அர்ப்பணிப்பிற்குள்ளாகக் கடந்து வருகின்றோம். இவ்வர்ப்பணிப்பின் காரணமாக நம்மை ஏற்றுக்கொள்வதில் கர்த்தர் பிரியம் கொண்டு, தமது பரலோக அல்லது ஆவிக்குரிய குடும்பத்திற்குள்ளாகச் சேர்த்துக்கொள்வதற்கு ஏதுவான புத்திரசுவிகாரத்தின் ஆவியை நமக்கு அருளுகின்றார்.

## "பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்"

நிக்கொதேமு, இராஜ்யத்தையும், அந்த இராஜ்யத்தைக் காண்பதற்கும், அதற்குள் பிரவேசிக்கிறதற்குமான வழிமுறைகளையும், நிபந்தனைகளையும் குறித்து இயேசு கூறியவைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்தார். "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்" என்று நமது கர்த்தர் பதிலளித்தார். பின்னர் ஆவியில் பிறக்கிற ஒருவன் எப்படி இருப்பான் என்பதற்கான விளக்கத்தை இயேசு நிக்கொதேமுக்குக் கூறினார். ஆவிக்குரிய ஜீவிகள் கண்களுக்குப் புலப்படாமல் இருப்பினும், அவைகள் உண்மையாய் இருக்கின்றது என்ற விஷயத்தின் மீது நிக்கொதேமுவின் கவனத்தைத் திருப்பினார்; கண்களுக்குப் புலப்படாத காற்றை, இயேசு எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டார். காற்றானது எங்கிருந்து வருகின்றது? என்றோ,

எவ்விடத்திற்குப் போகிறது? என்றோ நாம் அறியோம்; ஆனாலும், அதன் ஆற்றலை நாம் அறிவோம்; அதன் சத்தத்தைக் கேட்கவும், அது உண்டுபண்ணும் விளைவுகளைக் காணவும் நம்மால் முடிகின்றது. இதையே ஆவியில் பிறந்தவர்களுக்கான எடுத்துக்காட்டாக நமது கர்த்தர் நிக்கொதேமுவுக்கு எடுத்துரைத்தார்; அதாவது ஆவியில் பிறந்தவர்கள், பிரசன்னமாய் இருந்தாலும், ஆற்றல் உள்ளவர்களாய் (Powerful) இருந்தாலும், அவர்கள் கண்களுக்குப் புலப்படாமலும், தொட்டு உணரப்படாமலும் இருப்பார்கள். இவர்களே இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, இராஜ்யமாக இருப்பார்கள். நமது கர்த்தருடைய பேச்சை/கருத்தை மிகக் கவனமாய்க் கவனிக்க வேண்டும், இல்லையேல் தவறான சில கருத்துக்கள் நம்மையும் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். யாரையும் வேதவாக்கியங்களைப் புரட்டி, கர்த்தர் இவ்விடத்தில் பேசாதக் கருத்தைக் கர்த்தர் பேசினதாகக் கூற நாம் அனுமதிக்கக்கூடாது. நம்மை ஜெநிப்பிக்கும் (begotten) கண்களுக்குப் புலப்படாத ஆவியைக் குறித்துதான் கர்த்தர் இவ்விடத்தில் பேசியுள்ளார் என்பதான யோசனைகளை நாம் ஏற்க மறுத்துவிட வேண்டும். நம்மை ஜெநிப்பித்த ஆவி கண்களுக்குப் புலப்படாதது என்பது உண்மையாக இருப்பினும், இவ்வசனப் பகுதியில் நமது கர்த்தர் இதைக் குறித்துப் பேசவில்லை. பரிசுத்த ஆவி உலகத்தில் இங்கும், அங்குமாய்ச் சென்று கொண்டிருக்கும் என்றும், சிலரை ஜெநிப்பித்தும் (begotten), சிலரை கண்டுகொள்ளாமல் விலகிச் செல்வதால், யார் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளார்கள்? (begotten) யார் ஜெநிப்பிக்கப்படவில்லை? என்று நம்மால் அறிந்துக்கொள்ள முடியாது என்றுமுள்ள அனுமானங்களுக்குள் நமது மனதை தவறாய் நடத்தவும் நாம் விடக்கூடாது. இவைகளனைத்தும் குழப்பமான அனுமானங்களாகவும், வேதத்தில் எழுதப்பட்டுள்ளக் காரியங்களுக்கு முற்றிலும் எதிர்மாறாகவும் உள்ளது. யாருக்கெல்லாம் ஆண்டவரின் போதனைகளைக் குறித்துச் சரியான மற்றும் தெளிவான புரிந்துக்கொள்ளுதல் காணப்படுகின்றதோ, அவர்கள் சகல தேவ வார்த்தைகளுக்குக் கண்டிப்பாய்ச் செவிசாய்க்க வேண்டும். நம்முடைய கவனமின்மையின் காரணமாகவும், தேவனுடைய வார்த்தைகளுக்கு எவ்வளவேனும் இசைவில்லாத கருத்துக்களை (வேதத்தை வைத்துக்கொண்டு) விளக்குவதற்கு மற்ற மனிதர்களை நாம் அனுமதித்திருந்த காரணத்தினாலுமே நாம் இத்தனை நீண்ட காலங்கள் இருளில் இருந்துள்ளோம். தேவனுடைய வார்த்தைகளிலிருந்து நாம் ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது; மேலும் யாரெல்லாம் இப்படிச் செய்கிறார்களோ, அவர்கள் சத்தியத்திற்கு உண்மையற்ற ஊழியக்காரராகவும், கர்த்தருக்கு (எதிரான) உண்மையற்ற ஸ்தானாதிபதியாகவும் ஆகிவிடுவார்கள்.

ஆச்சரியமடைந்த நிக்கொதேமு, “இவைகள் எப்படி ஆகும்?” என்று பிரமிப்புடன் கேட்டார் (யோவான் 3:9); அதாவது “நியாயப்பிரமாணங்களையும், தீர்க்கத்தரிசனங்களையும் நூற்றாண்டுகள் காலமாக கற்றுக்கொண்டிருந்தவர்கள், இப்படித் தவறிழைப்பது சாத்தியமாகுமா?” என்ற விதத்தில் நிக்கொதேமு கேட்டார். இஸ்ரயேலில் ஒரு போதகனாக நிக்கொதேமு இருக்கும்பட்சத்தில், அவருடைய கவனத்திற்கு (இராஜ்யம் தொடர்பான தவறான) இக்காரியங்கள் கொண்டுவரப்பட்டபோது, அவர் இவைகளைப் பகுத்தறிந்திருக்க வேண்டுமென்று நமது கர்த்தர் அவருக்குப் பதிலளித்தார். தேவனுடைய இராஜ்யமானது பூமிக்குரியதாக இருக்கும் என நிலவிக் கொண்டிருக்கும் (தவறான) கருத்துக்களில் காணப்படும் சமாளிக்க முடியாத எதிர், புதிர்களை, நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனங்களைக் கற்றறிந்த கவனமுள்ள மாணவரான நிக்கொதேமு கண்டுபிடித்திருக்க வேண்டும். பின்னர் தேவனுடைய இராஜ்யமானது ஆவிக்குரிய ஒன்றாக இருக்கும் என்று வரும் அறிவிப்பை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்திருக்க வேண்டும். இந்த இராஜ்யமானது ஆவிக்குரியதாய் இருக்கும் என்பதை விளக்கும் விதமாகத்தான், “தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது, இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது,” மாறாக தேவனுடைய இராஜ்யமானது, மனுக்குலத்தின் மத்தியில் கண்களுக்குப் புலப்படாமல், அதேசமயம் சகல வல்லமையுடன் காணப்படும் என்று கர்த்தர் வேறொரு தருணத்தில் விளக்கிக் கூறினார் (லூக்கா 17:20, 21).

மேற்கூறிய விஷயங்களுக்கும், கர்த்தர் பேசின வார்த்தைகளான, “மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்” என்பதற்கும் இங்குத் தொடர்பு இருப்பதைக் குறித்து வேதபாட ஆராய்ச்சி புத்தகம் 5-ஆம் தொகுதியில் பக்கம் (English Page No 189, 192-இல்) நாம் ஏற்கெனவே காட்டியிருக்கின்றோம் (யோவான் 3:6). மாம்சத்தின் ஜெநிப்பித்தல் முதலாவது சம்பவியாமல், மாம்சத்தின் எவ்வித பிறப்பும்

சம்பவியாதது போன்று, ஆவியின் ஜெநிப்பித்தல் முதலாவது சம்பவியாமல், ஆவியின் எவ்விதமான பிறப்பும் சம்பவியாது. ஆவியில் ஜெநிப்பித்தல் என்பது தேவவார்த்தையின் மூலம் ஏற்படும் மறுஜென்ம முழுக்குத் தொடர்புடைய காரணத்தினால் வருகின்ற விஷயமாகும், மேலும், ஆவியில் ஜெநிப்பித்தல் என்பது தற்கால ஜீவியத்திற்குத் தொடர்புடையதாகும். புதுச் சிருஷ்டிகளாக, நாம் கர்த்தருடைய ஊழியத்திலுள்ள செயல்பாடுகளில் உயிர்ப்பிக்கும் படிநிலையை அடையும்வரையிலும், நாம் ஆவிக்குரியவைகளில் வளர்ந்து கொண்டிருக்க வேண்டும். மேலும், யாரெல்லாம் இவ்விதமாக ஜெநிப்பிக்கப்பட்டு, உயிர்ப்பிக்கப்படுகின்றார்களோ அதாவது, யாரிடத்தில் புதிய சித்தம் மரணம் வரையிலும் உண்மையுடன் காணப்படுகின்றதோ, இவர்கள் இவர்களுடைய உயிர்த்தெழுதலில் ஆவியில் பிறந்தவர்களாக இருப்பார்கள். இவ்விதமாகவே, நமது கர்த்தரும் தமது ஞானஸ்நானத்தின்போது, பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டார்; மேலும், அவருடைய உயிர்த்தெழுதலில் அவர் ஆவியில் பிறந்தவரானார்; அதாவது, மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானார்; அதாவது, அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர் ஆனார். கர்த்தரைப்போன்று அவருடைய சகோதரரும், அதாவது இராஜ்யத்தில் அவருடைய உடன்சுதந்தரர்களுமாய் இருப்பவர்கள், அவர்களின் மறுஜென்ம முழுக்கின்போது, பரிசுத்த ஆவியினால் இப்பொழுது ஜெநிப்பிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், அவர்கள் ஒருவேளை உண்மையாயிருக்கும் பட்சத்தில், அவர்களின் உயிர்த்தெழுதலின் மாற்றத்தில் அவர்களின் பிறப்புச் சம்பவிக்கும். "பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" (1 கொரிந்தியர் 15:43, 44). இவர்கள் நமது கர்த்தருடைய முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து, ஆவிக்குரிய சுபாவத்தையும், மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெற்றுக்கொள்வார்கள். அநேகர் இவ்விஷயத்தில் குழப்பமடைவதற்கான காரணம், 'Gennao' எனும் ஒரே கிரேக்க வார்த்தையானது, ஜெநிப்பித்தல் மற்றும் பிறப்பு எனும் இரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைக் கவனிக்கத் தவறினதாலேயே என்று நாம் இங்குக் குறிப்பிடுவது நலமாயிருக்கும்.

## "நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லுகிறோம்"

நிக்கொதேமுவின் சந்தேகங்களுக்கு விடையளிக்கும் விதத்தில், நமது கர்த்தர், இராஜ்யமானது ஆவிக்குரிய இராஜ்யமாக இருக்கும் என்றதான இந்தச் சாட்சியானது எவ்வித கற்பனையான கதை அல்ல என்று பதிலளித்தார். அதாவது, தாம் (இயேசு) கூறின சாட்சி மெய் என்று நிக்கொதேமுவுக்குத் தெரியும் என்றும், நிக்கொதேமுவின் பிரச்சனை, அவர் (நிக்கொதேமு) கற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பதேயாகும் என்றுமுள்ள விதத்தில் நமது கர்த்தர் பதிலளித்தார். நிக்கொதேமு நமது கர்த்தரை ரபீ, போதகர் என்று அழைத்தார்; இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்று, தான் நம்புவதாகவும் நிக்கொதேமு அறிக்கையிட்டார்; எனினும், இவர் முழு விவரமும் அறியாமல் முன்கூட்டியே தன்னிடத்தில் கொண்டிருந்த அபிப்பிராயங்களினால் கட்டுண்டவராக இருந்தபடியினால், இவருக்குப் போதனை வழங்க ஆற்றல் கொண்டிருந்த ஒரே நபரின் சாட்சியை ஏற்றுக்கொள்வதற்கு இவர் தயாராக இருக்க முடியவில்லை. பரலோக இராஜ்யத்தைக் குறித்து இன்னும் அதிகமாக தம்மால் கூற முடியும்; ஆனால் தம்மைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள், ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுவதால், தாம் ஆவிக்குரியவைகளைக் குறித்து இப்பொழுது பேசுவதும் ஏற்றதாக இருக்காது என்று நமது கர்த்தர் குறிப்பிட்டார். "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (யோவான் 3:12). நமது ஆண்டவருடைய இந்த வார்த்தைகள் கடிந்துகொள்ளுதலாக இராமல், யதார்த்தங்களைப் பேசுகிறதாக இருக்கின்றது என்று அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளிலிருந்து நாம் புரிந்துக்கொள்கின்றோம்; சுபாவத்தின்படியான மனுஷன், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாததால், அவனால் ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ள முடியாது என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். பெந்தெகோஸ்தே நாளன்று தமது பின்னடியார்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, ஆவிக்குரியவைகளையும், பரலோக/பரம காரியங்களையும் புரிந்துக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகவும், பாத்திரவான்களாகவும் அடையும் நிலையை எட்டும் வரை தெய்வீகத் திட்டத்தின் ஆழமான காரியங்களைக் குறித்த விளக்கங்கள் கொடுப்பதை நிறுத்தி வைத்திருந்தார். "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய

ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்” (1 கொரிந்தியர் 2:14).

சந்தேகத்திற்கிடமின்றி, இன்றும் இக்காரணங்களே பெரும்பாலான ஜனங்களுக்கு இடையூறாக/பிரச்சனையாகக் காணப்படுகின்றது; அதாவது, பெரும்பான்மையானவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. ஆகையால், அவர்களால் ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, நாம் பரிந்துரைப்பதென்னவெனில், சத்தியத்திற்குச் செவிசாய்க்க முடியாத செவிகளையுடைய யாரையாகிலும் நீங்கள் கண்டீர்களானால், சத்தியத்தை அவர்களுக்குள் திணிக்க முற்படாதீர்கள். மாறாக, வேறுவிதத்தைக் கையாண்டு, அவர்கள் அர்ப்பணிப்புச் செய்யத்தக்கதாக நாடுங்கள். . . . அதாவது கர்த்தருக்கும், அவருடைய ஊழியத்திற்குமான அர்ப்பணிப்பின் விஷயத்தில் அவர்கள் ஏற்கெனவே புரிந்து, கிரகித்து வைத்திருந்த கண்ணோட்டங்களோடு, முழு அர்ப்பணிப்பின் விளக்கங்களை ஒப்பிட்டு, முழு அர்ப்பணிப்புக் குறித்ததான நியாயமான கண்ணோட்டங்களை அவர்கள் முன் வையுங்கள். ஒருவேளை அவர்கள் தங்களை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்தலைப் பெற்றுக்கொண்டால், பின்னர் கர்த்தருடைய ஆழமான காரியங்கள் அவர்களுக்கு உரியதாகும்; அவைகளை அவர்களால் அப்போது புரிந்துக்கொள்ளவும் முடியும். இப்படிச் செய்வதே, ஜெநிப்பிக்கப்படாதவர்கள் முன்பு, ஆவிக்குரிய ஆழமான விஷயங்களாகிய தெய்வீகச் சத்தியம் எனும் முத்துகளைப் போட்டுவிடாத ஞானமாக இருக்கும். அதாவது, யுகங்களைக் குறித்ததான தெய்வீகத் திட்டத்தை மேலோட்டமாக, உலகத்தாரிடம் பொதுவாக கூறுவதும், தேவனுடைய கிருபையை விருதாவாக பெற்றுக்கொள்ளக்கூடாது என்று புத்திமதிக் கூறுவதும், புதுச் சிருஷ்டிகளாக, தேவனுடைய குமாரர்களாகிய ஆவிக்குரிய உடன்படிக்கையின் உறவிற்குள் வருபவர்களுக்கு மாத்திரம் ஆழமான காரியங்கள் கொடுக்கப்படும் என்றும், இவ்வுடன்படிக்கையின் உறவிற்குள் வருகிறவர்கள் மாத்திரமே ஆழமான காரியங்களைப் புரிந்துக்கொள்ளும் நிலையை அடைய முடியும் என்றும், பரத்திலிருந்து வரும் ஞானம், இவ்வுடன்படிக்கையின் உறவிற்குள் வருகிறவர்களுக்குக் கிடைக்கும் என்று அவர்களுக்கு உறுதி கூறுவதுமே ஞானமாகும்.

## “பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை”

நமது கர்த்தரின் இவ்வார்த்தைகள், நிக்கொதேமுவுக்கு எவ்வித ஆச்சரியத்தையும் எழுப்பவில்லை, ஏனெனில் மரித்தவர்கள் உயிரோடு இருக்கின்றார்கள்; அதாவது, முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகம் ஜீவனுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்று அந்நிய தெய்வங்களை வணங்கி வரும் ஜனங்கள் மத்தியில் நிலவி வரும் கருத்தானது, நியாயப்பிரமாணத்திலோ அல்லது தீர்க்கத்தரிசிகள் கூறின வார்த்தைகளிலோ அல்லது பாரம்பரியமான யூத மார்க்கத்தின் போதனைகளிலோ காணப்படவே இல்லை. மரித்தவர்கள், மரித்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள் என்றும், மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள் என்றும், மேசியா வந்து சாபத்தை மாற்றிப் போட்டு, மனுஷர்களைச் சீர்த்தூக்கவும், தேவனிடத்தில் மீண்டும் ஒப்புரவாக்கவுமெனப் பரலோக இராஜ்யத்தை மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கும்போது, உயிர்த்தெழுதல் சம்பவிக்கும் என்றும் இஸ்ரயேலர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் இன்று, அந்நிய தெய்வங்களை வணங்கும் ஜனங்களின் தப்பறையான கருத்துக்களும், “மரித்தவர்கள், மரணத்திற்குப் பின்பு ஜீவனோடு இருந்த நாட்களில் இருந்ததைக் காட்டிலும் அதிக ஜீவனுள்ளவர்களாக இருப்பார்கள்” என்ற பிளாட்டோவின் (Plato’s Philisophy) தத்துவங்களும், சகல குழப்படியான உபதேசங்களும் கிறிஸ்தவ மண்டலத்தையும் ஆட்டிப்படைக்கின்றது. யதார்த்தமான, அறிவுள்ள சில ஜனங்கள் . . . நம்மிடம் தாங்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்புவதாகவும், அதேசமயம் மரித்தவர்கள் மரிக்கவில்லை என்றும் ஒரே மூச்சில் கூறிவிடுகின்றனர். ஒருவேளை மரித்தவர்கள் மரிக்கவில்லையென்றால், எப்படி மரித்தவர்கள் உயிர்த்தெழுப்பப்படக்கூடும் என்ற கேள்விக்கும், அவர்களால் பதில் அளிக்க முடியவில்லை. ஆண்டவருக்குப் போதிக்க விரும்புவதைக்காட்டிலும், ஆண்டவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்துடன் இப்பாடத்தைப் படிக்கின்ற அனைவரும், அவருடைய இவ்வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்க்கக்கடவோம். அதாவது, “பரலோகத்துக்கு

ஏறினவன் ஒருவனுமில்லை" (இவ்வசனப் பகுதியில் இடம்பெறும் வார்த்தையான "பரலோகத்திலிருக்கிறவருமான" என்பது பழைய கிரேக்கப் பகுதிகளில் காணப்படுவதில்லை என்பதையும் இங்குக் குறிப்பிடுகின்றோம்) என்ற அவருடைய இவ்வார்த்தைகளுக்குக் கவனமாய்ச் செவிசாய்க்கக்கடவோம்..

## "வனாந்தரத்தின் சர்ப்பம்"

இப்பாகத்திலிருந்து தொடரும் பிந்தைய வசனப் பகுதிகள் நிக்கொதேமுவிடம் பேசப்பட்டதில்லை. மாறாக, நம்முடைய கர்த்தருடைய பல்வேறு போதனைகளை அச்சுவிசேஷப் புஸ்தகத்தின் ஆசிரியர் அவ்விடத்தில் ஒன்றாகத் தொகுத்து எழுதியுள்ளார் என்று நாம் எண்ணுகின்றோம்.

வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பம் உயர்த்தப்பட்ட காரியமானது 14-ஆம் வசனத்தில் கூறப்பட்டதற்கான காரணம், நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கான அந்த நிழல் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதற்கேயாகும். பாவத்தின் காரணமாக இஸ்ரயேலர்கள் எப்படிப் பயங்கரமான சர்ப்பங்களால் தீண்டப்பட்டார்கள் என்றும், எத்தனை கொடிதான வலியை இதன் காரணமாக அனுபவித்தார்கள் என்றும், மோசே தெய்வீக நடத்துதலினால் வெண்கல சர்ப்பத்தைச் செய்து உயர்த்தி நாட்டினதுவரையிலும் எத்தனை திரளானோர் மரித்துப் போனார்கள் என்றுமுள்ள சம்பவத்தை நாம் நினைவுகூருகின்றோம். விசுவாசத்தினால் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்த ஒவ்வொரு இஸ்ரயேலனும் சொஸ்தமாக்கப்பட்டான். இதன் நிஜத்தை நாம் பார்க்கலாம். முழு உலகமும், பாவத்தினால் தீண்டப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். "ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது" (ரோமர் 8:22). 18 நூற்றாண்டுகளுக்கு முன்பாக மனுஷகுமாரனாகிய இயேசு கல்வாரியில் உயர்த்தப்பட்டார், அவர் பாவியாகக் கருதப்பட்டார். இயேசுவின் நீதியை விரும்பும் யாவருக்கும் அதை, இயேசு வழங்கும் உரிமையை அவர் பெற்றுக்கொள்ளவும், அவர்களைச் சொஸ்தமாக்கி, நித்தியத்திற்குரிய ஜீவனைக் கொடுக்கவும் ஏதுவாக நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டது.

"தம்மை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும்" (யோவான் 3:15). இதுவரையிலும் சிலர் மாத்திரமே அவரை விசுவாசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர்; நம்முடைய கர்த்தருடைய நாட்களிலும், இன்றைய நாட்களிலும், காணப்படும் திரளான ஜனங்கள் மீட்பரைக் குறித்தும், அவருடைய பலி மற்றும் அவரை நோக்கிப்பார்ப்பதின் மூலமாக வரும் ஆசீர்வாதங்கள் குறித்தும் முழுமையான அறியாமையில் காணப்படுகின்றார்கள். இவர்கள் ஒருபோதும் நோக்கிப் பார்க்க மாட்டார்களா? இவர்கள் ஒருபோதும் இவைகளையெல்லாம் அறிந்துக்கொள்ள மாட்டார்களா? இவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவன் பெற்றுக்கொள்ள மாட்டார்களா? சுவிசேஷ யுகத்தில் விசேஷமான தயவைப் பெற்றுக்கொண்டவர்களாகிய, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை மாத்திரம்தான் இந்த மாபெரும் வாய்ப்பைப் பெறுவார்களா? ஏற்ற காலத்தில் தேவன் தம்முடைய கிருபை/இரக்கத்தைக் குறித்ததான அறிவு மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் சென்றடையத்தக்கதாக செய்வார். இதுவே 16-ஆம் வசனத்திலுள்ள நம்முடைய ஆண்டவரின் வார்த்தைக்கான முக்கியத்துமாகும். ஆ! ஆம்! இது ஆசீர்வாதமான வாக்குறுதியாகும். தேவனுடைய இரக்கத்தினால் இயேசு எல்லா மனுஷருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என்றாலும், "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்;" "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்ற வசனத்தின் காரியங்களினாலும் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் (எபிரெயர் 2:9; 1 யோவான் 2:2). இறுதியில் முழு உலகமும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களைப் புரிந்துக்கொள்ளத்தக்கதாகவும்,

பார்க்கத்தக்கதாகவும் தங்களுடைய கண்களும், காதுகளும் திறக்கப் பெற்றிருக்கும் சிலாக்கியத்தையும், வாய்ப்பையும் பெற்றுக்கொள்வார்கள்.

17-ஆம் வசனத்தை நாம் எத்துணை மகிழ்ச்சியோடு வாசிக்க வேண்டும். உலகமானது ஏற்கெனவே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுள்ளது. காரணம் உலகம், ஆதாமின் சந்ததியாய் இருப்பதினால், ஆதாமுக்குள் ஆக்கினைத் தீர்ப்பில் பங்கடைந்துள்ளது. உலகம் மீண்டும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட அவசியமில்லை. மாறாக, அதன்மேல் காணப்படும் ஆதாமினால் உண்டான ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து, அதற்கு இரட்சிப்பே அவசியமாய் உள்ளது. உலகமானது சரீர ரீதியிலும், மன ரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் பெற்றிருக்கும் அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும். மேலும், இதைச் செய்து முடிக்கவே இயேசு வந்தார். விசுவாசப் பிரமாணங்களும், ஆண்டவரின் போதனைகளும் முற்றிலும் எதிர்மாறாக உள்ளது. தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையல்லாத அனைவரும் நித்திய சித்திரவதைக்குள் போகும்படிக்குத் தீர்க்கப்படுவார்கள் என்று “இருண்ட யுகத்தில்” கூறப்பட்டது. மேலும், சபையல்லாத மீதமான மனுக்குலம் முழுவதும் அறியாமை, மூடநம்பிக்கை, குருடாக்கப்பட்ட நிலையின் காரணமாக இதுவரையிலும் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், வாய்ப்பும் இவர்களுக்கு இல்லை என்றும் இருண்ட யுகத்தில் கூறப்பட்டது; மேலும், உலகம் ஒருபோதும் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளாது என்றும், உலகத்தை இரட்சிக்க தேவன் சித்தங்கொள்ளவில்லை என்றும், கிறிஸ்து உலகத்திற்காக அல்லாமல், தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்காக மரித்தார் என்றும் இருண்ட யுகத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த அறுவடையின் காலக்கட்டத்தில் தெய்வீக வார்த்தைகள் மூலம், தெய்வீக ஞானம் மற்றும் அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரம் மகிமையாய் வெளிச்சமாக்கப்பட்டுள்ளது! அதாவது, சபையின் தெரிந்துக்கொள்ளுதல் என்பது உலகத்தை ஆசீர்வதிக்கும், வெளிச்சமூட்டும், சீர்த்தூக்கும் மாபெரும் வேலைகளுக்கு முன்பு சம்பவிக்க வேண்டிய செயல்/திட்டம் மாத்திரமே என்பது எவ்வளவு அழகாக நமக்கு வெளிச்சமாக்கப்பட்டுள்ளது. “ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது” (யோவான் 3:19). ஒளியானது, எவ்வளவாக ஒருவரால் பார்க்கப்பட்டு, புறக்கணிக்கப்படுகின்றதோ, அவ்வளவாய் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கப்படுவார்கள் என்று நமது கர்த்தர் இங்குக் குறிப்பிடுகின்றார். நமது கர்த்தருடைய முதலாம் வருகையின் நோக்கமானது, ஆதாமினால் உண்டான ஆக்கினைத் தீர்ப்பைக் கூட்டுவதற்காக இராமல் மாறாக, இந்த ஆக்கினைத் தீர்ப்பை முற்றிலும் ரத்து செய்துவிடும் பலியைச் செலுத்துவதற்கேயாகும். எனினும், அவர் அப்போது உலகத்திற்கு வந்ததையும், அப்போது பிரகாசித்த வெளிச்சத்தையும், இன்றளவும் அவருடைய பின்னடியார்கள் மூலம் பிரகாசித்துக்கொண்டிருக்கும் வெளிச்சத்தையும், நிராகரித்த அனைவர் மேலும் ஆக்கினைத்தீர்ப்பு உண்டு.

இந்த ஆக்கினைத்தீர்ப்பானது, ஆதாமிடமிருந்து சுதந்தரிக்கப்பட்டுள்ள ஆதாமின் நிமித்தமான ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஆதாமின் நிமித்தமாக உண்டான ஆக்கினைத்தீர்ப்பானது நமது பாவத்திற்கான கிறிஸ்துவின் பலியினால் இறுதியில் முற்றிலும் ரத்து செய்யப்படும்; ஆனால், ஒளியை/வெளிச்சத்தை நன்கு அறிந்துக்கொண்டு நிராகரிப்பதின் காரணமாக உண்டாகும் ஆக்கினைத்தீர்ப்பானது, தனிப்பட்ட விதத்தில் அந்தந்த நபருக்குத் தண்டனையைக் (Individual Penalty) கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது. இவ்வகை ஆக்கினைத்தீர்ப்பானது, உண்மையற்றவர்கள் மீது தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் கசையடிகளைக் கொண்டுவரக் கூடியதாய் இருக்கும். கசையடிகள்/சிட்சைகள் என்பது அந்தந்த நபர்களின் பிடிவாதத்தனமான தவறானப் போக்கை மாத்திரமே சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; கசையடிகள்/சிட்சைகள் கொடுக்கப்படும் விஷயத்தில், சுபாவத்தின்படியான பெலவீனங்கள், சோதனைகள் முழுமையாய்ச் சலுகை செய்யப்படும் என்று நமக்கு உறுதியளிக்கப்படுகின்றது. அதாவது, ஆதாமின் விழுகைக் காரணமாகச் சுதந்தரிக்கப்பட்ட பெலவீனங்கள் கிறிஸ்துவின் பலியினால் உண்டான புண்ணியத்தினிமித்தம் ரத்து செய்துவிடப்படுவதை உறுதியளிக்கின்றது. இச்சலுகைகளைத் தாண்டியும் சத்தியத்தின் வெளிச்சத்திற்கு எதிரான எதிர்ப்புகள் முழுவீச்சில் காணப்படுமாயின், தண்டனை இரண்டாம் மரணமாகவே காணப்படும்.

## "தெரிந்தெடுக்கும் நடைமுறை"

எங்கெல்லாம் சுவிசேஷத்தின் ஒளியானது பிரகாசிக்கின்றதோ, இதற்கேற்ப பொறுப்பும் ஏற்படுகின்றது, மற்றும் தெரிந்தெடுப்பதற்கான சூழ்நிலைகளும் அமைகின்றது என்பதை நாம் கடந்து வந்த காலங்களில் உணருகின்றோம். "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், இவர்கள் தங்களுடைய தவறுகள், பாவங்கள், தாங்கள் விரும்பும் பாவங்கள் கண்டிக்கப்படாதபடிக்கு, வெளிப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறார்கள்" என்று நமது கர்த்தர் கூறுகின்றார்; இவர்களுக்கு எதிர்மாறாக, "சத்தியத்தின்படி தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்" (யோவான் 3:21). இவர்கள் கர்த்தருடைய சித்தத்தைத் தங்களால் முடிந்தமட்டும் நிறைவேற்ற நாடுகின்றார்கள் என்பது தங்களுடைய ஜீவியத்தில் விளங்க வேண்டுமென விரும்புகின்றார்கள். மேலும் தற்செயலாக, தேவனுடைய சித்தத்திற்கு எதிரானவைகள் ஏதோ ஒன்று தங்கள் ஜீவியத்திலோ அல்லது கோட்பாடுகளிலோ வெளிப்பட இவர்கள் கண்டால், அவைகளைத் திருத்தம் செய்து கொள்வதற்கான வாய்ப்புத் தங்களுக்குக் கிடைத்தபடியால் மகிழ்ச்சிக் கொள்வார்கள்.

இந்தத் தெரிந்தெடுக்கும், பிரித்தெடுக்கும் வேலையானது அந்நிய தெய்வங்களை வணங்குபவர்கள் மத்தியில் நடைபெறாமல் கிறிஸ்தவ மண்டலத்தார் மத்தியிலேயே நடைபெறுகின்றது; கிறிஸ்தவ மண்டலத்ததாரின் திரளான ஜனக்கூட்டத்தாரின் மத்தியில் நடைபெறாமல், விசேஷமாகத் தேவனுடைய ஜனங்கள் என்றும், நமது கர்த்தரின் நாட்களில் யூதர்கள் செய்ததுபோன்று, இருளிலிருந்து ஒளியினிடத்திற்கு வந்துள்ளோம் என்றும் அறிக்கைப் பண்ணியுள்ள ஜனங்கள் மத்தியிலேயே நடைபெறுகின்றது. உண்மை சூழ்நிலையை உணர்ந்தவர்களாக, தெய்வீகத் திட்டம் மீது அல்லது நம்முடைய சொந்த இருதயங்கள் மற்றும் ஜீவியங்களின் மீதும் பிரகாசிக்கும் ஒளியின் ஒவ்வொரு, கதிர்களுக்காகவும் மிகவும் வைராக்கியமுள்ளவர்களாக இருக்கக்கடவோம். சத்தியமானது நம்மை ஒவ்வொரு அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கத்தக்கதாகவும், நம்மைக் கிறிஸ்துவுக்குள், தேவனுடைய சித்தத்திற்கு அதிகமதிகமாகக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்கதாகவும், சத்தியத்தை அதிகமதிகமாக அறிந்துக்கொள்ள விரும்புவோமாக. ஒளியின் பிள்ளைகளாகிய நாம் இருளின் கிரியைகளோடும், உபதேசங்களோடும், எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள முடியாது! தெய்வீக வார்த்தையானது நம்முடைய பார்வைத் திறனை அதிகமதிகமாகப் பெருகச் செய்யும்போதும், இருள் மற்றும் ஒளிக்கும்,சத்தியம் மற்றும் தப்பறைக்கும், நீதி மற்றும் பாவத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் அதிகமதிகமாகத் தெளிவாகக் காணச் செய்யும்போதும் நாம் அதிகமதிகமாய் நேர்மை/உண்மையுள்ளவர்களாக இருப்போமாக!

---

**R4556**

# "கலிலேயாவின் தீர்க்கத்தரிசி"

## மத்தேயு 4:12-25

"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்." மத்தேயு 4:15.

முதலாம் வருகையின்போது, பாலஸ்தீனியா (palestine) நான்கு மாகாணங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. அதில் யூதர் சீமை/மாகாணம், வரிசையில் முதலாவதாக வடக்கிலும், அதைத் தாண்டி சமாரியா வடக்கிலும், பெரியா (Perea) கிழக்கிலும், கலிலேயா சமாரியாவைத் தாண்டி வடக்கின் தொலைதூரத்திலும் காணப்பட்டது. இயேசு யூதர் சீமையில் (Judea) பிரசங்கித்தும், இவ்விடத்திலும், பெரியாவிலும் (Perea) சில வல்லமையான கிரியைகளை நிகழ்த்தினாலும், இவருடைய பிரதானமான ஊழியம் கலிலேயாவில் காணப்பட்டது; ஆகவே இவரும், இவருடைய சீஷர்களும் கலிலேயர்கள் என்று அழைக்கப்பட்டனர். இயேசு, பெத்லகேமில் பிறந்திருந்தாலும், "நசரேயன் என்னப்படுவார்"

என்று அவர் அழைக்கப்படத்தக்கதாக, அதாவது அவர் தாவீதின் ஊரில் பிறந்ததற்குரிய கனம் அவருக்கு வழங்கப்படாமல், மாறாக "ஓர் இழிவான பட்டணத்திற்குரிய கனத்தின் குறைவு அவருக்கு உண்டாகத்தக்கதாக அவர் நாசரேத்தில் வளர்க்கப்பட்டார். லூக்கா 23:5, 6, 49, 55 - ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும். ஆகவே நமது கர்த்தருடைய பெரும்பான்மையான அற்புதங்கள் மற்றும் போதகங்கள், கலிலேயர்கள் மத்தியிலேயே சம்பவித்தது. அவருடைய தலையான ஊழியங்கள் யூதர் சீமையில் சம்பவித்தது, அதாவது, இவ்வூழியங்கள் பஸ்கா மற்றும் கூடாரப் பண்டிகைக்காக அவர் வருடந்தோறும் இச்சீமைக்குப் பிரயாணித்தபோது சம்பவித்தவையாகும். சமாரியாவின் ஜனங்கள், யூதர்களின் இரத்தம் கலந்திருந்த புறஜாதிகளாக இருந்தார்கள். இந்தச் சமாரியா சீமையில் பிரசங்கிக்க வேண்டாம் என்று இயேசு தம்முடைய சீஷர்களை எச்சரித்தார் . . . . "இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத்தேயு 10:5-6). யூதர்கள் தங்கள் ஜாதியாருக்குள், கலிலேயர்களைக் கீழ் ஜாதியாராகக் கருதினார்கள். ஆகவே, "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா?" என்ற வாக்கியம் கலிலேயா முழுவதற்கும் கூடப்பொருந்தும் (மாற்கு 1:9; மத்தேயு 21:11 பார்க்கவும்).

சுவிசேஷத்தின் ஒளியானது முதலாவது கலிலேயாவில் வீச வேண்டும்/வீசப்படும் என்பது ஏசாயாவின் தீர்க்கத்தரிசனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. அதாவது, . . . "இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று, ஏசாயா தீர்க்கத்தரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்தேயு 4:15-16). கலிலேயாவின் கடற்கரை அருகிலுள்ள இஸ்ரயேலின் 12 கோத்திரத்தாரில், இருவரான செபுலோன் மற்றும் நப்தலியின் எல்லைகளைத் தீர்க்கத்தரிசி குறிப்பிடுகின்றார். கலிலேயா என்ற வார்த்தையின் அர்த்தமாவது வட்டம் (Circle) ஆகும்; எனவேதான் இந்தப்பட்டணம், புறஜாதியார்களால் சூழப்பட்டிருக்கும் என்று தீர்க்கத்தரிசனம் சுட்டிக்காட்டுகின்றது. உண்மையில் இப்படியாகத்தான் காணப்பட்டது; அதாவது சமாரியா, கலிலேயாவின் தெற்குத் திசையிலும், சமாரியா கலிலேயாவை யூதர் சீமையிலிருந்து பிரித்த விதத்திலும் காணப்பட்டது. இவ்விதமாக கலிலேயர்கள் அன்றைய நாட்களில் காணப்பட்ட மாபெரும் மதத்தின் மையப்பகுதியிலிருந்து (யூதர் சீமை) பிரிந்த நிலையில் காணப்பட்டு, தங்களுடைய சகோதரர்களைக் காட்டிலும் மிகுந்த இருளிலும், புறஜாதியார்மேல் காணப்பட்ட அதே மரண இருளின் நிழலின் கீழாகக் காணப்பட்டார்கள். எனினும் இக்குறிப்பிட்ட சம்பவப்பதிவின்படி, அதிகளவில் மத நம்பிக்கை கொண்டும், அதிகளவில் வெளிச்சமூட்டப்பட்டும், அதிகளவில் ஆசாரியர்களால் வழிநடத்தப்பட்டுமிருந்த சகோதரர்களாகிய யூதர்களைக்காட்டிலும், கலிலேயர்கள் இயேசுவின் போதனைக்கு இணக்கம் காண்பித்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

கலிலேயாவின் பிரதான பட்டணங்களாகிய நாசரேத், கோராசின், பெத்சாயிதா மற்றும் கப்பர்நகூம் மேல் வீசப்பட்டதான மாபெரும் ஒளியானது, மாபெரும் கனத்தையும், சிலாக்கியத்தையும் இப்பட்டணத்தின் ஜனத்தார் மீது கொண்டு வந்தபடியால், இப்பட்டணங்கள் வானபரியந்தம் உயர்த்தப்பட்டதாக அடையாள வார்த்தைகளில் கூறப்பட்டது. ஆனால், இவர்கள் (சுவிசேஷ) செய்தியை ஏற்றுக்கொள்ளாததினால், இவர்கள் (hades) பாதாளத்திற்குத் தள்ளப்பட்டார்கள்/தாழ்த்தப்பட்டார்கள் (மத்தேயு 11:20-24). ஒளியானது இருளில் பிரகாசித்து, சிலரை அதாவது, தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்த்து ஆசீர்வதித்து விட்டு, பின்னர் மற்றவர்களைக் கூட்டிச்சேர்த்து, ஆசீர்வதிக்கும்படி கடந்து சென்று கொண்டே இருந்தது; அவ்வொளியானது இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் இப்படியாகவே கூட்டிச் சேர்த்து, ஆசீர்வதிக்கும்படி கடந்து சென்று கொண்டே இருக்கின்றது. முழு உலகமும் மாபெரும் வெளிச்சமூட்டுதலுக்குள் கடந்து செல்வது இன்னும் எதிர்க்காலத்தில்தான் உள்ளது. ஆயிரம் வருஷம் அரசாட்சியின் விடியலில் மீட்பரும், அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையும், இஸ்ரயேல் மற்றும் முழு மனுக்குலம், அதாவது (hades) பாதாளத்தின் (சவக்குழியின்) இருளுக்குள் கடந்து சென்றுள்ள மில்லியன் கணக்கானவர்கள் உட்பட அனைவரையும் ஆசீர்வதிக்கவும்,

பிரகாசிப்பிக்கவும் நீதியின் சூரியனாக, ஆரோக்கியத்தின் செட்டைகளுடன் பிரகாசிப்பார்கள்.

## “இராஜ்யம் சமீபித்திருக்கிறது”

யூதர் சீமையிலுள்ள யூதர்களைக்காட்டிலும், புறஜாதிகளுக்கு அருகாமையில் காணப்பட்ட கலிலேய யூதர்கள், நீண்ட காலமாக வாக்களிக்கப்பட்டிருந்த தேவனுடைய இராஜ்யத்தின் அவசியத்தை உடனடியாகப் பார்க்க முடிந்தபடியால், இவர்கள் அதற்குச் செவிசாய்ப்பதற்காக மிகுந்த ஆயத்தத்துடன் காணப்பட்டார்கள். யூதர் சீமையிலுள்ள யூதர்களோ ஆலயத்திற்கடுத்தப் பணிகளில் சடங்காச்சரமான பகட்டுத்தனத்துடனும், பூமிக்குரிய ஆசாரியனுக்குரிய ஆடம்பரமான வஸ்திரங்களுடன், சாலொமோனைக் காட்டிலும் மிகப் பிரம்மாண்டமான ஆலயத்துடனும் காணப்பட்டபடியால், ஆவிக்குரிய இராஜ்யம் முன்வைக்கப்பட்டபோது அதற்குச் செவிசாய்க்க இவர்கள் மறுத்தார்கள். யூதர் சீமையிலுள்ள யூதர்களுக்கு அவர்களுடைய அமைப்பின் செழிப்பினுடைய பகட்டான வெளித்தோற்றமானது, பார்வையை மூடிப்போட்டக் கண்ணியாகவும், மாயையாகவும் இருந்தது. இந்நிலை இன்றளவும் இப்படியாகவே காணப்படுகின்றது. எளியவர்கள் மற்றும் அற்பமானவர்கள் மத்தியிலேயே தேவனுடைய கிருபையான சுவிசேஷமானது/செய்தியானது சில மிக உண்மையுள்ள நண்பர்களைக் கண்டுபிடிக்கின்றது. எனினும் எருசலேமைக் காட்டிலும் கப்பர்நகூமானது, நல்ல விஷயங்களிலும் சரி, தீய விஷயங்களிலும் சரி புறஜாதி உலகத்தோடு அதிகம் நெருக்கத்தில் காணப்பட்டது.

ஆபிரகாமின் மாம்சீக சந்ததியிடம், இராஜ்யத்திற்கான விதிமுறையின்படியான ஒப்பந்தத்தை (formal tender) ஏற்படுத்தவே, இயேசு வந்திருந்தார் என்ற விதத்திலேயே, பரலோக இராஜ்யம் சமீபித்திருந்தது. அவர்கள் இராஜாவை நிராகரித்தபோது, இராஜ்யத்தையும் நிராகரித்தவர்களானார்கள். எனினும், அவரை ஏற்றுக்கொண்ட அனைவரையும் அவர் ஆசீர்வதித்தார்; மேலும், முன்குறிக்கப்பட்டதின்படியும், வாக்களிக்கப்பட்டதின்படியும், அவர்கள் அவருடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் கருவாக ஆனார்கள்; பின்னர் சபையின் எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக அதுமுதல் புறஜாதியார் மத்தியிலிருந்து அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் வரும்படி அழைப்புச் சென்றது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் இயேசுவோடு, அவருடைய இராஜ்யத்தில் சேர்ந்து வேலை செய்யும்படிக்கு முதலாவதாக ஓர் ஆவிக்குரிய வகுப்பாரை, “இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாராக” தெரிந்துக்கொள்வதும், பின்னர் இந்த யுகத்தின் முடிவில் அந்த ஆவிக்குரிய இராஜ்யத்தை வல்லமையிலும், மகா மகிமையிலும் ஸ்தாபிப்பதும், மகா ஒளியினாலும், வாய்ப்பினாலும் இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதும், மேலும் அவள் (இஸ்ரயேல்) மூலம் பூமியன் சகல குடிகளை ஆசீர்வதிப்பதுமே தேவனுடைய ஏற்பாடாகும்.

பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவனாகிய மீனவர்கள் இந்த மாபெரும் தீர்க்கத்தரிசியினால், அவருடைய பின்னடியார்களாகவும், “தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை” அழைக்கும் வேலையில் தம்மோடுகூடச் சேர்ந்து பணி புரிபவர்களாகவும், பின்னர் ஒருவேளை உண்மையுள்ளவர்களாக இருக்கக்கண்டால், தம்மோடுகூட, தமது சிங்காசனத்தில் உட்காரும்படியாகவும் அழைக்க/வரவேற்கப்பட்டார்கள். அவரைப் பின்பற்றிச் செல்லும்படி அனைத்தையும் விட்டுவிட்டுச் சென்றார்கள். “ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” என்ற வசனமே அவருடைய நிபந்தனைகளாக இருந்தது (மத்தேயு 16:24). இவ்விதத்தில் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள தம்முடைய அனைத்துச் சீஷர்களுக்கும் சத்தியத்தின் பிரதான ஊழியர்களாகும் (அப்போஸ்தலராகும்) வாய்ப்பின் கதவுகளைக் கர்த்தர் திறப்பதில்லை. தம்மைப் பின்பற்றுவதற்கான தங்களுடைய அனைத்தையும் விட்டுவிடாத எவரையும், அவர் தமது சீஷராக ஏற்றுக்கொள்வதில்லை. எனினும் அவர்கள் தங்கள் இருதயத்தில் அனைத்தையும் விட்டுவிட வேண்டும். சீஷத்துவம் மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்தும் ஆவியுடையவர்களுக்கு, வாய்ப்பின் கதவு ஒருவேளை திறக்கப்படும் பட்சத்தில், இவர்கள் தங்களுடைய அனைத்தையும் தியாகம் செய்ய/விட்டுவிட வாஞ்சையுடன் காணப்படுவார்கள்.

இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களின் பிரசங்கம், "இராஜ்யத்தைப் பற்றின சுவிசேஷமாக" இருந்தது. இயேசு, நோய்கள் மீது தமக்கு இருந்த அதே அதிகாரத்தையும், பிசாசுகளைத் துரத்தும் தமக்கிருந்த அதே அதிகாரத்தையும் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார். தீர்க்கத்தரிசி மற்றும் அவருடைய செய்தியின் மீது கவனத்தை ஈர்ப்பதற்கு மாத்திரமே இந்த அற்புதங்களாகும். அனைத்து வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தவும், அனைத்து மரித்தவர்களை எழும்பப்பண்ணுவதும் (அன்றைய) நோக்கமாக இருக்கவில்லை. அந்த அற்புதங்கள் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படும் இராஜ்யத்தின் மகிமையான ஆசீர்வாதங்களின் வெளிப்பாடுகளே ஆகும். (யோவான் 2:11)

இவ்விதமாக, இயேசுவின் கீர்த்தி பரவினது. வியாதியஸ்தர்கள் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டுச் சொஸ்தமாக்கப்பட்டனர். மேலும், பாலஸ்தீனியாவின் அனைத்து/ஒவ்வொரு சீமையிலிருந்தும்/மாகாணத்திலிருந்தும் அர்ப்பணச் சிந்தையுள்ள மனுஷர்கள் அவருடைய பின்னடியார்கள் ஆனார்கள். அஞ்ஞான இருளில் சிக்கியிருந்த கலிலேயர்கள் மத்தியில் பிரகாசித்த மாபெரும் ஒளியினால் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆனால் எப்போதும்போல, சத்தியமும், ஒளியும் அவர்களைப் பரீட்சித்துப்பார்த்தது. சொற்பமான வெளிச்சத்தின் பிள்ளைகள் வெளிப்படுத்தப்பட்டு, இருள் மற்றும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்திலிருந்து பிரிக்கப்பட்டனர். அன்றுபோல், இன்றும் அதாவது தேவனுடைய வார்த்தைகளின் மீது மாபெரும் ஒளியானது பிரகாசித்துக்கொண்டிருக்கும் நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாமும் நம்மை வெளிச்சத்தின் பிள்ளைகளாக ஒளிக்கு ஆதரவு காட்டுபவர்களா? அல்லது இருளின் பிள்ளைகளாக ஒளியை எதிர்த்துக் கொண்டிருப்பவர்களா? என்று முடிவெடுத்து, நிரூபித்துக் காட்டுவதற்கான கடமையுடன் காணப்படுகின்றோம்.

---

**R2574**

# "மொண்டுகொள்ள பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே"

## யோவான் 4:5-26

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்." (வசனம் 24).

யூதேயாவுக்கும், கலிலேயாவுக்கும் இடையில் பரந்து விரிந்து காணப்படும் தேசமே சமாரியா ஆகும். அதன் குடிகள் சமாரியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களோடு, யூதர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தாலும், மத விஷயத்திலோ, சமுதாய விஷயத்திலோ எவ்விதமான தொடர்பும் வைத்திருப்பதில்லை. மேலும் யூதர்கள், புறஜாதியார்களைத் தெய்வீகத் தயவினின்று விலக்கப்பட்டவர்கள் என்றும், இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள் என்றும், தேவனற்றவர்களென்றும், நம்பிக்கையில்லாதவர்கள் என்றும் கருதினதுபோலவே, சமாரியர்களையும் கருதினார்கள் (எபேசியர் 2:12). இந்தச் சமாரியர்களின் மூதாதையர்கள், புறஜாதியாராக இருந்தனர். மேலும், நேபுகாத்நேச்சாரினால் இஸ்ரயேலர்கள் பாபிலோனுக்குக் கொண்டுவரப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, இந்தச் சமாரியர்களின் மூதாதையர்களாகிய புறஜாதியார் சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டனர் (2 இராஜாக்கள் 17:24-41). இந்தப் புறஜாதிகள், யூதர்களோடு சம்பந்தங்கொண்டு யூதர் கொள்கைகளைத் துறந்த/மீறின சில யூதர்களோடு கலப்புத் திருமணம் செய்துகொண்டபடியால், கொஞ்சம் யூதர் நம்பிக்கை மற்றும் ஆராதனை முறைமைகளைப் பற்றின அறிவையும், தங்கள் மார்க்கத்திலுள்ள தவறான சில அறிவையும் கலந்து பெற்றிருந்தார்கள். இவர்களைக் குறித்துதான் அப்போஸ்தலர், "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார் அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே"

என்று குறிப்பிடுகின்றார் (அப்போஸ். 17:27). ஆனாலும், தேவன் தம்மை உலகத்தாருக்கு வெளிப்படுத்துவதற்கான காலம் இன்னும் வரவில்லை, அல்லது வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் புறஜாதியாரை ஏற்றுக்கொள்வதற்கான காலம் இன்னும் வரவில்லை. அதுவரையிலும் சகல தெய்வீகக் கிருபைகளும் ஆபிரகாமின் சந்ததியாராகிய இஸ்ரயேலர்களிடத்தில் அதாவது, விருத்தசேதனம் மூலம் தங்களின் உடன்படிக்கையின் உறவைக் காத்துக்கொண்டு வந்த இஸ்ரயேலர்களிடத்தில் மையம் கொண்டிருந்தது. ஆகவே, யூதர்கள் சமாரியர்களை ஏற்றுக்கொள்ளாத காரியமும், அவர்களோடு மத ரீதியான விஷயங்களில் தொடர்பு வைத்துக்கொள்ளாத காரியமும், அவர்களோடு கலப்புத் திருமணம் செய்யாமலும், பழகாமலும் இருக்கும் காரியமும் சரியே. இப்படிச் செய்தது மதவெறித்தனத்தின் காரியமாக இராமல், தெய்வீக ஒழுங்குமுறைகளும், தெய்வீகத் தடைச்சட்டங்களுக்கடுத்த காரியமேயாகும் (உபாகமம் 7:1-6).

நமது கர்த்தர், இராஜ்யமானது சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கும்படி தம்முடைய சீஷர்களை அனுப்புவித்தபோது, யூதர்கள் கையாளும் இந்தமுறையைத் தாமும் அங்கீகரிக்கிறார் என்று தெள்ளத்தெளிவாக அவர்களுக்குக் கட்டளையிட்டார் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம். "இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப்போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத்தேயு 10:5-6). சமாரியா பட்டணம் தொடர்பான இச்சம்பவத்தில் அப்போஸ்தலர் யாக்கோபும், யோவானும் (சினங்கொண்டு) பேசின வார்த்தைகளும் நம்முடைய நினைவுக்கு வருகின்றது. சமாரியாவின் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கி, அற்புதத்தை இயேசு நிகழ்த்தாததால், சமாரியர்கள் கோபங்கொண்டு, அவரை ஏற்றுக்கொள்ளாமலும், அவர் பிரயாணிக்கையில் தங்கள் பட்டணம் வழியாகக் கடந்து செல்வதற்கு அனுமதியாமலும் இருந்ததையும் நாம் நினைவுகூருகின்றோம் (லூக்கா 9:51-56).

இப்படியாக நமது கர்த்தர், யூதேயாவிலிருந்து, கலிலேயாவுக்குச் சமாரியா வழியாகப் பிரயாணம் பண்ணின அநேக தருணங்களில், ஒரு சமயம் தமது சீஷர்கள் போஜனம் வாங்குவதற்காக ஊருக்குள் சென்றிருக்க, பிரசங்கம் பண்ணினதினிமித்தமாகவும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதினால் தமது ஆற்றலை இழந்ததினிமித்தமாகவும், பிரயாணத்தினிமித்தமாகவும் களைப்படைந்தவராக, யாக்கோபின் கிணற்றண்டையில் இளைப்பாறிக்கொண்டிருந்தார்.

அப்பகுதியில் யாக்கோபின் கிணறு மகா கீர்த்தியுடையதாக இருந்தது. காரணம், அதன் தண்ணீர்கள் அவ்வளவு தூய்மையாக இருந்தது. அத்தேசம் சுண்ணாம்புடைய தேசமாக இருந்தபடியால், இவ்விடத்திலுள்ள பெரும்பான்மையான தண்ணீர்கள் உப்புத் தன்மையுடையதாகக் காணப்பட்டது; ஆனால் யாக்கோபின் கிணறானது நூறு அடிக்கு மேல் ஆழமுடையதாகவும், 8 அடி விட்டம் கொண்டதாகவும் (ஆழத்தில்) கன்மலையைப் பிளந்ததாகவும் இருந்தபடியால், சுவையான தண்ணீரை அதிகளவில் பெற்றிருந்தது. இந்தத் தேசத்தில், இப்பகுதியில், வருடத்தின் சில பருவ காலங்களில் விசேஷமாக தண்ணீர் பற்றாக்குறைக் காணப்பட்டபடியால் நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கின்ற சமாரியா ஸ்தீரியானவள், என்றென்றும் வற்றிப்போகாததும், நல்ல தண்ணீரைக் கொடுக்கிறதுமான இக்கிணற்றண்டைக்குவர நீண்ட தூரம் பிரயாணித்து வர வேண்டியிருந்தது என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த ஸ்திரீ கிணற்றண்டைக்கு வந்த போது, இயேசு கிணற்றண்டையில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார்; அவள் அவரை யூதன் என்றும், இயேசு அவளைச் சமாரியா ஸ்திரீ என்றும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் வெறுமனே முகத்தோற்றத்தை வைத்து அடையாளம் கண்டுகொள்ளாமல், ஆடையின் முறைமையை வைத்தும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்டனர். யூதர்கள் தங்களுடைய வஸ்திர ஓரங்களின் தொங்கல்களை வெள்ளை நிறத்திலும், சமாரியர்கள் நீல நிறத்திலும் பெற்றிருந்தார்கள்.

ஒரு யூதன், ஒரு சமாரியனிடம், வேண்டுகோள் விடுப்பதும், உபசரிக்கக் கேட்பதும் வழக்கத்திற்கு மாறான காரியமாகும். ஸ்திரீ மொண்டு கொண்டிருக்கும் தண்ணீரைக் குடிப்பதற்காக, இயேசு கேட்டபோது, "நீர் ஒரு யூதனாக இருக்க, சமாரியா ஸ்திரீயாகிய

என்னிடம் இத்தகைய வேண்டுகோளை எப்படிக் கேட்டீர்" என்று ஆச்சரியம் அடைந்து இயேசுவிடம் துணிவுடன் கேள்வி கேட்டாள். அவளுடைய கேள்வியில் தைரியம் வெளிப்பட்டது. இத்தைரியமானது அவள் தன்னை கற்பற்ற ஸ்திரீ என்று ஒப்புக்கொண்ட காரியத்திலும் வெளிப்படுகின்றது. இந்த ஸ்திரீயுடன் இவ்விதமாகச் சம்பாஷணைக்கொள்ளுமளவுக்கு, நமது கர்த்தர் தம்மைத் தாழ்த்தினதே குறிப்பிடத்தக்க மிக முக்கியமான காரியமாகும். இப்படிப்பினைத் தொடர்புடையதாகவே அப்போஸ்தலர்களின் வார்த்தைகளான, "தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்" என்பது காணப்படுகின்றது (ரோமர் 12:16). அநேக கிறிஸ்தவ ஜனங்கள் இப்படிப்பட்ட ஸ்திரீகளுடன் பேசுவதைத் தவிர்ப்பதும், வெறுத்து ஒதுக்கி வைப்பதற்குமான காரணம், அவர்கள் தங்கள் மத போதகத்தின் ஆவியினால், அவர்களையும் அறியாமலேயே, தவறான போதனைகளை மனதில் பதிய பெற்றிருக்கிறவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்றே நாம் எண்ணுகின்றோம். அவர்களின் மத போதனையானது, இப்படிப்பட்ட ஸ்திரீயானவள் தேவனால் மிகவும் வெறுக்கப்படுகிறபடியால், அவள் மரணத்தின் பிடிக்குள் செல்லும்போது, அவள் நித்திய காலத்திற்கும் வாதிக்கப்படத்தக்கதாக தேவனால், பிசாசின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவாள் என்பதேயாகும். கர்த்தராலே இழிவாகப் பார்க்கப்படும் ஒருவர், மனுக்குலத்தினாலும் ஒதுக்கி வைத்து வெறுக்கப்பட வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் தங்களையும் அறியாமலேயே எண்ணிக்கொள்கின்றார்கள். பாவிகளிடத்திலான தேவனுடைய மனப்பான்மை பற்றியும், யாவரும் கெட்டுப்போவதில் அவருக்கு இருக்கும் விருப்பமின்மை பற்றியும் மற்றும் தம்முடைய சகல இரக்கங்களையும் நிராகரிக்கும் துணிவுள்ள பொல்லாதவர்களைச் சித்திரவதைக்குட்படுத்தாமல், மாறாக அத்தகையவர்களுக்கு ஜீவனைக் கொடுக்காமல் முற்றிலும் மரணத்தில் மறைந்து போடுவதாகிய அவருடைய ஏற்பாடு பற்றியுமான தெய்வீக வார்த்தைக் குறித்த அறிவின் தெளிவு கிறிஸ்தவர்களுக்குத் தேவை. (2 பேதுரு 3:9; அப்போஸ்தலர் 3:23). தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் தொடர்பான தெளிவான/உண்மையான கண்ணோட்டங்கள், தேவனுடைய ஜனங்கள் தங்கள் வழிமுறைகளைச் சரிச்செய்துகொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

அத்தருணத்தில் இயேசுவோடுகூட யூதர் கூட்டத்தார் காணப்பட்டிருப்பார்களானால், இழிவான சமாரியருக்குப் பதிலாக, தமது சக்தியை யூதர்களுக்கே செலவழித்திருந்திருப்பார் என்று நாம் அனுமானிக்கின்றோம். ஆனால் அச்சமயத்தில் போஷிக்கப்படத்தக்கதாக, "பிள்ளைகள்" இல்லாதபடியினால், இயேசு ஆசீர்வாதம் மற்றும் அறிவின் துணிக்கைகளை, "பிள்ளைகளாயிராமல்", "நாய்க்குட்டிகளாய்" இருக்கும் புறஜாதிகளுக்கு ஒப்பான சமாரியர்களுக்கு மேஜையிலிருந்து விழப்பண்ணினார் (மத்தேயு 15:27). நம்முடைய கர்த்தரின் இச்செயல்பாடானது, அவருடைய பின்னடியார்களுக்கு ஒரு படிப்பினையாகவும், "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு முன்னுதாரணமாகவும் இருக்கின்றது (கலாத்தியர் 6:10). இன்னுமாக, பிதாவுக்கடுத்தக் காரியங்களில் ஈடுபடுவதும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதுமே தமது போஜனமாகவும், பானமாகவும் இருக்கின்றது என்பதற்கான உதாரணமாக இந்நிகழ்வு அமைகின்றது. இயேசு களைப்படைந்திருந்தபோதிலும், தாம் இன்னும் சம்பாஷணையில் ஈடுபடுவது, தம்முடைய இளைப்பாறுதலையும், புத்துணர்வு அடைதலையும் தடுத்துவிடும் என்று அவர் அறிந்திருந்தபோதிலும், மற்றவருக்கு அதாவது சமுதாயத்தினால் புறக்கணிக்கப்பட்ட ஒருவருக்கு உதவும்படிக்குத் தம்முடைய சொந்த சௌகரியங்களைத் தியாகம் செய்ய ஆயத்தமாயிருந்தார். ஆகவேதான் "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை வாஞ்சையுள்ள செவிகளுக்குப் பிரசங்கம்பண்ணு" என்று கர்த்தருடைய சகல ஜனங்களுக்கும் அப்போஸ்தலர் புத்திச் சொல்லுகின்றார் (2 தீமோத்தேயு 4:2).

நமது கர்த்தர் தம்மை அந்த ஸ்திரீக்கு அறிமுகப்படுத்தின விதத்தில், ஞானம் வெளிப்படுகின்றது. அவள் செய்வதற்குக் கடினமில்லாத விண்ணப்பத்தை அவர் கேட்டார். அதே சமயம் அவளுக்கு நன்றிகள் செலுத்தும் நிலைக்குள், தம்மைக் கீழ்ப்படுத்தவும் செய்தார். இது சகலரையும் அணுகுவதற்கான முறைகளில் "தலைச் சிறந்தமுறை" என நம்முடைய அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது; அதாவது நம்மைத் தாழ்த்தி, மற்றவர்களின் பெருந்தன்மையின் மீதான நமது நம்பிக்கையை வெளிப்படுத்துவது, ஏதோ விதத்தில் அவர்களின் தயவுக்கு நாம் திரும்பச் செய்வதற்கு, விருப்பம் கொண்டிருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கும்.

நமது கர்த்தர் கேட்ட உதவிக்கு ஸ்திரீயிடம் வெளிப்பட்ட கடினத்தன்மையை அவர் பொருட்படுத்தாமல், யாக்கோபின் ஆழமான கிணற்றில் காணப்படும் நல்ல தண்ணீரை ஓர் உதாரணமாக எடுத்துக்கொண்டு, தேவனுடைய கிருபையைக் குறித்ததான ஒரு பாடத்தைப் போதிக்க முற்பட்டு, ஸ்திரீயினிடம் ஒருவேளை அவள் அனுபவிக்கும் சிலாக்கியத்தைக் குறித்து அவள் உணர்ந்துகொண்டாளானால், என்னென்றும் பாய்ந்துகொண்டிருக்கிறதும், தேங்கி நிற்காததும், புத்துணர்வுடையதுமான "ஜீவத்தண்ணீரை" தம்மிடத்தில் அவள் கேட்டுக்கொண்டிருப்பாள் என்று கூறினார். நமது கர்த்தருடைய வார்த்தைகளில் சில ஆழமான அர்த்தம் காணப்படுகின்றதை அவள் உணர்ந்துகொண்டாள். கர்த்தர் யாக்கோபின் கிணறைக் குறிப்பிட்டிருக்க முடியாது, காரணம் அதினின்று மொண்டு எடுப்பதற்கு அவரிடம் எவ்விதமான கயிறும், தோலினாலான பாத்திரமும் (Leather bucket) இல்லை. ஆதலால் அவள், "எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்" என்றும், இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே" என்றும் வினவினாள். நமது கர்த்தர் ஆவிக்குரிய காரியங்களை வெளிப்படுத்துவதில் இன்னும் ஒருபடி முன்சென்றவராக, தாம் கொடுக்கப்போகும் தண்ணீரானது வேறுபட்ட வகை என்றும், அது தற்போதுள்ள தண்ணீர்த்தாகத்தைத் தணிப்பதோடல்லாமல், அது தொடர்ந்து உள்ளுக்குள் ஊறுகிற நீரூற்றாய் இருந்து என்றென்றும் திருப்திக் கொடுக்கின்றதாயும் இருக்கும் என்றும் அவளுக்கு உறுதியளித்தார்.

தண்ணீர், ஜீவத்தண்ணீர், தூய்மையான தண்ணீர் என்பது அனைவருக்கும் தெளிவான, அருமையான அடையாளமாகும். மேலும், தாகம் என்பது வேறொரு அடையாமாகும். தாகம் என்பது விருப்பம், வாஞ்சை, ஏக்கம் பேராவலாகும். சரீரப் பிரகாரமான தாகம் என்பது சரீரப் பிரகாரமானப் பசியைக்காட்டிலும் மிக வேதனை அளிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. பசியின் வீரியமானது, சரிரம் பெலவீனமடைய, அடைய குறைவடையக்கூடியதாய் இருக்கின்றது. ஆனால், தாகம் என்பதோ கடைசி மூச்சுவரையிலும் தொடரக்கூடியதாகவும், கடுமையாகவும் காணப்படக்கூடிய ஒன்றாகும். தண்ணீர் என்பது இந்த இயல்பான தேவையைத் திருப்திச் செய்யக்கூடியதாய் இருக்கின்றது; இதைப் போலவே ஆத்துமாவின் தாகத்தையும், ஜீவத்தண்ணீர் மாத்திரமே தணித்துத் திருப்திச் செய்யக்கூடியதாக இருக்கின்றது.

ஒவ்வொரு இலட்சியமும், விருப்பமும் ஒரு தாகமாகும். ஒரு மனிதனுடைய மகத்துவமும், அவனுடைய தனித்துவமும் மூன்று காரியங்களின் அடிப்படையில் அளவிடப்பட முடியும். அவைகள் பின்வருமாறு, (1) அவனுடைய தாகங்களின்/விருப்பங்களின் எண்ணிக்கைகள்; (2) அவனுடைய தாகங்களின் அம்சங்கள்; (3) அந்தத் தாகங்களின் வீரியம் என்பவைகளே ஆகும். தகுதியான மற்றும் தகுதியற்ற தாகங்கள் பற்றியும், இவைகளில் எவைத் திருப்திப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும், இப்படி மிக ஞானத்துடன் செயல்படுவது எப்படி என்பது பற்றியும், உண்மையான கல்வியானது, ஓர் ஆசிரியராக மனுஷனுக்குப் பாடம் புகட்டுகின்றது. எவ்விதமான விருப்பங்களும் இல்லாதவனுக்குத் திருப்திச் செய்வதற்கு எதுவும் இருப்பதில்லை. மேலும், உண்மையைச் சொல்லப்போனால் அத்தகையவன் ஜடமாவான். நமக்கென்று விருப்பங்கள் இருக்கக்கூடாது என்றோ, அதிகமாக இருக்கக்கூடாது என்றோ, வாழ்க்கையின் பாடங்கள் நமக்குக் கற்பித்துத்தராமல் மாறாக, இந்த விருப்பங்கள் பாவமான விருப்பங்களிலிருந்து நீதியான விருப்பங்களாகவும், பாவமான பேராவல்களிலிருந்து பரிசுத்தமான பேராவல்களாகவும் மாற்றப்பட/மறுரூபமடைய வேண்டும் என்றே நமக்குக் கற்பித்துத்தருகின்றது. இவ்விதமாக, கர்த்தருடைய பின்னடியார்கள் நீதியின்மேல் பசிதாகம் உள்ளவர்களாகவும், அவர்களின் விருப்பங்களை இழப்பதினால் திருப்தியடைகிறவர்களாய் இராமல், மாறாக சகல தகுதியான ஏக்கங்களைத் திரளாகவும், தொடர்ச்சியாகவும் திருப்திச் செய்வதற்கு ஏதுவான கர்த்தருடைய முன்னேற்பாடுகளை உணர்ந்து ஏற்றுக்கொள்வதன் மூலம் திருப்தியடைகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தகுதியற்ற ஏக்கங்கள் எதிர்க்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு, வேருடன் அழிக்கப்படவும் வேண்டும். ஆனால், தகுதியான ஏக்கங்களோ வளர்க்கப்பட்டு, விருத்திச் செய்யப்பட்டு, ஆதரவு அளிக்கப்பட்டு, என்றென்றும் அனுபவிக்கப்படவும் வேண்டும்.

திருப்திப்படுத்தும் இந்த ஜீவத்தண்ணீரானது மீட்பரிடமிருந்து அல்லாமல், வேறு எவரிடமுமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட முடியாது; மேலும், இதனை பெற்றுக்கொண்ட யாவரும் இதனை நன்கு அறிந்திருக்கிறப்படியால், இதற்கு அவர்களால் நன்றி சொல்லி தீரமுடியாது. காரணம், இதனால் இவர்கள் புத்திக்கு எட்டாத தேவ சமாதானத்தைத் தங்கள் இருதயங்களில் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். மனுஷர் மத்தியில் கனம்பெற்றுக்கொள்வதற்கு இவர்கள் தாகங்கொள்ளாமல், பரம பிதாவிடத்திலும், மீட்பரிடத்திலும் ஐக்கியமும், கனமும் பெற்றுக்கொள்ளவே தாகங்கொண்டிருக்கின்றனர். பூமிக்குரிய ஆஸ்திக்காகத் தாகங்கொள்ளாமல், இவர்களின் மறுரூபமாக்கப்பட்ட/மாற்றப்பட்ட விருப்பங்களானது, பரலோகப் பொக்கிஷங்களுக்காக இப்பொழுது தாகங்கொண்டுள்ளது. சிற்றின்பங்களுக்காகத் தாகங்கொள்வதற்குப் பதிலாக, இவர்களின் பிரதானமான சந்தோஷங்களும், விருப்பங்களும் ஆவிக்குரிய விருப்பங்களாக/இன்பங்களாக இருக்கத்தக்கதாக, இவர்களின் விருப்பங்கள் மறுரூபமாக்கப்பட்டுள்ளது/மாற்றப்பட்டுள்ளது. மேலும், இந்த அனைத்துத் தாகங்களும் சத்திய வார்த்தைகளினால் உண்டாகும் புத்துணர்வினாலும், சத்தியத்தின் பரிசுத்த ஆவியினாலும் அதிகமாயும், தொடர்ச்சியாகவும் திருப்திச் செய்யப்படுகின்றது. நமது மீட்பரால் நமக்கு அளிக்கப்படும் ஜீவத்தண்ணீரானது நம் ஒவ்வொருவரிடத்திலும் என்றென்றுமுள்ள ஜீவ ஊற்றாகக் காணப்படும்.

அந்தச் சமாரியா ஸ்திரீயானவள், நமது கர்த்தரின் வார்த்தைகளுடைய அர்த்தத்தைப் புரிந்துக்கொள்ளவில்லை. ஒருவேளை நாமும் அதே சூழ்நிலைகளில் காணப்பட்டால், நம்மால் கூடப் புரிந்திருக்க முடியாது. ஏனெனில், நமது கர்த்தர் கொடுப்பேன் என்று கூறின ஜீவத்தண்ணீருடைய கிணறானது ஆழமாக இருந்தபடியினாலும், சமாரியா ஸ்திரீயும் சரி மற்றும் நம்மிடத்திலும் சரி அதனிடத்தினின்று மொண்டு எடுப்பதற்கு எதுவுமில்லாமல் இருந்தபடியினாலுமேயாகும். எனினும் நாம் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டுள்ள புதிய கால யுகத்தில் காணப்படுகிறபடியால், அப்போஸ்தலர் குறிப்பிடுகிறதுபோல திரளானவற்றினால் அருளப்பட்டிருக்கின்றோம்; "எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரிந்தியர் 2:9, 10).

உண்மையான ஜீவத்தண்ணீருக்கான, ஸ்திரீயினுடைய விண்ணப்பத்திற்கு நமது கர்த்தர் பதில் கொடுக்காததற்கான காரணங்கள் . . . (1) சத்தியத்தின் பரிசுத்த ஆவியானது அருளப்படுவதற்கான சமயம் அப்பொழுது வரவில்லை. மேலும் கல்வாரியில் மாபெரும் பலிச் செலுத்தப்பட்டப் பின்பும் பெந்தெகோஸ்தே நாள்வரையிலும் பரிசுத்த ஆவியானது அருளப்படவில்லை; (2) அவள் சமாரியா ஸ்திரீயாக இருந்ததும் ஒரு காரணமாகும். இத்தகையவர்கள் நியமிக்கப்பட்ட வேளை வரையிலும் தெய்வீகத் தயவையும், பரிசுத்த ஆவியையும் பெற்றுக்கொள்ள முடியாது. சகல புறஜாதிகளுக்கும் வாய்ப்பின் கதவுத் திறக்கப்படுவது வரையிலும் அதாவது, பெந்தெகோஸ்தே நாள் தொடங்கி . . . 3½ வருடங்களுக்குப் பின்புவரையிலும் இவர்களுக்கான நியமிக்கப்பட்ட வேளை வருவதில்லை. எனினும் அந்தச் சமாரிய ஸ்திரீயிடம் காணப்பட்ட ஆவலும், விசுவாசமும் மற்றும் அவளுடைய பட்டணத்து ஜனங்களிடம் காணப்பட்ட விசுவாசமும், கர்த்தருக்குப் பிரியமான, இருதயத்தின் உண்மைநிலை அவர்களிடம் காணப்பட்டதையும் சுட்டிக்காட்டுகின்றது. ஆக, இதன் காரணமாகவே கர்த்தர் சில ஆறுதலளிக்கும் சத்தியத்தின் துணிக்கைகளையும் அவர்களுக்கு விழும்படிக்குச் செய்தார்; மேலும், சகல புறஜாதிகளுக்கும் சுவிசேஷமானது பிற்காலங்களில் முழுமையாகத் திறக்கப்படும்போது, அச்சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இத்துணிக்கைகள் அவர்களை ஆயத்தப்படுத்தியிருக்கும்; (3) அந்த ஸ்திரீ ஜீவத்தண்ணீரை ஏற்றுக்கொள்வதற்கு/பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற இருதய நிலையில் இன்னும் காணப்படாமல் இருந்ததுகூட ஒரு காரணமாகும். இந்தக் கடைசி மூன்றாவது காரணமாகிய தடையை அவளால் மிக உடனடியாகப் புரிந்துக்கொள்ள முடியும் என்பதால், முதல் இரண்டு காரணங்களை ஸ்திரீக்கு விவரிக்க அவசியம் ஏற்படவில்லை. ஆகவே, அவள் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாள் என்ற விஷயத்தின் மீது அவளுடைய கவனத்தைக் கர்த்தர் திருப்பினார். தனக்கு முன்பின் அறிமுகமாகாதவராகிய அவர் (இயேசு) தன்னிடம் விசாரிக்காமலேயே, தன்னுடைய பாவ வாழ்க்கையைக் குறித்து

அறிந்திருந்தபடியால் அவர் தீர்க்கத்தரிசன வரம் பெற்றவர் என்று ஸ்திரீ புரிந்துக்கொண்டாள்.

நமது கர்த்தர், தாம் கொடுக்கப்போகும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமற்ற ஸ்திரீயிடம் மற்றும் ஒருவேளை அப்போது அவள் ஆயத்தமாய் இருந்தாலும், அவரால் அவளுக்கு (புறஜாதி) கொடுக்க முடியாத ஆசிர்வாதங்களைக் குறித்து அந்த ஸ்திரீயிடம் கலந்து ஆலோசிப்பதற்கான காரணம் என்ன என்று கேள்வி கேட்கப்படலாம். இதற்கான விடை பின்வருமாறு . . . (1) அச்சமயத்தில் கர்த்தர் தமக்குக் கிடைத்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தினார்; (2) அவளுடைய வாழ்க்கை பாவநிலையில் காணப்பட்டாலும், அந்த ஸ்திரீயின் குணலட்சணங்களில் நேர்மையின் சுவடுகளைக் கர்த்தர் கண்டுணர்ந்த காரணமாக இருக்கலாம். அவளுடைய நேர்மை தன்மையை நாம், பதிவு செய்யப்பட்ட வசனப்பகுதிகளில் அடையாளம் கண்டுக்கொள்ளலாம்; (3) இந்தச் சம்பாஷணையின் விளைவாக உண்டாகும் செல்வாக்கானது நீதிக்கு ஏதுவாகவும், ஜீவத்தண்ணீருக்கான உண்மையான தாகத்திற்கு நேராகவும் வழிநடத்தும் என்று கர்த்தர் எதிர்ப்பார்த்திருக்கக்கூடும். மேலும், தம்முடைய இந்தச் சம்பாஷணையானது, ஆறு வருடங்களுக்குப் பிற்பாடு (யூதர்களுக்கு மாத்திரம் விதிவிலக்காயிராமல்) சுவிசேஷம் பொதுவாகப் பிரசங்கிக்கப்படும் காலத்தில், இந்தச் சமாரியர்களில் சிலரை, சில உண்மைகளை உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு கொண்டுவரும் என்று கர்த்தர் எதிர்ப்பார்த்திருந்திருக்கக்கூடும்; **அதென்னவெனில்**, ஜீவத்தண்ணீருடைய கிணறானது ஆழமாய் இருக்கின்றது என்றும், அதனின்று மொண்டு எடுப்பதற்கு தங்களிடத்தில் எதுவுமில்லை என்றும், இன்னுமாக, ஒருவேளை இந்தத் திருப்திப்படுத்தும் ஜீவத்தண்ணீரில் ஒரு பாகத்தைத் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், விருப்பமுள்ள யாவருக்கும் ஜீவத்தண்ணீரைக் அருளும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக தமது ஜீவனைக் கொடுத்தவராகிய கர்த்தரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றுமுள்ள உண்மையை உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு வருவதற்கென, இந்தச் சமாரியர்களில் சிலருக்கு உதவும் என்று கர்த்தர் எதிர்ப்பார்த்திருந்திருக்கக்கூடும். ஒருவேளை அந்த எளிய சமாரியா ஸ்திரீயானவள், சுவிசேஷத்தில் தாக்கமடையவும், ஜீவத்தண்ணீரைப் பருகுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நிலையை அடையவுமில்லை என்றாலும் அவள், தற்போது வாய்ப்பு பெற்றிராத மற்ற அனைவரோடும் சேர்ந்து எதிர்க்காலத்தில் வாய்ப்பு அருளப்படுவாள் என்று தெய்வீக வார்த்தைகள் நமக்கு உறுதியளிக்கின்றது.

ஜீவத் தண்ணீரானது தற்போது தனித்தனி நபர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது; இப்பொழுது ஜீவத் தண்ணீரானது "தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவராலும்" அதாவது, "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களால்" மாத்திரமே அனுபவிக்கப்படுகின்றதாய்க் காணப்படுகின்றது; எனினும் இந்த ஜீவத்தண்ணீரனாது, கர்த்தருடைய ஜனங்களுக்குள் கிணறாக இருக்கும் நிலையிலிருந்து, மாறும் காலம் சமீபித்துள்ளது என்றும், ஆயிரம் வருஷம் அரசாட்சியில் அது ஜீவத்தண்ணீரின் நதியாக, திரளாயும், முழுமையாயும், பளிங்குக் கல்லுக்கு ஒப்பாக தெளிவாகவும், தேவன் மற்றும் ஆட்டுக்குட்டி மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாகிய உடன்சுதந்தரர்களின் சிங்காசத்தினின்று, பூமியின் குடிகளுக்கெல்லாம் பாயும் என்றதுமான உண்மையை, அவருடைய வார்த்தைகள் நமக்கு அருளியிருப்பதினால் நாம் கர்த்தரைத் துதிக்கின்றோம். அப்பொழுது ஜாதிகளைச் சீர்ப்பொருத்துவதற்கும், சொஸ்தப்படுத்துவதற்குமான இலைகளையுடைய ஜீவவிருட்சங்கள் மாத்திரமிராமல், ஆவியும் (மகிமையடைந்த) மணவாட்டியும் வா என்பார்கள், கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் என்பார்கள்" (வெளிப்படுத்தல் 22:17).

சமாரியா ஸ்திரீயானவள் தனது குணநலன்களைக் குறித்தும், ஜீவியத்தைக் குறித்தும் இன்னும் விவாதிக்கப்படுவதைத் தவிர்க்க விரும்பினவளாக, சாதுரியமாக மத ரீதியிலான கேள்விக்குத் திரும்பினாள். அதாவது, தேவனை ஆராதிப்பதிலும், ஆராதிக்கும் ஸ்தலம் குறித்ததுமான யூதர் கண்ணோட்டம் சரியா? (அ) சமாரியர் கண்ணோட்டம் சரியா? என்று வினவினாள். இவ்விதமான மனித சுபாவமே இன்றும் காணப்படுகின்றது. இன்றைய புருஷர்களும், ஸ்திரீகளுங்கூடத் தங்கள் உள்ளங்களை ஆராய்வதற்கும், தங்களுடைய

சொந்த ஜீவியங்களில் உள்ள முரண்பாடான காரியங்களைக் கவனித்து, அவைகளைச் சீர்த்திருத்தம் பண்ண விருப்பங்கொள்வதற்கும் பதிலாக, மதப்பிரிவுகளிலுள்ள வித்தியாசங்களையும், மதகோட்பாடுகளில் உள்ள பிரச்சனைகளையும் குறித்தே விவாதித்துக் கலந்து பேச விரும்புகின்றனர். அவளைக் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட வைக்கத்தக்கதாக தாம் உடனடியாக கேட்ட அந்த ஒழுக்கரீதியான கேள்வியை, நமது கர்த்தர் இன்னும் அதிகமாக வலியுறுத்தி விமர்சிக்கவில்லை; மேலும், அவரின் இச்செயல்பாடானது அவருடைய பின்னடியார்களுக்கு ஒரு படிப்பினையாக உள்ளது. மற்றவர்களின் தவறுகளின் காரணமாக அவர்களைப் பரிகாசம்பண்ணி, சினப்படுத்தி, இழிவாக/அவமரியாதையுடன் திட்டிக்கொண்டிருப்பதைக்காட்டிலும், அவர்களின் தவறுகளைக் குறித்த கவனத்திற்குள் அவர்களைக் கொண்டுவருவதே போதுமானதாகும்.

தேவனைத் தொழுதுகொள்ளும் சரியான ஒழுங்குமுறைக் குறித்துச் சுருக்கமான வார்த்தைகளில் நமது கர்த்தர் கூறிவிட்டார். சமாரியர்கள் தாங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகின்றார்கள் என்றும், யூதர்களோ தெய்வீக முறைமையின்படியே பின்பற்றுகின்றனர் என்றும், சமாரியா ஸ்திரீயிடம் மிகத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். மேலும், மாபெரும் யுக மாற்றம் சமீபித்துள்ளது என்றும், அந்தக் காலத்தில் இடம் மற்றும் முறைமைகள் குறித்த சகல வேற்றுமைகள் மாறிவிடும் என்றும், இந்தச் சுவிசேஷ யுகமாகிய புதிய காலப்பகுதியில் தேவனுடைய கிருபையைக் காண்பதற்குக் கண்களும், கேட்பதற்குக் காதுகளுமுள்ள சகலரும் ஆவியிலும் (உண்மையான இருதயத்திலும்) சத்தியத்திலும், தெய்வீக ஒழுங்குக்கு இசைவிலும், வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கின்ற கிறிஸ்துவின் மூலம் எவ்விடத்திலிருந்தும் தேவனை ஆராதிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்கள் என்றும் கூறினார். ஜீவத்தண்ணீரை அளிப்பவரும், அதன்மேல் அதிகாரியான மேசியாவாகிய கிறிஸ்துவின் மூலம் மாத்திரமே பிதாவை அணுகமுடியும்.

---

**R4130**

# “தாகத்துக்குத் தா”

## யோவான் 4:19-29

“ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்.”- யோவான் 7:37

“அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்” என்று இயேசுவைக் குறித்து யோவான் ஸ்நானன் சாட்சியளித்தார் (யோவான் 3:30). இதற்கிசைவாகவே, இயேசு (தம்முடைய சீஷர்களின் கைகளின் மூலம்) யோவான் மற்றும் யோவானுடைய சீஷர்களைக்காட்டிலும் அநேகம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் என்று வாசிக்கின்றோம் (யோவான் 4:1). இயேசுவைக் குறித்த பிரபலம் பெருகினபோது, இது பரிசேயர் மற்றும் வேதபாரகர் மத்தியில் கசப்பையும், எதிர்ப்பையும் உண்டுபண்ணினதினிமித்தம், அவரைக் கொன்றுபோட அவர்கள் வகைத்தேடினார்கள். இதன் காரணமாகவே அதாவது, “யூதர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகைத்தேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல், கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார்” என்று நாம் வாசிக்கின்றோம் (யோவான் 7:1). மதத்தலைவர்கள் யோவானைப் பார்க்கிலும் இயேசுவிடமே அதிகம் வன்மமும், விரோதமும் கொண்டிருந்தனர். காரணம், அவர் தங்களிலும் அதிகமாய் மேம்பட்டிருப்பதைக் கண்டார்கள். மேலும், கல்வியறிவு இல்லாத பொது ஜனங்கள் அவர் (இயேசு) கூறுவதை மகிச்சியுடன் கேட்டு, “இந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” என்றார்கள். ஆகவே, விசேஷித்தப் பண்டிகைகளில் நியாயப்பிரமாணத்தின்படி திரளான ஜனங்கள் எருசலேமில் கூடியிருக்கும் நாட்கள் தவிர மற்றபடி இயேசு எருசலேமில் இருந்ததாக நாம் அதிகம் வாசித்ததில்லை.

அவருடைய அப்போஸ்தலர்களில் பெரும்பாலானவர்களின் சொந்த ஊராகிய கலிலேயாவுக்குப்போக வேண்டுமெனில், சமாரியரின் பட்டணங்கள் வாயிலாகவே பிரயாணம்

பண்ண வேண்டியிருந்தது. இந்தச் சமாரியர்களைக் குறித்துத்தான் நமது கர்த்தர் இட்டக் கட்டளையானது, “இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்” என்பதாக இருந்தது (மத்தேயு 10:5, 6). சமாரியர்கள், இஸ்ரயேலர்களின் காணியாட்சிக்குப் புறம்பான அந்நியர்களாகவும், புறஜாதியாராகவும் கருதப்பட்டனர். சமாரியர்களின் வரலாறு குறித்து நாம் சற்றுப்பார்க்கலாம். பாபிலோனியர்களின் இராஜா, இஸ்ரயேலர்களைப் பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டுபோன காலகட்டத்தில் அவர் சில புறஜாதிகளை இஸ்ரயேல் தேசத்தில் குடியேற்றினார். இந்தப் புறஜாதியினர் தங்களுடைய கடந்த கால விக்கிரக அனுபவங்களிலிருந்து துண்டிக்கப்பட்டதால், இவர்கள் தங்களின் புதிய நாடாகிய இஸ்ரயேலின் மீதும், அதன் மத நம்பிக்கைகள், கோட்பாடுகள் மற்றும் ஆச்சாரங்கள் மீதும் விருப்பங்கொள்ள ஆரம்பித்தனர். இப்படியாக இருக்கையில், யூதர்கள் மத்தியில் காணப்பட்ட சில கவனமற்ற, அறிவற்ற, ஒழுக்கக்கேடான யூதர்கள், தங்களின் தெய்வீக நியாயப்பிரமாணங்களையும், கலப்பின திருமணம் பற்றின அதன் பிரமாணங்களையும் புறக்கணித்தவர்களாக, சமாரியர்களோடு திருமண உறவை வைத்துக்கொண்டார்கள். இவ்விதமாக, அவர்கள் (அந்தப் புறஜாதிகள்) மத்தியில் கொஞ்சம் யூதர் இரத்தம் கலந்தது. இவர்கள் தங்களைத் தாங்களே யாக்கோபின் பிள்ளைகள் என்று அழைத்துக்கொண்டனர். மேலும், இப்படி அழைப்பதினால் தங்களுக்குச் சில ஆசீர்வாதங்கள் சேரும் என்ற நம்பிக்கைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இந்தச் சமாரியர்களுக்கும் மற்றும் யாக்கோபின் வம்சம் வழியாக வந்த யூதர்களுக்கும் இடையில் மத சம்பந்தமான வேற்றுமைகள் காணப்பட்டது. மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுகிறவர்களாகிய யூதர்கள், எருசலேமையும், ஆலயத்தையுமே தேவனை வழிபடுவதற்கான, ஏற்கத்தக்க மையம் என்று புரிந்துக்கொண்டிருந்தனர். ஆனால், சமாரியர்களோ தங்களிடத்தில் மேன்மையான ஒன்று இருப்பதாகக் கூறிக்கொண்டனர்; அதாவது, தங்களுடைய சொந்த நாட்டிற்குள்ளாகவே, யாக்கோபு தேவனைத் தொழுது கொண்ட மலையைப்பெற்றிருந்தனர். ஆகவே, அவர்கள் அம்மலையை மாபெரும் ஆலயம் என்றும், பூமியிலுள்ள யாவற்றைக்காட்டிலும் அம்மலை மேன்மையானது என்றும் உயர்வாக எண்ணி, அம்மலைக்குச் சென்று தேவனைத் தொழுதுகொண்டிருந்தனர். மேற்கூறியவைகள்தான், இராஜ்யத்திற்கான அழைப்பை விசேஷமாக யூதர்களுக்குக் கொடுக்கையில், நமது கர்த்தர் புறஜாதிகளையும், சமாரியர்களையும் தவிர்த்ததற்கான காரணங்களை நமக்குக் காட்டுகின்றது. யூதர்கள் தங்களுடைய வாய்ப்பை நிராகரித்துபோட்டு, பிற்பாடு இராஜ்யத்திற்கான விசேஷித்த சிலாக்கியங்கள் அவர்களிடமிருந்து எடுக்கப்படும்போதே, பூமியின் சகல பாஷைக்காரர், ஜாதிகள், தேசங்கள், ஜனங்கள், கோத்திரங்கள் மற்றும் சமாரியர்கள் உட்பட இவர்கள் மத்தியில், கேட்கும் செவியுடையவர்களுக்கு வாய்ப்பானது கடந்து வரும்.

## “தாகத்துக்குத் தா”

கலிலேயாவுக்குப்போகும் சாலையானது, யாக்கோபின் கிணறு இருக்கும் ஸ்தலத்தில் பிரிந்தது; உணவு வாங்கும்படி சீஷர்கள் அருகாமையிலிருந்த சமாரியாவின் கிராமமாகிய சீகாருக்குப் போயிருக்க, இயேசு கிணற்றண்டையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார்; அந்தக் கிணறு 75 அடி ஆழமும், அதன் வாய்ப்பகுதியில் வட்ட இருக்கை வடிவில் சுவர் எழுப்பப்பட்டதாயும் காணப்பட்டது. அருகாமையிலுள்ள வயலில் பணிபுரிந்து கொண்டிருந்த ஒரு சமாரிய ஸ்திரீ, தண்ணீர் மொண்டுக்கொள்ளும்படிக்கு (கிணற்றண்டையில்) வந்தபோது, இயேசு தண்ணீர் தந்து உதவும்படிக் கேட்ட காரியமானது அவளை அதிகமான ஆச்சரியத்திற்குள்ளாக ஆழ்த்தியது. ஒரு யூதனானவர், சமாரியரிடம் எவ்விதமான உதவியும், அதிலும் விசேஷமாகக் குடிப்பதற்குத் தண்ணீர் கூடக் கேட்கக்கூடாது என்று, கடுமையாக (யூதர்) சமுதாய விதிமுறைகள்/கட்டுபாடுகள் காணப்பட்டது. அந்நாட்களில் உணவு அல்லது தண்ணீர் கொடுக்கப்படுவதோ அல்லது வாங்கப்படுவதோ, ஐக்கியம்கொள்வதையும், உடன்படிக்கைப் பண்ணுவதையும் அடையாளப் படுத்துகின்றதாகக் காணப்பட்டது. இப்படிப்பட்டச் சூழ்நிலையில், இப்படி விநோதமாக நமது கர்த்தர் நடந்து கொண்டதற்கான காரணத்தை அவள் கேட்டபோது, அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை. முழுச் சுவிசேஷப் புத்தகப்பதிவுகளிலுமே நமது கர்த்தரின் தாழ்மையை நம்மால்

காணமுடிகின்றது; அதாவது, எந்த வகுப்பாருடனும் பழக அவர் விருப்பமுடனும், தயக்கமில்லாமலும் இருப்பதை நம்மால் காண முடிகின்றது; அதாவது, எவ்வகுப்பாராய் இருப்பினும், அது ஆயக்காரரோ அல்லது பாவிகளோ, எவராய் இருப்பினும், அவர்களுக்கு நன்மை செய்வதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைக்கும் போதெல்லாம், அவர் ஒரு வாய்ப்பையும் தவறவிட்டதில்லை என்பதை நம்மால் காண முடிகின்றது; மேலும், வேதபாரகர் மற்றும் பரிசேயரின், **பாவிகளை/பிறரை ஒதுக்கி வைக்கும் தன்மையை** அவர் கடிந்து கொண்டதையும் நம்மால் காண முடிகின்றது. வெளிப்புறமாக மிகுந்த சீர்க்கேட்டுடன் காணப்பட்ட ஒருவரின் வஸ்திரத்தைக்கூடத் தொட அஞ்சும், சுயநீதி தொடர்பான எண்ணங்களைக் குறித்து அவருடைய உவமைகளில் ஒன்றில் அவர் பேசியுள்ளார். நமது கர்த்தர் வெளிப்புறமான சீர்க்கேட்டை அங்கீகரிக்கவில்லை. அதேசமயம் தேவன் இருதயத்தைப் பார்க்கின்றார் என்றும், மனுஷரால் இழிவாகக் கருதப்படும் சிலரைப் பார்க்கிலும், மனுஷரால் மிக உயர்வாக அங்கீகரிக்கப்படும் சிலர், தேவனுடைய பார்வையில் மிகத் தீட்டானவர்களாக இருக்கின்றார்கள் என்றும் எடுத்துக்காட்டினார்.

## "திறமை/சாமார்த்தியம் பயன்படுத்துவதற்கான மாதிரி"

நமது கர்த்தர் மாபெரும் திறமையை இவ்விடத்தில் காட்டுகின்றார். அந்த ஸ்திரீயின் கேள்விக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக, ஓர் ஆழமான சத்தியத்தின் மீது அவளது கவனத்தைத் திசை திருப்புகின்றார். இந்தத் திறமை குறித்ததான பாடத்தை அநேக கர்த்தருடைய ஜனங்கள் கற்க வேண்டியது அவசியமாயுள்ளது. திறமையைப் பயன்படுத்தக்கூடாது என்றும், அப்படிப் பயன்படுத்துவது நேர்மையற்ற காரியம் என்றும் சிலர் தவறாகப் புரிந்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் அறிவோம். இவ்விதம் தவறான எண்ணம் கொண்டிருப்பதினால் இவர்கள் மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்துமளவு மடத்தனமாக (அறிவு மழுங்கிய) தவறிழைத்து விடுகின்றனர். மேலும், தாங்கள் பயன்படக்கூடியதற்கான வாய்ப்புகளைத் தாங்களாகவே தடுத்தும் விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் நமது கர்த்தருடைய சாமார்த்தியம் குறித்ததான இந்தப் பாடத்தைக் கவனிக்க வேண்டும். அந்த ஸ்தீரியின் கேள்விக்குத் தாம், பதிலளிக்க வேண்டியது அவசியம் என்று கர்த்தருக்குத் தோன்றவில்லை. மாறாக, அவர் "நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்" என்றார் (யோவான் 4:10). இவ்வாறே, நாமும் வாழ்க்கையின் சகல விஷயங்களிலும், நாம் தொடர்புகொள்ளுகிறவர்களின் கவனத்தை பரத்திற்கும், ஆவிக்குரிய காரியங்களுக்கும் நேராக திசை திருப்ப முயற்சிப்போமாக. ஆனால், அதற்கென்று அனைத்துத் தருணங்களிலும், மத ரீதியான விஷயங்களைக் குறித்தே பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்றில்லை; நமது கர்த்தரும் இப்படியாக எல்லாவற்றிலும் செய்திருப்பார் என்று நாமும் எண்ணிக்கொள்கிறதில்லை. நமது கர்த்தர், தாம் பேசின ஸ்திரீயிடம் ஏதோ சில நேர்மையின் பண்புகளை அநேகமாகக் கண்டிருந்திருக்க வேண்டும்; இல்லையேல் அவளிடத்தில் அவர் பேசியிருந்திருக்கமாட்டார். நாமும் மற்றவர்களுக்கு உதவுவதற்கும், கர்த்தரைக் கனப்படுத்துவதற்கும் ஏதுவாக ஏற்றவேளையில் வார்த்தைகளைப் பேசுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் கண்ணோக்கினவர்களாக இருக்க வேண்டும்.

"ஜீவத்தண்ணீர்" என்பது புதிய தண்ணீர் என்றும், அது தேங்கி நிற்கும் தண்ணீரிலிருந்து வேறுபட்டது என்றும் ஸ்திரீயானவள் புரிந்துக்கொண்டாள். நமது கர்த்தரிடம் தண்ணீர் மொண்டு கொள்வதற்கான பாத்திரமும், ஒட்டக மையிரினால் உண்டான கயிறும் இல்லை என்று ஸ்திரீ அறிந்துக்கொண்டு, எனக்குத் தண்ணீர் கொடுக்க நீர் ஒருவேளை மிகவும் விருப்பம் கொண்டிருந்தாலும் கூட, இந்தக் கிணறு மிகவும் ஆழமாக இருப்பதாலும், உம்மிடத்தில் மொண்டெடுப்பதற்கு எதுவுமில்லாமல் இருப்பதாலும், இக்கிணற்றில் இருக்கும் தண்ணீரைக்காட்டிலும் வேறெங்கும் உம்மால் நல்ல தண்ணீர் கிடைக்கும் என நீர் எதிர்ப்பார்க்க முடியாததாலும், தண்ணீர் தாருங்கள் என்று நான் உம்மிடத்தில் கேட்பதினால் எனக்குப் பிரயோஜனமில்லை என்றாள். "பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும், அவர் பிள்ளைகளும், அவர்

மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்" (யோவான் 4:11, 12). ஸ்திரீயை ஏமாற்றுவதற்காக அல்லாமலும், தாம் (இயேசு) தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அல்லாமலும் மாறாக, ஸ்திரீயினுடைய நலம் கருதி, மீண்டுமாக நமது கர்த்தர் சாமார்த்தியமாக அவளுடைய கேள்விக்குப் பதில் கொடுக்கவில்லை. அவர், அவளுக்குப் போதித்துக் கொண்டிருந்தார். மேலும், அவர் அவளது மனதை இயற்கையான (சொல்லர்த்தமான) தண்ணீரிலிருந்து, ஆவிக்குரிய தண்ணீருக்கு நேராகவும், இயற்கையான ஊற்றிலிருந்து, ஆவிக்குரிய ஊற்றிற்கு நேராகவும் வழிநடத்திக் கொண்டிருந்தார். "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" (யோவான் 4:14).

நமது கர்த்தர் சாதாரணமான ஸ்திரீயிடம் பேசவில்லை என்பது, அவள் உடனடியாக கர்த்தரின் வார்த்தைகளைப் <u>புரிந்துக்கொண்டதிலும்,</u> அவர் கூறின ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கென அவள் வெளிகாட்டின உண்மையான <u>விருப்பத்திலும்</u> நம்மால் காணமுடிகின்றது. "அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்" (யோவான் 4:15). மீண்டுமாக, நமது கர்த்தர் சாமார்த்தியத்தைப் பயன்படுத்துவதைப் நாம் பார்க்கலாம். ஸ்திரீயானவள், தான் ஒரு பாவி என்பதையும், தான் மரணத் தீர்ப்பின் கீழ்க் காணப்படுகின்றாள் என்பதையும், தேவனால் மாத்திரமே அளிக்கப்படும் ஜீவத்தண்ணீரை, தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும், அந்த ஜீவத்தண்ணீரானது ஊற்றாகிய இயேசுவினிடத்திலேயே தேவன் அளித்துள்ளார் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாய் இருந்தது. "போய் உன் புருஷனை அழைத்துக் கொண்டு வா" என்று கூறி, நமது கர்த்தர் உடனடியாக அவளுடைய எண்ணங்களை, அவளுடைய இருதயத்திற்குள்ளாகத் திருப்பினார். "எனக்கு புருஷன் இல்லை" என்று அவள் பதிலளித்தபோது, அவளுக்குள் எண்ணங்கள் வெள்ளம்போல எழும்ப, நமது கர்த்தர் அவைகளை அவளுக்கு ஒருமுகப்படுத்தி, "எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" என்று கூறினார். இப்பொழுது ஸ்திரீ உணர்வடைந்தாள். தன்னுடைய இருதயத்தின் ஆழமான இரகசியங்களை அறிந்த ஒருவரின் முன்னிலையில் தான் இருப்பதாக ஸ்திரீ உணர்ந்துகொண்டாள். எனினும், அவரைக் கண்டு அவள் பயப்படவில்லை. அவரை விட்டு அவள் விலகி ஓடவுமில்லை. அவருடைய இரக்கம், அவருடைய கனிவு மற்றும் ஒரு சமாரியா ஸ்திரீயிடம் பேச அவர் கொண்டிருந்த விருப்பம் ஆகியவைகள் எல்லாம், அவளுக்கு, தான் ஒரு நண்பனைக் கண்டடைந்ததைக் காட்டினது. "ஆண்டவரே, நீர் தீர்க்கத்தரிசி என்று காண்கிறேன்" என்றாள் (வசனம் 19).

தனக்கு மிகவும் இரகசியமாய் இருந்தவைகளையும், விவாதித்தால்/பேசினால் தனக்கு மிகவும் கவலைக்கொடுக்கக்கூடியதும், தன்னை மிகவும் புண்படுத்தக் கூடியதுமான காரியங்களை சம்பாஷணைப்பண்ணுவதிலிருந்து ஸ்திரீ, விவேகத்துடன் பேச்சை மாற்றிவிட்டாள். மேலும், நமது கர்த்தரும் அக்காரியத்தைக் குறித்து மீண்டும் பேசாமல் அப்படியே விட்டுவிட்டார். இப்படிப்பினையை, அவருடைய அனைத்துப் பின்னடியார்களும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது, ஒருவரிடம் பேசும்போது, <u>முதலாவது</u> பாவத்தைக் குறித்த உணர்வை அவர்களுடைய மனதில் <u>உணர்த்திவிட்டு,</u> பின்னர் அவர்களே அவர்களுக்குரிய நேரங்களில் (பாவங்களைக் குறித்து) கவலைக்கொண்டு, மனம்வருந்தி, சீர்த்திருத்தம் பண்ணிக்கொள்ளத்தக்கதாக அவர்களை <u>விட்டுவிட வேண்டும்.</u> நம்மைச் சுற்றியிருப்பவர்களின் இருதயங்களை நொறுக்குவது நமது வேலையாயிராமல், நொறுங்குண்ட இருதயம் உடையவர்களைக் கண்டுபிடிப்பதே நமது வேலையாகும். "நொறுங்குண்டவர்களுக்குக் <u>காயம் கட்டுங்கள்"</u> என்பதே நமக்கான <u>கட்டளையாகும்.</u> "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்" (ஏசாயா 61:1). இந்தச் சம்பவத்தைப் போன்றே அநேக சந்தர்ப்பங்களில், நொறுங்குண்டவர்களின் இருதயமானது, சத்தியம் மற்றும் கிருபை எனும் சுகமாக்கும்

தைலத்தினால் கட்டப்பட வேண்டும். ஆனால், நொறுங்குண்ட இருதயங்களைக் கட்டுவதற்கு நாம் தொடும்பொழுது, நம்முடைய தொடுதல் **மென்மையாக/கனிவாக** இருக்க வேண்டும். **இருதயத்தை இன்னும் நொறுக்க வேண்டுவது அவசியப்படுமாயின் அதைச் செய்வது நமக்கான வேலை அல்ல.**

## ''யூதர்களின் இரட்சிப்பு''

அந்த ஸ்திரீயானவள், தன்னுடைய தனிப்பட்ட குணங்கள் மற்றும் குடும்ப காரியங்கள் குறித்ததான சம்பாஷணையிலிருந்து விலகி கொண்டதோடல்லாமல், மாபெரும் தீர்க்கத்தரிசியாக அவள் கண்டவரிடம், தன்னுடைய இருதயத்தில் நீண்ட காலமாய்க் காணப்பட்ட கேள்விக்கு விடையை அவருடைய உதவியினால் கேட்டறிந்துகொள்ளத்தக்கதாக அந்த வாய்ப்பைப் பயன்படுத்தினவளாகவும் இருந்தாள். மதம் மற்றும் (தேவனை) தொழுதுகொள்ளும் விஷயத்தில் யூதர்களின் முறைமைகளா அல்லது சமாரியர்களின் முறைமைகளா சரி? என்ற கேள்வியே அவளுக்குள் காணப்பட்டது. அவர் தீர்க்கத்தரிசி என்று அவள் உறுதியடைந்ததினிமித்தமாகவும், அவருடைய வார்த்தைகளின் பேரில் அவளுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தபடியாலுமே, அவளுடைய கேள்வி . . . எங்கள் பிதாக்கள் இந்த மலையே தொழுதுகொள்வதற்கான இடம் என்கிறார்களே, ஆனால் யூதர்களாகிய நீங்களோ, எருசலேம் மாத்திரமே தேவனைத் தொழுதுகொள்ளுவதற்கான இடம் என்கிறீர்களே, இதில் யார் சரியாகப் பின்பற்றுகிறார்கள்? என்று கேட்டாள். அவளை யூதமார்க்கத்தமைந்தவளாக (யூதர் மதத்திற்குள் மதம் மாற்ற) மாற்றுவது நமது கர்த்தரின் நோக்கமாக இல்லை; ஏனெனில் அதற்கான காலம் கடந்து போய்விட்டது. அறுவடை காலமும் வந்துவிட்டது. அவளுக்கு நன்மையாக இருக்கப்போகும் ஒரு காரியத்தையே அவளிடம் கூறுபவராக இயேசு காணப்பட்டார். மேலும், தேவனுடைய தயவு குறித்த விஷயத்தில், யூதர்களை மற்றவர்களிடமிருந்தெல்லாம் பிரித்து வைத்திருந்த தடையாகிய மதிற்சுவர் உடைக்கப்படும்போது, எதிர்க்காலத்தில் இந்த ஸ்திரீ மூலம் மற்றவர்களுக்கும் நன்மையாக இருக்கப்போகும் ஒரு காரியத்தையே அவளிடம் கூறுபவராக இயேசு காணப்பட்டார். சுவிசேஷ யுகத்தைக் குறித்த பொதுவான விளக்கமே, அவருடைய பதிலாகக் காணப்பட்டது. இந்தச் சுவிசேஷ யுகமானது சில யூதர்கள் பொருட்டு ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் சமாரியர்களையும், சகல புறஜாதிகளையும் சென்றடையக்கூடியதாய் இருக்கும். "அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலுமாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது" (யோவான் 4:21).

புதிய யுகமானது ஆரம்பித்த பிற்பாடு, யூதர்களின் குடியிருப்புப் பாழாகிப்போன பிற்பாடு, அந்த வேளையானது ஆரம்பித்தது. மேலும், அது நீடித்துக்கொண்டிருக்கின்றது. விசுவாசிக்கிறவர்கள், ஒரு குறிப்பிட்ட மலைக்கோ, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட வீட்டிற்கோ செல்ல வேண்டிய அவசியமில்லை. மாறாக, எவ்விடத்திலேயும், மாபெரும் மீட்பர் மூலம் ஜீவனுள்ள தேவனை அணுகலாம், கண்டடையலாம். "காலம் வருகிறது" என்று சொன்ன காலமானது, ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது. நமது கர்த்தர் தாமே ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களில் முதலாவது ஆவார். மேலும், அவருடைய சீஷர்கள் அவர் மூலமாகப் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். மேலும், இவர்கள் ஜெபிக்கவும், தேடவும், தட்டவும், கண்டடையவும் கற்பிக்கப்பட்டார்கள். இந்த ஆவிக்குரிய யுகத்தின் கீழ்த் தேவனைத் தொழுதுகொள்பவர்கள், முந்தின தொழுகை முறையின் அடிப்படையில் (அ) ஜாதியாரின்/தேசத்தாரின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவர்கள் தனித்தனி நபர்களாகவே ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இவர்கள் பிதாவினால் நியமிக்கப்பட்ட வழியாகிய, மீட்பர் மூலமாய், "ஆவியோடும், உண்மையோடும்" பிதாவை அணுகுகின்றார்கள். மேலும், இவர்கள் இவ்விதத்திலேயே தம்மைத் தொழுதுகொள்ள வேண்டுமெனப் பிதாவும் விரும்புகின்றார். "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" (யோவான் 4:23). முற்காலங்களில் தேவன், சில வழிபாடு முறைமைகளையும், நேரங்களையும், இடங்களையும் உத்தரவிட்டிருந்தார். ஆனால், இப்பொழுதோ கிறிஸ்துவின் வழியாக" ஆவியோடும், உண்மையோடும்" பிதாவினிடத்தில் வருபவர்களே ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

சம்பிரதாயங்களும், சடங்குகளும் கட்டளையிடப்படாமல், இருதயப்பூர்வமான உண்மையான தொழுதுகொள்ளுதலே கட்டளையிடப்பட்டுள்ளது என்பது முற்றிலும் உண்மையாக இருப்பினும், சிலர் இன்னமும் சம்பிரதாயம் மற்றும் சடங்குகள் மீது அதிகம் கவனம் செலுத்தி, ஈடுபடுகிறவர்களாக இருப்பதை நம்மால் காண/உணர்ந்துகொள்ள முடிகின்றது. மேலும், இப்படிப்பட்டவர்கள், ஜெபம் மற்றும் ஐக்கியத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அதிகம் இழந்து போகிறவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், வேறொரு விதத்திலும் கர்த்தருடைய அன்பார்ந்த சில ஜனங்கள் விழுந்துபோவதற்கான அபாயத்தையும் நம்மால் காண முடிகின்றது. அதாவது, ஜெபத்திற்கான **சகல** ஒழுக்கமுறைகளையும் புறக்கணித்துவிடுவதும், சில சமயம் பரலோக இரக்கத்தின் சிங்காசனத்தை அணுகும்போது, **சிறிதளவே** ஒழுக்கமுறைகள் நம்மில் இருப்பதும், நம்மை அவருடைய சந்நிதானத்தில் ஏற்றுக்கொண்டு, நம்முடைய விண்ணப்பங்களுக்குச் செவிசாய்க்கும் மாபெரும் தயவை வழங்கினவரை அணுகும்போது, சில சமயம் அவருக்கென்று, **போதுமானளவு** பயபக்தியும், தாழ்மையும் நம்மிடத்தில் இல்லாமலிருப்பதுமே அந்த அபாயமாகும். எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் நாம் கர்த்தரை அழைக்க முடியும் என்பதற்கு நாம் நன்றியுணர்வு தேவனிடம் கொண்டிருந்தாலும், அதே சமயம், அவருடைய பிரகாரங்களுக்குள் நாம் பயபக்தியுடனும், அவருடைய உயர்வான ஸ்தானத்திற்கு முன்பு, நமக்கு இருக்கவேண்டிய தாழ்மையான உணர்வு கொண்ட இருதயத்துடனும் பிரவேசிப்போமாக. இவ்விதமாக, சர்வவல்லமையுள்ளவரின் மகத்துவம் மற்றும் அவர் மீது நாம் முற்றிலும் சார்ந்திருக்கும் உணர்வுடன் கூடிய, ஜெபத்தின் உண்மையான ஆவிக்குள்/அனுபவத்திற்குள் பிரவேசிக்கிறவர்களாக இருப்போம்.

## "நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்"

"நீங்கள் அறியாததைக் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால், இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்ற உண்மையை/சத்தியத்தை ஸ்திரீயிடம் அறிவித்த நமது கர்த்தருடைய விதத்தில் எவ்விதமான முரட்டுத்தனமும் இல்லை என்பதில் நமக்கு உறுதியே (வசனம் 22). சமாரியர்கள், இஸ்ரயேலர்களாக இராதபடியினால், இவர்கள் எவ்விதத்திலும் ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய சுதந்தரவாளிகளல்ல. இந்த அடிப்படையான சத்தியத்தை, அதற்கே உரிய உண்மையான வெளிச்சத்தில் சமாரியர்கள் பார்க்காததினால், இவர்கள் தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தைக் குறித்தும் தெளிவற்றவர்களாக/குழப்பமடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். மாறாக யூதர்களோ, தாங்கள்தான் ஆபிரகாமின் மாம்சீகத்தின்படியான சந்ததி என்றும், மாபெரும் மேசியாவானவர் தங்கள் வழியாகவே வர வேண்டும் என்றும், இறுதியில் அவர் மூலமும், தங்கள் தேசத்தாரிலுள்ள சிலர் மூலமும், பூமியின் சகல குடிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் அறிந்திருந்தார்கள். "இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்று நமது கர்த்தர் சொன்னாரேயொழிய இரட்சிப்பு யூதர்களுக்காக என்று அவர் கூறவில்லை. யூதர்கள் வழியாய் என்று சொல்வதற்கான காரணம், ஆண்டவர், மாம்சத்தின்படி அந்தத் தேசத்தைச் சார்ந்தவராய் இருக்கிறபடியினாலே ஆகும். மேலும், யூதர்கள் வழியாய் என்று சொல்வதற்கான காரணம், வாக்குத்தத்தங்களானது விசேஷமாக இந்தத் தேசத்தாருக்கு உரியதாய் இருந்தபடியால், மேசியாவானவர் வேறெந்த தேசத்திலும் பிறந்து அந்த வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக்கொள்ள முடியாது. இந்தத் தேசத்திலிருந்தே அதாவது, இந்த ஜனங்கள் மத்தியிலிருந்தே நமது கர்த்தர், தமது சரீரமாகிய சபையின் ஆதி அங்கங்களைத் தெரிந்துக்கொண்டார். மேலும், இவர்கள் மூலமே அந்தச் சரீரத்தின் அங்கமாகுவதற்கான அழைப்பானது சகல தேசம், ஜனம், கோத்திரத்தார் மற்றும் பாஷைக்காரர் மத்தியில் கொண்டுப்போகப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்கு, சமாரியர்கள் இங்கு நிழலாக/அடையாளமாக இருக்கின்றார்கள் என்று நாம் கூறுவதில்லை. இங்கு நிழல் என்பது மிகக் பலமான வார்த்தையாகிவிடும். எனினும் நாம் பார்க்கலாம். நிழலில், உண்மையான (மாம்சீக) இஸ்ரயேலர்களும் இருந்தார்கள்; அதேசமயம் இஸ்ரயேலுக்குக் கொஞ்சம் ஒப்பாகவும் ஆனால், இஸ்ரயேலுடையவர்கள் அல்லாததுமான ஒரு வகுப்பாரும் (சமாரியரும்) காணப்பட்டதுபோன்று, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியிலும், ஒரே குடும்பத்தைச்

சார்ந்தவர்கள் அல்லாதபடியினால், உடன்படிக்கை மற்றும் வாக்குத்தத்தங்களுக்கு அந்நியரான சமாரியர்கள் போன்றவர்களை நம்மாலும் காணமுடிகின்றது; அதாவது, பரிசுத்த ஆவியினால் மீண்டும் ஜெநிப்பிக்கப்படாதவர்களை நம்மால் காணமுடிகின்றது. இப்படிப்பட்டவர்களில் சிலர் கனம் பொருந்தினவர்களாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டும், அதை மறுதலிக்கிறவர்களாகவும் காணப்படுகின்றனர். உண்மையான இஸ்ரயேலர்கள் மத்தியிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட சகலர் மத்தியிலும், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்குத் தொடர்புடையவர்கள் மத்தியிலும், இரண்டு வகுப்பார் காணப்படுகின்றனர்: உத்தம இஸ்ரயேலர்களாகிய சிறுமந்தையினர்; இவர்களுடைய அன்பையும், வைராக்கியத்தையும் கர்த்தர் அங்கீகரிக்கின்றார்; மற்றும் திரள்கூட்டத்தார் மற்றும் இவர்கள் ஜெயங்கொண்டவர்களாகிய உடன் சுதந்திரர்கள் என்ற நிலையை அடைவதற்குப்போதுமான அன்பிலும், வைராக்கியத்திலும் குறைவுப்பட்டவர்கள்.

சமாரியர்கள் போன்றவர்களிடத்திலான நம்முடைய மத ரீதியிலான சம்பாஷணையின்போது, "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்கின்றீர்கள்" என்பதான வார்த்தைகள் உண்மையாக இருப்பினும், இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பது சர்ப்பத்தினுடைய ஞானமாக இருக்காது. எனினும், இவ்வகுப்பார் சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கான விருப்பத்தைக் காட்டுவார்களெனில் அவர்களுக்கு அன்பாக விளக்க முற்படுங்கள், அதாவது அவர்கள் அதுவரையிலும் அறிந்ததும், எண்ணிக்கொண்டிருந்ததுமான காரியங்களிலிருந்து, ஆவிக்குரிய இஸ்ரயேலரின் அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்குப் பொருந்தக்கூடிய வாக்குத்தத்தங்கள், நம்பிக்கைகள் மற்றும் நோக்கங்கள் எவ்வளவு வேறுபட்டதாக இருக்கின்றதென அன்பாக எடுத்துக்காட்ட முற்படுங்கள். இஸ்ரயேலர்களிடமும் சரி, மற்றவர்களிடமும் சரி, நம்முடைய சகல கையாளுதல்களிலும், "பாம்புகளைக் போல் முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப்போல கபடு அற்றவர்களாகவும் இருங்கள்" என்ற ஆண்டவரின் வார்த்தைகளை நினைவுகூருவோமாக (மத்தேயு 10:16; திருவிவிலியம்).

## "மேசியா வரும்போது"

சமாரியா ஸ்திரீயின் மனதில் எண்ணங்கள் அலைமோதின. அவள் தன்னுடைய ஜனங்கள் மற்றும் யூதர்களின் எதிர்ப்பார்ப்பாகிய தேவன் அனுப்பும் மாபெரும் மேசியா குறித்து அதாவது, அபிஷேகம் பண்ணப்பட்டவர் குறித்து, அதாவது, சகல குழப்பங்களையும் முடிவிற்குக் கொண்டுவருவதற்கும், சகல இடர்பாடுகளையும் மாற்றிப்போடுவதற்கும், சகல வல்லமைகளையும் கொண்டுள்ள மாபெரும் மேசியா குறித்து நினைவுகூர்ந்தாள். தான் பேசிக்கொண்டிருக்கும் தீர்க்கத்தரிசியைக்காட்டிலும், மேசியாவானவர் ஆச்சரியப்படும் விதத்தில் மிகுந்த ஞானமுடையவராக இருப்பாரோ என்று ஸ்திரீ (தனக்குள்) எண்ணினாள். இக்கேள்வியை அவள் நேரடியாகக் கேட்க விரும்பாமல் மறைமுகமாக, "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்ற வார்த்தைகளின் பின்னாக மறைத்துக் கேட்டாள் (யோவான் 4:25). அவளுடைய மனதின் ஆயத்தத்தைக் கண்ட நமது கர்த்தர், தமது ஊழிய நாட்களில் மற்ற எவரிடமும் வெளிப்படுத்தியதைக் காட்டிலும் மிகத் தெளிவாக, "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று வெளிப்படுத்தினார் (வசனம் 26).

அத்தருணத்தில் திரும்பி வந்த சீஷர்கள் இயேசு, ஸ்திரீயுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். எனினும், அவர்மேல் அவர்கள் கொண்டிருந்த மிகுந்த மரியாதையினிமித்தமாக, அவரிடம் அவர்கள் கேள்வி கேட்கவில்லை. இச்சம்பவத்தைக் குறித்து, வாசித்த சுவிசேஷ யுகத்திலுள்ள பலர், ஆண்டவரிடம் (இவ்விடத்தில்) வெளிப்பட்டுள்ள தாழ்மையைக் குறித்து ஆச்சரியப்பட்டுள்ளனர். இது கர்த்தருடைய பின்னடியார்களுக்கு ஒரு படிப்பினையைக் கொடுக்கின்றதாய்க் காணப்படுகின்றது. அதென்னவெனில், பின்னடியார்களானவர்கள் தாங்கள் பிரசங்கிப்பதைக் கேட்க ஒரு நபர்தான் இருக்கிறார் என்றாலும், சத்தியம் பிரசங்கம் பண்ணுதல் மற்றும் ஊழியம் புரிவதற்கான வாய்ப்பைக் குறைவாக எண்ணிவிடக்கூடாது என்பதேயாகும். ஆயிரமாயிரமான செவிக் கொடாத ஜனங்கள் கூட்டத்திற்கு (சத்தியத்தின்) ஊழியம் புரிவதைப்பார்க்கிலும், உண்மையாய்ச் செவிக் கொடுத்துக்கேட்கும் ஒரு நபருக்குச்

சத்தியம் பேசுவதற்கான வாய்ப்பானது மிக மிக மேன்மையானதாகும். நமது கர்த்தர் ஸ்திரீயினிடத்தில் செலவிட்ட நேரம் மற்றும் ஆற்றலானது, (energy) அவளிடம் நேரத்தைச் செலவழிக்கத்தக்கதான ஏதோ சிலவற்றை அவர் அவளிடத்தில் கண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

எனினும் வேறு கோணத்தில் பார்க்கும்போது அவளிடத்தில் என்ன தகுதி காணப்பட்டது? மாம்சத்தில் நமக்கு என்ன தகுதி உள்ளது? விழுந்துபோனவர்களும், பூரணமற்றவர்களுமாகிய நம்மிடத்தில், கர்த்தருக்குப் பிரியமானதென்று சொல்லத்தக்கதாக மீதி காணப்படக்கூடிய ஒரே காரியம் நமது இருதயத்தின் உண்மையாகும். இந்த ஸ்திரீயினிடத்தில் உண்மை காணப்பட்டது என்பது உறுதியே. ஆகவே, அவள் தயவு பெற்றவளானாள் என்று நாம் நம்புகின்றோம். மேலும், இவ்வுண்மை தன்மையினாலேயே இன்றளவும் அநேக கர்த்தருடைய அருமையான ஜனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். இங்கு மீண்டுமாக, நமக்குவரும் ஒவ்வொரு வாய்ப்பைப் பயன்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்தும் மாதிரியைக் காண்கின்றோம். இச்சம்பவத்தைப் போன்று, தகுதியுள்ள எவருக்கேனும் உதவியாகச் செலவிடப்படும் நேரம் மற்றும் சக்தி/ஆற்றல்/பெலனானது, அநேகரிடத்தில் தாக்கத்தை உண்டாக்கத்தக்கதாகப் பயன்படுகின்றது. (பின்னாட்களிலே) நித்திய காலங்களில் மாத்திரமே இந்தச் சிறு சிறு காரியங்களின் முக்கியத்துவமும், கர்த்தரின் நாமத்தில் ஏறெடுக்கப்பட்ட எளிமையான/குறைவான/சிறிய பிரயாசங்களின் முக்கியத்துவமும் வெளியரங்கமாகும். மேலும், இது நம்முடைய பெரிய சாதனைகளைப் பார்க்கிலும், சிறு வாய்ப்புகள் மற்றும் சிறு காரியங்களில் நாம் காட்டும் உண்மையின் அடிப்படையிலேயே நமது கர்த்தர் நம்மை நியாயந்தீர்க்கின்றார் என்பதையும் நமக்கு நினைப்பூட்டுகின்றது. "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்" (லூக்கா 16:10). இவைகளை நாம் நினைவில் கொண்டவர்களாக, கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும் நம்முடைய வைராக்கியத்தைக் காண்பிப்பதற்கு ஏதுவாகவும், இதன்விளைவாக அவரிடத்திலிருந்து தற்கால ஆசீர்வாதங்களையும், இறுதியில் அவருடைய அங்கீகரிப்பையும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவும், நாம் சிறு காரியங்களிலும், சிறு வாய்ப்புகளிலும், கண நேரங்களிலும், மணி நேரங்களிலும் (hours) கவனமாய் இருக்கக்கடவோம்.

## "ஊழியச் சிந்தை" (Missionary Spirit)


இந்தச் சமாரியா ஸ்திரீயானவள் தனது தண்ணீர் குடத்தை விட்டுவிட்டு, தன்னுடைய நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம், தான் ஒரு மாபெரும் போதகரைக் கண்டதாகவும், அவர்தான் மேசியா என்று அறிவிக்கவும், அவரிடத்தில் வந்து அவர் பேசுவதைக் கேட்கும் சிலாக்கியத்தை அடையத்தக்கதாக அவர்களை வரச் சொல்லவும் கருதி, அவள் ஊருக்குள் துரிதமாகச் சென்ற காரியமானது, இன்னுமாக அவளுடைய குணலட்சணங்களைப் படம் பிடித்துக்காட்டுகின்றது. இயேசுவுடன் ஏற்பட்ட சம்பாஷணையைக் குறித்த விஷயத்தை, அவள் சுயநல ஆவியுடன் தனக்குள் மறைத்து வைத்திருப்பாளானால் அல்லது அவள் தனக்குள் . . . என்னுடைய நண்பர்கள் இவைகளையெல்லாம் அறிந்தார்களானால், நான் மகிழ்ச்சியடைவேன். ஆயினும், நானாக எவ்வித முயற்சியும் எடுக்கமாட்டேன் என்று சொல்லத்தக்கதாக, அவளுக்குள் சோம்பல் மற்றும் அஜாக்கிரதையின் ஆவிக் காணப்படுமாயின், இவைகள் இரண்டில் எவையேனும் அவளிடத்தில் காணப்பட்டிருந்திருக்குமாயின், அவள் கர்த்தருடைய தயவைப்பெறத் தகுதியற்றவள் என்பதைக் காட்டியிருக்கும்; மேலும், இப்படியான (சுயநலம் மற்றும் சோம்பல்) பண்புகள் அவளிடத்தில் காணப்பட்டிருக்குமாயின் இப்படிப்பட்ட ஸ்திரீயிடம் கர்த்தர் ஒருவேளை பேச முற்பட்டிருக்கமாட்டார் என்று நாம் எண்ணுகின்றோம். இப்படியாகவே, ஏற்றக்கால சத்தியத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் காணப்பட வேண்டும். அதாவது, நாம் உண்மையும், நேர்மையுடனும் இருப்பதோடு, பரந்த மனப்பான்மையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். அதாவது, நம்முடைய அயலார்களுக்கு நற்செய்தியை வழங்குவதில் பிரியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்; அதாவது, மனுஷகுமாரனுடைய இரண்டாம் வருகை குறித்தும், ஸ்தாபிக்கப்படபோகும் இராஜ்யத்தைக் குறித்தும், இப்பொழுது கேள்விப்படுகிறவர்களும், முன்பில்லாதளவு இன்று தெய்வீகத் திட்டத்தின் சத்தியம் குறித்த

தெளிவான அறிவிற்கும் வருகிறவர்களாகிய நாம், சத்தியத்தின் ஊழியத்திற்காகவும் அதாவது, சகல ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைக்கொடுக்கும் நற்செய்தியைப் பலர் அறிய செய்வதற்காகவும், நம்முடைய ஜீவனைக்கொடுப்பதில் களிகூர வேண்டும். இதுவே உண்மையான ஊழியனின் ஆவியாகும். மேலும் (சொந்த) வீட்டிற்குள்ளான (home) ஊழியமே வரிசையில் முதலாவதாக இடம் பெறுகின்றது.

## "என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்"

ஒருவன் கர்த்தரிடத்தில் வருவதற்கு முன்னதாக, அவன் தாகங்கொள்ள வேண்டும்; கர்த்தர் கொடுக்கப் போகிறதான ஜீவத்தண்ணீரைக் குறித்ததான, ஜீவனைக் குறித்ததான புரிந்துக்கொள்ளுதலும் அவனிடம் காணப்பட வேண்டும். அதாவது அவன், தான் ஒரு பாவி என்றும், தான் மரணத் தீர்ப்பின் கீழ்க் காணப்படுகின்றான் என்றும், கிறிஸ்து மூலம் அல்லாமல், எதிர்க்காலத்தைக் குறித்ததான எவ்விதமான நம்பிக்கை தனக்கு இல்லை என்றும் அவன் அறிந்துக்கொள்ள வேண்டும். கர்த்தரிடத்தில் வருவது என்பது விசுவாசத்தில் அணுகுவதாகும். நம்முடைய தாகமே நம்முடைய வாஞ்சை/விருப்பமாகும். நாம் நமக்குள்ளாக தெய்வீகச் செய்தியை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக அல்லது பானம் பண்ணுகிறவர்களாக இருக்கின்றோம். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17). தண்ணீர், சத்தியத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. இதற்கு இசைவாகவே, "நீதியின்பால் பசிதாகம் உள்ளவர்களுக்கான" ஆசீர்வாதம் தொடர்புடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. "அவர்கள் திருப்தியடைவார்கள்" என்பதே அந்த வாக்குத்தத்தமாக இருக்கின்றது (மத்தேயு 5:6). இதுவும், நம் பாடத்திலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாகவே காணப்படுகின்றது. அதாவது, "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது" என்பதே (யோவான் 4:14).

தற்காலத்திலுங்கூட ஒரு கோணத்தில் பார்க்கையில், நம்முடைய தாகமானது தணிக்கப்பட முடியாததாகும். அதாவது, தற்காலத்தில் நாம் ஒருபோதும் திருப்திபடுத்தப்பட முடியாது. அதாவது, கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் மகா பெரியவைகளும், மகா நன்மையானவைகளுமாய் இருக்கிறபடியினால், நம்மால் தற்காலத்திலும், தற்கால சூழ்நிலைகளிலும் அவைகளைப் (ஆசீர்வாதங்களை) போதுமானளவு பெற்றுக்கொள்ள முடியாது. நாம் அவருக்கு ஒப்பான சாயலில் விழிக்கையிலேயே நாம் முழுமையாய்த் திருப்தியடைவோம். "நானே நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன் நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" (சங்கீதம் 17:15). அதாவது, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகத்தக்கதாக, நம்முடைய புதுச்சிருஷ்டியானது மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிற காரியமானது, முதலாம் உயிர்த்தெழுதலில் நிறைவடையும்போது நாம் முழுமையாய்த் திருப்தியடைவோம். "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரிந்தியர் 3:18). எனினும், தற்காலத்திலும் பானம்பண்ணுகிற நமக்கும் கூட ஓரளவு திருப்திக் காணப்படுகின்றது. அதாவது, தண்ணீர் ஊற்றண்டையில் தாகமுடன் காணப்படுகின்ற ஒருவன் மகிழ்ச்சியுடனும், உணர்வு பூர்வமாகவும், திருப்தியுடனும் அதிகமதிகமாகவே பானம் பண்ணுகின்றான். இப்படியாகவே, கர்த்தருடைய ஜனங்கள் விஷயத்திலும் காணப்படுகின்றது. அவர் அவர்களுடைய பாத்திரத்தில் ஐஸ்வரியமும், திருப்தியளிக்கிறதுமான ஆசீர்வாதங்களை ஊற்றுகின்றார். மேலும், அவர்கள் இந்தத் தற்கால கூடாரத்தில் காணப்பட்டாலும், அவர் அவர்களின் பாத்திரத்தை மீண்டும் மீண்டுமாக நிரப்புகின்றார். சத்தியத்தை, ஜீவத்தண்ணீரை நாம் அதிகமதிகமாக ஏற்றுக்கொள்வோமாக; மேலும், தூய்மையான தண்ணீரின் ஊற்றிலிருந்துதான், தண்ணீரைச் (சத்தியத்தைப்) பெற்றுக்கொள்கின்றோமா என்றும் பார்க்கக்கடவோம். மேலும், கர்த்தர் இயேசு அல்லாத எந்த நீரூற்றையும் நாம் ஏற்றுக்கொள்ளாதிருப்போமாக; அதாவது, மற்றக் கால்வாய்கள் (channels) எவ்வளவு அதிகமாக நமக்குத் தண்ணீர் தருகின்றதாய் இருக்கின்றது என நாம் கண்டாலும், நாம் அவைகளை ஏற்காமல், கர்த்தர் இயேசுவிடமிருந்து வருவதையே ஏற்றுக்கொள்வோமாக.



*மார்த்தாள் மற்றும் மரியாள் வீட்டில் இயேசு*

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.

தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். (லூக் 10:41 42)

# பாகம்-3

## “கலியோவில் நடந்த இயேசுவின் மாபெரும் ஊழியம்...”

R2424

# விசுவாசத்திற்கான பலன் அளிக்கப்பட்டது - “உன் குமாரன் பிழைத்திருக்கிறான்”

## யோவான் 4:43-54

"உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்." யோவான் 4:53.

இராஜாவினுடைய மனுஷனின் குமாரன் சொஸ்தமாக்கப்படும் முன்பு இயேசுவுக்கு, சமாரியா ஸ்திரீக்குப் பிரசங்கிப்பதிலும், கலிலேயாவுக்கு நேரான தமது பிரயாணத்தை முடிப்பதிலும் இரண்டு நாள் செலவாயிற்று. முற்காலத்தில் இஸ்ரயேலினுடைய பத்துக் கோத்திரத்திற்கு உரிய நிலப்பரப்பில், கலிலேயா ஒரு பாகமாக விளங்கினது; மேலும் சமாரியா, கலிலேயா மற்றும் யூதேயாவுக்கு நடுவில் காணப்பட்ட கோட்டமாக/மாவட்டமாக இருந்தது. நமது கர்த்தர் இங்கும் அங்கும் பிரயாணிக்கையில், அவர் 12 கோத்திரத்தார் குடியிருந்த நிலப்பரப்பிற்கு வெளியே ஒருபோதும் கடந்துபோகவில்லை என்பதும் கவனிக்கப்படலாம். இயேசு, யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தார் என்றும், இவ்விடம் எருசலேமிலிருந்து வெகு தொலைவில் இல்லை என்றும் இயேசுவின் பிறப்புச் சம்பவித்த கொஞ்சம் காலத்திலேயே, பெத்லகேமில் உள்ள குழந்தைகள் கொல்லப்படுவதற்கு முன்பு, தேவனுடைய வழிநடத்துதலினால் அவருடைய பெற்றோர்கள் எகிப்துக்குத் தப்பி ஓடினார்கள் என்பதும் நினைவில்கொள்ளப்பட வேண்டும்; பின்னர் எகிப்திலிருந்து திரும்பியபோது பெத்லகேமுக்குச் செல்வதற்குப் பதிலாக, அவர் நசரேயன் என்று அழைக்கப்படத்தக்கதாக, அவருடைய பெற்றோர்கள், கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்குக் குடிப்பெயர்ந்தார்கள்; இவ்விதமாக கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள் மாத்திரம் உண்மையான வார்த்தையைக் கேட்டு, சொஸ்தமாக்கப்பட்டு, கிருபையின் உடன்படிக்கையின் கீழ், தேவனுடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக, முன்பும் சரி, இதுவரையிலும் சரி ஒரு மனுஷனும் பேசியிராததும், அவருடைய வாயிலிருந்து புறப்பட்டதுமான கிருபையான வார்த்தைகள் மற்றும் அவருடைய ஆச்சரியமான தனித்துவத்தில் கூட நசரேயன் என்று அவர் அழைக்கப்பட்டது, விசித்திரம் மற்றும் வெறுப்பின் முத்திரை அச்சாகவும் கூட இருந்தது.

நமது கர்த்தரும், அவருடைய சீஷர்களும் "கலிலேயர்கள்" என்று அழைக்கப்பட்டனர் என்பது நினைவில்கொள்ளப்பட வேண்டும். "ஒரு தீர்க்கத்தரிசிக்கு, தன் சொந்த ஊரிலே கனமில்லை" என்ற பழமொழியின் உண்மையை உணர்ந்துக்கொண்டவராக, நமது கர்த்தர் கலிலேயாவில் அல்லாமல், யூதேயாவில் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். கானாவூரில் நடந்த முதல் அற்புதத்திற்குப் பின்னர், அநேகமாக அவர் தம்முடைய சீஷர்களுடன் யூதேயாவுக்குச் சென்றிருக்க வேண்டும்; மேலும் பஸ்கா பண்டிகையின் போதும் அவர் அங்கு இருந்திருக்க வேண்டும்; மேலும் அச்சமயம் அநேக பிரபலமான அற்புதங்களையும் அவர் அங்கே செய்திருக்க வேண்டும்; மேலும் இதன் காரணமாக அவருடைய கீர்த்திப் பரவிச் சென்றது; யூதேயா முழுவதிலும் மாத்திரமல்ல, தமது சொந்த ஊராகிய கலிலேயாவிலும் அவர் கீர்த்திப் பரவிச் சென்றது, காரணம் ஒவ்வொரு வருடமும் பஸ்கா பண்டிகை அனுசரிப்பதற்காக திரளான பக்தியுள்ள யூதர்கள் எருசலேமுக்குச் செல்வது வழக்கமாயிருந்ததினால், அப்போது கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்கள், தங்கள் ஊருக்குத் திரும்பியபோது, தங்களது ஊரைச்சார்ந்தவரின் கிரியையையும், கீர்த்தியையும் குறித்த செய்திகளைக் கலிலேயாவில் பரப்பினார்கள். இப்படியாக, மாபெரும் தீர்க்கத்தரிசியாக முதன்முதலாக பிரபலமடைந்தவராக நமது கர்த்தர் தமது சொந்த ஊருக்கு இப்பொழுது திரும்பி வந்தார்.

நமது கர்த்தருடைய இந்த அனுபவமும் புதிதல்ல, இது பொதுவானதேயாகும். நாம் மிகவும் நெருங்கி பழகின ஒன்றை/ஒருவரைக் குறித்துப் பெரிதாகப் பொருட்படுத்தாத விஷயமானது, மனித சுபாவத்தின் பண்பாய் உள்ளது.

ஒருவர் ஒரு மலையைத் தொலைவில் நின்று பார்க்கையில், எல்லைக்கோடுகள் (outlines) சீரான அமைப்புடையதாகவும், கெம்பீரத்துடனும் காணப்படும், ஆனால் அவர் மலைக்கு அருகாமையில் வந்து பார்க்கையில், அவர் கணித்திருந்த அதன் அழகும், பிரமாண்டமும் நிச்சயமாக ஒன்றுமில்லாமல் போய்விடும், ஏனெனில் அவர் கண்கள் அம்மலையின் உடைந்த பாகங்கள், வண்டல்கள் (சேற்றுப்படிவங்களையும்) மண்கள், (குவிந்துக் கிடக்கும்) களைகள் மீதும்தான், தன் பார்வையைச் செலுத்துகின்றார். எனினும் தொலைத்தூரத்திலிருந்து பார்க்கப்படுகிறவைகளும், கணிக்கப்படுகிறவைகளும் உண்மையானவைகளாக இருக்கின்றன. இப்படியாகவே, இன்றும் மிக உயர்வாகக் கருதப்படும் சில பூமிக்குரிய நபர்கள், அன்றாடம் (இத்தகைய நபர்களுடன்) மிக நெருங்கிப் பழகுகிறவர்களால் மிக உயர்வாகக் கருதப்படுவதில்லை, இதற்கான காரணம், தற்கால கண்ணோட்டங்கள் தவறானவைகள் என்பதினால் அல்லாமல், அவர்களுடன் நெருக்கமாய் இருப்பவர்களும், அன்றாட ஜீவியத்தில் அவர்களோடு புழங்குகிறவர்களும், அவர்களைச் சரிவர புரிந்துக்கொள்ளாததாலேயே ஆகும். இது பிரபலமான உலகத்தாரின், வீட்டார் மற்றும் உறவினர்களின் விஷயத்தில் உண்மையாய்க் காணப்படுகின்றன. தொலைத் தூரத்திலிருந்து மாத்திரமே பார்க்க முடிகிறதான வாழ்க்கையின் பெரிய சிறப்பம்சங்களை (சாதனைகளை) விட, வாழ்க்கையின் பக்கத்திலுள்ள சிறு சிறு விஷயங்கள் பார்க்கப்பட்டு, அவைகளின் அடிப்படையில் குணங்கள் மதிப்பிடப்படுகின்றன. உதாரணத்திற்கு, ஜூலியஸ் சீசர் என்பவர் உலகத்தால் மகாபெரும் மனிதனாகக் கருதப்பட்டார், ஆனால் அதேசமயம் அவருடைய நெருங்கிய நண்பனும், ஊழியனுமாகிய (Cassius) கேசியசின் பார்வையில் குறைவாகவே கருதப்பட்டார்; இந்த அவருடைய நண்பன், ஜூலியஸ் தண்ணீரில் மூழ்கிவிடாதபடிக்கு அவரைக் காப்பாற்றினான், மேலும் ஜூலியஸ் வியாதியடைந்தபோது, அவரோடுகூடே இருந்தவனானபடியினாலும், இச்சம்பவங்கள் மற்றும் இன்னும் பல சம்பவங்களில் அவரிடம் பார்த்த அவருடைய (சரீர) பெலவீனங்களின் அடிப்படையிலேயே அவரை மதிப்பிட்டானே ஒழிய, மற்றத் தருணங்களில் ஜூலியஸிடம் வெளிப்பட்ட மகத்துவங்களை அவன் கருத்தில் கொள்ளவில்லை. அவரிடம் அவன் கொண்டிருந்த <u>நெருக்கமானது</u>, நெருக்கமற்ற மற்றவர்களால் காணமுடிந்த அவருடைய மகத்துவத்தை அவன் பார்க்கமுடியாத அளவு தடைபண்ணினது.

இயேசுவின் விஷயத்திலும் இப்படியாகவே இருந்தது. “அவருடைய சகோதரரும் அவரை விசுவாசிக்கவில்லை” (யோவான் 7:5). (பண்டைய காலங்களில் சகோதரர் என்ற வார்த்தையானது உறவினர்களைக் குறிக்கின்றது, இதில் பெற்றோரின் உடன் பிறந்தோருடைய புத்திரர்களும், சொந்த சகோதரரும் உள்ளடங்குகின்றனர்). ஊரார் அவருடைய தாயாகிய மரியாளையும், அவருடைய சகோதரர்களையும், மரியாளுடைய கணவனாகிய யோசேப்பையும் அறிந்திருந்தனர்; மேலும் இயேசு யோசேப்பினுடைய குமாரன் அல்ல என்றும், யோசேப்பு, மரியாளை மனைவியாக ஏற்றுக்கொண்டு திருமணம் புரிவதற்கு முன்னதாகவே மரியாள் கருவுற்றிருந்தாள் என்றும் அவர்கள் அறிந்திருந்ததும் வெளிப்படையாகத் தெரிகின்றது, எப்படியெனில், அவர்கள் விவாதம் பண்ணுகையில், “நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல” என்று இழிவான வார்த்தைகளைக் கூறுவதிலிருந்து இதன் உட்கருத்து விளங்குகின்றது (மத்தேயு 1:18, யோவான் 8:41). அவருடைய இளமை பிராயத்தில் இருந்து அவரை அறிந்திருந்தார்கள், அநேகமாக பல வருடங்களாக அவர்கள் மத்தியில் அவர் தச்சனாக வேலை செய்திருக்க வேண்டும். அவருடைய சொந்த ஊராகிய நாசரேத் ஒருபோதும் செல்வத்திற்கோ, கல்வி அறிவிற்கோ பெயர்ப்பெற்றது அல்ல, மேலும் நாசரேத்தூரில் உள்ள புத்திர செல்வங்கள், யூதர்களின் புத்திசாலிகள் வரிசையில் ஒருவராக இருந்ததுமில்லை. ஆகவே தாங்கள் நன்கு அறிந்திருந்த இயேசுவை, மோசே மற்றும் தீர்க்கத்தரிசிகளால் கூறப்பட்டதும், எழுதப்பட்டதுமான மகாபெரியவர் என்று ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்குச் சிரமமாக இருந்தது.

ஆகவேதான் அவருடைய சொந்த ஊரில், அவரைக் குறித்து, “இவனுக்கு இந்த ஞானமும், பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?” என்று அவர்கள் ஆச்சரியம் அடைந்து கூறியபோதிலும், “இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன் மற்றும் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி, அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கத்தரிசி ஒருவன் தன் ஊரிலும் தன்

வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை” என்றும் கூறினதை நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 18: 54-58).

இப்பொழுது நாம் நமது பாடத்திற்குத் திரும்புகையில், கலிலேயாவின் மாபெரும் தீர்க்கத்தரிசியும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குகிறவருமாகிய அவர் தமது சொந்த ஊருக்கு வந்திருக்கின்றார் என்ற செய்தியானது, கானாவூருக்கு 20 மைல் தொலைத் தூரத்தில் காணப்பட்ட கப்பர்நகூமுக்குச் சென்றடைந்தது; சமுதாயத்திலும், அரசியலிலும் நல்ல மதிப்பிற்குரிய நிலையில் காணப்பட்ட அப்பட்டணத்தைச் சார்ந்த ஒருவனே விசுவாசத்தை வெளிக்காட்டுபவர்களில் முதல் நபராகவும், அதற்குப்பதிலாக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறவனாகவும் இருந்தான், ஏனெனில் யூதேயாவிலிருந்து திரும்பிவந்த பிற்பாடு, இம்மனுஷனுடைய குமாரன் சொஸ்தமாக்கப்பட்டதே நமது கர்த்தரால் செய்யப்பட்ட “இரண்டாம் அற்புதம்” என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது.

இம்மனுஷனுடைய விசுவாசத்தைப் பரீட்சிக்கும் நோக்கத்திற்காகவே, அவனுடைய விண்ணப்பத்தை நமது கர்த்தர் மறுத்தார் என்பதில் ஐயமில்லை. “நான் மேசியா என்று நீ என்னை விசுவாசிக்கவில்லை, என்னுடைய அற்புதம் மற்றும் அடையாளத்தின் மீதே நீ கவரப்பட்டிருக்கின்றாய்” என்ற விதத்தில் நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்பட்டது. துக்கத்துடன் காணப்பட்ட, அந்தப் பாசமிக்க தகப்பன், ஓர் அற்புதத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வமும், ஆசையும் தனக்கிராமல், கிறிஸ்துவின் வல்லமையின் மீது தனக்கு உண்மையான விசுவாசம் இருக்கின்றது எனவும், இதனால்தான் தன்னுடைய குமாரனை மரணத்திலிருந்து இயேசு விடுவிக்க முடியுமா? என்று, கேள்வி கேட்காமல், “ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும்” என்று கூறுகின்றான் (வசனம்-49). அவனுடைய உண்மையான விசுவாசத்திற்குப் பலன் கொடுக்கப்பட்டது, எனினும் பல மணி நேரங்கள் அவனுக்குச் சொஸ்தமாக்கப்பட்டதைக் குறித்த எவ்வித நிரூபணம் இல்லாமல் இருந்தபோதிலும், அவன் இன்னும் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும் என்றும், தனது விண்ணப்பம் பதிலளிக்கப்பட்டது என அவன் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் அவனிடத்தில் எதிர்ப்பார்க்கப்பட்டது. அவன் விசுவாசம், பரீட்சையில் மீண்டும் உறுதியாய்க் காணப்பட்டது. அவன் வீட்டிற்குப் போகையில், அவர் தனது விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து அருளின அத்தருணத்தில் குழந்தை பிழைத்து, சொஸ்தமானது என்று அறிந்தும் கொள்கின்றான். அவனுடைய குமாரன் சரீரப் பிரகாரமாக சொஸ்தமாக்கப்பட்டதைப் பார்க்கிலும் இன்னும் மேலான ஆசீர்வாதத்தை அவனுடைய விசுவாசம் அவனுக்கு அளித்தது, எப்படியெனில், இவ்வற்புதம் காரணமாக அவனும், அவனுடைய வீட்டாரும் மேசியாவின் மேல் விசுவாசிகளாகி, யோவான் 1:12-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உடன்சுதந்திரர் மற்றும் புத்திரராகும் மாபெரும் சிலாக்கியம் அடையும் வாய்ப்பிற்குள் அவர்களைக் கொண்டு வந்தது.

சொஸ்தப்படுத்தும் இவ்வற்புதத்திலும், மற்ற அற்புதங்களிலும் நமது கர்த்தருடைய நோக்கமானது வலியிலிருந்து, வியாதியிலிருந்து வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்த வேண்டும் என்பதாக இல்லை. இது அவருடைய நோக்கமாக இருந்திருக்குமாயின் ஒரே மூச்சில் சகல வியாதியஸ்தர்களும் சொஸ்தமடையத்தக்கதாக அவர் கட்டளையிட்டிருந்திருப்பார், இதற்கும் மேலாக வியாதிகளை உண்டுபண்ணும் தீமையான சூழ்நிலைகளை அவர் சரிப்படுத்தியிருந்திருப்பார். உதாரணத்திற்கு இராஜாவினுடைய மனுஷனின் குமாரனுக்குக் காய்ச்சல் இருந்தது; அநேகமாக கப்பர்நகூமில் உள்ள அநேகர் இதைப் போன்று காய்ச்சலில் இருந்திருக்க வேண்டும், ஏனெனில் கப்பர்நகூம் பட்டணமானது தாழ்வான இடங்களில், சகதியான நிலப்பரப்பினால் கட்டப்பட்டிருப்பதினால், இது மலேரியாவிற்குரிய இடமாகவும், சுகாதாரமற்ற இடமாகவும் இருந்ததாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தர் பொதுவாக எல்லாருக்கும் சுகமளிக்கும் வேலையைப் பண்ணவில்லை, இப்படி அவர் செய்யாதது, அவரிடத்தில் அனுதாபம்/இரக்கம் இல்லாமைக்கான ஆதாரம் ஆகாது; அதேசமயம் கப்பர்நகூமையும், பூமியின் மற்றப் பகுதிகளையும் சுகாதாரமாக/ஆரோக்கியமாக வைப்பதற்கு எது அவசியப்படும் என்பதைக்குறித்த அறிவு/உணர்வு அவரிடத்தில் இல்லாமைக்கான ஆதாரமும் ஆகாது; மேலுமாக பல ஆயிரம் வருடங்களாக முழு உலகத்திலும் வியாதி, பெலவீனங்களை விளைவித்துக் கொண்டிருக்கும் மலேரியா மற்றும் மற்ற விதமான தீமையான சூழ்நிலைகளை அனுமதித்திருக்கும் தேவனானவர், அவர் சார்பில் மனுக்குலத்தின் மீது கவனமற்றவராக

இருக்கின்றார் என்பதற்கான ஆதாரமும் ஆகாது. மாறாக தேவன் வியாதிகளைக்குறித்து முன்னமே அறிந்தவராகவும், பாவியான மனுஷனுக்கு எதிரான (மரண) தீர்ப்புக்குத் துணையாகவும், உதவியாகவும், உடன் இணைந்து வரத்தக்கதாகவும், தீமையான சூழ்நிலைகளை அனுமதித்தவராகவும் இருக்கின்றார்.

மனுக்குலத்தை மீட்டுக்கொண்டவரும், சபிக்கப்பட்ட பூமியிலிருந்து அவருக்குச் சொந்தமானவைகளை மீட்டுக்கொண்டவருமான அவர், அதினின்று சகல தீமையான, நச்சுத்தனமான தாக்கங்களைச் சுத்திகரிக்கும் காலம் வரும் (எபேசியர் 1:14 - “Who is the pledge of our inheritance, unto the redemption of the acquired possession, to the praise of his glory” (Recovery Version); “Which is the earnest of our inheritance, until the redemption of the purchased possession, unto the praise of his glory” (KJV); “Who is a deposit guaranteeing our inheritance until the redemption of those who are God’s possession . . . to the praise of his glory” (NIV). "கிரயமாகக்கொள்ளப்பட்ட தேவனுடைய சொத்து (மனுக்குலம் அவர்களுடைய உரிமை, ஜீவன், பூமி, இயற்கை) அவருடைய மகிமையின் புகழ்ச்சிக்காக விடுவிக்கப்படும் வரையிலும், ஆவியானது நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கின்றது” (சரியான மொழிப்பெயர்ப்பு); அப்படியாக சுத்திகரிக்கப்படும் காலம் வரும்போது பிற்பாடு மரணமோ, வலியோ, வியாதியோ, அலறுதலோ இருப்பதில்லை, ஏனெனில் முந்தினவைகள் எல்லாம் ஒழிந்திடும், எல்லாம் புதிதாய் ஆக்கப்படும். மனுக்குலத்தின் பயன்பாட்டிற்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் திட்டமிடப்பட்டதான பூமியும், மனுக்குலம் புதுப்பிக்கப்படும் காலமானது வேதவாக்கியங்களில் சீர்த்திருத்தலின் காலங்கள் என அழைக்கப்படுகின்றது; "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கத்தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கத்தரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்” (அப்போஸ்தலர் 3:19-23).

முதலாம் வருகையின்போது, நமது கர்த்தரின் ஊழியம் விசேஷமாக தம்மை உலகத்திற்கு ஈடுபலியாக ஒப்புக்கொடுப்பதேயாகும்; மேலும் தம்மீதும், தமது போதனைகளின்மீதும், தம்முடைய எதிர்க்கால வேலையின்மீதும் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் விசுவாசம் வைத்துக்கொள்ளத்தக்கதாக, அஸ்திபாரமாக விளங்கும்படி ஆதாரங்களைக் கொடுப்பதும் அவரது இரண்டாம் பட்ச வேலையாக இருந்தது; அதாவது, தற்கால யுகத்தின் இத்தகைய விசுவாசிகள் பிதாவினிடத்திற்கு வரவும், புத்திரசுவிகாரம் மற்றும் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்துவதின் மூலம் மாபெரும் எதிர்க்காலத்திற்குரிய சீர்த்திருத்த வேலையில், அதாவது பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிக்கும் வேலையில், மேசியாவுடன் உடன் சுதந்திரர்களாக்கத்தக்கதாக விசுவாசம் வைப்பதற்கான அஸ்திபாரமாக விளங்கும்படி ஆதாரங்களைக் கொடுப்பதும் அவரது இரண்டாம் பட்ச வேலையாக இருந்தது.

இராஜாவினுடைய அந்த மனுஷன் விசுவாசத்தின் மூலம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டவனானான், அவனுடைய நடத்தை அவன் விசுவாசத்தைக் காட்டுகின்றது. இப்படியாகவே தேவனால் அங்கீகரிக்கப்படும் சகலரும் காணப்பட வேண்டும்; நமக்கு முன்பாக சுவிசேஷத்தில் வைக்கப்பட்டுள்ள மாபெரும் பரிசை வெல்லப் போகும் யாவரும் இப்படியாகவே காணப்பட வேண்டும், "இதுவே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாய் இருக்கின்றது.” ஆனால், "விசுவாசமில்லாத கிரியை செத்தக் கிரியையாயிருக்கின்றது.” விசுவாசம் வெளியரங்கமாகாவிட்டால் விசுவாசம் இல்லை என்பதாகிவிடும். அவருடைய வாக்குத்தத்தங்களின்படி, கர்த்தருக்கான நமது சகல ஊழியங்களும் நமது விசுவாசத்திற்கான நிரூபணங்களாக விசேஷமாக/பிரதானமாக மதிப்பிடப்படுகின்றது (1 யோவான் 5:4; யாக்கோபு 2:26; எபிரெயர் 11:6).

நெப்போலியனின் படையில், ஒரு சாதாரண தனிப்பட்ட வீரன் அவருடைய வார்த்தையை எப்படி விசுவாசித்தான் என்றும், அதன் விளைவாக அவன் எவ்வாறு தலைமை பதவிக்கு உயர்த்தப்பட்டான் என்றுமுள்ள ஒரு கதை கூறப்படுகின்றது. பாரீஸ் பட்டணத்திலுள்ள தனது படையை நெப்போலியன் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில், அவர் கையிலிருந்த கடிவாளம் கீழே விழ, குதிரையானது பாய்ந்து ஓட ஆரம்பித்தது, ஒரு வீரன் அணிவரிசையிலிருந்து பாய்ந்து குதிரையையும் பிடித்து, கடிவாளத்தையும் நெப்போலியனிடம் எடுத்துக்கொடுத்தான். "தளபதியே உமக்கு மிகுந்த நன்றி" என்று சக்கரவர்த்திக் கூறினான். அதற்கு அவன் உடனடியாக "எப்படைப் பிரிவிற்கு ஆண்டவனே" என்று கேட்டான். அவனுடைய நம்பிக்கை மற்றும் புரிந்துக்கொள்ளும் தன்மையில் பிரியம் அடைந்த சக்கரவர்த்தி, "மெய்காவலர் படையினருக்கு நீ தளபதி" என்று பதிலளித்தார். அந்த வீரனுடைய வஸ்திரங்கள் சாதாரணமான தனிப்பட்ட வீரனுக்குரிய வஸ்திரமாயிருப்பினும், தன்னுடைய நம்பிக்கை மற்றவருக்குப் பரிகாசமாக இருக்கும் என்ற உண்மை தெரிந்தும், அவைகளைக் கண்டுகொள்ளாமல், அவன் உடனடியாக, தலைமை அலுவலர்கள் மத்தியில்போய் (தலைவன் போல்) நின்றுவிட்டான். அவன் சக்கரவர்த்தியின் வார்த்தைகளை நம்பினான், அந்த நம்பிக்கையின்படி நடந்துகொண்டான், தளபதியுமானான். இப்படியாகவே, "நாம் தெய்வீகச் சுபாவத்தில் பங்கடையத்தக்கதாக, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை நமது கர்த்தர் நமக்கு அருளியுள்ளார்." மேலும் தம்மை அன்பு கூருபவர்களுக்குத் தேவன் ஏற்பாடு பண்ணி வைத்துள்ள மகா மேன்மையும், அருமையுமானவைகளை அடைகின்றவர்கள் மாத்திரமே, அவருடைய வார்த்தைகளை அப்படியே நம்புகிறவர்களாகவும் இருந்து, "வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும் ஒளியில் நடக்கிறவர்களாகவும்" ஆவார்கள். இத்தகையவர்களே, பாவம், தீமை, மூடநம்பிக்கையின் இருளை அகற்றி, உலகத்தை ஆசீர்வதிக்கவும், புத்துணர்வு அடையச்செய்யவும்தக்கதாக, தனது செட்டைகளில் குணமாக்கும் வல்லமையுடன் எழும்பும் மாபெரும் நீதியின் சூரியனின் அங்கங்களாக இறுதியில் ஆவார்கள். "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 13:43).

ஆனால் தங்கள் மீதே மாபெரும் விசுவாசம் வைத்துக்கொண்டு, இவ்விசுவாசமே தாங்கள் "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களில்" ஒருவராக இருப்பதற்கான ஆதாரம் என்று எண்ணிக்கொள்கின்ற தப்பறைகளிலிருந்து, நாம் நம்மைக் காத்துக்கொள்வோமாக. நெப்போலியனுக்கு <u>ஊழியம் செய்து</u>, அதே சமயம் அவரை <u>நம்பின</u> வீரனே <u>பலனைப் பெற்றுக்</u> கொண்டான். ஆகவே ஒவ்வொருவனும் தன்னிடத்தில் கேட்டுப் பார்க்க வேண்டிய கேள்வி என்னவெனில், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு உரியவைகளாக இருக்கின்றதா? அந்த வாக்குத்தத்தங்களோடு நிபந்தனைகள் உள்ளனவா? ஒருவேளை இருக்குமாயின் என்னுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலும் உறுதிபண்ணப்படத்தக்கதாக நான் அந்த நிபந்தனைகளுக்கு இசைவாக வாழ்கின்றேனா?

"விசுவாசத்தில் பூரண நிச்சயம்" அடையத்தக்கதாக, ஒருவனுக்கு இக்கேள்விகளுக்குப் பதில் வேண்டுமெனில், அவன் வாக்குத்தத்தங்களைத் தேடி/ஆராய வேண்டும்; அவைகளின் முக்கியத்துவம் மற்றும் அதனோடு கூட வரும் நிபந்தனைகளை ஆராய்ந்து, பரிசை அவன் வெல்ல வேண்டுமெனில், அவைகளின்படி நடக்கவும் வேண்டும்; அதேசமயம் நமது கர்த்தருடைய வார்த்தைகளையும் அவன் நினைவுகூர வேண்டும், அது என்னவெனில், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21).

**R3300**

# "போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது"

## லூக்கா 4:16-30

"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11).

நமது கர்த்தர் தமது ஊழியத்தை யூதேயாவில் ஆரம்பித்தார், அவர் தம்முடைய வாழ்க்கையின் பெரும்பகுதி கழிந்துபோன கலிலேயா மாகாணத்திற்குப் (திரும்பி) போவதற்கு முன்பு, அநேகமாக அவர் ஒரு வருட காலம் யூதேயாவில் செலவிட்டிருக்க வேண்டும் என்று அநுமானிக்கப்படுகின்றது. அவர் தம்முடைய சொந்த மாகாணத்திற்குப் போகையில், தம்முடைய சொந்த ஊருக்குப் போகும் முன் கப்பர்நகூமுக்குப் போனார். இச்செயல்பாடானது, ஒரு தீர்க்கத்தரிசி தொலைவில் இருப்பவர்களைக் காட்டிலும், சொந்த வீட்டாரால் பொதுவாகவே குறைவாக மதிப்பிடப்படுவார் என்ற உண்மையைக் கருத்தில்கொண்டு சிந்திக்கையில் ஞானமுள்ள செயல்பாடாக உள்ளது. யூதேயாவிலும், கப்பர்நகூமிலும் அவருக்கு உண்டான கீர்த்தியானது, அவருடைய மூன்றாம் வயது தொடங்கி, 30 வயது வரையிலும் அவர் வாழ்ந்து வந்த நாசரேத்தூரின் ஜனங்களின் மத்தியில் கவனத்தை ஈர்த்தது. அவர் நிமித்தம் அவருடைய ஊரைச் சார்ந்த நபர்களுக்குக் கொஞ்சம் பெருமை ஏற்பட ஆரம்பித்தது; மேலும் நமது கர்த்தர் நாசரேத்துக்கு வந்த பிற்பாடு முதல் ஓய்வு நாளன்று, ஜெப ஆலயத்தில் பெரும் திரளான ஜனக்கூட்டம் கூடியிருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு ஐயமில்லை.

தம்மிடத்திற்கும், தாம் கொடுக்கப்போகும் செய்தியினிடத்திற்கும் பாலஸ்தீனியாவின் ஜனங்களை ஈர்க்கவும், அவர்களை விழிக்கப்பண்ணுவது நமது கர்த்தருடைய ஊழியத்தின் நோக்கமாக இருந்தாலும், சகல ஜனங்களையும் சேர்த்துக்கொள்வது அந்தச் செய்தியின் நோக்கமாயிராமல், பதரிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுப்பதே நோக்கமாயிருந்தது, அதாவது கோதுமைகளை இயேசுவினிடத்திற்குச் சேர்த்துக் கொள்ளவும், எதிர்ப்பாயிருக்கும் பதர் வகுப்பாரை வரிசைப்படுத்தவுமேயாகும். கர்த்தருடைய ஊழியத்தின் பலனைக்குறித்து முன்னுரைக்கப்பட்டிருந்த காரியங்கள் முழுமையாக நிறைவேறினதை நம்மால் பார்க்க முடிகின்றது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" யோவான் 1:11, 12. அதாவது மோசேயை தலையாகக் கொண்டிருந்த பணிவிடைக்காரர்களின் வீட்டிலிருந்து, நமது கர்த்தராகிய இயேசுவைத் தலையாகப் பெற்றிருக்கும் புத்திரர் வீட்டாருக்குள் ஒருவராக மாறும் வாய்ப்புக் கொடுத்தார். நமது கர்த்தருடைய ஊழியத்தின் நாட்களில், உண்மையுள்ள ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், பெந்தெகொஸ்தே நாள் வரையிலும் அவர்கள் மீண்டுமாக ஜெநிப்பிக்கப்படவில்லை. பெந்தெகொஸ்தே நாளானது, அன்றைய நாளில் ஆயத்தமாயிருந்தவர்கள் மீது ஆவியின் ஜெநிப்பித்தலைக் கொண்டு வந்தது, அதாவது முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் இறுதியில் ஆவியில் பிறப்பதற்கு அவசியமான ஆவிக்குரிய குணலட்சணங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஜெநிப்பித்தலைக்கொண்டு வந்தது.

நமது பாடத்தின் முதலாவது வசனமானது, ஒவ்வொரு ஓய்வு நாளிலும் ஜெப ஆலயங்களின் கூடுகைகளில் கலந்துகொள்வது நமது கர்த்தருடைய வழக்கமாக இருந்தது என்றும், சபையாருக்காக வாசிப்பது அவருக்கு வழக்கமாக இருந்தது என்றும் தெளிவாகக் காட்டுகின்றது. (synagogue) ஜெப ஆலயங்களின் ஆசரிப்புகள், (temple)ஆலயங்களின் ஆசரிப்புகளுக்கு ஒத்ததாக இருப்பதில்லை. ஆலயம் என்பது ஜெபவீடாகவும், ஜனங்களின் பாவத்திற்காக காளை, வெள்ளாடு முதலியவற்றின் இரத்தத்தைக்கொண்டு நிழலான பாவநிவாரணம் செய்யப்படுகின்ற ஸ்தலமாகும். ஜெப ஆலயம் என்பது இன்றைய காலக்கட்டத்தின் வேதாகம வகுப்புகள் போன்று காணப்பட்டது, அங்கு வேதவாக்கியங்கள் வாசிக்கப்படும், மேலும் வழிநடத்தும் தலைவரினால் மாத்திரம் அல்லாமல், அவ்விடத்தில்

கூடியுள்ள அனைவராலும் விரும்பும் பட்சத்தில் வேதவாக்கியங்களைச் சுதந்திரமாக விவாதம் (discuss) பண்ணலாம். ஜெப ஆலயத்தில் இவ்வொழுங்குமுறையில் சில சிறப்பு அம்சங்கள் உள்ளன, அது என்னவெனில், எந்த ஒரு வேதவாக்கிய தலைப்பின் கீழ் விவாதம்/ஆராய்ச்சி பண்ணுவதற்கான வாய்ப்பும் கொடுக்கப்படுவதேயாகும். கர்த்தருடைய ஜனங்களுக்கு அவர்கள் இன்னமும் சத்தியத்தில் தெளிவடையத்தக்கதாக, அவர்கள் வேத ஆராய்ச்சி பண்ணவும், வேதாகம வகுப்புகள் நடத்தவும் நாம் பரிந்துரைக்கின்றோம்.

## “சத்திய வார்த்தையை நிதானமாய்ப் பகுத்து ஆராய்தல்”

ஜெப ஆலயங்களில் வேதவாக்கியங்கள் வாசிப்பதில் யூதர்கள் சில ஒழுங்குமுறைகள் வைத்திருந்தார்கள், மேலும் அன்றைய தினம் ஏசாயாவின் புஸ்தகத்திலிருந்து வாசிக்க வேண்டியிருந்தது. கர்த்தர் ஏசாயாவின் புஸ்தகத்தில் இப்பொழுது நாம் 61-ஆம் அதிகாரம் என்று கூறும் பகுதிகளை எடுத்துக்கொண்டு முதல் வசனத்தையும், இரண்டாம் வசனத்தின் ஒரு பாகத்தையும் வாசித்துவிட்டு, புஸ்தகத்தை மூடி, கீழே அமர்ந்து, தாம் வாசித்த பாகங்களுக்குச் சில விளக்கவுரைக் கொடுத்தார். நமது கர்த்தர் இங்கு அப்போஸ்தலர் விவரிக்கிற பிரகாரமாக, "சத்திய வார்த்தையை நிதானமாய்ப் பகுத்து ஆராய்ந்து" வாசித்தார் என்று நாம் பார்க்கின்றோம். அக்காலத்திற்கு ஏற்ற பாகத்தை மாத்திரம் அவர் வாசித்தார், ஆனால் நீதியைச் சரிக்கட்டும் நாள் குறித்த பாகத்தை அவர் வாசிக்கவில்லை. அவருடைய போதனைகள், ஜனங்களைப் பரீட்சிக்க வேண்டியதாய் இருந்தது, அதாவது ஒருவேளை அவருடைய செய்தி ஏற்றுக்கொள்ளப்படுமாயின், நீதியைச் சரிக்கட்டும் நாள் அவசியமில்லை; ஒருவேளை அவருடைய செய்தி ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில், நீதியைச் சரிக்கட்டும் நாள் அவர்களைப் பின்தொடருக்கின்றதாய் இருக்கும்; அவர்கள் அவரைப் புறக்கணித்தப்போது, நீதியைச் சரிகட்டும் நாளானது அவர்களைப் பின்தொடர்ந்தது. இதில் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஒரு பாடம் உள்ளது, அதென்னவெனில், நாம் ஆச்சாரமான முறையில் கர்த்தருடைய வார்த்தைகளை அதிகாரம் வாரியாக வாசித்துக்கொண்டு மாத்திரமே செல்வதைக் காட்டிலும், நாம் ஒரு வசனத்தைப் புரிந்துக்கொண்டும், உணர்ந்துக்கொண்டும் வாசிப்பது நலமாயிருக்கும் என்பதேயாகும்.

"உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று" என்று நமது கர்த்தர் கேட்டுக்கொண்டிருப்பவர்களிடம் கூறினார் (லூக்கா 4:21). இவ்வேத வாக்கியம் (ஏசாயா 61:1-2) பல நூற்றாண்டுகள் முன்பு எழுதப்பட்டதும், பல நூறு முறைகள் வாசிக்கப்பட்டதுமாயிருக்க, அவர்களுடைய (யூதர்) அறுவடையின் காலத்தில் முதல் முறையாக "நிறைவேறிற்று" என்று சொல்லப்பட்டது. கர்த்தர் யோர்தானில் தம்மை அர்ப்பணித்து, பரிசுத்த ஆவியானது அவர்மேல் இறங்கி சுமார் ஒரு வருடமாகிவிட்டது. பரிசுத்த ஆவி அவர்மேல் வந்தது என்பது, அவர் அபிஷேகம் பண்ணப்பட்டதைக் குறிக்கின்றது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது என்பது, அபிஷேகம் பண்ணப்படுதலைக் குறிக்கும் என்பதை யூதர்கள் அறிந்தவர்களாய் இருந்தார்கள்; யூதர்களுடைய பிரதான ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார்கள் என்பது பலிகள் செலுத்துவதற்கும், தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையே மத்தியஸ்தர் வேலை செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கும் விதமாக ஆசாரியன் மேல் கர்த்தருடைய வல்லமை (அ) ஆவி இருப்பதைக் குறிக்கின்றது. யூதர்களுடைய இராஜாக்கள் அபிஷேகிக்கப்படுவது என்பது, இராஜாக்கள் ஜனங்களை ஆளும் விஷயத்தில் கர்த்தருக்கு அடையாளமாக இருக்கத்தக்கதாக விசேஷமாக அங்கீகரிக்கப்படுவதையும், தெய்வீக வல்லமையும், வழிநடத்துதலும் இராஜாக்கள் மீது இருக்கின்றது என்று காண்பிக்கப்படுவதையும் குறிக்கின்றது.

தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய மேசியா வந்து, பூமியில் நீதியின் ஆளுகையை ஸ்தாபிப்பார் என்றே வாக்குத்தத்தம் காணப்பட்டது, மேலும் இப்பொழுது நமது கர்த்தர் தம்மைப் பிதாவின், அபிஷேகம் பண்ணப்பட்டவராக அறிவித்தார். இதை அவர், "நான்தான் மேசியா, நான்தான் தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர், என்னிடத்தில் ஆசாரியன் மற்றும் இராஜாவிற்குரிய அதிகாரம் உள்ளது" என முரட்டுத்தனமான விதத்தில் ஒன்றும் கூறவில்லை, மாறாக, அந்தத் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல் இப்பொழுது சம்பவித்துள்ளது என்பதன் மீதும், மற்றும் அந்தத் தீர்க்கத்தரிசனத்தின் மீதும் அவர்களது கவனத்தைத் திருப்பும்விதமாக ஆணவத்துடன் அல்லாமல், அமைதலுடனே கூறினார். தேவன் தம்மை ஆளுகை செய்யும்படிக்கு அபிஷேகம் பண்ணியுள்ளார் என்ற அறிவிப்புக்

காணப்படவில்லை, ஆனால் அவருடைய ஊழியத்தின் முதல் பாகமானது அவர் பிரசங்கம் பண்ணுவதாகக் காணப்பட்டது, அதாவது மனுக்குலத்திற்குத் தேவனுடைய வாயாக இருந்து அறிவிப்பது அவருடைய ஊழியத்தின் முதல் பாகமாக இருந்தது. இறுதியில், சகல ஜனங்களிடமும் சென்றடைந்து சேரத்தக்கதான மாபெரும் செய்தி அவரிடத்தில் இருந்தது. ஆனால் அத்தருணத்திலோ கேட்கச் செவியுள்ளவர்களுக்கு மாத்திரமே அச்செய்தி உரியதாயிருந்தது.

இராஜரீக அம்சங்கள் இல்லை என்றும், தீர்க்கத்தரிசியினால் கோடிட்டுக் காட்டப்பட்டதும், கர்த்தரால் அறிவிக்கப்பட்டதுமான மேசியாவின் வேலையானது, ஒரு மாபெரும் சேனையை எழுப்புவதற்குப்பதிலாக, நற்செய்தியைப் பிரசங்கிப்பதாகவும் இருந்தது என்றும், ஐசுவரியவான்களையும், ஞானமுள்ளவர்களையும், பெருமையுள்ளவர்களையும் தமக்கு ஆதரவு கொடுக்கக் கூட்டுவதற்குப்பதிலாக, ஏழைகளுக்கும், எளிமையுள்ளவர்களுக்கும் பிரசங்கிப்பதாகவும் இருந்தது என்றும் உணரும்போது, இது அநேகருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேசியா இருதயம் நறுங்குண்டவர்களைக் கட்டிச் சுகமாக்கப் போகிறார் என்ற அச்செய்தியினுடைய பாகத்தின் நிமித்தமும் அவர்களுக்கு ஏமாற்றம் உண்டாயிருக்கும். மற்றத் தேசங்களில் காணப்பட்ட மாபெரும் தலைவர்கள் மற்றும் யுத்த வீரர்கள் போன்றே தங்களுடைய இரட்சகரும், அநேக உயிர்களைக் கொன்றுபோடுகிறவராகவும், துன்பம் மற்றும் துக்கத்தினால் அநேகருடைய இருதயங்களை உடைத்துப் போடுகிறவராகவும் இருப்பார் என்றுதான் அவர்கள் அநேகமாக எதிர்ப்பார்த்திருந்திருக்க வேண்டும். ஏதோ விதத்தில் நறுங்குண்ட நிலையில் இருதயம் பெற்றிருந்தவர்கள் கூட, தங்களுடைய தவறான எதிர்ப்பார்ப்பின் காரணமாக அநேகமாக ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும்.

சிறைபட்டவர்களின் விடுதலைக்குறித்தும், கட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறவர்களுக்கு சிறையின் கதவுகள் திறக்கப்பட்டுச் சுதந்திரம் கொடுக்கப்படுவதைக்குறித்தும் அறிவித்தவைகளை, அங்குக் கர்த்தர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய எண்ணங்கள் அப்போது சிறையில் காணப்பட்ட யோவான் ஸ்நானன் மீது கடந்துசென்றது, மேலும் யோவானை விடுவிக்கும்படி, இயேசு ஏதேனும் முயற்சிகள் எடுக்கப்போகிறாரோ என்று கூட அவர்கள் யோசித்திருக்க வேண்டும். இவ்வசனத்தின் உண்மையான அர்த்தத்தைக்குறித்து அவர்கள் புரிந்துக்கொள்ளவேயில்லை; இவ்வசனமானது, பாவத்தின் அடிமைத்தனத்தினின்று சாத்தானின் சிறை கைதிகள் விடுவிக்கப்படுவதையும், இறுதியில் மரணத்தினின்றும், அதன் கட்டிலிருந்தும், கல்லறையாகிய இந்த மாபெரும் சிறைக்குள் போயிருந்த மில்லியன் கணக்கான ஜனங்கள் விடுவிக்கப்படுவதையுமே குறிக்கின்றது. கர்த்தருடைய சீஷர்களும் கூட, அதாவது அவருடைய செய்தியைக் கேட்கச் செவியும், உணர்வடையும் இருதயமும் கொண்டிருந்து, எதையும் இழக்கத் தயாராகி, அவருடைய பின்னடியார்கள் ஆனவர்கள் கூட, அச்சமயத்தில் கர்த்தருடைய வேலையின் மகத்துவத்தைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குத் தீர்க்கத்தரிசனங்களின் அர்த்தத்தை அவர் புரிய வைக்க வேண்டியிருந்தது, மேலும், பிரேதக்குழிகளில் இருப்பவர்கள் அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம்வரும் என்று அவர்களுக்கு விளக்கினார்.

## “அநுக்கிரகக் காலம்”

தீர்க்கத்தரிசியினால் குறிப்பிடப்பட்டுள்ள இந்த அநுக்கிரக்காலம் குறித்தும், அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. முழுச் சுவிசேஷ யுகமே, இந்த அநுக்கிரகக் காலம் (அ) அநுக்கிரக வருஷம் என்று இன்று நாம் காணமுடிகின்றதினால், நம்முடைய கண்கள் பாக்கியமானவைகள் ஆகும். இந்தச் சுவிசேஷ யுகத்தில்தான் கிறிஸ்து மூலம் தேவனிடத்தில் வரும் யாவரையும் ஏற்றுக்கொள்ள அவர் சித்தமுள்ளவராக இருக்கின்றார். அதாவது, இயேசுவுடன் கூட உடன் பலிச் செலுத்துகிறவர்களாகவும், மாபெரும் இராஜரிக ஆசாரியக் கூட்டத்தின் அங்கங்களாகவும் கிறிஸ்து மூலம் தேவனிடத்தில் வரும் யாவரையும் ஏற்றுக்கொள்ள, அவர் சித்தமுள்ளவராக இருக்கின்றார். உண்மைதான், ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில் மாபெரும் மீட்பரானவர் மனுக்குலம் முழுவதையும் சீர்த்திருத்தலின் முறைமையின் மூலம், மீண்டுமாக தேவனுடைய சாயலில் கொண்டு வந்து, தேவனுக்கு இசைவான இருதய நிலையில் அவர்களைக்கொண்டு வந்திருக்கும்போது,

மனுக்குலத்தையும் ஏற்றுக்கொள்ள தேவன் சித்தம் உள்ளவராகக் காணப்படுவார். ஆனால் கிறிஸ்துவினால் சீர்ப்பொருத்தப்பட்ட பிற்பாடு, உலகம் ஏற்றுக்கொள்ளப்படும் காரியமானது, தற்காலத்திலே சபை ஏற்றுக்கொள்ளப்படும் காரியத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாகும்.

நாம் (இப்பொழுது) ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது, நம்முடைய சுபாவ மாற்றத்தைக் குறிக்கின்றது; புதிய சுபாவத்திற்கு, அதாவது ஆவிக்குரிய சுபாவத்திற்கு நாம் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம்; மேலும் இந்த ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் அப்போஸ்தலர் விவரித்தப் பிரகாரமாக, தேவனுடைய கிருபையினால், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான மீட்பின் மூலமாய் இலவசமாக முதலாவதாக நாம் நீதிமானாக்கப்பட்டிருக்க, இரண்டாவதாக நாம், “புத்தியுள்ள ஆராதனை செய்யத்தக்கதாக நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக” ஒப்புக்கொடுக்க வேண்டும். இந்த “அநுக்கிரக நாள்” என்பது, நம்முடைய பரம பிதா அபிஷேகம் பண்ணப்பட்டவரின் பலிகளை ஏற்றுக்கொள்வதற்குச் சித்தமாயிருக்கும் நாளைக் குறிக்கின்றதாய்க் காணப்படுகின்றது. பிற்பாடு சிலுவையில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட இயேசுவின் அர்ப்பணிப்புக்குரிய ஆரம்பப் பலியை மாத்திரமே பிதா ஏற்றுக்கொண்டவராய்க் காணப்பட்டார். இதன் அடிப்படையிலேயே பரமபிதாவானவர் முதலாம் உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்களாகிய கனம், மகிமை மற்றும் அழியாமைத் தொடர்புடைய மகா மேன்மையான பரிசைக்கொடுத்தார். இப்படியாகவே, இரட்சகரின் இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்ற அவருடைய சரீர அங்கங்கள் யாவரின் பலிகளும் இந்த நிஜமான பாவ நிவாரண நாள் அன்று பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றது. மேலும் இந்த “மேன்மையான பலிகள்” முடிந்த பிற்பாடு, அதாவது நிழலான காளை மற்றும் வெள்ளாட்டின் பலிகள் கொடுக்கப்பட்டு முடிந்து, ஏற்றுக்கொள்ளப்பட்டப் பிற்பாடு, எந்தப் பலிகளும் தேவைப்படுவதுமில்லை (அ) ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை.

நமது கர்த்தர் அறிவித்த இந்த ஆச்சரியமான தீர்க்கத்தரிசனம் அவரிடத்திலும் நிறைவேற்றப்பட்டு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாகிய, அவருடைய உண்மையாக அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களிடத்திலும் இன்னமும் நிறைவேறிக்கொண்டிருக்கின்றது. இதுவுங்கூட நிழலில் காட்டப்பட்டுள்ளது. ஆரோன் சிரசில் ஊற்றப்பட்ட பரிசுத்த அபிஷேகத் தைலமானது, அவருடைய வஸ்திரங்களிலும் வழிந்து ஓடினதாய்க் காணப்பட்டு, இப்படியாக சொல்லர்த்தமான அவருடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கங்களையும் அபிஷேகம் பண்ணுகிறதாகக் காணப்படுகின்றது. இப்படியாகவே நமக்கும் உள்ளது. நாம் அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீர அங்கங்களாகவும் இருக்கின்றோம், மேலும் நமது தலையினுடைய விஷயத்தில் நடந்தவைகள், நம் ஒவ்வொருவரின் விஷயத்திலும் அப்படியாகவே காணப்படும். நாம் அனைவரும் பிரசங்கம் பண்ணுவதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றோம், மேலும் சாந்தமும், இருதயம் நறுங்குண்ட யாவருக்கும் வரவிருக்கின்ற இராஜ்யத்தைக்குறித்த நற்செய்தியை அறிவிக்க நாம் அனைவரும் கர்த்தரிடமிருந்து அதிகாரம் பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கின்றோம். மனுஷர்களுடைய இருதயத்தை நொறுக்குவதற்கே கர்த்தர் நோக்கம் கொண்டவராக நமக்குச் சுவிசேஷ செய்தியையும், பணியையும் கொடுத்திருக்கின்றார் என்று யூகிப்பது தவறாகும். அற்பமாய் இருக்கிறவர்களிடத்திலேயே நாம் விசேஷமாகப் போகும்படிக்கு நமக்குப் பணிகொடுக்கப்பட்டுள்ளது என்று அனுமானிப்பதும் தவறேயாகும். நம் மூலமாக வெளிப்படுத்தப்படும் செய்தியானது, சாந்தமுள்ளவர்களையும், இருதயம் நறுங்குண்டவர்களையும் தவிர வேறு எவரையும் ஈர்க்கும் என நாம் எதிர்ப்பார்க்கக் கூடாது. உண்மைதான், இருளின் மத்தியில் பிரகாசிக்கும் வெளிச்சமானது, இருளைக் கண்டிக்கிறதாகவும், பாவம், நீதி மற்றும் வரவிருக்கிற நியாயத்தீர்ப்புக் குறித்துக் காட்டுகிறதாகவும், நீதி மற்றும் அநீதிக்கு இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்திக் காட்டுகிறதாகவும் இருக்கின்றது. ஆயினும் இவைகள் அனைத்தும் அச்செய்தியினால் நிகழக்கூடிய இதர அம்சங்களேயாகும். சுவிசேஷத்தின் உண்மையான பணி சாந்தமுள்ளவர்களையும், இருதயம் நறுங்குண்டவர்களையும் ஈர்ப்பதேயாகும்.

உலகத்திற்கான நம்முடைய பொதுவான செய்தியானது, அதாவது அவர்களால் கேட்க முடிந்த அளவிற்கு நாம் கூறுவது, சிறைப்பட்டவர்களின் விடுதலை மற்றும் இறுதியில் மரணத்தின் சிறைக்கதவுகள் திறக்கப்படும் என்றுமுள்ள பொதுவான செய்தியே ஆகும்; இன்னுமாக ஏற்றகாலத்தில் தேவனிடமிருந்து அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்

மூலம், பூமியின் சகல குடிகளும் சத்தியத்தின் அறிவாகிய மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் அவர்கள் தேவனை அறிந்துக்கொள்ளவும், பரிசுத்தமான பெரும்பாதையான வழியில் திரும்பச் செல்லத்தக்கதாகவும் அவர்களுடைய செவிடான செவிகள் திறக்கப்படும் என்றும், புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும் என்றும், ஆயிரம் வருஷம் அரசாட்சியின் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் இறுதியில் அவர்களுக்கே உரியது என்றுமுள்ள பொதுவான செய்தியே ஆகும். ஆனால் இன்று கேட்கும் செவிகளை உடையவர்களுக்கு இன்னும் அதிகமான விஷயங்களை நாம் கூறலாம். சாத்தான், பாவம் மற்றும் மாம்சத்தின் பெலவீனத்தினுடைய ஆளுகையிலிருந்து அவர்களின் விடுதலையைக்குறித்து நாம் அவர்களுக்குக் கூறலாம். இன்னுமாக ஒருவேளை அவர்கள் இயேசுவை விசுவாசித்து, தங்களால் முடிந்தமட்டும் மாம்சத்தின்படி நடக்காமல், ஆவியின்படி நடக்க நாடுவார்களானால், நம்முடைய இரட்சகரினால் பாவங்களுக்காகச் செலுத்தப்பட்ட மாபெரும் பலியின் புண்ணயத்தினால் அவர்களுடைய கடந்தகால பாவங்கள் மன்னிக்கப்படும் என்றும், அவர்களுடைய தற்கால பெலவீனங்களும், குறைவுகளும் மூடப்படும் என்றும், நாம் அவர்களுக்குத் தேவனுடைய நாமத்தில் நிச்சயம் கொடுக்கலாம். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் காரியமானது, இப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கும், ஊழியக்காரிகளுக்குமே உரியதாகும், ஆனால் உலகத்திற்கான உண்மையான நீதிமானாக்கப்படுதல் (அ) பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுதலாகிய மகிமையான ஏற்பாடானது, சாத்தான் கட்டப்பட்டு, ஜனங்கள் இனி மோசம் போக்க முடியாத வரவிருக்கிற யுகத்திற்கே உரியதாகும்.

## “கிருபையற்ற இருதயங்களுக்குக் கிருபையான வார்த்தைகள்”

நமது கர்த்தருடைய உரையாடல் பதிவு செய்யப்படவில்லை, எனினும் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வசனத்தை அடிப்படையாகக்கொண்டிருப்பதினால், அவருடைய உரையாடல் சிறப்பாய்க் காணப்பட்டிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அவருடைய வாயிலிருந்து, கிருபை நிறைந்த வார்த்தைகள், சமாதானம், ஆறுதல், ஆசீர்வாதம் மற்றும் தயவுள்ள வார்த்தைகளாய் இருந்தது என அங்கிருந்த அனைவரும் அவருக்கு நற்சாட்சிகொடுத்தனர். தம்முடைய ஆயிரம் வருஷம் அரசாட்சியில், தம்முடைய மீட்பின்/பலியின் வேலையின் நிமித்தம் சுதந்தரிக்கப்பட்ட, உலகத்தின் மீது வரவிருக்கிறதான ஆசீர்வாதங்களைக்குறித்து எந்த அளவிற்குக் கர்த்தர் விளக்கினார் என்பது நமக்குத் தெரியவில்லை. அவருடைய வயதான அயலகத்தாரும், நண்பர்களும், அவரைக்குறித்து மிகவும் உயர்வான அளவில் எண்ணத் துவங்கினார்கள், மேலும் தீர்க்கத்தரிசியானவன் தன்னுடைய சொந்த ஊரிலும், உறவினர்கள் மத்தியிலும் அங்கீகரிக்கப்படமாட்டான் என்று முன்னொரு காலத்தில் பேசப்பட்ட பழமொழியானது மறுக்கப்பட வேண்டிய நிலை உருவாகி உள்ளது என்பது போன்று தோன்றியது. இன்னுமாக அவருடைய சொந்த ஊரார் அவரை உண்மையில் மாபெரும் தீர்க்கத்தரிசியென ஏற்றுக்கொள்வது போன்றும், அவரினால் மகிழ்ச்சிகொள்வது போன்றும், அவர் தங்களுடைய ஊரானாக இருந்ததினால், அதாவது நாசரேத்து ஊராராகிய இயேசுவாக இருப்பதினால் அவர் நிமித்தம் பெருமை கொள்வது போன்றும் தோன்றிற்று.

ஆனால் அவரைக்குறித்த அவர்களுடைய பாராட்டு சிறு கணங்களே நீடித்ததாகக் காணப்பட்டது! அவர்களுடைய சுபாவத்தின்படியான மனதும், விபரீதமான யோசனைகளும், அனைத்தையும் தலைகீழாக்கிப் போட்டுவிட்டதோடல்லாமல் அவருடைய ரசிகர்களை, அவருடைய சத்துருக்களாகவும் மாற்றி, அவரை வெறுத்து, அவருடைய ஜீவனைக் கொன்றுபோடும்படியாக நாடவும் செய்தது! அவர்களோ, "இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா?” என்று கூற ஆரம்பித்தார்கள். மேலும் யூதேயாவிலும், அருகாமையிலுள்ள பட்டணமாகிய கப்பர்நகூமிலும் அவரால் மாபெரும் அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது என்று கேள்விப்பட்டிருந்ததினால், தங்கள் மத்தியில் இயேசு எவ்விதமான வல்லமையான கிரியைகளைச் செய்யப்போகிறாரோ என்று யோசிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். அவர்களுடைய எண்ணங்களை அறிந்துக்கொண்டவராக, "அவர் அவர்களை நோக்கி: வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்கிற பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமூரில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ

அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம்” என்றார் (லூக்கா 4:23).

நாசரேத்தில் ஏன் நமது கர்த்தர் அற்புதங்கள் செய்ய மறுத்துவிட்டார் என்று நமக்குத் தெரியவில்லை. ஆயினும் நாம் அனுமானிப்பது என்னவெனில், “நாசரேத் அவருடைய சொந்த ஊராய் இருந்தபடியினால், அவர் அனைவருக்கும் அறிமுகமானவராக இருந்தார்; மேலும் ஜெப ஆலயத்தில் அவர் அவர்கள் மத்தியில் முன் நாட்களிலும் கூட வேத வாக்கியங்கள் வாசித்திருந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை, ஆகவே அவ்வூர் ஜனங்கள், அற்புதம் என்னும் சான்று (attestation) அளிக்கப்படாமலேயே நற்செய்தியை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருந்திருக்க வேண்டும்; ஆனால் கர்த்தரை யார் என்று தெரியாத மற்றப் பட்டணங்களில், இயேசுவை நம்புவதற்கான சான்றாக அற்புதங்கள் தேவைப்பட்டது. இன்னுமாக அவரோடு தனிப்பட்ட விதத்தில் பழக்கமோ (அ) அற்புதங்களோ, இவைகளில் ஏதேனும் ஒன்று சான்றாகக் கொடுக்கப்படாமல், அவரையும், அவருடைய போதனைகளையும் ஜனங்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்ப்பார்க்கப்பட முடியாது. நமது கர்த்தருடைய அற்புதங்களானது, திரும்பக்கொடுத்தலின் காலங்கள் இன்னமும் வராததினால், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களாக இருப்பதற்கு நிகழ்த்தப்படாமல், நமது கர்த்தருடைய போதனைகளுக்குச் சான்றாகவும், சாட்சியாகவும், மதிப்புச் சேர்ப்பதாகவும், வலுகொடுப்பதாகவும், உறுதி கொடுக்கிறதாகவும் அமைவதற்கே அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டது. நாசரேத்தின் ஜனங்கள் அற்புதங்களை எதிர்ப்பார்த்திருக்கக் கூடாது, அவர்களுக்கு அற்புதங்கள் அவசியமும் இல்லை, ஏனெனில் இயேசுவோடு அறிமுகம்/பழக்கம் எனும் மற்றொரு சான்று அவர்களிடத்தில் இருந்தது என்பதேயாகும்.

## “உம் பெயரால் வல்ல செயல்கள் பல செய்யவில்லையா” - மத்தேயு 7:22-23
### (திருவிவிலிய மொழிப்பெயர்ப்புச் சரியானது)

நம்முடைய நாட்களில் பொருந்தக்கூடிய ஒரு படிப்பினையை இந்தச் சம்பவத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளலாம். இன்று கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் அற்புதங்கள் செய்யப்படுவது அவசியமாய் இராதபடியினால், அற்புதங்கள் மறைந்து போயின. அற்புதங்கள் கடந்து/மறைந்து போய்விட்டதற்கான காரணம், கர்த்தர் வல்லமையில் குறைவுபட்டுப் போய்விட்டார் என்பதினால் அல்ல, மாறாக திரும்பக்கொடுத்தலின் காலங்கள் இன்னும் வரவில்லை என்பதினால், சுவிசேஷ செய்திக்கான அறிமுகமாக இருக்க அவசியப்பட்ட அற்புதங்கள் பின்னர் தொடர்ந்துக் காணப்படவில்லை. ஆகவே இன்று காணப்படக்கூடிய சகலவிதமான நோய்களைச் சொஸ்தப்படுத்துவதற்குரிய தெய்வீக வல்லமையை, நாம் கண நேரங்கூட சந்தேகிக்கவில்லை என்றாலும், தற்காலத்தில் நடத்தப்படும் அற்புதவிதமான சொஸ்தமாக்குதல்களையே நாம் சந்தேகிக்கின்றோம், இவைகள் மோர்மான்ஸ் (யோசேப் ஸ்மித் என்பவரினால் ஸ்தாபிக்கப்பட்ட சபை பிரிவு) அல்லது கிறிஸ்தவ விஞ்ஞானிகள் அல்லது கிறிஸ்தவக் கூட்டணி மக்கள் அல்லது ஆவி உலக ஊடகர்கள் (அ) திரு. டவுகி மற்றும் அவர் சீஷர்கள் (அ) மற்றவர்களால் செய்யப்படுகின்றதா என்றே நமக்கு சந்தேகம் எழுகின்றது. “உங்களை நான் என்னுடைய உண்மையுள்ள சீஷர்களாக அறியேன்” என்று கர்த்தர் சொல்லப்போகிறவர்கள் செய்த “வல்ல செயல்களில்” சில என்றே இந்த அற்புதங்களை நாமும் பார்க்கத்தக்கதாக மனம் சாய்கின்றது.

சாத்தானும், அவனுடைய வேலைகளும் சந்தேகத்திற்கிடமின்றி, ஜீவனுக்கும், சொஸ்தப்படுத்துதலுக்கும் எதிர்மாறானதேயாகும். எனினும், தன்னுடைய வசதிக்கேற்ப அவன் தனது வழிமுறைகளை மாற்றி, பிரசங்கிப்பவனாகவும் (அ) சொஸ்தப்படுத்துகிறவனாகவும் ஆகுவதற்கு விருப்பம் கொண்டவனாகவும், இப்படிச் செய்வதற்கு நன்கு வல்லமையுள்ளவனாகவும் காணப்படுகின்றான். இவ்விஷயத்தைக் குறித்துக் கர்த்தர் பேசுகையில், சாத்தானுடைய இத்தகைய போக்கு/நடைமுறையானது அவனுடைய இராஜ்யத்தின் வீழ்ச்சிக்கே வழிநடத்துகின்றதாய் இருக்கும் என்றும், சாத்தான் மனுக்குலத்தின் மீது செயல்படுத்திக் கொண்டிருக்கும் மூடநம்பிக்கைகள் மற்றும் குருட்டு நம்பிக்கைகளை நிலைநிறுத்த வேண்டுவதற்கு இத்தகைய பிரயாசங்கள் ஏறெடுப்பது அவனுக்கு அவசியமாய் இருக்கும் என்றும், கர்த்தருடைய உண்மையான அர்ப்பணிக்கப்பட்ட

ஜனங்களின் மனங்களுக்குள்ளும், இருதயங்களுக்குள்ளும் தற்கால சத்தியத்தின் மகிமையான ஒளியானது படிப்படியாகப் பிரவேசிப்பதிலிருந்து, கவனத்தைத் திருப்புவதற்கு இத்தகைய பிரயாசங்கள் ஏறெடுப்பது அவனுக்கு அவசியமாய் இருக்கும் என்றும் குறிப்பிடுகின்றார்.

கர்த்தருடைய ஜனங்களைப் பொறுத்தமட்டில், தற்கால வேளையானது, பலிச் செலுத்துவதற்கான வேளையாய் இருக்கிறதே ஒழிய, சீர்த்திருத்தித் திரும்பக்கொடுத்தலுக்கான /திரும்ப அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கான வேளையாய் இல்லை, அதாவது தங்களைக் காத்து இரட்சித்துக்கொள்வதற்கான வேளையாய் இராமல், தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கின்ற வேளையாய் இருக்கின்றது, அதாவது தங்களின் அழிந்துபோன சரீரங்களைச் சீர்ப்படுத்துவதற்கான வேளையாய் இராமல், தங்களுடைய நறுங்குண்ட இருதயங்களைக் கட்ட வேண்டிய வேளையாய் மாத்திரம் இருக்கின்றது. அதாவது நிஜமான/உண்மையான விடுதலைக்குரிய வேளையாய் இராமல், பாவம் மற்றும் மரணத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாய்க் கருதப்பட வேண்டிய வேளையாய் மாத்திரம் இருக்கின்றது. உலகத்தைப் பொறுத்தமட்டில், மேசியாவின் மகத்துவம் குறித்தும், போதகருக்கு உரியதான அவருடைய ஆற்றல் குறித்தும் எப்பக்கத்திலும் தற்போது போதுமான அளவு சாட்சிப் பெற்றிருப்பதினால், மேசியாவின் மகத்துவம் பற்றி அறிய உலகத்திற்குத் தற்காலிகமான நோய் சுகமாக்கும் விஷயங்கள் அவசியமில்லை, மேலும் உலகத்தின் நோய்கள் நிரந்தரமாக சொஸ்தமாக்கப்படப்போகிற வேளையும் இன்னமும் அவர்களுக்கு வரவுமில்லை. மேலும் அப்போஸ்தலர் பேதுரு சுட்டிக்காட்டுவது போன்று, கர்த்தருடைய இரண்டாம் வருகையில், அவருடைய ஆயிரம் வருஷம் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையிலேயே, நிரந்தரமாக நோய்களைச் சொஸ்தமாக்கும் அந்த வேளைவரும்; "ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்” (அப்போஸ்தலர் 3:19).

சுயநலத்தின் அடிப்படையில் நாசரேத்தின் ஜனங்கள் இயேசுவின்மேல் விருப்பமுள்ளவர்களாய் இருந்தார்கள், அதாவது தங்களுடைய பட்டணத்தை அவர் சார்ந்தவர் என்ற விதத்தில் பெருமைகொண்டிருந்தனர்; இன்னுமாக மற்றப் பட்டணங்களில் அவர் செய்த மாபெரும் அற்புதங்களைக்காட்டிலும் தமது சொந்த ஊரில் இரண்டு மடங்குக்கும் மேலாக செய்வார் என்று எதிர்ப்பார்க்கவும், செய்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட அற்புதங்களை, தாம் செய்வதில்லை என அவர்களுக்கு அவர் அறிவித்தபோது, ஏமாற்றமடைந்து கோபம் கொண்டார்கள். அவர்களுடைய கோபத்தைத் தணிக்க முடியவில்லை. கோபத்தினால் நிரம்பினவர்களாக அவர்கள் எழுந்து அவரைக்கொன்று போடும்படிக்கு (அ) கீழே தள்ளி, அவரை முடமாக்கும் நோக்கத்திற்காக ஊருக்குப் புறம்பே தள்ளி, சுமார் 40 (அ) 50 அடி உயரமுள்ள செங்குத்தான மலை இருக்கும் திசையை நோக்கி அவரைக்கொண்டு சென்றனர்.

## “உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்”

விழுந்துபோன நிலையில் காணப்படும் மாம்ச சுபாவத்தின்படியான மனுஷனுடைய நிலையைப் பற்றின காட்சியை நம்மால் இங்குப் பார்க்க முடிகின்றது! ஒரு நிமிடம் ஆண்டவரின் கிருபையான வார்த்தைகளின் நிமித்தம் களிக்கூருகின்றனர், ஆனால் தங்களுடைய சுயநலமான நம்பிக்கைகளும், எதிர்ப்பார்ப்புகளும், இலட்சியங்களும் ஏமாற்றமடையும்போது, அடுத்த நிமிடமே அவரை அழித்துவிட வேண்டும் என்று விரும்புகின்றனர். அந்தக்காலம் முதல் கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் இப்படியாகவே காணப்படுகின்றது; குறிப்பாக இந்தச் சுவிசேஷ யுகத்தின் அறுவடை காலமாகிய தற்காலத்திலும் கூட இது உண்மையாகவே இருக்கின்றது. சகல ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அநேகர் கேட்கின்றனர். மேலும் அது ஏற்றுக்கொள்ள தகுந்த மாபெரும்/மகத்துவமான சுவிசேஷச் செய்தி என அவர்கள் அறிக்கையிட்டாலும், சுயநலமான நோக்கங்கள் காரணமாக, அதாவது தனி மதப் பிரிவு ஏற்படுத்தும் விருப்பமும், இந்தச் சுவிசேஷச் செய்திக்குப்பதிலாகத் தங்களுக்குப் பிரியமான ஒரு பிரிவை, கூட்டத்தாரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வும், அவர்களையே களங்கத்திற்குள்ளாக்கி விடுகின்றது. அதாவது கொஞ்சம் முன்பு கிருபையான

அச்செய்தியில் களிக்கூர்ந்தவர்கள், தங்களின் சுயநோக்கம் காரணமாக தீமை செய்ய ஏவப்படுகின்றனர்.

கர்த்தர் தம்மை எதிர்ப்பவர்கள், தங்களுடைய உண்மையான ஆவியை வெளிப்படுத்தும் அளவுக்குச் செல்லத்தக்கதாக, காரியங்களை அனுமதித்தார்; பின்னர் தம்முடைய கண்ணின் பார்வையினால் அவர்களைப் பயமுறுத்தி பணியவைத்து, அவர்கள் மத்தியிலிருந்து தொல்லைப்படுத்தப்படாமல் கடந்து போய்விட்டார். இவ்வல்லமையை அவர் தம்முடைய வேளை இன்னமும் வராதபடியினால், செயல்படுத்தினார். இப்படியாகவே அவருடைய சரீரத்தின் அங்கமாகிய நம் அனைவரின் விஷயத்திலும் கூடப் பொருந்தும். குமாரன் தம்முடைய வேலையை நிறைவேற்றி முடிப்பதற்கெனப் பிதா ஒரு ஏற்றவேளை கொண்டிருந்தது போல, கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினுடைய விஷயத்திலும் தெய்வீக முன்னேற்பாடானது காரியங்களை நடத்திக்கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை; ஆகையால் தெய்வீகக் கவனத்தை மீறி, அவர்களுடைய தலையிலிருந்து ஒரு முடிக் கூடக் கீழே விழுவதில்லை; இன்னுமாக அவர்களுடைய வேளை வரும்வரையிலும், அதாவது பிதா அவர்களுக்கென்று கொடுத்திருக்கும் வேலையை அவர்கள் நிறைவேற்றி முடிப்பதுவரையிலும், அதாவது இராஜ்யத்திற்கு அவர்கள் தகுதியடையத்தக்கதாக அவர்களுக்குத் தேவைப்படும், செதுக்குதல்களையும், மெருகூட்டுதல்களையும் அவர்கள் அனுபவிப்பதுவரையிலும் அல்லது தங்களுடைய சுயசித்தத்தின்படி அவர்கள் தங்களையே கர்த்தரின் கரத்தினின்று எடுத்துப் போடுவதுவரையிலும் அல்லது அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க அவர்கள் மறுப்பதுவரையிலும், அவர்களது ஜீவன் பிதாவின் பார்வையில் விலையேறப்பெற்றதாய் இருந்து; அவர்களுக்கான வேளை வருவது வரையிலும், எந்த ஒரு விதத்திலாகிலும் அவர்களிடமிருந்து ஜீவன் எடுக்கப்பட முடியாது.

## “அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனால்...”

நமது பாடத்தின் ஆதார வசனமானது, நாம் இப்பாடத்தில் அவர் நாசரேத்தில் புறக்கணிக்கப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில் நிறைவேறாமல், ஒட்டுமொத்த இஸ்ரயேல் தேசத்தாராலும் அவர் புறக்கணிக்கப்பட்டதிலேயே நிறைவேறினது. ஒட்டுமொத்த தேசமும் கர்த்தரைப் புறக்கணித்தாலும், தனிப்பட்ட நபர்கள் அவரை ஏற்றுக்கொண்டார்கள் என அப்போஸ்தலர் இங்குச் சுட்டிக்காட்டுகின்றார். ஆகவே இஸ்ரயேல் தேசத்தாரை அவர் ஒரு தேசமாக புறக்கணித்தாலும், அவருடைய சீஷர்களான இந்த உண்மையுள்ள தனிப்பட்ட நபர்கள் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புத்திரர் வீட்டாரின் அங்கங்கள் ஆகுவதற்கான சுயாதீனம் அளிக்கப்பட்டனர்; மேலும் பெந்தெகொஸ்தே நாளன்று இவர்கள் புத்திர சுவிகாரத்தின் ஆவியை, அதாவது புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கப்படும் ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள்.

மாம்சீக இஸ்ரயேலர்களின் இந்த அனுபவத்திற்கு இணையானதை நாம் நிஜமான இஸ்ரயேலர்கள், அதாவது பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடத்திலும் காணலாம். நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, அவருடைய ஜனங்கள் என்று அறிக்கை செய்துகொள்ளும் கிறிஸ்தவ மண்டலத்தாரிடம் வரும்போது, தீர்க்கதரிசிகளின் மூலம் உரைக்கப்பட்டதற்கு இசைவாகவே அவர் மீண்டுமாகப் புறக்கணிக்கப்பட்டார், எனினும் அனைவராலும் அவர் புறக்கணிக்கப்படவில்லை. யூதர்களில் சிலர் அன்று அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற ஆயத்தமாய் இருந்ததுபோன்று இன்றும் கூட, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் நீங்கள் பாக்கியவானாய் இருக்கிறீர்கள்" என்ற அவருடைய வார்த்தைகள் பொருந்தக்கூடிய சிலர் காணப்படுகின்றனர். கர்த்தரை ஏற்றுக்கொண்டு, இன்று ஆவிக்குரிய வீட்டாரில் ஒருவராகக் காணப்படுகிறவர்கள் இன்னமும் ஏற்றவேளையில் மாபெரும் ஆசீர்வாதமாகிய, நிஜமான பெந்தெகொஸ்தே ஆசீர்வாதமாகிய மகிமையடைதலைப் பெற்றுக்கொள்வார்கள். சீக்கிரமாக இந்தச் சுவிசேஷ யுகத்தின் கோதுமை வகுப்பார் ஆசீர்வதிக்கப்பட்டு, "தங்களுடைய பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப்போன்று பிரகாசிக்கத்தக்கதாக" மாற்றப்படுவார்கள் (மத்தேயு 13:43). இவ்விதமாக, கர்த்தர் இஸ்ரயேலின் இரு வீட்டாருக்கும் தடுக்கலின் கல்லாகவும், உண்மையுடன் இரு வீட்டாரிலும் காணப்படும், சிலருக்கு

ஆசீர்வாதமுமாகவும் இருக்கின்றார் என நாம் பார்க்கின்றோம். இவர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகவும், அவருடைய சரீர அங்கங்களாகவும், அவருடைய மணவாட்டிகளாகவும் இருப்பார்கள், மேலும் தற்காலத்தில் இவர்கள் அவரோடு கூட அபிஷேகம் பண்ணப்படுவதிலும், பாடுபடுவதிலும் மாத்திரம் பங்கடையாமல், பூமியின் சகல குடிகளையும், கர்த்தரை அறிகிற அறிவினாலும், உலகிலுள்ள மனுக்குலம் விரும்பும் பட்சத்தில் மீண்டும் தேவனுடைய தயவிற்குள் வருவதற்கான வாய்ப்பினாலும், ஆசீர்வதிக்கும் எதிர்க்கால வேலையின் மகிமையிலும் அவர்கள் அவரோடு கூடப் பங்கடைவார்கள்.

---

**R3307**

# "மனுஷரைப் பிடிக்கிறவர்கள்"

## லூக்கா 5:1-11

"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்"
யோவான் 8:31

கலிலேயாவின் கடற்கரை அருகில் கப்பர்நகூம் காணப்பட்டது. கலிலேயா கடல் அழகானதும், நமது கர்த்தருக்கும், இக்கடலுக்கும் இடையே இருக்கும் தொடர்பின் நிமித்தம் உலக பிரசித்தி வாய்ந்ததும், மீன்கள் நிறைந்ததுமாய் உள்ளது. இயேசு நாசரேத்தில் புறக்கணிக்கப்பட்ட பிற்பாடு இக்கடலின் அருகாமையிலுள்ள கப்பர்நகூமுக்கே வந்தார். இவ்விடத்தில் அவருக்கு வித்தியாசமான வரவேற்புக் காணப்பட்டது; கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்காக, ஜனங்கள் அவரை வருந்திக் கேட்டுக்கொண்டபடியினால், அவர்களுக்கும் தமக்கும் வசதியாக இருக்கும் எனக் கருதி, சீமோன் பேதுருவின் மீன் பிடிக்கும் படகை இயேசு கேட்டுக்கொண்டார்; இப்படகில் நின்றவாறு, கடற்கரையில் உட்கார்ந்த நிலையில் (அ) நின்று கொண்டிருக்கும் நிலையில் காணப்படும் ஜனங்களுக்குப் பயனுள்ளமுறையில் போதிப்பதற்கென இயேசு படகைக்கேட்டார்.

நம்முடைய கர்த்தருடைய அனைத்து உரையாடல்களும் சுவிசேஷப் பதிவுகளில் பதிவு செய்யப்படவில்லை என்ற எண்ணங்கள் நமக்குள் எழுகின்றது. நாம் பெற்றிருப்பது துண்டுத் துண்டான பதிவுகளே ஆகும். இப்படித் துண்டுத்துண்டாகக் காணப்படுவதில் பிரதானமானது மலைப்பிரசங்கமாகும். இயேசுவின் மற்றப் போதனைகளும் கூடச் சுருக்கமான குறிப்புகளாகவே காணப்படுகின்றது; உதாரணத்திற்கு அவருடைய உவமைகளும், மறைப்பொருள்களும் ஆகும். உதாரணமாக, அவர் தம்மை வானத்திலிருந்து இறங்கின அப்பம் என்றும், அப்பமாகிய தம்மைப் புசிப்பவன் ஒருபோதும் மரிப்பதில்லை என்றும் கர்த்தர் கூறினார்; இதைக் கேட்ட அநேகர், இது கடினமான உபதேசம் என்று கூறி, அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள். சுவிசேஷத்தின் மாபெரும் உபதேசமாகிய பிரதானமான போதனைகள், அதாவது ஈடுபலி குறித்தும், விலையேறப் பெற்ற இரத்தத்தின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம் கிடைக்கும் நம்முடைய நீதிமானாக்கப்படுதல் குறித்தும், நமக்குப் புத்திரசுவிகாரம் கொடுக்கப்படுவது குறித்தும், நாம் ஜெநிப்பிக்கப்படுவது மற்றும் உயிர்த்தெழுதல் குறித்தும், முதலாம் உயிர்த்தெழுதலுக்கும் மற்ற உயிர்த்தெழுதலுக்கும் இடையே காணப்படும் வித்தியாசம், முதலியவைகள் குறித்ததுமான பிரதானமான போதனைகள் நமக்கு அப்போஸ்தலர்கள் எழுதின நிரூபங்கள் மூலமாகவும், அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அப்போஸ்தலர்களின் சொற்பொழிவுகள் மூலமாகவுமே கிடைக்கின்றது.

ஏன் இப்படியாக உள்ளது என்றும், எதிர்க்கால வாழ்க்கை மற்றும் பயபக்தியான ஜீவியம் தொடர்பான விஷயங்களைக்குறித்ததான பிரதானமான போதனைகள், நமது கர்த்தருடைய (வாயின்) வார்த்தைகளின் வாயிலாகவே நமக்கு ஏன் அருளப்படவில்லையே என்றும் நம்மைச் சிந்திக்க வைக்கலாம். ஆனால், நம்முடைய சந்ததியில் எவரேனும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புத்திர சுவிகாரத்தின் ஆவி அருளப்படுவதற்கு முன்னதாக, நமது கர்த்தர் ஈடுபலி விலைகிரயத்தைச் செலுத்தியாக வேண்டும் என்பதின் அவசியத்தை நாம் புரிந்துக்கொள்கையில், நமக்குள் எழும்பின கேள்விகளுக்குத் தெளிவான

பதில் கிடைக்கின்றது. இது எல்லாவற்றையும் விளக்கிவிடுகின்றது, என்னவெனில்: புத்திர சுவிகாரத்தின் ஆவி இல்லாமல், நம்மால் ஆவிக்குரிய விஷயங்களைப் புரிந்துக்கொள்ள முடியாது; ஆகவேதான் இயேசுவின் காலத்தில் வாழ்ந்து, அவர் பேசினவைகளைக் கேட்டவர்களுக்கு, இயேசு பேசின ஆவிக்குரிய விஷயங்கள் உவமைகளாகவும், மறைப்பொருள்களாகவும் காணப்பட்டது; உதாரணத்திற்கு புதிய/மறு பிறப்பைக்குறித்து இயேசு, நிக்கொதேமுவிடம் பேசுகையில், அவரால் புரிந்துக்கொள்ள முடியாமல் காணப்பட்ட போது, நமது கர்த்தர் பரத்திற்குரிய விஷயங்களைப் பேசாமல், பூமிக்குரிய விஷயங்கள் மாத்திரமே பேசினதாக சுட்டிக்காட்டி, "பூமிக்குரிய காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" என்று கூறினார் (யோவான் 3:12). நமது கர்த்தர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள், பரம காரியங்களைப் புரிந்துக்கொள்வதற்கு ஆயத்தமடையவில்லை என்று கண்டு, பூமிக்கடுத்த காரியங்களைச் சொல்லிக்கொடுப்பதிலும் தமது கவனத்தைப் பிரதானமாகச் செலுத்தினார். மேலும், பிற்காலங்களில் ஆவியின் மூலம் கர்த்தருடைய உவமைகளும், மறைப்பொருள்களுமான வார்த்தைகள், அவருடைய உண்மையுள்ளவர்களுக்குப் புரிய வைக்கப்படும்.

## "மாம்சீக சுபாவப்படியான மனுஷன் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ள மாட்டான்"

இது நம்முடைய கர்த்தருடைய ஊழியம் குறித்த பரந்த கண்ணோட்டத்தைக் கொடுக்கின்றது: முதலாவதாக, மாம்சீக சுபாவத்தின்படியான மனுஷனால் புரிந்துக்கொள்ளும் காரியங்களை மாம்சீக சுபாவத்தின்படியான மனுஷனுக்கு அவர் போதிப்பதாகும்; இரண்டாவதாக, மாம்சீக சுபாவத்தின்படியான மனுஷனுடைய வியாதிகள் சொஸ்தப்படுத்துவதன் மூலமாய், அவர் தாம் பெந்தெகொஸ்தே நாள் முதல் தொடங்கி, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் அவருடைய பிரதிநிதியாகிய அப்போஸ்தலர்கள் மூலமாகவும், அப்போஸ்தலர்களின் வார்த்தைகளின் மூலம் தம் மேல் விசுவாசம் வைக்கும் அனைவர் மூலமாகவும் செய்யப்போகின்ற ஆவிக்குரிய வேலைகளுக்கு அகன்ற/வெளிப்படையான அஸ்திபாரத்தைப் போடுவதாகும். இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் கர்த்தர்தாமே, "தம்முடைய சரீரமாக," "தம்முடைய சகோதரராக" இருக்கும் சபைக்குப் போதகராக இருக்கின்றார், மேலுமாக, "புதியதும், பழையதுமாகிய" சத்தியத்தைக்கொண்டு நம்மைப் போஷிப்பதிலும், போதிப்பதிலும் உள்ள சகல விஷயங்களையும் அவர் கவனித்துக் கொண்டிருக்கின்றார். இன்றும் அவர்தான் போதகராக இருக்கின்றார். மேலும், அப்போஸ்தலர்கள் மூலமாக நாம் பெற்றுக்கொள்ளும் அனைத்தும் கூட அவர்கள் வாயிலாக வரும் கர்த்தருடைய போதனைகளே தவிர, அவைகள் அவர்களுடைய சொந்த போதனைகள் அல்ல. இன்றும் கூடக் கர்த்தருடைய நாமத்தில் பேசுகிறவர்கள் அவருடைய பிரதிநிதியாகவும், ஸ்தானாதிபதியாகவும் மாத்திரமே பேசுகிறதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இவர்கள் தங்களுக்கு அருளப்பட்ட அதிகாரத்தைக் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உரியதாக அல்லது முழுமையான அதிகாரம் அவரால் கொடுக்கப்பட்டு, அவராலேயே ஏவப்பட்டு (அ) வழிநடத்தப்பட்டவர்களுடைய, அதாவது, 12 அப்போஸ்தலர்களுடைய (யூதாசுக்குப் பதிலாக அப் பவுல்) வார்த்தைகளுக்கு உரியதாகக் கருதிக்கொள்ள வேண்டும்.

நமது கர்த்தர் முதலில் யூதேயாவிலும், பின்னர் கலிலேயாவிலும், அதாவது நம்முடைய பாடத்தின் சம்பவம் நிகழும் தருவாய் வரையிலும், பிரசங்கம் பண்ணுவதில் சுமார் ஒரு வருடம் செலவு பண்ணியிருந்திருக்க வேண்டும். நம்முடைய பாடத்தில் இடம்பெறுகிற மீனவர்களாகிய பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவானுக்குக் கர்த்தர் ஏற்கெனவே அறிமுகமாய் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியே. இப்பாடத்தின் சம்பவம் நடப்பதற்கு முன்னதாக நடந்த சம்பாஷணையின் போதே, இயேசு சீமோனுக்குப் பேதுரு என்று பெயரிட்டார். இந்த மீனவர்கள் அநேகமாக ஏற்கெனவே இயேசுவைச் சந்தித்திருக்க வேண்டும்; மேலும் வேறு தருணங்களிலும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டிருந்திருக்க வேண்டும்; சொல்லப்போனால், அவருடைய சீஷர்களாகத்தான் காணப்பட்டார்கள்; சீஷர்கள் என்று சொல்லுகையில், அவரை அவர்கள் பின்பற்றுபவர்களாகவும், அவர்மேல் விசுவாசம் வைத்தவர்களாகவும், அவருடைய போதனைகளுக்கு ஆதரவு வழங்கினவர்களாகவும்

இருந்ததையே குறிப்பிடுகின்றது. எனினும் தம்மோடு கூட இவர்கள் தொடர்ந்து இருக்கும்படிக்கும், தம்முடைய அற்புதங்களைக் காணும்படிக்கும், தம்முடைய பிரசங்கங்களைக் கேட்கும்படிக்கும், பேசப்பட்டவைகளுக்கும், செய்யப்பட்டவைகளுமான சகலவற்றிற்கும் சாட்சியாக இருக்கும்படிக்கும், பின்னர் ஏற்றக்காலத்தில் இவர்கள், அவருடைய விசேஷமான பிரதிநிதியாக இருந்து பணிபுரியும்படிக்கும், நமக்கும், பின்னர் வரும் கர்த்தருடைய பின்னடியார்களுக்கும் தம்முடைய ஊழியத்தின் முக்கியமான சம்பவங்கள் குறித்ததான துல்லியமான மற்றும் உண்மையான பதிவுகளைக் கொடுக்கும்படிக்கும், 12-அப்போஸ்தலர்களை நமது கர்த்தர் தெரிந்தெடுப்பதற்கான நேரம் இப்பொழுது வந்துவிட்டது.

இயேசு படகில் உட்கார்ந்த வண்ணம் கடற்கரையில் நின்று கொண்டிருந்தவர்களுக்கு தமது பிரசங்கத்தை முடித்த பிற்பாடு, படகின் சொந்தக்காரர்களாகிய சீமோனிடமும், அந்திரேயாவிடமும், அவர்கள் படகுகளை ஆழத்திற்கு எடுத்துச்சென்று மீன்களைப் பிடிக்கும்படிக்கு வலைகளைப் போடும்படிச் சொன்னார்; ஆனால் பேதுருவோ அந்நாள் அனுகூலமற்ற நாளாயிருப்பதினால் (அ) ஏதோ காரணங்கள் நிமித்தம் அக்காலக்கட்டத்தில் கலிலேயா கடலிலுள்ள அப்பகுதிகளில் மீன்கள் காணப்படாததினால், மீண்டும் சென்று மீன்களுக்கு வலை போடுவது பிரயோஜனமற்றது என்று கூறினார்; காரணம் அவரும், அவரோடு இருந்தவர்களும் இராமுழுவதும் பிரயாசப்பட்டும், ஒன்றும் அகப்படவில்லை என்பதினாலேயே ஆகும். எனினும் கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டும் என்று, அவர் கூறின பிரகாரமே செய்தார்கள். கடலில் சென்று வலைகளை இழுக்க ஆரம்பித்தப் போதோ, தங்கள் படகு கொள்ளமுடியாத அளவிற்கு மீன்கள் வலையில் அகப்பட்டிருப்பதைக் கண்டார்கள். மற்றப் படகுகளில் இருந்த தங்கள் கூட்டாளிகளை உதவி கரம் கொடுக்கவும், மீன்களை எடுக்க உதவவும் அழைத்தார்கள். இச்சம்பவமானது, திட்டமிட்டிருந்தபடி அதற்கேயுரிய தாக்கத்தை ஏற்படுத்திற்று. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இப்படித் திரளான மீன்களைக்கொண்டு வருவது என்பது ஒரு சாதாரண மனிதனால் முடியாது என்று உணர்ந்தவராக சீமோன் பேதுரு கர்த்தர் முன் அவர் பாதங்களில் விழுந்தார்.

## “கர்த்தர் பக்திவைராக்கியத்தையும், ஊக்கத் தன்மையையும் விரும்புகின்றார்”

சீமோன் பேதுருவிடம் சிறப்பான ஏதோ ஒன்று உள்ளது; அவருக்குள் ஏற்படும் திடீர் உணர்ச்சி வேகமே அவரிடத்தில் கவர்ச்சியூட்டும் பண்பாக அமைகின்றது. எந்தக் காரியத்தையும் அவர் வைராக்கியத்துடனும், ஊக்கத்துடனும் கையாளும் விதமும் அவர்மேல் கவனம் செலுத்துவதற்குப் பாத்திரமானதாகவும் காணப்படுகின்றது. பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானாகிய மூன்று பேர்தான் 12-அப்போஸ்தலர்கள் மத்தியில் விசேஷமாகக் கர்த்தரால் அன்புகூரப்பட்டார்கள் என்பதையும் நாம் அறிவோம். கர்த்தர் அங்கீகரிக்கும் வைராக்கியமும், ஊக்கமும், மன உறுதியும் (force) இம்மூவரிடமும் காணப்பட்டது போன்று தோன்றுகிறது. இவர்கள், "உன் கைக்கு அகப்படுவது எதுவோ அதை உன் முழு பலத்தோடு செய்" என்ற புத்தமதிக்கு நிஜமான உதாரணங்களாக (practical illustrations) திகழ்ந்தனர். "நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போக வேண்டும்" என்று பேதுரு கர்த்தரிடம் கூறின வார்த்தைகள், தனக்கும், ஆண்டவருக்கும் இடையில் காணப்படும் மாபெரும் வித்தியாசத்தைப் பேதுரு ஒத்துக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; பேதுரு சூழ்நிலையைக் கிரகித்துக் கொண்டார், அதாவது தான் பாவியாகவும், பூரணமற்ற மனுஷனாகவும் இருக்கின்றார் எனவும், தனக்கு முன் காணப்படும் ஆண்டவரோ பூரணராகவும், பிதாவுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றபடியினால், பிதாவின் இரக்கங்களை மற்றவர்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டும் இருக்கின்றார் எனவும் கிரகித்துக் கொண்டார்.

பேதுரு பேசின வார்த்தைகளுக்கு, எதிர்மாறாகவே அவருடைய உள்ளத்தின் உண்மையான உணர்வு காணப்பட்டிருக்க வேண்டும். "ஓ கர்த்தாவே, நான் பாவியான மனுஷனாக இருப்பினும், உம்முடன் தொடர்பு வைப்பதன் மூலம் நான் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக, உம்மிடத்தில் நெருங்கி பழக என்னை அனுமதியும்" என்பதே அவர் உள்ளத்தின் உண்மையான உணர்வாக இருந்தது. இயேசு, இவரைத் தம்முடைய

தெரிந்துக்கொள்ளப்பட்ட 12-அப்போஸ்தலர்களில் ஒருவராக நியமித்ததின் மூலம், பேதுருவின் இந்தச் சரியான இருதய நிலைமையை ஏற்றுக்கொண்டு, அவரின் உண்மையான வேண்டுதலுக்குப் பதில் கொடுத்தார்.

விவரங்களின் பதிவுகள் திடீரென நின்றுவிடுகின்றது. மேலும், அதே மணி நேரத்திலோ (அ) அடுத்த நாளிலோ பேதுருவும், அந்திரேயாவும், யாக்கோபும், யோவானும் விசேஷமாக நமது கர்த்தருடைய கூட்டாளிகளாக ஆகுவதற்கும், பின்னர் அவருடைய பிரதிநிதிகளாகவும், அவருடைய அப்போஸ்தலர்களாகவும் ஆகுவதற்கும் எனத் தங்கள் மீன் பிடிக்கும் தொழிலையும், தங்கள் படகுகளையும், வலைகளையும் விட்டுச் சென்றார்கள் என்பது தொடர்பாக பதிவுகள் நமக்கு வழங்கப்படவில்லை. நம்முடைய நியாயமான அனுமானம் என்னவெனில், இவர்களுடைய இந்த மீன் பிடிக்கும் தொழிலில் இவர்களோடு பங்காளிகளாக/கூட்டாளிகளாக இருந்தவர்கள், இவர்களுடைய உறவினர்களேயாகும், மேலும் பேதுரு தனது படகையும், வலைகளையும் தனது உடன் சகோதரர்களிடம் (அ) குமாரர்களிடம் (அ) மற்றக் கூட்டாளிகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அதுபோல் செபதேயுவின் குமாரர்களும் தங்கள் தொழிலுக்குரிய சொந்த உடைமைகளைத் தங்கள் தகப்பனிடத்தில் (அ) தொழிலில் தங்களோடு கூடக்காணப்பட்ட மற்றவர்களிடத்தில் ஒப்படைத்திருக்க வேண்டும். நம்முடைய இந்த அனுமானமானது, நமது கர்த்தர் மரித்த பிற்பாடு, அதாவது சுமார் 2 வருடங்களுக்குப் பிற்பாடு இதே மனிதர்கள் (இந்த அப்போஸ்தலர்கள்) மீண்டும் மீன் பிடிக்கும் தொழிலுக்குத் திரும்புவது குறித்துப் பேசின காரியங்கள் தொடர்பான உண்மைக்கும் முழு இசைவாக உள்ளது. இந்தக் கடைசி சம்பவத்தில்தான் இயேசு மீண்டுமாக பெரும் திரளான மீன்களைக் கொடுக்க, இத்தகைய அற்புதம் வேறு எவராலும் அல்ல, மாறாக சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த கர்த்தராலேயே செய்ய முடியும் என மீண்டும் முதலாவது நபராக உணர்ந்த பேதுரு, கர்த்தர்தான் கரையில் நின்று கொண்டிருக்கின்றார் என்றும் அறிந்துக்கொண்டார் என்று பார்க்கின்றோம்.

## "மேலான/உயர்வான அழைப்புக்கு அழைக்கப்படுதல்"

"இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" என்பதே நமது கர்த்தர், பேதுருவிடம் கூறின வார்த்தைகளாய் இருக்கின்றது. இவ்வார்த்தைகள் பேதுருவின் கூட இருந்தவர்களுக்கும் கூடப் (யாக்கோபு, அந்திரேயா, யோவான்) பொருந்தக் கூடியதாய் இருக்கின்றது, மேலும் சந்தேகத்திற்கிடமின்றி இவ்வார்த்தைகளே, பிற்பாடு மற்றவர்களும், பேதுருவோடு கூட அவருடைய சீஷர்களாக (அ) அப்போஸ்தலர்களாக ஆக்கத்தக்கதான அழைப்பாகச் சென்றது. சீமோன் பேதுருவின் சகோதரனும், பேதுருவுடன் கூடத் தொழிலில் பங்காளியாயும் காணப்பட்ட அந்திரேயாவிற்கான அழைப்புக் கொஞ்சம் மாற்றங்களுடனான வார்த்தைகளாக மாற்கு 1:17-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது; அதாவது, "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்ற விதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அநேகமாக, இவ்விரண்டு விதமான வாக்கியங்களையும், கர்த்தர் பயன்படுத்தியிருக்க வேண்டும்; இரண்டு தருணங்களில் கர்த்தர் இதைப் பேசியிருந்தாலும் இவைகளின் அர்த்தமும்/முக்கியத்துவமும் ஒன்றேயாகும்.

ஜீவியத்தின் சகல காரியங்கள் வாயிலாக வரும் படிப்பினைகளை நாம் ஒருவேளை ஏற்றுக்கொள்வோமாகில், அவைகள் எதிர்க்காலம் முழுவதற்கும் நன்மை வழங்குவதாகக் காணப்படும். சாதாரணமான காரியங்கள், எந்தவிதமான வேலைகள் மற்றும் தொழில்கள் நேர்மையுடனும், நியாயத்துடனும், கண்ணியத்துடனும் செய்யப்படுவற்கு ஏற்ப, வரும் படிப்பினைகள் சரியான விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு, ஞானத்துடன் விருத்திச் செய்யப்படுமாயின், அவைகள் கர்த்தருடைய ஊழியங்களில் நாம் பிரயோஜனமுள்ளவர்களாய் இருப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்துவதாகவும், நமக்கு விலையேறப்பெற்ற போதனையாகவும் காணப்படும். மீன் பிடிக்கும் தொழிலில் விசேஷித்தவிதமாய் உதவியளிக்கக்கூடிய ஏதோ ஒன்று அநேகமாகக் காணப்பட்டிருக்க வேண்டும்; அதாவது இந்த மீன் பிடிக்கும் தொழிலுக்கும், அப்போஸ்தலர்கள் தங்களின் மீதமுள்ள ஜீவியகாலம் முழுவதிலும் செய்யப்போகின்ற மாபெரும் வேலைக்கும் விசேஷித்தவிதமான ஒற்றுமை காணப்பட்டது. இதைத் தம்முடைய அழைப்பில் நமது கர்த்தர் தெரியப்படுத்துகின்றார். மீன் பிடிப்பதற்கு ஊக்கமும் (energy), சாமார்த்தியமும் (tact),

மீனைப் பிடிப்பதற்கான சரியான தூண்டில் இரையும் (bait), மீன் பிடிப்பவன் தன்னை (மீனின் கண்களுக்குப் படாமல்) மறைத்துக்கொள்வதும் அவசியப்படுகின்றது. இந்த நான்கு விஷயங்களும், கர்த்தர் கொடுத்த இந்த ஆவிக்குரிய மீன் பிடிக்கும் வேலையாகிய, நமக்குரிய சிலாக்கியத்திற்கு அவசியமாய் உள்ளது. ஆகவேதான் அவர், "ஆடுகளை ஓய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" என்ற புத்திமதியைக் கொடுக்கின்றார் (மத்தேயு 10:16). அப்போஸ்தலனாகிய பவுலும் கூடச் சுவிசேஷத்தைச் சாமர்த்தியமாக முன்வைப்பதில், தான் பயன்படுத்தின ஞானத்தைக்குறித்து "உபாயமுள்ளவனாயிருந்து, தந்திரத்தினாலே உங்களைப் பிடித்தேனாம்" என்று குறிப்பிடுகின்றார் (2 கொரிந்தியர் 12:16). சுவிசேஷத்தை (practical) நடைமுறை விதத்தில் முன்வைப்பதற்கு, அப்போஸ்தலன், தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் இயல்பான சுபாவங்கள் மற்றும் மனப்பாங்கைச் சாதகமாகப் பயன்படுத்தியபோதிலும், அவர் சத்தியத்தின் ஒரு சிறிய அம்சத்தையாகிலும் அறிவிக்காமல் விட்டுவிடவில்லை. இது நமக்கொரு மாதிரியாக உள்ளது. மீன்கள் தங்களை எடுத்துகொள்ள/கைப்பற்ற ஒருவர் விரும்புகின்றார் என அறிந்துக்கொள்ளும் மாத்திரத்தில் அவைகள் உடனடியாக அச்சமடைந்து விடுகின்றன என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மேலும், மீன்களைப் போன்றே மனுக்குலமும் ஏதாகிலும் ஒன்றினால் கைப்பற்றப்படுவதைக்குறித்த விஷயத்தில், வெட்கம் அடைகின்றவர்களாக இருக்கின்றார்கள். அதாவது, தங்களது சுயாதீனங்களைத் தாங்கள் இழந்துபோய்விடுவோம் என்ற சந்தேகம் ஒருவேளை அவர்களுக்கு எழும்பும் பட்சத்தில் விசேஷமாக அவர்கள் வெட்கம் கொள்கிறார்கள். அர்ப்பணம் செய்வதன் மூலம் சுயாதீனம் இழக்கப்படுகின்றது என்பதே அர்ப்பணம் குறித்ததான உலகத்தின் கண்ணோட்டமாய் இருக்கின்றது.

மனித அமைப்புகளை உண்டாக்கும் விதத்தில் அப்போஸ்தலர்கள் மனுஷரைப் பிடிக்கிறவர்கள் அல்ல. அப்போஸ்தலர்கள், சீஷர்களைச் சில மதப்பிரிவின் அடிமைத்தனத்திற்குள் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யவில்லை. அவர்கள் கர்த்தருக்காகவும், மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆனார்கள்; அவர்கள் கர்த்தருடைய பிரதிநிதிகளாக மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆனார்கள்; அதாவது இவர்கள்மூலம், தேவன் மனுஷர்களைப் பிடிப்பது போல் செயல்பட்டார்கள். மகிமையான நம்பிக்கைகளுடனும், சுவிசேஷம் அளிக்கும் எதிர்க்கால வாய்ப்புகளுடனும் மனுஷர்களைப் பிடிப்பது அப்போஸ்தலர்களின் பணியாக இருந்தது; மேலும் (பிடிப்பட்ட) மனுஷர்கள் தங்களுக்குள்ள எல்லாவற்றையும் சந்தோஷத்துடனும், முழுமையாகவும் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்யத்தக்கதான நிலைக்குள் கொண்டுவரப் பண்ணுவதும் அப்போஸ்தலர்களின் பணியாக இருந்தது. இந்த வழிமுறையே இன்றும் உள்ள கர்த்தருடைய பிரதிநிதிகளுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது. நாம் கர்த்தருக்காவும், அவருடைய ஊழியத்திற்காகவும் மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாய் இருக்க வேண்டுமே ஒழிய, நம்முடைய தனிப்பட்ட நன்மை (அ) ஆதாயத்திற்காக, அதாவது தனிப்பட்ட மதப்பிரிவைக் கட்டியெழுப்புவதற்காக இருக்கக்கூடாது. நாம் நம்முடைய சொந்த சுயாதீனங்களை மனுஷர்களுக்குக் கொடுத்துவிடுகிறவர்களாகவோ அல்லது மனுஷர்கள் மற்றும் அமைப்புகளின் கட்டளையின்படி, மற்றவர்களின் சுயாதீனத்தை எடுத்துப்போட்டுவிடுகிறவர்களாகவோ இருக்கக்கூடாது. ஆனால் கர்த்தர் இட்ட கட்டளையின் பிரகாரமாக மனுஷரைப் பிடிக்கும்படிக்கு, கடந்து வந்த உண்மையான சீஷர்களிடமிருந்து வரும் செய்தியானது, வெற்றிகரமாக பிடிப்பட்டவருக்கு ஜீவனை இழப்பது மற்றும் சுயாதீனத்தை இழப்பது குறித்தே சுட்டிக்காட்டுகின்றது. மீன் பிடிக்கும் தொழிலானது அனைத்துக் காரியங்களுக்குமான முழுமையான விளக்கமாக இருப்பதில்லை, ஏனெனில் கர்த்தரால் பிடிக்கப்பட்ட அனைவரும் விரும்பி அவரிடத்தில் பிடிப்பட வேண்டும். இல்லையேல், அவர்கள் பிடிப்படாதவர்களாகவே காணப்பட்டு புறம்பாக்கிப் போடப்படுவார்கள்; மேலும் அவருடைய தனிப்பட்ட சுயாதீனம் மற்றும் ஜீவன் இழந்துபோவது என்பது அவர்கள் மகிமை, கனம் மற்றும் நித்திய காலத்திற்குமுரிய ஜீவனை அடைவதைக்குறிக்கின்றது.

இந்த மீன் பிடிக்கும் தொழிலை, நமது கர்த்தர் தாம் பேசின உவமைகளில் ஒன்றிற்கு அடிப்படையாகக்கொண்டு விளக்கியிருந்தார்; பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.இறுதியில் வலையானது கரைக்குக் கொண்டுவரப்படும் (மத்தேயு 13:47).

வலை சந்தேகத்திற்கு இடமின்றி இந்தச் சுவிசேஷ யுகத்தைக்குறிக்கின்றது. மேலும், இராஜ்யம் தொடர்பான கர்த்தருடைய நோக்கத்திற்குப் பாத்திரமானவர்களும், பாத்திரமற்றவர்களும் கலந்த ஜனங்கள் பொதுவாகப் பிடிக்கப்பட்டார்கள். வலை கரைக்குக் கொண்டுவரப்பட்டது என்பது இந்த யுகத்தின் "அறுவடை" காலத்தைக் குறிக்கின்றது. அதாவது, மனுஷரைப் பிடிப்பதற்கான நேரம் முடியும் காலப்பகுதியைக் குறிப்பிடுகின்றது. நல்ல மீன்கள் கூடைகளில் சேர்க்கப்பட்டு, ஆகாதவைகளாகிய மற்ற மீன்களோ கடலில் மீண்டுமாக எறியப்பட்டுவிட்டன என்று உவமையில் காணப்படுகின்றது. இப்படியாகவே சுவிசேஷ யுகத்தின் அழைப்பானது, சுவிசேஷ யுகத்தின் வலையானது, இந்தச் சுவிஷேச யுகத்தின் மீனவர்கள், மனுக்குலத்திலிருந்து இராஜ்யத்திற்கு எனக் கர்த்தர் கொண்டுள்ள நோக்கத்திற்குப் பாத்திரமான ஜனங்களையுடைய ஒரு விசேஷித்த வகுப்பாரைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றனர்; மேலும், மற்றவர்கள் இவ்வலைக்குள் வந்தாலும் அவர்கள் விரும்பத்தக்கவர்கள் அல்ல. அவர்கள் மீண்டுமாக லௌகீக நிலைக்குள் சறுக்கி விழுந்து போய்விடுகின்றனர். அடுத்த யுகத்திற்கான மீன்/மனுஷர் பிடிக்கப்படுதலோ, வேறுபட்டதாகவும், மிகுந்த பெரிய, பிரமாண்ட நிலையிலும் காணப்படும்.

## “சீஷத்துவத்தை விட உயர்வான அப்போஸ்தலத்துவம்”

சீஷத்துவத்திற்கும், அப்போஸ்தலத்துவத்திற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. ஆட்டுக்குட்டியானவருக்கு 12-அப்போஸ்தலர்கள் இருக்கின்றார்கள் (வெளி. 21:14). ஆனால், சீஷர்களின் எண்ணிக்கையோ பெரிதாய் உள்ளது. சீஷன் என்ற வார்த்தையின் அர்த்தம் மாணவன் (அ) கற்றுக்கொள்கிறவன் ஆகும். மேலும் இப்பொழுதும் கர்த்தரினால் அழைக்கப்பட்டுள்ள அனைவரும், தற்கால ஒழுங்கின்/ஏற்பாட்டின் கீழ், பாத்திரமான மீன்களாக இப்பொழுது பிடிக்கப்பட்டிருக்கும் அனைவரும் கர்த்தரால் போதிக்கப்படுவதற்கு விருப்பம் கொண்டவர்களாகவும், அவருடைய போதனைகளுக்கு விருப்பத்துடன் செவிச் சாய்ப்பவர்களாகவும் இருப்பார்கள். நம்முடைய பாடத்தின் ஆதாரவசனமானது, அவருடைய சீஷர்களாக நாம் இருப்பதற்கான நிபந்தனைகளை முன் வைக்கின்றது. அதாவது, நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது, நாம் அவருடைய வார்த்தைகளிலும் நிலைத்திருக்கின்றவர்களாய் இருக்க வேண்டும்; அவரால் போதிக்கப்படுவதிலும் நிலைத்திருக்க வேண்டும்; கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்வதிலும் நிலைத்திருக்க வேண்டும்; அவருடைய பள்ளிக்கூடத்திற்குள் நாம் பிரவேசிப்பதற்கு முன்னதாக, நாம் சுபாவத்தின்படி பாவிகளாக இருக்கின்றோம் என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும், மேலும் அவருடைய பள்ளிக்கூடத்தில் பிரவேசிப்பதற்கு (அ) அவருடைய சீஷர்களாகுவதற்கு முன்பு நமக்கு அவசியமென அவர் பரிந்துரைப்பது நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பது மாத்திரமேயாகும். விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்ததான தெய்வீக வார்த்தைகளின் ஆலோசனையை நாம் ஏற்றுக்கொண்ட பிற்பாடே, விசுவாசத்தினால் இந்தப் பாவ சுத்திகரிப்பு நிறைவேறின பிற்பாடே, மாணாக்கர்களாக பள்ளிக்குள் பிரவேசித்த பிற்பாடே, நம்முடைய வளர்ச்சிக்கு அவசியமான பல்வேறு பாடங்கள் கற்க வேண்டியுள்ளது என்று நாம் உணர்ந்துக்கொள்கின்றோம்.

நமக்கு என்ன படிப்பினைகள் தேவை, என்ன அனுபவங்கள் அவசியம், என்ன பரீட்சைகள், என்ன இடர்பாடுகள், எவ்விதமான உற்சாகங்கள், எவ்விதமான உதவிகள் நமக்கு அவசியமாய் இருக்கும் என்பதை தீர்மானிக்கப் போகிறவர் போதகரே/ஆசிரியரே ஆவார். நன்மையான யாதொன்றும் நமக்குத் தடைப்பண்ணப்படுவதில்லை என்று வாக்களிக்கப்பட்டுள்ளது. நம்முடைய தேவைகளுக்கு ஏற்ப, அவர் நமக்கு எச்சரிப்புகளையும், சீர்த்திருத்தங்களையும், உற்சாகமூட்டுதல்களையும், ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் அருளுவார்; ஆனால் இவைகளை நாம் நன்மையான விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளது. சீஷனாக பள்ளியில் சேரும் அனைவரும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திலிருந்து, இராஜ்யத்தின் மகிமைக்கும், போதகருடன் உடன்சுதந்திரராய் இருக்கும் நிலைக்கும் பட்டமளிக்கப்படும் மாபெரும் பரிசைப் பெற்றுக்கொள்வதில்லை; மாறாக சீஷத்துவத்தில் உண்மையுடனும், பொறுமையுடனும் தொடர்ந்து நிலைநிற்பவனும், தன்னுடைய ஓட்டத்தை முடிக்கும் வரையிலும் மாபெரும் ஆண்டவர் போதிக்கும் பாடங்களைத் தொடர்ந்து

கற்றுக்கொண்டிருப்பவனுமே, தனது கிரீடத்தை கர்த்தருடைய கரங்களிலிருந்து நிச்சயமாகப் பெற்றுக்கொள்வான்.

---

**R3726**

# "வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம்"
## மாற்கு 1:21-34

"பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கினார்." மாற்கு 1:34.

வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய் என்று நமது கர்த்தர் கூறியுள்ளார் (மத்தேயு 11:23). நம்முடைய பாடமானது கப்பர்நகூம் எவ்வளவாக வானபரியந்தம் உயர்த்தப்பட்டது என்று நமக்கு இப்பொழுது எடுத்துக் காண்பிக்கப் போகின்றது; அதாவது கப்பர்நகூமின் ஜனங்களுக்கு, அவர்களின் வியாதிகளைச் சொஸ்தப்படுத்தின நம்முடைய கர்த்தருடைய ஊழியத்தின் ஆரம்ப காலப்பகுதிகளில் அருளப்பட்ட மாபெரும் இரக்கங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களை நம்முடைய இந்தப் பாடமானது நமக்கு எடுத்துக் காண்பிக்கப் போகின்றது. எனினும், சொற்பமான நபர்களே அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்டனர். மேலும், இயேசு கூறின பிரகாரமாக அப்பட்டணமானது பாதாளபரியந்தம் தாழ்த்தப்பட்டது. அதாவது, அப்பட்டணம் எரிகின்ற (அ) சித்திரவதைப்படுத்துகின்ற இடத்திற்குள் தள்ளப்படாமல், (hades) ஹேடிஸ்க்குள், அதாவது படுகுழிக்குள் (grave), அதாவது மரித்த நிலைக்குள் விடப்பட்டது என்று நாம் அறிகின்றோம். அப்பட்டணமானது முற்றிலும் அடையாளம் தெரியாமல் போய்விட்டது. மேலும், அது காணப்பட்ட இடம் கூட இன்று திட்டவட்டமாகத் தெரியாத நிலையிலேயே உள்ளது. ஒரு குறிப்பிட்ட கற்குவியலே கப்பர்நகூம் காணப்பட்ட இடம் எனக் கூறிவரப்படுகின்றது.

கப்பர்நகூம் பட்டணமானது, கலிலேயா கடலின் அருகே, அதாவது நமது கடந்த பாடத்தில் அற்புதவிதமாக அநேக மீன்கள் வந்த கடலின் அருகே காணப்பட்டது. அடுத்து வந்த ஓய்வு நாள் அன்று, இயேசுவுடைய சீஷர்கள் ஆகும்படிக்குத் தங்களுடைய அனைத்தையும் விட்டுவந்த நான்கு மீனவர்களோடுகூட இயேசு, கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்திற்குள் பிரவேசித்தார். யூதர்களின் ஜெப ஆலயங்களில் (Synagogue) மிகுந்த சுதந்திரம் அருளப்பட்டிருந்தது. மேலும், பயபக்தியுள்ள எவரும் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனங்கள் குறித்ததான தங்களுடைய கண்ணோட்டங்களை முன்வைப்பதற்கான வாய்ப்பும் அருளப்பட்டிருந்தது. நமது கர்த்தர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஜனங்களுக்குப் போதித்தபோது, அவருடைய உபதேசம் மற்றும் அவருடைய போதனைகள் குறித்தும் ஆச்சரியம் அடைந்தார்கள். வேதவாக்கியங்களைக்குறித்துச் சதுசேயர் மற்றும் வேதபாரகர்கள் சண்டைச் சச்சரவு செய்து கொண்டு, வேத வாக்கியங்களின் அர்த்தங்களை யூகம் செய்து அவைகளின் அர்த்தங்களைக் குழப்பிக்கொள்வதையும், வேதவாக்கியங்களைப் புரிந்துக்கொள்ள முடியாத புதிர்கள்போல் ஆக்குவதையுமே ஜெப ஆலயங்களில் ஜனங்கள் பார்த்துப் பழகியிருந்தார்கள். ஆனால், இயேசுவோ "அதிகாரமுடையவராய்" வேதவாக்கியங்களின் அர்த்தங்களை முழுவதும் புரிந்துக்கொண்டிருந்த ஆண்டவர் போல் போதித்தார்.

உண்மைதான், நமது கர்த்தர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவர்தான். மேலும், மற்றவர்கள் அறிந்திராதக் காரியங்கள்பற்றின அறிவு அவருக்கு இருந்ததும் உண்மைதான்; ஆனால், அக்காரியங்களைக் குறித்தெல்லாம் அவர் போதிக்கவில்லை என்பதை அவர் நிக்கொதேமுவிடம் பேசின வார்த்தைகளிலிருந்து நாம் உறுதிப்படுத்தலாம்; அதாவது, "பூமிக்கடுத்தக் காரியங்களை" நான் உங்களுக்குச் சொல்லியும், நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவான் 3:12). கர்த்தரோ தெய்வீக வெளிப்படுத்தல்களான, நியாயப்பிரமாணங்கள் மற்றும் தீர்க்கத்தரிசனங்கள் குறித்தும் அவைகளின் நிறைவேறுதல் குறித்துமே போதித்தவராகக் காணப்பட்டார். இதை "நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை

அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்” என்றும், “என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது” என்றும், அவர் பேசின வார்த்தைகள் மூலமாகவே நாம் நிச்சயித்துக்கொள்ளலாம் (யோவான் 12:49; 7:16).

ஆகவே, கர்த்தருடைய சகல பிரதிநிதிகளும் கூட இப்படியாகவே போதிக்க வேண்டும். அதாவது, மனித யூகங்களையும், தத்துவங்களையும் போதியாமல், தேவனுடைய வார்த்தைகளையே போதிக்க வேண்டும். “சொப்பனங்கண்ட தீர்க்கத்தரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக; கோதுமைக்குமுன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரேமியா 23:28). “வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும் இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை” (ஏசாயா 8:20). “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திச்சொல்லு” (2 தீமோத்தேயு 4:2). “தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது” (எபிரெயர் 4:12). “உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்” (யோவான் 17:17). “பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்துக்கொண்டார்கள்” (அப்போஸ்தலர் 4:13).

ஆகவே கர்த்தருக்கும், அவருடைய சாட்சியின் வேதவாக்கியங்களுக்கும் உண்மையும், நேர்மையுமாய் இருப்பவர்கள், உலகத்தாரிடம் தெளிவற்ற விதத்தில் பேசாமல் ஏற்றவேளையில், “சகல ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாகிய” தேவனுடைய செய்தியை அறிவிப்பார்கள்.

## “உம்மை இன்னார் என்று அறிவேன்”

இயேசு பேசிக்கொண்டிருக்கையில் அல்லது அவருடைய சொற்பொழிவு அநேகமாக முடியும்போது, “நசரேயனாகிய இயேசுவே எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களை கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்” என்ற வார்த்தைகளை, ஜெப ஆலயத்தில் காணப்பட்ட சபையார் கேட்டபோது அதிர்ச்சியடைந்தார்கள் (வசனம் 24). இவ்வார்த்தைகளைப் பேசினது அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவன் ஆவான். ஆனால், இன்றைய நாட்களிலோ, இப்படிப்பட்ட மனிதன், பைத்தியம் பிடித்தவனாகக் கருதப்பட்டு, மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான காப்பகத்தில் சேர்க்கப்படுவான். அதற்காக இன்று மனநிலை பாதிக்கப்பட்டவர்களாய் இருக்கும் அனைத்துப் பைத்தியக்காரர்களும், அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் என்று நாம் சொல்ல வரவில்லை. மூளையானது நோயினால் தாக்கப்பட்டுப் பைத்தியமாய்ப் போனவர்களும் உண்டு என்பது உண்மைதான்; ஆயினும் பைத்தியக்காரர்களாகக் கருதப்படும் ஜனங்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் அசுத்த ஆவிகளினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் என்றும் நாம் நம்புகின்றோம்.

மனுக்குலத்தை ஆட்கொள்ளும் இந்த அசுத்த ஆவிகள் ஒருகாலத்தில் தேவதூதர்களாகக் காணப்பட்டு, நோவாவின் நாட்களில் பாவம் செய்த காரணமாக தெய்வீகத் தயவினின்று தள்ளப்பட்டு, அன்று முதல் ஆயிரம் வருஷம் அரசாட்சியின் மாபெரும் நாளுக்குரிய நியாயத் தீர்ப்பிற்கென்று, இருளின் சங்கிலிகளால் கட்டப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என வேறு கட்டுரைகளில் நாம் ஏற்கெனவே எழுதியுள்ளோம் (யூதா 1:6); மேலும் ஆயிரம் வருஷம் அரசாட்சியின்போது, கிறிஸ்துவாகிய இயேசுவும், சபையும் மகிமையடையும்போது, மனிதன் நியாயத்தீர்ப்பு (அ) பரீட்சிக்கப்படுவதற்கான வாய்ப்புப் பெற்றுக்கொள்வதோடு, இந்த விழுந்துபோன தூதர்களும் பெற்றுக்கொள்வார்கள் (1 கொரிந்தியர் 6:3). இதற்கிடையில் மனுக்குலத்தோடு தொடர்பு

வைத்துக்கொள்வதற்கும், மனிதர்கள் தங்கள் சித்தங்களை ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவர்கள் மேல் ஆதிக்கம் கொள்வதற்குமான இந்த விழுந்துபோன தூதர்களுடைய பிரயாசங்கள் இடைவிடாமல் தொடரும். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிலுள்ள வேத வாக்கியங்களில் எங்கும், தேவனிடம் பயபக்தியுடன் காணப்படும் அனைவரும், ஆவியுலக ஊடகங்கள் மற்றும் ஆவியுலகக் கோட்பாடுகளின் கூட்டங்கள் மற்றும் சைத்தான் தனமாயுள்ள இந்த ஆவிகளுடன் வைத்துக்கொள்ளும் எல்லா விதமான தொடர்புகள் ஆகியவற்றிற்கு எச்சரிக்கப்படுகின்றனர். இந்த எச்சரிப்புகளை மீண்டும் மீண்டுமாக வலியுறுத்துவது நமது கடமையாக இருக்கின்றது, காரணம் முன்பு காணப்பட்டதைக்காட்டிலும் இந்த விழுந்துபோன ஆவிகளின் செல்வாக்கு/தாக்கம் இன்று மிகுந்த செயல்பாட்டில் காணப்படுகின்றது; இன்னுமாக, நம்முடைய நாட்களில் அதாவது இன்னும் கொஞ்ச காலத்திற்குள் கிறிஸ்தவ மண்டலம் முழுவதின் மேலும் வரவிருக்கும் மாபெரும் பரீட்சையின்/சோதனையின் ஒரு பாகமாக, இந்த விழுந்துபோன ஆவிகளின், அதிக வல்லமையான செயல்பாடுகள் இன்னும் அதிகரிக்கும் என வேதவாக்கியங்கள் காட்டுகின்றது. ஐரோப்பியா அல்லது அமெரிக்காவைக்காட்டிலும் ஆஸ்திரேலியாவில் ஆவியுலக தொடர்புகளும், கோட்பாடுகளும் மிகுந்த முன்னேற்றமும், மிகுந்த ஆற்றலும் அடைந்துகொண்டு வருகின்றது என நாம் அறிந்துவருகிறோம், அதுமாத்திரமல்ல, அது எல்லா திசைகளிலும் விரைந்துப் பாய்கின்றது என்பதையும் நாம் அறிந்துவருகின்றோம்.

நம்முடைய பாடத்தில் இடம்பெறும் இச்சம்வத்தில் வரும் அசுத்த ஆவியானது, மேசியா வரும்போது சகல தீமையும் நீக்கப்பட்டு, அழிக்கப்பட்டுவிடும் என்பதை அறிந்துள்ளதுபோல் தோன்றுகின்றது. வேறு ஒரு சம்பவத்தின் பதிவு இப்படியாகத் தெரிவிக்கின்றது . . . "காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ? (மத்தேயு 8:29) . . . அதாவது மேசியா மூலம் வல்லமை வெளிப்படுவதற்கான காலம் இன்னும் எதிர்க்காலத்தில் உள்ளது என்ற செய்தியை அந்த ஆவி பெற்றிருப்பது போன்று (அ) முன்னுணர்வுகொண்டிருப்பது போன்று இவ்வசனம் வாசிக்கையில் நமக்குத் தோன்றுகின்றது . . . "எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ? என்ற வசனத்தில் இடம்பெறும் வேதனை என்ற வார்த்தையானது தண்டித்தலை, வேகமாக நடத்துதல் என்ற பொருளைக்கொடுக்கின்றது. அக்கால கட்டம்வரையிலும் தேவஆவியினால் ஏவப்பட்டு வேதத்தில் எழுத்தாளர்கள், விழுந்துபோன ஆவிகள்மேல் வரப்போகின்ற தண்டனையின் தன்மையைச் சுட்டிக்காட்டி எழுதவில்லை; மேலும் அந்தத் தண்டனையானது தங்களுக்கான அழிவாகவே இருக்கும் என இந்த விழுந்துபோன ஆவிகள் யூகித்துக் கொண்டன.

பாவ நிவாரண பலியாகிய நமது கர்த்தருடைய மரணத்தையும், தெய்வீக வல்லமையினால் உண்டான அவருடைய உயிர்த்தெழுதலையும் பார்த்த விழுந்துபோன ஆவிகள், தாங்கள் ஒரு காலத்தில் உணர்ந்துக்கொள்ளாததும், இப்பொழுது மனுக்குலத்தின் சார்பாக வெளிப்பட்டதுமான தேவனுடைய அன்பையும், தேவனுடைய வல்லமையையும் உணர்ந்துக்கொண்டார்கள்; மேலும், ஏற்றகாலத்தில் மனுக்குலம் மீது தேவனுடைய இரக்கம் வரும் என்ற கருத்தானது, விழுந்துபோன ஆவிகளின் கூட்டத்தார் மத்தியிலும், மனந்திரும்பின தூதர்கள் கூட ஏற்றக்காலத்தில் கிறிஸ்துவின் மூலம் தெய்வீக இரக்கத்தில் பங்கடைவதற்கான வாய்ப்பை அடைவார்கள் என்பது குறித்ததான நம்பிக்கை, இந்த விழுந்துபோன ஆவிகள் மத்தியிலுள்ள சிலருக்கு வந்துவிட்டது என அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகின்றார். இது தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகம் என்பதை நாம் அறிவோம். அதாவது, கிறிஸ்து வெளிப்படும் போதும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போதும் விழுந்துபோன மனிதர்கள் மாத்திரமல்லாமல், விழுந்துபோன தூதர்களும் நியாயம் தீர்க்கப்படுவது (அ) பரீட்சிக்கப்படுவது தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகம் என்பதை நாம் அறிவோம் (1 கொரிந்தியர் 6:3).

அசுத்த ஆவி அம்மனுஷனை விட்டு வெளியேறும்படி நமது கர்த்தர் கட்டளையிட்டார். அதாவது, அம்மனுஷனுடைய மனம் மற்றும் சரீரத்தின் மீதான ஆதிக்கத்தை விட்டுவிடக் கட்டளையிட்டார். இயேசுவினிடத்தில் காணப்படும் அதிகாரத்தை எதிர்ப்பதற்கு அந்த அசுத்த ஆவிக்கு வல்லமை இல்லாமல் இருந்தபோதிலும், அந்த மனுஷனை விட்டு போகையில், அவனுக்கு சில கஷ்டங்களைக் கொடுப்பதில் அவ்வாவியானது தடைப்பண்ணப்படவில்லை. லூக்கா 4:35-ஆம் வசனத்தில், பிசாசானது அம்மனுஷனை ஜனங்களின் நடுவே விழத்தள்ளி விட்டுச்சென்றது என நாம் வாசிக்கின்றோம். இவ்விதமாக, தீய ஆவிகளின் கொடுமையான செயல்கள்

வெளிப்படுத்தப்பட்டன. பரிசுத்தமான ஆவிகள்/தூதர்கள் இவ்விதமாக அலைக்கழித்து ஆட்டிப்படைப்பதில்லை. தேவன் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கங்களுடைய தனித்துவத்தைக் கருத்தில் கொண்டவராகவும் காணப்பட்டு, அவர்களுடைய தனித்துவத்தில் தலையிடுவதில்லை; மேலும், பரிசுத்தமான தேவ தூதர்களும் இப்படியாகத் தலையிடுவதில்லை. பிசாசுகள் மனுஷனுடைய சுயமாய்ச் சிந்திக்கும் திறனை, இல்லாமல் ஆக்கிப்போட்டு, மனுஷனுடைய (சுய) சித்தத்தை அடக்கி வயப்படுத்துவது போன்று தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு செயல்படுவதில்லை. மாறாக, ஒருவருடைய சித்தத்திற்கும், சுயமாய்ச் சிந்திக்கும் திறனுக்கும் இசைவாகவே தேவன் செயல்படுகின்றவராக இருக்கின்றார் (அவர் சித்தத்தை வற்புறுத்துகிறவர் அல்ல). கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக முழுமையாக அர்ப்பணம் பண்ணின விசுவாசி, தன்னுடைய சிந்தையிலும், வார்த்தையிலும், நடத்தையிலும் கர்த்தரிடத்தில் மகிமையான உறவிற்குள் வருவதற்கு ஏற்ப அதிகமதிகமாய்ப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், சுயசித்தத்திற்கு எதிராக அவன் அங்கீகரித்துள்ள தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது குறித்த கோட்பாடுகளையோ, தெய்வீகப் போதனைகளையோ எவ்விதத்திலாகிலும் அவனால் புறக்கணிக்கப்படுமாயின், இதற்கு ஏற்ப பரிசுத்த ஆவியும், தெளிந்த புத்தியின் ஆவியும், தேவனுடைய ஆவியும் தணிந்துப் போய்விடும்; மேலும், இந்த ஆவியானது எந்த விதத்திலும் நம்மிடத்தில்/நம்மேல் திணிக்கப்படவில்லை, மாறாக இவ்வாவி தக்கவைக்கப்பட்டு, பெருக பண்ணப்பட வேண்டுமாயின் நாம் அவைகள் மீது விருப்பம் கொண்டிருக்க வேண்டும், அவைகளைப் பற்றிப்பிடித்து வைத்திருக்க வேண்டும் மற்றும் அவைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

## “போதகத்தைக் குறித்து ஆச்சரியமடைதல்”

நமது கர்த்தர் போதிக்கையில் அவர் பாவம், துக்கம், வலி மற்றும் மரணத்திற்கான காரணம் பற்றி விவரித்திருக்க வேண்டும். அதாவது, இவைகள் ஆதியில் கீழ்ப்படியாமையின் நிமித்தம் உண்டானவைகள் என்றும், இவைகள் சாபம் என்றும், பின்னர் தேவனுடைய ஏற்றகாலத்திலும், அவருக்குரிய வழிமுறைகளிலும் இச்சாபமானது உலகத்திடமிருந்து எடுக்கப்பட்டுவிடும் என்றும், தீய ஆவிகள் வஞ்சனைப் பண்ணுவதற்கும், தாக்குதல் பண்ணுவதற்கும் வல்லமையும், அதிகாரமும் இல்லாமல் அப்போது காணப்படும் என்றும், மேசியா மூலம் தேவன் வாக்களித்துள்ள ஆசீர்வாதத்தின் மகிமையான காலை வேளையில் நோய், வலி மற்றும் மரணம் யாவும் அப்புறப்படுத்தப்படும் என்றும் விவரித்திருக்க வேண்டும். இந்தப் பிரமிக்கத்தக்கப் போதனைகள், ஜனங்கள் இதுவரையிலும் வேதபாரகரிடமிருந்து கேட்டவைகளைவிட மிகவும் தெளிவாக இருந்தபடியாலும் அசுத்த ஆவியைத் துரத்தின கர்த்தருடைய வல்லமையானது ஜனங்களுக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுத்தபடியினாலும் அனைத்து ஜனங்களும் பிரமித்து நின்றார்கள். மேலும், ஜனங்கள் கடற்கரையில் நின்று தங்களுக்குப் போதித்துக் கொண்டிருப்பவர் ஒரு மாபெரும் போதகர் என்றும், ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசி என்றும், ஒருவேளை மேசியாவாகக் கூட இருக்கலாம் என்றும் ஜனங்கள் போதுமான அளவு உணர்ந்துக்கொண்டார்கள்.

இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகியிருந்த போதிலும், கலிலேயாவிலுள்ள கானாவூரில் அவர் அற்புதம் செய்து வெகுநாள் சென்றிருந்த போதிலும், அப்பகுதியில் “பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது” எனப் போதுமான அளவு போதித்திருந்த போதிலும், இச்சம்பவமே வியாதி மற்றும் அசுத்த ஆவிகள் மீது கர்த்தருக்கு இருக்கும் அற்புதகரமான வல்லமையை அப்பட்டமாக வெளிப்படுத்தினதில், முதல் சம்பவமாக விளங்குகின்றது எனத் தோன்றுகிறது. இல்லையேல், இயேசு போதித்தவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அப்பட்டணத்து ஜனங்கள் இவ்வளவுக்கு ஆச்சரியமடைந்திருக்க முடியாது. ஆனால், அவருடைய சீஷர்களாகும்படிக்குத் தங்களுடையது அனைத்தையும் விட்டுச்சென்ற அந்த நான்கு மீனவர்கள், மற்றவர்களைக் காட்டிலும் குறைவாக பிரமிப்படைந்திருக்க வேண்டும் என்பது நிச்சயமே; ஏனெனில், அவர்கள் கானாவூரில் திராட்சரசம் அவர் உண்டுபண்ணினதைக்குறித்தும், இந்த அசுத்த ஆவி விரட்டப்படுவதற்குக் கொஞ்ச நாள் முன்பு அற்புதமான விதத்தில் மீன்கள் பிடிப்பட்டது குறித்ததுமான அறிவு அவர்களிடத்தில் இருந்ததாலேயே ஆகும்.

ஜெப ஆலயத்திலிருந்து இயேசுவும், நான்கு சீஷர்களும் புறப்பட்டுப் பேதுருவின் வீட்டிற்குள் பிரவேசித்தார்கள், அங்குப் பேதுருவின் மாமியார் கடும் ஜுரத்தினால்

வியாதிப்பட்டு இருந்தாள்; அவளைக் கர்த்தர் சுகப்படுத்தினார். பிசாசைத் துரத்தின இச்சம்பவமானது, சீஷர்களுடைய மனதில் நமது கர்த்தர் வியாதிகளைச் சுகப்படுத்துவதற்கும் வல்லவர் என்பதான எண்ணங்களை உதிக்கச் செய்தது. ஆகவேதான் சீஷர்கள், ஜெப ஆலயத்திற்குப் போவதற்கு முன்பு, (அதாவது இச்சம்பவத்தைத் தொடர்ந்து, அவர்களுக்குள் நோய்களைச் சுகமளிக்கும் கர்த்தருடைய வல்லமை குறித்த எண்ணங்கள் உதிப்பதற்கு முன்பும்), அந்த ஸ்தீரியைச் சொஸ்தப்படுத்த வேண்டும் என்ற எந்த விதமான வேண்டுகோள்களையும் வைக்கவில்லை. நமது கர்த்தர் அந்த ஸ்தீரியின் கரங்களைப் பிடித்து அவளை எழுப்பி விட்டார், உடனடியாக ஜுரம் அவளை விட்டுக் கடந்துப் போயிற்று. பொதுவாக காய்ச்சல் உடைய நோயாளிகளுக்குக் காய்ச்சல் நின்றாலும், சரீர பெலவீனமும், வலுவின்மையும் காணப்படுவது வழக்கம். ஆனால் பேதுருவின் மாமியோ தனது வீட்டில் வந்த விருந்தாளியாகிய அவர்களுக்கு உடனடியாகப் பணிவிடை செய்யவும், உணவு பரிமாறவும் தக்கதாக முழுப் பெலத்துடன் காணப்பட்டாள் என்று பார்க்கின்றோம்.

## “அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டார்”

மாலை பொழுது, அதாவது சூரியன் மறையும்பொழுது நாளின் முடிவாக இருந்ததால், மாத்திரமல்ல, மாறாக யூதர்களின் வழக்கத்தின்படி ஓய்வுநாள் மாலை வேளையான சூரியன் மறையும் வேளையில் நிறைவடைவதால், இதுவே சரியான நேரம் என ஜனங்கள் கருதி, வியாதியஸ்தர்களையும், பிசாசு பிடித்தவர்களையும், கர்த்தர் விடுதலை பண்ணத்தக்கதாக அவரிடத்தில் அழைத்து வந்தார்கள். இந்தச் சொஸ்தமாக்குதல்கள் அனைத்தையும் அவர் தமது சொந்த சத்துவத்தை, உயிராற்றலைக் கொடுத்தே செய்தார் என்பதில் நமக்கு நிச்சயமே. அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டார் என்றும், வியாதிகளைச் சுமந்தார் என்றும் அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிப்பதோடு, வேறு ஒரு சொஸ்தப்படுத்தும் சம்பவத்தில் இவ்விஷயங்கள் நேரடியாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.” "அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்” (மத்தேயு 8:17; லூக்கா 6:19). லூக்கா 6:19-ஆம் வசனத்தில் வரும் **வல்லமை** என்பதற்கான ஆங்கில வார்த்தை Virtue ஆகும், இதன் அர்த்தம் வல்லமை, வலிமை, உயிராற்றல் என்பவைகளாகும். இப்படியாக, நமது கர்த்தர் தமது அர்ப்பணிப்பிற்கான உடன்படிக்கையை நிறைவேற்றினார். மேலும், இவ்விதமாக மற்றவர்களுக்கு உதவி பண்ணும் பொருட்டுக் கர்த்தர் தமது வலிமையை/சத்துவத்தைப் பயன்படுத்தின காரியமாவது அவருடைய ஊழியத்தின் முடிவு வரையிலும் <u>தொடர்ந்தது</u>. அதாவது, எவ்விதமான மறுப்பும் தெரிவிக்காமல், பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, நம்மை அவருடைய இரத்தத்தினாலும், அவருடைய பலியாக்கப்பட்ட ஜீவியத்தினாலும் மீட்டுக்கொள்ளத்தக்கதாக, அநீதிமான்களுக்கு ஒரு நீதிமானாயும், பாவிகளுக்குத் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுப்பது வரையிலும் <u>தொடர்ந்தது</u>.

"அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை” (வசனம் 34) எனப் பதிவுகள் தெரிவிக்கின்றது. இதுபோலவே, "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்” என்று சத்தமிட்டுக்கொண்டிருந்த குறிச்சொல்லுகின்ற ஸ்திரீயையும் பவுல் கடிந்துகொள்கின்றார் (அப்போஸ்தலர் 16:17). கர்த்தர் தம்மைக்குறித்தும் தமது திட்டத்தைக்குறித்தும் பிசாசுகள் சாட்சிக் கொடுப்பதை விரும்பவில்லை என்பது எவ்வளவு தெளிவாகத் தெரிகின்றது. மீண்டும் புதுப்பிக்கப்படாத அனைவருக்கும் இது பொருந்தும். இப்படிப்பட்டவர்களுக்குச், "சிட்சையை நீ பகைத்து, என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய்” என்ற வார்த்தைகளே நமது கர்த்தர் கூறும் வார்த்தைகளாய் இருக்கின்றது (சங்கீதம் 50:17). கர்த்தருடைய ஸ்தானாதிபதிகளாகவும், அவருடைய வாய்க்கருவிகளாகவும் இருப்பது, கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணம் பண்ணினவர்களுக்குரிய விசேஷித்த சிலாக்கியமாகும்; அது அவர்களுக்குக்கெனக் கொடுக்கப்பட்ட விசேஷித்த கனமாகும். "அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு, புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்;

துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்துக்கொள்ளுவார்கள்” (தானியேல் 12:10).

தேவனுக்குரிய விஷயங்களில் ஞானத்துடன் காணப்பட்டு, தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக ஜீவிக்க முயற்சி பண்ணுபவர்களுக்கே, தேவனுடைய உண்மையான திட்டம் குறித்ததான தெளிவான புரிந்துக்கொள்ளுதல் காணப்படும்; மற்றவர்களோ குழப்பத்தில் காணப்பட்டு இருளில் காணப்படுவார்கள். ஆகவேதான் தீர்க்கத்தரிசி, கிறிஸ்துவாகிய அபிஷேகம் பண்ணப்பட்டவருடைய முழுச் சரீரத்தைக்குறித்து, "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்......”என்று குறிப்பிடுகின்றார் (ஏசாயா 61:1). அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் தவிர வேறு எவரும், தேவனுடைய செய்தியை அறிவிக்கும் போதகர்களாகக் (teacher) கருதப்படுவதில்லை; மேலும் அபிஷேகம் பண்ணப்பட்ட அனைவரும், அவர்கள் பெற்றிருக்கும் அபிஷேகத்திற்கு ஏற்ப வேதவாக்கியங்களின் நியாயமான வரையறைகளுக்கு உட்பட்ட விதத்தில் அவர்களுடைய விருப்பம் மற்றும் வாய்ப்பிற்கு ஏற்றாற்போல் கர்த்தருடைய பிரதிநிதிகளாகவும், அவருடைய வாய்க்கருவிகளாகவும் இருப்பதற்கான சிலாக்கியம் பெற்றுக்கொள்வார்கள்.

அடுத்த நாள் காலையில் ஜனங்கள், தங்கள் மத்தியில் ஒரு மாபெரும் போதகர், மாபெரும் சொஸ்தமாக்குபவர் இருக்கின்றார் என்ற எண்ணத்தில் உற்சாகமடைந்தவர்களாக, இயேசுவை மீண்டும் தேடினார்கள்; ஆனால் அவரோ தாம் அடுத்த ஊர்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ண வேண்டும் என்று கூறி அதிகாலையில், இருட்டோடே வனாந்தரமான ஓர் இடத்திற்குப் புறப்பட்டு போய்விட்டார்; அதாவது அவர் தமது பிதாவுக்கடுத்த வேலைகளில் ஈடுபட வேண்டும் என்றும், முழு மந்தையின் நலனையும், தேவைகளையும் தாம் சந்திக்க வேண்டும் என்று கூறி புறப்பட்டுப் போய்விட்டார். தெய்வீகத் தயவின் நிரூபணங்களாகிய இந்த அற்புதங்களானது கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாய் இருக்கும் அனைவரும் தம்முடைய குணங்கள் மற்றும் வேலைகளைப் பார்க்கையில், தாம் பிதாவின் பிரதிநிதி என்றும், மேசியா என்றும் நம்பிக்கை வைப்பதற்கு மாத்திரம் ஏதுவாய் இருக்க வேண்டும் என்பதே கர்த்தருடைய நோக்கமாயிருந்தது என்பது நமக்கு நிச்சயமே. இந்த அற்புதங்களாகிய சான்றுகளைக் (token) கொடுத்தப் பிற்பாடு, அவர் அவ்விடத்தை விட்டுப் போய்விடுவார்; அதாவது அவ்விடத்தில் தமது அற்புதமாகிய சான்றைக் கண்டவர்கள் மத்தியில், சரியான இருதய நிலையில் இல்லாதவர்கள் மறந்துவிடவும், தங்களின் கவனத்தை இழந்துவிடவும், தங்களின் அனல், ஆர்வம் தணிந்து விடுவதற்கு ஏதுவாகவும், ஆனால் உத்தம இஸ்ரயோலர்களோ நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலமாயத் தேவன் வாக்களித்துள்ள ஆறுதலுக்காக காத்து இருப்பதற்கும், அவர் அறிவித்துள்ள இராஜ்யத்திற்காக கவனித்து, நம்பிக்கை வைத்து, காவல் காத்து, ஜெபம் பண்ணுவதற்கும் ஏதுவாகவும் அவ்விடத்தை விட்டுக் கர்த்தர் போய்விடுவார்.

இப்படியே இச்சம்பவத்திலும் கர்த்தர் நடந்து கொண்டார். கர்த்தர் தெரிந்துக்கொள்ளப்படும் வகுப்பாரை மாத்திரமே நாடுகின்றார்; அதாவது அவரை ஆவியிலும், சத்தியத்திலும் தொழுது கொள்ளுபவர்களை மாத்திரமே தேடுகின்றார்; அவர் திரளான ஜனக்கூட்டத்தாரைத் தேடவில்லை; இப்படித் தேடுவதற்கான வேளையும் இன்னும் வரவில்லை. ஏற்றகாலத்தில் குருடான சகல கண்களும் திறக்கப்படும், சகல செவிடான காதுகளும் திறக்கப்படும், மேலும் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கர்த்தரை அறிகிற அறிவு அருளப்படும், ஆனால் இப்பொழுதோ கர்த்தர் தம்முடைய மணவாட்டியின் அங்கங்களாகும் ஒரு விசேஷித்த வகுப்பாரையே தேடிக்கொண்டிருக்கின்றார்.

## “அவர் அநேகரைச் சொஸ்தப்படுத்தினார்”

கர்த்தர் தம்முடைய ஊழிய காலங்களில் அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினார் என்பதில் நமக்கு ஐயமில்லை என்றாலும், அவர் பாலஸ்தீனியாவிலுள்ள அனைத்து வியாதியஸ்தர்களையும் சொஸ்தமாக்கினார் என்ற எண்ணம் நமக்கில்லை. அவருடைய ஊழியம் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதாய் இராமல்,

சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதாகவே இருந்தது. வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தும் காரியமானது, கவனத்தை ஈர்ப்பதற்கும், விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், தம்மைத் தேவனுடைய விரல் எனச் சுட்டிக்காண்பிப்பதற்குமேயாகும். யோவான் 5:1-9 ஆகிய வசனங்களிலுள்ள சம்பவத்தில், அநேக வியாதிஸ்தர்கள் மத்தியில் ஒருவன் மாத்திரமே சொஸ்தமாக்கப்படுகின்றான் என்பதையும் நாம் பார்க்கின்றோம். கப்பர்நகூம் பட்டணத்திலுள்ள அனைத்து வியாதியஸ்தர்களும் சொஸ்தமாக்கப்படவில்லை என்றாலும் அநேகர் சொஸ்தமாக்கப்பட்டார்கள் எனப் பதிவுகள் தெரிவிக்கின்றது; ஆனால் அது ஒரு சிறு பட்டணம்தான், ஆயினும் மற்றப் பட்டணங்களைப் பார்க்கிலும் இப்பட்டணத்திற்கு ஆச்சரியமான ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகள் அருளப்பட்டது என்று நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது, அதாவது அப்பட்டணத்தின் வியாதியஸ்தர்கள் சொஸ்தமாக்கப்பட்டதன் மூலமாகவும், பிசாசு பிடிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டதின் மூலமாகவும் இப்பட்டணத்திற்குக் கிடைத்த சிலாக்கியங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பான விஷயங்களிலேயே இப்பட்டணமானது வானபரியந்தம் உயர்த்தப்பட்டது என நாம் பார்க்கின்றோம்.

## “விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்”

இப்பாடத்தைப் படிக்கும் அநேகருடைய மனதில், "கர்த்தரை உண்மையாய் விசுவாசிக்கும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் ஜெபத்தின் மூலம் ஒருவரையொருவர் சொஸ்தப்படுத்திக் கொண்டவர்களாக இருக்க வேண்டும், மற்றும் ஒருபோதும் நோய்வாய்ப்பட்டவர்களாக இருக்கக்கூடாது” என்ற சிலரின் விவாதங்கள் நினைவுக்குவரும் என்பதில் ஐயமில்லை. இப்படியாக விவாதிப்பவர்கள், மாற்கு 16:17-18-ஆம் வசனங்களை ஆதாரமாய் முன்வைக்கின்றனர், "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.”

மேற்கூறப்பட்டுள்ள நமது அருமையான நண்பர்கள், இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். அவை பின்வருமாறு:

(1) மாற்கு 16:9 முதல் கடைசி வரையிலான வசனங்கள் வேதாகமத்தின் பழைய மூலப்பிரதிகளில் காணப்படுவதில்லை; மேலும் இவ்வசனங்கள் மாற்கு எழுதி பதிவு செய்துள்ள காரியங்களுடன் கூட்டிச்சேர்க்கப்பட்டுள்ளதால், இவ்வார்த்தைகள் முழுவதும் (தேவ ஆவியினால்) ஏவப்பட்டு, அதிகாரமுள்ளவைகளாக எழுதப்படவில்லை. அனைத்துக் கல்வியறிவு பெற்றவர்களும் இதை அறிந்திருக்கின்றார்கள்; மேலும் இந்தச் சேர்க்கப்பட்ட வசனங்களை முன்வைப்பவர்களில் பெரும்பாலானோர், இவ்வார்த்தைகள் சேர்க்கப்பட்டவைகள் என்பது தொடர்பான அறிவு பெற்றுக்கொள்ளத்தக்கதாக போதுமான அளவு புத்திசாலிகளாகவே இருக்கின்றார்கள் என நாம் அனுமானிக்கின்றோம். அப்படி இருந்தும் வேதவாக்கியங்கள் அல்ல என்று தாங்கள் அறிந்திருக்கிறவைகளை வேதவாக்கியங்கள் என இவர்கள் முன்வைப்பது ஏன்?

(2) இந்த வார்த்தைகள் கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்தில் பொருந்தக்கூடியவைகள் அல்ல. மேலும் கர்த்தருடைய பின்னடியார்களுக்கு அவ்வார்த்தைகள் பொருந்தும் என முன்வைப்பவர்களும் கூட, தாங்கள் அவைகளை நம்பவில்லை என்பதையும் கூட வெளிக்காட்டுகின்றனர். இவர்களால் சர்ப்பங்களைக் கைகளில் எடுக்க முடியாது, மேலும் சாவுக்கேதுவான யாதொன்றையும் குடிப்பதற்கு அஞ்சுகின்றனர், இவர்களால் பிசாசுகளைத் துரத்தவும் முடிகிறதில்லை, மேலும் வியாதியஸ்தர்களின் மேல் தங்கள் கைகளை வைப்பதன் மூலம் இவர்கள் அனைவராலும் சொஸ்தப்படுத்த முடிகிறதுமில்லை.

நமது கர்த்தருடைய அற்புதங்கள் ஜனங்களுக்குச் சுட்டிக்காட்டும் குறிப்புகளாக இருந்ததோடல்லாமல், இறுதியில் பூமியின் சகல குடிகளையும் ஆசீர்வதிப்பதற்கான மாபெரும் பிரமாண்டமான விதத்தில் அவர் பயன்படுத்தப் போகின்ற வல்லமையையும் கூடச்

சித்தரித்துக் காட்டுகின்றது. பதிவுகள் தெரிவிக்கிறவைகளை வைத்துப் பார்க்கையில் கர்த்தர் தம்முடைய வல்லமையைத் தமது பின்னடியார்கள், அதாவது தமது சீஷர்கள் மீது பயன்படுத்தவில்லை. அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதே அவர்களுக்கான அழைப்பாய் உள்ளது; மேலும் சரீர பிரகாரமான ஆரோக்கியத்தையும், குணமாக்குதலையும் நாடுவதற்குப் பதிலாக இவர்கள் சத்தியத்தின் ஊழியத்தின் பொருட்டுத் தங்கள் சகோதர சகோதரிகளுக்காக தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுக்கிறவர்களாய் இருக்க வேண்டும். கர்த்தருடைய பின்னடியார்கள் சரீர பிரகாரமான ஆரோக்கியம் பெற்றுக்கொள்வதற்கும், சோதனைகள், பிரச்சனைகள், பாரங்கள், வலிகள் மற்றும் வேதனைகளிலிருந்து விடுதலைப் பெற்றுக்கொள்வதற்கும் அழைக்கப்பட்டுள்ளனர் என்ற கருத்தைப் பெற்றிருப்பவர்கள் தவறான கருத்தையே பெற்றிருக்கின்றார்கள். தேவ பக்தியுடன் கூடிய ஜீவியமும், சமாதானமுடைய இருதயமும், சரீர ஆரோக்கியத்திற்கு ஆதரவானவைகள் என்பது உண்மைதான்; ஆயினும் இராஜாவினுடைய ஊழியத்தைச் சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் செய்கையில் சரீர பிரகாரமாக கொஞ்சம் களைப்பும், சோர்வும் ஏற்படுவதும் உண்மைதான்; சில சமயம் சரீர பிரகாரமான அசௌகரியங்களும் கூட ஏற்படுகின்றன; மேலும் இவ்விதமான சரீரப்பிரகாரமான பாதிப்புகள் நம்முடைய பலியின் ஒரு பாகமாகவும், நம்முடைய நன்மைக்கு ஏதுவாக தேவன் மாற்றிப்போடும் நம்முடைய அனுபவங்களின் ஒரு பாகமாகவும் கருதப்பட வேண்டும்.

கர்த்தருடைய சிட்சிக்கும் கோலினுடைய துன்பங்கள், வியாதிகள், முதலானவைகள் மூலம் அவருடைய கரங்களிலிருந்து மிக அருமையான ஆசீர்வாதங்களைக் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் பெற்றுக்கொண்டுள்ளனர். இவ்விதமாக சாபத்தின் அம்சமாகிய சில தீமைகள் அநேக தருணங்களில், கர்த்தரை அன்புகூருகிறவர்களுக்கும், தங்களின் அனுபவங்கள் மூலம் வரும் படிப்பினைகளைச் சரியான விதத்தில் கற்றுக்கொள்பவர்களுக்கும், நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டுள்ளது. பரலோகத்தில் எவ்வித வியாதியும் இருப்பதில்லை; மேலும் சாபங்களையெல்லாம் ஆயிரம் வருஷம் அரசாட்சியானது மாற்றிப்போட்டு, கீழ்ப்படிதல் எனும் நிபந்தனையின் கீழ்த் தேவனை ஏற்றுக்கொள்பவர்களுக்கு பூரணத்தையும், இழந்த அனைத்தையும் திரும்பப் கொடுத்தப் பிற்பாடு மற்றும், கீழ்ப்படியாதவர்கள் அனைவரையும் அழித்த பிற்பாடு எவ்விதமான வியாதியும் இருப்பதில்லை. ஆனால் இதற்கான காலம் இன்னும் வரவில்லை; நாம் இன்னமும் தரிசத்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறவர்களாக இருக்கின்றோம்; ஆதாமின் வீழ்ச்சியின் காரணமாக வந்தவைகளின் நிமித்தம் நமக்குப் பங்காக சரீர ரீதியிலும், மன ரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் பெலவீனங்கள் இன்னமும் காணப்படுகின்றது. கர்த்தர் நமக்குச் சில நோய் எதிர்ப்புச் சக்தியை (immunity) அல்லது விசேஷித்த விதமான புத்துணர்வை அவருடைய ஞானத்தின்படியேயும், நாம் செய்ய வேண்டும் என்று அவர் நமக்கு நிர்ணயித்துள்ள வேலைக்குரிய தேவைகள் பற்றியதான அவருடைய அறிவின்படியேயும் நமக்கு அருளுவார். ஆனால், அதற்கென்று நாம் பூமிக்குரிய தயவுகளையும், நோய் எதிர்ப்புச் சக்தியையும் (immunity) அவரிடத்தில் கேட்டு நமது பலியைப் பின்வாங்கிப்போட முயற்சிக்கக்கூடாது. மாறாக, பூமிக்குரிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பூமிக்குரியவற்றில் நல்லவைகளைக் கொடுக்க விருப்பம் கொள்வதைப் பார்க்கிலும், நமது பிதாவாகிய தேவன் தமது பிள்ளைகளுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுக்க அதிக விருப்பமுள்ளவராக இருக்கின்றார் என்பதை நாம் உணர்ந்தவர்களாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையே கேட்க வேண்டும்.

பரிசுத்த ஆவி நமக்குக் கொடுக்கப்படும்போது, அது படிப்படியாக ஒழுக்க ரீதியிலான (அ) சரீர ரீதியிலான சோதனைகள் மற்றும் பாடுகளின் மூலம் அன்பு, சாந்தம் மற்றும் பொறுமையில் வளருவதற்கான படிப்பினைகளைப் படிப்படியாகக் கொடுக்கின்றது. வேதவார்த்தைகள் பற்றின அறிவினாலும், அதன் ஆவியினால் ஆட்கொள்ளப்படுவதினாலும் வளரும், தேவனுடைய கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள், தங்களுக்கு நன்மையாக இருக்கும் எனக் கர்த்தர் காணும் எந்தப் பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் கர்த்தர் மேல் விசுவாசம் வைப்பதிலும், கர்த்தருடைய ஞானத்தை ஒத்துக்கொள்வதிலும் சந்தோஷம் கொள்வார்கள். நமக்கான விசேஷித்த அனுகூலங்கள் ஆவிக்குரியவைகளேயாகும்; மேலும் இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கப்பர்நகூமிலோ அல்லது நமது கர்த்தருடைய ஊழிய நாட்கள் முழுவதிலுமோ ஆரம்பிக்காமல், அவர் பரத்திற்கு ஏறி, பிதாவினிடத்திலிருந்து தமது

பரிசை/பலனையும், தமது பின்னடியார்களை ஜெநிப்பித்தலின் ஆவியினால் புதிய சுபாவத்திற்குள் கொண்டுவருவதற்கான அதிகாரத்தையும் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளன்றே ஆரம்பித்தது.

நாம் அப்பங்களையும், மீன்களையும், சரீர பிரகாரமான சுகங்களையும் நாடாமல் இருப்போமாக. ஏனெனில், இவைகளையெல்லாம் புறஜாதிகளே நாடுகின்றார்கள்; மாறாக, நாம் ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும், பலத்தையும், வல்லமையையும், தெய்வீக ஞானம் மற்றும் அன்பு நமக்குக் கூட்டி வழங்கும் சகல பூமக்குரியவைகளையுமே நாடக்கடவோம்.

---

**R4979**

# “அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார்”

## மாற்கு 1:29-45

"அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்." மத்தேயு 8:17

இயேசு, கப்பர்நகூமின் ஜெப ஆலயத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், பரிசுத்தவானாகிய பேதுருவின் வீட்டிற்குப் போனார். அங்கே பரிசுத்த பேதுருவின் மாமி ஜுரத்தினால் படுத்துக்கிடந்தாள். அவளைக் கரம் பிடித்து எழுப்பி, அவளுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்தது என்பது கணநேர வேலையாக இருந்தது. இயேசுவைக்குறித்த புகழ் பரவிக்கொண்டிருந்தபடியால், அவருடைய சொஸ்தப்படுத்தும் வார்த்தைகளுக்கும், தொடுதுலுக்கும் வேண்டி மாலை வேளையில் திரளான ஜனங்கள் அவரை விடாப்பிடியுடன் தொடர்ந்துகொண்டு வந்தார்கள். "பலவிதமான வியாதிகளினாலும் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை" (மாற்கு 1:34).

ஆனால் இயேசுவோ தாம் செய்த காரியங்களை இன்னும் அதிகமாய்ச் செய்வதற்கும் (நோய் சொஸ்தப்படுத்துவதற்கும்), தமக்கு ஆதரவாக அந்த ஜனங்களுக்குள் ஏற்பட்ட தாக்கத்தை இன்னும் ஆழமாக்குவதற்கும் தக்கதாக அவர் அவ்விடத்தில் தங்கவில்லை. அவர் தேவனிடம் ஜெபம் பண்ணுவதற்கும், அவரோடு உறவு கொள்வதற்குமென அடுத்த நாளில், விடியும் முன்பதாகவே கப்பர்நகூமை விட்டு, வனாந்தரமான இடத்திற்குச் சென்றுவிட்டார். அவருடைய சீஷர் ஆகுவதற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டிருந்த பரிசுத்தவானாகிய பேதுருவும், மற்றவர்களும் அவரைத் தொடர்ந்துபோய், "அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம்பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி; கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்" (மாற்கு 1:37-39).

நோய்களைச் சொஸ்தப்படுத்தும் அற்புதமான வல்லமையைக் காட்டிலும் வேறு எதுவும் மனித மனதிற்கு அவ்வளவு கவர்ச்சியாக இருக்க முடியாது. யாரும் வியாதிகளில், வலிகளில், பாடுகளில் சந்தோஷமடைவதில்லை. ஒருவேளை சொஸ்தமாக்கப்படுதல்கள் சாத்தானுடைய வல்லமையினால் நடக்கிறது என்று காணப்பட்டால் கூட, ஜனங்கள் அவனுடைய வல்லமையினாலாகிலும் சொஸ்தமடைவதில் சந்தோஷமடைவார்கள். இன்றைய நாட்களிலும் கூடத் தவிக்கும் பாவப்பட்ட சிருஷ்டிகளுக்கு மருந்துகள் இல்லாமலேயே வியாதிகளிலிருந்து சரீர சுகம் அளிப்பதாகவும், இன்னுமாக இவைகள் தேவனுடைய வல்லமையினாலும், தயவினாலும் செய்யப்படுகின்றன எனவும் தேவனுடைய

வார்த்தைகளுக்குக் கொஞ்சமும் இசைவில்லாத அநேக தவறான உபதேசங்கள் வாக்களித்துக்கொண்டுக் காணப்படுவதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால் இப்படிச் சொஸ்தப்படுத்துகின்றவர்கள், பல்வேறு எதிர்மறையான உபதேசங்களைப் பற்றிக்கொண்டிருப்பதினால் இவர்கள் கொண்டுள்ள இந்த உபதேசங்கள் தேவனுடையது அல்ல என்பது தெரிகின்றது. நாம் புரிந்துக்கொண்டுள்ள வரையிலும், தற்காலத்தில் வியாதியஸ்தர்களை அற்புதமான விதத்தில் சொஸ்தப்படுத்துவதற்கெனத் தேவனுடைய வார்த்தைகள் அதிகாரம் கொடுக்கவில்லை என்றே வேதாகமம் போதிக்கின்றது. ஆதிசபையினருக்கு அருளப்பட்டதும் மற்றும் இயேசுவினாலும், அப்போஸ்தலதர்களினாலும் செயல்படுத்தப்பட்டதும் மற்றும் அப்போஸ்தலர்களுடன் நெருக்கமாய் இருந்தவர்களுக்கு அவர்கள் அருளினதுமாய் இருந்த வரங்கள் ஒழிந்துபோம் எனப் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட பரிசுத்தவானாகிய பவுல் தெரிவிக்கின்றார். அவ்வரங்கள் ஓய்ந்து போய்விட்டன என்று நாம் நம்புகின்றோம். அதாவது, தெய்வீகக் கிருபையின் வெளிப்படுத்தலின் வரிசையில் இடம்பெறும் அடுத்த விஷயமும், மேன்மையான விஷயமுமாகிய பரிசுத்த ஆவியின் கனிகளுக்கு இந்த வரங்கள் இடம் விட்டுக்கொடுத்துப் போய்விட்டன. பரிசுத்த ஆவியின் கனிகளாகிய சாந்தம், பொறுமை, நீடிய பொறுமை, அன்பு ஆகியவை தேவனுடைய கிருபைக்கும், முதற்பேறானவர்களாகிய சபையின் அங்கங்களுக்கும் உள்ள ஆதாரங்களாக இருக்கும்படிக்கு இந்த வரங்கள் இடம்கொடுத்துப் போய்விட்டன. ஆதிசபை நிறுவப்படுதற்கான நோக்கத்திற்கு என மாத்திரமே இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் அற்புதங்கள் செய்யப்பட்டன. இந்த யுகத்திலேயே சகல ஜனங்களும் வியாதியிலிருந்து சொஸ்தமாக்கப்பட வேண்டும் என்பதே தெய்வீகச் சித்தமாக இருக்கின்றது என எங்கும் குறிப்பிடப்படவில்லை.

மேசியாவின் மகிமையான இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு ஜனங்கள் அனைவரும் சொஸ்தமடையப்படும் காரியமானது, மேசியாவின் இராஜ்யத்திற்குரிய வேலையில் முக்கியமான அம்சமாகத்திகழும் என்பதில் ஐயமில்லை. மாம்சத்தின் குறைபாடுகள் மாத்திரம் சீர்ப்பொருத்தப்படுவதோடு அல்லாமல், சீர்த்திருத்தலின் வேலையானது படிப்படியாக மனுக்குலத்தை, பாவம், நோய் மற்றும் பூரணமற்ற நிலைகளிலிருந்து தூக்கிவிட்டு, முற்றும் முழுமையான பூரண நிலைக்குக்கொண்டு சேர்க்கும்; ஆனால் தெய்வீக ஏற்பாடுகளைத் துணிந்தும், வேண்டுமென்றும் எதிர்ப்பவர்கள் ஏற்றகாலத்தில் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள். பின்னர் வேதவாக்கியங்களில் குறிப்பிட்டிருக்கின்ற பிரகாரம் மீதியான மனுக்குலம் முழுவதும் பூரணத்தின் மகிமையான நிலையை அடைவார்கள், "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்" (வெளிப்படுத்தல் 21:4,5).

## "ஒளியின் தூதனுடைய வேடத்தில் சாத்தான்"

சாத்தானும், அவனுடைய ஊழியர்களாகிய விழுந்துபோன தூதர்கள் "ஒளியின் தூதனுடைய" வேஷத்தைத் தரிப்பித்துக் கொள்ள நாடுவார்கள் என்றும், இதன் வாயிலாக மனுக்குலத்தின் மீது அதிக ஆதிக்கம் செலுத்தத்தக்கதாகவும், இன்னுமாக தேவன் மற்றும் அவருடைய வார்த்தைகளின் மேல் வைக்கப்படும் உண்மையான விசுவாசத்திற்கு எதிரான தவறான உபதேசங்களை வெற்றிகரமாக மனுக்குலத்தின் மனதில் பதிய வைத்துவிடலாம் என்றும் நாடுவார்கள் எனப் பரிசுத்தவானாகிய பவுல் தெரிவித்துள்ளார். அப்போஸ்தலருடைய இந்த வார்த்தைகள் குறிப்பாக நம்முடைய நாட்களுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கின்றது என நாம் நம்புகின்றோம்; அநேக நல்ல ஜனங்களும், நல்ல மனசாட்சியுள்ள ஜனங்களும் இன்று வஞ்சிக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுவதை நம்மால் பார்க்கப்படுகின்றது; மேலும் இவர்களை வஞ்சிப்பதற்கு அற்புதவிதமான வியாதி சொஸ்தமாக்கப்படுதலையே, எதிராளியானவன் இரையாக/ஆயுதமாகப் பயன்படுத்துகின்றான். வஞ்சிப்பதற்கு இரையாக (தூண்டிலாக) பயன்படுத்தப்பட்ட பல்வேறு உபதேசங்களை இங்கு நாம் விவரிப்பது தேவையில்லை என நாம் கருதுகின்றோம்; மாறாக,

தற்காலத்தில், தேவனிடமிருந்து எவ்விதமாக அற்புதகரமான வியாதி சொஸ்தமாக்கப்படும் காரியங்களை நாம் எதிர்பார்க்கக்கூடாது என்பதற்கான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்களை முன்வைப்பதிலேயே நாம் திருப்திக்கொள்கின்றோம்.

## "உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றவர்"

தேவன் இஸ்ரயேலுடன், நியாயப்பிரமாண உடன்படிக்கைப் பண்ணுகையில், அவர்கள் நியாயப்பிரமாணத்தை மீறும்போது தண்டனையாக வியாதியையும், பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்போது ஆரோக்கியத்தையும் அருளுவதாக கூறியிருந்தது உண்மையே ஆகும். "உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றவர்" என்ற தீர்க்கதரிசியின் வார்த்தைகளானது, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்படும் இஸ்ரயேலர்களுக்குச் சரீர ரீதியாக பொருந்தக்கூடிய ஒன்றாகும். மேலும் புதுச் சிருஷ்டியாகிய சபைக்கு இது ஆவிக்குரிய ரீதியிலும் பொருந்தக்கூடியதாயும் உள்ளது.

ஆனால் புதுச் சிருஷ்டி சொஸ்தமாக்கப்படுவதும், அவனுடைய மாம்சம் சொஸ்தமடைவதும் வெவ்வேறான காரியங்களாகும். புதுச் சிருஷ்டியின் ஆத்தும வியாதிகளும், இருதயத்தின் பாரங்களும்/பிரச்சனைகளும், அவனுடைய மாம்சம் ஒருவேளை பாடுகள்/வலிகள் அனுபவித்தும், மரணத்திற்குள் கடந்து போய்க் கொண்டிருந்தாலுங்கூட நல்ல வைத்தியனால் சொஸ்தமாக்கப்படும். மாம்சத்தை முற்றிலும் ஒப்புக்கொடுப்பதும், அதைத் தேவனுக்குப் பிரியமான மற்றும், புத்தியுள்ள ஆராதனையாகக் காணப்படுகின்றதாக உள்ள ஜீவபலியாகவும் ஒப்புக்கொடுப்பதுமான நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நாம் புதுச் சிருஷ்டிகளாக, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் (ரோமர் 12:1).

இன்னுமாக, ஆதிமுதல் கர்த்தர் சபையைக் கையாண்ட விதத்திலும், எவ்விதமான வித்தியாசத்தையும் நம்மால் பார்க்க முடியவில்லை. இயேசுவினாலும், அப்போஸ்தலர்களாலும் சொஸ்தமாக்கப்பட்டவர்கள், "பாவிகள்" என்றுதான் அனைத்துப் பதிவுகளும் தெரிவிக்கின்றது. எந்த ஓர் அப்போஸ்தலரும் எவ்விதமான வியாதியிலிருந்தும் சொஸ்தமாக்கப்பட்டார் என்பதான எவ்விதமான சம்பவங்களுக்கான பதிவுகளும் இல்லை. பரிசுத்தவானாகிய பவுல் அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கியிருந்த போதிலும், எப்பாப்பிரோதீத்து வியாதியாய் மரணத்திற்குச் சமீபமாயிருந்த போது, இவரை அற்புதமான விதத்தில் சொஸ்தப்படுத்துவதற்கான எந்தப் பிரயாசமும் எடுக்கப்பட்டதாக பதிவுகள் காணப்படவில்லை. (பிலிப்பியர் 2:25-27).

அதுபோலவே, தீமோத்தேயுவின் விஷயத்திலுங்கூட, இவருடைய வியாதி நீங்கும்படிக்குப் பரிசுத்தவானாகிய பவுல் இவருக்குக் கைக்குட்டைகளையோ, துண்டுகளையோ அனுப்பி வைக்கவில்லை, அல்லது தான் அவருக்காக ஜெபம் பண்ணுவேன் என்றும் கூறவில்லை அல்லது தீமோத்தேயு தனது சொஸ்தமாக்கப்படுதலுக்காக ஜெபம் பண்ணும்படிக்கு ஆலோசனையை அவருக்குப் பவுல் கொடுக்கவுமில்லை அல்லது இவருக்காக ஜெபம் பண்ணும்படிக்குப் பரிசுத்தவானாகிய பவுல் மற்றவர்களிடத்தில் வேண்டிக்கொள்ளவுமில்லை. மாறாக இவருக்கு ஏற்படும் வயிற்றின் பெலவீனங்களுக்காக சில குறிப்பிட்ட மருந்துகள் எடுத்துக்கொள்ளும்படியாகவே, பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 5:23). தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் சரீர சொஸ்தப்படுதலுக்காக ஜெபம் பண்ணும் காரியமானது, அவர்கள் கர்த்தரிடம் மரண பரியந்தம் வரையிலும் விசேஷமாக அர்ப்பணித்தவைகளை மீண்டும் திருப்பி எடுத்துக்கொள்வதற்குச் சமமாகிவிடும். ஆனால் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஜனங்களில் உள்ள அநேகரின் விஷயத்தில், அவர்கள் வேண்டிக்கொள்ளாமலேயே, கர்த்தரின் ஊழியத்திற்கென, அவர்கள் ஊழியம் புரிவதற்கு அவசியமான பலத்தையும், வியக்கத்தக்க ஆரோக்கியத்தையும் அவர்களுக்கு அளிக்கும் விதத்தில் கர்த்தர் விசேஷமாகச் செயல்படும் விஷயங்களும் உண்டு. சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் மேசியாவின் இராஜ்யத்தின் கீழ் மனுக்குலம் மீது பொதுவாக வரவிருக்கும் ஆசீர்வாதங்களுக்கு முன்மாதிரியாகவே தேவன் அர்ப்பணம் பண்ணாத ஜனங்கள் மத்தியில் அற்புதங்கள் செய்தார்.

சகல வியாதிகளைச் சொஸ்தமாக்கப்படுவதற்கு வலியையும், துக்கத்தையும் புறம்பாக்கிப் போடுவதற்குமென இயேசுவும், அப்போஸ்தலர்களும் அற்புதங்களை நிகழ்த்தவில்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அற்புதங்கள், சுவிசேஷச் செய்தியின் மேல் கவனம் ஈர்க்கப்படுவதற்கு மாத்திரமே செய்யப்பட்டன. வெளிப்படுத்தல் 21:4-ஆம் வசனத்தின் விஷயங்கள் அனைத்திற்குமான காலம், மேசியாவின் ஆயிரம் வருஷம் அரசாட்சிக்கான காலமாக இருக்கும்.

கவனத்தை ஈர்க்கும் நோக்கத்திற்காக மாத்திரமே, இயேசு கப்பர்நகூமில் பல பலத்த கிரியைகளைச் செய்தார் என்று பார்க்கின்றோம். அநேக வியாதியஸ்தர்களை ஏமாற்றத்துடன் கப்பர்நகூமில் விட்டுவிட்டு, இயேசு வேறு பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் புறப்பட்டுப் போனார். இதுபோலவே சொஸ்தமாக்கப்படுவதற்கெனத் தண்ணீருக்குள் இறங்குவதற்கான வாய்ப்பிற்காக சீலோவாம் குளத்தண்டையில் காத்துக்கொண்டிருந்த ஜனங்கள் இருந்த குளத்தை இயேசு கடந்து போகையில் அக்கூட்டத்தில் ஒருவனைக் கவனித்து, “உன் படுக்கையை எடுத்துக்கொண்டு போ” என்று கூறினார் என நாம் வாசிக்கின்றோம் ( 1 யோவான் 5:1-9).

## “சொஸ்தமடைந்த குஷ்டரோகி, நன்றியுடன் இருந்தான்”

யூதர்கள் மத்தியில் குஷ்டரோகம், சொஸ்தப்படுத்த முடியாத வியாதியாகவும், பாவத்திற்கான நிழலாகவும் கருதப்பட்டது. இப்பாடத்தில் நாம் பார்க்கும் குஷ்டரோகியானவனுக்கு, இயேசுவின் வல்லமை மீது விசுவாசம் இருந்தபடியால், அவரிடத்தில் வந்து, முழங்கால் படியிட்டு, சொஸ்தமாக்கப்படுவதற்காக, சுத்திகரிக்கப்படுவதற்காக வேண்டிக்கொண்டான். இந்தக் குஷ்டரோகி, இயேசுவின் சீஷர்களில் ஒருவனாக இருந்த காரணத்தினாலோ அல்லது அவருடைய சீஷனாகுவேன் என்று இவன் வாக்களித்த காரணத்தினாலோ சொஸ்தப்படுத்தப்படாமல், மாறாக இந்தக் குஷ்டரோகி தனது விசுவாசத்தைக் காட்டினதற்காகவும், மேலும் இக்குஷ்டரோகியின் சம்பவமானது, இயேசு தெய்வீக வல்லமையைச் செயல்படுத்தினதற்கான சாட்சியாக ஆசாரியர்களுக்கு இருப்பதற்காகவுமே இவனுடைய விண்ணப்பத்திற்குப் பதில் கொடுக்கப்பட்டது. சுத்திகரிக்கப்பட்ட குஷ்டரோகியை, நியாயப்பிரமாணத்தின்படி, தேவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக பலிகளைச் செலுத்தவும், தான் சொஸ்தமாக்கப்பட்டதை ஆசாரியனிடத்தில் அறிவிக்கவும், நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியன் அவன் சொஸ்தமாகிவிட்டானா என்பதைச் சோதித்துப் பார்க்கவும் தக்கதாக இயேசு போகச் சொன்னார்.

இந்த மாபெரும் அற்புதத்தைக்குறித்து யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கர்த்தர் அக்குஷ்டரோகியை எச்சரித்தார். ஆனால் நன்றியின் நிமித்தம் அக்குஷ்டரோகி தன்னை அடக்கிக்கொள்ள முடியாமல், எல்லாவிடத்திலும் அதை அறிவித்தான். இதன் விளைவாக அவரால் பெரிய பட்டணங்களுக்குப் போக முடியவில்லை. காரணம் அவர் சொஸ்தமாக்கும்படிக்கு அவரிடத்தில் வியாதியஸ்தர்கள் வந்து குவிந்து விடுவார்கள் என்பதினாலேயாகும். ஆகவே அவர் சிறு பட்டணங்களுக்குக் கடந்து சென்றார் என்ற போதிலும், எல்லா திசைகளிலும் இருந்து சொஸ்தமடையத்தக்கதாக ஜனங்கள் அவரைத் தேடினார்கள்.

ஆனால் அந்தோ! இவர்கள், கர்த்தரின் அடிச்சுவடுகளில் நடக்கும் பின்னடியார்கள் ஆகுவதற்கும், இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரர்கள் ஆகுவதற்குமான, கர்த்தரால் விசேஷமாக அழைக்கப்படும் மாபெரும் சிலாக்கியத்தை ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களையே அதிகம் ஏற்றுக்கொண்டவர்களாய் இருந்தார்கள். அதாவது ஆதாமின் வீழ்ச்சியின் காரணமாக தண்டிக்கப்பட்டு, கல்வாரியின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்ட ஆதாமின் சந்ததியில் உள்ள ஒவ்வொருவரின் மேலும் மேசியாவின் இராஜ்யத்தினால் படிப்படியாக அருளப்படப்போகும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களையும், சொஸ்தமாக்குதல்களையுமே இந்த ஜனங்கள் நன்கு புரிந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

---

**R3728**

# “பாவமன்னிப்பு”
## மாற்கு 2:1-12

“பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு.” -(வசனம் 10)

நம்முடைய கடந்த பாடத்தின் சம்பவத்திற்குப் பின்னர், நமது கர்த்தர் கலிலேயாவிலுள்ள மற்றப் பட்டணங்களுக்குச் சென்று பிரசங்கம் பண்ணின பிற்பாடு மீண்டும் கப்பர்நகூமுக்கு வந்தார். கப்பர்நகூம் இப்பொழுது அவருடைய சொந்த ஊர் ஆகிவிட்டது (மத்தேயு 4:13). அவர் வீட்டில் இருக்கின்றார் என ஜனங்கள் கேள்விப்பட்டபோது, அவ்வீட்டிற்கு வந்து விட்டார்கள். அக்காலக்கட்டத்தில் நடுத்தர நிலையிலுள்ள ஜனங்களின் வீடு ஒரே ஒரு அறையைக் கொண்டதாகக் காணப்பட்டது; மேலும் அதன் அளவு 20x40 அடியாகவும் காணப்பட்டது; மேலும் கூரையானது கனமுள்ள மரத்தண்டுகளினால் அமைக்கப்பட்டிருந்தது; இன்னுமாக இம்மரத்தண்டுகளின் மேல் மரப்பலகைகள் அல்லது கற்பலகைகள் வைக்கப்பட்டு, அவைகள் முற்றிலும் மண் அல்லது புல் கலந்த புல்பத்தைகளால் பூசப்பட்டுக் காணப்படுகின்றது. வெளிபுறத்தில் வைக்கப்பட்டிருக்கும் படிக்கட்டுகளின் மூலம் இக்கூரை பகுதிக்கு ஏறிப்போய், கோடைக்காலங்களில் அதை உறங்குவதற்கான இடமாகப் பயன்படுத்தவது வழக்கமாயிருந்தது.

இயேசு ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசி என்றும், அவரிடத்தில் அற்புதமான வல்லமை இருக்கின்றது என்றுமான உண்மைகளினால் சமீப காலத்தில் உணர்வடைந்த ஜனங்களாகிய தமது ஊராருக்கு இயேசு பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார். இயேசு நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ள தேவனுடைய இராஜ்யம் குறித்தும், அது சமீபித்துள்ளது, அதாவது வாசலருகே வந்துவிட்டது என்பது குறித்தும், அந்தச் செய்தியையும் அதன் ஆசீர்வாதங்களை ஜனங்கள் ஏற்றுக்கொள்ள விருப்பமாயிருக்கிறார்களா என்றதான கேள்வி குறித்தும்தான் பிரசங்கித்து இருப்பார் என்பதில் ஐயமில்லை. இத்தருணத்தில் முற்றிலும் உதவியற்ற நிலையில் காணப்பட்ட ஒரு முடக்குவாதமுற்றவனை நான்கு பேர் படுக்கையில் எடுத்துக்கொண்டு, அவன் வியாதி சொஸ்தமடைய வேண்டும் என்ற நோக்கத்தில் வீட்டிற்கு வந்தார்கள். இவனுடைய இயலாமை மற்றும் உதவியற்ற நிலைமை காரணமாகவே, இயேசு கப்பர்நகூமிலுள்ள அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தின முந்தின தருணத்தில் இயேசுவினிடத்தில் வந்து சொஸ்தமடைய இவனால் முடியாமல் போயிற்று. இப்பொழுதோ இவன் நண்பர்களையும், உதவியாளர்களையும் பெற்றிருந்தபடியால், இவனால் இயேசு இருக்கும் இடத்திற்கு வந்த போதிலும், இவனால் அவர் அருகாமையில் போக முடியவில்லை, காரணம் ஜனங்கள் இவனுக்கு இடம் விட்டு ஒதுங்கி வழி கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

இவனை இவ்வளவு தூரம் அழைத்துக் கொண்டு வந்த இவனுடைய விசுவாசமானது, இயேசுவின் அருகாமையில் செல்வதற்கான வழி ஏதாவது கிடைக்கும் என்றும் அவனுக்குள் உறுதியாய்க் காணப்பட்டது. ஒருவழியாக இவன் வீட்டின் கூரைக்கு எடுத்துச்செல்லப்பட்டான், பின்னர் கூரையின் ஒரு பகுதியிலுள்ள மண் தோண்டியெடுக்கப்பட்டு, மரப்பலகைகள் அப்புறப்படுத்தப்பட்டு, இறுதியாக ஆங்காங்கே கிடைத்த கயிறுகளைப் பயன்படுத்தி, இவன் இயேசுவுக்கு அருகாமையில் அவருடைய பார்வை படத்தக்கதாக கீழே இறக்கிவிடப்பட்டான். கர்த்தருடைய சொஸ்தப்படுத்தும் வல்லமையின் மீது இவனுக்குப் பலமான விசுவாசம் காணப்பட்டதோடல்லாமல், தான் இவ்விதமாக முரட்டுத்தனமாக உள்ளே நுழைந்ததற்கு இயேசு கோபம் கொள்ளாமல், பொறுமையோடு காணப்பட்டு, தன்னுடைய தேவையின் ஆழத்தை உணர்ந்துக்கொள்வார் என இயேசுவினுடைய பரந்த மனப்பான்மை மற்றும் நற்குணங்களின் மீதும் இவனுக்குப் பலமான விசுவாசம் காணப்பட்டது.

இயேசுவும் அவர்கள்மேல் குற்றம்சாட்டுவதற்குப் பதிலாகவும், கைதுச் செய்வேன் என்று பயமுறுத்துவதற்குப் பதிலாகவும், அவர்களுடைய முரட்டுத்தனமான செய்கைகளுக்காக அவர்கள்மேல் குற்றம் சுமத்துவதற்குப் பதிலாகவும், அவர்களிடத்தில் வெளிப்பட்ட விசுவாசத்தில் மிகவும் உவகைக் கொண்டு அவனுடைய குறுக்கிடுதலைப்

பொருட்படுத்தாமல், தமது அழையாத விருந்தாளியாகிய அவனை மிகுந்த இரக்கத்துடன் வரவேற்று, "மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன" என்று கூறினார். ஒருவேளை நோயுற்ற அந்த இளைஞன், சொஸ்தமடைவதற்கான எதிர்ப்பார்ப்புக் கொண்டிருந்ததைக் காட்டிலும், அவன் அவனுடைய பாவங்களைக்குறித்தும், அப்பாவத்திற்கான மன்னிப்பைக்குறித்தும் அக்கறைச் செலுத்தாமல் இருந்ததுபோல் தோன்றுகின்றது; எது எப்படி இருப்பினும், இங்கு நமது கர்த்தர் பிரதானமானதும், முக்கியத்துவம் உள்ளதுமான விஷயத்தை முன்வைத்தார். நமது கர்த்தருடைய பிரதானமான வேலை, பாவம் சுமப்பதும், போதிப்பதுமேயாகும், மேலும் தற்காலத்தில் அவர் செய்து கொண்டிருக்கும் சொஸ்தப்படுத்தப்படும் வேலைகளானது, போதிக்கப்படும் பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவே நிகழ்த்தப்பட்டன.

## "ஞானமுள்ள மற்றும் ஞானமற்ற கவனிப்பு"

இயேசு பேசினவைகளையும், செய்கின்றவைகளையும் கவனிப்பதில் அங்கிருந்த ஜனங்கள் கவனமாயிருந்தார்கள். இந்த ஜனங்கள் மத்தியில், ஜனங்களால் அதிகாரமுடையவர்களாக பார்க்கப்படுகின்றவர்களும், நியாயப்பிரமாணம் குறித்து நன்கு அறிந்தவர்களுமாகிய வேதபாரகரில் சிலரும் காணப்பட்டனர். இவர்களும் மற்றவர்களைப் போன்று இயேசுவின் போதனைகள் மேலும், ஆச்சரியமான அற்புதங்கள் மேலும் கவரப்பட்டவர்களாக, இயேசுவின் வார்த்தைகளையும், கிரியைகளையும் கவனித்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது இவர்கள் அவரிடத்தில் ஒரு குற்றத்தைக் கண்டுபிடித்தார்கள்; அதாவது தேவனுக்கு மாத்திரமே உரியதாகக் காணப்படும் ஓர் அதிகாரத்தையும், ஒரு வல்லமையையும் இயேசு உரிமையின்றி தமக்கென எடுத்துக்கொண்ட குற்றத்தைப் பார்த்தனர். இந்த ஓர் எண்ணத்தைத் தூண்டும் விதமாகவே இயேசு இவ்வார்த்தைகளைச் சொல்லி இருக்க வேண்டும் என நாம் அனுமானிக்கின்றோம். அவர் அவர்களுடைய இருதயங்களை உணர்ந்துக்கொண்டவராக மாற்கு 2:8, 9 ஆகிய வசனத்தின் வார்த்தைகளைக் கூறினார். அதாவது "நீங்கள் நம்புவதற்கு எது எளிதாக இருக்கும்? என்னால் பாவங்களை மன்னிக்க முடியும் என்பது நம்புவதற்கு உங்களுக்கு எளிதாக இருக்கின்றதா? அல்லது இவன் பாவங்கள் காரணமாக இவனுக்கு உண்டானவற்றை என்னால் சொஸ்தப்படுத்த முடியும் என்பது உங்களுக்கு நம்புவதற்கு எளிதாக இருக்கின்றதா? மேலும் பாவங்களை மன்னிப்பதற்கான என்னுடைய அதிகாரத்தை நிரூபிப்பதற்காக நான் இந்தச் சொஸ்தமாக்குதலைச் செய்தேன். மேலும் நான் செய்யும் இக்காரியமானது நான் தேவதூஷணம் சொல்லவில்லை என்பதற்கும், எனக்குக் கொடுக்கப்படாத உரிமையை நான் எனக்கு உரிமையாக்கிக்கொள்ளவில்லை என்பதற்கும், நான் பிதாவின் விசேஷமான பிரதிநிதி என்று சொல்லுவதின் மூலம் நான் என்னையே பிதாவாக தகாதவிதமாய்க் காட்டிக்கொள்ளவில்லை என்பதற்கும் சாட்சியாக விளங்கும் என்ற விதத்தில் இயேசு கூறினார். பின்னர் முடக்குவாதத்துடன் காணப்பட்ட அந்த இளைஞனை நோக்கி "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்கு 2:11).

அந்த மனுஷன் எழுந்து நின்று, சற்று நேரத்திற்கு முன்னதாக ஜனங்களுக்கு முன்பாக, தான் கிடத்தப்பட்டிருந்த படுக்கையை எடுத்து சென்ற போது, ஜனங்கள் ஆச்சரியமடைந்து, தேவனை மகிமைப்படுத்தும் விதமாக, "நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை" என்றார்கள், மேலும் "அதிசயமான காரியங்களை இன்று கண்டோம்" என ஜனங்கள் கூறினதாக லூக்கா, தனது சுவிஷேசத்தில் பதிவு செய்துள்ளார் (லூக்கா 5:26). அவர்கள் மேசியா தமது இராஜ்யம் குறித்து விவரிப்பதையும், பாவங்களை மன்னிப்பதற்கான தமது வல்லமை குறித்து அறிவிப்பதையும், அந்த வல்லமையை ஓர் அற்புதத்தின் வாயிலாக விளக்குவதையும் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆகையால் தேவனுடைய இராஜ்யம் உடனடியாக ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும், அதன் விளைவாக முழு உலகத்தின் மீது தெய்வீகத் தயவு வந்தடைந்து, இனிமேல் எந்த நோயும், வலியும், சாவும், அழுகையும், பாவமும், மரணமும் இல்லை என்ற நிலை அடையும் வரையிலும் முழு உலகத்தின் மீது திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் பெருக வேண்டும் என்றும் அவர்கள் விரும்புவார்கள் அல்லவா. எனினும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் சீர்த்திருத்தலின் வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக ஒரு குறிப்பிட்ட வேலை நிறைவேற வேண்டியுள்ளது, அதாவது முதல் காரியமாகத் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய, சிறுமந்தை, அதாவது கிறிஸ்துவின் மணவாட்டி

தெரிந்துக்கொள்ளப்பட வேண்டும். தெய்வீக ஏற்பாட்டின் படியான இவர்களது எண்ணிக்கையை இஸ்ரயேலர்களால் நிரப்ப முடியவில்லை. ஆகவே கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்ட பிற்பாடு, தேவனுடைய தயவானது, தெரிந்துக்கொள்ளப்பட வேண்டியவர்களின் மீதமான எண்ணிக்கையை நிறைவு செய்யும் வண்ணமாக மாம்சீக இஸ்ரயேலர்களிடமிருந்து, புறஜாதிகளுக்குக் கடந்து போயிற்று.

இந்தத் தெரிந்துக்கொள்ளப்படுதல் காரியமானது கிட்டத்தட்ட முடியும் தருவாயில் வந்துள்ளது என்பது நமது எதிர்ப்பார்ப்பாயும், நமது நம்பிக்கையாயும் இருக்கின்றது. இன்னுமாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது சீக்கிரத்தில், கிறிஸ்துவினுடைய சபையை முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் கனம், மகிமை, அழியாமை மற்றும் இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்துவத்தை அடையச் செய்யும் என்பதும், அதன் பிற்பாடு பூமியின் குடிகள் அனைத்தின் மீதும் இராஜ்யத்தின் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் கடந்துவரும் என்பதும் நமது எதிர்ப்பார்ப்பாயும், நமது நம்பிக்கையாயும் இருக்கின்றது.

பாவமும், அதன் மன்னிப்புச் சார்ந்த விஷயங்களே நமது இந்தப் பாடத்தின் சாராம்சமாக இருக்கின்றபடியால், இப்பொழுது அதன்மேல் நமது கவனத்தை நாம் திருப்புவோமாக.

வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்ற பிரகாரம் பாவம், மனுக்குலம் அனைவரிலும் காணப்படுவது மாத்திரமல்லாமல், பாவத்தைப்பற்றின உள்ளுணர்வும் பரவலாகவே காணப்படுகின்றது. அநீதியான அனைத்தும் பாவம் என்றும், பூரணமற்ற அனைத்தும் பாவம் என்றும் வேதாகமம் முன்னிறுத்தும் காரியங்களை இன்று உலக ஜனங்களும் பொதுவாக உணர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றார்கள். நியாயப்பிரமாணத்தின் கீழ்க்காணப்படும் யூதர்களும் கூட, நியாயப்பிரமாணம் முன்வைக்கும் விஷயங்களைக் கைக்கொள்ள முடியாததை உணர்கையில், தாங்களும் பாவிகள் என்றும், நியாயப்பிரமாணத்தை மீறினதால் தாங்களும் பாவிகள், அக்கிரமக்காரர்கள் என்றும் நேர்மையாய் ஒத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குள் காணப்படுகின்றனர். இன்னும் மேலான தளத்திலுள்ள தேவனுடைய பிரமாணங்களைக் கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பதினால் இவர்கள், “உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு உள்ளத்தோடும், முழு இருதயத்தோடும், முழு ஆன்மாவோடும் அன்பு கூருவாயாக என்றும், நீ உன்னை நேசிப்பது போல உன் அயலானையும் நேசிப்பாயாக” என்றதுமான இவர்களுக்குரிய பூரண பிரமாணத்தோடு தங்களை ஒப்பிட்டுப்பார்க்கையில், இவர்களால் இன்னும் அதிகமாக மற்றவர்களைக் காட்டிலும், தங்கள் சொந்த பெலவீனங்களையும், குறைபாடுகளையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஆனால் யூதர்களுடைய பிரமாணமோ அல்லது கிறிஸ்தவர்களுடைய பிரமாணமோ, போதனைகளோ இல்லாதவர்களிடம் போதுமானளவு மனசாட்சியும், மற்றும் மனிதனுடைய சிருஷ்டிப்பின் போது அவனிடத்தில் எழுதப்பட்டு, வீழ்ச்சியின் 6000 வருடக்காலத்தின் விளைவாக அதிகம் தடயம் இல்லாமல் போயிருப்பினும், போதுமானளவுக்கு கொஞ்சம் ஆதி பிரமாணம் இன்னமும் காணப்படுகின்றது; மேலும் இதன் மூலம் அவர்கள் தங்களிடத்தில் பெலவீனங்கள்/குறைப்பாடுகள் இருக்கின்றது என உணர்ந்துக்கொள்கின்றனர்; மேலும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகின்ற பிரகாரமாக இவர்கள் தங்களுக்கு முன்பாக வைத்திருக்கும் நீதியின் கொள்கைகள் பொறுத்த விஷயத்தில் தாங்கள் பாவிகள் என்றே ஒப்புக்கொள்கின்றனர்; ஆனால் சிலசமயம் இவர்கள் தங்கள் தவறுகளுக்குச் சாக்குப்போக்குச் சொல்கிறவர்களாய் இருந்தாலும், மற்றப்படி இவர்கள் தங்கள் தவறான பாவ செயல்களைத் தெளிவாய் ஒப்புக்கொள்ளவே செய்கின்றனர்.

கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நமக்கான படிப்பினைகள், பெருகுகையில், பாவத்தைப் பற்றின நமது உணர்ந்துக்கொள்ளுதல் அதிகரிக்கும் விஷயம் குறிப்பிடத்தக்கதான காரியமாகும். அதாவது தீமை செய்ய நிறுத்தி, நன்மை செய்ய நாம் கற்றுக்கொள்ளும் அளவிற்கு ஏற்ப பாவத்தைப் பற்றின உணர்ந்துக்கொள்ளுதல் நமக்குள் அதிகரிக்கின்றது. இப்படியாக மிகுந்த வளர்ச்சியடைந்த பரிசுத்தவான், மிகவும் சீர்க்கேடான நிலையில் காணப்படும் பாவியைக் காட்டிலும் பாவத்தைக் குறித்த தெளிவான புரிந்துக்கொள்ளுதலும், பாவத்தின் மீது மிகுதியான வெறுப்பும் கொண்டிருப்பான். தேவன் பாவத்தை வெறுக்கின்றவராகவும், அதற்கு இசைவாக இருக்க முடியாதவராகவும் காணப்படுகின்றார். தேவன் பாவத்திற்கு எதிரான தமது ஆணையையும், தமது தீர்ப்பையும்,

தமது சட்டத்தையும் விதித்துள்ளார்; மேலும் பாவம் முற்றிலும் வேரோடே அழிக்கப்படும் என்றும், பாவத்தை விரும்பி, துணிகரமுடன் பாவத்தைச் செய்பவர்கள் பாவத்தின் கூட்டாளிகளாகக் கருதப்பட்டும், பாவத்தோடு அழிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்துள்ளார்.

பாவத்தைக்குறித்து நாம் அதிகமதிகமாய்ப் பார்க்கும்/தியானிக்கும்போது, அதன் மாசுபடுத்தும் தன்மை குறித்தும், அதன் அழிக்கும் தன்மைகள் குறித்தும் அதிகமதிகமாய் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது, இன்னுமாகப் பாவத்தினிமித்தம் மனுக்குலத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கின தெய்வீக நீதியைக்குறித்தும் நம்மால் அதிகமாக உணர்ந்துக்கொள்ள முடிகின்றது (ரோமர் 8:3). நீதியைக்குறித்தும், சத்தியம், பரிசுத்தம், தூய்மையைக்குறித்தும் நமது புரிந்துக்கொள்ளுதல்கள் மிகுந்த முன்னேற்றத்தில் காணப்படும்போது, பாவம் குறித்ததான தெய்வீகக் கண்ணோட்டத்தை நாமும் அதிகம் புரிந்துக்கொள்ளப்பட உதவப்படுவோம், மேலும் பாவம் மற்றும் பாவிகளுக்கு எதிரான கர்த்தரையும், அவரது தீர்ப்பையும் குறித்து, “கர்த்தாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள் என்று நாமும் சொல்லுகிறவர்களாய்க் காணப்படுவோம் (வெளிப்படுத்தல் 15:3).

## “தெய்வீக இரக்கத்தின் செயல்பாடு”

நம்முடைய இனத்திற்கு எதிராக மரணத் தண்டனை தீர்ப்பு வழங்கின தெய்வீக நீதியைக் குறித்ததான அதிகமான புரிந்துக்கொள்ளுதலுக்குள் நாம் வர வர, நம் மீதான தேவனுடைய அன்பு மற்றும் இரக்கம் குறித்ததான புரிந்துக்கொள்ளுதலுக்கும் நாம் அதிகமாய்க் கடந்து வருவோம், மேலும் ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது என்பதின் நிமித்தம் நாம் அதிகமதிகமாய் மகிழ்ச்சிக்குள்ளும் கடந்து வருகின்றோம். தேவனும் இப்படி ஒருவனும் கெட்டுப்போகக்கூடாது என்று சித்தம் கொண்டிருப்பதினால், அனைவரும் தம்மிடத்திற்குத் திரும்பி வந்து ஜீவன் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, அதாவது நித்தியஜீவன் பெற்றுக்கொள்ளத்தக்கதாக போதுமான அளவு ஆழமும், போதுமான அளவு உயரமும், போதுமான அளவு அகலமும் உள்ள ஏற்பாடுகளைச் செய்துள்ளார். இரக்கத்தினுடைய இந்த ஏற்பாடானது பாவத்தைக் கண்மூடிக் கொண்டு அனுமதித்துவிடுவதுமில்லை, அதேச்சமயம் பாவியும், இந்தப் பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு அனுமதிப்பதுமில்லை. மீட்கப்படுகிறவர்கள், தங்கள் விழுந்துபோன நிலைமையையும், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மரணத் தண்டனையில் விளங்கும் நீதியையும், தாங்கள் விடுவிக்கப்படும் காரியமானது தெய்வீக இரக்கத்தினாலே உண்டாகிறது என்பதையும் புரிந்துக்கொண்டவர்களாய் இருப்பது அவசியமாகும். இந்தப் பாடங்களை அவர்கள் (மனுக்குலம்) கற்றுக்கொள்ளாதது வரையிலும், இவர்களால் தேவனால் ஏற்பாடு செய்யப்பட்டவைகளை ஒருபோதும் புரிந்துக்கொள்ள முடியாது. தேவன் அவர்களுக்கு நித்தியஜீவன் கொடுப்பதற்காக முன்வைத்துள்ள நிபந்தனைகளையும் புரிந்துக்கொள்ள முடியாது; அதாவது தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டு, மன்னிப்பு அடைவதும், அவருக்கும், அவருடைய நீதியின் கொள்கைகளுக்கும் கீழ்ப்படிவதும் ஆகியவைகளே நித்தியஜீவன் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள் ஆகும்.

## “வேறே நாமம் கொடுக்கப்படவில்லை”

நமது இனத்தை மீட்பதற்காக, பரம பிதா ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார், மேலும் அதை அவர் தமது வார்த்தைகளில் வெளிப்படுத்தியுள்ளார்; மேலும் இத்திட்டத்தின் வாயிலாக அவர் அனைவருக்கும் இரக்கத்தை அருளுவார், எனினும் இயேசுவின் மூலம், அதாவது, “அவருடைய இரக்கத்தின் மீதான விசுவாசத்தின் மூலமே இந்த இரக்கம் வந்தது” என்று அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இப்படி ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில் வேறு வழியில்லை (ரோமர் 3:25). மேலும் இது பிதாவினிடத்தில் வருகின்ற ஒவ்வொருவரும், தான் ஒரு பாவி என்றும் தன்னுடைய சொந்த பாவத்திற்கான தண்டனையைத் தன்னால் நிவர்த்தி செய்துகொண்டு ஜீவிக்க முடியாது என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும்; இன்னுமாக தனக்குண்டான இரட்சிப்பானது கிறிஸ்துவின் வழியாகச் செயல்பட்ட தெய்வீக இரக்கத்தினாலேயே ஆகும் என்றும்

ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றது; மேலும் இது மீட்பராகிய இயேசு பாவிகளுக்கும், தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்து நியமிக்கும் நிபந்தனைகள் முழுமையாகப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் சம்மதிக்கபட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. யாரெல்லாம் உண்மையாக பாவத்திற்காக மனம் வருந்தி, தேவனிடத்திற்குத் திரும்பும்படிக்குக் கிறிஸ்து அளிக்கும் உதவிகள், போதனைகள் மற்றும் வழிநடத்துதலிகளின் கீழ்த் தங்களால் முடிந்த மட்டும் பிரயாசம் எடுக்கின்றார்களோ, அவர்கள் எல்லோரையும் பூரண நிலைமைக்கும், தேவனுடன் முழுமையான உறவு நிலைமைக்கும் கொண்டு வருவதற்கு உதவி செய்வதாக கிறிஸ்து முன்மொழிகின்றார். இப்படிப்பட்டவர்களுக்கு மாத்திரமே, அதாவது உண்மையாய்ப் பாவத்திற்காக மனம் வருந்துகிறவர்களுக்கும், அவருடைய உதவி, வழிநடத்துதல் மற்றும் போதனைகளின் கீழ்க் காணப்பட்டு முடிந்தமட்டும் பிரயாசம் எடுப்பவர்களுக்கும் மாத்திரமே, பூரண நிலைமை அருளப்படும். இப்படிப்பட்டப்பட்டவர்கள் மாத்திரமே, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கி கொண்டவர் மூலம் உண்டாகும் மீட்பின் மூலமாகவும், அவருடைய உதவியின் மூலமாகவும் நித்தியஜீவனை அடைவார்கள்.

## “பாவங்கள் நிவர்த்திச்செய்யப்படுதல்/போக்கப்படுதல்”

பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படுகின்ற விஷயத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிறைவேறும் என்று வேத வாக்கியம் நமக்கு நிச்சயம் அளிக்கும் காரியங்களுக்கும், தற்காலத்தில் தேவையான விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் காட்டும் அனைவராலும், தற்காலத்தில் அனுபவிக்கப்படும் பாவங்கள் மன்னிக்கப்படும் காரியங்களுக்கும் இடையில் மாபெரும் வித்தியாசம் இருப்பதை இங்குக் காட்டுவது நலமாயிருக்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது சம்பவிக்கும் பாவ நிவர்த்தியானது, முதலாவது சபைக்குச் செய்யப்படும் காரியமாக இருக்கின்றது; அதாவது சபை முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய மகிமையான ஆசீர்வாதங்களில் பங்கடையும் சமயம் முதல், அவர்களிடத்தில் பாவத்திற்கான எவ்விதமான சுவடுகளும் இல்லாமல் ஆக்கப்படும். தற்காலத்தில் சபை ஜனங்கள் உண்மையில் பூரணமற்றவர்களாகவும், குறைபாடு உடையவர்களாகவும், பாவத்தின் தடயங்கள் உள்ளவர்களாகவுந்தான் காணப்படுகின்றனர்; மேலும் இவர்களுக்கு இலவசமாய் அருளப்பட்டுள்ள கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால், இவர்கள் தொடர்ந்து மூடப்பட்டுக் காணப்பட வேண்டிய அவசியத்திலும் காணப்படுகின்றார்கள். ஆனால் இவர்களுக்கு உயிர்த்தெழுதலின் மாற்றம் சம்பவிக்கும்போது, பாவத்தின் சகல கறைகளும் இவர்களிடமிருந்து போய்விடும். அப்போஸ்தலரால் விவரிக்கப்பட்டுள்ளது போன்று கனவீனத்தில் விதைக்கப்பட்டது, மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டது, பலமுள்ளதாய் எழுந்திருக்கும், ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரமாய் எழுந்திருக்கும். பிற்பாடு அவர்களுக்கு நீதி தரிப்பிக்கப்பட்டதாக எண்ணப்பட வேண்டியதில்லை, அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே முற்றிலும் பூரணமுள்ளவர்களாகவும், முற்றிலும் நீதியுள்ளவர்களாகவும் காணப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:42-44).

உலகத்தின் பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படும் காரியமானது உடனடியாகவோ, ஒரு நொடி பொழுதிலோ, கண் இமைக்கும் நேரத்திலோ நடக்காமல், படிப்படியாக ஆயிரம் வருஷம் யுகம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும் காரியமாகும். ஒவ்வொரு மனிதனும் பாவத்தை உணர்ந்து, இராஜ்யத்தின் சட்டங்களுக்கு உட்பட்ட நிலையில் செயல்படும்போதும், நீதியின் வழியிலும், பரிசுத்தத்தின் பெரும்பாதையான வழியிலும் அவன் ஏறெடுக்கும் பிரயாசங்களுக்கான பலனாக, அவன் பெலன் அடைவதில் வளர்வதை உணர்ந்துக்கொள்ள முடியும். நாட்கள் செல்ல செல்ல, வருடங்கள் செல்ல செல்ல, அவன் மன ரீதியிலான, ஒழுக்க ரீதியிலான மற்றும் சரீர ரீதியிலான வளர்ச்சியிலும் அதிகரிப்பான்; ஆனால் இத்தகைய இக்காலக்கட்டத்தின் திரளான வாய்ப்புகள் இருந்தபோதிலும், வளர்ச்சியடைய தவறிப் போகிறவர்கள் மீட்பரின் இராஜ்யம் மூலமாக நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான மீதமான எல்லாவித வாய்ப்புகள் பெறுவதற்கும் பாத்திரமற்றவர்கள் என்று கருதப்பட்டு, இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள். இராஜ்யத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களுடைய பாவங்கள் முற்றிலும் நிவர்த்திச் செய்யப்பட்டு காணப்படுகின்றவர்கள், ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில் முழுமையான மனம் மற்றும் சரீரத்தின் பூரண நிலைமையை அடைந்து, வெளிப்படுத்தல் 20:10-ஆம் வசனத்தில்

குறிப்பிட்டிருக்கிறபடி நீதியின் கொள்கைகளுக்கு இவர்களுடைய இருதயங்கள் உண்மையாய் இருக்கின்றதா எனச் சோதிக்கப்படுவார்கள். இந்த இறுதி பரீட்சையானது மனுக்குலத்தின் குடும்பத்தின் மீது பொதுவாக வரக்கூடிய ஒன்றாகக் காணப்படும்; மேலும் இந்த இறுதி பரீட்சையானது, ஏதேனில் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சைக்குப் பொருந்தக் கூடியதாய் இருக்கும்; இரண்டு பரீட்சைக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவெனில், இந்த இறுதி பரீட்சையானது இவர்கள் பாவம் மற்றும் வீழ்ச்சியின் அனுபவத்திற்குள் கடந்து சென்று, இவைகளிலிருந்து விடுதலையடைந்து மற்றும் நீதியின் அரசாட்சிக்குரிய அனுபவத்திற்குள் கடந்து சென்ற பிற்பாடு வருகின்றது. ஆகவே இவர்கள் இந்தப் பரீட்சையில் திருப்திகரமாக வெற்றிக்கொள்ளத்தக்கதான சரியான நிலையில் காணப்படுவார்கள்; ஆனால் இவர்கள் தோற்பார்களானால் இராஜ்யத்தில் இவர்களுக்கு அருளப்பட்ட அனுகூலமான சூழ்நிலைகளின் கீழ் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமாய் இருக்கும் நிபந்தனைகளுக்கு, அதாவது இவர்களுடைய இருதயம், தேவனுடன் இசைவுக்குள் வரவில்லை என்பதை நிரூபித்துக்காட்டுகின்றது. இப்படிப்பட்டவர்கள் சாத்தானோடு சேர்த்து அழிக்கப்படுவார்கள், ஏனெனில் இவர்களிடம் சாத்தானுடைய பண்புகளில் சில காணப்படுகின்றன.

## “பாவங்கள் மன்னிக்கப்படுதல்” (Forgiveness of Sins)

யாருக்கு விரோதமாய் மீறுதல் செய்யப்பட்டதோ, அவரே பாவத்தை மன்னிக்க அதிகாரமுடையவர் என்பதுதான் நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கும் சம்பவத்தில், வேதபாரகர்களுடைய எண்ணமாகயிருந்தது. ஒருவேளை “A” என்ற நபர், “B” என்ற நபருக்கு விரோதமாகப் பாவங்கள் செய்வரானால், அவரை மன்னிக்கும் அதிகாரம் “C” என்ற (மூன்றாம்) நபருக்கு இல்லை. “B” என்ற நபருக்கு மாத்திரமே கோபம் அடைவதற்கான உரிமையும் இருக்கின்றது, மேலும் இவருக்கே மன்னிக்கும் அதிகாரமும் இருக்கின்றது. வேதபாரகர்களின் எண்ணம்/கணிப்புச் சரியாகதான் இருந்துள்ளது. நாமும் கூடச் சில சமயங்களில் ஒருவர் இன்னொருவருடைய சுயாதீனம் மற்றும் உரிமைகளில் குறுக்கிட்டு, ஒருவருக்கொருவர் விரோதமாகப் பாவம் செய்துவிடுகின்றோம், மேலும் நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டிய அவசியமும் உள்ளது, எனினும் செய்யப்படும் சகல பாவங்களும் பிரதானமாகத் தேவனுக்கு எதிராகவே செய்யப்படுகின்றது. பாவங்கள் என்பது அவருடைய நீதியின் பிரமாணங்களை மீறுவதாகும். அனைத்து அநீதியான காரியங்களும் பாவமாகும், அதாவது அநீதியான அனைத்தும் தேவனுக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் எதிரான பாவமாகும். தேவன் தம்முடைய சிருஷ்டிகள் நியாயம் தீர்க்கப்படத்தக்கதாகவும், சரி மற்றும் தவற்றிற்கான நிலைப்பாட்டை அவரே நிர்ணயித்துள்ளார்; மேலும் அவரே நீதிபதியாகவும் இருக்கின்றார்.

## “எப்படி, இயேசுவினால் பாவங்களை மன்னிக்க முடியும்?”

பாவம் மற்றும் அதற்குரிய தண்டனைக்குத் தொடர்புடைய விஷயங்களில், இயேசுவால் அல்லது இயேசுவின் மூலம் பரமபிதா பாவங்களை மன்னிக்க முடியும் என்ற விதத்தில் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவன் நிர்ணயித்துள்ளார் என்பதே நமது பதிலாகும். தெய்வீக ஏற்பாடானது மிகவும் திட்டவட்டமாய்/ மாற்ற முடியாததாய் இருந்தபடியால், பாவங்களை மன்னிப்பதற்கான அதிகாரம் பிதாவினுடைய கரங்களிலிருந்து, பிதாவே எடுத்து போட்டுவிட்டார்; ஏனெனில் ஆதாம் மற்றும் அவர் சந்ததியாரின் விஷயத்தில் அவர்களுடைய பாவத்திற்கு எதிரான, உறுதியான, நிச்சயமான மாற்ற முடியாத தண்டனையைப் பிதா தாமே நிர்ணயித்து விட்டார். பிதா வேறுவிதமாக செய்திருந்திருக்கலாம், அதாவது விழுந்துபோன தூதர்களைக் கையாண்டது போன்று, மனுக்குலத்திற்கும் செய்திருக்கலாம், அதாவது நேரடியாக அவர்களுக்கு மரணத் தீர்ப்பை அளிப்பதற்குப் பதிலாக அவர்களுக்குச் சிலவிதமான கட்டுப்பாடுகளை வைத்திருந்திருக்கலாம். ஆனால் ஒருமுறை மரணத் தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டால், அதை மாற்றவோ அல்லது இல்லாமல் ஆக்கிப்போடவோ முடியாது. தேவனாலும் கூடத் தம்முடைய மாற்ற முடியாத பிரமாணங்களை மாற்றிப்போட முடியாது.

ஆனாலும் கூட மனுக்குலத்திற்கு எதிரான இந்த மாற்றமுடியாத தீர்ப்பானது, சிருஷ்டிகரால் எப்படி ஏற்றக் காலத்தில் தள்ளுபடிச் செய்யப்படும், அதாவது தீர்ப்பைப்

பின்வாங்கிக் கொள்ளாமல், மாறாக தள்ளுபடிச் செய்வதற்குத் தேவையானவற்றை ஒரு மீட்பர் மூலம் எப்படிச் சந்திக்கலாம் என்ற முழு அறிவுடனே சிருஷ்டிகரால் அளிக்கப்பட்டது. ஆகவேதான் நமது கர்த்தராகிய இயேசு உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக தெய்வீகத் திட்டத்தில் காணப்படுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், மீட்பை அவசியமாக்கிய மரணத் தண்டனையைத் தேவன் அளிப்பதற்கு முன்னதாகவே, தேவன் தமது மனதில் மீட்பின் திட்டத்தைக் கொண்டிருந்தார்.

## "ஆதியில் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீகக் கிருபை"

இயேசு உலகத்திற்கு வந்து, ஈடுபலி விலைக்கிரயம் கொடுப்பதற்கு முன்னதாகவே, தேவன் தமது கிருபை/இரக்கத்தை ஆபிரகாமிடத்திலும், மற்றவர்களிடத்திலும் வெளிப்படுத்தியுள்ளாரே என நீங்கள் கேட்கலாம். தெய்வீகக் கிருபை/இரக்கம் வெளிப்பட்டது உண்மைதான்; ஆனால் ஏற்றகாலத்தில் பாவிகளுக்கான ஈடுபலி கொடுக்கப்படும் என்று இருக்கும் தெய்வீக நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்த வெளிப்படுத்தல் காணப்பட்டது என்பதே நமது பதிலாகும். ஆனாலும் அப்பொழுது வெளிப்பட்ட இரக்கமானது, பாவ நிவர்த்திக்குரியதாய் இருக்கவில்லை. ஒருபோதும் இல்லை, பாவ நிவர்த்திச் செய்யும் காரியமானது ஈடுபலி செலுத்தப்படுவதற்கு முன்பு செய்யப்பட முடியாது; மேலும் பாவ நிவர்த்தியானது, மகிமையடைந்த மீட்பர் மூலமாகவே தேவனால் செய்யப்படும். முற்பிதாக்கள் தேவன் மீது வைத்த விசுவாசத்திற்கு ஏற்ப, அவர்கள் அனைவருக்கும் இப்படிப்பட்ட தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்வது நியாயமானதேயாகும். மேலும் மீட்பர் மூலம் தேவன் தாம் அருளவேண்டும் என நோக்கம் கொண்டிருக்கும் காரியங்கள் **குறித்த வெளிப்படுத்தல்கள்** மாத்திரமே இவர்களுக்கு அருளக்கூடிய இரக்கமாக உள்ளது எனும் காரியம் நியாயமானதாகவே தோன்றுகின்றது.

## "மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பாவம்"

இஸ்ரயேல் தேசத்தோடு தேவன் ஏற்படுத்தி இருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ், அவ்வுடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இருந்த மோசே மூலம் ஒரு குறிப்பிட்ட விதத்திலும், அளவிலும் பாவ மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் காணப்பட்டது. வருடந்தோறும் செலுத்தப்பட்ட இந்தப் பாவ நிவாரண பலிக்கான ஏற்பாடுகள், புதிய உடன்படிக்கையின் கீழ், மத்தியஸ்தராகக் காணப்படப் போகின்ற கிறிஸ்துவின் மூலம் வரப்போகின்ற ஆசீர்வாதங்களுக்கு நிழலாய் அமைகின்றன. முற்பிதாக்கள் போன்று இஸ்ரயேலர்களும் விசுவாசத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட அளவில் தேவனுடைய இரக்கத்தை அனுபவித்தார்கள், ஆனால் முற்பிதாக்கள் போல் இஸ்ரயேலர்களுக்கும் பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படவில்லை. மாறாக அப்போஸ்தலர் சுட்டிக் காட்டுகின்ற பிரகாரமாக இஸ்ரயேலர்களின் பலிகளும், பாவ நிவாரண பலிகளும் உண்மையில் ஒருபோதும் அவர்களுடைய பாவங்களை எடுத்துப்போடாமல்/ நிவர்த்திச் செய்யாமல், பாவங்களை உண்மையில் தள்ளும்படிச் செய்து, பின்னர் இறுதியில் நிவர்த்திச் செய்துவிடும் மேலான பலிகளுக்குரிய நிழலாய் மாத்திரம் இருந்தன. (எபிரெயர் 10:1-4; அப்போஸ்தலர் 3:19).

## "இயேசுவின் மன்னிப்பினுடைய அளவு"

ஒருவேளை பரம பிதா தம்முடைய சொந்த பிரமாணங்களினால் கட்டப்பட்டவராகக் காணப்பட்டு, ஈடுபலி விலைக்கிரயம் செலுத்தப்படாமல் பாவங்களை நிவர்த்திச் செய்ய முடியாது என்றால், நமது கர்த்தரால் இப்படிச் செய்ய முடியுமா? இந்த விஷயத்தில், பிதாவைக் காட்டிலும், இயேசுவுக்கு மிகுந்த அதிகாரம் உள்ளதா? இல்லை என்பதே நமது பதிலாகும். இயேசு முடக்குவாதமுள்ள மனுஷனிடத்தில் பேசின வார்த்தைகள், அம்மனுஷனுடைய பாவங்களை நிவர்த்திச் செய்து விடுவது எனும் அர்த்தத்தில் பேசப்படாமல், முற்காலங்களில் பிதா ஏற்கெனவே ஆபிரகாம் மற்றும் மற்றவர்களுக்கு அருளின பாவங்களுக்கான மன்னிப்பையே அருளினார். "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டுவிட்டன" என இயேசு கூறினபோதும், அம்மனுஷன் இன்னமும் உதவியற்றவனாகவே கிடந்தான். அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டாலும், அவனுடைய பாவங்கள் நிவர்த்திச் செய்யப்படவில்லை. அவன் இன்னமும் பாவத்தின் கொடூரமான தாக்கங்களுக்குரிய

உதாரணமாகவே படுத்துக் கிடந்தான். இதற்குப் பிற்பாடு, நமது கர்த்தர் அம்மனிதனிடம், "எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு போ" எனக் கூறின வார்த்தைகள் சீர்த்திருத்தலின் தன்மை கொண்டது போன்று காணப்பட்டாலும், அது அம்மனுஷனுடைய பாவங்களை நிவர்த்திச் செய்துவிடுவதாக இருக்கவில்லை. அவனுடைய பாவங்கள் முற்றிலும் நிவர்த்திச் செய்யப்படும்/போக்கப்பட்டுவிடும் என்று சொல்லப்பட்டிருக்குமாயின், அது அவனுக்கு விழுகையின் நிமித்தம் உண்டான சகல பூரணமற்ற தன்மைகளிலிருந்தும் அவன் சீர்த்தூக்கப்பட்டு, சரீரத்திலும், மனதிலும், ஒழுக்கத்திலும் பூரண மனிதனுக்குரிய பூரண நிலைக்கு அவன் உயர்த்தப்படுவதைக் குறிக்கும். ஆனால் இப்படியான காரியங்கள் எதையும் இயேசு அம்மனுஷனுக்குச் செய்யவில்லை; மாறாக இயேசு அம்மனுஷனுக்கு இருந்த விசேஷமான பிரச்சனையை (முடக்குவாதத்தை) மாத்திரமே சொஸ்தப்படுத்தினார்.

இன்னுமாக கர்த்தர் இவ்வார்த்தைகளைப் பேசுகையில், அவர் ஆதி பாவத்தையோ, அதன் மரணத் தண்டனையையோ குறிப்பிடவில்லை. அவர் அவனுடைய பாவங்களைக்குறித்துக் குறிப்பிடுகையில் அதனை பன்மையில், அதாவது பாவங்கள் (sins) எனக் குறிப்பிட்டார், அதாவது அம்மனுஷனுக்குப் பிதாவாகிய ஆதாமின் பாவம் மற்றும் ஆதாமின் தண்டனையிலிருந்து வரும் பங்கோடு சேர்ந்து, அவனுடைய சொந்த பாவமும் காணப்படுகின்றது. அந்த மனுஷன் மோசேயின் உடன்படிக்கையின் கீழுள்ள ஒரு யூதனாக இருந்தான். ஆதி பாவத்தில் இம்மனுஷனுக்கு இருக்கும் பங்கிற்கு, அனைத்து யூதர்களுடன் இவனுக்கும் சேர்ந்து வருடந்தோறும் பலிச் செலுத்தப்பட்டு வருகின்றது; மேலும் செலுத்தப்படும் பலியின் நிமித்தம் உண்டாகும் ஒப்புரவாகுதலின் நிமித்தம், யூதனாகிய அவன், கர்த்தருக்கு முன்பு நிற்க முடிந்தவனானான். யூத ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலுடன் காணப்படும் வரையிலும் அவர்கள் வியாதி முதலியவைகளிலிருந்து விடுதலையாய் இருப்பார்களெனக் கர்த்தர் இந்த ஜனங்களோடு பண்ணின உடன்படிக்கையின் ஒப்பந்தத்திற்கும் ஏற்புடையவனாக/பாத்திரவானாக இருப்பான். ஆகவே ஒவ்வொரு யூதனுடைய விஷயத்திலும், அவனுக்கு வியாதிகள் காணப்படுமாயின் அது அவனுடைய தனிப்பட்ட குற்றங்கள் மற்றும் தனிப்பட்ட மீறுதல்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது, ஏனெனில் கர்த்தரும் வேறு எந்த ஜனங்கள் மற்றும் ஜாதியாரிடத்திலும் உடன்படிக்கைப் பண்ணாத விதத்தில் இவர்களுடன் பண்ணியுள்ளார்.

## “நமது கர்த்தர் ஏற்கெனவே பலியாக்கப்பட்டார்”

ஆதாமின் பாவம் மற்றும் அதற்கான தண்டனைக்குறித்த விஷயத்தில் நமது கர்த்தர் சமாதானம் மற்றும் மன்னிப்பு அளிப்பதற்கும், இறுதியில் பாவங்கள் நிவர்த்தியாக்கப்படும்/போக்கப்படும் என்பது குறித்த வாக்குறுதி அளிப்பதற்கும் உரிமை கொண்டுள்ளார், ஏனெனில் அவர் நிறைவேற்றும்படிக்கு வந்திருந்ததற்கான வேலையை அவர் இன்னமும் முடிக்கவில்லை என்றாலும், அவர் இன்னமும் ஈடுபலியை நிறைவேற்றவில்லை என்றாலும், அவர் அதனை ஆரம்பித்துள்ளார். அவருடைய ஞானஸ்நானத்தின் போது, அவர் தமது ஜீவியத்தை அர்ப்பணித்துள்ளார், தமது ஜீவனை ஒப்புக்கொடுத்துள்ளார், பலியாக அதனை பிதாவினிடத்தில் ஒப்புவித்தார், மேலும் ஒருவிதத்தில் பிதாவும் அதனை ஏற்றுக்கொண்டு, இந்த ஒப்பந்தத்தை (Contract) தாம் ஏற்றுக்கொண்டுள்ளதை வெளிப்படுத்தும் பொருட்டு, நமது கர்த்தர் தமது உயிர்த்தெழுதலின்போது பெற்றுக்கொண்ட மகிமையான ஆசீர்வாதங்களுக்குரிய முதல் கனியாகிய பரிசுத்த ஆவியை நமது கர்த்தருக்குக் கொடுத்தார்.

இந்தப் பலியை அவர் ஏற்கெனவே பண்ணியிருந்தாலும், அதனை முடிவு பரியந்தம் நிறைவேற்ற கர்த்தர் முழு நோக்கம் கொண்டிருந்ததாலுமே நமது கர்த்தர் தம்மை விசுவாசிப்பவர்களிடம், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றும், "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" என்றும் உள்ள வார்த்தைகளைக் கூறுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருந்தார் (யோவான் 3:36,6:54); அதாவது யார் ஒருவன் என்மேல் விசுவாசம் வைத்து, என்னுடைய உண்மையும், நேர்மையும் உள்ள பின்னடியான் ஆகின்றானோ, அவன் புதிய ஜீவனுக்குள் தனக்குள்ளாக ஜெநிப்பிக்கப்பட்டுவிட்டதாக எண்ணக்கடவன்; இன்னுமாக ஆயிரம் வருஷம் அரசாட்சியின் விஷயத்தில் அவன் முதலாம்

உயிர்த்தெழுதலில் பங்கடையத்தக்கதாகவும், அதன் பூரணமான சூழ்நிலைகளில் நித்தியத்திற்கான ஜீவனை அடையத்தக்கதாகவும் நான் அதுவரையிலும் அவனை நடத்தி, அவனுக்கு உதவி செய்வேன் என்றும் அவன் அறியக்கடவன் என்ற விதத்தில் இயேசு அவ்வசனத்தில் குறிப்பிடுகின்றார்.

சுவிஷேச யுகம் முழுவதும் சபை, "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கின்றவர்களாய்" இருக்கின்றார்கள். விசுவாசத்தின் மூலமாக நாம் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளதை உணர்கின்றோம், மேலும் விசுவாசத்தின் மூலமாக நாம் முதலாம் உயிர்த்தெழுதல் அடைவோம் என்றும், நமது ஆண்டவரின் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் நாம் பங்கடைவோம் என்றும் எதிர்க்காலத்தை நோக்கிப் பார்க்கின்றோம் மற்றும் நம்பிக்கையும் கொண்டிருக்கின்றோம். மேலும் விசுவாசத்தின் மூலம் நாம் திருப்தி அடைந்து, நம்பிக்கையில் இளைப்பாறுகின்றோம். ஆம், நாம் அவருடைய சாயலில் விழிக்கும்போது உண்மையாகத் திருப்தியடைவோம் (சங்கீதம் 17:15).

---

**R2590**

# “இயேசு அவனை நோக்கி, எனக்குப் பின்சென்று வா என்றார்”

## மாற்கு 2:13-22

நமது கர்த்தர் பிரசங்கித்தும், நோய்களையும் சொஸ்தப்படுத்தியும் கொண்டிருந்த கப்பர்நகூம் பட்டணமானது, கலிலேயா கடலுக்கு அருகாமையில் காணப்பட்டது. இப்பட்டணமானது, வாணிபத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது, விசேஷமாக மீன் தொழிலுக்குப் பேர்ப் பெற்றதாய்க் காணப்பட்டது. மேலும் இப்பட்டணத்தில் காணப்பட்ட இந்தக் கடற்கரையும் பேர்ப் பெற்றதாய் இருந்தது. நமது கர்த்தர் இக்கடற்கரையின் வழியாகத்தான் நடந்து போவதும், தாம் பேசுவதைக் கேட்கும்படிக்குக் குவிந்துக் காணப்படும் ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்படி இக்கடற்கரையில் இங்கும், அங்குமாய் உட்காருவதும் வழக்கமாய்க் காணப்பட்டது. இப்படியாக அவர் பிரயாணித்துக் கொண்டிருக்கும் போதுதான், கர்த்தர் லேவி என்று அழைக்கப்படும் மத்தேயுவைக் கடந்து போனார்; இந்த மத்தேயு, ரோம அரசாங்கத்திற்குரிய சுங்கவரி துறையில் பிரதிநிதியாக இருந்தார், அதாவது வருவாய்த்துறை அதிகாரியாக மத்தேயு பணியாற்றிக் கொண்டிருந்தார்; இவரை நோக்கி, கர்த்தர், "எனக்குப் பின்சென்று வா" என்று அழைக்க, இவரும் சீஷன் ஆகுவதற்கான அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தார்.

இச்சம்பவம் தொடர்பான பதிவுகள் சுருக்கமாக இருப்பதினால், சிலர் இந்த லேவி (மத்தேயு) இச்சம்பவத்திற்கு முன்பு வரையிலும் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டதே இல்லை என்றும், நமது கர்த்தர், மத்தேயுவைக் கடந்து போனபோது, அவர், மத்தேயுவின் மேல் ஏதோ ஒருவிதமான மந்திரத்தைப் பயன்படுத்தினார் என்றும், இதன் காரணமாகவே மத்தேயு, புத்தித் திடீரென மழுங்கி போனது போன்று, திடீரென தனது தொழிலை விட்டு விட்டுப் போய்விட்டார் என்றும் தவறான கருத்துகள் கொண்டுள்ளனர். கர்த்தரைப் பற்றியும், அவருடைய சீஷர்கள் பற்றியும், இப்பகுதியில் இருந்தவர்கள் வருடக் கணக்காக நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; அநேகமாக மத்தேயு நமது கர்த்தரை அறிந்துக் கொண்டிருந்தது மாத்திரமல்லாமல், அவர்தான் மேசியா என்று விசுவாசமும் வைத்திருக்க வேண்டும். ஆனால் இத்தருணத்தின் போதுதான், இயேசு இவரைத் தம்முடைய சீஷர்களில் ஒருவராக ஆகும்படிக்கு அழைத்தார். நமது கர்த்தருடைய பிரசங்கங்களை மீண்டும், மீண்டுமாக கேட்டவர்களில் அநேகர் அவருடைய நண்பர்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அனைவரும் இந்தப் பன்னிரெண்டு நபர்களைப் போன்று அவருடைய விசேஷித்த பின்னடியார்களாகவும், கூட்டாளிகளாகவும், சுவிசேஷத்தின் ஊழியத்தில் துணையாளர்களாகவும்/பங்காளிகளாகவும் அழைக்கப்படவில்லை.

மத்தேயு, வரிப்பணம் வைத்திருந்த மேஜைகளைத் திறந்த நிலையிலும், மற்றும் ஆண்டவரைப் பின்பற்றுவதற்காக, ரோம அரசாங்கத்துடன் தனக்கு இருக்கும் பணக்

கணக்குகளைச் சரியாக ஒப்படைக்காத நிலையிலும், உடனே எல்லாவற்றையும் அப்படியே விட்டு விட்டுப் போய்விட்டார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக மத்தேயு தன்னிடத்திலுள்ள அனைத்துக் கணக்குகளை ஒப்படைப்பதற்கும், அப்போஸ்தலனாகும்படிக்குத் தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு இணங்கி செயலில் இறங்குவதற்கும் சில நாட்கள், அநேகமாக சில வாரங்கள் கூட எடுக்கப்பட்டிருக்கலாம் என்றே நாம் அனுமானிக்கின்றோம். பல வருடங்களுக்குரிய வரலாறுகளும், பல பிரசங்கங்களும், சம்பாஷணைகளும், பல சம்பவங்களும், மிகச் சுருக்கமாக சுவிசேஷ பதிவுகளில் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கர்த்தரால், சீமோன் என்ற பெயர், பேதுருவாக மாற்றப்பட்டது போன்று, லேவி என்ற பெயரும், மத்தேயுவாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்; மத்தேயு எனும் பெயருடைய அர்த்தம், "தேவனுடைய அன்பளிப்பு"/ஈவு (Gift of God) ஆகும். மத்தேயு ஓர் ஆயக்காரனாய் இருந்தார், அதவாது வரிகளை வாங்கும் நபர் ஆவார். "ஆயக்காரன்" என்ற வார்த்தையும், இப்பணியும், யூதர்களால் மிகவும் வெறுக்கப்பட்ட விஷயமாகும். யூதர்கள் விருப்பமின்றி, ரோமர்களின் வரி செலுத்துவதற்கான விதிமுறைகளுக்கு இணங்கி, வரி செலுத்தினார்கள். ஆயக்காரர்கள் தேசப்பற்று இல்லாதவர்கள் என்று கருதப்பட்டார்கள்; மேலும் இவர்கள் அந்நிய (ரோம) அரசாங்கம் அளிக்கும் பணியை ஏற்றுக்கொண்டு, அநீதியான விதத்தில் வரி வசூலிப்பதற்கு உதவும்படி இவர்கள் தங்கள் நாடு மற்றும் ஜனங்கள் பற்றின அறிவை ரோமர்களுக்கு ஆதாயமாய்ப் பயன்படுத்தினதால் இவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கே உண்மையற்றுப் போனவர்கள் என்றும் கருதப்பட்டார்கள். வரி வசூலிக்கும் பணியானது, நேர்மையற்று இருப்பதற்கும், இலஞ்சம் வாங்குவதற்கும், கொள்ளையடிப்பதற்கும் அநேக வாய்ப்புகளை அருளக்கூடியது என்று நம்மால் எளிதில் உணர முடிகின்றது. ஆனால் அதற்கென்று லேவியும் நேர்மையற்ற ஆயக்காரர்களில் ஒருவன் என்று நாம் ஒரு கணம் கூட எண்ணிவிடக் கூடாது, ஏனெனில் லேவி, நேர்மையற்ற ஆயக்காரர்களில் ஒருவராக இருப்பாரானால், அவர் அப்போஸ்தலன் ஆகும்படிக்கும் அழைக்கப்பட்டிருந்திருக்க மாட்டார்; இன்னுமாக ஒருவேளை அழைக்கப்பட்டாலும், அழைப்புக்குச் செவிசாய்த்திருக்க மாட்டார், காரணம், "இயேசுவை அனுப்பின பிதா, ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் இயேசுவினிடத்தில் வரமாட்டான்" என்று எழுதியிருப்பதை நாம் மறந்து விடக்கூடாது (யோவான் 6:44).

## "அர்ப்பணிக்கப்பட்ட இல்லம் கனப்படுத்தப்பட்டது"

மத்தேயு செல்வாக்குடைய மனுஷனாய் இருந்தார்; அவர் கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு தன்னையும், தனக்குள்ள யாவற்றையும் அர்ப்பணித்ததின் மூலம் அவ்வழைப்புக்குச் செவிச்சாய்த்து, மற்றவர்களை, இரட்சகரிடம் இழுக்கத்தக்கதாக, தனது செல்வாக்கைப் பயன்படுத்த முடிவெடுத்தார். மற்றவர்களை ஆதாயப்படுத்தத்தக்கதாக, தான் எவ்வாறு இரட்சகரிடத்தில் ஈடுபாடு அடைந்தார் என்பதைப் பறைசாற்ற முடிவெடுத்தார். இந்நோக்கத்தை முன்னிட்டு, மத்தேயு தனது வீட்டில், கர்த்தருக்கும், அவருடைய சீஷர்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்பண்ணினார்; மேலும் இவ்விருந்தில் தன்னுடைய நண்பர்கள் மற்றும் தொழில் ரீதியிலான கூட்டாளிகள் பலருக்கு மத்தேயு அழைப்புக் கொடுத்திருந்தார். இந்த அவருடைய நண்பர்கள், நம்முடைய பாடத்தில் "அநேக ஆயக்காரர் மற்றும் பாவிகள்" என்று அழைக்கப்படுகின்றனர் (மாற்கு 2:15).

பரிசேயர்களும், வேதபாரகர்களும், ஆயக்காரர்களைச் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவர்களாக கருதுவதற்கான காரணம், அவர்கள் பொல்லாதவர்கள் என்பதினால் அல்லாமல், மாறாக ஆயக்காரருடைய தொழில் அவமதிப்புடையதாய் இருந்தது என்பதினாலேயே ஆகும் என்பதை நாம் பார்த்தோம்; மேலும் ஆயக்காரர்கள் இவ்விதம் சமுதயாத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்களாகவும், மிகவும் பக்தியுள்ள ஜனங்களிடமிருந்து துண்டிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றபடியால், இவர்கள் "பாவிகள்" என்று அழைக்கப்படுகின்ற பக்தியற்ற ஜனங்களிடமே தங்களுடைய பெரும்பான்மையான சம்பாஷணைகளையும், உறவுகளையும் வைத்துக் கொள்ளும்படிக்குரிய நிர்ப்பந்தமான நிலையில் காணப்படுகின்றனர். "பாவிகள்" என்ற வார்த்தையை முன்னிட்டு, இப்படி அழைக்கப்படுபவர்கள் பொல்லாங்குச் செய்கைக்காரர்கள் என்றும், பயங்கரமானவர்கள்

என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது; மாறாக பரிசேயர்கள் சொல்லிக்கொள்ளும் விதமாக பரிசுத்தம் உடையவர்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணாதவர்களும், பரிசுத்தமாய் இருப்பதற்கு முயற்சிக்காதவர்களுமே இந்தப் “பாவிகள்” ஆவர்; அதாவது தெய்வீக நியாயப்பிரமாணத்தை அப்படியே கைக்கொள்ளுகின்றோம் என்று தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணாதவர்களே, இந்த “பாவிகள்” ஆவர்; அதாவது இந்தப் “பாவிகள்” என்பவர்கள், பாத்திரத்தின் வெளிப்புறத்தை முற்றிலும் சுத்தமாக வைத்திருக்கின்றோம் என்று அறிக்கைப் பண்ணாதவர்கள் ஆவார்கள் என்ற போதிலும் அநேக தருணங்களில், பூரணமான பரிசுத்தத்துடன் இருக்கின்றோம் என்று அறிக்கையிடுகின்ற பரிசேயருடைய இருதயங்களைக் காட்டிலும் இந்தப் பாவிகள் எனப்படுபவர்களின் உள்புறம் சுத்தமானதாகவே அல்லது அதிகம் சுத்தமானதாகவே காணப்படுகின்றது. இதைக்குறித்து நமது கர்த்தரே பல தருணங்களில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே நமது கர்த்தர், ஆயக்காரர்கள் மற்றும் பாவிகளுடைய நண்பர்கள் என்று நாம் வசனங்களில் வாசிக்கும்போது, கர்த்தர் ரவுடிகளுடன் அல்லது அவருடைய நாட்களில் காணப்பட்ட ஒழுக்க விஷயத்தில் குஷ்டரோகிகளாக இருப்பவர்களுடன் தோழமை வைத்து இருந்தார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக அக்காலக் கட்டத்தில் யூதர்களில் ஒரு வகுப்பார், பரிசுத்தமான ஜனங்கள் (பரிசேயர்) என்று அழைக்கப்படுவதும், மற்றொரு வகுப்பார் தங்களை முழுமையாய்ப் பரிசுத்தமுள்ளவர்கள் என்று அறிக்கைப் பண்ணாததினால் பாவிகள் என்று அழைக்கப்படுவதும் வழக்கத்தில் இருந்தது என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

மத்தேயு தனது நண்பர்களையும், தனது கூட்டாளிகளையும் கர்த்தரிடமும், அவருடைய போதனைகளிடமும் அறிமுகப்படுத்துவதற்கென எடுத்துக்கொண்ட பிரயாசம், பாராட்டப்பட வேண்டியதாகும். இன்னுமாக இக்கிரியைகள், கர்த்தருடைய மந்தைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும், என்ன என்ன செய்ய வேண்டும் என்பதற்கான நல்ல மாதிரியாகவும் அமைகின்றது. ஒவ்வொருவனும் தன்னுடைய செல்வாக்கு எவ்விடத்தில் அதிகமாய்க் காணப்படுகின்றதோ, அவ்விடத்தில் அதைச் செலுத்துவதற்கு நாட வேண்டும்; அதாவது நமக்கு அறிமுகமானவர்கள் மத்தியிலும், நாம் அறிமுகமாய்க் காணப்படுபவர்கள் மத்தியிலும், நம்முடைய கடந்த கால வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள தீவிரமான மாற்றத்தை எளிதில் உணரவும், புரிந்துக்கொள்ளக் கூடியவர்கள் மத்தியிலும் நாம் நமது செல்வாக்கைப் பயன்படுத்த நாட வேண்டும். இங்குக் காணப்படும் மற்றுமொரு பாடம் என்னவெனில், சத்தியத்தைப் பிரகடனப்படுத்துவதற்காக, விருந்தோம்பல் பண்பைக் கருவியாகப் பயன்படுத்துவதாகும்; அதாவது யார் தங்களைக் கர்த்தருக்கென்று அர்ப்பணித்துள்ளார்களோ, அவர்களுடைய இல்லங்களும் கூட அர்ப்பணிக்கப்பட்ட இல்லங்களாகக் காணப்பட வேண்டும், மேலும் அது ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது முதன்மை நோக்கமாகவும் இருக்க வேண்டும். இன்னுமாக நம்முடைய நண்பர்களும் கூடக் கர்த்தரால் போதிக்கப்படத்தக்கதாகவும், அவர்களைக் கர்த்தரிடத்தில் இழுக்கத்தக்கதாகவும், நம் அர்ப்பணிக்கப்பட்ட இல்லங்களின் மூலம் உண்டாகும் செல்வாக்குக் காணப்பட வேண்டும். ஆனால் பெரும்பாலும் இல்லங்கள் அர்ப்பணிக்கப்படுகின்ற விஷயங்கள், கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட தவறப்படுகின்றது; மேலும் இல்லத்திற்குள் எதிர்ப்புகள் அளிக்கும் நபர்களின் செல்வாக்குள் மேலோங்க அனுமதிக்கப்படுவதின் காரணமாக, அந்த அர்ப்பணிக்கப்பட்ட நபர்களின் இல்லங்களில் கர்த்தரும் சரி, கர்த்தருடைய ஜனங்களும் சரி வரவேற்கப்படாமலும், கர்த்தருடைய நோக்கங்களுக்காக இவர்களுடைய இல்லங்கள் பயன்படுத்தப்படாமலும் இருக்கின்றன. இப்படிப்பட்ட இல்லமும், இல்லத்தாரும் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தை இழந்து வருகின்றனர்; மேலும் இப்படிப்பட்ட நிலையில் காணப்படும் இல்லத்தின் தலைவர், தான் ஜெயங்கொள்ளுகிறேனா அல்லது இல்லையா என்று நிதானித்துக்கொள்ள வேண்டும்; அல்லது தான் எதிர்ப்பின் செல்வாக்குகளினால் மேற்கொள்ளப்படுகின்றேனோ என்று நிதானித்துக்கொள்ள வேண்டும். “ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு” மாத்திரமே பரிசு வாக்களிக்கப்பட்டுள்ளது.

கர்த்தர் தைரியமுள்ள ஜனங்களையே விரும்புகின்றார், அதாவது தம் மீது முழுமையான விசுவாசமும், தம் மீதும், தம்முடைவர்கள் மீதும் அன்பும் கொண்டு, மேலும் இதன் காரணமாக நீதியான விஷயங்களின் பொருட்டு எதிர்ப்பாய் உள்ள செல்வாக்குகளை ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருப்பவர்களையே கர்த்தர் விரும்புகின்றார். ஒருவேளை மத்தேயு, கர்த்தரிடம் பின்வரும் காரியங்களைக் கூறியிருப்பாரானால், நாம் மத்தேயு குறித்து

என்னவெல்லாம் எண்ணியிருப்போம்: "ஆண்டவரே என்னுடைய வீட்டில் ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணி, அவ்விருந்தில் என்னுடைய நண்பர்களில் சிலரை வரவேற்று, உம்மை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களும் சத்தியத்தின் தாக்கம் அடைவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க விரும்புகின்றேன்; ஆனால் இவைகளைச் செய்வதற்கு என்னுடைய சொந்த வீட்டிலேயே எனக்கு (இப்பொழுது) உரிமை இல்லை; நான் இப்படி விருந்து பண்ணினால், என்னுடைய மனைவி ஒரு நிமிடம் கூடப் பொறுத்துக்கொள்ள மாட்டாள்; ஏற்கெனவே மிகுந்த பணவருமானம் தரும் என்னுடைய தொழிலை நான் விடப்போகிறதினால் என்னுடைய பிள்ளைகள் மிகவும் கோபமடைந்தவர்களாகவும், முன்பிருந்த அந்தஸ்தில் அல்லது தாராளமாய்ச் செலவுகள் செய்யும் நிலையில் அவர்கள் என்னுடைய இந்த முடிவின் காரணமாக இனி இருக்க முடியாது என அச்சம் அடைந்தவர்களாகவும் இருக்க, உம்மைக் கனப்படுத்தும் வண்ணமாக நான் இல்லத்தில் விருந்து ஆயத்தம் பண்ணப்போகின்றேன் என்று நான் சொல்லிவிட்டாலே, அவர்கள் மிகுந்த இடஞ்சல்களை ஏற்படுத்திவிடுவார்கள்; இன்னுமாக என் பிள்ளைகள் மிகவும் ஒழுக்கமற்றவர்களாயும், பெற்றோருக்குரிய மரியாதையை எனக்கு தராதவர்களாயும் இருப்பதினால், நான் விருந்து ஆயத்தம் பண்ணினால் தொந்தரவு பண்ணுகிறவர்களாகவும் இருப்பார்கள்.”

இப்படி மத்தேயு கூறியிருந்திருப்பாரானால், இவர் அப்போஸ்தலன் ஆகுவதற்கோ, அல்லது அப்போஸ்தலர் பவுல் ஏற்படுத்தின நிபந்தனைகளுக்கு ஏற்ப சபையில் மூப்பர் (அ) உதவியாளன் ஸ்தானத்திற்குக் கூட மிகவும் பாத்திரமற்ற நபர் என்றே நாம் கருதியிருப்போம் (1 தீமோத்தேயு 3:4-5). மேலும் இவர் சபையில் எந்த ஒரு பொறுப்புள்ள ஸ்தானத்திற்கும் தகுதியற்றவர் என்றே நாம் எண்ணியிருப்போம்; இன்னுமாக இவர் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அவசியமான பண்புகளில் மிகவும் குறைவுடன் காணப்படுகின்றார் என்றும், இவர் தனது பண்புகளைச் சீர்த்திருத்திக்கொள்ளவில்லை என்றால் இவர் பரிசை இழந்து போவதற்கான மிகுந்த அபாயத்தில் இருக்கின்றார் என்றும் நாம் எண்ணியிருந்திருப்போம். ஆனால் மத்தேயுவின் விஷயம் முற்றிலும் மாறுபட்டதாகவும், அவர் தைரியமுள்ள பாத்திரமாகவும் காணப்படுகின்றார். ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு ஏதுவான பண்புகள் இவரிடத்தில் இல்லையெனில், இவரிடம், "எனக்கு பின் சென்று வா” என்று நமது கர்த்தர் கூறுவார் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியாது. ஏனெனில் நமது கர்த்தர் இயேசு இரக்கமுள்ளவராகவும், மென்மையானவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தாலும் கூட அவர் ஒருபோதும் குணலட்சணங்களில் குறைப்பாடு உடையவராகவோ அல்லது கோழையாகவோ (தைரியமற்றவராகவோ) இருந்ததில்லை.

இன்னுமாக, மத்தேயுவின் மனைவியும், குடும்பத்தினரும் விருந்து ஆயத்தம் பண்ணுவதற்கு மறுப்புத் தெரிவித்திருப்பார்களானால், இவரது மனைவியையும், குடும்பத்தாரையும் குறித்து நாம் என்ன எண்ணியிருந்திருப்போம்? பரிசுத்தவான்கள் ஆகுவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு இல்லை என்றும், மனைவியானவள் புருஷனுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற மனைவிக்குரிய முதல் அம்சத்தையே இவரது மனைவி கற்றுக்கொள்ளவில்லை என்றும் அவள் உதவியாக இருப்பதற்குப் பதிலாக மத்தேயுவுக்கு தடையாக இருந்தாள் என்றும் புரிந்துக்கொண்டிருப்போம். நல்லபடி இவர்களெல்லாரும் இருந்திருப்பார்களானால் கர்த்தர் அவ்வில்லத்திற்குள் வந்தபோது, அவரோடு கூட ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் கடந்து வந்திருக்கும் என நாம் நம்புகின்றோம்.

## “விருந்தில் ஆவிக்குரிய உணவு”

இவ்விருந்து குறித்த பல்வேறு பதிவுகளை வைத்துப் பார்க்கும்போது, விருந்தில் பங்குக்கொண்டவர்களைத் தவிர, இன்னும் அநேக திரளான ஜனங்களும் மத்தேயுவின் வீட்டில் கூடி வந்தது தெரிகின்றது. இன்னும் இச்சம்பவம் தொடர்பான விஷயங்களை வைத்துப் பார்க்கும்போது, இவ்விருந்தானது, பரிசேயர்கள் வழக்கமாக உபவாசம் பண்ணிக்கொண்டு வந்த நாட்களில், ஒருநாளில் நிகழ்ந்தது என்றும் தோன்றுகின்றது. இந்த விஷயங்கள் இரண்டு கேள்விகளுக்கு நேராக வழிநடத்திற்று. அவை பின்வருமாறு:

(1) பரிசுத்தம் இல்லாத இப்படிப்பட்ட ஜனங்களுடன் ஏன் உங்கள் போதகர் பழகுகின்றார்? என்பதே முதல் கேள்வியாகும். நமது கர்த்தரும் அவருடைய

அப்போஸ்தலர்களும், தேவனுக்கு முழுமையாய், அர்ப்பணிப்புள்ள ஓர் ஜீவியத்தை ஜீவிக்கின்றார்கள் என்று பரிசேயர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். நமது கர்த்தர், ஆயக்காரர்களுடனும், பாவிகளுடன் கூட இருந்து புசிக்கும் காரியமானது, அவர்களையும் சரிசமமாகக் கருதுவதற்கு ஒப்பாக இருக்கும் என்பதினால், நமது கர்த்தர் அவர்களுடன் சேர்ந்துப் புசிக்கக்கூடாது என்பதே பிரச்சனையாய் இருந்தது தவிர அவர்களுக்குக் கர்த்தர் போதிப்பதில் பரிசேயர்கள் எந்த விதமான எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இவர்களுடைய இக்கேள்விக்குப் பதில் கூறும் வண்ணமாகவே நமது கர்த்தர், "நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை" என்று கூறினார் (லூக்கா 5:31 திருவிவிலியம்); அதாவது வைத்தியன் தான் சுகமளிக்க வேண்டும் என்று நாடுகிறவர்களிடத்திற்குச் செல்லவும், அவர்களோடு கலந்துப் பழகுவதற்கும், அதிலும் அவர்களைச் சுகப்படுத்துவதற்கு எவ்விதங்களில் எல்லாம் பழகுவது அனுகூலமாய் இருக்குமோ, அவ்விதங்களில் எல்லாம் பழகவும் உரிமை கொண்டிருக்கின்றார் என்ற அர்த்தத்தில் கூறினார். கர்த்தருடைய இவ்வார்த்தைகளானது, பரிசேயர்கள் நோயுற்றவர்கள் அல்ல என்பதினால், அவர்களுக்குக் கர்த்தருடைய ஊழியம் அவசியம் இல்லை என்ற அர்த்தத்தில் காணப்படவில்லை என்றாலும், அவர்கள் பாவ நோயுற்றிருந்தாலும், அவர் அளிக்கும் நல்ல மருந்தாகிய உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளும்படியான மனநிலையில், அவர்கள் காணப்படவில்லை என்ற உண்மையை அடக்கியுள்ளதாகவுமே காணப்படுகின்றது. இதே கருத்துதான், "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்ற வார்த்தைகளில் நமது கர்த்தர் கூறியுள்ளார் (லூக்கா 5:32). யார் ஒருவன் தன்னை நீதிமான் என்று எண்ணிக்கொள்கின்றானோ, அவனுக்கு மனம் திரும்புவதற்கான அழைப்பு அப்பாற்பட்டதாய்க் காணப்படும். ஒருவன் தான் நீதிமான் அல்ல என்றும், தான் பூரணன் அல்ல என்றுமுள்ள, முதல் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்; ஆகவேதான் தங்களை நீதிமான்கள் அல்ல என்று ஒப்புக்கொண்டவர்களிடத்திலும் மற்றும் மற்றவர்களைக் காட்டிலும் சத்தியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நல்ல நிலம் போன்ற இருதயம் உடையவர்களிடத்திலுமே நமது கர்த்தர் பிரதானமாய்ச் சென்றார். இதே கருத்தை நமது கர்த்தர், பரிசேயன் மற்றும் ஆயக்காரனுடைய ஜெபம் தொடர்பான தம்முடைய உவமையில் தெரிவித்துள்ளார்; அதாவது ஆயக்காரன் தான் பூரணமற்றவன் என்று ஒப்புக்கொண்டு, இரக்கத்திற்காக வேண்டினபடியால், தேவனுடைய பார்வையில், பரிசேயனைக் காட்டிலும், ஆயக்காரனே தயவு பெறுவதற்கு ஏற்ற நிலையில் காணப்படுகின்றான் என்று கர்த்தர் நமக்கு உறுதி அளிக்கின்றார்.

"பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்" (மத்தேயு 9:13). இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் ஓசியா 6:6-ஆம் வசனத்திலிருந்துதான் கோடிட்டுக் காட்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை. பலிகள் மற்றும் சுயத்தை வெறுத்தல் தொடர்பான விஷயங்களிலும் மற்றும் புதினா, சோம்பு, சீரகம் முதலியவைகளில் பத்தில் ஒரு பங்குச் செலுத்தும் விஷயங்களிலும், பரிசேயர்கள் கவனமாய் அனுசரித்தக் காரியங்களானது, தங்கள் பரிசுத்தத்திற்கான சான்றுகள் எனப் பெருமைப் பாராட்டும் விஷயத்தைத் தேவன், இரக்கத்தை அங்கீகரிப்பது போன்று, அங்கீகரிப்பதில்லை எனும் காரியத்தையே மேற்கூறிய வசனத்திலிருந்து பரிசேயர்கள் கற்க வேண்டியிருந்தது. பரிசேயர்கள் தங்களோடு கூடக் காணப்படும் உடன் யூதர்கள் மீது இரக்கம் கொண்டிருந்திருக்க வேண்டும், அதாவது பாவத்திலிருந்து அவர்களைத் தூக்கி, கர்த்தருக்கு அருகாமையிலும், நீதியின் செல்வாக்கினுடைய அருகாமையிலும் கொண்டு வருவதில் மகிழ்ச்சிக் கொள்ளத்தக்கதான இரக்கத்தின் உணர்வைப் பரிசேயர்கள் பெற்றிருந்திருக்க வேண்டும். தேவனுடைய பார்வையில் மிகவும் பிரியமானதும், தேவனுடைய இரக்கத்தைத் தாங்கள் பெற்றுக்கொள்வதற்குத் தங்களை ஆயத்தப்படுத்துகிறதுமான இரக்கத்தின் சிந்தையை இந்தப் பரிசேயர்கள் பெற்றுக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, மற்றவர்களை இழிவாய் வெறுப்பதற்கும், தங்களைக் குறித்தே பெருமையாய்ப் பேசுவதற்கும் ஏதுவான அன்பற்ற உணர்வுகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர்; அதாவது தெய்வீக இரக்கத்தினால் ஆசீர்வதிக்கப்படுவதற்கென ஆயத்தமற்றதாய்க் காணப்படும் இருதய நிலையில், அதாவது கர்த்தர் மிகவும் கண்டிக்கும் சுய திருப்தியுள்ள மனதையும், இருதயத்தையும் உடைய நிலையில் பரிசேயர்கள் காணப்பட்டார்கள்.

## “உபவாசமும், விருந்தும் - நிழலும், நிஜமும்”

(2) இரண்டாவது கேள்வி:- “வாரத்திற்கு இருமுறை உபவாசத்தை” பரிசேயர்களாகிய நாங்கள் அனுசரிக்கையில் மற்றும் யோவான் ஸ்நானனுடைய போதனைகளைப் பின்பற்றுகிறவர்களும் உபவாசம் பண்ணுகையில், உங்கள் ஆண்டவரும், அவரோடு கூட உள்ள அனைவரும் விருந்துண்டு மகிழ்வது ஏன்?

இப்படி நீங்கள் நடந்துகொள்ளும் காரியமானது நீங்களும், உங்களுடைய ஆண்டவரும், நாங்கள் பக்தியாய் இருப்பது போன்று இல்லை என்பதைக் காண்பிக்கின்றது அல்லவா? (லூக்கா 18:12).

இக்கேள்விக்கான நமது கர்த்தருடைய பதிலை நாம் புரிந்துக்கொள்வதற்கு நன்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

(a) தம்முடைய பின்னடியார்கள் இத்தகைய ஆச்சரியமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது, அவர்கள் கவலையுடனும், துக்கம் கொண்டாடிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது என்றார்; அதாவது மணவாளன் தாமே அவர்களோடு கூடக் காணப்பட்டு, அவர்களுடைய இருதயங்களை மகிழ்ச்சியூட்டிக் கொண்டிருக்கும் போதும், அவர்களுக்குப் புத்துணர்வு கொடுத்து, அவர்களைப் பலப்படுத்திக் கொண்டிருக்கும் போதும், அவர்களிடத்தில் வந்து கொண்டிருக்கிறதுமான தெய்வீகத் தயவை அவர்கள் புரிந்துக்கொள்வதற்காக அவர்களுக்குக் கேட்கும் செவிகளைக் கொடுத்து அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறந்து கொண்டிருக்கும் போதும் அவர்கள் கவலையுடனும், துக்கம் கொண்டாடிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது என்றார். இப்படிப்பட்ட காலம், உபவாசம் பண்ணுவதற்கும், துக்கம் கொண்டாடுவதற்குமான காலமாயிராது. ஆனால் மணவாளன் தூரதேசத்திற்குப் போன பிற்பாடு, மிகுந்த வேதனையும்/கவலையும், திகைப்பும், குழப்பமும் ஏற்படும்போது, உபவாசம் இருப்பது சரியாக இருக்கும். சுவிசேஷ யுகம் முழுவதிலும் கர்த்தருடைய ஜனங்கள் இருளின் வேளைகளிலும், எதிர்ப்புகள் நிறைந்த வேளைகளிலும், உபவாசம் மூலம் தங்கள் மாம்சத்தைத் தாழ்த்தி, கர்த்தரிடத்தில் மிகவும் நெருங்க நாடுவது அவசியமாய் இருந்ததை உணர்ந்துள்ளார்கள் எனும் காரியம் உண்மையாகவே இருந்துள்ளது.

ஆனால் உபவாசம் என்பது சுயத்தை வெறுக்கும் தன்மைக்கு அடையாளமாயும் காணப்படுகின்றது. ஆண்டவர், ஜனங்கள் மத்தியில் காணப்பட்டது வரையிலும், அதாவது திரளான ஜனக்கூட்டங்கள் மத்தியில் அவர் கனத்துக்குரியவராய் இருந்தது வரையிலும், அவருடைய பின்னடியார்களில் ஒருவராக இருப்பதற்குக் கொஞ்சமே சுயத்தை வெறுக்க அவர்களுக்கு வேண்டியிருந்தது; அநேக கோணங்களில் பார்க்கும் போது, அத்தருணத்தில் இயேசுவைப் பின்பற்றுகிறதற்கு அழைக்கப்பட்ட காரியமானது சீஷர்களுக்குக் கனத்துக்குரியதாய் இருந்தது; அவருடைய பின்னடியார் ஆகுவதற்கெனச் சில பூமிக்குரிய நன்மைகளைத் தியாகம் செய்வது கனத்துக்குரியதாய் இருந்தது; மேலும், பூமிக்குரிய நன்மைகளைத் தியாகம் செய்யும் இவ்வகையான சுயத்தை வெறுத்தல் அல்லது உபவாசங்கள், உண்மையில் சந்தோஷத்தின் விருந்தாகவே சீஷர்களுக்கு இருந்தது; ஆனால் பிற்பாடு சோதனைகள் வந்த போதோ, ஆண்டவர் அவருடைய சத்துருக்களின் உபத்திரவங்களுக்குள் காணப்பட்ட போதோ, அவருடைய நோக்கங்கள் பிரபலமற்றதாய் ஆன போதோ, திரளான ஜனக்கூட்டங்கள் அவர் மரிக்க வேண்டும் என்று கூக்குரலிட்ட போதோ, அப்போதுதான் அவரை அறிக்கைபண்ணுவதற்கும், அவரைப் பின்பற்றுவதற்கும் சுயத்தை வெறுத்தலாகிய நிஜமான உபவாசத்தின் தேவை ஏற்பட்டது; இது சுவிசேஷ யுகம் முழுவதும் பொருந்தும்; சுயத்தை வெறுத்தல் இல்லாமல், உபவாசம் இல்லாமல், மாம்சத்தின் விருப்பங்கள் மற்றும் ஆசைகளை மறுக்காமல் ஒருவராலும், ஆட்டுக்குட்டியானவருடைய பின்னடியார்கள் ஆக முடியாது; மாம்சத்தில் சிலவற்றைத் **தியாகம் செய்கிறவர்களாகவும்**, இன்னும் மற்றவைகளைப் புதிய சிருஷ்டியின் நலன் கருதியும், அதன் ஆவிக்குரிய வளர்ச்சியை முன்னிட்டும் **தள்ளிவைத்து, சாகடிக்கிறவர்களாகவும்** கர்த்தருடைய பின்னடியார்கள் காணப்பட வேண்டும்.

கர்த்தருடைய இரண்டாம் வந்திருத்தலாகிய இப்பொழுது, அந்த விருந்து ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது என்று நாம் கூறுகின்றோம், அதாவது ஆவிக்குரிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, மிக அதிகமாகவும், மிகப் பெரியதாகவும் ஆசீர்வாதங்கள் இப்பொழுது இருக்கிறபடியாலும், மேலும் ஆவிக்குரிய உணவும் அதிகமாயும், சுவையுள்ளதாயும் இருக்கிறபடியால், கர்த்தருடைய விருந்து சாலைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் புசிக்கும்படிக்கு அவர் அமர்த்தியுள்ளவர்களுக்கும் மற்றும் பழையதும், புதியதும், புத்துணர்வு அளிக்கக்கூடியதுமானவைகளை அவர் அளித்துள்ளவர்களுக்கும், உபவாசத்தின் நாட்கள் முடிந்து, விருந்தும், “கர்த்தருடைய சந்தோஷங்களும்” ஆரம்பித்து விட்டது என்று நமக்குத் தோன்றுகின்றது. ஆனால் அதற்கென்று மாம்சத்தில் சோதனைகளும், கஷ்டங்களும், பரீட்சைகளும் இல்லாமல் இல்லை, மாறாக புதிய சிருஷ்டியாகிய அவருடைய ஜனங்கள் ஏற்றகால சத்தியங்களினால் மிகவும் புத்துணர்வும், மகிழ்ச்சியும், உற்சாகமும் அடைந்துள்ளப்படியால், அவர்கள் அடைந்துள்ள ஆவிக்குரிய புத்துணர்வுகளுக்கு முன்பு, இப்பொழுது இந்தச் சோதனைகளும், பரீட்சைகளும், கஷ்டங்களும் லேசானவைகள் என்று எண்ண முடிகின்றது: இந்த ஆவிக்குரிய புத்துணர்வுகள் சீக்கிரத்தில் அனுபவிக்கப் போகின்ற மாபெரும் கலியாண விருந்திற்குரிய மாதிரி அனுபவங்களே ஆகும்.

(b) நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் இருக்கும் காரியமானது, துக்கத்திற்கு மருந்தாக இருப்பதாகிய மற்றொரு உண்மையைக் குறித்தும் பரிசேயர்கள் புரிந்துக்கொள்ளவில்லை; அதாவது நமது கர்த்தருடைய வேலை, யோவான் ஸ்நானனுடைய வேலையைப் போன்றதல்ல; அதாவது யூத அமைப்பையும், ஒழுங்கையும் சீர்த்திருத்தம் பண்ணும் வேலை அல்ல என்று பரிசேயர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. சீர்த்திருத்தலாகிய இப்பணியை யோவானால் செய்ய முடியும் அளவுக்கு, அதைச் செய்யும்படிக்கு யோவான் நியமிக்கப்பட்டிருந்தார்; ஆனால் அவர் தோற்றுப் போயும் விட்டார், சிரைச்சேதமும் பண்ணப்பட்டு விட்டார்; ஆனால் இயேசு செய்த பணியோ முற்றிலும் வேறுபட்ட பணியாகும்; இயேசு தமது உபதேசங்களின் மூலம் யூத மார்க்கத்தைச் சீர்த்திருத்தம் பண்ணுவதற்கும், ஒட்டுப் போட்டுச் சீராக்கவும் முயற்சிக்கவில்லை; மாறாக முற்றிலும் ஒரு புதிய அமைப்பை நிறுவிகொண்டிருந்தார், ஒரு சபையைச் சேர்த்துக் கொண்டிருந்தார், அதாவது ஒரு யூத சபையையோ அல்லது சீர்த்திருத்தப்பட்ட யூத சபையையோ உண்டுபண்ணாமல், ஒரு கிறிஸ்தவ சபையையே நிறுவிக்கொண்டிருந்தார். இதன் காரணமாகவே பரிசேயர்களுடைய வழிமுறைகளில் உள்ள நல்லவைகளையும், தகாதவைகளையும் குறித்து அவர்களோடு கலந்து ஆலோசித்து, அவ்வழிமுறைகளைச் சரிச் செய்துகொள்வதற்குக் கர்த்தர் முயற்சிக்கவில்லை. ஏற்கெனவே பழையதாய்ப் போன பழைய வஸ்திரத்தை விலக்கி வைக்கப்படுவற்கு ஏதுவாக, அதைக் கர்த்தர் அப்படியே விட்டுவிட்டார். நியாயப்பிரமாணம் கோரும் சாத்தியமற்ற நீதியை அல்ல, மாறாக பாவங்களுக்கான கர்த்தருடைய பலியினால் உண்டாகும் புண்ணியத்தின் அடிப்படையிலும், விசுவாசத்தின் மூலமும் தரிப்பிக்கப்படும் நீதியாகிய புதிய வஸ்திரத்தைக் கர்த்தர் அருளுவார்.

ஒருவேளை இயேசு, கிறிஸ்தவ மார்க்கத்தையும், யூத மார்க்கத்தையும் சேர்க்க முற்பட்டிருப்பாரானால், அக்காரியமானது இரு மார்க்கத்திற்கும் மிகுந்த பாதகமான நாசத்தை ஏற்படுத்தியிருக்கும், ஏனெனில் இரண்டு மார்க்கங்களும் முற்றிலும் எதிர்மாறானவைகள் ஆகும்; யூத மார்க்கமானது முழுமையான நீதியின் செயல்பாடுகளை எதிர்ப்பார்க்கின்றது, ஆனால் இது பாவிகளுக்குச் சாத்தியமற்ற ஒன்றாக உள்ளது. கிறிஸ்தவ மார்க்கமானது, ஒருவன் தன்னைத்தான் நீதிமானாக்கிக்கொள்வது சாத்தியமற்ற காரியம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதை எதிர்ப்பார்க்கின்றது, மேலும் மன்னிப்பு மற்றும் இரக்கம் பெற்றுக்கொள்வதற்கான ஒரே நிபந்தனையாக விசுவாசத்தை எதிர்ப்பார்க்கின்றது.

(c) இதே காரியமானது அக்காலத்தின் வழக்கத்தின்படி பயன்படுத்தப்பட்ட துருத்தியின் விஷயத்திலும் விவரித்துக் காட்டப்படுகின்றது. இக்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற குப்பிகள் (bottle) மற்றும் பீப்பாய்கள் (barrel) அன்று பயன்படுத்தப்படாமல், மிருகங்களின் தோலினால் உண்டுபண்ணப்பட்ட துருத்திகள் பயன்படுத்தப்பட்டது. இன்றும் கூட உலகத்தில் பல்வேறு பகுதிகளில் இப்படியான தோல் துருத்திகளே பயன்படுத்தப்பட்டு, குப்பிகள் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட துருத்திகளில் புதிய திராட்சரசங்கள் ஊற்றப்படுகின்றன; மேலும் ரசம் புளித்துப்

பொங்குவதன் காரணமாக தோல் கிட்டத்தட்ட வெடித்துச் சிதறும் அளவுக்கு விரிந்துவிடுகின்றன; மேலும் ஒருமுறை பயன்படுத்தப்பட்ட துருத்திகள் மீண்டும் புதிய ரசம் ஊற்றுவதற்கென ஒருபோதும் பயன்படுத்த முடியாது, காரணம் துருத்தியின் சுருங்கி விரியும் தன்மை (elasticity) போய்விடுகிறபடியால், மீண்டும் அதில் புதிய ரசம் ஊற்றினால் அது புளிக்கும் போது, அது வெடித்து விடுகின்றது. யூத மார்க்கத்திற்குரிய நாட்கள் முடிவிற்கு வந்து விட்டது; அதன் நோக்கம் நிறைவேறிவிட்டது; பரிசேயர்கள் மற்றும் இயேசு பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் எதிர்ப்பார்த்த வண்ணம், தெய்வீக நோக்கமானது, யூதமார்க்கத்தைச் சீர்த்திருத்தம் பண்வதற்கு நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதான காரியங்களையே நமது கர்த்தர் இங்குப் போதிக்கின்றார். யூத மார்க்கம் ஓய்ந்துபோக வேண்டியிருந்தது; மேலும் யூதமார்க்கத்திற்குள் புதிய உபதேசங்களை, அதாவது சுவிசேஷம் எனும் புதிய ரசத்தைப் ஊற்றுவது என்பது, இந்தப் புதிய உபதேசங்களின் ஆவியானது யூத தேசத்தை/ஜாதியாரைக் கலக்கி நாசமடைய செய்வதற்கு வழிநடத்துகிறதாய் இருப்பதோடல்லாமல் அந்த ஜாதியாரின் நாசத்தின் மத்தியில், இப்புதிய உபதேசங்களும் மறைந்து, மாய்ந்து போய்விடும். ஆகவேதான் ஒரு புதிய இஸ்ரயேல், அதாவது பரிசுத்த ஜாதி, விசேஷித்த ஜனங்கள் எழுப்பப்பட வேண்டும் என்பதும், இவர்கள் அப்போது வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தையும், புதிய கிருபையையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் தெய்வீகத் திட்டமாய்க் காணப்பட்டது.

சுவிசேஷ யுகத்தின் முடிவு பகுதியாகிய இப்போதுங்கூட, ஆண்டவர் இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கும் புதிய ரசத்தை, கிறிஸ்தவ மத பிரிவுகள் எனும் பழைய துருத்திக்குள் ஊற்றுவது கூடாத காரியமாகவே உள்ளது. இந்தக் கிறிஸ்தவ பிரிவினர்களும் கூட ஏற்றக்கால சத்தியங்கள் எனத் தங்களுக்கு முன் வைக்கப்படும் சத்தியங்களை ஏற்றுக்கொள்வது என்பது, தங்கள் அமைப்புகளுக்குள் மிகுந்த நாசத்தைக்கொண்டு வந்துவிடும் என்று உணர்ந்து கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். தேவன் யூத யுக முடிவில் இந்த முழு அமைப்பிலிருந்து கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களை வெளியே வரும்படி அழைக்கின்றார்; அதாவது சமீபத்தில் உள்ள புதிய யுகத்திற்கான ரசத்தை (உபதேசத்தை) தம்முடைய கரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும்படிக்கு இவர்களை வெளியே அழைக்கின்றார். பழைய அமைப்புகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் அவர்களுக்கென்று நியமிக்கப்பட்ட நோக்கத்தைப் பாதிச் சரியாகவும், பாதித் தவறாகவும் நிறைவேற்றி முடித்துவிட்டனர். தெய்வீகத் திட்டம் தொடர்புடைய இவர்களுடைய (பழைய அமைப்புகள்/யூத அமைப்பு) பணிகள் முடிவடைந்துவிட்டன. "விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே” (வெளிப்படுத்தல் 18:23). ஆனால் இந்த அழைப்பை இவர்கள் கேட்பதற்கு, இவர்களைப் பாபிலோன் அனுமதிப்பதில்லை. தற்கால சத்தியத்தின் தொனி, அவளுடைய சுவர்களுக்கு அப்பாலேயே/வெளியே தொனித்துக் கொண்டிருக்கின்றது. சத்தியத்தைக் கேட்பதற்கான செவியை உடையவர்கள் எவர்களோ, மேலும் தற்கால சத்தியத்தினால் நிரப்பப்படுவதற்கு விருப்பம் உடையவர்கள் எவர்களோ, அவர்கள் ஆசீர்வாதத்தினால் நிரப்பப்படுவதற்கு முன்பும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைச் சுமந்துச் செல்லும் பாத்திரமாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன்பும், முதலாவது சபைப்பிரிவுகளாகிய அமைப்புகளிலிருந்து வெளியே வந்தாக வேண்டும், "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.” "விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே” (வெளிப்படுத்தல் 18:4, 23).

R3500

# "இரக்கத்தின் வீடு"

## யோவான் 5:1-15

"அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்" (யோவான் 6:2).

பெதஸ்தா என்ற வார்த்தை "இரக்கத்தின் வீடு" என்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது. இது எருசலேமின் சுவர்களுக்கு அருகாமையில் காணப்பட்ட பெரிய ஒரு குளத்தைச் சூழ்ந்து கட்டப்பட்டுள்ள பெரிய மண்டபங்கள் உடைய இடமாகும். இக்குளத்திற்குத் தண்ணீர் வழங்கி கொண்டிருந்ததான நீர்த்தேக்கங்கள் சில குறிப்பிட்ட வாயுகள் குடிப்புகும் இடமாகக் கூடக் காணப்பட்டது. இந்த நீர்த்தேக்கங்களில் வாயு, திரண்டு குவிந்து வரும்போது, வாயுகள் தண்ணீரை வெளியேற்றுகின்றது; இவ்விஷயம் இன்றுள்ள எண்ணெய் கிணறுகளின் விஷயங்களிலும் நடக்கின்றது. வாயுகள் கலந்த தண்ணீர் வெளியேறும் விஷயம் அவ்வப்போது நடந்தது, மேலும் இப்படியான சமயங்களில் குளத்தில் உள்ள தண்ணீர் கலங்குகின்றது அல்லது வாயுகளின் காரணமாக தண்ணீர் கொப்பளித்துப் பொங்குவது போன்று காணப்படும்.

இந்த விஷயத்தைப் புரிந்துக்கொள்ள முடியாததால், சிலர் குளத்தின் தண்ணீர் கலக்கப்படும் காரியத்தைப் பரலோகத்திலிருந்து தேவதூதன் வந்து அற்புதவிதமாய்க் கலக்குகின்றார் என்று எண்ணிக்கொண்டார்கள். விசுவாசம் அளிக்கும் உற்சாகமும் மற்றும் வாயுகளின் காரணமாக தண்ணீரில் காணப்படும் சில மருத்துவ தன்மைகளும், வியாதி சொஸ்தமடைவதற்கான காரணங்களாய் இருந்தன. இப்படிச் சொஸ்தப்படுத்தும் தன்மை இந்தக் குளத்தில் கலக்கப்படும் தண்ணீருக்கும் இருப்பதினால், அவ்வூர் முழுவதும் இக்குளம் பிரபலமாய்ப் பேர்ப்பெற்றதாய் விளங்கினது. தண்ணீர் கலக்கப்படும் மாத்திரத்தில், உடனே தண்ணீருக்குள் இறங்குகிறவருக்கு மாத்திரமே அவ்வாயுகளிடமிருந்து வரும் நன்மையை அடைய முடிகின்றது என்று தெரிகின்றது. வாயுகள் தண்ணீருடன் கலந்து வெளியே வரும்போது, வாயு உடனடியாக வாயு மண்டலத்தில்/ஆகாய மண்டலத்தில் சென்றுவிடுகின்றது, ஆகவேதான் உடனடியாக வாயு கலந்த தண்ணீரில் இறங்குகிறவர்கள் நன்மை அடைவதோடு கூட, சில வாயுகளையும் கூட மூச்சில் உள்வாங்குகின்றனர். இதே போன்ற நீர் ஊற்றுகள் இன்றும் கூட, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றது, அவைகளில் பெரும்பான்மையானவைகள் மருத்துவ தன்மை உடையவைகளாகவே இருக்கின்றது; மேலும் இவ்வூற்றுகள் அற்புதங்கள் என்று கருதப்படுவதில்லை.

"மருத்துவக் குணம் உள்ள மூலிகை தண்ணீர்கள் உலகத்தின் பல பகுதிகளில் காணப்படும் பொதுவான ஒன்றாகும். அவைகள் மூலம் சொஸ்தமடையும்படிக்கு ஜனங்கள் நீண்ட பிரயாணம் செய்து வருவதுண்டு. விசேஷமாக ஆயிஸ்கல்பியஸின் இப்படிப்பட்ட மருத்துவ ஆசாரியர்கள், தண்ணீரண்டையில் மண்டபங்களைக் கட்டி அமைத்தனர். பைலேடிரிக்கஸ் என்பவர் காயூஸில் நடந்த யுத்தத்தில் காயமடைந்த கிரேக்க வீரர்கள், சிமிர்னாவுக்கு அருகாமையில் காணப்பட்ட அகமனான் என்ற ஊற்றின் தண்ணீர் மூலம் சுகமடைந்தார்கள் என்று கூறுகின்றார்" - **"இதனை அமெரிக்க சைக்கிளோபீடியா விளக்குகின்றது."**

நம்முடைய பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊற்றைப் போன்று ஒன்று கிஸ்ஸிங்கெனில் உள்ளது. இங்குத் தினந்தோறும், அநேக நேரத்தில் தண்ணீரில் இரைச்சல் ஒலி ஏற்பட்டு, பின்னர் குமிழ்கள் ஏற்படுகின்றது, மேலும் வாயு வெளியேறும் போது தண்ணீரில் இறங்கினால், நன்கு பயன் ஏற்படுகின்றது. ஐஸ்லாந்தில் வெந்நீர் ஊற்றுகள் காணப்படுகின்றன. வியோமிங்கிலும் வெந்நீர் ஊற்றுகள் கலங்குதல்கள் ஏற்படுகின்றன.

## "மூலப்பிரதியைப் பார்த்து எழுதும், ஓர் எழுத்தாளரின் ஓரக்குறிப்பு"

ஐந்து மண்டபங்களை உடைய இரக்கத்தின் வீடானது, கலக்கப்படும் குளத்தைப் பயன்படுத்த விருப்பப்படுபவர்களின் நன்மைக்கு ஏதுவாகவும், சௌகரியத்திற்கு ஏதுவாகவும் பொது மருத்துவ இல்லமாகக் கட்டப்பட்டது; இதனால்தான் பெரும் திரளான வியாதியஸ்தர்களும், கண் குருடாயப் போனவர்களும், வாடி வதங்கிப் போனவர்களும் கலக்கப்படும் தண்ணீரின் மூலம் நன்மை அடையலாம் என்று வாய்ப்புக்காக இந்த மண்டபங்களில் காத்துக்கிடந்தனர் என்று நாம் பார்க்கின்றோம். பழைய மூல கிரேக்க பிரதிகளில் யோவான் 5:4-ஆம் வசனத்தின் முதற்பகுதி தவிர்க்கப்பட்டுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும். இவ்வார்த்தைகள் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டவைகளாகவும், அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டவைகளாகவும் இருக்கவில்லை. மாறாக பிற்காலங்களில் யோவான் எழுதின காரியங்களோடு சேர்க்கப்பட்ட வார்த்தைகளாகும். அநேகமாக ஜனங்கள் கொண்டிருக்கும் கண்ணோட்டத்தை விளக்கும் ஓரக்குறிப்பாக (marginal Note) இருக்க வேண்டும். அல்லது ஓரக்குறிப்பை எழுதின (வேதாகம மூலப்பிரதியைப் பார்த்து எழுதும்) எழுத்தாளரின் கருத்தாகக் கூட இருக்கலாம். இன்னும் சில வருடங்களுக்குப் பின்னர் வந்த வேறு ஒரு மூலப்பிரதியைப் பார்த்து எழுதும் எழுத்தாளரே (copyist) இந்த ஓரக்குறிப்பானது, வசனத்தில் விடப்பட்டுள்ளது என்று எண்ணி அதை, தான் பார்த்து எழுதிக் கொண்டிருக்கும் மூலப்பிரதியில் இடம்பெறும் வசனத்தோடு சேர்த்து விட்டார்; மீண்டும் இதே மூலப்பிரதி மீண்டும் மீண்டுமாக அப்படியாகவே பார்த்து எழுதப்பட்டு, இன்று நம்மிடத்தில் வந்துள்ளது. கடந்த 50 வருடங்களுக்கு முன்பு வரையிலும், அதாவது மிகப் பழமையான கிரேக்க மூலப்பிரதி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு வரையிலும் இந்த வார்த்தை தெய்வீக வார்த்தைகளின் பாகங்களாய் இராமல், அநேகமாக தற்செயலாய்ச் சேர்க்கப்பட்ட பாகம் என்று யாராலும் அறிந்துக்கொள்ள முடியவில்லை.

கடந்த பாடங்களில், நமது கர்த்தர் கலிலேயாவில் இருந்ததைக் குறித்தும், கானாவூரில் அவர் செய்திட்ட இரண்டாம் அற்புதம் குறித்தும் பார்த்தோம். இந்தப் பாடத்தில் யூதர்களின் வழக்கத்தின்படி மாபெரும் பண்டிகைகளில் ஒன்றை அனுசரிப்பதற்கெனக் கர்த்தர் மீண்டுமாக எருசலேமுக்கு வருவதைப் பார்க்கின்றோம். அவர் "இரக்கத்தின் வீடு" எனும் பெதஸ்தாவுக்கு வந்த போது, இப்பாடத்தில் நாம் பார்க்கப் போகின்ற அற்புதத்தைச் செய்யும்படிக்கு அவர் நின்றார். சூழ்நிலையை நமது மனங்கள் நன்கு கிரகித்துக்கொள்ளத்தக்கதாக, இன்றைய கால எழுத்தாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ள இப்படியான இரண்டு மருத்துவ பொது இல்லங்களைக்குறித்து நாம் இங்குக் குறிப்பிடுகின்றோம். **போவட்** அவர்கள் கலிலேயாவின் கடல் அருகே உள்ள திபேரியாவிலுள்ள இப்ராஹிம் எனும் குளிக்கும் இடம் குறித்துப் பின்வருமாறு கூறுகின்றார்:-

"தண்ணீர் ஊற்றுக் காணப்படும் குழியைச் சூழ்ந்து பல மண்டபங்கள்/அறைகள் உள்ளது. இந்த மண்டபங்களில் மிகுந்த வேதனை மற்றும் உபத்திரவங்களுடன் திரளான ஜனங்கள் படுக்கைகளில் கிடத்தப்பட்ட நிலையில் அல்லது போர்வைகளினால் மூடப்பட்ட நிலையில் மிகவும் நெருங்கி, நெருங்கி காணப்படுவதை நாம் பார்க்கலாம்.

**சோலா** அவர்கள் லூர்துஸில் உள்ள கிணற்றைச் சூழ்ந்து காணப்படும் மக்கள் கூட்டத்தைக் குறித்துப் பின்வருமாறு கூறுகின்றார்:-

"அங்கு எவ்விதமான ஒழுங்கும் காணப்படுவதில்லை; அனைத்து வகையான வியாதியஸ்தர்களும் மற்றும் நம்மை நடுங்க வைக்கும் அளவுக்கு மிகவும் அரிதானதாயும் மற்றும் மிகவும் பயங்கரமாயுள்ள வியாதிகளை உடையவர்களும் ஒன்றாய்க் கூடிக் கிடக்கும் நரகம் போன்று அவ்விடம் காட்சியளிக்கின்றது.

## "அவருடைய வல்லமைக்கான அடையாளம்"

இப்படிப்பட்டதான ஒரு காட்சியையே, நமது அருமையான மீட்பர், இந்த இரக்கத்தின் வீட்டிற்கு அருகாமையில் வந்த போது கண்டார். அவருக்கு முன் காணப்பட்ட அந்தப்

பாவப்பட்ட வியாதியஸ்தர்களை அவர் பார்த்த போது, அவருக்கு எந்த அளவுக்கு அனுதாபம் ஏற்பட்டிருக்கும் என்பதை நாம் விவரித்துக் கூறுவதைக் காட்டிலும், கற்பனை செய்து புரிந்துக்கொள்ளலாம். இவ்விதமான துன்பமும், வேதனையும் உடைய காட்சிகளை நாம் பார்க்கையில், நம்முடைய விழுந்துபோன இருதயங்களே ஆழமாகத் தொடுமாயின், இப்படிப்பட்டக் காட்சியைப் பார்க்கும்போது, நமது கர்த்தருக்கு எத்துணை ஆழமான அனுதாபம் ஏற்பட்டிருக்க வேண்டும். முழு உலகத்தையும் அன்புகூர்ந்தபடியால், பிதாவோடு தமக்குக் காணப்பட்ட மகிமையைத் துறந்து, மனித சுபாவம் எடுத்து, மரிக்கவும், நம்மை மீட்பதற்கும், இறுதியில் பாவம் மற்றும் அதன் தண்டனையான நோய் மற்றும் மரணத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்கும் என வந்தவர், கலக்கப்படும் தண்ணீரிலிருந்து நன்மை பெற்றுக்கொள்ளலாம் என்ற வாய்ப்பிற்காக கும்பல் கும்பலாக தமக்கு முன் காணப்பட்ட, பாடுபடுகிற ஜனக்கூட்டத்தைக் கண்டு அனுதாபப்பட்டிருப்பார் என்பது நிச்சயமே. இப்படியாக அவருக்கு மிகுந்த அனுதாபம் ஏற்பட்ட போதிலும், அக்கூட்டத்தாரில் ஒருவரையே நமது கர்த்தர் சொஸ்தப்படுத்தினதாக பதிவுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆனால் இப்படிச் செய்வது அவருடைய வழக்கமே; மேலும் இவ்வழக்கமானது அவருடைய பிரசங்கங்களிலும் விளக்கப்பட்டுள்ளது; அதாவது பஞ்சக் காலத்தில் இஸ்ரயேலில் எத்தனையோ விதவைகள் இருந்த போதிலும், சாறிபாத் ஊரிலுள்ள விதவையினிடத்திற்கு எலியா அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், இஸ்ரயேலில் எத்தனையோ குஷ்டரோகிகள் இருக்க, சீரியாவைச் சேர்ந்த நாகமான் மாத்திரமே குஷ்டரோகத்திலிருந்து எலிசாவினால் சொஸ்தமாக்கப்பட்டார் என்றும் நம் கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார் (லூக்கா 4:27). இதைப்போலவே, இரக்கத்தின் வீட்டில் திரளான, ஜனக்கூட்டம் இருந்தாலும் கூட இயேசு, ஒருவரை மாத்திரமே சொஸ்தப்படுத்தினார்.

இதற்கான காரணத்தை அறிந்துகொள்வது கடினமான காரியமல்ல; நமது கர்த்தர், தம்முடைய முதலாம் வருகையின் போது உலகத்தைப் பாவம், மரணம் மற்றும் சாத்தானின் வல்லமையின்று விடுவிக்கும்படிக்கு வராமல், மாறாக உலகத்தை மீட்டுக் கொள்ளும்படிக்கே வந்தார்; இன்னுமாக முதலாம் வருகையின் போது, அவர் அளித்த விடுதலைகள் எதுவாயினும், அவைகள் முழுமையான விடுதலையாய் இராமல், பகுதியளவிலான விடுதலையாகவும், அவருடைய வல்லமைக்கான விளக்கமாகவும் மாத்திரமே இருந்தது, அதாவது பார்ப்பதற்கு விசுவாச கண்களும், கேட்பதற்கு விசுவாச செவிகளும் உடையவர்கள் சார்பாக அவர் செய்யப் போகும் மீட்பினுடைய வேலையின் மீதும், அவர் மீதும் விசுவாசத்தைத் தூண்டி விடுவதற்கென நோக்கம் கொண்டுள்ள அவருடைய வல்லமைக்கான விளக்கங்களாக மாத்திரமே இருந்தது. இந்தக் கேட்கும் செவிகளையும், பார்க்கும் கண்களையும் உடையவர்களாகிய சொற்பமான பேர்களே அவருடைய வார்த்தைகளைக் கேட்டார்கள், மீதமானவர்கள் அனைவரும் குருடான நிலையிலேயே காணப்பட்டு விட்டார்கள்; அவர்கள் இன்று வரையிலும் கூட மாபெரும் மேசியாவை அறிந்துக்கொள்ளவில்லை. இந்தக் குருட்டு நிலையிலிருந்து தேவனுடைய ஏற்றவேளையில் அனைத்து இஸ்ரயேலர்களும் இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள் என்ற பாக்கியமான வாக்குத்தத்தத்திற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்வோமாக. "மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஓர் இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில் புறஜாதியாருடைய நிறைவுஉண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார்” (ரோமர் 11:25-26). இஸ்ரயேலர்கள் மாத்திரமல்லாமல், பூமியின் குடிகள் அனைத்தும் குருடான நிலையிலிருந்து இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள், "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்” (ஏசாயா 35:5).

## “சாத்தானே மறைமுகமாகத் துன்புறுத்துகிறவன்”

நமது ஆதி பெற்றோர்களிடம் சாத்தானால் நடப்பிக்கப்பட்ட ஆதி வஞ்சனையே மன ரீதியிலும், சரீர ரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் முழு மனுக்குலத்திற்கும் உள்ள பிரச்சனைக்குரிய காரணமாக உள்ளது என்று நாம் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டாலும் வியாதி விஷயத்தில், அவைகள் எதிராளியானவனுடைய நேரடி அல்லது மறைமுகமான வேலை என்பதை நாம் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டாலும், வியாதிப்பட்டவர்கள்

ஒவ்வொருவரும் சாத்தானால் கட்டப்பட்டுள்ளார்கள் என்று நாம் கூறினாலும் சாத்தான் கட்டப்படுவதற்கும், அவனுடைய கைதிகளை விடுவிப்பதற்குமான வேளை/காலம் (இப்பொழுது) வந்துள்ளது என்று புரிந்துக் கொள்பவர்களில் நாம் ஒருவராக இருப்பதில்லை. இதற்கான வேளை தெய்வீக ஏற்பாட்டின்படி எதிர்க்காலத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, அதாவது ஆயிரம் வருஷம் அரசாட்சியில் நடக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. நமது கர்த்தர் அனைத்து வியாதியஸ்தர்களுக்கும் அற்புதம் பண்ணாததினால், இன்றைய நாட்களிலும் கூட ஏதாகிலும் இயற்கையான விதத்திலோ அல்லது அற்புதமான வல்லமையினாலோ அனைத்து வியாதியஸ்தர்களும் சொஸ்தமாக்கப்படுவார்கள் என்று நாமும் எதிர்பார்க்கக்கூடாது. சாத்தானுடைய ஒவ்வொரு தீமையின் ஆற்றலும் சர்வ வல்லமையுள்ளவருடைய வல்லமையின் கட்டுப்பாட்டிற்குள் காணப்படுகின்றது என்பதையும், கர்த்தருக்கு தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களின் விஷயத்தில் அவர்களின் நலன் கருதி, அவர் அனைத்துத் தீமையின் ஆற்றல்களை நன்மைக்கு ஏதுவாக மாற்றிப்போட சித்தமும், வல்லமையுள்ளவராய் இருக்கின்றார் என்பதையும், அவர்களுக்கு அவர் அனுமதிப்பது எதுவாயினும் அது அவர்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாகவே முடியும் என்பதையும் நாம் நினைவில்கொள்ளும்போது, நமக்கு ஆறுதலாய் இருக்கின்றது.

நமது கர்த்தருடைய அற்புதங்கள், வரவிருக்கின்ற அவருடைய மகிமையை வெளிப்படுத்தினது என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. வெகு சீக்கிரத்தில் அதாவது அவருடைய ஆயிரவருட ஆளுகையின்போது, நமது அருமையான மீட்பர் உலகத்திற்காக நிறைவேற்றப் போகும், பாவம், வியாதி மற்றும் மரணத்திலிருந்துள்ள மாபெரும் சீர்த்திருத்துதலின் வேலைக்கான காட்சிகளாக அல்லது விளக்கங்களாக அல்லது படிப்பினைகளாகவே இந்த அற்புதங்கள் காணப்பட்டன. அவருடைய சபைகளாகிய நாம் (ஆயிரம் வருஷம் அரசாட்சியின்போது) அவரோடு சேர்ந்து, அவருடைய வல்லமையிலும், மகா மகிமையிலும், சிலாக்கியங்களிலும் பங்கடைவோம். கர்த்தருடைய முதலாம் வருகையின்போது, அச்சமயத்தில் காணப்பட்ட ஒட்டுமொத்த வியாதியஸ்தர்கள், குருடர்கள் மற்றும் உடல் செயலிழந்த நிலையில் காணப்படுபவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அவருடைய அற்புதமான வல்லமையினால் பயன்/நன்மை அடைந்தவர்கள் சொற்பமானவர்களாகவே இருந்தார்கள். கர்த்தருடைய எதிர்க்கால வல்லமையினை இந்த அற்புதங்கள் விளக்குவதோடல்லாமல், புதிய யுகத்தை அதாவது சுவிசேஷ யுகத்தை ஸ்தாபிக்கும் விஷயத்தில் பிதாவினுடைய பிரதிநிதிகளாகக் கர்த்தரும், அவருடைய அப்போஸ்தலர்களும் இருக்கின்றார்கள் என்பதற்குச் சாட்சி பகருகின்றதாயும் இருந்தது. இந்தச் சுவிசேஷ யுகமானது, யூத யுகம் மற்றும் மோசேயின் மூலம் வழங்கப்பட்ட அதன் நியாயப்பிரமாணத்தினிடமிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்தது.

## “தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சொஸ்தமாக்கப்படுதல்”

கர்த்தர் தம்முடைய வல்லமையையும், வரவிருக்கின்ற தமது மகிமையையும் வெளிப்படுத்தும் பொருட்டு அந்தத் திரளான வியாதியஸ்தருடைய கூட்டத்திலிருந்து, அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட அந்த ஒரு மனுஷனைக் குறித்து இங்குப் பேசுவது ஏற்றதாய் இருக்கும். மற்றவர்களையெல்லாம் விட்டுவிட்டு, இந்த ஒரு மனுஷனை மாத்திரம் ஏன் கர்த்தர் தெரிந்துக்கொண்டார் என்று பதிவுகள் நமக்கு எதுவும் தெரிவிக்கவில்லை; எனினும் 38 வருடங்களாய் வியாதிப்பட்டிருந்த இந்த மனுஷன் தனக்குள் ஓரளவு பாவத்திற்கு மனம் நொந்து வருத்தம் அடைந்திருக்க வேண்டும் என்றும், நீதியின்பால் ஓரளவுக்கு விருப்பம் கொண்டிருந்திருக்க வேண்டும் என்றும், துன்பம் எனும் கரத்தின் கீழ், கடந்து போன 38 வருடங்களாக சில விலையேறப்பெற்ற படிப்பினைகளைப் பெற்றிருந்திருக்க வேண்டும் என்றும், இவ்விதமாய் இவர் சொஸ்தமாக்கப்படும் சலுகையை/உதவியைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்குள் வந்திருக்க வேண்டும் என்றும் நாம் எண்ணுகின்றோம். இக்காரியங்கள் இந்த யுகத்தின் மாம்சீக ஆசீர்வாதங்களைக் காட்டிலும் மிக விலையேறப் பெற்ற ஆசீர்வாதங்கள் எனக் கர்த்தரால் பரிமாறப்பட்டு வரும் கிருபையின் சலுகைகள் விஷயத்திலும் உண்மையாகவே இருக்கின்றன.

கர்த்தர் தமது சத்தியம் மற்றும் கிருபை குறித்த அறிவு வழங்கும் விஷயத்தில், ஏன் அவர் சிலரைக் காட்டிலும் வேறு சிலருக்கு அதிகமாய்ச் சலுகைக் காட்டுகின்றார் என்பது நமக்குத் தெரியவில்லை, எனினும் இவ்விஷயத்தில் ஒரு படிப்பினை உள்ளது என நாம்

அனுமானிக்கின்றோம்; அதென்னவெனில் இருதயத்தின் நேர்மை, பாவத்திற்காக மனவருத்தங்கொள்ளுதல் மற்றும் தேவனுக்கடுத்தக் காரியங்களில் ஈடுபடுவதற்கு விருப்பங்கொள்ளுதல் ஆகியவைகளைக் கர்த்தர் பார்க்கின்றார் என்பதேயாகும். தேவன் விசேஷமான சலுகையை/கிருபைகளை அளிக்க வேண்டும் என்று விரும்பும் போது, அதை அவர் மனம்போனப் போக்கில் வழங்குவதில்லை, மாறாக சின்னஞ்சிறிய விசுவாசம் (அ) தகுதியின் அடிப்படையிலேயே வழங்குகின்றார் என்று நாம் அனுமானிக்கின்றோம். ஆனால் இங்குச் சொஸ்தமாக்கப்பட்ட இந்த மனுஷனுடைய விஷயத்தில், இந்த மனுஷனுக்கு மிகுந்த விசுவாசம் காணப்பட்டது என்று எவ்விதமான பதிவுகளும் இல்லை. மாறாக அம்மனுஷனிடத்தில் எவ்விதமான விசுவாசமும் இல்லை என்றும், அம்மனுஷனுக்கு கர்த்தர் யார் என்பது தெரியாது என்றும், தன்னை அவர் சொஸ்தப்படுத்தின பிற்பாடே அவரை யார் என்று அம்மனுஷன் அறிந்துக்கொண்டார் என்றுமே நாம் அப்பதிவுகளிலிருந்து அறிந்துக்கொள்கின்றோம்.

## "சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?"

"நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று நமது கர்த்தர் தம்முடைய பின்னடியார்களை நோக்கி, ஏற்கெனவே கூறின வார்த்தைகளானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் நிறைவேறியுள்ளது (யோவான் 14:12); மாம்ச கண்களினுடைய பார்வையை மீண்டும் கொடுப்பதைப் பார்க்கிலும், புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பது மாபெரும் கிரியை ஆகும்; சுபாவத்தின்படியான செவியின் கேட்கும் திறனைத் திரும்பக் கொடுப்பதற்குப் பதிலாக, புரிந்துக்கொள்ளுதலின் செவிகளைத் திறப்பது என்பது மாபெரும் கிரியையாய் இருக்கும். பாவத்திற்கு அடையாளமாய் இருக்கும் குஷ்டரோகத்தைச் சொஸ்தப்படுத்துவதைப் பார்க்கிலும் பாவத்திலிருந்து சொஸ்தப்படுத்துவது மாபெரும் கிரியை ஆகும்; மாம்ச கால்களுக்குப் பெலத்தைத் திரும்பிக் கொடுப்பதைப் பார்க்கிலும் விழுகையின் காரணமாக முழு மனுக்குலத்திற்கும் ஏற்பட்ட பலவீனத்தையும், முடமாய்ப் போன நிலையையும் சரிச் செய்வது என்பது மாபெரும் கிரியை ஆகும். மேற்கூறிய இக்கருத்துக்களுக்கு இசைவாக நமது கர்த்தர் தாம் சொஸ்தப்படுத்தின மனுஷனை நோக்கி, "நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?" என்று கேட்டு, அக்காரியத்தை அம்மனுஷனுடைய விருப்பத்திற்கே விட்டுவிட்டது போன்று, இன்று ஒழுக்க ரீதியிலான குறைபாடுகளிலிருந்து சொஸ்தப்படுத்தப்படுபவர்களின் விஷயத்திலும், இப்பொழுது ஆவிக்குரிய விஷயங்களில் வெளிச்சமூட்டப்படுபவர்களின் விஷயத்திலும் அப்படியாகவே விட்டுவிடுகின்றார்; அதாவது அவர்களுக்கான உதவி, அவர்களுக்குள்ளாகவே காணப்படுகின்றது. ஒருவேளை அவர்களுக்குக் கேட்கக்கூடிய செவிகளும், புரிந்துக்கொள்ளக்கூடிய கண்களும் இருந்தால், அதாவது கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய ஈவை அவர்களால் புரிந்துக்கொள்ள முடிந்ததெனில், அவர்களுக்கான கேள்வி என்னவெனில், "நீ சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?" என்பதேயாகும்.

தேவனுடைய கிருபை குறித்த காரியங்களினால் கொஞ்சம் கேட்கவும், காணவும், புரிந்துக்கொள்ளவும் முடிகின்றவர்களில் அநேகர் ஒழுக்க ரீதியில் குஷ்டரோகிகளாகவும், மன ரீதியில் குருடாகவும், பாதிச் செவிடாகவும் இருக்கின்றார்கள், மேலும் இத்தகையவர்கள் தங்களால் புரிந்துக்கொள்ள முடிந்த அந்தக் கொஞ்சமான காரியங்களை ஏற்றுக்கொண்டு, சொஸ்தமடைய/முழுமையடைய விரும்பினால், அதன் மூலம் அவர்கள் கிருபை மேல் கிருபை அடைந்து, அறிவு மேல் அறிவு அடைந்து, ஜெயம் மேல் ஜெயம் அடைந்து, இறுதியில் கர்த்தர் தமது "சிறு மந்தையினருக்கு" அளித்துள்ள மாபெரும் ஆசீர்வாதம் முழுவதையும் அடைவார்கள்; தேவனுடைய சுதந்திரர்கள் ஆகுவதும், நாம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு, அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்கள் ஆகுவதும், அவரோடு கூடப் பாடுபட்டால், அவரோடு கூட மகிமை அடைவதுமானவைகளே சிறுமந்தையினருக்குக் கொடுக்கப்படும் மாபெரும் ஆசீர்வாதங்கள் ஆகும்.

மேற்கூறப்பட்டுள்ள இக்கருத்துகளுக்கு இசைவாக, நாம் அனைவரும், நம்முடன் தொடர்புக்குள் வரும் அனைவரையும் மற்றும் தேவனுடைய கிருபையைப் புரிந்துக்கொள்ளவோ (அ) உணர்ந்துக்கொள்ளவோ (அ) பார்க்கவோ (அ) கேட்கவோ

வல்லமை இல்லாத அனைவரையும், நாம் அனுபவித்த அதாவது, "ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையாகிய" தெய்வீக உவியை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகப் பரிந்துரைக்கும்படிக்கு நமது செல்வாக்கைப் பயன்படுத்துவோமாக. கர்த்தர் கேட்ட கேள்விக்கு உறுதியாக பதில் கொடுப்பவர்கள் மாத்திரமே, நாம் பிரயாசம் எடுப்பதற்குப் பாத்திரமாய் இருப்பார்கள். கர்த்தரிடத்தில் ஒருவரது விருப்பம் தெரிவிக்கப்பட வேண்டும், இல்லையேல் அவரது ஆசீர்வாதம் இருதயத்திலும், ஜீவியத்திலும் கடந்து வரமுடியாது; பாவ நோயில் காணப்படுபவர்கள் "நீ சொஸ்தமாக வேண்டும் என்று விரும்புகிறாயா?" என்ற கேள்விக்கு உறுதியான பதில் அளிக்க ஆயத்தமாக்கப்படுவதற்கு ஏதுவாக, அவர்களுடைய இருதயங்களில் ஒரு கிருபையான அற்புதத்தைக் கர்த்தர் செய்வார் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியாது. சொஸ்தமடைய இவ்விதமாய் விருப்பம் உடையவர்கள் மாத்திரமே, இந்த யுகத்தில் நன்மை அடைய முடியும், ஏனெனில் இதுவே தெய்வீக ஏற்பாடாகக் காணப்படுகின்றது; ஏனெனில் கர்த்தர் இப்படிப்பட்ட விருப்பம் உள்ளவர்களையே தேடுகின்றார் மற்றும் இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே தம்மை ஆவியிலும், உண்மையிலும்/சத்தியத்திலும் தொழுதுகொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார். மேற்கூறப்பட்ட காரியங்களுக்கு இசைவாகவேதான், நமது கர்த்தர், தம்முடைய முதலாம் வருகையின்போது, தம்முடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் அநேகரிடம் அவர், "வாழ்வு பெறுமாறு என்னிடம் வர உங்களுக்கு விருப்பம் இல்லை" (திருவிவிலியம்; யோவான் 3:40) என்று கூறியுள்ளார். கர்த்தரிடத்தில் வருவது என்பது, அவருடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்வதையும் மற்றும், "ஆம் கர்த்தாவே, சொஸ்தமாக வேண்டுமென நான் விரும்புகின்றேன்" என்று அவரது கேள்விக்குப் பதிலளிப்பதையும் குறிக்கின்றது.

இவர்கள் சொஸ்தமாக்கப்படும் காரியமானது உடனடியாக நடைப்பெறாமல், படிப்படியாக நடைப்பெறும் காரியமாகும். இவர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்து கொண்டிருப்பார்கள், மேலும் தற்காலத்தில் கேள்விக்கு உறுதியான பதில் அளித்துக் கொண்டு, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்க முற்படுவதின் மூலம், தங்களின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துபவர்கள் அனைவருக்கும், கர்த்தர் வாக்களித்துள்ள முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய மாற்றத்தில், இவர்களிடத்தில் கிருபையின் வேலையானது நிறைவடையும். இவர்கள் நல்ல வைத்தியனுடைய பராமரிப்பின் கீழ் வந்து, பின்னர் இறுதியில் அவர் இவர்களைத் தமக்கு ஒப்பான சாயலில் பூரணமும், நிறைவும், முழுமையும் படுத்துவார்.

## “மாபெரும் இரக்கத்தின் வீடு”

சபையின் தற்காலத்துத் தெரிந்துக்கொள்ளுதலும், சொஸ்தமடைவதற்கான/ முழுமையடைவதற்கான தற்கால சலுகைகள் மற்றும் சிலாக்கியங்களும், முதலாம் உயிர்த்தெழுதலில் நிறைவடையும். இதற்குப் பின்னர் உலகத்திற்கு ஒரு பொதுவான ஆசீர்வாதம் கடந்து வர போகின்றபடியால், தேவனுக்கு நன்றி. தேவனுடைய ஏற்றவேளையில், தேவனுடைய வாசஸ்தலமானது மனுஷர் மத்தியில் காணப்படும் என்றும், அவர் அவர்கள் மத்தியில் வாசம் பண்ணுவார் என்றுமே வேத வாக்கியங்கள் வாக்களிக்கின்றன. இது இன்னமும் வரவில்லை. மனுக்குலம் இன்னமும் சாபத்தின் கீழேயே காணப்படுகின்றனர்; சாத்தான் இன்னமும் "இவ்வுலகத்தின் அதிபதியாகவே" காணப்படுகின்றான்; நாம் இன்னமும் "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செயல்படுவது போல, பூமியிலும் செயல்படுவதாக என்று ஜெபம் பண்ணி காத்துக் கொண்டிருக்கின்றோம். தேவனுடைய வாசஸ்தலம் அல்லது வீடு, ஆயிரம் வருஷம் யுகத்தின் போதே உலகத்தில் ஸ்தாபிக்கப்படும். அது இரக்கத்தின் வீடாகக் காணப்படும்; அதாவது தெரிந்து எடுக்கப்பட்ட சிலருக்கு மாத்திரம் இரக்கத்தின் வீடாக இராது, மாபெரும் உடன்படிக்கைக்கு இசைவாக ஆபிரகாமின் நிஜமான சந்ததியாகிய அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை, கிறிஸ்து மூலம் அதாவது தலையாகிய கிறிஸ்து மற்றும் சரீரத்தின் மூலம் தேவன் "பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார்" (கலாத்தியர் 3:29).

ஆ, உண்மை; அது எத்தகைய மகத்துவமுள்ள நாளாய்க் காணப்படும்! "தேவன் அனைவருடைய கண்ணீரைத் துடைத்து விடுவார்." ஆம், அவருடைய ஜனங்களுக்கு எதிரான நிந்தனை எடுத்து மாற்றப்படும். கர்த்தருடைய ஜனங்களுக்கு அப்போது

நிந்தனைகள் காணப்படாது; "நீங்கள் தேவனுடைய அன்பையும், அவருடைய இரக்கத்தையும் மற்றும் மகா பெரும் பாவ நிவாரணத்தின் முக்கியத்துவத்தையும் குறித்துக் கூறுகின்றீர்கள், ஆனால் நாங்கள் இன்னமும் உலகத்தின் மீது பாவமும், துக்கமும், கவலையும், மரணமும் ஆளுகை செய்வதையே பார்க்கின்றோமே" என ஜனங்கள் அப்போது கர்த்தருடைய செய்தியைக் கொடுத்துக் கொண்டிருப்பவர்களை நோக்கி கேள்விக் கேட்க முடியாது. நிந்தனை முடிந்துவிடும், அப்போது சாத்தான் கட்டப்படுவான், மற்றும் கர்த்தரைப் பற்றின அறிவானது முழுப் பூமியையும் நிரப்பி, அனைவருடைய கண்ணீர்களையும், துக்கங்களையும், வலியையும், நோவுகளையும் துடைத்துப் போடுவதற்கு ஆரம்பிக்கும். இந்தத் தயவுகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அதற்கு ஏற்றாற்போல் காணப்படும் அனைவருக்கும், ஆயிரவருட அரசாட்சியின் முடிவின்போது பூரணமான திரும்பக்கொடுத்தலின் வாயிலாக அவர்களுக்குரிய ஆசீர்வாதங்களை அடைவார்கள்; ஆனால் இந்தத் தெய்வீக ஏற்பாடுகளை அக்காலத்தில் ஏற்க மறுப்பவர்களுக்கு, "இரக்கத்தின் அடிப்படையிலான அறுப்புண்டு போகுதல்" ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 3:23).

## "ஓய்வுநாளில் செய்யப்பட்டது"

நமது கர்த்தர் அற்புதத்தை நிகழ்த்தின பிற்பாடு, சொஸ்தமாக்கப்பட்டவனை நோக்கி, அவன் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லுமாறு கட்டளையிட்டார், அம்மனுஷனும் அப்படியே செய்தான். அக்காலத்தின் வழக்கத்தின்படி பயன்படுத்தப்பட்ட படுக்கையானது மிகவும் எடை குறைவானதாய்க் காணப்பட்டபடியால், அதை எடுத்துச் செல்வதற்கு கர்த்தர் கொடுத்த கட்டளையைச் செய்வதில் எவ்விதமான சிரமமும் இல்லை. ஆகவே கர்த்தர் கட்டளையிட்ட இக்காரியமானது யூதர்களின் பிரமாணத்தின்படியான ஓய்வுநாளுக்குரிய கட்டுப்பாடுகளை மீறும் விஷயமாக இருக்கவில்லை; நமது கர்த்தர் யூதனாக இருந்தபடியாலும், மற்ற யூதர்களைப் போல அவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக இருந்தபடியால், நமது கர்த்தரும் பிரமாணத்தை மீறினதுமில்லை, மற்றவர்கள் மீறும்படிக்குக் கற்றுக்கொடுக்கவுமில்லை. படுக்கையை எடுத்துக்கொண்டுப் போகும்படிக்கு அம்மனுஷனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டதற்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன; அவை பின்வருமாறு:-

(1) அம்மனுஷன், தனது படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும் காரியமானது, அவ்வற்புதத்திற்கு நேரடி சாட்சியாய் இருந்தது. இதுமாத்திரமல்லாமல் . . .

(2) இப்படிச் செய்வது என்பது மறைமுகமாக, நியாயசாஸ்திரிகள், மற்றும் வேதபாரகர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்கும், ஏனெனில் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கூறாத சில கட்டுப்பாடுகளை, அவர்கள் ஓய்வுநாளின் கட்டுப்பாடு விஷயத்தில் தொகுத்துள்ளனர். நமது கர்த்தர் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தமது வல்லமை தொடர்பான படிப்பினையைப் புகட்டினதோடல்லாமல், நியாயப்பிரமாணத்தின் சரியான அனுசரிப்பு குறித்ததான படிப்பினையையும் புகட்டினர்; அதாவது நியாயப்பிரமாணம் மனுக்குலத்திற்கான நன்மைக்கே தேவனால் ஏற்படுத்தப்பட்டதே ஒழிய, ஒழுக்கத்திற்கான விலங்கு சங்கிலியாகக் கொடுக்கப்படவில்லை என்ற படிப்பினையையும் புகட்ட இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தினார். நியாயப்பிரமாணத்தின் விளக்கங்களைப் பரிசேயர்களும், வேதபாரகர்களும், ஜனங்களுக்கு பாரமானதாகக் காட்டுகின்றார்கள் என்று வேறு ஒரு தருணத்தில் பரிசேயர்களிடமும், வேதபாரகர்களிடமும் கூறினார்; அதாவது அவர்கள் நியாயப்பிரமாணத்தின் மிகச் சிறிய அம்சங்களைத் தவறான விதத்தில் மிகவும் மிகைப்படுத்தி, ஜனங்களுக்குக் காட்டுகின்றார்கள் <u>என்றும்,</u> நியாயப்பிரமாணத்தின் நீதி, நியாயம், அன்பு மற்றும் இரக்கம் தொடர்புடைய பெரிய கோட்பாடுகளை அவர்கள் ஜனங்களுக்கு விளக்குவதை முற்றிலும் தவிர்த்து விட்டார்கள் <u>என்றும்</u> கூறியுள்ளார்.

இச்சம்பவத்தின் பதிவுகளை நாம் பார்க்கும் போது, மேற்கூறிய பலனே வந்தது. அம்மனுஷன் தனது படுக்கையைச் சுமந்து கொண்டு போனதற்காக, அம்மனுஷன் மேல் பரிசேயர்களும், வேதபாரகர்களும் குற்றம் சுமத்தினார்கள்; ஆனால் அம்மனுஷனோ தனக்கு 38 வருடங்களாக இருந்த வியாதியைச் சொஸ்தப்படுத்தினவர் இந்த விஷயத்திலும் கூடப் போதுமானஅளவு ஞானமும், அதிகாரமும் கொண்டிருப்பார் என்று நம்பி, தான் அவருடைய வழிநடத்துதலின்படி செயல்படுவதால், தான் இப்படி படுக்கையை எடுத்துக்கொண்டு

செல்வதில் தவறில்லை என்று தன் செய்கையை நியாயப்படுத்தி அவர்களுக்கு மறுஉத்தரவு அளித்தான். இவ்விதமாக அவரை ஏற்றுக்கொள்கின்றார்களா அல்லது இல்லையா என்ற பரீட்சைக்குள் அக்கால கட்டத்தில் காணப்பட்ட அந்த வகுப்பார், அதிலும் விசேஷமாக அந்தச் தேசத்தின் பிரதிநிதிகளும், தலைவர்களும் கர்த்தரை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என அவர் விசேஷமாக விரும்பினதையும் நமது கர்த்தருடைய இவ்வற்புதம் தெளிவாக அவர்களுக்குக் காட்டியது; இரண்டாவதாக இவ்வற்புதத்தின் மூலம் கர்த்தருடைய போதனைகள் மற்றும் அவருடைய நல்ல கிரியைகளுக்கும், பரிசேயர்களுடைய போதனைகள் மற்றும் கிரியை அற்ற தன்மைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் தெளிவாகக் காட்டியது.

சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் தனக்கு நடந்த சம்பவங்கள் மற்றும் தான் அடைந்த விடுதலைக்குறித்த விஷயங்களினால் மிகவும் அதிர்ச்சியடைந்தபடியால், தன்னிடம் இப்படியான அற்புதத்தைப் பண்ணினவர் யார் என்று விசாரிக்கவோ (அ) அவர் யார் என்று பார்ப்பதற்கோ ஒரு கணம் மறந்துப் போய்விட்டான்; அவ்விடத்தில் பெரும் திரளாய்க் கூடியிருந்த வியாதியஸ்தர்களின் விண்ணப்பத்திற்கு நமது கர்த்தர் மறுப்புத் தெரிவிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த விரும்பாததால், அமைதியாக அவ்விடத்தை விட்டு கடந்து போய்விட்டார். ஆகவே அற்புதம் நிகழ்ந்துள்ளதை அனைவரும் உணர்ந்துக்கொண்ட தருணத்தில், சொஸ்தமாக்கினவர் மறைந்துப் போய்விட்டார். இயேசு இந்த அற்புதத்தைத் தேவனுக்கு மகிமையாகவும், புதிய யுகத்தின் பிரதிநிதி, தாமே என்பதை கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவும் செய்தார். மேலும் திரளான வியாதியஸ்தர்களின் கூட்டத்தாரில் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன், அக்கூட்டத்தாருக்குள் சொஸ்தமாக்கப்படுவதற்கு மிகவும் பாத்திரவானாய் இருந்திருக்கிறான் என்று நாம் அனுமானிக்கின்றோம். இம்மனுஷன் தான் சொஸ்தமடைந்ததற்காக கர்த்தருக்கு தனது நன்றியையும், துதியையும் அளிக்குமாறு ஆலயத்திற்குச் சென்றபோது, இயேசு விசேஷமாக இம்மனுஷனை மீண்டும் சந்தித்தக் காரியமானது, இம்மனுஷனிடத்தில் சராசரியான குணங்களைக் காட்டிலும் அதிகமாக ஏதோ ஒன்றைக் கர்த்தர் பார்த்தபடியாலேயே அவர், இம்மனுஷனைச் சொஸ்தப்படுத்தினதோடல்லாமல், இம்மனுஷனுக்குத் தம்மை வெளிப்படுத்தவும் செய்தார் என்பதைக் காட்டுகின்றது.

## “இனிப் பாவம் செய்யாதே”

நமது கர்த்தர், சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனை, தேவாலயத்தில் கண்டு, அவரிடத்தில் கூறின வார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் உடையதாகும்; அவ்வார்த்தைகள் கர்த்தருக்குச் சொஸ்தப்படுத்துவதற்கான வல்லமை இருந்தது என்பதை மாத்திரமல்லாமல், இந்த வியாதி வருவதற்கு ஏதுவாக 38 வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்ட பாவங்கள் குறித்த அறிவும் கர்த்தருக்கு இருந்தது என்பதையும் காட்டுகின்றது. "நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனி பாவஞ்செய்யாதே” என்று கர்த்தர் அம்மனுஷனிடம் கூறினார் (யோவான் 5:14). நம்முடைய மீட்பருடைய இந்த ஆலோசனையான வார்த்தைகளில் மிக விலையேறப்பெற்ற படிப்பினைகள் உள்ளது; இப்படிப்பினைகள் அந்தப் பாவப்பட்ட மனுஷனுக்கு மாத்திரம் உதவியாய் இராமல், கர்த்தருடைய கிருபையினால் பாவ வியாதியினின்று சொஸ்தமாக்கப்பட்டவர்களுக்கும், நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கும், தேவனுடைய குடும்பத்திற்குள், தேவனுடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கும் அதிக விலையேறப்பெற்ற படிப்பினையாகவும் உள்ளது. ஆதி பாவத்திற்கான தண்டனை மிகவும் கடினமானதாய் இருந்தது, மேலும் இத்தண்டனையானது ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொருவருக்கும் காணப்பட்டது; ஆனாலும் கூட இந்த ஆதி பாவத்திற்குத் தேவன் ஒரு மாபெரும் பாவநிவாரணத்தை அருளியுள்ளார்; ஆகவே இதன் காரணமாக இறுதியில் இப்பாவத்திற்கான அனைத்துத் தண்டனைகள் மற்றும் கூலிகளிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்கான முழு வாய்ப்பும், ஒவ்வொரு மனுஷனுக்கும் இறுதியில் வழங்கப்படும். ஆனால் இப்படியாக விடுவிக்கப்படும்போது, விடுவிக்கப்படும் நம் ஒவ்வொருவரின் மேலும் ஒரு புதிய பொறுப்பு வருகின்றது. அப்போஸ்தலர் அறிவிக்கிற பிரகாரமாக நாம் சத்திய அறிவைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, துணிகரமாய்ப் பாவம் செய்வோமானால் அப்பாவங்களுக்காக எவ்விதமான பலியும் இனிச் செலுத்தப்படாது என்பதினால் நமக்கு "நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும்,

விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்” (எபிரெயர் 10:27). ஆதி பாவத்திற்கான கூலியாகிய மரணத்தையும், அதனோடு கூடத் துக்கத்தையும், வலியையும், மரித்துக் கொண்டே இருக்கும் தன்மையையும் முழு மனுக்குலமும் ருசிப்பார்த்துள்ளது. நம்முடைய அனைத்துப் பாவங்களிலிருந்தும் நாம் நீதிமானாக்கப்பட்ட பின்னர் நாம் துணிந்து, வேண்டுமென்றே, விருப்பத்துடன் செய்யும் பாவங்களுக்கான கூலி, அதாவது தண்டனை மிகவும் கேடானதாகக் காணப்படும், அதாவது ஆதி பாவத்திற்கான தண்டனையைக் காட்டிலும், மிகக் கேடானதாய்க் காணப்படும்; அது இரண்டாம் மரணமாகும்; இந்த இரண்டாம் மரணத்திலிருந்து மீட்டுக் கொள்வதற்கெனத் தேவன் எவ்விதமான ஏற்பாடுகளையும் பண்ணவில்லை என்று தேவன் நமக்கு நிச்சயத்துடன் தெரிவித்துள்ளார்; அதாவது கிறிஸ்து மீண்டுமாக ஒருபோதும் மரிக்கப் போவதில்லை. பாவ வியாதியிலிருந்து நாம் சொஸ்தமாக்கப்பட்டு, நாம் நீதிமான்களாக்கப்பட்ட பின்னர், நாம் துணிந்து பாவம் செய்தால், அதிலும் பாவம் செய்த விஷயத்தில் நம்முடைய பெலவீனமும், பூரணமற்ற தன்மையும் நம்மைச் சோதனைக்குள் விழுவதற்குக் காரணமாய் ஓரளவிற்கு இருக்கும் பட்சத்தில், நமக்கான அடிகளை (தேவன் கரத்திலிருந்து) எதிர்ப்பார்க்கலாம்; ஆனால் ஒருவேளை எவ்விதமான குறிப்பிட்ட பெலவீனம் காரணமாக இல்லாமல், நாம் துணிந்து விருப்பத்துடன் பாவம் செய்திருப்போமானால், தெய்வீக இரக்கத்தையும், மன்னிப்பையும் நாம் எதிர்ப்பார்க்க முடியாது, ஏனெனில் மன்னிக்க முடியாத அளவுக்கு நீதிக்கு எதிராக மீறுதல் செய்யப்பட்ட காரணத்தின் நிமித்தம் ஒரு புதிய மற்றும் தனிப்பட்ட விதத்தில் குற்றவாளி எனும் நிலைக்கு ஆளாகுகின்றபடியால், விடுதலையின் நம்பிக்கை இல்லாத மரணமே தண்டனையாக அளிக்கப்படுகின்றது.

---

**R2433**

# “இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகள்”

## யோவான் 5:17-27

“அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர்.” யோவான் 4:42.

இயேசு மீண்டும் யூதேயாவில் வந்தார், அநேகமாக அவருடைய வழக்கத்தின்படி அவர் பஸ்கா பண்டிகையில் கலந்துகொள்ளும்படிக்கு வந்திருக்க வேண்டும். பரிசுத்த நகரத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும், நாடுகளிலுமுள்ள பக்தியுள்ள யூதர்களைச் சந்திப்பதற்கான மிகச் சிறந்த வாய்ப்பை இந்தப் பண்டிகைக்கான கூடுகைகள் வழங்கின.

நமது கர்த்தர் எருசலேமில், ஓய்வுநாளின் நிமித்தம் அமைதியாக நடந்து கொண்டிருந்த போது, பெதஸ்தா குளத்தின் அருகே வந்தார்; இக்குளமானது அதன் சுகமளிக்கும் தன்மையின் நிமித்தம் ஆச்சரியமான கீர்த்திப் பெற்றிருந்தபடியால், குளத்தைச் சுற்றியுள்ள மண்டபங்களில் பல்வேறு வியாதிகளினால் அவஸ்தை பட்டுக்கொண்டிருந்த திரளான ஜனக்கூட்டமானது, குளத்தின் அற்புதமான செயல்பாடுகளிலிருந்து நன்மையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக காத்துக் கொண்டிருந்த நிலையில் குவிந்துக் காணப்பட்டார்கள். அன்றைய நாட்களில் பெதஸ்தா குளம் என்று அழைக்கப்பட்ட இக்குளமானது இன்று விர்ஜின் குளம் (Pool of Virgin) என்று அழைக்கப்பட்டு வருகின்றது, மேலும் விர்ஜின் குளத்தின் தண்ணீரில் ஏற்படும் விநோதமான அசைவுகள் நன்கு அறியப்பட்டவைகளாகவே காணப்படுகின்றது. ஐந்து நிமிடங்களுக்குள் இந்த ஊற்றானது 12, அங்குலம் (inch) அளவுக்கு உயர்ந்து, பின்னர் உடனடியாக தணிந்து விடுகின்றது என்று பார்த்ததாக, நம்பிக்கைக்குப் பாத்திரமான சில பயணிகள் கூறியுள்ளனர். இதே மாதிரியான விநோதமான அசைவுகள் கொண்ட வேறு நீரூற்றுகளும் உள்ளன. அவைகளில் ஒன்று ஜெர்மனியில் உள்ள கிஸ்ஸிங்கென் (Kisingen) ஆகும். இவ்வூற்றில் கூட வாயுகளும் வெளியேறுகின்றது; மேலும் தண்ணீர் சலசலப்புகளினால் கலங்கும்போது, அத்தண்ணீருக்கு மருத்துவ பண்புகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றது என்ற கீர்த்தி நிலவுகின்றது, அநேகமாக தண்ணீரின் மருத்துவ பண்புகளுக்கு, வெளியேறும் வாயுகளே காரணமாய் இருக்க வேண்டும்.

பெதஸ்தா குளத்தில் தண்ணீரானது அவ்வப்போது கலங்கும் காரியமானது யோவான் 5:3, 7-ஆம் வசனங்களில் இடம்பெறுகின்றது. ஆனால் தூதன் வந்து தண்ணீரைக் கலக்குகின்றார் என்பது குறித்த காரியங்கள் பற்றின யோவான் 5:4-ஆம் வசனத்தின் பதிவுகள் பழைய கிரேக்க மூலப் பிரதிகளில் தவிர்க்கப்பட்டுள்ளது. இக்குளத்தில் அற்புதம் எதுவும் இல்லை, மாறாக தண்ணீர் கலங்குவதற்கான காரணம் வாயுகள் அல்லது குளத்திற்கான நீர்த்தேக்கங்களில் விநோதமான கால்வாய் அமைப்பின் நிமித்தம், தண்ணீர் ஓரிடத்திலிருந்து, அவ்வப்போது வேறு தளத்தில் செல்வதினால் கூட இருக்கலாம். இக்குளத்தின் தண்ணீர் மனதையே சொஸ்தப்படுத்தினது, அதாவது மனம் சொஸ்தமடையும் போது, சரீரத்திற்கு நன்மை ஏற்படுகின்றது.

சொஸ்தமடைவதற்கெனத் தண்ணீர் கலங்கும் தருணத்திற்காகக் காத்துக்கொண்டிருந்த ஜனக்கூட்டம் அனைவரையும் கர்த்தர் சொஸ்தப்படுத்தினாரா என்பதை நாம் அறியோம்; இன்னுமாக 38 வருடங்களாக, வியாதி முற்றிப்போன நிலையில், குணமடைய வாய்ப்பில்லாமலும், அங்கிருந்தவர்களைக் காட்டிலும் மிகவும் உதவியற்ற, பரிதாபத்திற்குரிய நிலையில் காணப்பட்டவர் என்று நம்முடைய பாடத்தில் குறிப்பிடப்படும் இம்மனுஷனைத் தவிர வேறு எவரையாகிலும் கர்த்தர் சொஸ்தப்படுத்தினாரா என்பதையும் நாம் அறியோம். குளத்தில் கலக்கப்படும் தண்ணீர் மூலமும் சொஸ்தப்படுவதற்கு இம்மனுஷனுக்கு வாய்ப்புகள் இல்லாதிருந்தது, இதைக்குறித்து அம்மனுஷனே விவரித்தார்; அதாவது தண்ணீர் கலங்கும்போது, தான் குளத்தில் இறங்குவதற்கு முன்பு வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்று அம்மனுஷன் விவரித்துக் கூறினான். இந்த உதவியற்ற, நம்பிக்கையெல்லாம் முடிந்துபோன, நலிந்துபோன, மனம் உடைந்துபோன மனுஷனிடத்தில், "சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?" என்று கர்த்தர் கேட்டார். அம்மனுஷனோ தான் சொஸ்தப்பட விரும்புகின்றேன் என உடனடியாகத் தெரிவித்தான்; சொஸ்தப்படுவதற்கு முன்னதாக அம்மனுஷன் இயேசுவின் வல்லமையின் மீது விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று கூட நமது கர்த்தர் காத்திராமல், மாறாக அம்மனுஷன் தன்னுடைய கீழ்ப்படிதல் மூலம் அம்மனுஷனுடைய விசுவாசம் வெளிப்படும்படிக்குக் கர்த்தர் அனுமதித்தார். மேலும் அம்மனுஷனோ விசுவாசத்தைச் செயல்படுத்தினவனாக, தன்னைச் சொஸ்தப்படுத்தினவர் யார் என்று அறிந்துக்கொள்ளாமலேயே அதிர்ச்சிக்கும், திகைப்புக்கும் உள்ளானவனாக, தனது படுக்கையை எடுத்து நடப்பதின் மூலம் அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தான்.

இப்படியாகவே, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் நமது கர்த்தரால் நிகழ்த்தப்பட்ட பெரிய அற்புதங்களும் காணப்படுகின்றது. விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் காரணமாகப் பெலவீனர்களில் சிலரும், நன்மை பெற்றுக்கொள்வதற்கு முற்றிலும் திராணியற்றவர்களாய் இருந்த சிலரும், முற்றிலும் நம்பிக்கை தொய்ந்துப் போனவர்களாய் இருந்த சிலரும், ஒழுக்க ரீதியில் சொஸ்தப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டுள்ளனர். ஆனால் இப்படியாகச் சொஸ்தமடைந்தவர்கள், இவர்களைப் போலவே பாவத்தினால் ஏறக்குறைய வியாதிக்குள்ளானவர்களாய்க் காணப்படும் மனுக்குலத்தின் உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சொற்பமானவர்களாகவே இருக்கின்றார்கள். மனுக்குலமானது இறுதியில் (ஆயிரம் வருஷம் அரசாட்சியின் போது) மாபெரும் வைத்தியனிடம் அறிமுகப்படுத்தப்படுவார்கள்.

இந்த அற்புதமானது, இயேசுவின் மீது, பரிசேயருடைய எதிர்ப்பைக்கொண்டு வந்தது; பரிசேயர்கள் தவறான இருதய மனப்பான்மையைக் கொண்டிருந்தபடியால், ஓய்வுநாளின் உண்மையான நோக்கத்தைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டு, தெய்வீகக் கட்டளைகளுக்குள், முன்னோர்களின் பாரம்பரியத்தைப் புகுத்தி, ஓய்வுநாளை வெறும் ஆச்சாரமாக அனுசரித்து, அதன் உண்மையான அர்த்தத்தை மறைத்துப் போட்டவர்களாய்க் காணப்பட்டார்கள். மற்ற நாட்களை விட, ஓய்வு நாளிலேயே நமது கர்த்தர் அநேக அற்புதங்களைச் செய்த காரியமானது, ஓய்வுநாளை அவமதிப்பதற்கென்றோ அல்லது பரிசேயர்களைச் சினமூட்டுவதற்கென்றோ, அவரால் செய்யப்பட்டதென நாம் கருதிவிடக் கூடாது. மாறாக ஓய்வுநாளில் அவர் செய்த இந்தக் குறிப்பிடத்தக்க அற்புதங்கள் மாபெரும் ஏழாம் நாளை, மாபெரும் ஓய்வு நாளை, ஆயிரம் வருஷம் அரசாட்சியை, பூமியின் வரலாற்றில் ஏழாவது ஆயிர வருடத்தின் காலப்பகுதியை, அதாவது மனுக்குலத்தின் மீது வரும் நிஜமான மற்றும் மகா பெரிய அற்புதங்கள் வரும் காலப்பகுதியைச் சுட்டிக்காட்டுவதற்கே நிகழ்த்தப்பட்டன.

"இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (யோவான் 2:11).

கர்த்தர் எவ்விதமான தவறையும் செய்யாமல் இருந்து, அதிகமான நன்மையை மாத்திரம் செய்தபடியாலும், மற்றும் அவர் வித்தியாசமாக நியாயப்பிரமாணத்திற்கான விளக்கத்தை அளித்தபடியாலும், "முன்னோர்களின் பாரம்பரியத்தை" அவர் புறக்கணித்தப்படியாலும், அவரைக் கொன்றுபோடும்படிக்கு நாடின யூதர்களின் செயல்பாடானது, தற்கால பெயர்க் கிறிஸ்தவர்களால் இன்றும் சிலசமயம் வெளிப்படுத்தப்படும் எதிர்ப்புக்கு இணையாக உள்ளது. பெயர்க் கிறிஸ்தவர்கள், தங்களுடைய கோட்பாடுகள் மற்றும் பாரம்பரியங்களை எதிர்க்கும் ஒருவரைச் சொல்லர்த்தமாகக் கொன்றுபோட நாடாவிட்டாலும், இவர்கள் தங்களுடைய அமைப்புகளின் தவறுகள் வெளிப்படாமல் மறைக்கப்படுவதற்கென, உண்மை கிறிஸ்தவனுடைய குணலட்சணத்தைக் (பெயரை) கொன்றுப் போடுவதில் கொஞ்சமும் தயக்கம் காண்பிப்பதில்லை.

நமது கர்த்தர், தம்முடைய அதிகாரம் குறித்துக் கூறின பதிலானது, அவர்களை இன்னும் அதிகமாகச் சினமூட்டியது; அநேகர் எண்ணுவது போன்று, இயேசு இங்குத் தம்மைப் பிதா என்று கூறினதற்காக இராமல், மாறாக இயேசு தம்மைப் பிதாவினுடைய குமாரன் என்றும், தாம் செய்யும்படிக்குப் பிதா தமக்கு ஒரு வேலை கொடுத்துள்ளார் என்றும் அறிவித்தப்படியாலே அவர்கள் சினம் கொண்டார்கள். இங்கு இயேசு தம்மைப் பிதா என்று கூறினதாக, யூதர்களும் தவறாகத் புரிந்துக்கொள்ளவில்லை; இயேசு தம்மைத் தேவனுடைய குமரான் என்று கூறும்போது, அவர் பரிசேயர்களைக் காட்டிலும், மிகவும் உயர்ந்த கனமும், ஸ்தானமும் தமக்கு உள்ளது என்றும், பிதாவுடைய சுபாவத்தில், அவருடன் நெருக்கமான உறவுகொள்ளும் ஸ்தானத்தில் தாம் இருப்பதாகக் கர்த்தர் கூறினார் என்றும் அவர்கள் புரிந்துக்கொண்டபடியாலே, அவர் மேல் சினம் கொண்டார்கள்; இப்படியாகக் கூறுவது என்பதைத் தேவதூஷணமாக அவர்கள் கருதினார்கள். நம்முடைய நாட்களில் காணப்படும் பரிசேயர்கள் நமது கர்த்தர் உரிமை பாராட்டின விஷயங்களையும் தாண்டி, அவர் தமக்கென ஒருபோதும் உரிமை பாராட்டிக்கொள்ளாதவைகளை, அவருக்கென உரிமை பாராட்டிக் கொண்டிருக்கின்றனர், அதாவது அவர்தான் பிதா என்றும், அவர் எப்போதும் பிதாவாகவும், குமாரனாகவும் இருக்கின்றார் என்றும், அவர்கள் இருவரும் ஒருவர் என்றும், அவர்கள் ஒரே நோக்கம், மனம், சித்தம், உணர்வுடைய இருவராயிராமல் ஒருவர் என்றும், கர்த்தருக்காக உரிமை பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். இப்படியாக கர்த்தருக்கு உரிமைப் பாராட்டிக் கொண்டிருப்பவர்கள், இன்றைய நாட்களில் வேதவாக்கியங்களின் அடிப்படையில் தேவனுடைய குமாரர்கள் என்று உரிமை பாராட்டிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய சகோதர சகோதரிகளுக்கு எதிராக மிகவும் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர். 2 பேதுரு 1:4-ஆம் வசனத்தை மையமாகக் கொண்டு, டான் வெளியீட்டில் வந்த சபைக்கான, "பரம அழைப்பு" தொடர்பான கட்டுரைக்கு, ஓகியோவிலுள்ள முக்கியமான இறையியல் கல்லூரியைச் சேர்ந்த முக்கியமான பேராசிரியரும், டாக்டர் ஆப் டிவைனிட்டியுமானவர் (Doctor of Divinity) கீழ்த்தரமான விதத்தில் விமர்சனம் வெளியிட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.

"மகன் தாமாக எதையும் செய்ய இயலாது" (யோவான் 5:19; திருவிவிலியம்) என்று கர்த்தர் கூறின வார்த்தைகள், குமாரன்தான் பிதா என்ற திருத்துவ கொள்கைவாதிகளுடைய பொதுவான கருத்துக்கு எதிர்மாறாய் உள்ளது; இன்னுமாக பிதாவும், குமாரனும் வல்லமை மற்றும் மகிமையின் விஷயத்தில் ஒன்றாய்/சரிசமமாய் இருக்கின்றார்கள் என்ற கேட்டிசம் (Catechism; வினா விடையாக கற்பிக்கப்படும் பாடம்) கூற்றிற்கும் கூட, இந்தக் கர்த்தருடைய வார்த்தைகள் முற்றிலும் எதிர்மாறாகவே உள்ளது. "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருக்கின்றார்" (வசனம் 20). மேலும் பிதா, குமாரன் மீது கொண்ட அன்பின் காரணமாக பெரிய வியப்பிற்குரியவைகளையும்/கிரியைகளையும், பெரிய ஆச்சரியங்களையும் பிதா, குமாரனுக்குக் காட்டியுள்ளார், காட்டிக்கொண்டிருக்கின்றார், இன்னமும் காட்டுவார். சுவிசேஷ யுகத்தின் புத்திரர்களின் மூத்த சகோதரனாகிய நமது கர்த்தர் இயேசுவுக்குப் பிதா எவைகளையெல்லாம் வெளிப்படுத்துகின்றாரோ, அவற்றையெல்லாம், நமக்கு கர்த்தர் இயேசு வெளிப்படுத்துவார் என்று கர்த்தர் இயேசு நமக்கு வாக்களித்துள்ளார். இவ்விஷயம் குறித்து, வெளிப்படுத்தல்

புஸ்தகத்தில் மிகத் தெளிவாக நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" (யோவான் 15:15). "சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்" (வெளிப்படுத்தல் 1:1). இன்னும் ஏற்றகாலத்தில், நமது கர்த்தரால், அவருடைய முதலாம் வருகையின்போது நிகழ்த்தப்பட்டவைகளைக் காட்டிலும் மாபெரும் கிரியைகளை அவர் செய்யும்போது, நாமும் அவரோடு கூட அதில் பங்குப்பெறுவோம் என்று நமது மூத்த சகோதரனும், நமது மணவாளனும், நமது அதிபதியுமானவர் வாக்களித்துள்ளார். "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" (யோவான் 14:12).

கர்த்தர் குறிப்பிட்ட மாபெரும் கிரியைகளில் ஒன்று மரித்தோரின் உயிர்ப்பிக்குதல் ஆகும்; மரித்தோரை உயிரோடு எழுப்புவதற்கான வல்லமை பிதாவுக்கு இருந்தது போன்று, இந்த வல்லமை குமாரனுக்கும் அருளப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் பேசும்போது, அவர் லாசரு, யவீருவின் மகள் மற்றும் நாயீன் ஊர் விதவையின் மகன் ஆகியவர்களை உயிரோடு எழுப்பப்பட்டது தொடர்பாகவே கூறினார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இவர்கள் உயிரோடு மாத்திரமே எழுப்பப்பட்டார்கள் (awakenings); இவர்களின் விஷயத்தில் உயிர்த்தெழுதல் (Resurrection) நடக்கவில்லை; இவர்கள் மரணத்திலிருந்து முற்றிலுமாகப் பூரணமான ஜீவனுக்குள் கொண்டுவரப்படவில்லை. நமது கர்த்தர் எதிர்க்காலத்தின் சம்பவங்களை நினைவில் கொண்டவராக, சபையானது மகிமை, கனம் மற்றும் அழியாமைக்குள் உயிர்த்தெழுப்பப்படுவதையும், பின்னர் ஆயிரம் வருஷம் யுகத்தில் உலகம் (நியாயத்தீர்ப்பிற்காக) உயிர்த்தெழுப்பப்பட போவதையும் கருத்தில் கொண்டவராக இதைக் கூறினார்.

மேற்கூறப்பட்ட இக்கருத்துக்கள் யோவான் 5:22-ஆம் வசனத்தில் வெளிப்படுகின்றது; அதாவது, "பிதாவானவர், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று கர்த்தர் கூறினார். நியாயத்தீர்ப்பில் வெற்றிகரமாக தேறுபவர்களுக்கே உயிர்த்தெழுதலின் ஜீவன், பலனாகக் கொடுக்கப்படுகின்றது. பரம அழைப்பு மற்றும் மகிமை, கனம், அழியாமைக்குரிய இவ்வழைப்புக்கான இடுக்கமான வழியின் நிபந்தனைகளின் கீழ், இந்தச் சுவிசேஷ யுகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சையில், "ஜெயங்கொண்டவர்களாக" வெளிப்படுபவர்களுக்கான பலனாக முதலாம் உயிர்த்தெழுதல் சம்பவிக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தில், இப்பொழுது சபையானது, இந்தப் பரம அழைப்பிற்கான நிபந்தனைகளின் கீழ் நியாயத்தீர்ப்பில், பரீட்சையில் உள்ளது. கர்த்தர் தம்முடைய சொந்த பலியினால் மீட்டுக்கொண்ட உலகத்தின் மனுக்குலத்தையும் கூட ஆயிரம் வருஷம் யுகத்தின் போது நியாயந்தீர்ப்பார்; மேலும் உலகம் நியாயம் தீர்க்கப்படும் விஷயத்தில், இப்பொழுது நியாயத்தீர்ப்பு நடந்தேறிக் கொண்டிருக்கும் மணவாட்டி வகுப்பாரும் கர்த்தரோடு இணைந்து செயல்படுவார்கள் எனக் கர்த்தர் வாக்களித்துள்ளார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" (1 கொரிந்தியர் 6:2). ஆயிரம் வருஷம் யுகத்தில் மனுக்குலம் எழுப்பப்பட்டு, (awaken) நியாயத்தீர்ப்பின் பரீட்சையின் கீழ் விடப்படுகின்றனர், மேலும் இவர்களில் யார் யார் நீதிக்கு இசைவான குணலட்சணங்களை வளர்த்தி, நியாயாதிபதியின் அங்கீகரிப்புக்குப் பாத்திரமாய் இருக்கின்றார்களோ, அவர்களே முழுமையான உயிர்த்தெழுதலை (Resurrection) அடைந்து, ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவின்போது, நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள்; மேலும் நியாயத்தீர்ப்பின் நாளினுடைய முடிவின்போது, மீதமானவர்கள் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள்.

உலகத்திற்கான நியாயத்தீர்ப்பு நமது கர்த்தருடைய முதலாம் வருகையின்போது ஆரம்பிக்கவில்லை என்பதற்கான சாட்சியாக யோவான் 12:47-ஆம் வசனம் விளங்குகின்றது. "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்;" "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (யோவான் 12:48; அப்போஸ்தலர் 17:31; 1 கொரிந்தியர் 6:2).

இதற்கு இசைவாகவே யோவான் 5:17 மற்றும் எபிரெயர் 4:4, 10-ஆம் வசனங்களும் காணப்படுகின்றன. மனிதன் மீறுகிறவனான போது, தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் வேலையிலிருந்து ஓய்ந்தார்; இன்னும் அவ்வேலையைத் தொடர்வதற்குப் பதிலாக, அதை அவர் விட்டுவிட்டு, அதன்மேல் சாபத்தை வைத்தார், அதாவது தம்முடைய பிரதானமான கையின் கிரியையின் மீது மரணம் எனும் தண்டனையை வைத்தார். ஒரு கண்ணோட்டத்தில்/விதத்தில் அவ்வேலையைத் தேவன் விட்டுவிட்டாலும், இன்னொரு விதத்தில் பார்க்கையில் அதன் மீது உள்ள அவருடைய நோக்கத்தை அவர் விட்டுவிடவில்லை; இறுதியில் தீமையானவனை நசுக்கிப் போட்டு, மனுக்குலத்தை அவனுடைய வல்லமையினின்று விடுவிப்பதற்கான ஸ்திரீயின் வித்தை எழுப்பும் நோக்கத்தைத் தேவன் கொண்டிருந்தார், அதை முன்னறிவிக்கவும் செய்தார்; அதாவது மரணத் தண்டனையை ரத்து செய்து, உயிர்த்தெழுதல் அளிக்கப்படுவதை முன்னறிவித்தார். நமது கர்த்தர் இயேசு வாக்களிக்கப்பட்ட ஸ்திரீயின் வித்தாவார்; ஆனால் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிற வண்ணமாக, தெய்வீகத் திட்டத்தின்படி சபையாகிய, அவருடைய சரீரத்தின் அங்கங்களும் ஸ்திரீயின் வித்தில் அடங்குகின்றனர். கிறிஸ்துவின் தலை மற்றும் சரிரத்தினுடைய பாடுகள் குறித்து, சர்ப்பம் குதிங்காலைக் காயப்படுத்தும் என்று ஏதேனில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சுவிசேஷ யுகம் முழுவதும் நடந்து கொண்டு வருகின்றது; இயேசு, தீமையின் சக்திகளினால்/அதிகாரங்களினால் சிலுவையில் அறையப்பட்டார்; அவரும் தம்மைப் பாவத்திற்கான பலியாக ஒப்புக்கொடுத்துவிட்டார்; அவருடைய சரீரத்தினுடைய அங்கங்களும் அவரோடு கூடப் பாடுபட்டு, கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள் (கொலோசெயர் 1:24).

இந்த மாபெரும் வித்தாகிய கிறிஸ்து முழுமையாய் மகிமை அடைவதற்கும், அனைத்து அங்கங்களும் தலையினுடைய மகிமையில் பங்கடைவதற்கும் உரிய வேளை சீக்கிரத்தில் வரவிருக்கின்றது; அப்போது "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் நிறைவேறும் (ரோமர் 16:20). தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உலகத்தை மீட்டுக்கொண்ட கர்த்தரும், தலையுமானவரும், மாபெரும் இரட்சகருமானவருந்தான், ஆயிரம் வருஷம் யுகத்தில், சாத்தான் கட்டப்பட்டுக் காணப்படும்போது, பரீட்சையின் கீழ்க் காணப்படும் மீட்கப்பட்ட மனுக்குலத்திற்கு நியாயாதிபதியாக, பிதாவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அனைத்துத் தீமையும் கீழ்ப்படுத்தும் வரையிலும், குமாரனுடைய வேலை நிறைவடைவதில்லை; தீமை அனைத்தும் கீழ்ப்படுத்துவது ஆயிரம் வருஷம் யுகத்தின் இறுதியின் போதே நிறைவடையும். விருப்பமுள்ள அனைவருக்கும் கர்த்தர் சத்திய அறிவையும், சிட்சைகளையும் கொடுத்து, நீதிக்குரிய விஷயங்களில் ஜனங்களைச் சீர்த்திருத்தவும் பண்ணுவார்; மீதமானவர்கள் அனைவரும் ஜனங்கள் மத்தியிலிருந்து அறுப்புண்டுப் போகப்படுவார்கள் (அப்போஸ்தலர் 3:23). கர்த்தர் இப்படியாக அனைத்து எதிர்ப்பின் அதிகாரங்களையும், ஆளுகைகளையும், வல்லமைகளையும் கீழ்ப்படுத்தின பிற்பாடு, தேவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்படைப்பார் என்று அப்போஸ்தலர் தெரிவித்துள்ளார். இவ்விதமாய் மனிதனுடைய வீழ்ச்சிக்கு முன்னதாகப் பிதாவானவர் கிரியை புரிந்தார், பின்னர் மனுஷனை ஒப்புரவாக்கும் வேலையையும், மனுக்குலத்தை நியாயந்தீர்க்கும் வேலையையும் பிதா, குமாரனிடத்தில் ஒப்படைந்திருந்தார்; பின்னர் தம்முடைய பிரதிநிதியாக குமாரன் செயல்பட்டு, அனைத்தையும் புதிதாக்கின பிற்பாடு அனைத்தையும் பிதா திரும்ப ஏற்றுக்கொள்வார் (1 கொரிந்தியர் 15:24; வெளிப்படுத்தல் 21:5).

ஆகவே சிலர் சொல்லுவது போன்று, "பிதாவைப் போன்று இயேசு நம்முடைய நியாயாதிபதி" என்று கூறுவது மாபெரும் தவறாகும், ஏனெனில் பிதா ஒருவனையும் நியாயம் தீர்ப்பதில்லை என்றும், நியாயம் தீர்க்கும் காரியத்தை பிதா, குமாரனிடத்தில் ஒப்புவித்துள்ளார் என்றும் நமது கர்த்தர் தாமே கூறியுள்ளார். இந்தச் சுவிசேஷ யுகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சபைக்கான நியாயத்தீர்ப்பானது, யோவான் 5:24-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; இப்பொழுது கேட்டு, விசுவாசித்து, தங்களால் முடிந்தமட்டும் கீழ்ப்படிகிறவர்கள், வெற்றிகரமாக தற்போதைய நியாயத்தீர்ப்பில் கடந்து செல்வதின் காரணமாக நித்தியத்திற்குரிய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் (சபை) ஆயிரம் வருஷம் யுகத்தின்போது, உலகத்திற்கு நடைபெறும் பொதுவான நியாயத்தீர்ப்பின் கீழ் வர வேண்டியதில்லை, ஏனெனில் இவர்கள் இந்த யுகத்தில் நடந்து கொண்டிருக்கும் நியாயத்தீர்ப்பின் முடிவாக மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் பிரவேசிப்பவர்களாய் இருப்பார்கள்.

மனுக்குலத்திற்கான பொதுவான நியாயத்தீர்ப்புக் குறித்து யோவான் 5:25-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; அதாவது மரித்தவர்கள் அனைவரும் தேவனுடைய குமாரனுடைய சத்தத்தைக் கேட்கும்போது, அவர்கள் சத்தியத்தின் அறிவிற்குள் கொண்டுவரப்படும்போது அதைக் கேட்டு, அந்தச் சத்திய அறிவிற்குக் கீழ்ப்படிகின்றவர்கள் பிழைப்பார்கள்; அவர்கள் பிரேத குழிகளிலிருந்து மாத்திரம் விடுவிக்கப்படாமல், பாவத்தின் காரணமாக வந்த சரீர பிரகாரமான, மன ரீதியிலான மற்றும் ஒழுக்க ரீதியிலான பூரணமற்ற தன்மைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, பூரணமான ஜீவனுக்கும் கொண்டு வரப்படுவார்கள். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4). இந்த நியாயந்தீர்க்கப்படும் வேலையானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலேயே சிறுமந்தையிடம் ஆரம்பமாகும் உண்மையானது, "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" என்ற வசனத்தில் விளங்குகின்றது (யோவான் 5:25). தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது முழு உலகமும் மரித்தவர்களாகப் பேசப்படுகின்றது. ஏனெனில் உலகத்தின் பத்தில் ஒன்பது சதவிகிதம் ஏற்கெனவே மரித்துவிட்டது, மேலும் முழுமையான மரணத் தண்டனையின் கீழும் உள்ளது. இதன் காரணமாகவே "மரித்தோர், தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்" என்று நமது கர்த்தர் ஒருவனிடம் கூறினார்.

ஒரு மனுஷனாக தம்மால் இத்தகைய மாபெரும் வேலையைச் செய்வதற்குரிய வாய்ப்பைப் பற்றி, தாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களால் புரிந்துக்கொள்ள முடியாது என்பதை உணர்ந்துக்கொண்ட நமது கர்த்தர், இன்னும் விளக்கினார்; அதாவது, "பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருக்கிறதுபோல (அழியாமை), குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருக்கும்படி (அழியாமை) அருள்செய்திருக்கிறார் (வாக்களித்துள்ளார்) என்றும், தீர்க்கத்தரிசிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட இவ்வேலையை, அதாவது நியாயந்தீர்க்கும் வேலையை அதாவது, தெய்வீகச் சித்தத்தை மனுஷகுமாரனாகிய தாம் செய்ய வேண்டும் என்று பிதா கட்டளைக் (அதிகாரம்) கொடுத்துள்ளார் என்றும் கர்த்தர் இயேசு விளக்கினார். "பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்" (யோவான் 5:20, 27). மேலும் மனுஷகுமாரனிடத்தில் பிதாவினால் ஒப்புவிக்கப்பட்டுள்ள இந்த உன்னதமான கனத்தின் காரணமாகவே, "அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்று கூறினார் (யோவான் 5:22). மாபெரும் வேலையை நிறைவேற்றும்படிக்கு குமாரன், பிதாவினால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதி என்பதே குமாரனுக்குரிய கனமாக இருக்கின்றபடியாலேயே, "குமாரனை கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" என்று தொடர்ந்து கர்த்தர் விளக்கிக் காட்டினார் (யோவான் 5:23).

---

R3752

# “ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும்”
## மத்தேயு 12:1-14

"ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" யாத்திராகமம் 20:8

ஓய்வுநாளைக் குறித்த சரியான கருத்துக்களைச் சொற்பமானவர்களே அறிந்திருக்கின்றனர். சிலர் தங்களை மோசேயின் பிரமாணத்திற்குக் கீழிருக்கும் யூதர்களாகக் கருதிக்கொள்கின்றார்கள். இன்னும் வேறு சிலரோ மறு எல்லைக்குப்போய், தாங்கள் பிரமாணங்களுக்குக் கீழிராமல், கிருபையின் கீழ் இருக்கின்றோம் என்று கூறி, ஓய்வுநாளின் காரியங்களை முற்றிலும் தள்ளிவிடுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். இந்த இரண்டு எல்லைகளுக்கும்/ கருத்துக்களுக்கும் இடைப்பட்ட கருத்தே சரியான கண்ணோட்டமாக இருக்குமென்று நாம் நம்புகின்றோம்.

தேவன் யூத தேசத்தாரை, அதாவது ஆபிரகாமின் பிள்ளைகள் அனைவரையும், யாக்கோபின் மூலமாக, உலகத்தில் தமக்குரிய விசேஷமான சம்பத்தாக ஏற்றுக்கொண்டார். இவர்களுடன் மோசேயின் வாயிலாக சீனாயில் தேவன் நியாயப்பிரமாண உடன்படிக்கையைச் செய்தார்; இவர்களிடம் தேவன் தம்முடைய தூதுவர்களாகிய தீர்க்கத்தரிசிகளையும், இறுதியில் தம்முடைய குமாரனையும் அனுப்பினார். இவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலம் தேவனுடைய கிருபையில் நிலைத்திருப்பார்கள் என்றும், வியாதி, வலி, வறட்சி மற்றும் பஞ்சத்திற்குப் பதிலாக, ஜனங்கள், நிலம், மந்தைகள் மீது தெய்வீக ஆசீர்வாதம் நிலைத்திருக்கும் என்றும் இவர்களோடேயல்லாமல், மற்றபடி வேறு எந்தத் தேசத்தாரோடும் தேவன் தமது ஒப்பந்தத்தைப் போட்டுக்கொள்ளவில்லை. வேறு எந்தத் தேசத்தாருக்கும் சீனாயின் நியாயப்பிரமாணமும் கொடுக்கப்படவில்லை, உடன்படிக்கையும் பண்ணப்படவில்லை. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்" (ஆமோஸ் 3:2).

யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தப் பிற்பாடு, மற்றும் இயேசு சிலுவையில் நியாயப்பிரமாண உடன்படிக்கையை முடிவிற்குக்கொண்டு வந்த பிற்பாடு, சிலர் எதிர்மாறாக கற்பனை செய்துகொள்வது போன்று நியாயப்பிரமாணமானது, உலகத்தின் மற்றத் தேசத்தாருக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை. யூத தேசத்தார் மத்தியில் இருந்தும், மற்றத் தேசத்தார் மத்தியில் இருந்தும் தெரிந்தெடுக்கப்படும் கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய சபைக்கும் கூட நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில், "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" ரோமர் 10:4. யாரெல்லாம் இந்தக் கருத்தை தெளிவாகப் புரிந்திருக்கின்றார்களோ, அவர்களே ஓய்வுநாளைக்குறித்தும், நியாயப்பிரமாணத்தின் மற்ற அனைத்து அம்சங்களைக்குறித்துமுள்ள சரியான கண்ணோட்டங்களுக்கான அஸ்திபாரத்தைப் பெற்றிருப்பார்கள்; மேலும் இக்கருத்தைப் புரிந்துக்கொள்ளாதவர்களே ஓய்வுநாளின் காரியங்களிலும் குழப்பத்துடனே காணப்படுவார்கள்.

## “இந்த உலகத்தின் இராஜ்யங்கள்”

யூதர்களின் ஓய்வுநாளையோ அல்லது வேறெந்த ஓய்வுநாளையோ ஐரோப்பியா மற்றும் அமெரிக்கா தேசங்களானது, தங்கள் ஜனங்கள் அநுசரிக்கும்படி நடைமுறைக்குக்கொண்டு வரலாமே? என்று நாம் கேள்வி கேட்பது நமக்கடுத்தக் காரியமல்ல. உண்மைதான், நாகரிக உலகமானது, "கிறிஸ்தவ மண்டலம்" அதாவது கிறிஸ்துவின் இராஜ்யம் என்று அழைக்கப்படுகின்றது; ஆனால் இது ஒவ்வாத பெயராகும். பூமியின் இராஜ்யங்கள் இன்னமும் இவ்வுலகத்தின் லோகாதிபதியினுடைய ஆளுகையின் கீழேயே காணப்படுகின்றது (2 கொரிந்தியர் 4:4). இவைகள் இந்த உலகத்தின்

இராஜ்யங்களே, மாறாக தேவனுடைய இராஜ்யங்கள் அல்ல. இந்த இராஜ்யங்கள் நிலவிக்கொண்டிருப்பதைத் தேவன் அறிந்தவராக இருக்கின்றார் என்பது உண்மைதான். மேலும், இந்த இராஜ்யங்களை ஒரு குறிப்பட்ட காலம் வரையிலும் தேவன் அனுமதித்துள்ளார்; ஆனால் இந்த இராஜ்யங்கள் மீது அதிகாரம் செலுத்த தேவன் ஒருபோதும் முயன்றதுமில்லை, இன்னுமாக இந்தப் பூரணமற்ற இராஜ்யங்களுக்கு தாம்தான் பொறுப்பாளி என்று நிலைநிறுத்திக் கொள்ளவுமில்லை; இந்த இராஜ்யங்கள், அவருடைய இராஜ்யங்கள் அல்ல. பரலோகத்தின் தேவன், ஆயிர வருஷம் அரசாட்சியின்போது, கிறிஸ்துவும், சபையுமாகிய, மகிமையடைந்திருந்த மேசியாவின் கரங்களைக்கொண்டு தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, அந்த இராஜ்யத்தின் ஒழுங்குகளும், சூழ்நிலைகளும் இந்த உலகத்தின் இராஜ்யங்களுடைய சூழ்நிலைக்கு மிகவும் வேறுபாடாகக் காணப்படும். ஆகவேதான் ஓய்வுநாள் முதலியவைகளை உலகத்தின் தேசங்கள் அநுசரிக்கும்படி, தேவன் கட்டளையிடவில்லை; உலகத்தார் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இராதபடியினாலும், வேறெந்தப் பிரமாணங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்படாததினாலும், பிரமாணத்திற்கடுத்த விஷயங்களில் உலகத்தார் என்ன செய்தாலும், அது அவர்கள் கட்டளையிடப்படாமலேயே விருப்பம்கொண்டு செய்கிறதாக இருக்கும்.

இயேசு நியாயப்பிரமாண உடன்படிக்கையைச் சிலுவையின்மேல் ஆணியடித்து முடிவிற்குக்கொண்டு வந்தபடியால், அவருடைய பின்னடியார்களாகிய கிறிஸ்தவ விசுவாசிகள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இல்லை. மாறாக, அப்போஸ்தலர் குறிப்பிடும் வண்ணமாக, "நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம்" (கொலோசெயர் 2:14; ரோமர் 6:14). மோசேயின் கரங்கள் மூலம் இஸ்ரயேலின் மீது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின் காலத்திற்கு நிலவின உறவுமுறை போன்றே, தேவனிடத்திலான நம்முடைய உறவு காணப்படுகின்றது; அதாவது, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு அனுபவித்த அதே உறவுமுறை, அதாவது ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய நிபந்தனையின் கீழுள்ள கிருபயின் உறவுமுறையையே நாம் தேவனிடத்தில் கொண்டுள்ளோம். நாம் வாக்குத்தத்தத்தின் உண்மையான சந்ததியாக இருக்கின்றோம் (கலாத்தியர் 3:29). நியாயப்பிரமாணம் இல்லாமலேயே ஆபிரகாமும், ஈசாக்கும் மற்றும் யாக்கோபும் செழித்தோங்குகினார்களா? ஆம்! அதே கிருபையின் சூழ்நிலைகளின் கீழ் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாலும் அதிகமதிகமாக செழித்தோங்கலாம். ஏனெனில், மாபெரும் <u>மீட்பரிடத்திலும்</u>, இவரை மையமாகக் கொண்டுள்ள மகாமேன்மையான <u>வாக்குத்தத்தங்களிடத்திலும்</u> விசுவாசத்தின் மூலம் நமக்கிருக்கும் விசேஷமான உறவின் வாயிலாக அனைத்து வழிகளும்/காரியங்களும் இப்பொழுது நமக்கு மிகவும் அனுகூலமாய் உள்ளது; மீட்பருடைய மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களாகிய அவருடைய சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படும் அனைவருக்கும் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் பொருந்தக்கூடியதாய் இருக்கின்றன.

## "குமாரனால் விடுதலையாக்கப்படுபவர்கள்"

நியாயப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவது தொடர்பான விஷயத்தில் நியாயப்பிரமாண உடன்படிக்கையினின்று விடுவிக்கப்பட்டாயிற்று என்று சொல்லப்படும் கருத்தின் நிமித்தம் சிலருக்கு அச்சம் ஏற்பட்டு விடுகின்றது. இப்படி அச்சம் கொள்பவர்களுக்கு, நியாயப்பிரமாணம் இல்லாமலேயே ஆபிரகாம், ஈசாக் மற்றும் யாக்கோபு கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்பதை நாம் நினைப்பூட்டுகின்றோம். இவர்கள் தேவனிடத்தில் கொண்டுள்ள விசுவாசமே, இவர்கள் அறிந்துக்கொண்டிருப்பற்கு ஏற்பவும் மற்றும் இவர்களால் முடிந்தமட்டும் இவர்கள் தெய்வீகச் சித்தத்தைச் செய்யும் கடமைக்குள்ளாக இவர்களைக் கொண்டுவருகின்றது; மேலும் இப்படியாகவே நம் விஷயத்திலும் காணப்படுகின்றது. ஏனெனில், நாம் தேவனுடைய பிள்ளைகளாக, அவருடைய குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய ஆவியின்/சிந்தையின் பங்காளிகளாக ஆக்கப்பட்டுள்ளதால், இதுமுதல் நம்முடைய செய்கைகள் அன்பால் ஆளப்பட வேண்டும்; மற்றும், நமக்கு அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கின்றது. அதாவது, ஒருவேளை நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் அங்கம் ஆகுவதற்கெனப் புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கின்றோம் என்றால், இது நாம் அன்பின்

ஆவியைப் பெற்றிருக்கின்றோம் என்பதாக இருக்கும். ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கின்றார். மேலும், தேவன் பேரிலான இந்த அன்பு வளரும்போது இந்த அன்பானது, தேவனோடு இசைவாக வாழும் அனைவரின் பேரிலும் காட்டும் அன்பாகவும், மற்றும் தேவன் தம்முடைய அனைத்துச் சிருஷ்டிகள் மீதும் கொண்டுள்ள இரக்கத்துடன்கூடிய அன்பாகவும் காணப்படும். இத்தகைய அன்பானது, நம்மால் முடிந்தமட்டும் தெய்வீகச் சித்தத்திற்கு நாம் இசைவாகச் செயல்படுவதற்கும் நம்மை நடத்துகின்றது; நம்முடைய நோக்கங்கள் மற்றும் முயற்சிகளின் அடிப்படையில் நம்மைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கின்ற கர்த்தரானவர் மற்றும் நம்முடைய பூரணமற்ற தன்மைகளையும், வேண்டுமென்றே இல்லாத குறைவுகளையும் மூடிப்போடுகின்ற கர்த்தரானவர் நமது, இருதயத்தினுடைய இந்த ஊழியத்தையும், நோக்கத்தையும் தெய்வீகப் பிரமாணத்தினுடைய பூரணமான கைக்கொள்ளுதல்களாகவே கருதிக்கொள்கின்றார். "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (ரோமர் 8:4). நாம் எவ்வளவுதான் தெய்வீகப் பிரமாணத்திற்குரிய முழுமையான ஆவியில் குறைவுப்பட்டிருந்தாலும், நம்மால் முடிந்த மட்டிலுமான நம்முடைய அன்றாட பிரயாசங்கள் காணப்படும் பட்சத்தில், நாம் தெய்வீகப் பிரமாணத்தை முழுமையாய் நிறைவேற்றுகிறவர்களாகவே கருதப்படுகின்றோம்.

இந்தக் கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், தேவன் இப்பொழுது இஸ்ரயேலுடன் தொடர்பு வைக்கவில்லை என்பதும், அவர் தமக்கென வேறு எந்தத் தேசத்தையும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதும் நமக்கு விளங்குகின்றது. மாறாக, அவர் ஒரு புதிய தேசத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார். மேலும், இந்தப் புதிய தேசத்திற்கான குடிகளை அவர் அனைத்துத் தேசம், கோத்திரம், ஜனங்கள் மற்றும் பாஷைக்காரர்கள் மத்தியிலிருந்து சேர்த்துக் கொண்டிருக்கின்றார். இந்தப் புதிய தேசத்தார், சபையாக இருக்கின்றார்கள். இவர்களைக் குறித்தது, "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், இராஜரிகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 பேதுரு 2:9). இந்தப் புதிய தேசம் நிறைவடைந்து, மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் சென்று, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆளுகை செய்து, ஆசீர்வதித்து மற்றும் சீர்தூக்கி விடுவார்கள். தேவனுடைய வழிநடத்துதல்கள், போதனைகள், பரீட்சைகள் முதலியவைகள் இந்தப் புதிய தேசத்தின் (சபை) மீதே காணப்படுகின்றது; ஆம், நாம் பார்த்த வண்ணமாக, தேவன் மீதும், நம்முடைய அயலார் மீதும் காட்ட வேண்டிய அன்புக்கான பிரமாணத்தை அல்லாமல் வேறு எந்தப் பிரமாணத்தையும் தேவன் நம் மீது வைக்கவில்லை. இந்தப் பரிசுத்தமான தேசத்தின்/ஜாதியின் அங்கத்திற்குள் நாம் சேர்க்கப்படுவதற்கு முன்பு, அதன் அன்பின் பிரமாணத்தை நாம் ஏற்றுக்கொண்டு, சுயநலமானது அந்தகாரத்தின் கிரியையாக இருக்கின்றது என்றும் அடையாளம் கண்டுகொண்டிருந்தோம். மேலும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நாம் தேவனிடத்திலும், நம்முடைய அயலாரிடத்திலும் காட்ட வேண்டிய அன்பின் முழு அர்த்தத்தையும் நாம் அதிகமதிகமாகக் கற்றுக்கொண்டிருக்கின்றோம். இந்தப் படிப்பினைகள் தொடரும். ஆனாலும், இராஜ்யத்தின் அங்கங்களாக நாம் பரலோகத்திற்குரியதும், நித்தியத்திற்குரியதுமான ஸ்தானத்திற்கு மாற்றப்படுவதற்கு நாம் பாத்திரவான்களாகக் கருதப்படுவதற்கு முன்பு, இந்தப் படிப்பினைகள் ஒரு குறிப்பிட்ட நிறைவை அல்லது பலன் கொடுக்கின்ற நிலையை அடைய வேண்டும்.

## "கர்த்தருடனான நம்முடைய உறவு"

மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமாகிய பத்துக்கட்டளைகள் முதலியவைகளோடு நமக்குத் தொடர்பு இல்லையா? இல்லை; நாம் நியாயப்பிரமாணத்தின்று விடுதலையுள்ளவர்களாக இருக்கின்றோம். தேவனுக்கு நன்றி! எனினும் நாம் விடுதலையாக்கப்பட்டுள்ள அந்த நியாயப்பிரமாணத்தை ஆராய்வதின் மூலம் நாம் மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏனெனில், இந்த நியாயப்பிரமாணமானது நீதியுள்ளது, பரிசுத்தமுள்ளது மற்றும் நல்லது என்று நாம் அறிந்துள்ளோம். மேலும், இந்த நியாயப்பிரமாணம் பூரணமற்றதாய் இருந்த காரணத்தினால், இது தள்ளி வைக்கப்படாமல், மாறாக மனிதன் பூரணமற்றவனாகவும், அதைக் கைக்கொள்ள முடியாதவனாகவும், அதன் வாயிலாக ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாதவனாகவும்

இருந்ததினாலேயே நியாயப்பிரமாணம் தள்ளிவைக்கப்பட்டது. ஆகையால், இந்தப் பூரணமான நியாப்பிரமாணத்தை நாம் ஆராய முற்படுகையில், அதன் வெளித்தோற்றத்தை மாத்திரமே நாம் அறிந்துக்கொள்வதற்கு நாடாமல், விசேஷமாக அதன் உள்ளான அர்த்தத்தை, அதன் ஆவியை அறிந்துக்கொள்வதற்கும் மற்றும் அதன் முக்கியத்துவமும், அது சுட்டிக்காட்டும் காரியமும் என்ன என்பதை அறிந்துக்கொள்வதற்கும் நாம் நாட வேண்டும். அதன் முக்கியத்துவத்தையும், அர்த்தத்தையும் குறித்து உறுதியடைந்த பிற்பாடு, புதிய சிருஷ்டிகளாகிய நாம் நம்முடைய பெலவீனங்கள், பூரணமற்ற தன்மைகள் மற்றும் வேண்டுமென்றே செய்யாத குறைபாடுகள் அனைத்தையும் தேவனுடைய ஆட்டிக்குட்டியானவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் ஈடு செய்துவிடுகின்றது என்பதை அறிந்த நிலையிலும் இந்த நியாயப்பிரமாணத்தின் ஆவி தொடர்பாக நாம் சேகரித்துள்ள ஆசீர்வாதத்திற்குரிய கருத்துக்கள் அனைத்தோடும் நம்முடைய ஜீவியங்களை இசைவாக வாழுவதற்கு நாம் நாடுகின்றவர்களாய் இருக்க வேண்டும்.

இதை நாம் செய்ய வேண்டும், ஆனாலும் இரட்சிப்படைவதற்கு என்று இதை நாம் செய்ய வேண்டியதில்லை; நாம் இரட்சிப்பு அடைந்தும், பாவங்கள் மன்னிக்கப்பட்டும், இன்னும் ஒருபடி மேலாக பரிசுத்த ஆவியினால் புதிய ஜீவனுக்கு, ஒரு புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்பட்டுள்ளபடியால், நாம் நம்மை நியாயப்பிரமாணத்தைக்கொண்டு நீதிமானாக்கிக்கொள்ள நாட வேண்டாம். ஏனெனில், நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டிருக்கின்றோம். இப்பொழுதோ நாம் புதிய சிருஷ்டிகளாக நமது பரம பிதாவைப் பிரியப்படுத்த நாடுகின்றபடியால், தெய்வீகச் சித்தம் குறித்துத் தெளிவாகப் புரிந்துக்கொள்வதற்கும் மற்றும் தேவன் மீது காண்பிக்க வேண்டிய அன்பின் விஷயத்தில் நாம் நம்மால் முடிந்தமட்டும் எல்லாவற்றையும் வல்லமையோடு செய்வதற்கும் என, மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது நமக்கு வழங்கும் ஏதேனும் கருத்துக்களில் மகிழ்ச்சிக்கொள்கின்றவர்களாகவும் இருப்போம்.

இப்படியாக நாம் பத்துக் கட்டளைகளைப் பார்க்கும்போது, “ஆம், இந்த நியாயப்பிரமாணங்கள் பூரணமானவைகள்தான்” என்று கூறுவோம்; மேலும் அவைகளை நாம் அதிகமதிகமாய் ஆராயும்போது, அவைகளுடைய முக்கியத்துவத்தின்/கருத்தின் ஆழத்தை நம்மால் கிரகித்துக்கொள்ள முடியும். உதாரணத்திற்கு, முதலாம் மற்றும் இரண்டாம் கற்பனைகளில், விக்கிரகங்களை உண்டுபண்ணி, அவைகளை வழிபடக்கூடாது என்று மாத்திரம் நாம் தடைப்பண்ணப்படாமல், தேவனுடைய இடத்தில் வேறெந்த ஒரு காரியத்தையும் வைக்கக்கூடாது, அதாவது, மனைவி (அ) பிள்ளைகள் (அ) செல்வம் (அ) சுயம் முதலியவைகளை வைக்கக் கூடாது என்றும் சரிசமமாகக் தடைப்பண்ணப்படுகின்றோம். இப்படியாகவே ஓய்வுநாள் தொடர்புடைய நான்காம் கட்டளையைப் பார்க்கும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தாங்கள் எந்த ஒரு குறிப்பிட்ட நாளுக்குக் கீழ்க் கட்டுண்டவர்களாக இல்லை என்பதை அறிந்துக்கொண்டாலும், அவர்கள், இந்தக் கட்டளையின் நோக்கம் (அ) ஆவி என்ன என்பதை அறிந்துக்கொள்வதற்கும், அந்த ஆவிக்கு இசைவுடன் காணப்படுவதற்கும் விரும்புவார்கள். மாம்சீக இஸ்ரயேலர்கள் இந்த மூன்று கட்டளைகளினுடைய வெளித்தோற்றத்தை மாத்திரமே அறிந்துக்கொண்டார்களே ஒழிய, அதன் உண்மையான கருப்பொருளை முற்றிலுமாகவே அறிய தவறிவிட்டார்கள்; மேலும் இவர்களைப் போலவே இன்றைய காலத்திலுள்ள அநேக கிறிஸ்தவர்களும் கூட, இந்தக் கட்டளைகளை, யூதர்களின் கண்ணோட்டத்தின்படியே மாத்திரம் பார்க்கிறவர்களாக இருந்து, அதன் உண்மையான தாழ்ப்பரியத்தைக் காண தவறிப்போகிறவர்களாக இருக்கின்றனர்.

## “இந்த இளைப்பாறுதலில் பிரவேசித்துள்ள நமக்கு ஓர் ஓய்வு”

ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நாம் கர்த்தர் இயேசுவை நம்முடைய மீட்பராக, நமக்கு ஜீவன் அளிப்பவராக, நம்முடைய பாவத்திற்கான பரிகாரியாக ஏற்றுக்கொண்ட உடனே, நாம் பிரவேசிக்கும் விசுவாசமாகிய இளைப்பாறுதல் எனும் இந்த ஓய்வுநாளின் உண்மையான அர்த்தத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். இந்த இளைப்பாறுதலுக்குள் நாம் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளோம் என நாம் நம்ப ஆரம்பிக்கும் பட்சத்திலும், மற்றும் நாம் கர்த்தருக்கு ஒருவேளை உண்மையாய் இருந்து, அவருடைய அன்பில் நிலைத்திருப்போமானால், நம்முடைய ஓய்வு ஒருபோதும் முடிவதில்லை.

"விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்" (எபிரெயர் 4:3).

விசுவாசம், வாரத்தின் அனைத்து நாட்களிலும் காணப்பட வேண்டும்; மேலும் இவ்விதமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு நாளும் ஓய்வைக் கைக்கொள்கின்றனர். அதாவது, கிறிஸ்துவினால் முடிக்கப்பட்ட வேலையின் நிமித்தம் ஓய்வாகக் காணப்படுகின்றார்கள். அதாவது, நியாயப்பிரமாணம் மூலம் நம்மை நாம் நீதிமானாக்குவதற்கான அனைத்துப் பிரயாசங்களாகிய, நம்மடைய சொந்த வேலைகளிலிருந்து நாம் ஓய்வு அடைந்திருக்கின்றோம். நம்முடைய கர்த்தருடைய ஊழியம் அவருக்கு முடிவில்லாத ஓய்வாக இருந்தது அல்லவா? அதுபோல, இன்றைய கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் விசுவாசத்தின் மூலம் கர்த்தரில் இளைப்பாறினால், உலகத்திற்குள் நம்மை அவருடைய ஸ்தானாதிபதிகளாக அனுப்பி வைத்தவருடைய கிரியைகளைச் செய்ய நாமும் நாடினால், நமக்கும் ஒவ்வொருநாளும் (கர்த்தருக்கு இருந்ததுபோன்று) ஓய்வுநாளாக இருக்கும் அல்லவா? இவ்விதமாக ஜீவியத்தின் சகல வேலையும் நமக்குப் பரிசுத்தமானதாய்க் காணப்படும். நாம் புசித்தாலும் (அ) குடித்தாலும், எழுதினாலும் (அ) பேசினாலும், தூங்கினாலும் (அ) விழித்தாலும், அழுக்குகளைத் தேய்த்துக் கழுவினாலும் (அ) மண்ணைத் தோண்டினாலும், நாம் அனைத்தையும் தேவனுடைய மகிமைக்காகவே செய்கின்றோம்; அதாவது எதைச்செய்தாலும், அதைத் தேவனுக்கென்றே செய்வதுபோன்று செய்கிறவர்களாகவும் மற்றும் நாம் செய்யும் அனைத்து வேலைகளிலும் நாம் நம்முடைய இருதயங்களில் ஓய்வின் இளைப்பாறுதலைத் தக்க வைத்துக்கொள்கிறவர்களாகவும், அதாவது நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் கூடே உள்ள நமக்கான உறவின் காரணமாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீக அன்பிலும், பராமரிப்பிலும் இளைப்பாறுதலைத் தக்க வைத்துக்கொள்கிறவர்களாகவும் நாம் காணப்பட வேண்டும்.

## "ஞாயிற்றுக்கிழமை அனுசரிப்புச் சரியான ஒழுக்கமுறை"

உண்மையான இளைப்பாறுதல் என்ன என்பதை அறிந்த நிலையிலும், அதனை அனுபவித்த நிலையிலும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்கள், கிறிஸ்தவ மண்டலத்தின் அமைதிகாலச் சட்டங்களின்படி நியமிக்கப்பட்டுள்ள ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளை அனுசரிக்க வேண்டுமா? என்ற கேள்விகள் எழும்பலாம்; மூன்று காரணங்களின் நிமித்தம் நம்முடைய பதில் ஆம் என்றே உள்ளது. அந்த மூன்று காரணங்களும் பின்வருமாறு:

(1) கிறிஸ்தவர்களாகிய நம்முடைய மனசாட்சிக்கு முரண்பாடாய்க் காணப்படாத மனித சட்டத்தின் எந்தக் கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும் என்பதே தெய்வீகக் கட்டளையாகக் காணப்படுகின்றது. மேலும், இந்த ஓய்வுநாள் குறித்த மனித சட்டமானது நம்முடைய மனசாட்சிக்கு முரண்பாடானதாக இல்லை என்பதையும் நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

(2) ஒருவேளை மற்ற ஜனங்களே தங்கள் வேலைகளிலிருந்து ஒருநாள் ஓய்ந்திருக்க முடிகின்றது என்றால், கர்த்தருடைய ஜனங்களாலும் அப்படிச் செய்ய முடியும். மேலும், இவர்கள் உலகத்தாரைக் காட்டிலும் அனுகூலமாய், ஒருநாள் ஓய்ந்திருக்க முடியும். ஏனெனில், நமக்குத் தேவனைக்குறித்தும், அவருடைய வார்த்தைகளைக்குறித்தும் உள்ள மேலான அறிவு இருக்கின்றபடியால், உலக வேலைகளிலிருந்து நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அந்த நேரத்தை நம்மால் ஞானமாகவும், சிறப்பாகவும் பயன்படுத்த முடியும்.

(3) உலகமும், பெயர்க் கிறிஸ்தவ மண்டலமும், ஓய்வுநாள் குறித்த விஷயத்தில் தவறு செய்துள்ளதாலும், மற்றும் யூத பிரமாணங்களுடைய கருத்தாகிய ஏழு நாட்களில் ஒன்றை மத ரீதியிலான ஓய்வுநாளாகக் கொண்டிருக்கும் கருத்தைக் கொண்டுள்ளதாலும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மிகுந்த நன்மை உண்டாகி உள்ளது. ஆகையால் உலகம் தவறு செய்தாலும், அறியாமையில் கட்டளையிட்டிருந்தாலும், அதனை தேவன் தம்மை அன்பு கூருகிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக மாற்றியுள்ளார்.

ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், தங்களுக்கு ஏழு நாட்களில், ஒரு நாளானது மாம்சீக வேலைகளினின்று விசேஷமான ஓய்வுக்காகவும், ஆவிக்குரிய வேலைகள், சந்தோஷங்கள்

மற்றும் புத்துணர்வில் பங்குக்கொள்வதற்காகவும் அனுமதிக்கப்பட்டுள்ள சிலாக்கியத்தின் நிமித்தம் சந்தோஷங்கொள்வதோடு மாத்திரமல்லாமல், உலகம் தங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றது என்றும், (கிறிஸ்தவ மண்டலத்தாரால், தெய்வீகக் கட்டளையாக வந்தது என்று அனுமானிக்கப்படும்) இந்த ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் சட்டத்தைத் தாங்கள் மீறும் காரியமானது, நன்மைக்கு ஏதுவாக தங்களுடைய செல்வாக்கைக் குறைத்துப்போடுவதாக இருக்கும் என்றும் அறிந்துக்கொள்ள வேண்டும். ஆகவே, உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அனைவரும் தங்களுடைய அயலார்களைக் காட்டிலும் ஞாயிற்றுக் கிழமையை, ஓய்வுநாளாக அநுசரிக்கும் விஷயத்தில் கண்டிப்புடன் (அ) மிகுந்த கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்பதே நம்முடைய புத்திமதியாகும்; அதாவது மிகவும் அவசியம் வாய்ந்த காரியங்கள் அல்லது இரக்கம் காட்டும் வேலைகள் தவிர மற்றபடி உள்ள அனைத்து வேலைகளையும் நாம் அந்நாளில் தவிர்த்து, இந்த விலையேறப்பெற்ற நாளை கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருளாகவும்/உதவியாகவும் மற்றும் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளருவதற்கான மாபெரும் சிலாக்கியமாகவும் மற்றும் வாய்ப்பாகவும் கருத வேண்டும் என்பதே நாம் அளிக்கும் புத்திமதியாகும். இந்த நியமிக்கப்பட்ட (ஞாயிற்றுக்கிழமை) ஓய்வின் நாளன்று நாகரிகமான தேசத்தில், நம்முடைய இல்லங்கள் மிகவும் அமைதியானதாக இருக்கக்கடவது; நாம் வசிக்கும் வீடுகளில்/இடங்களில் வேலை புரிகின்ற எவ்விதமான சத்தங்கள் (அ) லௌகீக இன்பங்களின் ஆரவார சத்தங்கள் இல்லாமல் இருக்கக்கடவது. ஆனால் நம்பிக்கையின், அன்பின், விசுவாசத்தின் சந்தோஷங்கள் பெருகக்கடவது. மேலும், நம்முடைய மகிழ்ச்சியான இருதயங்கள் நம்முடைய மகிழ்ச்சிகரமான வார்த்தைகளிலும், தொனிகளிலும், பார்வைகளிலும் வெளிப்படக்கடவது; இவ்விதமாக, கர்த்தருக்குள் நாம் கொண்டிருக்கும் நம்முடைய மகிழ்ச்சியும், நம்முடைய தன்னடக்கமும், நம்மோடு காணப்படும் அனைவருக்கும் வெளியரங்கமாகி, அவர்கள் நாம் இயேசுவோடுகூட இருந்தவர்கள் என்றும், அவரிடமிருந்து கற்றுக்கொண்டவர்கள் என்றும் அறிந்துக்கொள்வார்கள். "பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று அறிந்துக்கொண்டார்கள்” (அப்போஸ்தலர் 4:13). நாம் மிகவும் நெருக்கமாய்க் காணப்படும் நம்முடைய நண்பர்கள் மற்றும் அயலகத்தாரிடம், நம்முடைய கண்ணோட்டத்தின்படி, ஒவ்வொரு ஓய்வுநாளும் விசுவாசத்தில் இளைப்பாறும் ஓய்வுநாளாகக் காணப்படுகின்றது என்று விவரிக்கலாம்; இன்னுமாக நாம் அழிந்துபோகக்கூடிய மாம்சீக உணவுகளுக்காக வேலை செய்வதற்குச் சில நாட்கள் அவசியப்பட்டாலும், நம்முடைய இருதயங்கள் ஓய்வுநாளுக்குரிய மாபெரும் கர்த்தரிலும், அவர் நிறைவேற்றின வேலையிலும் இன்னமும் இளைப்பாறிக் கொண்டுதான் இருக்கின்றது என்றும் விவரிக்கலாம்.

இன்று வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம், யூதர்கள் செய்ய வேண்டும் என்று அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட நியாயப்பிரமாணத்தினுடைய வெளித்தோற்றமான அனைத்துக் காரியங்களுக்கும் நாம் இசைவாகக் காணப்பட முற்படுவது என்பது நமக்கான காரியமல்ல. உதாரணத்திற்கு ஒரு நான்கு சக்கர வண்டியை (car), ஓய்வு நாளன்று ஓட்டிக்கொண்டு செல்வது என்பது நான்காம் கட்டளையை (யூதர்கள்) மீறுவதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை; ஒருவேளை யூதர்களுடைய நியாயப்பிரமாணமானது நம் மீது ஆளுகை கொண்டிருக்குமாயின், நாம் நான்கு சக்கர வண்டியை ஓட்டிச்செல்வதும், அதில் அமர்ந்து பிரயாணம் பண்ணுவதும் முற்றிலும் தவறாகவும், பாவச் செயலாகவும் காணப்படும். ஆனால் நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்படாமல், கிருபையின் கீழ்க் காணப்படுகின்றபடியாலும், ஞாயிற்றுக்கிழமைகளில் வண்டியில் பிரயாணம் பண்ணுவதைச் சட்டங்கள் தடைப்பண்ணாததாலும், அது உடன் மனிதர்களால் தீமை என்று கருதப்படாததாலும், பிரயாண விஷயத்திலும் சரி, இதுபோன்ற மற்ற விஷயத்திலும் சரி, நாம் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளில் பிரயாணத்திற்குரிய சொகுசுகளின் நன்மையைப் பயன்படுத்துவதில் தவறில்லை.

## “பரிசேயர்களின் ஓய்வு”

நம்முடைய பாடம், யூதர்களுடைய நியாயப்பிரமாணம் நடைமுறையில் காணப்பட்ட காலம் சம்பந்தமானது. மேலும், இன்றைய காலங்களில் யூத போதகர்களால் ஒருமனப்பட்டு வலியுறுத்தப்படும் மிதமிஞ்சின அனுசரிப்புகளைக் காட்டிலும், அன்றைய காலக்கட்டத்தில்

நான்காம் கட்டளைக்குக் காணப்பட்ட சரியான விளக்கம், நாம் அக்கட்டளையை அனுசரிக்கும் விதத்திற்கு மிகவும் இசைவாகக் காணப்படுகின்றது. அன்றைக்கும், இன்றைக்கும் இடையே காணப்பட்ட வித்தியாசம் என்னவெனில், அன்று நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்பட்ட யூதர்கள் ஓய்வுநாளில் எவ்விதமான உலகத்திற்குரிய வேலைகளும் செய்யக்கூடாது என்று தடைப்பண்ணப்பட்டிருந்தார்கள். ஆனால், இன்று நாமோ நம்முடைய ஆவிக்குரிய சிலாக்கியங்களை முழுமையாக, அதிகமாக அனுபவிப்பதற்கு ஏதுவாக நாமே விலகிக்கொள்ள விரும்பும் பூமிக்குரிய வேலைகள் மற்றும் பூமிக்குரிய சட்டங்கள் சொல்லும் வரையறைகள் தவிர மற்றபடி நமக்கு எத்தகைய தடையும் விதிக்கப்படவில்லை.

இயேசுவும், அவருடைய சீஷர்களும் கோதுமை வயலின் வழியே காணப்பட்ட பொது வழியில் நடந்துக்கொண்டு சென்றிருந்தார்கள். பயிர்கள் கிட்டத்தட்ட முதிர்ந்த நிலையை அடைந்திருந்தது. சீஷர்கள் பசியாக இருந்ததின் நிமித்தம் கொஞ்சம் கதிர்களைக் கொய்து எடுத்து, கோதுமையைப் புசிக்கும் வண்ணமாக அதின் உமியை அகற்றும்படிக்கு கோதுமை மணிகளைத் தங்கள் கைகளுக்கிடையே தேய்த்தார்கள். பரிசேயர்கள் தெய்வீகமான நியாயப்பிரமாணத்தின் உள்காரியங்களைக் காட்டிலும், அதன் வெளிக்காரியங்களை அறிந்திருந்தவர்களானபடியால், நியாயப்பிரமாணத்தின் உண்மையான சாரத்தை (அ) ஆவியை முற்றிலும் அறிய தவறியும், அதைப் புறக்கணித்தும் இருந்து, அதை வெளித்தோற்றமாக அனுசரிக்கும் விஷயத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தவர்களாகக் காணப்பட்டார்கள். ஆகவே இயேசுவின் சீஷர்களை, நியாயப்பிரமாணத்தை மீறினவர்களாகவும், இயேசு அவர்களுடைய போதகராக இருந்தும், அவர்களை அவர் கடிந்துகொள்ளவில்லை என்பதாகவும் குற்றம் சாட்டிக்கொண்டு, தங்களுடைய மத பக்தியை வெளிக்காட்டுவதற்குமான வாய்ப்பு இப்பொழுது கிடைத்துள்ளது என்று பரிசேயர்கள் எண்ணிக்கொண்டார்கள். இதே ஆவியை, இன்றும் அடிக்கடி நம்மால் பார்க்க முடிகின்றது. இன்றைய நாட்களில் சிலர் ஓய்வுநாளன்று தாங்கள் வண்டியில் பயணம் செய்யக்கூடாது என்ற விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் தங்களுடைய மனங்களை உலகக்காரியங்களுக்குப் பின் அலைப்பாய விடுவதோடு மாத்திரமல்லாமல், மிகவும் மோசமாக தீமையான காரியங்களில் அல்லது அன்றைய தினத்தில் தங்களுடைய அயலாரைக்காட்டிலும் எப்படித் தாங்கள் முந்திக்கொள்ளலாம் என்பது தொடர்பான திட்டங்களில் அலைப்பாய விட்டுவிடுகின்றார்கள். இது மாய்மாலமாகும், மேலும் இது தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி மோசமான பாவங்களாகவும் உள்ளது.

தேவனிடத்திலும், மனுஷரிடத்தில் காண்பிக்கப்பட வேண்டிய/செய்யப்பட வேண்டிய நியாயப்பிரமாணத்தின் உண்மையான சாரத்தை யூதர்கள் புறக்கணித்து, தேவையற்ற விஷயங்களில் நியாயப்பிரமாணத்தை அவர்கள் மிகைப்படுத்தின காரியங்கள் நமக்கு உண்மையில் வேடிக்கையாக இருக்கின்றது. உதாரணத்துக்கு, இந்த ரபிகளின் சட்டத்தின்படி கொசுவை அடிப்பது என்பது வேட்டையாடுவதற்குச் சமமாக இருக்கின்றது; ஆகையால் இக்காரியம் ஓய்வுநாளன்று தடை பண்ணப்பட்டுள்ளது. இன்னுமாக, இரண்டு உள்ளங்கைகளால் கோதுமை மணியின் உமி தேய்த்து உரிக்கப்பட்டு ஊதிவிடப்படுவது என்பது கோதுமையைப் புடைப்பதற்கும், கதிரடிப்பதற்கும் சமமாய் இருப்பதினால், இக்காரியம் ஓய்வுநாளின் ஓய்வை மீறுவதாக மிகைப்படுத்தப்பட்டது. நமது கர்த்தர் இவர்களுடைய இக்குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளாமல், மாறாக தம்முடைய சீஷர்கள் செய்த காரியம் தவறல்ல என்றும், தம்மால் அங்கீகரிக்கப்படுவதோடு கூட, இந்தப் பரிசேயர்கள் அங்கீகரிக்கும் சில பிதாக்களின் செயல்பாடுகள் மூலமாகவும் சீஷர்கள் செய்த காரியம் தவறல்ல என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார். தேவை மற்றும் இரக்கத்திற்கான உதாரணமாக ஆசாரியர்கள் மாத்திரமே புசிக்கக்கூடிய தேவசமூகத்தின் அப்பத்தை, தாவீது புசித்த சம்பவத்தை நமது கர்த்தர் எடுத்துக்கொண்டார்; தாவீது பசியாய் இருந்தபடியால் இப்படியாகச் செய்துகொண்டார். இன்னுமாக ஆசாரியர்களும், லேவியர்களும், ஒவ்வொரு ஓய்வுநாளிலும், யூதர்களுடைய தேவாலயத்தில் ஆராதனை தொடர்பான விஷயங்களில் வேலை செய்வதையும் நமது கர்த்தர் உதாரணமாகச் சுட்டிக்காண்பித்தார். இப்படியான அங்கீகரிக்கப்பட்டக் காரியங்கள் ஓய்வுநாளின் சரியான கோட்பாடுகளைக் காட்டுகின்றது என நமது கர்த்தர் முன்வைத்தார். பயிர்களை ஓய்வுநாளன்று அறுவடை செய்வதோ, புடைப்பதோ, கதிரடிப்பதோ சரி என்று நமது கர்த்தர் சொல்ல முற்படாமல், பசியை ஆற்றுவதற்கான காரியங்களில், அதாவது அப்போஸ்தலர்கள் தங்கள் பசியை ஆற்றுவதற்கு

இப்படிச்செய்த காரியங்களில், அவர்கள் ஓய்வுநாளில் வேலை செய்துவிட்டார்கள் என்ற விளக்கங்களைக் கொண்டுவந்து நுழைத்து, அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்றும், ஓய்வுநாளின் கட்டளைகளை மீறிவிட்டார்கள் என்றும் சொல்லப்படக்கூடாது என்பதே நமது கர்த்தரின் வாதமாக இருக்கின்றது.

## “ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்”

வேதவாக்கியங்களைக் கொண்டு, பரிசேயர்களின் கூற்றுகள் ஏற்கப்பட முடியாது என்று அவர்களிடம் நமது கர்த்தர் வலியுறுத்தின பிற்பாடு, நியாயப்பிரமாணத்தின் அர்த்தத்தை விளக்கிக் கூறுவதற்கான தம்முடைய அதிகாரத்தைக்குறித்து நமது கர்த்தர் அவர்களிடம் கூறினார். “தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார்” என்றார். ஒருவேளை ஓய்வுநாளில் ஆலயத்தின் பணிகளை, லேவியர்கள் செய்வதே சரி என்றால், இயேசு இந்தத் தேவாலயத்தைக் காட்டிலும் பெரியவராகவும், தேவனுடைய குமாரனாகவும், தேவனுடைய பிரதிநிதியாகவும் இருக்கின்றபடியால், அவருடைய சீஷர்கள் அவரால் அங்கீகரிக்கப்பட்ட எதையும் மற்றும், அவருக்கான ஊழியத்திற்கென்று எதையும் கவலையின்றிச் செய்யலாம். நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்கள் முன்பு இப்படியாக அவருக்கு எதிர்ப்பேச்சுப்பேச முடியாத அளவுக்குச் சொல்வன்மையுடையவராகத் திகழ்வதிலிருந்து, அவர் எப்படிப்பட்ட தனித்துவமான சிறப்புப் பெற்றிருக்கும் மனிதனாக இருந்திருக்கக் கூடும் என்பது நமக்குத் தெரிகின்றது. எந்த ஒரு மனுஷனும் பேசாததுபோல் நமது கர்த்தர் பேசினவராக இருந்ததோடல்லாமல், அவருடைய தோற்றம் கூட விழுந்துபோன இனத்தின் அங்கங்களைக்காட்டிலும் தலைச்சிறந்ததாகவும் இருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

“மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்” (மத்தேயு 12:8). இயேசு ஓய்வுநாளின் ஆண்டவராகவும், மாபெரும் போதகராகவும் இருந்தபடியால், நியாயப்பிரமாணத்தின் விஷயங்களை இவர் நிறைவேற்றுவதன் மூலம், அதைச் சிலுவையில் அறைந்துப்போட்டு, நியாயப்பிரமாணத்தையும், இந்த ஓய்வுநாள் எனும் அம்சத்தையும் ஒழித்துப்போடுவதற்கு மாத்திரம் அவர் அதிகாரம் கொண்டவராய் இராமல் மாறாக ஓய்வுநாளின் ஆண்டவராகிய இயேசு, சரியான போதகராகக் காணப்பட்டு, நியாயப்பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தையும் யூதர்களுக்கு முன்வைக்கின்றவராகவும் இருந்தார். “பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்” என்ற காரியங்களைக் கர்த்தர் நமது கவனத்திற்குக் கொண்டு வந்தார் (ஓசியா 6:6). மேலும் ஒருவேளை ஓசியா 6:6-ஆம் வசனத்தின் இரக்கம் எனும் காரியத்திற்குப் பரிசேயர்கள் தங்கள் எண்ணங்களைத் திருப்பியிருந்திருப்பார்களானால், இவர்களுடைய எண்ணங்கள் மிகவும் இசைவானதாகவும் காணப்பட்டு, ஓய்வுநாளின் கட்டளையை மீறவில்லை என்று கர்த்தர் அறிக்கைப் பண்ணிக்கொண்டிருக்கும் தமது சீஷர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பிடாதவர்களாகவும் இருந்திருப்பார்கள் என்றார் கர்த்தர்.

இன்றைய நாட்களிலும் கூட குற்றம் கண்டுபிடிப்பவர்களிடமும், குறைகளை விமர்சனம் பண்ணுகிறவர்களிடமும், இரக்கமும், அன்பும் குறைவாகக் காணப்படுகின்றது. அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய்க் காணப்படுகின்றது. மேலும், யாரிடம் அன்பு அதிகமாக உள்ளதோ, அவர்களே (தேவையான) நிலைப்பாட்டை/உயர்வை எட்டக்கூடியவர்களாக இருப்பார்கள். நம்முடைய நண்பர்களிடமும், சகோதர சகோதரிகளிடமும், உலகத்தாரிடமும், நம்முடைய சத்துருக்களிடமும் நாம் காண்பிக்கும் இரக்கமானது, நம்மிடம் அன்பு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு ஜெப ஆலயத்தில் சென்றபோது, அங்கும் இதே கேள்வி கேட்கப்பட்டது. அங்குச் சூம்பின கைகளையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான், மேலும் இயேசுவைச் சிக்க வைக்கும் வண்ணமாக, ஓய்வுநாளன்று இம்மனுஷனைச் சுகப்படுத்துவது சரியான காரியமாக இருக்குமா என்று பரிசேயர்கள் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள். பரிசேயர்களுக்கு வேறு வழியில்லாமல் இருந்தபடியால், அவரை ஏதாகிலும் குற்றம் சாட்ட நாடினார்கள்; அவருடைய சீஷர்களுக்காக அவர் வாதம் பண்ணி முடிந்தாகிவிட்டது, இப்பொழுது இயேசு தாமே ஓய்வுநாளில் அம்மனுஷனைச் சொஸ்தப்படுத்தும் காரியத்தில் இறங்குவாரா? எனப் பரிசேயர்கள் எதிர்ப்பார்த்தார்கள்.

தேவனுடைய கணிப்பில் பலியைப் பார்க்கிலும் இரக்கம் செய்தலே முக்கியம் என்பதைக் கர்த்தர் கோடிட்டுக் காட்டி, வியாதியடைந்திருந்த மனுஷனுக்கு இரக்கம் காட்டும் செயலில் இறங்கினார். முதலாவதாக, பரிசேயர்களுடைய சொந்த வாழ்க்கையின், நடத்தையின் மூலமாகவே அவர்கள் முரண்பாடாகக் காணப்படுகின்றார்கள் என்பதை அவர்களுக்குக் காட்டினார்; ஒருவேளை அவர்களிடம் ஓர் ஆடு மாத்திரமே இருந்தது என்றால், அது ஓர் ஓய்வுநாளின் போது குழிக்குள் விழுந்துவிட்டது என்றால், அந்த ஆட்டின் மீதான அன்பின் காரணமாக அல்லாமல், அதன் இழப்பு, மதிப்பீடு குறித்த அச்சத்தின் காரணமாக அது காப்பாற்றப்படும் என்றார்.

"ஆட்டைப் பார்க்கிலும் மனுஷன் எவ்வளவு விசேஷித்தவன்?" என்று நமது கர்த்தர் கேட்டார்; இன்னுமாக, "ஓய்வுநாளன்று நன்மை செய்வது நியாயம்தானே?" என்றும் நமது கர்த்தர் கேட்டார். மனுஷன், மிருகத்தைப் பார்க்கிலும் விசேஷித்தவனா என்ற கேள்விக்கு உலகத்தார் பதில் கூறத்தயங்குவார்கள்/கஷ்டப்படுவார்கள்; ஆனால், ஆவிக்குரிய இஸ்ரயேவர்களாகிய கர்த்தருடைய ஜனங்கள் இக்கேள்விக்கு உடனடியாகப் பதில் கொடுத்துவிடுவார்கள். தேவனுடைய கிருபையினால் கர்த்தர் தம்மையே மனுஷனுக்கான ஈடுபலியாகக் கொடுத்தபோது மனுஷனுடைய முக்கியத்துவம் என்ன என்பதை நமக்கு முன் வைத்தார். ஆகையால், கர்த்தருடைய ஆவியைப் பெற்றுக்கொள்பவர்கள், பூமிக்குரிய (அ) ஆவிக்குரிய விஷயத்தில், தனக்கடுத்த மனுஷனுக்கு விடுதலை அளிப்பதற்குத் தாங்கள் செய்யும் எக்காரியங்களும் தங்களுக்கான சிலாக்கியம் என அதிகமதிகமாக எண்ணிக்கொள்ள வேண்டும்.

பரிசேயர்களுக்கு எல்லா கட்டங்களிலும் பதில் கொடுக்கப்பட்டது. மேலும், மாபெரும் போதகராகிய கர்த்தருடன் தங்களுக்கு ஏற்படும் மோதலின் நிமித்தம், ஜனங்கள் முன்னிலையில் தங்களுக்கான செல்வாக்கின் மதிப்புக் குறைந்து போவதைப் பரிசேயர்கள் உணர்ந்துக்கொண்டார்கள். ஆகவே, இயேசு தம்முடைய வார்த்தையினால் சூம்பின கரங்களையுடைய மனுஷனைச் சொஸ்தப்படுத்தினபடியால், அவரை அழித்துப் போடும்படிக்கு ஆலோசனைச் செய்வதற்கென, ஜெப ஆலயத்தைவிட்டுக் கோபத்துடன் வெளியேறினார்கள். இவர்கள் தங்கள் முக்கியத்துவத்தைக் கருதினவர்களாக இருந்தார்கள். இவர்கள் தங்களுடைய மதிப்பைக் களங்கப்படுத்தும் எச்செயலானாலும் சரி, அது கர்த்தருக்கும், அவருடைய நோக்கத்திற்கும் பாதிப்பை உண்டுபண்ண வேண்டும் என்று விரும்பினார்கள். மேலும், இவர்கள் தாங்கள்தான் பாரம்பரியமான கூட்டத்தாராக இருக்கின்றபடியால், தங்களுக்கு ஒத்துப்போகாத வார்த்தைகளையும், நடத்தைகளையும் உடையவருடைய செல்வாக்கானது இஸ்ரயேல் முழுவதும் பரவாமல் இருப்பதற்கென அவரைக் கொன்றுபோடுவது சரியானக்காரியமே என்றும் எண்ணினார்கள். இதேபோன்ற ஆவி, இன்றும் காணப்படுகின்றது; மதத்திற்காக வெளித்தோற்றமான வைராக்கியங்கொண்டுள்ள அநேக ஜனங்கள் மத்தியிலேயே, நாம் காணப்படுகின்றோம். இவர்கள் அன்பிலும், இரக்கத்திலும் மிகவும் குறைவுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அமைப்பின்/ஸ்தாபன பிரிவின் ஆவியினால் மிகவும் ஆட்கொள்ளப்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள். மேலும், ஆண்டவருடைய சரீரத்தின் அங்கங்கள் முன்வைக்கும் சத்தியமானது, அமைப்பின் ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டுள்ள இவர்களின் கனத்தையும், உலகத்தின் முன்பான இவர்களுடைய அந்தஸ்தையும் குறைவுபடுத்தும் பட்சத்தில், ஆண்டவருடைய சரீரத்தின் அங்கங்களை இவர்கள் துன்பப்படுத்தவும் விரும்புவார்கள். அன்பான நண்பர்களே, நாம் ஆண்டவருடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து, கர்த்தருடனான நம்முடைய உறவைப் புரிந்தும், உணர்ந்தும் கொண்டு, நியாயப்பிரமாணத்தின் சாரத்திற்கு/ஆவிக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கக்கடவோம்.

---

**R1521**

# “பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்”
## “அவர்களுடைய அழைப்பும், பணியும், அதிகாரமும்”

"இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா?.” யோவான் 6:70

கர்த்தராகிய இயேசு, தம்முடைய சரீரமாகிய சபைக்கு தகுதியான மற்றும் தெய்வீக நியமனத்தினால் ஏற்படுத்தப்பட்ட தலையாக இருக்கின்றபடியினால், சுவிசேஷ யுகம் முடிவு வரையிலும், அதாவது சபையினுடைய தகுதிகளைப் பார்க்கும்/தகுதிக்காண் காலம் வரையிலும் (Probation) கர்த்தர் தம்முடைய சபையின் நலனுக்கடுத்த அனைத்து விஷயங்களில் எவ்வளவு ஞானத்துடன், ஆழமாக அக்கறைக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் பார்க்கலாம்.

நமது கர்த்தர் தமது 40-நாள் தியானம் மற்றும் வனாந்தரத்தில் ஏற்பட்ட விநோதமான சோதனைகளுக்குப் பிற்பாடு, வரவிருக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினவராகக் காணப்பட்டார். மேலும், தாம் கூறின காரியங்களை மகிழ்ச்சியுடனும், விசுவாசத்துடனும் கேட்டு, தம்முடைய சீஷர்கள் ஆனவர்கள் மத்தியிலிருந்து புதிய யுகத்திற்கான அப்போஸ்தலர்களாய் இருக்கும்படிக்கு 12-மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார். இந்த 12-அப்போஸ்தலர்களும், எளிமையான ஜீவியம் கொண்டவர்களாக இருந்தார்கள். இந்த 12-பேரில், நான்கு பேர் மீனவர்களாகவும், ஒருவர் இழிவாய்க் கருதப்பட்ட ஆயக்காரனாகவும் இருந்தார், மீதமானவர்கள் எப்படியாக அழைக்கப்பட்டார்கள் என்பது தொடர்பான பதிவுகள் பதிவு செய்யப்படவில்லை.

12-நபர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டது தொடர்பான விஷயத்தில், இவர்கள் அனைத்தையும் துறந்து, தம்மைப் பின்தொடர்ந்து வரும்படிக்கு, இவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு சூழ்நிலைகளில் கர்த்தரால் அழைக்கப்பட்டிருந்தாலும், இவ்வழைப்பிற்கு இவர்கள் உடனடியாகக் கீழ்ப்படிந்திருந்தாலும், இவர்கள் அப்போஸ்தலர்கள் எனும் ஸ்தானத்திற்குரிய பணிக்குக் கர்த்தரால் அர்ப்பணம் பண்ணப்பட்ட ஒரு விசேஷமான தருணமும் இருந்தது என்று நாம் அறிந்துக்கொள்கின்றோம். (மத்தேயு 4:17-22; மாற்கு 16:20; 3:13-19; லூக்கா 5:9-11). இது தொடர்பாக லூக்கா அவர்கள் பதிவு செய்துள்ள காரியம் என்னவெனில், இப்படியாக இவர்களைக் கர்த்தர் அப்போஸ்தலர்களாக அர்ப்பணிக்கும் இச்சம்பவம் நிகழ்வதற்கு முன்பு, கர்த்தர் ஜெபம் பண்ணும்படிக்கு அதாவது, வருங்கால சபைக்கடுத்த நன்மைகள்/நலன்கள் தொடர்பான விஷயத்தில், தேவனிடத்தில் ஆலோசனைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு இராமுழுவதும் ஜெபத்தில் காணப்பட்டார் என்பதாகும். "அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துக்கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்” (லூக்கா 6:12,13). இவ்விதமாக, பன்னிரண்டு பேரும், கர்த்தருடைய சீஷர்கள் மத்தியில், வேறுபட்ட, பிரிக்கப்பட்ட வகுப்பாராய்க் காணப்பட்டார்கள்/காட்டப்பட்டார்கள். மேலும், 17-ஆம் வசனமும் கூட இந்தப் பன்னிரண்டு பேருக்கும் மற்றும் மற்றச் சீஷர்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுகின்றது.

அப்போஸ்தலர்களாக தெரிந்துக்கொள்ளப்படாத மற்றச் சீஷர்கள் கர்த்தரால் நேசிக்கப்பட்டவர்களாகவும், இந்தப் பன்னிரண்டு பேரின் நியமித்தலுக்கு இணக்கம் கொண்டவர்களாகவும், இந்த அப்போஸ்தலர்களின் நியமித்தல் என்பது நடைபெறவிருக்கும் வேலைகளுக்கான நலனுக்கே என்று உணர்ந்துகொண்டவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தர் இந்தப் 12-பேருடைய இருதயத்தில் காணப்பட்ட வாஞ்சையைக் கவனத்தில் எடுத்துக் கொண்டதோடுகூட, இவர்களுக்கு முன்பாகக் காணப்படும் புதிய வேலைக்கு இவர்களுடைய தகுதியையும், சூழ்நிலைகளையுங்கூடக் கவனத்தில் எடுத்துக்கொண்டார் என்பதில் ஐயமில்லை. உதாரணத்திற்கு அவர் செபதேயுவின் குமாரர்களை, எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தம்மைப் பின்சென்று வரும்படிக்கு அழைத்தபோது, கர்த்தர்

குமாரர்களைத்தான் அழைத்தாரே ஒழிய, அவர்களுடைய தகப்பனை அழைக்கவில்லை என்று பார்க்கின்றோம். பின்சென்று வருவது என்பது மனரீதியில் தம்முடைய உபதேசங்கள் முதலியவைகளை மாத்திரமே பின்செல்லுவதைக் குறிக்காமல், கர்த்தரோடுச் செல்வதற்கு அல்லது அவருடைய வழிநடத்துதலின் கீழ் வேலைக்கு ஈடுபடுவதில் தொழிலையும், வீட்டையும், நண்பர்களையும், பூமிக்குரிய திட்டங்களையும், பூமிக்குரிய எதிர்க்கால வாய்ப்புகள் முதலியவைகளையும் விட்டு வருதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இந்தப் 12-பேரைப் பிரித்தெடுத்த விஷயத்தின் மகா முக்கியத்துவம் குறித்து, பிரித்தெடுத்த சமயத்திலேயே வெளிப்படுத்திவிட்டார் என்று நாம் சொல்ல முடியாது. ஏனெனில், அப்போது அக்காரியங்களை அப்போஸ்தலர்கள் புரிந்துக்கொள்வது என்பது கூடாத காரியமாய் இருந்தது; ஆனால், எளிமையான வாழ்க்கையிலிருந்து, கர்த்தருடைய விசேஷித்த ஸ்தானாதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அருமையான சகோதரர்கள் தற்காலத்தில் தங்களுக்கான பலனாக இழப்பும், துன்புறுத்தப்படும் நிலையும் காணப்படும் என்பதை அறிந்திருந்த நிலையிலும் மற்றும் அச்சமயத்தில் தங்களுக்கான எதிர்க்காலத்திற்குரிய பலனைத் தங்களால் தெளிவாகப் புரிந்து/உணர்ந்துக்கொள்ள முடியாத நிலையிலும், தங்களுக்கு அருளப்பட்டுள்ள (ஸ்தானாதிபதிக்குரிய) சிலாக்கியத்தை உணர்ந்து ஏற்றுக்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள்.

இந்தப் 12-பேரும், தங்களின் எதிர்க்கால அப்போஸ்தலப் பணிக்குத் தகுதியடையும்படிக்கு அவர்களுக்குப் பயிற்சியும், போதனைகளையும், கொடுப்பதை ஆரம்பிப்பதற்கே இவர்களைக் கர்த்தர் அச்சமயத்தில் தேர்ந்தெடுத்ததற்கான நோக்கமாகும். ஏனெனில், இந்தப் 12-பேரும் பெந்தெகொஸ்தே நாள்வரையிலும் அப்போஸ்தலருக்குரிய பணியில் முழுமையாய்ப் பிரவேசிக்கவில்லை. இவர்கள் அப்போஸ்தலர் பணிக்கென அமர்த்தப்பட்ட பின்னர், இந்தப் பன்னிருவரும், கர்த்தருடைய வழிநடத்துதலின் கீழ் முழுமையாகவும் மற்றும் அவரோடுகூட அதிக நேரமும் காணப்பட்டார்கள். இவர்கள் அவருடைய குணலட்சணங்களையும், அவருடைய சுவிசேஷத்தையும், அவருடைய வழிமுறைகளையும் கவனிக்கும்/கற்கும் கவனமுள்ள மாணவர்களாய்க் காணப்பட்டார்கள்.

## “அப்போஸ்தலர்களுக்கான பணி”

கர்த்தர் மற்றும் ஒட்டுமொத்த சபையின் பணியைப்போன்றே அப்போஸ்தலர்களுடைய பணியும் இருந்தது. இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே அப்பணியாகும். (ஏசாயா 61:1-2; லூக்கா 4:17-21; மத்தேயு 10:5-8; மாற்கு 3:14-15; லூக்கா 10:1-17 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்). மேலும், இந்தப் பணிக்கே, அப்போஸ்தலர்கள், கர்த்தர் தங்களோடு இருந்த காலத்திலும், அதற்குப்பின் உள்ள காலங்களிலும், தங்களை வைராக்கியத்துடன் அர்ப்பணித்தார்கள். எனினும், இப்பணியின் விஷயத்தில், அப்போஸ்தலர்கள் கர்த்தர் தங்களோடு இருந்த காலத்தில், கர்த்தரால் இதே ஊழியத்திற்கென்று நியமிக்கப்பட்ட 70 சீஷர்களைக்காட்டிலும் அதிகமாக சாதித்ததாக எவ்விதமான குறிப்புகளும் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்கான இந்தப் பொதுவான பணியுடன் கூட, கர்த்தர் இந்தப் 12-பேரையும், எதிர்க்காலத்தில் அவர்கள் செய்ய வேண்டிய ஒரு விசேஷமான வேலைக்கும் அவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருப்பதையும், அவர்களுக்குப் படிப்படியாகக் காண்பித்தார். அதாவது, தம்முடைய மரணத்திற்குப் பிற்பாடு, தம்மைக்குறித்த சாட்சியை அறிவிப்பதற்கான தம்முடைய சாட்சியாளர்களாக இந்த 12-பேரும் காணப்படும்படிக்குக் கர்த்தர் இவர்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார். கர்த்தருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், அவரோடுகூட அப்போஸ்தலர்கள் இருந்தவர்கள் என்றும், மற்றும் அவருடைய உபதேசங்கள் மற்றும் நோக்கங்களை அறிந்தவர்கள் என்றுமுள்ள விதத்தில் அப்போஸ்தலர்கள் சாட்சியாளர்களாகவும், ஜனங்கள் காரியங்களை அறிந்துக்கொள்வதற்கு, நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாகவும் காணப்பட வேண்டும் (யோவான் 15:27; லூக்கா 24:48). இதுமாத்திரமல்ல, தெய்வீக ஏற்பாட்டின் கீழ் இந்த 12-பேரும், ஏற்றக் காலத்தில் உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்ட பின்னர், சுவிசேஷ யுக சபைக்கான நிறுவனர்களாகவும் (Founders) மற்றும் விசேஷித்தப் போதகர்களாகவும் இருக்க வேண்டும்.

வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், இந்த 12-பேரையும் நமது கர்த்தர் தெரிந்துக்கொண்டதற்கான நோக்கமானது, தேவனுடைய சத்தியம் தொடர்பான விஷயத்தில், இவர்களுடைய சாட்சியை நிலைவரப்படுத்தும் வண்ணமாக, இவர்களுக்கு பயிற்சியும், அதிகாரமும் கொடுத்து, பின்னர் இவர்கள் வாயிலாக நீதியின்மேல் பசித்தாகம் உள்ளவர்களைச் சத்தியத்தினால் திருப்தியடையச் செய்து, பின்னர் இப்படியாகத் திருப்தியடைந்தவர்கள் மத்தியிலிருந்து, தம்முடைய நாமத்திற்கெனச் சில (கிறிஸ்துவின் மணவாட்டிகள்) ஜனங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாக உயர்த்தப்படும்படிக்கு, பயிற்சியும், ஆயத்த உதவியும் பண்ணுவதற்குமேயாகும். 12-பேரை தெரிந்தெடுத்ததற்கான மேற்கூறப்பட்டுள்ள இந்த நோக்கமானது, கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு ஏறெடுத்த ஜெபத்தில் வெளிப்படுகின்றது. “நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு (அப்போஸ்தலர்கள்) உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை (உபசேத்தை) நான் அவர்களுக்குக் கொடுத்தேன் அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. நான் இவர்களுக்காக (அப்போஸ்தலர்கள்) வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் (முழுச் சுவிசேஷ யுகத்திலும்) என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் (இருதயத்திலும், நோக்கத்திலும், அன்பிலும்) ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் ( பாவிகளாக இருந்த போதிலும், தேவனால் அன்புகூறப்பட்ட உலகம்) விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் (**ஒன்றாயிருக்கவும்** - என்பதே அப்போஸ்தலர்களையும், கிறிஸ்துவின் முழுச் சரீரத்தையும் தெரிந்தெடுப்பதற்கான நோக்கமாகும் என்று இங்குக் கர்த்தர் வெளிப்படுத்துகின்றார்) வேண்டிக்கொள்ளுகிறேன்” (யோவான் 17:6-9, 20-21).

அப்போஸ்தலர்களின் எண்ணிக்கை, யாக்கோபின் புத்திரர்களாகிய இஸ்ரயேல் கோத்திரத்தினுடைய தலைவர்களும், பிரதிநிதியுமாய் இருந்தவர்களுடைய எண்ணிக்கைக்குச் சமமாக இருக்கின்றது. இந்த (மாம்சீக) இஸ்ரயேலின் கோத்திரங்கள் ஒருவிதத்தில் ஒட்டுமொத்த சுவிசேஷ யுகத்தின் சபைக்கும், இன்னொருவிதத்தில் முழு உலகத்திற்கும் நிழலாய் இருக்கின்றார்கள் (ஆசரிப்புக்கூடார நிழல்களைப் பார்க்கவும்). மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகத்தில், இந்த 12-அப்போஸ்தலர்கள், மகிமையடைந்த சபையாகிய, புதிய எருசலேமின் பன்னிரெண்டு அஸ்திபாரங்களாகக் குறிப்பிடப்படுகின்றனர் (வெளிப்படுத்தல் 21:14; எபேசியர் 2:20-21). ஆகவே, சபையைத் தாங்கும்படியாக ஏற்படுத்தப்பட்ட அஸ்திபாரங்கள், இறுதியில் முழு உலகத்தையும் தாங்கும்படியாக ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது. ஆனால், ஒருவேளை இந்த அஸ்திபாரக்கற்கள், மணல்மேல் போடப்பட்டிருந்தால், இதன்மேல் கட்டப்படும் கட்டிடத்திற்குப் பாதுகாப்பும் இராது, அக்கட்டிடம் என்றென்றும் காணப்படவும் முடியாது (மத்தேயு 7:25-27). ஆனால், இந்த அஸ்திபாரக்கற்கள் மணல்மேல் போடப்படாமல், உறுதியும், அசையாததுமாகிய கிறிஸ்து இயேசு என்னும் பாறையின் மீதே போடப்பட்டுள்ளது. (மத்தேயு 16:16-18; 1 பேதுரு 2:4-8).

12-அப்போஸ்தலர்களும் ஆரம்பத்திலேயே அவரோடு கூடக் காணப்பட்டப்படியால் கர்த்தருடைய சாட்சிகளாக விளங்கும்படிக்கு, அவருடைய ஊழியத்தின் ஆரம்ப காலங்களிலேயே தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இப்பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வீழ்ச்சிக்குள் கடந்துபோய், நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவனாகப் போனபிற்பாடு, யூதாசின் இடத்தில், கர்த்தர் உயிர்த்தெழுந்து பரத்திற்கேறினப் பின்னர், காணப்பட்ட மகிமைக்கு சாட்சியாக விளங்கின பவுலைக் கர்த்தர் நியமித்தார். (அப்போஸ்தலர் 26:13; 1 கொரிந்தியர் 15:8). ஆகவே, கர்த்தருடைய ஊழியத்திற்கும், மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் கண்களினாலும், காதுகளினாலும் சாட்சியாளர்களாகிய 11-பேர் மற்றும் கர்த்தருடைய

மகிமையான உயர்நிலைக்குச் சாட்சியாக விளங்கின பன்னிரண்டாவது நபர் சேர்ந்து, இந்த யுகத்தின் முடிவு வரையிலுமுள்ள முழுச் சபையாருடைய விசுவாசத்திற்கான உறுதியான அஸ்திபாரமாக விளங்கினார்கள். யூதாசின் இடத்தை நிரப்பும் வண்ணமாக 11-அப்போஸ்தலர்களால் தெரிந்துக்கொள்ளப்பட்ட மத்தியாவின் காரியம் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், இது மனித தவறாகும். அதாவது, கர்த்தருடைய வேலையை அவருடைய வழிநடத்துதல் இல்லாமல் அநாவசியமாக தலையிடும் செயலாகும். இக்காரியத்தை அப்போஸ்தலர் பரிசுத்த ஆவி இறங்கி வந்த பெந்தெகொஸ்தே நாளுக்கு முந்தின நாள் செய்தார்கள். இந்த 11-அப்போஸ்தலர்களும், இரண்டு நபர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள இரண்டு பேரில் ஒருவரைத் தெரிந்துக்கொள்ளும்படியாகவும், மேலும் கர்த்தர் தேர்ந்தெடுக்க விரும்புபவர் பேரில் சீட்டு விழும்விதத்தில் அதைத் தங்களுக்கு வெளிப்படுத்தும்படிக்கு, கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணினார்கள். நிச்சயமாக சீட்டு இரண்டு பேரில், ஒருவர் பேரில்தான் விழும். ஆனால், இதுவே கர்த்தருடைய சித்தமாக இருந்தது என்று எங்கும் சுட்டிக் காண்பிக்கப்படவில்லை. கர்த்தரோ அவர்கள் தெரிந்துக்கொண்டவரைத் தள்ளி, ஏற்றகாலத்தில் பவுலைத் தெரிந்துக்கொண்டதன் மூலம் தம்முடைய விருப்பத்தை வெளிப்படுத்தினார். மேலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் காரியங்களை வெளிப்படுத்தும்போது, புதிய எருசலேமுக்கு 12 அஸ்திபார கற்களே உண்டு என்று வெளிப்படுத்தினாரே ஒழிய 13 என்று வெளிப்படுத்தவில்லை. மத்தியா அநேகமாக மிக நல்ல சகோதரனாகத்தான் இருந்திருக்க வேண்டும் ஆனாலும், அவர் அப்போஸ்தலன் அல்ல.

ஆனால் சபைக்கான அப்போஸ்தலர்கள் எனும் முக்கியமான பணிக்கு இந்தச் சாதாரணமான பன்னிரண்டு மனிதர்கள்தான் நியமிக்கப்பட்டார்கள் என்பதற்கான ஆதாரம் என்ன? என்று நாம் கேட்கலாம். நம்முடைய கர்த்தர் உயிர்த்தெழுந்து, பரத்திற்கு ஏறிப்போன பிற்பாடு, இந்த அப்போஸ்தலர்களே, புதிதாய் உருவாக ஆரம்பித்த சபைக்கு ஆறுதலாகவும், பலமாகவும் இருந்தார்கள் என்பதே ஆதாரமாகும். இவர்கள் கர்த்தருடைய சீஷர்களாகவும், அவரோடுகூட தொடர்ந்து <u>காணப்பட்டபடியினாலும்</u>, கர்த்தருடைய அற்புதமான வல்லமையைக் கண்களால் கண்ட சாட்சிகளாக இருந்தபடியினாலும், கர்த்தரோடுகூட நிந்தனைகளைச் சுமந்துகொண்டதின் மூலம் இவர்கள் கர்த்தரிடத்தில்கொண்டிருந்த தங்களுடைய நேர்மையையும், உண்மையையும் நிரூபித்தவர்களாகக் <u>காணப்பட்டபடியினாலும்</u>, இவர்கள் காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருந்த பரிசுத்தவான்கள், தங்கள் விசுவாசத்திற்கான ஆதார தூண்களை, இவர்களிடத்தில் கண்டார்கள், மேலும், இவர்களுடைய போதனைகள் மீது சார்ந்து நின்று, இவர்களுடைய மாதிரியினால் தைரியம் கொண்டவர்களாகக் காணப்பட்டு, இவர்களுடைய ஆலோசனைகளுக்கு ஞானமாய் செவிச் சாய்த்தார்கள். ஆனால், இப்படிப்பட்ட உதவிகளைக்காட்டிலும் மேலானவைகளையும் அப்போஸ்தலர்கள் செய்யவேண்டும் என்ற நோக்கம் இருந்ததா? மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாய்த் தெய்வீக மனதை வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகளையுடைய அதிகாரப்பூர்வமான போதகர்களாகக் காணப்பட வேண்டும் என்ற நோக்கமும் இருந்ததா?

ஆம் என்பதே நம்முடைய பதிலாகும். மேலும், அப்போஸ்தலர்களைக் குறித்தும், அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய தம்முடைய முழுச் சரீரத்திற்கு இவர்கள் உதவிபுரிய வேண்டும் எனத் தாம் நோக்கம்கொண்டுள்ள உதவிகரமான ஊழியங்களைக் குறித்தும் சபையார் அதிகாரப்பூர்வமானது என்று கருத வேண்டும் என்றும் கர்த்தர் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார். நாம் சாட்சிகளைக்குறித்துப் பார்க்கலாம்:-

(1) நாம் ஏற்கெனவே பார்த்த வண்ணமாக, இந்தப் பன்னிரண்டு மனுஷர்களும், விசேஷமாக அழைக்கப்பட்டு, மற்றச் சீஷர்களிடமிருந்து, பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பாராக, முறையாக அப்போஸ்தலருக்குரிய பணியில் அமர்த்தப்பட்டு, மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கத்தக்கதாக, இவர்களுக்குத் தனிப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள பெயராகிய அப்போஸ்தலர்கள் என்ற நாமம் சூட்டப்பட்டது.

(2) நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தின் காலப்பகுதியில் அப்போஸ்தலர்களுடைய பணிக்கும், மற்ற 70 சீஷர்களின் பணிக்குமிடையே எவ்விதமான வித்தியாசமும் காணப்படவில்லை என்றும், இவர்களுடைய பிரயாசங்கள் 70 சீஷர்களின் பிரயாசங்களைக்காட்டிலும் குறிப்பிடத்தக்க விதத்தில் ஆசீர்வதிக்கப்படவில்லை என்றும் நாம்

ஏற்கெனவே பார்த்திருந்தாலும், இந்த 12-பேரும், கர்த்தர் அளித்த பயிற்சியின் கீழ் நேரடியாகவும், தொடர்ச்சியாகவும் காணப்பட்டார்கள். மேலும், இந்த 12-பேரும் அல்லது இவர்களில் சிலர், கர்த்தருடைய 3½ வருட ஊழியத்தின் காலத்தில், நடந்த ஒவ்வொரு குறிப்பிடத்தக்க அம்சத்திற்கும்/நிகழ்விற்கும் மற்றும் அவர் நடந்துகொண்ட முறைக்கும் சாட்சியாளர்களாக இருப்பதற்குத் தெரிந்தும் கொள்ளப்பட்டார்கள். (லூக்கா 9:6; 10:7). இந்த 12-பேரும்தான் கர்த்தருடைய போதனைகளுக்கும், அவருடைய தனிப்பட்ட குணலட்சணத்திற்கும், அவருடைய ஜீவியத்தின் நடத்தைக்கும், அவருடைய அற்புதத்திற்கும் மற்றும் அவருடையப் போதனைகளும், வேலைகளும் அவர் நாட்களில் ஏற்படுத்தின விளைவுகளுக்கும் சாட்சியாளர்களாகக் காணப்படுகின்றார்கள். இந்த 12-பேர்தான், கடைசி பஸ்கா போஜனத்தில், அவரோடுகூட பங்குக்கொள்வதற்கும், அந்தவேளைக்கான போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அதாவது பஸ்கா போஜனத்தின் நிழலான முக்கியத்துவம் தொடர்பாகவும், மாற்றப்பட்ட அதன் புதிய அம்சங்கள் தொடர்பாகவும் அதுமுதல் அந்தப் புதிய அனுசரிப்பானது, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற தேவனுடைய உண்மையான ஆட்டுக்குட்டியை நினைவுகூருவது தொடர்பாகவும் உள்ள போதனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அழைக்கப்பட்டிருந்தார்கள். மேலும், இவர்கள்தான் அவருடைய கெத்செமனே துயரத்திற்கும், அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட காரியத்திற்கும், அவர் கைதுச் செய்யப்பட்டது குறித்தும், கர்த்தர் தமக்கு வரும் என்று அவர் எதிர்ப்பார்த்த இச்சம்பவங்களின் போது, அவர் தம்மை அமைதலுடன் ஒப்புக்கொடுத்ததற்கும், சாட்சியாளர்களாகவும் இருந்தார்கள். இவர்கள்தான் அவருடைய சிலுவையில் அறையப்படுதல், மரணம், கல்லறையில் அடக்கம் பண்ணினது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலின் உண்மை ஆகிய சம்பவங்கள் தொடர்பான அனைத்துச் சூழ்நிலைகளுக்குச் சாட்சியாளர்களாகவும் இருந்தார்கள்.

(3) நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த பிற்பாடு, தமது மரணத்தினால் சற்று நின்றுபோயிருந்த தமது வேலையை உடனடியாக, அது நின்ற நிலையிலிருந்தே தொடங்குவதை நாம் பார்க்கின்றோம். அதாவது, முழுச் சபைக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமான சாட்சி கொடுப்பதற்குத் தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட சாட்சியாளர்களாகிய அப்போஸ்தலர்களை, இன்னும் அதிகம் ஆயத்தப்படுத்தும் வேலையை, உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடும் கர்த்தர் தொடர்ந்தார். அப்போஸ்தலர்களைத்தவிர கர்த்தர் ஒரேசமயத்தில் 500 சீஷர்களுக்கு முன் தோன்றினாலும், தமது உயிர்த்தெழுதல் தொடர்பான உண்மையை அப்போஸ்தலர்களுக்குத் தெளிவாக உறுதிப்படுத்துவதில், கர்த்தர் விசேஷித்த கவனம் செலுத்தினதையும் நாம் பார்க்கின்றோம். (1 கொரிந்தியர் 15:5-8). 11-அப்போஸ்தலர்களில், ஒவ்வொருவர் மேலும் அவர் அக்கறையுடன் கவனம் செலுத்துவதை நம்மால் பார்க்க முடிகின்றது. கல்லறைக்கு முதலாவதாக வந்த ஸ்திரீகள், தமது உயிர்த்தெழுதல் குறித்த உண்மையை ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் தெரிவிக்கும்படியாகவும், மற்றும் பேதுரு சற்றுமுன்பு உண்மையற்ற விதத்தில் நடந்துகொண்டதின் நிமித்தம், அவர் சோர்வினால் மேற்கொள்ளப்படாதபடிக்கும், பேதுருவின் பெயரை விசேஷமாகக் குறிப்பிட்டு அவருக்கு தெரிவிக்கும் படியாகவும் கர்த்தர் ஸ்திரீகளை அனுப்பி வைத்தார் (மாற்கு 16:7). இன்னுமாக, எம்மாவூருக்குப் போகின்ற வழியில் இரண்டு சீஷர்களின் புரிந்துக்கொள்ளுதலின் கண்களையும் திறந்துவைத்தார். (லூக்கா 24:27, 32). தோமாவின் சந்தேகத்தையும் தீர்த்து வைத்தார். இன்னுமாக, பேதுருவின் பணியைக்குறித்து அவருக்கு மீண்டும் விசேஷமாக வலியுறுத்தி, அனைத்து அப்போஸ்தலர்களையும் முழுமையாய் நம்பச்செய்து, மீண்டும் அவர்களை வேலைபுரிய அனுப்பி வைத்தார் என்று பார்க்கின்றோம். (யோவான் 20:26-28; 21:15-17; அப்போஸ்தலர் 1:1-2; லூக்கா 24:52)

(4) இன்னுமாக, இந்த 11-பேர்தான், கர்த்தர் பரத்திற்கு ஏறிப்போன சம்பவத்திற்கும் சாட்சியாளர்களாக இருக்கும்படிக்குத் தெரிந்துக்கொள்ளப்பட்டும் இருக்கின்றார்கள். கர்த்தர் பரத்திற்கு ஏறிப்போன சம்பவத்தில் அப்போஸ்தலர்கள் தவிர, வேறெவரும் காணப்பட்டார்கள் என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை. அப்போஸ்தலர் 1:1-13 - வரையிலான வசனங்களை வாசித்துப் பார்க்கவும். "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துப் பார்த்து நிற்கிறீர்கள்?" என்ற வார்த்தை கலிலேயர்களாகக் காணப்பட்ட இந்தப் பதினொரு அப்போஸ்தலர்களைத்தான் குறிக்கின்றது. லூக்கா 24:48-51 மற்றும் மத்தேயு 28:16-19 வரையிலான வசனங்களையும் பார்க்கவும்.

கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றவர்களால் பார்க்கப்பட்டிருந்தாலும், அப்போஸ்தலர்களே அவருடைய உயிர்த்தெழுதலுக்கு விசேஷித்த சாட்சியாளர்களாகக் காணப்படுகின்றார்கள்/இருக்கின்றார்கள். இவ்விதமாக, இவர்களுடைய சாட்சியில் நம்முடைய விசுவாசமானது தெளிவாக உறுதிப்படுத்தப்படும்படிக்கு, இவர்களைக் கர்த்தர் பொருத்தமான சாட்சியாளர்களாக ஏற்படுத்தினார். “யூதருடைய தேசத்திலும், எருசலேமிலும் அவர் செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படிச் செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படிச் செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்” (அப்போஸ்தலர் 10:39-43). (அப்போஸ்தலர் 13:31; 1 கொரிந்தியர் 15:3-8 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்).

(5) அப்போஸ்தலர்களுடைய சாட்சியானது ஆரம்பத்தில், யூதர்களுக்குள்ளாகவே வரையறுக்கப்பட்டிருந்தபோதிலும், கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, எருசலேம் துவங்கி, சகல தேசத்தாருக்கும் தம்முடைய நாமத்தில் பாவத்திற்கு மனம் திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்புகுறித்துப் பிரசங்கம்பண்ண, அப்போஸ்தலர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இன்னுமாக, “நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்” என்றும், “பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” என்றும் கர்த்தர் அப்போஸ்தலர்களிடம் கூறினார் (லூக்கா 24:48, 49; அப்போஸ்தலர் 1:8). “பூமியின் கடைசி பரியந்தம்/கடைசி எல்லைவரைக்கும்” எனச் சொல்லப்படும் விஷயத்தில், உதாரணத்திற்கு அமெரிக்கா பகுதிகளை, அப்போஸ்தலர்கள் தங்கள் ஜீவியகால நாட்களில் அடைந்து, அங்கு ஊழியம் புரிவது முடியாது என்பதினால் அப்போஸ்தலர் 1:8-ஆம் வசனத்தின் மேற்கூறப்பட்டுள்ள வார்த்தைகள், அப்போஸ்தலர்களுடைய மரணத்திற்குப் பிற்பாடு, இவர்கள் சாட்சி பகருவது, பெரும்பான்மையாக இவர்கள் எழுதிவைத்த எழுத்துக்கள் மூலமே நடக்கும் என்பதை வெளிப்படுத்துகின்றது. இவ்விதமாகவே, அப்போஸ்தலர்கள் நமக்கும் சாட்சி பகர்ந்துள்ளார்கள். மேலும், இவ்விதமாக சாட்சி பகரும் பணியை, இவர்கள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள் என்றும் இவர்கள் கர்த்தரிடத்தில் தனிப்பட்ட விதத்தில் பெற்றுக்கொண்ட பயிற்சியானது, இவர்கள் பகரும் சாட்சிக்குச் சிறப்பான அங்கீகாரமாகவும், இவர்களுடைய சாட்சிகள் நம்பத்தகுந்தவைகளாக இருக்கின்றன என்பதற்கான உத்திரவாதமாகவும் இருக்கின்றது என்றும் நாம் கருதுகின்றோம்.

(6) வாக்களிக்கப்பட்டுள்ள வல்லமை வரும்வரை காத்திருக்க வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக, அப்போஸ்தலர்களும், மற்றச் சீஷர்களாகிய சுமார் 120 பேர் எருசலேமிலேயே <u>தங்கியிருந்து,</u> பெந்தெகொஸ்தே நாளில் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதமாகிய “உன்னதத்திலுள்ள வல்லமையெனும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது வரையிலும், மாடியறையில் ஒன்றுகூடி, ஒவ்வொருநாளும் ஜெபத்துடன் காத்துக் கொண்டிருந்தார்கள்” (அப்போஸ்தலர் 1:14). அப்போஸ்தலர்களுக்கென விசேஷமாக வாக்களிக்கப்பட்டிருந்த மேற்கூறிய மாபெரும் ஆசீர்வாதத்தில் அவர்கள் கூடக் காணப்பட்ட உண்மையுள்ள ஆத்துமாக்கள் அனைவரும் பங்கடைந்தார்கள். “அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்” (அப்போஸ்தலர் 2:4). எனினும், அப்போஸ்தலர் 2:7-ஆம் வசனத்தை வைத்துப் பார்க்கும்போது, (கலிலேயர்களாகக் காணப்பட்ட) பதினொரு அப்போஸ்தலர்களும் பொதுப் பேச்சாளர்களாக இருந்ததைக் காணமுடிகின்றது. பரிசுத்த ஆவியானது, இவர்களுடைய மனங்களுக்கு, தெய்வீகச் சத்தியத்தின் தெளிவான

சாட்சிகளைக் கொடுத்து, இவர்களுடைய இருதயங்களைச் சந்தோஷத்தினாலும், துதியினாலும் நிரப்பியது. ஆகவே, தங்களுடைய இருதயத்தில் பொங்கிக்கொண்டிருக்கும் காரியங்களினாலும், இவர்கள் அங்குக் கூடியிருந்த ஜனங்களுடைய பல்வேறு பாஷைகளை, பரிசுத்த ஆவியினால் அற்புதத்தினால், பேசமுடிகிற ஆற்றலைப் பெற்றிருந்தபடியினாலும் இவர்கள் அருமையான ஜீவனுக்குரிய வார்த்தைகளைப் பேசினார்கள். இந்த வல்லமையின் விளைவாக, அந்த நாளில்தானே, 3000 ஆத்துமாக்கள், கிறிஸ்தவர்களாக மாறினார்கள். பெந்தெகொஸ்தே நாளில் விசேஷமாகப் பொழியப்பட்ட ஆவியில், அன்று உண்மையுடன் காத்திருந்த அனைத்து நபர்களும் பங்கடைந்திருந்தாலும் மற்றும் அதே ஆவியானது பின்னாட்களில் புறஜாதிகள் மீதும் பொழியப்பட்டிருந்தாலும் மற்றும் இன்றுவரையிலுமுள்ள உண்மையுள்ளவர்களாகிய அர்ப்பணம் பண்ணப்பட்டவர்கள் அனைவர் மீதும் அதே ஆவியானது கடந்து வந்துக்கொண்டிருந்தாலும், அன்றைய தினத்தில் பதினொரு அப்போஸ்தலர்களும் அங்குக் காணப்பட்டார்கள் என்றும், அவர்களில் ஒருவராகிலும் பரிசுத்த ஆவியின் இந்த வரத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறவில்லை என்றும் நாம் விசேஷமாக/குறிப்பாக உறுதி பெற்றுக்கொள்ளலாம். இவர்கள் இந்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், இவர்களுடைய அப்போஸ்தலத்துவம் அங்கீகரிக்கப்பட முடியாததாகக் காணப்படும். (அப்போஸ்தலர் 1:13-14; 2:1).

(7) கர்த்தரோடு கூடவே இருப்பதற்கும், அவரால் அளித்த தனிப்பட்ட விதமான போஷிப்புகள், முதலானவைகளாகிய சிலாக்கியங்கள் அனைத்தும் மற்றும் மற்றவர்கள் அனுபவித்த பெந்தெகொஸ்தே நாளிற்குரிய பரிசுத்த ஆவியின் பொழிவும், கடந்து முடிந்துப் போவதுவரையிலும், புதிய யுகம் தொடர்பான சத்தியம் குறித்த விஷயங்களில் அறியாமையிலேயே சவுல் இருப்பதற்கும், சவுல் பரிசேயர்கள் மத்தியில் ஒரு பரிசேயனாக இருந்து தேவனுடைய சேவை புரிவதற்கும் அனுமதித்திட்ட காரியமும் மற்றும் யூதாஸ், அப்போஸ்தலர்கள் மத்தியில் ஒருவராகக் காணப்படுவதற்குக் கர்த்தர் அனுமதித்திட்ட காரியமும் குறிப்பிடத்தக்க விஷயமாக இருப்பினும், இதிலும்கூட மற்றொரு ஞானமுள்ள திறமையும் வெளிப்படுகின்றது. ஏனெனில், மகிமையடைந்த கர்த்தருக்கு, சாட்சியாளர்களாக பவுல் ஏற்படுத்தப்பட்டார். அதாவது, சபை மகிமையடைந்து, உயர்த்தப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதற்கு ஏதுவாக, அவருக்கு ஒப்பாகக் காணப்படுகின்ற காலத்திற்கு முன்பு, அகால பிறவிபோன்று பிறந்தவராக, அதாவது காலத்திற்கு முன்பு மரணத்திலிருந்து பிறந்தவர்போன்று பவுல் காணப்பட்டார் ( 1 கொரிந்தியர் 15:8; 1 யோவான் 3:2). நமக்கு நம்பத்தகுந்த மற்றும் பொருத்தமான சாட்சியாளராகப் பவுல் இருப்பதற்கு, அவர் குறைவுப்பட்டிருந்த காரியங்களை, தரிசனங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மூலம் கர்த்தர் பவுலுக்குத் தெரியப்படுத்தினார் (2 கொரிந்தியர் 12:1-4, 7; கலாத்தியர் 1:11-12; 2:2).

மேலும், பவுலைக்குறித்து கர்த்தர் தாமே "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துக்கொண்ட பாத்திரமாயிருக்கிறான்" என்று சாட்சி அளிக்கின்றார் (அப்போஸ்தலர் 9:15). மேலும், கர்த்தருடைய இந்த வார்த்தைகள் யாவும், பவுல் 12-அப்போஸ்தலர்களில் ஒருவர் என்று பவுலுக்குத் தேவையான உத்திரவாதமாகக் காணப்படுகின்றது. சத்தியத்தைச் சாட்சி பகரும் விஷயத்தில் பவுல் கொண்டிருந்த வைராக்கியத்திற்கும், அவரிடத்தில் வெளிப்படும் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கும் உரிய நமது கர்த்தருடைய சாட்சியுடன்கூட, பவுலுங்கூடத் தன்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கின்றார், "மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின் படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிப் பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று" கூறினார் (கலாத்தியர் 1:11-12; 2:8).

பவுல், சிறப்பாகப் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலராகவும், மற்றவர்கள் விசேஷமாக யூதர்களுக்கு அப்போஸ்தலர்களாகவும் காணப்பட்டார்கள். ஆகவேதான், பவுல் தன்னுடைய அதிகமான நிரூபங்கள் வாயிலாக அநேக காரியங்களை நமக்குக் கூறுகின்றவராகக் காணப்படுகின்றார். ஆனால், அப்போஸ்தலர்களுடைய நாட்களிலேயே பவுலைக்காட்டிலும் பதினொரு பேரில் பேதுருவும், யாக்கோபும் மற்றும் யோவானும் சபையார் மத்தியில் மிக முக்கியமானவர்களாகக் காணப்பட்டார்கள். மேலும், இந்த 3 அப்போஸ்தலர்களைக்குறித்து

இவர்கள் சபையார் மத்தியில் தூண்களாகக் கருதப்படுவதைக்குறித்தும் பவுல் தெரிவிக்கின்றார் (கலாத்தியர் 2:9). பவுலோ முயன்று கொண்டிருக்கும் முன்னோடியாகக் காணப்பட்டார். மேலும், அவர் புறஜாதிகள் மத்தியில் செய்துகொண்டிருந்ததான வேலை, மனுஷர் கணிப்பில் கனமிக்க வேலையாக கருதப்படவில்லை. புறஜாதிகளின் மத்தியில் பவுலுடைய வேலையின் நிமித்தம் அவர் அனைத்துவிதமான ஆபத்துக்களுக்கும், உபத்திரவங்களுக்கும், இழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டார். மேலும், சபை ஜனங்கள் மத்தியிலுங்கூடப் பவுலுடைய வைராக்கியமானது முழுமையாகப் புரிந்துக்கொள்ளப்படவுமில்லை, உணர்ந்துகொள்ளப்படவுமில்லை. ஆகையால்தான் அவர் அடிக்கடி தன்னுடைய அப்போஸ்தலத்துவத்திற்கான ஆதாரங்களை முன்வைத்து, அவைகளைச் சபையாருக்கு நினைப்பூட்டி, மற்ற அப்போஸ்தலர்களைக்காட்டிலும், "தான் ஒன்றும் குறைவுள்ளவனல்ல” என்று நிரூபித்துக் காட்டுகின்றவராகவும் காணப்பட்டார். (1 கொரிந்தியர் 9:1; 2 கொரிந்தியர் 11:5)

அடுத்ததாக, சபையில் அப்போஸ்தலர்களின் பணி என்ன என்று நாம் ஆராயலாம். கர்த்தரையும், அவருடைய போதனைகள் குறித்தும் அப்போஸ்தலர்கள் அளிக்கும் வரலாற்று ரீதியிலான சான்றின் மீது மாத்திரமே நாம் சார்ந்திருக்க வேண்டுமா? அல்லது இன்னும் அதிகமானவைகளை இவர்களுடைய சாட்சி உள்ளடக்குகின்றதா?

அப்போஸ்தலர்கள் உண்மையில் தாங்கள் அறிந்துள்ள அனைத்து விஷயங்கள் குறித்தும், பரிசுத்த ஆவியின் விசேஷமான வழிநடத்துதலின் கீழ்த் தாங்கள் கற்றுள்ள அனைத்தையும் குறித்தும் சாட்சிப்பகர வேண்டியவர்களாகக் காணப்பட்டார்கள். இப்படியாக சாட்சிப்பகரும் பட்சத்தில்தான், இவர்களுக்குப் போதிக்கப்பட்ட காரியங்களுக்கு இவர்கள் உண்மையுள்ள உக்கிரணக்காரர்களாக இருக்க முடியும். "இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்” (1 கொரிந்தியர் 4:1). இதே கருத்துதான் "உங்களை நான் மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன்” மற்றும் "என் ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பாயாக” என்ற கர்த்தருடைய வார்த்தைகளில் விளங்குகின்றது. "அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை (எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் கிறிஸ்துவின் உடன் சுதந்திரவாளிகள் ஆகலாம் எனும் இரகசியத்தை) அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துக்கொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய (நீதிமான்களாக்கப்பட்டு, அர்ப்பணிக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் என்று கருதப்படும்) பரிசுத்த அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன். பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.” **(KJV மொழிப்பெயர்ப்பு)**. "அந்த மறைபொருள் எனக்கு இறை வெளிப்பாட்டின் வழியாகவே தெரியப்படுத்தப்பட்டது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சுருக்கமாக உங்களுக்கு எழுதியிருக்கிறேன்; அதை நீங்கள் வாசிக்கும்போது, கிறிஸ்துவை பற்றிய மறைபொருளை நான் புரிந்துக் கொண்டேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம் என்பதே; அந்த மறைபொருள் மற்ற தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதருக்கும், இறைவாக்கினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; நற்செய்தியின் வழியாக, பிற

இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைப்பொருள்; கடவுள் வல்லமையோடு என்னுள் செயல்பட்டு எனக்கு அளித்த அருள்கொடைக்கு ஏற்ப, அந்த நற்செய்தியின் தொண்டன் ஆனேன். கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப் பற்றிய நற்செய்தியை பிற இனத்தாருக்கு அறிவிக்கவும், எல்லா ஊழி காலமாக மறைந்திருந்த இந்த மறைபொருளின் திட்டம் இன்னதென யாவருக்கும் தெளிவுபடுத்தவும், இறைமக்கள் அனைவருள்ளும் மிகவும் கடையவனாகிய எனக்கு இந்த அருள் வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் பலவகையில் விளங்கும் கடவுளின் ஞானத்தை ஆட்சிபுரிவோர், வான்வெளியில் அதிகாரம் செலுத்துவோர் ஆகியோருக்கு இப்போது திருச்சபை வழியாக வெளிப்படுத்த முடிகிறது. இவ்வாறு கடவுள் ஊழி காலமாகக் கொண்டிருந்த திட்டத்தை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாகக் கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் நமக்குக் கிடைத்துள்ளது” (**எபேசியர் 3:3-11. திருவிவிலியம் மொழிப்பெயர்ப்பு**). இப்படியாக சபை எப்படி அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் அஸ்திபாரத்தின் மேலும், இந்த அஸ்திபாரத்தின் மூலைக் கல்லாகிய இயேசு கிறிஸ்துவின் மேலும் கட்டப்பட வேண்டும் என்று பவுல் கூறின பிற்பாடு, "இதினிமித்தம் (தேவனுடைய ஆலயமாகிய சபையைக் கட்டும் விஷயத்தில்) பவுலாகிய நான் புறஜாதியாயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்” என்றும் கூறுகின்றார் (எபேசியர் 3:1; 2:20-22).

இவ்விதமாக அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவைக்குறித்த வரலாற்றுச் சாட்சிகளைக் கொடுப்பவர்களாக மாத்திரம் இல்லாமல், தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துக்கொள்வதற்கும், போதிப்பதற்கும், பரிசுத்த ஆவியினுடைய தாக்கத்தினால் விசேஷித்த விதமாக ஆயத்தம்பண்ணப்பட்டு, அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளனர்; மேலும் இவர்கள் முழுச் சபையினுடைய நன்மைக்காகவும், போஷிப்பிற்காகவும், கட்டியெழுப்புவதற்காகவும், இவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு இவர்கள் விவேகமும், உண்மையுமுள்ள உக்கிராணக்காரர்களாகவும் காணப்பட்டார்கள். "இலவசமாய் பெற்றுக் கொண்டீர்கள், இலவசமாய் கொடுங்கள்” என்று கர்த்தர் கூறினார், மேலும் இக்கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் இவர்கள் கவனமாகவும் இருந்தார்கள்; இவர்கள் மூலமாக நமக்கு, அதாவது பூமியின் கடைசி எல்லை பரியந்தம் அந்த ஆசீர்வாதங்கள் கடந்து வந்தது.

ஆனால், நாம் இன்னும் ஒருபடி முன்வந்து, இந்த அப்போஸ்தலர்கள் சபையில் எஜமான்களாக/பிரபுக்களாக/கர்த்தாக்களாகக் கருதப்பட்டார்களா? அல்லது வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் சபையின் தலையும், கர்த்தருமாய் இருந்த இயேசு போனபிற்பாடு, இவர்களில் எவரும் தலையின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார்களா? அல்லது அப்போஸ்தலர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இயேசுவிற்குரிய தலை ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, அரசாங்கத்தின் ஆளுகைகளை எடுத்துக்கொண்டார்களா? அல்லது ரோமின் போப்மார்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு தாங்கள் கிறிஸ்து இயேசுவுக்குப்பதிலாக Vicars ஆக மற்றும் வாரிசுகள் என்று கூறிக்கொண்டது போன்று அப்போஸ்தலர்கள் ஸ்தானம் எடுத்துக்கொண்டார்களா? என்ற ஆராய்ச்சியைத் தொடர்வதற்கு நாம் பயபக்தியுடன் நாடுகின்றோம்.

இப்படியான கோட்பாடுகளுக்கு எதிராக, நாம் பவுலுடைய எளிமையான வார்த்தைகளைப் பெற்றிருக்கின்றோம்; "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; **ஒரே கர்த்தரும்**, ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்” (எபேசியர் 4:4-5). ஆகவே, சபையாகிய சரீரத்தில் பல்வேறு அங்கங்களின் மத்தியில், சிலருடைய முக்கியத்துவம் எவ்வளவுதான் அதிகமாய் இருந்தாலும், ஒருவரே கர்த்தரும், தலையுமாக இருக்கின்றார். இக்காரியத்தைக்குறித்து நமது கர்த்தர் இரண்டு தருணங்களில் தெளிவாகப் போதித்துள்ளார்; "பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும்

சகோதரராயிருக்கிறீர்கள்” (மத்தேயு 23:1-2, 6-8). “அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்” (மாற்கு 10:42-45).

ஆதிசபை ஜனங்கள், அப்போஸ்தலர்களைக் கர்த்தாக்களாக/பிரபுக்களாகக் கருதினதாகவோ அல்லது இப்படியான அதிகாரத்தையோ, மதிப்பையோ எப்போதாகிலும் அப்போஸ்தலர்கள் எடுத்துக்கொண்டதாகவோ நமக்கு எவ்விதமான ஆதாரங்களும் இல்லை. அப்போஸ்தலர்களுடைய இந்த நடத்தை, கர்த்தத்துவம் குறித்த போப்மார்களின் கருத்திடமிருந்து அதிகம் வேறுபட்டதாகும். உதாரணத்திற்குப் போப் தனக்குப் பெயர்ச் சூட்டிக்கொள்வது போன்று, பேதுரு ஒருபோதும் தன்னை அப்போஸ்தலர்களுக்கு இளவரசன்/பிரபு என்றோ, அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பட்டங்கள் சூட்டிக்கொண்டோ அல்லது இத்தகைய மரியாதையைச் சபையாரிடமிருந்து பெற்றுக்கொள்ளவோ இல்லை. அப்போஸ்தலர்கள் ஒருவரையொருவர் குறிப்பிடும்போது எளிமையாக பேதுரு, யோவான், யாக்கோபு, பவுல் அல்லது சகோதரன் பேதுரு, சகோதரன் யோவான் என்றே அழைத்துக்கொண்டார்கள். மேலும், சபை ஜனங்களும் ஒருவரையொருவர் கிறிஸ்துவுக்குள் சகோதரன், சகோதரி என்றுதான் அன்பின் வாழ்த்துக்களைப் பரிமாறினவர்களாகக் காணப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 9:17; 21:20; ரோமர் 16:23; 1 கொரிந்தியர் 7:15; 8:11; 2 கொரிந்தியர் 8:18; 2 தெசலோனிக்கேயர் 3:6, 15; பிலமோன் 7, 16). இன்னுமாக, இவர்களைச் சகோதரர் என்று அழைப்பதில் கர்த்தரும் வெட்கப்படவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. (எபிரெயர் 2:11). கர்த்தரும் கூடத் தம்முடைய கர்த்தத்துவத்தை (அ) அதிகாரத்தைச் செயல்படுத்தும் விஷயத்தில் அகந்தையான மனப்பான்மைக்கு அப்பாற்பட்டவராகவே காணப்பட்டார்.

சொந்த ஊரிலும், வெளியூரிலும் அப்போஸ்தலர்களைப்போலவே பொதுவாக மேற்பார்வை பண்ணின கண்காணிகளும் இருந்தது உண்மைதான். சத்தியம் மற்றும் இதரக்காரியங்களில் மிகவும் முதிர்ச்சி அடைந்தவர்கள், மூப்பர்களாக இருந்த அந்தந்தச் சபையின் காரியங்களை மேற்பார்வை பண்ணினதும் உண்மைதான். (அப்போஸ்தலர் 14:23). பல்வேறு இடங்களில் காணப்படும் சபையாருக்கடுத்த பூமிக்குரிய பணிக்கு விசேஷமான பொறுப்பேற்றுப் பண்ணின உதவியாளர்கள் இருந்ததும் உண்மைதான். (அப்போஸ்தலர் 6:1-3). மற்றும், பிரயாணம் மேற்கொண்டு தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கம் பண்ணும் சுவிசேஷகர்கள் இருந்ததும் உண்மைதான். ஆயினும், இவர்களில் எவரும் இந்தப் பெயர்களைக் கனத்திற்குரிய பட்டங்களாக ஒருபோதும் பயன்படுத்தினதில்லை. சபையில் இப்படியாக வேலைகள் புரிவதற்குத் தேவையான தகுதிகள் 1 தீமோத்தேயு 3:1-13; 2 தீமோத்தேயு 4:1-5 ஆகிய வசனங்களில் இடம்பெறுகின்றது.

ஆதிசபை ஜனங்கள் மத்தியில் முன்னிலை வகித்த இந்த ஊழியர்கள் ஆசாரிய/குருமார்களின் உடைகள் தரித்துக்கொண்டு சென்றதாகவோ அல்லது சிலுவையை, ஜெபமாலையை எடுத்துக்கொண்டு வெளியே திரிந்ததாகவோ, ஜனங்களிடமிருந்து பயபக்தியையும், மரியதையையும் எதிர்பார்த்தவர்களாகவோ காணப்படவில்லை. ஏனெனில், இவர்களில் எவர்கள் அதிகமாக பணிவிடைச் செய்கின்றார்களோ, அவர்களே இவர்களின் மத்தியில் பிரதானமானவராகக் காணப்படுவார்கள் என்று கர்த்தர் இவர்களுக்குப் போதித்துள்ளார். உபத்திரவங்கள் சபையைச் சிதறடித்தபோது, சபைஜனங்களை எருசலேமிலிருந்து வெளியே துரத்திவிட்டபோது, பதினொரு அப்போஸ்தலர்களும், எதையும் சந்திக்கத்தக்க தைரியத்துடன் காணப்பட்டார்கள். ஏனெனில், இந்தச் சோதனையான கட்டத்தில் வெளிதேசத்தில் காணப்படும் சபைஜனங்கள் உதவிக்காகவும், உற்சாகத்திற்காகவும் எருசலேமில் காணப்படும் இவர்களைக் (அப்போஸ்தலர்களை) கண்ணோக்குவார்கள்.

மேலும், ஒருவேளை அப்போஸ்தலர்களும் எருசலேமிலிருந்து பயத்தினிமித்தம், மறைந்து ஓடிப்போயிருப்பார்களானால், முழுச்சபையும் பெரும் அச்சத்தினால் ஆட்கொள்ளப்பட்டு, நடுநடுங்கி போயிருப்பார்கள். யாக்கோபு, ஏரோதின் பட்டயத்தினால் கொல்லப்படுகின்றார், பேதுருவோ சிறைச்சாலையில் இரண்டு போர்ச்சேவர்கள் மத்தியில் சங்கிலிகளில் கட்டப்பட்டவராகக் காணப்பட்டார். (அப்போஸ்தலர் 12:1-6). மேலும், பவுலும் சீலாவும் அநேக அடிகளினால் அடிக்கப்பட்டு, அவர்கள் பாதங்கள் தொழுமரத்தில் கட்டப்பட்ட நிலையில் சிறைச்சாலையில் போடப்பட்டார்கள். மேலும், பவுல் மிகுந்த போராட்டங்களைச் சகித்தவராகக் காணப்பட்டார். (அப்போஸ்தலர் 16:23-24; 2 கொரிந்தியர் 11:23-33). இவர்கள் கர்த்தாக்கள் போன்று பாவனைச் செய்தார்களா? இல்லை என்றே நாம் எண்ணுகின்றோம்.

பேதுரு இக்காரியங்களைக்குறித்து, தேவனுடைய மந்தையை மேய்க்கும்படி மூப்பர்களுக்கு அறிவுரைக் கூறினபோது, மிகவும் தெளிவாகக் காணப்பட்டார். இன்றைய காலத்தில் அநேக ஊழியர்கள் கூறுவதுபோன்று பேதுருவும், உங்கள் மந்தை, உங்கள் ஜனங்கள், உங்கள் சபை என்று கூறாமல் மாறாக, தேவனுடைய மந்தை என்றே கூறுகின்றார். மேலும், மூப்பர்கள் அடக்கி இறுமாப்பாய் ஆளுகிறவர்களாய் இராமல், தாழ்மை, உண்மை, வைராக்கியம் மற்றும் தேவபக்திக்குரிய மாதிரிகளாக மந்தைக்கு இருக்கும்படிக்கும் கூறுகின்றார். "எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும், தூதருக்கும், மனுஷருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்.... நாங்கள் பலவீனர்.... நாங்கள் கனவீனர்.....இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்" (1 பேதுரு 5:1-3; 1 கொரிந்தியர் 4:9-13). இவைகளையெல்லாம் பார்க்கும்போது, அப்போஸ்தலர்கள் அடக்கி இறுமாப்பாய் ஆளுகின்றவர்கள்போல் தெரியவில்லை. இன்னுமாக, தேவனுடைய மந்தையை அடக்கி இறுமாப்பாய் ஆள விரும்பும்/ஆசைப்படும் சில சகோதரர்களின் கருத்துக்களுக்கு எதிராக பவுல், "இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே "என்று பேசுகின்றார் (1 கொரிந்தியர் 4:8) . இன்னுமாக, இவ்விஷயத்தில் தாழ்மையாய் இருப்பதே சிறந்த வழி என்று கூறி, அதற்கு மாதிரியாய் இருக்கும் தன்னைப் பின்பற்றுங்கள் என்று கூறுகின்றார். பின்னர், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்" என்றும் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 4:1).

"சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவுமில்லை; தேவனே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை. உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல" என்று கூறினார் (1 தெசலோனிக்கேயர் 2:4-7).

இன்னுமாக, அப்போஸ்தலர்கள் ஒருபோதும் போதனைகள் விஷயத்திலும், சபைக்கான ஊழியங்களில் தங்களுக்கு மாத்திரம் பிரத்தியேக ஆதிக்கமான தனி உரிமை இருக்கின்றது என்று உரிமைப் பாராட்டிக்கொள்ளவுமில்லை. கர்த்தரும், அவர்கள் இப்படியாகச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லவுமில்லை. "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க

பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்ப்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்” (எபேசியர் 4:11-15).

தேவன் இவ்விதமாய் பல்வேறு உதவி புரியும் ஊழியர்களை எழுப்பினார். மேலும், ஆதி சபையிலும் சரி, சுவிசேஷ யுகத்திலும் சரி, இந்த ஊழியர்களின் பணிகளை அதிகமாய் ஆசீர்வதித்தும் உள்ளார். ஆனாலும் முன்னிலை ஸ்தானத்தையுடைய அப்போஸ்தலர்களே நமக்கு ஆவிக்குரிய காரியங்களால் ஊழியம் புரிவதற்கென விசேஷமாய் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தார்கள். போதகர்கள் மற்றும் மற்ற உதவிகளைப் புரியும் ஊழியர்களுக்கான பல்வேறு வரிசைகள் அல்லது ஒழுங்குமுறைகள் தொடர்பான கர்த்தருடைய நியமித்தலையும், தனிப்பட்ட மேற்பார்வையையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகின்றார்; "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கத்தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கத்தரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?” (1 கொரிந்தியர் 12:28-29). இல்லை, நிச்சயமாக இல்லை, ஒருவேளை நாம் கர்த்தரால் வழிநடத்தப்படுகிறவர்களாய் இருந்தால், சபைக்குப் போதிப்பதற்கும், போஷிப்பதற்குமெனத் தேவன் முன்வைத்துள்ள, அவருடைய நியமனம் தொடர்பான இந்த ஒழுங்குமுறையை ஏற்றுக்கொள்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் கிறிஸ்துவினுடைய ஐசுவரியங்களை அறிவிக்கின்றவர்களாய் இருப்பினும், அவர்கள் மத்தியில், அப்போஸ்தலர்களே முதன்மை ஸ்தானத்தில் இருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். (எபிரெயர் 5:12).

அப்போஸ்தலர்களுடைய இந்தப் பிரதான ஸ்தானத்தை நாம் ஒத்துக்கொள்கையில், சபை போஷிக்கப்படுவதற்காகக் கர்த்தரால் அருளப்பட்ட மற்ற உதவி புரிகிறவர்களின் ஊழியங்களை நாம் குறைவாக எடை போடுகின்றவர்களாகவோ அல்லது மதிப்புக் குறைத்தோ பேசுகிறதில்லை. உதாரணத்திற்குச் சுவிசேஷகர்களாகிய மாற்கு, லூக்கா மற்றும் ஸ்தேவானின் சாட்சிகள், அப்போஸ்தலர்களுடைய சாட்சிகள்போல் நம்பத் தகுந்ததாகவே இருக்கின்றது. ஏனெனில், "இவர்கள் அனைவரும் ஒரே சிந்தையை உடையவர்களாகக் காணப்பட்டார்கள்.” சுவிசேஷ யுகம் முழுவதும் காணப்படும் இத்தகைய உண்மையுள்ள மற்றும் கர்த்தரால் எழுப்பப்பட்ட சாட்சியாளர்களுக்கு, அப்போஸ்தலர்கள் கட்டளைக்கொடுப்பதை 2 தீமோத்தேயு 4:1-6 வரையிலான வசனங்களில் பார்க்கலாம்.

ஆகவே, புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாய்க் காணப்பட்ட பவுல் தன்னுடைய ஓட்டத்தை முடிக்கப்போகிற வேளையில், சபையின் மூப்பர்களிடம், நலன்களுக்கடுத்த வேலைகளின் பொறுப்பை அளிக்கின்றவராகக் காணப்படுகின்றார். மேலும், பவுலினுடைய இந்தக் கட்டளை, அன்றைய நாட்களில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் மூப்பர்களுக்கு மாத்திரம் பொருந்துவதாய் இராமல், நம்முடைய நாட்களில் உள்ளவர்களுக்கும் பொருந்தும். கர்த்தருக்கும், சபைக்கும், தான் ஊழியக்காரனாய் இருந்த விஷயத்தில் தன்னுடைய உண்மையைப்பற்றியும், மாபெரும் வேலையின் மீதான தன்னுடைய அக்கறையைப்பற்றியும் பவுல் கூறின பிற்பாடு, "மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல்

அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள். இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன். ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்" (அப்போஸ்தலர் 20:17, 28-35).

இதைப் போலவே பேதுருவும் மூப்பர்களுக்குப் புத்திமதிக் கூறுகின்றார்... "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" (1 பேதுரு 5 : 1-3).

இத்தகைய போதகர்கள், பரிசுத்த ஆவியினால், சபையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று நாம் நிதானித்துக் கொண்டாலும், இவர்களுடைய போதனைகள், சபைக்குத் தலையாக இருக்கும் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகள் போன்றுதான் காணப்படுகின்றதோ எனப் பார்ப்பது நம்முடைய கடமையாகும்; கர்த்தர் முதலாம் வருகையில் காணப்பட்டபோது, வெளிப்படுத்துவதற்கு ஏற்றதாய் இராதவைகளைப் பின்னர், தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகள் மூலம் வெளிப்படுத்தின தெய்வீகத் திட்டத்தின் ஆழமான காரியங்களை நமக்குப் போதிப்பதற்கு அவர் அப்போஸ்தலர்களுக்கு விசேஷமாக அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கர்த்தர் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். (யோவான் 16:12; எபேசியர் 3:5). சத்தியமானது, தெய்வீக ஏவுதலினால், கர்த்தரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பிரதிநிதிகளாகிய, அப்போஸ்தலர்களால் முதலாவதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஒருவேளை இந்த அப்போஸ்தலர்கள் கூட இடறிப்போனாலும், இந்தச் சத்தியமானது தடைப்பண்ணப்பட முடியாது (ஆனால் இந்த 11-அப்போஸ்தலர்கள் மற்றும் பவுலும் இடறிப் போகவில்லை) என்பது வெளிப்படுத்தல் 21:14-ஆம் வசனத்தில் வெளிப்படுகின்றது. இதைக்குறித்து பவுல் தெளிவாக, கலாத்தியர் 1:8-12 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார்.

ஆதிசபை ஜனங்கள் அப்போஸ்தலர்களின் மேன்மையான ஆவிக்குரிய அறிவு மற்றும் ஞானத்திற்குச் சரியான மரியாதைக்கொடுத்து, அப்போஸ்தலர்கள் தங்களுக்காக கர்த்தரால் விசேஷமாகத் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஸ்தானாதிபதிகளாகக் கருதி கற்றுக்கொள்ளும்படி, அப்போஸ்தலர்களின் பாதப்படியினருகே அமர்ந்தார்கள். ஆனாலும், சபைஜனங்கள் வெறுமையான மற்றும் எக்கேள்விகளும் அற்ற மனமுடையவர்களாக இராமல், அப்போஸ்தலர்களின் ஆவியைப் பகுத்தறிந்து, அவர்களுடைய சாட்சிகள் உண்மையுள்ளனவா என்று அறியும் மனப்பான்மையில், அப்போஸ்தலர்கள் பாதமருகே அமர்ந்தார்கள். (1 யோவான் 4:1; 1 தெசலோனிக்கேயர் 5:21; ஏசாயா 8:20). அப்போஸ்தலர்களும் கூட, (ஆதி) சபைஜனங்களுக்குப் போதிக்கும்போது, அவர்களிடம் மேற்கூறப்பட்ட மனப்பான்மை இருப்பதைக்கண்டு மகிழ்ந்து, அம்மனப்பான்மையை உற்சாகப்படுத்தி, அவர்களது இம்மனப்பான்மையைச் சந்திக்க ஆயத்தமாய்க் காணப்பட்டார்கள். அதாவது, (மனித தத்துவம் மற்றும் கூற்றுகளாகிய) மனித ஞானத்தின் மயக்கும் வார்த்தைகளால் அம்மனப்பான்மையைச் சந்திக்க அப்போஸ்தலர்கள் முற்படாமல், ஆவி மற்றும் வல்லமையை வெளிப்படுத்திக்காட்டுவதன் மூலம், சபையினுடைய விசுவாசமனதை மனித ஞானத்தின்மேல் நிற்கச் செய்யாமல், தேவனுடைய வல்லமையின்மேல் நிற்கச் செய்யத்தக்கதாக அப்போஸ்தலர்கள் ஆயத்தமாய்க் காணப்பட்டார்கள் (1 கொரிந்தியர் 2:4-5). அப்போஸ்தலர்கள், தங்களுக்கெனச் சபைஜனங்கள் மத்தியில் கண்மூடித்தனமான, மூடநம்பிக்கையான பக்தியை/மதிப்பை வளர்த்தவில்லை.

பெரோயாவிலுள்ளவர்கள் குறித்து, “அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்” என்று வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 17:11). முற்காலத்து தீர்க்கத்தரிசிகளினால் மறைப்பொருள்களாக அறிவிக்கப்பட்ட அதே சுவிசேஷத்தைத்தான், தாங்களும் பிரகடனம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர் என்பதை காட்டுவதே அப்போஸ்தலர்களுடைய தொடர்ச்சியான பிரயாசமாக இருந்தது. “உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கத்தரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு (அப்போஸ்தலர்கள்), இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்” (1 பேதுரு 1:10-12). ஜீவன் மற்றும் அழியாமைக்கான சுவிசேஷம் கர்த்தரால் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்றும், இது தொடர்பான அதிகமான வெளிச்சம் சபைக்கு, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் மூலம் விசேஷமான வெளிப்படுத்தல்கள் அல்லது ஏதேனும் இயல்பானமுறையில் அப்போஸ்தலர்களாகிய தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு, சபைக்கு வெளிப்படுத்தப்படும் என்றும், தங்கள் மூலம், முழுச்சபைக்கும் வெளிப்படுத்தப்படும் என்றும் காட்டவே அப்போஸ்தலர்களுடைய தொடர்ச்சியான பிரயாசம் காணப்பட்டது. “இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் (முதலாவது அப்போஸ்தலர்களையும், பின்னர் அவர்கள் வாயிலாக முழுச்சபையாரை) உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் (தனியாய்) பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி (உங்களுக்கான என்னுடைய செய்தி கொடுப்பவராக பரிசுத்த ஆவி இருந்து) வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்” (யோவான் 16:12-15).

ஆகவே, அப்போஸ்தலர்கள் அளித்த சாட்சியானது, நியாயப்பிரமாணங்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகள் உரைத்தவைகளுக்கும் இசைவாக இருக்கின்றதா என்று பார்க்கவும், அவர்களுடைய சாட்சிகளை, கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஒப்பிட்டுப்பார்க்கவும், பெரோயர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்துப் பார்த்தது சரியான காரியமே ஆகும். “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கின்றது” என்று கர்த்தரும் கூடத் தம்முடைய சாட்சியை நிரூபிக்கும்படி, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்ற அழைப்பை விடுக்கின்றார். நியாயப்பிரமாணம் மூலமாயும் சரி, தீர்க்கத்தரிசிகள் மூலமாயும் சரி, கர்த்தர் அல்லது அப்போஸ்தலர்கள் மூலமாயும் சரி வெளிப்படுத்தப்படும் தெய்வீகச் சாட்சியானது இசைவுடன் காணப்பட வேண்டும். இவர்கள் அனைவரின் சாட்சியில் காணப்படும் இசைவானது, இவர்கள் தெய்வீக ஏவுதலினாலேயே பேசியுள்ளனர் என்பதை நிரூபித்துக் காட்டுகின்றது. இப்படியாக, அனைத்துச் சாட்சிகளும் இசைவுடன் காணப்படுவதினால், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் அடங்கிய முழு வேதவாக்கியங்களும், கர்த்தர் அழைப்பதுபோன்று, “தேவ சுரமண்டலமாகவே” காணப்படுகின்றதினால் தேவனுக்கு நன்றி (வெளிப்படுத்தல் 15:2). இந்தச் சுரமண்டலம்/இசைக்கருவியின் பல்வேறு நரம்புகள், நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகளினால் உரைக்கப்பட்ட பல்வேறு சாட்சிகளாகக் காணப்படுகின்றது. மேலும், இந்த நரம்புகள் நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியினால் தொடப்பட்டு, தெய்வீகச் சத்தியத்தை ஆராயும் பக்தியுள்ள ஆராய்ச்சியாளரின் விரல்களினால் அந்த நரம்புகள் அசைக்கப்படும்போது, மிக அருமையான எழுச்சியூட்டும் இசையை அளிக்கின்றது. கர்த்தர் இயேசு மூலமும், அப்போஸ்தலர்கள் மூலமும்,

தீர்க்கதரிசிகள் மூலமும், வந்த சாட்சியின் வாயிலாக நாம் கற்றுக் கொண்டுள்ள மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலிலுள்ள சிறந்த இராகத்திற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றோம்.

கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய சாட்சியானது, நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள் உரைத்தக் காரியங்களுக்கு இசைவாக இருக்க வேண்டும் என்றாலும், இவர்களது சாட்சிகள் பழையவைகளைக் குறித்துச் சாட்சிக் கொடுப்பதோடல்லாமல் புதியவைகள் குறித்துச் சாட்சயளிக்க வேண்டுமென நாம் எதிர்ப்பார்க்க வேண்டும். ஏனெனில், இப்படியாக நாம் எதிர்ப்பார்க்கத்தக்கதாகவே தீர்க்கதரிசிகள் நம்மை வழிநடத்தியுள்ளனர் (மத்தேயு 13:35; சங்கீதம் 78:2; உபாகமம் 18:15, 18; தானியேல் 12:9). ஆகவே கர்த்தரும், அப்போஸ்தலர்களும் முற்காலத்துத் தீர்க்கதரிசனங்களில் மறைந்திருந்த சத்தியத்தை வெளிப்படுத்தியதோடுகூட, சத்தியத்தின் புதிய வெளிப்படுத்தல்களையும் வெளிப்படுத்துகின்றவர்களாகக் காணப்பட்டார்கள் என்று நாம் பார்க்கின்றோம்.

சுவிசேஷ யுகத்தின் சபையானது, பேதுரு எனும் பாறையின் மீது கட்டப்பட்டுள்ளார்கள் என்றும், அந்தப் பேதுருவினிடத்திலும், அவருக்குப் பின் அவர் ஸ்தானத்தில் இருக்கப் போகிறவர்களாகிய போப்புகளுக்குப் பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், திறப்பதற்கும், மூடுவதற்கும், தாங்கள் விரும்பும் எவரையும் அனுமதிப்பதற்கும் அல்லது விரும்பாதவர்களை அனுமதிக்காமல் இருப்பதற்கும் யாரையும் அல்லது எதையும் அவர்கள் விரும்பும்பட்சத்தில் கட்டுவதற்கோ அல்லது கட்டவிழ்ப்பதற்கோ அதிகாரம் உடையவர்கள் என்றும் உள்ள ரோம சபையின் அந்திக்கிறிஸ்தவ அமைப்பின் வாதங்களை நாம் இங்குக் கவனிப்பது நலமாயிருக்கும்.

இவ்வமைப்பு இவ்வாதங்களை, மத்தேயு 16:15-19 வரையிலான வேதவாக்கியங்களின் அடிப்படையில் கூறுகின்றது; "அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் (petros - ஒரு கல்) இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் (petra பாறை, ஒரு பெரிய கல்) என் சபையைக் கட்டுவேன்." ஏசாயா 8:14-ஆம் வசனம் போன்ற பல்வேறு பழைய ஏற்பாடு வசனங்களுக்கு இசைவாகப் பார்க்கும்போது, சபை கட்டப்படும் மாபெரும் பாறையாகக் கர்த்தர் இருக்கின்றார் என்றும், கிறிஸ்துவாகிய நம்முடைய இரட்சிப்பின் கன்மலை/பாறையாகிய அந்தப் பாறையின் மீது கட்டப்படும் தேவனுடைய மகிமையான ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களில், ஒரு கல்லாக பேதுரு இருக்கின்றார் என்றும் தெரிகின்றது. தான் உள்ளடங்கிக் காணப்படும் ஜீவனுள்ள கற்களுக்கும் மற்றும் மாபெரும் அஸ்திபாரக் கல்லாகிய, பாறையாகிய/கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவுக்கும் இடையேயுள்ள உறவினைப் பேதுரு குறிப்பிடுகின்றார்; "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1 பேதுரு 2:4-5).

நம்முடைய கர்த்தருடைய பல உவமைகளில் காட்டப்பட்டதுபோன்று, சுவிசேஷ யுக சபையானது, ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பரலோக இராஜ்யமாக இருக்கின்றது (மத்தேயு 13). மேலும், அதன் சிலாக்கியங்களும், வல்லமைகளும், யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் (அப்போது) திறக்கப்படவிருக்கின்றது. உண்மையில் கர்த்தர்தான் தமது சபைக்கான கதவைத் திறந்து வைத்தார். கர்த்தருடைய நாமத்தில், இவ்வேலையைச் செய்யும்படிக்கு, பேதுரு, தெரிந்துக்கொள்ளப்பட்ட பிரதிநிதியாக மாத்திரமே இருந்தார். அதாவது, பெந்தெகொஸ்தே நாளில் தனது செய்தியின் மூலம் யூதர்களுக்குக் கதவைத் திறந்தவராகவும் (அப். 2:14, 40), மூன்றரை வருடங்களுக்குப் பிற்பாடு, அதே கதவைக் கொர்நேலியு மற்றும் அவருடைய வீட்டாருக்கு, தான் கொடுத்த செய்தியின் மூலம்,

புறஜாதிகளுக்கும் பேதுரு திறந்து வைத்தார் (அப். 10:33, 46). இந்தக் கனம் பொருந்தின ஊழியமே, அடையாளமான வார்த்தையில், "இராஜ்யத்தின் திறவுகோல்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (மத்தேயு 16:9). ஆனால், ஒருமுறை திறக்கப்பட்ட அந்தக் கதவைப் பேதுருவானாலும் வேறெந்த மனுஷனாலும் சரி, மூட முடியாது. "தாவீதின் திறவுகோல்" தம்மிடம் இருப்பதாகக் கர்த்தர் உரைக்கின்றார் (வெளிப்படுத்தல் 3:7). மேலும், தெரிந்துக்கொள்ளப்பட்ட உண்மையுள்ள சபையின் கடைசி அங்கமானது, மகிமைக்குள் பிரவேசித்து முடிவது வரையிலும், அவருடைய இராஜ்யத்தின் இந்தக் கதவு அடைக்கப்படுவதில்லை. பேதுரு பயன்படுத்தின திறவுகோலானது பரிசுத்த ஆவியினால், பேதுருவின் மனதிற்குத் தெளிவுப்படுத்தப்பட்ட யுகத்திற்கடுத்த சத்தியமாகும்.

பூமியிலும், பரலோகத்திலும் எதையாகிலும் கட்டுவதற்கும், கட்டவிழ்ப்பதற்குமான வல்லமையானது பேதுருவுக்கு மாத்திரமல்லாமல், அனைத்து அப்போஸ்தலர்களுக்குமே அருளப்பட்டக் காரியமாகும். மேலும், சபைக்குச் சத்தியத்தை முன்வைக்கும் விஷயத்தில், தேவன் அப்போஸ்தலர்களுக்கு, பேச வேண்டிய வார்த்தைகளில் வழிநடத்துதல் கொடுத்ததினால், அனைத்து உண்மையுள்ளவர்களும், அப்போஸ்தலர்களுடைய போதனைகள் மீது நம்பிக்கைக்கொள்ளலாம். அவர்கள் சபையின் மீது எவைகளையெல்லாம் கடமைகள் எனக் காட்டினார்களோ, அவைகள் பரலோகத்திலும் அங்கீகரிக்கப்பட்டது என்றும், அவர்கள் எவைகளையெல்லாம் கட்டவிழ்த்துவிட்டார்களோ, அவைகளில் அவர்கள் தேவனால் வழிநடத்தப்பட்டபடியால், (உதாரணத்திற்கு: மோசேயின் நியாயப்பிரமாண அநுசரிப்புத் தொடர்புடைய விஷயம்) அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டது அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டது என்றும் நாம் அறிகிறோம்.

## "ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள்"

சபைக்கு ஊழியம் புரியும்படிக்குக் கர்த்தர் எப்படி 12-அப்போஸ்தலர்களைத் தெரிந்துக்கொண்டு, அவர்களுக்கு அதிகாரமும், கட்டளையும் கொடுத்தார் என்பவைகளைப் பார்த்த பிற்பாடு, அவர்களுடைய போதனைகள் வெறும் வாய்மொழிச் சொற்களா அல்லது ஏவப்பட்டுக் கூறின போதனைகளா என்று நாம் பார்க்கலாம். பின்வரும் காரியங்களை நாம் கவனிக்கலாம்:-

(1) அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தின் மூலமாக பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தம் முழுச் சபைக்கு வருவதாய் இருந்தாலும், தேற்றரவாளராகிய பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தம் விசேஷமாக அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டதை நாம் கவனிக்கின்றோம் (யோவான் 16:13-15). கடைசி இராப்போஜனத்தின் இரவில், யூதாஸ் வெளியே கடந்துபோன பிற்பாடு இந்தப் பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தமானது, 11-அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்டது (யோவான் 13:31). மேலும், 12-ஆம் அப்போஸ்தலனாக பவுல் நியமிக்கப்பட்டபோது, இந்த வாக்குத்தத்தமானது இவருக்கும் சரிசமமாகப் பொருந்தி நிறைவேறினதாகவும் இருந்தது. "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவான் 14: 26; 16:13).

இப்படியாக, அப்போஸ்தலர்களுக்கான ஏவுதல் மூன்று விதமான தன்மைகளைக்கொண்டது என்று நாம் அறிகின்றோம். அவை, (a) தெய்வீகத் திட்டம் மற்றும் நோக்கங்கள் தொடர்பான அனைத்துச் சத்தியத்தைப் புரிந்துக்கொள்ளும்படியான ஒரு வழிநடத்துதல், (b) இவர்கள் கர்த்தரோட காணப்பட்டபோது அவர் கொடுத்த அனைத்துப் போதனைகளை இவர்கள் தங்கள் ஞாபகத்தில் கொண்டுவந்து, அனைத்தையும் ஒப்புவிக்கும்படியாக இவர்களுடைய ஞாபகங்கள் புது வலுவூட்டப்படுதல் மற்றும் (c) கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மற்றும் பரிசுத்த ஆவி கடந்துவருவது வரையிலும், கர்த்தர் கூறவேண்டியிருந்ததும், புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்ததுமான "அநேக காரியங்களாகிய" வரவிருக்கின்ற காரியங்கள் தொடர்பான விசேஷித்த வெளிப்படுத்தல்கள் ஆகும் (யோவான் 16:12).

(புதுச் சிருஷ்டி) தொகுதி 6-இல், **அப்போஸ்தலர்களின் ஊக்கம்** மற்றும் **அப்போஸ்தலரின் உறுதி** எனும் தலைப்பின் காரியங்களே, இப்பாடத்தின் கடைசி நான்கு பக்கங்களாக உள்ளது. பக்கம் : 271, 272, 273, 274, 275, 276, 280, 281, 282, 283, 284, 285, 286, 287, 288.

---

**R2585**

# “நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு”
## (சங்கீதம் 37:37-KJV)

"சான்றோரைப் பார்! நேர்மையானவரைக் கவனி!” (திருவிவிலியம் )
மத்தேயு 4:25-5:12

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.”
(மத்தேயு 5:8)

தேவன் அளிக்கப்போகின்ற மிக ஆசீர்வாதமான நிலைகளை நாம் அடைவதற்கு என்ன குணநலன்கள் அவசியமாய் உள்ளன? இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கும், நீதியினால் நிரம்பிக்காணப்படுவதற்கும், தெய்வீக இரக்கம் மற்றும் முடிவில்லா ஆறுதலைப் பெற்றுக்கொள்வதற்கும், தேவனுடைய குமாரர்கள் என்று அழைக்கப்படுவதற்கும், தேவனுடைய முகத்தைப்பார்க்க அனுமதிக்கப்படுவதற்கும், பரலோகத்தில் மாபெரும் பலனை அடைவதற்கும் நாம் எப்படிக் காணப்பட வேண்டும்? இதைக்காட்டிலும் வேறெந்தக் கேள்வி, வேறெந்தத் தலைப்பு, வேறெந்தப் பாடம் நமக்கு மிகவும் சுவாரசியமாகவும் அல்லது மிகவும் நன்மைக்கேதுவான ஆராய்ச்சியாகவும் இருக்கக்கூடும்? இதை மாபெரும் போதகரானவர் தம்முடைய முதலாம் வருகையின்போது கொடுத்திட்ட முக்கியமான போதனைகளில் ஒரு தலைப்பாகக்/பாடமாகக் கொடுத்துள்ளார். மேலும், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள தம்முடைய உண்மையான சீஷர்களுக்கு எச்சரிப்பாக இருக்கும்படிக்குத் தம்முடைய வாதங்களின் சாராம்சத்தைப் பதிவு செய்து வைக்கும்படியாகவும் பண்ணினார்.

கர்த்தருடைய பின்னடியார்களாகிய நாம் பின்பற்ற வேண்டிய அவருடைய குணலட்சணம் ஒன்றாக இருப்பினும், அந்த ஒரு குணலட்சணத்தை அடைவது என்பது, தேவன் அளிக்கப் போகின்ற அனைத்து ஆசீர்வாதங்களை அடைவதாக இருக்கும். எனினும், இவ்விஷயத்தை நம்முடைய மனங்களுக்குத் தெளிவுபடுத்தும் வண்ணமாக, கர்த்தர் இந்த ஒரு குணலட்சணத்தைப் பல்வேறு பாகங்களாகப் பிரித்து, அந்த ஒவ்வொரு தனிப்பட்ட பாகத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றார். அதாவது, எப்படி ஒரு நிழற்படம் எடுப்பவர் (photographer) ஒரு பொருளின் அனைத்து விஷயங்களும் தெளிவாகத் தெரியத்தக்கதாக முன்புறக் கண்ணோட்டத்திலும், இடது புறக் கண்ணோட்டத்திலும், வலது புறக் கண்ணோட்டத்திலும், பின்புறக் கண்ணோட்டத்திலும் (Front, Right, Left, Back View) படங்கள் எடுத்துக்கொள்வதுபோன்று, கர்த்தர் நமக்குக்காட்டி, நம் மனங்களுக்குத் தெளிவுப்படுத்துகின்றார்.

## “முதலாம் அவசியம்”

நமது கர்த்தர் முன்வைக்கும் முதலாவது குணலட்சணமானது, சில கோணங்களில் மிகவும் முக்கியமானது என்று எண்ணுவதற்கு நியாயமான காரணங்கள் உண்டு என்று நாம் கருதுகின்றோம். முதலாம் குணலட்சணம் **தாழ்மையாகும்**. "ஆவியில் எளிமையுள்ளவர்கள் (தாழ்மையான மனமுள்ளவர்கள்) பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.” வசனம் இப்படியாக இருப்பதினால், தாழ்மைதான் அவசியமான ஒரே குணலட்சணம் என்றும், தாழ்மை கொண்டவர்கள் எவரும் இராஜ்யத்தை அடைந்துவிடுவார்கள் என்றுமுள்ள அர்த்தத்தைக் கொடுக்காது. மாறாக, இராஜ்யத்தை அடைவதற்குத் தாழ்மையானது முதலாம் முக்கியத்துவமுள்ள முன்தேவை/முன்நிபந்தனையாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தாழ்மையுள்ளவர்கள் அனைவராலும் இராஜ்யத்தை அடையமுடியாது,

அதேசமயம் தாழ்மை இல்லாத எவராலுங்கூட இராஜ்யத்தை அடையமுடியாது. மேலும், “பரலோக ராஜ்யம் அவர்களுடையது” என்பதின் அர்த்தமானது, பெருமை, அகம்பாவம், செருக்கு என்பவைகளைத் தங்களின் குணலட்சணங்களுடைய அஸ்திபாரமாகக் கொண்டிருப்பவர்களாகிய வேறு மனநிலையைக் கொண்டவர்களுக்கு, இராஜ்யத்தை அடைவதற்கான வாய்ப்புகள் முற்றிலும் தடைச் செய்யப்பட்டிருப்பினும், மேற்கூறப்படுள்ள தாழ்மையுள்ள வகுப்பார், இராஜ்யத்திற்கான கனங்கள் மற்றும் ஆசீர்வாங்களைப் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதேயாகும்.

“தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்” என்ற வார்த்தைகளைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் தெளிவாய்ப் புரிந்துக்கொள்வார்களாக! இந்தக் கருத்தானது, தேவனுடைய நேச குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாறும்படிக்கு நாடிக்கொண்டிருக்கின்ற, கர்த்தருடைய சிறியவர்களில் ஒவ்வொருவரையும் எவ்வளவாய் எச்சரிப்புடன் இருக்கச்செய்ய வேண்டும். இந்தத் தாழ்மையின் ஆவியைத் தங்களுடைய இருதயங்களில் வளர்த்திக்கொள்ளும்படியாக இவர்கள் பேணுவதிலும், கவனிப்பதிலும் எத்துணை வைராக்கியத்துடன் காணப்பட வேண்டும். மேலும், இத்தாழ்மையானது மற்றவர்களுக்கு அதிகமதிகமாய்த் தெரியத்தக்கதாக இவர்களுடைய அன்றாட ஜீவியத்திலும் காணப்பட வேண்டும். இன்னுமாக, இத்தாழ்மை விசேஷமாகச் சகோதரர்களுக்கு எத்துணை ஆசீர்வாதமாகவும் நன்மைக்கேதுவான எத்துணை செல்வாக்காகவும் காணப்பட வேண்டும்.

வேரிலிருந்து பல கிளைகளையுடைய மரமானது வளர்வதுபோன்று, முதலாவது அவசியமாய் இருக்கும் இக்குணலட்சணம் வளரும்போது, கர்த்தர் “பாக்கியம்” அதாவது தெய்வீக அங்கீகரிப்புடையது என்று அறிவித்துள்ள ஆவியின் மற்றக் குணலட்சணங்களும் வளர்கின்றது. இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, சகல மனித போதனைகளிடமிருந்தும், நமது கர்த்தருடைய போதனைகள் எவ்வளவு வேறுபட்டதாகக் காணப்படுகின்றது! பூமிக்குரிய ஞானமானது பின்வரும் காரியங்களைக் கூறுகின்றது:- அதாவது, “நிமிர்ந்து நில்லுங்கள், உங்களைப்பற்றி உயர்வாக எண்ணுங்கள், எளிமையுடன் இருப்பதற்குப்பதிலாகக் கொஞ்சம் கர்வம் கொண்டவர்களாக இருங்கள். இப்படிக் கொஞ்சம் கர்வத்துடன் இருப்பது அநேக விதத்தில் மிகுந்த செல்வாக்கை உடையதாக இருக்கும். உங்களைக்காட்டிலும் வேறு எவராலும் உங்களைக்குறித்து உயர்வாகவும் எண்ணமுடியாது, பாராட்டவும் முடியாது. ஆகவே, உங்களைக்குறித்து உயர்வாக எண்ணிக்கொள்ளுங்கள், நிமிர்ந்து நடங்கள், உங்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பதை வெளிப்படுத்தும் பார்வையை உடையவராய் இருங்கள்.”

இப்படியான உலகப்பிரகாரமான ஆலோசனையில், உலக ஞானம் காணப்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை. தற்காலம் தொடர்பான பூமிக்குரிய விஷயங்களில் ஜெயம்/வெற்றிக்கொள்வதற்கு ஏதுவான இந்தப் பூமிக்குரிய ஆலோசனைகளில் கொஞ்சம் உண்மை இருக்கின்றது என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், தேவனுடைய வழிகள் என்பது மனுஷனுடைய வழிகள் அல்ல; வானம் பூமியிலிருந்து எவ்வளவு உயரமாகக் காணப்படுகின்றதோ, அவ்வளவாய்த் தேவனுடைய வழிகளும், மனுஷனுடைய வழிகளிடமிருந்து உயர்வானதாகக் காணப்படுகின்றது. மேலும், தன்னைத்தான் தாழ்த்துகின்றவன், ஏற்றகாலத்தில் உயர்த்தப்படுவான் என்றும், தன்னைத்தான் உயர்த்துகின்றவன், ஏற்றகாலத்தில் தாழ்த்தப்படுவான் என்றும் தேவன் நமக்கு உறுதியளிக்கின்றார் (மத்தேயு 23:12). தேவன் இன்று தெய்வீக வல்லமையின் வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டுள்ள நமது அருமையான மீட்பரை, தாழ்மை மற்றும் கீழ்ப்படிதலுக்கான மாதிரியாக வேத வாக்கியங்களில் சுட்டிக்காட்டுகின்றார். பின்னர் தன்னைத்தான் உயர்த்த முயற்சித்து, இப்பொழுது தள்ளப்பட்டு, முற்றிலுமாக இறுதியில் அழிக்கப்படப்போகின்ற மாபெரும் எதிராளியானவனின் போக்கின்மேல் நமது கவனத்தைத் திருப்புகின்றார் (பிலிப்பியர் 2:9; எபிரெயர் 2:14).

ஆவியில் எளிமையுள்ளவனுக்கும் மற்றும் பணப்பையில் எளிமை/தரித்திரனாய் இருப்பவனுக்கும் (அ) அறிவிலும், சாதனைகளிலும் தரித்திரனாய் இருப்பவனுக்கும் இடையேயுள்ள துல்லியமான வித்தியாசம் கவனிக்கப்பட வேண்டும். பூமிக்குரிய காரியங்களில் தரித்திரராய் இருந்தும், ஆவியில் செருக்குக்கொண்டவர்களாய்க் காணப்படும் ஜனங்களை நாம் அனைவருமே பார்த்திருக்கின்றோம். நம்முடைய

பொருளாதாரமும் (அ) அறிவும், சூழ்நிலைகளும் என்னவாகக் காணப்பட்டாலும் சரி, தாழ்மையான ஆவியே தெய்வீகப் பார்வையில் அங்கீகரிக்கப்படுகின்ற காரியமாக இருக்கும் என்பதே கவனிக்கத்தகுந்த கருத்தாகும். பரத்திலிருந்துவரும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இத்தகைய தாழ்மையின் ஆவி அவசியமாகும். அதாவது, தங்கள் சொந்த குறைபாடுகள் குறித்தும், ஞானமில்லாமைக்குறித்தும் தாழ்மையுடன் உணர்ந்துக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல், தேவன் தற்காலத்தில் தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரம் அருள விரும்பும் ஞானத்தை இருதயப்பூர்வமாகவும், இலவசமாகவும் பெற்றுக்கொள்ள முடியாது. இன்னுமாக, இந்த மனத்தாழ்மையானது, தெளிந்த புத்தியுள்ள ஆவிக்கு அவசியமான ஆதாரமாக/அஸ்திபாரமாகக்கூட இருக்கின்றது. ஏனெனில், தாழ்மையான மனப்பான்மை உடையவரைத் தவிர வேறு எவரால் நியாயமாகவும், பாரபட்சமின்றியும், சரியாக சிந்திக்க முடியும்? ஆகவே, தாழ்மையானது கிறிஸ்துவின் மனம் அல்லது குணலட்சணத்தின் முதல்நிலை மூலக்கூறாக இருக்கின்றது என நாம் அனைவரும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

## "அனுதாபத்திற்குரிய பலனாகிய ஆறுதல்கள்"

கர்த்தரால் கூறப்பட்டுள்ள இரண்டாம் மலைப்பிரசங்கத்தின் வார்த்தைகள் அல்லது பாக்கியமான நிலை, முதல் வார்த்தைக்கு மிகவும் தொடர்புடையதேயாகும். "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்." துயரப்படுவது என்பது ஒரு குணலட்சணம் அல்ல, மாறாக அது கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படத்தக்கதான ஒரு மனப்பான்மையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆறுதல் அல்லது சந்தோஷங்கள் இல்லாத துயரப்படுதலின் ஆவியே ஒரு கிறிஸ்தவனுடைய ஆவி என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மேலும், நம்முடைய பரம பிதாவும், பரிசுத்த தேவதூதர்களும் எப்போதும் துக்கப்பட்டுக்கொண்டிருப்பவர்களாக இருப்பார்கள் என்றும் நம்மால் அனுமானிக்கவும் முடியாது. ஒருவேளை, துயரப்படுதல் ஒரு குணலட்சணமாக இருக்குமாயின், நிச்சயமாகப் பிதாவும், தூதர்களும் துயரப்பட்டுக்கொண்டே இருப்பார்கள். மாறாக, கருத்து என்னவெனில், இப்பொழுது துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பதேயாகும். அதாவது, தற்கால பூமிக்குரிய சூழ்நிலைகளானது, முழுமையான திருப்தியையும், மகிழ்ச்சியையும் கொடுப்பதில்லை என்று உணர்கின்றவர்களைக் குறிக்கின்றது. அதாவது, முழு மனிதகுடும்பமும் இன்று கடந்துசென்று கொண்டிருக்கும் பிரச்சனைகள், பாவம், வியாதி, வலி, மரணம் மற்றும் கூக்குரலை அறிந்தவர்களைக் குறிக்கின்றது. தற்கால சூழ்நிலைகளின் கீழ் அனுதாப இருதயம் கொண்டவர்களும், தற்கால சூழ்நிலைகள் திருப்திகரமற்றவைகள் என்று உணர்கிறவர்களும் பாக்கியவான்கள். ஏனெனில், தேவனுடைய ஏற்பாட்டின் கீழ் அனைத்தும் சிறப்பான விதத்தில் நிறுவப்படுவதற்கான காலம் வந்து கொண்டிருக்கின்றது. மேலும், தற்கால சூழ்நிலைகள் குறித்ததான இவர்களுடைய அதிருப்தியானது, தெய்வீகத் திட்டம் ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கும் மேலான ஏற்பாடுகள் மீது இவர்களை ஈர்க்கின்றது. தேவனுடைய இராஜ்யம் வந்து, பரலோகத்தில் அவருடைய சித்தம் செய்யப்படுவது போன்று பூமியிலும் செயல்படுத்தப்படும் போதும் துக்கம், துயரம், வேதனை மற்றும் கண்ணீருக்கான காரணிகள் அனைத்தும் மாற்றப்படும். மேலும், அக்காலமானது (இராஜ்யம்) (இன்று துயரப்படுகின்ற) இந்த வகுப்பாருக்கு ஆறுதலின் காலமாகவும், திருப்தியின் காலமாகவும் இருக்கும்.

கர்த்தருடைய ஜனங்களுக்கு தற்காலத்திலுங்கூட ஆறுதல் கிடைப்பது உண்மையே. அதாவது, தெய்வீக வார்த்தையின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் மீது இவர்கள் கட்டியெழுப்பும் விசுவாசத்தின் மூலமாக இவர்கள் இக்காலத்திலேயே ஆறுதல் அடைகின்றனர். இந்த வகுப்பார் தற்காலத்தில் காணப்படும் தவறுகள், அநியாயம், பெரும்துயரங்களை உணர்ந்துக்கொள்வார்கள் என்ற இக்காரியமானது, இவர்களுக்குள் பல தெய்வீக வாக்குத்தத்தங்கள் கவர்ந்து இழுக்கப்படும் இருதய நிலையை உருவாக்குகின்றது. ஆனால் மற்றவர்களோ, அதாவது சிருஷ்டிகளின்மேல் அதிகம் அனுதாபம் இல்லாத இருதயத்தை உடையவர்ளோ, நமக்கு முன்பாக சுவிசேஷத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைகளை முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்படுவார்கள். ஆகவே, அனுதாபம் கொள்பவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளினால் கவர்ந்து இழுக்கப்படுகின்றபடியால், இவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளிலிருந்து ஆறுதலை அடைகின்றார்கள். இந்த வார்த்தைகள் இவர்களுடைய இருதயங்களுக்குச் சமாதானத்தைப் பேசுகின்றது. மேலும், இவ்வார்த்தைகள் தற்கால சூழ்நிலைகளின் கீழ்க் குறைவான

அனுதாபம் உள்ளவர்களாக இருப்பவர்கள் அறிந்திராத, உள்ளான சந்தோஷத்தையும் இவர்களுக்குக் கொடுக்கின்றது. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்களே!

குணலட்சணங்களிலுள்ள முதலாவது குணலட்சணமாகிய மனத்தாழ்மையை நாம் விதைத்து, அதனை நாம் அதிகமதிகமாய் வளர்த்த முடியும்போது, நம்மால் இரண்டாம் குணலட்சணமாகிய அனுதாபத்தின் ஆவியையும் நம்மால் வளர்த்தமுடியும். இந்த அனுதாபத்தின் ஆவியை வளர்த்துவதற்கு நாம் அடிக்கடி மற்றவர்களுடைய நலன்களை,சோதனைகளை, நம்முடைய பிரச்சனைகள்போன்று எண்ணி உதவிகரத்தை நீட்டவேண்டும். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10).

## "சாந்தகுணமுள்ளவர்கள் எப்படிச் சுதந்தரித்துக்கொள்வார்கள்"

கர்த்தர் குறிப்பிடும் மூன்றாம் குணலட்சணம் சாந்தகுணமாகும். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். மூன்றாம் குணலட்சணம் என்பது சாந்தகுணம் அல்லது கனிவு/நிதானம் ஆகும். **வெப்ஸ்டர் அகராதியானது**, சாந்தகுணத்தை, "தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் மற்றும் ஒழுக்க ரீதியிலும், மத ரீதியிலும் காட்டப்படும் பொறுமை மற்றும் நிதானம்/கனிவு என்று விளக்குகின்றது. இந்தப் பொறுமை, நிதானம் மற்றும் தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல் என்பவைகளுக்கும், சுயவிருப்பங்களை நிறைவேற்றுவதற்கென அடிக்கடி காட்டப்படும் சாதாரணமான நிதானம்/கனிவு, பொறுமை என்பவைகளுக்கும் இடையே நிறைய வித்தியாசம் உள்ளது என்பதைப் புரிந்துக்கொள்ள முடிகின்றது. குணலட்சணங்களுடைய வரிசையில் முதலாவதாக இடம்பெறும் தாழ்மையான மனதைப் பெற்றிராதவர்களுக்கு, தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பது என்பது கூடாத காரியமாகும். பெருமையும், சுயசித்தமும் கொண்டிருப்பவர்களிடம், சுயம் மேலோங்கி, அவர்களுடைய கணிப்பைத் தவறாய் வழிநடத்தி, அவர்களுடைய மனசாட்சியையும் தவறாய் வழிநடத்தி, அவர்களைத் தெய்வீக ஏற்பாடுகளின்மேல் முழுமையான நம்பிக்கை வைக்கமுடியாதபடிச் செய்து, அவர்கள் தங்கள் (ஊசாவைப் போன்று) கரங்களை நீட்டி (உடன்படிக்கைப்) பெட்டி விழுந்துவிடாதபடிக்கு, பெட்டியைத் தாங்கள் பிடித்து நிலைகுலையாமல் செய்ய வேண்டும் என்று எண்ணச் செய்கின்றது.

துயரப்படுபவர்கள் மாத்திரமே அதாவது, அதிகமான அனுதாபங்கள் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே அதாவது, தேவனுடைய ஜனங்களை தேவனுடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களின் வாயிலாக, ஆறுதல்படுத்தும் பரிசுத்த ஆவியினால் ஆறுதல்படுத்தப்பட்டவர்கள் மாத்திரமே, பொறுமையுடன் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கும் குணலட்சணத்தை வளர்த்துக்கொள்ள முடியும். நம்முடைய காலக்கட்டத்திலுள்ள தீமைபற்றியும், அவைகள் தற்காலத்தில் ஒரு ஞானமுள்ள நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் உணர்ந்துள்ள நிலையில் தேவனுடைய ஜனங்கள், தவிக்கும் சர்வ சிருஷ்டிகளின்மேல் அனுதாபங்கொள்வதோடு கூட, இந்த அனுதாபமும் மற்றும் இந்த அனுதாபத்தினால் கிடைத்துள்ள பலனாகிய ஆறுதலும், இவர்களைத் தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் காணப்படவும், தங்களைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பதற்கும் உதவுகின்றது. தேவனை அன்புகூருகின்றவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதை இவர்கள் நினைவுகூர்ந்து, தெய்வீக வழிநடத்துதல்கள் தங்களுக்கு எந்த விதத்தில் காணப்பட்டாலும், அதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கின்றனர். இன்னுமாக, இந்த வழிநடத்தல்களில் கிடைக்கும் படிப்பினைகளானது, எதிர்க்கால நித்தியத்திற்குரிய சந்தோஷங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் தங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களாகக் காணப்படுவதற்கும் இவர்கள் ஆயத்தமாயிருக்கின்றனர்.

இந்த மூன்றாம் குணலட்சணமாகிய, தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் தன்மையானது அதாவது, நம்மிடம் பழகி வருபவர்களால் (வெளிப்படையாக) அறியப்படும் இந்த மூன்றாம் குணலட்சணமானது, உள்ளுக்குள், இருதயத்திற்குள் உடன் இருப்பவர்களால் வெளிப்படையாகப் பார்க்கமுடியாத இரண்டாம் குணலட்சத்தின் வெளிப்படுத்தலாக இருக்கின்றது என்று கூடச் சொல்லலாம்.

கிறிஸ்துவுக்குள் காணப்படுபவர்களுக்கு, அவர்களுடைய அனைத்து விஷயங்களும், தெய்வீக மேற்பார்வையின் கீழிருக்கின்றது என்பதை நாம் உணர்கையில், நம்முடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் அனுதாபம் எனும் குணலட்சணமானது, நம்முடைய பொறுமையுடன்கூடிய கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் தன்மையில் வெளிப்படுகின்றது. மேலும், நம்முடைய சூழல்கள் மற்றும் ஜீவியத்தின் காரியங்கள் தொடர்பான விஷயங்களிலுள்ள தேவனுடைய வழிநடத்துதல் நிமித்தமான இந்தப் பொறுமையானது, மற்றவர்களுடைய பெலவீனம் மற்றும் குறைவுகள் மற்றும் அறியாமையின் விஷயங்களில் அவர்கள்மீது பொறுமையுடன் இருக்க வழிநடத்துகின்றது. மேலும், நமக்கு வாய்ப்புகள் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு உதவியாகவும் இருக்க வழிநடத்துகின்றது.

இந்தச் "சாந்தகுணமுள்ளவர்கள்" பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். தெய்வீகச் சித்தத்திற்கென்று பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுப்பவர்கள், தற்காலத்தில் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்ற அர்த்தத்தில் கர்த்தர் கூறவில்லை. பொறுமையற்றவர்களும், கர்வம் கொண்டவர்களும், வெறியர்களும், சுயநலமுள்ளவர்களும்தான் இப்பொழுது வல்லமை, செல்வாக்கு மற்றும் ஆஸ்தியிலுள்ள பிரதானமானவைகளைக் கைப்பற்றுகின்றார்களே ஒழிய, இவர்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்து இருப்பவர்களுக்கு, பூமியைச் சுதந்தரிப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றே தெரிகின்றது. மற்றவைகள் போன்று இந்தக் குணலட்சணத்திற்குரிய பலன் எதிர்க்காலத்திலேயே உள்ளது. அதாவது, இக்குணலட்சணம் உடையவர்கள் தெய்வீக வழிநடத்துதலைப் பின்தொடர்ந்து, இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகவும், தேவனுடைய சுதந்ததிரர்களாகவும் (இராஜ்யத்தில்) காணப்படுவார்கள். மேலும், அப்பொழுது அவர்களுக்குரிய மகா சுதந்தரத்தில் பூமியும் ஒரு பாகமாகக் காணப்படும். மேலும், இவர்கள் ஆயிரம் வருஷத்தின் இறுதியில், ஆயிரம் வருஷத்தின் பரீட்சைகளை வெற்றிகரமாகக் கடந்து, நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களாகக் காணப்படும் உலகத்தின் மனுக்குலத்திற்குப் பூமியைக்கொடுப்பார்கள்.

தேவனுடைய ஜனங்கள் இப்பொழுதே ஆறுதல்படுத்தப்படுகின்றார்கள் என்ற விஷயம் இருப்பதுபோன்று, தேவனுடைய ஜனங்கள் இப்பொழுதே விசுவாசத்தின் மூலமாக பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்ற விஷயமும் இருக்கின்றது. "இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும் ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" (1 கொரிந்தியர் 3:21-23). சரியான மனத்தாழ்மையிலும், தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கும் நிலையிலும் காணப்படுபவர்கள், உலகத்தாரைக்காட்டிலும் தற்காலத்தின் காரியங்களிலிருந்து அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். ஏனெனில், ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்குரிய மனநிலையில் இவர்களுடைய இருதயங்கள் காணப்படுகின்றது. சுயநலமான பேராசைகளினால் நிறைந்து காணப்படும் உலகமானது, ஒருபோதும் திருப்பதியடைவதில்லை, ஒருபோதும் மனநிறைவும் கொள்வதில்லை. தேவனுடைய பிள்ளையோ தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படுத்தி , தங்களை ஒப்புக்கொடுத்து எப்போதும் திருப்தியாய் இருப்பார்கள்.

## “நீதியினால் திருப்தியடைவார்கள்”

நான்காம் குணலட்சணம் என்பது நீதியின் மீது பசி மற்றும் தாகம் கொண்டிருப்பதாகும். முந்தைய (மூன்று) குணலட்சணங்களைப் போதுமானளவுக்குக் கொண்டிராத எவராலும் இவ்விதமான பசியையும், தாகத்தையும் கொண்டிருக்கமுடியாது. ஒருவேளை கிறிஸ்தவனிடம் மனத்தாழ்மை இல்லையெனில், அவனால் அவனுடைய தாழ்வான நிலைக்கு மேலாகப்பார்க்க முடியாமலும், தெய்வீகப் பூரணத்தின் உயரத்தையும், மகத்துவத்தையும் புரிந்துக்கொள்ள முடியாமலும், நீதி தொடர்பான விஷயங்களில், தான் எட்டியுள்ள நிலையிலேயே திருப்தியடைந்தவனாக இருந்துவிடுவான். அவன் ஓரளவாகிலும் அறிந்திராத காரியத்தின்மேல் அவனால் பசி மற்றும் தாகங்கொள்ள முடியாது. மேலும், தற்காலத்தின் தவறுகள் மற்றும் அநியாயங்களைப் புரிந்துக்கொள்வதற்கு உதவக்கூடிய அனுதாபத்தின் ஆவியைக் கிறிஸ்தவன் ஒருவன் பெற்றிராதவரையிலும் அவனால், வேத

வாக்கியங்கள் சுட்டிக்காண்பிக்கும் மேசியாவின் ஆயிரம் வருஷம் அரசாட்சியில் மாத்திரம் நிறுவப்படும் மேம்பட்ட சூழ்நிலைகள்/காரியங்கள் மீது ஏக்கம் கொள்ளமுடியாது. ஆகவே, ஒருவேளை நம்முடைய இருதயங்கள் நீதிக்காகவும், நியாயத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் பசி மற்றும் தாகம் கொள்கின்றது என்றால், எல்லா விதத்திலுமுள்ள அசத்தியத்தையும், அனைத்து அநீதியையும், அநியாயத்தையும் வெறுக்கின்றது என்றால், அதிலும் முக்கியமாக, வரிசையில் மூன்றாவதாகவரும் பொறுமையுடன் தெய்வீகச் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தல் எனும் குணலட்சணத்தினால் இந்த வெறுப்பு வரையறுக்கப்பட்டு, தாக்கம் ஏற்படுத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்றால், இது ஆசீர்வாதமான அறிகுறியாகும். இந்த மூன்றாம் குணலட்சணம் செலுத்தும் கட்டுப்பாடுதான் அப்போஸ்தலரால் பிலிப்பியர் 4:5-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுகின்றது. "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்." இந்த மூன்றாம் குணலட்சணம் உள்ளே புகுவதின் காரணமாகத்தான், நாம் எந்த விதத்திலும் குழப்பவாதிகளாகவோ (அ) மதவெறிக்கொண்டவர்களாகவோ ஆகாதபடிக்கு நீதியின் மீதான நம்முடைய பசி மற்றும் தாகமும், (சத்தியம் மற்றும் அதை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான) நம்முடைய வைராக்கியமும் கட்டுப்படுத்தித் தடைப்பண்ணப்படுகின்றது. நீதியின் மீதான இந்தப் பசி மற்றும் தாகம் எனும் தன்மையானது ஆவியின் மற்றத் குணலட்சணங்களால் கட்டுப்படுத்தப்படாதக் காரணமாகத்தான், அநேக உலகப்பிரகாரமான மனிதர்களை வரம்பு மீறின சீர்த்திருத்தவாதிகளாக மாற்றியுள்ளது; தேவனுடைய பிள்ளைகளோ மற்றவர்களைக்காட்டிலும் நீதியின் மீதான இதே பசி தாகத்தை அதிகளவில் கொண்டிருந்து, தெளிந்தபுத்தியுள்ள ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் காணப்படுவதினாலும், கர்த்தருடைய வார்த்தைகளினால் (இவர்கள்) போதிக்கப்பட்டிருப்பதினாலும், இவர்கள் அவருடைய வாக்குத்தத்தங்களில் இளைப்பாறி, அவ்வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காகக் காத்திருந்து பொறுமையுடன் தங்களைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்துக் காணப்பட்டு, தேவனுடைய ஏற்றவேளையில், நீதி ஜெயங்கொள்ளும் என்ற நிச்சயத்துடன் காணப்படுகின்றார்கள்.

நீதியின்மேல் பசிதாகம் என்னும் பாக்கியமான குணலட்சணத்தை உடையவர்களும், அதனை விருத்திச் செய்பவர்களும் திருப்தியடைவார்கள். போகப்போக பின்னர் தேவனுடைய இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும்போது, இந்த இராஜ்யத்தின் விளைவாக சகல பொல்லாப்பும், சகல பாவங்களும், சகல (அக்கிரமங்கள்) அநியாயங்களும் அடக்கப்பட்டு, தேவனுடைய பரிசுத்தமான சித்தம், "பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலும் செய்யப்படும்" போது அதிகமாய்த் திருப்தியடைவார்கள். நீதியின் மீதான நம்முடைய பசி மற்றும் தாகம் அழிக்கப்படுவதில்லை. மாறாக, நமது கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரம் திருப்திப்படுத்தப்படும். சத்தியம் மற்றும் நீதியின் மீதான விருப்பம் இன்னமும் தொடர்ந்து காணப்படும். ஆனால், சத்தியம் மற்றும் நீதி நடைமுறையில் காணப்படும்போது திருப்தி நிலவும்.

மற்றக் குணலட்சணங்கள் போன்று இந்தக் குணலட்சணத்தின் (நீதியின்மேல் பசிதாகத்தின்) விஷயத்திலும், விசுவாசத்தின் வாயிலாக ஓரளவுக்கு திருப்தி (இப்பொழுதே) காணப்படுகின்றது. இந்தத் திருப்தியடைதல் ஒரு முன்சுவைப்போன்று காணப்படும். ஆவியின் மற்றக் குணலட்சணங்களோடுகூட, நீதியின் மீதான பசி, தாகத்தையும் கொண்டிருப்பவர்கள், கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தங்களில் தற்காலத்திலும் கூட விசுவாசத்தின் மூலம் ஆறுதலையும், தேறுதலையும் கண்டடைகின்றார்கள். மேலும், கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தங்கள், "விசுவாச வீட்டாருக்கு ஏற்ற கால சத்தியமாக" இருந்து, விசுவாச வீட்டாரைப் பெலப்படுத்துகின்றதாகவும், ஆறுதல்படுத்துகின்றதாகவும், தாங்குகின்றதாகவும் இருந்து, இவர்கள் தாங்கள் எதிர்ப்பார்த்தது (அ) வேண்டிக்கொண்டதைக்காட்டிலும், தெய்வீக ஏற்பாட்டின்படியான நித்தியக்காலத்திற்கும் நிலைக்கும் நீதியானது, மிக அதிகமாய்க் காணப்படும் என்று உணர்ந்துகொள்ளும் மாத்திரத்தில் இந்த வாக்குத்தத்தங்கள் இவர்களுடைய பசியையும், தாகத்தையும் பகுதியாகிலும் திருப்திப்படுத்துகின்றன.

## “இரக்கத்தை எப்படிப் பெற்றுக்கொள்வது”

ஐந்தாம் பாக்கியமான காரியம், இரக்கம் கொள்ளுதல் ஆகும். நீதியைக்குறித்து புரிந்துக்கொள்வதினாலும், புதுப்பிக்கப்பட்ட இருதயங்களுக்குள் இந்த நீதியின்மேல் பசி,

தாகம் ஏற்படுவதினாலும், வெளியே வெளிப்படுகின்ற காரியமே இரக்கமாகும். இந்த இரக்கத்தை சக மனிதர்களால் காணமுடியும். முந்தின அடிகளையெல்லாம் நாம் எடுத்துவைத்த பிற்பாடு, தற்காலத்தின் அநியாயங்களைக்குறித்தும், நம்முடைய பூரணமற்ற நிலமைகளைக் குறித்தும் (அநீதிகள்) மற்றும் மற்ற மனுஷர்களுடைய பூரணமற்ற தன்மைகளைக்குறித்தும் உணர்ந்துக்கொள்ள கற்றுக்கொண்ட பிற்பாடு, தேவன் மாத்திரமே காரியங்கள் அனைத்தையும் முழுமையாகச் சரிப்படுத்தக்கூடியவர் என்று நாம் கற்றுக்கொண்ட பிற்பாடு, எல்லா தவறுகளையும் சரிப்பண்ணுவதற்கும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்கிறவர்கள் அனைவரையும் தமது தயவிற்குள் கொண்டுவருவதற்கும் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், அதை அவர் ஏற்றவேளையில் வெளிப்படுத்துவார் என்றும் கற்றுக்கொண்ட பிற்பாடுதான், மற்றவர்கள் மீது நமக்கு இரக்க உணர்வு ஏற்படுகின்றது. அதாவது, இதுவரையிலும் உணர்ந்துக்கொள்ளாத அளவுக்கு இரக்கத்தின், அன்பின் உணர்வைப்பெற்றிருப்போம். இக்குணலட்சணங்களின் ஆசீர்வாதங்களை அறியாத நிலையிலும், இக்குணலட்சணங்களை வளர்த்துக்கொள்ளாத நிலையிலும் காணப்படுகின்ற உலகத்தாரால், கர்த்தரின் ஜனங்கள் செய்யும் அளவுக்கு, மற்றவர்கள் மீது ஆழ்ந்த அனுதாபமோ (அ) இரக்க உணர்வையோ கொண்டிருக்க முடியாது.

நாம் என்னதான் அறிவில் அல்லது கிருபைகளில் அநேக காரியங்களை அடைந்திருந்தாலும், ஒருவேளை இந்தக் குணலட்சணம் நம்மிடத்தில் இல்லையெனில், நாம் ஒருபோதும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்றும், ஒருவேளை நாம் நம்முடைய அயலார் மீது இரக்கம் கொள்ளவில்லையெனில், நம்முடைய பரம பிதாவும், நம்மேல் இரக்கம் கொள்ளமாட்டார் என்றும் தெரிவிப்பதின் மூலம், இரக்கம் எனும் இக்குணலட்சணம் மிகவும் முக்கியமானது என்று கர்த்தர் வலியுறுத்துகின்றார். மேலும், மன்னிப்பு மற்றும் பரந்த மனப்பான்மைக்கான வெளித்தோற்றமான வெளிப்பாடாக மாத்திரம், நாம் இரக்கத்தைக் கருதிக்கொள்ளாதபடிக்கு, நமது கர்த்தர் மத்தேயு 18:35-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் குறிப்பிட்டுள்ளார். "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." இரக்கம் உண்மையான இரக்கமாக இருக்கவேண்டுமே ஒழிய, போலித்தனமான இரக்கமாக இருக்கக்கூடாது. நாம் காட்டக்கூடிய இரக்கமானது, மற்றவர்கள் விஷயத்தில் அவர்களுடைய பெலவீனங்களையும், குறைவுகளையும், நம்முடைய பார்வையிலிருந்து திரையிட வேண்டும்/மறைக்க வேண்டும்; இல்லையேல், நம்முடைய நீதியின் மீதான பசி தாகத்தினால் நமக்கு வெளிப்பட்டுள்ள நம்முடைய சொந்த பெலவீனங்களுக்காக, நாம் மன்னிப்பையும், பாவ நிவிர்த்தியையும் அடையலாம் என நாம் எதிர்ப்பார்க்க முடியாது. இரக்கமுள்ளவர்கள் மாத்திரமே இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள். ஒருவேளை, நாம் தேவனுடைய கரங்களிலிருந்து இரக்கம் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் எல்லாம் முடிந்துவிடும்.

நாம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், நாம் இரட்சிக்கப்படுவதற்கும் அவசியமாய் இருப்பதினால் மாத்திரம், இரக்கம் காட்டுவதும், பரந்த மனப்பான்மையுடன் காணப்படுவதும், மன்னிப்பதும் ஆசீர்வாதமானவைகளாகக் காணப்படாமல் மாறாக, மற்றவர்களுடைய பெலவீனங்கள் மற்றும் தவறுதல்கள் மீது அனுதாபங்கொள்ளும் இருதயத்தின் இந்த இரக்கமான நிலையானது, மாம்சம் மற்றும் பிசாசின் சில குறிப்பிட்ட கிரியைகளை நம்முடைய இருதயங்களிலிருந்து வெளியேற்றுவதற்கும் உதவி செய்கின்றது. அதாவது, கர்த்தருடைய ஜனங்கள் விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக்கப்பட்டு, நீண்ட காலம் ஆன பிற்பாடும் மற்றும் கர்த்தருக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணித்து, "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பதற்கும்" நாடின பிற்பாடும், இவர்களிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் மாம்சம் மற்றும் சாத்தானின் சில குறிப்பிட்ட கிரியைகளை நம்முடைய இருதயங்களிலிருந்து வெளியேற்றுவதற்கும் உதவி செய்கின்றது.

கர்த்தரைப் பின்பற்றுவோம் என்று நாம் முழுமையாய் ஒப்புக்கொடுத்த பிற்பாடும், நாம் வெளியேற்ற வேண்டிய மாம்சத்தின் கிரியைகளான கோபம், வன்மம், பகை, சண்டைச்சச்சரவு, பொறாமை ஆகியவைகளை அப்போஸ்தலர் குறிப்பிகின்றார். சுயநலத்தின் இந்த அனைத்துப் பண்புகளும், இரக்கம் எனும் பண்பினால் எதிர்க்கப்பட்டு, இவைகள் நம்முடைய இருதயங்களில் ஆழமாய்க் காணப்பட்ட பகுதிகளிலிருந்து அதிகமாக வெளியேற்றப்படுகின்றது. பாக்கியமான குணலட்சணமாகிய இந்த இரக்கம், அன்புடன்

நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். ஏனெனில், நாம் எந்தளவுக்குத் தேவனுடைய அன்பின் ஆவியைப் பெற்றுக்கொள்கின்றோமோ, அந்தளவுக்கு நாமும் மற்றவர்களிடத்தில் இரக்கத்தை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருப்போம். கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கு அளிக்கப்பட்ட இரக்கத்தின் வாயிலாக, தேவன் நம்மீதான அவருடைய அன்பை வெளிப்படுத்தினார். அன்பு, இரக்கம் மற்றும் மற்றவர் நலன் கருதுவது என்பதான குணலட்சணங்கள், பொறாமையை வெளியேற்றுவதற்கும் மிகவும் உதவியாக இருக்கின்றது. நாம் உண்மையாய் அன்பு செய்பவர்கள் மீது, நம்மால் எப்படிப் பொறாமை கொள்ளமுடியும்? நம்முடைய சத்துருக்களை நாம் நேசித்து, அவர்கள் மீது இரக்கமும், பரிவும் கொண்டிருந்து, அவர்களை இருதயப்பூர்வமாக மன்னித்துவிட்டோமென்றால், அவர்களுக்கு எதிராக நம்மால் எப்படி வன்மம் கொண்டிருக்க முடியும்? நம் சத்துருக்கள் மீது நாம் இரக்கம் கொண்டு, அவர்களிடத்தில் நமக்கு மன்னிப்பின் ஆவிதான் காணப்படுகின்றது என்றால், அவர்கள்மேல் நமக்கு எப்படிப் பகை/வெறுப்புக் காணப்படும்? தெய்வீகப் பிரமாணங்களுக்கு எதிரான நம்முடைய மீறுதல்களுக்கு, நாம் மன்னிப்பை எதிர்ப்பார்க்கின்றதின் காரணமாக, நமக்கு எதிராய்ச் செய்யப்பட்ட பாவங்களை உடனடியாக மன்னிப்பதற்கான இரக்கமுள்ள மன்னித்துவிடும் ஆவி நமக்குள் காணப்படும் பட்சத்தில், சண்டை இடுகிறவர்களாய் நம்மால் எப்படி இருக்க முடியும்?

"ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" (யாக்கோபு 2:13). தெய்வீக இரக்கமானது, தெய்வீக நீதியை திருப்திப்படுத்தி, இப்படியாக நீதியின் தீர்ப்பினின்று நம்முடைய இனமாகிய மனுக்குலம் காப்பாற்றப்படுவதற்கான வழியை ஆயத்தப்படுத்திற்று. ஆகவே, தெய்வீக ஆவியின் பங்காளிகளாகவும், அதனை ஓரளவிற்கு தங்களுக்குள் வளர்த்துக்கொண்டவர்களாகவும் இருப்பவர்கள் நீதி குறித்ததான தங்களுடைய கருத்தைவிட, இரக்கமானது தங்களுக்குள் மேலோங்கும்படி அனுமதித்துவிடுவார்கள்; ஏனெனில் தெய்வீக இரக்கமானது, தெய்வீக நீதியை திருப்திச் செய்துவிட்டபடியால், இவர்களுக்கு சக மனிதர்கள் விஷயத்தில் திருப்திபடுத்துவதற்கென்று வேறெந்த நீதியின் பிரமாணமும் இருப்பதில்லை.

தேவனுடைய ஜனங்களிடம் காணப்படும் நீதியானது குருட்டுத் தன்மையுடையதாக இல்லாவிட்டாலும், இவர்களால் மற்றவர்களுடைய தவறுகளை மிகத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடிந்தாலும், மேலும், இவர்கள் தங்களுடைய சொந்த வார்த்தைகள், சிந்தைகள் மற்றும் கிரியைகள் தொடர்பான அனைத்திலும், நீதியை ஆளுவதற்கு அனுமதிக்க நாடினாலும், இவர்களுக்கு எதிராக பாவம் செய்கிறவர்களின் விஷயத்தில், இவர்கள் தங்களுடைய இருதயங்களில் இரக்கத்தை, நீதியின்மேல் ஜெயங்கொண்டு மேலோங்கிக் காணப்படச்செய்ய வேண்டும். மேலும், இவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தினவர்களுக்கு எதிராக, இவர்கள் கோபம் கொண்டிருக்கவுங்கூடாது, அல்லது, தாங்களே அவர்களைப் பழிவாங்க முற்பட்டு, அவர்கள் மீது நீதியைச் செலுத்தவுங்கூடாது. மாறாக, இவர்கள் சொல்ல வேண்டியது என்னவெனில், "தேவனே நீதியுள்ளவர், சுதந்தரித்துள்ள பெலவீனங்கள் நிமித்தமாக பூரணமான நீதிக்கு எதிரான மீறுதல் பண்ணினவனாகக் காணப்படும் நான், என்னைப்போல் சுதந்தரித்துக்கொண்டும், வித்தியாசமான பெலவீனங்களை உடையவர்களுமாய்க் காணப்படும் என்னுடைய சக மனிதன்மேல் நான் பரிவு கொண்டவனாக இருக்க வேண்டும்; மேலும் தெய்வீகக் கட்டளையின்படி நான் பாக்கியமான குணலட்சணங்களாகிய இரக்கம், பரிவு, மன்னிப்பு ஆகியவைகளைச் செயல்படுத்துகின்றவனாகவும் நான் காணப்பட வேண்டும்." இப்படியாக செய்கின்றவர்கள் உலகம், மாம்சம் மற்றும் பிசாசினுடைய பொல்லாத கிரியைகளையும், உணர்வுகளையும் தங்களிடத்திலிருந்து வெளியேற்றுவதோடல்லாமல், அன்பு, நிதானம் மற்றும் தெய்வீகச் சித்தத்திற்குப் பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தலின் ஆவியினால் அதிகமதிகமாய் நிரப்பப்பட்டு, இவ்விதமாய்த் தற்காலத்திலேயே, இரக்கமுள்ளவர்களாய் இருப்பதின் நிமித்தம் பாக்கியவான்களாய்க் காணப்படுவார்கள்.

## “பரிசுத்தம் இல்லாமல் தேவனைத் தரிசிப்பது கூடாதகாரியம்”

பாக்கியம் அடைவதற்கான ஆறாம் படிநிலை இருதயத்தில் சுத்தமாயிருப்பதாகும். அதாவது, நோக்கத்தில் சுத்தம், விருப்பத்தில் சுத்தம், பிரயாசத்தில் சுத்தம், சித்தத்தில் சுத்தமாகும். அதாவது, உண்மையாய் இருப்பது, ஒளிவுமறைவின்றி இருப்பது, நேர்மையாய்

இருப்பது என்றவிதத்தில் சுத்தமாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நேர்மையான இருதயம் கொண்டவர்கள் அதாவது, முற்றிலும் சரியான நோக்கம் கொண்டவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள். உலக ஜனங்களிலும் கூட சிலர் நேர்மையான இருதயம் கொண்டிருப்பதாகவும், நேர்மையான நோக்கம், விருப்பம் கொண்டிருப்பதாகவும் தங்களைக்குறித்துக் கூறிக்கொள்வது உண்மையாகவே இருந்தாலும் கூட, இவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான தெய்வீக ஏற்பாட்டிற்குள் வராததுவரையிலும், இவர்கள் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவினுடைய பின்னடியார்களாக அர்ப்பணம் பண்ணுவதுவரையிலும், பாக்கியமாய் இருப்பதற்கான படிகளை இவர்கள் அடியெடுத்து வைக்காததுவரையிலும், இவர்களை "இருதயத்தில் சுத்தமுள்ள" வகுப்பாரின் அங்கங்களாக நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

"இருதயத்தில் சுத்தம்" என்ற வார்த்தைகளை அநேகர் தவறாய்ப் புரிந்துள்ளனர். அதாவது, இருதயத்தில் சுத்தம் என்பது வெளியில் மாத்திரமல்லாமல், உள்ளேயும் முற்றிலுமாகப் பூரணமாய் இருத்தலைக்குறிக்கின்றது என்றும், வார்த்தைகள் மற்றும் கிரியைகளில் மாத்திரமல்லாமல், எண்ணங்களிலும் கூட முற்றிலுமாக பூரணமாய் இருத்தலைக்குறிக்கின்றது என்றும் எண்ணிவிடுகின்றனர். இப்படியான கண்ணோட்டமானது, "நான் கிரியையிலும் சரி, வார்த்தையிலும் சரி, எண்ணத்திலும் சரி பூரணமாய் இல்லை; பின்னே எப்படி இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள என்ற நிலையின் கீழ் நானும் ஒருவன் என்று என்னைக் குறித்துச் சொல்ல முடியும்?" என்று தங்களைக்குறித்து நேர்மையாய்ச் சொல்லக்கூடியவர்களைச் சோர்வடைய செய்துள்ளது. இந்தக் கண்ணோட்டம் ஒரு தவறான புரிந்துக்கொள்ளுதல் என்று நாம் கூறுகின்றோம். நம்முடைய மாம்சத்தில் எவ்விதமான பூரணமும் இல்லை, என்பதைச் சொல்லப்போனால் நம்மை விட கர்த்தர் நன்கு அறிந்துள்ளார். மேலும், விழுகையின் காரணமாக, ஆதாமின் பிள்ளைகள் அனைவரின் பற்களும் பாவம் என்னும் புளிப்பினால் கூசிப்போயின என்ற காரணத்தினால், ரோமர் 7:16-18-ஆம் வரையிலான வசனத்தின் காரியங்களைச் செய்கின்றோம் என்றும் கர்த்தர் அறிந்துள்ளார், "இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே.ஆதலால் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை" (எரேமியா 31:29, 30).

யூத ஜனங்களுக்கு, நியாயப்பிரமாணத்தையும், அதனோடுகூட ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தையும் அளித்ததின் மூலம், அவர்களுக்கு யூத யுகத்தில் ஒரு மாபெரும் படிப்பினையைத் தேவன் அருளினார். ஆனாலும், தேவன் இஸ்ரயேலர்களுக்கு நியாயப்பிரமாணத்தை அருளினபோதிலும் கூட, "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்பதை தேவன் முன்கூட்டியே அறிந்தவராகவே இருந்தார் என்று அப்போஸ்தலர்கள் நமக்கு உறுதியளிக்கின்றனர். "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." மாறாக, நியாயப்பிரமாணம் மிகத் தெளிவாக புரிந்துக்கொள்ளப்படும்போது, பாவம், பூரணமற்றநிலை தொடர்பான அறிவு மிகத் தெளிவாக புரிந்துக்கொள்ளப்படும். துணிகரமான பாவங்களையல்ல, ஆதி பாவத்தையும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள பெலவீனங்களையும், பூரணமின்மையையும் மன்னிப்பதே கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய ஏற்பாடாகும். துணிகரமில்லாமல், வேண்டுமென்றே இல்லாமல் காணப்படும் மீறுதல்கள் தொடர்பான விஷயங்களில் அவருடைய இரக்கம் கடந்துவருகின்றது. மனிதனுடைய பூரணமற்ற தன்மையை நமது கர்த்தர் இயேசு கருத்தில் கொண்டுள்ள காரியமானது, "இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என்ற அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அதாவது, நமக்கு இரக்கம் அவசியம் என்பதை அவர் குறிப்பிடும்போது, அவர் மனிதனுடைய பூரணமற்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டுள்ளது வெளிப்படுகின்றது. நாம் இரக்கம் பெற்றுக்கொள்வோம் என்பதை நமக்கு உறுதிப்படுத்தின பிற்பாடு, ஆறாம் மலைப்பிரசங்கத்தின் கருத்தானது, நாம் எண்ணங்களிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் முழுமையான பூரணத்துடன் காணப்பட வேண்டும் என்பதாக இடம்பெறுவதில்லை. ஏனெனில், ஒருவேளை நாம் பூரண நிலையை அடைந்திருப்போமானால் (அ) அடையக்கூடுமானால், கிறிஸ்துவின் பலியின்

மூலம் நமக்கு இரக்கமும், பாவங்களுக்கான மன்னிப்பும் தேவன் அளிப்பதற்கு அவசியமே ஏற்பட்டிருக்காது.

"இருதயத்தில் சுத்தம்" என்பது நடக்கையிலோ, வார்த்தையிலோ, எண்ணத்திலோ பூரணத்தைக்குறிப்பிடாமல் மாறாக, இவைகள் தொடர்பான அனைத்திலும் பூரணமான நோக்கம் இருக்க வேண்டும் என்பதையே குறிக்கின்றது. எண்ணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் நாம் பூரணம் அடைவதே நம்முடைய விருப்பமாகவும், பிரயாசமாகவும் காணப்பட வேண்டும். நம்முடைய இருதயங்களும், நம்முடைய சித்தங்களும் இசைவுடன் காணப்பட வேண்டிய தெய்வீக நியமமானது, **"பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்"** என்பதேயாகும் (மத்தேயு 5:48). இந்த முழுமையான பூரணத்திற்குக் கீழான, எந்த ஒரு நியமத்தையும் தேவன் நியமிக்கவில்லை. தேவன் கிறிஸ்துவின் மூலமாக கிருபையை, இரக்கத்தை மற்றும் சமாதானத்தை நமக்கு ஏற்படுத்தியுள்ளார். ஒருவேளை, நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கின்றவர்களாய் இருப்போமானால், இந்த இருதயத்தின் சுத்தம் என்பது இடுக்கமான வழியிலுள்ள முக்கியமான படிகளில் ஒன்றாய் இருக்கின்றது.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மாத்திரமே, தேவனைத் தரிசிப்பார்கள் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றுள்ளார்கள். இவர்கள் இருதயத்தில் சுத்தம் விஷயத்திலும், நோக்கத்தில் சுத்தம் விஷயத்திலும், தேவனிடத்திலும், மனுஷரிடத்திலுமாக தங்களுடைய பிரயாசத்தில் நேர்மையுடன் காணப்படும் விஷயத்திலும் தற்கால ஜீவியத்திலேயே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பான சாயலை அடைந்து, தங்களுடைய ஓட்டத்தின் இறுதிவரையிலும் உண்மையுடன் காணப்பட்டு, இறுதியில் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின்படி, இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பூமிக்குரிய நிலையிலிருந்து, பரலோக ஆவிக்குரிய நிலைக்கு மாற்றப்படுவார்கள். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்;" "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்;" "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்;" "மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (1 யோவான் 3:2; எபிரெயர் 1:3; எபேசியர் 5:27; கொலோசெயர் 2:10).

முந்தினவைகள் போன்று, இக்குணலட்ணத்திற்குரிய ஆசீர்வாதத்தின் ஒருபங்கு, ஒரு முன்சுவைப்பு, தற்காலத்திலேயே கடந்துவருகின்றது. கிறிஸ்துவினுடைய அன்பை அறிந்துக்கொள்வதற்கும், அதன் நீளம், அகலம், உயரம், ஆழம் புரிந்துக்கொள்வதற்கும் ஏதுவாக அதாவது, அனைத்துப் பரிசுத்தவான்களோடுங்கூட புரிந்துக்கொள்வதற்கு ஏதுவாக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுகின்ற காரியம் ஒன்றுள்ளது (எபேசியர் 3:18). அனைவருக்கும் புரிந்துக்கொள்ளுதலின் (மன) கண்கள் திறப்பதில்லை. பிதாவாகிய தேவனுடைய குணலட்சணங்கள் எல்லாம் இசைவுடன் காணப்படுவதின் மகிமைகளைப் பார்ப்பதற்கான சிலாக்கியம் அனைவருக்கும் உரியதல்ல. அதாவது, தெய்வீக நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமை, உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே தேவன் திட்டமிட்டபடியே அவருடைய அனைத்துச் சிருஷ்டிகளுக்கான ஆசீர்வாதத்திற்காக ஒத்திசைந்து செயல்படுவதின் மகிமைகளைப் பார்ப்பதற்கான சிலாக்கியம் அனைவருக்கும் உரியதல்ல.

ஆனால், மேற்கூறின இந்த ஆசீர்வாதத்தை அதாவது, இந்தத் தெளிவான பார்வையை/புரிந்துக்கொள்ளுதலை யாரால் அனுபவிக்க முடியும்? யார் புரிந்துக்கொண்டு அந்த மகிமையான பூரணத்திற்கு ஒப்பாக அதிகமதிகமாக வளர்வதற்கு உதவப்படுவார்கள்?

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்" மாத்திரமே! உண்மையும், நேர்மையுமுள்ள இருயமுடையவர்கள் மாத்திரமே! ஆகும். இருமனமுள்ளவர்கள், இரண்டு சித்தம் கொண்டவர்கள், வேதவாக்கியங்களின்படி இரட்டைப்பார்வை, இரட்டைகண்கள் உடையவர்களாய் இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆவிக்குரிய காரியங்களை ஓரக்கண்ணினால் பார்த்து, காரியங்களை இரட்டைப்பார்வை உடையவர்கள் போன்று பார்க்கின்றனர்; மேலும், தெளிவில்லாமலும் காண்கின்றனர். தேவனுடைய ஜனங்களில் அநேகர் கிறிஸ்துவுக்குள் அனைத்துக் காரியங்களிலும் வளரத்தவறி, அனைத்தையும் இரட்டையாகவும், குழப்பத்துடனும் பார்க்கின்றனர். இவர்கள் கொஞ்சம் ஆவிக்குரியவைகளயையும், கொஞ்சம் பூமிக்குரியவைகளையும் பார்க்கின்றனர். இவர்கள் தெய்வீகக் குணலட்சணத்தை மங்கலாகவும், தெளிவில்லாமலும் பார்க்கின்றனர். மேலும், இவர்கள் தெய்வீகக் குணலட்சணத்தை மங்கலாகப்பார்ப்பதற்கு ஏற்ப, அக்குணலட்சணத்திற்கு ஒப்பாக மாறுவதற்கு ஆற்றல் அற்றவர்களாய் இருக்கின்றனர். கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ள அனைவரும், ஓர் ஆண்டவரை உடையவர்களாகவும், அவருடைய மகிமை மற்றும் அவருக்கான ஊழியம் தொடர்பான விஷயத்தில் தெளிவான பார்வையுடைவர்களாகவும் இருப்பதற்கு அதாவது, சுத்தமான, நேர்மையான, உண்மையுள்ள இருதயம் கொண்டவர்களாக இருப்பதற்கு அதிகமதிகமாக நாடுவோமாக.

## "தேவனுடைய புத்திரர்கள் அனைவரும் சமாதானம் பண்ணுகிறவர்கள் ஆவர்"

ஏழாவது மலைப்பிரசங்கமானது, ஆறாவதினுடைய வெளிதோற்றமான வெளிப்படுத்தல் ஆகும். மற்றவர்களுடைய கண்களுக்கு புலப்படாத தேவனிடத்திலான இருதயத்தின் சுத்தமானது, (பாக்கியம் அடைதல் மற்றும் வளர்ச்சியிலுள்ள) ஏழாம் குணலட்சணத்தில் வெளிப்படுகின்றது. அதாவது, மற்றவர்கள் மத்தியில் சமாதானத்தை உண்டுபண்ணுவதற்கான நம்முடைய சமாதானத்திற்கேதுவான விருப்பங்களில் மற்றும் பிரயாசங்களில் வெளிப்படுகின்றது. தேவனுடைய விஷயங்களில் சுத்தமான இருதயத்தை ஏற்கெனவே அடைந்து, மற்றும் தாழ்மை, அனுதாபம், பொறுமையுடன் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்தல், நீதியின் மீதான பசி தாகம், மற்றவர்கள் மீது அன்பு (அ) இரக்கங்கொள்ளுதல், உண்மையான/தூய்மையான இருதயமுமாகிய குணலட்சணங்களை அடையாதவரையிலும், தெய்வீக நியமத்தின்படி ஒருவரால் சமாதானம் பண்ணுகிறவராக இருக்க முடியாது. யாரொருவர் இந்தக் குணலட்சணங்களையெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவு வளர்த்தியுள்ளார்களோ, அவர்கள் தங்களுக்குள் சமாதானத்தைப் பெற்றவர்களாயிருந்து, மற்றவர்களிடத்தில் சமாதானம் பண்ணுகின்றவர்களாய் இருப்பார்கள்.

கர்த்தருடைய ஜனங்களிலேயே மிகவும் சொற்பமானவர்களே, இந்தச் சமாதானம் பண்ணும் குணலட்சணத்தைக் குறிப்பிடத்தக்க விதத்தில் வளர்த்துக்கொண்டு, தங்களுடைய ஜீவியத்தில் எடுத்துக்காட்டியும் உள்ளனர். பெரும்பான்மையானவர்கள், அதிலும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களிலும்கூட, அநேகர் எதிர்மாறான போக்கைத் தெரிந்துக்கொண்டுள்ள காரியமானது, இவர்களுடைய இருதயங்கள் சுத்தமுள்ளதாகவும், இவர்களுக்குள் அனுதாபங்கள் நிறைந்திருந்தாலுங்கூட, இவர்கள் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் இன்னும் கற்றுக்கொள்வதற்கு அதிகமுள்ளது என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. ஏனெனில், இவர்கள் சமாதானத்தைத் தூண்டுகிறவர்களாக இருப்பதற்குப்பதிலாக இவர்கள் விரோதத்தைத் தூண்டுகிறவர்களாக இருக்கின்றனர். இதை இவர்கள் தீய நோக்கத்தினால் செய்யவில்லை; மாறாக, இது இவர்களுடைய பழக்கவழக்கத்தினாலும், அன்பின் தெய்வீகப் போக்கிற்கும், உலகத்தில் காணப்படும் சுயநலத்தின் எதிர்மறையான போக்கிற்கும் இடையேயுள்ள மாபெரும் வித்தியாசத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள தவறுவதினாலும், அறியாமையினாலும் செய்யப்படுகின்றது. விரோதம், பார்வையினால் அல்லது கைகளினால் தூண்டப்பட்டாலுங்கூட, அது பிரதானமாக நாவினால் தூண்டப்படுகின்றது. இதுபோலவே, சமாதானத்தைத் தூண்டுவதுங்கூட பார்வையினால் ஏற்பட்டாலுங்கூட, இது பிரதானமாக நாவினாலேயே செய்யப்படுகின்றது. விரோதத்தைத் தொடர்ச்சியாக தூண்டும் நாவுகளையுடைய எத்தனையோ கிறிஸ்தவர்களை நாம் பார்த்திருக்கின்றோம்! இவர்கள் எதிராளியானவனுடைய பிடியிலிருந்து அநேகவிஷயங்களில் தப்பிச்சென்ற பிற்பாடுங்கூட, அவன் இவ்விதத்தில் இவர்களைப்பிடித்து தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பான். ஏனெனில், இவ்விதத்தில்

தாங்கள் சாத்தானுடைய ஊழியக்காரர்களாக வேலைச்செய்கின்றனர் என்பதை இவர்கள் கண்டுபிடிப்பதில்லை. அதாவது, தாங்கள் விரோதம், பகை, வைராக்கியம், வன்மம் ஆகியவைகளைத் தூண்டிவிடும் கலகக்காரர்களாய் இருக்கின்றார்கள் எனவும், அநேகரைத் தீட்டுப்படுத்துவதற்கு ஏதுவான கசப்பின் வேர்களை நடுகிறவர்களாய் இருக்கின்றார்கள் எனவும் இவர்கள் கண்டுபிடிப்பதில்லை.

"ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு" என்றும், " கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" என்றும் உள்ள புத்திமதிகளின் நீளத்தையும், ஆழத்தையும், அகலத்தையும் கிறிஸ்தவர்கள் என்றுதான் கற்றுக்கொள்ளப் போகின்றார்களோ? (தீத்து 3:2; எபேசியர் 4:29). தீமையான ஒரு காரியத்தைப் பேசுவதின் மூலம் (ஒருவேளை அக்காரியம் உண்மையென அவர்கள் எவ்வளவுதான் உறுதிகொண்டிருந்தாலும்) தாங்கள் ஒரு பெரிய தீமையைச் செய்கின்றார்கள் என்று தேவனுடைய உண்மையான பிள்ளைகளில் சிலர் கற்றுக்கொள்வதற்கு எத்தனை காலம்தான் எடுத்துக்கொள்வார்கள்? மற்றவர்களுடைய பக்திவிருத்திக்கே அல்லாமல், எப்போதும் மற்றவர்களுடைய தப்பிதங்கள் குறித்தே (உண்மையான காரியங்களையே) பேசிக்கொண்டிருப்பது அவசியமில்லை என்பதை தேவனுடைய உண்மையான சிலர் கற்றுக்கொள்வதற்கு எத்தனை காலம்தான் எடுத்துக்கொள்வார்கள்? மற்றவர்களுடைய காரியங்கள் குறித்த வீண்பேச்சுகள், குறை கண்டுபிடிக்கும் பேச்சுகள் மற்றும் சந்தேக பேச்சுகள் தவிர்க்கப்பட வேண்டியுள்ளது; இவர்களிடத்தில் அன்பும், கிறிஸ்துவுக்கு ஒத்தசாயலும், சமாதானம் பண்ணுகிறதற்கான பண்புகளும் குறைவுபட்டிருப்பதையும், இவர்கள் பரலோக இராஜ்யத்தில் இடம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக தங்கள் அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக இந்தக் குறைவுகளை, உண்மையுடன் எதிர்த்து நிவர்த்தி செய்யப்பட வேண்டியதையும், இவர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக இவர்களுக்கு எத்தனை பாடங்கள்தான், வரிக்கு வரியாகக்கொடுக்கப்பட வேண்டும்?

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை, ஓ! அனைவரும் மனப்பாடமாய் படித்து, தங்களுடைய ஜீவியத்தில் வெளிக்காட்டுவதற்குத் தொடர்ந்து நாடுவார்களாக (பிலிப்பியர் 4:8). யாரெல்லாம் உண்மையானவைகளையும், நல்லவைகளையும், அருமையானவைகளையும் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றார்களோ, அத்தகையவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும்போது, இவைகளைக்குறித்தே பேசிக்கொள்வார்கள். ஆகையால், கர்த்தர் அங்கீகரிக்கத்தக்கதாகவும், கேட்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகுவதற்கு ஏதுவாகவும், நம்முடைய இருதயத்தின் நிறைவினால் நமது வாய் தொடர்ந்து நன்மையான காரியங்களைப் பேசத்தக்கதாக, நம்முடைய இருதயங்கள் நன்மையான காரியங்களினால் நிரப்பப்பட்டிருப்பது எவ்வளவு அவசியமாய் உள்ளது (லூக்கா 6:45).

இப்படிப்பட்டவர்களுக்கு மிகவும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம் உள்ளது; அதாவது, "அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்பதாகும். இவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கின்றனர். மேலும், தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக தடயங்களைத் தங்களுடைய இருதயத்தில் பெற்றிருக்கின்றனர். இவர்கள் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இறுதியில், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைய" தகுதியானவர்கள். இப்படிப்பட்டவர்களை மாத்திரமே தேவன் தமது புத்திரர்களாகவும், தமது மாபெரும் குமாரனும், நம்முடைய கர்த்தருமானவருடன் இராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களாகவும் ஏற்றுக்கொள்வார். இக்காரியமானது, நம்முடைய விஷயத்திலும், மற்றவருக்கும் நமக்குமான விஷயத்திலும், தேவனுடைய பிள்ளைகளாக நாமும், எல்லாரும் எவ்வளவாக வளர்ந்துள்ளோம் என்பதற்கான பரீட்சையாகக் கூடக் காணப்படுகின்றது.

அதாவது, நம்முடைய சமாதானத்திற்கு ஏதுவான பண்புகளுக்கும், சமாதானத்திற்கு ஏதுவான ஓர் ஜீவிய போக்கை/வாழ்க்கையை எடுப்பதற்குரிய நம்முடைய ஜாக்கிரதை தன்மைக்கும் பரீட்சையாகக் கூடக் காணப்படுகின்றது.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் இயல்பாகவே சண்டையிடுகின்ற ஆவியை உடையவர்களாகவும், சமாதானத்திற்குச் சாதகமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனுக்கு எதிராக போராடுவதற்கும், “விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடுவதற்கும்” இந்தப் போராடும்/சண்டையிடும் தன்மை கொஞ்சம் அவசியமாகத்தான் உள்ளது. ஆகவே, இயல்பாகவே போராடுகின்ற/சண்டையிடுகின்ற மனப்பான்மை உடையவர்கள், ஏதாவது ஒருவிஷயத்தில் மற்றவரை எதிர்த்துக்கொண்டே இருப்பார்கள். எனினும், இதனிமித்தம் இவர்கள் சோர்வடைய வேண்டாம். ஏனெனில், இந்தப் போராடும்/சண்டையிடும் மனப்பான்மை சரியான திசையில் வழிநடத்தப்பட்டால், அம்மனப்பான்மையானது மிக உபயோகமான வேலையாளாகவும், போர் வீரனாகவும் காணப்படும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும், இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய சொந்த பூரணமற்ற தன்மைகளையும், அனைவருடைய பூரணமற்ற தன்மைகளையும் உணர்ந்தவர்களாக, இவர்கள் இந்தப் போராடும் மனப்பான்மையை இரக்கத்தினால் வரையறுத்து, மற்றவர்களின் விஷயத்தில் செயல்படுத்துகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும். சத்தியத்திற்காகவும், சத்தியத்தின் அனைத்து ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்காகவும், மற்றும் தப்பறைகளுக்கு எதிராகவும் போராடும்படிக்கு இந்தப் போராடும் மனப்பான்மையானது அன்பு மற்றும் இரக்கத்தின் வரையறையை கொண்டு போராடுவதற்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். தப்பறைகளுக்கு எதிராகப் போராடலாம் ஆனால், தப்பறையில் குருடாக்கப்பட்ட மற்றும் அறியாமையினால் காணப்படும் ஊழியர்களுக்கு எதிராக போராடுதல்கள் காணப்படக்கூடாது. சொந்த சுபாவத்தினுடைய பூரணமற்ற தன்மைகள் மற்றும் பெலவீனங்களுக்கு எதிராக போராடுவதில் நம்முடைய இந்தப் போராடும் மனப்பான்மையை நாம் ஈடுபடுத்தலாம். மேலும், இவ்விதமாய் இம்மனப்பான்மையானது இத்தகைய நல்ல பணியில் சுறுசுறுப்பாய்க் காணப்படும் பட்சத்தில், மற்றவர்களைக் காயப்படுத்துவதற்கு இம்மனப்பான்மைக்கு நேரம் இராது. மேலும், நம்முடைய சுயத்தை கைப்பற்றி கீழ்ப்படுத்துவதிலுள்ள கஷ்டங்களை (நம்முடைய இந்த) மனப்பான்மையானது உணரும்போது, மற்றவர்களுடைய பெலவீனங்கள் குறித்து அதிகம் அனுதாபங்கொள்ளும்.

## “பரலோகத்தில் மகா பலனை அடைதல்”

துன்பப்படுத்துதலின் வாயிலாக வரும் ஆசீர்வாதம் எட்டாவது மலைப்பிரசங்கத்தினுடைய கருத்தாகும். கர்த்தருடைய ஜனங்கள் முந்தின பாக்கியமான காரியங்களையெல்லாம் அடையாதது வரையிலும், அப்போஸ்தலர் பவுல் கூறினது போன்று, “உபத்திரவத்தில் மேன்மை பாராட்டும்” நிலையை அடையமுடியாது. ஆனால், நமது கர்த்தரோ பல்வேறு விதமான துன்பப்படுதல்களுக்கு இடையேயுள்ள வித்தியாசத்தைக் கவனத்துடன் வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றார். அதாவது, பாக்கியமான துன்பப்படுதலிலிருந்து, மற்ற வேறுவிதமான துன்பப்படுதல்களைக் கவனமாக வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றார். அதாவது, மற்றவர்கள் மீது குறை கண்டுபிடிப்பதின் மூலமாகவும், தீயக்குணலட்சணங்கள் மூலமாகவும், எல்லாரையும், எல்லாவற்றையும் எதிர்த்துச் சண்டையிடுதல் மூலமாகவும் நாம் துன்பங்களை வருவித்துக்கொள்ளக்கூடாது. அதேசமயம், மதவெறி காரணமாகவும் நாம் துன்பங்களை வருவித்துக்கொள்ளக்கூடாது. மாறாக நாம், “தெளிந்த புத்தியுள்ள ஆவியை” விருத்திச்செய்து, கர்த்தருடைய தெளிந்தபுத்தி எப்படியாக இருந்தது என வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டியுள்ள காரியங்களைப் படிப்படியாகக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படியாக, நாம் கற்றுக்கொண்டு நடந்த பிற்பாடுங்கூட நாம் “மதவெறி” கொண்டுள்ளதாக உலகம் நம்மை தவறாய்க் குற்றஞ்சாட்டும். ஏனெனில், தேவனுடைய ஞானமானது, மனுஷனால் முட்டாள்தனம் என்று கருதப்படுகின்றது. ஆனால், மனுஷனுடைய ஞானமோ தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி முட்டாள்தனமாகவே கருதப்படுகின்றது.

எப்போதாவது ஒருவிதமான நடத்தை (அ) கிரியை, மதவெறி போன்றும், நியாயமற்றது போன்றும் நமக்குத் தோன்றுமாயின், அந்த நடத்தையில்/கிரியையில் வெளிப்படும் ஆவியானது, நம்முடைய கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய

போதனையிலும், மாதிரியிலும் காணப்படுகின்றது என்று நாம் உறுதி அடைவது வரையிலும், நாம் அக்கிரியை நடப்பிக்க தயக்கம்கொள்ள வேண்டும். பின்னர், நமக்கு உறுதி கிடைக்கும் பட்சத்தில் உலகம் நம்முடைய அக்கிரியைக்குறித்து என்னதான் எண்ணினாலும் (அ) பேசினாலும், அதைப் பொருட்படுத்தாமல், அக்கிரியையை நாம் பாதுகாப்பாய்த் தொடரலாம். உதாரணத்திற்கு, தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி, ஒரு மனுஷன் தனது மரணத்திற்குப்பிற்பாடு, தன் பிள்ளைகள் ஜீவிப்பதற்கென, மில்லியன் கணக்காக பணத்தைக் குவித்துச் சேர்க்க, இரவும் பகலும் வேலை புரிவது என்பது பைத்தியமான காரியமாகும். ஆனால், மனுஷனுடைய கண்ணோட்டத்தின்படி, மேற்கூறியபடி வேலை புரிவது நியாயமான நடத்தையாகும். இன்னுமாக, தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி, அப்போஸ்தலர்கள் சத்தியத்திற்கான ஊழியத்திற்கெனத் தங்களுடைய ஜீவியத்தையே செலவிடுவதும், மேன்மையான உயிர்த்தெழுதலையும், நித்திய மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெற்றுக்கொள்வதற்கெனத் தங்களுடைய பூமிக்குரிய நலனை, பெயரை, அந்தஸ்தை, கீர்த்தியைத் தியாகம் செய்வதும் ஞானமான காரியமாகும். ஆனால், இப்படியாகச் செய்வது என்பது, உலகத்திற்குரிய கண்ணோட்டத்தின்படி முட்டாள்தனமாகவும், மதவெறியாகவும் காணப்படும்.

கர்த்தரையும், அப்போஸ்தலர்களுடைய போதனைகளையும், மாதிரிகளையும் பின்பற்றுவதின் காரணமாக நமக்குத் துன்பங்கள் வந்தால், அவரோடு நாம் பண்ணியுள்ள அர்ப்பணிப்பின் உடன்படிக்கைக்கு நாம் காட்டும் உண்மையினிமித்தம் நமக்கு எதிராக பலவிதமான தீமைகளும், தவறாய்க் கூறப்படுவதினிமித்தம் நமக்குத் துன்பங்களும் வந்தால் நாம் களிக்கூர வேண்டும். ஏனெனில், இதுபோலவே தீர்க்கதரிசிகளும், நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், ஆதிமுதல் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்ட அனைவரும் துன்பப்படுத்தப்பட்டார்கள். இப்படியான ஒரு நல்ல கூட்டத்தாரோடு நம்முடைய அனுபவங்கள் காணப்படும் காரியமானது, கர்த்தர் தம்முடைய சம்பத்தைக் கூட்டிச்சேர்க்கும் நாளில், இந்த நல்ல கூட்டத்தாரோடு நாமும், அவர்களைப்போன்று (மகிமையில்) காணப்படுவோம் என்பதற்கான சாட்சியாக விளங்குகின்றது.

இப்படியான அனுபவங்கள் உடையவர்கள் அனைவரும் களிக்கூரக்கடவர்கள். மேலும், இப்படியான அனுபவங்கள் நமக்கு அதிகமாய்க் கிடைக்கும் பட்சத்தில், பரலோகத்திலுள்ள பலன் மிகுதியாய் இருக்கும் என்று கர்த்தருடைய வார்த்தைகள் தெரிவிக்குமானால், அப்பொழுது நாம் இப்படியான அனுபவங்களில் அதிகமாய்க் களிக்கூர வேண்டும். மேலும், ஒருவேளை நமக்கு இப்படியான அனுபவங்கள் இல்லையெனில், சுயத்தைப் பலிச் செலுத்துவதற்கான இடுக்குமான வழியில் நடப்பதில் நாம் உண்மையற்றவர்களாகக் காணப்படுகின்றோமா என நம்மை ஆராய்ந்து பார்ப்பதற்குரிய எச்சரிப்பாக விளங்கும் அல்லது நம்முடைய கைக்கு வருவதை நாம் முழுப் பலத்தோடு செய்கிறவர்களாயிராமல், நம்முடைய பலியைச் செலுத்தாமல், வைத்துக்கொள்கின்றோமா என நம்மை ஆராய்ந்து பார்ப்பதற்குரிய எச்சரிப்பாக விளங்கும். இப்படியான நிலையில் காணப்படுவதை ஆராய்ந்து கண்டறிந்த நிலையில் இருப்பவர்கள் சோர்ந்துபோக வேண்டாம். மாறாக, அன்பு மற்றும் பக்திவைராக்கியம் எனும் புதிய கயிறுகளினால் தங்கள் பலிகளைப் பலிப்பீடத்தின் கொம்புகளில் கட்டி, அப்பலியைத் தேவன் ஏற்றுக்கொள்ளும்படியாக ஜெபம்பண்ணி, மேலும் தேவனுக்காகவும், தேவனுடைய நோக்கத்திற்காகவும், சத்தியத்திற்காகவும் வேலைகள் புரிவதற்கும், பாடுகள் படுவதற்குமான வாய்ப்புகளைத் தர வேண்டும் எனவும் ஜெபம் பண்ணுவார்களாக (சங்கீதம் 118:27).

இந்த அனைத்துக் குணலட்சணங்களின் ஒட்டுமொத்த கூட்டுருவம், அன்பு ஆகும். மேலும், இந்த அனைத்துக் குணலட்சணங்களையும் உடையவர்கள் அன்புடையவர்களாய்/ அருமையானவர்களாய் இருப்பார்கள். மேலும், போகப்போக இவர்கள் முற்றிலும் அன்புள்ளவருடைய சாயலுக்கு ஒப்பாகவும் மாறி, அவரோடுகூட, முற்றிலும் அன்புடையவர்களாகக் காணப்படுவார்கள். இந்தப் பாக்கியமான குணலட்சணங்களை அடைந்து இராஜ்யத்தில் காணப்படுவதே நமக்கான அழைப்பாகும்.

**R2099**

# "உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சமும்"

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்……. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்." (மத்தேயு 5:13-14)

உப்பும், வெளிச்சமும், மனுக்குலத்திற்கு மிகவும் அவசியமானவைகள் ஆகும். மேலும், இவ்விரண்டும் இயற்கை வாயிலாகவும் அதிகமாகக்கிடைக்கின்றது. மிருகங்கள் மற்றும் தாவரங்களினுடைய உட்பொருளுக்குள், உப்பானது பெருமளவில் பிரவேசிக்கின்றது. மேலும், உணவை ருசியுள்ளதாக்குவதற்கென பயன்படுத்தப்படும் இந்த உப்பானது மனிதனுக்கும், மிருகங்களுக்கும் ஏறக்குறைய அவசியமாகவே உள்ளது. மனிதனுடைய வளர்ச்சிப் பாதையின் ஆரம்பக்கட்டத்தில், உப்பு வர்த்தக விஷயங்களிலும் முக்கியமான பங்கு வகித்துள்ளது. இன்னுமாக, இந்த மிகவும் பயனுள்ள உப்பாகிய வியாபாரப் பொருளுக்காகவே, ஆரம்ப காலத்திலுள்ள வாணிப பாதைகள்/சாலைகள் அமைக்கப்பட்டன என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. உள்நாட்டு ஜனங்கள் மத்தியில் உப்புச்சுனை என்பது, தேவர்களிடமிருந்துவந்த விஷேசமான ஆசீர்வாதமாகக் கருதப்பட்டது. ஆகையால், உப்பிற்கு மத ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் காணப்பட்டபடியால், தேவர்களுக்குச் செலுத்தப்பட்ட பலிகளில், உப்பு விலையேறப்பெற்ற பொருளாகச் சேர்க்கப்பட்டது. **ஹோமர்** என்பவர் உப்பை தெய்வீகமானது என்றும், **பிளாட்டோ** என்பவர் "உப்பு தேவர்களுக்கு அருமையானது" என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

உப்பினுடைய பயன் மற்றும் முக்கியத்துவத்தினிமித்தமாக நியாயப்பிரமாணத்தின் பழைய யுகத்திலும் மற்றும் கிருபையின் புதிய யுகத்திலும் முக்கியமான படிப்பினைகளைப் புகட்டுவதற்கென உப்பு என்ற வார்த்தை அடையாள வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டது. உணவிற்குச் சுவையூட்டும் பொருளாகிய உப்பு விருந்தோம்பலை அடையாளப்படுத்துகின்றது. மேலும், உப்பு கிருமி நாசினியாக இருக்கின்றபடியால், அது தூய்மைக்கும், நேர்மைக்கும், அழியாத்தன்மைக்கும் கூட அடையாளமாக இருக்கின்றது. "உப்பு உடன்படிக்கை" என்ற வார்த்தை வேதாகமத்தில் இடம்பெறுகின்றது (எண்ணாகமம் 18:19 திருவிவிலியம்). உப்பை முக்கியமானப் பொருளாகக் கொண்டுள்ள பலிகள் மூலமாகவே உடன்படிக்கைகள் பொதுவாக ஏற்படுத்தப்படுகின்றது. "நீ படைக்கிற எந்தப் போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜன பலியிலே குறையவிடாமல், நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக" (லேவியராகமம் 2:13). உப்பினுடைய பதப்படுத்துகின்ற தன்மையானது, பொறுமையுடன் சகித்துக்கொள்வதற்கான ஒப்பந்தத்திற்குப் பொருத்தமான அடையாளமாகக்கூடக் காணப்படுகின்றது. உப்பினுடைய சுத்தகரிக்கும் தன்மையானது, எலிசா தண்ணீரை ஆரோக்கியமாக்குவதற்கென உப்பைப் பயன்படுத்தின சம்பவத்தில் வெளிப்படுகின்றது (2 இராஜாக்கள் 2:20-22).

"நீங்கள் உலகத்துக்கு உப்பாயிருக்கின்றீர்கள்." அதாவது, உண்மையான கிறிஸ்தவன் ஒருவனிடமிருந்து, உலகத்தின்மீது செலுத்தப்படும் செல்வாக்கானது, சொஸ்தப்படுத்தக்கூடியதும், சுத்திகரிக்கக்கூடியதுமான செல்வாக்காகக் காணப்படும் என்றும், நல்லவைகள் புளித்துப்போகாமலும், அழுகிப்போகாமலும் எப்போதும் பதப்படுத்தி, பத்திரப்படுத்தும் செல்வாக்காகக் காணப்படும் என்றுமுள்ள அர்த்தத்திலேயே, நமது கர்த்தர் இங்கு உப்பு எனும் அடையாள வார்த்தையைப் பயன்படுத்துகின்றார். எவ்வளவு அருமையான ஒப்புமை!

மேலும், கர்த்தருடைய இந்த வார்த்தைகள் உலகத்தின் மீது, கிறிஸ்தவர்கள் தங்கள் சார்பில் பெற்றிருக்கும் ஒரு பொறுப்பைப் பொதுவாகச் சுட்டிக்காட்டுகின்றதாகவும் இருக்கின்றது. கிறிஸ்து உலகத்தான் அல்லாதது போன்று, இவர்களும் உலகத்தார் அல்லாதவர்களாகவும், உலகத்தினின்று பிரிக்கப்பட்டவர்களாகவும், தேவனுடைய சொந்த ஜனமாகவும், அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகவும் இருந்தாலுங்கூட, இவர்கள் உலகத்தினின்று பிரிக்கப்பட்டதும் தேவனுடன் ஐக்கியம், உறவு மற்றும் அவருடன்

ஒத்துழைக்கும் நிலைக்கு உயர்த்தப்பட்டதும், இவர்கள் தங்களுக்குள் பெருமையை வளர்த்துக்கொள்வதற்காய் இராமல் மாறாக, “உலகத்தை ஆசீர்வதிப்பதற்கே” என இவர்கள் மறந்துவிடக்கூடாது. ஏனெனில், தேவன் உலகத்தை மிகவும் அன்புகூர்ந்தபடியால், அவர்களை மீட்கும்படியாக தம்முடைய ஒரேபேறான குமாரனை ஒப்புக்கொடுத்துள்ளார். மேலும், தேவனைப்போன்று கிறிஸ்துவும் உலகத்தை அன்புகூர்ந்தபடியால், உலகத்தின் இரட்சிப்பிற்காக அவர்தாமே தேவனுடைய கருவியாகும்படிக்கு தம்மை ஒப்புக்கொடுத்துள்ளார். (யோவான் 17:16; 3:16; 6:51; 10:18; எபிரெயர் 2:9; ரோமர் 5:18-19).

“நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள், வெளிச்சமாக இருக்கின்றீர்கள்” என்ற இந்த வாக்கியங்கள் நிகழ்கால அமைப்பில் இருப்பதையும் நாம் கவனிக்கின்றோம். அதாவது, மகிமையடைந்த கிறிஸ்துவின் மூலம் பூமியின் குடிகள் அனைத்தின் மீதும் பொதுவான ஆசீர்வாதம் வருவதற்கு முன்னதாக, இப்பொழுதும் நீங்கள் பூமிக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும் இருக்கின்றீர்கள் என்பதாகும். “புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக” என்ற அப்போஸ்தலனாகிய பவுலினுடைய புத்திமதியை நாம் நினைவுக்குக் கொண்டுவருவோமாக (கொலோசெயர் 4:5,6 ).

உலகத்தாரிடமான கிறிஸ்தவனுடைய மனப்பான்மையானது, பெருமையாகவும், விருப்பு வெறுப்பு அற்ற நிலையிலும் இராமல் மாறாக, உலத்தினுடைய ஆவி, பரிசுத்தமற்ற இலட்சியங்கள், பேராசைகள் மற்றும் செய்கைகளிலிருந்து விலகின நிலையிலும், அதேசமயம் ஆசீர்வதிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாகக் காணப்படுவதற்கு ஏதுவாய்ப் பெருந்தன்மையுடனும், இரக்கத்துடனும், அன்புடனும் காணப்பட வேண்டும். மேலும், இவர்களது முன்மாதிரியின் மூலமாகவும், கொள்கைகளின் மூலமாகவும் ஜீவனுக்கான மற்றும் பரிசுத்தத்திற்கான வழியைச் சுட்டிக்காண்பிக்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். “நான் உன்னைக்காட்டிலும் பரிசுத்தமானவன்” என்று பெருமையுடன் சொல்லும் மனப்பான்மை சரியானதல்ல. மாறாக, “தெய்வீகக் கிருபையினுடைய செல்வாக்கு என்மேல் இல்லையெனில், நான் உங்களைவிட மிகக் கீழான நிலையில்தான் இருந்திருப்பேன். இந்தத் தெய்வீகக் கிருபையை ஏற்றுக்கொள்கிறவர்கள் அனைவருக்கும், அது இலவசமாக வழங்கப்படும். கிருபையினால்தான் இவ்வளவாகக் காணப்படுகின்றேன் என்றபோதிலும், என்னிடம் காணப்படும் குறைவுகளுக்கு, எனக்குப்போதுமான பரிந்து பேசுபவராகக் காணப்படுபவரின் புண்ணியம் தேவைப்படுகின்றது” என்று சொல்லுகிற மனப்பான்மையே சரியானதாகும். வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஏனெனில் செய்கைகள் என்பது, வார்த்தைகள், சொற்களைக்காட்டிலும் அதிக ஆற்றல் உடையதாய் இருக்கின்றது. மேலும், இவர்களுடைய சாட்சியானது, மிகவும் ஆற்றல் உள்ளதாய்க் காணப்படும் பரிசுத்தமான நடத்தை மற்றும் சம்பாஷணையினுடைய சாட்சியானது தேவனுக்கு மகிமை சேர்ப்பதில் தவறுவதில்லை; நீதியினுடைய விவேகத்திற்கும், சிறப்பிற்கும் மகிமை சேர்ப்பதில் தவறுவதுமில்லை; இன்னுமாக, அநீதியைக் கடிந்துகொள்வதிலும் தவறுவதுமில்லை; வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்பில் நீதி நிச்சயமாய் ஜெயங்கொள்ளும் என்ற உண்மையை அறிவிப்பதில் தவறுவதுமில்லை. (யோவான் 16:8; அப்போஸ்தலர் 24:25).

“உப்பு நல்லதுதான்” என்ற இயேசுவின் வார்த்தைகள், உப்பின் தூய்மையை, நீதித்தன்மையை அடையாளப்படுத்துவதையும், அதன் சுத்திகரிப்பதற்கும், ஆரோக்கியத்திற்கும், பதப்படுத்துமான ஆற்றலை அடையாளப்படுத்துவதையும் குறிக்கின்றது. “உங்களுக்குள்ளே (தூய்மை, நீதி எனும்) உப்புடையவர்களாயிருங்கள்” (மாற்கு 9:50). ஒருவேளை நம்மிடத்திலேயே உப்பு இல்லாதிருந்தால், நம்மால் எப்படிப் பூமிக்கு உப்பாக இருக்க முடியும்? ஒருவேளை நாமே நீதியில் உண்மையுள்ளவர்களாய் இல்லாமல் இருப்போமானால், மற்றவர்கள் மீது சுத்திகரிக்கும், ஆரோக்கியப்படுத்தும் செல்வாக்கை நம்மால் எப்படிச் செலுத்த முடியும்? நீதியுடையவர்களாய் இருக்கின்றோம் என வெளித்தோற்றமாக மாத்திரமே சொல்லிக்கொள்வது என்பது உண்மையான பரிசுத்தம் ஆகாது. வெளித்தோற்றமாக மாத்திரமே சொல்லிக்கொள்ளும் நீதியிடம், ஆரோக்கியமளிக்கும் தன்மைகள் இருப்பதில்லை; மற்றும் உலகத்தாரிடத்திலான நம்முடைய

பொறுப்பை ஒருபோதும் நிறைவேற்றவும் செய்யாது. ஆகவே, தேவனுக்குத் துதி ஏறெடுக்கப்படத்தக்கதாக, மனுஷர்கள் நம்மில் கண்டு, உணரத்தக்கதாக, உண்மையான பரிசுத்தம் எனும் உப்பை நாம் பெற்றிருப்போமாக.

இந்த அடையாள வார்த்தையாகிய உப்பைக்குறித்து, நமது கர்த்தர் பேசும்போதுதான், ஓர் எச்சரிப்பின் வார்த்தையையும் கூட சேர்த்துப் பேசுகின்றார். "உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" (மத்தேயு 5:13). ஆகவே, நீதி என்னும் உப்பை ஒரு காலகட்டத்தில் பெற்றிருந்த கிறிஸ்தவன் ஒருவன், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளுவதற்கெனத் திரும்புவதுபோன்று திரும்பி, விரும்பி, வேண்டுமென்றே/துணிகரத்துடனே நீதியினின்று, தவறுவானாகில், அவன் "ஒன்றுக்கும் உதவாதவனாகி விடுவான்" (எபிரெயர் 6:4-8; 10:26-31, 38, 39). உப்பை நமக்குள் பெற்றிருப்பது மாத்திரமல்லாமல், அதன் ஆரோக்கியப்படுத்தும் தன்மைகளை நாம் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதும் எவ்வளவு முக்கியமாய் உள்ளது.

இந்த வகுப்பாரை இயேசு, "உலகத்திற்கு வெளிச்சம்" என்றும் குறிப்பிடுகின்றார். இவர்கள் முழுஉலகமும் வெளிச்சமடையத்தக்கதாக, தேவனுடைய இராஜ்யத்தில் சூரியனைப்போன்று பிரகாசிக்கின்ற காலம் வரவில்லை என்றாலும் கூட, இப்பொழுதும் இவர்கள் ஒளி வீசுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். மேலும், இவர்களிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கென, இவர்களுடைய ஒளியானது, சிறிய வட்டத்திற்குள்ளாகவே பிரகாசிக்கின்றது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மீதும், இருளிலுள்ள உலகத்தாரின் மீதுமான <u>கர்த்தருடைய அக்கறையானது, பரிசுத்தவான்களுடைய ஒளி எப்படி இருக்க வேண்டுமென அவர்களுக்கு அவர் கொடுக்கும் புத்திமதியில் வெளிப்படுகின்றது</u> அதாவது, "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16). இன்னுமாக இந்த உலகத்தினுடைய இருளைக் கூடுமானமட்டும் விரட்டுவதற்கு ஏதுவாக நாம் நமது ஒளியை வைக்க வேண்டிய இடம் குறித்தும் கர்த்தர் ஆலோசனை வழங்குகின்றார். ஆகவே, நாம் நமது ஒளியை/விளக்கை மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத்தண்டின்மேல் வைக்க வேண்டும். இந்தக் கடமை மற்றும் சிலாக்கியத்தின் விஷயத்தில், நாம் கர்த்தருக்காகக்கொண்டுள்ள பக்தி வைராக்கியத்திற்கு, இன்னும் அதிகமான புத்திமதி அவசியப்படாது. ஏனெனில், கர்த்தரைப் போன்றே ஆவியைக்கொண்டிருப்பவர்கள், இந்தக் கடமை மற்றும் சிலாக்கியத்தில் தங்களுக்கான போஜனத்தையும், பானத்தையும் அடைவார்கள். <u>இவர்கள் தங்களுடைய இருளை மாற்றிப்போட்ட ஒளியை, அதாவது</u> தேவனுடைய சத்தியத்தின் மற்றும் அவருடைய பரிசுத்த ஆவியின் ஒளியை, தங்கள் மூலமாக, <u>மற்றவர்களுடைய இருளின்மேல் பிரகாசிக்கச்செய்வதில்</u> மகிழ்ச்சிக்கொள்வார்கள்.

இவ்விதமாக பார்க்கும்போது, உலத்திற்குரிய ஆசீர்வாதக்காலத்திற்கு முன்னதாகவே தேவனுடைய ஜனங்களுடைய உப்பு மற்றும் வெளிச்சத்தின் வாயிலாக, உலகத்தார் மீது ஓரளவுக்கு ஆசீர்வாதம் வரவே செய்கின்றது. மேலும், இந்த யுகத்தினுடைய முடிவிலோ, நமது உப்பு மற்றும் வெளிச்சத்தினால் உண்டான பலனைப்பார்க்க முடியும். "சமுதாயப் பண்பாட்டு உயர்வு" (Civilization) என்ற வார்த்தைக்குள் அடங்கும் பூமிக்குரிய வளர்ச்சிக்கான சகல <u>ஆசீர்வாதங்கள், இந்தச் சுவிசேஷ யுகத்தில், பூமியின் உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும்</u> இருந்துள்ள சொற்பமான ஜனங்களுடைய <u>நேரடியான மற்றும் மறைமுகமான செல்வாக்கின் காரணமாகவே வந்தவை</u> என்று நாம் கொஞ்சம் கவனித்துப்பார்ப்பதின் மூலம் அறிந்துக்கொள்ளலாம். தற்காலம் வரையிலும் உலகத்தில் இருந்த உப்பு மற்றும் வெளிச்சத்தினுடைய மறைமுகமான செல்வாக்கினுடைய விளைவே/பலனே "சமுதாயப் பண்பாட்டு உயர்வாகும் (Civilization)." தேவனுடைய உண்மையான ஜனங்கள், தெய்வீகச் சத்தியத்தினுடைய வெளிச்சத்தை எவ்வளவுக்கு தங்களால் முடியுமோ, அவ்வளவாய் முதன்மையானதாக உயர்த்திப் பிடித்துள்ளனர். இதன் வாயிலாக இவர்கள் நீதியையும், வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்பையும் குறித்து முன்வைத்துள்ளனர். மேலும், இவர்கள் தங்களுடைய குணலட்சணங்கள் வெளிப்படுத்தின நீதியின் கொள்கைகள் பற்றின அறிவினாலும், அக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டு

பின்பற்றுமாறு வலியுறுத்தினதாலும், தங்களால் முடிந்தமட்டும் மனிதர்களுடைய மனதில் உப்பிடுவதற்கு முயற்சித்துள்ளனர். மேலும், எந்தளவுக்கு இந்தக்கொள்கைகள் உலகத்தால் செயல்முறைப்படுத்தப்பட்டதோ, அவ்வளவாய்ப் பலனையும் அடைந்தது.

ஆதிமுதல், முடிவுவரை முன்னறிந்துள்ள கர்த்தர், தம்முடைய ஜனங்கள் தம்மோடுகூட வல்லமையிலும், மகா மகிமையிலும் உயர்த்தப்படுவதற்கான நியமிக்கப்பட்ட வேளைவருவதற்கு முன்புவரையிலும், தங்களிடத்திலுள்ள அனைத்து உப்பையும், ஒளியையும் கொண்டு, இப்பொழுது உலகத்திற்குச் செய்திருப்பதைக்காட்டிலும் அதிகம் செய்யமுடியாது என்று அறிவார். ஆனால், "சமுதாயப் பண்பாட்டு உயர்வாகிய" இந்த வேலைகூட, சீர்த்திருத்தலுக்குரிய எதிர்கால வேலைக்கான ஆயத்தம்பண்ணுதல் எனும் விதத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், தேவனுக்கு முன்பாக இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் காணப்படுவதற்கும், இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர் ஆகுவதற்குமென, கர்த்தருக்கென்று ஆயத்தமாய் இருக்கும் ஜனங்களைத் தெரிந்தெடுக்கும் இச்சுவிசேஷ யுகத்தின் விசேஷமான வேலைக்கு உதவியாகவும் காணப்படுகின்றது.

ஆகவே, தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சுதந்தரிக்கப் போகின்றவர்களே, இராஜ்யத்தைக் கொடுப்பதற்கெனப் பிதா பிரியப்படுகின்றவர்களே, "உங்களுக்குள் உப்புடையவர்களாய் இருங்கள்." நீங்கள் உப்பிடப்பட்டவர்களாய் இருக்கின்றபடியால், நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள் என்பதையும், உங்கள் நடத்தை, அக்கிரமத்தைக் கண்டிக்கின்றது என்பதையும், நீங்கள் உப்புத் தன்மையில் தொடர்ந்து காணப்படுவது என்பது பரிசுத்தத்திற்கும், தெய்வீகக் கிருபையினுடைய வல்லமைக்கும் ஜீவனுள்ள சாட்சியாக உள்ளது என்பதையும் மறந்து விடவேண்டாம். செவிச்சாய்ப்பவர்களுக்கு ஆசீர்வாதமாகவும், செவிச்சாய்க்காதவர்களுக்கு எச்சரிப்பாகவும், சகல ஒளிக்கும் மகா மையமாக இருக்கும் தேவனுக்கு துதி உண்டாகவும் தக்கதாக ஒளி பரவிச்செல்லும் விதமாக தெய்வீகச் சத்தியம் மற்றும் அதன் பரிசுத்த ஆவியினுடைய ஒளியை, நம்முடைய சிட்சிக்கப்பட்டதும், திருத்தம்பண்ணப்பட்டதும், தூய்மையானதுமான குணலட்சணங்களில் பிரகாசிக்கின்ற ஒளிக்குவிமையத்திலிருந்து செலுத்த நாம் பிரயாசப்படுவோமாக.

---

**R3243**

# "உங்கள் நீதி"

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கத்தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" **(மத்தேயு 5:14-20).**

நம்முடைய கர்த்தர் கொடுத்த மலைப்பிரசங்கத்திலிருந்து நாம் பார்க்கப்போகின்ற நம்முடைய பாடத்தின் ஆதாரவசன பாகமானது மிகவும் எளிமையானதாகவும், மிகவும் முக்கியமானதும் கூட இருக்கின்றது. இவ்வசனப்பகுதிகளின் ஆரம்பம் தொடங்கி, முடிவுவரையிலும், வார்த்தைகளைச் சுவாரசியப்படுத்துவதற்கென, இதன் இலக்கியத்தை அழகுப்படுத்துவதற்கோ (அ) நாவன்மையோ/சொற்திறனோ (அ) மெருகூட்டப்படுவதற்கோ முயற்சிகள் ஏறெடுக்கப்படவில்லை. கர்த்தருடைய நோக்கம் போதிப்பதாக இருந்தது. மேலும், அவர் மிக எளிமையான மற்றும் அழுத்தமான விதத்தில் போதித்தார். இன்னுமாக, இந்தத் தருணத்தின்போது, திரளான ஜனக்கூட்டம் கூடியிருக்கத்தக்கதான ஒரு பொதுவான இடத்தைக் கர்த்தர் நாடவில்லை என்பதை நாம் கவனிக்கையில் உணர்ந்துக்கொள்ளலாம்.

மாறாக, தம்முடைய சீடர்களுடன் தனித்திருக்கத்தக்கதாக ஒரு தனிமையான இடத்தையே அவர் தெரிந்துக்கொண்டதைப் பார்க்கின்றோம். அவருடைய அற்புதங்களைப் பார்ப்பதற்காகவும், அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்காகவும் திரளான ஜனக்கூட்டம் அவரைச் சுற்றிக்கூடியது. மேலும், அவருங்கூட அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தப்படுத்தி, அவர்களுக்கு அநேககாரியங்களைப் போதித்திருந்தாலும், இந்தப் பிரசங்கமானது விசேஷமாக அவருடைய சீடர்களுக்கும், விசுவாச வீட்டாருக்கும் கொடுக்கப்பட்டது. மேலும், இந்த யுகம் முழுவதும் காணப்படும் விசுவாச வீட்டாருக்கு இந்தப் போதனைகள் சென்று சேரும்படிக்கு இவ்வார்த்தைகள் உண்மையாய்ப் பதிவும் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளைக் கவனிக்க முற்படுகையில், பேதுருவும், யாக்கோபும், யோவானும், ஆதி சபையினுடைய அநேக சகோதரரும், சகோதரிகளும் உலகம் அதுவரையிலும் கண்டிராத மாபெரும் பிரசங்கியின் உதடுகளிலிருந்துவரும் வார்த்தைகளைக் கேட்கும்படியாக மலையின் அருகிலுள்ள புல்லின்மேல் அமர்ந்திருந்திருப்பார்கள் என்பதையும் நம்மால் உணரமுடிகின்றது. நாம் கேட்கிற காரியங்களை மறந்துப் போகக்கூடியவர்களாக இருக்க வேண்டாம். மாறாக, ஜீவனுக்கேதுவான அந்த வார்த்தைகளைப் பொக்கிஷமாகக் கருதுவோமாக. அந்த வார்த்தைகள், இருதயங்களின் ஆழங்களுக்குச் சென்று, நித்திய ஜீவனுக்கு ஏதுவான பலனைக்கொண்டு வரத்தக்கதாக அனுமதிப்போமாக.

நம்முடைய கர்த்தருடைய செய்தியிலுள்ள நம்முடைய பாடத்தின் ஆதாரவசனமாகிய சிறிய பாகமானது, நாம் பெற்றுள்ள சத்தியத்தின்பால் நமக்குள்ள கடமை குறித்துச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால், இதை அநேக கிறிஸ்தவர்களோ கவனமாய்க் கவனிப்பதுமில்லை சிந்தித்துப்பார்ப்பதும் இல்லை. “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது” என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். இன்னுமாக, “நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்” என்றும், “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்” என்றும் அவர் குறிப்பிடுகின்றார் (யோவான் 9:5; 8:12 ). அவருடைய வார்த்தைகளினால் போதிக்கப்பட்டு, வெளிச்சமூட்டப்பட்ட நாம், அவருடைய பிரதிநிதிகளாய் இருக்கின்றோம் என்பதையும், உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கின்றோம் என்பதையும், நம்மோடுகூட வருகின்றவர்கள் இருளில் நடவாதவாறு நம்முடைய வெளிச்சத்தைப் பிரகாசிக்கத்தக்கதாக, நம்முடைய விளக்கைத்தொடர்ந்து எரிய வைக்கின்றவர்களாகவும், விளக்கின் திரியைச் சரிச்செய்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதையும் நாம் நினைவில் கொள்ளத்தக்கதாகக் கர்த்தர் சித்தமுள்ளவராக இருக்கின்றார்.

வேதவாக்கியங்களிலும் சரி, பொதுவான பேச்சு வழக்குகளிலும் சரி வெளிச்சம் எனும் வார்த்தை, சத்தியத்திற்கு அடையாளமாயிருக்கின்றது. “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் . . . உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது” எனும் வார்த்தைகள் பின்வரும் காரியங்களைச் சொல்வதற்குச் சமமாக இருக்கின்றன. அதாவது, “நீங்கள் சத்தியத்தினால் வெளிச்சமூட்டப்பட்டுள்ளதால், நீங்கள் இப்பொழுது சத்தியத்திற்கான ஜீவனுள்ள பிரதிநிதியாக காணப்படுகின்றீர்கள். ஆகவே, எந்த விதத்திலும் வெளிச்சத்தை நீங்கள் மறைத்து வைக்காமல், மாறாக நீங்கள் சத்தியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டதுபோன்று, மற்றவர்களும் சத்தியத்தினிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, உங்கள் வெளிச்சத்தை அதிகமதிகமாக பிரகாசிக்கக்கடவீர்கள்” என்பதேயாகும். இந்தச் சத்தியமே, “ஜீவனுக்கான வெளிச்சமாக” இருக்கின்றது. இதுவே, உலகத்திற்கு அவசியமானதாய் உள்ளது. அதாவது, இதையே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு, அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும். சத்தியமானது மனிதனைப் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிப்பதற்கு முன்னதாக, முதலாவது மனிதன் சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும். சத்தியம் அவர்களைச் சுத்திகரித்து, பரிசுத்தம் பண்ணுவதற்கு முன்னதாக அவர்கள் முதலாவதாக சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும். சகல மனுஷரும் சத்தியம் பற்றின தெளிவான/துல்லியமான அறிவிற்குள் வரவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாக இருக்கின்றது (1 தீமோத்தேயு 2:4). ஆகவே, ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், சத்தியத்தைப் பரப்புவதிலும், தனது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்வதிலும், விளக்கின் திரியைச் செம்மைப்படுத்துவதிலும், எரிய வைப்பதிலும் மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட வேண்டும்.

"திரியைச் செம்மைசெய்து, எரிய விடுங்கள்!" என்று ஒருவர் கூறியுள்ளார். "உங்கள் விளக்கின் திரியைச் செம்மைப்படுத்துங்கள்" என்ற வார்த்தைகளடங்கின பாடல்களை ஊக்கத்துடன் நாம் பாடியிருக்கின்றோம். ஆனால், இதன் அர்த்தம்தான் என்ன? இதன் அர்த்தமாவது, சத்தியத்தைப்பற்றின துல்லியமான அறிவைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜீவனுக்கேதுவான வார்த்தைகளுக்கு நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியதாகும். இன்னுமாக, இதன் அர்த்தமாவது நம்முடைய குணலட்ணங்களின் வாயிலாக சிறு தடைகள் கூட இல்லாமல், தெய்வீகச் சத்தியத்தின் உண்மையான வெளிச்சம் பிரகாசிக்கத்தக்கதாக, நம்முடைய அன்றாட ஜீவியம் மற்றும் சம்பாஷணையிலோ அல்லது (நாம் கொண்டிருக்கும்) உபதேசங்களில் நாம் தப்பிதங்களைக் காண்கின்ற மாத்திரத்தில், இந்த ஒவ்வொரு தப்பிதங்களையும் கவனத்துடனும், உண்மையுடனும் கத்தரித்துச் செம்மைசெய்ய வேண்டியதாகும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் தங்கள் வெளிச்சத்தின் திரிகளைக் கத்தரித்து, செம்மைப்படுத்தும் விஷயத்தில் அலட்சியமாக இருப்பதென்பது, கவலைக்குரிய விஷயமாகும். இவர்கள் கொஞ்சம் சத்தியத்தை, அதிகமான தப்பறைகளுடன் சேர்த்துப் பெற்றிருப்பார்கள். மேலும், இவர்கள் தப்பறைகளை அப்புறப்படுத்துவதற்குப்பதிலாக, சத்தியத்தையும், தப்பறையையும் சேர்த்துப் போதிக்கின்றபடியால், இவர்களிடமிருந்துவரும் வெளிச்சமானது, தூய்மையான வெளிச்சமாக இராமல், அவ்வெளிச்சத்துடன் கூடவே காணப்படும் நிழலினால், உருவம் வேறுபடுத்தப்பட்டு, வெண்மை நிறமற்று காணப்படுகின்றது. இன்னும் சிலர் தூய்மையான சத்தியத்தை உயர்த்திப் பிடித்திருந்தாலுங்கூட, சத்தியத்தின் சுத்திகரிக்கும் தன்மையை இவர்கள் தங்களுடைய குணலட்சணத்தில் அனுமதியாததால், தூய்மையற்ற குணலட்சணங்களின் வாயிலாக இவர்களுடைய வெளிச்சம் கடந்துவருவதால், அவ்வெளிச்சம் தெளிவில்லாமலும், தவறாகவும் காட்டப்படுகின்றது. இப்படியான நிலையில் தொடர்ந்து சத்தியத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள், சத்தியத்தை உயர்த்திப் பிடிப்பதற்கு உண்மையில் பாத்திரமற்றவர்களாக இருப்பார்கள். பின்னர், இறுதியில் அதை இழந்தும் போய்விடுவார்கள். ஏனெனில், "நீதிமானுக்கே வெளிச்சம் (சத்தியம்) விதைக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்டுள்ளது (சங்கீதம் 97:11). மேலும், சத்தியம் முன்வைக்கும் விஷயங்களை அலட்சியப்படுத்துவது என்பது அநீதியான காரியமாகும்.

நம்முடைய கர்த்தருடைய நாட்களில், தங்களைத் தெய்வீகச் சத்தியத்திற்கான பிரதிநிதிகள் மற்றும் போதகர்கள் என்று வெளிப்படையாக அறிக்கைப்பண்ணினவர்கள் இருந்தார்கள். சத்தியத்திற்காக மிகவும் வைராக்கியம் கொண்டிருப்பதாக வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் கூறிக்கொண்டார்கள். மேலும், சத்தியத்தினுடைய சுத்திகரிக்கும் வல்லமைக்குத் தங்களை விலையேறப்பெற்ற சாட்சிகள் என்றும் கூறிக்கொண்டனர். இவர்கள் தங்களிடம் வெளிச்சம் இருப்பதாகவும், அதைத் தாங்கள் பிரகாசித்துக் கொண்டிருப்பதாகவும் கூறிக்கொண்டனர். பரிசேயர்கள் "தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்" என்ற வசனங்களின் காரியங்களைக் கூறுகின்றார்கள் (லூக்கா 18:11-12). ஆனால், இவர்களைக் குறித்துக் கர்த்தரோ, "மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள், உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்று கூறுகின்றார் (மத்தேயு 23:27-28) . இவர்கள் இப்படியாகக் கர்த்தருடைய பார்வையில் காணப்பட்டார்கள். ஆனால், இவர்கள் மனுஷர்களால் மதிக்கப்பட்டு, கனப்படுத்தப்பட்டு, பரிசுத்தர்கள் என்று உயர்வாகக் கருதப்பட்டு, சத்தியம் மற்றும் நீதியின் பாதையைக் காட்டித்தரும் வழிகாட்டிகள் எனக் கருதப்பட்டார்கள். இவர்கள் தேவனுடைய பிரமாணங்களுக்குள் முட்டாள்தனமான மற்றும் தங்களுடைய வீணான சொந்த பாரம்பரியங்களைப் புகுத்தி, தேவனுடைய நியாயபிரமாணத்தை அவமாக்கிப்போட்டார்கள்; பாரம்பரியங்களை ஜனங்களுக்குப் போதிப்பதில் மிகவும் வைராக்கியத்துடன் காணப்பட்டார்கள்.

இப்படியாக, செய்ததினிமித்தம் வேதபாரகர்கள் மற்றும் பரிசேயராகிய இந்தப் போதகர்கள் மன்னிப்புக்குத் தகுதியில்லாதவர்கள் ஆவார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணம் இவர்களுக்கு முன்பு திறந்த நிலையில் காணப்பட்டது. மேலும், அதைக் குறித்துச் சரியாக அறிந்திருப்பது, இவர்களுக்குரிய கடமையாகவும், சிலாக்கியமாகவும் இருந்தது. விசேஷமாக கிறிஸ்து வந்த பிற்பாடு, அவருடைய போதனைகளானது சத்தியத்தை அதிகமாய் வெளிப்படுத்தினது. இன்னுமாக, பரிசேயர், வேதபாரகருடைய வீணான பாரம்பரியத்தின் முட்டாள்தனத்தையும் அதிகமாய் வெளிப்படுத்தியதால், இவர்கள் சாக்குச்சொல்ல ஏதுவில்லாமல் ஆயிற்று. இவர்கள் தங்களுடைய முன்னோர்களின் பாரம்பரியங்களை உயர்த்திப்பிடிப்பதிலும், அவைகளைப் போதிப்பதிலும் தீர்மானத்துடன் காணப்பட்டிருந்ததினாலும், தங்களுடைய முட்டாள்தனமான பாரம்பரியத்தை வெளிப்படுத்தின சத்தியத்தினுடைய ஒளியை எதிர்ப்பதிலும் தீர்மானத்துடன் காணப்பட்டிருந்ததினாலும், இவர்களை நமது கர்த்தர் மாய்மாலக்காரர்கள் என்று கூறினது இவர்களுக்குப் பொருத்தமானதேயாகும்.

பரிசேயர் மற்றும் வேதபாரகரிடம் அதிகம் சத்தியம் இருந்தது. இவர்களிடம் தேவனுடைய முழு நியாயப்பிரமாணமும் காணப்பட்டது. மேலும், அந்தப் பிரமாணத்தை நம்புவதாகவும், அதையே போதிப்பதாகவும் இவர்கள் அறிக்கைப்பண்ணினார்கள். ஆனால், இவர்கள் தங்களுடைய பாரம்பரியத்தினாலும், வெளியில் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைபோன்று காணப்பட்டு, ஆனாலோ உண்மையில் இழிவுடன் காணப்படும் தங்களுடைய குணலட்சணங்களினாலும் சத்தியத்தை உருமாற்றிக் காட்டிவிட்டனர். ஆகவே, இவர்கள் மனிதர்களைத் தேவனிடத்திற்குக் கொண்டுவருவதற்காக தாங்கள் பிரயாசம் எடுப்பதாக அறிக்கை செய்த பிரயாசங்களின் விளைவாக, இவர்கள் மற்றவர்களையும் தங்களைப் போன்று மாய்மாலக்காரர்களாகவே ஆக்கினார்கள். "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:20).

மனுஷனுக்கு முன்பு அருமையானதாகவும், பாராட்டுப்பெறுவதற்கு ஏதுவானதாகவும் ஆனால், தேவனுடைய கணிப்பிலோ போலித்தனமாகவும், மாய்மாலமாகவும் காணப்படும் நீதியைக்குறித்து நாம் எச்சரிக்கையுடன் இருப்போமாக. நாம் எந்த நோக்கத்திற்காக சத்தியத்தை ஏற்றுக்கொள்கின்றோம் (அ) பரப்புகின்றோம் என்பதை இருதயத்தை வாசித்தறிகிற தேவன் உடனே புரிந்துக்கொள்கின்றார். இந்தத் தெய்வீகப் பொக்கிஷத்தைக் (சத்தியத்தை) கடந்துபோகும் வாழ்க்கையின் அற்பத்தனமான ஆதாயங்களுக்காக வியாபாரம் பண்ணுகின்றவர்கள், உண்மையில் முட்டாள்களே. தப்பறையான உபதேசங்களை உயர்த்திப்பிடிப்பதற்கும், அதைப் போதிப்பதற்கும், தேவனுடைய சத்தியத்தை எதிர்ப்பதற்கும் நாடுபவர்கள் உண்மையில் முட்டாள்களே. ஒருகாலத்தில் சத்தியத்தை ஏற்றுக்கொண்டும், பிற்பாடு பணத்திற்காக (அ) செல்வாக்கிற்காக (அ) தன்னோடுகூட கல்லறை நோக்கி பயணம் செய்து, செத்துக்கொண்டிருக்கும் நிலையில் காணப்படும் சகல மனிதர்கள் மத்தியில் பிரபலம் அடைவதற்காக (அ) வேறு ஏதேனும் காரணத்திற்காக விற்றுப்போடுகின்றவர்களும் உண்மையில் முட்டாள்களே.

இன்னுமாக, மாய்மாலத்துடன் சத்தியத்தை வியாபாரம் செய்யாமல் ஆனால், அதைக் குறைவாய் எடைபோடுகிற சிலரும் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும், இழப்பிற்குரியவர்களாகவே இருப்பார்கள். சத்தியத்தைத் தேடுபவர்களுக்கு அவசியமாய் இருக்கும் எளிமையை, சாந்தத்தின் ஆவியைக் குறுக்கிடுவதற்கு நாம் தவறான அபிப்பிராயத்தை (அ) பெருமை (அ) சண்டையிடும் தன்மை (அ) போட்டி மனப்பான்மை (அ) வேறு எதையாகிலும் அனுமதிப்போமானால், நமக்குள் பரிசேயரின் ஆவி வளர்ந்து, மாய்மாலம் வெளிப்படும். இப்படியான தன்மைகளைத் தவிர்த்து, உண்மையுடனும், சாந்தத்துடனும் சத்தியத்தை முழுமையாய் ஏற்றுக்கொண்டு, எதையும் இழந்து, சத்தியத்தை வைராக்கியத்துடன் போதிப்பவர்கள் கர்த்தர் சொல்வதுபோன்று பரலோக இராஜ்யத்தில் பெரியவர்கள் என்று அழைக்கப்படுவார்கள். தெளிவான சத்தியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சிலாக்கியம் இருந்தும், கொஞ்சம் தப்பறைகளைப் போதித்தும், ஆனாலும் சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்குச் சரியான இருதய நிலைக்கொண்டிருப்பவர்கள் பரலோக இராஜ்யத்தில் சிறியவர்களென அழைக்கப்படுவார்கள் (மத்தேயு 5:19).

தவறான கருத்துகள் மற்றும் பண்புகளின் பல்வேறு குறைவுகள் என்பது, தேவனுடைய சில உண்மையான அர்ப்பணம் பண்ணியுள்ள பிள்ளைகளின் வளர்ச்சியை அதிகளவு குறைத்துப் போடுகின்றது. மேலும், இதன்விளைவாக இவர்கள் தேவனுக்கென்று ஊழியம் புரிவதாக எண்ணி செய்யும் காரியங்கள் தவறாய் வழிநடத்தப்பட்டு, தேவனுடைய வார்த்தைகள் மிகவும் தெளிவாகக் காணப்படும் விஷயங்களில், சத்தியத்திற்கு எதிராக போதிப்பவர்களாகவும், நம்பிக்கை வைப்பவர்களாகவும் ஆகிவிடுவார்கள். ஆகவே, இம்மாதிரியான விஷயங்களில் நாம் மிகவும் எச்சரிக்கையாய் இருந்து, சத்தியத்தின் பாதையிலான நம்முடைய தனிப்பட்ட வளர்ச்சிக்கும், கர்த்தருடைய ஊழியங்களில் நாம் பயன்படுவதற்கும் ஏதுவாக நாம் எல்லா இடையூறுகளையும் தளரா முயற்சியுடன் பின்னே தள்ளுவோமாக. "என் கிருபை உனக்கு போதும், பெலவீனத்தில் என்னுடைய பெலம் பூரணமாய் விளங்கும்" என்று கூறின இயேசுவை நோக்கினவர்களாக, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையுடனும், சாந்தத்துடனும்/நிதானத்துடனும், விடா முயற்சியுடனும் ஓடுவோமாக.

---

**R4558**

# “உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்”

## மத்தேயு 5: 19-36, 38-48

இருதயத்திலும், நோக்கத்திலும் தவிர மற்றபடி கர்த்தருடைய பின்னடியார்கள் விழுந்துபோன மாம்சத்தை உடையவர்களாக இருக்கின்றபடியால், பிதாவைப்போன்று பூரண சற்குணராக இருக்க முடியாது. ஆனால், கிறிஸ்துவுடன் கூட அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாக, அவருடைய இராஜ்யத்தின் மகிமைகளில் நாம் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக நிரூபித்துக் காட்டுவதற்கு இருதயத்தின் நல்ல நோக்கம் மாத்திரம் போதாது. நம்முடைய தூய்மையான இருதயமும், தேவனுக்கு ஒத்த தன்மைகளும் பரீட்சிக்கப்பட வேண்டும். இவைகள் நிரூபிக்கப்பட வேண்டும். இன்னுமாக, அசையாத அளவுக்கு வளர்க்கப்படவும் வேண்டும். இன்னுமாக, இவைகள் சோதனையின் பரீட்சைகளில் நிலைநிற்க வேண்டும். இவைகள் கடுந்துன்பங்களைச் சகித்து, உண்மையுடன் காணப்பட வேண்டும். ஆகவே, கிறிஸ்துவின் சீஷர்களாக ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள், மிகவும் கடுமையான சூழ்நிலைகளில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

யூதர்கள் படிப்படியாக தெய்வீக நியாயப்பிரமாணத்தை மறந்துபோய், இந்த நியாயப்பிரமாணத்துக்கு மாறான குறிப்பிட்ட பாரம்பரியங்களினால், தங்களுடைய மனங்களை நிரப்பிக்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். மாபெரும் போதகர், ரபீகளைப் புறக்கணிப்பதின் மூலம், அவர் நியாயப்பிரமாணத்தை ஒதுக்கிவைப்பதாக சிலர் எண்ணியிருந்திருக்கலாம். மாறாக, அவரோ தாம் மனிதனுடைய பாரம்பரியங்களை ஒதுக்கிவைக்கவும், நியாயப்பிரமாணத்தை நிலைநாட்டவும், அதை அதிகமாய் வெளிப்படுத்தவுமே நாடுவதாக உறுதியளித்தார். பரிசேயர்களும், வேதபாரகர்களும் மிகவும் பரிசுத்தமானவர்கள் என்றும், பயபக்திக் கொண்டவர்கள் என்றும் ஜனங்களினால் கருதப்பட்டார்கள். ஆனால், ஜனங்களோ இந்தப் பரிசேயர், வேதபாரகரைக்காட்டிலும் அதிகமான பரிசுத்தத்தைக்கொண்டிருக்க வேண்டும், இல்லையேல், அவர்கள் ஒருபோதும் பரலோகத்தின் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியாது என்று இயேசு கூறினார்.

"கொலை செய்யாதிருப்பாயாக" என்றும், "கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்;" அதாவது, நியமிக்கப்பட்டுள்ள நீதிபதிகளினால் விசாரணைக்கும், தண்டனைக்கும் ஏதுவாயிருப்பான் என்றும், பாரம்பரியமானது நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிடுகின்றது. ஆனால், இயேசுவோ, சகோதரனுக்கு எதிராக (இருதயத்திலும், வெளியே வெளிப்படுத்தப்படாத நிலையிலும்) கோபம் கொண்டிருப்பது என்பது மனம், கொலை செய்யும் மனப்பான்மை கொண்டுள்ளது என்றும், உண்மையில் வெளிப்படையான கொலை நிகழ்த்தப்படாவிட்டாலும், கொலைக்குச்சமமான சகோதரனுக்கு எதிரான கோபமானது தேவனுடைய பார்வையில் கண்டனத்திற்கு ஏதுவாய்க் காணப்படும் என்றும் மிகவும்

கண்டிப்பான விதத்தில் போதித்தார். இன்னுமாக, சகோதரனை வீணனென்றும், மூடனே என்றும் கூறுவதையும் கண்டித்துப்பேசுகின்றார். இப்படியான வார்த்தைகள் இருதயத்தின் தவறான நிலையைச் சுட்டிக்காண்பிக்கின்றது என்பதையும், இப்படியாக இருப்பது அந்நபரை ஆலோசனை சங்கத்தின் தீர்ப்பிற்கு வழிநடத்தி, பின்னர் அந்நபரை கெஹென்னாவினால் அடையாளப்படுத்தப்படும் இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்திவிடும் என்பதையும் கர்த்தர் கூறினார்.

இங்குவரும் எரிநரகம் கெஹன்னாவாகும். அதாவது, குப்பைகளை அழிப்பதற்கும், தொற்றுநோயை தடுப்பதற்கும், இன்னோம் பள்ளத்தாக்கில் தொடர்ந்து எரிந்துக்கொண்டிருக்கும் நெருப்புதான் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நெருப்பில் பொல்லாத செய்கைக்காரர்களின் சடலங்களும் அழிக்கப்படுவதற்காகப் போடப்படுகின்றது. இவ்வாறாக, இது இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. (வெளிப்படுத்தல் 20:14).

ஒருவன் மற்றவருக்கு எதிரான பகையைத் தன்னுடைய இருதயத்தில் கொண்டிருக்கும் நிலையில், பலியின் பொருளோடு தேவனுடைய பலிப்பீடத்தை நெருங்குவது, பலனற்றதாய் இருக்கும் என்பது கலிலேயா தீர்க்கதரிசியின் கணிப்பாக இருந்தது. ஆகவே, கர்த்தருக்குப் பலிச் செலுத்துவதற்கு முன்பு, கிறிஸ்துவின் சீஷர்கள் ஒவ்வொருவரும், தங்களுடைய இருதயங்களை ஆராய்ந்துப் பார்த்து, தங்களிடத்தில் காணப்படும் பகைமையை எடுத்துப்போட வேண்டும். அதாவது, இப்படிச் செய்யாதபட்சத்தில் தங்களுடைய பலிகளும், தாங்கள் ஏறெடுக்கும் துதிகளும் வீணாக இருக்கும் என்று உணர்ந்த நிலையில் இவர்கள் தங்களிடத்திலிருந்துப் பகைமையை எடுத்துப்போட வேண்டும்.

25 மற்றும் 26-ஆம் வசனத்தில் இடம்பெறும் ஆலோசனைகள் செம்மையானவைகளாகும். நமக்கு எதிராக ஏதேனும் விஷயங்கள் காணப்படுமாயின், அதனை முடிந்தமட்டும் விரைவாகச் சரிச்செய்து, முடித்துவிட வேண்டும். யூதர்கள் தங்களுடைய நண்பனாக, உதவியாளனாக, கருதிக்கொள்ளும் அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையானது, உண்மையில் அவர்களுடைய எதிராளியாக இருந்து, அவர்களைக் குற்றம்சாட்டிக் கொண்டிருக்கின்றது என்ற முக்கியமானப் பாடத்தை அனைத்து யூதர்களும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. மாம்சத்தின் பூரணமின்மையினிமித்தம், இவர்களால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவும் முடியவில்லை. இன்னுமாக, நியாயப்பிரமாணத்தினிடமிருந்து பாராட்டைப் பெற்றுக்கொள்ள முடியாமல், அதன் கண்டனத்தையே பெற்றுக்கொள்கின்றனர். இதனை உணர்ந்துக்கொள்பவர்கள் தங்களால் முடிந்தமட்டும் விரைவாகத் தங்களுடைய பூரணமின்மையை ஒப்புக்கொண்டு, நியாயப்பிரமாணத்துடன் நல்மனம் பொருந்திக்கொள்வதே, இவர்களுக்கு ஏற்ற வழியாகும்.

நமது கர்த்தருடைய ஆலோசனைக்குச் செவிச்சாய்த்தவர்கள் தங்களுடைய பூரணமின்மையை உணர்ந்தவர்களாக, உதவிக்காகக் கூக்குரலிட்டு, இயேசுவினுடைய பலியின் மூலம், அவரிடத்தில் மன்னிப்பையும் கண்டடைந்துள்ளனர். இப்படியாக, மன்னிப்பைக் கண்டடைந்தவர்கள் விசுவாசத்தின் மூலமாகத் தேவனுடைய தயவிற்குள்ளும், பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்திற்குள்ளும் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்கின்றோம் எனப் போலித்தனமாகக் கூறிக்கொண்ட பரிசேயர்களோ, நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளின்படியும் நடவாமல், மனம் வருந்தினவிதத்தில் தங்களுடைய பாவங்களை ஒப்புக்கொள்ளாமல், இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல், பெந்தெகொஸ்தே நாளிற்குரிய ஆசீர்வாதங்களை அடையாமற்போனார்கள். இயேசுவைப் புறக்கணித்த யூததேசம் முழுவதும், சிறைச்சாலைக்குள் இடறிப்போனார்கள், மேலும், இவர்கள்மேல் கோபம் முழுமையாகக் கடந்துவந்தது. மேலும் நியாயப்பிரமாணங்களிலும், தீர்க்கத்தரிசிகள் எழுதின அனைத்துக் காரியங்களும் நிறைவேறு மட்டும் இவர்கள் இவர்களுடைய சிறைச்சாலையிலிருந்து வெளியே வரப்போவதில்லை. “இவருடைய இரத்தம் எங்கள் மீதும், எங்களுடைய பிள்ளைகள்மீதும் வரக்கடவது” என்று இவர்கள் கூறினார்கள். மேலும், இவர்களுடைய பிரமாணமானது இவர்களைக் குற்றவாளிகளாக்கியது. இவர்கள் பாவம் மற்றும் மரணத்தின் நிலையிலிருந்து வெளியே வருவதற்கென, இவர்கள் ஆயிர வருஷ அரசாட்சியின் சிலாக்கியங்களைப் பயன்படுத்தி, நன்மை பெற்றுக்கொள்வதற்கு முழு ஆயிர வருஷ யுகமும் தேவைப்படும். ஆயிர வருஷத்தின் முடிவில் கர்த்தருடைய

கிருபையினால் இவர்கள், "ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத்தீர்ப்பார்கள்." பின்னர், விருப்பமும், கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் விடுவிக்கப்படுவார்கள். எந்த யூதன் தன்னுடைய பூரணமின்மையையும், இயலாமையும் ஒப்புக்கொண்டு, கிறிஸ்துவின் பலியிலுள்ள பங்கை ஏற்றுக்கொள்கின்றானோ, அவன் நியாயப்பிரமாணத்தின் கடமையினின்று விடுவிக்கப்பட்டவனாவான். ஆனால், வெகு சிலரே நியாயப்பிரமாணத்தை எதிராளி என்று ஒப்புக்கொண்டார்கள். (யோவான் 1:12).

## “கண்ணுக்குக் கண் - பல்லுக்குப் பல்”

"கண்ணுக்குக் கண்" என்ற கண்டிப்பான நீதியை, இஸ்ரயேலின் நியாயாதிபதிகள் பின்பற்றும்படிக்கு, இந்தத் தெய்வீகக் கொள்கையை, மோசேயின் நியாயப்பிரமாணம் அருளினது. இந்தப் பிரமாணத்தை ஜனங்கள் தங்களுக்குள் தனிப்பட்டவிதமாக உத்தரவின்றி செயல்படுத்தினதால், இதன்விளைவாகக் கடினமான இருதயமும், சிறிய தவறும் காணப்படுவதை விரும்பாத தன்மையும், அனுதாபமற்ற தன்மையும் உண்டானது. நம்முடைய கர்த்தருடைய போதனைகளானது, தவறை வெளிக்காட்டி அன்பு எனும் மிகச்சிறந்த வழியை எடுத்துக்காட்டியது. பரம பிதாவே நியாயப்பிரமாணத்தை ஏற்பாடுபண்ணியிருந்தாலும், அவர் இரக்கத்தையும் ஏற்படுத்தி, அதைப் பாவிகள் அழிந்துபோகாமல், இரட்சகருக்குக் காட்டும் கீழ்ப்படிதல் வாயிலாக நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாக, பிதா தம்முடைய குமாரனை, பாவிகளுக்கான மீட்பராக அனுப்பி, தம்முடைய குமாரனை உலகத்திற்குள் அனுப்பினதின்மூலம் வெளிப்படுத்தவும் செய்தார். பூரணமற்ற நிலையில், ஓட்டத்தின்போது பாடுகள் அனுபவிக்கின்ற உடன் அங்கங்கள் ஒருவருக்கொருவர் இரக்கத்துடனும், அனுதாபத்துடனும் இருப்பது சரியான காரியமாகும். "உங்களைப்போன்று பூரணமற்ற நிலையில் காணப்படும் உடன் மனுஷர்களிடத்தில் துல்லியமான/பிசகாத நீதியைச் சரிக்கட்ட வேண்டுமெனக் கண்ணுக்குக் கண் மற்றும் பல்லுக்குப் பல் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்களானால், உங்களுடைய இருதயங்களில் நீங்கள் சரியில்லாத ஆவியை ஊக்குவிக்கின்றவர்களாய் இருப்பீர்கள்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள்.

(1) ஒருவேளை உங்கள் சத்துரு உங்களை வலதுகன்னத்தில் அறைந்தால், சொல்லர்த்தமாக இல்லாமல், உங்கள் இருதயத்தில், உங்கள் மனதில், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடுங்கள். எந்தவிதத்திலும் பழிக்குப்பழி வாங்காதிருங்கள். நம்முடைய கர்த்தருடைய விசாரணையின்போது, அவர் மறுகன்னத்தையும் காட்டி, அடியென்று சொல்லாததிலிருந்து, மத்தேயு 5:39-ஆம் வசனத்தைச் சொல்லர்த்தமானவிதத்தில் நம்முடைய கர்த்தர் கூறாதது விளங்குகின்றது. கர்த்தர் அடையாளமான விதத்திலேயே மறுகன்னத்தைத் திருப்பினாரே ஒழிய சொல்லர்த்தமாக அல்ல.

(2) ஒரு மனுஷன் நம்மோடு வழக்காடி, சட்டப்பூர்வமாக நம்முடைய ஆஸ்தியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றிருந்தால், நாம் அம்மனுஷனுக்கு எதிராக உட்பகை கொள்ளக்கூடாது. மாறாக, நீதிமன்றம் கட்டளையிடுவதைக்காட்டிலும், அதிகமாகவே கொடுத்துவிட விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் உச்சநிலையில் பிரமாணத்தின்படி நடந்துக்கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

(3) ஒருவேளை முற்காலத்து வழக்கத்தின்படி அரசாங்க சேவைகளில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டு, ஒரு மைல் தூரம்வரை பாரம் சுமக்க வற்புறுத்தப்பட்டால், கர்த்தருடைய பின்னடியார்கள் துல்லியமாக ஒரு மைல் தூரம் அல்லது ஒரு மைலுக்கு அண்மைவரை அல்லாமல், தேவைப்படுமாயின் இன்னொரு மைல் தூரம் உதவியளித்துத் தங்களுடைய நல்ல மனப்பான்மையைக் காட்ட வேண்டும். அதாவது, முறுமுறுப்பு இல்லாமலும், சட்டப்பூர்வமாக இல்லாமலும், இவர்கள் தேவைப்படும் பட்சத்தில், இவர்கள் இன்னொரு மைல் தூரம்சென்று உதவியளித்துத் தங்களுடைய நல்ல மனப்பான்மையைக் காட்ட வேண்டும்.

(4) கர்த்தருடைய பின்னடியார்கள், பெருந்தன்மையை விருத்திச்செய்ய வேண்டும். பரம பிதா எப்போதும் கொடுப்பவராகவும், ஒருபோதும் திரும்பக் கேட்காதவராகவும்

இருப்பதுபோன்று, அவருடைய அனைத்துப் பிள்ளைகளும், இந்தக் குணத்தைப்பெற்றிருந்து, தேவையுடன் காணப்படும் எவருக்கும் கொடுத்து உதவுவதற்கு ஆயத்தமாகக் காணப்பட வேண்டும். தேவை என்று இங்குக் குறிப்பிடப்படுவது, ஊதாரித்தனமான செலவுகளுக்கான தேவைகள் அல்ல, இன்னுமாக வேண்டிக் கேட்பவரின் அனைத்து விருப்பங்களும் தேவைகள் என்று கருதப்படவும் முடியாது. தேவை என்ன என்பதைக் கண்டறிய கணிப்பும், பகுத்தறிவும் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், கொடுப்பதற்கும், உதவுவதற்குமான விருப்பம், இயேசுவின் ஒவ்வொரு பின்னடியாரின் இருதயத்திலும் விருத்திச் செய்யப்பட வேண்டும். கடன் கேட்கிறவர்களுக்கு இவர்கள் நன்மை செய்கிறவர்களாகவும், கொடுக்கின்றவர்களாகவும், பிரதிபலன் எதிர்ப்பார்க்காதவர்களாகவும் காணப்பட வேண்டும். மற்றவர்களைப்போன்று, கர்த்தருடைய ஜனங்கள், அதிகமான பணங்களைத் திரட்டிக் குவிப்பவர்கள் அல்ல. இவர்கள் தங்களுடைய பரம பிதாவைக் கனப்படுத்தி, பிரியப்படுத்தி, பரலோகத்தில் தங்களுடைய பொக்கிஷத்தைச் சேர்த்துவைத்து, இராஜ்யத்தில் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஏதுவான நிலையில் தங்களுடைய இருதயத்தைக் கொண்டு வருகின்றவர்களாக இருப்பார்கள்.

## “உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்”

“உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக” என்று பாரம்பரியம் கூறியுள்ளது. மாறாக, மாபெரும் போதகரோ, சத்துருக்களிடமிருந்து துன்பமும், பாதிப்பும் வருமாயினும், சத்துருக்கள் அன்புகூரப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றார். இப்படியான புதிய மற்றும் மேலான போதனைகளே, நமது மீட்பர், மற்றவர்களைக்காட்டிலும் வித்தியாசமாகப் பேசினார் என்று கூறப்பட்டதற்கான காரணமாகும்.

நண்பர்கள் மேலும், சத்துருக்கள் மேலும் அன்பின் இந்த ஆவியை விருத்திச்செய்வது என்பது, இயேசுவின் பின்னடியார்கள், தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய ஆவியை, குணலட்சணத்தைப் பெற்றுள்ளதைக் குறிக்கின்றதாய் இருக்கும். தேவன் பாவிகள் மீதும், பரிசுத்தவான்கள் மீதும் சூரியனை உதிக்கப் பண்ணுகின்றார், சூரிய ஒளியை அனுப்புகின்றார். மழையானது நீதிமான்கள் மீதும், அநீதிமான்கள் மீதும் பொழியப்படுகின்றது. தேவன் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களைத் தவிர, மற்றபடி உள்ள தம்முடைய சத்துருக்கள் அனைவரையும் நித்திய காலமாய்ச் சித்திரவதைப்படுத்தும் தேவ நோக்கம் தொடர்பான “இருண்ட யுகத்தின்” பாரம்பரியங்கள், நம்முடைய மனங்களுக்கு எவ்வளவு தீமை விளைவித்துள்ளது என்பதைக் கணக்குப்பார்ப்பது கடினமே. இம்மாதிரியான போதனைகள், அவருடைய வேதத்தில் காணப்படாததற்குத் தேவனுக்கு நன்றி! இம்மாதிரியான பாரம்பரிய போதனைகள், நம்முடைய மூதாதையர்களை மதங்களுக்கு எதிரான கொள்கையுடையவர்களாக மாற்றியுள்ளது.

அன்பு, மகிமையான பண்பாகும், அது தேவனுடைய பண்பாகும். ஆனால், திருப்பி அன்பு காட்டுபவர்களிடத்தில் மாத்திரமே அன்பு காட்டப்படுமாயின், அது விசேஷமான பலனைப் பெற்றுக்கொள்வதற்கு எப்படிப் பாத்திரமாகும்? அந்நிய தெய்வங்களை வணங்குகின்றவர்களும், சொல்லப்போனால், எல்லா மனுஷரும் இப்படியாகவேதான், அன்பு செய்கின்றார்கள் அல்லவா? மரியாதையை நம்மிடம் காட்டுபவர்களிடத்தில் மாத்திரம் நாம் மரியாதை காட்டுபவர்களாய் இருப்போமானால், எவ்விதத்தில் நாம் புறஜாதிகள் மற்றும் பாவிகளைக்காட்டிலும் மேலானவர்களாக இருக்கக்கூடும்?

கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய, அவருடைய பள்ளிக்கூடத்தின் மாணவர்கள், தங்களுடைய அன்பான சிருஷ்டிகராகிய உயர்ந்தவரை தங்களுக்கான மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் பிதாவினுடைய பூரணத்தை/சற்குணத்தையடைய முயற்சிக்க வேண்டும். இதை இவர்கள் தங்களுடைய இருதயத்தில் அடைந்து, முடிந்தமட்டும் தங்களுடைய விழுந்துப்போன மாம்சத்தினுடைய ஒவ்வொரு எண்ணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் செயல்படுத்த வேண்டும்.

R5021

# "ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும்"

## மத்தேயு 6:1-18

"மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை." மத்தேயு 6:1

இன்றைய பாடத்தில் ஆண்டவர், தர்மம் கொடுப்பதிலுள்ள சரியான விதம் மற்றும் சரியில்லாத விதம் குறித்துக் கூறுகின்றார். பிற்பாடு அவர் சரியான மற்றும் சரியில்லாத ஜெபம் குறித்தும், சரியான மற்றும் சரியில்லாத உபவாசம் குறித்தும் விளக்குகின்றார். இவைகள் அனைத்தையும் பேசுகையில் அவர் மாய்மாலத்தையும், நாடகமிட்டுக் காட்டுவதையும் குற்றப்படுத்திப் பேசினார். பரமப் பிதாவைப் பிரியப்படுத்துவதற்கும், அவருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்குமான விருப்பத்தினால் மாத்திரமே, கர்த்தருடைய பின்னடியார்கள் இயக்கப்படுகின்றவர்களாய் இருக்க வேண்டும். சில நேரங்களிலும், இடங்களிலும் மற்றவர்கள் சூழ்ந்திருக்கும்போதுங்கூட, அவர்களுடைய முன்னிலையில் தர்மம் வழங்குவது சரியான காரியமாக இருப்பதுண்டு. சில நேரங்களிலும், இடங்களிலும் மற்றவர்கள் முன்னிலையில் ஜெபம் பண்ணுவது சரியான காரியமாக கருதப்படுவதற்குங்கூட வாய்ப்புண்டு. சில சந்தர்ப்பங்களில் மற்றவர்கள் நாம் உபவாசம் இருப்பதை அறிய நேரிட்டாலுங்கூட அவர்களுடைய பழிதூற்றுதலுக்கு இடமிராது.

மாபெரும் போதகர் குறிப்பிடும் கருத்தானது, நம்மை இயக்கும்/தூண்டும் தூண்டுதலாகக் காணப்படுகின்றது. ஒருவேளை நாம் சுயநலமான நோக்கங்களினால்/தூண்டுதல்களினால் இயக்கப்படுகின்றவர்களாய்க் காணப்படுவோமானால், ஒருவேளை நாம் பாராட்டையோ, பூமிக்குரிய ஆதாயத்தையோ, பிரபலத்தையோ நாடுபவர்களாய்க் காணப்படுவோமானால், அதன் வாயிலாக நாம் தெய்வீக அங்கீகரிப்பையோ அல்லது ஆசீர்வாதத்தையோ பெற்றுக்கொள்ள முடியாது. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்." நாம் நன்மைகள் செய்கிறதோ அல்லது ஜெபம் பண்ணுகிறதோ அல்லது உபவாசம் பண்ணுகிறதோ மற்றவர்களால் அறியப்படலாம். ஆனால், மற்றவர்களால் அறியப்பட வேண்டும் என்ற விதத்தில் நாம் நன்மைகளை, அல்லது நம்முடைய ஜெபங்களை, உபவாசங்களைச் செய்கின்றவர்களாய்க் காணப்படக்கூடாது. இப்படிப்பட்டவர்களுக்கு (மற்றவர்கள் அறிய வேண்டும் என்று செய்பவர்களுக்கு) "தங்களுக்கான பலனை அடைந்து தீர்ந்தார்கள்" என்று கர்த்தர் கூறுகின்றார். இவர்கள் நாடின விளம்பர பிரபலத்தைத் தவிர வேறெதையும் அடைவதில்லை.

### "ஜெபம் எனும் சிலாக்கியம்"

ஜெபம் ஒரு சிலாக்கியமாகும். ஜெபம் பண்ணும்படி, இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளைக்கொடுக்கவில்லை. ஜெபம் பண்ணுவது எப்படி என்று அவர்கள் வேண்டிக்கொள்ளாதது வரையிலும், ஜெபம் பண்ணுவதற்கான மாதிரியையும் அவர்களுக்குக் கர்த்தர் அருளவில்லை. "வார்த்தைகளினால் உச்சரிக்கப்படுகின்ற அல்லது உச்சரிக்கப்படாத ஆத்துமாவின் உண்மையான வாஞ்சையே ஜெபமாகும்." பரலோகக் கிருபையின் சிங்காசனத்தை அணுகுவதற்குரிய சிலாக்கியத்தை நாம் உணர்ந்துக்கொள்வதற்கு முன்னதாக, நமக்குத் தெய்வீகக் கிருபை மற்றும் உதவி, தேவையாய்யுள்ளது என்பதை நாம் முதலாவது உணர்ந்துக்கொண்டவர்களாய் காணப்பட வேண்டும். ஜீவியத்தின் போராட்டங்கள், துக்கங்கள், பரீட்சைகள், சோதனைகளானது, தேவனுடைய பிள்ளைகளை அடிக்கடி ஜெபம்பண்ணத் தூண்டுகின்றது. தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய வேதனையான சூழ்நிலைகளில் மாத்திரமல்லாமல், தங்களுடைய சந்தோஷமான சூழ்நிலைகளிலும் கூட நன்றி செலுத்துவதற்கும், துதி ஏறெடுப்பதற்கும், தொழுது கொள்வதற்கும் கிருபையின் சிங்காசனத்திற்குச் செல்ல விரும்புவது என்பது உயர்தரமான கிறிஸ்தவ வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது.

உலகத்தார் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கர்த்தர் கூறாமல், தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரமே . . . "நீங்கள் ஜெபம் பண்ணும்போது" என்று கூறினதைக் கவனிக்க வேண்டும். புறஜாதிகள், மனுக்குலத்தின் உலகம், பொதுவாக கிருபையின் சிங்காசனத்தை அணுகுவதற்கான வாய்ப்பில்லாமல் இருக்கின்றார்கள். தேவனுடன் உடன்படிக்கை உறவினைக் கொண்டிருந்தவர்கள் (யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள்) மாத்திரமே, தங்களுடைய விண்ணப்பங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற தெய்வீக வாக்குறுதியைப் பெற்றிருந்தார்கள். இது எல்லோரையும் ஜெபம் செய்யும்படிக்கு ஊக்குவிக்கும் பழக்கத்தையுடைய சிலருக்கு, ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். ஜெபத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள கொள்கையை, நாம் சுருக்கமாக சூழ்நிலையைப் பார்ப்பதின் மூலமே அறிந்துவிடலாம். அதைப்பற்றி இப்பொழுது பார்க்கலாம். ஆதாமின் சந்ததியாராகிய உலகத்தார், பொல்லாத கிரியைகளின் நிமித்தம், தேவனிடமிருந்து தூர விலக்கப்பட்டார்கள். ஆதாம், தேவனுடன் ஓர் உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்டார். மேலும், இந்த உடன்படிக்கையின் காரணமாக ஆதாம், தேவனுடைய குமாரனுக்குரிய சிலாக்கியங்களை அனுபவித்தார். இந்தச் சிலாக்கியங்களானது, உறவையும், ஐக்கியத்தையும், ஜெபத்தையும், தெய்வீக மேற்பார்வை மற்றும் பராமரிப்பையும் உள்ளடக்கினது. ஆனால், ஆதாமினுடைய கீழ்ப்படியாமை அந்த உடன்படிக்கையை முறித்துப்போட்டு, அந்த உடன்படிக்கை உறவையும், அதன் அனைத்துச் சிலாக்கியங்களையும் அழித்துப்போட்டது (ஓசியா 6:7). தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள்ளாக மீண்டுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே இன்று ஜெபமாகிய சிலாக்கியத்தை அனுபவிக்கின்றார்கள். இப்படியாகவே மாம்சீக இஸ்ரயேலர்கள், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். ஆகவே, எருசலேமிலுள்ள ஆலயம், ஜெபவீடு என்று அழைக்கப்பட்டது. இது விசேஷித்த விதமாக யூத தேசத்தாருக்குக் காணப்பட்டது. ஆனால், மற்ற அனைத்துத் தேசத்தாருக்கும் யூதமார்க்கத்தமைந்தவர்களாகுவதற்கான (யூத மதத்திற்கு மாறும்) சிலாக்கியம் இருந்தது. மேலும், இப்படி யூதமார்க்கத்தமைவதன் மூலமாக, ஜெபத்தின் சிலாக்கியத்தையும் உள்ளடக்கியுள்ள யூதர்களுக்கான அனைத்துச் சிலாக்கியங்களுக்குள் இவர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் வாய்ப்பு இருந்தது.

நமது கர்த்தருடைய சீஷர்களாக, அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பின்னடியார்களாக வந்தவர்களை, பாவங்களுக்கான தம்முடைய மேலான பலியின் மூலம் இவர்கள், ஜெபத்தினுடைய மேலான சிலாக்கியங்களை அடையத்தக்கதாக, இவர்களைப் பரிசுத்தம்பண்ணி, பாத்திரவான்களாக ஆக்கினார். இவர்கள் பெந்தெகொஸ்தே நாள் முதல் தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்பட்டனர், மேலும் இவர்கள் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் ஜெநிப்பித்தலையும் அனுபவித்தார்கள். முதலில் யூத விசுவாசிகள் மாத்திரமே காணப்பட்டார்கள். ஆனால், ஏற்றவேளையில் யூதர்களுக்கும், புறஜாதிகளுக்குமிடையே இருந்த சுவர் உடைக்கப்பட்டது. பின்னர், கொர்நேலியு முதல், அனைத்துப் புறஜாதி விசுவாசிகளும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஜெபத்தின் அனைத்துச் சிலாக்கியங்களும் அருளப்பெற்றார்கள் (அப்போஸ்தலர் 10).

இந்தப் புறஜாதிகள், மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமாக தேவனுடன் ஓர் உறவிற்குள் வராமல், பலியின் உடன்படிக்கையின் மூலமாகவே வந்தார்கள். இந்த உடன்படிக்கையின் கீழ்தான் இவர்கள் கிறிஸ்துவுடன் உடன் பலிச்செலுத்தும்படிக்கு அழைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" (சங்கீதம் 50:5). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இந்தப் பலியின் உடன்படிக்கையை அவரோடு பண்ணும் புறஜாதிகள் மாத்திரமே இந்த யுகத்தில் தேவனுடைய புத்திரர்களாகி, ஜெபம் எனும் சிலாக்கியத்தை உள்ளடக்கியுள்ள புத்திரத்துவத்திற்கான சிலாக்கியங்களை அனுபவிக்கின்றன்றவர்கள் ஆகின்றார்கள். தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் வராதவர்களை ஜெபம் பண்ணும்படி அழைக்கும் பழக்கமானது, வேதவாக்கியங்களின்படியான காரியமும் இல்லை, சரியானதும் அல்ல. தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக் கேட்பதில்லை (யோவான் 9:31). கிறிஸ்து மூலம் தேவனிடத்திற்கு வருபவர்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர். ஏனெனில், இயேசு அவர்களுக்குப் பரிந்து பேசுபவராக இருக்கின்றார். ஆகவே, தங்களுடைய சொந்த நாமங்களில்/நாமங்களின் மூலம் தேவனை அணுகுபவர்கள் அதாவது, பரிந்து பேசுபவராகிய கர்த்தரையும், சீஷத்துவத்திற்கான அவருடைய நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் பிதாவை அணுகுபவர்களுக்கு, பிதாவினிடத்தில் எவ்விதமான உறவும் இல்லை.

மேலும், அவர்களுடைய ஜெபங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பது தெளிவாகின்றது.

ஆகவே, நம்முடைய நண்பர்களையும், அயலார்களையும், தேவனிடத்தில் ஜெபம் ஏறெடுப்பதற்கும், அவர்கள் ஏறெடுக்கும் விண்ணப்பங்கள் நிறைவேறும் என நம்பிக்கைக்கொள்வதற்கும் நாம் புத்திமதிச் சொல்வதற்குப்பதிலாக, வேதவாக்கியங்களுக்கு இசைவாக அவர்கள் பாவங்களுக்காக மனம் வருந்தவும், தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளவும், இயேசுவின் அடிச்சுவடுளைப் பின்தொடரும் பின்னடியார்களாக ஆகுவதற்குத் தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணவும் நாம் ஆவிக்குரிய ஆலோசனை வழங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இப்படியாகச் செய்த பின்னர் அவர்கள் தேவனுடைய புத்திரர்களாகி, தற்காலத்திலும், மகிமையான எதிர்க்காலத்திலும், புத்திரத்துவத்திற்குரிய அனைத்துச் சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்வார்கள் என்றும் ஆவிக்குரிய ஆலோசனை வழங்க வேண்டும்.

## “அந்நிய தேவர்களை வணங்குபவர்களின் வீணான அலப்பல் வார்த்தைகள்”

உலகத்தை விட்டுவிட்டு, கிறிஸ்து மூலம் தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் வராத அனைவரும் புறஜாதிகளும், அந்நிய தேவர்களை வணங்குகின்றவர்களாக இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட அந்நியர்கள் தேவனுடைய கிருபை பெற்றுக்கொள்வதற்கான ஒரே வழியை, வாசலைப் புரிந்துக்கொள்ளாததினால், அநேக வார்த்தைகளைப் பயன்படுத்துவதினாலும், தங்கள் ஜெபங்களைத் திரும்பத் திரும்ப கூறுவதினாலும், தங்கள் ஜெபங்கள் கேட்கப்படும் என்று எண்ணிக்கொள்கின்றனர். சிலர் ஜெப சக்கரங்களைப் (prayer wheels - China) பயன்படுத்துகின்றனர். இன்னும் சிலர் ஜெபமாலைகளைப் பயன்படுத்துகின்றனர். வேறு சிலர் குறிப்பிட்ட வார்த்தைகளைப் பல நூறுமுறை கூறி ஜெபிக்கின்றனர்.

இயேசுவின் பின்னடியார்களாகாத எவர்களுடைய ஜெபமும் கேட்கப்பட மாட்டாது. நீண்ட ஜெபம் ஏறெடுப்பதினால், தங்களுடைய ஜெபங்கள் பிதாவினால் அங்கீகரிக்கப்படும் என்று இயேசுவின் பின்னடியார்கள் எண்ணிக்கொள்ள வேண்டாம் எனப் புத்திமதி இயேசு கூறுகின்றார். இவர்கள் நீண்ட நேரம் ஜெபம் ஏறெடுக்க வேண்டியதில்லை. ஏனெனில், “நீங்கள் கேட்பதற்கு முன்னதாகவே உங்களுக்கு என்ன தேவை என்பதை உங்கள் பிதா அறிந்திருந்கின்றார்” என இயேசு கூறியுள்ளார். இப்படிப் பிதா அறிவார் என்றால், பின்னே நாம் ஏன் கேட்க வேண்டும்? என்று கேள்விகள் எழலாம். நம்முடைய விசுவாசத்தைத் தூண்டிவிடுவதற்கும், நமக்கு அதிகமான ஆசீர்வாதங்களை அடிக்கடி கொடுப்பதற்கும்தான் இந்த ஜெபம் எனும் தெய்வீக ஏற்பாடு ஒழுங்குப்பண்ணப்பட்டிருப்பதற்கான நோக்கமாகும். தம்மை மிகவும் அன்பு செய்யும் அருமையான பிள்ளைகளாக தேவன் நம்மைக் கையாண்டு, நமக்கு மிகவும் உதவியாக இருக்கும் ஜீவியத்தின் அனுபவங்களினால் நம்மைப் பயிற்றுவிக்கும் விதமாகவும் வழிநடத்துகின்றார். இயேசுவுக்கு நீண்ட ஜெபங்கள் ஏறெடுக்க வேண்டியிருந்தபோதெல்லாம், அதை அவர் வெளியரங்கமாக, பொதுவிடங்களில் செய்யவில்லை. அவர் மலைக்குப் போய் ஜெபம் பண்ணினார். இப்படியே அவருடைய பின்னடியார்களுடைய விஷயத்திலும் காணப்பட வேண்டும். கர்த்தருடைய ஜனங்களின் கூடுகையின் மத்தியில் பொதுவாக ஜெபம் ஏறெடுக்க வேண்டியது இருந்தாலுங்கூட, இது அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தாலுங்கூட, நாம் பிதாவுடன் தனிமையில் உறவு வைத்தக்கொள்ள பிரதானமாக நாட வேண்டும்.

## “முறையான வார்த்தைகள்”

இயேசு தம்முடைய சீஷர்களுடைய விண்ணப்பத்திற்கு இணங்கி சரியான ஜெபத்திற்கான ஒரு மாதிரியை அவர்களுக்குக்கொடுத்தார். அந்த மாதிரி ஜெபத்தில் நாம் அதன் சுருக்கத்தையும், அதன் எளிமையையும், அதன் வழிக்காட்டுதலையும், அதன் ஒழுங்கையும் காண முடிகின்றது.

(1) பிதாவிடம் பிள்ளைகள்போன்று, நாம் துதி ஏறெடுப்பதுடன் ஜெபமானது ஆரம்பமாகுகின்றது. "நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (மத்தேயு 6:9). தேவனுடைய நாமம் என்பது அவருடைய குணலட்சணத்திற்கும், அவருடைய இராஜ்யத்திற்கும், அவருடைய தனித்துவத்திற்கும் அடையாளமாக இருக்கின்றது. முதலாவதாக, நம்முடைய மாபெரும் சிருஷ்டிகருக்கு கனத்தையும், மதிப்பையும், மகத்துவத்தையும், மகிமையையும் செலுத்த வேண்டும். தேவன் நியமித்துள்ள வழியில், பரலோகத்தில் இருக்கும் அவரை அழைப்பதில் நாம் பிரியப்பட வேண்டும்.

(2) வரிசையில் அடுத்ததாக, நாம் தெய்வீக அதிகாரம் மற்றும் ஆளுகையை நம்புவதாக ஒப்புக்கொள்ள வேண்டும். அதாவது, இப்படிச் சொல்வது என்பது சந்தோஷமோ, துக்கமோ, இன்பமோ, வலியோ, ஜீவனோ, மரணமோ, எதுவாக இருப்பினும், நம்முடைய இருதயங்கள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டு, ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதைக் குறிக்கின்றது. இன்னுமாக, இப்படிச் சொல்வது என்பது இப்பொழுது பரலோகத்தில் செயல்பட்டு வருவதுபோன்று, இறுதியில் தெய்வீகச் சித்தமானது பூமியில் முற்றும் முழுமையாகச் செய்யப்படும் என்ற தெய்வீக வாக்குத்தத்தம் மற்றும் வல்லமை மீது நாம் நமது நம்பிக்கையைத் தொடர்ந்து வெளிப்படுத்துவதையும் குறிக்கின்றது. "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு 6:10). மேலும், இதை ஜெபத்தில் கூறுவதின் மூலம் நாம் வரவிருக்கின்ற மேசியாவின் இராஜ்யத்தை ஒப்புக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றோம். மேலும், அந்த இராஜ்யத்துடன் தொடர்புடைய நம்முடைய சொந்த நம்பிக்கைகளையும் ஒப்புக்கொள்கின்றவர்களாய் இருக்கின்றோம். அதாவது, நாம் இறுதிவரை உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுவோமாகில், நாம் கர்த்தருடன் அவருடைய மகிமையான சிங்காசனத்தில் பங்கடைவோம் என்றும், தெய்வீக வல்லமை மற்றும் இரக்கத்தின் ஆசீர்வாதங்களை மனுக்குலத்திற்கு வழங்கி, விருப்பத்துடனும், கீழ்ப்படிதலுடனும் காணப்படும் மனுக்குலத்தைச் சீர்த்திருத்துவதில் பங்கடைவோம் என்றுமுள்ள நம்முடைய நம்பிக்கைகளையும் ஒப்புக்கொள்கின்றவர்களாய் இருப்போம்.

(3) அடுத்தது நம்முடைய அன்றாட தேவைகள், நம்முடைய ஆகாரம் பற்றின விண்ணப்பமாகும். "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத்தேயு 6:11). எவ்வளவு எளிமையான வார்த்தைகள்! தேவன் நம்மையும், நம்முடைய தேவைகளையும் மறக்க மாட்டார் என்றவிதத்தில் நமக்கு அப்பமும், தண்ணீரும் தருவார் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். நாம் விண்ணப்பிக்கையில், நாம் கர்த்தர்மேல் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்; அதாவது, கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குக் கொண்டுள்ள வல்லமை மற்றும் விருப்பத்தின் விஷயத்தில் எவ்விதமான சந்தேகமும் இல்லாமல், அவர்மேல் நம்பிக்கையுடன் காத்துக்கொண்டிருக்கின்றோம் என்று மாத்திரமே தெரியப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றோம். ஆஸ்தி, ஐசுவரியம் போன்றவைகளைத் தேவன் வாக்களிக்கவுமில்லை, நாமும் அவைகளுக்காக ஜெபம் பண்ணக்கூடாது. நல்ல உயர்தரமான ஆகாரம், சொகுசுகளையும் நாம் குறிப்பிட்டு ஜெபத்தில் கேட்கக்கூடாது. நமக்குச் சிறந்தது என ஜீவியத்தின் தேவைகளினுடைய விஷயத்தில், தந்தையே நீர் காண்கிறது எதுவோ, அதையே எங்களுக்கு அனுதினம் அருளியருளும் என்றவிதத்திலேயே நம்முடைய ஜெபம் காணப்பட வேண்டும். மேலும், ஒருவேளை இந்தத் தேவைகளைத் தெய்வீக ஏற்பாடு/வழிநடத்துதல் நமக்கு சந்திக்கவில்லையெனில், தேவன் கவனம் செலுத்தாதால் அல்லது அவருக்கு வல்லமை இராததினால் நம் தேவை சந்திக்கப்படவில்லை என்று நாம் எண்ணாமல், இப்படிச்செய்வதே நமக்குச் சிறந்தது எனத் தெய்வீக ஞானம் கண்டதினாலேயாகும் என்று நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும்.

(4) "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12). இவ்வார்த்தைகளில் இரக்கம் காட்டுபவர்கள் இரக்கம் பெற்றுக்கொள்வார்கள் என்ற கர்த்தருடைய போதனையும், மன்னிப்பு வழங்குகிறவர்கள் மன்னிக்கப்படுவார்கள் என்ற கர்த்தருடைய போதனையும் வெளிப்படுகின்றது. இங்கு ஆதிப்பாவம் பற்றிப் பேசப்படவில்லை. இரத்தத்தின் கீழ்க் காணப்படுபவர்களுக்கும், அதாவது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கும், அவருடன்

உடன்படிக்கை உறவிற்குள் வந்தவர்களுக்கும் இந்த ஆதிப்பாவம் மூடப்பட்டு உள்ளது. இவ்வசனத்தில் குறிப்பிடப்படும் பாவமானது, நம்முடைய அன்றாட குறைவுகள், பெலவீனங்கள், தவறுகள், தெய்வீகப் பிரமணாத்திற்கு எதிரான மீறுதல்கள் ஆகும். பிதா நம்மை மன்னிக்கிற விஷயத்தை, நாமும் மற்றவருடைய விஷயத்தில் செய்யவேண்டும் என்ற விஷயத்தை நாம் ஆழமாக உணர்ந்துக்கொண்டு, ஜெபம் பண்ணும்போதுதான் நாம் மன்னிக்கப்படுவோம் என்றவிதத்தில் தெய்வீக ஏற்பாடு காணப்படுகின்றது.

(5) “எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் (சோதனையில் கைவிட்டுவிடாமல்) தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்” (மத்தேயு 6:13). நம்முடைய சொந்த பெலவீனங்களையும், பூரணமின்மையையும் நாம் உணர்கின்றோம். ஆகவே, தெய்வீக வழிநடத்துதலின்படி பரீட்சைகள் மற்றும் சோதனைகளுக்குள் வழிநடத்தப்பட வேண்டும் என்பதை அறிந்துள்ள நாம், நம்முடைய சொந்த பலத்தினால், சோதனையில் போராடுவதற்கு விடப்படாமல், அவருடைய கிருபை நமக்கு போதுமானதாய் இருக்கின்றபடியால், அக்கிருபையை நமக்கு அருளும்படிக்கு நாம் ஜெபம்பண்ண வேண்டும்.

(6) பொல்லாங்கன் ஒருவன் இருக்கின்றான் என்றும், அவனுக்கு ஜனங்கள் மத்தியில் மிகுந்த வல்லமையும், செல்வாக்கும் இருக்கின்றது என்றும், அவன் இந்த யுகத்தில் தேவனாய் இருக்கின்றான் என்றும், ஆகாயத்து அதிகாரப் பிரபுவாய் இருக்கின்றான் என்றும் வேதம் நமக்கு நிச்சயமளிக்கின்றது. ஆகவே, சாத்தானின் தந்திரங்களை எதிர்த்துப்போராடும் விஷயத்தில் நம்முடைய சொந்தபலத்தினால் போராடுவதற்கு நாம் கைவிட்டுவிடப்பட வேண்டாம் என்று கர்த்தரிடத்தில் விண்ணப்பிப்பது எத்துணைச் சரியானக் காரியமாக உள்ளது!

“இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்” என்ற வார்த்தைகள், பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் இல்லை. ஆகையால், Revised Version மொழியாக்கத்தில் இவ்வார்த்தைகள் தவிர்க்கப்பட்டுள்ளது. தற்காலத்தின் இராஜ்யமோ, ஆளுகையோ தேவனுடையதல்ல. அவருடைய இராஜ்யத்தையும், வல்லமையையும், மகிமையையும் தற்காலத்தில் பார்க்க முடியவில்லை. சாத்தானுடைய சாம்ராஜ்யம் தகர்க்கப்படுவதற்கும், எதிராளியானவன் ஆயிரவருஷம் அளவும் கட்டப்படுவதற்கும், மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட நாம் காத்திருக்கின்றோம். அப்போதுதான் தெய்வீக இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் காணப்படும்.

---

**R4566**

# “தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள்”
## மத்தேயு 6:19-34

மாபெரும் போதகர் ஊதாரித்தனமான செலவு குறித்துப் போதிக்கவில்லை. அவர் பிதாவுக்கு அடுத்த வேலைகளில் சுறுசுறுப்புடன் காணப்பட்டார். மேலும், தம்முடைய பின்னடியார்களுக்கு, “அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியிலே அனலாயிருங்கள். கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்” என்ற காரியத்தையே போதிக்கின்றவராகக் காணப்பட்டார் (ரோமர் 12:11). இந்தப் பாடத்தில், பூமிக்குரிய பொக்கிஷங்களைச் சுயநலமாய்ச் சேர்க்கும் விதத்தில் நமது முயற்சிகள் காணப்படக்கூடாது என்று கர்த்தர் போதிக்கின்றார். பரலோகத்திலேயே நாம் பொக்கிஷங்களைச் சேர்க்கின்றவர்களாகக் காணப்பட வேண்டும். பூச்சியும், துருவும், திருடனும் பூமிக்குரிய பொக்கிஷங்களைக் கெடுக்கும் என்ற வார்த்தைகளைக் கர்த்தர் பயன்படுத்தியுள்ளபோதிலும், இவ்வார்த்தைகளில் விளங்கும் கொள்கை வெளிப்படையாக இருந்தாலும் கூட, இங்குள்ள அவருடைய போதனையை நாம் இன்னும் மேம்பட்ட கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றவர்களாய் இருக்கின்றோம். சில குறிப்பிட்ட சூழ்நிலைகள் தவிர மற்றபடி முன்கூட்டியே உடைகளையோ அல்லது உணவுகளையோ சேர்த்து வைப்பது என்பது அறிவீனமான காரியம் என்று அனைவரும்

ஒத்துக்கொள்வார்கள். ஆனால், பொன் சேர்க்கப்படலாம் அல்லது பணம் வங்கியில் சேர்த்து வைக்கப்படலாம், இருக்கும் வயல்களோடு கூட இன்னும் அதிகம் வயல்கள் வாங்கி சேர்க்கப்படலாம், அதிகம் வீடுகள் சேர்க்கப்படலாம். இவைகளெல்லாம் நாம் சேர்த்துவைத்தாலும் இவைகளும் அழியக்கூடியவைகளே.

வங்கி கணக்கைப் பூச்சியால் தொடமுடியாது என்றாலும், பொன்னைத் துரு சேதப்படுத்த முடியாது என்றாலும், சொத்துகளின் உரிமையைத் திருடனால் திருட முடியாது என்றாலும், இவைகள் நிரந்தரமானவைகள் அல்ல. நாம் உயிரோடு இருக்கும்போதும், இல்லாவிட்டாலுங்கூட, எல்லாவிதமான பூமிக்குரிய பொக்கிஷங்களும் அதற்குரிய மதிப்பை இழந்துவிடலாம். நாம் மரித்த பிற்பாடு நமக்கு அது மதிப்பு இழந்ததாகவே காணப்படும். தற்கால சூழ்நிலைகளில் கீழுள்ள பூமிக்குரிய பொக்கிஷங்கள் எவ்வளவுதான் முன்யோசனையுள்ள ஏற்பாடாக இருப்பினும், அவைகளை மரணமும், அழியும் தன்மையும் ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடுகின்றது. "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்" (யோபு 1:21). மரணத்திற்குப் பின்பு ஓர் எதிர்கால வாழ்க்கையைத் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், அது உயிர்த்தெழுதலின் காலைபொழுதில் கிடைக்கும் என்றும் புத்திசாலித்தனமான ஜனங்கள் பொதுவாக ஒத்துக்கொண்டுள்ளனர். நாம் நம்முடைய தற்போதைய வாழ்க்கையைப் பயன்படுத்துகிறதின் அடிப்படையிலேயே, அப்போதுள்ள நமக்கான ஆசீர்வாதம் இருக்கும் என வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. இதையே நமது மாபெரும் போதகர் இன்றைய நமது பாடத்தில் வலியுறுத்துகின்றார். இதிலுள்ள நியாயத்தை அனைத்து அறிவுடைய மனங்களும் ஒப்புக்கொள்கின்றன.

சிலரால் கூறப்படும் எல்லை மீறின கண்ணோட்டத்தை நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஜனங்கள் தங்கள் முதிர்வயதில் பிறரின் தர்ம உதவிகளைச் சார்ந்து இருக்காமல் இருக்கத்தக்கதாக, தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான நியாயமான ஏற்பாடுகளைக் கூடச் செய்ய வேண்டாம் என்று ஆண்டவர் போதித்ததாக நாம் எண்ணிவிட வேண்டாம். பெற்றோர்கள் தங்கள் குடும்பத்தில் தங்களைச் சார்ந்துள்ள அங்கங்களுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகள் குறித்து அலட்சியமாக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் ஆண்டவர் பேசினதாகவும் நாம் எண்ணிவிட வேண்டாம். "ஒருவன் தன் சொந்த ஜனங்களை விசாரியாமற்போனால், அவன் அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்" என்று தெளிவாக வேதாகமம் போதிக்கின்றது. பரிசுத்தவானாகிய பவுல், "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" என்று கூறியிருக்கின்ற பிரகாரம் நம்முடைய சொந்த எதிர்கால தேவைகளுக்கு அல்லது தேவைகளில் காணப்படும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவத்தக்கதாகப் பணத்தைச் சேமித்து வைப்பது சரியான விஷயமாகும் (1 கொரிந்தியர் 16:2 ). தேவனுடைய ஜனங்கள் சிக்கனமாய்ச் செலவு செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். கடன் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். தங்களிடத்தில் எதிர்கால தேவைக்கென, கொஞ்சம் பணம் சேமித்து வைத்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால், தேவனுடைய ஜனங்களுக்குப் பூமிக்குரியவைகள், அவர்களின் ஆத்துமாக்களுக்குப் பொக்கிஷங்களாக இருக்கக்கூடாது. மாறாக, அது அவர்களின் வேலைக்காரர்களாகவும், அவர்களுடைய வசதிகளுக்காக, எப்பொழுதும் பயன்பட ஆயத்தமாகவும், தேவைகளுக்கு இலவசமாகவும், முழுமையாகவும் பயன்பட ஆயத்தமாகவும் காணப்பட வேண்டும். இப்படியான நடத்தையைப் பின்பற்றுகிறவர்கள், அதிகமான பூமிக்குரிய ஆஸ்திகளைக் கொண்டிருப்பது அரிதான காரியமாகும். ஆஸ்திகளைப் பொக்கிஷமாக ஆக்கிக்கொண்டு, அவைகள்மேல் அளவுக்கு மீறின ஆசைகள் வைப்பவர்களே ஒன்றில் கருமிகளாக/பேராசைக் கொண்டவர்களாக அல்லது மிகவும் ஐசுவரியவான்களாகக் காணப்படுவார்கள். பரத்திற்குரிய காரியங்கள் மீது ஆசை வைப்பது என்பது, அதிகமான ஆஸ்திகள் குவிப்பதைத் தடைப்பண்ணத்தக்கதாக, உலக ஐசுவரியங்களிடத்தில், பற்று இல்லாமல் கையாளும் தன்மையைக் குறிக்கின்றது.

யாரொருவன் தனது ஆசையை, பூமிக்குரிய பொக்கிஷங்கள் மீது வைக்கின்றானோ, அவன் கஞ்சத்தனமானவனாகவும், சுயநலமுள்ளவனாகவும், உலகப்பிரகாரமாய் நடந்து

கொள்பவனாகவும் ஆகிவிடுவான் என்பதே நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளாகும். ஆனால், ஒருவன் பரத்திற்குரிய காரியங்கள் மீது தனது ஆசையை வைப்பானானால், அவன் தாராளமுள்ளவனாகவும், பாக்கியவானாகவும், ஆவிக்குரியவனாகவும், பரத்திற்குரியவனாகவும் ஆகிவிடுவான். நமக்கு இரண்டு கண்கள் உள்ளன. மேலும், ஒருவேளை அவைகள் ஒன்றுக்கொன்று பொருத்தமாகச் செயல்படவில்லையெனில், நம்முடைய பார்வைத் தெளிவற்றதாக/உருவம் வேறுபட்டதாக இருக்கும். அனைத்தையும் நாம் சரியாகப் பார்க்கத்தக்கதாக இந்தக் கண் பிரச்சனையை நாம் சரிச் செய்துகொள்ள நாடுவோம். இப்படியே புரிந்துக்கொள்ளுதலின் கண்களினுடைய விஷயத்திலும் உள்ளது. நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுக்கு, தற்கால மற்றும் எதிர்க்கால தோற்றங்கள் தெரியும். அதாவது, பூமிக்குரிய மற்றும் பரத்திற்குரிய பார்வைகள் உண்டு. அவையவைகளுக்குரிய வெளிச்சத்தில் இந்த இரண்டு பார்வைகளையும் நாம் சரியாய்ப் பொருத்திக்கொள்வது நல்லது. அதாவது, எதிர்க்கால வாழ்க்கையை, தற்கால வாழ்க்கையுடன் ஒப்பிட்டு, எதிர்கால வாழ்க்கையினுடைய மாபெரும் மதிப்பை நாம் உணர்ந்துக்கொள்ளத்தக்கதாகவும், இதன்விளைவாக நம் இருதயத்தின் ஆசைகள் பரத்திற்குரியவைகள்மேல் வைத்துக்கொள்வதற்கு உதவியாக வழிநடத்தப்படத்தக்கதாகவும் மற்றும் ஜீவியத்தின் விஷயங்களை ஞானமாய்ச் சரியான நிலையில் வைத்துக்கொள்ளத்தக்கதாகவும், நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுடைய இரண்டு பார்வைகளையும் சரியாய்ப் பொருத்திக்கொள்வது நல்லது.

நம்முடைய இயற்கையான சரீரத்தின் கண்கள் குருடான அல்லது இருண்டுபோன நிலைக்குச் எப்படிச் சென்றுவிடுகின்றதோ, அப்படியே நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களுடைய விஷயங்களிலும் நடக்கின்றது. ஒருமுறை நம்முடைய கண்கள் பிரகாசிக்கப்பட்டு, தெய்வீக வாக்குத்தத்தங்களை நாம் ருசி பார்த்தப் பிற்பாடு, குருட்டுத்தன்மை நமக்கு ஏற்படுமாயின், நமது நிலைமை பரிதாபத்திற்குரியதாகக் காணப்படும். இப்படியான இருள் எவ்வளவு அதிகமானதாய் இருக்கும்!

இன்னும் ஒரு படிப்பினை இங்கு நமக்கு உள்ளது. உலகத்திற்கு ஊழியம் செய்வது, தற்காலத்தில் நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரக்கூடியதாக இருப்பினும், நம்முடைய எதிர்க்கால நன்மைகளைப் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், தேவனுக்கு ஊழியம் புரிவது என்பது எதிர்க்காலத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தேவனுக்கு கீழ்ப்படியத்தக்கதாக, பாவத்தினால் உண்டாகும் சந்தோஷங்களை நாம் இழந்துபோக வேண்டியதாய் இருப்பினும், தற்காலத்திலுள்ள சில நியாயமான உலக ஆசீர்வாதங்களை இழக்க வேண்டியதாய் இருப்பினும், தேவனுக்கும், நீதிக்கும் உண்மையான ஊழியர்களாக இருப்பவர்களாகிய நமக்கு தற்போதுங்கூட ஓர் ஆசிர்வாதம் உள்ளது. இதனோடுகூட மகிமையான எதிர்க்காலத்தின் ஆசிர்வாதங்கள் கூட இருக்கின்றன. ஆகவே, இரண்டு எஜமான்களில், எவர் பக்கம் நாம் நிற்க வேண்டும் என்பதை நாம் தெரிந்துக்கொள்வது அவசியமாய் உள்ளது. நம்மால் இரண்டு எஜமான்களுக்கும் ஊழியம் செய்யமுடியாது. இரண்டு எஜமான்களிடமிருந்தும் நம்மால் பலன் பெற்றுக்கொள்ள முடியாது. "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்” என்று யோசுவாவைப் போன்று நாமும் தீர்மானிப்போமாக (யோசுவா 24:15).

நாம் நம்முடைய அனைத்துக் காரியங்களையும் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவும், நம்மால் முடிந்தமட்டும் தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் காணப்படுவோம் என முழுமையாய்த் தீர்மானிக்கவும், ஆண்டவர் நமக்கு வலியுறுத்துகின்றார். பின்னர், நாம் இப்படியாகத் தேவனுடன் ஒரு விசேஷமான உறவிற்குள் வந்தபடியாலும், அவருடைய வாக்குத்தத்தங்களின் காரணத்தினாலும் தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்தின் மத்தியிலும், நம்மீது தெய்வீகப் பராமரிப்புக் காணப்படுவதை நாம் உணர்ந்துக்கொள்ளவும் ஆண்டவர் நமக்கு வலியுறுத்துகின்றார். தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய பூமிக்கடுத்த காரியங்களில் கவலைக்கொள்ளாமல், தங்கள் அனைத்துக் காரியங்களையும் நம்பிக்கையுடன் தங்களுடைய பரம பிதாவிடம் ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். தற்கால ஜீவியத்திற்குரிய உணவு மற்றும் வஸ்திரங்களைக்காட்டிலும் நமக்கான நித்திய ஜீவன் மிகவும் முக்கியத்துவம் உடையதாகும். நாம் ஞானத்துடன் காணப்பட்டால், தற்காலத்தின் எல்லா விஷயங்களையும் தியாகம்பண்ணி, எதிர்க்கால ஜீவியத்தை நாடுகின்றவர்களாய்க் காணப்படுவோம்.

நம்முடைய விஷயங்களில் நம்மைப் பராமரித்துக்கொள்வதற்கான நம்முடைய பரம பிதாவின் வல்லமை குறித்த விஷயத்தில், நாம் இயற்கையில் வெளிப்படும் அவருடைய வல்லமை, ஞானம் மற்றும் கிருபையையும் மற்றும் ஆகாயத்துப் பட்சிகளுக்கும், லீலி புஷ்பங்களுக்கும் அவர் பண்ணியுள்ள ஏற்பாடுகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்க வேண்டும். இவைகளின் தேவைகளையெல்லாம் பராமரிப்பதுபோன்று, நம்முடைய மேலான நன்மைக்கும் அவர் அருளுவதற்கும் சரிசமமான வல்லமை கொண்டுள்ளார் என்பதை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும். என்ன வந்தாலும், விசுவாசத்தில் அவரை உறுதியாய் நம்ப வேண்டும். தற்கால ஜீவியத்திலும், எதிர்க்கால ஜீவியத்திலுமுள்ள காரியங்களுக்கு நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கின்றவர்களாய் இருக்கவேண்டும். நம்முடைய தற்கால அனுபவங்களையும், நமக்குரிய எதிர்க்கால பலன்களையும் தேவனுடைய ஞானம், அன்பு மற்றும் வல்லமையினிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு, அவருக்கான ஊழியங்களில் கடுமையாக உழைப்பவர்களாகக் காணப்படுவோமாக!

லீலி புஷ்பங்களையும், ஆகாயத்துப் பட்சிகளையும் பராமரிக்கின்றதைவிட, கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் மூலமாகவும், நம்முடைய ஜீவியங்களை அர்ப்பணம் பண்ணினதின் மூலமாகவும் அவருடைய பிள்ளைகளாக மாறியுள்ள நம்மை அதிகம் பராமரிக்க மாட்டாரோ? உலகத்தார் பொதுவாகக் கவலைப்படும் இவ்வுலகத்திற்கடுத்த உணவுகள், வஸ்திரங்கள் மற்றும் சகல காரியங்கள் தொடர்பான கவலைகளை அவரிடத்தில் வைத்துவிடுவோமாக. கவலைகள் இல்லாமல் இருக்கவேண்டும் என்பது சரியான அக்கறையுடன் இல்லாமல் காணப்படுவதையும், வேலை தேடுவதிலும், வேலை செய்வதிலும் முயற்சி எடுக்காமல் காணப்படுவதையும் குறிப்பதில்லை. நமக்கு உண்மையில் என்ன தேவை என்பதை நம்மைக்காட்டிலும் நமது பிதா அறிவார். மேலும், விசுவாசம் தேவனை நம்புகிறதாய் மாத்திரம் இராமல், நம்முடைய மேலான நலனுக்காக அவர் கொடுப்பதை ஏற்றுக்கொள்கிறதாயும் காணப்படவேண்டும்.

தேவனுடைய இராஜ்யத்தில், நம்முடைய அருமையான மீட்பருடன் பங்கடையும்படிக்கு நாடுவதே, கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய நம்முடைய பிரதானமான கவனமாகக் காணப்பட வேண்டும். அதாவது, மனுக்குலத்தின் உலகத்தைச் சீர்த்தூக்குவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் கிறிஸ்துவின் மகிமையான சிங்காசனத்தில், கிறிஸ்துவின் மணவாட்டிகளாக, ஆயிரம் வருஷம் அரசாட்சியில் பங்கடைவதற்கும் நாடுவதே, நம்முடைய பிரதானமான அக்கறையாகக் காணப்பட வேண்டும். இப்படியாக, தேவனை விசுவாசிப்பவர்களுக்கு, அவர்களுக்கான மேலான நன்மைகளையும், பூமிக்குரிய நன்மைகளையும் பார்த்துக்கொள்வார் என ஆண்டவர் நமக்கு நிச்சயம் அளிக்கின்றார். இப்படியாக, நம்முடைய ஜீவியத்தில், அனைத்தையும் விசுவாசித்து ஒப்படைத்துவிட்ட நிலையில் நாம் காணப்படும்போது, கர்த்தரை விசுவாசிப்போருக்கு வசனங்களில் வாக்களிக்கப்பட்ட சமாதானமும், சந்தோஷமும், இளைப்பாறுதலும் நமக்குக் கர்த்தருக்குள் காணப்படும்.

---

**R2589**

# "இராஜரிகப் பிரமாணம்-பொன்னான சட்டம்"

## மத்தேயு 7:1-14

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்."

இந்தப் பாடத்தில், கர்த்தருடைய மாபெரும் மலைப்பிரசங்கத்திலுள்ள இன்னொரு விஷயத்தை நாம் பார்க்கப் போகின்றோம். இந்தப் பிரசங்கம் பாவிகளுக்காக இராமல், கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணியுள்ள ஜனங்களுக்காகப் பண்ணப்பட்ட பிரசங்கமாகும். நம்முடைய கர்த்தருடைய இந்தப் பிரசங்கத்தைத் திரளான ஜனக்கூட்டத்தார் கூடிநின்று கேட்டாலும், அதிலும் அவர்கள் அனைவரும் நிழலாக அர்ப்பணம் பண்ணப்பட்ட தேசத்தாராகிய இஸ்ரயேலர்களாக இருந்தாலுங்கூட, நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை

விசேஷமாக தாம் தெரிந்துக்கொண்ட 12-சீஷர்களிடத்திலேயே கூறினார். இந்த 12-சீஷர்களும் சீக்கிரத்தில் தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய யுகத்தின் கீழ், வெளிப்படுத்தின விசேஷத்தில் புதிய எருசலேம் எனும் அடையாள வார்த்தை அடையாளப்படுத்தும் பரலோக இராஜ்யத்திற்கான 12-அஸ்திபாரங்களாக இருக்கத்தக்கதாக குறிப்பாகவும், முழுமையாகவும் போதிக்கப்பட்டுள்ளார்கள். (வெளிப்படுத்தல் 21:14).

இந்த இராஜரிக பிரமாணத்தின் பல்வேறு அம்சங்களை அன்றும், இன்றும் ஏற்றுக்கொள்கின்ற அனைவருக்கும்,அது ஆரோக்கியமான ஆலோசனையாக விளங்குவது என்பது உண்மையே. ஆனால், சத்தியத்தினுடைய இந்தப் பரிசுத்தமான முத்துக்களைப் புரிந்துக்கொள்ளத்தக்கதாக வெகு சிலரது கண்கள் திறக்கப்படுவதினாலும், செவிகள் திறக்கப்படுவதினாலும், அதனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்ததும் உண்மையே. இவைகளை ஏற்றுக்கொள்பவர்களுக்கே, இவைகள் பேசப்பட்டதும் உண்மையே ஆகும். சீக்கிரத்தில் நிறைவேறப் போகின்ற நல்ல நம்பிக்கைகளுக்காகவும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட போகிறதற்காகவும், குருடாயுள்ள கண்கள் யாவும் திறக்கப்படப் போகிறதற்காகவும், செவிடான அனைத்துக் காதுகளும் திறக்கப்படப்போகிறதற்காகவும், தேவனுடைய ஏற்றவேளையில் அன்பு எனும் பொன்னான சட்டத்தின் கட்டளைகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனைவரும் அந்தக் கட்டளைக்குச் செவிசாய்க்கப் போகிறார்களா அல்லது புறக்கணிக்கப் போகிறார்களா என்று அறிவதற்கு அனைவர் மத்தியிலும் அக்கட்டளை/சட்டம் அமுல்படுத்தப்படப் போகிறதற்காகவும் தேவனுக்கு நன்றி.

நமது கர்த்தருடைய மாதிரியையும், உத்தரவையும் நாம் பின்பற்றி, "பழையதும், புதியதுமான" ஏற்றக்கால சத்தியத்தை விசுவாச வீட்டாருக்கு அதாவது, இராஜ்யத்தினுடைய பிள்ளைகளுக்கு முன்பாக வைப்பதற்கு நாம் முயற்சி எடுக்கின்றோம். ஆனால், அதை "நாய்களுக்கு" முன்பாக வைக்கப்போவதில்லை. அதாவது, தெய்வீகத் தயவிற்கு வெளியே காணப்படுபவர்களும், தேவனுடைய கிருபையை இன்னமும் பெற்றுக்கொள்ளாதவர்களும், அவருடைய குடும்பத்திற்குள் குமாரர்களாக தத்தெடுக்கப்படாதவர்களுமாகிய "நாய்களுக்கு" முன்பாக வைக்கப்போவதில்லை. கேட்கும் செவிகளை உடையவர்களுக்கும், புரிந்துக்கொண்டு ஏற்றுக்கொள்ளும் இருதயம் உடையவர்களுக்கும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக புதிய சிருஷ்டிகளாக இருப்பவர்களுக்கும் புதிய வாழ்க்கை வாழ நாடுபவர்களுக்கும் இந்த விலையேறப்பெற்ற சத்தியங்கள் மகா மதிப்பும், மகா விலையுமுள்ள முத்துக்களாக இருக்கின்றது. பன்றி போன்றவர்களிடமும், முரடர்களிடமும் நாம் இச்சத்தியத்தை முன்வைத்தால், அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது மாத்திரம் காரணமாக இராமல், இன்னுமாக அவர்கள் ஏமாற்றமடைந்த உணர்வையடைந்து, நமக்குப் பாதிப்பு உண்டாக்குவதற்கு ஏதுவாக, நம்முடைய நல்ல நோக்கங்களின்மேல் எரிச்சல் அடைவார்கள் என்ற காரணத்தினாலும் நாம் சத்தியத்தை அவர்கள் முன்வைக்கவில்லை. இதைக் குறித்து நமது கர்த்தர், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள். உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள். போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்"என்று பேசுகின்றார் (மத்தேயு 7:6). மேலும், அவருடைய வார்த்தைகள் "பரியாசக்காரனைக் கண்டிக்கிறவன் இலச்சையடைகிறான். துன்மார்க்கனைக் கண்டிக்கிறவன் தன்னைக் கறைப்படுத்திக் கொள்ளுகிறான். பரியாசக்காரனைக் கடிந்து கொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான். ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்" என்ற வசனங்களுக்கு முழு இசைவாகவே உள்ளது (நீதிமொழிகள் 9:7-8).

ஆகையால் விசுவாச வீட்டாருக்கே, கர்த்தர் "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்ற வார்த்தைகளைப் பேசினார் (மத்தேயு 7:1). இந்த ஆலோசனையைக் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் மாணாக்கர்களாக இல்லாதவர்களுக்கு வழங்குவது பயனற்றதாகும். ஆனால், அனைத்து உண்மையான சீஷர்களும் (மாணாக்கர்களும்) இந்த ஆலோசனைக்கு உண்மையாய்ச் செவிசாய்க்க வேண்டும். மேலும், இவ்வாலோசனையில் மிக முக்கியமான பாடமுள்ளது என்பதைப் புரிந்துக்கொள்ள வேண்டும். மேலும், இந்தப்பாடத்தைக் கற்றுக்கொள்ளவில்லையெனில், நாம் மாபெரும் பரீட்சைக்கு ஆயத்தமற்றவர்களாகக் காணப்படுவோம் என்றும், தேர்ச்சிப் பெறுவதற்கு ஆயத்தமற்றவர்களாகவும், இராஜ்யத்திற்கு

ஆயத்தமற்றவர்களாகவும் காணப்படுவோம் என்றும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். தேர்ச்சிப் பெறுவதற்கு ஆயத்தமற்றவர்களாகக் காணப்படுவதற்கான காரணம் என்னவெனில், தங்களுடைய பரீட்சையில் இப்படிப்பினையானது ஒரு பரீட்சையாகக் காணப்படுவதை புரிந்துக்கொள்ளாமல் இருப்பதேயாகும். ஒருவேளை இவர்கள் குற்றம் கண்டுபிடிப்பவர்களாகவும், சந்தேகிப்பவர்களாகவும், மற்றவர்களை அன்பற்றவிதத்திலும், கடுமையானவிதத்திலும் நியாயந்தீர்ப்பவர்களாகவும் இருப்பார்களானால், இது இவர்கள் முழுமையான அன்பும், கனிவுமுள்ள கிறிஸ்துவின் ஆவியாகிய அன்பின் ஆவியை வளர்த்துக் கொள்ளாததற்கான தெளிவான அடையாளமாகும். மேலும், இப்படியாகக் காணப்படுபவர்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்கள் என்று நியாயந்தீர்க்கப்படுவார்கள் அல்லது குற்றம் தீர்க்கப்படுவார்கள். ஏனெனில், நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கிறபடியே, நாமும் நியாயந்தீர்க்கப்படுவோம். ஏனெனில், இதைக்காட்டிலும் நம்முடைய உண்மையான ஆவிக்குரிய நிலைமையை அதாவது அன்பு நம்மிடத்தில் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை விவரித்துக் காட்டுவதற்குச் சிறந்தவழி வேறெதுவும் இல்லை.

எந்தளவுக்கு மற்றவர்களிடத்தில் நாம் இரக்கமும், தயாளத்தையும் பாராட்டுகின்றோமோ, அவ்வளவாகவே தெய்வீக இரக்கம் நம்மிடத்தில் பாராட்டப்படும். மாபெரும் ஆண்டவரின் உதடுகளிலிருந்து புறப்பட்டு வெளியே வந்த இந்தப் பாடத்தை, கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் தங்களுடைய இருதயங்களில் நன்கு பதிய வைக்கப்பெற்றிருப்பார்களானால், இந்தப் பாடமானது மற்றவர்களைப்பற்றியதான இவர்களுடைய எண்ணங்களிலும், மற்றவர்கள் விஷயத்தில் நடப்பிக்கும் இவர்களுடைய கிரியைகளிலும் எத்துணை அருமையான செல்வாக்கு உடையதாய் இருக்கும்; இன்னுமாக இவர்கள் எவ்வளவு தயாளம் கொண்டவர்களாகவும், எவ்வளவு மன்னிக்கின்றவர்களாகவும், மற்றவர்களுடைய பெலவீனங்களுக்காக எவ்வளவு இரக்கப்படுகின்றவர்களாகவும் இருப்பார்கள்; இன்னுமாக, இவர்களுடைய இருதயத்தில் அன்பின் ஆவி எவ்வளவாய் வளர்ந்து பெருகி, இவர்களுடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் வெளிப்படுகின்றதாய்க் காணப்படும்.

## “அவர்களுடைய கண்களில் உள்ள உத்திரங்கள்”

தங்களைப்போன்று இடுக்கமான வழியில் நடப்பதற்கு நாடிக்கொண்டிருக்கும் "சகோதரர்களிடத்தில்" எப்போதும் குற்றங்கண்டுபிடிப்பவர்களும், கர்த்தருக்கு ஒத்த சாயலை அடையும்படிக்கு நாடிக்கொண்டிருக்கும் "சகோதரர்களுடைய" உண்மையான பிரயாசங்களை ஒருபோதும் பார்க்க முடியாதவர்களும், எப்போதும் சகோதரர்களைக் குத்திக்கொண்டே இருப்பவர்களும்தான் தவறுகளிலேயே பெரிய தவறுகளைக்கொண்டிருப்பவர்களாகவும், அன்பில்லாதவர்களாகவும் காணப்படுவார்கள் என்ற கருத்தைக் கர்த்தர் தெரியப்படுத்துகின்றார். இந்த வகுப்பரைக் கடிந்துகொள்ளும் விஷயத்தில், நமது கர்த்தர் பயன்படுத்தும் மிகைப்படுத்தின வார்த்தைகள் ஏளனத்தை வெளிப்படுத்துகின்றது. ஏனெனில், "உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல், உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்களில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்?" என்று சொல்லர்த்தமான வார்த்தைகளிலேயே பேசுகின்றார் (மத்தேயு 7:3; திருவிவிலியம்). அனைத்துச் சகோதரர்களுக்கும் ஏதோ ஒருவிதத்தில் மாம்சத்தின் பெலவீனங்கள் காணப்படவே செய்கின்றன. ஏனெனில், அனைவரும் புதிய சுபாவமாகிய பொக்கிஷத்தை ஆதி பாவத்தினால் கெடுக்கப்பட்ட பூரணமற்ற மண்பாண்டங்களிலேயே பெற்றிருக்கின்றனர். "நீதிமானாக ஒருவனாகிலும் இல்லை," முழுமையான பூரணத்துடன் எவரும் இல்லை. எனினும் இருதயத்தில் அன்பினால் முழுமையாய் நிரப்பப்பட்ட நிலையில் காணப்படும் சகோதர சகோதரிகள், அவர்களுடைய விசுவாசத்தின் அல்லது ஆவிக்குரியவைகளைப் புரிந்துக்கொள்ளும் கண்களில் துரும்பைக் கொண்டிருந்தாலும், அல்லது அவர்களுடைய ஜீவியத்தின் அனைத்துக் கிரியைகளையும் பாதித்து, பூரணமற்ற நிலையில் அவர்களுடைய கிரியை காணப்படத்தக்கதாக அவர்களுடைய கரங்களில் சிறு கண்ணாடித்துண்டு குத்தியிருந்தாலும், மேலும், அவர்கள் விருப்பம் கொண்டாலுங்கூட, அவர்களால் பூரணமாய் நடக்க முடியாதளவுக்கு, அவர்களுடைய பாதங்களில் சிறு கண்ணாடி துண்டுகள் குத்தியிருந்தாலும், அவர்களிடத்தில் ஒருவேளை விசுவாசத்தின் ஆவியும், அன்பின் ஆவியும், அனுதாபத்தின் ஆவியும், கிறிஸ்துவின் ஆவியும் காணப்படும் பட்சத்தில், அவர்கள் அன்பின், இரக்கத்தின்

ஆவி இல்லாதவர்களைக்காட்டிலும் அதிகமாய்த் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படுவார்கள். இப்படியான அன்பின் ஆவியும், இரக்கத்தின் ஆவியும் இல்லாதவர்கள் கர்த்தருடைய ஆவியை மிகச் சிறிய அளவிலும், "சகோதரரைக் குற்றம் சாட்டும்" மாபெரியவனாய் இருக்கும் எதிராளியானவனின் ஆவியை மிக அதிகமான அளவிலும் கொண்டிருக்கும் காரணத்தினால், மற்றவர்களை நியாயந்தீர்க்கும் தவறான வழியைத் தெரிந்துக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அன்பற்ற, குற்றம் கண்டுபிடிக்கின்ற, சகோதரரைக் குற்றம் சாட்டும் வகுப்பாரை, கர்த்தர் மாய்மாலக்காரர்கள் என்று அழைக்கின்றார். ஏன்? ஏனெனில், இவர்கள் மற்றவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கையில், தாங்கள் அவர்களைப் போல் பாவத்தின் பிணியினால் நோய்வாய்ப் படவில்லை எனும் எண்ணத்தை மற்றவர்களுக்கு அளிக்க விரும்பவது தெளிவாகின்றது. இன்னுமாக, தாங்கள் பரிசுத்தமாய்க் காணப்படுபவர்கள் என்ற எண்ணத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கவும் இவர்கள் விரும்புகின்றார்கள். இது பொய் என்றும், தங்களிடத்தில் அநேக குறைவுகளும், பெலீவனங்களும் இருக்கின்றது என்றும் இவர்கள் தங்கள் இருதயத்தில் அறிந்திருக்கும் நிலையிலும், தாங்கள் பரிசுத்தமாய்க் காணப்படுபவர்கள் என்ற எண்ணத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்புகின்றனர். இப்படியாக, இவர்கள் காணப்படுவதினால் இவர்களது போக்கானது மாய்மாலமாகவும், ஏமாற்றுத்தனமாகவும், தவறானதாகவும், தேவனுக்குப் பிரியமற்றதாகவும் காணப்படுகின்றது. பாவத்தின் மீதான வெறுப்பின் காரணமாகவும், தவறு செய்பவர்கள் மீதான அன்பின் காரணமாகவுந்தான், தாங்கள் குற்றம் கண்டுபிடிப்பதாக இவர்கள் கூறுவது, நமது கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காண்பிப்பதுபோன்று ஏமாற்றுத்தனமும், வஞ்சனையுமாகக் காணப்படுகின்றது. இவர்கள் தங்களுடைய சொந்த பாவங்கள் மற்றும் பெலவீனங்களுக்கு எதிராக யுத்தம் பண்ணுவதற்கும், பகைப்பதற்கும், குற்றஞ்சாட்டுவதற்கும், அதாவது, தங்களிடத்திலிருந்து மாய்மாலம் மற்றும் போலித் தற்பெருமை எனும் மரக்கட்டைகளை வெளியேற்றுவதற்குரிய அநேக வேலைகளை இவர்களுக்குள் பெற்றிருக்கின்றார்கள். இப்படியாக, இவர்கள் செய்வார்களானால், இவைகளால் வரும் அனுபவங்கள், இவர்களை மற்றவருக்கு உதவி செய்யும் விஷயத்தில் இரக்கத்துடனும், அன்புடனும், இனிமையுடனும் இருப்பதற்கு ஏதுவாக இவர்களை உருவாக்கியிருக்கும்.

நமது கர்த்தர் இங்கு முன்வைத்துள்ள விஷயத்தை அனைத்துச் "சகோதரர்களும்" கவனமாய்ப் பார்க்க வேண்டும். மேலும், தங்களிடத்தில் இருதயத்தில் ஏதேனும் தீயப் பண்புகள் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை நன்கு கவனிக்க வேண்டும். அதாவது, குற்றம் கண்டுபிடித்துத் திட்டுதல், கடுமையாகக் குற்றத்தை விமர்சித்தல் மற்றும் தீவிரமாய்க் குற்றத்தைப் பலர் அறிய தாக்கிப் பேசுதல் போன்றதான தவறான/தீய பண்புகள் நம்மிடத்தில் இருக்கின்றனவா எனக் கவனிக்க வேண்டும் . . . மேற்கூறப்பட்டவைகள் அனைத்தும் ஒரு தவறின் பல்வேறு நிலைகளாகும். ஒருவேளை எவரேனும் தங்களுடைய ஆவிக்குரிய கண்களில் போலி தற்பெருமை மற்றும் அன்பின்மை எனும் மரக்கட்டையின் ஏதேனும் தடயத்தைக் காண்பார்களானால், அவர்கள் உடனடியாக மாபெரும் (இயேசு)வைத்தியனிடம் சென்று, அவர்கள் "சகோதரருக்கு" மென்மையான மற்றும் இரக்கமுள்ள உதவியாளர்களாக உடனடியாக ஆகுவதற்கும், ஆயிரம் வருஷம் யுகத்தின் மாபெரும் வேலைக்காக மருத்துவர்களாகவும், அறுவை சிகிச்சையாளர்களாகவும் அவர்கள் ஆயத்தமாகிக்கொள்வதற்கும், மரக்கட்டையை முழுமையாக நீக்கிப் போட்டுக்கொள்ள வேண்டும். மனுக்குலத்தின் குருடாக்கப்பட்டுள்ள கண்களை இரக்கத்துடனும், அன்புடனும் திறந்து வைப்பதும், பாவத்தின் அனைத்துப் புண்களைச் சொஸ்தப்படுத்துவதும்தான் ஆயிர வருஷ யுகத்தின் மாபெரும் வேலையாகும்.

## "திராட்சக் கொத்துக்களை, முட்செடிகளில் கட்டி வைப்பது"

நம்மைப்போன்று நமது ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் பிரயாசம் எடுப்பவராகிய நமது "சகோதரரை" நாம் நியாயந்தீர்க்கக் கூடாது. எனினும், பொதுவான மனுக்குலத்தின் விஷயத்திலும் நாம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நியாயந்தீர்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். "அவர்களுடைய கனிகளினாலே," அதாவது "முட்செடிகளிலிருந்து திராட்சப் பழங்களையும், முட்பூண்டுகளிலிருந்து அத்திப்பழங்களையும் நம்மால் வேறுபடுத்தி அறிந்துக்கொள்ள முடியும் என்று வேறொரு இடத்தில் கர்த்தர்

தெரிவிக்கின்றார். இதே பிரசங்கத்தில் சகோதரர்களுக்கும், "நாய்களுக்கும்" மற்றும் சகோதரர்களுக்கும், "பன்றிகளுக்கும்" இடையேயுள்ள வித்தியாசம் என்னவென்பதை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும் அல்லது நியாயந்தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். "பன்றிகள்" சுயநலமுள்ளவர்கள், சிற்றின்பம் நாட்டம் கொண்டவர்கள், பூமிக்குரிய காரியங்கள் மீது நாட்டம்கொண்டவர்கள், தேவனுடைய ஆவியினால் ஒருபோதும் ஜெநிப்பிக்கப்படாதவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்டவர்களை, இவர்களுடைய வெளிப்புற சாட்சிகளினாலே நாம் அறிந்துக்கொள்ளலாம். ஏனெனில், "கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிராத எவனும், அவருடையவன் அல்ல." மேலும், ஒருவேளை ஒருவன் கிறிஸ்துவினுடையவன் அல்லாதவனானால், ஒருவன் திரட்சச் செடியின் கொடி அல்லாதவனானால், அப்படிப்பட்டவனிடத்தில் திராட்சப் பழங்களின் கொத்தைக் கட்டுவதற்கென நமது நேரத்தை, வீணாக நாம் செலவழிக்கக்கூடாது. சுயநலத்திலும், ஜெநிப்பிக்கப்படாத/புதுப்பிக்கப்படாத நிலையிலுமுள்ள உலகத்தாரிடம், உண்மையான பரிசுத்த ஆவியைப் போலித்தனமாக விளங்கச்செய்வதற்கு உதவி நாம் புரிவதின்மூலம் மற்றவர்களையோ அல்லது நம்மையோ வஞ்சிப்பதற்கு நாமே முயலுகின்றவர்களாய்க் காணப்படக்கூடாது. பூமிக்குரியவைகளை மாத்திரம் புரிந்துக்கொள்ள முடிகின்ற வகுப்பார், இறைச்சிகடையிலிருந்து வரும் இறைச்சிக்கும், ஆசாரியர்களால் மாத்திரமே புசிக்கப்படும் பலிக்குரிய இறைச்சிக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்துக்கொள்ள முடியாததுபோன்று, இவ்வகுப்பார் பரிசுத்தமான, பரலோகத்திற்குரியவைகளை உணரார்கள். பணத்தையும், இந்த ஜீவியத்திற்குரியவைகளையும் மாத்திரம் கருத்தில் கொள்ளும் பேராசை பிடித்தவர்களாகிய பன்றி போன்றவர்கள், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள சகோதரர்களின் பார்வையில் மிகவும் விலையேறப்பெற்றதாய்க் காணப்படும் சத்தியம் எனும் முத்துக்களை, உணர்ந்து ஏற்றுக்கொள்வார்கள் என நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது.

ஆனால், கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணம் பண்ணிக்கொள்ளாத ஜனங்களின் கவனத்திற்கு நாம் பரிசுத்தமானவைகளை ஒருபோதும் கொண்டு வரக்கூடாது என்பது கருத்தாக இராமல் மாறாக, நீதி மற்றும் சத்தியத்தின் அடிப்படையான கொள்கைகளை மாத்திரமே முன்வைக்கையிலே, ஒருவரிடம் சத்தியத்திற்குச் செவிசாய்க்கும் செவிகள் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பது தெரிந்துவிடும். ஒருவேளை கேட்கும் செவி இருப்பதை நாம் கண்டால், நாம் ஊழியம் புரிவதில் கடும் முயற்சி ஏறெடுக்கலாம். ஆனால், ஒருவேளை அடைத்திருக்கும் செவியைக் காண்போமேயானால், அத்தகையவர்களிடம் இந்தச் சுவிசேஷ யுகத்தின் அழைப்பு, பரிசுத்தவான்கள் ஆகுதவற்கான அழைப்பு, தெய்வீகச் சுபாவம் மற்றும் இராஜ்யத்தில் உடன் சுதந்திரர் ஆகுவதற்கான அழைப்புத் தொடர்பான முயற்சிகள் எடுப்பது பலனளிக்காது என்று அறிந்தவர்களாக நாம் நமது நேரத்தை விரயமாக்குவதை விட்டுவிடலாம் என்பதே கருத்தாகும். கடினமான இருதயங்களை உடைப்பதற்கும், குருடான கண்களைத் திறப்பதற்கும், செவிடான செவிகளைத் திறப்பதற்கும் தேவனுடைய ஏற்றவேளையாகிய ஆயிர வருஷ யுகமானது சீக்கிரத்தில் வரும்.

"நாய்கள்," "பன்றிகளிடத்தில்" சில விஷயங்களில் ஏறெடுக்கப்பட்ட பிரயாசங்கள் அதாவது, முட்செடிகளிலும், முட்பூண்டுகளிலும், கிறிஸ்துவின் ஆவியினுடைய கனிகளைப்போன்ற போலியான பல்வேறு கனிகளைக்கட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் மற்றும் இப்படிப்பட்டவர்களுக்கு, விசுவாச வீட்டாருக்குரிய அப்பத்தை/போஜனத்தை சுவையாய் இருக்கச் செய்வது, உண்மையில் கர்த்தருடைய நோக்கத்திற்குப் பாதிப்பையே உண்டுபண்ணியுள்ளது. "நாய்" வகுப்பாரைப் போஷிப்பிப்பதற்கு ஏறெடுக்கப்படும் பிரயாசத்தில், "சகோதரர்கள்" கவனிக்கப்படத் தவறிப் புறக்கணிக்கப்பட்டுவிடுகின்றனர். "பன்றிகளுக்கு" முத்துகள் மீதும் விருப்பத்தைத் தூண்டுவதற்கான பிரயாசத்தில் மணவாளனுக்காக, மணவாட்டி ஆயத்தம் செய்யப்படும் விஷயமும், மணவாட்டியைச் சத்தியத்தின் முத்துக்களைக்கொண்டு அலங்கரிக்கும் விஷயமும் புறக்கணிக்கப்பட்டுப் போய்விடுகின்றது. முட்புதரில், திராட்சச் செடியின் இயற்கையான கனிகள் கட்டி வைக்கப்படும்போது, முட்புதருக்கும் மற்றும் நல்ல கனிகளைக்கொடுக்கும் உண்மையான திராட்சச் செடியின் உண்மையான மதிப்பிற்கும்,சுபாவத்திற்கும் இடையேயுள்ள மாபெரும் வித்தியாசமும் அதிகமாக மறைக்கப்பட்டுவிடுகின்றன. எழுதப்பட்டிருக்கும் காரியங்களைவிட நம்மை நாம் ஞானவான்கள் எனக் காட்டாதிருப்போமாக. இந்த யுகத்திற்கெனத் தேவனால் நியமிக்கப்பட்டுள்ள தற்காலத்திற்குரிய வேலையில் நாம் ஈடுபட்டு, மனுக்குலத்தின் உலகத்திற்கான பொதுவான வேலைகளைத் தேவனுடைய நியமிக்கப்பட்ட காலத்திற்கு விட்டுவிடுவோமாக.

## “அன்பற்ற, போலித் தற்பெருமையை எப்படி மேற்கொள்ளலாம்”

இப்பொழுது "சகோதரர்கள்" கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களுக்கு நாம் வரலாம். ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும் விஷயத்தைச் சரி பண்ண வேண்டும் என்பதை விசேஷமாக மனதில் கொண்டவராக நமது கர்த்தர், இந்தத் தவறான பண்பை எப்படி அகற்றிப்போடுவது என்பதற்கான போதனைகளை அளிக்கின்றார். மற்றவர்களை நாம் நியாயத்தீர்ப்பு செய்வதிலிருந்து நம்மைத் தடைப்பண்ணுவதற்கும், நம்முடைய சொந்த குறைவுகளை நாம் சரிச் செய்துகொள்ள நமக்கு உதவுவதற்கும் நமக்குத் தேவையான அன்பையும், அனுதாபத்தையும் நாம் கர்த்தரிடத்தில் கேட்க வேண்டும். நாம் உண்மையாய்க் கேட்போமானால், இதற்கான அவருடைய கிருபையையும், உதவியையும் நாம் பெற்றுக்கொள்வோம். நாம் அவரிடத்தில் கேட்கையில், நாம் குறைவுபட்டுள்ள அன்பின் பரிசுத்த ஆவியானது நம்முடைய இருதயங்களை நிரப்பும்படி நாடுவது நமக்குரிய கடமையாகும். ஒருவேளை இதை நாம் நாடினால் நாம் அதைக்கண்டடைவோம். தொடர்ச்சியான பிரயாசங்கள் மூலமாகவும், இடைவிடாத ஜெபத்தின் மூலமாகவும், கிருபை மற்றும் ஆசீர்வாதத்தினுடைய கர்த்தரின் களஞ்சியத்தை நாம் தட்டிக்கொண்டிருக்க வேண்டும். இதன் விளைவாக, அது நமக்கு நிச்சயமாகத் திறக்கப்படும். தட்டுதல், கேட்டல், நாடுதல் ஆகியவைகள் கர்த்தருடைய பார்வையில் பிரியமாய்க் காணப்படும். மேலும் இது அவரிடத்திலான நமது விசுவாசத்தைக் குறிக்கின்றது; மற்றும் நம்மிடத்தில் காணப்படும் உண்மையையும், கர்த்தருடைய சித்தத்திற்கு முழுமையாய் இசைவுடன் காணப்பட வேண்டும் என்ற நமது விருப்பத்தையும் குறிக்கின்றது. மேலும், நம்முடைய இருதயத்தின் இந்த நல்ல விருப்பங்கள் நிறைவேற்றப்படும், ஏனெனில், பூமிக்குரிய உணவைக் கேட்கும் குழந்தைக்குப் பூமிக்குரிய பெற்றோர் கொடுப்பது போன்று, தேவனும் தம்முடைய பிள்ளைகளுக்குத் தேவையான எல்லா நேரங்களிலும், அவர்களுக்குச் செவிச்சாய்த்துக் கிருபையை அருளுவார். நாம் நல்லவைகளுக்காக விருப்பம் கொள்ளும்போது, அவர் நம்மை ஏமாற்றுவதுமில்லை; தீமையானவைகளையும் நமக்குக் கொடுப்பதுமில்லை. மாறாக, நாம் கேட்டதை அல்லது எண்ண முடிவதைவிட மிக அதிகமாய்த், திரளானதாய், மேன்மையானதாய் நமக்குக் கொடுத்தருளுவார். ஏனெனில், பூரணமற்ற மனுஷ தந்தையினால் செய்ய முடிகின்றதைப்பார்க்கிலும் நமது பரம பிதா மிகச் சிறப்பானதைச்செய்ய வல்லவராய்க் காணப்படுகின்றார்.

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்" (லூக்கா 11:13). இங்குக் கேட்கிறவர்களுக்கும், தேடுகின்றவர்களுக்கும், தட்டுகின்றவர்களுக்கும், தேவன் கொடுக்கப் பிரியப்படும் நல்ல விஷயம், அவருடைய பரிசுத்த ஆவியே என்று கூறப்பட்டுள்ளது. இதுவே நாம் வெளியேற்ற வேண்டிய மாம்சத்தின் பரிசுத்தமற்ற, அன்பற்ற, சுயநலமுள்ள, நியாயந்தீர்க்கும், குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியை அணைத்துப் போடுவதற்கு அவசியமானதாகும். விஷத்திற்கு எதிரான மருந்து, நாம் பரிசுத்த ஆவியினாலும், அன்பின் ஆவியினாலும் நிரப்பப்படுவதேயாகும். ஏனெனில், அன்பு தனது அயலானுக்குத் தீங்கு விளைவிக்காது. "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது." மற்றவர்களுடைய தவறுகளைப்பார்ப்பதற்கும், சொந்த தவறுகளைப்பார்ப்பதில் குருடாய் இருப்பதற்கும் "அன்பு இறுமாப்பாய் இராது." குற்றம் கண்டுபிடித்து, சகோதரரைக் குற்றம் சாட்டுகின்றவராய் இருப்பதற்கு அன்பு தன்னைப் புகழுவதில்லை. தேவனுடைய ஆவியாகிய அன்பும், அனுதாபமும் உதவி செய்கின்றதாயும் காணப்படுகின்றது. (1 கொரிந்தியர் 13:4; ரோமர் 13:10)

## “தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து” எபிரெயர் 13:21

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12). இவ்வசனத்தில் இடம்பெறும் "ஆதலால்" என்ற வார்த்தையானது இவ்வசனத்திற்கும், இப்பாடத்தில் நாம் முன்பு பார்த்துள்ள விஷயங்களுக்கும் இடையே தொடர்பு இருப்பதைக்காட்டுகின்றது.

இவ்வசனத்தின் காரியங்களானது, நாம் எப்போதெல்லாம் மற்றும் எவ்வளவாய் மற்றவர்களுடைய நோக்கங்களைத் தவறாய் நியாயம் தீர்த்துக்கொண்டு, அவர்களிடத்தில் (கைகளிலும், பாதங்களிலும்) காணப்படும் சிறு கண்ணாடித் துண்டுகளை மாற்றிப்போடுவதற்கு மிகவும் கவனமாக, அறுவை சிகிட்சைச் செய்வதற்கு முயற்சிகள் எடுப்பதற்கு அநாவசியமாகத் தலையிடுகின்றோம் என்பதை அறிந்துக்கொள்வதற்குப் பரீட்சையாக அல்லது கோட்பாடாக அல்லது அளவுகோலாகக் காணப்படுகின்றது. ஆகவே இவ்வசனமே, "பொன்னான சட்டமாகும்/கோட்பாடாகும்." அதாவது, தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய ஜீவியத்தின் அனைத்து விஷயத்திலும் மற்றும் விசேஷமாக அவர்கள் "சகோதரர்களுடன்" கொண்டிருக்கும் உறவிலும், அவர்கள் "சகோதரர்களைக்" கையாளும் விஷயத்திலும் பயன்படுத்த வேண்டிய சட்டமாகும்/கோட்பாடாகும். மற்றவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கவோ அல்லது குற்றத்தைத் தேடுவதற்கோ நாம் உந்தப்படும்போதும், மற்றவரைக் குற்றம் சாட்டுவதற்கோ அல்லது மற்றவருடைய குறைகளை விமர்சிக்க நாம் உந்தப்படும்போதும் அல்லது அவரை வெறுப்பதற்கு உந்தப்படும்போதும் இப்படி எண்ணுவது அல்லது செய்வது ஏற்புடையதா அல்லது ஏற்புடையதாக இல்லையா என்பதை நாம் அறியும் பொருட்டு, "ஒருவேளை நான் அந்தச் சகோதரனுடைய இடத்திலும், அந்தச் சகோதரன் என்னுடைய இடத்திலும் இருந்தால், என்னைக்குறித்து அந்தச் சகோதரன் இப்படியாக எண்ணுவதையோ, பேசுவதையோ நான் விரும்புவேனோ?" என்ற கேள்வியை நம்மிடத்திலேயே நாம் கேட்டுப்பார்க்க வேண்டும்.

இந்தப் பிரமாணத்தை/சட்டத்தை/கொள்கையைப் பின்பற்றினால், இப்பிரமாணம் ஒரு வழிகாட்டியாகக்காணப்படும். கர்த்தருடைய ஜனங்கள் இப்பிரமாணத்தை நினைவில் கொண்டிருந்தும், இதற்குக் கீழ்ப்படிய இருதயத்தில் விருப்பம் கொண்டிருந்த போதிலும், புறங்கூறும் விஷயத்திலும், தீமைப்பேசும் விஷயத்திலும், வதந்திகள் பரப்பும் விஷயத்திலும், தாங்கள் இந்தப் பொன்னான பிரமாணத்தை மீறும் விஷயத்தில், தங்களைக் குற்ற பழியினின்று விலகிக்கொள்வதற்கான காரணத்தைக்காட்ட வாய்ப்புத் தேடுகின்றனர். இந்தக் கர்த்தருடைய பிரமாணத்தைக்கையாளும் விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். அதாவது, தேவனுடைய வார்த்தைகளை ஏமாற்றுத்தனமாகக் கையாளாதபடிக்கு அதாவது, இந்தப் பிரமாணத்தினுடைய உண்மையான முக்கியத்துவம் தொடர்பான விஷயத்தில், நம்மையே நாம் குருடாக்கி, ஏமாற்றிக்கொள்ளாதபடிக்கு அதாவது, இவ்விதமாய் நம்மையே நாம் ஏமாற்றி, நம்முடைய மனசாட்சியை நாம் சிறைப்படுத்தி, பலவீனப்படுத்தாதபடிக்கு, அதாவது, பரிசுத்த ஆவி வேண்டும் என்பதான நம்முடைய ஜெபங்களை நாமே தடைபண்ணிப் போடாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். ஏனெனில், வழி திறந்திருக்கும் பட்சத்திலேயே பரிசுத்த ஆவியானது நம்முடைய இருதயங்களுக்குள் பாய்ந்து வரமுடியும்; இந்தப் பொன்னான பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொள்ளும்போது மாத்திரமே, வழி திறந்து காணப்பட முடியும். இந்தப் பொன்னான பிரமாணமும், இந்த அனைத்துப் படிப்பினைகளும் புதியவைகள் போன்று தோன்றுவதற்கான காரணம், இவைகள் முன்பு இல்லாத அளவுக்கு மாபெரும் போதகரினால், தெளிவான மற்றும் துல்லியமான வெளிச்சத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளதினாலேயாகும். இன்னுமாக, இவைகள் மோசேயினுடைய நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகள் வாயிலான தேவனுடைய போதனைகள் ஆகியவைகளின் சாரமாக உள்ளது.

## “வழி இடுக்கமானது/நெருக்கமானது”

நம்முடைய கிரியைகளின் விஷயத்தில் மாத்திரமல்லாமல், நம்முடைய வார்த்தைகள் மற்றும் நம்முடைய எண்ணங்கள் (வார்த்தைகளையும், கிரியைகளையும் உதிக்கப்பண்ணும் எண்ணங்கள்) விஷயத்திலும் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டிய ஜீவியமானது மிகவும் "நெருக்கமான பாதை" என்று அதாவது, கஷ்டமான பாதை என்று நமது கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றபோதிலும், இந்தப் பாதை இப்பொழுது நம்முன் வைக்கப்பட்டுள்ள சுவிசேஷ யுக அழைப்புக்கு வாக்களித்துள்ள சந்தோஷமுள்ள இராஜ்யம் மற்றும் ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்குரிய ஒரே வழியாகவும் உள்ளது. சுலபமான பாதை, சுயநலமான பாதை, உலகப்பிரகாரமான பாதை இராஜ்யத்திற்கு வழிநடத்தாமல், மரணத்திற்கு . . . இரண்டாம் மரணத்திற்கு . . . முழுமையான அழிவுக்கு நேராகவே வழிநடத்தும். அநேகர், இப்பொழுது விசாலமான வழியில் போய்க்கொண்டிருக்கின்றனர். வெகுசிலரே இராஜ்யத்திற்கும், அதன் மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கும் வழிநடத்தும் இடுக்கமான மற்றும் நெருக்கமான

பாதையைக் கண்டுபிடித்து அதில் பிரவேசிக்கின்றனர். தற்காலத்தில் இடுக்கமான வழி மாத்திரமே திறந்திருந்தாலும், விசாலமான மற்றும் உலகப்பிரகாரமான வழியானது நடத்திச் செல்லக்கூடிய அழிவினின்று தப்புவதற்குத் தற்காலத்தில் மாத்திரமே வாய்ப்புக் காணப்படுகின்றது என நாம் எண்ணிவிடக்கூடாது. தெரிந்துக்கொள்ளப்பட்ட சிறுமந்தையினர் அதாவது, கிறிஸ்துவின் சரீரமாகிய, மணவாட்டியாகிய, சபைவகுப்பார் அதாவது, இடுக்கமான வழியைநாடி, அதில் நடப்பவர்களுமாகிய வகுப்பார், மனுக்குலத்தின் மத்தியிலிருந்து மகிமையடைந்துவிட்ட பிற்பாடு, ஆயிர வருஷ யுகத்தில், மனுக்குலத்தின் உலகத்திற்காக, பெரும்பாதையான பரிசுத்தமான வழி திறக்கப்படுவதற்கான காலம் வரும். பெரும்பாதையான வழி, கீழ்நோக்கிச் செல்லும் பாதையாக இராமல், மேல் நேக்கிச் செல்லும் பாதையாக இருப்பதினால், அப்பாதையில் நடப்பதற்கும், முடிவில் முழுமையான சீர்ப்பொருந்துதலை அடைவதற்கும் பிரயாசம் எடுக்கப்பட வேண்டும். எனினும், இப்பொழுது தேவனுடைய ஜனங்களாகிய தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன்பு, திறந்து வைக்கப்பட்டுள்ள கடுமையான, நெருக்கமான பாதையினின்று, இந்தப் பெரும்பாதையான வழி முற்றிலும் வேறுபட்டதாகும். இந்தப் பெரும்பாதையான வழியானது, தற்போதுள்ள இடுக்கமான வழிக்குரிய பலிச் செலுத்தும் பாதையாயிராமல், நீதியின் பாதையாகக் காணப்படும். தற்கால இடுக்கமான வழியானது, இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரைத் தெரிந்தெடுக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக் கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கென, இவர்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

ஆயிர வருஷத்திற்குரிய பெரும்பாதையான வழியில் எந்தச் சிங்கங்களும் இருப்பதில்லை. நன்மை செய்வதிலிருந்து தடைபண்ணப்படுவதற்கோ (அ) அழிப்பதற்கோ (அ) தாக்கப்படுவதற்கோ அப்பொழுது எதுவும் இருப்பதில்லை. நீதியின்படி நடக்க நாடுபவர்களையும் வஞ்சிப்பதற்கோ (அ) விழுங்கிப்போடுவதற்கோ எதுவும் அப்பொழுது காணப்படுவதில்லை. ஆனால், இவைகள் நம்மை இப்பொழுது சூழ்ந்து நிற்கின்றன. ஏனெனில், இவ்வுலகத்தின் பிரபுவாகிய சாத்தான் இன்னமும் கட்டப்படவில்லை (ஏசாயா 35:8-9; வெளிப்படுத்தல் 20:2). "இடுக்கமான வழி" மூலமாய் இப்பொழுது பிரவேசிக்கின்ற அனைவரும், நல்லதொரு போராட்டத்தைப் போராட வேண்டும்; மற்றும், விசுவாசத்திற்காக உண்மையுடன் போராட வேண்டும் மற்றும் பிசாசை எதிர்க்க வேண்டும் ....... இவர்கள் தங்களுடைய பரம அழைப்பிற்கான பரிசை அடையவேண்டுமெனில் இவைகளைச் செய்தாக வேண்டும். நாம் சுதந்தரித்துள்ள மாம்சத்தின் பெலவீனங்களுடன் மாத்திரம் நாம் போராட வேண்டியதாயிராமல், வானமண்டலத்தின் பொல்லாத ஆவிகளுடன் நாம் போராட வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். (எபேசியர் 6:12). ஆனால், கர்த்தர் அதிகமான கிருபையை நமக்கு அளிப்பதினால், நம்மில் அன்புகூர்ந்து, நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவர் மூலமாய் நாம் ஜெயங்கொண்டவர்களாக ஆகுவோம் (1 தீமோத்தேயு 6:12; யூதா 1:3; யாக்கோபு 4:7; ரோமர் 8:37).

---

**R3746**

# “நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து, கவனியுங்கள்”
## மத்தேயு 7:15-29

"திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்." யாக்கோபு 1:22

நம் பாடம் மலைப்பிரசங்கத்தின் காரியங்களைப் பின்தொடர்ந்துவரும் காரியங்கள் பற்றியதாகும். கர்த்தருடைய ஜனங்கள் கேட்ட காரியங்களைக்குறித்த முக்கியத்துவத்தை, அவர்களுடைய மனதில் பதிய வைப்பதற்காகவும், நற்செய்தியைக் கேட்பதோடுகூட, அதற்குக் கீழ்ப்படிவதுகுறித்த முக்கியத்துவத்தை அவர்களுடைய மனதில் பதிய வைப்பதற்காகவும் கர்த்தர் உவமையாக இவைகளைப் பேசியுள்ளார். அவருடைய வார்த்தைகளானது, கவனமாய்க் கீழ்ப்படிதலின் மூலம் உண்டாகும் நல்ல

விளைவுகளிலிருந்து, கீழ்ப்படிய தவறிப்போவதினால் உண்டாகும் திருப்திகரமற்ற விளைவுகளை வேறுபடுத்திக் காண்பிக்கின்றது. மந்தைகளைத் தவறாய் வழி நடத்தும்படிக்கு, மந்தைகள் மத்தியில் வருவார்கள் என்று கர்த்தரால் அறிவிக்கப்பட்டுள்ள கள்ள போதகர்களை நாம் கவனித்துப்பார்த்து அறிந்துக்கொள்வது எவ்விதத்திலும் பொல்லாத ஊகங்கள் ஆகாது. மேலும், மந்தையின் கவனத்திற்கு, இப்படிப்பட்ட தவறான போதகர்களைக்கொண்டு வருவதும் தீமை பேசுதலாகவும் இருக்காது. கள்ள போதகர்களைக் குறித்து, ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் முன்னமேகூறி, அவர்களுக்கு எதிராக எச்சரித்தும் உள்ளபடியால், ஆண்டவருடைய மாதிரியை உண்மையாய்ப் பின்பற்றுகிற அனைவரும் அப்படியே செய்ய வேண்டும்.

நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டியுள்ள விதத்திலேயே நாமும் அத்தகையவர்களை வேறுபடுத்திக் கண்டறிந்துக்கொள்ள வேண்டும். வெளித்தோற்றத்தில் இத்தகையவர்கள் மென்மையுள்ளவர்களாகவும், மெருகூட்டப்பட்டவர்களாகவும், கல்வியறிவு உடையவர்களாகவும், நற்குணங்கள் உடையவர்களாகவும் காணப்பட்டாலும், இத்தகையவர்களை நாம் மந்தைக்கான தலைவர்களாக ஏற்றுக்கொள்வதற்கு, நம்பிக்கை வைப்பதற்கு முன்னதாகவும், இத்தகையவர்களிடமும், இவர்களுடைய நோக்கங்களுடனும், இலட்சியங்களுடனும், தனிப்பட்ட வாழ்க்கையுடனும் நாம் நெருங்கி பழகிப்போவதற்கு முன்னதாகவும், இத்தகையவர்களுடைய வெளித்தோற்றமான அறிகுறிகளைக்காட்டிலும், மற்ற அநேகக்காரியங்களினால் இவர்களை நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். இதைக்குறித்துதான், இத்தகையவர்கள் வெளித்தோற்றத்தில் பரிசுத்தமடைந்திருந்த தோற்றம் கொண்டிருந்தாலும், அதேசமயம் இவர்கள் சுயநலமுள்ளவர்களாகவும், பேராசையுள்ளவர்களாகவும் இருப்பார்களானால், இவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையுடன் காணப்பட வேண்டுமெனக் கர்த்தர் நமக்குக் கூறுவதின் மூலம் சுட்டிக்காட்டுகின்றார். "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்." "தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள்" (அப்போஸ்தலர் 20:29; 2 பேதுரு 2:1, 3).

ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டிருக்கும் ஓநாய்களைக் கண்டுபிடிப்பதிலும், எதிர்ப்பதிலும், அவர்களிடமிருந்து தூர இருப்பதிலும் நாம் விழிப்பாய் இருக்க வேண்டியிருப்பினும், நமது கர்த்தருடைய **மற்றச்சில** போதனைகளையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, நமக்கெதிராய் இராதவர்கள், நம் சார்பில்தான்/பட்சத்தில்தான் இருக்கின்றார்கள் என்றும், கர்த்தருக்குச் சொந்தமானவர்களென எவர்களுடைய இருதயங்களும், குணலட்சணங்களும் சாட்சிக் கொடுகின்றதோ, அவர்கள் ஒருவேளை கர்த்தருக்கான ஊழியத்திலும் அவருடைய செய்தியைப் பிரகடனப்படுத்தும் விஷயத்திலும் நம்மோடுக் கூடப் பின்பற்றுகின்றவர்களாக இல்லாமல் இருந்தாலும், அவர்களை நாம் ஓநாய்களெனக் கண்டனம் பண்ணவோ அல்லது சகோதரர் என்று ஏற்க மறுக்கவோ கூடாது என்றுமுள்ள போதகரின் போதனைகளையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும் (மாற்கு 9:38-40; லூக்கா 9:49-50). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் நாம் அனைவரிடமும் அன்புகூர வேண்டும். மேலும், கர்த்தரை அன்புகூருபவர்களும், அவருடைய ஆவியை வெளிப்படுத்துகிறவர்களுமாய் இருக்கும் அனைவருக்கும், அவர்கள் நம்மோடு சேர்ந்து காணப்பட்டாலும், காணப்படாவிட்டாலும், நாம் வாழ்த்துதல் சொல்ல வேண்டும். தெய்வீகப் பிரமாணம் மிக அகலமாகவும், அதேசமயம் மிகக் குறுகலாகவும்கூட உள்ளது. சீஷத்துவம் மற்றும் குணலட்சணத்தின் விஷயத்தில் தெய்வீகப் பிரமாணம் குறுகலாக இருக்கின்றது. மீட்கும் இரத்தத்தின் மீதான விசுவாசம், ஆண்டவருக்கு அர்ப்பணம் பண்ணுதல் மற்றும் அவருடைய ஆவியை வெளிப்படுத்துவதே சீஷத்துவத்திற்கான காரியங்களாகும். தெய்வீகப் பிரமாணம் இவர்களுக்குள் அகலமாகக் காணப்படுகின்றது. ஆயினும், உலகத்தின் விஷயங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தெய்வீகப் பிரமாணம் குறுகலாகவே இருக்கின்றது.

## “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்”

கள்ளப் போதகர்களிடமிருந்து, உண்மையுள்ளவர்களை நாம் அறிந்துக்கொள்வது எப்படி என்ற நம்முடைய கேள்விக்கு, “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்” என்று கர்த்தர் பதிலளிக்கின்றார். இதை விவரிக்கும் வண்ணமாக, பாலஸ்தீனியாவில் ஒரு முட்செடியில் திராட்சப்பழங்களைப்போன்ற பழங்களும், அத்திபழத்தின் வடிவத்திற்கு ஒத்த ஒருவகை முட்பூண்டுகளும் காணப்படுகின்றதாய் இருப்பினும், முட்செடிகளில் உண்மையான திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் உண்மையான அத்திப்பழங்களையும் எதிர்ப்பார்க்க முடியுமோ என்ற கேள்வியின் மூலம் கர்த்தர் விவரிக்கின்றார். ஆயினும், திராட்சப்பழங்கள் போன்றும், அத்திபழ வடிவைப்போன்றும் பழங்கள் இருந்தாலும், அதனை யாரும் திராட்சப்பழம் என்று நம்பி ஏமாறும் ஆபத்தில் இல்லை. அதோடுகூட, கர்த்தருடைய ஜனங்களில் எவரும் சக கிறிஸ்துவின் பின்னடியார்களுடைய ஜீவியத்தின் கனிகள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்பான விஷயத்தில் தெளிவில்லாதவர்களாகவும் இருக்கக்கூடாது.

கர்த்தருடைய உண்மையான ஜனங்களினுடைய ஜீவியத்தின் கனிகள், அவர்களோடு தொடர்புக்குள்வரும் அனைவருக்கும் புத்துணர்வையும், போஷாக்களிக்கின்றதாகவும் இருக்கும் என்பதே கருத்தாகும். அதேசமயம், முட்பூண்டுகளைப்போன்றிருப்பவர்கள் தப்பறைகள், பொல்லாத ஊகங்கள், தவறான உபதேசங்களெனும் பிரச்சனையை உண்டுபண்ணும் விதைகளை எப்பொழுதும் வீசிக் கொண்டிருப்பவர்களாகக் காணப்படுவார்கள். இன்னுமாக, சிலர் புத்துணர்வு அளிக்கும் கனியைக் கொடுப்பதற்குப் பதிலாக, முட்செடிகளைப் போன்று தங்களோடு தொடர்புக்குள் வருபவர்களை, காயப்படுத்துவதற்கும், தொந்தரவு பண்ணுவதற்கும், எரிச்சல் அடையச்செய்வதற்கும், மனவேதனை அடையப்பண்ணுவதற்கும், வளர்ச்சியைத் தடைபண்ணுவதற்கும் ஏதுவாக தொடர்ந்து செயல்படுகின்றவர்களாய் இருப்பவர்கள். கர்த்தருடைய ஜனங்களைத் தவறாய் வழிநடத்தக்கூடிய கள்ளப்போதகர்களுக்கும், மந்தைக்கான ஊழியத்திற்கெனத் தங்களுடைய ஜீவனையே சந்தோஷமாய் ஒப்புக்கொடுக்கக்கூடிய உடன் மேய்ப்பர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் கர்த்தருடைய ஜனங்களால் எளிதில் கண்டுகொள்ள முடியும் என்பதே கருத்தாகும். ஒரு வகுப்பார் எப்போதும் தீங்கு விளைவிப்பவர்களாகவும், பெலவீனப்படுத்துகின்றவர்களாகவும், நாசம் உண்டாக்குகின்றவர்களாகவும் இருப்பார்கள்; மற்றொரு வகுப்பார் எப்போதும் உதவி அளிப்பவர்களாகவும், கட்டி எழுப்புபவர்களாகவும், பெலப்படுத்துகின்றவர்களாகவும், சமாதானம் பண்ணுகின்றவர்களாகவும் இருப்பார்கள்.

ஓநாய்களுக்கும், மந்தைக்கும் மற்றும் கனிக்கொடுக்கிற செடிகளுக்கும், பாதகமான செடிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை நமக்கு அளித்தது போதுமென்று எண்ணாமல், நமது கர்த்தர் மற்றும் ஒரு விளக்கத்தை அதாவது, இன்னும் ஆராய்வதற்கு உதவியான ஒரு விளக்கத்தைக்கொடுக்கின்றார். கெட்ட மரத்திடமிருந்து நல்ல மரத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றார். தவறான ஒரு கிறிஸ்தவனிடமிருந்து, ஓர் ஆரோக்கியமான கிறிஸ்தவனை வேறுபடுத்திக்காட்டுகின்றார். நல்ல மரம் நல்ல கனிகளைக்கொடுக்கும், கெட்ட மரம் கெட்ட கனிகளைக்கொடுக்கும், அதாவது விரும்பத்தகாத பொல்லாத கனிகளைக்கொடுக்கும் என்று விவரிக்கின்றார். இவைகளை நாம் இயற்கையில் பார்த்திருக்கின்றோம். ஆரோக்கியமான நிலையிலுள்ள ஆப்பிள் மரம், ஆரோக்கியமான ஆப்பிள் பழங்களைக்கொடுக்கும். ஆனால், நோய் தாக்கப்பட்டு, பராமரிப்பு இல்லாமல் வெட்டி விடப்படாமல், புழுக்களால் தாக்கப்பட்டுள்ள மரமானது, புழுக்களுள்ள நலிந்துபோன கனிகளைக்கொடுக்கின்றன.

கர்த்தர் கொடுத்துள்ள இந்த உவமை விளக்கத்தில், சரியான விதத்திலேயும், ஆரோக்கியமான விதத்திலேயும் தங்களுடைய ஓட்டத்தை ஆரம்பிக்கும் தம்முடைய சீஷர்கள், பொல்லாதவர்களாகவும், தங்களுடைய ஆவிக்குரிய பெலத்தையும், கனிகொடுக்கும் தன்மையையும், கவனமாய் இருக்கும் தன்மையையும் இழந்து போகிறவர்களாகவும் ஆகுவதற்கு வாய்ப்புண்டு என்ற உண்மையைக் குறிப்பிடுகின்றார். மண்ணில் போஷாக்கற்ற தன்மை ஏற்படும்போது மரம் நோய்வாய்ப்பட்டு அழிந்து போய்விடுகின்றது. ஆகவே, கிறிஸ்தவன் ஒருவன் அறிவில் பெருகினாலும், சரியானவகையான ஆவிக்குரிய போஷாக்கை அவன் எடுத்துக்கொள்ளவில்லையெனில்,

ஆவிக்குரியவற்றில் கீழ்நோக்கிப்போவதற்கான வாய்ப்புகள் உண்டு. மேலும், தேவையற்ற மரக்கிளைகளை வெட்டிவிடாமல் இருக்கும்போது கிளைமுளைகள் (sucker) வளர்ந்து, மரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தி, அது கனி கொடுக்காதபடி, அதை இறுதியில் அழித்துப் போடுவதுபோல, கிறிஸ்தவனுக்கும் குணலட்சணமும், ஆவியின் கனிகளும் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக சிட்சைகள், தேவையற்றவைகளை வெட்டிவிடும் காரியம் அவசியமாகும். நம்முடைய பரமபிதா மாபெரும் தோட்டக்காரராவார். மேலும், சரியான பராமரிப்பை நமக்குக்கொடுப்பதாக அவர் வாக்களித்தும் உள்ளார். எனினும், மரங்களின் விஷயத்தில் காணப்படுவதுபோன்று, அப்படியே நம் விஷயத்தில் காணப்படுவதில்லை. காரணம், (மரங்களைக்காட்டிலும்) நம்முடைய உயர்தரமான பிறப்பினிமித்தமும், சித்தம், தனித்தன்மை ஆகியவற்றில் நமக்குத் தேவன் போன்ற சாயல் இருப்பதினிமித்தமும் நாம் வித்தியாசமாகக் கையாளப்படுகின்றோம்.

நமக்கு என்ன போஷாக்குத் தேவை என்று முடிவுபண்ணுவது ஒரு குறிப்பிட்டளவு நம்முடைய பொறுப்பில் விடப்பட்டுள்ளது. தேவன் சத்தியம் எனும் நல்ல மண்ணையும்/நிலத்தையும், புத்துணர்வு அளிக்கும் கிருபை எனும் மழை தூறலையும், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் எனும் போஷாக்கையும் கொடுக்கின்றார். ஆனால், இவைகளைப் பயன்படுத்திக் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்வதென்பது அவருடைய ஜனங்கள் ஒவ்வொருவருக்கான பொறுப்பாகும். ஒருவேளை நாம் குறைவுள்ளவர்களாகி, போஷாக்கு இன்மையின் காரணத்தினால் கனிக்கொடுக்காதவர்களாகிப்போனால், இதற்குத் தோட்டக்காரர் பொறுப்பாளியல்ல. அவருடைய நல்ல வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் போஷாக்கைக்கொடுக்கத் தவறுவதில்லை. நமக்குப் போஷாக்கு இல்லையெனில், தவறு நம்மிடத்தில்தான் உள்ளது. இப்படியே வெட்டிவிடுதலின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கர்த்தர் பரீட்சைகளை, கஷ்டங்களை, சிட்சைகளை அனுப்புகின்றார். ஆனால், இவைகளை நாம் தவிர்ப்பதும்/புறக்கணித்துத் தாண்டிச் செல்வதற்கும், இவைகளைப் பயன்படுத்தத் தவறுவதற்கும், இவைகள் மூலம் நம்முடைய சுபவாத்தில் வளர்ந்துள்ள தவறான காரியங்களையும், பெலவீனங்களையும், குறைவுகளையும் சரிச் செய்துகொள்ள தவறுவதற்கும் வாய்ப்புண்டு. எவ்வளவுதான் வளர்ச்சிகள் நம்மிடத்தில் ஏற்பட்டாலும் அல்லது எவ்வளவுதான் வெட்டிவிடுதலை நாம் பெற்றுக்கொண்டாலும், உவமையில் வருகின்றதுபோல நம்முடைய சத்துவத்தை எடுத்துப்போடுகிறதும் மற்றும் அங்கீகரிக்கப்படத்தக்கதான கனியை நாம் கொடுக்காதபடிக்கு நம்மைத் தடைபண்ணிப் போடுகிறதுமான கிளைமுளைகள் போன்றதான வீடுகள், நிலங்கள் (அ) பூமிக்குரிய இலட்சியங்கள், பொருட்கள் (அ) நபர்கள் மீது நாம் நமது ஆவல்களை வைப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு.

ஆரோக்கியமான மரம் கெட்ட கனிகளைக்கொடுக்க முடியாது; கெட்ட மரமும் நல்ல கனிகளைக்கொடுக்க முடியாது. கர்த்தருடைய ஜனங்களில் ஒவ்வொருவனும் தேவனுடைய வார்த்தை என்னும் கண்ணாடியின் முன்நின்று தன்னைப் பரிசோதித்து, தன்னுடைய சொந்த குணலட்சணங்கள், பண்புகள் தெய்வீக நிலைப்பாட்டிற்கு ஒத்துப்போகின்றதா (அ) ஒத்துப்போகாத நிலையில் இருக்கின்றதா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதாயினும், கனி நல்ல கனியா (அ) கெட்ட கனியா என்று தீர்மானிக்கும் இவ்விஷயத்தில் கர்த்தருடைய ஜனங்களிலுள்ள ஒவ்வொருவனும் மற்றவர்களுடைய விஷயத்திலும், தன்னுடைய சொந்த விஷயத்திலும் நியாயத்தீர்ப்பைப் பண்ணுவதற்குச் சொல்லப்பட்டுள்ளனர். அதாவது, என்னுடைய சொந்த வாழ்க்கையினுடைய பலன்கள், கனிகள், சாட்சி என்ன என்பதையும், என்னுடைய சகோதரனுடைய ஜீவியத்தினுடைய பலன்கள், கனிகள், சாட்சி என்ன என்பதையும் தீர்மானிப்பதில் நாம் நியாயத்தீர்ப்புச் செய்யலாம். இம்மாதிரியான பரீட்சைகள் தம்முடைய மந்தைக்குத் தலைவர்களாக இருப்பவர்களிடத்தில் விசேஷமாகப் பொருந்தும் என்று நமது கர்த்தர் குறிப்பிடுகின்றார். சபையை வழிநடத்துபவர்களாக இருப்பவர்கள் அனைவரும் மாதிரிகளாகக் காணப்பட வேண்டும். மேலும், இந்த நற்கனிகளே, நல்ல ஆரோக்கியமான குணலட்சணத்திற்குரிய அதாவது, கர்த்தருக்கு முழு இசைவுடன் காணப்படும் குணலட்சணத்திற்குரிய தேர்வாகப் பார்க்கப்பட வேண்டும். அனைவரும் பூரணமற்றவர்கள் என்பது உண்மைதான். மேலும், இருப்பதிலேயே சிறந்த நோக்கம் இருந்தாலுங்கூட, நாம் விரும்பிய அனைத்தையும் நம்மால் செய்ய முடியவில்லை என்பதும் உண்மையே. ஆனால், கர்த்தருடைய சகோதரர்களிலேயே பெலவீனனாய்க் காணப்படும் சகோதரர்கூட மற்றச் சகோதரர்கள் உணர்ந்துக்கொள்ளத்தக்கதாக சில கனிகளையாகிலும் கொடுக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். மேலும் இந்தக் கனிகளானது, மற்றச்

சகோதரர்களால் தெய்வீக நிலைப்பாட்டின்படி அதாவது, மாம்சத்தின்படியிராமல், ஆவியின்/சித்தத்தின்படி அங்கீகரிக்கபட வேண்டும். ஆகையால், தேவனுடைய உண்மையான பிள்ளைகளனைவரும், சகோதரருக்கு முன்பும், உலகத்துக்கு முன்பும் நேர்மையையும், நோக்கத்தில் உண்மையையும், அனைத்து விஷயங்களிலும் பரலோகத்திலிருக்கும் பிதாவினுடைய சித்தத்தையே செய்ய நாடும் அர்ப்பணிக்கப்பட்ட இருதயத்தை, மனதை, சித்தத்தை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருக்க வேண்டும்.

இன்றுவரையிலும் பாலஸ்தீனியாவில் கனிகொடுக்கும் மரங்கள் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆகையால், கனிகொடுக்காத மரமும், மிகக்குறைவான கனிகளைக் கொடுக்கும் மரமும் விட்டு வைக்கப்படுவதில்லை. ஏனெனில், இத்தகைய மரம் வைத்து வைக்கப்பட்டிருந்தால் வருமானம் வருவதற்குப்பதிலாக நஷ்டமே ஏற்படுகின்றது. இதற்கு இசைவாகவே நமது கர்த்தருடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. "என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்" (யோவான் 15:2).

யூத ஜனங்களை அடையாளப்படுத்துவதற்கென நமது கர்த்தர் அத்திமரத்தைப் பயன்படுத்தினார். மேலும், அது விரும்பிய கனி/பலனைக்கொடுக்கவில்லை என்றும், அது வெட்டப்பட்டு, அழிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டுகின்றார். யூத ஜனங்களை, முற்றிலும் அழித்துப் போட்ட அடையாளமான "அக்கினியானது" அத்திமரத்தை அழித்துவிட்டது. யூதர்கள் நிச்சயமாக கர்த்தருடைய கரத்திலிருந்து இன்னும் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருந்தாலும் கூட, அவ்வாசீர்வாதத்தை, "அவர்களுடைய பிதாக்களோடு பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல" என்று கர்த்தர் கூறுகின்றார் (எரேமியா 31:32). ஆசீர்வாதமானது, புதிய உடன்படிக்கையின் வாயிலாகவே எதிர்க்காலத்தில் இஸ்ரயேலுக்கும், மற்ற ஜாதியாருக்கும் கடந்துவரும். இதுபோலவே, இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவிலுங்கூட நல்ல மரம் மற்றும் கெட்ட கனி தொடர்பான தனி நபர் பரீட்சைகள், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் வருவது மாத்திரமல்லாமல், இன்னுமாக கிறிஸ்தவ மண்டலமும் ஒட்டுமொத்தமாகக் கனியற்றவர்களாகவும், கர்த்தருக்குத் திருப்தி அளிக்காதவர்களாகவும் நிரூபிக்கப்படுவார்கள்/கண்டுபிடிக்கப்படுவார்கள். மேலும், கர்த்தருடைய உண்மையான பரிசுத்தவான்கள் சேர்க்கப்பட்டு, மகிமையடைந்த பிற்பாடு, மரமாகிய அமைப்பு முழுவதுமாக மகா உபத்திரவக் காலத்திற்குள் கடந்து செல்லும். இந்த மகா உபத்திரவக் காலத்தோடு, இந்த யுகம் நிறைவடைந்து, புதிய யுகம் ஆரம்பமாகும். கிறிஸ்தவ மண்டலத்தில் காணப்பட்ட ஜனங்கள் ஆயிரவருஷ யுகத்தினுடைய உடன்படிக்கையின் கீழ் நிச்சயமாய்த் தயவடைந்து, ஆசீர்வாதம் அடைந்தாலுங்கூட, இவர்களுக்கு தற்காலத்திலுள்ள ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் முன்வைக்கப்பட்ட விசேஷமான சிலாக்கியங்களும், வாய்ப்புகளும் என்றென்றைக்குமாக மறைந்து போய்விடும்.

## "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை"

அடுத்ததாக, நமது கர்த்தர் பெயரளவிலான அநேக எண்ணிக்கைக்கொண்ட பின்னடியார்கள், அவருடைய ஆவியைக்கொண்டிராதவர்களாகவும், அவர் விரும்புகிற கனிகளைக்கொடாதவர்களாகவும், அவரால் அழைக்கப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் வகுப்பாரின் அங்கங்கள் அல்லாதவர்களாகவும் காணப்படுவார்கள் என்று கூறுகின்றார். ஆனால், வெளித்தோற்றத்தில் அழைக்கப்பட்டவர்கள் போன்றும், அவர் விரும்பும் கனிகொடுக்கிறவர்கள் போன்றும் காணப்படுவார்கள். இப்படியாக, இருப்பவர்கள் "அநேகராய்" இருப்பார்கள் என்றும் கர்த்தர் குறிப்பிடுகின்றார். இன்னுமாக, அவர் "அந்நாளில்" இருப்பார்கள் என்று சொல்லும்போது, நம்முடைய நாட்களை அதாவது, இந்த யுகத்தின் முடிவின்போது . . . சோதனை காலத்தை . . . தம்முடைய சம்பத்தைக் கூட்டிச் சேர்க்கவும், அவர்களைத் தம்முடைய மணவாட்டியாக, தம்முடைய அங்கங்களாக, இராஜ்யத்தில் தம்முடன் கூட இருப்பவர்களாக மகிமைப்படுத்தபடும் வருங்காலத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். "அந்நாளில் . . ." அதாவது நம்முடைய நாட்களில் அநேகர், தாங்கள் கர்த்தரை அறிவார்கள் என்றும், தாங்கள் தீர்க்கத்தரிசனம் சொல்பவர்கள் (அ) போதகர்கள் என்றும், தாங்கள் பிசாசுகளைத் துரத்தி, பாவத்தையும், பல்வேறு தீமைகளையும் எதிர்த்தார்கள் என்றும், அவருடைய நாமத்தில் பல

வல்லமையான கிரியைகளைச் செய்தார்கள் என்றும், கல்லூரிகள், குருமார்கள் பயிற்சி கல்லூரிகளையும், உதவி புரியும் காப்பகங்கள் முதலியவைகளை அமைத்தார்கள் என்றும் கூறுவார்கள். "உம்முடைய நாமம்" என்று சொல்லுகையில் இவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை மந்திரம்போல் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது.

இவ்விஷயங்கள் நம்முடைய நாட்களில் எவ்வளவு உண்மையாகக் காணப்படுகின்றது! ஆண்டவருடைய வார்த்தைக்கும், ஆவிக்கும் எதிரான விதத்தில் அடிக்கடி எத்தனை பேர் கர்த்தருடைய நாமத்தை வழங்கி, தங்களுடைய வியாபார நிறுவனங்களோடு, கர்த்தருடைய நாமத்தை இணைத்துக்கொள்கின்றனர். ஏன் இவர்கள் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகின்றனர்? மந்திர வார்த்தைகளாகப் பயன்படுத்திக்கொள்ளும் மந்திரவாதிபோல இவர்கள் செயல்படுகின்றனர். இன்னுமாக, தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதற்கும், தங்களுடைய மனங்களைத் திருப்திப் படுத்திக்கொள்வதற்கும், தங்களுடைய சுய சித்தங்களைச் செய்து வருவதின் மூலம், தாங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்து வருகின்றார்கள் என்று தங்களையே நம்ப வைப்பதற்கும், கர்த்தருடைய நாமத்தை இவர்கள் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். இவ்விஷயங்கள் நம்முடைய நாட்களிலுள்ள அனைத்து மத அமைப்புகளிலும் எவ்வளவுக்கு உண்மையாகக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு சபைகளை எடுத்துக்கொள்ளுங்கள், இவர்களுடைய மதவெறியின் ஆவிக்கும், விசுவாசப் பிரமாணங்களுக்கும், முறைகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராக தெய்வீகப் பார்வை காணப்படுகின்றது என இவர்கள் ஏறக்குறைய தெளிவாக அறிந்திருந்தபோதிலும், இவர்களுடைய அமைப்புகளுடனும்/ ஸ்தாபனங்களுடனும், முறைமைகளுடனும் கிறிஸ்துவின் நாமத்தை ஏதோ ஒருவிதத்திலாகிலும் இணைத்துக்கொள்ளாததுவரையிலும் இவர்கள் திருப்திக்கொள்வதில்லை.

ஆனால், பரீட்சிக்கின்ற காலம் சமீபித்துள்ளது. இந்த அமைப்புகளுடைய கனிகுறித்து கர்த்தர் விசாரிப்பார்; அவர் ஏமாற்றப்பட முடியாதவர்; அனைவரும் தம்முடைய நியாயத்தீர்ப்பு நீதியானது என்று காணத்தக்கதாக, கெட்ட கனிகளை அவர் வெளிப்படுத்துவார். கர்த்தருடைய வார்த்தைகள் இவர்களால் புறக்கணிக்கப்பட்டதினிமித்தம் சீர்க்குலைவு ஏற்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்படும். கிளைமுளைகளைத் தறித்துப்போடுவதற்கு ஏதுவான அனுபவங்களனைத்தும் அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும், கர்த்தருடைய வார்த்தைகள் புறக்கணிக்கப்பட்டதினிமித்தம் பெருமை, ஆஸ்தி, உலகப்பிரகாரமான இலட்சியம், பகட்டுத்தன்மை முதலிய கிளைமுளைகள் விருத்தியடைந்துள்ளது வெளிப்படுத்தப்படும். பாபிலோனிலுள்ள தீர்க்கத்தரிசிகள், கள்ளத் தீர்க்கத்தரிசிகள் என்றும், இவர்களுடைய போதனைகளானது ஜனங்களைத் தவறாய் வழிநடத்தியுள்ளது என்றும், ஆசீர்வாதம் அருளுவதற்குப் பதிலாகப் பாதகத்தையே/பாதிப்பையே உண்டுபண்ணியுள்ளது என்றும், பிரகாசமடையச் செய்வதற்குப்பதிலாக குருடாக்கவே செய்துள்ளது என்றும் வெளிப்படுத்தப்படும். இவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்தியுள்ள பட்சிக்கிற ஓநாய்கள் என்றும், மனுஷருடைய கனம் மற்றும் முக்கியத்துவம் மற்றும் பிரபலத்தை அடக்கியுள்ள இலட்சியங்களுக்காக பசி கொண்டவர்கள் என்றும், தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களைப் பெருக்கிக்கொள்வதற்காக மந்தையின் நலன்களை விற்றுப்போட்டவர்கள் என்றும் வெளிப்படுத்தப்படும். இவர்கள் மற்றவர்களை வஞ்சிக்கும் விஷயமும், தங்களையே வஞ்சித்துப்போட்ட விஷயமும், மதவெறியின் விஷயமும், இயேசுவின் நாமம் எனும் மந்திர வஸ்திரத்தின் கீழ் இவர்கள் விருத்திச்செய்த காரியமே ஒழிய, இவர்கள் அன்பு, சந்தோஷம், சமாதானம் மற்றும் பரிசுத்த ஆவியை விருத்திச் செய்துகொள்ளவில்லை என்பதும் வெளிப்படுத்தப்படும். இவைகள் அனைத்தையும் அந்நாள் அறிவிக்கும்/வெளிப்படுத்தும். இவர்களால் தேவனுடைய நாமம் கனவீனப்படுத்தப்பட்டது என்பதற்கும், அவருடைய வார்த்தைகள் தவறாய்க் காட்டப்பட்டது என்பதற்கும், இறுதியில் முழு உலகமும் சாட்சியாக விளங்குவார்கள். கள்ளத் தீர்க்கத்தரிசிகள் தங்களுடைய சொந்த பொழிவை/ஆதாயத்தை அதாவது, தங்களுடைய சொந்த சபை பிரிவின் ஆதாயத்தையே தேடினவர்களாக இருந்தார்கள் (ஏசாயா 56:11).

கர்த்தர் இந்தச் சபை பிரிவுகளை ஒருபோதும் அறியவில்லை. அதாவது, அவர் இவைகளை ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை, அவர் இவைகளுக்கு அதிகாரமும் அளிக்கவில்லை. இவை மனுஷரால் உண்டுபண்ணப்பட்டவைகளும்,

மனுஷனுக்கானவைகளுமே ஒழிய, கர்த்தருக்காகவும் கர்த்தருடைய மகிமைக்காகவும் அல்ல. கிறிஸ்தவ மார்க்கத்தினுடையதாய்க் காணப்படும் அனைத்தும் தங்களால்தான் என்று கூறி, பெருமைகொண்டு, தற்பெருமை அடித்துக்கொண்டிருக்கும் இவர்களோ, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டதும், மீட்பருக்கென்று அர்ப்பணம் பண்ணிக்கொண்டதுமான ஆதி திருச்சபையாரின் எளிமையின் மூலமாகத் கர்த்தருடைய நோக்கம் தழைத்தோங்கும்விஷயத்தில், தங்களுடைய உதவி இல்லாமலேயே தழைத்தோங்கியிருக்கும் என்பதை உணராமல் காணப்படுகின்றனர். மணவாட்டி வகுப்பார் சேர்க்கப்பட்டு, மீதமானவர்கள் விடப்படுவதைத்தான், "நான் உங்களை ஒருக்காலும் அறியவில்லை, ஒருக்காலும் உங்களை அங்கீகரிக்கவில்லை, ஒருக்காலும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை" என்ற வார்த்தைகள் தெரியப்படுத்துகின்றன. மேலும், கர்த்தரிடமிருந்து அதிகாரம் பெற்றிராத இந்தச் சபை பிரிவுகள், மகா உபத்திரவக் காலத்திற்குள் கடந்து செல்வார்கள். இந்தப் போலி அமைப்புகள் மூலம் வஞ்சிக்கப்பட்டுள்ள அனைத்து ஜனக்கூட்டமும், சத்தியத்தை அறிந்துக்கொள்வதற்கும், தேவனுடைய கிருபையான திட்டத்தின் நிறைவேறுதலில் வெளிப்படும் அவருடைய குணலட்சணத்தைப்பற்றின சரியான புரிந்துக்கொள்ளுதலை அடைவதற்குமுரிய மகிமையான வாய்ப்புகளுக்குள் ஆயிரவருஷ யுகத்தில் கடந்துவருவார்கள் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆகவே, மாபெரும் பரிசையடைய தவறுகிறவர்கள், சிறிய பரிசை (அ) சீர்ப்படுத்தப்படுதலில் தேவதயவைப் பெற்றுக்கொள்வதற்கான மகிமையான வாய்ப்பை இன்னமும் பெற்றிருக்கின்றார்கள்.

## “அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்”

"பாபிலோன்" என்று அழைக்கப்படும் சபை பிரிவுகளுக்குள் இன்னமும் உற்சாகமுள்ள வேலைக்காரர்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்களிடத்தில் சத்திய அறிவு சென்று சேர்ந்து, அவர்களை விடுவிக்கும் என்றும் நாம் நம்புகின்றோம். இதைக் கர்த்தர், "என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வா" என்று கூறுவதன் மூலம் தெரிவிக்கின்றார். அவருடைய ஜனங்களில் சிலர், பாபிலோனில் இன்னமும் காணப்படுவதை முன்வைப்பதின் மூலம், இவர்களை வெளியே வரும்படி அழைப்பதே, கர்த்தருடைய நாமத்தில் நாம் தற்காலத்தில் செய்ய வேண்டிய ஊழியமாகும். இந்தத் தற்கால/ஏற்றகால சத்தியமானது கர்த்தருக்கு உரியவர்கள் யார் என்றும், அவர்கள் எங்கே நிற்கின்றார்கள் என்பதையும், அவர்களுக்கான கடமை என்னவென்பதையும் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. அக்கிரமத்தின் அமைப்புகளிலுள்ள, உற்சாகமுள்ள வேலைக்காரர்கள் தவிர மீதமானவர்கள், உண்மைக்கு எதிராகக் காணப்படுகின்ற இவர்கள், தேவனுடைய செய்தியைத் தவறாய்க் காட்டுகின்றவர்களாகிய இவர்கள், ஜனங்களை அடிமைப்படுத்தி வைத்துள்ளவர்களாகிய இவர்கள், இருதயத்தில் கர்த்தருக்கு உண்மையாக இராதபடியினால், பாபிலோனிலிருந்து வெளியே வரமாட்டார்கள். மேலும், இவர்கள் பாபிலோன் மீதுவரும் கண்டனத்துக்கு உள்ளாவார்கள். இவர்கள் மகா உபத்திரவக் காலத்திற்குள் பிரவேசித்து, சிறிது காலம் கர்த்தருடனான அனைத்து ஐக்கியத்தினின்றும் துண்டிக்கப்படுவார்கள். இந்த அக்கிரமத்தின் ஊழியக்காரர்கள், தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டத்தைத் தவறாய்க் காட்டி, மனுக்குலத்தின் உலகத்தின்மேல் வருவதற்கு உதவிபுரிந்த உபத்திரவங்களுக்குள் முழுமையாய் அமுக்கப்படுவார்கள். அது கடுமையான சிட்சையாக இருக்கும். "உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" என்பதே இவர்களுக்கான நம்முடைய நம்பிக்கையாகும் (ஏசாயா 26:9).

## “கன்மலையின் மீதா அல்லது மணலின் மீதா”

ஊவமையில் கன்மலையின் மீது கட்டப்பட்ட வீடானது சபையையும் மற்றும் மணலின் மீது கட்டப்பட்ட வீடானது உலகத்தையும் குறிப்பதில்லை. மாறாக, சபைக்குள் இருக்கும் இரு பிரிவினரையே குறிக்கின்றது. "அவர் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்பவர்களே" இவ்வுமையில் அடங்குகின்றனர் (இவ்வுமையில் வரும் பாத்திரங்கள் ஆவர்). உலகம் நமது கர்த்தருடைய செய்தியைக் கேட்பதில்லை. அப்போஸ்தலர் கூறியுள்ளதுபோன்று, உலகத்தார் ஆவியக்குரிய விஷயங்களுக்குக் குருடர்களாகவும், செவிடர்களாகவும் இருக்கின்றனர். கர்த்தருடைய வார்த்தைகளைக்கேட்டு, அதனை ஏற்றுக்கொள்கிறவர்கள் பெயரளவிலான

சபையாராக இருக்கின்றனர். இப்படியாகப் பெயரளவாகக் காணப்படும் சபையார் மத்தியில் சிலர் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். மற்றவர்களோ கீழ்ப்படியாதவர்களாகக் காணப்படுகின்றனர். கீழ்ப்படிகின்றவர்கள், கன்மலை மீது கட்டப்பட்டவர்களாகவும், கீழ்ப்படியாதவர்கள் மணல் மீது கட்டப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

கன்மலையின் மீது கட்டப்பட்டவர்கள், கர்த்தருடைய செய்தியைக் கேட்பவர்களாக மாத்திரம் இராமல், அதற்குத் தங்களால் முடிந்தமட்டும் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இருக்கின்றனர் எனக் கர்த்தர் கூறுகின்றார். மலைப்பிரசங்கத்தின் வாயிலாக எவைகள் தேவனுடைய அங்கீகரிப்பிற்குப் பாத்திரமானவைகள் என்றும், எவைகள் தேவனுடைய அங்கீகரிப்பிற்குப் பாத்திரமற்றவைகள் என்றும் கர்த்தர் கூறின விஷயங்களே கர்த்தருடைய செய்தியாகும். இந்தத் தெய்வீகப் போதனைகளுக்கு, பரலோகத்தின் செய்திகளுக்கு ஏற்றபடிச் செய்கின்றவர்களும், செய்வதற்குத் தங்களால் முடிந்தளவுக்கு நாடுபவர்களும் நிலையாய் இருக்கும் அஸ்திபாரத்தைப் போட்டுக்கொள்கின்றனர். இந்த அஸ்திபாரம் தற்கால ஜீவியத்தின் புயல்கள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகளால் சேதமடைவதில்லை.

ஆண்டவருடைய வார்த்தைகளைக் கேட்டு, அதற்கு "ஆம் கர்த்தாவே" என்று கூறியும், செயல்முறையில் ஆண்டவருடைய போதனைகளைச் செயல்படுத்தாதவர்கள், கிறிஸ்து மீது, அதாவது சத்தியம் எனும் கன்மலையின் மீது சரியாகக் கட்டப்படாதவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் நிலையற்ற அஸ்திபாரத்தின் மீது தங்களுடைய நம்பிக்கையை, தங்களுடைய விசுவாசத்தைக் கட்டிக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் மீது ஜீவியத்தின் நாசமோசங்கள் வருகையில், இவர்களுடைய நம்பிக்கை வலுவிழந்துவிடுகின்றன; மற்றும், இவர்களுடைய விசுவாசம் சீர்க்குலைந்து போய்விடுகின்றன. இவ்விதமாக, நாம் அவருடைய சித்தத்தை அறிந்துக்கொள்வது அதாவது, உபதேச ரீதியாக அறிந்துக்கொள்வது மாத்திரம் போதுமானதாயிராமல், மாறாக அவருடைய போதனைகளுக்கு முழு இசைவான நிலையில் நாம் கொண்டுவரப்படுவதற்கும், இருதய பூர்வமான இசைவான நிலையில் நாம் கொண்டு வரப்படுவதற்கும், நம்மால் முடிந்தமட்டும் ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் கீழ்ப்படியும் நிலையில் கொண்டுவரப்படுவதற்கும் ஏதுவான குணலட்சணத்தினுடைய அத்தகைய ஒரு வளர்ச்சியைக் கர்த்தர் எதிர்ப்பார்க்கின்றார் என்பதை நமக்குக் கற்றுக்கொடுக்கின்றார். கீழ்ப்படிதல் இல்லாத, கிருபையில் வளர்ச்சியில்லாத அறிவின் மீது கட்டப்பட்ட விசுவாசத்தை உடையவர்கள், இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள், மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாகவும் இருக்கமாட்டார்கள், தேவனுடைய நேச குமாரனோடு உடன்சுதந்திரராகவும் ஆகமாட்டார்கள்.

## “அந்நாளின் அக்கினி”

இப்பாடத்தில், நமது கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்கள் மீது வரும் சோதனைகள் மற்றும் பரீட்சைகளை மாத்திரம் விவரியாமல் விசேஷமாக, இந்த யுகத்தின் முடிவில் அதாவது, "அறுவடை" காலத்தில் வரும் மாபெரும் பரீட்சையையும் விவரிக்கின்றவராக இருக்கின்றார். உவமையில் அவருடைய பின்னடியார்கள் என்று அறிக்கைப் பண்ணுபவர்களுடைய விசுவாச கட்டிடத்தின் மீது பெருமழை, பெருவெள்ளம் மற்றும் காற்று அடிக்கின்றது. மேலும், இவைகள் கர்த்தருடைய போதனைகளுக்கு இசைவாக சரியான விதத்தில் கட்டப்படாதவர்களின் விசுவாசத்தைக் கவிழ்த்து விடுகின்றது. ஆனால், சத்தியம் எனும் கன்மலை மீது அஸ்திபாரமிடப்பட்டவர்களின் விசுவாசத்தைச் சேதப்படுத்த முடியவில்லை என்று பார்க்கின்றோம். கிறிஸ்தவ மண்டலம் முழுவதின் மீதும், ஒரு வல்லமையான சத்திய பெருமழை சொரிந்துக்கொண்டு இருக்கின்றது. பயங்கரமான/பெரிய காற்று ஏற்கெனவே சீறி வீசிக்கொண்டிருக்கின்றது. பல்வேறு சபை பிரிவுகள் அதிர்ச்சியில் நடுங்கிக்கொண்டிருக்கின்றது. மனித பாரம்பரியம், விசுவாசப் பிரமாணங்கள், கூற்றுகள், "இருண்ட யுகத்தினுடைய" மூட நம்பிக்கைகள், அறிவீனங்கள் மீதான அவர்களுடைய அஸ்திபாரங்கள் திருப்தியற்றது என்பது உணரப்பட்டு வருகின்றது. சீக்கிரத்தில் சத்தியம் எனும் புயல்கள் (காற்று), பெயர்ச்சபையின் மணலாகிய அஸ்திபாரத்தை அசைத்துவிடும். பின்னர் அழிவு தொடரும். தேவனுடைய உண்மையான ஜனங்கள் மாத்திரமே, ஏற்கெனவே ஆரம்பமாயுள்ள "அந்நாளுக்குரிய" மாபெரும் புயலில் நிலைநிற்பார்கள்.

கர்த்தர் குறிப்பிட்டுள்ள இதே வெள்ளத்தையும், காற்றையும்தான், ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. "நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும். நீங்கள் மரணத்தோடு செய்த உடன்படிக்கை விருதாவாகி, நீங்கள் பாதாளத்தோடு செய்த ஒப்பந்தம் நிற்காதேபோம்; வாதை புரண்டுவரும்போது அதின்கீழ் மிதிக்கப்படுவீர்கள். அது புரண்டு வந்த மாத்திரத்தில் உங்களை அடித்துக்கொண்டுபோம்; அது நாள்தோறும் இரவும்பகலும் புரண்டுவரும்; அதைப்பற்றிப் பிறக்கும் செய்தியைக் கேட்பதும் சஞ்சலத்தை உண்டாக்கும்." (ஏசாயா 28:17-19)

இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலும், "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" என்று கூறியுள்ளார் (1 கொரிந்தியர் 3:13). பவுல் உண்மையான விசுவாசிகள் கன்மலையின் மீது, உண்மையான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்பதை மாத்திரம் சுட்டிக் காண்பிக்காமல், சரியான வீடும் இருக்க வேண்டியதின் அவசியத்தையும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றவராக இருக்கின்றார். அதாவது விசுவாசமும், (வீடு) சரியான அஸ்திபாரமும் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றார். ஒருவகை விசுவாச வீடு மரம், புல், வைக்கோலால், எரிந்து அழிந்து போகக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டுள்ளது என்றும், இவைகள் ஒவ்வொரு உபதேசத்தையும் சோதித்து, தப்பறைகளை அழித்துப்போடும் தெய்வீக நியாயத்தீர்ப்பு என்னும் அந்நாளுக்குரிய அக்கினியால் விரைவில் அழிக்கப்பட்டுவிடும் என்றும் பவுல் சித்தரித்துக் காட்டுகின்றார். இன்னும் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள், தெய்வீக வாக்குத்தத்தங்களினால் கட்டப்பட்டுள்ள சரியான இன்னொரு வகை விசுவாச வீட்டையும், அவை எப்படி ஒவ்வொரு பரீட்சையிலும் நிலைத்து நிற்கும் என்றும் பவுல் சித்தரித்துக் காட்டுகின்றார்.

எந்தப் பரீட்சையிலும் நாம் நிலைத்து நிற்கத்தக்கதாக நாம் கற்பாறையான அஸ்திபாரத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பது முதலாம் படிப்பினையாகும். இரண்டவதாக, கிறிஸ்துவின் மீது விசுவாசமும், அவருக்கும், பாவ நிவாரண வேலையிலும் நேர்மையும் கொண்டு, கன்மலை மீது காணப்படுபவர்களில் இரண்டு வகுப்பார் காணப்படுவார்கள் என்பதாகும். "சிறு மந்தையினர்" என்ற வகுப்பார், தேவ வார்த்தைக்கு உண்மையுடனிருந்து, அதை உயர்த்திப்பிடித்து, அதைப் பாதுகாத்தவர்கள் ஆவார்கள்; மற்றும் "திரள்கூட்டத்தினர்" என்ற வகுப்பார் தெய்வீக வாக்குத்தத்தம் தொடர்பான விஷயங்களில் போதுமானளவு ஜாக்கிரதை கொண்டிராதவர்களும், போதுமானளவு கடினமாய் முயற்சிக்காதவர்களும் ஆவார்கள். மேலும், திரள்கூட்டத்தினருடைய விசுவாசக் கட்டிடமானது பட்சிக்கப்படத்தக்கதான தப்பறைகளைப் பெருமளவில் கொண்டுள்ளது. "ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்." "அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (1 கொரிந்தியர் 3:12, 15; வெளிப்படுத்தல் 7:14).

## “திருவசனத்தின்படிச் செய்கிறவர்களாக இருங்கள்”

"திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்கோபு 1:22). தெய்வீகச் சித்தம் மற்றும் திட்டம் பற்றின அறிவினால் நாம் கனப்படுத்தப்படுவது, மாபெரும் ஆசீர்வாதமும், வரமுமாக இருந்தாலும் கூட, இது மாபெரும் பொறுப்பையும் நமக்குக்கொண்டு வருகின்றது. "எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்" (லூக்கா 12:48).

பரலோகத்திலிருந்து இயேசு கிறிஸ்து மூலமாய்ச் சமாதானத்தைப் பேசுபவருடைய குரலைக் கேட்டுள்ள நமக்கு, பாவமன்னிப்புப்பற்றின செய்தியினுடைய பலத்தினால், அர்ப்பணிப்பின் வாயிலாக, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நமக்கு, மற்றவர்களைக்காட்டிலும் அதிக பொறுப்புள்ளது. நாம் அழைக்கப்பட்டுள்ள மகிமையான காரியங்களை அடைவதற்கு நாம் இந்தக் கனத்தை மாத்திரம் கொண்டிருப்பவர்களாயிராமல், நாம் சிலாக்கியங்களைப் பயன்படுத்த வேண்டும்; மற்றும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு நம்முடைய கீழ்ப்படிதல் மூலமாக நாம் சிலாக்கியங்களை ஏற்றுக்கொண்டுள்ளதையும் காட்ட வேண்டும். தெய்வீக ஊழியத்திற்கு நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தல், நீதிக்கு உண்மையாய்க் கீழ்ப்படிதல் மற்றும் இதே பாதையில் மற்றவர்களும் செல்வதற்கான உதவி அளிப்பதில் பிரயாசம் எடுத்தல் எனும் வகையில் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிதல் காட்டுவதின் மூலம் நாம் சிலாக்கியங்களை ஏற்றுக்கொண்டுள்ளதையும் காட்ட வேண்டும்.

---

**R3754**

# “இயேசுவுக்குள் உயிர்த்தெழுதலின் வல்லமை”

## லூக்கா 7:1-17

"இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்.” - யோவான் 11:25

நமது கர்த்தராகிய இயேசுவுக்குள் உயிர்த்தெழுதலின் வல்லமை காணப்பட்டது. ஏனெனில், தெய்வீக திட்டத்தின்படி இவரே தம்மைப் பலியாக்குவதின் மூலமாக உலகத்தை மீட்டுக்கொள்ளவும், பின்னர் உலகத்தை முன்னிருந்த நிலைமைக்குக்கொண்டு வரவேண்டியவராக இருக்கின்றார். இவ்வேலைகள் இவர்களை மரணத்தினின்று விழித்தெழுப்புவதாக மாத்திரம் காணப்படாமல், நோயினுடைய மரித்துக்கொண்டே இருக்கும் நிலையை மேற்கொள்வதற்கு ஏதுவான அத்தகைய ஓர் உயிர் ஆற்றலையும் இவர்களுக்கு அளித்து, இறுதியில் இப்படியாக உயிர்த்தெழுப்பப்பட்ட இவர்கள், கீழ்ப்படியாமையின் காரணமாக கிடைத்திட்ட "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்” (எசேக்கியேல் 18:4) என்ற வசனத்தினுடைய தீர்ப்பினிமித்தம் நம்முடைய ஆதிப்பெற்றோர்கள் ஏதேன் தோட்டத்தில் இழந்துபோயிருந்த முழுப் பூரணத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள். இதுவே நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீகத் திட்டத்தினுடைய அனைத்துக் காரியங்களிலுமே மிக முக்கியமான அம்சமாகும். மேலும், இதை நாம் தெளிவாகப் புரிந்துக்கொள்வோமானால், இது தெய்வீகத் திட்டத்தினுடைய மற்ற அனைத்து அம்சங்களையும் நாம் புரிந்துக்கொள்வதற்கு உதவி செய்துவிடும். மரணம் என்பது ஜீவனற்ற நிலை, ஜீவன் இழந்துபோன நிலை என்றும், ஜீவன் பெற நாம் அபாத்திரர்களாகத் தீர்க்கப்பட்டுள்ளபடியால், இம்மரணம் நம் இனத்தின் மீது காணப்படும் தண்டனையாக இருக்கின்றது என்றும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

ஆதி பாவம் காரணமாக நம் மீது வந்துள்ள சாபம் அல்லது தீர்ப்பினின்று உள்ள மீட்பையே, எதிர்க்கால ஜீவியத்தைக்குறித்த அனைத்து வேதவாக்கியங்களும் குறிப்பாகக் காட்டுகின்றது. கடனை (அ) தீர்ப்பை ரத்து செய்வது என்பது மனுக்குலத்தை மீண்டும் முந்தின நிலைக்குக் கொண்டு வருவதில்லை என்றாலும், அது மனிதன் இழந்த அனைத்தையும் மீண்டுமாக திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு, அவனுக்கு இருந்த நீதியின்படியான தடையை மாற்றிவிட்டது. பின்வரும் காரியங்களே நமது இரட்சகருடைய வேலையாக இருக்கின்றது. முதலாவதாக, கர்த்தரின் வேலையானது மீட்பின் வேலையாக இருக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்தில் மீட்கப்பட்டவர்களில் சிலரைத் தம்முடைய அங்கங்களாக, தம்முடைய மணவாட்டியாக, தம்முடைய சபையாக, தலையாகிய தம் கீழ் ஏற்றுக்கொள்வதற்கும், அடுத்த யுகத்திற்குரிய சீர்த்திருத்துதலின்/திரும்பக்கொடுத்தலின் மாபெரும் வேலையில் இவர்களைத் தம்முடன் உடன்வேலையாட்களாக ஏற்றுக்கொள்வதற்கும் கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகத்தை பயன்படுத்தினாலும், இந்த மீட்பு, அவருடைய முதலாம் வருகையின்போதே செய்து முடிக்கப்பட்டது.

இரண்டாவதாக, கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது அவருடைய சபை, அவருடைய அங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டு, ஆயத்தப்படுத்தப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டு, அவருடன் கனத்திலும், மகிமையிலும், அழியாமையிலும் பங்கடைந்து காணப்படும்போது, அவருடைய வேலை திரும்பக்கொடுத்தலாகக் காணப்படும். அப்பொழுது மீட்பின் முழுவேலையும் மனுக்குலத்தின் உலகத்தின் மேல் செலுத்தப்படும் . . . இது இவர்களை மரணத்தினின்று விழித்தெழுப்பி, அக்க்ஷணமே முழுமையான பூரணம் அடையச்செய்வதின் மூலம் செய்யப்படாமல் மாறாக, முதலாவதாக இவர்கள் மரணம் எனும் நித்திரையினின்று விழித்தெழுப்பப்பட்டு, பிற்பாடு ஆயிரவருஷ யுகத்திற்குரிய போதனைகள் மற்றும் ஒழுக்கங்கள் மூலம் இவர்களுடைய ஒத்துழைப்புடன், இவர்கள் படிப்படியாகச் சீர்த்தூக்கப்பட்டு மேலும், இந்த இரக்கங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு இவர்கள் வெளிப்படுத்தும் பதிலுக்கேற்ப இவர்கள் படிப்படியாக பாவம் மற்றும் மரணத்தினின்று, நித்தியஜீவனுக்குள் கொண்டுவரப்படுவார்கள். கீழ்ப்படியாதவர்கள் நித்தியஜீவன் பெற்றுக்கொள்ள அபாத்திரர்களாகக் கருதப்பட்டு இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவார்கள்.

## “ஜீவன் கொடுப்பவராகிய இயேசு”

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தினுடைய (யோவான் 11:25) வார்த்தைகள் நம்முடைய கர்த்தருக்கு விசேஷமாக எதிர்காலத்தில் பொருந்தக்கூடியதாக இருப்பினும் அதாவது, அவருடைய ஆயிரவருஷ ஆளுகையின் ஆரம்பத்தில் அவருக்குப் பொருந்தக்கூடியதாக இருப்பினும் அதாவது, மரணத்தை அழித்துப்போட்டு அதன் வல்லமையினின்று, மாபெரும் சிறைச்சாலையினின்று, விழுகையின் காரணமாக வந்திட்ட பெலவீனங்களினின்று மனுக்குலத்தை அவர் தூக்கி எடுக்கும்போது அவருக்குப் பொருந்தக்கூடியதாக இருப்பினும், சிலவிதங்களில் அவருடைய முதலாம் வருகையின்போதும் அவருக்குப் பொருந்தக்கூடியதாகவும் இருக்கின்றது. நமது கர்த்தருடைய சொந்த பலியானது, அவர் கல்வாரியில் மரிப்பதுவரையிலும் நிறைவேறாமல் இருப்பதும் மற்றும் அவருடைய சரீரத்தினுடைய அங்கங்களின் பலிகள் நிறைவேறி முடிவதற்குப் பல நூற்றாண்டுகள் இருக்கின்றது உண்மைதான். ஆனால், நமது கர்த்தர், 30-ஆம் வயதில் பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கும், தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்குமெனத் தம்மையே முழுமையாக அர்ப்பணம் பண்ணினபோது, அவர் செய்யும்படிக்கு தமது கையில் எடுத்துக்கொண்ட அந்தத் தெய்வீகத் திட்டமானது, பிற்பாடு நிறைவேறி முடியப்போகிற தம்முடைய சொந்த பலியினுடைய நிறைவேறுதலையும், தம்முடைய சபையாகிய நிறைவடையும் சரீரத்தின் பலியினுடைய நிறைவேறுதலுமாகிய அம்சங்களையும் உள்ளடக்கினதாகக் காணப்பட்டது.

நமது பரம பிதா, கர்த்தர் தமது பலியை (நிச்சயமாய்) நிறைவேற்றித் தீருவார் என்று கருதின காரியமானது, பிதா பரிசுத்த ஆவியைக் கர்த்தருக்கு அருளின காரியத்திலிருந்து உறுதியாகுகின்றது. கர்த்தர் மேல் அருளப்பட்ட இந்த அபிஷேகமானது, அவரை மேசியாவாக, கிறிஸ்துவாக, சபையாகிய கர்த்தரின் சரீரத்தினுடைய நம்பிக்கையாகவும் மற்றும் இறுதியில் நடைபெறப்போகிற அனைத்துக் காரியங்களுக்குமான நம்பிக்கையாகவும் ஆக்கியது. ஆகவே, நமது கர்த்தர், தாம் பண்ணின பலியின் அந்த உடன்படிக்கையை, பலியை ஒருபோதும் தவறாதபடியினாலும், மற்றும் பிதாவும் அவரைத் தவறாதவராகவே கருதினபடியினாலும், கர்த்தர் தம்முடைய சொந்த ஓட்டம் முடிவுபெறும் என்ற விசுவாசத்திலும், அதேசமயம் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவை நம்பிக்கையில் கண்ணோக்கினவராகவும், ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவில் தேவனுடைய அனைத்து நல் திட்டங்களும்/நோக்கங்களும், தமக்குள்ளும், தம் மூலமாகவும் இறுதியில் நிறைவேறித் தீரும் என்ற நிச்சயத்துடன் கண்ணோக்கினவராகவும் அவர் காணப்பட்டபடியினாலும், இக்கண்ணோட்டத்தின்படி அவர் எண்ணுவதும், செயல்படுவதும், பேசுவதும் அவருக்கு ஏற்றவைகளாக இருக்கின்றன. ஆகையால், இக்கண்ணோட்டத்தின்படியே அவர், ''நான் உயிர்த்தெழுதலும், ஜீவனுமாய் இருக்கிறேன்'' என்று கூறினார். கர்த்தர் தாம் ஏறெடுத்துள்ள பலியின் வேலையானது, உலகத்திற்கு தாம் ஜீவன் கொடுப்பவராக இருக்கும் சிலாக்கியத்தைத் தமக்குப் பெற்றுக்கொடுக்கும் என்பதை அறிந்திருந்தார். இன்னுமாக, இந்த உரிமையைத் தாம் செயல்படுத்தும்போது, கல்லறையினின்று மரித்தவர்களைத் தாம் வெளியே கொண்டு வருவதோடு மாத்திரமல்லாமல், தம் மூலம் பிதாவினிடத்தில் வருகிறவர்களும், சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படிய இருதயத்தில் விருப்பம்

கொண்டுள்ளவர்களுமாகிய அனைவரையும் முற்றிலுமாக மரண நிலையினின்று, பூரணத்திற்குத் தம்மால் கொண்டு வரமுடியும் என்பதையும் அறிந்திருந்தார்.

## “நமது கர்த்தருடைய அற்புதங்கள், உதாரணங்களே ஆகும்”

நமது கர்த்தர் ஜீவன் கொடுப்பவர் என்பதை நிரூபித்துக் காட்டும் கண்ணோட்டத்தில்தான் அவருடைய அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன. ஜீவன் கொடுப்பதற்கான உரிமை (அ) சிலாக்கியம் தம்மிடத்தில் இருக்கின்றது என்பதை மாத்திரம் காட்டுகிறதாயிராமல், ஜீவன் கொடுப்பதில் தமக்குப் பிரியம் உள்ளது எனும் விஷயத்தையும் வெளிப்படுத்தும் கண்ணோட்டத்தில்தான் அவருடைய அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன. இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது, கர்த்தர் தம்முடைய மகிமையடைந்த சபையுடன் மற்றும் சபையின் மூலம், தம்முடைய ஆயிரம் வருஷம் ஆளுகையின்போது செய்யப்போகின்ற பிரமாண்டமான வேலைக்கான சிறு உதாரணங்களாகவே நமது கர்த்தருடைய அற்புதங்கள் காணப்படுகின்றன. சகல குருடான கண்களும் திறக்கப்பட்டு, சகல செவிடர்களின் செவிகள் திறக்கப்பட்டு, மனரீதியிலும், ஒழுக்கரீதியிலும், சரீர ரீதியிலும் முடமாய் இருந்தவர்கள் சொஸ்தமாக்கப்பட்டு, பாவத்திலும், அக்கிரமத்திலும் காணப்பட்ட சகல மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு, உலக தோற்றம் முதல் சகல பரிசுத்த தீர்க்கத்தரிசிகளின் வாயின்மூலம் வாக்களிக்கப்பட்ட பிரகாரம் இழந்துபோன அனைத்தையும், கீழ்ப்படிதல் காட்டுவதன் மூலம் படிப்படியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும் ஆயிரம் வருஷம் ஆளுகையின் பிரம்மாண்டமான வேலைகளுக்குக் கர்த்தருடைய அற்புதங்கள் சிறு உதாரணங்களாகவே காணப்படுகின்றது (அப்போஸ்தலர் 3:19-23).

நம்முடைய இந்தப் பாடமானது மலைப்பிரசங்கத்திற்குப் பின் தொடர்ந்த சம்பவங்களை உள்ளடக்கியுள்ளது. மலையில் ஆச்சரியமான போதனைகளை வழங்கினவருக்குள், அற்புதமான வல்லமை இருப்பது சாட்சி அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணங்களை மத்தேயு மற்றும் லூக்கா தங்களுடைய மனங்களில் கொண்டவர்களாகத்தான், வசன காரியங்களை இப்படியாக ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும். இயேசுவை நாசரேத் ஊரான் என்று ஏளனத்துடன் புறக்கணித்து ஒதுக்கினபடியால் இயேசு இப்பொழுது அவருடைய (புதிய) ஊரும், பேதுருவின் ஊரும், மற்றவர்களின் ஊருமாகிய கப்பர்நகூமுக்கு, கலிலேயா கடல் வழியாக வந்தார். முன்னொருமுறை அவர் கப்பர்நகூமில் அநேக வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தினது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. மேலும், அவருடைய கீர்த்தி அனைத்து வகுப்பாரையும் எட்டியிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. உரோம சேவகர்களுக்கு அதிகாரியான ஒரு நூற்றுக்கதிபதி இங்கு வாழ்ந்து கொண்டிருந்தார். மேலும், இவருடைய முக்கியமான ஊழியக்காரன் வியாதிபட்டபடியால், இவனை இயேசு சொஸ்தப்படுத்த வேண்டும் என்று இவர் ஆவல் கொண்டார். இச்சம்பவத்தின் பதிவுகளானது இம்மனுஷன் தாழ்மையான மனங்கொண்டவர் என்பதையும், விசுவாசத்தினாலும், பரந்த மனப்பான்மையினாலும் நிறைந்தவர் என்பதையும் காட்டுகின்றது. புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நூற்றுக்கதிபதிகளும் பயபக்தியுடையவர்களாகவே காணப்படுகின்றனர். "நூற்றுக்கதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல்காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.” "இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்” (மத்தேயு 27:54; அப்போஸ்தலர் 10:1). இந்தக் கொர்நேலியு என்பவரே புறஜாதியிலிருந்து முதலாவதாக கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாறினவர் ஆவார்.

## “பெருந்தன்மையுள்ள நூற்றுக்கதிபதி”

நம்முடைய பாடத்தில்வரும் நூற்றுக்கதிபதி ஞானமுள்ளவராகவும், தாழ்மையுள்ளவராகவும் காணப்படுகின்றார். தான் ஒரு புறஜாதியாக இருக்கின்றபடியால், தனக்கு இந்த யூத தீர்க்கதரிசியிடத்திலும், அவர் இஸ்ரயேலர்களுக்காகச் செய்துகொண்டுவரும் பணியிலும் உரிமை இல்லை என்பதை உணர்ந்தவராக இருந்தார். ஆகவே, தன்னுடைய வேலைக்காரனைச் சொஸ்தமாக்கும்படிக்குத் தம்பொருட்டு இயேசுவினிடத்தில் விண்ணப்பம் வைப்பதற்கு, இவர் பட்டணத்தின் சில மூப்பர்களை

இயேசுவினிடத்திற்கு அனுப்பி வைத்தார். பட்டணத்து மூப்பர்கள் என்று சொல்லும்போது, இவர்கள் ஜெபஆலயத்தின் மூப்பர்களாயிராமல், பட்டணத்தின் பிரதான மனுஷர்களாய் இருந்தார்கள். தாழ்மையான மனம் இல்லாத எந்த மனுஷனும் நிச்சயமாக தன்னுடைய சொந்த ஸ்தானத்திற்குரிய மதிப்பை எண்ணியிருப்பான்; இன்னுமாக, யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இடையே பிரிக்கும் சுவர் இருக்கின்றது என்றும், புறஜாதிகள் யூதர்களுக்குரிய தெய்வீக இரக்கத்தினின்று தவிர்க்கப்பட்டுள்ளனர் என்றும் வேதவாக்கியங்களும், யூதர்களும் குறிப்பிடுகின்ற வேறுபாட்டைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாதவனாகவும் இருந்திருப்பான். இந்த நூற்றுக்கதிபதியும், பிள்ளைகளில் ஒருவன் என்று உரிமை பாராட்டிக்கொள்ளாத நிலையில் பிள்ளைகளின் மேஜையினின்றுவிழும் துணிக்கைகளை விரும்பின சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய ஸ்திரீயைப் போன்றவர்தான்.

மூப்பர்கள் நூற்றுக்கதிபதியின் சார்பில் இயேசுவினிடத்தில் வந்து, நூற்றுக்கதிபதி யூதனாக இல்லாமல் இருந்தபோதிலும், அவர் பெருந்தன்மையுள்ளவர் என்றும், அவர் இஸ்ரயேலர்களை நேசிப்பவர் என்றும், அவர் புறஜாதியாக இருக்கும் காரியத்தினிமித்தம் அவரால் பங்குக்கொள்ள முடியாத போதிலும், இஸ்ரயேலர்களாகிய தாங்கள் தொழுதுகொள்வதற்கெனத் தங்களுக்கு ஜெப ஆலயத்தை அவர் கட்டிக்கொடுத்தார் என்றும் கூறி கருத்தாய் வேண்டிக்கொண்டார்கள். ஒருவேளை இந்த நூற்றுக்கதிபதி மதிப்பானவராய்த் தன்னைக் காட்டிக்கொண்டிருந்திருப்பாரானால், தான் "பிள்ளைகளில்" ஒருவரல்ல என்னும் உண்மையைக் கருத்தில் எடுத்துக்கொள்வதைப் புறக்கணித்திருப்பாரானால், விண்ணப்பத்திற்கு அருள் செய்வதற்கு முன்னதாக, மேற்கூறிய விஷயங்கள் சம்பந்தமான சில படிப்பினைகளைப் பதிய வைக்க வேண்டிய அவசியம் இயேசுவிற்கு உண்டாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மேற்கூறின அனைத்து விஷயங்களும் அவர் வேண்டியுள்ள விண்ணப்பத்தில் ஒப்புக்கொண்டிருப்பதினால், நமது கர்த்தர் உடனடியாக விண்ணப்பத்திற்கு இணங்கினார். எந்த ஒரு காரியத்திலும் நாம் கர்த்தரைத் தாழ்மையுடன் அணுக வேண்டும் என்பதும், இந்தத் தாழ்மை அவருடைய தயவுகளையும், ஆசீர்வாதங்களையும் நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நம்மை ஆயத்தப்படுத்தும் என்பதும் நம் ஒவ்வொருவருக்கும் இங்குக் கிடைக்கும் படிப்பினையாகும். நாமுங்கூட அவரிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதற்கு எவ்விதமான உரிமையோ, புண்ணியமோ நம்மிடத்தில் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறவர்களாக இருக்க வேண்டும். இன்னுமாக நாமும் தகுதியற்றவர்கள் என்றும், கெஞ்சி பணிந்து கேட்பவர்கள் என்றும், அவருடைய கரங்களினின்று நீதியை/தீர்ப்பை அடைவதற்காக இல்லாமல் கிருபையையும் இரக்கத்தையும் நாடுபவர்கள் என்றுமுள்ள கண்ணோட்டத்தில் நாம் கர்த்தரை அணுக வேண்டியவர்களாய் இருக்கின்றோம் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இன்னுமாக நூற்றுக்கதிபதி, தான் ஒரு புறஜாதியாக இருக்கின்றபடியால், தன்னுடைய வீட்டில் ஒரு யூதர் பிரவேசிப்பது, யூதர்களுடைய வழக்கத்தின்படி சரியானதல்ல என்றும், இப்படி பிரவேசிப்பது யூதர்களைத் தீட்டுப்படுத்தும் என்றுமுள்ள விஷயத்தை நினைவுகூர்ந்தார். இந்த நூற்றுக்கதிபதி, தான் ஒரு பாவி என்றும், வல்லமை கொண்டிருக்கின்றாரென தன்னால் ஒப்புக்கொள்ளும் இயேசுவானவர், சர்வ வல்லமையுள்ளவரின் பிரதிநிதி என்றும் உணர்ந்துக் கொண்டிருந்தார் என்பதிலும் சந்தேகமில்லை. இந்த நூற்றுக்கதிபதியின் உணர்வுகள், "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப்போக வேண்டும்" என்ற பேதுருவின் வார்த்தைகளுக்கு ஒத்திருக்கின்றன (லூக்கா 5:8).

இன்னுமாக, ஒருவேளை கர்த்தர் சம்பவத்தின் இடத்தில் இருக்கும்போது அவரால் வல்லமையைச் செயல்படுத்த முடியுமானால், சம்பவத்தின் இடத்தில் அவர் காணப்படாமலும், அவரால் தமது சொஸ்தப்படுத்தும் வல்லமையைச் செயல்படுத்த முடியும் என்று நூற்றுக்கதிபதி யோசித்தார். இன்னுமாக, இந்த நூற்றுக்கதிபதி இருக்கும் பட்டணமாகிய கப்பர்நகூமிலிருந்த இராஜாவின் மனுஷனுடைய குமாரனை, கர்த்தர் இயேசு கானாவூரில் இருந்துகொண்டு தமது வார்த்தை மூலம் சொஸ்தப்படுத்தின விஷயத்தையும், நூற்றுக்கதிபதி அநேகமாகக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். இந்தக் காரணங்களினிமித்தம் ஆண்டவர் இயேசு தன்னுடைய வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க தான் பாத்திரவானல்ல என்பதையும், ஆண்டவரை வருத்தப்படுத்த தனக்கு விருப்பமில்லை என்பதையும், ஆண்டவர் வாயினின்று புறப்படும் வார்த்தையே போதும் என்பதையும் தனக்கு முழுமையான விசுவாசம்

இருக்கின்றது என்பதையும், ஆண்டவரிடத்தில் விவரித்துச் சொல்வதற்காக நூற்றுக்கதிபதி உடனடியாகத் தூதர்களை அனுப்பி வைத்தார். இன்னுமாக, கர்த்தருடைய வார்த்தை மீது தனக்கு இருக்கும் இந்த விசுவாசத்தை லூக்கா 7:8-ஆம் வசனத்தின் வார்த்தைகள் மூலம் விவரிக்கின்றார். அதாவது, தனக்கும் குறிப்பிட்டளவு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளபடியால், இந்த அதிகாரத்தினால் தன்னால் தன்னுடைய ஊழியக்காரனைப் போ என்றும், வா என்றும் சொல்லமுடியும்; இதைப்போலவே, தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய இயேசுவுக்கும் இயற்கையினுடைய செல்வாக்குகளின் மீது அதிகாரம் உண்டென்றும், தனது ஊழியக்காரனிடமிருந்து நோயை போ என்று கூறி இயேசு கட்டளையிட்டால், தனது ஊழியக்காரன் சொஸ்தமடைவான் என்றும் நூற்றுக்கதிபதி இயேசுவினுடைய வார்த்தைகள் மீதான தனது விசுவாசத்தை விளக்கிக்காட்டினார்.

## “அந்நியனுடைய ஆச்சரியப்படத்தக்கதான விசுவாசம்”

"இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (லூக்கா 7:9). இயேசு ஆச்சரியப்பட்டதாகக் குறிப்பிடப்படும் மற்ற ஒரே ஒருஇடம், மாற்கு 6:6-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பல வருடங்களாக தயவு பெற்ற ஜனங்களிடம், மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களிடம், தெய்வீக வாக்குத்தத்தங்களினால் மிகவும் சம்பூரணமாகப் போஷிக்கப்பட்ட ஜனங்களிடம், தெய்வீக வழிநடத்துதல்களினால் போதிக்கப்பட்ட ஜனங்களிடம், எதிர்ப்பார்த்தளவுக்கு விசுவாசம் காணப்படவில்லை. ஆனால், தயவு பெற்றிராத புறஜாதிகளோ, அநேகவிதங்களில் குறிப்பிடத்தக்கதான விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டிருந்தனர். ஆகையால் கப்பர்நகூமின் ஜனங்களை, சோதோம் மற்றும் கொமோராவின் அந்நிய தெய்வங்களை வணங்கும் ஜனங்களுடன் கர்த்தர் ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கர்த்தர் இயேசு "தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்: கோராசினே உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும், சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய். உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்” என்ற வார்த்தைகளைப் பேசியதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை (மத்தேயு 11:20-23).

அந்நிய தேவனை வணங்குகின்ற ஜனங்கள் அனைவருக்கும், யூதர்கள் அனைவருக்கும் பாவம் மற்றும் மரணத்தின் நிலையிலிருந்து வெளியே வருவதற்கும், பாவத்தின் மூலம் இழந்ததும், விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொண்டதுமான ஜீவனுக்குரிய நிலைக்கு மீண்டும் கீழ்ப்படிதல் காரணமாகக் கொண்டு வரப்படுவதற்கும் ஏதுவாக ஆயிரம் வருஷம் யுகத்தின் கிருபையான வாய்ப்புகளை அருளுவது தெய்வீகத் திட்டமாய் இருக்கின்றது என வேதவாக்கியங்கள் வாக்களிப்பதால் நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றோம். மத சம்பந்தமான விஷயங்களில், முக்கியமாய்க் காணப்படுபவர்களில் சிலர், உலகத்தாரைக் காட்டிலும் கர்த்தரிடத்திலும் அவருடைய நற்பண்புகளிடத்திலும், அவருடைய வல்லமையிலும், அவருடைய ஞானத்திலும், அவருடைய அன்பிலும் வைத்துள்ள குறைவான விசுவாசத்தை/விசுவாசமின்மையைப் பார்த்துச் சிலசமயம் நாம் ஆச்சரியப்பட்டிருக்கின்றோம் அல்லவா? ஆனால், இப்படியாக விசுவாசமின்மையுடன் காணப்படுபவர்கள், கர்த்தரைப்பற்றின அறிவு பூமி முழுவதையும் நிரப்பும்பொழுதும், சகல மனுக்குலத்தின் புரிந்துக்கொள்ளுதலின் கண்களும், தேவனுடைய மகிமைப்பற்றின அறிவை உணர்ந்துகொள்ளத்தக்கதாகத் திறக்கப்படும்போதும் எவ்வளவாய் ஆச்சரியப்படுவார்கள். இப்பொழுது தேவனுடைய ஜனங்கள் அல்லாதவர்களாய்க் காணப்படுபவர்கள், அப்பொழுது அவருடைய ஜனங்கள் ஆகுவார்கள்; மற்றும், இப்பொழுது பலவிதத்திலும் அதிக அனுகூலங்களைப் பெற்றிருந்தும், வெளிவேஷமான பக்தியை

மாத்திரம் காட்டிக்கொண்டிருப்பவர்கள், இப்பொழுது தாழ்வாகக் கருதப்படும் சிலருக்கு முன்பாக, அப்பொழுது தாழ்வாகக் காணப்படுவார்கள்.

நமது கர்த்தரும், சீஷர்களும், அவரைப் பின்தொடர்ந்து சென்ற திரளான ஜனங்கள் கூட்டமும் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்கள். ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது அடக்கம் பண்ணும் ஊர்வலம் இவர்களுக்கு முன் எதிர்ப்பட்டார்கள். கைம்பெண்ணாகிய தாயும், புலம்பி வருத்தமடைந்த நண்பர்களும், பாடையைச் சுமந்து வருகிறவர்களும், ஊர்வலத்தில் காணப்பட்டார்கள். அக்கைம்பெண்ணாகிய தாய்க்கு ஒரே மகனாய் இருந்த வாலிபன் மரித்துப் போனவனாக, பாடையில் கிடத்தப்பட்டிருந்தான். நமது கர்த்தர் கைம்பெண்ணினுடைய கண்ணீரைக் கண்டு, மனதுருகி, "அழாதே" என்று சொன்னார். "கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்" (லூக்கா 7:14-15). ஒருவேளை இச்சம்பவம் கற்பனை கதையாக இருக்குமாயின், விதவை உடனடியாகக் கர்த்தருடைய பாதத்தில் விழுந்து, உரத்த சத்தத்தில் அவரைப் புகழ்ந்திருப்பாள், இன்னுமாக, அந்தத் திரளான ஜனக்கூட்டமும் சேர்ந்து அவரை வாழ்த்தியிருப்பார்கள் என்று பதிவுகள் இருந்திருக்கும். ஆனால், சம்பவத்தின் பதிவுகள் "எல்லாரும் பயமடைந்தார்கள்" என்றே தெரிவிக்கின்றது. அதாவது, இயேசுவின் வல்லமையினால், தேவன் அவர்கள் அருகாமையில் காணப்படுகின்றார் என்ற உணர்ந்துகொள்ளுதலின் காரணமாக ஜனங்கள் எல்லாரும் பயமடைந்தார்கள்.

மனுக்குலம் தேவனுக்கு எதிர்மாறாக இருக்கும் தங்களுடைய சொந்த குறைவுகளையும், பூரணமற்ற தன்மையையும், அதேசமயம் சர்வவல்லமையுள்ள தேவனுடைய பரிசுத்தத்தையும், முழுமையான பூரணத்தையும், உணரும் போது தேவன் சமீபமாய்க் காணப்படுகின்றார் என்ற எண்ணத்தினால் அவர்களுக்குப் பயமே ஏற்படுகின்றது. அங்கிருந்த திரளான ஜனங்கள் உரத்த குரலில் ஓசன்னா என்று கூறி தேவனை மகிமைப்படுத்தாமல் மாறாக, மகா தீர்க்கத்தரிசியானவர், மகா போதகர் அவர்கள் மத்தியில் காணப்படுகின்றார் என்றும், தேவன் அவருக்குள் இருக்கின்றார் என்றும் உணர்ந்தவர்களாக, "தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார்" என்று கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். யூதர்களுடைய பிதாக்களின் விஷயத்தில் அவர்களிடத்திலான கர்த்தருடைய தயவை, அற்புதங்கள் உறுதிபடுத்தின. விசேஷமான கையாளுதல்களை யூதர்கள் அக்காலகட்டத்தில் மீண்டுமாக எதிர்ப்பார்த்திருந்தார்கள். இன்னுமாக, மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கத்தரிசி ஆனால், மோசேயைக்காட்டிலும் வல்லமையுள்ள தீர்க்கத்தரிசி எழுப்பப்படுவார் என்று உரைக்கப்பட்டிருந்த தீர்க்கத்தரிசனத்தையும் அக்காலகட்டத்தில் யூதர்கள் நினைவுகூர்ந்து காணப்பட்டார்கள். பேதுரு, அப்போஸ்தலர் 3:19-21 வரையிலான வசனங்களில் குறிப்பிட்ட காரியங்கள் சிலவற்றை யூதர்கள் அக்காலக்கட்டத்தில் எதிர்ப்பார்த்து இருந்தார்கள். அதாவது, தேவன் தம்முடைய ஜனங்களைப் புதுப்பிப்பதன் மூலமாகவும், அவர்களை ஆசீர்வதிப்பதன் மூலமாகவும், சகல பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் மூலம் உரைத்திட்ட திரும்பக்கொடுத்தலின் காலங்களை அவர்களுக்கு அனுப்புவதின் மூலமாகவும் தமது தயவை வெளிப்படுத்துவார் என யூதர்கள் அக்காலக்கட்டத்தில் எதிர்ப்பார்த்தார்கள்.

## "தீர்க்கத்தரிசி, ஆசாரியன் மற்றும் இராஜா"

இவர்களுடைய எதிர்ப்பார்ப்பு சரிதான். இயேசு மகா தீர்க்கத்தரிசியாகவும், பிதா மற்றும் பிதாவின் தயவிற்கான பிரதிநிதியாகவும் காணப்பட்டார். எனினும், விசுவாசத்திற்கான பரீட்சை எத்தனை நீண்ட காலமாய் இருந்தது! கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களை எழுப்புவதற்கும் இவ்விதமாக, பரம பிதாவினுடைய திட்டம் முழுமையாக நிறைவேறுவதற்கும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, திரும்பக்கொடுத்தலின் காலங்கள் முழுமையாய் வருவதற்கும் எத்துணை நீண்டகாலம் அவசியமாய் உள்ளது. நமக்கான பாவநிவாரண பலியாக தம்மை மரணம் வரையிலும் கீழ்ப்படிதலுடன் ஒப்புக்கொடுத்தவருடைய புண்ணியத்தின் பலனால் மனுக்குத்தின் மீது வரப்போகும் மகா உலகளவிலான ஆசீர்வாதங்களுக்கான உதாரணங்களாகவே, நமது மீட்பர் சொஸ்தப்படுத்தின வேலைகளும், மரணத்தின் நித்திரையினின்று (சிலரை)

விழித்தெழுப்பப் பண்ணின வேலைகளும் காணப்பட்டது. இயேசுவின் செய்தியும், அவருடைய வேலையும், பட்டணத்தின் சகல பகுதிகளிலும் பரவினதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நமது கர்த்தருடைய அற்புதங்களால் நிறைவேற்றப்பட்டன என அக்காலத்தில் உணரப்பட்ட வேலையை விட, ஒரு மாபெரும் வேலை நிறைவேற்றப்பட்டது. நமது கர்த்தருடைய ஊழியத்தின் போது சுமார் "500 சகோரர்கள்" மாத்திரமே சேர்க்கப்பட்டார்கள் என்பது நம்மை ஆச்சரியப்படுத்துகின்றது. அதாவது, 500 பேர் மாத்திரமே சகோதரர்கள் என்ற பெயரில் அழைக்கப்படுவதற்குப் பாத்திரராகக் காணப்பட்டதும், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அந்த நாற்பது நாட்களின்போது அவரைக் காணும் சிலாக்கியம் இத்தனை பேருக்கு மாத்திரமே கிடைத்தது என்பதும் நம்மை ஆச்சரியப்படுத்தலாம். எனினும், புதிய யுகத்தின் கீழ்ப் பெந்தெகொஸ்தே நாள் முதலான அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தின் கீழ் அநேகர் பலனாய் வந்தார்கள். உதாரணத்திற்கு, நாயீன் ஊரின் இந்த விதவையும், அவளுடைய குமாரனும் கடைசியில், இயேசுவின் பின்னடியார்கள் ஆகியிருப்பார்கள் என்று நாம் எண்ணுவது சரியே. இன்னுமாக, அக்கூட்டத்தில் இருந்தவர்களும், அற்புதத்தைக் கண்டவர்களும், சரியன இருதய நிலையைக் கொண்டிருந்தவர்களும், மேசியாவின் மீது விசுவாசம் வைத்திருப்பார்கள். இன்னுமாக, சந்தேகத்திற்கிடமின்றி, "தடுப்புச் சுவர்" இடிக்கப்பட்ட பிற்பாடும், புறஜாதியாகிய கொர்நேலியு இந்த விசுவாச ஐக்கியத்திற்குள் கொண்டுவரப்பட்ட பிற்பாடும், இப்பாடத்தில் நாம் பார்த்த நூற்றுக்கதிபதி, நிச்சயமாக கிருபை மற்றும் சத்தியத்தின் செய்தியினால் தொடப்பட்டிருப்பார். கர்த்தருடைய ஊழியத்தில், நம்முடைய சொந்த பிரயாசத்திற்கான முழுப் பலனையும் நாம் உடனடியாக எதிர்ப்பார்க்கக் கூடாது என்பதே இங்கு நாம் கற்றுக்கொள்கின்ற பாடமாகும். நாம் மனநிறைவு உள்ளவர்களாக ஊழியம் புரிய வேண்டும்; காத்திருப்பதிலும் மனநிறைவுடன் காணப்பட வேண்டும்; மற்றும், கர்த்தர் தாமே அவருடைய வார்த்தைகளுக்கும், செய்திக்கும் பின்னாகக் காணப்பட்டு, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர்களாகுவதற்குப் பாத்திரரென, தாம் கருதுகின்றவர்களையே அவர் தெரிந்தெடுப்பார் என்று உணர்ந்துக்கொண்டவர்களாகவும் நாம் காணப்பட வேண்டும். சில உலகப்பிரகாரமான மனுஷர்கள் சத்தியம் தொடர்பான சில அறிவிற்குள்ளாக இக்காலக்கட்டத்தில் வரலாம்; ஆயினும், இவர்கள் இச்சத்தியத்தினால் முழுமையாய் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. மேலும் (தற்காலத்திலுள்ள) சத்தியத்திற்கான நம்முடைய ஊழியங்கள் மூலமாகவும், கர்த்தருக்கான நம்முடைய தற்கால பிரயாசங்கள் மூலமாகவும், இவர்கள் போகப்போக உபத்திரவக் காலத்தின் பாடுகள் மற்றும் உபத்திரவங்களினால் அல்லது பிற்பாடு ஆயிரம் வருஷம் யுகத்தின்போது நன்மை பெற்றுக்கொள்வார்கள் என்பதே இங்கு நமக்குக் கிடைக்கும் மற்றுமொரு கருத்தாகும்.

ஆகவே, நமக்கு வாய்ப்புக் கிடைப்பதற்கு ஏற்ப, நாம் எல்லா இடத்திலும் நல்ல விதைகளைத் தூவுவோமாக. ஏனெனில், இதுவோ (அ) அதுவோ எது செழித்து, வளரும் என்பதை நாம் அறியோம். சிலசமயம் எங்கு நாம் அதிக வைராக்கியங்கொண்டு, பிரயாசம் எடுக்கின்றோமோ, அங்குப் பலனே கிடைக்காமல் போகின்றது; மேலும், எங்கு நாம் குறைவான பலன்களை எதிர்ப்பார்க்கின்றோமோ, அங்குத்தான் சிலசமயம் அதிக பலன் கிடைக்கின்றது. நம்முடைய வைராக்கியம் (அ) பிரயாசங்களுக்கு ஏற்பவே கர்த்தர் நமக்குப் பரிசளிப்பாரே ஒழிய, நம்முடைய பிரயாசத்தினால் உண்டான பலன்களின் அடிப்படையிலல்ல என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. கர்த்தர் நம்மிடத்தில்தான் (நமக்குள்தான்) பிரதானமான பலன்களை எதிர்ப்பார்க்கின்றார். அதாவது, அவருடைய ஆவியின் கனிகளில் வளருவதே அவர் நாடும் பிரதானமான பலன்களாகும். இந்தப் பலன்களாகிய ஆவிக்குரிய கனிகளின் வளர்ச்சியானது, அவர் மீதும், அவருடைய செய்தியின் மீதும், சகோதரர் மீதும், ஒட்டுமொத்த மனுக்குலத்தின் மீதும், நம்முடைய சத்துருக்கள் மீதுமான நம்முடைய அன்பின் வாயிலாக வெளிப்படுகின்றது.

## “சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்”

நமது கர்த்தருடைய குணமாக்கும் ஊழியங்கள், சில வருடங்களே நீடித்தன. இன்னுமாக, சொற்பமான யூத ஜனங்களைத்தான் சென்றடையவும் செய்தது. ஆனால், கர்த்தர் பரமேறின பிற்பாடு, "தம்முடைய சரீரத்தின் அங்கங்கள்" என்று அழைக்கும் தம்முடைய சீஷர்கள் மூலமாக, மேலான தளத்தில் குணப்படுத்தும் வேலையைச் செய்து

கொண்டு வருகின்றார். (1 கொரிந்தியர் 21:27). இவர்கள் மூலம் கர்த்தர் செயல்படுவதினால், அநேக கண்கள் திறக்கப்பட்டுள்ளது, அநேக செவிகள் திறக்கப்பட்டுள்ளது, அநேக ஒழுக்க ரீதியிலான முடக்குகள் குணமாக்கப்பட்டுள்ளது மற்றும் அப்போஸ்தலர், "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்," "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள், அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." எபேசியர் 2:1; கொலோசெயர் 3:1; ரோமர் 8:11-ஆகிய வசனங்களில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் மரணத்தினின்று உயிர்ப்பிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இயேசுவின் வல்லமையான கிரியைகளைக் கண்ட பிற்பாடும், யூதர்கள் அவரைப் புறக்கணித்தக் காரியத்தைக்குறித்து நாம் ஆச்சரியடைவோமானால், பரலோகத்திலிருந்து மிகத் தெளிவாக நம்மிடத்தில் பேசியவரை, நம்மைக் குணப்படுத்தின தழும்புகளைக் கொண்டவரை மற்றும், உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறார் என நாம் உணர்ந்துக்கொண்டவரை ஏதோவிதத்தில் சந்தேகிப்போமானால் அல்லது, ஏதோ விதத்தில் இவருக்கு உண்மையற்றவர்களாய் இருப்போமானால், நம்மைக்குறித்து என்னவெல்லாம் பேசப்படும். ஆகவே, புதிய ஜீவனுக்குள் உயிர்ப்பிக்கப்படும் அனுபவத்தை அனுபவித்தவர்கள் மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், இயேசுவின் மூலம் செயல்படும் தெய்வீக வல்லமை, ஈவு, ஞானம் மற்றும் அன்பின் விவரிப்பைத் தெளிவாக அடைந்துள்ளபடியால், ஒருவேளை இவர்கள் மறுதலித்துப் போவார்களெனில், இவர்கள் மன்னிக்கப்பட முடியாதவர்கள் ஆவார்கள். "மறுதலித்துப்போனவர்கள், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (எபிரெயர் 6:6). இவ்வசனத்தில் இவர்கள் அறியாமை அல்லது பெலவீனம் காரணமாக மறுதலித்துக் கடந்து போகாமல், துணிகரமான செயல்பாடுகளினாலேயே மறுதலிக்கின்றார்களென குறிப்பிடுகின்றார். இன்னுமாக, இப்படிப்பட்டவர்களின் செயல்பாடானது, இயேசுவோடுக் கூட இருந்த யூதர்கள் அவர்பால் கொண்டிருந்த இருதய நிலைக்கு ஒத்திருக்கின்றது என்றும், இயேசுவை மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துவதற்கு ஒத்திருக்கின்றது என்றும் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோன்று நாம் நமது அழைப்பை, அபாத்திரமான நிலையில் முடிக்காமல் காணப்படுவோமாக. இன்னுமாக, நம்மை அன்புகூர்ந்து, நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவருடைய கரங்களினின்று நாம் பெற்றுக்கொண்ட இரக்கங்களுக்கும், தயவுகளுக்கும், வெட்கக்கேடான பிரதிபலனைச் செலுத்தும் நிலைக்கு ஆளாகாமல் இருப்போமாக. நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கக்கடவோம். புதிய சிருஷ்டியாக நம்மில் ஆரம்பிக்கப்பட்ட உயிர்த்தெழுதலின் வேலையானது, தேவனுடைய கிருபையினால் முதலாம் உயிர்த்தெழுதலில் நிறைவேற வேண்டும் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. முதலாம் உயிர்த்தெழுதலில், க்ஷணப்பொழுதில் நாம் நமது கர்த்தரைப் போன்று மாறி, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசித்து, அவருடைய மகிமையில் பங்கடைகின்றவர்களாய் இருப்போம்.

---

**R2620**

# "நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமான போக்கு"

## லூக்கா 7:18-28

"எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்." - மாற்கு 7:37

இயேசு அநேகமான அற்புதங்களைச் செய்தவராகவும், அநேகரை சீஷராக உருவாக்கினவராகவும், அதிகளவிலான எதிர்ப்புகளைச் சந்திக்காத நிலையிலும்

காணப்பட்டிருக்க, அவருடைய உறவினனாகிய யோவான் ஸ்நானனுடைய விஷயத்தில் சூழ்நிலைகள் முற்றிலும் வித்தியாசமாக/எதிர்மாறாக காணப்பட்டது. எனினும், இந்த எதிர்மாறான சூழ்நிலைகள் அனைத்தும், "அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்று யோவான்தாமே கூறின தீர்க்கத்தரிசனத்திற்கு இசைவாகவே நடந்தது (யோவான் 3:30). இயேசு வெற்றிகரமாக ஊழியம் புரிந்துக்கொண்டிருந்த இடத்திலிருந்து, சுமார் 120 மைல் தொலைவிலுள்ள சிறைச்சாலையில் யோவான் காணப்பட்டார். அக்காலவழக்கத்தின்படி, இருளான சிறைச்சாலை அறைக்குள் யோவான் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில், நமது கர்த்தர் தம்முடைய வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருப்பதும், யோவானின் சார்பாக எவ்விதமான கண்டன சத்தத்தை எழுப்பாமலிருப்பதும், மற்றும் யோவானுடைய விடுதலைக்காகக் கர்த்தர் தம்முடைய வல்லமையுள்ள சக்தியைச் செயல்படுத்தாமலிருப்பதும், யோவானுக்கு மிகவும் விநோதமாக இருந்தது. அதிலும் விசேஷமாக, மேசியாவின் பணி தொடர்பான யோவானுடைய எதிர்ப்பார்ப்பின் கண்ணோட்டத்தில், இயேசுவின் செயல்பாடுகள் அவருக்கு மிகவும் விநோதமாகக் காணப்பட்டது. மேசியா பூமியின் மாபெரும் அதிபதியாகவும், இராஜாவாகவும் இருப்பார் என்றிருந்த யூதர்களுடைய எதிர்ப்பார்ப்புப் போலவே யோவான் ஸ்நானனுடைய எதிர்ப்பார்ப்பும் இருந்தது.

யோவானுடைய மனதில் எத்தகைய சந்தேகங்கள் மற்றும் பயங்கள் எழும்பியிருக்குமென நம்மால் உணரமுடிகின்றது. அவர் பின்வருமாறு கூறியிருக்க வேண்டும், "அனைத்துமே ஏமாற்றுத்தனம்; இயேசுவும், நானும் எங்களையே ஏமாற்றியுள்ளோம்." யோவான் கடந்த காலங்களிலுள்ள தேவனுடைய வழிநடத்தல்கள் மீதுள்ள விசுவாசத்தையும், தற்காலம் மற்றும் எதிர்க்காலத்திற்குரியவைகள் மீதான நம்பிக்கையையும், விருப்பத்தையும்கூட இழந்திருக்க வேண்டும். யோவானுக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டாலும், அவருடைய விசுவாசம், கர்த்தரை ஊன்றி பிடிப்பதை விடவில்லை. இதன் காரணமாகவே விசாரிக்கும்படி யோவான், இயேசுவிடம் தன்னுடைய சீஷர்களை அனுப்பி வைக்கின்றார். இன்னுமாக, இவருடைய விசுவாசத்தின் உறுதி, இவருடைய விசாரிப்பின் தன்மையில் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. "அனைத்தும் வஞ்சனையா, நாம் இருவருமே வஞ்சிக்கப்பட்டுவிட்டோமா?" என்று யோவான் கேட்கவில்லை. மாறாக, இவருடைய கேள்வியானது, ஞானமானதாகவும், இதுவரையிலும் தேவன்தான் வழிநடத்தியுள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறதாகவும் இருந்தது. இன்னுமாக, தான் இயேசுவின் முன்னோடியாக இருந்ததுபோல, இயேசு பெரியவராக இருந்தும், இயேசுவைக் காட்டிலும், பெரியவராகவும், இனிமேல் வரப்போகிறவருமாய் இருக்கும் வேறொருவருக்கு இயேசு முன்னோடியா அல்லது இல்லையா என்பதே தீர்க்கத்தரிசியான யோவானின் மனதில் இருந்த சந்தேகமாகும். உண்மையைச் சொல்லப்போனால், மாம்சத்திலிருக்கும் இயேசு சகல பரிசுத்தமான தீர்க்கத்தரிசிகள் வாயிலாக உரைக்கப்பட்ட அனைத்தையும், மாபெரும் அற்புதமான காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றும் இரண்டாம் வருகையில் வரப்போகின்ற மாபெரும் மகிமையடைந்த கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுகிறவராகவும் முன்னோடியாகவும் இருக்கின்றார் (அப்போஸ்தலர் 3:21-23).

யோவான் ஸ்நானனுக்கு நமது கர்த்தர் நேரடியான பதிலைக் கொடுக்கவில்லை என்பதை நாம் கவனிக்கலாம். அதாவது, வேறொருவர் வரமாட்டார் என்றும், தாம் செய்வதைக்காட்டிலும் இன்னும் பெரிய காரியங்களுண்டு என்றும் கர்த்தர் கூறவில்லை. மாறாக, தீர்க்கத்தரிசிகள் மூலம் முன்னுரைக்கப்பட்ட வேலைகளையே தாம் செய்துகொண்டிருப்பதாகவும், அக்காலக்கட்டத்தில் அவைகள் செய்யப்படுவதற்குத் தகுந்தவைகள் என்பதாகவும் யோவானுக்கு தெளிவாகப் புரியவைத்தார். யோவானுடைய சீஷர்கள், இயேசுவுடன் கூட காணப்பட்டபோது, அவர்களுடைய பார்வைக்கு முன்னதாக அநேக அற்புதங்கள் செய்யப்பட்டன. மேலும், தம்முடைய கரங்களினால் செய்யப்பட்ட வேலைகளைக்குறித்துச் சாட்சியளிக்கும்படிக்கு யோவானுடைய சீஷர்களை, இயேசு யோவானிடத்திற்கு அனுப்பி வைத்தார். இன்னுமாக, இயேசு மற்றும் அவருடைய வேலைகள் மற்றும் அவருடைய வார்த்தைகள் விஷயத்தில் இடறலடைவதற்கு அநேக வாய்ப்புகள் இருக்கின்றது என்பதையும், ஏசாயா 8:14-ஆம் வசனத்தில் தீர்க்கத்தரிசி அறிவித்திருக்கின்ற பிரகாரம், அநேகர் இடறலடைவார்கள் என்பதையும், யோவானிடத்தில் கூறும்படி, யோவானுடைய சீஷர்களை இயேசு திருப்பி அனுப்பிவைத்தார். இன்னுமாக பூமியைவிட, வானம் உயரமாயிருப்பது போல் மனித புரிந்துக்கொள்ளுதலுக்கு மிகவும் அப்பாற்பட்டதாகக் காணப்படும் தெய்வீக திட்டத்தின் ஆழம், அகலம், நீளம் மற்றும் உயரத்தைச் சரிவர

புரிந்துக்கொள்ளாததின் காரணமாக, கர்த்தருடைய வேலைகள் மற்றும் அதன் நிறைவேறுதல் தொடர்பான எதிர்ப்பார்ப்புகளில் பல ஏமாற்றங்களடைந்த நிலையிலும், கர்த்தரிடத்திலான தங்களுடைய விசுவாசத்தில் தொடர்ந்து காணப்பட்டு, இடறல் அடையாதவர்கள் மீது, விசேஷமான ஆசீர்வாதம் தங்கும் என்பதையும் யோவானிடத்தில் கூறவும், யோவானுடைய சீஷர்களை இயேசு அனுப்பிவைத்தார். உதாரணத்திற்கு, பூமிக்குரிய இராஜ்யத்தின் பாகம் ஸ்தாபிக்கப்படப்போவதற்கு முன்னதாக, முதலாவது மேசியாவுடன் அவருடைய மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்காளிகளாக இருக்கத்தக்கதாக, ஆவிக்குரிய இராஜ்யத்தின் வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்றுமுள்ள இராஜ்யம் தொடர்பான யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பிற்கு மேலானதாய்க் காணப்படும் காரியத்தை, அறிந்த மாத்திரத்தில் யூதர்கள் என்ன சிந்தித்திருப்பார்கள்.

யோவானுக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பாடத்தை, **கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியர்கள்** அனைவரும் நினைவுகூர வேண்டும். அதாவது, இவர்கள் எதிர்ப்பார்த்தவைகளுக்கு நேர் எதிர்மாறாக காரியங்கள் சிலசமயம் நடைபெறும்போதும், சத்தியத்திலும், கடமையிலும் உண்மையாய் இருந்ததற்கான பிரதிபலனாகக் காயங்களையும், ஒடுக்குதல்களையும், அவதூறுகளையும் அடையும்போதும், தேவன் தங்களை மறந்துவிட்டார் என்றோ, தாங்கள் அதுவரையிலும் கர்த்தருக்குப் புரிந்து வந்த ஊழியத்தில், தாங்கள் தவறாய் வழிநடத்தப்பட்டுள்ளார்கள் என்றோ, தேவன் தமது திட்டத்தை மாற்றிவிட்டார் என்றோ, தங்கள் விஷயத்தில் தேவன் அக்கறையற்று இருக்கின்றார் என்றோ எண்ணக்கூடாது என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். முதலாவதாக, இந்தச் சாதகமற்ற சூழ்நிலைகள், சிட்சைகளாகத் தங்களுக்கு வந்திருக்கின்றதா அல்லது தங்கள் பங்கில் எதேனும் தவறுகள் செய்துள்ளதன் விளைவுகளா அல்லது கர்த்தருக்குச் சித்தமான வழியில் வேலை செய்ய தாங்கள் தவறி போனதால் உண்டான விளைவுகளா அல்லது இல்லையா என்பதை சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், ஒருவேளை தங்களுடைய நடத்தையானது, தெய்வீகச் சித்தம் மற்றும் வார்த்தைகளுக்கு இசைவாக இருப்பதை உணர்வார்களானால், இவர்கள் உடனடியாக கர்த்தர் மீதான விசுவாசத்தில் அமைதலடைந்து, தங்களைக்காட்டிலும், தேவன் தம்முடைய வேலைகளை ஒழுங்குபடுத்த/கையாள வல்லவர் என்ற முடிவிற்குள் வர வேண்டும். பின்னர், தேவனுடைய வேலையில் ஒரு குறிப்பிட்ட காலளவு தாங்கள் பயன்படுத்தப்பட்டதற்காக இவர்கள் நன்றியுள்ளவர்களாய் இருப்பதோடு கூட, ஒருவேளை மற்றவருடைய நன்மைக்காக அல்லது ஒருவேளை அனுபவம் எனும் பள்ளியில் தங்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், விசுவாசம் மற்றும் பொறுமை பற்றின படிப்பினைகளை தாங்கள் கற்றுக்கொள்வதற்குமெனத் தேவன் தங்களைச் சிறிது காலம் தள்ளி வைப்பது, அவருடைய சித்தமாய் இருக்குமாயின், இதிலும் இவர்கள் ரம்மியமாயிருக்க வேண்டும்.

ஆயினும், இப்படியாக கர்த்தரில் இளைப்படைவதும், கர்த்தருக்குள் ஜீவனை மையங்கொள்ளச் செய்வதும், ஓரளவுக்கு வளர்ச்சியடைந்தவர்களால் மாத்திரமே, அதாவது கர்த்தருடைய வழியில், ஓரளவு தூரம் ஓடினவர்களால் மாத்திரமே மற்றும் கர்த்தருடைய வழிநடத்துதலின் கீழ், ஏற்கெனவே அவருடைய பள்ளியின் அநேக படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டிருப்பவர்களால் மாத்திரமே செய்ய முடிகின்ற விஷயமாகும். இப்படி இளைப்பாறுதலுடன் காணப்படுவதே, கர்த்தருக்கு முற்றிலும் பிரியமான ஒரே காரியமாகவும், அனைத்துக் கர்த்தருடைய உண்மையான பின்னடியார்களும், அடைவதற்கு நாட வேண்டிய நிலையாகவும் உள்ளது. குழப்பத்தில் காணப்படும் தேவனுடைய ஊழியக்காரர்கள் அனைவரும் யோவான் ஸ்நானன் மேற்கொண்ட போக்கைப் பின்பற்றுவதே சரியான நடத்தையாகும். அதாவது, குழப்பத்தில் இருக்கும்போது கர்த்தரிடத்திற்குச் செல்ல வேண்டும், அதுவும் சந்தேகத்துடன் அல்லாமல் விசாரிக்கும்படியாகவும், அவருடைய வார்த்தையின் மூலம் இளைப்பாறுதல் அடைவதற்குச் செல்ல வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை நம்முடைய சொந்த செவிகளினால் கேட்க முடியாது. ஆயினும், அதனை யோவான் தன்னுடைய சீஷர்களின் சாட்சி மூலம் பெற்றுக்கொண்டது போன்று, நாம் நம்முடைய அனைத்து நியாயமான கேள்விகளுக்கும் தேவன் முன்கூட்டியே பதிலளித்துள்ளவைகளை எழுதியுள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கத்தரிசிகளுடைய சாட்சிகள் சத்தியத்திற்கான நம்முடைய ஊழியங்கள் மூலமாகவும், கர்த்தருடையதான நம்முடைய தற்கால பிரயாசங்கள் மூலம் பதிலைப் பெற்றுக்கொள்ளலாம்.

அநாவசியமாக தலையிட்ட காரணத்தினால் யோவான் சிறையில் அடைக்கப்பட்டாரா? அதாவது, ஏரோதின் விஷயத்தில் தேவையில்லாமல் தலையிட்ட காரணத்தினால், யோவான் சிறையில் அடைக்கப்பட்டாரா? அல்லது தன்னுடைய கடமையை உண்மையாய்ச் செய்ததினிமித்தம் சிறையில் அடைக்கப்பட்டாரா? இராஜாவை யோவான் கடிந்துக் கொண்டதும், ஏரோது தன்னுடைய சகோதரனாகிய பிலிப்பின் மனைவியைத் தனது மனைவியாக எடுத்துக்கொண்டது சட்ட விரோதமானது என யோவான் கூறினதும் சரியா (அ) தவறா? என்ற கேள்விகள் எழலாம். ஏரோது தவறு செய்துள்ளார் என்பதும் உண்மைதான். யோவானும், ஏரோது புரிந்த குற்றத்தையே சரியாக சுட்டிக் காண்பித்துள்ளார். ஏரோது விபச்சாரம் பண்ணியுள்ளதும் சரிதான் ஆனால், ஏரோதைக் கடிந்துக்கொள்வது யோவானுடைய வேலையா? என்பதுதான் கேள்வி. யோவான் இராஜாவினுடைய விஷயங்களில் தலையிட்டுக் கொண்டு, இவ்விதமாக தனக்கே பிரச்சனை வருவித்துக்கொள்வது, யோவானுக்கு அவசியமா? என்பதே கேள்வியாகும். ஒருவேளை இவ்விஷயத்தில் ஏரோதைக் கடிந்துக்கொள்வது யோவானுடைய கடமையாக இருக்குமாயின், இப்படியாகவே ஏரோதைக் கடிந்துக்கொள்வது இயேசுவுக்கும் கடமையாக இல்லையோ? மற்றும் யோவான் சிறையில் அடைக்கப்பட்ட விஷயத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பதும், பொல்லாத இராஜாவினால் செய்யப்பட்ட அநீதிக்காக ஒரு மாபெரும் அமளியை எழுப்புவதும் இயேசுவின் கடமையாக இல்லையா? இன்னுமாக ஒருவேளை ஏரோதின் விஷயத்தில் யோவான் செய்தது சரி என்றால், இதே விஷயத்தை நமது கர்த்தர் இயேசு செய்யாமல் இருந்தது தவறா? அல்லது ஏரோதைக் கடிந்துக்கொள்ளும் விஷயத்தில் இயேசு, யோவானைப் பின்பற்றாமல் இருந்தது சரி என்றால், கடிந்து கொண்டதின் நிமித்தம் யோவான் தவறு செய்துள்ளாரா?

நம்முடைய பதில் என்னவெனில், இவ்விஷயம் தொடர்புடைய நமது கர்த்தருடைய நடக்கையானது, நிச்சயமாக தவறற்றதாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில், "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பேதுரு 2:22). இயேசு தவறு செய்யவில்லை என்பது, வேறுவிதமான வழியைப் பின்பற்றின யோவானிடத்தில் பாவமும், வஞ்சனையும் இருக்கின்றது என்பதாகாது. யோவானும், அவருடைய ஊழியமும், பல்வேறு விதங்களில் நமது கர்த்தர் மற்றும் அவருடைய ஊழியத்தினின்று வேறுபட்டதாய்க் காணப்பட்டதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, யோவான் அணிந்திருந்த ஒட்டகமயிர் உடை மற்றும் வார்க்கச்சையிலிருந்து, நம்முடைய கர்த்தர் அணிந்திருந்த தையல் இல்லாத உடை மிகவும் வேறுபட்டிருந்தது. இன்னுமாக, யோவான் சாதாரணமான உணவுகளைப் "போஜனபானம் பண்ணாதவராகவும்," மிகவும் இச்சை அடக்கம் உள்ளவராக, இந்தச் சொகுசுகள் விஷயத்தில் தொடர்ந்து உபவாசம் (அ) சுயத்தை வெறுத்தலை மேற்கொண்டவராகக் காணப்பட்டார்; ஆனால், நமது கர்த்தர் "போஜனபானம் பண்ணுகிறவராகவும்," தம்மைக் கனப்படுத்தும் பொருட்டு ஏற்பாடு பண்ணப்பட்ட விருந்துகளிலும், பந்திகளிலும், திருமண விழாக்களிலும் பங்குக்கொண்டவராகக் காணப்பட்டார். பாடம் என்னவெனில், இந்த இரண்டு பிரம்மாண்டமான கதாபாத்திரங்களும், தங்களுக்குரிய ஊழியத்தை, தெய்வீக ஏற்பாட்டிற்கு ஏற்ப நிறைவேற்றினவர்களாகக் காணப்பட்டார்கள்; ஆனால், இவர்கள் இருவரும் வெவ்வேறான ஊழியத்தைப் பெற்றிருந்தனர். சீர்த்திருத்தவாதியாகவும், கடிந்துரைப்பவராகவும் இருப்பதுமே யோவானுடைய பிரதானமான ஊழியமாகும். மேலும், இவர் தீர்க்கதரிசியாக இருந்தபடியால், இவர் ஏறெடுத்த பாதையிலுள்ள பல்வேறு அம்சங்கள் தொடர்பான விஷயங்களில் தேவ ஆவியினால்/உலகத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்தப்பட்டிருப்பார் என்பதையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். மாறாக, நமது கர்த்தருடைய ஊழியம் வேறுபட்டதாகும். யோவானுடைய ஊழியத்தினால் நீதியினிடத்திற்கும், கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கும், செய்வதற்குமான வைராக்கியத்திற்கும் வந்தவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதே நமது கர்த்தருடைய ஊழியமாக இருந்தது.

கிறிஸ்துவின் "சரீரம்" ஆகுவதற்கும், அவரைப் பின்பற்றுவதற்கும் அழைக்கப்பட்டுள்ள நாம், நமக்கான சரியான போக்குத் தொடர்பான விஷயத்தில் ஒரு படிப்பினையை இங்குக் கற்றுக்கொள்ளலாம். நாம் யோவானைப்போல வனாந்தரத்தில் ஜீவிப்பதற்கும், விநோதமாக உடை அணிந்துக்கொள்வதற்கும், எல்லாவற்றையும் மற்றும் எல்லாரையும் குற்றப்படுத்துவதற்கும், கண்டித்துப் பேசுவதற்கும் அனுப்பப்படவில்லை. கர்த்தருடைய அன்பான ஜனங்களில் சிலர் இத்தகைய ஊழியங்களுக்காக அனுப்பப்படுதல்

விசேஷமானவைகள் என்றும், மிகவும் அபூர்வமானவைகள் என்றும் கவனிக்கத் தவறி, சிலசமயம் தவறுதலான மாதிரியைப் பின்பற்றி, கர்த்தருடைய நோக்கங்களின் மீது தேவையற்ற பழிகளை/இழிவுகளைக் கொண்டு வருபவர்களாக இருந்துவிடுகின்றனர். நாம் தேவனுடைய அருமையான குமாரனாகிய, நமது கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாகவே இருக்க வேண்டுமேயொழிய, யோவான் ஸ்நானனைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டியதில்லை. மற்றவர்களுடைய விஷயங்களில் தலையிட்டு, நாம் பிரச்சனைகளைத் தூண்டிவிடுபவர்களாக இருக்கக்கூடாது. இந்த உலகத்தின், சகல விஷயங்களைச் சரிச்செய்து கொள்வதற்கோ, அதிபதிகளை, இராஜாக்களை, சக்கரவர்த்திகளை கடிந்துக்கொள்வதற்கோ நாம் நாடக்கூடாது. மாறாக, தேவன் அனுமதிப்பதற்குத் தகுந்தவைகள் எனக் காண்பவைகள் எவைகளோ, அவைகள் நாமும் சகிப்பதற்கு ஏற்றவைகள் என்பதை நினைவுகூர அப்போஸ்தலரால் புத்தமதிக் கூறப்படுகின்றோம்/புகட்டப்படுகின்றோம்.

நம்மால் பாராட்டு அளிக்கமுடியாத அல்லது ஆதரவு அளிக்க முடியாத அநேக காரியங்கள் காணப்பட்டாலும் கூட, அவைகளை நாம் கடிந்துக்கொள்வதைத் தவிர்ப்பதற்கு நம்மால் முடியும். அதிலும் விசேஷமாக முழுமையான புரிந்துக்கொள்ளுதலுக்கும், கர்த்தருடைய வார்த்தையின்படியான கிரியைக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லாதவைகளைக் கடிந்துகொள்வதை நம்மால் தவிர்க்க முடியும். நம்முடைய ஸ்தானத்தைக் குறித்து, "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (ரோமர் 12:18). மேலும், இதே கருத்தை, "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்ற வார்த்தைகள் மூலம் கர்த்தரும் வலியுறுத்துகின்றார் (மத்தேயு 5:9).

இந்த விஷயத்தில், கர்த்தருடைய ஜனங்களில் மிகவும் பரிசுத்தமுள்ளவர்களுள் சிலர் கூட, தங்களுடைய சொந்த குடும்பங்களின் காரியங்களில் தவறு செய்து, தேவையில்லாமல் தவறான அபிப்பிராயங்கொண்டு, எதிர்ப்பைத் தெரிவித்துவிடுகின்றனர். மற்றும், பரிசுத்தத்திற்கும் சிலுவை சுமத்துலுக்குமுரிய அளவுகோலுக்குக் கீழானதும், அதேசமயம் தன்மையில் கூடப் பொல்லாங்காய் (அ) ஒழுக்கக்கேடாய் இல்லாதவைகளுமான காரியங்களில் தொடர்ந்து குற்றம் கண்டுபிடிப்பதின் மூலம், தங்கள் இல்லத்தில் மகிழ்ச்சி இல்லாமலும் ஆக்கிவிடுகின்றனர். பெற்றோர்களும், பாதுகாப்பவர்களும், ஒழுக்கக்கேட்டிற்கு நேரான அனைத்து விருப்பங்களுக்கும் எதிராக தங்கள் குடும்பத்தின் அங்கங்களை நிச்சயமாகப் பாதுகாக்க வேண்டும். ஆனால், தாங்கள் அன்புகூருகிறவர்கள் பெயர்க் கிறிஸ்தவர்களாகவும், உலகபிரகாரமான ஆவியைக் கொண்டிருப்பவர்களாகவும் இருப்பதினால் மாத்திரம் அவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பது, ஞானமற்ற விஷயமாகும். தேவனுடைய ஜனங்கள் பரிசுத்த ஆவியில் சந்தோஷத்துடனும், சமாதானத்துடனும் ஜீவக்கும் <u>ஜீவியமே,</u> இவர்களால் கொடுக்க இயன்ற <u>உலகபற்றிற்கு எதிரான மிகச் சிறந்த கடிந்துக்கொள்ளுதலும்,</u> இவர்கள் அறிவிக்கின்ற மகிமையான <u>சுவிசேஷத்திற்குச் சிறந்த சிபாரிசும்</u> ஆகும். இவர்களுடைய ஜீவியமே, வாசிக்கத்தக்கதான நிரூபமாகவும் மற்றும் இருளைக் கடிந்துக்கொள்ளும் வெளிச்சமும் ஆகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அர்ப்பணம் பண்ணாதவர்களிடத்தில், சுயத்தை வெறுக்கும் அம்சங்களை நாம் எதிர்ப்பார்க்கவும் கூடாது, திணிக்கவும் முயற்சிக்கக் கூடாது. அர்ப்பணம் பண்ணாதவர்கள் முழுமையான அர்ப்பணிப்பை, "புத்தியுள்ள ஆராதனை" என உணர்ந்து, தங்களுடைய சரீரங்களைத் தேவனுக்கான ஜீவபலிகளாக ஒப்புக்கொடுப்பது வரையிலும் நாம் காத்திருக்க வேண்டும். அநேகமான செல்வாக்குகள் இன்று, பரிசுத்தம் மற்றும் பயபக்தியின் விஷயங்களினுடைய மதிப்பை/நியமத்தைக் குறைத்துப் போடத்தக்கதாகத் தொடர்ந்து கிரியை செய்து வருகின்றது எனப் போதகர்கள் உணர்ந்தவர்களாக, எப்போதும் உன்னதமான வேதவாக்கியத்தின் நியமத்தைக் கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணியுள்ள மந்தைக்கு முன்வைப்பதற்கு நாட வேண்டும்.

## “தீர்க்கதரிசியிலும் பெரியவரான யோவான்”

யோவானுடைய சீஷர்கள், இயேசுவினிடத்தில் கொண்டுவந்த கேள்வியைச் சுற்றி கூடியிருந்த ஜனங்கள் கண்டிப்பாகக் கேட்டிருக்க வேண்டும்; மற்றும், சத்தமாகப்

பேசிக்கொள்ளவில்லை என்றாலும், சந்தேகத்திற்கிடமின்றி தங்கள் மத்தியில் ஒருவரோடொருவர் பின்வரும் கேள்விகளைக் கேட்டிருக்க வேண்டும். . . . "இயேசுதான் மேசியா என்ற விசுவாசம் யோவானுக்குப் போய்விட்டதா? ஒருவேளை யோவான் தீர்க்கத்தரிசியாய் இருந்திருப்பாரானால், அவர் இயேசுவினிடத்தில் ஆள் அனுப்பிக் கேட்காமலேயே, இவ்விஷயத்தை தேவன் அவருக்கு வெளிப்படுத்தியிருப்பாரே. யோவான் அற்புதம் எதுவும் செய்யாததினால், அவர் தீர்க்கத்தரிசியாயிராமல், சீர்த்திருத்தவாதியாக மாத்திரமே இருப்பாரோ? ஒருவேளை யோவானே தன்னை இப்படி நியமித்துக் கொண்டாரோ?" நமது கர்த்தர் இந்தக் கேள்விகளைப் புரிந்துக்கொண்டவராக, யோவானுடைய சீஷர்கள் போன பிற்பாடு, லூக்கா 7:24-26 வரையிலான வசனத்தின் வார்த்தைகளைப் பேசினார். யோவானுடைய உறுதி தொடர்பான இயேசுவின் வார்த்தைகள் முகஸ்துதி வார்த்தைகளாயிராமல், உண்மையுள்ள அந்த முன்னோடி குறித்த உண்மையான புகழ்ச்சியாக இருந்தது. "யோவானிடத்தில் என்ன எதிர்ப்பார்த்தீர்கள் . . . காற்றினால் அசையும் நாணலைப் போன்று, கற்பனைகள் மற்றும் உபதேசம் எனும் ஒவ்வொரு காற்றுகளினாலும், எளிதில் தள்ளாடும் நிலைக்கு ஆளாகுமளவுக்குப் பெலவீனமான மற்றும் வளைந்துக் கொடுக்கும் சுபாவத்தை யோவான் கொண்டிருப்பார் என்று எண்ணிக் கொண்டீர்களோ? இப்படியாக, யோவானைக்குறித்து எண்ணிக்கொள்பவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொள்கின்றவர்களாக இருக்கின்றனர். மாறாக, யோவான் ஒரு தீர்க்கத்தரிசி ஆவார்; ஆம், அவர் தீர்க்கத்தரிசியிலும் பெரியவர் ஆவார்; இப்பொழுது நான் பிரசங்கித்து வருகின்றதான இராஜ்யத்திற்குத் தொடர்புடைய, ஆயத்தம் பண்ணும் வேலையைச் செய்யும் தேவனுடைய விசேஷமான ஸ்தானாதிபதியாகவும், தேவனுடைய தூதனாகவும் யோவான் இருக்கின்றார். மல்கியா 3:1-ஆம் வசனத்தைக் கர்த்தர் குறிப்பிட்டார். உண்மை என்னவெனில், யோவானைக் காட்டிலும் பெரிய தீர்க்கத்தரிசி தோன்றினதில்லை என்று நான் உங்களுக்கு கூறுகின்றேன்; எனினும் இராஜ்யத்தில் சிறியவனாய் இருப்பவன், யோவானை விட பெரியவனாக இருப்பான், ஏனெனில் யோவான் இராஜ்ய வகுப்பாரைச் சார்ந்தவர் அல்ல, மாறாக முந்தின யுகமாகிய, பணிவிடைக்காரர் வீட்டைச் சார்ந்தவர் ஆவார். "நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்" என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்படுகின்றது (லூக்கா 16:16; யோவான் 12:1).

கர்த்தர் ஸ்தாபிக்கும் புதிய அமைப்பு முறைக்கும், மோசேயினால் முன்னால் நிறுவப்பட்டதும், இப்பொழுது முடிவிற்கு வருகிறதும், புதியதிற்கு இடம்விட்டுக் கொடுக்கிறதுமான பழைய அமைப்பு முறைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் நமது கர்த்தருடைய வார்த்தைகளில் தெளிவாக விளங்குகின்றது. இராஜ்யத்தின் உடன்சுதந்தரர்களாக, இராஜ்ய வகுப்பாரில் அங்கங்கள் ஆகுவதற்கான நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்குச் சொற்பமான யூதர்களே கர்த்தருடைய நிபந்தனைகளின் கீழ் இராஜ்யத்தின் சிலாக்கியங்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்ததின் காரணமாக, இந்தச் சுவிசேஷ யுகத்தின் அழைப்பானது புறஜாதிகளாகிய நம்மிடத்திற்குக் கடந்து வந்தது என அப்போஸ்தலர் காட்டுகின்றார். "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (ரோமர் 11:1-33; கலாத்தியர் 3:16, 29).

புதிய யுகத்திற்குரியவர்களாகிய நாம் இராஜ்யத்திற்கான சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளை உயர்வாகக் கருதி, "நம்முடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதி செய்துகொள்ள" நாடுகின்றவர்களாய் இருக்க வேண்டும் (2 பேதுரு 1:4-11). "பணிவிடைக்காரரின் வீட்டில்" அங்கங்கள் ஆகுவதற்கான பூமிக்குரிய அழைப்பிற்கு அழைக்கப்பட்டவர்களே (யோவான் ஸ்நானன் செய்தது போன்று) தங்களை வைராக்கியத்துடன் கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபடுத்தி, புத்தியுள்ள ஆராதனையைச் செலுத்தி, உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டார்களானால், மிகவும் மேலான தயவு பெற்றுள்ள நாம் எவ்வளவு அதிகமான வைராக்கியம் கொண்டவர்களாகவும், ஆற்றலைப் பிரயோகிக்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடத்தையும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்! இந்தப் "பரம அழைப்பு," "மேலான

அழைப்பு” அதாவது, இராஜ்யத்தில் கர்த்தருடன் உடன் சுதந்தரர்கள் ஆகுவதற்கான இந்த அழைப்பு, மிகவும் விசேஷமானது என்றும், மிகவும் குறுகிய எண்ணிக்கைக்கான அழைப்பு என்றும், அது சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும் என்றும், அது மீண்டும் கொடுக்கப்படாத அழைப்பு என்றும் நாம் நினைவில் கொள்வோமாக. “ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துக்கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்” (எபிரெயர் 12:1).

---

**R2623**

# “அறிவு, பொறுப்புகளை அதிகரிக்கின்றது”

## மத்தேயு 11:20-30

“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.”

நமது கர்த்தர் தமது ஊழியத்தின் பலனைக்குறித்து, விசேஷமாக தாம் அதிகமான காலம் தங்கியிருந்த கப்பர்நகூமில் தமது ஊழியத்தின் பலனைக் குறித்துக் கொஞ்சம் ஏமாற்றம் அடைந்ததுபோன்று தோன்றுகின்றது. இயேசு, மேசியா என்பதற்கான அநேக சாட்சிகளையும், அநேக பலத்தச் செய்கைகளையும் பார்க்கும் வாய்ப்புக் கப்பர்நகூம், கோராசின் மற்றும் பெத்சாயிதா ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது என்றும், இராஜ்யம் முதலியவைகள் அவர்களுக்கு முன்வைக்கப்பட்டது என்றும், கொடுக்கப்பட்டதற்கு ஏற்ப அவர்கள் பொறுப்பாளிகளாக இருக்கின்றார்கள் என்றுமுள்ள எச்சரிக்கையுடன் நம்முடைய இப்பாடம் ஆரம்பமாகின்றது. கப்பர்நகூம் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டு, உயர உயர்த்தப்பட்டிருந்தபடியால் அல்லது அடையாள வார்த்தைகளில் சிலாக்கியங்களிலும், வாய்ப்புகளிலும் வானபரியந்தம் உயர்த்தப்பட்டிருந்தபடியால், (ஆனால் மனந்திரும்பாத காரணத்தினால்) பின்விளைவு என்பது மிகுந்த கீழான நிலையை அடைதலாகவும், இறுதியில், “பாதாளப் பரியந்தம் தாழ்த்தப்படும்” வண்ணமாக அழிவை அடைதலாகவும் இருந்தது. “பாதாளப் பரியந்தம் தாழ்த்தப்படுதல்” என்பது, யூதர்கள் மீது வந்த உபத்திரவத்தில் இந்தத் தேசத்தார் அழிக்கப்பட்டதின் மூலம் நிறைவேறினது. இவர்கள் மேசியாவையும், அவர் ஸ்தாபிக்கப் போவதாக முன்வைத்த இராஜ்யத்தையும் ஏற்றுக்கொள்ள தவறினதால், அழிக்கப்பட்டார்கள்.

நமது கர்த்தர் புறக்கணிக்கப்பட்டது, அவருக்கு ஏமாற்றமாக இருப்பினும், தம்மை அனைத்து ஜனங்களும் ஏற்றுக்கொண்டு வரவேற்பார்கள் என அவர் எதிர்ப்பார்த்திருக்கமாட்டார். தாம் இஸ்ரயேலர்களால் புறக்கணிக்கப்படுவார் என்றும், இராஜ்யத்திற்கான அழைப்பு அவர்களிடமிருந்து கடந்து போய்விடும் என்றும் கர்த்தர் தீர்க்கத்தரிசனங்களிலிருந்து எடுத்துச் சீஷர்களுக்கு கூறியிருந்தபடியால், இவ்விஷயங்களையெல்லாம் அவர் அறிந்திருக்கவே செய்தார். இஸ்ரயேலர்கள் அவரைப் புறக்கணித்தபடியால், இராஜ்யத்தின் கனத்திற்குரிய மகிமையான அழைப்பு, புறஜாதிகள் மத்தியிலிருந்த விசுவாசிகளிடத்திற்குக் கடந்துபோனது. இவ்விதமாகவே, இக்காலத்தில் இருக்கும் நாம் தயவு பெற்றிருக்கின்றோம்.

கோராசின், பெத்சாயிதா மற்றும் தீரு, சீதோன் ஆகிய தேசங்களுக்கிடையே ஆண்டவர் வேறுபடுத்திக் காட்டும் விஷயம் அர்த்தம் உடையதாகும். தீருவும், சீதோனும் செழிப்பான புறஜாதி பட்டணங்களாகும்; மற்றும், இவைகள் பொல்லாங்கினாலும், ஒழுக்கக்கேட்டினாலும் நிரம்பியுள்ளபடியினால், இவ்விரு பட்டணங்களுடைய பெயர்களும்கூட பரிசுத்தமற்ற, தூய்மையற்ற, கட்டுப்பாடற்ற என்பதான ஒரே அர்த்தம் கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. ஆகவே, ஒருவேளை நமது கர்த்தருடைய பலத்தச் செய்கைகள் இந்தப் பரிசுத்தமற்ற பட்டணங்களில் செய்யப்பட்டிருந்தால், இவர்கள் என்றோ இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து, பாவத்திற்காக ஆழமாக வருந்தி, மனந்திரும்பியிருப்பார்கள் என்று நமது கர்த்தர் கூறுவது என்பது, புறஜாதிகளைக்

காட்டிலும், மிக மோசமான இருதயநிலையில் பெத்சாயிதா மற்றும் கோராசின் ஜனங்கள் காணப்படுகின்றார்கள், அதாவது தேவன் ஆசீர்வதிப்பதற்குக் கூடாத மோசமான இருதய நிலையில் காணப்படுகின்றார்கள் என்பதைத் தெரிவிக்கின்றது.

இதிலிருந்து நாம், பெரும்பாலான ஜனங்கள் கொண்டிருக்கும் கண்ணோட்டத்திலிருந்து, தேவன் வித்தியாசமான கண்ணோட்டத்தில் இப்படியான காரியங்களைப் பார்க்கின்றார் என்று அறிந்துக்கொள்கின்றோம். இந்தப் பட்டணம் ஒழுக்கமுள்ள (அ) ஒழுக்கமற்ற பட்டணமா? என்றும், இந்த ஜனங்கள் நல்நடத்தை உள்ளவர்களா (அ) இல்லையா? என்றும் வெறுமனே தேவன் கேட்பதில்லை. இந்த ஜனங்களுடைய (அ) அந்த ஜனங்களுடைய, இந்த நபருடைய (அ) அந்த நபருடைய மனநிலை என்ன? அவனுடைய நோக்கம் என்ன? அவன் எதை நாடுகின்றவனாகக் காணப்படுகின்றான்? ஒருவேளை தெய்வீகச் சித்தம் தொடர்பான, தெளிவான வெளிச்சம் அருளப்பட்டால், இவன் எப்படிச் செயல்படுவான்? என்ற கேள்விகளின் அடிப்படையிலேயே கர்த்தர் ஆராய்கின்றவராகக் காணப்படுகின்றார். ஒருவேளை நாம் நம்மையே சீர்த்தூக்கிப் பார்த்து, நாம் ஒழுக்கக்கேடு இல்லாதவர்களாகவும், கீழ்த்தரமாக இல்லாதவர்களாகவும், சிற்றின்ப நாட்டம் இல்லாதவர்களாகவும், முரட்டுத்தனம் இல்லாதவர்களாகவும் இருக்கின்றோம் என்று காண்போமானால், மற்ற அநேகரைக்காட்டிலும் மிகவும் நாகரிகமானவர்களாகவும் காண்போமானால், இவைகளெல்லாம் நல்லதுதான்; மற்றும், நாம் இப்படிக் காணப்படுவது என்பது சிலாக்கியங்கள், இரக்கங்கள், தயவு பெற்றுக்கொள்வதற்கு அவசியமானதே. ஆனால், அதேசமயம் இவைகள் இருந்தும் கூட, கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கும் நிலையில், நாம் இன்னமும் மிகக் குறைவுபட்ட நிலையிலும் காணப்படலாம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்; இன்னுமாக ஒருவேளை தேவன் நமக்குச் சில குறிப்பிட்ட சிலாக்கியங்கள், வாய்ப்புகள் மற்றும் ஆசீர்வாதங்களைக் கொடுக்கையில், அவைகளை நாம் புறக்கணிப்போமாகில், நம்முடைய இச்செயல்பாடானது, ஒழுக்கம் கெட்டவர்களைக் காட்டிலும், அவருடைய பார்வையில் கேடானதாகக் காணப்படலாம் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இருப்பதிலேயே அதிகமான தயவைப் பெற்ற கப்பர்நகூமை, நமது கர்த்தர் சோதோமோடு ஒப்பிடுகின்றார். இந்தச் சோதோமினுடைய பொல்லாப்பு மிகவும் பெரியதாய் இருந்தபடியால், அது கர்த்தரிடமிருந்து கடுமையான அழிவைப் பெற்றுக்கொண்டது. சோதோமின் ஜனங்களைப் பார்க்கிலும், கப்பர்நகூமின் ஜனங்கள் கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி மிகவும் பொல்லாங்கானவர்கள் என்றும், தெய்வீகத் தயவிற்கு அபாத்திரர்கள் என்றும், தண்டனைப் பெறுவதற்கு அதிக பாத்திரவான்கள் என்றும் தெளிவாகக் கூறப்பட்டது. இது கடுமையான கண்டனமாயினும், இது நீதியானதென்று நம்மால் காணமுடிகின்றது. ஏனெனில், தேவனை அறியாத நிலையில், பாவத்தின் வழியில் நடந்து கொண்டிருந்த பாவப்பட்ட சோதோம் ஜனங்கள், விழுகையின் சுபாவத்தினுடைய போக்கிற்கு ஏற்ப படிப்படியாகக் கீழ்த்தரமாகப் போய்க்கொண்டிருந்தனர்; ஆனால், யூதர்களாகிய கப்பர்நகூமின் ஜனங்கள் சகலவிதத்திலும் அதிக அனுகூலமுடையவர்களாகக் காணப்பட்டார்கள்; மேலும், இவர்கள் கர்த்தரைப் பற்றின அறிவினால், ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். இப்பொழுதோ, தேவன் இவர்களிடத்தில் மேசியாவை அனுப்பிவைத்தார். இன்னுமாக, இவர்கள் மேசியாவின் அற்புதங்களை அடிக்கடி கண்டும் வந்தார்கள். இன்னுமாக, அவர் இவர்கள் மத்தியில் அதிக காலம் வாசம் பண்ணினபடியினால், அவருடைய அருமையான குணலட்சணம் மற்றும் போதனைகளுக்கு இவர்கள் நன்கு அறிமுகமாகியும் இருந்தனர்.

இந்த இரக்கங்கள் மற்றும் சிலாக்கியங்களின் விஷயத்தில் இவர்கள் மேசியாவைப் புறக்கணித்து, தங்களுக்கு வந்த வாய்ப்புகளைப் பற்றிப் பிடித்துக்கொள்ள தவறின விஷயமானது, சத்தியம் மற்றும் நீதியைப் புரிந்துக்கொள்வதில், இவர்கள் சோதோம் ஜனங்களைக்காட்டிலும் கீழ்த்தரமானவர்களாகக் காணப்பட்டனர். ஏனெனில், சோதோம் ஜனங்களுக்கு இதே இரக்கங்களும், சிலாக்கியங்களும் அருளப்பட்டிருப்பின், சோதோம் ஜனங்கள், கப்பர்நகூம் ஜனங்கள் போன்று நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்று நமது கர்த்தர் கூறுகின்றார்.

நமது கர்த்தர் கப்பர்நகூமின் ஜனங்களுக்கு அருளின நல்ல வாய்ப்புகளை ஏன் சோதோம் ஜனங்களுக்கு அவர் அருளவில்லை? என்றும், கோராசின் மற்றும் பெத்சாயிதா

ஜனங்களுக்கு அவர் அருளின வாய்ப்பை, அக்காலத்திலே ஜீவித்துக் கொண்டிருந்த தீரு மற்றும் சீதோன் ஜனங்களுக்கு அவர் ஏன் அருளவில்லை? என்றுமுள்ள கேள்விகள் இயல்பாகவே தோன்றலாம். இந்த ஜனங்களில் எவருக்கும் நித்திய ஜீவனுக்கான எவ்விதமான பரீட்சையும் அருளப்படவில்லை என்பதே நமது பதிலாகும். சோதோம் ஜனங்களுக்கு இவ்விதமான எந்தப் பரீட்சையும் இருக்கவில்லை. தீரு, சீதோன் ஜனங்களுக்கும் இவ்விதமான எந்தப் பரீட்சையும் இருக்கவில்லை. பாலஸ்தீனியாவிலுள்ள ஜனங்களுக்கும் கூட நித்திய ஜீவனுக்கான எவ்விதமான பரீட்சையும் காணப்படவில்லை. யூதர்கள் தங்கள் கர்த்தருக்காகவும், நீதிக்காகவும், அன்பு கொண்டிருப்பது தொடர்பாகவும், அவருடைய ஜனங்களாக இருப்பதற்கும், அவருடைய இராஜ்யத்திற்கு ஆதரவு கொடுப்பதற்கும் ஆயத்தமாய் இருப்பது தொடர்பாகவுமே, யூதர்கள் பரீட்சைப் பெற்றிருந்தனர். மேலும் பரீட்சையின் முடிவானது, இவர்கள் கர்த்தருடைய இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகப் போதுமானளவுக்கு நீதியின்பால் அன்பு கொண்டிருக்கவில்லை என்பதாகவும், இராஜ்யத்தின் நண்பர்களாகவும், ஊழியக்காரர்களாகத்தக்கதாக நீதியின்மேல் போதுமானளவுக்கு அன்பு கொண்டிருக்கவில்லை என்பதாகவும் விளங்கினது; பின்னர் இதன் விளைவாக இந்த இவர்களுடைய பட்டணமும், இவர்களுடைய தேசமும், ஜனங்களாகிய இவர்களும் கர்த்தரால் ஸ்தாபிக்கப்படப் போகும் இராஜ்யத்தோடுத் தொடர்புடைய பிரதிநிதிகளாக இருப்பதிலிருந்து, கர்த்தரால் புறக்கணிக்கப்பட்டனர்.

நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குரிய எவ்விதமான தனிப்பட்ட விதமான பரீட்சையும் இந்த ஜனங்களில் எவருக்கும் வரவில்லை என்பது, அப்போதிருந்த பின்வரும் பல காரியங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றது: (1) முழு உலகமும் ஆதாமின் மீறுதலின் மூலம் கண்டனத்திற்குக் கீழாகவே காணப்படுகின்றது; (2) ஈடுபலி அதுவரை கொடுக்கப்படாததால், அது கொடுக்கப்படாதது வரையிலும் எவரும் குற்ற கண்டனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஜீவனுக்கான தனிப்பட்ட புதிய பரீட்சையைப் பெற்றுக்கொள்ள முடியாது; (3) லூக்கா 11:24-ஆம் வசனத்தின் வார்த்தைகள் மூலம் எதிர்க்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பின் நாள் உள்ளது என்று, அதாவது யார் நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்கள் மற்றும் யார் அபாத்திரர்கள் எனக் காண்பதற்கு, பரீட்சிக்கிற ஒருநாள் உள்ளது என்று தெரிகின்றது (அப்போஸ்தலர் 17:31). அந்த நியாயத்தீர்ப்பின் நாளாகிய ஆயிரம் வருஷம் யுகத்தில், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை அனைவரும் பெற்றுக்கொள்வார்கள். ஆதாமின் சந்ததி முழுவதற்கும் இந்த வாய்ப்பை அருளுவதே நம்முடைய மீட்பருடைய மரணத்திற்கான நோக்கமாகும். இதற்கிடையில் கப்பர்நகூம், கோராசின் மற்றும் பெத்சாயிதா ஜனங்கள் கர்த்தரைப் புறக்கணித்தபடியால், அவரும் அவர்களைப் புறக்கணித்தார். ஆயிரவருஷ அரசாட்சியின்போது கர்த்தரோடு உடன்சுதந்திரர்களாய் இருக்கும்படிக்குக் கர்த்தர் அழைத்துக்கொண்டிருக்கும் விசேஷமான வகுப்பாருக்கு கப்பர்நகூம், பெத்தசாயிதா, கோராசின் மத்தியிலும் சிலரைக் கர்த்தர் கண்டுப்பிடித்தார், மற்றும் மீதமான மற்றவர்களையும் தேர்ந்தெடுத்துக்கொண்டு வருகின்றார். கர்த்தர் மற்றும் இந்த விசேஷமான வகுப்பாருடைய நீதியின் ஆளுகையின் கீழ், அனைவருக்கும் முழுமையான மற்றும் நியாயமான நியாயத்தீர்ப்பு (அ) நித்திய ஜீவனுக்கான பரீட்சை அருளப்படும். இப்பொழுது அநேக சிலாக்கியங்களைப் பெற்றுக்கொண்டு, தாங்கள் கண்டவைகளுக்கும், அறிந்துக்கொண்டவைகளுக்கும் எதிராக தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டவர்களைக் காட்டிலும், எதிர்க்காலப் பரீட்சையில் தீரு, சீதோன் மற்றும் சோதோமின் ஜனங்கள், அதிகமான கவனம் செலுத்தப்பட்டு, அதிகமான சலுகைகளுடன் கையாளப்படுவார்கள் என்ற விதத்தில் கர்த்தர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குக் கர்த்தர் புரியவைத்தார். "நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மத்தேயு 11:22, 24).

பொல்லாப்பிற்கும், சிற்றின்ப பற்றிற்கும், கெட்ட பெயரெடுத்துக் கொண்ட சோதோமின் ஜனங்களுக்கு, மனுக்குலத்தை நியாயந்தீர்க்கும் வேலையைக் கர்த்தர் ஆரம்பிக்கையில், (தேவனுடைய தயவைப் பெற்றுக்கொண்டும், அந்தத் தயவை ஏற்றுக்கொள்ளாமல், அந்தத் தயவை இகழ்ந்த) கப்பர்நகூமின் ஜனங்களைக் காட்டிலும் கர்த்தருடைய கரங்களிலிருந்து அதிக தயவு கிடைக்கும் என்றும், அதிக இலகுவாயிருக்கும் என்றுமுள்ள இந்த வார்த்தைகளினுடைய கடிந்துக்கொள்ளுதல் எவ்வளவு

காயப்படுத்துகின்றதாய் இருக்கின்றது! ஆனால், அதற்கென்று ஆயிரம் வருஷம் யுகத்தின் போதினிலான ஜீவனுக்கான பரீட்சையின்போது, கப்பர்நகூமின் ஜனங்கள் அன்பற்றவிதத்தில் கையாளப்படுவார்கள் என்று எவரேனும் அர்த்தம் எடுத்துக்கொண்டால், அது மிகுந்த தவறான அர்த்தமாகிவிடும். ஏனெனில், கர்த்தருடைய வார்த்தைகள் தெளிவாக உலகமானது, "நீதியோடு நியாயம் தீர்க்கப்படும்" என்றே தெரிவிக்கின்றது. கோபத்தோடும், வன்மத்தோடும், பாதிப்புக்குள்ளாக்க வேண்டும் என்ற விருப்பத்தோடும் அல்லாமல், மாறாக நன்மையான சகலவற்றையும் உலகத்தார்க்குச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்துடனே, உலகத்தார் நியாயந்தீர்க்கப்படுவார்கள். ஆகவே, கப்பர்நகூமின் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாளில் "இலகுவாகவே," அதாவது வெகு இலகுவாகவே காணப்படும். கர்த்தரைப் பற்றின தெளிவான மற்றும் முழுமையான அறிவிற்குள் கப்பர்நகூமின் ஜனங்கள் வருவது, அவர்களுக்கு பிரம்மாண்டமான மற்றும் ஆசீர்வாதமான வாய்ப்பாகவே காணப்படும். ஆனால், இவர்களைக் காட்டிலும் சோதோம், கொமோராவின் ஜனங்களுக்கு, இன்னும் அதிகம் இலகுவாயிக்கும். ஏனெனில், இவர்களுடைய பாவங்கள் சில விதத்தில் பெரியவைகளாய் இருந்தாலும் கூட, தேவனுடைய பார்வையில் குறைவாகவே வெறுக்கத்தக்க நிலையில் காணப்படுகின்றது; இவர்களுடைய பாவங்கள் அதிகம் அறியாமையினால் செய்தவைகளாகக் காணப்படுகின்றது மற்றும், குணலட்சணங்களுக்கு எதிராக குறைவாகவே காணப்படுகின்றது.

ஆகவே தீரு, சீதோன் மற்றும் சோதோம் போன்ற பட்டணத்தின் ஜனங்கள் தேவனை எவ்வளவேனும், ஒருபோதும் அறிந்திராததாலும், அவருடைய பிரமாணங்களை ஒருபோதும் அறிந்திராததாலும், மற்றவர்களைக் காட்டிலும், அதாவது தேவனை அதிகமாய் அறிந்திருந்த கப்பர்நகூம், கோராசின் போன்றவர்களைக் காட்டிலும் ஆயிரவருஷ யுகத்தின் அராசாட்சியின்போது, அக்காலத்திற்குரிய செல்வாக்கிற்கும், நிபந்தனைகளுக்கும் அதிசீக்கிரமாக இணங்கி வரக்கூடிய இருதய நிலைமையில் காணப்படுவார்கள். அதாவது, தேவனை அதிகமாய் அறிந்தும், தற்கால ஜீவியத்திலேயே கிடைத்திட்ட வாய்ப்புகளைத் தவறவிட்டு, குணலட்சணங்களை வளர்த்துக்கொள்வதற்குப் பதிலாக, குணலட்சணங்களைத் தகர்த்துப் போட்டவர்களாகிய கப்பர்நகூம், கோராசின், பெத்சாயிதா போன்றவர்களைக் காட்டிலும் உடனடியாக இணங்கி வரக்கூடிய இருதய நிலையில் காணப்படுவார்கள் என்று நாம் அனுமானிக்கின்றோம்.

இவைகளெல்லாம் உதாரணங்களே. ஏனெனில், யோவான் 5:28, 29-ஆம் வசனத்தின் காரியங்களை நாம் அறிவோம். "அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."

நமது கர்த்தர் இப்பாடத்தில் தெரிவித்தவைகளுக்கு இசைவாக, தற்கால ஜீவியத்தில் தேவனைப் பற்றின அறிவு இல்லாமலும், வாய்ப்புகள் எதுவும் இல்லாமலும் காணப்படுபவர்களுக்கு இதனால், நியாயத்தீர்ப்பின் காலத்தில் எவ்விதத்திலும் அனுகூலமில்லாமல் இருப்பதில்லை என்பதைக் காண்கின்றோம். இன்னுமாக இவர்கள், தற்கால ஜீவியத்திலேயே வெளிச்சத்தோடு தொடர்புக்குள் வந்தும், அதனை ஏற்க மறுத்துவிட்ட சிலரைக் காட்டிலும், இராஜ்யம் மற்றும் அதன் பிரமாணங்களுடைய நல்ல செல்வாக்கிற்கு மிகவும் தாக்கம் அடைந்தவர்களாகக் காணப்படுவார்கள். எதிர்க்கால நியாயத்தீர்ப்பு (அ) பரீட்சைத் தொடர்பான எத்துணை ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் இது! ஆதாமின் வீழ்ச்சியின் காரணமாகத் தேவனால் வழங்கப்பட்டதும், மனுக்குலத்திற்குத் தனிப்பட்ட பரீட்சை எதுவும் கொடுக்காமலேயே, முழுச் சந்ததி மீதும் தேவனால், அனுமதிக்கப்பட்டதுமான, இந்த முதலாம் தீர்ப்பினின்று அனைவருக்கும் ஒரு மீட்பை அருளி, இச்சந்ததியின் ஒவ்வொரு அங்கமும், இயேசுவின் கரங்களினின்று, ஏற்றவேளையில், தனிப்பட்ட விதத்தில் (ஜீவனுக்கான) பரீட்சையைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளக் காரியமானது, தவிக்கும் சர்வ சிருஷ்டிக்கும் எத்தகைய அருமையான விஷயமாய் உள்ளது. அருளப்படப் போகும் அந்தத் தனிப்பட்ட பரீட்சையின் கீழ், சூழ்நிலைகள் அப்பொழுது எத்துணை சாதகமாய்க் காணப்படும்! சாத்தான் கட்டப்படப் போகிறான் மற்றும் கர்த்தரை அறியும் அறிவினாலும், அவருடைய நல் ஈவுகளினாலும், விழுந்துபோன அவருடைய சிருஷ்டிகளின் சார்பிலான அவருடைய கிருபையான ஏற்பாடுகளினாலும் பூமி நிறைந்துக் காணப்படப் போகின்றது. இந்தத் தம்முடைய

விழுந்துபோன சிருஷ்டிகள் கெட்டுப்போய்விட வேண்டும் என்று தேவன் விரும்பாமல் மாறாக, அவர்கள் ஒருவேளை விரும்பினால், கிறிஸ்து மூலம் நித்தியஜீவனை அடையவே விரும்புகின்றார்.

இன்னுமாக, ஆதாமினுடைய சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுக்கப்படும் ஆசீர்வாதமான வாய்ப்புகள் மற்றும் வரவிருக்கின்ற நியாயத்தீர்ப்புத் தொடர்பான காரியங்கள் பெரும்பாலானவர்களிடமிருந்து மறைத்து வைக்கப்பட்டுள்ளது. அதிலும் விசேஷமாக ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து வைக்கப்பட்டுள்ளது என நமது கர்த்தர் மத்தேயு 11:25-ஆம் வசனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஞானிகளும், கல்விமான்களும், இந்தக் கிருபையான திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, பாவப்பட்ட சோதோமியர்களுக்கு வாய்ப்பு ஒருபோதும் கொடுக்கப்படாமலேயே நித்தியமான சித்திரவதைக்குள் கடந்து சென்றுவிட்டனர் என்றும், (ஒருவேளை சோதோமியருக்கு, கப்பர்நகூமின் ஜனங்களுக்குக் கிடைத்தது போன்று வாய்ப்புக் கிடைத்திருக்குமாயின்) இவர்கள் மனம் திரும்பியிருப்பார்கள் என நமது கர்த்தர் கூறியிருந்த போதிலும், சோதோமியர்களுக்கு எதிர்க்காலத்திலும் வாய்ப்புக் கிடையாது என்று ஜனங்களுக்குப் போதிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். இதுவுமல்லாமல் தீரு மற்றும் சீதோன் ஜனங்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைத் தற்காலத்தில் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாய் இருந்தும் கூட, ஒருவேளை இவர்களும் பாலஸ்தீனியாவில் உள்ளவர்களைப் போன்று, நல்வாய்ப்புப் பெற்றிருப்பார்களானால், மனந்திரும்பி இருப்பார்கள் எனக் கர்த்தர் கூறி இருந்தாலுங்கூட, இவர்களும் நித்தியமான சித்திரவதைக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றே, ஜனங்களிடம் இந்த ஞானிகளும், கல்விமான்களும் கூறுகின்றனர். இறுதியாக, பாலஸ்தீனியாவிலுள்ள யூதஜனங்களும் நமது கர்த்தரைப் புறக்கணித்துவிட்டபடியால், இவர்கள் இராஜ்யத்தை இழப்பதோடல்லாமல், நிச்சயமாய் நித்தியமான சித்திரவதையை அனுபவித்தாக வேண்டும் என ஞானிகளும், கல்விமான்களும் நம்மிடம் கூறுகின்றனர். இந்த ஞானிகள் மற்றும் கல்விமான்கள் சத்தியத்தைப் பார்க்கத் தவறிவிட்டனர். இவர்கள் சத்தியத்திற்குக் குருடர்களாக இருக்கின்றனர். இந்த ஞானிகளும், கல்விமான்களும் யூதர்களைப் போன்று, இவர்களுடைய மதபோதகர்களுடைய பாரம்பரியத்தினால் குருடாக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் இவர்கள் குழம்பத்தக்கதாக, நியாயத்தீர்ப்பு நாள் தொடர்பான கர்த்தருடைய வார்த்தைகளுக்கு வியாக்கியானம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அந்நாளை பரீட்சைக்கான நாள் என்றுள்ள அர்த்தத்தில் விவரிப்பதற்குப் பதிலாக, தண்டனைக்குரிய நாள் என்ற அர்த்தத்தில் விவரிக்கின்றனர். இவர்களோ நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை உரைத்தது முதல், சுமார் 2000 ஆண்டுகள் சோதோம் ஜனங்கள் ஏற்கெனவே நரகத்தில் இருக்கின்றார்கள் என்றும், கடுமையான சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றுமுள்ள தங்களுடைய அறிக்கையைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். இப்பொழுது சோதோம் ஜனங்கள் சித்திரவதை அனுபவிக்கின்றார்கள் என இவர்கள் விவரிப்பதைக் காட்டிலும் அதிகமாக, நியாயத்தீர்ப்பின் நாளுக்குப் பின்னர் சோதோம் ஜனங்கள் அனுபவிப்பார்கள் என இவர்கள் எண்ணுகின்றார்களோ? "நியாயத்தீர்ப்பின் நாள்" என்ற வார்த்தைகளை இவர்கள் எப்படிதான் புரிந்துவைத்துள்ளனர்? இவர்கள் எவ்விதத்திலும் இவ்வார்த்தைகளுக்கான அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துக்கொள்ளவில்லை என்பது உறுதியே. இவர்கள் நமது கர்த்தர் எதிர்க்காலத்தையே குறிப்பிட்டார் என்று காண்கின்றனர். ஆயினும், இவர்கள் அனைத்தையும் குழப்பிக் கொண்டதால், இவர்களால் தேவனுடைய குணலட்சணத்திற்கு இசைவாக, இக்காரியத்திற்கு நியாயமான விளக்கத்தைக் கொடுக்கமுடியவில்லை. அதேசமயம், தேவனைக் கனவீனப்படுத்தும் இவர்களுடைய ஈனமான கூற்றுகளுக்கு இசைவாகவும், இக்காரியத்திற்கு நியாயமான விளக்கத்தைக் கொடுக்க முடியவில்லை. **வேதாகம பாடங்கள் (STUDIES IN SCRIPTURES) , தொகுதி - 1, (ஆங்கிலத்தில்) பக்கம் - 137 பார்க்கவும்.**

இந்த உலகத்தினுடைய வழக்கத்திற்கு ஏற்ப ஞானிகள் அல்லாதவர்களும், பிரபுக்கள் அல்லாதவர்களும், பாலகராய் இருக்கும் சிலருக்கும் இக்காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளானது எத்துணை ஆறுதலாய் உள்ளது. அதாவது, தாழ்மையான மனங்கொண்டவர்களுக்கும், கர்த்தருக்குப் போதிக்க ஆசைக் கொள்வதற்குப் பதிலாக, கர்த்தரால் போதிக்கப்படுவதற்கு ஆயத்தமாய்

இருப்பவர்களுக்கும் இக்காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற கர்த்தருடைய வார்த்தைகள் எத்துணை ஆறுதலாய் உள்ளது. இந்த மாபெரும் ஆசீர்வாதமானது, அன்பானவர்களே நமக்குரியதாகும். மேலும், நாம் தொடர்ந்து தேவனால் போதிக்கப்படுவதற்கும், "தேவனால் அருளப்பட்டவைகளை அறியும்படிக்கும்," நாம் எளிமையையும், குழந்தைத் தன்மையையும் தக்கவைத்துக்கொள்வதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். நாம் சத்தியத்தில் களிகூர்ந்து, அதைப் பயன்படுத்துவோமாக; மற்றும், அதன் வெளிச்சத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கடவோம். கல்விமான்கள் மற்றும் இறையியல் பட்டதாரிகள் முதலான பெரும்பாலனாவர்களிடமிருந்து தெய்வீகத் திட்டம் மறைக்கப்பட்டுள்ள உண்மையின் விளக்கமானது, "இவர்கள் தங்களுடைய தந்திரத்திலே பிடிக்கப்படுவதற்கு" அனுமதிப்பதும், தாழ்மையான மனம் உடையவர்களுக்குத் தம்முடைய திட்டங்களை வெளிப்படுத்துவதும் பிதாவுக்குப் பிரியமாய் இருந்ததேயாகும். "இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும்" (1 கொரிந்தியர் 3:19). குமாரனுடைய முதலாம் வருகையின்போது, குமாரனிடத்திற்குப் பிதாவானவர், வேதபாரகர்களையும், பிரபலமானவர்களையும், நியாயசாஸ்திரிகளையும் ஈர்க்காமல் மாறாக, சொற்பமான கபடற்ற மற்றும் தாழ்மையுள்ள, குறிப்பிட்ட "உத்தம இஸ்ரயேலர்களையே" ஈர்த்தார். இதே வகுப்பாரே யுகம் முழுவதிலும் ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளனர்.

ஆண்டவர் தம்முடைய விசேஷமான போதனைகள், தம்முடைய சாட்சியை ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான இருதய நிலையைக் கொண்டிராத ஆயத்தமற்றவர்களுக்கும், விருப்பமற்றவர்களுக்கும் கொடுக்கப்படுவதைவிட, பிதா தம்மிடத்தில் தந்தவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்பதை அறிந்திருந்தார். இந்தத் தம்முடைய உண்மையுள்ள சீஷர்களுக்கும், இந்தச் சீஷர்கள் வகுப்பாரிலுள்ள அனைவருக்கும் ஆண்டவர், தம்முடைய போதனைகள் அனைத்தையும், தாம் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டது என அறிவித்தார்; தாம் சுயமாய் எதையும் பேசவில்லை என்றும் கூறினார்; இன்னுமாக, தம்மைப் பிதா தவிர, வேறு எவரும் உண்மையாக, முழுமையாக, நெருக்கமாக அறிந்திருக்கவில்லை என்றும் கூறினார். இன்னுமாக, குமாரனாகிய தம்மைத் தவிர, வேறு எந்த மனிதனும் பிதாவை அறியான் என்றும், குமாரனாகிய தமக்குத்தான் பிதா, தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் கூறினார். இவைகளைக் குறித்து ஒரு சராசரி வாசகன் முதன்முறையாகப் படிக்கும்போது, கொஞ்சமாகவே புரிந்துக்கொள்கின்றான். ஆனால், வருடங்களாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவன் கிருபையிலும், கர்த்தரைப் பற்றின அறிவிலும் வளருகையில் நன்கு புரிந்துக்கொள்ளுவான். கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்ப காலத்தில், ஒருவன் இயேசுவையும், பிதாவையும் குறித்துக் கொஞ்சம் அறிவு கொண்டிருந்திருந்தாலும், பிதாவையும், குமாரனையும் நெருக்கமான விதத்தில் அறிந்துக்கொள்வது என்பது அதாவது, அவர்களோடு நன்கு பழகின நிலையில், அவர்களை அறிந்துக்கொள்வது என்பது அதாவது, நெருக்கமான நண்பனுடைய மனதையும், இருதயத்தையும் ஒருவர் அறிவதுபோல பிதாவையும், குமாரனையும் அறிந்துக்கொள்வது என்பது, முற்றிலும் வேறுபட்ட காரியமாக இருக்கின்றது என்பதை உணர்ந்துக்கொள்கின்றான். இப்படியான நெருக்கத்தைப் பெற்றுக்கொண்டிருப்பது என்பது சிலாக்கியமாகும். இந்த நெருக்கம் அனைவருக்கும் இருப்பதில்லை; இதற்காக தேடி நாடவேண்டும், (கதவு) தட்டப்பட வேண்டும்; மேலும், இப்படித் தேடி நாடி, தட்டுதல் என்பது நெருக்கமான ஐக்கியம் மற்றும் உறவுகொள்வதற்கான உண்மையான வாஞ்சையைக் குறிக்கின்றது. இப்படியாக, கிருபையில் வளருதல் என்பது, இராஜ்யத்தில் கர்த்தரோடு உடன் சுதந்திரர்களாகுவதற்கு நாடும் கர்த்தருடைய உண்மையான அனைத்துப் பின்னடியார்களால் உண்மையாய் நாடப்பட வேண்டும்; இது இல்லையெனில், இவர்கள் முன்னேற முடியாது. நாம் எந்தளவுக்குப் பிதாவையும், குமாரனையும் அறிந்துக்கொள்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் அவர்களில் அன்புகூருகின்றவர்களாகவும், அவர்களுடைய பார்வைக்குப் பிரியமானவைகளைச் செய்வதற்கு அதிகமதிகமாக நாடுகின்றவர்களாகவும் காணப்படுவோம்.

## "வருத்தப்பட்டு, பாரஞ்சுமக்கிறவர்களே, வாருங்கள்"

தாம் பேசுவதை, அங்கு நின்று கேட்டுக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் சிலர் சரியான நிலைமையில் காணப்பட்டும், இன்னமும் தம்முடைய சீஷர்களாகவில்லை என்பதை மறைமுகமாகச் சொல்லும் விதத்தில், "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள்

எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" எனத் தாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்குத் தனித்தனியே பொருந்தும் வண்ணம் இயேசு கூறினார். பெரும்பான்மையான ஜனங்கள் விஷயத்தில் இருந்த சிக்கல், அவர்கள் வருத்தப்படுகின்றவர்களாகவும் இல்லை, பாரஞ்சுமக்கிறவர்களாகவும் இல்லை. மாறாக, நன்கு சுயதிருப்தியுடன் காணப்படுபவர்களாக இருப்பதினாலேயேயாகும். இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் பேசுகையில், அவர் சரீரப்பிரகாரமான வருத்தத்தை அல்லது சரீர பிரகாரமான பாரத்தையோ, மனதில் கொண்டவராகப் பேசினார் என்று நாம் எண்ணுவதில்லை. மாறாக, இருதயத்தின் பாரம் மற்றும் பாவத்தைப் பற்றின வருத்தம் பற்றியே ஆகும். உண்மையுள்ள இஸ்ரயேலர்கள் தங்களுக்கே உண்மையாக இருந்திருப்பார்களானால், அவர்கள் இப்படியான இருதய பாரத்தையும், பாவம் பற்றின வருத்தத்தையும் நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள்.

இஸ்ரயேலர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்டார்கள் என்றும், நியாயப்பிரமாணமானது இம்மியும் பிசகாத நிலையை எதிர்ப்பார்க்கின்றது என்றும், பெலவீனங்களுக்கும், பூரணமின்மைகளுக்கும், தப்பறைகளுக்கும் நியாயப்பிரமாணமானது எவ்விதமான சலுகையும் காட்டுவதில்லை என்றும், சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் பாரத்தைச் சுமக்க முயற்சிக்கையில், தாங்கள் எப்பொழுதும் குற்றவாளிகளாகக் கண்டிக்கப்படுவதை யூதர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். நியாயப்பிரமாணத்தைப் பின்பற்ற முடியாததற்கான காரணம், நியாயப்பிரமாணம் அநீதியானதாக இருந்ததினாலோ அல்லது நியாயப்பிரமாணம் பூரண மனிதனால் கைக்கொள்ளப்பட முடியாது என்பதினாலோ இல்லை மாறாக, அனைவரும் பூரணமற்றவர்களாகவும், விழுந்துபோனவர்களாகவும் காணப்படுவதினாலேயே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியாமல் போயிற்று. ஆகவே, அக்காலத்தில் வாழ்ந்த யூதர்கள் மத்தியில் பெரும்பான்மையானவர்கள், தாங்கள் பரிசுத்தமாய் இருப்பதாகவும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதாகவும், பாவம் செய்யவில்லை எனவும் அறிக்கைப்பண்ணி வந்தாலும், சிலர் தங்களுக்குள்ளும், மற்றவர்களிடத்திலும் தாங்கள் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்ளவில்லை எனவும், கைக்கொள்ள முடியவுமில்லை எனவும் நேர்மையாய் ஒப்புக்கொண்டவர்களாகவும் இருந்து, தங்களுடைய பயனற்ற பிரயாசங்களினிமித்தம் வருத்தமும், பாரமும் கொண்டிருந்தார்கள் என நாம் புரிந்துக்கொள்கின்றோம். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கெனச் சுமை தாங்குபவர் அவசியம் என்பதை உணர்ந்துக்கொண்டிருந்தனர். மேலும், இவர்கள் தங்களுடைய ஆத்துமநோயை உணர்ந்தவர்களாகவும், ஒரு நல்ல வைத்தியனுடைய அவசியத்தையும் உணர்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். மேலும், இவர்களையே இயேசு தம்மிடத்தில் வந்து இளைப்பாறுதலையும், விடுதலையையும் பெற்றுக்கொள்ளும்படி அழைத்தார்.

இப்படியாக, இளைப்பாறுதலுக்கெனக் கிறிஸ்துவினிடத்தில் வருவது என்பது கிறிஸ்தவ ஜீவியத்திற்கு நேரான முதல் படியாகும். அது நீதிமானாக்கப்படுதலாகும். நமது பாவங்களுக்கான பலியாக அவரை ஏற்றுக்கொள்ளுதலாகும். மேலும், அவரை இவ்விதமாக ஏற்றுக்கொள்வது முதல், அவரை விசுவாசிப்பதின் மூலம் நமக்கு அப்போஸ்தலர் கூறியுள்ளது போன்று சந்தோஷமும், சமாதானமும் கிடைக்கின்றது. (ரோமர் 5:1; 15:13). ஆனால், இவ்வாறாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டப் பின்னர், நாம் செய்யவேண்டியவைகள் இன்னும் சில உள்ளன. அதாவது, நாமே விரும்பி நம்மேல் ஏற்றிக்/ஏற்றுக்கொள்ள வேண்டிய வேறொரு பாரமும், வேறொரு நுகமும் இருக்கின்றது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நுகம் என்பது அடிமைத்தனத்திற்கான அடையாளமாகும். ஆகவே, நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை எனும் நுகத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாகிய விசுவாசிக்கின்ற யூதர்கள் அல்லது சாத்தானுடைய நுகத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாகிய விசுவாசிக்கின்ற புறஜாதிகள், கர்த்தருடைய வேலைக்காரர்களாகி, அவருடைய நுகத்தை எடுத்துக்கொண்டு, அவருடைய சித்தம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நமது கர்த்தர் குறிப்பிடுகின்றார். நுகம் இரண்டு நபர்களுக்கும் பொதுவாக ஏற்பாடு பண்ணப்படுகின்றது. மேலும், நமது கர்த்தர், "தமது நுகம்" என்றும் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து கர்த்தர் இயேசுவும் கூட ஒரு வேலைக்காரர் என நாம் புரிந்துக்கொள்கின்றோம். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வந்துள்ள அவர், வேலைக்காரரின் நுகத்தைத் தரித்துக்கொண்டு/தம் மீது ஏற்றுக்கொண்டு, பிதாவின்

சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, அவரோடு கூட நாம் உண்மையுள்ள சக நுகம் சுமப்பாளியாக இருப்பதற்கும், பாவம் மற்றும் மரணத்தினின்று உலகத்தை விடுவிக்கும் மாபெரும் வேலையில் கிறிஸ்துவாகிய அவரோடு உடன் வேலையாட்களாக இருப்பதற்கும், நம்மை வரவேற்கின்றார்/அழைக்கின்றார்.

இந்த நுகத்தை தரித்துக்கொள்வதற்குரிய ஆற்றலுக்கான இரகசியம், மற்றும் கிறிஸ்துவோடு அவருடைய வேலையில் கூட்டாளியாக முடிவதற்கான இரகசியம், இப்படியெல்லாம் செய்வதின் விளைவாகிய மாபெரும் ஆசீர்வாதத்தை நம்முடைய சொந்த இருதயத்தில் பெற்றுக்கொள்வதற்கும், நமது ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் பெற்றுக்கொள்வதற்குமுள்ள இரகசியம், கர்த்தர் விவரிக்கிற பிரகாரம், அவர் இருப்பது போல நாமும் சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவர்களாக இருப்பதற்குக் கற்றுக்கொள்வதேயாகும். பெருமையுள்ளவர்களாலும், அகம்பாவம் உள்ளவர்களாலும், சுயசித்தம் கொண்டவர்களாலும், பேராசை கொண்டவர்களாலும், உலக ஞானிகளினாலும், இயேசுவோடு ஒரே நுகத்தில் வேலை புரிவது, கூடாத காரியமாகும் அல்லது நாம் சரியாய் நாடித் தேடிக்கொண்டிருக்கும் ஆத்துமாவிற்கான உண்மையான இளைப்பாறுதலையும் கண்டடைய முடியாது. ஆனால், ஒருவேளை நாம் சாந்தமுள்ளவர்களாகவும், போதிக்கப்படத்தக்கவர்களாகவும், மனத்தாழ்மையுள்ளர்வகளாகவும், காத்தருடைய சித்தத்தை அறிந்துக்கொள்ளவும், என்ன சம்பவித்தாலும் அச்சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமானவர்களாகவும் காணப்படுவோமாகில், அப்பொழுது நிச்சயமாக நமது ஆத்துமாவிற்கான இளைப்பாறுதலைக் கண்டடைவோம்; அதாவது, எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்முடைய இருதயங்களை ஆளும்.

மத்தேயு 11:28, 29-ஆம் வசனங்களில் இடம்பெறும் இரண்டு இளைப்பாறுதல்களுக்கும் இடையே வித்தியாசம் உள்ளதை நாம் கவனிக்கின்றோம். விசுவாசத்தின் மூலம் கர்த்தரிடத்தில் வருபவர்களுக்குக் கொடுக்கப்படும் இளைப்பாறுதலே முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள இளைப்பாறுதலாகும். இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆத்துமாவிற்கான இளைப்பாறுதலையோ ஒருவன் இயேசுவுடன் நுகத்தை சுமப்பவன் ஆகும்போது கண்டடைகின்றான். இவைகள் இரண்டு ஆசீர்வாதங்களாகும்; முதலாம் ஆசீர்வாதமானது நீதிமானாக்கப்படுதலாகும் அதாவது, நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டதினாலும், இனிமேல் நமது பரம பிதாவுக்கு நாம் அஞ்ஞானிகளாய், அந்நியர்களாயிராமல் மாறாக, கிறிஸ்துவின் இரத்தத்தினால், பிதாவுக்குச் சமீபமாக்கப்பட்டு இருக்கிறோம் என உணர்ந்துக்கொள்ளுவதினாலும் ஏற்படும் சந்தோஷமாகும். இரண்டாவது ஆசீர்வாதமோ, படிப்படியாக இருதயத்தில் வளர்ந்து வரும் சந்தோஷமாகவும், வளர்ந்து நிலைத்திருக்கும் பரிசுத்தஆவியின் சமாதானமும், சந்தோஷமாகவும் காணப்படுகின்றது. ஆனால், இந்த இரண்டாம் ஆசீர்வாதமானது மிகவும் சொற்பமானவர்களாலேயே அடையப்படுகின்றது. பெயர்க்கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் இதைக் குறித்தும் எதுவும் தெரியாமலேயே காணப்படுகின்றனர். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதே இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய, அழைப்பிற்குரிய முக்கியமான நோக்கமாகும். மேலும், கர்த்தரிடத்தில் வருவதற்கும், அவருடைய நுகத்தைச் சுமப்பதற்கும், அவரைக் குறித்துக் கற்றுக்கொள்வதற்கும், இவ்வாறாகத் தேவனுடைய நேசகுமாரனுடைய சாயலைப் போலாகுவதற்கும் தவறுகின்றவர்கள், இந்தச் சுவிசேஷ யுக அழைப்பிற்கும், அதன் விசேஷமான நோக்கத்திற்கும் தவறிவிடுகின்றவர்களாக இருப்பார்கள்; மற்றும், இராஜ்யத்தின் வேலையில் பங்குவகிக்கப் போவதுமில்லை. விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்படும் ஆசீர்வாதமானது, நாம் நுகத்தை எடுப்பதற்கும், பிதாவின் வேலையில் கர்த்தரோடு உடன்வேலையாட்களாக ஆகுவதற்கும், நம்மை ஆயத்தப்படுத்துவதற்கும் மற்றும் தகுதிப்படுத்துவதற்குமேயாகும்.

தம்மோடு கூட நுகத்தின் கீழ், நாம் வரும்படிக்கு நம்மை இயேசு வரவேற்கும் இந்த நுகமானது உலகத்தின் பார்வைக்கு மிகவும் அச்சம் தரக்கூடிய விஷயமாகக் காணப்படுகின்றது. ஜீவனை, நேரத்தை, மற்றும் எல்லாவற்றையும் தேவனுக்கான ஊழியத்திற்கென ஒப்புக்கொடுப்பது என்பது/அர்ப்பணம் பண்ணுவது என்பது மிகவும் பயங்கரமான பாரமாகவும், மிகவும் நியாயமில்லாத நுகமாகவும் உலகத்தாருக்குத் தோன்றுகின்றது. ஆனால், இயேசுவினிடத்தில் வந்தவர்களுடைய மற்றும் நீதிமானாக்கப்படுதல் வாயிலாக சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் அவரிடமிருந்து

பெற்றுக்கொண்டுள்ளவர்களுடைய கண்ணோட்டத்தில், இந்த நுகம் பற்றின விஷயம் முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். இவர்களுக்கோ இந்த நுகமானது, “புத்தியுள்ள ஆராதனையாக” தோன்றும். நமது ஜீவியங்களையும், நமக்கான எல்லாவற்றையும் கர்த்தர் கிருபையாக மீட்டுக்கொண்டபடியினால், அவர் மீட்டுள்ள அந்த ஜீவியத்தின் அனைத்தையும், அவருடைய மகிமைக்காகவும், துதிக்காகவும் பயன்படுத்த வேண்டும். நாம் நுகத்தை நம்மீது ஏற்றுக்கொண்ட/நம்மீது இணைத்துக்கொண்ட பிற்பாடு, அது **மெதுவானது** எனக் காண்கின்றோம். மற்றும், இந்த நுகத்தினிமித்தம் நமக்கு வரும் எந்தச் சுமையும், எந்தக் கடமையும், எந்தப் பரீட்சையும், எந்தக் கஷ்டமும், எவ்விதமான மனவேதனையும், உண்மையில் இலகுவாகவே காணப்படும்.

ஏன்? ஏனெனில், இந்த நுகத்தைத் தரித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, சகலமும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்ற தெய்வீக வார்த்தையினுடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. சுமை அதிகமாயிருப்பின் ஆசீர்வாதமும், நற்பலனும் கூட அதிகமாக இருக்கும். தற்காலத்திலுள்ள அனுபவங்கள் மிகவும் கடுமையாக இருக்குமாயின், இவர்களுக்கான மகிமை மிகவும் பிரகாசமாகவும், இவர்களுக்கான குணலட்சணம் மிகப் பிரகாசமாகவும் இருக்கும் மற்றும் பரலோக இராஜ்யத்திற்கென இவர்கள் பொருத்தமானவர்களாகவும், மெருகூட்டப்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பது அதிக நிச்சயத்துடனும் இருக்கும். இந்தக் கண்ணோட்டத்தின்படி அனைத்துச் சுமையும் இலகுவாயிருக்கும். ஏனெனில், நமது நுகத்தைப் பற்றி நாம் உணர்ந்துள்ளோம். ஆகையால், அது மிக மெதுவானதாகவும், மிகவும் நியாயமானதாகவும் காணப்படும். **இது இலகுவாயிருப்பதற்கு இன்னொரு காரணம், இந்த நுகத்தில், கர்த்தர் இயேசு நம்மோடு கூட இருப்பதாகும். அவர் மாபெரும் சுமைத்தாங்கி.** மேலும், நம்மால் சகிக்க முடியாத ஜீவியத்தின் சுமைகளால் நாம் அதிகமதிகமாய் அழுத்தப்படுவதற்கும், சோதிக்கப்படுவதற்கும் அவர் அனுமதிக்க ஒட்டார். அவரது நுகத்தைத் தங்கள் மேல் ஏற்றுக்கொள்கின்றவர்கள் அனைவருடைய, நலனுக்கடுத்த காரியங்களைப் பார்த்துக்கொள்கின்றார். அவர்களுடைய சுமைகள், அவருடைய சுமைகளாக இருக்கின்றது, அவர்களுடைய பரீட்சைகள், அவருடைய பரீட்சைகளாக இருக்கின்றது, அவர்களுடைய நலம், அவருடைய நலமாக இருக்கின்றது. ஆம், இவர்கள் அவரை அன்புகூருவதினால், இவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கின்றது.

கர்த்தர் இந்த வழியில் எந்த அடிமைகளையும் அவராகவே எடுத்துக்கொள்வதில்லை என்றும், அவர் யார் மீதும் இந்த நுகத்தைக் கட்டுவதில்லை/இணைப்பதில்லை என்றும், நாம் வருவதற்கும், இந்த அவருடைய நுகத்தை நம்மீது நாம் கட்டிக்கொள்வதற்கும்/இணைத்துக் கொள்வதற்கும் அவர் அழைக்க மாத்திரமே செய்கின்றார், அதாவது அவருக்கும், அவருடைய ஊழியத்திற்குமென நாம், நம்மையே முழுமையாய் அர்ப்பணம் பண்ணத்தக்கதாக அழைக்க மாத்திரமே செய்கின்றார் என்றும் நினைவில் வைத்துக்கொள்வோமாக.

---

**R2625**

# “இரண்டு விதமான பாவிகள்”

## லூக்கா 7:36-50

“உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது” (வசனம் 50)

சீமோன் என்னும் பெயரானது, யூதர்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படும் பெயராகும். ஆகவே, இரண்டு சீமோன்கள் காணப்பட்டார்கள் என்பதிலும், அவர்கள் இருவரின் வீட்டிலும், இயேசு உபசரிக்கப்பட்டார் என்பதிலும் கவனத்தை ஈர்க்கத்தக்கதாக எதுவுமில்லை. எனினும், அந்த இரண்டு உபசரிப்புகளிலும் அநேக அம்சங்கள் ஒற்றுமையாய்க் காணப்படுவது கொஞ்சம் விநோதமாகவே இருக்கின்றது. அதாவது, இரண்டு சம்பவங்களின் போதும், நமது கர்த்தருடைய பாதங்கள் அபிஷேகிக்கப்படுகின்றது (மத்தேயு 26:6-13 வரையிலான வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்). இந்த இரண்டு சம்பவங்களுக்குமிடையே சுமார் ஒன்றரை வருடம் இடைவெளி இருக்கும் என

அனுமானிக்கப்படுகின்றது. மத்தேயுவால் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவமானது நமது கர்த்தருடைய மரணத்திற்குச் சற்று முன்பு நடந்ததாகும்.

இந்தப் பாடத்தில் நாம் பரிசேயனாகிய சீமோனைப் பார்க்கின்றோம். இவர் நமது கர்த்தருடைய குணலட்சணங்களினாலும், போதனைகளினாலும் கவரப்பட்டவராக, பெரும்பாலான ஜனங்களைக் காட்டிலும் கர்த்தரிடத்தில் ஈர்ப்புக் கொண்டவராக இருந்தார் என்பது நிச்சயமே. இயேசுவைப் போஜனம் பண்ண அழைப்பதும், இவ்வாறாக அவரைக் கனப்படுத்துவதும் நலமானது எனச் சீமோன் எண்ணினார்; மற்றும் இப்படியாகப் பிரபலமான நசரேயனுடன் தனக்குத் தொடர்பு இருக்கின்றது என்பதின் மூலம், தனக்கும் கொஞ்சம் பிரபலம் கிடைக்கும் என்றும் சீமோன் எண்ணியிருக்கக்கூடும்.

நமது கர்த்தர் அழைப்பை ஏற்றுக்கொண்டு, போஜனம் பண்ண வந்தபோது, சீமோன் அவரை அன்புடனும், மரியாதையுடனும் நடத்தினார். ஆனாலும், அவரை உபசரிப்பதில் உச்சக்கட்டமான/அதிகப்படியான மரியாதை எதையும் செய்யும்படி சீமோன் நடந்து கொள்ளவில்லை. இயேசு விசேஷமான வரவேற்பு உபசரிப்புகளுக்குப் பழக்கப்பட்டவர் அல்ல எனவும், மாறாக இயேசு பொதுவாக மீன்பிடிக்கின்றவர்கள் மற்றும் பொது ஜனங்களின் நண்பராக காணப்படுகின்றார் எனவும் இயேசுவைக் குறித்துச் சீமோன் அநேகமாக எண்ணியிருந்திருக்கக்கூடும். ஆகவே, கனம் வாய்ந்த விருந்தினர்கள் வரும்போது, அவர்களுக்குச் செய்வது போன்று, இயேசு வந்தபோது, சீமோன் அவரை முத்தம் செய்யவில்லை. ஏனெனில், அப்படி இயேசுவை முத்தம் செய்வது, ஒரு சாதாரண நபரை மிக அதிகமாய்க் கனப்படுத்துவது போன்று, அவரை முழுமையாய் ஏற்றுக்கொள்வதற்கு இன்னமும் ஆயத்தமில்லலாமல் காணப்பட்ட பரிசேயனாகிய சீமோனுக்குத் தோன்றினது. இன்னுமாக, அக்காலத்தில் சிறப்பாக உபசரிப்பவர்களின் பழக்கத்தின்படி, இயேசு வந்தபோது, அவருடைய பாதரட்சைகளைக் கழற்றுவதற்கும், அவருடைய பாதங்களைக் கழுவுவதற்குமென, சீமோன் தன்னுடைய வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடவில்லை. சீமோன் பின்வருமாறு தனக்குள்ளே சொல்லியிருக்கக்கூடும், “இந்த மனுஷனும் அவருடைய சீஷர்களும் இப்படியான உபசரிப்புகளுக்குப் பழக்கப்பட்டவர்களல்ல மற்றும் என்னுடைய வேலைக்காரர்களும் கூட, தங்களுக்கு இந்தச் சீஷர்கள் சமமானவர்களல்ல என்றும் போதகர்தான் கொஞ்சமாகிலும் சரிசமமான மரியாதையில் காணப்படுகின்றார் என்றும் உணர்ந்துக்கொள்வார்கள்.” ஆகவே, மிகுந்த மரியாதையான, வரவேற்பு உபசரிப்பைக் கர்த்தருக்குக் கொடுக்கவில்லை. ஆயினும், பரிசேயன் கர்த்தரை உள்ளன்போடு, தனது மேஜைக்கு வரவேற்றான். இப்படியாக, உள்ளன்போடு கர்த்தரைத் தனது மேஜைக்கு அழைத்த காரியமானது, தான் கர்த்தரைக் கனப்படுத்துகின்றதாக இருக்கின்றது எனச் சீமோன் எண்ணியிருந்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய ஒரு விருந்தாளியை உபசரிக்கும் சிலாக்கியத்தில் தனக்குத்தான் கனம் உள்ளது என்பதைப் போதுமானளவுக்கு சீமோன் உணராதவராகக் காணப்பட்டார். உயிர்த்தெழுதலின் காலங்களில் (ஆயிரம் வருஷம் யுகத்தின்போது) சீமோனுடைய விருந்தாளியாக வந்திருந்தவர், “தேவனுடைய ஒரே பேறான குமாரனும், கிருபையும், சத்தியமும் நிறைந்தவருமானவர்” எனச் சீமோன் அறிகையில், அவர் நடந்துகொண்ட விதத்தைக்குறித்து அவருக்கு (சீமோனுக்கு) எப்படி இருக்கும்?

“அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் தேவதூதரையும் (தேவனுடைய செய்தியாளர்களையும்) உபசரித்ததுண்டு” என்று அப்போஸ்தலர் நமக்கு வலியுறுத்துகின்றார். இப்படிப்பட்டதான காரியங்களில், கர்த்தருடைய ஜனங்கள் தாராளமுள்ளவர்களாக இருக்க வேண்டும் எனக் கர்த்தர் விரும்புகின்றார் (ஆனால் வீண்பெருமைக்காக, வீண் செலவாளிகளாக இருக்கக்கூடாது); ஆகவேதான், “வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு. அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு” என்று எழுதப்பட்டுள்ளது (நீதி. 11:24). விழுகையினிமித்தம் நாம் சுதந்தரித்துள்ள இழிவான நம்முடைய சுயநலத்தைக்<u>குறித்தும்</u>, படிப்படியாகக் கர்த்தருடைய வார்த்தைகளினுடைய போதனையின் மூலம் சுயநலத்தை மேற்கொண்டு, அதிகம் தாராளமுள்ளவர்களாகுவது, அதாவது பரலோகத்திலுள்ள நமது பிதாவைப் போன்று தாராளமுள்ளவர்களாகுவது <u>குறித்தும்</u> இப்பாடத்தில், ஒரு பகுதியாக நாம் பார்க்கப்போகின்றோம்.

கர்த்தரை உண்மையில் அடையாளப்படுத்துகிறவர்களாகிய “சகோதரரிடத்தில்” நாம் விசேஷித்த விதமாகத் தாராளமுள்ளவர்களாகவும், விருந்தோம்பல் பண்ணி

உபசரிக்கின்றவர்களாகவும் இருப்போமாக. இவர்களை, "தேவனுடைய ஸ்தானாதிபதிகளாக" மாத்திரமல்லாமல், "கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களாகவும்" கருதி, உபசரித்து, இவர்களிடத்தில் தாராளமுள்ளவர்களாகக் காணப்படுவோமாக.

"ஊரில் உள்ள ஸ்திரீ" எனக் குறிப்பிடப்படும் இவள் சாமான்ய ஸ்திரீயாகவும், அவ்வூரார் அல்லாத இயேசுவுக்கும், சீஷர்களுக்கும் இவளைக்குறித்துத் தெரியவில்லை என்றாலும், இவள் அவ்வூரின் ஜனங்களுக்கு நன்கு அறிமுகமானவளே. இந்த ஸ்திரீயினுடைய கடந்த கால ஜீவியம் எப்படிப்பட்டதாக இருப்பினும், இவளுடைய இருதயமானது பாவத்தைக்குறித்த ஆழமான மனவருந்துதலுக்குள் கடந்து சென்றுள்ளது; மற்றும் நல்ல ஓர் ஜீவியத்தை ஜீவிக்கவும் இவளுக்குள் விருப்பம் ஏற்பட்டுள்ளது. மாபெரும் போதகராகிய இயேசுவைக்குறித்தும், விழுந்துபோனவர்களை உற்சாகப்படுத்துவதற்கும், விழுந்துபோனவர்கள் மீண்டும் எழும்புவதற்கென உதவுவதற்கும், விழுந்துபோனவர்களுடன் பேசுவதற்கும் இயேசு பரிசேயர்கள் போன்று அலட்சியப்படுத்தாமல், வெறுத்து ஒதுக்காமல் காணப்படுகின்றார் என்பது குறித்தும் இவள் கேள்விப்பட்டாள். மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ஜெபத்துடன் கர்த்தரிடம் செல்ல வேண்டும் என்றும், ஒரு புதிய ஜீவியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும், பிற்பாடு ஓர் உறுதியான ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் என்றும் எண்ணினாள். எப்படி இதைச் செய்ய வேண்டும் என்பது அவளுக்குத் தெரியவில்லை; தன்னைக் குறித்து அவரிடம் என்ன சொல்லவேண்டும் என்பதும் அவளுக்கு தெரியவில்லை; தன்னுடைய கரங்களில் சிறு காணிக்கையை மாத்திரம் எடுத்துச்செல்லலாம் என எண்ணினாள் மற்றும் அக்காலத்தின் வழக்கப்படி, அவர் படுத்த நிலையில் ஒரு பக்கமாக சாய்ந்து பந்தியிருக்கையில், அவருடைய பாதத்தைத் தன்னால் சுலபமாக அணுகமுடியும் என்பதினால், தான் கொண்டுவரும் தைலத்தினால் அவருடைய பாதங்களை அபிஷேகம் பண்ணலாம் என எண்ணினாள். அவள் எதுவும் பேசவில்லை. ஆனால், அவளுடைய இருதயம் வார்த்தைகளினால் நிரம்பியிருந்தது, ஆண்டவரின் பாதங்கள் அருகே வந்தாள், அவளுடைய கண்ணீர் அவர் பாதங்கள் மீது விழுந்தன. பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், ஒப்புரவாகுவதற்குமான அவளது இருதயத்தின் உண்மையான ஏக்கங்களை அவள் தனது வார்த்தைகளினால் வெளிப்படுத்துவதைக் காட்டிலும், அவள் தனது கண்ணீர் மூலம் ஆண்டவருக்கு விளக்கினாள்.

நாம் பாவ மன்னிப்பிற்காக உள்ளம் நொந்து அவருடைய பாதத்தண்டையில் வருகையில், கர்த்தருடைய ஏற்பாடுகள் எவ்வளவு இரக்கத்துடனும், நமது தேவைகள் மீது எவ்வளவு கரிசனையுடனும் காணப்படுகின்றது. அதாவது, வேறொருவர் மூலம் நாம் அவரை அணுக வேண்டியதில்லை, அதேசமயம் சில குறிப்பிட்ட வார்த்தைகள் மூலம் நமது விண்ணப்பத்தை முறைப்படுத்திக் கூற வேண்டியதுமில்லை. அவரால் நம்முடைய இருதயங்களை வாசித்து அறியமுடியம், அவர் நமது கண்ணீர்களை ஏற்றுக்கொள்கின்றார். இன்னுமாக, அவருடைய சரீரத்தின் அங்கங்களுக்கு நாம் ஊழியம் புரிவதற்கும், நம்மைத் திருத்தம் செய்துகொள்வதற்கும் நாம் ஏறெடுக்கும் எளிமையான பிரயாசங்களைக்கூட அவர் ஏற்றுக்கொள்கின்றார். மன்னிக்கப்பட்டது குறித்த செய்தியை அவர் நமக்குத் தாமதமாகக் கூடக் கொடுக்கலாம், அதுவும் விசுவாசம் மற்றும் பாவத்திற்கான வருத்தத்தின் வேர்கள் நம்முடைய இருதயங்களில் ஆழமாக ஊடுருவதற்கேயாகும்.

இயேசு கொஞ்சம் நேரம் அவளுக்குச் செவிசாய்க்காமல் இருந்தார், மற்றும் அவளுக்குள், தான் செய்கிற காரியத்திற்கான நோக்கமும், ஜெபங்களும் அவரால் சரியாகப் புரிந்துக்கொள்ள முடிகின்றதா அல்லது இல்லையா என்ற கேள்விகள் எழும்பியிருந்திருக்க வேண்டும். ஆனால், அவளுடைய இருதயத்தில் நிறைந்திருந்த கண்ணீர், இன்னும் அதிகமாக அவள் கண்களிலிருந்து சொரிந்தது மற்றும் அவருடைய பாதங்களை அவள் மென்மையாகத் துடைத்து, அவர் பாதங்களைத் தைலத்தினால் அபிஷேகித்தாள். இதற்கிடையில் பரிசேயன் தனக்குள்ளாக, பின்வருமாறு கூறிக்கொண்டான் . . . "இன்று நான் இயேசுவை போஜனம் பண்ணும்படி அழைத்தது நல்லதாகிவிட்டது. மேலும், இந்த ஸ்திரீயும் இங்கு வந்ததும் நல்லதுதான்; இச்சூழ்நிலையானது இயேசுவைச் சுற்றியிருப்பவர்களுடைய இருதயத்தை இயேசுவால் வாசித்தறிய முடிவதற்கான வல்லமை தொடர்பான நிரூபணத்தை வெளிப்படுத்த ஏதுவாயிற்று. ஒருவேளை இயேசு தீர்க்கத்தரிசியாக இருப்பாரானால், ஒருவேளை தேவனுடைய வல்லமை விசேஷித்தவிதத்தில் இவரிடத்தில் இருக்குமாயின், ஒருவேளை இவர் தேவனால் வெளிச்சமூட்டப்பட்டவராக இருப்பாரானால், இவருக்கு இந்த ஸ்திரீயின் குணநலம் தெரிந்திருக்கும். ஆனால்,

ஒருவேளை இவளது குணம் பற்றி இயேசுவுக்குத் தெரியாமல், தம்முடைய பாதங்களை அபிஷேகிக்கும்படி இவளை அனுமதித்துக் கொண்டிருப்பாரானால், இது இவர் தீர்க்கத்தரிசி இல்லை என்பதை நிரூபித்துவிடும் என்பதேயாகும்.”

ஆனால், இயேசுவோ என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை முழுமையாக அறிந்தும், தமது பாதம் அருகே காணப்படும் பாவப்பட்ட அந்த ஸ்திரீயினுடைய இருதயம் பற்றியும், தம்மை உபசரித்த சுயத்தில் திருப்திகொள்ளும் பரிசேயனுடைய இருதயம் பற்றியும் தெளிவாக அறிந்தவராக, இருவருக்கும் நன்மை செய்வதற்கான ஒரு வழியைத் திட்டம் பண்ணினார். அதாவது, அனைவருக்கும் முன்பாக ஒரு மாபெரும் சத்தியத்தை முன்வைப்பதற்கான ஒரு வழியைத் திட்டம் பண்ணினார். ஆகவே, அவர் சீமோனுக்கு ஓர் உவமையைச் சொன்னார், அதாவது, ஒரு மனுஷனுக்கு இரண்டு கடனாளிகள் இருந்தார்கள் என்றும், ஒருவன் அதிக தொகைக்குக் கடனாளியாக இருந்தான் என்றும், மற்றொருவன் சிறு தொகைக்குக் கடனாளியாக இருந்தான் என்றும், அவர்கள் இருவராலும் கடனைக் கொடுத்துத் தீர்க்க நிர்வாகமில்லாதபோது அந்த மனுஷன், அவர்கள் இருவரின் கடனையும் மனப்பூர்வமாகவும், உடனடியாகவும் மன்னித்து விட்டார் என்றுமுள்ள உவமையைச் சொன்னார். பின்னர், இப்படியாக மன்னித்து விடப்பட்டவர்களில், எவன் கடன் கொடுத்த மனுஷனுடைய தயவை அதிகம் பெற்றவனாய் இருப்பான் என்ற கேள்வியைக் கேட்டதின் மூலம் இந்தச் சிறு உவமையினுடைய பாடத்தைக் கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். உவமையின் சாரத்தை அதுவரையிலும் கிரகித்துக்கொள்ளாத நிலையில் காணப்பட்ட சீமோனோ, உடனடியாக எவனுக்கு அதிகமாய் மன்னிக்கப்பட்டதோ, அவனே அம்மனுஷனுடைய தயவை அதிகமாய்ப் பெற்றவனாய் இருப்பான் என்று பதில் கூறினார். மேலும், சீமோனுடைய பதில் சரியானது எனவும் கர்த்தர் ஒத்துக்கொண்டார். பின்னர், சீமோன் கர்த்தரைப் போஜனம் பண்ணும்படி அழைத்ததின் மூலம் சீமோன் அன்பாயிருந்தாலும், மற்றும் சீமோனுடைய உபசரிப்புகளைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டாலும் கூட, இந்த ஸ்திரீயினுடைய அதிகப்படியான உபசரிப்பும், அவள் வெளிப்படுத்தின அதிகமான மரியாதையும் காட்டுவது என்னவெனில், சீமோனும், ஸ்திரீயும் கர்த்தரை அன்பு செய்தபோதிலும், ஸ்திரீயே அதிகமாய் அன்பு செய்தாள் என்ற விஷயத்தைச் சீமோனுக்குக் கர்த்தர் சுட்டிக்காண்பித்தார். அதாவது, பாவத்தைக் குறித்த அதிகமான உணர்ந்துக்கொள்ளுதலும், பாவத்தினின்று விடுபட வேண்டும் என்ற அதிகமான விருப்பமும், அதிகமான அன்பை உருவாக்குகின்றது என்பதே வெளிப்படுத்தப்பட்ட கருத்தாகும்.

ஒரு கோணத்தில் பார்க்கும்போது, நாம் அனைவரும் பாவிகளே, தேவ மகிமையற்றவர்களே, மற்றும் பாவ மன்னிப்பு அடைவதற்கான வாய்ப்பும் இல்லாமலும் இருந்தவர்களே; எனினும், பரிசேயன் யூதருடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்டதினால், பரிசேயன் ஏற்கெனவே நிழலான நீதிமானாக்கப்பட்ட ஸ்தானத்தில் காணப்படுவதினாலும் மற்றும், இந்த ஸ்தானத்தை/நிலையைக் கடுமையாக நியாயப்பிரமாணத்தின்படி வாழ முற்படுவதின் மூலம் தக்கவைத்துக்கொள்ள நாடுவதினால், அந்த ஸ்திரீக்கு முற்றிலும் வேறான நிலையில் காணப்பட்டார். இன்னொரு பக்கத்தில், அந்த ஸ்திரீ அதே உடன்படிக்கையின் கீழ் இருந்தாலும், நியாயப்பிரமாணத்தை வெளிப்படையாக மீறினதினிமித்தம், ஒதுக்கித் தள்ளப்பட்டுள்ள ஜீவியத்தை ஜீவிப்பதினால், அவள் தேசத்தின் நிழலான நீதிமானாக்கப்படுதல் காரியத்தின் மீதான பற்றை இழந்துவிட்டபடியால், இவள் மிகுந்த பாவியாகக் காணப்படுகின்றாள். சீமோன் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முயற்சித்தாலும், தன்னால் அதனை பூரணமாய்க் கைக்கொள்ள முடியவில்லை என்பதையும், அவ்வப்போது பல்வேறு விதங்களில் மீறியுள்ளதையும் சீமோன் நன்கு அறிந்திருந்தான். எனினும், ஸ்திரீயைப்போன்று சீமோன் துணிகரமாக நியாயப்பிரமாணத்தை மீறவில்லை. ஆகவே, இப்படியான கண்ணோட்டத்தில் பார்க்கையில் மிகுந்த பாவத்திற்கும், குறைவான பாவத்திற்குமிடையே மிகுந்த வித்தியாசம் உள்ளது. எனினும், இருவருக்குமே இரட்சகர் தேவையே. நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, தனக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க முடியாது என்ற உண்மையை ஒருவேளை பரிசேயன் உணர்ந்திருப்பானானால், அந்த ஸ்திரீ போன்று தனக்கும், இரட்சகர் தேவை என உணர்ந்திருப்பான். பரிசேயன் நித்திய ஜீவனை அடைய வேண்டுமெனில், அவன் தனது பாவத்தை ஒத்துக்கொள்ள வேண்டும், மற்றும் தன்னுடைய அழைப்பிற்கு இணங்கி, தன்னுடைய விருந்தாளியாக இருப்பதற்குரிய கனத்தை தனக்குத் தந்த இரட்சகரின் ஈவாக பாவ மன்னிப்பையும், பாவம் மற்றும் அதன் தண்டனையாகிய மரணத்தினின்றுமுள்ள இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பின்னர் இயேசு ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்று அவளிடத்தில் கூறினார். இந்த வார்த்தைகள் அவளுக்கு எப்படியாக இருந்திக்கும். அவளுடைய ஜெபம் கேட்கப்பட்டது; அதாவது, அவளுடைய இருதயத்திற்குள் எழும்பினதும், அவளது கண்ணீர்கள் மூலமும், பரிமளத்தைலம் மூலமும் வெளிப்பட்டதுமான அவளுடைய ஜெபம் கேட்கப்பட்டது; அவள் மன்னிக்கப்பட்டாள்; மற்றும் அவளுடைய கடந்த காலத்தின் பாவங்கள் அனைத்தும் என்றென்றும் அகற்றப்பட்டது பற்றி எத்துணை நன்றி உணர்வை அவள் அடைந்திருப்பாள்! எனினும் சீமோன் கர்த்தரிடத்திற்கு வந்து, "ஆண்டவரே நானும் பாவிதான்; இன்னுமாக இந்த ஸ்திரீயைக் காட்டிலும் நான் உம்மைக் குறைவாக அன்புகூர்ந்தவனாக இருப்பினும், எனக்கு மன்னிப்பு தேவை; நான் உம்முடைய பின்னடியார்களில் ஒருவனாகக் கருதப்படத்தக்கதாக, என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி நான் உம்மிடம் வேண்டிக்கொள்கின்றேன்" என்று சொல்லும் நிலையில் நாம் அறிந்திருக்கின்றவரை வரவில்லை. பெயரளவிலான சபையார் மத்தியில் சீமோன், கடவுள் பற்றுள்ளவர் என்ற ஸ்தானத்தை வகிக்கும் காரியமும், இவர் தன்னைப் பரிசுத்தமுள்ளவர் என அறிக்கை பண்ணியுள்ள காரியமும், இவர் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கும், பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் தடையாக நின்றது. இது இன்றும் உண்மையாகவே காணப்படுகின்றது. கவனமற்ற ஓர் ஜீவியத்தை ஜீவித்து, தங்களுடைய கவலைக்கிடமான நிலைமையைக்குறித்த உணர்விற்கு விழித்து, பாவத்தைக்குறித்த மிகுந்த வேதனையுடனும், உண்மையுடனும் கர்த்தரிடத்தில் வந்து, மிகுந்த விசுவாசத்தை வைத்து, அவர் மேல் மிகுதியான அன்பைக் கொண்டிருக்கும் சிலரைக் காட்டிலும், நல்ல ஒழுக்கமுள்ள ஜீவியத்தை ஜீவிக்கின்றவர்களும், நீதியின் பாதைகளில் நடப்பதற்கு நாடுகின்றவர்களுமாகிய ஜனங்களோ கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமான மன்னிப்பை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லாமலே காணப்படுகின்றனர்.

சீமோன் இப்படியாக மன்னிப்புக் கேட்பதற்கும், இயேசுவின் பின்னடியார்கள் ஆகுவதற்கும் தவறினபடியால், அவர் நரகத்திற்குத் தள்ளப்பட்டார் என்ற எந்தக் குறிப்பும் இல்லை. மாறாக, (மனிதருடைய தவறான பாரம்பரியத்தினாலும், தவறான அபிப்பிராயத்தினாலும், குருடான நிலையில் காணப்பட்ட) அவருடைய ஜனங்கள் கடந்துபோன வழியையே, பின்தொடர்ந்து போனவராகச் சீமோன் காணப்பட்டார். இஸ்ரயேலர்கள் இயேசுவைப் புறக்கணித்ததினிமித்தம், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உடன் சுதந்திரராகும் சிலாக்கியத்தை இழந்து போனார்கள்; மற்றும் அவர்கள் தேசமாக ஆயிரம் வருஷம் யுகத்தின் ஆரம்பம் வரையிலும் தேவனுடைய தயவினின்று புறக்கணிக்கப்பட்டுப் போனார்கள். பின்னர், அப்போஸ்தலர் தெரிவிக்கின்ற பிரகாரம் அவர்களுடைய குருட்டுத்தன்மை மாற்றிப்போடப்படும். இன்னுமாக, சத்தியம் பற்றின அதிகம் தெளிவான அறிவினால் அவர்கள் அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவார்கள். "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சகரியா 12:10). அப்பொழுது இஸ்ரயேலர்கள் தைலம் வைத்திருந்த ஸ்திரீ அழுதது போன்று கண்ணீர் சிந்தும்போது/அழும்போது, தேவன் மகிமையடைந்த கிறிஸ்து மூலம் அவர்கள் மீது இரக்கங்கொண்டு, அவர்களுக்கான பாவங்களை மன்னிப்பார் (ரோமர் 11:25-32). அப்போது நித்திய ஜீவனுக்கான அவர்களுடைய பரிட்சை ஆரம்பிக்கும்.

அந்த ஸ்திரீயினுடைய பாவங்கள் அவளுக்கு மன்னிக்கப்பட்டது என்று நமது கர்த்தர் கூறின வார்த்தைகளினிமித்தம், பந்தியில் போஜனம் பண்ணுவதற்குக் கூடவே இருந்த மற்ற விருந்தாளிகள் அதிர்ச்சியடைந்தனர். இவ்வார்த்தைகளைப் பேசினவராகிய இயேசு, மேசியா என்றும், தேவனுடைய குமாரன் என்றும் அறியாமல், இத்தகைய வார்த்தைகளுக்கான அவருடைய அதிகாரத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பினார்கள். இப்படியான வார்த்தைகள் பயன்படுத்துவது என்பது, தாம் மேசியா என்ற உண்மையினிடத்திற்கும், எதிர்க்காலத்திலும் பாவங்களை மன்னிப்பதற்கான அதிகாரம் தம்முடைய கரங்களில் இருக்கின்றது என்ற உண்மையினிடத்திற்கும் கவனத்தை ஈர்ப்பதற்கென அவர் கையாளும் பகடற்ற முறைகளில் ஒன்றாகும்.

பின்னர் ஸ்திரீயை நோக்கி, “உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ” என்றார். அவள் மன்னிப்புப் பெற்றுக்கொள்வதற்கான காரணம் அவளுடைய கண்ணீர்களால் இல்லை என அவள் அறிந்துக்கொள்ள விரும்பினார். அவள் பயன்படுத்தின தைலத்தின் மதிப்பானது, அவளை மன்னிப்பதற்கு, அவரை ஏவவில்லை என்பதை அவள் அறிய வேண்டும் என விரும்பினார். மாறாக, அவளுடைய விசுவாசமே அவருடைய பார்வையில் பிரியமாய்க் காணப்பட்டது என்றும், அவளது விசுவாசத்தின் காரணமாகவே அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றும் அவள் அறிய வேண்டும் என விரும்பினார். அவள், தனது சொந்த பாவ நிலைமையை உணர்ந்துக்கொண்டதோடு கூட, தன்னுடைய பாவங்களை மன்னிப்பதற்கும், தன்னைச் சீர்ப்பொருந்த பண்ணுவதற்கும் இந்த மாபெரும் போதகரிடம் வல்லமை இருக்கின்றதையும் உணர்ந்துக் கொண்டாள். அவள் விசுவாசித்தாள், அதன்படி நடந்தும் கொண்டாள். மேலும், அவள் அடைந்துள்ள பலனானது, இந்த விசுவாசத்தைச் செயல்படுத்தின காரணத்தினாலேயே என அவள் உணர்ந்துக்கொள்ள நமது கர்த்தர் விரும்பினார். இப்படியே கர்த்தருடைய சகல தயவுகள் தொடர்பான அனைத்து விஷயங்களிலும், அவருடைய ஜனங்கள் ஒவ்வொருவரின் விஷயத்திலும் காணப்படும். நாமும் பாவத்திற்காக மனம் நொந்து, கண்ணீரோடு கர்த்தரிடத்தில் வரும்போது, நமது கண்ணீர்கள் எதையும் வெல்வதில்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஒருவேளை நாம் அவருக்கு அன்பளிப்புகளைக் கொடுப்போமாகில், அந்த அன்பளிப்புகள் எதையும் வெல்வதில்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் நமது விசுவாசத்தைக் கர்த்தரிடத்தில் கொண்டு வரும்போது அதாவது, பாவங்களை மன்னிப்பதற்கும், சகல அநீதிகளிலிருந்து நம்மைச் சுத்தகரிப்பதற்கான வல்லமை உடையவர் இயேசு என நாம் விசுவாசித்தாலொழிய கண்ணீர்களும், அன்பளிப்புகளும் நமக்கு உபயோகமாகுவதில்லை. இப்படியான விசுவாசம் கிறிஸ்தவனுடைய பாதையின் ஆரம்பத்தில் மாத்திரமல்லாமல், பாதையின் பிரயாணம் முழுவதும் அவசியமாய் இருக்கின்றது. நாம் விசுவாசத்தில் தொடரவில்லை என்றால் நம்மால் (ஓட்டத்தில்) முன்னேற முடியாது. கர்த்தருடைய சீஷர்களாக இருக்கும் அனைவரையும், அவர்களது கிறிஸ்தவப் பாதை மற்றும் அனுபவங்களுடைய ஆரம்பம் முதல் முடிவுவரைக் கர்த்தர் கையாளும் முறையானது, “உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது” என்பதேயாகும்.

கர்த்தர் மீதான விசுவாசத்தில் காணப்படுவதே, நம்முடைய பாடத்தின் மையாமாகும். அவர் நம்மைக் கவனிக்காதது போல தோன்றும்போதும், விசுவாசம் வைக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய காரியங்களும், பூமிக்குரிய காரியங்களும் செழித்து ஓங்கிக் காணப்படும்போதும் அவரிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். ஜீவியத்தில் சகல காரியங்களும் நமக்கு எதிராக காணப்படும்போதும், செழிப்பாய் இருந்த காலங்களில் நம்மிடம் காணப்பட்ட அதே விசுவாசம் காணப்பட வேண்டும். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கின்ற ஜெயமாக இருக்கின்றது. மேலும், இந்த விசுவாசமானது அனைத்துச் சூழ்நிலைகளிலும் அவருடைய தயவு மற்றும் உண்மையின் மீதான முழுமையான நம்பிக்கையினால் கர்த்தரை ஏறெடுத்துப் பார்க்கும், மற்றும் அவருடைய ஜனங்களுக்குச் சகல காரியங்களும் நன்மைக்கு ஏதுவாக நடைபெறும் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தையும் உணர்ந்துக்கொள்கின்றது (1 யோவான் 5:5; ரோமர் 8:29).

---

**R4608**

# “முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்”
## மத்தேயு 12:22-32, 38-42

“என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.” - மத்தேயு 12:30

சில சமயங்களில் யுத்தங்களில் ஒவ்வொரு மனுஷனும் தனக்காகவே யுத்தம்/போராடுவது போன்று தோன்றும். குழப்பத்தில் யுத்தத்திற்கான அனைத்து வரம்பு எல்லைக்கோடுகள் மறந்துவிடப்படுகின்றன. எனினும், முடிவில் வெற்றிக் கிடைக்கும்போது, யுத்தத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட வரம்பு தெளிவாக மீண்டும் பார்க்கப்படலாம். மாபெரும்

போதகரைப் பொறுத்தமட்டில், மனுக்குலத்தின் முழுக் குடும்பமானது சத்தியத்திற்கும் மற்றும் தப்பறைக்கும், சரியானதற்கும் மற்றும் தவறானதற்கும், தேவனுக்கும் மற்றும் சாத்தானுக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாபெரும் யுத்தத்தினுடைய ஏதோ ஒரு பக்கத்தில் காணப்படுகின்றனர். யுத்தத்தின் முடிவு பற்றி எந்தச் சந்தேகமும் இல்லை, தேவனே ஜெயம் அடைவார். தேவனால் எந்த நேரத்திலும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, தமது பரிசுத்தவான்களை விடுவித்து, சாத்தானையும் அவன் சாம்ராஜ்யத்தையும் கவிழ்த்துப்போட முடியும் என வேதாகமம் நமக்கு நிச்சயமளிக்கின்றது. ஆனால், இவைகள் தேவனுடைய "ஏற்றவேளையில்" நிறைவேற்றப்படும் என்பதாக தெய்வீக வாக்குத்தத்தங்கள் காணப்படுகின்றது. அதாவது, சபை நிறைவடைந்து முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் மாற்றப்பட்ட பிற்பாடு, பூமியின் ஜாதிகளை ஆசீர்வதிப்பதற்கான மேசியாவின் ஆயிரம் வருஷம் அரசாட்சி ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் வரும் என்று தெய்வீக வாக்குத்தத்தங்கள் காணப்படுகின்றது.

ஆறாயிரம் வருஷம் காலமான தாமதிப்பும், பாவிகளை மீட்பதற்காகவும், அவர்களை மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிப்பதற்காகவும், மேசியா மரித்தும் இரண்டாயிரம் வருஷம் காலமான தாமதிப்பும் ஏன்? என்ற கேள்விகள் எழும்பலாம். இந்தப் பத்தொன்பது நூற்றாண்டுகளாக தேவன் தமது சித்தம் தொடர்பான கொஞ்சம் அறிவை வெளிப்படுத்தியுள்ள சிலருடைய விஷயத்தில், அவர்கள் தம்மிடத்திலும், தம்முடைய பிரமாணங்களுக்கும், தம்முடைய பிரதிநிதிகளுக்கும் கொண்டிருக்கும் உண்மையைப் பரிசோதிக்கின்றார் என்பதே பதிலாகும். உண்மையுள்ளவர்களெனத் தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்கின்றவர்கள் மத்தியில், நீதியினுடைய கொள்கைகளை இருதயத்தில் கொண்டிருப்பவர்களைத் தேவன் நாடுகின்றபடியினாலே அவர் பரிசோதிக்கின்றார். இவ்விதமாகக் கர்த்தருடைய முதலாம் வருகையின்போது, சிலர் எப்படிப் பரீட்சிக்கப்பட்டார்கள் என்பதை நம்முடைய இன்றைய பாடம் காட்டுகின்றது. இன்னுமாக, நசரேயனாகிய அவருக்கு என்ன நேர்ந்ததோ, அதுவே அவருடைய அடிச்சுவடுகளை இந்தப் பத்தொன்பது நூற்றாண்டுகளாகப் பின்பற்றி வருகின்ற பின்னடியார்களுக்கும் அனுபவமாக இருக்கும் என நாம் அறிவோம். அடிக்கடி அவர்கள் முகாந்தரம் இல்லாமல் பகைக்கப்பட்டனர்; முகாந்தரமில்லாமல் அவர்கள் பழித்தூற்றப்பட்டார்கள், தவறாகப் புரிந்துக்கொள்ளப்பட்டார்கள், அவதூறாய்ப் பேசப்பட்டார்கள். அதுவும் இப்படியாகச் சிலசமயம் கனமுள்ள ஸ்தானத்தில் காணப்படும் மதத்தில் ஈடுபாடுள்ள உடன் நபர்களாலே நடத்தப்பட்டார்கள். இப்படியான ஒவ்வொரு சூழ்நிலையிலும், யுத்தத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றது. அதாவது, தேவன், சத்தியம், நீதி எனும் பக்கமும் மற்றும் தவறுகள், தப்பறைகள், சாத்தான் எனும் பக்கமும் இருக்கின்றது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## “ஒவ்வொரு பரீட்சைக்கும் இரண்டு பக்கங்கள்”

பரிசேயர்களும், வேதபாரகர்களும், நியாயசாஸ்திரிகளும் எவ்வளவு குருட்டுத்தனமாக இயேசுவைப் பகைத்து, அவருக்கு எதிராக சகலவிதமான தீமைகளைப் பேசினார்கள் என்று நாம் பார்க்கையில், இவர்கள் உண்மையில் சாத்தானுடைய பக்கத்தில் காணப்பட்டார்கள் என்று உணர்ந்துக்கொள்கின்றோம். தர்சு பட்டணத்தானாகிய சவுல், ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றதையும், அநேகர் இயேசுவின் பின்னடியார்களைத் துன்புறுத்தியதையும் நாம் பார்க்கையில், இவர்கள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, அவனுக்கு ஊழியம் புரிகின்றவர்களாக இருந்துள்ளதை நாம் தெளிவாகப் பார்க்கின்றோம். இன்னுமாக, சில தருணங்களில் தாங்கள் தேவனுடைய வேலையைச் செய்கின்றதாக இந்தச் சாத்தானுடைய மற்றும் அநீதியினுடைய ஊழியக்காரர்கள் எண்ணிக்கொண்டனர். ஆகவே, இம்மாதிரியான விஷயங்களில், "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" என்ற மாபெரும் போதகருடைய வார்த்தைகளை நினைவில் கொண்டவர்களாக எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்." (மத்தேயு 12:30). அந்தோ, எத்தனை நல்ல ஜனங்கள், அவர்களையும் அறியாமல் மாபெரும் யுத்தத்தில் தவறான பக்கத்தில் அதாவது, தேவன் மற்றும் சத்தியத்திற்கு எதிராக, அறியாமையினால், எதிராளியானவனால் ஏமாற்றப்பட்டு யுத்தம் பண்ணுகிறவர்களாகக் காணப்படுகின்றனர். இந்தப் போராட்டத்தையும், இருளையும் அனுமதிப்பதின் மூலம், தம்முடைய ஜனங்களாக

இருக்க அழைத்தவர்களைத் தேவன் நன்கு பரீட்சிக்கின்றார், பரிசோதிக்கின்றார். நாம் எப்பக்கத்தில் காணப்படப்போகின்றோம் என்பது தொடர்பாக நாம் நேரடியாக பரீட்சிக்கப்படுவதோடு கூட, நம்முடைய தாழ்மை தொடர்பாகவும் நாம் மறைமுகமாகப் பரீட்சிக்கப்படுகின்றோம். இருதயத்தில் நேர்மையுள்ளவர்களாக இருந்தும், கண்கள் திறக்கப் பெற்றிருந்துங்கூட, தேவனுக்கு எதிராக யுத்தம் பண்ணும் தவறைச் செய்தவர்களுக்கு, தங்கள் தவறை ஒப்புக்கொள்ளும் விஷயத்திலும், சத்தியத்திற்காக வைராக்கியம் கொள்கின்றவர்களாக மாறும் விஷயத்திலும் தாழ்மைக்கான மாபெரும் பரீட்சை உள்ளது. சரியான பக்கத்தில் காணப்படுகிறவர்களுக்குக்கூட தாழ்மைக்கான பரீட்சை உள்ளது. அதாவது, இவர்கள் தாங்கள் சரியான பக்கத்தில் காணப்படுவதினாலும், ஜெயிப்பதினாலும் மிகைப்படாமல், மாறாக "ஏற்றக்காலத்தில் தேவன் தங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்தக் கரத்தில் அடங்கியிருக்க வேண்டும்.”

சாத்தான், உயர்த்தளத்தில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளபடியால், அவனுக்கும், விழுந்துபோன தூதர்களுக்கும் இருக்கும் தொடர்பினிமித்தம் பேய்களின் அதிபதியென அழைக்கப்படுகின்றான். பரிசேயர்களுடைய இருதயங்களில் காணப்பட்ட தவறான கணிப்பானது ஆண்டவரைச் சாத்தான் என்றும், சாத்தானுடைய வல்லமையினாலேயே அவர் பிசாசுகளைத் துரத்துகின்றார் என ஆண்டவரைக் குற்றம் சாட்ட ஏவிற்று. இவ்விஷயம் குறித்து அவர்களுக்கு அறிவுரைக் கூற கர்த்தர் முற்பட்டார். இன்னும் சாத்தான் தன்னுடைய சொந்த வேலைக்காரர்களுக்கும், கூட்டாளிகளுக்கும் எதிராக கிரியை புரிகின்ற காலம் வரும்போது, அது அவனுடைய சாம்ராஜ்யம் விரைவாக விழப்போகின்றதைக் குறிக்கும் என்பதையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட முற்பட்டார். இன்னுமாக, அவர்களால் அங்கீகரிக்கப்பட்டும், கனப்படுத்தப்பட்டும் இருக்கும் சிலர் கூடப் பிசாசுகளைத் துரத்துவதாகவும் கர்த்தர் சுட்டிக்காட்டினார். ஒருவேளை தாம் பெயல்செபுலினாலே பிசாசுகளைத் துரத்துகிறவராக இருந்தால், இதே வல்லமையைச் சிலசமயம் செயல்படுத்தியுள்ள அவர்களுடைய நண்பர்கள் மற்றும் நெருக்கமானவர்கள் குறித்து என்ன முடிவிற்கு வருவார்கள் என்று அவர்களிடம் கர்த்தர் கேட்டார். ஆனால், ஒருவேளை தாம் தேவனுடைய வல்லமையினால்தான் பிசாசுகளைத் துரத்தினார் என்றால், அது தாம் அறிவித்துள்ள பிரகாரம் தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளதற்கான அறிகுறியாகும் என்றார்.

## “துணிகரமான பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை”

இப்படியாக, அவர்களது எதிர்ப்பிற்குக் கர்த்தர் பதிலளித்ததின் மூலம், அவர்கள் தமக்கு எதிராக காணப்படுகின்றார்கள் என்றும், தமது வார்த்தைகளை எதிர்க்கின்றார்கள் என்றும், தாம் தேவனுடைய பிரதிநிதியாக இருக்கையில், அவர்கள் இப்படியாகத் தம்மை எதிர்ப்பது என்பது அவர்கள் தேவனை எதிர்ப்பதைக் குறிக்கின்றது என்றும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். பின்னர், தமக்கு இருக்கும் தேவனுடைய ஆவியை, தேவனுடைய வல்லமையை அவர்கள் பிசாசின் வல்லமையாகக் கூறினதின் மூலம், அவர்களுடைய வார்த்தைகள் தேவதூஷணமாக இருக்கின்றது என்ற உண்மையின் மீது அவர்களது கவனத்தைக் கர்த்தர் கொண்டுவந்தார். ஆயினும், இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்கள் ஏதோ சினம் அடைந்ததால் பேசவில்லை மற்றும் ஒவ்வொரு சாட்சிகளைப் பார்த்த பின்னரும், சாட்சிகளை எதிர்த்தே பேசினார்கள். ஆகவே, அவர்கள் இருதயத்தில் பொல்லாதவர்கள் என்பது தெரிகின்றது. விழுகையின் காரணமாகவும், அறியாமை, மூடநம்பிக்கை போன்றவைகளின் விளைவாக உண்டாகும் சாதாரணமான பாவங்கள் அனைத்தும் தேவனுடைய ஏற்பாட்டின்படி இறுதியில் மன்னிக்கப்படும். ஆனால், வெளிச்சத்திற்கு எதிராகவும், அறிவிற்கு எதிராகவும் செய்யப்படும் துணிகரமான பாவங்கள் தேவனுடைய ஆவிக்கு எதிரான பாவமாகும். இப்படிப்பட்டதான பாவத்திற்கு இந்த யுகத்திலும் (அ) வரவிருக்கின்ற யுகத்திலும், அதாவது சுவிசேஷ யுகத்திலும் (அ) ஆயிரம் வருஷம் யுகத்திலும் எவ்விதமான மன்னிப்பும் இல்லை. முழுமையான வெளிச்சத்திற்கு எதிராக ஒருவேளை பாவம் செய்யப்பட்டிருக்குமாயின், அதற்கான பலன் (அ) தண்டனை அழிவாக இருக்கும்; அதாவது, இரண்டாம் மரணமாக இருக்கும். ஆனால் இப்படியான பாவத்தை உடையவர்கள் சொற்பமானவர்களாகவே இருப்பார்கள். பெரும்பாலானவர்களுடைய பாவத்தில் துணிகரமும், அறியாமையும் கலந்து காணப்படுகின்றது. இப்படியான சூழ்நிலையில் அறியாமையினால் செய்யப்பட்ட தப்பிதத்தின்

பாகம் மன்னிக்கப்படும்; ஆனால் துணிகரமாகச் செய்யப்பட்ட தப்பிதத்தின் பாகமோ மன்னிக்கப்பட முடியாததினால் தண்டிக்கப்பட வேண்டியுள்ளது.

பரிசேயர்களும், வேதபாரகர்களுமே அவருடைய பிரபலத்தினிமித்தம் பொறாமை கொண்டபடியால், அவருடைய போதகங்களையும், அவருடைய அற்புதங்களையும் அவர் மேசியா என்பதற்கான போதுமான ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளாமல் அவரிடம் அடையாளம் கேட்டார்கள். அவரோ நெடுநாட்களுக்குப் பின்னர் நடக்கப் போகும் ஓர் அடையாளத்தை அவர்களிடம் கூறினார். அதாவது, தாம் கல்லறைக்குள் காணப்படப் போகின்ற காரியமானது, யோனா பெரிய மீனின் வயிற்றில் காணப்பட்ட காரியத்திற்கு ஒத்ததாகும் என்று கூறினார். யோனா பிரசங்கம் பண்ணினதினிமித்தம் நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; ஆனால் யோனாவிலும் பெரியவருடைய பிரசங்கத்தைக் கேட்டுப் பரிசேயர், வேதபாரகராகிய இவர்கள் மனந்திரும்பாத காரணத்தினால், நியாயத்தீர்ப்பின் நாளில், ஆயிரவருஷ யுகத்தின்போது. அந்நிய தேவனை வணங்கினவர்களாகிய நினிவே பட்டணத்தார், இவர்களைக் காட்டிலும் மேலான சூழ்நிலையில் காணப்படுவார்கள் என்று இவர்களுக்குக் கர்த்தர் உறுதியளித்தார். சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்கும்படிக்குச் சேபா நாட்டு ராஜஸ்தீரி வெகுதூரம் பிரயாணம் செய்து வந்தாள்; ஆனால், பரிசேயர்கள், வேதபாரகர்களாகிய இவர்கள் மத்தியில் சாலொமோனிலும் பெரியவர் இருந்தும், இவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவுமில்லை, மற்றும் அவருடைய செய்திக்கும் செவிசாய்க்கவுமில்லை. இவ்விதமாக நாம் குருடர்களாகக் காணப்படாதிருப்போமாக. மாறாக, நம்முடைய முழு இருதயங்களோடு நசரேயனை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்தொடருவோமாக!

---

**R1937**

# "வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல்; அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல்"

"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" (மத்தேயு 12:34-37).

தற்காலத்தில் தம்முடைய இராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்ப்பதற்கும் மற்றும் தம்முடைய சம்பத்தாகிய தம்முடைய மணவாட்டியைத் தம்மிடத்தில் கூட்டிச் சேர்ப்பதற்கும் என்று இப்பொழுது வந்துள்ள இராஜரிக மணவாளனுடைய கண்காணிப்பின் கீழ், தற்காலத்தில் சபை காணப்படுகின்றது என்பதை நாம் உணருகையில், இந்த நியாயத்தீர்ப்பு மற்றும் தேர்ந்தெடுத்தலின் கொள்கைகளைக் கவனிப்பதில் நாம் ஜாக்கிரதையற்றவர்களாக இருக்கமுடியாது (மத்தேயு 22:11; 13:41; மல்கியா 3:17).

மேற்கூறப்பட்டுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, இருதயமும், வாயும் விசேஷமான கவனிப்பின் கீழ் இருப்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. இருதயம் என்பது தனித்தனியான குணலட்சணங்களையும், வாய் என்பது, குணலட்ணத்தினுடைய அட்டவணையையும் குறிக்கின்றது. இதே கண்ணோட்டத்தில்தான் ஞானியுடைய வார்த்தைகளும் எழுதப்பட்டுள்ளது; "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து" (நீதிமொழிகள் 4:23-24). சரியான வார்த்தைகள் வாயிலிருந்து வெளிவருவதற்கு, சரியான இருதய நிலைமை

அவசியமாய் உள்ளது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏனெனில், இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகின்றது. மேலும், இதை ஒவ்வொரு மனுஷனும் அனுபவத்தில் புரிந்திருக்கின்றான். ஆகவே, கர்த்தர் சொல்லியிருப்பது போன்று, நமது வார்த்தைகளே கர்த்தருடைய கணிப்பில் நியாயத்தீர்ப்பதற்கான அடிப்படைக் காரியமாக இருக்கின்றது. தேன் போன்ற வார்த்தைகள், சில சமயம் பயங்கரமான மாய்மாலத்தை மறைப்பதற்கான முகமூடியாக இருப்பதும் உண்மையே. ஆனாலும், சுயநலமான காரியங்கள் நிறைவேறுவதற்குக் கையாளும் திறமையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்போது, சில காலத்திற்குப் பின்னர் நிச்சயமாக, தேன் போன்ற இனிமையான வார்த்தைகள் எனும் முகமூடி விலக்கப்படும். ஆகவே, வார்த்தைகள், சம்பாஷணைகள் மற்றும் நடத்தைகள் இருதயத்தின் அட்டவணையாக இருக்கின்றது.

ஆகவே, நமது முதல் கவனம் இருதயத்திற்காகக் காணப்பட வேண்டும்; அதாவது, அதன் ஆசைகள் மற்றும் பண்புகள், தெய்வீகக் கிருபையினுடைய முழுமையான கட்டுப்பாட்டிற்குள் இருக்கத்தக்கதாகவும், சத்தியம் மற்றும் நீதியின் ஒவ்வொரு கொள்கையும் இருதயத்தில் குடிக்கொண்டிருக்கத்தக்கதாகவும், நீதி, இரக்கம், சகோதர சிநேகம், அன்பு, சாந்தம், இச்சை அடக்கம், கிறிஸ்து மற்றும் தேவனுக்கு உன்னதமான பயபக்தி மற்றும் பரிசுத்த சகல அலங்காரத்திற்கும் உரிய தீராத அன்பும் ஜீவியத்தை ஆளும் கொள்கைகளாக உறுதியாக இருக்கத்தக்கதாகவும் கவனிக்கப்பட வேண்டும். ஒருவேளை இந்தக் கொள்கைகள் இருதயத்தில் நிலைநிறுத்தப்பட்டு, ஸ்திரப்படுத்தப்பட்டால், அப்பொழுது இருதயமாகிய நல்ல பொக்கிஷ சாலையிலிருந்து, வாயானது சத்தியம், ஞானம், கிருபை மற்றும் தெளிவான வார்த்தைகளைப் பேசுகின்றதாய் இருக்கும்.

பூரணமான இருதயமும், பாவம் மற்றும் வஞ்சனை இல்லாத வாயையுடைய நமது கர்த்தர் இயேசுவைக்குறித்து, “உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது;” “எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு; இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்” (சங்கீதம் 45:2; லூக்கா 4:22) ஆகிய வசனங்களில் பேசப்படுகின்றது. கர்த்தருடைய வார்த்தைகளின் ஆசீர்வாதமான செல்வாக்குக்குறித்து, மோசே கிறிஸ்துவை அடையாளப்படுத்தும் விதத்தில், “மழையானது இளம்பயிரின்மேல் பொழிவது போல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்” என்று கூறியுள்ளார் (உபாகமம் 32:2). இயேசுவும், “நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது” (யோவான் 6:63) என்ற வார்த்தைகளைக் கூறுகின்றார். கர்த்தருடைய வார்த்தைகள் ஞானமுள்ளவைகளாகவும், நியாயமானவைகளாகவும், உண்மையுள்ளவைகளாகவும் இருந்தது. மேலும், அவருடைய சத்துருக்கள் அவரிடத்தில் ஏதாகிலும் குற்றம் கண்டுபிடிப்பதற்குத் தொடர்ந்து நாடினாலும், அவரைக்குறித்து, “அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம்பிடிக்கக்கூடாமல், அவர் சொன்ன உத்தரவைக்குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்” (லூக்கா 20:26). “சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்” என்று வாசிக்கின்றோம் (யோவான் 7:46).

இவ்விதமாக, கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு மாதிரியை விட்டுச்சென்றார். மேலும், இதை நாம் பின்பற்றும்படிக்கு அப்போஸ்தலர், அனைவருக்கும் வலியுறுத்துகின்றார். “உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக;” “ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்;” “உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்;” “தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்;” “ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்; மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும்;” “அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம்;” “தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக” (கொலோசெயர் 4:6; 1 பேதுரு 4:11; சங்கீதம் 34:13; நீதிமொழிகள் 21:23; பிரசங்கி 10:12-13; 5:2).

யோபு தன்னுடைய கஷ்டமான சூழ்நிலைகள் அனைத்தின் மத்தியிலும், தன் உதடுகளினால் பாவம் செய்யாதபடிக்கு மிகவும் ஜாக்கிரதையுடன் காணப்பட்டார் (யோபு 2:10; 31:30; 1:21-22). கர்த்தர் தன்னுடைய வார்த்தைகளை, தனது இருதயத்தின் அட்டவணையாக எடுத்துக்கொள்வார் என்பதை யோபு அறிந்திருந்தார்; மற்றும், "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் (புடமிடப்படுவதற்காக (அ) சிட்சிக்கப்படுவதற்காக உபத்திரவங்களும், பிரச்சனைகளும்) பெற வேண்டாமோ?" "கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று கூறி இருதயத்தையும், வார்த்தைகளையும் சரியானவிதத்தில் தக்க வைத்துக்கொள்வதில் ஜாக்கிரதையாகவும் காணப்பட்டார். கடுமையான சோதனைகளின் கீழ், அதிலும் எதற்காக தெய்வீக ஞானம் இந்தப் பிரச்சனைகளை அனுமதித்ததற்கான காரணத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியாத நிலையில், எந்த இருதயத்தின் நிறைவினால், வாயானது கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்துள்ளதற்குரிய, பொறுமைக்குரிய, விசுவாசத்திற்குரிய வார்த்தைகளைப் பேசுகின்றதோ, அந்த இருதயத்தில் கலகத்தின்/எதிர்ப்பின் ஆவி இருக்கவில்லை என்பதாகும்.

"என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் (நீதிமானைச் சோதிக்கிறவன்) எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன்" என்ற <u>உறுதியான தீர்மானத்தின்</u> வார்த்தைகளைச் சங்கீதக்காரன், தேவனுக்கென்று அர்ப்பணம் பண்ணி, பரீட்சிக்கப்பட்ட ஜனங்களின் வாயில் வைக்கின்றார் (சங்கீதம் 39:1).

இந்தத் தீர்மானம் மற்றும் இந்தத் தீர்மானத்தினால் வளர்ச்சியடையும் சுயகட்டுப்பாடு, கிறிஸ்தவனுடைய குணலட்சணம் உறுதியாய்க் காணப்படுவதற்கு எவ்வளவு அவசியமாய் இருக்கின்றது. அன்பற்ற உலகத்திடமிருந்து, கர்த்தரைப் போன்று நிந்தனைகளையே நாம் எதிர்ப்பார்க்க முடியும், ஏனெனில் ஊழியக்காரன் தன்னுடைய எஜமானினும் பெரியவன் அல்ல. உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் நம்முடைய வழியை எதிர்க்கின்றனர்; நம் உள்ளுக்குள்ளே யுத்தங்களும் நடக்கின்றன மற்றும் அநேக அம்புகளும், அக்கினியாஸ்திரங்களும் நீதிமான் மீது எய்யப்படுகின்றன. ஆனால், இத்தகைய பிரச்சனைகள் மற்றும் கடுமையான பரீட்சைகளின் கீழ் ஆத்துமாவிடம் காணப்பட வேண்டிய பாதுகாப்பான மனநிலை என்ன? ஆத்துமாவானது, அதிகமான பிரச்சனைகளைக் கொண்டுள்ள ஒன்றில் இறங்குவதற்குத் துணியும் முன்பு, தேவனுக்கு முன்பு அமைதியுடன் காணப்பட்டு, காத்திருந்து, அவருடைய வழிநடத்துதலையும் அவருடைய சித்தத்தையும் பார்ப்பதற்கென முதலாவது கவனிப்பதும்தான் பாதுகாப்பான மனநிலை அல்லவா. ஆகவேதான் சங்கீதக்காரன், "நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் (என்னுடைய சொந்த பார்வைக்கு நலமானதாக தோன்றினதைப் பேசுவதிலிருந்து (அ) செய்வதிலிருந்தும்) பேசாமல் அமர்ந்திருந்தேன்; ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது; என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது (தாவீது இவ்விதமாய் கடுமையான சோதனையை விவரிக்கின்றார்); அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் (திட்டுகின்றவர்களிடத்திலோ, மற்ற எவரிடத்திலோ ஏறெடுக்காமல் மாறாக கர்த்தரிடத்தில்) செய்தேன்" என்று கூறுகின்றார் (சங்கீதம் 39:2-3). நம்முடைய துக்கங்களையும், ஏமாற்றங்களையும், கர்த்தரிடத்தில் எடுத்துச்செல்வது என்பது எப்பொழுதும் நமக்கான பாக்கியமான சிலாக்கியமாக இருக்கின்றது.

சங்கீதம் 39:4-6 வரையிலான வசனங்களிலுள்ள கருத்தின் வாயிலாக, ஆத்துமாவின் விருப்பங்களைத் திருப்திச் செய்வதற்கோ அல்லது காயப்பட்ட மனதை/ஆவியை ஆறுதல்படுத்துவதற்கோ பூமிக்குரிய விஷயங்கள் முற்றிலும் ஆற்றல் அற்றவைகள் என்றும், அவைகள் பயனற்றவைகள் <u>என்றும்</u> <u>தேவன் நமக்குக் காட்டித் தருகின்றார்</u>. அடுத்ததாக தற்கால ஜீவியமும், அதன் கவலைகள், ஏமாற்றங்கள் மற்றும் துக்கங்கள் கடந்து போகக்கூடியவைகள் <u>என்றும்,</u> நம்முடைய நாட்கள் நாலுவிரற்கடையளவுதான் <u>என்றும்,</u> நம்முடைய அனுபவங்கள் எவ்வளவு வேதனையானவைகளாக இருப்பினும், அவைகள் சீக்கிரம் முடிந்துவிடும் <u>என்றும்,</u> நாம் கஷ்டமான அனுபவங்களைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், அவைகள் நம்மிடத்தில் நீதிக்கு ஏதுவான சமாதான கனிகளையே உண்டுபண்ணி நமக்குள் பலமான, அருமையான குணலட்சணங்களையும் வளர்க்கும் மற்றும், முழுமையான சுயக்கட்டுப்பாடு கொள்ளத்தக்கதாகவும், ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகவும், துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கத்தக்கதாகவும், அன்புடன்

நேர்மையாக இருக்கத்தக்கதாகவும், உண்மையாய் இருக்கத்தக்கதாகவும், தேவனிடத்தில் விசுவாசமாய் இருக்கத்தக்கதாகவும் நெறிமுறைப்படுத்துகின்றது என்றுமுள்ள விஷயத்தையும் தேவன் காட்டித்தருகின்றார். அடுத்ததாக, வரவிருக்கின்ற ஜீவியத்தில் நீதிமான்களுக்குரிய பாக்கியமான பலன்கள் குறித்த வாக்குத்தத்தங்களை ஆழமான மற்றும் புதிய முக்கியத்துடன் நமக்குத் தேவன் தோன்றச் செய்கின்றார். மேலும், இது நமக்கு நிரந்தரமான பட்டணம் இல்லை என்றும் மாறாக, வரவிருக்கின்ற ஒன்றையே நாடுகின்றோம் என்றும், நாம் தேவனால் உணர வைக்கப்படுகின்றோம். இவ்விதமாக இருதயமானது, பூமிக்குரிய காரியங்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, பரம காரியங்களுடைய உன்னதமான மதிப்பை உணர வைக்கப்படுகின்றது. மாறிமாறி புரட்டப்பட்டு, சோதிக்கப்பட்டு வரும் ஆத்துமாவின் ஏக்கங்களைக் கர்த்தரைத் தவிர வேறு எதுவாலும் திருப்திச் செய்ய முடியாது.

இப்படியாகத் தண்டிக்கப்பட்டு, ஆறுதல்படுத்தப்பட்டு நாம் விசுவாசம் உள்ளவர்களுக்கு மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டுள்ள பரிசை நாடி, மாறுபாடுள்ள சந்ததி மத்தியில் பொறுமையுடன் தொடர்ந்து நற்கிரியை நடப்பிக்கிறவர்களாகிய, உண்மையாய் ஜெயங்கொள்பவர்களிடத்தில் போகப்போக வெளிப்படுத்தப்படும் மகிமையைத் தற்காலத்திற்கப்பால் நோக்கக் கற்றுக்கொள்கின்றோம். கடுமையான சோதனைகளில் உதவிக்காகவும், ஆறுதலுக்காகவும் கர்த்தரிடத்தில் கடந்துசென்று, இப்படியாக ஆசீர்வதிக்கப்பட்டு, நெறிமுறைப்படுத்தப்பட்ட தேவனுடைய பிள்ளை, உலகத்திற்கு மரிப்பது பற்றியும் அவருடைய அன்பு, ஈவு மற்றும் கிருபை குறித்த கூர்மையான புரிந்துக்கொள்ளுதலுடன் கூடத் தேவனுக்கென்று ஜீவிப்பது பற்றியும் உணர்ந்துக்கொள்ள ஆரம்பிக்கின்றார். மேலும், இப்படியாக உலகத்திடமிருந்து பிரிக்கப்பட்டு, மிக உறுதியாக கர்த்தரிடத்தில் இணைந்துள்ள இருதயத்தின் வார்த்தைகள், “இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்ப்பார்த்திருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை” என்ற வார்த்தைகளாகவே இருக்கும் (சங்கீதம் 39:7).

இதுவே சோதனை மற்றும் ஏமாற்றமான சூழ்நிலைகளில் நாவுக்குக் கடிவாளம் இட்டுக்கொண்டு, நமது அனைத்துக் கவலைகளையும், கர்த்தரிடம் ஜெபத்தில் தாழ்மையுடன் எடுத்துச் சென்றதற்கான பாக்கியமான விளைவாகும். இந்த விளைவின் காரணமாக நாம் பேசும்போது, நம்முடைய பேச்சு, கிருபையினாலும், உப்பினால் சாரமேற்றப்பட்டதாகவும் காணப்படுகின்றது மற்றும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் நாம் தேவனுடைய வாக்கியங்களையே பேசுகின்றவர்களாகவும் இருப்போம்.

“பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்” என்ற கர்த்தருடைய வார்த்தைகளையும், மற்றும் தற்காலமே (சபையாகிய) நம்முடைய நியாயத்தீர்ப்பு நாள் என்ற உண்மையையும் குறித்து நாம் சிந்திக்கும்போது, நம்முடைய வார்த்தைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருப்பதை நாம் பார்க்கின்றோம். நம்முடைய அனைத்து வார்த்தைகளும், நம்முடைய இருதயத்தினுடைய அட்டவணையாகக் கர்த்தரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. ஒருவேளை நம்முடைய வார்த்தைகள் இரக்கமற்றதாக, நன்றியற்றதாக, பரிசுத்தமற்றதாக (அ) தூய்மையற்றதாக (அ) மரியாதையற்றதாக (அ) விளையாட்டுத்தனமாக/அற்பத்தனமாக (அ) நேர்மையற்றதாக (அ) கலகத்திற்குரியதாய் இருக்குமானால், “இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்” என்ற கொள்கையின் அடிப்படையிலேயே இருதயம் நியாயம் தீர்க்கப்படுகின்றது. இப்படியாக, நம்முடைய அன்றாட ஜீவியத்தில் பல்வேறு விதமான சூழ்நிலைகளில் பேசப்படும் நம்முடைய வார்த்தைகள், அச்சூழ்நிலைகளில், நம்முடைய இருதயத்தின் நிலைமையைக் குறித்துத் தொடர்ந்து தேவனுக்கு முன்பு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றது. இவைகளுக்கு இசைவாகத்தான் பின்வரும் வசனம் இடம்பெறுகின்றது. “தேவன் முன்னிலையில் சிந்தித்துப் பாராமல் எதையும் பேசாதே, மனம்பதறி எண்ணிப்பாராமல் வாக்குக் கொடாதே இரு (மற்றும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய அவருடைய கண்களுக்கு முன்பாக சகலமும் நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது என்பதை ஞாபகத்தில் கொண்டிரு). ஏனெனில், (நம்முடைய நியாயாதிபதியாகிய) தேவன் (சிங்காசனத்தில்) வானத்திலிருக்கிறார். நீ (தேவனுடைய கூண்டிற்கு முன்பு விசாரணையின் கீழ்) பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக” (பிரசங்கி 5:2; எபிரெயர் 4:13 திருவிவிலியம்). ஆகையால், தேவன் முன்னிலையில், சிந்தித்து வார்த்தைகள் பேசப்பட வேண்டுமே ஒழிய, துணிகரமாகவோ, எண்ணிப் பார்க்காமலோ, சிந்திக்காமலோ பேசக் கூடாது.

இன்னுமாக நம்முடைய வார்த்தைகளுக்குரிய பொறுப்புத் தொடர்பாக கர்த்தர் பேசின வார்த்தைகளுக்கு நீதிமொழிகள் 13:3-ஆம் வசனமும் இசைவாக இருக்கின்றது; "தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்." தேவனுக்கு அவமதிப்பாய் இருக்கும் அளவுக்குக் கூடப் பொல்லாத விதத்தில் கேலி அல்லது மரியாதையற்ற விதத்தில் கேலி செய்யக் கூடிய நாவுக்கு, எவ்வளவு பயப்படக் கூடிய பொறுப்பு இருக்கின்றது! மேலும் 1 பேதுரு 4:7-ஆம் வசனத்தில் இடம்பெறுகிறபடி, "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" என்ற அப்போஸ்தலர் பேதுருவின் கட்டளைகளும் எத்துணை அவசியமானவைகள் (1 பேதுரு 1:13; 5:8).

இந்த ஒரு பொறுப்பை உணர்கின்றவர்கள் அனைவருடைய உதடுகளிலும், சங்கீதக்காரன், பின்வரும் இந்த ஜெபத்தின் வார்த்தைகளை வைக்கின்றார். "கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும். அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்." "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக." "உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது, என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்; ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச்சொல்லும். நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துக்கொண்டபடியால், உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக. கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி" (சங்கீதம் 141:3-4; 19:14; 119:171-174).

நாம் பூரணமற்ற ஜீவிகளாக இருக்கின்றபடியினால், நாம் வார்த்தையிலும், கிரியையிலும் எப்பொழுதும் பூரணமாய் இருப்பது முடியாத காரியமாகும். நம்மால் முடிந்த சிறந்த பிரயாசங்களை எடுத்தாலுங்கூட, சில சமயம் நாம் வார்த்தையிலும், கிரியையிலும் தவறு செய்துவிடுகின்றோம். எனினும் பூரணமான வெற்றியை நம்முடைய வார்த்தைகளிலும், வழிகளிலும் அடைவதற்குக் கடுமையான, உண்மையான, விடாமுயற்சியுடன் கூடிய முயற்சியின் மூலம் நாடப்பட வேண்டும், எனினும் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும், இந்த நம்முடைய நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் கணக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. ஒருவேளை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குரிய கடமையின்படி, நாம் நம்முடைய வழிகளைத் தினந்தோறும் ஆராய்ந்து பார்க்கையில், ஏதோ குறிப்பிட்ட நம்முடைய வார்த்தைகள் கர்த்தரைக் கனவீனப்படுத்துகின்றதாக நாம் கண்டுபிடிப்போமானால், "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துப் பேசுகிறவராயிருக்கிறார்" என்ற வசனத்தின் வார்த்தைகளை நாம் நினைவுகூர்ந்து, நமக்குப் பரிந்துப் பேசுபவருடைய நாமத்தினால் கிருபையின் சிங்காசனத்தை நாம் அணுகி, நாம் தவறை உணர்ந்துக் கொண்டதையும், பரிசுத்தமான நடக்கை மற்றும் சம்பாஷணையின் மூலம் அவருடைய நாமத்தையும், அவருடைய நோக்கத்தைக் கனப்படுத்தவதற்கு நாம் தவறிப் போனதினிமித்தம் நாம் துக்கம் கொள்வதையும் நமது பரம பிதாவினிடத்தில் விவரித்து, நம்முடைய கணக்கில் பாவம் சேர்த்து வைக்கப்படாமல், அவருடைய கிருபையான ஏற்பாடாகிய கிறிஸ்து மூலமான நம்முடைய சுத்திகரிக்கப்படுதலின் மூலம், பாவம் அகற்றப்படும்படிக்குத் தாழ்மையாக விண்ணப்பிக்க வேண்டும்; மற்றும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தமே தங்களுடைய நம்பிக்கையாக இருக்கின்றது எனவும் தாழ்மையுடன் தெரிவிக்க வேண்டும் (1 யோவான் 2:1).

இவ்விதமாக, ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நாம் நம்முடைய கணக்கை ஒப்புவிக்க வேண்டும்; மற்றும் மனவருத்தத்தைத் தெரிவிக்கும் நம்முடைய வார்த்தைகளினாலும், விசுவாசத்தின் மூலமாய்க் கொடுக்கப்படும் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் பலனினாலும் நாம் குற்றவாளி நிலையினின்று விடுவிக்கப்படுகின்றோம். இல்லையேல் கர்த்தரைக் கனவீனப்படுத்துகின்ற நம்முடைய வீணான வார்த்தைகள் நமக்கு எதிராய்க் காணப்பட்டு, நம்மைக் குற்றவாளியாக தீர்க்கும்; மற்றும் நாமும் பின்விளைவுகளை அனுபவித்தாக வேண்டிய நிலையிலும் காணப்படுவோம். முதலாம் பின்விளைவு

சுயபாதிப்பாகும். ஏனெனில், இடம்கொடுக்கப்படும் ஒவ்வொரு தீமையான எண்ணம் (அ) வார்த்தை குணலட்சணத்தைக் கடினப்படுத்தி விடுகின்றது மற்றும் அநீதியானவைகளிடத்திற்கு நேராக இன்னமும் நடத்திவிடுகின்றது. இரண்டாம் பின்விளைவு மற்றவர்களுக்கு மோசமான மாதிரியாக இருந்து, மற்றவர்களுக்குள் பொல்லாங்கைத் தூண்டி விடுவதாகும். "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதிமொழிகள் 15:1). இப்படியாக ஞானமற்ற (அ) அன்பற்ற வார்த்தைகளின் விளைவாக நாம் நமக்கு பிரச்சனைகளைத் தூண்டிவிடுவோம்; இந்தப் பிரச்சனைகள்/கஷ்டங்கள்/இடர்பாடுகளானது சுயகட்டுப்பாடு பற்றியும், மற்றவருடைய உணர்வுகளையும், கருத்துக்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்வது பற்றியுமான படிப்பினைகளை நமக்குப் போதிக்கும், தவறுக்கான தண்டனை அளிக்கும் நியாயத்தினுடைய பிரதிநிதிகளாக மாறிவிடுகின்றன. நம்முடைய சொந்த தவறுகளினால் இயல்பாக வரும் விளைவுகளானது, பெரும்பாலும் கர்த்தரால் அல்லது சாத்தானால் அனுப்பப்படுகின்ற சோதனைகள்/பிரச்சனைகள் என்று குற்றம் சாட்டப்படுகின்றன. பிரச்சனைக்கான வேர் தங்களிடத்தில்தான் இருக்கின்றது எனக் கண்டுபிடிக்கத் தவறுகின்றவர்கள், கடுமையான சுய நெறிமுறைப்படுத்துதலினாலும் மற்றும் வசனங்களுக்குக் கீழ்ப்படிவதினாலும் தங்களாலேயே அப்புறப்படுத்த முடிகின்றவைகளை, அற்புதகரமான விதத்தில் கர்த்தர் எடுத்து மாற்றும்படிக்கு வீணாக ஜெபம் ஏறெடுக்கின்றவர்களாக இருக்கின்றனர். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் (மற்றும் சரிச்செய்து கொண்டால்) நாம் நியாயந்தீர்க்கப்படோம்; நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே (நம்முடைய தவறுகள் நம்மைக் கொண்டு செல்லும் அனுபவத்தினால் பெரும்பாலும்) சிட்சிக்கப்படுகிறோம்" (1 கொரிந்தியர் 11:31-32). இடர்பாடுகள்/கஷ்டங்கள்/பிரச்சனைகள் நேரடியாக தேவனாலோ, அல்லது சாத்தானாலோ உண்டாக்கப்படவில்லை, "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" (யாக் 1:14). ஆனால், மற்ற ஒருவர் மேல் குற்றத்தைப் போட்டு விடுவதும், நாம் பொறுமையை இழந்ததற்கும், நாம் யோசிக்காமல் வார்த்தை பேசினது அல்லது கிரியை செய்தது இன்னொருவருடைய தவறினால் என்று எண்ணிக்கொள்வதும் இயல்பாகக் காணப்படுகின்றது. நம்மில் எத்தனை பேர், பின்வரும் எண்ணங்களினால் நம்மையே ஊக்குவித்துக் கொண்டு, நம்மையே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம்...........அதாவது "அனைவருமே நியாயமாகவும், நல்லவர்களாயும் நடந்துக்கொள்வார்களானால், பூமி சௌர்க்கம் போல் காணப்படுமே" என்பதேயாகும். அன்பானவர்களே, நாம் ஒருவேளை சத்தமாக உச்சரித்துப் பேசாவிட்டாலும், நம்முடைய இருதயங்களுக்குள் நாம் கொண்டிருக்கும் சுய பாராட்டுதல் மற்றும் சுயதிருப்தியின் வார்த்தைகள், நம்மைக் குற்றவாளியாக்கி விடாதபடிக்கு, நாம் நம்மையே ஆராய்ந்து பார்ப்போமாக, மிகவும் தாழ்மையாகவும் இருப்போமாக. "உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன?" (லூக்கா 6:33-38). "அநியாயமாய்ப் பாடுபட்டு, உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகிக்கிறவர்களாய்" நாம் காணப்பட்டால் மாத்திரமே, நம்முடைய பாடுகள் தேவன் அங்கீகரிக்கத்தக்கதாக இருக்கும், மற்றும் சுகந்த வாசனையுள்ள பலியாகவும் காணப்படும். "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்" (1பேதுரு 2:19-21). அன்பிற்குரியவர்களே நாம் நீதியினிமித்தமாக மாத்திரம் நம்முடைய பாடுகள் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளக்கடவோம் மற்றும், நாம் சுதந்தரித்துக் கொண்ட அல்லது வளர்த்து, விருத்திச் செய்த தவறுகளுக்கு நாம் இடம்கொடுத்தக் காரணத்தினால் உண்டாகும் உபத்திரவங்களுக்கான பழியைத் தேவன் மீது (அ) நம்முடைய அயலார் மீது சுமத்தாமல் இருப்போமாக.

"நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்" (யாக்கோபு 3:2). ஆனால், இப்படிப்பட்ட மனுஷன் எவனும் இல்லை. ஒவ்வொரு எண்ணங்களைக் கிறிஸ்துவின் சித்தத்தின் கீழ்ச் சிறைப்படுத்துவதற்கும், கர்த்தருக்குரிய பயபக்தியில் பூரண பரிசுத்தத்திற்குக் கொண்டு வருவதற்கும் நாம் அன்றாடம் முயற்சிக்கையில், நாம் நமக்குப் பரிந்துபேசுபவராகிய,

நம்முடைய மீட்பருடைய புண்ணியத்தின் பலனுக்காக நாம் அனைவரும் தொடர்ந்து வேண்டி கொண்டிருப்பவர்களாகவும் காணப்பட வேண்டும்.

இந்தக் கண்ணோட்டத்தின்படி, நாம் அனைவரும் இப்பொழுது நியாயத்தீர்ப்பின் கூண்டிற்கு முன்பு காணப்படுகின்றோம் என்பதை அதிகமதிகமாய் உணர்ந்துக்கொள்ள கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் முயற்சிக்கின்றனர் என நாம் நம்புகின்றோம். அப்போஸ்தலர் பேதுரு, "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" என்ற கேள்வியை நாமும் கேட்கின்றோம் (2 பேதுரு 3:11). பாதகமான வதந்திகள்/வீண்பேச்சு, கெட்ட (அ) பரிசுத்தமற்ற சம்பாஷணைகள், நேர்மையற்ற (அ) எதிர்ப்பின் வார்த்தைகள் அடங்கிய பேச்சுகள் எதுவும், தேவபக்திக்குள் நிச்சயமாக அடங்காது. கிறிஸ்துவின் நாமத்தை உண்மையாகவும், நேர்மையாகவும் தரித்துள்ளவர்கள், மேற்கூறியவைகளை அகற்றிவிடுவார்களாக. கர்த்தருடனான நம்முடைய கணக்குகளை நாம் தினந்தோறும் சரிச்செய்து முடித்துவிட வேண்டும் என்றும், எந்த வீண் வார்த்தைகளும் மனவருந்தப்படாமல், மன்னிப்புப் பெற்றுக்கொள்ளப்படாமல் சேர்த்து வைத்து, நமக்கு எதிராய்க் குற்றப்படுத்தும் நிலையில் கணக்குகளை வைத்துக் கொள்ளக்கூடாது என்றும் நாம் நினைவில்கொள்வோமாக. "எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்." "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" (பிலிப்பியர் 1:27; 4:8). இவ்விதமாக இருதயமாகிய நல்லப் பொக்கிஷத்திலிருந்து, நம்மால் சத்திய வார்த்தைகளைப் பேசமுடியும்; மற்றும் தேவபக்தியான நடத்தை மற்றும் சம்பாஷணை மூலம் நமது கர்த்தரைக் கனப்படுத்த முடியும்; மற்றும் நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் பொல்லாத தன்மைகளைக் கீழ்ப்படுத்தவும் முடியும்; மற்றும் "புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (1 பேதுரு 2:12) என்ற வசனத்தின்படியும் காணப்பட முடியும்.

ஒருவேளை தினந்தோறும் தேவனிடத்தில் நம்முடைய கணக்குகளை நாம் ஒப்புவித்து, ஒவ்வொரு நாளும், அதிகமான ஜெயங்கொள்ளுவதற்குரிய வல்லமைக்கான அவரது கிருபையை நாடுவோமானால், நாம் குற்றமற்றவர்களாகத் தீர்க்கப்பட்டு, கிறிஸ்து மூலம் தேவனால் அங்கீகரிக்கப்படும் நிலையில் நிற்க முடியும், மற்றும் நாம் அவருக்கு அங்கீகரிக்கத்தக்கதாகவும், பிரியமாகவும் இருக்கின்றோம் என்பதை நம்முடைய ஆவியுடன் அவருடைய ஆவி கொடுக்கும் சாட்சியை உடையவர்களாகவும் இருப்போம்.

---

**R943**

# "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?"

தேவனுடைய ஆவிக்குரிய குமாரர்கள் என்பதான புதிய உறவிற்குள் வந்துள்ளவர்கள், அவர்கள் அடைந்துள்ள உறவுகளின் மாற்றத்தை அடிக்கடியும், மற்றும் கவனமாயும் கருத்தில் எடுத்துக் கொண்டும் காணப்படுவது நலம். இனிமேல் நம்முடைய நெருக்கமான உறவுகள், பூமியுடன் காணப்படுவதில்லை. நம்முடைய கவனம், எதிர்ப்பார்ப்புகள்/நம்பிக்கைகள் மற்றும் குறிக்கோள்கள் இப்பொழுது பரலோக குடும்பத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இன்னுமாக, நாம் இதைக்குறித்து முழுமையாக உணர்ந்துக்கொள்ளுகையில், தேவனுடைய குடும்பத்தின் மீது நமது பிரியம் காணப்படும், மற்றும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அந்த அன்பை, அகலமும் ஆழமும் படுத்தத்தக்கதாக, பரலோக குடும்பத்துடனான நம்முடைய ஐக்கியம் காணப்பட வேண்டும்.

இதற்கு இசைவான நமது கர்த்தருடைய வார்த்தைகள், அவர் எப்படிப் பரலோக உறவைக் கருதினார் என்பதைக் காட்டுகின்றது. கர்த்தரிடம் ஒருவர், "உம்முடைய தாயாரும்

உம்முடைய சகோதரரும் உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள்" (மத்தேயு 12:47) என்று கூறினபோது கர்த்தர், "தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்குப் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்தேயு 12:48-50).

புதிய சிருஷ்டிகளாகிய, தேவனுடைய ஆவிக்குரிய குமாரர்களாகிய நாம், விரைவில் அவருடைய அருமையான குமாரனுடன் உடன்சுதந்திரர்களாக இருக்கப் போகின்றோம். நிச்சயிக்கப்பட்ட கன்னிகைகளாக, சகல பூமிக்குரிய ஈடுபாடுகளைத் துறந்திருக்கும் நாம், நமது பரலோக மணவாளனுடன், திருமணத்தின் மூலம் இணைக்கப்படவிருக்கின்றோம், மற்றும் (திருமணத்தின் மூலம் இணையும்) அந்த மாபெரும் தருணத்திற்காகச் சந்தோஷத்துடன் நம்மால் முடிந்த அனைத்து ஆயத்தங்களையும் செய்து கொண்டிருக்கின்றோம். இந்த ஒரு புதிய நிலைக்குள் நாம் முழுமையாய்ப் பிரவேசித்தப் பிற்பாடு, நாம் பூமிக்குரிய தளத்தில் காணப்படுபவர்களுக்குக் கணவர்களாக, மனைவிகளாக, பெற்றோர்களாக, பிள்ளைகளாக, சகோதரர்களாக மற்றும் சகோதரிகளாக இருப்பதில்லை. ஏனெனில், அக்காலத்தில் பூமியின் சகல குடிகளை ஆளுவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் ஆயத்தமாக நாம், "தேவனுடைய ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும்" இருப்போம். இன்னுமாக, அக்காலத்தில் பூமியின் குடிகளிலுள்ள ஒவ்வொருவரும் தேவனுக்கு அன்பிற்குரியவர்களாக இருப்பது போன்று நமக்கும் இருப்பார்கள். இக்காலத்தில் நமது அன்பிற்குரியவர்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பானது, அக்காலத்தில் எவ்விதத்திலும் குறைவதில்லை. அக்காலத்தில் நமது அன்பு மிகவும் அதிகமாய்க் காணப்படும். அதுவும் இக்காலங்களில் இரத்த உறவுகளுக்குள் மாத்திரம் அன்பு செய்தல் என்றுள்ள குறுகிய வரம்புகளற்ற அன்பாக நமது அன்பு அக்காலத்தில் காணப்படும்.

---

**R4634**

# "நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள்"
## மத்தேயு 13:1-9; 18-23.

"ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்."

**யாக்கோபு 1:21**

தேவன் தம்முடைய ஆயிரவருஷ இராஜ்யத்தின் நிர்வாகத்தில் கிறிஸ்து இயேசுவுடன் அங்கங்களாக இருக்கும்படிக்கு அழைக்கும் சிறுமந்தையைத் தெரிந்தெடுக்க சர்வவல்லமையுள்ளவர் பயன்படுத்தும் முறை தொடர்பான மிக அருமையான பாடத்தை நமது கர்த்தர் படகில் இருந்துகொண்டு போதித்தார். இங்கு இடம்பெறும் உவமையிலுள்ள "விதையானது," இராஜ்யத்தின் செய்தி அல்லது அழைப்பாகும். இந்த விதைகளோ சாதகமான சூழ்நிலைகளில் முளைத்து, தேவைப்படும் குணலட்சணத்தின் வளர்ச்சியாகிய பலனைக்கொண்டு வருகின்றது. நமது கர்த்தரானவரே இராஜ்யத்தின் இந்த நல்ல விதைகளை விதைக்கும் மாபெரும் விதைப்பாளராக இருக்கின்றார். கர்த்தருக்குப் பின் அப்போஸ்தலர்கள் அதைச் செய்தார்கள். அதுமுதல் கர்த்தர், தம்முடைய உண்மையுள்ள ஜனங்கள் அனைவரையும் விதை விதைக்கும் வேலையில் ஏறக்குறைய பயன்படுத்தியுள்ளார்.

தெய்வீகச் செய்தி எனும் விதை பெரும்பாலும் வீணடிக்கப்பட்டது என்ற உண்மையானது, இந்தச் செய்தி நல்லதல்ல என்பதற்கும், விரும்பத்தக்கதல்ல என்பதற்கும் எவ்விதத்திலும் நிரூபணமாகாது. நிலத்தில், அதாவது இருதயத்திலேயே தவறு உண்மையில் காணப்படுகின்றது என இந்த உவமை காட்டுகின்றது. ஒருவேளை அனைத்து

இருதயங்களும் சரியாக இருந்திருக்குமாயின், விதை (அ) செய்தி எல்லா இடத்திலும் அதிக பலனைக் கொடுத்திருக்கும்.

## “வழியோரமாகக் கேட்டுச்செல்பவர்கள்”

எல்லா நிலமும் நல்ல (அ) பொருத்தமான நிலமாக இல்லாவிட்டாலும், அநேகர் தங்களிடத்தில் இருக்கும் சாதகமற்ற நிலைமையைச் சரிச்செய்துகொள்வதற்கும், சீர்ப்படுத்துவதற்குமான ஆற்றல் பெற்றிருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டும் விதத்தில் உவமையின் காரியங்கள் முன்வைக்கப்படுகின்றது. இந்த உவமையின் அர்த்தம் தொடர்பாகவும் நாம் யூகம் பண்ண வேண்டியதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே விளக்கம் கொடுத்த சில உவமைகளில், இந்த உவமையும் ஒன்றாக உள்ளது. இவ்விஷயத்தை அநேகர் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

"விதை" என்பது இராஜ்யத்தின் செய்தியாக இருக்கின்றது. அநேகர் இதைப் புரிந்துக்கொள்வதில்லை. இப்படியாகப் புரியமுடியாதவர்களின் செவிகள், இச்செய்தியை இழந்துவிடுகின்றன. ஏனெனில், இச்செய்தியை எடுத்துப்போடும்படிக்கு எதிராளியானவன் விழிப்பாகக் காணப்படுகின்றான். இந்த எதிராளியானவன், "வழியருகே விழுந்துள்ள விதைகளைப்" பட்சித்துப் போடும் பறவைகளாக அடையாளப்படுத்துகின்றான். இப்படியாக, "வழியருகே" கேட்டுச் செல்பவர்கள்தான் அனைத்துப் பெயரளவிலான சபை கூட்டத்தார்களிலுள்ள, பெரும் திரளான வகுப்பாராய் இருக்கின்றனர். இவர்கள் சம்பிரதாயமானவர்களே.

## “செவிகொடுத்துக் கேட்ட கற்பாறை நிலம் போன்றவர்கள்”

"கற்பாறையான" நிலம் என்பது, இராஜ்யத்தின் செய்தியைக் கேட்கும் மற்றொரு வகுப்பாரை அடையாப்படுத்துகின்றது. இவர்களுக்கு இந்தச் செய்தி நல்லதாகத் தோன்றுகின்றது. இவர்கள் இதில் விருப்பம் கொள்கின்றனர். ஆனால், குணலட்சணத்தின் ஆழம் விஷயத்தில் இவர்கள் குறைவுபடுகின்றனர். இவர்கள் தங்களை (கிறிஸ்தவர்களென) அறிக்கை செய்துகொள்கின்றனர். இன்னுமாக, சில காலம் வரையிலும் அபரிவிதமாகத் தழைத்தோங்குகின்றனர். ஆனால், இராஜ்யத்தின் வேலைக்காக, இவர்களைக் கர்த்தர் பயன்படுத்துவதற்கு ஏதுவான குணலட்சணத்தின் வளர்ச்சிக்கு அவசியமான ஆழத்தில் இவர்கள் குறைவுபடுகின்றனர். மேலும், சோதனைகளும், பரீட்சைகளும் வரும்போது, இவர்கள் இடறி விழுந்து போய்விடுகின்றனர். "மற்றவர்கள் பரிசை வெல்லத்தக்கதாகப் போராடுகையில்," இவர்கள், தாங்கள் "மலர் மெத்தைகளில் சுகமாக" இராஜ்யத்திற்குச் சுமந்துகொண்டு செல்லப்படுவார்கள் என எண்ணுகின்றனர். இராஜ்யத்திற்கு எவ்விதமான சுலபமான சாலையும் இல்லை. தெரிந்துக்கொள்ளப்பட்ட "மணவாட்டியாக" இருக்கப்போகிறவர்கள் அனைவரும், "மிகுந்த உபத்திரவத்தினாலே இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்" என ஆண்டவர் கூறியுள்ளார்.

## “நல்லவிதை ஆனால் முள்ளுள்ள இடம்”

முட்செடிகளை முளைப்பிக்கும் நிலமானது, சரியான கிறிஸ்தவக் குணலட்சணத்தை உருவாக்குவதற்குரிய ஐசுவரியமும், மிகவும் பொருத்தமுமான நிலமாகவே காணப்பட்டது. ஆனால், இந்த நிலமானது முட்செடியின் விதைகளைப் பெருமளவில் கொண்டிருக்கின்றது, மற்றும் இந்த நிலமானது கோதுமையையும், முட்செடிகளையும் வெற்றிகரமாக விளைவிக்க முடியாது. ஆகவே, உவமை கூறுகின்றதுபோல, முள் வளர்ந்து கோதுமையை நெருக்கிப் போடுகின்றபடியால், போதுமானஅளவுக்குக் கோதுமை விளைவதில்லை. இந்த முட்கள் சிலர் கருத்துத் தெரிவிப்பது போன்று தீயொழுக்கமும், குற்றமான ஆசைகளும் அல்ல; சுயநல வேட்கைகளுள்ள இருதயங்களை உடையவர்கள் இராஜ்யத்தின் செய்தி தொடர்பான எதையும் கேட்பதில்லை. மேலும், இப்படிப்பட்டவர்கள் இவ்வுமையில் குறிப்பிடப்படவும் இல்லை. மாறாக, துணிகரமான பாவிகளாய் இல்லாமலும், வெளிப்புறமாக நீதியின் பாதையில் நடக்கிறவர்களுமாய் இருப்பவர்கள்தான் இந்த உவமையில் குறிப்பிடப்பட்டுள்ளனர். "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால்,

அவனும் பலனற்றுப் போவான்” (மத்தேயு 13:22). உவமையில் இடம்பெறும் இந்த வகுப்பாரில் அநேக பெருந்தன்மையுள்ள நல்ல ஜனங்கள் அடங்குகின்றனர். ஒருவேளை உலகத்தின் ஆவியினின்றும், அதன் இலட்சியங்கள், ஐசுவரியம், செல்வாக்கிலிருந்தும், இந்த ஜீவியத்திற்கான நற்பொருள்களின் மீதான நேசத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டால், நீதியில் மிகவும் பலன் கொடுக்கின்றவர்களாய் இருப்பார்கள் என நாம் கருதும் அநேக ஜனங்களும் கூட இந்த உவமையிலுள்ள இவ்வகுப்பாரில் அடங்குகின்றனர். நாம் நம்மையும், நாகரிகமான இடங்களிலுள்ள அநேக ஜனங்களுடைய ஊதாரித்தனத்தையும், வீரியத்தையும் பார்க்கும்போது, நமக்குள்ளே பின்வருமாறு கூறுவோம், “ஒருவேளை இவர்களுடைய ஜீவியங்கள் கர்த்தருடைய வழிக்கு நேராகத் திருப்பப்பட்டால் மற்றும், இந்தப் பூமிக்குரிய சுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டால், எத்துணை அருமையான பாத்திரங்களாக இவர்கள் இருந்திருப்பார்கள்.” எனினும் இவர்களுடைய பலம், இவர்களுடைய ஆற்றல்/சக்தி உலகக்காரியங்களினாலும், கவலைகளினாலும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவரோடு உன்னதமான கனத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியென அவசியப்படும் கனிகளை இவர்களால் கொடுக்க இயலாது. இத்தகையவர்களுக்கு ஆண்டவருடைய செய்தி பின்வருமாறு உள்ளது; அதாவது, “உலகப்பிரகாரமான காரியங்களுக்கு உங்களுடைய நேரத்தையும், பெலத்தையும், செல்வாக்கையும் கொடுத்துக்கொண்டு, அதேசமயம், என்னுடைய இராஜ்யத்தில் என்னோடு கூட ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக உங்களால், உங்கள் அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப் பண்ணிக்கொள்ள முடியாது; மற்றும் என்னுடைய சீஷனாக இருக்கிறவன், தனது சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றுவானாக. நான் எங்கேயோ, அங்கே என் சீஷனும் இருப்பான்” என்பதேயாகும்.

## “நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால்”

“நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்” என்று ஆண்டவர் கூறினார் (யோவான் 15:8). இந்த உவமையில், நல்ல நிலத்தின் பலன் வேறுபடுகின்றது. அதாவது, 30, 60 மற்றும் 100 ஆக பலன் தருகின்றது. அதிகமான பலன் இருக்கையில், பிதாவின் மகிழ்ச்சியும், இரட்சகருக்கான மகிமையும் அதிகமாகக் காணப்படும். இருதயத்திலும், ஜீவியத்திலும், குணலட்சணத்திலும் பலன் கொடுக்கிற காரியமானது, அந்த நபரையும், அவர் எப்படி இராஜ்யத்தின் செய்தியை ஏற்றுக்கொள்கின்றார் என்பதையே அதிகமாய்ச் சார்ந்துள்ளது. அதிகமான பலனைக் கொடுப்பவர்கள் என்பவர்கள், அழைப்பை மிகவும் உண்மையாகவும், புத்திக் கூர்மையுடன் பற்றிப் பிடித்துக் கொண்டவர்கள் ஆவார்கள். “வசனத்தைக் கேட்கிறவன் உணருகிறவனுமாயிருக்கிறான்” (மத்தேயு 13:23). யாருடைய இருதயம் தேவனுக்கு உண்மையாக இருக்கின்றதோ, மற்றும் யார் தன்னைத் தடைகளிலிருந்தும், உலகப்பிரகாரமான ஆசைகள் மற்றும் குறிக்கோள்களிடமிருந்தும் விடுவிக்கின்றனரோ, மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலைப்போல, “ஒன்றையே செய்கிறேன்” எனக் கூற முடிகின்றதோ, அவர் நிச்சயமாய் இராஜ்யத்தை அடைவார்.

இராஜ்யத்தின் செய்தியை நாம் கேட்பது மாத்திரம் போதாது; இராஜ்யத்தின் செய்தி தொடர்பான நல்ல இருதயங்களை (அ) நல்ல நோக்கங்களை நாம் பெற்றிருப்பது மாத்திரம் போதாது; இவைகளுடன்கூட ஆண்டவர் கூறுவதுபோன்று, நாம் இராஜ்யத்தின் செய்தியை புரிந்துக்கொள்கின்றவர்களாகவும் இருப்பது அவசியமாகும். ஆகவே, வேத ஆராய்ச்சி அவசியமாய் உள்ளது. பூமிக்குரிய ஜீவியத்தின் சொற்ப வருடங்களுக்காக ஆயத்தப்படுவதில் நாம் பல ஆண்டுகள் (கல்வி) கற்றுக்கொள்வது மிகவும் சரியானதும், ஞானமானதுமாக இருக்கின்றது என்பதைப் புத்தியுள்ள ஜனங்கள் எண்ணுகின்றார்கள். அப்படியானால் நித்தியத்திற்குரிய ஜீவியத்திற்கும், இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்குமான நமது ஆயத்தமாகுதலுக்கு எவ்வளவு கற்றுக்கொள்ளுதல் (அவசியமாய்) சரியானதாய் இருக்கும். இராஜ்யத்திற்கான குணலட்சணத்தின் வளர்ச்சியில் செலவழிக்கப்பட்ட நேரமும், பிரயாசமும் ஞானமான செலவழித்தல் ஆகும். மற்றும், 30, 60 அல்லது 100 என்ற அறுவடை பலனானது நம்முடைய உண்மையின் அளவையும், வீரியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. இராஜ்யத்தில் வெகுமானமும் சரிவிகிதமான அடிப்படையிலேயே இருக்கும். “மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது.” இராஜ்யத்தில் மகிமையில் பல்வேறு அளவுகள் காணப்படும், எனினும் போதுமானளவு பலனைக்கொடுக்காத எவரும்

பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள்; தகுதியில்லாத எவருக்கும் "நல்லது" என்ற வார்த்தை ஒருபோதும் சொல்லப்படாது.

---

**R4635**

# “கோதுமை மற்றும் களைகள்”
## மத்தேயு 13:24-43

"அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்." - மத்தேயு 13:43

இங்கு நாம் "இராஜ்யத்தின் மற்றொரு உவமைக்கு," ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசனத்திற்கு அறிமுகமாகுகின்றோம். கடந்த பாடத்தில் சத்தியத்தைக் கேட்கும் பல்வேறு வகுப்பாரைக்குறித்து நாம் பார்த்தோம். இன்றைய நாளின் பாட ஆராய்ச்சியானது, "நல்ல நிலமாகிய" சத்தியத்தைக் கேட்டவர்களை மாத்திரமே கருத்தில் எடுத்து, மற்றவைகளையெல்லாம் புறக்கணித்து விடுகின்றது. மேலும், நமது கர்த்தர் சுவிசேஷ யுகத்தின் வரலாற்றை முன்னறிந்தவராக இருக்கின்றார் என்பதையும் காட்டுகின்றது. கர்த்தரும், அவருடைய அப்போஸ்தலர்களும் நல்ல விதைகளையே விதைத்தார்கள் <u>என்றும்</u>, அப்போஸ்தலர்கள் மரண நித்திரைக்குள் போன பிற்பாடு, மாபெரும் எதிராளியானவனாகிய சாத்தான் கோதுமை வயலில், களைகளின் விதையை/புல்லை விதைத்தான் <u>என்றும்</u> நமக்குக் கூறப்படுகின்றது. கிழக்கத்திய நாடுகளிலுங்கூட இப்படியான கெட்ட எண்ணத்துடனான வேலைகள், வழக்கத்திற்கு மாறானதல்ல என்று நமக்குக் கூறப்படுகின்றது. "புல்லின்" விதைகள் கோதுமையினின்று முற்றிலும் வேறுபட்டது ஆகும். ஆனால், இவைகளில் வளர்ந்து வரும் தண்டுகள் ஒன்று போலவே காணப்படும்; கதிர்கள் முதிர்வது வரையிலும் கைத்தேறினவர்களைத் தவிர, மற்றபடி எவர் கவனித்தாலும், இரண்டும் ஒன்று போன்றே தோன்றும்; கதிர்கள் முதிர்ந்த பிற்பாடு, கோதுமையின் கதிர்கள் பாரம் கூடினதாகக் காணப்படும். ஆனால், களை/புல் மிகவும் பாரம் குறைந்ததாக இருப்பதினால், இவைகள் நேராக நிற்கும். கைத்தேறினவர்களுக்கே கோதுமை வளரும் போதே கோதுமையினின்று களைகளை வேறுபடுத்தத் தெரியும்.

சாத்தானால், சபைக்குள் எப்படித் தப்பறைகள் கொண்டு வரப்படும் என்பது <u>குறித்தும்</u>, தப்பறைகள் மூலம் உருவாகும் பிள்ளைகள், சத்தியத்தினால் உருவாகும் பிள்ளைகள் போலவே அநேகவிதத்தில் காணப்படுவார்கள் என்பது <u>குறித்தும்</u> விவரிக்கவே ஆண்டவர் இந்த உவமையைக் கொடுத்தார். இயேசுவினாலும், அப்போஸ்தலர்களாலும் விதைக்கப்பட்ட சத்தியத்தின் விதைகளை அழிப்பது என்பது எதிராளியானவனால் கூடாத காரியமாகும். இயேசுவும், அப்போஸ்தலர்களும் விதைத்ததை, எதிராளியானவன் குறுக்கிடுவதற்கும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், கோதுமைகளுக்குள் களைகளை விதைத்திட, எதிராளியானவன் அனுமதிக்கப்பட்டான். அநேகமாக கோதுமையை நெருக்கிப் போடுவதற்கும் மற்றும் கோதுமையின் அதாவது, இராஜ்யத்தின் பிள்ளைகளினுடைய உண்மையான குணலட்சணம் தொடர்பான விஷயத்தில் வெளி உலகத்தை ஏமாற்றுவதற்கும் ஏதுவாக எதிராளியானவன் கோதுமைகளுக்குள் களைகளை நடுகின்றான்.

சாத்தானைத் தடைபண்ணக் கூடியதும், அவனுடைய திட்டங்களின் நிறைவேறுதலை எக்காலத்திலும் தடுப்பதற்குரியதுமாகிய தேவனுடைய சர்வவல்லமையை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தேவன் அங்கீகரிக்காததும், அவருடைய வார்த்தைகள் கண்டிக்கிறதுமான அநேக காரியங்களை, யுகங்களைக் குறித்த தெய்வீகத் திட்டமானது அனுமதிக்கின்றது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். தெய்வீகத் திட்டமானது பல யுகங்கள் அடங்கிய காலஅளவு கொண்டது என்பதையும், திட்டம் நிறைவடையும் போது மாத்திரமே தெய்வீக ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையை முழுமையாக வெளிப்படுத்தும் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். பிசாசுகள் மற்றும் மனுஷனுடைய கோபம் தேவனுடைய நோக்கங்களை எதிர்க்கத்தக்கதாக அனுமதிக்கின்றார். அதுவும் இவைகளையெல்லாம் தம்முடைய சொந்த மகிமைக்காகவும், தம்மோடு இசைவாக உள்ள

அனைவரின் நன்மைக்காகவும் தம்மால் மாற்ற முடிகிற மற்றும் மாற்றும் அளவுக்குத் தக்கதாகவே அனுமதிக்கின்றார் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

## "இரண்டையும் வளரவிடுங்கள்"

வேலைக்காரர்கள், தாங்கள் போய்க் கோதுமையினின்று களைகளைப் பிடுங்கிப் போட உமக்கு சித்தமா? (அ) இல்லையா? என்றும், இவ்வாறாகச் சத்துருவின் வேலை அழிக்கப்படுமே என்றும் கேட்பதாக உவமையில் இடம்பெறுகின்றது. பதில் இல்லை என்று வருகின்றது. ஏனெனில், இப்படியாகச் செய்வது என்பது அனைத்துக் கோதுமைகளையும் துயரப்படுத்தத்தக்கதாக, கோதுமை நிலத்தில் அப்படி ஒரு குழப்பத்தை/அமைதியின்மையை ஏற்படுத்திவிடும். உண்மையானவர்களும், போலியானவர்களும் மிகவும் நெருக்கமாக வாழ்வில் பிணைந்துக் காணப்படுகின்றனர். இவர்களுடைய வேர்கள் சமுதாயத்திலும், குடும்பங்களிலும் ஒன்றோடொன்றாகப் பின்னிப் பிணைந்துக் காணப்படுகின்றது. ஆகவே, யுகத்தின் முடிவாகிய அறுப்பின் காலம் வரையிலும், இரண்டுமே சேர்ந்து வளர விடப்பட வேண்டும் என்று ஆண்டவர் கூறினார். அப்போது இந்த இரண்டு வகுப்பரைச் சேகரிப்பதும், பிரிப்பதும் தொடர்பான அறிவுரைகள் "அறுக்கிறவர்களுக்கு" அறிவிக்கப்பட வேண்டும் என்றும் ஆண்டவர் கூறினார். கோதுமை களஞ்சியத்தில் சேர்க்கப்படும், களைகளோ சுட்டெரிக்கப்படுவதற்காகக் கட்டப்படும். அதாவது, எதிர்க்கால விளைச்சலை, எந்தக் கெட்ட விதைகளும் பாதிக்காத அளவுக்குச் சுட்டெரிக்கப்படுவதற்காகக் கட்டப்படும்.

சீஷர்களுடைய விசேஷமான வேண்டுகோளுக்கு இணங்க ஆண்டவர் இந்த உவமையினுடைய அர்த்தத்தையும் விளக்கினார். இயேசு தாமே இராஜ்யத்தின் சுவிசேஷம் எனும் நல்ல விதையை விதைத்தவர் ஆவார். தவறான உபதேசம் மற்றும் வஞ்சனையின் விதைகளை விதைத்தவன் சாத்தான் ஆவான். "அறுப்பின் காலம்" என்பது கிறிஸ்துவின் ஆயிரம் வருஷம் இராஜ்யத்தின் புதிய யுகம் ஆரம்பிப்பதற்கு முன்னர், இடம்பெறும் இந்த யுகத்தின் முடிவாகும். கோதுமை வகுப்பார் என்பவர்கள் கிறிஸ்துவினுடைய ஆயிரம் வருஷம் இராஜ்யத்தில் அவரோடு மகிமையில் பங்கடைவதற்கெனப் பாத்திரமாய்க் கருதப்படுபவர்கள் ஆவர்; மற்றும் "களஞ்சியத்தில்" சேர்க்கப்படுதல் என்பது இந்தக் கோதுமை அனுபவிக்கும் உயிர்த்தெழுதலின் மாற்றத்தைக் குறிக்கின்றது. "கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, அவிக்குரிய சரீரமுமுண்டு." "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்." (1 கொரிந்தியர் 15:43-44; வெளிப்படுத்தல் 20:6).

களைகள் வகுப்பார், இராஜ்யத்திலிருந்துச் சேர்த்து வெளியே எடுக்கப்படுவதாக 41–ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலத்தில் காணப்படும் சபையானது, கரு நிலையில் இருக்கும் தேவனுடைய இராஜ்யமாக உள்ளது; அதாவது, எதிர்க்கால வேலை மற்றும் மகிமைக்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது வளர்ந்துக் கொண்டிருக்கும் நிலையில் காணப்படுகின்றது. இராஜ்ய வகுப்பார் அனைவரும் தேவனுக்கென்று முழுமையாய் அர்ப்பணம் பண்ணினவர்களாகவும், உயிர்த்தெழுதலில் தெய்வீக ஆவியின் ஜீவிகளாக மாறுவது தொடர்பாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறாக, ஆவியில் ஜெநிப்பிக்கப்படாதவர்கள் "கோதுமை" என்று தங்களை உரிமைப் பாராட்டிக்கொள்வதற்கோ, தங்களை இராஜ்யத்தின் சுதந்தரர்கள் என்று கருதிக்கொள்வதற்கோ உரிமையற்றவர்களாவர். இவர்கள் கிறிஸ்துவினுடைய சபைக்குள் காணப்படுவது என்பது, முறையற்ற விஷயமேயாகும். இவர்கள் நூற்றாண்டு காலங்களாக கோதுமையுடன் சேர்ந்துக் காணப்படும்படிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், யுகம் முடியும் போது அதாவது, ஆயிரம் வருஷம் யுகத்தின் ஆரம்பம் சம்பவிக்கும்போது, யுக மாறுதல்கள் நடைபெறும்.

இந்தக் களை வகுப்பாரில் திருடர்கள், கொலைக்காரர்களாகிய குற்றவாளிகளில் மிகவும் இழிவானவர்கள் உள்ளடங்குகின்றார்கள் என்று அனுமானிப்பது தவறாகும். எனினும், மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகளை நடப்பிக்கின்றவர்கள் என அப்போஸ்தலரால் விவரிக்கப்படுகின்றவர்கள், இதில் உள்ளடங்குகின்றனர், அதாவது

கோபம், பகை, வன்மம், பொறாமை, விரோதம் கொண்டவர்கள் ஆவர். ஆனாலும் பெரும்பாலான களைகள், பெருந்தன்மையான குணமுடைய நல்ல ஜனங்களாக இருக்கின்றனர், எனினும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான "புதிய சிருஷ்டிகள்" அல்ல. இவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படவில்லை என்பதற்காக அல்லாமல் பெயர்ச்சபையில், கிறிஸ்தவர்களெனத் தங்களைக் காட்டிக்கொள்வதினாலேயே குற்றஞ்சாட்டப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர். இந்தக் காரணத்தினாலேயே இவர்கள் ஆண்டவருடைய பார்வையில் குற்றத்திற்குரியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தங்களையே கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொண்ட குற்றத்திற்கு முழுமையாக இவர்கள் பொறுப்பாளிகளும் அல்ல. இப்படியாக, இவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக்கொள்வதற்கும், செயல்படுவதற்கும், இவர்கள் பிரசங்கிமார்களாலும், போதகர்களாலும் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் போலவே இந்தப் பிரசங்கிமார்களும், போதகர்களும் கூட இராஜ்யத்தைப் பற்றின அறிவோ (அ) இராஜ்யத்தில் அங்கத்துவம் பெற்றிட உதவும் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதலின் வல்லமையைக்குறித்தோ அறியாதவர்கள்தான். இவர்கள் கட்டுகளாகக் கட்டப்படுதல் அதாவது சமுதாயங்களென, புகலிடங்களென, சபைகளென, சபை பிரிவுகளெனக் கட்டுகளாகக் கட்டப்படுதல் என்பது, "அறுப்பு" வேலை நடந்து கொண்டிருப்பதற்கான விசேஷமான நிரூபணமாகக் காணப்படும். உண்மையுள்ள வகுப்பார், கிறிஸ்துவானவர் அவர்களை விடுவித்துக் கொண்டு, அளித்துள்ள சுயாதீனத்தில் உறுதியாய்த் தரித்து நிற்கும்படிக்கும், அவர்கள் சபை பிரிவுகளின் கட்டுகளுக்குள் வரக்கூடாது என்று புத்திமதிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் "கட்டுகளுக்குள்" அங்கத்துவம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். மாறாக, உண்மையான "கோதுமை" வகுப்பாரிலுள்ள அனைவருடனான முழுமையான ஐக்கியத்தில் நிலை நிற்கின்றவர்களாகக் காணப்பட வேண்டும்.

இந்தக் கட்டுக்கள் அக்கினியில் போடப்படுவது என்பது, இவர்களின் அழிக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனாலும் அக்கினிச் சூளை என்பது, சொல்லர்த்தமான அக்கினிச் சூளை என்றோ, களைகளைப் பட்சித்துப் போடும் அக்கினி என்பது, சொல்லர்த்தமான அக்கினி என்றோ நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. இந்த யுகம் நிறைவடையும்போது வரும் அக்கினியானது, வேதவாக்கியங்கள் முன்னறிவிக்கின்றபடி ஆயிரம் வருஷம் இராஜ்யத்தை அறிமுகப்படுத்தும் "மகா உபத்திரவக் காலமாகும்." "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" (தானி 12:1). இந்த மகா உபத்திரவக் காலத்தில், இப்பொழுது தாங்கள்தான், உண்மையான சபை எனக் களைகளை எண்ணிக் கொண்டிருக்கச் செய்திட்ட தவறான நம்பிக்கைகள் யாவும் கரைந்துவிடும். இவர்கள் தங்களுக்குரிய சரியான தளம், பூமிக்குரிய தளமே என்று புரிந்துக்கொள்வார்கள். தாங்கள் வெறும் பூமிக்குரியவர்களே என்றும், எவ்விதத்திலேயும் அழைக்கப்பட்டு, ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டு, ஜீவனுள்ள தேவனுடைய உண்மையான சபையில் தாங்கள் அங்கங்கள் ஆகவில்லை என்றும் புரிந்துக்கொள்வார்கள்.

## "தங்கள் பிதாவின் இராஜ்யத்தில்"

இந்த யுகத்தின் முடிவில், சபையினுடைய எதிர்ப்பார்ப்பு நிறைவேறும் என்பது தொடர்பான ஆண்டவருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள், "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 13:43). அனைவரிடமும் கேட்கக்கூடிய செவிகள் இல்லை. ஆனால், இவ்வசனத்திலுள்ள கர்த்தருடைய செய்தியானது, சரியான இருதய நிலையைக் கொண்டிருப்பவர்களுக்கே அதாவது, ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ளக் கூடியவர்களுக்கேயாகும். இப்படிப்பட்டவர்கள், இந்த யுகத்தின் முடிவில் பூமிக்குரிய சபை அமைப்புகள் எவ்வளவு இருந்தாலுங்கூட, கர்த்தருடைய பரிசுத்தவான்களே, மீட்பருடைய ஆயிரம் வருஷம் அரசாட்சியிலுள்ள மகிமையில் பங்கடைந்து, மனித குடும்பத்தை ஆசீர்வதிப்பதற்கும், சத்தியத்தினால் வெளிச்சமூட்டுவதற்கும் தூக்கிவிடுவதற்குமெனச் சூரியனைப் போன்று பிரகாசிப்பார்கள் என்பதைப் புரிந்துக்கொள்வார்களாக.

R4636

# “இராஜ்யத்தின் காட்சிகள்”
## மத்தேயு 13:31-33; 44-52

"தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.” - ரோமர் 14:17

பரலோக இராஜ்யம் பற்றியதான ஆண்டவருடைய உவமையானது, சீக்கிரத்தில் ஆரம்பிக்க இருக்கும் ஆண்டவருடைய ஆயிரம் வருஷம் இராஜ்யத்தில் அவரோடுகூட இருக்கும்படிக்கு, மனுக்குலத்தின் உலகத்தினின்று அவர் அழைக்கும் ஒரு வகுப்பார் தொடர்புடையது என்பதை நாம் நினைவில் கொண்டிருப்போமாக. சில சமயம் இந்த வகுப்பார் பரிசுத்தமான கோதுமைகள் மாத்திரமல்லாமல், களைகள் போன்றவர்களும் உள்ளடங்கினவர்களாகவும் பேசப்படுவதையும் நினைவில் கொள்வோமாக. இந்தப் பல்வேறு உவமைக் காட்சிகள் ஒரே காரியத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்து விவரிக்கின்றதாய் இருக்கின்றது. அதாவது, ஒரு கட்டிடத்தை வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் நாம் படம் பிடித்துக் காட்டுவது போலாகும்.

## “கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது”

கடுகு விதை மிகச் சிறியதாய் இருந்தும், அது பெரிய செடியாக வளர்ந்து, ஆகாயத்தின் பட்சிகள் அதன் கிளைகளில் வந்து அடையத்தக்கதாக இருப்பதுபோல, இராஜ்யத்தின் சுவிசேஷமும் சிறிய ஆரம்பத்திலிருந்து, பெரிய அளவை அடையும் என விவரிக்கப்படுகின்றது. இது மரங்கள் மத்தியில் பெரிய மரமாக ஆகாமல், மாறாக செடிகள் அல்லது பூண்டுகள் மத்தியில் பெரியதாகக் காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, கிறிஸ்துவினுடைய செய்தியானது ஆரம்பத்தில் ஏழைகளினாலும், இஸ்ரயேலிலுள்ள சிலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இறுதியில் அது முக்கியத்துவம் வாய்ந்த அளவுக்கு வளர்ந்தபடியால், அதின் கிளைகளில் ஆகாயத்துப் பறவைகள் வந்து கூடின. முந்தின உவமைக்கு நமது கர்த்தர் கொடுத்திட்ட விளக்கத்தில் பறவைகள், பொல்லாங்கனின் ஊழியக்காரருக்கு அடையாளமாக இருப்பதை நாம் நினைவில் கொள்வோமாக. ஆகவே, ஒருகாலத்தில் கிறிஸ்துவின் சபையானது உலகத்திற்கு மிகவும் முக்கியத்துவம் அற்றதாகவும், சபையில் இருப்பது என்பது வெட்கமாகவும், அவமானமாகவும் கருதப்பட்டது என்றும், பிற்பாடு அது கனமுள்ளதாகவும், பிரம்மாண்டமானதாகவும் கருதப்படுவதினால், எதிராளியானவனின் ஊழியக்காரர்கள் இதன் நிழலின் கீழ்க் காணப்படுவதில் மகிழ்ச்சிகொள்வார்கள் என்றுமுள்ள விஷயங்களே இந்த உவமையின் விளக்கம் என்று முடிவு செய்வதற்கு ஏதுவாக வழிநடத்தப்படுகின்றோம். இந்த வளர்ச்சியை, வேதவாக்கியங்கள், பாபிலோன் என்று தெரிவிக்கின்றது, மற்றும் பல்வேறு கிளைகளையும், பிரிவுகளையும் கொண்டுள்ள கிறிஸ்துவின் பெயரளவிலான சபை முழுவதும், பாபிலோன் தன்மையில் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கின்றது. "அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று” (வெளிப்படுத்தல் 18:2). இதில் இடம்பெறும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள். இது சபையின் வெளித்தோற்றமான பெரிய வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது, மற்றும் இந்த வளர்ச்சி அவளுக்கு நன்மையாகவும், மகிமை சேர்க்கின்றதாகவும் இராமல், எதிர்மாறாகவே இருக்கின்றது. இது பெயரளவிலான கிறிஸ்துவின் சபையாகும். கர்த்தருடைய ஆவி தவறாகக் காட்டப்பட்டாலும், சரியில்லாத வளர்ச்சிக் காணப்பட்டாலும், இறுதியில் சபையின் மாபெரும் தலையானவர் குழப்பதைச் சரிப்படுத்தி, தம்முடைய "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை” மகிமைப்படுத்திப் பயன்படுத்துவார்.

## “மாவிலே அடக்கி வைக்கப்பட்ட புளிப்பு”

"புளிப்பு” பற்றின உவமையானது (33-ஆம் வசனம்) சபை தவறான நிலைக்குள் கடந்துப் போகும் முறைக்குறித்து விவரிக்கின்றது. எப்படி ஒரு ஸ்தீரி அப்பம் உண்டாக்க

மாவுக்குள் புளிப்பை அடக்கி வைத்து, மாவு முழுவதையும் புளிக்கச் செய்வதைப் போன்று, கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இப்படியாகவே காணப்படும். முழு விசுவாச வீட்டாருக்குரிய உணவும் புளிப்பாக்கப்படுகின்றது (அ) கெடுக்கப்படுகின்றது. முழு மாவுக்குள்ளும் கலக்கும் புளிப்பாகிய தவறான உபதேசமானது, ஒவ்வொரு பாகத்தினுடைய தூய்மையை ஏறக்குறைய கெடுத்துப் போடுகின்றதாய் இருக்கின்றது. இவ்வாறாக இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு உபதேசமும், ஏறக்குறைய இருண்ட யுகத்தின் தப்பறைகளினால் திரிக்கப்பட்ட நிலையில் அல்லது தவறான நிலையில் இன்று வழங்கப்பட்டுள்ளது.

## "நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம்"

கிறிஸ்துவுடன் அவருடைய ஆயிரம் வருஷத்தின் இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்துவத்தை அடைவதற்காக விரும்பும் தன்மையானது, இந்த உவமையில் காட்டப்படுகின்றது. பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்கிறவன், அதன் மதிப்பை உணர்ந்தவனாக, அது தனக்கு வேண்டுமென விரும்புகின்றான், மற்றும் அதன் மீது கொண்டிருக்கும் அத்தகைய விசுவாசத்தினால், விலையேறப்பெற்ற பொக்கிஷம் காணப்படுகின்றது என அவன் நம்பின நிலத்தை வாங்குவதற்கென, தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்றுவிடுகின்றான். சுவிசேஷத்தின் செய்தியை உணர்கின்றவர்கள் மாத்திரமே, அதன் மகிமையான வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வார்கள். ஒருவேளை நாம் தற்கால ஜீவியத்தினுடைய சந்தோஷங்களையும், அதன் இலட்சியங்களையும், வாய்ப்புகளையும் நேசிப்போமானால், இவைகளுக்காகவே நாம் ஊழியம் புரிகின்றவர்களாக இருப்போம். ஆனால், ஒருவேளை கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தில் அவருடன் பங்கடைவதற்கென, இந்த யுகத்தில் அளிக்கப்படும் சுவிசேஷத்தின் வாய்ப்பை நாம் புத்திக்கூர்வமாகக் கேட்டு, விசுவாசித்தால், நம்முடைய விசுவாசம் மற்றும் உணர்ந்துக்கொள்ளுதலுக்கு ஏற்ப, பரிசை அடைவதற்கான நமது சுயத்தைப் பலிச் செய்யும் வைராக்கியம் காணப்படும். இராஜ்யத்தின் சுவிசேஷத்தை விசுவாசிக்கின்றவர்கள், பரிசை தாங்கள் பெற்றுக்கொள்வதற்கு இந்த அவர்களுடைய விசுவாசமே, அவர்களுக்கு ஊக்கமாக விளங்குகின்றது. ஏனெனில், இந்தப் பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, ஒருவர் கொண்டிருக்கும் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழக்க வேண்டியதாய் இருக்கும் மற்றும், ஒருவன் தான் பரிசை அடைவான் என்று விசுவாசம் கொள்ளவில்லை என்றால், அவன் தன்னிடத்திலுள்ள அனைத்தையும் பலிச் செலுத்திட நிச்சயமாய் விருப்ப மாட்டான். இவ்வுமையில் இடம்பெறும் நிலம் தேவனுக்குச் சொந்தமானதாகும். இங்குத் தேவன் பொக்கிஷத்தை வைத்துள்ளார். விலைக்கொடுத்து வாங்க விருப்பமுள்ள எவருக்கும் விற்கும்படி தேவன் அந்நிலத்தை வைத்துள்ளார். விலைக்கொடுத்து வாங்குபவர்கள் கர்த்தரும், கர்த்தரோடு அவருடைய பரலோக மகிமையில் பங்கடையத்தக்கதாக, பூமிக்குரிய நன்மைகளை பலிச் செலுத்துவதில் அவரோடு இணைந்துக் கொள்ளும்படியான அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்பவர்களும் ஆவர். அதாவது, கர்த்தரும், ஆயிரவருஷ யுகத்தில் மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிப்பதற்கான சகல பொக்கிஷங்களைக் கொண்டு வருவதற்குரிய வேலையில் அவரோடு பங்கடையத்தக்கதாக, பூமிக்குரிய நன்மைகளைப் பலிச் செலுத்துவதில் அவரோடு இணைந்துக் கொள்ளும்படியான அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்பவர்களும் ஆவர். பொக்கிஷத்தைப் புதைத்து வைப்பது அவசியம், ஏனெனில் "பன்றிகளுக்கு முன்பாக உங்களது முத்துக்களைப் போடாதீர்கள்" என்று நமது கர்த்தர் கூறியிருக்கின்றார். பன்றிகள் போன்றவர்கள் உங்களைப் புரிந்துக்கொள்ள மாட்டார்கள், உங்களை முட்டாள்களென எண்ணுவார்கள், மற்றும் அவர்களுடைய ஏமாற்றத்தில், உங்களைக் காயப்படுத்த முற்படுவார்கள். "உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்குமுன்பாக உன்மட்டும் இருக்கட்டும்" (ரோமர் 14:22). பூமிக்குரிய விஷயங்களை நீங்கள் அவரிடத்தில் பலிச் செலுத்துங்கள் அந்தரங்கத்தில் பார்க்கின்ற உங்கள் பிதா, வெளியரங்கமாய் உங்களுக்குப் பலனளிப்பார்.

## "விலையேறப்பெற்ற முத்து"

இன்றைய காலங்களைவிட முற்காலங்களில் முத்துக்கள் பொதுமக்களால் பெரிதும் விரும்பப்பட்டது. முத்து வியாபாரிகள் இந்த முத்துக்களை வாங்கி, முத்துக்கள் மிகவும் உயர்வாக மதிக்கப்படும் அங்காடிகளில் எடுத்துச் செல்வார்கள். இந்த உவமையில் முத்து

வியாபாரிகளில் ஒருவர், அவர் அதுவரையிலும் பார்த்திராத மிகவும் உயர்வான ஒரு முத்தைக் காண்பதாக இடம்பெறுகின்றது. அந்த முத்து மிகவும் விலையேறப் பெற்றது எனக் கண்ட இவர், இந்த முத்தினுடைய உரிமையாளர் ஆகத்தக்கதாக, தன்னிடத்திலுள்ள மற்ற அனைத்து முத்துக்களையும், உடைமைகளையும் விற்பதில் மகிழ்ச்சிக் கொண்டார்.

உலகம் அளிக்கும் சகல வாய்ப்புகளைவிட, கிறிஸ்துவுடன் அவருடைய இராஜ்யத்தில் பங்கடைவதற்கான சுவிசேஷத்தின் வாய்ப்பானது மிகவும் பெரியது என்பதை இந்த உவமை காட்டுகின்றது. “திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துக்கொள்ளப்படத்தக்கது” (நீதிமொழிகள் 22:1) என்ற வேதவாக்கியம் தெரிவிக்கிறபடி, உலகத்தின் கனமும், நற்கீர்த்தியின் விளைவான கனமும், ஆஸ்தி, ஸ்தானம் ஆகியவற்றினால் வரும் கனமும் விரும்பத்தகுந்தவைகளே. ஆனால், நம்முடைய கண்கள் கர்த்தராகிய இயேசுவுடன் அவருடைய பரலோக மகிமையிலும், பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கும் வேலையிலும், அவருடைய உடன் சுதந்திரராகுவதற்கான இராஜ்யத்தின் வாய்ப்பாகிய, “விலையுயர்ந்த ஒரு முத்தை” காண்கையில்/கண்டுபிடிக்கையில், இதுவே உலகத்தின் சகல கனங்கள், அந்தஸ்துகள் மற்றும் இன்பங்களைக் காட்டிலும் மிகவும் விலையேறப் பெற்றதென நாம் உணர்கின்றோம். இந்த முத்தை வாங்குவதற்குப் பாத்திரமானவர்கள், இதற்காக தங்களுடைய பூமிக்குரியக் காரியங்களைக் கொடுத்துவிடுவார்கள்; தங்களுடைய நல்ல பெயரைக்கூட ஒப்புக்கொடுத்துவிடுவார்கள்; இப்படியாக, நமது நல்ல பெயரையும் ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியம். ஏனெனில், ஆண்டவர் இதைக்குறித்து மத்தேயு 5:11, 12-ஆம் வசனங்களில் கூறியுள்ளார், “என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கத்தரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.” இப்படியாக விலைக் கொடுத்து இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள விருப்பம் இல்லாதவர்கள், இராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்களல்ல. “நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று” அப்போஸ்தலர் கூறினார் (அப்போஸ்தலர் 14:22). மேலும் இப்படியாக நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும், பரம அழைப்பிற்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாகவும் உபத்திரவங்களைச் சகிக்க விருப்பம் உள்ளவர்களே ஜெயங்கொள்பவர்கள் ஆவர். மேலும் இந்த “ஜெயங்கொள்கிறவர்களுக்கு” மாத்திரமே கர்த்தர் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களையும் கொடுத்துள்ளார். “ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்” (வெளிப்படுத்தல் 3:21).

## “சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலை”

இராஜ்யத்தைப் பற்றின மற்றொரு உவமையில், வலை சுவிசேஷ செய்தியை அடையாளப்படுத்துகின்றது. ஒரே ஒரு வகை மீன்தான் விரும்பப்படுகின்றது. ஆனால், வலையோ சகலவிதமான மீன்களையும் வாரிக்கொள்கின்றது. எல்லா வகை மீன்களும், இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரத்தைச் சுதந்தரிக்கப் போவதில்லை. ஆகவேதான் இந்த யுகத்தின் முடிவானது, உவமையில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் புடமிடுகின்ற, பிரித்தெடுக்கின்ற காலமாக இருக்கின்றது. விரும்பத்தக்கதான மீன்கள் கூடைகளில் சேர்க்கப்படும், மீதமான மற்ற மீன்களோ இராஜ்யத்திற்குப் பாத்திரம் அற்றவைகள் எனக் கடலில் வீசப்படும்; இராஜ்யத்திற்குப் பாத்திரமல்ல என்றாலும், வேறு நோக்கத்திற்கு இவைகள் பயன்படாதவைகள் அல்ல. இராஜ்யத்திற்குப் பாத்திரமற்றவர்கள் என்று (சுவிசேஷ யுகத்தில்) கருதப்பட்ட அந்த வகுப்பார் கிறிஸ்துவின் ஆயிரம் வருஷம் ஆளுகையின் போது ஆசீர்வதிக்கப்படுவார்கள், மற்றும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்குப் பாத்திரமாய்க் கருதப்படலாம்.

கோதுமை மற்றும் களைகள் உவமையில் வரும் அக்கினிச் சூளை மற்றும் அழுகையும், பற்கடிப்பும் இந்த யுகத்தை முடித்து, ஆயிரம் வருஷம் இராஜ்யத்திற்கு அதாவது, விடாமல் பத்தொன்பது நூற்றாண்டு காலங்களாகச் சபையால் ஜெபம் பண்ணப்படும் பூமியில் ஸ்தாபிக்கப்படப் போகும் இராஜ்யத்திற்கு இடமளிக்கும் மகா உபத்திரவக் காலத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. “உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம்

பரலோகத்தில் செய்யப்படுவது போன்று பூமியிலும் செய்யப்படுவதாக” இது எத்துணை இராஜ்யமாக இருக்கும்! “பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்” (லூக்கா 12:32). மனுக்குலத்தின் மத்தியில் பரலோகத்தின் ஆளுகையை ஸ்தாபிப்பதற்கே இந்த இராஜ்யம் செயல்படுகின்றது!

இராஜ்யம் தொடர்பான காரியங்களினால் போதிக்கப்பட்டுள்ள அனைவரும், இதற்கு இசைவாகத் தங்களுடைய காரியங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற கர்த்தருடைய புத்திமதியுடன் நம்முடைய பாடம் நிறைவுப்பெறுகின்றது.

---

**R5047**

# “இராஜ்யம் ஒரு பரிசு”
## மத்தேயு 13:44-53

“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.” - மத்தேயு 6:33

இப்பாடத்தில் மாபெரும் போதகர், தம்முடைய இராஜ்யம் தொடர்பாகக் கொடுக்கும் இன்னும் விலையேறப்பெற்ற படிப்பினைகளைக்குறித்து நாம் பார்க்கப் போகின்றோம். “நிலத்தில் புதைக்கப்பட்டப் பொக்கிஷம்” பற்றின உவமையும், “விலையுயர்ந்த முத்து” பற்றின உவமையும், உலகத்தின் ஆசீர்வாதத்திற்கென இறுதியில் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் மகிமையின் இராஜ்யத்தினுடைய மகா முக்கியத்துவத்தை நமக்குக் காட்டித் தருகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக, இந்த இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாக எதை இழக்க வேண்டும் என்பது தொடர்பான படிப்பினைகளையும் இந்த உவமைகள் அளிக்கின்றன. மூன்றாவதாக ஓர் உவமை, கருநிலையிலுள்ள இராஜ்யத்தைக் குறித்துத் தெரிவிக்கின்றது; அதாவது, “கடலில் வீசப்படும் வலை” பற்றின உவமையானது, தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் (அ) இராஜ்யத்தின் வகுப்பாராகிய மணவாட்டி கண்டடையப்பட்டு, கர்த்தருடைய ஏற்பாட்டின்படிச் சேர்க்கப்படும் இந்தத் தற்கால யுகத்தின் நிலைமையைக் காட்டுகின்றது.

### “நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட பொக்கிஷம்”

இது இயேசுவால் விளக்கம் அளிக்கப்பட்ட உவமைகளில் ஒன்றல்ல. ஆகையால், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினாலும், இவ்வுவமையின் மீது மற்ற வேதவாக்கியங்கள் செலுத்தும் வெளிச்சத்தினாலும், கர்த்தருடைய ஜனங்கள் இவ்வுவமையின் அர்த்தத்தைக் கணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதற்குப் பல கோணங்களில் விளக்கம் கொடுக்கலாம் என்பது உண்மையே. உதாரணத்திற்கு, இந்த உவமையை நமது கர்த்தர் இயேசுவுக்குக்கூட பொருத்தி பார்த்துவிட்டு, இயேசு தம்முடைய எல்லாவற்றையும் விலையாகக் கொடுத்து முழு உலகத்தை வாங்கினார் என்றும், உலகத்தில் காணப்படும் “பொக்கிஷத்திற்காக” இயேசு உலகத்தை வாங்கினார் என்றும் கூறலாம். மேலும், அந்தப் பொக்கிஷமானது பல்வேறு மதிப்புள்ள பல்வேறு பொக்கிஷங்களாகும். உதாரணமாக, சபையாகிய மணவாட்டி வகுப்பார் கர்த்தருடைய விசேஷமான பொக்கிஷமாக இருக்கின்றனர், மற்றும் மேசியாவின் இராஜ்யத்தினால் இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆசீர்வதிக்கப்படப் போகும் உலகத்தாருங்கூட ஒரு பொக்கிஷமாவார்கள்.

ஆனால், மாபெரும் போதகர் தம்மைக்குறித்து இந்த உவமையில் குறிப்பிடாமல் மாறாக, தாம் அறிவுரைக் கொடுத்தவர்களைப் பற்றியே குறிப்பிடுகின்றார் என்பது நமது எண்ணமாக இருக்கின்றது. கர்த்தர் தாம் பண்ணியிருந்த பலியின் உடன்படிக்கைக்கு உண்மையாய் இருந்தபடியால், அவருக்கு ஏற்கெனவே இராஜ்யம் வாக்களிக்கப்பட்டது. மேலும், கர்த்தர் இயேசுவோ பிதாவின் நாமத்தில் கேட்கும் செவியுடையவர்களையும், உணர்ந்துக்கொள்ளும் இருதயம் உடையவர்களையும் தம்முடைய மணவாட்டி வகுப்பாரில் அதாவது, தம்முடைய இராஜ்யத்தின் வகுப்பாரில் அங்கங்களாகும்படிக்கு அழைக்கின்றார்.

இப்படியாக, அழைக்கப்படுபவர்கள் இந்த உவமையில் விவரிக்கப்பட்டுள்ளபடி இராஜ்யத்தைக் கண்ணோக்குகிறவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட நிலம், ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்கப்படுவதற்கு உள்ளது என வைத்துக்கொள்ளுங்கள். மேலும், அந்த நிலத்தைக்குறித்து விசாரித்துப் பார்த்ததில், அந்த நிலத்தில் ஒரு மாபெரும் பொக்கிஷம் இருக்கின்றது என நீங்கள் காண்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பொக்கிஷம் ஒருவேளை உங்கள் நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமாய் இருக்கும், மிகச் சிறந்த மண் வளமாக இருக்கலாம் அல்லது ஏதோ விலையேறப்பெற்ற உலோகங்கள் அந்த நிலத்திற்குள் காணப்படலாம் அல்லது பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக, பணம் அந்நிலத்தில் புதைத்து, பின்னர் மறந்துப் போகப்பட்டதாகவும் இருக்கலாம். இப்படியான சந்தர்ப்பத்தில் சராசரி அறிவுள்ள எவரும் இந்நிலத்தைப் பெற்றிட தன்னிடத்திலுள்ள அனைத்தையும் முதலீடு பண்ணுவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள் என்ற கருத்தை இந்த உவமை முன்வைக்கின்றது.

ஆகவே, அன்று கர்த்தர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும், இன்று அதே அவருடைய வார்த்தைகள் வரும்போது, அதைக் கேட்டுக் கொண்டிருக்கும் நமக்கும், ஆண்டவர் ஒரு மாபெரும் பொக்கிஷம் அதாவது, மிகுந்த பிரயாசத்தினாலும், முக்கியத்துவம் வாய்ந்தது எனச் சொல்லப்படும் யாவையும் முதலீடு செய்வதினாலும் மாத்திரமே அடைய முடிகின்ற ஒரு விலையேறப்பெற்ற பொக்கிஷம் குறித்த தகவலை வைத்திருக்கின்றார் எனக் கூறுகின்றார். மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடைவது அதாவது, சீஷத்துவத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், நாம் தேவனுடைய புத்திரர்களாக மாத்திரம் இல்லாமல், புத்திரர்களானால் தேவனுடைய சுதந்தரர்களாகவும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் அவருடைய பரலோக சுதந்தரத்தில் உடன் சுதந்தரர்களாயும் இருப்பதே அந்த மாபெரும் பொக்கிஷமாகும். இந்தச் சுதந்தரம் ஆபிரகாமின் சந்ததியாருக்கு வாக்களிக்கப்பட்டிருந்த அதே விஷயங்களே; மேலும் நாம் சொல்லர்த்தமாக/உண்மையாக (சுபாவத்தின்படி) ஆபிரகாமின் சந்ததியாகவும், இராஜ்யத்தின் உண்மையான சுதந்தரர்களாகவும் இருந்தபடியினால் இல்லாமல், மேசியாவின் மணவாட்டியாகவும், உடன் சுதந்தரர்களாகவும் நாம் மாறினபடியினாலே அந்தச் சுதந்தரத்தில் நமக்கும் பங்குக் கிடைத்தது.

சில சிறு விஷயங்களுக்காக, முக்கியத்துமற்ற உலகப் பிரகாரமான புகழ்ச்சிக்குரிய, பூமிக்குரிய கனத்தை அடைவதற்காக எவ்வளவு நேரமும், பெலனும் பிரயோகிக்கப்படுகின்றது என்பதையும், எவ்வளவு பணமும், செல்வாக்கும் செலவழிக்கப்படுகின்றது என்பதையும் நாம் எண்ணிப் பார்ப்போமானால் மற்றும், இவைகள் அதிகபட்சமாக சில வருடங்கள் மாத்திரமே நீடிக்கின்றது என்பதையும், முழுத் திருப்தியை அளிக்காதது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், "அழைக்கப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டு மற்றும் உண்மையுள்ளவர்களாகிய" மணவாட்டியாகிய, ஆட்டுக்குட்டியானவரின் மனைவிக்காக தேவன் வைத்துள்ள மகிமை, கனம் மற்றும் அழியாமையைக்குறித்து நம்மால் நன்கு உணர்ந்துக்கொள்ள முடியும்.

## “மகா மதிப்புள்ள முத்து”

நம்முடைய இரட்சகருடைய நாட்களில், மிகவும் விலையேறப்பெற்ற மற்றும் மிகவும் விரும்பத்தக்க சம்பத்துகளில் ஒன்று முத்தாகக் காணப்பட்டது; மேலும் எந்தளவுக்கு முத்துப் பெரியதாகவும், கிட்டத்தட்ட பூரணம் உடையதாகவும் இருக்கின்றதோ, அந்தளவுக்கு முத்தினுடைய மதிப்பும் அதிகமாகக் காணப்படும். இந்தப் பிரபலமாய் இருந்த முத்தை, இராஜ்யத்தின் முக்கியத்துவம் தொடர்பான பாடத்திற்காக மாபெரும் போதகர் பயன்படுத்துகின்றார். இவ்வுவமையில் வரும் வியாபாரி, மற்ற அனைத்து முத்துக்களுக்கும் எல்லாவிதத்திலும் மிகவும் மேலான ஒரு முத்தைக் கண்டுபிடித்தபடியினால் இந்த முத்தை அடைவதற்கென, தான் கொடுக்கும் தன்னிடத்திலுள்ள யாவும் அற்பமானது என்று கருதினார்.

இதுவே தெரிந்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களாகிய சிறுமந்தையினர் தம்மோடு கூட பங்கடையும்படி தாம் அழைக்கும் இராஜ்யம் மற்றும் அதன் மகிமை, கனம் மற்றும்

அழியாமையின் முக்கியத்துவம் என ஆண்டவர் கூறுகின்றார். யார் இதன் மதிப்பைச் சரியாகக் கணிக்கின்றார்களோ, அவர்கள் இதற்கான விலையை அளிப்பதிலுள்ள தங்களுடைய விருப்பம் மற்றும் மகிழ்ச்சியின் அளவின் மூலம் தங்களின் உணர்ந்துக்கொள்ளுதலை வெளிக்காட்டுகின்றவர்களாக இருப்பார்கள். ஒரு மனிதன் பணக்காரனாகவோ (அ) ஏழையாகவோ, படித்தவனாகவோ (அ) கல்வியறிவு இல்லாதவனாகவோ, செல்வாக்கு உள்ளவனாகவோ (அ) அற்றவனாகவோ இருந்தாலும் சரி மிகவும் விலையேறப்பெற்ற முத்தாகிய இந்த இராஜ்யத்தின் விலையானது, அவனிடத்திலுள்ள அனைத்தையும் கேட்கின்றதாய் இருக்கும். இதைவிட குறைவான விலைக்குக் கிடைக்காது.

உலகத்தில் ஐசுவரியவானோ (அ) மிகவும் திறமை உள்ளவனோ, ஒருவேளை அவன் தன்னுடைய உடமைகளில் ஒரு சிறியதை, தனக்கென வைத்துக்கொள்வானானால், அவனால் அந்த இராஜ்யத்தில் பங்கடைய முடியாது. இராஜ்யத்திற்கான விலை என்பது, மரணம் வரையிலான சுயத்தைப் பலிச் செலுத்துதல் ஆகும். இதை விட குறைவான எதுவும் இராஜ்யத்தைப் பெற்றுத்தராது. அதேசமயம் நமது மீட்பரால் கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட பலியினுடைய விலையேறப்பெற்ற புண்ணியத்தின் மூலம், நமது பலியானது முதலாவதாக தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படாதது வரையிலும், நாம் ஏறெடுக்கும் எந்தப் பலியும் இந்த இராஜ்யத்தில் நமக்குப் பங்கைப் பெற்றுத்தராது.

## “மீன் வலை பற்றின உவமை”

இராஜ்யம், வலையைப் போன்று இருக்கும் என நாம் எண்ணக்கூடாது. மாறாக, கரு நிலையிலுள்ள இராஜ்யமே, சகலவிதமான மீன்களையும் வாரிக் கொள்ளப்பட்டு, கரைக்குக் கொண்டு வரப்பட்டு, பிரித்தெடுக்கப்படும் வலையுடனான மீன் பிடிக்கும் அனுபவத்திற்கே ஒத்தது என நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இது கரு நிலையிலுள்ள இராஜ்யம் பற்றின உவமையாகும். ஏனெனில், மகிமையிலுள்ள இராஜ்யத்திற்குரியவர்களாக இருக்கப்போகின்ற "சிறுமந்தையினர்" கண்டுபிடிக்கப்படுவது தொடர்பான, இந்த யுகத்தில் நடைபெறும் வேலையை விவரிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் இந்த யுகத்தில் சகலவிதமான மீன்களுக்காக, மீன்பிடிக்கவில்லை; அவர் சகல ஜனங்களையும் நாடித் தேடவில்லை. அவர் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை மாத்திரமே, பரிசுத்தவான்களை மாத்திரமே கையாளுகின்றார், அழைக்கின்றார் மற்றும் விசேஷமாக தம்மிடத்தில் சேர்த்துக்கொள்கின்றார்.

ஆனால், தற்செயலாகப் பல்வேறுவிதமான மீன்களும், சுவிசேஷத்தின் வலைக்குள் வந்துவிட்டன. சிலர் உலகப்பிரகாரமான பேராசைகளினாலும், சிலர் மத அமைப்புகளைத் திருமணம் புரிவதற்கான நல்ல களம் எனக் கருதினதாலும், சிலர் சமுதாயச் சிலாக்கியங்களையும், புகழையும் கருதினதாலும், சிலர் ஒழுக்கமாக வாழ விரும்புவதினாலும், சிலர் தொழிலுக்கென மதம் எனும் போர்வையைப் போர்த்திக்கொள்ள விரும்பியதினாலும், இவ்வலைக்குள் வந்துள்ளனர். ஆனால், கர்த்தர் தேடுகிறதும், இராஜ்யத்தின் அங்கங்களாக இருப்பதுமாகிய பொருத்தமான மீன் என்பது அவருடைய செய்தியை மகிழ்ச்சியுடன் கேட்டு, விலையைக்குறித்து சிந்தித்து, சூழ்நிலையை உணர்ந்தவர்களாக, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அடிமை வேலைக்காரர்களாக" ஆகுவதற்கு விரும்புபவர்களைக் குறிக்கின்றது. இவர்கள் அவரோடு கூட சேர்ந்து அவருடைய இராஜ்யத்தில் மகிமையடையத்தக்கதாக, இப்பொழுது அவரோடு கூட பாடுப்பட விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

"வலை நிறைந்தபோது, அது கரையில் இழுக்கப்பட்டு," மீன்கள் பிரிக்கப்பட்டன என்று உவமை நமக்குக் கூறுகின்றது. இது கர்த்தர் தம்முடைய நோக்கத்திற்காக போதுமான எண்ணிக்கையில் பரிசுத்தவான்களைச் சேர்த்திருக்கும் ஒரு காலம், அதாவது, மகிமையிலுள்ள தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் அங்கங்களாக இருக்க வேண்டுமென பிதாவின் முன்குறிக்கப்பட்ட எண்ணிக்கை நிறைவடையும் ஒரு காலம், இந்த யுகத்தின் முடிவில் வரும் என்பதைத் தெரிவிக்கின்றது என்பது உறுதியே. அப்பொழுது மீன் பிடித்தல் முடிவு பெறும். கர்த்தர் நாடிக் கொண்டிருக்கின்ற உண்மையான "மீன்" வகையில் ஒருவராக, "வலைக்குள்" பிரவேசிப்பதற்கான வாய்ப்பு நிறைவடையும் நிலையில் இல்லை என யாரால்

சொல்ல முடியும்? பலவகையான கிறிஸ்தவர்களால் நிரம்பியுள்ள சுவிசேஷத்தின் வலையானது, தகுதியான மாணவர்களை இராஜ்யத்திற்குள் சேர்த்துக்கொள்ளத்தக்கதாக, சீக்கிரத்தில் வலை கரைக்கு இழுக்கப்படாது என்று யாரால் சொல்லக் கூடும்?

இந்த உவமையில் இடம்பெறும் தகுதியற்ற “மீனானது” நாம் முந்தின பாடத்தில் பார்த்திட்ட “களைகளுக்கு” ஒத்ததாகும். “அக்கினி சூளை” என்பது சீக்கிரத்தில் மனுக்குலத்தின் உலகத்தின் மீது வரவிருக்கும் “மகா உபத்திரவக் காலத்தையே” குறிக்கின்றது. வலையில் காணப்படும் தகுதியற்ற மீன்கள் அனைத்தும் (பெயர்) சபை அங்கத்தினர்கள் ஆவார்கள். உலகத்தார் இவ்வுவமையில் குறிப்பிடப்படவே இல்லை.

“பின்பு, இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் அறிந்துக்கொண்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்துக்கொண்டோம் ஆண்டவரே, என்றார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால், பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும், பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.” (மத்தேயு 13:51-52)

நமது பாடத்தின் ஆதார வசனம், இந்தப் பாடத்திற்கு முக்கியத்துவம் சேர்க்கின்றது. ஆண்டவர் சுட்டிக்காட்டுகிற பிரகாரமாக ஒருவேளை இராஜ்யமே முத்தாகவும், பொக்கிஷமாகவும் இருக்குமானால், ஒருவேளை நாம் அவருடைய சாட்சியை நம்புவோமானால், அப்பொழுது நம்மால் முடிந்தமட்டும் நமது விசுவாசத்தைக் காட்டுவோமாக, அதுவும் வெறும் அறிக்கையாயிராமல் மாறாக, ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தையிலும் காட்டுவோமாக. இராஜ்யத்தையே நமது ஜீவியத்தில் பிரதானமான விஷயமாக நாம் நாடுவோமாக. இதனோடு ஒப்பிடுகையில், மற்ற அனைத்தும் பரிசுத்தவானாகிய பவுல் “ஒப்பிடத்தக்கவைகள்” அல்ல என்று கூறுவது போல், அற்பமானதாகக் கருதுவோமாக. ஒருவேளை இராஜ்யத்தை நாடும் விஷயமானது, நமது சில பூமிக்குரிய காரியங்களுக்குத் தடையாக இருக்குமானால், அது மிகவும் நல்லதே. நம்முடைய அனைத்தையும் இழக்க வேண்டியுள்ளது என்று ஆண்டவர் கூறியுள்ளார். நமது பூமிக்குரிய தேவைகளை நாம் அவருடைய கரங்களில் விட்டிருக்கின்றோம். இராஜ்யத்தில் நாம் இடம் பெறத்தக்கதாக, நமது “அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும்” நாம் உறுதிப்படுத்திக்கொள்ளத்தக்கதாக நமக்கு மிகவும் உதவியாக இருக்கும் என அவருடைய ஞானத்தில் அவர் காண்பதற்கு ஏதுவான பூமிக்குரிய ஆசீர்வாதங்களை அவரே பங்கிட்டுக் கொடுப்பாராக.

---

**R4577**

# “எதிராளியானவன் மீது வல்லமை/அதிகாரம்”

## மத்தேயு 8:23-34

“இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்.” - மத்தேயு 8:27

அப்போஸ்தலர்களில் அநேகர் கலிலேயா கடலில் மீன்பிடிக்கிறவர்களாய் இருந்தனர். ஓய்வு எடுப்பதற்காகவும், அமைதலாய் இருப்பதற்காகவும், ஆண்டவர் அவ்வப்போது அப்போஸ்தலர்களுடன் படகில் ஏறிச் செல்வதுண்டு. ஏனெனில், அவர் கரையில் காணப்படும்போது அவரது ஊழியத்திலும், ஜனங்களுக்குப் போதிப்பதிலும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதிலும் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே காணப்படுவார். இப்படியாக, ஒருமுறை அவர் தமது சுறுசுறுப்பான அலுவல்களிலிருந்து, ஓய்வு எடுக்கும் தருணத்தில் நடந்த சம்பவம் தொடர்பாகவே நமது பாடம் காணப்படப்போகின்றது. அவர் களைப்படைந்தவராக மீன்பிடிக்கும் பாய்மரக் கப்பலின் பின்னணியத்தில் நித்திரை பண்ணிக்கொண்டிருந்தார். திடீரென கடும் புயல் எழும்பிற்று; இப்படியாக புயல் உருவாகுவது இந்தக் கடலைப் பொறுத்தமட்டில் வழக்கமாகவே இருந்தது.

சீற்றம் மிக்க அலைகள் கப்பலை நாசப்படுத்தும் வண்ணமாக இருந்தது. புயல்களுக்கு நன்கு பழக்கப்பட்டிருந்த அப்போஸ்தலர்களும் கூட இப்புயலைக் கண்டு அச்சம் அடைந்ததிலிருந்து புயலின் வீரியம் குறித்து நாம் உணர்ந்துக்கொள்ளலாம். "ஆண்டவரே எங்களை இரட்சியும், அல்லது நாங்கள் மடிந்துபோவோம்" என்று கூறி, சீஷர்கள் ஆண்டவரை வந்து எழுப்பின போது, அவர் எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார் என்றும், மிகுந்த அமைதல் உண்டாயிற்று என்றும், பிற்பாடு, "அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று கூறி அப்போஸ்தலர்களைக் கடிந்துக் கொண்டார் என்றும் வெகு சுருக்கமாக பதிவுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. அநேகர் இந்த வார்த்தைகளை வாசித்து, மகா ஆறுதலும், நன்மையும் அடைந்துள்ளனர். காரணம், இவர்கள் கடலின் ஆபத்துக்கு ஆளாகாமல், மாறாக அனைவரும் ஜீவியத்தின் புயல்களுக்கு ஆளாகி இருக்கின்றபடியினாலேயாகும். இந்த ஜீவியத்தின் புயல்களினுடைய பயங்கரமான பேரலைகள், நம்மை அழிக்கும்விதத்தில் பயமுறுத்துகின்றன. சொல்லர்த்தமான பேரலைகளினின்று விடுவிக்கத்தக்கதாக வெளிப்பட்ட வல்லமையானது, (இதே) வல்லமையுள்ளவர் அனைத்துப் பிரச்சனைகளினின்று, விடுவிக்கவும் வல்லவர் என்ற நம்பிக்கையைக் கொடுக்கின்றதாக இருக்கின்றது. விசுவாச குறைச்சலினிமித்தம் அப்போஸ்தலர்களுக்கு வந்த கடிந்துக்கொள்ளுதலானது, நம்முடைய சர்வவல்லமையுள்ள நண்பருடைய முன்னேற்பாடான பராமரிப்பில் மிகுந்த நம்பிக்கை கொள்வதற்கும், மிகுந்த தைரியம் கொள்வதற்கும், மிகுந்த விசுவாசம் கொள்வதற்கும், கர்த்தருடைய ஜனங்களை உற்சாகமூட்டுவதாகவும் மற்றும் அவர்களைக் கண்டிக்கத்தக்கதாகவும், அவர்களுடைய இருதயத்தினிடத்திற்கும் கடந்து வருகின்றது.

"அப்போஸ்தலர்கள் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்றார்கள்" (மத்தேயு 8:27). இந்தப் பாடத்தை இவர்கள் கற்றுக்கொள்ளாதது வரையிலும், இவர்களுடைய சோதனைகள், நன்மைகள் மற்றும் இடர்பாடுகள் தொடர்பான விஷயங்களில், கர்த்தரை நம்புவதற்கு இவர்கள் ஆயத்தமாய் இருக்கமுடியாது. இதைப் போலவே இயேசுவின் "மேசியாத்துவம்" குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதலின் போது "பரலோகத்திலும், பூமியிலும் சகல வல்லமை" அவருக்குக் கொடுக்கப்பட்டது என்பது குறித்ததுமான அதே மாபெரும் பாடங்களை நாமும் கற்றுக்கொள்ளாதது வரையிலும், நம்மாலும் அவரை முழுமையாய் நம்பவும், விசுவாசத்தில் அவருடைய அன்பான பராமரிப்பிலும், இளைப்பாறவும் முடியாது.

சாத்தான் ஓர் ஆவிக்குரிய ஜீவி என்றும், கண்ணுக்குப் புலப்படாதவர் என்றும், வல்லமையுள்ளவர் என்றும், ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தெய்வீகக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட நிலையில் மனிதனுடைய காரியங்கள் மீது வல்லமை கொண்டவர் என்றும் அனைத்து அப்போஸ்தலர்களும் புரிந்திருந்தது உறுதியே ஆகும். ஆகவேதான் சாத்தானைக் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபு" என்று அழைக்கின்றார் (எபேசியர் 2:2).

தீர்க்கத்தரிசியாகிய யோபுவின் விஷயம் குறித்தும், இவருடைய விசுவாசத்திற்கான ஒரு சோதனையைத் தேவன் அனுமதித்தார் என்றும், இவருடைய காரியங்கள் மீது எதிராளியானவன் அதிக வல்லமை கொள்ளும்படி அனுமதித்தார் என்றும், வேதாகமம் கொடுக்கும் சாட்சிக்குறித்தும் நாம் நினைவுகூருகின்றோம். யோபுவின் பிள்ளைகள் கூடியிருந்த வீட்டை அழித்திட்ட புயல் மூலம், எதிராளியானவனுடைய அந்த வல்லமையில், சில செயல்படுத்தப்பட்டது என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

அநேகமாக அப்போஸ்தலர்களுக்குப் பாடம் கொடுக்கும் நோக்கத்திற்காகவே கலிலேயா கடலில் புயலை உருவாக்கும்படிக்கு, எதிராளியானவன் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். இரட்சகரைப் பிற்பாடு இரண்டு கள்வர்களுக்கு நடுவில் சிலுவையில் அறைந்திட செய்தது போன்று, ஆகாயத்து அதிகாரப் பிரபு இங்கு இவ்விதத்தில் (இப்பாடத்தின் சம்பவத்தில்) இரட்சகரை அழிக்கலாம் என்று எண்ணியிருக்கக் கூடும். முதல் சம்பவத்தில் எதிராளியானவனுடைய பிரயாசம், இயேசுவின் வார்த்தைகளினால் தோற்கடிக்கப்பட்டது. பிற்பாடு நடந்த சம்பவத்திலோ எதிராளியானவனுடைய பிரயாசம் ஜெயங்கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஏனெனில் "அவருடைய வேளை வந்தது." யூதாசில் முன்பு கிரியை செய்துக்கொண்டிருந்த சாத்தான், நமது இரட்சகர் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முந்தின இரவில் முழுமையாக யூதாசுக்குள் புகுந்தான் என்ற பதிவுகளையும் நாம் நினைவுகூருகின்றோம். (லூக் 22:3; யோவான் 13:27)

விழுந்துபோன தூதர்களில் சிலருடனான, நமது கர்த்தருடைய போராட்டம் குறித்து, இந்தப் பாடம் நமக்குக் கூறுகின்றது. இந்தப் பிசாசுகளுக்குச் சாத்தான் தலைவனாய் இருக்கின்றான் என்று நாம் வாசிக்கின்றோம். இந்தப் பிசாசுகள், மனிதனுடைய சரீரத்தினின்று பிரியும் ஆவியாய் இராமல் மாறாக, இவர்கள் விழுந்துபோன தூதர்கள் என்று வேதவாக்கியங்கள் மிகத் தெளிவாகப் போதிக்கின்றன (2 பேதுரு 2:4; யூதா 1:6).

இந்த விழுந்துபோன தூதர்கள் முன்பு ஒரு காலத்தில் பரிசுத்தமாய் இருந்தார்கள் என்றும், ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னதாக இவர்கள் மனுக்குலத்தோடு வைத்த தொடர்பினிமித்தம், பாவத்தினால் தீட்டுப்படுத்தப்பட்டார்கள் என்றும் வேதாகமம் கூறுகின்றது. ஜலப்பிரளயத்திற்குப் பிற்பாடு, பரிசுத்தமான தேவதூதர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டும், மனித உருவம் எடுத்துக்கொண்டு, மனிதனாகத் தோன்றும் சுதந்தரம் தடுக்கப்பட்டும் இருந்தாலும், இவர்கள் தடைகளைத் தகர்க்க நாடுகின்றனர். மனித சரீரத்தை எடுக்க அனுமதிக்கப்படவில்லை என்றாலும், மனித சரீரத்தைத் தங்களுக்கான ஊடகமாகப் பயன்படுத்தித் தடையாகிய மனித சித்தத்தை தங்களால் முடிந்தமட்டும் தகர்த்து, மனுக்குலத்தை ஆக்கிரமித்து ஆட்டிப் படைக்க நாடுகின்றனர். மரித்தவர்களுக்காகப் பேசுகிறவர்களாகவும், மரித்தவர்களை அடையாளப்படுத்துகின்றோம் எனக் கூறுகிறவர்களாகவும் இருக்கும் ஊடகங்கள், சூனியக்காரர்கள், சூனியக்காரிகள், ஆவியுலகப் பேச்சாளர்கள் போன்றவர்களுடன் எவ்விதமான தொடர்பும் நாம் வைத்துக்கொள்ளக்கூடாது என வேதவாக்கியங்கள் எப்போதும் நம்மை எச்சரிக்கின்றன. "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்றும், மரித்தவர்களுக்கான ஒரே நம்பிக்கை உயிர்த்தெழுதலில்தான் உள்ளது என்றும், மரித்த மனிதர்கள் அல்லாமல், விழுந்துபோன தூதர்களே நம்மிடத்திலும், நம் மூலமாகவும் தொடர்புகொள்ள நாடுகின்றனர் என்றும் வேதாகமம் நமக்கு நிச்சயமளிக்கின்றது. இந்த ஆவியுலக ஊடகர்கள் அறிந்தேதான் விழுந்துபோன தூதர்களுடன் இணைந்துள்ளனர் என நாம் இங்குக் குற்றம் சாட்டவில்லை. இந்த ஊடகர்களும், மற்றவர்களைப் போல வஞ்சிக்கப்பட்டே உள்ளனர் என நாம் நம்புகின்றோம். இக்காரியம் தொடர்பான வெளிச்சத்தை, உண்மையில் வேதாகம் மாத்திரமே நமக்குக் கொடுக்கின்றது. இதனாலேயே இதைக் குறித்து, இந்த வஞ்சகத்திலிருந்து நாம் மீட்டுக் கொண்ட அநேகருக்கு நம்மால் சுட்டிக்காட்ட முடிகின்றது.

வசனம் 28-இல் இடம்பெறும் இரண்டு பிசாசு பிடித்தவர்கள், பைத்தியக்காரர்களாய் இருந்தார்கள். காரணம், அநேக பிசாசுகள் அவர்களைப் பிடித்துக் கொண்டிருந்தன, மற்றும் பல்வேறு விதங்களில் அவர்களைக் கட்டுப்படுத்த முயற்சித்தவைகளாகவும் இருந்தன. பைத்தியக்கார விடுதிகளில் இருப்பவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பிசாசு பிடித்தவர்களே எனப் புத்தியுள்ள மருத்துவர்கள் உணர்ந்துக்கொள்வார்கள்.

பிசாசு பிடித்தவர்களிடம் நமது கர்த்தர் எப்படிக் கேள்வி கேட்டார் என்றும், தாங்கள் லேகியோன் அதாவது, அநேக பிசாசுகள் என்று அம்மனிதர்கள் மூலம் பொல்லாத ஆவிகள் எப்படிப் பதில் கொடுத்தன என்றும், வேறு ஒரு பதிவு நமக்குத் தெரிவிக்கின்றது. மேலும், அந்தப் பிசாசுகள் தாங்கள் அம்மனிதனிடத்தில் தங்கக்கூடாதெனில், பன்றி கூட்டத்திற்குள் புகும்படிக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டன. அவைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன் விளைவாக முழுப் பன்றிக் கூட்டமும், அநேகமாக பல நூறு பன்றிகள் தாவி, மலையிலிருந்து குதித்து, கடலுக்குள் விழுந்து மாண்டன. பன்றிகள் நடந்துக்கொண்டதை வைத்துப் பார்க்கும் போது, ஒவ்வொரு பன்றிக்குள்ளும் ஒவ்வொரு பிசாசு புகத்தக்கதாக அவ்வளவு பிசாசுகள் இருந்துள்ளது தெரியவருகின்றது. ஏனெனில், ஆடுகளைப் போலில்லாமல் பன்றி, பொதுவாக அதன் கூட்டத்திலுள்ள சகல பன்றிகளும் அதிகம் கிளர்ச்சி அடைந்திட்டாலும், அசையாமல் அப்படியே நிற்கும் சுபாவம் கொண்டவையாகும். ஒவ்வொரு பன்றியும் சுயமாகவே செயல்படுகின்றது (உடன் பன்றியின் கிளர்ச்சியினால் கிளர்ச்சி அடைவதில்லை). அம்மனுஷனிடமிருந்த பல பிசாசுகள், உண்மையில் லேகியோனேயாகும். மனித சித்தத்தைத் தகர்க்க முடியாத இந்தப் பிசாசுகள், ஒருவேளை அச்சித்தமானது ஒரு மனிதனுக்குள் தகர்க்கப்படுமாயின், இவைகள் இந்தப் பாவப்பட்ட மனிதர்களுக்குள் போய்க் குவிந்து விடுகின்றன. மாயவித்தை, ஆவியுலகக் கோட்பாடு ஆகியவை எதிராளியானவனுடையது என வேதவாக்கியங்களுக்கு இசைவாக நாம் எப்போதும் ஜனங்களை எச்சரித்துக் கொண்டிருக்கின்றோம். தன்வயப்படுத்தும் (மயக்கம் அடையப் பண்ணும்) வசீகர சாஸ்திரம்

போன்று மனித சித்தத்தைத் தகர்ப்பவைகள் அனைத்தும் பாதகமானவைகள் என்றும், ஒருவேளை இந்த நபர் தனது மனநிலையை ஆட்டிப் படைக்க ஒப்புக்கொடுப்பாரானால், இவருடைய மனம் மற்றும் காரியங்களுக்குள் இந்த விழுந்துபோன ஆவிகள் பிரவேசிக்க மிகவும் ஏதுவாகிவிடுவார்கள் என்றும் நாம் எச்சரித்துள்ளோம்.

இந்த அற்புதம் காரணமாக உண்டான விளைவு, சுயநலத்தின் வல்லமையைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. அற்புதத்தைக் காண திரளான ஜனக்கூட்டம் கூடினார்கள். பைத்தியமாய் இருந்த இரண்டு மனிதர்கள், இப்பொழுது வஸ்திரம் தரித்திருந்தார்கள். ஆனால், "என்னே ஓர் இழப்பு! பன்றிகள் செத்துக் கடலில் மிதப்பதைப் பாருங்கள்!" என்று ஜனங்கள் அறப்பத்தனமாய்க் கூறினார்கள். "அப்பொழுது, அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர்க் கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்" (மத்தேயு 8:34). இயேசுவும் அப்படியே உடனடியாகச் செய்துவிட்டார். இதே சுயநலத்தின் கோட்பாடானது இன்றும், எங்கும் கவனிக்கப்படலாம். பெரும்பாலான ஜனங்கள் விசேஷமாக தங்களது பூமிக்குரிய நலன்களையே கருதினவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், இவைகளோடு ஒப்பிட்டு பார்க்கையில், கர்த்தருடைய மாபெரும் ஆசீர்வாதங்களைக் கவனியாதே போகின்றார்கள். கலிலேயா தீர்க்கத்தரிசியின் சீஷர்களாகிய நாம், காரியங்களை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கின்றவர்களாயிருந்து, மனுக்குலத்தை விடுவிப்பதும், யூத பிரமாணம் தடை விதித்துள்ள பன்றியின் விஷயம் போல, தெய்வீகச் சித்தத்திற்கு வெறுப்பாய் இருக்கும் அனைத்தையும் அழிப்பதுமாகிய அவருடைய மகிமையான வேலைக்கு நமது இருதயங்களை இசைவாய்க் கொண்டிருப்போமாக.

---

**R4588**

# “ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம்”

## மத்தேயு 9:18-34

"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்." - மாற்கு 9:23

தேவனிடத்தில் விசுவாசம் என்பது அவருடைய வார்த்தையை நம்புவதாகும். அதாவது, நம் தொடர்பாகவும், மற்றவர்கள் தொடர்பாகவுமுள்ள அவருடைய திட்டம் மற்றும் அவருடைய குணலட்சணத்தின் வெளிப்படுத்தல்களை நம்புவதும், ஏற்றுக்கொள்வதுமாகும். விசுவாசத்திற்கும் (faith), எளிதில் நம்பக்கூடிய தன்மைக்கும் (credulity) இடையேயுள்ள வித்தியாசத்தை நாம் தெளிவாகத் தெரிந்துக்கொள்ள வேண்டும். மிகவும் நல்ல சில ஜனங்கள், தாங்கள் எந்தளவுக்கு மிகவும் அர்த்தமற்ற காரியங்களை நம்புகின்றார்களோ, அந்தளவுக்கு அவர்களுடைய விசுவாசம் பெரியதாய் இருக்கும் எனத் தவறாக எண்ணிக்கொள்கின்றனர். விசுவாசமானது பகுத்தறிவைப் புறக்கணிப்பதில்லை. மாறாக, பகுத்தறிவைக் குறிப்பிட்ட நியாயமான வரையறைக்குள் விசுவாசமானது பயன்படுத்திக் கொள்கின்றது. தேவனிடத்தில் நாம் விசுவாசம் கொள்வதற்கு, முதலாவதாக நாம் நமது மனதின் விவாதங்களை திருப்திப் பண்ணிக்கொள்ள வேண்டும்:-

(a) அதாவது, தேவன் ஒருவர் இருக்கின்றார்;

(b) அதாவது, அவரில் நம்பத்தக்க குணங்கள் இருக்கின்றது, அதாவது அவர் நீதியுள்ளவர்; அவர் ஞானமுள்ளவர்; அவர் வல்லமையுள்ளவர்; அவர் கிருபையுள்ளவர்;

(c) அதாவது அவருடைய செய்தியென நாம் ஏற்றுக்கொண்டுள்ளது, ஏற்றுக் கொள்வதற்குப் பாத்திரமானது என்றும், உண்மையும், தெய்வீகக் குணலட்சணத்திற்கு இசைவையும் உள்ளது என்றும் நாம் நியாயமாக நமக்கே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படியாக விசுவாசத்திற்குச் சாட்சிகளைக் கொண்டிருக்க நாடாதவன், முழுமையான விசுவாசம் கொண்டிருக்கவில்லை, மற்றும் எளிதில் நம்பும் தன்மையை (credulity) உடையவனே ஆவான்.

கிறிஸ்தவ ஜனங்களில் அநேகர் விசுவாசத்தின், சரியான விளக்கத்தைப் புறக்கணிக்கின்றபடியினால், யதார்த்தமான மனங்கொண்ட அநேகர் அர்த்தமற்ற காரியங்களை நம்ப வேண்டும் என்று சொல்லப்படுவதினால், கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்க மறுக்கின்றனர். 1 பேதுரு 3:15-ஆம் வசனத்தில் அப்போஸ்தலர் சொல்லுகின்றது போல, கிறிஸ்தவ ஜனங்கள் தேவனிடத்திலும், வேதாகமத்திலுமான அவர்களது விசுவாசத்தை அதிக கவனத்துடன் ஆராய்ந்துப் பார்க்கும்படி நாம் வலியுறுத்துகின்றோம். இதை நமக்கும், தேவனுடைய வார்த்தைகளில் பிரியப்படும்படிக்கு நாம் கொண்டு வரக்கூடிய மற்றவர்களுக்கும், நாம் செய்ய கடமைப்பட்டுள்ளோம். தேவனுடைய வார்த்தைகள் மீது இன்று பிரகாசிக்கும் வெளிச்சத்தில், அப்போஸ்தலருடைய நாட்களில் இருந்தது போல, தேவனுடைய மனுஷன் "தேறினவனாகவும்", "சத்தியத்தை நிதானமாய் பகுத்துப் போதிப்பதற்கும்" கூடியவனாகி, தனது நண்பர்கள் மற்றும் அயலார்களுக்கு, தான் விசுவாசிக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும் உறுதியான, நியாயமான அடிப்படைகளைக் காண்பிக்க முடியும். ஆனால் இப்படிச் செய்வது என்பது, முதல் நூற்றாண்டிற்கும், இந்த நூற்றாண்டிற்கும் (18) இடையே காணப்பட்ட இருண்ட யுகத்தில், நிச்சயமாய் முடியாததாகவே இருந்தது. வேதாகமம், ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் என்பதை நம்புவது தொடர்பான விஷயத்தில் குழப்பமாய்க் காணப்படும், அநேகர் மீது நமக்கு அனுதாபம் உள்ளதினால், இப்படிப்பட்டவர்களுக்கு நாம் உதவ முடியும் என்ற நிச்சயத்துடன், இவர்களிடமிருந்து, கடிதத்தை எதிர்ப்பார்த்து வரவேற்கின்றோம்.

நம்முடைய இந்தப் பாடமானது, விசுவாசத்தை நான்கு வெவ்வேறு கோணங்களிலிருந்து விளக்குகின்றது. அவை பின்வருமாறு:-

(1) யவீருவின் விசுவாசம் - தனது மகளுக்காக வைக்கப்பட்ட தகப்பனுடைய விசுவாசம்.

(2) தன் பொருட்டு, கர்த்தருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட ஸ்திரீயினுடைய விசுவாசம்.

(3) ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக் கொண்ட இரண்டு குருடர்களின் விசுவாசம்.

(4) பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்த ஊமையனும், வாய்ப் பேசாதவனுமாகிய மனுஷனைக் கர்த்தரிடத்தில் கூட்டிக் கொண்டு வந்தவர்களின் விசுவாசம்.

நமது கர்த்தருடைய (பிற்காலங்களில்) சொந்த ஊராகிய கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்தலைவரில் ஒருவராய் இருந்த யவீரு, இயேசுவை நன்கு அறிந்திருந்தார். இவர் கர்த்தரை, சில சமயம் ஓய்வுநாளின் பாடங்களை வாசிக்கவும் அழைத்திருக்கின்றார். இன்னொரு தருணத்தில் ஒரு நூற்றுக்கதிபதியினுடைய வேலைக்காரனுக்காக, மற்றவர்களுடன் இவர் (யவீரு) கர்த்தரை மன்றாடியுள்ளார் (லூக்கா 7:4). இப்பொழுது, யவீருவின் குடும்பத்திலேயே துன்பம் வந்துவிட்டது. பன்னிரெண்டு வயதுள்ள இவருடைய ஒரே மகள் மரித்துக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில் கர்த்தரும் அவ்விடத்தில் இல்லை. கர்த்தருக்காகக் காத்துக் கொண்டிருந்த ஜனக் கூட்டத்தில், யவீருவும் ஒருவராகக் காணப்பட்டார். மேலும், இவர் முக்கியமான நபராகக் காணப்பட்டபடியால், இவர் கர்த்தரை அணுக, ஜனங்கள் இவருக்கு இடம்விட்டுக்கொடுத்தனர். கர்த்தர் வந்து தனது மகளைச் சொஸ்தப்படுத்த வேண்டும் என்ற இவருடைய வேண்டுதலினால் மாத்திரம் இவர் தனது விசுவாசத்தை வெளிப்படுத்தாமல் இன்னுமாக, கர்த்தருடைய பாதத்தில் விழுவதாகிய தனது செயல்பாடு மூலமாகவும் வெளிப்படுத்தினார். அதாவது, பாதத்தில் விழுவதன் மூலம் தனது கீழ்ப்படிதலையும், மரியாதை அளித்தலையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தினார். மரிக்கும் நிலையிலிருந்த இவருடைய மகளை, இவர் தனது வீட்டில் விட்டு வந்திருந்தார். இவர் இயேசுவோடு பேசிக் கொண்டிருக்கும் போதும், இயேசுவை வரும்படிக்குத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கும் போதும், இவரது மகள் இறந்து போய்விட்டாள். இவரும், இயேசுவும் வீட்டிற்குச் சமீபிக்கும் போது, காலம் கடந்து விட்டது என்றும், மகள் இறந்து போனாள் என்றும் தூதுவர்கள் இவர்களிடம் வந்து அறிவித்தார்கள். இயேசு வந்த சமயம், அயலார்கள் யூத வழக்கத்தின்படி மரித்த வீட்டில் கூடியிருந்தனர். சிலர் துக்கம் கொடுக்கும் இசைகளை, இசைத்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டு, புலம்பிக்

கொண்டிருந்தார்கள். குடும்பத்திலும், அண்டை வீட்டுக்காரர்களிலுமுள்ள பெண்கள் அவர்களின் வழக்கத்தின்படி, ஒருவர் மரித்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், கதறி, கூவி, பின்னர் சடலம் இருக்கும் அறைக்குள் பிரவேசித்து, துக்கித்து, புலம்பிக்கொண்டிருப்பார்கள். "சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" என்று ஆண்டவர் கூறி, கூட்டத்தார் புலம்புவதை நிறுத்தச் சொன்னார். இதைப் போன்ற வார்த்தைகளையே, ஆண்டவர் லாசருவின் விஷயத்திலும் பயன்படுத்தினார். பொதுவான மனித வார்த்தையின்படி சிறு பெண் மரித்திருந்தாள். ஆனால், தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி அவள் மரிக்கவில்லை. அதாவது, மிருகங்கள் மரித்து அழிந்து விடும் விதத்தில் அவள் அழிந்து போய்விடவில்லை. மனுக்குலத்தின் மீது இருக்கும் மரணத் தீர்ப்பானது, மீட்பருடைய பலியினால் ரத்து செய்யப்படும் என்பதும், இதன் விளைவாக நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்துப் போனவர்களின் உயிர்த்தெழுதல் சம்பவிக்கும் என்பதுமான காரியங்களே ஆரம்பத்திலேயே காணப்பட்ட தெய்வீக ஏற்பாடாக உள்ளது. இந்தக் கண்ணோட்டத்தின்படி மரித்தவர்கள் நித்திரையில் இருக்கின்றார்கள் என்றும், இந்த நித்திரையிலிருந்து உயிர்த்தெழுதலின் காலையில், ஆயிரம் வருஷம் யுகத்தின் விடியலில் ஒரு மகிமையான விழித்தெழுதல் இருக்கும் என வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. ஆகவேதான் ஆபிரகாமும், முற்காலங்களிலுள்ள மற்றவர்களும், நல்லவர்களும், கெட்டவர்களும் நித்திரையில் உள்ளதாகவும், அவர்களின் பிதாக்களுடன் நித்திரையடைந்தார்கள் என்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் இரத்தச் சாட்சியாகிய ஸ்தேவானும் நித்திரையடைந்தார் (அப்போஸ்தலர் 7:60). மரித்தவர்கள் பரலோகத்திலோ, உத்தரிக்கும் ஸ்தலத்திலோ (அ) நரகத்திலோ நித்திரைப் பண்ணிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதாகாது. பூமியின் தூளிலே நித்திரைப் பண்ணிக் கொண்டிருப்பவர்கள், எழுந்திருப்பார்கள் என்று வேதாகமம் தெரிவிக்கின்றது. (தானியேல் 12:2). "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:22). ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் மரணமாகவும், ஜீவிக்கும் தன்மை நித்தியத்திற்கும் நின்று போனதாகவும் இருந்தது. மீட்பருடைய பலியின் புண்ணியத்தினால் இது மாற்றப்பட்டது; மேலும் மரணம் என்பது, உணர்வில்லாத/உணர்வு இழந்த நித்திரையாகவே உள்ளது. இப்படியான நித்திரை நிலையானது, மாபெரும் மீட்பரானவர் லாசருவினிடத்தில் "வெளியே வா" என்றும், யவீருவின் மகளிடத்தில் "தலித்தாகூமி" அதாவது "சிறு பெண்ணே எழுந்திரு" என்று சொன்னது போன்று மனுக்குலம் அனைத்திடமும் சொல்லும் காலைப் பொழுது வரையிலும் நிலவும். ஆகவே, இறுதியில் பிரேதக்குழியில் இருக்கும் அனைவரும் மனுஷகுமாரனுடைய குரலைக் கேட்டு வெளியே வருவார்கள் என்பது நமக்கு உறுதியே (யோவான் 5:28). யவீருவின் வீட்டிற்குக் கர்த்தர் போகும் வழியில், கர்த்தரைச் சூழ்ந்திருந்த கூட்டத்தாரில் ஒரு ஸ்திரீ அவருடைய மகத்துவத்திலும், வல்லமையிலும் நம்பிக்கைக்கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள, அவருடைய வஸ்திர ஓரத்தைத் தொட்டாள். மின்கல அடுக்கை (battery) கம்பி தொடும்போது, உடனடியாக மின்சாரம் பாய்வது போன்று, ஜீவனின் எழுச்சியும், பலமும் அவளுக்குள் உடனடியாகப் பாய்ந்தது. நமது கர்த்தர் உயிர் ஆற்றலினால் முழுவதும் நிரம்பப் பெற்றிருந்தார். அவர் பரிபூரணமாய் இருந்தார். மேலும், அவர் பாவத்திற்கு விலகினவராய் மாத்திரமல்லாமல், நோய் மற்றும் மரண நிலையிலிருந்து விலகினவராகவும் இருந்தார். தம்மிடமிருந்து ஆற்றல் புறப்பட்டதை உணர்ந்த கர்த்தர் திரும்பி, "என்னை தொட்டது யார்?" என்று வினவினார். அந்த ஸ்திரீயானவள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள தான் பாத்திரமற்றவள் என்று எண்ணினாள், மற்றும் ஆசீர்வாதத்தைத் திருடினபடியால் பயந்தாள். ஆனால், உடனடியாக ஆண்டவருடைய இரக்கமான வார்த்தைகள் மற்றும் பார்வையினால் அமைதியடைந்தாள். இந்தச் சம்பவம், நமது கர்த்தருடைய அற்புதங்கள், அவருடைய உயிர்ஆற்றலைக் கரையப் பண்ணினது என்பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வாறாக யோர்தான் முதல் கல்வாரி வரையிலும் அவரிடமிருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட அனைவரின் தேவைகளுக்கும், விரும்பி மகிழ்ச்சியுடன் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தவராகக் காணப்பட்டார்.

இயேசுவை மேசியா என்றும், தாவீதின் சந்ததியில் வரும் வாக்களிக்கப்பட்ட ராஜா என்றும் வாழ்த்தி, அவரைச் சந்தித்த இரண்டு குருடர்களும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக்கொண்டு, அவர்களுடைய விசுவாசத்திற்கு ஏற்ப, விரும்பின ஆசீர்வாதங்களை இருவருமே பெற்றுக்கொண்டனர். இங்கு விசுவாசத்தைத் தூண்டக்கூடிய, சபை ஐக்கியத்தின் அனுகூலம் நமக்குச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மகா பரிசுத்தமான விசுவாசத்தில் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்திடுவோமாக. நம்முடைய உடன்

சகோதரர்களுக்கு, நாம் உதவிக்காரர்களாக இருப்போமாக; இடையூறு பண்ணுபவர்களாக இல்லாமல் இருப்போமாக. சகல ஜனங்களையும் சொஸ்தப்படுத்த ஆண்டவர் முற்படவில்லை. உதாரணத்திற்குச் சீலோவாம் குளத்தண்டையில் அநேகர் இருந்தும், ஒருவரே சொஸ்தப்படுத்தப்பட்டார். இங்கும் கண்கள் பார்வை பெற்றவர்கள், காரியத்தை இரகசியமாய் வைத்துக்கொள்ள இயேசு எச்சரித்தார். ஆனால், அவர்களால் அதை அடக்கி வைக்க முடியவில்லை. அவர்களுடைய சந்தோஷம் மிகுதியாய் இருந்தது, மற்றும் இவ்விஷயத்தில் கர்த்தரிடமிருந்த தாழ்மை, அவர்களை வெளிப்படையாக துதிக்க ஏதுவாக்கிற்று. நம்முடைய விஷயத்திலும் இப்படியே ஆகும்; மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, ஆவியில் சொஸ்தமாக்கப்பட்டு, புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்ற நம்மாலும் நற்செய்தியை அறிவிக்காமலும், கர்த்தரைத் துதிக்காமலும் இருக்க முடியாது. (ரோமர் 1:12; அப்போஸ்தலர் 4:20)

பிசாசினால் பிடிக்கப்பட்டு, ஊமையனாகவும், செவிடனாகவும் இருந்த மனுஷன் கவலைக்கிடமான நிலையில் காணப்பட்டான்; அவனால் அவனுக்கே உதவ முடியவில்லை, ஆண்டவரின் உதவியையும் கேட்க முடியவில்லை; ஒருவேளை எவரேனும் அவனிடத்திலுள்ள பிசாசுக்களை விரட்டினாலும் அவனால் கேட்கவும் முடியாது. இவனுக்காக, இவனுடைய நண்பர்கள் விசுவாசம் கொண்டார்கள். இயேசு இணங்கி, பிசாசை விரட்டினார், அம்மனுஷன் சொஸ்தமாக்கப்பட்டான்; ஜனக்கூட்டம் பிரமித்தது. ஆனால், பரிசேயர்கள் பொறாமை அடைந்தனர். பரிசேயர்கள் தாங்கள்தான் பிரதானமான பயபக்தியுடையவர்கள் என்று காண்பிக்க விரும்பினர். மற்றும் இயேசுவின் கூடவே கடந்து சென்றுக்கொண்டிருக்கும் பிரபலமும், கீர்த்தியும் தங்களுக்குத் தக்கவைக்கப்படவும் விரும்பினர். இயேசுவைச் சாத்தான் என்றும், பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூல் என்றும் கூறுமளவுக்கு, அவர்களுடைய மனங்களுக்குள் பொறாமையின் விஷம் ஊடுருவின. இப்பாடத்தை நாம் கற்றுக்கொண்டு, பொறாமை, வன்மம், பகை முதலியவைகளைத் தவிர்த்து, இவைகளுக்குப் பதிலாக சாந்தம், நற்குணம், பொறுமை எனும் அன்பின் ஆவியினால் நமது இருதயங்களை நிரப்பி, நமது விசுவாசத்தைப் பெருக்கிக் கொண்டு, அதிகமதிகமாக நமது ஆண்டவரைப் போன்று மாறுவோமாக.

---

**R2635**

# “அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு”

## மத்தேயு 9:35-10:8

"பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்." - மத்தேயு 10:20

எவ்விதமான இடையூறும் இல்லாமல், நமது கர்த்தர் பட்டணந்தோறுமுள்ள ஜெப ஆலயங்களில் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஏதுவாக, யூதர்கள் மத்தியில் நிலவியிருந்த சுதந்திரம் மாபெரும் பாராட்டிற்கு ஏதுவானதாகும். ஒருவேளை இன்றைய நாட்களில் உள்ள ஏதேனும் ஆலயங்களில், ஏதேனும் சபை பிரிவுகளில் கர்த்தர் போதிக்க முற்பட்டிருந்திருப்பாரானால், அவருக்கு அது மறுக்கப்பட்டிருக்கும் என நாம் நிச்சயமாக எண்ணுகின்றோம்; வேதவாக்கியங்கள் அறிவிக்கும் விஷயங்களைக் கடைப்பிடிப்பதில் இயேசு எவ்வளவுதான் உண்மையுள்ளவராக இருந்தாலும் சரி, மற்றும் அவருடைய போதனைகள் மிகவும் விளக்கமாகவும்/தெளிவாகவும் இருந்தாலும் சரி, இவைகள் இன்று பொறுப்பில் உள்ளவர்களுக்கு, அதாவது இராஜ்யம் தொடர்பான தங்களுடைய சொந்த கோட்பாட்டை உடையவர்களுக்கு, அதிலும் ஆராய்ச்சி பண்ணினால் நிலைநிற்க முடியாத கோட்பாட்டை உடையவர்களுக்கு, அதாவது தங்களுடைய பெலவீனம் வெளிப்படுவதை விரும்பாதவர்களுக்கு மிகவும் திருப்திகரமற்றவைகளாகவே காணப்படும். மத விஷயங்கள் தொடர்பான காரியங்களில் யூதர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் இப்படியான சுதந்திரமற்ற தன்மையானது, அவர்களுக்கே ஊறு விளைவிக்கின்றதாகக் காணப்படும். அதாவது, தற்கால அறுவடை செய்தியின் சந்தோஷமான சத்தத்தைக் கேட்கும் விஷயத்தில் கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த இடர்பாட்டைக் கொண்டு வருகின்றதாய் இருந்துவிடும்.

நமது கர்த்தர் அநேகரைச் சொஸ்தப்படுத்தினபோதிலும், இன்னும் பெருந்திரளான வியாதியஸ்தர்கள் சொஸ்தமடைவோம் என்ற நம்பிக்கையில், பல்வேறு திசைகளிலிருந்து வந்து அவரிடம் குவிந்தனர்; மேலும், இஸ்ரயேலின் இந்த மந்தைகளுக்காக அவர் மனதுருகினார் என்பதாக நாம் வாசிக்கையில், அவருடைய இரக்கம், அவருடைய பரிவு, அவருடைய அன்பு குறித்து ஆழமாய் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது; மேலும், பிதா கொடுத்த மகிமையை விட்டு, பரிசுத்தமான தேவதூதர்களையும் பிரிந்து, மனித நிலையை எடுக்கும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்தினவர், பெலவீனமானவர்களுக்காகவும், பாவிகளுக்காகவும், சீரழிந்துப் போனவர்களாகவும், வலி உடையவர்களாகவும் இருப்பவர்கள் மேல், மனதுருக்கம் கொள்வது குறித்து, நாம் ஆச்சரியம் அடையவில்லை; மாறாக, அவர் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியாகவே இருந்துள்ளார் என்பதாக நாம் எண்ணுகின்றோம். இப்படியான மனதுருக்கம் இல்லையெனில், அவரால் எப்படி நமது மீட்பராக இருக்க முடியும்? மற்றும் நம் பொருட்டு எப்படி அவர் பரலோக மகிமையைத் துறந்து வந்திருக்கக்கூடும்! அவர் இன்னமும் அப்படியாகவே இருக்கின்றார் என நாம் எண்ணுகையில், இது எத்துணை புதிய நம்பிக்கையை நமக்குக் கொடுக்கின்றதாக இருக்கின்றது? நமது பெலவீனங்களும், பூரணமின்மைகளும் ஒருபுறம் இருப்பினும், முழுஉலகமாகிய தவித்துக் கொண்டிருக்கும் சிருஷ்டியின் பெலவீனங்களும், பூரணமின்மைகளும் இன்னொருபுறம் இருப்பினும், அதேசமயம் இயேசு மனதுருக்கம் கொண்டவராகவே இருக்கின்றார் என்பது எத்துணை புதிய நம்பிக்கையை நமக்குக் கொடுக்கின்றதாக இருக்கின்றது. அதுவும் தம்முடைய ஜனங்கள் மீது மாத்திரமல்லாமல், ஏற்றக்காலத்தில் பூமியின் குடிகள் அனைத்தின் மேலும் மனதுருக்கம் கொண்டிருந்து, பாவத்தினால் மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், சரீர ரீதியாகவும் ஏற்பட்டுள்ள அழிவுகளினின்று குணமடைவதற்கான முழுவாய்ப்பும் அனைவருக்கும் அருளுவார். கர்த்தர், பிதா நியமித்துள்ள வேளைக்காக மாத்திரமே காத்துக்கொண்டிருக்கின்றார் என்பது எத்துணை புதிய நம்பிக்கையை நமக்குக் கொடுக்கின்றதாக இருக்கின்றது; பின்னர் வேளை வரும்போது, தம்முடைய உண்மையுள்ளவர்களோடு, அதாவது தம்முடைய இராஜ்ய வகுப்பாரோடு, ஆபிரகாமின் சந்ததியாகக் காணப்பட்டுத் திரும்பக்கொடுத்தலின் காலங்களில் தேவனோடு ஒப்புரவாகிக் கொள்வதற்கான முழு வாய்ப்புடனும், இதன் விளைவாக நித்திய ஜீவனை அடைவதற்கும் ஏதுவாக, பூமியன் சகல குடிகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

நாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற இப்பாடத்தின் காலத்தில், அவருடைய வேலை பரந்த அளவில் செயல்படவில்லை; இன்றுங்கூட அப்படியாகச் செயல்படவில்லை. இயேசுவின் நாட்களில் ஒப்புரவாகுதல் தொடர்பான அவருடைய செய்தியும், அவருடைய உதவியும் சுபாவத்தின்படியான மாம்சீக இஸ்ரயேல் வீட்டாராகிய தொலைந்துப்போன ஆட்டிற்கு மாத்திரமே கொடுக்கப்பட்டிருந்ததே ஒழிய, சமாரியர்களுக்கோ அல்லது புறஜாதிகளுக்கோ கொடுக்கப்படவில்லை. அதற்குப் பின் ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதமானது சமாரியர்கள் அல்லது புறஜாதியார்கள் மத்தியில் கேட்பதற்குச் செவியுடையவர்களாய் இருந்தவர்களுக்கு அருளப்பட்டது. அதாவது, இவர்களுக்கு இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஒப்புரவாகுவதற்கான சிலாக்கியம் கிடைத்தது; ஆனால், சிறியவர் முதல் பெரியவர் வரை கர்த்தரை அறிந்துக்கொள்வதற்கென, செவிடான காதுகளைத் திறப்பதற்கான மாபெரும் காலம் இனிவரும் ஆயிரவருஷம் யுகத்திலேயே ஆகும்.

உதவி வேண்டிய நிலையிலும், உதவியை விரும்பியும் காணப்படுபவர்கள் இருப்பது வரையிலும், கர்த்தருடைய குணலட்சணத்தில் ஒரு பாகமாக இந்த மனதுருக்கம் செயலாக்கத்தில்/அமலில் காணப்படும்; மேலும், இந்த மனதுருக்கமானது, உதவியை வாஞ்சிக்கிறவர்கள் அனைவரும் உதவியைப் பெற்றுத்தீரும் ஆயிரவருஷம் யுகத்தின் முடிவு வரையிலும் செயல்படும்; அவருடைய உதவியை வேண்டுமென்றே புறக்கணித்து விட்டவர்கள் மாத்திரமே ஆசீர்வதிக்கப்படாதவர்களாகக் காணப்படுவார்கள். ஆயிரவருஷம் யுகத்திற்குப் பிற்பாடு அவருடைய மனதுருக்கம் காண்பிக்கப்படுவது நிறுத்தப்படும். ஏனெனில், அதற்குப் பிற்பாடு மனதுருக்கம் அவர் கொள்வதற்கு அவசியம் இராது. ஏனெனில், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் மூலம், பூரணமாய் இருப்பவர்கள் தேவனிடத்தில் ஒப்புரவாகிவிடுவதால், அவர் மனதுருக்கம் கொள்வதற்கு அவசியம் இராது.

ஜனங்கள் மீது நமது கர்த்தர் கொண்டிருந்த மனதுருக்கத்தினிமித்தம், வியாதிகள் முதலியவைகளைச் சொஸ்தப்படுத்தும் வல்லமை தரிப்பிக்கப்பட்டவர்களாக, அவர் தமது பிரதிநிதிகளை அனுப்ப வேண்டியிருந்தது. மேலும், தம்முடைய எண்ணத்தைத் தமது சீஷர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாகவே, அவர்களிடம் அறுவடை மிகுதி என்றும், வேலையாட்கள் கொஞ்சம் என்றும், இவ்விஷயத்திற்காக அவர்கள் ஜெபம் ஏறெடுக்க வேண்டும் என்றும் கூறினார். அவர்களுடைய ஜெபம் கண்டிப்பாக பின்வருமாறு காணப்பட வேண்டும், அதாவது "அறுவடையின் ஆண்டவரே, அறுவடையில் என்னை அறுக்கிறவனாக அனுப்பும்" என்பதேயாகும். இயேசு தாமே அறுவடையின் ஆண்டவராக இருக்கின்றார்; முழுக் காரியமும் கர்த்தருடைய கரங்களில்தான் இருந்தது; மேலும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், அறுவடை வேலையின் அதிகரிப்பைக் குறித்த அவருடைய எண்ணத்தையும், சிந்தையையும் உடனடியாகக் கிரகித்துக் கொண்டார்கள்; ஆகவே, அவர்களை இருவர் இருவராக அனுப்பி வைத்தார்; எனினும் அவருடைய சொந்த ஊழியத்தை அவரே எல்லைக்குட்படுத்தியிருந்தது போல, மாம்ச இஸ்ரயேலர்களுக்காக மாத்திரமே அவர்களது வேலையையும் எல்லைக்குட்படுத்தினார். ஏனெனில், தேவனுடைய அனைத்து உடன்படிக்கைகளும், வாக்குத்தத்தங்களும் மாம்சீக இஸ்ரயேலர்களுக்கே உட்பட்டதாயிருந்தது; மற்றும் பிதாவினால் நியமிக்கப்பட்ட ஏற்றவேளை வரையிலும் அதாவது, தீர்க்கத்தரிசியாகிய தானியேல் மூலம் விசேஷமாகக் குறிப்பிடப்பட்ட இஸ்ரயேலுக்கான கிருபையின் எழுபது வாரங்களுடைய முடிவில் அதாவது, நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டு, மூன்றரை வருடத்திற்குப் பின்வரையிலும், மற்ற ஜனங்களுக்கு வாய்ப்புத் திறக்கப்படுவதில்லை/ வெளிப்படுத்தப்படுவதில்லை.

"அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (மத்தேயு 10:1). இந்த வல்லமை/அதிகாரம் பரிசுத்தஆவியினுடைய வல்லமை/அதிகாரமேயாகும்; இது இவர்கள் பிற்பாடு பெந்தெகொஸ்தே நாளில், பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்ட அதே ஆவியாக இருந்ததெனினும், வேறுபட்டதாகவும் இருந்தது. இவர்களுக்கு அருளப்பட்ட வல்லமையானது, பரிசுத்த ஆவி அல்லது தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தின விதத்தில் வித்தியாசப்பட்டாலும், எப்போதும் இது ஒரே வல்லமைதான் என்ற விதத்தில் அது அதே வல்லமைதான். இவர்களுக்கு அருளப்பட்ட வல்லமையானது, நமது கர்த்தராகிய இயேசுவின் ஆவியாகவும், அவருக்கு அளவில்லாமல் அருளப்பட்டதுமான வல்லமையாக (அ) ஆவியாக இருக்கின்றபடியால், அது பரிசுத்தமானதுதான்; இப்படியாக அவரிடத்திலிருந்த ஆவியைத்தான், அப்போஸ்தலர்கள் தமது பிரதிநிதிகளாக இருந்து, தம்முடைய நாமத்தில் ஒரு வேலையைச் செய்யத்தக்கதாக, அப்போஸ்தலர்களுக்கு அந்நேரம் அருளினார்.

வியாதிகள் சொஸ்தமாக்கப்பட்டபோது, சொஸ்தம் உண்டாகத்தக்கதாக நமது கர்த்தர் இயேசுவிடமிருந்து உயிர் ஆற்றல் கடந்துப் போனது என்றும், இவ்விதமாக ஒவ்வொரு சொஸ்தமடைதலும், அவரிடமிருந்து அவருடைய சொந்த உயிர் ஆற்றலையும், அவருடைய சொந்த ஜீவனுக்கான சக்திகளையும் எடுத்துக்கொள்வதாக இருக்கின்றது என்றும் நாம் அனுமானிக்கின்றபடியினால், இச்சம்பவத்திலும் கூட வியாதியஸ்தர்களைச் சொஸ்தப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட வல்லமை, இயேசுவின் வல்லமை என்றும், சீஷர்கள் தங்களுடைய சொந்த உயிர் ஆற்றலைக் கொடுக்காமல், அவர் அவர்களுக்கு, கொடுத்ததும், "இலவசமாய்ப் பெற்றுக் கொண்டீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" என்று அவர் கூறி பயன்படுத்தும்படிக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்ததுமாகிய அவருடைய வல்லமையையே (உயிர் ஆற்றலையே) என்றும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். (சீஷர்கள்) தங்களுக்கு இழப்பாய் இராததும், ஆனால் இயேசுவுக்கு தினந்தோறும், ஒவ்வொரு மணி நேரமும் இழப்பாய் இருக்கின்றதுமாகியவைகளையே (வியாதிகள் சொஸ்தப்படுத்தும்போது) கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்வதன் மூலம், தினந்தோறும் நமது கர்த்தர் இவ்விதமாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்ற இக்கருத்தை நாம் புரியும் போதுதான், மூன்றரை வருடங்களாகிய சுருக்கமான காலப்பகுதியில், அவருடைய பரிபூரணமான ஜீவன் எப்படி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை நம்மால் நன்கு புரிந்துக்கொள்ள முடியும்.

வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதும், பிசாசுகளைத் துரத்துவதும், அப்போஸ்தலர்களின் ஊழியங்களில் ஒரு பாகமேயாகும். இவைகளோடுக் கூட அவர்கள் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியிருந்தது. அதாவது, தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது என்ற நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டியிருந்தது; மற்றும் அற்புதங்களினால் உண்டாகும் செல்வாக்கானது, இச்சுவிசேஷத்தின் மீது கவனத்தை ஈர்க்கின்றதாகவும், இராஜ்யத்திற்காக ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்காகவும், அதற்கு எதிர்ப்பார்த்திருக்கப் பண்ணுகின்றதாகவும் காணப்பட வேண்டும். ஆனால், பதிவுகளைப் பொறுத்தமட்டில், ஜனங்கள் அற்புதங்களுக்காகவும், சொஸ்தமாக்கப்படுவதற்காகவும் வாஞ்சித்தார்கள் என்றும், இராஜ்யம் தொடர்பான விஷயத்தில் அக்கறையற்றவர்களாகவும் காணப்பட்டார்கள் என்றும் நாம் பார்க்கின்றோம். இயேசுவிடமும், அவருடைய சீஷர்களிடமுமிருந்து சொஸ்தமடைதலை ஜனங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினார்கள். ஆனால், தேவனுடைய இராஜ்யம் எப்படி மற்றும் எப்பொழுது வரும் என்பது தொடர்பான தகவல் அறிய விரும்புகையில், வழக்கம்போல, ஜனங்கள் தங்களுடைய குருடான வழிகாட்டிகளையே தேடிச்சென்றனர்.

இஸ்ரயேல் முழுவதும் நடந்திட்ட இந்த ஊழியத்தினுடைய செல்வாக்கு/தாக்கம் முற்றிலும் வீணாகவில்லை என்றும், கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டதற்குப் பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி சீஷர்கள் மீது இறங்கின பிற்பாடு, இவர்கள் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பல்வேறு கோணங்களில் பிரசங்கித்து, கிறிஸ்துவுடன் இணையும்படி உத்தம இஸ்ரயேலர்கள் அனைவரையும் வரவேற்று, இவ்வாறாக அவருடன், இராஜ்யத்தில் உடன் சுதந்திரர்களாகும்படி வரவேற்றார்கள் என்றும் நாம் எண்ணுகின்றோம். கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணம் பண்ணுவதன் மூலம் சபையாகிய, கருநிலையிலுள்ள இராஜ்யத்திற்குள் அநேகர் பிரவேசித்தார்கள்; இந்த அநேகருக்குள், சந்தேகத்திற்கிடமின்றி ஏற்கெனவே அற்புதங்களைக் கண்டும், கேட்டவர்களும் இருந்திருக்கக்கூடும். மேலும் இவைகளை, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் சில நாட்களுக்குள்ளாகவே பல்லாயிரம் பேர், கிறிஸ்தவர்களானார்கள் என்ற விஷயம் உறுதிப்படுத்துகின்றது.

யூத யுகத்தின் முடிவிலுள்ள அறுவடையானது, இந்தச் சுவிசேஷ யுகத்தின் அறுவடைக்கு நிழலாக இருக்கின்றது. அப்பொழுதுபோல இப்பொழுதும் இயேசு, அறுவடையின் கர்த்தராகவும், அவருடைய சீஷர்கள், கூட்டிச் சேர்க்கின்ற வேலையில் அவருடைய பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனர். அப்பொழுதுபோல இப்பொழுதும், சீஷர்களை நோக்கி, அறுவடை மிகுதி என்றும், வேலையாட்கள் குறைவு என்றும், மேலும் இவ்விஷயத்தில் நம்மிடம் ஒருவேளை அவருடைய ஆவி இருக்குமாயின், அவருடைய வேலைக்கு நம்மை அனுப்பும்படி நாம் அவரிடத்தில் வேண்டினால், நம்மை அவர் அனுப்பப் பிரியம் கொள்வார் என்றும் கூறுகின்றார். அநேகர் இன்று இப்படியாக தினந்தோறும் ஜெபித்து, அறுவடை வேலையில் தங்கள் கைக்கு அகப்படுவதைச் செய்வதற்குத் தினந்தோறும் நாடுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களை அவர்களுடைய ஊழியத்தில் வழிநடத்துவதற்கும், இவர்களுடைய சொந்த நன்மைக்காகவும், மற்றவர்களுடைய நன்மைக்காகவும் இவர்களுடைய பலன்களை/விளைவுகளை ஆசீர்வதிப்பதற்கும் கர்த்தர் கிருபையுள்ளவராக இருக்கின்றார். அன்று இப்படியாக சீஷர்கள் அனைவரும் ஜெபம் பண்ணி, அறுவடை வேலையில் சில பாகங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டதுபோல, இன்றும் கூட உண்மையுள்ள சீஷர்களனைவரும் இப்படியாக ஜெபம் பண்ணிக்கொண்டு, ஊழியத்தை/வேலையை எதிர்ப்பார்த்து, ஊழியத்திற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துகின்றவர்களாகக் காணப்பட வேண்டும்.

அன்றும், இன்றுமுள்ள அறுவடை வேலையின் முறைகள் சற்று வித்தியாசமாக இருப்பினும், கிட்டத்தட்ட ஒன்றுதான். தற்காலத்து அறுவடை என்பது, மாம்சீக இஸ்ரயேலர்கள் விஷயம் அல்ல மற்றும் அறுவடையில் அறுக்கிறவர்களின் கைகளில் கொண்டு வரப்படும் ஆசீர்வாதங்கள், பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் அல்ல, அதாவது, சரீரப் பிரகாரமான நோய்களின் சுகப்படுத்துதல்கள் அல்ல. மாறாக இவைகளைப் பார்க்கிலும், மேலான ஆசீர்வாதங்கள் ஆகும். அதாவது, மாம்ச கண்களைத் திறப்பதைப் பார்க்கிலும், புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுவது என்பது மேலான ஆசீர்வாதமாகும்; மாம்ச காதுகள் திறக்கப்படுவதைப் பார்க்கிலும், கர்த்தருடைய மாபெரும் திட்டம் தொடர்பான காரியங்களில் செவிட்டுத் தன்மை அகற்றப்படுவது மிக விலையேறப் பெற்ற உதவியாகும். அன்றைய காலத்தைப் பார்க்கிலும், இன்று இராஜ்யம் அளிக்கப்படும் காரியம் மிகவும்

உறுதியாக உள்ளது, மற்றும் அன்றைக்கு விட இன்றைக்கு மிகத் தெளிவாகவும் விவரிக்கக்கூடும். ஏனெனில், இராஜ்யம் வெகு சமீபமாய் இருக்கின்றது, வெகு அண்மையில்/வாசலருகில் காணப்படுகின்றது; மேலும், தற்கால அமைப்புகள் மாற்றிப் போடுவதற்கு ஏதுவாக, அசைக்கப்படுவதையும் உலகத்தாரால் பார்க்க முடிகின்றது; மற்றும் அசைக்கப்பட முடியாத உண்மையுள்ளவைகள் கர்த்தருடைய நீதியின் ஆளுகையின் கீழ் நிலைவரப்படுத்தப்படும்.

இன்று இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான விளைந்த கோதுமையைத் தேடும், அறுவடை வேலையாட்கள் ஒவ்வொருவரும், யூத அறுவடையின்போது காணப்பட்ட வேலையாட்களுக்குச் சொல்லப்பட்டுள்ள "பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" என்ற வார்த்தைகளை நினைவில் கொள்ள வேண்டும் (மத்தேயு 10:20). அற்புதகரமாகப் பேசும் வல்லமைகள் நமக்கு அருளப்படும் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. மாறாக, சத்தியம் மற்றும் அதன் ஆவியினால் நாம் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்; அப்பொழுது நாம் பேசுவது நம்முடைய சொந்த ஞானத்திற்குரியதாக இராது; நாம் அறிவிப்பது நமது சொந்த திட்டமாகவும் இராது. மாறாக, பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தையும், நமது தேவனாகிய கர்த்தருடைய திட்டத்தையுமே பேசுகின்றவர்களாக உண்மையில் காணப்படுவோம்.

---

**R4593**

# "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது"
## மத்தேயு 10:1-15

"இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்." - மத்தேயு 10:8

இயேசு ஒரு வருடத்திற்கு மேலாக பிரசங்கித்துக் கொண்டு இருக்கும்போது, தம்முடைய பின்னடியார்களில் பன்னிரண்டு பேரைத் தம்முடைய பிரதிநிதிகளாக, அனுப்பப்படும் அப்போஸ்தலர்களாக நியமித்தார். அவர்களை இருவர், இருவராக யூதேயா முழுவதும் அனுப்பி வைத்தார். அவர்கள் பிதாவினால் (இன்னமும்) நியமிக்கப்படவில்லை. அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் பரிசுத்த ஆவியை இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை; மற்றும் இரண்டு வருடங்களுக்குப் பிற்பாடு பெந்தெகொஸ்தே நாள் வரும் வரையிலும், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்குப் பரிசுத்த ஆவி இன்னமும் வழங்கப்படவில்லை. ஏனெனில், அதுவரையிலும் இயேசு மகிமையடையவில்லை (யோவான் 7:39). ஆனால் அவருடைய ஞானஸ்நானத்தின் போது, அவருக்கு அளவில்லாமல் பரிசுத்த ஆவி வழங்கப்பட்டபடியினால், அப்போஸ்தலர்கள் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் அவர்களுக்குத் தம்முடைய சொந்த விசேஷமான வல்லமைகளையே இயேசு கொடுத்தார். ஆனால், அவரைப்போன்று, அவர்களுக்கும் சரீர உபாதைகளைச் சொஸ்தப்படுத்துவது மாத்திரம் பிரதானமானவைகளாக இருக்கவில்லை. கர்த்தர் இயேசுதான் இராஜா என்றும், நீண்டகாலம் எதிர்ப்பார்க்கப்பட்ட மேசியா என்றும் அப்போஸ்தலர்கள் பிரகடனப்படுத்த வேண்டியிருந்தது; மற்றும் தங்களுடைய தேசம் தொடர்புடையதான அவருடைய மத்தியஸ்த இராஜ்யத்தின் ஸ்தாபிப்பு அண்மையில் காணப்படுகின்றது என ஜனங்களுக்குச் சொல்ல வேண்டியிருந்தது. இந்தச் செய்தியானது, அனைத்து யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பிற்கு இசைவாகவும் இருந்தது. ஏனெனில் இஸ்ரயேலர்கள் மூலம் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காக, இஸ்ரயேலர்கள் நூற்றாண்டுகளாக காத்துக் கொண்டிருந்தனர். "பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்ற அறிவிப்பின் மீது கவனத்தை ஈர்ப்பதற்கே இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன (மத்தேயு 3:2). யோவான் ஸ்நானனுடைய செய்திக்கு இசைவான கர்த்தருடைய செய்தியானது, "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவரையும் விழிக்கப் பண்ணுவதற்கும் மற்றும் இயேசுவை இராஜாவென அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்குமேயாகும். அப்போஸ்தலர்களுடைய செய்தி புறஜாதிகளுக்கோ அல்லது தங்களது அயலார்களாயிருக்கும் கலப்பின

ஜனங்களாகிய சமாரியர்களுக்குக்கூட அல்ல என்றும் அப்போஸ்தலர்கள் எச்சரிக்கப்பட்டார்கள். இராஜ்யத்திலும், அதன் மகிமைகளிலும் பங்கடையத்தக்கதாக யூதர்கள் மாத்திரமே தங்களுடைய இருதயங்களையும், மனங்களையும் ஆயத்தமாக்கிக்கொள்ள உண்மையில் அழைக்கப்பட்டவர்கள் ஆவர். “காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாருக்கு” மாத்திரமே அப்போஸ்தலர்களின் செய்தி காணப்பட்டது (வசனம் 6).

அப்போஸ்தலர்கள் தங்களுடைய பிரயாணத்திற்கு எவ்விதமான முன்னேற்பாடும் செய்ய வேண்டாம், அதாவது பணமோ, அதிகபடியான வஸ்திரங்களையோ கொண்டிருக்க வேண்டாம் என்று கூறப்பட்டிருந்தார்கள். அவர்களை அனுப்பின ஆண்டவர் மீது, அவர்கள் முழுமையாய்ச் சார்ந்திருக்க வேண்டும் என்பது தொடர்பான படிப்பினையை அவர்கள் கற்க வேண்டியிருந்தது. அவர்கள் வீடுகள்தோறும் தேவைகளுக்காகக் கேட்கும் பிச்சைக்காரர்களாக இருக்கக்கூடாது. மாறாக, அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஊழியம் மற்றும் தேவனுக்கான வேலை மற்றும் மேசியாவின் ஸ்தானாதிபதிகளாகிய தங்களைப் பற்றியதுமான மரியாதையை உணர்ந்தவர்களாக, ஒவ்வொரு பட்டணத்திலும் மிகவும் பாத்திரமானவர்களாகவும், மிகவும் பரிசுத்தமாகவும், மிகவும் மாசற்ற ஜனங்களாக இருப்பவர்கள் யார் என்று விசாரித்து அறிந்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இப்படிப்பட்டவர்களே ஒருவேளை ஐசுவரியவான்களாகவோ (அ) தரித்திரவான்களாகவோ இருப்பினும், இவர்களே விசேஷமாக அப்போஸ்தலர்களுடைய செய்தியில் நாட்டம் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். மேலும், அப்போஸ்தலர்களின் செய்தியை ஏற்றுக்கொண்ட இப்படிப்பட்டவர்கள், அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்பட்ட இராஜ்யத்திற்குரிய இராஜாவினுடைய பிரதிநிதிகளைப்போல அப்போஸ்தலர்களை நடத்துவதிலும் உண்மையில் சந்தோஷம் கொள்வார்கள். இப்படியாக அடுத்த ஊருக்குப் போக அப்போஸ்தலர்கள் ஆயத்தப்படும்வரையிலும், அவர்கள் காணப்படும் ஊரில், விருந்தாளிகள்போல் தங்க வேண்டும். ஒரு வீட்டிற்குள் அப்போஸ்தலர்கள் பிரவேசிக்கும் போது, அவர்கள் வீட்டாரை மரியாதையான விதத்தில் வாழ்த்தி அவர்களுக்கான அழைப்பின் நோக்கம் குறித்து அறிவுரைக் கூற வேண்டும். ஒருவேளை சமாதானத்துடனும், இருதயப்பூர்வமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அப்போஸ்தலர்களுடைய ஆசீர்வாதம், அந்த வீட்டில் தங்கும். இப்படியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில், அப்போஸ்தலர்கள் தங்களது நம்பிக்கையையும், அமைதியையும் இழந்துவிடக்கூடாது. மாறாக, அவர்கள் கடந்துப் போய்ச் செய்தியை ஏற்றுக்கொள்வதற்கும், அச்செய்திக்கான பிரதிநிதிகள் தாங்களென ஏற்றுக்கொள்வதற்கும் அதிகம் பாத்திரமாய் இருக்கும் இன்னொருவரைத் தேட வேண்டும். அப்போஸ்தலர்களை ஏற்றுக்கொள்கின்றவர்கள் ஓர் ஆசீர்வாதம் அடைவார்கள். அப்போஸ்தலர்களையும், அவர்களது செய்தியையும் மறுக்கின்றவர்கள் ஒரு மாபெரும் சிலாக்கியத்தை இழந்துப் போய்விடுவார்கள்.

## “இராஜ்யத்தின் சுவிசேஷம்”

உண்மையில் இராஜ்யம் இன்னமும் வராதிருக்க நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கின்றது என்று அறிவிப்பது ஏன்? என்றும், கர்த்தருடைய கட்டளைகளின்படி, அக்கட்டளைகளைப் பின்பற்றுபவர்கள் இன்னமும், “உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என ஜெபித்தும் வருவது ஏன்? என அநேகர் யோசித்திருக்கக்கூடும். இதைப் புரிந்துக்கொள்வதென்பது, இன்று தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு வரும் வேதாகமத்தின் அநேக காரியங்களைப் புரிந்திட உதவும் திறவுகோலாயிருக்கும். ஆகவே, இக்காரியத்தைக் குறித்துக் கொஞ்சம் நாம் விரிவாகப் பார்க்க வேண்டியுள்ளது.

இஸ்ரயேலர்கள் மூலமாக, தெய்வீக ஆசீர்வாதம் ஒவ்வொரு ஜாதியாருக்கும் கடந்துச் செல்லத்தக்கதாக, தங்களை மிகவும் பெரியவர்களாக்கும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காக, இஸ்ரயேலர்கள் பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாகக் காத்துக் கொண்டிருக்கின்றனர். யூத தேசத்திற்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்கள் அனைத்தையும், ஒருவேளை அவர்கள் ஆயத்தமாய் இருக்கும் பட்சத்தில், நிறைவேற்றுவதற்கான தேவனுடைய ஏற்றவேளை வந்துள்ளது என கர்த்தர், தமது

அப்போஸ்தலர்கள் மூலம் குறிப்பிட்டார். அவர்கள் ஆயத்தமாய் இருப்பதற்கு, அவர்கள் பரிசுத்தமான ஜனமாகக் காணப்பட வேண்டும். அவர்களுக்கு அறிவுரைக்கூறவும், அவர்களை ஆயத்தப்படுத்துவதற்குமெனப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே மோசேயின் மூலமாக, அவர்களுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இப்பொழுது இயேசுவுக்குள் கொஞ்சம் முன்பு, யோவான் ஸ்நானன், ஜனங்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக்கத்தக்கதாக அவர்களுக்கு மனந்திரும்புதலையும், நியாயப்பிரமாணத்திற்கு இசைவான நிலையில் வருவதையும், சீர்த்திருத்தத்தையும் குறித்துப் பிரசங்கித்தார். அப்போது உலகத்தில் இருக்கும் ஜனங்களிலேயே அவர்கள் மிகவும் பயபக்தியுடைய ஜனங்களாக இருந்தும், அவர்களிலும் சிலர் மாத்திரமே "உத்தம இஸ்ரயேலர்களாக" இருந்தனர்; அதாவது, இருதயத்தில் தேவனுக்கு முழுமையாக அர்ப்பணம் பண்ணினவர்களாகக் காணப்பட்டனர். இதன் காரணமாக முழுத் தேசமும் தேவனுடைய வேலைக்கு ஆயத்தமாய் இருப்பதற்குப்பதிலாக, அவர்களில் சிலரே பரிசுத்தமாய் இருந்தனர், மற்றும் செய்தியையும் ஏற்றுக்கொண்டனர். இயேசுவின் ஊழியத்தினுடைய முடிவில் சுமார் 500 பேர் மாத்திரமே பாத்திரமானவர்களாகக் காணப்பட்டார்கள், மற்றும் திரளான ஜனங்கள், "அவரைச் சிலுவையில் அறையும்!" எனக் கூக்குரலிட்டனர். இதற்குத் தேவ நம்பிக்கையற்ற பிலாத்து, "ஏன் இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்?" என்று வினவினார். ஆகவே, மற்ற ஜனங்களையெல்லாம் ஆசீர்வதிப்பதற்கெனத் தேவனால் பயன்படுத்தப்படுவதற்கு இஸ்ரயேல் ஆயத்தமற்றுக் காணப்பட்டது.

தேவன் இதை முன்கூட்டியே அறிந்திருந்தார்; மற்றும் சொற்பானவர்கள் மாத்திரம் பாத்திரமாகக் காணப்படுவார்கள் என்றும் தீர்க்கத்தரிசிகள் மூலம் அறிவிக்கவும் செய்தார். "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று இந்தத் தேசத்தாரிடம் நமது கர்த்தர் கூறினார் (மத்தேயு 21:43). மேலும், கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்து நாள் முன்னர் இவர்களிடம், "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 23:38, 39).

மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு முதலாவதாக அளிக்கப்பட்டிருந்த இராஜ்யத்தின் சிலாக்கியங்கள் (அ) வாய்ப்புகள், பெந்தெகொஸ்தே நாள் முதல் ஆரம்பமான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மாற்றப்பட்டது. மாம்சீக வீட்டாரிலுள்ள "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவருக்கும், ஆவிக்குரிய வீட்டாரில் அங்கமாகும் சிலாக்கியம் அருளப்பட்டது; அதாவது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை அடைந்து, சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள் சேர்க்கப்படும் சிலாக்கியம் அருளப்பட்டது. இந்தச் சபையைக் குறித்துப் பரிசுத்தவானாகிய பேதுரு, "நீங்களோ இராஜரிகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று கூறுகின்றார் (1 பேதுரு 2:9).

ஆவிக்குரிய இஸ்ரயேலில் இடம்பெறுவதற்குப் பாத்திரமான அநேக யூதர்களைத் தெரிந்துக்கொண்ட பிற்பாடு, ஆவிக்குரிய இஸ்ரயேலின் நிறைவடைவது <u>வரையிலும்,</u> தேவனுடைய தயவு மாம்சீக இஸ்ரயேலர்கள் மீது மீண்டும் வருமென அவர் வாக்குத்தத்தங்கள் அறிவித்துள்ள காலம் <u>வரையிலும்,</u> பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்கள், தெய்வீகத் தயவினின்று விலக்கிப் போடப்பட்டவர்களாகக் காணப்படுவார்கள். (ரோமர் 11: 25, 26). இதற்கிடையில் "உத்தம இஸ்ரயேலர்களுடைய" ஆவியை உடையவர்களையும், தேவனுக்கு உண்மையாய் இருக்கும் ஆவியைக் கொண்டிருக்கின்றவர்களையும் தேடும்படிக்கு, ஒவ்வொரு தேசத்திற்குக் கர்த்தருடைய உண்மையுள்ள அங்கங்கள் மூலம் அழைப்புச் சென்றது. இப்படியாக மற்றத் தேசத்தாரும் யூதர்களோடு கூட, அந்த ஒரே இராஜ்யத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைச் சூழ்ந்து பலவகையானவர்களும் சேர்ந்துக் காணப்படுகின்றனர்; ஆகவேதான், மில்லியன் கணக்கானவர்களைக் கொண்டுள்ள வெளித்தோற்றமான (அ) பெயரளவிலான சபைகள் காணப்படுகின்றன, மற்றும் இவர்கள் மத்தியில் உண்மையான சபையும் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றனர்.

யூத யுகத்தின் முடிவின்போது, பாத்திரமானவர்கள் காணப்படுகின்றார்களெனப் பார்ப்பதற்கும், தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்குமென இயேசு வந்ததுபோன்று, இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் செய்வார்; பரிசுத்தவான்களைக் காண்பதற்கென அவர் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களிடத்தில் வருவார். பெந்தெகொஸ்தே நாள் முதல், இந்த யுகத்தின் முடிவுவரையிலும், கிறிஸ்துவின் தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் எண்ணிக்கையை நிறைவு செய்யத்தக்கதான போதுமான எண்ணிக்கையில் பரிசுத்தவான்கள் கண்டுபிடிக்கப்படுவார்களென வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன; உலகத்தை ஆசீர்வதிப்பதற்கான வேலையை ஆரம்பிப்பதற்கென, ஸ்தாபிக்கப்படப்போகும் ஆயிரம் வருஷம் இராஜ்யத்தில், கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவினுடைய ராணியாகவும், உடன் சுதந்தரராகவும் இருக்கும்படிக்குத் தேவன் திட்டமிட்டுள்ளார். தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யம் உயர்த்தப்பட்ட பின்னர், தேவனுடைய தயவானது, மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு மீண்டும் திரும்பும் என்றும், அக்காலத்தில் விளங்கும் புதிய ஒழுங்கின் கீழ் ஆசீர்வதிக்கப்படுவதில் முதலாவது தேசத்தாராக மாம்சீக இஸ்ரயேலர்கள் காணப்படுவார்கள் என்றும், மற்றும் தேவனுக்கு இசைவாக மாறும் இந்த (மாம்சீக இஸ்ரயேல்) ஜனங்கள் மூலம் ஆசீர்வாதம், அனைத்து ஜனங்களுக்கும் கடந்துச் செல்லும் என்றும் ரோமர் 11:25-32 வரையிலான வேதவாக்கியங்கள் நமக்கு நிச்சயமளிக்கின்றது.

## “சோதோமுக்கு இலகுவாயிருக்கும்”

சோதோம் ஜனங்கள் மிகவும் ஒழுக்கம் கெட்டவர்களாக இருந்தனர்; எனினும் சுவிசேஷத்தைக் கேட்ட பிற்பாடும், அதனை புறக்கணிப்பவர்களைப் பார்க்கிலும், சோதோம் ஜனங்கள் ஆண்டவருடைய கணிப்பில் கொஞ்சமாகவே பொல்லாதவர்களாய் இருந்தார்கள். இந்தக் கோட்ப்பாடானது கப்பர்நகூமுக்கும், நம்முடைய நாட்களில் வாழும் அநேக ஜனங்களுக்கும், அநேக பட்டணங்களுக்கும் கூடப் பொருந்தும். மாபெரும் ஆயிரம் வருஷம் யுகம் அதாவது, நியாயத்தீர்ப்பின் நாளானது நித்திய ஜீவன் (அ) நித்திய மரணத்திற்கான பரீட்சையில் இடம்பெறுவதற்கான வாய்ப்பை முழு உலகத்திற்கும் அளிக்கும்போது, மற்றவர்களைக் காட்டிலும் சோதோம் ஜனங்களுக்கு மிகவும் இலகுவாயிருக்குமென ஆண்டவர் நமக்கு உறுதியளிக்கின்றார். எந்தளவுக்கு ஒருவர் கிறிஸ்துவைப் பற்றின அறிவிற்குள் வந்திருக்கின்றாரோ, அந்தளவுக்கு அவர் பொறுப்பாளியாகவும் இருக்கின்றார். கிறிஸ்துவின் மரணமானது, ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் இரட்சிக்கப்படுவதற்கான முழு வாய்ப்பைப் பெற்றுத் தருகின்றது. பெரும்பான்மையானவர்கள் எந்த வாய்ப்பும் இல்லாமலேயே, புற மதத்தின் இருளிலேயே இறந்துவிட்டனர்; மேலும், கிறிஸ்தவத் தேசத்திலுள்ள அநேகர், கப்பர்நகூமின் ஜனங்களைப் போன்று தங்களுக்கான வாய்ப்பை அலட்சியப்படுத்திவிட்டனர். கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் தங்களுக்கான சிலாக்கியம் பற்றின முழுமையான அறிவிற்குள்ளாக இராஜ்யத்தில் அனைவரும் கொண்டு வரப்படுவார்கள், பிற்பாடு புறக்கணிப்பவர்கள் யாவரும் அழிக்கப்படுவார்கள் (அப்போஸ்தலர் 3:23; 1 தீமோத்தேயு 2:4; மத்தேயு 20:28).

இயேசுவையும், அப்போஸ்தலர்களையும் பின்பற்றுவது அதாவது, அவர்களுடைய பக்தியின் அடிகளில் நாம் நடந்து, இப்படி மேசியாவோடு அவருடைய இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாக நமது அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதே நமக்கான காரியமாகும்; இந்த இராஜ்யத்தில், நியாயத்தீர்ப்பெனும் பெயரில் அடங்கும் பரிசளித்தல் மற்றும் தண்டனையளித்தலெனும் முறைமையின் கீழ், சபை மேசியாவோடு கூட இஸ்ரயேலையும் மற்றும் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பார்கள். இந்தத் திரும்பக் கொடுத்தல் வேலையில் இஸ்ரயேலர்களும், சோதோமியரும் பங்கடைவார்களென வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவாகக் கூறுகின்றன (எசேக்கியேல் 16:50-55; அப்போஸ்தலர் 3:19-21).

**R3325**

# “விலை அதிகமுள்ள பேரம்”
## மத்தேயு 14:1-12

"ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." - வெளிப்படுத்தல் 2:10

யோவான் ஸ்நானன் சுமார் ஒரு வருட காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இவர் சுமார் ஒரு வருட காலந்தான் பிரசங்கமும் பண்ணினார்; ஆனால் அக்காலத்தில் இவருடைய பிரசங்கம் பாலஸ்தீனியா முழுவதும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது; எனினும், வியக்கத்தக்க விதத்தில் இத்தாக்கமானது யோவான் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் தவறிவிட்டது. அதாவது, பாவத்திற்காக மனம் வருந்தி, மனந்திரும்புவதன் மூலம், இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக ஜனங்களுடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் தவறிவிட்டது. ஜோசப்பஸ் எனும் வரலாற்று ஆசிரியர், யோவான் ஸ்நானன் மக்கீரஸ் கோட்டையிலுள்ள நிலத்தடியில் கட்டப்பட்ட சிறையில் வைக்கப்பட்டதாக அனுமானிக்கின்றார். கெய்கீ (Geike) என்பவர், இருட்டறை/சிறைகளின் வகைகள் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார், "அநேகமாக இது நான் காசாவில் பார்த்திட்ட இரும்புப் பட்டைகளினாலான கூண்டாக இருக்கலாம்; இங்குச் சிறையில் அடைக்கப்பட்டவருடைய நண்பர்கள் உணவு கொண்டு வருவதற்கோ (அ) பேசுவதற்கோ வரலாம். ஆனால், வாழ்வதற்கோ (அ) உறங்குவதற்கோ எவ்விதமான சௌகரியங்களும் இல்லை; வெறும் தரைதான் காணப்படும்." கெய்கீ அவர்கள் கூறின விஷயம், யோவான் தன்னுடைய சீஷர்களிடம், "வரவிருக்கின்றவர் நீர் தானோ அல்லது வேறொருவர் வர காத்திருக்க வேண்டுமோ?" என இயேசுவிடம் கேட்கும்படி, சீஷர்களிடம் அவரால் சொல்லியனுப்ப முடிந்த காரியத்திற்கிசைவாகக் காணப்படுகின்றது. யோவான் ஸ்நானனுக்கு வந்திட்ட அனுபவங்கள் சிலவிதங்களில் அவருக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருப்பினும், நம்முடைய கண்ணோட்டத்தின்படி பிதா நோக்கம் கொண்டிருந்தவைகளை, அவர் செய்தார் என்றே நாம் காண்கின்றோம். இங்கு நமக்கு ஒரு பாடம் உள்ளது. நாமுங்கூட நாம் செய்ய வேண்டிய நமக்குரிய பாகத்தைக் கர்த்தருக்கு உண்மையாய்ச் செய்துவிட்டு, அவருடைய கிருபையான நோக்கங்கள் இறுதியில் நிறைவேற்றத்தக்கதாக அவருடைய வல்லமையும், ஞானமும் அனைத்துக் காரியங்களையும் நடத்தும் என்ற நிச்சயத்தில், பலன்களை அவருடைய கரத்தில் விட்டுவிடுவோமாக.

யோவானுக்கும், எலியாவின் நிழலுக்குமிடையே கவனத்தை ஈர்க்கும் ஒற்றுமைகள் காணப்படுவதுபோல, யோவானுடைய அனுபவங்களுக்கும், மாபெரும் நிஜமான எலியாவாகிய உண்மையுள்ள சபை அங்கங்களுடைய அனுபவங்களுக்கும் இடையேயும் பலமான ஒற்றுமை காணப்படுகின்றது. எலியா, ஆகாபுக்குத் தப்பி ஓடினாலும், எலியாவை உண்மையாய்த் துன்பப்படுத்தியது, அவரது உயிருக்காக நாடின யேசபேலே ஆவாள். யோவான் ஸ்நானனும், ஏரோதினால் கைதுச் செய்யப்பட்டு, இறுதியில் கொல்லப்பட்டாலும், யோவானுடைய உண்மையான எதிராளி, ஏரோதின் மனைவியாகிய ஏரோதியாளே ஆவாள். இதுபோலவே, மாபெரும் எலியாவாகிய மாம்சத்திலுள்ள கிறிஸ்துவின் உண்மையான சபையானது, அரசியல் வல்லமையின் கரங்களில் இதுவரை பாடுகள் அனுபவித்தாலும், இனிமேலும் அரசியலின் கரங்களிலிருந்து பாடுகள் அனுபவிக்கப் போகிறதாயிருப்பினும், அரசியல் வல்லமைகளுக்குப் பின்னாலிருந்து, இவர்களை உண்மையாய்த் துன்பப்படுத்துவது வெளி 2:20-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிஜமான யேசபேல் அதாவது, நிஜமான ஏரோதியாள் அதாவது, கிறிஸ்துவுக்குப் பெயரளவில் நிச்சயிக்கப்பட்டு, இவ்வுலகத்தின் இராஜ்யங்களுடன் விபச்சாரம் பண்ணும் பெயர்ச்சபையே ஆவாள். இக்காரியம் குறித்து வெளிப்படுத்தின விசேஷத்தில், பல்வேறு அடையாளங்களில் காணப்படுவதை அனைத்து வேதத்தின் மாணவர்களும் அறிவார்கள்; இந்தப் பல்வேறு அடையாங்களுக்கிடையேயுள்ள ஒற்றுமை தெள்ளத் தெளிவாகப் புரிகின்றதோ இல்லையோ ஆனால் இதனை வேதத்தின் மாணவர்களும் அறிவார்கள்.

## "ஏரோது, ஏரோதியாள் மற்றும் சலோமி"

மாபெரும் ஏரோதுக்குப் பின்னர், அவர் பதவியை அடைய வேண்டும் என்று அதிகமான ஆசைக் கொண்டிருந்த அநேக குமாரர்கள் அவருக்கு இருந்தார்கள். இக்குமாரர்களில் மூத்தவரை, ஏரோதியாள் மணம் முடித்தாள்; இவ்வாறாக ராணி ஆகலாம் என எதிர்ப்பார்த்தாள். ஆனால், ரோம சக்கரவர்த்தியோ, வேறுவிதமாக முடிவெடுத்து, இப்பாடத்தில் இடம்பெறும் அந்திப்பாவை ஏரோதாக தெரிந்துக்கொண்டார். ஆகவே, இன்னமும் ராணியாக வேண்டும் என்ற மிகுந்த ஆசையும், உறுதியும் கொண்டிருந்த ஏரோதியாள், அந்திப்பாவை வசீகரப்படுத்தி, அந்திப்பா தனது மனைவியைத் தள்ளிவிடச் செய்து, அவளுக்குப்பதிலாக தன்னை ராணியாக ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தாள். பாவத்திற்கு எதிராக பிரசங்கித்துக் கொண்டிருந்த யோவான் ஸ்நானன், நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான இந்தச் சேர்தலுக்கு எதிராக பொது ஜனங்கள் மத்தியில் நிச்சயமாய்ப் பேசியிருந்திருக்க வேண்டும்; அதாவது அந்திப்பாவும், அவன் மனைவியாகிய ஏரோதியாளும் விபச்சாரத்தில் வாழ்கின்றனர்; அதாவது, அந்திப்பா தனது சொந்த மனைவியைத் தள்ளிவிட்டு அவனுடைய சகோதரனாகிய பிலிப்புவின் மனைவியுடன் தகாதவிதமாய் இணைந்துள்ளான் என்று நிச்சயமாய்ப் பேசியிருந்திருக்க வேண்டும். ஏரோது, ஏரோதியாள் போன்று பேராசையும், கர்வமும், பிரமாணமற்ற நிலையிலும் இருப்பவர்கள் எவரும், ராஜ தம்பதிகளின் தொடர்பைக் குறித்துக் கேள்வி எழுப்பத் துணியும் எந்தப் பிரசங்கிக்கும் எதிராக கோபமடைவதில், நமக்கு ஆச்சரியம் எதுவும் இல்லை. இதன் விளைவாக யோவான் சிறையில் அடைக்கப்பட்டார். யோவானுடைய பிரசங்கத்தின் மீதான பயத்தினிமித்தமே, ஏரோதியாள் பின்னிருந்து அனைத்தையும் தூண்டிவிட்டாள். ஒருவேளை ஏரோதுக்கு மனசாட்சி குத்தப்பட்டால் அல்லது ஏரோது தனது மனசாட்சிக்கு ஏற்ப செயல்படுமளவிற்கு, ஒருவேளை ஜனங்கள் கொந்தளித்து எழுந்தால், இதன்விளைவு நிச்சயமாக அவளுக்கான நன்மைகளை அழிக்கக்கூடியதாகவே இருக்கும்; அவள் அடைய வேண்டுமெனத் தன்னுடைய ஜீவியத்தையே தியாகம் பண்ணின, சமுதாயத்தின் மத்தியிலான அந்த உயர் ஸ்தானத்தை இழப்பதோடல்லாமல், அவள் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்; மற்றும் வீடும் அற்ற கீழான நிலைக்கும் ஆளாவாள். யோவானைச் சிறையிலடைத்த உடனே, அவரைக் கொன்றும் போடும்படிக்கு அவள் தனது கணவனை நிச்சயமாய்த் தூண்டியிருந்திருக்க வேண்டும்; ஆனால், யோவானைக் கொன்று போட்டால், அவரை ஒரு தீர்க்கத்தரிசியாக மதிக்கும் ஜனங்கள் மத்தியில் ஏற்படும் விளைவுகளினிமித்தமாக ஏரோது கொண்டிருந்த பயத்தினால், அவள் தூண்டுவதற்கு எடுத்த முயற்சி தடைப்பட்டது.

இன்னமும் திட்டம் போட்டுக்கொண்டிருந்த ராணி, இராஜாவின் ஜனன விழாவை பயன்படுத்திக்கொள்ள தீர்மானித்தாள்; ராஜாவின் குணத்தை அவள் அறிந்திருந்தாள்; மற்றும் அப்படியான கொண்டாட்டங்களில் மிகுந்த களிப்புக் காணப்படும் என்றும், பொதுவான சுதந்தரத்தை மிஞ்சி போதையூட்டும் பானங்கள் பயன்படுத்தப்படும் என்றுமுள்ள வழக்கத்தை அவள் அறிந்திருந்தாள். அக்கால வழக்கத்தின்படி, இப்படியாகக் கூடியிருக்கும் ஆண்கள், உடல் இன்பத்தைத் தூண்டும் நடனங்களை, மெல்லிய வஸ்திரமணிந்து ஆடும் நடன பெண்களால் மகிழ்விக்கப்படுவார்கள். மேலும், இராஜாவின் விருந்தை, ராணி தன்னுடைய முன்னாள் கணவனுடன் பெற்றுக்கொண்ட மகளாகிய சலோமி மூலம் கௌரவிக்கத்தக்கதாக ஏற்பாடு பண்ணினாள். அவளது திட்டமானது பயங்கரமாய் வெற்றியடைந்தது; இராஜாவும் அவருடைய அரச சபை உறுப்பினர்களும் மயக்கப்பட்டார்கள்; மற்றும் மதுபானத்தினாலும், தன்னுடைய தத்தெடுக்கப்பட்ட மகளின் மீதான பாசத்தினாலும், பொதுவாக வழங்கப்படும் சிறு அன்பளிப்பிற்குப் பதிலாக, சலோமி விரும்பியது எதையும் கேட்டுக்கொள்ளும்படி கூறினான். அவனது இராஜ்யத்தில் பாதி வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளும்படி கூறினான் என்று மாற்கு பதிவு செய்துள்ளார்.

## "இராஜாவின் மோசமான பேரம்"

இங்குப் பார்க்கிறபடி, மதுபானத்தினாலும், உணர்ச்சிகளின் தூண்டுதலினாலும் ஏற்பட்ட தன்னிலை மறந்த ஒரு கணிப்பே, இப்படி அவசர அவசரமான உறுதிமொழியை (promise), அநேக சூளுரைகளுடன் செய்ய, வழிநடத்தியிருக்க வேண்டும். இங்கிருந்து, கர்த்தருடைய ஜனங்களுக்கு இருக்கும் அனுகூலங்களில் ஒன்றை நாம் பார்க்கின்றோம்.

இவர்கள் தங்களுடைய இயல்பான/இயற்கையான கணிப்புக் கெடுக்கப்படுவதிலிருந்தும், மிஞ்சி காணப்படுவதிலிருந்தும் மாத்திரம் பாதுகாக்கப்படாமல் இன்னுமாக, இவர்கள் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ள வண்ணமாக "தெளிந்த புத்தியின் ஆவியையும்" பெற்றிருக்கின்றார்கள் (2 தீமோத்தேயு 1:7). கிறிஸ்துவின் மனமானது, கிறிஸ்துவின் பண்பானது, இப்படியான அறிவீனமான காரியங்களினின்று, மிகவும் நியாயமான காரியங்கள் மீது இருதயத்தைக் கொண்டுச் செல்கின்றது. கிறிஸ்துவின் மனமானது, காரியங்கள் குறித்த உண்மையான மதிப்பை நமக்குக் கொடுக்கின்றது. ஆனால், பொறாமையின் ஆவி போன்று, உலகத்தின் ஆவியானது, பெருமையின் ஆவியானது, பேராசையின் ஆவியானது, காரியங்கள் குறித்த தவறான மதிப்பைக் கொடுக்கத்தக்கதாக, கணிப்பைத் தவறாய்த் திருப்பக் கூடியதாய் இருக்கின்றது.

இங்கு இப்படியாக பல்வேறு மோசமான பேரங்களைச் செய்தவர்களை நாம் நினைவுக்குக் கொண்டு வருகின்றோம். ஏசா ஒரு பானை கூழுக்காக, ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தினுடைய சுதந்தரவாளியாகிய ஈசாக்கின் முதல் குமாரனாகிய தனக்குரிய சேஷ்ட புத்திரப் பாகத்தை விற்றுப்போட்டான்; யூதாஸ் தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்காக விற்றுப்போட்டதும், அவனுடைய அனைத்தையும் இழக்கப் பண்ணினதுமான மோசமான பேரத்தைக் குறித்தும் நாம் நினைவுகூருகின்றோம். இவ்விதமான மோசமான அல்லது அதிகம் விலையுள்ள பேரங்களைச் செய்தவர்களில் ஒருவன் ஏரோதாவான். "இராஜா துக்கமடைந்தான்" என்று பதிவுகள் தெரிவிக்கின்றபடி, ஏரோது தனது மனதின் சமாதானத்தை இழந்துவிட்டான். ஏரோது தனது அநீதி குறித்து அநேகமாக மனக்கிலேசம், அடிக்கடி அடைந்திருப்பான் என்பதிலும், அதுவும் கர்த்தருடைய விசேஷித்தவர்களாகிய ஒரு தீர்க்கதரிசிக்கு எதிரான தனது குற்றம் குறித்து, அநேகமாக மனதுக்கம் அடிக்கடி அடைந்திருப்பான் என்பதிலும் நமக்கு நிச்சயமே. யோவானின் மரணத்திற்குப் பிற்பாடுதான், இயேசுவைப் பொதுமக்கள் அதிகமாக அறிந்தார்கள். பிற்பாடு ஏரோது, இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்ட போது, கிரேக்கர்களின் கூற்றாகிய <u>மரித்தவர்கள் மரிக்கவில்லை</u> மாறாக, (நம்முடைய நாட்களில் ஆவியுலக ஊடகங்கள் மூலம் தொடர்புகொள்வதுபோன்று) <u>மரித்தவர்கள், உயிரோடிருக்கிற மற்ற நபர்கள் மூலம் தொடர்புகொள்ளும் வல்லமை கொண்டுள்ளார்கள்</u> என்பது உண்மையாக இருக்குமோ, இல்லையோ என ஏரோது யோசித்துக் குழப்பமடைந்தான். ஏரோதின் மனம் துக்கமடைந்தது, எனினும் அவன் தவறுக்காக வருந்தவில்லை.

இதே நிலை இன்றும் நிலவுகின்றது; ஜனங்கள் தாங்கள் தவறு என அறிகின்ற காரியங்களை, தங்களுடைய மனசாட்சியையும் மீறிச் செய்கின்றனர், துக்கமும் அடைகின்றனர்; எனினும், இது தேவனுக்கேற்ற துக்கமல்ல; ஏனெனில் அப்போஸ்தலர் தெரிவிக்கின்றது போல, தேவன் அங்கீகரிக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் துக்கங்கொள்ளும் வகையான <u>தேவனுக்கேற்ற துக்கமானது</u>, மனந்திரும்புதலை உண்டாக்குகின்றது. மற்றவிதமான துக்கங்கள், பாதிப்பையே உண்டாக்குகின்றது. ஆனால், தேவனுக்கேற்ற துக்கமானது, நன்மைக்கு ஏதுவானதாக இருக்கின்றது. தேவனுக்கேற்ற துக்கமானது, <u>மனந்திரும்புதலுக்கும், சீர்த்திருந்துவதற்கும்</u>, தேவன் இயேசுவுக்குள் நியமித்துள்ள ஏற்பாட்டின் மூலம் தேவனுடன் <u>ஒப்புரவாகுதல் அடைவதற்கும்</u> வழிநடத்துகின்றது. ஆகவே, நாம் கர்த்தருடைய ஜனங்களாகக் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருப்போமாக; மற்றும் கர்த்தருடைய ஆவியினால் நிரப்படுவதற்கேற்ப, உலகத்தின் ஆவியையும், சுயசித்தத்தின் ஆவியையும், மயக்கத்தின் ஆவியையும் வெளியேற்றி விடுவோமாக; மற்றும் புதிய மனதின் ஆவியை, தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொண்டிருப்போமாக. ஒருவேளை எவன் மாம்சத்தின் ஆசைகளுக்கு ஒப்புக்கொடுத்ததின் காரணமாக, தான் பாவத்தில் இருப்பதை உணர்கின்றானோ, இப்படியாக கீழ் நோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடியிரும் ஏதேனும் நன்மை உண்டாகுமோ என நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதை நினைவுகூரக்கடவன். இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்கள் கர்த்தரைத் தேடுவதற்கும், விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் துப்புரவாக்கப்படுவதற்கும், கழுவப்படுவதற்கும், சுத்திகரிக்கப்படுவதற்கும், பிற்பாடு பாவத்திற்கெதிராக அதிக ஜாக்கிரதையுடன் காணப்படுவதற்குமென எதையும் இழக்கவும் துணிந்துத் துரிதமாய்ச் செயல்பட வேண்டும்.

## “யோவான் விவேகமற்றுச் செயல்பட்டாரா?”

யோவானின் செயல்பாடு குறித்துத் தீர்ப்புச் சொல்வதும், இராஜா மற்றும் ராணியைக் குற்றப்படுத்தியதில், யோவான் தனக்கான வேலையை மிஞ்சி செயல்பட்டாரா அல்லது இல்லயைா என்று தீர்ப்புச் சொல்வதும் நமக்கடுத்த காரியமல்ல. எனினும், யோவான் தனது கடமையையும்/வேலையையும் மிஞ்சி செயல்பட்டார் என்றே நமக்குத் தோன்றுகின்றது. நம்முடைய கணிப்பின்படி, அக்காலத்தில் இயேசுவினாலும், அப்போஸ்தலர்களினாலும் கடுமையாய்க் குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவாக அநேக அதிகாரிகள் காணப்பட்டார்கள். எனினும், யோவான் செய்ததுபோல, இயேசுவும், அப்போஸ்தலர்களும் செய்ததாக எவ்விதமான சான்றும் நமக்கு இல்லை. இயேசு, பிலாத்துவுக்கு முன்பும், இந்த ஏரோதுக்கு முன்பும் கொண்டுச் செல்லப்பட்டார். எனினும், யோவான் பேசினது போன்று, எந்த ஒரு வார்த்தையையாகிலும் இயேசு பேசினதாக நமக்கு எந்தப் பதிவும் இல்லை. பவுலுங்கூட அகிரிப்பா, மற்றும் பேலிக்ஸ் மற்றும் அக்காலக்கட்டத்தில் முன்னிலை வகுத்தவர்கள் முன்புக் கொண்டுச் செல்லப்பட்டார்; இவர்களில் சிலர், வரலாற்றின்படிக் கெட்ட பெயர்களையுடைய மனிதர்களாகவும் காணப்பட்டனர்; எனினும், இவர்களைத் தனிப்பட்ட விதத்தில் எவ்விதமான கடுமையான சொற்களினால் பவுல் தாக்கவில்லை; பவுல் அகிரிப்பாவிடம், “இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார்” (அப்போஸ்தலர் 26:29), அதுவும், “நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்” என்ற அகிரிப்பாவின் வார்த்தைகளுக்குக் கருத்துத் தெரிவிப்பதற்கே அவ்வார்த்தைகளைப் பவுல் கூறினார்.

நாம் புரிந்திருக்கின்றவரையிலும் உலகத்துக்குள் சென்றுப் பாவத்தைக் கண்டிப்பதாக இல்லாமல், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே கர்த்தருடைய ஜனங்களுக்கான வேலையென வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. நம்முடைய வார்த்தைகளினாலும், நம்முடைய ஜீவியங்களினாலும் நாம் பிரசங்கிக்கும் சுவிசேஷமானது, “விசுவாசிக்கிறவனெவனோ, அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனாயிருக்கிறது.” கர்த்தருடைய ஜனங்களில் சிலர் இப்படியான காரியங்களில், கர்த்தர் இயசுவையும், அப்போஸ்தலர்களையும் பின்பற்றுவதற்குப்பதிலாக, யோவானின் நடவடிக்கையைப் பின்பற்றுவது தங்களது கடமை என்று எண்ணுவதினாலும், இதில் அவர்கள் தவறு புரிவதினாலும், மேற்கூறிய காரியங்களை நாம் வலியுறுத்துகின்றோம். <u>மனிதனுடைய இருதயங்களை நொறுக்குவதற்கல்லாமல்,</u> மாறாக நொறுக்கப்பட்ட இருதயங்களைக் <u>கட்டுவதற்கு</u> அதாவது, ஏற்கெனவே நொறுக்கப்பட்டிருக்கும் இருதயங்களை உடையவர்களைச் <u>சுகப்படுத்துவதற்கே சுவிசேஷம் அனுப்பப்பட்டுள்ளது.</u> பாவமும், அதன் <u>இயல்பான தண்டனைகளும்,</u> மனிதனுடைய இருதயங்களை <u>நொறுக்கும் சுத்தியல்களாக</u> இருக்கின்றது. வரவிருக்கும் மகா உபத்திரவக் காலமானது, முழு உலகத்தினுடைய இருதயங்களை நொறுக்குவதற்கான <u>தேவனுடைய வழிமுறையாகக்</u> காணப்படுகின்றது; அதாவது, கீலேயாத்தின் பிசின் தைலத்திற்கும், மற்றும் பின்வரும் ஆயிரவருட யுகத்திற்குரிய பொதுவான ஆசீர்வாதங்களுக்கும் ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்குமான, <u>தேவனுடைய வழிமுறையாக</u> மகா உபத்திரவக் காலம் காணப்படுகின்றது. சுவிசேஷத்தைச் சுத்தியலாகப் பயன்படுத்துகின்றவர்கள், தனது வேலையைக் குறித்துத் தவறாய்ப் புரிந்துக்கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஒட்டுமொத்த கிறிஸ்துவுக்குள்ளான வேலையைக் குறித்துக் “கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறுவதுமாகும்” என்று வாசிக்கின்றோம் (ஏசாயா 61:1).

## “நன்மைக்கு அல்லது தீமைக்கு வழிநடத்தக்கூடிய பெற்றோரின் செல்வாக்கு”

ஏரோதியாள், ஏரோது மீது கொண்டிருந்த அதிகாரமானது, அவளுடைய மகளாகிய சலோமியின் மீது அவள் கொண்டிருந்த அதிகாரத்தில் விளங்குகின்றது. இராஜாவின் தாராளமான கொடை, இளம் பெண்ணாகிய சலோமியின் மனதில் சலனத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஐசுவரியங்கள், அரண்மனைகள், பகட்டுகள் அவளுடைய

மனதிற்கு முன்பு தோன்றியிருக்க வேண்டும்; ஆனால், அவள் தாயின் அறிவுரையின்படி வழிநடத்தப்பட்டிருக்கிறபடியால், இப்பொழுதும் அவள் தாயின் ஆலோசனையை நாடி, "நான் என்ன கேட்க வேண்டும்" என்று கேட்டாள் (மாற்கு 6:24). இங்குப் பெற்றோருடைய செல்வாக்குக் குறித்துக் காட்டப்படுகின்றது. பொல்லாத ஸ்திரீயாகிய ஏரோதியாள், தனது மகளுடைய பாசத்தையும், அவளுடைய முழுமையான நம்பிக்கையையும் மற்றும் கீழ்ப்படிதலையும் தன்வசமாகக் கொண்டிருந்தாள். நன்மை (அ) தீமை வழியில் அந்த வாலிப பெண்ணின் மனதை வழிநடத்துவது, ஏரோதியாளின் கரங்களில் இருந்தது. இது ஓரளவுக்கு ஒவ்வொரு பெற்றோரின் விஷயத்திலும், அதிலும் விசேஷமாக ஒவ்வொரு தாய்மாருடைய விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது. பிள்ளைகளின் நடத்தை/வாழ்க்கை விஷயத்தில் தாய், தகப்பன்மாருடைய பொறுப்பு எவ்வளவு அதிகமாய்க் காணப்படுகின்றது! கர்த்தருடைய ஜனங்களுடைய தெளிந்த புத்தியின் ஆவியானது, மாம்ச உறவுமுறை மற்றும் வாய்ப்பினடிப்படையில் பெற்றோர்களுக்குச் சொந்தமான இந்த வல்லமையான செல்வாக்கை, தங்களுடைய வழிநடத்துதலின் கீழிருப்பவர்களைச், சரியானப் பாதையில் வழிநடத்துவதற்கு ஏதுவாக பயன்படுத்த நிச்சயமாய்த் தூண்டும்.

அந்தோ பரிதாபம், கிறிஸ்தவ தாய்மார்களில் சிலர்கூட இப்படியான வாய்ப்புகளை எடுத்துக்கொண்டு, தங்களது பிள்ளைகளை, பரலோக வழிகளில் நடத்துவதற்குத் தவறிவிடுகின்றனர். இவர்கள் கர்த்தருடைய நோக்கத்திற்காக தங்களுடைய பூமிக்குரிய நன்மைகளைத் தியாகம் செய்திடவும் மற்றும் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்க விரும்பினாலும், இவர்களுக்குள்ளாகவே அதிகமான உலகத்தின் ஆவி இருப்பதினால், இவர்கள் ஞானத்தின் வழிகளே இனிமையான வழிகள் என்பதையும், மற்ற அனைத்துப் பாதைகளும் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் உபத்திரவத்திற்கே வழிநடத்தும் என்பதையும் உணர தவறிப்போய், தங்களது பிள்ளைகளையும் (இந்த ஞானமான வழிகளில்) பங்கெடுக்க வைப்பதில் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை இவர்கள் புரிந்துக்கொள்ள தவறிவிடுகின்றனர் (ரோமர் 12:1). மற்ற அனைத்துப் பாதைகளும் புத்தியற்றதும், ஞானமற்றதும், பகுத்தறிவில்லாததுமாக இருக்கின்றது.

இராஜாவினால் முன்வைக்கப்பட்ட பெரிய காரியங்கள் மீதான மகள் சலோமியின் விருப்பங்களுக்கு, தாய்க் கொடுக்கும் பதிலை, பின்வருமாறு ஒருவர் சித்தரித்துள்ளார். "முட்டாளே நீ என்ன கேட்கின்றாய் என்பது உனக்குப் புரியவில்லை. யோவான் ஸ்நானன் உயிரோடு இருக்கும் பொழுது, என்றாவது ஒருநாள் நான் ராணி ஸ்தானத்திலிருந்து விலக்கப்பட்டு, தள்ளப்படும் போது, இந்த ஆடம்பரமும், அரண்மனையும், உனக்கும், எனக்கும் எப்படிப் பயனாக இருக்கும்?" தீர்க்கத்தரிசி அகற்றப்பட்டால், அனைத்து நன்மைகளும் தனக்கும், தன் மகளுக்கும் கிடைக்கும் எனத் தாயானவள் நிச்சயமாய் எண்ணியிருந்திருக்க வேண்டும். தீர்க்கத்தரிசியின் தலை வேண்டும் என்றும், அதுவும் உடனடியாக, இப்பொழுதே ஒரு தாலத்திலே (விருந்துகளில் பயன்படுத்தப்பட்ட பெரிய தட்டு) தரும்படிக்குக் கேட்க, ஏரோதியாள் தன் மகளிடம் கூறினாள். இராஜாவின் உணர்வுகள் தணிந்து, அவர் நிதானமாக முடிவெடுத்துவிடுவார் என்ற பயத்தினால், துரிதமாய்ச் செயல்படுவது ஏரோதியாளுக்கு அவசியமாய் இருந்தது. இராஜா பானத்தின் மயக்கத்தில் இன்னமும் இருக்கும் போதும், மற்றும் இராஜாவின் சூளுரையைக் கேட்ட அவருடைய அரண்மனை ஆலோசனை உறுப்பினர்கள் அங்கு இன்னமும் கூடியிருக்கும்போதும் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற துரிதம் ஏரோதியாளுக்கு இருந்தது.(ஒரு கைதி தொடர்பான விஷயத்தில், இராஜாவினுடைய தீர்ப்பு மாற்றங்கள் அவனை மற்றவர்களுக்கு முன்பு அவநம்பிக்கைக்குரியவராகக் காட்சியளிக்கும்). இராஜா ஒப்புக்கொடுத்துவிட்டார்; எனினும், ஏரோதியாள் தனக்கு வருமெனப் பயந்த அபாயத்தினின்று தப்பிக்க முடியவில்லை; ஏனெனில், பத்து வருடங்களுக்குள்ளாக அவளுடைய பேராசைகள், ஏரோதைக் கூடுதலான மதிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, ரோமிடம் மன்றாடும்படிக்கு, அவனுடைய கணிப்பிற்கு எதிராக தூண்டினது என்றும், கோரிக்கை மறுக்கப்பட்டது என்றும், ஏரோது பதவி நீக்கப்பட்டு, கவுலில் உள்ள லையான்சில் நாடு கடத்தப்பட்டான் என்றும், அங்குச் செத்துப்போனான் என்றும் சரித்திர பதிவுகள் தெரிவிக்கின்றன.

## "எதிர்க்காலத்தில் நமக்கு நிறைவேறுவதற்கான சாத்தியக்கூறு"

யோவான் ஸ்நானன், எலியாவின் நிஜமாக இருக்கின்றார் என்ற உண்மையையும், சுவிசேஷ யுக சபையாகிய சரீரமும், தலையும், அதாவது மாம்சத்தில் இருக்கும் கிறிஸ்துவும், இன்னும் மேலான, பிரம்மாண்டமான நிஜமாக இருக்கின்றார்கள் என்ற உண்மையையும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். பதினெட்டு நூற்றாண்டுக் காலமாக (அ) இதற்கு அதிகமான காலங்களாக இந்த மாபெரும் எலியா (வகுப்பார்), உலகத்தில் நீதியைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கின்றனர், மற்றும் மனந்திரும்பும்படி அழைத்துக் கொண்டிருக்கின்றனர்; கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபையின் வருகை என்பது, உலகத்தை நியாயந்தீர்ப்பதற்கும், ஆசீர்வதிப்பதற்குமான தேவனுடைய இராஜ்யமாக இருக்கின்றது என அறிவித்தும் கொண்டிருக்கின்றனர். இஸ்ரயேலில் சிலர் மாத்திரமே தேவனுக்கு உண்மையாய் இருந்ததை எலியா கண்டதுபோல இரண்டாம் எலியாவும் (யோவான்), மாம்சத்தில் இருந்த இயேசுவைச் சந்திக்க சொற்பமானவர்களே ஆயத்தமாய் இருந்ததைக் கண்டார்; மற்றும் இதுபோலவே மாபெரும் நிஜமான எலியாவும் (மாம்சத்தில் இருக்கும் சபையும்) சொற்பமானவர்களே, அதாவது சிறு மந்தையினரே செவிசாய்ப்பதையும், இராஜ்யத்திற்குச் சரியாய் ஆயத்தமாய் இருப்பதையும் கண்டனர். இப்படியாகவே இந்த வேலை திட்டமிட்டு/வடிவமைக்கப்பட்டுள்ளது; மேலும், மல்கியா தீர்க்கதரிசி மூலம் முன்னுரைக்கப்பட்டது போல, அதிகமான/பெரிய பலனைக் கொடுக்கத் தவறியது என்பது இராஜ்யம் சமாதானமாய் அறிமுகப்படுத்தப்படாமல், பலவந்தமாவே அறிமுகப்படுத்தப்படும் என்பதைக் குறிக்கின்றது; அதாவது, மகிமையின் இராஜாவை, பூமியின் அதிபதியாக நிறுவுவதற்கும், புறஜாதிகள் அனைவரும் கர்த்தரை நாடுவதற்கும் மற்றும் கர்த்தரைப் பற்றின அறிவு முழுப் பூமியையும் நிரப்புவதற்கும் மற்றும் அவருடைய இராஜ்யம் வருவதற்கும் மற்றும் பரலோகத்தில் செய்யப்படுவது போல அவர் சித்தம் பூமியில் செயல்படுத்தப்படுவதற்குமென, தேசங்கள் இருப்புக் கோலால் அடிக்கப்படுவதும், குயகலத்தைப் போல் அவர்களை உடைத்துப் போடுவதும் அவசியமாய் இருக்கும்.

மற்றுமொரு கருத்துப் பின்வருமாறு: முதல் யேசபேல், முதல் எலியாவை துன்பப்படுத்தினபடியால், அவர் வனாந்தரத்திற்குத் தப்பிப்போனார்; மற்றும் எலியா மீண்டும் திரும்பி வந்து, மாபெரும் அற்புதம் செய்து, சிலரின் இருதயங்களைக் கர்த்தர் பால் திருப்பினார்; அவர் உயிரை எடுக்க நாடின யேசபேலிடமிருந்து தப்பி ஓடும் நிர்ப்பந்தம் அவருக்கு இரண்டாம் முறையும் ஏற்பட்டது. இரண்டாம் எலியாவாகிய, யோவான் ஸ்நானனின் விஷயத்திலும், அனுபவங்கள்/நிகழ்வுகள் கிட்டத்தட்ட ஒன்றாகவே இருக்கின்றது, மற்றும் ஏரோதியாளாகிய யேசபேல் தீர்க்கதரிசியை அழிக்கும் விஷயத்தில் இறுதியில் வெற்றிக் கொண்டாள். மூன்றாம் எலியாவின் (மாம்சத்தில் உள்ள சபை) விஷயத்திலும், யேசபேல் எனும் பெயருள்ள ஸ்திரீ வெளிப்படுத்தல் 2:20-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளாள்; மற்றும் அவளுடைய பெரும் கேடு விளைவிக்கும் வேலையும், சபை வனாந்தரத்திற்குத் தப்பி ஓடுவதும் (வெளிப்படுத்தல் 12:6) மற்றும் வனாந்தர நிலையிலிருந்து சபை, சீர்திருத்தலின் காலங்களில் திரும்பினதும் நன்கு அறிந்த காரியங்களேயாகும். இப்பொழுது (பெயர்ச்சபையின் மீதல்ல) உண்மையான சபையின் மீது இரண்டாம் தாக்குதலை நாம் எதிர்ப்பார்க்கின்றோம்; மேலும், யோவான் ஸ்நானனுடைய விஷயத்தில் நடந்தது போன்றே, மாம்சத்திலுள்ள கிறிஸ்துவின் சரீரத்தில் அடங்கும் உண்மையுள்ள அங்கங்கள் மீதான, பாபிலோனிய ஸ்திரீ மற்றும் அவளுடைய கள்ளக்காதலனாகிய உலகத்தின் இரண்டாம் தாக்குதல் முழுமையாய் வெற்றியடைவது போன்று காணப்படும். இப்படியாக நடக்குமாயின், நாம் நிச்சயமாய் ஆச்சரியமடைவதில்லை; இதுவும் அனைத்துக் காரியங்களும் கர்த்தரை அன்புகூருகின்றவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். திரைக்கு அப்பாலுள்ள நமக்கான பரிசை நாம் அடைய வேண்டுமெனில், நாம் அனைவரும் மரிக்க வேண்டும். திரையின் இப்பக்கத்தில் காணப்படும் எலியா வகுப்பார் கண்டிப்பாக வெற்றியடைய வேண்டும், மற்றும் வெற்றியடையவும் செய்வார்கள். ஆனால், பார்வைக்குத் தோல்வி போன்றுத் தோன்றும், இந்தத் தோல்வியானது இராஜ்யத்தின் மகிமைகளையும், வல்லமைகளையும், வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களையும் துரிதமாக மேப்படுத்துகின்றது. "ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளிப்படுத்தல் 2:10).

## “இயேசுவிடம் போய்ச் சொல்லுங்கள்”

யோவான் ஸ்நானனுடைய சீஷர்கள், அவருடைய மரணம் குறித்த செய்தியுடன் எங்குச் செல்ல வேண்டும் என்று அறிந்திருந்தார்கள். அதாவது, தங்களது இந்த இழப்புத் தொடர்பாக எங்கு அனுதாபத்தையும், ஆறுதலையும் அடையலாம் என்று அறிந்திருந்தார்கள். சோதனைகள், கஷ்டங்கள், உபத்திரவங்கள், துக்கங்கள் மற்றும் ஏமாற்றங்களுடன் நாம் யாரிடத்தில் போக வேண்டும்? நமக்கு மிகவும் பாரமாயிருக்கும் யாவற்றையும் கர்த்தரிடத்தில் கொண்டு வரும்படிக்கு கர்த்தர் நம்மை அழைக்கின்றார். அவர் நம்மைப் பராமரிப்பார், மற்றும் நம்பிக்கையுள்ள ஆத்துமாக்களுக்கு அவர் ஆசீர்வாதம் அருளுவார். இயேசுவிடம் சென்ற யோவானுடைய சீஷர்கள் சந்தேகத்திற்கிடமின்றி, அவருடைய சீஷர்கள் ஆனார்கள்; மற்றும் இவ்விதமாக அவர்களுடைய தலைவரும், குருவுமாயிருந்த யோவான் ஸ்நானனுடைய மரணம் தொடர்பாக, அவர்களுக்கு நேரிட்ட சோதனைகள், அவர்களை மாபெரும் போதகர் குறித்த நெருக்கமான அறிவிற்குள்ளாகவும், உறவிற்குள்ளாகவும் கொண்டு வந்தது. இப்படியாகவே, தற்காலத்தில் கர்த்தருடைய ஜனங்களின் தோழர்களாய் இருப்பவர்களின் விஷயத்திலும் காணப்படும். அதாவது, நிஜமான எலியாவின் மீதான நிஜமான யேசபேலின் பழிவாங்குதல், நிஜமான எலியாவினுடைய நண்பர்களை இன்னும் அதிகமான அன்பிற்குள்ளும், நன்மைக்கு ஏதுவாகவும் வழிநடத்தும்; அதாவது, “திரள் கூட்டத்தினர்” மிகவும் நெருக்கமாக கர்த்தரிடத்தில் ஈர்க்கப்படுவார்கள்.

## “நம்முடைய ஆதார வசனம்”

யோவான் ஸ்நானனுக்கு ஜீவகிரீடம் வாக்களிக்கப்படவில்லை. இந்த வாக்குத்தத்தமானது, சுவிசேஷ யுக சபை அதாவது, அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாகிய நமக்கே உரியதாகும். எனினும், யோவான் ஸ்நானன் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார். ஏனெனில், அவரைக் குறித்து, "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படுவதாகப் பார்க்கின்றோம் (லூக்கா 7:28).

---

**R3779**

# “அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார்”

## மாற்கு 6:30-44

"என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார்." - யோவான் 6:32

இரண்டிரண்டு பேராகக் கர்த்தர் அனுப்பி வைத்திருந்த ஊழியத்திலிருந்து, பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் திரும்பினார்கள். அவர்கள் ஐயத்திற்கு இடமின்றி குறிப்பிட்ட காலம் நியமிக்கப்பட்டுத் திரும்பியிருக்க வேண்டும். அநேகமாக கப்பர்நகூமே ஒன்றுகூடிச் சேரும் இடமாக இருந்திருக்க வேண்டும். இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களின் வந்திருத்தல், ஜனங்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தினது. ஏனெனில், அச்சமயம் நமது கர்த்தருடைய கீர்த்திப் பரவலாய் பரவி காணப்பட்டது. இயேசுவின் ஆலோசனையின்படி, பன்னிரண்டு பேரும், அவர்கள் தங்கள் காரியங்களைக்குறித்துத் தொந்தரவுகளின்றி பேசுவதற்கும், அதாவது தங்களது ஊழியத்தில் ஏற்பட்ட தங்களது அனுபவங்களைக்குறித்துப் பேசுவதற்கும், அவர்களது அனுபவம் தொடர்பாக தாம் கொடுக்க விரும்பும் பாடங்களை இயேசு அளிப்பதற்குமெனப் பன்னிரண்டு பேரும் அவருடன்கூட வனாந்தரமான இடத்திற்குப் போனார்கள். அவர்களுக்கு இந்த இளைப்பாறுதல் பயனுள்ளதாக இருக்கும் என நமது கர்த்தர் கூடக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பாடம் இன்று வாழும் நமக்குப் பொருந்தும் அல்லவா?

## ‘ஜனங்கள் எதிர்ப்பார்ப்பில் காணப்பட்டார்கள்’’

ஜனங்கள் கர்த்தருடைய போதனைகளுக்குப் பசியாக இருந்தபடியால், படகு சென்ற திசையைக் கவனித்து, அநேகர் கால்நடையாய் நடந்து, படகு சென்ற திசைக்குச் சென்றனர். மேலும், சிலர் ஓடிச் சென்றபடியால் ஆண்டவர் சென்ற படகு கரையை எட்டுவதற்கு முன்பாக இடத்தையடைந்து அவருக்காகக் காத்திருந்தனர். ஏற்கெனவே அநேக காரியங்களைத் தம்மிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஜனங்கள், தாம் தனிமையில் இருப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் எடுத்திட்ட முயற்சியைக் குறிக்கிட்டதினிமித்தம், கர்த்தர் கோபம் அடைந்தாரா? இல்லை! கோபங்கொள்ள முடியாத அளவுக்கு அவருடைய இருதயம், அனுதாபத்தினால் நிறைந்திருந்தது. அவர் ஜனங்களைக் கண்டு மனதுருகினார்; காரணம், அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக இருந்தார்கள். யோவான் ஸ்நானன், தேவனுடைய இராஜ்யம் வருவதைக்குறித்து அறிவித்துக் கொண்டு வந்தார். இயேசுவும் இராஜ்யத்தைச் சித்தரிக்கும் உவமைகளைக் கூறினார். இதை ஜனங்கள் பூரணமாய்ப் புரிந்துக்கொள்ளவில்லை. கர்த்தர் இரண்டிரண்டு பேராக அனுப்பி வைத்திட்ட சீஷர்களும் மனந்திரும்புதலைக்குறித்தும், இராஜ்யத்திற்காக ஆயத்தப்படுவதுகுறித்தும் அறிவித்தார்கள். பொல்லாப்பான ஜீவியம் பண்ணி வந்த ஏரோது இராஜா, தீர்க்கத்தரிசிகளில் பெரியவர்களில் ஒருவரான யோவானைச் சிரைச்சேதம் பண்ணினான். பின்னர், அவன் தள்ளிவிட்ட மனைவியின் தகப்பனாகிய, அரபிய தேசத்து இராஜாவாகிய அரேத்தாவுடன் யுத்தம் பண்ணிக்கொண்டிருந்தான். ஏரோதின் சேனை தோற்றது. மேலும், ஜனங்கள் மத்தியில் கொந்தளிப்பும், கிளர்ச்சியும் காணப்பட்டது. இந்தக் குழப்பங்களின் முடிவு என்னவாக இருக்கும் என்றும், தேவனுடைய இராஜ்யம் எப்பொழுது மற்றும் எப்படி ஸ்தாபிக்கப்படும் என்றும், ஜனங்கள் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இயேசு உண்மையில் மேசியாவா (அ) இல்லையா என்றும், அவர் சீக்கிரத்தில் தம்மை இராஜாவாக அறிவிப்பாரா என்றும், முன்வந்து தங்களை ஒப்புக்கொடுக்கும் போர்ச்சேவகர்களை அழைப்பாரா என்றும், ஜனங்களுக்குள் கேள்விகள் எழும்பியது. இக்காரியம் குறித்து ஜனங்கள் மிகவும் உற்சாகமடைய ஆரம்பித்தார்கள். மேலும், இப்படியாக இருந்த சில நாட்களுக்குள்ளாகத் தெய்வீகத் திட்டம் மற்றும் கர்த்தருடைய ஏற்பாட்டிற்கு எதிர்மாறாக, ஜனங்கள் தம்மை வலுக்கட்டாயமாக, இராஜாவாக்கி விடாதபடிக்கு, கப்பர்நகூமில் கர்த்தர் தம்முடைய பொதுப்படையான ஊழியத்திலிருந்து விலகினார் என்றும் நாம் அறிவோம்.

நமது கர்த்தர் இளைப்பாற விரும்பினாலும், ஜனங்களுக்குப் போதிப்பதை அவரால் செய்யாமலும் இருக்கமுடியாது. அவர் உண்மையான மேய்ப்பர் ஆவார்; மற்றும் கல்வாரியில் மாத்திரமல்லாமல் மாறாக, அனைத்து மணி நேரங்களிலும், தினமும், தம்முடைய பலியின் உச்சக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் தமது ஊழிய வருடங்களிலும், தமது ஊழியத்தை நிறைவேற்றுவதற்கும், ஆடுகளுக்காகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கும் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருந்தார். இதுவே கர்த்தருடைய உண்மையான சீஷர்கள் அனைவரின் ஆவியாக/சிந்தையாகக் காணப்பட வேண்டும்; இந்த ஆவி/சிந்தையானது, அவருடைய வார்த்தைகளை உட்கொண்டு, அவருடைய வழிகாட்டிகளைப் பின்பற்றி, கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்வதன் மூலம், ஆண்டவருடைய பரிசுத்த ஆவியில் பங்கடைகையில் அதிகமடையும்.

## “உம்முடைய இராஜ்யம் வருவதாக’’

பாபிலோனிலுள்ள அநேக கர்த்தருடைய ஜனங்கள், இதே நிலையில் காணப்படுகின்றனர்; அதாவது, நாம் குறிப்பிடத்தக்க காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றும், மாபெரும் சில யுக மாற்றங்கள் நடைபெறவிருக்கின்றது என்றும் எளிதில் ஒத்துக்கொள்கின்றனர். ஆயிர வருட இராஜ்யம் சமீமாய் இருக்கின்றது எனவும், அது வாசலருகே வந்துவிட்டது எனவும் சில காரியங்களைக்குறித்து அநேகர் கேட்டிருக்கின்றனர்; மற்றும் அந்த ராஜ்யம் எப்படி, எப்பொழுது, எங்கு, ஏன் ஸ்தாபிக்கப்படும் என்றும் யோசித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அரசியல் தலைவர்களை உற்று நோக்குகையில் ஏறக்குறைய குழப்பத்தையே காண்கின்றனர்; மற்றும் யுத்தங்கள் பற்றியும், யுத்தங்கள் பற்றின வதந்திகளையும் கேள்விப்படுகின்றனர் மற்றும் சீக்கிரத்தில் அனைத்துக் காரியங்களும் சரியாகிவிடும் என்ற பொதுவுடைமைக் கொள்கைவாதிகளின் குரல்களையும் கேட்கின்றனர். இவர்கள், முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்குமிடையே சீக்கிரம்

பிரச்சனைக்குரிய காலம் வரவிருக்கின்றது என்றும் கவனிக்கின்றனர்; மேலும், இவர்கள் தங்களுக்கான சரியான நடத்தை என்னவாகக் காணப்பட வேண்டும் என்பது தொடர்பான தகவலுக்காக, வழிகாட்டிக்காக, வழிநடத்துதலுக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போன்றே இவர்கள் காணப்படுகின்றனர்.

பாபிலோனில் அநேக மேய்ப்பர்கள் இருப்பது உண்மைதான். ஆனால், இந்த மேய்ப்பர்களோ, தங்களை அவநம்பிக்கைக்கு நேராகவும், பரிணாமகொள்கைகளுக்கு நேராகவும், வேதாகமத்தில் குற்றம் கண்டுபிடிக்கும் தன்மைக்கும் நேராகவும் வழிநடத்துகின்றனர் என எந்தளவுக்கு மந்தைகள் கவனிக்கின்றார்களோ, அவ்வளவாய் இந்த மேய்ப்பர்களுடைய வழிநடத்துதலில் ஆடுகளுக்கு பயமும், நம்பிக்கையின்மையும் ஏற்பட்டுள்ளது. யாரிடம் செல்ல வேண்டும் என்று தெரியாமல் (பாபிலோனுக்குள் இருக்கும் இந்த) ஆடுகள் காணப்படுகின்றனர். இவர்களுடைய செவிகளுக்கு எட்டும் மிகவும் திருப்திகரமான பாகம், நாம் அறிவிக்கின்ற இராஜ்யத்தின் செய்தியாகும். எனினும், பயத்தின் மூலமாகவும், மூடநம்பிக்கைகள் மூலமாகவும், பாதிரியார்களின் சூழ்ச்சி மூலமாகவும் இவர்களை அடக்கி வைத்துள்ள, இவர்களுடைய மேய்ப்பர்களின் வெளிப்படையான கண்டனம் மற்றும் பழிப்புரை மத்தியில் இச்செய்தியை ஏற்றுக்கொள்ள பயப்படுகின்றனர். கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கமும், தாங்கள் கர்த்தருக்காக ஸ்தானாதிபதியாக இருக்கிறார்கள் என்றும், சகல ஜனங்களுக்கும் மகா சந்தோஷமாயிருக்கும் நற்செய்தியை அறிவிப்பதிலும், ஆடுகளைச் சரியான வழியில் உண்மையான மேய்ப்பனிடம் வழிநடத்துவதற்கு உதவுவதிலும் கர்த்தருடைய வாய்க்கருவியாக பயன்படுத்தப்படுவதில் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஓரளவுக்குப் பசியாய் இருக்கும் அனைவரையும் வழிநடத்திவிடலாம் என நாம் எதிர்ப்பார்க்க முடியாது; அந்நியர்களின் சத்தத்திற்குச் செவிக்கொடுக்காமல், மாறாக தேவனுடைய குமாரனுடைய சத்தத்தை அதாவது, சத்தியத்தின் குரலைப் பின்தொடரத்தக்கதான இருதய நிலையில், ஒரு சிறு மந்தையினர் மாத்திரமே காணப்படுவார்கள் என்பது நிச்சயமே. எனினும் ஆண்டவர்போல, நாமும் அனைவர் மேலும் மனதுருக்கங்கொண்டு, தற்காலத்தில் தெளிவாகக் கேட்க முடியாதவர்கள், வெகு சீக்கிரத்தில், இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, செவிடான காதுகள் அனைத்தும் திறக்கப்பட்டு, தேவனுடைய மகிமை பற்றின அறிவு முழுப் பூமியையும் நிரப்பும்போது, தெளிவாகக் கேட்பார்கள் என்பதினால் களிக்கூர வேண்டும்.

## "அநேக விசேஷங்களை அவர்களுக்குப் போதித்தார்"

ஆண்டவருடைய மாதிரியிலிருந்து, நாம் ஒரு படிப்பினையை எடுத்துக்கொள்ள வேண்டும். திரளான ஜனங்களுடைய நன்மைக்கு ஏதுவானதும், ஆறுதலுக்கு ஏதுவானதும் மற்றும் போகப்போக ஆழமான காரியங்களை அவர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக (அவர்களை ஆயத்தம் பண்ணுகிறதுமான) அநேக காரியங்களை அவர் ஜனங்களுக்குக்கூட போதித்திருக்க முடியும். அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும், அவருடைய விசேஷித்த அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாய் இருந்தவர்களுக்குங்கூட, அவர் கூறுவதற்கு இன்னும் அநேக காரியங்கள் இருந்தது. "தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது" (மாற்கு 4:11). எனினும் சீஷர்களுக்குக் கூடச் சொல்லப்படாமல் விட்டுவிடுவதற்கு ஏதுவான சில விஷயங்கள் இருந்தது. "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான் 16:12, 13).

அப்போஸ்தலர் கூறுகிறதுபோல, தேவனுடைய ஆழமான காரியங்களையும், இரகசியங்களில் மறைக்கப்பட்டுள்ள தேவனுடைய ஞானத்தையும், அவரைப்பற்றின அறிவில் வளர்ந்துள்ளவர்களிடத்திலும், ஆழமான சத்தியங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இருதயத்தில் ஆயத்தமாய்க் காணப்படுபவர்களிடத்திலும் நாம் பேசலாம். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருப்பவர்களை, பலமான ஆகாரத்தினால் மூச்சுத் திணற

செய்துவிடுவதற்கு எதிராக, நாம் விசேஷித்த விதமாக ஜாக்கிரதையுடன் காணப்பட வேண்டும். எனினும், நாம் அவர்களைப் பட்டினியும் போடக்கூடாது. மாறாக, அவர்கள் வளரத்தக்கதாக, அவர்களுக்குப் பால் ஆகாரத்தை நாம் கொடுத்திட வேண்டும். நமது கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய முன்மாதிரியையும் நாம் நினைவில் கொள்வோமாக; அவர், "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத்தேயு 10:16) என்றார். இந்த அவருடைய வார்த்தைகளை வாசிக்கும் ஒவ்வொருவரும், கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும், ஊழியம் புரிவதற்கு ஆரம்ப காலங்களில் நீங்கள் எடுத்திட்ட பிரயாசங்களில், நன்மைக்குப் பதிலாகப் பாதிப்பையே உண்டு பண்ணினீர்கள் என்று கண்டிப்பாக உணர்ந்துக்கொள்வீர்கள்; இப்படியாக நன்மைக்குப்பதிலாக பாதிப்பு ஏற்படுத்தினதற்குக் காரணம் ஞானமின்மையும், முன்யோசனையற்ற தன்மையும், கர்த்தருடைய அறிவுரைகளுக்குச் செவிக்கொடுக்கத் தவறிப்போன நிலையும், குழந்தைகளுக்குப் பாலும், புருஷர்களுக்குப் பலமான ஆகாரமும் கொடுக்கும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றத் தவறிப்போன நிலையுமே ஆகும்.

இன்னொரு சுவிசேஷ புஸ்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதிவின்படி, ஜனங்களுக்குப் போதித்தப் பிற்பாடு, நமது கர்த்தர் ஜனங்களைவிட்டு, மலைப்பகுதியில் தம்முடைய சீஷர்களுடன் சென்றார் என்றும், அங்கு அவர்களுடைய ஊழியங்களைக்குறித்து சிந்தனைச் செய்தார்கள் என்றும் பார்க்கின்றோம். இப்படியாக ஐக்கியம் கொள்வதற்கும், பிரயாணத்தின்போது படகிலிருக்கையில் அனைத்தையும் எண்ணிப்பார்ப்பதற்குமுரிய வாய்ப்புகள் அவர்களுக்கு இருந்தது என்பதில் ஐயமில்லை. அந்நாளின் பிற்பகுதியில், மத்தியான வேளையில், அவர் மலையிலிருந்து இறங்கி கீழே வந்தார்; மற்றும் அங்கு ஏற்கெனவே கூடியிருந்த கூட்டத்தாருடன், அதிகமான வழிப் பிரயாணிகளும் பெருமளவில் சேர்ந்தனர், அதாவது, பஸ்கா பண்டிகைக்காக எருசலேமை நோக்கி அவ்வேளையில் அவ்வழியாகப் பிரயாணம் பண்ணிக்கொண்டு வந்த பிரயாணிகளும் சேர்ந்துக்கொண்டார்கள். மொத்தமாக பல்லாயிரம் பேர்கள் இருந்தார்கள். அங்குப் புதிதாய் வந்தவர்களுங்கூட அநேக கேள்விகளுடனும், நாட்டத்துடனும் இருந்திருப்பார்கள்; மற்றும் நமது கர்த்தர் போதனைகளையும், விரிவான விளக்கங்களையும் கொடுத்திருக்க வேண்டும்.

## "அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்"

இரவு நெருங்கியது; மேலும், ஜனங்களைக் கர்த்தர் அனுப்பிவிடும்படி சீஷர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால், அவர்கள் அறியாத நோக்கம் ஒன்றை அவர் கொண்டிருந்தார். அதாவது, அவருடைய முழு ஊழியத்திலும், செய்யப்பட்ட மிகப்பெரிய அற்புதங்களில் ஒன்றைச் செய்ய அவர் அப்போது நோக்கம் கொண்டிருந்தார். எனினும் இதைப்பற்றி அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக, ஜனங்களை அவர்கள் பந்தியிருக்கச் சொல்லி, பின்னர் அவர்களது இயலாமையில் அவர்களுக்குத் தாம் உதவுவதன் மூலம், இயல்பான விதத்தில் அற்புதத்தை அரங்கேற்ற சித்தங்கொண்டார். அவர்களிடம் என்ன உணவு இருக்கின்றது எனக் கர்த்தர் கேட்டார்; ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் கொண்டிருந்த சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டான்; இது நமது கர்த்தருடைய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது; திரளான ஜனங்களை ஆசீர்வதிக்கும் வேலையில், ஒத்துழைப்பதற்கான தமது விருப்பத்தைக் கர்த்தர் வெளிப்படுத்த விரும்பினார். மேலும், இப்படியாக அவருடைய சொந்த ஜனங்கள் மற்றும் உலகத்துடனான அவருடைய கையாளுதலின் பொதுவான ஓர் அம்சத்தைச் சித்தரித்துக் காட்டினார். அவர் நம்முடைய நேரத்தையும், தாலந்துகளையும் எடுத்துக் கொள்கின்றார். மேலும், இவைகள் சிறியதாகவும், அற்பமானதாகவும் இருப்பினும், இவைகளை ஆசீர்வதித்து, இவைகளைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்தி, மாபெரும் காரியங்களைச் செய்துமுடிக்கின்றார். இப்படியாகக் கர்த்தர் தம்முடைய ஜனங்களைத் தம்முடன் இணைத்துக்கொண்டு, தம்முடைய பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய இரக்கங்களைச் சுமந்துச் சென்றவர்களிடமிருந்து, இரக்கங்களைப் பெற்றுக் கொண்டவர்களை அவர் ஆசீர்வதிப்பதைக் காட்டிலும், இந்த அனுபவங்கள் மற்றும் படிப்பினைகள் மூலம், சுமந்துச் சென்றவர்களையே மிக அதிகமாக கர்த்தர் ஆசீர்வதிக்கின்றார்.

ஆண்டவர் கட்டளையிடும் காரியங்கள் தொடர்பான விஷயங்களில், கீழ்ப்படிவதற்கு சீஷர்கள் கற்றுக்கொண்டிருந்தனர்; ஆகவே, பரிமாறுவதற்கு உணவு இல்லாமல் இருந்த போது, விருந்து உண்பதற்கென ஐம்பது, ஐம்பது பேராக அங்கிருந்த ஜனங்களை அவர்கள் பந்தி அமரச் செய்வதின் மூலம், அவர்கள் ஜனங்களின் முன்பு தங்களை முட்டாளாக்கிக்கொள்ள வேண்டும் என்ற விதத்தில் காணப்பட்ட கர்த்தருடைய கட்டளைக்கு, அவர்கள் எந்த மறுப்பும் தெரிவித்ததாகப் பதிவுகள் காணப்படவில்லை. தங்கள் வலைகளை மீன்களினால் நிரம்பப்பண்ணினவர், மரண நித்திரையிலிருந்து விழித்து எழப்பண்ணினவர், தொடாமலேயே, ஒரு வார்த்தை மூலமாக சுகப்படுத்தினவர், சூம்பின கரங்களைச் சரி பண்ணினவர், தங்களிலிருந்து முற்றிலும் அப்பாற்பட்டவர் என அப்போஸ்தலர்கள் கற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். அப்போஸ்தலர்கள் கீழ்ப்படிந்தார்கள்; மீதியைக் கர்த்தர் பார்த்துக்கொண்டார்.

## “அப்பத்தை ஆசீர்வதித்தல்”

நம்முடைய பாடத்தின் ஆதார பகுதியானது, கர்த்தர் அப்பத்தை ஆசீர்வதித்தார் என வழங்குகின்றது; இதே சம்பவம் குறித்த யோவான் சுவிசேஷத்தின் பதிவானது, “அவர் ஸ்தோத்திரஞ் செய்தார்” எனக் காணப்படுகின்றது. இரண்டுமே இசைவாகவே உள்ளது. அதாவது, தேவனுக்கு ஸ்தோத்திரம்/நன்றி செலுத்திய காரியமானது, அப்பத்தின் மேல் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. ஒருவேளை பிதாவினுடைய ஒரே பேறான குமாரனே சாதாரணமான உணவிற்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அதன்மேல் தெய்வீக ஆசீர்வாதத்தைக் கேட்பது தகுதியானதாய் இருக்குமானால், அவருடைய பின்னடியார்களெனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் ஒவ்வொருவரும் இக்காரியத்திலும் சரி, மற்றக் காரியங்களிலும் சரி, அவரது முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். உணவானது, நமக்கான தேவனுடைய ஏற்பாடு என்றும், தாராளம்/இரக்கம் என்றும் நாம் உணர்கையில், நம்முடைய நன்றிகளைச் செலுத்தாமல் அல்லது அதனை ஒப்புக்கொள்ளாமல், நம்மால் எப்படி உணவை உட்கொள்ள முடியும்? இப்படியாக நன்றிச் செலுத்துபவர்கள் அனைவரும், தங்கள் உணவின் மீது விசேஷித்த ஆசீர்வாதத்தையும், இந்த உணவைப் பயன்படுத்துவதன் மூலம், மற்றவர்கள் பெற்றுக்கொள்ளத் தவறும் விசேஷித்த ஞானத்தையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதில் நமக்கு நிச்சயமே. நன்றியுடன் கர்த்தரை நோக்கி/ஏறெடுத்துப்பார்ப்பதன் விளைவாகவும், அவருடைய ஏற்பாடுகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்வதன் விளைவாகவும் வரும் இருதயத்தின் சமாதானம் மற்றும் இளைப்பாறுதலானது, இயற்கையாகவே உணவு செரிமானத்திற்கு அனுகூலமாய் இருக்கும் அமைதியான நிலையை உருவாக்குகின்றது. இனிமையான மற்றும் நன்றியுணர்வுடன் கூடிய மனப்பான்மை இருக்கும்போது, புசிக்கப்படும் உணவானது நன்றியற்ற மனப்பான்மையில் (அ) கோபத்தில் (அ) அதிருப்தியில் புசிக்கப்படும் இதே உணவளிக்கும் ஊட்டத்தைப் பார்க்கிலும் அதிகம் ஊட்டமளிக்கின்றதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

நமது கர்த்தர் நன்றி ஏறெடுத்த விருந்து, ஆடம்பரமான ஒன்றல்ல என்பதையும் கவனிக்கவும்; அது மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட விதத்திலும் பரிமாறப்படவில்லை; அது உயர்தரமான உணவும் அல்ல; அது எளிமையான வாற்கோதுமை அப்பமாகவும், உலர்ந்த மீன்களாகவும்தான் இருந்தது. நம்முடைய கர்த்தருடைய நாட்களிலிருந்த உணவு முறையிலுள்ள எளிமையை நாம் எண்ணிப்பார்க்கும்போதும், இன்றும் கிழக்கத்திய நாட்டு ஜனங்கள் மத்தியில் காணப்படும் எளிமையான உணவு முறையை நாம் எண்ணிப்பார்க்கும்போதும், ஜப்பான் தரைப்படையினருக்கு அளிக்கப்படும் உணவிலும், ஜப்பான் குடும்பத்தார் வழக்கமாகப் பயன்படுத்தும் உணவிலுமுள்ள எளிமையை நாம் எண்ணிப்பார்க்கும்போதும், தரத்திலும் சரி, அளவிலும் சரி நம்முடைய நாட்களில் அநேக ஜனங்கள் அதிக உணவுகள் எடுத்துக் கொண்டும், எவ்விதமான நன்மையை அடையவில்லை என்ற பாடத்தையும் நாம் அடைகின்றோம்; மற்றும் உணவில் எளிமை என்பது அதிகம் ஆரோக்கியமாய் இருப்பதற்கு மாத்திரம் உதவாமல், ஆவிக்குரிய புத்துணர்வு அடைவதற்கும், பரத்திலிருந்து அப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், மற்றவர்களுக்கு சத்திய சேவை செய்வதற்கும், அதிகமான நேரத்தை ஒதுக்கியும் கொடுக்கின்றது என்ற பாடத்தையும் நாம் அடைகின்றோம். ஒவ்வொருவரும் இக்காரியத்தைக் குறித்துச் சிந்தித்துப் பார்த்து, தனது சந்தர்ப்பத்திற்கு ஏற்பவும், அவன் சிந்திப்பதற்குக் கண்டிப்பாகக் கடமைப்பட்டுள்ள மற்றவர்களின் நலன்கள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும்.

நம்முடைய பணச் செலவுகள் எவ்வளவு எளிமையாக இருப்பினும், தேவனுக்கு நன்றி ஏறெடுப்பது தகுதியானது என்ற பாடத்தை அனைவராலும் ஒப்புக்கொள்ளலாம். இந்த வெளியீட்டை வாசிக்கும் வாசகர்கள், தங்களுடைய குடும்பத்தில் இப்படியாக நன்றி ஏறெடுக்கும் சிலாக்கியத்தை முடிந்தமட்டும் புறக்கணித்துப் போடவில்லையென்று அதாவது, குடும்பத்தின் காரியங்களில் அதிகாரமுடைய நபர்களாக இருந்து, இப்படி நன்றி ஏறெடுக்கும் சிலாக்கியத்தைப் புறக்கணித்துப் போடவில்லை என்று நாம் நம்புகின்றோம். குடும்பத்தில் நன்றி ஏறெடுக்கும் நமது வழக்கத்தை, விருந்தினர் அல்லது அந்நியர் வந்திருக்கையில் தடைப்பண்ணிட முடியாது. அதேசமயம் உணவகம், சிற்றுண்டிச் சாலைகளிலுள்ள பொது மேஜைகளில் காணப்படும்போதெல்லாம், கர்த்தருக்கு வெளிப்படையாக நன்றி ஏறெடுப்பதும் எப்பொழுதும் தகுதியானதே எனவும் நாம் எண்ண முடியாது. இப்படியாகப் பொது இடங்களிலுள்ள உணவு பரிமாறப்படும் மேஜைகளில் நாம் காணப்படுகையில், நாம் கர்த்தரிடம் பெற்றுக் கொண்டதை ஒப்புக்கொள்வது நமக்கு நலமாக இருப்பினும், ஒருவேளை நாம் இப்படிச் செய்வது என்பது நம்மைப் பரிசேயர் முறைபோன்று தவறாக வெளிக்காட்டும் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், நாம் இப்படிச் செய்வதைத் தவிர்ப்பது நலமாக இருக்கும். இப்படியான சூழ்நிலைகளில் நாம் உணவு உண்பதற்கு முன்னதாக நாம் நன்றியை, நம்மைச் சுற்றியிருப்போருக்கு வெளிப்படையான செய்கைகள் (அ) வார்த்தைகள் மூலம் காட்டாதவிதத்தில், இருதயத்திற்குள் ஏறெடுக்க வேண்டும்.

## “சீஷர்கள் ஜனங்களுக்குக் கொடுத்தார்கள்”

வேறொரு பதிவில் கர்த்தர் அப்பத்தைப் பிட்டு, தம்முடைய சீஷர்களிடம் கொடுத்தார் என்றும், சீஷர்கள் அதை ஜனங்களிடத்திற்கு எடுத்துச் சென்றார்கள் என்றும் காணப்படுகின்றது. இப்படியாக, நமது கர்த்தர் காரியங்களை ஒழுங்குப்படுத்தியதில் எவ்வளவு கிருபையுள்ளவராகக் காணப்பட்டிருந்திருக்கின்றார்! இப்படியாகச் சீஷர்களே அற்புதத்தின் வல்லமைக்கு மேலான சாட்சியாளர்களாகக் காணப்பட்டார்கள்; மற்றும் ஜனங்களுக்கும், அப்போஸ்தலர்கள் ஏறக்குறைய பரிச்சயமானார்கள்; அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு இந்த ஜனங்களில் அநேகரை, அநேகமாகச் சந்தித்திருக்க வேண்டும்; மற்றும் அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய பிரதிநிதிகளாக இவர்களுக்குப் பரலோக அப்பத்தை வழங்கினவர்கள் ஆனார்கள். இன்றும் இப்படியாகவே உள்ளது. ஏனெனில், "கர்த்தர் தம்முடையவர்களை அறிந்துள்ளபடியினால்" அவர் தம்முடையவர்களைக் கண்டுபிடித்து, அவர்களைப் போஷித்துப் பலப்படுத்துவார் (2 தீமோத்தேயு 2:19). பசியாய் இருக்கும் ஜனங்களிடத்தில் தற்கால சத்தியத்தை எடுத்துச் செல்லும் விஷயத்தில், அவர் ஒன்றும் நம்மைச் சார்ந்திருக்கவில்லை. மாறாக, நம்முடைய நன்மைக்காகவே, நாம் அவருடன் உடன்வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தை நமக்குக் கொடுக்கின்றார். இதனை நாம் எவ்வளவாய் உணர்ந்துக்கொள்ள வேண்டும்! நம்மிடத்தில் காணப்படும் ஏதேனும் கொஞ்சம் வாற்கோதுமை அப்பங்கள், ஏதேனும் சிறு மீன்கள், ஏதேனும் டாலர்கள் மற்றும் நாணயங்கள், ஏதேனும் செப்புக் காசுகள் மற்றும் வெள்ளி நாணயங்கள், நம்முடைய எந்த நேரங்களும், செல்வாக்குகளும் கர்த்தருடைய பாக்கியமான வேலைகளில் பயன்படுத்தப்படத்தக்கதாக நாம் எவ்வளவு பேராவலுடன் காணப்பட வேண்டும்!

நம்முடைய பங்கில் இப்படியாகச் செய்வதென்பது வேதவாக்கியங்களில் பலி என்ற பெயரில் மேன்மையாய் வழங்கப்பட்டாலும், இச்சூழ்நிலையைச் சரியாகப் புரிந்துக்கொள்பவர்கள் இதனை நேர்மாறாக, ஓர் ஆசீர்வாதமாக, ஒரு சிலாக்கியமாக, ஒரு தயவாகவே கருதிக்கொள்வார்கள். இந்தச் சிலாக்கியமானது, இன்று தற்கால சத்தியத்தில் களிகூர்ந்து கொண்டிருப்பவர்களால் மிகவும் மேன்மையாகக் கணிக்க/மதிப்பிடுவதைப்பார்ப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இவர்களிடத்தில், அறுவடை செய்தியைப் பிரகடனப்படுத்துவதற்குரிய (பண) வளத்தில் ஒருபோதும் குறைவில்லாமல் இருப்பது குறித்தும், அதுவும் இவர்கள் பண்டிகைகள், கண்காட்சிகள் முதலியவைகள் மூலம் உலகத்தாரிடமிருந்து உதவிகள் கேட்காமலும், மற்றும் பணத்திற்காக அல்லது காணிக்கைப் பெட்டிகள் மூலம் இவர்கள் கர்த்தருடைய ஜனங்களைத் தொந்தரவு செய்து கேட்காமலும் காணப்படுவது குறித்தும், சத்தியத்திற்கு எதிரிகளாகவும், சத்தியத்தை அவமதிக்கிறவர்களாகவும் இருப்பவர்களுக்கு எப்பொழுதும் வியப்பாகவே இருந்துள்ளது; சத்தியத்துடன் கூடக் கர்த்தருடைய ஆவியும் காணப்படுவதினால், சத்தியத்தையும்,

கர்த்தருடைய ஊழியத்திற்கும் பயன்படுத்தப்படும் ஏதாகிலும் விதத்திலுள்ள தாலந்தையும் பெற்றிருப்பவர்கள், அவைகள் பயன்படுத்தப்படுவதில் சொல்லமுடியாதளவு சந்தோஷத்தினால் களிக்கூருகின்றனர், மற்றும் இவர்கள் அனுபவிக்கும் இந்தச் சிலாக்கியங்களுக்காக ஆண்டவருக்கு நன்றியும் ஏறெடுக்கின்றனர்.

## “எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்”

சுவையான உணவை மாத்திரமல்லாமல், திருப்திகரமாக அதாவது, அனைவரும் நிரம்பப் பெற்றுக்கொள்ளத்தக்கதான உணவைக் கர்த்தர் அளித்தார். ஒருவேளை ருசி கூட்டும் பொருள்கள், காரச்சுவைப் பொருள்கள், குழம்புகள், இனிப்புகள், முதலியவைகள் அளிக்கப்பட்டிருந்தால் அதிகமாய்க் கட்டுப்பாடற்றுப் புசிக்குமளவுக்கு ஏற்ப, இந்த வாற்கோதுமை அப்பங்களும், காய்ந்த மீன்களும் அடங்கிய உணவு புசிக்கப்படுவதில்லையென நாம் நியாயமாக அனுமானிக்கலாம். ஒருவேளை நாம் எளிமையான உணவுகளில் ஜீவித்து, நம்முடைய உணவின் மீதுள்ள விருப்பங்களை அதிகமாக ஊட்டிவிடாமலும், பசிக்கான திருப்திபடுத்தும் எல்லையை மிஞ்சிச் சாப்பிடுவதற்கும் நம்மையே நாம் உற்சாகமளிக்காமலும் இருந்திருப்போமானால், நம் அனைவருக்குள்ளும் காணப்படும் இயல்பானது, நாம் போதுமானளவு சாப்பிட்டுவிட்டோம் என்பதை நாம் அறியத்தக்கதாக அநேகமாகச் செயல்படும்.

இங்குக் காணப்படும் திரளான ஜனக்கூட்டத்தார் சில விதத்தில், ஆயிரவருஷம் யுகத்தில் காணப்படும் உலகத்திற்கு அடையாளமாக இருக்கின்றார்கள். இப்பொழுது அவருடைய விசேஷித்த சீஷர்களாக அவரைப் பின்பற்றுகின்றவர்கள், ஆயிரவருஷம் யுகத்தின்போது நித்திய ஜீவனுக்குரிய அப்பங்களை ஆண்டவரிடத்திலிருந்து அதிகமாய்ப் பெற்றிருப்பார்கள், மற்றும் அவைகளைப் பூமியின் சகல குடிகளுக்கும் அளிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றுக்கொள்வார்கள். ஜனங்கள் அனைவரும் நிரம்பப் பெற்றுக்கொள்வதற்கும், புத்துணர்வு அடைவதற்கும், பெலப்படுத்தப்படுவதற்கும் வாய்ப்புப் பெற்றுக்கொள்வார்கள். இன்று இக்காரியத்தில் உலகம் எவ்வளவு குறைவுப்பட்டிருக்கின்றது என நாம் காண்கின்றோம்; ஆனால், எதிர்க்காலத்திற்காகக் காணப்படும் திரளான தேவனுடைய ஏற்பாடுகளை நாம் அறியும்போதும், அனைவரும் இலவசமாய் ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், திருப்திக்கொள்ளுமளவுக்கு ஜீவ அப்பத்தைப் புசிக்கத்தக்கதாகவும், ஒவ்வொரு சிருஷ்டிக்கும் நம்முடைய மீட்பருடன், நாம் உடன்வேலையாட்களாகப் பகிர்ந்து கொடுக்கும் வேலையிலுள்ள நமது பங்கைக்குறித்து அறியும் போதும், நமது இருதயங்கள் களிக்கூருகின்றன; இந்த அற்புதத்திற்குப் பிற்பாடுதான், ஜீவ அப்பம் குறித்து நமது கர்த்தர் பேசினார் (யோவான் 6:26-58).

## “மீதியானவைகளைச் சேகரித்தல்”

ஜனங்கள் விருந்தைப் புசித்து, மீதியாய் விட்டிருந்ததைச் சேகரிப்பதற்கெனக் கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பி வைப்பது என்பது கடுமையான சிக்கனம் போன்று தோன்றலாம். ஐயாயிரம் ஜனங்களால் தொட்டுச் சாப்பிடப்பட்டு, மீதி கிடந்த துண்டுகளைப் பயன்படுத்த, தம்முடைய உண்மையுள்ள பன்னிரண்டு அப்போஸ்தலர்களை ஆளாக்குவதும் கடுமையான சிக்கனம் எனத் தோன்றலாம். ஜனங்களால் சாப்பிட்டு விடப்பட்ட துண்டுகள் பறவைகள் மற்றும் அணில்கள் சாப்பிடும்படிக்கு விடப்பட்டது என்றும், அப்போஸ்தலர்களால் சேகரித்துச் சேர்க்கப்பட்ட துண்டுகள், நமது கர்த்தருடைய கரங்களினால் உடைக்கப்பட்ட துண்டுகள் என்றும் அனுமானிப்பது, அதிகம் நியாயமாய்க் காணப்படுகின்றது. அவர் அப்பங்களையும், மீன்களையும் பிட்டுக் கொடுத்தபோது, அவைகள் திரளாய்ப் பெருகின. ஆகவே, அவர் மீண்டும், மீண்டுமாக சீஷர்களிடம் உணவைக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் அதை ஜனங்களுக்கு எடுத்துச் சென்றார்கள்; மற்றும் நமது கர்த்தர் அருகில் கொஞ்சம் உணவு இன்னும் காணப்பட்டது. இவைகள் பன்னிரண்டு கூடைகள் நிரம்பத்தக்கதாகவும், நல்லதாகவும், சுத்தமானதாகவும், பிற்பாடு பயன்படுத்துமளவுக்கு நல்ல நிலைமையிலும் காணப்பட்டது.

சிக்கனம் குறித்த பாடம் நம் அனைவருக்கும் பொருத்தமானதேயாகும். ஆனால், நம்முடைய அனுபவத்தின்படி, உலகத்திலேயே தரித்திரராய் இருப்பவர்களாகிய கர்த்தருடைய

ஜனங்களுக்கும் அடிக்கடி இந்தப் பாடம் மிகவும் அவசியமாய்க் காணப்படுகின்றது. (உணவுகளை) உண்டாக்குவதற்குரிய வல்லமையைக் கர்த்தர் அதிகமாய்ப் பெற்றிருந்தாலும், தம்முடைய சீஷர்கள் சிக்கனத்தின் கோட்பாடு குறித்து அறியவும், அதை அவர்கள் நடைமுறைப்படுத்தவும் விரும்பினார்.

அவருடைய வல்லமையின் ஐசுவரியமானது, அவருடையவர்களாய் இருக்கும் எவரும் ஊதாரிச் செலவாளிகளாய் இருப்பதற்கான காரணமாய் இருக்கக்கூடாது. எந்த ஒரு காரியத்திலும் ஊதாரித்தனம் என்பது, நமது கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியில் புறம்பாகவே காணப்பட வேண்டும். ஒருவேளை நம்முடைய தேவைக்கும் மிஞ்சி நமக்கு இருக்குமாயின், தேவைகளைக் காட்டிலும் குறைவாகப் பெற்றிருக்கும் நிலையில் காணப்படும் மற்றவர்கள் இல்லையோ? ஒருவேளை நாம் ஆண்டவருடைய ஆவியைப் பெற்றிருப்போமானால், பெருந்தன்மை/தாராளமனம் மற்றும் உதவியின் ஆவியையும் நாம் பெற்றிருப்போம், இதுவும் நாம் அவருடைய குணலட்சணத்திற்கு ஒப்பான சாயலை அதிகமதிகமாய் அடைகையில், பெருகுகின்றதாய் இருக்கும்.

இதே பாடம், அறுவடை வேலை தொடர்புடையதாகவும் நம்மிடத்தில் வருகின்றது. “நமது கர்த்தர் ஐசுவரியவானாக இருக்க, அவருடைய பின்னடியார்களில் எவரேனும் ஏன் ஏழையாக இருக்க வேண்டும்?” என்று நாம் சில சமயம் நமக்குள்ளாகவே கேட்டிருக்கின்றோம். அவருடைய வேலைக்குத் தேவையானதை மாத்திரம் கொடுத்துவிட்டு அதற்கு மேலாக கர்த்தர் கொடுக்காத காரியமானது, சந்தேகத்திற்கிடமின்றி நம்முடைய நன்மைக்கேதுவானதேயாகும். இச்சம்பவத்திலுள்ள பாடமானது, அவருடைய ஊழியம் தொடர்பான காரியங்களில் அவர் தம்முடைய பின்னடியார்களுக்குப் பலிச் செலுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொடுக்க விரும்புகின்றார், மற்றும் இப்படியாக நம்மை ஆசீர்வதித்து, நமக்கான சிலாக்கியங்களைக்குறித்து அதிகமதிகமாக நாம் புரிந்துக்கொள்ள உதவுவதும் ஆகும். ஒருவேளை ஐசுவரியமுள்ள நண்பர்களினாலும், திரளான பணங்களினாலும் அறுவடை வேலை ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், இது அதிகபடியான உலகப்பிரகார ஆவியையும், அதிகமான பெருமையையும், வெளிப்படையாகக் காட்டிக்கொள்வதையும் வளர்த்துவிடும். மேலும், இது (கர்த்தருடைய) நோக்கத்திற்கு அனுகூலமற்றதாகவும், நம்முடைய சொந்த வளர்ச்சிக்குச் சாதகமற்றதாகவும் காணப்பட்டுவிடும். நாம் பெற்றுக்கொண்டிருப்பவைகளில் நாம் திருப்திக் கொள்வோமாக. அதாவது, எளிமையான அப்பம் மற்றும் மீனுடன், நமது கர்த்தருடைய ஆசீர்வாதத்துடன் திருப்திக்கொள்வோமாக. நம்முடைய உக்கிராணத்துவம் குறித்த உண்மையுள்ள கணக்கை நாம் ஒப்புவிக்கத்தக்கதாகவும், நம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துகளை, நிலத்தடியில் புதைத்து வைக்காமல் மாறாக, நம்மால் முடிந்தமட்டும், நம்முடைய இராஜாவினுடைய மகிமைக்காகப் பயன்படுத்திக்கொள்கின்றோமா என்பதைப் பார்த்துக்கொள்ளத்தக்கதாகவும் அப்பத்துண்டுகள் குறித்தும் நாம் கவனமாய் இருப்போமாக.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனம் கூறுகின்றதுபோல, நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நன்மைக்காக அதாவது, ஜீவனுக்கான அப்பத்திற்காகவும், இயேசுவுக்காகவும், இயேசு அளிக்கும் இரட்சிப்பிற்காகவும், இவர் மூலமாகவும், இவரோடு தொடர்புள்ள சிலாக்கியங்கள் மூலமாகவும் வரவிருக்கும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவுக்கு நாம் நன்றி ஏறெடுக்க வேண்டும். அனைத்தும் பிதாவிடமிருந்து வந்துள்ளது, மற்றும் நமக்கான அனைத்து ஈவுகளும் குமாரன் மூலம் வந்துள்ளது. நன்றியுணர்வு என்பது மிகச் சிறிய கைமாறாகும்; இது சுயத்தைப் பலிச் செலுத்தும் ஆவியை உள்ளடக்கிய பூரண அன்பிற்கு நேராக வழிநடத்துகின்றது.

R4618

# “ஆண்டவரே என்னை இரட்சியும்” என்று பரிசுத்த பேதுரு கூப்பிட்டார்

## மத்தேயு 14:22-36

"அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.” வசனம் 33

மற்றச் சமய புஸ்தகங்களைப் போலல்லாமல், வேதாகமத்தின் கதாப்பாத்திரங்கள் தொடர்புடைய விஷயத்தில், அவர்களைப்பற்றின அப்பட்டமான உண்மைகளை வேதாகமம் கூறுகின்றது. பரிசுத்தவானாகிய பேதுருவின் சுபாவக் குணத்தினுடைய பலவீனங்கள் மற்றும் பலங்கள் பற்றியே, நம்முடைய இன்றைய பாடம் காணப்படுகின்றது. இப்பாடத்தில் நாம் பார்க்கின்ற அதே கதாப்பாத்திரம், வேறு சில தருணங்களில் தைரியமுள்ளவராகவும், உயர் குணமுள்ளவராகவும், அதேசமயம் தற்பெருமையடித்துக் கொள்பவராகவும், துடுக்குத்தனமுள்ளவராகவும் காட்டப்படுகின்றார். வேதாகமத்திலுள்ள எந்த ஒரு கதாபாத்திரத்தின் ஒரு பெலவீனமும் கூட உருமாற்றப்பட்டோ அல்லது பதிவும் பண்ணப்படாமலும் இல்லை. இயேசு தமக்குச் சம்பவிக்க இருக்கும் மரணத்தைக் குறித்துச் சொல்வதைக் கேட்ட இதே பரிசுத்தவானாகிய பேதுரு, ஆண்டவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், இப்படியாக இயேசு பேசியதினிமித்தம் அவரைக் கடிந்துக்கொள்ள ஆரம்பித்து, இயேசு உண்மையைச் சொல்லவில்லை என்றும், இயேசுவைக் காட்டிலும் சீஷர்களாகிய தங்களுக்கு அதிகம் தெரியும் என்றும், இயேசு அறியாமையில் பேசுகின்றார் அல்லது வேண்டுமென்றே தம்முடைய எதிர்க்காலத்தைத் திரித்துக் காட்டுகின்றார் என்றும் இயேசுவுக்குப் புரிய வைக்க முயற்சித்தார். இந்த விஷயத்தில் அவருடைய பேச்சுகள் எதிராளியானவனிடமிருந்து வந்தது என ஆண்டவர் கடிந்துக் கொண்டதில், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

அதே தைரியமுள்ள மனுஷன்தான் (பேதுருதான்) பின்னாளில் தனது ஆண்டவரைப் பாதுகாப்பதற்கென, தனது பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை வெட்டினார். இப்படியெல்லாம் செய்த சில மணி நேரத்திற்குப் பிற்பாடுதான் சத்தியம் செய்தும், சபித்தும், ஆண்டவரைப் பேதுரு மறுதலிக்கவுஞ்செய்தார். எனினும், இவரை ஆண்டவர் அன்பு கூர்ந்தார்; இப்படியாகப் பலமும், பலவீனமும் கொண்டிருந்த இவர், "உம்மை அனைவரும் கைவிட்டு ஓடிப்போனாலும், நான் உம்மை விட்டு ஓடமாட்டேன்” என்று பெருமையாய்க் கூறினாலும், இவரிடம் பெருந்தன்மையும், உண்மையுமுள்ள இருதயமும் இருந்தது. பரிசுத்தவானாகிய பேதுருவும், மற்றச் சீஷர்களும், சீற்றம் நிறைந்த கடலின் மேல், மீன் பிடிக்கும் படகில் போய்க்கொண்டிருந்தனர். இயேசு அவர்களோடு படகில் செல்லாமல், ஜெபம் பண்ணும்படிக்கு மலைக்குப் போனார். ஆண்டவர் கடலின் மீது நடந்துத் தங்களை நோக்கி வருவதைச் சீஷர்கள் கண்டபோது, படகு இன்னும் செல்ல வேண்டிய கரையை அடையவில்லை. முதலில் அனைவரும் அச்சம் அடைந்தனர்; இயேசுவினுடைய வார்த்தை, அவர்களுடைய அச்சத்தைப் போக்கினது; பின்னர் பரிசுத்தவானாகிய பேதுரு தானும் தண்ணீரின் மீது, அவர் அண்டைக்கு நடந்து வரத்தக்கதாக, கர்த்தரிடத்தில் அனுமதிக் கேட்டார்; அனுமதி வழங்கப்பட்டது; மேலும் ஒருவேளை அப்போஸ்தலன் தனது விசுவாசத்தைத் தக்க வைத்திருந்திருப்பாரானால், அவர் பாதுகாப்பாய்க் கர்த்தர் அண்டைக்குத் தண்ணீர் மேல் நடந்துப் போய்ச் சேர்ந்திருப்பார் என்பதில் நமக்கு ஐயமில்லை. ஏனெனில், வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குவதிலும், பிசாசுகளைத் துரத்துவதிலும் பேதுருவின் மூலமும், மற்ற அப்போஸ்தலர்கள் மூலமும் செயல்பட்ட அதே வல்லமையானது, நிச்சயமாய்ப் பேதுரு தண்ணீருக்குள் மூழ்குவதிலிருந்தும் அவரைக் காத்துக்கொண்டிருக்கும்.

## “அற்ப விசுவாசியே”

தண்ணீரின் மேல் நடக்க முயற்சிக்கும் விஷயத்தில், மற்றவர்களைக்காட்டிலும் மற்றும் இன்றுள்ள நம்மைக்காட்டிலும் பரிசுத்தவானாகிய பேதுருவின் விசுவாசம் பலமானதாக இருப்பினும், போதுமானளவுக்குப் பலமுடையதல்ல. பேதுருவின் கண்கள் கடல்

சீற்றத்தின் மேல் நொடி நேரம் விழுந்தபோது, அவருடைய விசுவாசம் விழுந்துவிட்டது. அவர் மூழ்க ஆரம்பித்துவிட்டார். "உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்" (மத்தேயு 14:31). அச்சம்பவத்திற்குரிய படிப்பினை முடிந்ததும், காற்று அமர்ந்தது. "அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" (மத்தேயு 14:33).

அனைவரும் பாவிகள், "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." சிலர் தங்களுடைய பூரணமின்மையின் அளவை உணர்ந்துக்கொள்வதில்லை. புத்தியுள்ள ஜனங்களனைவரும் தாங்கள் பூரணமற்றவர்கள் என்றும், இதனால் மாபெரும் சிருஷ்டிகரால் அங்கீகரிக்கப்படுவதற்குத் தாங்கள் பாத்திரவான்களல்ல என்றும் உணர்ந்துக்கொள்வார்கள். இன்னுமாக, தாங்கள் அவருடைய தயவுக்கும், நித்திய ஜீவனைப் பெறுவதற்கும், பாத்திரவான்களாய் இருக்கின்றார்கள் என்று, தேவனிடத்தில் இவர்கள் தங்களுக்காக பரிந்து பேசவும் முடியாது. இப்படியாகப் பாத்திரமின்மை எனும் குற்றத்தீர்ப்பு ஆழமாகப் பதியப் பெற்றிருக்கும்போதும், 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்று உணர்ந்துக்கொள்ளுதல் கூர்மையாகும்போதும்தான் இருதயமானது, நித்திய ஜீவனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துக்கொண்டு, இருளிலிருந்தும், பாவத்தின் அடிமைத்தனத்திடமிருந்தும், அதன் மரணத் தண்டனையிலிருந்தும் விடுவிக்கும்படிக்குக் கர்த்தரிடம் கூக்குரலிடும். இப்படிப்பட்டவர்கள் அனைவருக்கும், பரிசுத்தவானாகிய பேதுருவின் விஷயத்தில் செய்யப்பட்டதுபோல, உதவிகரத்தைக் கொடுக்க இரட்சகர் ஆயத்தத்துடன் நின்று கொண்டிருக்கின்றார். இவர்கள் ஒருவேளை பாவத்திற்காக மனம் வருந்தி, நீதியினிடத்திற்குத் திரும்பினார்கள் என்றால், இவர்களுடைய பாவங்களுக்காக, இவர்களை இரட்சகர் கடிந்துக்கொள்வதில்லை. மாறாக, 'ஏன் நீ சீக்கிரமாக வரவில்லை? நீ கூக்குரலிட்ட/கூப்பிட்ட மாத்திரத்திலேயே உனக்கு உதவிடுவதற்கு நான் விருப்பம் கொண்டிருந்தேன்' என்றே கூறுவார்.

## "சித்திரவதைப் பற்றின பயமுறுத்துதல், உலகத்தை மாற்றுவதில் தோற்றது"

பாவிகளுடைய மனங்களுக்கு முன்னதாக, பிசாசுகளின் கரங்களில் நித்திய காலத்திற்குமுரிய சித்திரவதைக் காட்சியைக் கொண்டு வரவேண்டும் என்று நம்முடைய முன்னோர்கள் எண்ணிக் கொண்டார்கள். இப்படியான ஒரு காட்சியானது, பாவத்தின் சம்பளம் மரணம், அதாவது, நித்திய அழிவு என்று வேதவாக்கியங்களால் தெரிவிக்கப்படும் தண்டனையைவிட, மனிதனைப் பாவத்திலிருந்து நீதியினிடத்திற்குக் கொண்டுவரும் விஷயத்தில், மிகவும் வெற்றிகரமாகக் காணப்படும் என நமது முன்னோர்கள் எண்ணினார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:9). ஆனால், இதைக் கொஞ்சம் அளவுக்கு மிஞ்சியே செய்துவிட்டனர். இவர்களுடைய இந்தச் செய்தி உலகத்தை மாற்றும் விஷயத்தில் தோற்றுப்போனது. இந்தச் செய்தி, பரிசுத்தமானவர்களாக, அன்பானவர்களாக, நல்லவர்களாக இருந்தவர்களுக்கு மாத்திரமே சித்திரவதையாக இருந்தது. இச்செய்தியில் ஏதோ தவறு உள்ளது என்று மனுஷர்கள் நிதானித்து/பகுத்து அறிந்தார்கள், காரணம், இப்படிச் சொல்ல முடியாத அளவிலான சித்திரவதைக்குள் ஜீவன் மாயும் என்ற செய்தியானது, மனிதனுடைய சகல அனுபவங்களுக்கும் எதிர்மாறாகக் காணப்படுகின்றது. எனினும் இப்பொழுதோ நவீன வேதாகமம், மேம்பட்ட மொழியாக்கங்கள், ஓரக் குறிப்புகள் முதலியவைகளின் உதவியினால், தேவனுடைய வார்த்தை உண்மையானது என்றும், அது திரித்துக் கூறப்படக்கூடாது என்றும், வேதாகமம் மரணம் என்று சொல்லும்போது, அது சித்திரவதை வாழ்க்கையைக் குறிக்காது என்றும், தேவனுடைய ஜனங்கள் அதிகமதிகமாய்க் கற்றுக்கொண்டு வருகின்றார்கள்.

தேவன் அளிக்கும் அனைத்து வாய்ப்புகளையும், இரட்சிப்பையும் மறுத்துவிடுகின்றவர்களின் இறுதி முடிவாக, தேவன் ஏற்பாடு பண்ணியுள்ள காரியமாகிய, முற்றிலுமாக ஒன்றுமில்லாமல் அழிக்கப்படுவது (இரண்டாம் மரணம்) என்பது, சித்திரவதையில் கழியும் வாழ்க்கையைவிட, அச்சுறுத்தலாகத் தோன்றுகின்றது என்று சிலர் நம்மிடம் சொல்லியிருக்கின்றனர். இப்படியான மிகுந்த அச்சத்திற்கான காரணங்கள் என்னவெனில், இது நியாயமானதாக இருக்கின்றது என்பதும், மற்றும் சிந்திக்கின்ற

ஜனங்களால் இதற்கு ஒப்புதல் அளிக்க முடியும் என்பதும் ஆகும். மரணத்தண்டனை என்னும் அழிவிலிருந்து, ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தையும் விடுவிப்பதற்கு இரட்சகர் ஆயத்தமாக நிற்கின்றார். அதாவது, கல்லறையிலிருந்தும், மரணத்தின் காரணமாகச் சரீரம் மற்றும் மனதில் ஏற்பட்ட சகல பூரணமின்மைகளிலிருந்தும், விடுவிப்பதற்கு இரட்சகர் ஆயத்தமாக நிற்கின்றார். முதல் மனிதனுடைய பாவத்தையும், ஆதாமோடு அவருடைய மரணத்தண்டனையில் பங்கடைந்துள்ள அனைவரின் பாவத்தையும் தள்ளுபடிச் செய்வதற்கு கல்வாரியில் நடந்திட்ட இயேசுவின் மரணம் இல்லாமல், எந்த உயிர்த்தெழுதலும், எந்த எதிர்க்கால ஜீவியமும் இருப்பதில்லை.

இன்னுங்கொஞ்ச காலத்தில் உண்மையுள்ளவர்கள் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாக இருக்கும்படிக்கு, “முதலாம் உயிர்த்தெழுதலின்” மூலம் வருவார்கள். பின்னர் மரண நித்திரையிலுள்ள முழு உலகத்தின் விழித்தெழுதலும், மனுக்குலத்தின் பொதுவான மேம்படுத்தப்படுதலும் சம்பவிக்கும். நமது கர்த்தர், பேதுருவுக்கு உதவிச் செய்தது என்பது, முழு உலகத்திற்கும் அளிக்கப்படும் மாபெரும் உதவிக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இன்னுமாக, தேவனுடைய பிள்ளைகளாக ஏற்கெனவே ஆனவர்களுக்கு, நமது கர்த்தருடைய உதவிகரம் இல்லையெனில், அவர்கள் மீண்டுமாக பாவம் செய்வதற்கான ஆபத்தில் எப்படிக் காணப்படுவார்கள் என்பதையும் சித்தரிக்கின்றது.

---

**R2651**

# “ஜீவ அப்பம் நானே”

## யோவான் 6:22-40

ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு போஷித்த அற்புதத்தில் பந்தி அமர்ந்து புசித்த திரளான ஜனக்கூட்டத்தாரில் சிலர், அந்த அற்புதத்தினிமித்தமாக ஆழமான தாக்கம் அடைந்தவர்களாக, இயேசுவிடம் மிகுந்த மதிப்புக் கொள்ளத்தக்கதாகவும் ஏவப்பட்டனர். மேலும், இவர்களில் அநேகர் (மிகவும் அதிகமானவர்கள் என்று எண்ண முடியாது) இத்தகைய ஆச்சரியமான வல்லமைகளையுடைய மாபெரும் போதகரின் சீஷர்களாகத் தாங்கள் ஆகுவதன் மூலம், தங்களது தேவைகள் சந்திக்கப்படும் என்றெண்ணி அவரைப் பின்தொடர முடிவு செய்தனர். (வியாதியும், வேதனையுமான) இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படும் ஜனங்கள் இப்படியாக அவரைப் பின்தொடர முடிவுபண்ணுவதற்கு, அவருடைய வல்லமை ஒரு தூண்டுதலாகக் காணப்பட்டது. கப்பர்நகூமில் அவரை ஜனங்கள் கண்டு, அவருடைய சீஷராக வேண்டும் என்ற தங்களது விருப்பத்தை அவரிடம் தெரிவித்து, இந்த விருப்பம் எப்படியாக தங்களை அவரிடத்தில் வழிநடத்தி வந்தது என்று கூறினபோதோ, அவர்களின் இந்த விருப்பம் சுயநலத்தின் அடிப்படையிலே உள்ளது என்றும், தாம் பிரியப்படும் சத்தியத்தின் அடிப்படையிலான விருப்பத்தின் வகையல்ல என்றும் அவர்களிடம் ஆண்டவர் கூறிவிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இந்த ஜனங்களுக்கு மாத்திரமல்லாமல், இவர்கள் வாயிலாகத் தம்முடைய சீஷர்களுக்கும், நாடப்பட வேண்டிய சரியான காரியம் தொடர்பான மிகவும் விலையேறப்பெற்ற பாடம் ஒன்றை நமது காத்தர் கூறினார்; அதாவது, ஜீவியத்தினுடைய பிரதான இலட்சியமும், நோக்கமும், விருப்பமும், அழிந்துப்போகக்கூடிய உணவாகவும், பூமிக்குரிய உணவாகவும், கண நேரத்தில் மறைந்துப் போகக்கூடிய பூமிக்குரிய சொகுசுகள், பூமிக்குரிய இன்பங்களாக இராமல் மாறாக, தற்கால மரிக்கின்ற நிலையையும் தாண்டி, நித்தியஜீவனை அடைவதே அனைவருடைய பிரதானமான இலட்சியமாக இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். கொஞ்சக் காலம் நம்முடைய மாம்சீக சரீரங்களைத் தக்கவைப்பதற்குப் பூமிக்குரிய உணவுகளை அளிப்பது மாத்திரம் தேவன், தம்முடைய சிருஷ்டிகளுக்குப் பண்ணியிருக்கும் ஏற்பாடாக மாத்திரம் காணப்படாமல் மாறாக, இதிலும் அதிக முக்கியமாக ஆவிக்குரிய உணவில்/போஷாக்கில் நாம் ஒருவேளை பங்குக்கொள்ளும் பட்சத்தில், நாம் நித்தியஜீவனை அடையத்தக்கதாகவும் தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்று கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

தாம் நிகழ்த்தியுள்ள இந்த அற்புதமும், அதன் ஆசீர்வாதமும், தேவனுடைய குமாரனாகிய தம்மால் மாத்திரமே கொடுக்கக்கூடிய மிகவும் விலையேறப்பெற்ற ஜீவ

அப்பத்தின் அதாவது, ஒரு மாபெரும் அன்பளிப்பின்/ஈவின் உதாரணம் மாத்திரமே என அன்றிருந்த அவர்களுக்கும் சரி, நமக்கும் சரி மற்றும் அனைவருக்கும் கர்த்தர் புரிய வைத்தார். பூமிக்குரிய உணவைத் தம்மால் வழங்க முடிந்ததுபோல, நித்தியஜீவனுக்குரிய அப்பத்தையும் தம்மால் வழங்க முடியும் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தினதின் மூலம், அவர் தம்மைத் தேவனுடைய குமாரன் என்றும், பரம பிதா தம்மை முத்திரையிட்டு, குறித்துள்ளார் என்றும், தமக்கு அருளப்பட்ட வல்லமைகளில் குமாரத்துவத்திற்கான ஆதாரத்தையும், நிரூபணத்தையும் தமக்குப் பிதா அருளியுள்ளார் என்றும் தம்மைக்குறித்துக் கர்த்தர் அறிக்கைப் பண்ணினார். முத்திரை பரிசுத்த ஆவியாக, தேவனுடைய பரிசுத்தமான வல்லமையாக இருந்தது; மேலும், இந்தப் பரிசுத்த ஆவியானது நமது கர்த்தராகிய இயேசுவின் மேல் செயல்பட்டதின் காரணமாகவே, அவரால் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றவும் முடிந்தது, மற்றும் வாற்கோதுமை அப்பத் துண்டுகளையும், இரண்டு சிறு மீன்களையும், திரளான மக்கள் கூட்டத்தைப் போஷிக்குமளவுக்குப் பெருக்கவும் முடிந்தது. இந்த வல்லமைகள் கர்த்தருக்குள், தேவனுடைய பரிசுத்த ஆவி இருக்கின்றது என மனிதர்களுக்குச் சாட்சிகளாக (அ) வெளியரங்கமான வெளிப்படுத்தல்களாக இருக்கின்றது; இன்னுமாக, கர்த்தருக்குத் தேவனோடு கூட, அவருடைய கனமிக்க பிரதிநிதியாக/குமாரனாக இருக்கும் உறவிற்கு முத்திரையாகவும் இருக்கின்றது. இந்தச் சாட்சியங்களுடைய பெலத்தினால், இந்தச் சாட்சிகளைப் பார்த்திட்ட சரியான இருதய நிலையிலுள்ள சாட்சியாளர்கள் நமது கர்த்தருடைய வாக்கை, பிதாவிடமிருந்து வந்த செய்தியெனச் செவிசாய்த்திட ஆயத்தப்பட்டிருக்க வேண்டும்.

கர்த்தர் கொடுத்திட்ட சொற்பொழிவிற்குப் பலனில்லாமலில்லை; நித்தியஜீவனைக் கொடுக்கும் அப்பமே நாடப்பட வேண்டிய முக்கியமான உணவு என்ற கருத்தினுடைய தாக்கத்தை, கேட்டுக் கொண்டிருந்தவர்கள் உணர்ந்தார்கள்; மேலும், அவர்கள் யூதர்களாக இருக்கின்றபடியால், தேவன் தங்கள் தேசத்துடன் கிரியைகளின் ஓர் உடன்படிக்கையை, நித்தியஜீவனுக்கான வாக்குத்தத்தத்துடன் அதாவது, மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கையைப் பண்ணியுள்ளார் என்ற எண்ணமும்கூட அவர்களுடைய மனங்களுக்கு முன்பாக இருந்தது. ஆகவேதான் நித்தியஜீவனை அடையத்தக்கதாக, தேவனைப் பிரியப்படுத்தும் எந்தக் கிரியையைத் தாங்கள் நடப்பிக்க வேண்டும்? என்றும் இக்காரியங்கள் தொடர்பான விஷயத்தில் தங்களுக்கு உதவி புரியும் எச்செய்தியையும் தங்களுக்குக் கொடுக்கும்படிக்குக் கேட்டுக்கொண்டார்கள்.

கர்த்தரை விசுவாசிப்பதே கிரியையாகும். அதாவது, தேவனால் மிகவும் அங்கீகரிக்கப்படும் கிரியையாகும்; அதாவது, தேவன் அவர்களை ஏற்றுக்கொள்வதற்குரிய ஒரே கிரியை என்று நமது கர்த்தர் கொடுத்திட்ட பதில் முதலில் நமக்குக் கொஞ்சம் விநோதமாய்த் தோன்றும். இதன் அர்த்தத்தைப் பின்னர் பார்க்கலாம். அவரைக் கேட்டுக்கொண்டு நின்றவர்கள் அவர் கூறினதின் அர்த்தத்தை அப்படியே புரிந்துக்கொண்டார்கள்; அதாவது, தெய்வீக வாக்குத்தத்தங்களின்படி, தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், பூமியின் சகல குடிகளை ஆசீர்வதிக்க ஆரம்பிப்பதற்கென, உலகத்தில் வரும் மேசியாவாக, தேவனுடைய குமாரனாக இயேசுவைத் தாங்கள் அங்கீகரிப்பதே, தேவனுடைய பார்வையில் மிகவும் பிரியமான காரியமாக இருக்கும் என்ற அர்த்தத்தில் இயேசு கூறினதை, அவர்கள் அப்படியே புரிந்துக்கொண்டனர். ஆனால், அவர்கள் அவருடைய மேசியாத்துவத்திற்கான ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள்; அதாவது, அவருடைய அன்பின் ஆவியிலும், இரக்கத்திலும், பெருந்தன்மையிலும், தூய்மையிலும், உண்மையிலும் அவருடைய உபதேசங்களிலும், வெளிப்படும் கர்த்தர் இயேசுவின் மீதான தேவனுடைய அடையாளத்தை/முத்திரையைத் தாங்கள் ஏற்கெனவே கண்டிருப்பதை உணர்ந்துக்கொள்வதற்குப் பதிலாக, அவருடைய மேசியாத்துவத்திற்கான ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள். இன்னுமாக அவரிடத்தில் தெய்வீக வல்லமை இருப்பதற்கான ஆதாரங்களையும், வெளிப்படுத்திய வெளிப்படுத்தல்களையும், (உதாரணத்திற்கு முந்தின நாள் நடந்த அற்புதத்தில் விளங்கின ஆதாரங்களையும்) தாங்கள் கண்டிருப்பதை உணர்ந்துக்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் அவருடைய மேசியாத்துவத்திற்கான ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள். இதற்குக் காரணம், வேதவாக்கியங்கள் எங்கும் தெரிவிப்பதுபோல, அவர்கள் கடின இருதயமுடையவர்களாய் இருந்தார்கள் (மாற்கு 3:5; யோவான் 12:40); அதாவது, அவர்கள் விசுவாசமற்ற தன்மையிலும், எளிதில் தாக்கம் அடைந்திடாமலும் இருப்பவர்கள் ஆவர்; அதாவது சந்தேகம்

கொள்பவர்கள்; ஆகவேதான் இயேசுவின் மீது காணப்பட்ட தேவனுடைய முத்திரைக்கான இந்த அடையாளங்கள் (அ) சாட்சிகள் அவர்களுக்குப் போதுமானதாய் இருக்கவில்லை.

ஒருவேளை அடையாளங்களுக்கு மேல் அடையாளங்கள் கொடுக்கப்பட்டாலுங்கூட, “இதே அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயமானது,” ஒன்றல்ல, பத்து அடையாளங்கள் கொடுக்கப்பட்டாலும், அவ்வடையாளங்களைப் புறக்கணிக்கவே செய்யும் என்பதை நம்மால் உணர முடிகின்றது. இப்படியாகவே, பார்வோனின் விஷயமும் காணப்பட்டது; பார்வோன் பிந்தின அடையாளங்களைக்காட்டிலும் மோசேயால் கொடுக்கப்பட்ட முதல் அடையாளத்தினாலேயே உண்மையில் அதிகமாய்த் தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டார்; இந்த ஒவ்வொரு அடையாளங்களும் சரியற்ற ஆவியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதினால், முடிவுவரை பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது. இப்படியாகவே, கர்த்தருடைய வாக்குத்தத்தம் தொடர்புடைய காரியத்தில், இன்று சிலருடைய விஷயமும் காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்கள், “நான் கொண்டுள்ள இந்தத் தவறான அபிப்பிராயத்திற்கு எதிர்மாறாக அப்போஸ்தலர் கூறியுள்ளாரா? என்று கேட்கின்றனர்; ஒருவேளை ஆம் என்று நிரூபிக்கப்பட்டால், வேறே அப்போஸ்தலர்கள் இது தொடர்பாகப் பேசியுள்ளார்களா என்றறிய வகைத் தேடுகின்றனர்; அடுத்ததாக, கர்த்தர் இதைக்குறித்துப் பேசியிருக்கின்றாரா என்றும், அடுத்ததாக, தீர்க்கதரிசிகள் யாரேனும் பேசியுள்ளார்களா என்றறிய வகைத் தேடுகின்றனர்; இவர்கள் நம்பிக்கை வைப்பதற்காகத் தேடாமல், நம்பாமலிருக்க வேண்டும் என்பதற்காகச் சாக்குப்போக்கைத் தேடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் பொதுவாக, சகல சாட்சியங்களும் கொடுக்கப்பட்டாலுங்கூட, சாட்சியங்களின் திரட்சியினால் நம்பப் போவதும்/நம்புவதும் இல்லை. மாறாக, வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று உண்மையில் நம்புகின்றவர்கள், அதன் அதிகாரப்பூர்வமான சகல சாட்சிகளையும் நம்புவார்கள். அது கர்த்தரால் (அ) அப்போஸ்தலரால் (அ) தீர்க்கதரிசியினால் கொடுக்கப்பட்டிருந்தாலும் சரி, ஒருமுறையோ (அ) பலமுறையோ கூறப்பட்டிருந்தாலும் சரி நம்புவார்கள்.

நமது கர்த்தர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றவர்களின் மனதில் கிரியை செய்திட்ட சந்தேகம்/அவநம்பிக்கையானது அவர்களுடைய வார்த்தைகளில் வெளிப்பட்டது. பின்வரும் அர்த்தத்தில் அவர்கள் பேசினார்கள்; அதாவது, “நீர் தேவனுடைய குமாரன் என்பதைக் குறிக்குமளவுக்கு, உம்முடைய அற்புதம் மிகப் பிரமாண்டமானதாகவோ (அ) மிகவும் ஆச்சரியமானதாகவோ இருந்ததாக எங்களால் ஒத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், இதைப் போன்றதான வல்லமையை, மோசேயும் செயல்படுத்தினார் என்பதை நாங்கள் நினைவில் கொண்டிருக்கின்றோம்; மோசே நம்முடைய பிதாக்களுக்கு அதாவது, முழு இஸ்ரயேல் தேசத்துக்கும், வனாந்திரத்தில் நீண்ட காலம் உணவு வழங்கினார். அதுவும் அப்பமும் மீனும் கொஞ்சமும் இல்லாமலேயே, மன்னாவை வழங்கினார்.”

மன்னா, மோசேயினால் உண்டாக்கப்படவில்லை என்றும், மன்னாவை அனுப்பி வைக்கும் விஷயத்தில் மோசேக்கு எந்தப் பங்கும் இல்லை என்றும், மன்னா, பரலோகப் பிதாவினுடைய நேரடி ஏற்பாடு/வழங்குதல் என்றும் நமது கர்த்தர் பதில் கொடுத்தார். இவ்விஷயத்தில், மோசே முகவராகக் கூட (agent) இல்லை. மேலும், வனாந்தரத்தில் கொடுக்கப்பட்ட மன்னாவானது, நித்தியஜீவனுக்குரிய மெய்யான அப்பத்திற்கு, அதாவது மெய்யான மன்னாவிற்கு, அதாவது தமக்கும், தம்மால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்திற்கும், தம்முடைய கரங்களினின்று ஜனங்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ள வேண்டுமென அவரால் விரும்பப்பட்ட மெய்யான மன்னாவிற்கும் நிழலாக இருக்கின்றது என நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

கர்த்தர் இயேசு தம்மைத்தான் குறிப்பிடுகின்றார் என்பதை அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை; ஆனால் தங்களது பிதாக்களுக்கு வனாந்தரத்தில், பரலோகத்திலிருந்து தேவன் மன்னாவைக் கொடுத்துப் பேணினதுபோல, இப்பொழுது இந்த மாபெரும் போதகராகிய இயேசு, உயர்வான ஒருவகை மன்னாவைக் குறித்துத் தங்களுக்குக் கூறிக் கொண்டிருக்கின்றார் என்றும், இந்த உயர்வான மன்னாவகைகளைப் புசிப்பதன் வாயிலாக நித்தியஜீவன் கிடைக்கும் எனக் கூறிக்கொண்டிருக்கின்றார் என்றுமுள்ள மாம்சபிரகாரமான சிந்தை அவர்களுக்கு ஏற்பட்டது; ஆகவே அவர்கள், “ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்!” என்று கேட்டார்கள். அப்போது நமது

கர்த்தர், "ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்று உவமை பாணியில் கூறினார் (யோவான் 6:35).

"என்னிடத்தில் வருகிறவன்" என்ற வார்த்தைகளிலிருந்து, கர்த்தர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குக் கலிலேயா கடலைத் தாண்டி, அவரிடம் வந்து சேர்ந்தவிதம் தொடர்புடைய அர்த்தத்தில் கர்த்தர் பேசவில்லை என்பது தெரிகின்றது. நீதியின் மீதான பசிதாகத்தோடும், நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாஞ்சையோடும், மற்றும் நித்தியஜீவனை அடையத்தக்கதாக ஜீவஅப்பத்தின் மீதான வாஞ்சையோடும் கர்த்தரிடத்தில் வருவதே "என்னிடத்தில் வருகிறவன்" என்ற வார்த்தைக்கான அர்த்தமாகப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். இப்படியாக, கர்த்தரிடத்தில் வரும் அனைவரும் அதாவது, இப்படியான சரியான இருதய நிலையில் வரும் அனைவரும் அவரிடத்தில் திருப்தியடைவார்கள். இதைப்போலவே, "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்ற வார்த்தைகள், இயேசு என்ற ஒருவர் ஜீவித்துள்ளார் என்று மாத்திரம் விசுவாசிப்பதைப் பார்க்கிலும் அதிகமான விசுவாசம் வைப்பதை அர்த்தப்படுத்துவதாய்ப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், "பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" என்று எழுதப்பட்டுள்ளது; ஆகவே, கர்த்தரை அறிவுப்பூர்வமாக மாத்திரமல்லாமல், "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்" என்று எழுதியிருக்கிறபடி, இருதயப்பூர்வமாகவும் ஏற்றுக்கொள்வதுதான் "விசுவாசமாயிருக்கிறவன்" என்பதற்கான அர்த்தமாகப் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். கர்த்தரைத் தேவனுடைய குமாரன் என்றும், இவருக்குள்ளாகவே தெய்வீக வார்த்தைகளின் மகா மேன்மையும் அருமையுமான சகல வாக்குத்தத்தங்களும் நிறைவேற்றப்படும் என்றும் உணர்ந்து, கர்த்தரை இருதயத்திலிருந்து விசுவாசிக்கின்றவன், இந்த விசுவாசத்தைத் தக்கவைத்துக்கொள்வது வரையிலும் அத்தகைய ஒரு புத்துணர்வையும், அத்தகைய ஒரு தாகத்தணிப்பையும், அத்தகைய ஒரு திருப்தியையும் அடைவான் (ரோமர் 10:10). இப்படிப்பட்டவர்கள், கிறிஸ்துவுக்குள்ளான தெய்வீக முன்னேற்பாடுகள் மிகத் திரளாய் இருப்பதினால், இன்னும் வேண்டும் என்று கேட்பதற்கில்லாமல், "வேறு எதைக் காட்டிலும் இதுவே என்னுடைய ஏக்கங்களைத் திருப்திப்படுத்துகின்றது" என்று ஆச்சரியத்தில் கூறுவார்கள்.

இப்பொழுது 29-ஆம் வசனத்தில் இடம்பெறும் கர்த்தருடைய வார்த்தைகளை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது; "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற (தேவனுக்குப் பிரியமாய் இருக்கும்) கிரியையாயிருக்கிறது." விசுவாசத்தோடு தொடர்புடைய ஒரு கிரியை இருக்கின்றது; நமது கைகளால் செய்யப்படும் கிரியையாயிராமல் மாறாக, நம்முடைய தலைகளினாலும், நமது இருதயங்களினாலும் செய்யப்படுகின்ற கிரியையாய் இருக்கின்றது; மேலும், இந்தக் கிரியை கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கத்தக்கதாய் இருப்பதுபோல, நமது கைகளினால் செய்யப்படும் எந்த ஒரு கிரியையும் அங்கீகரிக்கப்படாது. நம்முடைய விழுந்துபோன நிலையிலும், பூரணமற்ற நிலையிலும், பூரணமான எதையும் நம்மால் செய்வது கூடாத காரியம் என்றும், தேவனும், அவருடைய சகல கிரியைகளும் பூரணமாய் இருப்பதினால் பூரணமற்ற மற்றும் எவ்விதமான பாவத்தன்மையுள்ள எதையும் அவரால் சம்மதிக்க முடியாது என்றும் நாம் உணரும்போது, விசுவாசத்தைத்தவிர நாம் அவருக்கு அளிக்கும் மிகச் சிறப்பான கிரியைகளும், அவரால் அங்கீகரிக்கப்பட முடியாது என்பதை நம்மால் உடனடியாக உணர்ந்துக்கொள்ள முடியும்.

ஆனால், நமக்காக ஒரு மாபெரும் கிரியையை/வேலையைத் தேவன் செய்வதாகத் தெரிவித்துள்ளார்; மேலும், மீட்பரை நமக்குத் தேவன் வழங்கியதின் மூலம், அந்த மாபெரும் கிரியையை/வேலையைத் தேவன் செய்துள்ளார்; இந்த மீட்பர் மூலமாகவே, நம்முடைய சந்ததிக்கான ஈடுபலிச் செலுத்தப்பட்டது; இப்பொழுது தேவனால் நீதியுள்ளவராகவும் இருக்க முடியும், அதேசமயம் இயேசுவில் விசுவாசம் வைக்கிறவர்களை அவர் நீதிமானாக்குகிறவராகவும் இருக்கமுடியும். ஆகவே, நாம் குற்றத்தீர்ப்பின் கீழ்க் காணப்படுவதுவரையிலும், நாம் செய்யும் எந்தக் கிரியையும் தேவன் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தாலும், அவருடைய சொந்த ஏற்பாட்டின்படி, கிறிஸ்துவின் மீதான நமது விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, அந்த விசுவாசத்தினால் நம்மை நீதிமானாக்கவும் செய்கின்றார்; நம்மால் செய்ய முடிகின்ற இந்த முதலாவது கிரியையைத்தான் தேவன்

கேட்கின்றார். இந்த முதலாவது கிரியை வரிசையில் முதலாவதாகவும், அடிப்படையாகவும் கொண்டு, பின்தொடரும் (மற்ற) கிரியை தவிர, மற்றபடி வேறெந்தக் கிரியையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. கர்த்தருடைய பார்வையில், விசுவாசத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தை, அனைவரும் புரிந்துக்கொள்வது நலம்! "விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்." மேலும், நாம் அதிகமாக விசுவாசத்தைக் காட்டும்பொழுது, நாம் தேவனை அதிகமாகப் பிரியப்படுத்துகின்றவர்களாய் இருப்போம்; எதையும் எளிதில் நம்புகிற கண்மூடித்தனமான விசுவாசம் அல்ல, தேவன் கூறாத ஏதோ ஒன்றின் மீதான விசுவாசம் அல்ல, நம்முடைய சொந்த கற்பனை (அ) மற்ற மனிதர்களுடைய கற்பனையின் மீதான விசுவாசம் அல்ல, மாறாக தேவன் சொல்லியுள்ளவைகளின் மீதான விசுவாசமும், அதன் மீதான உறுதியான, நிலையான நம்பிக்கையுமாகும்; இதுவே தேவன் அங்கீகரிக்கும் விசுவாசமாகும். மேலும், இந்த விசுவாசத்தைக் காட்டுகிற யாவருக்கும், இந்த விசுவாசமே, நீதிமானாக்கப்படுதலுக்கான அஸ்திபாரமாக ஆகின்றது. "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5:1).

இங்குக் கர்த்தர் இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய, பரம அழைப்பிற்குரிய அடுத்த படிகளை விவாதிக்கவில்லை. ஆகையால், நாமும் இப்பொழுது விவாதிக்கவில்லை. தேவனை அணுகுவதற்கு நமக்கு அவசியமாயுள்ள முதல் படியை மாத்திரம் அதாவது, நீதிமானாக்கப்படுதலை மாத்திரம் கர்த்தர் கையாளுகின்றார். நீதிமானாக்கப்படுதலுக்கு அவசியமானது, கிறிஸ்துவை ஜீவ அப்பமாக ஏற்றுக்கொள்வதாகும்; இந்த நீதிமானாக்கப்படுதலுக்கு <u>முன்னதாக</u>, தகப்பனாகிய ஆதாமின் மீறுதல் மூலமாக நமது சந்ததி மேல் மரணம் கடந்து வந்துள்ளதால், நம்மில் ஜீவன் இல்லை <u>என்பதையும்</u>, தகப்பனாகிய ஆதாம் மீதும், அவர் காரணமாகச் சந்ததி மீதுமுள்ள தண்டனையைச் சந்திக்கத்தக்கதாகக் கர்த்தராகிய இயேசு மாம்சமாக்கப்பட்டார் <u>என்பதையும்</u>, மற்றும் இப்பொழுது கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய இந்த இலவசமான கிருபையை ஏற்றுக்கொள்பவர்களும், கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்பவர்களும், உலகத்தின் ஜீவனுக்கான தமது ஜீவனை ஈடுபலியாக வழங்கின அபிஷேகம் பண்ணப்பட்டவரில், தேவன் ஏற்பாடு பண்ணியுள்ள மாபெரும் நன்மைகள் மற்றும் ஆசீர்வாதங்களில் பங்குக் கொள்பவர்களும், புசிக்கின்றார்கள் <u>என்பதையும் உணர்ந்துக்கொள்ள வேண்டும்</u>. யாரொருவன் இந்த உண்மையை மனதளவில் ஏற்றுக்கொண்டு, தனது இருதயத்திலே அதனை புசிக்கின்றானோ, அவனே மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிக்கிறவனாகச் சித்தரிக்கப்படுகின்றான். அதாவது, அவருக்குள் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் (அல்லது இந்த யுகத்தில், நீதிமானாக்கப்படுதல்) ஆகியவற்றில் பங்கடைவதாகச் சித்தரிக்கப்படுகின்றான்.

நமது கர்த்தர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றவர்கள், அவரை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் காண்பித்த தாமதமும், இஸ்ரயேல் ஜனங்கள் மத்தியில் காணப்பட்ட தாமதமும், தாம் மேசியா அல்ல என்பதற்கான நிரூபணமாக இராமல் மாறாக, மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கான நிலைமையில் அவர்கள் இல்லை என்பதற்கான நிரூபணமாகவே உள்ளது என்று தம்மைக் கேட்டுக்கொண்டு நின்றவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். இன்னுமாக, தாம் முழு இஸ்ரயேல் ஜனங்களையும் கவர்வது, தேவனுடைய நோக்கமாயிராமல் <u>மாறாக, பிதா தமக்குக் "கொடுத்தவர்களை"</u> அதாவது, <u>பிதாவைப் பிரியப்படுத்துகின்றவர்களாய்க் காணப்படுபவர்களை</u>, அதாவது, பிதா வழங்கியுள்ள இந்த வாய்க்கால் வழியாக இன்னும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு <u>ஆயத்தமாய் இருப்பவர்களை</u> மாத்திரம் தம்முடைய வாயினின்று புறப்பட்டு வரும் கிருபையான <u>வார்த்தைகள் வாயிலாகவும், அற்புதங்கள் வாயிலாகவும்</u>, அல்லது கர்த்தருக்குள் விளங்கும் <u>வல்லமைக்கான சாட்சிகள் வாயிலாகவும் தம்மண்டைக்கு இழுத்துக் கொள்வதே தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது</u> என்று கர்த்தர் சுட்டிக்காட்டினார். எனினும், அனைவரும் தம்மண்டைக்கு இப்படியாக ஈர்க்கப்படுவார்கள் என்பது எதிர்ப்பார்க்கப்படவில்லை; எனினும், பிதா ஈர்த்துக்கொள்ளும் அனைவரையும், ஏற்றுக்கொள்வதில் தாம் மிகுந்த சந்தோஷத்துடன் காணப்படுவார்; காரணம், கர்த்தர் தம்முடைய சொந்த வேலைக்காகப் பூமியில் காணப்படாமல் மாறாக, பிதாவின்

நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே வந்துள்ளார் என்றும், அந்த நோக்கங்களுக்காக தாம் முழு இசைவுடன் காணப்படுகின்றார் என்றும் அவர்களுக்குக் கர்த்தர் உறுதியளித்தார்.

பின்வரும் இரண்டு வசனங்களிலும், நமது கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களிலுள்ள இரண்டு வகுப்பாரை வித்தியாசப்படுத்திக் காண்பிக்கின்றார். வசனம் 39-இல் இந்தச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரைக் குறிப்பிடுகின்றார், மற்றும் 40-ஆம் வசனத்தில் இந்தத் தற்கால யுகத்தைப் பின்தொடரும், ஆயிர வருட யுகத்தில் மனுக்குலம் மீது வரும் பொதுவான ஆசீர்வாதங்களையும் மற்றும் நமது கர்த்தரால் தம்முடைய சொந்த ஜீவன் எனும் அதிக விலையைக் கொடுத்து வாங்கப்பெற்ற நித்தியஜீவனென்னும் இந்த மாபெரும் அன்பளிப்பினால் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக, ஒவ்வொரு சிருஷ்டிக்கும் ஆயிர வருட யுகத்தில் வழங்கப்படும் வாய்ப்புகளையும் குறித்துக் குறிப்பிடுகின்றார்.

தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, அடிக்கடித் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் இயேசுவுக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்டவர்களாகப் பேசப்பட்டுள்ளனர். ஆனால், முழு மனுக்குலமும் அவருடையதாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். காரணம், மனுக்குலத்தை தமது விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் இயேசு வாங்கியுள்ளார். இந்த யுகத்தில் ஒரு விசேஷமான வகுப்பாரைக் குமாரனிடத்திற்குப் பிதா இழுத்துக் கொள்கின்றார். மேலும், இந்த ஒரு வகுப்பாரை, கர்த்தருடைய ஆயிர வருட இராஜ்யத்தில், கர்த்தரோடு உடன் சுதந்தரர்களாகவும், துணையாளிகளாகவும் காணப்படுவதற்கெனக் கர்த்தருக்குப் பிதா கொடுத்துள்ளார்; இவர்கள் சிலசமயம், அவருடைய "சகோதரர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர், ஏனெனில் இயேசு, "அநேக சகோதருக்குள்ளே முதற்பேறானவர்" என்று கூறப்பட்டுள்ளது (ரோமர் 8:29); இன்னுமாக, இவ்வகுப்பார் இயேசுவினுடைய மணவாட்டி என்றும், உடன் சுதந்தரர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்; ஆனால், இரட்சிக்கப்படும் மனுக்குலமானது கிறிஸ்துவின் பிள்ளைகள் என்றும், இவர்களுக்குக் கர்த்தர் இயேசு, "நித்திய பிதா" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (வெளிப்படுத்தல் 21:9; 22:17; ரோமர் 8:17; ஏசாயா 9:6).

கர்த்தர் இயேசுவுக்குக் "கொடுக்கப்பட்ட" அனைவரும் இரட்சிக்கப்படுவதும், அவர்களை (கடைசிநாளில்) எழுப்புவதும், இவ்வகுப்பாரில் ஒருவரும் இழந்துபோகாமல் இருப்பதும், பிதாவின் சித்தமாக இருக்கின்றது என நமது கர்த்தர் கூறினார். அப்படியானால், இரட்சிப்பு நிச்சயமாயுள்ள இவர்கள் யார்? இது தொடர்பாக அப்போஸ்தலனாகிய பவுல் கொடுத்திட்ட புத்திமதியின் வார்த்தைகளே இக்கேள்விக்கான நமது பதிலாகும்; பிதா முன்குறித்த மற்றும் தெரிந்தெடுத்துக் கொண்ட வகுப்பாரைக்குறித்து அப்போஸ்தலர் பவுல் பின்வருமாறு நமக்குத் தெரிவிக்கின்றார்:- இவர்கள் விசுவாசிப்பதின் மூலமாக இப்பொழுது கர்த்தர் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் ஆவர், மேலும், இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய, "பரம அழைப்பினுடைய" அழைப்பைக் கேட்டு, அதினிமித்தம் மிகுந்த தாக்கம் அடைந்தபடியால், சுவிசேஷத்தில் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள ஓட்டப்பந்தயத்தில், சகல பாரங்களையும் தள்ளி வைத்துவிட்டு, பொறுமையுடன் ஓடுகின்றார்கள்; மேலும், இப்படியாக இவர்கள் செயல்படும்போது, தெய்வீக வழிநடத்துதல் மற்றும் வழிக்காட்டுதலின் கீழ் இவர்கள், "தேவனுடைய நேச குமாரனுடைய சாயலை அடையத்தக்கதாக இவர்களது குணலட்சணங்கள் தொடர்பான விஷயங்களில் இவர்கள் வார்க்கப்பட்டு, வடிவமைக்கப்படுகின்றனர்" (ரோமர் 8:29).

பரம பிதா, இந்த வகுப்பார் தொடர்பான தம்முடைய முன்குறித்தலுக்கு எல்லைகளையும், நிபந்தனைகளையும் முடிவு செய்துள்ளார்; (அவர்தான் செய்தியை அனுப்பியிருந்தாலுங்கூட) நற்செய்தியை யார்யார் கேட்பார்கள் என்பது தொடர்பாகவும், எல்லைகளையும், நிபந்தனைகளையும் பிதா ஏற்படுத்தவில்லை; (தற்காலத்தில் பிதா ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை மாத்திரம் இழுத்துக் கொண்டிருப்பதினாலும் மேலும், அவர்தான் இழுத்துக் கொண்டிருந்தாலுங்கூட) கிறிஸ்துவுக்குள்ளான அவருடைய கிருபையான நற்செய்தியினிடத்திற்கு யார்யார் இழுக்கப்படுவார்கள் என்பது தொடர்பாக எல்லைகளையும், நிபந்தனைகளையும், பிதா ஏற்படுத்தவில்லை; (பிதா இந்த அழைப்பில் அக்கறை கொண்டவராக, இந்த அழைப்பை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரின் காரியங்களை மேற்பார்வையிட்டு, அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக சகலமும் செயல்படத்தக்கதாக

பண்ணினாலுங்கூட) இயேசுவின் அடிச்சுவட்டில் சுயத்தைப் பலிச் செலுத்தும் ஓட்டத்தை ஓடத்தக்கதாக, இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவரையும் வரவேற்கும்படிப் போய்க்கொண்டிருக்கும் அழைப்புத் தொடர்புடையதாக எல்லைகளையும், நிபந்தனைகளையும் பிதா ஏற்படுத்தவில்லை, மாறாக, கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரின் எண்ணிக்கைத் தொடர்பான விஷயத்திலும் மற்றும் இவ்வகுப்பாரில் அடங்குபவர்கள் அனைவரின் குணலட்சணம் தொடர்பான விஷயத்திலுந்தான் பரம பிதா முன்குறித்துள்ளார்; அதாவது, இந்தச் சுவிசேஷ யுகத்தில், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான பாடங்களை முற்றும் முழுமையாகக் கற்றுக்கொண்டு, நம்முடைய மீட்பராக மாத்திரமல்லாமல், நம்முடைய மாதிரியாகவும் இருக்கும்படிக்கு பிதா அனுப்பி வைத்துள்ள இயேசுவினிடத்தில் மிகவும் மகிமையுள்ளதாக வெளிப்பட்ட மாதிரிக்கு ஒத்த குணலட்சணத்தை வளர்த்திக்கொள்பவர்கள்தான், இவ்வகுப்பாரில் அடங்குவார்கள் என்று பரம பிதா முன்குறித்துள்ளார்.

இப்படியாக, தெய்வீக முன்னேற்பாட்டின் வழிநடத்துதல்களுக்குக் கீழ்ப்படிந்து, இருதயத்திலும், சித்தத்திலும், நோக்கத்திலும் (மாம்சத்தின் பூரணத்திலல்ல) கர்த்தர் இயேசுவுக்கு ஒத்த சாயலை அடைகின்றவர்கள் அனைவரும், இந்த மாபெரும் இரட்சிப்பில் இரட்சிக்கப்படுவதும், இயேசுவோடு "முதலாம் உயிர்த்தெழுதலிலும்" அது வழிநடத்தும் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்காளிகள் ஆகுவதும்தான் பிதாவின் சித்தமாக இருக்கின்றது. இவர்களில் ஒருவரும் இழந்துப் போகப்படுவதில்லை; இவர்களில் ஒவ்வொருவரும், நியமிக்கப்பட்ட காலத்தில் "கடைசி நாட்களில்" அதாவது, ஆயிரம் வருஷம் நாளின்போது, அந்த மகிமையான ஸ்தானத்திற்கு எழுப்பப்படுவார்கள். "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் (சீயோன்) சகாயம் பண்ணுவார்" (சங்கீதம் 46:5).

குமாரனுக்கு இராஜ்யத்தில் துணையாளர்களாகவும், உடன் சுதந்தரர்களாகவும் இருக்கும்படிக்கு, பிதாவினால் குமாரனுக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்டவர்களை அதாவது, இந்த யுகத்தில் தம்முடைய வழிநடத்துதல்கள் மூலம் இழுத்துக் கொண்டவர்களைப் பற்றி 40-ஆம் வசனத்தில் பேசப்படவில்லை; நமது கர்த்தர் இயேசுவினால் ஈடுபலி கொடுக்கப் பெற்றவர்களாகிய மீதமுள்ள மனுக்குலத்தைப் பற்றியே இவ்வசனத்தில் பேசப்படுகின்றது; மேலும், பிதாவினுடைய திட்டத்தின்படி, ஆயிரவருஷம் யுகத்தின்போது நமது கர்த்தர் இயேசு இவர்களைத் தம்மண்டைக்கு இழுத்துக்கொள்ளுவார். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" (யோவான் 12:32). ஆனால், பிதாவின் இழுத்துக்கொள்ளுதல் வலுக்கட்டாயமாக இராததுப்போல, குமாரனுடைய இழுத்துக்கொள்ளுதலும் வலுக்கட்டாயமாக இராது. பிதாவின் இழுத்துக்கொள்ளுதலை, இன்று பெரும்பாலானவர்கள் எதிர்ப்பதற்குக் காரணம் குருட்டுத்தனம், அறியாமை முதலியவை ஆகும். ஏனெனில், இவ்வுலகத்தின் அதிபதியானவன் இன்று ஆளுகை செய்து, வஞ்சித்துக் கொண்டிருக்கின்றான்; ஆனால், நம்முடைய அருமை மீட்பருடைய ஆயிரம் வருஷம் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போதும், இவ்வுலகத்தின் அதிபதியாகிய சாத்தான் "கட்டப்படும்" போதும் (வெளிப்படுத்தல் 20:2) மற்றும் கர்த்தரை அறிகின்ற அறிவானது பூமி முழுவதையும் நிரப்பும் போதும், மீட்பராலும், அவருடைய சரீரமாகிய மகிமையில் அவரோடு இணைந்துள்ள சபையாலும் மனுக்குலத்தின் மீது செயல்படுத்தப்படும் இழுத்துக்கொள்ளுதலுக்கான செல்வாக்கானது, அதிகமான பலன்களைக் கொடுக்கும் என்றும், இதன் காரணமாக அநேகர் இந்தச் செல்வாக்கிற்கு/தாக்கத்திற்கு இணங்கி, உண்மையாகவும், இருதயப்பூர்வமாகவும் கர்த்தரிடத்தில் வந்து, கர்த்தருக்குள் தேவன் அளித்துள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், பாவத்தை வேண்டுமென்று விரும்புகிறவர்களும், இராஜ்யத்தின் நிபந்தனைகளையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் மறுக்கிறவர்களும் தவிர மற்றபடி அனைவரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் நாம் நியாயமாக அனுமானிக்கின்றோம்.

40-ஆம் வசனத்தில், இந்த வகுப்பார் அனைவரும் குமாரனைக் காண்பது பிதாவின் சித்தமாக இருக்கின்றது என நமது கர்த்தர் தெரிவித்துள்ளார் (அதாவது தீர்க்கத்தரிசிகள் மூலம் கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரம், ஆயிரவருஷம் யுகத்தில் இவர்களின் குருடான கண்கள் திறக்கப்படும்; சகரியா 12:10). மனுக்குலத்தால் இப்பொழுது உணரமுடியாததை,

அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும்போது உணர்வார்கள். அதாவது, கர்த்தரையும், அவருக்குக் கீழ்ப்படிகின்ற அனைவருக்கும் அவர் அளிக்கும், நித்தியஜீவனுக்கான உடன்படிக்கையையும் உணர்ந்துக்கொள்வாாகள். இவர்களின் புரிந்துக்கொள்ளும் கண்களை இப்பொழுது குருடாக்கி வைத்துள்ள இந்த உலகத்தின் தேவனானவன், ஆயிரம் வருஷம் கட்டப்பட்டு, கர்த்தர் மற்றும் அவருடைய சரீரமாகிய மகிமையடைந்த சபை எனும் மாபெரும் நீதியின் சூரியன் மூலம் உலகத்திற்குப் பிரகாசிக்கப்படும், தேவனைப்பற்றின அறிவாகிய வெளிச்சம், சாத்தானுடைய நச்சுத்தனமான செல்வாக்கை இல்லாமலாக்கிப் போடாதது வரையிலும், மனுக்குலத்தால் இப்படியாகக் கர்த்தரைக் காண முடியாது.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், நித்தியஜீவனை அடைவது தேவனுடைய சித்தமாக இருக்கின்றது; மேலும், இவர்கள் பரலோகத்திற்குரிய பூரணத்திற்கல்லாமல், பூமிக்குரிய பூரணத்திற்குக் கர்த்தர் இயேசுவினால் எழுப்பப்படுவார்கள்; மேலும், இவர்களின் எழுப்பப்படுதலும் "கடைசி நாளில்தான்" காணப்படும், ஆயினும் இவர்களுடைய உயிர்த்தெழுதலானது "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின்" "முதலாம் உயிர்த்தெழுதலுக்குரிய" கடைசி நாளின் ஆரம்பப்பகுதியில் நடப்பதில்லை. இந்தச் சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொண்டவர்களாகிய, கிறிஸ்துவின் சபை, கண்ணிமைக்கும் நொடியில், அவருக்கு ஒப்பாகப் பூரணப்படுத்தப்படுவார்கள்; பிற்பாடு அந்த யுகம் முழுவதும் பாவம், சீர்க்கேடு, சீரழிவிலிருந்து மனுக்குலகத்தின் உலகம் எழுப்பப்படும் வேலையானது, படிப்படியாக நடக்கும். இவ்வேலையானது, விருப்பமும், கீழ்ப்படிதலுமுள்ள அனைவரும் பரலோகத்திலிருந்து வந்த அப்பத்தைத் திருப்தியாகப் புசித்து, பாவம் மற்றும் மரணத்திலிருந்து, நித்தியஜீவனுக்கு முழுமையாய் எழுப்பப்படுவதுவரையிலும், அதாவது ஆயிரம் வருஷம் யுகத்தின் முடிவுவரையிலும் தொடரும்; அதாவது, பாவத்திற்கு முன்பு ஆதாம் காணப்பட்ட தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும், ஆனால் அதேசமயம் அவர்களது ஆயிரம் வருஷம் அனுபவங்களினால் நீதியில் பூரணப்படுத்தப்பட்ட மற்றும் பரீட்சிக்கப்பட்ட குணத்தில் எழுப்பப்படுவதுவரையிலும், இவ்வேலை தொடரும்.

---

**R611**

# "மாம்சம் மற்றும் இரத்தம்"

"அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." - **யோவான் 6:53, 54, 63**

சத்தியத்தைப் மறைப்பொருளாக வெளிப்படுத்துவது இயேசுவின் வழக்கமாக இருந்தது. மேலும், அநேகருக்கு நம்முடைய ஆதாரவசனங்களும் மறைப்பொருள்களில் ஒன்றாகவே இருந்தது. இதைக் கேட்ட யூதர்கள், "இவர் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பார்" என்று கூறினார்கள்; மற்றும் சீஷர்களில் அநேகர் முறுமுறுத்து, "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" என்று கூறினார்கள். இயேசுவினுடைய சொல்லர்த்தமான மாம்சத்தை அவர்கள் புசிக்கும்படியான அர்த்தத்தில் இயேசு கூறவில்லை என்பது இன்றும் பரவலாகப் புரிந்துக்கொள்ளப்பட்டாலுங்கூட, அவர் கூறின அர்த்தத்தைக்குறித்துத் தெளிவான கருத்தைச் சிலரே கொண்டிருக்கின்றனர்.

ஆண்டவர் தம்முடைய வார்த்தைகள் ஆவியாக அல்லது ஆவிக்குரியதாக இருக்கின்றது எனக் கூறியுள்ளபடியால், இயேசுவின் இங்குள்ள வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்திட, வார்த்தைகளுடைய சொல்லர்த்தமான அர்த்தத்திற்கு நேர் எதிர்மாறான அர்த்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமெனச் சிலர் நிதானிக்காமல் அவசரவசரமாய் முடிவிற்கு வந்துள்ளனர்; மேலும் இப்படிப்பட்டவர்கள், "மாம்சம் மற்றும்

இரத்தம்” ஆவிக்குரிய சுபாவத்தைக் குறிக்கின்றது என்ற முடிவிற்குள் வந்துள்ளனர். இயேசு தம்முடைய வார்த்தைகள்தான், ஆவிக்குரியதாக இருக்கின்றது எனச் சொல்லியுள்ளாரே ஒழிய, மாம்சம் ஆவிக்குரியதாக இருக்கின்றது எனச் சொல்லவில்லை என்பதை இப்படிப்பட்டவர்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

கர்த்தர், “மாம்சம் மற்றும் இரத்தம்” எனும் வார்த்தைகளைப் பயன்படுத்தின இடங்களில் அவர் ஆவிக்குரிய சுபாவத்தைக் குறிப்பிடவில்லை என்பது, அவர் இந்த “மாம்சம் மற்றும் இரத்தம்” எனும் வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ள இடங்களையெல்லாம் நினைவுப்படுத்திப் பார்க்கும் போது எளிதில் கண்டுக்கொள்ளலாம். “நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே” என்ற வார்த்தைகளை அவர் கூறவில்லையா? (யோவா 6:51-ஆம் வசனம்). அவர் தமது ஆவிக்குரிய சுபாவத்தைக் கொடுக்கின்ற அர்த்தத்திலா பேசினார்? ஒருவேளை அப்படி அவர் கொடுத்திருந்திருப்பாரானால், இப்பொழுது அவருக்கு ஆவிக்குரிய சுபாவம் இல்லையென்பதாகிவிடும். ஏனெனில், அவர் தமக்கு உண்டான யாவற்றையும் கொடுத்துள்ளதை நாம் நினைவுகூருகின்றோம் (மத்தேயு 13:44). உலகத்தின் ஜீவனுக்காக, அவர் தம்மிடமிருந்த திவ்வியச் சுபாவம் அனைத்தையும் கொடுத்ததாக எடுத்துக்கொள்ளப்பட முடியாது. இதைக்குறித்து பேசுகையில் வேறொரு இடத்தில், “இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாயிருக்கிறது” என இயேசு கூறுகின்றார். இங்கு அவர் திவ்வியச் சுபாவத்தைக் குறிப்பிட்டுள்ளதாக யார்தான் எண்ணக்கூடும்? ஆவிக்குரியது (அ) ஆவி பிட்கப்பட்டு, சிந்தப்பட்டதா? அல்லது மனுஷீகம் அதாவது, பலிக்கென ஆயத்தம் பண்ணப்பட்ட சரீரம் மரணத்தை அனுபவிக்கும்படி எடுத்துச் செல்லப்பட்டதாக? எது என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்? (எபிரெயர் 10:5; 2:9).

இந்த வேதவாக்கியத்தையும், மற்ற வேதவாக்கியங்களையும் வைத்துக் காணும் கண்ணோட்டத்தின்படி, இயேசு தம்முடைய ஆவிக்குரிய சுபாவத்தைப் பிட்கவும், அதை அனைவரும் புசிக்கச் சொன்னதாகவும் எவரும் அர்த்தம் கொள்ளாதிருப்பார்களாக. “அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே” என யூதர்களில் சிலர் ஒப்புக்கொண்டதைப் போல், நாமும் ஒப்புக்கொள்வது நலமாயிருக்கும் (18-ஆம் வசனம்).

ஆனால், சிலர் இங்கு இடம்பெறும் “மாம்சம் மற்றும் இரத்தம்” அநேகமாக இயேசுவினுடைய (ஒழுக்கத்திலுள்ள) நன்நெறியிலுள்ள பூரணத்தையே குறிக்கின்றது என்றும், அனைவரும் இயேசுவிடமிருந்து நன்நெறியில் பூரணத்தைப் (Moral Perfection) பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது புசிக்க வேண்டும், இல்லையேல் ஜீவன் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இக்கருத்தும், மற்றக் கருத்துக்களைப் போன்று இயேசுவின் “மாம்சம் மற்றும் இரத்தம்” எனும் வார்த்தைகளின் அர்த்தத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கென அனைவருக்கும் நன்நெறி/ஒழுக்கமாய் இருக்க வேண்டும் என்பது உண்மையாக இருந்தாலுங்கூட, இது இங்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கும் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கான அர்த்தமல்ல. இவ்வர்த்தம் பொருந்துகின்றதா என நாம் சோதித்து, அறியலாம். இயேசுவின் நன்நெறியிலுள்ள பூரணம் நமக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டதா (அ) பிட்கப்பட்டதா? நிச்சயமாக இல்லை. நன்நெறியிலுள்ள பூரணத்தை ஒப்புக்கொடுப்பது (அ) பிட்கப்படுவது என்பது நன்நெறியில் பூரணக் குறைவு ஆகுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். ஆகவே, நாம் அவருடைய திவ்விய சுபாவத்தையோ, அவரது நன்நெறி பண்புகளையோ புசிக்க வேண்டும் என்பது இயேசுவினுடைய வார்த்தைகளின் சாரமாக (அ) அர்த்தமாக இல்லை என்பது, தெளிவாகியுள்ளது.

அப்படியானால் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள “மாம்சம் மற்றும் இரத்தம்” எனும் வார்த்தைகளின் சாரம் (அ) அர்த்தம்தான் என்ன? இவ்வார்த்தைகளுக்கு வேறு வேதவாக்கியங்களில், இடம்பெறும் சாரமே (அ) அர்த்தமே பொருந்தும் என்பதே நமது பதிலாகும். அனைத்து வேதவாக்கியங்களும் நிரூபித்துக் காட்டுவது போன்று “மாம்சம் மற்றும் இரத்தம்” என்பது மனித சுபாவத்தைக் குறிக்கின்றது. (மத்தேயு 16:17; யோவான் 1:14; கொலோசெயர் 1:22; பிலமோன் 1:16; 1 கொரிந்தியர் 15:50; 1 பேதுரு 1:24; 3:18; 4:1).

இப்பொழுது நாம் "மாம்சம் மற்றும் இரத்தத்திற்கான" இந்த அர்த்தத்தைச் சோதித்துப் பார்த்து, அது பொருந்துகின்றதா எனப் பார்க்கலாம். இயேசுவின் மனித சுபாவம், உலகத்தின் ஜீவனுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டதா, பிட்கப்பட்டதா? ஆம் மெய்யாகவேதான்; நம் அனைவருக்குமான ஈடுபலி ஆகத்தக்கதாக, தேவதூதரிலும் சற்று சிறியதான நம்முடைய மாம்ச சுபாவத்தை இயேசு எடுத்துக்கொண்டார்; நம்முடைய மனித சுபாவத்திற்கான ஈடுபலியாக, அவர் தம்முடைய மாம்சீக சுபாவத்தைக் கொடுத்து, தம்முடைய சொந்த இரத்தத்தினால் நம்மை வாங்கிக் கொண்டார். நமக்காக தமக்கு உண்டாயிருந்த யாவற்றையும் கொடுத்துவிட்டார் (மத்தேயு 13:44). "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." (1 கொரிந்தியர் 15:21). நமக்கான ஈடுபலியாக, மனிதனாகிய கிறிஸ்து இயேசு தம்முடைய மனித சுபாவத்தைக் கொடுத்ததின் மூலமாக நமக்குப் பதிலாள் (Substitute) ஆனார்.

ஒருவேளை இந்த அர்த்தம் இவ்வார்த்தைத் தொடர்புடைய அனைத்திற்கும் பொருந்துமானால், இதுவே ஆண்டவரின் போதனையுடைய சரியான அர்த்தம் (அ) சாரமாகக் காணப்படும். ஆனால், எந்தவிதத்தில் நம்மால் இயேசுவின் மனித சுபாவத்தைப் புசிக்க முடியும்? என்ற கேள்வி எழும்புகின்றது. புசிப்பது என்பதும், "மாம்சம் மற்றும் இரத்தம்" போன்றே, அடையாள வார்த்தையே ஆகும். புசிப்பது என்பது புசிக்கப்படும் பொருளின், ஜீவன் கொடுக்கும் தன்மைகளைத் தனக்கெனச் சொந்தமாக்கிக்கொள்வதாகும். இவ்வர்த்தம் எப்படிப் பொருந்துகின்றது என்பதைப் பார்க்கலாம். ஒப்புக்கொடுக்கப்பட்டு, பிட்கப்பட்ட இயேசுவின் மனித சுபவாத்தை நீங்கள், உங்களுக்கெனச் சொந்தமாக்கிக்கொள்ளாதது வரையிலும், உங்களுக்குள் ஜீவன் இல்லை என்பதாகிவிடும். இவ்வர்த்தம் முழு இசைவாய்க் காணப்படுகின்றது. மனுக்குலம், ஆதாமின் மூலமாக, ஜீவிப்பதற்கான அனைத்து உரிமையையும் இழந்துவிட்டனர். ஆகவே, மனுக்குலம் இப்பொழுது மரித்துக் கொண்டே இருக்கின்றது; மற்றும் ஜீவிப்பதற்கான உரிமையைத் தங்களுக்குள் கொண்டிராததால் மரித்துப் போயும் காணப்படுகின்றது; மேலும், ஈடுபலிக் கொடுக்கப்பட்டிருந்தாலும், சரீரம் பிட்கப்பட்டிருந்தாலும், மனுஷன் ஈடுபலிக் கிரயத்தை முழுமையாய் உணர்ந்துக் கொண்டு, மனிதனாகிய கிறிஸ்து இயேசு தம்முடைய மாம்சத்தை (மனித சுபாவத்தை) அனைவருக்காகவும் கொடுத்ததின் மூலம் பாதுகாத்திட்ட அந்த உரிமைகளை, விசுவாசத்தின் மூலமாகச் சொந்தமாக்கிக்கொள்ளாதது வரையிலும், அவன் மீண்டுமாக மனித பூரணத்தை (ஜீவனை) அடையமுடியாது என்பது தேவனுடைய திட்டத்தில் ஒரு பாகமாக உள்ளது. எந்தளவுக்கு வேகமாக சொந்தமாக்கிக்கொள்கின்றோமோ, தேவன் அதை நமக்குத் தரிப்பிக்கின்றவராக இருப்பார்; இப்படியாக கிறிஸ்துவின் நீதியும், நித்தியகாலமாய் ஜீவிப்பதற்கான அதன் உரிமையும் நமக்குத் தரிப்பிக்கப்படும்.

இப்படியாக நமக்கெனப் பலியாக்கப்பட்டதை, விசுவாசத்தின் மூலமாக, நாம் நமக்கென உரிமையாக்கிக் கொள்கின்றோம் அல்லது புசிக்கின்றோம். இப்படியாக, நமக்காகப் பலியாக்கப்பட்ட மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்களையும், உரிமைகளையும் நமக்கென நாம் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை அல்லது புசிக்கவில்லை என்றால் நமக்குள் ஜீவனும் இராது, ஜீவனுக்கான உரிமையும் நமக்குள் இராது. இயேசுவுக்குள்ளாகவே அல்லது இவர் மூலமாகவே, முதலாம் ஆதாமினால் நாம் இழந்துபோன ஜீவனை, மீண்டுமாக நாம் பெற்றுக்கொள்ள முடியும். வேறு எவர் மூலமாகவும் இரட்சிப்பு (ஜீவன்) இல்லை; காரணம், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12). ஈடுபலியையும், அதன் அவசியத்தையும் மற்றும் முழு மனுக்குலத்திற்கும் ஜீவனைத் திரும்பக் கொடுக்கும் சக்தி என்ற அதன் முக்கியத்துவத்தையும் மறுதலிக்கின்றவர்கள் எத்துணை ஆபத்தான நிலையில் காணப்படுகின்றார்கள். பலியாக்கப்பட்டதைச் சொந்தமாக்கிக்கொள்ளாத (அ) புசிக்காத வரையிலும் எவருக்கும் ஜீவன் இராது. ஆகவேதான், இந்தப் பலியை மதிப்புக் குறைந்ததாக எண்ணி, அதன் முக்கியத்துவத்தை மறுதலிப்பது என்பது மிகக் கடுமையான பாவங்களில் ஒன்று என அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; "தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை (சாதாரணம்) அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான

ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்” (எபிரெயர் 10:29).

ஆகவே, இயேசுவினுடைய மாம்சம் மற்றும் இரத்தத்தை (மனித சுபாவத்தை) நமக்கென சொந்தமாக்குவதன் (அ) புசிப்பதன் மூலமாகப் பாவத்திலிருந்தும், அதன் மரணத் தண்டனையிலிருந்தும் நாம் நீதிக்கு ஏதுவாகத் தீர்க்கப்பட்டோம். அதாவது, மனித ஜீவனுக்கும், அதன் சிலாக்கியங்களுக்கும் நாம் நீதிக்கு ஏதுவாகத் தீர்க்கப்பட்டோம் (ரோமர் 5:18, 19). இது பொதுவான இரட்சிப்பாகும் (யூதா 3). ஆனால், இரட்சிக்கப்பட்ட உலகத்தின் மத்தியிலிருந்து தெரிந்துக்கொள்ளப்பட்ட சிறுமந்தையினருக்கு அதாவது, பரிசுத்தவான்கள் என்றும், இயேசுவின் உடன் சுதந்திரர்கள் என்றும் அழைக்கப்படுகிறவர்களுக்கு, விசேஷமான இரட்சிப்பு உள்ளது என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 4:10).

இந்தப் "பரம அழைப்பிற்கு" அழைக்கப்பட்டவர்களும், "திவ்விய சுபாவத்தில் பங்கடையும்படிக்கு" அழைக்கப்பட்டவர்களுமாகிய இவர்கள், இயேசுவினுடைய பலியின் முக்கியத்துவத்தை உணர்வதின் மூலம் ஜீவனைச் சொந்தமாக்கிக்கொள்ளுவதோடு (அ) புசிப்பதோடு மாத்திரமல்லாமல், அதிகமாகவே செய்கின்றனர். மனிதனாக ஜீவிப்பதற்கென நீதிக்கு ஏதுவாக தீர்க்கப்பட்டுள்ள இவர்களுக்கான அதாவது, ஆதாமுக்குள் இழந்திட்ட உரிமைகளை (விசுவாசத்தினால்) மீண்டும் பெற்றுக்கொண்டுள்ள இவர்களுக்கான இந்த யுகத்திற்குரிய அழைப்பு (அ) சிலாக்கியம் என்பது, இயேசு செய்ததுபோல தங்களையே இவர்கள் பலிச் செலுத்தி அல்லது தங்களையே பிட்டு, தங்களுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்துவிடுவதாகும்; இப்படியாக இவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்திற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுவார்கள் என்றும், தாங்கள் அவரோடு வாழ்ந்து, மனித சுபாவத்தைப் பலிச் செலுத்துவதற்கான பலனாக அவருக்குக் கொடுக்கப்பட்ட திவ்விய சுபாவத்தில் பங்கடைவோம் என்றுமுள்ள நம்பிக்கையில், "அவரோடு கூட மரித்தவர்கள்" ஆகுகின்றனர்.

இவ்வகுப்பார் இயேசுவின் பலியை, தங்களுக்கெனச் சொந்தமாக்கிக் கொண்டதோடு (அ) புசித்ததோடுகூட, பலியில் அவரோடு கூட இணைந்தும் உள்ளனர் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்." "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (கொலோசெயர் 1:24; 1 கொரிந்தியர் 10:16, 17).

ஆகவே, ஒரு ஜீவ அப்பமானது மனுக்குலம் முழுவதற்குமெனப் பரலோகத்திலிருந்து அளிக்கப்பட்டது; கிறிஸ்துவின் சரீரத்தில் சேர்வதற்கும், மனித சுபாவத்தைப் பலிச்செலுத்தும் விஷயத்தில் அவருடன் பங்கடைவதற்கும், அவரோடு திவ்விய சுபாவத்தைச் சுதந்தரிப்பதற்கும் என்றுள்ள வாய்ப்பானது சுவிசேஷ யுகத்தில் சிலருக்கு அருளப்பட்டது.

இப்படியாக, இயேசுவின் சொல்லர்த்தமான மாம்சத்தைப் புசிப்பதில் நன்மை இல்லை என்றாலும், அவர் பெற்றிருந்ததும், மனுஷருக்காக ஒப்புக்கொடுத்திட்டதுமான (மனுஷீக ஜீவனுக்கான) உரிமைகளைச் சொந்தமாக்கிக்கொள்வது என்பது, பூரணமான மனித ஜீவனுக்கும், அதன் சகல சிலாக்கியங்களுக்கும் உரிமை பெற்றுக்கொள்வதுமாக இருக்கும் என்பதை நாம் பார்க்கின்றோம். "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவான் 6:53).

---

**R1710**

# “நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே”

அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.”

**- யோவான் 6:66-68**

இங்குப் பதிவு பண்ணப்பட்டுள்ள நமது ஆண்டவருடைய வார்த்தைகளில் சிறிதளவு ஏமாற்றமடைந்த உணர்வுகள் வெளிப்படுகின்றது. “அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்” (யோவான் 6:67). ஒவ்வொரு செய்கைக்கும், வார்த்தைக்குமான காரணம் என்ன என்று பார்ப்பதில் நாம் பழக்கப்பட்டிருப்பதினிமித்தம், பின்னடியார்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவு ஏன் நமது கர்த்தரைத் துக்கங்கொள்ளச் செய்தது? என்று நமக்குள் கேள்விகள் எழும்புகின்றது; இன்னுமாக, அநேகர் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தாரா? எண்ணிக்கையின் மீது அவரது நம்பிக்கை இருந்ததா? நான் மூன்று வருடங்கள் போதித்தப் பிற்பாடு, என்னுடைய பின்னடியார்களில் அநேகர் என்னை விட்டு விலகிப் போவதைக் கண்டு, இப்பொழுது பரிசேயர்கள் என்ன சொல்வார்களோ?” எனத் தமக்குள்ளாகக் கூறிக்கொண்டாரோ? பின்னடியார்கள் தம்மிடமிருந்து விலகி செல்வதென்பது, அவருடைய வருமானங்களைக் குறைத்துவிடும் என்று அஞ்சினாரா? இவைகள் எதற்காகவும் அவர் துக்கம் அடையவில்லை; ஏனெனில், அவர் ஏற்கெனவே தமக்கெனப் புகழ்ச்சியைச் சேர்த்துக்கொள்ளவில்லை; அவர் முன்னதாகவே/ஏற்கெனவே தம்முடைய சீஷர்களிடம் “எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்” (லூக்கா 6:26) என்று கூறியிருக்கின்றார். ஐயாயிரம் மக்களுக்கு மூன்று வாற்கோதுமை அப்பங்களையும், இரண்டு சிறு மீன்களையும் கொண்டு போதுமானளவுக்குப் போஷிக்கும் வல்லமையும் அவரிடம் இருந்தது. இன்னுமாக, தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்கள், “சிறு மந்தையினராகத்தான்” இருக்கப் போகின்றார்கள் என்றும், திரளானவர்கள் அவரை விசுவாசிப்பதில்லை என்றும் அவர் முன்னதாகவே அறிந்திருந்தார்.

பின்னர் ஏன், தம்முடைய பின்னடியார்களின் எண்ணிக்கை குறைந்ததினிமித்தம், அவருடைய வார்த்தைகளில் துக்கம் வெளிப்பட்டது? அவர் உண்மையுள்ளவராகவும், பரந்த மனப்பான்மையுள்ளவராகவும், அனுதாபம் உள்ளவராகவும், தம்முடைய நண்பர்களை நேசித்தவராகவும் இருந்தபடியால், மேய்ப்பன் வெட்டப்பட்டு, ஆடுகள்/மந்தைகள் சிதறிப்போவதற்கான வேளை நெருங்குவதை அவர் கண்டபோது, **தனிமையின் துயரம்** அவரைச் சூழ்ந்துக்கொள்ள, “நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?” என்று கேட்டார் என்பதே காரணமாகும். அனுதாபத்தை விரும்புதல், நண்பர்களின் ஐக்கியத்தை விரும்புதல் முதலானவைகள் பெலவீனங்களல்ல. மாறாக, இவை உண்மையான குணலட்சணத்தினுடைய அம்சங்களேயாகும். ஆனால், ஒருவேளை நமது கர்த்தருடைய சீஷர்கள் அவரை விட்டு விலகிச் சென்ற காரியமானது, பிதாவின் திட்டத்தில் அவருக்கெனக் குறிக்கப்பட்டுள்ள பலியின் பாதையினின்று, அவரது போக்கைத் திசை மாற்றியிருக்குமாயின், அது பெலவீனமாயிருந்திருக்கும். இப்படிப்பட்டதான பெலவீனங்கள் கர்த்தரிடத்தில் ஒருபோதும் வெளிப்படவில்லை. மாறாக, சில நாட்களுக்குப் பிற்பாடு, பலிச் செலுத்துவதிலிருந்து, நமது கர்த்தருடைய மனதை மாற்றுவதற்கெனப் பேதுரு பேசினபோது, கர்த்தர் உடனடியாக “எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்” (மத்தேயு 16:23).

“ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே” என்ற அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகள், பிரம்மாண்டமான அர்த்தம் கொண்டவைகள் ஆகும் (யோவான் 6:68). நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலமாகத் தேவனுடைய கிருபையை நாடுவதும், நித்தியஜீவனை நாடுவதும் என்பது என்ன

என்றும், தாழ்மையுள்ள யூதர்கள் பெரும்பான்மையானவர்களைப் போன்று பரிசேயர்களின் உபதேசங்களினாலும், தங்களுடைய சொந்த மனசாட்சியினாலும் குற்றவாளியாக்கப்பட்டுச் சோர்ந்துப் போவது என்ன என்றும், பேதுரு நன்கு அறிந்திருந்தார். எதிர்க்கால வாழ்க்கை குறித்த அந்நிய ஜாதிகளின் பல்வேறு தத்துவ ஞானங்கள் பற்றியும் கொஞ்சம் பேதுரு அறிந்திருக்க வேண்டும்; ஒருவேளை இதை அறிந்திருப்பாரானால், இவைகள் மனித யூகங்கள் மாத்திரமே என்றும் அறிந்திருந்திருப்பார்.

ஆனால், மூன்று வருடங்களாகப் பேதுரு இயேசுவை அறிந்திருந்தார். இன்னுமாக, நித்தியஜீவன் தொடர்பான இந்தப் பாடத்தைக்குறித்த இயேசுவின் வார்த்தைகளையும் பேதுரு கேட்டிருந்தார். இயேசுவின் போதனைகள், யூகங்கள் அல்ல. “அவர் வேதபாரகரைப் போல் போதியாமல், அதிகாரமுடைவராய் அவர்களுக்குப் போதித்தார்” என்று பார்க்கின்றோம் (மாற்கு 1:22). நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதன் மூலமாக, நித்தியஜீவனை எதிர்ப்பார்க்கலாம் என்று இயேசு அவர்களுக்குப் போதிக்கவில்லை. (நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதும், அதினால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதும் கூடாத காரியம் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்). மாறாக, இயேசுவினுடைய போதனைகள், மற்றப் போதனையாளர்களின் போதனையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. தாம் உலகத்திற்கு வந்ததற்கான காரணம், ஊழியம் கொள்வதற்கும் (அ) கனம் பெற்றுக்கொள்வதற்கும், மதிப்புப் பெற்றுக்கொள்வதற்கும் அல்லாமல், ஊழியம் செய்வதற்கும், இறுதியில் ஆதாமின் பரீட்சை காரணமாகவும், கீழ்ப்படியாமையின் காரணமாகவும் ஜீவனுக்கான உரிமைகளை இழந்துள்ள அனைவருக்கும், ஈடுபலிக் கிரயமாக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கும் என்று சீஷர்களுக்கு அவர் கற்றுக்கொடுத்தார் (மத்தேயு 20:28). தெய்வீக அன்பு மற்றும் ஏற்பாட்டின் மூலமான இந்த ஈடுபலியின் காரணமாக, புதிய உடன்படிக்கையினுடைய கிருபையான இரக்கங்களின் கீழ்க் காண்பிக்கும் கீழ்ப்படிதல் வாயிலாக, நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை, அனைவரும் பெற்றுக்கொள்வார்கள் என்று இயேசு போதித்தார். அதோடு கூட, “பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் மனுஷகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டு (கீழ்ப்படிந்து), பிழைப்பார்கள் (பூரண ஜீவனை அடைவார்கள்)” என்றும் கூறினார் (யோவான் 5:25, 28, 29). இந்த எளிமையான மற்றும் அருமையான சுவிசேஷத்தை, அதாவது நித்தியஜீவன் பற்றின ஒரே உண்மையான நற்செய்தியைப் பேதுரு கேட்டிருந்தார்; இயேசுதான், உலகத்திற்கு ஜீவன் கொடுக்கும்படிக்குத் தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்றும், உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி என்றும் பேதுரு அடையாளம் கண்டுக் கொண்டார் (யோவான் 1:9).

இந்தக் கண்ணோட்டத்தின் காரணமாகவே, “ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே” என்று பேதுரு பதிலளித்தார். வேறெங்கும் பெற்றுக்கொள்ள முடியாத, அஸ்திபாரத்தையும், நங்கூரத்தையும் பேதுருவின் விசுவாசமும், நம்பிக்கையும், கிறிஸ்துவின் உபதேசத்தில் கண்டடைந்தது.

இன்றுள்ள புத்தியுள்ள விசுவாசிகள் அனைவரின் விஷயத்திலும் இப்படியாகவே உள்ளது; கிறிஸ்துவின் மரணத்தையும் மற்றும் தேவனுடைய அன்பையும், தயவையும், அவருடைய மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களையும் உள்ளடக்கியுள்ள ஜீவனுக்கான அருமையான வார்த்தைகளை எந்தளவுக்கு இன்றுள்ள புத்தியுள்ள விசுவாசிகள், கேட்டு,புரிந்துக்கொள்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்களது விசுவாசமும், நம்பிக்கையுங்கூட, பேதுரு விஷயம் போன்று அஸ்திபாரத்தையும், நங்கூரத்தையும் அடைகின்றது. சத்தியத்தை ஒருமுறை உணர்ந்த பிற்பாடு, நற்செய்தியை ஒருமுறை கேட்ட பிற்பாடு, நித்தியஜீவனுக்கான வார்த்தைகளைக் கேட்ட பிற்பாடு, இதற்காக புத்தியுள்ள இந்த விசுவாசிகள் எதைக் கொடுப்பார்கள்? (exchange)

நாம் ஏறெடுத்துப் பார்க்கையில் புத்தா, பிரம்மா, சொராஸ்டர், கன்பூசியஸ் (confucious) என்பவர்களின் தத்துவங்கள் இன்னமும் காணப்படுகின்றது. ஆனால், அவைகள் நம்மைத் திருப்திப்படுத்துவதில்லை. இந்த உலகத்தின் ஞானமானது, ஒரு பரிணாமம் பற்றின யூகத்தைத் தெரிவிப்பதை நாம் கேட்டுள்ளோம்; இந்த யூகமானது ஓர் உயிரணு, தலைப்பிரட்டையாக வளர்ச்சி அடைந்தது என்றும், தலைப்பிரட்டையிலிருந்து குரங்கு வந்தது என்றும், குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றும், காணப்படுகின்றது.

பின்னர் மனிதனிலிருந்து, மனிதனைக் காட்டிலும் உயர் தளத்திற்கு வளர்ச்சி காணப்படும் என்ற பரிணாமம்பற்றின இந்த யூகமானது அதனையே தொடர்ந்து உறுதிப்படுத்திக் கொண்டும் இருக்கின்றது. ஆரம்பத்தில் தேவன் என்ற ஒருவர் இருந்திருந்தாலும், இல்லாமல் இருந்திருந்தாலும், போகப்போக ஞானமுள்ள மற்றும் வல்லமையுள்ள தேவர்கள் படிப்படியாகத் தோன்றும்போது, மில்லியன் கணக்கான வல்லமையும், ஞானமுமுள்ள தேவர்கள் இருப்பார்கள் என்று இந்தப் பரிணாம யூகம் நமக்கு உறுதியளிக்கின்றது. ஆனால், இத்தகைய பயங்கரமான யூகங்களிலிருந்து, நம்முடைய இருதயங்கள், எந்த மனிதனும் பேசினது போல் அல்லாமல் இயேசுவினால் பேசப்பட்ட ஜீவனுக்கான அருமையான வார்த்தைகளை நோக்கித் திரும்புகின்றது. அந்த வார்த்தைகளில்தான் உலகத்தால் தரமுடியாததும், எடுத்துப்போட முடியாததுமான இளைப்பாறுதலும், சமாதானமும் காணப்படுகின்றது.

இந்த மாபெரும் போதகரின் அறிவுரைகளைப் பின்பற்றுகையில், இவர் அனைவருக்குமென அளித்துள்ள இந்த நித்தியஜீவனை அதிகமதிகமாக நாம் கற்றுக்கொண்டு வருகின்றோம். நித்தியஜீவனாகிய இந்த ஈவு, அவரை அன்புகூருகின்றவர்களுக்கு மாத்திரமே என்றும், ஈடுபலிச் செலுத்தப்பட்ட உலகத்திலிருந்து, சுவிசேஷ யுகத்தில் ஒரு சிறு மந்தையினர், அழைக்கப்பட்டு, அவர்களுடைய அன்புடன்கூடிய கீழ்ப்படிதல் காரணமாகப் பாத்திரவான்களென நிரூபிக்கப்பட்டு, திவ்வியச் சுபாவத்தின் மகிமை, கனம் மற்றும் அழியாமையில் அவரோடுக் கூட உடன் சுதந்தரர்களாக இருக்கப்போகின்றார்கள் என்றும் நமக்கு இந்தப் போதகர் கற்றுக்கொடுத்துள்ளார்; இன்னுமாக ஈடுபலியின் இரத்தத்தினால், முத்திரிக்கப்படும் புதிய உடன்படிக்கையின் இருதயப்பூர்வமான கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசம் எனும் நிபந்தனைகளின் கீழ், மனித பூரணத்தை, நித்தியஜீவனோடு திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பைக்கொண்டும், அறிவைக் கொண்டும், இவர்கள் கர்த்தருடன்கூட அடுத்த யுகமாகிய ஆயிரம் வருஷ அரசாட்சியில், பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பார்கள் என்றும் நமக்கு இந்தப் போதகர் கற்றுக்கொடுத்துள்ளார். நாம் இங்கு விவரித்துள்ளது, முற்காலத்தில் உரைக்கப்பட்ட அதே சுவிசேஷம், நித்தியஜீவனுக்கான அதே வார்த்தைகள்தான்; ஆனால், இவைகளின் பிரம்மாண்டமான நிறைவேறுதலின் அண்மையில் நாம் காணப்படுவதினால், அதே சுவிசேஷத்தை விரிவாக உரைத்துள்ளோம்.

யூத யுகத்தினுடைய அறுவடையில் "நித்தியஜீவனுக்கான வார்த்தைகளை" நமது கர்த்தர், தம்முடைய பின்னடியார்களிடம் பேசின பிற்பாடுதான், "இடறல்கள் வருவது அவசியம்" என்று கூறி, அவர்களைக் கோதுமையைப்போல் புடைக்கிறதற்கென "இடறல்களை" அனுமதித்தார். "இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" (மத்தேயு 18:7). இந்தப் பரீட்சைகளானது, யார் யார் முதிர்ந்த கோதுமை மற்றும் வளர்ச்சியுறாத கோதுமை மற்றும் பதர் என்று நிரூபிக்கப்படுவதற்கேயாகும். இரண்டு வகுப்பார்கள் விசேஷமாகப் புடைக்கப்படுகின்றனர். அதாவது, அரும்பொருள்களை அறிந்துக்கொள்ள வேண்டும் என்றிருப்பவர்களும் (curious), அதிகம் விருப்பம் இல்லாதவர்களும் அடங்கிய ஒரு வகுப்பார் மற்றும், அர்ப்பணம் பண்ணியும் ஆழமான குணலட்சணம் கொண்டிராதவர்கள் அதாவது, நமது கர்த்தருடைய உவமையில் வசனத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருந்தும், இருதயம் எனும் நிலம் ஆழமாக இல்லாமலும், உண்மையான அன்பு மற்றும் சத்தியத்திற்கான அர்ப்பணம் இல்லாமலும் இருக்கும் கற்பாறை நிலம் போன்ற மற்றொரு வகுப்பார்; இந்த இரண்டாம் வகுப்பார் உபத்திரவங்கள் (அ) துன்பங்கள் வரும்போது, இவர்கள் உடனடியாக இடறல் அடைந்து, பின்னிட்டுத் திரும்பி, கர்த்தரிடமும், அவருடைய உண்மையுள்ளவர்களிடமும் இருந்து விலகிப் போய்விடுவார்கள்.

சுவிசேஷ யுகத்தினுடைய தற்போதைய அறுவடையாகிய இப்பொழுதும் இப்படியாகவே இருக்கின்றது. யுகங்களைக் குறித்ததான தெய்வீகத் திட்டத்தின் "ஆழமான காரியங்கள்" அநேகவற்றைக் கண்டுள்ளதால், நமது கண்கள் பாக்கியமுள்ளவைகள்; மாபெரும் போதகரின் பாடங்களையும், மகிமை, கனம் மற்றும் அழியாமையின் வார்த்தைகளையும், நித்தியஜீவனுக்கான வார்த்தைகளையும், ஆச்சரியத்திற்குரிய தெளிவுடன் கேட்டுள்ளதால், நமது காதுகள் பாக்கியமுள்ளவைகள். கர்த்தருடைய ஏற்பாட்டின்படி இப்பொழுது நாம் பரீட்சைகளுக்காகவும், புடைக்கப்படுவதற்காகவும் ஆயத்தத்துடன் காணப்பட வேண்டும். இப்பொழுதும், மீண்டுமாக அனைவரையும்

நிரூபித்துக் காட்டுவதற்கும், அர்ப்பணம் பண்ணாதவர்களையும், குணலட்சணங்களை ஆழமாகப் பெற்றிராதவர்களையும், கிறிஸ்துவின் நிமித்தமான நிந்தைகளையும், அவமானங்களையும் சகிப்பதற்கு விருப்பம் இல்லாதவர்களையும் விலகச் செய்வதற்கும் என இடறல்கள் அவசியமாய் உள்ளது. இப்படியாகவே, நிழலான கிதியோனின் சேனை விஷயத்திலும் நடந்தது. கிறிஸ்துவின் உடன் சுதந்தரர்களாக, தேவனுக்குச் சொந்தமாய் உள்ளவர்கள் அனைவரும், வைராக்கியத்தில் விசேஷமாய் இருக்கும் ஜனங்களாக, ஒரு தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாராய்க் காணப்பட வேண்டும். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்;" "உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்கவேண்டியதே" (1 பேதுரு 4:12; 1 கொரிந்தியர் 11:18, 19).

இங்குப் பரீட்சையில் நிலைநிற்கின்றவர்கள், முந்தின அறுவடையின் பரீட்சையில், பேதுரு பேசினது போன்றுக் காணப்படுவார்கள். இவர்களைச் சோர்வு மேற்கொள்ளும் போது, இவர்களும், "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம்?" என்றே கேட்பார்கள். இவர்கள் தங்களைச் சுற்றிலும் பிசாசுகளின் பல்வேறு உபதேசங்களும், ஆவியுலகக் கோட்பாட்டின் வஞ்சனைகளும், நாத்திகர்களும், கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகளும், வேதவாக்கியம் மற்றும் பகுத்தறிவிற்கு எதிரானவைகளும், குருட்டுத்தன்மைகளும் இருப்பதைக் காண்கின்றனர். இந்தக் கணநேர கண்ணோட்டம் என்பது, கர்த்தர் தெரிந்துக்கொள்ள விரும்பும் வகுப்பாருக்குப் போதும். இதற்கு மேல் இவர்களால் விலகிப் போக முடியாது; கர்த்தருடைய சேனையை விட்டு விலகிப் போகும்படிக்கு இவர்களைக் கட்டாயமும் படுத்த முடியாது. உண்மைதான், நாம் எங்கே போவோம்? நம்முடைய தலைவரிடம், ஆம் அவரிடம் மாத்திரமே, நித்தியஜீவனுக்கான வார்த்தைகள் இருக்கின்றது. நாம் அவருடைய வார்த்தைகளைக் கேட்டுள்ளபடியினால், மற்ற விசேஷ செய்திகள் அனைத்தின் மீதுமான ஈர்ப்புப் போய்விட்டது. நம்முடைய மாபெரும் இரட்சிப்பின் அதிபதியில் நாம் நிலைத்திருந்து, அவரைப் பின்தொடர்வோம்; அவருடைய வார்த்தைகளிலும், அவருடைய அன்பிலும், அவருக்கான ஊழியத்திலும் நாம் ஜீவித்து, இயங்கி, தேவனுடைய தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாக நிலைத்திருப்போம்.

"கர்த்தருடைய பரிசுத்தவானே!
அவருடைய சிறப்பான வார்த்தைகள் மீதுள்ள
உன் விசுவாசத்தின் அஸ்திபாரம் எவ்வளவு உறுதியாய் உள்ளது?
அடைக்கலத்திற்காக நீ புகுந்துள்ள இயேசு கூறியுள்ளதைக் காட்டிலும்
அதிகமாய் வேறென்ன உனக்குக் கூறிடுவார்."

---

**R5096**

# “தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல”

## மாற்கு 7:1-13

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது." - ரோமர் 14:17

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், தெய்வீக நியாயப்பிரமாணங்களைக் கவனமாகக் கைக்கொள்வதாக அறிக்கைப் பண்ணிக்கொண்டும், கைக்கொள்ளும் விஷயத்தில் காணப்படும் தங்களது உண்மைத் தன்மையைக்குறித்துத் தற்பெருமையடித்துக் கொண்டும் இருந்த பரிசேயர்கள், படிப்படியாக, தேவனுடைய வார்த்தைகளிடமிருந்து விலகிப்போய், மனித பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறவர்களுமானார்கள் என்பதையே

இன்றைய நமது பாடம் காட்டுகின்றது. இப்படியாகவே இன்றைய யூதர்களும் காணப்படுகின்றனர். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தமான வேதவாக்கியங்களை இன்றைய யூதர்கள் வாசித்தாலுங்கூட, அது அவர்கள் புரிந்துக்கொள்ள முடியாத முத்திரிக்கப்பட்ட புஸ்தகமாகக் கருதப்படுகின்றது. மேலும், இதைப் புரிந்துக்கொள்வதற்கு முயற்சி எடுப்பதற்குப் பதிலாக, இவர்கள் தல்மூது (Talmud) என்ற யூத வேதாகமத்தைப் படித்துக்கொண்டு, இதன்படித் தங்களது வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றனர். இந்த Talmud எனும் யூத வேதாகமமானது, ஞானம் மற்றும் ஞானமற்ற வாக்கியங்களைக் கொண்டுள்ளது; புத்தியுள்ள மற்றும் மடத்தனமான அறிவுரைகளைக் கொண்டுள்ளது; இதன் அடிப்படையிலேயே ஆச்சாரமான யூதர்கள் தங்களுடைய மதசம்பந்தமான உணர்வுகளை வனையப்பெற்றிருக்கின்றனர்.

இன்றைய கிறிஸ்தவர்களுடைய விஷயத்திலும் இப்படியாகவே உள்ளது. வேதாகமம்தான் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டாலும், ஒவ்வொரு கிறிஸ்தவப் பிரிவுகளுக்கும், சொந்த கொள்கைகளும், சொந்த புஸ்தகங்களும், சொந்த வினாவிடை புஸ்தகங்களும் உள்ளது. வேதாகமம் வாசிக்கப்பட்டாலுங்கூட, அவரவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விசுவாசப் பிரமாணத்தின் விளக்கங்களே கிறிஸ்தவர்களின் மனதில் காணப்பட்டு, வேதாகமத்தைத் திரையிட்டு மூடிவிடுகின்றது. ஆகவேதான் வேதாகமத்தை நமது கரங்களில் கொண்டிருந்த போதிலும், பயபக்தியை நமது இருதயங்களில் கொண்டிருந்த போதிலும், ஒன்று சேர்வதற்கு வாய்ப்பற்ற நிலையில், 600 பல்வேறு பிரிவினர்களாகக் கிறிஸ்தவர்களாகிய நாம் பிரிந்திருக்கின்றோம். காரணம், ஒவ்வொரு பிரிவினரும், வேதாகமத்தை ஆராயும் விஷயத்தில் தங்கள், தங்கள் சொந்த விசுவாசப் பிரமாணம் எனும் மூக்குக் கண்ணாடியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று விடாப்பிடியாய்க் காணப்படுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் உண்மையாய் ஞானமுள்ளவர்கள் என்றால், அவர்களை நீண்ட காலமாகப் பிரித்து வைத்ததும், தேவனுடைய வார்த்தைகள் அநேகவற்றிற்குத் தவறான அர்த்தம் கொடுத்ததும், நமது மனங்களைக் குழப்பி வைத்திருந்ததுமான இந்த விசுவாச பிரமாணம் எனும் மூக்குக் கண்ணாடிகளைக் கிறிஸ்தவர்கள் தள்ளி வைத்துவிடவும், அழித்து விடவும் முற்படுவார்கள் அல்லவா? கிறிஸ்தவர்கள் உண்மையாய் ஞானமுள்ளவர்கள் என்றால், அவர்கள் பரம ஆலோசனைகளையும், பரம ஞானத்தையும் எடுத்துக்கொண்டு, வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கங்களிலும் பிரகாசிக்கும் ஒளியில், தேவனுடைய வார்த்தைகளைப் புதிதாய்ப் படிக்க/ஆராய ஆரம்பிக்க முற்படுவார்கள் அல்லவா? இதனை கோட்பாடு/வார்த்தை அளவில் அனைவரும் நிச்சயமாய் ஒத்துக்கொள்வோம்; இந்த நமது தீர்மானத்தை நாம் நடைமுறையிலும் செயல்படுத்தலாம் அல்லவா ?

## “கழுவப்படாத கைகளினால் புசித்தல்”

இயேசுவைப் போன்ற ஒரு திறமிக்க நபரைத் தங்களுடைய கூட்டத்தில் சேர்த்துக்கொள்வதிலும் அதாவது, தங்களுடைய செய்கைகளுக்கு ஒத்த செய்கை செய்பவராக, தங்களுடைய கூட்டத்தில் ஒருவராகச் சேர்த்துக்கொள்வதிலும், இப்படியாக அவராலும் தாங்கள் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்று காண்பித்துக்கொள்வதிலும் பரிசேயர்கள் பிரியப்பட்டிருப்பார்கள். நீதி, இரக்கம் மற்றும் அன்பின் அடிப்படையிலுள்ள, அவருடைய போதனைகளிலுள்ள உயர்வான தன்மையை அவர்கள் கவனிக்காமலும் இருக்கவில்லை. ஒருவேளை அவர் அவர்களது சடங்காச்சாரங்களுக்கும் ஆதரவு கொடுத்திருப்பாரானால், ஒருகாலத்தில் அவர்களை நடுங்கச் செய்யும் அளவுக்கு அவர் பேசின உண்மைகளைக்கூட அவருக்கு மன்னித்து விட்டிருப்பார்கள். அவருக்கு நிகராக யாரும் இருக்கவில்லை. அசுத்தத்துடன் காணப்பட்டவர்களுக்கு அவர் மிதமிஞ்சின பரிசுத்தத்தை கொண்டவர் போன்று தோன்றினார்; மாய்மாலமாய் அறிக்கைப் பண்ணிக்கொண்டு திரிந்தவர்களின் பார்வையில், அவர் மிதமிஞ்சின நேர்மையைக் கொண்டவர் போன்று தோன்றினார்; உலக ஞானிகளென இருந்தவர்களுடைய பார்வையில், அவர் வெளிப்படையாய்ப் பேசும் தன்மையை மிதமிஞ்சின அளவில் கொண்டவராகவும், மிதமிஞ்சின உண்மையுள்ளவர் போன்றும் தோன்றினார்.

இயேசுவின் பின்னடியார்கள் ஏன் தல்மூது (Talmud) எனும் யூத வேதாகமத்திற்கு இசைவாகப் போதிக்கப்படவில்லை. அதாவது, புசிப்பதற்கு முன்னதாக, மத ரீதியான கடமையாக/சடங்காக எப்பொழுதும் கைகளைக் கழுவிக்கொள்ளும் விஷயத்தில் ஏன் மிகவும் கவனமாய் இருக்கும்படிக்குப் போதிக்கப்படவில்லை என்று பரிசேயர்கள் கேள்வி கேட்கும் விஷயமே இப்பாடத்தில் காணப்படுகின்றது. அசுத்தமாக இருப்பது தொடர்பான எந்த மாதிரியையும், இயேசு தம்முடைய பின்னடியார்களுக்கு முன்பாக வைக்கவில்லை என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. எந்தளவுக்கு ஒருவருடைய இருதயத்திற்குள் சத்தியம் பிரவேசிக்கின்றதோ, அவ்வளவாக அச்சத்தியமானது, முழு வாழ்க்கையின் மீது மனரீதியிலும், ஒழுக்க ரீதியிலும், சரீர ரீதியிலும் சுத்திகரிப்பிற்கு ஏதுவான தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதை நாம் அறிவோம். பரிசேயர்கள் இங்குக் குறிப்பிடுவது, கைகள் சுத்தமாகவோ (அ) சுத்தமில்லாமலோ காணப்பட்டாலும், சடங்காச்சாரமாகக் கைகளைக் கழுவுதல் என்ற மதத்தின் அம்சத்தையே ஆகும். இதையே இயேசு மறுத்தார். இப்படியாக, அவரால் போதிக்க முடியாது. ஏனெனில், இப்படிச் செய்வது என்பது, சடங்காச்சாரமான மாய்மாலமாகிவிடும். வேறு ஒரு தருணத்தில், இப்படியாகப் பரிசேயர்கள் தங்களையும், தங்களது பாத்திரங்களையும், கடமையானவிதத்திலும், சடங்காச்சாரமானவிதத்திலும் அருமையாகக் கழுவிக்கொள்வது என்பது, அவர்களுடைய அதிகப்படியான நேரத்தை எடுத்துக்கொள்கின்றது என்றும், இம்மாதிரியாக ஏழைகள் தங்களைக் கழுவிக்கொள்வதற்கு, வேலையாட்களைக் கொண்டிராததால், இவ்விஷயம் ஏழைகளுக்குப் பாரமாக உள்ளது என்றும் இயேசு கூறியுள்ளார். இப்படியாகக் கழுவிக்கொள்ளாதவர்கள் அசுத்தமாய், பரிசுத்தமில்லாமல் இருக்கின்றார்கள் எனவும், தெய்வீக ஒழுங்குகளுக்கு எதிராக இருக்கின்றார்கள் எனவும், உண்மையான யூதர்களல்ல எனவும் ( யூதர்களால்) கருதப்படுகின்றனர்.

இவ்விஷயம் தொடர்பாக இயேசு, பரிசேயர்களுக்கு “இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிறபிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கத்தரிசனம் சொல்லியிருக்கிறான். நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்துவருகிறீர்கள் என்றார்” (மாற்கு 7:6-8).

தேவனால் கட்டளையிடப்படாமல், மனிதனால் கட்டளையிடப்பட்டுள்ள தல்மூது (Talmud) எனும் யூத வேதாகமத்தின் சடங்காச்சாரமான கழுவுதல்களுக்கு, ஸ்நானம் பண்ணுவதற்கு அதிக கவனம் செலுத்திக்கொண்டு, பரிசேயர்கள் எப்படி, தெய்வீகக் கட்டளைகளைப் புறக்கணிக்கின்றார்கள் என்பதற்கான உதாரணத்தை, இயேசு அவர்களுக்குக் கூறினார். தாய், தகப்பனைக் கனம் பண்ண வேண்டும் என்பதும், இவர்களில் எவரையேனும் நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும் என்பதும், மோசேயின் நியாயப்பிரமாணம் கட்டளையிட்ட காரியமாகும். ஆனால், தல்மூது (Talmud) மூலம் இந்தக் கட்டளை மாற்றப்பட்டுள்ளது; தேவனுக்கும், மத அனுசரிப்பிற்கும் சில பொருள்களையும், தன்னையும் காணிக்கையாக்குவதன் வாயிலாக ஒரு மனுஷன், தனது பெற்றோர்களிடமிருந்து விடுதலையாகின்றான் என்று தல்மூது கூறுகின்றது. இப்படியாகச் செய்வதன் மூலம், ஒருவன் தனது பெற்றோருக்கான சகல கடமைகளிலிருந்தும் விடுதலையாகின்றான். இப்படியாக பெற்றோருக்கான கடமை தொடர்புடைய தேவனுடைய நேரடியான கட்டளையை, தல்மூது வீணானதாக்குகின்றது; இதைச் செய்வதற்கு இவர்களுக்கு அதிகாரம் இல்லை.

இதுவே இயேசுவின் போதனைகளுக்கும், பரிசேயர்களின் போதனைகளுக்குமிடையேயுள்ள முரண்பாடாகும். இவர்கள் இருவருமே பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்றும், தெய்வீகப் பிரமாணங்களைக் கவனமாய்க் கடைப்பிடிக்கின்றார்கள் என்றும், உரிமை கோரிக்கொண்டார்கள்; ஆனால், இயேசுவோ தேவனுடைய வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டவராகவும், முன்னோர்களுடைய பாரம்பரியங்களையும், தல்மூதையும் (Talmud) புறக்கணித்தவராகக் காணப்பட்டார். மேலும், பரிசேயர்களோ தேவனுடைய வார்த்தைகளைப் புறக்கணித்துப்போட்டு, பாரம்பரியங்களைப்

பிடித்துக் கொண்டிருந்தவராகக் காணப்பட்டனர். கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று என்ன செய்கின்றோம்? "உண்மையுள்ள வார்த்தைகளை நாம் பற்றிக்கொள்வோமாக." நம்மை ஞானமுள்ளவர்களாக்கும், "தேவனுடைய வசனத்தை" பற்றிக்கொள்வோமாக. வேத வாக்கியங்களைத் தினந்தோறும், கருத்தாக ஆராய்வோமாக, மற்றும் வேதவாக்கியத்திற்கு முரண்பாடாயுள்ள அனைத்தையும் நாம் புறக்கணித்து விடுவோமாக.

## "தேவனுடைய இராஜ்யம் எது?"

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு, நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமும்தான் தேவனுடைய இராஜ்யம் என்று அர்த்தம் கொள்ளப்படுகின்றது. இது முற்றிலும் தவறான கருத்து என்று இவ்வசனத்தில் உரைக்கப்பட்ட சந்தர்ப்பமானது காட்டுகின்றது. இதை நாம் பார்க்கலாம்.

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராஜ்யம் தொடர்பாக, நாம் ஏற்கெனவே பார்த்துள்ளதை, அதாவது மனுக்குலத்தைச் சீர்த்தூக்குவதற்குரிய, மேசியாவின் ஆயிரம் வருஷம் ஆளுகையே அந்த இராஜ்யம் என்பதையும், அந்த இராஜ்யத்தில் சபை, இயேசுவுடன் அவருடைய இராஜ்யத்தின் மகிமையிலும், வல்லமையிலும், கனத்திலும் பங்கடைந்திருப்பார்கள் என்பதையும் நாம் நினைவில் கொண்டிருப்போமாக. இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான அழைப்பானது, இந்த மணவாட்டி வகுப்பாரைத் தெரிந்தெடுத்துக் கொண்டு, அவர்களை வளரச்செய்து, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, அவர்களைத் தகுதியுள்ளவர்களாக்குவதற்குமே" ஆகும்.

இந்தக் காலத்தில் இப்படியாக அழைக்கப்படுபவர்கள், மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவி ஆகத்தக்கதாகவே அழைக்கப்படுகின்றனர்; இவர்கள் கருநிலையில் அல்லது முழுவதும் வளர்ச்சியடையாத நிலையிலுள்ள இராஜ்யமாக இருக்கின்றனர். இராஜ்யத்தின் இந்தத் தேர்வுக்கு உட்பட்டிருக்கும் அங்கங்களைக்குறித்து வேதவாக்கியங்கள், இவர்கள் பத்துக் கற்பனைகளில் வெளிப்படும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை என நமக்குக் கூறுகின்றது; இவர்கள் நியாயப்பிரமாணத்தின் வாயிலாக நித்தியஜீவனை எதிர்ப்பார்க்கவில்லை. மாறாக, கிருபையின் கீழே இவர்கள் காணப்படுகின்றனர்; கிறிஸ்துவின் மரணத்தினுடைய புண்ணியத்தின் வாயிலாக, தேவன் இவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள ஒரு கிருபையான ஏற்பாட்டின் கீழாகவே இவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் யூதர்களுடைய நியாயாப்பிரமாணத்தினுடைய பல்வேறு கட்டளைகளிலிருந்து விடுவிக்கப்பாட்டாலும், இவர்கள் பிரமாணம் கொண்டிராமல் இல்லை என்றும், இவர்கள் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்களாக மாபெரும் திவ்விய பிரமாணத்தின் கீழேயே காணப்படுகின்றனர் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். நம்முடைய மாம்சத்தின் பெலவீனம் காரணமாக, நம்மால் பிரமாணத்தின் ஆவிக்கேற்ப முழுமையாக நடக்க முடியாவிட்டாலுங்கூட, நாம் "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கும்" போது, புதுச் சிருஷ்டிகளாக நாம் திவ்வியப் பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தை நிறைவேற்றுகின்றவர்களாக இருப்போம் என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார். புதிய சிந்தை அதாவது, வாஞ்சைதான் நியாயந்தீர்க்கப்படுகின்றதே ஒழிய, மாம்சம் அல்ல.

இப்படியாக, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கத்திற்குள் வந்திட்ட புறஜாதிகளுக்கு, யூதர்களுடைய நியாயப்பிரமாணம் கேட்கும் விஷயங்களுக்கு ஒத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. உதாரணத்திற்கு, யூதனைப் பொறுத்தமட்டில், நியாயப்பிரமாணத்தின்படி அவன், செதிள் இல்லாத மீன்கள், முயல், பன்றி முதலானவற்றின் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது. மேலும், அவன் புசிக்கும் மற்றும் பானம் பண்ணும் விஷயங்களில் பல்வேறு விதங்களில் அவனுக்குக் கட்டுப்பாடு உள்ளது. ஆனால், இந்தக் கட்டுப்பாடுகளில் எதுவும் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் ஒருபோதும் இராமல், கிறிஸ்தவர்களாக மாறியுள்ள புறஜாதியினருக்குப் பொருந்தாது.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில், புசிப்பதிலும், பானம் பண்ணுவதிலும் கிடைத்துள்ள இந்தச் சுயாதீனங்கள் என்பது, இந்தக் கருநிலை இராஜ்ய வகுப்பாருக்கு தற்காலத்து ஜீவியத்திற்குரிய உண்மையான ஆசீர்வாதங்களாகக் கருதப்படக்கூடாது என்பதையே பரிசுத்த பவுல் வலியுறுத்துகின்றார். இவைகளுக்கும் மேலாக, இவ்வகுப்பாருக்குரிய உண்மையான ஆசீர்வாதங்கள் என்பது, நீதியிலும், சமாதானத்திலும்,

பரிசுத்த ஆவியின் சந்தோஷத்திலுமுள்ள இவர்களது களிகூருதலிலேயே அடங்குகின்றது. இவர்களுடைய மனங்கள் புதிதாகிறதினாலே, மறுரூபமடைந்த இவர்கள் நீதியையும், சத்தியத்தையும் உணர்ந்துக்கொண்டு, அதை விரும்பும் நிலைக்கு வந்துள்ளனர்; தீமையைப் பார்க்கிலும் நல்லவைகளையும், அசுத்தத்தைப் பார்க்கிலும் சுத்தமானதையும், பூமிக்குரியவைகளைப் பார்க்கிலும் ஆவிக்குரியவைகளை விரும்பும் நிலைக்கு இவர்கள் வந்துள்ளனர்; பூமிக்குப்பதிலாக இவர்களுடைய குடியுரிமை இன்று பரலோகத்தில் காணப்படுகின்றது. "எல்லா புத்திக்கும் மேலான தேவனுடைய சமாதானத்தை" இவர்கள் உணரும் நிலைக்குள் வந்துள்ளனர்; மேலும், இந்தச் சமாதானம், இவர்களுடைய இருதயத்தில் ஆளுகை செய்வது என்பது, கருநிலையிலுள்ள இராஜ்ய வகுப்பாரின் அங்கங்களாக, இவர்கள் அனுபவிக்கும் பிரம்மாண்டமான ஆசீர்வாதங்களில் ஒன்றாகும்.

"துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." "துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக்கூடாமல்....." (ஏசாயா 48:22; 57:20). கிறிஸ்துவுடன், அவருடைய இராஜ்யத்தின் வகுப்பாருக்குரிய அங்கங்களாக நாம் இணைந்ததின் விளைவே, நமக்கான பரம சமாதானமும், தேவனிடத்திலுமான நம்பிக்கையுமேயாகும். இதையே நாம் உயர்வாகக் கருதுகின்றோமே ஒழிய, பன்றியின் மாம்சத்தைப் புசிக்கும் சிலாக்கியத்தை அல்லது யூதர்களுக்குத் தடைப்பண்ணப்பட்ட ஏதோ ஒன்றைப் புசிக்கும் சிலாக்கியத்தை நாம் விசேஷமானதாகக் கருதுவதில்லை. பரிசுத்த ஆவியால் உண்டாகும் சந்தோஷம், அதாவது பிதாவுடனும், குமாரனுடனும், நீதியின் ஆவியையுடைய அனைவருடனுமுள்ள ஐக்கியம் என்பது கரு நிலையில் இருக்கும் இராஜ்ய வகுப்பாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்குக் கிடைத்திட்ட ஆசீர்வாதமான சிலாக்கியமாகும்.

இப்படியாக, இவ்வகுப்பார் பெற்றுள்ள பல்வேறு தயவுகளுக்குரிய தகுந்த மதிப்பை, அப்போஸ்தலர் முன்வைக்கின்றார். ஆகையால், கர்த்தருடைய நோக்கத்தினுடைய நலனுக்கடுத்த காரியங்களுக்காக அல்லது கிறிஸ்துவுக்குள்ளான சகோதரருடைய நலனுக்கடுத்தக் காரியங்களுக்காக, இவர்கள் உணவு மற்றும் பானம் சம்பந்தமான விஷயங்களில் தங்களது சுயாதீனத்தை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில், இவர்கள் கிறிஸ்துவினிமித்தமாகவும், சகோதரர்களினிமித்தமாகவும் செய்யும்/மேற்கொள்ளும் இப்படியான சுயத்தில் வெறுத்தல்கள், ஒரு பெரிய விஷயமாகக் (இவர்கள்) கருதக்கூடாது; அதாவது, சந்தோஷத்துடன் ஏறெடுக்கும் தியாகங்களாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில், இப்படியான தியாகங்கள் எவ்விதத்திலும் கிறிஸ்துவுக்குள்ளான நமது ஆசீர்வாதங்களின் மற்றும் சிலாக்கியங்களின் உண்மையான மதிப்பைக் குறிக்கிடவோ அல்லது தொந்தரவோ செய்வதில்லை.

---

**R3337**

# “கிறிஸ்து ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்”
## மாற்கு 7:24-37

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்." - எபிரெயர் 11:6

இப்பாடத்திலிருந்து நாம் கிறிஸ்துவினுடைய பூமிக்குரிய வாழ்க்கைப்பற்றின ஆராய்ச்சியில் ஒரு புதிய பாகத்தை ஆரம்பிக்கின்றோம்.

## ‘‘விலையேறப் பெற்ற இரத்தத்தினால், இழப்பிலிருந்து மீட்கப்பட்ட உலகத்தினுடைய ஜீவனுக்கான உரிமைகள்’’

இக்கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்போது, பாவத்தின் தீர்ப்பாகிய மரணத்திலிருந்து ஆதாமையும், அவருடைய சந்ததியையும் மீட்கும்படிக்கு, மனிதர் சார்பாக

மரிக்கும்படி இயேசு உலகத்திற்கு வந்தபோது, அவர் இன்னும் இரண்டு மற்ற முக்கியமான வேலைகளைச் செய்தார் என்பதை நாம் புரிந்துக்கொள்கின்றோம். மீட்பின் வேலை பிரதானமானதாகும்; இது இல்லாமல் எவ்விதமான எதிர்க்கால வாழ்க்கையும் இருக்கமுடியாது. கல்வாரியில் பலி நிறைவடையும் வரையிலும் தினந்தோறும் ஜீவனை ஒப்புக்கொடுத்தது என்பது நமது கர்த்தரால் நிறைவேற்றப்பட்ட பிரதானமான (அ) அஸ்திபாரமான வேலை என்று பெயரிடலாம். இது இல்லாமல், வேறு எதுவும் உபயோகப்படாது. மேலும், இந்த அஸ்திபாரத்தின் மேல்தான், மற்ற இரண்டு வேலைகளும் நடைபெற முடியும். ஜீவனும், அழியாமையும் சுவிசேஷத்தின் மூலம், காத்தரால் வெளியரங்கமாக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார். இதன் அர்த்தம் என்னவெனில், நித்தியஜீவன் தொடர்புடைய தெளிவான மற்றும் உறுதியான நம்பிக்கையும் இதற்கு முன்னதாக எவருக்கும், யூதர்களுக்குக்கூடக் கொடுக்கப்படவில்லை என்பதேயாகும். மற்ற ஜாதியார்கள் தேவனற்றுக் காணப்பட்டபடியால், நம்பிக்கையில்லாமல் இருந்தாலுங்கூட, யூதர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்ளத்தக்கதாக போதுமானளவுக்கு தெய்வீக வெளிப்படுத்தல்களைப் பெற்றிருந்தனர்; எனினும், அதன் தத்துவ ஞானத்தை அவர்கள்/யூதர்கள் அறிந்திருக்கவில்லை; அதாவது, தேவன் நீதியுள்ளவராக இருக்கும் அதேவேளையில், அவர் நீதியாய் மரண ஆக்கினைக்குள்ளாக தீர்த்திட்டவர்களை எப்படி விடுவிக்க முடியும் என்பதை அறியாது இருந்தார்கள்; அவர்களால்/யூதர்களால் இதனையறிய முடியவில்லை. காரணம், அதற்குரிய வேளை இன்னும் வராததினால், அது வெளிப்படுத்தப்படவில்லை.

"அநேகருக்கான மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க" வேண்டி, தாம் உலகத்திற்குள் வந்திருப்பதாக, கேட்கும் செவியுடையவர்களுக்கு விவரிப்பதன் வாயிலாக, கிறிஸ்து ஜீவனை வெளியரங்கமாக்கினார் (மாற்கு 10:45). இன்னுமாக இராஜ அதிகாரத்திலுள்ள தமது குரலை, பிரேத குழிகளில் இருப்பவர்கள் கேட்பதற்கும், மரண நித்திரையினின்று விழித்தெழுவதற்கும், அதாவது கல்லறை எனும் சிறைச்சாலையிலிருந்து வெளிவருவதற்குமான காலம் வரும் என்றும் விவரித்தார். இப்படியாகக் கல்லறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டும், ஒருவேளை ஜனங்கள் தொடர்ந்துத் தற்காலத்திலுள்ள வலிகள், வேதனைகள் மற்றும் பிசாசுகளின் எதிர்ப்புகளுக்குக் கீழ்த்தான் காணப்படுவார்களானால், என்ன நன்மை இருக்கும் என்று அவரைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் யோசித்திருக்கக்கூடும். ஆயிரம் வருஷம் யுகமானது உலகளாவிய ஆசீர்வாதத்தின் காலமாக இருக்கும் என்றும், பரிசுத்த இராஜ்யம் எங்கும் தீங்குச் செய்வதற்கோ, அழிப்பதற்கோ எதுவும் இராது என்றும், ஆயிரம் வருஷம் யுகம் தொடர்பாக தீர்க்கத்தரிசிகளால் அருளப்பட்ட சாட்சியங்களை, நமது கர்த்தர் வலுவூட்டினார். இது எவ்வாறு செய்யப்படும் என்பதை, தாம் செய்த பல்வேறு அற்புதங்கள் வாயிலாகக் காட்டினார்; ஏனெனில், அவர் தேவனுடைய இராஜ்யத்தைப் பிரசங்கித்து, அதற்காக எதிர் நோக்கி இருப்பதற்கும், அதன் வருகைக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும், வல்லமைக்காகவும் ஜெபிப்பதற்கும் தம்முடைய சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்தது மாத்திரமல்லாமல், அவரால் நிகழ்த்தப்பட்ட பல்வேறு அற்புதங்கள் வாயிலாக, இராஜ்யத்தின் வல்லமைகளானது, மனுஷர்களின் ஆசீர்வாதத்திற்காக, மனுஷர்கள் மத்தியில் காணப்படும் என்றும் விவரித்துக்காட்டினார்.

அவர் அனைத்து விதமான வியாதிகளையும் சொஸ்தமாக்கினார், மற்றும் பிசாசுகளைத் துரத்தினார்; இவ்விதமாக தேவனுடைய ஏற்ற வேளையில் மாபெரும் வைத்தியனாக, தாம் மனித குடும்பம் தொடர்பான விஷயத்தில் தீமையான கிரியைகள் செய்யாதபடிக்குச் சாத்தானையும், அனைத்து விழுந்துபோன ஆவிகளையும் முற்றிலும் கட்டுப்படுத்துவதற்குரிய அளவுக்கு மிகுதியாய் வல்லமை கொண்டிருப்பார் என்றும், அப்பொழுது தாம் ஏழைகளையும், முடவர்களையும், செவிடர்களையும், ஊமையர்களையும், குருடர்களையும், தற்காலத்து உபத்திரவங்களிலிருந்து தூக்கி விடுவார் என்றுமுள்ள காரியங்களுக்குச் சான்று பகர்ந்தார். இதோடுக் கூட விசுவாசத்தின் மூலம் அவருடைய தயவை ஏற்றுக்கொண்டவர்களுக்குக் (பிணியாளிகளுக்குக்) கிடைத்திட்ட இந்தத் தற்காலிகமான (பிணிகள் மற்றும் பிசாசுகளிடமிருந்ததுமான) விடுதலை என்பது, இன்னும் மேலான ஆசீர்வாதங்களுக்கும், வேலைகளுக்கும் மற்றும் சிலாக்கியங்களுக்கும் விளக்கமாயிற்று. அதாவது, புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படுதல், பாவமாகிய குஷ்டரோகம் சொஸ்தப்படுதல், சூம்பினவைகளுக்குச் சக்திகள் திரும்புதல், மரித்தவர்களை விழித்தெழுப்பப்பண்ணுதல் ஆகியவற்றிற்கு விளக்கமாயிற்று; இப்படியாக,

புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்படும்போதுதான் அனைவரும் தேவனால் அங்கீகரிக்கப்படும் நீதியையும், அதன் பலனாகிய நித்தியஜீவனையும் பார்க்க, கேட்க மற்றும் அறிந்துக்கொள்ள முடியும்; மற்றும் இப்படியாக அனைவரும், பாவம், பூரணமின்மை முதலான தற்போதைய அடிமைத்தனத்தினின்று, தேவனுடைய குமாரர்களுக்குரிய முழுச் சுதந்திரத்திற்குள் வரத்தக்கதாக உதவப்படமுடியும். இப்படியாக, இராஜ்யம் தொடர்பான அவருடைய செய்தியைப் கேட்டவர்களுக்கு, கர்த்தர், ஜீவனை, அதாவது நித்தியஜீவனைப் பற்றியும், அதன் ஆசீர்வாதங்களையும் வெளிப்படுத்தினார்.

## “தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே அழியாமை அல்லது திவ்வியச் சுபாவம்”

அவர் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார். உலகத்திற்கான நித்தியஜீவனுடன் கூட, தம்முடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பின்னடியார்களாகிய விசேஷித்த வகுப்பார், தம்முடன் கூடத் திவ்வியச் சுபாவத்தின் கனம், மகிமை மற்றும் அழியாமையில் பங்கடையத்தக்கதாக ஒரு வழியையும் திறந்து வைத்தார். பொதுவாயுள்ள மனுக்குலமானது இதனை புரிந்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படவில்லை. "எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை” (1 கொரிந்தியர் 2:9). தேவனை அன்புகூருகின்றவர்களாகிய புதுச் சிருஷ்டிகளுக்கு, அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு, அதாவது இராஜ்யத்தில் கர்த்தருடன் உடன் சுதந்தரராய் இருக்கும்படிக்குத் தங்களது அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகின்றவர்களுக்கு மாத்திரமே இது ஆயத்தம் பண்ணப்பட்டவையாகும்.

பின் குறிப்பிடப்படும் மூன்று கண்ணோட்டங்களின்படிப் பார்க்கப்படும் போதுதான், நமது கர்த்தருடைய ஊழியமும், போதனைகளும் சரியாய்ப் புரிந்துக்கொள்ளப்பட முடியும். அவை, (1) ஆதாம் மற்றும் அவருடைய சந்ததிக்கான மீட்கும்பொருளாக வழங்கப்பட்ட அவருடைய சொந்த பலி, அதாவது, "எல்லாம் முடிந்தது” என்று அவர் உரக்கக் கடைசியில் கூறும்வரை, நாளுக்கு நாள் அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்ததின்படியான கண்ணோட்டம். (2) அவருடைய பொதுவான போதனைகள்; அதாவது, ஏற்றவேளையில் முழு உலகத்திற்கும் பொருந்தக்கூடிய பொதுவான போதனைகள். அதாவது, மீட்பின் வேலைக்கான, பலன் தொடர்பான அவருடைய போதனைகள். அதாவது, உலகம் தேவனோடு ஒப்புரவாகுதல், உலகத்தின் பாவங்கள் முழுமையாக மன்னிக்கப்படுதல், இராஜ்யத்தின் மூலமாக உலகத்திற்கு வரவிருக்கும் வாய்ப்பு (அ) மாபெரும் பரீட்சை (அ) நியாயத்தீர்ப்பு; மற்றும் இந்த இராஜ்யத்தில் மீட்பர், தேவனுக்கும் மனுஷனுக்குமிடையே மத்தியஸ்தராகக் காணப்பட்டு, மனுக்குலத்தை உள்ளும், புறமுமான சகல எதிரிடையான சூழ்நிலைகளிலிருந்து விடுவித்து, சிருஷ்டிகரோடு, இசைவாக வரவிரும்பும் அனைவருக்கும் உதவுவது என்பதான மீட்பின் வேலைக்கான பலன் தொடர்பான அவருடைய பொதுவான போதனைகளின் கண்ணோட்டம். (3) இடுக்கமான வழியில் நடப்பதற்கும், அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்தானத்தில் முழுகுவதற்கும், இப்படியாக, தெய்வீகக் கிருபையின் மூலமாக, இந்த ஏற்பாட்டின் வாயிலாகப் பரலோக இராஜ்யத்தில் பங்கடைவதற்கென ஆயத்தம் பண்ணப்பட்டுத் தகுதியடைவதற்கு, அதாவது கிறிஸ்துவுடன் அவருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்து, பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆயிரம் வருஷம் யுகத்திற்கான, ஆச்சரியமான ஆசீர்வாதங்கள் யாவற்றையும் அருளுவதில் பங்கடைவதற்குமென ஆயத்தம் பண்ணப்பட்டு, தகுதியடைவதற்கும் என்றுமுள்ள விசேஷமான சீஷத்துவத்திற்குரிய அழைப்புப்பற்றின கண்ணோட்டம் என்பவைகளேயாகும்.

இந்தக் கருத்துக்களினடிப்படையில்தான் இந்தப் பாடத்தை நாம் பார்க்கப்போகின்றோம். ஐயாயிரம் பேருக்குப் போஷித்தப் பிற்பாடு, கலிலேயா கடலின் புயலில் கழித்திட்ட இரவிற்குப் பிற்பாடும், இயேசுவும், அவருடைய சீஷர்களும், சில காலத்தைக் கப்பர்நகூமில் செலவிட்டார்கள். அப்பொழுதுதான் தம்மால் ஜனங்களுக்கு அளித்திட்ட அப்பங்களையும், மீன்களையும் குறித்து அதிகம் சிந்தனை செய்யாமல், மேலானவைகளைக் குறித்துச் சிந்திக்க வேண்டும் என்று தாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணினார். தம்மை வானத்திலிருந்து இறங்கி

வந்த ஜீவ அப்பமாகக் கருத வேண்டும் என்றும், தம்முடைய வார்த்தைகளைப் புசித்து, இவ்விதமாக நித்தியஜீவனை அடையும்படிக்கு அவர்களுக்கு அவர் பிரசங்கம் பண்ணினார். எனினும், இந்த நித்தியஜீவனைப் பரவலாகவும் வழங்குவதற்கான வேளை இன்னமும் வரவில்லை; இந்த வேலையானது ஆயிரம் வருஷம் யுகத்திற்குரியதாகும். ஆகவே, நீதியின் மீது விசேஷமாகப் பசியும், தாகமும் கொண்டுள்ளவர்களையே, அவர் விசேஷமாய்த் தேடிக் கொண்டிருந்தார். இவ்வகுப்பாரில் உள்ளவர்கள்தான் அப்போஸ்தலர்கள்; பெந்தெகொஸ்தே நாள் முதல் ஆரம்பிக்கவிருக்கும் புதிய யுகத்தில், இந்த அப்போஸ்தலர்கள் வாயிலாகக் கர்த்தர் நிறைவேற்ற வேண்டிய எதிர்க்கால வேலைக்கென, இப்பொழுது அவர்களை அவர் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார்.

## “அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களுக்குரிய தேவனுடைய கிருபைகள்”

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் தீரு மற்றும் சீதோன் எனும் பட்டணங்களுடைய எல்லைகளுக்கு நேராக வடக்கிலிருந்து, மேற்கை நோக்கி பிரயாணம் பண்ணினார். அங்கிருந்த ஜனங்களிடம் அவர் தம்மை வெளியரங்கமாக அறிவிக்கவில்லை. ஆனால், அவருடைய வந்திருத்தலானது வேகமாக அனைவராலும் அறிந்துக்கொள்ளப்பட்டது; ஏனென்றால் அவருடைய அற்புதங்கள் மற்றும் போதனைகளின் கீர்த்தியானது, பாலஸ்தீனியா முழுவதும் பரவியிருந்தது. அவருடைய வந்திருத்தலை முதலில் கேட்டவர்களில், ஒருவள் கிரேக்கத்தியர்களாக வாழ்ந்திருந்த கானானிய ஸ்திரீயாகக் காணப்பட்டாள்; மேலும், இவள் தன்னுடைய மகளுக்கு உதவி புரிந்திடும்படியாக, அவர் முன் வந்து ஓலமிட்டாள். நமது கர்த்தர் அவருடைய வழக்கத்திலிருந்து மிகவும் வேறுப்பட்டவராக, இத்தருணத்தில் நடந்துக் கொண்டார்; ஒரு பாடத்தைப் புகட்டுவதற்கெனவே இப்படியாக நடந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. வழக்கமாகக் கேட்பதற்கும், அனுதாபம் கொள்வதற்கும், சொஸ்தப்படுத்துவதற்கும் உடனே தயாராகக் காணப்படும் கர்த்தர், இத்தருணத்தில் அந்த ஸ்திரீக்கு எவ்விதமான கவனமும் செலுத்தாதவராகக் காணப்பட்டார்; மத்தேயுவின் பதிவின்படி, அந்த ஸ்திரீயை அனுப்பிவைத்துவிடும்படிக்கு, அதாவது ஒன்றில் அவளது விண்ணப்பத்திற்கு அருளி அவளை அனுப்பி வைத்து விடும்படிக்கு, அல்லது அவளது விண்ணப்பத்தை நிராகரித்து, அவள் போய்விட கட்டளையிடும்படிக்குச் சீஷர்கள் கர்த்தரிடத்தில் வந்து அவரை வற்புறுத்தினார்கள் என்பதாகக் காணப்படுகின்றது.

அந்தப் பாவப்பட்ட ஸ்திரீயானவள் தனக்காக அல்லாமல், பிசாசு, அசுத்தமான ஆவி பிடித்திருந்த தனது மகளுக்காகவே விடாப்பிடியுடன் காணப்பட்டாள்; நாம் புரிந்துள்ளவரைக்கும் இந்த விழுந்துபோன ஆவிகளில் பெரும்பாலானவைகள் அசுத்தமானவைகளும், சீர்க்கேடடைந்ததுமானவைகளாகும். இன்னுமாக, இவைகள் குடிக்கொண்டிருப்பவர்கள் மீதிருக்கும் இவைகளுடைய செல்வாக்கும், அசுத்தமானதும், பாதிப்பிற்கு ஏதுவானதுமாகும். சிலசமயம் இவைகள் தூய்மையையும் தூண்டுகின்றது; மேலும், அநேக தருணங்களில் இவைகள் பரிசுத்தமானவர்களைப்போல், கர்த்தரைப் போல் கூட, ஆள்மாறாட்டம் பண்ண முயற்சி எடுத்துள்ளதையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்; எனினும் இந்தப் பொல்லாத ஆவிகளின் முழு நோக்கமும், இவைகள் ஆட்கொண்டிருப்பவர்களின் விஷயத்திலும் மற்றும் ஆட்கொண்டிருப்பவர்கள் வாயிலாக மற்றவர்கள் விஷயத்திலும், அசுத்தமான எண்ணம் மற்றும் நடத்தைக்கு நேராகவே காணப்படுகின்றது.

இறுதியாக ஸ்திரீயின் அழுகைக்கும், சீஷர்களுடைய வற்புறுத்தலுக்கும் இணங்கி, நமது கர்த்தர் பதில் கொடுத்தார். ஆயினும், வழக்கத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமாகப் பதில் கொடுத்தார். அவருடைய அற்புதங்களும், ஊழியங்களும், தேவனுடைய உடன்படிக்கைக்கு உட்பட்ட ஜனங்களாகிய யூதர்களுக்கே ஒழிய, பொதுவான உலகத்திற்காக அல்ல என்று மாத்திரம் கர்த்தர் கூறிவிட்டார். அக்காலத்தில் நிலவின யூதர்களுடைய வழக்கமாகிய புறஜாதிகளை நாய்கள் என்று கூறும் விதத்தைக் கர்த்தர் பின்பற்றினார். எனினும், கொஞ்சம் மாற்றிப்பயன்படுத்தினார்; நாய் என்று பயன்படுத்துவதற்குப்பதிலாக, குடும்பத்தில் காணப்படும் சிறு செல்லப்பிராணியாகிய நாய்க்குட்டி எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார். கர்த்தருடைய வல்லமையில் பலமான விசுவாசம் கொண்டிருந்த ஸ்திரீயானவளோ, கர்த்தரிடமிருந்து வந்த சாதகமில்லாத பதிலையும், தன்னுடைய சொந்த நன்மைக்கு ஏதுவாக மாற்றுவதிலும் பலமிக்கவளாக

இருந்தாள்; இன்னுமாகப் பிள்ளைகளின் மேஜையிலிருக்கும் திரளான உணவிலிருந்து, செல்லப் பிராணியான நாய்க்குட்டிகள் பெற்றுக்கொள்வது போன்று, நமது கர்த்தர் விசேஷமாக ஊழியம் செய்யும்படிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள யூதர்களுக்கு எவ்விதமான நன்மையும் குறைவுப்படாதவிதத்தில், புற இனத்தாளாகிய தனக்கும், கர்த்தருடைய தயவுகளில் சிலவற்றை அருளலாமே என்று வலியுறுத்தினாள்.

## “விசுவாசமில்லாமல் அவரைப் பிரியப்படுத்துவது கூடாத காரியமாகும்”

இது அந்த ஸ்திரீயினுடைய உண்மையையும், விசுவாசத்தையும் காட்டுகின்றது. இப்படியான விசுவாசத்தின் வெளிப்பாடானது, நிச்சயமாய்க் கர்த்தரைப் பிரியப்படுத்துகின்றதாய் இருக்கும். நமது விசுவாசத்தை வளர்ப்பதிலும், பரீட்சிப்பதிலுமான காரியங்களினடிப்படையில்தான், நம்மைக் கர்த்தர் அநேகந்தரம் கையாளுவதை, கிறிஸ்தவனாக உள்ள நம்முடைய அனுபவங்களில் நாம் பார்த்திருக்கின்றோம். நாம் எவ்வளவுதான் முற்காலங்களில் அவரைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டிருந்தாலும் மற்றும் அவருடைய குணலட்சணமும், திட்டமும் எவ்வளவுதான் எதிராளியானவனால் அவதூறாகவும், தவறாகவும் காண்பிக்கப்பட்டிருந்தாலும், அவர் நல்லவரும், கிருபையுள்ளவருமாக இருக்கின்றார். அவருடைய நற்குணத்திலும், அவருடைய வல்லமையிலும், அவருடைய ஞானத்திலும், அவருடைய அன்பிலும் மற்றும் அவரிலும் நாம் விசுவாசமும், நம்பிக்கையும் வைக்காமல், கர்த்தர் அண்டைக்கு நாம் செல்வது என்பது நம்மால் கூடாத காரிமாகும். நம்ப மாத்திரம் செய்யுங்கள், அனைத்தும்கூடும் என்பதையே இன்றுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தொடர்ந்துக் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். அதாவது முற்காலங்களில், “ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும்” என்று அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணினது போன்று நாமும் காணப்பட வேண்டும். இப்படியாகவே நாமும் ஜெபம்பண்ண வேண்டும் மற்றும் இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் வாழ்க்கையின் பாடங்களை, விசுவாசத்திற்கான பாடங்கள் (அ) அறிவுரைகள் என்று ஏற்றுக்கொள்ள நாம் தொடர்ந்து நாடுகின்றவர்களாக இருக்க வேண்டும். இங்குத் தெய்வீக வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதன் அவசியத்தை நாம் புறக்கணிக்கவில்லை. மாறாக, எங்கு விசுவாசம் காணப்படுகின்றதோ, அதற்கு ஏற்ப கொஞ்சமாகவோ, அதிகமாகவோ கிரியைகள் காணப்படும் என்பதையே நாம் தெரிவிக்கின்றோம். ஆகவே, நம்முடைய விசுவாசம் அதிகமாகக் காணப்படும்போது, நம்முடைய கிரியைகளும், திவ்விய ஒழுங்கிற்குக் கீழாகவே காணப்படும் என்பது நிச்சயமேயாகும். விசுவாசம் இல்லாமல் கர்த்தரைப் பிரியப்படுத்துவது என்பது கூடாத காரியம் என்று கூறும் நமது ஆதார வசனம் சரியாகவே உள்ளது.

விசுவாசம் விருத்திச் செய்யப்பட வேண்டும், வளர வேண்டும். கலிலேயாக் கடலில் வீசின புயலின் காரணமாகப் பயத்தில் சத்தமிட்ட அதே அப்போஸ்தலர்கள்தான், கர்த்தர் இல்லாதபோதும், அவர் இருப்பதை உணரமுடியாத தருணத்திலும் அவரை விசுவாசிக்குமளவுக்கு, அவர்களுடைய விசுவாசமானது படிப்படியாகப் பலப்பட்டது. இதுபோலவே கர்த்தர் மீதான விசுவாசத்தை விருத்திச் செய்வதும், அவர் மீதான, நமது விசுவாசம் வேரூன்றத்தக்கதாக, அவருடைய வார்த்தைகளிலுள்ள படிப்பினைகளையும், நமது ஜீவியத்தின் கடந்தகால அனுபவங்களையும் எண்ணிப்பார்ப்பதும் நம்முடைய அனுதின பாடங்களின் ஒரு பகுதியாகும்.

## “விசுவாசம் பரீட்சிக்கப்பட்ட பின்னர், விசுவாசத்திற்கான பலன் கொடுக்கப்பட்டது”

கர்த்தர் அவளுக்குப் பிரதியுத்தரமாக, “ஸ்திரீயே உன் விசுவாசம் பெரியது” என்று கூறினார். இவளது விசுவாசமானது, இவளுடைய மகளின் மீதான இவளது அன்பிலும் மற்றும் இவளின் தாழ்மையிலும், விடாமுயற்சியிலும், உறுதியிலும் பலமாய்க் காணப்பட்டது. மேலும், இவளது விசுவாசமானது, கர்த்தர் பார்க்கிற விதத்திலேயே இருந்ததே ஒழிய, கிரேக்கர்கள் மற்றும் புறஜாதிகளுடைய பொதுவான எண்ணங்களின் அடிப்படையில் காணப்படவில்லை. அதாவது, யூதர்கள் பாசாங்கு மாத்திரமே பண்ணுகின்றார்கள் என்றும், யூதர்களும், மற்ற ஜனங்களைப்போன்று தெய்வீகத் தயவிற்குள் இல்லை என்றுமுள்ள

கிரேக்கர்கள் மற்றும் புறஜாதிகளுடைய எண்ணங்கள் இவளுக்கு இல்லை. மாபெரும் இடர்பாடுகளையும் அதாவது, நமது கர்த்தருடைய வெளிப்படையான மறுப்புகளையும் ஜெயங்கொள்ளுமளவுக்கு, இவளுடைய விசுவாசம் பலமாய்க் காணப்பட்டது. இந்த அந்நிய ஸ்திரீயின் ஒவ்வொரு நடத்தையும், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் பிரகாசிக்கப்பட்ட ஜனங்களுக்கான மாதிரியாக நாம் கருதிக்கொள்வதில்லை. இவளுடைய விசுவாசத்திற்கு இருந்த பலமே, நாம் பின்பற்ற வேண்டிய ஒரே விஷயமாக உள்ளது. கர்த்தருடைய ஜனங்களாக ஆகியுள்ள நாம், அதாவது அந்நியர்களாகவும், பரதேசிகளாகவும், நாய்களாகவும் இராமல், பிதாவினுடைய குடும்பத்திற்குள்ளாகத் தத்தெடுக்கப்பட்டு, கர்த்தரினால் “சகோதரர்கள்” என்று அழைக்கப்படும் நாம், கர்த்தர் நமக்கு அருளுவதில் பிரியப்படாத விஷயங்களுக்காக, அழுவதோ (அ) கெஞ்சுவதோ (அ) மன்றாடுவதோ நமக்குத் தகுதியாய் இராது.

அழிந்துப்போகும் உணவுக்காக மாத்திரமே நமது நாடுதலும், வேண்டுதலும் காணப்படக்கூடாது என்று ஆண்டவர் கூறினதின் மூலமாக, புறஜாதிகள் நாடும் விஷயங்களுக்கும், அவருடைய சீஷர்களாக நாம் நாட வேண்டிய விஷயங்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் கொடுத்தார்; ஏனெனில் புறஜாதிகள், பூமிக்குரிய விஷயங்களுக்காக மாத்திரமே விடாப்பிடியாக நாடுவார்கள்; இன்னுமாக முதலாவதாகத் தகுதியாய் இருக்கும் தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்றும், நம்முடைய நன்மைக்கு ஏதுவான இந்தப் பூமிக்குரிய அனைத்தும் நமக்குக் கூடக்கொடுக்கப்படும் என்றும் ஆண்டவர் கூறியுள்ளார். இருதயம் பரிசுத்தமாக்கப்படுவதற்கும், அவருடைய ஆவியினால் நிரப்பப்படுவதற்கும், ஆவிக்குரிய உணவிற்கும், புத்துணர்விற்கும் மற்றும் பலத்திற்காகவே, கர்த்தரிடத்தில் நம்முடைய விண்ணப்பங்களும், நம்முடைய வேண்டுதல்களும், நம்முடைய கூக்குரல்களும் காணப்பட வேண்டும்; மேலும் மாம்சத்திற்குரிய விஷயங்களைப் பொறுத்தமட்டில், புதிய சிருஷ்டிகளாக நம்முடைய நன்மைக்கடுத்த விஷயங்கள் எது என்பதை அவர் அறிவார். இவைகளை நாம் அவரிடத்தில் விட்டுவிட வேண்டும்; அவர் நமக்குக் கொடுத்திடாத காரியங்களுக்காக நாம் அவரை விடாப்பிடியாக வருந்தி கேட்பதில் அவர் பிரியப்படுவதில்லை. காரணம், இப்படியாக நாம் நடந்துக்கொள்வது என்பது அவரிடத்திலான விசுவாசத்தை வெளிப்படுத்துவதாக இராமல், மாறாக சந்தேகத்தை வெளிப்படுத்துகிறதாகவும், நமக்குத் தேவையானவற்றை அருளுவதாக அவர் கொடுத்துள்ள வாக்குத்தத்தத்தை, அவர் புறக்கணித்து விடுவாரோ (அ) மறந்துப் போய்விடுவாரோ என்ற நமது பயத்தை வெளிப்படுத்துகிறதாகவும்தான் இருக்கும்.

அவளிடத்தில் வெளிப்பட்ட விசுவாசம் போதுமானது என்றும், அவளுடைய விண்ணப்பத்திற்குப் பதில் அருளப்பட்டுள்ளது என்றும், அவளுடைய மகளிடமிருந்து பிசாசு போய்விட்டது என்றும் நமது கர்த்தர் அந்த ஸ்திரீயிடம் கூறினார். இதைக் கேட்ட உடனே அவள் வீட்டிற்குக் கடந்துப்போனது என்பது, இன்னுமாக அவளுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினது. அவள் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டாள்; அவர் தம்மை மேசியா என்று அறிவித்த பிரகாரம், மேசியாவாகவே இருந்தாரானால், அவரிடம் இருப்பதாக அவள் நம்பின வல்லமை அவரிடம் இருந்ததானால், அவர் தன்னிடம் சொஸ்தப்படுத்தியுள்ளேன் என்று பொய்யாகக் கூறமாட்டார் என அவள் நம்பிக்கைக் கொண்டிருந்தாள். இவ்விஷயத்தில், இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் விசுவாசமில்லாமல் காணப்படுகின்றனர். அதாவது, இந்தப் பாவப்பட்ட அந்நிய ஸ்திரீயைக்காட்டிலும், குறைவான விசுவாசம் பெற்றிருக்கின்றனர். கர்த்தரிடத்தில் வருபவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என்று அநேகருக்குக் கர்த்தருடைய வார்த்தைகள் நிச்சயம் அளித்தாலுங்கூட, இவர்களுக்குள் இருக்கும் குறைவான விசுவாசமானது, இவர்களுக்குள் சந்தேகத்தை எழுப்பி, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதே மன்னிக்கப்பட்டுவிட்டது என்று கர்த்தர் உறுதியளித்துள்ள, இவர்களுடைய பாவங்களுக்காக இவர்களைத் தொடர்ந்து புலம்பச்செய்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டே இருக்கச்செய்கின்றது. இவர்கள் விசுவாசத்தைச் செயல்படுத்தத் தவறிவிடுகின்றனர், மற்றும் இதற்கேற்ப ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் அடைவதிலும் தவறிவிடுகின்றனர்.

இந்தப் பாவப்பட்ட (புறஜாதி) ஸ்திரீக்குத் தவிர, வேறு யாருக்கும் எதுவும் நமது கர்த்தர் செய்ததாகப் பதிவுகள் இல்லை; இன்னுமாக, இங்கு ஆவிக்குரிய படிப்பினைகள்

சீஷர்களுக்கே தவிர, அந்த ஸ்திரீக்கு இல்லை; ஏனெனில், அந்த ஸ்திரீக்காகிலும் அல்லது அவ்விடத்தில் காணப்பட்ட வேறு எவருக்காகிலும் அவர் போதித்ததாகப் பதிவுகள் எதுவும் இல்லை. இங்கிருந்து நமது கர்த்தர் புறப்பட்டு, கிழக்கு நோக்கி, பாலஸ்தீனியாவின் வடக்கு எல்லை வழியாகப் பிரயாணம் பண்ணி, யோர்தான் நதியைக் கடந்து, தெற்கு நோக்கி, கலிலேயா கடலுக்கு நேராக வந்தார். இதற்கிடையில் ஒரு மலையில் கர்த்தர் கொஞ்சம் வாசம் பண்ணினார் என்றும், அங்குதான் ஜனக்கூட்டத்தார் தங்களது வியாதியஸ்தர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள் என்றும், முடவர்களும், குருடர்களும், ஊமையர்களும், சப்பாணிகளும், இயேசுவின் பாதத்தண்டைக்கு ஜனங்களால் கொண்டுவரப்பட்டார்கள் என்றும், இவர்களை இயேசு சொஸ்தப்படுத்தினார் என்றும், ஜனக்கூட்டத்தார் ஆச்சரியப்பட்டு இஸ்ரயேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்றும் மத்தேயு தெரிவிக்கின்றார்.

நம்முடைய இந்தப் பாடத்தில், திரளான சொஸ்தப்படுத்துதல்களில், ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பார்க்கலாம். ஊமையனாகவும், செவிடனாகவும் இருந்த ஒரு மனுஷன் இயேசுவினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டான். மேலும், அவனைக் கையாண்ட விஷயம் விநோதமாக இருக்கின்றது; கர்த்தர் அம்மனுஷனைத் தனியே கூட்டிக்கொண்டு போனார். அநேகமாக பாடத்தை அம்மனுஷனிடத்தில் பதிய வைப்பதற்காகவே, இப்படியாகச் செய்திருக்க வேண்டும். அம்மனுஷனுக்குக் கேட்கும் திறன் இல்லை. ஆகவே, செய்கைகள் மூலம், படிப்பினையைப் புகட்டினார். அவனது நாவையும், அவனது செவிகளையும் தொட்டு, வானத்தை அண்ணாந்துப்பார்த்து, பெருமூச்சு விட்டதின் மூலம், அம்மனிதனுக்கு உதவி செய்யும்பொருட்டு, பரலோக அனுதாபம் கடந்து வந்தது என்று தெரியப்படுத்தினார்; உடனே அம்மனுஷன் மேல் ஆசீர்வாதம் கடந்து வந்தது, அவன் சொஸ்தமடைந்தான். அநேகமாக அந்த வட்டாரத்தில் இதுதான் முதலாவது அற்புதமாக இருந்திருக்க வேண்டும். மேலும், மத்தேயு அவர்கள் பதிவு செய்துள்ளது போல, ஜனக்கூட்டத்தார் இதனால் கவரப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள். இவ்வற்புதத்தை அமைதலாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று நமது கர்த்தர் கொடுத்திட்ட உத்தரவானது, கட்டளையாக இராமல், தாம் விளம்பரப்படுத்தப்படுவதை விரும்பவில்லை என்ற கருத்தைத் தெரிவிப்பதாகவே உள்ளது. எனினும், விசுவாசம் வெளிப்படுத்தப்படும் போதும், கஷ்டப்படுகின்றவர்கள் அவருக்கு முன்பாகக் காணப்படும் போதும், ஆசீர்வாதம் கொடுத்திட அவர் ஒருபோதும் மறுத்ததே இல்லை. ஆகவே, பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கென ஏற்றவேளை வரும்போது, கர்த்தர் யாரிடமிருந்தும், எந்த ஓர் ஆசீர்வாதத்தையும் விலக்கி வைப்பதில்லை என்றும், ஆசீர்வதிக்கப்பட விரும்புகின்ற அனைவரும், அவருடைய தயவைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் நாம் கற்பிக்கப்பட்டுள்ளோம்.

## “புரிந்துகொள்ளும் நமது கண்களும், செவிகளும் பாக்கியமுள்ளவைகள்”

கிறிஸ்துவுடன் கூடப் புதிய ஜீவனுள்ளவர்களாய் நடப்பதற்கும், அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்குமென, அடையாளமானவிதத்தில் முன்னமே உயிர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சிருஷ்டிகளாகிய நமக்கு, நம்முடைய கண்களும், செவிகளும் திறக்கப்பட்டுள்ளபடியாலும், நமது நாவுகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளபடியாலும், நாம் தேவனுடைய கிருபையைப் பார்ப்பதும், அனுபவிப்பதும் மாத்தரமல்லாமல், மற்றவர்களிடம் அவருடைய அன்பையும், தயவையும் குறித்துப் (நாம்) பேசவும் செய்யலாம். இப்பொழுது, அதாவது தற்காலத்தில் கர்த்தர் அருளும் சத்தியத்தைப் பற்றின விசேஷமான அறிவைப் பெற்றிருப்பவர்கள் சிலர், சத்தியம் அனைவருக்கும் உரியது அல்ல என்றும், சத்தியத்தை வழங்குவதற்கான நம்முடைய பிரயாசங்களில் நாம் யார் யாருக்கு தனிச் சிறப்புக் காண்பிக்க வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும் என்றும், நமக்கு முத்துக்கள் போன்றிருக்கும் கர்த்தருடைய இந்த மாபெரும் ஆசீர்வாதங்கள் அனைவருக்கும் உரியது அல்ல என்றும், நாம் பன்றிகளுக்கு முன்பாக, அதாவது கர்த்தருடைய தயவுகளை அறிவதற்கோ, ஏற்றுக்கொள்வதற்கோ உரிய பண்புகளை வெளிப்படுத்தாதவர்கள் முன்பாக நாம் முத்துக்களைப் போடக்கூடாது என்றும் கருத்துக்கள் கொண்டிருக்கின்றனர். ஆனால், இப்பாடத்தில் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனுக்கு இருந்ததுபோல, இது நம்மால் அடக்கி மறைத்து வைத்துக்கொள்ள முடியாதளவுக்கு மிகவும் நல்ல செய்தியாகும்; இதைப் பற்றி (சத்தியத்தை) நாமும் அறிவிக்க விரும்புகின்றோம். ஏனெனில், இது அவ்வளவுக்கு

அதிகமானவைகளை நமக்குச் செய்துள்ளது; குருடர்களாகவும், செவிடர்களாகவும் இருக்கும் அனைவரும் மாபெரும் வைத்தியனிடம் வந்து, சொஸ்தமடைய வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்; நற்செய்தியைச் சொல்வதற்கான தங்களுடைய பிரயாசங்களில் திக்கித் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய மகிமையான காரியங்களைத் தெளிவாகப் பேசத்தக்கதாக, ஆண்டவரினால் இவர்ளுடைய உதடுகளையும் தொடப் பெற்றிருக்க நாங்கள் (இப்பாடத்தின் ஆசிரியர்) விரும்புகின்றோம். இப்பாடத்தில் சொஸ்தமடைந்ததாக நாம் பார்த்துள்ள மனுஷனை ஆண்டவர் கடிந்துக்கொள்ளாதது போன்று, கேட்பதற்குச் செவிகள் இல்லாதவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கத்தக்கதாக நாம் செல்லும்பொழுதும் அல்லது பன்றி போன்றுக் காணப்பட்டும், ஆவிக்குரிய காரியங்கள் மீது விருப்பமற்றவர்களுமாய்க் காணப்பட்டும் அல்லது ஆட்டுக்குட்டியானவர் போகும் இடமெல்லாம் போகாதவர்களாய்க் காணப்பட்டும் இருப்பவர்களை, சீஷர்களாக்கிட நாம் முயற்சிக்கும் பொழுதும், அதாவது இப்படியாக நாம் செய்யத்தக்கதாக நம்முடைய வைராக்கியம் ஒருவேளை காணப்பட்டாலுங்கூட நம்மை ஆண்டவர் கடிந்துக்கொள்வதில்லை.

நாம் இந்த அழியக்கூடிய சரீரத்தில் காணப்பட்டாலும், மனுஷர்கள் மத்தியில் காணப்பட்டாலும் கிறிஸ்துவுடன், நம்முடைய மனதின் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டுள்ள நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துக்கொள்ள வேண்டும் என்பதும், நாம் கர்த்தருக்கு ஒப்பாக, காணப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாக அவரைத் தரிசித்து அவருடைய மகிமையில் பங்கடைந்து, மகிமையான இராஜ்யத்தின் கிருபைகளை ஏற்றுக்கொள்கிறவர்களுக்குக் குணமாக்குதலையும், ஜீவனுக்கான ஆசீர்வாதங்களையும் அளிப்பதில் அவரோடு இணைந்துக் காணப்படத்தக்கதாக, முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தை நாம் எதிர்நோக்கினவர்களாக இருக்க வேண்டும் என்பதும்தான் இப்பாடத்தின் முக்கியப் பகுதியாகும்.

---

**R5103**

# “அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்”

## மாற்கு 7:31-8:10

“எல்லாவற்றையும் நன்றாய்ச் சொய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும்பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்.” (வசனம் 37)

இயேசு தம்முடைய அற்புதங்கள் வாயிலாக, தனிப்பட்ட விதத்தில் சொஸ்தமடைந்தவர்களிடத்திலும், பொதுவான விதத்தில் சொஸ்தமாக்கப்பட்டதைக் கண்ட ஜனங்களிடத்திலும், இந்தச் சொஸ்தப்படுத்தும் வல்லமை தேவனுடையது என்ற உண்மையைப் பதியப் பண்ணினார் என்றும், இப்படியாக தேவனிடத்திலான விசுவாசத்தை நிறுவினார் என்றும் கடந்த பாடத்தில் நாம் பார்த்துள்ளோம். கொன்னை வாயும், செவிடாயும் இருந்த ஒரு மனுஷனைச் சொஸ்தப்படுத்தும்படி, அவனை இரட்சகரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்.

இதிலிருந்து பெரும்பான்மையான அற்புதங்கள் கையை வைப்பதின் மூலமாகவே செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகின்றது; சிலர் இயேசுவைத் தொடுவதின் மூலமாகவும் (அ) அவருடைய வஸ்திரங்களைத் தொடுவதின் மூலமாகவும் சொஸ்தமடைந்ததாகவும் பதிவுகள் காணப்படுகின்றது. அவருடைய வஸ்திரத்தைத் தொட்டுச் சொஸ்தமடைந்த விஷயத்தில், அந்த ஸ்திரி விசுவாசத்தைக் காட்டினாள் என்பது நிச்சயமே, இல்லையேல் சொஸ்தமடையும் நம்பிக்கையில் வஸ்திரத்தைத் தொட்டிருந்திருக்கமாட்டாள். வேறு ஒரு தருணத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள ஜனங்களுடைய அவநம்பிக்கைக் காரணமாக, அவ்விடத்தில் இயேசுவினால் அநேக வல்லமையான செய்கைகளைச் செய்யமுடியவில்லை என்று நாம் வாசிக்கின்றோம். ஆகவே, எப்படியிருப்பினும் சொஸ்தப்படுத்தும் வல்லமையானது, விசுவாசம் செயல்படுத்தும்

காரியத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது; விசுவாசம் ஒன்றில் வியாதியஸ்தரின் சார்பில் (அ) வியாதியஸ்தனுக்காக அவனுடைய நண்பர்களுடைய சார்பில் செயல்படுத்தப்பட வேண்டும்.

நாம் பார்த்துக் கொண்டிருக்கும் சம்பவம் கொஞ்சம் விநோதமானதாகும். (1) ஏனெனில், இயேசு, மக்கள் கூட்டத்தாரிடமிருந்து, அம்மனுஷனைத் தனியே கூட்டிக்கொண்டு சென்று, இரகசியமாகச் சுகப்படுத்தினார் மற்றும் (2) அவர் பயன்படுத்தின விஷயங்களும் விநோதமாக இருந்தது. அவர் தமது விரல்களை அவன் காதுகளில் வைத்தார். அதாவது, ஜீவனுக்கான மின்னோட்டம் விரல்களிலிருந்து ஏதோ பாய்வது போன்று, அவன் காதுகளில் வைத்தார். பின்னர் அவர் உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டார். இவ்வளவுதான் இயேசுவினுடைய வல்லமை என்று நாம் எண்ணி விடக்கூடாது, வேறு தருணங்களில் வேறுவிதத்திலும் அவருடைய வல்லமை செயல்பட்டிருக்கின்றது. அம்மனுஷனுடைய கவனத்தை ஈர்ப்பதற்கும், விசுவாசம் அவன் கொள்ளத்தக்கதாக, அவனுக்கு உதவுவதற்கும்தான் இம்மாதிரியாகச் செயல்பட்டார் என்று புரிந்துக்கொள்வது தகுதியானதாக இருக்கும்.

அம்மனுஷனுக்குக் கேட்கும் திறன் இல்லாதபடியினால், சூழ்நிலைகளை/காரியங்களை விவரிப்பதற்காக அம்மனுஷனிடம் எதுவும் கூறமுடியாது; உமிழ்வதை அம்மனுஷனால் காண முடியும், அவர் தொடுவதை அம்மனுஷனால் உணர்ந்துக்கொள்ள முடியும். மேலும், என்ன நடந்துக் கொண்டிருக்கின்றது என்பதை அம்மனுஷன் புரிந்துக்கொண்டான்; அம்மனுஷன் சொஸ்தமடைந்தான். இவைகளெல்லாம் அவனுடைய மனதின் கீழ்ப்படிதலை அல்லது விசுவாசத்தைக் குறிக்கின்றது. இந்தப் படிப்பினைகளைக் கொடுத்தப் பிற்பாடு, அம்மனுஷன் இயேசுவைப் பார்த்துக்கொண்டிருக்கையில், இயேசு வானத்தை அண்ணாந்துப் பார்த்தார்; இப்படியாக நோயாளிக்கு மூன்றாவது படிப்பினையாக, தான் சொஸ்தப்படுவதற்கான வல்லமை, தேவனிடமிருந்தே எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்பது வழங்கப்பட்டது. இயேசு பெருமூச்சுவிட்டு எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்பது அர்த்தமாகும்; உடனடியாக அம்மனுஷனுடைய செவிகள் திறக்கப்பட்டன, மற்றும் பேசுவதில் அம்மனுஷனுக்கு இருந்த பிரச்சனையும் போய்விட்டது.

இயேசு பெருமூச்சு விட்ட காரியம் கவனிக்கப்பட வேண்டியதாகும்; இது இயேசுவின் முன் காணப்பட்ட மனஷன் மீதும் மற்றும் தவித்துக் கொண்டிருக்கும் சிருஷ்டிகள் மீதுமுள்ள அவருடைய ஆழ்ந்த அனுதாபத்தையே சுட்டிக்காண்பிக்கின்றது. இயேசு, "ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்" என்று பதிவு செய்யப்பட்டுள்ள வேறொரு தருணத்தையும் நாம் நினைவுகூருகின்றோம். அது அவருடைய நண்பனாகிய லாசருவின் கல்லறைக்கு முன்பாக அவர் நின்று கொண்டிருந்தபோது சம்பவித்தது; "மரியாள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித்துயரமடைந்து" (யோவான் 11:33). தீர்க்கத்தரிசனத்தில் உரைக்கப்பட்டுள்ளபடி அவர், மனிதனுடைய பலவீனங்கள் குறித்தும் பரிதபிக்கக்கூடியவராக காணப்படுகின்றார் என்பதே நமக்கான பொதுவான படிப்பினையாகும். உண்மை என்னவெனில், அவர் பரிபூரணமானவர் ஆவார்; வலிகளும், வேதனைகளும், குறைவுகளுமுள்ள பூரணமற்ற சரீரத்தை அவர் பெற்றிருக்கவில்லை; ஆனால், இதற்கென்று அவர் உணர்ச்சியற்றவராகவும், அனுதாபமற்றவராகவும் இராமல், எதிர்மாறாகவே காணப்பட்டார். அவருடைய பரிபூரணமான மனமானது, நம்முடையதைக் காட்டிலும், அவருடைய உணர்வுத் திறன்கள் அனைத்தையும் விழிப்பாக வைத்தது; அவருடைய அனுதாபம் பலமாய்க் காணப்படும். மற்றும் வலியை உணரக்கூடிய அவருடைய திறன் அதிகமாகவும் இருக்கும். விழுந்துபோன சந்ததியாகிய நாம், நம்முடைய அநேக சுற்றுச் சூழல்களுக்கு மிகவும் பழக்கப்பட்டிருப்பதினால், அவைகள் சர்வ சாதாரணமாக நமக்குத் தோன்றுகின்றது. மற்றும் அவைகளை இயல்பென எண்ணிக்கொள்ளத்தக்கதாகவும் நாம் காணப்படுகின்றோம். அதாவது பூரணமான ஒழுங்குமுறையே, மனிதனுக்கான இயல்பான ஒழுங்குமுறை என்றும், குறைபாடுள்ள நிலை என்பது மனிதனுக்கான இயல்பில்லா ஒழுங்குமுறை என்றுமுள்ள காரியத்தை நாம் மறந்து விடுமளவுக்குச் சர்வ சாதாரணமாகிவிட்டது.

அற்புதம் பண்ணும் ஒவ்வொரு தருணத்திலும், நமது ஆண்டவர் தமது சத்துவத்தை இழப்பதன் வாயிலாகவும், நம்முடைய ஆண்டவர், நம்முடைய பலவீனங்களினால்

தொடப்பட்டுள்ளார் என்றும் நாம் எடுத்துக்கொள்ளலாம். இதுவே, "அவர் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்" என்று கூறும் வேதவாக்கியத்தின் அர்த்தமல்லவா? தினந்தோறும், ஒவ்வொரு மணிநேரமும் அவருடைய உயிர் ஆற்றலானது, அவர் சந்தித்தவர்களைச் சொஸ்தப்படுத்தியதிலும், ஆசீர்வதித்ததிலும், ஆறுதல் படுத்தியதிலும், போதித்ததிலும் செலவழிக்கப்பட்டது. இதை நாம் மாற்கு 5:25-34 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவத்தில் பார்க்கலாம்.

ஆண்டவர், தேவனுடைய பிரதிநிதியாக, தெய்வீக வல்லமையை மாத்திரம் பயன்படுத்தாமல், மனிதனுடைய துயரத்தை முடிப்பதற்கென அவர் தமது சரீரத்தின் வல்லமையையும்/சத்துவத்தையும் பயன்படுத்தியுள்ளார் என்ற காரியத்தைக் குறித்த எண்ணமானது, அவரிடத்திற்கு நமது இருதயங்களை நெருங்கச் செய்திடும், மற்றும் இரட்சகருடைய அன்பைக்குறித்த தெளிவானக் கண்ணோட்டத்தையும் நமக்குக் கொடுத்திடும்; மேலும், நம்முடைய ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் அவர்மேல் நாம் நம்பிக்கை வைக்கத்தக்கதாக, சிறப்பான அஸ்திபாரத்தையும் அமைத்துத் தருகின்றது.

இப்பாடத்தில் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் அற்புதம் நடந்திட்ட சம்பவத்தில், நமது கர்த்தர் பெருமூச்சுவிட்ட விஷயமானது, அவருடைய சரீரத்தில் ஏற்பட்டுள்ள சோர்விற்கான ஆதாரமாகவும் இருக்கலாம். அதாவது, நோயாளியைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் அவர் தமது உயிர் ஆற்றலையும், சக்தியையும் அளித்ததின் காரணமாக ஏற்பட்ட உடல் சோர்வாகவும் இருக்கலாம். இயேசுவின் மரணமானது, முற்றிலுமாகக் கல்வாரியில்தான் நிறைவேறினது என்று நாம் எண்ணிக்கொள்ளக்கூடாது. மாறாக, அவர் தமது முப்பதாம் வயதின்போது, யோர்தானில் தம்மை அர்ப்பணம் பண்ணினது முதல் ஆரம்பித்து, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருஷமும் தொடர்ந்து நடைபெற்றது, கல்வாரியில் நிறைவு மாத்திரமே அடைந்தது என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

இதைக் குறித்து நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்குரிய முந்தின தினத்தில் கூறினார். மரணம் வரையிலான தம்முடைய அர்ப்பணிப்பைக் குறித்துப் பேசுகையில், அவர் "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது.ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்று கூறினார். (மத்தேயு 26:38; லூக்கா 12:50) இதைப் பேசின நாளுக்கு, அடுத்த நாள் அன்று, கல்வாரியில், அவர் "எல்லாம் முடிந்தது" என்று உரக்க கத்தினபோதுதான், முழுமையாய் நிறைவடைந்தது; அதாவது, மரணத்துக்குள்ளான அவரது ஞானஸ்நானம் நிறைவடைந்தது.

## “அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்”

இந்த அற்புதம் நடைபெற்றப் பிற்பாடு, ஜனக்கூட்டத்தார் "இத்தலைப்பிலுள்ள" இவ்வார்த்தைகளைக் கூறினார்கள். இந்த ஒரே ஒரு அற்புதத்தின் காரணமாகத்தான், இவ்வார்த்தைகள் கூறப்பட்டது என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. ஏனெனில், இதே அற்புதத்தின் சம்பவத்தைப் பதிவு செய்துள்ள பரிசுத்தவானாகிய மத்தேயு, அவ்விடத்தில் அநேக சப்பாணிகளுடனும், குருடர்களுடனும், ஊமையர்களுடனும், முடமானவர்களுடனும், திரளான ஜனக்கூட்டத்தார் கூடி வந்து, நோயாளிகளை அவர் பாதத்தருகே வைத்தார்கள் என்றும், அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார் என்றும், ஊமையர்கள் பேசுகிறதையும், சப்பாணிகள் சொஸ்தமடைகிறதையும், முடவர்கள் நடக்கிறதையும், குருடர்கள் கண் பார்வை அடைகிறதையும், ஜனங்கள் கண்டு, இஸ்ரயேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்றும் தெரிவிக்கின்றார் (மத்தேயு 15:29-31).

## “தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்”

நமது கர்த்தருடைய அற்புதங்கள் தொடர்புடைய மாபெரும் மையக் கருத்தை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதும், பிசாசுகளைத் துரத்துவதும் அவருடைய ஊழியமாக இராமல் மாறாக, "எல்லாரையும் மீட்கும் விலைப் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுக்கவே வந்தார்." அவருடைய வேலையின் இரண்டாவது அம்சமானது, "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களை" தம்முடைய அடிச்சுவட்டைப்

பின்பற்றும் பின்னடியார்களாக அழைப்பதாகும்; இவர்கள் பெந்தெகொஸ்தே நாள் அன்றும், அது தொடர்ந்தும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவார்கள். செய்யப்பட்ட அற்புதங்களும், சொஸ்தப்படுத்துதல்களும் இடைநிகழ்வுகள் மாத்திரமே ஒழிய, அவருடைய உண்மையான வேலையல்ல. இவைகள் அவருடைய ஆயிர வருஷம் ஆளுகையின்போது, அவருடைய இராஜ்யமானது நிறைவேற்றி தீர்க்கூடிய மாபெரும் வேலைகளுக்கான, சிறிய அளவிலான உதாரணங்கள் என்றவிதத்தில், இவைகள் இடைநிகழ்வுகளாகும். "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்” (ஏசாயா 35:5).

தெய்வீகத் திட்டத்தை விளக்குவதும், ஜனங்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பதும், ஜனங்களுடைய செவிடான காதுகளைத் திறப்பதும், (இப்பொழுது அவரால் செய்யப்பட்ட அற்புதங்களைக் காட்டிலும்) மிகவும் பெரியதும், மிகவும் பிரம்மாண்டமானதுமாகிய வேலையாகக் காணப்படும்; ஆனால், இவ்வேலையை, அவர் உன்னதத்திற்கு ஏறிச்சென்று, தம்முடைய பலியின் புண்ணியத்தை, விசுவாசிகள் நீதிமானாக்கப்படுவதற்கென ஒப்புக்கொடுப்பதுவரையிலும் நிறைவேற்ற முடியாது. ஆகையால்தான், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்” என்றார் (யோவான் 14:12).

இன்றும்கூட இயேசுவின் பின்னடியார்கள், அவர் செய்ததைக்காட்டிலும் பெரிய கிரியைகளை, அதாவது அந்த அற்புதங்களைக்காட்டிலும் பெரிய கிரியைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். காரணம் மாம்ச கண்களைத் திறப்பதைவிட, மனதின் கண்களைத் திறப்பது நிச்சயமாக பெரிய அற்புதமேயாகும்; மாம்சக் காதுகளைத் திறப்பதைவிட, மனதின் செவிகளைத் திறப்பது என்பது, பெரிய அற்புதமாகும்; மாம்ச வாயைப் பேச வைப்பதைப்பார்க்கிலும், ஊமையனை தனது மனதின் ஆவியில் தேவனைத் துதிக்கப்பண்ணுவது என்பது, மாபெரும் கிரியையாகும். நாம் சுயமாக இயேசுவைக்காட்டிலும் மாபெரும் கிரியைகள் செய்துவிட முடியாதது மாத்திரமல்ல, அவரைப்போன்று அப்படியே பெரிய கிரியைகளையும் நம்மால் செய்துவிட முடியாது. அவர் இல்லாமல் நம்மால் எதையும் செய்துவிட முடியாது. வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தும்படிக்கும், பிசாசுகளைத் துரத்தும்படிக்கும் இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பி வைத்தபோது, அவர்களால் நிகழ்த்தப்பட்ட குணமாகுதல்கள் இயேசுவாலேயே செய்யப்பட்டதுபோல, இன்றும் இயேசுதான் தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் வாயிலாக, இந்த மாபெரும் கிரியைகளைச் செய்து வருகின்றார்.

## “இன்னும் ஒருமுறை திரளான ஜனங்களுக்கு அற்புதகரமாகப் புசிப்பதற்கு உணவு கொடுக்கப்பட்டது”

ஏழு அப்பங்களைக்கொண்டு, நான்காயிரம் ஜனங்களைப் போஷித்துவிட்டு, மீதியானவைகள் ஏழு கூடைகளில் சேர்த்து வைக்கப்பட்ட பதிவானது இயேசுவின் வல்லமைக்கான, அதாவது அவரிடத்தில் இருக்கும் தெய்வீக வல்லமைக்கான மற்றுமொரு வெளிப்படுத்தல் ஆகும். ஐயாயிரம் பேர் போஷிக்கப்பட்டபோது, ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் பயன்படுத்தப்பட்டன. இவைகள் ஒரு சிறுவனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்திலோ, சீஷர்களிடமே ஏழு அப்பங்கள் இருந்தது. மேலும் அதை, ஜனக்கூட்டத்தாரைப் போஷிக்கும்படிக்கு முழுவதும் கொடுத்து விட்டார்கள்; மற்றும் அனைவரும் திருப்தியாய்ப் போஷிக்கப்பட்டார்கள்; மேலும், ஆண்டவரின் அறிவுரையின்படி மீதியான துண்டுகள், மீண்டுமாகச் சேர்த்துக் கூடையில் எடுக்கப்பட்டன.

இரண்டு சம்பவங்களிலுமே, ஆண்டவர் சிக்கனமான தன்மையை வெளிப்படுத்தி, தம்முடைய பின்னடியார்களுக்குச் சிக்கனமாக விவேகத்துடன் செலவுச் செய்யும் காரியத்தை ஊக்குவித்தார். பல்வேறு வகையான, மிகவும் சுவையான உணவுகளை உருவாக்குவது அவருக்குச் சுலபமான காரியமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அன்று பயன்படுத்தப்பட்ட அதே அப்பங்கள், இன்றும் பாலஸ்தீனியா குடிமக்களால் பயன்படுத்தப்படுகின்றது. அவைகள் நம்முடைய பெரிய பன்களின் (bun) அளவு போன்றே

காணப்படும்; மற்றும் அவைகள் அரைக்கப்பட்ட கோதுமையினாலேயே முழுமையாய்ச் செய்யப்படுகின்றது. எகிப்து மற்றும் பாலஸ்தினியாவின் பலசாலிகளான குடிமக்கள் இந்த அப்பத்தினாலேயே பெரும்பாலும் ஜீவியத்தைக் கழிக்கின்றனர்; இரண்டு அப்பங்களை இவர்கள் உணவாக எடுத்துக் கொள்கின்றனர். இப்படியான எளிமையான உணவுகளினால் நம்மில் சிலர் கூட ஆரோக்கியமாகவும், பலசாலிகளாகவும் காணப்படுகின்றோம். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, நமக்கான அனுதின ஆகாரங்களை நன்றியுள்ள இருதயங்களுடன் புசிப்பது நமக்கான காரியமாகும்; உணவு எவ்வளவுதான் எளிமையாக இருப்பினும் அதில் ஆசீர்வாதம் காணப்படும்.

---

**R5111**

# “வானத்திலிருந்து ஓர் அடையாளம்”
# மாற்கு 8:11-26

"மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்."

- யோவான் 8:12.

இயேசுவின் நாட்களில் மதவாதிகளாகவும், போதகர்களாகவும் முன்னணியில் காணப்பட்ட பரிசேயர்களும், வேதபாரகர்களும் இயேசுவின் செய்தி, ஜனங்களைச் சென்றடைவதில், இயேசு அடைந்த வெற்றியினிமித்தமாக திகைத்துப்போய் எரிச்சலுடன் காணப்பட்டார்கள். இது உண்மைதான். இயேசுவின் செய்தியை மகிழ்ச்சியுடன் கேட்டவர்கள் பிரதானமாக, பொது ஜனங்களாக இருந்தனர். அதாவது, யூதமத போதகர்களால் இழிவாகப் பார்க்கப்பட்டு, "ஆயக்காரர்கள் என்றும் பாவிகள் என்றும்" அழைக்கப்படுகின்றவர்களும், சகோதரர்கள் என்று கருதுவதற்கு யூதமத போதகர்களால் மறுக்கப்படுகின்றவர்களுமான பொது ஜனங்கள் ஆவர். பரிசேயரும், வேதபாரகரும், இயேசுவைப் போட்டிப் போடுகிறவராகவும், வெற்றிப் பெற்றவராகவும் கருதினார்கள். மேலுமாக, இயேசுவினுடைய ஜீவனுக்கேதுவான அருமையான வார்த்தைகள், அநேகருடைய இருதயங்களைத் தொட்டிருப்பதினிமித்தம், ஒரு போதகராக இயேசுவிடம் காணப்பட்ட மேம்பட்ட நிலையானது, போதகர்கள் என்று தங்களுக்கு இருக்கும் கீர்த்தியை மங்கச்செய்கின்ற காரணத்தினால், இவர்கள் அச்சம் கொண்டிருந்தனர்.

இயேசுவை "சோதித்து" அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்றே இந்தப் பரிசேயர்கள், இயேசுவினிடத்திற்கு விசேஷமாக வந்தார்கள். "வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத்" தங்களுக்குக் கொடுக்கும்படியாக, இவர்கள் இயேசுவினிடத்தில் கேட்டார்கள். வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தல் முதலியவைகள் மூலம் இயேசு, ஜனங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் அநேக அடையாளங்களைச் சிறுமைப்படுத்துவதே, இவர்களுடைய உண்மையான நோக்கமாக இருந்தது. இந்த அநேகமான அடையாளங்களை இவர்கள் புறக்கணித்துவிட்டு, "வானத்திலிருந்து வரும் எந்த ஓர் அடையாளத்தை நீர் எங்களுக்குக் கொடுப்பீர்? என்றும், எங்களுக்கு வானத்திலிருந்து ஓர் அடையாளம் வேண்டும், இதை எங்களுக்குக் கொடுத்தருளும், அப்பொழுது நாங்கள் உம்மை நம்புவோம் என்றும் கூறினார்கள்.

மேசியா என்ன செய்வார் என இவர்கள் எண்ணிக் கொண்டிருந்த விஷயங்களிலிருந்து, இயேசு தம்முடைய மேசியாத்துவத்தை நிரூபிக்கத்தக்கதாகச் செய்த காரியங்கள் எவ்வளவு வித்தியாசமாய் இருந்தது என்பதை நாம் நினைவில் கொண்டிருந்தால், அந்நாட்களில் காணப்பட்ட யூதர்களுக்கான பிரதான அதிகாரிகள் மீது நாம் ஓரளவுக்கு அனுதாபங்கொள்ள முடியும். மேசியாவைக் குறித்த அநேக காரியங்களைத் தீர்க்கத்தரிசனங்கள் தெரிவிக்கின்றன. ஆயினும், இவர்கள் தீர்க்கத்தரிசனங்களை வாசிக்கையில், இவர்கள் அவருடைய மகிமையைக் குறித்தும், யூத தேசத்தாருக்கு வரும் வல்லமை/அதிகாரம் குறித்தும், மேசியாவின் இராஜ்யத்தின்போது, உலகத்தை ஆசீர்வதிப்பதற்கென, சகல தேசங்கள் மீது, இறுதியில் யூத தேசமானது வழங்கப் போகும் ஆசீர்வாதங்குறித்தும் பேசப்பட்ட விஷயங்களுக்கே விசேஷமான கவனம் கொடுத்தனர். முற்றிலும் வேறுவகையான மற்ற வேதவாக்கியங்களை இவர்கள் கவனிக்கவும் தவறி, போதுமானளவுக்கு அல்லது ஆழமான கவனத்துடன் கற்கவும் தவறிவிட்டனர்.

இந்த மற்ற வேதவாக்கியங்கள், மேசியா எப்படி "ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்படுவார் என்றும், மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருப்பார் (அவர் தாம் குற்றவாளியாகத் தீர்க்கப்படுவதையும், மரித்துப் போவதையும் தவிர்ப்பதற்கெனத் தம்முடைய வாயைத் திறக்கமாட்டார்)” என்றும் தெரிவிக்கின்றது. இன்னுமாக, எப்படி அவர் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைப் பிரசித்தப்படுத்துவார் என்றும், குருடர்களின் கண்களை எப்படித் திறப்பார் என்றும் தெரிவிக்கின்ற வேதவாக்கியங்களானது மகிமையான இராஜ்யத்தோடு தொடர்புடையவைகளாக இருக்கின்றனவே ஒழிய மேசியா, "மனுஷரால் நிந்திக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு” மற்றும் அவரிடமிருந்து மனுஷர்கள் தங்களது முகத்தைத் திருப்பிக்கொள்ளும் காலப்பகுதி தொடர்புடையதாக இல்லை.

உண்மைதான், இவர்கள் வேதவாக்கியங்களைச் சரியாகப் படித்திருக்க வேண்டும். இந்தத் தவறைச் செய்ததில், இவர்களுடைய தவறு எதுவுமில்லை என்று சொல்லப்படலாம்; ஒருவிதத்தில் இது உண்மையாகக்கூட இருக்கலாம். மற்றொரு விதமாகப் பார்க்கையில், இருதயத்தின் பெருமையும், எல்லாம் தெரியும் என்ற சிந்தையும்தான் உண்மையில் இவர்களுக்கான பிரச்சனை என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் தாழ்மையில்லாமல் காணப்பட்டார்கள்; ஆகவே இவர்கள் கற்பிக்கப்படத்தக்கதான நிலையில் இல்லை. இவர்களைப் போலவே இயேசுவின் செய்தியை ஏற்றுக்கொண்டிருந்த, "உத்தம இஸ்ரயேலர்களும்” தீர்க்கத்தரிசனங்களைத் தவறாகவே புரிந்திருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்த உத்தம இஸ்ரயேலர்களோ தவறாய்ப் புரிந்திருந்ததை மறைக்காமல் ஒப்புக்கொண்டு, வழிநடத்தப்படுவதற்கும், வழிக்காட்டப்படுவதற்கும் ஆயத்தமாகவும் காணப்பட்டார்கள். மேலும், இத்தகையவர்களுக்கு ஆண்டவரின் போதனைகள் கவருகின்றவைகளாகவும், ஆசீர்வாதமாகவும், அற்புதமானதாகவும் காணப்பட்டது. தெய்வீகத் திட்டம் வெளிப்படுத்துவதற்கான ஏற்ற காலமாய் (அப்போது) இருந்தபடியால், இத்தகையவர்கள் படிப்படியாக, தெய்வீகத் திட்டத்தினுடைய ஒவ்வொரு அம்சத்தையும் சரியாய்ப் புரிந்துக்கொள்ளப்படுவதற்கு ஏதுவாய் வழிநடத்தப்பட்டார்கள். மேலும், இப்படியாக இத்தகையவர்கள் ஏற்றவேளையில் பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதத்திற்கு ஆயத்தமாய்க் காணப்பட்டு, மேசியாவின் மணவாட்டியாகவும், மேசியாவின் இராஜ்யத்தின் உடன் சுதந்தரராகவும் இருக்கும்படிக்குத் தேவன் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரில் தங்களை அங்கங்களாக வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

## “யோனாவின் அடையாளமேயல்லாமல் வேறே அடையாளம் இல்லை”

"அவர் தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு: இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஓர் அடையாளமும் கொடுக்கப்படுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை விட்டு மறுபடியும் படவில் ஏறி, அக்கரைக்குப் போனார்” (மாற்கு 8:12, 13). இவர்களுக்கு அடையாளத்தைக் கொடுக்க இயேசு மறுத்துவிட்டார். பரிசுத்தவானாகிய மத்தேயு, இவர்கள் அடையாளம் கேட்டதையும், அதற்குப் பெற்றுக் கொண்ட பதிலையும் குறித்து விவரமாக பதிவு செய்துள்ளார் (மத்தேயு 16:1-4). இயேசு தாம் அதுவரையிலும் கொடுத்து வந்த அடையாளங்களின் மீது பரியேர்களின் கவனத்தைக் கொண்டு வந்தார். பின்னார் ஒரு மாபெரும் அடையாளம் இந்த ஜாதியாருக்குக் கொடுக்கப்படும் என்று கூறினார்; ஆயினும், கல்வாரியில் காரியங்கள் சம்பவிப்பதுவரையிலும், இவ்வடையாளம் கொடுக்கப்படுவதில்லை. அந்த அடையாளமானது பல ஆயிரக்கணக்கான யூதர்கள் மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தினது; இவ்வடையாளத்தின் தாக்கமானது, பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்தவானாகிய பேதுரு, இயேசுவின் மரணத்தைக்குறித்தும், அவர் மூன்று நாள் கல்லறையில் இருந்ததுகுறித்தும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததுகுறித்தும் பண்ணின பிரசங்கத்தின் காரணமாக, அன்று பல்லாயிரம் நபர்கள் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டதாக அப்போஸ்தலரின் நடபடிப் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களிலிருந்து உறுதிப்படுகின்றது.

யோனாவின் அடையாளத்தை இயேசு மேற்கோள் காட்டினார்; யோனா மூன்று நாள் இரவும், பகலுமாக, மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இதே காலஅளவு, பூமிக்குள் காணப்படுவார் என்றும், பிற்பாடு யோனா வெளியே வந்ததுபோல, மனுஷகுமாரனும் வெளியே வருவார் என்றும் தெரிவித்தார்.

நமது கர்த்தருடைய இவ்வறிக்கைக்கு எதிராக, உயர் விமர்சகர்கள் எழுப்பும் புதுக் கருத்துக்கள் தொடர்பான விஷயங்களில் அவர்கள், அவர்களுக்குள்ளாகவே சண்டைப் போட்டுக்கொள்ளட்டும் என நாம் விட்டுவிடுகின்றோம். உயர்விமர்சகர்களைப் பொறுத்தமட்டில், இயேசுவும், அப்போஸ்தலர்களும் எல்லா விதத்திலும் மிகவும் வஞ்சிக்கப்பட்டுள்ளவர்களாக இருக்கின்றனர்; ஆனால், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களைப் பொறுத்தமட்டில், உயர்விமர்சகர்களே மிகவும் மோசமாக வஞ்சிக்கப்பட்டுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். நாம் தேவனுடைய வார்த்தைகளின் பக்கமாகவே நிற்க விரும்புகின்றோம்; “மனித ஞானத்தின்” பக்கமாக நிற்க விரும்புகின்றவர்கள் அதன் பக்கமாகவே நிற்கட்டும்.

## “பரிசேயர்களுடைய புளித்த மாவு”

இயேசு படகில் ஏறின பிற்பாடு, பரிசேயர்களுடைய உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்கும்படிக்குத் தம்முடைய சீஷர்களை எச்சரித்தார்; பரிசேயர்களுடைய உபதேசத்தை அவர் புளித்தமாவுக்கு ஒப்பிட்டுக் கூறினார். புளிப்பு என்பது, அப்பம் பண்ணுவதற்கெனப் பிசைந்துள்ள மாவில் பரவக்கூடிய ஒன்றாகும். தேவனுடைய வார்த்தை என்பது சத்தியமாகும்; அதாவது தேவனுடைய ஜனங்கள் புசிப்பதற்குரிய அப்பமாக இருக்கின்றது. ஆனால், தேவனுடைய ஜனங்கள் புளிப்பில்லாத அப்பத்தை அதாவது, மனித கோட்பாடுகள் என்னும் புளிப்பினால் கலப்படம் பண்ணப்படாத தூய்மையான அப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். தூய்மையான அப்பமானது தூய்மையான சத்தியமாகும்.

இந்த எச்சரிப்பு அவசியமானது. காரணம், பரிசேயர்கள், யூதர்கள் மத்தியிலே மிகவும் பரிசுத்தமான அமைப்பினராகக் காணப்பட்டு வந்தனர். யூதர்களிலேயே மிகுந்த உண்மையும், மிகுந்த பக்தி வைராக்கியமும், மிகுந்த திறமையும் உள்ளவர்கள் இவ்வமைப்பிடத்திற்குக் கவரப்படுவது இயல்பே. இவ்வமைப்பானது, அது உன்னதமான மற்றும் சிறப்பானவைகளுடன் தொடர்பு கொண்டுள்ளது என்று கூறும் காரியங்களும்,அதன் போதனைகளும் மிகவும் அபாயமானதாகும். காரணம், அதன் அப்பம், அதன் சத்தியம், மனித பாரம்பரியங்களுடன் கலக்கப்பட்டுள்ளதாக இருக்கின்றது; மேலும், அதன் அப்பம், உடல் நலக்குறைவையும், அஜீரணத்தையும் ஏற்படுத்துகின்றது. மேலும், அதை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருடைய மனங்களையும் விஷமுமாக்கி விடுகின்றது.

இதே பாடம் இன்றுள்ள நமக்கும் கூடப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்தவ சபை பிரிவுகளில், ஏதேனும் சபைப் பிரிவானது மிகவும் பரிசுத்தமாய் இருப்பதாக கூறிக்கொண்டாலும் அல்லது ஒருவேளை பரிசுத்தமாய் இருப்பினும் கூட, நாம் அவர்களது புளித்த மாவை, அதாவது தவறான உபதேசத்தைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.அதாவது அதற்கு விழிப்பாய் இருந்து, அதனை தவிர்த்துவிட வேண்டும். தேவனுடைய வார்த்தைகளில் உள்ள தூய்மையான சத்தியமே, நம்மை “இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்கள் ஆக்குவதாக” இருக்கின்றது மற்றும் அப்போஸ்தலர் கூறுவது போன்று தூய்மையான சத்தியமே, நம்மை “எல்லாவற்றிலும், எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும்” ஆக்குகின்றது (2 கொரி 9:8; 2 தீத்து 3:15).

ஆகவே, அனைத்துப் பிரிவுகளிலும் காணப்பட்ட கிறிஸ்தவர்களாகிய நாம், நமது மனங்களையும், நமது இருதயங்களையும், பரம பிதாவின் சித்தத்தைச் செய்வதற்குமென, நமது கர்த்தரும், மீட்பருமானவருக்கு முழுமையான அர்ப்பணம் பண்ணுவதில் இணைத்துக் கொள்வோமாக. இன்னுமாக, கடந்த காலங்களில் கர்த்தருடைய ஜனங்களை 600 பிரிவினர்களாகப் பிரித்ததில் முக்கிய பங்கு வகிக்கும், பல்வேறு விசுவாசப் பிரமாணங்களாகிய, சகல புளிப்பிலிருந்தும் சுதந்திரமாகவும், தெளிவடைந்தவர்களாகவும் விலகி நிற்போமாக. எங்குமுள்ள தேவனுடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் இந்த மார்க்கப்பேதங்களை/பிரிவினைகளை நாங்கள் எதிர்த்துப் பேசுகின்றோம். மற்றும் ஒரே

கர்த்தர் கீழும், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் கீழும், ஒரே தேவனும், ஒரே பிதாவின் கீழும், பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள முதற்பேறானவர்களாகிய ஒரே சபையின் கீழும் உண்மையான இருதயங்கள் இணைவதையே நாம் அதிகமதிகமாய் வாஞ்சிக்கின்றோம்.

## "இன்னும் சிந்தியாமல் இருக்கிறீர்களா?"

பரிசேயருடைய புளித்தமாவு குறித்த இயேசுவின் உவமையான வார்த்தைகளின் அர்த்தத்தைச் சீஷர்கள் மிகவும் மந்தத்தனமாகத் தவறவிட்டார்கள். சீஷர்கள் உடனடியாகச் சொல்லர்த்தமான புளிப்பையும், சொல்லர்த்தமான அப்பத்தையும் எண்ணிக்கொண்டு, தங்களுடன் ஓர் அப்பத்தை மாத்திரம் எடுத்து வந்துள்ளதைச் சீஷர்கள் கவனித்து, இதன் காரணமாகத்தான் தங்களை ஆண்டவர் கடிந்துக்கொள்வதாக அனுமானித்துக் கொண்டார்கள். சீஷர்களது புரிந்துக்கொள்ளுதலின் கண்களாகிய மனக்கண்கள் மிக அகலமாகத் திறக்கப்படவில்லை. இவ்வளவு போதனைகளைத் தாம் அவர்களுக்குக் கொடுத்தப் பிற்பாடுங்கூட, தம்முடைய வார்த்தைகளின் கருத்தைப் புரிந்துக்கொள்வதில் இவ்வளவுக்கு மெதுவாகக் காணப்படுகின்றார்களே எனச் சீஷர்களை உடனடியாகக் கடிந்துக் கொண்டார்.

ஐந்து அப்பத்தைக் கொண்டு ஐயாயிரம் பேருக்குப் போஷித்த அற்புதத்தைச் சீஷர்களுக்கு நினைப்பூட்டி, மீதியானவைகளை எத்தனை கூடைகளில் சேர்த்துக் கொண்டதாகக் கேள்விக் கேட்டார். அவர்கள் "பன்னிரண்டு" என்று பதிலளித்தனர். பின்னர் ஏழு அப்பங்களைக் கொண்டு நான்காயிரம் பேருக்குப் போஷித்த அற்புதத்தை நினைப்பூட்டி, மீதியானவைகளை எத்தனை கூடைகளில் சேர்த்துக் கொண்டார்களெனக் கேள்விக் கேட்டார். அவர்கள் "ஏழு" என்று பதிலளித்தனர். பின்னர் அவர்கள் ஓர் அப்பம் மாத்திரம் கொண்டிருந்ததற்காக, தாம் அவர்களிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கவில்லை என்று ஏன் அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை என்றும், அப்பத்தை உண்டுபண்ணுவதற்குத் தமக்கு முன்பு வல்லமை இருந்ததானால், இன்னமும் உண்டுபண்ண வல்லமை தமக்கு உண்டு என்று புரிந்துக்கொண்டு, அவர்கள் குறைவாக அப்பம் வைத்திருப்பதை, தாம் குறிப்பிடவில்லை என்பதை ஏன் புரிந்துக்கொள்ளவில்லை என்றும் இயேசு அவர்களிடம் கேட்டார்.

இதே காரியம் வேத ஆராய்ச்சியில் காணப்படும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் இன்று அடிக்கடி பார்க்கப்படலாம்; நமது கர்த்தருடைய போதனைகளின் கருத்தானது, சில சிறு முக்கியத்துவமற்ற விஷயங்கள் மீது மாத்திரம் ஈடுபாடுடைய மனங்களையுடைய சிலரால் முற்றிலும் புரிந்துக்கொள்ள தவறப்படுகின்றது. இதற்கான தீர்வு, தேவனோடு கொஞ்சங்கூட நெருங்கி நடப்பதேயாகும்; கொஞ்சங்கூட கவனமாக தெய்வீக வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு, ஆண்டவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் பின்னடியார்களென ஆண்டவருடைய மற்றும் அவரது வேலையினுடைய ஆவியை அடைய வேண்டும். இவ்விஷயத்தில் "முட்கள்" எனும் பிரச்சனையையும் நாம் மறந்துவிட வேண்டாம்; வேறொரு உவமையானது, "முட்கள்" எவ்வாறு தேவனுடைய ஜனங்களின், இருதயங்களையும், மனங்களையும் அடிக்கடித் தாக்கி, சத்திய வார்த்தையானது, அதற்குரிய பலனை இவர்களிடத்தில் கொண்டு வருவதைத் தடுக்கின்றது என்று தெரிவிக்கின்றது. இயேசு கூறியுள்ள பிரகாரம், "முட்கள்" இந்த ஜீவியத்தின் கவலைகளாகவும், ஐசுவரியத்தின் மயக்கங்களாகவும் காணப்படுகின்றது.

"பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டு வந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து: எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான். பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான்" (மாற்கு 8:22-25). இப்படியான ஒருமுறையை இயேசு கையாண்டதற்கான நோக்கம், நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எனினும், அநேகமாக அம்மனுஷன் விசுவாசத்தில் குறைவுப்பட்டிருந்தான் என்றும், விசுவாசத்தை, இயேசு படிப்படியாக அம்மனுஷனுக்குள் வளர்த்தினார் என்றும் நாம் எண்ணுகின்றோம். இந்த நமது கருத்தை நாம், அம்மனுஷன் ஏறெடுத்துப் பார்த்து, கொஞ்சம்

நேரமாகப் பார்த்துக் கொண்டே இருந்து, பின்னர் அனைத்தையும் தன்னால் தெளிவாகப் பார்க்க முடிகின்றது என்றுள்ள பதிவிலிருந்தே எடுத்துக்கொள்கின்றோம். அம்மனுஷன் அவனது சித்தத்தின் முழு வல்லமையையும் செயல்படுத்த வேண்டும் என்றும், காரியங்களைப் பார்ப்பதற்குப் போராடவும்/முயற்சிக்கவும் வேண்டும் என்றும் கர்த்தர் எதிர்ப்பார்த்தார்.

---

**R5120**

# "மாபெரும் கேள்வி"
# மாற்கு 8:27-9:1

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து." - மத்தேயு 16:16

நமது கர்த்தருடைய ஊழிய நாட்களில் ஒரு குறிப்பிட்ட காலம்வரையிலும், அவர் தம்முடைய சீஷர்களுக்குக்கூட தாம்தான் மேசியா எனத் தம்மைக்குறித்துக் கூறவில்லை. நமது கர்த்தர் ஞானமான வழியைத் தெரிந்துக் கொண்டார் என்பதில் சந்தேகமில்லை. "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும், ஒருக்காலும் பேசினதில்லை" என்று ஜனங்கள் கூறும்வரையிலும் அவர் ஒரு மாபெரும் போதகராக, ஜனங்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார். "மேசியா வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ?" (யோவான் 7:31) என ஜனங்கள் சொல்வது வரையிலும், அவர் ஜனங்களைச் சொஸ்தப்படுத்திக் கொண்டிருந்தார். அவர்தான் மேசியா என அவரே கூறுவதற்குப் பதிலாக ஜனங்களே அவரைக் குறித்துக் கூறுவது சிறப்பாயிருக்கும், மற்றும் அவரே அறிவிப்பதற்கு முன்னதாக, அவருடைய பின்னடியார்களின் மனதில் இந்த எண்ணம் படிப்படியாக உணரப்படுவது சிறப்பாயிருக்கும்.

எனினும் தம்முடைய சீஷர்கள் இதை அறிய வேண்டும் என்று கர்த்தர் எண்ணினார். மேலும், "ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்?" என்ற கேள்வியைக் கேட்டார். அதற்குப்பதிலாக, சிலர் அவரை மரணத்திலிருந்து எழுந்த யோவான் ஸ்நானன் என்றும், சிலர் அவரை மரணத்திலிருந்து எழுந்த எலியா என்றும், வேறு சிலர் அவரைத் தீர்க்கத்தரிசிகளில் ஒருவர் என்றும் எண்ணுவதாகக் கூறினார்கள்.

அடுத்ததாக, "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கர்த்தர் கேட்டார். இதற்குப் பிரதியுத்தரமாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பரிசுத்த பேதுரு பதில் கூறினார். பேதுருவின் பதில் சரியானது என்று இயேசு கூறி, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்று கூறினார் (மத்தேயு 16:17).

உடனடியாக இயேசு தமக்குப் பிரியமான பன்னிரண்டு சீஷர்களிடத்தில், தமக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள அனுபவங்களைக்குறித்து விவரிக்கத் தொடங்கினார்; அதாவது, எவ்வாறு இராஜ்யம் யூதர்களுக்கு அன்புடன் வழங்கப்பட்டது என்றும், எப்படி யூதர்களுடைய பிரதிநிதிகளாகிய மூப்பர்களும், பிரதான ஆசாரியர்களும் தம்மைப் புறக்கணிப்பார்கள் என்றும், எப்படி தாம் கொலை செய்யப்படுவார் என்றும், மூன்று நாளுக்குப் பின் மீண்டும் எப்படி தாம் உயிர்த்தெழுவார் என்றும் விவரிக்கத் தொடங்கினார்.

இயேசு தம்முடைய மரணத்தைக்குறித்து, மிகவும் அழுத்தம் கொடுத்துத் தெரிவித்தார். மேலும், சீஷர்களும் அதைத் தெளிவாய்ப் புரிந்துக் கொண்டார்கள். யூதாஸ் கோபமும், ஏமாற்றமும் அடைந்தவராக, இப்படியாக இயேசு தம்முடைய எதிர்க்காலத்தைக்குறித்த கண்ணோட்டம் கொண்டிருப்பது என்பது கர்த்தருக்கும், அப்போஸ்தலர்களுக்கும் அவமானமாக இருப்பதாகக் கருதினார்; காரணம், இப்படியாகவெல்லாம் இயேசு எதிர்ப்பார்ப்புக் கொண்டிருப்பாரானால், அது அவருடைய போக்கை மாற்றி அமைக்கும், மற்றும் விரைவில் அவர் மேல் விபரீதத்தைக் கொண்டு வரும், மற்றும் கர்த்தரால் சீஷர்களுடைய மனதில் பதிய வைக்கப்பட்ட அவர்களது அனைத்து

நம்பிக்கைகளையும் தகர்த்துவிடும், அதாவது கர்த்தரோடு அவருடைய சிங்காசனத்தில் உட்காருதல் முதலிய நம்பிக்கைகளைத் தகர்த்து விடுகின்றதாக இருக்கும் என யூதாஸ் கருதினார்.

சந்தேகத்திற்கிடமின்றி, அப்போஸ்தலர்கள் அனைவரும் ஏமாற்றம் அடைந்தவர்களாக இருந்தர்கள். ஆனால், பரிசுத்தவானாகிய பேதுரு மாத்திரமே பேசுவதற்குத் துணிவு கொண்டு, பின்வருமாறு பேசினார்: "ஆண்டவரே இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை. நாங்கள் அனைவரும் அறிந்திருக்கிறபடி, நீர் மேசியாவாக, இஸ்ரயேலின் சிங்காசனத்தை அடைவீர். பிற்பாடு உலகத்தின் சிங்கசானத்தையும் அடைந்து, மனுஷ சந்ததி முழுவதற்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவீர். மேலும், நீர் வாக்களித்துள்ள பிரகாரமாக, நாங்களும் உம்முடைய சிங்காசனத்தில் உம்மோடுக் கூட காணப்படுவோம்" என்றார்.

## "எனக்குப் பின்னாகப்போ சாத்தானே"

இப்படியாக, பரிசுத்தவானாகிய பேதுரு நடந்துக்கொண்டதின் காரணமாக அவர் தெய்வீகத் திட்டத்தையும், சித்தத்தையும் எதிர்க்கின்றவராக இருந்தார்; தெய்வீகத் திட்டத்திற்கு மையமாக இருக்கும் இயேசுவின் மரணத்தில்தான், முதலாவது சபைக்கும், அடுத்து இஸ்ரயேலுக்கும், இறுதியில் சகல ஜாதிகள், ஜனங்கள், பாஷைக்காரர்கள், கோத்திரத்தாருக்குமுள்ள பல்வேறு வாக்குத்தத்தங்கள் நிறைவேறும். இயேசுவை அவருடைய அர்ப்பணிப்பின் ஆரம்பத்தில் சாத்தான் தடைபண்ண முற்பட்டதுபோல, இப்பொழுதும் தம்முடைய பலியில், தாம் முழுமையாகப் பட்சிக்கப்படுவதைத் தடைப்பண்ணுவதற்கு ஏதுவாக (பேதுருவிடமிருந்து வெளிப்பட்ட) இந்தச் வார்த்தைகள் காணப்படுவதை இயேசு உணர்ந்தார்.

இவ்விஷயத்திற்கு மிகவும் அழுத்தம் கொடுக்கும் விதத்தில், இயேசு, பரிசுத்தவானாகிய பேதுருவை நோக்கி, "எனக்கு பின்னாகப்போ சாத்தானே என்றும், உன்னுடைய வார்த்தைகள், தேவனுடைய திட்டத்திற்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மாறாக, மனித கணிப்பு மற்றும் விருப்பத்திற்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறதைச் சுட்டிக்காட்டுகின்றது" என்றும் கூறினார். பிற்பாடு "ஏற்ற காலத்திற்குரிய உணவாக" இன்னும் காணப்படாதிருந்த காரியத்தை எளிமையான விதத்தில் இயேசு, தம்முடைய பின்னடியார்களுக்குத் தெளிவுப்படுத்திட ஆரம்பித்தார்; அதாவது, அவருடைய வேலையின் எந்த ஒரு பாகத்திலும், அவருடன் பங்கடைய விரும்புகின்றவர்கள் மட்டுமே தாங்கள் கொண்டிருக்கும் பூமிக்குரிய அனைத்தையும் இழக்க வேண்டியிருக்கும் என்றும், தன்னைத்தான் வெறுத்து, தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு, மீட்பரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர வேண்டும் என்றுமுள்ள விஷயங்களை எளிமையான வார்த்தைகளில் இயேசு தம்முடைய பின்னடியார்களுக்குத் தெளிவுப்படுத்த ஆரம்பித்தார்.

யாரொருவர் தனது உரிமைகளைத் தக்க வைப்பதிலும், தற்கால ஜீவியத்தைப் பற்றிப்பிடிப்பதிலும் அக்கறைக் கொண்டிருந்து, அனைத்தையும் தியாகம் செய்திட விருப்பமற்று காணப்படுகிறாரோ அவர், சிலுவையைச் சுமந்துக் கொண்டு, பூமிக்குரிய நன்மைகளை முழுமையாகத் தியாகம் பண்ணுபவர்களாய் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் மாபெரும் "பரிசாகிய" திவ்வியச் சுபாவத்தை இழந்துவிடுவார். ஆனால், யாரொருவர் இயேசுவினிமித்தமாக தனது ஜீவனை உண்மையாக இழந்துபோவாரோ, அவர் அதனை இரட்சித்துக் கொள்வார். அதாவது, ஆவிக்குரிய தளத்தில் ஜீவனைப் பலனாகப் பெற்றுக்கொள்வார்.

இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் இதே கொள்கைதான், என்றென்றும் செயல்படும். அதாவது, யாரொருவர் சுயநலமாகக் காணப்பட்டு, தனது சொந்த ஜீவனையும், தனக்கான சுயநன்மைகளையும் அன்புகூருகிறாரோ, அவர் நித்தியஜீவன் பெறுவதற்குப் பாத்திரமாகக் கருதப்படுவதில்லை; ஆனால், யாரொருவர் கர்த்தருடைய காரணங்களுக்காக, தனது நன்மைகளைத் தியாகம் பண்ணுவாரோ, அவர் நித்தியஜீவன் பெறுவதற்கு ஏதுவாக குணலட்சணத்தில் பாத்திரமானவராகக் கருதப்படுவார்.

## "மனுஷனுக்கு இலாபம் என்ன?"

இயேசுவினால் நிறைவேற்றப்பட்ட மீட்பின் மூலமாக, ஒவ்வொரு மனுஷனுக்கும் தேவன் ஓர் எதிர்க்கால வாழ்க்கையை அளித்துள்ளார். ஆனால், தேவனால் நியமிக்கப்பட்டுள்ள வழியின் வாயிலாக, இந்த மாபெரும் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்கின்றவர்களாகிய இருதயத்திலும், குணலட்சணத்திலும், ஜீவியத்திலும் உயர்தன்மையுள்ளவர்கள் மாத்திரமே எதிர்க்கால ஜீவியத்தை அடைவார்கள். ஒருவேளை மனுஷன் சுயநலத்துடன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலுங்கூட, இந்தச் சுயநலம் அவன் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமற்றுப் போகச் செய்திடும். மனுஷன் தன்னுடைய ஜீவனை இழந்துவிட்டு, அதற்கு ஈடாக என்னத்தை எடுத்துக்கொள்வான்? நித்திய மகிமையையும், நித்திய ஜீவனையும் இழக்கும் பட்சத்தில், மனுஷன் இந்த இழப்பிற்கு ஈடாக அல்லது ஆதாயமாக, சொற்பகாலமான தற்கால ஜீவியத்தின் ஆஸ்தியைக் (அ) கீர்த்தியை (அ) பிரபலத்தைக் கருதுவானோ? நிச்சயமாக இல்லை. தேவன் தம்முடைய குமாரன் வாயிலாக, எந்த ஒரு தளத்திலும் நமக்கு அருளப்போகும் நித்திய காலத்திற்குமுரிய ஜீவனை அடைவதற்கு, குணலட்சணத்தை வளர்த்தல் என்பது முற்றிலும் அவசியமான காரியமாக உள்ளது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

யாரொருவன் கர்த்தருடைய பின்னடியாராகி, ஆவிக்குரிய தளத்தில் நித்திய காலத்திற்குரிய ஜீவன் மற்றும் மகிமை எனும் பரிசை அடைய வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றானோ, அவன் அனைத்தையும் முழு இருதயத்தோடே செய்ய வேண்டுமே ஒழிய, நயவஞ்சகமாக அல்லது இரகசியமாயல்ல. அவன் முழுமையாகவும், தைரியமாகவும், சரியான விதத்திலும், இயேசுவையும், அவருடைய வார்த்தைகளையும் ஒப்புக்கொள்ள வேண்டும். இயேசு தம்மையும், தம்முடைய வார்த்தைகளையும் சமநிலையில் வைத்துப் பேசுகின்றார். "என்னைக் குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ" என்று குறிப்பிடுகின்றார். இயேசுவின் வார்த்தைகள் என்பது, இயேசுவின் உபதேசங்கள் (அ) போதனைகளைக் குறிக்கின்றது. மனுஷர்கள் மத்தியில் பிரபலமில்லாமல் காணப்படும் காரணத்தினால், சத்தியத்தைக்குறித்து வெட்கப்படுவதும், தெய்வீகத் திட்டம் குறித்து வெட்கப்படுவதும், தேவனுடைய வார்த்தைகளின் போதனைகளென நாம் காண்பவைகளைக் குறித்து வெட்கப்படுவதும், கர்த்தரை அவமதிப்பதையும், அவருடைய தயவுக்கு நாம் அபாத்திரர்கள் என்று நிரூபிப்பதையும் குறிக்கின்றதாக இருக்கும்.

கிறிஸ்துவின் சபையாக இருப்பவர்கள், அவரால் பிதாவுக்கு முன்னதாகக் குற்றமற்றவர்களாக நிறுத்தப்படுவதுவரையிலும் தொடர்ந்து, கிறிஸ்துவைத் தங்களுக்கான பரிந்து பேசுபவராகப் பெற்றிருப்பது அவர்களுக்கு அவசியமாகும். ஒருவேளை அவர் தங்களுக்காகப் பரிந்துப் பேசுவதை அவர்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமெனில், அவர்கள் மனுஷர் மத்தியில் அவருடைய நோக்கத்தை ஆதரிக்கின்றவர்களாகவும், அவரைக்குறித்தும், அவருடைய உபதேசங்களாகிய, அவருடைய வார்த்தைகள் குறித்தும் வெட்கமடையாமலும் காணப்பட வேண்டும் (கொலோ. 1:22).

தம்முடைய சீஷர்கள் செய்ய வேண்டிய ஓர் அர்ப்பணிப்பைச் செய்திடாத மற்றத் தேசத்தார் பற்றிக் கர்த்தர் குறிப்பிடுவதை வைத்து, நமது கர்த்தர் இவ்வார்த்தைகளை விசேஷமாகச் சீஷர்களுக்குக் கூறினார் என்பது தெரிகின்றது. மற்றவர்கள், "விபச்சாரமும் பாவமுமுள்ள சந்ததியாகக்" கூறப்படுகின்றனர். கிறிஸ்துவின் பின்னடியார்கள் சத்தியத்தின் வெளிச்சத்தை, உலகத்திற்கு உயர்த்திப் பிடிக்க வேண்டும். மேலும், இப்படியாக உண்மையாய்ச் செய்யும்போது, இவர்கள், கர்த்தர் தமது பிதாவின் மகிமைப் பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களுடன் வருகையில், ஏற்றவேளையில், கர்த்தர் இயேசுவினால் அங்கீகரிக்கப்படுவார்கள்; இவர்களை அங்கீகரிப்பதில் கர்த்தர் இயேசு வெட்கமடையமாட்டார்; இவர்களைக் கர்த்தர் தம்முடைய பிதாவுக்கும், பரிசுத்த தூதர்களுக்கும் முன்பும் நிறுத்துவார்.

## "மாபெரும் கேள்வி"

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகக் கேட்கப்பட்ட இதே மாபெரும் கேள்வியானது, இன்றும் மாபெரும் கேள்வியாக இருக்கின்றது. யார் இந்த இயேசு? சிலர்

கூறுவது போன்று, அவர் ஒரு நல்ல மனுஷனாகவும், மிகவும் திறமிக்கப் போதகராகவும் மாத்திரம் இருந்திருப்பாரானால், அவர் கிறிஸ்து அல்ல. ஏனெனில், கிறிஸ்துவிடம் இந்த அனைத்துப் பண்புகளும் காணப்பட்டாலுங்கூட, இதிலும் மேலானவரே கிறிஸ்து ஆவார். கிறிஸ்துவாக இருப்பதற்கு, அவர் அனைவருக்காகவும், தம்மையே மீட்கும் பொருளாகக் கொடுத்திட்ட மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக இருந்திருக்க வேண்டும். “மற்றும் இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது” (1 தீமோத்தேயு 2:5, 6). இது அவர் சாதாரணமான பிறப்பைக் கொண்டிராமல் மாறாக, பரத்திலிருந்து பிறந்தவராக, அசாதாரணமான பிறப்பைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது; ஏனெனில், அவர் சாதாரணமான விதத்தில் பிறந்திருப்பாரானால், அவரும் ஆதாமின் மற்றக் குமாரர்களைப்போன்று, மரணத் தீர்ப்புக்குக் கீழ்ப்பட்டவராக இருந்து, தம்மையோ (அ) மற்றவர்களையோ இரட்சிக்க முடியாதவராகக் காணப்பட்டிருந்திருப்பார். ஆனால், அவர் கிறிஸ்துவாக, தேவனால் அனுப்பப்பட்டவராக ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்குப் பிதாவின் மகிமையைத் துறந்து, மாம்சமாக்கப்பட்டவராக இருப்பாரானால் அப்பொழுது, நாம் அவரை உலகத்திற்கான மாபெரும் மீட்பராக பார்க்க வேண்டும். அதாவது, மனுக்குலத்தை மரணத்தீர்ப்பிலிருந்து விடுவிப்பதற்கும், ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் உயிர்த்தெழுதலைச் சாத்தியமாக்குவதற்குமென ஈடுபலியாக (அ) சரிநிகர், சமான பலியாக ஆகிடுவதற்குமென மரிக்க வேண்டியது அவசியமாய் இருந்த, உலகத்திற்கான மாபெரும் மீட்பராக அவரைப் பார்க்க வேண்டும்.

இதற்கும் மேலாக, கிறிஸ்து எனும் வார்த்தையின் அர்த்தம் அபிஷேகம் பண்ணப்பட்டவர் ஆகும். அபிஷேகிக்கப்பட்ட கர்த்தர் மாபெரும் இராஜாவாகவும், தீர்க்கத்தரிசியாகவும், ஆசாரியராகவும் இருப்பார் என்றும், அவருடைய இராஜ்யம் ஆயிரம் ஆண்டுகள் காணப்படும் என்றும், பாவத்தையும், பாவத்தை விரும்புகின்றவர்களையும் அவரது இராஜ்யம் அழித்துவிடும் என்றும், தேவனுடன் நல்உறவுக்குள் திரும்ப விரும்பும் மனுக்குலத்தை அவரது இராஜ்யம் தூக்கிவிடும் என்றும் வேதாகமம் தெரிவிக்கின்றது. வேதவாக்கியங்களின்படி, இந்த இயேசுவே, மேசியா ஆவார். அவருடைய தற்கால வேலை என்பது, அவருடைய மகிமையான இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரர்களாக இருக்கத்தக்கதாக ஒரு மணவாட்டி வகுப்பாரைச் சேர்த்துக்கொள்வதேயாகும். இந்த இராஜ்யமானது, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தில் நிறைவடைந்த பிற்பாடு, உடனடியாக ஸ்தாபிக்கப்படும்.

மேசியாவைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்? அவருடைய மகிமையிலும், இராஜ்யத்திலும் அவருடன் காணப்படத்தக்கதான இந்த அவருடைய அழைப்பைக்குறித்து என்ன எண்ணுகின்றீர்கள்? சுயத்தை வெறுத்தல், சுயத்தைப் பலிச்செலுத்துதல் எனும் விலையைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்? மாபெரும் பலனைக்குறித்து நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்? அர்ப்பணிப்பைப் பண்ணியுள்ளவர்கள் நிபந்தனைகளை மறுபடியும் சிந்தனைச் செய்து பார்க்கக்கடவர்கள்; இந்த அர்ப்பணிப்பை இன்னமும் பண்ணாதவர்கள், தீர்மானம் எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக, ஒருவேளை தாங்கள் சீஷர்களானால், தங்களுடைய பாதையில் நேர்மையுடனும், உண்மையுடனும் காணப்படுவதற்கும், புத்தியாய்ச் செய்வதற்குமென, இயேசு சொன்னது போன்று, “உட்கார்ந்து, செல்லுஞ்செலவைக் கணக்குப் பார்க்கக்கடவன்.”

“கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பைப் புரிந்துக்கொள்பவர்கள் மாத்திரமே, தாங்கள் அர்ப்பணிப்புப் பண்ணினது முதல், ஆரம்பித்த ஓட்டத்தைப் பொறுமையுடன் ஓடுவதற்கு அவசியமான உற்சாகத்தைப் பெற்றிருப்பார்கள். மேலும், ஓட்டத்தை உண்மையாய் ஓடுகிறவர்கள் மாத்திரமே பரிசை அடைவார்கள்; மேலும், மாபெரும் பரிந்துப் பேசுபவரின் உதவியால் மாத்திரமே, ஒருவரால் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக ஜெயங்கொள்பவராகுவதற்கும், முற்றிலும் ஜெயங்கொள்பவராகுவதற்கும் முடியும்.

R1761

# “மறுரூபம்”

## லூக்கா 9:28-36.

## இணையான பதிவுகள் ...... மத்தேயு 17:1-13; மாற்கு 9: 2-13

"இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்.” - மத்தேயு 17:5

நம்முடைய இந்தப் பாடம் லூக்கா 9:22-ஆம் வசனத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. 22 முதல் 26 வரையிலான வசனங்களில், விரைவில் சம்பவிக்கப் போகும், தம்முடைய ஜீவியத்தின் அவலமான முடிவைக்குறித்து கர்த்தர் எப்படிச் சீஷர்களுக்கு வெளிப்படுத்தினார் என்பது குறித்தும், மூன்றாம் நாளின் தம்முடைய உயிர்த்தெழுதல் பற்றி எப்படி அவர்களுக்கு நிச்சயம் அளித்தார் என்பது குறித்தும் நமக்குத் தெரிவிக்கின்றது. பின்னர் தம்முடைய சீஷர்களும் இதே மாதிரியான உபத்திரவங்களுக்குள் கடந்துப் போவார்கள் என்றும், இம்மாதிரியான சோதனைகளின் கீழ் அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு ஆலோசனை வழங்கி, இப்படி உண்மையாய் இருப்பதின் விளைவாக, தாம் இரண்டாம் வருகையில் வரும்போது, தம்முடைய இராஜ்யத்தின் மகிமையில் திரளான பலனைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் அவர்களுக்கு நிச்சயமும் அளித்தார்.

27-ஆம் வசனமானது ஒரு தீர்க்கதரிசனமாகும். இப்பாடம் காட்டுவதுபோன்று இந்தத் தீர்க்கதரிசனம் உடனடியாக நிறைவேறவும் செய்தது.

28 முதல் 36 வரையிலான வசனங்கள். இங்குப் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பவம் ஒரு தரிசனமே ஒழிய, உண்மையாய் நடந்தது அல்ல என்று கர்த்தருடைய வார்த்தைகளே நிரூபிக்கின்றது; "அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார் ” (மத்தேயு 17:9).

இந்தத் தரிசனத்தின் பொருளானது, அப்போஸ்தலனாகிய பேதுருவினால் தெளிவாகச் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. இதனை வரவிருக்கின்ற கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் மகிமைக்கான "தரிசனமாகப்” பேதுரு குறிப்பிடுகின்றார். "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றபோது, அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம்” (2 பேதுரு 1:16-18).

"தரிசனம்” என்கிற போது, அது கிறிஸ்துவினுடைய ஆயிரம் வருஷம் இராஜ்யத்தின் மகிமைக்கான அடையாளமான காரியமாக இருக்கின்றது. கர்த்தரும், அவருடைய வஸ்திரமும் மாறுவது என்பது, வரவிருக்கின்ற அவருடைய தனிப்பட்ட மகிமைக்கான அடையாளமாக இருக்கின்றது. மோசே மற்றும் எலியாவின் மகிமையான தோற்றம் என்பது, கர்த்தருடன்கூட அவருடைய இராஜ்யத்தின் மகிமையில் காணப்படும் மனுஷர் மத்தியிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு கூட்டத்தாருக்கு அடையாளமாக இருக்கின்றது; இந்த இரண்டு வகுப்பரில், ஒரு வகுப்பார் இராஜ்யத்தின் பூமிக்குரிய பாகமாகவும், இன்னொரு வகுப்பார் பரலோகத்திற்குரிய பாகமாகவும் காணப்படுவார்கள். மோசே பூமிக்குரிய பாகத்திற்கு அடையாளமாக இருக்கின்றார் மற்றும் எலியா ஆவிக்குரிய அல்லது பரலோகத்திற்குரிய பாகத்திற்கு அடையாளமாக இருக்கின்றார். அடையாளத்தில் இங்குக் குறிப்பிடப்படும் "தரிசனமானது,” 27-ஆம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஸ்தாபிக்கப்பட்டுள்ள இராஜ்யத்தை அடையாளப்படுத்துகின்றது. "இங்கே நிற்கிறவர்களில்

சிலர் தேவனுடைய இராஜ்யத்தைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (லூக்கா 9:27). இது உண்மையான மோசேயும், எலியாவும் அல்ல. ஏனெனில், இது “தரிசனமே” ஒழிய, உண்மையாய் நடந்தது அல்ல (யூதா 1:9; ரோமர் 5:12; பிரசங்கி 9:5; சங்கீதம் 146:4; யோபு 14:21; யோவான் 3:13; அப்போஸ்தலர் 2:34; சங்கீதம் 90:3). இவர்கள் உயிர்த்தெழுவதற்கான ஏற்றவேளை இன்னமும் வரவில்லை. “அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்” (எபிரெயர் 11:40). கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் இராஜ்யத்தின் ஆவிக்குரிய பாகமாகிய, சுவிசேஷ யுக சபையின் முழுமையான ஸ்தாபித்தல் வரையிலும், முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் சம்பவிக்கக் காத்துக் கொண்டிருக்கின்றது.

31-ஆம் வசனமானது இந்த மூன்று மகிமையானவர்களின் சம்பாஷணையின் பொருளைக் குறித்துப் பதிவு செய்கின்றது. அதாவது, சீக்கிரத்தில் எருசலேமில் நிறைவேற்றப்பட போகின்ற கர்த்தர் சிலுவையில் அறையப்படுதல் அதாவது, நமக்கான ஈடுபலிச் செலுத்தப்படுதல் எனும் மாபெரும் செயலைக் குறித்த இவர்களுடைய சம்பாஷணையின் பொருளைக்குறித்துப் பதிவு செய்கின்றது.

இந்தத் “தரிசனத்திற்கான” நோக்கம் அநேகமாக இரண்டு விஷயங்களுக்காக இருக்க வேண்டும். ஒன்று கர்த்தரை ஆறுதல்படுத்துவதற்காகவும், பெலப்படுத்துவதற்காகவும், மற்றொன்று அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய சாட்சிகளை வெளிச்சமூட்டுவதற்குமாகும். கர்த்தருடைய மரணம் குறித்துக் கர்த்தருடன் பண்ணப்பட்ட சம்பாஷணையானது, அநேகமாக சீஷர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது நடைபெற்றப்படியால் (32-ஆம் வசனம்), இது விசேஷமாக அவருடைய ஆறுதலுக்காகவே நடந்தது. கர்த்தருடைய ஜெபத்திற்குப் பதிலளிக்கும் வண்ணமாகவே “தரிசனம்” வந்தது. மேலும், சீஷர்கள் இதனை அப்பொழுது புரிந்துக்கொள்ளவில்லை என்றாலும் பிற்பாடு, இது அவர்களுக்கு ஆசீர்வாதமான தூண்டுதலாக/உற்சாகமாகக் காணப்பட்டது, இது நமக்கும் இப்படியாகவே காணப்பட வேண்டும். எனினும், (உலகம் உண்டானது முதல் சகல பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் வாயிலாக உரைக்கப்பட்ட இராஜ்யம் மற்றும் அதன் மகிமை தொடர்பான) “அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்” (2 பேதுரு 1:19; அப்போ. 3:19-21). “தரிசனம்” இராஜ்யம் தொடர்பான தெளிவான மற்றும் புத்துணர்வுள்ள அடையாளப் பார்வையாக இருப்பினும், “அதிக உறுதியான தீர்க்கதரிசனம்” இல்லையெனில், இத்தரிசனம் புரிந்துக்கொள்ளப்படாததாய் இருக்கும்.

34, 35-ஆம் வசனங்களில், நமது கர்த்தர், தேவனுடைய குமாரன் என்றும், கர்த்தர் தேவனுக்குப் பிரியமாய் இருக்கின்றார் என்றும் வானத்திலிருந்து ஒரு குரல் சான்று பகர்ந்ததைப் பார்க்கலாம். இவருடைய பிறப்பின்போது, வானதூதர்கள் இவரைக்குறித்து அறிவித்தார்கள்; இவருடைய ஞானஸ்நானத்தின்போது, இவர் தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ள குமாரன் என்று இவரைக்குறித்து வானத்திலிருந்து ஒரு சத்தம் அறிவித்தது; மேலும், இப்பொழுது இவருடைய பூமிக்குரிய ஜீவியம் முடிவை நோக்கி நெருங்குகையில், இவர் மீண்டுமாக தேவனுக்குப் பிரியமாகவும், அங்கீகரிக்கத்தக்கதாகவுமுள்ள குமாரனாக இருப்பது அறிவிக்கப்பட்டது.

36-ஆம் வசனத்தில், “அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார்” என்று காணப்படுகின்றது. “தரிசனமும்” சத்தமும், மேகமும் கடந்துப்போனது; மற்றும் எல்லாம் இயல்பான நிலைக்குத் திரும்பினாலும், இந்தக் குறிப்பிடத்தக்க சம்பவத்தின் அர்த்தமானது, சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, புரிந்துக்கொள்ளப்படுவதுவரையிலும், விரிவடைவதற்குக் காத்திருக்க வேண்டியிருந்தது.

இப்படியாக, தேவனுடைய மகிமையாயுள்ள இரக்கத்தின் திட்டம் பற்றின ஆசீர்வாதமான சத்தியங்கள், கற்பனையின் மேல் கற்பனையினாலும், பிரமாணத்தின்மேல் பிரமாணத்தினாலும், அவருடைய சீஷர்களின் மனங்கள் மற்றும் இருதயங்கள் மீது

ஆழமாகப் பதியவைக்கப்படுகின்றது. மேலும், நாம் அவருடைய வார்த்தைகளுடன் நம்மை அதிகமதிகமாக ஐக்கியத்திற்குள் கொண்டு வரும்போது, நம்மிடத்திலுங்கூட இது ஆழமாகப் பதியக்கூடியதாயிருக்கும்.

---

**R5128**

# “எல்லாம் கூடும்”

## மாற்கு 9:14-29

"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்”- மாற்கு. 9:23.

இயேசுவும், அவருடைய அபிமான மூன்று அப்போஸ்தலர்களும் மறுரூப மலையில், மகிமையின் விஷயங்களைக் கண்டுவிட்டு, மலையிலிருந்து இறங்கி வந்தபோது, மலையின் அடிவாரத்தில் திரளான ஜனக்கூட்டம், அவருடைய மீதமுள்ள ஒன்பது அப்போஸ்தலர்களைச் சூழ்ந்திருக்கக் கண்டார்கள். ஒரு தகப்பன், தன்னுடைய குமாரனிடத்தில் காணப்பட்ட அசுத்த ஆவியை வெளியே அனுப்பும்படிக் கேட்க வந்தபோது, அப்போஸ்தலர்கள் அதைத் துரத்த முயற்சித்தும், கூடாமற்போயிற்று.

இப்படியே சில கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் நடக்கின்றது. அதாவது, அவர்கள் அடிக்கடி விசுவாசத்தில் மலைகளுக்கு அதாவது, இராஜ்யத்திற்குப் போவதுண்டு. மேலும், விசுவாசத்தில் அவர்கள் மகிமையின் கர்த்தரைத் தரிசித்து, அவருடைய மகிமையில் பங்கடைய வேண்டுமெனில், அவரோடு கூடப் பாடுபட வேண்டும் என்ற வார்த்தைகளைக் கேட்பதுண்டு. அவர்கள் மகிமையான விஷயங்களைக் குறித்த சிந்தனையின் உச்சக்கட்டத்திற்குப் போய்விட்டு, கீழே இறங்கி, தற்காலத்திலுள்ள (நிஜவாழ்க்கையின்) உண்மைகளை எதிர்க்கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது; அதாவது, எதிராளியானவன் இன்னும் உலகத்தை தன் வசத்திலேயே வைத்திருக்கின்றான் என்றும், அநேகர் அவனுக்கு அடிமைகளாகவும், அவனுடைய ஏமாற்றத்துக்கு ஆளானவர்களாகவும் காணப்படுகின்றார்கள் என்றும், அவனை வெளியேற்றுவதற்கு எந்தப் பூமிக்குரிய வல்லமைகளும் போதுமானதாக இல்லை என்றுமுள்ள நிஜவாழ்க்கையின் உண்மைகளை எதிர்க்கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது. ஒருவேளை போதகர் சபையோடு காணப்படும்போது, இறுதியில் அனைத்திலும் வெற்றிக் கிடைக்கும்.

சிலரில் அசுத்த ஆவி எப்போதும் குடிக்கொண்ட நிலையில் காணப்பட்டாலும், இச்சம்பவத்தில் வரும் சிறுவன் அவ்வப்போது, ஒரு தீய ஆவியினால் ஆட்கொள்ளப்படுகின்றான். தீய ஆவி இந்தப் சிறுவனுக்குள் வரும்போது, அவனை அலைக்கழித்து, நுரைத்தள்ளச் செய்து, அவனைக் கொல்லும்படி, சில சமயம் தீயிலும், தண்ணீரிலும் தள்ளிப் போட்டது. அவனுடைய பெற்றோர்கள், அவன் சுகம் பெறுவதற்கென, இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். ஆனால், இயேசு இல்லாத காரணத்தினால் அவர்கள், அங்கிருந்த மீதமுள்ள ஒன்பது அப்போஸ்தலர்களின் உதவியை நாடினார்கள். ஆனாலும், அப்போஸ்தலர்களின் முயற்சி பலனளிக்கவில்லை. தீய ஆவியை அவர்களால் துரத்தக் கூடாமற்போயிற்று.

துரத்த முடியாத சீஷர்கள் தடுமாறினார்கள். அதுவரையிலும் தங்களுடைய போதகரின் நாமத்தினால், தீய ஆவிகளைத் துரத்துவதில் முடியாமற்போனதில்லை. வேதபாரகர்களும் அவர்களுடன் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவும், மூன்று சீஷர்களும் மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறதைக் கண்டு, திரளான ஜனங்கள், இயேசுவுக்கு வந்தனஞ் சொல்லி, அவரைச் சூழ்ந்துக் கொண்டார்கள். இயேசு அப்போஸ்தலர்களுக்கு உதவும்படி, அவர்களுடைய பிரச்சனையை வினவினார். "அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டுவந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைத்தள்ளி, பல்லைக் கடித்து,

சோர்ந்துப்போகிறான். அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரிடத்தில் கேட்டேன்; அவர்களால் கூடாமற்போயிற்று என்றான். அவர் பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார். அவனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; அவன் தரையிலே விழுந்து, நுரைத்தள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயது முதற்கொண்டே உண்டாயிருக்கிறது; இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்றான்” (மாற்கு 9:17-22).

## “விசுவாசிக்கிறவனுக்கு”

"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்" (மாற்கு 9:23). தெய்வீக வல்லமையின் மேலுள்ள விசுவாசத்தைச் செயல்படுத்தும்/காட்டும் விஷயத்தில் கர்த்தர் எவ்வளவு அழுத்தம் கொடுக்கின்றார். "விசுவாசமில்லாமல், தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியமாகும்." விசுவாசத்தைச் செயல்படுத்தாதவர்களுக்கு, ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள முடியாது. அதாவது, விசுவாசத்தைச் செயல்படுத்துகிறவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதத்தை, விசுவாசிக்காதவர்களால் பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய விசுவாசத்தை எந்தளவுக்குச் செயல்படுத்துகின்றோமோ, அந்தளவுக்கு ஆசீர்வாதங்கள் பெருகுகின்றது. இவ்விதமாக, இந்தக் குணலட்சணங்களுக்கு உயர் மதிப்பைக்கொடுத்து, தம்முடைய தயவைப் பெற்றுக்கொள்ள இது அவசியமானது என்று கர்த்தர் காட்டுகின்றார்.

தற்போது விசுவாசத்தைச் செயல்படுத்தாத ஜனங்கள், ஒருபோதும், எவ்வித ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. மாறாக, இவர்களுக்கும் சில மகா மேன்மையான வாக்குத்தத்தங்களை அருளியுள்ளார். இத்தகையவர்களுக்கு மேசியாவின் இராஜ்யத்தில் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் பாதை மிக எளிமையாகக் காணப்படுவதால், இவர்கள் அனைவரும், அதில் பிரவேசித்துப் பலனை அதாவது, தற்காலத்திலேயே விசுவாசமும், கீழ்ப்படிதலும் காட்டுகிறவர்களைக் காட்டிலும் குறைவான பலனை அடைவார்கள்.

இதற்கான காரணம் வெளிப்பட்டுள்ளது. இயேசுவுடன் உடன்சுதந்தரவாளிகளாக இருப்பதற்கும், அவருடைய மகிமையான மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடைவதற்குமென, உண்மையும், கீழ்ப்படிதலுமுள்ள ஒரு விஷேசித்த வகுப்பாரைத் தேவன் இப்பொழுது தேடிக் கொண்டிருக்கின்றார். உலகம் முழுவதும் தம்முடைய ஆசீர்வாதத்தைப் பரப்புவதற்கு, தேவன் இக்காலத்தில் ஒரு வகுப்பாரைத் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கின்றார். மேலும், தம் மீது முழுமையான விசுவாசம் காட்டக் கூடியவர்களை மாத்திரம், இவ்வகுப்பாரின் அங்கங்களாகத் தெரிந்துக்கொள்ள தேவன் விரும்புகின்றார். "உன்னுடைய விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது" எனும் விதமே, சபையினிடத்தில் தேவன் கையாளுகிறவிதமாக உள்ளது.

இந்த அற்புதத்திலும் சரி, மற்ற அற்புதங்களிலும் சரி, சுகம் கொடுப்பதற்கு, கர்த்தர் விசுவாசத்தையே எதிர்ப்பார்த்தார். இவ்விதமாகத் தமக்கு வரவிருக்கிற மகிமையையும், தமது இராஜ்யத்திற்குரிய வல்லமையையும், வெளிப்படுத்தினார். இராஜ்யத்தின் காலகட்டத்தில், சாத்தானையும் மற்றும் பாவத்தின் ஒவ்வொரு வல்லமையையும் வெளியேற்றுவதற்கும், தங்களுடைய மாம்சத்தில் சுகமாக்குதலை அனுபவிக்கிறதற்கும் ஏதுவாக, தங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்த விரும்புகிற யாவருக்கும் உதவி கொடுக்கப்படும் மற்றும் தெய்வீக வல்லமை செயல்படுத்தப்படும்.

இயேசுவின் வார்த்தைகளிலிருந்து அந்த ஏழை தகப்பன், பிரச்சனை தன்னிடத்தில் இருக்கின்றது என்றும், தான் விசுவாசம் காட்டவில்லையெனில், தன்னுடைய குமாரன் சுகம்பெற முடியாது என்றும் உணர்ந்துக் கொண்டு, "உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று

கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்” (மாற்கு 9:24). அவருடைய விசுவாசத்துக்குரிய பலனைப் பெற்றுக்கொண்டார். அந்தத் தீய ஆவி, அவனிடத்திலிருந்து வெளியேறவும், அவனிடத்தில் இனி ஒருபோதும் பிரவேசிக்கக் கூடாது என்றும் இயேசு கட்டளையிட்டார். இதுவே சுகம் பெற்றதற்கான விசேஷமான அறிகுறியாகும். அந்தத் தீய ஆவி, அவனைவிட்டு அநேகந்தரம் வெளியே போனாலும், மீண்டும் அவனுக்குள் திரும்பி வந்தது. அவனை விட்டு வெளியேறவும், மீண்டும் ஒருபோதும் வரக்கூடாது என்பதே கர்த்தருடைய கட்டளையாக இருந்தது.

தீய ஆவி வெளியேறும்போது, அது அவனை அழ வைப்பதற்கும், அவனுக்கு வலி முதலியவற்றை ஏற்படுத்துவதற்கும் போதகர் ஏன் அனுமதித்தார் என்று யோசிக்கலாம். அதை வெளியேற்றுவதற்கே கர்த்தருக்கு வல்லமை இருக்குமாயின், அது வெளியேறும் விதத்தை, கட்டுப்படுத்தும் வல்லமையும் அவரிடத்தில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்தத் தீய ஆவியானது எவ்வளவு வன்மமும், தீமையும் கொண்டது என்று விவரித்துக் காட்டுவதற்கு, அது வெளியேறும் விதத்தைத் தெரிந்துக்கொள்வதற்கு இயேசு அனுமதித்தார் என்று நாம் அனுமானிக்கின்றோம்.

## “அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொன்னார்கள்”

சிறுவன் செத்த நிலையிலிருப்பதுபோன்று காணப்பட்டான். இயேசு, அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கிவிட்டார். எதிராளியானவனும், அவனுடைய வல்லமையும் உலகத்திலிருந்து துரத்தப்படுவதோடல்லாமல், உலகமானது பாவம் மற்றும் மரணத்திலிருந்து தூக்கி எடுக்கப்படுவதற்கு, தெய்வீக வல்லமையின் கரங்கூட அவசியப்படுகின்றது என்ற பாடம் நமக்கு இங்குள்ளது. வேத வாக்கியங்களின் அடிப்படையில் நாம் பார்க்கும்போது, சாத்தான் கட்டப்படும் காலத்திற்கும், மனுகுலத்தின் மீதான அனைத்துத் தீமையின் ஆதிக்கங்களும் எடுத்து மாற்றப்படுவதற்குமான காலம் சமீபித்துள்ளது. வேத வாக்கியங்களின் அடிப்படையில் நாம் பார்க்கையில், இந்தச் சாத்தான் கட்டப்படுங்காலம், மகா உபத்திரவக் காலத்தில் அதாவது, ஒரு ஜாதியாரும் பார்த்திராத உபத்திரவக் காலத்தில் நிறைவடையும். மேலும், மனுக்குலம் அப்பொழுது செத்த நிலையில் விடப்பட்டிருக்கும். மனுஷருடைய பெருமை, நம்பிக்கை, இலட்சியங்கள், அந்தப் பயங்கரமான உபத்திரவக் காலத்தில் மறைந்துவிடும். ஆனால், அப்போது அவர்களைத் தூக்கி விடும்படிக்கு, போதகர் தமது இராஜ்யத்தில் காணப்படுவார்.

மேசியாவின் இராஜ்யமானது எதிராளியானவனைக் கட்டி, அவன் மீண்டும் மனுக்குலத்திற்குள் பிரவேசியாதே என்று கட்டளையிடுவதோடல்லாமல், விழுந்துபோனவர்களை ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வீக நியமங்களுக்கு ஒத்த நிலையில் திரும்பக் கொண்டு வரத்தக்கதாக படிப்படியாக உயர்த்துவதற்கு ஏதுவாகவும், இராஜ்யத்தின் வல்லமையானது செயல்படும்.

சீஷர்கள் தங்களால் ஏன் அந்தத் தீய ஆவியை, வெளியேற்ற முடியாமற் போயிற்று என்று இயேசுவினிடத்தில் கேட்டார்கள். இதைப்போலவே, அநேக தேவனுடைய ஜனங்கள் அநேகந்தரம் தங்களிடத்திலேயே சில கேள்விகள் கேட்டிருக்கின்றார்கள். அதாவது, சாத்தானையும், பாவத்தையும், அதன் ஆளுகையையும் எதிர்க்கிற விஷயத்தில், ஏன் எங்களால் இன்னும் அதிகமாகச் செய்ய முடியவில்லை என்று கேட்கலாம். இயேசு அன்று அவர்களுக்குக் கூறிய பதில், நம் கேள்விகளுக்கும் பதிலாக அமைகின்றது. அதாவது, “இவ்வகை பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது” என்றார் இயேசு (வசனம் - 29). பாவம் மற்றும் சாத்தானைத் தாங்கள் எதிர்த்துப் போராடுகிற விஷயத்திலும், மற்றவர்களைப் பாவத்தின் வல்லமையினின்று விடுவிக்க உதவுகிற விஷயத்திலும், தேவனுடைய ஜனங்கள் அதிகம் செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை. எப்படியெனில், நாம் ஒருவேளை எப்போதும் முழுமையான விசுவாசத்தைச் செயல்படுத்தினவர்களாகவும், மாம்சத்தில் குறைவாகவும், ஆவியில் அதிகமாகவும் தொடர்ந்து ஜீவிக்கிறவர்களாகவும் இருப்போமானால், நம்மால் அதிக விஷயங்களை நிறைவேற்ற முடியும். அதாவது, உபவாசத்தில் அல்லது சுயத்தை வெறுத்தல் மற்றும் தேவனிடத்தில் ஜெபம் அல்லது ஐக்கியம் கொள்வதினால் ஆகும். விசுவாசிக்கிறவர்களுக்கு, தேவன் உண்மையுள்ளவர்களுக்கென்று வாக்குத்தத்தம்

பண்ணியுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும் கிடைக்கும். ஆனால், நமக்கு ஒரு நிபந்தனையும் உள்ளது. அதென்னவெனில், "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்பதேயாகும்.

---

**R2660**

# "இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள்"
## மத்தேயு 18:1-14

"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது." - மத்தேயு 19:14

நமது இந்தப் பாடத்திற்காகத் தெரிந்தெடுத்துள்ள ஆதார வசனமானது மிகவும் பொருத்தமற்றதாகவும், தவறான கருத்தைக் கொடுக்கிறதுபோன்றும் தோன்றும். இது குழந்தைகள் பற்றியும், இவர்களுக்காகக் கர்த்தர் கொண்டுள்ள அனுதாபம் மற்றும் அன்பு பற்றியும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. உண்மையில் மிகப்பெரிய நிலையில் காணப்படும் எந்த ஒரு மனுஷனோ (அ) ஸ்திரீயோ தங்களுடைய குழந்தைப்பருவத்தை அன்புடன்கூடிய அனுதாபத்துடனும், அக்கறையுடனும் பார்க்கமாட்டார்கள் என்று நாம் எண்ணமுடியாது; அந்தப் பருவம் பிரதிபலிக்கிற வாழ்க்கையின் வெற்றுத்தாள் போன்ற பக்கங்களைப் பார்க்கும்போது, இனிவரும் வாழ்க்கையில் எதிர்க்கொள்ளப்போகிற கஷ்டங்கள் குறித்தும், சோதனைகள் குறித்தும், ஏமாற்றங்கள் குறித்துமான உணர்வுகளுக்கு விழித்தெழுவார்கள்; மேலும் வாழ்க்கையின் அனுபவங்கள், போராட்டங்கள் மூலம் அடையப்போகும் வெற்றிகள் மற்றும் குணலட்சணங்கள் குறித்துமான நம்பிக்கையினாலும், ஆர்வத்தினாலும் விழித்தெழுவார்கள். இயேசு குழந்தைகளை நேசித்தார் என்பதிலும், வஞ்சனையற்றதும், தூய்மையானதுமாய்க் காணப்படும் அனைத்தையும் அவர் நேசித்தார் என்பதிலும் எந்தச் சந்தேகமும் இல்லை; மேலும், நம்முடைய ஆதார வசனமானது இக்கருத்தை மெய்யாக்கவும் செய்கின்றது.

தேவனுடைய இராஜ்யமானது, அறிவும், அனுபவங்களும் (அ) குணலட்சணத்தின் வளர்ச்சியில்லாமல் மரித்துப்போன குழந்தைகளைக் கொஞ்சமாகவோ (அ) முழுமையாகவோ உள்ளடக்கினதல்ல. இப்படியான குழந்தைகளைத் தேவனுடைய இராஜ்யத்தில் உள்ளடக்குவது தேவனுடைய நோக்கமாக இருந்திருக்குமாயின், 1,44,000 பேர் அடங்கிய "சிறுமந்தையினரை" நிறைவு பண்ணுவதற்குக் கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருந்திருக்காது; அதோடு கூட ஒருவர் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கென, நல்லதொரு போராட்டம் போராடப்பட வேண்டுமென்றும், ஜெயம் அடையவேண்டுமென்றும், "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்வதின்" மூலமாக ஆவியின் கனிகளை அடைய வேண்டுமென்றும், மாம்சத்தின் உபத்திரவங்கள் ஊடே, விரும்பி, மகிழ்ச்சியுடன் அனைத்திலும் கடந்துச் செல்ல வேண்டுமென்றும் கூறவும் பட்டிருக்காது. இந்தச் சுவிசேஷ யுக அழைப்பில் குழந்தைகளுக்குப் பங்கில்லை; எனினும் சபை நிறைவடைந்து, அது தேவனுடைய இராஜ்யமாக மகிமையடைந்த பின் உடனடியாகத் தொடரும், உலகத்திற்கான மாபெரும் ஆசீர்வாதத்தில், குழந்தைகள் நிச்சயமாகப் பங்கடைவார்கள்.

இப்பாடம் தொடர்பான விஷயத்தில் இவ்வசனம், கொஞ்சம் தவறான எண்ணத்தைக் கொடுக்கின்றதாக இருக்கும். காரணம், இவ்வசனத்தின் பின்பகுதியில் இடம்பெறும் சிறுபிள்ளைகள் உருவகமான விதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதே ஒழிய சொல்லர்த்தமாக அல்ல; கர்த்தர் தாழ்மையும், நம்பத்தக்கவர்களாய்க் காணப்படும் தம்முடைய சீஷர்களையே தேவனுடைய சிறுபிள்ளைகளாக, அதாவது பூமிக்குரிய பெற்றோர்கள் தங்களது சிறு பிள்ளைகள் மீது இரக்கங்கொண்டு, பேணுவது போன்று தேவன் இரக்கங்கொண்டு பேணும் தேவனுடைய பிள்ளைகளாக இங்குக் குறிப்பிடுகின்றார். இப்படியாக, இவ்வசனத்தில் மாத்திரமாகக் குறிப்பிடப்படாமல், புதிதாயுள்ள கிறிஸ்தவனும், கொஞ்சமே வளர்ச்சியடைந்துள்ள கிறிஸ்தவனும் குழந்தைகளுக்கும், பிள்ளைகளுக்கும்

வேதவாக்கியங்களில் ஒப்பிடப்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். "சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்;" "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 கொரி. 14:20; 1 பேதுரு 2:3).

மறுரூபமான மலையிலிருந்து இறங்கி, கப்பர்நகூமுக்குப் பிரயாணம் பண்ணின பிற்பாடே இப்பாடத்தில் இடம்பெறும் சொற்பொழிவு நிகழ்ந்ததாகத் தோன்றுகின்றது. மாற்கு மற்றும் லூக்கா அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப்பார்க்கையில், போகிற வழியில் அப்போஸ்தலர்கள் மத்தியில், யார் பெரியவர் என்றும், கர்த்தர் வாக்களித்ததும், தாங்கள் பங்கடைவார்களென அப்போஸ்தலர்களால் நம்பிக்கை வைக்கப்பட்டதுமான இராஜ்யத்தில் யார் பெரியவராக (அ) மிகவும் கனத்திற்குரியவராக இருப்பார் என்றும் விவாதம் எழும்பியதை நம்மால் கிரகிக்க முடிகின்றது. அப்போஸ்தலர்கள் மத்தியிலேயே கர்த்தரோடுக் கூட மலையில் காணப்படுவதற்கு மூன்று பேர் மாத்திரம் விசேஷமாகத் தயவு பெற்றிருந்த காரியமே, அநேகமாக இந்த விவாதத்தைத் தூண்டியிருக்க வேண்டும். இவர்கள் மத்தியில் நடந்திட்ட இந்த விவாதம், இயேசுவின் காதுகளில் விழக்கூடாது என்று அடக்கமான தொனியில் அநேகமாகப் பேசினாலும், அனைவரிடமிருந்து பல்வேறு வாக்குவாதம் எழும்பினபோது, தொனி மிகுதியாயிற்று. கொஞ்சம் நேரத்திற்குப் பிற்பாடு வழியில் தமக்குப் பின்னாக வந்து கொண்டிருக்கும்போது, எதைக்குறித்து விவாதித்தார்களென அப்போஸ்தலர்களிடம் இயேசு கேட்டார். லூக்காவின் பதிவைப் பார்க்கையில், அப்போஸ்தலர்கள் பதில் கொடுக்காமல் இருந்தார்கள் என்றும், அவருடைய கேள்விக்கு விடையளிக்கவும், தங்களது சண்டையைச் சொல்லவும் விரும்பவுமில்லை என்றும் பார்க்கின்றோம்; அவர்கள் வெட்கப்பட்டார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும், கர்த்தரிடமிருந்து விஷயத்தை மறைக்க முடியாது என்று அவர்கள் உணர்ந்ததினாலும், அதேசமயம் இவ்விஷயத்தில் கர்த்தருடைய முடிவைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களில் சிலர் விரும்பியதினாலும், தங்களுக்காக இப்பிரச்சனையை முடித்துத் தரும்படிக்கு அவரிடம் கேட்டுக்கொண்டார்கள்.

இவ்விஷயம் தொடர்பாக, அவசியமாயிருந்த படிப்பினையைத் தம்முடைய உண்மையுள்ளவர்களுக்குக் கொடுக்கும்படியாக இதுபோன்றதான ஒரு வாய்ப்பை, நமது கர்த்தர் விரும்பியவராக இருந்தார். மேலும், தம்முடைய வழக்கத்தின்படி அதை விவரித்தும் கொடுத்தார். ஒரு சிறுபிள்ளையை அழைத்து, அதை நடுவில் உட்காரச்செய்து, இப்படியாக, குழந்தைப்போல் ஆகுகின்றவர்கள் மாத்திரமே, இராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்ற பிரமிக்கச் செய்யும் விஷயத்தைக் கூறினார். சீஷர்கள் சுபாவத்தின்படியான மனுஷர்களாகவும், பெரும்பான்மையாகக் கல்லாதவர்களாகவும் காணப்பட்டபடியால், இவர்கள் குழந்தை போன்ற எளிமை தன்மைக்குத் தொலைவாகக் காணப்பட்டு, மனதளவில் கௌரவமானவர்களாகக் காணப்படுவதற்கு நாடினவர்களாக இருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை; இப்படியாக கௌரவமான மனதைக் கொண்டிருப்பது என்பது, தேவனுடைய இராஜ்யத்தில் சீக்கிரத்தில் இராஜரிக கனத்தை அடைவதற்கு எதிர்ப்பார்த்துக் காணப்படுபவர்களுக்குத் தகுதியானது, எனச் சுபாவப்படியான மனுஷனுக்குத் தோன்றும். கௌரவம், ஞானம், மதிநுட்பமுடையவர்களுக்குப் பதிலாக, எளிமையும், சாந்தத்தையும், குழந்தை போன்ற தன்மையும், போதிக்கப்படத்தக்க தன்மையும் உடையவர்களையே கர்த்தர் நாடுகின்றார் என்பதை அப்போஸ்தலர்கள் அறிந்தபோது, இது எத்துணை அதிர்ச்சியை அவர்களுக்குக் கொடுத்திருக்கும்.

எனினும் அப்போஸ்தலர்கள் விருத்திச் செய்துக்கொண்டிருந்த ஆவியை/சிந்தையைக் கண்டிக்கும் வண்ணமாக மாத்திரமே, நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படாமல் இவ்விஷயத்தில் மாற்றம் வேண்டும் எனும் அறிவுரையைக் கொடுக்கும் படிப்பினையாகவுங்கூட இருந்தது. அதாவது, அவருடைய இராஜ்யத்தில் பங்கடைய விரும்புகின்றவர்களின் சார்பில், இத்தகைய மாற்றம் வேண்டுமானால் செய்வோம் என்றில்லாமல், மாறாக செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது. மத்தேயு 18:3-ஆம் வசனத்தின் KJV மொழிப்பெயர்ப்பாகிய, "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளை" என்பதற்குப்பதிலாக Revised மொழியாக்கத்தின்படி, "நீங்கள் மாறி/மறுபக்கமாகத் திரும்பி, பிள்ளைகளை" என்று நாம் வாசிக்கும்போது, தம்முடைய பின்னடியார்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென நமது கர்த்தர் விரும்பின உண்மையான கருத்தை நாம் அடைய முடியும்;

"மனந்திரும்பி (Convert)" எனும் வார்த்தை சரிவரப் பயன்படுத்தப்படாததால், அநேகர் இதன் சரியான அர்த்தத்தைப் புரிந்துக்கொள்ள தவறுகின்றனர். சீஷர்கள் இவ்விஷயத்தின் மீது தங்களது கவனத்தைத் திருப்பி, படித்து, மறுதிசையில் படிப்பினைகளைச் செயல்படுத்த வேண்டும். அதாவது, சாந்தம், தாழ்மை, குழந்தை தன்மைப்பற்றின படிப்பினைகளைச் செயல்படுத்த வேண்டும்; சாந்தத்திலும், இருதயத்தின் எளிமையிலும் யார் அதிகமாக வளர்ச்சியடைகின்றார்களோ, அவர்களே இராஜ்யத்தில் பெரியவராய் இருப்பார்கள் என்ற நமது கர்த்தருடைய அறிக்கையானது, எளிமைக்காகவும், சாந்தத்திற்காகவும் நாடுபவர்களுக்கு மாத்திரமே இராஜ்யத்தில் ஒரு பங்கு அருளப்படும் என்பதையும், சுயத்திற்காக நாடுபவர்களுக்கும், தற்பெருமையடித்துக் கொள்பவர்களுக்கும் இராஜ்யத்தில் எவ்வித பங்கும் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

இப்படியாக தம்முடைய சீஷர்கள் மத்தியில் தாழ்மை மனதை உடையவர்களுக்கும், கவனத்தை ஈர்க்கும் தன்மை இல்லாதவர்களுக்கும், தாம் இராஜ்யத்தின் உன்னதமான கனங்களையும், மதிப்புகளையும் அருளுவதாக இயேசு விவரித்தப் பிற்பாடு, தம்முடைய பின்னடியார்களாகிய இப்படிப்பட்ட "சிறியவர்கள்" தொடர்பான ஒரு பொதுவான பாடத்தைக் குறித்துப் பேச, தொடர்ந்து முற்பட்டார்; அதாவது தம்முடைய நாமத்தில் இத்தகைய எளிமையான சீஷர்களை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், தம்மையே ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுவார்கள் என்று கூறினார்; இன்னுமாக இந்தச் சிறியவர்களில் அல்லது தாழ்மையுள்ளவர்களில் ஒருவரை இடறச் செய்கிறவர் அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்றவர் இப்படியாக மிகவும் கடுமையான குற்றத்தைப் புரிவதால், ஜீவனை இழந்துப்போவது நலமாயிருக்கும் எனவும், ஏந்திரக்கல் கழுத்தில் கட்டப்பட்டு, கடலுக்குள் தள்ளப்பட்டு இப்படியாக தங்களது ஜீவனை இரட்சித்துக்கொள்வதற்கான சகல நம்பிக்கைகளையும் இழந்து, அழிக்கப்படுவது நலமாயிருக்கும் எனவும், இப்படியாகக் காத்தருடைய "சிறியவர்களில்" சீஷர்களிலேயே தாழ்மையாய் இருப்பவர்களில், குழந்தை போன்றும், சாந்தத்துடனும், கர்த்தருடைய வழியைப் பின்பற்றுகிறவர்களில் ஒருவருக்கு, ஒருவன் பாதிப்பை ஏற்படுத்துவதைப் பார்க்கிலும், அவன் மீது இந்த மாபெரும் பேராபத்து வருவது நலமாயிருக்கும் எனவும் இயேசு கூறினார்.

இப்படியாகத் தாழ்மைக்குக் கர்த்தர் எவ்வளவு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றாரென நாம் காணும்போது, இது உண்மையான சீஷர்கள் அனைவரையும், இந்தப் பண்பை அன்றாடம் விருத்திச் செய்திட உற்சாகப்படுத்திட வேண்டும். அதாவது, இவர்கள் அதிகமாக மாபெரும் இராஜாவின் பார்வையில் நேர்மையுள்ளவர்களாகவும், கபடற்றவர்களாகவும், உண்மையில் தாழ்மையுள்ளவர்களாகவும் வளரத்தக்கதாகவும், வரவிருக்கும் இராஜ்யத்திற்குரிய உன்னதமான உயர்த்தப்படுதல்களுக்கு அதிகமதிகமாகத் தகுதியடைத்தக்கதாகவும், இப்பண்பை அன்றாடம் விருத்திச் செய்திட, உற்சாகப்படுத்திட வேண்டும். இந்தச் சாந்தமில்லாமல் எவரும் இந்த இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்பதைக் காண்கையில், கர்த்தருடைய ஜனங்கள் தாழ்மையாய் இருக்கும்படிக்கு, வேதவாக்கியங்கள் எங்கும் புத்திமதிக் கூறுவதைக் குறித்தும் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேதுரு 5:6). இப்படியாக, வேதவாக்கியங்களின் புத்திமதிகள் அனைத்தும் காணப்பட்டாலுங்கூட, கர்த்தருடைய ஜனங்கள் ஆகுகிறவர்களுக்கு, அவருடைய வழியில் ஓடுவதற்கென ஈடுபட்டுள்ளவர்களுக்கு, அவர்களுடைய மாம்ச சுபாவத்தின் தவறான திசையை நோக்கும் தன்மை காரணமாக, மற்றக் காரியங்களைக் காட்டிலும், இத்தாழ்மை தொடர்பான விஷயத்திலேயே அதிகமான சிரமத்தையும், அதிகமாகப் போராட வேண்டிய நிலைமையையும் கொண்டிருக்கின்றனர். தங்களைத் தாங்களே சிறியவர்கள் என்று எண்ணுகின்ற சிலர் தங்களைக்குறித்துச் சகோதரர்கள் மிக உயர்வாக மதிக்க வேண்டுமென மிகவும் ஆவலோடு காணப்படுகின்றனர். கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அனைவரும், அதிலும் விசேஷமாக வழி நடத்துகின்றவர்களாய் இருப்பவர்களும், சபையை வழி நடத்துவதற்கும், சபைக்கு உதவியாக இருப்பதற்குமென இயல்பாகவே சில பண்புகளைப் பெற்றிருப்பவர்களும், இந்தப் பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு, மற்றும் இதிலிருந்து எப்படித் தாங்கள் கர்த்தருடைய தயவை அதிகமாகப் பெற்றுக்கொள்வதற்கும், அவருடைய இந்த நியமத்திற்கு ஏற்றாற்போல் காணப்படுவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும்.

கர்த்தருக்கு உண்மையாய்ச் சொந்தமானவர்களின் பாதையில் இப்படியாக அநேக இடறலின் கற்கள் காணப்படும் என்றும், அதுவும் அவர்கள் “சிறியவர்களாக,” தாழ்மையுள்ளவர்களாக இருப்பதற்கு ஏற்ப காணப்படும் என்றும் கர்த்தர் மிகவும் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இந்த இடர்பாடுகள், இந்தப் பரீட்சைகள், இந்த இடறல்கள் வருவது அவசியம் என்றும் கர்த்தர் தெரிவித்துள்ளார். தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை முழுவதும் முற்றிலுமாகப் பரீட்சிக்கப்படுவதும், குணலட்சணத்தில் வளர்ச்சியடைவதும், இப்படியாகப் பலவான்களாகவும், தேவனுடைய நேசக்குமாரனுக்கு ஒத்தச் சாயலுமாகி, சத்தியத்திற்காகப் பாடுபடுவதற்கான விருப்பம் கொள்ளத்தக்கவர்களாகுவதும், பரலோகத்தில் இருக்கும் பிதாவைத் தாங்கள் பிரியப்படுத்தத்தக்கதாகப் பூமிக்குரிய காரியங்களை மகிழ்ச்சியுடனும், சந்தோஷத்துடனும் இழந்துவிடுவதும், இப்படியாகத் தாழ்மையையும், கீழ்ப்படிதலையும் வளர்த்திக் கொண்டு, இயேசுவின் அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கென மாத்திரம் பிதா வாக்களித்துள்ள, உயர்த்தப்படுதலுக்கு இவர்கள் போகப்போக ஆயத்தப்படுவதும் தெய்வீகச் சித்தமாக இருப்பதினால், இந்த இடறல்கள், இந்தப் பரீட்சைகள் அவசியமாய் உள்ளது.

பாதையில் இடறலின் கற்கள் அவசியமாய் இருந்தாலும், இப்படியாக இடறலின் கற்கள் வாயிலாகத்தான் சபையாகிய, கிறிஸ்துவின் சரீரம் பரீட்சிக்கப்படுவதாக இருந்தாலும், இதிநிமித்தம் பரிசுத்தவான்களுடைய பாதங்களுக்கு முன்பாக இந்த இடறலின் கற்களை வைப்பதற்கென, எதிராளியானவனின் வேலையாட்களாக (agents) தங்களை எதிராளியானவனுடைய செல்வாக்கிற்கு இரவல் கொடுத்துவிட்டவர்களை, (சபைக்கு அவசியமாய் இருந்த) இடறலின் கற்களைத் தூக்கிப்போட்டத்தற்கான (குற்ற) பொறுப்பிலிருந்து நீங்கலாகுவதில்லை. இவர்களுக்கான தண்டனையின் விதம் என்பதைத் துல்லியமாகக் குறிப்பிடாத விதத்தில், இத்தகைய பொல்லாப்புச் செய்கைக்காரர்கள், “பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்” என்று கூறினவரிடமிருந்து பலன் பெற்றுக்கொள்வார்கள் என்று நமது கர்த்தருடைய வார்த்தைகள் காணப்படுகின்றது.

ஆண்டவர் தம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியை நிறைவேற்றுவதிலிருந்து, அவரை மனம் மாற்ற பேதுரு முற்பட்டதின் வாயிலாக, பேதுரு தன்னையும் அறியாமல் இடறலின் கல்லாக இருந்ததுபோல, இன்றும் அநேகர் கர்த்தருடைய சிறியவர்களுக்கு முன்பாக, அவருடைய உண்மையுள்ள சிறுமந்தைக்கு முன்பாக இடறலின் கற்களைப் போட்டுக் கொண்டிருக்கின்றனர். கர்த்தருடைய “சிறியவர்களுக்கு” முன்பாக இடறலின் கற்களை வைப்பவர்கள், இன்றும் “சிறியவர்களை” முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்தும் பாதையாகிய இடுக்கமான வழியிலிருந்து, வழிவிலகச் செய்வதற்கே நாடுகின்றனர். அதாவது இடுக்கமான வழியைக் காட்டிலும், சுலபமும் மற்றும் தாழ்த்த வேண்டிய அவசியம் இல்லாத ஒரு வழியானது, இவ்வுலகப் போக்கிற்கு மிகவும் ஞானமுள்ளதாகவும், மிகவும் நாகரிகமானதாகவும், மிகவும் தந்திரமானதாகவும் இருக்கின்றது என்றும், அது இடுக்கமான வழியைப்போன்று நல்லதாக அல்லது இடுக்கமான வழியைக்காட்டிலும் பிரம்மாண்டமானதாக இருக்கின்றது என்றும் அவர்களை வற்புறுத்த நாடுகின்றனர். இப்படியான பரீட்சைகள் அவசியமே. மேலும், இரட்சகரின் அடிச்சுவடுகளில் அதிகமாக நடக்காதவர்கள் அனைவரும், வெளியாக்கப்படவும் அவசியமாய் இருக்கின்றது. காரணம், தேவன் சிறுமந்தையினரை மாத்திரமே அதாவது, அவருடைய நேசக்குமாரனுடைய சாயலை உடையவர்களை மாத்திரமே தேடுகின்றார். மந்தையிலுள்ள எவரையும் திசைத் திருப்புகின்றவர்கள் மீது, அதாவது, எந்த விதத்திலாகிலும் கர்த்தருடைய ஜனங்களின் பாதையில் இடறலின் கற்களாக இருக்கின்றவர்கள், இடறுவதற்கான காரணிகளாக இருக்கின்றவர்கள் மீது, மாபெரும் பொறுப்புள்ளது.

இப்படியாகப் பார்க்கும்போது, இடறல்கள் (அ) பரீட்சைகள் மற்றும் சோதனைகள் அனைவருக்கும் வர வேண்டியதேயாகும். இன்னுமாக இந்தப் பரீட்சைகள் என்பது, நமது பாதங்கள் போன்று நமக்கு உதவியாகக் காணப்படுபவைகளை அல்லது நமது வலது கண் (அ) வலது கரம் போன்று நமக்கு அருமையான இலட்சியங்களை (அ) பழக்கங்களை (அ) சிலாக்கியங்களை (அ) இன்பங்களைப் பலிச் செலுத்துவதாக இருக்கின்றது. இன்னுமாக நாம் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமெனில் மேற்கூறியவைகள் ஜெயங்கொள்ளப்பட வேண்டும் என்று நமது கர்த்தர் வலியுறுத்துகின்றார். இதுவே இன்னொரு விதத்தில், “நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 14:22). இயேசுவை விசுவாசித்தாலேயே

இராஜ்யம் அருளப்படும் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பவர்கள், வேதவாக்கியங்கள் கூறாத தவறான கருத்தைக் கொண்டவர்களாய் இருக்கின்றனர். தேவன் அங்கீகரிக்கத்தக்கதாக, சுயத்தைப் பலிச் செலுத்தும் ஏதேனும் காரியங்களை நாம் செய்வதற்கு முன்னதாக, நாம் நீதிமானாக்கப்படுவதற்கு, விசுவாசம் அவசியமாய் உள்ளது; ஆனால், ஒருவர் விசுவாசம் வைப்பதில் மாத்திரம் நிறுத்திவிட்டு, கிரியைகள் இல்லாமல், சுயத்தைப் பலிச் செலுத்துதல் இல்லாமல் காணப்பட்டால், இவர் இராஜ்யம் தொடர்புடைய அனைத்து நம்பிக்கைகளையும், சிலாக்கியங்களையும் இழந்துவிடுபவர் ஆகிறார். இராஜ்யத்தை அடைவதற்கு நாம் "போராட வேண்டியுள்ளது." "நல்லதொரு போராட்டம் போராட வேண்டியுள்ளது." "நல்லப் போர்ச்சேவகனாய்த் தீங்கு அனுபவிக்க வேண்டியுள்ளது." பாவ இன்பங்களை மாத்திரமல்லாமல், கர்த்தருடைய ஊழியங்களுக்கான நம்முடைய முழு ஈடுபாட்டையும், அவரோடு மரிப்பதாகப் பண்ணியுள்ள நம்முடைய உடன்படிக்கையையும் நாம் நிறைவேற்றுவதை குறிக்கிடும் அனைத்தையும் தறித்துப்போட விருப்பத்துடன் காணப்பட வேண்டியுள்ளது; "தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் நம்மில் உண்டாக்கும் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் மற்றும் தேவையான பொழுதெல்லாம் காணப்படும் தெய்வீகக் கிருபை ஆகியவற்றின் உதவியால் பயத்தோடும், நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இராஜ்யத்தில் கை (அ) கண் (அ) பாதம் இல்லாமல் காணப்படுவார்கள் என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது; மாறாக, இடறலாய் இருக்கும் கண் என்பது, நம்முடைய சுபாவ ஆசைகளுக்கு அழகானதாகவும், கவர்ச்சியானதாகவும், பூமிக்குரிய காரியங்களினிடத்தில் நம்மை ஈர்க்கின்ற விதமாகவும் நம்மைச் சூழ்ந்து வளைத்துக்கொள்ளும் விஷயங்களைக் குறிக்கின்றது; இடறலாய் இருக்கும் கரம் என்பது, உன்னதமான நம்முடைய ஆவிக்குரிய நலன்களுக்கு எதிராக செய்யும் காரியங்களைக் குறிக்கின்றது; இடறலாய் இருக்கும் கால் என்பது, சுயத்தைத் திருப்திப்படுத்தும் பாவத்தின் விலக்கப்பட்டப் பாதைகளில் செல்வதைக் குறிக்கின்றது; ஆகவே, இவைகளைத் தறித்துப்போடுவது என்பது, நாம் அனைத்துப் பூமிக்குரியவைகளை அனுபவித்துக் கொண்டு, நமது அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்குத் தவறிப்போவதைப் பார்க்கிலும், குறிப்பிட்ட பூமிக்குரிய சிலாக்கியங்களையும், இன்பங்களையும் அனுபவிக்காமல் இருந்து, நித்தியத்திற்குரிய ஜீவனுக்கும், இராஜ்யத்தின் பங்கிற்குள்ளும் பிரவேசிப்பது நலமாயிருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

"நித்திய அக்கினி" மற்றும் "நரகத்தின் அக்கினி" என இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள் அடையாளமான வார்த்தைகளேயாகும்; மேலும், இது துணிகரமான பாவிகளுடைய பாவத்தின் சம்பளமாகிய அழிவையே குறிக்கின்றது; அதாவது, "அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெசலோனிக்கேயர் 1:10). இவ்விடத்திலும் சரி, மற்ற வேதவாக்கியங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்டுள்ள அக்கினி என்பது சித்திரவதையைக் குறிக்காமல், அழிவையே குறிக்கின்றது என்பதை, **"நரகம் குறித்து வேதவாக்கியங்கள் கூறுவது என்ன?"** என்ற துண்டு பிரசுரத்தில் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இன்னுமாக, "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." அதாவது, தேவனுடைய இந்தத் தாழ்மையானவர்களை அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள் என்ற எச்சரிப்பை நமது கர்த்தர் கொடுக்கின்றார். உலகத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் இவர்கள் எளிமையானவர்கள் போலும், முக்கியத்துவம் அற்றவர்கள் போலும் தோன்றலாம். ஆனால், இவர்கள் தேவனுடைய தோழர்கள்; ஆம், இவர்கள் தேவனுடைய பிள்ளைகள்; இவர்களைத் தேவன் பராமரிக்கின்றார்; ஆகவே, இவர்களுக்குப் பாதகம் பண்ணுகின்றவர்கள், பரலோகத்திலுள்ள இவர்களுடைய பிதாவைப் பரியாசம் பண்ணி, எதிர்க்கின்றவர்களாய் இருப்பார்கள். இன்னுமாகத் தம்முடைய சிறியவர்களுக்கும், தம்முடைய உண்மையுள்ள மற்றும் தாழ்மையுள்ள சிறுமந்தையினர் ஒவ்வொருவருக்கும், பிதாவின் சந்நிதியில் எப்பொழுதும் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது என்றும் நமது கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பாதுகாக்கும்

தேவதூதர் காணப்படுகின்றார்; மேலும், இவர்களுடைய நலனுக்கடுத்த காரியங்களை மாபெரும் இராஜாவின் கவனத்தில் கொண்டுவரும் விஷயத்தில், எவ்விதமான தாமதமும் காணப்படாது என்று நாம் புரிந்துக்கொள்கின்றோம். கிறிஸ்துவின் சரீர அங்கத்திலுள்ள தாழ்மையானவர்கள், மோசமாக நடத்துவதற்கும் (அ) எவ்விதத்திலாகிலும் அலட்சியம் செய்தவதற்கும், இழிவாகக் கருதுவதற்கும் முற்படுகிறவர்களுக்கு, எத்தகைய ஒரு கருத்து இங்கு முன்வைக்கப்படுகின்றது! இந்தத் தாழ்மையுள்ளவர்கள் தெய்வீகப் பராமரிப்பிற்கும், கவனிப்பிற்கும் விசேஷமாக உரியவர்கள் என்றும், இவர்கள் கர்த்தருக்குச் சொந்தமானவர்களானபடியால் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் இவர்களுக்கும் நடக்கும் என்றுமுள்ள காரியம், இந்தத் தாழ்மையுள்ளவர்களுக்கும் எத்துணை படிப்பினையாக உள்ளது!

கடைசி நான்கு வசனங்கள் இப்பாடத்திற்குச் சம்பந்தப்பட்டவை அல்ல. மேலும், இது வேறொரு பாடத்தில் இடம்பெறுவதினால், இவ்வசனங்களுக்கு இப்பாடத்தில் விளக்கம் கொடுப்பதை நாம் தவிர்த்துவிடுகின்றோம்.

---

**R5134**

# “ஏழெழுபது தரம் மன்னித்தல்”
# மத்தேயு 18:15-35

“ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.”

- எபேசியர் 4:32

இன்றைய பாடமானது, ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனுக்கும் மிகவும் ஆசீர்வாதமானதாய்க் காணப்படும்; இன்னுமாக, இப்பாடமானது அவன் தெய்வீக எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்ப முழுமையாய்க் காணப்படுவானானால், அவனுக்கு நித்தியத்திற்குரிய ஜீவனையும் உறுதிப்படுத்துகின்றது. இப்பாடமானது மற்றவர்களுக்கும் நன்மை கொடுக்கிறதாக இருப்பினும், விசேஷமாக இது அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களுக்கு அதாவது, கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டிருக்கும் சபைக்கு அதாவது, கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு உரியதாகும்.

ஆண்டவருடைய பின்னடியார்களுக்குரிய அவரது சட்டம் பின்வருமாறு . . . ஒருவேளை ஒரு சகோதரன், உனக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால், அவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரத்தக்கதாக, ஓர் புரிந்துகொள்ளப்படுதலுக்குள் வருவதற்கென இவ்விஷயத்தோடு, அவனிடம் தனிமையில் சென்று முயற்சிக்க வேண்டும். ஆனால், இது போதுமானதாக இராமல், விஷயம் அலட்சியம் செய்ய முடியாதது என நீ கருதினால், காரியம் எதையும் விவரிக்காமல், உன்னோடு கூட இரண்டு நபர்களை அழைத்துக் கொண்டு, குற்றம் புரிந்தவரிடத்தில் செல்ல வேண்டும்; அதாவது, உனக்கும் அவனுக்கும் அறிவுரைக் கூறத்தக்கதாக, காரியத்தை அந்த இரண்டு நபர்களும் கேட்கத்தக்கதாக, முன்கூட்டியே அவர்களிடம் விஷயத்தைக் கூறாமல் அழைத்துச் செல்ல வேண்டும்.

இந்த இரண்டு நபர்களின் முடிவும், இவர்களின் அறிவுரையும் உன்னாலும், அவனாலும் பின்பற்றப்பட வேண்டும். ஒருவேளை இந்த இரண்டு நபர்களும் நீ தவறு செய்துள்ளதாகக் கூறினால், தவறு செய்துள்ளதை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவேளை நீ தவறு செய்யவில்லை என்று இந்த இரண்டு நபர்கள் கூறியும், உனக்குப் பாதகம் பண்ணினவன், இவர்களது ஆலோசனைக்குச் செவிசாய்க்க மறுத்துவிட்டு, உனக்குப் பாதகம் செய்வதில் தொடர்ந்துக் கொண்டிருந்தால், மேலும் இதனை சபைக்குத் தெரிவிக்குமளவு முக்கியமானதாகக் கருதினால், அதைத் தெரிவிக்கும் சுயாதீனத்தில் நீ காணப்படுகின்றாய். உங்கள் இருவர் மீதான சபையின் முடிவே இறுதியானதாகும். சபைக்குச் செவிசாய்க்க மறுப்பவர் வெளியாளாகக் கருதப்பட வேண்டும். அதுவும் இப்படிச் செய்வது அவனுக்குப் பாதகம் பண்ண வேண்டும் என்றில்லாமல் மாறாக, அவனது போக்கு மாற்றப்படுவது வரையிலும் சபையில் அவன் ஏதேனும் ஸ்தானங்களில்

நியமிக்கப்படுவதிலிருந்து அவன் விலக்கி வைக்கப்படுகின்றான்.தெய்வீக வழிநடத்தல் எவ்வளவு எளிமையாய் உள்ளது. இதனை பின்பற்றுகையில் எத்துணை ஆசீர்வாதம் கடந்து வரும்!

## “ஏழெழுபது தரம் மன்னித்தல்”

ஒரு சகோதரன் எத்தனைமுறை மீறுதல் பண்ணி மன்னிப்பைக் கேட்கலாம் என்றும், அவன் எத்தனைமுறை மன்னிக்கப்படலாம் என்றும், ஏழுமுறை மன்னித்தல் வரையறையாக வைத்துக்கொள்ளலாமா என்றுமுள்ள கேள்வியைப் பரிசுத்தவானாகிய பேதுரு கேட்டார். எவ்விதமான வரையறையும் இல்லை என்றும், தவறை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்கும் எந்தச் சகோதரனும் மன்னிக்கப்பட வேண்டும் என்றும், ஒருவேளை 490 முறை மன்னிப்பு மீண்டும் மீண்டுமாகக் கேட்கப்பட்டாலும், மன்னிக்கப்பட வேண்டும் என்றும் ஆண்டவர் கூறினார். வேறு எதுவும் வழியில்லை; மன்னிப்புக் கேட்கப்பட்டால், அது வழங்கப்படுவது கடமையாகும். ஆண்டவருடைய இந்த அறிவுரையைப் பின்பற்றுவதினால் வரும் பின்விளைவுகளைக்குறித்து நாம் மிகவும் பயந்தவர்களாகக் காணப்படக்கூடாது; அவருடைய ஞானம் நம்மைத் தவறாய் வழிநடத்தவில்லை என்ற உறுதியுடன் பொறுப்பை நாம் அவர்மேல் வைத்துவிட வேண்டும்.

பின்னர் நமது கர்த்தர், பரலோக வகுப்பாராகிய இராஜ்யம் குறித்து அதாவது, தற்போது கருநிலையில் காணப்படும் சபை தொடர்பான விஷயத்தில், இக்காரியத்தை விவரிக்கும் வண்ணமாக ஓர் உவமையைக் கூறினார்; ஒரு குறிப்பிட்ட இராஜா தம்முடைய ஊழியக்காரர்களிடம் கணக்கை விசாரித்தார். இப்படிக் கணக்குப் பார்த்தபோது, ஒருவன் பதினாயிரம் தாலந்துகள் தனக்குக் கடன் பட்டிருப்பதை அறிந்தார். ஆகையால், அவனையும் அவனுடைய பெண் ஜாதியையும், அவனுக்குண்டான யாவற்றையும் கடனைத் தீர்க்கத்தக்கதாக விற்கும்படி, அவனுக்கு இராஜா கட்டளையிட்டார். அந்த ஊழியக்காரனோ, இராஜாவின் பாதங்களில் விழுந்து, தம்மிடத்தில் இரக்கம் காட்ட வேண்டும் என்று கேட்டு, தான் கடனை அவருக்குக் கொடுத்துத் தீருவதாகக் கூறினான். இராஜா மனமிரங்கி, அவனை விடுதலைப்பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டார்.

## “தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்த…”

இப்படியாக விடுதலையாகி வெளிவந்த அந்த ஊழியக்காரன், அவனிடத்தில் கடன்பட்டிருந்தவர்களைத் தேடிச் சென்றான்; இவ்வூழியக்காரன் இராஜாவினிடத்தில் கடன்பட்டிருந்த தொகையோடு ஒப்பிடுகையில், மிகவும் குறைவான தொகையாகிய நூறு வெள்ளிப்பணம் தன்னிடத்தில் கடன்பட்டிருந்த தன்னுடைய சக ஊழியக்காரனைக் கண்டுபிடித்தான். “அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காராகள் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்” (மத்தேயு 18:28-34).

## “இங்குள்ள முக்கியமான படிப்பினை”

இங்கு என்ன பாடம் உள்ளது? கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மீது மனமிரங்க வேண்டுமென நாம் விரும்புவதுபோன்று, நாமும் ஒருவர் மீதொருவர் மனமிரக்கம் கொண்டிருக்க வேண்டும் என்பதே பாடமாக உள்ளது. நம்முடைய பாடத்தின் ஆதார

வசனத்தில், நமக்கான இந்தப் படிப்பினை உள்ளது. நாம், "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபேசியர் 4:32) என்ற வசனத்தின்படி நாம் காணப்பட வேண்டும். நம்முடைய குற்றங்களை அவர் தினந்தோறும் தொடர்ந்து மன்னித்துக் கொண்டிருப்பதுபோன்று, நாமும் ஒருவருக்கொருவர் காணப்பட வேண்டும். நாம் கர்த்தருக்குட்பட்டிருக்கும் கடனுக்கு முன்பாக, மற்றவர்கள் நமக்கு எதிராகச் செய்துள்ள குற்றங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், அவைகள் அற்பமானவைகளாகவே காணப்படுகின்றன. ஆகவே, நம்மிடத்தில் மன்னிப்புக் கேட்கும் யாவருக்கும் நாம் "ஏழெழுபது தரம்" மன்னிப்பதற்கு விருப்பமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இப்படியாக, நாம் இரக்கத்தைக் காட்டும்போது, நாம் தெய்வீகக் குணலட்சணத்தைப் பின்பற்றுகிறவர்களாகக் காணப்படுவோம். மேலும், நம்முடைய இருதயங்கள் மற்றும் ஜீவியங்கள் மீதான இதன் தாக்கம் நம்மைக் கண்ணியப்படுத்தக் கூடியதாகக் காணப்படும். நமது கர்த்தர் இயேசு, பிதாவின் தற்சொரூபமாக இருக்கின்றார்; மேலும், நாம் அன்பு, பெருந்தன்மை எனும் பண்புகளைப் பின்பற்றுகையில், நாம் அதிகமதிகமாய்க் கிறிஸ்துவின் சாயலில் காணப்படுவோம் மற்றும் இப்படியாகத் தேவனின் சாயலிலும் காணப்படுவோம்.

## “தேவனும் உங்களுக்கு இப்படியே செய்வார்”

கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்களாகிய சபையின் விஷயத்தில், பரம பிதா கையாளும் கொள்கையை அவருடைய உவமை போதிப்பதாக நமது கர்த்தர் இயேசு விவரிக்கின்றார். இவர்கள் அனுதாபமற்றவர்களாகவும், கடுமையானவர்களாகவும் ஒருவேளை காணப்பட்டார்களானால், ஒருவேளை இவர்கள் நீதியின் விஷயங்களில் தங்களது சகோதரர்களைக் கடுமையாகக் கையாளுவார்களானால், பரம பிதாவும் இவர்களை இப்படியே கையாளுவார் மற்றும் இவர்களுடைய குறைவுகள் அனைத்திற்கும் இவர்களைக் கணக்கு விசாரிப்பவராகக் காணப்படுவார். இப்பாடத்தின் முக்கியத்துவத்தைக்குறித்து, தேவனுடைய ஜனங்கள் உணர்ந்துக்கொள்வார்களானால், சகோதரர்களின் குற்றங்களையும், குறைபாடுகளையும் மன்னிக்கும் தன்மையானது அவர்களுக்கு மிகவும் தாராளமாகவும், மிகவும் சர்வ சாதாரணமான பழக்கமாகவும் ஆகிவிடும். பரம பிதாவிடம் இருந்து கடந்துவரும் நம்முடைய ஒவ்வொரு பரிபூரணமின்மைக்கான முழுமையான தண்டனையையும், அத்தண்டனையை இரத்துச் செய்யப் பிதா மறுத்துவிடுவதையும் நம்மில் எவரால் சகிக்கக்கூடும்?

தேவனுடைய குணலட்சணத்தில் நாம் பயிற்சி பெறுவதன் மூலமாகவும், விசுவாச வீட்டார் அனைவரிடமும் நாம் அதிகமதிகமாக இரக்கமும், தயாளமும் கொண்டவர்களாக ஆகுவதன் மூலமாகவும், நம்மீது பாராட்டப்பட்ட தேவனுடைய இரக்கத்தை நாம் உணர்ந்துள்ளதைத் தெரிவிக்கின்றவர்களாகக் காணப்படுவோம். நாம் சகோதர சகோதரர்களிடத்தில் இரக்கமுள்ளவர்களாகக் காணப்படும்போது, இயல்பாகவே நாம் சகல மனுஷர்களிடத்திலும் பெருந்தன்மையுள்ளவர்களாகக் காணப்படுவோம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நம்முடைய பெலவீனங்களையும், குறைவுகளையும் நாம் உணர்ந்து, நினைவில் கொண்டிருக்கையில், இது நம்மை, சகோதரர்களிடத்திலும், சகல மனுஷர்களிடத்திலும் அனுதாபம் கொள்ளச் செய்திடும். இரக்கத்திலும், தாராளத்தன்மையிலும்/பெருந்தன்மையிலும், அனுதாபத்திலுந்தான் தேவன் பிரியப்படுகின்றார். இந்த ஆவியின் கிருபைகளை விருத்திச் செய்கின்றவர்கள், கர்த்தருடைய பார்வையில் பிரியமாய்க் காணப்படுவார்கள்; மற்றும் இயேசுவோடு, அவருடைய மகிமையின் சிங்காசனத்தில் பங்கடைவதற்கும் ஆயத்தப்படுத்தப்பட்டுத் தகுதியாக்கப்படுவார்கள்; ஏனெனில், தெளிவான அறிவின் கீழ் மற்றும் இராஜ்யத்தில் அருளப்படும் உதவியுடன் தெய்வீகக் கிருபை மற்றும் ஆசீர்வாதத்திற்குள் திரும்பிடும் ஆயிரமாயிரமான மனுக்குலத்திற்கு இரக்கம் காட்டுவதே, மாபெரும் மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படப் போவதற்கான நோக்கமாகும்.

## “ஆதாமின் பாவம் குறிப்பிடப்படவில்லை”

இந்த உவமையானது, ஆதி பாவத்திற்கான தெய்வீக மன்னிப்பைக் குறிப்பிடுவதாக நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. இரக்கத்திற்காக நாம் கூக்குரலிடுவதற்கென, ஆதாமின் பாவம் ஒன்றும் மன்னிக்கப்படுவதில்லை. ஆதாமும், முழுச் சந்ததியும் இரக்கத்திற்காகக்

கேட்டாலும், தெய்வீக வழியாகிய இயேசுவின் மூலம் அதாவது, அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாக அல்லாமல், மற்றபடி எந்த இரக்கத்தையும் அடைந்திருக்க முடியாது. இயேசு தம்முடைய பலியை நிறைவேற்றி, பரத்திற்கு ஏறி, தம்முடைய புண்ணியத்தின் வாயிலாகப் பிதாவிடத்திற்கு வருபவர்கள் சார்பாக அவர் பிதாவின் முன்னிலையில் தோன்றாதது வரையிலுங்கூட, இந்த மன்னிப்பு (ஆதாமின் பாவத்திற்கான மன்னிப்பு) அருளப்படவும் முடியாது.

"நாங்கள் எங்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட தப்பிதங்களை மன்னிக்கிறதுபோல, எங்களுடைய தப்பிதங்களையும் மன்னியும்" என்று ஜெபத்தில், நமது கர்த்தரால் குறிப்பிடப்பட்டுள்ள பாவங்கள் குறித்தே அதாவது, பின்னர் ஏற்படும் பாவங்கள் குறித்தே இவ்வுமையானது குறிப்பிடுகின்றது. இவ்வுமையில் இவர்கள் ஊழியக்காரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்; ஆனால், பாவிகளாகிய உலகத்தாரோ, தேவனுடைய ஊழியக்காரர்கள் என்றில்லாமல், அந்நியர்கள், பரதேசிகள் என்று அழைக்கப்படுகின்றனர். விசுவாசத்தின் மூலமாகவும், அர்ப்பணிப்பின் மூலமாகவும், இயேசுவின் வழியாகவும், தேவனுடன் மீண்டும் உறவிற்குள் வந்தவர்களையே, தேவன் ஊழியக்காரர்கள் என்று கருதுகின்றார். இந்தத் தேவனுடைய ஊழியக்காரர்களே, தங்களது சகல ஊழியர்களாகிய, மற்றச் சகோதர சகோதரிகளிடத்தில் இரக்கம் பாராட்டுவதற்கென எதிர்ப்பார்க்கப்படுகின்றனர்.

இயேசுவின் புண்ணியத்தின் வாயிலாக, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தேவனுடைய புத்திரர்கள், புதிய சிருஷ்டிகள் ஒவ்வொருவரும் தனது பெலவீனங்களுக்குப் பொறுப்பாளியாகக் கருதப்படுகின்றனர்; ஆயினும், இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்கும் பொழுதோ, கிறிஸ்துவினிமித்தமாக இவர்களுடைய தப்பிதங்கள் இலவசமாய் இரத்துச் செய்யப்படுவதற்கென, தெய்வீக வல்லமையானது ஏற்பாடு பண்ணியுள்ளது. ஆனால், தேவனுடைய பிள்ளைகளுடைய இந்தத் தப்பிதங்கள் மன்னிக்கப்படுதல் என்பது, இவர்கள் தங்களது சகோதரர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான ஆவியைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது; ஏனெனில், "நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்." "ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்" (மத்தேயு 18:35; 7:2). தெய்வீக ஏற்பாடுகள் எத்துணை அருமையாய் உள்ளது! இவைகள் எத்துணை ஆசீர்வாதமாகவும், இராஜ்யத்திற்கான நமது ஆயத்தமாக்குதல்களில் நமக்கு எத்துணை நன்மையாகவும், எத்துணை உதவியாகவும் உள்ளது!

---

**R4701**

# "அக்கினியைக் கட்டளையிட உமக்குச் சித்தமா?" லூக்கா 9:51-56

"பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது, அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி, தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார்."

- வசனம் 51, 52

நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக அவர் கலிலேயாவிலிருந்து, எருசலேமை நோக்கி மேற்கொண்ட பிரயாணத்தின்போது நடந்திட்ட சம்பவத்தையே இப்பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றோம். தம்முடைய வேளை சமீபித்துவிட்டது என்றும், தம்முடைய அர்ப்பணிப்பு ஜீவியத்தினுடைய மூன்றரை வருடங்கள் நிறைவடைய போகின்றது என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். மாபெரும் போதகர் முழுமையாய்த் தைரியம் கொண்டிருந்தார். "ஜனங்களில் ஒருவனும் அவரோடிருந்ததில்லை" (ஏசாயா 63:4) என்ற வார்த்தைகள் அனுதாபத்திற்குரிய அவருடைய நிலைமையைக்

காட்டுகின்றது. தம்முடைய வேலை முழுவதும் பட்சிக்கப்படுவது/நிறைவேற்றுவது குறித்தும், அதற்கான வேளை சமீபித்துள்ளதைக் குறித்தும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு அவர் தெரிவித்தது உண்மையே. ஆனால், அவரைக்குறித்து நியாயப்பிரமாணங்களிலும், தீர்க்கத்தரிசனங்களிலும் எழுதியிருப்பவைகள் அனைத்தையும் நம்புவதில் அப்போஸ்தலர்கள் தாமதமாகக் காணப்பட்டார்கள். மேசியாவைக்குறித்துப் பேசப்பட்ட மகிமையான காரியங்களையே அப்போஸ்தலர்களின் மனங்கள் இயல்பாகக் கிரகித்துக் கொண்டன. அவருடைய மகிமையான இராஜ்யம் குறித்தும், அந்த இராஜ்யத்தில், அவரோடு கூடத் தங்களுடைய மகிமையான இணைதலைக் குறித்தும், எண்ணுவதிலேயே அப்போஸ்தலர்கள் மூழ்கிக் காணப்பட்டதினால், அவருடைய பாடுகளையும், அவருக்கு ஏற்படும் அவமானங்களையும் பற்றிப் பேசும் மற்றத் தீர்க்கத்தரிசனங்களைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். இப்படியே, தம்முடைய மரணம் குறித்து ஆண்டவராலேயே பேசப்பட்ட வார்த்தைகளையும், அப்போஸ்தலர்கள் கவனிக்கத் தவறிவிட்டனர். அவர் ஏதோ அடையாளமாக, உருவகமான விதத்தில் பேசுகின்றார் என எண்ணிக்கொண்டார்கள். மேலும் பேதுரு, “ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை” என்று சொல்லி அவரைக் கடிந்துக்கொள்ளவும் முற்பட்டார். (மத்தேயு 16:22)

## “சமாரியர்களால் நிராகரிக்கப்படுதல்”

அப்போஸ்தலர்களுடைய கூட்டத்திற்கென அப்பங்களை வாங்கும்படிக்கு யாக்கோபும், யோவானும், சமாரியா பட்டணத்திற்குச் சென்றதாக மற்றுமொரு பதிவு தெரிவிக்கின்றது. இவர்களைச் சமாரியர்கள் அடையாளம் கண்டுபிடித்து, மாபெரும் போதகர் சமாரியர்களாகிய தங்களை அங்கீகரித்து, தங்களுடைய வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவாரா அல்லது யூதர்கள் தங்களை நடத்துவது போன்று, அன்பற்ற விதத்தில் போதகர் நடத்துவாரா? என்று விசாரித்தார்கள். மாபெரும் போதகரும், யூதர்கள் தங்களை நடத்துவது போன்றே நடத்துவார் என்று சமாரியர்கள் நம்பினார்கள். மாபெரும் போதகர் யூத தேசத்தாருக்கு மாத்திரமே அனுப்பப்பட்டுள்ளார் என்றும், சமாரியர்களின் வியாதிகளைச் சொஸ்தப்படுத்தும்படிக்கு (சமாரியாவில்) நிற்கமாட்டார், காரணம் “அவர் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கே” அனுப்பப்பட்டுள்ளார் என அப்போஸ்தலர்கள் சமாரியர்களிடம் வெளிப்படையாகக் கூறினார்கள்.

சமாரியர்கள் கோபமடைவதற்கு இதுவே போதும். “நல்லது நீங்கள் போதிக்கிறவர்களிடமிருந்தும், நீங்கள் சொஸ்தப்படுத்துகிறவர்களிடமிருந்தும் போய் அப்பம் வாங்கி கொள்ளுங்கள்” என்றார்கள் சமாரியர்கள்.

இதனிமித்தம் பரிசுத்தவானாகிய யோவானும், பரிசுத்தவானாகிய யாக்கோபும் ஆத்திரம் அடைந்தார்கள். இயேசு மாபெரும் போதகர் அல்லவா? அவர் மேசியா அல்லவா? யார் தம்முடைய நன்மைகளை அடைய வேண்டும், அடையக் கூடாது தொடர்பான விஷயத்தில் தேவனுடைய சித்தத்தைத் தீர்மானிப்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது அல்லவா? இவ்விஷயத்தோடு அவர்கள் இருவரும் இயேசுவினிடத்திற்கு வந்து, நடந்ததை விவரித்துக் கூறி, “வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா?” என்று கேட்டார்கள்.

## “இன்ன ஆவியுள்ளவர்கள்?”

ஆண்டவருடைய பதிலை நாம் ஆவலாய்ப் பார்க்கின்றோம். மாபெரும் போதகர் அப்போஸ்தலர்களை நோக்கி, “எனது அருமையான சீஷர்களே, இதை விட்டுவிடுங்கள்; கொஞ்சம் காத்திருங்கள்; இந்தச் சமாரியர்கள் அனைவரும் மரிக்கும்போது, இவர்கள் நித்திய சித்திரவதை அடையும்படிக்கு பரம பிதா இவர்களைப் பிசாசினிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுவார். அந்த நித்திய சித்திரவதைக்கு முன்னதாக, நீங்கள் அக்கினியை இறங்க செய்து, இப்பட்டணத்தைச் சில நிமடங்களில் எரித்துப்போடுவது என்பது ஒன்றுமில்லாததாக இருக்கும். உங்களுடைய ஆவியை, என் அன்பு சீஷர்களே நான் அங்கீகரிக்கின்றேன்; இது தேவன் போன்ற தன்மைதான்; இப்படியாக, உங்களது வல்லமையினால் இவர்களை நீங்கள் எரிக்கவும், பொரிக்கவும் நீங்கள் விரும்பினதற்காக

நான் உங்களைப் பாராட்டுகின்றேன். இப்படியான உங்களது தேவனை நீங்களும் தொடர்ந்துப் பின்பற்றுங்கள். உங்களை யார் என்று சரியாகப் புரிந்துக்கொள்ளாத சக மனிதர்களை உங்களால் முடிந்தமட்டும் உபத்திரவப்படுத்துங்கள்” என்று (ஒருவேளை) கூறியிருப்பாரானால், இது, முன்பொருக் காலத்தில் தெய்வீக ஏற்பாடுகளைப் பற்றி, நாம் கொண்டிருந்த கண்ணோட்டத்தின்படி பார்க்கப்பட்டால், இப்படிப் போதகர் பதில் சொல்வது சரி என்று நாம் எண்ணியிருந்திருப்போம்.

இப்படித்தான் மாபெரும் போதகர் பதில் சொன்னாரா? இல்லை. தேவனுக்கு நன்றி! அவருடைய போதனைகள் முற்றிலும் எதிர்மாறாக காணப்பட்டது. அதாவது, அனுதாபத்துடனும், அன்புடனும், இரக்கத்துடனும் காணப்பட்டது. அவரிடம் பிதாவின் ஆவி இருந்தது. மேலும், தம்மிடம் பிதாவின் ஆவி இருப்பதை அவர் புரிந்துக் கொண்டிருந்தார், மற்றும் அதைப் பூரணமாய்ப் பின்தொடரவும் செய்தார். "அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்” (லூக்கா 9:55-56).

## “ஓர் இரட்சகர், ஒரு மாபெரியவர்”

இயேசுவின் நாட்களில் பாலஸ்தீனியாவில் பேசப்பட்ட மொழி சிரியாக் (Syriac) ஆகும். மாபெரும் போதகரின் நாமங்களில்/பட்டங்களில் ஒன்று "இரட்சகர்” என்பதாகும். இரட்சகர் என்பதற்குச் சிரியாக் மொழியில், "ஜீவன் கொடுப்பவர்” என்பது அர்த்தமாகும். இயேசு வருவதற்கு முன்பாக முழு உலகமும் போதுமானளவுக்குக் குற்றவாளி என ஏற்கெனவே தீர்க்கப்பட்டுள்ளனர். அவர் இன்னும் அதிகமாகக் குற்றவாளி எனத் தீர்ப்பதற்கு வராமல் மாறாக, அவர்கள் (உலகம்) தம் மூலம் ஜீவனையடைவதற்கே வந்தார்! (யோவான் 10:10; 3:17)

ஜீவன்! உலகத்திற்கு ஜீவன் இல்லையா? ஆம், ஜீவன் இல்லை. ஆதாமின் கீழ்ப்படியாமைக் காரணமாக மனுஷீக ஜீவன் இழக்கப்பட்டது. இதன் விளைவாக மனுக்குலம் முழுவதும் மரித்துக் கொண்டிருக்கின்றது. (நித்திய சித்திரவதையிலிருந்து அல்லாமல்) மரணத்திலிருந்து, இரட்சிக்கின்ற ஓர் இரட்சகரே, ஜீவன் அளிப்பவரே, மனுக்குலத்திற்கு அவசியம்.

இரட்சகரின் முதல் வேலை, கல்வாரியின் மீட்பின் வேலையாகும். அவருடைய இரண்டாம் வேலையானது, இராஜ்யத்தில் தம்முடன் உடன் சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக, தமது சபையைத் தெரிந்தெடுப்பதாகும். அவருடைய மூன்றாவது வேலை, பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் ஆதாமையும், அவருடைய சந்ததி முழுவதையும் இரட்சிப்பதாகும். அதாவது, தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாகவும், அவருடைய பிள்ளைகள் பாவத்தில் பிறந்து, துர்க்குணத்தில் உருவாகி, மற்றும் அவர்களது தாய் அவர்களைப் பாவத்தில் கர்ப்பந்தரித்ததின் மூலமாகவும் வந்திட்ட மனரீதியில், சரீர ரீதியில் மற்றும் ஒழுக்க ரீதியிலுள்ள சீர்க்கேடுகள் அனைத்திலிருந்தும் அவர்களை இரட்சிப்பதாகும்.

சபையை இரட்சிப்பது என்பது மாபெரும் வேலையாகும்! கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாகுவதற்கான இந்த அருமையான சிலாக்கியத்திலுள்ள தேவனுடைய கிருபையை, ஒருவேளை நமது இருதயங்கள் ருசிபார்த்ததானால், ஒருவேளை நம்முடைய கண்கள் கண்டதானால், ஒருவேளை நாம் கேட்டிருப்போமானால், நாம் எவ்வளவு உண்மையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். எனினும் கொஞ்சம் பேர்களை மாத்திரமே இரட்சிப்பது என்பது, உலகத்தைச் சிருஷ்டித்ததிலும், உலகத்தை மீட்பதிலுமுள்ள தேவனுடைய நோக்கம் என்று நாம் அனுமானித்து விடக்கூடாது. மாறாக, இந்தத் தெரிந்துக்கொள்ளப்படும் "சிறுமந்தையினர்” தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலனானவர்கள் என்று கூறப்படுகின்றனர் (யாக்கோபு 1:18; வெளி 14:4). அப்படியானால் பிற்பலன்கள் அநேகம் இருப்பது காட்டப்படுகின்றது. எந்த ஒரு நபருடைய தனிப்பட்ட விருப்பத்திற்கு எதிராக, அவரைத் தேவன் மரணத்திலிருந்து இரட்சித்து, நித்தியத்திற்குரிய ஜீவனைக்கொடுப்பதாக அறிவிக்கவில்லை என்றாலும், ஆதாமுக்குள் இழந்துப்போய் மற்றும் இயேசுவினால் மீட்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும்

இரட்சிக்கப்படத்தக்கதாக, சத்தியம் பற்றிய தெளிவான அறிவிற்குள் கொண்டு வரப்படுவார்கள் என்று தேவன் தெரிவிக்கின்றார். துணிந்துப்பிடிவாதமாக இருப்பவர்கள் மாத்திரமே இழப்பிற்குள்ளாகப் போவார்கள் என்று தேவன் தெரிவித்துள்ளார்; மேலும், இத்தகையவர்களுடைய இழப்பு என்பது, ஜீவனை இழந்து போவதாகும். அதாவது, அப்போஸ்தலர் தெரிவித்துள்ளது போன்று "நித்திய அழிவிற்குள்" ஆகுவார்கள்.

---

**R5370**

# “அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள்” லூக்கா 8:1-3; 9:57-62; 10:38-42

"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்." - மத்தேயு 25:40

இவ்வாராய்ச்சிக்கான ஆரம்ப வசனமானது, இயேசு பேசின சகல பிரசங்கத்திற்கான, திறவுகோலை நமக்கு அளிக்கின்றது. அவருடைய ஒரு செய்தி, தேவனுடைய இராஜ்யம் பற்றின நற்செய்தியாகும். இது இன்றும் நற்செய்தியாகவே உள்ளது. மேலும், கர்த்தருடைய ஜனங்களில் எவரேனும், தேவனுடைய இராஜ்யமே சபைக்கான நம்பிக்கை மற்றும் உலகத்திற்கான நம்பிக்கையின் மையமாகவும், சாரமாகவும் இருப்பதை இன்னமும் கற்றுக்கொள்ளவில்லையெனில், அவர் போதுமானளவுக்கு வேதாகமத்தை வாசித்து, நம்பிக்கைக்கொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும். யூதர்கள் இராஜ்யத்திற்கு ஆயத்தமாகக் காணப்படாததினால், அவர்கள் அந்த இராஜ்யத்தில், மேசியாவின் துணைவர்களாக இருப்பதிலிருந்து, தேசமாகவே புறக்கணிக்கப்பட்டு விட்டனர். ஆனால், அனைவரும் புறக்கணிக்கப்படவில்லை; ஆகவேதான், இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்தவர்கள் எத்தனை பேரோ, அவர்களுக்கு தேவனுடைய புத்திரர்கள் ஆகுவதற்குரிய சுதந்திரத்தை அவர் கொடுத்தார் என்று நாம் வாசிக்கின்றோம்; இந்தச் சுதந்திரத்தை, பெந்தெகொஸ்தே நாளில் வந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் ஜெநிப்பித்தல் வாயிலாக அவர்கள் அடைந்தார்கள்.

## “உண்மையில் இது நற்செய்தியே”

இந்தத் தேவனுடைய புத்திரர்கள், ஒருவேளை உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்களானால், இவர்கள் இயேசுவுடன் காணப்படுவார்கள். அதாவது, இந்தப் பரலோக இராஜ்யத்தில் தேவனுடைய சுதந்தரர்களாகவும், இவர்களுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகவும் காணப்படுவார்கள். இவர்களுக்கான கனமும், ஆசீர்வாதமும் பெரியதாய் இருக்கும்; ஏனெனில், இவர்கள் தங்கள் ஆண்டவர் போன்றுக் காணப்படுவார்கள், மற்றும் அவர் இருக்கின்ற வண்ணமாக அவரைத் தரிசித்து, அவருடைய மகிமையில் பங்கடைவார்கள். இவைகள் மாத்திரமல்ல. ஒருவேளை இவர்கள் இந்த அன்பின் ஆவியை வளர்த்துக்கொள்வார்களானால், உலகத்தை ஆசீர்வதிப்பதும், சாபத்தை அப்புறப்படுத்துவதும், பாவம் மற்றும் மரணத்தின் சூழ்நிலைகளிலிருந்து மனுக்குலத்தைத் தூக்கிவிடுவதுமாகிய ஆண்டவருடைய மாபெரும் வேலையில், இவர்களும் இணைவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

நிச்சயமாக இது நற்செய்திதான்! இதே நற்செய்திதான் ஆண்டவருடைய பிறப்பின்போது தூதர்களால் அறிவிக்கவும் பட்டது; "தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக்கா 2:10). இது, இதுவரையிலும் தேவனுடைய ஊழியக்காரர்களும், ஊழியக்காரிகளுமான சபைக்கு மாத்திரமே நற்செய்தியாய் இருந்துள்ளது. ஆனால், இது சகல செவிடான காதுகள் திறக்கும்போதும், சகல குருடான கண்கள் திறக்கும்போதும், அனைவருக்கும் நற்செய்தியாகக் காணப்படும். மேலும், அவர்கள் மேசியாவின் இராஜ்யத்தினுடைய மகிமைகளைக் காண்பார்கள்.

இயேசு இப்படியாக இராஜ்யத்தை அறிவித்து வந்தபோது, அவர் யாரிடமும் பணத்தை வருந்தி கேட்கவில்லை. அவர் எவ்விதத்திலாவது பணத்தைக் கெஞ்சிக் கேட்டார் அல்லது பணத்தைத் திரட்டினார் என்ற கருத்து நமக்கில்லை. இதை வைத்தே, கிறிஸ்துவின் பின்னடியார்களும் பணத்தைக் கேட்காமல், தங்களுக்கு உள்ளதை அல்லது மற்றவர்களால் தானாக விரும்பிக் கொடுக்கப்படும் பணங்களையே பயன்படுத்த வேண்டும் என்று அநேகர் எண்ணுகின்றனர். எனினும், இது ஒவ்வொருவரும் தனக்குள் முடிவெடுக்க வேண்டிய காரியமாக உள்ளது.

சொஸ்தப்படுத்தப்பட்டவர்களில் ஒருவர், மகதலேனா மரியாள் ஆவாள்; இவளிடமிருந்து கர்த்தர் ஏழுப் பிசாசுகளைத் துரத்தினார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இன்று மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான விடுதிகளில் காணப்படும் அநேகரின் நிலையில்தான் இந்தப் பாவப்பட்ட ஸ்திரீயும் காணப்பட்டிருந்தாள். இவளுக்குப் பிரச்சனை உடலில் இல்லை; மாறாக, இவளை ஆட்கொண்டிருந்த ஏழு விழுந்துபோன தூதர்களின் தொல்லையே இவளுக்கான பிரச்சனையாக இருந்தது. வேதாகமத்தின் செய்தியை நம்புகின்றவர்கள், விழுந்துபோன தூதர்கள் இருக்கின்றார்கள் என்பதை நம்ப வேண்டும். அதாவது, இந்த ஆவிக்குரிய ஜீவிகளானது, இவைகளால் முடிந்தமட்டும் மனுக்குலத்தின் மீது தீமையான செல்வாக்குக் கொண்டிருக்கின்றது என்றும், இவைகள் மனதின் கட்டுப்பாட்டினால் எதிர்த்துப் போராடப்பட வேண்டும் என்றும் நம்பவேண்டும். மரியாள் ஆஸ்திகளுள்ள ஸ்திரீ போன்று தெரிகின்றது. பிசாசுகளின் வல்லமைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட மரியாள், இயேசுவுக்கு மிகவும் நன்றியுடன் காணப்பட்டபடியால், இயேசுவுக்கு ஒவ்வொரு சூழ்நிலையிலும் தன்னால் முடிந்தமட்டும் ஊழியம் புரிந்திட்டாள். வேறு கனமிக்க ஸ்திரீகளும் இயேசுவுக்கு உதவிச் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## “முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ணட்டும்”

இயேசு மிகுந்த வரங்களையுடையவராக இருக்கின்றார் என்றும், அவருடைய ஜீவியத்தின் தேவைகளெல்லாம் சந்திக்கப்படுகின்றபடியால், அவர் ஐசுவரியவானாக இருப்பார் என்றெண்ணி, சிலர் அவரிடத்திற்குக் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். இப்படிப்பட்டவர்களில் ஒருவன், கர்த்தரிடம், "ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன்" என்று கூறினான். ஆனால், தம்மை (இயேசு) வரவேற்பதற்கு அநேக வீடுகள் தமக்கு இருந்திட்டாலும், தமக்கெனச் சொந்தமாக வீடு இல்லை என்றும், தம்மிடத்தில் எந்த ஆஸ்தியும் இல்லையென்றும் தெரிவித்தப் போதோ, இவனுடைய ஆவல் தணிந்துப் போய்விட்டது போன்று தோன்றுகின்றது. "இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்" (லூக்கா 9:58). இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் காணப்படும் ஒரு தலைவரைப் பின்பற்றுவதற்கு மிகவும் உண்மையுள்ளவர்களே ஈர்க்கப்படுவார்களே ஒழிய, மற்றபடி எவரும் ஈர்க்கப்படுவதில்லை. ஆஸ்தி/ஐசுவரியம் அநேகரைக் கவர்கின்றது. ஆனால், தரித்திரம் சிலரையே கவர்கின்றது.

இன்னொருவன் இயேசுவினிடத்தில் பின்வரும் அர்த்தத்தில் கூறுகின்றான், "ஆண்டவரே, உம்முடைய சீஷர்களில் ஒருவனாக என்னை நீர் எண்ணிக்கொள்ள வேண்டும்; ஆனால் எனக்குத் தகப்பன் இருக்கின்றார், மேலும் அவர் மரித்துப்போவது வரையிலும், அவரோடு நான் காணப்பட வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன்." அதற்கு இயேசு கொடுத்த பதிலானது, பரம பிதாவின் நோக்கங்களுக்காக, நாம் ஏறெடுக்கும் ஒவ்வொரு ஊழியத்திற்கும் உரிய முக்கியத்துவத்தை நமக்கு வெளிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்" (லூக்கா 9:60).

## “விழிப்பதற்கு நேரமாகி விட்டதல்லவா?”

தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி முழு உலகமும் ஏற்கெனவே மரித்துவிட்டதாகக் காணப்படுகின்றது. ஆதாமின் மீது செலுத்தப்பட்ட மரணத் தீர்ப்பானது, அவருடைய அனைத்துப் பிள்ளைகளையும் உள்ளடக்கியது. ஜீவன் கொடுப்பவராகிய இயேசுவுடன் தற்காலத்தில் தொடர்புக்குள் வந்தவர்களையே, வேதவாக்கியங்கள் ஜீவனுடையவர்கள்

என்று தெரிவிக்கின்றன. இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களிடமிருந்து வித்தியாசமான கண்ணோட்டத்தில் ஜீவனைப்பார்க்க வேண்டும் என்று ஆண்டவர் சுட்டிக்காட்டுகின்றார். பூமிக்குரிய காரியங்களைக் கவனிப்பதற்கு, உலகத்தில் அநேகர் காணப்படுகின்றனர்; இராஜ்யத்தை அறிவிப்பதற்கும், இராஜ்ய வகுப்பாரைச் சேர்ப்பதற்குமான மாபெரும் மற்றும் மிக முக்கியமான வேலையைச் சிலரே செய்ய முடியும்.

இதுதான் உலகத்திலேயே மிக முக்கியமான வேலையாகும். காரணம், இது தேவனுடைய வேலையாக இருக்கின்றது. மேலும், இவ்வேலையில் ஈடுபடுகின்றவர்கள், தேவனுடன் உடன் வேலையாட்களாகக் காணப்படுகின்றனர். தேவனுடைய இராஜ்யமே பிரசங்கிக்கப்பட வேண்டுமென்றும், இதற்காகவே பலிச் செலுத்த வேண்டுமென்றும், மீண்டுமாகக் கவனிப்போமாக. அந்தோ பரிதாபம்! இந்தப் பிரசங்கம் இந்தக் காலத்தில் மிகவும் குறைவாகக் காணப்படுவது எவ்வளவு விநோதமாகத் தோன்றுகின்றது! வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், இயேசுவும், அவருடைய சீஷர்களும் கொடுத்திட்ட சுவிசேஷச் செய்தியானது தொலைந்துப் போய்விட்டது, மறக்கப்பட்டுவிட்டது, புறக்கணிக்கப்பட்டுவிட்டது. ஆண்டவரும், அவரால் நியமிக்கப்பட்டவர்களும் முதலாம் வருகையின் காலத்தில் பிரசங்கித்த அதே செய்தியைப் பிரசங்கிப்பதற்குரிய மாபெரும் சிலாக்கியத்திற்கு, வேத மாணவர்கள் அனைவரும் விழித்துக்கொள்வதற்கு இது காலம் அல்லவா?

## “கற்கப்பட வேண்டிய பாடங்கள்”


"பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்” (லூக்கா 9:61-62). நாம் மற்றவர்களை நியாயம் தீர்க்கக்கூடாது. மாறாக, நாம் ஒவ்வொருவரும் நம்மையே நிதானித்துக்கொள்ள வேண்டும். எனினும், அநேகர் பின்னாகத் திரும்பிப்பார்த்து, ஜீவியத்திற்கான சமுதாய வசதிகளுக்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்வது மாத்திரமல்லாமல், இதோடு கூட உலகத்தின் அநேக இன்பங்கள், அற்பத்தனமான காரியங்கள் மற்றும் ஆடம்பரங்களில் பாய்கின்றார்கள்/மூழ்குகின்றார்கள் அல்லவா? இக்கேள்வி சோதித்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். நம்மில் எத்தனை பேரை, கர்த்தர் இராஜ்யத்திற்குத் தகுதியானவர்கள் என்று கருதுவார்? சமீபத்தில் வாசலருகே வந்துள்ளதென நாம் நம்பும் மகிமையான மேசியாவின் இராஜ்யத்தில் கர்த்தரோடு கூட இருப்பதற்கென, நம்மில் எத்தனை பேரைத் தகுதியுடைவர்கள் என்று கர்த்தர் கருதுவார்? இங்கு ஒரு கொள்கைக் காணப்படுவது போன்று தோன்றுகின்றது. இராஜ்யத்தின் மீதான கவனத்தில் மூழ்காமலும், அதன் ஆசீர்வாதங்களை விரும்பாமலும், மற்றவர்கள் மீது ஆசீர்வாதங்களை வழங்குவதில் பங்கடைய விரும்பாலும் இருப்பவர்கள், மனுக்குலத்திற்குச் செய்யப்பட வேண்டும் என்று அவர் வடிவமைத்துள்ள வேலையை நிறைவேற்றுவதற்கென உயிர்த்தெழுதலுக்குப் பாத்திரமாய்க் காணப்படமாட்டார்கள்.

மார்த்தாள் மற்றும் மரியாள் சம்பவத்துடன் பாடம் நிறைவடைகின்றது. இருவரும் இரட்சகரை அன்புகூர்ந்தார்கள். ஆனால், இவர்கள் இருவரும் தங்களது அன்பை வித்தியசமாக வெளிப்படுத்தினார்கள். மார்த்தாளையும், கர்த்தருடைய சௌகரியத்திற்காக உணவை அளிப்பதில் அவள் கொண்டிருந்த கவனத்தையும் இயேசு நிராகரிக்கவில்லை; மாறாக, ஜீவனுக்கான அருமையான வார்த்தைகளைக் கேட்கும்படிக்கு மரியாளை தம் பாதத்தண்டைக்கு ஈர்த்திட்ட, மரியாளின் ஆவியையே அவர் விசேஷமாகப் பாராட்டினார். மரியாள் நல்ல பங்கைத் தெரிந்துக்கொண்டாள் என்று இயேசு கூறினார். ஆகவே, நாம் அவருடைய வார்த்தைகளுக்கு உண்மையான கவனம் செலுத்தும் போதும், அவருடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கும், வழிநடத்தப்படுவதற்கும் நாடும்போதும், அவர் விசேஷமாகப் பிரியங்கொள்வார் என்பதை, ஆண்டவருக்காக நாம் ஊழியம் செய்கையில், நாம் மனதில் வைத்துக்கொள்வோமாக.

இன்றைய பாடமானது, நமது கர்த்தருடைய ஊழிய நாட்களின் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏறெடுக்கப்பட்ட விசேஷமான ஊழியங்கள் பற்றியதாகும்.

அங்கீகரிக்கப்படத்தக்கதான ஊழியங்களானது, அங்கீகரிக்கப்படத்தக்கதான துதியைப்போன்று, கர்த்தரிடத்தில் கொண்டிருக்கும் அன்பின் பலனாக வந்திட வேண்டும். அவரை அதிகமாய் அன்புகூருகின்றவன், அதிகமாய் ஊழியம் செய்வான். இவ்வகையான ஊழியங்களைச் சம்பளங்களால் விலைக்கு வாங்கவும் முடியாது, அதேசமயம் இதைத் துன்புறுத்தல்களால் தடைப் பண்ணவும் முடியாது.

கர்த்தர் இயேசுவுக்காகத் தனிப்பட்ட விதத்தில் ஊழியம் புரிவதற்கான சிலாக்கியம் பெற்றவர்கள், நிச்சயமாக உன்னதமான சிலாக்கியமே அடைந்துள்ளனர். எனினும், கர்த்தரினால் தம்முடைய சகோதரர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்குச் செய்யப்படும் ஊழியங்கள், உண்மையில் கர்த்தருக்குச் செய்ததாகவே இருக்கின்றது என்று ஆதார வசனத்தில் காணப்படும் பொதுவான கொள்கையானது உண்மையே ஆகும். அவ்வூழியத்தைக் கர்த்தர் தமக்குச் செய்ததாகவே ஏற்றுக்கொள்கின்றார். இக்கருத்து எத்துணை விலையேறப்பெற்றக் கருத்தாகும்! கர்த்தருடைய வார்த்தைகளை உண்மையாய் நம்புகின்றவர்கள், தங்களுடைய சகோதரர்களுக்குப் புரிந்திடும் ஊழியங்களில் வைராக்கியமாய்க் காணப்பட வேண்டும். அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, கிறிஸ்து நம் அனைவருக்காகவும் மரித்ததுபோன்று, நாமும் சகோதர சகோதரிகளுக்காக நம்முடைய ஜீவியங்களை/ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.



*சத்திரத்திற்கு நல்ல சமாரியனின் வருகை*

அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். (லூக் 10:34)

# பாகம்-4

# "யூதேயாவில் நடந்திட்ட, இயேசுவின் பின்நாள் ஊழியம்..."

R2437

# "கூடாரப்பண்டிகையின் போது"

## யோவான் 7:14, 28-37

"ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்" (வசனம்-37)

நம்முடைய கடந்த பாடத்தில் நாம் பார்த்துள்ளபடி, ஐயாயிரம் பேருக்குக் கர்த்தர் அற்புதகரமாகப் போஷித்தப் பிற்பாடு, ஜனக்கூட்டத்தார், நமது கர்த்தரை ஒரு மாபெரும் தீர்க்கத்தரிசியெனப் பிரகடனம் பண்ணிக்கொண்டு, அவரை வலுக்கட்டாயமாக இராஜாவாக்கிட முடிவு செய்தனர். எனினும் இது பிதாவினுடைய திட்டமல்லவென்று அவர் நன்கு அறிந்திருந்தார்; மரணத்திற்குக்கொண்டுச் செல்லும், பாவிகளால் ஏற்படும் விபரீதத்திற்கு தாம் ஆளாக வேண்டும் என்றும், இப்படியாகத்தான் தாம் சுதந்தரிக்கப் போகிற இராஜ்யத்தை அடையமுடியும் என்றும், தமக்கு வாக்களிக்கப்பட்ட இராஜ்யமானது, உலகத்திற்குரியதாகவும், தற்கால ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகளுக்குரியதாகவும் இருப்பதாயிராமல், மாறாக புதிய யுகத்திற்குரியதாக இருக்கும் என்றும் அவர் அறிந்திருந்தார். ஆகவே நமது கர்த்தர் தமது சீஷர்களைப் படகில் அனுப்பிவிட்டு, மலைக்குத் தனியே போய்விட்டார்; பிற்பாடு தண்ணீர் மீது நடந்து போய் தமது சீஷர்களை அடைந்தார்.

தம்மை இராஜாவாக்கிக்கொள்வதற்கென, தமது அற்புதத்தின் மூலம் அடைந்திட்ட பிரபலத்தைப் பயன்படுத்தும் எந்தப் பிரயாசமும் எடுக்கப்படாமல், இயேசு ஆறு மாதங்களுக்கு மேலாக கலிலேயாவில் பிரசங்கித்தும், போதித்தும் வந்ததுமான காரியம், அவருடைய சொந்த சகோதரர்களுடைய நம்பிக்கையைத் தளர்த்த ஆரம்பித்தது; காரணம் அதுவரையிலும் காணப்பட்ட அவர்களது அக்கறை விசுவாசத்தின் அடிப்படையை விட, பெருமையின் அடிப்படையிலேயே காணப்பட்டது. இப்பொழுதும் எருசலேமுக்குச் சென்று, கூடாரப்பண்டிகை அனுசரிக்க வேண்டிய வேளை வந்திருக்க, அதில் பங்குக்கொள்வதற்கென இயேசு எந்த விசேஷித்த ஆயத்தங்களையும் பண்ணாமல் இருப்பதை, அவருடைய சொந்த சகோதரர்கள் கவனித்தனர். அவருடைய வல்லமை பரீட்சிக்கப்பட வேண்டும் என்பதில் அவர்கள் ஆவலாய் இருந்தனர். "ஒன்றில் எதையாகிலும் செய்து, முழு உலகத்தினுடைய பார்வைக்கு முன்னதாக உம்மை பெரியவராக்கிக்கொள்ளும் (அ) எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நீர் உம்மை மேசியா என்று கூறிக்கொண்டது ஏமாற்றுத்தனம் என ஒப்புக்கொள்ளும்" என்பதே அவர்களது மனநிலையாக இருந்தது. ஆகவேதான் அவர்கள், "நீர் பண்டிகைக்குப் போகவில்லையா? உம்மைப் போன்று பேசுகிறவர்கள் எவராயினும் அவர்கள், இக்காரியங்களையெல்லாம் அந்தரங்கத்தில் செய்யக்கூடாது, மாறாக பிரபலமடைவதற்குரிய பெரிய வாய்ப்புகளையே நாட வேண்டும். உம்மிடத்தில் நித்தியஜீவன் இருக்கின்றது என்றும், அதை மற்றவர்களுக்கு உம்மால் கொடுக்கமுடியும் என்றும் நீர் எங்களிடத்தில் கூறுகின்றீர், ஆனால் உம்முடைய ஜீவனை அபாயத்திற்குள் ஆக்குவதற்கு நீர் பயப்படுவது போன்று தோன்றுகின்றது" என்ற விதத்தில் பேசினார்கள். "அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்" (யோவான் 7:5).

அவர்களுடைய சூழ்நிலையிலிருந்து, தம்முடைய சூழ்நிலை மிகவும் வேறுபட்டதாய் இருக்கின்றது, அதாவது அவர்களால் எந்த நேரத்திலும் செல்லக்கூடும், ஆனால் தாம் குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகின்றார் என்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணமாக நமது கர்த்தருடைய பதில் காணப்பட்டது. அவர்கள் தங்களுக்கு எதிராக, அந்தத் தேசத்தின் மிகுந்த செல்வாக்குள்ள மற்றும் வல்லமையுள்ள வகுப்பாரின் கொலை பாதகமான விரோதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தாம் அதைப் பெற்றுக்கொண்டுள்ளார்; அதாவது தாம் சத்தியத்திற்கென ஊழியம்புரியும்படிக்கு உலகத்திற்கு வந்து, அச்சத்தியத்திற்கு உண்மையாய் இருந்ததின் காரணமாக தாம் மற்றவர்களுடைய விரோதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். "யூதர்கள் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடினபடியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்து" வந்த காரியம் உண்மையாக இருப்பினும், அவர் மரண பயத்தினிமித்தம் இப்படிச் செய்யாமல்,

மாறாக "தம்முடைய வேளை இன்னும் வரவில்லை" என்பதை உணர்ந்துக்கொண்ட காரணத்தினாலேயே ஆகும். ஆகவே பிதாவின் திட்டம் தொடர்புடையதாக, தாம் அறிந்திருந்தவைகளுக்குத் தம்மால் முடிந்தமட்டும் ஒத்துழைப்புக் கொடுப்பது தம்முடைய கடமை என்றும், தெய்வீகத் திட்டம் தடுக்கப்படாதபடிக்கு (தாம் யூதேயாவுக்குச் செல்லும் பட்சத்தில்) தம்மைக் காப்பாற்றும்படிக்கு, ஒரு விசேஷித்த அற்புதம் செய்ய அவசியம் ஏற்படுத்தும் வண்ணமாக, திட்டத்தை அலட்சியப்படுத்தாமல் இருப்பதும் தம்முடைய கடமை என்றும் அவர் உணர்ந்திருந்தார்.

## ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு நாடும் அனைவருக்கும் இங்குப் படிப்பினைகள் உள்ளன:-

(1) ஒருவேளை நமக்கு உலகத்திலிருந்து எதிர்ப்பு வரவில்லையெனில், அதற்குக் காரணம் நாம் நமது பிதாவின் வார்த்தைகளுக்கும், அவ்வார்த்தைத் தொடர்பாக நமக்கு நியமிக்கப்பட்டுள்ள பிதாவிற்கு அடுத்த ஊழியத்திற்கும் நாம் உண்மையற்றவர்களாகக் காணப்படுவதேயாகும்; காரணம் ஆண்டவருக்கு எப்படியோ, அப்படியே தம்முடைய பின்னடியார்களுக்கும் காணப்படும் என்று நமது ஆண்டவர் கூறியுள்ளார்; அதாவது நாம் உலகத்தாரல்லாததினால், நம்மை உலகம் பகைக்கும் என்றும், நமக்கு எதிராகப் பலவிதமான தீமைகளை உலகம் தவறாய்ப் பேசும் என்றும், நம்மைத் துன்பப்படுத்துபவர்கள், தாங்கள் தேவனுக்குத் தொண்டு செய்வதாக எண்ணிக்கொள்வார்கள் என்றும் நமது ஆண்டவர் கூறியுள்ளார். "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12). நாம் இன்னமும் இந்தத் துன்ப காலத்தில்தான் காணப்படுகின்றோம்; மாபெரும் எதிராளியானவன் இன்னமும் (முழுமையாய்) கட்டப்படவில்லை. மேலும் இப்படிப்பட்ட எதிர்ப்புகள் எதுவும் இல்லாமல் நாம் காணப்படுவோமானால், அது நாம் தேவபக்தியாய் வாழவில்லை என்பதற்கு உறுதியான ஆதாரமாக இருக்கின்றது, அதாவது எதிராளியானவன் மற்றும் அவனுடைய குருடாக்கப்பட்டுள்ள ஊழியர்களின் விரோதத்தைத் தூண்டும் அளவுக்கு, நாம் இன்னதும் போதுமானளவுக்கு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை என்பதற்கான உறுதியான ஆதாரமாக இருக்கின்றது.

(2) நமது ஆண்டவருக்கு விசேஷித்த எதிராளிகளாக இருந்தவர்கள் அவிசுவாசியான உலகத்தாராய் இராமல், மாறாக பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கின்றார்கள் என்றும், தெய்வீகப் பிரமாணங்களில் முழுமையான ஈடுபாடு உள்ளவர்கள் என்றும் அறிக்கைப் பண்ணிக்கொண்டிருக்கும் உண்மையற்ற அவிசுவாசிகளே ஆவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமக்கும் இப்படியாகவே காணப்படும்; பெயரளவிலான கிறிஸ்தவர், சபைக்குப் புறம்பாக அல்லாமல் உள்ளுக்குள்ளாகவே நாம் நமக்கான விசேஷித்த எதிராளிகளையும், துன்பப்படுத்துபவர்களையும், அவதூறு பேசுகிறவர்களையும் பெற்றிருப்போம்.

(3) தேவையற்ற விதத்திலும், ஞானமற்ற விதத்ததிலும், நாம் நம்மை அபாயத்திற்குள் ஆக்கிக்கொண்டு, நம்மைப் பாதுகாக்கும்படிக்கு அற்புதமாய்க் கர்த்தர் இடைப்படுவார் என்று எதிர்ப்பார்க்கக்கூடாது எனும் பாடத்தை நமது கர்த்தருடைய மாதிரியிலிருந்து நாம் பெற்றுக்கொள்கின்றோம். நாம் சத்தியத்தை மறுதலித்து விடலாமெனச் சிந்திக்கவும் கூடாது, அதேசமயம் நம்முடைய ஜீவன்களைப் பாதுகாப்பதற்கான கடமையையும் நாம் கைவிட்டுவிடலாம் எனக் கருதவும் கூடாது; அதாவது கர்த்தரைப் போன்று காணப்பட வேண்டும் .சரியான மற்றும் ஏற்றவேளை வந்தபோது, நமது கர்த்தர் பண்டிகைக்குப் போனார் என்றும், பயமில்லாமலும், தைரியத்துடனும் பேசினார் என்றும் நாம் பார்க்கின்றோம். ஆகவே ஜீவனைப் பாதுகாப்பதில் எச்சரிக்கையாய் நாம் இருப்பது என்பது, பயத்தின் விளைவினாலோ, தெய்வீக வழிநடத்துதலின் மீது நம்பிக்கையின்மையினாலோ, நமது கடமையை நிறைவேற்றுவதில் தைரியமின்மையினாலோ இராமல், மாறாக முடிந்தமட்டும் தெய்வீகச் சித்தத்துடன் ஒத்துழைக்க விரும்பும் எச்சரிக்கையாகவும், கவனமாகவும் மாத்திரமே காணப்படுகின்றது.

தம்மைக் கொன்று போடும்படியான பரிசேயரின் மனநிலையை நமது கர்த்தர் அறிந்திருந்தார். இந்தப் பண்டிகையின் காலங்களில் எருசலேம், விருந்தாளிகளால் குவிந்துக்

காணப்படும்போதும், அதுவும் பல ஆயிரங்கள் கலிலேயர்களாக இருக்கும் போதும் மற்றும் கர்த்தருடைய நண்பர்களும், தம்முடைய சீஷர்களாகிய கலிலேயர்களின் நண்பர்களும் காணப்படும் போதும், தமக்கு விரோதமாகச் செயல்படும் விஷயத்தில், பரிசேயர்கள் அதிகமாய்த் தயங்குவார்கள் என்றும் கர்த்தர் அறிந்திருந்தார். பண்டிகையின் ஆரம்ப நாட்களில், புனித பயணம் மேற்கொண்டவர்களுடைய வருகையின் காரணமாக நிகழும் சச்சரவுகளின் வேளையில் தம்மைக் கைதுச்செய்வதற்கும், அதிகாரிகள் மத்தியில் சில ஏற்பாடுகள் போய்க் கொண்டிருப்பதையும் அவர் அறிந்திருக்கக் கூடும். கர்த்தர் சூழ்நிலைக் குறித்த தம்முடைய மேம்பட்ட அறிவின்படி, ஜனங்கள் அனைவரும் எருசலேமுக்குப் போவது வரையிலும் தாம் செல்லாமல் இருந்து, பின்னர் போதனை, அற்புதங்கள் முதலியவைகள் எதையும் செய்யாமல், அமைதியாகப் பண்டிகைக்குப் போனார்.

பண்டிகை வாரத்தின் நடுவில், அவர் ஆலயத்தில் ஜனங்களுக்குப் போதிப்பவராகக் காணப்பட்டார். பண்டிகையின் ஆரம்ப நாட்களில், அவருடைய சத்துருக்கள் அவரைத் தேடியும் அவர் வழக்கம்போல் வராமல் இருப்பதைக் குறித்து ஆச்சரியமடைந்தனர்; ஆனால் இப்பொழுது அவர் வெளியரங்கமாகவும், தைரியமாகவும், போதிப்பதையும் கண்டார்கள்; ஆனால் அவர்மேல் கைப்போடாமல் இருந்தனர், காரணம் அவர்கள் ஜனங்களினிமித்தம் பயந்திருந்தனர்; அவர் தங்களைப் போல் உறுதியற்ற நிலையில் இல்லாமல், உறுதியுடன், "அதிகாரமுடையவராய் ஜனங்களுக்குப்" போதிப்பதை ஜனங்கள் அநேகம் பேர் உணர்ந்தவர்களாக, அவருடைய போதனைக்கு ஆதரவு கொடுக்கின்றனர் என்பதால் பரிசேயர்கள் அஞ்சினர். ஜனங்களில் அநேகர் கவரப்பட்டுள்ளனர் என்பதும், இயேசு செய்துள்ளதைக் காட்டிலும், மேசியா வரும்போது மாபெரும் அற்புதங்கள் செய்யப்படுமோ என ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதும், இயேசு வெளியரங்கமாய்ப் பேசிக்கொண்டிருப்பதும், அதிகாரிகள் அவரைக் குறுக்கிடாததுமான காரியங்கள், "இவர் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ?" என்று கேட்பதற்குச் சிலரை வழிநடத்தினது.

தங்களது துணிவின்மையானது உண்மையில், தாங்கள் பகைக்கும் இயேசுவை அபிவிருத்திச் செய்வதைக் கண்டு, அதிகாரிகள் அவரைப் பிடித்துக் கொண்டுவரும்படிக்குச் சேவகரை அனுப்பிவைத்தார்கள்; இந்தச் சேவகர்களோ, அவருடைய உதடுகளிலிருந்து தேவதூஷணமான (அ) குழப்பம் ஏற்படுத்துவதற்கு ஏதுவான (அ) கலகத்திற்கு ஏதுவான ஏதாகிலும் வார்த்தைகள் வருவதைக் கேட்க வேண்டும் என்று எண்ணினார்கள், இல்லையேல் அவரைக் கைதுச்செய்யும் விஷயத்தில் சேவகர்கள் ஜனங்களுடைய கண்களுக்கு முன்னதாக குற்றம் புரிந்தவர்களாய்க் காணப்பட்டு விடுவார்கள்; ஆகவே அவரைக் கவனிக்கும்படிக்குக் காத்திருந்தனர். "அவருடைய வாயினின்று புறப்பட்டு வந்த கிருபையான வார்த்தைகளினால்" சேவகர்கள் கவரப்பட்டவர்கள். ஆதலால் இயேசுவைக் கைதுச்செய்யாமல், அதிகாரிகளிடத்திற்குத் திரும்பிப்போய், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று கூறினார்கள். இயேசு மேசியாவோ என்ற சந்தேகம் கொண்டிருப்பினும், அவர் தேவனால் அனுப்பப்பட்ட போதகர் என்று இருதயத்தில் நம்பிக்கைக்கொண்டிருந்த நிக்கொதேமு, ஆலோசனைச் சங்கத்தாரில் ஒருவராக இருந்தபடியினால், தனது சத்தத்தை உயர்த்தி, அதிகாரிகளுடன் நட்பு முறையில் வாதிடத்தக்கதாக, அவர்களை நோக்கி: ஒரு மனுஷன் சொல்லுவதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா என்றான் (யோவான் 7:51). நீதிக்கான இந்த வேண்டுதலுக்கும் கூட, "நீரும் கலிலேயனோ?" என்ற ஏளனப் பேச்சுப் பேசப்பட்டது. அவர்களுடைய கொலை பாதக முயற்சியில் அவர்கள் தோற்றதன் காரணமாகக் கோபத்துடன் கலைந்துப் போனார்கள்.

இது கர்த்தருடைய அடிச்சுவட்டைப் பின்தொடரும் அடியார்கள் அனைவரின் விஷயத்திலும் முடிந்தமட்டும் காணப்பட வேண்டும்; அவர்களுடைய வார்த்தைகள் கிருபை பொருந்தினதாகவும், தன்னடக்கமுடையதாகவும், சத்தியத்தின் மீதும், அதனை விரும்பி நாடும் அனைவர் மீதுமான அன்பினால் நிரம்பின இருதயத்தின் வழிந்தோடுதலாகவும் காணப்பட வேண்டும். அவர்களுடைய வார்த்தைகள் எப்பொழுதும் நீதி மற்றும் நியாயத்தின் வரம்புகளுக்கு உட்பட்டதாகவும், கண்டிப்பாக கர்த்தருடைய வார்த்தைகளுக்கு ஒத்துப்போவதாகவும் காணப்பட வேண்டும். இப்படியாகவே ஜீவனுள்ள நிருபங்களாகிய அவர்களுடைய பழக்கவழக்கங்களும், அவர்களுடைய நடத்தைகளும் காணப்பட வேண்டும்;

இதனிமித்தமாக அவர்களுடைய சத்துருக்களும் ஆச்சரியமடைந்து, அவர்கள் இயேசுவுடன் இருந்தவர்கள் என்றும், அவர்கள் இயேசுவினால் போதிக்கப்பட்டவர்கள் என்றும் அறிந்துக்கொள்வார்கள்.

தமது சத்துருக்களுடைய கொலைபாதக திட்டங்களைக் குறித்து மனதில் கொண்டவராகவும், மற்றும் இந்தத் திட்டங்களானது மனுஷகுமாரன் பாடுபட்டு, மரணத்திலிருந்து எழுந்திருப்பார் என்பதை அவருக்கு நினைப்பூட்டுவதாகவும், தம்முடைய ஓட்டத்தின் முடிவு வருவதற்குக் கிட்டத்தட்ட ஆறு மாதங்களே இருக்கின்றது என்பதை அறிந்தவராகவும், நமது கர்த்தர், "இன்னும் கொஞ்சம் காலம் நான் உங்களுடனே இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்" என்றார். இஸ்ரயேல் மேல் கடந்து வரும் எனத் தம்முடைய அப்போஸ்தலர்களிடம் அவர் பிற்பாடு மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில் முன்னுரைக்கும் உபத்திரவங்களையும், அவர் தம்முடைய இரண்டாம் வருகையில் தம்மை இஸ்ரயேலர்களுக்கு மீண்டும் மேசியாவாக வெளிப்படுத்துவதற்கு முன்பு வரையிலும், இஸ்ரயேலர்கள் அநேக கஷ்டங்களைச் சகிக்க வேண்டும் என்பதையும் மனதில் கொண்டவராக, "நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்" என்று கூறினார். அக்காலம் தொடங்கி, உபத்திரவத்துடன் கடந்து வந்த 18 நூற்றாண்டுகளாக, யூதர்கள் மேசியாவைத் தேடிக்கொண்டிருந்தனர். காரணம் அப்போஸ்தலர் சொல்லுகிறது போன்று, "அவருடைய முதலாம் வருகையின் போது, அதாவது அவர்களுடைய சந்திப்பின் நாளில் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் தவிர, மற்றவர்கள் கடினப்பட்டு இருக்கின்றனர்." ஆகவேதான், நமது கர்த்தர், "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள்" என்றும் கூறினார் (லூக்கா 13:35). "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துக்கொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம்பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள். எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்" (ரோமர் 11:27-32).

தாம் போகிற இடத்திற்கு அவர்களால் வரமுடியாது என்று நமது கர்த்தர் கூறினபோது, அவர் ஏற்கெனவே இஸ்ரயேலின் கீழ்மட்ட வகுப்பார்களாகிய ஆயக்காரர்களுக்கும், பாவிகளுக்கும் பிரசங்கம் பண்ணிவருவது போல, அவர் இப்பொழுது பாலஸ்தீனியாவை நிரந்தரமாக விட்டுவிட்டு, கிரேக்கர்களாகிய புறஜாதிகள் மத்தியில் சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய் உபதேசம் பண்ணப் போகின்றாரோ என்னவோ, அதாவது பாலஸ்தீனியாவில் உள்ள யூதர்களுடைய மொழியாகிய சிரியன் மொழியில் அல்லாமல், கிரேக்க மொழியில் உபதேசிக்கப் போகின்றாரோ என்னவோ என ஜனங்கள் யூகிக்க முயற்சித்தனர். இங்குத் "தொலைந்து" போனவர்கள் குறித்து, ஆங்கிலேய இஸ்ரயேர்கள் கொண்டிருக்கும் கோட்பாட்டின் தவறை நம்மால் பார்க்க முடியும். சிதறிக் காணப்பட்டிருந்த யூதர்கள், நமது கர்த்தருடைய நாட்களில் தொலைந்துப் போனவர்களாகக் கருதப்படவில்லை என்பது நிச்சயமே; மேலும் ஜனங்களுடைய இந்த வார்த்தைகள், "சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்கள்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு முழு இசைவுடனே காணப்படுகின்றது. இந்தக் கோத்திரங்கள் முற்றிலுமாக ஒன்றுபட்டு, கலந்துவிட்டபடியால், இவர்களது கோத்திரங்களின் வித்தியாசங்கள் தொலைந்துப் போய்விட்டது எனும் அர்த்தத்தில்தான் இந்தக் கோத்திரங்கள் தொலைந்துப் போய்விட்டனர்; இன்றும் உலகில் மிகச் சொற்பமான யூதர்கள் மாத்திரமே, தங்களது மூதாதையர் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று அறிந்து வைத்துள்ளனர்.

"நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங்கூடாது" என்ற நமது கர்த்தருடைய வார்த்தையானது, வேறு ஒரு கண்ணோட்டத்தில் கவனிக்கப்படத்தக்கதொன்றாகும். அவர் ஓர் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகின்றார் என்றும், அந்த இராஜ்யத்திற்குள் அவர்களால் வரக்கூடாது என்றுமுள்ள அர்த்தத்தில் அவர் பேசவில்லை, மாறாக தாம் பரலோகம்

செல்வதாகவும், பரலோகத்திற்கு அவர்களால் வரக்கூடாது எனும் அர்த்தத்தில்தான் பேசினார். இது அவர் பிற்பாடு யோவான் 8:21-29 வரையிலான வசனங்களில் பேசியுள்ள காரியங்களில் உறுதிபடுகின்றது.

ஆனால் அவிசுவாசமான யூதர்கள் மாத்திரம், பரலோகம் போக முடியாதவர்கள் அல்ல. ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு மற்றும் பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் அனைவரும் பரலோகம் செல்லவில்லை என்று வேதவாக்கியங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன (அப்போஸ்தலர் 2:34; எபிரெயர் 11:39, 40-ஆம் வசனங்களைப் பார்க்கவும்). மேலும் இதே வார்த்தைகள் நமது ஆண்டவரினால், தம்முடைய விசுவாசிகளாகிய பின்னடியார்களிடம் கூறப்படுகின்றது, "பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்" (யோவான் 13:33). கடந்த காலத்திலும் , தற்போதைய காலத்திலும் உள்ள விசுவாசிகளால் நமது கர்த்தரிடத்திற்குச் செல்ல முடியாத காரணத்தினால், கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக சரியாகப் போதிக்கப்பட்டிருக்கும் அனைவரும், அவருடைய திரும்பி வருதலுக்காக, அவருடைய இரண்டாம் வருகைக்காக, மகிமையிலும், இராஜ்யத்தின் வல்லமையிலும் உள்ள அவருடைய வருகைக்காக, யோவான் 14:3-ஆம் வசனத்தின் வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப உண்மையில் எதிர்ப்பார்க்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

நமக்கு முன்பாக சுவிசேஷத்தில் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை, அநேகர் பார்க்கத் தவறிப்போய், இதற்குப் பதிலாக மாம்சீக இஸ்ரயேலர்களுடைய தவறான நம்பிக்கைகளாகிய, "முன்னோர்களின் பாரம்பரியத்தைத்" தவிர, இன்னமும் அஸ்திபாரமற்ற நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்; அதாவது தாங்கள் மரிக்கும்போது தாங்கள் மரிக்காமல், அதுவரையில்லாத அளவுக்கு ஜீவனோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர்; அதாவது தேவனுடைய வார்த்தைகள் ஒன்றுகூட ஆதரிக்காததும், தேவனுடைய வார்த்தைகளில் உள்ள நியாயமான விஷயங்களுக்கு எதிர்மாறாய்க் காணப்படும் நம்பிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர். "(கர்த்தர் தம்முடைய சம்பத்தைச் சேர்த்துக்கொள்வதற்கும், தம்முடைய உண்மையுள்ளவர்களை ஏற்றுக்கொள்வதற்கும் இரண்டாம் வருகையில் வருவார் என்ற) இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:3). உண்மை சுவிசேஷத்தின் இந்த நம்பிக்கையைக் காட்டிலும், உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுவதற்குத் தூண்டும், மாபெரும் தூண்டுதல் எதுவும் இல்லை.

கூடாரப்பண்டிகையின் கடைசிநாள், எட்டாம் நாளாக இருக்கின்றது. பண்டிகையின் ஏழு நாட்களும், பலிச் செலுத்துதலுக்கென ஒதுக்கப்படுகின்றது; எழுபது காளைகள், பலிப்பீடத்தில் தகனிக்கப்படுகின்றன, மேலும் இது முழு உலகத்தின் சார்பாகப் பலிச்செலுத்தப்படுகின்றது எனப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது, ஆனால் எட்டாம் நாள், விசேஷமாக யூதர்களுக்குரிய நாளாக இருக்கின்றது; மேலும் இந்த எட்டாம் நாளானது, இந்த மகிழ்ச்சிகரமான நன்றி செலுத்துவதற்குரிய பண்டிகையிலேயே மிகவும் மகிழ்ச்சியான நாளாக இருக்கின்றது. இதைக் குறித்து **கெய்கீ** அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்...

"அந்த முழு வாரமும், முழுப்பரபரப்புடன் காணப்படுகின்றது**;** மாபெரும் பலிப்பீடமானது வழக்கமாக உள்ள காலை மற்றும் மாலைக்குரிய பலிகள், ஓய்வுநாளின் பலிகளோடு கூடக் காளை, ஆட்டுக்கடா மற்றும் ஆட்டுக்குட்டிகளின் தகன பலிகளுடன், சகல வகையான எண்ணற்ற தனிப்பட்ட பலிகளுடன் கூடப் புகை எழுப்பிக்கொண்டு காட்சியளிக்கும். எருசலேமுக்குள் காணப்படும் ஒவ்வொரு பகுதியும், பள்ளங்களும், சரிவான நிலப் பகுதிகளும், மரங்களின் கிளைகளினாலும், பேரீச்சின் ஓலைகளினாலும், பின்னப்பட்ட கூடாரங்களினால் நிரம்பிக் காட்சியளிக்கும்."

ஆனால் பிரதானமான நாள் என்று அழைக்கப்படும் பண்டிகையின் கடைசிநாளாகிய, விசேஷமான சந்தோஷத்திற்குரிய அந்நாளுக்கு விசேஷமான அம்சம் ஒன்று இருந்தது; அது தண்ணீர் வார்த்தல் பலியாகும்; மேலும் இந்த நாளில்தான், இந்தத் தண்ணீர் ஊற்றப்படுதல் தொடர்புடையதாக, நமது கர்த்தர் சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில்

வந்து, பானம் பண்ணக்கடவன்" என்று கூறினார். சமாரியா ஸ்திரீயுடன் கர்த்தர் பண்ணின தனிப்பட்ட உரையாடலில் சொன்னது போலவே, இங்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பவராகத் தம்மை முன்வைத்தார். அவரை ஏற்றுக்கொள்கின்ற அனைவருக்கும் அவர் ஜீவ ஊற்றாகவும், சத்தியத்தின் ஊற்றாகவும், புத்துணர்வின் ஊற்றாகவும் காணப்படுகின்றார். ஒவ்வொரு மனித இருதயத்திலும் தாகங்கள், ஏக்கத்துடன் கூடிய வாஞ்சைகள் காணப்படுகின்றன; மேலும் இன்பம் (அ) பிரபலம் (அ) ஐசுவரியம் எனும் பூமிக்குரிய ஊற்றுகளிலிருந்து, இந்த ஏக்கங்களைத் தணிக்க நாடியுள்ள அனைவரும், இந்தப் பூமிக்குரிய ஊற்றுகள் தங்களைத் திருப்திப்படுத்தவில்லை என்று உணர்ந்துள்ளனர்; ஆனால் ஜீவத்தண்ணீரை, சத்தியத்தை, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் மாத்திரமே, உண்மையில் திருப்திப்பண்ணும் பங்கைப் பெற்றிருக்கின்றனர். கர்த்தாவே, இந்தத் தண்ணீரை எங்களுக்கு எப்பொழுதும் தருவீராக!

கூடாரபண்டிகையின் கடைசி நாளாகிய, பிரதானமான நாளைக் குறித்த ஒரு சுவாரசியமான பதிவை, திறமிக்க எழுத்தாளர் **எடல்செய்ம்** அவர்கள் பதிவு செய்துள்ளார்:-

"வழிபாட்டில் பங்குக்கொள்வதற்கென, விடியும் நேரத்தில் தங்களது "கூடாரங்களை" விட்டு, பண்டிகையின் கடைசி நாளாகிய, பிரதானமான நாளில் புறப்படும் எண்ணற்ற ஜனங்களில், ஒருவராக நாமும் காணப்படுகின்றோம் என வைத்துக்கொள்வோம். பிரயாணிகள் அனைவரும் விழா வரிசையில் காணப்பட்டனர். ஒவ்வொருவனும் தனது வலது கரத்தில் ஆற்றலரிகளையும், பேரீச்சத்தின் ஓலைகளையும் தூக்கிச் செல்கின்றான். "முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும், பேரீச்சின் ஓலைகளையும், தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள்" (லேவி 23:40). ஒவ்வொருவனும் இடது கையில் எலுமிச்சை வகையைச் சேர்ந்த பாரடைஸ் ஆப்பிள் என இன்று அழைக்கப்படும் கனிகளைத் தூக்கிச் செல்கின்றான். இப்படியாகக் கைகளில் வைத்திருக்கும் விழா கூட்ட ஜனங்கள், மூன்று கூட்டமாகப் பிரிவர். இந்த மூன்றில், ஒரு கூட்டத்தார், இசையின் சத்தம் ஒலிக்கும்போது, ஆலயத்திலிருந்து ஊர்வலமாய்ப் புறப்படுகின்றனர். இவர்களுக்குப் பின்னாக மூன்று (log/pint) பின்ட் தண்ணீர் கொள்ளும் பொன்னினால் ஆன பெரிய பானையைச் சுமந்தவராக ஓர் ஆசாரியன் போவார். இவர்கள் ஆலயத்திற்குத் தெற்கேயுள்ள பள்ளத்தாக்கிலுள்ள சீலோவாம் குளத்திற்குப் போவார்கள். இந்தக் குளத்திலிருந்து ஆசாரியன் பொன்னினாலான பானையில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு, அதை ஜனங்களின் ஆரவார குரல்கள் மற்றும் பூரிகைகள் மற்றும் கைத்தாளங்களின் ஒலியின் மத்தியில் ஆலயத்திலுள்ள பிரகாரத்திற்குக்கொண்டு வருவார். இப்பண்டிகையில் களிகூருதல் மிகவும் பெரியதாகக் காணப்படுவதினால், இந்தப் பண்டிகைக்கும், இதிலிருந்து வேறுபட்ட மற்றப் பண்டிகைகளிலும் ஒருபோதும் கலந்துக்கொள்ளாதவர்களுக்கு, களிகூருதல் என்றால் என்ன என்பது தெரியாது என ரபிக்கள் கூறுவதுண்டு. அன்றாட காலை பலிச் செய்யும் பொருட்டு, தகன பலிச் செலுத்தப்படுவதற்கான துண்டுப்பாகங்கள் மாபெரும் பலிபீடத்தில் வைக்கையில், தண்ணீரண்டைக்குப் போன கூட்டம் திரும்பத்தக்கதாக, நேரம் சரியாய்க் கையாளப்படுகின்றது. பொன்னினாலான பானையிலுள்ள தண்ணீர், பலிப்பீடத்தின் மீது ஊற்றப்படுகின்றது. உடனடியாக சங்கீதம் 113 முதல் 118 அடங்கிய மாபெரும் (Hallel) வாழ்த்திப் புகழுதல், இசையுடன் கூட, மென்மையான குரலில் பாடப்படுகின்றது. இந்த விழாவின் காலை வழிபாடு முடியும்போது, அந்நாளுக்குரிய விசேஷமான பலிகளை ஆசாரியர்கள் ஆயத்தப்படுத்துகையில், வழிபாடுகளுக்கு கொஞ்சம் ஓய்வு கொடுக்கப்படுகின்றது. இந்தத் தருணத்தில் ஆலயம் முழுவதும் கேட்குமளவுக்குச் சத்தமாக இயேசுவின் குரல் தொனித்தது. அவர் அங்கு நடந்த வழிபாடுகளைக் குறுக்கிடவில்லை, காரணம் வழிபாடுகள் அப்பொழுதுதான் முடிந்தது; அவ்வழிபாட்டிற்கான அர்த்தத்தையே அவர் விளக்கினார்; அவர் அவ்வழிபாட்டினை நிறைவேற்றினார்.

---

**R3508**

# "கூடாரப்பண்டிகை"

## யோவான் 7:37-46

"அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை."
( வசனம்-46)

"முதலாம் மாதத்தின் 15 முதல் 22 வரையிலான பஸ்கா பண்டிகையும், ஏழாம் மாதமாகிய திஸ்ரியின் 15 முதல் 22 வரையிலான கூடாரப்பண்டிகையும், யூதர்களுடைய இரண்டு மாபெரும் பண்டிகைகளாகும். இந்த இரண்டு மாபெரும் பண்டிகைகளும், யூதர் வருடத்தைப் பிரித்தது; மேலும் ஒன்றாய்க் கூடி வாரத்தைச் செலவிடுவதற்கும், கர்த்தருக்கு நன்றி செலுத்துவதற்கும், அவரிடம் வாக்குறுதி அளிப்பதற்குமென இராஜ்யம் எங்கும் இருக்கும் ஜனங்கள், தலைநகரமாகிய எருசலேமுக்கு வருவார்களென எதிர்ப்பார்க்கப்படும் மாபெரும் தருணங்களாக இந்த இரண்டு பண்டிகைகளும் காணப்பட்டன. வருடத்தின் ஆரம்பத்தை, இந்த இரண்டு பண்டிகைகளும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றன. ஒன்று சிவில் ஆண்டின் துவக்கத்தையும், மற்றொன்று சர்ச்/சமய ஆண்டின் துவக்கத்தையும் குறிக்கின்றது; எனினும் இந்த இரண்டு வருடமும் மத அடிப்படையில் கூறப்படலாம், காரணம் இத்தேசத்தின் அரசாங்கம், மத அஸ்திபாரத்தின் மீது இயங்குகின்றது/காணப்பட்டது. இஸ்ரயேல், தேவனுடைய தேசமாக இருக்கின்றது, மேலும் அதன் பிரமாணங்கள் தேவனிடத்திலிருந்து வந்ததாகும்.

இந்தப் பண்டிகைகள் ஒவ்வொன்றும் சிறப்பிற்குரிய பலிகளைக்கொண்டிருந்து, நமது கர்த்தரையும், அவருடைய பலியையும், அவருடைய சரீரமாகிய சுவிசேஷ யுக சபையையும் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. வருடத்தின் துவக்கத்திலுள்ள பஸ்கா பண்டிகையானது, எகிப்திலிருந்ததான விடுதலைக்கான ஆண்டு நிறைவு நாளாக (anniversary) இருக்கின்றது; பஸ்கா ஆட்டுக்குட்டி, நமக்கான பஸ்கா பலியாகிய கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கின்றது; மற்றும் பஸ்காவைத் தொடரும் பண்டிகையானது, அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாக மரணத்திலிருந்து தப்புவிக்கப்பட்ட கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும் வரும் சுதந்தரம், சந்தோஷம் மற்றும் ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய மேன்மையான பலிகளுக்கும், இறுதியில் முழு உலகத்தின் பாவத்திற்கான ஒப்புரவாகுதலுக்கும் மற்றும் மனுக்குலத்தின் உலகத்தின் மீது இன்னமும் நிலைத்திருக்கும் சாபம் இறுதியில் மாற்றப்படுதலுக்கும் நிழலாக இருக்கும், பாவநிவாரண நாள் மற்றும் பாவத்திற்கான அந்நாளுக்குரிய பலிகளுடன் சேர்ந்தே இலையுதிர்கால (fall) பண்டிகையும் நடைபெறுகின்றது. இப்பண்டிகையானது, இஸ்ரயேலர்கள் வனாந்தரத்திலிருந்து, வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குள் கடந்து வந்தபோது நிறுவப்பட்டது. இப்பண்டிகையானது, வனாந்தரத்தின் வாழ்க்கையையும், நிலையாக தங்கும் இடத்தை அவர்களால் அனுபவிக்க முடிந்த கானானுக்குள் பிரவேசிப்பதையும் நினைவுகூருவதாக இருந்தது. உண்மையில் இது புதிய வருடத்திற்கான பண்டிகையாகவும், அவ்வருடத்தின் அறுவடைக்காக அல்லது சேர்ப்புக்காலத்திற்காக நன்றி ஏறெடுக்கும் தருணமாகவும் இருந்தது. (யாத்திராகமம் 23:16; லேவியராகமம் 23:33-44)

### "கூடாரப்பண்டிகையின் கொண்டாட்டம்"

இத்தருணத்தின்போது ஜனங்கள் செய்யும் காரியத்தைக் குறித்துப் பின்வருமாறு **எடர்சேயிம்** மற்றும் இன்னும் பலர் விவரிக்கின்றார்கள்:-

"எருசலேம் எங்கும், முற்றங்களிலும், தெருக்களிலும், வீட்டுக்கூரைகளிலும், சமநிலையான இடங்களிலும் கூடாரங்கள் போடப்பட்டிருக்கும். இந்தக் கொடி வீடு (அ) கூடாரங்கள் பேரிச்சம் மரங்கள், ஒலிவ மரங்கள், ஆற்றலரிகள், தேவதாரு மரங்கள், காட்டத்தி மரங்கள் முதலியவைகளின் ஓலைகளினால்/கிளைகளினால் உண்டாக்கப்படுகின்றது. எவரும் வீடுகளில் தங்குவதில்லை, எல்லோரும் இந்தக் கூடாரங்களிலேயே தங்குகின்றனர். பட்டணத்திலும், நாட்டிலுமுள்ள ஜனங்கள் அனைவருமே கூடாரங்களில் வசிப்பார்கள். அந்தஸ்தில் இருக்கும் வித்தியாசங்கள், ஏழை

மற்றும் ஐசுவரியவானுக்கு இருக்கும் வித்தியாசங்கள் கொஞ்சக் காலம் மறக்கப்படுகின்றது, ஏனெனில் ஒவ்வொருவரும், தன்னுடைய அயலானைப் போலவே, கூடாரங்களில் தங்குகின்றவனாய் இருக்கின்றான்."

"ஒவ்வொரு நாள் காலையிலும் இசையுடன், சந்தோஷத்துடன் ஓர் ஊர்வலமானது சீலோவாம் குளத்திற்குச் சென்று, பொன்னினாலான பானையில் தண்ணீர் மொண்டுக் கொண்டு வந்து, அல்லேலூயா என்று குரல்கள் தொனிக்கப்படுதலின் மத்தியில் பலிப்பீடத்தின் மீது ஊற்றப்படுகின்றது."

"இரவில், வெளிச்சத்திற்காகப் பொன்னினாலான நான்கு அகல்களை உடைய, பொன்னினாலான நான்கு கொத்து விளக்குத் தண்டுகளானாது (candelabra) பிரகாரத்தினுடைய நடுவில் வைக்கப்படுகின்றது; இதிலிருந்து வரும் வெளிச்சமானது முழுப் பட்டணமும் காணத்தக்கதாய் இருக்கும். இந்த விளக்குகளைச் சுற்றி, பயபக்தியுள்ள புருஷர்கள் தங்களது கைகளில் தீவட்டிகளை வைத்துக்கொண்டு, துதிப்பாடல்களைப் பாடிக்கொண்டு, ஜனங்களுக்கு முன்பாக ஆடுவார்கள்; இவர்கள் இப்படியாக ஆடுகையில் லேவியர்கள் 122-134 வரையிலான 15 சங்கீதங்களைக்குறிக்கும் (சங்கீதங்களுக்கு அடையாளமான), ஆலயத்திலுள்ள ஸ்திரீகளுக்கான பிரகாரத்திற்குக்கொண்டுச் செல்லும் 15 படிகளில் நிறுத்தப்பட்டு, இசைக்கருவிகளின் இசையுடன் பாடப்படும் பாடல்களுடன் இணைந்துப் பாடுவார்கள்."

"ஆலயத்தின் இந்த வெளிச்சம் என்பது ஆலயத்திலிருந்து, புற சமயத்தாரின் இருளான இரவின் மீது பிரகாசிக்கும் ஒளிக்கு அடையாளமாய் இருந்தது; பின்னர் விடிகையில், தேவனுடைய சேனையாகிய ஆசாரியர்களின் வெள்ளி பூரிகைகளின் தொனியுடன், பண்டிகைக்கான பூரிகையின் தொனிக்கும் ஒலியானது நித்திரைப் பண்ணிக் கொண்டிருப்பவர்களை விழித்தெழச் செய்கின்றது மற்றும் அது அஞ்ஞான மார்க்கத்திற்கு எதிரான, தீர்க்கமான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றது."

"பண்டிகையின் கடைசி சாயங்கால வேளையில்தான், இந்தப் பிரமாண்டமான ஒளியின் வெளிச்சம் அணைய இருக்கையில், கிறிஸ்து, "நானே உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றேன்" என்று கூறி தம்முடைய கவனத்திற்கு அனைவரையும் திருப்பினார் என்று எண்ணப்படுகின்றது; அதாவது என்றென்றும் பிரகாசிக்கின்றதும், ஆலயத்திலும், பரிசுத்த பட்டணத்திலும் மாத்திரமல்லாமல், முழு உலகத்திலும் நீதியின் சூரியனாக ஒளியூட்டப் போகின்றதுமான தம்மிடத்தில் யோவான் 8:12-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறிக் கவனத்தைத் திருப்பினார்."

## "பண்டிகையின் கடைசிநாளாகிய அந்தப் பிரதான நாள்"

பண்டிகையினுடைய ஏழு நாட்களின் கடைசிநாளானது, பிரதான நாள் என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கடைசி நாளில்தான் முழுப் பண்டிகையினுடைய அனுசரிப்பும், மற்றும் சந்தோஷமும் உச்சக்கட்ட நிலையயை அடைகின்றது. மீண்டுமாக எடல்சேயிம் மற்றும் இன்னும் பலர் கூறுவதைப் பார்க்கலாம்:-

"யூதர்களுடைய பாரம்பரியத்தின்படி, தேவனுடைய பிரசன்னத்திற்கும், வழிகாட்டுதலுக்கும் அடையாளமாய் இருக்கும் காலை வேளையிலுள்ள மேகஸ்தம்பமும், இரவு வேளையிலுள்ள அக்கினி ஸ்தம்பமும், இதே திஷ்ரி மாதம் 15-ஆம் தேதியில்தான் இஸ்ரயேலர்களுக்குத் தோன்றியது. திஷ்ரி மாதம் 15-ஆம் தேதியே, இந்தப் பண்டிகையினுடைய முதலாம் தேதியாகும். அந்த நாளில்தான் மோசே மலையிலிருந்து இறங்கி வந்து, ஜனங்கள் மத்தியில் தேவனுடைய கூடாரம் நிறுவப்பட வேண்டும் என்று ஜனங்களுக்குத் தெரிவித்ததாக இருக்கின்றது. சாலொமோனின் ஆலயம் பிரதிஷ்டைப் பண்ணப்பட்டதும், ஆலயத்தின் மீது ஷெக்கினா மகிமை இறங்கி வந்ததும் இப்பண்டிகையினுடைய நாட்களில்தான் என்று நாம் பார்க்கின்றோம். (1 இராஜாக்கள் 8; 2 நாளாகமம் 7).

"பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளே, இந்த அனைத்து அடையாளங்களுக்குமான உச்சக்கட்டமாக இருக்கின்றது. அதிகாலையில் ஜனங்கள் தங்களது இடது கையில் பாரடைஸ் ஆப்பிளுடனும் (ஆரஞ்சு பழத்துடனும்), வலது கையில் ஓலைகளுடனும், ஆலயத்திற்குத் தெற்கே இருக்கும் சீலோவாம் குளத்திலிருந்து தண்ணீர் மொண்டுக்கொள்வதற்குரிய பொன்னினாலான பானையைச் சுமக்கும் ஆசாரியனுக்குப் பின்னாக, இசையின் சத்தத்துடன் ஊர்வலமாகச் செல்வார்கள்; இந்தக் குளத்திலிருந்து ஆசாரியன் பொன்னினாலான பானையில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு, அதை ஜனங்களின் ஆரவாரக் குரல்கள், பூரிகைகள் மற்றும் கைத்தாளங்களின் ஒலியின் மத்தியில் ஆலயத்திலுள்ள பிரகாரத்திற்குக்கொண்டு வருவார். அன்றாட காலை பலிப்பொருட்டு, தகனபலி செலுத்தப்படுவதற்காகத் துண்டுப்பாகங்கள் மாபெரும் பலிப்பீடத்தில் வைக்கையில், தண்ணீரண்டைக்குப் போன கூட்டம் திரும்பத்தக்கதாக, நேரம் சரியாய்க் கையாளப்படுகின்றது."

"ஏழு நாட்களும் ஆசாரியன், "யாவே இப்பொழுது இரட்சிப்புக் கொடுத்தருளும், ஓ; யாவே வளமைக் கொடுத்தருளும்!" என்று கூறி, பலிப்பீடத்தைச் சுற்றி வருவார். ஆனால் ஏழாம் நாள் அன்றோ, ஏழு முறை சுற்றி வந்தபோது, எப்படி எரிகோ மதில் விழுந்தது என்பதை நினைவில் கொண்டவர்களாகவும், தேவனுடைய நேரடியான இடைபடுதலின் காரணமாக, யேகோவாவிற்கு முன்னதாக அந்நிய தேசங்களின் மதில்கள் விழுந்து, அவருடைய ஜனங்கள் போய், சொந்தமாக்கிக்கொள்ளத்தக்கதாக உலகம் தங்களுக்கு முன் திறந்துக்கிடக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பைக்கொண்டவர்களாகவும் ஏழு முறை பலிப்பீடத்தைச் சுற்றி வந்தார்கள்."

"பொன்னினாலான பானையில் நிரம்பியிருந்த தண்ணீரானது பலிப்பீடத்தின் மீது ஊற்றப்படுகின்றது. இந்த அனுசரிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், பரிசுத்த ஆவி பொழியப்படுவதற்குரிய அடையாளமாகவும் கருதப்படுகின்றது. இந்தத் தண்ணீர் ஊற்றப்பட்ட உடனே மாபெரும் வாழ்த்திப்பாடுதல் நடக்கின்றது. இது 113-118 வரையிலான சங்கீதங்களை உள்ளடக்குகின்றது. இவைகள், இசையுடன் கூட, விடையளித்தலுடன் பாடப்படுகின்றது. லேவியர்கள் சங்கீதத்தின் முதல் வரியை இசையுடன் கூடப் பாடும் போது, ஜனங்களும் அதை அப்படியே திரும்பவும் கூறுவார்கள்; ஆனால் மற்ற வரிகள் பாடப்படும்போது, அவர்கள் அல்லேலூயா என்று விடையளிப்பார்கள். பின்னர் ஆசாரியர்கள் தங்களது வெள்ளியிலான பூரிகைகளை மூன்று மடங்கு வேகத்துடன் ஊதுவார்கள்."

## "பண்டிகையில் இயேசு"

நம்முடைய பாடம், நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக அவரால் கலந்துக்கொள்ளப்பட்ட கடைசிக் கூடாரப்பண்டிகை பற்றியதாகும். நம்முடைய கடந்த பாடத்தில், பஸ்கா பண்டிகைக்கென ஜனங்கள் எருசலேமை நோக்கி பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கும் வேளையில்தான், ஐயாயிரம் பேர்ப்போஷிக்கப்பட்ட சம்பவம் நடந்தது என்று நாம் பார்த்தோம். ஆகவே நம்முடைய தற்போதைய பாடத்தின் சம்பவமானது சுமார் ஆறு மாதங்களுக்குப் பிற்பாடே நடந்திருக்க வேண்டும். அநேகமாக ஒரு வருடமும், ஆறு மாதமும் கடந்திருக்க வேண்டும். ஏனெனில், "யூதர்கள் அவரைக் கொன்று போட வகைத் தேடின காரணத்தினால், அவரால் யூதர்கள் மத்தியில் சஞ்சரிக்க முடியாமல் அதிக காலம் இருந்தது."

இந்தப் பண்டிகையின்போது, இயேசு இதில் கலந்து கொள்வாரா, இல்லையா என அநேகர் எண்ணினார்கள், காரணம் கர்த்தருக்கு எதிராக பிரதான ஆசாரியர்கள் மிகவும் பொறாமைக்கொண்டிருந்தனர் என்றும், மிகவும் வெறுப்புக்கொண்டிருந்தனர் என்றும், மிகுந்த விரோதம்கொண்டிருந்தனர் என்றும், அவருடைய ஜீவனுக்கு அச்சுறுத்தல் காணப்பட்டது என்றும் அநேகர் நன்கு அறிந்திருந்தார்கள் என்பது தெரிகின்றது. கர்த்தர் தம்முடைய வேளை வருவது வரையிலும், தம்முடைய ஜீவன் தெய்வீகப் பாதுகாப்பின் கீழ்க்காணப்படுகின்றது என்பதை உணர்ந்திருந்ததினால், ஆபத்தான பாதையில் அவசியமில்லாமல் சென்று, தெய்வீகப் பாதுகாப்பை அவர் சோதிக்க முற்படாமல், மாறாக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தம்முடைய வழியை வனைந்துக்கொண்டதைப் பார்க்கின்றோம். இப்படியாகவே தம்முடைய சீஷர்களுக்கும் அவர் புத்திமதி அருளினார், அதாவது, "ஒரு

பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால், மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்” என்று கூறினார் (மத்தேயு 10:23).

அத்தருணத்தில் நம்முடைய கர்த்தருடைய சகோதரர்களில் சிலர் (அநேகமாக அவருடைய சித்தப்பா/பெரியப்பா பிள்ளைகளாக இருக்க வேண்டும்; ஏனெனில் அக்காலத்தில் சித்தப்பா/பெரியப்பா பிள்ளைகள்/cousins “சகோதரர்கள்” என்று அழைக்கப்படுவதுண்டு). அவருடைய மேசியாத்துவத்தின் மீது சந்தேகம் உடையவர்களாக அவர் எருசலேமுக்குச் சென்று, அங்கு அவருடைய வல்லமையான கிரியைகளை நடப்பிக்கும்படிக்கு வற்புறுத்தினார்கள், ஏனெனில் எருசலேமில்தான் அவருடைய வல்லமையான கிரியைகளைப் பார்ப்பதற்கும், விமர்சிப்பதற்கும், குற்றம் கண்டுபிடிப்பதற்கும், கூடுமானால் அவர் உரிமைப் பாராட்டிக்கொண்டிருப்பவைகளையும், அற்புதங்களைத் தவறு என மறுத்து வாதிடுவதற்கும், தேசத்தின் கல்விமான்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமென அவருடைய சகோதரர்கள் எண்ணினார்கள். யோவான் 7:8-ஆம் வசனத்தின் வார்த்தைகள், நமது கர்த்தருடைய பதிலாக இருந்தது. ஒருவேளை நமது கர்த்தர் பண்டிகையினுடைய ஆரம்ப நாளிலேயே வந்திருப்பாரானால், அது மதபோதகர்களுடைய பகைமையை இன்னும் அதிகமாய்த் தூண்டி விட்டிருந்திருக்கும். அவர் தாமதமாய்ப் பண்டிகைக்குச் சென்றது, எவ்விதத்திலும் அவருடைய போதனைகள் பிரசித்திப் பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை, ஏனெனில் ஜனங்கள் அவரைக் குறித்து விசாரித்து, அவரைக் குறித்து ஆச்சரியப்பட்டு, அவர் உரிமைப் பாராட்டிக்கொண்டவைகளைக் குறித்து ஆராய்ந்து, ஒவ்வொருவரும் தங்களுடைய பட்டணங்களில், கிராமங்களில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் ஒருவருக்கொருவர் தெரிவித்தவர்களாகவே காணப்பட்டார்கள். பண்டிகை வாரத்தின் பாதியில்தான் நமது கர்த்தர் காட்சியில் நுழைந்து, நேரடியாக ஆலயத்திற்குச் சென்று, ஜனங்களுடைய பயபக்தியின் உணர்வானது, உச்சக்கட்டமான நிலையில் காணப்படும்போது, நமது கர்த்தர் அவர்களுடைய கவனத்தை வருடந்தோறும் அவர்களால் அனுசரிக்கப்பட்டு வரும் காரியங்கள் அடையாளப்படுத்தும் ஆழமான ஆவிக்குரிய காரியங்களின் மீது திருப்பினார்.

கர்த்தருக்குப் பானபலியாக, பொன்னினாலான பானையிலுள்ள தண்ணீர் பலிப்பீடத்தின் மீது ஊற்றப்பட்டுத் தீரும்போதும், வெப்பமான நிலையில் ஜனக்கூட்டத்தார் அநேகமாக தாகத்துடன் இருக்கையில் மற்றும் தண்ணீரைப்பார்த்த மாத்திரத்தில் தண்ணீருக்கான தாகம் இன்னும் அதிகரிக்கப்பட்ட நிலையில் இருக்கும் போதுதான், “பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்” என்ற வார்த்தைகளைக் கூறியிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது (யோவான் 7:37, 38).

தீர்க்கத்தரிசி முன்னுரைத்ததுப் போல, நமது கர்த்தர் உவமைகளாகவும், மறைப்பொருள்களாகவும் பேசியுள்ளார் என்று ஜனங்களும் கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கேட்டுக்கொண்டிருந்த ஜனக்கூட்டத்தாரில் இருந்த எத்தனை பேர், அதாவது எத்தனை சொற்பமானவர்கள் இந்த அவருடைய செய்தியின் அர்த்தத்தைப் புரிந்திருப்பார்கள்! ஆவிக்குரிய யுகத்தின் கீழ் நமக்கு இருக்கும் பாக்கியமான சூழ்நிலைகளிலுங்கூட, எத்தனை சொற்பமானவர்களே அவருடைய இந்த வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

## “ஊற்றுக்கண்ணில் பருகுதல்”

சொல்லர்த்தமான தாகம் என்ன என்றும், சொல்லர்த்தமான தண்ணீரைக் குடிப்பதன் மூலம் வரும் புத்துணர்வு எப்படி இருக்கும் என்றும் அனைவருக்கும் தெரியும்; மேலும் கர்த்தர் கொடுக்க இருக்கிறதான ஜீவத்தண்ணீர் தொடர்புடைய அவருடைய வார்த்தைகளைப் புரிந்துக்கொள்ள வேண்டுமெனில், நாம் நிழலை முன்னே கொண்டு நிறுத்தி, திருப்திப்படுத்தப்பட வேண்டிய மனித சுபாவத்தினுடைய மற்றத் தாகங்கள் மற்றும் ஆசைகளும் இருக்கின்றது என்றும், திருப்திப்படுத்தாதப் பட்சத்தில் அமைதியின்மையையும், பெரும் துயரத்தையும் கொடுக்கும் என்றும் நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும். இந்த

இருதயத்தின் ஆசைகளை நாம் சுருக்கமாக சமாதானம், அமைதி, சந்தோஷம், ஐக்கியத்திற்கான தாகம் என்று குறிப்பிடுகின்றோம். இப்படியான தாகம்கொண்டிருப்பவர்கள் மாத்திரமே, "பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறப்படுகின்றனர். நம்முடைய சந்ததியிலுள்ள அநேகர், தற்போதைய காலத்தில் மனரீதியிலும், சரீரரீதியிலும் மிகவும் சீரழிந்துப்போய் உள்ளபடியால், அவர்களால் இப்பொழுது அனுபவித்துக்கொண்டிருப்பவைகளைக் காட்டிலும் மேலானதாய் இருக்கும் விஷயங்களுக்காக பசிதாகம் பெற்றிருப்பதில்லை; அதாவது, அவர்கள் பெற்றிருக்கும் பூரணமற்ற விஷயங்களினால் ஏற்கெனவே நிரப்பப்பட்டு, திருப்தியடைந்திருக்கின்றார்கள். இப்படியாக இருப்பவர்களுக்கல்லாமல், மாறாக பசிதாகம் உள்ளவர்களுக்கே, கர்த்தர், "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" என்று கூறினார்.

இதுவே இந்தச் சுவிசேஷ யுகத்திற்குரிய அழைப்பாகும். தாகங்கொண்டவர்களையே கர்த்தர் நாடி, கண்டுபிடிக்கின்றார்; மேலும் இப்படிப்பட்டவர்கள் கிருபை மற்றும் சத்தியம் எனும் அவருடைய ஊற்றில் பருகுவார்களானால், அவர்கள் உலகத்தினால் கொடுக்க முடியாததும், எடுத்துப் போட முடியாததுமான ஆறுதலை, சந்தோஷத்தை, சமாதானத்தை, இளைப்பாறுதலை, ஆசீர்வாதத்தை, திருப்தியைக் கண்டடைவார்கள். ஆகவே தாகம் உள்ளவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள்; மற்றும் அடிக்கப்பட்ட கன்மலையாகிய, நமது கர்த்தரிடமிருந்து வரும் தண்ணீரை இப்பொழுது பருகிக்கொண்டிருப்பவர்கள், தயை பெற்றிருக்கின்றவர்களாய் இருக்கின்றனர் (1 கொரிந்தியர் 10:4).

நமது கர்த்தருடைய வார்த்தையை அப்போஸ்தலர் விவரிக்கையில், அவர் முதல் பாகத்தையே விவரிக்கின்றாரே ஒழிய, இரண்டாம் பாகத்தை அல்ல. "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (யோவான் 7:39). ஆவியைப் பெற்றுக்கொள்வது என்பது, நமது தாகத்தைத் தணிப்பதாகும். ஜீவகாலம் முழுவதும் இந்த ஊற்றில் நாம் பருகுகின்றவர்களாய் இருக்கின்றோம். கர்த்தருடைய சாயலில் நாம் விழிக்கும் வரையிலும் நாம் திருப்தியடைகிறதில்லை; பின்னர் சங்கீதக்காரன் கூறியுள்ள பிரகாரம், "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" என்று இருக்கும்; அதாவது இந்த அழியக்கூடியது, அழியாமையினால் ஜெயமாய் விழுங்கப்படும்போது, நாம் நமது அன்பார்ந்த மீட்பர் போல காணப்பட்டு, அவர் இருக்கிற வண்ணமாக அவரைத் தரிசித்து, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக, அவருடைய மகிமையில் பங்கடைவோம்.

## "பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை"

பரிசுத்த ஆவியானது தீர்க்கத்தரிசிகள் மீது செயல்படுத்தப்பட்டது; மேலும் அதனுடைய செயலாற்றலின் கீழ் அவர்கள் பேசவும், எழுதவும் செய்தார்கள். ஆனால் பெந்தெகொஸ்தே நாள் முதல் சுவிசேஷ யுக சபைக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவி வித்தியாசமானதாகும்; அது தீர்க்கத்தரிசனத்தின் ஆவியாய் அல்லாமல், புத்திரசுவிகாரத்தின் ஆவியாகவும், புரிந்துக்கொள்ளுதலின் ஆவியாகவும் இருக்கின்றது. நம் சார்பாக இயேசு ஈடுபலியாகக் கொடுப்பது நிறைவேறி, அவர் பரத்திற்கு ஏறி, அந்தப் பலியின் புண்ணியத்தை நம் சார்பில் பிதாவிடம் ஒப்படைத்து, அது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவது வரையிலும், தேவனுடைய புத்திரர்களாக எவரும் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுவது என்பது கூடாத காரியமாக இருந்தது. பின்னரே புத்திரசுவிகாரத்தின் ஆவியாகிய இந்த ஆசீர்வாதமானது, அப்போஸ்தர்கள் மீது பொழியப்பட்டது. அதுமுதல் கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைவரும், உடன் அங்கங்களுடன் சேர்ந்து, இரட்சிக்கப்படும் நாள் வரையிலும், அனைவரையும் முத்திரித்துள்ள அந்த ஒரே ஆவியின் பங்காளிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபேசியர் 4:30).

## "நதிகள் ஓடுதல்"

"அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவான் 7:38). இவ்வசனமானது பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறவில்லை. பெந்தெகொஸ்தே நாளில், கர்த்தருடைய பின்னடியார்கள் ஆவிக்குரிய சத்தியங்களைப் பருக மாத்திரமே

ஆரம்பித்தார்கள்; மற்றும் இந்தச் சத்தியங்கள் மூலம் இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ள அநேக அங்கங்களுடைய ஒரே சரீரத்திற்குள் இணைக்கப்படுகின்றனர். இந்த ஒரே சரீரத்திலிருந்துதான் இறுதியில், முழு உலகத்திற்கான ஆசீர்வாதத்திற்கென ஆயிரவருட யுகத்தின் போது, ஜீவத்தண்ணீரின் நதிகள் ஓடிவரும். இதைக் குறித்து நமது கர்த்தர் பேசுகையில், "நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" (யோவான் 12:48); அதாவது கடைசி நாள் என்பது மாபெரும் நாளாகிய, ஆயிரவருட யுகமாகும்; தேவனுடைய வாயினின்று புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையினாலும் உலகமானது நியாயந்தீர்க்கப்படும். ஜீவத்தண்ணீர் என்பது சத்தியத்தைக் குறிக்கின்றது; மேலும் கர்த்தருடைய வாயினின்றும், மகிமையடைந்த சபையின் வாயினின்றும் புறப்படும் இந்த ஜீவத்தண்ணீர் (அ) சத்தியத்தின் அளவானது நதிபோன்று இருப்பதினால், அது பூமியின் அனைத்துப் பாகங்களையும் சென்றடைகின்றதாய் இருக்கும். பூமி முழுவதும் தேவனுடைய மகிமைப் பற்றின அறிவினால் நிரப்பப்படும்.

தற்காலத்தில் ஜீவத்தண்ணீரின் ஊற்றில் பருகுகின்றவர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகப் பரிசுத்தமாக்கப்படுகின்றனர், மற்றும் நமது கர்த்தர் இவர்களைக் குறித்துப் பேசுகையில், இவர்களுக்குள்ளான தம்முடைய கிருபையும், சத்தியமும் நித்திய காலத்திற்குரியதுமான ஜீவனைக் கொடுக்கும் ஊற்றாக இருக்கின்றது என்று கூறுகின்றார். வெளிப்படுத்தின விசேஷத்தின் 21-ஆம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பல்வேறு அங்கங்கள் மகிமையில் ஒன்றுசேர்க்கப்படுவது குறித்தக் காட்சிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒட்டுமொத்தமாக புதிய எருசலேம் என்றும், அதினின்று நம்முடைய கர்த்தர் இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றபடி, ஜீவத்தண்ணீரின் நதியானது வரும் என்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. அது ஜீவத்தண்ணீருள்ள மாபெரும் ஆறு ஆகும், மற்றும் அதன் இரண்டு கரைகளிலும், அதனால் போஷாக்களிக்கப்பட்ட நல்ல கனிகள் கொடுக்கும் ஜீவ விருட்சங்கள் காணப்படுகின்றன; மற்றும் அந்த விருட்சங்களின் இலைகளானது, ஜாதிகளுடைய சொஸ்தமாக்குதலுக்காகும்.

இப்படியாக நமது கர்த்தருடைய வார்த்தைகளானது, இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள தம்முடைய பின்னடியார்களின் மீது வரும் <u>ஆசீர்வாதங்களையும்,</u> பூமியின் குடிகள் அனைத்தையும் ஆறுதல்படுத்தப்படுவதற்கும், ஆசீர்வதிக்கப்படுவதற்கும், சீர்த்தூக்கப்படுவதற்கும், இழந்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்குமெனத் தம்முடைய பின்னடியார்கள் வாயிலாக அடுத்த யுகத்தில் கடந்து வரும் <u>ஆசீர்வாதங்களையும்</u> சுருக்கமாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அடுத்த யுகத்தில் ஜீவத்தண்ணீரின் ஆறானது இலவசமாய்க் காணப்படும், மேலும் அதனிடத்திற்கு ஆவி மற்றும் மணவாட்டியினுடைய அழைப்பு விடுக்கப்படும்.

## "ஜனங்கள் மத்தியில் பிரிவு"

சமாதானமும், ஒற்றுமையும், பெரிதும் விரும்பப்பட வேண்டும்; எனினும் இது எப்பொழுதும் சாத்தியம் அல்ல, எப்பொழுதும் நன்மைக்கு ஏதுவானதாயும் இராது. ஒருவேளை அனைவரும் பரிபூரணமாய்க் காணப்பட்டார்களானால், சமாதானமும், ஒற்றுமையும்தான் தகுந்த நிலைமையாக நிச்சயமாய்க் காணப்பட்டிருந்திருக்கும். ஆனால் பூரணமின்மைகளும், தப்பறைகளும் இருப்பது வரையிலும், வேற்றுமைகள் காணப்பட வேண்டும். இதற்கு இசைவாகத்தான் நம்முடைய கர்த்தர், தம்முடைய செய்தி சமாதானத்தைக்கொண்டு வராது என்றும், தற்காலத்தில் பட்டயத்தையே கொண்டுவரும் என்றும் கூறியுள்ளார். அவர் பின்னாட்களின் சமாதானத்தின் பிரபுவாக இருப்பார்; ஆனால் நீதியின் அடிப்படையில், சமாதானமானது நிலைநாட்டப்படாதது வரையிலும் அவர் சமாதான பிரபுவாக இருப்பதில்லை. இப்படி நிலைநாட்டப்படுவதற்கு முன்பு வரையிலும், அவர் நீதியில் ஆளுகை செய்யும் இராஜாவாக இருந்து, இருப்புக் கோலால் தீமையான அமைப்புகளையும், காரியங்களையும் குயவன் கலத்தை நொறுக்குவது போன்று நொறுக்குவார்.

சமாதானம் இல்லாமல் இருக்கும் பொழுதும், சமாதானத்திற்கு வாய்ப்புகள் இல்லாமல் இருக்கும் பொழுதும், சமாதானம், சமாதானம் என்று சொல்லுகின்றவர்கள் இருப்பார்கள்; இப்படிக் கூறுபவர்களில் கர்த்தருடைய ஜனங்கள் காணப்படுவதில்லை. இதனிமித்தம் கர்த்தருடைய ஜனங்கள் கலகத்தைத் தூண்டி விடுபவர்களாக இருப்பார்கள் என்பது அர்த்தமல்ல. மாறாக இவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருக்க

வேண்டுமென, வேதவாக்கியங்களில் எங்கும் புத்திமதிக் கூறப்படுகின்றது; சமாதானத்திற்கான பிரயாசங்களை எடுப்பவர்களாகவும், சமாதானத்தை விரும்புகின்றவர்களாகவும், சமாதானம் பண்ணும் தங்களது பண்பைத் தொடர்ந்து பெருக்கிக்கொள்பவர்களாகவும் காணப்பட்டும் கூட, இவர்களுக்குக் கர்த்தர் கொடுத்திட்ட செய்தியானது பிரச்சனையை வளர்க்கின்றது ஏன்? வெளிச்சத்திற்கும், இருளுக்கும் ஐக்கியம் இராததினால், இவை இரண்டிற்கும் நடுவே சமாதானம் இருக்க முடியாது என்றும், எந்தளவுக்கு ஒன்று ஆதிக்கம்கொள்கின்றதோ, அப்பொழுது மற்றொன்று அந்தளவுக்குப் பின்னுக்குத் தள்ளிவிடப்படுகின்றது என்றும், நாம் கர்த்தருடைய வார்த்தைகளின் அடிப்படையில் பதிலளிக்கின்றோம்.

இதற்கு இசைவாகவே இப்பாடத்தில், அவரைக் குறித்த விஷயத்தில் ஜனங்கள் மத்தியில் பிரிவு ஏற்பட்டதை நாம் பார்க்கின்றோம்; சிலர் அவரை அங்கீகரித்தும், சிலர் அவரை எதிர்த்தும் காணப்பட்டனர். இப்படியாகவே நாம் நீதியின் கொள்கைகளை உயர்த்தும் போதும் காணப்படும். நாம் சத்தியத்தின் ஒளியைப் பிரகாசிக்கப் பண்ணும்போது, சத்தியத்தை விரும்புகின்றவர்கள் தங்களுடைய இருதயத்தின் உண்மை மற்றும் சத்தியத்தின் மீதான வாஞ்சைக்கு ஏற்ப, சத்தியத்தினிடத்திற்குக் கொஞ்சமாகவோ, அதிகமாகவோ ஈர்க்கப்படுவார்கள். மேலும் தப்பறையை விரும்புகின்றவர்கள், தங்களிடத்தில் இருக்கும் உண்மை குறைவுக்கு ஏற்ப, சத்தியத்தை எதிர்க்கின்றவர்களாய் இருப்பார்கள். நமது கர்த்தருடைய நிலைமையே இப்படி இருக்குமாயின், அவருடைய பின்னடியார்களுடைய நிலைமை வித்தியாசமாக இருக்கும் என்று நாம் எண்ண முடியுமோ? நிச்சயமாக இல்லை. நம்முடைய பாதங்களுக்கு நாம் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் எனும் பாதரட்சையைத் தரித்துக்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய சுவிசேஷமானது, சமாதானத்தின் சுவிசேஷமாகும், எனினும் நாம் அதை மற்றவருக்குச் சுமந்துச் செல்லுகையில், நமக்கான பாதை கடினமான ஒன்றாக இருக்கும்; மற்றும் நாம் என்ன எதிர்ப்பார்க்கலாம் என்பது பற்றிக் கர்த்தரால் முன்னறிவிக்கப்பட்டுள்ளவைகளில் அடங்கும் அனைத்துப் பாதுகாப்புகளும் மற்றும் ஜெயங்கொள்பவர்களுக்கான மகிமை மற்றும் ஆசீர்வாதம் பற்றின அவருடைய வாக்குத்தத்தங்களும் நமக்கு அவசியப்படும்.

## "பொறாமை, வன்மம், பகைமை, கொலைப்பாதகம்"

நமது கர்த்தர் ஆலயத்தில் போதித்துக்கொண்டிருந்தபோது, அவர் அங்கு இருப்பதை அறிந்திருந்த யூத அதிகாரிகள், அவருடைய ஜீவனை எடுக்க சதித்திட்டம் போட்டனர். ஆலோசனை சங்கத்தார் அழைக்கப்பட்டனர், மேலும் இவர்களின் சேவகர்கள் ஜனங்கள் மத்தியில் ஆலயத்தில் நிறுத்தப்பட்டனர்; இந்தச் சேவகர்கள் அவருடைய போதனையில் குற்றம் கண்டுபிடிப்பதற்கும், அதைக் கலகத்திற்கான சாக்குப்போக்காகப் பயன்படுத்தி, நமது கர்த்தரைக் கைதுச்செய்வதற்குரிய பொறுப்பைப் பெற்றிருந்தார்கள்; அதாவது ஒன்றில் மோசேயின் பிரமாணத்திற்கு எதிராக போதித்தார் அல்லது ரோம சட்டங்களுக்கு எதிராக போதித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவரைக் கைதுச்செய்யத்தக்கதாக, குற்றம் கண்டுபிடிக்கும் பொறுப்புடன் ஆலயத்தில், ஜனங்கள் மத்தியில் சேவகர்கள் நிறுத்தப்பட்டனர். ஒவ்வொரு முறையும், அவருடைய வார்த்தையினால் அவரைச் சிக்க வைக்க முயன்றனர், ஆனால் அதைச் செய்ய முடியாததினால், காரியத்தைத் தெரிவிக்கும்படிக்கு ஆலோசனை சங்கத்தாரிடத்திற்குத் திரும்பினார்கள்.

மனித இருதயத்தின் திருக்குத்தனத்தைக் குறித்து எத்துணை வேதனையான விமர்சனம் காணப்படுகின்றது. இயேசுவைக் கைதுச்செய்து, கொன்றுப்போடும்படிக்கு நாடின மனிதர்கள், பூமியிலேயே பரிசுத்தமான தேசமாகிய இஸ்ரயேல் தேசத்தின் மிகுந்த செல்வாக்குள்ள மனுஷர்கள் ஆவார்கள். இதுமாத்திரமல்லாமல் இவர்கள் நியாயசாஸ்திரிகளுமாக இருந்தார்கள், அதாவது மோசேயின் நியாயப்பிரமாணத்தினுடைய எழுத்தையும், சாரத்தையும்/ஆவியையும் நன்கு அறிந்தவர்கள் எனக் கருதப்படும் மனுஷர்களாய் இருந்தார்கள்; அதாவது இன்றைய கிறிஸ்தவ மண்டலத்தில் டாக்டர்ஸ் ஆப் டிவைனிடிக்குச் (Doctors of Divinity) சரிசமமான ஸ்தானத்தில் யூத மார்க்கத்தில் காணப்பட்ட மனுஷர்களாய் இருந்தார்கள். பிலாத்துக் கேட்டது போல நாமும், "ஏன், இவர் என்ன பொல்லாப்புச் செய்தார்?" எனக் கேட்கலாம். உலகத்திலேயே மிகுந்த தாலந்துடையவர்களாகவும், மிகுந்த கல்வியறிவு உடையவர்களாகவும், பெயரளவில் மிகுந்த

மத வாதிகளாகவும் இருக்கும் நபர்களுடைய இருதயத்தில்தான் பொல்லாப்பு இருந்ததே ஒழிய, இயேசுவினிடத்தில் இல்லை என்று நாம் பதிலளிக்கின்றோம்.

இவர்களது நோக்கம் என்னவென்று ஒருவேளை இவர்களிடம் கேட்கப்படுகின்றது என்று நாம் கற்பனை பண்ணிக்கொள்ளலாம். இவர்களுடைய பதிலானது, "நாங்கள் தேவனுக்கு உண்மையாய் இருக்கின்றோம்; மோசே மூலமாய்க் கொடுக்கப்பட்ட அவருடைய நியாயப்பிரமாணத்திற்கு நாங்கள் உண்மையாய் இருக்கின்றோம். தேவன் எங்களை அதிகாரிகளாகவும், போதகர்களாகவும் அமர்த்தியுள்ள, அவருடைய இந்த வல்லமையான ஜனங்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களில் நாங்கள் உண்மையாய் இருக்கின்றோம், ஆகவே இம்மனுஷன் தேவனுக்குப் பயப்படுகிறவன் போலும், ஏழைகளிடத்தில் அனுதாபம் உள்ளவன் போலும் தோன்றினாலும், இவன் மிகுந்த நாசத்தை உண்டுபண்ணுகிறவன் என்று நாங்கள் நம்புவதினால், இம்மனுஷனைக் கட்டுப்படுத்த நாங்கள் வைராக்கியமாய் இருக்கின்றோம். இவன் தன்னை மேசியா என்று கூறிக்கொள்ளும் விஷயத்தில், இவன் நாசத்தை உண்டாக்குகிறவனாய் இருக்கின்றான்; காரணம் உண்மையில் இவன் திறமை மிக்கவனாகவும், ஜனங்களை ஏமாற்றுகிறவனுமாயும் இருக்கின்றான். இவனை இப்படியே விட்டுவிட்டால், ஒழுக்கம் சார்ந்த விஷயத்திலும், அறிவு சார்ந்த விஷயத்திலும் இந்தத் தேசத்தின் தலைவர்களாக எங்கள் கரங்களில் காணப்படும், தேசத்தைக் கட்டுப்படுத்துகிறதற்கான வல்லமையானது, எங்கள் கையை விட்டு நழுவி விடும்; இம்மனுஷன் தன்னை நிலைநாட்டிவிடுவான்; மேலும் இஸ்ரயேல் தேசத்தின் ஜனங்கள் அனைவரும் எங்களை முட்டாள்களெனப் பார்த்து, தங்களால் மேசியாவை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது என்றும், அறிவில் மேம்பட்டவர்களாகிய எங்களை முட்டாள்கள் அல்லது தெய்வீகக் கிருபையை இழந்துவிட்டவர்கள் என்பதினால், நம்முடைய சந்திப்பின் காலத்தை அடையாளம் கண்டுகொள்ள எங்களால் முடியவில்லை என்றும் முடிவு செய்துவிடுவார்கள்" என்பதேயாகும்.

இப்படியாகவே இவர்கள் கூறுவார்கள்; ஆனால் இச்சூழ்நிலையைக் குறித்த கர்த்தருடைய கண்ணோட்டமானது, நேர்மாறாகக் காணப்படும். அதாவது, "இவர்கள் மாய்மாலக்காரர்கள் என்பதாகவும், இவர்கள் தாங்கள் உண்மையில் காணப்படாத நிலையில், தாங்கள் இருப்பதாக நடித்துக்கொண்டிருக்கின்றவர்கள் என்பதாகவும், கர்த்தருக்கான இவர்களுடைய துதியும், ஊழியமும், சடங்காச்சாரமான உதட்டின் அளவிலேயே உள்ளவைகளாக இருக்கின்றது என்பதாகவும், இவர்களுடைய பிரயாசங்கள் மற்றும் அறிக்கைகளின் அடித்தளத்தில் பெருமை காணப்படுகின்றது என்பதாகவும், நமது கர்த்தருடைய வெற்றியும், அவருடைய ஞானமும், ஜனங்கள் அவருடைய செய்திக்குச் செவிச் சாய்க்கும் உண்மையும் இவர்களது இந்தப் பெருமையைத் தொட்டது என்பதாகவும், இவர்கள் பொறாமை கொண்டவர்கள் என்பதாகவும், வன்மம் இவர்களுடைய இருதயத்தில் எரிந்துக்கொண்டிருந்தது என்பதாகவும், காரணமின்றி அவரைப் பகைத்தார்கள் என்பதாகவும், இவர்களைக் காட்டிலும் அவர் மேலானவராகவும், பரிசுத்தமானவராகவும், ஞானமுள்ளவராகவும் இருப்பதினாலும், இந்த உண்மையை ஜனங்களும் புரிந்துக்கொண்டு வருவதினாலும் அவரைப் பகைத்தார்கள் என்பதாகவும்" காணப்படும்.

பொறாமை--சுயநலம் எத்துணை ஆபத்தானதாகும்! எத்தனை கர்த்தருடைய ஜனங்கள் இன்று இதனால் தாக்கப்பட்டு இருப்பதினால், அவர்கள் கர்த்தருடைய ஆவியை அடையாளம் கண்டுக்கொள்ள மறுக்கின்றவர்களாகவும், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதற்கு நாடி, ஒருவருக்கொருவர் தாங்கி கர்த்தருடைய முழு வேலையும் ஒன்றுதான் என்று உணர்ந்துக்கொள்வதற்குப் பதிலாக, அந்தோ பரிதாபம் கலகத்தின் ஆவியையும், வீண் பெருமையையும் அடிக்கடி வெளிப்படுத்துகின்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள்! இப்படியான அனைத்தும், கர்த்தருடைய பார்வைக்கு எவ்வளவு பிரியமற்றதாக இருந்திருக்க வேண்டும்!

## "அவருடைய உதடுகளிலிருந்து கிருபை பொழிந்தது"

சேவகர்கள், ஆலோசனை சங்கத்திற்குத் திரும்பினபோது "கைதி எங்கே? என்றும் நீங்கள் ஏன் அவரைக்கொண்டு வரவில்லை?" என்றும், அவருடைய வார்த்தைகளினால் அவரைச் சிக்க வைக்க உங்களால் முடியவில்லையா? பொதுமக்கள் மத்தியில் பேசுபவர்களாகவும், நுணுக்கமான மனதையுடையவர்களாகவும் இருக்கும் உங்களால்,

ஜனங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் காரியங்களைப் போதித்த (போதகரான) அவருக்கு எதிராக நீங்கள் குற்றம் சாட்டத்தக்கதாக, அவருடைய வார்த்தைகள் எதிலாகிலும் அவரை உங்களால் சிக்க வைக்க முடியவில்லையா? மோசேயின் பிரமாணம் (அ) உரோமின் சட்டத்திற்கு விரோதமாக அவர் சொன்னார் என்று எதையாகிலும் நீங்கள் சொல்லத்தக்கதாக அவர் ஒன்றும் பேசவில்லையா? என்றும் கேள்விகள் எழும்பியது. இதற்கு அவர்கள் கொடுத்தப் பதில், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்பதாகும் (யோவான் 7:46). இவ்வார்த்தைக்குள் பல ஆயிரக்கணக்கான விஷயங்கள் அடங்கியுள்ளது.

கர்த்தருடைய அடிச்சுவட்டில் நடப்பதற்கு நாடும் கர்த்தருடைய ஜனங்கள், உலகமானது இன்னமும் பொறாமையினாலும், வன்மத்தினாலும், பகைமையினாலும் நிரம்பியிருப்பதை எப்பொழுதும் காணவே செய்கின்றனர். "உலகம் அவரை அறியாதது போல, நம்மையும் அறியவில்லை" என்பது இன்னமும் உண்மையாய் இருப்பதைக் காண்கின்றார்கள்; மேலும் அவர்களுக்கு எதிராய் இருப்பவர்கள் மத்தியில், அவர்களுக்குப் பாதிப்பு உண்டாக்க நாடுபவர்கள் மத்தியில், அவர்களுடைய வார்த்தைகளினால் அவர்களைச் சிக்க வைக்கும்படி நாடி, அவர்களைக் கைதுச்செய்து, அவர்களின் நற்பெயரைக் கெடுக்க நாடுபவர்கள் மத்தியில் சிலர் உலக ஞானிகளாகவும், உலகத்தில் உயர்ந்தவர்களாகவும், மதவாதிகளாகவும் இருப்பதை இன்னமும் பார்க்கின்றனர். அவர்களுக்கான கர்த்தருடைய செய்தி, "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்பதாகக் காணப்படுகின்றது (லூக்கா 21:19). அவர்கள் தங்கள் வாயினால் பாவம் செய்துவிடாதபடிக்குத் தங்கள் உதடுகளைக் காவல் காத்துக்கொள்வதும், ஜெபிப்பதும் மாத்திரமல்லாமல், தங்களுடைய இருதயத்தின் தியானங்களும், தங்களின் வாயின் வார்த்தைகளும் கர்த்தர் அங்கீகரிக்கத் தக்கதாகப் பார்த்துக்கொள்ள முயற்சிப்பதும், நேர்த்தியான போக்காக இருக்கும்; மேலும் எந்தளவுக்கு இதில் அவர்கள் உண்மையாய் இருக்கின்றார்களோ, அந்தளவுக்கு அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் தங்களுடைய பேச்சில் ஞானமுள்ளவர்களாகவும், ஜாக்கிரதையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்; அதாவது ஒருவனும் ஒருக்காலும் பேசாதது போல் பேசின அவரைப் போன்று காணப்படுவார்கள்.

நாவை காத்துக்கொள்வது என்பது எத்தகைய ஒரு பெரிய விஷயமாய் உள்ளது! தன் நாவை அடக்கிக்கொள்ள முடிகிறவனுக்கு, அவனுடைய முழுச் சரீரத்தையும் அடக்க முடியும் என்று அப்போஸ்தலர் சொல்லியிருப்பது உண்மையே. சொல்லக்கூடாத ஏதோ ஒன்றைச் சொல்வது என்பது மிகவும் சுலபமானது; பொல்லாப்பான வதந்தியை, மீண்டும் மீண்டுமாகப் பரப்புவதும், மற்றவருடைய குணலட்சணத்தின் மீது தவறான அபிப்பிராயத்தை வைப்பதும், இப்படியாக தவறான அபிப்பிராயம் வைப்பதன் மூலமாக கொலைச் செய்வதும், மற்றவருடைய நற்பெயரை (அ) உணர்வுகளைக் காயப்படுத்துவதும் மிகவும் சுலபமானதாகும். இவ்விஷயத்தில் நாம் கர்த்தர் போல் காணப்படுவதற்கும், மற்றவர்கள் பேசுகிறது போல் பேசாமல் இருப்பதற்கும், இப்படியாக இருளினின்று, ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களைக் காட்டுவதற்கும் நாம் அதிகமதிகமாய் நாடுவோமாக.

---

**R2438**

# "மெய்யாகவே விடுதலையாவீர்கள்"

## யோவான் 8:12, 31-36

"ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" - யோவான் 8:36.

இப்பாடத்தில் நாம் பார்க்கப்போகிற கர்த்தருடைய சம்பாஷணையானது, கூடாரப்பண்டிகையின் பிரதான நாள் (அ) எட்டாம் நாளைத் தொடர்ந்த அடுத்த நாளில் நடந்தது என்று கருத்திற்கொள்ளப்படுகின்றது; இந்த ஒரு கருத்தானது, 8-ஆம் அதிகாரத்தின் 1, 2 - வசனங்கள் மற்றும் 7-ஆம் அதிகாரத்தின் கடைசி வசனத்தின் அடிப்படையிலும் கொடுக்கப்படுகின்றது. கூடாரப்பண்டிகையின் கடைசி நாளாக, எட்டாம் நாள் காணப்பட்ட போதிலும், பண்டிகையின் சந்தோஷம் நிறைவடைவதை ஜனங்கள்

விரும்பாததினால், அடுத்த நாளிலும் சில விஷயங்கள் அனுசரிக்கப்படுகின்றது. இந்தச் சம்பாஷணையானது, எட்டாம் நாளினுடைய சம்பாஷணையில் ஒரு பாகம்தான் எனவும் ஒரு கண்ணோட்டம் காணப்படுகின்றது.

இந்தப் பண்டிகையின்போது, ஆலயத்தினுடைய பிரகாரத்தில் காணப்பட்ட இரண்டு மாபெரும் விளக்குகளின் அருகில்தான் இயேசு இவைகளைப் பேசினார் என்று கூறப்படுகின்றது (court of the women - ஸ்தீரிகளுக்கான பிரகாரம் - ஸ்தீரிகளுக்கும், புருஷர்களுக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆலயத்தின் பாகம்). இந்த விளக்குகள் அல்லது கொத்து விளக்குகள் அலங்கரிக்கப்பட்டதாயும், தங்கத்தினால் மெருகிடப்பட்டதாயும், 75 அடி உயரம் கொண்டதாயும் இருக்கின்றபடியினால், அவைகள் பண்டிகை வேளையில் மிகுந்த வெளிச்சத்தைப் பட்டணம் முழுவதிலும் வீசியது. இதுதான் இயேசுவை உலகத்தின் ஒளியாய், தாம் இருப்பதைப் பற்றிக்கொடுத்த சொற்பொழிவுக்கு ஆதாரமாக இருந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது; யூதர்களுடைய குறிப்பிட்ட ஒரு பண்டிகையின் போதுள்ள அனுசரிப்பைப் பார்த்தும், இயேசு இந்தச் சம்பாஷணைப் பண்ணியிருக்க வாய்ப்பு இருக்கின்றது. அந்த அனுசரிப்பு பற்றி **பக்ஸ்டோர்ப்** அவர்களால் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:-

"கூடாரப்பண்டிகையின் கடைசி நாளுக்கு, அடுத்த நாளாகிய ஒன்பதாம் நாள், அனுசரிப்புகள் நிறைந்த நாளாக, "நியாயப்பிரமாணத்திற்கான சந்தோஷப் பண்டிகை" என்று அழைக்கப்படுகின்றது; ஏனெனில், இந்த நாளில்தான் நியாயப்பிரமாணத்தின் கடைசி பாகம் வாசிக்கப்படுகின்றது; கடைசிக்கு முன்புள்ள பிரமாணத்தின் பாகங்களோ முன்பு வந்த ஓய்வு நாட்களில் வாசித்து முடித்திருக்க, கடைசி பாகம் ஒன்பதாம் நாளில் வாசிக்கப்படுகின்றது. இந்த ஒன்பதாம் நாளில், அறையிலிருந்து நியாயப்பிரமாணத்தின் புத்தகங்கள் அனைத்தும் வெளியே எடுக்கப்பட்டு, நீதிமொழிகள் 6:23-ஆம் வசனத்திலுள்ள, அதிலும் குறிப்பாக சங்கீதம் 119:105-ஆம் வசனத்திலுள்ள காரியங்களைத் தெரிவிக்கும் வண்ணமாக, புத்தகங்களினுடைய இடத்தில் மெழுகுத் திரிகளை வைப்பது யூதர்களுடைய வழக்கமாகும் - **Synag. Jud; c.xxii.**"

இச்செய்கை அடையாளப்படுத்துவது என்னவென்று பார்க்கும்போது, முதலாவது நியாயப்பிரமாணம் வெளிச்சமாக இருந்தது, மற்றும் இரண்டாவதாக, யூதருடைய நியாயப்பிரமாணத்தினுடைய இடத்தில், கடைசியில் மெய்யான ஒளியாகிய, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபையின் சுவிசேஷமானது வரும் என்பதாகும். ஒன்றில் நியாயப்பிரமாண புத்தகங்களின் இடத்தில் வைக்கப்பட்ட மெழுகுத்திரிகள் அல்லது பிரகாரத்தில் வைக்கப்பட்ட இரண்டு மாபெரும் விளக்குகள், இல்லையேல் இரண்டுமே, நமது கர்த்தர் மனதில் பதியப்பண்ணும்படிக்குத் திட்டமிட்ட பாடத்திற்கு ஏற்றதும், போதுமானதுமான உதாரணங்களுமாய் இருக்கின்றது. முதல் அடையாளத்தின் கருத்து உலகம் இருளில் இருக்கின்றது; மற்றும் ஜீவனுக்கான ஒளி அவசியம் மற்றும் ஒளியில் நடப்பவன் இடறிவிழுவதில்லை என்பதாகும். மற்றொரு அடையாளத்தின் கருத்து, இறுதியில் அறியாமையின் திரை அகற்றப்படும் மற்றும் சத்தியத்தின் ஆவி உய்த்துணரப்படும் மற்றும் இப்படியாக மெய்யான ஒளியாகிய இயேசு, தெய்வீகக் குணம் மற்றும் பிரமாணம் மற்றும் நித்திய ஜீவனை அனுபவிப்பதற்குரிய நிபந்தனைகள் தொடர்புடைய காரியங்களில் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனுஷனையும் பிரகாசிப்பிக்கின்ற ஒளியாக இருப்பார் என்பதாகும்.

இன்னுமொரு கருத்து என்னவெனில், இந்தக் கூடாரப்பண்டிகையானது, கானானை நோக்கின இஸ்ரயேலின் வனாந்தர பிரயாணத்தின் காலத்தைக்குறிப்பதாய் இருக்க, இப்பண்டிகையின் மாபெரும் விளக்கானது/ஒளியானது, இஸ்ரயேலர்களை வனாந்தர பிரயாணத்தில் மாபெரும் ஒளியாக வழிநடத்தினதும், அவர்களை விரட்டின சத்துருக்களுக்கு மாபெரும் இருளின் மேகமாக காணப்பட்டதுமான அக்கினி மற்றும் மேகஸ்தம்பத்தை அநேகமாய்க் குறிக்கின்றதாய் இருக்கும். இக்கருத்து மற்றக் கருத்துக்களுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றது; காரணம், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் பரம கானானை நோக்கி, சீன் வனாந்தரத்தின் வழியாகப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், நமது கர்த்தரும், அவருடைய போதனைகளும் அவருடைய ஜனங்களுக்கு, அதாவது முழு விசுவாச வீட்டாருக்கும், அதிலும் விசேஷமாக பரம ஆலோசனைக்குக்

கவனித்திருப்பவர்களாகவும், விழிப்புள்ளவர்களாகவும் இருப்பவர்களுக்கு வெளிச்சமாகவும், வழிகாட்டியாகவும் இருக்கின்றது என்றும் நாம் காண்கின்றோம்.

நம்முடைய அர்ப்பணிப்பு முதல் தொடங்கப்பெற்ற கிறிஸ்துவுடனான இந்த உறவானது, (அவர் உபதேசத்தில் நாம் நிலைத்திராவிட்டால்) நின்றுபோகிறதற்குக்கூட வாய்ப்புண்டு என்பது 31, 32-ஆம் வசனங்களின் வார்த்தைகளில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. தம்மை இரட்சகர் என்றும், தம் மூலமாக மாத்திரம் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களையும் ஏற்றுக்கொள்பவர்கள் மாத்திரமே சீஷத்துவத்திற்குள் பிரவேசித்திருக்கின்றார்கள் என்றும் கர்த்தர் முன் வைக்கின்றார். இன்னுமாகச் சீஷத்துவம் என்பது, ஆதிக்கத்தைக்குறிப்பதில்லை; மாறாக ஒருவர் சீஷனாக மாறுவது என்பது, பூரணம் அடைவது வரையிலும், ஆண்டவருடைய அறிவுரைகளின் கீழ் ஒழுக்க ரீதியிலும், அறிவின் ரீதியிலும், கிறிஸ்துவுக்குள் பூரண புருஷருக்குரிய வளர்ச்சியை அடைவதற்கெனச் சீஷனாக ஆகியுள்ள கற்றுக்குட்டியாக இருப்பதைக்குறிக்கின்றது. இவ்விஷயத்தில் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்கள் அனைவரிடத்திலும், பூரணத்தை எதிர்ப்பார்க்கும் உலக ஜனங்களினாலும் மற்றும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம் பண்ணும்போது, உடனடியாகவே தங்களுக்குள் பூரணம் ஏற்பட வேண்டுமென்று, வீணாய்க் கற்பனைப் பண்ணிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களினாலும் ஒரு மாபெரும் தவறு செய்யப்படுகின்றது; அதாவது, சில கிறிஸ்தவர்கள் தங்களிடத்தில் பாவம் இல்லையென்று வீணாய்க் கூறி பாவம் செய்கின்றனர், மேலும் இப்படிக் கூறுவதன் மூலம் தங்களுக்கு ஓர் இரட்சகர், ஒரு கிறிஸ்து தேவை இல்லையென்றும், தாங்கள் கடமைகளைச் செய்யத் தவறியதினாலும் ஏற்படும் கறைகளை மூடுவதற்கு அவருடைய புண்ணியத்தினுடைய பலன் தேவையில்லையென்றுமுள்ள அனுமானத்தைக் கொடுக்கின்றவர்களாக இருக்கின்றனர்.

நமது கர்த்தருடைய வார்த்தைகளில் முன்வைக்கப்பட்டுள்ள சரியான கருத்து என்னவெனில், பாவிகள் சீஷத்துவத்திற்கு அழைக்கப்படவில்லை, மாறாக மனம் திரும்புவதற்கும், தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக (நீதிமானாக்கப்படுவதற்காக) மீட்பரிடத்தில் விசுவாசம் வைப்பதற்கும்தான் அழைக்கப்படுகின்றனர்; ஆனால் இவை அனைத்தும் நீதிமான்களாக்கப்பட்ட மனுஷர்களாக இவர்கள் தங்களை, கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணிப்புப் பண்ணுவதன் மூலமாக, அவருடைய சீஷர்களாக ஆகுவதற்கே, அதாவது கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் ஆகுவதற்கே ஆகும்.

நாம் ஏன் இந்தப் பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசிக்கின்றோம்? அங்கு என்ன பாடங்களை நாம் கற்க இருக்கின்றோம்? என்ன காரணங்களுக்காக நாம் இந்தப் பாடங்களைக் கற்பதற்கும், இவைகளைக் கற்பதற்கென நம்மையே அர்ப்பணம் பண்ணுவதற்கு நாடுகின்றவர்களாக இருக்கின்றோம்?

கிறிஸ்து எனும் புதியதும், ஜீவனுக்குரியதுமான வழியில், பிதாவினுடைய கிருபையின் சிங்காசனத்தை அணுகும் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளுக்கான, பரம பிதாவின் அழைப்பே கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசிப்பதற்கான தூண்டுதலாக அமைகின்றது; இப்படிப்பட்டவர்களுக்கு, "தேவனுடைய புத்திரர்களாகும்படிக்கான "பரம அழைப்பை" பிதா கொடுக்கின்றார்; "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17).

இந்தக் கிறிஸ்துவின் பள்ளிக்கூடமானது, அன்பினால் இயக்கப்பட்டதும், பக்தியினால் தக்கவைக்கப்படுகிறதுமான சுயத்தைப் பலிச் செலுத்துதலுக்கான, சுயத்தை வெறுத்தலுக்கான பள்ளிக்கூடமாக இருக்கின்றது. கர்த்தருடைய சகோதரர்களென, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்குப் போதிக்கும்படிக்குப் பிதாவினால் இப்பள்ளிக்கூடத்தில் நியமிக்கப்பட்டுள்ள மாபெரும் போதகராய் இருக்கும் கர்த்தர் கூட, இதே பள்ளியில், பிதாவின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ்க் கற்றுக்கொண்டவராய்க் காணப்படுகின்றார். "அவர் குமாரனாய் இருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானப் பின்பு (அவர் அழைக்கப்பட்ட மேன்மையான நிலையாகிய, திவ்விய சுபாவத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட

பின்பு) தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமானார்" (எபிரெயர் 5:8, 9).

நாம் அனைத்து விஷயங்களிலும் சோதித்துப் பார்க்கப்படுவது போன்று, "கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் இருக்கும் பிதாவின் ஒரே பேறானவரும்" அனைத்துக் கட்டங்களிலும் சோதித்துப் பார்க்கப்படுவதும் அவசியமாய் இருந்தது; அதாவது எதை இழந்தும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் விஷயத்தில் அவருடைய கீழ்ப்படிதலும், மற்றும் மனுக்குலத்தினை மீட்பதற்கும், தூக்கிவிடுவதற்கும் பிதாவின் ஏற்பாட்டின்படி அனுப்பி வைக்கப்பட்ட கர்த்தர், இந்த மனுக்குலமாகிய தம்முடைய அயலானிடத்தில் கொண்டிருக்கும் அவரது அன்பும், முழுமையாய்ச் சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்படுவது அவசியமாய் இருந்தது. விழுந்துபோய், மீட்கப்பட்ட சந்ததியாரைச் சேர்ந்தவர்களும், அவருடன் உடன்சுதந்தரத்திற்கு அழைக்கப்பட்டுள்ளவர்களுமாகிய நாம், பிதாவினுடைய புத்திரர்களாகும்படிக்கு, அதாவது திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கென, பிதாவினால் ஏற்பாடு பண்ணப்பட்ட இப்பள்ளிக்கூடத்தில், பிதாவின் முழுமையான அங்கீகரிப்பிற்கு ஏற்ற கிறிஸ்துவின் சிந்தையை முழுமையாய்த் தரித்துக் கொள்ளும் நோக்கத்திற்காக போதிப்பையும், பயிற்சியையும் அடைவதும் எவ்வளவு அவசியமாய் இருக்கின்றது. நாம் பிதாவினுடைய குமாரனின் சாயலை அடைவதற்கும், இவ்வாறாக இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்களாக, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில்" பங்கடைவதற்குமென, தேவனுடைய முன்தீர்மானத்தின்படி நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து, நாம் காண்கிறதென்னவெனில், விசுவாசத்தின் மூலமும், அர்ப்பணிப்பின் மூலமும் நாம் கர்த்தருடன் இணைந்துகொள்ளும்போது, நாம் தேர்ச்சியடைந்துவிட்டோம், சுதந்தரர்கள் ஆகிவிட்டோம் என்று நம்மைக் குறித்து அறிவிக்கின்றவர்களாய் இராமல், மாறாக, "தேவனை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துள்ளவைகளைச்" சுதந்தரித்துக்கொள்ள ஆயத்தப்படுவதற்கு விரும்புகின்ற மாணாக்கர்களாக, சீஷர்களாக இருப்பதாக நாம் நம்மைக் குறித்துப் பிரகடனப்படுத்துகின்றவர்களாகவே இருக்கின்றோம். இவ்விஷயம் தொடர்பான கருத்தைத் தெய்வீகப் போதனை என நாம் மனதில் வைத்துக்கொள்வோமானால், இது நாம் விரும்பாததைச் செய்கின்றவர்களாகவும், நாம் செய்ய வேண்டியதை நாம் செய்யாமல் விட்டுவிடுகிறவர்களாகவும், நம்முடைய மாம்சத்தில் பூரணம் இல்லை என்பதையும் நாம் காண்கையில், நமக்கு ஏற்பட வாய்ப்புள்ள சோர்வைத் தடுக்க உதவியாய் இருக்கும் (1 கொரிந்தியர் 2:9; ரோமர் 7:25).

இன்னுமாக மாம்சம், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசிக்கவில்லை என்றும், மாம்சம், இராஜ்யத்திற்குரிய அவருடைய அறிவுரைகள் மற்றும் ஆயத்தப்படுதலின் கீழ் இல்லையென்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்; ஏனெனில் மாம்சமும், இரத்தமும், தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது (1 கொரிந்தியர் 15:50). ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வதற்குரிய தெய்வீக அழைப்பை நாம் ஏற்றுக்கொள்வது என்பது, எல்லா விதத்திலும் பூமிக்குரிய சுபாவத்தைத் துறந்துவிடுவதையும், "தேவனுடைய புத்திரர்களாக," புதிய சிருஷ்டிகளாக நாம் ஜெநிப்பிக்கப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. "புதிய சிருஷ்டியே," புதிய மனமே, புதிய சித்தமே, கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் காணப்படுகின்றது, மேலும் இதுவே பூரணப்படுத்த வேண்டியுள்ளது, அதாவது தெய்வீகச் சித்தத்திற்கு முழு இசைவுடன் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது, அதாவது கர்த்தருடைய சாயலுக்கு ஒப்பாகக் கொண்டுவரப்பட வேண்டியுள்ளது. தெய்வீகப் பிரமாணத்துடன் முழுமையான இசைவான நிலைக்குள், நம்முடைய மாம்சத்தை ஒருபோதும் நம்மால் கொண்டுவர முடியாது, காரணம் அதன் சுதந்தரிக்கப்பட்டுள்ள அபூரணத் தன்மைகள் ஆகும். யார் ஒருவர் தன்னுடைய மாம்சத்தில் பூரணத்தை எதிர்ப்பார்க்கின்றாரோ மற்றும் மாம்சத்தில் பூரணம் வரும் என்று விசுவாசிக்கின்றாரோ, அவர் கிறிஸ்துவின் சாயலை என்றாவது அடைவதற்கும், முன் குறிக்கப்பட்ட வகுப்பாராகிய, "அவருடைய குமாரனுடைய சாயலை" அடையும் வகுப்பாரில் ஒருவராக ஆகுவதற்கு, குறைவாகவே வாய்ப்புக் காணப்படுகின்றது (ரோமர் 8:29).

புதிய மனமானது எந்தளவுக்குக் கிறிஸ்துவினுடைய மனதிற்கு ஒப்பாக வளர்ச்சியடைகின்றதோ, அவ்வளவாய் சரீரத்தை, அதன் பாவத் தூண்டுதல்களுடன் கட்டுப்படுத்துவதில், அதாவது மாம்சத்தின் சித்தத்தை மரித்த நிலையிலேயே வைத்துக்கொள்வதில் அதன் முயற்சியைத் தளர்த்தாது என்பதை நாம் சுட்டிக்காட்டி விளக்குவதற்கு அவசியமிராது. நிச்சயமாக தேவனுடைய ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரன் யாராலும், தன்னுடைய அழியக்கூடிய சரீரத்தில் பாவம் ஆளுகை செய்யத்தக்கதாக அனுமதிக்க முடியாது; ஒருவேளை ஏதேனும் அளவில் பாவம் அவனைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்குமானால், அது துணிகரமாய் இருக்காது; மாறாக கண நேரமே இருக்கும்; அதாவது புதிய மனமானது/சிருஷ்டியானது, உயிரடைந்து எழும்பும் மாம்சத்தைக் கண்டு, அதைப் பரலோகக் கிருபையின் களஞ்சியமாகிய கிறிஸ்துவிடமிருந்து, தேவையானபொழுதெல்லாம் கிடைக்கும் என வாக்களிக்கப்பட்டுள்ள கிருபையையும், உதவியையும் அடைந்து, வெற்றியடைவது வரையிலும்தான் அப்பாவம் காணப்படும்.

இந்தக் கருத்தானது சரியான விதத்தில் புரிந்துக்கொள்ளப்படுமாயின், இது உண்மையான சீஷர்களுக்கு, தங்களுடைய நிலையைப் புரிந்துக்கொள்வதற்கும், தங்களுடைய இருதயங்களானது, பாவத்திற்கும், அநீதிக்கும் இசைவாய் இராமல், மாறாக நம்முடைய போதகருடைய போதனைகளுக்கும், கொள்கைகளுக்கும் முழு இசைவுடன் இருக்கின்றது என்றும், அவருடைய பார்வையில் பிரியமாயும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்க தங்கள் இருதயங்கள் வாஞ்சிக்கின்றது என்றும் அவர்களால் உணரமுடிகிறது வரையிலும், ஒருவேளை அவர்கள் மாம்சத்தின் தவறில் விழுந்தாலும் முற்றிலுமாகச் சோர்ந்துபோகாமல் இருப்பதற்கும் உதவப்படுவார்கள். மேலும் இந்தச் சரியானக் கருத்தானது, உண்மையான சீஷர்கள் அனைவரும், தங்கள் மத்தியில் அதாவது, தங்களைப் போல இந்தப் பள்ளிக்கூடத்தில் சீஷர்களாக, மாணவர்களாக, மாம்சத்தில் அல்லாமல், தங்களது மனதினுடைய ஆவியில் புதிய சிருஷ்டிகளாக இருக்கும், "சகோதரர்களிடத்தில்" அன்பைக் காட்டுவதற்கும் உதவிடும். ஆகவே ஒவ்வொருவரும், உடன் சகோதரனுடைய மாம்சத்தில் அவனால் வெறுக்கப்பட்டு, எதிர்த்துப் போராடப்படுகின்ற குறைவுகளை நாம் பார்க்கும்போது, அதுவும் அச்சகோதரன், அவனுடைய இருதயமும், சித்தமும் கர்த்தருக்கும், அவருடைய அன்பின் பிரமாணத்திற்கும் இசைவாக இருக்கின்றது என்ற நிச்சயத்தையும், மற்றும் இந்தக் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களை அன்றாடம், அவன் கற்றுக்கொள்ள நாடுகின்றதாகவும், மாம்சத்தின் பெலவீனங்களுக்கு எதிராக, அவன் நல்லதொரு போராட்டம் போராட நாடுகின்றதாகவும் உள்ள நிச்சயத்தையும் நமக்குக் கொடுக்கும் பட்சத்தில், நாம் (அச்சகோதரனிடத்தில்) காணும் அத்தீமையானது, அச்சகோதரனுடைய சத்துருவே ஒழிய, அச்சகோதரனாகிய புதிய சிருஷ்டியினுடைய தீமைகள் அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

இது வேதவாக்கியங்களின் வெளிச்சத்தில் நடப்பதாகவும், இருளில் இடறிப்போகாத நிலையாகவும் கூறப்படுகின்றது, அதாவது புரிந்துக்கொண்டு, தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாகச் செயல்படுவதாகும், அதாவது தேவன் காரியங்களைப் பார்க்கிற விதத்திலும், தம்முடைய கிருபையான வார்த்தைகளில் தெளிவாக முன்குறித்து வைத்துள்ள விதத்திலும், காரியங்களை நாம் பார்ப்பதாகும். எனினும் அன்பின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின் வெளிச்சத்தில், உலகப்பிரகாரமானவர்கள் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களைப் பார்க்க விரும்புவார்கள் (அ) பார்க்க முடியும் என்று நாம் எதிர்ப்பார்க்க வேண்டாம். மாறாக நம்முடைய எதிராளியானவன், "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" உலகப்பிரகாரமானவர்களிடம், சுயநலம், தீய எண்ணம் முதலியவைகளுக்கான போர்வையாகக் கிறிஸ்துவின் நாமத்தையும், அன்பின் பிரமாணத்தையும் பயன்படுத்துகின்ற மாய்மாலக்காரர்களையே காண்பிக்கின்றார். மேலும் இந்த எதிராளியானவன் உலகத்தாருக்கும், மாய்மாலமான கிறிஸ்தவர்களுக்கும் மாத்திரமல்லாமல், விசேஷமாக உண்மையான சீஷர்களுக்கும், கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்திற்கான நிபந்தனைகளைத் தவறாய்க் காட்டுவதற்குத் தொடர்ந்து நாடுகின்றான். கர்த்தருடைய வார்த்தைக்கு நேர்மாறாக, சீஷர்கள் மாம்சத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுகின்றார்களே ஒழிய, ஆவியின்படி, புதிய மனதின்படியல்ல என்று உண்மையான சீஷர்களை நம்ப வைத்து, அவர்களைச் சோர்வடையப்பண்ணி, சரியானப் பாதையிலிருந்து விலகிப்போகத்தக்கதாகத் தொடர்ந்து நாடுகின்றான்.

"உத்தம சீஷர்களே," இந்த கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் தங்கள் ஓட்டத்தை முடித்து, தேர்ச்சிப் பெற்று, தங்களுடைய கர்த்தருடன் உடன்சுதந்தரர்களாகி, இறுதியில் பூமியின் குடிகள் அனைவருக்கும் போதிப்பதற்கும், ஆசீர்வாதம் வழங்குவதற்கும் அவரோடு உடன் துணையாளர்களாகக் காணப்படுபவர்களாக இருப்பார்கள்; ஆனால் பள்ளியில் சேர்ந்துக்கொள்ளுவது என்பது, இந்தப் பலன்கள் அனைத்தையும் கொண்டுவருவதில்லை; நமது கர்த்தர் குறிப்பிட்டிருப்பதுபோல, பள்ளியில் நிலைத்திருப்பதினால் மாத்திரமே, அதாவது அவருடைய வழிநடத்துதலின் கீழ், அவருடைய சத்திய வார்த்தையினுடைய வழிநடத்துதலின் கீழ் உண்மையாயும், விடாமுயற்சியுடனும் நிலைத்திருப்பதினால் மாத்திரமே, இப்பள்ளியினுடைய பிரமாண்டமான நோக்கம் அடையப்பெறும். பிரயாணத்தின் போது, நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், நாம் முன்னேறுகின்றோம் என்பதையும், நாம் அதிகமதிகமாய்ச் சத்தியத்தை அறிய வருகின்றோம் என்பதையும், சத்தியம் நம்மை அதிகமதிகமாய் விடுவிக்கின்றது என்பதையும், நாம் காண்பது/உணர்வது நமக்கான சிலாக்கியமாய் இருக்கின்றது. உடனடியாக அறிவு வரும் என்றோ, உடனடியாக விடுதலை வரும் என்றோ நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது.

சத்தியத்தின் வெளிச்சம், அதாவது தேவனுடைய வார்த்தையாகிய விளக்கினுடைய பொதுவான பலனானது, மூட நம்பிக்கையாகிய விலங்குகளைத் தகர்த்து, ஜனங்களைச் சுதந்தரம் ஆக்குவதாகும். ஆனால் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் சீஷர்களாய் இராதவர்களுக்கு, சத்தியத்தின் வெளிச்சம் உண்டுபண்ணும் பலனானது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இன்னும் வேறு சிலருக்குச் சுதந்தரமும், அறிவின் வெளிச்சமும், நாசத்தைக்கொண்டு வருவதாகவும் இருக்கின்றது, இன்னுமாக இறுமாப்பு அடைவதற்கும், இரக்கமற்றவர்களாய் இருப்பதற்கும், தற்பெருமை அடித்துக்கொள்வதற்கும், கர்வம்கொள்வதற்கும், சண்டைப்பண்ணுவதற்கும், அதிருப்திக்கொள்வதற்கும், சந்தோஷம் இல்லாமல் இருப்பதற்கும் நேராக வழி நடத்துகின்றது. இந்தப் பொல்லாப்பான விளைவுகளானது, சில விஷயங்களில் விடுதலை பெற்று, மற்றெல்லா விஷயங்களிலும் கட்டப்பட்டவர்களாகக் காணப்படுபவர்களிடத்திலேயே காணப்படுகின்றது; மேலும் இதுவே இன்றைய நாகரிக உலகிலும், பெயர்ச்சபையில் பெரும்பான்மையானவைகளிடத்திலும் வளர்ந்துக்கொண்டு வருகிறதும், பரவலாய்க் காணப்படுகிறதுமான நிலமையாக இருக்கின்றது.

ஆனால் மாபெரும் போதகருடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து, அவருடைய மாணவர்களாகக் காணப்படத்தக்கதாக அனைத்து விஷயங்களிலும் தொடர்ந்து நிலைத்திருக்கும் உண்மையான சீஷர்கள், அறியாமை மற்றும் மூடநம்பிக்கையிலிருந்து மாத்திரம் விடுவிக்கப்படாமல், பாவத்திற்கு ஊழியம் செய்வதிலிருந்தும் விடுதலை அடைந்துள்ளனர்; மற்றும் அவர்களுடைய சுதந்தரிக்கப்பட்டுள்ள சொந்த பெலவீனங்கள், குறைகள் குறித்தும், தெய்வீக மனம் குறித்துமுள்ள சரியான உணர்ந்துக்கொள்ளுதலையும், அதாவது சத்தியத்தையும் பெற்றுள்ளனர். இதன் காரணமாக இவர்களுடைய சுதந்தரம் என்பது, இவர்களைப் பாதிப்பிற்குள்ளாக்குவதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கவே செய்கின்றதாய் இருக்கின்றது; பெருமை மற்றும் தற்பெருமை அடித்துக்கொள்ளும் தன்மைக்குப் பதிலாகத் தாழ்மையைக்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது; கோபத்திற்குப் பதிலாகப் பொறுமையைக்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது; சுயநலம் மற்றும் பகைக்குப் பதிலாக, பெருந்தன்மையையும், இரக்கத்தையும்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது; கசப்பின் ஆவி மற்றும் அதிருப்திக்குப் பதிலாக சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது. உண்மைதான், குமாரனால் மாத்திரமே நம்மை மெய்யாக விடுவிக்க முடியும்.

எனினும் நம்முடைய விடுதலை என்பது, மாம்சத்தின் விடுதலையாய் இராமல், மாறாக இருதயத்தின், மனதின், சித்தத்தின், புதிய சுபாவத்தின் விடுதலையாக இருக்கின்றது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் நாம் இந்தப் பொக்கிஷங்களை மண்பாண்டங்களில் பெற்றிருப்பது வரையிலும், புதிய சிருஷ்டியானது மாம்சமாகிய பூரணமற்ற சரீரத்தை அதன் கருவியாகப் பயன்படுத்த வேண்டியது வரையிலும், இந்தச் சுதந்தரம் நிறைவானதாய்/முழுமையானதாய் இருப்பதில்லை. கிறிஸ்துவின் இந்தச் "சகோதரர்கள்," "உன்னதமானவரின் குமாரர்கள்," முதலாம் உயிர்த்தெழுதலில் தங்களது பங்கை அடையும்போதுதான் உண்மையில் விடுதலையடைந்தவர்களாய் இருப்பார்கள். "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" (சங்கீதம் 17:15).

பாவம் செய்கின்றவர்கள், பாவத்தின் ஊழியக்காரர்கள் என்றும், அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1 யோவான் 3:8; 1:8). மேற்கூறப்பட்ட ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பது போல் தோன்றும் வேதவாக்கியங்களை எப்படி நாம் இசைவாக்கிக்கொண்டு, ரோமர் 6:18-ஆம் வசனத்தின் வார்த்தைகளைப் புரிந்துக்கொள்ளலாம்?

நம்முடைய பதில் என்னவெனில், வேதவாக்கியங்கள் புதிய மனதின் பாவங்கள் என்றும் சுட்டிக்காட்டுவதில்லை மற்றும் நம்முடைய விழுந்துபோன மாம்சத்திற்கு, நீதியில் பூரணம் உண்டு என்றும் சொல்லவில்லை; இந்த இரண்டு உண்மைகளையும், இப்பாடத்தைப் படிக்கையில் நினைவில் கொள்ளப்பட வேண்டும். தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சிருஷ்டியை (இதன் மாம்சம் மரித்துவிட்டதாகக் கருதப்படுகின்றது) அடையாளப்படுத்தும் புதிய மனம் பாவம் செய்யாது, காரணம் அதனிடத்தில் பாவத்திற்கு எதிரான சத்தியத்தின் ஆவி, சத்தியம் எனும் விதை நடப்பட்டுள்ளது (யாக்கோபு 1:18). இந்தப் புதிய சிருஷ்டியானது, நீதிக்கு மிக இசைவுடன் காணப்பட்டுக் கர்த்தருடைய ஆவியினால், பரிசுத்தத்தின் ஆவியினால் மிகவும் ஊக்குவிக்கப்படுகின்றபடியால், புதிய சிருஷ்டி பரிசுத்தத்தில்தான் பிரியங்கொள்கின்றதே ஒழிய, பாவத்தில் அல்ல; மேலும் இவைகளெல்லாம் ஜெநிப்பிக்கப்பட்ட (அ) பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்பட்ட நிலைமைகள் தொடர்ந்துக் காணப்படுவது வரையிலும்தான் காணப்படுகின்றது. "தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள எவனும் பாவஞ்செய்யான் (துணிகரமாய்ச் செய்யான், அதாவது பாவத்தை அங்கீகரிக்கமாட்டான் அல்லது பாவத்தில் சந்தோஷமும் அடையமாட்டான்), ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது." அதாவது அவனை ஜெநிப்பித்துள்ள சத்தியத்தின் ஆவி, சத்தியத்தின் பரிசுத்தமான வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; "பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1 யோவான் 3:9; 5:18).

எதுவரையிலும் இருதயமானது (மனமானது, சித்தமானது) பரிசுத்தமாகவும், தேவனுக்கும், நீதிக்கும் இசைவானதாகவும் இருக்கின்றதோ, அதாவது நம்மை ஜெநிப்பித்த வித்தாகிய, சத்தியத்தின் ஆவி, பரிசுத்தத்தின் ஆவியானது நம்மில் தொடர்ந்துத் தரித்திருப்பது வரையிலும், புதிய மனதினால் பாவத்தை அங்கீகரிக்க முடியாது மற்றும் அதை எதிர்க்க வேண்டும், மற்றும் அதை எதிர்க்கவும் செய்யும். நம்முடைய சொந்த விழுந்துபோன மாம்சத்தின் அங்கங்களுடனும், பெலவீனமான மனித சுபாவத்துடனும், அதன் ஏக்கங்கள் மற்றும் ஆசைகளுடனும் அநேக யுத்தங்கள் பண்ணப்பட்டாலும், மாம்சத்திலிருந்து வேறுபட்டது "புதிய சிருஷ்டி" ஆகும்; மற்றும் மாம்சத்தின் பூரணமற்ற தன்மைகளும், பெலவீனங்களும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டிக்குத் தரிக்கப்படாமல், மாறாக நமது கர்த்தருடைய மீட்பின் பலியினுடைய புண்ணியங்களின் கீழ் மூடி, மறைத்து வைக்கப்பட்டதாகவே கருதப்படுகின்றது.

விழுகையின் காரணமான பெலவீனங்களினாலும், தீமையின் நெருக்கடியினாலும், நாம் மாம்சத்தைக் கீழ்ப்படுத்துவதற்கு எவ்வளவுதான் பிரயாசங்கள் எடுத்துக்கொண்டாலும், நம்முடைய மாம்சமானது ஒருபோதும் தெய்வீகப் பிரமாணத்திற்குரிய அளவுகோலுக்கு/நியமத்திற்கு ஒப்ப வரமுடியாது; எனினும், "புதிய சிருஷ்டிகளாகிய" நமக்கு வேதவாக்கியத்தின் நிச்சயம் பின்வருமாறு காணப்படுகின்றது அதாவது, "<u>மாம்சத்தின்படி நடவாமல்</u> (நம்மால் முடிந்தமட்டும் தெய்வீக உதவியை நாடி, மாம்சத்தின் கவர்ச்சிகரமான செல்வாக்குகளை நாளுக்குநாள் எதிர்த்து) <u>ஆவியின்படி நடக்கிற</u> (நாம் அநேகமாக ஆவிக்கேற்ப முற்றிலுமாக நடக்கவில்லை என்றாலும் இறுதியில், பரம பிதாவினுடைய அன்பான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான சாயல் என்று பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக, "புதிய சிருஷ்டிகளுக்குரிய" குணலட்சணத்தின் மகிமையான நிலைக்கு நம்முடைய மாபெரும் போதகருடைய கிருபையினாலும், உதவியினாலும் <u>வரத்தக்கதாக</u> நாம் ஆவியில் நடப்பதை நாளுக்கு நாள் தொடரும்) <u>நம்மிடத்தில்</u> (புதிய சிருஷ்டிகளிடத்தில்) <u>நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்</u>" (ரோமர் 8:4).

மாறாக ஒருவேளை இப்படியாக, "புதிய சிருஷ்டிகளாக" மாறியுள்ளவர்களில் எவரேனும் பாவத்தில் துணிகரமாகவும், விரும்பியும் ஈடுபட்டு, மாம்சத்திற்கு ஏற்றபடி வாழ்வாரானால் இது, அவரை ஜெநிப்பித்த சத்தியத்தின் விதையானது, அவருக்குள் அழிந்துப் போய்விட்டதற்கான உறுதியான அடையாளமாகும்; ஏனெனில் இந்த விதை அவருக்குள் எதுவரையிலும் தரித்திருக்கின்றதோ, அதுவரையிலும் அவரால் துணிகரமாய்ப் பாவம் செய்ய முடியாது (1 யோவான் 3:9).

பாவத்திற்கு அடிமைகளாக இருந்து, உண்மையில் விடுதலை அடையாமல், புத்திரத்துவத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் தற்கால சூழ்நிலைகளின் கீழ், ஒரு குறிப்பிட்ட வேளைவரையிலும் யுகத்திற்கடுத்த திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் தெய்வீகத் திட்டத்தினுடைய ஊழியக்காரர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர்; உதாரணத்திற்குச் சிலசமயம் தேவன், மனுதனுடைய கோபத்தையும், சாத்தானுடைய எதிர்ப்பையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றிப் பயன்படுத்துகின்றார்; ஆனால் பாவம் நித்திய காலமும் நிலைத்திருப்பதற்கும், அதற்கு அடிமைகளாக இருப்பவர்கள் அப்படியே காணப்படுவதற்கும் தேவன் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. தேவனுடைய புத்திரர்கள் மாத்திரமே, ஜீவிப்பதற்குரிய சிலாக்கியத்தை இறுதியில் பெற்றிருப்பார்கள். இரண்டு யுகங்களில் புத்திரர்கள் இருப்பதை நாம் நினைவில்கொண்டு, மேற்கூறிய புத்திரர்களைக் குறித்துத் தவறாய்ப் புரிந்துக்கொள்ளாமல் இருப்போமாக. இரண்டு யுகங்களின் புத்திரர்கள் பின்வருமாறு:-

(1) இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய புத்திரர்கள், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் அவருடைய, "சகோதரர்களென" உடன் சுதந்தரத்துவத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் ஆவர்; இவர்கள் முதற்பேறானவருடைய மணவாட்டிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்; இவர்கள் அனைத்தையும் சுதந்தரிக்கப் போகின்றனர். "இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:2). ஆவிக்குரிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளவர்களாகிய இந்தப் புத்திரர் வீட்டார், சீக்கிரத்தில் நிறைவடையப் போகின்றார்கள்; இவர்கள் நிறைவடைந்த பிற்பாடு, யாரும் இவ்வகுப்பாருக்குள் சேர்க்கப்பட முடியாது."

(2) சீக்கிரத்தில் இன்னொரு புத்திரர் வீட்டார் ஆரம்பிக்க இருக்கின்றனர். ஆயிரவருட யுகத்தின்போது, புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்த் தேவனுடைய ஈவை ஏற்றுக்கொள்பவர்களாகிய <u>உலகத்திற்கு</u> நமது கர்த்தர் இயேசு பிதாவாக, ஜீவன் கொடுப்பவராக இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது. சபை முதலாம் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக, முதல் பலன்களாக இருக்க, உலகம் பின்வரும் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக இருப்பார்கள். ஆயிரவருட யுகத்தின்போது உயிர்ப்பிக்கப்பட்டு, யுகத்தின் முடிவில் புத்திரத்துவத்திற்குள் கொண்டுவரப்படும் இந்தக் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய உலகத்தாரைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகையில், "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று (மரணத்தினின்று) தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்," அதாவது பாவம், மரணம், துக்கம், அழுகை, வலி முதலானவற்றிலிருந்து விடுதலை என்று குறிப்பிடுகின்றார். இவர்கள், தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்குமான பொதுவான சிலாக்கியங்கள் அனைத்தையும் சுதந்தரித்துக்கொள்வார்கள், மற்றும் இதோடுகூட மாபெரும் பாவநிவாரண பலி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட, பூமிக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்வார்கள் (ரோமர் 8:20-23).

இப்படியாக பூமியின் சீர்ப்பொருந்தப்பட்ட வகுப்பார், கிறிஸ்துவின் பிள்ளைகளாக இருப்பார்கள்; கிறிஸ்துவே இவர்களுடைய ஜீவனை விலைக்கொடுத்து வாங்கி, இவர்கள் ஆதாமுக்குள் இழந்துபோனதும், தம்முடைய சொந்த ஜீவனைக்கொடுத்து மீட்டுக்கொண்டதுமானதை இவர்களுக்குத் திரும்பக் கொடுத்திடுவார். ஆனால் அதற்கென்று இவர்கள் இறுதியில், யேகோவா தேவனைத் தங்கள் பிதாவாகவும், பிதா இவர்களை தமது பிள்ளைகளாகவும் கொண்டிருக்கமாட்டார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இக்காரியம் தொடர்பான இஸ்ரயேலிலுள்ள நிழலான வழக்கமானது, காரியத்தைத் தெளிவுப்படுத்துகின்றது. உதாரணத்திற்கு அனைத்து இஸ்ரயேலர்களும்

ஆபிரகாமின் பிள்ளைகள் என்றும், இஸ்ரயேலின் பிள்ளைகள் என்றும், யாக்கோபின் பிள்ளைகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் நாம் பதிய வைக்க விரும்பும் மையக்கருத்து என்னவெனில், எக்காலக் கட்டத்திலும் தேவனால், தம்முடைய பிள்ளைகளென ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய மத்தியஸ்தர் மூலமாக மாத்திதரமே பாவத்தின் கொடுமையினின்று விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்; இப்படிப்பட்டவர்களே மெய்யாகவே விடுவிக்கப்படுகின்றனர் என்பதே ஆகும்.

---

**R4148**

# "நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்"
## யோவான் 9:1-41

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்" - ( வசனம் 5)

நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக, தம்முடைய ஊழியத்தின் மூன்றாம் வருடத்தில், நிகழ்ந்த கூடாரப்பண்டிகையின் போது, எருசலேமில் காணப்பட்டார். இப்பொழுதும் காணப்படுவதுபோல, அன்றும் வழி ஓரங்களில் அநேக குருடர்கள் பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர்; அதிலும் விசேஷமாக வருடத்தின் இந்தக் காலகட்டத்தில், தொழுதுகொள்வதற்கெனத் திரளான ஜனக்கூட்டத்தார் கூடியிருக்க, அதுவும் இரக்க உணர்வுடன் காணப்படும் காலகட்டத்தில் அநேக குருடர்கள் வழி ஓரங்களில் பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்தனர். நமது கர்த்தர் இந்த அனைத்துக் குருடர்களையும் சொஸ்தப்படுத்தவில்லை; ஆறுமுறை மாத்திரமே சொஸ்தப்படுத்தினதாகப் பதிவுகள் காணப்படுகின்றது. அவருடைய வேலை, வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதாய்க் காணப்படாமல், மாறாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்கும், சுவிசேஷச் செய்தியைச் சுட்டிக்காண்பிப்பதற்கும் மாத்திரமே சொஸ்தப்படுத்துவதற்குரிய வல்லமை அவரால் செயல்படுத்தப்பட்டது.

நமது கர்த்தரும், அப்போஸ்தலர்களும் இந்தக் குருடர்களில் ஒருவரைக் கடந்துப்போகையில், ஒருவன் பிறந்தது முதல் குருடனாக இருந்தது கவனிக்கப்பட்டது. அந்தக் குருடன் பிச்சைக் கேட்ட காரியமானது அநேகமாக மிக முக்கியமான கேள்வி ஒன்றைப்பற்றின விவாதத்திற்குள் வழி நடத்தியிருக்க வேண்டும்; அப்போஸ்தலர்களால் எழுப்பப்பட்ட கேள்வி, "ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ?" என்பதாகும் (வசனம் 2). அப்போஸ்தலர்கள் இந்தத் தங்களுடைய வாதத்தைக் குறித்த விஷயத்தில், பொதுவாய்க் காணப்படுவதைக் காட்டிலும், இத்தருணத்தில் மிகவும் தெளிவில்லாமல் காணப்பட்டனர்; இல்லையேல் அந்த மனுஷன் பிறப்பதற்கு முன்னதாகவே பாவம் செய்ய முடியாது என்ற விஷயத்தை அறிந்திருப்பார்கள்; ஆத்துமாக்கள் கூடுவிட்டுக் கூடுச் செல்லும் என்பதான அந்நியர்களின் கருத்துக்கள் சீஷர்களுடைய கவனத்திற்கு வந்திருப்பதற்குக் குறைவான வாய்ப்புகளே உள்ளன. அந்நிய மதத்தினர், தாங்கள் முன்பு ஏதோ ஒருவிதத்தில் அல்லது சூழ்நிலையில் வாழ்ந்ததாகவும், உலகில் தாங்கள் பிறந்துள்ளபடியால், முன்பைக் காட்டிலும் ஒன்றில் மேலான (அ) கீழானதுமான மாறுபட்ட சூழ்நிலைகளில் புதுப்பிக்கப்பட்டுள்ள ஜீவியத்தைப் பெற்றுள்ளதாகவும் அனுமானித்துக்கொள்ளத்தக்கதாக, சாத்தான் அந்நிய மார்க்கத்தினர் அனைவரையும் வஞ்சித்துள்ளான். இதே கருத்து, மில்லியன் கணக்கிலான புத்தர்களினாலும், மோர்மோனியர்களினாலும் நம்பப்படுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் ஆதாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டார் என்றும், மனுக்குலம் முழுவதும் இயல்பான பிறப்பின் முறை மூலமாக ஆதாமிடமிருந்து தோன்றினது என்றும் வேதவாக்கியங்கள் போதிக்கின்றன.

அது இம்மனுஷன் செய்த பாவமும் இல்லை, இவனுடைய பெற்றோர் செய்த பாவமும் இல்லை என்ற நம்முடைய கர்த்தருடைய பதிலானது, அம்மனுஷனும், அவனுடைய பெற்றோர்களும் பாவம் இல்லாதவர்கள் என்றும், தகப்பனாகிய ஆதாமின் மீது வந்ததும்,

அவர் மூலமாய் அவருடைய சந்ததி முழுவதின் மீது வந்ததுமான குற்றத் தீர்ப்பில் இவர்கள் பங்கடையவில்லை என்றும் புரிந்துக்கொள்ளபடக்கூடாது. ஆதாமின் குற்றத்தீர்ப்பைக் குறித்து, "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" என அப்போஸ்தலர் கூறுகின்றார் (ரோமர் 5:12). நம்மையும், மற்றவர்களையும் போல இந்தக் குருடான மனுஷனும், அவனுடைய பெற்றோர்களும், ஆதாமின் சந்ததியினுடைய அங்கங்களாக மரணத் தீர்ப்பின் கீழ்க் காணவேபடுகின்றனர். இம்மனுஷனால் செய்யப்பட்ட ஏதேனும் விசேஷித்த பாவத்தினாலோ, இவனுடைய பெற்றோரினால் செய்யப்பட்ட ஏதேனும் விசேஷித்த பாவத்தினாலோ, இம்மனுஷன் குருடனாய்ப் பிறக்கவில்லை என்ற விதத்திலேயே நமது கர்த்தருடைய வார்த்தைகள் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். இதேபோல் வேறொரு தருணத்தில் சீலோவாமிலே கோபுரம் விழுந்து செத்தவர்களைக் குறித்துப் பேசுகையில், "சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ?" என்று கர்த்தர் பேசினார் (லூக்கா 13:4), அதாவது இதே விதத்தில் அனைவரும் கெட்டுப்போவதில்லை, மாறாக அனைவரும் மரித்துப்போவார்கள்; அனைவர் மீதும் மரணத்தீர்ப்பு உள்ளது. ஜீவன் அளிப்பவருடன் உறவிற்குள் வரும் போதுதான், இதனின்று தப்பித்துக்கொள்வதற்குரிய நம்பிக்கை காணப்படும்.

## "துன்பங்கள் என்பது தேவனுடைய உக்கிரத்திற்கான ஆதாரம் அல்ல"

இக்கட்டுகள் என்பது கண்டிப்பாக, தெய்வீக நிராகரிப்பிற்கான குறிப்பாக எப்போதும் இருக்க வேண்டும் என்பது இல்லை என்பதே இப்பாடத்தினுடைய முக்கியமான கருத்தாகும். இச்சம்பவத்தில் இடம்பெறும் இந்த மனுஷனுடைய விஷயத்திலும், தெய்வீக நிராகரிப்பு எதுவும் இல்லை; இப்படியாக யோபுவின் சூழ்நிலையிலும், சீலோவாம் கோபுரம் விழுந்து இறந்துப் போனவர்களின் விஷயத்திலும் இல்லை. யூதர்களுடைய விஷயத்தில், அவர்களுக்கு விசேஷித்த விதமாய் வரும் வியாதிகள் என்பது, தனிப்பட்ட பாவத்திற்கான தண்டனைகளை (அ) அடிகளைப் பெரும்பாலும் குறிக்கின்றது என நமது கர்த்தர் குறிப்பிட்டும் இருக்கின்றார்; ஆகவேதான் பெதஸ்தா குளத்தண்டையில் காணப்பட்ட வியாதியாய் இருந்த மனுஷனை நமது கர்த்தர் சொஸ்தப்படுத்தின தருணத்தில், "நீ போ, அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்." மனுக்குலத்தைத் தாக்கும் பெரும்பாலான வியாதிகளுக்கு, அவர்கள் சார்பில் அல்லது அவர்களுடைய முன்னோர்களின் சார்பில் <u>சரியற்ற ஒரு வாழ்க்கை</u> வாழ்ந்ததே காரணம் என்பதில் ஐயமில்லை. தைராய்டு வீக்கம் அடைதல் எனும் நோயானது, பல்வேறு தலைமுறைகள் தொடர்கிற நோயாக இருக்கின்றது; இப்படியாகவே முடக்குவாதமும் காணப்படுகின்றது. <u>ஆகவே நாம் வியாதிப்பட்டிருக்கும்போது,</u> அதிகமாக புசித்ததன் மூலமாக அல்லது அதிகமாக பானம் பண்ணினதன் மூலமாக அல்லது நம்முடைய நிலைக்குப் பொருந்தாத உணவுகளைப் பயன்படுத்தினதன் மூலமாக, அஜாக்கிரதையாய் வாழ்ந்ததன் காரணமாக, நாம் எந்தளவுக்கு வியாதிப்பட்டதற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றோம் என்பதைக் கவனமாய் ஆராய்ந்துப் பார்ப்பது சரியானக் காரியமாய் இருக்கும். இக்காரணத்தினால்தான் ஒருவேளை நாம் வியாதிப்பட்டிருப்போமானால், நாம் மனந்திரும்பி, நம்மால் முடிந்தமட்டும் முன்பைவிட மாறான விதத்தில் அடிகள் எடுத்து வைப்பது சரியானதாக காணப்படும்; இன்னுமாக எதிர்க்காலத்தில் நாம் அதிக உறுதியாய் இருப்போம் என்றும், அவருடைய மகிமைக்காகவும், நாம் அவருடைய ஊழியத்திற்கென அர்ப்பணம் பண்ணியுள்ள அழியக்கூடிய சரீரத்தைப் பாதுகாப்பதற்காகவும் சரீரத்திற்குரிய பிரயோஜனத்திற்காகவும் மட்டும்தான், நம்முடைய புசித்தலும், பானம் பண்ணுதலும் காணப்படும் என்றும், ஜெபத்துடன் தீர்மானம் எடுத்துக்கொள்வதும் சரியானதாகக் காணப்படும்.

ஆனால் ஒருவேளை நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவமும், வியாதியும், சுயத்தைத் திருப்திப்படுத்தினதன் காரணமாக அல்லது நம்முடைய கட்டுப்பாட்டிற்கு மிஞ்சி பரம்பரை வழியாக வந்த நோயாக இல்லை என நாம் ஆராய்ந்துப் பார்த்ததில் கண்டுப்பிடிப்போமானால், கர்த்தருடைய ஊழியங்களிலுள்ள நம்முடைய ஈடுபாட்டின் காரணமாக, நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்கள் வந்துள்ளனவா எனக் கவனமாய் ஆராய்ந்துப் பார்ப்பது சரியானதாக இருக்கும். ஒருவேளை கர்த்தருடைய ஊழியங்களில்

ஈடுபட்ட காரணத்தினால்தான் இவ்விளைவுகள் நேர்ந்துள்ளதெனில் நாம் அவைகளில் மேன்மை பாராட்டிக்கொள்ள வேண்டும்; நமக்கு மாபெரும் காரியங்களைச் செய்தவருக்கான ஊழியத்தில் ஜீவனிலும், ஆரோக்கியத்திலும் கொஞ்சத்தை ஒப்புக்கொடுக்க நம்மால் முடிந்ததற்கு நாம் களிகூர வேண்டும். எனினும் விவேகமுள்ள ஊழியக்காரர்களென, நாம் இதே நற்பலன்களை அல்லது இதைக் காட்டிலும் மேலான பலன்களை, வேறுவழியின் மூலம், அதாவது குறைவான உடல் சோர்வையும், குறைவான தளர்வையும்/பலவீனத்தையும் கொடுக்கக்கூடிய வேறு வழியின் மூலம் அடையலாமோ என்றும் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இதிலுங்கூட நம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய மனங்களுக்கு முன்பாகக் காணப்படக்கூடாது. ஏனெனில் அதிகப்படியான அளவில் தன்னுடைய ஜீவனைச் சிநேகிக்கிறவன், அதை இழந்து போவான். அவருடைய பார்வையில் மிகவும் பிரியமாகவும், அங்கீகரிக்கப்படத்தக்கதாகவும் இருப்பவைகளை, நம்முடைய சரீரங்களில், உக்கிராணக்காரர்களாக நாம் நிறைவேற்றுவதற்குரிய நமக்கான பொறுப்பைப் பற்றியே நம்முடைய எண்ணங்கள் காணப்பட வேண்டும். ஒருவேளை இந்தக் கருத்துக்களில் எதுவும், நம்முடைய சூழ்நிலைக்குப் பொருந்தவில்லையெனில், நாம் ஆராய்வதற்கு இன்னும் இரண்டு காரியங்கள் காணப்படுகின்றது:-

(1) நம்முடைய வியாதி, ஒருவேளை, கர்த்தருக்குப் பிரியமற்ற நடத்தைக்கான சிட்சையா? நம்முடைய வியாதி, அடிகள் போன்று இருக்கின்றதா? ஒருவேளை நம்முடைய மனங்களில், நம்முடைய இருதயத்தின் வாசலில் பாவம் கிடப்பதை, அதாவது ஜீவியத்தின் தவறான நடத்தையை நாம் கண்டுபிடிப்போமானால், நமக்கு வந்திருக்கும் அனுபவத்தைச் சிட்சை என ஏற்றுக்கொண்டு, அதில் நன்மையை அடைய நாடுவதே சரியானக் காரியமாக இருக்கும்.

(2) ஆனால் ஒருவேளை இவைகளில் எதுவும் நம்முடைய நிலைமைக்குப் பொருந்தவில்லையெனில், இப்பாடத்தில் இடம்பெறும் நபரின் நிலைமை போன்று, நமக்கு வந்துள்ள துன்பமும், நம்முடைய நன்மைக்கு என்றும், சில விலையேறப் பெற்ற ஆவிக்குரிய படிப்பினைகளை நாம் கற்று, செயல்படுத்துவதில் நமக்கு உதவுவதற்கு என்றும், இல்லையேல் இப்பாடத்தில் நமது கர்த்தர் குறிப்பிட்டிருக்கின்றது போல, தேவனுடைய கிரியைகள் வெளிப்படுத்துவதற்கு என்றும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்கென்று நாம் படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக அல்லது மற்றவர்களுக்கு நல்ல படிப்பினைகளைச் சுட்டிக்காண்பிப்பதன் மூலமாக, அவருக்குச் சொந்தமான நம்முடைய ஆவிகளிலும் (மனங்களிலும்), நம்முடைய சரீரங்களிலும் தேவனை மகிமைப்படுத்துவது நமக்கான பாக்கியமாகும். இப்படியாகவே குருடான மனுஷனுடைய அனுபவமும் காணப்பட்டது; குருடான மனுஷனுடைய சந்தர்ப்பமானது அவனுக்கு ஆசீர்வாதமாகவும், கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பரிசேயர்களுக்கும், மற்றவர்களுக்கும் கர்த்தர் இயேசுவையும், அவருடைய வல்லமையையும் வெளிப்படுத்துகிறதாகவும், பரீட்சையாகவும், அந்நாள் முதல் தற்காலம் வரையிலுமான கர்த்தருடைய ஜனங்களுக்கு விலையேறப்பெற்ற அறிவுரையாகவும் அமைந்தது.

## “தேவனுடைய கிரியைகள்”

தேவனுடைய கிரியைகள் என்பது, ஆயிரக்கணக்கிலான வியாதியஸ்தர்கள் மற்றும் குருடர்களில் ஒருவரைச் சொஸ்தப்படுத்துவதாக மாத்திரம் இல்லாமல், மாறாக இயேசுவை உலகத்தின் ஒளியாக வெளிப்படுத்துவதும், இதனால் யூத ஜனங்களுக்கு ஏற்படும் தாக்கமும், பரிட்சையுமே தேவனுடைய கிரியையாக இருக்கின்றது; அதாவது அவர்கள் மத்தியில் சில உத்தம இஸ்ரயேலர்கள், மணவாட்டி வகுப்பாரில் அங்கத்துவத்திற்குச் சேர்க்கப்பட்டனர் மற்றும் அந்தத் தேசத்தின் திரளானவர்கள் பரலோக இராஜ்யத்தில் பங்கடைவதற்கு அபாத்திரர்கள் எனப் புறக்கணிக்கப்பட்டனர். இந்தக் கிரியையை/வேலையை நமது கர்த்தர், “பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது” என்று கூறி இந்தக் குருடனான மனுஷனைச் சொஸ்தப்படுத்தினதில் செய்யத் தொடங்கினார் (யோவான் 9:4). (கிரியை புரிவதற்கான பகற்காலமாகிய) நமது கர்த்தருடைய நாட்களானது, சீக்கிரமாய் நிறைவை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த அற்புதமும், மற்றவைகளும், அதில் விசேஷமாக லாசருவை எழுப்பினதும், ஜனங்களுடைய கண்களின்

கவனத்திற்கு அவரை வெகுவாய் ஈர்த்தது; இதினிமித்தம் ஜனங்கள் மத்தியில் பிரிவினையும் ஏற்பட்டது, சிலர் அவரை ஏற்றுக்கொண்டவர்களாகவும், சிலர் அவரை புறக்கணித்தவர்களாகவும் காணப்பட்டனர் மற்றும் இந்தப் பிரிவு முழுத் தேசத்திலும் தொடர்வது அவசியமாய் இருந்தது. அது ஒரு பரீட்சையாக இருந்தது மற்றும் அது, இஸ்ரயேலர்களுக்கு முன்பாக, பிலாத்துவுக்கு முன்பாக, கல்வாரியில், உலகத்தின் ஒளியாகிய இயேசு, ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் முற்றிலுமாய் அணைந்துப்போகக் கூடிய இரவு வேளையின் உச்ச நிலையை அடைய வேண்டும். இப்படியாகவே கர்த்தருடைய பின்னடியார்கள் ஒவ்வொருவரின் விஷயத்திலுங்கூட அனைவருடைய நேரமும், தாலந்தும், வைராக்கியமும் கர்த்தருக்குத் துதிச் சேர்க்கும் வண்ணமான பலன்களை கொணர்வதற்கான வாய்ப்புகளுள்ள பகற்காலம் உள்ளது; மற்றும் இந்தப் பகற்காலத்தில் கொடுக்கப்படும் வாய்ப்புகள் முழுமையாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவனுக்கும், அவன் மரணத்திற்குள் கடந்துச் செல்கையில், அவனிடமிருந்து வாய்ப்புகள் கடந்துப் போகக்கூடிய இராக்காலம் வரும்.

இதற்கு இசைவாகவே "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய் நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிரசங்கி 9:10) என்று காணப்படுகின்றன. ஒட்டு மொத்த சபையும் பல்வேறு அனுபவங்களைக் கொண்டிருக்கின்றது என்பதும் மறந்துவிடப்படக்கூடாது. பெந்தெகொஸ்தேயில் ஆரம்பித்த ஆதி சபையின் மீது, குறைவில்லாமல் வெளிச்சம் காணப்பட்டது; எனினும் அப்பொழுது காலை வேளையாய் இராமல், சாயங்கால வேளையாய் இருந்தது. அஸ்தமனமாகும் சூரியனிடமிருந்த ஒளியே அவர்கள் மீது வீசியது; படிப்படியாக இருள் வந்தது, மற்றும் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நீண்டகால பகுதியில், கடினமான இருள் நிலவினது; மற்றும் இதில் கர்த்தருடைய ஜனங்களால், "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்று எழுதியிருக்கிறபடி, ஒரு குறிப்பிட்ட காலம்வரையிலும், நடைப்பாதையில் கொஞ்சத்தையே பார்க்க முடிந்தது (சங்கீதம் 119:105). அந்தக் காலபகுதி "இருண்ட யுகம்" என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது, மற்றும் இப்பொழுது நாம் காலையின் விடியலை நெருங்கிக்கொண்டிருக்கிறோம் மற்றும் பாதையும் அதிகமதிகமாய்ப் பிரகாசம் அடைந்து வருகின்றது.

இப்பொழுது அதிகமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதான வெளிச்சமானது, கிட்டதட்ட, ஆதிகால திருச்சபையின் மீது பிரகாசித்த வெளிச்சத்தைப் போன்றே காணப்படுகின்றது; மேலும் இரண்டு காலங்களிலும் மனுஷ குமாரனுடைய பிரசன்னத்தின் (parousia) ஒளிதான் காணப்பட்டது. ஆனால் விடியற்காலையின் இந்த வெளிச்சத்திலும் கூட, நாம் இன்னொரு ஆழ்ந்த இருளின் காலத்தை எதிர்ப்பார்த்து இருக்கின்றோம்; இந்த இராக்காலம் என்பது, தீர்க்கத்தரிசியினால், "விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது" என்று குறிப்பிட்டிருக்கின்றபடி, வானங்களில் இருள் பரவுகின்ற விதத்திலும், காலை வேளையின் கடுமையான புயல் என்ற விதத்திலும் உள்புகுவதாகக் காணப்படும் (ஏசாயா 21:12). காலைவேளை இப்பொழுது காணப்படுகின்றது, எனினும் இது ஆயிரவருட அரசாட்சிக்குரிய முழுமையான பிரகாசத்துடன் வருவதற்கு முன்னதாக, உபத்திரவக் காலத்தின் மாபெரும் புயல், அதாவது, "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்து காலம்" வரும் (தானியேல் 12:1). ஆகவே தனிப்பட்ட விதத்திலும், கிறிஸ்துவின் சரீரமென ஒட்டுமொத்தமாகவும் நாம் நமக்கே சொல்ல வேண்டியது என்னவெனில், "நாம், நம்மை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்;" அதாவது பகற்காலமாய் இருக்கும்பொழுதே, நம்மீது சூரியனுடைய ஒளி வீசும்பொழுதே, நம்மிடம் பணியை ஒப்படைத்தவருடைய கிரியைகளை நாம் செய்ய வேண்டும், ஏனெனில் எந்த மனுஷனும் கிரியை செய்ய முடியாத இராக்காலம் வருகின்றது, அப்பொழுது அவருடைய நோக்கத்திற்கும், சகோதர சகோதரிகளுக்கும், சத்தியத்தை பொது ஜனங்கள் மத்தியில் பரப்புவதற்குரிய ஊழியங்களுக்கான நம்முடைய வாய்ப்புகள், நிலவிக்கொண்டிருக்கும் சக்திகளினால்/அதிகாரங்களினால் வலுக்கட்டாயமாக நெருக்கப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

## "உலகத்தின் ஒளி"

"நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவான் 9:5) என்று நமது கர்த்தர் கூறினார். இவ்வார்த்தைகளைக் கூறினதிலிருந்து இன்னும் ஓர் ஆறு மாத காலங்கள், அதாவது நமது கர்த்தர் சிலுவையில் அறையப்படுவது வரையிலும் தீமையைக் கண்டிக்கத்தக்கதாகவும், நல்லவற்றை ஊக்குவிக்கத்தக்கதாகவும், உலகத்தின் மீது இந்த ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது; ஆனால் அவர் போன பின்னர், ஒளி மற்றும் தம்முடைய ஆவியின் செல்வாக்கினை/ஆதிக்கத்தை ஏற்கவல்ல கூடிய சிலரை விட்டுச் சென்றார்; இவர்கள் பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதத்தினால் பிரகாசிக்கப்பட்டனர். இவர்களைக் குறித்துக் கர்த்தர், "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றும், "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்றும் கூறினார் (மத்தேயு 5:14, 16). ஆகவேதான் அப்போஸ்தலனும், "அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" என்று குறிப்பிடுகின்றார்; அதாவது இருளில் பிரகாசிக்கும் வெளிச்சங்களாக நாம் இவ்வுலகத்தில் காணப்படுகின்றோம்; அதேசமயம் திரளான ஜனங்களினாலும், தேவனுடைய ஜனங்கள் என்று தங்களைக் குறித்துக் கூறிக்கொள்கின்றவர்களினாலும், அதாவது பரிசுத்த ஆவியினுடைய பிரகாசிப்பித்தலை அடையத்தக்கதாக, வெளிச்சத்தைத் தங்களுக்குள் அனுமதிக்க இருதயத்தில் விருப்பமற்று தேவனுடைய ஜனங்களெனத் தங்களைக் குறித்து அறிக்கை செய்து கொள்பவர்களினாலும் நாம் உணர்ந்துக்கொள்ளப்படாதவர்களாக, புரிந்துக்கொள்ளப்படாதவர்களாக, ஏற்றுக்கொள்ளப் படாதவர்களாக, மறுக்கப்படுபவர்களாக, தாக்கித் துரத்தப்படுபவர்களாக, இவ்வுலகத்தில் காணப்படுகின்றோம் (1 யோவான் 4:17). நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்து, நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கப் பண்ணத்தக்கதாக, நாம் அந்தப் பரிசுத்த ஆவியினால் பிரகாசிப்பிக்கப்படுதலுக்கும், இப்படியான வெளிச்சமானது, வீசி விழும் நபர்களில் ஒருவராக நாம் இருப்பதற்கும் இடையே பெரிய வித்தியாசம் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். நமது கர்த்தர் அநேகர் மீது தம்முடைய ஒளியைப் பிரகாசிக்கச் செய்தார், இப்படியே நாமும் நம்முடைய வெளிச்சத்தை அநேகர் மீது பிரகாசிக்கப் பண்ணுவதற்குரிய வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம். எனினும் ஒருவன் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லையெனில், அவனுக்குள் வெளிச்சமிராது (எபிரெயர் 10:32).

## "குருடனுடைய கண்களில் சேறு பூசப்படுதல்"

இந்தச் சிறு சம்பாஷணையானது, அநேகமாக குருடான மனுஷன் கேட்கத்தக்க தொலைவில்தான் நடந்து கொண்டிருந்தது; இன்னுமாக இச்சம்பாஷணையானது, அந்தக் குருடான மனுஷனுக்கு மாத்திரமல்லாமல், சீஷர்களுக்கும், கர்த்தருடைய வார்த்தைகள் மூலமாக அவரை விசுவாசித்த அனைவருக்கும் கூட கொடுக்கப்பட்டது. பின்னர் நமது கர்த்தர் மண்ணில் உமிழ்ந்து, புழுதி மற்றும் உமிழ் நீரினால் ஒரு களிம்பை/சேற்றை உண்டாக்கி, அதை வைத்து குருடான மனுஷனுடைய கண்களில் பூசினார். இவையனைத்தும் அந்தக் குருடான மனிதனுடைய சார்பிலிருந்து கொஞ்சம் ஒத்துழைப்பும் தேவை என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. சீலோவாம் குளத்தின் தண்ணீரிலே போய்க் கழுவும்படியான நமது கர்த்தருடைய கட்டளைக்குக் குருடான மனுஷன் புறப்பட்டுப்போனது என்பதில், அம்மனுஷனுடைய சம்மதமும் தெரிகின்றது. விசுவாசமானது, முதலாவதாகக் கிரியைகளினால் பின்தொடரப்படுகின்றது, மேலும் இது ஓரளவுக்கு வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. ஒருவேளை அம்மனுஷன் நம்பிக்கைக்கொண்டிருக்கவில்லையெனில், அம்மனுஷன் தன் கண்களில் சேறு பூசுவதற்கும் அனுமதித்திருக்கமாட்டான், இன்னமும் பிச்சைக்கேட்டுக்கொண்டிருந்த அவனுடைய இடத்தையும் விட்டுவிட்டு, கழுவும்படிக்கு எழுந்து போயிருந்திருக்கமாட்டான். நமது கர்த்தர் உண்டுபண்ணி பயன்படுத்தின சேற்றின் விஷயத்தில், சேற்றிலும், தண்ணீரிலும் எவ்விதமான குறிப்பிட்ட நன்மையும் இல்லை என்று நாம் கூறுகின்றோம்; மேலும் இப்படியாக இல்லை என்பது, முழுச் சம்பவத்தைப் பார்க்கும்பொழுது அடையாளம் கண்டுகொள்ளப்படலாம்; மாறாக அந்தச் சேறானது குருடான மனுஷனுடைய விசுவாசத்திற்கு உதவுவதாக மாத்திரமே இருந்ததே ஒழிய, மாறாக அம்மனுஷனுடைய மனதில் குணமாக்குதலை ஏற்படுத்தவில்லை; பரிசேயர்கள் போன்று, அம்மனுஷனும் அதை அற்புதம் என்றே எடுத்துக்கொண்டான்.

இம்மனுஷன் பிறவியிலேயே குருடாய் இருந்த காரியமே, இந்த அற்புதத்திற்கு அதிக முக்கியத்துவத்தைச் சேர்த்தது, இன்னுமாக அம்மனுஷன் கூறின பிரகாரமாக, பிறவிக்குருடனாய்ப் பிறந்த எவனுடைய கண்களும் திறக்கப்பட்டதாக, அதுவரையிலும் எவரும் கேட்டதில்லை. உண்மையில், அறிவியல் துறையில் உள்ள இவ்வளவு முன்னேற்றத்திற்குப் பிற்பாடும் கூட, பிறவியிலேயே குருடாய்ப் பிறந்தவர்களுக்கு எதுவும் சரிச் செய்திட முடியாது என்றும், கண் படலம் (cataract) நோய்க்கு மாத்திரமே விடுதலை இருக்கின்றது என்றும், இன்றுள்ள கண் மருத்துவர்கள் நமக்குத் தெரிவிக்கின்றனர். அதுவும் கண்படலம் விஷயத்திலும் சிகிச்சையும் பகுதியாகவே இருக்கின்றது, அதுவும் அறுவை சிகிச்சை மூலமாக லென்ஸ் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக செயற்கை லென்ஸ் வைக்கப்படுகின்றது.

அம்மனுஷனுடைய வீடு காணப்பட்ட இடத்திலுள்ள அனைவர் மத்தியிலும், இந்த அற்புதம் பற்றின பேச்சே போய்க்கொண்டிருந்திருக்க வேண்டும்; அயலார்களும், நண்பர்களும் அம்மனுஷனுக்கு வாழ்த்துதல் தெரிவித்தார்கள்; ஆனால் சிலரால், இம்மனுஷன்தான் குருடாய் இருந்த மனுஷன் என்பதை நம்ப முடியாமலும், பிறவியிலேயே குருடாய்ப் பிறந்த ஒருவர் பார்வையடைதல் என்பதை நம்ப முடியாமலும் காணப்பட்டனர். இது இயேசுவுக்கு நல்லதொரு விளம்பரமானது; ஏனெனில், எப்படிப் பார்வையடைந்தான் என்று அம்மனுஷனிடத்தில் கேட்கப்பட்ட போது, இயேசு என்னும் பெயர்க்கொண்ட ஒரு மனுஷன் இந்த அற்புதத்தைச் செய்தார் என்று தெரிவித்தார். நமது கர்த்தர் மீது ஏற்கெனவே பொறாமைக்கொண்டிருந்து, அவரைக் கொன்றுப் போடுவதற்கு வகை தேடின பரிசேயர்கள், ஒருவேளை எவரேனும் இயேசுவை மேசியா என்று கூறும் பட்சத்தில், அவர்களைத் தேவாலயங்களிலிருந்தும், அதன் சிலாக்கியங்களிலிருந்தும், அதாவது உண்மை யூதனுக்குரிய கனம், சுயாதீனம் மற்றும் சிலாக்கியங்களிலிருந்தும், பாத்திரமற்றவன் என ஒதுக்கி வைக்க வேண்டும் என்று முடிவு பண்ணியிருந்தனர். அற்புதம் பற்றின சங்கதி பரவி விடும் என்ற பயத்தினால், விஷயத்தை மடக்கி, ஒன்றுமில்லாமல் ஆக்கிப்போடுவதற்கென, அவர்கள் (பரிசேயர்கள்) விசாரணை நடத்தினார்கள். பரிசேயர்கள் குருடான மனுஷனுடைய தகப்பனிடத்திற்கும், தாயினிடத்திற்கும் சென்றபோது, பெற்றோர்கள் சுருக்கமாக உண்மையைத் தெரிவித்துவிட்டு, விலகிவிட்டனர்; அதாவது அம்மனுஷன் தங்களுடைய குமாரன்தான் என்றும், அம்மனுஷன் பிறவியிலேயே குருடாய்ப் பிறந்தான் என்றும், இப்பொழுது பார்வையடைந்துள்ளான் என்றும், தாங்கள் நடந்ததைப் பார்க்காத காரணத்தினால் எப்படிப் பார்வை வந்தது பற்றித் தங்களுக்கு எதுவும் சொல்ல இயலாது என்றும், அம்மனுஷன் வயதுள்ளவனாய் இருக்கிறபடியால் அம்மனுஷனே தனக்காகப் பேசிக்கொள்ள முடியும் என்றும் பெற்றோர்கள் கூறி விலகிவிட்டனர். மீண்டுமாக, குருடாய் முன்பு காணப்பட்டிருந்த அந்த மனுஷனிடத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன; எப்படி? எப்பொழுது? எங்கே? என்று அம்மனுஷன் பொய்ச் சொன்னதாக அவரை மடக்கி, சிக்க வைப்பதற்கெனக் கேள்விகள் கேட்கப்பட்டன. இருதயத்தில் உண்மைக்கொண்டிருந்த அம்மனுஷனோ, பரிசுத்தமானவர்களெனத் தங்களைக் குறித்துக் கூறிக்கொள்ளும் பரிசேயர்களாகிய இந்த மனிதர்கள், இயேசுவை எதிர்ப்பவர்கள் என்றும், நடந்த அற்புதத்தை மறுப்பதற்கு அல்லது இழிவாய்ப் பேசுவதற்கென அனைத்து விதத்திலும் முயற்சி எடுக்கின்றவர்கள் என்றும் உணர்ந்துக்கொண்டார்.

சொஸ்தப்பட்ட மனுஷனை நோக்கிப் பரிசேயர்கள் பின்வரும் விதத்தில் பேசினார்கள், . . . "உனக்குத் தவறான வழியின் மூலமாகப் பார்வைக் கிடைத்திருந்தாலும், உனக்குப் பார்வைக் கிடைத்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்; ஏனெனில் உன்னைச் சொஸ்தப்படுத்தின மனுஷனாகிய இயேசு ஒரு பாவி என்பதையும், மாய்மாலக்காரன் என்பதையும், மேசியா எனத் தன்னை அறிக்கைப் பண்ணும் மோசடியாளர் என்பதையும் நாங்கள் அறிவோம்; இயேசு ஒரு மோசமான மனுஷன்." இவைகளை முன்பு குருடாய் இருந்து, இப்பொழுது சுகமடைந்துள்ள அம்மனுஷனால் சகிக்க முடியாமல் இருந்தது; தன்னுடைய அருமை நண்பன் (இயேசுவினுடைய) குணலட்சணங்கள் திரித்துக் கூறப்படுவதை, எதிர்த்துப் பேசாமல் அம்மனுஷனால் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை; ஆகவே பின்வருமாறு கூறினார் . . . "இதுவரையிலும் நிகழ்ந்ததாக, கேட்டிராத இப்படிப்பட்டதொரு அற்புதம் நிகழ்த்தப்பட்டிருப்பது வியக்கத்தக்கதாக இருக்கின்றது; இன்னமும் தேவனால் தொடர்பு வைக்கப்படாத ஒரு பாவியினால் இந்த அற்புதம் செய்யப்பட்டிருப்பது, வழக்கத்திற்கு மாறாக இருக்கின்றது; உண்மையில் வியக்கத்தக்கதாகவே இருக்கின்றது. தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக்கூட கேட்பதில்லை

என்ற போதனை யூதர்களாகிய நம் மத்தியில் காணப்படுகின்றதே; அப்படியானால் (உங்களால்) பாவியென்று சொல்லப்படும் இந்த மனுஷனால் (இயேசுவினால்) எப்படி, இப்படியொரு வியக்கத்தக்க அற்புதத்தைச் செய்ய முடியும்?" பின்னர் மீண்டுமாக, எப்படி, எங்கு, எப்பொழுது எனப் பரிசேயர்கள் அம்மனுஷனிடத்தில் குறுக்குக் கேள்விகள் எழுப்பினார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தின் உண்மையற்ற தன்மையை அம்மனுஷன் உணர்ந்தவராக, "ஏன் மீண்டும் மீண்டுமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? நான் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இல்லையா? நீங்கள் அவருடைய சீஷர்களாக ஆக ஆவல் கொண்டிருப்பதினாலா, என்னை இன்னும் விவரித்துக்கூற சொல்கின்றீர்கள், இல்லையேல் உங்கள் நோக்கம்தான் என்ன?" என்று கேட்டார். தங்களுடைய மாய்மாலமான திட்டங்கள் வெளியாகிவிட்டன என்று உணர்ந்தவர்களாக, "நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்" என்றும், மோசேயுடனே தேவன் பேசினார் என்றும் அறிவோம், இவரைக் குறித்து யார் அறிந்துள்ளார்கள்? இவர் நாசரேத்திலிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றார்; இவருடைய பெற்றோர்கள் அரண்மனையிலுள்ளவர்களுமல்ல மற்றும் நம்முடைய நாட்டை ரோமர்களின் கரங்களிலிருந்து விடுவிப்பதற்குரிய வல்லமையையும், மகா மகிமையையும், திறமையும் கொண்டவராக நாம் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கும் மேசியா போன்றவர் இவரல்ல. நீ வேண்டுமானால் இவரைப் பின்பற்று; உன்னோடும், இயேசுவோடும் எங்களுக்கு சம்பந்தம் இல்லை; மீண்டுமாக இனி எங்களுடைய தேவாலயத்திற்கு நீ வராதே, உன்னுடைய சொந்த தேசத்திலுள்ள பக்தியுள்ள ஜனங்களிடமிருந்து நீ விலக்கப்படுவதைக் கொஞ்சம் யோசித்துக்கொள்" என்றும் அம்மனுஷனை வைதார்கள்.

இம்மனுஷன் புறம்பாக்கப்பட்டான் என்பதை இயேசு கேள்விப்பட்டு, அம்மனுஷனைக் கண்டு, "தேவனுடைய குமாரனை நீ விசுவாசிக்கிறாயா?" என்று கேட்டார். கர்த்தரைக் குறித்து அதிகம் அறிந்துக்கொள்வதற்கான அம்மனுஷனுடைய வாஞ்சைக்குப் பதிலளிக்கும் வண்ணமாக, நமது கர்த்தர் தம்மை மேசியா என்று அம்மனுஷனுக்கு வெளிப்படுத்தினார். அம்மனுஷன் கர்த்தரைத் தொழுதுகொண்டான். இம்மனுஷன் மீதும், இவனுடைய நலனுக்கடுத்த விஷயங்கள் மீதும், விவேகமான பராமரிப்பைக் கர்த்தர் செயல்படுத்துவதைக் கவனியுங்கள். அம்மனுஷன் தேவலாயத்திலிருந்து தள்ளப்படுவதிலிருந்து, கர்த்தர் இவனைக் காக்கவில்லை, ஆனால் அந்தத் தள்ளப்படுதலை, அம்மனுஷனுக்கு அனைத்து விஷயத்திலும் நன்மைக்கு ஏதுவான போதனை அருளப்படுவதற்குரிய விசேஷித்த ஆசீர்வாதமாக மாற்றிப்போட்டார்.

இந்தச் சம்பவத்தில் நமக்கு மேன்மையான படிப்பினைகள் காணப்படுகின்றது. நம்மில் சிலர் குருடர்களாகவே பிறந்திருக்கின்றோம், அதாவது கர்த்தருக்கும், அவருடைய உண்மையான குணலட்சணத்திற்கும், தெய்வீக வார்த்தையினுடைய சத்தியத்திற்கும் குருடர்களாகவே பிறந்திருக்கிறோம். இந்த நம்முடைய குருட்டுத்தன்மையானது, நம்முடைய சொந்த தவறினாலும் அல்ல, நம்முடைய பெற்றோர்களுடைய தவறினாலும் அல்ல; நம்முடைய பெற்றோர்களும், நாமும் கர்த்தரிடத்தில் உத்தம இருதயத்துடனே காணப்பட்டிருந்தோம். ஆனால் இந்த நம்முடைய குருட்டுத்தன்மையானது, பாவங்களுக்கான சிட்சைகள் அல்ல. கிறிஸ்தவ மண்டலத்தில் பரவிக் கிடக்கும் இருளும், குருட்டுத்தன்மையும், நம்மையும், மற்றவர்களையும் சிக்க வைத்திருந்தது, ஆனால் கர்த்தர் நம்மீது இரக்கங்கொண்டு, நம் பக்கமாகக் கடந்துவந்து, நமக்காக கலிக்கத்தையும், களிம்பையும் உண்டு பண்ணினார். மனித பிரதிநிதியாகிய மண்ணை எடுத்து, அதில் தம்முடைய உதடுகளின் கனியாகிய தம்முடைய வார்த்தைகளைச் சேர்த்து, அதை புரிந்துக்கொள்ளுதலின் கண்களுக்கான களிம்பாக நமக்குக்கொடுத்து, சத்தியம் மற்றும் கிருபை எனும் தம்முடைய வார்த்தையாகிய சீலோவாம் குளத்தின் தண்ணீரில் நாம் கழுவிக்கொள்ளும்படிக்கு நமக்குக் கட்டளையிட்டார். அவர் சொன்னதை நாம் பின்பற்றினோம், இப்பொழுது நாம் காண்கின்றோம். நமக்கு முன்பு ஒரு புதிய உலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது; "வேதாகமத்தின் ஆச்சரியமானக் காரியங்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்!" நம்முடைய நாட்களிலுள்ள பரிசேயர்களும், வேதபாரகர்களும், நமக்கு வந்துள்ள ஆசீர்வாதத்தைக் குறித்து வியக்கின்றனர், விமர்சிக்கின்றனர், காரணம் காட்டுவதற்கும்/பதில் சொல்லுவதற்கும் முயற்சிக்கின்றனர்; இன்னுமாக நம்முடைய ஆசீர்வாதம் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தரால் பயன்படுத்தப்படும் அனைத்துப் பிரதிநிதிகளிலும்/கருவிகளிலும் குற்றம் கண்டுபிடிப்பார்கள், காரணம் தேவனுடைய கிருபையின் வெளிச்சத்தைப் புரிந்துக்கொள்வதற்குரிய சரியான நிலையில் அவர்களுடைய இருதயம் இல்லை என்பதேயாகும்.

சத்தியத்தை ஒப்புக்கொள்வதிலும், வெளிச்சத்தை ஒப்புக்கொள்வதிலும், நாம் நம்முடைய இருதயங்களைக் கர்த்தருக்குக் கொடுப்பதிலும், நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களிடத்தில் கர்த்தர் பண்ணிட்ட அற்புதத்தை ஒப்புக்கொள்வதிலும், நாம் இப்பொழுது அந்தக் குருடான மனுஷன்போல் செயல்படுகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும். இன்னுமாக இப்படியெல்லாம் செய்வது என்பது, நம்முடைய நாட்களிலுள்ள பரிசேயர் மற்றும் வேதபாரகரரின் வன்மத்தையும், கோபத்தையும், எரிச்சலையும், நமக்கு எதிராக கொண்டுவரும் என்பதையும் நாம் பார்க்கிறவர்களாய் இருப்போம். இது நம்மை இன்றைய வேதபாரகர் மற்றும் பரிசேயரின் கூட்டத்திலிருந்து பிரித்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களிலிருந்து நம்மை விலக்கி வைக்கத்தக்கதாக வழிநடத்துகின்றதாய் இருக்கும் என்பதையும் நாம் பார்க்கின்றவர்களாய் இருப்போம். இதைத் தீர்க்கத்தரிசி மூலம் கர்த்தர் முன்னுரைத்துள்ளார், அதாவது, "என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகின்ற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே (நாங்கள் கர்த்தரை மகிமைப்படுத்தத்தக்கதாக, கர்த்தருடைய நோக்கத்திற்கு நன்மையாக விளங்கும்படிக்கு நாங்கள் இந்த அப்புறப்படுத்தல்களைப் பண்ணுகின்றோம்); அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்" (ஏசாயா 66:5). கர்த்தருடைய ஜனங்களில் எத்தனை பேர், தாங்கள் சத்தியத்தை ஒப்புக்கொண்ட பிற்பாடு, சத்தியத்திற்காக நின்ற பிற்பாடு, மற்றும் சத்தியத்தினிமித்தம் சில துன்பங்களை அனுபவித்தப் பிற்பாடுதான், தங்களுக்கான ஆசீர்வாதத்தின் பெரும்பான்மையான பகுதி தங்களுக்கு வந்ததைக் கண்டிருக்கின்றனர்! இப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் கண்டுப்பிடிக்கின்றார், இவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதையும், இவர்களைப் பற்றின அனைத்தையும், எப்பொழுதும் அறிந்திருக்கிறார்; பின்னர் இவர்கள் தம்மைப்பற்றி அறிந்துக்கொள்வதற்கு என்றும், இவர்கள் தம்முடன் ஐக்கியம்கொள்வதற்கு என்றும், இந்தக் குருடான மனுஷனின் விஷயம் போலவே இவர்களும் தம்மிடத்திலிருந்து ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு என்றும், தம்மைப் பற்றி இவர்களுக்கு விசேஷித்தவிதமாய் வெளிப்படுத்துகின்றார்.

## "நாங்களும் குருடரோ?"

நம்முடைய பாடத்திற்கு ஆதாரமான வேதபகுதியின் அதிகாரத்திலுள்ள கடைசி இரண்டு வசனங்கள், பரிசேயர்களுடைய வேதசாஸ்திரங்கள் தொடர்பான பெருமையை நம்முடைய கவனத்திற்குக்கொண்டு வருகின்றது. இவர்கள், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியில், ஆவியில் பெருமையுள்ளவர்களாகிய இவர்களுடைய வாரிசுக்குச் சரியான அடையாளமாய் இருக்கின்றனர். நமது கர்த்தர் தாம் உலகத்திற்கு வந்தது என்பது, குருடரான சிலர் பார்வையடையத்தக்கதாகவும், பார்வைகொண்டிருந்தவர்களில் சிலர் குருடாய்ப் போகத்தக்கதாகவும் பரீட்சையாக (அ) நியாயத்தீர்ப்பாக அமையும் என்று தெரிவித்தார். அதாவது, சத்தியம் அநேகரைப் பரீட்சிக்கின்றதாய் காணப்படும், சிலர் இருளிலிருந்தும், அறியாமையிலிருந்தும், குருட்டுத் தன்மையிலிருந்தும், மூட நம்பிக்கையிலிருந்தும், வெளியே வந்து, தேவனுடைய பிரம்மாண்டமான ஆசீர்வாதங்களை உணர்ந்துக்கொள்கின்றவர்களாய் ஆவார்கள், மற்றும் முன்பு அதிக அளவிலான கிருபைகளைப் பெற்றிருந்த மற்றவர்களோ, குருடான நிலைக்குள் போய்விடுபவர்களாக ஆகிவிடுவார்கள். கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள், பெந்தெகொஸ்தே நாளில் பிரகாசிப்பித்தலை அடைவார்கள்; மீதமானவர்கள் குருடர்களாகி, இந்தச் சுவிசேஷ யுகத்தின் நிறைவு காலம் வரையிலும் குருடர்களாகவே காணப்படுவார்கள் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

இப்படிக் குருடர்கள் பார்வையடைவார்கள் என்றும், பார்வையுள்ளவர்கள் குருடர்கள் ஆவார்கள் என்றும் கர்த்தர் குறிப்பிடுவதைக் கேட்ட பரிசேயர்கள், கர்த்தரை நோக்கி, "எங்களை எந்தப் பட்டியலின் கீழ் வைக்கின்றாய்? குருடர்களின் பட்டியலில் இல்லை என நாங்கள் எதிர்ப்பார்க்கலாமா?" என்று கேட்டார்கள். இதற்குப் பிரதியுத்தரமாக, இயேசு அவர்களை நோக்கி, "முழுமையான அறியாமையின் காரணமாக, ஒருவேளை இவர்களுடைய பாதைகள் நடத்தப்பட்டதினிமித்தம் இவர்கள் குருடர்களாய் இருந்திருப்பார்களானால், இவர்களுக்கு நலமாயிருந்திருக்கும், ஆனால் இவர்களது சூழ்நிலையே வேறு. இவர்களுக்குப் போதுமானளவு பிரகாசிப்பித்தல்/வெளிச்சம் இருந்துள்ளபடியால், இதற்கேற்ப இவர்களுக்குப் பொறுப்பும் உள்ளது; ஆனால் பெருமையும், சுய திருப்தியும் இவர்களிடத்தில் மேலோங்கியிருப்பதினாலும், கர்த்தருடைய உண்மையான

செய்தியை இவர்கள் புறக்கணிப்பதினாலும், இவர்கள் வெளிச்சத்திற்கும், சத்தியத்திற்கும் எதிராக தங்களையே கடினப்படுத்திக்கொள்பவர்களாகவும், இருந்து, தங்களுடைய பாவம், தங்களைக்கட்டிப் போடுவதற்கும், ஏற்றகாலத்தில் வந்த வெளிச்சத்தை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு இவர்களை ஆக்கத்தக்கதாகவும், இவர்களை விலங்கிடுவதற்கும் அனுமதித்துவிட்டனர்; இவர்கள் வந்த ஒளியையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதே நிலையில் இன்று எத்தனை பேர்கள் காணப்படுகின்றனர்; முன்னிலை வகிக்கும் கிறிஸ்தவ ஜனங்கள் தாங்கள் பிரகாசிக்கப்பட்டுள்ளதாகப் பெருமையடித்துக்கொள்கின்றனர், ஆனால் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தைக் குறித்து அச்சமடைகின்றனர்; மற்றும் ஒன்றில் தங்களுடைய சொந்த அறியாமையைக் குறித்து அல்லது கர்த்தருடைய பிரசன்னத்தின் நாட்களில், இக்காலத்திற்குரிய வெளிச்சத்தைப் பரப்புவதற்கென அவர் பயன்படுத்திக்கொண்டிருக்கும் கருவிகளையும், இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கும் வெளிச்சத்தையும் குறித்து ஒப்புக்கொள்வதற்கு வெட்கப்படுகின்றனர். நமக்கு எவ்விதமான சொந்தமான வெளிச்சமோ, ஞானமோ இல்லை என்பதை உடனடியாக ஒப்புக்கொள்பவர்களாக இருப்போமாக, மற்றும் பரத்திலிருந்து வரும் மெய்யான ஞானத்தை, மெய்யான பிரகாசிப்பித்தலைக் கர்த்தருடைய கரங்களினின்று பெற்றுக்கொள்வோமாக. இப்படியான நிலையில் அனைவரும் வருவார்களானால், சத்தியம் வேகமாகப் பரவி விடும். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கூறியும், உண்மையில் எதையுமே தெரிந்திராதவர்களிடமிருந்தே மாபெரும் எதிர்ப்பு வருகின்றது; இப்படிப்பட்டவர்களுடைய பெருமையும், பெருமையடித்துக்கொள்ளுதலும் இவர்கள் வெளிச்சத்துக்குள் பிரவேசிக்காதபடிக்கு இவர்களை மாத்திரம் தடைப்பண்ணுகிறதாய் இராமல், மற்றவர்கள் வெளிச்சத்தை உணர்ந்துக்கொள்வதை இவர்கள் தடைப்பண்ணுவதற்கும் ஏதுவாக இவர்களை வழிநடத்துகின்றதாயும் இருக்கும்.

---

**R5362**

# “எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல்”

## லூக்கா 10:1-24

"பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.” - மத்தேயு 10:20

ஊழியர்களின் நியமித்தல் என்பது நூற்றாண்டுகள் காலமாக விவாதத்திற்குரிய ஒரு காரியமாகவே காணப்பட்டு வருகின்றது. இது மறைமுகமாக, கடந்த காலங்களில் இரத்தம் சிந்தப்படுவதற்கு ஏதுவான துன்புறுத்தல்களுக்கு நேராகவும் வழிநடத்தியுள்ளது. அந்தக் காலங்கள் கடந்துப் போய்விட்டப்படியினால், தேவனுக்கு நன்றி! எனினும் அநேக ஜனங்கள் இன்னமும் நியமித்தல் தொடர்பான விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ளாத காரணத்தினால், இந்த நியமித்தல் தொடர்புடைய விஷயத்தில், துன்புறுத்தல் மீண்டுமாகத் தொடர்வதற்குரிய அபாயம் எப்பொதுழுமே காணப்படுகின்றது. ஊழியர்கள் நியமித்தல் தொடர்புடைய விஷயத்திலுள்ள, தவறான கருத்துகளின் அடிப்படையிலுள்ள துன்புறுத்தல்களில் பேப்டிஸ்ட்டினர், மெத்தடிஸ்ட்டினர், லுத்தரேனியர், எபிஸ்கோப்பலியர், பிரஸ்பைடேரியினர் அனைவரும் பங்குக்கொண்டுள்ளனர்; இக்காரியம் தொடர்புடைய விஷயங்களில் இவர்கள் முற்காலங்களில் ஒருவரையொருவர் துன்புறுத்தியுள்ளனர்.

ஒருவர் விசேஷித்த விதமாய் (ஊழியத்திற்கு) நியமிக்கப்படாதது வரையிலும் ஒருவரால் போதகராக அல்லது பிரசங்கியாளராக இருக்க முடியாது என்பதும், நியமிக்கப்படாமல் பிரசங்கம் பண்ணுவது அல்லது போதகம் பண்ணுவது என்பது தெய்வீக ஏற்பாட்டிற்கு எதிராகக் கலகம் செய்வதாக இருக்கும் என்பதும், இப்படியாக நியமிக்கப்படாமல் போதிப்பவரின் போதனையைப் பின்பற்றுகின்ற அல்லது அப்படிப்பட்ட ஒருவருக்கு ஆதரவு கொடுக்கின்ற அனைவரும் (Heretics) எதிரான கொள்கையை உடையவர்களாகவும், எவ்விதமான அனுதாபத்திற்குப் பாத்திரமற்று, துன்பப்படுதலுக்கு ஏதுவானவர்களாய் இருப்பார்கள் என்பதும்தான் வாதமாய்க் காணப்படுகின்றது.

அநேகர் எண்ணிக்கொள்வது போன்று ஊழியத்திற்கு நியமிக்கப்படுதல் என்பது சடங்கு, ஆச்சாரம் தொடர்புடையதல்ல. அது பிரசங்கிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்படுதலையும், பிரசங்கிப்பதற்கான கடமை ஒப்படைக்கப்படுதலையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பேப்டிஸ்ட்டினர்கள் தங்களுடைய விசுவாசப்பிரமாணத்தை ஒப்புக்கொள்பவர்களிடம், அந்த விசுவாசப்பிரமாணத்தைப் பிரசங்கிப்பதற்கான கடமையை ஒப்படைக்கின்றனர். இப்படியாகவே பிரஸ்பைடேரியினர்கள் தங்களுடைய சீஷர்களிடம் கடமையை ஒப்படைக்கின்றனர்; இப்படியாகவே லுத்தரேனியர்களும், மெத்தடிஸ்ட்டினர்களும் செயல்படுகின்றனர். ரோம கத்தோலிக்கர்களும், எபிஸ்கோப்பலியர்களும் தேவனிடமிருந்து, நியமித்தல் வருவதாகக் கூறுகின்றனர்; அதாவது இவர்களுடைய கண்காணிகள் அனைவரும் அப்போஸ்தலர்களின் பின்வரும் வாரிசுகள் என்றும், அப்போஸ்தல அதிகாரம் உடையவர்களாய் இருக்கின்றனர் என்றும் உரிமைப் பாராட்டிக்கொள்கின்றனர்; இன்னுமாக இவர்களுடைய கண்காணிகள் மூலம் நியமிக்கப்படாத அல்லது பொறுப்பு ஒப்படைக்கப்படாத எவருக்கும், பிரசங்கம் பண்ணுவதற்குரிய உரிமை இல்லை என்றும், இப்படி நியமிக்காமல் பிரசங்கிக்கும் பட்சத்தில் அப்படிப்பட்டவர்கள் (Heretics) கொள்கைகளுக்கு எதிரானவர்கள் என்றும் கூறுகின்றனர். இவர்களுடைய கண்ணோட்டத்தின்படி, அதிகாரம் அளிக்கப்படாமல், பிரசங்கித்துக்கொண்டுவரும் புராட்டஸ்டன்ட்டினர் அனைவரும் (Heretics) கொள்கைகளுக்கு எதிரானவர்களே ஆவர்.

ஆனால் விட்டுக்கொடுத்தலின் ஆவியும் வளர்ந்துக்கொண்டு வருகின்றது; கடந்த இரண்டு வருடங்களுக்குள்ளாக எபிஸ்கோபலின் ஊழியக்காரர் ஒருவர், வேறு ஒரு சபை பிரிவின் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணலாம் அல்லது எபிஸ்கோபியினர்களினால் நியமிக்கப்படாத ஓர் ஊழியக்காரன், எபிஸ்கோபல் சபையின் மேடையில் நின்று பிரசங்கம் பண்ணலாம் எனும் அளவுக்கு, எபிஸ்கோபியினர்கள் மற்றப் புரோட்டாஸ்டன்டினர் மீதான தங்கள் தடைவிதிகளை விலக்கிப் போட்டுள்ளனர். எனினும் இவை அண்மை காலத்திற்குரிய சலுகையாகவே உள்ளது.

இன்றைய பாடத்தில், ஊழியத்திற்கான நியமித்தல் குறித்த சரியானக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இயேசு தம்முடைய விசேஷித்த அப்போஸ்தலர்களாய் இருக்கும்படிக்கு ஏற்கெனவே பன்னிரண்டு பேரை நியமித்துவிட்டார்; இப்பொழுது அவர் மேலும் எழுபது பேரை அப்போஸ்தலர்களாய் இருப்பதற்கு அல்லாமல் மாறாக பொதுவான ஊழியர்களாய் இருக்கும்படிக்கு நியமித்தார். பதிவுகள் தெரிவிக்கின்றதை வைத்துப் பார்க்கும் பொழுது, இவர்களுடைய நியமனத்தின் விஷயத்தில் எவ்விதமான சடங்குகள் அனுசரிக்கப்படவில்லை. அவர்கள் என்ன சொல்ல வேண்டும் என்று மாத்திரமே அவர்களிடம் கூறி, இயேசு அவர்களை அனுப்பி வைத்தார். நமது பாடத்தின் ஆதார வசனம் இவைகளைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. "பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" (மத்தேயு 10:20).

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், அப்போஸ்தலர்கள் அதுவரையிலும், நேரடியாக பிதாவின் ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை. பிதாவின் ஆவி, குமாரனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; மேலும் குமாரன், தம்முடைய நாமத்தில் பிரசங்கம் பண்ணும்படிக்கு அனுப்பி வைத்தவர்களுக்கு, அந்தத் தம்முடைய ஆவியைப் பகிர்ந்தார். பெந்தெகொஸ்தே வரையிலும், சுவிசேஷத்தின் செய்தியைப் பிரசங்கிப்பதற்குப் பிதா எவரையும் நேரடியாய் அங்கீகரிக்கவில்லை, மற்றும் அதிகாரம் கொடுக்கவில்லை அல்லது நியமிக்கவில்லை. பிதாவிடமிருந்து, குமாரன் மூலமாக பரிசுத்த ஆவியானது பொழியப்பட்டது குறித்து அப்போஸ்தலர் 2:32-33-ஆம் வசனத்தில் பரிசுத்தவானாகிய பேதுரு விவரிக்கின்றார்.

முன்பு பரிசுத்த ஆவி கொடுக்கப்படவில்லை, காரணம் இயேசு இன்னமும் மகிமையடைவில்லை என்று வேறு ஓர் இடத்திலும் கூட விவரிக்கப்பட்டுள்ளது. இயேசுவின் சீஷர்களைப் பிதாவானவர் புதிய ஏற்பாட்டின் கீழ்ப் புத்திரர்களாக ஏற்கும் முன்பும், அதாவது, உலகத்தில் அவருடைய ஸ்தானாதிபதிகளாகவும், பிரதிநிதிகளாகவும், அவர்கள் காணப்படத்தக்கதாக மற்றும் உண்மையாய் இருக்கும் பட்சத்தில் சாபத்தை மாற்றிப்போட்டு, பூமியை ஆசீர்வதிப்பதற்குரிய ஆயிரம் வருடங்களுக்குப் பரலோக இராஜ்யத்தில், இயேசுவுடன்கூடத் துணையாளர்களாகவும் காணப்படத்தக்கதாக பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலையும், பரிசுத்தராலே அபிஷேகத்தையும், அதிகாரத்தையும் (அ) நியமித்தலையும் கொடுப்பதற்கு முன்பும் இயேசு பாடுபட்டுப் பரமேறிச் சென்று, தம்முடைய சீஷர்களின் சார்பாக தம்முடைய புண்ணியத்தை முன்வைப்பது அவசியமாய் இருந்தது.

தேவன் யாருக்குப் புத்திர சுவிகாரத்திற்குரிய பரிசுத்த ஆவியைக் கொடுத்திருக்கின்றாரோ, அவர்கள் மாத்திரமே கர்த்தருடைய நாமத்தில் பிரசங்கிக்கத்தக்கதாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளனர் (அ) பொறுப்பு ஒப்படைக்கப் பெற்றுள்ளனர். தேவனுடைய நாமத்தில் பேசத்தக்கதாக எவருக்கும், பூமியில் நடைபெறும் சடங்கு ஆச்சாரங்கள் அனைத்தினாலும், மற்றும் கண்காணிகள் அனைவரின் கரங்கள் அனைத்தினாலும் அதிகாரம் கொடுக்க முடியாது. தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது வரையிலும், நமது கர்த்தர் இயேசுவும் தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கவில்லை. அவருடைய ஞானஸ்நானம் மற்றும் அர்ப்பணிப்பின் போது, பரிசுத்த ஆவி அவர் மீது வந்து, அவரை அபிஷேகித்து, அவரைப் பிரதிஷ்டைப்படுத்தி, அவர் "சிறுமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், நொறுங்குண்டவர்களின் காயம் கட்டவும், சிறையிலிருப்பவர்களுக்கு விடுதலையைப் பறைசாற்றவும், துக்கப்படுகின்றவர்களை ஆறுதல் படுத்துவதற்குரிய கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் அவருக்கு அதிகாரம் கொடுத்தது” (ஏசாயா 61:1, 2).

அதே பரிசுத்த ஆவிதான், இதைப் பெற்றுக்கொண்டுள்ள எவருக்கும், தெய்வீகத் திட்டம் தொடர்பாக தான் புரிந்துள்ள அனைத்தையும் கேட்க செவியுடையவர்களுக்கு, அதிலும் விசேஷமாகச் சிறுமைப்பட்டவர்களுக்கும், நொறுங்கின இருதயம் உடையவர்களுக்கும், தேவனைத் தேடுபவர்களுக்கும் கூறுவதற்கான அதிகாரமாய்க் காணப்படுகின்றது. சபையின் பெண் அங்கத்தினர்கள் பொதுவிடங்களில் பிரசங்கிக் கூடாது என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பாகத் தெரிவித்திருந்தாலும், இது பரிசுத்தாவியைப் பெற்றிருப்பவர்கள் அனைவரும் அவரவர்க்குரிய (ஆண்/பெண்) . . . பால் பாகுபாட்டிற்குரிய வாய்ப்புகள் மற்றும் வரம்புகளுக்கு ஏற்ப பிரசங்கம் பண்ணுவதற்கும், போதிப்பதற்குமான அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றார்கள் என்ற உண்மையில் தலையிடுவதில்லை. சிலசமயங்களில் தனி அறைகளுக்குள்ளாகப் பண்ணப்படும் போதனைகளானது, பொதுவிடங்களில் பண்ணப்படுவதற்கு ஒத்த பலனைக் கொடுக்கின்ற அளவிலும் காணப்படுகின்றது.

யோவான் ஸ்நானகன் துவங்கி, எருசலேம் அழிக்கப்படும் கிபி 70 வரையிலுமான, யூத யுகத்தை நிறைவு செய்திட்ட 40 வருடங்களானது, நிழலான இஸ்ரயேலர்களுக்கான அறுவடை காலமாய் காணப்பட்டது. இதில் உண்மையான கோதுமை அனைத்தும் சுவிசேஷ களஞ்சியத்தில் திரட்டப்பட்டது, மற்றும் மீதமான பதர் அனைத்தையும் அக்கினி அடைளாயப்படுத்தும் மகா உபத்திரவக் காலத்தில் ஒதுக்கப்பட்டது. இதைப் போலவே மத்தேயு 13-ஆம் அதிகாரத்தில், இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவிலும், அறுவடை காணப்படும் என்று கர்த்தர் தெரிவிக்கின்றார். அநேகர் இது 1874-ஆம் வருடத்தில் துவங்கி விட்டது என்றும், 1915-ஆம் வருடத்தில் முடிவடையும் என்றும் நம்புகின்றனர்.

யூத யுகத்தின் முடிவிலுள்ள கர்த்தருடைய உண்மையுள்ளவர்கள் அனைவரும், அறுவடை வேலையில் ஈடுபடுவதற்குரிய மாபெரும் சிலாக்கியத்தை அடையாளம் கண்டுகொள்ள வேண்டியிருந்தது போன்று, இப்பொழுதும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டியிருக்கின்றது. கர்த்தருடைய பின்னடியார்களை, கபடற்ற ஆட்டுக்குட்டிகளுடனும், ஆடுகளுடனும் ஒப்பிடப்படுகின்றனர், ஆனால் சுயநலமானதும், சீரமைக்கப்படாததுமான உலகத்தாரை அவர் ஓநாய்களைக்கொண்டு அடையாளப்படுத்துகின்றார். யூதர் அறுவடையின்போது, சீஷர்கள் வீடு வீடாய்ப்போய் இரந்து திரிய வேண்டும் என்பது அவருடைய விருப்பமாய் இருக்கவில்லை, மாறாக ஒவ்வொரு கிராமத்திலும், மிகுந்த தகுதியான ஜனங்கள் யார் என்று விசாரிக்கப்பட வேண்டும் என்றும், மேலும் சீஷர்களை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அந்தக் கிராமத்தில், சீஷர்கள் தங்களது சாட்சியைப் பகர்வது வரையிலும், அங்கேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் விரும்பினார். சீஷர்கள் முழுமையாகவே கர்த்தரைச் சார்ந்திருந்து, தங்களுடைய தேவைகளைச் சந்தித்துக்கொள்வதற்குத் தாங்களே முற்படக்கூடாது. இவைகளெல்லாம் அவர்களுடைய எதிர்காலத்தின்போது, அவர்களுக்கு உதவுகின்ற பாடமாய் இருந்தது. பிற்பாடு ஒருமுறை இயேசு தம்முடைய சீஷர்களை அனுப்பி வைக்கும்போது, அவர்களால் முடிந்தமட்டும் அவர்களுடைய தேவைகளைச் சந்தித்துக்கொள்ளும்படிக்குக் கூறி அவர்களை அனுப்பி வைத்தார்; இதிலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முதலாம் அனுபவமானது விசேஷித்த விதமான ஒன்று என்றும், அவர்கள் பிரதிநிதிப்படுத்தும் தெய்வீக வல்லமையின்

மீது சார்ந்தவர்களாகவும், அதில் நம்பிக்கைக்கொண்டிருப்பவர்களாகவும் அவர்களை ஆக்குவதற்கு, என்றும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

அவர் செய்தது போன்று, அவர்களும் வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தவும், பிசாசுகளைத் துரத்தவும் தக்கதான அளவில் ஆண்டவருடைய ஆவி, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இப்படியாகவே இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாக நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. சூழ்நிலைகள் மாறியுள்ளது. அன்றிருந்ததைக் காட்டிலும், மாபெரும் கிரியைகளாகிய ஆவிக்குரிய வியாதிகளை, குருட்டுத்தன்மையை, செவிட்டுத்தன்மையைச் சொஸ்தப்படுத்துவது என்பது இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கான சிலாக்கியமாகும்.

தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது என்பதே, சீஷர்களுடைய ஒரே செய்தியாய் இருந்தது. யாரெல்லாம் அந்த ஒரு செய்தியினால், தாக்கத்திற்குள்ளாகக் காணப்பட்டார்களோ, அவர்களெல்லாம் தாக்கத்திற்குள்ளானார்கள். இஸ்ரயேலர்கள் பல நூற்றாண்டுகள் காலமாக தேவனுடைய இராஜ்யத்திற்காக் காத்திருந்தார்கள். அந்தோ பரிதாபம், இராஜ்யம் முன்வைக்கப்பட்ட போதோ, அதை ஏற்றுக்கொள்வதற்குச் சொற்பமான யூதர்களே ஆயத்தமாய்க் காணப்பட்டனர்! பின்னர், இராஜ்யம் அளிக்கப்படும் காரியமானது, அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு விட்டு, அன்றுமுதல், முழு உலகத்தாருக்கும் கொடுக்கப்பட்டு, மேசியாவின் மணவாட்டியாகவும், உடன் சுதந்தரராகவும் இருக்கத்தக்கதாக அனைத்துத் தேசங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார் திரட்டப்பட்டனர்; இந்த மேசியா மற்றும் அவருடைய மணவாட்டி மூலமாகவே பூமியில் சீக்கிரமாய் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அதன் ஆசீர்வாதங்கள் பூமியின் இனத்தார் அனைவர் மேலும் அருளப்படும்.

கப்பர்நகூமிலும், பெத்சாயிதாவிலும், கோராசீனிலும், ஆண்டவர் தாம் பண்ணிய பிரசங்கத்தையும், பலத்த கிரியைகளையும் குறிப்பிடுகின்றார். சிலாக்கியத்தின் விஷயத்தில், இப்பட்டணத்தார் உயர்த்தப்பட்டுள்ளதாக அடையாள வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது; மேலும் இவர்கள் கர்த்தருடைய தயவுகளைப் புறக்கணித்துப் போட்டபடியால், இவர்கள் பாதாளமட்டும் தள்ளுண்டுவிடப்பட்டார்கள் என்றும் அடையாளமான வார்த்தைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீதோன் மற்றும் தீருவுங்கூட இப்படியாக பாதாளமட்டும், தூசியின் நிலைமையில்கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

நமது கர்த்தர் தம்முடைய பிரசங்கத்தின் வாயிலாக ஏற்படுத்தியுள்ள பரீட்சை (அ) போதனை (அ) நியாயத்தீர்ப்பானது இறுதியானது அல்ல என்றும், எதிர்க்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பு (அ) பரீட்சை இருக்கின்றது என்றும் சுட்டிக் காண்பிக்கின்றார். பரிசுத்தவானாகிய பவுலின் கூற்றுப்படி, ஆயிரவருட யுகம் என்பது ஆயிரவருட நியாயத்தீர்ப்பின் நாளாக இருக்கின்றது. இன்னுமாக அக்கால கட்டத்தில் முழு உலகமும், சத்தியத்தைப் பற்றின அறிவிற்குள்ளாகவும், தேவனைப் பற்றின அறிவிற்கு வருவதற்குரிய முழுமையான வாய்ப்பிற்குள்ளாகவும் கொண்டுவரப்படுவார்கள் (அப்போஸ்தலர் 17:31). எனினும் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டும், அசைவுறாமல், தங்களுடைய இருதயத்தில் கடினப்பட்டுப் போனவர்கள், இதற்கேற்ப, நியாயத்தீர்ப்பின் நாளில் அனுகூலமின்மையையும் அடைவார்கள். இக்காரியத்தை, இப்படிக் கடினப்பட்டிருக்கின்ற ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாளானது இலகுவாயிருப்பினும், இவர்களைக் காட்டிலும் சோதோமின் ஜனங்களுக்கு மிகவும் இலகுவாயிருக்கும், காரணம் சோதோமியர்கள், குறைவான வெளிச்சம் மற்றும் சிலாக்கியத்திற்கு எதிராகவே பாவம் செய்துள்ளனர் என்று கூறுவதின் மூலம் இயேசு சுட்டிக்காட்டினார் (எசேக்கியல் 16:48-63).

இறுதியில் சீஷர்கள் கூறுவதைக் கேட்டும், அவர்களை இழிவாகப் பார்ப்பவர்கள், கர்த்தரையும், பிதாவையும் இழிவாகப் பார்ப்பதாக இருக்குமென ஆண்டவர் நம்முடைய திருத்தூதர்களுக்கு உறுதியளித்தார். இது கர்த்தரால் நியமிக்கப்பட்டு, சுவிசேஷத்தின், சத்தியத்தின் ஊழியர்களென அனுப்பி வைக்கப்படும் அனைவரின் விஷயத்திலும் சந்தேகத்திற்கிடமின்றி உண்மையாகவே இருக்கின்றது.

**R3803**

# "எனக்குப் பிறன் யார்?"
## லூக்கா 10:25-37

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." - மத்தேயு 5:7

இயேசு பொது ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் போதித்து விளக்குபவராகக் காணப்பட்டார், எனினும் அவர் தம்மை யூதர்கள் மத்தியிலுள்ள வேதபாரகர்கள் மற்றும் வேத சாஸ்திரிகளுடன் இணைத்துக்கொள்ளவில்லை/காண்பிக்கவில்லை. அவர்களிடமிருந்து நியாயப்பிரமாணத்தைக் குறித்த வேறுபட்ட கண்ணோட்டத்தை இயேசு கொண்டிருந்தார், மற்றும் அவர் வேறுவிதத்தில் கற்றுக்கொடுப்பவராகவும் காணப்பட்டார். பொது/சாமானிய ஜனங்கள் அவர் கூறுவதை மகிழ்ச்சியுடன் கேட்டனர்; ஆனால் யூத வேத சாஸ்திரிகளோ, பொது ஜனங்களின் கவனத்தை ஈர்த்ததுமில்லை அல்லது பொது ஜனங்களுக்குப் போதிக்க முற்பட்டதும் இல்லை, மாறாக அவர்கள், அவர்களைப் போன்றவர்களுடனும், இன்னும் ஜனங்கள் மத்தியில் துறவிகளென காணப்படும் பரிசேயர்களுடனும், தெய்வீக நியாயப்பிரமாணம் தொடர்புடைய மாபெரும் பிரச்சனைகளை விவாதித்தவர்களாய் மாத்திரமே காணப்பட்டனர்.

கர்த்தர் கூறுவதைப் பொது ஜனங்கள் மகிழ்ச்சியுடன் கேட்டாலும், அவருடைய போதனைகளை அவர்கள் தெளிவாகப் புரிந்துக்கொள்ளவில்லை, காரணம் திரளானவர்களாய் இருக்கும் ஜனக்கூட்டத்தாருக்குப் புரியாமல் இருக்கத்தக்கதாகவும், பக்தி வைராக்கிமுள்ள உத்தம இஸ்ரயேலர்கள் இன்னும் அதிகமாய்க் கேட்பதற்கும், விசாரிப்பதற்குமென விசேஷமாய் ஈர்க்கப்படத்தக்கதாகவுமான நோக்கத்திற்கென்று, அவர் ஜனங்களிடம் உவமைகளினாலும், மறைபொருள்களினாலும்தான் பேசினார். இந்தப் பக்திவைராக்கியமுள்ள உத்தம இஸ்ரயேலர்களுக்கே, அவர் மாற்கு 4:11-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறி, உவமைகளை விவரித்தார். எனினும் ஆண்டவருடைய பாணியில் (style) ஏதோ ஒன்று மிகவும் கவரும் வண்ணமாக இருந்தபடியினால், அவருடைய போதனைகளை முழுமையாய்ப் புரிந்துக்கொள்ளாதவர்களும் கூட, "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று கூறினார்கள்; இன்னுமாக, "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டனர்" என்றும் நாம் வாசிக்கின்றோம்; இன்னுமாக, "அவர் வேதபாரகரைப்போல் (தெளிவில்லாமல்) போதியாமல், அதிகாரமுடையவராய் (தாம் பேசும் காரியத்தைப் பற்றி முழுவதும் அறிந்தவராய்) அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்றும் நாம் வாசிக்கின்றோம் (யோவான் 7:46; லூக்கா 4:22; மத்தேயு 7:29).

இதன் காரணமாகவேதான், இயேசுவின் மீது பொறாமை, நியாயசாஸ்திரிகள் மத்தியில் எழும்பிற்று. அவர்களைப் பொறுத்தமட்டில் அவர் போட்டிப் போடுகின்ற போதகராக இருந்தார்; ஆகவே கல்லாதவர்களென இவர்களால் அறியப்பட்டிருந்த இயேசுவின் பின்னடியார்கள் முன்பாக, இயேசு கேலிக்கு இடமாகத்தக்கதாக, அவரைச் சிக்க வைக்க இவர்கள் நாடினார்கள். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவர்கள் வெற்றிக் காணவில்லை; பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கர்த்தருடைய ஞானமானது இவர்களை மிஞ்சி காணப்பட்டது; இவர்களுடைய வாக்குவாதத்தில் இவர்களையே இயேசு சிக்க வைத்தார். இதற்கு இந்த நம்முடைய பாடங்கூட ஓர் உதாரணமாகும். நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் கண்டிப்பான நீதியின் விஷயங்களுக்கு எதிராக, அன்பு மற்றும் இரக்கம் தொடர்புடைய நம்முடைய கர்த்தருடைய போதனைகள் காணப்படுகின்றது என நியாயசாஸ்திரிகளில் ஒருவர் எண்ணிக்கொண்டு, இயேசுவை ஒரு கேள்வியினால் அகப்படுத்தும்படிக்கு நாடினார். நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள் என்ன என்று இயேசுவிடம் கேட்க வேண்டுமென அவர் முடிவு பண்ணியிருந்தார். "தேவனைப் போன்று அன்பான, பரந்த மனப்பான்மையுடன் கூடிய குணத்தை வெளிப்படுத்துகின்றவர்கள் அனைவருக்கும் நித்திய ஜீவன் கொடுக்கப்படும்" என்றோ அல்லது "என்னுடைய சீஷனாகி, என்னுடைய போதனைகளைக் கைக்கொள்வீரேயானால் நீர் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம்" என்றோ இயேசு பதிலளிப்பார் என்று அந்த நியாயசாஸ்திரி எதிர்ப்பார்த்தார். இப்படியாக இயேசு பதில் கொடுக்கும் தருணத்தில்,

இயேசுவின் போதனைகள் நியாயப்பிரமாணத்தை இரத்துச் செய்கின்றது என்றும், நியாயப்பிரமாணத்தை அவமாக்கிவிட்டது என்றும், அவர் நியாயப்பிரமாணத்தைப் புறக்கணித்துவிட்டார் என்றுமுள்ள உண்மையின் மீது கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று நியாயசாஸ்திரி எண்ணியிருந்தார்.

## "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும், புறாக்களைப் போல கபடற்றவர்களுமாய்"

இந்தப் நியாயசாஸ்திரியே, தன் வாயினாலேயே பதிலளிக்க நமது கர்த்தர் பண்ணினார்; "நீர் நியாயப்பிரமாணத்தைப் போதிப்பவர்; நித்திய ஜீவன் பெறப்படுவது தொடர்புடைய விஷயத்தில் நியாயப்பிரமாணம் என்ன கூறுகின்றது என்று நீரே எங்களுக்குச் சொல்லும்" என்ற விதத்தில் இயேசு அம்மனுஷனிடத்தில் கூறினார். இது கேள்விக்கேட்கும் பதிலாக இருந்தது; மேலும் இதற்கு நியாயசாஸ்திரி பதில் கூற முழு ஆயத்தத்துடன் காணப்பட்டார், காரணம், "நியாயப்பிரமாணம் சொல்கிறதென்ன?" என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிடும் யூதர்கள் மத்தியில் காணப்பட்ட பொதுவான ஒரு கேள்வியாக விளங்கி வந்தது (உபாகமம் 6:5; லேவியராகமம் 19:18). இக்கேள்விக்கான இதே பதிலைத்தான் சற்று முன்பு நமது கர்த்தரால், அவரிடம் வந்த ஐசுவரியமான வாலிபனுக்குக் குறிப்பிடப்பட்டது. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் அன்புகூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று நன்கு அறியப்பட்டிருந்த நியாயப்பிரமாணத்தின் கொள்கையை, நியாயசாஸ்திரி சொன்னார். இயேசு அவரை நோக்கி, "நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய்; அப்பொழுது பிழைப்பாய்" என்றார்.

## "நியாயப்பிரமாணமும், சுவிசேஷமும் ஒப்பிடப்படுதல்"

ஏன் இயேசு நியாயப்பிரமாணத்தை மேற்கோளிட்டுக் குறிப்பிட்டார்? ஏன் இந்த வாய்ப்பை, அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குப் பயன்படுத்தவில்லை? "என் மீது விசுவாசம் வைத்து, பின்னர் என்னுடைய சீஷனாக என்னுடைய அடிச்சுவடுகளில் நடக்கத்தக்கதாக முழுமையான ஓர் அர்ப்பணிப்பைப் பண்ணுவதே நித்திய ஜீவனை அடைவதற்கான ஒரே வழி" என ஏன் இயேசு நியாயசாஸ்திரியிடம் கூறவில்லை?; "மனுஷன் இரட்சிக்கப்படத்தக்கதாக, இயேசுவின் நாமத்தையல்லாமல், வேறே நாமம் வானத்தின் கீழ்க் கொடுக்கப்படவில்லை" என்று ஏன் இயேசு, அம்மனுஷனிடம் கூறவில்லை?; "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்" என ஏன் இயேசு அம்மனுஷனிடம் கூறவில்லை?" (அப்போஸ்தலர் 4:12; 1 யோவான் 5:12).

அப்படி ஒருவேளை இயேசு பதிலளித்திருந்திருப்பாரானால், அது அந்த நியாயசாஸ்திரி இருந்த மனநிலைக்கு மிகவும் பலமான ஆகாரமாய் இருந்திருக்குமென நாம் பதிலளிக்கின்றோம். அம்மனுஷன் இயேசுவின் மூலமாக தெய்வீக இரக்கத்தை எதிர்ப்பார்க்க ஆயத்தப்படுவதற்கு முன்னதாக, முதலாவது அம்மனுஷன், தெய்வீக நியாயப்பிரமாணம் முழுவதையும் தன்னால் கைக்கொள்ள முடியாமல் இருக்கும் இயலாமையை உணர்ந்துக்கொள்வது அவசியமாய் இருந்தது. பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளைப் பொறுத்தமட்டில், பிரச்சனை என்னவெனில், இவர்கள் தெய்வீக நியாயப்பிரமாணமானது மிகவும் உயர்வானதாகவும், பிரமாண்டமானதாகவும், பூரணமானதாகவும் இருப்பதை உணர்ந்து, அதன் நிபந்தனைகளைத் தங்களுடைய பெலவீனமான மற்றும் விழுந்துபோன நிலைமையில் பூரணமாய்ச் சந்திக்க இயலாது என்பதை அறிந்திருந்தும் மற்றும் தாங்களும் மற்ற மனிதர்களைப் போலவே மரிக்கின்றனர் என்பதையும் நன்கு அறிந்திருந்தும், இவர்கள் தாங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வது போன்று நடித்துக்கொண்டிருப்பதும், இன்னுமாக இவர்கள் நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாக்கப்பட்டுள்ளதுபோல் நடித்துக்கொண்டிருப்பதும் மற்றும் இன்னுமாக நியாயப்பிரமாணத்தினால் தங்களுக்கு நித்திய ஜீவன் கிடைப்பது போன்று நடித்துக்கொண்டிருப்பதுமேயாகும்.

சில ஜனங்கள், தேவன் ஒரு பரிபூரணமான (கொள்கையை) அளவுகோலைக் கொண்டிருக்கின்றார் என்றும், இந்தக் கொள்கைக்கு/அளவுக்கோலுக்கு இசைவாய் வராமல் எவரும் நித்திய ஜீவனை எதிர்ப்பார்க்க முடியாது என்றும், ஒப்புக்கொள்வதற்கு ஆயத்தமாய்

இன்னும் காணப்படுகின்றனர்; யூதர்கள் மத்தியில் அன்று காணப்பட்டது போன்று, இன்றும் அநேகர், தாங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான தெய்வீகக் கொள்கைக்கு/அளவுகோலுக்கு ஏற்ப ஓரளவுக்கு காணப்படுகின்றனர் என நம்புவதன் மூலம், தங்களுக்காக மீட்பின் தொகையை அளிப்பதற்குரிய ஒரு மீட்பருக்காக, ஓர் இரட்சகருக்காக எதிர்நோக்கமாலும், தங்களுடைய கறைகளை மூடிப்போடுவதன் மூலம், பிதாவுடன் தங்களை ஒப்புரவாக்கி, பாவங்களுக்கான மன்னிப்பையும், பாவங்களிலிருந்து பாதுகாப்பையும் தங்களுக்கு அருளக்கூடிய ஒரு மீட்பரை எதிர்நோக்காமலும் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் அனைவரும் தெய்வீக நீதிக்கு ஓர் அளவுகோல்/கொள்கை இருக்கின்றது, அது மிகவும் உயரிய அளவுகோல் என்றுள்ள பாடத்தை முதலாவதாகக் கற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் தேவனுடைய கொள்கை/அளவுகோல் எவ்வளவு உயர்வானதாக இருக்கின்றது என்றும், அந்தக் கொள்கைக்கு/அளவுகோலுக்கு ஏற்ப தாங்கள் காணப்படத்தக்கதாக தங்களால் ஏறெடுக்கும் சிறந்த பிரயாசங்கள் எவ்வளவு பூரணமற்றது என்றும் காண்கையில், இவர்கள் நித்திய ஜீவனை அடையும் விஷயத்தில் கர்த்தரிடமிருந்து உதவிக்காக நோக்க ஆரம்பிப்பார்கள். இந்த ஒரு பாடத்தைத்தான் அந்த நியாயசாஸ்திரி கற்றுக்கொள்ள வேண்டுமெனக் கர்த்தர் விரும்பினார், ஆகவேதான் நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்ப்பது என்ன என்பதற்கான பதில் வார்த்தைகளை அம்மனுஷனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

தேவனை ஒருவன் தன்னுடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் அன்புகூருவது என்பது எவற்றையெல்லாம் உள்ளடக்கும் என வாக்குவாதம் பண்ணிட நியாயசாஸ்திரி முற்படவில்லை. சிலர் தேவனை அன்புகூருவதாகவும், அவருக்கு ஊழியம் புரிவதாகவும் கூறுவதுண்டு. வேறுசிலர் இவர்கள் இப்படிக் கூறும் விஷயத்தில் எதையும் நிரூபிக்க முடியாமல் இருந்தும், அக்கூற்றின் உண்மையைக் குறித்துச் சந்தேக நிலையிலேயே காணப்படுவார்கள்; ஏனெனில் கர்த்தரும், அந்தந்த மனுஷரும்தான் சரியாக தன்தன் இருதயத்தைக் கணிக்க முடியும். இந்த அன்பு பற்றின விஷயம் ஏதோ முக்கியத்துவம் அற்றது போன்றும், அது ஏதோ தெரிந்த விஷயம் போன்றும், அது குறித்த மாபெரும் கேள்வியை நியாயசாஸ்திரி கேட்காமல் விட்டுவிட்டார்; ஆனால் ஒருவேளை நியாயசாஸ்திரி கர்த்தருக்கு அப்படி ஒரு அர்ப்பணிப்புப் பண்ணுவது என்பது குறிப்பது என்ன? எனக் குறைக்காணும் விதத்தில் ஆராய முற்பட்டிருப்பாரானால், அந்தக் கொள்கைக்கு/அளவுகோலுக்கு, தான் மிகவும் குறைவுபட்ட நிலையில் காணப்படுவதைக் கண்டிருப்பார்.

இக்கேள்வியை நாம் தவிர்த்துவிடாமல் காணப்படுவோமாக அல்லது முக்கியத்துவமற்றதாக எடுத்துக்கொள்ளாமல் இருப்போமாக; கர்த்தருக்காக நாம் கொண்டிருக்கும் நம்முடைய அன்பானது, வீட்டிலும், குடும்பத்திலுமுள்ள பிரியமானவர்கள் மீதான நம்முடைய அன்பைக் காட்டிலும் மற்றும் முழு உலகத்தார் மீதான நம்முடைய அன்பைக் காட்டிலும் மிஞ்சிக் காணப்படத்தக்கதாக, நம்முடைய அன்புகள்/நேசங்கள் அனைத்தும் கர்த்தர்மேல் மையம் கொண்டிருப்பது என்பதே, கர்த்தரை நம்முடைய முழு இருதயத்தோடு அன்பு செய்வதைக் குறிப்பதாக இருக்கும் என்பதை நாம் அறியக்கடவோம். கர்த்தரை நம்முடைய முழு ஆத்துமாவோடு அன்புகூருவது என்பது, நம்முடைய முழு ஆத்துமாவோடும், நம்முடைய வார்த்தைகள், பார்வைகள் மற்றும் நம்முடைய துதிகள் மூலமாக மாத்திரம் நம்முடைய அன்பு வெளிப்படுவோதடல்லாமல், இன்னுமாக நம்முடைய ஊழியங்கள், ஜீவியத்தின் நடத்தைகள் யாவும், நம்முடைய அன்பின் விஷயத்திலும், ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும் தேவனுக்கே முதலிடம் என்பதை சாட்சிப் பகருவதாக இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. மூன்றாவதாக கர்த்தரை நம்முடைய முழுப் பலத்துடன் அன்புகூருவது என்பது, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும் விஷயத்திலும், அவருடைய சித்தமென நாம் புரிந்துக்கொள்ளும் அவருடைய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் விஷயத்திலும், எல்லாவற்றிலும் நாம் பயன்படுத்தத்தக்கதாக ஆயத்தமாயிருக்கும் வண்ணமாக நம்முடைய நேரமும், தாலந்தும், செல்வாக்கும், நமது தேவனுக்குப் பயன்படத்தக்கதாகக் காணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நான்காவதாக நமது கர்த்தரை நம்முடைய முழு மனதுடன் அன்புகூருவது என்பது, கர்த்தரைப் புரிந்துக்கொள்ளும் விஷயத்திலும், அவருடைய தெய்வீகப் பிரமாணங்களைப் புரிந்துக்கொள்ளும் விஷயத்திலும், அப்பிரமாணங்களுடன் இசைவாய் வரும் விஷயத்திலும் அறிவு சார்ந்த பிரயாசம் எடுப்பதின் மூலம், "தேவனைத் தொழுதுகொள்பவர்கள், ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்"

என்று கர்த்தர் கூறினதற்கு ஏற்ப, நம்முடைய ஊழியமும், தொழுதுகொள்ளுதலும் புத்தியுள்ளதாய் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

## "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக"

கர்த்தருக்கு நியாயப்பிரமாணத்தைப் பற்றிப் பதில் கூறுகையில், "உன்னில் நீ அன்புகூருவது போல, பிறனிலும் அன்புகூருவாயாக" எனும் நியாயப்பிரமாணத்திற்கு, தான் அளித்துள்ள பதிலின் பின் பாகத்தை, தான் மீறுவதாக தன்னுடைய அன்றாட நடத்தையானது தன்னைக் குற்றவாளி எனத் தீர்க்கும் என்று நியாயசாஸ்திரி உணர்ந்துக்கொண்டார். இது, தான் தாக்கப்படுவதற்கு ஏதுவான கட்டம் என்றும், தன்னுடைய பதிலைக்கொண்டே, தன்னைக் கர்த்தர் சிக்கவைத்துவிட்டார் என்றும் நியாயசாஸ்திரி உணர்ந்துக்கொண்டார். நியாயசாஸ்திரி, தான் தன்னில் அன்புகூருவது போன்று தன்னுடைய அயலானை, தான் எவ்வாறு தன்னுடைய அனுதின ஜீவியத்தில் அன்புகூரவில்லை என்பதையும், தன்னைப்போன்ற வகுப்பாரிடமிருந்து, பொது ஜனங்களை, ஆயக்காரர்களை மற்றும் பாவிகளை வேற்றுமையாக, தான் பார்த்ததையும், தற்போது இயேசுவைச் சிக்கவைப்பதற்கு, தான் ஏறெடுத்துள்ள பிரயாசத்திலும், தான் தன்னில் அன்புகூருவது போன்று தன்னுடைய அயலானாகிய இயேசுவில் அன்புகூராமல், இயேசுவை எதிராளி போன்று நடத்துவதையும் நியாயசாஸ்திரி அறிந்திருந்தான். தன்னுடன் காணப்படும் வகுப்பாரிலுள்ள மற்றவர்களைப் போலவே தானும், தன்னுடைய சொந்த இனத்திலுள்ள கீழ்மட்ட ஜனங்களிடம் திமிர்த்தனத்தோடும், வெறுத்து ஒதுக்கும் மனப்பான்மையோடும் காணப்படுவதை உணர்ந்தார். வேதபாரகர் நியாயப்பிரமாணத்தில் கைத்தேர்ந்தவராய்க் காணப்பட்டிருந்தார். தங்கள் வகுப்பாரைச் சேர்ந்தவர்களை, தங்களைப் போன்ற வாழ்க்கை மட்டத்தில் காணப்படுபவர்களைத்தான், நியாயப்பிரணமாணத்தின்படி, தங்களில் அன்புகூருவது போன்று, தாங்கள் அன்புகூரப்பட வேண்டிய அயலார்கள் என்று பரிசேயர்களும், வேதபாரகர்களும் கொண்டிருந்த அதே விளக்கத்தைத்தான் நியாயசாஸ்திரியும் கொண்டிருந்தார். ஆகவே மிகுந்த நம்பிக்கையுடன், "எனக்குப் பிறன் யார்?" என்று இயேசுவுக்குப் பதில் கூறினார். அதாவது, "இவ்விஷயத்தில் தான் நாம் வேறுபடுகின்றோம் என நான் எண்ணுகின்றேன். என்னுடைய வகுப்பைச் சேர்ந்தவர்களை நான் அன்புகூர்ந்து, மதித்து, உறவுகொண்டிருந்து, மற்றவர்களை ஏறக்குறைய வெறுத்து ஒதுக்கும்போதுதான், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதாக நான் கருதுகின்றேன். எப்படி நீர் மோசேயின் நியாயப்பிரமாணத்தை வேறுமுறையில் செயல்படுத்துகின்றீர்? ஒவ்வொருவரும் தன்னுடைய வகுப்பில் உள்ளவர்களையே தனது அயலானாகக் கருதி, அவர்களை அன்புகூர்ந்து, அவர்களோடு ஒத்துழைக்க வேண்டுமே ஒழிய, வெளி உலகத்தில் காணப்படும் மற்றவர்களுடன் அல்ல என்றுதான் நியாயப்பிரமாணம் தெரிவிக்கின்றது என்பதை நீர் ஒப்புக்கொள்வீர் என்று நான் எண்ணுகின்றேன்" என்றவிதத்தில் நியாயசாஸ்திரி இயேசுவினிடத்தில் பேசினார்.

பொதுவாய்ச் சம்பவிக்கக்கூடிய காரியம் ஒன்றை வைத்து, அதாவது நியாயசாஸ்திரிகள் அறிந்திருக்கிற ஒன்றைக் கர்த்தர் வைத்து, வியத்தகு ஞானத்துடன் ஓர் உவமையைச் சித்தரித்தார். எருசலேமுக்கும், எரிகோவுக்கும் இடையேயுள்ள ஒரு பாதையைக் காட்சியில் முன் வைத்தார்; அது ஒரு குறுகிய வழிநடைப்பாதையாய் இருந்தது, சில இடங்களில் மிகவும் செங்குத்தாகவும் காணப்பட்டது, பாறை இடுக்குகளும் காணப்பட்டது; இது கொள்ளையர்கள் காணப்படும் பகுதியாம்; இந்தக் கொள்ளையர்கள், மலைகளிலுள்ள திரளான குகைகளில் வாழ்ந்து, வழிப்போக்கர்களைத் தாக்குபவர்களாக இருந்தனர். இன்றும்கூட எரிகோவுக்கு நேராகப் போகும் பிரயாணத்தின்போது, பிரயாணிகள் ஆயுதம் தரித்த அரேபியர்களைத் துணைக்குக்கொண்டு செல்வது வழக்கமாய் இருக்கின்றது. இந்தப் பாதையில் போய்க் கொண்டிருந்த ஒரு பிரயாணியை, கொள்ளையர்கள் தாக்கி, அவனை அடித்து, குற்றுயிராகப் போட்டு, அவனுடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டதாக நமது கர்த்தர் சித்தரித்தார். ஓர் ஆசாரியன் அவ்வழியில் போனதாகவும், அம்மனுஷனைக் கண்டு, தானும் கொள்ளையர்களால் தாக்கப்பட்டுப் போகாதபடிக்கு, விலகிப்போய்விட்டான் என்றும், இதைப் போலவே அவ்வழியே வந்த லேவியன் ஒருவன், உதவியளிப்பதற்கு நேரத்தைச் செலவிட விருப்பம் இல்லாமல் விலகிபோய்விட்டான் என்றும் கர்த்தர் சித்தரித்தார். பின்னர் ஒரு சமாரியன் அவ்வழியாக வந்தான் என்றும், அவன் மனதுருகி, காயமடைந்த மனுஷனுக்கு உதவி, அம்மனுஷனுடைய காயங்களைக் கட்டி, அவனைத் தன்னுடைய

சுயவாகனத்தில் ஏற்றிக்கொண்டு, அவனை அருகே உள்ள சத்திரத்தில் கொண்டுபோய், இரவு முழுவதும் அவனைப் பராமரித்து, இன்னுமுள்ள பராமரிப்பிற்காக இன்னும் சில ஏற்பாடுகளைச் சமாரியன் பண்ணுவித்தான் என்று நமது கர்த்தர் சித்தரித்தார்.

ஜனங்களுக்குக் கற்பிப்பதற்காகவும், ஜனங்களை, கர்த்தருடைய வழியில் வார்த்தையினாலும், மாதிரியினாலும் வழிநடத்துவதற்காகவும், கர்த்தருடைய பரிசுத்தமான ஊழியத்திற்கென விசேஷமாகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் லேவியர்கள் என்பதும், இதே கோத்திரத்தைச் சேர்ந்த ஆசாரியர்கள் எனப்படுபவர்கள், கர்த்தருக்கென்றும், இஸ்ரயேல் ஜனங்களுக்கென்றும் மிக உன்னதமான ஊழியத்திற்குக் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட விசேஷித்த குடும்பத்தாராய் இருக்கின்றனர் என்பதும் நினைவில் கொள்ளப்படும்போதுதான், நமது கர்த்தருடைய இவ்வுவமையின் அழுத்தத்தைப் பார்க்க முடிகின்றது. இன்னுமாக சமாரியர்கள் கலப்பின ஜனங்கள் என்பதும், சமாரியர்களை யூதர்கள் இழிவாகக் கருதினார்கள் என்பதும், யூதர்களும், சமாரியர்களும் எவ்விதமான சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை என்பதும் நினைவில் கொள்ளப்படும்போது, இவ்வுவமையானது மிக உயர்வானதாகத் தோன்றுகின்றது (யோவான் 4:9).

இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, "இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது" என ஆண்டவரால் கேட்கப்படும் கேள்வியைக் கவனியுங்கள் (லூக்கா 10:36). நியாயசாஸ்திரி சொல்வதற்கு ஒரே ஒரு பதில் இருந்தது. உவமையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள லேவி வகுப்பாரைச் சேர்ந்தவனாக இந்த நியாயசாஸ்திரி காணப்பட்டார். "அதற்கு அவன்: அவனுக்கு இரக்கம் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படி செய் என்றார்" (லூக்கா 10:37). அதாவது, "போய் இரக்கம் காண்பி; உலகத்திலுள்ள எந்த மனுஷனும், நண்பனோ, சத்துருவோ அவன் உன்னுடைய அயலான் என்றும், அவன் உன்னால் உனக்கு வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் அன்புகூரப்பட வேண்டும் என்றும், ஊழியம் புரியப்பட வேண்டும் என்றும் போய்ப் புரிந்துக்கொள். அவன் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ விரும்புகின்றாயோ, அதை நீயும் அவனுக்குச் செய்; உன்னில் நீ அன்புகூருவது போலும், உனக்கு நீ செய்வது போலும், உனக்கான கஷ்டமான சூழ்நிலையின் கீழ் அவன் உன்னில் அன்புகூர்ந்து, ஊழியம் புரிந்திட நீ விரும்புவது போன்றும், நீ அவனில் அன்புகூர்ந்து, அவனுக்குச் செய்திடுவாயாக."

## "பொன்னான சட்டம்"

கர்த்தருடைய ஜனங்களில் சிலர் மேற்கூறப்பட்டுள்ளபடி, நியாயப்பிரமாணத்தின் இந்தக் கோரிக்கையிலும், இதற்கான கர்த்தருடைய உவமையிலுள்ள விளக்கத்திலும் காணப்படும் முக்கியத்துவத்தை/அழுத்தத்தைத் தட்டிக்கழித்துவிடுகின்றனர்; அதாவது, "காயமடைந்த மனுஷனுக்கு இரக்கம் பாராட்டின சமாரியன், உண்மையில் அம்மனுஷனுக்கு அயலானாய் இருக்கின்றான்; ஆனால் அம்மனுஷனுக்கு இரக்கம் காட்டிட மறுத்த ஆசாரியனும், லேவியனும் அம்மனுஷனுடைய அயலானாகக் கருதப்படக்கூடாது; ஆகவே, அம்மனுஷன் காயம் ஆறின பிற்பாடு, தனக்கு உதவின சமாரியனுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும். சமாரியனுக்கு ஊழியம் புரிவதில், தன்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுத்திடவும் விரும்பி காணப்பட்டிட வேண்டும். ஆனால் அயலான் போன்று செயல்படாத மற்ற இருவரையும் அம்மனுஷன் தன் அயலானாகக் கருதக்கூடாது, மற்றும் தன்னில் அன்புகூருவது போன்று அவர்களையும் அன்புகூர முற்படக்கூடாது" என்று கூறி, கர்த்தருடைய ஜனங்களில் சிலர், கர்த்தர் இவ்வுவமையில் விவரிக்கும் விஷயத்தின் அழுத்தத்தை/முக்கியத்துவத்தைத் தட்டிக்கழித்துவிடுகின்றனர்.

இப்படியாகக் கூறுவது என்பது நமது கர்த்தருடைய வார்த்தைகளைத் திரித்துக் கூறுவதாக இருக்கும். உண்மையில் யூதர்கள் மத்தியில் பரவலாய் இருந்த இந்த ஓர் எண்ணத்தை/கருத்தை எதிர்க்கவே கர்த்தர் நாடினார். ஏனெனில் அயலார்களுக்கு நேர்மையாய் இருக்க வேண்டும் என்றும், சத்துருக்களிடம் வெறுப்புடன் காணப்பட வேண்டும் என்றும்தான், யூதர்கள் மத்தியில் பழமொழியாகக் காணப்பட்டது. அயலான் என்னும் வார்த்தையானது அருகாமையில் காணப்படுபவர்களைக் குறிப்பதினால் அன்பிலும்,

உணர்விலும், விசுவாசத்திலும், சமய பிரிவிலும் அருகாமையில் காணப்படுபவர்கள்தான் அயலான் எனப் பொருத்திப் பார்க்கும் பழக்கத்தில் வேதபாரகரும், பரிசேயரும் காணப்பட்டனர். ஆகையால் பரிசேயன் ஒருவன் இன்னொரு பரிசேயனையும், வேதபாரகன் ஒருவன் இன்னொரு வேதபாரகனையும், ஒரே குலம் எனும் சுயநலமான ஆவியில் ஒருவரையொருவர் அயலான் என்று கருதி, மகிழ்ச்சியுடன் ஊழியம் புரிவான்; இன்னுமாக வேறு வகுப்பாரிலுள்ள மற்றவர்களை ஏறக்குறைய எதிரிகளாகக் கருதிக்கொண்டு, ஒன்றில் அவர்களை அன்பு செய்யாமல் கடந்துச் செல்வான், அல்லது ஒருவேளை அவர்கள் தன்னை எதிர்க்கும் பட்சத்தில், அவர்களைப் பகைப்பவனாய்க் காணப்படுவான்.

இதைக் காட்டிலும் மேலான ஒரு கண்ணோட்டத்தைக் கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டிருக்க வேண்டும். மேற்கூறிய இக்கருத்தை எதிர்க்கும் நமது கர்த்தருடைய வார்த்தைகளை நாம் நினைவுகூருகின்றோம். "உனக்கடுத்தவனை சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராய் இருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத்தேயு 5:43-45). நண்பர்களிடத்தில் மாத்திரமல்லாமல், சத்துருக்களிடத்திலும் இந்த ஓர் அன்பின் அளவுகோலை/கொள்கையை அடையாத எவரும், தேவனால் அவருடைய பிள்ளைகளெனக் கருதப்பட முடியாது.

நமது கர்த்தருடைய சீஷர்களாய் இருக்கும் அனைவரையும், ஆள வேண்டிய தெய்வீகச் சித்தத்தின் முழு விவரமாகிய பொன்னான சட்டத்தை நமது கர்த்தர் உருவாக்கினார். நமக்கு இரக்கம் பாராட்டி உள்ளவர்களையே நாம் சகோதர சகோதிரிகளென அன்புகூர வேண்டுமெனப் பொன்னான சட்டம் கூறவில்லை. நமது கர்த்தர், "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே" என்று கூறினதன் மூலமாக இம்மாதிரியான சுயநலமான அன்பைக் கண்டிக்கின்றார் (லூக்கா 6:32). நமக்காக தங்களுடைய ஜீவியங்களை ஆபத்துக்குள்ளாக்கியவர்களை, நாம் நமது அயலார்களென அன்புகூர வேண்டும் என்று இந்த உவமை போதிப்பதாக விளக்கம் அளிப்பது என்பது, நம்முடைய ஆண்டவருடைய போதனைகளைவிட மிகவும், மதிப்பு இறங்கின விளக்கமாய் இருக்கும், மற்றும் இப்படி எண்ணுவது போன்றே பாவிகளும் எண்ணுகின்றனர் என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

மீட்பருடைய பின்னடியார்களாய் இருக்கும் நாம், மிகவும் உயர்வான (கொள்கை) அளவுகோலைக் கொண்டிருக்க வேண்டும்; கஷ்டமான நிலைமையிலும், நமது உதவி தேவைப்படும் நிலைமையிலும் இருக்கும் ஒவ்வொருவரையும், நம்முடைய அயலானாக நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; அதாவது ஒருவேளை நாம் இப்படியாக ஒரு கஷ்டமான நிலைமையில் காணப்படும்போது அவன்/அவள் நமக்குச் செய்திட, நாம் எதையெல்லாம் விரும்புகின்றோமோ, அவற்றை நாமும் அவனுக்கு/அவளுக்குச் செய்யத்தக்கதாக ஆயத்தமாய் இருக்கும் அளவுக்கு அவன்/அவள் மீது அனுதாபத்துடன்கூடிய/இரக்கத்துடன் கூடிய அன்புகொண்டிருக்க வேண்டும். எந்தளவுக்கு அன்பின், இரக்கத்தின், ஒத்துழைப்பின், பெருந்தன்மையின், இரக்க உணர்வின் இந்த உயர்வான அளவுகோலானது/கொள்கையானது, நமது இருதயங்களைக் கட்டுப்படுத்தி, நம்முடைய நடத்தைகளை ஆளுகின்றதோ, அவ்வளவாய் நாமும் நிச்சயமாய்த் தேவனைப்போன்று அதிகமாயும், கிறிஸ்துவைப்போன்று அதிகமாயும் காணப்படுவோம்; காரணம் நன்றியற்றவர்கள் மீதும் கூடத் தேவன் இரக்கமுள்ளவராக இருக்கின்றார் என நமது அருமை மீட்பர் குறிப்பிட்டுள்ளார்.

## "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்"

அயலானை அன்புகூரும் விஷயத்தைக் காட்டிலும், கர்த்தர் தம்முடைய சீஷர்களாகிய நம்மில் எதிர்ப்பார்க்கின்றார். நம்முடைய சத்துருக்கள் மீது நமக்கு அனுதாபத்துடன் கூடிய

அன்பாகிலும் காணப்பட வேண்டும்; இதினிமித்தம் நாம் அவர்களை வார்த்தையினாலோ, கிரியையினாலோ காயப்படுத்த முற்படாமல் இருப்பதோடு, நம்மால் முடிந்தமட்டும், அவர்களுக்கு உதவிடவும் நாம் ஆயத்தத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட வேண்டும். கர்த்தரை அன்புகூருவது போன்றோ, நமது சகோதர சகோதரிகளை அன்புகூருவது போன்றோ, நாம் நமது சத்துருக்களை அன்புகூர வேண்டும் எனும் அர்த்தத்தையே கர்த்தர் கொடுக்கின்றதாக நாம் எண்ணிவிடக்கூடாது. கர்த்தருக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் நாம் கொண்டிருக்கும் அன்பு என்பது, மிகவும் உயரிய வகை அன்பாகும்; அது நம்முடைய பரம பிதாவின் குணலட்சணத்தில் விளங்குவதும், அதேசமயம் பிதாவுக்குச் சொந்தமானவர்கள் அனைவரும் வளர்த்துவதற்கு நாடுகிறதுமான கொள்கைகளை உணர்ந்துள்ள/புரிந்துள்ள அன்பின் வகையாகும்.

நமது சத்துருக்கள் மீதும், நம்முடைய அயலார்கள் அநேகர் மீதுமுள்ள நம்முடைய அன்பானது, அவர்களுடைய குணலட்சணங்களின் அடிப்படையில் காணப்பட வேண்டும்; இவர்களுடைய நம்பிக்கைகள் மற்றும் இவர்களுடைய திட்டங்கள் என்பது, நாம் புதிதாய்ப் பெற்றுள்ள நம்பிக்கைகள் மற்றும் திட்டங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். நமது கர்த்தர் (இவர்களிடத்தில்) காட்டினதுபோன்று, இவர்களிடத்திலான நம்முடைய அன்பும், அனுதாபத்துடன் கூடிய அன்பாய் இருக்க வேண்டும்; தேவனும் இவர்கள்/உலகத்தின் மீது அனுதாபத்துடன் கூடிய அன்பையே கொண்டிருந்தார். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). ஐக்கியத்துடன்/உறவுடன் கூடிய அன்புடன் தேவன் உலகத்தை அன்புகூரவில்லை, நாமும் ஐக்கியத்துடன் கூடிய அன்புடன் உலகத்தை அன்புகூர வேண்டியதில்லை. உலகத்தின் விழுந்துபோன மற்றும் சீரழிந்துபோன நிலைமையை உணர்ந்தவர்களாக, அதனை காப்பாற்றுவதற்கும், நீதி மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் அது ஆறுதல் அடையத்தக்கதாகவும் நம்மால் முடிந்ததைச் செய்வதில் நாம் மகிழ்ச்சிகொள்பவர்களாகக் காணப்பட வேண்டும்.

"உன்னில் நீ அன்புகூருவது போல், பிறனிலும் அன்புகூருவாயாக" என்று நியாயப்பிரமாணம் கட்டளையிடும் அன்பிலும் கூட வரையறை காணப்படுவதாக இருக்கின்றது; அதாவது, "உன்னைக் காட்டிலும் அதிகமாய் அன்புகூர" வேண்டும் என்பதாகச் சொல்லப்படவில்லை. ஆகவே நாம் நமது ஜீவனைத் தியாகம் செய்துதான், நம்முடைய அயலானுக்கு நம்மால் உதவிட முடியும் எனும் அளவுக்கு, அயலான் ஒருவனுடைய ஜீவன் ஆபத்தில் காணப்படும் கட்டம் ஒருவேளை ஏற்படுமாயின், நாம் நமது அயலானுக்காக ஜீவனைத் தியாகம் பண்ணிட வேண்டும் என்று அன்பின் தெய்வீகப் பிரமாணம் கேட்பதில்லை . . . ஒருவேளை அப்படி ஜீவனைத் தியாகம் பண்ணுவது என்பது நம்மில் நாம் அன்புகூருவதைக் காட்டிலும் பிறனில் அன்புகூருவதாகவும், தெய்வீகப் பிரமாணம் கேட்பதைக் காட்டிலும் மிஞ்சினதாகவும் காணப்படும். நம்முடைய அயலானும், அவனில் அவன் அன்புகூருவதைக் காட்டிலும் அதிகமாக நம்மை அன்புகூர வேண்டும் எனவும், நமக்காக அவன் தன்னுடைய ஜீவனைத் தியாகம் பண்ணிட வேண்டும் எனவும், நாமும் எதிர்ப்பார்க்கக்கூடாது. ஒருவேளை நம்முடைய அயலான் இப்படியாக நமக்குச் செய்ய முற்படும் பட்சத்தில், அதைத் தடைப்பண்ணிவிடுவதும், நாம் அவனுக்குச் சம்பவிக்கக் கூடாது என விரும்புபவைகளை, அதாவது அவன் தனக்கு நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்த நாம் அவனை அனுமதியாமல் இருப்பதே நமக்கான சரியான மனநிலையாகும். இந்த ஒரு விஷயத்தில்தான், அதாவது நம் பொருட்டு நம்முடைய கர்த்தர் தம்முடைய ஜீவனைத் தியாகம் பண்ணின அவருடைய நடத்தையானது, நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்த்ததையும் மிஞ்சியதாய் இருந்தது; அநேகருக்காக தம்முடைய ஜீவனையே ஈடுபலியாக அவர் கொடுத்ததின் வாயிலாக, அவர் நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்த்ததைக் காட்டிலும் அதிகம் செய்தவராகக் காணப்பட்டார். இந்த ஒரு காரணத்தினால்தான் அது பலி/தியாகப் பலி என்று பெயரிடப்பட்டது. நியாயப்பிரமாணம் முழுவதையும் செய்வது அவருடைய கடமையாக இருந்தது, ஆனால் அவர் இதைத் தாண்டிச் சென்று, தம்முடைய ஜீவனை, மனுக்குலத்திற்கான ஈடுபலி விலைக்கிரயமாகக் கொடுத்திட்டார்; இது ஒரு பலி, மேலும் இந்தப் பலியானது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நித்தியஜீவனுக்கும் அதிகமானவைகளால் இயேசு விசேஷமாய்ப் பலனளிக்கப்பட்டார். இதே காரியம் நமக்கும் பொருந்துகின்றது, காரணம் அவரைப் போலவே நாமும் இவ்வுலகில் காணப்படுகின்றோம்;

மற்றும் அவருடைய அடிச்சுவடுகளில் நாமும் நடக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். (1 யோவான் 4:17).

நம்முடைய அயலான், நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அதையே நாம் நம்முடைய அயலானுக்குச் செய்ய வேண்டும் என்பதாகவே இன்னமும் நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கின்றது. இதைக் காட்டிலும் குறைவாக நாம் யாருக்கும் செய்துவிடக்கூடாது; ஆனால் கர்த்தருடைய பின்னடியார்களாக, அவருடைய பலயின் ஆவியினால் ஊக்குவிக்கப்பட்டுள்ளவர்களாகிய நாம், தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக சகோதர சகோதரிகளுக்கென நம்முடைய ஜீவியங்களை சந்தோஷமாக ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்; தெய்வீகத் திட்டமானது, இயேசுவுடன்கூட பலிச் செலுத்துபவர்களாக, பின்னர் அவருடைய இராஜ்யத்திலும், அதன் மாபெரும் வேலையாகிய உலகத்தை ஆசீர்வதித்தல் மற்றும் மீண்டும் பழைய (பூரண) நிலைக்குக்கொண்டுவருதல் வேலையில் அவருடன் உடன்சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக இப்பொழுது சிறு மந்தையை, விசுவாச வீட்டாரைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வருகின்றது. பிரமாணம் எதிர்ப்பார்க்கும் விஷயத்தையும், நமது பலி என்னவாக இருக்க வேண்டும் என்பதையும், எந்த ஒரு சிருஷ்டியின் இடத்திலும் நாம் எப்படி நடக்க வேண்டும் என நீதி எதிர்ப்பார்க்கும் விஷயத்தையும் பற்றின தெளிவான பார்வையை நாம் பெற்றிருப்பது அவசியமாய் இருக்கின்றது.

## ''நியாயப்பிரமாணம் முழுவதும் நம்மில் நிறைவேறும்படிக்கு''

நம்முடைய இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில், நமது கர்த்தர் நியாயசாஸ்திரிக்குக் கிருபையின் சுவிசேஷத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதற்குப் பதிலாக, நியாயப்பிரமாணத்தையே குறிப்பிடுவதைப் பார்த்தோம். கர்த்தர் தம்முடைய பின்னடியார்களுக்கு நியாயப்பிரமாணத்தையும், சுவிசேஷத்தையும், இரண்டையுமே பொருத்துவதை இப்பொழுது கவனிப்போம். தேவன் ஓர் அளவுகோலை/நியமத்தை, ஒரு பிரமாணத்தைக்கொண்டிருக்கிறார், அதை அவர் ஒருபோதும் அழிப்பதில்லை. நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையானது அதன் நோக்கத்தை நிறைவேற்றின பிற்பாடு, அது நின்று போய்விட்டது என்பது உண்மைதான்; ஆனால் உடன்படிக்கைக்கு அடிப்படையான, தேவனுடைய பிரமாணமானது, ஒரு போதும் இல்லாமல் போகப் போவதில்லை. நாமும் சரி, யூதர்களும் சரி, கர்த்தரை நம்முடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் மற்றும் பலத்தோடும் அன்புகூரவும், மற்றும் நம்மை நாம் அன்புகூருவது போன்று நமக்குப் பிறனை அன்புகூர வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கின்றோம். இதுவே நமக்கு முன்பும், யூதருக்கு முன்பும் வைக்கப்பட்டுள்ள நியமமாகும். யூதனால் இதைக் கைக்கொள்ள முடியவில்லை; யூதன், தான் தன்னுடைய அயலானைக் கையாளும் விஷயத்தில் குறைவுப்பட்டதோடல்லாமல், தன்னுடைய சிருஷ்டிகர் மீதுள்ள தன்னுடைய அன்பிலும், அதாவது மற்ற அன்புகளைக் காட்டிலும் மேலோங்கி காணப்பட்டு, ஜீவியத்தின் நடத்தைகள் அனைத்திலும் வெளிப்பட வேண்டிய சிருஷ்டிகர் மீதுள்ள தன்னுடைய அன்பின் விஷயத்திலும் தான் குறைவுப்பட்டிருப்பதைக் காண்கின்றான்.

நியாயப்பிரமாணத்தின் எழுத்தின்படியும், ஆவியின்படியும் முழுமையான பூரணத்தில் நமது கர்த்தராகிய இயேசுவினால் மாத்திரமே அந்த அன்பைக் கைக்கொள்ள முடியும் (அ) கைக்கொள்ள முடிந்தது. நமது கர்த்தருடைய காலங்களுக்கு முன்பாக வாழ்ந்த யூதன், நியாயப்பிரமாணம் தொடர்புடைய விஷயத்தில் எவ்வளவுதான் சரியான இருதயத்தின் நிலைமையில் காணப்பட்டிருந்தாலும், நியாயப்பிரமாணம் கூறுபவைகளுக்கு ஏற்ப அவனால் வாழ/செய்ய முடியாத காரணத்தினால், அவனால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நம்முடைய நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும். நமது கர்த்தர் இயேசு, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டவராக, ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததி அனைவருக்குமாகவும், தம்முடைய ஜீவனைப் பலியாகக்கொடுத்தார்; மேலும் இந்த உண்மைப் பற்றின அறிவிற்குள் இப்பொழுது வந்துள்ள நாம், விசுவாசிப்பதின் மூலம் அதை ஏற்றுக்கொண்டுள்ளப்படியால், கிறிஸ்துவுக்குள்ளாக, தேவனிடத்தில் அங்கீகரிப்பைப் பெற்றிருக்கின்றோம்; இதினிமித்தம் பிரமாணத்தைக் கைக்கொள்ளும் விஷயத்தில் நாம் எடுக்கும் சிறந்த பிரயாசங்களுடன், கிறிஸ்துவினுடைய புண்ணியமுங்கூடக் காணப்படுகின்றது, இவ்வாறாக தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதான நிலைமையில்

ஆக்கப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தேவனை நம்முடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும், மனதோடும் பிரதானமாக அன்புகூருவதில் நம்மால் முடிந்ததைச் செய்யும்பொழுதும், நம்மில் நாம் அன்புகூருவதுபோல் பிறனில் நாம் அன்புகூரும் விஷயத்தில் நம்மால் முடிந்ததைச் செய்யும்பொழுதும், தேவன் இந்த நல்ல பிரயாசங்களைப் பூரணமானது போன்று ஏற்றுக்கொண்டு, இதிலுள்ள குறைவுகளை, கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தினால் சரிச்செய்து கொள்கின்றார். ஆகவேதான் அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகின்றார், அதாவது, ‘‘மாம்சத்தின்படி நடவாமல் (நம்மையும், நம்முடைய விழுந்துபோன பண்புகளையும் பிரியப்படுத்த நாடாமல்), ஆவியின்படி நடக்கிற (தெய்வீகப் பிரமாணத்தினுடைய ஆவிக்கு இசைவாக நடப்பதற்கு முடிந்தமட்டும் செய்கிற) நம்மிடத்தில், நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்” (ரோமர் 8:4).

## “பொன்னான . . . வசனம்’’

‘‘தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?” என்ற வசனம் நம்முடைய நினைவுக்கு வருகின்றது (1 யோவான் 4:20). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் நம்முடைய இருதயங்களில் நிரம்பிக்கொண்டிருக்கும் அன்பின் அளவானது, நமது அனுதாபமும், கவனமும் அவசியப்படும் நம்முடைய சக சிருஷ்டியினிடத்தில் வெளிப்படும் அன்பில் அளவிடப்படலாம், மேலும் ஒருவேளை நாம் நம்முடைய சக சிருஷ்யினிடத்தில் குறைவான அன்பை வெளிப்படுத்துகின்றோமெனில், இது நமது சிருஷ்டிகர் மீதான நம்முடைய அன்பிலுள்ள குறைவையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். மாறாக ஒருவேளை நாம் மற்றவர்களிடத்தில் இரக்கமாய் இருக்கிறோமென்றால், நம்முடைய சக சிருஷ்டிகளுக்காக, அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாரிடத்தில் இரக்கத்துடனும், பெருந்தன்மையுடனும் இருந்து, நம்மால் முடிந்ததைச் செய்வதில் மகிழ்ச்சிக் கொள்வோமென்றால், இது நமது கர்த்தரினால் அங்கீகரிக்கப்படும் ஆவி நம்மில் இருப்பதையும் மற்றும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் அடையப் பெற்றதே இந்த ஆவி என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள இப்படிப்பட்ட இரக்கமுள்ளவர்கள், கர்த்தருடைய கரங்களிலிருந்து இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அவர் இவர்களைக் கனிவுடன் கையாளுவார்; மேலும் எந்தளவுக்கு தங்களுக்கு எதிராகத் தவறுகள் பண்ணுகிறவர்கள்மேல் இவர்களுக்குப் பெருந்தன்மையின், மன்னிப்பின் இந்த ஆவி காணப்படுகின்றதோ அவ்வளவாய், இவர்களுடைய பெலவீனங்களையும், குறைவுகளையும் கர்த்தர் இவர்களுக்கு மன்னிப்பார்.

---

# “சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல்”

**(Harvest Gleaning, Vol -2, p.80 சில பகுதிகள் மாத்திரமே இப்பாடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது)**

‘‘இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, நீ அநேகக் காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.” - லூக்கா 10:41, 42

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் நாம் நல்லதும், கெட்டதுமான விருப்பங்களையும் மற்றும் திட்டங்களையும்/கோரிக்கைகளையும் சந்தித்துக்கொண்டுதான் இருக்கின்றோம். நாம் இவைகளில் ஏதேனும் ஒன்றை எப்போதும் தெரிந்தெடுத்துக்கொண்டு இருக்கின்றோம்; ஒன்றில் உற்சாகமாய்த் தெரிந்துக்கொள்கின்றோம், இல்லையேல் ஒருவேளை தெரிந்துக்கொள்ள தவிர்க்கும் பட்சத்தில், என்ன சம்பவிக்கும் என்பதை அறிந்தவர்களாக அப்படியே ஏற்றுக்கொள்கின்றவர்களாகவும் இருக்கின்றோம். இந்தப் பல்வேறு திட்டங்கள்/கோரிக்கைகளின் விஷயத்தில் சரியான தெரிந்துக்கொள்ளுதலின்

முக்கியத்துவமானது இளைஞர்களால் சரிவர புரிந்துக்கொள்ளப்படுவதுமில்லை, உணர்ந்துகொள்ளப்படுவதுமில்லை. வருடங்கள் கடந்து செல்லுகையில், அனுபவப் பாடங்களை நாம் கற்றுக்கொள்ளுகையில், முடிவு எடுக்கும் திறனை அடைகின்றோம்; அதாவது சரியாய்த் தெரிந்துக்கொள்வதின் முக்கியத்துவத்தையும், நல்ல அல்லது கெட்ட தூண்டுதல்களையும், வாய்ப்புகளையும் ஏற்றுக்கொள்வது அல்லது புறக்கணிப்பது என்பதின் அடிப்படையிலேயே நமது எதிர்க்கால ஜீவியம் அமையும் என்பதையும், நமது எதிர்க்கால ஜீவியம் நம்மையே சார்ந்துள்ளது என்பதையும் நாம் கற்றுக்கொள்கின்றோம்.

இது எப்பொழுதும் ஓரளவுக்கு உண்மையாகவே இருந்துள்ளது, ஆனாலும் முன்பில்லாத அளவுக்கு, நம்முடைய நாட்களிலேயே மிகவும் உண்மையாகவும் இருந்துள்ளது, ஏனெனில் நம்முடைய முன்னோர்களைப் பார்க்கிலும், அதிகமான வாய்ப்புகளுள்ள காலத்திலேயே நாம் வாழ்ந்துக்கொண்டு இருக்கின்றவர்களாய் இருக்கின்றோம். நம்முடைய முன்னோர்களைக் காட்டிலும் நமக்கான அனுபவங்களும் வாய்ப்புகளும் கிட்டத்தட்ட ஏழு மடங்குக்குக் காணப்படத்தக்கதாக, நன்மைக்கும், தீமைக்கும் ஏதுவான நமது வாய்ப்புகளை, நவீன கண்டுபிடிப்புகளும், தொலைப்பேசிகளும், இயந்திரங்களும், அஞ்சல்களும், தந்திகளும், அச்சகங்களும் வெகுவாய்ப் பெருக்கியுள்ளது. இதினிமித்தம் நம் மீதும், அனைத்து மனுஷர்கள் மீதும், அதிலும் விசேஷமாக தெய்வீகச் சத்தியத்தினால் வெளிச்சமூட்டப்பட்டு, தேவனுடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்பட்டுத் தேவனுடைய ஸ்தானாதிபதிகளாக இருக்கும்படிக்குப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, பரலோகத்திலுள்ள பிதாவுக்கு மகிமையாக, தங்களிடத்திலுள்ள வெளிச்சத்தை மனுஷர்கள் முன்பாகப் பிரகாசிக்கும்படியான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களுமாய் காணப்படுபவர்கள் மீதும், எத்தகைய ஒரு பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது.

## "நல்ல தேர்ந்தெடுத்தல், சிறந்த தேர்ந்தெடுத்தல் மற்றும் மிகச்சிறந்த தேர்ந்தெடுத்தல்"

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, இரண்டு நல்ல விஷயங்களுக்கிடையேயுள்ள தெரிந்துக்கொள்ளுதலைக் குறிக்கின்றதாகவும், கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவர்கள் ஒன்றில் நல்லதை அல்லது சிறந்ததைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாகவும் இருக்கின்றது. ஆதார வசனத்தின் கருத்தானது, கர்த்தருடைய ஜனங்களென உண்மையாய் ஆகுகின்றவர்களுக்கு விசேஷித்த அழுத்தத்துடன் பொருந்துகின்றதாகவும் இருக்கின்றது. மார்த்தாள் நல்ல பங்கைத்தான் தெரிந்துக்கொண்டிருந்தாள், அவள் உண்மையில், "அசதியாயிராமல், ஜாக்கிரதையாயிருந்து; ஆவியிலே அனலாயிருந்து, கர்த்தருக்கு ஊழியஞ்செய்தாள்;" மேலும் மார்த்தாளுடைய நடத்தையானது, கர்த்தரால் மிகவும் மதிக்கப்பட்டது. மரியாள் விருந்தோம்பல் வேலையில் அக்கறையற்று இருக்கிறாள் என மார்த்தாள் எண்ணிக்கொண்டு, மரியாளுக்கு எதிராக முறுமுறுக்கவில்லையெனில், நமது கர்த்தர் இரண்டு சகோதரிகளை வித்தியாசப்படுத்திக் காட்டுவதும், மரியாளின் நடத்தைக்கு நமது கர்த்தர் விசேஷித்த அங்கீகரிப்பு வழங்கினதும் வெளிப்பட்டிருக்காது. இரண்டு சகோதரிகளையும் அங்கீகரித்த நமது கர்த்தர், வாய்ப்பைப் பயன்படுத்தி, மார்த்தாளுடைய நடத்தையானது நிச்சயமாய் மதிக்கப்பட்டாலும், நிச்சயமாய் அங்கீகரிக்கப்பட்டாலும், மரியாளுடைய போக்கே, இன்னும் அதிகமான அங்கீகரிப்பிற்கு ஏதுவானதாய் இருக்கின்றது என மார்த்தாளுக்குக் காட்டினார். மார்த்தாள், கர்த்தரை நேசித்தபடியினால் அவருக்காக அநேகவற்றைச் செய்ய வேண்டும் என்று விரும்பினாள்; மரியாள் கர்த்தரையும், கர்த்தர் விரும்பினவைகளையும் விரும்பி, அவருடன் பேசவும் விரும்பினபடியால், அவருடைய தோழமை மற்றும் ஐக்கியத்தின் இன்பத்தை விட்டுச்செல்ல முடியாமல் இருந்ததாள். கர்த்தரைக் கனப்படுத்துவதற்கெனத் பெரியதொரு விருந்தை ஆயத்தப்படுத்துவதில், தனது சகோதரியுடன் இணைந்து வேலை செய்யவும், மரியாளும் அதிகம் விரும்பியிருப்பாள். ஆனால் சமாரியாவுக்கு அருகே இருந்த கிணற்றின் அருகில், சீஷர்கள் ஆண்டவரிடம், "ரபீ போஜனம் பண்ணும்" எனும் போது, அவர் "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" என்றும், "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படிச்செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்றும் கூறியவற்றிற்கு ஏற்ப அவர் பரிமாறிக்கொண்டிருக்கும் ஆவிக்குரிய உணவை, மார்த்தாளைக் காட்டிலும், மரியாள் அதிகமாய் உணர்ந்தவளாக இருந்தாள்.

கர்த்தரை ஏற்கெனவே தேர்ந்தெடுத்தவர்களுக்கு, கிருபையான வாக்குத்தத்தங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களுக்கு, நீதியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களுக்கு, மேலும் இவைகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டதன் மூலமாகப் பாவத்தையும், சாத்தானையும், உலகத்தையும், சுயநலத்தையும் புறக்கணித்துக்கொண்டவர்களுக்கு, மார்த்தாளிடத்திலான நமது கர்த்தருடைய வார்த்தைகளில் படிப்பினை ஒன்று உள்ளது. இவ்வாறாக மேற்கூறியவைகள் அனைத்திலும் நாம் நல்லவைகளைத் தெரிந்துக்கொண்வர்களாக இருக்க, கர்த்தருடைய கண்ணோட்டத்தில் சிறந்தவைகளும், மிகச்சிறந்தவைகளும் மற்றும் நல்லவைகளும் இருக்கின்றன என்பதை நாம் அறிந்துக்கொள்ளவும் வேண்டும். கர்த்தருக்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தின், பூமிக்குரிய காரியங்களிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் எடுக்கப்படும் பிரயாசங்கள் சரியானதாகவும், பாராட்டத்தக்கதாகவும், கர்த்தரால் அங்கீகரிக்கப்படத்தக்கதாகவும் இருக்கும், அதேசமயத்தில் கர்த்தரால் இன்னும் மேலாய் அங்கீகரிக்கப்படும் சில காரியங்களும் உண்டு என்பதே படிப்பினையாகும். நீதியின் மேல் பசிதாகம் கொள்பவர்களை, "அவருடைய வார்த்தைகளைப் புசிக்கின்றவர்களை," "அவருடைய பாதத்தருகே அமர்கின்றவர்களை," அவருடைய மகிமையான திட்டங்களில் மகிழ்ந்து, அத்திட்டம் வெளிப்படுகையில் களிகூருகின்றவர்களை, கர்த்தர் மிகவும் அங்கீகரிக்கின்றார்.

ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் சரியானவைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதின் முக்கியத்துவம் குறித்தும், சிறிய தவறுகள் கூட, நம்முடைய ஜீவியத்தின் காரியங்களில் தாக்கம் ஏற்படுத்துபவைகள் என்பதை உணர்ந்துக்கொள்ளுவது குறித்தும் உணர்த்துவது ஒரு பக்கமிருக்க, நாம் உணர்த்த விரும்பும் விசேஷித்த படிப்பினை என்னவெனில், நாம் அவருடைய ஊழியங்களில் ஈடுபட்டிருப்பது என்பது, கர்த்தருக்கான நமது அன்பின் அடையாளமாக இருப்பினும், அவருடன் ஜெபத்தில் ஐக்கியம்கொண்டிருப்பதும், அவருடைய வார்த்தைகளைக் கற்பதும், அவரை நாம் மதிப்பதற்கான இன்னமும் மேலான அடையாளமாக இருக்கின்றது என்பதேயாகும். மரியாள் கர்த்தருடைய பாதத்தருகே இருந்து கவனிப்பதற்குத் தன்னுடைய முழு நேரத்தையும் செலவழிக்கவில்லை, மாறாக கவனிப்பதற்கான வாய்ப்பு வந்த போது, அவள் அதை விட்டுவிடவில்லை. அவள் அதைத் தெரிந்துக்கொண்டாள், அவள் அதை அடைந்தாள்; அதனோடு அவள் ஆசீர்வாதத்தையும் அடைந்தாள், மேலும் இது, பிற்பாடு வேலைகள் செய்ய அவளை ஆயத்தப்படுத்தினதில் ஐயமில்லை. இப்படியாகவே கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும்; கர்த்தருடன் சம்பாஷிப்பதற்கும், அவருடைய வார்த்தைகளைப் படிப்பதற்கும் எடுக்கப்படும் நேரம் வீண் செலவழிப்பு என்று கர்த்தருடைய ஜனங்கள் எண்ணக்கூடாது. மாறாக, இவ்வாறு ஆண்டவரின் பாதத்தருகே இருந்து, அவருடைய வார்த்தைகளையும், அவருடைய ஆவியையும் பானம் பண்ணுவதற்குக் கொஞ்ச நேரம் செலவழிப்பது என்பது, தங்களை ஊழியங்களுக்கான பரீட்சைகளுக்காகவும், அதில் தாங்கள் ஞானமாய்ச் செயல்படுவதற்கு தங்களை ஆயத்தப்படுத்துவதாகவும் இருக்கும் என்றும், இப்படியான போக்கே, அவருடைய அங்கீகரிப்பிற்கு ஏதுவானது என்றும் கர்த்தருடைய ஜனங்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். எல்லா விதத்திலும் நாம் மிகச் சிறந்த பங்கை, நமது கர்த்தருக்கு மிகவும் பிரியமாய் இருக்கும் பங்கை தேர்ந்தெடுத்துக் கொள்வோமாக.

---

**R5377**

# "அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி"

## லூக்கா 11:14-26, 33-36

"ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு."
- லூக்கா 11:35

தனிப்பட்ட விதத்தில் பிசாசு என்று ஒருவன் இருக்கின்றான் என்றும், அவன் ஆவியின் ஜீவிகளாய்க் காணப்படும் அசுத்த ஆவிகளின் சேனைக்கூட்டத்திற்கு அதிபதியாய் இருக்கின்றான் என்றும், அவன், தேவனுடைய அரசாளுகைக்கு எதிராக எதிர்ப்பவன் என்றுமுள்ள வேதாகமத்தின் போதனைகளை உலக ஞானிகள் எவ்வளவுதான்

இகழ்ந்தாலும், இதுவே ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையிலான வேதாகமத்தின் போதனையாக இருக்கின்றது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்வோமாக. உலக ஞானிகளின் விஷயத்தில் அவர்களது (நல்ல) சிந்திக்கும் திறனானது, தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்படாததே அவர்களுக்கான பிரச்சனையாகும். மனுஷருடைய கண்களுக்குப் புலப்படாத ஒரு தேவனிடத்திலும், ஒரு தேவதூதர் சேனையாகிய, ஆவிக்குரிய ஜீவிகளான அவருடைய ஊழியக்காரர்களிடத்திலும் நம்பிக்கை வைப்பது கடினமாய் இருக்கின்றது என உலக ஞானிகள் கூறுகின்றனர். இதைக் காட்டிலும் இன்னும் இவர்களுக்குக் கடினமாக, ஆம் காரணகாரியத்திற்கு உட்படாததாய் இருப்பது என்னவெனில், தேவனுக்கு எதிராளிகளாக இன்னுமொரு ஆவிக்குரிய அதிபதியும், இன்னுமொரு ஆவிக்குரிய சேனையும் இருப்பதுதான்; தேவன் தம்மை எதிர்க்கக்கூடிய, சிருஷ்டிகளைச் சிருஷ்டிப்பது என்பது அல்லது ஒருவேளை பரிசுத்தமானதாகவே அவர் சில சிருஷ்டிகளைச் சிருஷ்டித்திருக்க, அந்தச் (சில) சிருஷ்டிகள் நீதிக்கு எதிராளிகளாக மாறியிருக்க, சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர், அந்தச் சிருஷ்டிகளை அழிக்காமல், அப்படியே தீமையாக எதிர்ப்பதைத் தொடர்வதற்கு அனுமதிப்பது என்பது நினைத்தே பார்க்க முடியாத காரியமாக இருக்கின்றது என்பதே இந்த உலக ஞானிகளுடைய வாதமாக இருக்கின்றது.

சாத்தான்தான் முதலாவதாக மீறுதலுக்கு உட்பட்டார் என்றும், மீறுதலுக்கு உட்படுவதற்கு முன்னதாக அவர் உயர்வான நிலையில் இருக்கும் கேரூபாக இருந்தார் என்றும், பெருமை மற்றும் பேராசையின் காரணமாகத் தேவனிடத்திலான தன்னுடைய உண்மையை இழந்து போனார் என்றும், இன்று அசுத்த ஆவிகளின் சேனைகள் என்று வேதாகமம் கூறும் இவர்கள் கீழ்ப்படியாமைக்குள் வரத்தக்கதாக, இவர்களைச் சாத்தான் வஞ்சித்தார் என்றும் வேதாகமம் விவரிக்கின்றது. இந்த அசுத்த ஆவிகளின் சேனைகளானது, நமது பூமியுடன் தொடர்புடையவர்களாக இருக்கிறதாகவே வேதவாக்கியங்கள் கூறுகிறதே ஒழிய, எங்கோ தீச்சூளையில் காணப்பட்டு, மரித்த மனிதர்களைச் சித்திரவதைப்படுத்துவதாகக் கூறவில்லை.

இந்த எதிர்ப்புகளையெல்லாம் சமாளிப்பதற்குத் தேவனிடம் பலம் இல்லை என்று வேதாகமம் சுட்டிக்காட்டாமல், மாறாக இவர்களைச் சிலகாலம் அனுமதித்துள்ளார் என்றும், மனிதர்களுக்கும், தேவதூதர்களுக்கும் படிப்பினையாக, பாவம், கோபம், வன்மம், பகைமை, பொறாமை ஆகியவற்றின் பலனை வெளிப்படுத்துவதற்கென இவர்களை அனுமதித்துள்ளார் என்றும் வேதாகமம் சுட்டிக்காட்டுகின்றது. இவர்கள் சில கட்டுப்பாடுகளின் கீழ்க் காணப்படுகின்றனர்; இது குறித்து அப்போஸ்தலர், "அந்தகார சங்கிலிகள்" எனக் குறிப்பிடுகின்றார். ஜலப்பிரளயத்தினுடைய அழிவிற்குப் பிற்பாடு, இவர்கள், மனித உருவம் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் இவர்கள் மனுக்குலத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ள நாடுகின்றனர்; மேலும் இதில் இவர்கள் எந்தளவுக்கு ஜெயம் அடைகின்றார்களோ, அந்தளவுக்கு, இவர்களுக்குப் பலியாடாக இருக்கும் மனுஷன் தீய ஆவிகளினால் ஆட்டுவிக்கப்படுபவனாக இருப்பான். முழுமையாய் இவர்கள் ஒரு மனுஷனிடத்தில் ஜெயம் அடைந்துவிட்டார்களெனில், அம்மனுஷன் பிசாசினால் பிடிக்கப்பட்டவனாக, பித்துப்பிடித்தவனாகி இருப்பான்.

பித்து/பைத்தியம் பிடித்தவர்களுடைய காப்பகங்களில் காணப்படுபவர்களில் பாதிப்பேர், பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது; இந்தப் பிசாசுகள் நமது கர்த்தருடைய ஊழிய காலங்களில் தொடர்புடையதாக அடிக்கடி (வேதாகமத்தில்) குறிப்பிடப்பட்டுள்ள பிசாசு கூட்டங்களிலுள்ள பிசாசுகள்தான்; முந்தின காலங்களில் சூனியக்காரிகள், மந்திரவாதிகள், மாயவித்தைக்காரர்கள், முதலானவர்கள் மூலமாகவே இவர்கள், மனுக்குலத்துடன் தொடர்பு வைக்க முயன்றனர்; இன்றோ, ஆவியுலக ஊடகங்கள், ஆவியுலக தொடர்பு பலகைகள் மூலம், இவர்கள் மனுக்குலத்துடன் தொடர்பு வைக்க நாடுகின்றனர். இருண்ட யுகத்தின் போது, மனதில் பதிய வைக்கப்பட்ட இந்தப் பிசாசுகளின் உபதேசங்களினால் வஞ்சிக்கப்பட்ட மனுக்குலமானது, மரித்தவர்கள் நித்தரையில் இருக்கின்றனர் என்றும், மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்றும் வேதாகமம் கொடுக்கும் சாட்சியினைப் புறக்கணித்துவிட்டது (1 தீமோத்தேயு 4:1; பிரசங்கி 9:5). ஆயிர வருட காலங்களில், "திரும்பக்கொடுத்தலின் காலங்களில்," "கிறிஸ்துவின் நாளில்," புதிய யுகத்தின் காலைப்பொழுதில் மரித்தவர்கள் விழித்துக்கொள்வது வரையிலும், மரித்தவர்களுடைய, "யோசனைகள் அழிந்தே" இருக்கும்

(அப்போஸ்தலர் 3:21; பிலிப்பியர் 1:10). இன்றைய பாடத்தில், பிசாசினால் பீடிக்கப்பட்ட மனுஷனை ஆண்டவர் விடுவிப்பதை நாம் பார்க்கப் போகின்றோம். பிரச்சனையை, சூழ்நிலையை ஜனங்கள் நன்கு உணர்ந்துக்கொண்டனர், ஆயினும் ஆண்டவருக்கு எதிராக இருந்த காரணத்தினால், ஜனங்களில் சிலர், பிசாசுகள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்ததற்கான காரணம், இயேசு பிசாசுகளின் அதிபதியாகிய சாத்தானாக, பெயல்செபூலாக இருக்கின்றதாக, தீமையாய்ப் பேசினார்கள். இன்னும் சிலர், “உம்முடைய அற்புதங்கள் அனைத்தும் பூமிக்குரியவைகளுக்குத் தொடர்புடையவைகளாக இருக்கின்றது; பரலோகத்தில் /வானத்தில் ஏதேனும் ஓர் அடையாளத்தைக் காண்பியும்” என்று கேட்டார்கள்.

சாத்தான் தன்னுடைய சொந்த சேனையையே விரட்டுவது என்பது, தீயவர்களின் பாளையத்திற்குள்ளாகவே யுத்தம் ஏற்பட்டுள்ளதைக் குறிக்கின்றதாய் இருந்து, சாத்தானுடைய இராஜ்யம் பிரிந்துப்போய், வீழ்ந்துப்போவதைச் சுட்டிக்காண்பிக்கின்றது என்று கூறி, தாம் பிசாசுகளின் அதிபதியாய் இராமல், வெளிச்சத்தின் அதிபதியாக இருப்பதைக் காண்பிப்பதின் மூலம், அவருக்கு எதிராக உரைக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு இயேசு பதில் கொடுத்தார். சாத்தான், சாத்தானையே துரத்தியடிப்பது என்பது, முட்டாள்தனமான காரியமாய் இருக்கும்; மேலும் இப்படியாகக் கூறுவது என்பது, அர்த்தமற்ற ஒன்றாகவும் இருக்கும். “பிசாசுகளைத் துரத்துவதற்கு வேறே யூதர்களும், இதே வல்லமையைச் செயல்படுத்தியிருக்க, அந்த யூதர்கள் ஜனங்களால், பிசாசுகளின் அதிபதி என்று ஒருபோதும் குற்றம் சாட்டப்படவில்லை என்றும், பிசாசுகளுக்கு அநேகம் அதிபதிகள் எவ்வாறு இருக்கக்கூடும்? என்றும், தமக்கு விரோதமான அவர்களது பேச்சு நியாயமானதா என்று ஜனங்கள் நிதானித்துக்கொள்ள வேண்டும் என்றும் இயேசு கூறினார். இன்னுமாக தாம் தேவனுடைய வல்லமையைக் கொண்டு, தேவனுடைய விரலைக்கொண்டு, பிசாசுகளைத் துரத்துகின்ற உண்மையை உணர்ந்துக்கொள்பவர்களுக்கு, மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான அளவில் தம்மிடத்தில் காணப்படுவதும், தம்முடைய அப்போஸ்தலர்கள் மூலமாகவும் தம்மால் செயல்படுத்தப்படுவதுமான இவ்வல்லமையானது, தேவனிடமிருந்து, வந்துள்ள விசேஷித்த ஈவிற்குச் சாட்சியாகவும், தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது, அதாவது தேவனுடைய இராஜ்யம் உங்கள் மத்தியில் உள்ளது என்ற தம்முடைய சாட்சிக்குக் கூடுதல் சாட்சியாகவும் இருக்கின்றது என்று இயேசு கூறினார்.”

ஆனால் அந்தத் தேசம், கிறிஸ்துவைப் புறக்கணித்தப்போது, தேவனால் அளிக்கப்பட்ட இராஜ்யமானது, அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. ஈவானது நிறுத்தப்பட்டது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தேவனுடைய கிருபையினின்று விலக்கி வைக்கப்பட்டனர்; பிற்பாடு அதுமுதல், கிருபை மற்றும் சத்தியத்தின் செய்தியானது வேறொரு இஸ்ரயேலரைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றது; முதலாவதாக யூதர்கள் மத்தியில் கபடற்ற இஸ்ரயேலர்களாய் இருப்பவர்களை இச்செய்தியானது இழுத்துக்கொண்டது, பிற்பாடு இங்கும், அங்குமாய்ச் சென்று ஒவ்வொரு தேசத்திலுமிருந்து, இந்த வகுப்பாருக்கு, அங்கங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கின்றது.

பிசாசுகளைத் துரத்துவதற்கான இயேசுவின் வல்லமையானது, அவர் இவ்வுலகத்தின் அதிபதியானவனை, அந்தகாரத்தின் அதிபதியானவனாகிய சாத்தானைக் கையாளுவதற்கு, முற்றிலும் திறமிக்கவர் என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக அக்காலத்தில் ஒருவேளை இராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டிருக்குமாயின், சாத்தானும், அவனுடைய தூதர்களும் கட்டப்பட்டு வைத்திருக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் காட்டுகின்றதாய் இருக்கின்றது. எனினும் இயேசுவும், இராஜ்யமும் அச்சமயம் புறக்கணிக்கப்படும் என்று முன்னறிந்து, தேவனால் முன்னறிவிக்கப்பட்டுள்ளபடி, சாத்தானைக் கட்டும் வேலை அச்சமயம் நடைபெறவில்லை, மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகை வரையிலும் அவ்வேலையானது காத்திருப்பில் வைக்கப்பட்டது. இதற்கிடையில் இராஜ்யத்தில் இயேசுவுடன் உடன் சுதந்தரர்களாய்க் காணப்படும்படிக்கு, அவருடைய மணவாட்டி வகுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க, அவர் இராஜ்யத்தின் காலத்தில் தமது மாபெரும் வல்லமையையும், ஆளுகையையும் கையில் எடுத்துக்கொள்வார். அப்பொழுது அவர் பிசாசையும், அவனுடைய தூதர்களையும் கையாளுவார்; ஆம் விழுந்துபோன மனுக்குலத்தை மிகவும் ஆட்டுவித்துள்ள சாத்தானின் ஆவியையும், பாவத்தையும் விருத்தியாக்கின அனைவரையும் கர்த்தர் கையாளுவார்.

## "சாத்தான் கட்டப்படுதல்"

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் சாத்தான் ஆயிர வருடமளவும் கட்டப்படுவார் என்றும், வெளிச்சத்திற்குப் பதிலாக இருளைக் காண்பித்து, பரம பிதாவை மிக மோசமானவராக தவறாய்க் காட்டி, மில்லியன் கணக்கான மனுஷர்கள் பிறந்து, அவர்கள் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்துப்போக வேண்டும் என்று பிதா திட்டம் பண்ணியுள்ளதாக அவரைத் தவறாய்க் காட்டி, ஆறாயிரம் வருடங்களாக சாத்தான் மனுக்குலத்தை வஞ்சித்து, ஏமாற்றிக்கொண்டிருந்தது போன்று, அவன் இனிமேல் மனுக்குலத்தை வஞ்சிக்கமாட்டான் என்றும் நமது கர்த்தர் கூறியுள்ளார்.

தற்காலத்தில் உலகத்தின் மீதான சாத்தானுடைய கட்டுப்பாட்டை, ஆயுதம் தரித்த பலவான் தன்னுடைய அரண்மனையைப் பாதுகாத்துக்கொண்டிருப்பதற்கு ஒப்பிட்டு, கர்த்தர் இயேசு சித்தரிக்கின்றார். சாத்தானைக் காட்டிலும் பலமானவர் வந்து, சாத்தானை மேற்கொண்டு, சாத்தானால் அபகரித்து வைக்கப்பட்டுள்ள உடைமைகளை எடுத்துக்கொள்வது வரையிலும், சாத்தான், உலகத்தின் மீதான தனது கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக்கொள்வார். தம்முடைய மேசியா - இராஜ்யம், சாத்தானுடைய இராஜ்யத்தைக் காட்டிலும் பலமானதாகவும், அவனுடைய இராஜ்யத்தைக் கட்டுப்படுத்தி, அவனைக் கட்டும் என்று இயேசு முன்னுரைத்தார். இதன் விளைவாக, ஆறாயிரம் வருடங்களாக மனுக்குலத்தின் மீது காணப்பட்ட பாவம் மற்றும் மரணத்தினுடைய சாபத்தினின்று, மனுக்குலம் விடுவிக்கப்படும். மேசியாவின் இராஜ்யம் மாபெரும் ஏழாம் நாளில் அல்லது ஓய்வுநாளில் காணப்படும்; அப்பொழுது இரட்சகரை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள்.

இதற்கிடையில், இந்தச் சுவிசேஷ யுகத்தில், பிதாவின் திட்டத்திற்கு ஏற்ப, இயேசு தம்முடைய செய்தியின் மூலமாகவும், அப்போஸ்தலர்களுடைய செய்தியின் மூலமாகவும், இராஜ்யத்தில் தம்முடன் உடன் சுதந்தரர்களாகவும் இருக்கும்படிக்கு, உலகத்திலிருந்து ஒரு மணவாட்டி வகுப்பாரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கின்றார். இந்த வகுப்பாரிலுள்ள அனைவருடைய உண்மையையும் பரீட்சிக்கும்படிக்கு, சாத்தானுக்கு அதிகமான சுதந்தரம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு எஜமான்கள் மாத்திரமே இருக்க முடியும். ஜனங்கள் ஒன்றில் அறிந்து அல்லது அறியாமையில் இவர்களுள் ஒருவரைச் சேவிக்கின்றனர். "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" என்று இயேசு கூறினார்.

## "முழு உலகமும் (சாத்தானால்) ஆட்டுவிக்கப்பட்டுள்ளது"

இந்த உலகத்தின் அதிபதியானவனாகிய சாத்தான், "இன்று கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியைச் செய்து வருகின்றான்" என்று பரிசுத்தவானாகிய பவுல் தெரிவிக்கின்றார். இயேசுவும் கூட இதே கருத்தைக்கொண்டிருந்து, இச்சம்பவத்தில் தம்மால் சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பிசாசு பிடித்திருந்த மனுஷனை, உலகத்திற்கு ஒப்பிடுகின்றார். இப்படியாகவே, கிறஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், பிசாசின் வல்லமையினின்று விடுவிக்கப்படுகின்றனர். பாவமானது உங்களுடைய அழிவுக்கு ஏதுவான சரீரங்களில் ஆளுகைச் செய்யாதிருப்பதாக" (ரோமர் 6:12).

இவர்களுடைய இருதயங்கள், பெருக்கி, ஜோடிக்கப்பட்டிருந்ததாக, அதாவது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்ட இருதயங்களாக இருப்பதாக இயேசு குறிப்பிடுகின்றார். ஆனால் உலகத்தின் ஆவி மூலம், அதாவது பெருமை, கோபம், வன்மம், பகை, சண்டை, மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் மூலம் இப்படியான இருதயமுடையவர்களிடத்தில் மீண்டும் ஆதிக்கம் பெற்றுக்கொள்வதற்குச் சாத்தான் நாடுவான் என்றும் இயேசு கூறுகின்றார் (மத்தேயு 12:43-45). "விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று அப்போஸ்தலர் எழுதுகின்றார் (1 பேதுரு 5:9). ஒருவேளை சாத்தான் எதிர்க்கப்படவில்லையெனில், தேவனைப் பற்றும் அறிவினால் உண்டான வெளிச்சமும், ஆசீர்வாதமும் சாபமாகவும், பாதிப்பாகவும் ஆகிவிடும், மேலும் அந்த நபர், கிறிஸ்துவுடனான உறவிற்குள் வருவதற்கு முன்பாக இருந்ததைக் காட்டிலும், கேடான நிலையில் காணப்படுவார்.

இதை வலியுறுத்தும் வண்ணமாக, விளக்கானது, மரக்காலால் மூடி வைக்கப்படாமல், மாறாக நன்மை உண்டாகத்தக்கதாக, அதாவது வெளிச்சம் கொடுக்கத்தக்கதாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று கூறினார்; இதுபோலவே பெற்றுக்கொள்ளப்பட்ட சத்தியத்தின் வெளிச்சமும், தேவனுடைய கிருபையும், மறைத்து வைக்கப்படாமல், மாறாக தேவன் மகிமைப்படத்தக்கதாக, பிரகாசிக்கப் பண்ண வேண்டும் என்று இயேசு கூறினார். இப்படிச் செய்யவில்லையெனில் ஒளியானது அணைந்துப்போய், இருள் காணப்படும். கண் என்பது அறிவைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் எதுவரையிலும் நாம் உண்மையான பிரகாசத்தை (அ) அறிவைப் பெற்றிருக்கின்றோமோ, அதுவரையிலும் முழுச்சரீரமும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்; ஒருவேளை அறிவானது அழிக்கப்பட்டுவிட்டால், ஒருவேளை கண்ணானது குருடாகிவிட்டால், முழுச்சரீரமும் பாதிப்படைந்து இருளில் காணப்படும்.

வெளிச்சத்தை அடைகின்ற ஒவ்வொருவரும் அதனை இழந்துப்போய், இருளை அடையாதபடிக்கு, அந்த வெளிச்சத்தினுடைய விலையேறப்பெற்றவைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும். கண், ஒளி என்பது இங்கு, நம்மை ஆசீர்வதிப்பதற்கு அதிகமான வல்லமையைக் கொண்டிருக்கும் பரிசுத்தஆவியினால் உண்டாகும் பிரகாசிப்பித்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இதை இழந்துப்போவது என்பது, கர்த்தரைப் பற்றின அறிவை நாம் அடைவதற்கு முன்பு, நாம் அடைந்திருந்த இருளைக் காட்டிலும், அதிகமான இருள் அடைவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

---

**R5389**

# "பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ!"
## லூக்கா 11:37-54

"மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்." - கலாத்தியர் 6:7

நமது கர்த்தருடைய நாட்களில் யூதர்கள் மத்தியில் காணப்பட்ட பல்வேறு பிரிவினர்கள் மத்தியில், பரிசேயர்கள் சிறந்தவர்களாக, தேவனுக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் மிகவும் நேர்மையாய் இருந்தவர்களாக நாம் எடுத்துக்கொள்வதற்கு நமக்கு அநேகக் காரணங்கள் இருக்கின்றது. சதுசேயர்கள் எதிர்க்கால வாழ்க்கைக்குறித்த எவ்விதமான நம்பிக்கையும் கொண்டிராதவர்களாய் இருந்தார்கள். சதுசேயர்கள் நாத்திகர்களாகவும், அரசியல்வாதிகளாகவும் காணப்பட்டனர். Essenes ( எசினிஸ்) எனும் சிறு பிரிவினர், வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை; இவர்கள் விமர்சகர்களாகவும், குறைவான விசுவாசம் உடையவர்களாகவும், யூத மார்க்கத்தை, புறச்சமயத்துடன் இணைத்துக்கொண்டு, குழப்பத்தில் காணப்படும் வகுப்பினராக இருந்தனர். பரிசேயர்கள் ஆச்சாரமிக்க/வைதீகமான யூதர்கள் என்று சொல்லலாம். இவர்களுடைய பெயரின் அர்த்தம், "பரிசுத்தமான ஜனங்கள்" என்பதாகும். மற்ற பிரிவினர்கள் அனைவரும், முற்றிலுமாக தேவனை விட்டுப் போய்விட்டனர் என்பதை இங்குக் குறிப்பிடாமல், பரிசேயர்களை மாத்திரம் நோக்கி, அவர்கள் தங்கள் பரிசுத்தத் தன்மையைக்குறித்துப் பெருமை பாராட்டிக்கொண்டாலும், <u>அவர்கள் தேவன் அங்கீகரிக்கத்தக்கதான தகுதியின்றி இருக்கின்றார்கள்</u> என்பதாக இயேசு சுட்டிக்காண்பித்துத் தெரிவிப்பதை இப்பாடத்தில் நாம் பார்க்கின்றோம்.

ஒரு பரிசேயன், இயேசு தன்னுடைய வீட்டில் வந்து பந்தி அமரும்படிக்கு அழைப்பித்தான். அழைப்பை உடனடியாக இயேசு ஏற்றுக்கொண்டவராக, பரிசேயர்களுடைய கழுவுதல் சடங்காச்சாரங்களை அநுசரிக்காமல், மற்றவர்களுடன் பந்தி அமர்ந்துவிட்டார். இயேசு அஜாக்கிரதையுடன்/நிர்விசாரமாய் நடந்துக்கொண்டார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக கைகள் கழுவும் ஆச்சாரமானது, வெளிப்படுத்தின ஆவியிலுள்ள குற்றத்தைச் சுட்டிக்காண்பிப்பதற்குரிய வாய்ப்பை அடைவதற்கே, இயேசு விசேஷமாக, பரிசேயர்களுடைய கைகள் கழுவும் ஆச்சாரத்தைப் புறக்கணிக்க விரும்பினார்.

அந்தப் பரிசேயன், இயேசுவை ஆயக்காரனாகவோ அல்லது பாவி என்றோ எண்ணாமல், அவரை ஒரு பரிசுத்தமான மனுஷன் என்று எண்ணியிருந்தபடியால், இயேசு

இப்படிக் கைகள் கழுவும் ஆச்சாரமான வழக்கத்தைக் கடைப்பிடிக்காமல் இருந்தது தனக்கு விநோதமாக இருப்பதாகக் குறிப்பிட்டார். இப்படியாக குறிப்பிட்டதினிமித்தமாக, இவ்விஷயம் தொடர்பாகப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. யூதர்களில் பரிசுத்தமாய் இருப்பவர்களால், அநுசரிக்கப்பட்டதான மதத்தின் பெரும்பான்மையான விஷயங்கள் வெறும் சடங்காச்சாரமான அநுசரிப்புகளாக இருக்கிறதே ஒழிய, உண்மையான பயபக்தியின் விஷயங்கள் அல்ல என்று இயேசு சுட்டிக்காட்டினார். வெளித்தோற்றத்தில் அவர்கள் சுத்தமாக இருந்தார்கள். ஆனால் இருதயத்தின் உள்ளே அசுத்தமாய் இருந்தனர், அதாவது ஆவிக்குரியவற்றில் பொல்லாப்புடையவர்களாய் இருந்தனர் என்று இயேசு சுட்டிக்காட்டினார். இருதயமே, தேவனுடைய பார்வையில் முக்கியமான காரியமாக இருக்கின்றது என்றும், வெளிப்புற சுத்திகரிப்பெல்லாம் இரண்டாம் பட்சமாகவே இருக்கின்றது என்றும் காண்பிப்பதற்குக் கர்த்தர் நாடினார். பாத்திரத்தின் உள்புறமே முதலாவது கவனிக்கப்பட வேண்டும், வெளிப்புறம் பிற்பாடே கவனிக்கப்பட வேண்டும்.

கர்த்தருடன் இருதய பூர்வமான இசைவிற்குள் வருபவர்கள், அதாவது கர்த்தருடைய செய்திக்கும், அச்செய்தியினுடைய ஆவிக்கும், கீழ்ப்படிவதன் மூலம் சுத்திகரிக்கப்பட்டவர்கள், உள்ளும், புறமும் சுத்தகரிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இருதயத்தில் சுத்தமாய் இருப்பவர்கள், தங்களுடைய சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகளுக்கு ஏற்ப, சரீரத்திலும், பேச்சிலும், எல்லாவற்றிலும் சுத்தமாய் இருப்பதற்கு நாடுவார்கள். இவர்களுடைய இருதயத்தில் கிரியை செய்யும் கொள்கையானது, இவர்களுடைய அனைத்து வார்த்தைகளில், எண்ணங்களில் மற்றும் செய்கைகளில் எல்லா நேரங்களிலும், எல்லா நாட்களிலும் தாக்கம் ஏற்படுத்துகின்றதாய் இருக்கும்.

இவ்விடத்திலும், இன்னும் அநேகம் தருணங்களிலும், நமது கர்த்தர் குறிப்பிடுவதைக் கவனிக்கும் பொழுது பரிசேயர்களுடைய மாபெரும் தவறுகளில் ஒன்று பண ஆசையாக இருந்ததாகத் தெரிகின்றது. கிரேக்கர்களைப் பொறுத்தமட்டில், இயேசு பரிசேயர்களை, "பண ஆசைக்காரர்களாகக்" கூறினதாகத் தெரிவிக்கின்றார். பணத்தின் மீதான இந்த அவர்களுடைய ஆசையும், பேராசையும், மற்றவர்களுடைய உரிமைகளை நேர்மையற்ற விதத்தில் புறக்கணிப்பதற்கு ஏதுவாக வழிநடத்தினது என்று இயேசு ஒரு தருணத்தில் பரிசேயர்களிடம் கூறினார். "விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்" என்று இயேசு பரிசேயர்களிடம் தெரிவித்ததின் அர்த்தம், இவர்கள் விதவைகளின் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தங்களுக்கெனச் சொத்துக்களைச் சேர்க்கின்றனர் என்பதாகும். இதன் காரணமாக, பரிசேயர்களில் அநேகர் நன்கு ஐசுவரியான்களாக இருந்தனர்.

பரிசேயர்கள், யூதருக்கான நியாயப்பிரமாண வெளிப்புற ஒழுங்குகளை எவ்வளவுதான் கவனமாய் கைக்கொண்டு வந்தாலும், மேற்கூறப்பட்ட இருதயத்தின் தவறான நிலையானது, தேவனுக்குப் பிரியமற்றதாக இருக்கும் என்று இயேசு சுட்டிக்காட்டினார். பத்தில் ஒரு பாகம் கொடுக்க வேண்டிய வெளிப்புறமான விஷயத்தில், இவர்கள் சிறிதளவில் விவசாயம் பண்ணி வரும், சிறு விதைகளின் விஷயத்திலுங்கூட, ஜாக்கிரதையாய் இருக்கின்றனர் என்ற காரியத்தை இவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். எல்லாவற்றிலும் இவர்கள் பத்தில் ஒரு பாகம் கொடுக்க வேண்டும் என்று ஜாக்கிரதையாய் இருந்தனர், ஆனால் நியாயப்பிரமாணத்தினுடைய முக்கியமான காரியங்களையோ இவர்கள் புறக்கணித்துவிட்டனர், அதாவது தாங்கள் கையாளும் விஷயங்களில் நீதியாய் நடந்துக்கொள்வதையும், மற்றவருக்கு இரக்கம் காட்டும் விஷயத்தையும் புறக்கணித்துவிட்டனர். இவர்கள் தங்களுக்குள்ள எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பாகத்தைக் கொடுப்பதற்கு ஆண்டவர் மறுப்புத் தெரிவிக்கவில்லை, மாறாக மிகவும் முக்கியமானவைகளைச் செய்யாமல் விட்டுவிடக்கூடாது என்றே தெரிவித்தார்.

இன்னொரு தருணத்தின்போது, "நீங்கள் கொசு இல்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்" என்றார்; அதாவது இவர்கள் எந்தளவுக்கு இவர்களுடைய நியாயங்களிலும், செய்கைகளிலும் முன்னுக்குப் பின் முரண்பாடாகக் காணப்படுகின்றார்கள் என்பதைக் கூறினார். கொசு இல்லாதபடி வடிகட்டுதல் என்பது நெரித்துக்கொல்லப்பட்டவைகளைத் தவிர்ப்பதில், இவர்கள் ஜாக்கிரதையாய் இருந்ததைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒட்டகத்தை விழுங்குதல் என்பது, இவர்கள் சிறிய காரியங்களில் ஜாக்கிரதையாய் இருக்க, இவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்திலுள்ள

முக்கியமானவைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து விடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் பண ஆசையுடையவர்களாகவும், சுயத்தை நாடுகிறவர்களாகவும் இருப்பதற்குப் பதிலாக, இரக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்றும், இப்படியாக இவர்களுடைய இருதயம் இரக்கம் கொண்டதாக இருக்கும் பட்சத்தில், வெளிப்புற சுத்தம் இவர்களுக்கு முக்கியத்துவம் அற்றதாய் இருக்கும் என்றும் இயேசு கூறினார்.

இவர்கள் ஜெப ஆலயங்களில் முதன்மையான இடங்களையும், சந்தை வீதிகளில் வந்தனங்கள் அடையவும் விரும்பினார்கள் என்று இயேசு கூறினார். இவர்களது பண ஆசையானது, பெருமை மற்றும் நேர்மையின்மையின் உருவத்தை எடுத்துக்கொண்டது. மத விஷயங்களில் மிகவும் முக்கியமானவர்களாகவும், மிகவும் பிரபலமானவர்களாகவும் இருப்பதற்கும், ரபீ என்றும் அதாவது ஆண்டவர் என்றும், கல்விமான் என்றும் வாழ்த்தப்படுவதற்கும் விரும்பினார்கள். இவர்கள் வெளிப்புறத்தில் சுத்தமாயும், வெள்ளையடிக்கப்பட்டதும், ஆனால் உள்ளே அசுத்தத்தையும், செத்துப்போனதையும் கொண்டுள்ளதுமான கல்லைறகளாக இருக்கின்றனர் என்று இயேசு கூறினார். இவர்கள் வெளிப்புறத்தில் அல்லது சடங்காச்சாரமான அனுசரிப்பில் மாத்திரம் பரிசுத்தமான ஜனங்களாக இருந்தனர்.

கிறிஸ்தவ மண்டலத்தின் அனைத்துப் பிரிவினர்களை அல்லது ஏதேனும் ஒரு பிரிவினர் நியாயந்தீர்ப்பதும், அவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தையைப் பொருத்துவதும் நமக்கு அடுத்த வேலை இல்லை. இயேசுவைப் போன்று, மனுஷர்களுடைய இருதயங்களை அறிவதற்கான வல்லமையோ அல்லது மற்றவர்களை மாய்மாலக்காரர்கள் என்று கூறுவதற்கான அதிகாரமோ நமக்கு இல்லை. "காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்" (1 கொரிந்தியர் 4:5) என்பதே நமக்கான கர்த்தருடையச் செய்தியாக இருக்கின்றது. அவருடைய இரண்டாம் வருகையின் போது, அனைத்தும் வெளியரங்கமாகும் என்று கர்த்தர் கூறியுள்ளார். ஒவ்வொருவரின் உண்மையான நிலையானது, அப்பொழுது வெளியரங்கமாக்கப்படும். அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் வந்து, நாங்கள் உம்முடைய நாமத்தினாலே அநேகம் வல்லமையான கிரியைகளைச் செய்தோம் அல்லவா என்று கூறுவார்கள் என்றும், இதற்குப் பதிலாக "உங்களை நான் அறியேன்; நீங்கள் என் நாமத்தில் செயல்பட்ட அநீதியின், அக்கிரமத்தின் ஊழியக்காரர்கள்" என்றுதான், கூறுவார் என்றும் கர்த்தர் கூறினார்.

நம்முடைய நாட்களிலுள்ள பெரும்பான்மையான கிறிஸ்தவர்களைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் விவரித்துள்ளார். நம்முடைய நாட்களைக் குறித்துப் பேசுகையில், அப்போஸ்தலனாகிய பவுல் "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" என்கிறார் (2 தீமோத்தேயு 3:5). அதாவது வெளித்தோற்றமாய்க் கிறிஸ்தவர்களாகக் காணப்படுகின்றனர், ஆனால் உள்ளுக்குள் நாத்திகர்களாகவும், பண ஆசைக்கொண்டவர்களாகவும், அநீதியுள்ளவர்களாகவும், கொள்ளையடிக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இம்மாதிரியான காரியங்களை, இன்று சரியாக மதிப்பிடுவதற்கு மனுஷனால் முடிகிறதில்லை. கர்த்தருக்கு நேர்மையுடனும், வைராக்கியத்துடனும் காணப்படும் சிலர் மாய்மாலக்காரர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் பெயரிடப்படுகின்றனர்; ஆனால் நேர்மையற்றவர்களாகவும், வெறும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாகவும் இருக்கும் சிலரோ விக்கிரகங்களாக அல்லது பூமிக்குரிய அமைப்புகளுக்குத் தாராளமாய் நன்கொடை வழங்குபவர்களாக உயர்த்திப் பேசப்படுகின்றனர்.

பரிசேயர்கள் மத்தியில் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனங்களின் போதனைகளில் நன்கு கைத்தேர்ந்தவர்களாகவும், கல்விமான்களாகவும் விசேஷமாய்க் காணப்பட்ட் சிலர், நியாயசாஸ்திரிகள் என்று அழைக்கப்பட்டனர்; இவர்கள் இன்றுள்ள டாக்டர்ஸ் ஆப் டிவைனிட்டி (Doctors of Divinity) எனும் பட்டம் உடையவர்களுக்குச் சரிசமமானவர்களாய்க் காணப்பட்டனர். இவர்கள், பொது ஜனங்களால் சுமக்க முடியாத கடினமான பாரங்களை, ஜனங்கள் மீது சுமத்தினதாகக் கூறி, இவர்களை இயேசு கடிந்துக்கொண்டார். அதாவது பொதுஜனங்களைச் சோர்வடைய செய்யத்தக்கதாக, தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்குக் கடினமான விளக்கங்களை இவர்கள் கொடுத்தார்கள் என்ற விதத்தில் இயேசு கூறினார்; அதாவது முயற்சி செய்யலாமே என்று எண்ணிக்கூடப் பார்க்க முடியாத பூரணமான மற்றும் உயர்வான கொள்கைகளை,

ஆயக்காரர்கள் மற்றும் பாவிகள் முன்பாக இவர்கள் வைத்ததை இயேசு கூறினார். இவர்கள் இப்படிச் செய்வதற்கான நோக்கம் என்னவெனில், இவர்களுடைய பரிசுத்த தன்மையை, பொது ஜனங்களுக்கு அறியப்பண்ணி, இதன் மூலமாக இவர்கள் பொதுமக்களிடையே மிகுந்த பயபக்திக்குரியவர்கள் என்று கருதப்படுவதற்கேயாகும். இவர்களிடம் இருக்கும் அதே ஆவியைப் பெற்றிருந்த இவர்களுடைய பிதாக்கள்தான், தீர்க்கத்தரிசிகளைக் கொன்றுபோட்டார்கள், அதாவது தங்கள் பிதாக்கள் தீர்க்கத்தரிசிகளை மரணத்திற்கு ஏதுவாக துன்பப்படுத்தினார்கள் என்பதை மறந்து, அந்த முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகளுக்குக் கல்லறைகளைக் கட்டினார்கள்.

## "ஐயோ! ஐயோ! ஐயோ! ஐயோ! ஐயோ!"

பரிசேயர்களுக்கு எதிராக இயேசு, ஐயோ என்று தீர்க்கத்தரிசனம் உரைத்ததினால், இவர்களை நித்தியமான சித்திரவதைக்குரிய தீர்ப்பிற்குள் தீர்க்கின்றார் என்றோ, நித்தியமான சித்திரவதையின் விதத்தில்தான் இவர்கள் மீது வரும் ஐயோவின் தன்மை காணப்படும் என்றோ கர்த்தர் கூறினதாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. யூத தேசத்தாருக்கென்று தேவனால் வாக்களிக்கப்பட்ட மாபெரும் ஆசீர்வாதங்களை, அதாவது மேசியாவின் இராஜ்யத்தில் பிரதான பங்காளிகளாக இருப்பதற்கான மாபெரும் ஆசீர்வாதத்தை, பரிசேயர் இழந்துப் போக இருக்கின்றார்கள் என்பதே, பரிசேயர்களுக்கு ஐயோ என்று கர்த்தர் கூறினார் (ஆதியாகமம் 12:3). வாக்குத்தத்தமானது முதன்மையாய் இஸ்ரயேலுக்கே உரியதாய் இருந்தது. இதற்கு இவர்கள் ஆயத்தமற்று இருந்ததின் காரணத்தினாலே, இது இவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, வேறொரு இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்டது. தேவனால் நிர்ணயிக்கப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டிக்கான எண்ணிக்கையை நிறைவு செய்வதற்குப் போதுமான "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள்" இருந்திருப்பார்களானால், இராஜ்யத்திற்கான வாய்ப்பு, புறஜாதிகளிடம் கடந்துப் போயிருக்காது.

மேசியாவுடன் உடன் சுதந்தரத்தை அடையும் விஷயத்தில், யூதர்கள் மத்தியில் பரிசேயர்கள், மிகவும் அனுகூலமான ஸ்தானத்தில் காணப்பட்டனர்; ஆனால் இவர்கள் தாங்கள் எதை இழக்கின்றார்கள் என்று இயேசு அடையாளம் கண்டது போன்று, இவர்கள் உணர்ந்து/அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை. "உங்களுக்கு ஐயோ" என்ற இயேசுவின் வார்த்தையானது, அனுதாபத்துடனும், பரிதாபத்துடனும் கூடியது என்று கருதப்பட வேண்டும். இயேசு அறிவித்த இவ்வசனத்தின் வார்த்தைகளானது, தெரிவிக்கின்றப் பிரகாரம் இயேசு சிலுவையில் அறையப்படும் காலங்களில், யூத தேசத்தின் மீது கடந்து வரவிருக்கின்ற மாபெரும் உபத்திரவக் காலமானது, இவர்களது தேசமும், அரசாங்கமும் முற்றிலுமாக கிபி 70-இல் அழிக்கப்பட்ட போது நிறைவேறிற்று.

கர்த்தர் அறிவித்தப் பிரகாரமாக, அந்தப் பயங்கரமான உபத்திரவமானது, சிந்தப்பட்ட நீதிமான்களுடைய இரத்தத்திற்காக, அதாவது ஈடுசெய்யப்படாமல் காணப்பட்ட நீதிமான்களுடைய இரத்தம் சிந்தப்பட்ட காரியங்களுக்காக, தேவன் யூத தேசத்தாருடன் கணக்குச் சரிக்கட்டுவதாய் இருந்தது. பரிசேயர்களுடைய இந்த மாய்மாலமானது, மேசியாவின் இராஜ்யத்தில் மேசியாவுடன் உடன் சுதந்தரர்களாகும் விஷயத்தில், தாங்கள் ஆயத்தப்படுவதைத் தடைப்பண்ணுகிறதாய் மாத்திரம் அல்லாமல், போதனைக்காகத் தங்களைச் சார்ந்திருக்கும் ஜனங்களையும் தடை செய்கின்றது என்பதைப் பரிசேயர்கள் அறியாமல் இருந்தார்கள். இதைக்குறித்து, "நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்" என்று இயேசு குறிப்பிடுகின்றார் (லூக்கா 11:52).

யூத யுகத்தை முடிவு செய்த அந்த மாபெரும் உபத்திரவக் காலமானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை முடிவிற்குக்கொண்டு வருகிறதும், நம்முடைய நாட்களிலுள்ள பரிசேயர்கள் போன்றிருக்கும் அநேகருக்கு, ஐயோவைக் கொண்டு வருகிறதும், மேசியாவின் மகிமையான ஆளுகையில் நீதி ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, தற்கால அமைப்புகளைக் கவிழ்ப்பது தொடர்புடைய காரியத்தில், பொல்லாப்புச் செய்கைக்காரர்கள் அனைவர் மீதும் உபத்திரவத்தைக்கொண்டு வருகிறதுமான மாபெரும் மகா உபத்திரக் காலத்திற்கு

அடையாளமாக இருக்கின்றது (அ) தீர்க்கத்தரிசனமாக இருக்கின்றது என வேதமாணவர்கள் பரவலாய் நம்புகின்றனர்.

---

**R5390**

# "நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை"
## லூக்கா 12:1-12

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார்." (வசனம் 8)

எந்த ஒரு மனுஷனாலும், ஒருக்காலும் பேசப்படாதது போன்று பேசின, இரட்சகரின் பேச்சுக்களைக் கேட்பதற்குப் பெரும் திரளான கூட்டம் அவரைச் சூழ்ந்துக்கொண்டிருந்தது. ஜனங்களைப் பொருட்படுத்தாமல், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, "மாயக்காரராகிய பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறினார். எங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது போன்று, தம்முடைய போதனைகளிலும், இயேசு தீமையான செல்வாக்கை அடையாளப்படுத்துவதற்குப் புளிப்பு என்ற வார்த்தையே பயன்படுத்துகின்றார். தூய்மையானதை அல்லது நல்லதை அடையாளப்படுத்துவதற்கென, எங்கேயாவது புளிப்பானது பயன்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு தருணத்தையும் நாம் அறியோம். பஸ்கா காலங்களில், யூதர்கள் புளிப்பைப் பயன்படுத்துவதற்கு விலக்கப்பட்டுள்ளனர்; இது பாவத்தைக் களைந்துப் போடுவதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

அந்தக் காலத்திலுள்ள கல்விமான்களாகிய, பரிசேயர்களால் அனுசரிக்கப்பட்டு வந்த மாய்மாலங்கள், புளிப்பாகவும், அசுத்தமாகவும், பாவமாகவும் இருந்து, பரிசேயர்களின் செல்வாக்கை அசுசிப்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது என்று இயேசு கூறினார். அவருடைய சீஷர்கள் நேர்மையானவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும், சுத்தமானவர்களாகவும், வஞ்சனையும், போலித்தனமான பேச்சுகளும் இல்லாதவர்களாகவும் காணப்பட வேண்டும். மூடி மறைப்பதற்குரியதாய் இல்லாத விதத்தில், அவருடைய சீஷர்களின் வார்த்தைகளும், கிரியைகளும் காணப்பட வேண்டும். இறுதியில் அனைத்து மாய்மாலங்களும், பாவங்களும் நிர்வாணமாக்கப்படும், வெளியாக்கப்படும் என்று இயேசு கூறினார். அவருடைய இராஜ்யத்தில், உயிர்த்தெழுதலின் வல்லமை செயல்படுத்தப்படும்போது, இருளின் மறைவான காரியங்கள் அனைத்தும் ஒழித்துக்கட்டப்பட்டு, மனுக்குலத்தின் இரகசியம் வெளியாக்கப்படும் எனும் அர்த்தத்தில் இயேசு கூறினார். முன்னுரைக்கப்பட்டுள்ளபடி, அநேகரின் தண்டனையாக அவமானம் மற்றும் நிந்தனைகள் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறாக உயிர்த்தெழுதலில், சிலர் பரலோகத்தின் நட்சத்திரங்களாகப் பிரகாசிப்பதற்காகவும், மற்றவர்களோ வெட்கமும், நித்தியமான அவமானமும் அடையத்தக்கதாக எழும்பி வருவார்கள் என்று நாம் வாசிக்கின்றோம் (தானியேல் 12:2). எனினும் நித்தியம் என்று இங்கு இடம்பெறும் வார்த்தைக்கான எபிரெய வார்த்தையானது, <u>நித்தியம்</u> என்று அர்த்தம் கொடுக்காமல், <u>நீடித்திருத்தல்</u> எனும் அர்த்தத்தைக் கொடுப்பதினால் ஆறுதலடைகின்றோம். வெட்கமான மற்றும் அவமானமான சூழ்நிலைகள் நீடிப்பது வரையிலும், வெட்கமும், அவமானமும் நீடித்திருக்கும், அதாவது ஒரு நபர் சீர்த்திருந்துவது வரைக்கும் அல்லது தவறும் பட்சத்தில் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவது வரைக்கும் நீடிக்கின்றதாய் இருக்கும்.

## "துன்புறுத்தப்படுதலுக்கு அஞ்சாதிருங்கள்"

வாழ்க்கையில் நேர்மையாய் இருப்பதன் காரணமாக, மாய்மாலக்காரர்களிடமிருந்து, தம்முடைய பின்னடியார்களுக்குத் துன்புறுத்தல்கள் வரும் என்றும் துன்புறுத்தல்கள் அவர்களுக்கு மரணத்தைக் கொண்டு வருவதாக இருப்பினும், அவர்கள் அஞ்சக்கூடாது என்றும் இயேசு குறிப்பிட்டிருந்தார். தற்கால ஜீவியம் என்பது, சிலகாலம் மாத்திரமே வாழ்கின்ற ஜீவியமாக இருக்கின்றது. விருப்பமுள்ளவர்களுக்கும்,

கீழ்ப்படிதலுள்ளவர்களுக்கும் தேவன் ஏற்படுத்தியுள்ளதும், இயேசுவின் பலியினுடைய புண்ணியத்தினால் இறுதியில் அடையப் பெறப்படுகிறதுமான நித்தியத்திற்குரிய ஜீவனே, கருதுவதற்குப் பாத்திரமான ஜீவனாகும். இப்படியாகக் கருதுபவர்கள், மனுஷர் தங்களுக்குச் செய்கிறவைகளைக் குறித்து அஞ்சாமல், மாறாக தேவனிடமிருந்தும், எதிர்க்கால ஜீவியம் குறித்த அவருடைய கிருபையான ஏற்பாடுகளிலிருந்தும் தங்களைப் பிரித்துவிடுவதற்கு ஏதுவானவைகளைக் குறித்தே அஞ்ச வேண்டும்.

"கொலை செய்த பின்பு, நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்," இங்கு இடம்பெறும் நரகம் என்பதற்கான கிரேக்க வார்த்தை கெஹன்னா ஆகும். முதலாவதாக, இது எருசலேமுக்கு வெளியே இருக்கும் பள்ளத்தாக்கினுடைய பெயர் ஆகும்; இதில் பட்டணத்தின் குப்பைகள், முற்றிலுமாய் அழிக்கப்படுவதற்கெனப் போடப்படுகின்றது; இன்னுமாக பயங்கரமான குற்றவாளிகள், மரணத் தண்டனை அடைந்த பிற்பாடு, அவர்களுடைய சரீரம் இங்கு வீசப்படுகின்றன. அவர்களைச் சித்திரவதைப் பண்ணுவதற்காக அல்லாமல், மாறாக பொல்லாதவர்களுக்கு எதிர்க்காலம் இல்லை என்பதை அடையாளமாய்த் தெரிவிப்பதற்கே இப்படியாகச் செய்யப்பட்டது. வெளிச்சத்திற்கும், அறிவிற்கும் எதிராகவும், நன்கு உணர்ந்தவர்களாகவும், வேண்டுமென்றும் பாவம் செய்பவர்களுக்குரிய இரண்டாம் மரணத்திற்கு நிழலாக இயேசு, கெஹன்னாவைப் பயன்படுத்துகின்றார்.

தேவனுக்குப் பயப்படுகின்ற பயம் என்பது, ஞானத்தின் ஆரம்பமாக இருக்கின்றது; பயபக்தியுடன் கூடிய பயம் கொண்டிருப்பது எப்போதும் நல்லதே. ஆனால் தேவனுடைய ஜனங்கள், அவருடன் நெருங்கிப் பழகி, அவருடைய நீதியையும், ஞானத்தையும், அன்பையும், வல்லமையையும் கற்றுக்கொள்ளும் போது, நீதியை விரும்புகின்ற யாவருக்கும் அவர் நண்பராய் இருக்கின்றர் என்பதை உணர்ந்துக்கொண்டு, தேவனை அன்புகூருகின்றனர்; அப்போஸ்தலர் கூறுவது போன்று, "பூரண அன்பானது, (வெறுப்பு மூட்டிவிடுவோமே எனும் அச்சத்தை) பயத்தைப் புறம்பே தள்ளுகின்றது" . . . இது இளைப்பாறுதலைக் குறிக்கின்றது. கர்த்தருடைய சீஷர்கள், தங்களுடைய பரம பிதா தங்கள் மீது கொண்டிருக்கும் பராமரிப்பையும், அவருடைய ஞானத்தையும், அடைக்கலான் குருவிகளையே அவர் மறக்காமல் இருப்பதினால், தங்களையும் அவர் மறப்பதில்லை என்பதையும், அவருடைய அறிவின்படியும், அனுமதியின்படியும் அல்லாமல் மற்றபடித் தங்களுடைய தலையிலிருந்து ஒரு மயிர்க்கூட, கீழே விழுவதில்லை என்பதையும், அவருடைய ஜனங்களுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் அவர் அனுமதிக்கும் யாவும், ஏதோ ஓர் ஆசீர்வாதத்தையே கொண்டு வருகிறதாய் இருக்குமென அவர் நிச்சயம் அளித்துள்ளார் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## "மனுஷர் முன்பாக என்னை அறிக்கைப்பண்ணுங்கள்"

தேவனுடன் இசைவாகக் காணப்படும் அனைவரும் தேவனையும், தேவனுடைய பிரதிநிதியாக உலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இயேசுவையும் அறிக்கைப்பண்ண வேண்டும். இயேசுவை அறிக்கைப் பண்ணுகிறவர்கள் எவரும், அவரை அனுப்பின பிதாவையும் அறிக்கைப் பண்ணுகிறவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய தயவிற்குள்/கிருபைக்குள் காணப்பட்டு, இறுதியில் உயிர்த்தெழுதலில், பிதாவினாலும், பரிசுத்த தூதர்களாலும் கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கங்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். ஆனால் கிறிஸ்துவின் சீஷர்களான பிற்பாடு, அவரை மறுதலிப்பவர்களை, அவர் மகிமையில் சீஷர்களாக அங்கீகரிக்கமாட்டார்.

இயேசுவின் வார்த்தைகள் சீஷர்களுக்கே சொல்லப்பட்டதே ஒழிய, ஜனக்கூட்டத்தாருக்கு அல்ல. கிறிஸ்துவை அறிக்கைப் பண்ணுகிறவர்கள், அவருடைய சீஷர்களாகுகின்றனர்; அவரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதவர்களால் அவரை மறுதலிக்கவும் முடியாது. ஞானஸ்நானத்தினால் அல்லது வேறு ஏதாகிலும் வெளித்தோற்றமான முறையினால் மாத்திரமாகக் கர்த்தர் அறிக்கைப்பண்ணப்படக் கூடாது. அவருடைய பின்னடியார்களின் ஜீவியத்திலும், வார்த்தையிலும், நடத்தையிலும் அவர் அறிக்கைப்பண்ணப்பட வேண்டும். பின்னடியார்கள் அவருடைய ஆவியைக் கொண்டிருந்து, "இருளினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கின்றவர்களாக" இருக்க வேண்டும். சீஷன் என்று தன்னை ஒருவன் அறிக்கைப்

பண்ணிக்கொண்டும், ஆண்டவருடைய போதனைகளைப் புறக்கணித்து, அவரைத் தவறாய்க் காட்டுகின்றவனாகவும், அவரைத் தூஷிக்கின்றவனாகவும், அவரை மறுதலிக்கின்றவனாகவும் இருப்பானானால், இந்த யுகத்தின் முடிவில், மணவாட்டி மகிமையில் (தேவன் முன்பாக) நிறுத்தப்படுவதில் பங்கடையமாட்டான்.

அங்கிருந்த ஜனக்கூட்டத்தார், சீஷர்கள் ஆகவேயில்லை என்பதில் ஐயமில்லை. சிலர் இயேசு பிசாசு பிடித்தவராய் இருந்தார் என்றும், பைத்தியமாய் இருக்கின்றார் என்றும் ஏளனம் செய்தனர். இப்படியாக தம்மைத் தவறாய்க் காட்டினதும், தம்மை இப்படியாக தூஷித்ததும், அறியாமையினால் செய்யப்படும் பட்சத்தில் மன்னிக்கப்படும் என்று ஆண்டவர் கூறினார். ஆனால் சிலர் இதையும் தாண்டிச் சென்று, பரிசுத்த ஆவியினால் செய்யப்பட்ட அவருடைய நற்கிரியைகளை, பெயெல்செபூலாகிய சாத்தானின் வல்லமையினால் செய்யப்பட்டது என்று கூறினார்கள்; இதன்மூலம் இவர்கள் கண்டுக்கொள்ளப்படாமல் விடுவதற்கு முடியாத, மன்னிக்க முடியாத பாவங்களைச் செய்தவர்கள் ஆனார்கள்.

இப்படிப்பட்ட பாவங்கள் துணிகரமானவைகள்; ஏனெனில் இவர்களுடைய குற்றச்சாட்டிற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. ஆண்டவருடைய போதனைகளானது, தூய்மையானவைகள். அவருடைய நடத்தையும், அவருடைய பேச்சும், அவருடைய அற்புதங்களும் அனைத்தும் நற்கிரியைகளாக இருந்தன. துணிகரமாய்த் தவறாய் இருப்பவர்கள் மாத்திரமே, இயேசுவின் இக்காரியங்கள் சாத்தானால் செய்யப்பட்டது என்று சொல்வார்கள். இத்தகையவர்கள் ஒருபோதும் மன்னிக்கப்பட முடியாது என்ற காரியமானது, இந்த அவதூறுகாரர்களுக்கு இனிமேல் நம்பிக்கையே இல்லை என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. இவர்கள் தங்களுடைய துணிகரத்திற்கு ஏற்ப தண்டனை பெறுவார்கள். இத்தண்டனையின் மூலம், இவர்கள் சீர்த்திருந்தினால் நல்லது; ஒருவேளை இல்லையென்றால், இறுதியில் இரண்டாம் மரணத்தில் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்.

பரிசுத்த ஆவிக்கு எதிரான பாவம், போன்றதான, சில பாடங்கள் குறைவாகப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது. இவ்விடத்தில் இடம்பெறும் ஆவி எனும் வார்த்தையானது, வல்லமை (அ) செல்வாக்கைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்குச் சாத்தானுடைய ஆவி என்பது தேவனுக்கும், நீதிக்கும் விரோதமான செல்வாக்காகும்; தப்பறையின் ஆவி என்பது தப்பறையின் வல்லமை (அ) செல்வாக்கு ஆகும். இதற்கு எதிர்மாறான சத்தியத்தின் ஆவி, தேவனுடைய ஆவி, பரிசுத்த ஆவி என்பது, தெய்வீக வல்லமையையும், செல்வாக்கையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவர் எந்தளவிற்கு வெளிச்சமூட்டப்பட்டிருக்கின்றாரோ, அந்தளவுக்குப் பொறுப்புடையவராக இருக்கின்றார். மனதளவிலும், ஒழுக்க ரீதியிலும் குருடாய் இருப்பவர்களுக்குக் குறைவாகவே பொறுப்பு இருக்கின்றது/பொறுப்பு இல்லை, காரணம் இவர்கள் சத்தியத்தின் ஆவிக்கும், தப்பறையின் ஆவிக்கும் இடையிலும், தேவனுடைய ஆவிக்கும், சாத்தனுடைய ஆவிக்கும் இடையிலுமுள்ள வித்தியாசத்தைத் தெளிவாக உணர்ந்துக்கொள்வதில்லை.

நன்மை, தீமை என்ன என்பதை உணர்ந்துக்கொள்வதற்கு முடியாமல் இன்றுக் காணப்படும் நிலைமையில், மனுஷன் ஆதியில் சிருஷ்டிக்கப்படவில்லை. அவன் பூரணமாக, தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டான். பாவமானது, மனிதனுடைய சரீரத்திற்கு மாத்திரமாக மரணத்தைக்கொண்டு வராமல், அவனுடைய மனதிற்கும், அவனுடைய மனசாட்சிக்கும் கூட மரணத்தைக்கொண்டு வந்தது. ஆகவே நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான வித்தியாசத்தை உணர்ந்துக்கொள்வதற்கான திறனும் வேறுபட்டிருக்கின்றது. இன்னுமாக சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் அறிவுரைகள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தபடியால், இதற்கேற்ப பொறுப்புகளும் அதிகமாயிருந்தது. உலகமானது, தேவனை அறிந்துக்கொள்ளவில்லை, ஆதலால் இரண்டாம் மரணத்திற்கு ஏதுவாக தண்டிக்கப்படத்தக்கதாக, உலகம் பரிசுத்த ஆவிக்கு எதிராய் முழுமையாகப் பாவம் செய்ய முடியாது; "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4).

கிறிஸ்து, தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை அறிந்துக்கொள்வதற்குக் கொஞ்சம் அறிவு அவசியமாய் இருக்கின்றது. ஒருவேளை நாம் அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாக அல்லது பின்னடியார்கள் ஆகும் பட்சத்தில், நாம் பரிசுத்த

ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை அடைகின்றோம். இது நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்குத்தக்கதாக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் அகலமாய் அதிகமதிகமாக திறக்கும் அனுகூலமான கட்டத்திற்கு நம்மைக் கொண்டு வருகின்றது. கர்த்தருக்குள்ளான நம்முடைய சந்தோஷத்துடனும், நாம் அழைக்கப்பட்டிருக்கும் பரலோக மகிமைகளுக்கான நம்முடைய ஆயத்தங்களுடனும், நம்முடைய பொறுப்புங்கூடப் பெருகுகின்றது. இந்த வளர்ச்சியடைந்துள்ள இயேசுவின் சீஷர்களே, அவர்கள் முத்திரையிடப்பட்டுள்ள பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவதற்கும், அவர்களுடைய இருயதங்களிலுள்ள பரிசுத்தத்தின் ஆவியை அவித்துப் போடுவதற்குமான அபாயத்தில் காணப்படுகின்றனர் (எபேசியர் 4:30; 1 தெசலோனிக்கேயர் 5:19). அவித்துப் போடுதலும், துக்கப்படுத்துதலும் உடனடியாகச் சம்பவிக்கும் கிரியைகளாக இல்லாதிருந்தாலும், இவைகள் இரண்டாம் மரணத்திற்கு நேராக வழிநடத்தும் பாதைகளாக இருக்கின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஆவியில் நிரம்பி, பரிசுத்தத்தில் பூரணமடைதலுக்கு நேராக முன்னோக்கி தொடர்ந்துக்கொண்டிருக்க வேண்டும்.

தேவனுடைய நல்வார்த்தைகளையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியில் பங்கடைந்தும், பிற்பாடு, கிறிஸ்துவையும், நீதியையும் துணிகரமாயும், வேண்டுமென்றும் வெறுத்து, பாவத்திற்குள்ளாகப் போகிறவர்களை மனந்திரும்புதலுக்கு ஏதுவாய் மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் எனும் இக்கருத்தை, அப்போஸ்தலர் எபிரெயர் 6:4-6 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபிரெயர் 10:26-27). இப்படியாக கிறிஸ்துவின் ஒப்புரவாகுதல் பணியைப் புறக்கணிக்கின்றவர்களைக்குறித்து, அப்போஸ்தலர் விசேஷமாகக் குறிப்பிடுகையில், இப்படிப்பட்டவர்கள் தங்களைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தைச் சாதாரணமான ஒன்று என்று எண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கின்றார்கள் என்கிறார்.

பரிசுத்தத்தின் ஆவியை அவித்துப்போடுகிறவர்களை (அ) ஆவியைத் துக்கப்படுத்துகிறவர்களைப் பரிசுத்தவானாகிய யாக்கோபு, ஆவிக்குரிய வாழ்க்கையில் நோய்வாய்ப்பட்டுள்ளவர்களாக விவரிக்கின்றார். (யாக்கோபு 5:14). தேவனிடத்திலுள்ள ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட்டுள்ள இத்தகையவர்களுக்கு, கடைசியாக ஓர் உதவி காணப்படுகின்றது; அதென்னவெனில், இவர்கள் இவர்களுக்காக ஜெபிக்கவும், பரிசுத்த ஆவிக்கு அடையாளமான எண்ணெயினால் இவர்களை அபிஷேகிக்கவும், இவர்கள் சபையிலுள்ள பரிசுத்தமாக்கப்பட்ட மூப்பர்களின் உதவியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். விசுவாசத்துடன் கூடிய ஜெபம் இந்த ஆவிக்குரிய நோயாளிகளை இரட்சிக்கும்; மற்றும் கர்த்தர் இவர்களைத் தூக்கிவிடுவார்; இவர்கள் பாவங்கள் செய்திருந்தாலும், இவர்கள் மன்னிக்கப்படுவார்கள்.

## "பரிசுத்த ஆவியானது போதிக்கும்"

கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்கள், அவர்களுக்கு வரும் உபத்திரவங்களில், அவர்கள் தவறாய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, துரைத்தனத்தார்களுக்கு முன்பாகக்கொண்டுச் செல்லப்படுவதை எதிர்ப்பார்க்கலாம். சீஷர்களில் பெரும்பாலானவர்கள் கல்லாதவர்களாய் இருந்தபடியினால், அவர்கள் கல்வியறிவுள்ள அதிகாரிகள் முன்பு கொண்டுச் செல்லப்படும் போது, மிகுந்த மனக்கலக்கம் அடையக்கூடும்; அவர்கள் மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் காணப்படும் என்பதைப் பின்னடியார்கள் அறிந்திருக்க வேண்டும்; மேலும் அவர்களுக்கு இருக்கும் இயல்பான ஞானத்தைப் பார்க்கிலும், உயர்வான ஞானத்தை அடைவார்கள் என்பதையும் பின்னடியார்கள் அறிந்திருக்க வேண்டும்; என்ன பதில் சொல்ல வேண்டும் என்று பின்னடியார்கள் பதட்டத்துடன், முன் கூட்டியே சிந்தித்து வைத்துக்கொள்ளாமல், மாறாக தெய்வீக உதவியினை எதிர்ப்பார்த்து, அனைத்தையும் கர்த்தரிடத்தில் ஒப்படைத்து விட வேண்டும்.

ஆனால் அதற்கென்று, தங்களுக்கான பாடத்தைப் படிக்காமல், கிறிஸ்துவின் ஊழியர்கள் மேடைகளில் அல்லது பாட வகுப்புகளில் கர்த்தருக்குப் பிரதிநிதியாக நிற்க

முற்படக் கூடாது. மாறாக ஒவ்வொருவரும், "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரும்" என்ற தீமோத்தேயுவுக்கான பரிசுத்தவானாகிய பவுலினுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் (2 தீமோத்தேயு 2:15). தேவனுடைய ஜனங்களாகிய சபையாரின் முன்பாக தேவனுடைய வாய்க்கருவியாக நிற்பதற்கும், துரைத்தனத்தார்களுக்கு முன்பாக அழைத்துக்கொண்டு போய் நிற்க வைக்கப்படுவதற்கும் வித்தியாசம் இருக்கின்றது.

---

**R5396**

# "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ"

## லூக்கா 12:13-34

"உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."

(வசனம் 34)

இயேசு யூதர்கள் கூட்டத்தாரால் சூழப்பட்டிருக்க, அவர்களில் ஒருவர் இயேசு செல்வாக்கு மிக்கவர் என்பதை உணர்ந்துக்கொண்டு, தன்னுடைய குடும்ப ஆஸ்தியில் தனக்கு ஒரு பாகம் கொடுத்துவிடும்படிக்கு, தன்னுடைய சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அதற்கு, தாம் நியாயாதிபதியாகவும், பங்கிடுகிறவராகவும் இல்லை என்று இயேசு மறுத்தார். இந்த விஷயத்திலும், வேறு விஷயங்களிலும் இயேசுவின் பின்னடியார்கள், தங்களுடைய ஆண்டவரைப் பின்பற்றுவார்களானால் நலமாயிருக்கும். அநேகர், மற்ற மனுஷர்களின் விஷயங்களில் தலையிடுகிறவர்களாக இருந்து, தாங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே தங்களுக்கான கர்த்தருடைய கட்டளை எனும் காரியத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

சமுதாயமானது சில சட்டதிட்டங்களையும், விதிகளையும் ஏற்படுத்தி வழங்கியுள்ளது. இந்த அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டங்களில் எவையெல்லாம் நமக்கு இசைவாக இல்லையோ, அவைகள் விட்டுவிடப்பட வேண்டும். நமக்கு இருப்பவைகளிலும், தெய்வீக ஞானமானது நமக்கு ஏற்படுத்திக் கொடுப்பவைகளிலும் நாம் திருப்திக்கொண்டிருக்க வேண்டும். இயேசு செய்வதற்கு வேறொரு வேலை இருந்தது போன்று, அவருடைய பின்னடியார்களுக்கும் வேறொரு வேலை இருக்கின்றது. மகிமையான மேசியாவின் இராஜ்யத்திற்காக ஆயத்தம் செய்வதே, அந்த வேறொரு வேலையாகும். நமக்கு வாக்களித்துள்ள இந்த ஐசுவரியங்களானது, காணப்படும் பூமிக்குரிய ஐசுவரியங்கள் அனைத்தைக் காட்டிலும் மேலானதாகும்; மேலும் பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிட்டுள்ளப்படி பூமிக்குரிய ஐசுவரியங்களானது குப்பையாகவும், தூசியாகவும் காணப்பட்டு, நமது கர்த்தர் வாக்களித்துள்ள ஆசீர்வாதமான காரியங்களோடு ஒப்பிடுவதற்குப் பாத்திரமானவைகள் அல்ல.

இயேசு மறுப்புத் தெரிவிக்கும் வண்ணமாக, பண ஆசைக்கு எதிராக எச்சரித்துப் பேசினார். இதிலிருந்து ஆஸ்தி, அச்சகோதரனுக்கே நியாயப்படிச் சொந்தமானது என்பதும், இயேசுவிடம் வேண்டிக்கொண்ட மனுஷனோ தன்னுடைய நியாயமான உரிமைகளுக்கும் மிஞ்சி ஆசைப்பட்டான் என்பதும் தெரிகின்றது. மற்றவருக்குச் சட்டப்படிச் சொந்தமானதை, இம்மனுஷன் அடைய ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்றான். பூமிக்குரிய உடைமைகள், ஆஸ்திகள் திரளாய் இருப்பது என்பது ஜீவன் ஆகாது என்பதை அம்மனுஷனும், நாம் அனைவரும் அறிந்துக்கொள்ளவும் இயேசு விரும்பினார். ஒரு மனுஷன் ஐசுவரியத்தை மிகுதியாய்க் கொண்டிருந்தாலும், அவன் துக்கமாய் இருக்கலாம்; அதேசமயம் ஒருவன் தரித்திரத்தில் இருந்தும், அவன் சந்தோஷமாய்க் காணப்படலாம். ஒருவனுடைய ஆத்துமா தேவனிடத்தில் கொண்டிருக்கும் உறவின் அடிப்படையிலும், தேவனிடத்தில் அவன் கொண்டிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையிலுந்தான், சந்தோஷம் காணப்படும்.

இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு, மாம்சீக இஸ்ரயேலர்கள் நிழலாய் இருந்தார்கள். மாம்சீக இஸ்ரயேலர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வார்களானால், அவர்கள் ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தைச் சுதந்தரித்துக்கொள்ளலாம் என்பதாகவும், அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பூமியின் குடிகளை ஆசீர்வதிப்பதற்கெனப் பயன்படுத்தப்படுவார்கள் என்பதாகவுந்தான் மாம்சீக இஸ்ரயேலர்களுக்குத் தேவனால் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் காணப்பட்டது. மாம்சீக இஸ்ரயேலர்களும், மீதமான மனுஷர்களைப் போலவே பாவிகளாக இருந்தபடியால், அவர்களால் தெய்வீகப் பிரமாணங்களைக் கைக்கொள்ள முடியவில்லை, என்பதே அவர்களுக்கு இருந்த பிரச்சனை; ஆகவே அனைத்து ஜாதிகள் மீது, தேவன் தம்முடைய இராஜ்யத்தில், ஆசீர்வாதங்களைப் பொழிவதற்கு அவர்களைப் பயன்படுத்துவதற்கு, மாம்சீக இஸ்ரயேலர்கள் தகுியற்றவர்கள் ஆனார்கள். எனினும் இராஜ்யம் பற்றின நம்பிக்கையே அவர்களுடைய மனங்களில் எப்பொழுதும் மேலோங்கி காணப்பட்டு, அவர்கள் அனைவராலும் நாடப்பட்டதாகவும் இருந்தது.

அனைவருக்குமான மீட்கும்பொருளைக் கொடுப்பதற்கும், மேசியாவின் இராஜ்யத்தில் தம்முடன் உடன் அங்கத்தினராய் இருக்கத்தக்கதாக "உத்தம இஸ்ரயேலர்களை" அழைத்து, இழுத்துக்கொள்ளும் வேலையை ஆரம்பிப்பதற்கும் இயேசு உலகத்திற்கு வந்தார் (1 தீமோத்தேயு 2:6). இயேசுவினால் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடியும், மற்றும் அவர் கைக்கொள்ளவும் செய்தார் மற்றும் இதனோடுகூட ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததிக்காகவும் இயேசு தம்முடைய ஜீவனைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். இந்தப் பலியானது, மாய்மாலமற்ற, "உத்தம இஸ்ரயேலர்கள்" அனைவரின் வேண்டுமென்றே செய்யப்படாத தவறுகளுக்காக, அவர் நன்மை செய்ய (அவருக்கு) அனுமதியை உண்டாக்கிற்று. அவர்களால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு இராஜ்யத்தை அடைய முடியாவிட்டாலும், அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதின் மூலமாக, நீதியினால் தரிப்பிக்கப்பட்டு, இவ்வாறாகத் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியும். ஆகவேதான் அந்த இராஜ்யத்தின் அங்கத்தினராகும்படிக்கு, பல நூற்றாண்டுக் காலமாக, தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதாக முயன்று கொண்டிருக்கும் ஜனங்களுக்கு இயேசுவின் பிரசங்கங்கள், இராஜ்யத்தின் அடிப்படையில் இருந்தது. இராஜ்யத்தின் வகுப்பாரில் அங்கத்துவம் அடைவதற்காக முதலாவது வாய்ப்பு, யூத ஜனங்களுக்கே அருளப்பட்டது; மேலும் இவர்கள் கிருபையைப் புறக்கணித்த போதுதான் வாய்ப்பானது யூதர்களை விட்டு, புறஜாதிகளிடம் சென்றது. "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" (அப்போஸ்தலர் 13:46). இந்த உண்மைகளின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், இயேசுவின் போதனைகள் உலகத்திற்குக் கொடுக்கப்படாமல், மாறாக உலகத்தினின்று தாங்கள் பிரிந்திருப்பதாகவும், மேசியாவின் இராஜ்யத்தில் உடன் சுதந்தரத்துவத்தை அடைவதற்கு தாங்கள் நாடிக்கொண்டிருப்பதாகவும் கூறிக்கொண்ட ஜனங்களுக்காகவே கொடுக்கப்பட்டது.

இப்படிப்பட்டவர்களுக்கே உண்மையில் புதிய ஏற்பாட்டின் முழுப் போதனைகளும் கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு மாத்திரமே கேட்கிற செவிகள் இருந்தது; மேலும், "கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவன்" என்று நமக்குப் போதிக்கப்பட்டுள்ளது. இன்னுமாக சாந்தமுள்ளவர்களுக்கும், தாழ்மையுள்ளவர்களுக்கும், இருதயம் நொறுங்குண்டவர்களுக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கும்படிக்கு நாம் போதிக்கப்பட்டிருக்கின்றோம்; ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமான நிலைமையில் காணப்படுகின்றனர். மற்றவர்கள் அனைவரும் இராஜ்யத்தின் சுவிசேஷத்திற்குக் குருடர்களாகவும், செவிடர்களாகவும், காணப்படுகின்றனர். இப்பொழுது கேட்கவும், பார்க்கவும் முடியாதவர்கள், மேசியாவின் ஆளுகையின் போது, தங்களுடைய கண்களையும், செவிகளையும் திறக்கப் பெற்றிருப்பார்கள், ஏனெனில் அவர் ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்திருக்கின்றார். எனினும் இவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மகிமையான பரம அழைப்புத் தொடர்புடைய விஷயத்தில், இழந்துப் போகிறவர்களாக இருப்பார்கள்.

# "ஆத்துமாவே, நீ இளைப்பாறி இரு"

சகல பூமிக்குரிய இலட்சியங்களிலுள்ள முட்டாள்தனத்தை விவரிக்கும் உவமை ஒன்றை நமது கர்த்தர் கூறினார். ஆனால் அதற்கென்று பூமிக்குரிய இலட்சியங்கள் என்பது, மோசமானவைகள் என்பதாக இல்லை; மாறாக இவைகள் இராஜ்யத்திற்கு முன்பு ஒப்பிடுகையில் ஒன்றுமில்லாதவைகளாய் இருக்கின்றது. இராஜ்யம் மிகுந்த விலையேறப்பெற்ற முத்தாகும்; இதை அடையும்படிக்கு, மற்ற அனைத்து முத்துக்களும், அதாவது மற்ற அனைத்து விலையேறப்பெற்றவைகளும், மற்ற அனைத்து இலட்சியங்களும், மற்ற அனைத்து நம்பிக்கைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டு, குப்பை என்று கருதப்பட வேண்டும்.

உவமையானது, ஓர் ஐசுவரியமான விவசாயி இருந்ததாகவும், அவன் தன்னுடைய ஐசுவரியங்களைக்கொண்டு நன்மையைச் செய்வதற்குப் பதிலாக கஞ்சனாக இருந்தான், அதாவது சேர்த்துக் குவித்து வைத்துக்கொள்வதில் பிரியமாய் இருந்தான் என்பதாகவும் கூறுகின்றது. அவன் மாபெரும் களஞ்சியங்களையும், பண்டகசாலைகளையும் கட்டிக்கொண்டு, தனக்கு அநேகமானவைகள் இருக்கிறது என்றும், போதுமானதுக்கும் அதிகமாக இருக்கிறது, ஆதலால், தான் இளைப்பாறி இருக்கலாம் என்ற எண்ணத்தினால் தன்னை மகிழ்வித்துக்கொண்டிருந்தான். சீக்கிரத்தில் அம்மனுஷன் மரித்துப்போனதாக உவமை சுட்டிக்காட்டுகின்றது. இவ்வளவாய் அதிகம் ஆஸ்தியைப் பயன்படுத்தாமல், சேர்த்துக் குவித்துக் கொண்டதினால் உண்மையில் அம்மனுஷனுக்கு என்ன நன்மை கிடைத்தது? என்பது நமது கேள்வியாகும். மற்றவர்கள் போட்டிப் போட்டுக்கொள்ளத்தக்கதாக அம்மனுஷன் மற்றவர்களுக்குத்தான் தனது ஆஸ்திகளை விட்டுச் சென்றுள்ளான். அவன் மதிக்கெட்ட ஐசுவரியமான மனுஷனாக இருந்தான். இப்படியாக அம்மனுஷன் தன்னுடைய ஆஸ்திகளை விட்டுச்செல்வதற்குப் பதிலாக, (உயிரோடு இருக்கும்போது) அவன் மற்றவர்களுடைய நன்மைக்காவும், தேவனுடைய மகிமைக்காகவும் ஞானமாய்ச் செலவழித்து, சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். இப்படிச் செய்திருந்தானானால், அவன் தேவனிடத்தில் ஐசுவரியவானாய் இருந்திருப்பான். மாறாக இம்மனுஷன், தேவனிடத்தில் ஐசுவரியமற்றுக் காணப்படுபவர்களுக்கு உதாரணமாய்க் காணப்பட்டான். இவன் சுயத்திற்காகவே, தன்னுடைய பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்திருந்தான்.

அநேகர் இவ்வுமையில் குறிப்பிடப்படாத காரியங்களை, உட்புகுத்திக் கூறிவிடுகின்றனர். அந்த ஐசுவரியமான மனுஷன் நித்தியமான சித்திரவதைக்குள் கடந்துப்போனதாக அனுமானித்துக் கூறுகின்றனர்; ஆனால் இப்படியாக எதையும், கர்த்தருடைய வார்த்தைகள் தெரிவிக்கவில்லை. "உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்" எனும் வார்த்தைகளானது, "இந்த இரவில் நீ உன்னுடைய ஜீவனை இழக்கப் போகிறாய் . . . நீ தரித்திரனாய் மரிக்கப் போகின்றாய்; எதிர்க்காலத்தில் உன்னை ஐசுவரியவானாக இருக்கப்பண்ணுவதற்கு ஏதுவாக நீ உன்னுடைய இருதயத்தில், மனதில் மற்றும் நற்கிரியைகளில் ஆவிக்குரிய ஐசுவரியங்களைச் சேர்த்து வைக்கவில்லையெனில் பூமிக்குரிய ஐசுவரியங்கள் உனக்கு எதிர்க்காலத்தில் ஒன்றும் உதவாது" என்பதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அந்த ஐசுவரியவான் தனக்கு என்று குவித்துக்கொண்ட ஐசுவரியங்களினால் நன்மையடைவதற்குப் பதிலாக, எதிர்க்கால ஜீவியத்தில் அனுகூலமற்றவனாக இருப்பான். அவன் தன்னுடைய ஐசுவரியங்களைப் பலிச் செலுத்தயிருக்கலாம் அல்லது தன்னுடைய முழு ஜீவியத்தையும் கிறிஸ்து மூலம் தேவனுக்கு அர்ப்பணம் பண்ணி, பின்னர் நேரத்தையும், தாலந்தையும், வாய்ப்புகளையும், ஆஸ்தியையும் உண்மையாய் ஒப்புக்கொடுத்திருக்கலாம். இப்படியாக அவன் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்துக்கொண்டிருக்கலாம்; இப்படியாக உயிர்த்தெழுதலில் அவன் உண்மையுள்ள பின்னடியாராக, அவருடைய இராஜ்யத்தின் வகுப்பாரில் அங்கத்தினராக, அவருடைய மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கடையத்தக்கதாக கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பான். இந்த இராஜ்யத்தின் வகுப்பார், இயேசுவின் மரணமானது ஆதாமின் சந்ததி அனைத்திற்காகச் சுதந்தரித்துக்கொண்ட தெய்வீக ஆசீர்வாதங்களை, ஆயிரம் வருடங்கள் அருளுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தனக்கான வாய்ப்புகளை இழந்த அந்த ஐசுவரியவான் கிறிஸ்துவின் ஆயிர வருட இராஜ்யத்தில் வருவான், ஏனெனில் பிரேத குழிகளில் உள்ளவர்கள் எல்லாரும் அவருடைய சத்தம் கேட்டு வருவார்கள் என்று நாம் வாசிக்கின்றோம். அம்மனுஷன் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையத்தக்கதாக அங்கீகரிக்கப்பட்டவனாக வராமல், தேவனால் அங்கீகரிக்கப்படாதவனாகவே (பிரேத குழியிலிருந்து) வெளிவருவான், மற்றும் அவனுடைய உயிர்த்தெழுதலின் வாய்ப்புகளானது, யோவான் 5:29-ஆம் வசனத்தின்படியாக இருக்கும். அவன் நிந்தனைக்கும், இகழ்ச்சிக்கும் எழுந்திருப்பான்; மேலும் இந்த இகழ்ச்சியானது அவன் அந்த நியாயத்தீர்ப்பின் காலங்களுக்குக் கீழாக, தனக்கான பாடங்களைக் கற்றுக்கொண்டு நல்ல குணலட்சணத்தை வளர்த்துக்கொள்வது வரையிலும், அல்லது கற்கவும், குணலட்சணத்தை வளர்க்கவும் மறுத்து, இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுப் போவது வரையிலும் நீடித்திருக்கும்.

## “முதலாவதாக இராஜ்யத்தைத் தேடுங்கள்”

பூமியின் இராஜ்யங்களைப் பார்த்து, அதில் ஒன்றாக அவருடைய இராஜ்யம் இருக்குமென நாம் எதிர்ப்பார்க்கலாம் என்பதாக நல்ல போதகர் கூறினதாக நாம் புரிந்துக்கொள்ளக் கூடாது. மாறாக, அவருடைய இராஜ்யம் எதிர்க்காலத்திற்கு உரியது என்று அவர் நமக்கு அறிவிக்கின்றார். “இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்” (யோவான் 18:36). அவருடைய இராஜ்யத்திற்காக, தேவனுடைய இராஜ்யத்திற்காக நாம், “உம்முடைய இராஜ்யம் வருவதாக” என்று ஜெபம் பண்ணுகின்றோம். “ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுக்குரிய சுதந்தரத்தை” அடையத்தக்கதாக நம்மை ஆகச்செய்வதற்கு ஏதுவானவைகளை நாம் செய்ய நாடுவதே, அவருடைய இராஜ்யத்தை நாம் நாடுவதாகும். நாம் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்க்க வேண்டும். இரட்சகரின் இரண்டாம் வருகையின்போது, அவர் முதலாவதாகத் தம்முடைய ஊழியர்களை அழைத்து, கணக்கு விசாரிக்கும் போது, நாம் அவருடைய ஊழியர்கள் மத்தியில் காணப்படுவது மட்டுமல்லாமல், “நல்லது உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள், இராஜ்யத்தின் சந்தோஷத்திற்குள் பிரவேசி; இரண்டு பட்டணங்கள் அல்லது ஐந்து பட்டணங்கள் மீது அதிகாரம் பெற்றுக்கொள் என்று அவர் கூறுவதைக் கேட்கவுந்தக்கதாக, நமது தாலந்துகளையும், நமது ராத்தல்களையும் நாம் மிகவும் ஞானமாய்ப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

இராஜ்யத்தின் சுதந்தரர்களாகுவதற்கு ஒரு வழிமுறை காணப்படுகின்றது. (1) இவர்கள் தங்களைப் பாவிகள் என்றும், தெய்வீகக் கவனம்/பார்வைப் பட தாங்கள் பாத்திரமற்றவர்கள் என்றும் உணர்ந்துக்கொள்ள வேண்டும். (2) இயேசு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டி என்று இவர்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். (3) இறுதியில் உலகமானது சுத்திகரிக்கப்படுவதற்கும், விருப்பமுள்ளவர்களையும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களையும் தேவனுடன் ஒப்புரவாகுவதற்கும், அவருடைய பலிதான் அடிப்படையாக இருக்கின்றது என்றாலும், அந்த வேலை இன்னமும் ஆரம்பமாகவில்லை என்றும், அந்த வேலையானது அவருடைய இராஜ்யத்தின் ஆயிர வருட ஆளுகையின் போது அவரால் நிறைவேற்றப்படும் என்றும் இவர்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். (4) இப்பொழுது இராஜ்யத்தின் வகுப்பாருக்கான அங்கத்தினர்களைக் கர்த்தர் தேடிக்கொண்டிருக்கின்றார் என்பதும், அங்கத்துவமாவதற்கான வழி, இடுக்கமான வழி என்பதும், “ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்” (லூக்கா 9:23) என்பதுமான கர்த்தருடைய செய்தியை இவர்கள் கேட்க வேண்டும். இந்த வகுப்பாருக்கான பரீட்சைகள், மிகுந்த உபத்திரவத்தின் வழியாக இருக்கும் என்றும், தேவன் வெறுமனே பரிசுத்தவான்களை அழைக்காமல், மாறாக தேவன் மற்றும் சகோதரரிடத்தில் அன்பு தொடர்பான விஷயத்திலும், மரணம் வரையிலுமான நேர்மை/உண்மை தொடர்பான விஷயத்திலும் கடுமையான பரீட்சைகளையும், சோதனைகளையும் சகித்து நிற்கும் பரிசுத்தத்துவம் உடையவர்களாகிய பரிசுத்தவான்களை அழைக்கின்றார் என்றும் இவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தங்களை கர்த்தருடைய ஊழியக்காரர்களாக, நீதிக்கடுத்த ஊழியங்களில் மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாக இருப்பதாக முழுமையாய் அர்ப்பணித்தது முதல் இவர்கள், மதிப்புடைய எல்லாவற்றிற்கும் மேலாக, பரலோக இராஜ்யத்தை மாபெரும் பொக்கிஷமாக எண்ணுவார்கள். இவர்கள் இதனை தினந்தோறும், ஒவ்வொரு மணி நேரமும் தேடுவார்களா. பொக்கிஷம் இருக்கும் இடத்தில், இவர்களுடைய இருதயம் காணப்படும். இதுவே இவர்களுக்குப் பகலின் சிந்தனைக்கும் மற்றும் இரவின் தியானத்திற்குமான பொருளாக இருக்கும். இவர்களுடைய தேவைகள் மற்றும் நியாயமான அவசியங்கள் சந்திக்கப்படுவதற்கு, பூமிக்குரிய தொழில்கள் இவர்களுக்கு அவசியமாகவே காணப்படும்; எனினும் இவர்களுடைய கணிப்பில், பரலோக பரிசுக்கு ஒப்பாக எந்தப் பூமிக்குரிய பரிசும் காணப்படுவதில்லை. இப்படிப்பட்டவர்களே, தேவனைத் தங்களுடைய வீடுகள் (அ) நிலங்கள், பெற்றோர்கள் (அ) பிள்ளைகள் (அ) தங்களைக் காட்டிலும் அன்புகூருகிறவர்களுக்கென்று, தேவனால் வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்தின் சுதந்தரர்களாக, நிச்சயமாய் ஆகுவார்கள்.

---

**R3354**

# "எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள்"

## லூக்கா 12:35-48

"எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்." (வசனம் 37)

சம்பவிக்கவிருக்கும் தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்து நமது கர்த்தர் போதனைகளைக் கூறின பிற்பாடு, மற்றும் மறுரூப மலையில் கொடுத்திட்ட தரிசனமானது மேலும் இப்படிப்பினையை அப்போஸ்தலர்களுக்கு வலியுறுத்தின பிற்பாடு, நமது கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையைக்குறித்தும், இரண்டாம் வருகை வரைக்குமான இடைப்பட்டக் காலத்தில் அப்போஸ்தலர்கள் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மையைக்குறித்தும், அப்போஸ்தலர்களுக்கு விளக்க ஆரம்பித்தார். கர்த்தர் பூமியில் இல்லாதிருக்கும் காலங்களில், அவருடைய ஜனங்கள் தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும். அவர்கள் அரைக்கட்டிக்கொண்டு இருப்பது என்பது, அவர்கள் எல்லா வேளைகளிலும் ஊழியத்திற்கு ஆயத்தமாய் இருப்பதை, அதாவது இராஜ்யத்திற்கு அடுத்த வேலைகளில் உற்சாகமாகப் பங்கெடுத்துக்கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. அக்கால வழக்கத்தின்படி, தளர்வான நீண்ட வஸ்திரங்கள் பயன்படுத்தப்பட்டன, மேலும் வேலைகள் செய்யத்தக்கதாக, அரைகளில் கச்சைக் கட்டப்பட்டது. ஓய்வு எடுக்கும்போது கச்சைகள் தளர்த்தப்பட்டன. ஆகவே அரைக்கட்டிக்கொண்டிருப்பதாக வசனப்பகுதிகளில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பது, கர்த்தர் நம்மோடு பூமியில் இல்லாமல் இருக்கும் பொழுது, கர்த்தருடைய ஜனங்கள் தொடர்ச்சியாக ஊழியங்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் எனும் படிப்பினையைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நாம் இவ்வுலகத்திற்கடுத்தக் கவலைகளினால் அமிழ்த்தப்பட்டு, தூங்கிக்கொண்டிருக்கக் கூடாது. மேலும் இவ்வாறாக தூங்கிக்கொண்டு, நமக்கென அளிக்கப்பட்ட கடமையைச் செய்வதைத் தவிர்த்தல் கூடாது.

கர்த்தருடைய வேலைக்காரர்கள் ஒவ்வொருவரும், ஒளியைச் சுமப்பவராக அடையாளப்படுத்தப்படுகின்றனர்; மேலும் அவனுடைய நற்கிரியைகளைக் கண்டு மனுஷர்கள் பரலோகத்திலுள்ள பிதாவை மகிமைப்படுத்துவதற்கு ஏதுவாக, அவன் தன்னுடைய ஒளியை, மனுஷர்கள் முன்பாக பிரகாசிக்கப் பண்ண வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றான். இருளும், அறியாமையும், மூடநம்பிக்கையும், பாவமும் உலகத்தில் காணப்பட்டிருக்க, கர்த்தருடைய சீஷர்களுக்கு தெய்வீக வெளிப்பாடு, ஞானம் மற்றும் புரிந்துக்கொள்ளுதலுக்கான ஒளி அருளப்பட்டிருக்கின்றது; இந்த ஒளியானது இவர்களை மறுரூபமாக்கி, புதிய சிருஷ்டிகளாக ஆக்குவதோடுகூட, இவர்கள் வாயிலாக, இவர்களுடன் தொடர்புக்குள் வரும் அனைவருக்கும் பிரகாசிக்கின்றதாகவும் இருக்கின்றது என்பதே சித்தரிக்கப்பட்டுள்ளது. "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கின்றீர்கள்" மாபெரும் ஒளியாகிய, ஆயிர வருட காலை வேளையின் மகிமையான சூரிய உதயம் இன்னமும்

நடைபெறவில்லை என்பதும், காலை வேளைக்குக் காத்திருப்பவர்களாகவும், அதற்கு விழித்திருந்துப் பார்த்துக்கொண்டிருப்பவர்களாகவும், கர்த்தருடைய ஜனங்கள் இன்னமும் உலகத்தில் சிறு ஒளிகளாக, இருளின் மத்தியில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதும் இங்கு நாம் பார்க்கும் கருத்தாகும். இதற்கு இசைவாகவே தீர்க்கத்தரிசியின் வார்த்தைகளாகிய . . . "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்"என்று காணப்படுகின்றது. இருள், அறியாமை மற்றும் பாவத்தின் இந்த இரவு வேளையானது, தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நம்முடைய சந்ததிமேல் வந்த மரண சாபத்துடன் ஆரம்பமானது; மேலும் சர்வ சிருஷ்டியானது காலைக்காக காத்திருந்து தேவனுடைய புத்திரர்களாகிய, கிறிஸ்து இயேசுவும், இராஜ்யத்தில் அவருடன் உடன் சுதந்தரர்களாக இருக்கும் அவருடைய சகோதரர் வெளிப்படுவதற்குக் காத்திருந்து, ஏகமாய்த் தவித்துக் கொண்டிருக்கின்றது.

தம்முடைய பின்னடியார்களிடம் காணப்பட வேண்டிய விழிப்பும், ஜாக்கிரதையாய் இருத்தலையும் குறித்து விவரிக்கும் வண்ணமாக, நமது கர்த்தர் ஓர் உவமையைப் பேசினார். வீட்டெஜமான் தன்னுடைய வீட்டில் தன்னுடைய மணவாட்டியைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு வரும் இரவு (அ) காலை வேளையில், வேலைக்காரர்கள் அதிகளவில் வழிப்பாய் இருப்பதற்கு (அ) வீட்டாருடைய நலனில் அதிகம் அக்கறையாய் இருப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுவது போன்று, வேறு எந்தத் தருணத்திலும், யூதர்கள் மத்தியில் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை. இந்த ஒரு விஷயத்தைத் தம்முடைய பின்னடியார்கள் தம்முடைய இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கும் போது, கொண்டிருக்க வேண்டிய விழிப்புத்தன்மையை விளக்குவதற்கு, கர்த்தர் தேர்ந்தெடுத்துக்கொண்டார். உண்மையைச் சொல்லப்போனால் இவ்வுவமையிலுள்ள வேலைக்காரர்கள், வேறொரு உவமையில் உள்ள மணவாட்டிகளாக இருக்கின்றனர்; ஆனால் காரியம் அங்கு வேறு கண்ணோட்டத்திலிருந்து விவரிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. இங்குள்ள முக்கியமான பாடம் என்னவெனில், ஊழியத்தில் கடுமையான முயற்சி காணப்பட வேண்டும், இன்னுமாக ஆண்டவருடைய நோக்கத்திற்கடுத்தக் காரியங்களில் விழிப்பாய்க் காணப்பட வேண்டும், இன்னுமாக அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றின அவருடைய வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் கொண்டிருக்க வேண்டும்; அவருடைய வருகையைப் பற்றின எதிர்ப்பார்ப்பானது, நேர்த்தியாய் ஊழியம் செய்வதற்குத் தூண்டுதலாக (அ) உதவியாக இருக்கின்றது. எஜமான் தன்னுடைய கூட்டத்தாருடன் திரும்பி வரும் போது, தான் வந்திருப்பதைத் தெரிவிக்கையில், கதவைத் திறப்பதற்கு ஆயத்தமாய் இருப்பதற்குப் பதிலாக ஒருவேளை வேலைக்காரர்கள் தூங்கிக் கொண்டிருப்பதை எஜமான் காண்பது என்பது, எஜமான் மீதான வேலைக்காரர்களின் அன்பிலும், ஈடுபாட்டிலும், அக்கறையிலும் இருக்கும் குறைவை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கும்.

## "நீ விழித்திராவிட்டால், நீ அறிந்துக்கொள்ள மாட்டாய்"

நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது அவருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் அவர் வந்திருப்பதை உணர்ந்துக்கொள்வதற்கு முன்னதாகவே, அவர் வந்து காணப்பட்டிருப்பார் என்ற காரியத்தை இந்த உவமை தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவருடைய வந்திருத்தலானது, கதவுத் தட்டப்படுவதன் மூலமாக அறிவிக்கப்படும்; கதவைத் தட்டுதல் என்பது, ஏதோ விசேஷித்த ஊழியக்காரன் அல்லது ஊழியக்காரர்கள், ஒன்றில் வாயின் வார்த்தைகள் (அ) அச்சடிக்கப்பட்ட காகிதத்தின் வாயிலாக ஆண்டவருடைய பிரசன்னத்தின் சான்றுகளை முன்வைக்கப்படுவதன் மூலமான ஓர் அறிவித்தலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு, காலத் தீர்க்கத்தரிசனங்கள் பற்றின வெளியீடானது, அந்தக் காலம் நிறைவேறியுள்ளதையும், சுவிசேஷ யுகத்தினுடைய இறுதியிலும், ஆயிர வருட யுகத்தின் ஆரம்பத்திலும் நடைப்பெறும் சம்பவங்களைக் குறிப்பிடும் சில தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளதையும், வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில அடையாளங்கள் நிறைவேறியுள்ளதையும் காட்டுகின்றது; இத்தகைய சாட்சிகளே, கதவு தட்டுதலின் வடிவில் காணப்படுகின்றது; இந்தக் கதவு தட்டப்படுதலின் சத்தமானது, அக்காலத்தில் விழித்திருக்கும் கர்த்தருடைய ஊழியர்களினால் கேட்கப்படும். ஊழியர்கள் இந்தக் கதவு தட்டுதலைச் செய்வதில்லை, மாறாக இந்தக் கதவு தட்டுதலையும், அறிவித்தலையும் பண்ணுவதற்குப் பயன்படத்தக்கதாக, அவர் தேர்ந்தெடுக்கும் சக்திகளையும், பிரதிநிதிகளையும் அவரே செயல்படுத்துவார்.

அக்கால கட்டத்தில் விழிப்பாய் இருந்து, கதவு தட்டும் சத்தத்தைக் கேட்டு, அதைப் புரிந்துக்கொண்டு, ஆண்டவரை வரவேற்பவர்களாகிய ஊழியர்களுக்கு, ஓர் ஆசீர்வாதம் வாக்களிக்கப்பட்டுள்ளது. 39-ஆம் வசனமானது, ஊழியர்களைத் தவிர வேறு எவரும் கதவு தட்டப்படுதலை உணர்ந்துக்கொள்ள மாட்டார்கள், அதாவது பொதுவான உலக ஜனமானது ஆண்டவர் திரும்பி வரும் வேளையை அறிவதில்லை, மாறாக அவருடைய ஊழியக்காரர்கள் மாத்திரமே அறிந்துக்கொள்வார்கள் என்பதைத் தெளிவாய்க் காண்பிக்கின்றது. எஜமானுடைய வருகைக்கெனக் குறிப்பிட்ட நேரம் எதுவும் சொல்லப்படவில்லை, மாறாக காலங்களையும், வேளைகளையும் அறிவது அவர்களுக்கடுத்த வேலை இல்லை என்பதும், மாறாக அவர்கள் முதலாம் ஜாமத்தில் மாத்திரமல்லாமல், இரண்டாம், மூன்றாம் ஜாமங்களிலும், எந்த ஜாமத்திலும் எஜமான் கதவைத் தட்டும் சத்தம் கேட்கையில், தாங்கள் உடனடியாகச் செயல்படத்தக்கதாகத் தொடர்ந்து விழிப்புடன் காணப்பட வேண்டும் என்பதும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுள்ளது. எஜமான் எப்போது வருவார் என்று ஊழியக்காரர்கள் ஒருபோதும் அறிந்துக்கொள்ளமாட்டார்கள் என்பதாகக் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். அவருடைய வந்திருத்தலின் போது, விழிப்பாய்க் காத்திருந்து, கவனித்துக் கொண்டிருக்கும் தம்முடைய ஊழியர்கள் அனைவராலும் உணர்ந்துக்கொள்ளப்படத்தக்கதாக, அவர் கதவு தட்டுதலைத் தெரியப்படுத்துவார் என்பதே கருத்தாக இருக்கின்றது. கதவு தட்டும் சத்தத்தை ஊழியர்களால் ஒருவேளை அறிந்துக்கொள்ள முடியாது/சாத்தியம் இல்லை என்றால், கதவு தட்டுதலின் பயன் என்ன? கதவு தட்டுதல் என்பது வந்திருத்தலுக்கான சாட்சியாக இருக்கின்றது; ஊழியர்கள் முன்கூட்டியே அறிந்துக்கொள்ள முடியாது, மாறாக வந்திருக்கும் போதுதான் அறிந்துக்கொள்வார்கள்; அதுவும் கண்களினால் பார்க்காமல் அறிந்துக்கொள்வார்கள்.

## "ஆண்டவர் தம்முடைய ஊழியர்களுக்கு ஊழியஞ்செய்வார்"

இந்த ஊழியர்களுக்கான விசேஷித்த பலன் என்ன? "அவர் அரைக்கட்டிக்கொண்டு (அவர்களுக்கு ஊழியக்காரனாகி) அவர்களைப் பந்தியிருக்கச் செய்து சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்" என்று உவமை தெரிவிக்கின்றது. இது நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையில், அவருடைய வந்திருத்தலை அவருடைய ஊழியக்காரர்களில் எவரேனும் அறிந்துக்கொள்வதற்கு முன்னதாகவே வந்து இருப்பார் என்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அவர் வந்தாகிவிட்டது என்ற அறிவிப்பைக் கொடுப்பார் (அ) கதவைத் தட்டுவார். அவரை எதிர்ப்பார்த்தும், கதவு தட்டப்படுதலுக்கு விழிப்பாய் இருந்தும், ஆயத்தமாய் இருந்தவர்கள் மாத்திரமே, கதவு தட்டப்படுதலைக் கேட்பவர்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் விசேஷித்த ஆவிக்குரிய விருந்தைப் பெற்றுக்கொள்வார்கள். அது விசேஷமாய் இருக்கும், காரணம் அது விசேஷித்தத் தருணத்தில் கொடுக்கப்பட்டதினாலும் மற்றும் அவர்களுடைய அக்கறையும், ஈடுபாட்டையும் வெளிப்படுத்தினதற்கான, விசேஷித்தமான பலனாக இருக்க நோக்கம் கொள்ளப்பட்டதினாலும் ஆகும். அது விசேஷமானது காரணம், வீட்டின் எஜமான், வீட்டிற்கு ஊழியக்காரனாக ஆகியுள்ளார், மேலும் கிருபை மற்றும் ஆசீர்வாதங்களில் சகல ஐசுவரியங்களின் திறவுகோல்களையும்கொண்டு, அவர் தம்முடைய பொக்கிஷசாலையிலிருந்து, உணவு சாலையிலிருந்து பழையதும், புதியதும், பலமானதும், மென்மையானதுமான அனைத்தையும் வெளிக்கொண்டு வந்துள்ளார். முன்பு ஒருபோதும் அருளப்படாத அளவுக்கு உண்மையுள்ளவர்கள், இராஜரிகமான விருந்தை நிச்சயமாகப் பெற்றுக்கொள்வார்கள்.

நாம் கூறும் இவ்விஷயங்கள் ஏற்கெனவே நிறைவேறிவிட்டது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசனங்களில் குறிப்பிட்டுள்ளபடி, கர்த்தருடைய கதவைத் தட்டுதல் அல்லது அதிகாரப் பூர்வமான அறிவிப்பு, 1875-ஆம் வருடம் முதற்கொண்டு கொடுக்கப்படுகின்றது; மேலும் இன்னமும் கொடுக்கப்பட்டு வருகின்றது. உவமையில் கதவு தட்டப்படுதல் என்பது, ஒரு சில விநாடிகள்தான் செய்யப்பட்டது, ஆனால் இது நிறைவேறுவதற்குச் சில வருடங்கள் எடுத்துக்கொள்ளப்படும். (விசுவாச) வீட்டாரின் ஊழியக்காரர்கள் கவனித்துக்கொண்டு வருகின்றனர்; மேலும் ஒவ்வொருவனும் கர்த்தருடைய வந்திருத்தல் குறித்த உண்மைக்குத் தன்னுடைய இருதயத்தையும், மனதையும் திறக்கையில், வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தின் நிறைவேறுதலை அடைகிறான், அதாவது ஆவிக்குரிய கொழுத்தப் பதார்த்தங்களுடைய விருந்தை அடைகின்றான், அதாவது தெய்வீகத் திட்டம் பற்றின உணர்ந்துக்கொள்ளுதலையும், புரிந்துக்கொள்ளுதலையும், மற்றும் முன்பு ஒருபோதும்

இல்லாத அளவுக்கு ஆத்துமா போஷிக்கப்படுதலையும், பெலப்படுத்தப்படுதலையும் அடைகின்றான். ஊழியக்காரர்களுக்கு ஆண்டவர் ஊழியம் புரிவது என்பது, ஒட்டுமொத்தமாய் அனைவருக்கும் கொடுக்கப்படும் விருந்தாய் இராமல், தனிப்பட்ட விதத்திலான வேலையாகவே புரிந்துக்கொள்ளப்பட வேண்டும்; இக்காரியம் "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் (தனிப்பட்ட ஒருவன்) என் சத்தத்தைக் (கதவு தட்டுதலைக்) கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" என்ற வார்த்தைகளில் உறுதிப்படுகின்றது. இந்த வெளிப்படுத்தல் 3:20-ஆம் வசனம் என்பது, ஏழாம் காலக்கட்ட சபைக்கானச் செய்தியாகும்.

## "ஆயிரம் வருஷம் இராச்சாமம் போலவும் இருக்கின்றது"

இரவு நேரத்தைக் கணக்கிடும் முற்காலத்து யூத முறைமையின்படி, இரண்டாம் ஜாமம் என்பது, பத்திலிருந்து இரண்டு மணி வரைக்கும் மற்றும் மூன்றாம் ஜாமம் என்பது, இரண்டிலிருந்து ஆறுமணி வரைக்குமாகக் காணப்படுகின்றது. எஜமான் எந்த ஜாமத்தில் வருவார் என எதிர்ப்பார்க்கப்படலாம் என்று உவமை தெரிவிப்பதில்லை. தாமதத்திற்கு ஏற்ப, ஊழியக்காரர்களின் உண்மை பரீட்சிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. முதலாம் ஜாமத்தில் தூங்காமல் விழித்திருப்பது என்பது, அநேகருக்குச் சுலபமாய் இருக்கும், ஆனால் இரண்டாம் ஜாமத்தில், அநேகரால் விழித்திருக்க முடிகிறதில்லை, இன்னும் வெகுசிலரே மூன்றாம் ஜாமத்தில் விழித்திருப்பார்கள். உவமையிலுள்ள இக்காரியத்திற்கு இசைவாகவே, இன்று மணவாளனுடைய வருகை மற்றும் அவருடைய உண்மையுள்ள வீட்டாருக்குக்கொண்டு வரப்படும் இராஜ்யத்தின் மகிமையான காரியங்கள் தொடர்புடைய காரியங்களில், கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் தூக்கமயக்கம் காணப்படுவதை நாம் காண்கின்றோம். சீயோனில் அநேகர் தூங்கிக்கொண்டிருக்கின்றனர்; அநேகர் இவ்வுலகத்திற்கடுத்த கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் அமிழ்த்தப்பட்டுள்ளனர். உலகப்பிரகாரமான ஜனங்கள் மாத்திரமே வியாபாரத்தையும், பணத்தையும், இன்பங்களையும் தெய்வமாக ஆக்கிக்கொள்ளவில்லை, மாறாக இருதயத்தில் நீதியை விரும்புகின்றவர்களும், கர்த்தருடைய ஊழியர்களாகக் கருதப்படுவதற்கு விரும்புகிறவர்களும் கூட, கடுமையாக உலகத்தின் காரியங்களில் அமிழ்ந்து மூழ்கி காணப்படுகின்றனர். இவர்களுடைய இருதயங்கள் இவைகளினால் மிகவும் நிரம்பியுள்ளபடியினாலும், இவர்களுடைய மனங்கள் இன்பத்தின், தனிப்பட்டக் காரியங்களின் மற்றும் சபை மார்க்கத்தின் கனவுகளினால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதினாலும், இவர்களால் கதவுத் தட்டப்படுதலைக் கேட்க முடிவதில்லை. இவர்கள் ஆண்டவருடைய வந்திருத்தலை அறிந்துக்கொள்வதில்லை; இவர்கள், கர்த்தருடைய ஜனங்களால் நீண்ட காலமாய்க் காத்திருக்கப்பட்டு, "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என உண்மையாய் ஜெபம் ஏறெடுக்கப்பட்டக் காரியம் தொடர்பான, இந்த அருமையான அறிவிப்பிற்கும் தங்களுடைய இருதயங்களைத் திறந்து வைக்கவில்லை. இதன் விளைவாக இவர்கள் நம்முடைய கர்த்தருடைய உவமையிலும், தானியேல் தீர்க்கத்தரிசனத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ள மாபெரும் ஆசீர்வாதத்தை இழக்கின்றவர்களாய் ஆகுகிறார்கள், "ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்" (தானியேல் 12:12).

## "அவருடைய வந்திருத்தலை உலகம் அறியாது"

"திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள்" (லூக்கா 12:39). திருடன் வருகிறவிதமான வருகைப் பற்றி இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது; மேலும் கன்னமிடவொட்டான் என்பதற்கான கிரேக்க வார்த்தையினுடைய அர்த்தம் "உள்ளுக்குத் தோண்டுதல்" என்பதாகும். முற்காலத்தில் பெரும்பான்மையான வீடுகள் கல்லினாலோ, செங்கல்லினாலோ செய்யப்படாமல், காய்ந்த மண்ணினாலே கட்டப்பட்டன; இது கிட்டத்தட்ட மேற்குப் பகுதிகளிலும், மெக்சிகோவிலுமுள்ள சில இடங்களிலும் கட்டப்படும் அடோப் வீடுகள் (adobe houses) போன்றுக் காணப்படும். கதவின் வழியாக பலவந்தம் பண்ணி உள்ளே வருவதை விட, சுவரின் அருகே தோண்டுவதன் மூலம் சீக்கிரமாய் இம்மாதிரியான வீடுகளுக்குள் பிரவேசித்திடலாம். வீட்டெஜமான், கர்த்தரைக்

குறிக்க முடியாது, ஏனெனில் வீடு, "தற்கால தீமையான உலகத்தை," தற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமுதாய அமைப்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தற்கால அமைப்புகளுக்குச் சாத்தான், "இவ்வுலகத்தின் தேவனாகவும்," "இவ்வுலகத்தின் அதிபதியாகவும்" இருப்பதினாலுங்கூட, இங்கு வரும் வீட்டெஜமான், சாத்தானாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இங்கு வரும் வீட்டெஜமான், பூமிக்குரிய அரசாங்கங்களைக் குறிப்பதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் அதாவது தானியேல் கண்ட நாலாம் மிருகம் மற்றும் சிலையின் பத்து விரல்களாகிய பிரதிநிதிகளை, அதிகாரங்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

கர்த்தருடைய ஊழியர்கள் மத்தியில், விழித்திருக்கும் ஊழியக்காரர்களால் கேட்கப்படுவதும், அதே வேளையில், தூங்கியும், உலகக் கவலைகளில் அமிழ்த்தப்பட்டும் காணப்படும் அவருடைய ஊழியக்காரர்களால் கேட்கப்படாமல் இருப்பதுமாகிய கர்த்தருடைய இரண்டாம் வருகை மற்றும் கதவு தட்டுதலின் காரியமானது, முற்றிலுமாக உலகத்தாரால் அறிந்துக்கொள்ளப்படுவதில்லை. இவர்களைப் பொறுத்தமட்டில், அவருடைய வந்திருத்தல் என்பது, இவர்கள் நீண்ட காலமாய் எதிர்ப்பார்த்து, ஊழியம் செய்த எஜமானாய் இருப்பதில்லை, மாறாக கர்த்தரை இவர்கள் எதிராளியாக கருதுவார்கள், ஏனெனில், அவர் இல்லாத வேளையில், இவர்கள் அவருடைய வீட்டை எடுத்துக்கொண்டு, அவருடைய விருப்பங்களுக்கு மாறாக அதைப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் ஒருவேளை அவருடைய வருகையின் நேரத்தை அறிந்திருப்பார்களானால், இவர்கள் ஏதாகிலும் விதத்தில் தங்களை வலுப்படுத்திக்கொண்டு, தற்கால அமைப்புகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்கப் பண்ணுவதற்கும் முயன்றிருப்பார்கள்.

உலகத்தின் மீது திருடனாய் வருதல் என்பது அமைதியாய் வருதலை, ஆரவாரம் இல்லாமல், எவரும் அறியாதவாறு, சத்தமில்லாமல் அல்லது பறைசாற்றுவோன் இல்லாமல் வருதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆண்டவர் தம்முடைய ஊழியக்காரர்களுக்குக் கதவைத் தட்டிக்கொண்டிருப்பது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது போன்று, பலவானுடைய வீட்டிற்குள் உடைத்துப் புகுவது என்பது அடையாளப்படுத்தும் தற்கால அமைப்புகள், அதாவது அரசியல், மதம், சட்டம், பொருளாதாரம் பற்றின அமைப்புகளுக்குள், உடைத்துப் புகுவதும் ஏற்கெனவே நடைபெற ஆரம்பமாகிவிட்டது. ஒட்டுமொத்த சமுதாய அமைப்பும் புதிய பிரபுவின் கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படுகின்றது. அவர் தம்முடைய சேனைகளை ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கின்றார். மேலும் மனுஷனுடைய கோபம் தமக்குத் துதியை உண்டாக்குவதற்கும், சுயநலத்தின்மேல் கட்டப்பட்டுள்ள ஒவ்வொரு அமைப்பையும் கவிழ்த்துவதாகிய தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும் செய்வார். விழுகை மகாபெரியதாய்க் காணப்படும். "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்." "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என அவருடையவர்கள் அனைவரும் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும், கர்த்தருடைய பிரம்மாண்டமான இராஜ்யத்தை, இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தருமானவர் அழிவுகளின்மேல் கட்டுவார்; மேலும் கர்த்தரால் இந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது அது, "சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாக" நிச்சயமாய் காணப்படும் (ஆகாய் 2:7).

## "நீங்கள் நினையாத நாழிகையிலே"

இப்பாடத்தின் சாரமானது 40-ஆம் வசனத்தில் சுருக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது; "அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்" (லூக்கா 12:40). மனுஷகுமாரனுடைய வருகையின் வேளையைக் குறித்து எவரும் அறிந்திருக்கமாட்டார்கள். முன்கூட்டியே அறிந்துக்கொள்ளும் விதத்தில், அவ்வேளை தெரிவிக்கப்படவில்லை. அவர் கதவைத் தட்டுதலே, அவருடைய பிரசன்னத்திற்கான முதல் சுட்டிக்காட்டுதலாகும். இப்படியாகவே நிறைவேறியும் உள்ளது; கர்த்தருடைய வருகை எப்போது நடக்கும் என்று நம்மில் எவரும் முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை; வருகை சம்பவித்தப் பிற்பாடே, நாம் கதவு தட்டப்படுதலைக் கேட்டோம்; அதாவது பழைய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசனங்களின் வாயிலான அவருடைய சத்தமானது, நாம் ஏற்கெனவே அறுவடை காலத்திலும், மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தின் நாட்களிலும் காணப்படுகின்றோம் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது. "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமானின்

வந்திருத்தலின் காலத்திலும் நடக்கும்" என்ற கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறியுள்ளது (மத்தேயு 24:37). நோவாவின் நாட்களில் சம்பவிக்கயிருந்த சம்பவங்களைக் குறித்து, உலகமானது அறியாமையில் இருந்து, அறியாமையில் புசித்தும், குடித்தும், நட்டும், கட்டியும் காணப்பட்டது போன்று, மனுஷகுமாரனுடைய வந்திருத்தலின் காலங்களிலும் காணப்படும் உலகமானது, அவருடைய வந்திருத்தல் பற்றின உண்மையைக்குறித்த அறியாமையில் காணப்பட்டு, ஜீவியத்தின் அன்றாட காரியங்களை வழக்கம் போல நடத்திக்கொண்டிருப்பார்கள் என்னும் கருத்தையே மேற்கூறப்பட்டுள்ள வசனம் தெரிவிக்கின்றது. "சகோதரர்கள்" மாத்திரமே கதவு தட்டும் சத்தத்தைக் கேட்டு, வந்திருத்தலை உணர்ந்துக்கொண்டு, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

பன்னிரண்டு பேருக்கு மாத்திரமாகவா அல்லது சீஷர்களாகும் அனைவருக்கும் இந்த உவமை பொருந்துமா, இல்லையா என்று பேதுரு கேட்டார். இயேசு, "பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன் யாவன்?" (லூக்கா 12:42) என்று பதிலாகக் கொடுத்தப்போது, இக்கேள்வியைப் புறக்கணித்தவராகக் காணப்பட்டார். உவமையைப் புரிந்துக்கொள்வதற்கான சரியான வேளை வரும்போது, உவமையானது, கேள்விக்கான பதிலைத் தெளிவாய் முன்வைக்கும் என்பதே கருத்தாகும்; அதாவது உவமையானது நிறைவேறும் காலத்தில், கர்த்தர் இக்காரியங்களை, தம்முடைய ஊழியக்காரர்கள் அனைவரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு, விசுவாச வீட்டாரில் ஓர் ஊழியக்காரனை நியமிப்பார் என்பதும், இக்கடமைகளை நிறைவேற்ற வேண்டிய அந்த ஊழியக்காரனுக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றது என்பதுமாகும். ஒருவேளை அந்த ஊழியக்காரன் இவைகளை உண்மையாய்ச் செய்வாரானால், மாபெரும் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்; ஆனால் ஒருவேளை உண்மையாய்ச் செய்யவில்லை என்றால் கடுமையான தண்டனையை அடைவார். ஒருவேளை அந்த ஊழியக்காரன் உண்மையாய் இருந்தாரானால், தனது வேலையைத் தொடர்ந்து செய்யலாம். ஆனால் ஒருவேளை உண்மையில்லாமல் இருப்பாரானால், அவ்வூழியக்காரன் தள்ளப்பட்டு, வேறொருவன் அந்த ஸ்தானத்தையும், அந்த ஸ்தானத்திற்கான பொறுப்புகளையும் எடுத்துக்கொள்வான் என்பதும் கருத்தாகும்.

## "உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன்"

நமது கர்த்தருடைய வார்த்தைகள், பல பேர் அடங்கிய விசாரணைக்காரர்களைக் குறிப்பதாக அர்த்தங்கொள்வதற்கு நாம் முற்படலாம், அதாவது இவ்வுமையில் குறிப்பிடப்படும் விசாரணைக்காரன், குறிப்பிட்ட சகோதரர்களின் எண்ணிக்கையுடைய வகுப்பாரைக்குறிப்பதாக அர்த்தங்கொள்வதற்கு நாம் முற்படலாம். இப்படியாக அர்த்தங்கொள்ள முற்படும் விஷயத்தில், அநேக சிக்கல்களும் ஏற்படுகின்றது.

(1) விசாரணைக்காரன் என்பதைச் சபையில் ஒரு வகுப்பாராக அனுமானித்துக்கொள்வது என்பது, விசுவாச வீட்டாருக்கு, உடன் ஊழியர்களுக்கு இந்த விசாரணைக்காரன் ஏற்றக்கால சத்தியத்தை வழங்குவதினால், மீதமான சபை ஜனங்களிடமிருந்து இந்த விசாரணைக்காரன் வகுப்பார் தனிப்பட்டவர்களாக, அதிகாரமுடைய வகுப்பாராக அல்லது சபை குருமார் தொகுதியாகக் (clerical class) கருதப்பட வேண்டியிருக்கும் நிலையைக்குறிப்பதாய் இருக்கும். கிறிஸ்துவின் சபையானது குருமார் (clergy) தொகுதியையும், மற்றும் பொது ஜனங்கள் (laity) தொகுதியையும் உடையதல்ல, மாறாக, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கின்றீர்கள்" என்றும், "கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கின்றார்" என்றுமே நாம் வாசிக்கின்றோம் (மத்தேயு 23;10; கலாத்தியர் 3:28). அந்த ஏற்றவேளையில் கர்த்தர் தம்முடைய சபையில் ஓர் அங்கத்தைப் பயன்படுத்துவார் என்றும், அந்த ஓர் அங்கத்தைக் கருவியாகப் பயன்படுத்தி, அக்காலத்திற்கு ஏற்ற செய்திகளையும், ஆவிக்குரிய போஷாக்குகளையும் அனுப்பி வைப்பார் என்றும் எடுத்துக்கொள்வது என்பது கொள்கைக்கு எதிரான காரியமாக இராது; ஏனெனில் முற்காலங்களில், அநேக வேளைகளில், கர்த்தர் இவ்விதமாய்த் தனிப்பட்ட நபர்களைப் பயன்படுத்தியிருக்கின்றார். உதாரணத்திற்குப் பேதுரு, பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களைப் பெந்தெகொஸ்தே நாளிலும், பின்னர் கொர்நேலியுவின் வீட்டிலும் பயன்படுத்தினார் என்றும் பார்க்கின்றோம்; மேலும் இரண்டு

இடங்களிலும் விசேஷித்த சத்தியங்களைக் கொடுப்பது தொடர்புடைய விஷயத்தில், பேதுரு விசேஷித்த ஊழியக்காரனாகப் பயன்படுத்தப்பட்டார். இதனிமித்தம் பேதுரு, சபையின் மீதோ, மற்ற அப்போஸ்தலர்கள் மீதோ கர்த்தராக/ஆண்டவராக இருக்கவில்லை, மாறாக ஓர் ஊழியக்காரனாகவே இருந்தார்.

(2) விசாரணைக்காரன் எனும் வார்த்தையை, ஒரு கூட்டமான கர்த்தருடைய ஜனங்களுக்கு நாம் பொருத்த முயற்சித்தாலும், இவ்வுமையில் குறிப்பிடப்பட்டுள்ள அநேகம் விஷயங்கள், ஒரு கூட்டத்தாருக்குப் பொருந்துவதில்லை. உதாரணத்திற்கு, 43-ஆம் வசனத்தில் இடம்பெறும், "அந்த ஊழியக்காரன்" எனும் வார்த்தைகளானது பொது மொழிப்பெயர்ப்பில் "that faithful" என்றும் திருந்திய மொழிப்பெயர்ப்பில் (Revised) "that faithful Steward" என்றும் இடம்பெறுகின்றது; ஒரு தனிப்பட்ட நபரைக் குறிப்பதாகவே கூறப்பட்டுள்ளது; அதிக எண்ணிக்கையானவர்களைக் குறிப்பதாகக் கூறப்படவில்லை. இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியக்காரன் சரீரத்தின் மற்ற அங்கங்களாகிய, தன்னுடைய சக ஊழியக்காரர்களுக்கு உணவு வழங்குவதாகக் கூறப்பட்டிருக்கின்றபடியினால், விசாரணைக்காரன்/ஊழியக்காரன் என இந்த உவமையில் இடம்பெறும் வார்த்தையானது தனிப்பட்ட நபரையே குறிக்கின்றதாய் இருக்கின்றது. பேதுருவைக்குறித்து நாம் தெரிவித்தது போலவே, பேதுரு விசேஷமாக பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் பேதுரு, சகோதரர்களுக்கு எஜமானராய்/ஆண்டவராய் இல்லை. இதைப் போன்று, இவ்வுமையில் குறிப்பிடப்படும் நபரும் ஆண்டவராகவோ (அ) எஜமானராகவோ (அ) சர்வாதிகாரியாகவோ இருப்பதில்லை. ஒருவர் மாத்திரமே, இவ்வுமையில் சொல்லப்பட்டுள்ள ஊழியக்காரன் ஆகுவதற்குச் சிலாக்கியம் அடைவாரே ஒழிய, இந்த ஸ்தானத்தை விரும்பும் அனைவரும், "அந்த ஊழியக்காரன்" ஆகுவதில்லை என்பதே நம்மால் சொல்ல முடிந்த காரியமாக இருக்கின்றது. "அந்த ஊழியக்காரன்," ஒருவேளை உண்மையுள்ளவராகக் காணப்படுவாரானால், உவமையில் அவர் வீட்டாருக்கு ஏற்ற கால உணவை அளிப்பது போலவே, ஏற்ற கால சத்தியத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் வழங்குவதற்கு அதிகதிகமாய்ப் பொறுப்பளிக்கப்படுவார். நியமிக்கப்பட்ட இந்த ஊழியக்காரனிடத்தில் உண்மையில்லாதிருந்தால், அவருடைய ஊழியத்திலிருந்து பின்வாங்கி போய்விடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும்; இன்னுமாக வேலையானது அவரிடமிருந்து, அவருக்குப் பின்வரும் இன்னொருவருக்குச் சென்றுவிடும்.

"தனக்குள்ளதெல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான்" என்ற 44-ஆம் வசனத்தின் வார்த்தைகளானது, எதிர்கால மகிமைகள் மற்றும் கனங்கள் விஷயத்திற்குப் பொருந்தும் என்பதாக எடுத்துக்கொள்ளப்படாமல், மாறாக இந்த அறுவடை வேலையில் பாதுகாக்கப்பட வேண்டிய (அ) விநியோகிக்கப்பட வேண்டிய கர்த்தருடைய சத்தியங்களை வழங்குவது தொடர்புடைய விஷயங்களில் மாத்திரமே விசாரணைக்காரனாகப் பொறுப்புக் கொடுக்கப்படும் என்றே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லப்பட வேண்டுமெனில், இந்த அறுவடைக்கான ஏற்றக் கால சத்தியத்தை வழங்குவதற்கான கர்த்தருடைய அந்த விசாரணைக்காரன், ஒருவேளை உண்மையுள்ளவராக, தாழ்மையுள்ளவராக, எச்சரிக்கையுள்ளவராகக் காணப்படுவாரானால், அந்த விசாரணைக்காரன் தொடர்ந்து அப்படியாக காணப்பட்டு, அறுவடையின் முடிவு வரையிலும், வீட்டாருக்கான ஊழியத்தில், கர்த்தரால் அதிகமதிகமாய்ப் பயன்படுத்தப்படுவார்.

## "தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்கள் அல்ல"

அந்த ஊழியக்காரன் ஆண்டவர்/எஜமான் போன்று செயல்படக் கூடாது (அ) கருதப்படக் கூடாது என்பது 45-ஆம் வசனத்தில் தெளிவாய்ச் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றது; இந்த வசனமானது, அந்த ஊழியக்காரன் தன்னுடைய ஸ்தானத்தைத் தவறாய்ப் பயன்படுத்தினால், பின்னிட்டு விழுந்துபோவான் என்பதைக் காட்டுகின்றது. இக்காலத்திலேயே, கர்த்தருடைய பொக்கிஷ சாலையிலிருந்து, ஏற்ற கால சத்தியத்தைச் சபையாருக்குக் கொடுப்பதற்கும், சபையாருக்காக ஊழியம் செய்வதற்குமென உண்மையாய்ப் பிரயாசம் எடுக்கும், சபையின் ஊழியக்காரர்கள் விஷயத்தில், சபையார் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய்

ஆளுவதற்கு நாடினவர்களிடமிருந்தும், கர்த்தருடைய வசனத்திற்குப் பதிலாக தங்களுடைய சொந்த ஞானத்தையோ அல்லது மற்ற மனுஷர்களுடைய ஞானத்தையோ வழங்க முற்படுகிறவர்களிடமிருந்தும்தான் சபைக்கு எப்போதும் ஆபத்துகள் எழும்பியுள்ளது.

47, 48-ஆம் வசனங்கள், அந்த ஊழியக்காரன் எந்தளவுக்குக் கர்த்தருடைய சித்தத்தைப் பற்றின அறிவைப் பெற்றிருக்கிறாரோ, அந்தளவுக்கு அந்த ஊழியக்காரன் பொறுப்புடையவராக இருக்கின்றார் என்பதையும், அதிகமான அறிவும், வாய்ப்பும் கொடுக்கப்பட்டபடியால், அதிகமாய் எதிர்ப்பார்க்கப்படும் எனும் கொள்கையின் அடிப்படையில் கர்த்தர் அவ்வூழியக்காரனைக் கையாளுவார் என்பதையும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இந்தப் புத்திமதியானது மற்ற ஊழியக்காரர்களுக்குப் படியளந்து கொடுக்கும் அந்த ஓர் ஊழியக்காரனுக்குப் பொருந்துவதாய் இருந்தாலும், உணவு (அ) உக்கிராணத்துவம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஊழியனுக்கும் கூட இதே கொள்கைகளைப் பொருத்தலாம் (மத்தேயு 24:45-51). ஒவ்வொருவனும் எதைப் பெற்றிருக்கின்றானோ (அ) பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அடைந்துள்ளானோ, மேலும் எந்தவிதத்தில் ஆசீர்வாதத்தைப் பயன்படுத்தியுள்ளானோ, அவ்வளவாய்ப் பொறுப்புடையவனாவான். இன்று, இப்படிப்பட்ட கர்த்தருடைய மாபெரும் கிருபையின் கீழ் வாழ்ந்தும், ஏற்ற கால சத்தியத்தின் வெளிச்சத்தை அனுபவித்துக்கொண்டும், இருக்கும் நமக்கு, அவர் தம்முடைய சத்தியத்தின் களஞ்சியத்திலிருந்து எடுத்து இப்பொழுது வழங்கிக்கொண்டிருக்கும் பழையதும், புதியதுமானவைகளை அதிகமதிகமாய் உணர்ந்துக்கொண்டு, நன்றி சொல்வதற்குரிய அனைத்துக் காரணங்களையுடைய நமக்கு....... ..மற்றவருக்குச் சத்தியத்தை வழங்குவதற்கான சிலாக்கியத்தை அடைந்துள்ள நமக்கு....... ..அவரைப் பற்றின அறிவிற்கு ஏற்ப பொறுப்புக் காணப்படுகின்றது. நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கும், நமது கர்த்தர் ஊழியக்காரனாகவும், தேவனுடைய குமாரனாகவும் இருந்தார் என்பதை நினைவில் கொள்வதற்கும், புத்திரர்களாகியுள்ள நாம், தேவனுடைய பலவகையான கிருபைகளுக்கு விசாரணைக்காரர்களாகவும் உண்மையுள்ள ஊழியக்காரர்களாகவும் இருப்பது என்பது உச்சக்கட்டமான நமக்கான சிலாக்கியமாக இருக்கின்றது என்பதை நினைவில் கொள்வதற்கும், கர்த்தர் நமக்கு உதவிச் செய்வாராக.

---

**R748**

# "காவல் கோபுரத்தின் ஒரு கண்ணோட்டம்"
## View from the TOWER
## லூக்கா 12:56-59

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பாக கொஞ்சம் வருவோம். அப்பொழுது இயேசு, பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடன் காணப்பட்டார்; இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாகக் காணப்பட்டார்கள்; ஆண்டவர் முப்பது வயதைத் தாண்டினவராக இருந்தார். அப்போஸ்தலர்களுக்குக் கல்வியறிவு இருந்ததில்லை, மற்றும் இவர்களில் பெரும்பாலானோர் சாதாரணமான மீனவர்களாகவே இருந்தனர். இவர்கள், "படிப்பறியாதவர்களாகவும், பேதைமையுள்ளவர்களாகவும்" இருந்தாலுங்கூட, இவர்கள் போதனையின் மீது நம்பிக்கையும், போதிப்பதற்கான ஆற்றலையும் கொண்டிருந்தக் காரியம், இவர்களை மனுஷர்கள் மத்தியில் விசேஷித்தவர்களாய் காட்டியது; மேலும் இவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ, அங்கெல்லாம் இவர்கள், "இயேசுவோடு இருந்தவர்கள் என்று அறியப்பெற்றிருந்தனர்," காரணம் இவர்களுடைய ஆண்டவராகிய இயேசு ஒருபோதும் கல்லாதவராய் இருந்த போதிலும் அவர், "வேத எழுத்துக்களில் புலமை மிக்கவராக" காணப்பட்டார் (அப்போஸ்தலர் 4:13; யோவான் 7:15).

எனினும் இவர்கள் இராணுவ ஆளுநராகிய பிலாத்துவின் கண்களுக்கு முன்பாகவும், பிரதான ஆசாரியனுடைய கண்களுக்கு முன்பாகவும், பரிசேயர், வேதபாரகருடைய கண்களுக்கு முன்பாகவும், அந்நாளில் சட்டப்படியான பரிசுத்தத்திற்கு அப்போஸ்தலர்களெனக் காணப்பட்ட நியாயசாஸ்திரிகளுடைய கண்களுக்கு முன்பாகவும்,

முக்கியத்துவமற்ற சிறு கூட்டத்தாராகவே காணப்பட்டனர். "காலம் நிறைவேறியுள்ளது, தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது" என்று கூறி, இயேசுவே, யூதர்களுக்கான இராஜா என்று அறிவிப்பதற்கெனத் தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாரானவர்கள், ஈர்க்கக்கூடியவர்களும் அல்ல, இன்னுமாக நீண்டகாலமாய் மேசியாவை எதிர்ப்பார்த்திருந்த வைராக்கியமுள்ள யூதர்களுடைய எதிர்ப்பார்ப்பின்படியும் காணப்படவில்லை. மேலும் யூதர்களுடைய மாபெரும் மதபோதகர்கள் போன்று இல்லாமல், முற்றிலும் மாறானவர்களாக இருந்தபடியால், யூதர்கள், இயேசுவை மேசியா என்று அடையாளம் கண்டுகொள்ளத் தவறிவிட்டனர் (மாற்கு 1:15).

மேசியாவின் வருகை தொடர்புடைய விஷயத்தில், கர்த்தருடைய தீர்க்கத்தரிசிகளினால் நீண்ட காலத்திற்கு முன்பாக உரைக்கப்பட்டிருந்த காரியங்களுக்கும், இயேசுவின் போதனைகள் மற்றும் அற்புதங்களுக்கும் இடையே இருந்த ஒற்றுமையே, இஸ்ரயேலர்களுக்கு இயேசுதான் நீண்டகாலமாய் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த இராஜா என்பதற்கான ஒரே நிரூபணமாய் இருந்து; இந்த நிரூபணமானது, "அதிக உறுதியான தீர்க்கத்தரிசனங்களுக்கு" ஜாக்கிரதையாய்க் கவனித்து இருப்பவர்களுக்கும், எதை எதிர்ப்பார்க்கலாம் என்பதை அறிந்திருப்பவர்களுக்கும், இயேசு மறுதலிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படுவார் என்பது தொடர்பாக உரைக்கப்பட்ட தீர்க்கத்தரிசனங்களைக் கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு மாத்திரமல்லாமல், தாழ்மையான மீனவர்கள் சூழ, சாந்தமாய் வருபவரை ஏற்றுக்கொள்வதற்கு, மனத்தாழ்மையுடன் ஆயத்தமாய் இருப்பவர்களுக்கும் மாத்திரமே நிரூபணமாய் இருக்கும்.

இயேசுவுக்கு ஞானஸ்நானம் வழங்கினவரும், அவர்மேல் தேவனுடைய பரிசுத்த ஆவி வந்து அபிஷேகிப்பதையும் பார்த்து, சாட்சியளித்தவருமாகிய, இயேசுவினுடைய உறவினனாகிய யோவான் ஸ்நானன் கூட விநோதமாய்க் காரியங்கள் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் குழப்பமடைந்தார். இயேசு அபிஷேகம் பெற்றுக்கொண்டவுடன், அவர் தம்மை வல்லமையுடனும், அதிகாரத்துடனும் வெளிப்படையாய் அறிவித்து, தம்முடன் இருப்பவர்களுக்குக் கனத்தையும், மதிப்பையும் கொண்டு வருவார் என்று யோவான் ஸ்நானன் எண்ணியிருக்கக் கூடும். ஆனால் இப்படியாகவெல்லாம் இல்லாமல், இயேசு அமைதியாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தார்; இன்னுமாக யோவான் சிறையில் போடப்பட்டிருந்த போது, இயேசு இராஜா போல் தம்முடைய வல்லமையைச் செயல்படுத்த முற்படவுமில்லை. யோவான் எதிர்ப்பார்த்தவைகளிலிருந்து, மிகவும் வேறுபட்ட விதத்தில் காரியங்கள் நடந்து கொண்டிருந்தபடியால், இயேசுதான் மேசியா என்ற யோவானுடைய விசுவாசங்கூடத் தளர ஆரம்பித்தது. இரட்சகராக இஸ்ரயேலை ஆசீர்வதிக்கவும், இஸ்ரயேல் மூலம் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கவுமுள்ள மேசியாவாக . . . "வருகிறவர் நீர்தானா (என்னைப் போன்று நீர் ஒரு முன்னோடி மாத்திரமா) அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்று யோவான், இயேசுவினிடத்தில் கேட்கும்படிச் செய்தி அனுப்புவித்தார்.

யோவானுக்கு, இயேசு கொடுத்தப் பதிலைக் கவனமாய்க் கவனிக்கவும்; கேள்விப்பட்டுக் கொண்டிருக்கும் காரியங்களை, யோவானுக்கு இயேசு நினைப்பூட்டினார்; சம்பவங்களை வைத்துக் காலங்களை யோவான் அறிந்துக்கொள்ள இயேசு எதிர்ப்பார்த்தார். "வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்" (மத்தேயு 11:3-6).

மேசியாவைக்குறித்து வாக்களிக்கப்பட்டுள்ள காரியங்களைக் காட்டிலும், மேசியா அப்போது வந்திருக்கின்றார் என்பதற்கு நிரூபணமாக, கேள்விப்படும் சம்பவங்கள் இருப்பது என்பது ஒன்றும் குறைவானதல்ல. இயேசுவின் அற்புதங்கள் கொஞ்சம் இரகசியமாகவே செய்யப்பட்டது என்பதையும், அதே சமயத்தில் பெரிய பரப்பளவிலான இடங்களில் செய்யப்பட்டதினால், அந்த இடத்தில் காணப்படும் பெரும்பான்மையான யூதர்கள் அநேகமாக சொஸ்தப்படுத்தப்படும் நபர்களை ஒருபோதும் கண்டதில்லை என்பதையும், நாம்

மறந்துவிடக் கூடாது. அற்புதங்கள் பற்றின விவரங்களைப் பரப்புவதற்கு, அவர்களுக்கு அன்று அச்சகங்களும், பத்திரிக்கை நிருபர்களும் இருக்கவில்லை.

அங்கிருந்த கல்வியறிவுயடைவர்கள், தானியேல் தீர்க்கத்தரிசனத்தை வைத்து, அந்த வேளை நிறைவேறியுள்ளது என்பதை அறிந்திருப்பார்கள் (தானியேல் 9:24-27; மாற்கு 1:15). ஆனாலும் அநேகமான ஜனங்களுக்கு இந்த நிரூபணங்கள் வேளைகளுக்கான அடையாளங்களாக மாத்திரமே இருந்தன; ஆனால் இவர்கள் மனுஷருடைய பாரம்பரியங்களினால் குருடாக்கப்பட்டபடியால், இவர்கள் உணர்ந்துக்கொள்ளவில்லை. இவர்கள் மனிதர்களைப் பின்பற்றுகிறவர்களாக ஆனபடியினால், தேவனுடைய வார்த்தைகளுக்கு மதிப்பு இல்லாமல் போயிற்று; ஆகையால் ஜனங்களும், தலைவர்களும் குருடர்களாய் இருந்தனர். குருடர்கள், குருடர்களைப் பின்தொடர்ந்து போய், இருவரும் இடறிப்போனார்கள்; இவ்வாறாக இஸ்ரயேல் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால், "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாகிய" தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இப்பொழுது நாம் என்ன காண்கின்றோம்? மேசியா மீண்டுமாக வந்திருக்கின்றார்; அவருடைய இரண்டாம் வருகைக்கான வேளை நிறைவேறியுள்ளது; ஆவிக்குரிய ஓர் ஜீவியாக, இயேசு வல்லமையில் வந்திருந்து, உலகத்தை அதாவது யாக்கோபின் வீட்டாரையும், பூமியின் குடிகள் அனைத்தையும் நியாயந்தீர்க்கவும், சுத்திகரிக்கவும், சொஸ்தப்படுத்தவும், ஆசீர்வதிக்கவும் எனத் தம்முடைய சரீரத்தைத் தம்முடைய நிலைமைக்கு உயர்த்தவிருக்கின்றார்.

சாட்சிகள்/நிரூபணங்கள் என்ன? நிரூபணங்கள் திரும்பத் திரும்ப, அதிகமாக இப்பத்திரிக்கையில் வெளியிடப்பட்டு வருகின்றது. கர்த்தருடைய நாள் (கிறிஸ்துவின் வந்திருத்தல் வேளை) ஆபத்துக் காலமாய் இருக்கும் என்றும், அந்நாளில் (பூமிக்குரிய அரசாங்கமும், அதிகாரங்களுக்கும் மாற்றப்படும்) வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் என்றும் தீர்க்கத்தரிசிகளின் சாட்சிக் காணப்படுகின்றது என்பதை நாம் காண்பித்தோம் (மத்தேயு 24:29; எபிரெயர் 12:27, 28; தானியேல் 2:44). இப்படியாக நடைபெறும் போது, இப்பொழுது அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டிருப்பவரின் <u>நிமித்தமாக</u>, பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கு வந்திருப்பவர், ஜனங்களுக்குத் தடையாகவும், ஜனங்களை ஒடுக்கியும் (அ) குருடாக்கியும் வைத்துள்ள சகல தீமையான அமைப்புகளை அசைத்துப் போடுபவர் <u>நிமித்தமாக பூமியின் சகல கோத்திரங்களும் துக்கிக்கும்.</u> உலகில் மகாபெரியவர்களாய் இருந்தவர்கள், பூமியின் மீது வந்துக்கொண்டிருக்கும் காரியங்களைக் காண்கையில் அஞ்சுவார்கள். இவர்கள் ஜனங்கள் மத்தியில், சுதந்தரத்தின் ஆவி கிரியைச் செய்வதைக் காண்பார்கள்; மேலும் இந்த ஆவியானது ஜனங்களை வெறித்தனத்திற்குள்ளாக்கி, படுகொலைக்கான போராட்டத்திற்கு நேராக வழிநடத்தும் என்பதையும் இவர்கள் காண்கின்றனர். இன்னுமாக வரவிருக்கின்ற உபத்திரவங்களில், உலகத்தின் ஐசுவரியவான்கள் வெகுவாய்ப் பாடுபடுவார்கள் என்பதாக வேதவாக்கியங்களில் காணப்படுகின்றது (யாக்கோபு 5:1-4). <u>இப்படியாகவே இன்று ஐசுவரியவான்களுக்கு எதிராகவே, மனநிறைவு அடையாதவர்களின் இலட்சியங்களும், அச்சுறுத்தல்களும் காணப்படுகின்றது.</u> இப்படியான காரியங்கள் நம்மைச் சுற்றிலும் நடைபெறுவதை நாம் காண்கின்றோம்; இவைகள் எல்லாம், நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலங்களுக்கான அடையாளங்களாய் இருக்கின்றது அல்லவா?

**11 பத்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன.**

நம்முடைய நாட்களுக்கான அடையாளங்களைக்குறித்து என்ன நினைக்கின்றீர்கள்? வானத்தின் தோற்றத்தை நிதானிக்கத் தெரிந்திருக்கும் உங்களால், எப்படி இந்த வேளையை நிதானிக்க முடியவில்லை? முதலாம் வருகையில் இருந்தவைகளைக் காட்டிலும், இரண்டாம் வந்திருத்தலுக்கான காரியங்கள் மிகத் தெளிவாய் இருக்கின்றதல்லவா? நாம் கர்த்தருடைய பிரசன்னத்தின்/வந்திருத்தலின் நாட்களில் காணப்படுகின்றோம் என்பவைகளுக்கு இவைகள் எல்லாம் திருப்திகரமான சாட்சியங்களாய் இருக்கின்றதல்லவா?

**R5405**

# "ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள்"
## லூக்கா 13:10-17

"மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது." - மாற்கு 2:27

ஓய்வுநாள் பற்றின பெரும் குழப்பம், கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் காணப்படுகின்றது. இந்தக் குழப்பத்திற்கு அருமையான ஒரு காரணம் என்னவெனில், வெகு சிலரே நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்ட மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு தேவன் பண்ணின ஒழுங்கிலிருந்து, இயேசுவின் பின்னடியார்களுக்கெனத் தேவனால் பண்ணப்பட்ட ஒழுங்கானது முற்றிலும் வேறுபட்டது என்று உணர்ந்திருப்பதேயாகும். (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்ட அனைத்தும் நிழல்களாகவும், கிறஸ்தவர்களுக்கு விலையேறப்பெற்ற படிப்பினைகளைக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன; ஆனால் நிழலை நிஜமாக எடுத்துக்கொள்வது என்பது, நம்முடைய மனங்களைக் குழப்புகின்றதாகவும், நிஜத்தின் அழகையும், ஆற்றலையும் இழந்துவிடுவதாகவும் இருக்கும்.

யூதர்களுக்கான நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு வரையிலும் ஓய்வுநாள் என்ற ஒன்று இருக்கவில்லை; ஓய்வு என்னும் வார்த்தையானது இளைப்பாறுதல் எனும் பொருளை மாத்திரம் கொடுக்கின்றதாய் இருந்தது; மேலும் தேவன் மகா ஏழாம் நாளில் அல்லது சிருஷ்டிப்பின் வாரத்தினுடைய ஏழாம் நாளில் ஓய்ந்து இருந்தார் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கும், தேவனுடைய நண்பனாய் இருந்த ஆபிரகாமும் மற்றும் கர்த்தருக்குப் பிரியமாய் இருந்த அநேகரும் பாவநிவாரண நாளையும், அதன் பலிகளையோ அல்லது இஸ்ரயேலுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையோடு தொடர்புடைய எந்த ஒரு காரியத்தையோ அறிந்திராதது போலவே, ஓய்வுநாளைப் பற்றியும் ஒன்றும் அறிந்திருக்கவில்லை.

இஸ்ரயேலர்கள் மோசேயின் கீழ், பணிவிடைக்காரர் வீட்டாராக இருந்தார்களென, அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கின்றார்; மேலும் சபை கிறிஸ்துவின் கீழ், புத்திரர் வீட்டாராக இருக்கின்றனர் என்றும் விவரிக்கின்றார் (எபிரெயர் 3:1-6). பணிவிடைக்காரர் வீட்டாரைத் தேவன் கையாளும் முறை என்பது, அவர் புத்திரர் வீட்டாரைக் கையாளும் முறையிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். ஏன், எதற்கு என்ற விவரங்கள்/விளக்கங்கள் இல்லாமல் பணிவிடைக்காரர்களுக்குக் கட்டளைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் தேவன் நம்மைப் புத்திரர்கள் போல் கையாளுகின்றார் என்று அப்போஸ்தலர் விவரிக்கின்றார்.

பரம பிதாவானவர் தம்முடைய ஆவியையுடைய புத்திரராகிய உண்மை கிறிஸ்தவன் கட்டாயத்தினால் அல்லாமல், மாறாக பிதாவின் சித்தத்தைச் செய்வதிலுள்ள மகிழ்ச்சியினால், சுயத்தைப் பலிச் செலுத்திக் கீழ்ப்படிவதின் மூலம், தம்முடைய திட்டங்களுக்குள் அவன் ஈடுபடத்தக்கதாக, அவனுக்கு தம்முடைய திட்டத்தையும், தம்முடைய நோக்கத்தையும், தம்முடைய ஏற்பாடுகளையும் தெரியப்படுத்துகின்றார்.

இயேசுவும், அப்போஸ்தலர்களும் யூதர்களாய் இருந்தார்கள், மேலும் (இயேசு) தம்முடைய மரணத்தின் மூலமாய், "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாப்பிரமாணத்தின் முடிவாகுவது" வரையிலும் இயேசுவும், அப்போஸ்தலர்களும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய கடமைகளுக்குக் கீழாகவே காணப்பட்டனர். இயேசுவினுடைய மரணத்திற்குப் பிற்பாடு, இயேசுவின் பின்னடியார்கள், எந்த விதத்திலும் யூதர்களுடைய பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவர்களாய் இருக்கவில்லை. இவர்கள் பத்துக்கட்டளைகளின் மீது விருப்பம் கொண்டிருந்தனர், காரணம் இந்தக் கட்டளைகள், மேலோட்டமாக தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றதாக இருக்கின்றது; தேவனுடைய புத்திரர்கள் அனைவரும் தாங்கள் விரும்பி வந்து செய்யத்தக்கதாக, பிதாவின் சித்தத்தை அறிய ஆவலாய் இருந்தனர். ஆனால் தேவன் புத்திரர் வீட்டாரிடம், "நீ கொலை செய்யாதிருப்பாயாக," "நீ களவு செய்யாதிருப்பாயாக" என்று கூறுவதில்லை; ஏனெனில்

இவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டபடியால், இவர்கள் கொலை செய்வதற்கும், களவு செய்வதற்கும் நிச்சயமாய் விரும்புவதில்லை.

புத்திரர்கள் வீட்டரைக் கையாளும் விஷயத்தில், தேவன் வீட்டாரின் தலை மூலமாக ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தியுள்ளார்; இந்தப் புதிய பிரமாணமானது, முன்பு கொடுக்கப்பட்ட மோசேயினுடைய பிரமாணங்கள் தெரிவிக்கும் காரியங்களைக் காட்டிலும் அதிகமானதும், விரிவானதுமான அர்த்தங்களைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது அன்பின் பிரமணாமாகும். அப்போஸ்தலர் கூறினது போன்று, "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது;" நியாயப்பிரமாணமானது, அன்பு எனும் ஒரு வார்த்தைக்குள் அடங்குகின்றது, அதாவது தேவனுக்காக மேன்மையான அன்பு, மற்றும் நம்முடைய சக மனுஷருக்கான அன்பு. இறுதியில் இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 13:34) என்று கூறினார். இதை அவர் ஒருவருக்கொருவர் ஜீவனை ஒப்புக்கொடுத்துக்கொண்டிருக்கும் நமக்காகக் கூறினார்.

## "ஏழாம் நாள்-முதலாம் நாள்"

சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்ப காலத்தில், இயேசுவினுடைய பின்னடியார்கள், வாரத்தின் முதலாம் நாளில், கூடுகைக் கூடிக் கொள்ள ஆரம்பித்தார்கள். இந்த ஒரு வழக்கமானது, இயேசு வாரத்தின் முதலாம் நாளில் உயிர்த்தெழுந்ததும் மற்றும் அதே நாளில் அநேகம் தரம் தம்முடைய பின்னடியார்களுக்கு அவர் தோன்றிக் காட்சியளித்ததும் மற்றும் பின்வந்த மறுவாரத்திலும் அவர் வாரத்தினுடைய முதலாம் நாளில் தோன்றி, காட்சியளித்ததுமான உண்மையின் அடிப்படையில்தான் ஆரம்பமானது. ஆகவே, இந்த வாரத்தின் முதலாம் நாளில் சீஷர்கள் தங்களுடைய ஐக்கியங்களைக் கொண்டிருந்தது, சீஷர்கள் மத்தியில் வழக்கமாயிற்று; இந்த வழக்கம் கர்த்தரினால் கட்டளையிடப்பட்டதினால் வராமல், மாறாக ஆண்டவரை நினைவுகூர்ந்து, ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ள வேண்டும் என்ற அவர்களுடைய ஆசையினாலேயே இப்படிச் செய்தார்கள். இப்படியாகவே இவர்கள் கொஞ்சக்காலம் ஓய்வு நாளையும், முதலாம் நாளையும் அநுசரித்து வந்தார்கள். மோசே மற்றும் அவருடைய நியாயப்பிரமாணத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழிலிருந்து, தாங்கள் எவ்வாறு முழுமையாக, இயேசுவினுடைய தலைமை மற்றும் அவருடைய வழிநடத்துதலின் கீழ் அதாவது, "கிறிஸ்துவினால் உண்டாக்கப்பட்ட சுயாதீன நிலைமைக்கு" வந்தார்கள் என்பதை உணர்ந்துக்கொள்வதில் இவர்களுக்குச் சிரமம் இருந்தது.

கிறிஸ்தவர்கள் இன்று வாரத்தினுடைய முதலாம் நாளிலுள்ள அனுகூலத்தின் நிமித்தமாக, ஏழாம் நாள் கைக்கொள்வதை விட்டுவிட்டாலும், இந்த மாற்றம் தேவனுடைய அங்கீகரிப்பில் உண்டானது என்று அநேகர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இப்படியாக இல்லை; கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்தின் கீழ்க் காணப்படாமல், கிருபையின் கீழ்க் காணப்படுகின்றான். தேவனுடைய அறிவுரையின்படி இல்லாமல் மாறாக, சிலாக்கியத்தின் அடிப்படையிலேயே, ஆதி கால சீஷர்கள், முதலாம் நாளில் ஒன்று கூடினார்கள். இப்படியாகவே இன்னமும் சிலருடைய விஷயத்தில் காணப்படுகின்றது. பரம பிதாவினுடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்வதற்கும், தங்களுடைய இருதயங்களின் ஆராதனைகளையும், வணக்கங்களையும் அவருக்குச் செலுத்துவதற்கும் என்று ஐக்கியங்கொள்வதற்கான அதிகமான வாய்ப்புகள் உண்மை கிறிஸ்தவர்களுக்கு இருப்பதில்லை.

உண்மை கிறிஸ்தவர்கள் தங்களை முழுமையாய், ஜெபத்திலும், ஆராதனையிலும், துதிச் செலுத்துதலிலும், வேதாகம ஆராய்ச்சியிலும், நற்கிரியைகளைச் செய்வதிலும் ஈடுபடுத்திக் கொள்வதற்கு என்று வாரத்தில் ஒருநாள் விசேஷமாய் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால், சந்தோஷம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை; இப்படியாக ஒரு ஞாயிற்றுக்கிழமை மனித சட்டத்தினாலோ அல்லது தவாறன கருத்து நிலவும் காரணத்தினாலோ ஒதுக்கிக் கொடுக்கப்பட்டலோ, உண்மைக் கிறிஸ்தவர்கள் சந்தோஷமாய்த்தான் காணப்படுவார்கள். ஒரு வாரத்தில் இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட ஞாயிற்றுக்கிழமைகள் கிடைக்கத்தக்கதாக, கர்த்தருடைய ஜனங்களின் பூமிக்குரிய வேலை காரியங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தாலுங்கூட, கர்த்தருடைய ஜனங்களில் அநேகர்

மகிழ்ச்சியடைவார்கள். ஆனால் ஞாயிற்றுக்கிழமையைச் சரியாக அனுபவிக்க வேண்டுமெனில், பொதுவாய் நிலவும் தவறான கருத்துக்களிலிருந்து, கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் விடுவிக்கப்பட்டாக வேண்டும்.

## “இளைப்பாறுதலுக்கான ஓய்வு”

இஸ்ரயேலர்களுடைய பிரமாணத்தின்படி இரண்டு ஓய்வுகள் காணப்பட்டது. ஒவ்வொரு ஏழாவது வருடமும் ஏழு தடவை பெருக்கப்பட்டு, பின்வரும் ஐம்பதாம் வருடமாகிய யூபிலியின் வருடம் ஓர் ஓய்வாக இருந்தது; ஒவ்வொரு ஏழாம் நாளும், ஏழு தடவை பெருக்கப்பட்டு, பின்வரும் ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாள் மற்றொரு ஓய்வாகும்; இந்தப் பெந்தெகொஸ்தே நாள் என்பது, தேவனுடைய ஜனங்கள் இன்றும் பிரவேசிக்கும் இளைப்பாறுதலுக்கு நிழலாய் இருக்கின்றது.

இந்த இரண்டு ஓய்வுகளையும் எபிரெயர் 4:1-11 வரையிலான வசனங்களில் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். ஓய்வுநாளானது, நிஜமான இஸ்ரயேலர்களால் அனுபவிக்கப்பட்ட இருதயத்தின் சமாதானத்திலும், இளைப்பாறுதலிலும் அதன் நிறைவேறுதலை அடைந்தது. அது இவர்களுக்கு நிரந்தரமான ஓய்வாக இருந்தது. இவர்கள் இளைப்பாறுதலில் பிரவேசித்துள்ளனர். இவர்கள் தங்களுடைய இருதயங்களில் தேவ சமாதானம் ஆளும் கட்டத்தை அடைந்துள்ளனர். இவர்கள் தங்களுடைய சொந்த கிரியைகளிலிருந்தும், அதாவது ஓய்வுநாளையோ (அ) வேறு எதையாகிலும் கைக்கொள்வதாகிய கிரியைகள் மூலமாய் தாங்கள், தங்களுக்காக தேவனிடத்தில் பரிந்துப்பேசலாம் என்பதான அனைத்து நம்பிக்கைகளிலிருந்தும் ஓய்வு அடைந்துள்ளனர். இவர்களுக்குத் தேவையான அனைத்தையும் இயேசுவுக்குள் தேவன் கொடுத்துள்ளார் என்பதையும் இவர்கள், "அவருக்குள் பூரணமுள்ளவர்களாக” இருக்கின்றார்கள் என்பதையும் இவர்கள் காண்பதினால், இவர்கள் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தவர்களாய் இருக்கின்றார்கள். இந்தச் சமாதானத்தை (அ) இளைப்பாறுதலை எந்த மனுஷனும் இவர்களிடத்திலிருந்து எடுத்தப்போடுகிறதில்லை. இவர்கள் தேவனிலும், கிறிஸ்துவிலுமுள்ள விசுவாசத்தில் நிலைத்திருப்பது வரையிலும் இந்த இளைப்பாறுதல்/சமாதானம் இவர்களுடையதே.

ஆனால் அப்போஸ்தலர், "தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது” (எபிரெயர் 4:9) என்று சுட்டிக் காண்பிப்பது போன்று எதிர்க்காலத்தில் ஓர் இளைப்பாறுதல் இருக்கின்றது. சபையானது தங்களுடைய உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடையும்போது, தங்களுடைய இரட்சகர் போல் ஆக்கப்பட்டு, தங்களுடைய கர்த்தருடைய சந்தோஷங்களுக்குள் பிரவேசிக்கும்போது, அந்த இளைப்பாறுதலுக்குள்ளாகப் பிரவேசிப்பார்கள். அது முழுமையான இளைப்பாறுதலாக இருக்கும். உலகத்தைப் பொறுத்தமட்டில், மாபெரும் மேசியாவின் ஆயிரவருட ஆளுகையானது, உலகத்திற்கான ஓய்வாக இருக்கும்; அக்காலத்தில் எல்லா விதத்திலும் பூரணமடைவதற்குரிய சிலாக்கியத்தை உலகமானது அடைந்து, இப்படியாக தேவனோடு இசைவுக்குள் வருகையில் இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள்.

இயேசு ஓய்வுநாட்களிலேயே தம்முடைய அநேகமான அற்புதங்களைச் செய்தார்; இதற்கான காரணம் மாபெரும் ஓய்வாகிய, ஆயிர வருடமாகிய, பூமியின் சரித்திரத்தினுடைய ஏழாம் நாளானது, அவருடைய இராஜ்யத்திற்கான வேளை என்றும், அக்காலத்தில் பாவம், வியாதி, துக்கம் மற்றும் வலியிலிருந்து ஒட்டுமொத்த மனுக்குலமும் சொஸ்தமாக்கப்பட்டு, ஆதாமினால் இழந்துபோகப்பட்டதும், கல்வாரியில் மீட்கப்பட்டதுமான அனைத்தையும் அடைவதற்கும், மற்றும் மனுஷீக சுபாவத்தில் முழுமையான பூரணம் அடைவதற்கான சிலாக்கியம் மனுக்குலத்திற்குக் கிடைக்கும் என்றுமுள்ள உண்மையை வலியுறுத்துவதற்கேயாகும்.

## “ஓய்வுநாட்களில் நன்மை செய்வது”

இயேசு மாம்சத்தின்படி யூதனாக இருந்தபடியால், யூதப் பிரமாணத்தினுடைய கட்டளைகள் அனைத்திற்கும் உட்பட்டவரானபடியால், அவரால் நியாயப்பிரமாணத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியாது. அவரால் அதைத் தள்ளியும் வைக்கமுடியாது.

அதேசமயம் ஓய்வின் உண்மையான அர்த்தத்தை, அவர் யூதர்களுக்கு விளக்குவதும் சரியாக இருக்காது. இந்த உண்மையான அர்த்தங்கள் அனைத்தும் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு, பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலின் கீழ் வெளிவரும், ஏனெனில் "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14). ஆனாலும் இயேசுவினால், இஸ்ரயேலின் ரபிகளினாலும், நியாய சாஸ்திரிகளினாலும், பரிசேயர்களினாலும் போதிக்கப்பட்ட போதனைகள் மூலம் உள்வந்த நியாயப்பிரமாணம் தொடர்பான சில தவறான புரிந்துக்கொள்ளுதல்களைச் சரிச் செய்யவும் முடியும் மற்றும் அப்படியாகவும் செய்தார்.

இவர்கள் நியாயப்பிரமாணத்தினுடைய ஆவியைப் புறக்கணித்தவர்களாக, நியாயப்பிரமாணத்தின் சில விஷயங்களைப் பகட்டிற்காக மிகைப்படுத்தினார்கள். ஆகவேதான் இயேசுவின் சீஷர்கள், வயல் வழியாகப் போய்க்கொண்டிருந்து, சாப்பிடுவதற்கெனக் கதிர்களில் சிலவற்றைக் கொய்து, உமி நீக்க உள்ளங்கைகளுக்கு இடையே தேய்த்த போது, இவர்கள் ஓய்வுநாளை மீறினார்கள் என்றும், அதாவது கதிரடித்து, புடைத்துவிட்டார்கள் என்றும் பரிசேயர்கள் குற்றம்சாட்டினார்கள். இது நியாயப்பிரமாணத்தினுடைய நோக்கமல்ல என்று இயேசு காண்பித்துக்கொடுத்தார். அவசியமான (அ) நல்ல கிரியைகளைத் தடைப்பண்ணுவதற்காக இல்லாமல், மாறாக ஜனங்களுடைய நன்மைக்காகவே ஓய்வுநாள் உண்டாக்கப்பட்டது. நியாயசாஸ்திரிகளைப் பொறுத்தமட்டில் ஓய்வுநாளில், கடிக்கும் கொசுவை விரட்டுவது கூடப் பாவமாக இருந்தது, ஏனெனில் அப்படிச்செய்வது அவர்களைப் பொறுத்தமட்டில் "வேட்டையாடுவதற்கு" சமமாய் இருந்தது. இப்படியாக பல்வேறு விதங்களில், இவர்கள் தேவனுடைய நியாயமான பிரமாணத்தை ஜனங்களுக்கு நியாயமற்றதாக ஆக்கினார்கள்; மேலும் அற்ப விஷயங்களில் கவனமாய் இருந்த இவர்கள், நீதி, அன்பு மற்றும் இரக்கம் தொடர்புடைய நியாயப்பிரமாணத்தினுடைய முக்கியமான காரியங்களைப் புறக்கணித்தார்கள்.

ஓய்வுநாளின்போது, அவர் சொஸ்தப்படுத்தின இரண்டு சம்பவங்களை இப்பாடத்தில் நமக்கு முன்பாகப் பெற்றிருக்கின்றோம். பதினெட்டு வருஷமாய் நிமிரக்கூடாத கூனியாக ஒரு ஸ்திரீ காணப்பட்டார். இயேசு அவளை ஓய்வுநாளன்று விடுவித்தார். அவள்மேல் அவர் கைவைத்து, "உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்" என்றார்; அவள் நிமிர்ந்து நின்று, தேவனை மகிமைப்படுத்தினாள். ஜெப ஆலயத்தலைவனோ, கோபமடைந்து, ஜனங்களை நோக்கி, "வேலைசெய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக்கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான்" (லூக்கா 13:14).

இயேசு ஓய்வுநாளின் விஷயத்தில் இருக்க வேண்டிய அளவுக்குப் பரிசுத்தமாயும், கவனமாயும் இருக்கவில்லை, மாறாக அவர் நியாயப்பிரமாணத்தை மீறுகின்றவராக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கும் வண்ணமாக அவரை விசேஷமாய்க் கடிந்துக்கொள்ளும் விதத்தில் லூக்கா 13:14-ஆம் வசனத்தின் வார்த்தைகள் பேசப்பட்டது; "கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார். அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக்குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்" (லூக்கா 13:15, 16, 17).

இன்னொரு தருணத்தில், ஒரு மனுஷன் நீர்க்கோவை வியாதியுடையவனாக இருந்தான். இந்தச் சம்பவத்தில், இயேசு பரிசேயர்கள் மற்றும் நியாயசாஸ்திரிகளின் மனப்பான்மையை அறிந்தவராக, சொஸ்தப்படுத்துவதற்கு முன்பாக, இக்காரியத்தைக்குறித்து விவாதிக்கும் வண்ணமாக, லூக்கா 14:3-6 வரையிலான வசனங்களின் காரியங்கள் நடைபெற்றது; "இயேசு நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும்

பார்த்து: ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டு, அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ என்றார். அதற்கு உத்தரவுசொல்ல அவர்களால் கூடாமற்போயிற்று."

ஓய்வு, அதாவது தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஏற்படுத்தியுள்ள இளைப்பாறுதலைப் பற்றிச் சரியாய்ப் புரிந்துக்கொள்வது என்பது மாபெரும் ஆசீர்வாதமாகும். விசுவாசிக்கிற நாம் இளைப்பாறுதலுக்குள், நிலையான நிரந்தரமான ஓய்வுக்குள் பிரவேசிப்போம். இப்படிப்பட்டவர்கள் அனைவரும், ஆராதிப்பதற்கும், துதிப்பதற்கும் படிப்பதற்கும், ஐக்கியம் கொள்வதற்குமெனக் கர்த்தருடைய நாமத்தில் ஒன்றுகூடுவதற்கான விசேஷித்த வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியாய் இருப்பார்கள். நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம் நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபிரெயர் 10:25) என்ற வார்த்தைகள் மூலம் அப்போஸ்தலர் நமக்குக் கூறுவதைச் செய்வோமாக.

---

**R4157**

# "மேய்ப்பன், வாசல், மந்தைகள்"
## யோவான் 10:1-18

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்."
(வசனம் 10:1)

நமது கர்த்தர் தம்முடைய உண்மையுள்ளவர்களிடம் கொண்டிருக்கும் உறவுமுறையை விவரிக்கும் வண்ணத்தில், வேதவாக்கியங்களானது அநேக மிக அருமையான மற்றும் அர்த்தமுள்ள பெயர்களை அவருக்கு அளிக்கின்றது. இப்படிப்பட்ட மிக அருமையான மற்றும் கவரும் பெயர்களில் ஒன்று நல்ல மேய்ப்பன் ஆகும்; இதைப் பெரிய மேய்ப்பன், தலை மேய்ப்பன் என்றும் வழங்கலாம். இதுபோலவே நமது கர்த்தருடைய பின்னடியார்களுக்குப் பொருந்தும் பல்வேறு பெயர்களில், "ஆடு" என்பது மிகவும் பரிச்சயமானதாகவும், மிகவும் பொருத்தமானதாகவும் இருக்கின்றது. இப்படியான ஓர் உதாரணத்தைப் பயன்படுத்துவது என்பது, சுபாவத்தின்படியான மனுஷனுக்குத் தோன்றியிருக்காது. உதாரணத்திற்கு இங்கிலாந்தின் சீமான்களும், பிரபுக்களும் கொண்டுள்ள பல்வேறு முத்திரைகளிலும், மரபுரிமை சின்னம் உடைய மேல் சட்டைகளிலும், மிருகங்கள் (அ) மிருகங்களின் தலைகள் இடம்பெறுகின்றன. இவைகளில் ஏதாவது ஒன்றில் ஆட்டின் தலை இடம்பெறுகின்றதா? இப்படியாக இல்லை. அதுவும் ஒருவேளை ஏதோ ஒரு பூமிக்குரிய பிரபுவானவன் ஆட்டின் சின்னத்தை தேர்ந்தெடுத்துக்கொண்டாலும் அது முரட்டுத்தனமான கொம்பைக் கொண்டுள்ள செம்மறியாட்டுக்கடாவாகவே இருக்கும். சிங்கத்தின் தலைகள், புலியின் தலைகள், கழுகின் தலைகள், வலுசர்ப்பம் முதலிய கொடிய மிருகங்களின் தலைகள் பொதுவாக தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இது பலமுள்ளவனாகவும், கொடியவனாகவும், மற்றவர்களை அச்சுறுத்தபவனாகவும் காட்சியளிப்பதற்கான மாம்ச சுபவாத்தின்படியான மனுஷனுடைய ஆசையையும், மனதையும் வெளிப்படுத்துகின்றது. தம்மை நல்ல மேய்ப்பன் என்றும், தம்முடைய பின்னடியார்கள் ஆடுகள் என்றும் கூறுபவர் மேற்கூறப்பட்ட விஷயங்களில் சுபாத்தின்படியான மனுஷனிடத்திலிருந்து முற்றிலுமாய் வேறுபட்ட கருத்தைக்கொண்டிருப்பவர் ஆவர்; மேலும் இதை அவருடைய பின்னடியார்களானவர்களாகிய நாம் கருத்தில் எடுத்துக்கொண்டு, உணர்ந்துக்கொண்டு, மேய்ப்பனாகிய அவரிடத்தில் நமக்கிருக்கும் உறவில், ஆட்டினுடைய சுபாவத்தை அதிகமதிகமாய் வளர்த்திக்கொள்ள வேண்டும்.

### "ஆட்டுத்தொழுவத்தின் வாசல்"

நம்முடைய பாடத்தின் உவமையானது, இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது; முதலாவதாக இயேசு ஆட்டுத்தொழுவத்தின் வாசலாய் இருக்கின்றார் என்றும்,

இரண்டாவதாக இயேசு மேய்ப்பனாக இருக்கின்றார் என்றும் காட்டப்படுகின்றது. உவமையில் விவரிக்கப்பட்டுள்ள தொழுவம் என்பது, பின்வரும் விளக்கத்தில்/உவமையில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அது கள்வர்களிடமிருந்தும், இரைத்தேடித்திரியும் காட்டு விலங்குகளிடமிருந்தும் பாதுகாப்பான இடமாகவும், இளைப்பாறுவதற்குரிய இடமாகவும் இருக்கின்றது. இந்தத் தொழுவங்களுக்கு ஒரே வாசல் இருந்தது; மேலும் உண்மையான மேய்ப்பனை அறிந்தவராகவும், உண்மையான மேய்ப்பனை மாத்திரம் உள்ளே அனுமதித்து, வேறு எவரையும் உள் அனுமதிக்காதவராகவும் இருக்கும் காவல்காரர் ஒருவர், வாசலைக் காவல் காத்துக்கொண்டிருப்பார். நமது கர்த்தர் தம்மைத் தேவனுடைய மந்தைகளுக்கான உண்மையான மேய்ப்பனாகவும், காவல்காரன் உள்ளே அனுமதிக்கக்கூடிய ஒரே நபராகவும், ஆடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய உரிமை உடையவராகவும், ஆடுகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறவராகவும் கூறுகின்றார். நல்ல மேய்ப்பன் மற்றும் கெட்ட மேய்ப்பனை வித்தியாசம் காண முடிந்த காவல்காரன், நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் குறிக்கின்றார். நியாயப்பிரமாணத்திற்குப் பதில் கொடுக்க முடியாதவர்களுக்கு, நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதவர்களுக்கு, மேய்ப்பன் என்றும், மேசியா என்றுமுள்ள உரிமையை உறுதிப்படுத்த/மெய்ப்பிக்க முடியாது. ஆனால் நமது கர்த்தர் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை, முற்றும் முழுமையாக நிறைவேற்றினார் . . . "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பேதுரு 2:22). அவர் ஏற்கெனவே பரிசுத்தமானவராகவும், கபடில்லாதவராகவும், பாவிகளுக்கு விலகினவராகவும் காணப்பட்டார். இப்படியாகவே, அவரே உரிமையுள்ள மேய்ப்பன் என்று நமக்கு அடையாளம் காட்டப்படுகின்றார்; மற்றவர்கள் அவருடைய நாமத்தில் வந்து, மேசியா என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொண்டார்கள்; இவர்கள் பொய் மேசியாக்கள் ஆவர்; இவர்கள் ஆடுகளைக் கவருவதற்கு முயற்சித்தனர்; ஆனால் இவர்கள் வஞ்சகர்கள் என்றும், "கள்ளரும், கொள்ளைக்காரரும்" என்றும், இவர்கள் ஆடுகளைத் திருடுவதற்கே உதவுகின்றனர் என்றும், ஆடுகளின் நன்மைக்காக அல்லாமல், தங்களுடைய தனிப்பட்ட, சுயநலமான இலட்சியங்களினால் தூண்டப்பட்டவர்கள் என்றும், நமது கர்த்தர் கூறுகின்றார்.

ஆண்டவருடைய ஆடுகளுக்கான உண்மையான மேய்ப்பனாகுவதற்கும், ஆடுகளைச் சத்தியம் மற்றும் கிருபை எனும் புல்லுள்ள இடங்களிலும், அமர்ந்த தண்ணீரண்டைகளிலும் நடத்த வெளியே கொண்டு வருவதற்கும், பின்னர் தொழுவத்திலுள்ள இளைப்பாறுதலுக்குள்ளும், பாதுகாப்பிற்குள்ளும் கொண்டு வந்துவிடுவதற்குமான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒரே ஒரு வழி உள்ளது. அந்த வழி, சிலுவையின் வழியாகும் . . . அதாவது அனைவருக்குமான ஈடுபலியாக தம்மையே ஒப்புக்கொடுத்து விடுவதாகும். இதை நமது கர்த்தர் செய்து, இப்படியாக ஆட்டுத்தொழுவத்தினுடைய வாசலாகி, ஜீவனுக்கான புதிய பாதையைத் திறந்து வைத்தார். ஆனால் தொழுவத்திற்குப் புதிய வாசலை உண்டு பண்ணுவதாக இராமல், மாறாக முன்பு பூட்டப்பட்டிருந்த வாசலே திறக்கப்படுகின்றது என்று புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். வாசல் நியாயப்பிரமாணமாய் இருந்தது; நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதது வரையிலும் இந்த வாசல் திறக்கப்பட முடியாது. இப்பொழுதோ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்ட நமது கர்த்தர் இயேசு, தம்முடைய உண்மையான ஆடுகளானது, நியாயப்பிரமாணத்தின் ஆவியைக் கைக்கொள்வதின் மூலமாய், இதே வாசல் வழியாய் உட்பிரவேசிப்பதற்கு ஏற்பாடு பண்ணியுள்ளார்; நியாயப்பிரமாணத்தின் எழுத்துக்களைக் கைக்கொள்வது என்பது கூடாத காரியம், ஆனால் அதன் ஆவியைக் கைக்கொள்வதன் மூலமாய் உட்பிரவேசிக்க ஏற்பாடு பண்ணியுள்ளார். தொழுவத்திற்குள் உண்மையான ஆடு பிரவேசிப்பது குறித்து, அப்போஸ்தலர் "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" (ரோமர் 8:4) என்று கூறுகின்றார்; ஏனெனில் நமது மேய்ப்பன், நாம் குறைவுப்பட்டிருப்பதை நிறைவுபடுத்தத்தக்கதாக, நம் சார்பிலான அவருடைய கிருபையை, (நமக்கான) தகுதியாக ஏற்பாடு பண்ணியுள்ளார். நாம் எதுவரைக்கும் அவருடையவர்களாக காணப்பட்டு, அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு முயற்சிக்கின்றோமோ, அவ்வளவாய் நம்முடைய ஒவ்வொரு குறைவும் அவருடைய (திரளான கிருபைகளினால்) திரளானவைகளால் ஈடுகட்டப்படும். அவருக்குக் காவல்காரன் திறப்பான்; அவரைக்குறித்தே நியாயப்பிரமாணங்களும், தீர்க்கத்தரிசனங்களும் சாட்சிப்பகர்கின்றன.

## "அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை"

பிறவிக் குருடனாக இருந்தவனும், ஜெப ஆலயத்திலிருந்து தள்ளப்பட்டவனுமான மனுஷன் கேட்பதற்காகவும், அம்மனுஷனைப் புறம்பாக்கிப் போட்ட பரிசேயர்கள் கேட்பதற்காகவுமே இந்த உவமை உரைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. கர்த்தருடைய ஜனங்களின் தொழுவம் என்று எண்ணப்படுவதிலிருந்து, அம்மனுஷன் புறம்பாக்கிப் போடப்பட்டதினிமித்தம், அம்மனுஷன் சோர்வடைந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. அம்மனுஷன் உண்மையிலேயே கர்த்தருடைய தொழுவத்திலிருந்து புறம்பாக்கித் தள்ளப்படாமல், மாறாக இக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் எவ்விதமான வல்லமையையும் கொண்டிராதவர்களால், மனித அமைப்பிலிருந்து மாத்திரமே தள்ளப்பட்டிருக்கின்றான் எனும் உண்மையை விவரிக்கும் வண்ணமாகவே, கர்த்தர் இந்த உவமையைக் கொடுத்தார் என்று கருதப்படுகின்றது. கர்த்தரை வழிநடத்துனராகவும், மேய்ப்பனாகவும் கொண்டிருக்கும் மந்தையையே கர்த்தர் கொண்டிருக்கின்றார் என்பதையும், தம்மூலம் அல்லாமல், தம்முடைய பலியில் தம்மால் நிறைவேற்றப்போகும் வேலையின் மூலம் அல்லாமல், இந்தப் பலியை, விசுவாசத்தின் வாயிலாய் நாம் ஏற்றுக்கொள்வதன் மூலம் அல்லாமல், அந்த மந்தைக்குள் வருவதற்கு வேறு வழி இல்லை என்பதையும் அம்மனுஷனும், பரிசேயர்களும், அவருடைய சீஷர்களும், நாமும் காண்பதற்குக் கர்த்தர் விரும்பினார். ஆனால் 6-ஆம் வசனமானது, கேட்டுக்கொண்டிருந்தவர்கள் உவமையின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவிக்கின்றது; ஆகவே கொஞ்சம் வித்தியாசமான வார்த்தைகளில் உவமையைத் திரும்பவும் கூறி, ஒருவன் கர்த்தருடைய மந்தைக்கான அங்கத்தினர் ஆகுவதற்கான தெய்வீகக் கிருபையில் பிரவேசிப்பதற்கான வாசலாக, தாம் காணப்படுவதைக் கூறினார். இப்படியாக ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கப்பட்ட மனுஷன், தான் உண்மையில் எதையும் இழக்கவில்லை, மாறாக இளைப்பாறுதல் கிடைக்கும் உண்மையான தொழுவத்திற்கான சரியான வாசலினிடத்திற்கே வழிநடத்தப்படுகின்றான் என்பதைப் புரிந்துக்கொள்ள ஏதுவாயிற்று. இப்பொழுது அம்மனுஷன், கர்த்தர் மாத்திரமே இளைப்பாறுதலுக்கும், இரட்சிப்பிற்கும், தெய்வீக அறிவுரையின் ஆவிக்குரிய புத்துணர்வுக்கும் வழியாக இருக்கின்றார் என்பதைக் காண்பதற்கு வரவேற்கப்படுகின்றான். மற்றவர்களோ தங்களுடைய தனிப்பட்ட நன்மைகளுக்காக ஆடுகளைக் கொள்ளையிடுவதற்கு அல்லது ஆடுகளை அழிப்பதற்குச் சுயநலமாய் நாடினார்கள்; ஆனால் கர்த்தர் உண்மையான மேய்ப்பனாக, தமக்கென சொந்த ஆதாயங்களை நாடுவதற்குப் பதிலாக, ஆடுகள் ஜீவனையும், மற்றும் ஜீவனை அதிகளவில் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, ஆடுகளின் நன்மையையும், ஆதாயத்தையும் நாடினவராகக் காணப்பட்டார்.

நமக்கு எத்தகைய ஒரு பாடம் காணப்படுகின்றது! நித்தியமான சித்திரவதையிலிருந்து ஆடுகளை மீட்க வந்ததாகக் கூறாமல், மாறாக, மரணத்திலிருந்து ஆடுகளை மீட்க வந்ததாகவே ஆண்டவர் கூறினார். சந்தோஷத்திலோ (அ) துயரத்திலோ செலவிடத்தக்கதாக ஆடுகள் ஏற்கெனவே ஜீவனைக் கொண்டிருப்பதாகவும், துயரத்தில் கழித்துவிடாதபடிக்கு, ஆடுகளுக்கு வழிகாட்டுவதற்கே தாம் வந்துள்ளதாகவும் கர்த்தர் சொல்லவில்லை; மாறாக ஜீவன் அளிப்பவராகிய தம்மையல்லாமல், ஆடுகள் ஜீவன் பெற்றுக்கொள்ள முடியாது என்றும், ஆதாமின் கீழ்ப்படியாமையின் மூலமாய் இழக்கப்பட்ட மனித ஜீவனைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு அளிக்கத்தக்கதாக ஏற்றகாலத்தில் சீர்த்திருத்தல் வாயிலாக கொடுப்பதற்கே தாம் வந்துள்ளார் என்றும்தான் அவர் போதித்துள்ளார். ஆம் இழந்ததைக் காட்டிலும், அதிகமான ஜீவனைக் கொடுக்க அவர் நோக்கம் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளது உண்மைத்தான். இது எப்படிக் கூடும்? பிதாவாகிய ஆதாம் பரிபூரணமாய் இருந்தாரானால், தெய்வீக ஏற்பாட்டின்படி அவர் நித்திய ஜீவனைத்தானே அடைய வேண்டும்? இந்தச் சுவிசேஷ யுகத்தில் அவருடைய ஆடுகளாய் இருப்பவர்களுக்கு, அதாவது இந்தச் சிறு மந்தையினருக்கு, அவர் இன்னும் உயர்வான ஜீவனின் நிலையை, அதாவது அழியாமையைக்கொடுக்க சித்தமுள்ளவராய் இருக்கின்றார் என்று நாம் பதிலளிக்கின்றோம். இவர்களை, தம்முடைய உயிர்த்தெழுதலாகிய, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையச் செய்வதின் மூலம், திவ்விய சுபாவத்தில் பங்கடைய அழைக்கின்றார் (பிலிப்பியர் 3:10).

## "அவர் நமக்காய் ஜீவன் தந்தார்"

இதுவே நம்முடைய பாடத்தின் மையக் கருத்தாகும். நல்ல மேய்ப்பன் சுயத்திற்காக நாடாமல், ஆடுகளுக்காக தம்முடைய ஜீவனைச் சந்தோஷமாய் ஒப்புக்கொடுத்தார்; மேலும்

இப்படியாக அவர் தம்முடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால், ஆடுகளை விலைக்கு வாங்கினபடியினாலேயே, ஆடுகளுக்கான நித்தியத்திற்குரிய ஜீவன் உறுதியாயிற்று; அவர் விலைக்கு வாங்கவில்லையெனில், மந்தையும் இருக்க முடியாது, மேலும், இப்படி மந்தையை விலைக்கு வாங்கினபடியினாலேயே, அவர் மந்தையின் மேய்ப்பனானார். "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்" என்பது எவ்வளவு தெளிவாகவும், அருமையாகவும் காணப்படுகின்றது! (1 கொரிந்தியர் 6:20). இந்த ஈடுபலியை வேறு எவராலும் நமக்காகக்கொடுக்க முடியாது, வேறு எவராலும் நம்மை வாங்கவும் முடியாது, நமக்கு நித்தியத்திற்குரிய ஜீவனை அளிக்கவும் முடியாது; வேறு எவராலும் சட்டப்பூர்வமாக நம்முடைய மேய்ப்பனாகவும் முடியாது; அல்லது நம்மைத் தேவனிடத்திலான சமாதானத்திற்குள்ளும், இளைப்பாறுதலுக்குள்ளும், சத்தியத்தின் அறிவிற்குள்ளும், இறுதியில் பரலோக தொழுவத்தினிடத்திற்கும், தேவனுடைய ஜனங்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் இளைப்பாறுதலுக்குள்ளும் வேறு எவராலும் வழிநடத்தவும் முடியாது. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் மகிமைக்கும், கனத்திற்கும், ஆளுகைக்கும், வல்லமைக்கும் பாத்திரமானவர்!

## "ஆடுகள் அவன் சத்தத்துக்குச் செவிக்கொடுக்கிறது"

கிழக்கத்திய நாடுகளின் மேய்ப்பர்களையும், அவர்களுடைய மந்தைகள் குறித்தும் கூறப்படும் கதைகள் குறிப்பிடத்தக்கவைகளாகவும், இந்த உவமையில் கர்த்தர் கூறியுள்ளவைகளுக்கு நல்ல உதாரணமாகவும் அமைகின்றது. கர்த்தருடைய வார்த்தைகளின் ஆவிக்கு இசைவாய்ப் புரிந்துக்கொள்ளத்தக்கதாக, இக்கதைகளில் சிலவற்றை நாம் ஆராயலாம். கர்த்தரால் போதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உண்மைகள் பரிச்சயமே. ஒரு எழுத்தாளர் இப்படியாகக் கூறுகின்றார்.

"தண்ணீர் ஊற்றண்டையில் தண்ணீர் தாகமுள்ள ஆடுகளின் திரளான மந்தையைப் பார்ப்பது சுவாரசியமான காட்சிகளில் ஒன்றாகும். ஒவ்வொரு மந்தையும், அதனதின் மேய்ப்பனுடைய அழைப்புக்குரல் வருவது வரையிலும், கீழ்ப்படிதலுடன் அதன் தருணம் வரை அமர்ந்துக் காத்திருக்கும். ஒரு மந்தையினுடைய மேய்ப்பன், தன்னுடைய ஆடுகளைப் பிரிவு பிரிவாக அழைப்பான்; மேலும் ஒரு பிரிவு ஆடுகள் வந்து தண்ணீர் பருகி முடிந்த பிற்பாடு அவை போகும்படிக்குச் சத்தம் கொடுக்கின்றான்; இந்தச் சத்தத்தை ஆடுகள் நன்கு அறிந்திருக்கும்; பின்னர் அடுத்த பிரிவை வரும்படி அழைக்கின்றான். யார் தங்களை அழைக்கின்றார்கள் என்ற விஷயத்தில், ஆடுகள் ஒருபோதும் தவறாய்ப் புரிந்துக்கொள்ளுவதில்லை. நூறு (அ) ஆயிரம் ஆடுகளைக் கொண்டிருக்கும் மந்தையிலுள்ள ஒவ்வொரு ஆட்டிற்கும் பெயர் உள்ளது; அதன் பெயரை அதுவும் அறிந்திருக்கும், மேய்ப்பனும் அதை அறிவான். கிரேக்கர்களுக்கும் இதைப் போன்ற வழக்கம் உண்டு. ஆட்டிற்குக் காணப்படும் சில குறைபாடுகளின் அடிப்படையிலேயே, பெரும்பாலும் பெயர்க் காணப்படும்; உதாரணத்திற்கு, "உடைந்த கால்", "ஒற்றைக் கண்", "வளைந்த கொம்பு", "வழுக்கைத்தலை" என்ற பெயர்கள் ஆடுகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. ஆட்டுக்குட்டிளும்கூட, அதன் பெயர்கள் கூப்பிடப்படுகையில் கீழ்ப்படிவதற்குப் பொறுமையாய்ப் பயிற்சியளிக்கப்படுகின்றன; இன்னுமாக மந்தையிலிருந்து வெளியேயும், உள்ளேயும் அழைத்துச் செல்லப்படுகின்றன; மேலும் அழைப்புக்குச் சரியாய் ஆட்டுக்குட்டிகள் செவிசாய்ப்பது வரையிலும், உணவுக்காக அதன் தாயினிடத்திற்குப் போக அனுமதிக்கப்படுவதுமில்லை. மேய்ப்பன் ஒருபோதும் தன்னுடைய ஆடுகளைக் கிழக்குத் திசையில் ஓட்டிச்செல்வதில்லை; அவைகளுக்கு முன்னாக மேய்ப்பன் செல்கின்றான்; அவைகள் அவனைப் பின்தொடர்கின்றன; அவைகளின் கண்களுக்கு மேய்ப்பன் மறைவது போல தோன்றினால், அவன் பின் அவைகள் ஓடிச் செல்கின்றன; அவன் காணாமல் போய்விட்டாலோ அல்லது அவனுக்குப் பதிலாக அந்நியன் ஒருவன் வந்து நின்றாலோ, அவைகள் பயந்து விடுகின்றன. மேய்ப்பன், தான் அருகில்தான் காணப்படுகின்றான் என்பதை அவைகளுக்கு தெரிவிக்கும்படியாக, அடிக்கடி சத்தம் கொடுக்கின்றான்; இச்சத்தத்தைக் கேட்டு, அவைகள் மேய்வதைத் தொடர்கின்றன; மாறாக ஒருவேளை வேறு யாராவது இதே சத்தத்தைக் கொடுக்க முற்பட்டால், அவைகள் சுற்றிச் சுற்றிப் பார்த்து, திகைத்துப்போய், சிதறிச் செல்ல ஆரம்பித்துவிடும். ஸ்காட்ச் நாட்டைச் சார்ந்த பிரயாணி ஒருவர் மேய்ப்பன் போலவும், மேய்ப்பன் பிரயாணியைப் போலவும் உடைமாற்றிக் கொண்டனர்; பிரயாணி ஆடுகளை அழைத்தார்; அவைகள் அசையாமல் அப்படியே

நின்றுவிட்டன; பின்னர் உண்மையான மேய்ப்பன் உரத்தச் சத்தத்தில் கூப்பிட்ட போதோ, மேய்ப்பன் வேறே ஆடைகள் அணிந்திருந்த போதிலும், அவனிடத்தில் வந்தது."

## "அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்ச்சொல்லிக் கூப்பிட்டு"

முன் பார்த்திட்ட உதாரணங்கள், மேற்கூறப்பட்ட (தலைப்பிலுள்ள) வார்த்தைகளைப் புரிந்துக்கொள்வதற்கும், இவ்வார்த்தைகளைக் கர்த்தருடைய சிறுமந்தையாகிய உண்மையான ஆடுகளுக்குப் பொருத்திப் பார்ப்பதற்கும் நமக்கு உதவியாய் இருக்கின்றது. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்;" மேலும் அவருடையவராய் இருக்கிறவர்களும் அவரை அறிந்திருப்பார்கள் என்பதும் உண்மையே. "அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துப்போகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்" (யோவான் 10:4-5). கர்த்தருடைய சத்தம் என்பது நீதியின், சத்தியத்தின் மற்றும் அன்பின் சத்தமாக இருக்கின்றது; மேலும் அவருடைய ஆடுகளாய் இருப்பவர்கள் அனைவரும், அவருடைய செய்திக்கும், மந்தையைத் தவறாய் வழிநடத்துவதற்கென, மனித கருவிகளைப் பயன்படுத்தும் எதிராளியானவனுடைய தவறான செய்திகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை வித்தியாசப்படுத்திக் கண்டுணரத் தக்கவர்களாய்க் காணப்பட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். உண்மையான ஆடுகளிலுள்ள எவரும் தவறான சுவிசேஷத்தில் திருப்தியடையமாட்டார்கள் என்றும், அந்தத் தவறான சுவிசேஷங்கள் அவர்களுடைய இருதயங்களைக் கவருவதில்லை என்றுமுள்ள கர்த்தருடைய நிச்சயத்தை நாம் பெற்றிருக்கின்றோம்; இன்னுமாக உண்மையான ஆடுகள் உண்மையான சுவிசேஷத்தில் திருப்தியடைவார்கள் என்ற நிச்சயத்தையும் நாம் பெற்றிருக்கின்றோம், காரணம் மற்றவைகள் அனைத்தையும்விட உண்மையான சுவிசேஷமே அவர்களது ஏக்கங்கள் அனைத்தையும் திருப்திச் செய்யும். இது நமது மனதில் நாம் நிறுத்த வேண்டிய முக்கியமான கருத்தாகும். இது முற்றும் முழுமையாகக் கர்த்தருடைய ஆடுகளாக வேண்டியதற்கான முக்கியத்துவத்தையும், அவருடன் உடன்படிக்கையின் உறவிற்குள் பிரவேசிப்பதற்கான முக்கியத்துவத்தையும், இப்படியாக அவருடைய பாதுகாப்பிற்குரிய பராமரிப்பையும், அறிவுரையையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முக்கியத்துவத்தையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

## "என்னுடைய ஆடுகளை அறிவேன்"

நாம் எப்படி மற்றும் எப்பொழுது கர்த்தருடைய மந்தையாகிறோம் என்ற கேள்வியை இப்பொழுது எழுப்புகின்றோம். ஞானிகள், கல்விமான்கள், ஐசுவரியவான்கள் மற்றும் வல்லவர்கள் அனைவரும் கர்த்தருடைய மந்தையாகுகின்றார்களா? இல்லை என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்; இன்னுமாக ஆடுகளில் அநேகர் வல்லவர்களாகவும், ஐசுவரியவான்களாகவும், பிரபுக்களாகவும், கல்விமான்களாகவும் இல்லாமல், பிரதானமாக இவ்வுலகத்தில் தரித்திரராய் இருப்பவர்கள் மாத்திரமே, விசுவாசத்தில் ஐசுவரியமாய் இருக்கின்றார்கள் என்றே அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 1:26-28; யாக்கோபு 2:5). அப்பொழுது தரித்திரர்கள் அனைவரும் கர்த்தருடைய ஆடுகளாக இருக்கின்றார்களா? இல்லை என்றே நாம் பதிலளிக்கின்றோம். பல்வேறு மந்தைகள், கிறிஸ்துவின் நாமத்தையே பொதுவாய்க்கொண்டுள்ளன. ஆனால் இவர்களில் அநேகர், அவருடைய சீஷர்களாக, அவருடைய பின்னடியார்களாய் இருப்பதற்கான எவ்வித சான்றுகளையும் காண்பிப்பதில்லை. இவர்களில் அநேகர் அவருடைய வார்த்தைகளையும், அவருடைய சத்தத்தையும் அறியவே இல்லை; இவர்களில் அநேகர், அவர் தெய்வீகச் சத்தியம் மற்றும் கிருபை எனும் புல்வெளிகளிலும், அமர்ந்த தண்ணீரண்டைகளிலும் வழிநடத்துவதை அறிந்துக்கொள்ளவே இல்லை. இவர்களில் அநேகர் உண்மையான தொழுவத்தையும், அதன் இளைப்பாறுதலையும், சமாதானத்தையும், பாதுகாப்பான பராமரிப்பையும் அறிந்துக்கொள்ளவே இல்லை. இவர்கள் இவைகளையெல்லாம் அறியாமல் இருப்பது என்பது, இவர்கள் கர்த்தரால் வழிநடத்தப்படும் உண்மையான மந்தையில் இல்லாதவர்கள் என்பதைக் காட்டுகின்றது; அதாவது இம்மாதிரியான ஒவ்வொரு சபை பிரிவுகளிலும் கர்த்தருடைய உண்மையான ஆடுகள் காணப்பட்டாலுங்கூட, இப்பிரிவுகளிலுள்ள மற்றவர்கள் கர்த்தரால் வழிநடத்தப்படும் உண்மையான மந்தையில் இல்லாதவர்கள் என்பதைக் காட்டுகின்றது. உண்மையான

ஆடுகள் எங்குக் காணப்பட்டாலும் சரி, அவர்கள் அவருடையவர்களாய் இருந்தால், அவர்கள் அவரால் வழிநடத்தப்பட்டு, போஷிக்கப்பட்டு, இருப்பார்கள்; அவரை அறிந்திருப்பார்கள்; அவருடைய சத்தத்தை, அவருடைய வார்த்தைகளை அறிந்திருப்பார்கள் மற்றும், செவிக்கு இனிமையற்ற/உமி போன்ற மனித பாரம்பரியங்களில் அதிருப்தியடைந்தவர்களாகவே இருப்பார்கள்.

## ‘‘கூலியாள் ஓடிப்போகிறான்’’

அநேகர் மேய்ப்பனாக, அதாவது கர்த்தருடைய ஆடுகளுக்கு மேற்பார்வையாளராக இருக்கும் கனத்தினிமித்தம் மகிழ்ச்சியடைவார்கள்; ஆயினும் இதற்குரிய பரீட்சையும், விலையும்/இழப்பும் இவர்களுக்கு மிக அதிகமானதாகவும் இருக்கும். தேவதூதர்களில் அநேகர் இந்த ஸ்தானத்தை எடுத்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைவார்கள் என்று நாம் எண்ணலாம்; ஆனால் இந்த ஸ்தானத்திற்குரிய விலையைக்கொடுத்து, இழப்பைச் சந்தித்து, இந்த ஸ்தானத்தை எடுக்க விரும்புவார்களா? நமது கர்த்தருடைய நாட்களுக்கு முன்னதாகவும், பின்பும் மனுஷர்கள் மத்தியில் அநேகர், மேய்ப்பனுக்குரிய வேலைக்காக ஆசைப்பட்டனர்; ஆனால் மனுஷர்கள் அனைவரும் தண்டனை தீர்ப்பின் கீழ்க் காணப்பட்டிருக்க, மனுஷர்களில் எவரும் ஆடுகளை வாங்க முடியாது என்பதினால், எவனும், தனக்குள்ள அனைத்தையும் இழந்து, ஆடுகளை விலைக்கு வாங்க விரும்புவான் என்று நாம் எண்ணுவதில்லை. இதனை கர்த்தருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன. உண்மையான மேய்ப்பன் மாத்திரமே பலிச் செலுத்துவதற்கும், ஆடுகளுக்காக தன்னுடைய ஜீவனையே ஒப்புக்கொடுப்பதற்கும் விரும்புவான். கர்த்தருடைய மந்தைக்கு ஒரு மேய்ப்பன் இருக்கின்ற போதிலும், அவர் இல்லாமல் இருக்கும் காலங்களில், அவர் தம்முடைய மந்தைக்கு ஒர் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், தேவனுடைய மந்தையைப் போஷிப்பதற்கும், அவர்களுடைய ஆத்துமாக்களுக்காகவும், அவர்களுடைய ஜீவியங்களுக்காகவும், அவர்களுடைய நலன்கடுத்தவைகளைப் பராமரிப்பதற்கும், போதகர்களையும், ஆயர்களையும் (Pastor) மந்தைகளுக்கு ஏற்பாடு பண்ணிக்கொடுத்துள்ளார் என்றும் நாம் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

இந்த மந்தையைப் போஷிப்பதற்கும், மேய்ப்பதற்குமான இந்த ஸ்தானத்திற்குரிய தகுதியாய் இருப்பவர்கள் அனைவரும், அவருடைய ஆவியையும், ஆடுகளுக்காக தங்களின் ஜீவனைக்கொடுப்பதற்கான விருப்பத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கின்றார்; இன்னுமாக அவருடைய பிரதிநிதிகளாக இருந்து, எதிராளியானவனிடமிருந்து, அவனுடைய பல்வேறு கண்ணிகள், தந்திரங்களிலிருந்தும், ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்களிடமிருந்தும் மந்தையைக்காக்க விருப்பத்தைக்கொண்டிருக்க வேண்டுமென்றும் அவர் எதிர்ப்பார்க்கின்றார். இந்த ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்கள், உண்மையான மேய்ப்பனினால் திறந்து வைக்கப்பட்ட உண்மையான தொழுவத்திலிருந்து ஆடுகளை விலக்கி, அடிமைத்தனத்திற்கும், மனித எழுத்துக்களுக்கும் கீழாகக்கொண்டு வந்து, “ஏற்றகால சத்தியமாகிய” புல்வெளியில் ஆடுகளை வழிநடத்துவதற்குப் பதிலாக இனிமையற்ற, உமி போன்ற மனித பாரம்பரியத்தினிடத்திற்கு வழிநடத்தி, வியாபாரம் பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள். உண்மையான ஆடுகள், உண்மையான மேய்ப்பனை அறிந்தும், அவரும் அவைகளை அறிந்திருப்பது போலும், உண்மையான மேய்ப்பன் உண்மையான கீழ்/உடன் மேய்ப்பர்களை அறிந்திருப்பார்; இந்த உடன் மேய்ப்பர்களும் ஆடுகளை நெருக்கமாய் அறிந்திருப்பார்கள். தங்களுடைய சொந்தமான குரலில் சத்தமிடுபவர்கள்/ அழைப்பவர்கள், உண்மையான மேய்ப்பனினாலோ அல்லது உண்மையான ஆடுகளினாலோ அடையாளம் கண்டுக்கொள்ளப்படுவதில்லை/அங்கீகரிக்கப்படுவதில்லை; உண்மையான உடன் மேய்ப்பனானவன், உண்மையான மேய்ப்பனுடைய சத்தத்தையும், வார்த்தைகளையுந்தான் பேசுவான்.

“நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அது போல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக்கொடுக்கிறேன்” என்ற வார்த்தைகள் எவ்வளவு ஆறுதலாய்க் காணப்படுகின்றது! (14, 15-ஆம் வசனங்களுக்கான திருவிவிலிய மொழிப்பெயர்ப்பே, சரியான மொழிப்பெயர்ப்பாய் இருக்கின்றது). இங்குக் கர்த்தருக்கும், தம்முடையவர்களுக்கும் இடையேயுள்ள, விலையேறப்பெற்ற உறவு எத்துணை

அருமையாக விவரிக்கப்பட்டுள்ளது! பிதாவை அறியாதவன் தம்மை அறியவில்லை என்று கர்த்தர் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, இங்குத் தம்முடைய அறிந்துக்கொள்ளுதலையும், பிதாவின் அறிந்துக்கொள்ளுதலையும் ஒப்பிட்டு ஆண்டவர் கூறுவது அழுத்தம் நிறைந்ததாய் இருக்கின்றது. இந்த அறிவு, தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது; இது தலையில் காணப்படும் அறிவாக மாத்திரமிராமல், இருதயம் சார்ந்த அறிவாக இருக்கின்றது; அதாவது கர்த்தருடனும், அவருடைய மகிமையான திட்டத்துடனும் நெருக்கமான பழக்கமாகும்!

## "ஒரே மந்தை மற்றும் ஒரே மேய்ப்பன்"

16-ஆம் வசனத்தில் முக்கியமான சத்தியமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய ஆடுகளுக்கென இப்பொழுது ஒரேயொரு தொழுவம் ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது; மேலும் இந்தத் தொழுவத்தில், இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ள அவருக்கு உண்மையானவர்கள் அனைவரும், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் வாயிலாக சமாதானத்தையும், இளைப்பாறுதலையும் கண்டடைவார்கள். இது சிறுமந்தையாகும்; இவர்களுக்கே இராஜ்யத்தைக் கொடுப்பது, பிதாவினுடைய திருவுளமாய் இருக்கின்றது. இராஜ்யத்தின் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெற்றுக்கொள்ளும் இந்தத் தெரிந்தெடுக்கப்பட்ட சிறுமந்தை மாத்திரமே, கர்த்தரால் தம்முடைய ஆடுகள் என்று அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, மற்றவர்கள் அனைவரும் உத்தரிக்கும் ஸ்தலத்திற்கு (அ) நித்தியமான சித்திரவதைக்கு அனுப்பப்படுவார்கள் என்று முன்னர் வாழ்ந்த அநேகரினால் யூகிக்கப்பட்டது. ஆனால் இக்கண்ணோட்டத்தினுடைய தவறுகளானது, இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல், வேறே ஆடுகளும் தமக்கு உண்டு என்றும், நாம் இராஜ்யத்தின் மகிமைகளை எதிர்ப்பார்த்தவர்களாக, தொழுவத்தினுடைய விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தது போன்று, பிரவேசிக்காத வேறே ஆடுகள் தமக்கு உண்டு என்றுமுள்ள கர்த்தருடைய வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. தெய்வீக அன்பு மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான ஏற்பாடுகளின் ஆழம், அகலம், உயரம் மற்றும் நீளம் பற்றின சரியான கண்ணோட்டத்தைக் கொண்டிருப்போமாக; ஆதாமின் கீழ்ப்படியாமை வாயிலாக முழு உலகமும் பாவத்திலும், மரணத்திலும் தொலைந்துப் போயிருக்க, கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் முழு உலகமும் மீட்கப்பட்டுள்ளது! கர்த்தருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கும், தற்கால ஆட்டுத்தொழுவத்தில் இருக்கும் நிலையை அடைவதற்கான சிலாக்கியத்திற்கும் இன்று ஒரு விசேஷித்த வகுப்பார் மாத்திரமே இருளினின்று அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைப் புரிந்துக்கொள்வோமாக! மீதமான திரளான மனுக்குலமானது தேவனற்றவர்களாய் இருக்கின்றார்கள் என்றும், உலகத்தாருக்கு உலகில் எவ்விதமான நம்பிக்கை இல்லை என்றும், காரணம் அவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டு, செவிகள் கேட்கும் திறனை இழந்துள்ளபடியால், அவர்கள் தேவனுடைய கிருபையை அறிந்துக்கொள்ளவும் இல்லை, ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும் இல்லை என்றும் அறிந்துக்கொள்வோமாக!

இன்னுமாக ஏற்ற காலத்தில் குருடானவர்கள் அனைவரின் கண்களும் திறக்கப்படும் என்றும், செவிடானவர்கள் அனைவரின் செவிகளும் கேட்கும் என்றும் கர்த்தர் கூறியுள்ள வார்த்தைகளையும் கவனித்துக் கேட்போமாக! இப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சிறுமந்தையினர், இராஜ்யத்தில் அவருடைய மணவாட்டிகளாகவும், உடன் சுதந்தரர்களாகவும் இருக்கப் போகிறார்கள் என்றும், அப்பொழுது அவர் மூலமாயும், அவருடைய மகிமையடைந்த மணவாட்டி மூலமாயும் தேவனுடைய ஆசீர்வாதங்கள், மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் அளிக்கப்படும் என்றுமுள்ள கர்த்தருடைய வார்த்தைகளையும் கவனித்துக் கேட்போமாக! நீதியின் சூரியன் உதிக்கும், அதன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; அனைத்து முழங்கால்களும் முடங்கி, அனைத்து நாவுகளும் அவரை அறிக்கைப்பண்ணும். பின்னர் மற்ற மந்தையின்ஆடுகள், யோவான் 10:16-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கூட்டிச் சேர்க்கப்படும். அப்போது, இக்காலத்திலுள்ள மந்தையானது, திரையைக் கடந்து, இராஜ்யத்திற்குள்ளும், அதன் மகிமைகளுக்குள்ளும் கடந்துப் போயிருக்கும். அப்பொழுது இக்காலத்தின் தொழுவம் முடிவிற்கு வரும்; மேலும் இத்தகைய தொழுவம் எதிர்க்காலத்தில் பயன்படாது, காரணம் எதிர்க்காலத்தில் கள்வர்களும், திருடர்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். "என் பரிசுத்த

பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9). அப்பொழுது மாபெரும் எதிராளியானவன், ஆயிரம் வருஷம் முடிவது வரையிலும் ஆடுகளை வஞ்சிக்காதபடிக்கு, ஆயிரம் வருஷங்கள் கட்டிப்போடப்படுவான். இதற்கிடையில் ஒட்டுமொத்த மனுக்குலமும், கர்த்தர் மற்றும் அவருடைய மணவாட்டி வகுப்பாருடைய அறிவுரையின் கீழ்க் காணப்படும்; அப்பொழுது தேவனை அறிகிற அறிவால் முழுப்பூமியும் நிரம்பியிருக்கும் (ஆபகூக் 2:14). இந்த அறிவிற்கான பலன், மனுக்குலத்திற்கான பரீட்சையாக இருக்கும்; மேலும் சிலர் கர்த்தருடைய ஆடுகள் போல், அவருடன் இசைவிற்குள் மகிழ்ச்சியுடனும், விருப்பத்துடனும் வருவார்கள்; மேலும் இவர்கள் அவர் நித்தியத்திற்குரிய ஜீவனை அளிப்பதற்குப் பிரியப்படும் அவருடைய வலது கரத்தினிடத்திற்கும், அவருடைய கிருபையினிடத்திற்கும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதே சாதகமான சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படும் சிலர் வெள்ளாட்டின் பண்பை, மூர்க்கத்தனமான பண்பை வெளிப்படுத்தி, <u>கர்த்தர் தயவு பண்ண விரும்பிடாத</u>, எதிராளியானவனின் ஆவியை உடையவர்களுக்கான, அவருடைய இடது கரத்தினிடத்திற்குச் சேர்க்கப்படுவார்கள். இவர்கள் இறுதியில், ஆயிர வருட யுகத்தினுடைய முடிவில் சாத்தானுடன் கூட, இரண்டாம் மரணத்தில் முற்றிலுமாய் அழிக்கப்பட்டுப் போவார்கள். இவர்களுக்கான தண்டனை நித்திய காலத்திற்குமுரியதாகும், ஏனெனில் இவர்களுடைய மரணம் நித்திய காலத்திற்குமானதாகும்; இவர்கள் ஒருபோதும் உயிர்த்தெழுவதில்லை; இவர்கள் கெஹன்னா வார்த்தையை அடையாளப்படுத்தும் அழிவாகிய இரண்டாம் மரணத்தை அடைவார்கள்.

சுவிசேஷ யுகம் முழுவதிலும், இரட்சிக்கப்படுவதற்கென வானத்தின் கீழ்க் கொடுக்கப்பட்ட ஒரே நாமத்தை ஒருபோதும் கேட்டிராத பெரியதொரு வகுப்பார் இருக்கின்றார்கள் என்றும், இப்படிக் கேள்விப்படாததினால், கர்த்தருடைய மந்தையின் அங்கமாகுவதற்கான வாய்ப்பினை ஒருபோதும் பெற்றிராமல் இருக்கும் பெரியதொரு வகுப்பார் இருக்கின்றார்கள் என்றும் எவராலும் மறுக்க முடியாது. அந்த ஒரேயொரு நாமத்தை அறிந்துக்கொள்ளாமலேயே இவர்கள் பரலோகம் போய்விட்டார்கள் என்ற கூற்றை வேதவாக்கியம் அங்கீகரியாதது மாத்திரமல்லாமல், நியாயமாயும் காணப்படாது; அதேசமயம் இவர்கள் இரட்சிப்படைவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளாமலேயே நித்தியமான சித்திரவதைக்குள் போய்விட்டார்கள் என்பதும்கூட வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததாகவும், நியாயமற்றதாகவும் காணப்படும். கர்த்தர் நித்தியத்திற்குரிய ஜீவனையளிக்க வேண்டுமென்று சித்தம் கொண்டுள்ள மனுக்குலத்திற்கு, ஆயிர வருட யுகத்தில், மனித மந்தையில் அங்கமாகுவதற்கான வாய்ப்பையும், தமது இரக்கத்தையும், கிருபையையும் எடுத்துச் செல்வதற்கென இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுமந்தையினரை, ஆயிரவருட யுகத்தில் தம்முடைய இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஆக்குவதற்கு நோக்கம் கொண்டுள்ளார் என்பது, வேதவாக்கியங்கள் அங்கீகரிக்கின்றதாகவும் நியாயமானதாகவும் காணப்படுகின்றது.

## "ஒரே மந்தை, ஆனால் ஒரே தொழுவம் அல்ல"

ஆங்கிலத்தில், "one **<u>fold</u>** (தொழுவம்) and one shepherd" என்று மொழிப்பெயர்ப்பு இடம் பெறுகின்றது; ஆனால் கிரேக்க வார்த்தையானது சரியாக மொழிப்பெயர்க்கப்படுகையில், "one **<u>flock</u>** (மந்தை) and one shepherd" என்று இடம்பெற வேண்டும் (நமது KJV மொழிப்பெயர்ப்பு சரியாக உள்ளது; யோவான் 14:16). இது அப்போஸ்தலன் எபேசியர் 1:9-ஆம் வசனத்தில் கூறியுள்ள வார்த்தைகளுக்கு முழு இசைவாகவே உள்ளது. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்." இறுதியில் தேவனுடைய சிருஷ்டிகளிலுள்ள அனைத்தும், இப்பொழுது சிறுமந்தையாகிய சபைக்குத் தலையாக இருக்கும் இந்த மாபெரும் மேய்ப்பனுடைய தலைமையின் கீழ்க்கொண்டு வரப்படும்; இந்த மாபெரும் மேய்ப்பன் எதிர்க்காலத்தில் தூதர்கள் மீதும், சீர்ப்பொருந்தப்பட்ட மனுக்குலத்தின் மீதும், தலையாகக் காணப்படுவார். மந்தை ஒரேயொரு மந்தையாகக் காணப்படும், ஆனால் ஆடுகள் பல்வேறு ஜீவதளங்களில், பல்வேறு சுபாவங்களில் காணப்படும்; ஆகவேதான், "என் பிதாவின் வீட்டில் அநேகம் வாசஸ்தலங்கள்" அநேகம் நிலைகள், அநேகம் தளங்கள் உண்டு என்று

எழுதப்பட்டுள்ளது; ஆனால் அனைத்தும் இசைவாய் ஒன்றிக் காணப்படும். ஆனால் இந்தத் தளங்களிலேயே உயர்வான, மகிமையின் தளத்திற்கு, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மணவாட்டி வகுப்பாராகிய, சிறுமந்தையினர் கர்த்தரால் வரவேற்கப்படுகின்றனர். அவருடைய சத்தத்தைக் கேட்போமாக; அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமாக; நம்முடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வோமாக.

---

**R2441**

# “நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து”

## யோவான் 10:1-16

“நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.”- யோவான் 10:11

கிறிஸ்து உலகத்திற்கான ஒளியாக இருக்கத்தக்கதாக, “தேவனுடைய சிருஷ்டியின் ஆதியாக இருந்த அவர், “மாம்சமாக்கப்பட்டார்” என்ற விஷயத்தைச் சுவிசேஷகராகிய யோவான் நம்முடைய கவனத்திற்கு முதலாவதாகக்கொண்டு வருகின்றார்; அடுத்ததாக அவரைப் பசியுள்ளவர்களுக்கு ஆகாரம் வழங்குபவராக நமக்குக் காட்டுகின்றார்; அடுத்ததாக தாகமுள்ளவர்களுக்கு, ஜீவத்தண்ணீரை வழங்குபவராக, அவரை நமக்குக் காட்டுகின்றார்; அடுத்ததாக மனிதனுக்குரிய வேதனைகளைச் சொஸ்தப்படுத்துகிறவராகவும், மனிதனுடைய ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய தேவைகளை அளிப்பவராகவும் அவரை நமக்குக் காட்டுகின்றார்; அடுத்ததாக நமது புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பவராக அவரை நமக்குக் காட்டுகின்றார். இந்தப் பாடத்திலோ, சுவிசேஷகனாகிய யோவான், கிறிஸ்துவினுடைய பணியை இன்னொரு கோணத்தில், அதாவது அவரை நல்ல மேய்ப்பனாக, இப்பொழுது நமக்கு முன்வைக்கின்றார்.

கண்கள் திறக்கப்பட்ட மனுஷன், இயேசுவே தனக்குத் தெய்வீகத் தயவைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகையாக இருந்தார் என்று அறிக்கைப்பண்ணினதினிமித்தம், நியாயசாஸ்திரிகள் ஆத்திரமடைந்து, அம்மனுஷனை ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கிப் போட்டப் பிற்பாடு, இந்த உவமை பேசப்படுகின்றது. நமது கர்த்தரால் பேசப்பட்ட இந்த உவமையானது, தவறாய் மேய்ப்பவர்களுக்குக் கடிந்துக்கொள்ளுதலாய் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. உண்மையான மேய்ப்பனை அடையாளம் கண்டுகொள்வதற்கும், அவரிடத்தில் வருவதற்கும், நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டுள்ள இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கும், பாவமான சிதறடிக்கப்பட்ட ஆடுகளாகிய இஸ்ரயேலுக்கு உதவி புரிய வேண்டியவர்களோ, மேய்ப்பனைக் கர்த்தருடைய ஆடுகள் அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்ப்பதற்கு முயற்சிக்கின்றனர்; அதாவது தாங்களும் பிரவேசியாமல், மனுஷர்களையும் இராஜ்யத்தில் பிரவேசிக்கவிடாமல் தடைபண்ணுவதற்கு நாடுகின்றவர்களாய் இருக்கின்றனர் (மத்தேயு 23:13).

கர்த்தரை, மேய்ப்பன் என்றும், அவருடைய ஜனங்களை ஆடுகள் என்றும், கூறும் உதாரணமானது, வேதவாக்கியங்களில் பொதுவான/சகஜமான காரியமாக இருக்கின்றது; மேலும் இந்த உதாரணமானது, அவர்களுக்கிடையே காணப்படும் நம்பிக்கைக்குரிய நெருக்கமான உறவிற்குச் சரியாக பொருந்தவும் செய்கின்றது; ஆனால் இந்த அடையாளமானது, உலகத்தின் ஆவிக்கு, முற்றிலும் எதிர்மாறானதாக இருக்கின்றது. இந்த ஓர் அடையாளத்தில், சுபாவத்தின்படியான மனுஷனைக் கவருகின்ற எதுவும் இல்லை; சுபாவத்தின்படியான மனுஷன் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகையில், அவன் தன்னை மற்றவர்கள் நரி போலும், சிங்கம் போலும், புலி போலும் அல்லது தீண்டினால் பட்சித்துப்போடும் வேறு ஏதாவது கடுமையான மிருகம் போலும் கருத விரும்புகின்றான். இவ்விஷயத்தை, மேலங்கியிலுள்ள மரபுரிமை சின்னங்களில் நாம் பார்க்கலாம்; மகா வல்லவர்களின் கேடகங்களில் பட்சிக்கும் பறவைகளின், பட்சிக்கும் மிருகங்களின் சித்திரங்கள் இருப்பதையும் பார்க்கலாம்; இந்த மிருகங்கள் அச்சுறுத்தலையும், மூர்க்கத்தனத்தையும் சுட்டிக்காட்டுபவைகளாகும். ஆனால் தேவன், தம்முடைய இராஜரிக

குடும்பத்திற்கான சின்னத்தை வெளிப்படுத்துகையில், அவருடைய ஒரே பேறான குமாரன், தேவனுடைய ஆட்டுக்குட்டி என்றும், அவருடைய ஜனங்கள் அனைவரும் அவருடைய ஆடுகள் என்றும் அழைக்கின்றார்; இது சாந்தத்திற்கும், ஆபத்தற்ற தன்மைக்கும், கனிவிற்கும் சின்னங்களாய் இருக்கின்றது. "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கின்றார்" என்பது அவருடைய ஜனங்களுக்கான சரியான உணர்வாகும் (சங்கீதம் 23:1).

பாலஸ்தீனியாவில் ஆடுகள் வளர்ப்பது என்பது, பெரிதளவில் காணப்பட்டது; எனினும் ஐரோப்பியா மற்றும் அமெரிக்காவிலுள்ள தற்கால முறைமைகளிலிருந்து, முற்றிலும் வேறுபட்டதான முறைகளிலேயே பாலஸ்தீனியாவில் ஆடுகள் வளர்க்கப்பட்டன. மந்தையினுடைய சொந்தக்காரர் அல்லது அவருடைய குமாரனே பொதுவாக மேய்க்கும் வேலையைச் செய்வார் (அ) சிலசமயம் மந்தையை பெருக்குவதில் அக்கறை காட்டும் நபர் வேலையில் அமர்த்தப்படுகின்றார்; உதாரணத்திற்கு யாக்கோபும் இப்படியாகவே தன்னுடைய மாமனாகிய லாபானுடன் மேய்ப்பனாக இருந்தார். அக்காலங்களில், இன்றைய காலங்களைக் காட்டிலும் ஆடுகளுக்கும், அவைகளின் மேய்ப்பனுக்கும் இடையே இருந்த உறவு மிக வித்தியாசமாக, மிகவும் நம்பகரமாக இருந்தது. மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளுடன் நன்கு பழக்கம் ஏற்படுத்திக்கொண்டவனாக இருக்கின்றான்; இன்னும் அவைகளை அன்புச் செய்கின்றான்; அவைகளை ஆஸ்தியாகவும், லாபம் தருபவைகளாக மாத்திரம் அன்பு செய்யாமல், அவைகளை நண்பர்கள், துணைவர்கள் போன்று கருதி அன்புச் செய்கின்றான்; அவைகளுடனே அவன் பேசுகின்றான், அவைகளுக்கான நன்மைக்கடுத்த காரியங்களில் பராமரிப்புச் செலுத்துகின்றான். இந்த உவமையில் குறிப்பிடப்பட்ட விசேஷித்த அம்சங்கள், இன்று வரையிலும், கிழக்கத்திய நாடுகளிலுள்ள மந்தைகளில் பார்க்கலாம் என்று சுற்றுப் பிரயாணிகள் நமக்குத் தெரிவிக்கின்றனர்; அதாவது தன்னுடைய மந்தையிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட ஆடுகளின் பெயர்களையும் மேய்ப்பன் அறிவான் என்றும், ஒவ்வொரு ஆட்டிற்கும் பெயர் வைத்திருக்கின்றான் என்றும், ஆடுகள் தங்களுடைய மேய்ப்பனை அறிந்திருக்கும் என்றும், மேய்ப்பனுடைய சத்தத்தை உடனடியாக ஆடுகள் அடையாளம் கண்டுகொள்ளும் என்றும், அவைகளை ஏமாற்ற முடியாது என்றும் சுற்றுப் பிரயாணிகள் நமக்குத் தெரிவித்தனர். உவமையின் இந்த விநோதமான வார்த்தைகளைச் சிலர் எப்படிப் பரீட்சித்துப்பார்த்து, நிரூபித்துக்கொண்டார்கள் என்றும் நமக்குத் தெரிவித்தனர்: ஒரு குறிப்பிட்ட ஆட்டின் பெயரைச் சொல்லி ஆட்டை அழைக்கும்படி ஒருவர், மேய்ப்பனிடம் கேட்டுக்கொண்டார்; அதாவது ஆடு, மேய்ப்பனிடம் வருகின்றதா (அ) இல்லையா என்பதைப் பார்க்க, இப்படி மேய்ப்பன் ஆட்டின் பெயரை அழைக்கச் சொன்னார்; தொலைத்தூரத்தில் இருக்கும் ஓர் ஆட்டை மேய்ப்பன் அழைத்தான்; உடனடியாக அந்தக் குறிப்பிட்ட ஆடு, அது நின்ற இடத்தில், அதன் தலையை உயர்த்தி, மேய்ப்பனை நோக்கிப் பார்த்தது; பெயர் மீண்டுமாக அழைக்கப்பட்ட போதோ, அந்த ஆடு மந்தையின் ஊடே நடந்து முன்னேறி, அவனுடைய பாதங்களின் அருகே வந்து நின்றது; அது கீழ்ப்படிந்ததின் காரணமாக, அதன் தலை மெல்ல அன்பாய்த் தட்டிக்கொடுக்கப்பட்டது. இப்படியாக ஆடு ஒருமுறைதான் செய்யுமோ என்ற எண்ணத்தில், இப்பரீட்சை மீண்டும் மீண்டுமாக நடத்தப்பட்டது; ஆடு மீண்டும் மீண்டுமாக அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து மேய்ப்பனிடம் வந்தது. இன்னொரு பயணி, மேய்ப்பனுடைய குரலைக் கொடுத்து, ஆட்டைப் பெயர்ச் சொல்லி அழைத்தார்; ஆனால் ஆடு செவி சாய்க்கவேயில்லை. மேய்ப்பனுடைய வஸ்திரத்தில், தான் காணப்படாததினால்தான் தன்னுடைய சத்தத்திற்கு ஆடு செவிக்கொடுக்கவில்லை என்று அந்தப் பயணி எண்ணி, பயணியும், மேய்ப்பனும் ஒருவருக்கொருவர் உடையை மாற்றிக்கொண்டனர்; ஆனாலும் அந்நியனுடைய குரலுக்கு ஆடு செவிசாய்க்கவில்லை; பின்னர் மேய்ப்பன் ஆடுகளுக்குச் செவிகொடுத்தப் போதோ, அவன் அந்நியனுடைய உடைகளில் இருந்தபோதிலும், ஆடுகள் மேய்ப்பனுடைய சத்தத்தை அறிந்திருந்தபடியால், உடனடியாகச் செவிசாய்த்தன.

நமது கர்த்தர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு, நன்கு பரிச்சயமாய் இருந்த இந்த உண்மைகளைப் பயன்படுத்தி, கர்த்தருடைய ஜனங்களுடன், மாபெரும் மேய்ப்பனின் குமாரனாகிய, அவர்களின் மேய்ப்பனாகிய தமக்கு இருக்கும் உறவை விவரித்தார்; இன்னுமாக அவருடைய மந்தையாய் உண்மையில் இருப்பவர்கள் அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள் என்றும், எதிராளியானவன் கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்கத்தக்கதாக, ஒளியினுடைய தூதனுடைய வேஷத்தைத் தரித்து வந்தாலும் ஏமாற்றம் அடையார்கள் என்றும் சுட்டிக் காண்பிக்கின்றார். நாம் கர்த்தருடைய மந்தையின் உண்மையான அங்கத்தினராக வேண்டும் என்பதும்,

அவருடன் நெருக்கமாய்ப் பழக்கம் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும், அவருடைய வார்த்தைகளை, அவருடைய சத்தத்தை அறிந்திருக்க வேண்டும் என்பதும், உத்தம சீஷர்களாய்க் காணப்பட வேண்டும் என்பதும்தான் முக்கியமான காரியமாய் இருக்கின்றது. இப்படியாகக் காணப்படுபவர்களையே, தம்முடைய தற்கால மந்தைக்காக கர்த்தர் நாடுகின்றார். தற்போதைய காலத்தில் அவருக்கு இரண்டு மந்தைகள் இருக்கவில்லை; அதாவது ஒரு மந்தை, அவருடைய சத்தத்தைக் கேட்டு, கீழ்ப்படிகின்றதாகவும், மற்றொரு மந்தை அவருடைய சத்தத்திற்குச் செவிச்சாய்க்காத மந்தைகளாகவும் அவருக்கு இல்லை. "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது.” நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது (வசனம் 27) என்று கர்த்தர் கூறுகின்றார். வார்த்தையிலும், மாதிரியிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள கர்த்தருடையச் சத்தத்திற்குக் கீழ்ப்படிதலுடன், அவரைப் பின்பற்றாதவர்கள் அவருடைய மந்தையல்ல; இப்படிப்பட்டவர்கள் தற்கால சத்தியம் என்னும் புல்வெளிகளினிடத்திற்கும், அமர்ந்த தண்ணீரினிடத்திற்கும் வழி நடத்தப்படுகிறதில்லை; இவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக இவர்களுக்குப் பந்தி ஆயத்தப்படுத்தப்படவில்லை; இவர்கள் கர்த்தருடைய வீட்டில் நீடித்து நிலைத்திருப்பதற்கு ஏதுவான தெய்வீக நன்மை மற்றும் கிருபை ஏற்படுத்தியுள்ள பாதையிலும் இல்லை (சங்கீதம் 23).

பிதாவாகிய தேவன் ஒரு நிழலான இராஜ்யத்தை அல்லது ஆட்டுத்தொழுவத்தை ஸ்தாபித்து, இஸ்ரயேல் தேசத்தை, தம்முடைய ஆடுகளாக ஏற்றுக்கொண்டார்; ஆனால் இவர்கள் தேசமாக வழிவிலகிப் போன ஆடுகளாகி, அவரை அறியாமல் போய்விட்டனர். இவர்களை நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் வேலியடைத்தார். இவர்கள் ஓர் இராஜா, ஓர் ஆளுநர் வேண்டும் என்று விரும்பினர்; தேவனும் இவர்களுடைய விருப்பத்தை அருளினார்; ஆனால் இந்த இராஜாக்களில் எவரும் உண்மையான மேய்ப்பனுமல்ல; இன்னுமாக இவர்களில் எவரும் ஆடுகளைத் தகுந்த பிரியமான நிலைக்கும் கொண்டு வரவில்லை. இவர்களெல்லோரும் (இராஜாக்களெல்லாம்) போன பிற்பாடு, அநேகர் வந்து தங்களை மேசியாவென அறிவித்துக்கொண்டு, இஸ்ரயேலை வழிநடத்துவதற்கான உரிமையைத் தவறாய்ச் சொந்தம் கொண்டாடினார்கள். இவர்கள் பொய் மேசியாக்களாக காணப்பட்டனர். ஆடுகளினுடைய நன்மைக்காக அல்லாமல், சுயநலமான நோக்கத்தினாலும், தன்னைத்தான் உயர்த்திக்கொள்ளும் நோக்கத்தினாலும், செல்வம் திரட்டும் நோக்கத்தினாலும், ஆடுகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நாடின இவர்களை நமது கர்த்தர் கள்வர்களும், திருடர்களும் என்கிறார். இவர்கள் வாசல் வழியாக அல்லாமல், வேறு வழிகளின் மூலமாய் ஏறி உள்ளே குதித்துக் கர்த்தருடைய ஆடுகளை வெளியே கொண்டுவருவதற்கு முயன்றனர்; இவர்கள் நியாயப்பிரமாணம் எனும் வேலியின் மேலேறி உள்ளே குதிப்பதன் மூலம் அல்லது மண்ணைத் தோண்டி உள்ளுக்குள்ளாக வந்து ஆடுகளிடம் நெருங்கி, வழிநடத்துவதற்கு முயன்றனர்; இப்படியாக இஸ்ரயேலில் பெரும் பகுதியானவர்கள் தொழுவத்திலிருந்து, வழித்தவறிப் போய்விட்டனர். சிலர் விக்கிரகங்களுக்கு நேராகவும், வேறு சிலர் வெறுமனே வனாந்தரத்தில் சுற்றித்திரிவதற்குமென வழிநடத்தப்பட்டனர்.

இதுவே நமது கர்த்தருடைய முதலாம் வருகையின்போது இருந்த சூழ்நிலைகள் ஆகும்; இஸ்ரயேலுடனான தேவனுடைய உடன்படிக்கையானது, தேசத்தைச் சுற்றிலும் மதில் சுவராக நின்றுகொண்டிருந்தது; ஆனால் வாசலோ, மோசேயின் நியாயப்பிரமாணமாகிய இஸ்ரயேலின் உடன்படிக்கையில் அடையாளப்படுத்தப்படும் நீதியினால் பூட்டப்பட்டிருந்தது. உள்செல்லுவதோ (அ) வெளியேறுதலோ இல்லாதிருந்தது; அனைவரும் நியாயப்பிரமாணத்தின் கைதிகளாய்க் காணப்பட்டனர்; ஜீவனுக்கான வழி அல்லது வாசலாகிய கிறிஸ்து பிற்பாடு வெளிப்படுத்தப்படுவார் என்ற நம்பிக்கையில் பூட்டப்பட்டிருந்தது; இதற்கிடையில் வாசலானது பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களால், வைராக்கியமாய்ப் பாதுகாக்கப்பட்டு வந்தபொழுதிலும், ஆட்டுத்தொழுவத்தைச் சூறையாடும் வேலையை, சாத்தானின் ஊழியக்காரர்களாகிய கள்வர்களும், திருடர்களும் செய்துகொண்டு வருகின்றனர் என்ற உண்மையானது, முற்றிலுமாய் மறக்கப்பட்டுவிட்டது. (யோவான் 10:1, 2, 7, 9; கலாத்தியர் 3:24; யோவான் 14:6; சகரியா 9:9-12).

நமது கர்த்தர் இயேசுவுங்கூட தம்முடைய ஜீவனை இழக்காமல், தொழுவத்தைத் திறப்பதற்கும், ஆடுகளைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கும் சட்டப்படி முடியாது. இதுவே

மாபெரும் மேய்ப்பனாகிய, பிதாவின் நோக்கமாய் இருக்கின்றது; மேலும் இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான், கிறிஸ்து தம்முடைய ஜனங்களுக்குக் கொடுக்கும் விடுதலையை ஆடுகள் அடைவதற்கு முன்பாக, ஆடுகள், நியாயப்பிரமாணத்தினுடைய ஆதிக்கத்தின் கீழினின்று, தம்முடைய (நியமிக்கப்பட்ட மேய்ப்பனாகிய) குமாரன் மூலம் மீட்கப்படுவதற்காக, ஆடுகளை நியாயப்பிரமாணத்தின் கீழ் அடைத்து வைத்தார். இதுவே நல்ல மேய்ப்பனால், ஆடுகளுக்காக செய்த முதல் வேலையாகும்; அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த காரியமானது, அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், அதாவது மரணம் வரையிலும் தம்மை முழுமையாய் அர்ப்பணித்தக் காரியத்தை, ஞானஸ்நானம் எடுத்ததன் மூலம் அடையாளப்படுத்திக் காட்டினது முதலே ஆரம்பித்துவிட்டது. இப்படியாக ஆரம்பிக்கப்பட்டதும், தொடர்ந்து நிறைவேற்றப்பட்டதும், கல்வாரியில் பிற்பாடு நிறைவேற்றப்படப் போகின்றதுமான இந்தப் பலியைக் கருத்தில் கொண்டவராகவே, நமது மீட்பர், தம்மை ஆடுகளுக்காக தம்முடைய ஜீவனைக்கொடுக்கும் நல்ல மேய்ப்பனாக அறிவித்தார்.

நமது கர்த்தருடைய மரணமானது, இஸ்ரயேலை, நியாயப்பிரமாணத்தின் கீழான சாபத்தினின்று (தீர்ப்பினின்று) விடுவித்தது என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்; வாசலைக் காக்கும் காவல்காரன், ஆட்டுத்தொழுவத்தைத் திறந்துவிடத்தக்கதாக மாத்திரமல்லாமல், உண்மையான மேய்ப்பன் ஆடுகளைப் புல்வெளிக்கு நடத்துவதற்கும், ஆடுகள், அவருடைய ஆடுகளாக, அவரைப் பின்சென்று, முழுமையான சுதந்தரத்துடன் உள்ளும், புறம்பேயும் செல்வதற்கும் ஏதுவாக, உண்மையான மேய்ப்பன் ஆடுகளின் மீது அதிகாரத்தையும், ஆடுகளைத் தமக்குச் சொந்தமாக அடையத்தக்கதாகவும், அவரது மரணமானது நியாயப்பிரமாணத்தைத் திருப்திப்படுத்திற்று. எனினும் அநேக உண்மை ஆடுகள் தொழுவத்திலிருந்து வெளியேறி, பாவம் எனும் வனாந்தரத்தில் தொலைந்துப் போய்விட்டன என்று நமது கர்த்தர் சாட்சிப் பகர்ந்தார். இப்படிப்பட்டவர்களையும் மற்றும் தொழுவத்தில் இருக்கும் மீதியானவர்களையும் அழைப்பதே அவருடைய ஊழியமாக இருந்தது; அதாவது ஆயக்காரர்களையும், பாவிகளையும் மற்றும் தேவனை நெருங்கி வாழ்வதற்கு முயன்றுகொண்டிருப்பவர்களையும் (தொழுவத்தில் இருக்கும் மீதியானவர்களை) அழைப்பதே அவருடைய ஊழியமாக இருந்தது.

இவ்வாறாக உண்மையான மேய்ப்பன், தம்முடைய உண்மையான ஆடுகளின் மீது தமது அக்கறையைக் காண்பித்தார்; ஊனமுள்ளதும், பெலவீனமானதும், வாடி வதங்கி நலிந்துப் போனதுமான ஆடுகளாகிய தம்முடைய உண்மையான ஆடுகளின் மீது, தமது கவனத்தைச் செலுத்தினார். அவர் பாவிகளை மனந்திரும்பும்படி அழைத்தார்; மேலும் உண்மையான ஆடுகள், நியாப்பிரமாணத்தின் கீழ்த் தங்களுக்கிருந்த இயலாமைகளை உணர்ந்து, அவருக்குச் செவிச்சாய்த்து, மேய்ப்பனாகவும், தங்களின் ஆத்துமாக்களுக்குக் கண்காணியாகவும் இருந்த அவரிடத்திற்கு வந்தனர். ஆனால் மந்தையிலுள்ள அநேகம் ஆடுகள், உண்மையான ஆட்டிற்கான நிலையிலிருந்து மிகவும் தொலைவில் கடந்துப் போய்விட்டபடியினால், அவருடைய மந்தைக்கான நியமிக்கப்பட்ட எண்ணிக்கையை நிறைவு செய்யத்தக்கதாக, அவருடைய சத்தத்தைக் கேட்டவர்கள் போதுமானவர்களாக இல்லாததினால், இந்த நல்ல மேய்ப்பன், இந்தச் சுவிசேஷ யுகத்தில், தம்முடைய குரலை உயர்த்தி (தம்முடைய சரீரத்தின் அங்கங்கள் வாயிலாக பேசுவதன் மூலம்) புறஜாதிகள் மத்தியிலிருந்து, ஆடுகளை அழைத்துள்ளார்; முன்தீர்மானிக்கப்பட்ட அந்த எண்ணிக்கைக்குப் போதுமானவர்கள் செவிக்கொடுப்பார்கள்.

இந்தத் தற்காலத்தில் அழைக்கப்படும் அழைப்பானது, பொதுவான ஒன்றாய் இராமல் மாறாக, "அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்ச் சொல்லிக் கூப்பிடுகிறான்" என்று வேதவாக்கியங்களில் காணப்படுகிறபடி, அது ஒரு விசேஷமான அழைப்பாய் இருக்கின்றது. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." ஆடுகள் அவருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, அவருக்குப் பின்செல்லுவதன் மூலமாக, ஆடுகள் அவருடைய மந்தைகளாக தங்களுக்கு இருக்கும் உறவை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இப்பொழுது அழைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதும், இறுதியில் தங்கள் அழைப்பையும் தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறதுமான மந்தை மாத்திரமே, "சிறுமந்தையினராக" இருப்பார்கள் என்றும், இவர்களுக்கு அருளும் தொழுவமானது விசேஷமானது என்றும், அது இராஜ்யம் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன.

"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார் (லூக்கா 12:32).


இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும், கர்த்தர் இந்த வகுப்பாரைப் பராமரித்துக்கொண்டு வருகின்றார்; இவர்கள் மற்றவர்களின் பார்வையில் கடுமையான சோதனைகள், சிட்சைகள், பாடுகளுக்குள் கடந்துப்போனவர்களாகக் காணப்பட்டாலும், இவர்களைக் கர்த்தர் விசேஷமாய் வழிநடத்தியுள்ளார், போஷித்துள்ளார் மற்றும் ஆசீர்வதித்துள்ளார். ஆம் நம்முடைய மேய்ப்பன் அறிவித்துள்ள பிரகாரம், தேவபக்தியாய் நடக்கின்றவர்கள் அனைவரும் துன்புறுத்தப்படுவார்கள். ஆனால் இது விசேஷமாய்த் தெரிந்துக்கொள்ளப்பட்டுள்ள மந்தைக்கு, விசேஷமான சோதனை காலம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்தத் தொழுவத்தில் அல்லாத வேறே ஆடுகள், அதாவது இராஜ்யத்திற்கான அழைப்புப் பெறாத வேறே ஆடுகளும் தமக்கு இருக்கின்றது என்று மேய்ப்பன் கூறியுள்ளதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வேறே ஆடுகள் இன்னமும், பாவம் எனும் வனாந்தரத்தில் அலைந்துக்கொண்டுதான் இருக்கின்றன; ஆனால் ஆயிர வருட இராஜ்யம் சமீபித்து இருக்கின்றது; அப்பொழுது கர்த்தர் தம்முடைய சிதறடிக்கப்பட்ட ஆடுகளை ஒன்று கூட்டுவார்; அதாவது அனைவரும், தமக்கு இசைவாக, தம்முடைய மந்தையாகக்கொண்டுவரப்படத்தக்கதாக, சாதகமான சூழ்நிலைகளின் கீழ் நீதியையும், தேவனுடன் ஒப்புரவாகுதலையும் விரும்பி, நாடும் அனைவரையும் கர்த்தர் ஒன்றுகூட்டுவார். இந்த யுகத்திலுள்ள, "சிறுமந்தையினருக்கு," அதாவது, "இராஜ்யத்தின் சுதந்தரர்களுக்கு" மாத்திரமல்லாமல், தம்முடைய ஆடுகள் அனைத்திற்குமாக, நல்ல மேய்ப்பன் தம்முடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுத்திட்டார். இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடே, கர்த்தருடைய பெரிய மந்தை கூட்டிச்சேர்க்கப்படும் (மத்தேயு 25:31, 32).

தெய்வீகத் திட்டத்தினுடைய மற்ற அநேக அம்சங்ளுக்குரிய திறவுகோலாகக் காணப்படும் இந்த உவமையினுடைய திறவுகோலுக்கான ஒரு பாகமானது, இராஜ்யத்தின் உடன்சுதந்தரராகும் பொருட்டு இப்பொழுது அழைக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்படும் "சிறுமந்தையினர்" பலியாகிட வேண்டும் எனும் உண்மையில் அடங்கியுள்ளது; இராஜாவின் மகனாகிய மேய்ப்பன் தம்மைத் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகப் பலிச்செலுத்தினார்; மற்றும் அவர் நியாயப்பிரமாணத்தின் கீழ் அடைக்கப்பட்டவர்களுக்காக வாசலைத் திறந்துவிட்டதுமல்லாமல், அதே பலியினால், இனிமேல் அவர் கூட்டிச்சேர்க்கப் போகின்ற மற்ற ஆடுகளையுடைய ஒட்டுமொத்த மனுக்குலத்தையும் அவர் மீட்டுள்ளார்; இதுபோலவே இப்பொழுது அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும், "சிறுமந்தையின்" ஆடுகளாகிய அனைவரும் தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுடன் பாடுபட வேண்டும் மற்றும் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக புத்தியுள்ள ஆராதனையாக தங்களை, அனைவரும் ஒப்புக்கொடுக்க வேண்டும். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (ரோமர் 12:1; 1 யோவான் 3:16).

இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது நமது கர்த்தர் பிதாவின் ஆட்டுக்குட்டியாகவும், உலகத்திற்கான பாவநிவாரணபலியாகவும் இருப்பதினால், இயேசுவின் மந்தையினராகிய நாம், கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, நிறைவேற்றுபவர்களாய் இருப்போம் என்பது பார்க்கப்படலாம். "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோசெயர் 1:24). இன்னுமாக இம்மந்தையில் உள்ளவர்கள், "மரணம் வரையிலும்" மேய்ப்பனைப் பின் தொடரும் விஷயத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்தால், அவர்கள் மேய்ப்பனுடைய சரீரத்தின் அங்கங்களாகக் கருதப்படுவார்கள் என்று வேறு வேதவாக்கியங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. இவ்வாறாக முழுச் சுவிசேஷ யுகமும், கிறிஸ்துவுடன் பாடுபடுவதற்கும், அன்றாடம் மரிப்பதற்கும், சகோதர சகோதரிகளுக்காக ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்குமான காலமாகக் காணப்படுகின்றது; மேலும் இந்தப் பலியானது, இந்த யுகத்தின் முடிவில் நிறைவடையாத வரையிலும், புதிய உடன்படிக்கையானது மனுக்குலத்தின் முன்பாக வைக்கப்படவும் முடியாது, மாபெரும் மேய்ப்பனும், அதாவது தலை மற்றும் சரீரம் முழுமையடைந்திருக்காது. பின்னர் ஆவியும், மணவாட்டியும், "வா என்பார்கள்;" ஆனால்

இப்பொழுது ஒருவனைப் பிதா இழுத்துக்கொள்ளாதது வரையிலும், அவன் "சிறுமந்தைக்குள்" வரமாட்டான்.

இராஜ்யத்தில் அவருடன் இணைந்திருக்கும்படிக்கு இப்பொழுது அழைக்கப்படும் அனைவரிடத்திலும், மந்தையின் மாபெரும் பிரதான மேய்ப்பனுடைய ஆவிக் காணப்பட வேண்டும். நல்ல மேய்ப்பன் தம்முடைய ஜீவனை மந்தைக்காகக் கொடுத்தது போன்று, இவர்கள் அனைவரும் கூடச் சத்தியத்திற்கான ஊழியத்தில், தங்களது ஜீவன்களைக் கொடுப்பார்கள். நல்ல மேய்ப்பன், தமக்கும், ஆடுகளினால் தமக்கும் எவ்வளவு ஆதாயம் கிடைக்கும் என்பதையும் பொருட்படுத்தாமல், ஆடுகளின் தேவைகளை நிறைவேற்றுவது போலவே, அவருடைய ஆவியையுடைய அனைவரின் விஷயத்திலும் காணப்படும்; இவர்கள் இழிவான ஆதாயத்திற்காகவோ, மனுஷர் மத்தியிலான கனத்திற்காகவோ, பூமிக்குரிய ஆதாயத்திற்காகவோ எவ்விதத்திலும், கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் செய்யாமல், மாறாக தேவன் மீதான அன்பினாலும், சத்தியத்தின் மீதான அன்பினாலும், மந்தையாகிய சகோதர சகோதரிகளின் மீதான அன்பினாலுந்தான் ஊழியம் புரிகின்றனர்.



*லாசருவின் உயிர்தெழுதல்*

இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். (யோவா 11:43)

# பாகம்-5

# “யோர்தானுடைய கிழக்குப் பகுதிகளில் உள்ள இயேசுவினுடைய பிந்தைய ஊழியம்...”

**R1951**

# "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்"

## லூக்கா 13:22-30

"ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ?" என்று கேட்கப்பட்டக் கேள்விக்குக் கர்த்தர் நேரடியாக பதில் அளிக்கவில்லை. இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதற்கும், இதில் பிரவேசிப்பதற்கென, கேட்கக் காதுள்ளவர்களை வரவேற்பதற்குமான வேளை வந்துள்ளது. இந்தக் காலத்திற்கான அழைப்பானது, ஆயிர வருட இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்கள் ஆகுவதற்கான பரம அழைப்பாய் இருந்தது; அன்று முதல், இன்று வரை இந்த அழைப்பானது தொடர்ந்துக் கொண்டிருக்கின்றது. இந்த யுகத்தில் ஒரேயொரு அழைப்புதான் உள்ளது. "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்" (எபேசியர் 4:4). ஆயிர வருட யுகத்தின் போது, இன்னொரு வகுப்பாருக்கு, இன்னொரு அழைப்பைக் கொடுக்க தேவன் சித்தம் கொண்டுள்ளக் காரியமானது, இப்பொழுது நமக்கு மகிழ்ச்சியையும், ஆறுதலையும் தருகின்றது, மற்றும் இன்னுமாக தெய்வீகக்குணலட்சணம் மற்றும் ஏற்பாடுகளில் காணப்படும் இசைவையும், சீரான தன்மையையும் நாம் காண உதவுகின்றது; ஆனால் அடுத்த யுகத்தில் இன்னொரு அழைப்பு இருக்கின்றது என்ற காரியமானது, இப்போதுள்ள அழைப்பையும், நம்பிக்கையையும் எவரும் புறக்கணித்துப் போடத்தக்கதாக ஏவக்கூடாது. அப்போஸ்தலர் கூறுவது போன்று, "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால், தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்?"

நமது கர்த்தர் தம்முடைய வேலையைக் குறித்தும், தம்முடைய இராஜ்யத்தைக் குறித்தும், இராஜ்யத்தின் நோக்கத்தைக் குறித்தும் அநேகக் காரியங்களை அப்போஸ்தலர்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளார்; இன்னுமாக அவர், "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை(படிப்படியாக) நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று கூறினார் (யோவான் 16:12, 13). அப்போஸ்தலர்களுடைய கேள்விகளுக்குக் கர்த்தர் முழுமையாய்ப் பதிலளிப்பது என்பது இன்னும் அநேக கேள்விகளுக்கு, அதாவது அவர்களால் ஜீரணிப்பதற்கு ஆயத்தமாய் இல்லாத பதில்களை உடைய அநேகம் கேள்விகளுக்கு வழிநடத்துவதாக இருந்திருக்கும்; ஆகவேதான் நமது கர்த்தர் ஞானமாய் அவர்களுடைய கேள்விகளைத் தவிர்த்து, அவர்களுக்கான கடமை மற்றும் சரியான போக்கு/பாதைக் குறித்ததானவைகளைக் குறித்து மாத்திரமே பதிலளித்தார். "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள் (கடுமையாய் முயற்சியுங்கள்), வீட்டெஜமான் எழுந்து கதவைப் பூட்டினபின்பு அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும், அவர்களாலே கூடாமற்போகும்" என்று கூறினார்.

இந்த உதாரணமானது, பத்துக் கன்னிகைகள் பற்றின உவமையில் காணப்படும் கிழக்ககத்திய கலாச்சாரத்தின்படியான திருமணத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்டவர்கள் மணவாளனுடன் உள்ளே பிரவேசிக்கத்தக்கதாக, மணவாளன் வருவதற்கு முன்னதாகவே ஆயத்தமாய் இருப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். மணவாளனும், அவருடையவர்களும், கூடே வரும் நண்பர்களும் உள்ளே பிரவேசித்த பின், கதவு பூட்டப்படுகின்றது; கதவுக்கு வெளியே நிற்பவர்கள் அனைவரும் அந்நியர்கள் போலவும், அறியப்படாதவர்கள் போலவும் இத்தருணத்தில் நடத்தப்படுவார்கள். மேலும் (கதவு அடைக்கப்பட்ட பின்) இவர்கள் இல்லாமலேயே, விழா உள்ளே நடைப்பெற்றுக் கொண்டிருக்கும்.

கர்த்தருடைய உவமைகள் அனைத்திலும், அவருடைய பின்னடியார்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள இராஜ்யமானது, யுகத்தின் முடிவில் கிடைக்கும்; அதாவது பிரபுவானவன், தூரதேசமாகிய பரலோகத்திலிருந்து, தமது இராஜ்யத்தை உரிமையாக்கிக்

கொள்வதற்கும் மற்றும் தாம் (பூமியில்) இல்லாதிருந்த காலத்தில் தமக்கு உண்மையாய் இருந்தவர்களோடு, அந்த இராஜ்யத்தின் கனங்களைப் பங்கிட்டுக்கொள்வதற்கும் எனத் திரும்பி வரும்போது இராஜ்யம் கிடைக்கப்பெறும் என்று விவரிக்கப்பட்டுள்ளது (லூக்கா 19:12-27). இன்னும் தம்முடைய உண்மையுள்ள, காத்திருக்கும், நிச்சயிக்கப்பட்ட கன்னிகையை உரிமை கோருவதற்கும், வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்குமாக வரும் மணவாளன் என வேறு உருவகங்களிலும் தம்மை அடையாளப்படுத்திக் காண்பிக்கின்றார். ஆகவே தங்களுடைய ஆண்டவர் இன்னவேளையில் வருவார் என்பதை அறியாத காரணத்தினால் அவர்கள் அனைவரும் தொடர்ந்து விழித்திருக்க வேண்டும் என்பதற்காக, தாம் இன்னவேளையில் வருவார் என்று அவர்களுக்கு அவர் திட்டவட்டமான எந்தத் தகவலையும் கொடுக்கவில்லை; எனினும் காத்திருந்து ஆயத்தமாயும், விழிப்பாயும் இருக்கும் அனைவருக்கும், ஏற்றவேளையில் குரல் கொடுக்கப்பட்டு, அவர்கள் திருமணத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணப்படுவார்கள் என்ற நிச்சயத்தைக் கொடுத்துள்ளார்.

ஆகவே மணவாளனுடைய வருகையும், ஏற்ற நேரத்தில் கதவு அடைக்கப்படுவதும், அழைக்கப்பட்டு, தெரிந்துக்கொள்ளப்பட்டு, உண்மையுள்ளவர்கள் என்று கண்டுகொள்ளப்படும் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைக்கான முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கை நிறைவடையும் தருணமாகிய, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவும் தொடர்புடையதாய் இருக்கின்றது. அப்போது கிறிஸ்துவுடன் அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்திரராகிய மணவாட்டியின் அங்கம் ஆகுவதற்கான வாய்ப்பு (அ) கதவு என்றென்றும் மூடப்பட்டுவிடும். முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமானவர்களும் இருப்பதில்லை, எண்ணிக்கையை விட குறைவானவர்களும் இருப்பதில்லை.

நாம் இந்த யுகத்தினுடைய முடிவில் இப்பொழுது காணப்படுகின்றோம்; மணவாளன் . . . இராஜா வந்துள்ளார்; புத்தியுள்ள கன்னிகைகள் தங்கள் விளக்குகளைச் சீராக்கி, வேதவாக்கியங்களின் சாட்சியங்களை ஆராய்ந்து, அவருடைய வந்திருத்தலை ஒத்துக்கொண்டவர்களாக முன்னேறி, உறுதியுடன் திருமணத்திற்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். இந்த வகுப்பாரில் கடைசி அங்கம் உள்ளே சென்ற உடன், கதவு பூட்டப்படும். பிற்பாடு புத்தியில்லாத கன்னிகைகள், அதாவது அரைத்தூக்கம் தூங்கிக்கொண்டிருப்பவர்களாய், கவலைகளின் சுமைகளைச் சுமப்பவர்களாய், வைராக்கியத்தில் குறைவுப்பட்டவர்களாய், ஆனால் கன்னிகைகளாய் இருக்கும் புத்தியில்லாத கன்னிகைகள், தங்களைச் சுறுசுறுப்பாக்கிக்கொள்ள ஆரம்பிப்பார்கள்; இவர்கள் அனுபவம் எனும் விற்கிற இடத்திலிருந்து எண்ணையை வாங்கிக்கொள்வார்கள்; இவர்கள் யுகத்தின் முடிவு வந்துள்ளது என்பதையும், மணவாளன் வந்துள்ளார் என்பதையும், இராஜ்யத்தின் விருந்து ஆரம்பிக்கவிருக்கின்றது என்பதையும் உணர ஆரம்பிப்பார்கள். மப்பும், மந்தாரமும் உண்டாகுவதை கண்டு, திருமணத்திற்குப் போக இவர்கள் துரிதப்படுவார்கள்; ஆனால் இவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கப்படுவார்கள். பிற்பாடு கிறிஸ்துவுடன் உடன்சுதந்திரம் எனும் பரிசை அடைவதற்காக ஓடுவதன் மூலம், தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, இவர்கள் தாங்கள் தவறிவிட்டதை உணர்ந்துக்கொள்வார்கள்.

"புலம்பலும், அழுகையும், பற்கடிப்பும் அப்பொழுது உண்டாயிருக்கும்;" முன்வைக்கப்பட்டதும், நாடப்பட்டதுமான பரிசானது, அலட்சியமான நாடுகையினால் இழந்துப்போகப்பட்டுவிட்டது என்ற ஏமாற்றம் மாத்திரம் காணப்படாமல், வேறு காரணத்திற்காகவும், சில அழுகையும், வேதனையும் காணப்படும்; இவர்கள் (புத்தியில்லாத கன்னிகைகள்) யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஒரு மகா உபத்திரவக் காலத்தின் மத்தியில், தாங்கள் திடீரெனக் காணப்படுவதை உணர்வார்கள் (தானியேல் 12:1); அது உலகளாவிய ஓர் உபத்திரவமாகக் காணப்படும்; இந்த உபத்திரவத்திலிருந்து, கதவு பூட்டப்படுவதற்கு முன்பாக உள்ளே பிரவேசித்தவர்கள் தவிர, மற்றப்படி எவருக்கும் தப்புவதற்கான வாய்ப்பு இல்லை. லூக்கா 21:36-ஆம் வசனத்தில் இடம்பெறும் வார்த்தைகள் கதவு பூட்டப்படுவதற்கு முன்னதாக உள்ளே பிரவேசித்தவர்களைக் குறித்துப் பேசப்படுகின்றது; "...இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு...விழித்திருங்கள் என்றார்."

தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையானவர்கள் முழுமையாய் முத்திரைப் பண்ணப்பட்டு, தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வது வரையிலும் தூதர்கள் நான்கு திசை "காற்றுகளைப்" பிடித்துவைத்துள்ளனர்; இவர்களின் எண்ணிக்கை நிறைவுபெறும்போது, உலகத்தின் மீதான உபத்திரவம், சூறாவெளியெனச் சடுதியாய் வரும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம்.

ஆனால் விசுவாச வீட்டாருக்குள் காணப்பட்டும், ஜெயங்கொள்ளாதவர்களாகவும், சோம்பலானவர்களாகவும் காணப்படும் புத்தியில்லாத கன்னிகைகள் எனும் வகுப்பார் மாத்திரம் இராஜ்யத்தின் கதவை அடைக்கப் பெற்றிருப்பவர்களாக இருப்பதில்லை. யூதர்களானாலும், புறஜாதியாரானாலும், இவர்களில் காணப்பட்ட அக்கிரமத்தின் ஊழியக்காரர்கள் அனைவரும் தேவனுடைய இராஜ்யத்தில் (உடன்சுதந்திரர்) பங்கிலிருந்து புறம்பாக்கப்படுவார்கள்.

இந்தச் சொற்பொழிவில், நமது கர்த்தர், பரலேக மணவாளன், தம்முடைய மணவாட்டியுடன் இணைவதைத் தொடரும் மாபெரும் ஆசீர்வாதங்களைக் குறித்துப் பேசவில்லை; எனினும் மற்ற வேதவாக்கியங்கள், இந்த இணைதலைத் தொடர்ந்து சீக்கிரமாய் முழு உலமும் ஆசீர்வதிக்கப்படும் என்று தெரிவிக்கின்றது, ஏனெனில், வெளிப்படுத்தல் 22:17-ஆம் வசனத்தின்படி, "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" என்று உள்ளது. புத்தியில்லாத கன்னிகைகளுக்கு என்ன சம்பவிக்கும் என்று இந்த உவமை கூறுவதுமில்லை, ஆனாலும் இவர்கள் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோல, இரட்சிக்கப்படுவார்கள் என்று மற்றொரு வேதவாக்கியம் தெரிவிக்கின்றது (1 கொரிந்தியர் 3:15).

---

**R3831**

# "பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட்ட சம்பாஷணைகள்"

## லூக்கா 14:1-14

"தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."

ஓய்வுநாள் என்பது யூதர்கள் மத்தியில் காணப்பட்ட விருந்தின் நாளாக இருந்தது; எனினும் நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டவைகளுக்கு இணங்க, உணவுகள் முந்தின நாளே சமைக்கப்பட்டு, ஓய்வுநாளில் சூடு இல்லாமல் குளிர்ந்துப் போன ஆகாரமாகவே பரிமாறப்படுகின்றது. இப்படியான ஓய்வுநாளின் விருந்து உபசரிப்புகளுக்கு, கர்த்தர் எவ்விதமான மறுப்பும் தெரிவித்ததில்லை, ஏனெனில், அவரே பல தருணங்களில் இப்படியான விருந்துகளில் கலந்துக் கொண்டவராகக் காணப்படுகின்றார். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக பெத்தானியாவில் நடைப்பெற்ற விருந்தானது, ஓய்வுநாளில் இடம்பெற்ற ஒன்றாகவே இருந்தது; இப்படியாகவே நம்முடைய இப்பாடத்தில் நாம் பார்க்கின்ற விருந்துங்கூட, ஓய்வுநாளிலேயே நிகழ்ந்த ஒன்றாக இருக்கின்றது. மிக முக்கியமான பரிசேயனும், அதிகாரிகளில் ஒருவரிடமிருந்தே இந்த அழைப்பு வந்தது. இந்த அழைப்பானது இயேசுவுக்கும், அவருடைய சீஷர்களுக்கும், அந்தப் பரிசேயனுடைய மிக முக்கியமான நண்பர்களாகிய அநேக பரிசேயர்களுக்கும், நியாயசாஸ்திரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது.

இயேசுவைப் பற்றின கீர்த்திப் பரவிக்கிடந்தது, மேலும் அவருடைய குணலட்சணம், போதனைகள் மற்றும் அற்புதங்கள் தொடர்புடைய விஷயத்தில், அவரைத் தங்களுடைய சொந்த கணிப்பின்படி கணிக்கத்தக்கதாக, அவருடன் நெருங்கி வருவதற்கான இந்த வாய்ப்பில் இந்த மனுஷர்கள் (மற்றப் பரிசேயர்களும், நியாயசாஸ்திரிகளும்) ஆர்வமாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை; அதாவது இயேசு மதத்தில் வைராக்கியம் கொண்டவரா

அல்லது இல்லையா என்றும், அவர் தம்மைத்தாமே பெருமைப்படுத்திப் பேசுகிறவரா (அ) இல்லையா என்றும், ஏன் அவரிடத்தில் பொதுஜனங்கள் மிகவும் ஈர்க்கப்படுகின்றனர் என்றும், ஏன் அவர் ஐசுவரியவான்கள் மற்றும் செல்வாக்கு மிகுந்தவர்களிடத்திலும் ஐக்கியம் வைத்துக்கொள்ள விசேஷமாய் நாடவில்லை என்றும் கணிக்கத்தக்கதாக, அவருடன் நெருங்கி வருவதற்கான இந்த விருந்தில் கிடைக்கும் இந்த வாய்ப்பில், இந்த மனுஷர்கள் ஆர்வமாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. இயேசு ஐசுவரியவான்கள் மற்றும் செல்வாக்கு மிகுந்தவர்களிடம் ஐக்கியம் வைத்தக்கொள்ளவில்லை என்றாலும், நாம் அறிந்தது வரையிலும், இயேசு ஒருபோதும் விருந்திற்கான அழைப்பை மறுக்காமல், இம்மாதிரியான தருணங்களை, சத்தியத்தை முன்வைப்பதற்கும், பரலோகத்தில் உள்ள பிதாவை மகிமைப்படுத்துவதற்கும், தம்முடன் தொடர்புக்குள் வருபவர்கள் நன்மை அடைவதற்கும், போதிக்கப்படுவதற்கும், உதவப்படுவதற்கும் என எப்போதும் பயன்படுத்தினார்.

விருந்தாளிகள் அவரை அன்புடன்/அனுதாபத்துடன் பார்ப்பதற்குப் பதிலாக, குற்றம் காணத்தக்கதாக கவனித்தார்கள். நல்லப் பண்புகளைப் பார்ப்பதற்குப் பதிலாக, குற்றம் தேடினார்கள். ஆனால் மற்றவர்களைப் போன்று அவரிடத்தில், இவர்களால் குறை ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. அநேகமாக தற்செயலாக, அல்லது அநேகமாக திட்டமிட்டபடி, இவர்களுடன் நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் காணப்பட்டான். இம்மனுஷன் அவ்வீட்டாரின் (அ) குடும்பத்தாரின் ஓர் அங்கமாக இருக்கலாம்; வியாதியுள்ள இந்த மனுஷனைச் சொஸ்தப்படுத்தத்தக்கதாக வேண்டிக்கொள்ளும் நோக்கத்தில் கூட நமது கர்த்தர், இங்கு அநேகமாக வரவேற்கப்பட்டிருக்கலாம்.

நமது கர்த்தர் வியாதியஸ்தர் மீது அனுதாபத்தின் உணர்வை விசேஷமாய்க் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது; அவர் உடனடியாக நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷனைக் கண்டார். பரிசேயர்கள் கூட மற்றவர்களைப் போன்று அற்புதத்தைக் காண ஆர்வத்தில் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. இன்னுமாக ஓய்வுநாளில் இப்படியாக ஓர் அற்புதம் நிகழ்த்தப்படுவது என்பது, இவர்களுடைய சடங்காச்சாரத்தின்படி தவறான செயலாக இருந்தது. நமது கர்த்தர் இவ்விஷயத்தைக் கையாளுவதற்கு ஆர்வமாய் இருந்தது என்பது, தெளிவாகத் தெரிகின்றது. அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவரிடமும், சூழ்ந்து இருக்கும் விருந்துக்கு அழைக்கப்பட்ட மற்றப் பரிசேயர்களாகிய கல்விமான்களிடமும், ஓய்வுநாளில் வியாதியஸ்தனைச் சொஸ்தப்படுத்துவது நியாயமானதா (அ) இல்லையா என்று முதலாவதாகக் கேள்விக் கேட்டார். இப்படியான கேள்விகள் எந்த நேரத்திலும், ஜனங்களால் கேட்கப்படும்போது, அவைகளுக்குப் பதிலளிக்க நியாயசாஸ்திரிகள் வல்லவர்களாகவும், விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தனர்; எனினும் மாபெரும் போதகருக்கு முன்னதாக இவர்கள் அமைதிக் காத்துக்கொண்டனர்; இவர்கள் பதில் சொல்லவில்லை; அவர் என்ன முடிவு எடுத்து, செயல்படப் போகின்றார் என்பதைப் பார்க்கவேண்டும் என்றிருந்தார்கள். அவரைக் குறுக்கிட, அவர்கள் விரும்பவில்லை; இவ்விஷயத்தில் அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள விரும்பினார்கள். ஓய்வுநாளில் சொஸ்தப்படுத்தக் கூடாது என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்ட எந்தக் காரியமும் நியாயப்பிரமாணத்தில் இல்லை; நமது கர்த்தர் அற்புதத்தை நிகழ்த்தினார். "அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி அனுப்பிவிட்டார்." இவ்வார்த்தைகளானது, ஏதோ ஒரு விதத்தில் நமது கர்த்தர் வியாதியஸ்தனைச் சொஸ்தப்படுத்தினார் என்றும், இவ்விதமாக அவர் மூலமான தெய்வீக வல்லமையினாலேயே அற்புதம் நிகழ்ந்தது என்றும் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

## "வாய்ப்பேசா விலங்குகளுக்கு உதவி செய்திடுவார்கள்"

அற்புதத்தை நிகழ்த்தின பிற்பாடு, நியாயப்பிரமாணமானது ஓய்வுநாளில் வியாதியஸ்தனைச் சொஸ்தப்படுத்த தடைப்பண்ணுவதில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டு, நமது கர்த்தர், தாம் செய்ததைக் கூட்டத்தாருக்கு முன்னதாக நியாயப்படுத்தும் வண்ணமாக, "அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கிவிடானோ" என்று வினவினார் (லூக்கா 14:5). இக்கேள்விக்குப் பதிலளிக்கப்பட முடியவில்லை. தங்களுடைய சொந்த தேவை/நன்மை/அவசியம் என்றால், ஓய்வுநாளில் உதவி அளிப்பதற்குத் தடைப்பண்ணும் வண்ணமாய், நியாயப்பிரமாணத்தில் ஒன்றும் இல்லை என்ற முடிவுக்குத்

தாங்கள் வருவார்கள் என்பது இவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.. இப்படியாக ஓய்வுநாளில் மனுக்குலத்தைச் சொஸ்தப்படுத்தும் விஷயத்தில் இவர்கள் கொண்டிருந்த எண்ணங்கள்/கருத்துக்கள் தவறானது என்றும், வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காதது என்றும் தெளிவாக நம்முடைய கர்த்தர் காட்டிக்கொடுத்தார்.

சீனாய் மலையில் நியாயப்பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது முதல் எப்படி ஒவ்வொரு யூதனும் காணப்படுகின்றானோ, அப்படியே நமது கர்த்தரும் நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளுக்குக் கீழாகக் காணப்பட்டு, நியாயப்பிரமாணத்தினுடைய ஒவ்வொரு காரியத்திற்கும் கட்டுப்பட்டிருந்தார் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்து நியாயப்பிரமாணத்தைச் "சிலுவையின்மேல் ஆணியடிப்பது" வரையிலும் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது முடிந்தும்/கடந்தும் போகவில்லை என்று பார்க்கின்றோம் (கொலோசெயர் 2:14). ஆகவே நமது கர்த்தர் ஓய்வுநாளில் செய்த வியாதியஸ்தர்களின் சுகமாக்குதல், முதலானவைகள் எதுவும் நாலாம் கற்பனையையோ, அல்லது நியாயப்பிரமாணத்தின் வேறு ஏதாகிலும் அம்சத்தையோ மீறினதாகக் கருதப்பட முடியாது.

சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, யூதர்களுக்கு வழங்கப்பட்ட காலத்திற்கு முன்பாக அமலாக்கப்படவில்லை என்றும், இது (யூதர்களையல்லாமல்) வேறு எந்த ஜனங்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்றும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களைப் பொறுத்தமட்டில் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது சிலுவையில் முடிவடைந்தது என்றும் நாம் ஏற்கெனவே வேதாகம பாடங்கள் வெளியீட்டின் (VOLUME) தொகுதி 6-இல், அத்தியாயம் 8-இல் உங்களுக்குக் காண்பித்துள்ளோம். ஆகவே யூதருக்கான ஓய்வுநாளுக்குரிய கடமைகளும் கூட சிலுவையில் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய இயேசுவின் பின்னடியார்களோ மேன்மையான ஓய்வை, நிஜமான ஓய்வாகிய, "தேவனுடைய ஜனங்களுக்கான இளைப்பாறுதலை" அனுபவித்தவர்களாய் இருக்கின்றார்கள்; அதாவது தங்களது சொந்த கிரியைகளிலிருந்துள்ள இளைப்பாறுதலை, பயத்திலிருந்துள்ள இளைப்பாறுதலை, தேவனை அன்புகூருகின்றவர்களுக்குத் தேவன் கிறிஸ்து மூலமாய் ஏற்பாடு பண்ணியுள்ள மகிமையான காரியங்களின் மீதான நம்பிக்கையில் உள்ள இளைப்பாறுதலை, உலகத்தார் ஏற்றக்காலத்தில் கர்த்தருடைய அறிவிற்குள்ளாக வருவார்கள் என்றிருக்கும் உலகத்தாருக்கான நம்பிக்கையில் உள்ள இளைப்பாறுதலை அனுபவித்தவர்களாய் இருக்கின்றார்கள். இந்தச் சமாதானத்தின் நிரந்தரமான இளைப்பாறுதலானது நம்மிடம் ஒவ்வொரு நாளும் காணப்படுகின்றது.

## "இனி ஒருபோதும் பணிவிடைக்காரர்கள் அல்ல, மாறாக குமாரர்கள் ஆவர்"

வாரத்தின் முதல்நாளை கிறிஸ்துவனுக்கான ஓய்வுநாளாக அனுசரிப்பதை, நாம் கட்டளை (அ) பிரமாணம் என்று எண்ணாமல், மாறாக அந்த நாளில், நாம் பூமிக்குரிய காரியங்களைவிட்டு, புதுச் சிருஷ்டிக்கான ஆவிக்குரிய காரியங்களை சிந்திப்பதற்கும் மற்றும் ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்வதற்குமான மாபெரும் சிலாக்கியத்தை அடைவதை உணர்ந்துக்கொள்ள வேண்டும்; இன்னுமாக நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுந்து, புதிய சிருஷ்டியின் வேலையை ஆரம்பித்த நாளாகவும், அந்நாள் நினைவில் கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய ஜனங்களுக்காக, வரும் மகிமையான இளைப்பாறுதலுக்காகவும், நாம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, நமது கர்த்தருடைய சாயலில் விழித்தெழும்போது, நாம் எதிர்ப்பார்க்கும் நித்திய காலத்திற்குமுரிய பாக்கியமான பூரணத்திற்காகவும் நாம் எதிர்நோக்கி இருக்கின்றோம். இந்தச் சுவிசேஷ யுகத்தில், நம்முடைய பரம பிதா, நம்மைப் பணிவிடை வீட்டாராக அல்லாமல், மாறாக புத்திரர் வீட்டாராகவே, அதாவது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டியாகவே நம்மிடம் தொடர்புகொள்கின்றார். பணிவிடைக்காரர் வீட்டாராகிய யூதர்களுக்குக் கொடுத்திட்ட நியாயப்பிரமாணங்களை, இந்தப் புதுச் சிருஷ்டியாகிய, அவருடைய ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பது பிதாவுக்கு ஏற்றதாய் இராது.

பத்துக்கட்டளைகளில் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு காரியங்களை நினைப்பூட்டுவதன் மூலம் கூட கர்த்தர் புதிய சிருஷ்டிகளைக் குறைவாக நடத்தமாட்டார்.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள் கொலை, விபச்சாரம், விக்கிரக ஆராதனை, பெற்றோர்களைக் கனவீனப்படுத்துதல், பொய்ச்சாட்சி, பொருளாசை, அவிசுவாசத்தின் அமைதியின்மை, தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குதல் முதலியவைகளை விரும்புவதே இல்லை. இவைகளையெல்லாம் நோக்கி இருதயங்களைப் பெற்றிருப்பவர்கள், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதவர்களாகவும், கிறிஸ்துவின் ஆவி இல்லாதவர்களாகவும், அவருடையவர்கள் அல்லாதவர்களாகவுமே காணப்படுகின்றனர். அன்பின் ஆவியினால் நெஜிப்பிக்கப்பட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக புதிய சிருஷ்டிகளாக இருப்பவர்களுக்கான, கர்த்தருடைய கட்டளை என்பது, அவர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்து, தாங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட தருணத்தில் மரித்ததாகக் கருதப்பட்ட, தங்களுடைய அழியக்கூடிய சரீரங்களின் பெலவீனங்கள் அனைத்தையும் தினந்தோறும் கீழ்ப்படுத்த நாடுவதும் ஆகும். இப்படியாகவே கர்த்தருடைய ஜனங்கள் செய்யவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் வலியுறுத்தும் வண்ணமாக, "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது" (எபேசியர் 4:31) என்று கூறியுள்ளனர்; இப்படியாக அப்போஸ்தலர்கள் புதுச் சிருஷ்டிக்கு வலியுறுத்துகையில், அவர்கள் இந்தத் தவறான செய்கைகளை விரும்புகின்றது போன்று கூறாமல், மாறாக மரித்ததாக ஏற்கெனவே கருதப்படும் தங்களின் இந்த மாம்சத்தின் கிரியைகளை நீக்கிப்போட, கொன்று போட, அழித்துப்போடவே வலியுறுத்துகின்றார்கள்.

நமது பிதாவின் கையாளுதல்களும், கட்டளைகளும் ஒருபோதும் நம்முடைய மாம்சத்திற்கு இராமல், மாறாக நம்முடைய புதிய சிருஷ்டிக்கே கொடுக்கப்பட்டுள்ளது. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல;" "ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம் நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்." "இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது" (ரோமர் 8:9; 2 கொரிந்தியர் 5:16; 1 பேதுரு 4:6). நாம் மாம்சத்தின்படி நடவாமல், ஆவிக்கேற்றபடி நடக்கின்றபடியால், நாம் தேவனிடத்திலும், மனுஷரிடத்திலும் தெய்வீகப் பிரமாணத்தின் உயர்வான கோரிக்கைகளை நிறைவேற்றுபவர்களாகக் கருதப்படுகின்றோம்.

## "தாழ்த்துகிறவர்கள், உயர்த்தப்படுவார்கள்"

அநேகமாக ஏதோ ஒரு கேள்விக்குப் பதில் கொடுக்கும் வண்ணமாகவே, கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்ட விருந்தாளிகள் பற்றின உவமையைக் கூறி, முதன்மையான ஸ்தானங்களை நாடும் வழக்கத்திற்கு எதிராக எச்சரித்து, பிற்பாடு அதிக கனமுள்ள விருந்தாளி வருகையில், முதன்மையான ஸ்தானங்களில் இருந்தவர்கள், தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதைக் குறித்து நமது கர்த்தர் பேசியிருக்க வேண்டும். இந்த ஒரு சுயநலத்தை, தம்மோடு கூடப் பந்தியமர்ந்தவர்களின் மத்தியில் நமது கர்த்தர் கவனித்தார்; ஆனாலும் இக்காரியம் குறித்து, தாம் பேசத்தக்கதாக எந்தக் கேள்வியும் எழுப்பப்படாமல், தாம் கடிந்துக்கொள்ளத்தக்கதாக, கர்த்தர் இவ்விஷயத்தில் கடுமையாகக் குறுக்கிடவில்லை என்றே நாம் எண்ண வேண்டும்.

இந்த உவமையின் முழுப்பாடமும், தெய்வீகக் கண்ணோட்டத்தின்படியான, மனுஷர்கள் மத்தியிலான சரியான நடந்துக்கொள்ளுதலை விவரிக்கின்றதாகவே இருக்கின்றது, ஆகவே இது நிஜமான கலியாண விருந்தில், தேவன் அழைப்பவர்கள் விஷயத்தில், அவர் கையாளும் விதத்தை அனைவருக்கும் விவரிக்கின்றதாகவும் இருக்கின்றது. மிகுந்த தைரியமுள்ளவர்களுக்கும், அதிகாரத்தை எடுத்துக்கொள்வதற்கு நாடுபவர்களுக்கும் பிரதானமான இடங்கள் கொடுக்கப்படுவதில்லை; மாறாக தன்னைக் குறித்துச் சிறிதாக எண்ணியும், நன்றியுள்ளவர்களாக இருந்தும், தெய்வீகச் சந்நிதானத்தில் மிகவும் தாழ்ந்த இடத்தை நன்றியுடன் நாடும் தாழ்மையான மனதையுடைய மனுஷனையோ (அ) ஸ்திரீயையோ கர்த்தர் மறந்துவிடுவதில்லை.

பேராசை/புகழ் முதலியவற்றை அடையவேண்டும் என்ற ஆர்வம் மனித மனதிற்கு அவசியமான ஒன்றாகும்; இது இல்லையெனில் உலகம் இன்று இவ்வாறு முன்னேற்றமே அடைந்திருக்காது; எனினும் இது கிறிஸ்தவ குணலட்சணம் உருவாகுதல் தொடர்புடைய விஷயத்தில், மிக ஆபத்தான அம்சமாக இருக்கின்றது. "தன்னைத்தான் தாழ்த்துகிறவன், உயர்த்தப்படுவான், தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்" என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்டிருக்கும் விஷயமே, இரரஜ்யத்தின் மகிமைகளையும், கனங்களையும் வழங்குவதில் தேவனால் கையாளப்படும் கொள்கையாகக் காணப்படும் என்று நமக்கு முன்வைக்கப்பட்டுள்ள வேதவாக்கியங்கள் அனைத்தும் நமக்கு நிச்சயமளிக்கின்றது.

## "நன்மை செய்வதற்கு அதிகாரத்தை விரும்புதல்"

மற்றவர்கள் கர்த்தருடைய கரங்களிலிருந்து பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் ஏதோ ஓர் உயர்வான இராஜ்யத்தின் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் நாம் சுயநலமாய் நாடுவதாகவும், இராஜ்யத்தின் சுவிசேஷத்தினுடைய மகிமையைக் குறைவாய் மதிப்பிடுகின்றவர்களாகிய குருடாக்கப்பட்டவர்களால் நாம் அடிக்கடி குற்றம் சாட்டப்படுகின்றோம். இது முற்றிலும் நியாயமற்ற ஒரு குற்றச்சாட்டாகும்; ஏனெனில் "தற்கால சத்தியத்தில்" ஆர்வம் அடைந்துள்ளவர்கள், மாபெரும் கலியாண விருந்தில் ஏதோ இடம்பெற்றுக்கொள்ளவும், மகிமையான மணவாட்டி வகுப்பாரின் ஏதோ அங்கத்துவம் பெற்றுக்கொள்ளவும், பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கும் மாபெரும், பிரம்மாண்டமான வேலையில் பரம மணவாளனுடன் பங்கடைவதற்கான ஏதோ வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் நாடத்தக்கதாக, இராஜ்யத்தின் மரியாதைகள் மீது மிகவும் ஆசை கொண்டதாக நமக்குத் தெரியவில்லை. இப்படியான உயர்ந்த கனங்களுடனும், மகிமைகளுடனும், மரியாதைகளுடனும், அழியாமையுடனும் தொடர்புடையவர்களாய் நாங்கள் இருக்கின்றோம் என எங்களைக் குறித்து நாங்கள் எண்ணிக்கொள்ள, இது எங்களுக்குத் தோன்றின காரியமல்ல; இப்படியாக எல்லாம் தெய்வீக வார்த்தைகளில் கொடுக்கப்பட்டுள்ளபடியால், இவைகளுக்கு நாம் பாத்திரவான்களாகக் கருதப்படுவதை ஏற்றுக்கொள்வதும், இது நம்மில் கர்த்தருடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், நடக்கையையும், உண்டுபண்ணத்தக்கதாக அவர் விரும்பின வண்ணமாக அனுமதிப்பதும், விசுவாசத்தின் கடமையாக இருக்கின்றது.

இராஜ்யத்தின் மகிமை, கனம் மற்றும் ஸ்தானம் தொடர்புடைய விஷயத்தில் பேராசை காணப்படாமல், தற்கால ஜீவியம் தொடர்புடைய விஷயத்திலேயே, அதாவது திரைக்கு இந்தப் பக்கத்தில் யார் பெரியவராக இருப்பார்கள் என்பது தொடர்புடைய விஷயத்திலேயே பேராசை காணப்படுகின்றது என்பதே நம்முடைய அனுபவத்தைப் பொறுத்தமட்டில் பிரதான பிரச்சனையாக இருக்கின்றது. கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள மிகுந்த தாலந்து உடையவர்களிலும், மிகுந்த திறமை மிக்கவர்களிலும், கடமை உணர்ச்சிமிக்கவர்களிலும் சிலர், இந்த அபாயத்தில் காணப்படுகின்றார்கள் என்றும் நாம் கவனிக்கின்றோம்; மேலும் இந்தக் காரியத்தை அனைவரின் கவனத்திற்குக் கொண்டுவருவது, நமது கடமையில் ஒரு பாகமாக இருக்கின்றது என்று நாம் எண்ணுகின்றோம்; அதாவது இப்படியாக தாலந்துகள் உள்ள ஸ்தானத்தில் காணப்படுபவன், தற்காலத்தில் மகிமைக்காகவும், கனத்திற்காகவும், மதிப்பிற்காகவும், ஸ்தானத்திற்காகவும் பேராசையுடன் நாடுவது என்பது, அவன் கர்த்தருடைய தயவை இழந்துப்போவதற்கும், (ஒருவேளை பெருமையானது, அவனைச் சிறுமந்தையின் அங்கமாக ஏற்றுக்கொள்ளுவதற்கு முற்றிலுமாய்த் தடைப்பண்ணிப்போடாத நிலையில் அவன் காணப்பட்டால்) இராஜ்யத்தில் மிகுந்த தாழ்வான ஸ்தானத்தையாகிலும் இறுதியில் பெற்றுக்கொள்வதையும் இழந்துப்போகப் பண்ணுவதற்கும் ஏதுவாயுள்ளதை அவனுக்கு உணர்த்தும் வண்ணமாக, ஒவ்வொரு கர்த்தருடைய அருமையான ஜனமும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யவேண்டும். "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:6).

## "ஏழைகளையும், நண்பர்களற்றவர்களையும் நினைவில் கொள்ளுங்கள்"

அநேகமாக இன்னும் எழுப்பப்பட்ட கேள்விக்கே, நமது கர்த்தர் விருந்து ஏற்பாடு பண்ணப்படுவதும், அதில் யார் அழைக்கப்பட வேண்டும் என்பதும் தொடர்பான விளக்கத்தை

கொடுத்திருக்க வேண்டும். அவர் ஒரு புதிய கருத்தை முன்வைத்தார். பதில் விருந்து எவர்களுடைய வீட்டில் அழைத்துக் கொடுக்கப்படுமோ, அவர்களையே விருந்துக்கு அழைக்கப்படும் வழக்கம் இருந்தது. கைம்மாறு என்ற கருத்தானது, இவ்விஷயத்தில் சுயநலமான கருத்தாக இருந்தது. ஆனால் இப்படியாக நம்மையும் வீட்டிற்கு அழைப்பார் என்று எண்ணி, ஒருவரை நாம் அழைப்பது தவறு என்று காண்பிக்கும் வண்ணமாக நமது கர்த்தருடைய கருத்து இருந்தது என நாம் எண்ண வேண்டியதில்லை. இப்படியாக அழைத்துக்கொள்வது நன்மையான கைம்மாறாக இருப்பினும், கர்த்தருடைய பார்வையில் இப்படிச்செய்வதின் மூலம் எந்தப் பலனும் இருப்பதில்லை, ஏனெனில் ஒவ்வொருவனும், தனக்கான பலனை ஒருவருக்கொருவரிடமிருந்து பெற்றாகிவிட்டது.

தம்மையும், தம்முடைய சீஷர்களையும் விருந்துக்கு அழைத்த வீட்டாருக்கு பிரதி விருந்து செய்யமுடியாதவராக தாம் இருக்கையில், தம்மை அழைத்து விருந்துக்கொடுத்தவர், உண்மையில் இரக்கத்துடன் செயல்பட்டிருக்கின்றார் என்றும், இரக்கமான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றார் என்றும், தம்மை விருந்துக்கு அழைத்தவருக்குக் காண்பிக்க அநேகமாக கர்த்தர் விரும்பியிருக்கலாம். ஏழைகளுக்கும், உதவியற்றவர்களுக்கும், ஊரார்களுக்கும், சப்பாணிகளுக்கும், குருடர்களுக்கும், விருந்தளிப்பது என்பது, அவர்களுக்கு இரக்கம் காட்டுவதாகவும், தர்மம் பண்ணுவதாகவும், தற்கால ஜீவியத்தில் எவ்விதமான கைம்மாறு கிடைக்காததாகவும், எதிர்க்கால ஜீவியத்தில் நிச்சயமாய் ஆசீர்வாதம் கிடைக்கின்றதாகவும் காணப்படும். விருப்பத்துடனும், அறிந்தும், சரியான நோக்கத்துடனும் செய்யப்படும், ஒவ்வொரு நல்ல செய்கைகளுக்கும் நிச்சயமாய் ஆசீர்வாதம் உண்டு என்றும், தவறான நோக்கத்துடனும், தீமையான உணர்வுகளுடனும் செய்யப்படும் ஒவ்வொரு தீமையான செய்கைகளும், ஒவ்வொரு பாதகமான காரியங்களும் தற்காலத்திலோ (அ) எதிர்க்காலத்தின் ஜீவியத்திலோ நிச்சயமாய் ஏதோ வகையிலான தண்டனையைக் கொண்டுவரும் என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காண்பிக்கின்றார்.

இப்படிப்பட்டதான நற்கிரியைகளுக்கு, நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பதில் செய்யப்படும் என்று நமது கர்த்தர் கூறியுள்ளார்; ஆனால் இந்த வார்த்தைகளை அவர் தம்முடைய சீஷர்களாகிய நீதிமானாக்கப்பட்டவர்களிடம் கூறாததினால், இப்படியாக தரித்திரர்களுக்கு விருந்து பண்ணுகிறவர்கள், முதலாம் உயிர்த்தெழுதலில், பரிசுத்தர்களும், பாக்கியவான்களாகவும், தேவனுடைய இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், மணவாளனுடன் மணவாட்டி வகுப்பாராகவும், இராஜரிக வகுப்பாராகவும் இருப்பவர்கள் மத்தியில் உன்னதமான ஸ்தானத்தை அடைவார்கள் என்று புரிந்துக்கொள்ளப்பட முடியாது. இது நியாயமாய் இருக்கமுடியாது, ஏனெனில் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கு, பரிந்துப்பேசுபவராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைப்பது மாத்திரம் அல்லாமல், இடுக்கமான வழியில் உண்மையாய் நடப்பதும் அவசியம் என்று மற்ற வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அப்படியானால் இயேசுவினுடைய வார்த்தைகளின் அர்த்தம் என்ன? மகிமையான தலை மற்றும் மணவாளனுடனான மணவாட்டிகளாகிய, பரிசுத்தவான்களை மாத்திரம் உள்ளடக்கும் முதலாம் உயிர்த்தெழுதலானது, நமது கர்த்தரால் பிரசங்கிப்பட்டதும், "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவது போல, பூமியிலும் செயல்படுவதாக" என நாம் ஜெபிக்கும்படிக் கற்றுக்கொடுக்கப்பட்டதுமான இராஜ்யத்தினுடைய ஆரம்பித்தலைக் குறிக்கின்றதாக இருக்கும் என நாம் பதிலளிக்கின்றோம். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குக்கொள்பவர்கள் உலகத்திற்கு இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், நியாயாதிபதிகளாகவும் இருப்பார்கள். (1 கொரிந்தியர் 6:2; வெளிப்படுத்தல் 20:6). முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, உலகத்திற்கான ஆசீர்வாதமும், அனைத்தையும் திரும்பக்கொடுக்கும் காலங்கள் ஆரம்பமாகும்! அப்பொழுது முழு உலகமும், உதவி பெறத்தக்கதாக ஆயிர வருடங்கள் இந்த நியாயாதிபதிகள் முன்பு நிற்பார்கள்; ஒருவேளை உலகத்தார் உதவி பெற விரும்பினால், மனுஷீக பரிபூரணத்தை அடைவார்கள் (அ) ஒருவேளை தங்களுக்கான மகிமையான வாய்ப்புகளுக்கு இணங்க மறுப்பார்களானால், இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

உலகத்தாருடைய நியாயத்தீர்ப்பின் நாளில், ஏழைகளுக்கு இரக்கத்தினால் செய்யப்பட்ட ஒவ்வொரு கிரியைகளும், அவனவன் குணலட்சணத்தின் விஷயத்தில் சில ஆசீர்வாதம் கொண்டு வந்துள்ளதைக் காண்பான், அதாவது அவனவன் எந்த

இடத்திலிருந்து பரிசுத்தத்திற்கு நேரான பெரும்பாதையான வழியில் நடக்க ஆரம்பிக்க வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்துள்ளதைக் காண்பான். மிகவும் சீர்க்கெட்டவர்கள், அதாவது குணலட்சனத்தினுடைய வளர்ச்சியின் விஷயத்தில், தற்கால ஜீவியத்தில் எதையுமே செய்யாதவர்கள், பெரும்பாதையான வழியின் ஆரம்ப எல்லையிலிருந்தே நடக்க வேண்டியிருக்கும், இன்னுமாக நெடுந்தொலைவில் இருக்கும் பரிபூரணத்தை நோக்கி, நீண்ட பயணமும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்; ஆனால் தற்காலத்திலேயே நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்து, தங்களுடைய சக மனிதர்களுக்கு உதவியும், ஆறுதலும் அளிக்க நாடியுள்ளவர்கள், இன்னும் விசேஷமாக கர்த்தருடைய சீஷனுக்குக் குடிக்க ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தவர்கள், இராஜ்யத்தில் நன்மை அடைவார்கள். ஆகவே ஊராருக்காக, ஏழைக்காக, குருடனுக்காக ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தவர்கள் (அ) உதவி செய்தவர்கள் நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலைப் பின்தொடரும் ஆயிர வருட யுகத்தில் பலனையும், ஆசீர்வாதத்தையும் அடைவார்கள் என்பதே கர்த்தருடைய வார்த்தைகளின் அர்த்தமாகும்.

## "பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் பேசப்படும் சம்பாஷணைகளின் முக்கியத்துவம்"

இப்படியாக பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் பேசப்படும் சம்பாஷணையின் (table-talks) விஷயத்தில் நமது கர்த்தர் முன்வைத்த மாதிரியானது, நம்முடைய பைபிள் ஹவுசில் (bible house) பல வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு, மிகுந்த நன்மையைக் கொடுத்து வருகின்றது. ஒழுங்குமுறை கடைபிடிக்கப்படும் பொழுது மிகுந்த நன்மை உள்ளதை நாங்கள் கண்டுபிடித்தோம். எல்லா நாள் காலையிலும் சரியாக ஏழு மணிக்கு, துதியும், ஜெபமும் ஏறெடுக்கப்படுகின்றது (ஞாயிறு அன்று எட்டு மணிக்கு ஏறெடுக்கப்படுகின்றது). பின்னர் நாங்கள் மேஜையைச் சுற்றி அமர்ந்துக் கொண்டு, உணவுக்காக நன்றி செலுத்திக்கொண்டு, இந்த எங்களுடைய ஐக்கியத்தின் நிமித்தம் ஆசீர்வாதம் கிடைக்க ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது; பின்னர் எங்களில் ஒருவர் அன்றைய நாளுக்கான பரலோக மன்னாவின் வசனத்தை வாசிக்கின்றார். காலை உணவு நடந்துக்கொண்டிருக்கையில் கேள்விகள் கேட்கப்பட்டு, வசனம் முழுமையாய் விவாதித்து ஆராயப்படுகின்றது. மேஜையிலிருந்து எழும்பும் நேரத்தில், மன்னா வசனத்திற்கான விளக்கவுரை வாசிக்கப்படுகின்றது. இரவு நேரம் உணவு உண்ணப்படும்போதும், அங்கு அமர்ந்து இருக்கும் யார் ஒருவராலும் கேள்வி எழுப்பப்பட்டு, பொதுவாய்க் கருத்துகள் தெரிவிக்க, பொதுவாய் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றது; அதாவது யாரேனும் கேள்வி கேட்க, பின்னர் பதில் கூறுவதற்கான வாய்ப்புப் பொதுவாக வைக்கப்படுகின்றது. மேஜையில் தலைமை வகுப்பவர், இறுதியில் கேள்விக்கான இறுதி பதிலைக்கொடுக்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இம்மாதிரியான சம்பாஷணைகள், அனைத்து விதமான தேவனுடைய வார்த்தைகள் பற்றியும் இருப்பதினால், இப்பதில்கள் அங்கிருப்பவர்கள் ஏற்கெனவே கற்றுக்கொண்டுள்ளது பற்றின ஞாபகங்களைப் புத்துயிர் பெறச்செய்கின்றது. இந்த ஒரு முறையை நாம் தேவனுடைய அருமையான ஜனங்கள் அனைவருக்கும் பரிந்துரைக்கின்றோம். இம்மாதிரியான நேரங்களில் உட்கொள்ளப்படும் உணவும் நன்றாயிருக்கின்றது, அதேவேளையில் ஆவிக்குரிய புத்துணர்வும் மிகுந்த நன்மைக்கு ஏதுவாய் இருக்கின்றது. இம்மாதிரியான வேளையில் தர்க்கங்கள் எழும்புவதற்கு நாம் ஆதரியாமல், மாறாக ஒவ்வொருவரும் அந்த வசனம் (அ) அந்தக் கேள்வி தொடர்புடைய விஷயத்தில், தான் புரிந்துக்கொண்டுள்ளதை தெரிவிப்பதையே நாம் ஆதரிக்கின்றோம். நம்முடைய சுறுசுறுப்பான மனங்களை, இப்படியான பயனுள்ள திசைகளில் திருப்பி, சுறுசுறுப்பாய் வைத்துக்கொள்வது நன்மைக்கு ஏதுவாய் இருக்கும். நம்முடைய கர்த்தரால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த மாதிரி, மிகவும் ஒரு நல்ல மாதிரியாகவே இருக்கின்றது.

**R2701**

# "ஏற்க மறுக்கப்பட்ட இராஜ விருந்து"
## லூக்கா 14:15-24

"எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள்" (வசனம் 17)

இயேசு பரிசேயனுடைய வீட்டில் பந்தி அமர்ந்துக் கொண்டிருக்கையில், பந்தியில் பேசிக்கொண்டிருந்தார். கைம்மாறு திரும்பிச் செய்ய முடியாதவர்களாகிய ஏழைகளின் நலனுக்காக விருந்து செய்யப்படவேண்டும் என்றும், கைம்மாறு பெற முடியாததினால், நிச்சயமாய் எதிர்க்காலத்தில், இராஜ்யத்தில் கைம்மாறுக்கும் மேலான திவ்விய ஆசீர்வாதம் அளிக்கப்படும் என்றுமுள்ள கருத்தைத் தெரிவித்ததின் மூலமாக, நமது கர்த்தர் ஜீவியத்தின் காரியங்கள் மாத்திரம் அல்லாமல், எதிர்க்காலத்தைப் பற்றியுமான காரியங்களை, தம்மைச் சுற்றியிருந்தவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதிநிமித்தம் கூட்டத்தில் இருந்த ஒருவன் லூக்கா 14:15-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறினான், அதாவது "ஆ, ஆம்! நாம் எதிர்ப்பார்க்கும் அந்த இராஜ்யம், ஓர் ஆசீர்வாதமான காலமாய் இருக்கும். தேவன் அளிப்பதாக வாக்களித்துள்ள மாபெரும் விருந்தில் உள்ள திரளான காரியங்களில் பங்கடைவது, எத்துணை ஆசீர்வாதமாய் இருக்கும்!" என்ற விதத்தில் கூறினான். இவ்வார்த்தைகளைக் கூறினவன், இராஜ்யம் தொடர்புடைய ஏசாயாவின் தீர்க்கதரிசன வசனத்தை நன்கு அறிந்தவனாய் இருந்திருக்கவேண்டும்; இந்தத் தீர்க்கத்தரிசனத்தில் உலகத்திற்கான தேவனுடைய இரக்கங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள், விருந்து எனும் அடையாள மொழியில் விவரிக்கப்பட்டுள்ளது; "சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்" (ஏசாயா 25:6).

இப்படியாக பந்தியில் காணப்பட்டவர்களுடைய மனங்களானது பூமிக்குரிய காரியங்களிலிருந்தும், பொதுவான காரியங்களிலிருந்தும், வம்பளப்பிலிருந்தும், தேவனுடைய கிருபையான வாக்குத்தத்தங்களிடத்திற்கு வழிநடத்திச் செல்லப்பட்டது. இதுவே அநேகமாக நமது கர்த்தர் பரிசேயனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டதற்கான காரணமாகக் கூட இருக்கலாம்; அதாவது இப்படியாக இத்திசையை நோக்கிப் படிப்படியாக சம்பாஷணையைத் திருப்புவதற்காக இருந்திருக்கலாம். இந்த இராஜ்யமும், அதின் ஆசீர்வாதங்களும், அதில் பங்கடைவதற்கான அழைப்பையும் பற்றி ஏதோ சிலவற்றைப் போதிப்பதற்கான வாய்ப்பு இப்பொழுது நமது கர்த்தருக்குக் கிடைத்தது; அதைப் பயன்படுத்திக்கொண்டார். ஒருவேளை அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் தங்கள் மனதில் ஏசாயாவின் தீர்க்கதத்ரிசனத்தையும், ஆபிரகாமுக்கான தேவனுடைய வாக்குத்தத்தையும் கொண்டுவந்திருப்பார்களானால், கர்த்தருடைய இராஜ்யம் அல்லது மலை, இஸ்ரயேல் வீட்டார் என்றும், இந்த இஸ்ரயேல் வீட்டார் மேசியாவின் கீழ், மகிமையான மற்றும் உயர்த்தப்பட்ட நிலையில் காணப்படுவார்கள் என்றும், இந்த இராஜ்யத்திலும், இந்த இராஜ்யத்தின் மூலமாகவுந்தான் சகல ஜாதிகளுக்குமான திவ்விய ஆசீர்வாதங்களாகிய விருந்து பரிமாறப்படும் என்றும் அவர்கள் புரிந்திருப்பார்கள். இப்பொழுது மாபெரும் ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் உடைய சுவிசேஷ அழைப்பின் மீது, ஓர் உவமையைக் கூறுவதன் மூலம் கவனத்தைத் திருப்பினார்; இன்னுமாக அங்கு இருக்கும் அனைவரும் அந்த இராஜ்யம் ஆசீர்வாதமான ஒன்று என்றும், அங்குப் பரிமாறப்படும் விருந்து மிகவும் வாஞ்சிக்கப்படத்தக்கதான ஒன்று என்றும், பொதுவாக ஒப்புக்கொண்டாலும் அந்த இராஜ்யத்திற்கான அழைப்பு விடுக்கப்படும்போது, பெரும்பாலானவாகளுடைய இருதயங்களானது பூமிக்குரிய காரியங்களுடன் இசைந்து இருப்பதினால், இந்த அழைப்பைப் பொருட்படுத்துவதில்லை என்ற உண்மையைத் தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர முயன்றார்.

உவமையில் ஒரு மாபெரும் விருந்து ஏற்பாடுப் பண்ணப்பட்டது; அந்த விருந்தை ஏற்பாடு பண்ணின மனுஷனுடைய நண்பர்கள் ஏராளமானவர்கள் முன்கூட்டியே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தனர்; அதாவது விருந்து ஆயத்தமாகிவிட்டது என்று அறிவிக்கப்படும்போது, விருந்தாளிகள் ஆயத்தமாய்க் காணப்படத்தக்கதாக, விருந்தாளிகளுக்கு முன்கூட்டியே அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த உவமையில், தேவனே,

விருந்தை எற்பாடு பண்ணின மனுஷனாய் இருந்தார்; மேலும் யூத தேசத்தாரே, அம்மனுஷனுடைய நண்பர்களாய் இருந்தார்கள்; இந்த யூத தேசத்தாருக்கே, தேவன் அதிகமான அனுகூலங்களைக் கொடுத்திருந்தார்; இவர்களுக்கே தேவனுடைய வார்த்தைகள்/தீர்க்கத்தரிசனங்கள் கொடுக்கப்பட்டது, அதாவது மனிதனுடைய இரட்சிப்பிற்கான தெய்வீகத் திட்டம் பற்றின அறிவு அதிகமாய்க் கொடுக்கப்பட்டிருந்தது; இன்னுமாக இவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரென உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், இவர்களுக்கு இந்த மாபெரும் விருந்திற்கான அழைப்பும், சிலாக்கியமும், வாய்ப்பும் கிடைக்கும் என்று வாக்களிக்கவும் பட்டது. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துக் கொண்டேன், ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்" என்று (ஆமோஸ் 3:2), கர்த்தர் தீர்க்கத்தரிசி மூலம் இவர்களிடம் பேசினார். இஸ்ரயேலர் மாத்திரமே இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டனர்; ஆனால் கர்த்தருடைய நாள் வரையிலும், விருந்து ஆயத்தமாகவில்லை, ஆகவேதான் பங்கெடுங்கள் என்பதற்கான அழைப்பு இன்னமும் விடுக்கப்படவில்லை. இறுதியில் காலம் வந்தது. பாவநிவாரண பலியின் காளை அடையாளப்படுத்தும் கிறிஸ்து, தம்மை ஏற்கெனவே கொடுத்துவிட்டார். நமது கர்த்தர் யோவான் முன்னால், தம்மை மரணம் வரையிலுமான முழு அர்ப்பணிப்புப் பண்ணினபோது, அதாவது பலி ஒப்புக்கொடுத்த நேரத்திலேயே, பலி நிறைவேறிவிட்டதாகக் கருதப்பட்டது. பாவங்களுக்கான இந்தப் பலியின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், தேவனால் உடனடியாக ஆபிரகாமின் மூலம் தேவன் நீண்ட காலத்திற்கு முன்னதாக வாக்களித்துள்ள ஆசீர்வாதங்கள் மற்றும் தெய்வீகக் கிருபையின் வெளிப்படுத்தல் எனும் மாபெரும் விருந்திற்கு, முன்னமே வாக்களித்துள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்க ஆரம்பிக்க முடியும்.

ஆகவேதான் இயேசு வந்து, தம்முடைய சீஷர்களை அழைத்து, "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கின்றது" என்றும், தேவன் நீண்டகாலமாய் வாக்களித்துள்ள இந்தத் தேசத்திற்கான கொழுத்தவைகளிலான மாபெரும் விருந்து ஆயத்தமாய் இருக்கின்றது என்றும், யாரெல்லாம் விரும்புகின்றார்களோ அவர்களெல்லாரும் வந்து, பெற்றுக்கொள்ளுங்கள் என்றுமுள்ள செய்திகளுடன் அவர்களை அனுப்பி வைத்தார். இயேசு மற்றும், பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், பின்னர் எழுபது சீஷர்கள் மூலம், யூதேயா முழுவதும் கொண்டு செல்லப்பட்ட செய்தியானது, கிருபை பெற்ற (இஸ்ரயேல்) ஜனங்கள் பொறுமையற்றுக் காத்திருந்தும், பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாக எதிர்ப்பார்த்து, ஜெபம் பண்ணினதுமான மாபெரும் விருந்தாகிய, இராஜ்யத்தின் மாபெரும் சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளை வந்து, அனுபவிப்பதற்கான அழைப்பாகக் காணப்பட்டது.

ஆனால் இராஜ்யத்தின் அழைப்பு உண்மையாக விடுக்கப்பட்டபோதோ, மாபெரும் விருந்தின் ஆசீர்வாதங்களில் பங்குக்கொள்வதற்கான அழைப்பு அவர்களுக்கு உண்மையாக விடுக்கப்பட்ட போதோ, மற்றவர்கள் எதிர்ப்பார்த்ததற்கு நேர்மாறாக, அவர்கள் இராஜ்யத்தையும், எதிர்க்கால காரிங்களையும் விரும்பவில்லை என்பது வெளியானது என்று உவமை காட்டுகின்றது. மாறாக இராஜ்யத்திற்கான அழைப்பானது, அவர்களால் ஒரே மாதிரியான விதத்தில் மறுக்கப்பட்டதுமான காரியமானது, மறுப்புத்தெரிவித்தவர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டது போன்று தோன்றுகின்றது. தங்களால் வாஞ்சிக்கப்பட்ட காரியம் என்று கூறப்பட்டதுமான தேவன் வாக்களித்துள்ள காரியங்களில், தங்களால் ஈடுபடமுடியாது என்பதற்கு அவர்கள் கூறின காரணங்கள் என்பது அவர்கள் நிறைவேற்ற வேண்டிய வேறே கடமைகளின் பாரங்களாக இருந்தது; இந்தப் பாரங்களோ, அவர்கள் இராஜ்யத்திற்கான தெய்வீக அழைப்பிற்குச் செவிக்கொடுக்க அவர்களுக்கு எந்த நேரத்தையும் கொடுக்கவில்லை. ஒருவனுக்கு தன்னுடைய வயலை பார்க்க வேண்டிய பாரம் இருந்தது; இப்படியாக அவன் வயலில் வேலை செய்வதாலேயே, அவனுடைய தொழில் நன்றாக இருக்கும் என எண்ணினான்; இன்னொருவனோ, எந்த வேலையும் இல்லாதவர்களால் ஆவிக்குரிய விருந்திற்குக் கவனம் செலுத்த முடியும், ஆனால் தன்னுடைய நேரமானது, தன்னுடைய ஆஸ்திகளை, எருதுகளை, ஆடுகளை, தொழிலைக் கவனிப்பதற்கே போதுமானதாக இருக்கின்றது என்று எண்ணினான். இன்னொருவன் தன்னுடைய கடமைகளுக்கும், குடும்ப உறவுகளுக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் தன்னுடைய கவனம் முழுவதும் தேவைப்படுகிறதினால், தன்னால் இராஜ்யத்தின் சிலாக்கியங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று எண்ணினான்.

இப்படியாக இருந்த மாம்சீக இஸ்ரயேலர்களின் இதே மனநிலையே, இன்று ஆவிக்குரிய இராஜ்யம் அறிவிக்கப்படும்போதும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் மனநிலையாகவும் காணப்படுகின்றது. அநேகர் ஜீவியத்தின் உண்மையான மற்றும் நடைமுறைக் காரியங்களுக்கே தங்களுடைய கவனம் தேவையாக இருக்கின்றது என்று எண்ணுகின்றனர். இவர்கள் இந்த உலகத்தின் காரியங்களைத் தொடர்ந்துச் செய்துகொண்டிருக்கவும், உலகத்தோடேயே காணப்படுவதற்கும் விரும்புகின்றனர். மேலும் பூமிக்குரிய காரியங்களிலும், உறவு காரியங்களிலும் காணப்படுகின்றதான, இப்படிப்பட்டதான விருப்பங்களானது, இவர்களுக்கு மகிமையான ஆயிர வருட இராஜ்யத்தில், கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகப் பங்கடைவதற்கு, அதாவது நமக்கு வந்துள்ள பரம அழைப்பாகிய மாபெரும் விருந்தில் பங்கடைவதற்கான தெய்வீக அழைப்பிற்குப் பதில் கொடுக்க இடறலாக இருக்கின்றது எனக் காண்கின்றனர். ஒரு விதத்தில் பார்க்கப்படும்போது, இவை அனைத்தும் சரிதான், ஏனெனில் இதநிமித்தம் கர்த்தர் பங்குக்கொள்ள வேண்டும் என விரும்பாத ஒரு வகுப்பார், இராஜ்யத்தின் இந்த அழைப்பிற்கு விலகிச் செல்வர்; ஒருவேளை இப்பபடிப்பட்டவர்கள் உள்ளே வந்துவிட்டாலும், பிற்பாடு வெளியேற்றப்படுவது அவசியமாகவே இருக்கும். தேவன் அநேகருக்கு அழைப்பு விடுத்திருந்தாலும், யார் மற்றச் சிலாக்கியங்களைக் காட்டிலும் இராஜ்யத்தின் சிலாக்கியத்தை உயர்வாக மதிப்பிடுவார்களோ, அதாவது யார் இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதாக எதையும் மற்றும் எல்லாவற்றையும் பலிச்செலுத்த விரும்புகிறார்களோ, அப்படிப்பட்டவர்களையே இந்த விருந்திற்கு தேவன் நாடித்தேடுகின்றார்.

உவமையில் கூறப்பட்டுள்ளதான இந்த முதலாம் அழைப்பானது, நமது கர்த்தருடைய ஊழிய வருடங்களின் முதலாம் பாகத்தைக் குறிக்கின்றது. நமது கர்த்தருடைய ஊழிய வருடங்களின் முதலாம் பாகங்களானது, விசேஷமாக அந்தத் தேசத்தில் முன்னிலை வகுத்தவர்களாகவும், நமது கர்த்தரால் சொல்லப்பட்டது போல, மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து இருந்தவர்களாகவும், ஒட்டுமொத்த தேசத்திற்கு அடையாளமானவர்களாகவும் காணப்பட்ட பரிசேயர்களை, வேதபாரகர்களை மற்றும் நியாயசாஸ்திரிகளை ஆர்வப்படுத்துவதற்கு நேராகக் காணப்பட்டது; மேலும் இவர்கள் அழைப்பை மறுத்தது என்பது, அழைப்பை ஒட்டுமொத்த தேசமும் மறுத்ததாக இருந்தது. தம்முடைய மேசியாத்துவத்திற்கான சாட்சியங்களை, ஆசாரிய வகுப்பாருக்கு முன்பாக கொண்டு வருவதில் நமது கர்த்தர் மிகவும் கவனமாய் இருந்தார்; ஆகவேதான், அவர் பத்துக் குஷ்டரோகிகளைச் சொஸ்தப்படுத்தின சம்பவத்தில், அவர்கள் காரியத்தை வேறு எந்த மனுஷரிடத்திலும் அறிவியாமல், அவர்களை ஆசாரியர்களிடத்தில் போய், காண்பிக்கும்படி கட்டளையிட்டார் என்று பார்க்கின்றோம். இவ்வாறாக மற்றவர்களைக் காட்டிலும் குறிப்பாக ஆசாரிய வகுப்பாரே, நமது கர்த்தருடைய அற்புதமான கிரியைகளைக் குறித்து நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே குறிப்பாக ஆசாரிய வகுப்பாரே, மற்றவர்களைக் காட்டிலும் விருந்திற்கான அழைப்பைப் பெற்றிருந்தனர். எனினும் இஸ்ரயேலின் பிரதான பிரதிநிதிகள் அழைப்பிற்கு ஆயத்தமற்று இருந்த காரியமானது எவ்விதத்திலும் (எதற்கும்) தடையாக இருப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை; பின்னர் நமது கர்த்தர், தம்முடைய சீஷர்கள் வாயிலாக அழைப்பை, இன்னொரு வகுப்பாருக்குக் கொடுத்தார்.

அதன் தலைவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த தேசத்திற்கான பரீட்சை, கல்வாரியில் அல்லது கல்வாரியின் சம்பவம் நடைப்பெறுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்னதாக, நமது கர்த்தர் கழுதையின் மேல் ஏறிச்சென்று, எருசலேம் பட்டணத்திற்காக, "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டு அழுததோடு நிறைவடைந்தது (லூக்கா 13:34, 35). அதாவது "ஒரு தேசமாக, ஒரு ஜாதியாராக, நீ மாபெரும் விருந்திற்கான தெய்வீக அழைப்பை மறுத்துவிட்டாய்; மேலும் நீயும் ஒரு ஜாதியாய் அதை ருசி பார்க்க முடியாது" என்ற விதத்தில் கர்த்தர் கூறினார். எனினும் தீர்க்கத்தரிசிகள் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீக நோக்கம் மற்றும் வாக்குத்தத்தங்களுக்கு இசைவாக, அந்தத் தேசம் இராஜ்யத்தின்

சிலாக்கியங்களுக்கு அபாத்திரமாய்க் காணப்படுகின்றது என்று நிரூபித்துக் காண்பித்த பிற்பாடும், தேவனுடைய இரக்கமானது அந்தத் தேசத்தின் பல்வேறு தனிநபர்களிடம் கடந்துச் சென்றது. அப்போஸ்தலர்கள் ஆள் சேர்க்க அனுப்பப்பட்டார்கள், ஒட்டுமொத்த தேசத்தைச் சேர்க்க அல்ல, மாறாக இந்த விருந்தில் பங்குக்கொள்ளத்தக்கதாக, தாழ்மையான மனங்களைக் கொண்டிருந்த தனிப்பட்ட நபர்களைச் சேர்க்க அனுப்பப்பட்டார்கள்; மேலும் ஒட்டுமொத்த இஸ்ரயேல் தேசத்திற்காக அல்லாமல், தனிப்பட்ட நபர்களுக்கான இந்த அழைப்பிற்கு, யாரெல்லாம் தங்களுடைய பாத்திரமற்ற தன்மையை உணர்ந்துக் கொண்டவர்களாக இருந்தார்களோ, அதாவது தாங்கள் பூரணமானவர்கள் அல்ல என்று ஒப்பக்கொண்டவர்களாகவும், பூரணத்தை வாஞ்சித்தவர்களாகவும், இராஜ்யத்தின் சிலாக்கியங்களில் பங்குக்கொள்வதற்கான அழைப்பில் களிக்கூர்ந்தவர்களாகவும், இதற்காக அனைத்தையும் விட்டுவந்தவர்களாகவும் இருந்த குருடர்களால், சப்பாணிகளால் செவிச்சாய்க்கப்பட்டது. இவர்கள் மத்தியில் அநேகர் ஞானிகளாக இல்லை, அநேகர் பிரபுக்களாக இல்லை, அநேகர் கல்விமான்களாக இல்லை, மாறாக பிரதானமாய்த் தரித்திரர்களாய் இருந்தனர்; தரித்திரர்கள் மத்தியில் அநேகர் தாழ்மையானவர்கள் இல்லை என்றாலும், தரித்திரர்கள் மத்தியிலேயே அதிகமானோர் அங்கீகரிக்கத்தக்கதான குணலட்சணங்களில் காணப்படுகின்றனர். ஐசுவரியவான்கள் மத்தியில் அதிக தாழ்மை எப்போதும் அரிதான ஒன்றாகவே இருக்கின்றது.

இந்த இரண்டாம் அழைப்பானது கொடுக்கப்பட்ட பட்டணத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் இருந்த ஏழைகளை, சப்பாணிகளை, குருடர்களை மற்றும் ஊரார்களை நம்முடைய நாட்களில் கூட்டிச் சேர்ப்பது கடினமான காரியமாக இருப்பினும், நம்முடைய கர்த்தருடைய நாட்களில் வறுமையில் உள்ளவர்கள் அடங்கிய திரளானகூட்டத்தைச் சிறு கட்டளையிலேயே கூட்டிச் சேர்த்துவிடுவது சுலபமான காரியமாகும்.

இந்த இரண்டு அழைப்புகளும் பட்டணத்திற்கே, அதாவது இஸ்ரயேலுக்கே, தேவனுடைய பெயரளவிலான இராஜ்யத்திற்கே கொடுக்கப்பட்டது கவனிக்கப்பட வேண்டும். எனினும் இராஜ்யத்தின் வகுப்பாருக்குத் தேவனால் முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையை நிறைவு பண்ணுவதற்குப் போதுமானவர்களை, இந்த இரண்டு அழைப்புகளும் கண்டுபிடிக்க தவறிவிட்டது. அனைத்து இஸ்ரயேலர்களையும் வர பண்ணுவதற்கு அவரால் தூண்ட முடியும், ஆனால் அவரோ சரியான இருதய நிலையில் இல்லாதவர்களைத் துரத்தும் விதத்திலேயே, வேண்டுமென்றே விருந்திற்கான அழைப்பை விடுத்தார், அதாவது உத்தம இஸ்ரயேலர்களைக் கவரும் விதத்தில் அழைப்பை விடுத்தார்; அதாவது தங்களுடைய சொந்த தகுதியற்ற நிலையை உணர்ந்து, ஒப்புக்கொண்டவர்களாகவும், விருந்தில் பிரவேசிப்பதற்கு மகிழ்ச்சியடைகிறவர்களாகவும், தங்களுடைய சொந்த பூரணமின்மையாகிய அழுக்கான கந்தைகளை மூடுவதற்கென, விருந்தாளிகளுக்கு அளிக்கப்படும் வஸ்திரங்களைப் (கிறிஸ்துவின் நீதியை) பெற்றுக்கொள்ள மகிழ்ச்சியடைகிறவர்களாகவும் இருக்கும் உத்தம இஸ்ரயேலர்களைக் கவரும் விதத்திலேயே அழைப்பை விடுத்தார். ஆனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கான எண்ணிக்கையை நிறைவு செய்யத்தக்கதாக, இப்பொழுது இஸ்ரயேலில் போதுமானவர்கள் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை; செய்தியானது பட்டணத்திற்கு வெளியே, அதாவது யூதமார்க்கத்திற்கு வெளியே புறஜாதிகளிடத்தில் அனுப்ப வேண்டியிருந்தது. ஆகவே மூன்றாம் செய்தி அனுப்பப்பட்டது, "அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா" (லூக்கா 14:23). இவ்வசனத்தில் ஆங்கிலத்தில் இடம்பெறும் "compel" என்ற வார்த்தையானது, இவ்விடத்தில் தவறான கருத்தைக் கொடுக்கின்றதாக இருக்கும்; பரிந்துரை/தூண்டு, இணங்க வைத்தல் என்பதாகவே இவ்வார்த்தை இடம்பெற வேண்டும்.

ஆகவேதான் சுவிசேஷ யுகம் முழுவதிலும், சுவிசேஷ கிருபைகளுக்கு உள்ளாக, ஆயத்தமாய் இருந்த அநேக யூதர்கள் கொண்டுவரப்பட்ட பின்னர், செய்தியானது "தேவனுடைய நாமத்திற்கு என்று புறஜாதிகள் மத்தியிலிருந்து ஓர் ஜனம் எடுத்துக்கொள்ளப்படுவதற்காகவும்," இஸ்ரயேலின் மீதியானவர்களுடன் மாபெரும் விருந்தில் பங்கடையத்தக்கதாகவும், புறஜாதிகளிடத்திற்கு அனுப்பப்பட்டது; "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை

நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்" (அப்போஸ்தலர் 13:46, 47). யூதர்கள் தாங்கள் இந்த மாபெரும் ஆசீர்வாதத்திற்கு (அ) ஈவிற்கு அபாத்திரர்களாக இருப்பதை நிரூபித்துக்காட்டினார்கள்; நித்திய காலத்திற்குமான மகிமையான வாக்குத்தத்தங்களைக் காட்டிலும், இவர்கள் அழிந்துப் போகக்கூடிய காரியங்கள் மீதே மிகுந்த விருப்பம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

இந்த உண்மையை அப்போஸ்தலர், "அல்லாமலும் இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்கள்மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள்" என்று கூறுவதன் மூலம் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றார் (ரோமர் 9:27). இன்னுமாக இராஜ்யத்தில் பங்காளிகளாக இருக்கத்தக்கதாகப் புறஜாதிகளுக்குச் சென்ற அழைப்பானது, ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட அதே அழைப்பாக மாத்திரமே இருக்கின்றது என்றும், இவ்வளவு மாபெரும் இரட்சிப்பையும், சிலாக்கியத்தையும் புறக்கணித்துப்போனவர்களுடைய இடத்தில் நாம் வரத்தக்கதாகவே, அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்றும் அப்போஸ்தலர் நமக்குக் காட்டுகின்றார். இதை அவர், ஒலிவ மரத்தின் மூலம் விவரிக்கின்றார்; "சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால்........." (ரோமர் 11:17).

இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களும், சிலாக்கியங்களுமான மாபெரும் விருந்திற்கான இந்த மூன்றாம் அழைப்பானது, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் போய்க்கொண்டிருக்கின்றது; மேலும் நாம் புரிந்திருக்கிறவைகளை வைத்துப் பார்க்கையில், இந்த அழைப்புச் சீக்கிரத்தில் நிறைவடையப் போவதாகத் தெரிகின்றது; கிட்டத்தட்ட பந்தியின் அநேக இடங்களில், விருந்தாளிகள் காணப்படுகின்றனர்; வெகுசில இடமே காலியாக இருக்கின்றது; இந்தக் காலியான இடங்களும் சீக்கிரத்தில் நிரம்பிவிடும்போது, மாபெரும் விருந்து ஆரம்பித்துவிடும், மேலும் நாம் நம்முடைய கர்த்தருடைய சந்தோஷங்களில் பிரவேசித்து, நாம் மாத்திரம் புசிப்பதற்குரிய சிலாக்கியம் பெற்றிராமல், அதன் ஆசீர்வாதங்களைப் பூமியின் குடிகள் அனைத்திற்கும் எடுத்துச்செல்லும் சிலாக்கியம் உடையவர்களாகவும் இருப்போம்.

முதலாம் அழைப்பின் கீழாக வந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு, யூதர்களுக்குத் இடையூறாக/தடையாக இருந்திட்ட அதே காரியங்களே, மூன்றாம் அழைப்பைக் கேட்ட புறஜாதியார்களில் அநேகருக்கு அதிக அளவில் தடையாகக் காணப்படுகின்றது. முழுமையான தொழிலாளியாக, ஐசுவரியவானாக, செல்வாக்கு மிக்கவனாகவே இருந்துக் கொண்டு, அதே வேளையில் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, இந்த விருந்திற்கான அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில், கர்த்தருக்கு நம்முடைய இருதயங்கள், தாலந்துகள், ஆற்றல்கள் அனைத்தையும் ஒப்புக்கொடுத்துவிடுவது கூடாத காரியமாகும். இந்த விருந்திற்கான அழைப்பை ஏற்றுக்கொள்ளுதல் என்பது, மற்ற எல்லாவற்றையும் விட இதில் ஆழமான ஆர்வம் இருப்பதினிமித்தம், மற்ற எல்லா விஷயங்களும், அது வீடாகவோ, நிலமாகவோ, தகப்பனாகவோ, தாயாகவோ, மனைவியாகவோ, பிள்ளையாகவோ இருந்தாலும், அவை அனைத்தும் இராஜ்யத்திற்கு அடுத்த காரியங்களுக்கும் மற்றும் அழைப்புத் தொடர்புடைய நிபந்தனைகளின் விஷயத்திலான நம்முடைய கடமைகளுக்கும், அடுத்தப்படியாக, இரண்டாவதாகவே காணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இஸ்ரயேலர்களின் விஷயத்தில் எப்படிக் காணப்பட்டதோ, அப்படியே புறஜாதியார்களின் விஷயத்திலும் காணப்பட்டது, அதாவது இராஜ்யத்திற்கான அழைப்பானது, இந்த உலகத்தின் ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் பெற்றிருந்தவர்களால் மறுக்கப்பட்டது; அதாவது மனுஷர் மத்தியிலான கனத்திலோ (அ) சமுதாய அந்தஸ்திலோ (அ) தாலந்துகளிலோ (அ) பணத்திலோ (அ) நற்பெயரிலோ ஐசுவரியவான்களாய் இருந்தவர்கள், இவைகளையெல்லாம் விட்டுவிட்டு, இடுக்கமான வழியில் இயேசுவைப் பின்தொடர்வது கஷ்டம் என எண்ணினார்கள்; யூத யுகத்தின் முடிவில் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தரித்திரர்களாகவும், எளிமையானவர்களாகவும் இராமல் இருந்ததுபோலவே புறஜாதியாரின் விஷயத்திலும்

உண்மையாய் இருந்தது; இன்றும் இது உண்மையாக இருக்கின்றது "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." "என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துக்கொள்ளவில்லையா?" (1 கொரிந்தியர் 1:26; யாக்கோபு 2:5).

ஆனால் அதற்கென்று எவ்வகையான ஐசுவரியவான்களுக்கும் அழைப்புத் தடைப்பண்ணப்படுவதில்லை, மாறாக அவர்களுக்கும் மாபெரும் சிலாக்கியங்களும், வாய்ப்புகளும் கொடுக்கப்படுகின்றது; ஏனெனில் இவர்களிடம் மிக அதிகமான தாலந்துகள் காணப்படுகின்றது; ஒருவேளை இவர்கள் விருப்பம் கொண்டால், இவர்களும் பலிச்செலுத்தி, அழைப்பையும், விருந்தையும் குறித்ததான தங்களுடைய மதிப்பீட்டை வெளிப்படுத்தி, தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். நமது கர்த்தருடன் இராஜ்யத்தில் உடன்சுதந்திரத்துவம் எனும் மாபெரும் விருந்தில் பங்கடைவதற்கான அழைப்பிற்குப் பதில் கொடுக்கும் வண்ணமாக, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடத்தக்கதாக, நாமும் அப்போஸ்தலனாகிய பவுலைப் போன்று பாரமான யாவற்றையும், ஒவ்வொரு இடையூறையும், ஒவ்வொரு நெருக்கங்களையும், நமக்கு அருமையாய் இருக்கும் பூமிக்குரியவை அனைத்தையும் தள்ளிவிட்டுவிடுவோமாக (எபிரெயர் 12:1, 2; ரோமர் 8:16-18; 12:1, 2).

---

**R5425**

# "சீஷத்துவத்திற்கான விலை"
## லூக்கா 14:25-35

"தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்." (மத்தேயு 16:25).

அது மாபெரும் போதகருடைய ஊழியத்தின் நிறைவு காலமாய் இருந்தது. அவரைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த திரளான ஜனக்கூட்டத்தினர், நியாயப்பிரமாணத்தின்படி, பஸ்கா பண்டிகையைக் கைக்கொள்ளும்படிக்கு எருசலேமுக்குப் போய்க் கொண்டிருந்தனர்; இயேசுவும் தாம் பஸ்கா பண்டிகையின்போது, நிஜமான பஸ்கா ஆடாக மரிக்கப்போவதையும் முன்கூட்டியே அறிந்தவராக இருந்தார். அவ்வப்போது பிரயாணத்தில் இயேசு திரும்பி, ஜனக்கூட்டத்தாரில் சிலருக்குப் போதகம் பண்ணினார். இன்றைய பாடத்தில் நாம் அவரால் இத்தருணங்களின் போது கொடுக்கப்பட்ட சில போதனைகளைப் பார்க்கப் போகின்றோம். அக்காலத்தில் போதகர்கள் மாணவர்களை (அ) சீஷர்களை ஏற்றுக்கொள்வது வழக்கமாய் இருந்தது; அதாவது தங்களை மாபெரும் போதகர்களாகக் கருதி, தங்களிடத்திலிருந்து கற்றுக்கொள்ள விரும்பும், தங்கள் அறிவுரைகளினால் நன்மையடைய விரும்பும் மாணவர்களை ஏற்றுக்கொள்வது அக்காலத்தில் போதகர்களின் வழக்கமாயிருந்தது. இன்றும் கூடக் கிறிஸ்தவர்கள் தங்களை இயேசுவின் பின்னடியார்கள் (அ) சீஷர்கள் எனக் கூறுகின்றனர்; இன்னுமாக அவருடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பதாகவும், அவர் தம்முடைய உண்மையுள்ள பின்னடியார்களுக்கு வாக்களித்துள்ள ஆசீர்வாதங்களை நாடுவதாகவும் கூறுகின்றனர்.

அவருடைய வாய்க்கருவிகள் என்றும், அவருடைய ஊழியர்கள் என்றும் தங்களைக் குறித்துக் கூறிக்கொள்பவர்கள் தெரிவிக்கும் காரியங்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாக, இயேசு முன்வைத்துள்ள சீஷயத்துவத்தின் நிபந்தனைகள் காணப்படுவது கவனிக்கப்படலாம். சபையில் எழும்பி நின்று ஒருவன், தான் தேவனுடைய ஜனங்களின் ஜெபத்தை விரும்புவதாகக் கூறுவதே, சீஷயத்துவத்திற்குப் போதுமான அடையாளமாக இருக்கின்றது எனச் சிலரால் சிலசமயம் கூறப்படுகின்றது. இன்னுமாக இப்படியாக

தேவனுடைய ஜனங்களின் ஜெபங்களை விரும்புவதாகக் கூறுகின்றவன், கிறிஸ்தவனாக மனமாறியுள்ளான் என்று எண்ணப்படுகின்றான். இந்த ஒரு படியை அவன் அடியெடுத்து வைப்பதற்குக் கூடத் தூண்டுதல்கள் தேவைப்படுகின்றதாம். சிலசமயம் இத்தகைய தூண்டுதல்கள் வர்த்தக அடிப்படையில், அதாவது வியாபாரிக்கு, அதிகமான செழிப்பு, தொழிலில் ஏற்படுவதன் மூலம் அல்லது, வேலைக்காரனுக்கு, தன்னுடைய எஜமானிடத்தில் மாபெரும் தயவு கிடைப்பதன் மூலம் அல்லது அரசியல் வேலையில் நல்ல வாய்ப்புப் பெற்றுக்கொள்வதன் மூலம் தூண்டுதல்கள் ஏற்படுகின்றதாம்.

இவைகளையெல்லாம், நாம் இப்பாடத்தில் பார்க்கப் போகும் இயேசுவினுடைய வார்த்தைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, பெரும்பாலான பெயர்க் கிறிஸ்தவர்கள், தாங்கள் அறிக்கைப் பண்ணவேண்டும் என்று ஒருபோதும் நோக்கம் கொண்டிராதவைகளையே, நயமான தூண்டுதலினால் அறிக்கைப் பண்ணிக் கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் புரிந்துக்கொள்ள முடியும். சீஷயத்துவத்தற்கான ஆண்டவருடைய நிபந்தனைகளின்படி, ஒருபோதும் கிறிஸ்தவர்கள் ஆகாத அநேகரும், மற்றும் அவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்காத அநேகரும் கிறிஸ்தவத்தை அறிக்கைப்பண்ணத்தக்கதாகப் பொறியில் சிக்கவைக்கப்பட்டுள்ளனர். “யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்” (லூக்கா 14:26, 27). இப்படியான தெளிவான வார்த்தைகளையும், நிபந்தனைகளையும் தவறாய்ப் புரிந்துக்கொண்டுள்ளோம் என்று சொல்ல எந்தச் சாக்குப்போக்கும் இல்லை. அவருடைய சீஷர்களால் மாத்திரமே நித்தியத்திற்கான ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆண்டவர் சொல்லவில்லை. முழு உலகமும் தொலைந்துப்போய், தேவனிடத்திலிருந்து பிரிந்துப் போய், நித்திய ஜீவனுக்கான உரிமை இல்லாமல் காணப்படுகின்றது என்பதே அவருடைய பொதுவான போதனையாக இருக்கின்றது. அநீதியுள்ளவர்கள் அனைவரும், தெய்வீகத் தயவிற்குள்ளாக திரும்புவதற்காக வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, ஆண்டவர் “அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்” மரிக்க வந்திட்டார். எதிர்கால ஜீவியத்திற்கான இப்படிப்பட்ட வாய்ப்பினை, அவருடைய பின்னடியார்கள் தவிர, வேறு எவரும் பெற்றுக்கொள்வதில்லை என்று இயேசு சொல்லவில்லை. இப்படியாகவெல்லாம் தவறாய்க் கூறுபவர்கள், தங்களையே குழப்பிக் கொள்ளுகிறவர்களாய் இருப்பார்கள்.

“உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாகிய மெய் ஒளியாக,” ஏற்றக்காலத்தில் தாம் இருப்பார் என்றே இயேசு போதித்தார். இயேசு வருவதற்கு முன்னதாக, 4000 வருடங்களாகவே உலகம் ஏற்கெனவே காணப்பட்டு வருகின்றது; மேலும் அவர் வருவதற்கு முன்பு வாழ்ந்தவர்களுக்கு அவரை அறிவதற்கோ, அவருடைய சீஷர்களாக ஆகுவதற்கோ வாய்ப்பு இல்லை என்பதை யாரும் மறுப்பதில்லை. எனினும் இவர்களையும் ஆசீர்வதிப்பதற்காகவும், அவர் வந்த பிறகு உலகத்தில் பிறந்த அனைவரையும் ஆசீர்வதிப்பதற்காகவுமே அவர் மரித்தார். இப்படியாக உலகத்தை ஆசீர்வதிப்பது என்பது, அவருடைய இராஜ்யத்தில் நிறைவேற்றப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்; மேலும் அவருடைய இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதாய், இந்த யுகத்திற்குரியதாய் இராமல், எதிர்க்காலத்திற்குரியதாய் இருக்கின்றது என்றும் அவர் தெளிவாய்க் கூறியுள்ளார். அதுவரையிலும் அவர் சீஷர்களை அழைத்து மாத்திரம் கொண்டிருக்கின்றாரே ஒழிய, உலகத்தை அணுக முயற்சிக்கவில்லை.

சீஷர்கள் அவரோடு கூடச் சிங்காசனத்தில் உட்காரத்தக்கதாகவும், மனுஷரைச் சீர்த்தூக்கும் அவருடைய மாபெரும் வேலையில் அவருடன் பங்குக்கொள்ளத்தக்கதாகவும், அதாவது ஆதாமுக்குள் இழக்கப்பட்டு, கல்வாரியில் மீட்கப்பட்ட அனைத்தையும் மனுக்குலத்திற்குத் திரும்பக்கொடுக்கும் அவருடைய மாபெரும் வேலையில், அவருடன் பங்குக்கொள்ளத்தக்கதாகவும் அவருடைய இராஜ்யத்தில், இயேசுவுடன் உடன்சுதந்திரராகும்படிக்குச் சீஷர்கள் அழைக்கப்படுகின்றனர். மிகுந்த உபத்திரவத்தின் வாயிலாக மாத்திரமே, சீஷர்களாக இராஜ்யத்தின் வகுப்பாருக்குள் பிரவேசிக்க முடியும் என்று, அவர் சீஷர்களுக்குத் தெளிவாய்க் கூறியுள்ளார்; இன்னுமாக உபத்திரவங்கள் என்பது, நீதியின் மீதான அவர்களுடைய அன்பையும், தேவனிடத்திலான அவர்களுடைய நேர்மையையும் நிரூபித்துக் காண்பிக்கும் என்றும் தெளிவாக அவர் சீஷர்களுக்குக்

கூறியுள்ளார்; இன்னுமாக சொற்பமானவர்கள் மாத்திரமே, அதாவது தேவனுடைய பார்வையில் மனுக்குலத்திலேயே மிகவும் பொறுக்கியெடுக்கப்படத்தக்கதானவர்கள் மாத்திரமே இடுக்கமான வழியைக் கண்டுபிடிக்கத்தக்கதாக, வெகு சிலரே அந்தப் பாதையில், மகிமை, கனம் மற்றும் அழியாமையின் எல்லையை அடையத்தக்கதாக, தேவன் திட்டமிட்டே பாதையை மிகவும் இடுக்கமாக ஆக்கியுள்ளார் என்றும், அவர் தெளிவாய்ச் சீஷர்களுக்குக் கூறியுள்ளார்.

இந்தக் கண்ணோட்டங்களை, நம்முடைய மனக்கண்களுக்கு முன்பாக நாம் தெளிவாக வைக்கையில், சீஷயத்துவத்திற்குக் கடுமையான நிபந்தனைகள் இருப்பது நியாயம் என்று உணரப்படலாம். இப்படியான நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்க விருப்பம் கொண்டு, இவ்வாறாக தேவனிடத்திலான தங்களுடைய அன்பையும், நேர்மையையும் நிரூபிப்பவர்களுக்கு மாத்திரமே, மீட்பரோடு கூட இராஜ்யத்தின் வகுப்பாருக்கு அருளப்படும் மாபெரும் வல்லமையும், கனமும், மகிமையும் கொடுக்கப்பட முடியும். இந்த வார்த்தைகளை நாம் கவனமாய் ஆராய்வோமாக; இதற்கிடையில் நம்மை, அதாவது நம்முடைய மாம்சத்தை அல்லாமல், நம்முடைய ஆவியை, நம்முடைய நோக்கங்களை, நம்முடைய வாஞ்சைகளைப் பரிசோதித்துப் பார்ப்போமாக.

இயேசுவினுடைய இந்த வார்த்தைகளைக் குறித்து **ஹென்றி வார்ட் பீச்சர்** அவர்கள் நன்றாய்ப் பின்வருமாறு கூறியுள்ளார் . . . "ஒருவரைப் பின்பற்றுவதற்கு விரும்பியும், வாஞ்சித்தும் இருப்பவர்களுக்குச் சொல்லப்பட்ட இப்படியான ஒரு வார்ததை என்னைப் பொறுத்தமட்டில் இதற்கு முன்பும், ஒருபோதும் இப்படியாகப் பேசப்படவுமில்லை, பிற்பாடும் ஒருபோதும் இப்படியாகப் பேசப்படவுமில்லை." லூக்கா சுவிசேஷத்தில் இடம்பெறும் இவ்வசனத்திற்கு இணையான வார்த்தைகள், மத்தேயு 10:37-ஆம் வசனத்திலும் காணப்படுகின்றது, அதாவது "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல." இங்கு இடம்பெறும் வெறுப்பு என்ற வார்த்தையானது, அன்பிற்கு எதிரானது என்று காட்ட பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சீஷன் ஆகுவது என்பது, நாம் கர்த்தரையும், அவர் ஆதரிக்கும் கொள்கைகளையும் பிரதானமாய் அன்புகூருவதாக இருக்கின்றபடியால், மற்றவர்களுக்கான அன்பு நமக்குக் கர்த்தரோடு ஒப்பிடுகையில் வெறுப்பாய்க் காணப்படும்.

நம் விஷயத்தில், கர்த்தருக்கான நம்முடைய அன்பிற்கும், அவருடைய சித்தத்திற்கான நம்முடைய கீழ்ப்படிதலுக்கும் எதிரான எந்த மற்ற அன்பையும் வெட்டிவிடுவது நோக்கமாக, சித்தமாகக் காணப்பட வேண்டும். கர்த்தருடைய அன்போடு ஒப்பிடுகையில், நம்முடைய பூமிக்குரிய அன்புகள் ஒருபொருட்டாக இல்லையென்று கருதப்பட வேண்டும். நமது கர்த்தருடைய கட்டளைக்கு ஏற்ப, ஒவ்வொரு பூமிக்குரிய எதிர்ப்பார்ப்பையும், நம்பிக்கையையும், இலட்சியத்தையும், நோக்கத்தையும், பலிச்செலுத்துவதற்கும், மற்றும் விருப்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கும் நாம் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும். இப்படியான பக்தியின் வெளிப்பாடை வெளிப்படுத்துகிறவர்களிடத்தில் எதுவும் ஒப்படைக்கலாம். இவர்களைக் குறித்துக் கர்த்தர், "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்" என்று தீர்க்கத்தரிசனமாய்ப் பேசுகின்றார் (மல்கியா 3:17).

இயேசுவும் இப்படியான பண்பையே கொண்டிருந்தார் என்பதும், மற்றவைகள் அனைத்தையும்விட மேலாக பிதாவின் சித்தத்தையே முதன்மையாகக் கொண்டிருந்தார் என்பதும், இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்திரர்களாய் இருப்பவர்கள் அனைவரிடத்திலும் இதே மனது, இதே ஆவி காணப்படும் என்ற நிச்சயத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இராஜ்யம் சுயநலமான ஒன்றாக இராமல், எதிர்மாறாகவே இருக்கும் என்று அவர் நமக்கு நிச்சயம் அளிக்கின்றார். அந்த இராஜ்யத்தின் இராஜாக்கள், பிரபுக்கள், நியாயாதிபதிகள் வல்லமையில் மாத்திரம் எதிர்த்து வெல்லப்பட முடியாதவர்களாய் இராமல், கொஞ்சமும் அசுத்தப்படுத்தப்பட முடியாதவர்களாய் இருப்பார்கள். இவர்களைப் பொறுத்தமட்டில் தெய்வீகக் கோட்பாடே முதன்மையானதாகக் காணப்படும்.

இங்கு விவரிக்கப்பட்டுள்ளதான இப்படியான பக்தி என்பது சிலசமயம், அநேக பூமிக்குரிய பந்தங்களைத் துண்டித்துப் போடுவதைக் குறிக்கின்றதாக இருக்கும். இது இயேசுவின் பின்னடியார்களை, விநோதமான ஜனங்களாக எண்ணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். அநேகர் இவர்களுடைய போக்கை விநோதமாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் எண்ணுவார்கள். ஆகவே, பரிசுத்தவானாகிய பவுல் தெரிவித்துள்ள வண்ணம், நாம் கிறிஸ்துவின் நிமித்தமாகப் பைத்தியக்காரர்களாக எண்ணப்படுகின்றோம், ஏனெனில் மனித ஞானத்திற்கும், மனித அன்பிற்கும் பதிலாக, நாம் தேவனுடைய ஞானத்திற்கும், தேவனுடைய அன்பிற்கும் முன்னுரிமைக் கொடுத்துப் பிரசங்கிக்கின்றோம். இப்படிப்பட்டவர்களைக் குறித்து, பரிசுத்தவானாகிய யோவான், "அவர் இருக்கிறபிரகாரமாகவே நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்," அதாவது தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு, பழித்துரைக்கப்பட்டு, விலக்கி வைக்கப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டுக் காணப்படுகின்றோம் என்று கூறுகின்றார். இம்மாதிரியான அனுபவங்களில் நிற்க முடிகின்றவர்கள் மாத்திரமே, "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத் தாம் ஜீவகிரீடத்தைக் கொடுத்து, அவர்கள் தம்முடன் சிங்காசனத்தில் உட்கார அனுமதிப்பதாக," இயேசுவினால் குறிப்பிடப்பட்ட கிரீடத்தை வெல்கிறவர்களாய் இருப்பார்கள்.

"இவைகளை நடப்பிப்பதற்கு எவன் தகுதியானவன்?" என்று அப்போஸ்தலர் கேள்வி கேட்கின்றார். "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" என்றும், "என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" மற்றும் "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" எனும் வாக்குத்தத்தத்தையும் பதிலாக வழங்குகின்றோம் (எபிரெயர் 13:5; 2 கொரிந்தியர் 12:9; 2:16; 3:5).

## "சிலுவை சுமத்தலின் அர்த்தம்"

இன்னும் அழுத்தம் தெரிவிக்கும் வண்ணமாக,"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்," என இயேசு கூறுகின்றார் (லூக்கா 14:27). தைரியத்துடன் கூடிய நோக்கத்துடனும், சீஷயத்துவத்தை அறிக்கைப் பண்ணுவதுடன், நாம் ஆரம்பிப்பது மாத்திரம் போதாது. நாம் விசுவாசத்துடன் கர்த்தர் பக்கத்தில் நிலை கொண்ட பிற்பாடு, நாம் நிரூபிக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் உணர்ச்சி வேகம் கொண்டிருப்பவர்கள் அல்ல, மாறாக தங்களுடைய உண்மையின் மூலமாக தங்களுடைய தகுதியை நிரூபித்துக் காண்பிப்பவர்களே தகுதியுள்ளவர்கள் என்று கருதப்பட்டு, இறுதியில் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். சிலுவை சுமத்தல் என்பது, அன்றாட விஷயமாக இருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளில் நமக்கெனக் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீகச் சித்தத்திற்கு எதிராக, மாம்சம், உலகம் மற்றும் சாத்தானிடமிருந்து வரும் எதிர்ப்புகளே நம்முடைய சிலுவைகள் ஆகும். "என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்ற ஆண்டவரின் உணர்வே, சரியான உணர்வாக இருக்கின்றது.

நிதானித்து, யோசிக்கப்படாமல், சீஷயத்துவத்தை எடுத்தக்கொள்ளக்கூடாது என்பதற்கான எச்சரிப்பைக் கொடுக்கும் பொருட்டு, நமது கர்த்தர் ஓர் உவமையைக் கூறினார்; அதென்னவெனில் ஒரு கோபுரத்தைக் கட்டத் துவங்கின மனுஷன், அதற்கு அஸ்திபாரத்தைப் போட்டான், ஆனால் அதனை கட்டி முடிக்க அவனால் கூடாமல் போயிற்று, இவ்வாறாக அவன் தன் பிரயாசத்தை வீணாக்கி, தன்னையே ஏளனத்திற்கு ஆக்கிக்கொண்டு, மூடனாய் செயல்பட்டுக் கொண்டவனாய் இருந்தான். இன்னொரு உருவகமானது, தேவையான ஆயத்தம் இல்லாமல், யுத்தத்திற்குப் போவது பற்றியதாகும்; இப்படியாக யுத்தத்திற்குச் செல்வது என்பது, விபரீதத்தையே கொண்டு வருவதாக இருக்கும். கிறிஸ்துவின் பின்னடியார்கள் அனைவரும் குணலட்சணத்தை வளர்த்துக்கொள்வதிலும், "நல்ல போராட்டம் போராடுவதிலும்" ஈடுபட்டிருக்கின்றனர். யாரெல்லாம் இயேசுவின் கொடியின் கீழ்த் தங்களை இணைத்துக்கொண்டுள்ளார்களோ, இவர்கள் சாத்தானுக்கும், பாவத்திற்கும் எதிரான நிலையை எடுத்துக்கொண்டவர்களாய் இருக்கின்றார்கள்; மேலும் இவர்கள் கடுமையான யுத்தத்தை எதிர்ப்பார்க்கலாம்; இன்னுமாக உண்மையாய் நற்கிரியைகளை நடப்பிப்பதில் தொடர்ந்து நிலைத்து நின்றாலே ஜெயங்கொள்கிறவர்களுக்கான கிரீடத்தையும், "நல்லது" என்ற வார்த்தையையும் கேட்க முடியும் என்பதையும் எதிர்ப்பார்க்கலாம்.

கிறிஸ்துவினுடைய காரணங்களை/நோக்கங்களை ஆதரிப்பவர்கள், தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற தெளிவான முழுப்புரிந்துக்கொள்ளுதலுடன் கூட, திரும்பிப் பின்னே பார்க்காமல், நல்ல வழியில் தொடர்ந்து முன்னோக்கிப் போக வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்துடன் செயல்படுவார்களானால், அது எத்துணை ஆசீர்வாதமாய் இருக்கும்! இன்னுமாக கிறஸ்துவினுடைய காரணங்கள்/நோக்கங்கள் மனுஷர் மத்தியில் நன்கு முன்னேறும்; இவர்களுடைய எண்ணிக்கை மிகச் சொற்பமாக இருந்தாலும் கூட உலகத்தில் இவர்களுடைய செல்வாக்கும், வல்லமையும், சந்தேகத்திற்கு இடமின்றி மிகப் பெரியதாகவே இருக்கும்.

## "உப்பு நல்லதுதான், ஆனாலும்..."

உப்பு, பதப்படுத்துகிற தன்மையைக் கொண்டதாகும். இது உணவிற்குச் சுவையையும் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. முற்காலங்களில் உண்மைக்கு, நேர்மைக்கு உப்பானது அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது; இன்னமும் கூட சில அரேபியர்கள், தாங்கள் உப்புச் சாப்பிட்ட வீட்டில் உள்ள நபருக்கு, மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது. இவர்களைப் பொறுத்தமட்டில் உப்பு, நேர்மைக்கான/உண்மைக்கான உறுதிமொழியாக இருக்கின்றது.

இயேசு, தேவனிடத்தில் கொண்டிருந்த தம்முடைய உண்மைக்கும், தம்முடைய பின்னடியார்கள் அனைவரும் கொண்டிருக்க வேண்டியதும், தக்கவைத்தக்கொள்ள வேண்டியதுமான உண்மைக்கும், உப்பை அடையாளமாகப் பயன்படுத்துகின்றார். உப்பானது அதன் சாரத்தை இழந்துப் போகுமானால், அது எதற்கும் பயன்படாது; அது உரமாகக் கூடப் பயன்படாது, ஏனெனில் அது எதிர்மாறான செயல்பாட்டையே, சாரமற்றுப் போனப் பிறகுக் கொண்டிருக்கும்; அது முற்றிலும் பயனற்றதாயிருக்கும். இப்படியாகவே கிறிஸ்தவனும், உலகத்தில் ஒரு விசேஷித்த நோக்கத்தைப் பெற்றிருப்பவனாக இருக்கின்றான், அதாவது அவன் பதப்படுத்துகின்ற ஆற்றலாய் இருந்து, கிருமிநாசினியாக இருந்து, தொடர்புக்கு வரும் அனைவரிடமும் நல்ல பண்புகளை வெளியே கொண்டு வருபவனாக இருக்கவேண்டும். இதுவே உலகத்தைப் பொறுத்தமட்டிலான கிறிஸ்தவனுடைய வேலையாக இருக்கின்றது. இதில் அவன் தவறுவானானால், அவன் அழைக்கப்பட்ட நோக்கத்தைப் புரிவதில் தவறுகிறவனாய் இருந்து, கர்த்தருடைய வேலைக்குப் பயனற்றவனாய் இருப்பான்.

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று இயேசு இறுதியாகக் கூறினார். அவருடைய பின்னடியார்கள் அனைவரும் இந்த வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்க வேண்டும். இவ்வார்த்தைகளை அசட்டைப் பண்ணுகிறவன், இவ்வார்த்தைகளைக் கொடுத்திட்டவரை அசட்டைப் பண்ணுகிறவனாய் இருந்து, நிச்சயமாய்க் கிடைக்கப்பெறும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள தவறுகிறவனாய் இருப்பான். ஆனால் உலகத்தாரைப் பொறுத்தமட்டில், "அவர்கள் காதுகளிருந்தும் கேளாதவர்களாகவும், கண்ணிருந்தும், காணாதவர்களாகவும்" இருப்பார்கள். நம்மையும், இயேசுவின் பின்னடியார்கள் அனைவரையும் அளப்பதற்கான அதே கொள்கைகளின் அடிப்படையில் நாம் உலகத்தாரைக் கணிக்கக்கூடாது. உலகத்திற்கான உயர்ந்த அளவுகோல்/கொள்கை பொன்னான சட்டமாக இருக்கின்றது. கிறிஸ்தவனுக்கான உயர்ந்த அளவுகோல்/கொள்கை சுயத்தைப் பலிச் செலுத்தி, எல்லாம் இழந்து, தேவன் சித்தம் செய்வதாகும்.

**R2706**

# "காணாமல் போனவர்களுக்கான தெய்வீக அக்கறை"

## லூக்கா 15:1-10

"அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" - (வசனம் 10).

மனுக்குலம் தொடர்புடைய விஷயத்தில் பயன்படுத்தப்படும் "காணாமல் போனது" என்ற வார்த்தைக்கு, நவநாகரிக இறையியலால் வழங்கப்படும் பொதுவான அர்த்தத்திலிருந்து, முற்றும் ஒரு வேறுபட்ட அர்த்தத்தை வேதாகமம் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நவநாகரிக இறையியலோ, "காணாமற்போனது" எனும் வார்த்தையை, எந்த வாய்ப்புமற்ற, தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்களுடன் தொடர்புபடுத்திப் பயன்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக பாரம்பரிய நம்பிக்கையானது, இவ்வார்த்தையை வாய்ப்பற்றவர்களுக்கும், முடிவற்ற நித்திய சித்திரவதைக்குப் பாத்திரமானவர்களுக்கும் தொடர்புடையதாய்ப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் வேதவாக்கியங்களுடைய கண்ணோட்டத்தின்படி பார்க்கப்படுகையில் "காணாமற்போன"எனும் வார்த்தையானது, முற்றிலும் மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு எதிர்மாறான நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை, இப்பாடத்தில் நாம் பார்க்கலாம்.

வார்த்தையிலும், நடத்தையிலும் பரிசுத்தராயிருந்த நம்முடைய கர்த்தர், அவருடைய நாட்களில் பரிசுத்தமாய்க் காணப்பட்ட ஜனங்களை இயல்பாகவே தம்மிடத்தில் ஈர்க்கின்றவராய்க் காணப்பட்டார்; இந்தப் பரிசுத்தமான ஜனங்கள் பரிசேயர்களாய் இருந்தார்கள்; மேலும் இவர்கள் மத்தியில் காணப்பட்ட அநேகருடைய பரிசுத்தமானது, மாய்மாலமான விதத்திலேயே இருந்தது; அதாவது இவர்கள் இருதயத்தில் பரிசுத்தத்தையும், தூய்மையையும் பெற்றிருப்பதற்குப் பதிலாக, வெளிப்புறமாக பரிசுத்தமாய்க் காட்சியளிப்பதிலேயே விருப்பம் உள்ளவர்களாய் இருந்தனர். கடந்த பாடத்தில், நமது கர்த்தர் எப்படி முன்னிலையான பரிசேயர்களுடன் கூட, விருந்தாளியாக சென்று, எப்படி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டார் என்று பார்த்தோம். ஆனால் தங்களையே யூதர்கள் மத்தியில் பரிசுத்தமான வகுப்பார் என்று எண்ணிக்கொள்வதற்குப் பழகிப்போன பரிசேயர்கள் படிப்படியாக, ஜனங்கள் மத்தியில் கீழ்மட்டத்தில் காணப்பட்டவர்களிடமிருந்து, தங்களையே பிரித்துக் கொண்டவர்களானார்கள்; ஆகவே நமது கர்த்தருடைய நாட்களில், இந்த இரண்டு வகுப்பாரும் கலந்துக் கொள்வதில்லை/பழகுவதில்லை; பரிசேயர்கள் மற்றவர்களைச் சகோதரர் என்றும், தெய்வீக வாக்குத்தத்தங்களில் உடன்சுதந்திரர்கள் என்றும் ஒத்துக்கொள்ள மறுப்பவர்களாய் இருந்தார்கள். ஆகையால் யூதர்களின் கீழ்மட்ட ஜனங்கள், இயேசுவினுடைய போதனைகளிடத்திற்கு ஆர்வம் கொண்டுள்ளனர் என்றும், இயேசு இவர்களிடமிருந்து தம்மை விலக்கிக்கொள்ளவில்லை என்றும், இவர்களுடன் கலந்துப் பழகுபவராகவும் இருந்து, மற்றவர்களுக்குப் போதிப்பது போன்று இயேசு இவர்களுக்கும் போதிக்கின்றார் என்றும் பரிசேயர்கள் கண்டபோது, அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஒருவேளை இயேசு தம்மை ஒரு பரிசேயன் போல் காண்பிக்கவும், தங்களுடைய ஆச்சாரங்களுக்கு இசையவும் விரும்பினாரானால், இயேசுவைத் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்வதற்கு, இந்தப் பரிசேயர்கள் மகிழ்ச்சியாய் இருந்திருப்பார்கள். இந்தப் பரிசேயர்களுடைய தவறான கருத்தைச் சரிச் செய்வதற்கே, இயேசு ஐந்து உவமைகளைக் கொடுத்தார்; அவைகளில் இரண்டைத்தான் நாம் இப்பாடத்தில் பார்க்கவிருக்கின்றோம்.

உவமையில் உண்மையான மேய்ப்பன், தன்னுடைய ஆடுகளை நேசித்தவனாகவும், அவைகளுக்காகப் பராமரிக்கின்றவனாகவும் இருந்து, தன்னுடைய 99 ஆடுகளையும் (பாலைவனத்தில் அல்லாமல்) காட்டில் உடன் மேய்ப்பர்களுடைய நல்ல பராமரிப்பின் கீழ் விட்டுவிட்டு, காணாமற்போன ஓர் ஆட்டைக் கண்டுபிடிக்கும் மட்டும் தேடிச் செல்லுகிற காரியமானது, தெய்வீகப் பராமரிப்புப் பற்றின விளக்கமாக இருக்கின்றது. இதற்கும் மேலாக, வேறு எந்தப் பாடமும் ஆண்டவருடைய இந்த வார்த்தைகள் மூலமாய்த் தெரிவிக்கப்படவில்லை என்று நாம் எண்ணுகின்றோம்; ஆனால் ஒருவேளை இந்த

உவமையானது, இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்தினுடைய அம்சங்களை விவரிக்கின்றதற்கும், கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று நாம் எண்ணுவோமானால், காணாமற்போன அந்த ஓர் ஆடு ஆதாமையும், மனித குடும்பத்தையும் குறிக்கின்றதாகவும், மற்றும் காணாமற்போகாத 99 ஆடுகளும் பாவத்தில் திரியாமலும், தேவனிடமிருந்து தொலைதூரத்திற்குப் போகாமலும், அவருடைய மேற்பார்வை மற்றும் பராமரிப்பின் கீழ் எப்போதும் காணப்பட்டவர்களாகவும் இருக்கும் தேவதூதர்களையும், மற்ற ஆவியின் ஜீவிகளையும் குறிக்க வேண்டும் என்றே நாம் அனுமானிக்க வேண்டியுள்ளது. இக்கண்ணோட்டத்தின்படி, காணாமற்போன ஆட்டைத் தேடும்படிக்கு, மேய்ப்பன் செல்வது என்பது, மனுக்குலத்தின் நன்மைக்காக, உலக தோற்றத்திற்கு முன்பாக பிதாவுடன் இருந்த தம்முடைய மகிமையை இயேசு துறந்து, மனித நிலைமைக்கு வருவதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இதற்கும் மேலாக வேறு ஏதாகிலும் காரியத்திற்கு, இவ்வுமையைப் பொருத்திப் பார்ப்பது என்பது பொருந்தாதாகவே இருக்கும்; உதாரணத்திற்குக் காணாமற்போன ஆடு என்பது, மனுக்குலத்தில் மிகவும் சீரழிந்துப் போனவர்களைக் குறிக்கின்றது என்றும், 99 ஆடுகளும் பரிசுத்தமான ஒரு வகுப்பாரைக் குறிக்கின்றது என்றும் அனுமானிப்பது, இரண்டு விதங்களில் பொருந்தாதக் காரியமாக இருக்கும்; அவை (1) நீதிமான் ஒருவராகிலும் இல்லை என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன, மேலும் தீர்க்கத்தரிசி குறிப்பிட்டுள்ளது போன்று, "நாமெல்லாரும் ஆடுகளைப் போல் வழிதப்பித் திரிகின்றவர்களாய் இருக்கின்றோம் (ரோமர் 3:10; ஏசாயா 53:6). (2) 99 ஆடுகள், பெரும்பகுதியினராக இருப்பவர்களைக் குறிக்கும் என்று கூறுவதும் பொருந்தாது, காரணம் சிறுபான்மையானவர்களே, அதாவது பூமியின் 600,000000 ஜனத்தொகையில், 100000 பேரில் ஒருவரும், 10,000 பேரில் ஒருவரும்தான் இன்று மாபெரும் மேய்ப்பனாகிய தேவனுடன் ஓரளவுக்கு ஐக்கியத்தில் இருக்கின்றனர் என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

ஓர் ஆடு ஆதாமுக்குள் விழுந்துபோனதும், நீதியின் பாதையினின்று தொலைதூரத்திற்கு அலைந்துத் திரிந்ததுமான ஒட்டுமொத்த மனுக்குலத்தை அடையாளப்படுத்துகின்றது என்றும், இயேசு, மாபெரும் மேய்ப்பனாகிய பிதாவினுடைய நல்ல மேய்ப்பனாக இருக்கின்றார் என்றுமுள்ள கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், காணாமற்போன ஆட்டைத் தேடிச்செல்வதற்கான வேலை, நமது கர்த்தருடைய முதலாம் வருகையின் போதே ஆரம்பமாகியுள்ளது என்று காண்கின்றோம். ஆட்டை மீட்கும் விஷயத்திலான நமது இரட்சகருடைய விலை கொடுக்கப்பட்டதாகிய ஆரம்பத்தை நாம் பார்க்கின்றோம், ஆனால் ஆடு மீட்கப்பட்டதை நம்மால் இன்னமும் பார்க்க முடியவில்லை, ஏனெனில் எந்த விதத்திலும் மனுக்குலமானது, தேவனுடன் இசைவிற்குள் கொண்டு வரப்படவில்லை. ஆனால் இயேசுவின் தலைமையின் கீழ் நல்ல மேய்ப்பனுடைய அங்கத்தினர்களாக, அதாவது கிறிஸ்துவினுடைய சரீரமாக இருப்பதற்கு, தேவன் மனுக்குலத்திலிருந்து சபையை இந்தச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுத்துக் கொண்டிருப்பதை நம்மால் காண முடிகின்றது; இன்னுமாக மனுக்குலமாகிய காணாமற்போன ஆட்டை, ஆயிர வருட யுகத்தின்போது, தேடுவதற்குரிய இந்த வேலையில் ஈடுபடுவதற்கு ஆயத்தப்படுத்தப்படும் விஷயத்தில், சரீரத்தினுடைய ஒவ்வொரு அங்கமும் ஏதேனும் விலை கொடுக்க (இழக்க) வேண்டியுள்ளதை நாம் பார்க்கின்றோம்.

ஆடானது எந்த இடத்தில் காணப்படுகின்றது என்ற விதத்தில் ஆடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; ஒருவிதத்தில் சொல்லப்போனால் அது காணாமற்போகவில்லை. ஆனால் தேவனிடமிருந்து விலகி, பாவத்திற்குள்ளும், சீரழிவிற்குள்ளும் மனுக்குலம் கடந்து போய் உள்ள விதத்திலேயே, அது காணாமற்போனதாகக் கூறப்பட்டுள்ளது; மனுக்குலமானது, திரும்பக்கொடுத்தலின்/சீர்ப்பொருத்துதலின் வாயிலாக, சீரழிவிலிருந்தும், பாவம் எனும் உளையான சேற்றிலிருந்தும், அக்கிரமமும், மரணமுமாகிய படுகுழியிலிருந்தும், மீட்கப்பட அல்லது திரும்பிக்கொண்டு வரப்படவேண்டும். உவமையில் கூறப்பட்டுள்ளபடியாக, ஆடு, பூரணமான நிலைமைக்குக் கொண்டு வரப்படத்தக்கதாக ஆயிரம் வருடம் காலப்பகுதித் தேவைப்படுகின்றது; ஆனால் இதற்கிடையில் மனிதனுடைய இரட்சிப்பிற்கான இந்த மாபெரும் திட்டத்தினுடைய ஒவ்வொரு படியும், பிதாவின் தொழுவத்தைவிட்டு ஒருபோதும் வழிவிலகாத பரம சேனைகளால் ஆர்வமாய்க் கண்ணோக்கப்பட்டு வருகின்றது என்று நமது கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். கர்த்தருடைய விளக்கத்தில் அடையாள

வார்த்தை கொஞ்சம் மாற்றம் அடைகின்றது, அதாவது மனுக்குலமானது ஓர் ஆட்டினால் அடையாளப்படுத்தப்படாமல், மாறாக அநேகம் ஆடுகளால் அடையாளப்படுத்தப்படுகின்றது (ஆதியில் ஆதாம் ஒருவராக இருந்தார். இப்பொழுது அநேகம் மனிதக்குடும்பங்கள் காணப்படுகின்றன); இன்னுமாக ஒரு பாவி, மனந்திரும்பி, மீண்டுமாகத் தொழுவத்தினிடத்திற்கு, அதாவது தேவனுடனான ஐக்கியத்திற்குத் திரும்புகையில், தேவதூதர்கள் மத்தியில் சந்தோஷம் காணப்படும் என்றும் இயேசு அறிவித்தார்.

தேவனுடனான இசைவிற்குள் வரும் இவர்கள், பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருக்குள்ளான கிருபையினால் அனைத்திலிருந்தும் இலவசமாக நீதிமானாக்கப்படுகின்றனர். "சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:25). மேலும் இவர்கள் நல்ல மேய்ப்பனோடுக் கூட, அவருடைய சரீரத்தின் அங்கத்தினராக வேலை புரியும் உடன் வேலையாட்களாகுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.

ஆதியில் காணாமற்போன ஓர் ஆடாகிய ஆதாமின் விஷயத்திலும், அவருடைய அநேக சந்ததியாரின் விஷயத்திலும் இழந்துவிட்ட நிலைமை அவர்களால் வாஞ்சிக்கப்படவில்லை, இல்லையேல் ஆதாமும் சரி, மற்றவர்களும் சரி, மீண்டுமாய் வெளியேறின தொழுவத்தினிடத்திற்கே சென்றிருப்பார்கள்; மாறாக பாவத்தினுடைய சீர்க்கேட்டின் நிமித்தமாக, அவர்கள் மிகவும் சீர்க்கேடானவர்களாகவும், இயலாதவர்களாகவும் ஆகிவிட்டதினால், அவர்களால் தங்களுடைய சொந்த பெலத்தினாலேயே வந்த வழியில் திரும்பிப்போக முடியாமல் போயிற்று. அவர்களுக்கு ஓர் இரட்சகர் தேவையாய் இருந்தது; அதாவது அவர்களை இந்தக் கீழான நிலையிலிருந்து இரட்சிக்கக் கூடியவரும், பாவத்தினுடைய தீர்ப்புகள் அனைத்திலிருந்தும் தங்களை விடுவிக்கக்கூடியவரும், தங்களை மீண்டுமாகத் தேவனுடைய தொழுவத்தில் முழுமையாய்க் கொண்டு வந்து சேர்க்கிறவருமான ஓர் இரட்சகர் தேவைப்பட்டார். இப்படிப்பட்டதான ஒருவராகிய நமது கர்த்தர் இயேசுவை, நம்முடைய பரம பிதாவானவர் அருளினார் "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபிரெயர் 7:25).

தங்களை மீட்கும் விஷயத்தில், கர்த்தருடைய அன்பானது அருளும் சகல ஆசீர்வாதங்களையும், வாய்ப்புகளையும், அவருடைய கரத்திலிருந்து பெற்றுக்கொண்ட பிற்பாடும் கூட, சிலர் துணிகரமாய்ச் சுயசித்தத்தில் காணப்பட்டு, நல்ல மேய்ப்பனுடைய உதவியை உதைத்துத் தள்ளுகிற வகுப்பாராகக் காணப்படுவார்கள் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்க் காட்டுகின்றன. இவர்களைக் குறித்து, "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்து பின்பு மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்கள்" என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன; மேலும் இப்படிப்பட்டவர்கள், மாபெரும் பலியை அசட்டைப் பண்ணுகிறவர்களாய் இருப்பார்கள் என்றும், இவர்களைப் புதுப்பிப்பது என்பது கூடாத காரியம் என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். இப்படிப்பட்டவர்களின் போக்கைக் குறித்து, "மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். இப்படியாக துணிகரமாயும், தொடர்ந்தும் பாவம் செய்துகொண்டிருப்பவர்கள், நல்ல மேய்ப்பனை எட்டும் தொலைவிற்கு அப்பால் தங்களை நிறுத்துபவர்களாய் இருந்து, இரண்டாம் மரணம் மரித்து, தெய்வீகத் திட்டத்தில் ஏதேனும் ஒரு பங்கு அடைவதிலிருந்து நின்றுபோவார்கள் (எபிரெயர் 6:4-6; 1 யோவான் 5:16). "வெள்ளாடு வகுப்பாருக்காக," நல்ல மேய்ப்பன் தம்முடைய ஜீவனைக் கொடுத்து, வனாந்தரத்தில் தேடித் திரியவில்லை; "நரிகளுக்காகவும்" அவர் தேடித்திரியவில்லை, மாறாக, பாவத்தினால் ஏற்பட்ட சீரழிவு இருப்பினும், கொஞ்சமாகிலும் "செம்மறியாட்டினுடைய" சுபாவத்தைக் கொண்டிருப்பவர்களை மாத்திரமே அவர் தேடித் திரிகின்றார். ஆதாம், "செம்மறியாடாக," அதாவது வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றது போன்று, "தேவனுடைய குமாரனாக" இருந்தார் (லூக்கா 3:38); இவருடைய மீறுதல் துணிகரமாக இருப்பினும், சில விதங்களில் பார்க்கப்படும்போது, இவருடைய மீறுதல், தொழுவத்திலிருந்து, <u>சுயசித்தத்தின் வழியில் செம்மறியாட்டினுடைய வழித் திரிதலாகவே இருந்தது</u> என்று எடுத்துக்கொள்ளப்படலாம்; மாறாக செம்மறியாட்டினுடைய

சுபாவத்தினின்று, வெள்ளாட்டின் (அ) நரியின் சுபாவத்திற்கு மாற்றம் எதுவும் நடைபெறவில்லை; ஆதாம் பிசாசினுடைய பிள்ளையாக இருக்க விரும்பிச்செல்லவில்லை.

ஒருவேளை ஆதாம் தன்னுடைய இருதயத்தில் தேவனுக்கும், நீதிக்கும் எதிராக அறிவுப்பூர்வமாகவும், துணிகரமாகவும், தேவனுக்குச் சத்துருவாகியிருப்பாரானால், சர்வ ஞானமுள்ள மேய்ப்பனாகிய பிதாவானவர், ஆதாமின் பின் தம்முடைய குமாரனை அனுப்பியிருப்பார் என்று நம்மால் எண்ணிக்கொள்ள முடியாது. உண்மைதான், ஆதாமின் பிள்ளைகளில் அநேகர் இன்று, வெள்ளாட்டினுடைய சுபாவத்தில் சிலவற்றை அடைந்துள்ளனர்; "துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாய் இருந்த உங்களை" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவது உண்மைதான் (கொலோசெயர் 1:21). இன்னுமாக இந்த ஒரு நிலைமைக்குள் இவர்கள் அநேகமாய்த் துணிகரமாய்க் காணப்படவில்லை, மாறாக, சாத்தான் ஒளியை இருள் என்றும், இருளை ஒளி என்றும் வஞ்சித்துள்ளதினாலேயே ஆகும். இவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் ஏமாற்றப்பட்டுள்ளது; "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4). இவர்களில் அநேகர், எதிராளியானவனுடன் கூட்டுச் சேர்ந்துள்ளபடியால், அநேக விதங்களில் வெள்ளாட்டினுடைய சுபாவங்கள் கொண்டவர்களாக ஆகிப்போனாலும், இன்னமும் செம்மறியாட்டினுடைய சுபாவத்தில் கொஞ்சம் பெற்றிருக்கவே செய்கின்றனர்; இவர்கள் சரியான வெளிச்சத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டால், தங்களை முழுமையாகத் தெய்வீகக் கிருபையினிடத்திற்கும், தொழுவத்தினிடத்திற்கும் கொண்டுவரும்/சீர்ப்பொருந்தப் பண்ணும் நல்ல மேய்ப்பனைப் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைவார்கள்.

இவ்விஷயங்கள் உண்மையானது என்றும், சரியானது என்றும், உவமையினுடைய பல்வேறு அம்சங்களுக்கு இசைவான ஒரே காரியமாக இருக்கின்றது என்றும் உள்ள இக்கண்ணோட்டத்தின்படிப் பார்க்கப்படுகையில், இரண்டாம் மரணத்திற்குக் கடந்துப் போகிறவர்களைக் குறித்து, தேவன் கருத்தில் எடுத்துக்கொள்வது இல்லை எனவும், இவர்கள் செம்மறியாட்டினுடைய சுபாவத்தை இழக்கும் தருணம் முதல், தேவன் மற்றும் அவருடைய திட்டத்தைப் பொறுத்தமட்டில், எந்தவிதமான ஜீவனை அடையக்கூடாதவர்களாய் இருக்கின்றார்கள் எனவும் நாம் உணர்ந்துக்கொள்கின்றோம். திரும்பக்கொடுத்தலின் காலங்களில் நமது கர்த்தரால் மீட்கப்படுகிறதும், ஆயிர வருட யுகத்தினுடைய முடிவின்போது, தேவனுடைய மந்தைக்குள்ளாகக் கொண்டு வரப்படுகிறதுமான அந்த ஓர் ஆடானது, மனித குடும்பமாகும், அதாவது தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டவர்களும், அந்தச் சாயலையும், ரூபத்தையும் முழுமையாய் இழந்துப்போகாதவர்களும், ஆயிரவருட யுகத்தின் போது, அவருடைய சாயலிலும், ரூபத்திலும் சீர்ப்பொருந்தப் பண்ணப்படுகிறவர்களுமான மனுக்குலமே ஆகும். ஆதாம் மற்றும் ஏவாளாகிய ஓர் ஆட்டினால் அடையாப்படுத்தப்படும் காணாமற்போன ஓர் ஆடானது, மீட்கப்படும்போது, பல மில்லியன் கணக்கான மீட்கப்பட்டு, சீர்ப்பொருந்தப் பண்ணப்பட்ட மனுக்குலத்தாராக, அநேகம் பேராக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

## "காணாமல்போன வெள்ளிக்காசு"

பத்து வெள்ளிக்காசு தொங்கவிடப்பட்ட ஆபரணத்தை, அதாவது திருமணத்திற்கான அடையாளமாகப் பெற்றுக்கொண்டிருந்த ஸ்திரீ பற்றின உவமையில், அவள் காணாமல் போன ஒரு வெள்ளிக்காசைக் கவனமாய்த் தேடுவது என்பது, முன்பு நாம் பார்த்திட்ட உவமையின் அதே கருத்தைக் கொடுக்கிறதாகவே உள்ளது. காணாமற்போன வெள்ளிக்காசைத் தேடுவதில் செலவிடப்பட்ட ஸ்திரீயினுடைய பிரயாசமானது, காணாமற்போன மனுக்குலத்தின் சார்பிலாகத் தெய்வீகப் பிரயாசத்திற்கான விளக்கமாக நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கும்கூட ஆதாமினுடைய இழப்புப் பற்றியேயல்லாமல், மற்றபடி இரண்டாம் மரணத்தில் தொலைந்துப் போகிறவர்களைக் குறித்து, "காணாமற்போன" என்ற வார்த்தையை வேதவாக்கியங்கள் பயன்படுத்துவதில்லை என்று நாம் பார்க்கின்றோம். இரண்டாம் மரணத்தின் வகுப்பார், காணாமற்போனவர்கள் என்று சொல்லப்படுவதில்லை; அவர்கள் ஜீவன் இல்லாமல் நின்றுவிடுபவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் தெய்வீக மதிப்பின்படி ஒரு பொருட்டாக கருதப்படுவதில்லை, மற்றும்

குறிப்பிடப்படுவதற்குப் பாத்திரவான்களும் இல்லை. தேவன் அங்கீகரிப்பதும், சீர்ப்பொருந்த பண்ணுவதாகக் கூறும், ஆதியில் . . . காணாமற்போனவைகள் போன்று இந்த இரண்டாம் மரணத்தின் வகுப்பார் இருப்பதில்லை.

பத்து வெள்ளிக்காசுகள் விலைறேப்பெற்றவைகளாக, மதிப்புடையவைகளாக மாத்திரம் இல்லாமல், குறிப்பிட்ட உருவங்கள் சில அந்த வெள்ளிக்காசுகளில் பொறிக்கப்படுவது வழக்கமாய் இருந்தது. இப்படியாகவே தேவனுடைய குமாரர்களாகிய தேவதூதர்களின் விஷயத்திலும், பிரதான தூதர்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது; வேறு எத்தனை வகையான ஆவியின் ஜீவிகள், தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. இவைகளில் ஒன்றாகிய மனுஷன் காணாமற்போனான். காணாமற்போனதே தேடப்பட்டு, இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

முற்காலத்தின் வீடுகளானது, வாசல் வழியாய் வரும் வெளிச்சத்தினால் வெளிச்சம் பெற்றுக்கொள்கின்றது. மேலும் தரைப் பகுதியானது குப்பைகளில், தூசிகள் நிறைந்ததாய்க் காணப்படுவது என்பது, பாவம் மற்றும் சீரழிவுக்குள் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் காணப்பட்ட ஆதாமினால் அடையாளப்படுத்தப்படும் மனுக்குலமானது காணாமற்போனதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது காணாமற்போன வெள்ளிக்காசானது, காணாமற்போன ஆட்டிற்கு அடையாளமாக இருக்கின்றது. இந்த உவமையானது, திரும்பக்கொடுத்தலின் வழிமுறைகளைப் பற்றிக் குறிக்காமல், மாறாக, ஆரம்பத்தில் காணாமற்போன காரியமும், இறுதியில் காணாமற்போன அதே காரியம் கண்டுபிடிக்கப்படுகிற காரியமும், இதற்காக ஏறெடுக்கப்படும் பிரயாசமும் மாத்திரமே குறிப்பிடப்படுகின்றது. விளக்கைக் கொழுத்துவதும், ஜாக்கிரதையாய்ப் பெருக்குவதும், கிறிஸ்து மூலமாய், ஆயிர வருட யுகத்தினுடைய முடிவில் நிறைவேற்றப்படும் தேவனுடைய வேலையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

ஆயிர வருட யுகத்தின் முடிவில், பரம பிதாவினிடத்திற்குத் திரும்பும், சீர்ப்பொருத்தப்பட்ட இனமானது, ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட போது காணப்பட்ட தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் பூரணமாய்க் காணப்படுவார்கள், மற்றும் தாங்கள் பெற்றிருக்கும் சாயலுக்குரியவரான தேவன் பற்றின முழுமையான உணர்ந்துக்கொள்ளுதலையும், அதிகமான அறிவையும் கூடப் பெற்றிருப்பார்கள். இவ்வுமையில் மனித குடும்பத்தினருடைய எண்ணிக்கைப் பெருகுவது குறித்தோ, அல்லது (நீதியைக் காட்டிலும், பாவத்தின் மீதான விருப்பத்தின் காரணமாக) துணிகரமாய்ப் பாவம் செய்யும் ஆதாமின் சந்ததியில் உள்ள சிலர், ஜனங்கள் மத்தியிலிருந்து அறுப்புண்டுப் போவதைக் குறித்தோ பேசப்படுவதில்லை. (அப்போஸ்தலர் 3:23). இந்த இரண்டாம் மரண வகுப்பார்களுக்கு, பிதாவின் முன்னிலையில் எவ்விதமான தகுதியும் இல்லை; காணாமற்போனவர்களையும், தம்முடைய உண்மையுள்ள பிரதிநிதியாகிய கிறிஸ்துவினால் தேடப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டு, தம்முடைய தொழுவத்தில் கொண்டு வரப்படுபவர்களையும் பற்றி மாத்திரமே பிதாவானவர் கவனத்தில் கொள்கின்றார் என்பது உண்மையே.

ஆயிர வருட யுகத்தினுடைய முடிவின்போதும், பரலோகத்திலும், பூமியிலும், சிங்காசனத்தில் வீற்றிருப்பவரையும், ஆட்டுக்குட்டியானவரையும் துதிக்கும் சத்தம் கேட்கப்படும் போதும், பரலோகத்திலும், பூமியிலும் மிகுந்த சந்தோஷத்திற்கான காலம் வரும்; ஆனால் முழுமையாய்ச் சந்தோஷம் கொள்ளும் காலத்திற்கு முன்பாகவும் கூட, மாபெரும் வேலையினுடைய நிறைவேறுதலுக்கான ஒவ்வொரு சாட்சியங்களிலும், பரலோக சேனை முழுவதும் மகிழ்ச்சிக் கொள்ளும்; அதாவது ஒரு பாவியினுடைய மனந்திரும்புதலில், அதாவது பாவத்திலிருந்து, தேவனுடன் இசைவிற்குள் முழுமையாய்த் திரும்புதலில் மகிழ்ச்சிக் கொள்ளும் என்று நமது கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். ஒருவேளை தேவனுக்கும், பரலோக ஜீவிகளுக்கும் இசைவாய் இருக்கும் பரலோகத்தில் உள்ள தேவதூதர்கள் மகிழ்ச்சிக் கொள்வார்களானால், பூமியில் உள்ள தேவனுடைய ஜனங்கள், சகல சிருஷ்டிகளும் பாவம் மற்றும் சாத்தானுடைய கண்ணி மற்றும் குருட்டுத்தன்மையிலிருந்து விடுபடும் போதும் மகிழ்ச்சிக் கொள்வார்கள்.

இந்த ஒரு படிப்பினையையே நமது கர்த்தர், பரிசேயர்களின் மனதில் பதியவைக்க நாடினார்; அதாவது பரிசேயர்கள் தங்களையே, கீழ்மட்ட ஜனங்களிடமிருந்து விலக்கிக்

கொண்டு, இயேசுவின் வார்த்தைகளைக் கீழ்மட்ட ஜனங்கள் மகிழ்ச்சியாய்க் கேட்டுக் கொண்டிருப்பதின் காரணமாக சினம் கொள்வதற்குப் பதிலாக, பரியேசர்கள் தேவனுடனும், பரலோக தேவதூதர்களுடனும் இசைவாய்க் காணப்படுவார்களனால், அவர்கள் மனம்திரும்புதலையும், சீர்ப்பொருந்துதலையும் ஜனங்கள் மத்தியில் காணும்போது சந்தோஷமடைந்திருக்க வேண்டும்; இன்னுமாக "கர்த்தரைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க" நாடுபவர்களை, தேவனுடனான உறவிற்குள் கொண்டு வருவதில், மகிழ்ச்சியாய் உதவி செய்பவர்களாக இருந்திருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 17:27).

இதுவே கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்கும், இன்றும் காணப்பட வேண்டிய மனப்பான்மையாக இருக்கின்றது. இப்படியாக ஒருவேளை அவர்களுடைய இருதயத்தின் உணர்வுகள் காணப்படவில்லையெனில், இது அவர்களிடம் கர்த்தருடைய ஆவி இல்லாததற்கான சாட்சியாகும். இப்படியாக மற்றவர்கள் பாவத்திலிருந்து வெளிவரும் விஷயத்தில், அன்புடன் கூடிய அக்கறையைக் கொண்டிருப்பதும், தேவனுடனான ஐக்கியத்தில் மற்றவர்களைக் கொண்டுவருவதற்கான உதவி புரியும் மனநிலையைக் கொண்டிருப்பதும், தேவனுக்கு இசைவான இருதய நிலைமையை நாம் பெற்றிருப்பதற்கான சாட்சியாக மாத்திரம் இராமல், இது நமக்கே உதவியாகவும், நாம் மேய்ப்பனுடைய பராமரிப்பின் கீழ், தொழுவத்திற்குப் பத்திரமாய் வந்து சேரத்தக்கதாக, நம்முடைய பாதங்களுக்கே நாம் செவ்வையான பாதைகளை உருவாக்கிட உதவுவதாகவும் இருக்கும்.

ஆகவே நல்ல மேய்ப்பனினால், ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டு, கர்த்தருடைய அன்பான பராமரிப்பு மற்றும் தேவனிடத்தில் திரும்புவதற்கான உதவியை ஏற்றுக்கொண்டுள்ள கர்த்தருடைய அன்பான ஜனங்கள் அனைவரும், மற்றவர்களுக்காய் அனுதாபம் கொள்ளும் ஆவியையும், உதவி புரியும் ஆவியையும், நல்ல மேய்ப்பன் ஈடுபட்டுள்ள வேலையில் ஒத்துழைக்கும் ஆவியையும் அதிகமதிகமாய் வளர்த்தி, விருத்திச் செய்வார்களாக; கர்த்தருடைய ஜனங்கள் ஒட்டுமொத்த மனுக்குலத்தைத் தேடிச்செல்லாமல், மாறாக இப்பொழுது விசேஷமாகக் கர்த்தரால் இந்த யுகத்தில் தம்முடைய வேலை மற்றும் வெற்றியின் முதற்பலனானவர்களாக தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு உதவி அளிப்பார்களாக; ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதற்கும், ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டி எழுப்புவதற்கும், ஒருவரையொருவர் பக்திவிருத்திப் பண்ணுவதற்கும் நாடுவார்களாக; கலியாண வஸ்திரத்தை அணிவதற்கு ஒருவருக்கொருவர் உதவுவதற்கும், இராஜ்யத்தின் உடன் சுதந்திரர்களென ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை அடையத்தக்கதாக ஒருவருக்கொருவர் உதவுவதற்கும் நாடுவார்களாக.

---

**R1459**

# "ஊதாரி மகனுடைய திரும்பி வருதல்"
## லூக்கா 15:11-32

அநேகர் இவ்வுமையில் வரும் ஊதாரியான மகன் புறஜாதிகளுக்கு அடையாளமாக இருக்கின்றான் என்று கருதி, இந்த உவமையை யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் பொருத்துகின்றனர். ஆனால் இப்படியான அர்த்தமானது நம்மைப் பொறுத்தமட்டில் உண்மைகளுக்கும், வேதவாக்கியங்களுக்கும் பொருந்தாததாகக் காணப்படுகின்றது; ஏனெனில் இந்த உவமை பேசப்பட்ட காலத்திலும், பெந்தெகொஸ்தே நாளுக்கு மூன்றரை ஆண்டுகள் ஆகுவது வரையிலும், புறஜாதிகள் தேவனுடைய புத்திரர்களாக அங்கீகரிப்படாமல், அந்நியர்களாகவும், அஞ்ஞானிகளாகவும், "நம்பிக்கையில்லாதவர்களாகவும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களாகவும்" காணப்பட்டார்கள் (எபேசியர் 2:11, 12). விழுகை முதற்கொண்டே, ஆதாமின் பிள்ளைகளிலேயே ஒரு வம்சா வழி மாத்திரமே தெய்வீகக் கிருபை பெற்றவர்களாக இருந்தார்கள்; அந்த வம்சா வழியிலேயே நோவாவும், ஆபிரகாமும், இஸ்ரயேலும், கிறிஸ்துவும் வந்தார்கள்; அது சேத்தின் வழியாக வந்த வம்சா வழியாக இருந்தது (ஆமோஸ் 3:2). இந்த வம்சா வழியில் வந்த அனைவரும் (கிறிஸ்து தவிர) பாவங்களுக்கான நிழலான பலியின் மூலமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர்; கிறிஸ்துவானவர், ஆதாமை அல்லாமல்

வேறொரு தந்தையை உடையவராய் இருந்தார்; மேலும் ஆதாமுக்காகவும், அவருக்குள் ஜீவனை இழந்த அனைவருக்காகவும், கிறிஸ்து நிஜமான பாவநிவாரண பலியானார்.

ஆகையால் இவ்வுமையில் வரும் ஊதாரி மகன் புறஜாதிகளுக்கு அடையாளமாய் இருக்க முடியாது, ஏனெனில் புறஜாதிகள் ஒருபோதும் குமாரர்களாக இருந்ததில்லை; மேலும் இவர்கள் ஒருபோதும் பிதாவினுடைய வீட்டில் காணப்படாமல் இருக்க, இவர்கள் பிதாவினுடைய வீட்டை விட்டுப்போனார்கள் என்று சொல்ல முடியாது. ஊதாரி மகன் எந்த வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றார் என்று நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த இரண்டு குமாரர்களில் மூத்தவன் "ஜெயங்கொள்கிறவர்களுக்கு" அடையாளமாக இருக்கின்றான் என்றும், இளையவன் "திரள்கூட்டத்தாருக்கு" அடையாளமாக இருக்கின்றான் என்றும் சிலரால் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது; இன்னுமாக தங்களுடைய உடன்படிக்கையை நிறைவேற்ற தவறுகின்றவர்களாகவும், உலகத்தின் இன்பங்களை/அனுகூலங்களை அனுபவிப்பதன் மூலம் ஆவிக்குரிய சிலாக்கியங்களை வீணடிக்கின்ற வேசிகளாகவும், ஆயக்காரர்களாகவும் இருந்து, உடன்படிக்கைக்கு ஏற்ப வழித்தவறி, (ஆண்டவருடைய ஊழியத்தில், தினந்தோறும் மரித்துக் கொண்டிருப்பவர்களாகிய உடன்படிக்கையை உண்மையாய்க் கைக்கொள்ளுகிறவர்கள் மீது வரும்) எதிர்ப்புகள் இல்லாமல் இருப்பவர்களுக்கு ஊதாரி மகன் அடையாளமாய் இருக்கின்றான் என்றும் சிலரால் கருத்து முன்வைக்கப்படுகின்றது. ஆனால் இந்த ஒரு கருத்தானது, ஊதாரி மகன் உலகத்திலிருந்து வரும் அவமானம், பழி மற்றும் எதிர்ப்புகள் அற்றவன் என்றும், எப்பாடும் அனுபவியாத மூத்த மகன், நீதியின் நிமித்தமாய் கிறிஸ்துவுடன் பாடு அனுபவிக்கிறவனுக்கு அடையாளமாய் இருக்கின்றான் என்றும், தலைக்கீழாகக் காட்டப்படுகின்றது. உவமையில் மூத்தமகனே, நன்மையான காரியங்களையும், திரளான உணவுகளையும், உடைகளையும், அனைத்துச் சௌகரியங்களையும் உடையவனாய் இருக்கின்றான்; மற்றும் ஊதாரி மகனே பசியுடையவனாகவும், கிழிந்த வஸ்திரம் உடுத்தியிருந்தவனாகவும், கால்களில் செருப்பு இல்லாதவனாகவும், கஷ்டப்படுகிறவனாகவும், பன்றிகளுடன் வெளியே தள்ளப்பட்டுக் காணப்பட்டவனாகவும் இருக்கின்றான்.

இந்த உவமையினுடைய அனைத்து அம்சங்களுக்கும் பொருந்தும் நியாயமான விளக்கம் பின்வருமாறு:

உவமையில் மூத்த குமாரன் பரிசேயர்களுக்கும், மற்றும் இளைய குமாரன் பாவிகளுக்கும், ஆயக்காரர்களுக்கும் அடையாளமாய் இருக்கின்றனர். தேவனுடைய பிரமாணங்களையும், தங்களுடைய உடன்படிக்கையையும் பொருட்படுத்தாமல், பாவ ஜீவியத்தை ஜீவிக்கும், யூதர்களுடைய கீழ்மட்ட வகுப்பினரை நமது கர்த்தர் ஏற்றுக்கொள்ள விரும்பின காரியமானது, பரிசேயர்களின் கோபத்தைத் தூண்டினதாக இச்சம்பவம் தெரிவிக்கின்றது. பரிசேயர்களோ, தேவனுடைய நியாப்பிரமாணங்களைக் கண்டிப்புடன் கைக்கொள்கின்றவர்களாய் இருந்தார்கள்; மேலும் இது பாராட்டத்தக்கதான ஒன்றேயாகும்; எனினும் இவர்கள் தங்களுடைய பயபக்தியின் விஷயத்தில் பெருமையாய் இருந்ததும், தங்களுடைய நல்ல பண்புகளினிமித்தம் பெருமையடித்துக் கொண்டிருந்ததும், குற்றம் சாட்டப்படத்தக்கதாய் இருந்தது; இன்னுமாக இவர்கள் பயபக்தியற்ற வகுப்பாரை மதிக்கவோ, அவர்களோடு கூடப் பேசவோ, அவர்களோடு கூடப் புசிக்கவோ செய்யாமல், அவர்களை இழிவுபடுத்தியதும், அவர்களை வெறுப்புடன் பார்த்ததும், குற்றம் சாட்டப்படுவதற்கு ஏதுவாய் இருந்தது; இன்னுமாக பரிசேயர்கள் தங்களால் இயன்றமட்டும் சிறப்பாகத் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி வந்தாலும், தங்களிடத்தில் பூரணமான கீழ்ப்படிதல் குறைவுபட்டிருக்கின்றது என்ற உண்மையைத் தங்களுடைய பெருமையினால் உணர்ந்துக்கொள்ள தவறிப்போனார்கள்.

நமது கர்த்தர் யூதனாக, நியாயப்பிரமாணத்தின் கீழ்ப் பிறந்ததினால், நியாயப்பிரமாண உடன்படிக்கையை முடிவிற்குக் கொண்டு வந்த அவரது மரணம் வரையிலும், அந்த நியாயப்பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவராக, அனைத்து அம்சங்களையும் நிறைவேற்றி வந்தபடியால், அவர் நியாயப்பிரமாணத்தைக் கடுமையாய்க் கைக்கொண்ட காரியமானது, அவர்மேல் பரிசேயர்களை விருப்பம் கொள்ளப் பண்ணியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை; அதினாலேயே, அவர் சில பரிசேயர்களால் விருந்தாளியாகவும்

அழைக்கப்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம். (லூக்கா 7:36; 5:17; யோவான் 3:1, 2 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்). ஆனால் அவர் பாவிகளையும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடும் அவர் புசிப்பதைக் கண்டபோது, அவருடைய நீதி, தங்களுடைய நீதியிலிருந்து வித்தியாசமாய் இருப்பதைப் பரிசேயர்கள் உணர ஆரம்பித்தார்கள்; மேலும் இருள், ஒளியை எதிர்க்கின்றபடியால், அவரைப் பகைத்தார்கள். இன்னுமாக அவருடைய போதனைகள், தங்களுக்கு எதிராக தங்களைக் குறித்துத் திரையிட்டு வெளிக்காட்டுபவைகள் என்றும், தங்களால் அறிக்கைப் பண்ணப்பட்டதும், ஆயினும் பூரணமற்றதாய்க் காணப்படுகிறதுமான பரிசுத்தத்தைக் குறித்துக் கடுமையாய்க் கடிந்துக்கொள்ளுகிறதுமாக இருக்கின்றது என்றும் பரிசேயர்கள் உணர ஆரம்பித்தார்கள். ஆகவேதான் இந்த உவமையும், மற்ற சில உவமையும், பரிசேயர்களுக்குக் கடிந்துக்கொள்ளுதலாகப் பேசப்பட்டுள்ளது, காரணம் பாவிகளுடன் இவ்விதமான தொடர்பு வைத்திருந்ததற்கும், பாவிகளுக்காய் அவர் போதித்ததற்கும், பரிசேயர்கள், இயேசுவுக்கு எதிராய் முறுமுறுத்தார்கள். லூக்கா 15:1-3-ஆம் வசனங்களில் பார்க்கவும்.

ஆரம்பத்தில் யூதர்கள் அனைவரும், தேவனுடனான உடன்படிக்கை உறவிற்குள் பிரவேசித்து, இவ்வாறாக நிழலில் அவருடைய குமாரர்கள் ஆனார்கள். புத்திரர் வீட்டார் எனக் கிறிஸ்தவ சபை அழைக்கப்பட்டாலும், இவர்களுக்கு நேர்மாறாக யூதர்கள், பணிவிடை வீட்டார் என்று அழைக்கப்பட்டாலும், இந்த யூதர்கள் ஆவிக்குரிய புத்திரர் வீட்டாருக்கு நிழலாய் இருக்கின்றார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்; இன்னுமாக ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக, அவர் தேவனுடைய மனித குமாரனாக இருந்தார் என்றும், மன்னிப்புப் பெற்று, தேவனுடன் இசைவிற்குள் வரும் அனைவரும் மீண்டுமாக, பூமிக்குரிய அல்லது பரலோகக் குடும்பத்தில் குமாரர்கள் ஆகுகின்றார்கள் என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே இந்த உவமையில், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க் காணப்பட்ட இஸ்ரயேலர்கள் அனைவரும், தேவனுடைய (மனித) குமாரர்களாக நடத்தப்படுகின்றனர். இந்த உறவானது, சீனாயில், உடன்படிக்கைச் செய்யப்பட்டது முதல் ஆரம்பமாகின்றது.

ஆரம்பத்தில் அனைவரும், கீழ்ப்படிதலுள்ள குமாரர்களுக்கான உறவை நிறைவேற்றுவதன் மூலமாக, வீடாகிய தேவனுடைய கிருபையில் நிலைத்திருக்க நாடினார்கள்; உவமையில் வரும் மூத்த குமாரன், நம்முடைய கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பரிசேயர்களுக்கு அடையாளமாய் இருந்தான். ஆனால் மற்றொரு வகுப்பாரோ, தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பாவத்தின் பாதையில் திரிந்து, தேவனையும், அவருடைய அன்பையும், பராமரிப்பையும் மறந்துப்போய், சிதறிப்போய்விட்டனர்; இப்படியாக உவமையில் இடம்பெறும் இளையக்குமாரன் நம்முடைய கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பாவிகளுக்கும், ஆயக்காரர்களுக்கும் அடையாளமாக இருக்கின்றான்.

பாவம் எப்பொழுதும், ஏதோ விதத்தில் துன்பத்தைக் கொண்டுவரும்; அது பல்வேறு விதங்களில் துன்பங்களைக் கொண்டு வருகின்றதாகவும் இருக்கும்; இளைய ஊதாரி மகன், தன்னுடைய தவறை உணர ஆரம்பிப்பது பற்றின கதையை, ஆயக்காரர்களும், பாவிகளும் கேட்டபோது, அவர்கள் தங்களுடைய கவலைக்கிடமான நிலைமை உவமையில் சித்தரிக்கப்படுவதை உணர்ந்துக் கொள்வதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. எவ்வாறு ஊதாரி மகன் தானாக திரும்பி வந்தான் என்றும், எப்படித் தகப்பன் அவனைத் தொலைத் தூரத்திலே வரக்கண்டார் என்றும், எப்படித் தகப்பன் ஓடிச்சென்று, மகனை வரவேற்றார் என்றும் ஆண்டவர் கூறி முடிப்பதற்கு முன்னதாக, அநேகருடைய கண்கள் கண்ணீரினால் நிரம்பி இருக்கும் என்பதிலும், அநேகருடைய இருதயங்கள் பிசாசுக்கு ஊழியம் செய்வதிலிருந்து, தேவனுடைய அன்பிற்கும், கிருபைக்கும் இளையகுமாரன் போலவே திரும்பிடுவதற்கான ஆசையினாலும், ஏக்கத்தினாலும், உணர்வுகளினாலும் நிரம்பி இருந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

தேவனுடைய அன்பைக் குறித்தும், பாவிகளை மன்னிப்பதற்கும், மீண்டுமாக வீட்டிற்குள்ளாக வரவேற்பதற்கும், தேவன் விருப்பமுள்ளவராக இருக்கின்றார் என்பது குறித்தும், கர்த்தர் இந்தப் பாவப்பட்ட ஊதாரி மகன்களுக்குச் சொல்வதை, எதிர்த்தவர்களாக, இந்தப் பரிசேயர்கள் நிற்கும் உண்மையானது, அருமையாய் உவமையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. உவமையில் வரும் மூத்த குமாரன் "கோபம் அடைந்தவனாக உள்ளே

போக மனதில்லாதிருந்தான்" என்று பார்க்கின்றோம். சுயநீதியுடைய பரிசேயர்கள், கோபம் அடைந்தவர்களாகவும், அப்போது வர சமீபித்திருந்ததும், தெய்வீக வாக்குத்தத்தங்களுக்கு ஏற்ப தங்களுடைய ஜனங்களுக்கு முதலாவதாக அளிக்கப்பட்டதுமான இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க மறுத்தவர்களாகவும் இருந்தார்கள். வேறொரு தருணத்தில், "மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை;" மற்றும் "இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார் அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கர்த்தர் கூறினார் (மத்தேயு 23:13; 21:31). பரிதாபத்திற்குரிய சுயநீதிகளைக் கொண்ட பரியேசர்கள்! இவர்கள் இன்று வரையிலும் பொறாமைக் கொண்டவர்களாகவும், உள்ளே பிரவேசிக்க மறுக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களிடமிருந்து இராஜ்யத்திற்கான அழைப்பும், வாய்ப்பும் எடுக்கப்பட்டு, இவர்களால் ஆயக்காரர்களையும், பாவிகளையும் காட்டிலும் கீழாய் மதிப்பிடப்படும் புறஜாதிகளுக்குக் கொடுக்கப்படுவது வரையிலும், இவர்கள் ஒரு வகுப்பாராக, நிபந்தனைகளின் அடிப்படையிலான இராஜ்யத்தை ஏற்க மறுத்துவிட்டனர்; "ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத்தேயு 21:43); இவர்களால் "நாய்கள்" என்று மதிப்பிடப்பட்டவர்களாகவும், அஞ்ஞானிகளாகவும், அந்நியர்களாகவும், குமாரர்கள் அல்லாதவர்களாகவும் காணப்பட்ட புறஜாதியார் மத்தியிலிருந்து, மணவாட்டி மற்றும் கிறிஸ்தவினுடைய இராஜ்யத்திற்கான அங்கங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

புறஜாதிகள் மத்தியிலிருந்து, தேவனுடைய குமாரர்களாக ஆகும்படிக்கு, அதாவது கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரர்களாகும்படிக்குத் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நம்மாலும், மீட்பருடைய வாயிலிருந்து புறப்பட்டு வந்த இந்தக் கிருபையான வார்த்தைகளை, அன்று முழுமையாய் உணர்வு பூர்வமாய்ப் புரிந்துக்கொண்ட பாவிகள் மற்றும் ஆயக்காரர்கள் போன்று புரிந்துக்கொள்ள முடியும். அஞ்ஞானிகளாகவும், அந்நியர்களாகவும் காணப்பட்டிருந்த நாம், ஆதாமுக்குள் மரணத்தீர்ப்புக்குள்ளாயிருக்கும் அனைவருடைய பாவங்களுக்கு, பிதா மாபெரும் பலி ஒன்றை ஆயத்தப்படுத்தியுள்ளார் என்று அறிந்துக்கொள்கின்றோம். பிதாவினுடைய குடும்பத்தில் அவர் நம்மை அன்புடன் வரவேற்பதை நாம் கேட்டுள்ளோம் மற்றும் ருசித்துள்ளோம்; பாவத்திலும், மீறுதலிலும் மரித்திருந்த நாம், இப்பொழுது கிறிஸ்து இயேசு மூலமாய்த் தேவனுக்குள் பிழைத்தவர்களாய் இருக்கின்றோம். நம்முடைய அநீதியாகிய, அழுக்கான கந்தைகளுக்குப் பதிலாக நாம், கிறிஸ்துவின் நீதி எனும், "உயர்ந்த வஸ்திரத்தைப்" பெற்றிருக்கின்றோம்; நாம் குமாரர்களும், சுதந்திரர்களுமாய் இருக்கின்றோம் என்பதற்கான ஆவியினுடைய சாட்சியை அடையாளப்படுத்தும் மோதிரத்தைப் பெற்றிருக்கின்றோம்; தற்போதைய தீமையான உலகத்தினுடைய கடுமையான அனுபவங்களுக்கு, நம்மை ஆயத்தப்படுத்தும் பாதரட்சைகளைப் பெற்றிருக்கின்றோம்; எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய ஒப்புரவாகுதலுக்கான முத்திரையாக, தெய்வீகக் குடும்பத்திற்குள்ளாக நாம் தத்தெடுக்கப்பட்டுள்ளதற்கான அடையாளமான முத்தத்தை, நாம் பெற்றிருக்கின்றறோம். மற்ற வேதவாக்கியங்களானது ஈடுபலியின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுவது போன்று, இவ்வுமையில் எந்த அம்சமும் இந்த ஓர் அவசியத்தைக் குறித்து விளக்குவதேயில்லை, எனினும் இது இந்த உவமைக்கான நமது விளக்கத்திற்கு முரண்பாடாக இல்லாமல், இசைவாகவே உள்ளது; ஏனெனில் ஒட்டுமொத்த இஸ்ரயேலர்களும், நிழலான பலிகள் மூலம், நிழலாக ஒப்புரவாக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர், இந்த நிழலான பலிகள் மூலமாகவே இவர்களுடைய உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்பட்டது, மற்றும் வருடந்தோறும் புதுப்பிக்கவும்பட்டது. இந்த உவமை ஊதாரியாகவும், பின்வாங்கிப் போனவனாகவும் இருந்த குமாரனுடைய திரும்புதல் பற்றின உவமையாகவே இருக்கின்றதே ஒழிய, குற்றவாளியெனத் தீர்க்கப்பட்ட அந்நியனும், அஞ்ஞானியானவனுடைய மீட்பு பற்றின உவமையல்ல.

பரிசேயர்களுக்கான இந்த உவமையினுடைய பாடமானது, கொள்கைகளில் அடங்குகின்றதாக இருக்கின்றது; அவை பின்வருமாறு: தேவனுடன் இசைவிற்குள் இருக்கும் அனைவரும், பரிசுத்த ஆவியை உடைய அனைவரும், பாவிகள் தெய்வீகக் கிருபையினிடத்திற்குத் திரும்புதலின் நிமித்தம் மகிழ்ச்சிக் கொள்ளவேண்டும். இந்த ஆவி

இல்லாமல், வேறே ஆவி கொண்டவர்களுக்கு ஆபத்தே இருக்கும்; அதாவது பரிசேயர்களை, அவர்களுடைய சுயநலத்தின் நிமித்தமாக, தேவன் அளித்த ஆசீர்வாதத்தில் பங்கடைவதற்கு அபாத்திரமாக்கின ஆபத்தானது, வேறே ஆவியைக் கொண்டவர்களுக்கும் ஏற்படும். குருட்டுத்தன்மையை அகற்றுவதற்கான காலம், சீக்கிரத்தில் வரவிருப்பதற்காக தேவனுக்கு நன்றி "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்" (ஏசாயா 35:5). இப்பொழுது சுயநலத்தினால் ஆளப்படுபவர்கள், புதிய நிலைமைகளின் கீழ் அன்பின் ஆவியை அதிகமாய்க் கற்றுக்கொள்ளவும், செயல்படுத்தவும் செய்வார்கள் என்று நம்பிக்கைக் கொள்வோமாக. சுயநலமான மனிதன் இராஜ்யத்தில் பிரவேசிப்பது எத்தனை கடினம்; சுயநலத்தைக் குறித்து எச்சரிக்கையாய் இருந்து, தாழ்மை மற்றும் அன்பு எனும் மலர்களை நம்முடைய கலியாண வஸ்திரத்தில் சித்திரத் தையலிடுவோமாக.

---

**R2715**

# "அநீதியுள்ள உக்கிராணக்காரன்"

## லூக்கா 16:1-13

"தேவனுக்கும் உலகபொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" (வசனம் 13).

பரிசேயனுடைய வீட்டில் இயேசு விருந்துக்கு அழைக்கப்பட்டபோது அவர் பேசின முந்தின உவமைகள் எல்லாம் விசேஷமாகப் பரிசேயர்களுக்குப் பேசப்பட்டாலும், இந்த உவமையும், இதனை பின்தொடரும் ஐசுவரியவான் மற்றும் தரித்திரன் (டைவிஸ் மற்றும் லாசரு) பற்றின உவமையும், பரிசேயர்களுக்கு என்று மாத்திரம் பேசப்படாமல், லூக்கா 16:1-ஆம் வசனத்தின்படி பந்தி அமர்ந்திருந்த பரிசேயர்களுக்கும், சீஷர்களுக்கும் பேசப்பட்டது. முதல் மூன்று உவமைகளும் பரிசேயர்களுக்கு மாத்திரமே பேசப்பட்டு, சீஷர்களுக்காகப் பேசப்படாமல் இருந்ததற்கான காரணம், தாங்கள், நல்ல மேய்ப்பனினால் கண்டுபிடிக்கப்படுவதில் மகிழ்ச்சிக் கொள்ளும் "காணாமற்போனவர்கள்" மத்தியில் காணப்படுவதாக சீஷர்கள் உணர்ந்திருந்ததினால், பாவப்பட்ட வகுப்பாருக்கு எதிராக எவ்விதமான தவறான அபிப்பிராயமும் சீஷர்கள் கொண்டிராததினால், சீஷர்களுக்கு இப்படியான அறிவுரைகள் தேவைப்படவில்லை என்பதேயாகும்.

இந்த உவமையில் இடம்பெறும் உக்கிராணக்காரன் முந்தின உவமையில் இடம்பெற்ற மூத்தகுமாரனுக்கு இணையாகவும், பின்வரும் உவமையில் இடம்பெறும் ஐசுவரியவானுக்கும் இணையாகவும் காணப்படுகின்றான். அதிலும் விசேஷமாக இந்த உக்கிராணக்காரன், பரிசேயர்களுக்கும், வேதபாரகர்களுக்கும் அடையாளமாய் இருக்கின்றான்; இவர்கள் மோசேயையும், மோசேயை மத்தியஸ்தராக பெற்றிருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையும், மோசே உக்கிராணக்காரராய் இருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதத்தையும் அடையாளப்படுத்தும் "மோசேயினுடைய ஆசனத்தில்" உட்கார்ந்திருக்கின்றனர் என்று நமது கர்த்தர் வேறொரு தருணத்தில் கூறினார்; இப்பொழுதும், இந்த மோசேயினுடைய ஆசனத்தில், மோசேயினுடைய பிரதிநிதிகளாக, இந்த உக்கிராணக்காரர்கள் காணப்படுகின்றனர். எவைகள் மீது இந்த உக்கிராணத்துவம் காணப்படுகின்றது? இக்கேள்வியை அப்போஸ்தலனாகிய பவுலும் கேள்விகேட்டு, பதில் கூறுகின்றார் . . . "யூதனுடைய மேன்மை என்ன? . . . அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே" என்கிறார். தேவனைப் பற்றின அறிவும், நிழலான நீதிமானாக்கப்படுதலும், அவருடன் நிழலான ஒப்புரவாகுதலும், பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களும் இவர்களுக்கே ஒப்புவிக்கப்பட்டது" (ரோமர் 3:1, 2).

மோசேக்குள்ளும், அவருக்கு பின் அவர் ஆசனத்தில் வந்தவர்களுக்குள்ளும் அடையாளப்படுத்தப்படும் யூதர்கள், தங்களுடைய உக்கிராணத்துவத்தில் தவறிப்போனார்கள்; இவர்களுடைய பராமரிப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்ட, தேவனுடைய கிருபைகளைத் திருப்திகரமான விதத்தில் பயன்படுத்துவதில் தவறிப்போனவர்களாகிவிட்டனர். இப்படியாக இவர்கள் தவறிப்போனதற்கு, இவர்கள்

முற்றிலுமாக குற்றம் சாட்டப்படமுடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் பவுல் சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, இவர்களும் விழுகையின் காரணமாக பெலவீனர்களாகவும், இப்படிப்பட்டதான மாபெரும் பொறுப்பை நிர்வகிக்க திராணியற்றவர்களாகவும் காணப்பட்டனர்; இவர்களிடம் உக்கிராணத்துவம் கொடுக்கப்பட்ட போதே இவர்கள் தவறிப்போவார்கள் என்று தேவன் அறிந்திருந்தார்; இவர்கள் நியாயப்பிரமாணத்தை முழுமையாய்க் கைக்கொள்ளுவதில் தவறிப்போவார்கள் என்று தேவன் அறிந்தருந்தார். ஏற்றவேளையில் இவர்களை உக்கிராணத்துவத்திலிருந்து நீக்கிவிட்டு, மேசியாவிற்குக் கொடுக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டிருந்தார்.

இந்தப் பதவிமாற்றம் செய்வதற்கான நேரம் இப்பொழுது வந்துவிட்டது; ஒரு புதிய யுகம் ஆரம்பிக்கவிருப்பதை தெரிவித்து, இஸ்ரயேலின் பிரதிநிதிகள், தங்களுடைய உக்கிராணத்துவம் பற்றின கணக்கினை ஒப்புவிப்பதற்கு, தேவன் இவர்களுக்கு அழைப்பு விடுத்தார். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் எப்படி ஞானமாய்ச் செயல்பட வேண்டும் என்பது பற்றியே, நமது கர்த்தர் இந்த உவமையின் மூலமாக இவர்களுக்குச் சுட்டிக் காண்பிக்க விரும்பினார். இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் ஒரு பூமிக்குரிய உக்கிராணக்காரன் என்ன செய்வான் என்பதைக் கர்த்தர் இவர்களுக்குக் காண்பித்துக் கொடுத்தார்; மற்றும் இப்படியாகச் செயல்படுவதில் ஞானம் விளங்கும் என்பதை, "அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்" என்று கூறி தெரிவித்தார் (வசனம் 8). அதாவது "தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் பற்றின ஒளியின் விஷயத்தில் மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் கிருபைப் பெற்றுள்ள நீங்கள், உங்கள் பூமிக்குரிய விஷயங்களில் நீங்கள் உக்கிராணக்காரனாய் இருக்கும்போது ஞானமாய்ச் செயல்படுவதைப் போன்று ஞானமாய் நடந்துக்கொள்ளவில்லை" என்ற விதத்தில் கர்த்தர் கூறினார்.

முற்காலத்து உக்கிராண சிலாக்கியங்களுக்கான வாய்ப்பின் எல்லைகள் பற்றின தெளிவான புரிந்துக்கொள்ளுதல், அநேகமான ஜனங்களுக்கு இல்லை. இப்படிப்பட்டதான ஒரு பணி, இன்று நாகரிகமடைந்த ஜனங்கள் மத்தியில் இல்லை. உக்கிராணத்துவ பணி என்பது, நம்பிக்கைக்குரிய பணியாகும். எஜமானால் தன்னுடைய பொருட்களைக் கொண்டு செய்ய முடிகிற அனைத்தையும் மற்றும் எதையும் செய்வதற்கான சுதந்திரத்தையும், முழு அதிகாரத்தையும் உக்கிராணக்காரன் பெற்றவனாய் இருக்கிறான். அவன் தன்னுடைய பொறுப்பின் கீழ்க் காணப்படும் பொருட்களை அன்பளிப்பாக வழங்கலாம் அல்லது கடன்களை ரத்துச் செய்யலாம் அல்லது வேறு எந்த விதத்திலும் அப்பொருட்களைப் பயன்படுத்தலாம், மற்றும் இப்படியாகச் செய்வதிநிமித்தம் அவன் நியாயப்பிரமாணத்திற்கு முன்பாக குற்றவாளியாகுவதில்லை, காரணம் உக்கிராணத்துவத்தினுடைய பணியின் தன்மையானது, அவன் தன்னுடைய எஜமானுக்கு முற்றும் முழுயைமாய்ப் பிரதிநிதி போல் செயல்படுவதாகும். உக்கிராணக்காரன் உண்மையற்றவனாய் இருந்தால், எஜமான் அவனைப் பணி நீக்கம் செய்யலாம்; இப்படியாகப் பணி நீக்கம் செய்வது மாத்திரமே, அவனுக்கு அளிக்கப்படும் ஒரே தண்டனையாக இருக்கும்; காரணம் அவனை உக்கிராணக்காரனாக்கினபோது, உக்கிராணக்காரன் தன்னுடைய கணிப்பின்படி நடப்பதற்கு, எஜமான் முழுமையான அதிகாரம் கொடுத்தவனாய் இருந்தார்.

அநீதியுள்ள உக்கிராணக்காரன் பற்றின உவமையில் உக்கிராணக்காரன், தன்னுடைய எஜமானுடைய காரியங்களை, தான் அநீதியான விதத்திலும், திருப்திகரமற்ற விதத்திலும், பூரணமற்ற விதத்திலும் பயன்படுத்தினதில் அநீதியுள்ளவனாய் இருக்க, சூழ்நிலையை உணர்ந்துக் கொண்ட மாத்திரத்தில், தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கோ அல்லது தான் சரியாக அனைத்தையும் செய்துள்ளதாக சாதிப்பதற்கோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் தன்னுடைய கணக்கை ஒப்புவிப்பதற்கு முன்னதாக, தன்னுடைய எஜமானிடம் கடன்பட்டவர்கள் சிலருக்கு அவர்களுடைய கடன்களின் சில பாகங்களை மன்னித்து விடுவதன் மூலமாக, இரக்கத்துடன் நடந்துக் கொண்டவனாகக் காணப்பட்டான் (இது ஓர் ஞானமான செய்கையாகும்; உதாரணத்திற்குக் கடனாளிகளால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், கடனாளிகளை, திவால் சட்டமானது கடனிலிருந்து விடுவிக்கின்றது; இதைப் போலவே கடனாளி கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் இருப்பதைக் காணும் கடன் கொடுத்தவர்கள், முழுக்கடன் தொகையில், 60%, 50%, 40% தொகையை மாத்திரம் தங்களுடைய நன்மைக்காகப் பெற்றுக்கொள்ள

ஒப்புக்கொள்கின்றனர். யூதர்களுடைய யூபிலி வருடமும், கடனாளிகளை அனைத்துக் கடன்களிலிருந்து விடுவிக்கின்றதாய் இருக்கின்ற காரியங்கூட, இன்றைய திவால் சட்டத்தில் உள்ள ஞானமான வியாபார நுட்பத்திற்கு இசைவாசவே உள்ளது). உக்கிராணக்காரன் கடைசியில் செய்யும் இக்காரியத்தினிமித்தமாக, அவன் உவமையில் அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்று கூறப்படாமல், மாறாக முற்காலங்களில், அவன் தன்னுடைய எஜமான் எதிர்ப்பார்த்த விதத்தில் உக்கிராணத்துவம் செய்யாததினாலேயே, அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்று உவமையில் கூறப்பட்டுள்ளான்.

யூத ஜனங்களுக்கு, அதிலும் விசேஷமாக மோசேயினுடைய ஆசனத்தில் வீற்றிருந்து, காரியங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிருந்து, நியாயப்பிரமாணத்திற்கான சரியான விளக்கம் எது என்றும், எது இல்லை என்றும் தீர்மானிக்கின்றவர்களுக்கு, இப்பொழுது உவமையைப் பொருத்தும் விதத்தில், ஒருவேளை இவர்கள் பூமிக்குரிய உக்கிராணக்காரர்கள் போன்று ஞானமுள்ளவர்கள் என்றால், இப்படியாகவே தங்களுடைய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நமது கர்த்தர் சுட்டிக்காண்பித்தார். இவ்வாறு இவர்கள் எப்படிச் செய்யக்கூடும்? ஒருவேளை இவர்கள் தாங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ், தேவன் எதிர்ப்பார்த்தவைகளை நிறைவேற்றவில்லை என்ற உண்மையை உணர்ந்துக் கொண்டு விட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம்; ஒருவேளை யுக மாற்றத்திற்கான காலமும் வந்துவிட்டது என்றும், இவர்கள் தங்கள் கணக்கை ஒப்புவிக்க வேண்டும் எனத் தேவன் கேட்கின்றார் என்றும், புதிய உக்கிராணக்காரன் காரியங்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வார் எனத் தேவன் அறிவிக்கின்றார் என்றும், உணர்ந்துக்கொண்டார்கள் என வைத்துக்கொள்வோம்; இம்மாதிரியான ஒரு சூழ்நிலையின் கீழ், மோசேயின் ஆசனத்தில் இருக்கும் இவர்கள் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும்? இந்த உவமையினுடைய படிப்பினைக்கு இசைவாக, இவர்கள் அவர்களுக்குள்ளாக பின்வருமாறு கூறியிருந்திருக்க வேண்டும் என்று நாம் பதிலளிக்கின்றோம், அதாவது .......... நாம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை முழுமையாய்க் கைக்கொள்ளவில்லை என்பதை நாமே அறிவோம்; உண்மைத்தான் அப்படி முழுமையாய்ச் செய்வது என்பது, நம்முடைய திராணிக்கு அப்பாற்பட்ட காரியமே. யுக மாற்றம் சீக்கிரம் சம்பவிக்கவிருப்பதையும் நம்மால் உணரமுடிகின்றது; மற்றும் நாம் கணக்கு ஒப்புவிக்க அழைக்கப்படுகின்றோம் என்பதையும் நம்மால் உணர முடிகின்றது; தேவனுடைய நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்க்கும் விஷயத்தைச் செய்வது மற்றும் பிரமாணத்தின் கீழாக இருந்து நித்திய ஜீவனை அடைவது மற்றும் தேவன் நமக்குக் கொடுத்திட்ட நன்மைகள் அநேகவற்றைப் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில் நாம் தவறியே உள்ளோம் என்று மாத்திரமே, தேவனுக்கு முன்பாக நம்மால் ஒத்துக்கொள்ள முடியும். நாம் சில விஷயங்களில், நமக்குக் கொடுக்கப்பட்ட நன்மைகளைச் சரியாய்ப் பயன்படுத்தியுள்ளோம்; ஆனால் நமக்காகவோ அல்லது வேறு யாருக்காகவோ (உலகத்தில் எதையாகிலும் சாதிக்கும் விஷயத்திலோ அல்லது) நித்திய ஜீவனைச் சம்பாதிப்பதிலோ முழுமையாய்த் தோல்வியடைந்தே உள்ளோம். எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை என்பதை நம்மால் மறுக்கமுடியாது. நம்முடைய உக்கிராணத்துவம் தோல்வி அடைந்துள்ளது என்பதும், நாம் பதவி நீக்கம் பண்ணப்படப் போகின்றோம் என்பதும், சீக்கிரத்தில் நடைப்பெறப் போவதினால், நாம் இந்தப் பாவிகளிடம் (ஊதாரி மகன் வகுப்பாரிடம்) அன்புடனும், இரக்கத்துடனும், தயாளத்துடனும் நடந்துக்கொள்வதே விவேகமான விஷயமாய் நமக்கு இருக்கும்; அவர்கள் நம்மை விட மிகவும் பாவிகளாக இருக்கின்றனர் என்று தாக்கிப் பேசுவதற்குப் பதிலாக, அவர்களிடம் வெளிப்படையாகப் பேசலாம், அதாவது “எங்களால் இந்தப் பூரணமான தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை என்பதையும், உங்களாலும் முடியவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம்; ஆனால் முற்றும் சோர்வடைந்து தளர்ந்துப் போவதற்குப் பதிலாக, உங்களால் முடிந்தமட்டும் நியாயப்பிரமாணத்தைக் கடைபிடியுங்கள்; உங்களால் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாய்க் கைக்கொள்ள முடியாது என்றும், உங்களால் முடிந்த மட்டும், உங்களுடைய சந்தர்ப்ப, சூழ்நிலைகளுக்கு ஏற்ப, 50% அல்லது 80% நியாயப்பிரமாணத்தை நீங்கள் கைக்கொள்வதையே நாங்கள் எதிர்ப்பார்க்கின்றோம் என்றும் ஒத்துக்கொள்ளுவதின் மூலமாக, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதிலான உங்களுடைய கடனில் ஒரு பகுதியை ரத்து நாங்கள் செய்வோம் எனப் பேசலாம்” என்பதேயாகும்.

பரிசேயர்களும், வேதபாரகர்களும் இப்படியாகச் செய்திருப்பார்களானால், இவர்கள் தங்களுக்கும், ஜனங்களுக்கும் இடையே இருந்த பிளவைச் சரிச் செய்திருப்பார்கள்; மற்றும்

இவர்கள் தங்களாலும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை என்று ஒத்துக்கொள்வதில் விளங்கும் நேர்மையானது, இவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக இருந்திருக்கும், அதாவது புதிய யுகம் தொடர்புடைய விஷயத்தில் நன்மைக்கு ஏதுவாக இருந்திருக்கும். இப்படியாக இவர்கள் வெளிப்படையாய் ஒத்துக்கொள்வதும், மற்றவர்களுக்காய் அனுதாபம் கொள்வதும், மற்றவர்களுடைய பாரம் சுமப்பதில் உதவியளிப்பதுமான விஷயங்களைச் செய்திருப்பார்களானால், இவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமான இருதய நிலைமையை அடைந்திருப்பார்கள். இன்னுமாக இவர்களால் பாவிகள் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட கீழ்மட்ட வகுப்பாரும், இவர்களிடத்தில் அன்பாயிருந்திருப்பார்கள்; மற்றும் இவைகளின் காரணமாக, இவர்களது ஆட்சியைக் கவிழ்த்துப் போடத்தக்கதாக இவர்கள் மீது வரவிருக்கும் உபத்திரவக்காலத்தில், ஜனங்களுடைய அனுதாபத்தையாகிலும் கொஞ்சம் இவர்கள் தக்கவைக்கப் பெற்றிருந்திருப்பார்கள்.

ஆனால் இப்படியாகப் பரிசேயர்களும், வேதபாரகர்களும் செயல்பட்டார்களா? இல்லவே இல்லை. மாறாக இவர்கள் தங்களுடைய காப்பு நாடாக்களை இன்னும் அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கிக் கொண்டு, தங்கள் இருதயம் மற்றும் ஜீவியத்தில் பரிபூரணம் இருக்கின்றது என அதிகமாய் அறிவித்துக் கொண்டும், தங்களைத் தாங்களேயும், மற்றவர்களையும் வஞ்சித்துக் கொள்கின்றவர்களாய் இருந்தார்கள். தாங்கள் என்றென்றும் தேவனுடைய கிருபைகளுக்கு உக்கிராணக்காரர்களாய் இருக்கப் போவதாகப் பெருமையடித்துக் கொண்டிருந்தார்கள். பூரணமான நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியவில்லை என்று ஒத்துக்கொள்ளுகிற ஜனங்களுடைய தோள்களிலிருந்து, நியாயப்பிரமாணத்தினுடைய தீர்ப்புகளையும், பாரங்களையும் இறக்கி வைப்பதற்குப் பதிலாக, இந்தப் பரிசேயர்களும், வேதபாரகர்களும், தங்களுடைய சுண்டு விரலினால் கூட உயர்த்துவதற்கு உதவிப் புரியாத கடினமான பாரங்களை, ஜனங்கள் மேல் சுமத்துகிறவர்களாய் இருந்தார்கள்; "பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்" (மத்தேயு 23:1-4).

இப்படியாகச் செய்வதின் மூலமாக, இவர்கள் இன்னும் இன்னுமாக மாய்மாலக்காரர்களாகவும், கடின இருதயத்தார்களாகவுமாகி, வெளியில் அழகாய் அலங்கரிக்கப்பட்டதும், ஆனால் உள்ளே சகல அசுசிகளையும், நேர்மையின்மையையும், மாய்மாலத்தையும் கொண்டிருக்கும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளென இருந்தார்கள்; இவர்கள் தாங்கள் நியாயப்பிரமாணத்தை மீறுவதாக அறிந்திருந்த போதிலும், வெளியில் தங்களைப் பூரணர்கள் என்று கூறி பெருமையடித்துக் கொண்டிருந்தனர். இது பரிசேயர்களுக்கு மாத்திரம் சொல்லப்படாமல், சீஷர்களுக்கும் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது என்பது, இந்த உவமை எவ்வாறு பொருந்துகின்றது என்றும், எவ்வளவு ஞானமற்ற விதத்தில் இந்த உக்கிராணக்காரன் செயல்பட்டுள்ளான் என்றும் சீஷர்கள் கவனிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பந்தியில் இருக்கும் போதுகூட, அந்தப் பொருளாசைக்காரரான பரிசேயர்கள் ஓரளவுக்கு உவமையினுடைய போக்கை உணர்ந்தவர்களாக, பரியாசம் பண்ணினார்கள். ஆனால் நமது கர்த்தர் பாடத்தை இவர்களுக்கு வலியுறுத்தும் வண்ணமாக, லூக்கா 16:15-ஆம் வசனத்தினுடைய வார்த்தைகளைக் கூறினார்; அதாவது "நீங்களே அந்த அநீதியுள்ள உக்கிராணக்காரர்; சீக்கிரத்தில் உங்களுடைய தள்ளப்படுதல் வெளியரங்காமாகும்" என்ற விதத்தில் இயேசு பேசினார்; "(நீங்கள் பிரதிநிதியாக இருக்கும்) நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் (தேவனால் அங்கீகரிக்கப்பட்டு) வழங்கி வந்தது; அதுமுதல் தேவனுடைய இராஜ்யம் (புதிய யுகம்) சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது. யாவரும் பலவந்தமாய் அதில் (பிரவேசிக்க வேண்டும்) பிரவேசிக்கிறார்கள்" (லூக்கா 16:16). "மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை,

பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை" (மத்தேயு 23:13). உங்களுடைய அமைப்பானது மனைவி, கணவனுக்குக் கட்டுப்பட்டு இருப்பது போன்று மோசேயுவுக்கும், நியாயப்பிரமாணத்திற்கும், (அதாவது நியாயப்பிரமாணம் காணப்படுவது வரைக்கும்) கட்டுப்பட்டு இருப்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் அடையாளப்படுத்தும் நியாயப்பிரமாணம் மரித்துப்போவது என்பது, இஸ்ரயேல் விடுதலையாகுவதற்கும், புதிய உடன்படிக்கையின் மூலம், மேசியாவுடன் இணைவதற்கு (திருமணம் பண்ணிக்கொள்வதற்கும்) ஆயத்தப்படுவதற்கும், அவசியமாய் இருக்கின்றது என்ற விதத்தில் இயேசு கூறினார் (ரோமர் 7:1-4; லூக்கா 16:17, 18).

இந்த உவமையானது இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவு பகுதிக்கு விசேஷமாய் பொருந்துவதாகக் கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை; ஆனாலும் மாம்சீக இஸ்ரயேலர்களும், அவர்களின் அறுவடைகாலமும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும், இந்த யுகத்திற்கும், தற்போதைய அறுவடை காலத்திற்குமான உருவகமாக இருக்கின்றது என்று மற்ற வேதவாக்கியங்கள் மூலமாய் நாம் அறிந்துக்கொள்கின்றோம்; ஆகையால், நமது கர்த்தருடைய நாட்களில் உள்ள அநீதியுள்ள உக்கிராணக்காரனுடைய நிலைமைக்கும், இந்தத் தற்போதைய காலத்தில் அப்படியாக இருக்கும் ஒரு வகுப்பாருக்கும் இடையே உள்ள சில இணைகளைப் பார்ப்பதில் தவறில்லை. மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வகுப்பார் போன்று, இன்று யார் காணப்படுகின்றார்கள் என நாம் பார்க்கையில், சுவிசேஷ யுக சபை தொடர்புடையவர்களாக, கிறிஸ்துவினுடைய ஆசனத்தில் ஒரு வகுப்பார் உட்கார்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டுபிடிக்கின்றோம். இந்த ஒரு வகுப்பாருக்குள், மூப்பர்கள், ஊழியக்காரர்கள், கண்காணிகள், ஓய்வுநாள் பள்ளி ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், தலைமைக் குரு முதலானவர்கள் காணப்படுகின்றனர். இவர்களும் தங்கள் மீது ஒரு யுக மாற்றம் வரவிருக்கின்றது என்றும், முற்காலங்களிலுள்ள தங்களுடைய பாரம்பரியங்கள் மற்றும் விசுவாசப் பிரமாணங்கள் பற்றிக் கேள்வி எழுப்பப்படுகின்றது என்றும், தாங்கள் கணக்கு ஒப்புவிக்க அழைக்கப்படுகின்றார்கள் என்றும், உணர்ந்துக்கொள்கின்றனர். கணக்கு முகஸ்துதிக்கென ஒப்புவிக்க முடியாது என்றும், ஒருவேளை தேவனுக்குத் தெரிந்திருக்கும் முழு உண்மையும் ஜனங்களுக்குத் தெரிந்துவிட்டால், தாங்கள் அநேக விதத்தில் தங்களுடைய உக்கிராணத்துவத்தில் உண்மையற்றவர்களாகவும், கடமையில் தவறிப்போனவர்களாகவும் இருந்த காரியம் கண்டுபிடிக்கப்படும் என்றும் உணர்கின்றனர். இவர்கள் ஆபத்தைக் கண்டு அஞ்சுகின்றனர்; இவர்கள் ஜனங்களுடைய முறுமுறுத்தல்களையும், விசுவாசப்பிரமாணங்கள் பற்றின கேள்விகளையும், அமைதிப்படுத்திட முனைந்து கொண்டிருக்கின்றனர். கர்த்தர் அவருடைய நாட்களில் வாழ்ந்திட்ட உக்கிராணக்காரர்களைக் குறித்துப் பேசிட்டக் காரியங்கள்,அதாவது "நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார் மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" என்பது இன்றுள்ள இவர்களுக்கும் பொருந்துகின்றது (15-ஆம் வசனம்).

கர்த்தருடைய ஜனங்கள் திரளானவர்கள் தொடர்புடைய விஷயத்தில் உக்கிராணக்காரர்களாய் இருக்கும் பெயர்ச்சபைகளின் இந்தப் பிரதிநிதிகள், பரிசேயர்கள் போலவே, அவர்களுடைய ரூபத்திலேயே, உண்மையை ஒத்துக்கொள்வதற்குப் பதிலாக, துணிவு கொண்டுள்ளனர். உதாரணத்திற்கு விசுவாச பிரமாணங்கள் பற்றிக் கேள்வி எழுப்பபடும் விஷயத்தில், வெஸ்ட் மினிஸ்டர் விசுவாச அறிக்கையை (westminister confession of faith) திருத்தும் நோக்கத்தில் மறுஆய்வு பண்ணும்படிக்கு விண்ணப்பம் வைக்க முயன்றவர்களே, இப்படிச் செய்வது அனைத்தையும் வெளியரங்கமாக்கிவிடும் என்றும், தாங்கள் முற்காலத்தில் தப்பறையில் காணப்பட்டுள்ளதையும், தெய்வீக வார்த்தைக்கான தங்களுடைய விளக்கத்தில் தாங்கள் குறைவுள்ளவர்களாக இருந்ததையும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் எண்ணினார்கள்; மற்றும் இது ஜனங்கள் மத்தியிலான தங்களுடைய கனத்தைக் குறைத்துவிடும் என்று உணர்ந்தார்கள்; ஆகவே மறுஆய்வு பண்ணவேண்டும் என்று வேண்டிக்கொண்டவர்களே, இப்பொழுது இந்த விசுவாச அறிக்கை சிறப்பாய் இருக்கின்றது என்றும், இதில் தங்களுக்கு முழுமையான திருப்தி இருக்கின்றது என்றும், இதில் எந்த மாற்றமும் செய்ய அவசியமில்லை என்றும் ஆதரவு தெரிவிக்கின்றனர். இவர்கள் மனுஷர் மத்தியில் உயர்வாய் மதிக்கப்படுவதற்கு விரும்புகின்றபடியால், இவர்கள் தாங்கள் யாரிடம் இந்த உக்கிராணத்துவத்தைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதையும், யார்

அதைத் தங்களிடமிருந்து எடுத்தக்கொள்ளப் போகிறார் என்பதையும் முற்றிலுமாக மறந்துப்போய்விட்டனர்.

சுவிசேஷ யுகத்தினுடைய இந்த உக்கிராணக்கார வகுப்பாருக்கான, சரியான செயல்பாடு என்னவாக இருக்கும்? யூத உக்கிராணக்காரர்களுக்கு என்ன நமது கர்த்தர் பரிந்துரைத்தாரோ, அதையே இவர்களும் செய்வது சரியான காரியமாக இருக்கும் என்றே நாம் பதிலளிக்கின்றோம்; அதாவது இவர்கள் விசுவாசப் பிரமாணங்களில் உள்ள தப்பறைகளையும், தெய்வீக வார்த்தைகளுக்கு விளக்கம் கொடுக்கும் விஷயத்திலுள்ள தங்களுடைய குறைவுகளையும், தேவனுடைய வார்த்தைகளைச் சரியாய்ப் பயன்படுத்துவதிலும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைச் சரியாய்ப் பொருத்திப் பார்ப்பதிலும், கடந்த காலத்தில் தாங்கள் தவறிய விஷயங்களையும் ஜனங்களிடம் ஒத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் இப்படியாக தங்களுடைய சொந்த தப்பறைகளையும், குறைவுகளையும் ஒத்துக்கொள்வதோடு கூட, இவர்கள் காரியங்களைத் திருத்தம் செய்து, ஜனங்களால் இயன்றதைச் செய்யும் நிலைக்கு, அவர்களைக் கொண்டு வரவேண்டும். உதாரணத்திற்கு, இவர்கள் பின்வருமாறு ஜனங்களிடம் கூற வேண்டும், “நீங்கள் தேவனுக்கு எவ்வளவு கடன்பட்டுள்ளீர்கள் என்றும், உங்கள் மீது என்ன தண்டனை வருகின்றது என்றும், நாங்கள் உங்களிடம் கூறினோம்? உங்களிடம், நித்திய காலத்திற்குமாகிய சித்திரவதை எனும் தண்டனையை நாம் கூறியிருந்திருந்தோம் என்றால், அது தவறு என்று இப்பொழுது எண்ணிக் கொண்டு, உட்கார்ந்து “நீதியான பலனே/விளைவே கிடைக்கும்” என்று எழுதுங்கள். ஒருவேளை யூதர்களுக்கான நியாயப்பிரமாணத்தில் இடம்பெறும் பத்துக் கற்பனைகளுக்கு ஏற்பவே, நீங்கள் தேவனுக்குக் கடமைப்பட்டிருப்பதாகவும், இவைகளையும் நீங்கள் முற்றும் முழுமையாகப் பூரணமாய்க் கடைபிடிக்கவில்லையெனில், உங்களுக்கு நித்திய ஜீவனுக்கான வாய்ப்பு இல்லை என்று நாங்கள் தெரிவித்தோமா? உங்கள் விசுவாசத்தினுடைய இந்த அம்சத்தைத் திருத்தம் செய்துகொண்டு, இதற்குப் பதிலாக, புதிய உடன்படிக்கையின் கீழ், தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்துள்ளவர்களுடைய மிகுந்த பூரணமற்ற கிரியைகளை தேவன் ஏற்றுக்கொள்கின்றார் என்று எழுதுங்கள்; அதுவும் இந்தப் பூரணமற்ற கிரியைகளே, தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களால் செலுத்த முடிந்த சிறந்த விஷயங்களாகவும், தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக் கொண்டவரும், அன்பு செய்தவருமானவருடைய நாமத்திலும், அவருடைய புண்ணியத்திலும் ஏறெடுக்கப்பட்டதாகவும் இருக்கும்போது, தேவன் அதை ஏற்றுக்கொள்கின்றார் என்றும் எழுதுங்கள்” என்பதேயாகும்.

ஒருவேளை இக்காலத்திலுள்ள உக்கிராணக்காரர்கள் இப்படியாகச் செயல்பட்டிருப்பார்களானால், இவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி எதிர்க்காலத்தில் மதிக்கப்பட்டிருந்திருப்பார்கள்; ஆனால் இவர்கள் இப்படியாகச் செயல்படாமல் இருப்பதினால், இவர்கள் மாய்மாலக்காரர்கள் என்றும், மகா உபத்திரவக் காலத்திற்குள்ளாகவம், அவநம்பிக்கை எனும் குழிக்குள்ளாகவும் இவர்களை நம்பியிருந்த மந்தைகளை இவர்கள் தவறாய் வழிநடத்தும், குருடான வழிகாட்டிகள் என்றும், இழிவுபடுத்தும் காலம் நிச்சயமாய் வந்து கொண்டிருக்கின்றது.

இந்த உவமையானது 8-ஆம் வசனத்துடன் நிறைவடைகின்றதாக கருதப்படுகின்றது; இதற்குப் பின்னர் இடம்பெறும் அறிவுரைகள் வேறே காரியம் பற்றிப் பேசுகிறதாகவும், விசேஷமாகக் கர்த்தருடைய போதனைகளை ஏற்றுக்கொண்டுள்ள, அவருடைய சீஷர்களுக்குப் பேசப்பட்டதாகவும் இருக்கின்றது.

## “தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது”

பின்னர் இடம்பெறும் வசனங்கள், இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்வது கூடாத காரியமாக இருக்கின்றது என்பது பற்றியதாகும். உலகப்பொருள் என்பது, பூமிக்குரிய ஐசுவரியங்களையும், ஆஸ்தியையும் மாத்திரம் குறிக்காமல், மனுஷர் மத்தியிலான கனம் முதலியவற்றையும் குறிக்கின்றதாகவும் இருக்ககின்றது; இதுவே பரிசேயர்கள் சரியான

நடவடிக்கையை எடுப்பதற்கும், தங்களுடைய தவறை ஒத்துக்கொள்வதற்கும், இரக்கத்தை நாடவும், இரக்கத்தை அடைவதற்கும் அவர்களுக்கு இடையூறாக இருந்தது. உலகப்பொருட்கள் என்பது, கர்த்தருடைய சீஷர்களாகுவதற்கு விரும்பும் அனைவருக்கும் மாபெரும் இடையூறான ஒன்றாகவே இருக்கின்றது. உலகப்பொருள் என்பது, அது சுயமாகவோ (அ) ஆஸ்தியாகவோ (அ) கீர்த்தியாகவோ (அ) அந்தஸ்தாகவோ (அ) மனுஷர் மத்தியிலான கனமாகவோ (அ) இவையனைத்துமாகவோ (அ) இவைகளில் ஒன்றாகவோ இருக்கலாம். இதை வணங்குகிற ஒருவன், ஒரே நேரத்தில் உலகப்பொருளையும் வணங்க முடியாது, அதேசமயம் தேவனை உண்மையாய் வணங்குகிறவனாகவும், கிறிஸ்துவினுடைய உண்மையான பின்னடியானாகவும் இருக்கவும் முடியாது; ஏனெனில் தேவனும், உலகப்பொருளும், நம்முடைய இருதயங்களுக்கு முன்னதாக எதிரெதிரானதாக இருக்கின்றது. நாம் நமது அன்பையும், கவனத்தையும் கூறுபோட்டு, ஒரு பாதியைத் தேவனுக்கும், அவருடைய ஊழியத்திற்கும், மற்றும் மற்றப் பாகத்தை உலகப்பொருளுக்கும் கொடுக்க முயற்சித்தால், அது தேவனுக்கும் திருப்திகரமாய் இராது, உலகப்பொருளுக்கும் திருப்திகரமாய் இராது, நமக்கும் திருப்திகரமாய் இராது.

ஆகையால் நாம் சுயத்திற்காகவும், பூமிக்குரியவைகளுக்காகவும் வாழப்போகிறோமா அல்லது எல்லாவற்றையும் துறந்து, இவைகளைத் தேவனுக்கான நன்மைக்கேதுவான விஷயங்களுக்கும், பரத்திற்கடுத்த நலனுக்கான விஷயங்களுக்கும் பலிச்செலுத்தப் போகிறோமா என்று நாம் தீர்மானிக்க வேண்டும். உலகப்பொருளை/செல்வத்தை வணங்குகிறவர்களுக்குத் தற்கால ஜீவியம் தொடர்புடைய விஷயத்தில், பூமிக்குரிய செழிப்புச் சார்ந்த சில நன்மைகள் காணப்படலாம், ஆனால் உலகப்பொருளினால்/செல்வத்தினால் நித்திய ஜீவனைக் கொடுக்க முடியாது. நித்திய ஜீவன் என்பது, தேவனுடைய அன்பளிப்பாகும்; மேலும் தேவனுடைய அன்பளிப்பை/ஈவைப் பெற்றுக்கொள்ளப் போகிறவர்கள், தேவனுடைய நண்பர்களாய், தேவனுடைய பிள்ளைகளாய்க் காணப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்கள் உலகப்பொருட்களைத் துறப்பதன் மூலமாகவும், பூமிக்குரிய பெயரையும், கீர்த்தியையும், நன்மைகளையும், சந்தோஷமாய்ப் பலிச் செலுத்துவதன் மூலமாகவும் தேவன் மீதான தங்களுடைய அன்பையும், பயபக்தியையும் வெளிப்படுத்துகிறவர்களாய் இருந்து, இப்படியாக வரவிருக்கிற ஜீவியத்தில் அவர் அளிப்பதாக வாக்களித்துள்ள மகா மேன்மையும், அருமையுமான காரியங்களையும், அவருடைய கிருபையின் ஐசுவரியத்தையும், அவருடைய அன்பையும், கிருபைகளையும் பற்றியதான தங்களுடைய மேலான உணர்ந்துக்கொள்ளுதலை/மதிப்பிடுதலை வெளிப்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கின்றார்.

இவர்கள் "சிநேகிதர்களைச் சம்பாதிக்க வேண்டும்." வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இவர்கள் அநீதியுள்ள உலகப்பொருட்ளைப் பலிச்செலுத்துவதன் மூலம், பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்க வேண்டியவர்களாய் இருக்கவேண்டும்; அதாவது அநீதியான இந்தத் தற்காலத்தின் தீமை நிறைந்த உலகத்தினுடைய, பல்வேறு நலன்களைப் பலிச்செலுத்துவதன் மூலமாக, பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்க வேண்டியவகளாய் இருக்கவேண்டும்.

சிலர் பலிச்செலுத்தத்தக்கதாக மிகவும் குறைவான உலகப்பொருட்களையே/ செல்வங்களையே பெற்றிருப்பார்கள்; ஆனால் கொஞ்சத்தில் உண்மையாய் இருப்பவன், ஒருவேளை அவன் திரளானவற்றைப் பெற்றிருந்தால் எப்படி உண்மையுள்ளவனாய் இருப்பான் என்பதற்குச் சாட்சிக் கொடுக்கிறவனாய் இருப்பான் என்று கூறுவதன் மூலம், கர்த்தர் நம் அனைவரையும் உற்சாகப்படுத்துகின்றார். இன்னுமாக நம்மால் ஏறெடுக்க முடிந்த சிறிய பலிகளை, நாம் பெரிய பலிகளை ஏறெடுத்தது போன்று கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார். கொஞ்சம் நாணயங்களாகவோ அல்லது மில்லியன் கணக்கான பணமாகவோ, சிறிய செல்வாக்காகவோ அல்லது பெரிய செல்வாக்காகவோ, எதுவாயினும் கர்த்தருடைய ஊழியமும், தற்போதைய வாய்ப்புகளை நாம் பயன்படுத்துவது தொடர்புடையதுமான சிறந்த சாட்சி . . . "அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்பதேயாகும். அளவைத் தேவன் பார்ப்பதில்லை, மாறாக குணலட்ணத்தை, இருதயத்தின் நிலைமையையே தேவன் நாடுகின்றார். யார் சரியான இருதய நிலைமையைப் பெற்றிருந்து, தன்னால் முடிந்த மட்டும், தன்னிடத்திலுள்ள யாவற்றினாலும் கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதாக ஜீவியத்தின் சிறு காரியங்களில் கூட ஜாக்கிரதையாய் இருக்கின்றானோ, அவனுக்கே உண்மையான ஐசுவரியங்களாகிய பரலோக ஐசுவரியங்கள் கொடுக்கப்படும்.

அவன் பரம இராஜ்யத்தின் மகிமைகளுக்குள் பிரவேசிப்பவனாய் மாத்திரம் இல்லாமல், தற்கால ஜீவியத்திலுங்கூட அந்த ஐசுவரியத்தின் முதற்பலன்களைத் தன்னுடைய சொந்த இருதயத்திலும், தன்னுடைய சொந்த அனுபவத்திலும் கூடக் பெற்றுக்கொள்ளுகிறவனாயும் இருப்பான்; ஏனெனில் மகிமையின் சுதந்திரவாளிகளாகவும், தேவனுடன் சரியான உறவின் நிலையிலும் காணப்பட்டு, ஓட்டத்தில் உண்மையாய் ஓடுகிறவன், ஓட்டத்தினுடைய முடிவில் பரிசைப் பெற்றுக் கொள்கிறவனாய் மாத்திரம் இராமல், ஓட்டத்தின் முடிவிற்கு முன்னதாகவுங்கூட உலகத்தால் கொடுக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான ஆசீர்வாதங்களாகிய கர்த்தருடைய சந்தோஷத்தையும், எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தையும் பெற்றிருப்பான் என்ற உண்மை மறுக்கப்பட முடியாததேயாகும். இதனால் இவர்கள் யாத்திரிகர்களாக இருக்கும்போதும், தற்கால திருப்திகரமற்ற கூடார நிலையில் அதன் பெலவீனங்களினால் தவித்துக்கொண்டிருக்கும்போதும் இவர்களால் பாட இயலும்.

ஒருவேளை நாம் நமக்குச் சொந்தமாய் இராததும், நமக்கு உக்கிராணத்துவத்தில் மாத்திரம் கொடுக்கப்பட்டதுமான பொருட்கள், வாய்ப்புகள், தாலந்துகளாகிய சிறிய காரியங்களில், அதாவது கர்த்தருடைய உக்கிராணக்காரர்களென நம்முடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டதாக மாத்திரமே காணப்படும் சிறிய காரியங்களில் உண்மையாய் இராவிட்டால், ஒருவேளை கர்த்தருடைய மகிமைக்காக மாத்திரமே இவைகளைப் பயன்படுத்துவதில் நாம் உண்மையாய் இராவிட்டால், எதிர்க்காலத்திலோ அல்லது தற்கால ஜீவியத்திலோ, என்றென்றுமாய் அவர் கிருபையின் ஐசுவரியங்களை நமக்குச் சொந்தமானதாய் வைத்துக்கொள்ள கொடுப்பார் என்று எப்படி நாம் எதிர்ப்பார்க்கக்கூடும்.

எந்த ஒரு மனுஷனாலும், இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்வதும், திருப்திபடுத்துவதும், இரண்டிற்கும் நீதியானதைச் செய்வதும் கூடாத காரியம் என்பதும், தேவனுக்கும், நீதிக்கும், ஊழியஞ்செய்து அதேவேளையில் எதிராளியானவனுக்கும், இந்த யுகத்தை ஆளுகை செய்யும் இவ்வுலகத்தின் அதிபதியானவனுக்கு இசைவாக இருப்பவர்களுக்கும் பிரியமாகவும், ஏற்பவும் நடந்துக்கொள்வது கூடாத காரியம் என்பதும்தான் சீஷர்களுக்கான பாடமாகும். பரலோகத்தில் பொக்கிஷங்கள் சேர்த்தவர்களும், தேவனிடத்தில் ஐசுவரியவான்களாய் இருப்பவர்களுமாகிய, கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணயுள்ள அனைவரும், அர்ப்பணம் பண்ணிக்கொள்ளாதவர்கள் மத்தியில் கனமற்றவர்களாக இருக்க விரும்பிட வேண்டும்; இந்த அர்ப்பணம் பண்ணாதவர்கள் எந்த வேலை செய்கிறவர்களாக இருப்பினும், அவர்கள் உண்மையில் உலகப்பொருட்களுக்கும், சுயநலத்திற்கும், தற்கால ஜீவியத்திற்கும் ஊழியம் பண்ணுகிறவர்களாய் இருந்து, பரலோக இராஜ்யத்தை அடைவதற்கடுத்த காரியங்களில் இவைகளைப் பலிச்செலுத்தாதவர்களாய் இருப்பவர்கள் ஆவர்கள்.

---

**R5444**

# "ஐசுவரியவான் நரகத்திற்கும்...ஏழை பரலோகத்திற்கும்"
## லூக்கா 16:19-31

"ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்."-நீதிமொழிகள் 21:13.

அனைத்து ஐசுவரியமான புருஷர்களும், ஐசுவரியமான ஸ்திரீகளும் தினந்தோறும் சம்பிரமமாய் வாழ்கிறதினாலும், இரத்தாம்பரம், விலையேறப்பெற்ற வஸ்திரம் தரிப்பதினாலும், கடுந்துயரில் நித்திய காலத்தைக் களிப்பார்கள் என்ற அர்த்தத்தில் இயேசு கூறியுள்ளாரா? பரலோகத்திற்கு நாம் செல்ல வேண்டுமெனில், நாம் தரித்திரர்களாகவும், பருக்கள் நிறைந்தவர்களாகவும், பருக்களை நாய்களினால் நக்கப்பெற்றவர்களாகவும், ஐசுவரியமான மனுஷனுடைய மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைப் புசிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும் என்பது உண்மையா? எதிர்க்கால நன்மைகளின் பலன்களிலும், தண்டனைகளின் விஷயத்திலும், குணலட்சணத்திற்கு முக்கியத்தும் இல்லையா? இன்னுமாக நித்திய காலமாக அக்கினியில் வாதிக்கப்படும் ஐசுவரியவான்கள், தரித்திரர்கள் பேரின்பத்தில் இருப்பதைக் காண்பதும் மற்றும் கனப்படத்தப்பட்ட தரித்திரர், ஐசுவரியவான்கள் நித்தியமான

துயரத்திற்குள் இருப்பதைக் காண்பதும் நடைபெறுமா? இது சர்வ வல்லமையுள்ளவரும், ஆதிமுதல் அந்திவரை அறிந்திருப்பவரும், அன்புமுள்ள சிருஷ்டிகருடைய ஏற்பாடாக இருக்குமா?

அநேக வருடங்களாக, தேவனுடைய ஜனங்களில் மிகவும் பரிசுத்தமாய் இருப்பவர்களுக்கு இந்த உவமையானது, பெரும் மனவேதனையை அளித்து வந்துள்ளது; இருதயமும், தலையும்/சிந்தனையும் இந்த உவமையோடு எதிர்த்ததாகவே காணப்பட்டது. ஆபிரகாம் மிகவும் ஐசுவரியவானாய் இருந்தார் என்றும், ஈசாக், யாக்கோபு, தாவீது இராஜா, சாலொமோன் இராஜா முதலானவர்களும் மிகுந்த ஐசுவரியவான்களாய் இருந்தார்கள் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். தேவன் தாமே ஐசுவரியமுள்ளவராய் இருக்கின்றார் என்றும் நாம் நினைவுகூருகின்றோம். இன்னுமாக இக்காரியம் தொடர்புடைய வார்த்தைகளை நாம் எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகளில் பார்க்கும்போது, நம்பிக்கையற்றதும், இரண்டாம் மரணமாகவும் இருக்கிறதான கெஹன்னாவுக்கு ஆபிரகாம் செல்லாமல், மாறாக அக்கினியற்ற மரித்துப்போன நிலைமையாகிய கல்லறைக்கு, ஹேடிசுக்கு, ஷீயோலுக்கு போனார் என்றே நாம் கண்டுபிடிக்கின்றோம்.

நமக்குக் கிடைத்திட்ட அதிகப்படியான சத்தியமானது, இவ்வுமையின் விசித்திரத்தை/இரகசியத்தை அதிகரித்தது; ஏனெனில் ஷீயோல், ஹேடிஸ், கல்லறையானது அழிக்கப்படும் என்றும், அதிலுள்ள அனைவரும் வெளியே உயிர்த்தெழுதலில் கொண்டுவரப்படுவார்கள் என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்த உவமைக்கு ஒத்துப்போகிற/இசைந்துப் போகிற வேறு எந்த வசனமும் காணப்படவில்லை. அடையாளமான மிருகமும், அடையாளமான கள்ளத்தீர்க்கதரிசியும் சித்திரவதைக்குள் காணப்படுவதாக வெளிப்படுத்தல் விசேஷத்திலுள்ள ஒரு வசனத்தை மாத்திரமே இவ்வுமைக்கு (நேரடி பொருத்துதலின்) ஆதரவாகச் சொல்லலாமேயன்றி, மற்றப்படி இவ்வுமை தனித்தே மற்றவைகளுக்கு இசைவின்றி காணப்படுகின்றது. இந்த உவமையினுடைய கதையினால், சபையிலுள்ள சிந்திக்கிற ஜனங்களும் இடறிப்போய், குழப்பத்தில் காணப்படுகின்றனர்.

## "இப்பொழுது அனைத்தும் தெளிவாகியுள்ளது"

இப்பொழுது உவமையைப் பார்க்கலாம். நம்முடைய இரட்சகருடைய மற்ற உவமைகள் மற்றும் மறைப்பொருள்கள் போன்று, அதாவது உதாரணத்திற்கு, "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (அ) "உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" என்ற வசனங்களில் இடம்பெறும் உவமை போன்று, இந்த உவமையும், சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது (யோவான் 6:53; மத்தேயு 18:9). "இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை" (மத்தேயு 13:34). பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி வந்து தகுதியைக் கொடுப்பது வரையிலும், இயேசுவினுடைய போதனைகளுடைய ஆழத்தைப் புரிந்துக்கொள்வதற்கு எவரும் ஆயத்தமாய் இருக்கவில்லை.

ஆனால் இப்பொழுது அனைத்தும், எத்துணை எளிமையாய் உள்ளது! எத்துணை அருமையாய் உள்ளது! வேதாகமம் பற்றின நம்முடைய தற்போதைய புரிந்துக்கொள்ளுதலின் வெளிச்சத்தில், தெய்வீகக் குணலட்சணத்தினுடைய பிரகாசமானது, அவருடைய நீதியின் மீதும், அன்பு, ஞானம் மற்றும் வல்லமை ஆகியவைகளின் மீதும் அழகாய்ப் பிரகாசிப்பதினிமித்தம், தேவனுடைய ஜனங்கள் அநேகர் களிகூர்ந்து கொண்டிருக்கின்றனர்.

நம்முடைய இந்த ஆதார வசனப்பகுதி, ஓர் உவமை என்று புரிந்துக்கொள்வதில் நமக்குச் சிரமம் இல்லை. இதைச் சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்வது என்பது தரித்திரர்கள் அனைவரும் பரலோகம் செல்வதாகவும், ஐசுவரியவான்கள் அனைவரும் நரகம் செல்வதாகவும் எண்ணிக்கொள்ளும் அர்த்தமற்ற பொருட்களையே கொடுப்பதாக இருக்கும்;

ஏனெனில் இவ்வுமையானது, குணலட்சணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக எதுவும் தெரிவிப்பதில்லை. அதாவது தரித்திரன் நல்லவன் என்றோ, ஐசுவரியவான் கெட்டவன் என்றோ உவமையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இது உவமையாகவே பார்க்கப்படும்போது, இங்குச் சொல்லப்பட்டுள்ள தரித்திரனையும், ஐசுவரியவானையும் பற்றி எதுவும் கூறப்படவில்லை என்பதை நாம் காணலாம். இப்படியாகவே மற்ற உவமைகளிலும், கோதுமை மற்றும் செம்மறியாடானது தேவனுடைய பிள்ளைகளைக் குறிப்பதாகவும், களைகள் மற்றும் வெள்ளாடு என்பது, இந்த உலகத்தின் பிரபுவானவனாகிய எதிராளியின் தலைமையின் கீழ்க் காணப்படுபவர்களைக் குறிப்பதாகவும் இருக்கின்றது.

## "உவமையில் வரும் ஐசுவரியவான்"

நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டுள்ள இந்த உவமையில், ஐசுவரியவான் ஒரு வகுப்பாரையும், தரித்திரனாகிய லாசரு மற்றொரு வகுப்பாரையும் அடையாளப் படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர். இப்போது பார்க்கலாம்: ஐசுவரியவான், 16 நூற்றாண்டுகளுக்கு மேலாக தேவனுடைய கிருபையில் காணப்பட்ட யூத ஜனங்களுக்கு அடையாளமாக இருக்கின்றான். யூதர்களுக்கோ வாக்குத்தத்தங்களும், தீர்க்கதரிசிகளும், நியாயப்பிரமாண உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்களும், சிலாக்கியங்களும் கொடுக்கப்பட்டது. இக்காரியங்களே அடையாள வார்த்தைகளில், இவர்களுக்கான இராத்தாம்பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும், சம்பிரமமான மேஜையுமாக இருக்கின்றது. விலையேறப்பெற்ற வஸ்திரமானது, நிழலான பலிகளின் மூலமாக, இவர்களுக்கான நிழலான நீதிமானாக்கப்படுதலுக்கு அடையாளமாக இருக்கின்றது. இவர்களுடைய இரத்தாம்பரம், இராஜரிகத்திற்கு அடையாளமாக இருக்கின்றது; ஏனெனில் இவர்களே நிழலான இராஜ்யமாக இருந்தார்கள். இவர்களுடைய சம்பிரமமான வாழ்க்கையானது, அப்போஸ்தலனாகிய பவுல் உரோமர் 11:9-ஆம் வசனத்தில் குறிப்பிடுகின்றது போன்று தெய்வீக வாக்குத்தத்தங்களுக்கு அடையாளமாக இருக்கின்றது.

இயேசுவின் நாட்களில், யூதர்களுக்கான கிருபையானது படிப்படியாக நலிவுற ஆரம்பித்தது. இவர்கள் கி.பி. 70-இல் முற்றிலும் கிருபையினின்று துண்டிக்கப்பட்டுப் போனார்கள்; இதை யூதர்கள் அனைவருங்கூட ஒப்புக்கொள்கின்றனர். இடைப்பட்ட 40 வருட காலப் பகுதியில், ஐசுவரியவானாகிய யூத ஜனங்கள் வியாதிப்பட்டு, மரித்துப்போய் அடக்கம் பண்ணப்பட்டனர். இவர்கள் ஒரு ஜாதியாக ஹேடிசுக்கு, கல்லறைக்குப் போனார்கள்; இவர்களுடைய உயிர்த்தெழுதல் இன்னும் நடைபெறவில்லை; சீயோனிசம் (Zionism) என்பது இவர்களுடைய உயிர்த்தெழுதலுக்கான ஆரம்பமாக இருப்பினும், இவர்களுடைய உயிர்த்தெழுதல் இன்னும் நிறைவடையவில்லை.

இவர்கள் ஒரு ஜாதியினராக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டாலும், தனித்தனி யூதர்களென இவர்கள் கடந்த 19 நூற்றாண்டுகளாக வாழ்ந்துக்கொண்டே வருகின்றனர். இவர்கள் துன்புறுத்தல்களை அடையும்போது, சிலசமயம் இயேசுவின் நாமத்தை அறிக்கைச் செய்துகொண்டு, தங்களுடைய கிரியைகளில் அவரை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பவர்களிடமிருந்து துன்புறுத்தல்களை அடையும்போது, இவர்களுடைய ஆத்துமா துக்கித்தது. இத்தனை நூற்றாண்டுகளிலும், இவ்வுவமையில் விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாமால் அடையாளப்படுத்தப்படும், தேவனிடம் இந்த யூதர்கள் கூக்குரலிட்டனர். இவர்களுக்கும், தேவனுக்கும் இடையே பெரும் பிளவு உள்ளது என்ற ஒரே பதிலை மாத்திரமே, யூதர்கள் பெற்றவர்களாய் இருந்தார்கள். இது இப்படியாகவே எப்போதும் தொடர்ந்து இருக்கப் போவதில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி! புதிய யுகம் விடிந்து கொண்டிருக்கின்றது, இதில் ஐசுவரியவான், ஹேடிசிலிருந்து திரும்பி வருவான். இஸ்ரயேல் ஒரு ஜாதியாக, மீண்டும் பழைய நிலைமைக்குக்கொண்டு வரப்படும்; தேவையான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளுகிறவர்களிடத்தில் தேவனுடைய கிருபையானது மீண்டும் திரும்பும்.

## "உவமையில் இடம்பெறும் தரித்திரன்"

இவ்வுவமையில் இடம்பெறும் தரித்திரன், புறக்கணிக்கப்பட்ட ஒரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். இவ்வகுப்பாரில், தேவனுடைய கிருபையினின்று அகன்று

தூரம் போய்விட்ட பாவிகளும், ஆயக்காரர்களும் அடங்குகின்றனர். இவ்வகுப்பாரில் புறஜாதிகளுங்கூட அடங்குகின்றனர்; புறஜாதிகளிடத்திற்கு ஒருபோதும் தேவக் கிருபை காணப்படவில்லை, மற்றும் இவர்கள் இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களாகவும், அந்நியர்களாகவும் காணப்பட்டனர். "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரயேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்" (எபேசியர் 2:12). புறஜாதிகளுக்கு நிழலான நீதிமானாக்கப்படுதலாகிய விலையேறப்பெற்ற வஸ்திரங்கள் இருக்கவில்லை; மற்றும் தேவனுடைய இராஜ்யத்தில் பங்காகிய, தேவனுடைய கிருபையில் ஒரு பங்கிற்கு அடையாளமாக இருக்கும் இரத்தாம்பரமும் இவர்களுக்கு இருக்கவில்லை. இவர்களுக்கு எந்த வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்படவில்லை. ஐசுவரியவானுடைய மேஜையிலிருந்து, விழும் சிறு துணிக்கைகளை மாத்திரமே இவர்கள் பெற்றுக்கொள்ள முடிந்தவர்களாய்க் காணப்பட்டனர்.

இவ்வகுப்பாருக்கு இயேசுவினால் கொடுக்கப்பட்ட இப்படிப்பட்டதான இரண்டு துணிக்கைகளைக் குறித்து வேதவாக்கியங்கள் விவரிக்கின்றன. இயேசு உரோம நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனை, யூதர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க சலுகையாகச் சொஸ்தப்படுத்தினார்; இந்த அதிபதி யூதர்களுடைய நண்பன் என்றும், ஜெப ஆலயம் முதலானவைகளைக் கட்டிக் கொடுத்ததின் மூலமாக இந்த அதிபதி யூதர்களுக்கு நன்மை செய்துள்ளார் என்றும், யூதர்கள் கூறி, இயேசுவிடம் வேண்டிக்கொண்டார்கள். இந்த அதிபதியினுடைய ஊழியக்காரனைச் சொஸ்தப்படுத்தினது என்பது, ஒரு துணிக்கையாகும். இதைப் போலவே, பிசாசு பிடித்த தன்னுடைய மகளை விடுவிக்கும்படிக்கு, இயேசுவிடம் வேண்டிக் கொண்ட சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயும், ஒரு துணிக்கையைப் பெற்றுக்கொண்டாள். இயேசு அவளிடம், "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்" (மத்தேயு 15:26). இங்குப் புறஜாதியாரை, புறஜாதி நாய்கள் என்று கூறப்படும் யூத சொற்களின் வழக்கத்தையே இயேசுவும் பயன்படுத்தினார். இந்தச் சீரோபேனிக்கியா தேசத்து ஸ்திரீ, யூத ஸ்திரீயல்ல. ஆகையால், இவள் தேவனுடைய கிருபையை உரிமைப் பாராட்டுவதற்கு முடியாதவளாக இருக்கின்றாள். ஆனால் இவளோ "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" (மத்தேயு 15:27) என்று கூறினபோது, இயேசு அவளுடைய விசுவாசத்தைக் கவனித்து, அவள் வேண்டிக்கொண்ட துணிக்கையைக் கொடுத்தார்.

யூதர்கள் தங்களுக்கான <u>கிருபையின் நிலைமைக்கு</u> மரித்ததுபோல, புறம்பே இருந்தவர்களாகிய ஆயக்காரர்களும், பாவிகளும், புறஜாதிகளும் தங்களுக்கான <u>கிருபையற்ற நிலைமைக்கும்</u> மரித்துவிட்டார்கள்; தேவனுடைய கிருபைகளுக்காக வாஞ்சித்தவர்களும், அவருடைய வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளுக்குப் பசி தாகம் கொண்டுள்ளவர்களும், அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். பரிசேயர்களால் பாவிகள் என்றும், ஆயக்காரர்கள் என்றும், புறஜாதிகள் என்றும் புறக்கணிக்கப்பட்ட இந்த லாசரு வகுப்பாரை உள்ளடக்கினதாகவே, ஆதிகால திருச்சபை காணப்பட்டது. இவர்கள் தொடர்ந்துத் தேவனிடமிருந்து தொலைவில் காணப்படுவதற்குப் பதிலாக, இவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகவும், அவருடைய வாக்குத்தத்தத்தின் சுதந்தரர்களாகவும் ஆனார்கள். இந்த உவமையில், இவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக, அவருடைய கரங்களில் இருப்பவர்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளனர். நிழலில் ஈசாக்கே, சொல்லர்த்தமான ஆபிரகாமினுடைய வாக்குத்தத்தத்தின் பிரியமான குமாரனாகக் காணப்பட்டார். நிஜத்தில் இயேசுவும், அவருடைய பின்னடியார்களும், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராக இருந்து, தேவனுடைய இருதயத்தினிடத்திற்கும், கிருபையினிடத்திற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கின்றனர். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:29).

## "நிர்ணயிக்கப்பட்ட பெரும் பிளவு"

யூத மார்க்கத்திற்கும், கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் இடையிலான மாபெரும் பிளவானது, 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக நிர்ணயிக்கப்பட்ட காரியமாக இருக்கின்றது.

இவ்வளவு நீண்ட காலமாகவும், எந்த யூதனும் தேவனுக்கு அருகாமையில் வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை, மற்றும் எந்தப் புறஜாதியும், யூதனுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, கிறிஸ்துவல்லாத வேறு வழியின் மூலம், கிருபையை நாடுவதற்கு அனுமதிக்கவும் படவில்லை. தெய்வீகத் திட்டத்தில் இந்தப் பெரும் பிளவு ஏற்பாடு பண்ணப்பட்டதாகவும், மாற்ற முடியாததாகவும் இருக்கின்றது. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்போஸ்தலர் 4:12). அதாவது தேவனோடு இருதயப்பூர்வமான இருதய நிலைக்குள் நாம் வரத்தக்கதாக, கிறிஸ்துவினுடைய நாமமேயல்லாமல், வேறே நாமம் கொடுக்கப்படவில்லை. கிறிஸ்து வந்து, தம்மை இஸ்ரயேலர்களுக்கு அளித்து, அவரை அவர்கள் புறக்கணித்து, கொன்றுப் போட்டது முதல், இந்தப் பெரும் பிளவிற்கான காலம் ஆரம்பமாகின்றது.

கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின்போது இன்னுமொரு யுகமாற்றம் நடப்பதைத் தேவனுடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுவதினால் தேவனுக்கு நன்றி! அப்போது லாசரு வகுப்பாராகிய, இன்றைய காலத்தில் தேவனுடைய பிள்ளைகளாக விசுவாசத்தின் மூலம் காணப்படுபவர்கள், திரைக்கு அப்பால் அவருடைய பிள்ளைகளென உண்மையாகவும், மகிமையிலும் இருப்பார்கள். இவர்கள் தங்கள் கர்த்தராகிய இயேசுவுடன் இணையும்போது, இவர்கள் உலகத்தைக் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொள்வார்கள்; காரணம் இவர்கள் அவருடைய மணவாட்டியாகவும், இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரர்களாகவும் இருப்பார்கள். அப்போது ஐசுவரியவானுக்கு என்னவாகும்? ஓ, ஐசுவரியவான் ஹேடிசிலிருந்து உயிர்த்தெழுதலைப் பெற்றுக்கொள்கிறவனாய் இருப்பான்!

தேவனுடைய இராஜ்யத்தின், ஆவிக்குரிய தளத்தில், லாசரு வகுப்பார் காணப்படும்போது, தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய தளத்தில் காணப்படும் இன்னொரு வகுப்பாரில், யூதர்களே காணப்படுவார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள், மேசியாவின் ஆவிக்குரிய இராஜ்யத்துடன் தொடர்புடைய பூமியில், பிரபுக்களாக வைக்கப்படுவதில்லை; மாறாக இவர்களால் பிதாக்கள் என்று அழைக்கப்படுபவர்களே பூமியில் பிரபுக்களாக வைக்கப்படுவார்கள். இப்படியாகப் பிரபுக்களாக வைக்கப்பட போகிறவர்களைக் குறித்து, பரிசுத்தவானாகிய பவுலினால், எபிரெயர் 11:32-40 வரையிலான வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது.

யூதர்கள் மீண்டுமாக தெய்வீகக் கிருபைக்குள் கொண்டுவரப்படுவது குறித்துப் பரிசுத்தவானாகிய பவுல் ரோமர் 11:25-33 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். இங்கு, தேவனுடைய ஜனங்களாக இப்போது காணப்படும் நாம், எப்போதும் தேவனுடைய கிருபையைப் பெற்றவர்களாக இருக்கவில்லை என்றும், இஸ்ரயேல் தேவனுடைய கிருபையினின்று துண்டிக்கப்பட்ட போதுதான், நாம் தெய்வீகக் கிருபைக்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டோம் என்றும், தேவனுடைய கிருபையினின்று துண்டிக்கப்பட்ட அந்த இஸ்ரயேலர்கள், நம்முடைய கிருபையின் மூலமாக ஏற்றக் காலத்தில் கிருபைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், அப்போஸ்தலர் சுட்டிக் காண்பிக்கின்றார். அதாவது சபையானது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களென மகிமை, கனம் மற்றும் அழியாமையாகிய பரிசைப் பெற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய கிருபைக்கும், மாம்சீக இஸ்ரயேலர்களுக்கும் இடையிலான பெரும் பிளவு கடந்துப்போய் விடுகிறதாய் இருக்கும். பின்னர் மாம்சீக இஸ்ரயேலர்களுக்குக் கிருபை திரும்பி வருவதாக இருக்கும். மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் வாயிலாக, மாம்சீக இஸ்ரயேலர்களிடத்தில் வரும் தேவக் கிருபையானது, மாம்சீக இஸ்ரயேலர்கள் வாயிலாக ஆயிரவருட யுகத்தின்போது, சகல ஜாதியார்களுக்கும், பாஷைக்காரர்களுக்கும், கோத்திரங்களுக்கும் கடந்து வருகிறதாக இருக்கும்.

இதுவே, "உன் சந்ததியாருக்குள் பூமியின் குடிகள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்" என்பதே தெய்வீக வாக்குத்தத்தமாக இருக்கின்றது. ஆபிரகாமுடைய ஆவிக்குரிய சந்ததியாகிய சபையானது, இந்த வாக்குத்தத்தத்தில் முதலாவது பங்கை அடைவார்கள்; மற்றும் ஆபிரகாமுடைய மாம்சீக சந்ததியார்கள் இரண்டாவது பங்கை அடைவார்கள்; ஆனால் இவர்கள் இரு வகுப்பாரும், சாபத்தை

அகற்றுவதிலும், மனுக்குலத்திலுள்ள அனைவருக்கும் ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் பொழிவதிலும் பயன்படுத்தப்படுவார்கள்.

## "ஐசுவரியவானாகிய டைவின் (Dive's) ஐந்து சகோதரர்கள்"

ஐசுவரியவான் தன்னுடைய உலர்ந்துபோன நாவை, ஒரு சொட்டுத் தண்ணீரைக்கொண்டு குளிரப்பண்ண வேண்டும் என்று வேண்டிக்கொள்வதாக உவமை தெரிவிக்கின்றது. இது மகா துன்பத்தில் காணப்பட்ட யூத ஜனங்கள், தங்களுடைய உபத்திரவங்களில், ஏதேனும் சில உதவிகளைத் தங்களுக்குக் கிறிஸ்தவர்கள் செய்ய அனுமதிக்க வேண்டுமெனத் தேவனிடம் கேட்பதற்கு அடையாளமாக இருக்கின்றது. இப்படியான உதவிகளை, யூதர்கள் எப்போதாகிலும் தேவனிடம் கேட்டதுண்டா? கடந்த காலங்களில் தங்கள் மீது வந்திட்டதுமான உபத்திரவங்களிலிருந்து தங்களை விடுவிக்கும்படி, யூதர்கள் தேவனிடம் ஜெபம் பண்ணினதுண்டா? ஆம், இவர்கள் ஜெபம் பண்ணியுள்ளார்கள்! இன்னுமாக இவர்கள் லாசரு வகுப்பாருடைய பிரதிநிதியானவர்களிடம், அதாவது கிறிஸ்தவ மண்டலத்தினுடைய (கிறிஸ்தவ மார்க்கத்தினுடைய) பிரதிநிதியானவர்களிடம், வேண்டுகோளும் விடுத்துள்ளனர்; இந்தப் பிரதிநிதியானவர்கள் மூலம் தங்களுக்கான விடுதலை வர வேண்டுமென்று இவர்கள் வாஞ்சித்துள்ளார்கள்.

இதற்கான ஓர் உதாரணத்தை, நம்முடைய நாட்களில், குடியரசு தலைவரான ரூசிவெல்ட் (Roosevelt) அவர்களிடம் யூதர்களால் ஏறெடுக்கப்பட்ட வேண்டுகோளில் நாம் பார்க்கலாம். இந்த வேண்டுகோளில், யூதர்களுக்கான துன்புறுத்தல்களைத் தடைப்பண்ணும் விதத்தில் ரஷ்ய அரசாங்கத்துடனான, குடியரசு தலைவராகிய ரூசிவெல்ட் அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தும்படியாக, யூதர்களால் வேண்டுகோளிடப்பட்டது. இந்த ஒரு துளித் தண்ணீரை யூதர்கள் பெற்றார்களா? இல்லை உலக நாடுகளின் பரஸ்பர நல்லுறவு/மரியாதையானது, இப்படிப்பட்ட சம்பாஷணையை, ஒரு நட்பிற்கு உரிய நாட்டிடமிருந்து, வருவதை அனுமதிக்காது என்று ரூசிவெல்ட் அவர்களால் கூறி, மறுக்கப்பட்டது.

ஐசுவரியவான் மீது வந்த உபத்திரவத்தில் பங்கடைவதற்கான ஆபத்திற்குள்ளாகத் தக்கதான நிலையில், அந்த ஐசுவரியவானுக்கு ஐந்து சகோதரர்கள் காணப்பட்டதாக உவமை தெரிவிக்கின்றது. ஐசுவரியவானுடைய இந்த ஐந்து சகோதரர்கள் யார்? இயேசுவின் நாட்களில் பாலஸ்தீனியாவில் காணப்பட்ட யூதர்கள், பிரதானமாக பென்யமீன் மற்றும் யூதா கோத்திரர்களாக இருந்தார்கள் என்றும், மீதி பத்துக் கோத்திரத்தாராகிய பெரும்பாலானோர்கள் பல்வேறு தேசங்களில் சிதறிப்போயிருந்தார்கள் என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இந்தச் சோதனையான அனுபவங்கள் தேவனுடைய கிருபைகளில் பெரும்பாலானவைகளை அனுபவித்த பாலஸ்தீனியாவிலுள்ள யூதர்களை மாத்திரம் பாதித்ததா (அ) சிதறிப்போயிருக்கும் மற்ற யூதர்களையும் சேர்த்துதான் பாதித்ததா? என்ற கேள்வி எழும்புகின்றது. "அவர்களுக்கு மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் இருக்கின்றார்கள் இவர்களுக்கு அவர்கள் செவிக்கொடுக்கட்டும்" என்பதாக பதில் கொடுக்கப்பட்டுள்ளது. இது யூதர்களை மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளதை நிரூபிக்கின்றதாக இருக்கின்றது; ஏனெனில் புறஜாதிகளுக்கு மோசேயும், தீர்க்கத்தரிசிகளும் இருக்கவில்லை. ஐந்து என்ற எண்ணும் இசைவாகத்தான் உள்ளது. இரண்டு கோத்திரமாகிய யூதா மற்றும் பென்யமீன், ஓர் ஐசுவரியமுள்ள மனுஷனால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதினால், மற்றப் பத்துக் கோத்திரங்களும், ஐந்து சகோதரர்களால் அடையாளப்படுத்தப்படுவதும் சரியே.

இப்படியாகவே நடந்தது. பாலஸ்தீனியாவிலுள்ள யூதர்கள் மத்தியில் கொடுக்க ஆரம்பிக்கப்பட்ட சுவிசேஷத்தின் செய்தியானது, ஒவ்வொரு தேசத்திற்கும் கடந்துச் சென்றது. புறஜாதிகள் மத்தியில் இருக்கும் பட்டணங்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் கடந்துப் போகும் போது, முதலாவதாக, யூதர்களுக்குப் பிரசங்கித்து, "முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும்

இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம்" என்று குறிப்பிடுபவராக இருந்தார் (அப்போஸ்தலர் 13:46, 47). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இஸ்ரயேலர்கள் அனைவரின் மீதுமான பரீட்சை ஒன்றுபோலவே இருந்தது.

இவ்வாறாக நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறவைகளைக் காட்டிலும் மேலானதாகவே, இயேசுவின் போதனைகளிலுள்ள ஞானத்தின் ஆழம் காணப்படுகின்றது. இன்னுமாக இருண்ட காலங்களின் கொடூரமான உபதேசங்களானது நம்முடைய கணிப்புகளை விஷமேற்றினதாகவும், நம்முடைய ஆவிக்குரிய கண் பார்வையைக் குறைவுப்படுத்தி, கர்த்தருடைய வார்த்தைகளில் இருக்கும் அழகைப் பார்ப்பதிலிருந்து நம்மைத் தடுக்கிறதாய் இருந்துள்ளதையும் நாம் கண்டுபிடித்துள்ளோம். புதிய நாளுக்காகவும், வேதாகமத்தின் மீது வீசும் வெளிச்சத்திற்காகவும் தேவனுக்கு நன்றி!

---

**R5445**

# "நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்"

## லூக்கா 17:1-10

"மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைப் பாராட்டுவானாக."
- 1 கொரிந்தியர் 1:30

இந்தப் பாடமானது நான்கு பாகங்களைக் கொண்டதாகும்; ஒவ்வொன்றும் தனித்தனியான வேறுபட்டக் காரியமாகும். இவ்வார்த்தைகளுக்கு இடையிலான தொடர்பும் தெரிவிக்கப்படவில்லை, ஆனால் இவை பரத்திலிருந்து வரும் ஞானத்தை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இவைகளை வரிசையாகப் பார்க்கலாம்.

"இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம்." இடறல் என்ற வார்த்தையானது, தடுமாறி விழுதலை அல்லது கண்ணியில் சிக்குதலைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. இயேசுவின் அர்ப்பணம் பண்ணப்பட்ட பின்னடியார்களானவர்கள், சிறியவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர், காரணம் இவர்கள் புதிய சிருஷ்களென, தேவனுடைய சித்தத்திற்கு முழுமையான அர்ப்பணம் எனும் புதிய பாதையில் நடக்க ஆரம்பிக்க மாத்திரமே செய்துள்ளனர். இவர்களைக் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளானவர்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் அழைக்கின்றார் (1 கொரிந்தியர் 3:1). "பிள்ளைகளே" என்று பரிசுத்தவானாகிய யோவான் எழுதுகின்றார். இந்தக் குழந்தைப் பருவமானது, தொடர்ந்துக் காணப்பட்டுக்கொண்டிருக்கக்கூடாது. கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ச்சி காணப்பட வேண்டும். குணலட்சணமானது பலமடைய வேண்டும்; இந்தக் குணலட்சணமானது, ஞானமானதாகவும், பலமுள்ளதாகவும், கண்ணியில் அகப்படுத்தப்படுவதற்குக் கூடாததாகவும் இருப்பது மாத்திரமல்லாமல், குறைவாய் வளர்ந்துள்ள மற்றவர்களுக்கு உதவி புரியக் கூடியதாகவும் காணப்பட வேண்டும்.

இவ்வாறாகச் சபையில் மிகவும் வளர்ந்தவர்கள் மூப்பர்களென, மூத்த சகோதரர்களென அழைக்கப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள், சகோதரர்கள் மத்தியில் கர்த்தரை அடையாளப் படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர்; மேலும் சில சமயங்களில் பரலோக ஆறுதலும், ஆலோசனையும், கருத்துக்களும், கடிந்துக்கொள்ளுதல்களும் இவர்கள் மூலமாய், (சத்தியத்தில்) இளைய சகோதர சகோதரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. சாத்தான் இந்த யுகத்தின் அதிபதியாக இருப்பதினாலும், பெரும்பான்மையான மனுக்குலத்தை இவன் தன்னுடைய செல்வாக்கின் கீழ் வைத்துக்கொண்டு தப்பறைகள், மூடநம்பிக்கைகள், பாவங்கள் முதலானவைகளினால் குருடாக்கி வைத்துள்ளப்படியாலும், கண்ணியில் அகப்படுவதற்கு/இடறுவதற்கு வாய்ப்புகள் காணவேபடுகின்றது. "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய

அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4). "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு" என்று இயேசு குறிப்பிடுவதிலிருந்து, இங்கு இயேசு குழந்தைகளைப் பற்றிப் பேசவில்லை என்பது தெளிவாகுகின்றது.

இயேசுவின் பின்னடியார்களுக்கு, அதாவது அவருடைய சிறியவர்களுக்கு, அறியாமையினால் (அ) வேண்டுமென்றில்லாமல் இடறல் உண்டாக்குகின்றவர்களை இயேசு தண்டிப்பார் என்றோ, அநீதியாக குற்றம் தீர்ப்பார் என்றோ நாம் அனுமானிப்பதில்லை. தம்முடைய பின்னடியார்களை, தம்முடைய சிறியவர்களை, வஞ்சிப்பதற்கும், கண்ணியில் சிக்க வைப்பதற்கும், இடறச்செய்வதற்கும், சோர்வுபடுத்துவதற்கும், வேண்டுமென்றே முயற்சிப்பவர்களுக்கே, இயேசு எச்சரிப்பு வழங்குகின்றார் என்றே நாம் எண்ணிக்கொள்கின்றோம். கர்த்தருடைய பின்னடியார்களுக்கு எதிராக, துணிகரமாக மற்றும் வேண்டுமென்றே போடப்பட்ட திட்டங்கள் பற்றின சம்பவங்களை நாம் அனைவரும் கேட்டிருக்கின்றோம், மேலும் இதில் சாத்தான்தனமான ஆவியே காணப்படுகின்றது.

சில சமயம் தேவனுடைய உண்மையான ஜனங்கள் கூட, இவ்வாறாக சாத்தானுக்கான ஊழியங்களுக்குள் சிக்கிக்கொள்கின்றனர். "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோமர் 6:16). தர்சு பட்டணத்துச் சவுல் கூட இவ்வாறாகக் கண்ணியில் சிக்கிக் கொண்டவராக, ஒரு குறிப்பிட்ட காலம் எதிராளியானவனால் பயன்படுத்தப்பட்டவராக இருந்தார்; மேலும் அறியாமையில், தான் இவைகளைச் செய்தபடியால் தேவன் தன்மேல் இரக்கம் காண்பித்ததாக சவுல் விளக்கம் அளிக்கின்றார். ஒருவேளை சவுல் வேண்டுமென்றே, துணிகரமாய் இவைகளைச் செய்திருப்பரானால், இவரை ஓர் அற்புதத்தை நிகழ்த்தி மீட்டுக்கொள்ளும் அளவுக்கு, இவரிடம் தேவன் இரக்கம் காட்டியிருந்திருக்கமாட்டார் என்று நாம் எண்ணுகின்றோம்; இன்னுமாக ஒருவேளை சவுல் இவைகளையெல்லாம் துணிகரமாய்ச் செய்திருப்பாரானால், அவர் தன்னுடைய துணிகரமான பொல்லாங்கான வழியிலேயே தொடர்ந்துக் காணப்பட்டிருந்திருப்பார் மற்றும் அவருடைய கழுத்தில் எந்திரக்கல் தொங்க விடப்பட்டு, அவர் கடலில் அமிழ்ந்துப் போவது சவுலுக்கே நலமாயிருந்திருக்கும் என்று நாம் எண்ணுகின்றோம்.

ஏனெனில் ஒரு மனுஷன் இப்படியாக கடலில் அமிழ்த்தப்படும் போது, தன்னுடைய தற்கால ஜீவியத்தை இழந்துப் போகிறவனாக மாத்திரமே இருப்பானே ஒழிய, மரணம் எனும் நித்திரையினின்று அவன் விழிக்கும்போது ஆயிரவருட யுகத்திலுள்ள எதிர்க்கால வாழ்க்கையை இழந்துப் போகிறவனாய் இருக்கமாட்டான். அப்போது அவன் கீழ்ப்படிதல் மூலமாய்ப் பிரகாசிக்கப்படுவதற்கான முழு வாய்ப்பையும், பாவம் மற்றும் மரணத்தினின்று விடுதலைக்கான முழு வாய்ப்பையும் பெற்றுக்கொள்கின்றவனாய் இருப்பான். ஆனால் இயேசுவின் பின்னடியார்களை, வேண்டுமென்றே துன்பப்படுத்துகிறவர்களாகவும், பின்னடியார்களை நீதியின் வழியினின்று பின்வாங்க செய்கிறவர்களாகவும் இருப்பவர்கள், தங்கள் சொந்த மனசாட்சியைத் தவறான வழியில் திருப்புபவர்களாய் இருப்பதினால், மற்றும் தங்களையே மிகவும் சீரழித்துக்கொள்வதினால், இவர்கள் கல்லறையிலிருந்து வெளியே வந்த பிற்பாடு, புதிய யுகத்தினுடைய நிபந்தனைகளுக்கு இசைவாக வருவதென்பது, இவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் வெளிச்சத்திற்கும், அறிவிற்கும் எதிராக பாவம் செய்பவர்கள் நித்திய ஜீவனுக்கான தங்களுடைய வாய்ப்புகளை அபாயத்திற்குள்ளாக ஆக்குகின்றனர்.

## "மன்னிக்கும் ஆவி அவசியம்"

3 மற்றும் 4-ஆம் வசனங்களானது, மத்தேயு 18:15-22 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பிரசங்கத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது. இப்பிரசங்கத்தின் பாடமானது உலகத்தாருக்காய் அல்லாமல், இயேசுவின் பின்னடியார்களுக்குக் கொடுக்கப்பட்டதாய் இருக்கின்றது. இது பின்னடியார்கள்,அதாவது விசுவாச வீட்டாரிலுள்ள சகோதரர்களிடத்திலான, அவர்களது கடமையைப்பற்றிப் பிரதானமாய்த் தெரிவிக்கின்றதாக

இருக்கின்றது; இதற்கு அடுத்ததாக பரந்த கண்ணோட்டம் ஒன்றும் இருக்கின்றது. சில சமயங்களில் இந்தப் பரந்த கண்ணோட்டம் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. தேவைப்படும் பட்சத்தில் விஷயம் சபையாருக்கு முன்பு கொண்டுவரப்படலாம் என மத்தேயு 18-ஆம் அதிகாரத்தில் இடம்பெறும் சகோதரருக்கான ஆலோசனை பற்றின புத்திமதிகள், வேறு யாருக்காகவும் இல்லாமல், மாறாக சபைக்கே என்று நிரூபிக்கப்படுகின்றது.

இரக்கம் அதாவது அளவற்ற இரக்கம் பற்றினதே படிப்பினையாகும். அனைவருக்கும் இரக்கம், அதாவது தெய்வீக இரக்கம் தேவைப்படுகின்றது, காரணம் அனைவரும் பூரணமின்மையில் காணப்படுகின்றனர் என்பதே சம்பாஷணைக்கான அடிப்படையாக இருக்கின்றது; மேலும் இந்தக் கிருபையை/பண்பை நாம் வளர்த்துவதற்கு நமக்கு உதவத்தக்கதாக, நாம் எந்தளவுக்கு இந்தத் தேவனுக்கொத்த பண்பைச் செயல்படுத்த முயற்சிக்கின்றோமோ, அதன் அடிப்படையிலேயே நமக்கு அவருடைய தயவும், அவருடைய ஆசீர்வாதங்களும் காணப்படத்தக்கதாக கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே" (லூக்கா 6:35).

பரிசுத்தவானாகிய பவுலினால் "பிசாசுகளின் உபதேசங்கள்" என்று அழைக்கப்படும் தவறான உபதேங்களினால், நம்முடைய முன்னோர்களும், நாமும் இவ்வளவுக்கு வஞ்சிக்கப்பட்டிருந்தது என்பது விநோதமாகவே தோன்றுகின்றது (1 தீமோத்தேயு 4:1). ஒரு காலத்தில் பரம பிதாவானவர் மன்னிப்பை ஒருபோதும் வழங்காதவர் என்றும், அவர் தம்முடைய மனித சிருஷ்டிகள் பாவம் செய்தபடியினால், அவர்களை மன்னிப்பதற்குப் பதிலாக, அவர்கள் மீதான பகையினால் முழுக்க நிரம்பப் பெற்றவராக இருக்கின்றார் என்றும், நாம் எண்ணி வந்தோம். பாவத்திற்கான தண்டனை (அ) சம்பளம், சித்திரவதை என்றும், அதுவும் நித்திய காலத்துக்குமான சித்திரவதையாக இருக்க வேண்டும் என்றும் நாம் விடாப்பிடியாய்க் கூறி வந்தோம். சகல கிருபைகளுக்கும் தேவனாய் இருப்பவரின், அதாவது இரக்கங்களின் பிதாவாக இருப்பவரின் உண்மையான குணலட்சணத்தை நாம் எவ்வளவு குறைவாகப் புரிந்திருந்தோம்!

இன்னுமாக நம்மில் சிலர் நம்முடைய தப்பறைகளை நியாயப்படுத்தும் முயற்சியில், தேவன் அன்பானவராகவும், இரக்கமானவராகவும், நல்லவராகவும் இருந்தாலும், அவருடைய பின்னணியில் அவருடைய சிருஷ்டிகளைச் சித்தரவதைப்படுத்த வேண்டும் என்று கோரும் கடினமான பிரமாணம் ஒன்று காணப்படுவதாகவும், அவராலேயே தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத பிரமாணம் ஒன்றைக்கொண்டிருப்பதாகவும், மனுக்குலத்திற்கு இப்பிரமாணம் கொடுத்திட்ட தீர்ப்பை அவர் நிறைவேற்றத்தக்கதாக, அப்பிரமாணத்திற்குத் தேவன் கட்டுப்பட்டிருப்பதாகவும் நாமே அனுமானித்துக்கொண்டோம்.

இன்னும் சிலர் முழு மனுக்குலமானது, பிறப்பு மற்றும் இறப்பிற்குள்ளாக ஏதோ ஒரு கால கட்டத்தில், பாவத்திலிருந்து நீதிக்குத் திரும்புவதற்கும், பரிசுத்தவான்கள் ஆகுவதற்குமான முழு வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றது என்ற கருத்தை நாம் கொண்டிருக்கத்தக்கதாக நம்மைத் தவறான வழியில் நடத்திவிட்டனர். இவைகளெல்லாம் எவ்வளவு கேலிக்கு இடமாக இருக்கின்றது எனச் சமீப காலத்திலேயே, வேத மாணவர்களாகிய நாம் அறிந்து வருகின்றோம். 4000 ஆண்டுகளாக ஒரு சிறு யூத ஜனத்தார் மாத்திரமே தேவனைப்பற்றின அறிவை உடையவர்களாகக் காணப்பட்டார்கள் அல்லது இவர்களுக்கே நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன அலலது இவர்களுக்கே பாவம் மற்றும் அதன் தண்டனைப்பற்றின போதனையும் கொடுக்கப்பட்டுள்ளது என்று இப்போதுதான் நாம் அறிய வருகின்றோம். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட யூதர்கள் கூட, சாத்தானால் குருடாக்கப்பட்டுள்ளனர் என இயேசுவும், அப்போஸ்தலர்களும் தெரிவித்தனர். இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் பேசும்போது, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள்" என்று கூறுகின்றார் (மத்தேயு 13:16). பெரும்பான்மையான யூதர்கள் பார்க்காதவர்களாகவும், கேட்காதவர்களாகவுமே காணப்பட்டனர். இது கிறிஸ்தவ மண்டலத்தின் பத்தில் ஒன்பது பங்கின் நிலைமையின்

விஷயத்திலும், உண்மையாகக் காணப்படுகின்றது. பிற தேவர்களை வணங்குபவர்களைப்பற்றி நாம் சொல்லவே அவசியமில்லை.

எந்த ஒரு வேதவாக்கியங்களின் ஆதாரம் இல்லாமலும், வேதவாக்கியங்களுக்கு எதிராகவும், நம்மில் அநேகர், தற்போதைய வாழ்க்கையில் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் அனைவரும், இன்னுமாக அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பரிசுத்த பின்னடியார்கள் ஆகாத அனைவரும், பிசாசுகளின் கரங்களில் நித்திய காலமாய்ச் சித்தரவதைப்படுவார்கள் என்ற கொடூரமான கூற்றை ஆதரித்தவர்களாகக் காணப்பட்டோம். இப்பொழுது கேட்பதற்குச் செவிகளை உடையவர்களாகவும், காண்கிறதற்குக் கண்களை உடையவர்களாகவும் இருந்து, கிறிஸ்து மூலமாய்த் தேவனுடன் உடன்படிக்கையின் உறவிற்குள் பிரவேசிப்பவர்களாகிய ஒரு சிறு வகுப்பாரே, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கின்றவர்களாய் இருப்பார்கள் என்று வேதாகமம் போதிப்பதை, இப்பொழுது நாம் காண்கின்றோம். இவர்களுக்கு மாத்திரமே எதிர்க்கால ஜீவனை அடைவதற்கான அனைத்து வாய்ப்புகளும், தற்கால ஜீவியத்திலேயே முடிகின்றதாய் இருக்கின்றது. மீதமான மனுக்குலத்திற்கு நியாயத்தீர்ப்பின் காலங்களில், உயிர்த்தெழுதல் மூலமாகவே, எதிர்க்கால ஜீவியத்தைத் தேவன் அருள நோக்கம் கொண்டுள்ளவராக இருக்கின்றார்.

உயிர்த்தெழுதல் என்பது, சபை வகுப்பாருக்கு மாத்திரமே உரியதல்ல; சபைக்கு உரியது முதலாம் உயிர்த்தெழுதலாக இருக்கின்றது. உயிர்த்தெழுதல் என்பது, "நீதிமான்களுக்கும், அநீதிமான்களுக்குமுரிய" ஒன்றாகும் (அப்போஸ்தலர் 24:15). சபை வகுப்பார் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் உயிர்த்தெழுந்து வருவார்கள். அநீதிமான்கள் நியாயத்தீர்ப்பு அடைகிறதற்கும், ஒழுங்குப்படுத்தப்படுவதற்கும், நற்பலன்களை அடைகிறதற்கும், தண்டனை அடைகிறதற்கும், கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழுந்து வருவார்கள். மனுக்குலத்தார் இந்த நியாயத்தீர்ப்புகளையும், நித்திய ஜீவனை அடைவதற்கான வாய்ப்புகளையும் அடைவதற்கே, மேசியாவின் இராஜ்யம் தொடங்கி வைக்கப்படும்; இன்னுமாக ஜனங்களை வழிநடத்துவதற்கும், அவர்களுக்கு பலனைக்கொடுப்பதற்கும், நீதியாய்த் தண்டிப்பதற்கும் அவர் நியாயாதிபதிகளை நியமிக்கத்தக்கதாகவே, இப்பொழுது அவர் மாம்சத்திலிருப்பவர்கள் மத்தியிலிருந்து சபையை அழைக்கின்றார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" (1 கொரிந்தியர் 6:2).

## "விசுவாசத்தின் வல்லமை - கண்மூடித்தனமான நம்பிக்கையின் வல்லமை"

கண்மூடித்தனமாக நம்பப்படுகின்ற அநேகமான விஷயங்கள், இன்று விசுவாசம் என எண்ணப்பட்டு வருகின்றது. ஒருவர் நம்மிடம் வந்து சந்திரனானது, பாலாடையினால் உண்டாக்கப்பட்டுள்ளது என்று கூறுவாரானால், அவர் கூறுவதை நம்புவது என்பது கண்மூடித்தனமான நம்பிக்கையே ஒழிய, விசுவாசமல்ல. "இப்படிப்பட்டவைகளைச் சொல்லுகின்றவன் யார்? என்றும், இக்காரியத்தைப்பற்றி நாம் அறிந்துள்ளவைகளைக் காட்டிலும், இவைகளைச் சொன்னவன் என்னதான் அறிந்திருக்கின்றான்?" என்றும் நாம் கேள்வி கேட்கிறவர்களாய் இருக்க வேண்டும். வேதாகமத்தில் பரிந்துரைக்கப்பட்டதான விசுவாசம் என்பது, தேவன் வாக்களித்துள்ளவைகள் தொடர்புடையதாய் இருக்கின்றது. இப்படியாக நாம் தேவனிடத்தில் விசுவாசங்கொள்ள வேண்டும், அதாவது அவர் பண்ணியுள்ள அவருடைய நல்ல வாக்குத்தத்தங்களை அவர் நிறைவேற்ற வல்லவரா என்று கேள்வி கேட்காத, சந்தேகிக்காத விசுவாசத்தைத் தேவனிடத்தில் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் உற்சாகப்படுத்தப்படுகின்றோம்.

நம்முடைய முன்னோர்கள் மனிதர்கள் மீது, மிகுந்த நம்பிக்கை வைத்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் விசுவாசம் என்று நினைத்துக்கொண்டதெல்லாம், வெறும் கண்மூடித்தனமான நம்பிக்கையாகவே இருக்கின்றது. அவர்கள் இருண்ட காலத்தின் விசுவாசப் பிரமாணங்களை அப்படியே உள்வாங்கி விட்டவர்களாய்க் காணப்பட்டனர்; மேலும் எந்தளவுக்கு ஒரு கூற்று அர்த்தமற்றுக் காணப்பட்டதோ, அதில்தான் தங்களுக்கு அதிக விசுவாசம் இருப்பதாக எண்ணிக்கொண்டார்கள். மாறாக அவர்கள், "நிரூபணம் எங்கே?

இப்படியாகத் தேவன் எங்கே குறிப்பிட்டிருக்கின்றார்?" என்று சொல்லியிருந்திருக்க வேண்டும். விசுவாச பிரமாணங்களுக்கு ஆதரவு கொடுத்தவர்கள், தெளிந்த விசுவாசத்திற்கு எதிராக சந்தேகப்பட்டுக் கூக்குரலிட்டு, தெளிந்த விசுவாசமானது, மதங்களுக்கு எதிரான கொள்கை என்று கூறி, அநேக நேரங்களில், உண்மையுள்ளவர்களைக் கழுமரத்தில் கட்டி எரித்துப்போட்டனர். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில், நமக்கு உறுதியளித்துள்ளவைகள் மாத்திரமே, நம்மால் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே படிப்பினையாக உள்ளது; அதாவது நாம் தூய்மையான தேவ வார்த்தைகளை, அதாவது தவறான மொழிப்பெயர்ப்புகள் நீங்கப் பெற்றதும், இடைச் சொருகப்பட்ட வார்த்தைகள் நீங்கப் பெற்றதுமான தூய்மையான தேவ வார்த்தைகளை நாம் பெற்றிருப்பதில், கவனமாய் இருக்க வேண்டுமென்பதே படிப்பினையாக இருக்கின்றது.

இயேசுவின் சீஷர்கள், இயேசுவின் போதனைகளிலுள்ள மகத்துவங்களையும், நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கத்தரிசிகளினாலும் பதிவு செய்யப்பட்டுள்ளதும், தம்முடைய மேசியாவின் இராஜ்யம் தொடர்புடையதாய் இயேசுவினால் கூறப்பட்டதுமான ஆச்சரியமான காரியங்கள் நிறைவேறும் விஷயத்தில், வரவேண்டியிருக்கும் சிரமங்களையும் மனதில் பதியப் பெற்றுக்கொண்டார்கள். ஆகையால் தங்களுடைய விசுவாசத்தைப் பெருகப்பண்ணும்படிக்கு, சீஷர்கள், கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இயேசு கொடுத்தப் பதிலானது, நம்முடைய நாட்களில் பெரிதும் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது; "அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்" (லூக்கா 17:6). இன்னுமொரு தருணத்திலும், இயேசு மலைகளைக் குறித்து இப்படியாகவே குறிப்பிட்டுள்ளார்; "அதற்கு இயேசு: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்;" "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 17:20; 21:21). இன்னும் வேறு இரு தருணத்திலும், இயேசு இதைப் போன்றே மலைகள் தொடர்புடைய விஷயத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## "என்ன அர்த்தத்தில் கூறியுள்ளார்?"

மலைகள், சமுத்திரத்தினிடத்திற்கு இடம்பெயர்ந்து போகத்தக்கதாக, யூதர்கள் பிரயாசம் எடுப்பதற்காக நிச்சயமாக ஆண்டவர் இவ்வார்த்தைகளைப் பேசவில்லை; மாறாக ஒருவேளை அவர்களுக்கு தேவனுடைய வல்லமையின் மீது சரியான விசுவாசம் இருந்து, மலைகளைக் கடலுக்கு இடம்பெயர்க்கும்படிக்குத் தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டாரானால், அவர்கள் விசுவாசத்துடன் மலைக்குக் கட்டளையிடும்போது, மலை கடலுக்கு இடம்பெயர்ந்து செல்லும் என்பதை யூதர்கள் உணர்ந்துக்கொள்ளவே இயேசு விரும்பிட்டார். ஆனால் மலை (அ) மரம் தொடர்புடைய விஷயத்தில், தேவன் இப்படியாக எந்தக் கட்டளைகளையும் கொடுக்கவில்லை. ஆகவே இப்படியாக நாம் செய்ய முற்படுவதில், விசுவாசம் அடிப்படையாகக் காணப்படாது.

ஒரு சகோதரனிடம் ஒரு கேள்வி கேட்டப்போது, அவர் சரியான ஒரு பதிலைக்கொடுத்தார், அதாவது, "ஒருவேளை தேவன் உங்களிடம் மதில் சுவரிலிருந்து குதித்துவிட சொல்வாரானால், நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது, "நான் குதித்துவிடுவேன்" என்று பதில் கூறினார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நாம் தேவனுடைய செய்தியைக் கேட்டுச் சரியாய்ப் புரிந்துள்ளோமா என்று உறுதிபடுத்துகிறவர்களாய் மாத்திரம் இராமல், தேவனுடைய வார்த்தைகளில், முற்றும் முழுமையாய் நம்பிக்கைக்கொள்கின்றவர்களாய் இருக்க வேண்டும். பின்னர் மலையை இடம்பெயர்க்கும் அளவிலான விசுவாசத்துடன் அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு முன்னேறிச்செல்கின்றவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் தேவன் முட்டாள்தனமான காரியங்களை (அ) தேவையற்ற மாற்றங்களைச் செய்யும்படிக்குக்

கட்டளையிடுவதில்லை. மரங்களை வேரோடே பிடுங்குவதற்கான (அ) மலைகளை இடம்பெயர்க்கப் பண்ணுவதற்கான, இம்மாதிரியான கட்டளைகளைத் தேவன் கொடுப்பதில்லை. இப்படியாகச் செய்வதை மனிதன் தன்னுடைய புத்தியின்படி முடிவு எடுத்துக்கொள்ள, தேவன் விட்டுவிடுகிறாரே ஒழிய, அவர் இம்மாதிரியான கட்டளைகளையெல்லாம் கொடுப்பதில்லை. இப்படியாக மரத்தின் (அ) மலையின் விஷயத்தில், விசுவாசத்தினால் மலையை இடம்பெயர்த்துவிட்டதாக ஒரு மனுஷன் நம்மிடம் சொல்வானானால், நாம் அவனை நம்புகிறவர்களாக இருப்பது, கண்மூடித்தனமான நம்பிக்கையாகும். இப்படியான விதங்களில் தேவன் கிரியை செய்வதில்லை.

## "நம்முடைய ஆண்டவருக்குப் பிரயோஜனமற்றவர்கள்"

கிறிஸ்துவின் பின்னடியார்கள் மத்தியில் சிலர், இயல்பாகவே முன்னேறுகிற தன்மையுடைவர்களாகவும், சிலசமயம் மிகவும் இறுமாப்புக்கொண்டவர்களாகவும், சண்டையிடுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். அவருடைய சீஷர்கள் ஆனவுடனே, இந்தப் பண்புகள் உடனடியாக மாறிவிடுவதில்லை. பழையவைகள் படிப்படியாகக் கடந்துப் போகின்றன, மற்றும் பழையவைகள் கடந்துப்போன இடங்களில், புதியவைகள் வருகின்றன. அவருடைய சீஷர்கள் அனைவரும், அதிலும் விசேஷமாக இங்குக் குறிப்பிடப்படும் வகுப்பாரும் நினைவில் கொள்ள வேண்டிய படிப்பினை இப்பாடத்தில் கற்பிக்கப்படுகின்றது. இவர்கள் தங்களிடத்தில் நடப்பிக்கப்படும் தேவனுடைய கிருபையின் கிரியையானது, தங்களிடத்திலான தேவனுடைய தயை என்றும், அவருடைய கட்டளைகளுக்கான தங்களுடைய கீழ்ப்படிதலானது, பிரதானமாய்த் தங்களைச் சீர்ப்படுத்துவதற்கும், வளர்த்துவதற்கும் மற்றும் ஆசீர்வாதமான எதிர்க்கால ஜீவியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அவசியம் என்றும் இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள், தாங்கள் கர்த்தருக்குச் செய்யும் ஊழியமும் ஒரு சிலாக்கியம் என்றும், தங்களுடைய ஊழியங்களினால், தேவனுக்கு நன்மை ஏதும் இல்லை என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் இல்லாமலேயே தேவனால் எளிமையாகக் காரியங்களைச் செய்துவிட முடியும், அதாவது நம் மூலமாய்ச் செய்வதைக் காட்டிலும், அவரால் எளிமையாய்க் காரியங்களைச் செய்துவிட முடியும் என்றவிதத்தில், நாம் அனைவரும் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களாய் இருக்கின்றோம். அவரால் தம்முடைய தேவதூதர்களையும் (அ) ஜீவியத்தின் பல்வேறு காரியங்களையும் பயன்படுத்த முடியும். நம்மில் எவரும் அவருடைய வேலைக்கும், அவருடைய மகிமைக்கும் அவசியமானவர்களாய்க் காணப்படுவதில்லை. மாறாக கர்த்தருடைய திராட்சத்தோட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கும், வேலை புரிவதற்குமான வாய்ப்பு என்பது, பிரதானமாக நம்முடைய சொந்த நன்மைக்குரியதாகவே இருக்கின்றது. இந்த ஊழியமானது, ஒருவிதமான சந்தோஷங்களை நமக்குக்கொண்டு வருகின்றது. இந்தச் சந்தோஷத்தை வேறெந்த விதத்திலும் நாம் பெற்றுக்கொள்ள முடியாது. திரைக்கு அப்பால் உன்னதமான ஊழியங்களைப் புரிவதற்கான தகுதிகளுக்கும், வளர்ச்சிக்கும் அவசியமான குறிப்பிட்ட அனுபவங்களை, இந்த ஊழியங்களானது நமக்குக்கொண்டு வருகின்றதாய் இருக்கின்றது.

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார் (எபேசியர் 2:8). ஒருவிதத்தில் சொல்ல வேண்டுமெனில் விசுவாசமே நாம் வளர்த்த வேண்டிய காரியமாக இருக்கின்றது. எனினும் விசுவாசம் நம்மால் உண்டானதல்ல, அது தேவனுடைய ஈவாக இருக்கின்றது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; ஆகையால் நம்முடைய விசுவாசத்தில் நாம் மேன்மை பாராட்டிக்கொள்வதற்கு வாய்ப்பில்லை. கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டிராத எதை நாம் பெற்றிருக்கின்றோம்? தேவனுடைய வழிநடத்துதலானது, நமக்குக் கொடுத்திட்ட சில அறிவின் அடிப்படையில்தான், நம்மிடத்தில் அடிப்படையான ஆரம்ப விசுவாசங்கூடக் காணப்பட்டது; அதாவது சாதகமான பெற்றோரின் வளர்ப்பின் மூலமான தேவனுடைய வழிநடத்துதல் கொடுத்திட்ட சில அறிவின் அடிப்படையில்தான், நம்மிடத்தில் அடிப்படையான ஆரம்ப விசுவாசம் காணப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

**R4160**

# “நான் அவனை எழுப்பப்போகிறேன்”
# யோவான் 11:1-57

“நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன்” (வசனம் 25).

நமது கர்த்தருடைய ஊழியக்காலங்களுடைய இறுதி பகுதிகளில், யூதர்களுடைய ஆலயத்தின் அதிகாரிகளுடைய எதிர்ப்பானது மிகவும் கசப்பாய்ப் போனபடியினால், இயேசு, யூதேயாவை விட்டு, பெரோயாவுக்குப் போக நேரிட்டது. இயேசு தாம் ஞானஸ்நானம் எடுக்கும்போது, யோவான் ஸ்நானனால் பிரசங்கம் பண்ணி வந்த இடங்களுக்கு அருகாமையிலான இடங்களில், கொஞ்சக் காலம் இயேசு காணப்பட்டார். இப்படியாக இயேசு அங்குக் காணப்படும் போதுதான், “ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்” என்று மார்த்தாள் மற்றும் மரியாளிடமிருந்து, இயேசுவுக்கு செய்தி வந்தது. இதிலிருந்து, மார்த்தாள் மற்றும் மரியாளுடைய இளைய சகோதரனாகிய லாசரு, இயேசுவின் மிக நெருங்கிய நண்பனாக இருந்ததை நாம் அறிகின்றோம். தூது செய்தி மிகச் சுருக்கமாய் இருந்தது; இயேசு வரவேண்டும் என்றோ, ஏதாகிலும் அற்புதம் செய்யவேண்டும் என்றோ, வற்புறுத்தும் வண்ணமாக எதுவும் தூது செய்தியில் சொல்லிவிடப்படவில்லை; லாசரு வியாதியாய் இருக்கின்றான் என்பது மாத்திரமே சொல்லி அனுப்பப்பட்டது. ஒரு சில விஷயங்களில், இது கிறிஸ்தவனுடைய ஜெபத்திற்கான சிறந்த மாதிரியாகக் கூட விளங்குகின்றது. கர்த்தருடைய ஜனங்கள் பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய தங்களுடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் கர்த்தர் இரக்கத்துடனும், அன்புடன் கூடிய அக்கறையுடனும் காணப்படுகின்றார் என்ற முழு நிச்சயத்துடன் எப்போதும், கர்த்தரிடத்தில் செல்லலாம். பரலோகத்தில் இல்லை என்றாலும், பூமியிலாகிலும் தங்களுடைய சொந்த சித்தம் நடைபெறத்தக்கதாக வேண்டிக்கொள்ளும் நிலையில் கர்த்தருடைய ஜனங்கள் ஆரம்பக்காலங்களில் காணப்படுவார்கள்; ஆனால் பிற்பாடு, அவர்களுடைய அர்ப்பணிப்பின் ஆவியானது, கிருபையில் வளர ஆரம்பிக்கையில், அவர்கள் மார்த்தாள் மற்றும் மரியாள் போன்று தங்களுடைய பிரச்சனைகளைக் கர்த்தரிடத்தில் தெரிவிப்பதிலும், கர்த்தருக்காய்க் காத்திருப்பதிலும், அவர் அருளுவதற்குச் சிறந்தது என்றும், ஞானமானதென்றும் விரும்பும் எதையும் பெற்றுக்கொள்வதில் நன்றியுள்ளவர்களாக இருப்பதிலும் திருப்தியாய் இருப்பார்கள்.

நமது கர்த்தர் இயேசு தூது அனுப்பப்பட்டு வந்தவர்களிடம், “இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது” என்று கூறினார் (யோவான் 11:4). லாசரு மரிக்க மாட்டார் என்று நமது கர்த்தர் தவறாய்க் கணக்குப் போட்டுவிட்டார் என்று நாம் அனுமானித்துவிடக்கூடாது, மாறாக லாசரு மரித்தாலும், தாம் அவரை எழுப்பப்போவதினால், அது நிரந்தரமான மரணமாய் இருக்காது என்பதை இயேசு அறிந்திருந்தபடியினாலே, இப்படிக் கூறினார் என்று பார்க்கின்றோம். இரண்டு நாளுக்குப் பிற்பாடு, இயேசு யூதேயாவிலுள்ள பெத்தானியாவுக்குத் திரும்ப வேண்டும் என்று கூறினபோது, சீஷர்கள் பயப்பட்டார்கள், ஆனால் எந்த ஆபத்தும் நிகழாது என்று நமது கர்த்தர் அவர்களுக்குச் சுட்டிக்காண்பித்தார். இயேசு சூழ்நிலைகள் அனைத்தையும் முன்கூட்டியே அறிந்தவராக இருந்தபடியால், தாம் நிகழ்த்த சித்தமாயிருக்கும் அற்புதமானது, தாம் யூதேயாவிலிருந்து, கொஞ்சம் காலத்திற்குப் பின்னர் மீண்டுமாகப் பெரோயாவுக்குத் திரும்பி வருவதை அனுமதிக்கத்தக்கதாக, தம்முடைய சத்துருக்கள் குழப்பத்தில் அலங்கோலப்படுவார்கள் என்று இயேசு கிரகித்துக் கொண்டார். இப்படிச் செல்வதற்கு, அதாவது பெத்தானியாவிற்குச் செல்வதற்கான காரணத்தை, “நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்” என்ற வார்த்தைகள் மூலம், இயேசு சீஷர்களுக்கு விவரித்துக் கொடுத்தார். இப்படியாக தாம் 11-ஆம் வசனத்தில் குறிப்பிட்ட வார்த்தைகளைச் சீஷர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக, “லாசரு மரித்துப்போனான்” என்று இயேசு வெளிப்படையாகக் கூறினார்.

ஒவ்வொரு காரியத்திற்கும் அநேகம் கண்ணோட்டங்கள் காணப்படுகின்றது. இரக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய தெய்வீக நோக்கத்தைத் தள்ளி, யதார்த்தத்தின்/உண்மையின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, ஒரு மிருகம்

மரித்துப்போய்விட்டது என்று சொல்லும் அதே விதத்தில், லாசரு மரித்துப்போனதைக் கூறுவது சரியே. ஆனால் தேவன் மீதும், ஆபிரகாமிடம் பண்ணப்பட்ட வாக்குத்தத்தமாகிய, அவருடைய சந்ததிக்குள் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும் என்பதின் மீதுமான விசுவாசத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், லாசரு, ஒரு விலங்கு மரித்தது போன்று மரித்துப்போகவில்லை, மாறாக லாசரு ஒரு குறிப்பிட்ட காலம்வரை உயிரற்றவனாகவும், கர்த்தருடைய ஏற்றவேளையில், அவரால் அழைக்கப்படுவதற்கும், உயிர் மீண்டும் பெறுவதற்கும், மரணமாகிய நித்திரையினின்று விழித்தெழும்பப் பண்ணுவதற்கும் எனக் காத்திருப்பவனாகவுந்தான் இருக்கின்றான். சதுசேயர்கள் எதிர்க்கால வாழ்க்கையையும், உயிர்த்தெழுதலையும் மறுத்துப் பேசின வேறொரு தருணத்தில் மேற்கூறியக் கண்ணேட்டத்தை இயேசு கொண்டவராக, "அன்றியும் மரித்தோர் எழுந்திருப்பார்களென்பதை மோசேயும் முட்செடியைப்பற்றிய வாசகத்தில் காண்பித்திருக்கிறார். எப்படியெனில், கர்த்தரை ஆபிரகாமின் தேவனென்றும் ஈசாக்கின் தேவனென்றும் யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார்" என்றார் (லூக்கா 20:37). ஒருவேளை ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும், விலங்கு மரித்துப்போவது போன்று, உயிர்த்தெழும்புவதற்கும், விழித்தெழுவதற்குரிய நம்பிக்கை எதுவும் இல்லாமல் மரித்துப்போனவர்களாக இருந்திருப்பார்களானால், இவர்களுடைய தேவனாக, தாம் இருப்பதாக தேவன் சொல்லியிருந்திருக்க மாட்டார் என்பதே நமது கர்த்தருடைய வாதமாய் இருந்தது. தேவனுடைய கண்ணோட்டத்தின்படி, "எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே" அதாவது ,அனைவரும் அவருக்குள் பிழைத்தவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறி நமது கர்த்தர் தம்முடைய வாதத்தை நிறைவு செய்ததை நாம் பார்க்கின்றோம் (லூக்கா 20:38).

நம்முடைய கண்ணோட்டமானது, தெய்வீகக் கண்ணோட்டமாகவே இருக்க வேண்டும்; இந்தத் தெய்வீகச் சாட்சிக்கு இசைவாகவே நாம் சிந்திக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே கிறிஸ்தவர்களுக்காக, அதாவது கிறிஸ்துவுக்குள் மரித்திருக்கும் பரிசுத்தவான்களுக்காக, மாத்திரம் அல்லாமல், இயேசுவுக்குள் நித்திரையாய் இருக்கும் உலக மனுக்குலத்திற்கும், நமக்கும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தேவன், இயேசுவில் மனுக்குலத்திற்கான உயிர்த்தெழுதலின் ஏற்பாடு பண்ணியிருக்கவில்லையென்றால், மனுக்குலத்தின் மரணமானது, மிருகங்களின் மரணம் போன்று உண்மையான மரணமாகவே இருந்திருக்கும். ஆனால் இப்படியான ஏற்பாட்டைப் பண்ணப்பட்டுள்ளபடியால், மனுக்குலத்தின் உலகமானது முற்றிலும் அழிந்துப்போகாமல், மாறாக நித்திரையில் மாத்திரமே காணப்படுகின்றனர் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் தெய்வீக வார்த்தைகளினுடைய போதனைகளை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், "நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கிக்கக்கூடாது; காரணம் நாம் இயேசு மரித்து, உயிரோடே மீண்டும் எழுந்துள்ளார் என்று விசுவாசித்தோமானால், இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் (அவருடைய பலியின் பலனுக்குள் அடங்குபவர்களும், அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டுள்ள ஆதாமின் சந்ததியார் அனைவரும்) தேவன் அவரோடுக் கூடக் கொண்டு வருவார்" (1 தெசலோனிக்கேயர் 4:13, 14). சபையானது, அவருடைய உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்த்தெழுதலில், பிரதான உயிர்த்தெழுதலில் பங்கடையத்தக்கதாகவும், அவருடைய மகிமை, கனம் மற்றும் அழியாமையிலும் பங்கடையத்தக்கதாகவும் அவரால் முதலாவது உயிர்த்தெழுப்பப்படுகின்றனர். பின்னர் ஆயிர வருட யுகத்தில் அவர் மூலமாய்ப் பூமியின் குடிகள் அனைத்தும் விழித்தெழுப்பப்பட்டு, ஷீயோலிலிருந்து, ஹேடிசிலிருந்து, சத்தியத்தின் அறிவிற்குள்ளாகக் கொண்டு வரப்படுவார்கள்; ஒருவேளை அவர்கள் சத்தியத்தின் செய்தியை நல்லதும், உண்மையுமான இருதயத்திற்குள்ளாக ஏற்றுக்கொண்டால், அவர்கள் அவர் மூலமாய்ப் பாவம் மற்றும் மரணத்தின் நிலையினின்று முழுமையாய்த் தூக்கியெடுக்கப்பட்டு, நித்திய ஜீவனுக்கும், முழுமையான பூரணத்திற்கு நேராகவும் கொண்டுவரப்படுவார்கள். இயேசுவில் விசுவாசம் வைக்கிற யாவரும் அவருக்குள் களிக்கூர்ந்து, மற்றவர்களைப்போல, மரணத்தைக்கண்டு துக்கியாதிருப்பார்களாக.

## "நண்பர்கள் துக்கிக்க, இயேசு மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்"

பிரசித்திப்பெற்ற சார்லஸ் ஸ்பர்ஜியன் (Charles Spurgeon) அவர்கள் இப்பாடத்தைக் குறித்துப் பிரசங்கிக்கையில், "நான் அங்கே இராததினால் நீங்கள்

விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள்" என்ற வசனத்திலிருந்து, (யோவான் 11:15) தன்னுடைய சத்திய உரைக்கு, "நண்பர்கள் துக்கிக்க, இயேசு மகிழ்ச்சியுடன் கணப்பட்டார்" என்ற தலைப்பை வழங்கினார். கர்த்தருடைய ஜனங்கள் துக்கத்தின், வேதனையின், வியாதியின், வலியின் தருணங்களில், தங்களுடைய கண்ணீர்களும், உபத்திரவங்களும், கர்த்தருடைய வழிநடத்துதலின் கீழ் மாபெரும் ஆசீர்வாதமாய்த் தங்களுக்கு அமையும் என்று நினைவுகூர்ந்து, விசுவாசத்துடன் கர்த்தரை நோக்கிப்பார்ப்பது நலமான காரியமாகும். இப்பாடத்தில் நாம் ஓர் உதாரணத்தைக் காணலாம்: தங்களுடைய வியாதிப்பட்டிருந்த சகோதரனுக்குப் பணிவிடை புரிந்துக்கொண்டிருந்த மார்த்தாளும், மரியாளும், தங்கள் சகோதரனைக் கர்த்தர் எவ்வளவு சிநேகித்தார் என்பதை எண்ணினவர்களாக, லாசருவின் நிலைமையைக் குறித்த செய்தியைக் கர்த்தருக்கு அனுப்பி வைத்து, அவருடைய ஞானத்தையும், கிருபையையும் நம்பினவர்களாக, காரியத்தை கர்த்தர் கரத்தில் விட்டுவிட்டார்கள்; எனினும் அவர்கள் இருளான சூழ்நிலைகளுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். லாசரு மரித்துப்போய், அடக்கம் பண்ணப்பட்டார். அவர்கள் மேசியா என்று நம்பியிருந்த ஆண்டவராகிய இயேசு, வியாதியை நிவர்த்திப் பண்ணவும் இல்லை; லாசரு மரிப்பதிலிருந்து தடுக்கவும் இல்லை; இன்னும் அவர்களுக்கு ஒரு செய்திகூட இயேசு சொல்லி அனுப்பவும் இல்லை; நாட்களும் கடந்துச் சென்றன. இயேசு இவைகளையெல்லாம் குறித்துச் சொல்லுகையில், "நான் சந்தோஷப்படுகிறேன்" என்று கூறியுள்ளார். இவைகளை நாம் எப்படிப் புரிந்துக்கொள்வது? "உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" என்பதே பதிலாகும். இப்படியாகவே நம் நிமித்தமாக, நமக்குச் சோதனைகளையும், துக்கங்களையும், கண்ணீர்களையும், இன்னல்களையும் அனுமதிப்பதிலும், இதன் மூலமாய் நாம் வேறு வழிகள் மூலமாய்க் கற்றுக்கொள்ள முடியாத முக்கியமான சில படிப்பினைகளை அடைவதிலும் கர்த்தர் சந்தோஷப்படுவது உண்மையே. அவருடைய தடையங்களை நம்மால் பார்க்க முடியாதபோது, அவரை நாம் விசுவாசிக்க வேண்டும் என்பதும், "அவரை அன்புகூருகின்றவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்ற அவரது வாக்குத்தத்தத்தை நினைவுகூர வேண்டும் என்பதும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகளில் ஒன்றாய் இருக்கின்றது. மார்த்தாள், மரியாள் சம்பவத்தில், அவர்களுடைய சகோதரனுடைய வியாதியும், மரணமும், அந்த இரண்டு சகோதரிகளுக்கு மர்மமான வழிநடத்துதல்களாகவே இருந்தது என்பதில் ஐயமில்லை. எனினும் இந்த அனுபவங்களானது, விலையேறப்பெற்ற படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள உதவியாக இருந்தது என்பதிலும், கர்த்தருடன் நெருக்கமான ஐக்கியத்திற்கும், நித்தியத்திற்குரிய காரியங்களுக்கும் ஆயத்தமாக்குதலாய் இருந்தது என்பதிலும் ஐயமில்லை.

அப்போஸ்தலர்கள் மத்தியில் ஒருவரான தோமாவின் வார்த்தையானது, கர்த்தருடைய அப்போஸ்தலர்களிடம் இருந்த பயபக்தியை விவரிக்கின்றது; தாங்கள் ஆண்டவரைத் தனித்துவிடக்கூடாது என்றும், அவர் ஒருவேளை யூதேயாவிற்குப் போக விரும்பினாரானால், தாங்களும் அவரோடு கூடச் செல்ல வேண்டும் என்றும் தோமா, தன்னுடைய உடன் சீஷர்களிடம் வலியுறுத்திக் கூறுகின்றார். அதாவது, "அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்." (யோவான் 11:16) இந்த ஒரு தைரியத்தின் ஆவியையே, பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், கர்த்தரோடு கூடச் சென்றபோது கொண்டிருந்தார்கள். மேலும் கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்போஸ்தலர்களிடம் வெளிப்பட்ட கோழைத்தனமானது, உதவியை ஏற்க மறுத்த நமது கர்த்தருடைய வார்த்தைகளினாலேயே, அவர்களுக்குக் உண்டானது என்று புரிந்துக்கொள்ள நமக்கு உதவுகின்றது. ஜனங்களின் ஆதரவற்ற தீர்க்கத்தரிசியாகிய இயேசுவைப் பின்பற்றுவதில் தங்கள் ஜீவனை மரணம் வரையிலும் பணயம் வைத்த இவர்கள்தான், பிற்பாடு அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். கர்த்தருக்காகவும், அவருடைய காரணங்களுக்காகவும் தைரியமாகச் செயல்படுவோம் என்று எண்ணுகிறவர்களும், அவருக்காக மரிக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்களுமான நம்மில் சிலர், இந்த ஒரு பண்பை நாம் தக்க வைத்துக்கொள்வதற்கும், சோதனையான வேளைகளில், ஆற்றல் இழந்து, தணிந்து போகாதபடிபடிக்கும், விழித்திருந்து, ஜெபம் பண்ணவேண்டும் என்பதே இதிலுள்ள நமக்கான படிப்பினையாக இருக்கின்றது.

## "யூதர்கள் அழுது புலம்பினார்கள், இயேசு கண்ணீர் விட்டார்"

அன்றைய நாட்களில், ஏழு நாட்கள் துக்கம் அநுசரிக்கும் வழக்கம் காணப்பட்டது. அநேகமாக மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு ஐசுவரியவான்களாகவும், செல்வாக்கு மிக்க

குடும்பத்தினராகவும் காணப்பட்டிருக்க வேண்டும்; மேலும் அவர்களது இழப்பில், அவர்களோடு துக்கம் அநுசரிப்பதற்காக அநேக நண்பர்கள் வந்திருந்தார்கள். துக்கிக்கிறவர்களால் நிரம்பி இருக்கும் அவர்களது வீட்டிற்குச் சென்றுவிட்டு, பிற்பாடு கல்லறைக்குச் செல்வது ஞானமாய் இருக்காது என்று எண்ணின இயேசு, பெத்தானியாவுக்கு முன்பாக கொஞ்சம் தொலைவில் நின்று கொண்டு, செய்தி அனுப்பினார். இயேசு அருகாமையில் வந்துகொண்டிருப்பதாகச் செய்தி வந்தவுடன், அவரைச் சந்திப்பதற்கு மார்த்தாள் வெளியே வந்தாள்; ஆனால் மரியாளோ துக்கத்தினால் துவண்டுப் போனவளாகவும், அநேகமாக, "இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாக இராமல், தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாக இருக்கிறது" என்ற ஆண்டவரின் வார்த்தை நிறைவேறாமல் போனதால் ஏமாற்றமடைந்தவளாகவும், வீட்டிலேயே அமர்ந்து விட்டாள், அவரைச் சந்திக்க மரியாள் போகவில்லை; அதாவது, "ஆண்டவரே கடைசிவரை உம்மை எதிர்ப்பார்த்தோம்; ஆனால் இப்பொழுது எல்லாம் முடிந்துவிட்டது. நீர் வாய்ப்பைத் தவற விட்டுவிட்டீர். நாங்கள் எங்கள் துக்கத்தின் மத்தியில் காணப்படுகின்றோம். இப்பொழுது எங்களுக்கு என்ன இலாபம்? லாசரு மரித்துவிட்டான்" என்று தன்னுடைய நடவடிக்கைகள் மூலமாய் மரியாள் சொல்லுகிறவளாய் இருந்தாள். மார்த்தாள், கர்த்தரைச் சந்தித்தப்போது, "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்." (யோவான் 11:21, 22) இப்படியாக அவள் கூறிய வார்த்தைகளுக்குள்ளாக, அவளுடைய கோபமும் மறைந்திருந்தது; அதாவது, "ஏன் நீர் வரவில்லை? ஆனால் இன்னமும் எனக்கு உம்மிடத்தில் விசுவாசம் இருக்கின்றது. நீர் மேசியா என்று உணர்கின்றேன்" என்ற விதத்தில் மார்த்தாள் கூறினாள். இயேசுவினுடைய பதில், "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்பதாக இருந்தது.

## “உன் சகோதரன் மீண்டும் உயிர்வாழ்வான்”

நமது கர்த்தர், "உன் சகோதரன் நித்தரைப்பண்ணிக்கொண்டிருக்கவில்லை," "உன் சகோதரன் மரிக்கவில்லை" என்று கூறாததைக் கவனிப்போமாக; மாறாக அவளுடைய மனதை அவர் உயிர்த்தெழுதலுக்கு நேராக திருப்பினார். நாம் அவரைக் காட்டிலும் ஞானிகளா? அவர் கூறினவைகளுக்கு, நேர்மாறானவைகளை நாம் அவருடைய சீஷர்களாகப் போதிக்கலாமா? மார்த்தாளுடைய பதிலானது, அவள் இயேசு கூறினதை நன்கு புரிந்துக்கொண்டிருந்ததையும், அந்நாட்களில் காணப்பட்ட யூதர்கள் அனைவரும், விசுவாசித்தவைகள் பற்றின பொதுவான கண்ணோட்டத்தை மார்த்தாள் கொண்டிருந்ததையும், யுகத்தின் முடிவில், மகா கடைசி நாளாகிய, மகா ஏழாவது ஆயிர வருடத்தின்போது, மரித்தவர்களாகிய நீதிமான்களுக்கும், அநீதிமான்களுக்கும் உயிர்த்தெழுதல் எனும் காரியம் உள்ளது என்று மார்த்தாள் உணர்ந்திருப்பதையும் வெளிப்படுத்துகின்றது. நமது கர்த்தர் அவளுடைய கருத்தை மறுக்காமல், அத்தருணத்தில் தாம் செய்ய விரும்புவதைப் பற்றின உணர்ந்துக்கொள்ளுதலுக்கு நேராக அவளைப் படிப்படியாகக்கொண்டுவர விரும்பி, ஏற்றகாலத்தில் அனைவரும் விழித்தெழுப்பப் பண்ணும் உயிர்த்தெழுதலின் வல்லமையானது தம்மிடத்தில் இருக்கின்றது என்று விளக்கி, "நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாய் இருக்கின்றேன்" என்று கூறினார், மற்றும் தம்மை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றும், உயிரோடிருந்து தம்மை விசுவாசிக்கிறனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றும் கூறினார். இப்படியான தம்முடைய வல்லமை மற்றும் எதிர்க்கால வேலை பற்றின கண்ணோட்டத்தை மார்த்தாள் விசுவாசிக்கின்றாளா? என்று நமது கர்த்தர் அவளிடம் கேட்டார். அதற்கு மார்த்தாள், "ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று பதில் கூறினள் (யோவான் 11:27). "இவைகளைச் சொன்னபின்பு, அவள்போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்" (யோவான் 11:28).

தங்களுடைய விஷயத்தில் கர்த்தரிடமிருந்த அக்கறையற்ற தன்மை மற்றும் அலட்சியம் பற்றி என்னதான் மரியாள் கோபங்கொண்டிருந்தாலும், தன்னை ஆண்டவர் அழைக்கின்றார் என்று மரியாளுக்குச் சொல்லப்பட்டபோது, இந்தக் கோபங்கள் அனைத்தும் பறந்து போய்விட்டது. கல்லறைக்குப் போகிற வழியில் கர்த்தர் இருந்த இடத்திற்கு மரியாள் போனபோது, வீட்டில், அவளோடு துக்கங்கொண்டாடிக்கொண்டிருந்த யூதர்கள், "மரியாள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே

போனார்கள்." பின்னர், "ஆண்டவர் அவனை எங்கே வைத்தீர்கள்" என்று கேட்டதிநிமித்தம் கர்த்தருக்கு, லாசரு வைக்கப்பட்ட இடம் தெரியவில்லை என்பது அர்த்தமாக இராமல், மாறாக அவர் மரியாதையான விதத்திலேயே, "நாம் இப்பொழுது கல்லறைக்குப் போகலாமா?" என்று கேட்டதாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அத்திமரத்தின் கீழ் நாத்தான்யேல் இருந்ததை அறிந்திருந்த கர்த்தர், லாசரு மரித்துப் போய் நான்கு நாட்கள் ஆகின்றது என்பதை மாத்திரமல்ல, லாசரு எங்கே வைக்கப்பட்டுள்ளார் என்பதையும் அறிந்திருப்பது உண்மையே. "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை" என்பதினால், அவர் முக்கியத்துவமற்ற காரியங்களை எளிதில் அறிந்துக்கொள்வார் என்பது நிச்சயமே" (யோவான் 2:25).

மரியாள் கர்த்தரைக் கண்டபோது கோபங்கள் அனைத்தும் பறந்துப் போயின. அவள் அவருடைய பாதங்களில் விழுந்து, பாதங்களை அணைத்துக்கொண்டு, கண்ணீருடன், "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்று மாத்திரம் கூறினாள். அது உணர்ச்சிகளைத் தூண்டுகிற தருணமாய் இருந்தது. நமது கர்த்தருடைய பிரியமான தோழி கண்ணீரில், பாதத்தில் விழுந்துகிடந்தாள், அநேகம் யூதர்களும் அவளோடுகூட அழுது, புலம்பிக்கொண்டிருந்தனர். இவைகள் என்ன தாக்கத்தை நமது கர்த்தரிடத்தில் ஏற்படுத்தியது? அவர் இரக்கமற்று நின்றாரா? இல்லை. "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல்" என்ற வசனத்தின்படி அவர் காணப்பட்டார் (எபிரெயர் 4:15). அவர் அனுதாபத்தினால் முழுக்க நிரம்பினவராக இருந்தார்; அவர் மரணத்தின் உண்மையான அர்த்தத்தையும் அது ஒரு சாபம் என்றும், மனுக்குலத்தின் மீது காணப்படும் பயங்கரமான சாபம் என்றும், அவர் முழுமையாய் உணர்ந்துக்கொண்டார். லாசரு பரலோகத்தில் காணப்படுகின்றார் என்று மரியாளை ஆறுதல்படுத்தும் வண்ணமாக இயேசு எதுவும் கூறவில்லை, காரணம், அவர் உண்மையையே பேசுகிறவராய் இருந்தார். வேறொரு தருணத்தின்போது அவர் "பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று கூறியுள்ளார் (யோவான் 3:13).

மாறாக நம்முடைய சந்ததியின் மீது காணப்படுவதும், சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவிக்கிறதுமான, துன்பத்தை ஆழமாய் அனுபவித்தவராக, இயேசு கண்ணீர் விட்டார். வேதாகமத்தில் மிகச் சிறிய வசனமாகிய, "இயேசு கண்ணீர் விட்டார்" என்பதானது, நமது கர்த்தர் அனுதாபம், இரக்கம் மிக்கவர் என்றும், அவர் நம்முடைய உருவம் இன்னதென்று அறிந்திருக்கிறார் என்றும், நாம் மண் என அவர் நினைவுகூருகின்றார் என்றுமுள்ள ஐசுவரியமான நிச்சயத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நாம் அவருடையவர்களாய் இருந்து, நம்முடைய சோதனைகளின் கீழ்ச் சரியாய்க் காணப்படுவோமானால், நமக்கான சோதனைகள் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே நடைப்பெறும் என்பதாக அவர் வாக்களித்து, அறிவித்துள்ளவைகளாகிய அனைத்தையும் அவர் உணர்ந்தவராகவே இருக்கின்றார் என்பதே சிறந்த நிச்சயங்களில் ஒன்றாக இருக்கின்றது. இங்கு மற்றவர்களாகிய யூதர்கள் அழுததற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, அழுது புலம்புதல் எனும் அர்த்தத்தைக் கொடுத்தாலும், நமது கர்த்தர் கண்ணீர் விட்டார் என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, அழுது புலம்புதல் எனும் அர்த்தத்தைக் கொடுக்கிறதாக இல்லை; அவர் கண்ணீர் விட்டார்; ஆனால் துக்கத்தில் தம்முடைய சத்தத்தை உயர்த்தி அவர் அழவில்லை, அவர் ஆவியில் கலக்கமடைந்தார், தவித்தார், பெருமூச்சுவிட்டார், மற்றும் தம்முடைய நண்பர்களுடைய துக்கத்திற்குள்ளாக முழுமையாய்ப் பிரவேசித்தார். இது அழுவாரோடு அழுவதற்கும், சந்தோஷப்படுவாரோடு சந்தோஷப்படுவதற்கும் அவருடைய பின்னடியார்களுக்குப் படிப்பினையாக இருக்கின்றதல்லவா?

இயேசுவுடன் காணப்பட்ட யூதர்கள் அவருடைய அனுதாபத்தைக் கவனித்து, "இதோ இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்" என்று பாராட்டினார்கள், ஆனால் மற்றவர்களோ, "இவர் அற்புதம் பண்ணுகிறவராயிற்றே. இவர் இவருடைய நண்பனை உண்மையாய் சிநேகித்திருந்தாரனால், இவர் அவருக்கு உதவியிருக்கலாமல்லவா?" என்று குறை கூறினார்கள்.

இன்றும் கர்த்தர் வியாதியையும், துக்கத்தையும், மரணத்தையும் அனுமதிப்பதற்காக, சிலர் அவரைக் குறை கூறிக்கொண்டிருக்கின்றனர்; இன்னுமாக இவைகளையெல்லாம்,

அதாவது மனித குடும்பத்தைப் பாடுபடுத்தும், எதிரான காரியங்களை/தீமைகளை அவர் அப்புறப்படுத்தாதற்கான காரணம், தேவன் வல்லமையில் குறைவுப்பட்டிருப்பதினாலோ அல்லது தேவன் விருப்பமற்று இருப்பதினாலோ என்று இவர்கள் கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். விசுவாசத்தினுடைய அர்த்தம் பின்வருமாறு:-

"தெளிவின்மையுடன் கர்த்தரை நியாயம் தீர்த்திடாதே
ஆனால் அவருடைய கிருபைக்கென அவரை நம்பிடு;
கடுமையான ஏற்பாட்டின் பின்தனிலே (பின்னால்)
அவர் மறைத்துள்ளார் அவர்தம் புன்னகைக்கும் முகத்தை."

கல்லறை என்பது, வாயிலில் பெரிய கல்லினால் அடைக்கப்பெற்ற கல்லறையாகும். இந்தக் கல்லை அகற்றும்படிக்கு இயேசு கட்டளைக்கொடுத்தார். மரித்தவரை உயிரோடு விழிக்க செய்வதற்கான அதே வல்லமையானது, கல்லைப் புரட்டித் தள்ளுவதற்கும் வல்லமையுள்ளதுதான். ஆனால் மனிதனால் செய்ய முடிகின்ற எதையும், அற்புத வல்லமையினால் செய்யக்கூடாது என்ற வரையறையைக் கர்த்தர் கொண்டிருந்தார். இந்த ஒரு படிப்பினையை, நம்முடைய ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் நாம் பொருத்துவதும் நன்மைக்கு ஏதுவாய் இருக்கும். மேலும் இதற்கு இசைவாகவே நாம் நம்முடைய துக்கங்களுடனும், பிரச்சனைகளுடனும், வேதனைகளுடனும் கர்த்தரிடத்தில் வந்து, அவருடைய ஆசீர்வாதங்களையும், நன்மைக்கு ஏதுவாய் மாற்றும் அவருடைய வழிநடத்துதல்களையும் கேட்கும்போது, நம்மால் செய்யச் சாத்தியமான காரியங்களில் நாம், விசேஷித்த குறுக்கீடுகளை எதிர்ப்பார்க்கக்கூடாது. இப்படி ஒருவேளை எதிர்ப்பார்த்தோமானால், நாம் சந்தேகத்திற்கிடமின்றி ஓர் ஆசீர்வாதத்தை இழக்கின்றவர்களாய் இருப்போம். கல்லறையின் வாயிலினின்று கல்லைப் புரட்டிப்போட்ட மனிதர்கள், அற்புதத்திற்குப் பிற்பாடு, இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்கையிலும், மற்றவர்களிடத்தில் சொல்லும்போதும், தாங்கள்தான் கல்லைப் புரட்டிப் போட்டார்கள் எனச் சொல்வது தொடர்புடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பார்கள் என்பதில், யாருக்குத்தான் சந்தேகம் வரும். இவ்விஷயமானது, அற்புதத்தின் முக்கியத்துவத்தை இவர்களுடைய மனதில் பதிய வைத்திட உதவியிருக்கும் என்பதில் யாருக்குத்தான் சந்தேகம் வரும். நம்மால் முடிந்த யாவற்றையும் நம்முடைய முழுப் பலத்தினால் செய்துவிட்டு, நமது கரம் நிகழ்த்துவதற்கு வலுவற்றதாய் இருக்கும் காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருப்போமாக.

## "அவன் மரித்து நாலு நாளாயிற்றே"

"இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்" (யோவான் 11:22) என்று கூறின அதே மார்த்தாள், இப்பொழுது கல்லறையினின்று கல்லைப் புரட்டிப்போடும் விஷயத்தில், "ஆண்டவரே இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே" என்று மறுப்புத் தெரிவித்தாள். யவீருவின் மகளையும், நாயீன் ஊர் விதவையின் மகனையும் இயேசு உயிரோடு எழுப்பியிருந்ததை மார்த்தாள் அறிந்திருக்க வேண்டும்; ஆனால் இந்த இரண்டு சம்பவங்களிலும், மரித்தவர்கள், மரித்துப்போன கொஞ்சம் நேரத்திற்குள்ளாகவே உயிரோடே எழுப்பப்பட்டவர்களாய் இருந்தார்கள். ஆனால் லாசருவின் விஷயத்திலோ, அழுகிப்போக ஆரம்பித்த பிற்பாடு, மரித்தவனை உயிரோடு கொண்டுவருவதற்கான வல்லமை சாத்தியமற்றதாக மார்த்தாளுக்கும், மற்றவர்களுக்கும் தோன்றியது. இதன் காரணமாகவே நமது கர்ததர் முன்னமே, "நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" என்று கூறினார். இச்சம்பவமானது அவருடைய அன்புக்குரிய நண்பிகளாகிய மார்த்தாளுக்கும், மரியாளுக்கும் மட்டுமல்லாமல், அவருடைய அருமை சீஷர்களுக்கும், ஓர் அருமையானப் படிப்பினையாக இருக்கப் போகின்றது; இன்னுமாக அவருடைய வார்த்தைகள் மூலம் விசுவாசிக்கப் போகிற அனைவருக்குங்கூட, அருமையான படிப்பினையாக இருக்கப்போகின்றது. இது மிகவும் பிரம்மிக்க வைக்கின்றதான அற்புதமாகும்.

லாசருவை வெளியே வரும்படிக்கு அழைப்பதற்கு முன்னதாக, நமது கர்த்தர் தம்முடைய சீஷர்கள் முன்னிலையிலும், துக்கிக்கிறவர்களாகிய திரளான ஜனங்கள்

முன்னிலையிலும் சத்தமாய் ஜெபம் பண்ணினார். பொருத்தமற்ற இடங்களிலும், நேரங்களிலும் ஜெபம் செய்யப்படுவதின் காரணமாக கர்த்தர், தெருச்சந்திகளில் பரிசேயர்கள் ஏறெடுக்கும் ஜெபத்தைக் கண்டித்தாலும், இங்கு அவர் பொது இடங்களில் ஜெபம் பண்ணுவதற்கு ஒப்புதல் கொடுக்கின்றார். பரிசேயர்கள் தங்கள் ஜெபம் பண்ணுவது, மனுஷர்களால் பார்க்கப்பட வேண்டுமென்றும், கேட்கப்பட வேண்டுமென்றும் ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருந்தார்கள். ஆனால் இயேசுவின் விஷயத்திலோ, தம்முடைய வல்லமையினால் அல்லாமல், பிதாவின் வல்லமையினால், தேவனின் விரல்களினாலேயே, தாம் இந்த அற்புதங்களை நிகழ்த்தியதாகச் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் அறிந்துக்கொள்ளத்தக்கதாக, பிதாவை வெளிப்படுத்தினவராக இருந்தார்.

"பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்." இயேசு முணுமுணுக்கவோ, மந்திரங்கள் ஓதவோ, மாயமந்திரமோ செய்யாமல், உரக்க சத்தத்தில் கூப்பிட்டார். இந்த அற்புதத்தினுடைய அநேக அம்சங்களை வைத்துப்பார்க்கும்போது, கர்த்தர் அவருடைய மகிமையடைந்த சபையுடன் கூடச் செய்யவிருக்கும் மகிமையான வேலைக்கு நிழலாய் இருக்கின்றது; அப்போது கல்லறைகளில் இருப்பவர்கள் அனைவரிடத்திற்கும், "வெளியே வாருங்கள்" என்ற செய்தி உன்னதத்திலிருந்து வரும் (யோவான் 5:28). லாசரு கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்டவராகவும், சீலைகளினால் கட்டப்பட்டவராகவும் வெளியே வந்தார். அங்கிருந்தவர்கள் ஆச்சரியமடைந்ததைக் குறித்து விளக்குவதைக் காட்டிலும், நம்மால் நன்கு கற்பனை செய்து பார்க்க முடியும். இயேசு அவர்களை நோக்கி, "இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்" என்று சொல்ல வேண்டிய அளவுக்கு, சுற்றியிருந்தவர்களைச் சுயநினைவுக்குக்கொண்டு வர வேண்டியிருந்தது. லாசரு மரித்தபோது, அவருடைய தாடைகள், கைக்கால்கள் அனைத்தும் சீலையினால் கட்டப்பட்டிருந்ததினால், இயேசு கட்டவிழ்க்கக் கூறினார். அற்புதமானது சரியான சந்தர்ப்பத்தில் நடைபெற்றது; இது துக்கித்திருந்த சகோதரிகளுக்கு மாத்திரமல்லாமல், சுற்றி நின்ற அச்சகோதரிகளின் யூத நண்பர்களுடைய நன்மைக்கும் ஏதுவாய் இருந்தது; சுற்றி நின்ற இந்த யூத நண்பர்களில் அநேகர், இந்த அற்புதத்தைக் கண்டதினால், அவரை விசுவாசித்தார்கள்; இந்த அற்புதம் அப்போஸ்தலர்களுக்குக்கூட நன்மைக்கு ஏதுவாய் இருந்தது; இது இன்னும் கொஞ்சம் நாட்களுக்குப் பின்பாகக் கர்த்தர் சிலுவையில் அறையப்படுதல் தொடர்புடையதாய், அப்போஸ்தலர்களுக்கு வரவிருக்கின்ற பரீட்சைகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்துகிறதாயும் இருந்தது.

இதற்கிடையில் அற்புதத்தைக் கண்ட சிலர், தங்கள் வழிகளில் போகையில், காரியங்களைப் பரிசேயர்களுக்கும் அறிவித்தார்கள்; இதினிமித்தம் நமது கர்த்தர் மரிக்க வேண்டும் என்று பரிசேயர்கள் மிகுந்த தீர்மானத்துடன் காணப்பட்டார்கள்; இயேசு தீமையான கிரியைகளைச் செய்திட்டார் என்பதினால் அல்லாமல், அவர் ஒரு மோசமான மனுஷன் என்று பரிசேயர்கள் நம்பினதாலும் அல்லாமல், மாறாக பரிசேயர்கள் தங்கள் ஜனங்கள் தொடர்புடைய விஷயத்தில், தங்களுடைய சொந்த நோக்கங்களுக்குள்ளும், சொந்த திட்டங்களுக்குள்ளும் மிகவும் மூழ்கி இருந்தபடியால், கர்த்தர் மரிக்க வேண்டும் என்று தீர்மானமாய் இருந்தார்கள். ஒருவேளை இயேசு இப்படியாகவே தம்முடைய வேலையைச் செய்துகொண்டிருப்பாரானால், சீக்கிரத்தில் ஜனங்கள் அனைவரும் இயேசுவுக்குப் பின்னாகப் போய்விடுவார்கள் <u>என்பதும்</u>, தங்களுடைய தேசம் மற்றும் மத விஷயங்களில், தங்களுக்கு அதிகமான சுதந்திரத்தைக் கொடுத்துள்ள உரோம அரசாங்கமானது அதிகாரங்கள் அனைத்தையும் தங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளும் <u>என்பதும்</u>, இப்படியாகத் தங்களுடைய ஆட்சி முற்றிலுமாய்க் கவிழ்ந்துப் போய்விடும் <u>என்பதும்தான்</u> பரிசேயர்களுடைய வாதமாக இருக்கின்றது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆபத்தான கட்டம் வந்துள்ளது எனப் பரிசேயர்கள் எண்ணினார்கள். இப்படியாகவே இந்தத் தற்கால அறுவடையின் காலத்தில், இன்னும் கொஞ்சம் காலத்திற்குள்ளாக, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய கடைசி அங்கத்தாரிடத்தில், கிறிஸ்தவ மண்டலத்தாருடைய மனப்பான்மை காணப்படும். அன்று இயேசுவை எதிர்க்க வேண்டும் என்று ஆலோசனை சங்கம் தீர்மானித்தது போன்று, இன்று <u>சபை கூட்டமைப்பானது (FEDERATIONS) முற்றிலும் ஒழுங்குப்படுத்தப்பட்டு, உயிரடையும்போது, சபைகளின்</u>

கூட்டமைப்பானது, "தற்கால சத்தியத்தை/ஏற்றக்கால சத்தியத்தை" எதிர்ப்பதற்குத் தீர்மானம் எடுக்கும். (வெளிப்படுத்தல் 13:15). இவைகளையெல்லாம் நன்மை கருதி செய்யவேண்டும் என்று வாதமும் காணப்படும். பரலோக இராஜ்யமானது எப்படியாக ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பது, தொடர்புடைய தங்கள் சொந்த கூற்றுகளின் மீதான அதிகப்படியான சார்ந்திருத்தலும், அதிகப்படியான சுயநம்பிக்கையுந்தான் கிறிஸ்தவ மண்டலத்தின் தவறாய் இருக்கின்றது. "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று பல நூற்றாண்டுகள் காலமாக இவர்கள் ஜெபம் ஏறெடுத்தும், இவர்கள் இவ்வார்த்தைகளினுடைய அர்த்தத்தை முற்றிலுமாக தவறாய்ப் புரிந்துக்கொண்டபடியால், இவர்களுக்கு இராஜ்யத்திற்கான சம்பவங்கள் அனைத்தும் இசைவற்றதாகவும், அழிவிற்குக் காரணமானதாகவும் தோன்றுகின்றது.

## "லாசரு எங்கே இருந்தார்?"

லாசரு பரலோகத்திற்குச் செல்லவில்லை என்பதற்கு, நமது கர்த்தருடைய வார்த்தைகள் ஆதாரமாய் உள்ளது; ஏனெனில், "பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று கர்த்தரே கூறியுள்ளார்; இதற்கு இசைவாகவே அப்போஸ்தலனாகிய பேதுருவின் சாட்சி மறைமுகமாகக் காணப்படுகின்றது; "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே" (அப்போஸ்தலர் 2:34). லாசரு எங்கே இருந்தார்? இதைக் குறித்து லாசரு என்ன கூறியுள்ளார்? இது குறித்து லாசரு எதுவும் சொல்லவில்லை. லாசரு சொல்வதற்கு எதுவும் இல்லை, ஏனெனில் அவர் எங்கேயும் செல்லவில்லை, அவர் மரித்துப்போயிருந்தார். நமது கர்த்தர் பரலோகத்தில் உள்ள பிதாவிடம் தமது கண்களை ஏறெடுத்து, ஜெபம் பண்ணி, பின்னர் லாசருவை அழைக்கும்போது அவர் கல்லறையை நோக்கிப் பார்த்தே, "லாசருவே வெளியே வா" என்று கூறினார் மற்றும் மரித்தவன் கல்லறையினின்று வெளியே வந்தான். இது இறுதியில் முழு உலகத்திற்குமான உயிர்த்தெழுதலின் வல்லமையாக எவ்வாறு அவர் இருக்கப் போகின்றார் என்பதை முன்கூட்டியே காட்டுவதற்கான, கர்த்தருடைய வல்லமையின் காட்சி என்று நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" (யோவான் 5:28). சிலர் முதலாம் உயிர்த்தெழுதலில் முழுமையான பூரணத்திற்கும், மீதியானவர்கள் பாவம் மற்றும் மரணத்தின் நிலைமையினின்று முழுமையான பூரண மனுஷீக சுபாவத்திற்கு வருவதற்கான வாய்ப்பிற்கும் உயிர்த்தெழுந்து வருவார்கள்; நியாயத்தீர்ப்பின் (அ) ஒழுங்குப்படுத்துதல்களின் மூலமாக, பலன்கள் மற்றும் அடிகள் வாயிலாக, உயிர்த்தெழுதலில் பாவம் மற்றும் மரணத்தின் நிலைமையினின்று, முழுமையான பூரண மனுஷீக சுபாவத்திற்கு, மீதமான மனுக்குலம் கொண்டுவரப்படுவார்கள்.

இயேசுவின் விசேஷித்த நண்பனும், அவரால் நேசிக்கப்பட்டவனுமான லாசரு, உத்தரிக்கும் ஸ்தலத்திற்கோ, அல்லது நரகத்திற்கோ செல்லாமல், பரலோகத்திற்குதான் போயிருக்க வேண்டும் என்ற தப்பறையான கண்ணோட்டம், கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் பிரபலமாய்க் கிடக்கின்றது. ஆனால் ஒருவேளை லாசரு பரலோகத்தில் சில நாட்கள் காணப்பட்டிருந்திருப்பாரானால், அவரை இயேசு மீண்டுமாக பூமிக்குரிய ஜீவியாக வாழ அழைப்பது என்பது இயேசு அவரிடம் அன்பற்ற விதத்தில் நடந்துக் கொள்வதாக அல்லவா இருக்கும்; மேலும் லாசரு கிரீடத்தை (அ) குருத்தோலையை (அ) இசைக் கருவியைப் போட்டுவிட்டு, எவ்வளவு அவசர அவசரமாய்ப் பூமியில் வந்திருக்க வேண்டும்! இல்லை! இல்லை! இவை அனைத்தும் முட்டாள்தனமான கற்பனைகளாகும், மற்றும் இவை நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தினுடைய விலையேறப்பெற்ற படிப்பினைக்கு, முற்றிலும் இசைவற்றும் காணப்படுகின்றது. இயேசு தம்முடைய மரணத்தின் மூலமாக ஆதாமுக்காகவும், அவருடைய சந்ததியாருக்காகவும், மீண்டும் வாழ்வதற்கான உரிமையைப் பெற்று வைத்திருக்கின்றார்; மேலும் உயிர்த்தெழுதலுடைய வல்லமையின் மூலமாகவே அவர் மனுக்குலத்தை, மரணத்தின் பிடியிலிருந்து கொண்டுவருவார். லாசரு தன்னுடைய மரணத் தருவாயில் தன்னுடைய சுயநினைவை இழந்துப்போனார், மேலும் அவர் விழித்தெழுந்த தருணத்தில் மீண்டுமாக சுயநினைவைப் பெற்றுக்கொண்டு விட்டார். இடைப்பட்ட நான்கு நாட்களில், அவர் மரணத்தில் நித்திரைப் பண்ணிக்கொண்டிருந்தார்; "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்று இயேசு கூறியபடியே, லாசரு நித்திரையாய் இருந்தார். லாசரு விழித்திருக்கவில்லை, ஆகவேதான், இயேசு, "நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்று கூறினார்; இப்படியாகவே வேதவாக்கியங்கள் எங்கும்

காணப்படுகின்றது. "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிரசங்கி 9:5, 10).

முழு உலகமும் எழுந்திருப்பதைக் கற்பனைப் பண்ணிப்பாருங்கள், அது எத்துணை மகிழ்ச்சியான தருணமாக இருக்கும்; ஒருவர் பின் ஒருவராக, மரணம் எனும் மாபெரும் சிறைச்சாலையிலினின்று வெளியே வருவதும், அவரவர்களுடைய நண்பர்களினால் வரவேற்கப்படுவதும், எத்துணை மகிழ்ச்சிகரமான தருணங்களாக இருக்கும்; இன்னுமாக பூமியானது திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதையும், படிப்படியாக ஏதேனில் காணப்பட்ட முழுமையான பூரணத்தை நோக்கி முன்னேறுவதையும், இராஜ்யம் அளிக்கும் ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மற்றும் வாய்ப்புகளால் சூழப்பட்டுள்ள மனுக்குலமானது பூமி முழுவதும் நிரம்பிக் காணப்படும் தேவனைப் பற்றின அறிவாகிய வெளிச்சத்தினால், பூரணத்தை நோக்கி முன்னேறுவதையும் காண்பது எத்துணை மகிழ்ச்சிகரமாய் இருக்கும். ஓ! இவைகளெல்லாம், புறமதத்தார் போதித்தவைகளுக்கும் மற்றும் விலங்குகளாக மறுஜென்மத்தில் அவதாரம் எடுப்பது தொடர்பாக கற்பனை பண்ணியுள்ளவைகளுக்கும், எவ்வளவு மாறுபட்டதாய் இராஜ்யத்தில் மனுக்குலத்தாருக்குத் தோன்றும்! ஓ இவைகளெல்லாம், நித்திய சித்திரவதை (அ) உத்தரிக்கும் ஸ்தலத்தின் வேதனைக் குறித்த தவறான உபதேசங்களைக் கேட்டவர்களாகவும், இப்படியான சித்திரவதைக்குள் போகக்கூடாது என்று பயத்தோடே மரித்தவர்களாகவும் காணப்பட்ட மனுக்குலத்திற்கு, இராஜ்யத்தில் எவ்வளவு மாறுபட்டதாய்த் தோன்றும்! மனுக்குலத்தார் எவ்வளவு நன்றியுள்ள இருதயத்தை இராஜ்யத்தில் கொண்டிருப்பார்கள்! அநேகமாகச் சாத்தானுடைய பொய்யானது, இறுதியில் தேவன் மகிமைப்படவே உதவும்; மேலும் அநேகமாக இந்தக் காரணத்தினால்தான், தேவன் இவ்வளவு காலம் அமைதியாய் இருந்து, தம்முடைய பரிசுத்த நாமம், தீமையாய்ப் பேசப்படுவதற்கும், குற்றமாய்ப் பேசப்படுவதற்கும், தம்முடைய குணலட்சணங்கள் பழிதூற்றப்படுவதற்கும் அனுமதித்திருக்க வேண்டும்!

## "உயிர்த்தெழுதலும், ஜீவனும்"

நம்முடைய ஆதார வசனம் குறித்து, இன்னும் ஆழமான கருத்துக்களும் காணப்படுகின்றது; அதை நாம் பார்க்காமல் விட்டுவிடக்கூடாது. அதென்னவெனில்:- கர்த்தரில் இப்பொழுது விசுவாசம் கொண்டு, அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்குமான அழைப்பைக் கேட்டு, கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணம் பண்ணுவதின் மூலமாக, அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டவர்களாகிய நாம், சிலசமயம், ஏற்கெனவே புதிய ஜீவனை, உயிர்த்தெழுந்த ஜீவனைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், ஏற்கெனவே மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் கடந்து வந்தவர்களாகவும் பேசப்படுகின்றோம். இவை உயிர்த்தெழுதலுக்கும், ஜீவனுக்குமான அடையாள வார்த்தைகளாகும். பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தல் மூலமாக, நாம் பழைய சுபாவத்தைக் களைந்துப் போட்டவர்களாகவும், கர்த்தரிடத்திலிருந்து புதிய சுபாவத்தைப் பெற்றுக்கொண்டவர்களாகவும் கருதப்படுகின்றோம்; மேலும் இந்தப் புதிய சுபாவமே, முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணமடைய போகின்றதாய் இருக்கின்றது. நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட மாத்திரத்தில், நம்முடைய மனுஷீக சுபாவம் மரித்துப்போனதாகக் கருதப்படுகின்றபடியால், நம்முடைய தற்போதைய நிலைமையை, உயிர்த்தெழுப்பப்பட்ட நிலைமையாக வேதவாக்கியங்கள் தெரிவிப்பது நியாயமாகவும், சரியானதாகவும் இருக்கின்றது; இன்னுமாக நாம் ஜீவனுக்கான புதிய வழியில் ஆரம்பித்துவிட்டோம் என்றும், தற்போதைய அனுபவங்கள் மறுரூபமடைதல் என்றும், இந்த மறுரூபமாகுதலின் முடிவில், பெலவீனத்திலிருந்து வல்லமைக்கும், மாம்ச சரீரத்திலிருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கும், கனவீனத்திலிருந்து மகிமைக்குமான நிஜமான மாறுதல் நடைபெறும். அப்போது நாம் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் மகிமையான மாறுதலில், நிஜமாகப் பங்கெடுக்கின்றவர்களாய் இருப்போம்.

இந்த இளைப்பாறுதலுக்குள், இந்த ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிக்க முயற்சிப்போமாக! இப்படியான ஓர் உயர்வான ஸ்தானத்திற்கும், சிலாக்கியத்திற்கும் நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருக்கின்றார்; மேலும் நாம் கேட்பதற்கும்,

எண்ணிப்பார்ப்பதற்கும் மேலாக அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி, நமக்கு மேன்மையாகவும், அதிகமாகவும் அவர் செய்வார். "எல்லாம் உங்களுடையதே; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" (1 கொரிந்தியர் 3:21, 23). இதற்கிடையில் இந்த அடையாளமான உயிர்த்தெழுந்த ஜீவியத்தை ஜீவிக்கும் நமக்கும், அப்போஸ்தலருடைய வார்த்தைகள் பொருந்துகின்றதாய் இருக்கின்றது, அதாவது "நான் ஜீவிப்பது என்பது கிறிஸ்து ஜீவிப்பதாகும்." ஏனெனில் நாம் அவரை அடையாளப்படுத்துகின்றோம்; நாம் அவருடைய ஸ்தானாதிபதிகளாக இருக்கின்றோம். இதற்கிடையில் நம்முடைய (நிஜமான) உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கை அவருக்குள் காணப்படுகின்றது என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோசெயர் 3:3, 4).

---

**R5453**

# "ஒன்பது பேர் எங்கே?"
## லூக்கா 17:11-19

"தேவனை மகிமைப்படுத்துவதற்கு இந்த அந்நியனே ஒழிய, மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே." (வசனம் 18)

இன்றைய நம்முடைய பாடத்தின் சாராம்சமானது நன்றியறிதல் ஆகும். இது ஒரு மிக நியாயமான குணலட்சணமாகவும், விலங்கினிடத்திலும் கூடக் காணப்படுகின்றதாகவும் இருக்கின்றது. இந்த ஒரு பண்பில்லாமல், ஒரு பரிபூரண மனுஷனோ (அ) தேவதூதனோ, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது, கற்பனை செய்துபார்க்க முடியாத ஒன்றாக இருக்கும். நம்முடைய நன்றியறிதலின் அளவுக்குத்தக்கதாகவே, நாமும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம். இந்த ஒரு நன்றியறிதலானது, தெய்வீகப் பிரமாணங்களையும், ஒழுங்குகளையும் நாம் புரிந்துக்கொண்டோமோ (அ) இல்லையோ, இது தெய்வீகப் பிரமணாங்களுக்கும், ஒழுங்குகளுக்கும் நாம் கீழ்ப்படியத்தக்கதாக நம்மை வழிநடத்தும். நன்றியறிதலானது, தேவனுக்கான ஊழியத்தில் சுயத்தைப் பலிச் செலுத்தும் பிரயாசங்களை எடுப்பதற்கு நமக்கு உதவி செய்திடும்; மேலும் இயங்கிக்கொண்டிருக்கும் தெய்வீக ஏற்பாட்டின்படி இந்த நன்றியறிதலானது, அதற்கே உரியதான ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும்.

இயேசு சமாரியா மற்றும் கலிலேயா வழியாக எருசலேமுக்கு வந்தார். இதுவே அவர் மரிப்பதற்கு முன்னதாக, எருசலேமை நோக்கி செய்திட்ட அவரது கடைசி பிரயாணமாக இருக்கின்றது என அனுமானிக்கவும் படுகின்றது. அவருடைய கீர்த்தி எங்கும் பரவியிருந்தது. வழியருகே உட்கார்ந்து இருந்த பத்துக் குஷ்டரோகிகளும், நாசரேத்தூரின் இயேசு அவ்வழியாய்க் கடந்துப் போய்க் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டார்கள். ஊடனடியாகத் தங்களுடைய நோயின் காரணமாக, தங்களுக்கு இருக்கும் தொண்டைக் கட்டின குரலில், முடிந்தமட்டும் இயேசுவை உரக்கக் கூப்பிட்டார்கள். பொதுவாக இவர்கள் பணத்திற்காகவே சத்தமிடுவார்கள். ஆனால் இத்தருணத்திலோ, "ஐயரே எங்களுக்கு இரங்கும்!" என்று சத்தமிட்டார்கள்.

குஷ்டரோகிகள் என்பவர்கள் பரிதாபப்படுவதற்குரிய ஒரு வகுப்பாராகக் காணப்படுகின்றனர். இவர்களுடைய இந்த நோயானது, நீண்ட காலமாகச் சொஸ்தப்படுத்த முடியாத ஒன்றாக இருப்பதினால், வேதாகமத்தில் இந்த நோயானது பாவத்திற்கு அடையாளமாய் இருக்கின்றது. இந்த நோயானது, இரத்தத்தை மாசுப்படுத்துகிற ஒன்றாகும். மூட்டுகள் முறுக்கி, இணைந்து போய், அழுகி, தோல் போல் உரிந்து விழுந்துவிடும். நம்முடைய இந்தப் பாடத்தின் சம்பவம் நடைபெற்றதான காலப்பகுதியில் காணப்பட்ட ஒழுங்குகளின்படி, குஷட்ரோகிகள் பட்டணத்திற்குள் வர அனுமதிக்கப்படுவதில்லை; மீறினால் பிரம்பினால் முப்பத்தொன்பது முறை அடிக்கப்படுவது தண்டனையாக இருந்தது. இவர்கள் ஜீவிப்பதற்கென எவ்வேலையும் செய்யமுடியாது; மற்றும் இவர்கள் தங்களுடைய நண்பர்கள் (அ) பொது ஜனங்களின் தருமத்தையே எப்போதும் சார்ந்தவர்களாகக்

காணப்பட்டனர். நோய் தொற்றிவிடும் என்ற அச்சத்தினால் இவர்கள் நூற்றைம்பது அடிக்கு தள்ளியே, ஒருவரை அணுக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் செத்து, செத்து உயிர்வாழ்கின்றவர்களாகக் காணப்பட்டனர்.

இச்சம்பவத்தில் இடம்பெறும் பத்துக் குஷ்டரோகிகளானவர்கள், யூதர்கள், சமாரியர்கள் என்ற இனவேற்றுமையைப் பொருட்படுத்தாமல், தங்கள் அனைவருக்குமே குஷ்டரோகம் இருப்பதினால், ஒன்றுகூடி ஜீவித்தவர்களாய்க் காணப்பட்டார்கள். இவர்களுடைய கூக்குரலுக்கு இயேசு பதில் கொடுக்கும் வண்ணமாக, அவர் மிகுந்த இரக்கம் கொண்டவராக இருந்தபோதிலும், ஏதோ இவர்களைக் கடுமையாய் நடத்துவது போன்று, "நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்" என்று கூறினார். நியாயப்பிரமாண உடன்படிக்கையில், யூதர்களுடனான தேவனுடைய ஏற்பாடானது, பாவங்களினால் அல்லாமல், மற்றபடி அவர்களுக்கு நோய் வருவதில்லை என்பதாக இருந்தது; மேலும் குஷ்டரோக நோயின் விஷயத்தில், வியாதி உண்மையில் குஷ்டரோகமா (அ) வேறு ஏதாகிலும் வியாதியோ என்று ஆசாரியர்களே தீர்ப்புச் சொல்ல வேண்டியவர்களாய் இருந்தார்கள். நமது கர்த்தர் குஷ்டரோகிகளை ஆசாரியரிடத்திற்குப்போய், காண்பிக்கச் சொன்ன காரியமானது, சொஸ்தமாக்குதலைக் குறிப்பதாகவும், இவர்கள் ஆசாரியர்களிடத்திற்குப் போய்ச்சேரும் நேரத்தில், இவர்கள் தாங்கள் சுத்தமாகிவிட்டோம் என்று கூறும் நிலைக்கு வந்துவிடுவார்கள் என்பதைக் குறிப்பதாகவும் இருந்தது.

இந்தக் குஷ்டரோகிகள், இயேசுவின் வல்லமைக் குறித்துப் போதுமான அளவுக்கு அறிந்திருக்க வேண்டும், மற்றும் இவர்கள் இப்படி ஆசாரியனிடத்திற்குப் புறப்பட்டுச் சென்ற விஷயத்தில், மிகுந்த விசுவாசத்தையும் செயல்படுத்தியிருக்க வேண்டும்; ஏனெனில் இவர்கள் உடனடியாகச் சொஸ்தப்படுத்துவதற்குக் கூக்குரலிடுவதற்குப் பதிலாக, அவருடைய கட்டளையின்படி பின்பற்றி, ஆசாரியனிடத்தில் தங்களைக் காண்பிக்கப் புறப்பட்டுப் போனார்கள். இவர்கள் ஆசாரியனிடத்திற்குத் தாங்கள் போய்ச்சேரும் நேரத்தில், தாங்கள் நன்றாய்ச் சுகமடைந்திருப்பார்கள் என்றும், ஆரோக்கியம் அடைந்திருப்பார்கள் என்றும் நம்பிக்கைக் கொண்டிருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. இவர்கள் கொஞ்சம் தூரத்திற்குப்போன உடனே, தாங்கள் சொஸ்தமடைந்ததைக் கண்டுகொண்டார்கள். இவர்கள் தங்களுடைய குடும்பம், வேலை முதலானவைகளுக்குத் திரும்பிச் செல்லத்தக்கதாக ஆசாரியனிடத்தில் ஒப்புதல் வாங்க வேண்டுமென எத்துணை சந்தோஷத்துடன் துரிதப்பட்டுப் போயிருப்பார்கள் என்பதை நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகின்றது. இவர்களுடைய இரத்தம் சுத்திகரிக்கப்பட்டதினால் ஏற்பட்ட மகிழ்ச்சியினால், இவர்கள் ஓடித்தான் சென்றிருக்க வேண்டும்! ஆனால் இவர்களில் ஒருவன் ஓடுவதை நிறுத்திவிட்டு, பின்னே திரும்பி வந்துவிட்டான்; அநேகமாக மற்றவர்கள் மகிழ்ச்சியின் பரவசத்தில் இருந்தபடியால், ஒருவன் இப்படிப் பின்னே ஓடுவதைக் கவனிக்கவில்லை. அவன் பின்னே ஓடி வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, அவருக்கு நன்றிச் செலுத்தினான், அவன் <u>நன்றியுள்ள இருதயத்தைக் கொண்டிருந்தான்</u>; மேலும் இதன் காரணமாக அவன் <u>பின்னாளில் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வான்</u> என்பதில் நமக்குச் சந்தேகமில்லை; அவன் அப்பொழுது சமாரியனாகவும், அந்நியனாகவும், இஸ்ரயேலின் காணியாட்சிக்குப் புறம்பானவனாகவும் இருப்பதினால் அத்தருணத்தில் அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும், பின்னாளில் பெற்றுக்கொள்வான்.

## "கிருபையின் மற்றுமொரு துணிக்கை"

இந்தச் சம்பவத்தில், இந்தச் சொஸ்தப்படுத்துதலானது, பிள்ளைகளின் மேஜையிலிருந்து விழுந்த துணிக்கையாகும். ஏனெனில் ஐசுவரியவான் இன்னமும் மரிக்கவில்லை, அதாவது இஸ்ரயேலிடமிருந்து இன்னமும் தேவனுடைய கிருபையானது எடுக்கப்படவில்லை. "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்" என்னும் வார்த்தைகளை இன்னமும் இயேசு கூறவில்லை. அவர்களுடைய வீடானது பாழாய் விடப்பட்ட பிற்பாடும் கூட, இஸ்ரயேலிடத்திலான கிருபையானது, தனித்தனி நபருக்கான கிருபையாக 3½ வருடங்கள் தொடர்ந்துக் கொண்டிருந்தது. இயேசு மரித்துப்போய், 3½ வருடங்கள் யூதர்களுக்குத் தனித்தனி நபராக கிருபை வழங்கப்பட்ட விஷயம் நின்ற பிறகே, சுவிசேஷமானது புறஜாதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டது; கொர்நேலியு என்பவர்

தேவனுடைய உறவிற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் புறஜாதியாக இருக்கின்றார் (அப்போஸ்தலர் 10).

ஒருவேளை நன்றிச் சொல்வதற்கெனத் திரும்பி வந்தவன் சமாரியனாக இல்லாமல், யூதனாக இருந்திருந்தால் அவனை இயேசு தம்முடைய பின்னடியார்களில் ஒருவனாகும்படிக்கு அழைத்திருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை; "உன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என் பின்னே வா!" என்று சொல்லியிருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால் வந்தவன் சமாரியனாக இருந்தபடியால், "நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" (லூக்கா 17:19) என்று மாத்திரமே கூறி அனுப்பினார். ஆனால் இந்த நன்றியுள்ள சமாரியனைக் கர்த்தருடைய ஏற்பாடானது பின்தொடர்ந்தது என்பதிலும், புறஜாதிகளுக்குக் கதவு திறக்கப்படுவதற்கான காலம் வந்தபோதோ, இவனும் செய்தியை மகிழ்ச்சியாய் ஏற்றுக்கொண்டவர்களில் ஒருவனாக இருந்து, தேவனுடைய சுதந்தரர் ஆகுவதற்கும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன், பரம சுதந்தரத்தில் உடன் சுதந்தரராகுவதற்குமென அர்ப்பணம் பண்ணியும் இருப்பான் என்பதிலும் நமக்கு ஐயமில்லை.

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகளை, தெய்வீக வல்லமையினால் இல்லாமல், அம்மனுஷனுடைய விசுவாசமே அவனை இரட்சித்தது என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது, மாறாக அம்மனுஷனுடைய விசுவாசத்தோடு கூடவே ஆண்டவர் தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தினார் என்றே புரிந்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய வல்லமையும், அம்மனுஷனுடைய விசுவாசமும் சேர்ந்து, அவனைச் சொஸ்தப்படுத்தினது. இவை இரண்டும்தான் மற்ற ஒன்பது பேரைக்கூடச் சொஸ்தப்படுத்தினது. ஒன்பது பேர்க் கூட விசுவாசம் கொண்டிருந்தார்கள் மற்றும் சொஸ்தமாக்கப்பட்டார்கள்; மேலும் இவர்கள் (9-யூதர்கள்) நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் யூதர்களாகக் காணப்பட்டபடியால், இவர்களே சமாரியனைக் காட்டிலும், மன்னிப்பையும், சொஸ்தமாக்குதலையும் வேண்டிக்கொள்வதற்கான உரிமைக் கொண்டிருந்தார்கள்.

## "பத்துப்பேர் சொஸ்தமாக்கப்பட்டிருந்தார்கள் - 9 பேர் எங்கே?"

பத்துப் பேர் சொஸ்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஒருவன் மாத்திரமே தேவனுக்கு மகிமை செலுத்தத் திரும்பிவந்துள்ளான் எனும் காரியத்தை, அங்கிருந்த பொதுஜனங்களின் கவனத்திற்கு இயேசு கொண்டு வந்தார். இவர்கள் திரும்பிவர வேண்டுமென்றும், துதிச்செலுத்த வேண்டுமென்றும், தம் மூலமாய்த் தெய்வீக வல்லமையே செயல்பட்டுள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், அவர் இவர்களிடத்தில் கேட்டுக் கொள்ளவில்லை என்பது உண்மைதான் அவர் என்ன செய்யச் சொன்னாரோ, அதைத்தான் இவர்கள் செய்தார்கள், தங்களை ஆசாரியனிடத்திற்குப் போய்க் காண்பித்தார்கள்; பின்னர் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி, எதுவும் சொல்லவில்லை என்பதும் உண்மைதான்!

இவர்களைக் குணப்படுத்துவதற்கு முன்னதாக, "ஒருவேளை நான் உங்களைக் குணப்படுத்தினால், நீங்கள் உங்கள் ஜீவியங்களை அர்ப்பணித்து, என் சீஷர்களாகுவீர்களா?" என்று கர்த்தர் கூறி ஏன் பேரம் பேசவில்லை? அப்படி இயேசு கூறியிருந்தாலும், இவர்கள் ஒத்துக்கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமும் இல்லை. இப்படியாக வெறுக்கத்தக்கதும், சொஸ்தப்படுத்த முடியாததுமான நோயினை அகற்றுவதற்குக் கொடுக்கப்படும் எந்த நிபந்தனைகளுக்கும், யார்தான் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்? ஏன் இம்முறையைக் கையாண்டு, இயேசு தம்முடைய சீஷர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளவில்லை? "பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்கிறவர்களையே பிதா விரும்புகின்றார்" என்பதாகிய பிதாவின் கையாளுதலின் ஆவியையே, இயேசுவும் பின்பற்றுகிறவராக இருந்தார் என்பதே பதில். ஆவியோடும், உண்மையோடும் தம்மைத் தொழுதுகொள்ளாதவர்களைப் பிதா விரும்பாதது போன்று, குமாரனும் விரும்புவதில்லை.

இதன் அடிப்படையில் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய பிரசங்கமானது, இன்றுள்ள சுவிசேஷகர்கள், எழுப்புதல் ஊழியங்கள் முதலானவர்களின் பிரசங்கங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. உலகப்பிரகாரமான ஜனங்கள் கிறிஸ்துவின் சீஷர்களாகும்படிக்கு இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி

ஒருபோதும் வலியுறுத்துவதில்லை. இயேசுவும், அப்போஸ்தலர்களும் சில மாபெரும் உண்மைகளை மாத்திரமே பிரசங்கித்தார்கள், மற்றும் இந்தப் பிரசங்கத்தைக் கேட்டு, அதில் முன்வைக்கப்பட்ட மாபெரும் உண்மைகளினால் தாக்கத்திற்குள்ளானவர்களே ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். இயேசுவும், அப்போஸ்தலர்களும் பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பின் காலத்தையும் கூறி, காரியத்தை அந்தந்த நபரின் மனசாட்சிக்கே விட்டுவிட்டார்கள். பாவத்தை விட்டுவிட்டு, தேவனிடத்தில் திரும்புகிறவர்களுக்கு, இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் புண்ணியத்தினால் மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் கிடைக்கப்பெறும் என்று அப்போஸ்தலர்கள் கூறினார்கள். தேவனுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்குமான ஊழியத்திற்கென, தங்களுடைய ஜீவியங்களை அர்ப்பணம் பண்ணவும், நல்ல போர்ச்சேவகர்களாக தீங்கு அனுபவிக்கக் கூடியவர்களுமாகிய, பாவத்திற்காக வருந்துகிறவர்களுக்குப் பரம அழைப்பைப்பற்றி அப்போஸ்தலர்கள் கூறினார்கள்.

இன்னொரு தருணத்தில், உணர்ச்சிவசப்படுதலைக் கடிந்துக்கொள்ளும் வண்ணமாக, இயேசு "அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பார்க்கக்கடவன்" என்று கூறினார் (லூக்கா 14:30). தம்முடைய குமாரனுடன் கூட, உடன் சுதந்தரர்களாய் இருப்பதற்கெனச் சத்தியத்தைப் பிரசங்கிப்பதன் மூலமாக ஒரு வகுப்பாரை அழைத்திட தேவன் பிரியங்கொண்டுள்ளார். இந்த வகுப்பார் ஜெபங்கள் மூலமாகவோ அல்லது உணர்ச்சிப் பரவசத்தின் மூலமாகவோ, தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகக் கொண்டு வரப்படாமல், மாறாக தெய்வீக நிபந்தனைகளின் அடிப்படையிலேயே கொண்டு வரப்படுவார்கள். இப்படியாகத் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அதை விருதாவாகப் பெற்றுக்கொள்ளக்கூடாது என்றும், கலப்பையில் கை வைத்திட்ட பிற்பாடு, அவர்கள் பின்னோக்கிப் பார்க்கக்கூடாது என்றும், அவர்கள் தங்களைச் சிலுவையின் நல்ல போர்ச்சேவகர்களாக இணைத்துக்கொண்டுள்ளபடியால், அவர்கள் தீங்கு அனுபவித்து, ஊழியம் மற்றும், பலியாகிய சிலாக்கியத்தில் களிக்கூர வேண்டுமென்றும் உள்ள அவசர செய்தி கடந்துச் செல்கின்றது.

இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, கர்த்தருடைய சேனையில் போர்ச்சேவகர்களைச் சேர்ப்பதற்கு, ஆரவார பரவச முறையை, "hip-hip-hurrah" முறையைக் கையாளவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டுகின்றோம். இப்படிக் கூறுவதினால் நாம் மற்றவர்களைக் குறைக் கூற வரவில்லை, மாறாக தேவனுடைய ஜனங்கள், தேவனுடைய சித்தத்தை அறிவதற்கும், அவர் சித்தத்தைச் செய்வதற்கும் வழிகாட்டப்படத்தக்கதாக, உண்மைகளை அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டுவர மாத்திரமே செய்கின்றோம்.

## "பத்து, நூறு, ஆயிரக்கணக்கான மற்றவர்கள்"

நம்முடைய இப்பாடத்தை அடையாள கண்ணோட்டத்தில் பார்க்கலாம். அந்தக் குஷ்டரோகிகள், பாவிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றனர்; அதாவது தாங்கள் அசுத்தமாய் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்துக்கொண்டு, சுத்திகரிக்கப்படுவதற்காக கர்த்தரை நோக்கிக் கூப்பிடும் பாவிகளாய் இருக்கின்றனர்; இப்படியாக இவர்கள் கர்த்தரை நோக்கி கூப்பிடுவது என்பது, கர்த்தர் தேவனுடைய குமாரன் எனக் கொண்டிருக்கும் மகத்துவத்தையும், வல்லமையையும் ஒத்துக்கொள்வதையும், இவர் மூலமாய் மாத்திரம் பாவம் மன்னிக்கப்படுவதை ஒத்துக்கொள்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; இன்னுமாக இவர்கள் கர்த்தரை நோக்கி கூக்குரலிட்ட காரியமானது, இவர்கள் அவருடைய சீஷர்களாகுவதற்கான அதாவது, பின்னடியாராகுவதற்கான விருப்பத்தை அறிவிப்பதாகவும், பாவம் பாதகமானது என்று உணர்ந்து, தங்களுக்குள்ளாகவும், உலகத்திலும் காணப்படுகின்றதான பாவத்தை எதிர்த்துப் போராடி, அவருடைய அடிச்சுவடுகளில் இனிமேல் நடக்க வேண்டுமென்ற தீர்மானத்தை அறிவிப்பதாகவும் காணப்படுகின்றது. இப்படியான, எத்தனை பத்து, நூறு மற்றும் ஆயிரக்கணக்கானோரின் பக்தியையும், விசுவாசத்தையும் கர்த்தர் ஏற்றுக்கொண்டுள்ளார்? எத்தனை பேர்களைக் குணப்படுத்தி, மன்னித்து, இவர்களுடைய சீஷத்துவத்தின் அறிக்கையின்படிக் கர்த்தர் ஏற்றுக்கொண்டுள்ளார்? இவர்களில் எத்தனை பேர் அவருடைய உண்மையான சீஷர்களாகியுள்ளனர்?

கர்த்தருக்குப் பாவத்தைக் குறித்ததான தங்களுடைய துக்கத்தையும், பாவ மன்னிப்பிற்கான தங்களுடைய வாஞ்சையையும், வாழ்நாள் முழுவதும் அவருக்கும்,

அவருடைய தயவிற்கும், நன்றியும், பக்தியும் குறித்ததான தங்களது வாக்கையும் தெரிவித்துள்ள எத்தனை பேர்கள், தங்களுக்குக் கிடைத்திட்ட சிலாக்கியங்களையே மறந்துப்போய் உள்ளனர்; ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, எத்தனை பேர்கள் ஒரு தொழில் துறையினின்று, இன்னொரு தொழில் துறையினிடத்திற்கும், ஒருவகை களியாட்டங்களிலிருந்து இன்னொன்றிற்குச் சென்றிருக்கின்றனர்! இரக்கத்திற்கான கர்த்தரிடத்திலான தங்களுடைய ஜெபங்களையும், ஒருவேளை தங்கள் ஜெபங்கள் கேட்கப்பட்டால், தாங்கள் என்ன செய்வார்கள் என்று எடுத்திட்ட தீர்மானங்களையும் சொற்பமானவர்களே நினைவில் கொண்டவர்களாய் இருக்கின்றார்கள்!

## "மறுமலர்ச்சியானது வரவிருக்கின்றது"

தேவனுடன் உடன்படிக்கைப் பண்ணியுள்ளவர்கள் தொடர்புடைய விஷயத்தில், நாம் ஒரு கடுமையான சோதனை காலத்தில் இப்பொழுது வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம் என்ற கருத்தானது அநேக கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் பெருகிக்கொண்டு வருகின்றது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது, உயிர்த்தெழுதலுடைய மாற்றத்தின் மூலமாக, கர்த்தருடைய மணவாட்டியாக, அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நேரத்தை நாம் நெருங்கிக் கொண்டிருப்பதாக அநேக கிறிஸ்தவ ஜனங்கள் நம்புகின்றனர். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது;" "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். (1 கொரிந்தியர் 15:50, 51, 52). இயேசுவுடன் கூட, அவருடைய இராஜ்யத்தில் துணையாளர்களாக இருக்கப்போகின்ற மணவாட்டி வகுப்பாருக்கான அங்கத்தினரைக் கண்டுபிடிப்பதற்கே, இந்தச் சுவிசேஷ யுகத்திற்கான அழைப்புக் கொடுக்கப்பட்டது.

யூத யுகத்தினுடைய முடிவின் சோதனையான காலங்களில் வாழ்ந்துக் கொண்டிருந்த யூதர்களைக் குறித்து, "கடவுள் உன்னை தேடி வந்த காலத்தை நீ அறிந்துக்கொள்ளவில்லை" என்று இயேசு கூறினார் (லூக்கா 19:44; திருவிவிலியம்). வெகு சொற்பமானவர்கள் மாத்திரமே, தாங்கள் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலத்தினுடைய அம்சங்களையும், நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்களையும் புரிந்துக்கொள்வதற்குரிய, தேவனுக்கு அருகாமையிலான இருதய நிலைமையைக் கொண்டிருந்தார்கள். அதே மாதிரியான மாற்றங்கள் இப்பொழுது நமது மத்தியிலும் காணப்படுகின்றது. இதுவும் தங்களுடைய புரிந்துக்கொள்ளதலின் கண்களைத் திறந்திருக்கப் பெற்றிருப்பவர்களால் மாத்திரமே, உணர்ந்துக்கொள்ள முடிகின்றதாய் இருக்கின்றது.

நம்முடைய பாடத்தில் இடம்பெறும் சமாரியன், தங்களுடைய கிருபையிலும், வார்த்தையிலும், எண்ணங்களிலும் கர்த்தருக்கு மகிமை செலுத்த, நாடும் கர்த்தருடைய நன்றியறிதலுள்ள பின்னடியார்களாகிய வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றவனாய் இருக்க, மற்ற ஒன்பது பேரும் ஒரே மாதிரியான கிருபையைக் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்த போதிலும், தற்கால ஜீவியத்தின் இன்பங்களையும், ஆசைகளையும் நாடினவர்களாகவே இருக்கின்றனர்; ஆண்டவர் கடந்துச் சென்ற பாதையில் செல்லாததினால், இந்த ஒன்பது பேரும் சமாரியன் அடையாளப்படுத்தும் வகுப்பாருக்குரிய கனம், மகிமை மற்றும் அழியாமையை அடைவதில்லை. இவர்களுக்குக் கொஞ்சம் கீழான நிலைமையே அருளப்படும். வேதவாக்கியங்களின்படி, இன்னும் கொஞ்சங்காலத்திற்குள்ளாக, இராஜ்யத்தின் மகிமையானது, அதிர்ச்சியடைந்திருக்கும் உலகத்திற்கு வெளிப்படுத்தப்படும், மற்றும் தற்கால சூழ்நிலைகளின் மகிமைகள் அனைத்தும் கடந்துப் போய்விடும்.

தம்முடைய ஜீவனையும் பொருட்படுத்தாமல், தாம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாக தம்மைத்தாமே வெறுமையாக்கினவரும், இதன் விளைவாக இப்பொழுது மிகவும் உயர்த்தப்பட்டிருப்பவருமாகிய நமது இரட்சகர் வாயிலாகப் பரத்திலிருந்து வருகிறதான ஞானம் வெளிப்படுத்தப்பட்டது. கிறிஸ்துவின் சரீரத்தில், அதாவது திரைக்கு அப்பால், மகிமையான சபையில், ஓர் அங்கமாகுவதற்கென, தான் அனைத்தையும் குப்பையும், தூசியுமாக எண்ணினார் என்ற இதே கருத்தைத்தான் பரிசுத்தவானாகிய பவுலும் தெரிவித்துள்ளார். ஆயிரம் வருடம் யுகத்தின் போது,

உலகத்திற்கு வரும் ஆசீர்வாதம் மகா பெரியதாயிருக்கும், சபை பெற்றுக்கொள்ளப் போவதான ஆசீர்வாதமானதோ தலைச்சிறந்ததாக இருக்கும்.

---

**R5455**

# "மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது"

## லூக்கா 17:20-37

"இதோ தேவனுடைய இராஜ்யம் உங்கள் **மத்தியில்** இருக்கிறதே."
(வசனம் 21; திருத்தப்பட்ட வசனம்).

நமது ஆண்டவருடைய இந்த வார்த்தைகளைப் புரிந்துக்கொள்வதற்கு, இது பேசப்பட்ட சூழ்நிலையை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். இயேசுவுக்கு முன்னதாக யோவான் ஸ்நானன் வந்து, தேவனுடைய இராஜ்யம் சமீபித்துள்ளது என்று பிரசங்கித்தார். ஏற்றவேளையில், இயேசுவே, வரவிருக்கின்ற மேசியா என்றும், தேவனுடைய ஆட்டுக்குட்டி என்றும் சுட்டிக்காண்பித்தார். இயேசு தம்மைப் பூமியின் இராஜாவாக நிலைப்படுத்துவார் என்று, பல மாதங்களாகக் காத்துக்கொண்டிருந்த யோவான் ஸ்நானன், இப்படியாக நடப்பதற்குப் பதிலாக, தன்னுடைய வேலை நிறைவடையப் போவதைக் கண்டார்; மேலும் இவர் ஏரோதினால் சிறையிலே போடப்பட்டார். இயேசுதான் வரவிருக்கின்ற மேசியாவா அல்லது வேறொருவருக்காகக் காத்திருக்க வேண்டுமா என்று விசாரிக்கும்படிக்கு, யோவான் இயேசுவினிடத்திற்கு ஆள் அனுப்பினார். யோவான், தான் எதிர்பார்த்த பிரகாரமாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான ஆதாரங்களைக் காணமுடியாததினால் ஏமாற்றம் அடைந்தார்.

இயேசுதான் மேசியாவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிற, நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்ட இராஜா என்று கூறப்படும் காரியங்களைப் பரிசேயர்களும், வேதபாரகர்களும் கேள்விப்பட்டு, அவரைப் பரியாசம் பண்ணினார்கள். நகைப்பிற்கு இடமான இயேசுவினுடைய பின்னடியார்களின் கூட்டத்தைப் பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்கள் கவனித்தார்கள்; இயேசுவின் பின்னடியார்களில் ஆயக்காரர்கள், பாவிகள் மற்றும் கனமிக்க ஜனங்கள், (அதாவது செல்வாக்கிலோ, ஆஸ்தியிலோ, விசேஷித்த ஸ்தானத்திலும் இல்லாத கனமிக்க ஜனங்கள்) காணப்பட்டனர். இயேசு ஓர் ஏமாற்றுக்காரர் என்றும், அவருடைய பின்னடியார்கள் அவரால் ஏமாற்றப்பட்டவர்கள் என்றும் பரிசேயர்களும், வேதபாரகர்களும் எண்ணினார்கள். இயேசுவைக் குறித்து அவருடைய பின்னடியார்கள் எண்ணிக்கொண்டிருந்தது, இயேசுவின் ஒரு வஞ்சனை என்று வெளிப்படுத்துவதன் மூலம், அவருடைய பின்னடியார்களை வஞ்சனையிலிருந்து வெளிக்கொண்டு வருவதற்குப் பரிசேயர்களும், வேதபாரகர்களும் எப்படி முயன்றார்கள் என்பதையே இந்தப் பாடம் நமக்குக் காண்பிக்கப் போகின்றது. ஆகவேதான் ஜனங்கள் முன்னிலையில், "தேவனுடைய இராஜ்யம் எப்போது வரும்? என்றும், நீர் அதை ஸ்தாபிப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும்?" என்றும் இவர்கள் இயேசுவினிடத்தில் கேள்விக் கேட்டார்கள்.

இயேசுவைச் சிக்க வைக்கவேண்டும் என்பதே இவர்களது நோக்கமாய் இருந்தது என்பதில் ஐயமில்லை; ஏனெனில் ஒருவேளை நீண்டகாலம் எடுக்கும் என்று இயேசு சொல்வாரானால், அவருடைய பின்னடியார்கள் மனம் தளர்ந்துப் போய்விடுவார்கள்; ஒருவேளை கொஞ்சக்காலந்தான் என்று இயேசு கூறுவாரானால், "உமக்குச் சேனையை நீர் எங்கிருந்து பெற்றுக்கொள்வீர் என்றும், உம்முடைய போர்ச்சேவகர்களுக்கு நீர் எப்படி ஊதியம் கொடுப்பீர்? என்றும், எப்படி நீர் அவர்களுக்கு உணவு கொடுப்பீர்? என்றும், நம்முடைய முழுத் தேசத்தாலும் எதிர்க்க முடியாத உரோமின் அரசியல் வல்லமையுடன் எதிர்த்து யுத்தம் பண்ணுவதற்கு நீர் உரோமிற்குச் செல்வீரா?" என்றும் கேள்வி கேட்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் முதலாம் கேள்வியை மாத்திரமே பரிசேயர்களால் கேட்க முடிந்தது, காரணம் அதற்கு அவர் கொடுத்திட்டதான பதில் இவர்களைத் தடுமாறப் பண்ணிற்று. தேவனுடைய

இராஜ்யம் வெளிப்படையாக வராது, அதாவது தேவனுடைய இராஜ்யம் வரும்போது, ஜனங்களால் அதைக் காண இயலாது என்று இயேசு பதிலளித்தார். இன்னும் விரிவாகச் சொல்லும் வண்ணமாக, தேவனுடைய இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படும்போது, இதோ இங்கே இருக்கின்றது (அ) இதோ அங்கே இருக்கின்றது என்று ஜனங்களால் பார்க்க இயலாது என்றும் இயேசு கூறினார்; காரணம் தேவனுடைய இராஜ்யமானது ஜனங்கள் மத்தியில் எங்கும் ஸ்தாபிக்கப்படும், தேவனுடைய வல்லமையாக இருக்கின்றது.

"இதோ தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" என்ற வசனத்தின் மொழிப்பெயர்ப்பானது தவறாய்க் காணப்படுகின்றது (வசனம்-21); ஆனால் இது வேண்டுமென்றே செய்யப்படாத தவறாகவே இருக்கின்றது (லூக்கா 17:21). ஒருவேளை மொழிப்பெயர்ப்பாளர்கள் கவனமாய்க் கவனித்திருப்பார்களானால், இயேசுவால் மாய்மாலக்காரர்கள் என்றும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும், சொல்லப்பட்ட பரிசேயர்களுக்குள், தேவனுடைய இராஜ்யம் இருக்கின்றது என்று மொழிப்பெயர்ப்பதிலிருந்து/சொல்வதிலிருந்து தங்களைக் காத்துக்கொண்டிருந்திருப்பார்கள். "தேவனுடைய இராஜ்யம் உங்கள் நடுவில் இருக்கிறதே" என்பதே சரியான மொழிப்பெயர்ப்பாகும்.

ஓர் இராஜ்யமானது, அதன் இராஜாவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இயேசு ஓர் இராஜாவாக இவர்கள் நடுவில் காணப்பட்டார், ஆனால் இவர்களோ அவரை அடையாளங் கண்டுகொள்ளவில்லை. "நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்" (யோவான் 1:26). இப்படியாகவே சுவிசேஷ யுகம் முழுவதிலும் கிறிஸ்துவின் சபையாகிய, அவருடைய சரீரமானது, உலகத்தினால் அடையாளங்கண்டு கொள்ளப்படவில்லை. "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1 யோவான் 3:1). இது 18 நூற்றாண்டுகளாக உண்மையாய் இருந்து வருகின்றது; ஆனால் மாம்சத்தில் காணப்பட்ட கிறிஸ்துவும், சபையும், வேதாகமம் வாக்களிக்கிற பிரகாரமான வல்லமையிலும், மகா மகிமையிலுமான இராஜ்யம் என்ற விதத்தில், முழுமையான தேவனுடைய இராஜ்யமாகக் காணப்படவில்லை. கிறிஸ்துவும், சபையும், அப்போது தொடக்க நிலையிலுள்ள இராஜ்யமாக, கருநிலையிலான இராஜ்யமாக, தேவனுடைய ஏற்றவேளையில் அதிகாரத்தில் அமர்த்தப்படுவதற்கென ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் இராஜ்ய வகுப்பாராகக் காணப்படுகின்றனர். அந்த ஏற்ற வேளையானது இப்பொழுது அண்மையில் உள்ளது என நாம் நம்புகின்றோம்.

இந்த இராஜ்யமானது ஆவிக்குரிய ஒன்றாக இருக்கப் போகின்றது; ஆகையால் இதில் ஆளுகைப் பண்ணப் போகிறவர்கள், தேவதூதர்கள் மற்றும் பரம பிதா போன்று கண்களுக்குப் புலப்படாதவர்களாக இருப்பார்கள். "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று இயேசு கூறியுள்ளார். தலையின் விஷயம் எப்படியாக இருக்கின்றதோ, அப்படியாகவே கிறிஸ்துவின் சபையாகிய தெரிந்துக்கொள்ளப்பட்ட சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடைய விஷயத்திலும் ஆகும். "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாம் மறுரூபமாக்கப்படுவோம்;" இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் இவர்களையும் காணாது, ஏனெனில், "மாம்சமும், இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை;" மற்றும் மாம்சமும் இரத்தமுமானவர்களினால், ஆவிக்குரியவர்களைக் காணவும் முடியாது.

ஆயிர வருட யுகத்தில், இராஜ்யத்தின் அதிகாரமும், தேவனுடைய வல்லமையும் கிறிஸ்து மற்றும் சபை மூலமாக, மனுஷர்கள் நடுவில்/மத்தியில் செயல்படுத்தப்படும்; எனினும் அதை அவர்கள் மாம்ச கண்களினால் காணாமல், புரிந்துக்கொள்ளுதலின் கண்களினால் மாத்திரமே காண்கின்றவர்களாய் இருப்பார்கள். குருடாக்கப்பட்ட கண்கள் யாவும் அப்போது திறக்கப்படும். இவ்வாறாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதை அனைத்துக் கண்களும் காணும்; இன்னுமாகப் பாடுகள் பட்டவராகிய அவர், தம்முடைய மகிமையில் பிரவேசித்துள்ளார் என்பதையும், அவருடைய மணவாட்டியாகிய சபை, அவரோடு கூட மகிமையில் காணப்படுகின்றார்கள் என்பதையும், கிறிஸ்து மற்றும் சபை மூலமாகவே, ஆயிர வருட அரசாட்சியின் ஆசீர்வாதம் தங்களுக்கு வருகின்றது என்பதையும் அனைவரும் புரிந்துக்கொள்வார்கள் (வெளிப்படுத்தல் 20:6).

## "மனுஷகுமாரனுடைய நாட்கள்"

பரிசேயர்களது வாயை அடைத்த பின்னர், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, "மனுஷகுமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங்காலம் வரும்; ஆனாலும் அதைக் காணமாட்டீர்கள்" என்று கூறினார் (லூக்கா 17:22). இது உண்மையுள்ளவர்களுக்கு அதிர்ச்சியான செய்தியாகும். எனினும் தங்களால் புரிந்துக்கொள்ள முடியாத விஷயங்களை ஆண்டவர் கூறுவதைக் கேட்பது, அவர்களுக்குப் பழகிப்போன காரியமாய் இருந்தது; உதாரணத்திற்கு அவருடைய மாம்சத்தையும், அவருடைய இரத்தத்தையும் பானம் பண்ண வேண்டும் என்று கூறினதும், அவர் தாம் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று கூறினதும் ஆகும். இவைகளையெல்லாம் சீஷர்கள் அடையாளங்கள் என்று புரிந்துக்கொண்டு, அவைகளின் உண்மையான அர்த்தம் என்னவாக இருக்கும் எனச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் எதிர்ப்பார்த்திருந்த பிரகாரமாகவே, இயேசு எப்படி மாபெரும் இராஜாவாக இருக்க முடியும், அதே வேளையில் தாங்கள் அவரையும், அவருடைய நாட்களையும் எப்படிக் காணாதிருக்கவும் முடியும்? என்று சீஷர்கள் யோசித்தார்கள்.

இன்னுமாக, "இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும், சிலர் உங்களிடத்தில் சொல்லுவார்கள்; நீங்களோ போகாமலும் பின்தொடராமலும் இருங்கள்" என்று இயேசு கூறினார் (லூக்கா 17:22). சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் "இப்படியாக என்னுடைய இரண்டாம் வருகையைக் குறித்து யாராகிலும் சொல்வார்களானால் நம்பாதிருங்கள். நான் இப்படியான விதத்தில் வருவேன் என்று நம்பி வஞ்சிக்கப்படாதிருங்கள். நான் எப்படி வருவேன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி, மறுதிசைவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்" என்ற விதத்தில் இயேசு சொன்னார் (வசனம் 24).

"மின்னல்" என்று மொழிப்பெயர்க்கப்பட்ட 24-ஆம் வசனத்திலுள்ள இவ்வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையாகிய 'astrape' என்பதை "பிரகாசித்தல்" என்று மொழிப்பெயர்த்தால், இவ்வசனத்தை நம்மால் நன்கு புரிந்துக்கொள்ள முடியும்; அதாவது மின்னலுக்குப் பதிலாகப் பிரகாசித்தலைக்குறிக்கும் சூரியன் இடம்பெற்றால் இவ்வசனம் நன்கு புரியும்; கிழக்கில் உதித்து, மேற்கில் அஸ்தமிக்கிறது சூரியன். ஆனால் இது எவ்வாறு மனுஷகுமாரனை, அவருடைய நாட்களில் அடையாளப்படுத்தப்பட முடியும்? அவர் எப்படிச் சூரியன் போன்று இருப்பார்? கிறிஸ்துவின் நாள் என்பது ஆயிர வருடங்கள் அடங்கியது என்றும், நம்முடைய கர்த்தரின் இவ்வார்த்தைகளானது, "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" (யோவான் 16:12) என்ற இயேசுவின் மறைப்பொருட்களுள் ஒன்றாய் இருக்கின்றது என்றும், அவருடைய வார்த்தைகள் அனைத்தையும் தெளிவாய்ப் புரிந்துக்கொள்ளத்தக்கதாக, ஏற்ற வேளையில் பிரகாசிப்பித்தலை அருளும் பரிசுத்த ஆவியை இயேசு வாக்களித்துள்ளார் என்றும் நாம் பதிலளிக்கின்றோம். இந்த வசனமானது புரிந்துக்கொள்வதற்கான ஏற்றவேளை வந்துவிட்டபடியால், இப்பொழுது ஆவிக்குரிய புரிந்துக்கொள்ளுதலை உடையவர்களுக்குத் தெளிவாகிக்கொண்டு வருகின்றது.

இவைகள் எல்லாம் நீண்ட காலத்திற்குப் பிறகு சம்பவிப்பவைகள் என்று, சீஷர்கள் படிப்படியாக அறிந்துக்கொள்ளத்தக்கதாக, இயேசு தாம் முதலாவது அநேகம் பாடுப்பட்டு, இஸ்ரயேல் தேசத்தால் புறக்கணிக்கப்பட வேண்டுமென்று விளக்கினார். அவருடைய வந்திருத்தலுக்கான அடையாளங்கள் பற்றின அவர்களுடைய கேள்விக்கு அவர் கொடுத்திட்ட விவரத்தை (மத்தேயு 24) மீண்டும் சொல்லும் வண்ணமாக "நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்" என்று கூறினார் (லூக்கா 17:26).

இங்குத் திட்டவட்டமான காரியங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தில், நீதியின் சூரியனானது வானத்தின் ஒரு எல்லை துவங்கி, மறு எல்லை வரை பிரகாசிக்க ஆரம்பிக்கும் காலத்தில், நாம் எவைகளை எதிர்ப்பார்க்கலாம், என்பது நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. காலங்களுக்கான அடையாளங்களானது, உலகத்தில் பகிரங்கமாய்க் காணப்படாது, மாறாக ஜலப்பிரளயம் வருவதற்கு முன்னதான

நோவாவின் நாட்களில் இருந்தது போன்று, சோதோம் அழிக்கப்படுவதற்கு முன்னதாக லோத்தினுடைய நாட்களில் இருந்தது போன்று, உலகம் அமைதியாக, எப்போதும் போல் இயங்கிக்கொண்டிருக்கும். ஜனங்கள் புசித்தும், குடித்தும், திருமணம் பண்ணியும், வீடுகள் கட்டியும், விதைத்தும், நட்டும், எப்போதும்போல் செய்துகொண்டிருப்பார்கள். ஜனங்கள் இப்படியாக எப்போதும்போல் இருப்பது என்பது பொல்லாப்புத்தனத்தின் அடையாளங்கள் என்று குறிப்பிடப்படாமல், மாறாக உலகத்தைக் கையாளுவதற்கும், தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்குமெனக் கிறிஸ்து, ஆரம்பிக்கும் தம்முடைய இரண்டாம் பிரசன்ன காலத்தை உலகத்துக்குச் சுட்டிக்காண்பிப்பதற்கென எவ்விதமான வெளியரங்கமான அடையாளங்கள் இருக்காது என்பதைக் கூறுவதற்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

## "ஜலப்பிரளயம் மற்றும் சோதோமின் அழிவு"

உலகத்தை ஆசீர்வதிக்கப் போகிறதான மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில் ஏன் ஜலப்பிரளயம் மற்றும் சோதாமின் அழிவாகிய இரண்டு அடையாளங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது? உலகத்தின் மீதான சாபத்தை எடுத்துப்போட்டு, அதை ஆசீர்வதிக்கப் போகிறதான மேசியாவின் இராஜ்யமானது, தேவனுடைய மாபெரும் ஏற்பாடாக இருந்தாலும், இந்த இராஜ்யமானது, நம்முடைய தற்கால அமைப்புகளின் அழிவுகளின் மீதே ஸ்தாபிக்கப்படும் என்று வேதாகமம் எங்கும் குறிப்பிடப்பட்டிருப்பதே பதிலாக இருக்கின்றது. தற்காலத்தின் இந்த மதம், சமுதாயம், அரசியல் மற்றும் பொருளாதாரத்தின் அமைப்புகளுடைய அழிவே, இயேசுவினால் ஜலப்பிரளயத்தினாலும், சோதோமின் அழிவினாலும் சித்தரிக்கப்படுகின்றது. மகா உபத்திரவத்திற்கான கொந்தளிப்புச் சடுதியாக நிகழ்வது வரையிலும், மகா உபத்திரவம் வருவதற்கு முன்னதாக, அவர் வந்திருக்கும் காரியத்தை உலகம் காணாது, உலகம் அறியாது, மற்றும் உலகம் யோசித்தும் பார்க்காது, மற்றும் நம்பவும் செய்யாது.

இது ஒரு மகிழ்ச்சியூட்டும் அடையாளமல்ல. ஒவ்வொரு மேகத்திலும் வெள்ளி சரிகை உள்ளது. நமது மனித தோல்விகளாகிய அழிவுகளின் மீது, இராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு, உடனடியாக மகிமையான ஆசீர்வாதங்கள் பின்தொடரும் என்பதினால் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகத்தின்மேல் பெரும் துன்பமானது சடுதியாய் வெடிப்பதை வலியுறுத்தும் வண்ணமாக "லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்தது," என்று இயேசு கூறினார் (லூக்கா 17:29). "மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்." (வசனம் 30). கிரேக்க வார்த்தைகளானது, மகா உபத்திரவத்திற்கு முன்னானது கிறிஸ்துவின் பிரசன்னம் (அ) Parousia என்றும், உபத்திரவத்திற்குப் பின்னானது வெளிப்படுத்துதல் (அ) Epiphania என்றும் வேற்றுமைப்படுத்திக் காண்பிக்கின்றது.

கிறிஸ்துவின் வெளிப்படுதலானது, "அவர் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார்" என்று கூறப்பட்டுள்ளது (2 தெசலோனிக்கேயர் 1:7, 8). மகா உபத்திரவமானது பெரும்பாலும் உலகத்தை எரிக்கக்கூடிய ஒன்றாய் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது . . . இதற்குப் பெயர்க் கிறிஸ்தவ மண்டலத்தின் விசுவாசப் பிரமாணங்களானது, பூமி எரிக்கப்படும் என்ற கருத்தை வழங்குகின்றது. பரலோகங்களும்/வானங்களும் எரிக்கப்படும் என்று வரும் வார்த்தைகளை இவர்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

வேதாகமத்தில், அடையாள வார்த்தையான பூமி, மனித காரியங்களிலுள்ள சமுதாய ஒழுங்கை அடையாளப்படுத்துகின்றது; கடலானது அமைதியற்ற, திருப்தியற்ற திரளான ஜனக்கூட்டத்தரை அடையாயப்படுத்துகின்றது. வானங்கள் என்பது, மத சம்பந்தமான ஆவிக்குரிய வல்லமைகளை அடையாளப்படுத்துகின்றது. இவைகளெல்லாம் மகா குழப்பத்துடன் அழிந்துபோய், இவைகளுக்குப் பதிலாகத் தேவனால் வாக்களிக்கப்பட்டுள்ள புதிய வானங்களும், புதிய பூமியும் வரும் என்று பரிசுத்தவானாகிய பேதுரு நமக்குக் கூறுகின்றார் (2 பேதுரு 3:10-13). புதிய வானங்கள் என்பது, கிறிஸ்துவின் இராஜ்யத்திலுள்ள மகிமையில் இருக்கும் கிறிஸ்து மற்றும் அவருடைய உடன் சுதந்தரர்களாகிய மகிமையடைந்த சபை உள்ளடக்கின புதிய ஆவிக்குரிய குழுவை

அடையாளப்படுத்துகின்றது. புதிய பூமி என்பது, மேசியாவின் இராஜ்யமானது ஸ்தாபிக்கும் புதிய சமுதாய ஒழுங்கை அடையாளப்படுத்துகின்றதாக இருக்கும்.

## "வீட்டின்மேல் இருக்கும் பரிசுத்தவான்கள்"

தாம் ஜுவாலிக்கிற அக்கினியாக வெளிப்படுவதற்கு முன்பு, தாம் வந்திருக்கும் காலத்தை மீண்டுமாக நினைவுபடுத்தின பிற்பாடு, மாபெரும் உபத்திரவத்திற்கு அடையாளமான நெருப்பானது, தற்கால அமைப்புகளைப் பட்சிப்பதற்கு முன்னதாக, அவருடைய உண்மையுள்ளவர்கள் அனைவரும் மரிப்பார்கள் என்றும், மரிக்கும் அக்ஷணமே மறுரூபமடைவார்கள் என்றும் கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். அடையாள வார்த்தையில், அவருடைய நாளில் (Epiphania வெளிப்படுதலுக்கு முன்னதான, பிரசன்ன நாட்களில்) தங்களுடைய பொருட்களை வீட்டிற்குள் வைத்திருக்கும், வீட்டின்மேல் இருப்பவர்கள், பொருள்களை எடுப்பதற்கென, வீட்டின்மேலிருந்து இறங்காமல் இருக்கக்கடவன் என்று கூறுகின்றார் (வசனம் 31). இதன் அர்த்தம் என்ன?

வீடு என்பது தேவனுடைய வீட்டாரை அடையாளப்படுத்துகின்றது என்றும், வீட்டின்மேல் இருப்பவர்கள், தேவனுடைய ஜனங்களிலே மிகவும் பரிசுத்தவான்களாய் இருப்பவர்களை அடையாளப்படுத்துகின்றது என்றும் நாம் நம்புகின்றோம். இவர்கள் அவருடைய பிரசன்னத்தின் நாட்களில், ஓடுவதற்கான அவசியத்தை அறிந்தவர்களாக இருப்பார்கள். இவர்களுடைய பொருட்களில், விலையேறப் பெற்றவைகளில், இவர்கள் எவ்வளவுக்குக் காப்பாற்ற நாட வேண்டும்? என்ற கேள்வி எழும்பலாம். இவர்கள் தங்களுடைய பொருட்களில் எவற்றையும் தக்கவைத்துக்கொள்ள/ காப்பாற்றிக்கொள்ள நாடக்கூடாது என்றும், இவர்கள் எச்சரிக்கப்படுகின்றனர்; அதாவது சமுதாயத்தின் சில சிலாக்கியங்கள், மனுஷர் மத்தியில் கனம், சில பட்டங்கள் அதாவது உதவியாளர், மூப்பர், ஊழியக்காரர் போன்றதான சிறு பதவி ஸ்தானங்களின் பெயர்கள் முதலானவைகளை இவர்கள் தக்கவைத்துக்கொள்ள நாடக்கூடாது. இவைகளையெல்லாம் தக்க வைக்க/காத்துக்கொள்ள முற்படுவது என்பது ஏமாற்றத்தை அளிக்கின்றாகவே இருக்கும். அனைத்தையும் நாம் விட்டுவிட வேண்டும், இல்லையெனில் அக்காலத்தின் பரீட்சைகளை நாம் வெற்றிகரமாய்க் கடந்துச் செல்ல முடியாது.

இதுபோலவே வயலில் இருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமல் இருக்க வேண்டும். வயலானது, உலகத்தை அடையாளப்படுத்துகின்றது. உலகத்தை விட்டு வெளியேறின, அதாவது பெயர்ச் சபைகளை விட்டு வெளியேறின எந்தக் கர்த்தருடைய ஜனங்களும், திரும்பிப்போகக் கூடாது; மாறாக சூழ்நிலையின் உண்மையை அவர்கள் அறிந்துக்கொண்டு, வயலிலிருந்து, கர்த்தரிடத்திற்கு ஓடிவிட வேண்டும்.

பிள்ளைகளை உடையவர்களுக்கும், பால் கொடுக்கிறவர்களுக்கும் மேல் அக்காலத்தில் வரும் விசேஷித்தப் பிரச்சனைகளைக் குறித்துப் பரிசுத்தவானாகிய மத்தேயு அவர்களின் பதிவானது தெரிவிக்கின்ற காரியமானது, அடையாளமான வார்த்தைகள் என்றும், உலகத்தை மாற்றுவதற்கும், புதிதாய் வருபவர்களுக்குப் போதிப்பதற்குமென நாடும் கிறிஸ்தவ ஜனங்களை அடையாளப்படுத்துகின்றது என்றும் நாம் நம்புகின்றோம். இவர்கள் விசேஷித்த ஆத்துமாவின் வருத்தத்தில் காணப்படுவார்கள்; அதாவது யுக மாற்றத்தின் நிமித்தமாகவும், "என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்ற அழைப்பினாலும் வருத்தத்தில் காணப்படுவார்கள். அழைப்பைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிவது என்பது இப்படிப்பட்டவர்களுக்குக் கடினமானதாக இருக்கும்.

சோதோமிலிருந்து, லோத்தும், அவருடைய குடும்பத்தாரும் தப்பி ஓடும்போது, அவர்கள் துரிதமாய் ஓடும்படியாகவும், அழியப் போகிறவைகளைத் திரும்பிப் பார்க்காதப்படியும் எச்சரிக்கப்பட்டார்கள். ஆகவே கர்த்தருடைய ஜனங்களும் அழிந்துப் போவதற்குரியவைகளைத் திரும்பிப்பார்க்கக்கூடாது. அவைகள் மீது கவனம் செலுத்தக் கூடாது. "பாபிலோனை விட்டு ஓடி விடுங்கள்!" "அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்பிவியுங்கள்!" (எரேமியா 51:6); லோத்தின் மனைவி கீழ்ப்படியத் தவறி, அழியப் போகிறவைகளை ஏக்கத்துடன் திரும்பிப்பார்த்து, தப்பிக்கொள்ள முடியாதவள் ஆனாள். இந்த உதாரணத்தை கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக்கொடுத்து, அவர்கள்

தற்காலத்தின் காரியங்கள் அனைத்தையும் முழுமையாகத் துறந்து ஓடும்படியாக வலியுறுத்துகின்றார். தன்னுடைய ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்துபோவான்; தன் ஜீவனை இழந்துபோகிறவன், நித்தியத்திற்குரிய ஜீவனைக் கண்டடைகிறவனாக இருப்பான்.

---

**R3841**

# “தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்”

## லூக்கா 18:1-14

“தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்.” (வசனம் 13)

பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து ஜெபம் பற்றின ஒரு பாடத்தை நாம் மீண்டுமாக இங்குப் பார்க்கப் போகிறோம். ஜெபம் பற்றின சில பாடங்களைச் சீஷர்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; இதைக் கர்த்தர் இரண்டு உவமைகள் மூலம் அருளினார். முதலாவது பாடம் விடாப்பிடியாய் உறுதியாகத் தரித்திருத்தல் பற்றியதாகும்; அதாவது அவர்கள் தொடர்ந்து ஜெபம் பண்ண வேண்டும், மற்றும் பதில் தாமதமாகும்போது, சோர்ந்து, மனம் தளர்ந்துப் போகக்கூடாது என்பது பற்றியே முதலாம் பாடமாகும். அவர்கள் தேவனுடைய உண்மையான குணலட்சணத்திலும், தங்களின் விண்ணப்பங்ளைக் கேட்பதற்கும், தங்களுக்குத் தேவையான நன்மைகளை ஏற்ற விதத்தில், ஏற்றவேளையில் கொடுப்பதற்குமான அவருடைய விருப்பத்திலும் நிச்சயத்துடன் காணப்பட வேண்டும். பதில் தாமதமாகுவது என்பது அவர்களுடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் பெருக்கும் விதத்தில் ஆசீர்வாதத்தைக்கொண்டுவருகின்றதாக அமையும்.

## “அநீதியுள்ள நியாயாதிபதி”

மேற்கூறியவைகளை அறிவுறுத்தும் உவமையானது, தேவனுக்கோ, மனுஷனுக்கோ மதிப்புக் கொடுக்காத நியாயாதிபதி ஒருவன் கிழக்குத் திசை நாட்டில் இருந்தான் என்றும், அவன் தன்னுடைய சுயநலமான நோக்கங்களை நிறைவேற்றத்தக்கதாக தெய்வீகக் கட்டளைகளை எதிர்ப்பதற்கும், பொதுவாய் நிலவும் கருத்துக்களை மீறுவதற்கும் துணிந்தவனாகக் காணப்பட்டான் என்றும் தெரிவிக்கின்றது. கிறிஸ்தவ தேசங்களில் காணப்படும் நியாயாதிபதிகள் கனமிக்கவர்களாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாகவும் இருக்கின்றனர் என நாம் நம்புகின்றோம்; இன்னுமாக நியாயாதிபதிகள் இப்படிதான் இருக்க வேண்டுமென்பது சட்டமாக இருக்கின்றது என்றும், இப்படியாக இல்லாமல் இருப்பது அபூர்வம் என்றும் நாம் நம்புகின்றோம்; ஆனால் கிழக்குத் திசை நாடுகளில் எல்லாவற்றிலும் பணியாளர்கள் இலஞ்சம் வாங்க விரும்புவது வழக்கமாக இருந்தது, மற்றும் பணி புரிகின்றவர்கள் தங்களுடைய தனிப்பட்ட நன்மை மற்றும் ஆதாயத்திற்கே பணிபுரிகிறவர்களாய் இருப்பார்கள். முற்காலங்களில், அதாவது கடந்த நூற்றாண்டிற்கு முன்பு வரையிலும், நியாயாதிபதிகள், சட்டங்களை இயற்றுபவர்களாகவும், சட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்களாகவும் காணப்பட்டு வந்தனர். இன்றைக்கு நாகரிகமடைந்த தேசங்களில், ஜனங்களுடைய நன்மைக்கு ஏதுவாகவும், நீதி கிடைக்கப் பண்ணுவதற்குமென, சட்டம் இயற்றும் துறையும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறையும் தனித்தனியாகச் செயல்பட்டு வருகின்றது.

உவமையில் இடம்பெறும் அநீதியுள்ள நியாயாதிபதிக்கு முன்பாக தனது வாழ்க்கையில் அநீதிகளையும், அவமரியாதைகளையும் அனுபவித்த விதவை ஒருவள் வந்தாள்; இந்தப் பிரச்சனைகளிலிருந்து நியாயாதிபதி தன்னை விடுவிக்கும்படியாக விரும்பினாள். அவள் ஆஸ்தி உள்ளவளாக இராதபடியினால், அவளால் அவனுக்கு இலஞ்சம் கொடுக்க முடியவில்லை; மேலும் அவளுக்குச் செல்வாக்கு எதுவும் இராததினால் நீதிக்கும், குறை தீர்க்கப்படுவதற்குமான அவளுடைய விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டது. நீதியை வழங்க வேண்டும் என்ற விருப்பத்தினால் அல்லாமல், தொந்தரவை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற சுயநலத்தின் காரணமாக, அவளுடைய

விஷயத்தைக் கையில் எடுத்து, அவளுக்கு அவசியமான உதவியையும், நீதியையும் அவன் கொடுப்பதற்கு இறுதியாக முடிவெடுப்பது வரையிலும், அவள் விடாப்பிடியாய்த் தொடர்ந்துக் கொண்டிருந்தாள்.

## ''தேவன் தாமதித்தாலும் அவர் அநீதியுள்ளவர் அல்ல''

உவமையானது இந்த அநீதியுள்ள நியாயாதிபதியை, நம்முடைய பரம பிதாவுடன் ஒப்பிட்டுக் கூறி, இவ்வாறாக நம்முடைய பரம பிதாவானவர், அநீதியுள்ள நியாயாதிபதியாக இருக்கின்றார் என்று காண்பிப்பதில்லை. மாறாக இது இருவரையும் வித்தியாசப்படுத்தி, ஒருவேளை அநீதியுள்ள நியாயாதிபதி ஒருவன், சுயநலமான நோக்கங்களுக்காக இறுதியில் விடுதலை கொடுப்பானானால், நீதியுள்ளவராகவும், அன்புள்ளவராகவும், தம்முடைய ஜனங்களின் நன்மைகள் பற்றின அக்கறையுள்ளவராகவும் இருக்கும், நம்முடைய பரம பிதாவானவர், நிச்சயமாய் அவர்களின் ஜெபங்களுக்குச் செவிக்கொடுப்பார் என்ற கருத்தைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் ஒருவேளை நம்முடைய கணிப்பில் மிகவும் விடாப்பிடியாகக் கேட்பதற்கும், நம்முடைய உண்மையான ஜெபங்களும் அவசியப்படுவதற்கும் உரிய ஒரு காரியம் நமக்குக் காணப்பட்டு, ஒருவேளை அதற்கான ஜெபங்களுக்கான பதில் உடனடியாக வரவில்லையெனில், நம்மால் தேவனுக்கு இலஞ்சம் கொடுக்க முடியாத காரணத்தினாலோ (அ) அவருக்கு நம்மால் பிரயோஜனம் இல்லை என்பதினாலோ. தேவன் நம்மிடத்தில் அக்கறைக் காண்பித்திடாத அநீதியுள்ள நியாயாதிபதியாக இருக்கின்றார் என்று நாம் முடிவு பண்ண முடியாது; அதேசமயம் நாம் அவரைத் தொந்தரவு பண்ணினாலொழிய, மற்றப்படி அவர் சுயநலத்துடன் அக்கறையற்றவராக இருப்பார் என்றும் நாம் தேவனைப்பற்றி முடிவு பண்ணிவிடக்கூடாது. மாறாக அவரை நம்முடைய அன்புக்குரிய பரம தகப்பன் என்றும், நமக்கு உதவி செய்யமுடியாத அளவுக்கு அவருடைய கரம் குறுகிப்போகவில்லை என்றும், நமக்கான அவருடைய அன்பு குறைவாய் அல்லாமல், பலமாய்க் காணப்படுகின்றது என்றும், தகப்பன் தன்னுடைய பிள்ளைக்கு இரங்குகிறது போன்ற அன்பை உடையவர் என்றும், அவரைக் குறித்து எண்ணி, தேவனுடைய குணலட்சணம் பற்றின நம்முடைய அறிவின் பெலத்திலும், அவருடைய உண்மையின் மீதான நம்பிக்கையிலும், நாம் பொறுமையாய் இருந்து, தேவனை அன்புகூருபவர்களுக்கும், அவருடைய நோக்கத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்று அறிந்து, நம்முடைய விண்ணப்பங்களின் நிறைவேறுதலை அவருடைய ஞானத்திற்கும், அன்பிற்கும், வல்லமைக்கும் ஒப்புக்கொடுத்து விடுகிறவர்களாய் இருக்க வேண்டும்.

தேவன் காரியத்தில் விசேஷித்த துரிதம் எதையும் வெளிப்படுத்தவில்லை என்றாலும், "தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" என்று நமது கர்த்தர் கூறுகின்றார் (லூக்கா 18:7). இறுதியில் நீதியானது ஜெயங்கொள்ளும் என்று, நாம் தேவனிடத்திலும், அவருடைய வாக்குத்தத்தங்களிலும் நம்பிக்கைக்கொள்ள வேண்டும் என்பதே பாடமாக உள்ளது. இந்த நம்பிக்கையானது, ஒருபோதும் சந்தேகிக்காமல், மாறாக காத்திருக்க மாத்திரம் செய்யுமளவுக்கு வாக்குத்தத்தங்களை உறுதியாய்ப் பற்றிப் பிடித்திருக்கும் முற்றும் முழுமையான விசுவாசமாகின்றது. இப்படியாக விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் தேவனிடத்தில் வருபவர்கள், மீண்டும் மீண்டுமாக வருவார்கள், மற்றும் இப்படியாக வரும் ஒவ்வொரு முறையும் புத்துயிர் பெறுகின்றனர், ஏனெனில் இவர்கள் சர்வவல்லவரை மனமாற்றுவதற்குரிய நம்பிக்கையிலோ, நீதியானது என்று (தங்களால்) அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ள அவருடைய திட்டங்களை/ஏற்பாடுகளை, ஏதேனும் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையிலோ அவரிடத்தில் வருவதில்லை; மாறாக அவருடைய வாக்குத்தத்தங்களை அவர்கள் நம்புவதினாலும், அவருடன் ஐக்கியம் வைத்துக்கொள்வதன் மூலமாக, தங்களின் இருதயங்களை ஆறுதலும், அமைதலும் அடையப் பண்ண விரும்புவதினாலும் அவரிடத்தில் செல்கின்றனர்; இன்னுமாக பிதா தாமே நம்மை அன்புகூருகின்றார் என்றும், அவருடையவர்களை அவர் எதிராளியானவனின் பாவத்தின் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிப்பதற்கு ஏற்றக்காலம் ஒன்றைக்கொண்டுள்ளார் என்றும், தங்களுடைய இருதயங்களுக்கு உறுதிப்படுத்துவதன் மூலமாக, தங்களின் இருதயங்களை ஆறுதலும், அமைதலும் அடையப் பண்ண விரும்புவதினாலும் அவரிடத்தில் செல்கின்றனர். அந்த ஏற்றக்காலம், நீண்ட காலமாய்

இருக்கலாம், ஆனால் சரியான விதத்தில் விசுவாசம் செயல்படுத்தப்பட்டால், தாமதத்தின் ஒவ்வொரு அடியிலும், ஈடு இணையற்ற ஆசீர்வாதம் வரும்.

"சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார்" என்று கூறி இந்த உவமையைக் கர்த்தர் முடிக்கின்றார். அதாவது தம்முடைய ஜனங்களை விடுவிப்பதற்கான காலம் வரும்போது, அவர் மாபெரும் எதிராளியானவனுடனும், இவ்வுலகத்தின் அதிபதியானவனின் தலைமையின் கீழ் சத்தியத்தையும், நீதியையும் எதிர்த்து, ஜீவியத்தின் காரியங்களில் மிக முக்கிய ஸ்தானங்களைப் பிடித்து வைத்துள்ள அநீதியின் இயக்கங்களுடனுமான, தம்முடைய வேலையைச் சீக்கிரத்தில் முடித்துவிடுவார் என்று எடுத்துக்கொள்ளப்படலாம். இல்லையேல் கர்த்தர் தம்முடைய நீதியின் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு நீண்ட தாமதம் பண்ணமாட்டார் என்ற விதத்திலும் புரிந்துக்கொள்ளப்படலாம். மனிதனுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படுகையில், நமது கர்த்தர் உலகத்தை மீட்டுக்கொண்டது முதல், அவருடைய இராஜ்யமானது இப்போது ஸ்தாபிக்கப்படுவது வரையிலுமான 18-நூற்றாண்டுகளுக்கு மேலான காலப்பகுதியானது, நீண்ட காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. "சீக்கிரமாய்" என்று எந்த விதத்தில் பேசப்பட்டுள்ளது? "கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம்போலவும்," என்று நாம் தெரிவிக்கின்றோம். ஆகையால் இக்கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, இந்த நீண்ட முழுக்காலப்பகுதியும், இரண்டு நாட்களுக்கும் குறைவானதாகவே இருக்கும். காரியங்களைக் கண்ணோக்குவதில் இங்கு நாம் கர்த்தருடைய கண்ணோட்டத்தையே எடுக்கவேண்டும். இரண்டு கண்ணோட்டங்களையும் வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றன; ஆகையால் எந்தக் கண்ணோட்டத்தில் கர்த்தர் பேசியுள்ளார் என்று நாம் விவாதம் செய்ய வேண்டியதில்லை. அநேகமாக நாம் இரண்டு கண்ணோட்டங்களிலும் பார்க்கும் வண்ணமாகவே அவர் பேசியிருந்திருக்க வேண்டும்.

## "அவர் விசுவாசத்தைக் காண்பாரோ?"

உவமையிலிருந்து வேறுபட்டதான வார்த்தைகளை இயேசு இங்குக் குறிப்பிடுகின்றார்; "ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கென இரண்டாம் வருகையில் வரும்போது, உண்மையான விசுவாசமானது முதலாம் வருகையில் காணப்பட்டது போன்று, கடுமையாய்க் குறைவுப்பட்டிருக்கும், கிட்டத்தட்ட இல்லாமலலேயே இருக்கும். அவர் முதலாம் வருகையில் வந்தபோது, காணப்பட்ட நிலைமையானது, "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11). இதுபோலவே இந்த யுகத்தினுடைய முடிவின்போது, நமது கர்த்தர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக இரண்டாம் வருகையில் வரும்போது, பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும், பரீட்சித்து, சோதிக்கப்படுவார்கள். மீண்டுமாக அவர் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வருவார், அவர்களோ, அவரை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பார்கள்; மற்றும் அவசியமான விசுவாசத்தை பூமியில் அவரால் காணவும் முடியாது. முதலாம் வருகை தொடர்பாக நாம், "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" என்று வாசிக்கின்றோம் (யோவான் 1:12). இதுபோலவே அவருடைய இரண்டாம் வருகையின் போதும், விசுவாசங்கொண்டு, அவரை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, அவர் விசேஷித்த ஆசீர்வாதத்தை வழங்குவார்.

சுவிசேஷ யுகம் முழுவதிலும் சபையானது, சிறுமந்தையானது, உதவிக்காகவும், விடுதலைக்காகவும் தொடர்ந்து, கர்த்தரை நோக்கிப்பார்க்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கப்பட்டாலும், ஆண்டவர் இரண்டாம் வருகையில் வந்து, தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது, முதலாம் உயிர்த்தெழுதல் நடைபெறுவது வரையிலும் அவர்கள் உண்மையில/நிஜமாய் உதவி செய்யப்படுவதோ அல்லது விடுவிக்கப்படுவதோ இல்லை என்ற கருத்து உவமையின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. இதற்கு இசைவாகவே அப்போஸ்தலர், "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்று கூறியுள்ளார் (ரோமர் 12:19). ஆகவேதான் நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையானது, உலகத்திற்கு உபத்திரவத்தின் காலமாகவும், பழிவாங்குதலின் நாளாகவும், ஜனங்களுடைய தவறுகளைச் சரிப்படுத்தும்

நாளாகவும் காணப்படும் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிப்பதை நாம் பார்க்கின்றோம். "நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது; என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது." "அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்" (ஏசாயா 63:4; 34:8).

நாம் பொறுமையாய் இருக்க வேண்டுமென்றும், நம்மை எதிர்ப்பவர்களைப் பழிவாங்க முற்படாமல், மாறாக நம்முடைய சத்துருக்களை நாம் அன்புகூர்ந்து, நம்மை இழிவாய் நடத்தினவர்களுக்கு நாம் நன்மை செய்ய வேண்டுமென்றும், கர்த்தர் கொடுப்பதற்குச் சித்தமாக இருக்கும் விடுதலைகளையே, நாம் கர்த்தரிடத்தில் எதிர்ப்பார்க்க வேண்டுமென்றும், முழுமையான விடுதலை வருவதற்கு நீண்டகாலம் உள்ளது என்பதை நாம் உணர்ந்துக்கொண்டாலும், கிருபையான வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட போவதற்கான காலம் வந்துகொண்டிருக்கின்றது என்ற விசுவாசத்தின் மூலமாக நாம் இளைப்பாறுதலும், புத்துணர்வும் கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும் என்றுமுள்ளவைகளே இவ்வுமையின் மூலமான கர்த்தருடைய ஜனங்களுக்கான படிப்பினையாக இருக்கின்றது. ("உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது.")

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைக் கொஞ்சமாய் நம்புகின்றவர்கள், அவரைக் கொஞ்சமாய் விசுவாசிக்கின்றவர்கள், அவரிடத்தில் கொஞ்சமாகவே ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், கொஞ்சமே விசுவாசத்தைச் செயல்படுத்துகின்றவர்களாகவும் இருந்து, இதன் விளைவாகக் கொஞ்சமே சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்கிறவர்களாகவும் இருப்பார்கள். மாறாக விசுவாசத்தைக்கொண்டவர்களாகவும், தொடர்ந்து கிருபையின் சிங்காசனத்திடத்திற்குச் செல்கின்றவர்களாகவும், கர்த்தருக்கு மதிப்புக் கொடுப்பவர்களாகவும், தங்களுடைய ஜெபங்கள் மற்றும் பிரயாசங்களின் மகிமையான விளைவுகளில் நம்பிக்கைகொண்டவர்களாகவும் இருப்பவர்கள், இப்பொழுதும் மகிழ்ச்சியைப் பெற்றிருப்பார்கள், மற்றும் எதிர்க்காலத்தில் முழுமையான மகிழ்ச்சியையும் பெற்றிருப்பார்கள்.

## "சுயநீதி கொண்டவர்களின் ஜெபங்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை"

பரிசேயர்கள், யூதர்கள் மத்தியில் மிகவும் ஒழுக்கமாய் வாழும் வகுப்பாராய்க் காணப்பட்டார்கள்; இவர்கள் மிகவும் பயபக்தியுள்ளவர்களாகவும், வெளிப்புறத்தில் மிகவும் சரியானவர்களாகவும் காணப்பட்டனர்; ஆனால் உள்ளேயோ, கர்த்தர் நமக்குக் கூறியுள்ள பிரகாரம், தூய்மைக்கு மிகவும் தொலைவில் காணப்பட்டனர். இவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையைப்போல், வெளியில் நன்கு வெள்ளையடிக்கப்பட்டவர்களாகவும், உள்ளே முழுக்க அசுத்தமானவர்களாகவும் காணப்பட்டனர் என்று இவர்களைக் குறித்துக் கடினமான கண்டனம் தெரிவிப்பதற்கு இயேசு மாத்திரமே தகுதியானவராகக் காணப்பட்டார். இதுபோன்ற ஒரு வகுப்பார், இன்று கிறிஸ்தவ மண்டலத்திலும் காணப்படுகின்றனர்; இவர்கள் வெளித்தோற்றத்தில் மிகவும் ஒழுக்கமானவர்களாகவும், சிறு விஷயங்களையும் நன்கு கவனித்துச் செய்பவர்களாகவும், மிகவும் செம்மையானவர்களாகவும் காணப்படுகின்றனர், எனினும் இவர்கள் கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதில்லை. இவர்கள் தங்களுடைய நீதியினிமித்தம் பெருமைகொண்டவர்களாய் இருந்து, மற்றச் சிலரைக் காட்டிலும் குறைந்தளவு சீரழிந்தவர்களாய் ஒருவேளை இருப்பினும், தாங்கள் உண்மையான பூரணத்திலிருந்து இன்னமும் தொலைத் தூரத்தில் காணப்படுவதினால், தங்களில் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு எதுவும் இல்லை என்பதை உணர்ந்துகொள்ள தவறிவிடுகின்றவர்களாய் இருக்கின்றனர். ஓரளவுக்கு ஒழுக்கம் கொண்டிருந்தும், தாழ்மையில்லாமல் காணப்படும் மனிதனை விடவும், மிகவும் சீர்க்கெட்டுப்போயிருந்த போதிலுங்கூட, மிகவும் நேர்மையுள்ளவனாகவும், மிகவும் தாழ்மையுள்ளவனாகவும் காணப்படும் மனிதனையே, தேவன் மிகுந்த அனுதாபத்துடனும், மிகுந்த இரக்கத்துடனும் கண்ணோக்குவார் என்று இந்த உவமை காட்டுகின்றது.

உவமையில், யூதர்களுடைய வழக்கத்தின்படி, இரண்டு மனுஷர்கள் ஜெபம் பண்ணும்படிக்கு ஆலயத்திற்குச் சென்றார்கள்; இதில் ஒருவன் சுயநீதியுள்ள பரிசேயனாக

இருந்தான்; இவன் ஒழுக்கமுள்ள மனிதனாகவும், அநேக விதத்தில் நல்ல மனிதனாகவும், அதே வேளையில் தன்னுடைய நீதியின் கிரியைகள் மீது மிகுந்த கவனம் கொண்டவனாகவும், தெய்வீகப் பிரமாணங்களைக் கடமைக்காக கைக்கொண்டு வந்தவனாகவும் இருந்தான். மற்றவன் தாழ்ந்த வகுப்பாரைச் சேர்ந்தவனாகவும், ஒதுக்கப்பட்டவனாகவும், அதிகமான பெலவீனங்களையும், குறைவுகளையும் கொண்டவனாகவும், தனது நிலைமையை உணர்ந்தவனாகவும் இருந்தான். பரிசேயன் அங்குப்போய் நின்று, தனக்குள்ளாக ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது; இவனுடைய ஜெபம் கர்த்தரிடம் ஏறிச் செல்லவில்லை போலும்; இவன் தன்குள்ளாக ஜெபம் பண்ணிக்கொண்டதாகவும், இவன் ஜெபம் பண்ணினதை இவனே கேட்கத் தக்கதாகப் பண்ணினதாகவும், ஜெபத்தில் இவன் தனக்கே பாராட்டுத் தெரிவித்ததாகவும், தன்னுடைய சொந்த மனசாட்சியில் மகிழ்ந்தவனாகவும் கூறப்படுவது சரியே. இவன் பண்ணின ஜெபமானது, பிதா விரும்புகின்ற ஒன்றல்ல, ஏனெனில் பிதா, தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்கிறவர்களையே நாடுகின்றார். மேலும் தன்னுடைய சொந்த பெலவீனங்களையும், பூரணமின்மைகளையும், குறைவுகளையும் உணர்ந்துக்கொண்டு, இவைகளை ஒப்புக்கொண்டு, இவைகள் மூடப்படுவதற்கென, தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகளை நாடுவதையும் செய்யாதவன், சரியான விதத்தில், கர்த்தருக்கு முன்பாக வருவது என்பது கூடாத காரியமாக இருக்கின்றது.

## "சுயநீதியுள்ளவனின் ஜெபம்"

"தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று பரிசேயன் கூறினான் (லூக்கா 18:11). இப்படியாக உண்மையாய் ஏறெடுக்கப்படும் ஜெபம் என்பது இருதயத்தினுடைய நன்றியைக் குறிப்பதாக இருக்கின்றது. இதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அனைத்துக் கிறிஸ்தவர்களும், தேவனிடத்திலான தங்களின் உறவின் காரணமாகவும், தங்களுடைய பாவம் மூடப்பட்டதின் காரணமாகவும், தாங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதின் காரணமாகவும், தங்களுடைய இருதயத்தில் நடைபெறும் மறுரூபமாகுதலின் வேலை காரணமாகவும், தாங்கள் தங்கள் சக மனிதர்கள் பெரும்பாலானவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாய் இருப்பதின் காரணமாகவும், கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர். ஆனால் இதனிமித்தம் அவர்கள் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு எதுவும் இல்லை. ஏனெனில், "உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 4:7). ஆகவே இப்படியாக நமக்கும், மற்றவர்களுக்கும் இடையிலான வித்தியாமானது கர்த்தராலும், அவருடைய கிருபையின் கிரியையினாலும் உண்டானது என்றும், இது நம்மால் உண்டாகவில்லை என்றும் உணர்ந்துக்கொள்வது சரியான இருதய நிலையாகும்; மேலும் இப்படியான உணர்ந்துக்கொள்ளுதலைப் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் அனைவரும், இப்படியான விதத்தில் அவர் நம்மை மற்றவர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்தி வைத்திருக்கும் காரணத்தினாலும், அவருடைய கிருபையினால் நாம் இப்படி வித்தியாசப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் காரணத்தினாலும் அவருக்கு நன்றி ஏறெடுக்கலாம்.

உவமையில் இடம்பெறும் பரிசேயனுடைய பிரச்சனை என்னவெனில், அவன் தனக்குள்ளாக ஜெபம் பண்ணினவனாகவும், தன்னையே பாராட்டிக்கொண்டவனாகவும், இந்த வித்தியாசங்கள் அனைத்திற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவதுபோன்று நடித்துக்கொண்டவனாகவும் இருந்ததேயாகும். கர்த்தர் தன்னை வித்தியாசப்படுத்தியுள்ளார் என்பதற்காக இவன் கர்த்தருக்கு நன்றி செலுத்தாமல், மாறாக இவன் இந்த வித்தியாசங்களை, தானே ஏற்படுத்தினதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தியவனாய்க் காணப்பட்டான்; இவன் தன் மாம்சத்தின் சொந்த கிரியைகளிடத்தில் நம்பிக்கைக்கொண்டவனாக இருந்தான்; இத்தகைய காரியம் ஒருபோதும் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை; மேலும் இவன் பரியேசனாக, பாவநிவாரண பலியினால் தரிப்பிக்கப்படும் நீதியைப் புறக்கணிக்கின்றவனாய்க் காணப்பட்டான். இப்படியாகவே, நாமும் ஒருவேளை ஏதாகிலும் விதத்தில் பெருமையடித்துக்கொண்டவர்களாய்

இருந்தோமானால், நம்முடைய நிலைமையும் இப்படியாகவே காணப்படும். இப்படிப்பட்ட ஒரு மனுஷன், இப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை ஏறெடுக்கும்போது இது தேவனிடத்தில் செல்லாது என்றும், இது தன்னைத்தானே போலி புகழ்ச்சிச் செய்வதாக மாத்திரமே இருக்கும் என்றும், இதனால் அவனுக்கு எந்த நன்மையும் இராது என்றும், அறிந்துக்கொள்ளப்பட வேண்டும். நம்மை மற்றவர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்தினவரும், நம்மைத் தம்முடைய வல்லமையினால் காத்துக்கொள்பவரும், கிறிஸ்துவின் நீதி எனும் வஸ்திரத்தினால் நம்மை மூடுகிறவரும், அவருடைய படிப்பினைகளுக்கும், வழிநடத்துதல்களுக்கும் கீழ்ப்படிவதில் நாம் உண்மையாய் இருப்போமானால், நமக்கு வாக்களித்துள்ள கனத்திற்கும், மகிமைக்கும், அழியாமைக்கும் நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டுவருபவருமான தேவன், நமக்குப் போதுமானவராய் இருக்கின்றார் என்று நாம் உணர்ந்துக்கொள்ளும்போது, நாம் சரியான மனநிலையில் இருக்கின்றவர்களாய் இருப்போம்.

கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும், தாங்கள் கிருபையின் சிங்காசனத்திற்கு முன்னதாக, தாங்கள் பாவிகளைப் போலும், விபச்சாரக்காரர் போலும், ஆயக்காரரைப் போலும் அல்லது மற்ற மனுஷர்களைப் போலும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றவர்களாய் இருக்க வேண்டும். இது, "நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துக் கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" என்று கர்த்தரால் கூறப்பட்டவைகளுக்கு இசைவாகவே உள்ளது (யோவான் 15:19). இப்படியாக நாம் உலகத்திடமிருந்து பிரிந்திருக்கும் நிலைக்கான ஆதாரங்களை காண்கையில் நாம் சந்தோஷம் அடையலாம், ஆனால் இவைகளைக் குறித்து நாம் பெருமை பாராட்டிக்கொள்ளக்கூடாது; இன்னுமாக இவைகள் நம்மால், அதாவது நம்முடைய முயற்சியினால் உண்டானது என்று உரிமை பாராட்டிக்கொள்ளக்கூடாது. ஏற்கெனவே சொன்னது போன்று, நாம் கர்த்தருடைய கிருபையினால்தான் இப்படியாகவெல்லாம் வித்தியாசப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றோம்.

பரிசேயன் பெருமையடித்துக்கொள்ளும் விதமாக, தான் வாரத்திற்கு இரண்டு முறை உபவாசம் பண்ணுவதாகவும், எல்லாவற்றிலும் தசம பாகம் கொடுப்பதாகவும் கூறினான். இவன் உபவாசம் பண்ணும்போது, நியாயப்பிரமாணம் கோரும் காரியங்களைக் காட்டிலும் அதிகமானவைகளை இவன் செய்து வந்தான், ஆகையால், இதற்காக இவன் விசேஷமாய்ப் பாராட்டப்படுவான் என்று எதிர்ப்பார்த்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்படியாகக் கர்த்தருடைய கண்ணோட்டத்தில் இருப்பதில்லை; கிரியைகள் ஒருபோதும் நம்மை நீதிமானாக்கிவிட முடியாது. ஒருவேளை நாம் உபவாசித்தாலும், மரிக்குமளவுக்கு உபவாசித்தாலும், இவைகளினால் எந்தப் புண்ணியமும்/தகுதியும் இல்லை; நாம் நம்முடைய பூரணமின்மைகளைச் சரியாக உணர்ந்துக்கொண்டும், இப்பொழுது இயேசுவின்மேல் வைக்கப்படுகிற விசுவாசத்தினால் வழங்கப்படுகிறதும், அன்று யூதர்களுக்கு அவர்களுடைய நிழலான பாவநிவாரணநாளின் பலிகளினால், நிழலாய்த் தரிப்பிக்கப்பட்டதுமான தெய்வீக நீதிமானாக்கப்படுதலைச் சரியாக ஏற்றுக்கொண்டும் காணப்படாத வரையிலும், எந்தக் கிரியைகளுக்கும் மதிப்பிராது. இன்று கர்த்தருடைய ஜனங்கள் உபவாசிப்பதற்கு அநேக காரியங்களைப் பெற்றிருக்கின்றனர். உபவாசம் என்பது சுயத்தை வெறுத்தலாகும்; மேலும் உணவின் விஷயத்தில் சுயத்தை வெறுத்தல் என்பது, தேவனுடைய பார்வையில் மிகவும் மதிக்கத்தக்கதான ஒன்றாய் இராது என்பது நிச்சயமே. கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் ஆவிக்குரியவற்றில் போஷிக்கப்படத்தக்கதாகவும், செழிப்படையத்தக்கதாகவும், பலப்படத்தக்கதாகவும், கட்டுப்படுத்துவதற்குரிய, பட்டினிப் போடுவதற்குரிய, குறைப்பதற்குரிய, அநேக மாம்சத்தின் ஆசைகளைக் கொண்டிருக்கின்றனர்.

## "தசம பாகங்களைக்குறித்துப் பெருமையடித்துக்கொள்ளுதல்"

தசம பாகம் கொடுப்பது என்பது சரியான காரியமாக இருக்கின்றது. தேவனுக்கு மதிப்புக் கொடுக்கத்தக்கதாக, மந்தைகள் மற்றும் வயலின் விளைவுகளில் பத்தில் ஒரு பங்கு, அவருடைய ஊழியத்திற்குக் கொடுக்கும்படியாக தேவன் கட்டளையிட்டார்; மேலும் இந்த ஒரு கட்டளைக்கு/ ஏற்பாட்டிற்குக் கீழ்ப்படியும் விஷயத்தில், கர்த்தரே அனைத்து நன்மைகளையும் அருளுபவர் என்று நினைவுக்கூரப்பட்டால், பெருமையடித்துக்கொள்வதற்கு எதுவும் இராது. இப்படியாக தசம பாகம் கொடுப்பதில் பெருமைக்கும், பெருமை

அடித்துக்கொள்வதற்கும் இடம் ஏது? இப்படியாகப் பெருமையடித்துக்கொள்வது என்பது, இருயத்தில் சுயதிருப்தியான நிலையையும், புத்திரர் வீட்டாரின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் அனைவரிடத்தில் எதிர்பார்க்கப்படும், மேலான அர்ப்பணிப்பைப் பண்ணுவதற்கு ஆயத்தமற்ற நிலைமையையும் காண்பிக்கின்றது; அதாவது இயேசுவின் பின்னடியார்கள் ஆகுவதற்கென்று தங்களிடத்திலுள்ள யாவற்றையும் அர்ப்பணம் பண்ணுவதற்கும், பிற்பாடு ஒவ்வொரு பணத்தையும், ஒவ்வொரு தாலந்தையும், ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தின விதத்தைக் குறித்துக் கணக்கு ஒப்புவிக்கிற உக்கிராணக்காரர்கள் ஆகுவதற்கும் அவசியமான மேலான அர்ப்பணிப்பைப் பண்ணுவதற்கு ஆயத்தமற்ற நிலைமையைச் சுட்டிக்காண்பிக்கின்றது. பரிசுத்தவான்கள் தங்களுடைய சுயத்தை வெறுத்தல் (அ) ஊழியங்கள் குறித்துப் பெருமையடித்துக் கொள்ளத்தக்கதாகக் காணப்படுகின்றார்களா? பரிசுத்தவான்கள் காரியங்களைக் கவனமாய்க் கவனித்து, மிகவும் ஆற்றல் மிக்கவர்கள்கூட, எவ்வளவு சொற்பமானவைகளைத்தான் நிறைவேற்ற முடிகின்றவர்களாய்க் காணப்படுகின்றார்கள் என்று பார்ப்பார்களாக; இப்படியாகப் பார்க்கும்போது, தாங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினவைகளில், எவ்வளவு சொற்பமானவைகளைத்தான் தாங்கள் கர்த்தருக்குச் செய்ய முடிந்தது என்பதை அநேகர் வெட்கத்தோடே ஒப்புக்கொள்வார்கள்.

## "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்"

மாபெரும் பயபக்திக்கொண்டிருப்பதாக, தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்ளாதவர்களுக்கு, ஆயக்காரன் எடுத்துக்காட்டாகக் காணப்படுகின்றான். தாழ்மையான மனதையுடைய ஜனங்களாகிய இவர்கள், தாங்கள் தேவனுடைய பூரணமான நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ப வாழவில்லை என்பதை உணர்ந்தவர்களாகவும் பரிசேயர்கள் தங்களால் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, பிரமாணத்திற்கு ஏற்றபடி வாழமுடியும் என்று கொடுக்கபட்ட உறுதிமொழிகளினிமித்தம் சோர்ந்துப் போனவர்களாகவும் காணப்படுகின்றனர்; இந்த மிகவும் தாழ்மையான மனங்கொண்ட ஜனங்கள் பெரும்பாலும் சோர்ந்த மனப்பான்மையுடையவர்களாகவே காணப்படுகின்றனர்; மேலும் இதனிமித்தமாக இவர்கள் ஜாக்கிரதையற்றவர்களாகவும், பாவ வழியில் போகின்றவர்களாகவும் தவறிப்போய்விட்டனர். உவமையில் ஆயக்காரன் தூர நிற்கின்றான்; அவன் ஆலயத்தின் பரிசுத்த பிரகாரங்களின் அருகாமையில் நெருங்கி வரவில்லை; அவன் கொஞ்சம் தொலைவிலேயே நின்றுகொண்டான். அவன் தேவனுடைய பூரணத்திற்கும், தன்னுடைய சொந்த அபாத்திரமான பூரணமற்ற மற்றும் பாவமுள்ள நிலைக்கும் இடையிலான மாபெரும் வித்தியாசத்தை உணர்ந்தவனாய் இருந்தான். அவன் தன் மார்பில், தன் இருதயத்தில் அடித்துக்கொண்டு, அதாவது அவன் மரணமாகிய தெய்வீக தீர்ப்பை ஏற்றுக்கொண்டது போலும், தான் மரணத்திற்குப் பாத்திரவான் போலும், எனினும் இரக்கம் கேட்பது போலும் மார்பில் அடித்துக்கொண்டு, தேவனே என்மேல் கிருபையாய் இரும், நான் ஒரு பாவி! என்று கூறினான். வெளிப்புறத்தில் அவன் மனித கண்ணோட்டத்தின்படி, ஒழுக்கமற்றவனாகவோ (அ) நல்ல மனுஷனாகவோ இல்லாமல் இருப்பினும், அவனுடைய உள்தோற்றமோ, தேவனுடைய கண்ணோட்டத்தில், இருவரிலும் சிறந்ததாக இருந்தது. அவன் தன் மீது நம்பிக்கை வைக்கவில்லை: ஆகவே தாழ்மையுடன் கூடிய விசுவாசம் எனும் ஒரே நிபந்தனையின் கீழ் அருளப்படும், தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கான சிறந்த நிலைமையில் காணப்பட்டான். இவர்கள் இரண்டு பேரில் வெளிப்புறத்தில் ஒழுக்கம் குறைந்தவனாகவும், உட்புறத்தில் பிதாவினால் மிகவும் அங்கீகரிக்கத்தக்கதான நிலைமையில் காணப்பட்டவனே, பரியேசனைப் பார்க்கலும் நீதிமானாக்கப்பட்டான் என்று நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார். இதன் அடிப்படையில் பாடம் கொடுக்கத்தக்கதாக, லூக்கா 18:14-ஆம் வசனத்தினுடைய, பின்பாக வார்த்தைகளைக் கூறினார்.

**"தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்,**
**தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்"**

தாழ்மை இல்லையெனில், நம்முடைய நிலைமையும், நம்முடைய தகுதிகளும் என்னவாக இருப்பினும், நம்மால் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்று தாழ்மையினுடைய பெரும் அவசியத்தைக் கர்த்தர் வேதவாக்கியங்கள் எங்கும், அடிக்கடி நம்முடைய கவனத்திற்குக்கொண்டு வருகின்றார். இந்த உவமையில் தாழ்மை எனும் பண்பானது ஆயக்காரனிலும்; இப்பண்பு இல்லாத காரியம், பரிசேயனிடத்திலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாழ்மை மனங்கொண்டுள்ளவர்களால் மாத்திரமே, தாங்கள் பாவி

என்றும், தாங்கள் தெய்வீகத் தயவிற்கும், அன்பிற்கும் அபாத்திரர்கள் என்றும், கிறிஸ்துவுக்குள் நமக்கு அருளப்பட்டுள்ள நீதிமானாக்கப்படுதலும், மன்னிப்பும் அவசியம் என்றும், ஒப்புக்கொள்வதற்கு ஆயத்தமாய்க் காணப்படுவார்கள். இது மாத்திரமல்லாமல் இப்படியாக தாழ்மை கொண்டிருந்து, கர்த்தரிடத்தில் வந்து, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், ஒருவேளை தாழ்மை இல்லாமல் போய்விட்டால், கிறிஸ்துவுக்குள்ளாய் இருக்கும் நமக்கான கிருபையான தகுதியும், பறிமுதல் செய்யப்படும். பெருமை என்பது, சுயதிருப்திக்கொள்ளுதலையும், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறின நமது மகிமையான தலை நமக்குப் போதுமானவராய் இருக்கின்றார் என்பதைப் பற்றின புறக்கணித்தலையும் குறிக்கிறதாய் இருக்கும் (யோவான் 15:5).

அந்தோ, தேவனைப்பற்றின கொஞ்சம் அறிவையும், அவருடைய இரட்சிப்பின் திட்டம் பற்றின அறிவையும் உடையவர்கள் அநேகர், தாழ்மை இல்லாததினாலும், தங்களுடைய சொந்த தவறுகளைக் காண்பதற்கும், அவைகளை ஒத்துக்கொள்வதற்கும், தெய்வீகக் கிருபை மற்றும் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஆயத்தம் இல்லாமையினாலும், சரியானப் பாதையில் தொடர்வதற்குத் தடைப்பண்ணப்படுகின்றனர். விசுவாசம் வைத்து, தங்களுடைய பழைய பாவங்களிலிருந்து கழுவப்பட்ட பிற்பாடு, அநேகர் தாழ்மை இல்லாததினால், இறுமாப்பிற்கும், பெருமைக்கும் நேராய் வழிநடத்தப்பட்டுள்ளனர்; இவைகள் எப்படியாகிலும், புதிய சிருஷ்டியாகிய நமக்குப் பாதகத்தையே உண்டு பண்ணுகின்றது; இவைகள் நிச்சயமாய், "தங்களைத் தாழ்த்திக் கொள்பவர்களை மாத்திரமே உயர்த்தக்கூடிய இராஜ்யத்தில்," பங்கடைவதற்கான வாய்ப்பினை இழக்கச் செய்து விடும்.

---

**R4658**

# "ஒட்டகமும், ஊசியின் காதும்"
## மத்தேயு 19:13-26

"இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றார்."

(வசனம் 14).

எருசலேமுக்குப் போகிற வழியில், தங்கள் பிள்ளைகள் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்று விரும்பின தாய்மார்களினால் ஆண்டவர் எதிர்க்கொள்ளப்பட்டார். அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஆண்டவரின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாகவும், அவருடைய நேரத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்தவர்களாகவும், வந்த தாய்மார்களைத் தடுத்து, அவர்களைக் கடிந்துக்கொண்டார்கள். இதை இயேசு கேட்டபோது, அவர்களை அழைத்து, "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று கூறி, சிறுபிள்ளைகளின் மேல் தம் கரங்களை ஆசீர்வதிக்கும்படிக்கு வைத்தார் (மத்தேயு 19:14).

இதிலிருந்து பரலோக இராஜ்யம், சிறுபிள்ளைகளைக்கொண்டிருக்கப் பெற்றிருக்குமென நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. இந்தத் தப்பறையான கருத்துப் பரவிப்போய், இப்படியான கருத்து மனதில் பதியப்பட்டுக் காணப்படுகின்றது. எந்தச் சிறு பிள்ளையினாலும், பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசித்திட முடியாது. விசுவாசத்தின் கேட்கும் செவிகளை உடையவர்கள் மாத்திரமே இராஜ்யத்திற்கும், அதன் மகிமைக்கும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். நமது கர்த்தர் சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தக் காரியமானது, அவருடைய இரக்கத்தையும், அன்பையும் மற்றும் சிறுபிள்ளை பருவத்தின் தூய்மை மற்றும் கபடமற்ற தன்மையை அவர் விரும்புவதையும் குறிக்க மாத்திரமே செய்கின்றது. தேவனுடைய இராஜ்யத்தில் காணப்படுபவர்கள் சிறுபிள்ளைகள் போன்று, எளிமையான இருதயங்கொண்டவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும், தங்களுடைய பரமபிதாவை நம்புகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இப்படியாக இருப்பவர்களே இராஜ்யத்தின் சுதந்தரர்களாக இருப்பார்கள்.

இன்னொரு சுவிசேஷத்தின் பதிவானது, இயேசுவின் சீஷர்களாய் இருப்பவர்கள், சிறுபிள்ளைகளாக ஆக வேண்டும், அதாவது வஞ்சகமற்ற விஷயத்திலும், விசுவாசம்/நம்பிக்கை வைக்கும் விஷயத்திலும் சிறுபிள்ளைகள் போன்று காணப்பட வேண்டும் என்ற விதத்தில் இயேசுவின் வார்த்தைகள் காணப்படுகின்றது. இராஜ்யத்தின் சுதந்தரர்களாய் இருக்கப் போகிறவர்கள், "ஜெயங்கொண்டவர்களாக" இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களது சிலுவையை எடுத்துக்கொண்டு, கர்த்தர் எங்கெல்லாம் வழிநடத்துகின்றாரோ, அங்கெல்லாம் அவரைப் பின்பற்றுபவர்களாய் இருப்பார்கள். நமது கர்த்தர் இயேசுவினால் அவர் ஒன்பது வயது சிறுவனாக இருந்த போது, அவருடைய சிலுவையை எடுத்துச்செல்ல முடியாமல் இருந்தது போன்று, சிறு பிள்ளைகளாலும், அவர்களுக்கான பகுத்தறிவின் வயதை அடைவது வரையிலும், அவர்களால் ஆவிக்குரிய விஷயத்தில் கிறிஸ்துவின் பின்னடியார்களாகிவிட முடியாது. இந்தப் பகுத்தறிவின் வயதை ஒவ்வொரு பிள்ளைகளும் வெவ்வேறு வயதில் அடைகின்றனர். பன்னிரண்டு வயது பிள்ளைகள் விசுவாசத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும், கர்த்தருடைய சித்தத்திற்கும் அர்ப்பணம் பண்ணுவதற்குமான சிறந்த சாட்சியங்களை கொடுத்துள்ளதையும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதற்கான சாட்சியங்களை/ஆதாரங்களைக் கொடுத்துள்ளதையும் நாம் அறிந்திருக்கின்றோம். மற்றப் பிள்ளைகள் அல்ல, இந்தப் பிள்ளைகளே, கிறிஸ்துவினுடைய ஆயிர வருட இராஜ்யத்தில் அவரோடு கூடப் பங்கடைவதற்கான நம்பிக்கைப் பெற்றிருப்பார்கள்.

## "ஐசுவரியமுள்ள வாலிபனுக்கான பரீட்சை"

நமது கர்த்தர் பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கையில், அவரிடம் ஒருவன் வந்து, "நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" என்று கேட்டான். இந்த வாலிபன் சரியான கருத்துக்கொண்டிருந்தான், அதாவது நித்திய ஜீவன் என்பதே மனித குடும்பத்திற்கு முன்பாகக் காணப்படும் அனைத்து நம்பிக்கைகளிலுமே, மாபெரும் நம்பிக்கை என்றும், மாபெரும் தேவை என்றுமுள்ள சரியான கருத்தைக்கொண்டிருந்தான். இக்கேள்வி எழும்பினதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம், காரணம் இது அனைவரும் அறிய ஆவல் கொண்டுள்ள பதிலை வெளிக்கொண்டு வந்தது. நித்திய ஜீவனுக்கான பாதைக்கு வழிநடத்துவதைத் தவிர, மற்றப்படி, தற்கால ஜீவியத்திற்கு என்னத்தான் முக்கியத்துவம் காணப்படுகின்றது? ஒருவேளை மரணத்தில் நாம் என்றென்றுமாய் முற்றிலும் அழிக்கப்பட்டு விடுவோம் என்பதாக நமக்கு உறுதிப்பண்ணப்பட்டால், நாம் எவ்வளவு சோர்ந்துப் போயிருப்போம்! இன்னுமாக இந்தத் தற்கால ஜீவியம் எவ்வளவு அற்பமாய்த் தோன்றியிருக்கும்! நித்திய ஜீவனுக்கான நம்முடைய இருதயங்களின் ஏக்கங்களுக்கு, இந்தத் தற்கால ஜீவியம் உதவாததாகத் தோன்றியிருக்கும்!

அந்த வாலிபன் தன்னைத்தான் ஒப்புக்கொடுக்கத்தக்கதாக, நமது கர்த்தர் கேள்வியைத் தவிர்த்தார். "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? நீ என்னை நல்ல போதகர் என்று ஒப்புக்கொள்வது ஏன்? நான் ஒன்றில் உரிமைப்பாராட்டுவது போன்று மேசியாவாக இருக்க வேண்டும், இல்லையேல் நான் ஏமாற்றம் பண்ணுகிறவராகவும், நல்லவைகளுக்குத் தூரமானவராகவும் இருக்கவேண்டும். நீ என்னுடைய மேசியாத்துவத்தை ஏற்றுக்கொள்கின்றாயா? ஒருவேளை இல்லையெனில், எப்படி என்னை நல்லவன் என்று சொல்கின்றாய் அல்லது சகல நன்மைகளுக்கும் ஊற்றாய் இருக்கும் தேவனிடத்திலிருந்து வராத எதையும், நன்மை என்று எப்படி நீ ஒப்புக்கொள்கின்றாய்? நீ நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினால், கற்பனைகளைக் கைக்கொள் என்பதே உன் கேள்விக்கு நான் பதிலாகக் கூறுகின்றேன்" என்ற விதத்தில் இயேசு பேசினார். இப்படி இயேசு கூற, வாலிபன் எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: "கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார்" (வசனம் 18, 19).

இந்த வாலிபன் ஒரு முன்மாதிரியான வாலிபனாக இருந்தான் மற்றும் இயேசு இவனில் அன்புகூர்ந்தார். இவன் தன்னால் முடிந்த மட்டும், மற்றும் தான் அறிந்திருந்தமட்டும், யூதர்களுக்கான நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு வந்தான். தன்னை நேசிப்பதைப் போலவே, தன்னுடைய அயலானை, தான் நேசிப்பதாக இவன் எண்ணினான்; ஆனால் இப்படியாக இவன் எண்ணினது தவறு என்பதை 21-ஆம்

வசனத்தின் ஆலோசனையைக் கூறி இயேசு இவனுக்கு வெளிப்படுத்தினார். "அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்."

ஆ! நமது கர்த்தர் முக்கியமான இடத்தில், தம்முடைய விரலை வைப்பதற்கு அறிந்தவராக இருந்தார் உலகத்திலேயே தெய்வீக ஏற்பாடுகளுக்கு ஒருவன் இசைவாக வாழ நாடுகின்றான் என்றால், அது தானாகத்தான் இருக்கும் என்ற பெருமிதத்துடன் அந்த வாலிபன், கர்த்தரிடத்தில் சென்றான். "நீ அபூர்வமானவனாக இருக்கின்றாய்" என்று ஆண்டவர் ஒருவேளை சொல்லுவார் என்று எண்ணி, அவன் ஆண்டவருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவரிடத்தில் வந்தவனாய் இருந்தான். "நீ உன் அயலானை அன்புகூர்ந்தாயானால், நீ சௌகரியமாய் இருக்க விரும்பிட்டது போன்று, அந்த உன் அயலானையும் சௌகரியமாய் இருக்கத்தக்கதாக, நீ பிரயாசமாகிலும் எடுத்திருப்பாய்" என்று கர்த்தர் சொல்லவில்லை. இவன் ஐசுவரியவானாய் இருப்பதில் திருப்திக்கொண்டிருக்க, இவன் தன்னைத்தான் நேசிப்பது போன்று, தான் நேசிப்பதாக எண்ணிக் கொண்டிருந்த அயலானே, மிகவும் ஏழையாகவும், கவலைக்கிடமான நிலைமையிலும் காணப்பட்டான். ஆகவே ஆண்டவர் இவனுடைய பிரச்சனை என்ன என்பதை இவனுக்கு வெளிப்படுத்தின போது, இவன் அதை உடனடியாகக் கிரகித்துக் கொண்டான். இவன் இப்போது, முன்பொருபோதும் இல்லாத அளவுக்குத் தன்னுடைய நிலைமையைக் கண்டான். இது இவனுக்கு ஒரு புதிய பரீட்சையாக இருந்தது. இப்படியாகவே அனைவருக்கும் இருக்கின்றது. முன்பொரு பாடத்தில் நாம் இராஜ்யம் ஒரு மாபெரும் பரிசாகவும், மாபெரும் மதிப்புள்ள . . . ஒரு முத்தாகவும், ஒரு பொக்கிஷமாகவும் இருக்கின்றது என்றும், இதனை அடைவதற்கு, நம்மிடத்தில் உள்ள அனைத்தையும் நாம் விலையாகக் கொடுக்க வேண்டும் என்றும் பார்த்தோம்; மேலும் இந்தப் பாடமும் கூட, இதே கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

மிகவும் நல்ல ஓர் ஜீவியத்தை ஜீவித்த இந்த வாலிபன் பரலோகத்தை அடைய தவறிப்போய், நித்தியமான சித்திரவதைக்குள்ளாகப் போடப்பட்டான், காரணம் இவன் கர்த்தருடைய சீஷனாகுவதற்கெனத் தன்னில் உள்ள யாவற்றையும் பலிச்செலுத்தவில்லை என்று சிலர் எண்ணிக்கொண்டது போன்று, நாமும் எண்ணி, தவறு செய்யாமல் இருப்போமாக. நித்தியமான சித்திரவதை இல்லாமலேயே, இவன் இராஜ்யத்தை இழந்ததே, எதிர்க்காலத்தில் இவனுக்கு போதுமான தண்டனையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மனித குடும்பத்தின் அங்கத்தினர், ஆயிர வருட இராஜ்யத்தின் ஆசீர்வாதமான நிலைமையின் கீழ், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே உரிய இராஜ்யத்தின் கனத்தை அடைய பாத்திரமாய் இல்லை என்றாலும், மனித பரிபூரண தளத்தில் நித்திய ஜீவனை அடைவார்கள்.

மாபெரும் பரிசை அடையத்தக்கதாக, தங்களுடைய ஜீவியங்களையும், தங்களுடைய அனைத்தையும் மகிழ்ச்சியுடன் பலிச்செலுத்துபவர்களாக இருப்பவர்களே தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் ஆவர்.

## "ஊசியின் காது வழியாய் நுழைதல்"

இவ்விஷயத்தைக் குறித்து நமது கர்த்தர் சீஷர்களிடம் கருத்துத் தெரிவித்து ஐசுவரியவான்கள், இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு எடுக்கும் பிரயாசம் தொடர்புடைய விஷயத்தில் மிகுந்த சிரமம் உள்ளது என்று கூறினார். கண்டிக்கும் விதத்தில் அல்லாமல், மாறாக அனுதாபத்துடனே, "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 19:24). இது சீஷர்களை வெகுவாய் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. ஏனெனில் சீஷர்களின் நாட்களில் மதம் சம்பந்தப்பட்ட பெரும்பான்மையானவர்களாகிய பரிசேயர்களும், வேதபாரகர்களும் ஐசுவரியமுள்ள வகுப்பாரைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதைச் சீஷர்கள் அறிந்திருந்தார்கள். "அவருடைய சீஷர்கள் அதைக்கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு: அப்படியானால், யார் ரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள். இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனாலே எல்லாம் கூடும் என்றார்" (மத்தேயு 19:25, 26). தேவன் ஒருவேளை ஐசுவரியவான்களைப் புறக்கணித்தார் என்றால், தேவனால்

இராஜ்யத்திற்கு என்று எவரையும் கண்டுபிடிக்க முடியாது என்று மனிதர்கள் சொல்லுபவர்களாய் இருப்பார்கள்.

சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமெனில், எந்த ஐசுவரியமுள்ள மனுஷனும் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஒருவன் அனைத்தையும் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். இல்லையேல், அவன் இராஜ்யத்தில் இடம் பெறுவதிலிருந்து தள்ளப்படுவான். இராஜ்யத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகள் ஐசுவரியவான்களுக்கும், ஏழைகளுக்கும் ஒரே போல்தான் உள்ளது. மாபெரும் விலையுள்ள முத்தை ஒருவன் அடைய வேண்டுமெனில், இதற்காக அவன் தன்னில் உள்ள யாவற்றையும் விற்க வேண்டியவனாய் இருக்கின்றான். ஐசுவரியவான் தன்னில் உள்ள யாவற்றையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியவனாய் இருக்கின்றான்; பின்னர் அவன் தன்னுடைய ஐசுவரியங்கள் மீது உக்கிராணக்காரனாய் இருந்து, தனக்கான உக்கிராணத்துவத்தின் கணக்கை ஒப்புவிக்க வேண்டியவனாய் இருக்கின்றான்.

சூரியன் அஸ்தமித்தப் பிற்பாடு, பட்டணத்திற்குள்ளாகப் போவதற்கான பெரிய வாயிற்கதவில் இருக்கும், சிறிய வாயில் (அ) ஊசியின் காது வழியாய்ப் பாரங்கள் கீழே இறக்கி வைக்கப்பட்டு, ஒட்டகங்கள் செல்வதைக் கீழே இடம்பெறும் கவிதை விளக்குகின்றது. இப்படியாகவே ஐசுவரியவான்கள், ஐசுவரியம் எனும் பாரங்களை இறக்கி வைத்துவிட்டு, தரித்திரர் ஆகும்போது, இராஜ்யத்திற்குள் செல்லலாம்.

## "ஊசியின் காது வழியாய்..."

"ஊயரமாம் என்னுடைய ஒட்டகம், சரக்குகள், சுமைகள், ஒட்டகங்களின் மேலே,
ஊசியின் காதெனச் சிறியதாய் வாயிற்கதவு உள்ளதே.

உள்ளிருக்கும் பட்டணம் வெகு அழகாமே
நானும் என் ஒட்டகமும் பிரவேசிக்க வேண்டுமே.

நீ உந்தன் சுமையை இறக்கிவிடு, நீ உந்தன்
பெருமை எனும் மூட்டையை இறக்கிவிடு என்று கூக்குரலிட்டான் வாயிற்காவலன்.

அதைச்செய்திட்டேன் நான், ஆனாலும் சுமை இன்னும் பெரிதாய் இருந்ததே
இடுக்கமான வழிக்கு, எந்தன் சுமை மிகவும் அகலமாய் இருந்ததே.

இன்னும் குறைத்திட, சுயநலம் எனும் மூட்டையை
வீசிடு இப்போது, என்றான் வாயிற்காவலன்.

மிகுந்த கலக்கத்துடன் கீழ்ப்படிந்தேனே நான்,
எனினும் நானும், எந்தன் ஒட்டகமும் உள்ளே செல்ல இயலவில்லையே.

ஆ! உந்தன் சுமைகளில் பொன் கொஞ்சம்
இருக்கின்றதே என்றான் வாயிற்காவலன்.

கொஞ்சமான இதை மாத்திரமே நான் கொண்டிருந்தேனே
எனினும் வீசிடு வெளியே என்றான் வாயிற்காவலன்.

இதோ உயரமான எந்தன் ஒட்டகம் உயரம் குறைந்தே
வாயில் கதவின் அளவுக்குக் குறைந்ததே,

எந்தன் அனைத்து ஐசுவரியங்களும், பெரிய ஆஸ்தியும்
குறுகலான வாயிற்கதவு வழியே நுழைந்ததே எளிமையாக!"

**R5473**

# "திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள்"

## மத்தேயு 20:1-16

"அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி,
நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்."
- மத்தேயு 5:45

இந்த உவமையின் அனைத்து அம்சங்களும் நிறைவேறியுள்ளது என்று காண்பிக்கத்தக்கதாக, இந்த உவமைக்கு அர்த்தம் கொடுப்பதற்குச் சிரமமாய் உள்ளது. மாபெரும் போதகர் இதை இராஜ்யத்தின் உவமையாகக் கொடுத்துள்ளார்; ஆகையால் இது இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய சபையின் அனுபவங்களுக்குப் பொருந்தக்கூடியது என்பதை நாம் அறிவோம். ஒருவேளை இந்த உவமையை நாம் இந்த யுகத்தினுடைய பல்வேறு காலக்கட்டங்களுக்குப் பொருத்துவோமானால் நமக்குச் சிக்கல் ஏற்படும்; ஏனெனில் யுகத்தின் ஆரம்பக் காலக்கட்டத்தில் அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், மற்றவர்களும், யுகம் முழுவதிலும் வாழவும் இல்லை மற்றும் வேலை புரியவும் இல்லை. இன்னுமாக இப்படியாகப் பொருத்திப் பார்க்கப்படும்போது, யுகத்தின் ஆரம்பத்தில் காணப்பட்டவர்களுக்கு மாத்திரமே பலன்/கூலி தொடர்புடைய விஷயத்தில் திட்டவட்டமான வாக்குத்தத்தம் அருளப்பட்டிருக்கின்றது என்றும், மற்ற அனைவருக்கும், நியாயமாய்க் கூலி வழங்கப்படும் என்ற நிச்சயம் மாத்திரமே அருளப்பட்டிருக்கின்றது என்றுமுள்ள சர்ச்சையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த உவமைக்கு அர்த்தம் வழங்கும் விஷயத்தில், முந்தி வந்து, கடைசியில் கூலி பெற்றுக்கொள்பவர்களாக இருப்பவர்கள் முறுமுறுப்பதை, எவ்வாறு பொருத்திப்பார்க்க வேண்டும் என்பதிலும் மற்றொரு சிக்கல் காணப்படுகின்றது. சுவிசேஷ யுகத்தில் முதலாவதாக அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், மற்றவர்களும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினுடைய காலப்பகுதியில் வாழ்ந்துக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னதாக, தங்களின் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைவார்கள் என்று மற்ற வேதவாக்கியங்கள் நமக்குச் சுட்டிக்காண்பிக்கின்றன. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்றும், பின்பு உயிரோடு வாழும் நாம் மறுரூபமாவோம் என்றும் பரிசுத்தவானாகிய பவுல் தெரிவித்துள்ளார். இன்னுமாக ஆதி சபையின் அப்போஸ்தலர்களும், மற்றவர்களும், தங்களுக்கு அருளப்படும் பலனைக் குறித்து முறுமுறுப்பார்கள் என்பது நினைத்துப்பார்க்கவே முடியாத ஒன்றாகவும் இருக்கின்றது.

இந்த அனைத்துச் சிக்கல்களையும், இந்த உவமையை, சுவிசேஷ யுகத்தினுடைய ஒட்டுமொத்த சபையினுடைய அனுபங்களோடு பொருத்திப் பார்க்க நாம் முற்படும்போது, நினைவில் கொள்ளவேண்டும்.

ஒருவேளை இந்த உவமையைத் தேவனுடைய ஜனங்களின் தனிப்பட்ட அனுபவங்களுடன் நாம் பொருத்திப்பார்க்க முற்பட்டாலுங்கூட, நமக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றது. இப்படியாக ஒருவேளை நாம் பொருத்திப்பார்த்தால், வாழ்க்கையின் ஆரம்ப வயதிலேயே கிறிஸ்தவ ஜீவியத்தை ஆரம்பித்து, வாழ்க்கையின் முடிவு தருணமாகிய சாயங்கால வேளை வரை கர்த்தருக்கான ஊழியத்தில், உண்மையுள்ளவர்களாக இருப்பவர்களே, முதலாவதாக/முந்தி அழைக்கப்பட்டு, கூலியைக் குறித்து வாக்களிக்கப்பட்டார்கள் என்று நாம் கூற வேண்டியிருக்கும். இன்னுமாக கிறிஸ்தவ ஜீவியத்திற்குள்ளாக வாழ்நாட்களின் பிந்தைய நாட்களில் வந்து, தங்களுடைய கொஞ்சமான நேரத்தினாலும், பலத்தினாலும், காலங்களினாலும் கர்த்தருடைய நோக்கங்களுக்காக வேலை புரிபவர்கள், பிந்தி அழைப்பைக் கேட்டவர்களாய், அதாவது பதினோராம் மணி வேளையில் அழைப்பைக் கேட்டவர்களாய் இருக்கின்றார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கும். கர்த்தருடைய வேலையில் செலவிட்ட நேரம் பொருட்படுத்தப்படாமல், இவர்கள் அனைவருக்கும் ஒரே கூலிக் கொடுக்கப்படும் என்று நாம் அர்த்தம் கூறினாலும், ஆரம்பத்திலேயே அழைக்கப்பட்டவர்கள் முறுமுறுத்தார்கள், குறைக்கூறினார்கள், அதிருப்தியடைந்தார்கள் என்ற விஷயத்தில் விளக்கம் கொடுப்பதில் இன்னமும் சிரமமே உள்ளது.

கர்த்தருடைய சித்தத்திற்கு எதிராகவும், அவர் தம்முடைய ஜனங்களுக்குக்கொண்டிருக்கும் அவருடைய நீதியான மற்றும் அன்புடன் கூடிய ஏற்பாடுகளுக்கு எதிராகவும் முறுமுறுப்பவர்கள், திரைக்கு அப்பாலுள்ள பலனாகிய இராஜ்யத்தை ஒருபோதும் அடையமாட்டார்கள் என்பதில் நமக்கு உறுதியே. "நல்லது" என்று ஆண்டவரிடம் பாராட்டுதலையும், உயிர்த்தெழுதலின் மாற்றத்தையும் அடைகிற எவரும், முறுமுறுக்கும் விஷயத்தில் தொலைவில்தான் இருப்பார்கள் என்பதிலும் நமக்கு நிச்சயமே. இவர்கள் ஒவ்வொரு சிறு ஊழியங்களிலும், பலிச்செலுத்துவதிலும் மகிழ்ந்து, களிகூருகின்றவர்களாய் இருப்பார்கள். இராஜ்யத்தின் வகுப்பாருக்கான பலனைக் குறித்துப் பேசும் மற்ற வேதவாக்கியங்களின் போதனைகளுக்கு இசைவாக, இந்த உவமையை நாம் எவ்வாறு பொருத்திப் பார்க்க வேண்டும்? ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது; அதென்னவெனில் இந்த உவமையை, நாம் இராஜ்ய வகுப்பாருடைய தற்காலு ஜீவியத்தின் அனுபவங்களுடன் முழுமையாய்ப் பொருத்த வேண்டும், அதிலும் விசேஷமாக இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுடைய தற்கால ஜீவியத்தின் அனுபவங்களுடன் பொருத்திப்பார்க்க வேண்டும்.

## "யூதர்களுக்கும் கொஞ்சம் பொருந்தும்"

1600 வருடங்களுக்கும் மேலாக யூதர்கள் மேசியாவினுடைய முதலாம் வருகைக்காகவும், அவருடைய வருகையின்போது வரும் ஆசிர்வாதமான வாய்ப்புகளுக்காகவும் காத்திருந்தார்கள். இயேசு தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்தபோது, "பரலோக இராஜ்யம் சமீபித்துள்ளது" என்று பிரசங்கம் பண்ணி, அதில் பிரவேசிப்பதற்கான சிலாக்கியத்தை யூதர்களுக்குக் கொடுத்தார். அந்தச் சிலாக்கியமே "ஒரு பணம்" அல்லது தங்களுடைய ஜீவியம் முழுவதும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கான, அதாவது அவர்களுடைய உண்மையுள்ள பிரயாசத்திற்கான கூலியாக இருந்தது. இராஜ்யத்திற்கான வாய்ப்புப் பிரகடனப்படுத்தப்பட்ட போது, சில ஆயக்காரர்களும், பாவிகளும் அதனிடத்திற்கு ஈர்க்கப்பட்டார்கள்; அதாவது தேவனுக்கான ஊழியத்தையும், திராட்சத்தோட்டத்தின் வேலையையும் முன்பு புறக்கணித்திருந்த சிலர், அதனிடத்திற்கு ஈர்க்கப்பட்டனர். இந்தப் புதிய வேலையாட்கள் கர்த்தர் இயேசுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய சீஷர்கள் ஆகுவதற்கான வாய்ப்பினை வழங்கப் பெற்றார்கள்.

சீஷத்துவத்திற்கான வாய்ப்பே அந்த ஒரு பணம் (அ) கூலி ஆகும். தேவனாகிய கர்த்தருக்குத் தங்களுடைய ஜீவியங்கள் முழுவதும் உண்மையாய் இருந்திட்ட பரிசேயர்களும், வேதபாரகர்களும், பாவிகள் மற்றும் ஆயக்காரர்களைக் காட்டிலும் தங்களுக்குச் சில முன்னுரிமை (அ) முக்கியத்தும் கொடுக்கப்பட வேண்டுமென்று எண்ணினார்கள், மற்றும் இராஜ்யத்திற்கான முதல்தரமான வாய்ப்புகளைத் தங்களுக்கு அளிக்காத எந்த ஏற்பாடுகளும் நியாயமற்றது என்று முறுமுறுத்தார்கள். ஒருவேளை பாவிகளும், ஆயக்காரர்களும் கூட மேசியாவின் சீஷராகுவதற்குரிய ஆசீர்வாதமான சிலாக்கியத்தை அடைவார்களானால், நிச்சயமாய் இதனை காட்டிலும் மேலான/உயர்வான காரியம் தங்களுக்கு வரும் என்று பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்கள் எண்ணினார்கள். இயேசு பாவிகளையும், ஆயக்காரர்களையும் ஏற்றுக்கொண்டு, அவர்களோடு புசித்ததைக் குறித்து இவர்கள் முறுமுறுத்தார்கள்.

இது தொடர்புடைய விஷயத்தில் பரிசேயர்களுக்கு விசேஷித்த கடிந்துக்கொள்ளுதலாக விளங்கும்படிக்கு, ஆண்டவருடைய உவமைகளில் ஒன்று காணப்பட்டது. கெட்ட குமாரன் தங்களுடைய சிலாக்கியங்களுக்கு ஏற்ப வாழாமல் காணப்பட்ட ஒரு யூத வகுப்பாருக்கு அடையாளமாய் இருந்தான், ஆனால் மூத்த குமாரனோ பிதாவின் வேலையில் காணப்படுவதற்குத் தொடர்ந்து முயன்று கொண்டிருந்த ஒரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். இந்தக் கெட்ட குமாரன் வகுப்பாரில் சிலர், இயேசு மற்றும் அவருடைய சீஷர்களின் உதடுகளிலிருந்து தேவனுடைய அன்பு பற்றின செய்தியைக் கேட்டு, பிதாவின் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது, அவர்கள் கிருபையாய்/இரக்கத்துடன் நடத்தப்பட்டு, (வழித்தப்பிப் போகாமலும், உண்மையாய் ஊழியம் புரிந்தவர்களுமாகவும் காணப்பட்ட மூத்தக்குமாரன் வகுப்பாருக்குரிய அதே) புத்திரத்துவத்தின் சிலாக்கியம் வழங்கப்பட்டபோது, மூத்த குமாரன் வகுப்பார் எரிச்சலடைந்தார்கள். இவர்கள் முறுமுறுத்து, விருந்தில் பங்குக்கொள்ள மறுத்தார்கள். இவ்விதமாய் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் சிலர் முந்திக் காணப்பட்டாலும், ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் பிந்தினவர்களாய்க் காணப்பட்டார்கள், மேலும்

மற்றவர்களாகிய பிந்தினவர்கள் சிறந்த விதத்திலும், விரைவாகவும் தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினைக் கண்டடைந்தார்கள்.

## "கிறிஸ்தவர்களுக்குக்கூடப் பொருந்தும்"

தேவன் அருளவிருக்கும் எதுவும் அன்பளிப்பு என்ற உண்மையை நாம் உணர்ந்துக்கொள்ள வேண்டும் என்பதே இந்த உவமையினுடைய பொதுவான படிப்பினையாக இருக்கின்றது. கொள்கைக்கும், நீதிக்குமான அன்புடன் கூடிய நேர்மையுடன் நாம் அவருடைய ஊழியத்தில் ஈடுப்பட வேண்டும். ஒருவேளை நாம் பல வருடங்களாக ஊழியம் புரிந்திருந்தோமானால், ஊழியம் புரிவதற்கான அந்தச் சிலாக்கியம் மதிக்கப்பட வேண்டும்; மற்றும் கர்த்தருடைய நோக்கங்கள் மீதான நமது அக்கறையானது நம்மை மகிழ்விக்க வேண்டும். இப்படியாக ஊழியத்திற்கான சிலாக்கியத்தினுடைய உணர்ந்துக்கொள்ளுதலின் கண்ணோட்டத்தின்படி நாம் பார்க்கும்போது, நாம் கர்த்தருடைய வேலைகள் நடந்தேறுவதைக் காண்பதில் மகிழ்கிறவர்களாகவும், மற்றவர்களும் ஊழியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கையில் மகிழ்கிறவர்களாகவும், நாம் எதிர்ப்பார்த்து நம்பியிருக்கும் அதே பலனை, மற்றவர்களும் அடைவதைப்பார்ப்பதில் மகிழ்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். இப்படியாகப் பரந்த மனப்பான்மையுடன் கூடிய ஆவி கொண்டவர்கள் மாத்திரமே, அதாவது திராட்சத்தோட்டத்தின் சிலாக்கியத்தை இப்படியாக உணர்ந்துக்கொண்டவர்கள் மாத்திரமே, அதாவது "தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவரிடமும்" இப்படியான அனுதாபம் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே, இராஜ்யத்திற்குப் பாத்திரவான்களாய் இருப்பார்கள்; மற்றும் இராஜ்யம் அறிவிக்கப்பட ஆயத்தமாகும் போது, அறிவு மற்றும் வாய்ப்பிற்கான விசேஷித்த சிலாக்கியங்களை ஏற்றுக்கொள்வதிலும் ஆயத்தமாய் இருப்பார்கள்.

நிழலான இராஜ்யமானது இயேசுவின் நாட்களில் யூதர்களுக்கு அளிக்கப்பட்டது போலவும், தெய்வீக ஊழியங்களில் நீண்ட காலமாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களோடு கூட, இராஜ்யத்தில் பங்கடைவதற்கான அதே வாய்ப்பினை, தெய்வீக ஊழியங்களுக்குப் புதிதாய் இருப்பவர்களும் பெற்றுக்கொண்டது போலவும், இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய முடிவாகிய அறுவடை காலத்திலும் காணப்படும். கர்த்தருக்கு உண்மையாய் இருப்பதற்கும், அவருடைய நோக்கங்களுக்கு ஊழியம் புரிவதற்கும், தங்கள் ஜீவிய காலம் முழுவதையும் பெற்றிருப்பவர்கள், தங்களுக்கு அவ்வளவு அதிகமான சிலாக்கியமும், ஆசீர்வாதமும் இருக்கின்றது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை பல வருடங்களுக்குப் பின்னர், சிலர் தெய்வீக ஊழியங்களுக்குள் பிரவேசித்தால், இவர்களை உடன் ஊழியர்கள் என்று கருதி, முந்தி வந்தவர்கள் களிக்கூர வேண்டும்.

ஊழியர்களாக/வேலையாட்களாக இருக்கும் அனைவரும், கர்த்தருடைய வார்த்தைக்கு இசைவாக திராட்சத்தோட்டத்தில் உள்ளே வரும், மற்றவர்களைக் குறித்துப் பொறாமைக்கொள்வதற்குப் பதிலாக, ஆண்டவர் இன்னும் வேலையாட்களைத் திராட்சத்தோட்டத்திற்குள் அனுப்பும்படிக்கு ஜெபம் பண்ண வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். தற்கால சத்தியத்தின் மாபெரும் அறிவானது இப்பொழுது, கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை புரியும் அனைவருக்குமான கூலியாக வந்து கொண்டிருக்கையில், நீண்ட காலத்திற்கு முன்னதாகவே ஆண்டவருடைய ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும், சமீபத்தில்தான் உள்ளே வந்தவர்களுக்கும், ஒருவேளை இந்தக் கூலியானது சரிசமமாக வழங்கப்பட்டால் நாம் ஆச்சரியப்பட வேண்டாம்.

கர்த்தருடைய வழிமுறைகளில் நாம் களிக்கூருவோமாக. பதினோராம் மணி நேரத்தில் கூட வேலைக்கு வந்தவர்களிடத்திலான அவருடைய கிருபையின் காரணமாக, நம் இருதயங்கள் கோபங்கொள்ளாமல் இருப்பதாக. அவர்களும் சகோதரர்கள் அல்லவா? பொன்னான சட்டத்தினுடைய நிபந்தனையின் கீழ் நாம் அனுபவிக்கும் அதே ஆசீர்வாதங்களை, அவர்களும் அனுபவிக்க நாம் விரும்ப வேண்டாமோ? கர்த்தருடைய ஊழியத்தில் நீண்ட காலமாய்க் காணப்படுபவர்களின் சார்பிலிருந்து, ஏதேனும் விலகியிருக்கும் தன்மை அல்லது இவர்கள் தங்களிடத்தில் அதிகமான கர்த்தருடைய தயவு காணப்பட வேண்டுமென்று எண்ணுவது தவறாகும். நாம் கர்த்தரைப் போன்றே காணப்பட வேண்டுமென்றே கர்த்தர் விரும்புகின்றார் "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும்

நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்” (மத்தேயு 5:45).

## “ஆதார வசனத்தின் படிப்பினைகள்”

தேவனுடைய குணலட்சணம் பற்றியும், மனித இரட்சிப்பிற்கான அவருடைய திட்டம் பற்றியும் உள்ள சரியான புரிந்துக்கொள்ளுதலை நம்முடைய முன்னோர்கள் இருண்ட யுகங்களின்போது, இழந்துப் போயுள்ளனர் என்பதை நாம் அதிகமதிகமாய்க் கற்று வருகின்றோம். அவரை அன்புள்ளவராகவும், கிருபையுள்ளவராகவும் சித்தரிப்பதற்கு பதிலாக, விசுவாசப் பிரமாணங்களில், அவரை வித்தியாசமாய் சித்தரித்துவிட்டனர். நமக்கு வழங்கப்பட்ட இருண்ட யுகங்களுடைய விசுவாசப் பிரமாணங்களானது, வேதாகமத்தின் போதனைகளைத் திரித்துக் காட்டுகின்றன. சமீப காலங்களில்தான் இந்த உண்மையை வேத மாணவர்கள் உய்த்துணர ஆரம்பித்துள்ளனர். தேவன் தம்முடைய பெரும்பாலான மனித சிருஷ்டிகளுக்கென, அக்கினி உள்ள நரகத்தையும், நித்தியமான சித்திரவதையையும் ஆதியிலே திட்டம் பண்ணியுள்ளார் என்றும், தெரிந்துக்கொள்ளப்பட்ட சொற்பமான பரிசுத்தவான்களுக்கு மாத்திரமே பரதீஸ் என ஆதியிலே திட்டம் பண்ணியுள்ளார் என்றுமுள்ள போதனைகள் கொண்டுள்ள விசுவாசப்பிரமாணங்கள், பகுத்தறிவிற்குப் புறம்பாக இருக்கின்றதென, கிட்டத்தட்ட புத்தியுள்ள ஜனங்கள் அனைவருமே உணர்ந்து, இப்பொழுது இந்த விசுவாசப்பிரமாணங்களை ஒதுக்கிவிட்டனர்.

ஆனால் அந்தோ, நம்முடைய விசுவாசப்பிரமாணங்களுடைய தப்பிதங்களை நாம் உணர்ந்துக் கொண்டு, அவைகளை நாம் ஒதுக்கி வைத்துக்கொண்டிருந்தாலும், நம்மில் அநேகர் விசுவாசப் பிரமாணங்களுடைய போதனைகளானது எவ்வளவாய் வேதாகமத்தின் போதனைகளிலிருந்து வித்தியாசமாய் இருக்கின்றது என்பதைக் கவனிக்கத் தவறுகின்றனர்! ஆனால் வேதாகமம் மீண்டுமாகத் தேடப்படுகின்றது. நம்முடைய பார்வையை மங்கலாக்கின, விசுவாசப்பிரமாணம் எனும் மூக்குக்கண்ணாடியானது, சுக்குநூறாக உடைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. வேதாகமத்தை நாம் அதற்கே உரியதான, அதன் வெளிச்சத்தில் கற்றுக்கொள்வதற்காக, வாசிக்கின்றோம்; மேலும் இப்படியாகச் செய்யும் அளவுக்குத்தக்கதாக ஆசீர்வாதமும் நம்மிடத்தில் கடந்து வருகின்றது.

“இப்படிச்செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்” என்பதைக் கவனியுங்கள். பரலோகத்தில் இருக்கின்ற தங்கள் பிதாவைப் போன்று, தாங்கள் செய்வதாக எண்ணிக்கொண்டு, இயேசுவின் நாமத்திலும், பிதாவின் நாமத்திலும், மதத்தின் பெயரிலும் இருண்ட யுகத்தின்போது சகோதரர் கேல்வின் (Brother Calvin), பிளட்டி மேரி (Bloody Mary), மற்றும் இன்னும் பலரால் பயங்கரமான கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டன. அந்தோ பரிதாபம், அவரை இவர்கள் சரியாய்ப் புரிந்துக்கொள்ளவில்லை. மிகவும் மோசமானவராக இவர்களால் சித்தரிக்கப்பட்ட மோசமான பிதாவையே, இவர்களும் பின்பற்றினவர்களாகக் காணப்பட்டார்கள். இப்பொழுது நம்மால், “இப்படிச்செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்” என்ற வார்த்தையை இயேசு எந்த அர்த்தத்தில் கூறினார் என்பதை பார்க்கின்றோம். “அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்” (மத்தேயு 5:45).

இயேசுவின் மிகச் சிறந்த சீஷர்களில் இருவர், அவரோடு கூடவே காணப்பட்டப் போதிலும், தவறான கருத்தைக்கொண்டிருந்தனர். அவர்களே இப்படி இருந்தார்களானால், விசுவாசப்பிரமாணங்கள் காணப்பட்ட காலப்பகுதியில், வேதாகம ஆராய்ச்சி தவிர்க்கப்பட்ட நிலையிலும், தெய்வீகக் குணலட்சணம் பற்றின சரியான புரிந்துக்கொள்ளுதல் அனைத்தையும் இழந்த நிலையிலும் காணப்பட்டவர்களை நாம் எவ்வளவாய்ப் பொறுத்துக்கொள்ள வேண்டும்!

இங்கு நாம் குறிப்பிடும் இரண்டு சீஷர்கள் செபதேயுவின் குமாரர்களாகிய யாக்கோபும், யோவானும் ஆவார்கள். கர்த்தருக்கும், சீஷர்களுக்கும் உணவு குறைவுப்பட்டபோது, யாக்கோபும், யோவானும், அப்பம் வாங்குவதற்கென, சமாரியா பட்டணத்திற்குள் போனார்கள். வியாதிப்பட்டிருக்கின்ற சமாரியர்களையும், யூதர்களையும்

சொஸ்தப்படுத்தும்படிக்கு ஏன் இயேசு தங்கள் பட்டணத்திற்கு வரவில்லை என்று இவர்கள் இருவரிடமும் சமாரியர்கள் வினவினார்கள். அச்சமயம் அவருடைய ஊழியம் யூதர்களுக்கு மாத்திரமே உரியது என்று சமாரியர் அறிந்தபோது கோபமடைந்து, "யூதர்களிடமிருந்தே அப்பம் போய் வாங்கிக்கொள்ளுங்கள்; நாங்கள் உங்களுக்கு எதுவும் விற்பதில்லை" என்று இரு சீஷர்களிடம் கூறினார்கள். அனைத்திற்கும் சுதந்தரவாளியான தங்கள் ஆண்டவர் இப்படியாகக் கனவீனப்படுத்தப்பட்டபடியால் யாக்கோபும், யோவானும் மிகவும் கோபமடைந்து, சமாரியர்களுடைய பட்டணம் அழிக்கப்படத்தக்கதாகச் சமாரியர்கள் மீது அக்கினியை வரப்பண்ணுவதற்கு, இயேசுவிடம் அனுமதிக் கேட்டுக்கொண்டார்கள். இந்தச் சீஷர்கள், தங்களிடத்தில் தேவனுடைய ஆவி இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தார்கள், "அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்" (லூக்கா 9:55, 56).

இந்த இரண்டு அருமையான சீஷர்கள் கூடத் திருத்தப்படுவது அவசியமாய் இருந்ததானால், அதாவது சமாரியர்களை அழித்துப் போடும் விஷயத்தில், அவர்களிடத்தில் தவறான ஆவி இருந்தது எனக் காண்பித்துக் கொடுக்கப்படுவது அவசியமாய் இருந்ததானால், எதிர்க்கிறவர்கள் அனைவரும் நித்தியமான சித்திரவதைக்குள் போவார்கள் என்று தேவனுடைய நாமத்தில் கூறுபவர்களுக்கு, எவ்வளவாய் இயேசுவின் இந்தக் கடிந்துக்கொள்ளுதல் பொருத்தமானதாய் இருக்கும்!

இப்படியாகக் காணப்பட்டவர்களில் சிலராகத்தான் நாம் இருக்கின்றோம். அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும், தவறான உபதேசமாகிய திராட்சரசத்தைப் பருகினதின் காரணமாக விசுவாசப்பிரமாணம் கொடுத்திட்ட போதை மயக்கத்தினாலும் இப்படியாக முன்பு ஒருகாலத்தில் நாமும் காணப்பட்டிருந்தோம். (வெளிப்படுத்தல் 17:1-5; 18:3). விடுவித்ததற்காக தேவனுக்கு நன்றி! தெளிந்த கண்ணோட்டங்கள்/பார்வைகள் அவருடைய ஜனங்களுக்கு வந்துகொண்டிருப்பதற்காக அவருடைய நாமத்தை துதிப்போமாக! புதிய யுகத்தினுடைய காலை விடிந்துக் கொண்டிருப்பது, பிரகாசிப்பித்தலைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. நீதியின் சூரியன் உதித்துக்கொண்டிருக்கின்றது; அதன் பிரகாசமான கதிர்களினால் கடந்த காலத்தின் குட்டிச்சாத்தான்கள் ஓடி மறைந்துக் கொண்டிருக்கின்றது. இந்த ஆசீர்வாதமான செய்தியை உலகம் அனைத்திற்கும் சொல்லுங்கள்.

## "தேவனுடைய மகிமையான குணலட்சணம்"

நம்முடைய ஆதார வசனமானது, நன்றியற்றவர்களிடத்திலும், அநீதியுள்ளவர்களிடத்திலும், பாவிகளிடத்திலுங்கூட, நமது தேவன் கிருபையுள்ளவராக, இரக்கமுள்ளவராக, கருணையுள்ளவராக இருக்கின்றதுபோல, நாமும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சகல மனுஷருக்கும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்கிறவர்களாகவும் மற்றும் இரக்கமுள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும், காணப்பட வேண்டும் என்று கூறுகின்றது. இப்படியான தேவனைப்பற்றின ஒரு கண்ணோட்டமே நம்முடைய இருதயங்களின் கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இந்த அன்பின் தேவனைப்பற்றி நாம் அதிகமாய்ப் படிக்கையில், இவர் ஒருவரே அன்புள்ளவராகவும், உண்மையான தேவனாகவும் இருக்கின்றார் என்பதையும், முன்பு நாம் கொண்டிருந்த தவறான கருத்துக்கள் அனைத்தும் உண்மையற்றதும், அன்பற்றதும், நிஜமற்றதும், நாம் சொந்தமாய் உருவாக்கின தெய்வங்கள் என்பதையும் நாம் அதிகமதிகமாய் உணர முடிகின்றவர்களாய் இருப்போம். இன்னுமாக கல்லினாலும், மண்ணினாலும், இரும்பினாலும், வெண்கலத்தினாலும் புறமதத்தினர் செய்திருந்த விக்கிரகங்களைக் காட்டிலும், கொடூரமான விசுவாசப்பிரமாணம் எனும் விக்கிரகங்களை, பேனாவினாலும், காகிதத்தினாலும், மையினாலும், அச்சுகளினாலும் நாகரிகமடைந்திருக்கும் தேசங்கள் உண்டுபண்ணப் பெற்றிருக்கின்றனர் என்பதையும் நம்மால் காணமுடியும்.

"அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கின்றான்." (நீதிமொழிகள் 23:7). ஒருவன் வணங்கும் தேவன் கொடூரமானவராகவும் பழிவாங்குபவராகவும், பகைக்கிறவராகவும், வெறிகொண்டவராகவும் இருப்பாரானால், இப்படியான கடவுளை வணங்கும் அந்த மனுஷனோ (அ) மனுஷியோ, அந்தத் தெய்வத்தின்

கொடூரமான தன்மையின் தாக்கத்தினால் ஆட்கொள்ளப்படாமலும், அதே போன்று எண்ணுவதற்கும், செய்வதற்கும் வழிநடத்தப்படாமலும் இருக்குமாயின், இது அற்புதமாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய மனதின் கண்களுக்கு முன்னதாக அன்பான மற்றும் உண்மையான தேவனை, நமது மாதிரியாகக் கொண்டிருப்போமானால், நமது சிருஷ்டிகரின் மகிமையான குணலட்சணத்தை நாம் அறிய அறிய, நாம் மாற்றமடைந்து, நாளுக்கு நாள் மறுரூபமாக்கப்படுவோம். நம்மையும் அறியாமல், இந்த உயர்ந்த மாதிரியை நாம் பின்பற்றுபவர்களாகி, நம்முடைய மனங்கள் புதிதாகிறதினாலே, அதிகமதிகமாய் மறுரூபப்படுவோம்; மற்றும் நம்முடைய அன்றாட ஜீவியங்களில் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தமும் இன்னதென்று பகுத்தறிகிறவர்களாகவும் இருப்போம்.

நலமானதை, அதாவது கர்த்தருடைய உறுதியான வார்த்தைகளைப் பற்றிக்கொள்வோமாக. தெய்வீகச் செய்தியை நமக்கு மிகவும் திரித்துக் காண்பித்த இருண்ட யுகத்தினுடைய, மனித கொள்கைகளைப் புறம்பாக்கிடுவோமாக. இப்படிச் செய்வோமானால் நாம், "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற ஆண்டவருடைய வார்த்தைகளுக்குச் செவிக்கொடுப்பவர்களாய் இருப்போம். (யோவான் 8:32).

---

**R4668**

# "பெரியவன்-ஊழியக்காரன்"

## மத்தேயு 20:17-34

"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." (வசனம் 28)

குறிக்கோள், அதாவது சுயநலமான குறிக்கோள் உலகத்தை இயக்கிக்கொண்டிருக்கின்றது. தேவனைப் பிரியப்படுத்துவதும், அவருடைய பலன்களைப் பெற்றுக்கொள்வதுமாகிய ஒருவகையான குறிக்கோளுக்கு/ஆசைக்குத் தேவனுடைய வார்த்தைகளிலுள்ள மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் ஊக்கமூட்டுகின்றன. இயேசுவின் அர்ப்பணம் பண்ணியுள்ள மற்றும் சுயத்தைப் பலிச்செலுத்துகிறதுமான பின்னடியார்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தைச் சிந்தித்துப் பாருங்கள்; அதென்னவெனில் அவர்கள் மரணம் வரை உண்மையுள்ளவர்களாய் இருந்தால், ஜீவகிரீடத்தையும், அழியாமையையும், அவருடைய இராஜ்யத்தின் மகிமையையும், கனத்தையும் அவர்கள் பங்கடைகின்றவர்களாக, தங்களுடைய ஆண்டவரோடு கூட அவருடைய சிங்காசனத்தில் ஓர் இடத்தையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதேயாகும். சிருஷ்டிகரிடமிருந்து, விசுவாசத்தின் கேட்கும் செவிகளை உடையவர்களிடத்தில் வரும் இந்தக் காரியத்தைக் காட்டிலும், குறிக்கோள் கொள்ளத்தக்கதாக இதுபோல் மிகப் பலமாய், வேறு எந்தப் பூமிக்குரிய காரியத்தினாலும் நமது கவனத்தை ஈர்க்க முடியாது. எனினும் இந்த வாக்குத்தத்தங்களினால் எழுப்பப்பட்ட இந்தக் குறிக்கோள்கள்/ஆசைகள், நமக்குக் கண்ணிகளாகக்கூட மாறலாம் என்று நாம் எச்சரிக்கப்பட்டிருக்கின்றோம். அவமானம், தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுதல் மற்றும் இகழ்ச்சியை நாம் உண்மையாய் சகித்து முன்னேறுதல் மற்றும் இறுதிவரையிலும் தாழ்மையை, தேவனிடத்திலான முழுமையான நேர்மையை, அவருடைய வழிநடத்துதல்களுக்கு நாம் முழுமையாய் ஒப்புக்கொடுத்தலை நிரூபித்தல் ஆகிய நிபந்தனைகளின் கீழ்தான் நாம் இராஜ்யத்தை அடைய முடிகின்றவர்களாய் இருப்போம். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உமது சித்தம் பரமண்டலத்தில் செயல்படுவது போன்று பூமியிலும் செயல்படுவதாக" என்று நாம் ஜெபம் பண்ணுகிறதான வரவிருக்கின்ற இராஜ்யத்தில் மேசியாவோடு கூட ஆள வேண்டுமெனில், ஒருவர், "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்ற வசனத்தின்படிக் காணப்பட வேண்டும் (1 பேதுரு 5:6).

இயேசு தம்முடைய அவமானத்துடன் கூடிய பாடுகளையும், மரணத்தையும் பற்றி முன் அறிவித்த போதிலும், அப்போஸ்தலர்களுடைய மனங்களுக்கு முன்னதாக

இராஜ்யத்தைப்பற்றின நம்பிக்கை பிரகாசமாகவே காணப்பட்டது; ஆகையால்தான் இயேசுவுக்குப் பிரியமாய் இருந்த பின்னடியார்களில் இருவரான யாக்கோபும், யோவானும், தங்களுடைய தாயார் வாயிலாக, அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, மாபெரும் இராஜாவாகிய அவருடைய வலது பக்கத்தில் ஒருவரும், இடது பக்கத்தில் இன்னொருவரும் உட்காரத்தக்கதாக ஒரு வாக்கை அடையும்படிக்கு வேண்டிக் கொண்டார்கள்.

இந்த ஒரு விண்ணப்பத்தின் மூலமாய், இப்படிப்பட்ட உயர்வான நிலையை அடைவதற்குரிய விலையைக் குறித்து அன்பும், குறிக்கோளும் கொண்டுள்ளவர்களாகிய சீஷர்கள் முழுமையாய்க் கணக்குப் பார்க்கவில்லை என்று மாபெரும் போதகர் கருத்துத் தெரிவிக்க ஏதுவாயிற்று. அவர்கள் தம்முடைய அவமானம் மற்றும் நிந்தனையின் பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கு விரும்புகின்றார்களா என்றும், அவர்கள் தம்முடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தில் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள விரும்புகின்றார்களா என்றும், அனைத்துப் பூமிக்குரிய நன்மைகளையும் பலிச்செலுத்திட விரும்புகின்றார்களா என்றும் கர்த்தர் அவர்களிடம் கேட்டார். அவர்கள் விலையைக் கணக்குப்பார்த்து விட்டனர்; மற்றும் உடனடியாக தங்களது விருப்பத்தைத் தெரிவித்தனர். அவர்கள் மாபெரும் போதகருடைய பாடங்களை நன்கு கற்றிருந்தனர். அவர்கள் இத்தகைய மனவிருப்பம் கொண்டதினால், அவருடைய அவமானத்திலும், அவருடைய மரணத்திலும் பங்கடைவதற்கும் மற்றும் அவரோடு கூட அவருடைய சிங்காசனத்தில் உட்காருவதற்கும் உரிய சிலாக்கியம் அவர்களுடையதாய் இருக்குமெனக் கர்த்தர் அவர்களுக்கு நிச்சயம் அளித்தார். அவருடைய ஜனங்களின் பரீட்சைகள் நிறைவடையும்போது, பிதா ஆயத்தம் பண்ணினதும், ஏற்படுத்தினதுமான நியாயமான நியமனத்தின்படி /அளவுகோலின்படி/கொள்கையின்படி, கர்த்தருடைய வலது, இடது பக்கத்தில் இருக்கும் இராஜ்யத்தின் உயர்வான கனத்திற்குரிய ஸ்தானம் அருளப்படும். அப்போஸ்தலர்களோடு கூட நாமும், அவர்களுடைய முழுமையான அர்ப்பணிப்பிலும், ஆண்டவருடைய நிச்சயத்திலும்/வாக்கிலும் எவ்வளவாய்க் களிக்கூரலாம்! ஆண்டவரோடு கூட, அவருடைய சிங்காசனத்தில் அவருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினராக இடம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக நாமும் உண்மையாய் நாட வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.


யாக்கோபு மற்றும் யோவானுடைய குறிக்கோளானது/ஆசையானது, கர்த்தரிடம் மிகவும் விசேஷித்த நெருக்கமான இடத்தை அடைய வேண்டுமென்றதான அவர்களது விருப்பத்தைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. கர்த்தர் இயேசு அவர்களைக் குறிப்பாய்க் கடிந்துக்கொள்ளாமல், மறைமுகமாகக் கடிந்துக்கொள்கின்றார். இந்த இருவரும் எவ்வாறு கனத்திற்குரிய பிரதான இடங்களை அடைய நாடினார்கள் என்பதை, மற்றவர்கள் கேட்டபோது மிகவும் எரிச்சலடைந்தார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மனிதனுடைய கணிப்பிலிருந்து, தேவனுடைய கணிப்பு எவ்வளவு வேறுபாடாக இருக்கின்றது என்பதை ஆண்டவர் காட்டினார். மனுஷர்கள் மத்தியில், ஆக்கிரமிக்கிறவர்களும், வல்லமையுள்ளவர்களுந்தான் மற்றவர்கள்மேல் ஆளுகையையும், அதிகாரத்தையும் கொண்டிருக்கின்றனர், ஆனால் தெய்வீக ஏற்பாட்டிலோ, இது முற்றிலும் தலைக்கீழாக இருக்கின்றது. தேவன் தாழ்மையுள்ளவர்களையும், சாந்தமுள்ளவர்களையும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பவர்களையுந்தான், மிகவும் கனப்படுத்தி, உயர்வான ஸ்தானத்தில் அமர்த்துவார். இந்தச் சம்பவத்தில், தாழ்மையின் அவசியத்தைக் குறித்துத் தம்முடைய பின்னடியார்களுக்குப் போதித்தார்; நாமும் தெய்வீகக் கண்ணோட்டத்தின்படிச் செயல்படுகிறவர்களாய் இருந்து, சபையில் யார் அதிகமாய் ஊழியம் புரிகிறார்களோ, அவர்களையே நாம் மிகவும் கனப்படுத்த வேண்டுமே ஒழிய, ஊழியம்கொள்வதற்கும், கனங்களை அடைவதற்கும், தன்னைத்தான் உயர்த்துவதற்கும் நாடுபவர்களுக்கும் அல்ல. "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்," அதாவது தேவனுடைய ஏற்ற வேளையாகிய, மேசியாவின் இராஜ்யத்தில் ஜனங்கள் பாவம் மற்றும் மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவதற்குத் தம்முடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுக்க வந்தார் (மத்தேயு 20:28).

## "குருடர்களையும், ஏழைகளையும் ஆசீர்வதித்தல்"

பிரயாணம் பண்ணிக்கொண்டு போகையில், ஆண்டவருக்குத் தம்மை வேலைக்காரனாக முன்மாதிரிப்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இயேசு

அவ்வழியாய்ப் போய்க் கொண்டிருக்கின்றார் என்பதை அறிந்துக் கொண்ட இரண்டு குருடர்கள், அவர் தாவீதின் குமாரனாகிய மேசியா என்று விசுவாசித்து, இரக்கத்திற்காக, உதவிக்காகக் கூக்குரலிட்டனர். நீங்கள் குருடர்களாகப் பிச்சை எடுப்பவர்கள்தானே என்று கூறி, பொருட்படுத்தாமல் செல்வதற்குப்பதிலாக, ஆண்டவர் நின்று, அவர்களைத் தம்மிடம் கொண்டு வரச்சொல்லி, அவர்களுடைய விண்ணப்பத்தின்படி, அவர்களுடைய கண்களைத் தொட்டார், மற்றும் அவர்கள் உடனடியாகப் பார்வை அடைந்தார்கள். அவருக்கு இழப்பு இல்லாமல், அவர் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை என்று மற்ற வேதவாக்கியங்களும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. "அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கிற்று" (லூக்கா 6:19).

ஐசுவரியவானாய் இருந்த அவர், மிகவும் தரித்திரரும், கீழானவர்களுமான நமக்கு ஊழியம் புரியும்படிக்கு, நமக்காக தரித்திரர் ஆனார்! இங்கு நம்முடைய இருதயத்தில் காணப்பட வேண்டிய சாந்தத்தின் ஆவிக்கும், ஊழியம் புரிவதற்கான ஆவிக்கும் எடுத்துக்காட்டைப் பெற்றிருக்கின்றோம்; இது ஓரளவுக்கு, மாபெரும் போதகருடைய சீஷர்களாகிய, உண்மையான பின்னடியார்களின் ஜீவியங்களைக் கட்டுப்படுத்துகின்றதாய்/ஆளுகின்றதாய் இருக்க வேண்டும். ஒருவேளை மாம்ச குருடான கண்களைத் திறப்பதற்கான வல்லமை நமக்கு இராவிட்டாலும், மாம்ச கண்கள் காணாததும், மாம்ச காதுகள் கேட்டிராததும், தேவன் தம்மை அன்புகூருகிறவர்களுக்கும், தம்மை அன்புகூர்ந்து, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும் வைத்திருக்கிறதுமான காரியங்களை அநேகர் தெளிவாய்ப் பார்க்க உதவுவதற்கான வல்லமை, நமக்குக் கொடுக்கப்பட்டதாய் இருக்கின்றது (1 கொரிந்தியர் 2:9). இந்த உண்மையான குறிக்கோளை அடைய நாடுவோமாக; பரலோகத்தில் இருக்கும் நம்முடைய பிதாவின் சித்தத்தை அறிவதற்கும், செய்வதற்கும் நாம் விசேஷமாக நாடுவோமாக!




இயேசு தோட்டத்தில் ஜெபித்தல்

சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். (மத் 26:39)

# பாகம்-6

# “எருசலேமில் இயேசுவின் இறுதி ஊழியம்...”

R3534

# "மிகவும் விலையேறப்பெற்ற தைலம்"

## யோவான் 12:1-11.

"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்."—மாற்கு 14:8.

அன்று சனிக்கிழமை இரவாகக் காணப்பட்டிருக்க வேண்டும் என நாம் கருதுகின்றோம்; அதாவது, யூதர்களுடைய ஓய்வு நாள் ஆரம்பமாகும் மாலையில் ஆறு மணிக்குப் பின்னர், இயேசுவும் அவருடைய சீஷர்களும், மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்ட லாசருவும், அக்குடும்பத்தின் மற்றச் சில நண்பர்களோடு விசேஷித்த கனத்தை இயேசுவுக்குக் கொடுக்கும்படியாக அவருடைய நண்பர்களின் வீட்டில் ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த விருந்தில் அமர்ந்தார்கள். அவ்வீட்டிற்கு அவர் வந்துபோவதை, எப்பொழுதும் அவ்வீட்டார் விரும்பினார்கள். மேலும், பதிவுகள் தெரிவிக்கிற காரியங்களை வைத்துப்பார்க்கையில், அவருடைய ஊழிய நாட்களில், மற்ற வீடுகளுக்கு செல்வதைக்காட்டிலும், இவ்வீட்டிற்கே அவர் வந்துபோய் உள்ளார் என நாம் அறிந்துக்கொள்கின்றோம். இது பெத்தானியாவிலுள்ள லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீடாகும். இது, குஷ்டரோகியாகிய சீமோனின் வீடு என்றும் அழைக்கப்பட்டது. மேலும், இந்தச் சீமோன், இக்குடும்பத்தில் தலைவராகிய தகப்பனாய் இருந்தார் என்று ஒரு அனுமானம் நிலவிக்கொண்டிருக்கிறது; வேறொரு அனுமானமோ, இந்த சீமோன் மார்த்தாளுடைய கணவர் என்றும், இப்பாடத்தின் சம்பவங்கள் நடந்த தருணத்தில் அவள் விதவையாய் இருந்தாள் என்றும் காணப்படுகின்றது.

நமது கர்த்தரும், அவர் சீஷர்களும் எருசலேமுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் போகிற வழியில் புறநகர் பகுதிகளில் பெத்தானியா காணப்பட்டது. அதற்கு முந்தின தினமாகிய வெள்ளிக் கிழமை அல்லது யூதர்களின் வாரத்தின் ஆறாம் நாளன்று, அவர்கள் அநேகமாக அங்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். அவர்களை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்த மார்த்தாளும், மரியாளும் அருமையான விருந்தை ஆயத்தம் செய்தார்கள். மேலும், யூதர்களின் முறைமையின்படி ஓய்வு நாளில் வேலை செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததினால், இப்படிப்பட்ட தருணங்களில் உணவு பண்டங்கள் முன்கூட்டியே ஆயத்தம் பண்ணப்பட்டிருக்க வேண்டும். பெத்தானியாவில் அவர்கள் கைக்கொண்ட ஓய்வு நாளைக் குறித்து எந்தப் பதிவுகளும் கொடுக்கப்படவில்லை என்றாலும், கர்த்தர் மற்றும் அவருடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் மற்றும் அக்குடும்பத்தின் அருமையான அங்கங்கள் மத்தியில் நடந்த மகிழ்ச்சியான சம்பாஷணைகளை நாம் நன்கு கற்பனை செய்துகொள்ளலாம்.

## "சமுதாய வாழ்வில் இயேசு"

ஆண்டவருடைய ஞானமுள்ள மற்றும் அன்பான வார்த்தைகள் பதிவு செய்யப்படவில்லையென்றாலும், நல்ல மனுஷனுடைய இருதயத்தில், நன்மையான பொக்கிஷங்கள் நிரப்பப்பட்டிருக்கும் என்றும், அப்படியாக நன்மையால் நிறைந்த இருதயத்தின் நிறைவால் வாய் பேசும் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, அன்று விளையாட்டுத்தனமான வார்த்தைகளுக்கோ அல்லது செயல்பாடுகளுக்கோ இடம்கொடுக்கப்படாமல் மாறாக, சரியான இருதய நிலைமையிலுள்ள யாவருக்கும் புத்துணர்வை உண்டுபண்ணும் ஆவிக்குரிய களிகூருதலிலும், இளைப்பாறுதலிலும் அன்றையநாள் செலவழிக்கப்பட்டிருக்க வேண்டும். இதே கோட்பாடுகள், கர்த்தருடைய பின்னடியார்கள் எவ்விடங்களில் காணப்பட்டாலும், அவர்களுடைய சூழ்நிலைகள் என்னவாகக் காணப்பட்டாலும், கூட அவர்களுக்குப் பொருந்தக்கூடியதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களுடைய இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நன்மையான காரியங்களை மட்டுமே பேச வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள், ஆனால், ஒருவேளை இதற்கு எதிர்மாறாகக் காணப்படுவார்களேயானால், அவர்கள் விழிப்படைந்து தங்கள் தலை (இவ்விஷயம் குறித்ததான அறிவை) மாத்திரம் சரிச்செய்து கொள்வதோடல்லாமல், இருதயத்தின் மாறுபாடுகளையும் சரிச் செய்துகொள்ள வேண்டும்.

லாசருவினாலும், அவருடைய சகோதரிகளினாலும் மிகவும் உயர்வாய்க் கருதிக்கொள்ளப்பட்டவரும், லாசருவை கல்லறையிலிருந்து வெளியே வரும்படி கூறி, தமது மேசியாவுக்குரிய அதிகாரத்தையும், தமக்குள் உயிர்த்தெழுதல் மற்றும் ஜீவனின் வல்லமை இருக்கின்றது என்பதையும் விவரித்துக் காட்டினவருமாகிய இயேசுவினிடத்தில், அவர்கள் கொண்டிருந்த அன்பை நாம் எழுத்துக்களில் காண்பிப்பதைக்காட்டிலும் நன்கு கற்பனை செய்துகொள்ளலாம். ஒருவேளை (லாசருவின் உயிர்த்தெழுதலாகிய), அந்த மாபெரும் சம்பவத்திற்குப்பின், நம்முடைய ஆண்டவர் பெத்தானியாவுக்கு இதுவே முதன்முறையாக சென்றிருக்க வேண்டும்.

நம்முடைய ஆண்டவர் பலதரப்பட்ட மக்களை நண்பர்களாகக் கொண்டிருந்தார். இவர்களில் சிலர் ஐசுவரியவான்களாகவும், சிலர் தரித்திரர்களாகவும், சிலர் நடுத்தரமான சூழ்நிலைகளிலும் இருந்தனர். பெத்தானியாவில் இருந்த இந்தக் குடும்பத்தினர் சௌகரியமான சூழ்நிலையின் கீழ்க் காணப்படும் வகுப்பாராய் இருந்தனர். மேலும், இவர்கள் சௌகரியமான சூழ்நிலைகளில் இருந்த காரியமானது, இவர்களுக்கு சொந்த வீடு இருப்பதின் மூலமும், இவர்களுக்குச் சொந்த கல்லறை இருப்பதின் மூலமும், கர்த்தரை விலையேறப்பெற்ற நளதத் தைலம் கொண்டு அபிஷேகம் பண்ணி கனப்படுத்தும்படிக்கு அதிகம் பணம் செலவு செய்யத்தக்கதாக மரியாள் விருப்பமும், திராணியும் கொண்டிருந்ததின் மூலமும் உறுதிப்படுகின்றது. ஐசுவரியங்கள் அநேகருக்கு மாபெரும் கண்ணியாக இருக்கிறது. இன்னுமாக, ஐசுவரியவான்களில் அநேகர் இராஜ்யத்தில் பிரவேசிப்பது இல்லை என்றும் கர்த்தருடைய வார்த்தை அறிவிக்கின்றது. இவர்களுக்கு தற்கால ஜீவியத்தின் கவர்ச்சிகள் என்பது, மிகவும் சக்திவாய்ந்ததாகவும், தங்களுடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தடையாகவும் உள்ளது. அதாவது, தங்களுடைய அனைத்தையும் பலிச்செலுத்தவும், தங்களுடைய அனைத்தையும் இயேசுவின் பாதத்தில் ஒப்புவிக்கவும், தங்களுடைய பூமிக்குரிய வாய்ப்புகள் மற்றும் ஆசீர்வாதங்களைப் பயன்படுத்தும் விஷயத்தில், அவருடைய உக்கிராணக்காரர்களாக மாறுவதற்கும் தடையாக உள்ளது. இன்னுமாக, இவைகளை ஞானமாக அவருடைய ஊழியத்தில் பயன்படுத்துவதற்கும் மற்றும் தாங்கள் கொண்டிருக்கிறோம் என்று அறிக்கைபண்ணின அன்பையும், நேர்மையையும் விவரிக்கும் விதத்தில், அவைகளை அவருடைய ஊழியத்திற்குப் பயன்படுத்துவதற்கும் தடையாக உள்ளது.

பல கோணங்களில் பார்க்கும்பொழுது, மற்றவர்களுக்கு மிகவும் தாராளமாய்ச் செய்வதற்கும், மிகுந்த விருந்தோம்பல் காண்பிப்பதற்கும் என, ஜீவியத்தில் நடுத்தரமான (middle class) வசதி வாய்ப்புகள் காணப்படுவது நலமாய்த் தோன்றலாம். எனினும், நிலைத்து நிற்பதற்கும், அதேசமயம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கும், பெரும் திரளான வளமையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது, நடுத்தரமான வசதியுங்கூட கொஞ்சம் அதிகமாகவே தோன்றுகின்றது. இதன் காரணமாகவே, இவ்வுலகத்தில் ஏழ்மையானவர்களே பிரதானமாக இராஜ்யத்தின் சுதந்தரவாளிகளாக இருப்பார்கள் என்று நமது கர்த்தர் அறிவித்த காரியங்கள் உண்மை என அறிந்துக்கொள்கின்றோம். அதாவது, பிரதானமாகக் கொஞ்சம் உடையவர்களும், அதிகம் பெற்றுக்கொள்வதற்கு கொஞ்சம் எதிர்ப்பார்ப்பு உடையவர்களும் மற்றும் இப்படிப்பட்ட எதிர்ப்பார்ப்பின் விளைவாக, கர்த்தரை பிரதானமாய் அன்பு கூருகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள பரம காரியங்களின்மேல் உடனடியாக மனதை திருப்பிக்கொள்ளுகிறவர்களுமே இராஜ்யத்தின் சுதந்திரவாளிகளாய் இருப்பார்கள்.

பெத்தானியாவின் வீட்டாருக்குச் சௌகரியமான சூழ்நிலைகள் இருந்ததுபோன்று நம்மிடத்தில் எந்தளவுக்குக் காணப்படுகின்றதோ, அதாவது தற்கால ஜீவியத்திற்குரிய நற்காரியங்களை எந்தளவுக்குப் பெற்றிருக்கின்றோமோ, அந்தளவுக்கு தக்கதாக இந்த ஜீவியத்திற்குரிய கவலைகளுக்கு எதிராகவும், இவ்வுலகத்தின் ஐசுவரியங்கள், இலட்சியங்கள், எதிர்ப்பார்ப்புகள் மற்றும் குறிக்கோள்களினுடைய வஞ்சனை தன்மைக்கும் எதிராகவும், விசேஷித்த விதமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்வது அவசியமாய் உள்ளது; இல்லையேல் இவைகள் நம்முடைய இருதயங்கள் கர்த்தரிடத்திலும், அவருடைய நோக்கத்தின் பேரிலும் காண்பிக்க வேண்டிய உண்மையையும், பக்தியையும் விட்டுவிலகச் செய்யும். மேலும், இவ்வுண்மைத் தன்மையையும், பக்தியையும் ஊக்குவிப்பதற்கும், தக்கவைப்பதற்கும் முழு விசுவாசமும் நம்பிக்கையும் தேவைப்படுகின்றது. சொல்லர்த்தமாகத் தரித்திரத்தில் இல்லாவிட்டாலும், ஆவியில் எளிமையுள்ளவர்களாய் இருக்க முடியும்.

அதிகபட்சமான பூமிக்குரிய ஐசுவரியங்களைப் பெற்றிருந்தோமேயானால், இடுக்கமான வழியில் பிரவேசிப்பதற்கு அதிகமான கிருபை தேவைப்படுகிறது.

## ''விலையேறப்பெற்ற நளதத் தைலம்''

இரண்டு சகோதரிகளும் செய்யப்பட வேண்டிய காரியங்களைத் தங்களுக்குள்ளாக ஏற்கெனவே தீர்மானித்து வைத்திருந்தார்கள். மார்த்தாள் பந்தியில் உணவு பறிமாறினாள். மரியாளோ அபிஷேகம் பண்ணும் விசேஷமான பணியின் மூலம் பணிவிடை புரிந்தாள். பண்டைய யூதர்களின் வழக்கத்தின்படி உயரம் குறைந்த, நீண்ட மேஜைகளைச் சுற்றி விருந்தாளிகள் பக்கவாட்டில் சாய்ந்த படுக்கை நிலையில் அமர்வார்கள். ஒரு முழங்கையின் மீது சரீரத்தின் மேற்பாதியைச் சாய்த்துக்கொள்வதும், மற்றக் கரத்தைக் கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வதும் வழக்கமாய் இருந்தது. நம்முடைய கர்த்தர் இப்படிப் பக்கவாட்டில் சாய்ந்துப் படுத்த நிலையில் காணப்பட்டபடியினால், அவருடைய தலை பாகத்தையும், அவருடைய பாதத்தின் அருகேயும் மரியாளினால் மிகவும் சுலபமாக நெருங்க முடிந்தது. மரியாள் முதலில் அவருடைய தலையை அபிஷேகம் பண்ணி, பின்னர் அவருடைய பாதத்தைத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினாள்.

இந்தத் தைலத்தின் விலை 300 பணத்திற்கும் மேல் என்று 5-ஆம் வசனம் குறிப்பிடுகின்றது. ஒரு பணம் அன்றைய தினத்திற்கான ஒருவருடைய கூலியாகும். (மத்தேயு 20:2). இப்படியாக 300 பணம் என்பது, ஒரு வருடத்தின் உழைப்பினால் பெற்ற ஊதியமாகும். ஆகவே, இக்காலத்தில் இந்த 300 பணம் என்பது, இன்றுள்ள 300-லிருந்து 600 டாலர்களுக்கு ஒப்பிடலாம்.

## ''அவளால் இயன்றதை அவள் செய்தாள்''

இப்படிப்பட்ட விலையுயர்ந்த தைலங்கள் மிக அரிதாகப் பயன்படுத்தப்பட்டது. உண்மையைச் சொல்லப்போனால் சக்கரவர்த்திகளும் கூட, இதைச் சிக்கனமாகப் பயன்படுத்தினார்கள். அதுவுமல்லாமல், அது பயன்படுத்தப்படும் சமயங்களில் பொதுவாகத் தலையின் மீதே ஊற்றப்படுகிறது. மரியாள் கர்த்தருடைய தலையில் தைலத்தை ஊற்றினபோது, மேற்கூறப்பட்ட அவ்வழக்கத்தைப் பின்பற்றினவளாகக் காணப்பட்டாள் என்பது மத்தேயு மற்றும் மாற்குவின் பதிவுகளிலிருந்து தெரியவருகிறது; ஆனால், இதைச் செய்த பிற்பாடோ, அவள் அவர் பாதம் அருகே வந்து, தைலத்தினால் அபிஷேகம் பண்ணி, தன்னுடைய நீண்ட கூந்தலினால் அவர் பாதங்களைத் துடைத்தாள். அன்பு கலந்த பக்திக்குரிய எத்துணை அருமையான காட்சி இங்கு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது! பாதங்கள் மனிதனுடைய சரீரத்திலேயே தாழ்மையானதும், கீழான அங்கமுமாக, மதிப்புக்குறைந்த அங்கமாக எப்பொழுதும் கருதப்படுகிறது. ஆனால், தலையிலுள்ள மயிரானது, அதுவும் விசேஷமாக, ஸ்திரீகள் விஷயத்தில் விசேஷித்த பொக்கிஷமாகவும் அவளுக்கு மகிமையாகவும் எப்போதும் கருதப்படுகின்றது. இவ்விதமாக, மரியாள் தனது மகிமையான தலைமயிரைக்கொண்டு அவருடைய பாதங்களைத் துடைத்த காரியமானது, மரியாள் தனது, கர்த்தரும் ஆண்டவருமாகிய அவரைத் தன்னைக்காட்டிலும், முற்றிலும் மேலானவராக மதிப்புடன் கருதியதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆரம்பத்தில், அவரை மனுஷர் மத்தியில் மிகவும் அருமை வாய்ந்த நபராகவும், ஒரு மனுஷனும் அதுவரைக்கும் பேசாதவைகளைப் பேசுகின்ற ஒரு மனுஷனாகவும் மரியாள் உணர்ந்துக்கொண்டாள்; பின்னரே அவர் ஒரு மாபெரும் போதகர் என்றும், விசேஷித்த காலத்திற்காக விசேஷித்தவிதமாய் அனுப்பப்பட்டவர் என்றும் அறிந்திருந்தாள். ஆனால், அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து எழுப்பினதின் மூலம் இறுதியாக, சர்வ வல்லமையுள்ளவரின் வல்லமை அவருக்குள் இருக்கின்றது என்றும், அவர் தேவனுடைய குமாரன் என்றும் அறிந்துக்கொண்டாள். ஆகவே, அவருடைய மேன்மையான நிலையை உணர்ந்தவாறு அவருக்குப் பொருத்தமான மரியாதையைச் செலுத்தினாள்.

அவரை இந்த பூமியின் சிங்காசனத்தின் மேல் அவளால் அமர்த்த முடியாவிட்டாலும், தான் அவருக்கு என்றுமே பயபக்தியுடன் காணப்படும் ஓர் ஊழியக்காரி என்பதை அவளால் காட்ட முடிந்தது. இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பாக அவரை மகிமைப்படுத்த அவளால் இயலாதபோதிலும், தன்னுடைய சொந்த வீட்டிற்குள் அவரை மகிமையும், கனமும்

செய்யமுடிந்தது. அவளால் அவருடைய புகழை எடுத்துக்கூறவோ, அவருடைய மகத்துவங்களை எடுத்துக்கூறி பாட முடியாவிட்டாலும், அவளுடைய இருதயத்திற்குள் அவளால் அவரைக் குறித்துப் பாட முடிந்தது, இன்னுமாக, அவர் மேல் நறுமண தைலத்தையும் அவளால் ஊற்றவும் முடிந்தது. இந்த நறுமண தைலமானது, அவளுடைய வீட்டை நறுமணத்தினால் நிரப்பியதோடல்லாமல், அவளுடைய நாள் துவங்கி தற்காலம் வரையிலும் காணப்படும் பெண் இனத்திற்குரிய கனத்திற்கு இனிமையான நறுமணத்தை வழங்குவதாகவும் இருக்கின்றது. இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று கர்த்தர் கூறினார். அதாவது, இவள் தன்னால் இயன்றமட்டும் தன்னுடைய பக்தியை/அன்பை வெளிப்படுத்தி உள்ளாள் என்றவிதத்தில் கர்த்தர் குறிப்பிட்டுள்ளார். "இந்த சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் இவள் செய்ததும் அறிவிக்கப்படும்" என்று நம்முடைய ஆண்டவரால் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் எவ்வளவு உண்மையாக இந்நாள்வரைக்கும் நிறைவேறிவருகிறது! இது, ஓர் அன்பான இருதயத்தைக் குறித்தும், இனிமையான குணலட்சணம் குறித்ததுமான ஓர் இனிமையான நினைவுகூருதலாகும். இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய ஜனங்களின் அனைவர் மீதும் ஊற்றப்பட்ட நறுமணத்தினிமித்தம் உண்டான புத்துணர்வு, ஆசீர்வாதம் மற்றும் சுகந்த வாசனையின் வெளிச்சத்தின் கீழ் பார்க்கும்போது, மரியாளுடைய நளதம் தைலம் விலையுயர்ந்ததாக இருப்பினும், அது உண்டுபண்ணின பலன்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அது அவ்வளவு விலையுயர்ந்ததாகத் தோன்றவில்லை.

## "இதை விற்று தரித்திருக்குக் கொடுத்திருக்கலாமே"

பணம் விரயமாக செலவழிக்கப்பட்டதைக் குறித்து யூதாஸ் எதிர்த்துப் பேசினான் என்று கூறப்படுகிறது. ஆயினும், அவன் தரித்திரனுக்காக இப்படி பரிந்துரையாமல், அவன் திருடனாக இருந்தபடியினால் தன் பணப்பையை நிரப்புவதற்கு இப்படி கூறினான் என்றும், நறுமணத்தைலத்திற்கு செலவிடப்பட்ட பணமானது, சீஷர்களின் கூட்டத்தாருக்கு பொருளாளராக இருக்கும் தன்னிடம் கொடுக்கப்பட்டிருந்தால், அதை தனக்காக தகாத விதமாய் பயன்படுத்தி இருக்கலாமே என்று வருத்தமடைந்தான் என்றும் சுவிசேஷங்கள் அறிவிக்கிறது. யூதாஸ்தான் அவர்கள் மத்தியில் முறுமுறுப்பை தூண்டிவிட்டான் என்பதில் ஐயமில்லை. மேலும், சீஷர் கூட்டத்தில் இருந்த சிலர், அவனுடைய கூற்றிற்கு சம்மதித்தார்கள், இப்படியிருக்க, மீதமிருந்த மற்ற அப்போஸ்தலர்கள், அவ்விஷயத்தைக் குறித்து எழுந்த சச்சரவில் பெரும்பான்மையாய்க் காணப்பட்டவர்களின் கருத்தினிமித்தம் இந்த வீண் செலவுகள் தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்திருக்க வேண்டும். ஆனால், இயேசுவோ, "அவளை தனியே விட்டுவிடுங்கள், என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இதை செய்தாள். தரித்திரர்கள் எப்போதும் உங்களோடு இருப்பார்கள், நானோ உங்களோடு எப்போதும் இரேன்" என்ற வார்த்தைகளைச் சொல்லி அவர்களுடைய வாயை அடைத்தார்.

இன்று காணப்படும் கர்த்தருடைய சீஷர்களில் அநேகர் சிக்கனம் தொடர்பான தங்கள் கருத்துக்களில் சில மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். நாம் வீண் செலவு செய்யாமல், எதிர்காலத்தைக் குறித்த சிந்தனையினிமித்தம் சேமிக்கிறவர்களாய் இருக்க வேண்டும் என்பதும், ஊதாரித்தனமாய் இல்லாமல், சிக்கனமாய் இருக்க வேண்டும் என்பதும் உண்மை தான். இப்படிப்பினை குறித்து நமது கர்த்தர் அடிக்கடி கூறியுள்ளார். உதாரணத்திற்கு, திரளான ஜனங்களைப் போஷித்த பிற்பாடு மீதியிருந்த துணிக்கைகளைச் சேர்த்து வைக்கும்படி அவர் கட்டளையிட்டார் என்று நாம் பார்க்கின்றோம். (மத்தேயு 14:20) ஆனால், சிக்கனம் சரியான விஷயங்களில் காணப்பட வேண்டும். கர்த்தருடைய விஷயத்தில், சிக்கனத்துடனும், கருமித்தனத்துடனும் காணப்படுகிறவர்கள் நிச்சயமாக இழப்புக்குள்ளாவார்கள். ஏனெனில், வேதவாக்கியங்கள் இப்படியாகக் காணப்படுகின்றது, அதாவது, "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு."

நம்முடைய சொந்த விஷயங்களில், சிக்கனமாய் இருப்பது குறித்தும், கர்த்தர் மற்றும் அவருடைய ஊழியம் தொடர்பான விஷயத்தில் ஏராளமாய் செலவுசெய்யத்தக்கதாக தாராளமாய் இருப்பது குறித்தும், நாம் கற்றுக்கொள்வது, நமக்குப் புதிய காரியமாய் உள்ளது. "இராஜாவினிடத்தில் நீங்கள் வரும்போது பெரிய பெரிய விண்ணப்பங்களை சுமந்து வாருங்கள்" என்று நாம் சில சமயம் பாடுகின்றோம், ஆனால், கிருபையின்

சிங்காசனத்தினிடத்தில் பெரிய பெரிய விண்ணப்பங்களைக் கொண்டு வருகிறவன் கர்த்தருக்காக நறுமணத்தைலமுள்ள பெரிய வெள்ளைக்கல் பரணியை தன்னோடுகூட கொண்டு வந்திருக்கின்றானா என்று கவனிக்க வேண்டும். அதாவது, கர்த்தருடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்கோ, அல்லது தன்னுடைய விண்ணப்பங்களை நறுமணத்தினால் பிரமாண்டமாக்கிக் கொள்வதற்கோ தைலமுள்ள பெரிய வெள்ளைக்கல் பரணியை அவன் கொண்டுவராமல் மாறாக, தான் ஏற்கெனவே பெற்றுள்ள ஆசீர்வாதங்களை உணர்ந்துக்கொண்டிருப்பதற்கான அடையாளமாய்க் கொண்டுவர வேண்டும். துதி மற்றும் நன்றிகளாகிய தைலம் நிரம்பின வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வருபவர்கள் பொதுவாக கொஞ்சம் விண்ணப்பங்களையே உடையவர்களாகக் காணப்படுவார்கள். மாறாக, தாங்கள் ஏற்கெனவே கடனாளிகளாய் இருக்கின்றார்கள் என உணர்ந்த நிலையில் காணப்படுகின்றனர், அதாவது, தாங்கள் பெற்றுக்கொண்ட தெய்வீக கிருபைகளுக்குச் சரியான பிரதிபலனை தாங்கள் ஒருபோதும் செலுத்த முடியாதவர்களாய் இருக்கின்றார்கள் என்று உணர்ந்து கொண்ட நிலையில் காணப்படுகின்றனர். தாங்கள் கேட்பது அல்லது விரும்புவதைக்காட்டிலும் அதிகமாயும் திரளாயும் கர்த்தருடைய கரங்களிலிருந்து நாளுக்கு நாள் பெற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதையும் உணர்ந்துகொள்கின்றனர். மேலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களே அல்லாமல் வேறொன்றிலும் இவர்களுடைய ஏக்கங்கள் திருப்தி அடையவதில்லை. இப்படிப்பட்டவர்களே, மரியாளின் நடத்தையைப் பின்பற்றி, ஆண்டவருக்கு நறுமணம் வீசும் தைலங்களைக் கொண்டுவருகின்றனர், அதாவது, தங்களுடைய ஜெபங்களையும் இருதயப்பூர்வமான நன்றிகளையும் அவரிடத்தில் கொண்டுவந்து எவ்விதமான விண்ணப்பங்களையும் கேட்காமல் மாறாக, தங்களால் தாங்க முடியாத அளவுக்கு போதகரிடமிருந்து பொழிந்துக்கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களாகிய சகல காரியங்களுக்கும் நன்றி தெரிவிக்கிறவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இக்காரியத்தைச் சரியாகக் கண்ணோக்கக்கூடியவர்கள், நம்மில் ஒருவரும் ஆண்டவருக்குக் கொடுக்கத்தக்கதாக, பாத்திரமான எதையும் பெற்றிருக்கவில்லை என்ற உணர்வையும் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள், அதாவது, நம்மிடத்தில் இருக்கும் சிறப்பானவைகளும், நம்முடைய மிக விலையேறப்பெற்ற பரிசுகள் அல்லது பலிகள் அவருக்குக் கொடுக்கத்தக்க பாத்திரமாய் இராமல் மாறாக, நம்முடைய இருதயங்களிலுள்ள உணர்வுகளை லேசாக வெளிப்படுத்துகின்றதாய் மாத்திரம் காணப்படுகின்றது என்ற உணர்வையும் நிச்சயமாகப் பெற்றிருப்பார்கள். அவர் அங்கீகரிப்பாரானால், நாம் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருப்போம், மேலும், அதே இனிமையான குரல் நம்மிடத்தில் "இவன் தன்னால் இயன்றதைச் செய்தான்" என்றும், "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்றும் கூறுவதை இறுதியில் நாம் கேட்பதற்கு எவ்வளவாய் எதிர்ப்பார்க்கின்றோம்.

## "தரித்திரர்கள் எப்பொழுதும் நம்மோடிருப்பார்கள்"

சுவிசேஷ யுகம் முழுவதிலும் தரித்திரம் தொடர்ந்துவரும் என்று நம்முடைய ஆண்டவர் தீர்க்கத்தரிசனமாக உரைத்த விஷயங்கள் பெருமளவில் நிறைவேறியுள்ளது. வருங்காலத்தை நாம் நோக்குகையில், அவருடைய ஆட்சியின் கீழ் எந்தவிதமான துக்கமும், தரித்திரமும் இனி இராது என்பதை நாம் அறிந்துக்கொள்ளும்போது, மகிழ்ச்சியடைகிறோம். "அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்" இந்த மாற்றமான சூழ்நிலைகள் அனைத்தும் மனித பரிணாமத்தினாலோ, மனித கோட்பாடுகளினாலோ, மனிதனுடைய சமுதாயம், கூட்டுறவு இயக்கங்கள் முதலியவைகளாலோ உண்டானவைகள் அல்ல. மனித சமுதாயத்தை ஒட்டுமொத்தமாக ஐசுவரியமுள்ளவர்களாகவும், சௌகரியமுள்ளவர்களாகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும் ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஏறெடுக்கப்பட்ட இத்தகைய பல்வேறு முயற்சிகள் கடந்த காலங்களில் தோல்வியைத் தழுவியுள்ளது, எதிர்க்காலத்திலும் தோல்வியைக் கொடுக்கக்கூடியதாகவே காணப்படும். மனுக்குலத்தின் ஒவ்வொரு அணுக்களும் பாவத்தினால், உரு சிதைந்துக் காணப்படுவதினாலும், இந்த உரு சிதைந்துபோன மனுக்குலத்தின் மேல், சுயநலம், இலட்சியங்கள் மற்றும் ஆசைகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதினாலும், பாவம் தொடர்ந்துக் காணப்படும் வரையிலும் வலிகள், பாடுகள், தேவைகள் தொடர்ந்துக் காணப்பட்டுக் கொண்டே இருக்கும். மாபெரும் மேசியா, தமது மாபெரும் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஆளுகைசெய்து, பாவத்தையும், நீதி

மற்றும் சத்தியத்திற்கு எதிராக இருக்கும் யாவற்றையும் ஒளித்துப்போட்டு, நீதியையும் சத்தியத்தையும் பூமியில் நிலைநாட்டும் வரையிலும் பாவம் தொடர்ந்துக் கொண்டிருப்பது நிச்சயமே.

அந்த மகிமையான நாள் வரும் வரையிலும், அனைவரும் இரவின் அழுகையின் வழியாகவே கடந்துச் செல்ல வேண்டியுள்ளது; இப்பொழுது பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேல் கடந்துச் சென்றிருந்தாலும், தரித்திரர்கள் நம்மோடு இருக்கின்றார்கள். மேலும், தரித்திரர்களில் அநேகர், கர்த்தருடைய அருமையானவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்தத் தரித்திரம், பல வழிகளில், இக்காலத்துச் சூழ்நிலைகளில் ஆசீர்வாதமாகவே நிரூபிக்கப்படுகிறது. தரித்திரமும் தரித்திரத்தைக் குறித்த பயமும் அநேகரை சரியான நிலையில் நிற்க உதவியுள்ளது. மேலும், வாழ்க்கையின் போராட்டத்தில் அவர்களைச் சுறுசுறுப்பாகவும் ஆக்கியுள்ளது, இவ்விதமாக, அவர்களுக்குள் ஜெயங்கொள்வதற்கு ஏதுவான குணநலன்களும் வளர்கின்றது. வேறு கோணத்தில் பார்க்கையில், தரித்திரம் இன்னும் நிலவிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையும், நம்முடைய பராமரிப்பும், உதவியும் தேவைப்படுகின்ற நிலையில் நமக்கு நண்பர்களும் அயலகத்தாரும், இருக்கின்றார்கள் என்ற உண்மையும், இப்பொழுது மிகுந்த சௌகரியமான சூழ்நிலைகளில் காணப்படுவோருக்கு ஆசீர்வாதமாக விளங்குகின்றது. இந்த உண்மைகளினிமித்தம் இப்படிப்பட்ட சௌகரியமான சூழ்நிலைகளில் காணப்படுவோருக்குள் அனுதாபமும், பொறுமையும், அன்பும், நன்மை செய்வதற்கான வாஞ்சையும், உதவி செய்வதற்கான வாஞ்சையும் வளர்கின்றது. ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், கர்த்தரோ அதை அவனுக்குத் திருப்பிக்கொடுக்கின்றார் என்று வாசிக்கிறோம். இந்த வாக்குத்தத்தம் மிகவும் ஐசுவரியமானது, மற்றும் இது எளிமையாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வார்த்தைகளுக்கு இசைவாக முதலீடு செய்வதற்கும், கர்த்தர் திருப்பிக்கொடுப்பதோடு அல்லாமல் மிகுந்த வட்டியையும் சேர்த்துக் கொடுக்கின்றார் என்று உணர்ந்துக்கொள்வதற்கும் அநேகர் அதிகம் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர் என்பதே வியப்பாய் உள்ளது.

## "நான் உங்களோடு எப்போதும் இருப்பதில்லை"

ஆண்டவரைக் கனப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் கொஞ்சமாகவே இருந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பின்பு, அவருடைய உபத்திரவங்கள் முடிவடைந்து, எல்லா தீமைகளையும், மனிதருடைய வல்லமையையும் கடந்து, அவர் மகிமையை அடையப்போகிறவராய் இருந்தார். ஆகவே, மரியாளின் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கும்பொழுது, (எல்லாம் முடிவடையப்போகும்) குறுகிய காலத்திற்குள் இவ்வளவு விலையுயர்ந்த தைலத்தை அவருக்கு செலவழிப்பது ஏற்றதாய் இருந்தது. அதாவது, அந்நாளில் காணப்பட்ட நியாயசாஸ்திரிகள் மற்றும் பிரதான ஆசாரியர்களின் பழிப் பேச்சுக்களும், தூஷணங்களும் விழப்போகிற அவருடைய தலையானது, அதாவது இன்னும் கொஞ்ச நாட்களில் முட்களினால் உண்டாக்கப்பட்ட கிரீடம் சூட்டப்படப்போகின்ற அவருடைய தலையானது, இப்பொழுதே அவருடைய உண்மையான மதிப்பையும், உண்மையான மகத்துவத்தையும், அவருடைய இராஜத்துவத்தையும், அவர் உண்மையில் தேவனுடைய குமாரன் என்று அறிந்த சொற்பமான ஜனங்கள் மத்தியில் ஒருவர் (மரியாள்), அவரைக் கனப்படுத்தப்படுவது பொருத்தமானதாக இருக்கும். இன்னுமாக, பாலஸ்தீனாவின் மலைப்பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் நடந்துத்திரிந்த அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக சில சமயம் களைப்புற்ற நிலையில் காணப்பட்ட அவருடைய அந்தப் பாதங்களை, இன்னுமாக இடுக்கமான மற்றும் கரடுமுரடுமான அர்ப்பணிப்பின் பாதையில் நடந்துக் கொண்டிருப்பவர்களின் பாதங்களுக்கு அடையாளமாய் இருக்கும் அவருடைய அந்த பாதங்களை, இன்னுமாக விரைவில் சிலுவையில் ஆணியினால் ஊடுருவப்படப்போகிற அவருடைய அந்தப் பாதங்களை, இப்பொழுதே போதகரின் அடிச்சுவட்டில் நடக்க நாடுகிறவர்களும், அவருடைய பாதங்களை விரும்புகிறவர்களும், அவருடைய பாதங்கள் மீது நம்பிக்கை வைக்கிறவர்களும், அவைகளைக் குறித்து உணர்ந்துக்கொண்டவர்களுமாயிருக்கிற ஜனங்களில் ஒருவரால் மேன்மையாகக் கனப்படுத்தப்படுவது பொருத்தமானதாய்க் காணப்படும்.

இக்காரியங்களைக் குறித்த சரியான கண்ணோட்டம் எது என்று நமக்குத் தெரியும்பொழுது, "அவளை தனியே விட்டுவிடுங்கள்," அவளைத் தொந்தரவு

செய்யாதிருங்கள், அவளிடமிருந்து அதை எடுத்துவிடாதீர்கள் என்ற விதத்தில் காணப்பட்ட நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு, நாமும் உண்மையில் இணங்க முடியும். அதாவது, அவள் தைலத்தைப் பயன்படுத்த முன் வந்தபோது, அவளைத் தடுத்து, அவளிடமிருந்து தைலத்தை எடுத்து, அதை விற்றுவிடலாம் என்று அப்போஸ்தலர்கள் விருப்பம் கொண்டிருந்ததுப்போது, அப்படியாக அவளைக் கட்டாயப்படுத்தி அப்போஸ்தலர்கள் அதை விற்றுப்போடாதபடிக்கு, நமது கர்த்தர் அவர்களைத் தடை பண்ணும் விதத்தில், அவளைத் தனியே விட்டுவிடுங்கள், அவளைத் தடைசெய்யாதிருங்கள், அவளிடமிருந்து அதை எடுத்துவிடாதீர்கள் என்பதுபோல் கூறினார்.

அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் மரியாளின் தைலம் ஒரு கிறிஸ்தவ குணநலனின் மிக அழகான அம்சங்களில் ஒன்றை அடையாளப்படுத்துகிறது. இயேசுவும், அப்போஸ்தலர்களும் தெரிவித்திருக்கிறபடி, கிறிஸ்துவின் முழுச்சபையும் விரிவான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றார்கள் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். தங்களுடைய தனிப்பட்ட விஷயங்களுக்கு அதிக விலை கொடுத்துச் செலவு பண்ணுகிறதைக்காட்டிலும், கிறிஸ்துவின் சரீரமாகிய அபிஷேகம் பண்ணப்பட்ட சபையாருக்கு ஊழியம் புரியும்படி, மிகுந்த விலை கொடுத்து நறுமணத் தைலம் வாங்குபவர்களாகிய மரியாள் வகுப்பார் இன்றும் நம்மோடு காணப்படுகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், கடந்த 18 நூற்றாண்டுகளாக, சபையார் மத்தியில் காணப்பட்டும் இருந்தார்கள். சரீரத்தின் தலைக்கு மாத்திரம் அபிஷேகமும், நறுமணமும், கனமும், ஆறுதலும், மகிழ்ச்சியும் அளிக்கப்படுவதோடு நிறுத்தப்படாமல், அன்று முதல் இதைப்போலவே அனைத்து அங்கங்களும், இந்த நளதத்தைலம் ஊற்றின மரியாள் வகுப்பாரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டவர்களாகவே காணப்படுகின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் ஆஸ்தி உடையவர்களாயும் அல்லது ஞானமுடையவர்களாயும், சொற்பொழிவாளர்களாயும் உள்ள வகுப்பாராய் எப்போதும் இருப்பதில்லை. மேலும், இவ்வகுப்பாரின் ஊழியம் ஆரவாரத்துடன் காணப்படுவதில்லை, ஆனால், அநேகருக்கு, அதிலும் விசேஷமாக உலகத்தாருக்கு இவர்களுடைய ஊழியம் முட்டாள்தனமாயும், வீணான காரியமாகவும் தோன்றும். ஆனால், கர்த்தரோ இவ்வகுப்பாருடைய ஊழியத்தை அங்கீகரிக்கின்றார். அதுபோல, இவர்களுடைய ஊழியத்தினால், ஆறுதலும், புத்துணர்வும் அடைந்த சரீரத்தின் அங்கங்களும் அங்கீகரிக்கின்றார்கள். இந்த மரியாள் வகுப்பார் மீது, ஆசீர்வாதம் தங்கியிருப்பதாக!

## "அங்கத்தினருக்குரிய கனம் - தலைக்குரிய கனம்"

சுவிசேஷ யுகம் முழுவதும் அங்கங்கள் இப்படியான விதத்தில் ஆறுதல் அளிக்கப்பட்டிருப்பார்களானால், யுகத்தின் முடிவில் இருக்கும் பாத அங்கங்கள் மீது இவ்விதமான சில குறிப்பிட்ட ஆசீர்வாதங்களை நாமும் எதிர்ப்பார்க்கலாம் அல்லவா? யுகத்தின் முடிவில் நாம் வாழ்ந்துக்கொண்டிருப்பதை நன்கு அறிந்திருக்கிறோம். தலை மகிமையடைந்துவிட்டது, சரீர அங்கத்தினர்களில் பலர் திரைக்கு அப்பால் சென்றுவிட்டனர், மீதமுள்ள பாத அங்கத்தினர்கள் மட்டுமே மாம்சத்தில் உள்ளார்கள். மரியாள் ஆண்டவரின் தலையையும், பாதங்களையும் அபிஷேகித்தக் காரியமானது, இக்காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நமக்கு ஓர் அருமையான நிழலாக உள்ளது. நாம் அனைவரும் மரியாள் வகுப்பாராகவும், அதேசமயம் பாத அங்கங்கள் வகுப்பாராகவும் இருக்க முடியும் என்ற தெய்வீக ஒழுங்கின் அருமையான அம்சம் இங்கு வெளிப்படுகின்றது. வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், மரியாள் இயேசுவின் பாதங்களுக்கு ஊழியம் புரிந்ததுபோன்று, கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கமும் சரீரத்தின் உடன் அங்கங்களுக்கு, அதாவது பாதங்களின் உடன் அங்கங்களுக்குச் சில விதங்களில் ஊழியம் புரிய முடியும். கர்த்தருடைய உண்மையான ஜனங்களில் ஒவ்வொருவனும், இக்காரியங்களைக் குறித்துப் படிக்கையில் தேவனுடைய கிருபையினால், தானும் மரியாள் வகுப்பாரில் சேர்ந்துக்கொண்டு, விலையேறப்பெற்ற நளதத் தைலத்தை வாங்கி, அதைச் சபையின் உண்மையான அங்கங்களாகிய கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பாதங்களின்மேல், தாராளமாய் ஊற்றவேண்டும் எனத் தீர்மானிப்பானாக. இங்குத் தைலம் அன்பையும், அனுதாபத்தையும், இரக்கத்தையும், தயவையும், பொறுமையையும், உதவி அளித்தலையும், ஆறுதல் அளித்தலையும் குறிக்கின்றது. இன்னுமாக இது, சகலவிதமான ஆவியின் கிருபைகள் மற்றும் கனிகள் நமக்குள் பெருகுவதையும், வளருவதையும்,

விருத்தியாகுவதையும் குறிக்கின்றது. இந்த ஆவியின் கனிகள் மற்றும் வரங்கள் ஒட்டுமொத்தமாக அன்பு என்னும் பெயருக்குள் அடங்குகின்றது.

அன்பான வாசகர்களே, மரியாள் இந்தப் பாடத்தில் செய்ததுபோல் நாம் செய்வது இயலாத காரியம் என்று நாம் அறிந்திருந்தாலும், இப்பொழுது உலகத்தில் காணப்படும் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளாகிய, அவருடைய சரீரத்தின் பாத அங்கங்களுக்கு, ஒருவருக்கொருவர் இதைக் காட்டிலும் மிக முக்கியமான காரியங்களைச் செய்வது ஒவ்வொருவருக்கும் உரிய சிலாக்கியமாய் உள்ளது. அன்று மரியாள் சொல்லர்த்தமாகப் பயன்படுத்தின தைலத்தின் நறுமணம் கொஞ்ச நேரத்திற்குப் பின் இல்லாமற்போனது. ஆனால், நாம் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் அன்பின் அடிப்படையிலான சிறு வேலைகள் மற்றும் உதவிகள் கர்த்தருடைய பார்வையில் ஒருபோதும் மதிப்பை இழந்துப்போவதுமில்லை, மற்றும் ஒவ்வொருவருடைய கணிப்பிலிருந்து நித்திய காலத்திற்கும் அதின் நறுமணங்கள் இழந்துப்போவதும் இல்லை. வாழ்க்கையில் சிறிய காரியங்கள், சில வார்த்தைகள்,சிறிய அன்பளிப்புகள், அன்பான பார்வைகள், அவ்வப்போது செய்யப்படும் உதவிகளாகிய இந்தச் சின்ன சின்ன விஷயங்களே, மற்றவர்களுக்கான நம்முடைய நறுமணத் தைலமாகவும், வாய்ப்புகளாகவும் இருக்கின்றன.

## "ஒருவரின் பாதங்களை ஒருவர் கழுவுதல்"

பண்டைய காலத்தில் விசேஷமாகக் கிழக்கத்திய தேசங்களில் பாதங்கள் கழுவும் காரியமானது, உடம்புக்கு ஆறுதல் அளிப்பதற்காகச் செய்யப்பட்டு வந்த வழக்கமாக இருந்தது. ஆகவே, ஒருவருக்கொருவர் பாதங்கள் கழுவும் விஷயமானது, மிகவும் தாழ்மையான/மதிப்புக் குறைவான ஊழியங்கள் மூலமாகக் கூட ஒருவருக்கொருவர் ஆறுதலையும், புத்துணர்வையும் அளிப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. எவ்வளவுதான் மதிப்புக் குறைந்த ஊழியங்களாக இருப்பினும், அதன்மூலம் ஒருவருக்கொருவர் ஆறுதலையும், உதவியையும் அளிக்கக்கூடுமானால் அப்படிப்பட்ட மதிப்புக்குறைவான வேலைகள் மூலம், ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகளினிமித்தம் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதே கர்த்தருடைய பாடத்தில் அடங்கும் சாராம்சமாகும். இக்காரியத்தை நம்முடைய பாடத்திற்குப் பொருத்திப் பார்க்கலாம் . மரியாள், நம்முடைய ஆண்டவரின் பாதத்தைத் தைலத்தினால் கழுவினாள். சபையில் உள்ள மிகுந்த பயபக்தியும், அன்பும் உள்ள வகுப்பாராகிய மரியாள் வகுப்பார், ஒருவருக்கொருவர் உதவி செய்கிறவர்களாகவும், ஒருவருக்கொருவர் பாதங்களைக் கழுவக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இன்னுமாக, இவைகளை அவர்கள் முரட்டுத்தனமாயும் மற்றும் அருவருப்பாயும் கருதிச் செய்யாமல், ஒருவருக்கொருவர் அன்பினாலும், மரியாதையினாலும், ஏவப்பட்டு, ஒருவருக்கொருவருடைய பாதங்களை, மரியாளுடைய நளதத்தைலம் அடையாளப்படுத்தும் இரக்கம், அனுதாபம், அன்பு மற்றும் உணர்ந்துகொள்ளும் தன்மையினால் கழுவுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். இன்னுமாக, இவர்கள் ஒருவருக்கொருவர் அன்புடனும், அக்கறையுடனும் ஆறுதல் அளிக்க வேண்டிய காரியத்திற்கு, மரியாள் தனது தலை மயிரினால் ஆண்டவருடைய பாதங்களைத் துடைக்க பயன்படுத்தின விஷயம், அடையாளமாய்க் காணப்படுகிறது.

இந்த அன்பு, அதாவது, இந்த நளதத் தைலம் ஊற்றின மரியாளின் அன்பும், இரக்கமும் கர்த்தருடைய சரீர அங்கங்கள் மத்தியில் வளர்ந்துக்கொண்டிருப்பதற்கான சில ஆதாரங்களை நம்மால் பார்க்க முடிகின்றது. மேலும், கர்த்தருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கு எதிராகக் காணப்படும் உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனின் விரோதத்தை இவர்கள் உணர்ந்துக்கொள்கையில், இவர்கள் ஒருவருக்கொருவர் இன்னும் அதிகமான பயபக்தியுடன் காணப்பட்டு, அன்பினாலும், அனுதாபத்தினாலும், பராமரிப்பினாலும், ஒருவரையொருவர் இன்னும் அதிகமாகக் கனப்படுத்தி, ஒருவருக்கொருவர் அன்புடன் பேசியும், கிரியைகள் புரிந்த நிலையிலும் காணப்படுகின்றனர். இவைகளையெல்லாம் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இப்படியாக, அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஆவியின் கனிகளில் வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பதை நாம் அறிந்துக்கொள்ளும்போது மகிழ்ச்சியடைகிறோம். நாம் வீட்டை அன்பின் நறுமணத்தினால் முழுமையாய் நிரப்பும் வரையிலும், கிறிஸ்தவர்கள் எப்படி ஒருவருக்கொருவர் அன்பாய் இருக்கின்றார்கள் என்று முழு உலகமும் அறிந்துக்கொள்ளும் வரையிலும் அதாவது, குறுகினப் பார்வையில் அல்லாமல் பிதாவை அன்பு கூறுகிற அனைவர்

மேலும் மற்றும் பிதாவின் வழிகளில் நடப்பதற்கு நாடுகின்ற அனைவர் மேலும் கிறிஸ்து கொண்டிருக்கும் அன்பை, பரந்த பார்வையில் முழு உலகமும் புரிந்துக்கொள்ளும் வரையிலும், இந்த நற்கிரியைகள் அனைத்தும் தொடர்ந்துக் கொண்டிருப்பதாக.

## "நாம் இப்பொழுதே செய்வோம்"

ஒருவேளை மரியாள், நளதத் தைலத்தைக் கர்த்தருக்குப் பயன்படுத்தும் விஷயத்தில் ஒருவாரம் கழித்துச் செய்யலாம் என்று தாமதித்திருப்பாளேயானால், அவள் அதைக் கர்த்தருக்கு பயன்படுத்த முடியாமல், தனக்கே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். ஏனெனில், இந்தச் சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குள், நமது கர்த்தர் அடக்கம் பண்ணப்பட்டுவிட்டார். கல்லறையும் முத்திரையிடப்பட்டிருந்தது; கல்லறைக்கு முன்பாக உரோம போர்ச்சேவகர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஆக மொத்தம், அவருடைய மரித்துப்போன சரீரத்திற்குக்கூட அதனை ஊற்றுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. கர்த்தர் அவளுடைய விருந்தாளியாக வந்திருந்தபோது ஆண்டவரிடத்தில், தான் கொண்ட பக்தியை அவள் வெளிப்படுத்தினது எவ்வளவு நல்ல காரியமாக இருந்தது. கிறிஸ்துவின் பாத அங்கத்தினர்களும் வெகு சீக்கிரத்தில் அவர்கள் ஓட்டத்தை முடித்துத் திரைக்கு அப்பால் கடந்துச் செல்வார்கள்.

நம்முடைய தைலமுள்ள வெள்ளைக்கல் பரணிகளை எடுத்துக்கொண்டு வருவதிலும், அவைகளைக் கிறிஸ்துவின் பாத அங்கங்களாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள நமது அருமையானவர்கள் மேல் ஊற்றுவதிலும், நாம் தாமதம் காட்டக்கூடாது என்ற ஞானம் இங்கு நமக்கு விளங்குகின்றது. ஒருவேளை நாம் தைலத்தை ஊற்றும் நபர்கள் நம்மைக் கவனிக்காமல் இருந்தாலும் அல்லது நம்மைக் குறித்துச் சிந்திக்காமல் இருந்தாலும் அல்லது நம்மை பாத அங்கங்களில் ஒருவராகக் கருதி நம்மேல் தைலத்தை அவர்கள் ஊற்றாமல் இருந்தாலும் சரி, நாம் நம்முடைய பங்கை செய்வோமாக; நாம் மரியாள் வகுப்பாராக இருப்போமாக. சீஷர்களில் சிலர் நம்முடைய அன்பு மற்றும் பக்தியின் விஷயங்களில், நாம் வரம்புமீறிச் செயல்படுகின்றோம் என்று தவறாய்க் குற்றம் சாட்டினாலும் சரி, அவளைத் தனியே விட்டு விடுங்கள், அவள் தன்னால் இயன்றதை செய்தாள் என்று மீண்டுமாக (அன்று எச்சரித்ததுபோல்) கர்த்தர் தங்களிடத்தில் கூறுவார் (எச்சரிப்பார்) என்பதைப் புரிந்துக்கொள்ளாமலேயே நம்மைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தாலும் சரி, நாம் மற்றவர்கள் மீது நமது இனிமையான நறுமண தைலங்களை ஊற்றிக்கொண்டிருப்போமாக. கர்த்தருடைய சபையாகிய விசுவாச வீட்டாரும், தைலத்தின் இனிமையான வாசனையினால் நிறைந்து இருப்பார்களாக. இந்த நளதத் தைலமும், அதினால் செய்யப்படும் அபிஷேகமும் நம்முடைய கர்த்தருடைய கணிப்பில், நம்மால் செய்ய இயன்ற காரியமாகவே கருதப்படுகின்றது. இதைக்காட்டிலும், வேறு எதுவும் அதிகமாகவோ அல்லது மேன்மையானதாகவோ அவருடைய பார்வையில் இருப்பதில்லை. இந்த நளதத்தைலமும், அதினால் பண்ணும் அபிஷேகமும், அன்பை அதாவது மகாபெரும் அன்பைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கிறது. மேலும், இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது.

"ஒருவரையொருவர் கவனியுங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதாவது, நாம் ஒருவரில் ஒருவர் காணப்படும் பலவீனங்களைக் கவனிக்க வேண்டும், ஒருவருக்கொருவர் ஏற்படும் சோதனைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும், ஒருவருக்கொருவர் ஏற்படும் பரீட்சைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும்; உலகம் மாம்சம், மற்றும் எதிராளியானவனுக்கு எதிராக யுத்தம் பண்ணுவதில் ஒருவருக்கொருவர் ஏறெடுக்கும் பிரயாசங்களைக் கவனிக்க வேண்டும்; உள்ளேயிருந்தும், வெளியிலிருந்தும் வரும் எதிர்ப்புகளுக்கு எதிராக, நெருக்கமான வழியில் நடந்துக்கொண்டிருக்கையில், ஒருவருக்கொருவர் ஏற்படும் உபத்திரவங்களைக் கவனிக்க வேண்டும். மேலும், இப்படியாக நாம் கவனித்துக் கொண்டு வரும்போது, நம்முடைய இருதயங்களில் இரக்கம் உண்டாகும்; இந்த இரக்கமானது ஒரே சரீரத்திலுள்ள உடன் அங்கங்களாகிய அனைவர்மேலும், மிக விலையேறப்பெற்றதும், தூய்மையானதும், சிறப்பானதுமான நளதத்தைலத்தை ஊற்றுவதில் மகிழ்ச்சிக்கொள்ளும்.

**"ஊக்குவிப்பவர்களுடைய சமுதாயம்"** என்ற மாபெரும் சமுதாயத்தைக் குறித்து ஒருவர் பேசியுள்ளார். இந்தச் சமுதாயமானது, ஜீவியத்தின் பாதையில் சோர்ந்துப்

போனவர்களையும், கால்கள் தள்ளாடிப் போனவர்களையும், தூக்கி நிறுத்துவதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் மிகுதியான உதவிகளைச் செய்து வருகின்றது. இந்தச் சமுதாயத்தின் அங்கங்களைப் பார்க்கும் போது, அது ஒரு மாபெரும் சமுதாயம் போன்று தோன்றவில்லை. ஆனால், இச்சமுதாயத்திடமிருந்து உதவியும், உற்சாகமும் பெற்றவர்களுடைய பார்வையிலும், கர்த்தருடைய பார்வையிலும் இது மாபெரும் சமுதாயமாகும். நளதத் தைலம் ஊற்றின மரியாளை, இந்த "ஊக்குவிப்பவர்களுடைய சமுதாயத்தில்" முக்கியமான அங்கமாகச் சொல்லப்படலாம். தாம் படக்கூடிய பாடுகளையும், உபத்திரவங்களையும், சிலுவை மரணத்தையும் குறித்து எண்ணிக்கொண்டிருந்த நம்முடைய ஆண்டவருக்கு, மரியாள் வெளிப்படுத்தின அன்பு மற்றும் பக்தியின் கிரியைகள் எவ்வளவு விசேஷித்த ஊக்கத்தையும், புத்துணர்வையும் அளித்திருக்க வேண்டும் என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. சிலர் மாத்திரமே அவரைப் புரிந்துக் கொண்டிருந்தார்கள். சுற்றியிருக்கும் சீஷர்கள் கூடச் சூழ்நிலையைப் புரிந்துக்கொள்ளவில்லை. அவர்மேல் நம்பிக்கை கொண்டும், அவரிடத்தில் அன்பு வைத்திருந்த மரியாளாகிலும் அங்கு அவருக்குக் காணப்பட்டாள். இது, அவருடைய பிரயாணத்தின் எஞ்சியுள்ள நாட்களில், அவருக்குத் தைரியம் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## "உண்மை"

நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் அளிப்பதற்கும், உற்சாகமூட்டுவதற்குமென, தற்கால வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதின் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கும் விதத்தில் ஒரு எழுத்தாளர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"உங்களுடைய நண்பர்கள் மரிப்பது வரையிலும் அன்பும், இரக்கமும் உள்ள வெள்ளைக்கல் பரணியை முத்திரையிட்ட நிலையிலேயே வைத்துவிடாதீர்கள். உங்களுடைய நண்பர்களுடைய ஜீவியத்தைச் சந்தோஷத்தினால் நிரப்புங்கள். அவர்களுடைய செவிகள் கேட்கும் நிலைமையில் இருக்கும்போதே, உற்சாகமான வார்த்தைகளையும், மகிழ்ச்சியான வார்த்தைகளையும் பேசுங்கள்." "ஒருவேளை என்னுடைய நண்பர்கள், என்னுடைய சரீரத்தின்மேல் ஊற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் அனுதாபமும், பாசமுமாகிய நறுமணத்தைலங்களினால் நிரப்பப்பட்ட வெள்ளைக்கல் பரணிகளை எங்கோ மூலையில் வைத்திருப்பார்களானால், எனக்கு அவைகள் தேவைப்படும் போது, நான் அவைகளினால் புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையத்தக்கதாக அவர்கள் அதை என்னுடைய சோர்ந்துப் போன மற்றும் உபத்திரவமான நேரங்களில் என்னிடத்தில் கொண்டுவந்து அவைகளைத் திறக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அன்பு மற்றும் அனுதாபத்தின் இனிமைகள் இல்லாத ஓர் ஜீவியத்தை வாழ்வதைப் பார்க்கிலும், பூக்குவியல்கள் இல்லாத எளிமையான சவப்பெட்டியை பெற்றுக்கொள்வதில் நான் திருப்தியாய் இருப்பேன்.சவப்பெட்டியின் மீதுள்ள பூக்களினால், என்னுடைய கடந்தகால சோர்வின் மத்தியிலான வாழ்க்கைக்கு நறுமணம் வீச முடியாது."

## "நறுமணம் வீசும் பலி"

சபை ஜனங்கள் ஒருவருக்கொருவர் பண்ண வேண்டிய ஊழியங்களைக் குறித்துப் பேசுகையில், நம்முடைய பலியானது, தேவனுக்கு முன்பு சுகந்த வாசனையாக இருக்கும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; மேலும் சுவிசேஷமானது, "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறது" என்றும் குறிப்பிடுகின்றார். அதாவது, நற்கிரியைகள், அன்பான வார்த்தைகள் மற்றும் நல்ல முயற்சிகளைச் சரியான நோக்கத்தையுடைய இருதயங்கள் மட்டுமே புரிந்துக்கொள்ள முடியும். அதேநேரத்தில், தவறான மனநிலையைக் கொண்டிருப்பவர்கள் எல்லா நன்மையான காரியங்களையும், தவறாகவே புரிந்துக்கொள்வார்கள். அவர்களுக்கு அது கெட்ட வாசனையாகவே இருக்கும். நம்முடைய அனுபவங்களில் இவைகளை நாம் அடிக்கடி காணலாம். கிறிஸ்துவின் பாதங்களுக்கு நாம் ஊழியம் செய்வதற்கென நம்மால் முடிந்த சிறந்த பிரயாசங்களை எடுத்தாலும், சிலர் அதினால் ஆறுதலும், புத்துணர்வும் அடைந்துள்ளார்கள்; இன்னும் சிலர் கோபமும் அடைந்துள்ளனர்; அதாவது, சிலருக்கு நம்முடைய இந்தப் பிரயாசம் சுகந்த வாசனையாகவும், வேறு சிலருக்குக் கெட்ட

வாசனையாகவும் இருக்கின்றது. ஏனெனில், இவர்களுக்குக் கர்த்தரிடத்திலும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களிடத்திலும் தவறான இருதய நிலைமையே காணப்படுகின்றது. ஒருவேளை, அவர்களுடைய இலட்சியங்கள் அல்லது பேராசைகள், குறிக்கிடப்பட்டதினாலும் கூட அவர்களுக்கு இந்தப் பிரயாசங்கள் கெட்ட வாசனையாக இருந்திருக்கலாம்.

பெத்தானியாவிலும் அப்படியே நடந்தது. நறுமணம் வீடு முழுவதும் பரவினது. மேலும், இந்த ஊழியத்தின் விளைவாக, மரியாளுக்கு வந்த ஆசீர்வாதமும், புத்துணர்வும், யூதாசுக்கு மிக வித்தியாசமான தாக்கத்தை உண்டுபண்ணிற்று. யூதாசோ கோபமடைந்தான்; அவனுக்குள் காணப்பட்ட சுயநலம், கர்த்தருக்குச் செய்யப்பட்ட கனத்தைப் புரிந்துக்கொள்வதைத் தடைபண்ணிற்று. அவன் தன்னைப்பற்றியும், இதை விற்றால் என்ன கிடைக்கும் என்பது பற்றியும்தான் சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆகவே, அவனைப் பொறுத்தவரையில் இந்த அனைத்து விஷயங்களும் வீண் செலவுகளே. அவனுடைய தவறான சிந்தையினிமித்தம் அவனுடைய இருதயத்திற்குள் வந்த கசப்பானது, அவன் அதற்குப் பிற்பாடு நேராகப் பிரதான ஆசாரியரிடத்திற்குச் சென்று இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்கென, பேரம் பேசின விஷயம் குறித்த பதிவுகளில் வெளியரங்கமாகுகின்றது. அன்பான சகோதர சகோதிரிகளே, நம்முடைய இருதயங்கள் ஆண்டவர் மேல் அன்பான நோக்கம் உடையதாக இருக்கின்றதா அல்லது சுயநலமான நோக்கத்துடன் இருக்கின்றதா என்றும், அவருடைய நாமத்தினால் அவருடைய சரீரத்திற்குச் செய்யப்பட்ட அனைத்தையும் உணர்ந்துக்கொண்ட நிலையில் இருக்கின்றோமா என்றும், நாம் சுயத்திற்காக நாடுபவர்களாக இல்லாமல் காணப்படுகின்றோமா என்றும், கவனிக்கக் கடவோம். இல்லையேல், யூதாசுக்கு இருந்ததுபோல, நமக்கு இந்த நறுமணங்கள் மரணத்துக்கு ஏதுவான மரண வாசனையாக இருந்துவிடும்.

நம்முடைய பாடத்தின் முடிவிற்கு வருவோம். அநேகமாக இந்தச் சம்பவத்திற்கு மறுநாள், இயேசுவையும், லாசருவையும் காணும்படியாக யூதர்கள் கூட்டங்கூடத் துவங்கியிருக்க வேண்டும். அனைவரின் நலனுக்காக ஒருவர் மரிப்பது நலம், என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும். ஆதியிலிருந்து இந்நாள் வரையில், "நன்மையின் காரணத்திற்காகவே," சத்தியத்திற்கு எதிரான செயல்கள் செய்யப்பட்டு வந்ததுள்ளது. இப்படிப்பட்ட ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கக்கடவோம். சுயநலமான அன்பை அல்ல, ஆண்டவர் மீதும், மற்ற அனைத்துச் சகோதரர்கள் மீதும் உண்மையான அன்பை உத்தமமாகச் செலுத்துவோம்; இல்லாவிடில், நாம் எப்படிப்பட்ட தீமைகளுக்குள் வழிநடத்தப்படுவோம் என்று நமக்குத் தெரியாது.

---

**R1794**

# "நமது கர்த்தருடைய நிழலான வெற்றி"

## மத்தேயு 21:1-17; லூக்கா 19:29-48; யோவான் 12:12-19; மாற்கு 11:1-11.

"ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்."—மாற்கு 11:9.

இப்பாகத்தில் நம்முடைய மனங்களை, நமது கர்த்தருடைய மாம்ச ஜீவியத்தின் கடைசி நாட்களில் நடந்திட்ட வேதனையான சம்பவங்களுக்கும், அவருடைய மனுஷீக ஜீவன் அவர் சிலுவையில் அறையப்படுவதன் மூலமாய் முடிவடைந்ததற்கும், பின்னர் மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்களை உடையவராகவும், இரட்சிப்பதற்கும் வல்லமையுள்ளவராகவும் காணப்பட்ட உயிர்த்தெழுந்த கர்த்தரிடத்திற்கும் படிப்படியாகக் கொண்டுச் செல்கின்றது. முந்தின பாகத்தில் ஜனங்கள் மத்தியில் அவருடைய அற்புதங்களினால் ஈர்க்கப்பட்டு அவருடைய போதனைகளைக் குறித்து ஆச்சரியமடைந்து, அவருடைய போதனைகளினால் கவரப்பட்டு காணப்பட்ட ஜனங்கள் மத்தியில் அவர் பிரபலமடைந்து வருவது அதிகரித்து வருவதைப் பார்த்தோம். ஜனங்களோடுகூட, அவருடைய வாயினின்று புறப்பட்டு வந்த கிருபையான வார்த்தைகளினிமித்தம் நாமும் ஆச்சரியமடைந்து இருந்தோம், மற்றும் அவருடைய வார்த்தைகளை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தோம், மேலும் தேவனுடைய ஆவியானது, நமக்கு அவருடைய ஆலோசனையாகிய தைலத்தை அளித்தபோது, நம்முடைய இருதயங்கள் நமக்குள்ளாக்

கொழுந்து விட்டு எரிந்தன. இப்பொழுது நாம் அவருடைய மனுஷீக கடைசி சில நாட்களுக்குள்ளாக, அவரோடுகூட மனதளவில் பிரவேசிக்கையில் அந்த வேதனையான சம்பவங்கள் நம்முடைய இருதயங்களை, நமக்காக அனைத்தையும் இலவசமாய்ப் பலியாக்கின. அவருடைய ஐசுவரியமான அன்போடும், பரிவோடும் நெருங்கின உறவிற்குள்ளாகவும், புரிந்துகொள்ளுதலுக்குள்ளாகவும் கொண்டு வருவதாக.

அவர், தாம் மேசியா என்று உரிமைப்பாராட்டின விஷயத்தின் உண்மைக்குச் சாட்சி பகர்ந்திட்ட அவருடைய 3½ வருடக் காலப்பகுதிக்கொண்டதும், லாசருவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினதோடு நிறைவடைந்ததுமான, அவருடைய பொதுப்படையான போதனைகளும், வேலைகளும், வெற்றிகரமாய் முடிந்தது போன்று காணப்பட்ட தோற்றமானது, அவருடைய சீஷர்கள் மற்றும் இஸ்ரயேலர்களில் பலரின் நம்பிக்கைகளை உயிரோட்டம் அடையச் செய்தது; அதாவது இப்பொழுது தங்கள் இராஜா, தங்கள் மேசியாவாக உண்மையாய் வந்துள்ளார் என்றும், தீர்க்கத்தரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்த இஸ்ரயேலின் மகிமை சீக்கிரத்தில் காணப்படும் என்றும் எண்ணினார்கள். இப்படியாகப் பொது ஜனங்களுடைய மனநிலை இருக்கையில், கர்த்தர், இராஜா ஸ்தானத்தை எடுக்க பொதுப்படையாக முயற்சிப்பதன் மூலம், சகரியா 9:9-ஆம் வசனத்தின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றுவதற்காக தமக்கு வாய்ப்பு இருப்பதைக் கண்டார். சூழ்நிலைகள் சாதகமாய் இருந்தது மாத்திரமல்லாமல் வேளையும் வந்திருந்தது.

தேவன் அவர்களுடைய பிதாக்களுடன் பண்ணின உடன்படிக்கையின்படி, இராஜ்யத்தின் சுவிசேஷமானது முதலாவதாக யூதர்களுக்கே கொடுக்கப்பட்டது. எனினும் அவர்கள் தேசமாகவே சுவிசேஷத்தை உணர்ந்துகொள்ளவோ, ஏற்றுக்கொள்ளவோ மாட்டார்கள் என்பதை முன்னமே தேவன் அறிந்திருந்தார்; மற்றும் ஜனங்களில் கொஞ்சமானவர்கள் மாத்திரமே கிருபையின் உடன்படிக்கைக்குத் தகுதியானவர்களாக இருப்பார்கள் என்றும், மீதமானவர்கள் (அவர்களுடைய தவறானக் கருத்துக்களினாலும், இருதயக் கடினத்தினாலும்) குருடாக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்றும், மாபெரும் உடன்படிக்கையின் ஆசீர்வாதமானது புறஜாதியார்களில் சிலரால் உணர்ந்துகொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆபிரகாமின் சந்ததியாராகக் கருதப்படுவார்கள் என்றும், தேவன் தம்முடைய தீர்க்கத்தரிசி மூலமாய் முன்னறிவித்துள்ளார். இந்தப் புறஜாதியிலிருந்து வந்தவர்கள், மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாய் இராமல், மாறாக ஆவியின்படி, ஆபிரகாமின் விசுவாசத்தைப் பெற்றிருப்பதினால் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருப்பார்கள்; ஏனெனில் தேவன் கல்லிலிருந்து கூட ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவராக இருக்கின்றார் என்று இயேசு கூறினார். ரோமர் 9:27; ஏசாயா 10:22,23; ரோமர் 11:7, 11, 12; அப்போஸ்தலர் 13:46; கலாத்தியர் 3:9, 16, 28, 29; மத்தேயு 3:8, 9-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

தேவன் இஸ்ரயேல் ஜனங்களுடைய பிதாக்களுடன் பண்ணின இந்த உடன்படிக்கையின் காரணமாகவும், மற்றும் மற்றத் தீர்க்கத்தரிசனங்களுடைய அறிவுறுத்தலின் காரணமாகவும், இயேசு தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு முன்னதாக, அவர்களுடைய இராஜாவெனக் கையளித்தார்/முன்வைத்தார்; ஆயினும் ஜனக்கூட்டத்தார் அவருக்கு இராஜரிகமான வரவேற்புக் கொடுத்து, ஓசன்னாக்கள் கூறி, வந்தனம் சொல்லி வரவேற்றாலும், அவர்களுடைய தவறான போதகர்களால், அவர்களுடைய நிலையற்ற மனங்கள் தடுமாறும் என்றும், எதிர்ப்பு வரும்போது, ஜனங்கள் தாங்கள் கூறின வந்தனங்களுக்கு ஏற்ப நடக்க விருப்பமற்று இருப்பார்கள் என்றும், இன்னும் சில நாட்களுக்குள்ளாக, “இவரைச் சிலுவையில் அறையும்! இவரைச் சிலுவையில் அறையும்!” என்று கூக்குரலிடுவார்கள் என்றும் இயேசு அறிந்திருந்த போதிலும், தம்மை அவர்களுக்கு முன்பாக இராஜாவெனக் கையளித்தார்/ முன்வைத்தார். (யோவான் 12:1, 12, 13; 19:6, 7, 14, 15).

விளைவு/முடிவு என்னவாக இருக்கும் என்று அறிந்திருந்த போதிலும், ஏன் இப்படி இயேசு இராஜரிக அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும், இந்தச் செயல்பாட்டைச் செய்தார்? என்று கேள்வி கேட்கப்படலாம்; வரவிருக்கிற நன்மையான காரியங்களுக்கான மாபெரும் நிழல்களின் ஒரு பாகமாகவே, இச்செய்கை செய்யப்பட்டது என்று நாம் அப்போஸ்தலர்களுடைய போதனைகளை வைத்துக்கொண்டு பதில் தெரிவிக்கின்றோம்.

இப்படியாக இயேசு எருசலேமுக்குள் வெற்றி விஜயம் கொடுத்ததும், அதன் காலக்கணக்குக் காரியமும், யூத யுகத்திற்கான நிஜமாய்க் காணப்படும் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில், கிறிஸ்து இராஜாவாக வருவதைச் சித்தரித்துக் காண்பிக்கின்றது; யூத யுகமும், சுவிசேஷ யுகமும், காலங்கள் மற்றும் சம்பவங்கள் விஷயத்திலும் இணையானவைகளாக இருக்கின்றன. இந்த இணையின்படி கி.பி. 1878 எனும் வருடமானது, இந்த யுகத்தின் இராஜாவாகிய நம்முடைய உயிர்த்தெழுந்த கர்த்தர், தம்முடைய மாபெரும் வல்லமையை எடுத்துக்கொள்வதற்கும், தம்முடைய ஆளுகையை ஆரம்பிப்பதற்குமான காலமாக இருக்கின்றது.

இது நிறைவேறியுள்ள உண்மையாக இருக்கின்றபடியினால் இதை நாம் தயக்கம் இல்லாமல், தெரிவிக்கின்றோம். தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர் மற்றும் சபையின் கீழ், பூமியில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் சமீபித்துள்ளது என்பதற்கு, அதிக உறுதியான தீர்க்கத்தரிசனங்களில், நமக்கு மிகுதியான நிரூபணங்கள் காணப்படுகின்றன. இந்த உண்மைக்கு கிறிஸ்தவர்கள் மாத்திரமல்லாமல், முழு உலகத்தாரும் கூட, கேட்பதற்கும், செவிசாய்க்கும் அளவுக்கும் ஞானமுள்ளவர்களாய்க் காணப்படுவார்களானால், இன்னும் திரளான சத்தியங்களுக்கு வழி நடத்தப்படுவார்கள்.

அநேகர் அவரது வருகை பற்றின தவறான கருத்துக்கள் கொண்டிருப்பதினால், கர்த்தருடைய பிரசன்னம் பற்றின உண்மைக்குக் குருடர்களாய் இருக்கின்றார்கள் என்பது வேதவாக்கியங்களில் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. அவரை மாம்சத்தில் பார்க்கலாம் என்றும், மாம்ச கண்களுக்குப் புலப்படும் விதத்தில் சொல்லர்த்தமான மேகங்களில், சொல்லர்த்தமான எக்காளத்தின் சத்தத்தினால் அவரது வருகை அறிவிக்கப்பட்டு, அவர் வருவார் என்றும் அநேகர் எதிர்ப்பார்த்திருப்பதினால், அவர் மாம்சத்தில் இல்லாமல், மாறாக மாம்ச கண்களுக்குப் புலப்படாத ஆவியின் ஜீவியாகவும், அதே வேளையில் அதிக உறுதியான தீர்க்கத்தரிசன வார்த்தைகள் மூலமாக, விசுவாசக் கண்களுக்குத் தெளிவாய்ப் புரிந்துக்கொள்ளத்தக்கதாகவும், வந்து இப்போது இருக்கின்றார் என்பதையும் அவர்களால் உணர்ந்துக்கொள்ள முடியவில்லை; மற்றும் முழு உலகத்தின் மீது இருளை இப்பொழுது மிக விரைவாக அளித்துக்கொண்டிருக்கும் உபத்திரவமாகிய மேகங்கள் மத்தியில், அவரது வந்திருத்தலையும், வல்லமையையும் உணர்ந்துக்கொள்ள முடியாமலும் காணப்படுகின்றனர். எனினும் இவைகள் அனைத்தும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்கள் யாவருக்கும், மிக முக்கியமான உண்மைகளாக இருக்கின்றது. "உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" என்ற வார்த்தைகள் உண்மையுள்ளவர்களாகிய உங்களுக்கே சொல்லப்பட்டுள்ளது (லூக்கா 21:28). அனலுமின்றி, குளிருமின்றிப் போயுள்ள, கிறிஸ்தவர்கள் என்று தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்களுக்கும், மற்றும் ஒடுக்கப்படுபவர்களின் கூக்குரல்களையும், துன்பப்படுபவர்களின் துயரத்தையும் பொருட்படுத்தாமல், உலக இன்பங்களினால் தங்கள் ஆத்துமாக்களுடைய ஆசைகளைத் திருப்திப் பண்ண நாடுபவர்களாகிய உலகத்தாருக்கும், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்ற வார்த்தைகள் சொல்லப்பட்டுள்ளது (தானியேல் 12:1).

"என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" (மத்தேயு 21:13) என்று சொல்லி, ஆலயத்தில் காசுக்காரர்களுடைய பலகைகளைக் கவிழ்த்துப்போட்டதான கர்த்தருடைய அதிகாரப் பூர்வமான செய்கையானது, நிழலான செய்கையாகும்; இது இந்த யுகத்தினுடைய முடிவில், தேவனுடைய விசுவாச வீட்டார் என்று அறிக்கைப் பண்ணுகிறவர்களிடத்தில் ஆரம்பிக்கும் நியாயத்தீர்ப்பையும், சத்தியத்தை வியாபாரம் பண்ணுபவர்களுக்கு எதிரான அவருடைய மாபெரும் கோபத்தையும், சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. (மத்தேயு 21:12, 13; 1 பேதுரு 4:17).

பின்னர் ஆலயத்திற்கு அவரோடு வந்திருந்த குருடர்களையும், சப்பாணிகளையும் அவர் சொஸ்தப்படுத்துகின்ற காரியமானது, எவ்வாறு சபையில் ஆவிக்குரியவற்றில் குருடர்களாயும், சப்பாணிகளாயும் இருந்திட்டவர்கள், அவருடைய சுகமாக்கும் தொடுதலினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய்

இருக்கின்றது. "குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (மத்தேயு 21:14; வெளிப்படுத்தல் 3:18, 19).

(இன்றும் கர்த்தரினால் சொஸ்தப்படுத்தப்பட்ட குருடர்களுக்கும், சப்பாணிகளுக்கும் எதிராக பிரதான ஆசாரியர்கள் போன்றதான தலைமை குருக்கள் இருப்பது போன்று) பிரதான ஆசாரியர்கள், புதிய இராஜாவை மகிமைப்படுத்தினவர்களுக்கு எதிராக, தங்களது எரிச்சலை வெளிப்படுத்தினபோது, இயேசு, லூக்கா 19:40-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறினார். ஏன்? காரணம், சகரியா தீர்க்கதரிசியானவர் இந்தக் கெம்பீரிப்பையும், களிகூருதல்களையும் பற்றி முன்னமே கூறியுள்ளார் (சகரியா 9:9). மற்றும் இப்பொழுது வேளை வந்துள்ளது, மற்றும் தீர்க்கத்தரிசனமும் நிறைவேறினது; "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்;" இது அப்போது நிழலாய் இருந்தது மற்றும் இப்பொழுது நிஜமாய் இருக்கின்றது. கெம்பீரிப்பும், களிக்கூருதலும் அப்போது இருப்பது அவசியமாய் இருந்ததானால், இப்போதும் அவசியமானதேயாகும். இராஜாவை இப்பொழுது தங்கள் மத்தியில் காணப்படுபவராக, அடையாளம் கண்டுகொள்பவர்களாகிய பரிசுத்தவான்கள் மத்தியில் இப்பொழுது காணப்படும் சந்தோஷம் மாபெரியதேயாகும்; மற்றும் அவருடைய வந்திருத்தலையும், இராஜ்யத்தையும் குறித்ததான அவர்களது பறைச்சாற்றுதலானது கெம்பீரிப்பாக இருக்கின்றது; ஆண்டவர், "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா" (மத்தேயு 21:16) என்று கூறினார். இதன் நிஜமும் இப்படியாகவே இப்பொழுது காணப்படுகின்றது. ஏனெனில் இராஜாவின் வந்திருத்தல் குறித்தும், அவருடைய வல்லமை குறித்துமான அடையாளம் கண்டுக்கொள்ளுதலினால் எழும்பும் ஓசன்னா, இன்றுள்ள பிரதான ஆசாரியர்கள் மற்றும் மத குருமார் வகுப்பாரிடமிருந்து எழும்பாமல், மாறாக சாதாரணமான ஜனங்களாகிய குழந்தைகள் மற்றும் பாலகருடைய வாயிலிருந்தே துதி கேட்கப்படுகின்றது; "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! ஆளுகை செய்வதற்கும், இப்பொழுது தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டிருப்பவருமாகிய தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!" என்று துதிக் கேட்கப்படுகின்றது.

---

**R2757**

# "கிறிஸ்துவாகிய காந்தம்—நான் எல்லாரையும் இழுத்துக்கொள்ளுவேன்"

### யோவான் 12:20-33.

"இயேசுவைக் காண விரும்புகிறோம்."—வசனம் 21.

நமது கர்த்தர் கழுதையின் மீது ஏறி, எருசலேமுக்கு வந்த பிற்பாடு, ஆலயத்தில் தினந்தோறும் போதித்தவராய் இருந்தார்; அதாவது அவர் கைதுச் செய்து, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதான அந்தச் சில நாட்களில், இரவில் பெத்தானியாவிற்குச் சென்றவராகவும், ஒவ்வொரு நாள் காலையிலும் ஆலயத்திற்குத் திரும்பி வருபவராகவும் காணப்பட்டார். அப்போதுதான், சில கிரேக்கர்கள் இயேசுவைச் சந்தித்துப் பேச முற்பட்டு, அந்திரேயா மற்றும் பிலிப்பு மூலமாய்த் தங்களுடைய இந்த விருப்பத்தைத் தெரியப்படுத்தினார்கள்; அந்திரேயா மற்றும் பிலிப்பு என்பவர்கள், கிரேக்க மொழி அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்ட (பெத்சாயிதா எனும்) பட்டணத்திலிருந்து வந்தவர்களாகவும், கிரேக்க பெயர்களைக் கொண்டிருந்தவர்களாகவும் இருந்தபடியினால், அநேகமாய்க் கிரேக்க மொழி பேசுபவர்களாய் இருந்திருக்க வேண்டும். ஆகவே இவர்கள் இருவரும் வந்திருந்த, கிரேக்கர்களின் வாயாகக் காணப்பட்டு, இவர்களுடைய விருப்பத்தைக் கர்த்தருக்குத் தெரிவித்தவர்களாய் இருந்தனர். இப்படியான வேண்டுகோள் விடுக்கப்பட்டதற்கான காரணம், பிறப்பால் யூதர்களாய் இருப்பவர்கள் மாத்திரமே பிரவேசிக்க முடிந்த, ஆலயத்தின் குறிப்பிட்ட பாகங்களில் நமது கர்த்தர் காணப்பட்டார்; மேலும் இந்தக் கிரேக்கர்களாகிய யூதமார்க்கத்தமைந்தவர்கள், புறஜாதியார்களுக்கான பிரகாரப் பகுதியை அல்லாமல்,

மற்றபடி, பரிசுத்த ஸ்தலத்தை அணுகுவதற்கு அனுமதிக்கப்படாமல் காணப்பட்டனர். ஆகையால் தாங்கள் இயேசுவைச் சந்தித்துப் பேசத்தக்கதாக, இயேசு வெளியே வர வேண்டும் என்ற விதத்தில், இந்தக் கிரேக்கர்கள் வேண்டிக்கொண்டவர்களாய் இருந்தார்கள்.

இவர்கள் கர்த்தரைச் சந்தித்ததற்கான நோக்கம் என்ன என்பது பற்றி நமக்குச் சொல்லப்படவில்லை; இச்சம்பவத்தின் போது, நமது கர்த்தர் பேசினதாகப் பதிவு பண்ணப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகள், கிரேக்கர்களிடம் பேசப்பட்டதாகவும் நாம் எடுத்துக்கொள்வதில்லை, மாறாக சில விஷயங்கள் பதிவுகளில் பதிவு செய்யப்பட்டவில்லை என்றே நாம் எண்ணுகின்றோம். சந்தித்துப் பேச வேண்டும் என்ற விண்ணப்பத்திற்குக் கர்த்தர் இணங்கினார் என்பதில் ஐயமில்லை, ஆயினும் இவர்களுடைய சம்பாஷணையானது சபைக்கு அவசியமாய் இராதபடியினால், அவைகள் பதிவு செய்யப்படவில்லை. முற்காலத்து சபை வரலாற்று ஆசிரியரான **இசுபியஸ் (Eusebius)** அவர்கள் குறிப்பிட்டுள்ள காரியங்களை இங்குக் குறிப்பிடுவது தவறாய் இராது என்று நாம் எண்ணுகின்றோம்; இவர் குறிப்பிட்டிருப்பதாவது . . . சீரியாவின் எடிசாவின் (Edessa) இராஜா, இயேசு தன்னோடு வந்து வசிக்கவும், இயேசுவுக்கு இராஜரிக வரவேற்புக் கொடுக்கப்படும் என வாக்களித்தும், ஒரு தூதுவரை இயேசுவிடம் அனுப்பி வைத்தார் என்பதுமாகும். இந்தப் பதிவு உண்மையாய் இருந்தாலும், நமக்கு ஆச்சரியம் ஏற்படுவதில்லை, மாறாக இப்படியான தனிப்பட்ட முறையிலான கோரிக்கைகளை கர்த்தர் மறுத்துவிடுவார் என்பதை நாம் அறிவோம், ஏனெனில் சீஷர்களை அனுப்பிவைக்கையில், இயேசு தெளிவாக "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார்" (மத்தேயு 15:24).

தேவன் பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆசீர்வாதங்கள் வைத்துள்ளார், ஆயினும் அதை வழங்குவதற்கான காலம் இன்னும் வரவில்லை மற்றும் அதை நிறைவேற்றுவதற்கு இது வழியும் அல்ல. அனைத்தும் தெய்வீக ஒழுங்கில், தெய்வீகத் திட்டத்திற்கு ஏற்ப செய்யப்பட வேண்டும்; உலகத்தின் மீது பொதுவான ஆசீர்வாதங்கள் வருவதற்கு முன்னதாக, தெய்வீகத் திட்டத்தின்படி, ஆபிரகாமின் சந்ததியினுடைய தேர்ந்தெடுப்பு நடைப்பெற வேண்டும்; மற்றும் தெய்வீக ஏற்பாட்டின்படி ஆபிரகாமினுடைய இந்தச் சந்ததியில் அங்கத்தினர் ஆகுவதற்கான அழைப்பு, முதலாவது யூதர்களுக்கே கொடுக்கப்பட வேண்டியுள்ளது. (கலாத்தியர் 3:16, 29).

கிரேக்கர்களுடனான உரையாடல் முடிவடைந்த பிற்பாடு, இறுதியில் ஒருவழியாக உலகமானது தங்களுடைய ஆண்டவரை, அவருக்கே உரிய உண்மையான வெளிச்சத்தில் அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக விழித்தெழுந்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதினாலும், இன்னும் சீக்கிரத்திலேயே, உலகம் அவரை மேசியாவென உயர்வான ஸ்தானத்திற்கு உயர்த்தும் என்ற எதிர்ப்பார்ப்பினாலும் அடைந்த பரவசத்தினால், அப்போஸ்தலர்களுடைய இருதயங்கள் வேகமாய் அடித்துக் கொண்டிருக்கும் போதும், அப்போஸ்தலர்கள் தாங்களும் இராஜ்யத்தில் அவருடன்கூட உடன் சுதந்தரர்களாக ஆகப்போகிறார்கள் என்ற நம்பிக்கையில் உயர பறந்து கொண்டிருக்கும் போதும், இயேசு இந்தப் பாடத்தில் பார்க்கப்படும் வசனங்களைக் கூறியுள்ளார். இது சீக்கிரத்தில் தாம் படப்போகின்ற பாடுகளே, எதிர்க்கால மகிமைக்கான அஸ்திபாரமாக இருக்கப்போகின்றது என்பதை அவர்களுக்கு கர்த்தர் வெளிப்படுத்துவதற்கான நல்லதொரு வாய்ப்பாய் இருந்தது. தம்முடைய மரணம் தொடர்பாக அவர்களிடம் தம்மால் ஏற்கெனவே சொல்லப்பட்டக் காரியங்களை அவர்கள் உணர்ந்துக்கொள்ளும்போது, அந்தத் தம்முடைய உண்மையுள்ளவர்களாகிய சிலருக்கு அது எத்தகைய கசப்பான ஏமாற்றமாகவும், இருதயத்திற்கு வேதனையளிக்கின்றதாகவும் இருக்குமெனக் கர்த்தர் நன்கு அறிந்திருந்தார். அவர்களுக்குப் பிற்காலத்தில் உதவிகரமாக இருக்கிறதும், வேறுவழியில் இல்லாமல், விசுவாச கண்களினால் மாத்திரமே பாடுகளின் ஊடாக, முன் தீர்மானித்து வைக்கப்பட்ட மகிமையை, அவர்களைக் காணச்செய்கிறதுமான சில யோசனைகளைக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார்.

இதை மனதில் கொண்டவராகத்தான் நமது கர்த்தர் "மனுஷகுமாரன் மகிமைப்படும் படியான வேளை வந்தது" என்று கூறியிருந்திருக்க வேண்டுமென நாம் நம்புகின்றோம்

(யோவான் 12:23). இயேசு தம்முடைய பூமிக்குரிய உயர்த்தப்படுதலைத்தான் பேசுவதாக, சீஷர்கள் முதலாவதாக எடுத்துக்கொண்டார்கள்; ஆனால் தம்முடைய மகிமைப்படுதல் சமீபமாய் இருப்பினும், அதற்கு முன்பு மரணம் வரையிலும் தாம் பாடுப்பட வேண்டும் என்ற உண்மையினிடத்திற்கு அவர்களது கவனத்தை இயேசு உடனடியாகக் கொண்டு வந்தார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தபோது, அவர் அழியாமையிலும், வல்லமையிலும், மகிமையான ஆவிக்குரிய சரீரத்தில் எழுப்பப்பட்டபோது, "உயிர்ப்பிக்கிற ஆவியான" போதுதான் அவருடைய மகிமைப்படுதல் ஆரம்பமானது (1 கொரிந்தியர் 15:42-45). இந்த மகிமைப்படுதலானது, தம்முடைய விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்டதுமான உலகத்தின் மீது, நியமிக்கப்பட்ட காலத்தில் அவர் இராஜாவாய் இருப்பதற்கான மகா வல்லமையையும், ஆளுகையையும் எடுப்பது வரையிலும், தெய்வீக வல்லமையினுடைய வலது பாரிசத்தில் காத்திருக்கத்தக்கதாகவும், நம்பொருட்டாகவும், அவர் பிதாவின் முன் சென்ற போது, இன்னும் அதிகமாகுகின்றது.

## "வேளை வந்தது!"

வேதாகமத்தில் ஒருநாள் என்பது 24 மணி நேரத்தைக் குறிக்காதது போன்று, "வேளை வந்தது" எனும் வார்த்தைகளானது 60 நிமிடங்களைக் குறிப்பதாக நாம் புரிந்துக்கொள்ள வேண்டாம், மாறாக ஒரு குறுகிய காலப்பகுதி என்று எடுத்துக்கொள்ளப்படலாம்; உதாரணத்திற்கு "நோவாவின் நாட்கள்," "மோசேயின் நாட்கள்," "இயேசுவின் நாட்கள்" முதலானவைகள் ஆகும். ஆகவே இயேசுவின் நாட்கள் என்பதுடன் தொடர்புடைய சம்பவங்கள், அந்த வேளையில் அல்லது கொஞ்சக் காலத்தில் சம்பவிப்பவைகளாக இருந்தன.

இவ்வாறாக தாம் மகிமைப்பட ஆரம்பிக்கப் போவது என்பது மிகவும் தொலைவில் இல்லை என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தின பிற்பாடு, தம்முடைய மரணத்தின் அவசியத்தை மனதில் பதிய வைக்க நமது கர்த்தர் முற்பட்டார்; இதைப் பதிய வைக்கும் வண்ணமாக . . . "மெய்யாகவே, மெய்யாகவே" என்று கர்த்தர் கூறினார்; அதாவது "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால், தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுப்பதைப் போலவே, தெய்வீக ஏற்பாட்டின்படி, என்னுடைய மரணத்தின் மூலமாகவே, என் மகிமைப்படுதல் வர வேண்டுமென்று மெய்யாகவே, மெய்யாகவே, உறுதியாய் உங்களுக்குக் கூறுகின்றேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார். ஒருவேளை மரிக்க வேண்டாம் என்று கர்த்தர் முடிவெடுத்திருந்தால், அவர் தனித்து (உயிரோடே) இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருப்பாரே ஒழிய, நம் பொருட்டாக மரிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்திருக்க மாட்டார். கர்த்தர் ஒருவேளை இப்படியாகச் செய்திருப்பாரானால், நாம் இன்னமும் மீட்கப்படாதவர்களாகவே காணப்படுவோம், மற்றும் அவராலும் பலனைக் கொடுத்திருந்திருக்க முடியாது. ஆனால் அவர் தம்முடைய ஜீவனை அர்ப்பணம் பண்ணியிருந்தார்; அவர் பிதாவின் சித்தத்திற்கு உடன்பட்டவராக, ஆதாம் மற்றும் அவருடைய சந்ததிக்காகத் தம்மைப் பலிச் செலுத்திட விரும்பி ஈடுபட்டவராகக் காணப்பட்டார்; ஆகையால்தான், இப்பொழுது அவர் தம்முடைய ஜீவனை விரும்பினால், அதை தாம் இழக்கக்கூடும் என்றும், அவர் தம்மைக் காத்துக்கொள்ளத்தக்கதாக நாடுவதற்குப் பதிலாக, மரணம் வரையிலான கீழ்ப்படிதலுக்கான பலனாக பிதா தமக்கு வாக்களித்துள்ள எதிர்க்கால ஜீவனுக்கு முன்பாக, தற்கால ஜீவியத்தை தாம் வெறுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இப்படியாக நாம் புரிந்துக்கொள்ளும்போது, 25-ஆம் வசனம் என்பது நமது கர்த்தருக்கு மாத்திரமே பொருந்தக்கூடிய ஒன்றே ஒழிய, அவருடைய பின்னடியார்களுக்கு அல்ல; ஏனெனில் சீஷர்கள் இழந்துப் போகத்தக்கதாக எந்த ஜீவனையும் பெற்றிருக்கவில்லை. அவர்களும் சரி, முழு உலகமும் சரி மரித்துப்போய் இருந்தது மற்றும் தகப்பனாகிய ஆதாமின் மீறுதலினால், மரணத் தீர்ப்பின் கீழ்க்காணப்பட்டது. நமது கர்த்தர் மாத்திரமே ஜீவன் கொண்டிருந்தார், மற்றும் அதை நித்திய ஜீவ காலமாய்க் காத்துக்கொள்ளத்தக்கதாக அதைக் கொடுத்து விட்டு, மற்றொன்றை மாற்றிக்கொள்வதற்கு அல்லது அதை ஒப்புக்கொடுப்பதற்கான உரிமையைக் கர்த்தர் மாத்திரமே கொண்டிருந்தார். இப்படிப்பட்டதான சிலாக்கியங்கள், இயேசு தம்முடைய ஜீவனை அநேகருக்கான ஈடுபலியாகக் கொடுப்பது வரையிலும், அவருடைய சீஷர்களுக்குக் கடந்து வருவதில்லை. ஈடுபலி செலுத்தப்பட்ட பிற்பாடும், அது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற்பாடும்,

(தங்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளாகிய) மீட்கப்பட்டவர்கள், கர்த்தருடைய பலிபீடத்தில் அர்ப்பணிப்பதற்கும், மற்றும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலமாக பரலோக ஜீவனுக்காக மாற்றிக்கொடுப்பதற்கும் உரிய, ஜீவனுக்கான உரிமைக்கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

ஆகையால்தான் 26-ஆம் வசனத்தை கர்த்தர் அவருடைய பின்னடியார்களுக்குக் கூறுகின்றார்; அதாவது அவருக்கு ஊழியஞ்செய்ய விரும்புகின்றவர்களும், அவரோடு காணப்பட விரும்புகின்றவர்களும், அவர் முன்னோடியாய் ஏற்கெனவே கடந்துச் சென்றுக்கொண்டிருக்கும் இந்த அனுபவத்தில் அவரை, அவர்கள் பின் தொடரும்படியாகக் கூறுகின்றார்; அதாவது அர்ப்பணம்பண்ணி, வாக்களிக்கப்பட்டுள்ள பரம மகிமை மற்றும் ஆவியின் ஜீவனோடு, தற்கால ஜீவியத்தை ஒப்பிட்டு, தற்கால ஜீவியத்தை வெறுத்திட வேண்டும்.

இரட்சிக்கப்படுபவர்களில் பல வகுப்பார் காணப்படுகின்றனர், அதாவது ஜெயங்கொள்பவர்கள், திரள்கூட்டத்தினர் மற்றும் சீர்ப்பொருத்தப்படும் மனுக்குலத்தார் எனும் வகுப்பார்கள் காணப்படுகின்றனர் என்பதை கிறிஸ்தவ ஜனங்கள் புரிந்துக்கொள்ள தவறின காரியமானது, அவர்களுக்கு மிகவும் அனுகூலமற்றதாய்க் காணப்படுகின்றது. வாக்களிக்கப்பட்ட எதிர்க்கால ஜீவியத்திற்கு முன்பாக, தற்கால ஜீவியத்தை வெறுத்து, பூமிக்குரிய விஷயங்களில் சுயத்தை வெறுத்து, பலிச் செலுத்துவதன் மூலமாக, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு நாடுபவர்களில் குறுகிய மனமுடைய சிலர், இப்படியாய் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவர்கள் மாத்திரமே கர்த்தருடன் காணப்பட முடியும் என்றும், பிதாவினால் கனப்படுத்தப்பட முடியும் (வேறு எவரும் கர்த்தருடன் காணப்பட முடியாது) என்றுமுள்ள எண்ணத்தினால், தங்களுக்கான சந்தோஷத்தையும், ஆறுதலையும், சமாதானத்தையும் இழந்துப்போயிருக்கின்றனர், ஏனெனில் இப்படியாக அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவர்கள் சிறு மந்தையினராக (சொற்பமானவர்களாக) இருப்பார்கள் என்று இவர்கள் உணர்ந்துள்ளனர். தெய்வீகத் திட்டத்தைப் பற்றின அறியாமையின் காரணமாக, சிறுமந்தையினரைத் தவிர, மற்றவர்கள் அனைவருக்கும் நித்திய காலமான சித்திரவதைக் கொடுப்பதே தேவனுடைய திட்டமாக இருக்கின்றது என்று இவர்கள் நம்புவதினால், இவர்கள் தேவனை எப்படிப்பட்டவர் என்று புரிந்திருக்கின்றார்களோ, அவ்வாறாகவே இவர்களும் இருக்க முற்பட்டு, இருதயம் கடினப்பட்டுப் போகின்றார்கள். இன்னொரு பக்கத்திலோ, சில பரந்த மனமுடையவர்கள், இயேசுவோடு காணப்படுவதற்கும், தெய்வீக மகிமையை அடைவதற்குமான பாதை மிகவும் இடுக்கமான பாதை என்பதை நம்புவதற்கு மறுத்து, தங்களுடைய நண்பர்களையும், தங்களுடைய குடும்பங்களையும், தங்களுடைய அயலார்களையும் மற்றும் கூடுமானமட்டும் அதிக எண்ணிக்கையிலான புறமதத்தாரையும் உள்ளே கொண்டு வரத்தக்கதாக, இடுக்கமான பாதையை அதிகமதிகமாக அகலமாக்க முயற்சிக்கின்றனர்; இவ்வாறாக இவர்கள் தங்களையும் அறியாமல், படிப்படியாக, சீஷத்துவத்திற்கான கோட்பாடுகளை மற்றவர்களுக்கு மாத்திரமல்லாமல், தங்களுக்கும் குறைத்துக் காட்டுகின்றவர்களாய் இருக்கின்றனர்; இவர்கள் வெளியரங்கமான சடங்காச்சாரங்களிலும், அனுசரிப்புகளிலும், வெற்றுரைகளிலும், நன்னடத்தைகளிலும் அதிகமதிகமாய்த் திருப்திகொள்பவர்களாய் ஆகிப்போய்விடுவார்கள்; மற்றுமாக கர்த்தரோடு காணப்படவும், பிதாவினால் கனப்படுத்தப்படவும், சிலுவையை எடுத்துக்கொண்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடர வேண்டும் என நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாய்த் தாங்கள் முன்பு கொண்டிருந்த கருத்துச் சரியானதல்ல என்றும் எண்ணும் நிலைக்கு வந்திடுவார்கள்.

தெய்வீக வார்த்தைகள் மற்றும் திட்டத்தின் மீது இப்பொழுது பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதான இந்த அறுவடை காலத்தின் வெளிச்சமானது, கர்த்தருடன் அவருடைய மகிமையில் உடன் சுதந்தரத்தை அடைவதற்காகத் தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்கான அழைப்பின் மேன்மையை மாத்திரம் நமக்குத் தெளிவுப்படுத்தாது; இன்னுமாக எதிர்க்காலத்தில் அந்த மகிமையில் பங்கடையப் போகும் அனைவரும், தற்கால ஜீவியத்தில் அவரோடு கூடப் பாடுபட வேண்டும் என்பதையும், பாவத்திற்கும், சுயத்திற்கும், உலகத்தாருக்கும் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்பதையும், கிறிஸ்து இயேசுவுக்கான புதிய ஜீவனுக்குள்ளாக எழுப்பப்பட்டவர்களாக இப்போது கருதப்பட்டு, பிற்பாடு உண்மையுள்ளவர்களாய்க் காணப்படும் பட்சத்தில், நிஜமாய், முதலாம் உயிர்த்தெழுதலில் எழுப்பப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதையும், நமக்குத் தெளிவாய்க்

காட்டுகின்றது. இப்பொழுது அழைக்கப்பட்டவர்களும், குமாரனுடன் உடன் பலிச்செலுத்துபவர்களாக, குமாரனுடன் அவரது மகிமையில் உடன் சுதந்தரர்களாக இருக்கும்படிக்கு, பிதா நோக்கம் கொண்டு இப்பொழுது தெரிந்துக்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பவர்களும், மனித குடும்பத்தில் ஒரு சிறிய கூட்டத்தினர் என்றும், இந்தப் பரம அழைப்பினைப் பெற்றுக்கொள்ளாத மற்றவர்கள், மகிமையடைந்த இயேசு மற்றும் அவருடைய மகிமையடைந்த சபையாகிய மணவாட்டியின் கீழ், ஆயிர வருட இராஜ்யத்தில், ஏற்றவேளையில் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும், இந்த அறுவடை வெளிச்சமானது நமக்குத் தெளிவுப்படுத்துகின்றது.

இந்த வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டு, இதை உணர்ந்துகொள்பவர்கள், மற்றவர்களுக்கு வரும் சோர்விலிருந்து தப்புவிக்கப்படுவார்கள். தாங்கள் இப்படியான ஓர் உயர் ஸ்தானத்திற்கென்று அழைக்கப்பட்டிருக்கின்றதான பாதை, மிகவும் இடுக்கமான பாதையாக இருக்கின்றது என்பதிலும், கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்களை மாத்திரமே இப்பாதைக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்பதிலும், தேவனைப் பிரியப்படுத்துவதற்கும், அவருக்கு ஊழியஞ்செய்ய விரும்புபவர்கள் மாத்திரமே இப்பாதைக்குள் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்பதிலும், இறுதியில் இக்காலத்திற்குரிய அனுபவங்கள் ஊடாக உண்மையுள்ளவர்களாய்க் கடந்து சென்று, இருதயத்திலும், குணலட்சணத்திலும், தேவனுக்குப் பிரியமான குமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலைக் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே மகிமையில் அனுமதிக்கப்படுகின்றனர் என்பதிலும் விளங்கும் நியாயத்தை இவர்களால் காணமுடிகின்றது. (ரோமர் 8:29)

"என் ஆத்துமா கலங்குகிறது" . . . என்னுடைய உணர்வுகள் கலங்குகிறது; நான் அமைதியற்று இருக்கிறேன். நான் என்ன சொல்லுவேன். பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; விடுவியும் என்று கேட்பதற்குப் பதிலாக, நான் இதற்காகவே, விரும்பிச் சகித்துக்கொள்ளத்தக்கதாகவே இந்த வேளைக்குள் வந்திருக்கிறேன் என்று நினைவுகூரவே செய்கின்றேன்; பிதாவினுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து என்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பேன் என்பதாக நான் பண்ணின ஒப்பந்தத்தை வீணாக்கிப் போடாத விதத்தில், ஏதோ ஒருவகையான விடுவித்தலை என்னால் பிதாவிடம் கேட்க முடியும். நான் குற்றவாளியாக, அதாவது என்னுடைய பரம பிதாவுக்கு எதிராக தேவதூஷணம் கூறின மோசமான குற்றவாளியாக நான் அவமானப்படுத்தப்பட்டு, தீர்ப்பளிக்கப்படும் அனுபவங்களிலிருந்து என்னைத் தப்புவிக்கத்தக்கதாக, என் மீது வேறு ஏதோ ஒரு பெரும் துன்பத்தை விழப்பண்ணி, அதன் மூலம் என் மரணம் சம்பவிக்கத்தக்கதாக, என்னால் பிதாவிடம் கேட்க முடியும். மேலும் பிதாவுக்கு எல்லா விஷயங்களிலும் உண்மையையே காண்பித்து வந்த எனக்கு, இத்தகைய சலுகைகளைப் பிதா காண்பிப்பது எனக்கு நியாயமற்றதாகவும் தெரியவில்லை. எனினும் நான் இந்தச் சலுகைகளைக் கூடக் கேட்பதில்லை. மாறாக நான் என்னுடைய சித்தத்தை முற்றிலுமாகப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, என்னுடைய உடன்படிக்கையினுடைய ஆவி மற்றும் எழுத்துகளின் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் விடுபடாத அளவுக்கு அனைத்தையும் செய்வேன். பிதாவின் சித்தம் அனைத்தும் நிறைவேறுவதாக; அதுவே ஞானமுள்ளதும் சிறந்ததுமாய் இருக்கின்றது; ஒருவேளை ஞானமற்றதாகவும், சிறப்பற்றதாகவும் இருக்குமானால், அது பிதாவினுடைய திட்டமாக இருக்காது. பிதாவுக்கு என்னுடைய முழுமையான அர்ப்பணிப்பையும், அவருடைய சித்தத்திற்கான என்னுடைய முற்றும் முழுமையான கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துவதற்காக, நிரூபிப்பதற்காகவே நான் இந்த வேளைக்குள் வந்திருக்கின்றேன். பிதாவே நீர் தொடரும்! நான் எதை இழக்க வேண்டியிருப்பினும், பிதாவே உம்முடைய வழியில், உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்! என்ற விதத்தில் இயேசு கூறினார்.

பின்பு ஒரு சத்தம் உண்டானது; தேவனுடைய சத்தத்தின் விஷயத்தில் எப்போதும் காணப்படுவது போன்று, சிலர் அதைப் புரிந்துக்கொண்டார்கள், ஆனால் மற்றவர்களோ தவறாய்ப் புரிந்துக்கொண்டனர். உலகத்தார் எந்தச் செய்தியையும் கேட்பதில்லை; விசுவாசிகள் அரைக்குறையாய்ச் செய்தியைக் கேட்கின்றனர், ஆனால் பிதாவுக்குப் பூரணமான இசைவுடன் காணப்படும் ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்கள் மாத்திரமே, செய்தியை முழுமையாய்க் கேட்கவும் செய்கின்றனர் மற்றும் புரிந்துக்கொள்ளவும் செய்கின்றனர். பிதாவிடம் இருந்து வந்த இந்தச் செய்தியினால், நமது கர்த்தர் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை; எனினும் இச்செய்தியானது

தமக்கென்று விசேஷமாய் அனுப்பப்படாமல், மாறாக கர்த்தருடைய போதனைகளுக்குத் தேவனும் உறுதியளிக்கின்றார் என்பதைச் சீஷர்கள் கவனித்து, நன்மையடைவதற்கே அளிக்கப்பட்டதாக, கர்த்தர் நமக்கு உறுதியளிக்கின்றார். இப்படியாகக் காதுகளுக்குக் கேட்குமளவில், தேவன் இன்று, தம்முடைய ஜனங்களிடம் பேசுவதில்லை. எனினும் தேவன் தம்முடைய வார்த்தைகள் மூலமாகவும், தம்முடைய வழிநடத்துதல்கள் மூலமாகவும், அதே அழுத்தத்துடன்தான், இப்பொழுதும் நம்மிடம் பேசுபவராக இருக்கின்றார். அன்றுபோல், இன்றும், சிலரே மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய்க் கேட்டு உணர்ந்து/ஏற்றுக்கொள்ளுபவர்களாகக் காணப்படுகின்றனர். தேவனுடைய வார்த்தைகளைத் தங்கள் கைகளில் பெற்றிருக்கும் சிலர், அதை வெறுமனே இன்னுமொரு புத்தகமாக மாத்திரமே காண்கின்றனர் மற்றும் தேவனுடைய ஜனங்களுடைய காரியங்களிலான அவருடைய வழிநடத்துதல்களையும் உணர்ந்துகொள்ள தவறிவிடுகின்றனர். இன்னும் சிலர் கர்த்தருடைய வார்த்தைகளில் ஒரு செய்தி இருக்கின்றது, அதுவும் நல்ல செய்தியாக இருக்கின்றது என்று கண்டு, வேதாகமத்திற்குப் பயபக்திக் காண்பிக்கின்றனர், மற்றும் அவருடைய வழிநடத்துதலில் தெய்வீகப் பராமரிப்பையும், கிறிஸ்துவின் சரீரம் தொடர்புடைய ஏற்பாடுகளையும் கொஞ்சம் காண்கின்றனர். ஆனால் 18 நூற்றாண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட தலை போன்று, இன்று ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட குமாரர்களாகிய கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் மாத்திரமே, பிதாவின் வார்த்தைகளைக் கேட்டு, தெளிவுடனும், புரிந்துக்கொள்ளுதலுடனும் காணப்படுகின்றனர். இவர்கள் தெய்வீக வழிநடத்துதல்களைக் கண்டு, அதில் களிக்கூரவும் உதவப்படுகின்றனர் மற்றும் இவர்களால் "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்" என்ற காரியங்களை உணர்ந்துக்கொள்ளவும் உதவப்படுகின்றனர் மற்றும் இவர்கள் அந்த அழைப்பிற்கு இணங்கி, தங்களுடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நாடுகின்றவர்களாய்க் காணப்படுகின்றனர் (ரோமர் 8:24).

## "இவ்வுலகத்தின் அதிபதியானவன்"

"இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" (யோவான் 12:31) என்று இயேசு கூறினபோது, அவர் முன்பு, "வேளை வந்துள்ளது" என்று எந்த அர்த்தத்தில் குறிப்பிட்டாரோ, அப்படியாகவே, "இப்பொழுது" என்ற வார்த்தையையும் இங்குப் பயன்படுத்தியுள்ளார். 31-ஆம் வசனம் நிறைவேறுவதற்கு இன்னும், இப்பொழுது கொஞ்சக்காலம் காணப்படுகின்றது. இவ்வுலகத்திற்கான நியாயத்தீர்ப்பானது, தராசில் காணப்படுகிறதாகவும், சீக்கிரத்தில் தீர்மானிக்கப்படப் போகிறதாகவும் இருந்தது. முதலாவது பரீட்சை ஏதேனில் நடைப்பெற்றது; தகப்பனாகிய ஆதாமே பரீட்சையில் காணப்பட்டார்; மேலும் அவருடைய அரைக்குள் காணப்பட்ட முழு மனுக்குலமும் ஒரு விதத்தில் பரீட்சையில் காணப்பட்டு, ஆதாமோடு கூடத் தராசில் காணப்பட்டனர். அந்தப் பரீட்சையானது, ஆதாமுக்கும், அவருடைய சந்ததியாருக்கும் அழிவாக முடிவடைந்தது என்பதை நாம் அறிவோம். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (ரோமர் 5:12). உலகத்திற்கான அந்த (பரீட்சை மற்றும் தீர்ப்பு) நியாயத்தீர்ப்பானது மரணத்திற்கு ஏதுவானதாய் அமைந்தது, மற்றும் ஆதாம் மூலமாய் வந்த மரணமானது, நமது கர்த்தர் இவ்வார்த்தைகளைப் பேசும் வரைக்கும், 4161 வருடங்கள் ஆளுகை செய்ததாக இருக்கின்றது. ஆனால் இப்போதோ தெய்வீக ஏற்பாட்டின் கீழ், தேவனுடைய கிருபையின் கீழ், தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதாகவும் மற்றும் ஆதாமுக்கும், அவர் சந்ததியாருக்கும் ஜீவனை ஈடுபலியாக ஒப்புக்கொடுக்க விருப்பம் கொண்டுள்ள ஒருவர் ஈடுபலியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இவர் இப்பொழுது பரீட்சையில் காணப்படுகின்றார், மற்றும் முழு உலகத்தின் வாழ்க்கை முடிவு/விதியானது தராசில் காணப்படுகிறதாகவும், இவருடைய வெற்றியைச் சார்ந்துள்ளதாகவும் காணப்படுகின்றது. ஆகவேதான் நமது கர்த்தர், இப்போது, உலகத்தின் krisis அல்லது பரீட்சையானது, அதன் உச்சக்கட்டத்தில் காணப்பட்டது என்றும், பிதாவின் சித்தத்திற்குத் தாம் உண்மையாய் இருப்பதற்கும், அந்தச் சித்தத்திற்குக் கீழ்ப்படியும் வண்ணமாக தற்கால ஜீவியத்தை வெறுப்பதற்குமான தம்முடைய தீர்மானமே, உலகத்திற்குச் சாதகமான பரீட்சையைத் தீர்மானிக்கக் கூடியதாய் இருக்கின்றது என்று கூறினார்; ஏனெனில்

ஆதாமின் மூலமாய் உலகத்திற்கு மரணத்திற்கு ஏதுவான தீர்ப்பு வந்ததுபோல, கிறிஸ்துவின் மூலமாய் உலகத்திற்கு, ஜீவனுக்கு ஏதுவான நீதிமானாக்கப்படுதல் உண்டாகிறது என்று அப்போஸ்தலர் தெரிவித்துள்ளார்; தெய்வீகப் பிரமாணத்தைப் பொறுத்தமட்டில், இயேசு முழு உலகத்திற்கான முழுமையான தண்டனையை ஏற்றுக்கொண்டார்; ஆகையால் மனுக்குலத்தின் உலகத்தை விழிக்கப்பண்ணுவதன் மூலமாக, மனுக்குலத்தைக் கல்லறையினின்று மீட்பதற்கு மாத்திரமல்லாமல், கிருபையினை ஏற்றுக்கொள்பவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேர்களையும் ஆயிர வருட யுகத்தின் போதும், அதின் முடிவிலும், பாவம் மற்றும் மரணத்திலிருந்து பூரணத்திற்கும், தேவனுடனான இசைவிற்கும் கொண்டு வருவதன் மூலமாக, முற்றும் முழுமையாய் மீட்பதற்குமான உரிமையையும், வாய்ப்பையும் உடையவராக இயேசு காணப்படுவார். (ரோமர் 5:18, 19).

"இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளும், மேற்கூறிய காரியங்களுக்கு இசைவாக இருக்கின்றது. "எனக்குப் போய்க்கொண்டிருக்கும் பரீட்சையானது, மரணத்துக்கு ஏதுவான மனுக்குலத்தின் மீதான தெய்வீகத் தீர்ப்பை இரத்துச்செய்துவிடுவது மாத்திரமல்லாமல், அது இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுடைய கரங்களிலுள்ள, தற்கால தீமையின் ஆளுகையையும் கவிழ்த்துப் போடுகிறதாகவும் காணப்படும். அவன் புறம்பே தள்ளப்படுவான்; அவன் என்னுடைய ஆயிர வருட இராஜ்யத்தின் காலத்தில் விலங்கிடப்படுவான் அவன் பிற்பாடு அழிக்கப்படுவான்" என்ற விதத்தில் கர்த்தருடைய வார்த்தைகள் காணப்பட்டது. நமது கர்த்தருடைய வெற்றியின் மீது, உலகத்தின் நியாயத்தீர்ப்பும், பாவத்தின் வழியாய் உலகை தற்போது கைப்பற்றி வைத்துள்ளதை அப்புறப்படுத்துவதையும் சார்ந்து இருப்பதினால், இவைகள் அனைத்தும் நிறைவேறித் தீருவதற்குப் பல நூற்றாண்டுகள் தாண்ட வேண்டியிருப்பினும், இவைகளுக்கான காலம் அந்த வேளையிலிருந்து ஆரம்பிப்பதாகக் கர்த்தர் குறிப்பிடுவது சரியானதாகவே உள்ளது; அதாவது சாத்தானைக் கட்டுதல் மற்றும் ஆயிர வருட இராஜ்யத்தின் (கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபை எனும்) கருவிகளால், மனுக்குலத்தை ஆதாமின் தீர்ப்பிலிருந்து விடுவித்துத் தேவனுடைய குமாரர்களுக்குரிய மகிமையான சுதந்தரத்திற்குள், எந்த ஜீவனுக்கான தளத்திலும் நடத்துதல் ஆகியவைகள் அனைத்தும் நிறைவேறித் தீருவதற்குப் பல நூற்றாண்டுகள் கடந்துச் செல்ல வேண்டியிருப்பினும், அவைகளின் ஆரம்பத்தை, அந்த வேளையிலிருந்தெனக் கர்த்தர் குறிப்பிடுகின்றார். அனைத்து மனுஷர்களும் இந்தப் பரம இரக்கங்களையும், சிலாக்கியங்களையும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது; ஆனால் அனைவருக்கும் இதற்கான முழுமையான வாய்ப்புகள் கிடைக்கும்; ஆகவே இரண்டாம் மரணத்தில் மரிப்பவர்கள், தங்களுடைய சொந்த பாவங்களுக்காக மரிப்பார்களே ஒழிய, சுதந்தரித்துக்கொண்ட பெலவீனங்களுக்காக மரிப்பதில்லை. "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்" (எரேமியா 31:29, 30). (1 யோவான் 5:16).

## "கிறிஸ்து எல்லா மனுஷர்களை இழுக்கும்போது"

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" (யோவான் 12:32). இவ்வார்த்தைகளில், இயேசு தாம் இன்ன விதமாய் மரிக்கப்போவதைப் பற்றிக் குறிப்பிடுவதாக, சுவிசேஷத்தைப் பதிவு பண்ணினவர் கூறினாலும், இவ்வார்த்தைகளுக்கு இன்னும் அதிகமான அர்த்தங்கள் உள்ளன. "ஒருவேளை என்னுடைய உடன்படிக்கைக்கு ஏற்ப, நான் உண்மையாய் ஜீவனைக் கொடுத்தால் மற்றும் பிதா வாக்களித்துள்ள உயர்வான உயர்த்துதலை நான் பரம பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டால், அந்த உயர்த்தப்படுதலானது, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்கான வல்லமையையும் கொண்டு வருகிறதாய் இருக்கும். முதலாவதாகப் பிதாவின் சித்தம் மற்றும் முன்னேற்பாட்டின்படி, பிதா தாமே என்னிடத்தில் சபையை (அ) மணவாட்டியை இழுத்துக்கொள்வார்; இவர்களை நான் இழுத்துக்கொள்ளமாட்டேன், மாறாக பிதாவே இதைச் செய்வார்" என்ற விதத்தில் இயேசு கூறினார். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் (தற்காலத்தில்,இடுக்கமான வழியில்) என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன் (உயர்த்துவேன்);" "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது

அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்" (யோவான் 6:44; சங்கீதம் 46:5).

"இவர்கள் என்னுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாகவும், முதலாம் உயிர்த்தெழுதலில் என்னோடு கூடப் பங்காளிகளாகவும் இவ்வாறாக உயர்த்தப்பட்ட பிற்பாடு, நான் என்னுடைய இழுத்துக்கொள்ளும் வேலையை ஆரம்பிப்பேன்; இது பிதா விசேஷித்த ஒரு வகுப்பாரான, இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரை இழுத்துக்கொண்டது போன்று இருப்பதில்லை. என்னுடைய இழுத்துக்கொள்ளுதலானது, ஒரு பொதுவான இழுத்துக்கொள்ளுதலாகும். நான் அனைத்து மனுஷர்களையும் இழுத்துக்கொள்வேன். ஆதாமின் மீறுதலினால், அனைவரும் இழந்திட்ட மனித பூரணத்தின் மகிமையான நிலையினிடத்திற்கும், இழந்ததைத் திரும்பப் பெறுவதற்கான உரிமையினிடத்திற்கும் படிப்படியாக, ஜனங்கள் கொண்டு வரப்படுவதற்கு ஏதுவாக, பிதாவின் பிரதிநிதியாகிய என்னிடத்தில் வருவதும், என்னிடத்திலிருந்து கடந்த காலத்தின் பாவங்களுக்கான முழுமையான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதும், நீதியின் அப்படிப்பட்டதான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதும், அப்படிப்பட்டதான சிட்சைகளைப் பெற்றுக்கொள்வதும், அப்படிப்பட்டதான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதும், அப்படிப்பட்டதான நியாயமான தீர்ப்புகளைப் பெற்றுக்கொள்வதும், உலகளாவிய வாய்ப்பாக இருக்கும். மனிதன் இழந்ததைத் திரும்பக்கொடுத்தலுக்கான இந்த உரிமை என்பது, என்னுடைய பூமிக்குரிய வாழ்க்கையை அருமையானது என்று நான் கருதாமல், அதை நான் மனுஷரை மீட்பதற்காகவும், இந்த உன்னதமான பரலோக நிலைமையை அடையத்தக்கதாகவும், நான் வெறுத்ததன் மூலமாகச் சம்பாதித்துக்கொண்ட உரிமையாக இருக்கின்றது. மேலும் தெய்வீக ஏற்பாட்டின்படி என்னோடு கூட இருப்பவர்களும், பிதாவினால் கனப்படுத்தப்படுபவர்களும், மற்றும் என்னால் என்னுடைய மணவாட்டி என்றும், சகோதர சகோதரி என்றும், உடன் சுதந்தரர்கள் என்றும் அழைக்கப்படக்கூடிய ஊழியர்களும், நானும், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கின்றவர்களாய் இருப்போம்." (வெளிப்படுத்தல் 22:17; ரோமர் 8:17; கலாத்தியர் 3:16, 29).

---

**R4678**

# "தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன"
## மத்தேயு 21:23-46

"ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு,...என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."—வசனம் 43.

மாபெரும் போதகர் வாழ்ந்திட்ட நாட்களில் காணப்பட்ட மதவாதிகள் செய்திட்ட தவறை இரண்டு உவமைகளில், போதகர் சித்தரிக்கின்றார். இந்த உவமையானது, ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் தெய்வீகக் கிருபையினின்று இஸ்ரயேலர்கள் புறக்கணிக்கப்படத்தக்கதாக வழிவகுத்திட்ட காரணங்களைப்பற்றின தெளிவான பார்வையைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. பெயரளவிலான மாம்சீக இஸ்ரயேலர்கள் என்பவர்கள், பெயரளவிலான பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாருக்கு ஒத்த மாதிரியாகக் காணப்படுகின்றனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால் இந்தக் கிறிஸ்தவ யுகத்தின் அறுவடை காலமாகிய இப்பொழுது, நமக்கு முன்பு நடந்திட்ட அதே நிலைமைகளும், கையாளுதல்களும் காணப்படும் என எதிர்ப்பார்க்கின்றோம்.

யூத ஜனங்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேவனுடைய இராஜ்யத்திற்கு, தாவீதின் இராஜ்யமானது சிறிய அளவிலான நிழலாய் இருக்கின்றது என்பதை நாம் நினைவில் கொண்டாலே, இங்கும், மற்றவிடங்களிலும் கொடுக்கப்பட்ட கர்த்தருடைய போதனைகளின் அழுத்தத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். யூத ஜனங்கள் தங்களை உயர்த்தி, தங்களைத் தேவனுடைய இராஜ்யமாக முக்கியமான ஸ்தானத்திற்குக் கொண்டுவருபவரான, மேசியாவாகிய மாபெரும் இராஜாவுக்குப் பல நூற்றாண்டுகளாக எதிர்ப்பார்த்திருந்தனர். மேசியாவை அறிமுகப்படுத்த வந்த யோவான் ஸ்நானன், இவர்கள்

மனம் வருந்தி, மனந்திரும்பி, தங்களால் இயன்றமட்டும் தேவனோடும், நியாயப்பிரமாணத்தோடும், இசைவாய் வராதது வரையிலும், இவர்கள் மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடைய எதிர்ப்பார்க்க வேண்டாம் என்று யூதர்களிடம் கூறினார். இயேசுவும் ஜனங்களிடம், "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 5:20). நாம் பார்க்கவிருக்கிற இரண்டு உவமைகளும், பெரும்பான்மையானவர்களுக்கு இடையூறாக இருந்த காரியத்தை விவரிக்கின்றதாய் இருக்கும்.

## "என் திராட்சத்தோட்டத்தில் இன்று பணிபுரியுங்கள்"

யூத ஜனங்கள், தேவனுக்கு ஊழியம் செய்திட விரும்பும் தேவனுடைய ஜனங்களென தங்களை அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் அடிமைகள்போல் நடத்தப்படாமல், மாறாக குமாரர்கள்போல் நடத்தப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் போய், வேலை செய்யும்படிக்குக் கூறப்பட்டார்கள்; ஆனால் இவர்கள் இரு வகுப்பாராகப் பிரிந்துவிட்டனர்; இந்த இரண்டு வகுப்பாருக்கு அடையாளமாக, நம்முடைய முதலாம் உவமையில் இரு குமாரர்கள் காணப்படுகின்றனர். இந்த இரு குமாரர்களில் ஒருவன், வெளிப்புறமாய்ப் பயபக்தியாய் இருந்து, ஆம் நாங்கள் தேவனுக்குச் சேவை செய்வோம் என்று கூறும் வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். இவர்கள் தேவனுக்குச் சேவை செய்வதாகக் கூறினாலும் கூட, இவர்கள் உண்மையில் தெய்வீக ஊழியங்களை நாடவில்லை, மாறாக தங்கள் சொந்த மதப்பிரிவுகளுக்கும், தங்கள் தனிப்பட்ட இலட்சியங்கள், கனங்கள், செல்வாக்குகள் மற்றும் விருப்பங்களுக்கும் ஊழியம் புரியவே நாடினவர்களாகக் காணப்பட்டனர். உவமையில் இடம்பெறும் மற்றொரு குமாரன், தேவனுக்கு ஊழியஞ்செய்வதாக நடிக்காதவர்களும், ஆயக்காரர்கள், பாவிகள் மற்றும் வேசிகள் என்று கூறப்படுபவர்களுமாகிய, இஸ்ரயேலர்களின் இன்னொரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கின்றான். எனினும் யோவான் ஸ்நானனின் செய்தி கடந்து சென்றபோது, பிற்பாடு இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் செய்தி கடந்து சென்றபோது, இதே ஆயக்காரர்களும், பாவிகளும், வேசிகளும்தான் அவரை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாய் இருந்தார்கள்; ஆனால் அவருடைய செய்தியானது, தங்களுடைய போதனைகளிலிருந்து முரண்பாடாக இருப்பதைக் கண்ட மதவாதிகளோ, அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆகையால்தான் இயேசுவுக்கு எதிராகக் கூறின குற்றச்சாட்டுகளில் ஒன்று, "இவர் ஆயக்காரர்களையும், பாவிகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" என்பதேயாகும்.

## "பாவிகளுக்குச் சிநேகிதன் என்பது அவரது பெயராய் இருந்தது"

இரண்டாம் உவமையில், தேவன் மாபெரும் திராட்சத்தோட்டத்தின் சொந்தக்காரராக அடையாளப்படுத்தப்படுகின்றார்; இந்தத் திராட்சத்தோட்டமானது எல்லா விதத்திலும், தம்முடைய நோக்கங்களுக்கு ஏற்றதாகவும், நியமிக்கப்பட்டதாகவும் காணப்பட்டது. இந்தத் திராட்சத்தோட்டமானது யூத தேசத்தையும், இந்த ஜனங்களுக்குப் பண்ணப்பட்ட தெய்வீக வாக்குத்தத்தங்களையும், அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; இவர்களுடைய வளர்ச்சிக்கென நியாயப்பிரமாணமும், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் சகல ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டது. இந்தத் திராட்சத்தோட்டத்தை அதன் சொந்தக்காரர், தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டார்; இவர்களுடைய கடமை, திராட்சச்செடிகளையும், கனிக்கொடுப்பதையும் கவனித்து, பலனைச் சொந்தக்காரருக்குக் கொடுப்பதாகும்; இந்தப் பலனில் ஒரு பகுதியை மாத்திரமே இந்தத் தோட்டக்காரர் தங்களுக்கென வைத்துக்கொள்ளலாம். இந்தத் தோட்டக்காரர்கள், முன்னிலை வகுத்த மதவாதிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றனர் இவர்களைக் குறித்து இயேசு, "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்" என்று கூறுகின்றார் (மத்தேயு 23:2, 3). சொந்தக்காரர், தன்னுடைய திராட்சத்தோட்டத்தின் பலனை அடைய வேண்டுபவராகக் காணப்படுவதினால், பலனில் தன்னுடைய பங்கை அடையும்படிக்குத் தன்னுடைய ஊழியக்காரரை அனுப்பினார்.

ஆனால் தோட்டக்காரர், எஜமானுக்கு உரிய பங்கினைக் கொடுப்பதற்குப் பதிலாக, ஊழியக்காரர்களை அடித்து, கல் எறிந்து கொன்றனர்.

அந்த ஊழியக்காரர்கள் என்பவர்கள், இஸ்ரயேலுக்கு அனுப்பப்பட்ட முற்காலத்துத் தீர்க்கத்தரிசிகள் ஆவார்கள். அவர்கள் அன்புடனும், சாந்தம், பொறுமை முதலான திரளான கனிகளுடனும் வரவேற்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் இதற்குப் பதிலாக, அவர்கள், இஸ்ரயேலின் தலைவர்களால், அழையாமல் உள்ளே தலையிட்டவர்களாக நடத்தப்பட்டார்கள்; அவர்களில் சிலர் கல்லெறியப்பட்டார்கள், சிலர் அடிக்கப்பட்டனர், சிலர் கொல்லப்பட்டனர், சிலர் வெட்டப்பட்டனர்; சிலர் ஏற்றுக்கொள்ளப்படாததினால் செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்திக்கொண்டு, திரிந்து, குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் தங்கியிருந்தார்கள். அவர்கள் திராட்சத்தோட்டத்தின் சொந்தக்காரருடைய பிரதிநிதிகள்போல் நடத்தப்படவில்லை. இறுதியில், "என் குமாரனுக்கு அஞ்சுவார்கள்" என்று சொந்தக்காரர் எண்ணி, தன்னுடைய குமாரனை அனுப்பி வைத்தார். ஆனால் நமது கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட மதவாதி/மத தலைவர்களாகிய தோட்டக்காரர்கள், குமாரனைக் கொன்று போட்டு, சுதந்திரத்தைக் கட்டிக்கொள்ள ஆலோசனைப் பண்ணினார்கள். இந்த மதத்தலைவர்களுக்குத் தேவனுடைய சுதந்தரத்தின் மீது, எஜமானனாய்த் தாங்கள் காணப்படலாம் என்ற எண்ணம் எப்படியோ வந்துவிட்டது; மற்றும் தங்களைக் கடிந்துக்கொள்பவர்கள் எவரையும் (அ) தங்கள் மாய்மாலத்தை வெளிப்படுத்துபவர்கள் எவரையும் (அ) தங்கள் அடிமைத்தனத்தின் பிடியிலிருந்து, ஜனங்களை விடுவிக்கும் எவரையும், அது யாராக இருந்தாலும் சரி, அது சுதந்தரவாளியாக இருந்தாலும் சரி, அவரைக் கொன்றுபோடுவதற்கான சுதந்தரமும் தங்களுக்கு இருக்கின்றது என எண்ணினார்கள். இவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து போட்டார்கள்.

திராட்சத் தோட்டத்தின் சொந்தக்காரர் யார் என்பதை மறந்து, திராட்சத் தோட்டத்தைத் தங்களுக்குச் சொந்தமானது போன்று பயன்படுத்தி, சொந்தக்காரரின் ஊழியர்களைத் துன்பப்படுத்தி, சொந்தக்காரரின் குமாரனைச் சிலுவையில் அறைந்துப் போட்டவர்களாகிய இந்தப் பொல்லாத தோட்டக்காரரை, சொந்தக்காரர் என்ன செய்வார்? என்று நாம் எண்ணலாம்: மாபெரும் போதகர் தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களிடம் இக்கேள்வியைக் கேட்டபோது, சொந்தக்காரர் வந்து அந்தப் பொல்லாத தோட்டக்காரர்களை அழித்து, தனக்குப் பலனைத் தருகின்ற மற்றவர்களுக்குத் தோட்டத்தைக் குத்தகைக்கு விடுவார் என்று உடனடியாகப் பதில் தெரிவிக்கப்பட்டது.

இதுதான் நடந்தது. சர்வ வல்லமையுள்ள தேவனை அவமதித்து, பரிசேயர்களும், வேதபாரகர்களும், நியாயசாஸ்திரிகளும் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும், தங்களுக்கான வாய்ப்புகளையும், சுயநலமாய்ப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்; இவர்கள் தள்ளிவிடப்பட்டனர். இவர்களுடைய அரசாங்கம் அழிக்கப்பட்டது மற்றும் இவர்கள் ஒரு காலத்தில் அனுபவித்த தெய்வீகக் கிருபைகளும், தேவனுடைய வாய்க்கருவிகளாக இருக்கும் சிலாக்கியங்களும், இவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது; அதாவது இந்தச் சுவிசேஷ யுகத்தில் உள்ளவர்களுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

மாம்சீக இஸ்ரயேலர்கள், பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான நிழலாய் இருப்பதினால், இதே மாதிரியான நிலைமைகள் இன்று காணப்படுகின்றதா என்பதைப் பார்ப்பதற்கு நாம் அதிக முயற்சிகள் எடுக்க வேண்டியதில்லை. இன்று தேவனுக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும் பிரதிநிதிகளென உயர்ந்த ஸ்தானத்தில் காணப்படும் சிலர், தங்களை வலுப்படுத்துவதற்கும், ஜனங்கள் மீது அதிகாரங்கொள்வதற்கும், தங்கள் சொந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமென தங்களுடைய ஸ்தானங்களைப் பயன்படுத்துவதை நாம் பார்க்கவே செய்கின்றோம். இவர்கள் தங்கள் மத்தியில் தாழ்மையுடனும், சாந்தத்துடனும், கர்த்தருடைய நாமத்தில் வருகிற எவரையும் கடுமையான வார்த்தைகள் பேசி, கொலைச் செய்கிறவர்களாய்க் காணப்படுகின்றனர். இவர்கள் சொல்லர்த்தமாக அவர்களைக் கொல்லுவதோ (அ) அம்பு எய்வதோ இல்லை, மாறாக இவர்கள் அவர்களைத் தள்ளி, ஒதுக்கி வைப்பதன் மூலம் சிரச்சேதம் பண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் கசப்பான வார்த்தைகள், பழிப் பேச்சுகள் மூலம் அவர்கள்மேல் அம்பு எய்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இப்படியான ஊழியர்களைச் சொந்தக்காரர் என்ன செய்வார்? இவர்கள் அனுபவித்த வாய்ப்புகள் இவர்களிடமிருந்து எடுக்கப்பட்டுவிடும் என்ற, அதே பதில்தான் இவர்களுக்கும் பொருந்தும். தேவனுக்கு நன்றி, ஏனெனில் அவருடைய திட்டத்தில் அடுத்தப்படியாகச் சொந்தக்காரரின் குமாரனும், கொடுமைப்படுத்தப்பட்ட அனைத்து ஊழியர்களும், தேவனுடைய அருமை குமாரனுடைய புதிய இராஜ்யத்தின் அங்கத்தினர்களாய்க் காணப்படுவார்கள். பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு, உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களைத் தவிர வேறு எவரிடத்திலும், இனிப் பொறுப்பு ஒருபோதும் ஒப்படைக்கப்படுவதில்லை.

புறக்கணிக்கப்பட்ட இயேசு, தேவனுடைய மாபெரும் ஆலயமாகிய சபையின், “மூலைக்குத் தலைக்கல்லானார்.” தேவனுடைய கருநிலையிலான இராஜ்யமாய் இருப்பதற்கான சிலாக்கியம் யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, கிறிஸ்துவுக்கும், சபைக்கும் கொடுக்கப்பட்டது. தற்போது அவருடைய கருநிலையிலான இராஜ்யம் முற்றிலுமாகப் பூமியிலிருந்து எடுக்கப்படும், அதாவது அவருடைய உண்மையுள்ளவர்கள் பரலோகத் தளத்திலும், வல்லமையிலும், மகா மகிமையிலும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

இயேசுவின்மேல் விழுந்தவன் எவனும் நொறுங்கிப்போனாலும், சரி பண்ண முடியாத அளவுக்கு நொறுங்கிப்போகவில்லை. ஆனால் “இந்தக் கல் (மேசியா) எவன் மேல் விழுமோ, அவனை அது இரண்டாம் மரணத்தில் நசுக்கிப்போட்டுவிடும்.” (மத்தேயு 21:44).

---

**R5510**

# “கலியாண விருந்து”

## மத்தேயு 22:1-14.

“எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று.”—லூக்கா 13:34.

இங்கு நாம் இராஜ்யம் பற்றின இன்னொரு உவமையைப்பார்க்க இருக்கின்றோம். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேலுக்கான தேவனுடைய கிருபை மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களானது, தேவனுடைய பரிசுத்த ஜாதியாகவும், அதிலும் விசேஷமாகக் கிறிஸ்துவினுடைய வருகையின்போது, இராஜ்யத்தில் மேசியாவுடன் உடன் சுதந்தரர்களாகிய, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபைக்கான எண்ணிக்கைக்கு, போதுமான எண்ணிக்கையானவர்களாக, இஸ்ரயேலர்கள் காணப்படத்தக்கதாக, அவர்களை ஆயத்தப்படுத்தும்படிக்கு வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதை இந்த நம்முடைய பாடமானது நமக்குக் காண்பித்துத் தருகின்றதாயும் இருக்கின்றது. கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருந்தவர்கள் சொற்பமானவர்களாய் மாத்திரமே இருந்தார்கள் என்றும், இவர்கள் இராஜ்ய வகுப்பாரின் எண்ணிக்கைக்குப் போதுமானவர்களாக இல்லை என்றும், இதன் காரணமாகவே உடன் சுதந்தரர்களுக்கான போதுமான எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அழைப்பானது, புறஜாதியார்கள் மத்தியில் மேசியாவின் இராஜ்யத்திற்கான உடன் சுதந்திரர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றது என்றும் உவமை காட்டுகின்றது.

தேவனுடைய இராஜ்யம் என்று அழைக்கப்படுகின்ற பரலோக இராஜ்யமானது, ஒரு பூமிக்குரிய இராஜ்யமாக இராமல், மாறாக பரலோக இராஜ்யமாக இருக்கப் போகின்றது; இதை ஆளுகை செய்யும் மகிமையடைந்த கிறிஸ்து, பூமிக்குரிய சுபாவமுள்ள இராஜாவாக இராமல், மாறாக திவ்வியச் சுபாவத்தில் காணப்படும் பரலோக ஜீவியாக இருப்பார். தேவனையும், பரலோக ஆளுகையையும், அடையாளப்படுத்தும் இந்த இராஜ்யமானது, பாவத்தை ஒழித்துக்கட்டும்படிக்கு, மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றது. இதன் முதலாம் வேலை, “இவ்வுலகத்தின் அதிபதியான” சாத்தானைக் கட்டுதலாக இருக்கும்.

பிற்பாடு, அந்தகாரத்தின் கிரியைகள் அனைத்தும் வீழ்த்தப்படும். இந்த வீழ்ச்சி (அ) கவிழ்த்துப் போடுகிற காரியமானது, முதலாவது மகா உபத்திரவக் காலத்தை ஏற்படுத்தும்; பிற்பாடு நீதியின் ஆளுகை முன்னேறி வரும்போது, மேசியாவின் இராஜ்யத்திற்கான ஆசீர்வாதங்களுக்கு, ஒவ்வொரு வடிவிலான சாபமும் இடம் விட்டுக்கொடுத்து விடும்; அதாவது எந்தச் சாபமும், எந்த மரித்தலும், எந்தக் கண்ணீரும், எந்தத் துக்கமும் இல்லாமல் போகுமளவுக்கு/போகும்வரைக்கும் இடம் விட்டுக்கொடுத்துவிடும்.

ஆனால் இந்தப் பரலோக இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, மனுஷர் மத்தியிலிருந்து ஒரு மணவாட்டி வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்பது தெய்வீக ஏற்பாடு மற்றும் கட்டளையின் ஒரு பாகமாக இருக்கின்றது. இந்த மணவாட்டிகள் பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும், தேவனுடைய செய்கையாய் இருக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள்; மற்றும் இவர்களில் தேவன் வேதவாக்கியங்களின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் மூலமாகவும், ஜீவியத்தின் வழிநடத்துதல்கள் மூலமாகவும் தேவன் கிரியை செய்கின்றார். இப்படியாக இவர்கள் மனதில் மறுரூபமாக்கப்பட்டு, இவர்கள் மாம்ச சுபாவத்திலிருந்து, தெய்வீகச் சுபாவத்திற்கு, கண்ணிமைக்கும் நொடிபொழுதில் மாற்றப்படும் மகிமையான உயிர்த்தெழுதலுக்கு ஆயத்தமாக்கப்படுகின்றனர். இப்படியாக இவர்கள் கர்த்தருடைய மணவாட்டி வகுப்பார் மற்றும் அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்தரர் ஆகுவதன் மூலமாக, தங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

## ''உவமையைப் பொருத்திப்பார்த்தல்''

இயேசுவின் நாட்களில், அவர் தம்முடைய மரணத்தின் மூலமாக ஜீவனுக்கான புதிய வழியைத் திறந்து வைத்து, அவருடைய சீஷர்கள் ஆகுவதற்கும், அவருடைய உடன் சுதந்தரர்கள் ஆகுவதற்கும், அவருடைய மணவாட்டி ஆகுவதற்கும் விரும்புகின்ற யாவருக்கும் அவர் பரிந்துப்பேசுகிறவர் ஆனது முதல் துவங்கி, இந்த இராஜ்ய வகுப்பாருடைய வளர்ச்சிக்காக, உலகம் காத்துக்கொண்டிருக்கின்றது.

நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தினுடைய காலத்தின் போதான இராஜ்யத்தின் காரியம் குறித்து இன்றைய பாடம் காண்பிக்கின்றது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் (சிலாக்கியம்) கொடுத்தார்" (யோவான் 1:11, 12).

தன்னுடைய குமாரனுக்காக திருமண ஏற்பாடு பண்ணின இராஜா, பிதாவாகிய தேவனாக இருக்கின்றார். உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே, கிறிஸ்துவுடன், அவருடைய இராஜ்யத்தில் உடன் சுதந்தரர்கள் என்கிறவர்கள் காணப்பட வேண்டுமென்று பிதாவாகிய தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார். இராஜாவின் மகன் உலகத்திற்கு வந்து, தம்முடைய பின்னடியார்களுக்காகவும், தாம் இராஜாவாக இருக்கப் போகின்ற இராஜ்யத்திற்காகவும், ஒருவழியை உண்டு பண்ணுவது வரையிலும், இந்தக் கலியாணம் நடைபெற முடியாது.

சரியான வேளை வந்தபோது, தேவன் கலியாணத்திற்கு அழைக்கப்பட்டவர்களை அழைக்கும்படி, தம்முடைய வேலைக்காரர்களை அனுப்பி வைத்தார், ஆனால் அவர்கள் கலியாணத்திற்கு வரவில்லை. யோவான் ஸ்நானனும், அவருடைய சீஷர்களும், இராஜாவின் மகன், யூதர்களின் மத்தியில் காணப்படுகின்றார் என்ற உண்மைக்கு, யூதர்களுடைய கவனத்தை ஈர்க்கும் இந்த அழைக்கும் வேலையைச் செய்தார்கள். "யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: …நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்" என்றார். மீண்டுமாக அவர், "மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" (யோவான் 1:26; 3:29). மணவாளனுடைய சத்தத்தைக் கேட்பதில் யோவான் ஸ்நானன் மகிழ்ச்சியடைந்தார். தன்னால் மணவாட்டி

வகுப்பாரில் அங்கமாக முடியாத போதிலும், யோவான் ஸ்நானன் மணவாட்டி வகுப்பாருக்கான அழைப்பு வந்துள்ளது என்பதைத் தீர்க்கத்தரிசனமாய் முன்னுரைத்தார்.

## "செய்தியை அசட்டைப்பண்ணுதல்"

மீண்டுமாக ஊழியக்காரர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். இயேசு, "நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள்" என்று யூதர்களிடம் கூறும்படிக்குத் தம்முடைய சீஷர்களை அனுப்பி வைத்தார் (மத்தேயு 22:4).

ஆனால் இயேசு மற்றும் சீஷர்களின் செய்தி ஏற்றுக்கொள்ளப்பட்டதா? இல்லை. அந்நாட்களில் காணப்பட்ட மத வல்லுனர்களாகிய பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களின் வழிகாட்டுதலின் கீழ், ஜனங்கள் செய்தியை ஒரு பொருட்டாக எண்ணாமல், தங்கள் வழியாய்ப் போனார்கள்; அதாவது ஒருவன் தன்னுடைய வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்திற்கும், இராஜ்யம் தொடர்புடைய இந்தச் செய்தியை நாங்கள் நம்புவதில்லை என்றுகூறி போய்விட்டார்கள். சிலர் இதைக் காட்டிலும் மோசமாக நடந்துக்கொண்டனர். சிலர் வந்திட்ட ஊழியக்காரர்களைப் பிடித்து, அவமானப்படுத்திக் கொன்றுபோட்டார்கள். (நம்பிக்கைக் கொண்டிராத இந்த) விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களால் இயேசு மாத்திரம் கொல்லப்படாமல், மாறாக அவருடைய உண்மையுள்ள சீஷர்களும் கூட மோசமாய் நடத்தப்பட்டு, கொன்றுபோடப்பட்டார்கள்.

பின்னர், மற்றொரு உவமையில் பார்த்தப் பிரகாரமாக தேவன் அந்த இஸ்ரயேல் ஜனங்களிடம் கோபங்கொண்டு தம்முடைய சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைப்பாதகர்களை அழித்து, அவர்களுடைய பட்டணத்தைச் சுட்டெரித்துப் போட்டார். கி.பி. 70-இல் எருசலேமை அழித்துப்போட்ட தீத்து இராயனின் கீழான, உரோம சேனை, தேவனின் அந்தச் சேனையாக இருந்தது; ஏனெனில் மனிதனுடைய கோபத்தினால் தமது மகிமையை விளங்கப் பண்ணுவதற்கும் தேவனால் முடியும் மற்றும், தாம் விரும்பும் எவரையும் தம்முடைய தூதர்களாக (அ) ஊழியக்காரர்களாக (அ) வேலைக்காரர்களாக அவரால் பயன்படுத்தவும் முடியும்.

## "கலியாணத்திற்குப் புறஜாதிகள் அழைக்கப்பட்டனர்"

இதற்கிடையில், கலியாண ஏற்பாடு பண்ணப்பட்டுள்ளது என்றும், யூத தேசத்தார் இதற்கு விசேஷமாய் அழைக்கப்பட்டாலும், இந்தக் கனத்திற்குப் பாத்திரமானவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தேவன் தம்முடைய ஊழியக்காரர்களாகிய அப்போஸ்தலர்களுக்கும், இவர்கள் மூலமாய் மற்றவர்களுக்கும் கூறினார். "ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றார்" (மத்தேயு 22:9). ஆகவே ஊழியக்காரர்கள் புறபட்டு வழிகளிலே போய் தாங்கள் கண்ட யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இப்படியாகக் கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது.

வழிச்சந்துகள் என்பது, எங்குமுள்ள உலகத்தாருக்கு அடையாளமாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஸ்தானாதிபதிகள், இனிமேல் யூதர்களுக்கு மாத்திரம் என்று கட்டுப்பாடு விதிக்கப்படாமல், ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியார்கள் ஆவதற்கும், இறுதியில் மீட்பருடைய இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரர்களாகுவதற்குமெனத் தேவன் இப்பொழுது உலகத்திலிருந்தும், நீதியை விரும்புகின்ற ஒரு சிறு வகுப்பாரை அழைத்துக்கொண்டிருக்கின்றார் என்ற உண்மையை, சகல ஜாதியாருக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும் அறிவிக்க வேண்டியவர்களாய்க் காணப்படுகின்றனர். வழிச்சந்தியிலுள்ள அனைத்து ஜனங்களையும் இடைமறிக்கிறவர்களாக இந்த ஸ்தானாபதிகள் காணப்படாமல், மாறாக அவர்கள் கூடும் இடங்களில், சந்திக்கும் அனைவரிடமும், கலியாண விருந்துக்குக் கதவு திறந்திருக்கும் மாபெரும் சிலாக்கியத்தைப் பரிந்துரைப்பவர்களாக மாத்திரமே இருக்க வேண்டுமென்பது கவனிக்கப்பட வேண்டும்.

இப்படியாக அழைக்கப்படுபவர்களில் அனைவரும் நல்லவர்களாக இருப்பதில்லை; சிலர் பொல்லாதவர்களாகவுங்கூடக் காணப்படுவார்கள். இதைக் குறித்து அப்போஸ்தலர், "சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துக்கொண்டார்" என்ற வார்த்தைகளில் விவரிக்கின்றார். இப்படியான விதத்திலேயே, தேவன் அந்த வகுப்பாரை உலகத்திலிருந்து தெரிந்துக்கொண்டிருக்கின்றார். அழைக்கப்படுபவர்கள் எவ்வளவு இழிவானவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு அற்பமானவர்களாக இருந்தாலும் சரி, சுபாவத்தில் எவ்வளவு கீழ்த்தரமானவர்களாக இருந்தாலும் சரி, தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் கொள்ளும் அனைவரும், கிறிஸ்துவின் நீதியாகிய கலியாண வஸ்திரத்தின் மூடுதலினால், கலியாணத்திற்குப் பாத்திரவான்களாக ஆக்கப்படுவார்கள்.

சிலர் இயல்பாகவே எவ்வளவுதான் பாத்திரவான்களாக (அ) நல்லவர்களாக இருந்தாலும் சரி, இவர்களும் இராஜாவின் முன்னிலையில் காணப்படுவதற்கு இன்னமும் பாத்திரமற்றவர்களாகத்தான் காணப்படுகின்றனர். இந்தக் கலியாணத்தில் கலந்துக்கொள்பவர்கள் அனைவரும், கலியாண வஸ்திரம் தரித்திருக்க வேண்டும்; அதாவது கிறிஸ்துவினுடைய நீதியின் புண்ணித்தினால் மூடப்பட்டிருக்க வேண்டும். கலியாண சாலை இப்படியாக விருந்தாளிகளினால் நிறைந்தது, அதாவது இராஜா எண்ணினபடி அனைத்து இடங்களும் நிறைந்தது. இப்படியாகத் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையானது, குறிப்பிட்ட எண்ணிக்கையென நிர்ணயிக்கப்பட்டது என்பதைக் கர்த்தர் சுட்டிக்காண்பிக்கின்றார்; இன்னுமாக நிர்ணயம் பண்ணப்பட்ட எண்ணிக்கை நிறைவடைந்த பிற்பாடு, அழைப்பு நின்றுவிடும் என்றும் கர்த்தர் சுட்டிக்காண்பிக்கின்றார்.

## "விருந்தாளிகளை உள்ளே வந்து பார்த்தல்"

யூதர்களுடைய வழக்கத்தின்படி, ஒவ்வொரு கலியாண விருந்தின் போதும், ஒவ்வொரு விருந்தாளியும் அவனுடைய சொந்த வஸ்திரங்களை மூடிக்கொள்ளத்தக்கதாக வெண்மையான கலியாண வஸ்திரங்கள் கொடுக்கப்படுவதுண்டு; சந்தேகத்திற்கு இடமின்றி இவ்வழக்கமானது, தெய்வீக ஞானத்தினால் ஏற்பாடு பண்ணப்பட்டதாகவே இருக்க வேண்டும். இப்படியாகக் கலியாணத்தில் மரியாதை தொடர்புடைய விஷயத்தில், அனைவரும் சரிசமமான நிலைமையில் காணப்பட்டனர், ஏனெனில் அனைவரும் விருந்தளிப்பவரின் விருந்தாளிகளாகக் காணப்படுகின்றனர். ஆகவே கிறிஸ்து மூலமாய் தேவன் அளித்துள்ள மாபெரும் விருந்துக்கு வரும் அனைவரும், மாம்சத்திலுள்ள தங்களுடைய ஏதேனும் சொந்த தகுதியில் வராமல், மாறாக தேவன் தங்களை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, தங்களிடத்தில் தகுதி இல்லை என்று ஒப்புக்கொண்டு, தாங்கள் இணங்க விரும்பும் இவ்வழைப்பிற்கு, கிறிஸ்துவினுடைய புண்ணியமே தங்களைத் தகுதிப் பண்ணுகிற காரியமாய் இருக்கிறது என்று ஏற்றுக்கொண்டு, வர வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

வீட்டிற்குள் பிரவேசிக்கும் போது, ஒவ்வொரு விருந்தாளிக்கும் வஸ்திரம் கொடுக்கப்படுகின்றது, மற்றும் அதை உடனடியாக விருந்தாளிகள் தரித்துக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். இந்தக் கலியாண வஸ்திரம் தரிக்காமல் காணப்படுவது என்பது, விருந்தை ஏற்பாடு பண்ணியுள்ள எஜமானை அவமதிப்பதற்கான குறிப்பாக இருக்கும். இன்னுமாக கலியாணத்தில் கலியாண வஸ்திரம் தரித்திராதவன் அதைக் கழற்றிக் கொண்டவனாக இருப்பான், ஏனெனில் வஸ்திரம் இல்லாமல் எவரும் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. இக்காட்சியே நமக்கு உவமையில் கொடுக்கப்பட்டுள்ளது. விருந்தாளி ஒருவன் கலியாண வஸ்திரம் இல்லாமல் அங்குக் காணப்பட்டான்; அவன் தன் வஸ்திரத்தைக் கழற்றிக்கொண்டதன் மூலமாக, தனக்கு விருந்தளித்தவரை அவமதித்தவனாக இருந்தான்; வஸ்திரம் தரித்திருந்தாலே உள்ளே அனுமதிக்கப்படக்கூடிய நிபந்தனையாகிய, அந்த வஸ்திரத்தை அவன் களைந்துப் போட்டவனாகக் காணப்பட்டான்.

"விருந்தாளிகளைப் பார்க்கும்படி இராஜா உள்ளே பிரவேசித்தபோது" என்ற வார்த்தைகளானது, விருந்திற்குச் சற்றே முன்னதாக நடந்திட்ட பார்வையிடுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உவமையில் இடம்பெறும் இராஜா, தேவனைக்

குறிக்கின்றபடியால், தேவன் ஏதோ ஒரு விதத்தில், உண்மையுள்ளவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கைப் பண்ணி, அதே வேளையில் கிறிஸ்துவினுடைய மரணத்தின் புண்ணியத்தை அவமதிக்கிறவர்களை, தெய்வீக நீதியின் வெளிப்படுத்தல் மூலம் பார்ப்பார்/கவனிப்பார் என்பதாகக் காண்பிக்கப்படுகின்றது. இல்லையேல் இத்தருணத்தில் இராஜா, கிறிஸ்துவுக்கு அடையாளமாகவும் எடுத்துக்கொள்ளப்படலாம்; ஏனெனில் அவர் வரும்போது, அவர் பரம பிதாவினால் வல்லமையினாலும், இராஜரிக அதிகாரத்தினாலும் தரிப்பிக்கப்பட்டவராகக் காணப்படுவார்; இக்காரியமானது நமது கர்த்தரினால், தாலந்துகள் மற்றும் இராத்தல் பற்றின உவமைகளில் குறிப்பிடப்படுகின்றது. ஆகையால் அவருடைய இரண்டாம் வருகையின் போது, அவருடைய உண்மையுள்ள ஊழியர்களெனக் காண்பித்துக்கொண்டிருக்கும் அனைவரையும், அதாவது கலியாண விருந்தை அனுபவிக்க வாஞ்சிக்கும் அனைவரையயும், அவர் பார்வையிடுவாரென அவர்/கர்த்தர் தாமே நமக்குக் கூறியுள்ளார்.

இராஜாவுக்கு முன்னதாகக் கலியாண வஸ்திரம் இல்லாமல் காணப்பட்ட ஒரு மனுஷன், ஒரு வகுப்பாருக்கு அடையாளமாய் இருக்கிறானே ஒழிய, ஒரு தனி நபருக்கு மாத்திரம் அடையாளமாய் இருக்கின்றான் என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட வகுப்பாரை நம்மால் இன்றும் காண முடிகின்றது; அதாவது இவர்கள் தங்களைக் கிறிஸ்துவின் பின்னடியார்கள் என்றும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்துக்குக் காத்திருக்கிறார்கள் என்றும், தங்களுடைய கர்த்தரின் சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் என்றும் அறிக்கைப் பண்ணுபவர்களாக இருந்து, அதே வேளையில் பிதாவுக்கு முன்பான தங்களுக்கான தகுதியின் விஷயத்தில், தாங்கள் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தை இனி ஒருபோதும் நம்புவதில்லை என்றும் நம்மிடம் தெரிவிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் இயேசுவைத் தங்கள் இரட்சகர் இல்லை என்றும், தங்கள் மீட்பர் இல்லை என்றும் மறுதலிக்கின்றார்கள். இயேசுவைத் தங்களுடைய போதகராக மாத்திரமே இவர்கள் கருதுகின்றனர்; மற்றும் இயேசுவினுடைய போதனைகளிலும் பகுதியை மாத்திரமே ஏற்றுக்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கத்தினர் ஆகுவதற்குத் தகுதியற்றவர்களாய் இருக்கின்றார்கள் என்பது, வெளியரங்கமாய்த் தெரிகின்றது. நேர்மையுள்ளவர்களும், உண்மையுள்ளவர்களும் மாத்திரமே, அந்த மணவாட்டி வகுப்பாரின் அங்கத்தினராய் இருப்பார்கள். கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியத்தை மறுதலிக்கின்றவர்கள் அனைவரும், இராஜ்யத்தின் வகுப்பார் ஆகுவதற்கு மறுக்கப்படுவார்கள் என்று உவமை காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் தாங்கள் எப்படி, "கலியாண வஸ்திரமில்லாமல்" உள்ளே வந்தார்கள் என்பதைச் சொல்ல முடியாமல் இருந்தார்கள், காரணம் வஸ்திரம் இல்லாமல் இவர்கள் உள்ளே வரவில்லை. ஒருவனுடைய பூரணமின்மையானது, கிறிஸ்துவின் புண்ணியமாகிய, கலியாண வஸ்திரத்தினால் முதலாவதாக மூடப்பெறாமல், கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையினுடைய ஐக்கியத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை. கலியாண வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டவர்கள், புறம்பே தள்ளப்பட்டார்கள். "அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்" (மத்தேயு 22:13).

## "புறம்பான இருள்"

நம்முடைய மனங்களானது, இருண்ட யுகங்களினுடைய கற்பனைகளினால் நிரம்பியிருந்தபோது இந்த வேத வாக்கியத்தையும் (மத்தேயு 22:13), இதைப் போன்ற மற்ற வேத வாக்கியங்களையும் நாம் வேறு அர்த்தத்தில் வாசிக்கிறவர்களாய்க் காணப்பட்டிருந்தோம். கலியாண வஸ்திரம் இல்லாமல் இருந்த மனுஷன் அடையாளப்படுத்தும் வகுப்பார், நித்தியமான சித்திரவதைக்குள் தள்ளப்பட்டார்கள் என்றும், அங்கு அவர்கள் நித்திய காலமாய்ப் பாடுபடுவார்கள் என்றும் நாம் எண்ணியிருந்தோம். ஆனால் இப்பொழுது, மிகவும் கவனமாய் வேதவாக்கியங்களை ஆராய்ந்துப் பார்க்கும்போது, கலியாணத்திற்கு வந்த இந்த விருந்தாளிகள் அனைவரும், வெளி உலகமாகிய இருளினின்று, கலியாண சாலையின்/அறையின் வெளிச்சத்திற்குள்ளாக வந்தவர்களாய்

இருக்கின்றனர்; ஆகவே விருந்தாளிகளில் ஒருவர் வெளிச்சத்திலிருந்து, புறம்பான இருளுக்குத் தள்ளப்படுதல் என்பது, இப்படிப்பட்டவர்களிடமிருந்து, கலியாண சாலை/அறையின் வெளிச்சம் அடையாளப்படுத்தும் அறிவையும், சந்தோஷங்களையும் எடுத்துப்போட்டு விடுகிறதாய் இருக்கும்.

புறம்பான வெளி உலகத்தைப் பொறுத்தமட்டில், அப்போஸ்தலர் யோவான் குறிப்பிடுவது போன்று, முழு உலகமும் இருளில், "பொல்லாங்கனுக்குள்" காணப்படுகின்றது. மணவாட்டி வகுப்பார் நிறைவடையும்போது, பிற்பாடு வரும் மேசியாவின் இராஜ்யத்தினுடைய ஆசீர்வாதங்களுக்காக, உலகை ஆயத்தம் பண்ணும்படிக்கு, ஒரு மகா உபத்திரவக்காலம் வரும் என்பதையும் நாம் அறிவோம். அந்த உபத்திரவத்தின்போது, இருளில் காணப்படுபவர்களுக்கு அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும், அதாவது அவர்களுடைய தவறான அடிப்படையிலான மனித நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் கவிழ்க்கப்படுவது தொடர்புடைய விஷயத்தில் உலகம் ஏமாற்றம், அதிருப்தி, முதலானவைகளை அடையும்.

"அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களோ சிலர்" (மத்தேயு 22:14) என்று கூறி, நமது கர்த்தர் உவமையை நிறைவு செய்கின்றார். இவ்வசனத்தின் அர்த்தமாக நாம் ஒரு காலத்தில், தெரிந்துக்கொள்ளப்பட்ட சிலர் மாத்திரமே எதிர்க்காலத்தில் தேவனிடமிருந்து கிருபை பெற்றவர்களாகவும், மீதமான மனுக்குலம் அனைவரும் நித்திய காலமாய்ச் சித்திரவதைப்படுத்தப்படுவார்கள் என்று அனுமானித்திருந்த விஷயம், அர்த்தமாய் இருப்பதில்லை; யூத தேசத்தார் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்; கபடற்ற உத்தம இஸ்ரயேலர்கள் சிலரைத் தவிர, மற்றவர்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ள தவறிப்போனார்கள். பதினெட்டு நூற்றாண்டுகளாக சுவிசேஷ யுகத்தினுடைய அழைப்பை ஏறக்குறைய அநேகர் கேட்கத்தக்கதாக, செய்தியானது வழிச்சந்துகளில் போய், ஒன்றன்பின் ஒன்றாக, புறஜாதியார் தேசங்களுக்குக் கடந்துப் போனது. எனினும் சிலர் மாத்திரமே அழைப்பை ஏற்றுக்கொண்டு, தெரிந்துக்கொள்ளப்பட்ட நிலைக்கு வந்திருக்கின்றனர். இந்தத் தெரிந்துக்கொள்ளப்பட்ட நிலைக்கு வந்துள்ளவர்கள் மத்தியில், சரிவர உணர்ந்துகொள்ளாத ஒரு வகுப்பார் காணப்படுவார்கள். இவர்கள் புறம்பே தள்ளப்படுவார்கள் (அ) புறக்கணிக்கப்படுவார்கள்.

"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32) என்று கூறி, ஆண்டவர் மீண்டும் காரியத்தின் மீது கவனத்தைக் கொண்டு வந்தார். யூதர்களையும், புறஜாதிகளையும் அடக்கியுள்ள சிறுமந்தையினர், தங்கள் உண்மையின் மூலமாகத் தேவனுடைய தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனமாக, அவருடைய தெரிந்தெடுக்கப்பட்ட சபையாக, கிறிஸ்துவின் மணவாட்டியாக ஆகுவார்கள். பிற்பாடு ஆதாமின் கீழ்ப்படியாமை மற்றும் விழுகையின் காரணமாக இழந்துப் போகப்பட்ட அனைத்தையும் மற்றும் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும், மனுக்குலம் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான மகிமையான வாய்ப்பினால், மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்கான பரமபிதாவின் பிரதிநிதிகளாக சபை, அவர்களுடைய கர்த்தருடன் காணப்படுவார்கள்.

---

**R4686**

# "சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள்"
## மத்தேயு 22:15-22; 34-46.

"இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்."—வசனம் 21.

நம்முடைய கர்த்தருடைய நாட்களில் காணப்பட்ட பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள், மதத்தின் தலைவர்களாய்க் காணப்பட்டனர். இவர்கள் ஒரு கூட்டுச் சமுதாயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்; மேலும் இவர்கள் இருவரின் உபதேசங்களும் எதிரிடையாக

இருப்பினும், இவர்கள் மிகவும் அபூர்வமாகவே ஒருவர்மேல் ஒருவர் தாக்குதல் பண்ணுபவர்களாகக் காணப்பட்டனர். பரிசேயர்கள் தேவனையும், தீர்க்கத்தரிசிகளையும், நியாயப்பிரமாணங்களையும் அங்கீகரிக்கின்றவர்களாக இருந்து, மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலின் மூலம் எதிர்க்கால வாழ்க்கை இருக்கின்றது என்று நம்பி, தங்கள் தேசத்தை உயர்த்துவதற்கும், தங்கள் தேசம் மூலம் உலகம் ஆசீர்வதிக்கப்படுவதற்குமென, மேசியா வருவார் என்றும் நம்பினவர்களாகக் காணப்பட்டனர். இவைகளையெல்லாம் சதுயேர்கள் நம்புவதில்லை; சதுசேயர்கள் கடவுள் உண்டு என்பதைக் கண்டறிய/முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாது என்ற கொள்கை உடையவர்களாகவும், விமர்சனம் பண்ணுபவர்களாகவும் காணப்பட்டனர். இவர்கள் எதிர்க்கால வாழ்க்கையைப் பற்றி ஐயம் கொள்வதினால், தற்கால ஜீவியத்தை நன்கு அனுபவிக்கிறவர்களாய் இருந்தனர். இயேசு பரிசேயர்களை அங்கீகரியாமலும், அவர்களுடைய குறைகளைச் சுட்டிக்காண்பித்ததினாலும், அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும் விஷயத்தில் பூரணமாயும், பரிசுத்தராயும் இருக்கின்றார்கள் என அவர்கள் கூறிக்கொள்ளும் விஷயத்தில், அவர்கள் மாய்மாலக்காரர்கள் என்று சுட்டிக்காண்பித்ததினாலும், அவர்களுக்கு நடிக்காதவர்களிடத்திலும், ஏழைகளிடத்திலும் அனுதாபம் இல்லை என்று அவர்களைக் கடிந்துகொள்வதினாலும், பரிசேயர்கள் இயேசுவை எதிர்த்தனர்.

சதுசேயர்களுடைய நம்பிக்கையின் கண்ணோட்டத்தின்படி இயேசு மோசடிக்காரராக/ஏமாற்றுப் பேர்வழியாக இருந்தபடியினால், சதுசேயர்கள் இயேசுவை எதிர்த்தனர். இவர்கள் பார்வையில், இயேசு ஏமாற்றும் பேர்வழிபோல் இருந்த விஷயம், இயேசுவை எதிர்க்கும் அளவுக்கு ஒரு பொருட்டான காரியமாக இல்லாமல் இருந்தபோதிலும், இயேசு ஜனங்கள் மத்தியில் பெற்றுக்கொண்டு வந்த செல்வாக்கானது, சமாதானத்தைக் குலைக்கும் ஏதோ காரியத்திற்கு வழிநடத்திவிடும் என்றும், இதினிமித்தம் உரோம சாம்ராஜ்யமானது, யூதர்களிடத்தில் பாதகமாய் நடக்க வழிநடத்திவிடும் என்றும் அஞ்சினதினால், இவர்கள் இயேசுவை எதிர்த்தனர். ஆக பரிசேயர்களும், சதுசேயர்களும் இருவரும் இயேசுவை எதிர்த்திட்டாலும், இவர்கள் இருவரும் வெவ்வேறு காரணங்களுக்காக இயேசுவை எதிர்த்தவர்களாக இருந்தனர். எருசலேமுக்குள்ளான இயேசுவின் பிரவேசித்தலும்/விஜயமும், "தாவீதின் குமாரனுக்கு," மேசியாவிற்கு "ஓசன்னா" என்ற ஜனங்களின் ஆரவாரக் கூக்குரலும், பரிசேயர்களுடைய மனதில் பொறாமையைத் தூண்டினது. ஆனால் சதுசேயர்களோ, உரோம சாம்ராஜ்யத்துடன் ஏதேனும் பிரச்சனையில் பொதுஜனங்கள் இறங்கிவிடுவார்களோ என அச்சம் கொண்டனர். மாபெரும் போதகரிடமிருந்து ஜனங்களுடைய ஆதரவைத் திசைத்திருப்பிட பரிசேயர்கள் முயற்சித்தனர். மேலும் இதற்காக அவரிடம் கேள்வி கேட்டு, அவரை அகப்படுத்த நாடினார்கள்.

## "வரிக்கொடுக்கிறது நியாயமோ?"

ஒருவேளை இக்கேள்விக்கு இயேசு, நியாயம் இல்லை என்று பதிலளிப்பாரானால், அவரைக் கலகத்தின் தலைவனாகக் கைதுச் செய்து, அவரைக் கொன்றுபோடும்படிக்குப் பிலாத்துவை வற்புறுத்துவது சுலபமாய் இருக்குமென்று எண்ணினார்கள். ஒருவேளை இயேசு, இராயனுக்கு வரிக்கொடுப்பது நியாயமானது என்று சொல்வாரானால், அக்காரியம் அவருக்கு "ஓசன்னா!" கூறின ஜனங்களுக்கு மனமுறிவு ஏற்படுத்துகிறதாக இருக்கும் என்று இவர்கள் எண்ணினார்கள்; யூதர்கள், தாங்கள் தேவனுடைய இராஜ்யமாக இருப்பதினால், எந்தப் பூமிக்குரிய இராஜ்யத்திற்கும் வரிக் கொடுக்கக்கூடாது என்றும், இப்படியாக வற்புறுத்தலின் காரணமாகச் செய்வதுங்கூடப் பயபக்தியற்றது என்றுமுள்ள மூடநம்பிக்கையான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். "போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்று...அறிந்திருக்கிறோம்" (மத்தேயு 22:16, 17) என்ற வசனத்தின் வார்த்தைகளை இவர்கள் எவ்வளவு தந்திரமாய்ப் பயன்படுத்தினார்கள் என்று நம்மால் கவனிக்க முடிகின்றது; அதாவது அவருடைய உண்மையைப் பாராட்டும்படியாக, "நீர் சத்தியமுள்ளவரென்றும் அறிந்திருக்கின்றோம்" என்றும், அவரைப் போதகர் என்று தாங்கள் அங்கீகரிப்பதைத் தெரிவிக்கும் வண்ணமாகவும், அவர் என்ன நேர்ந்தாலும் ஒளியை, சத்தியத்தைப் போதிப்பார் என்பதைத் தாங்கள் அங்கீகரிப்பதைத் தெரிவிக்கும் வண்ணமாகவும், "நீர் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும் அறிந்திருக்கிறோம்" என்றும், தங்கள் நிலைப்பாட்டினை வலுப்படுத்தும் வண்ணமாக, "நீர்

முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்” என்றும் கூறினார்கள்.

இயேசுவைச் சிக்க வைக்க வேண்டுமென்று இந்த நயவஞ்சகமான பாராட்டுகள் எல்லாம் கூறப்பட்டது; ஆனால் இயேசு உடனடியாக, "மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்,” "உங்கள் உள்ளான நயவஞ்சகங்களை, ஏன் உண்மை பேசுபவர்கள்போல் திரையிட்டு மூடுகின்றீர்கள்?,” "வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள்” என்று கூறினார். வரிக்காசு என்பது, அவர்கள் கட்டவேண்டிய வரிக்கான காசாக இருந்தது. ஒருநாளுக்கான வழக்கமான கூலியாகிய ஒரு பணத்தை (நம்முடைய கணக்கின்படி கிட்டத்தட்ட 17 cents) அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். "அப்பொழுது அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.” (மத்தேயு 22:20,21). இயேசுவை அவருடைய வாயின் வார்த்தைகளினால் எப்படிச் சிக்க வைக்க முடியும் எனும் விஷயத்தில் தந்திரமான பரிசேயர்கள் குழம்பிப் போயிருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை! அவரைச் சிக்க வைப்பதற்குப் பதிலாக, இவர்களே மாட்டிக்கொண்டனர்; ஏனெனில் இவர்கள் கூறின பாராட்டுதல்கள் அனைத்தும், இயேசுவுக்கு ஆதரவானதாக, ஜனங்களின் மனதில் பதிந்துவிட்டது.

## “எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்?”

அடுத்ததாக, கடவுள் உண்டு என்பதைக் கண்டறிய முடியாது எனும் கொள்கையை உடையவர்களாகிய சதுசேயர்கள், தங்களுடைய கேள்வியினால், மாபெரும் போதகரைச் சிக்க வைத்திட முயன்றனர். "ஏழுச் சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக, ஒரே ஸ்திரீயை மணந்து, அவள் மரித்துப்போவதற்கு முன்னாக, இந்த ஏழுச் சகோதரர்களும் மரித்துப்போனவர்களாகக் காணப்பட்டனர். உயிர்த்தெழும்போது, இவர்கள் ஏழு பேரில் எவனுக்கு அவள் மனைவியாக இருப்பாள்?” என்பது இவர்களின் கேள்வியாக இருந்தது. அவள் எவனுக்குப் பரலோகத்தில் (அ) உத்தரிக்கும் ஸ்தலத்தில் (அ) நித்திய காலமான சித்திரவதையின் ஸ்தலத்தில் மனைவியாக இருப்பாள்? என்று இவர்கள் கேட்கவில்லை, ஏனெனில் இயேசுவும் சரி, யூதர்களும் சரி, இப்படியான போதனைகளைக் கொண்டவர்களாக இருக்கவில்லை. பரிசேயர்களும், இயேசுவும், மரணத்திலிருந்து இருக்கும் உயிர்த்தெழுதலைப் போதித்தவர்களாகக் காணப்பட்டனர்; மேலும் இந்தப் போதனைக்கு எதிராகவே, சதுசேயர்களின் ஏளனப்படுத்தும் கேள்வி காணப்பட்டது.

"நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்” (மத்தேயு 22:22, 29) என்ற ஆண்டவருடைய பதிலின் மகத்துவத்தைக் கவனியுங்கள்; அதாவது, "இப்படிப்பட்ட கேள்வி தொடர்புடைய வேதவாக்கியங்களின் போதனையை நீங்கள் புரிந்துக்கொள்ளவில்லை. உங்களுடைய இந்தக் கேள்வியில், நீங்கள் மாபெரும் தெய்வீக வல்லமையைப் பொருட்படுத்தாமல் காணப்படுகின்றீர்கள். இந்த மாபெரும் தெய்வீக வல்லமையானது, உயிர்த்தெழுதலின் காலங்களில் செயல்பட்டு, அச்சூழ்நிலைகளின் அனைத்து இடர்பாடுகளையும் செம்மைப்படுத்துகின்றதாய் இருக்கும்,” என்ற விதத்தில் இயேசு பேசினார். உயிர்த்தெழுதலை (படிப்படியாக) அடைபவர்கள், பாவம் மற்றும் மரணத்தின் நிலையிலிருந்து முற்றிலுமாக எழும்புபவர்கள் என்றும், "திருமணம் செய்து கொள்வதில்லை” மற்றும் ஆண் பால்-பெண் பால், வேறுபாடின்றி தேவதூதர்களைப்போல் இருப்பார்கள் என்றும் மாபெரும் போதகர் தெரிவித்தார். இப்படியாக மாபெரும் கேள்வி என்றும், பதில் கொடுக்கவே முடியாத கேள்வி என்றும் எண்ணிக்கொண்டு, வரப்பட்ட சதுசேயர்களின் கேள்வியானது தோல்வியுறப்பண்ணப்பெற்றது, மற்றும் இவர்களின் அறியாமையும் வெளிப்படுத்தப்பட்டது.

## “எந்தக் கற்பனை பிரதானமானது?”

தெய்வீகக் கற்பனைகளின் முக்கியத்துவம் தொடர்புடைய கேள்வியினால், கர்த்தரைச் சிக்க வைக்கும்படிக்கு அடுத்து நியாயசாஸ்திரிகளில் ஒருவன் முயற்சித்தான். இயேசு எந்தக் கற்பனையைப் பிரதானமாக கருதுகின்றதாக இயேசுவிடம் நியாயசாஸ்திரி கேட்டார். பத்துக்கற்பனைகளை (உபாகமம் 6:5), நியாயப்பிரமாணத்தின்படி, மாபெரும் போதகர், இரண்டாகப் பிரித்துக்கூறினார். "இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய

கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும், தீர்க்கத்தரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்" (மத்தேயு 22:37-40). இப்படியாக அருமையாய் நியாயப்பிரமாணத்தைச் சுருக்கமாய்க் கூறுபவரிடம், நியாயசாஸ்திரி என்ன பதில் கூற முடியும்? இவரால் எதுவும் சொல்ல முடியாமல் போய்விட்டார். இதுவரையிலும் இல்லாத அளவுக்கு, நியாயசாஸ்திரிக்குப் பதில் கொடுக்கப்பட்டது.

## "இயேசு கேள்வி கேட்டார்"

"மெசியாவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்" (மத்தேயு 22:42-45).

ஆம் இக்கேள்வி, பரிசேயர்களுக்கு மிகவும் ஆழமான கேள்வியாக இருந்தது. இவர்களுடைய அனைத்துக் கேள்விகளுக்கும் மாபெரும் போதகரினால் பதில் கொடுக்க முடிந்தது, ஆனால் இவர்களால் அவருடைய கேள்விக்குப் பதில் கொடுக்க முடியவில்லை. மேசியா மாம்ச பிரகாரமாக தாவீதின் வம்சத்தில் பிறந்தார் என்றும், மாம்சத்தில் காணப்பட்ட மேசியாவினடத்தில் தேவனுடைய நோக்கங்கள் முழுமையாய் நிறைவு பெறவில்லை என்றும், மேசியா பலியாகத் தம்முடைய மாம்சத்தை ஒப்புக்கொடுத்து மகிமை, கனம் மற்றும் அழியாமையின் தளத்தினிடத்திற்கு, மரணத்திலிருந்து உயர்த்தப்பட்டார் என்றும், தேவதூதர்கள், அதிகாரங்கள் மற்றும் துரைத்தனங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டார் என்றும், நாம் தெளிவாய்க் காணமுடிகின்றது. அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் அவர் தாவீதின் குமாரனாய் இருந்தார் என்றும், அவர் மகிமைப்படுத்தப்பட்டபோது, அவர் தாவீதின் ஆண்டவராய் இருக்கின்றார் என்றும், ஏற்றவேளையில் அவர் மூலமாய்த் தாவீது மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலை மாத்திரமல்லாமல், மேசியாவின் இராஜ்யத்தில் பங்கடையத்தக்கதான ஆசிர்வாதத்தையும் பெற்றுக்கொள்வார் என்றும் நாம் புரிந்துக்கொள்கின்றோம். மாம்சத்தில் வந்த மேசியாவிற்கு தகப்பனாய்/முற்பிதாவாய் காணப்பட்டவர், இவ்வாறாக மகிமையடைந்த மேசியாவின் குமாரனாய் இருப்பார்; மேசியாவின் பூமிக்குரிய ஜீவியமானது, தாவீதையும் உள்ளடக்கின முழு உலகத்திற்குரிய திரும்பக்கொடுத்தலுக்கான விலையாக வழங்கப்பட்டது. "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்." (சங்கீதம் 45:16).

## "பூமிக்குரிய இளவரசன் ஒருவனின் உதாரணம்"

பெர்லினில் நடைப்பெற்ற ஜெர்மானிய நிகழ்ச்சி ஒன்றில், தளபதி ஒருவன், ஒரு அறிமுகமற்ற வாலிப உத்தியோகஸ்தன் ஒருவனைச் சந்தித்தான்; அந்த வாலிபன் பெரிய பதக்கமாகிய சின்னம் ஒன்றை மாத்திரம் தரித்தவனாகக் காணப்பட்டான். "ஆயுத படை அதிகாரியே, நீ தரித்திருக்கின்ற இச்சின்னம் என்ன என்று தளபதி கேட்டான். வாலிபன் தன்னடக்கத்துடன், தளபதியே இது ஒரு பதவி என்றான். இது புரஷிய நாட்டு பதவி இல்லையே, இதுபோன்று நான் பார்த்ததில்லையே" என்றான் தளபதி. "இது ஒரு ஆங்கில பதவி" என்றான் வாலிபன். "இதை யார் உனக்குத் தந்திட்டார்கள்?" என்று வினவினான் தளபதி. "என்னுடைய பாட்டி" என்றான் வாலிபன். வாலிபன் தன்னை முட்டாளாக்கப் பார்க்கின்றான் என்று தளபதி எண்ண தொடங்கி, "உன்னுடைய பாட்டி யார்?" என்று கேட்டான். தளபதி வியக்கத்தக்கதாக, "இங்கிலாந்தின் மகாராணி விக்டோரியா அவர்கள் என் பாட்டி ஆவார்" என்று வாலிபனிடமிருந்து பதில் வந்தது. மாறுவேடத்தில் இளவரசன் அங்குக் காணப்பட்டான், இப்படியாகவே மகிமையின் மாபெரும் இராஜாவாகிய இயேசு

மாறுவேடத்தில் காணப்பட்டார். "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை" (யோவான் 1:10).

---

**R5521**

# "பிரதான கற்பனைகள்"

## மாற்கு 12:28-44.

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்."—லூக்கா 10:27.

நமது கர்த்தரைச் சிக்க வைக்கும்படி, நியாயசாஸ்திரிகள் நாடின நாளன்று, நமது கர்த்தரிடம் அநேகம் கேள்விகள் கேட்கப்பட்டன. அவரிடம் கேட்கப்பட்ட இறுதிக் கேள்வியைப் பற்றி இன்றைய பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றோம். சராசரியான கல்வியறிவைக் காட்டிலும் அதிகம் கொண்டிருந்த வேதபாரகரில் ஒருவன், இயேசுவிடம் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் மற்றும் அவைகளுக்கு நமது கர்த்தர் எவ்வளவு நன்றாய் உத்தரவு கொடுத்து வந்தார் என்பதையும் வேதபாரகன் உணர்ந்தவனாக இருந்தான். பின்னர் வேதபாரகன் ஒரு கேள்வியை முன்வைத்தான்; அநேகமாக இயேசுவைச் சிக்க வைக்க வேண்டும் என்றில்லாமல், நேர்மையுடனே இவன் இக்கேள்வியை முன்வைத்திருக்க வேண்டும். "கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று?" வேதபாரகன் கேட்டான்; இவன் பத்துக் கற்பனைகள் தொடர்புடைய கேள்வியைக் கேட்டான். "இஸ்ரயேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை" என்று இயேசு கூறினார் (மாற்கு 12:30).

நமது கர்த்தர் பழைய ஏற்பாட்டில் இடம்பெறும் வேதவாக்கியத்தைக் குறிப்பிட்டார் (உபாகமம் 6:4, 5). இயேசுவின் இந்த வார்த்தைகள், புரிந்துக்கொள்ளும் விதத்தில் எத்துணை அருமையாய்க் காணப்படுகின்றது. இந்த நூற்றாண்டில்கூட யாரால், இவ்வளவு மாபெரும் சத்தியத்தை, இவ்வளவு சுருக்கமாய்க் கூற இயலும்? பரலோக ஞானமானது உபாகமம் 6:4,5- ஆம் வசனம் முதலாவதாக பேசப்பட்டப் போது வெளிப்படுகின்றது. இயேசு இதைக் குறிப்பிட்டபோதும், அதே பரலோக ஞானம்தான் வெளிப்பட்டது. இயேசு, எதையும் கூடச் சேர்க்கவில்லை, ஏனெனில் எதுவும் கூடச் சேர்க்கப்பட முடியாது.

அன்பின் அழுத்தத்தை, நாம் தினந்தோறும் மிகத் தெளிவாகப் பார்த்துக்கொண்டு வருகின்றோம். அன்பே பிரதானமான காரியமாகும்! முற்காலங்களின் விசுவாசப் பிரமாணங்களின்படி, அன்பிற்குப் பதிலாக பயமே, அச்சமே காணப்பட்டது; ஏனெனில் அண்ட சராசாரத்தின் சர்வ வல்லமையுள்ள தேவன், பெரும்பாலான மனுக்குலத்தார் நித்திய காலமாய்ச் சித்திரவதைப்பட வேண்டுமென்று, நோக்கங்கொண்டு, மனிதனுடைய சிருஷ்டிப்பிற்கு முன்னதாகவே சித்திரவதைக்கான மாபெரும் நரகத்தை ஆயத்தம் பண்ணி வைத்துள்ளார் என்று நமக்குக் கூறப்பட்டிருந்தது. ஆனால் இப்படியெல்லாம் விசுவாசப்பிரமாணங்களில்தான் காணப்படுகின்றது; வேதாகமமானது, மனிதனுடைய அனைத்து விசுவாசப் பிரமாணங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளுக்கு நேரெதிர்மாறாக, தேவன் அன்பாக இருக்கின்றார் என்றும், அவர் வெளிச்சம் மற்றும் இரக்கத்தின் பிதாவாக இருக்கின்றார் என்றும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் அவரிடமிருந்தே வருகின்றது என்றும் கூறுகின்றது.

உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே, கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாகத் தேவனால் ஏற்பாடு பண்ணப்பட்டுள்ள தெய்வீக மன்னிப்புக் குறித்தும்கூட, வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. பாவங்களுக்கான இந்த மன்னிப்பு

என்பது, இப்பொழுது உலகத்திலிருந்து அழைக்கப்படும் சபைக்கு மாத்திரமே உரியதாய்க் காணப்படாமல், இறுதியில் தேவனுடைய அன்பானது, அவருடைய சிருஷ்டிகள் அனைத்தினிடத்திற்கும் வெளிப்படுத்தப்படும் என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கின்றது; அதாவது மனுக்குலம் முழுவதும் தேவனுடைய அன்பு பற்றின அறிவிற்குள்ளாக ஏற்றக்காலத்தில் வந்து, பாவத்தைக் கைவிட்டு, தெய்வீக ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டு, இப்படியாக மேசியாவின் இராஜ்யத்தின் கீழ், தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமைக் காரணமாக இழக்கப்பட்ட சரீரம், மனம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றிலுள்ள பூரணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு,ம் மாபெரும் ஆசீர்வாதத்தை அடையத்தக்கதாக, இறுதியில் தேவனுடைய அன்பானது, அவருடைய சிருஷ்டிகள் அனைவரிடத்திலும் வெளிப்படுத்தப்படும் என்று நமக்கு வேதாகமம் தெரிவிக்கின்றது.

## "இரண்டாம் கற்பனை"

இயேசு இன்னுமாக, "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (மாற்கு 12:31) என்று கூறினார். மீண்டுமாக, இத்தனை சொற்ப வார்த்தைகளுக்குள், எவ்வளவான காரியங்கள் உரைக்கப்பட்டுள்ளது என்று கண்டு பிரமிப்படைகின்றோம். சிறு விஷயங்கள் மாத்திரமே அடங்கப் பெற்றிருக்கும் நிலையில், எத்தனையோ புத்தகங்கள் பக்கம் பக்கமாக எழுதப்பெற்றுள்ளது. தம்முடைய சிருஷ்டிகளின் நன்மைக்கான அவருடைய அன்புடன் கூடிய வழிநடத்துதல்கள் மூலம் வெளிப்படும் இரக்கத்தையும், பரிவையும் கொண்டிருக்கும் ஒரு தேவனை வேதாகமம் வெளிப்படுத்துவதுபோன்று, வேறெந்த மதமும் காணப்படுவதில்லை. திருப்பி அன்பு செலுத்துவதைக் குறித்து வேறெந்த மதமும், கருத்துக்கூடக் கொடுப்பதில்லை. நம்முடைய சக மனுஷரிடத்தில் நாம் கையாள வேண்டிய இவ்வளவு ஓர் உயர்வான கொள்கையைக் குறித்து ,வேறெந்த மதமும் கருத்தும் தெரிவிப்பதில்லை.

கிட்டத்தட்ட 4000 வருடங்களுக்கு முன்னதாக பழமை வாய்ந்த இந்தத் தேவனுடைய பிரமாணத்தை, யூதர்கள் வாயிலாக, மற்ற ஜனங்களும், ஜாதியாரும் அறிய வந்தார்கள் (உபாகமம் 4:6-8). ஆனால் எவரும் இதன் உண்மையான முக்கியத்துவத்தைக் கிரகித்துக்கொள்ளவில்லை. இந்தப் பிரமாணத்திற்குக் கொஞ்சம் நெருக்கமாக, கன்பியூசியஸ் (Confucius) அவர்கள் எழுதியுள்ளார்; அதென்னவெனில் . . . "ஒருவன் தனக்கு மற்றவன் என்ன செய்யக்கூடாது என்று எண்ணுகின்றானோ, அதை அவன் மற்றவனுக்குச் செய்யாமல் இருப்பானாக" என்பதேயாகும்; ஓ! ஆனால் எத்துணை வித்தியாசமாய்க் காணப்படுகின்றது; கன்பியூசியஸ் அவர்களின் வார்த்தை செய்யாதே என்றுள்ளது, ஆனால் ஆண்டவருடைய வார்த்தை, "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல் பிறனிடத்தில் அன்புகூருவாயாக" என்று உள்ளது.

தேவனுடைய பிரமாணங்கள் தெய்வீகமானவைகள் என்று சொல்வதற்கு, உண்மையில் சில காரணங்கள் இருக்கவே செய்கின்றது. ஒருவேளை மனிதர்களால் இந்த மாபெரும் இரண்டு பிரமாணங்களுக்கு ஏற்ப வாழ முடிந்தால் மற்றும் வாழ விரும்பினால், முள்ளும் குறுக்கும், இடர்பாடுகளுமுள்ள இந்த உலகம் எத்துணை அழகுடையதாய் இருந்திருக்கும்; ஒவ்வொரு மனிதனும் பரம பிதாவைப் பிரதானமாய் அன்புகூர்ந்து, அவருக்கு முழு வல்லமையோடும், அனைத்துத் தாலந்துகளைக்கொண்டு ஊழியம் புரிவதும் மற்றும் தன்னை நேசிப்பது போலவே அயலானையும் நேசித்து, வாய்ப்புக் கிடைப்பதற்கேற்ப, அந்த அயலானுக்கு உதவிட நாடுவதும், இந்த இரண்டு மாபெரும் கற்பனைகளாக இருக்கின்றன! இப்படி இருக்குமானால், உலகம் பரதீசாக இருந்திருக்கும். ஆனால் மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, உலகம் பரதீசாக இருக்குமென, நமக்கு வாக்களிக்கப்பட்டிருப்பதற்காக தேவனுக்கு நன்றி.

தெய்வீக ஏற்பாடானது, ஆதாமின் பாவத்திற்கு ஈடாக, கிறிஸ்துவின் மரணத்தை அருளினது போலவே, பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகைக்கு ஈடாக, கிறிஸ்துவின் ஆளுகையையும் அருளியுள்ளது. சத்தியத்தையும், நீதியையும் இறுதியில் விரும்பி வாஞ்சிப்பவர்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டு, பூரணப்படுவார்கள் என்றும், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும், தெய்வீக வாக்குத்தத்தங்களானது நமக்கு நிச்சயமளிக்கின்றது. தேவனுடைய பாதப்படியாகிய பூமியும், மேசியாவினுடைய ஆயிர வருட ஆளுகையின்போது மகிமைப்படுத்தப்படும் என்றும், இறுதியில் பாவத்தை விரும்பி, நீதியை

நோக்கி முன்னேறுவதற்கு மறுப்புத் தெரிவிப்பவர்கள், ஜனங்கள் நடுவில் நின்று, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் என்றும், தெய்வீக வாக்குத்தத்தங்களானது நமக்கு நிச்சயம் அளிக்கின்றன. அப்போது "உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு 6:10) என்று கூறி நீண்ட காலமாய் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்திற்கு இணங்க, அந்தச் சந்தோஷமான நாட்கள் வரும். அப்பொழுது சகல முழங்கால்களும் முடங்கும் என்றும், சகல நாவுகளும் அறிக்கைப் பண்ணும் என்றும், முழுப் பூமியும், கர்த்தரின் மகிமையினால் நிரம்பும் என்றுமுள்ள வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்.

## "தேவனுடைய இராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல"

வேதபாரகன், இயேசுவின் பதிலிலுள்ள உண்மையை ஒப்புக்கொண்டான். "அதற்கு வேதபாரகன்: சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்; ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்கதகனப்பலி முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது என்றான்" (மாற்கு 12:32-33).

"அவன் விவேகமாய் உத்தரவு சொன்னதை இயேசு கண்டு: நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல என்றார்" (மாற்கு 12:34). இயேசுவின் சீஷனில் ஒருவனாக ஆகத்தக்கதான நிலைமைக்கு மிக அருகாமையில் வேதபாரகன் இருக்கின்றான், என்ற அர்த்தத்தில் ஆண்டவருடைய வார்த்தைகள் காணப்படுகின்றது; அதாவது இராஜ்யத்தை எதிர்ப்பார்க்கிறவர்களில் ஒருவனாகவும், அதற்காக காத்திருப்பவர்களில் ஒருவனாகவும், அதற்காக முயற்சி செய்பவர்களில் ஒருவனாகவும், அதற்காக ஆயத்தப்படுபவர்களில் ஒருவனாகவும் வேதபாரகன் காணப்படுகின்றான் எனும் அர்த்தத்தில் ஆண்டவர் கூறினார். கபடற்ற இந்த உத்தம இஸ்ரயேலர்களைத்தான் இயேசு, இராஜ்யத்தின் சிலாக்கியங்களைப் புறஜாதிகளுக்குத் திறப்பதற்கு முன்னதாக யூத ஜனங்கள் மத்தியிலிருந்து சேர்த்துக்கொள்ள விசேஷித்த விதமாய் நாடினவராகக் காணப்பட்டார். மேசியா தம்முடைய வருகையில் வரும்போது, அவர் ஓர் இராஜ்ய வகுப்பாரைத் தெரிந்துக்கொள்வார் என்றும், அந்த வகுப்பாருக்குத் தெய்வீக வல்லமை அருளப்படும் என்றும் யூதர்கள் புரிந்திருந்தார்கள், இதைத்தான் இயேசுவும் செய்துகொண்டிருந்தார். இயேசுவின் வார்த்தைகளும், அவருடைய போதனைகளும் சிலரை இழுத்துக்கொண்டும், சிலரைத் துரத்தித் தள்ளிவிட்டுக்கொண்டும் இருந்தது. அனைத்து உண்மையுள்ளவர்களும், நேர்மையான இருதயம் கொண்டவர்களும் இந்த வாலிபனான வேதபாரகன்போல், இராஜ்யத்திற்குத் தூரமானவர்களாய் இல்லாமல் காணப்பட்டனர். ஒருவேளை இவர்களது நேர்மையும், உண்மையும், இவர்களைப் பிதாவின் சித்தத்தை அறிவதற்கும், செய்வதற்கும் வைராக்கியங்கொள்ளத்தக்கதாக வழிநடத்தியிருக்குமானால், இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். ஏனெனில், "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" (சங்கீதம் 25:14).

## "தேவன் இருதயத்தைப் பார்க்கின்றார்"

எருசலேமின் ஆலயம் இன்னும் புதியதாகவே காணப்பட்டது; மற்றும் அதன் பராமரிப்பு முதலியவைகளுக்காக, பணம் தேவையாய்க் காணப்பட்டது. பணம் கொடுப்பதற்கான சிலாக்கியம் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; மற்றும் ஜனங்களும் விருப்பத்துடனான இருதயத்தோடு கொடுத்து வந்தார்கள். ஜனங்கள் எவ்வளவுதான் தங்களுடைய முன்னோர்களுடைய பாரம்பரியத்தினால் தவறாய் நடத்தப்பட்டிருந்தாலும், எவ்வளவுதான் தங்களுடைய குருடரான மத வல்லுனர்களின் தவறான வழிநடத்தல் காரணமாய்க் குழப்பப்பட்டிருந்தாலும், ஜனங்கள் தேவனைச் சேவிக்க வேண்டுமென்றும், அவரைத் தொழுதுகொள்ள வேண்டுமென்றும், விருப்பம் கொண்டவர்களாக இருந்தனர். இது அவர்கள் ஆலயத்தின் வாசலில் இருந்த காணிக்கைப் பெட்டியில், பணங்களைக்கொண்டு வந்து, போடுவதில் காண்பித்த விருப்பத்தில் வெளிப்படுகின்றது.

இயேசு காணிக்கைப் பெட்டிகளின் முன்பாக உட்கார்ந்து இருந்து, எப்படி எல்லா நிலை ஜனங்களும் கொடுத்து வந்தார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டிருந்தார். ஒரு விதவை வந்து, இரண்டு காசைக் காணிக்கைப் பெட்டியில் போட்டாள்; இது பணப்புழக்கத்தில் இருந்த மிகச்சிறிய வெண்கல நாணயங்களாகும்; இந்த ஒரு காசின் மதிப்பு, சென்டில் எட்டில் ஒரு பாக மதிப்பாக (one-eight of a cent) இருந்தது. விதவையானவள் இதை ஆரவாரத்துடன் போட்டாள் என்று எண்ணுவதற்கு அவசியமில்லை; ஏனெனில் பெருமையடித்துக்கொள்ள முடியாதளவுக்கு இவை மிகச்சிறிய நாணயங்களாக/தொகையாக இருந்தது. இயேசு தெய்வீக வல்லமையினால் விதவையினுடைய நிலைமையையும், அவளுடைய காணிக்கையின் அளவையும் அறிந்துக்கொண்டார் என்று நாம் புரிந்துக்கொள்ளலாம். இதை வைத்து, இயேசு அப்போஸ்தலர்களுக்குச் சிறிய ஒரு பிரசங்கம் பண்ணினார். காணிக்கைப் போட்ட மற்றவர்களில் இந்த விதவையான ஸ்திரீயே, தேவனுடைய பார்வையில் அதிகம் கொடுத்தவளாக இருக்கின்றாள் என்று இயேசு கூறினார். இவள் தனக்கு உண்டாயிருந்த அனைத்தையும், அதாவது தன்னுடைய ஜீவியத்திற்கு உண்டாயிருந்த அனைத்தையும் போட்டுவிட்டாள் என்றும், மற்றவர்கள் தங்களுக்கு இருக்கும் திரளானவைகளிலிருந்து காணிக்கைக் கொடுத்தார்கள் என்றும், இந்த இழப்பு அவர்களுக்குப் பெரிய இழப்புமில்லை என்றும், அப்போஸ்தலர்கள் வியக்கத்தக்கதாக இயேசு கூறினார்.

இந்தச் சிறு சம்பவமானது பலிகளையும், ஊழியங்களையும் குறித்ததான கர்த்தருடைய மதிப்பிடுதலை நமக்குக் காட்டுகின்றது. நாம் செய்த (அ) செய்யப் போகின்ற பெரிய காரியங்களைக் கர்த்தர் உயர்வாய் மதிப்பதில்லை. நாம் கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் அன்பும், ஈடுபாடும், சுயத்தைப் பலிச்செலுத்துதலும் கொண்டிருப்போமானால், உலகத்தின் பார்வைக்கு ஒரு பொருட்டாய் இராத, நமது ஜீவியங்களின் மிகச்சிறிய விஷயங்களும், மிகச்சிறிய பலிகளும், மிகச்சிறிய சுயத்தை வெறுத்தல்களும், ஆண்டவரின் பார்வையில் உயர்வானதாய் மதிக்கப்படும்.

இன்னுமாக கர்த்தரை மறுக்கிறதும், அபாத்திரத்தினால் இன்னும் சீக்கிரத்தில் அழிக்கப்படப் போகிறதுமான ஓர் அமைப்பிற்கே, இந்த ஸ்திரீ பணம் கொடுக்கிறாள் என்பதையும் கர்த்தர் அறிந்திருந்தார். மற்றவர்களுடைய நிலைமை என்னவாக இருப்பினும், கர்த்தர் காணிக்கை வழங்கினவரின் இருதயத்தையும், நோக்கத்தையும் பார்க்கின்றார் . . . "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்." மாற்கு 14:8-ஆம் வசனத்தில் வருபவள் இயேசுவின் சீஷி ஆனாள் என்பதை நாம் அறிவோம். சுயத்தைப் பலிச்செலுத்துபவர்களை, கர்த்தர் தம்முடைய சீஷர்களாக ஆக்கிக்கொள்கின்றார்.

---

**R3867**

# “புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள்”

## மத்தேயு 25:1-13.

"மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்."—வசனம் 13

நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழிய நாட்களின் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று, நமது காத்தர் எருசலேமின் அழிவைக் குறித்தும், தம்முடைய பின்னடியார்கள் சிதறடிக்கப்படுவது குறித்தும், நீண்ட காலப்பகுதியான யுத்தங்கள் குறித்தும், யுத்தங்களின் செய்தி குறித்தும், இறுதியாக, மத்தேயு 25-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்தும் முன்னறிவித்தார். இந்த ஒரு தகவலானது, அவ்வேளையில் அப்போஸ்தலர்களுக்கு மிகவும் ஏற்றதாய் இருந்தது. ஏனெனில், அப்போஸ்தலர்களுடைய எதிர்ப்பார்ப்பு வேறுவிதமாய்க் காணப்பட்டது; அதாவது, அவர்கள் கர்த்தர் மேசியாவாக உயர்த்தப்படுவார் என்றும், எருசலேம் அவரது சாம்ராஜ்யத்தின் ஸ்தலமாக இருக்கும் என்றும் எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தவர்களாகக் காணப்பட்டனர். "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்ற கேள்விகளைக் கேட்டனர் (மத்தேயு 24:3). மத்தேயு 24-ஆம்

அதிகாரத்தில் இயேசுவினால் கூறப்பட்ட அவருடைய மாபெரும் தீர்க்கத்தரிசனத்தில், தம்முடைய இரண்டாம் வருகை என்பது விறுவிறுப்பான காலப்பகுதிகளில் நடைபெறும் என்றும், அப்போது கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் கூட வஞ்சிக்கப்பட்டுப் போவார்கள் என்றும், நோவாவின் நாட்களில் எப்படி இருந்ததோ, அப்படியே மனுஷகுமாரனுடைய நாட்களில் இருக்கும் என்றும், ஜனங்கள் புசித்தும், குடித்தும், நட்டும், கட்டியும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும் இருப்பார்கள் என்றும், அவருடைய இராஜ்யத்தின் புதிய யுகத்திற்கான ஆரம்பத்திற்கு ஆயத்தப்படுத்தத்தக்கதாக, சீக்கிரம் வரவிருக்கின்ற புயலைக் குறித்து அறியாதவர்களாக உலகத்தின் ஜனங்கள் இருப்பார்கள் என்றும் அப்போஸ்தலர்களுக்குச் சுட்டிக்காண்பித்து, அவர்களுக்கு இயேசு காரியங்களை விளக்கினார்.

காரியங்களை அவர்களது மனதில் பதிய வைப்பதற்கென, இயேசு ஐந்து புத்தியுள்ள மற்றும் ஐந்து புத்தியில்லாத கன்னிகைகளாகிய, பத்துக் கன்னிகைகள் பற்றின உவமையை அவர்களுக்குக் கூறினார். உவமையின் காட்சியானது/சம்பவமானது, சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவு பகுதியைப் பற்றினது என்பது, “அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்க்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்” என்ற வார்த்தைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது (மத்தேயு 25:1). இந்த உவமை சுவிசேஷ யுகம் முழுவதற்கும் பொருந்துகிறதில்லை. மாறாக, நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி இவ்வுவமையானது, இக்காலத்திற்குப் பொருந்தக் கூடியதாய் இருக்கின்றது. ஏனெனில், நாம் மணவாளன் காணப்படும் காலமாகிய யுகத்தினுடைய முடிவில் வாழ்ந்துக் கொண்டிருப்பவர்களாக இருக்கின்றோம். அதாவது, கலியாணத்திற்குப் புத்தியுள்ள கன்னிகைகள் செல்வதும், புத்தியில்லாத கன்னிகைகளுக்குக் கதவு அடைக்கப்படுவதுமான காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தற்காலத்தில் இந்த உவமையைப் புரிந்துக்கொள்வது என்பது, கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் அனைவருக்கும் ஏற்றக்கால சத்தியமாகக் காணப்படும்.

வேதவாக்கியங்கள் எங்கும் சபை, தனது கலியாணத்திற்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கும் மணவாட்டியினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மணவாளன் கர்த்தர் இயேசு ஆவார்; கர்த்தர் இயேசுவே அனைத்திற்கும் சுதந்தரவாளியாக இருக்கின்றார்; அவருடைய மணவாட்டியாகவும், உடன் சுதந்தரராகவும் ஆகுவதற்கான வாய்ப்புக் கர்த்தருடைய பின்னடியார்களுக்கு அருளப்பட்டுள்ளது. இவர்கள் இராஜாவினுடைய குமாரனுடன் இணைவதாலே அல்லாமல், மற்றப்படி இவர்களுக்கு நித்திய இராஜாவுடன் எவ்விதமான உறவும் இல்லை. இதற்கான நிழல், பழைய ஏற்பாட்டில் மிகவும் அருமையாய் உள்ளது. ஆபிரகாம், மிகவும் ஐசுவரியமுள்ள பரம பிதாவிற்கு நிழலாய் இருக்கின்றார்; ஈசாக், வாக்குத்தத்தத்தின் வித்தாகவும், அனைத்திற்கும் சுதந்தரவாளியான நமது கர்த்தர் இயேசுவுக்கு நிழலாய் இருக்கின்றார்; ஈசாக்கிற்கு மனைவியை அழைத்து வரும்படிக்கு அனுப்பப்பட்ட ஆபிரகாமின் ஊழியக்காரன், பரிசுத்த ஆவிக்கு அருமையான நிழலாய்க் காணப்படுகின்றார்; இந்தப் பரிசுத்த ஆவியானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் சபையைத் தெரிந்துக்கொண்டு வருகின்றது; இதைக் குறித்து அப்போஸ்தலர், “நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்” என்று கூறுகின்றார் (2 கொரிந்தியர் 11:2).

சுவிசேஷ யுகம் முழுவதும், இந்தச் சபையானது, பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் மற்றும் பாதுகாப்பின் கீழ், மணவாளனோடு கூட உடன் சுதந்தரத்துவத்தில் வாக்களிக்கப்பட்ட மகிமையான நிலைமையாகிய, பரலோக இராஜ்யமாகிய, பல அறைகளைக்கொண்ட பிதாவின் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றனர். ஒருவேளை நாம் காரியங்களைச் சரியாகப் புரிந்துக்கொண்டவர்களாக இருப்போமானால், நாம் பிரயாணத்தின் முடிவில் இப்பொழுது காணப்படுபவர்களாக இருந்து, ரெபேக்காவினால் அடையாளப்படுத்தப்பட்டபடி, மணவாட்டி வகுப்பாரென முக்காடிட்டுக்கொண்டு, ஒட்டகங்களிலிருந்து இறங்கி, பரலோக மணவாளனால் ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாய்க் காணப்படுவோம். இந்த முழுக் காரியமும், கிட்டத்தட்ட 19 நூற்றாண்டு காலப்பகுதியை உள்ளடக்கியிருப்பதினால், சம்பவிக்கவிருக்கும் அம்சங்கள்கூட, அவைகள் நிறைவேறுவதற்குப் பல வருட காலங்களை எடுத்துக்கொள்ளுகிறதாய் இருக்கும்.

சீக்கிரத்தில் மணவாட்டி, மணவாளனுடன் கூடக் காணப்படுவாள்; மற்றும் ஆபிரகாமின் உடன்படிக்கையில், மணவாட்டி அவரோடு கூடச் சாராளின் கூடாரத்தில் உடன்சுதந்தரர்களாகக் காணப்படுவாள். இவைகளுக்கு இசைவாகவே, "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலரால் நமக்குக்கொடுக்கப்பட்ட நிச்சயம் காணப்படுகின்றது (கலாத்தியர் 3:29).

கர்த்தருடைய உவமைகளில் அநேக உவமை, இராஜாவினுடைய மகனின் கலியாணம் தொடர்புடையதாக இருக்கின்றது; மேலும் சபைக்கான தம்முடைய கடைசி செய்தியிலுங்கூட, மணவாட்டியாகிய ஆட்டுக்குட்டியானவரின் மனைவியானவள், எப்படி இராஜ்யத்தில் மிகப் பிரகாசமாய்ப் பிரகாசிப்பாள் என்று கூறப்பட்டுள்ளது; அவள் புதிய எருசலேமென அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறாள். இங்கும் ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தன்னை ஆயத்தம் பண்ணின பின்பு ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து இருப்பதாக அறிவிப்புக்கொடுக்கப்பட்டது என்று பார்க்கின்றோம் (வெளிப்படுத்தல் 19:7-9). யோவான் ஸ்நானன் ஒரு தீர்க்கத்தரிசியாக, கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையிலான இந்த உறவைக் குறித்துக் கூறும்போது, "மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான் இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" என்றார் (யோவான் 3:29). யோவான் ஸ்நானன் தான் மணவாட்டி வகுப்பாரில் அங்கத்தினன் அல்ல என்றும், தான் மணவாளன் அல்ல என்றும் உணர்ந்திருந்தார். யோவான் ஸ்நானன், இயேசுவை மணவாளன் என்று அடையாளம் கண்டுகொண்டார்; மேலும் மணவாளன் மற்றும் மணவாட்டிக்குப் பணிவிடைக்காரனாக, அவர்களை அறிமுகப்படுத்தி வைக்கும் விதத்தில், தேவனால் கனப்படுத்தப்பட்டதில் மகிழச்சியாயிருந்தார். எதிர்க்காலத்தில் யோவான் ஸ்நானன், உண்மையுள்ள தீர்க்கத்தரிசிகளில் ஒருவராக, உயர்ந்த ஸ்தானம் வகிப்பார்; மேலும் நமது கர்த்தர் உறுதியளித்ததுபோல, இவரைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி எவரும் இருப்பதில்லை; எனினும் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய மணவாட்டி வகுப்பாரில் மிகவும் எளிமையானவனாய், சிறியவனாய் இருப்பவன், அதாவது இந்த இராஜ்ய வகுப்பாரிலேயே சிறியவனாய் இருப்பவன், யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவனாய் இருப்பான். ஏனெனில், இவர்கள் இராஜ்யத்தின் உடன் சுதந்தரர்களாகவும், கனம், மகிமை மற்றும் அழியாமையில் பங்கடைபவர்களாகவும் இருப்பார்கள்; ஆனால் யோவான் ஸ்நானனும், முற்காலத்திலுள்ள உண்மையுள்ளவர்களும், பூமிக்குரிய தளத்தில், மனுஷர் மத்தியில் இராஜ்யத்தின் பிரதிநிதிகளாகவும், பிரபுக்களாகவும் இருப்பார்கள். (மத்தேயு 11:11; எபிரெயர் 11:39, 40; சங்கீதம் 45:16).

## "இரண்டு வகுப்பாரான கன்னிகைகள்"

இந்த உவமையானது தற்காலத்திற்குப் பொருந்துகின்றது என்பதை மனதிற்கு முன்பாக நிறுத்திய பிற்பாடு, இவ்வுமையானது கன்னிகைகளை, அதாவது தூய்மையுள்ளவர்களை மாத்திரமே குறிப்பிடுகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இவ்வுவமையானது உலகத்தாரையோ, பெயர்க்கிறிஸ்தவ ஜனங்களையோ குறிப்பிடுவதில்லை. இவ்வுவமையில் இடம்பெறும் இரு வகுப்பாரும், கிறிஸ்தவர்களை அதாவது பரலோக இராஜ்ய வகுப்பாரை; அதாவது விசுவாசிகளை, அர்ப்பணம் பண்ணின விசுவாசிகளை, அதாவது இராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் கேட்டு, இராஜாவை அவரது இரண்டாம் வருகையில் எதிர்ப்பார்த்து, தங்கள் தீவெட்டிகளிலிருந்து வெளிச்சம், தகவல் மற்றும் போதனைகள்/அறிவுரைகள் பெற்றுக்கொள்ளும் விசுவாசிகளைக் குறிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். தூய்மையானவர்களாகவும், உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களாகவும், மணவாளனுடைய வருகை மற்றும் இராஜ்யம் குறித்து அறிவிக்கப்பட்டவர்களாகவும், அதற்காக காத்திருப்பவர்களாகவும் காணப்படும் இந்த இரண்டு வகுப்பார், அர்ப்பணிக்கப்பட்டவர்களில் காணப்படும் இரண்டு வகுப்பாராகிய சிறுமந்தையினரையும், திரள்கூட்டத்தாரையும் குறிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது முற்றிலும் ஜெயங்கொள்பவர்களையும், மிகுந்த உபத்திரவத்தின் வாயிலாக ஜெயங்கொள்பவர்களையும் குறிக்கின்றவர்களாய் இருக்கின்றனர். (ரோமர் 8:37; வெளிப்படுத்தல் 7:14). இந்த இரண்டு வகுப்பாரும்தான்,

ஆசாரிப்புக் கூடாரத்தின் நிழல்களில் இடம்பெறும் இரண்டு ஆடுகள் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றனர்; இந்த இரண்டு ஆடுகளில் ஒன்று பலிச் செலுத்தப்படுவதற்கான கர்த்தருடைய ஆடு, மற்றொன்று போக்காடாய் போனது; ஆசாரிப்புக் கூடார நிழல்களில் இந்த ஆடுகளானது, சுவிசேஷ யுகம் முழுவதிலும், அதே சமயம், யுகத்தினுடைய முடிவிலுமான இந்த இரண்டு வகுப்பாருக்கும் அடையாளமாய் இருக்கின்றது; ஆனால் நாம் இப்போது பார்த்துக்கொண்டிருக்கும் உவமையில் வரும் இரண்டு வகுப்பார், இந்த யுகத்தினுடைய முடிவாகிய, தற்காலத்திலுள்ள சபைக்கு மாத்திரம் அடையாளமாய் இருக்கின்றனர்.

இந்த உவமையைக் கர்த்தர் கொடுப்பதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு; முதலாவதாக அப்போஸ்தலர்களும், இந்தச் சவிசேஷ யுகத்தினுடைய முழுச்சபையும் இராஜ்யத்தில் பங்கடைவதற்கு எப்போதும் ஆயத்தத்துடன் காணப்படத்தக்கதாக, வரவிருக்கின்ற இராஜா மற்றும் அவருடைய இராஜ்யத்திற்காக விழிப்புடனும், ஜாக்கிரதையுடனும், ஜெபத்துடனும், எதிர்ப்பார்ப்புடனும், ஆயத்தத்துடனும் காணப்பட வேண்டிய அவசியம் குறித்துப் பாடம் புகட்டுவதற்கு ஆகும். இரண்டாவதாக விசேஷமாக இக்காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நமக்காக கொடுக்கப்பட்டுள்ளது; அதாவது இராஜ்யத்தை எதிர்ப்பார்ப்பதும், அதற்காக ஜெபம் பண்ணுவதும், பொதுவான விதத்தில் மணவாளனை எதிர்ப்பார்த்திருப்பதும் (மட்டும்) போதாது, இறுதித் தருணத்தில் நாம் ஏமாற்றம் அடைந்துப் போகாதபடியும், நாம் நம்மை ஞானமாய் ஆயத்தம் பண்ணிக்கொள்ளும்படியும், அத்தருணத்திற்கென நாம் மிகவும் விழிப்புள்ளவர்களாகவும், மிகவும் ஊக்கத்துடனும் காணப்பட வேண்டுமென்பதை நாம் காணத்தக்கதாக, இவ்வுவமை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## "உவமையில் இரண்டாம் அட்வெண்டிஸ்டுகள்"
## (இரண்டாம் வருகையினை எதிர்பார்ப்பவர்கள்)

"உவமையின் காட்சியின்படியே, கடந்த நூற்றாண்டில் அனைத்துக் கிறிஸ்தவப் பிரிவுகளிலுள்ள கர்த்தருடைய ஜனங்களின் மத்தியில், ஓர் இயக்கம் ஆரம்பித்து, பின்னர் இரண்டாம் வருகை இயக்கம் என்று அழைக்கப்படும் அளவுக்கு உச்சநிலையை எட்டினது. உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரின் மத்தியிலுமுள்ள தூய்மையானவர்களாகிய கன்னிகைகள், மணவாளனுடைய வருகைச் சமீபித்துள்ளது என்ற எண்ணத்தினால் விழித்தெழுந்துள்ளனர்; மற்றும் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தல் எனும், இரண்டாம் வருகை தொடர்புடைய வேதாகமத்தின் மீதான பொதுவான ஆராய்ச்சி நடைப்பெற்றது. உவமையின்படியே, அந்த அருமையான ஜனங்களுடைய எதிர்பார்ப்பு ஏமாற்றம் அடைந்தது. "மணவாளன் வர தாமதித்தார்;" மேலும் அவர் தாமதித்தபோது அவர்களனைவரும், "நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்." விளக்குகள் மீதான கவனம் புறக்கணிக்கப்பட்டது, பின்னர் இவ்வகுப்பார்மேல் ஒரு மந்தத்தன்மை ஏற்பட்டது. கன்னிகைகளில் அநேகர் தூங்கிபோனது மாத்திரமல்லாமல், அநேகர் மிகவும் விநோதமான மற்றும் பகுத்தறிவுக்குட்படாத, கற்பனையான காரியங்களைக் கனவு கண்டார்கள். இப்படியாகப் போய்க்கொண்டிருக்கும்போது, "இதோ மணவாளன்!" என்று நடுராத்திரியில் அறிவிக்கப்பட்டது.

இந்த ஒரு சத்தமானது கி.பி. 1874 முதல் போய்க்கொண்டே இருக்கின்றது; மேலும் இதற்குச் செவிச்சாய்த்து, கன்னிகை வகுப்பார் அனைவரும் விழித்தெழுந்து கொண்டிருக்கின்றனர்; மீண்டும் புதிதாய் தெய்வீக வார்த்தைகளின் மீதான ஆராய்ச்சி நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது. தீவெட்டிகள் ஆயத்தப்படுத்தப்படுகின்றன. இந்த அறிவிப்பை/சத்தத்தைக் கேட்டவர்களில் சிலர், இது தவறான சத்தம்/அறிவிப்பு என்று வலியுறுத்துபவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் அதிகம் அரைத்தூக்கத்திற்குள்ளாகிவிட்டதினாலும், இவர்கள் இவ்வுலகத்தின் கவலைகளினால் பாரமடைந்து விட்டதினாலும், இவர்கள் நன்கு சௌகரியமாய்க் காணப்படுவதினாலும், இவர்கள் மணவாளனை அன்புகூர்ந்தபோதிலும், அனைத்துக் காரியங்களைக் காட்டிலும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஆயத்தமாய் இருப்பதை விரும்பினபோதிலும், இவர்கள் ஆயத்தமற்றவர்களாகவும், வேத ஆராய்ச்சி செய்ய மறுப்பவர்களாகவும், பின்வருமாறு தங்களுக்குள்ளாக வெறுமனே முறுமுறுக்கிறவர்களாகக் காணப்படுகின்றனர்; அதாவது,

"ஆம் நாங்கள் மணவாளனை அன்புகூருகிறோம்; அவரைச் சந்திக்க நிச்சயமாய் நாங்கள் ஆயத்தமாய் இருப்போம்; நாங்கள் நீண்டகாலமாய் அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம்; ஆனால் அவர் இன்னமும் வரவில்லை, இன்னமும் வரவில்லை. ஆத்துமாவே அமைதலாயிரு; யாருக்கும் எதுவும் தெரியாது; மணவாளன் வந்திருக்கிறார் என்று அறிவிக்கின்றவர்கள் நிச்சயமாய் தவறாகவே சொல்கின்றார்கள்" எனத் தங்களுக்குள்ளாக முறுமுறுக்கிறவர்களாக மாத்திரமே காணப்படுகின்றனர்.

நாட்கள், வாரங்கள் மற்றும் வருடங்கள் தாண்டிச் சென்றுக்கொண்டிருக்கையில், அநேக, அநேக கன்னிகைகள் விழித்தெழுந்துக்கொண்டிருக்கின்றனர்; மேலும் இப்படியாக இவர்கள் விழித்தெழும்பும் போது, வேத ஆராய்ச்சியாகிய, தீவட்டிகளை ஆயத்தப்படுத்துதலும் ஆரம்பமாகுகின்றது; இப்படி ஆராயச்சி நடந்துக் கொண்டிருக்கையில், தங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்கு, தாங்கள் ஆயத்தமாய் இருக்கின்றதாக எண்ணிக்கொண்டிருந்த சிலர், <u>பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகின்றதுமான மிக முக்கியமான எண்ணெயில், தாங்கள் குறைவுப்பட்டிருப்பதைக் கண்டுபிடிக்கின்றனர்</u>; இந்தப் பரிசுத்த ஆவியிலிருந்தே இவர்களுக்கான வெளிச்சம்/பிரகாசிப்பித்தல் வருகின்றது. மணவாளனுடைய தாமதமானது, அவரோடு கலியாணத்துக்கு வரும்படிக்கு அழைக்கப்பட்டிருந்த கன்னிகைகளுக்குப் பரீட்சையாக அமைந்தது; இந்தத் தாமதமானது யார் புத்தியுள்ளவர்கள் என்றும், யார் புத்தியில்லாதவர்கள் என்றும் நிரூபிப்பதற்குரிய பரீட்சையாக அமைந்தது. கன்னிகைகளில் ஒருவராக, எந்தச் சபை காலப்பகுதியிலும் கருதப்படுவதற்குக் குறிப்பிட்டளவு எண்ணெய், ஒரு குறிப்பிட்டளவு அர்ப்பணிப்பு, ஒரு குறிப்பிட்டளவு பரிசுத்த ஆவி அவசியமாய் இருந்தது; ஆனால் இவைகளனைத்தும் மணவாளன் உண்மையில் பிரசன்னமாய்க் காணப்படும் இப்பொழுது மற்றும் நிஜமான பவனி நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் இப்பொழுது, அதிகளவில் அவசியப்படுகின்றது; இப்பொழுது அதிக வெளிச்சம், அதிக சத்தியத்திற்கான வேளையாக இருக்கின்றது; மற்றும் இவை, கலியாணத்துக்குப் போகிறவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

கன்னிகைகள், இக்காலத்தில் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களுக்குப் பொதுவாக அடையாளமாய் இருக்கின்றனர்; ஆகவே இவர்கள் மத்தியில் 1844-ஆம் வருடத்தின் இயக்கத்துடன் தொடர்பு இல்லாதவர்கள் கூடக் காணப்படுகின்றனர். எனினும் 1844-ஆம் வருடத்திலிருந்த அதே ஆவிதான், இன்றும் காணப்படுகின்றது; அதாவது <u>மணவாளன் மீது அன்பும்</u>, அவருடைய இராஜ்யத்தில் அவருடைய பிரசன்னத்திற்கான <u>எதிர்ப்பார்ப்பும்</u>, கதவு அடைக்கப்படுவதற்கு முன்னதாக, அவரோடுகூட உள்ளே பிரவேசிக்கத்தக்கதாக ஆயத்தம்படுவதற்கு எல்லாவற்றையும்விட <u>விரும்புவதும்</u>, 1844-ஆம் வருடத்தில் காணப்பட்டதுபோல், இன்றும் காணப்படுகின்றது. கதவு அடைப்படுவதற்கு முன்னதாக, மணவாளனுடன் உள்ளே பிரவேசிக்கத்தக்கதாக பவனியில் நிற்கும் கன்னிகைகளாக இருப்பதற்கு உதவும், வெளிச்சத்தை அருளுமளவுக்குப் போதுமான எண்ணெயை, வெளிச்சத்தை, பரிசுத்த ஆவியைக்கொண்டிருப்பவர்கள் யார்? என்ற கேள்வி எழும்புகின்றது. இது ஒரு முக்கியமான கேள்வியாகும்; மற்றும் இது தனது தீவட்டியை எரிய பெற்றிருக்கும் ஒவ்வொருவரும் அறிய வேண்டியதாகும். நாம் போதுமானளவுக்கு கர்த்தருடைய ஆவியாகிய சாந்தத்தின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின், அன்பின் ஆவியைக் கொண்டிருக்கின்றோமா என்பதை நாம் பார்த்துக்கொள்வது எவ்வளவு அவசியமானதாய் இருக்கின்றது. இவைகளை நாம் போதுமானளவில் கொண்டிருக்கவில்லையெனில், நம்முடைய தீவட்டிகள் அணைந்து போய்விடும் என்பது உறுதியே.

## "உங்கள் எண்ணெயில் கொஞ்சம் கொடுங்கள்"

தங்களுடைய வெளிச்சத்தையும், மணவாளனிடத்திலான தங்களது தயவைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், மற்றுமாக கலியாணத்திற்குள் போகத்தக்கதான நிலையை அடைவதற்கும், இந்தப் பரிசுத்த ஆவியை, இந்த அர்ப்பணிப்பின் ஆவியைப் புத்தியுள்ள கன்னிகைகள் அனைவரும் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதை விவரிப்பதற்காகவே, உவமையில் புத்தியில்லாத கன்னிகைகள், புத்தியுள்ளவர்களுடைய எண்ணெயில் கொஞ்சத்தைக் கேட்பதாகக் கர்த்தர் காண்பித்து, மற்றவர்களிடமிந்து

இப்படியாக எண்ணெய் பெற்றுக்கொள்வது என்பது முடியாத காரியம் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றார்; கேட்பதினால் பரிசுத்த ஆவியின் கனிகளும், வரங்களும் பெற்றுக்கொள்ளப்பட முடியாது. இவைகள் அனுபவமெனும் கடையில் வாங்கப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன; இவைகள் படிப்படியாக வளரக்கூடியவைகளாகவும், கவனமான/ஜாக்கிரதையுடன் கூடிய வார்த்தைகளினாலும், எண்ணங்களினாலும், கிரியைகளினாலும் பெற்றுக்கொள்ளப்படக் கூடியவைகளாக இருக்கின்றன. ஆவியின் கனிகள் அடைவதற்கு மிகவும் கஷ்டமானவைகள் என்பதினாலும், சுயத்தை வெறுத்தல் எனும் விலையினால் இந்த ஆவியின் கனிகள் அடையப்படுவதினாலும், இவைகள் கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவைகளாக இருக்கின்றன.

எவராலும் இந்தப் பரிசுத்த ஆவியைத் திரளாய்ப் பெற்றுக்கொள்ள முடியாது, மற்றும் தன்னுடைய தேவைக்குப்போக, மற்றவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாக அதிக திரளாய் எவரும் இந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியாது. தம்மோடு கூடக் கலியாணத்திற்கு வர அழைக்கப்பட்டவர்கள், வஸ்திரம், தீவட்டிகளால் மாத்திரமல்லாமல், எண்ணெயையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, மணவாளன் முன்கூட்டியே அநேகம் ஏற்பாடுகளைப் பண்ணிவிட்டார்; ஒருவேளை எவரேனும் எண்ணெய் பெற்றுக்கொள்வதில் அஜாக்கிரதையுடன் காணப்பட்டால், அவர்கள் இப்படியாக, கதவு பூட்டப்படுவதற்கு முன்னதாகவே, மணவாளனுடன் பிரவேசிக்கும் வகுப்பாரில் காணப்படுவதற்கான தங்களுடைய தகுதியற்ற நிலையைக் காண்பிக்கிறவர்களாக இருக்கின்றார்கள். இதுவே இந்த உவமையின் மூலமான நம்முடைய கர்த்தருடைய போதனையின் சாரமாக இருக்கின்றது; அதாவது, இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றும், அதன் மகிமைகளில் பங்கடைய வேண்டுமென்றும் எதிர்ப்பார்ப்போடு இருப்பவர்கள், முன்கூட்டியே ஆயத்தமாய்க் காணப்பட வேண்டுமென்பதே ஆகும். ஒருவேளை அவர்கள் கதவு அடைக்கப்படும் தருணம் வரையிலும் ஆயத்தம் அடைவதில் தாமதித்துக்கொண்டிருப்பார்களானால், அவர்கள் எவ்வளவுதான் விருப்பம் கொண்டவர்களாகவும், எவ்வளவுதான் வாஞ்சைக் கொண்டவர்களாகவும் இருந்தாலுங்கூட (முடிவில்) அவர்களால் ஆயத்தம் அடையமுடியாது; ஏனெனில், ஆயத்தம் அடைவதற்கு நேரமும், பொறுமையும், கவனமும் அவசியமாய் இருக்கின்றது.

உண்மையான கிறிஸ்தவர்களாகவும், கன்னிகைகளாகவும், தூய்மையான நோக்கம் மற்றும் இருதயம் கொண்டவர்களாகவும், பரலோக மணவாளன் மீது விருப்பம் கொண்டவர்களாகவும், கலியாண விருந்தில் பங்கெடுக்க விருப்பம் கொண்டவர்களாகவும் இருப்பதற்கு சாட்சிப் பகர்ந்து, அதே வேளையில் இவ்விஷயங்களில் குறைவான வெளிச்சம் கொண்டுள்ளவர்களாகிய சிலரை நாம் அடிக்கடிச் சந்திக்கின்றோம். இவாகள் சிலசமயம் நம்மிடம் பின்வருமாறு கூறுவதுண்டு; அதென்னவெனில், "உங்கள் வெளிச்சத்தை எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள்; இவைகளையெல்லாம் நீங்கள் எப்படி அறிந்துக்கொண்டீர்கள் என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள்; மற்றவர்கள் தூங்கிக்கொண்டிருக்க, இவைகளைப்பற்றி நீங்கள் ஏன் இவ்வளவு உறுதியுடன் காணப்படுகின்றீர்கள்? நாங்கள் போதுமானளவுக்கு எழுந்திருக்கின்றோம், ஆனால் எங்கள் தீவட்டிகள் வெளிச்சம் கொடுப்பதில்லை" என்பதாகும். இவ்விஷயங்களில் இவர்களுக்கு இன்னொருவர்/பதிலாள் வாயிலாக விசுவாசம் கொடுப்பது சாத்தியமற்றது என்று நாம் பதிலளிக்கின்றோம்; வெளிச்சத்தை அடைவதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது; அது பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் கீழாக, தெய்வீக வார்த்தைகளைப் பொறுமையுடன், தொடர்ந்து/சோர்ந்து போகாமல் ஆராய்வதன் மூலமேயாகும். இந்த எண்ணெயையும், அதன் வெளிச்சத்தையும் பெற்றுக்கெள்வதற்கு, இவர்கள் நற்கிரியைச் செய்வதிலும், வேத ஆராய்ச்சிகளிலும், ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளை வளர்த்துவதிலும் சோர்ந்துப் போகாமல் காணப்பட வேண்டுமென நாம் இவர்களுக்கு அறிவிக்கின்றோம். இவர்கள் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், தேவ வார்த்தைகளின் ஆராய்ச்சிக்கும் நேரம் கொடுக்க முடியாதளவுக்கு, இவ்வுலகத்தின் கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும், ஜீவனத்தின் பெருமையினாலும் அமிழ்த்தப்பட்டுள்ளனர் என்று மனவருத்தம் தெரிவிக்கின்றனர். இப்படிப்பட்டவர்களினிமித்தம் நமக்கு வருத்தம் ஏற்படுகின்றது; நமக்கிருக்கும் எண்ணெய் மற்றும் நமது தீவட்டிகளின் தெளிவான வெளிச்சமாகிய ஆசீர்வாதங்களை, இவர்களும் அனுபவிக்க வேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம். எங்கு மற்றும் எப்படி எண்ணெய் மற்றும் வெளிச்சம் அடையப்பெறலாம் என்பதை இவர்களுக்குச் சொல்வதைக் காட்டிலும், வேறெதுவும் எங்களால் செய்ய இயலாது. மணவாளனுக்கு

வந்தனம் தெரிவிக்கத்தக்கதாகவும், அவருடைய பிரசன்னம்/வந்திருத்தல் தொடர்புடைய நமது சந்தோஷத்தைத் தெரிவிக்கத்தக்கதாகவும், அவரோடு கூடக் கலியாணத்திற்குள் பிரவேசிப்பதற்கான நமது எதிர்ப்பார்ப்பைத் தெரிவிக்கத்தக்கதாகவும், நாம் நமது வெளிச்சத்தை உயர்த்திப் பிடித்துக்கொள்பவர்களாகவும், நமது தனிப்பட்ட விதமான ஆயத்தமாகுதலைத் தொடர்ந்து செய்து வருபவர்களாகவும் காணப்பட வேண்டும்.

## "கதவும் அடைக்கப்பட்டது"

கி.பி. 1878 முதல், புத்தியுள்ள கன்னிகைகள் நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி கலியாணத்திற்குள் பிரவேசித்துக்கொண்டு வருகின்றனர்; மற்றும் இன்னமும் புத்தியுள்ள கன்னிகைகள் திரையைக் கடந்து, ஒரு இமைப்பொழுதில் மறுரூபமடைந்துக்கொண்டு வருகின்றனர். (1 கொரிந்தியர் 15:51). சீக்கிரத்தில் முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவடைந்து, கடைசி அங்கத்தினர் மறுரூபமடைந்து தீரும்; பின் கதவு அடைக்கப்படும்; பின்னர் ஒருவரும் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இக்காரியங்களானது கர்த்தருடைய அருமையான ஜனங்களில் சிலர், எண்ணிக்கொண்டுள்ள பயங்கரமான காரியங்களைக் குறிப்பதாக இல்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி. கதவு அடைக்கப்படுவது என்பது, வெளியே இருக்கும் புத்தியில்லாத கன்னிகைகளும், உலகத்தாரும், நம்பிக்கையற்ற இரண்டாம் மரணத்திற்குப் போய்விடுவார்கள் என்பதைக்குறிக்கிறதாக இல்லை; மாறாக கதவு அடைக்கப்படுவது என்பது, இனி ஒருபோதும் திறக்கவே மாட்டாத, மாபெரும் பிரம்மாண்டமான வாய்ப்புகளின் நிறைவடைதலைக் குறிக்கின்றதாய் இருக்கும்; அதாவது இராஜ்ய வகுப்பாரின், மணவாட்டி வகுப்பாரின் நிறைவடைதலையும், கனம், மகிமை, அழியாமை மற்றும் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரத்துவத்திற்கான இடுக்கமான வழி மூடப்படுவதையும் குறிக்கின்றதாகவே இருக்கின்றது.

புத்தியில்லாத கன்னிகைகள் போய், விலையேறப் பெற்ற எண்ணெயை வாங்கிக்கொண்டு வந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்திக்கொண்டு எரிய வைக்கின்றனர். ஆனால் இவர்கள் கலியாணத்திற்கு வர தாமதித்துவிடுகின்றனர்; ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டி ஆகுவதில் மிகவும் தாமதித்துவிடுகின்றனர். ஆகவேதான் இவர்கள் உவமையில் கதவைத் தட்டும்போது, மணவாளன் இவர்களிடம், "மணவாட்டி வகுப்பாரில் உங்களை நான் அங்கத்தினராக அறியேன்; நீங்கள் உள்ளே வரக்கூடாது" என்று கூறுவதாகக் காணப்படுகின்றது. இவர்கள் கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்குப் பதிலாக, கொஞ்சக் காலம், அப்போது உலகம் முழுவதும் நிலவும் மகா உபத்திரவக்காலத்தில் தங்கள் பங்கை அடையும்படி அனுமதிக்கப்படுகின்றனர்; அக்காலத்தில் புத்தியில்லாத கன்னிகைகளுக்கு மாத்திரமல்லாமல், பூமியின் குடிகள் அனைத்திற்கும் கூட அழுகையும், பற்கடிப்பும், துக்கமும், ஏமாற்றமும், மன வருத்தமும் பங்காகக் காணப்படும். சீக்கிரத்தில் வரவிருக்கின்ற ஆயிர வருட இராஜ்யத்தின் மகிமையான நிலைமைகளுக்காக, மனுக்குலத்தின் உலகத்தை உபத்திரவத்தின் மகா நாளானது, ஆயத்தப்படுத்தும் என்பதை அறிவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நீதியின் சூரியனானது, ஆரோக்கியமுடைய அதன் செட்டைகளுடன் உதிக்கும்போது, "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்;" "சீயோனிலிருந்து (மகிமைப்படுத்தப்பட்ட இராஜ்யம், பரலோக இராஜ்யம்) வேதமும், எருசலேமிலிருந்து (பரலோக இராஜ்யத்தின், பூமிக்குரிய பிரதிநிதிகள்) கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3; மல்கியா 4:2).

இந்தப் புத்தியில்லாத கன்னிகைகள், இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களிலிருந்து தள்ளப்படுவது மாத்திரமல்லாமல், இவர்கள் எண்ணெயாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு வந்த பிற்பாடும், நித்தியமான சித்திரவதைக்குள் அனுப்பப்படுவார்களெனும் கருத்தானது எவ்வளவு முரண்பாடாக உள்ளது! எவ்வளவு நியாயமற்றதாய் உள்ளது! எவ்வளவு முன்னுக்குப் பின் முரணானதாக உள்ளது! இந்த உவமையனாது தெய்வீகக் குணலட்சணத்திற்கும், திட்டத்திற்கும்/ஏற்பாட்டிற்கும் எவ்வளவு

இசைவானதாய்க் காணப்படுகின்றது. நாம் புத்தியில்லாத கன்னிகைகள் மீது அனுதாபம் கொள்கின்றோம்; நாம் இவர்களைப் புகழ முடியாது, ஆனால் இவர்களைக் கடிந்துக்கொள்ள வேண்டும். இவர்கள் திரள்கூட்டத்தினராக, தங்கள் வஸ்திரங்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் கழுவி, வெண்மையாக்கிக்கொண்டு, கர்த்தர் மற்றும் மணவாட்டியினுடைய முன்னிலையில் காணப்படுவார்கள். வெளிப்படுத்தல் 7 மற்றும் சங்கீதம் 45-ஆம் அதிகாரங்களில் குறிப்பிட்டுள்ளதுபோல், கன்னிகைகளாக, மணவாட்டியினுடைய தோழிகளாகக் காணப்படுவார்கள்; சிங்காசனத்திற்கு முன்னதாக ஊழியக்காரர்களாய்க் காணப்படுவார்கள்; ஒருவேளை இவர்கள் தற்காலத்தில் சரியான அன்பும், வைராக்கியமும், அறிவும் கொண்டிருப்பார்களானால், மணவாட்டி வகுப்பின் அங்கத்தினர்களாக, சிங்காசனத்தில் காணப்பட்டிருந்திருப்பார்கள்.

## "நாளையாவது நாழிகையையாவது அறியாதிருக்கிறபடியால்"

"மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" (மத்தேயு 25:13) என்று கூறி நமது கர்த்தர் உவமையை முடிக்கின்றார். பழைய மூல பிரதிகளில், "மனுஷகுமாரன் வரும்" என்ற வார்த்தைகள் காணப்படுவதில்லை. எப்படியாயினும் கருத்து ஒன்றுபோலவே காணப்படுகின்றது. "இந்த உவமை நிறைவேறும் நாளையோ; நாழிகையையோ அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்." விழித்திருத்தல் என்பது, சுவிசேஷ யுகம் முழுவதிலுமுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு நன்மையாகவே இருந்துள்ளது; மற்றும் இது தற்காலத்திலுள்ள புத்தியுள்ள கன்னிகை வகுப்பாருக்கு இன்னும் அதிக நன்மைக்கு ஏதுவாய்க் காணப்படுகின்றது, ஏனெனில் விழித்திருத்தலானது, இவர்களுக்கு, இவர்களுடைய சூழ்நிலைகளையும், நிலைமைகளையும் விவரிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த உவமையில் கூறப்பட்டுள்ள விழிப்பாய் இருக்கும் மனநிலைமையில், புத்தியுள்ள கன்னிகை வகுப்பார் அனைவரும் காணப்பட வேண்டும்; மணவாளன் வந்துகொண்டிருக்கின்றார் என்ற உண்மைப் பற்றின அறிவு இவர்களுக்குக் காணப்பட வேண்டும்; இவர்களிடம் தீவட்டிகளும், நிரம்ப எண்ணெயும் காணப்பட வேண்டும். இப்படியாக இந்த ஆயத்தமான நிலைமையில் காணப்படுபவர்கள், "இதோ மணவாளன் காணப்படுகின்றார்/பிரசன்னமாயுள்ளார்" என்று கடந்துப் போய்க்கொண்டிருக்கும் செய்தியைக் கேட்கும்போது அச்சமோ, அதிர்ச்சியோ அடையமாட்டார்கள். நாம் மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தில் (parousia) வாழ்ந்துக்கொண்டு வருகின்றோம்; புத்தியுள்ள கன்னிகைகள் ஏற்கெனவே கலியாணத்திற்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கின்றனர்; சபைக்கான முழுமையான எண்ணிக்கைச் சீக்கிரத்தில் நிறைவடையும், கதவும் அடைக்கப்படும். இப்படியான விழிப்பான இருதய நிலைமையில் இருப்பவர்களும், கர்த்தருடைய ஆவியை முழுமையாய்த் தங்கள் இருதயங்களில் பெற்றிருப்பவர்களும், மணவாளன் காணப்படுகின்றார்/வந்திருக்கின்றார் என்ற முதலாம் தகவலிலேயே/அறிவிப்பிலேயே மிகவும் விரைவாக ஈர்க்கப்படுவார்கள். இவர்கள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தும்போது, அதாவது வேதவாக்கியங்களை ஆராயும்போது, இந்த அறிவிப்பினுடைய உண்மையை உடனடியாக உணர்ந்துக்கொண்டு, விரைவாக (தங்களை) ஆயத்தம் பண்ணிக்கொண்டு, புத்தியுள்ள கன்னிகைகள் மத்தியில் நிற்பார்கள். இவ்விஷயம் தொடர்புடைய சத்தியமானது, இந்த அறிவிப்பானது ஒரு பரீட்சையாக அமைந்து, கர்த்தருடைய கன்னிகைகள் என்று அறிக்கைப் பண்ணிக்கொண்டவர்களில், எவர்களுடைய பாத்திரத்தில் எண்ணெய் இருக்கின்றது என்றும், தாழ்மையின், பொறுமையின், அன்பின், சரியான ஆவி இருக்கின்றது என்றும், மணவாளனுக்கடுத்த காரியங்களில் ஈடுபாடும், அக்கறையும் இருக்கின்றது என்றும் நிரூபிக்கின்றதாய் விளங்கும். இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே மணவாளனினால் விரும்பப்படுகின்றனர் அல்லது உள்ளே பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இக்கண்ணோட்டத்தின்படிப் பார்க்கையில், தங்காலத்தின் நமது வேலையானது, மணவாளனுடைய வந்திருத்தலை பறைசாற்றுவது/பிரகடனப்படுத்துவது மாத்திரமில்லாமல், பாத்திரத்தில் எண்ணெய் கொண்டிருப்பவர்கள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் பண்ணுவதற்கும், நாம் உதவ வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். எண்ணெயைப் போய் வாங்கிகொள்வதற்கு இதுவரை காலம் இருக்கிறது என்றாலும், இனிச் சீக்கிரத்தில் அதற்குக் காலம் இராமல் போகும்; ஆகவே, கர்த்தருடைய ஆவியாகிய

எண்ணெயைக்கொண்டிருந்தும், இன்னமும் அரைதூக்கத்தில் இருப்பவர்களுக்கே நமது விசேஷித்த அக்கறை காணப்பட வேண்டும்; மேலும் அன்புடனும், பொறுமையுடனும், விடா முயற்சியுடனும் அவருடைய பிரசன்னத்தின் அறிவிப்பானது, இவர்களது கவனத்திற்குக்கொண்டு வரப்பட வேண்டும்.

மணவாளனுடைய வந்திருத்தல் அறிவிக்கப்படும் வேளை வரும்போது, அதைக் கன்னிகைகள் அறியாமல் இருப்பார்கள் என்பது உவமையின் கருத்தல்ல. அவருடைய பிரசன்னத்தில் உறுதியில்லாமல் அவர்களால் எப்படித் தங்கள் தீவட்டிகளை ஆயத்தம் பண்ணிக்கொண்டு அவரைச் சந்திப்பதற்கும், அவரோடு செல்வதற்குமெனப் புறப்பட்டுப்போக முடியும்? பிரசன்னமாகுவதற்கு முன்னான காலப்பகுதித் தொடர்புடைய விஷயத்திலேயே கர்த்தர் விழித்திருக்கச் சொன்னார். மணவாளன் வந்திருப்பதை உணர்ந்துக்கொண்டவர்களும், தங்களுடைய தீவட்டிகளை ஆயத்தம் பண்ணிக்கொண்டவர்களும், அவருக்கான ஊர்வலத்தில் சேர்ந்துக்கொண்டவர்களுமாகிய கன்னிகைகள், அவருடைய வருகைக்காக (எப்போது வருவார் என்பதற்காக) விழித்திருக்கவில்லை, மாறாக அவருடைய பிரசன்னத்தை அறிந்தவர்களாக இருக்கின்றனர், ஏனெனில் அந்த நாளும், நாழிகையும் வந்தபோது, அவர்கள் ஆயத்தத்துடனும், எண்ணெயுடனும் காணப்பட்டிருந்தார்கள்.

நமக்கு ஏற்கெனவே உரியதாக இருக்கும் ஆசீர்வாதங்களுக்காகவும், இரக்கங்களுக்காகவும், நாம் தேவனுக்குத் துதிச் செலுத்திக்கொண்டு, நமது தீவட்டிகளுடைய வெளிச்சத்திலும், மகிமையான கலியாண விருந்திற்கான எதிர்ப்பார்ப்பிலும், பின்னர் மணவாளனோடு கூடப் பூமியின் குடிகளை ஆசீர்வதிக்கும் மகிமையான வேலைபற்றின எதிர்ப்பார்ப்பிலும், களிக்கூர்ந்து, நாம் உண்மையுடன் தொடர்ந்து முன்னேறுவோமாக. இந்த அறிவை உடையவன், இந்த அறிவினிமித்தமாக உலகத்திலிருந்தும், அதன் ஆவியிலிருந்தும் அதிகமதிகமாய்ப் பிரிக்கப்பட்டு, அதிகமதிகமாய் மணவாளனுடைய சாயலுக்குத்தானே, மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுவான்.

---

**R2764**

# "அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக"

## மத்தேயு 25:14-30.

"ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும், தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்."—ரோமர் 14:12.

எரிகோவிலிருந்து, எருசலேமுக்குப் போகிற வழியில்தான், நமது கர்த்தர், பத்து ஊழியக்காரர்களுக்கு ஒன்றாகக்கொடுக்கப்பட்ட பத்து இராத்தல் பற்றின உவமையைக் கொடுத்திட்டார். (லூக்கா 19:11, 12). நாம் இப்போது பார்க்கின்ற தாலந்துகள் பற்றின உவமையானது இராத்தல் உவமை போலவே காணப்பட்டாலும், அது அநேக விஷயங்களில் வேறுபட்டதாகவே இருக்கின்றது. இந்த உவமையானது, நமது கர்த்தர் தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதான சில நாட்களில், தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்திட்ட அவருடைய போதனைகளின் ஒரு பாகமாக இருக்கின்றது; அநேகமாக சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு வந்த செவ்வாய்க் கிழமையன்று எருசலேமிலிருந்து, பெத்தானியாவுக்கு மாலையில் பிரயாணம் பண்ணும்போது, இந்த உவமை கொடுக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். இந்த உவமையானது, தேவனுடைய ஊழியம் தொடர்புடைய விஷயத்தில், தேவனுடைய ஜனங்களுக்கு இருக்கும் பல்வேறு திறமைகள் குறித்தும், எவ்வாறு ஒவ்வொருவரும் தங்களது திறமைகளுக்குக் கணக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள் என்பது குறித்தும், அனைவரிடமும் ஒரே பலன் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை என்பது குறித்தும், ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் அந்தத் திறமையையும், வாய்ப்பையும் பயன்படுத்துவதில், உண்மையே எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்பது குறித்தும் நமக்கு விவரிக்கின்றது.

மத்தேயு 25:14-ஆம் வசனத்தில் இடம்பெறும், "பரலோக இராஜ்யம்" எனும் வார்த்தையானது, பழைய மூலப்பிரதிகளில் காணப்படுவதில்லை; இவ்வார்த்தை இங்கு இடம்பெறவில்லை என்பதற்காக, இங்குக் கருநிலையிலான பரலோக இராஜ்யமே (சபை) விவரிக்கப்பட்டு, தாலந்துகளைப் பெற்றுக்கொண்டுள்ள இந்த ஊழியக்காரர்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது எனும் கருத்தை மறுக்க முடியாது; ஏனெனில் இந்த உவமையானது, இராஜ்யத்தை விவரிக்கும் பத்துக் கன்னிகைகள் பற்றின உவமையை உடனடியாகப் பின்தொடர்ந்துவரும் உவமையாக இருக்கின்றது என்பது நினைவில்கொள்ளப்பட வேண்டும். ஆகையால் தாலந்துகள் பற்றின உவமையானது, இராஜ்ய வகுப்பாரைப்பற்றின கருத்தைத் தொடர்வதாக மாத்திரமே காணப்படுகின்றது.

(பத்து) அநேகம் எண்ணிக்கையிலான ஊழியக்காரர்கள் உவமையில் குறிப்பிடப்பட்டாலும், மூன்று பேர் மாத்திரமே உதாரணங்களாகக் காண்பிக்கப்படுகின்றனர்; ஆகவே மீதமானவர்களும் இந்த மூன்று பேருக்குள் அடங்குகின்றார்கள் என்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எந்த வகுப்பார் உயர்ந்திருப்பார்கள் என்பதைக் காட்டுவதற்கோ, போதிப்பதற்கோ இவ்வுவமை முயற்சிப்பதில்லை. இந்த விதத்தில் இது இராத்தல் பற்றின உவமை போன்று காணப்படுகின்றது. இந்த உவமையும் மற்ற உவமை போன்று, நமது கர்த்தர் தற்கால ஜீவியிலிருந்து, தூரதேசமாகிய பரலோகத்திற்குப் புறப்பட்டுப் போகும் விஷயத்தில், அப்போஸ்தலர்களுடைய மனங்களை ஆயத்தப்படுத்துவதற்கே கொடுக்கப்பட்டது; அதாவது, தாம் கல்வாரியில் நிறைவேற்றப் போகின்ற பாவங்களுக்கான மனுக்குலம் சார்பிலான பலியை, பிதாவின் சந்நிதியில் வைப்பதற்கென, பிதாவின் சந்நிதியில் பிரசன்னமாகுவதற்கும், பின்னர் முடிசூட்டப்படுவதற்கும், தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக கனப்படுத்தப்படுவதற்கும், உயர்வாய் உயர்த்தப்படுவதற்கும், தெய்வீகத் தயவின் வலது பாரிசத்தினிடத்திற்கு உயர்த்தப்படுவதற்கும், மற்றுமாக தேவன் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படத்தக்கதாக, தமது இராஜ்யத்தை முழுமையாய்க் கையில் எடுத்து, வானங்களின் கீழ் அனைத்தையும் தெய்வீக அரசாங்கத்திற்கு முழு இசைவுடன் கொண்டு வருதவதற்கான நியமிக்கப்பட்ட வேளை வரும் வரையிலும், தாம் தேவனுடைய வலது பாரிசத்திலேயே காத்திருப்பதற்குமென, நமது கர்த்தர் தற்கால வாழ்க்கையை விட்டு, தூர தேசமாகிய பரலோகத்தினிடத்திற்குச் செல்லும் விஷயத்தில் அப்போஸ்தலர்களுடைய மனதைத் தயார்படுத்தும் வண்ணமாகவே, இவ்வுவமை கொடுக்கப்பட்டுள்ளது.

"தூர தேசம்" எனும் வார்த்தையானது, ஆண்டவர் பூமியிலிருந்து போவதற்கும், பின்னர் தம்முடைய ஆயிர வருட இராஜ்த்தை ஸ்தாபிக்க திரும்பி வருவதற்கும் இடையே நீண்ட காலப்பகுதி இருப்பதைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இதற்கிடையில் அப்போஸ்தலர்கள், தாங்கள் அவருடைய சொத்துகள் ஒப்படைக்கப்பெற்ற அவருடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றார்கள் என்றும், அவருக்கடுத்த காரியங்கள் மற்றும் நன்மைகளைப் பாதுகாப்பதில் தாங்கள் உண்மையாய் இருந்து, இந்த அவருடைய காரியங்களை, நன்மைகளை அவர்களுடைய பல்வேறு திறமைகளைக் கொண்டு வளர்ச்சியுற செய்ய வேண்டுமென அவர் தங்களிடம் எதிர்ப்பார்ப்பார் என்றும் புரிந்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தார்கள். ஆனால் இந்த உவமையானது, பதினெட்டு நூற்றாண்டுகளுக்குரிய காலப்பகுதியை உள்ளடக்குவதினாலும், ஆண்டவர் திரும்பிவரும்போது வாழ்ந்துக்கொண்டிருக்கும் சில ஊழியர்களையும் உள்ளடக்குவதினாலும், இவ்வுமையானது அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமல்லாமல், நமது கர்த்தர் ஜெபம் பண்ணினதுபோன்று, அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலமாக கர்த்தரை விசுவாசிக்கின்றவர்கள் அனைவருக்காகவும் கூடக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகுகின்றது. இவ்வுவமையானது உலகத்திற்கானதல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும்; நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, எடுக்கப்படும் தீர்மானங்கள் எந்த விதத்திலும் உலகத்தைப்பற்றின தீர்மானங்களாய் இராமல், சபையைப்பற்றின தீர்மானங்களாய் மாத்திரமே இருக்கின்றது என்பதையும் நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். உவமையானது பொதுவான "விசுவாச விட்டாரை" உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது என்றும் நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது; மாறாக, கர்த்தரால் குறிப்பிட்ட பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட அவருடைய விசேஷித்த அர்ப்பணம் பண்ணப்பட்ட ஊழியக்காரர்களையே உள்ளடக்குகின்றது என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்; அதாவது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களை மாத்திரமே உள்ளடக்குகின்றது, என்றே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி பொழியப்பட்ட பிற்பாடு, ஆதி திருச்சபையில், ஒவ்வொரு அர்ப்பணம் பண்ணப்பட்ட விசுவாசியும் வரங்கள் (அ) தாலந்துகள் பெற்றுக்கொண்டனர். சிலர் அநேகம் பெற்றுக்கொண்டனர். "(ஒரு தாலந்தாகிலும்) ஆவியினுடைய அநுக்கிரகம் (அர்ப்பணிக்கப்பட்ட சபையிலுள்ள) அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கின்றது" (1 கொரிந்தியர் 12:7). ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்டிருக்கும் தாலந்துகள் (அ) ஆவியின் வரங்களுக்குத்தக்கதாகப் பொறுப்பை உடையவர்களாய் இருக்கின்றனர்; அப்போஸ்தலனாகிய பவுல், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான தாலந்துகளை/வரங்களைப் பெற்றிருந்து, அதிகம் வாய்ப்புகளை உடையவராய் இருந்தபடியினால், அதிகம் பொறுப்புடையவராகக் காணப்பட்டார்; மேலும் ஆண்டவருடைய பார்வையில் பவுல் மிகவும் அங்கீகரிக்கப்படத்தக்க விதத்தில் தன்னுடைய பொறுப்புகளை நிறைவேற்றினார் என்று நாம் எண்ணுகின்றோம் (1 கொரிந்தியர் 14:18). ஆனால் இந்த வரங்கள் கொஞ்சம் காலத்திற்குள்ளாக, அப்போஸ்தலர்களின் மரணத்திற்குப் பிற்பாடு ஓய்ந்துவிட்டது; ஏனெனில், ஆவியின் வரங்களானது அப்போஸ்தலர்கள் விசுவாசிகள்மேல் கைகள் வைத்த போதுதான், விசுவாசிகளுக்கு இந்த வரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டது என்றும், இந்த வரங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட வண்ணமாகத் தேவனிடத்திலிருந்து ஒவ்வொரு நபருக்கும் வரவில்லை என்றும், அப்போஸ்தலர்களாலேயே அல்லாமல், வேறெவராலும் இந்த வரங்களை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியாது என்றும் நம்மால் தெளிவாய்க் காணமுடிகின்றது. (அப்போஸ்தலர் 8:12-20).

ஆதி சபையை ஸ்தாபிக்கும் நோக்கத்திற்காகவே இந்த வரங்கள் கொடுக்கப்பட்டது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம்; மற்றும், சபை ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு வரங்களின் அவசியம் முடிந்தது, ஆகையால் வரங்கள் இந்த விதத்தில்/வடிவத்தில் ஓய்ந்துவிட்டது; மற்றும் இவ்விதத்தில் ஓய்ந்தது முதல், வரங்களானது இன்றுவரை கர்த்தருடைய ஜனங்களுக்கு வேறே விதத்தில்/வடிவத்தில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது; அதாவது ஓய்ந்தது முதல், ஒவ்வொருவனும் பிறப்பின் மூலமாகவும், கல்வி அறிவின் மூலமாகவும், பயிற்சியின் மூலமாகவும், பெற்றிருக்கும் இயல்பான தாலந்துகளானது, அவன் தன்னைக் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணி, கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது, பரிசுத்த ஆவியினுடையதாய்க் கருப்படுகின்றது; ஆகையால் இந்தத் தாலந்துகள் (அ) திறமைகள் அவனுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது; மேலும், அதைப் பயன்படுத்தும் விஷயத்தில் மற்றும் பலன் கொடுப்பதில் அவன் பொறுப்பாளியாக வைக்கப்படுகின்றான். ஒருவேளை அவன் உலகத்தானாகவே இருந்திருந்தால், அவனுக்கு வேறே பொறுப்புகள் காணப்பட்டிருந்திருக்கும்; ஆனால் இப்படிப்பட்டதான உலகத்தாரைக் குறித்து இந்த உவமையில் சொல்லப்படாமல், மாறாக அர்ப்பணம் பண்ணியுள்ள ஊழியக்காரர்கள், தங்கள் ஆண்டவருடைய ஆவிக்குரிய ஆஸ்திகளைப் பயன்படுத்துவது தொடர்புடைய விஷயத்தில், கொண்டிருக்கும் பொறுப்பு மாத்திரமே இவ்வுமையில் குறிப்பிடப்படுகின்றதாய் இருக்கின்றது.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் ஐந்து தாலந்து உடையவர்கள், சொற்பமானவர்களாகவே காணப்படுவார்கள் என்பது நமக்கு உறுதியே. பெரும்பான்மையான பரிசுத்தவான்கள் ஒரு தாலந்தும், இரண்டு தாலந்தும் உடையவர்களாகத்தான் காணப்படுவார்கள். உலகத்திலுங்கூட ஐந்து தாலந்துகள் உடையவர்கள் அநேகரில்லை; மேலும், இப்படியாக ஐந்து தாலந்துகள் கொண்டுள்ளவர்களை உலகமும், மாம்சமும், பிசாசும் அதிகமாய் அதற்கே ஊழியஞ்செய்யத்தக்கதாக வைத்துள்ளப்படியால், இப்படிப்பட்டவர்களில் மிகச் சொற்பமானவர்களே கர்த்தருடைய ஊழியக்கரர்கள் ஆகும்படிக்கும், தங்களுடைய ஐந்து தாலந்துகளை முற்றும், முழுமையாகக் கர்த்தருடைய வேலைக்கு என அர்ப்பணம் பண்ணும்படிக்கும் முன் வருபவர்களாக இருக்கின்றனர். "அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை."

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மத்தியில், ஐந்து தாலந்துடையவர்களாய் இருக்கின்றவர்கள், தங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுக்கொண்டு, "நான் போதுமானளவுக்குச் செய்துள்ளேன்; நிச்சயமாய் ஒரு தாலந்துடைய சகோதரன் "A" அவர்களைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்துள்ளேன்; இரண்டு தாலந்துகளையுடைய சகோதரன் "B" அவர்கள் அளவுக்கும் நான் செய்துள்ளேன்" என்று சொல்லக்கூடாது

என்பதை இந்த உவமை நமக்குக் காட்டித்தருகின்றதாய் இருக்கின்றது. மாறாக ஒவ்வொரு சீஷனும், ஆண்டவர் தன்னிடம் கொடுத்துள்ள இயல்பான திறமைகளின் தாலந்துகளையும், வாய்ப்புகளையும் உண்மையாய் அறிந்திட நாடவேண்டும்; மற்றும் இந்தத் தாலந்துகளையும், வாய்ப்புகளையும் கொண்டு, கர்த்தருக்கு அதிகமான கனிகளையும், அதிகமான துதிகளையும், அதிகமான ஊழியங்களையும், அதிகமான கனத்தையும் விளைவிக்கத்தக்கதாக முற்றும் முழுமையாகவும், முடிந்தமட்டும் ஓயாமல் பயன்படுத்தவும் நாட வேண்டும் என்று உவமை நமக்குக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. ஐந்து தாலந்துகளை உயைடவர்கள், காரியங்களைச் சோம்பலான கண்ணோட்டத்தில் பார்க்காதபடிக்கு, இச்சோம்பலைத் தடைபண்ணும் வண்ணமாக, இவ்வுமையானது ஐந்து தாலந்துடைய ஊழியர்களுக்கு ஒரு கட்டுப்பாட்டை வைக்கிறது. இவ்வுமையானது, பெரிய வாய்ப்புகளையும், பெரிய இயல்பான தாலந்துகளையும் கொண்டவர்களிடத்தில், கர்த்தர் பெரிய காரிங்களை எதிர்ப்பார்ப்பது போன்று, சிறிய தாலந்துகளையும், வாய்ப்புகளையும் உடையவர்களிடத்தில் கர்த்தர் பெரிய காரியங்களை எதிர்ப்பார்ப்பதில்லை என்று காண்பிப்பதன் மூலமாக, கொஞ்சம் தாலந்து உடையவர்களுக்கு இவ்வுவமை உற்சாகமளிக்கின்றதாயும் இருக்கின்றது. சிறிய தாலந்துகளையும், வாய்ப்புகளையும் உடையவர்கள், தங்களுடைய கைக்கு அகப்படுவது எதுவோ, அதைத் தங்கள் முழுப்பலத்துடன் செய்யவேண்டும் என்றும், இந்தப் புத்தியுள்ள ஆராதனையே கர்த்தர் எதிர்ப்பார்க்கிறதும், பலன் கொடுப்பதாகக் கூறியதுமாகிய காரியமாக இருக்கின்றது என உணரவும் வேண்டும் என்றும் இவ்வுவமையானது கற்றுக்கொடுக்கின்றது. ஒரே ஒரு தாலந்தையும், வாய்ப்பையும் கொண்டிருந்த ஊழியக்காரன், தன்னுடைய தாலந்திற்கு ஏற்ப (அதாவது மற்றவர்கள் தங்களுக்குரிய தாலந்திற்கு ஏற்ற பொறுப்பைக் கொண்டிருப்பது போன்று) பொறுப்புடையவனாய் இருக்கின்றதை உணர்ந்திருக்க வேண்டும்; மேலும், அவன் உண்மையுள்ளவனாய்க் காணப்பட்டிருப்பானானால், அவன் சரிசமமான ஆண்டவருடைய அங்கீகரிப்பையும் பெற்றிருப்பான்; மேலும், அவன் உண்மையுள்ளவனாய் இருந்திருந்தானானால் அவனுடைய ஒரு தாலந்து, இரண்டு தாலந்தாக அதிகரித்திருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

உவமையில் ஒரு தாலந்தைப் பெற்ற மனுஷனே நிலத்தைத் தோண்டி, அதைப் புதைத்துப் போட்டவனாக கர்த்தர் கூறிய காரியத்தை வைத்து, அதிகம் தாலந்துகள் உடையவர்களைப் பார்க்கிலும் குறைவான/ஒரு தாலந்துடையவர்களே, இப்படியாகத் தாலந்துகளைப் புறக்கணிப்பவர்களாகவும், அவைகளைத் தவறாய்ப் பயன்படுத்துபவர்களாகவும் அதிகம் இருப்பார்கள் என்ற விதத்தில் நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. நாம் பார்த்தது வரையில், ஒரே ஒரு தாலந்துடையவர்கள் புதைப்பதுபோல, இரண்டு தாலந்தும், ஐந்து தாலந்தும் உடையவர்களாகிய அநேக பேர்க்கூட, நிலத்தைத் தோண்டி, தங்கள் தாலந்துகளைப் புதைத்துப் போட்டவர்களாக இருக்கின்றனர்; மேலும் இப்படியாகச் செய்ததற்காக, ஒரு தாலந்துடைய மனுஷனைக் காட்டிலும், அதிகம் தாலந்துடைய மனுஷன் அதிகமாய் குற்றம் சாட்டப்படுவதற்குரியவனாய் இருக்கின்றான். பின்னர் ஏன் ஒரு தாலந்தையுடைய மனுஷன், தாலந்துகளைப் புதைத்துப் போடுவதற்காக உவமையில் தெரிந்துக்கொள்ளப்பட்டவனாய் இருக்கின்றான்? குறைவான தாலந்துகளை உடையவர்களின் பொறுப்பைக் காண்பிப்பதற்கே உவமையில் ஒரு தாலந்துடைய மனுஷன், தாலந்துகளைப் புதைத்துப் போட்டவனாகக் காண்பிக்கப்படுகின்றான்; அதாவது, கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணின ஜனங்களில் சிறியவர் கூட, தன் தாலந்துகளை அறிந்து, தன்னிடத்திலுள்ள தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டுமெனக் கர்த்தர் எதிர்ப்பார்க்கின்றார் என்றும், தமக்கும், சகோதர, சகோதரிகளுக்கும், சத்தியத்திற்கும் ஊழியம் புரிவதற்குச் சிறிய திறமைகள் கொண்டிருந்து அதைப் பயன்படுத்தாமல் புறக்கணிப்பவர்களைக்கூடக் கர்த்தர் குற்றமற்றவர்களாய் விட்டுவிடுவதில்லை என்றும் காண்பிப்பதற்கே ஒரு தாலந்துடைய மனுஷன், தாலந்துகளைப் புதைத்துப் போட்டவனாக உவமையில் காண்பிக்கப்படுகின்றான். அதிகமான தாலந்துடையவர்களின் பொறுப்பானது அதிகமாய் இருப்பதுபோல, அவர்களின் விஷயத்தில் இழப்புகள் என்பதும் அதிகமாய் இருக்கும்; மற்றும் இப்படியாகத் தண்டனையும் அதிக கடுமையானதாகக் காணப்படும்.

"வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான்" (மத்தேயு 25:19). இந்த வார்த்தைகள் மூலமாக நமது கர்த்தர், தம்முடைய சீஷர்கள் வெகு சில நாட்களுக்குள், சில மாதங்களுக்குள் (அ) சில வருடங்களுக்குள் தாம் திரும்பி வந்து, கணக்குக் கேட்பார் என்று எதிர்ப்பார்க்கக்கூடாது

என்ற உண்மையைத் தெளிவாய்த் தெரிவித்துள்ளார்; ஆனால் சீஷர்கள் அந்தக் குறிப்பிட்டக் காலத்தைக் குறித்து, அவரிடம் கேட்ட போதோ, காலங்களையும், வேளைகளையும் அறிவது சீஷர்களுக்கடுத்த காரியமாய் இராமல், அது பிதாவுக்கு அடுத்த காரியமாய் இருக்கின்றது என்று கூறி, சீஷர்களுக்குப் பதில் கொடுக்க கர்த்தர் மறுத்துவிட்டார். ஆகவே பதினெட்டு நூற்றாண்டுகள் காலமாக, கர்த்தருடைய ஜனங்கள் இக்காரியத்தில், தெளிவான தகவல் இல்லாத நிலைமையிலேயே விடப்பட்டுள்ளனர். எனினும் இவ்விஷயம், இப்போதைய காலத்தில், காலங்களையும், வேளைகளையும் பற்றிக் கொஞ்சம் அறிந்துக்கொள்வது என்பது தேவனுடைய ஜனங்களின் சிலாக்கியமாய் இருக்கின்றது என்ற கருத்தை எதிர்ப்பதில்லை; ஏனெனில், தேவனுடைய ஜனங்களுக்குத் தேவன் காரியங்களைத் தெரியப்படுத்த விரும்புவதற்கான ஏற்றவேளையாக இப்போதைய காலப்பகுதிக் காணப்படுகின்றது. "ஞானவான்களோ உணர்ந்துக்கொள்ளுவார்கள்" (தானியேல் 12:10; 1 தெசலோனிக்கேயர் 5:4; யோவான் 16:13).

அநேகரால் விசுவாசிக்கப்பட்டு வருவது போன்று, சீஷர்கள் மரித்துப்போய், பின்னர் தங்களுடைய கர்த்தரினிடத்திற்குச் சென்று, கணக்குக் கேட்கப்பட்டு, பலன் அளிக்கப்படுவார்கள் என்பதான எந்தக் குறிப்பும் உவமையில் காணப்படவில்லை. வேதவாக்கியங்களானது, "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை" என்றும், இயேசுவைத் தவிர, "பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்றும் தெரிவிப்பதோடல்லாமல், நமது கர்த்தர் தம்முடைய ஜனங்களைத் தம்மிடத்திற்கு ஏற்றுக்கொள்ளவும், பின்னர் பலனளிக்கவும் தக்கதாக இரண்டாம் முறை வருவார் என்றும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. ஐந்து தாலந்துகளைக் கொண்டவர்களில் ஒருவரான அப்போஸ்தலனாகிய பவுலும், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது (காத்திருக்கின்றது), நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்ற வார்த்தைகளையே கூறுகின்றார். (2 தீமோத்தேயு 4:7, 8; யோவான் 3:13; 14:3; அப்போஸ்தலர் 2:34).

நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி, நாம் இப்பொழுது, "மனுஷகுமாரனுடைய நாட்களில்" வாழ்ந்து கொண்டு வருகின்றோம், மற்றும் அவருடைய இந்த வந்திருத்தலின் நாளில், அவர் தம்முடைய ஊழியக்காரர்களிடம், இப்பொழுது கணக்குக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். நித்திரையில் காணப்படுகின்ற ஊழியக்காரர்களிடம் இந்தக் கணக்குக் கேட்குதல் ஆரம்பமாக வேண்டியிருக்கின்றது என்றும், கணக்குக் கேட்கப்படும் விஷயத்திலும், பலனளிக்கப்படும் விஷயத்தில், இவர்களை, "கர்த்தருடைய வருகையின் போது, உயிரோடிருக்கும் நாம்" தடைப்பண்ணவோ, முந்திகொள்ளவோ கூடாது என்றும், வேதவாக்கியங்களின்படி (தரிசித்ததினால் அல்லாமல், விசுவாசத்தினால்) நாம் புரிந்து இருக்கின்றோம். (1 தெசலோனிக்கேயர் 4:15-17). நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி 1878-ஆம் வருடமானது நமது கர்த்தர் தம்முடைய இராஜரிக அதிகாரத்தை எடுத்துக்கொண்ட <u>வருடமாகவும்,</u> மகா பாபிலோனின் மீதான அவருடைய நியாயத்தீர்ப்பானது, "அவள் விழுந்தாள்" என்று சொல்லப்பட்டதன் மூலமாகவும், தேவனுடைய ஜனங்களனைவரும் அவளைவிட்டு வெளியே வரும்படியாக அழைக்கப்பட்டதன் மூலமாகவும், வெளிப்பட்டதின் <u>வருடமாகவும்</u> இருக்கின்றது. இன்னுமாக இந்த வருடமே, கடந்த காலத்து உண்மையுள்ள ஜெயங்கொண்டவர்கள், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்கான வருடமாகவும், அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கின்ற வருடமாகவும், "நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்ற அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்குமான வருடமாகவும் இருக்கின்றது. இதற்கு இசைவான நம்முடைய புரிந்துக்கொள்ளுதல் என்னவெனில், இந்த வகுப்பாரில் அனைவரும், இப்பொழுது உண்மைள்ளவர்களுக்கென்று வாக்களிக்கப்பட்டுள்ள மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். ஊழியக்காரர்களுக்கான இந்த நியாயத்தீர்ப்பு என்பது, உலகத்திற்கான நியாயத்தீர்ப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்; உலகத்திற்கான நியாயத்தீர்ப்பு என்பது, அனைத்து விதத்திலும் வேறுபட்டதாகவும், ஆயிர வருட யுகத்தின்போது நடக்கிறதாக இருந்து, வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டின் உவமையினால்

அடையாளப்படுததப்படுகின்றதாய் இருக்கின்றது; இந்த வெள்ளாடு, செம்மறியாடு உவமையில், இப்போது, தற்காலத்தில் பரீட்சையில் காணப்படுபவர்களாகிய உண்மையுள்ள ஊழியக்காரர்கள், அதாவது தாலந்து உவமையில் கணக்குக்கேட்பது தொடர்பாகவும் பலனளிக்கப்படுவது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ள இந்த உண்மையுள்ள ஊழியக்காரர்கள், அப்போது, கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரமாகவே, அவரோடு கூட அவருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்திருப்பார்கள். (வெளிப்படுத்தல் 3:21).

மற்ற வேதவாக்கியங்கள் தெரிவிப்பது போன்று, "கர்த்தருடைய பிரசன்னத்தின் காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம்" மகிமையடைந்தவர்களை முந்திக்கொள்ள முடியாவிட்டாலும், நாம் மகிமையடையும் வகுப்பாரிலிருந்து தவிர்க்கப்படுவதில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்களிடம் கணக்குக் கேட்கும் விஷயமும், பலன் வழங்கப்படும் விஷயமும், மரணத்தில் நித்திரைப் பண்ணிக்கொண்டிருக்கும் ஊழியர்களைப் பொறுத்தமட்டில் 1878-ஆம் வருடத்தில் ஆரம்பமாகி, உயிரோடு இருப்பவர்கள் தொடர்புடைய விஷயத்தில் தொடர்ந்து, நீடித்துக்கொண்டிருக்கின்றது; கர்த்தருடைய பிரசன்னத்தின் காலத்தில் ஜீவித்துக்கொண்டிருப்பவர்கள் தங்களுடைய அர்ப்பணிப்பின் ஒப்பந்தத்தின்படி, அனைத்தையும் முடிப்பதற்கும், முதிர்ச்சியடைந்த கோதுமை மணிகளாக ஆகுவதற்கும், தங்கள் கணக்குகளை ஒப்புவிக்கத்தக்கதாகவும் போதுமான காலம் வழங்கப்படுகின்றனர். இப்பொழுது அதாவது, அவருடைய பிரசன்னத்தின் காலங்களில் தங்களது ஓட்டத்தை நிறைவுசெய்பவர்கள், உடனடியாக தங்கள் கணக்கை ஒப்புவிக்கலாம்; மற்றும், மரண நித்திரையில் காணப்பட வேண்டிய அவசியமில்லை; மற்றும், இராஜாவின் வருகைக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை; மாறாக, மரிக்கும் தருணத்திலேயே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு, உடனடியாக முதாலம் உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதமாகிய மகிமை, கனம் மற்றும் அழியாமையை, முழுமையாய் அனுபவிப்பவர்களாய் இருப்பார்கள்.

உவமையின் இந்தக் கண்ணோட்டத்தின்படி, இன்றுள்ள கர்த்தருடைய ஜனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றார்கள் என்பதை உணரும்போது, அர்ப்பணிக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவரும் (பகற்காலமாய் இருக்கும்பொழுதே, இரவு . . . வருவதற்கு முன்னதாக) தன்னை முற்றும் முழுமையாய் ஆராய்ந்துகொள்வானாக; அதாவது கர்த்தருக்கு ஊழியம் புரியத்தக்கதாக எந்தளவுக்குத் தன்னிடம் தாலந்துகளும், திறமைகளும், சிலாக்கியங்களும், வாய்ப்புகளும் காணப்படுகின்றது என்றும், எந்தளவுக்கு தான் அதைப் பயன்படுத்துகின்றான் என்றும் உறுதிப்பண்ணிக்கொள்ளத்தக்கதாகவும், தான் தனது தாலந்துகளைப் பயன்படுத்துவதில் காண்பிக்கும் உண்மையின் மீது, தான் அடையப்போகும் பலன் சார்ந்துள்ளது என்பதை நினைவில் கொள்ளத்தக்கதாகவும் தன்னை முற்றும் முழுமையாய் ஆராய்ந்துகொள்வானாக. ஐந்து தாலந்துகள் கொண்டிருப்பவர்களில் சிலர், கர்த்தருடைய ஊழியத்திற்கென, ஐந்தில் மூன்றை உண்மையாய்ப் பயன்படுத்துபவர்களாய் இருந்து, மற்ற இரண்டையும் ஜீவியத்தின் கவலைகளிலும், தொழில்களிலும், அதாவது பூமியில், பூமிக்குரிய காரியங்களில் புதைத்துப் போடுபவர்களாய்க் காணப்படலாம். இன்னுமாக, இரண்டு தாலந்துடையவர்களில் சிலர், ஒரு தாலந்தைக் கர்த்தருக்கான ஊழியத்தில் பயன்படுத்தி, மற்றொன்றைப் புதைத்துப் போடுகின்றவர்களாய்க் காணப்படலாம்; இப்படியாக கர்த்தர் உதாரணம் கொடுக்காத காரணத்தினால், இப்படியாகச் சிலர் நடக்க வாய்ப்பு உண்டோ என்று கேள்வி எழும்பலாம். சிலர் இரண்டு தாலந்துகளைப் பரம காரியங்களுக்குப் பயன்படுத்தலாமென்றும், மீதி மூன்றைப் பூமிக்குரிய காரியங்களுக்குப் பயன்படுத்தலாமென்றும் திட்டமிடுகிறவர்களாகக் காணப்படலாம்; சிலர் ஒன்றைப் பூமிக்குரிய காரியத்திற்கும், மற்றொன்றைப் பரம காரியத்திற்கும் பயன்படுத்தலாமென்றும் திட்டமிடுகிறவர்களாகக் காணப்படலாம்; இதன் விளைவாக ஒன்றில் அவன் பூமிக்குரிய காரியங்களில் முழுமையாக மூழ்கிப்போய், பூமியில் தன்னுடைய அனைத்துத் தாலந்துகளையும் புதைத்து விடுகிறவனாய் இருப்பான், இல்லையேல் அவனது இருதயம் கர்த்தருடைய ஆவியில் முழுமையாய் நிரம்பப்பெற்று, கர்த்தருடைய நோக்கங்களுக்காக, தன்னுடைய தாலந்துகளனைத்தையும் பயன்படுத்துவதற்கு வாஞ்சிப்பவனாய் இருப்பான். இக்காரியம் தொடர்பாகவே, நமது கர்த்தர் வேறொரு இடத்தில், "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது" என்றும் "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது" என்றும் கூறியுள்ளார் (லூக்கா 16:15) . இதற்கு அனுபவமும், கவனித்துப் பார்த்து உணர்ந்த விஷயமும் இசைவாகவே காணப்படுகின்றது; ஆகவேதான், சிலர் ஆவிக்குரிய காரியங்களில் ஒன்றில் குளிரானவர்களாக (அ)

அனலானவர்களாகக் காணப்படுவதை நம்மால் பார்க்க முடிகின்றது; ஒன்றில் பரலோக இராஜ்யமே முதன்மையானதாகவும், அனைத்தையும் விட மேன்மையானதாகவும், நம்முடைய சிறந்த நேரத்தையும், ஆற்றலையும், செல்வாக்கையும் எதிர்ப்பார்க்கிறதாகவும், எடுத்துக்கொள்கிறதாகவும் காணப்படும்; இல்லையேல், பரலோக இராஜ்யமானது புறக்கணிக்கப்பட்டு, மறந்து போகப்பட்டும், நாம் நேரமும், செல்வாக்கும், பணத்தைச் சம்பாதிப்பதற்கோ அல்லது சுயநலமான காரியத்திற்கோ பயன்படுத்தப்பட்டும், மனமும் சரீரமும் பூமிக்குரிய தொழில்களில் ஈடுபட்டும் காணப்படும்.

கர்த்தருடைய அர்ப்பணம் பண்ணியுள்ள ஜனங்கள் ஒவ்வொருவருக்குமான பாடம் . . . நாம் தேவனுடைய இராஜ்யத்தையே முதலாவதாக (பிரதானமானதாக) நாட வேண்டும் என்பதேயாகும். இதுவே நம்முடைய பிரதானமான அக்கறையாகக் காணப்பட்டு, நம்முடைய நேரத்தையும், கவனத்தையும், எண்ணங்களையும், ஆற்றலையும், செல்வாக்கையும், தற்கால ஜீவியத்திற்கு அவசியமானவைகள் தவிர மற்றபடி நம்மிடத்திலுள்ள வளமைகளையும், நம்மிடத்திலிருந்து கவர்ந்து போடுகிறதாயும் இருக்கவேண்டும்; மேலும் தற்கால ஜீவியத்திற்கு நமக்கு அவசியமானவைகளைக்கூட, நாம் பரலோக காரியங்களுக்கடுத்த நன்மைகளுக்கெனப் பலிச் செலுத்த விரும்பும் அளவுக்குத்தக்கதாக, நமது அன்பும், வைராக்கியமும் வெளிப்படுகிறதாகவும் இருக்கும்.

உவமையில் உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கென வழங்கப்படும் பலனானது, ஒவ்வொருவரின் விஷயத்திலும் ஒன்றாகவே காணப்படுகின்றது; அதாவது, கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்தலாகும்; இதன் அர்த்தமாவது, ஒவ்வொருவருக்குமான சந்தோஷத்தினுடைய பாத்திரம் நிரம்பி இருப்பதைக் குறிப்பதாக இருக்கும். இதிலுங்கூட, நம் அனைவருக்கும் மாபெரும் உற்சாகம் அளிக்கப்படுகின்றது; மேலும் இது ஒன்றோ, இரண்டோ வாய்ப்புகளுக்கான தாலந்துகளை உடையவர்களாகிய, பெரும்பான்மையான கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விசேஷமாய் அவசியமான ஒன்றாகும். ஐந்து (அ) பத்துத் தாலந்துகளை உடையவர்கள் போன்று, குறைவான தாலந்து உடையவர்களுக்கும், கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்கான சரிசமமான நல்ல வாய்ப்பு உள்ளது; “நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே” எனும் பலனானது, அநேகம் தாலந்து உள்ளவர்களுக்கும், குறைவான தாலந்து உள்ளவர்களுக்கும், முற்றும் முழுமையாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

இந்த ஊழியக்காரர்களுக்கு வழங்கப்படும் பலனானது, உவமையில் விவரிக்கப்பட்டுள்ளவைகளுக்கு இசைவாகவே காணப்படுகின்றது; ஆயிர வருட யுகத்தின்போது, இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களாகிய, உண்மையுள்ள ஊழியக்காரர்கள், உலகத்தை ஆளுபவர்களாகவும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாகவும், ஆளுகையில் அவருடைய சிங்காசனத்தில் உட்காருகிறவர்களுமாய் இருப்பார்கள். ஏனெனில், “கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்; அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்” என்பதாகவே பலன் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை இந்த உவமையானது, உலகத்தின் நியாயத்தீர்ப்பை அடையாளப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்குமானால், உவமையின் இந்த முடிவானது பொருத்தமற்றதாகக் காணப்பட்டிருக்கும்; ஏனெனில், உலகத்தின் நியாயத்தீர்ப்பானது முடிவுபெறும்போது, இப்படியான விதத்தில் ஆளுகைத்துவத்திற்கான அவசியம் காணப்படாது; “ஏனெனில், கிறிஸ்து, அனைத்து அதிகாரங்களையும் பரிகரித்துப் போடும் வரைக்கும், அவர் (ஆயிர வருடத்தின் போது) ஆளுகை செய்து, தேவனுடைய இராஜ்யத்தைத் தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்புக்கொடுப்பார்” என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளார் (1 கொரிந்தியர் 15:24, 25). இப்பொழுது மனுஷர்கள் மத்தியில் காணப்படுகின்ற அநீதியின் ஆளுகையைக் கவிழ்த்துப் போடுவதற்கும், மனுக்குலத்தைத் தற்போதைய பாவம் மற்றும் மரணத்தின் நிலைமையினின்று தூக்கிவிடுவதற்கும், சாத்தானுடைய வல்லமையினின்று, தேவனுடைய குமாரர்களுடைய சுயாதீனத்திற்குள் விடுவிக்கப்பட விருப்பம் உள்ளவர்களை விடுவிப்பதற்குமென, ஆயிர வருட யுகத்தின்போது நீதியின் ஆளுகை, மத்தியஸ்தரின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். மேலும், இந்த வேலைகள் அனைத்தும் நிறைவேற்றி முடியும்போது, இப்படியாக ஆளுகை செய்வதும் முடிவிற்கு வரும்; ஆகவே இந்த உவமையானது, ஆயிர வருட யுகத்திற்கு முன்னதான நமது கர்த்தருடைய வருகைக்கும்,

அவருடைய உண்மையுள்ளவர்களாகிய, தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையின் உயர்த்தப்படுதலுக்கும் பலத்த ஆதாரமாய்க் காணப்படுகின்றது.

தனது தாலந்தை நிலத்தில் புதைத்துப்போட்டு, அதைப் பயன்படுத்த தவறிவிடுகின்ற ஊழியக்காரன், எஜமான் மிகவும் கடுமையானவர் என்றும், கொடுமையானவர் என்றும் அவர்மேல் பழிச் சுமத்திக்கொண்டு, தன்னுடைய செயலை நியாயப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றவனாய்க் காணப்படுகின்றான். இப்படியாகவே கர்த்தருக்கு அர்ப்பணிப்பின் வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு, அவைகளை நிறைவேற்றுவதில் தவறிப்போய்விடுபவர்களாக நடந்துக்கொள்பவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் தங்களைக் குற்றஞ்சாட்டுவதற்குப் பதிலாக, கர்த்தரைக் குற்றஞ்சாட்டுபவர்களாய்க் காணப்படுகின்றனர்; மேலும் இப்படியாக நடந்துக் கொள்வதென்பது, இவர்கள் உண்மையில் அன்பின் விஷயத்தில் குறைவுபட்டிருப்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. இவர்கள் கர்த்தரைப் போதுமானளவுக்கு முழுமையாய் அன்புகூருவதில்லை; மேலும், இந்த உண்மையை இவர்களது செயல்பாடானது வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை இவர்கள் கர்த்தரை அன்புகூர்ந்தார்களானால், இவர்கள் தங்களால் முடிந்த மட்டும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சிக்கொள்பவர்களாய் இருப்பார்கள்; மற்றும் இப்படிப்பட்டவர்களே பலன்களினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

தங்களுடைய உடன்படிக்கைக்கு ஏற்ப, ஊழியக்காரர்களாய்ச் செயல்படுவதற்குத் தவறிவிடுபவர்களுக்கு, இந்த உடன்படிக்கையின் கீழ்க்கொடுக்கப்பட்ட தாலந்துகளைப் பயன்படுத்த தவறிவிடுபவர்களுக்கு உரிய தண்டனையானது, மிகப்பெரிய இழப்பாகக் காண்பிக்கப்பட்டுள்ளது; ஆனால் இந்த இழப்பு என்பது, ஜெயங்கொள்பவர்கள் தவிர மற்றபடி அனைவருக்கும் பாவத்தின் சம்பளமாக நித்திய காலமாய்ச் சித்திரவதைக் கொடுக்கப்படும் எனும் கூற்றினால் குருடாக்கப்பட்ட மனங்களை உடையவர்களின் அனுமானத்தின்படியான இழப்பாகக் காணப்படுவதில்லை.

குருடாக்கப்பட்டவர்கள், இந்த உண்மையற்ற ஊழியக்காரன் சாத்தானிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு, எரிகிற நெருப்பில் சித்திரவதைப்படுத்தப்படுவான் என்று கூறுகின்றனர்; இப்படியான கூற்றுகளைக்கொண்டு வந்தவர்கள், மிகவும் குருடர்களாய்க் காணப்படுவதினால், இப்படியாகவே கர்த்தருடைய உவமைக்கு அர்த்தம் எடுத்துக்கொள்கின்றனர். நெருப்பு இருக்கும் வெளிச்சமுடையதான இடத்தைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக இயேசுவோ, அந்த ஊழியக்காரனைப் புறம்பான இருளில் தள்ளப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். பிசாசுகள் எனும், சித்திரவதைப்படுத்துபவர்களைக் குறித்து நமது கர்த்தர் எதுவும் குறிப்பிடவில்லை.

நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நியாயமான மற்றும் பொருத்தமான விளக்கத்தை நாம் வழங்குகின்றோம். அர்ப்பணம், ஊழியம் மற்றும் பலிச்செலுத்துதலுக்கான தற்கால சிலாக்கியங்களைப் பயன்படுத்த தவறுகின்ற ஊழியக்காரனிடமிருந்து, அந்த வாய்ப்பு எடுக்கப்பட்டுவிடும். அது இவனுக்கு இனிமேல் கிடைக்காது; ஜெயங்கொள்பவர்களுக்கான பலனில், இவனுக்கு எந்தப் பங்கும் கொடுக்கப்படாது; இவன் இந்த மாபெரும் இழப்பை அனுபவிப்பவனாக இருப்பான். இவன், "புறம்பான இருளுக்குள்" தள்ளப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளான் என்பது, இவன் ஏற்கெனவே தெய்வீகக் கிருபையின் வெளிச்சத்தில், தெய்வீகக் காரியங்களின் ஆசீர்வாதத்தில், சிலாக்கியத்தில், அறிவில் காணப்பட்டிருந்திருக்கிறான் என்பதையும், இந்தப் பிரகாசிப்பித்தலை இவன் இழந்துவிடுவான் என்பதையும், ஆவிக்குரிய காரியங்கள் தொடர்புடைய இவனுடைய புரிந்துக்கொள்ளுதல் அந்தகாரப்பட்டுப் போகும் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இது, "புறம்பான இருள்" காரணம், இது மனுக்குலத்தின் உலகத்தின் மீது காணப்படும் பொதுவான இருளாகும். கர்த்தரைபற்றியும், இப்பொழுது பிரகாசித்துக்கொண்டிருக்கிறதுமான அவருடைய திட்டத்தைப் பற்றியுமான அறிவின் தெளிவான வெளிச்சத்திற்குள், கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே வரும்படிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஒளி தற்காலிகமாக வீசப்படப் பெற்றிருக்கும் மற்றவர்களோ, ஒளியின் பிம்பத்தை மாத்திரமே காண்கின்றவர்களாய் இருக்கின்றனர். உண்மையற்ற ஊழியக்காரன் அனைத்துக் கிருபைகளினின்று முழுமையாய்த் தள்ளிவிடப்படுபவனாக இருப்பான்; ஒளியின் பிம்பம்/பிரதிபலிப்புக்கூட இவன் பார்வையினின்று மறைக்கப்பட்டிருக்கும்; இவன்

சீக்கிரத்தில் தெய்வீகத் திட்டம், வேலை, முதலானவைகளில் தானும் உலகத்திற்கு இருக்கும் இருளிலேயே காணப்படுவதை உணருவான். மேலும் இந்த யுகத்தை முடிக்கிறதான மகா உபத்திரவக் காலத்தில், உலகத்தோடு பங்கடைகின்றவனாக இவன் காணப்படுவான்; இந்த மகா உபத்திரவக் காலமானது உவமையில் அழுகையும், பற்கடிப்பும் என அருமையாய்ப் பொருந்துகிற விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

---

**R2606**

# "செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை"
## மத்தேயு 25:31-46.

"அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்."—மத்தேயு 25:46.

வேதவாக்கியங்களானது, நித்தியமான சித்திரவதை எனும் தேவதூஷணமான உபதேசத்தை எங்கும் போதிக்கவில்லை என்றாலும், உவமையில் வரும் "வெள்ளாடு" வகுப்பாரை அடையாளப்படுத்தும் பொல்லாங்கான வகுப்பாருக்கான நித்தியமான தண்டனை குறித்து வேதவாக்கியங்களானது அழுத்தம் கொடுத்துப் போதிக்கவே செய்கின்றன. இந்த உவமையையும், இறுதியில் வழங்கப்படும் தண்டனை தீர்ப்பையும் ஆராய்ந்துப்பார்க்கலாம்.

"ஒழுக்கம் என்பதே பரலோகத்தின் முதல் பிரமாணம்" என்று கூறப்படும் காரியம் உண்மையே; எனினும், சிலர் மாத்திரமே இது எந்தளவுக்கு உண்மையாய் இருக்கின்றது என்பதை உண்மையாய் உணர்ந்திருக்கின்றனர். யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினைப் பார்க்கையில் விளங்கும் ஒழுங்கினை வேறெங்கும் பார்க்க முடியாது.

தேவன் தம்முடைய ஒவ்வொரு வேலையின் பாகத்திற்கும் திட்டவட்டமான காலங்களையும், வேளைகளையும் கொண்டிருக்கின்றார்; மேலும், இந்த ஒவ்வொரு காலங்களுடைய முடிவிலும் வேலை நிறைவடைவதும், பின்வரும் யுகத்தில் புதிய வேலையை ஆரம்பிப்பதற்கான ஆயத்தமாக, பயனற்றவைகளை அகற்றுவதும் நடைபெற்றது. இவ்வாறாக யூத யுகத்தினுடைய முடிவில் ஒழுங்குக் கடைப்பிடிக்கப்பட்டது; அதாவது ஓர் அறுவடையும், பதரிலிருந்து கோதுமை வகுப்பார் முற்றிலுமாகப் பிரிக்கப்படுவதும், பதர் வகுப்பார் தேவனுடைய கிருபையினின்று முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுவதும் நடைபெற்றது. யூத யுகத்தில் பாத்திரமானவர்களெனத் தீர்க்கப்பட்டுள்ள சிலரை வைத்து, ஒரு புதிய யுகமாகிய, சுவிசேஷ யுகம் ஆரம்பமானது. இப்பொழுது, நாம் இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அறுவடையாகிய நிறைவடைதலின் காலப்பகுதியில் காணப்படுகின்றோம்; அதாவது, இந்த யுகத்தின் போது வளர்ந்திட்ட "கோதுமைகளையும்," "களைகளையும்" பிரிக்கும் காலத்தின் மத்தியில் நாம் காணப்படுகின்றோம். நமது கர்த்தர் இயேசுவைத் தலையாகக்கொண்டிருந்த, இந்தக் கோதுமை வகுப்பாரை வைத்து, ஒரு புதிய யுகம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது; இந்தப் புதிய யுகத்தில் இந்தக் "கோதுமைகள்," ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும் ஆளுகை செய்வார்கள்; ஆனால், களை வகுப்பாரோ இந்தக் கிருபைக்குப் பாத்திரமற்றவர்களென நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

யூத யுகத்திலும், நிறைவடையப் போகிற சுவிசேஷ யுகத்திலும் கைக்கொள்ளப்படும் இதே ஒழுங்கானது, இந்தச் சுவிசேஷ யுகத்தைப் பின்தொடரும் யுகத்திலும் கைக்கொள்ளப்படும் என்று நமது கர்த்தர், நாம் ஆராய்வதற்கு எடுத்துக்கொண்ட இந்த உவமையின் மூலமாக நமக்குத் தெரிவிக்கின்றார்.

யூத யுகத்தினுடைய அறுவடையானது, பதிரிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுக்கப்படுவதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது; இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய அறுவடையானது, களைகளிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுக்கப்படுவதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது; ஆயிர வருட யுகத்தின் அறுவடையானது, வெள்ளாடுகளிலிருந்து, செம்மறியாடுகள் பிரித்தெடுக்கப்படுவதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் பற்றின உவமையானது, ஆயிர வருட யுகம் தொடர்புடையதாய் இருக்கின்றது என்பது, "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரிப்பார்" என்ற வசனங்களுடைய வார்த்தைகள் மூலம் தெளிவாய்ச் சுட்டிக்காட்டப்படுகின்றதாய் இருக்கின்றது (மத்தேயு 25:31, 32). தற்கால யுகத்தில் பரீட்சையில் காணப்படுகின்றவர்களுடைய (சபை) ஒவ்வொரு கிரியையும், நியமிக்கப்பட்ட காலத்தில் நீதிபதியினுடைய இறுதித் தீர்ப்பைத் தீர்மானிக்கத்தக்கதாக, அவர்களுடைய குணலட்சணங்களின் விஷயத்தில் பங்கு வகிக்கின்றதுபோலவே, இனிவரும் யுகத்திலுள்ள மனுக்குலத்தின் விஷயத்திலும் காணப்படும். தற்கால யுகத்தில், யுகம் முடிவதற்கு முன்னதாகவே சபையிலுள்ள தனிப்பட்ட அங்கத்தினர் அநேகரின் பரீட்சைகள் முடிவுபெற்று, அவர்கள் விஷயத்தில் தீர்மானமும் எடுக்கப்பட்டுக் காணப்படுவது போலவே (2 தீமோத்தேயு 4:7, 8), ஆயிர வருட அரசாட்சியிலும், யுகம் முடிவதற்கு முன்னதாகவே சில தனிப்பட்டவர்களுடைய விஷயத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட நிலையில் காணப்படும் (ஏசாயா 65:20). எனினும் ஒவ்வொரு யுகத்திலும், யுகத்தினுடைய முடிவு காலப்பகுதியில் ஒரு பொதுப்படையான பிரித்தெடுத்தலும் நடைபெறும்.

மகா உபத்திரவக் காலத்திற்குப் பின்பு, ஆயிர வருட யுகத்தின் விடியலில், உயிரோடிருப்பவர்களாகிய ஜாதியார்கள் கிறிஸ்துவுக்கு முன்பாகக் கூட்டிச்சேர்க்கபடுவார்கள்; மற்றும், மரித்தவர்களுக்கான நியமிக்கப்பட்ட நேரத்திலும், வரிசையிலும், மரித்த ஜனங்கள் அனைவரும் கிறிஸ்துவினுடைய நியாயசனத்திற்கு முன்பாக, உடனடியான தீர்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இல்லாமல், மாறாக மிகவும் சாதகமான சூழ்நிலையின் கீழ் நியாயமான, பாரபட்சமற்ற தனிப்பட்ட பரீட்சைகளை/ஒத்திகைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அழைக்கப்படுவார்கள்; இந்தப் பரீட்சையின்/ஒத்திகையின் விளைவாக நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்கள் (அ) பாத்திரவான்கள் இல்லை எனும் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் (எசேக்கியேல் 18:2-4, 19, 20).

இந்த உவமையின் சம்பவமானது, மகா உபத்திரவக் காலம் முடிந்து, ஜாதிகள் கீழ்ப்படுத்தப்பட்டு, சாத்தான் கட்டப்பட்டு, கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் அதிகாரம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடே நடைபெறுகின்றதாய் இருக்கின்றது (வெளிப்படுத்தல் 20:1,2). இச்சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்னதாக (ஜெயங்கொள்ளுகிற சபையாகிய) கிறிஸ்துவின் மணவாட்டி, அவருடைய ஆவிக்குரிய வல்லமையாகிய சிங்காசனத்தில், அவரோடு கூட உட்கார்ந்திருப்பார்கள், மற்றும் கோபாக்கினையின் மகா நாளினுடைய நியாயத்தீர்ப்புகளை வழங்குவதிலும் பங்குக்கொள்ளுகிறவர்களுமாய் இருப்பார்கள். அப்போது மனுஷகுமாரனும், அவருடைய மகிமையடைந்த சபையும் வெளிப்படுத்தப்பட்டு, மனுஷர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களினால் பார்க்கப்படுவார்கள்; மற்றும் இவர்கள், "தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" (மத்தேயு 13:43).

இதுவே யோவான் பார்த்த புதிய எருசலேமாகும் . . . "(அரசாங்கத்திற்கு அடையாளமாக) பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்" (வெளிப்படுத்தல் 21:2). மகா உபத்திரவத்தின்போது, இந்தப் இறங்கி வந்துகொண்டிருக்கும், ஆனால் (உபத்திரவக் காலம்) அது முடிவு பெறுவதற்கு முன்பாக, புதிய எருசலேம் பூமியையே வந்து தொட்டிருக்கும். புதிய எருசலேம் (தேவனுடைய வல்லமையினாலே அல்லாமல், மற்றபடி) கைகளினால் பெயர்க்கப்பட முடியாத மலையிலிருந்து பெயர்க்கப்பட்டு வரும் கல்லாக இருந்து, பெரிய பர்வதமாகி, முழுப் பூமியையும் நிரப்புகின்றதாய் இருக்கும்; மற்றும் இது வரும்போது, இருளின் அதிபதியினுடைய பொல்லாத இராஜ்யங்களைச் சுக்குநூறாக உடைத்துப்போட்டு வருகின்றதாய் இருக்கும் (தானியேல் 2:34, 35).

இதுவே, "தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்படும் மகிமையான நகரமாகும் (அரசாங்கமாகும்). மேலும் ஆயிர வருட அரசாட்சியினுடைய விடியலில், ஜாதிகள் இந்நகரத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள்

(வெளிப்படுத்தல் 21:24). "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்" (வெளிப்படுத்தல் 21:27). "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; . . . இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளிப்படுத்தல் 22:17). இப்படியாக உலகத்திற்கான மாபெரும் நியாயத்தீர்ப்பின் நாளாகிய, (ஆயிர வருடங்களான) தகுதிக்காண் பருவக்காலம் ஆரம்பிக்கும்.

இப்படியாக ஜாதியார் குணமாக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்படும் அந்தக் கிருபையான காலத்திலும் கூட, அதாவது சாத்தான் கட்டப்பட்டு, தீமைகள் அடக்கி வைக்கப்பட்டு, மனுக்குலமானது மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்திலும் கூட, அதாவது கர்த்தரைப்பற்றின அறிவினால் பூமி நிரம்பிக் காணப்பட்டிருக்கும்போது கூட, இரண்டு வகுப்பார்கள் காணப்படுவார்கள்; இந்த இரண்டு வகுப்பாரை, நமது கர்த்தர் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு என ஒப்பிட்டுக் கூறுகின்றார். இந்த இரண்டு வகுப்பாரை, கர்த்தர் பிரிப்பார் என்று கர்த்தர் நமக்குத் தெரிவித்துள்ளார். ஆயிர வருடத்தின்போது சாந்தமுடையவர்களாகவும், போதிக்கப்படத் தக்கவர்களாகவும், வழிநடத்தப்படுவதற்கு விருப்பமுள்ளவர்களாகவும் காணப்படும் செம்மறியாடு வகுப்பார், நியாயாதிபதியின் அங்கீகரிப்பிற்கும், தயவிற்கும் அடையாளமான அவருடைய வலது கரத்தினிடத்திற்குக் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். ஆனால், இப்படியாகச் செம்மறியாடுகள் நல்ல ஆயனால் ஏற்பாடு பண்ணப்பட்ட சத்தியம் எனும் பசுமையான புற்களில் மேயும்போது, குப்பைகளை மேய்பவர்களாகவும், சுயசித்தம் உடையவர்களாகவும், இணங்காதவர்களாகவும், மனுஷர் மத்தியில் அங்கீகரிப்பையும் மற்றும் முதன்மை வகுத்தலையும் நாடுபவர்களாகவும், பாறைகள்மேல் ஏறிச்செல்லுகிறவர்களாகவும் இருக்கும் வெள்ளாடு வகுப்பார், நியாயாதிபதியினுடைய தயவிற்கு எதிரான, இடது கரத்தில் கூட்டிச் சேர்க்கப்படுபவர்களாய்க் காணப்படுவார்கள்; அதாவது அவரது தயவற்றவர்களாகவும், அவருடைய கண்டனத்திற்குரியவர்களாகவும் இந்த வெள்ளாடு வகுப்பார் காணப்படுவார்கள்.

இப்படியாக வெள்ளாடுகளையும், செம்மறியாடுகளையும் பிரிக்கும் வேலையானது நிறைவடைவதற்கு, ஆயிர வருட யுகமும் தேவைப்படுகிறதாய் இருக்கும். அந்த யுகத்தில் ஒவ்வொருவரும், தேவன் மற்றும் அவரது சித்தம் பற்றின அறிவில் படிப்படியாக வரும்போது, அந்தப் பொன்னான யுகத்தினுடைய வாய்ப்புகளை ஒவ்வொருவரும் நன்றாய்ப் பயன்படுத்துவதற்கு (அ) தவறாய்ப் பயன்படுத்துவதற்கு ஏற்ப, அவருடைய தயவின் வலது கரத்தில் (அ) அவருடைய தயவின்மையின்/வெறுப்பின் இடது கரத்தில் தங்கள் ஸ்தானத்தைக் கொள்பவர்களாய்க் காணப்படுவார்கள். யுகம் முடியும்போது, உவமையில் சொல்லப்பட்டதுபோன்று, மனுக்குலத்தின் உலகத்திலுள்ள அனைவரும், இந்த இரண்டு வகுப்பிலும் இணைந்துக் கொண்டவர்களாக/சேர்ந்துக் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள்.

அந்த யுகத்தின் முடிவு என்பது, உலகத்திற்கான நியாயத்தீர்ப்பினுடைய (அ) பரீட்சையினுடைய முடிவாக இருக்கும். இந்தச், "செம்மறியாடு" வகுப்பாருக்கான பலன் அவர்களுக்கு வழங்கப்படும்; ஏனெனில், இவர்கள் பரீட்சையின் மற்றும் நெறிப்படுத்துதலின் காலத்தில், தேவனுடைய நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாக அப்போஸ்தலர் பவுலினால் விவரிக்கப்பட்டுள்ள அன்பு எனும் அருமையான குணலட்சணத்தை வளர்த்து, வெளிப்படுத்தினவர்களாய் இருந்தனர். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோமர் 13:10). இந்த அன்பை இவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய அவசியமான நேரங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்; மேலும் இவர்கள் ஒருவருக்கொருவர் செய்வதை, கர்த்தர் தமக்கே செய்ததாக எண்ணுவார்; ஏனெனில், இவர்கள் மனித சுபாவத்திலும், அவர் தெய்வீகச் சுபாவத்திலும் காணப்பட்டாலுங்கூட, இவர்களனைவரையும் தேவனுடைய பிள்ளைகளாகவும், தம்முடைய சகோதரர்களாகவும் எண்ணுகின்றார்.

"வெள்ளாடு" வகுப்பார் கண்டிக்கப்படுவதற்கான காரணம், இந்த அன்பின் ஆவியில் இவர்கள் குறைவுபட்டிருப்பதினாலாகும். செம்மறியாடுகளைப்போலவே சாதகமான சூழ்நிலைகளில் காணப்பட்ட இந்த வெள்ளாடு வகுப்பார், கர்த்தருடைய

நெறிப்படுத்துதலுக்கான வனைந்தெடுக்கும் செல்வாக்கைத் துணிகரமாய் எதிர்க்கின்றவர்களாயிருந்து, தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகின்றவர்களாய்க் காணப்படுவார்கள். தேவனுடைய தயவுகள், இவர்களை உண்மையான மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்துவதில்லை; மாறாக, இவர்கள் பார்வோனைப் போன்று அவருடைய தயவைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு, தீமையைச் செய்கிறவர்களாய்க் காணப்படுவார்கள். தேவனுடையதும், இராஜ்யத்தினுடையதுமான பிரமாணமாகிய அன்பு எனும் அம்சத்தை வளர்த்திக்கொள்ளாத வெள்ளாடு வகுப்பார், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரர்களாய்க் கருதப்பட்டு, அழிக்கப்படுவார்கள். தேவனுக்கொத்த சாயலாகிய அன்பை வளர்த்துக்கொண்டவர்களாகவும், அந்த அன்பைத் தங்களுடைய குணலட்சணங்களில் வெளிப்படுத்துபவர்களாகவும் காணப்படும் "செம்மறியாடு" வகுப்பார், யுகா யுகங்களில், கீழ்த்தளத்தில் பூமியை ஆளுபவர்களாக ஆக்கப்படுவார்கள்.

ஆயிர வருட யுகத்தினுடைய முடிவின்போது, இறுதியாக மனிதர்களுடைய காரியங்களை ஒழுங்குப்படுத்தும் வண்ணமாக, கிறிஸ்து, "செம்மறியாடு" வகுப்பாரை நோக்கி, "என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று குறிப்பிடுகின்றார் (மத்தேயு 25:34).

இங்குக் குறிப்பிடப்படும், ஆயிர வருட யுகத்தின் கடைசியில் வரும் "செம்மறியாடுகள்," சுவிசேஷ யுகத்தினுடைய, சுவிசேஷச் சபையினுடைய செம்மறியாடுகளாய் இராமல், மாறாக நமது கர்த்தரினால் யோவான் 10:16-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "வேறே ஆடுகளாய்" இருக்கின்றது என்பது தெளிவாய்த் தெரிகின்றது. உலகம் உண்டானது முதல், தெய்வீகத் திட்டத்தில் (ஆயிர வருட யுகததின் முடிவில் வரும் இந்த) செம்மறியாடுகளுக்கான இராஜ்யம் என்பது, சுவிசேஷ யுக சபைக்கென ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யமல்ல. ஆயிர வருட யுகத்தினுடைய ஆரம்பப் பகுதியிலேயே சபை, தன்னுடைய இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வாள்; ஆனால் இங்குக் (மத்தேயு 25:34) குறிப்பிடப்படும் இராஜ்யமானது, ஆயிர வருட யுகத்தினுடைய இந்தச் செம்மறியாடுகளுக்கு உரியதாகும். இவர்களுக்கான இராஜ்யம் என்பது, ஆதாமினால் ஆதியில் பெற்றிருக்கப்பட்டதும், பாவத்தினால் இழந்துப் போகப்பட்டதும், மனிதன் பூரணத்திற்கு நேராகக்கொண்டு வரப்படும்போதும், ஏற்றுக்கொள்வதற்கும், அனுபவிப்பதற்கும், பாத்திரமாகும்போதும் மீண்டுமாக திரும்பக்கொடுக்கப் பெற்றதுமான, பூமியின் மீதான ஆளுகையாய் இருக்கின்றது. இந்த ஓர் ஆளுகை என்பது ஓர் இனத்தார், இன்னொரு இனத்தார் மீது பண்ணும் ஆளுகையாய் இராமல், மாறாக ஒரு கூட்டு ஆளுகையாயிருக்கும்; இந்த ஆளுகையில் ஒவ்வொரு மனிதனும் இராஜாவாக இருப்பான்; மற்றும் அனைவரும் அனைத்துப் பூமிக்குரிய நன்மைகளையும் அனுபவிக்கும் விஷயத்திலும், உரிமை கொண்டாடும் விஷயத்திலும், சரிசமமான உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பெற்றிருப்பார்கள். அவர்கள் இராஜரிக உரிமையுடைய ஜனங்களாய் இருப்பார்கள்; பூரணமான நீதியை அடிப்படையாகக் கொண்டுள்ள மாபெரும், பிரம்மாண்டமான குடியரசாகக் காணப்படும்; அங்கு அனைத்து மனுஷர்களுக்குமான உரிமைக்கு முக்கியத்தும் கொடுக்கப்படும்; ஏனெனில், பொன்னான சட்டமானது ஒவ்வொருவரின் இருதங்களிலும் பொறிக்கப்பட்டிருக்கும்; மற்றும் ஒவ்வொரு மனுஷனும் தன்னைத்தான் நேசிப்பதுபோன்று, தன்னுடைய அயலானையும் அன்புகூருகின்றவனாய் இருப்பான். அனைவரின் ஆளுகையும், ஐசுவரியமான மற்றும் திரளான ஆசீர்வாதங்களைக்கொண்டிருக்கும் ஒட்டுமொத்த பூமியின் மீதே காணப்படும் (ஆதியாகமம் 1:28; சங்கீதம் 8:5-8). ஆயிர வருட யுகத்தின் முடிவில் பூரணமாக்கப்பட்ட, தகுதியாக்கப்பட்ட, மீட்கப்பட்ட சந்ததியாருக்கு வழங்கப்படும் உலகத்திற்கான இராஜ்யமானது, மற்றவர்களுக்கு வழங்கப்படும் இராஜ்யத்திலிருந்து, தெளிவாய் வேறுபடுத்தி காண்பிக்கப்படத்தக்கதாக, **"உலகம் உண்டானது முதல் ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யம்"** என்று கூறப்பட்டுள்ளது; பூமியானது பூரண மனிதனுக்கான நித்தியமான வீடாகவும், இராஜ்யமாகவும் இருக்கின்றது. ஆனால் கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட்டதும், அவருடைய சபையாகிய மணவாட்டி உடன் சுதந்தரத்துவம் அடையப் போகிறதுமான இராஜ்யமானது, ஓர் ஆவிக்குரிய இராஜ்யமாகும்; அது "தேவதூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், வல்லமைகளுக்கும் மேலானதாகும்," மற்றும் அந்த இராஜ்யத்திற்கு முடிவு இருப்பதில்லை; முடிவு பெறக்கூடிய கிறிஸ்துவினுடைய ஆயிர வருட அரசாட்சி

என்பது, கிறிஸ்துவினுடைய வல்லமை மற்றும் ஆளுகைக்கான ஆரம்பமாக மாத்திரமே இருக்கின்றது (1 கொரிந்தியர் 15:25-28). முடிவில்லாத பரலோக, ஆவிக்குரிய இராஜ்யமானது, உலகம் உண்டாவதற்கு முன்னதாகவே ஆயத்தம் பண்ணப்பட்டதாக இருக்கின்றது; இதன் ஆரம்பமானது, "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாய் இருக்கிற" கிறிஸ்து இயேசுவில் காணப்படுகின்றது. இந்த இராஜ்யமானது முதற்பேறான கிறிஸ்து இயேசுவுக்காக நோக்கம் கொண்டு ஆயத்தம் பண்ணப்பட்டது; ஆனால் சபையாகிய அவருடைய மணவாட்டியும், உடன் சுதந்தரமுமானவளும், அவருக்குள்/கிறிஸ்துவுக்குள்ளாக உலக தோற்றத்திற்கு முன்னதாகவே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றாள் (எபேசியர் 1:4).

பூமியின் ஆளுகை (அ) இராஜ்யமானது, உலகம் உண்டானது முதல் மனுக்குலத்திற்காக ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யமாக இருக்கின்றது. மனிதன் ஆறாயிரம் ஆண்டுகளாக தீமையினுடைய ஆளுகையின் கீழ்ப் பாடுபடுவதும், துயரம் மற்றும் மரணத்தினுடைய விளைவுகளைக் கற்றுக்கொள்வதும், இதன் வாயிலாக தேவனுடைய அன்பின் பிரமாணத்தினுடைய நீதி, ஞானம் மற்றும் காருணியத்தை வேறுபடுத்திக் கண்டுகொள்வதும் நலமானதாகும். பின்னர் கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் மனிதனைச் சீரழிவிலிருந்தும், மரணத்திலிருந்தும் திரும்பக்கொண்டுவந்து, "உலகம் உண்டானது முதல் அவனுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை அவன் சுதந்தரித்துக் கொள்ளத்தக்கதாக," அவனைத் தகுதிப்படுத்துவதற்கு, ஏழாவது ஆயிர வருடக்காலம் அவசியப்படுகின்றது.

அனைவரும் இராஜாக்களாய் இருக்கப்போகின்ற அந்த (பூமிக்குரிய) இராஜ்யமானது, பிரம்மாண்டமான, உலகளாவிய குடியரசாகக் காணப்படும்; இப்பொழுது பாவத்தின் காரணமாகச் சாத்தியமற்றுக் காணப்படும் சமநிலையும், ஆசீர்வாதமான செல்வாக்கும், அப்போது ஒவ்வொரு குடிமகனுடைய பரிபூரணத்தினால் காணப்படும். ஆயிர வருட காலத்திலுள்ள கிறிஸ்துவினுடைய இராஜ்யமோ, முற்றிலும் வேறுபட்டதாக, ஆசாரியர்களினால் செலுத்தப்படும் ஆட்சியாகக் காணப்படும்; இந்த ஆட்சியானது உலகத்தினுடைய சம்மதத்தையோ (அ) உடன்பாட்டையோ பொருட்படுத்தாமல், உலகத்தை (அதன் பூரணமற்ற நிலை காணப்படும்போதும், அனைத்தும் திருப்பக் கொடுக்கப்படும் காலங்களின் போதும்) ஆளுகை செய்யும் ஆட்சியாகக் காணப்படும்.

சுவிசேஷச் சபையினுடைய சகோதர சகோதரிகள் மாத்திரமே, கிறிஸ்துவின் சகோதர சகோதரிகளாய் இருப்பதில்லை. அக்காலத்தில் பூரண நிலைக்குத் திரும்பி வருபவர்கள் அனைவரும் தேவனுடைய புத்திரர்களாக, அதாவது ஆதாம் தேவனுடைய குமாரனாக இருந்ததுபோன்று, மனித குமாரர்களாக அடையாளம் கண்டுக்கொள்ளப்படுவார்கள் (லூக்கா 3:38). தேவனுடைய குமாரர்கள் மனித தளத்திலோ, தேவ தூதர் தளத்திலோ (அ) தெய்வீகத் தளத்திலோ, எத்தளத்தில் காணப்பட்டாலும், அவர்கள் அனைவரும் சகோதரர்களேயாவார்கள். இங்கு நமது கர்த்தருடைய மனித சகோதரர் மீதான, அவருடைய அன்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சீக்கிரத்தில் தேவனுடைய தெய்வீகக் குமாரர்களாகவும், கிறிஸ்துவினுடைய சகோதரர்களாகவும் இருக்கப் போகிறவர்களுக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்பு, இப்பொழுது உலகத்தாருக்கு இருப்பது போன்று, இனிவரும் யுகத்தில் இதே உலகத்தார்தான் மனித சகோதரர்களாகிய தங்களுக்குள், ஒருவருக்கொருவர் ஊழியம் புரிவதற்கான திரளான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள்.

மரித்த ஜாதிகள், மீண்டுமாக உயிருடன் கொண்டு வரப்படும்போது, உணவும், வஸ்திரமும், உறைவிடமும் அவர்களுக்கு அவசியமாய் இருக்கும். ஜனங்கள் தற்கால ஜீவியத்தில் எவ்வளவு திரளானவைகளைக் கொண்டிருந்தாலும், மரணமானது அனைவரையும் சரிசமமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அனைவரையும் என்பது சிறுபிள்ளையாயினும் சரி, முதிர்ச்சியடைந்த மனுஷனாயினும் சரி, கோடிஸ்வரனாயினும் சரி, ஏழையாயினும் சரி, கல்வியறிவுடையவனாயினும் சரி, கல்வி அறிவு இல்லாதவனாயினும் சரி, நாகரிகமானவனாயும், நாகரிகமற்றவனாயினும் சரி, எல்லாரையும் சரிசமமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அனைவரும் இரக்கம் காட்டுவதற்கான திரளான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள்; மற்றும் இப்படியாக அனைவரும், தேவனுடன் ஒத்துழைக்கும் துணை வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தைப் பெற்றுக் கொள்பவர்களாக இருப்பார்கள். இங்கு லாசருவின் சம்பவத்தின் உதாரணம், நமக்கு நினைவிற்கு

வருகின்றது; இயேசு லாசருவை மரணத்திலிருந்து விழித்தெழுப்பப் பண்ணினார்; பின்னர் அவனைக் கட்டி வைத்திருந்த சீலைகளை அவிழ்ப்பதற்கும், அவனுக்கு வேறு வஸ்திரம் கொடுப்பதற்கும், அவனுக்குப் போஜனம் கொடுப்பதற்கும், கல்லறையைச் சுற்றிக் காணப்பட்ட அவனோடு கூடச் சந்தோஷமடைந்த நண்பர்கள், இந்த உதவிகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

இன்னுமாக இவர்கள், "வியாதியுள்ளவர்களாகவும், காவலிலடைக்கப்பட்டவர்களாகவும்" அதாவது படுக்கையில் (அ) பார்வையின் கீழ் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லறைக் குழி என்பதுதான், மில்லியன் கணக்கான மனுக்குலம் உணர்வற்ற நிலையில், காவல் வைக்கப்பட்டுள்ள மாபெரும் சிறைச்சாலையாக இருக்கின்றது; ஆனால் இவர்கள் கல்லறையிலிருந்து விடுவிக்கப்படும் போது, பூரணத்திற்குத் திரும்புதல் என்பது உடனடியாக நடக்கும் காரியமல்ல. இவர்கள் இன்னமும் பூரணமடையாதபடியால், இவர்கள் வியாதியுற்றவர்கள் என்று அழைக்கப்படுவது சரியே; இவர்கள் மரணத்தில் இல்லை, ஆனாலும் ஜீவனிலும் பூரணமடையவும் இல்லை; இப்படியாக இரண்டிற்கும் இடையே காணப்படும் நிலைமை என்பது, வியாதிப்பட்டிருக்கும் நிலை என்று கூறப்படுவது பொருத்தமானதேயாகும். இவர்கள் மனதளவிலும், சரீரத்திலும், ஒழுக்கத்திலும் பூரணமடைவது வரையிலும், இவர்கள் படுக்கையில் (அ) பார்வையின் கீழ்த் தொடர்ந்து காணப்படுபவர்களாய் இருப்பார்கள். அப்போது ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கும், அனுதாபங்கொள்வதற்கும், அறிவுரைக் கூறுவதற்கும், உற்சாகமூட்டுவதற்கும், திரளான வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்பவர்களாக இருப்பார்கள்; மேலும் இப்படியாக உதவி புரிவதற்குத் தவறுவது என்பது, கர்த்தருடைய அன்பின் ஆவி குறைவுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

மனுக்குலம் முழுவதும் ஒட்டுமொத்தமாக மரணத்திலிருந்து எழுப்பப்படாமல், மாறாக ஆயிர வருடக் காலப்பகுதியில் படிப்படியாக எழுப்பப்படுவதினால், ஒவ்வொரு கூட்டத்தார் எழுந்து வரும்போது, இவர்களுக்கு முன்பு எழுந்து வந்த கூட்டத்தார் அடங்கிய உதவியாளர்களின் சேனை (உதவி புரிவதற்கென) காணப்படும். (கிறிஸ்துவின் சகோதரராகிய) மனுஷர்கள் ஒருவருக்கொருவர் அப்போது காண்பிக்கும் அன்பையும், இரக்கத்தையும், இராஜா தமக்கே செய்ததாகக் கருதிக்கொள்வார். எந்த மாபெரும் சாகசங்களும், அப்போது நீதிமான்களுக்கு அளிக்கப்படும் கனங்களுக்காகவும், தயவுகளுக்காகவும் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை; இவர்கள் தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்கு இசைவாக வந்து, அந்த அன்பை தங்களுடைய கிரியைகளினால் நிரூபித்துக் காட்டுகிறவர்களாய் இருக்க மாத்திரமே வேண்டும். "அன்பு நியாயப்பிரமாணததினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது;" "தேவன் அன்பாகவே இருக்கின்றார்;" ஆகையால் மனிதன், மீண்டுமாகத் தேவனுடைய சாயலில் கொண்டு வரப்படும்போது, மனிதன் அன்பின் ஜீவனுள்ள உருவமாக இருப்பான்.

"உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" எனும்போது, தெய்வீக நியாயப்பிரமாணம் மற்றும் அதன் உயர்வான கொள்கைகளைச் சார்ந்திராத ஒரு தனிப்பட்ட விதமான ஆளுகையைக் குறிக்கிறதாக இல்லை; பூமியின் மீதான ஆளுகையை மனிதனுக்குத் தேவன் ஆதியில் கொடுத்திருந்திருந்தார்; ஆனால் மனிதன் இந்த மாபெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக தேவன் அவனை (இராஜ்யத்தில்) ஆயத்தம் பண்ணின பிற்பாடு, அந்த ஆளுகையை அவனுக்குத் திரும்பக்கொடுக்கத்தக்கதாக திட்டமிட்டிருந்த போதிலும், தம்முடைய உயர்வான பிரமாணங்களுடன் இசைவாகவே அல்லாமல் மற்றபடி, மனிதன் பூமியை ஆளுகைச் செய்வதற்குத் தேவன் நோக்கம் கொண்டுள்ளார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. "பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலும் செய்யப்படுவதாக" என்பதே அரசாங்கம் பண்ணுவதற்கான கொள்கையாக, என்றென்றும் காணப்பட வேண்டும். அப்போது மனுஷன், பரலோகத்தினுடைய பிரமாணத்திற்கு இசைவாக, தன்னுடைய பூமியை ஆளுகை செய்வான்; அதாவது "வலது பாரிசத்தில் நித்திய பேரின்பம்" கொண்டிருப்பவரும், ஜீவனைக் கொடுப்பவருமானவரின் சித்தத்தைச் செய்வதில் தொடர்ந்து மகிழ்ச்சிக்கொள்பவனாக இருப்பான். "உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு" (சங்கீதம் 16:11). ஓ! முழுமையான ஆசீர்வாதங்களை அள்ளி வழங்கும் அன்பான திட்டங்களை உடையவருக்குக் கனமும், மகிமையும் செலுத்துங்கள் என யார்தான் சொல்லாமல் இருப்பார்கள்?

இடது பக்கத்தில் நிற்பவர்களுக்கு, "சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டுப் போங்கள்" என்று கூறப்பட்ட வார்த்தைகளை நாம் இப்பொழுது ஆராயலாம்; இவர்கள் தெய்வீக அன்பினுடைய வனைந்தெடுக்கும் மற்றும் வடிவமைக்கும், ஆதிக்கங்களுக்கு இணங்காதவர்களாய்க் காணப்பட்டு, ஜீவனுக்கு தகுதியற்றப் பாத்திரங்களாகத் தீர்ப்பு வழங்கப்படுகின்றனர். சகோதரர்கள் பசியாய், தாகமாய் இருந்தபோது, வஸ்திரமில்லாமல் இருந்தபோது, வியாதிப்பட்டிருந்த போது, காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, அவர்களுடைய இந்தத் தேவைகளுக்கு, இடது பக்கத்தில் காணப்பட்டவர்கள் உதவிகள் புரிந்திடவில்லை; இவ்வாறாக இவர்கள் பரலோக இராஜ்யத்திற்குத் தாங்கள் இசைவாய் இல்லை என்று, தங்களை நிரூபித்து காண்பிக்கின்றவர்களாய் இருப்பார்கள்; ஏனெனில், "தீட்டுள்ளது ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை" (வெளிப்படுத்தல் 21:27). இந்த வகுப்பாருக்கான தீர்ப்பு என்பது . . . "சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே (இது அழிவிற்கான அடையாள வார்த்தை) போங்கள்" ஆகும். "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்" என்றும் நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 2:14).

"அந்தப்படி, இவர்கள் (வெள்ளாடுகள்) <u>நித்திய</u> (கிரேக்க வார்த்தை aionios - இதன் அர்த்தம் நித்திய காலமாகும்) <u>ஆக்கினையை</u> அடையவும், நீதிமான்களோ (செம்மறியாடுகள்) நித்திய (கிரேக்க வார்த்தை aionios - இதன் அர்த்தம் நித்திய காலமாகும்) ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்" (வசனம் 46). பலனைப் போன்று, தண்டனையும் நித்தியக் காலத்திற்கு உரியதாகும், அதாவது இரண்டுமே நித்திய காலத்திற்கும் உரியதாகும்.

---

**R3363**

# "கடைசி இராப்போஜனம்"

## மத்தேயு 26:17-30.

பரிசுத்த நகரத்தில் பஸ்கா போஜனத்தை இயேசுவும் மற்றும் அப்போஸ்தலர்களும் <u>புசிக்கத்தக்கதாகவும்</u>, இயேசு தம்முடைய சீஷர்களுக்கு முன்னறிவித்தப் பிரகாரமாய்த் தம்முடைய சத்துருக்களின் கரங்களில் <u>பாடுபடத்தக்கதாகவும்</u>, ஜனங்களுடைய பாவத்திற்கான பாவநிவாரண பலியைத் தாம் <u>நிறைவேற்றத்தக்கதாகவும்</u>, எருசலேமுக்கு அருகாமையிலுள்ள பெத்தானியாவுக்கு இயேசுவும், அப்போஸ்தலர்களும் வந்தார்கள். தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே அவர் பெத்தானியாவிற்கு வந்தார். அடுத்த நாளின் இராப்போஜனத்தின் வேளையில் மரியாள் அவரை (தைலத்தினால்) அபிஷேகித்தாள். இதற்கு அடுத்த நாளில் அவர் எருசலேமுக்குக் கழுதையின் மீது ஏறி வந்தார். அவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர் பட்டணத்திற்காக கண்ணீர்விட்டழுது, "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார். இதற்கு அடுத்த நாளில் அவர் ஆலயத்திற்கு வந்து, கயிற்றினாலான சவுக்கைக்கொண்டு காசுக்காரர்களைத் துரத்தினார். இதற்கு அடுத்த நாளில் அவர் தம்மை உலகத்திற்கான ஒளியென அறிவித்து, தம்முடைய பொதுவிடத்திலான கடைசிப் போதனையை ஆலயத்தில் பண்ணினார். ஒவ்வொருநாள் இரவும் லாசரு, மார்த்தாள் மற்றும் மரியாளின் வீட்டிற்கு அவர் திரும்பினதாகத் தெரிகின்றது. இவ்விடத்திற்கு அருகாமையிலுள்ள இடங்களில் எப்போதெல்லாம் இயேசுவும், அப்போஸ்தலர்களும் காணப்படுகின்றார்களோ, அப்போதெல்லாம் லாசரு மற்றும் மார்த்தாள் மற்றும் மரியாளின் வீடே, அவர்களுக்கான வீடாக இருந்தது. இதற்கு அடுத்த நாளாகிய புதன் கிழமையன்று கர்த்தர் பெத்தானியாவிலேயே ஓய்ந்திருந்தார்; மற்றும் வியாழக்கிழமையன்று, "அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில்" அவரும், அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் புசிக்கத்தக்கதாக, பஸ்காவை ஆயத்தம் பண்ணும்படிக்கு, தம்முடைய சீஷர்களில் இரண்டு பேரை அனுப்பி வைத்தார்.

பஸ்கா பண்டிகையானது ஒரு வாரமளவுக்கு நீடிக்கக்கூடியது; மற்றும் அது யூதர்களுடைய ஒழுங்கின்படி கைக்கொள்ளப்படும் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்றாகும். அந்த வாரத்தில் கர்த்தருடைய ஜனங்களுடைய புளிப்பற்ற தன்மை, பரிசுத்தம்

மற்றும் தூய்மையைக் குறிப்பாய்த் தெரிவிக்கத்தக்கதாக, பாவத்திற்கு நிழலாயிருந்த புளிப்பானது அனைத்து உணவுகளிலும் ஜாக்கிரதையாகத் தவிர்க்கப்பட்டு, ஒவ்வொரு வீடுகளிலும் அழிக்கப்படுகின்றது. மாம்சீக இஸ்ரயேலர்கள் நிழலில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு அடையாளமாக இருக்கின்றனர். முழு வாரமும் சந்தோஷத்தின் பண்டிகையாக இருந்தது. காரணம், தேவன் இஸ்ரயேலை, எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவித்தார். பண்டிகை வாரமானது, யூதர்களுடைய முதலாம் மாதத்தின், 15-ஆம் தேதியன்று ஆரம்பிக்கின்றது. ஆனால், அதற்கு முந்தின நாளாகிய 14-ஆம் தேதி அன்று ஆட்டுக்குட்டிக் கொல்லப்பட்டு, அதன் இரத்தம் வீட்டின் நிலைக்கால்களின் மீது தெளிக்கப்படுகின்றது. இது இரத்தத்தின் கீழ்க்காணப்பட்டு இஸ்ரயேலர்களின் முதற்பேறானவர்களைக் கர்த்தர் தப்புவித்து, எகிப்தியரின் முதற்பேறானவர்களைச் சங்கரித்துப்போட்டு, இவ்விதமாக எகிப்தியர்கள் கர்த்தருடைய ஜனங்களைப் போக சம்மதித்ததாகிய, எகிப்தில் இரவு வேளையில் நடந்திட்ட விஷயங்களை நினைவுகூருவதாகச் செய்யப்பட்டது. பஸ்கா பண்டிகை வாரம் ஆரம்பிப்பதற்குரிய முந்தின நாள் இரவில், இந்த நினைவுகூருதலின் ஆட்டுக்குட்டியைப் புசிப்பதற்கான, ஆயத்தங்களைச் செய்யும்படிக்கு, தம்முடைய சீஷர்களைக் கர்த்தர் அனுப்பி வைத்தார்.

ஆயத்தம் பண்ணும் வேலைக்கெனப் பேதுருவும், யோவானும் அனுப்பி வைக்கப்பட்டார்களென லூக்கா அவர்கள் நமக்குத் தெரிவித்துள்ளார். மேலும், தண்ணீர் குடத்தை யார் கொண்டு செல்கின்றாரோ, அவருடைய வீட்டில்தான் விருந்து ஏற்பாடு பண்ண வேண்டும் என்று அவர்கள் அறிந்துக்கொள்ளலாம் என்று, கர்த்தர் தெரிவித்ததாக மாற்கு அவர்கள் நமக்குத் தெரிவித்துள்ளார். மாற்குவினுடைய தாயாராகிய மரியாளுக்குச் சொந்தமானதுதான் அந்த வீடு என்றும், அப்பொழுது பயன்படுத்தப்பட்ட மேல் வீட்டறைதான் பிற்பாடு அப்போஸ்தலர்கள் ஒன்று கூடின இடம் என்றும், அவர்கள் மீது பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் பொழிந்த இடம் என்றும், சிலரால் அனுமானிக்கப்படுகின்றது. பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்படும்படிக்கு ஜெபம் பண்ணுவதற்கென, அநேகர் ஒன்று கூடியதும் இந்த மரியாளின் வீட்டில்தானா என்பது நமக்குத் தெரியவில்லை. அது பெரிய மேல் வீட்டறையாகும் மற்றும் அது ஏற்கெனவே உணவு உட்கொள்வதற்குரிய மஞ்சத்தினால் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. கர்த்தரைக் கைதுச் செய்யும்படிக்கு நாடுகின்றவர்கள் சார்பில், எவ்விதத்திலும் பஸ்கா அனுசரிப்பும், யோவான் 14:17-ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நமது கர்த்தர் பிற்பாடு கொடுத்ததான சொற்பொழிவும் குறுக்கிடப்படாதப்படிக்கு, இயேசுவும், சீஷர்கள் அனைவரும் ஒன்றுகூடுவது வரையிலும், பஸ்கா அநுசரிக்கப்படுகின்ற இடம் பற்றின தகவல் யூதாசுக்குத் தெரியாத வண்ணம், இயேசு இப்படியாக மறைமுகமாக மேல்வீட்டறையைக் குறித்துக் கூறினார் என்று அனுமானிக்கப்படுகின்றது. ஆட்டுக்குட்டியை ஏற்பாடு பண்ணுதல், புளிப்பில்லா அப்பங்கள், கசப்பான கீரைகள், திராட்சரசம் ஆகியவற்றிற்கு ஏற்பாடு பண்ணுதல் எனும், விதத்தில்தான் பேதுருவும், யேவானும் பஸ்காவிற்காக ஆயத்தம் பண்ணினார்கள். சாயங்காலத்தில், ஏற்றவேளையில் அநுசரிப்பிற்காக அனைவரும் ஒன்று கூடினார்கள்.

## "தாழ்மைக்கான ஒரு பாடம்"

இவ்வேளையில் அப்போஸ்தலர்கள் மத்தியில் வாக்குவாதம் எழும்பினதாக லூக்காவும், யோவானும் பதிவு செய்துள்ளனர் (லூக்கா 22:24-30; யோவான் 13). அப்போஸ்தலர்கள் முற்றும் முழுமையாகச் சுயநலத்தினாலும், பேராசையினாலும் தூண்டப்பட்டிருந்தார்கள் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. கர்த்தராகிய ஆண்டவர் மீதான அவர்களுடைய அன்பினிமித்தமே, அவருக்கு அருகாமையில் இருக்கும் ஸ்தானத்தையடைய வேண்டும் என்று, அவர்களுக்குள் வாக்குவாதம் காணப்பட்டது என்று, நாம் எடுத்துக்கொள்ளலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களுடைய ஜீவியம் முழுவதுமாக, நினைவில் காணப்படக்கூடிய மிகுந்த அருமையான செய்தியைக்கொடுக்க கர்த்தர் முற்பட்டார். அவர்கள் புழுதி நிறைந்த சாலையில் பிரயாணம் பண்ணி நண்பகல் வேளையில் வந்தடைந்தார்கள்; மற்றும் அவர்கள் செல்வந்தர்களாய் இராதபடியினால், அவர்களை வரவேற்பதற்கும், அவர்களது பாதங்களைக் கழுவுவதற்கும் வேலைக்காரர்கள் அவர்களுக்கு இல்லை. மேலும் அவர்களுடைய பரஸ்பரமான சௌகரியத்திற்கென, ஒருவருக்கொருவர் இதைச் (பாதங்கழுவுதலை) செய்வதை விட்டுவிட்டு, பந்தியில் சிறப்பிற்குரிய ஸ்தானம் அடைவதற்கென ஒருவரோடொருவர் போராடிக்கொண்டிருந்தனர். யோவான் ஆண்டவருக்கு அருகாமையில் உட்காரும் மிகவும் விரும்பப்படும் ஸ்தானத்தை

அடைந்திருந்தார் . . . இதற்குக் காரணம் யோவான் அவருக்கு உறவினனாகவும், இயேசு விசேஷித்த விதத்தில் அன்புகூர்ந்தவர்களில் ஒருவராகவும் இருந்ததினால் மாத்திரமல்லாமல், அப்போஸ்தலர்கள் மத்தியில் இவர் வயதில் சிறியவராகவும் இருந்ததினாலாகும்.

முற்காலங்களின் பழக்கவழக்கமானது, அநேக விதங்களில் இன்றைய பழக்கவழக்கத்திலிருந்து வித்தியாசப்படுகின்றது. அவர்கள் உணவு உண்கையில் பந்தியைச் சுற்றி வளைந்துள்ள மஞ்சத்தில், ஒரு பக்கமாய்ச் சாய்ந்து கிடப்பது வழக்கமாகும். அவர்கள் தங்களது இடது முழங்கையில் (elbow) சாய்ந்து காணப்பட்டு, வலது கையைக்கொண்டு உணவை வாய்க்கு எடுத்துச் செல்வர். ஆகவே, அவர்களது தலைகள் ஒருவரோடொருவர் நெருங்கிக் காணப்படுகின்றது. ஆனால், அவர்களுடைய பாதங்களோ பின்னால் வெளியே நீட்டப்பட்ட நிலையில் காணப்படும். வாக்குவாதமானது அதன் போக்கிலேயே தொடரும்படி விடப்பட்டது. இராப்போஜனம் ஆரம்பித்தது. இயேசு எழுந்து நின்று அவர்கள் ஒவ்வொருவரின் பாதங்களை, ஒன்றன்பின் ஒன்றாகக் கழுவ ஆரம்பித்தார். அவருடைய பாதங்களைக் கழுவ வேண்டுமென்றும் ஒவ்வொருவருடைய பாதங்களைக் கழுவ வேண்டுமென்றும், தங்களுக்குள் அவர்கள் எண்ணி, கழுவியிருக்க வேண்டும். ஆனால் அதற்குப்பதிலாக ஒவ்வொருவரும், தான் மற்றவரைக்காட்டிலும் தாழ்ந்தவனல்ல எனும் கருத்தை ஏற்படுத்துவதற்குரிய நோக்கத்தைக்கொண்டிருந்தனர். இப்படியாக, ஆண்டவரால் அவர்களுக்குச் செய்யப்பட்ட ஊழியமானது, கடுமையான கடிந்துக்கொள்ளுதலாய் இருந்தது. கொஞ்சம் முன்பு கொடுக்கப்பட்டதான பாடத்தை அதாவது, "அவர்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்ற பாடத்தை அவர்கள் அவ்வளவு சீக்கிரமாய் மறந்துவிட்டனர். இக்காரியத்தை விவரிப்பதற்குரிய வாய்ப்பு இங்கு நமது கர்த்தருக்குக் கிடைத்தது. அவர்களனைவருக்கும் அவர் ஊழியம் புரிந்திட விரும்பினார்; மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் அனைத்திலும் அவர் அவர்களுக்கு ஊழியம் தொடர்ந்து புரிந்துக்கொண்டிருக்கின்றார். ஆகவேதான் அவரை அவர்கள் தங்களுடைய ஆண்டவரென உண்மையில் கருதினார்கள். இப்பொழுதோ மிகவும் மதிப்புக் குறைந்த ஊழியமும் அவர்களுக்குப் புரிந்திட, தாம் விரும்புமளவுக்குத் தம்முடைய தாழ்மையை அவர்களுக்குக் காட்டினார். எத்துணை விலைமதிப்புள்ள பாடம்! இதன் முக்கியத்துவம் கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள் மத்தியில் இழந்துப்போகாமல் இருப்பதாக! ஆனால், இதுவும் கர்த்தருடைய இராப்போஜனம் மற்றும் ஞானஸ்நானம் போன்று, செய்யத்தக்க முறைமையென (அ) கட்டளையென இருக்கின்றது எனச் சிலர் அனுமானிப்பதின் மூலமாக, தவறிழைத்துள்ளனர். நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின்படி இந்த அடையாளத்தின் மூலமான பாடமும், அப்பாடமானது எந்த நேரத்திலும், எவ்விடத்திலும் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும் என்ற காரியமும் தெரிவிப்பது என்னவெனில்... எவ்வளவுதான் மதிப்புக் குறைவான ஊழியமாக இருப்பினும், அதைப் பொருட்படுத்தாமல், அந்தப் பயனுள்ள ஊழியத்தைச் சகோதரர்களுக்குச் செய்ய நாம் நாடுகின்றவர்களாய் இருக்க வேண்டும்; மற்றும் இப்படியாகச் செய்யப்படும்போது, அதைக் கர்த்தர் தமக்கே செய்ததாகக் கருதுகின்றார் என்பதுமாகும்.

## "அந்த மனுஷன் பிறவாதிருப்பானானால் அவனுக்கு நலமாயிருக்கும்"

அவர்கள் இராப்போஜனத்தின்போது காணப்படுகையில், மிகவும் துக்கங்கொண்டவராக இயேசு, தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட 12-பேரில் ஒருவன்தான் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்றும், இப்படியாக தம்முடைய மரணத்திற்குத் துணை கருவியாக ஆகப்போகிறான் என்றும் விவரித்தார். அதாவது இதே இராப்போஜனத்தில், இதே அப்பத்தில், இதே சுடப்பட்ட ஆட்டுக்குட்டியின் மாம்சத்தில் தம்முடன் கூடப் புசிக்கிறவனும், தம்முடன் கூடத் தாலத்தில் கையிடுகிறவனே தம்மைக்காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகப் போகிறான் என்று விவரித்தார். இவைகள் அனைத்தும் எழுதப்பட்டிருந்தாலும், தெய்வீகத் திட்டம் தொடர்பான எந்தக் காரியங்களிலும், எவ்விதமான மாற்றமில்லாமல் இருந்தாலும், இப்படியாகத் தம்மைக் காட்டிக்கொடுத்து, தம்முடைய மரணத்திற்குத் துணையாகிறது என்பது, தோழமையில் மிகவும் பயங்கரமான பிளவை ஏற்படுத்துகின்றதாய் இருக்கும், அதாவது எண்ணுவதற்கே வேதனையானதாக இருக்கும் என்று சுட்டிக்காட்டினார். காட்டிக்கொடுக்கப்படாமலேயே அவர் அதிகாரிகளால் கைதுச்

செய்யப்படுவதாய் இருந்தாலும் அல்லது முன் பின் தெரியாத நபர் மூலமாகவோ அல்லது ஒரு சீஷன் வாயிலாகவோ அவர் காட்டிக்கொடுக்கப்பட்டு அதிகாரிகளால் கைதுச் செய்யப்படுவதாய் இருந்தாலும், இது கர்த்தருடைய நோக்கம் மற்றும் அர்ப்பணிப்பைப் பொறுத்தமட்டில் அவருக்கு ஒன்றும் வித்தியாசமாகக் காணப்படப்போவதில்லை; அதாவது இது தெய்வீக ஏற்பாட்டில் எவ்விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. எனினும் அவரைக் காட்டிக்கொடுப்பவர் அவருடைய உயிர் நண்பனாகவும், சீஷனாகவும் இருப்பதுதான் மிகுந்த துக்கத்திற்கான காரணமாகும்.

"அம்மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்ற வார்த்தைகள் நமக்குத் தெரிவிப்பது என்னவெனில், கர்த்தருடைய கண்ணோட்டத்தின்படி, யூதாஸ் அதிகளவிலான அறிவையும், மேலான காரியங்களுக்கான வாய்ப்புகளையும் ஏற்கெனவே அனுபவித்துள்ள காரணத்தினால், அவருடைய கிரியைக்கு அவரே பொறுப்பு வகிக்கின்றார், மற்றும் அவருக்கு எதிர்க்காலத்தில் எந்தவொரு நம்பிக்கையும் இல்லை என்பதாகும். ஒருவேளை யூதாஸ் அவருடைய குணலட்சணத்தைச் சரி செய்வதற்கென, இன்னும் ஒரு வாய்ப்பை அருளுவதற்குரிய ஏதேனும் காரணத்தைக் கர்த்தர் காண்பாரானால், அதற்கு நாம் நிச்சயமாய் மறுப்புத் தெரிவிப்பதில்லை. ஆனால், அப்படியாக இன்னுமொரு வாய்ப்பு யூதாசுக்கு அருளப்படும் என்று எண்ணுவதற்கு, நம்மால் எந்த வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணத்தையும் பார்க்க முடியவில்லை. நம்முடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், கர்த்தருடன் தொடர்பு வைத்தவரும், பரிசுத்த ஆவியினுடைய வல்லமையின் கீழ்க்காணப்பட்டவரும், கர்த்தருடைய நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவதற்கும் மற்றும் வியாதிகளைச் சொஸ்தப்படுத்துவதற்கும் அனுப்பப்பட்டவர்களில் ஒருவராகவும், அவருடைய பிரதிநிதியாகவும், அவருடைய வல்லமையைப் பயன்படுத்துபவராகவும் இருந்த யூதாஸ் மாபெரும் வெளிச்சத்திற்கும், அனுபவத்திற்கும் மற்றும் அறிவிற்கும் எதிராகப் பாவம் செய்தவராகக் காணப்படுகின்றார். யூதாசினுடைய முடிவு சோகமானதே. தற்கொலை பண்ணுகின்ற ஒவ்வொருவனும், தான் பிறவாமல் இருந்தால் நலமாயிருக்கும் என்பதை, தற்கொலை பண்ணுவதன் மூலம் ஒப்புக்கொள்பவனாக இருக்கின்றான்.

## "கர்த்தாவே, நானோ?"

மற்றொரு பதிவானது, சீஷர்கள் ஒவ்வொருவரும் கர்த்தரை நோக்கி நானோ? என்று கேட்டதாகவும், இறுதியில் யூதாசும் கேட்டார் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றது. சீஷர்கள் தங்களுக்கு இதில் எந்தச் சம்மந்தமும் இல்லை என்பதில் நிச்சயமாய் இருந்தார்கள்; மற்றும் தங்களுடைய குற்றமில்லா நிலைமையைக் கர்த்தர் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். பதினொரு பேரும் இப்படியாகக் கர்த்தரிடத்தில் கேட்க, அவர்களுடைய குற்றத்தைச் சுட்டிக்காட்டும் விதத்தில் கர்த்தர், விடை எதுவும் கொடுக்காமல் இருந்தது, யூதாஸ்தான் அந்நபர் என்பதைத் தெரிவிப்பதாக இருந்தது. ஆண்டவரே நானோ? என்று யூதாசும் கேட்டதில், அவருடைய தைரியம் தெரிகின்றது. இதற்கு, "நீ சொன்னபடிதான்" அல்லது "நீ தான்" என்று இயேசு யூதாசுக்கு விடையளித்தார். கர்த்தருடைய குற்றம் சாட்டுதல்/கடிந்துரை/கண்டனம் எத்துணைப் பெருந்தன்மையுடன் காணப்படுகின்றது. கர்த்தருடைய வார்த்தைகள் பயமுறுத்துகின்றதாகவும், பழித்துரைப்பதாகவும், கசப்பின் வெளிப்படுத்தலாகவும் இராமல், மாறாக கவலை மற்றும் அனுதாபத்தின் வெளிப்படுத்தலாக மாத்திரமே இருந்தது என்பது எத்துணைப் பாடமாய் நமக்கு உள்ளது! நம்முடைய சத்துருக்கள் மீது நாம் அனுதாபம் கொள்ள வேண்டுமே ஒழிய பகைக்கக்கூடாது. சபிக்காமல் நம்மால் முடிந்தமட்டும், நம்முடைய சத்துருக்களை ஆசீர்வதிக்க வேண்டும். பணத்திற்காகவோ அல்லது வேறு சுயநலமான காரியங்களுக்கெனக் கர்த்தரையோ (அ) அவரது சத்தியத்தையோ (அ) அவரது சகோதரர்களை விற்றுப்போடும் யூதாசுக்கு ஒத்த மனப்பான்மைக்கு எதிராக, இயேசுவினுடைய சீஷர்கள் அனைவரும் விழித்திருந்து, ஜெபம் பண்ணுவது நல்லது. யூதாஸ் வகுப்பார் உண்டு என்பதை நாம் அறிந்து வைத்தவர்களாக, நமது இருதயங்களை நாம் காத்து, "ஆண்டவரே நானோ?" என்று கேட்போமாக.

யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தின்படியாக பஸ்கா இராப்போஜனத்தை அவர்கள் புசித்துக்கொண்டிருக்கையில் அல்லது இராப்போஜனம் புசித்து முடித்து அவர்கள் பந்தியில் இன்னமும் காணப்படுகையில், மீதமிருந்த அப்பத்தில் சிலவற்றை இயேசு எடுத்து, அதை ஆசீர்வதித்து, அதைப்பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து,"நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது" என்று கூறினார். "உங்களுக்காகப்

பிட்கப்படுகிற” எனும் வார்த்தைகளை வேறொரு சுவிசேஷகர் பதிவு செய்துள்ளார். “என்னுடைய சரீரமாயிருக்கின்றது” மற்றும் “என்னுடைய இரத்தமாயிருக்கின்றது” என்ற வார்த்தைகளின் காரணமாக, எப்போதெல்லாம் நினைவுகூருதலின் அப்பமும், ரசமும் படைக்கப்படுகின்றதோ, அப்போதெல்லாம் அப்பமும், ரசமும், கிறிஸ்துவின் நிஜமான சரீரமாகவும், அவருடைய நிஜமான இரத்தமாகவும் மாறும் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் எனக் கத்தோலிக்கர்களும், சில புரொட்டஸ்டண்டினரும் கூறுகின்றனர். இது காரணகாரியத்திற்கு உட்பட்டதல்ல என்றும், மிகவும் உண்மையற்றது என்றும் நாம் கருத்துத் தெரிவிக்கின்றோம். அப்பமும், ரசமும், நமது கர்த்தருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமாக மாத்திரமே இருக்கின்றது. இது அடையாள வார்த்தைகள் என்பதற்கான நிரூபணமானது, இவ்வார்த்தைகளை நமது கர்த்தர் பேசின/பயன்படுத்தினபோது, அவருடைய சரீரம் இன்னமும் பிட்கப்படவும் இல்லை, அவருடைய இரத்தம் இன்னமும் சிந்தப்படவும் இல்லை என்பதேயாகும். ஆகவே அப்பமும், ரசமும், அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துவதற்கெனப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் என்ற அர்த்தத்தில் அல்லாமல், வேறு ஏதாகிலும் விதத்தில் எடுத்துக் கொள்ளப்படுமாயின், அப்பொழுது உண்மை திரித்துக் கூறப்பட்டதாக, பொய்யுரைத்ததாக ஆகிவிடும். மேலும், கர்த்தராலோ, அவருடைய பின்னடியார்களாலோ பொய்யுரைக்கப்பட்டதாக நம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

நமது கர்த்தரினால் விவரிக்கப்பட்டுள்ள அப்பமானது, வானத்திலிருந்து வந்த அப்பத்தை அதாவது, உலகத்தின் பாவத்திற்காக அவரால் பலிச் செலுத்தப்பட்ட அவருடைய மாம்சத்தை அடையாளப்படுத்துகின்றது. இதைப் புசிக்கும்படிக்குத் தம்முடைய பின்னடியார்கள் அனைவரையும் அழைக்கின்றார். மேலும் அவருடைய சரீரம் பிட்கப்படுவதன் மூலமாக, கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களையும், இரக்கத்தையும், கிருபையையும் நாம் நமக்கெனச் சொந்தமாக்கிக்கொள்ளும்போது, அவருடைய மாம்சத்தைப் புசிக்கின்றவர்களாய் இருப்போம். இப்படியாகப் பாவங்களுக்கான மன்னிப்பையும், பிதாவுடன் ஒப்புரவாகுதலையும் பெற்றுத் தந்த பலியினுடைய நன்மைகளை நாம் நமக்கெனச் சொந்தமாக்கிக்கொள்கின்றோம்.

## “புது உடன்படிக்கையின் இரத்தம்”

“இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது” (மத்தேயு 26:28). “இது (பாத்திரம்) என்னுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றது. இது எப்பொழுதும் உங்களுக்கும், என்னுடைய அன்பார்ந்த பின்னடியார்கள் அனைவருக்கும் என்னுடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும். மேலும், இது இப்படியான தருணங்களிலெல்லாம் என்னுடைய <u>மரணத்தையும்</u>, தேவனுக்கும் மற்றும் மனுஷனுக்கும் இடையிலான மாபெரும் மத்தியஸ்தராகிய என்னாலேயே தேவனுக்கும், பாவிகளுக்கும் இடையிலே முத்திரிக்கப்பட்ட <u>உடன்படிக்கையையும்</u> உங்களுக்கு நினைப்பூட்டுவதாக இருக்கும்” என்ற விதத்தில் இயேசு கூறினார்.

கிறிஸ்துவின் இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டுள்ள புது உடன்படிக்கையானது, பழைய ஏற்பாட்டில் எங்கும் மற்றும் எபிரெயர்களுக்கு அப்போஸ்தலர் எழுதியுள்ள நிரூபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது (எபிரெயர் 8:6-13; 10:29; 12:20). இந்தப் புது உடன்படிக்கையானது, நியாயப்பிரமாண உடன்படிக்கையைத் தள்ளிவைத்துவிட்டது. மோசேயை மத்தியஸ்தராகக் கொண்டிருந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, யாரெல்லாம் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளையெல்லாம் கைக்கொள்வார்களோ, அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்களெனத் தெரிவித்தது. ஆனால், புது உடன்படிக்கையானது, இரக்கத்தைக் காட்டுகின்றது; மற்றும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர், ஜனங்களின் சார்பிலான தம்முடைய மரணத்தின் மூலமாக, மனுக்குலத்தையும் படிப்படியாகச் சீரழிந்த நிலையிலருந்து, உண்மையான மற்றும் நேர்மையான இருதயத்தின் நல்ல வாஞ்சைகள் அனைத்தையும், அவர்கள் பூரணமாய்ச் செய்யத்தக்கதான நிலைக்கு உயர்த்திவிடுவார்.

இந்த அப்பம் மற்றும் பாத்திரத்திற்கு இன்னும் ஆழமான அர்த்தம் இருப்பதை அப்போஸ்தலர் பவுல் நமக்குக் காட்டுகின்றார். “கிறிஸ்துவானவர் மகிமையின்

நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" என்பதைப் பற்றின தெளிவான புரிந்துக்கொள்ளுதலைப் பெற்றிருந்தவர் அப்போஸ்தலர் பவுலேயாவார். அதாவது நாம் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கமாய் இருக்கின்றோம் என்றும், இப்பொழுது அவருடைய பாடுகளில் பங்காளிகளாக இருக்கின்றோம் என்றும், ஒருவேளை உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், அவருடைய மகிமையின் சரீரத்தினுடைய அங்கங்களாகவும், அவருடைய மகிமையில் பங்கடைகின்றவர்களாகவும் இருப்போம் என்றுமுள்ள இரகசியத்தைக் குறித்த தெளிவான புரிந்துக்கொள்ளுதலை அப்போஸ்தலர் பவுலே பெற்றிருந்தார். இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், அப்போஸ்தலர் விவரித்துள்ள பிரகாரமாக, பிட்கப்பட்ட அப்பம் என்பது கர்த்தர் இயேசு தனிப்பட்ட விதத்தில் பிட்கப்படுவதை மாத்திரம் குறிக்காமல், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதுமுள்ள அவருடைய மறைப்பொருளாயிருக்கும் அங்கங்கள் பிட்கப்படுவதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது; மற்றும் பாத்திரத்தில் பானம் பண்ணுவது என்பது, அவர் மனுக்குலத்தின் சார்பாக புது உடன்படிக்கையை முத்திரைப்பண்ணத்தக்கதாக, அவர் மரணத்தில் பங்கடைவதை மாத்திரம் உள்ளடக்கவில்லை, இன்னுமாக பாத்திரத்தில் அவரோடு கூட நாம் பங்கடையத்தக்கதாக, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்ற அவரது அழைப்பானது, தற்காலத்தில் அவரோடு கூட உபத்திரவப்படுவதிலும், மரிப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும், ஆயிரவருட யுகத்தின்போது, புது உடன்படிக்கைக்கான சூழ்நிலைகளை ஆரம்பித்து வைப்பதிலும் நாம் பங்கடையலாம் என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இக்கருத்து எத்துணைப் பிரம்மாண்டமாகவும், எத்துணை ஆழமாகவும், எத்துணைப் பரந்தமனப்பான்மையுடனும் காணப்படுகின்றது! கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிறைவேற்றுவதற்கு நாம் அனுமதிக்கப்படுவதும், எதிர்க்காலத்தில் அவருடைய மகிமையில் பங்கடைவதற்கு எதிர்நோக்குவதும், எத்துணை அருமையான சிலாக்கியமாகும். இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? "என்ற சீஷர்களுக்கான அவருடைய வார்த்தையிலுள்ள முக்கியத்துவத்தை நம்மால் காண முடிகின்றது (மத்தேயு 20:22). இப்படிப் பங்குக்கொள்வதற்கென அழைக்கப்படுவதற்கு அனைவரும் பாத்திரமாய் இராததுபோல, அழைக்கப்பட்டவர்களில் அனைவரும் கூட இப்படிப் பங்குக்கொள்வதற்குரிய சிலாக்கியத்தை மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும் உணர்ந்துக்கொள்ள மாட்டார்கள். நம்மில் ஒவ்வொருவரும் உறுதியுடன் யாக்கோபையும், யோவானையும் போன்று, கர்த்தரிடம், "கர்த்தாவே கூடும்," நாங்கள் விருப்பத்துடன் இருக்கின்றோம் என்றும், உம்முடைய உதவியினால் நாங்கள் ஜெயங்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் வருவோம் என்றும், சொல்வோமாக.

## "புதிய திராட்சரசம் - இராஜ்யத்தின் சந்தோஷங்கள்"

நமது கர்த்தர் இராஜ்யத்தில் நவமானதாய்ப் பானம் பண்ணுவதுவரையிலும், தாம் திராட்சரசம் பருகுவதில்லை என்று கூறினார். இதன் அர்த்தம் கர்த்தர் அவர்களுடன் இராஜ்யத்தில் புதிய அல்லது புளிக்காத ரசத்தைப் பானம் பண்ணுவார் என்பதாக இராமல், மாறாக இராஜ்யம் வருவது வரையிலும் திராட்சரசம் அடையாளப்படுத்தும் நவமான (அ) நிஜமான காரியங்கள் நிறைவடைவதில்லை என்பதேயாகும். இராஜ்யம் வரும்போது, தற்காலத்தின் அனைத்து உபத்திரவங்களும், சோதனைகளும் கடந்துப்போய்விடும்; மற்றும் திராட்ச ஆலையின் மிதிக்கப்படுதலும், ரசம் உருவாக்குதலும் அனைத்தும் முடிந்துவிடும்; மற்றும் திராட்சரசம் சந்தோஷத்திற்குரியதாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் காணப்பட்டு, கற்பனைசெய்து பார்ப்பதற்கு அப்பாற்பட்ட சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும்; மற்றும் இச்சந்தோஷமானது, தற்காலத்தில் நம்முடைய மீட்பருடன் அவருடைய பாடுகளிலும், பின்வரும் மகிமைகளிலும் உண்மையாய் ஐக்கியம் கொண்டிருந்தவர்கள் அனைவரின் பங்காக இருக்கும். இராஜ்யத்தின் காலம் இப்பொழுது சமீபித்துள்ளது. அதாவது, கர்த்தர் இவ்வார்தைகளைப் பேசின காலங்களைக்காட்டிலும், 1800 வருடங்கள் கடந்துள்ள இப்பொழுது, மிகவும் சமீபித்துள்ளது; மற்றும் இதன் ஆரம்பத்திற்கான ஆதாரங்கள் அனைத்துத் திசைகளிலும் பெருகிக்கொண்டு வருகின்றது. அதை எதிர்ப்பார்த்த வண்ணமாக நம்முடைய இருதயங்கள் களிகூர்ந்திருக்க வேண்டும்; மற்றும் தற்காலத்தில் துக்கத்தின், அவமானத்தின், பாடுகளின், பாத்திரத்தில் பானம் பண்ணுவதில் நாம் உண்மையாயிருந்து, இவ்விதமாக நம்முடைய அன்பையும், நம்முடைய நேர்மையையும் வெளிப்படுத்துவோமாக.

இதற்குப் பின்வரும் சம்பாஷணையாக, யோவானால் (15, 16, 17-ஆம் அதிகாரங்களில்) பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்கள், கர்த்தருடைய ஜனங்கள் அநேகருக்கு பல நூற்றாண்டுகளாக ஆசீர்வாதமாய் இருந்துவருகின்றது. பின்னர், அவர்கள் ஸ்தோத்திர பாட்டைப்பாடி, ஒலிவ மலைக்கு, கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். சீஷர்கள் அனைவரின் மீதும் சோதனைகள் கடந்துவந்தது. ஒவ்வொரு நினைவுகூருதலின் காலங்களிலும், கர்த்தருக்கான நம்முடைய வாக்குறுதியை அடையாளமாய்த் தெரிவிக்கும் ஒவ்வொரு முறையும், கர்த்தருடைய ஜனங்களுக்குப் புதிய சோதனைகள், புதிய பரீட்சைகள், புதிய சலித்தெடுத்தல்கள் வருகின்றது. யாரால் நிலைநிற்க முடியும்? நம்முடைய இரட்சகராகிய நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றிக்கொண்டிருப்போமாக! மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டிருப்போமாக! உண்மையுள்ள வார்த்தைகளைப் பற்றிக்கொண்டிருப்போமாக! நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப்பற்றிக்கொண்டிருப்போமாக!

---

**R4711**

# "சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும்"

## மத்தேயு 26:31-35, 69-75.

"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்"—1 கொரிந்தியர் 10:12.

கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களிலேயே மிகவும் உதவியானவர்களில், ஒருவராக பரிசுத்தவானாகிய பேதுரு காணப்படுகின்றார். அவருடைய மனித சுபாவம், அதன் பலம் மற்றும் பெலவீனங்கள் குறித்ததான வேதவாக்கியங்களின் வெளிப்படுத்தல்களே, நமக்கான அவருடைய உதவியின் இரகசியமாகக் காணப்படுகின்றது. பன்னிரண்டு அப்போஸ்தலர்களிலேயே போதகரை, தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்று முதலாவதாக அறிவித்தவர் இவரே ஆவார். பன்னிருவரில் இவர்தான் முதலாவதாக அவரை மறுதலிக்கவும் செய்தார். பன்னிருவரில் இவர் மாத்திரமே போதகரைக் காப்பாற்றுவதற்காக, தனது பட்டயத்தை உருவினவரும் ஆவார். மேலும், இவர் மாத்திரமே பின்னர் போதகரை அறியேன் என்று சூழுரைக்கவும் செய்தார். தெய்வீக ஏற்பாட்டின்படி, இராஜ்யத்திற்கான பரம அழைப்பின் கதவுகளைத் திறக்கும்படி, இவரிடமே திறவுகோல்கள் கொடுக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளின்போது, இவர் வல்லமையின் திறவுகோல்களில் ஒன்றைப் பயன்படுத்தி, மகிமை, கனம் மற்றும் அழியாமைக்குள் பிரவேசிப்பதற்கான வழி திறக்கப்பட்டுள்ளதைக் குறித்து, தைரியத்துடன் யூதர்களுக்கு அறிவித்தார். கொஞ்சம் காலத்திற்குப் பிற்பாடு, நியமிக்கப்பட்ட காலத்தில், அதே பரம அழைப்பிற்கான கதவை, இவர் புறஜாதிகளுக்குத் திறந்து வைத்தார்; மேலும் இது இவர் கொர்நேலியுவுக்குப் பிரசங்கம் பண்ணி, அவர் முதல் புறஜாதியாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபோது சம்பவித்தது. இச்சம்பவமானது, முற்காலங்களில் யூதர்களையும், புறஜாதிகளையும் பரித்துவைத்திருந்த தடுப்புச் சுவரானது தகர்க்கப்பட்டதற்கான நிரூபணமாகவும் அமைகின்றது. இத்தகைய சகல அறிவையும், விசேஷமான வாய்ப்புகளையும் பெற்றுக்கொண்டிருந்தாலும், இந்த மாபெரும் மனுஷன் புறஜாதிகளுக்குப் போதுமான அளவு தேவனுடைய கிருபை கொடுக்கப்பட்டுள்ளது எனும் காரியத்தைப் பொருட்படுத்தாததுபோல, பாசாங்குச் செய்யும் அளவுக்கும் நடந்தும் கொண்டார். மேலுமாக, யூதர்கள் மற்றும் புறஜாதிகளுக்கு இடையில் வேற்றுமை கண்டு, கர்த்தருக்கு முன்பு அவர்கள் இருவரும் சரிசமமாகக் கருதப்படுவதைப் பொருட்படுத்தாதது போல பாசாங்குச் செய்யும் அளவுக்கும் போய்விட்டார்.

அனைத்து அனுபவங்களிலும் பரிசுத்தவானாகிய பேதுரு அவருடைய இருதயத்தின் ஆழத்தில் தேவனுக்கும், சத்தியத்திற்கும், நீதிக்கும் உண்மையாய் இருக்கின்றார்; ஆனால் அவருடைய குணலட்சணங்களிலுள்ள களங்கம், தவறுகள், பெலவீனங்கள் ஆகியவை அவருடைய மாம்சத்தினுடையவைகளே தவிர, அவருடைய உண்மையான இருதயத்தின் நோக்கமாக இருந்ததில்லை என்பது வெளிப்படுகின்றது. போதகரை மறுதலித்ததின் காரணமாக அவர் மிகவும் மனங்கசந்து அழுதார். மேலும், புறஜாதிகளை ஏற்றுக்கொள்வதில்

அவர் தவறினதால், மிகுந்த தாழ்மையுடன் தன்னை முழுமையாகத் திருத்திக்கொண்டார். பரிசுத்தவானாகிய பேதுருவின் மனித சுபாவத்தின் வெளிப்படுத்தல்கள், நம்மை அவர்பால் கவரச் செய்தது போன்றே, இஸ்ரயேலின் இராஜாவும், தீர்க்கத்தரிசியுமான தாவீதினிடத்திலும் நாம் கவரப்படுகின்றோம். தவறு செய்யாமல் இருக்க அவர் (தாவீது) ஒன்றும் பரிசுத்தவான் அல்ல. அவரை ஒரு சக மனிதனாகக் காண முடியாத அளவிற்கு, அவர் (தாவீது) மீதியான மனுக்குலத்திற்கு அப்பாற்பட்ட ஜீவியும் அல்ல. எனினும், அவரை வெறுக்கத்தக்க அளவுக்கு, அவர் மதிப்புக் குறைந்தவரும் அல்ல. தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் இருதயத்தில் அவர் (தாவீது) கொண்டிருந்த உண்மை குறித்த திரளான ஆதாரங்களானது, அவருடைய பெலவீனங்களை முழுமையாக ஈடு செய்கின்றதாக அமைகின்றது. இடறி விழுதல் மற்றும் சீர்ப் பொருந்துதல் குறித்ததான அவருடைய (தாவீது) அனுபவங்களினால், சங்கீதங்கள் மிகவும் நிரப்பப்பட்டிருப்பதினால், அவைகள் தேவனிடத்தில் உண்மை கொண்டிருக்கும் ஒவ்வொரு இருதயத்திலும், அதேசமயம் பாவம் மற்றும் பெலவீனத்தின் அனுபவங்களை வெவ்வேறு அளவுகளில் கொண்டிருக்கும் ஒவ்வொரு இருதயத்திலுமுள்ள, உள் உணர்ச்சியின் நரம்பைத் தொடக்கூடியதாக இருக்கின்றது.

## ''பரிசுத்தவானாகிய பேதுருவை மற்றவர்கள் பார்த்த விதம்''

நமது கர்த்தரின் ஆரம்ப பிரயாண நாட்களில், அவரோடு கூடக் காணப்பட்ட மனிதர்கள் மத்தியில் பேதுரு இன்றளவும் மிகவும் வசீகரிப்பவராகக் கருதப்படுகின்றார். பேதுருவைக் குறித்து, **ஜி.சி. மோர்கன் (G. C Morgan)** அவர்கள் இப்படியாகக் கூறுகின்றார்: "பேதுருவுக்குள்ளாக, நமக்கொரு மாபெரும் மனிதன் புதிய ஏற்பாட்டில், வெளிப்படுத்தப்பட்டுள்ளான் என்று என்னால் இப்பொழுது நம்ப முடிகின்றது. ஒருவனை மாபெரும் மனுஷன் என்று கணிப்பது அவனுடைய சாதனைகளின் அடிப்படையிலோ அல்லது அவனுடைய தனித்துவமான ஒரு திறமையின்/பண்பின் அடிப்படையிலோ அல்லாமல், அவனுடைய மனித சுபாவத்தின் மிக ஆச்சரியமான வெளிப்படுத்தலின் அடிப்படையிலே என்று நான் கூறுகின்றேன். அறிவுடைய இந்த மனுஷன் தொடர்ந்து கண்மூடித்தனமாக/மடத்தனமாக தவறு செய்து கொண்டிருந்தார். உணர்ச்சிவசப்படும் இந்த மனுஷன், தான் உதவ வேண்டும் என்று விரும்பின, அதே காரணத்திற்கு எதிராக அவர் செயல்பட்டதினால் மிகுந்த குற்ற உணர்வுக்குள்ளாகவும் ஆனார்."

பரிசுத்தவானாகிய பேதுருவைக் குறித்து, **சவுதோஸ் (Southouse)** என்பவர் இப்படியாகக் கூறுகின்றார்: "பேதுரு ஒரு சராசரியான மனுஷன் ஆவார். இக்காரணத்தினால் அவர் நமக்கும், அவரோடு கூட இருந்தவர்களுக்கும் (மற்ற அப்போஸ்தலர்களுக்கும்) கூடச் சரிசமமாவார். ஆனால், சராசரியான மனிதர்களுக்கும் கூட, அவர்களுடைய வாழ்க்கையில் சிறப்பான தருணங்கள் உண்டு. அதாவது பரிசுத்தவானாகிய பேதுருவின் விஷயத்தில், அவர் தண்ணீரின் மீது நடக்க முயன்றார். இவ்விடத்தில் தன்னால் முடியாத ஒரு காரியத்தைச் செய்ய முயன்றார். தனக்கு எவ்வித அனுபவமும் இல்லாத ஒன்றைச் செய்யும்படிக்குப் பேதுரு கடந்துப்போனார். நாம் அறிந்திருக்கும் ஆண்கள் மற்றும் ஸ்திரீகள் மீது நாம் கணநேரம் கண்ணோட்டம் இடுகையில், அவர்களின் திறமையின் அடிப்படையில் அவர்கள் இன்னென்ன காரியங்களைச் செய்துவிடுவார்கள் என்று தீர்க்கத்தரிசனம் கூறுவதுபோன்று கூறுவது, எப்போதும் (சாதகமாக) அப்படியே நடந்துவிடும் என்பது இல்லை என நாம் அறிந்திருக்கின்றோம். ஏனெனில் உலகத்திலேயே (திறமைகளில்) மிகக் குறைவான மனிதனால், அசாதாரணமான காரியங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளது."

பரிசுத்தவானாகிய பேதுருவைக் குறித்து, **டாக்டர் டேவிஸ் (Dr. Davis)** அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்: "பேதுரு புத்திக்கூர்மை உடையவர். மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் இவரே இயேசுவிடம் அநேக கேள்விகளைக் கேட்டுள்ளார். கேள்விகள் கேட்கும் தன்மையானது, புத்திக்கூர்மையின் வெளிப்படுத்தலாகும். கேள்வி கேட்பது என்பது, அறியாமையின் வெளிப்படுத்தலாகக்கூட இருக்கலாம். ஆனால், ஒருபோதும் கேள்வி கேட்காத மனிதன் நிச்சயம் அறிவாற்றலில் குறைவுபட்டவனாகவே இருக்கின்றான்...பேதுரு, நல்ல இருதயம் கொண்டவரும், துக்கத்தால் விம்மி அழுகிறவரும், சிந்திக்காமல் செயலாற்றுகிறவரும் ஆவார். அவருடைய பேரார்வம் எனும் பண்பிலே, அவருடைய நற்பண்புகளும், அவருடைய தவறுகளும், இரண்டும் பொதுவான வேரைக் கொண்டுள்ளது. பேதுருவிடம் அவசர செயல்பாடு எனும் களை இருக்கவே, இதனோடு கூட அவருடைய

ஜீவியத்தில் கொழுந்துவிட்டு எரியும் அன்பு மற்றும் சத்தியத்தை உடனடியாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையாகிய அழகிய செடியும் மிகப் பலமாக வளர்ந்ததே, அவரிடத்தில் பாராட்டத்தகுந்த விஷயமாகும்."

## "உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"

ஆண்டவர் தம்முடைய பின்னடியார்களுக்குக் கற்றுக்கொடுத்ததும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பயிலும் அனைவராலும் கற்றுக்கொள்ள வேண்டியதுமான மாபெரும் பாடம் என்னவெனில்... தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் கொழுந்துவிட்டு எரியும் அன்பும், வைராக்கியமும் இருக்கும் அதேசமயத்தில், நம்மிடத்தில் தன்னடக்கமும் காணப்பட வேண்டும்; அதாவது தெளிந்த புத்தியின் ஆவியைச் செயல்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்கள், "புறாக்களைப்போல் கபடற்றவர்களாகவும், சர்ப்பத்தைப்போல் வினாவுள்ளவர்களாகவும்" இருக்கும்படி புத்திமதி அளிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய ஞானமானது, அவர்களுடைய நலனை மாத்திரம் கருதும் சுயநலநோக்கமுள்ளதாக இராமல், பரந்தமனப்பான்மையுடையதாக இருக்க வேண்டும். அதாவது, சகலருடைய நலனைக் கருதக்கூடியதாகவும், விசேஷமாகக் கர்த்தருடைய நோக்கங்களுக்கடுத்த நலனுக்காகவும், கர்த்தருடைய நோக்கத்தில் அவர் நமக்கு ஏதேனும் பங்களிப்புக் கொடுத்திருந்தாரானால், அதனுடைய நலனுக்காகவும் கருதக்கூடியதாக அவர்களுடைய ஞானம், பரந்த மனப்பான்மை உடையதாக இருக்க வேண்டும்.

இயேசு, தாம் காட்டிக் கொடுக்கப்படப்போகிற சோதனையான வேளைக்கு முன்பாக, தம்முடைய சீஷர்களிடத்தில், "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்" (மத்தேயு 26:31, 32).

உணர்ச்சிவசப்படும் பேதுரு, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்று கூறுகின்றார் (வசனம்-33). அந்தோ! இந்தத் தைரியமுள்ள மனிதன், தனக்கு முன்பு வரவிருக்கும் பரீட்சைகள் மற்றும் இடர்பாடுகளின் வீரியத்தை எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுப் புரிந்துக்கொண்டுள்ளார் (அ) தனது உணர்ச்சிவசப்படும் சுபாவத்தில் உள்ள பெலவீன பாகங்களை, எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுப் புரிந்துக்கொண்டுள்ளார். எனினும், ஒருவேளை இவர் போதகரை மறுதலித்து விட்டாரே என்று நாம் வருத்தம் அடைந்தோம் என்றால், பிற்காலங்களில் இயேசுதான் மேசியா என்று இவர் அறிக்கைப்பண்ணினதிலும், அவரிடத்திலான தனது உண்மையை எதுவும் அசைக்க முடியாது என்று இவர் அறிக்கைப்பண்ணினதிலும் வெளிப்பட்ட இவருடைய விசுவாசம், அன்பு மற்றும் வைராக்கியங்களைக் கண்டு நாம் களிக்கூர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

விசேஷித்த விதத்தில் உண்மையும், அனல்/ஆர்வம் கொண்டவர்களையும்தான் சிக்கவைக்கும்படி எதிராளியானவன் மிகவும் விடாப்பிடியுடன் நாடுகின்றான். ஆகவேதான், அத்தருணத்தில் இயேசு பரிசுத்தவானாகிய பேதுருவிடம், "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்" என்று விளக்கினார் (லூக்கா 22:31). அதாவது, "என் மீது நீ கொண்டிருக்கும் உண்மையினின்று உன்னைப் புறம்பாக்கிப்போடவும், சீஷத்துவத்தின் பாதையினின்று உன்னை மனம் தளர்வடையச் செய்யவும், பயம் மற்றும் உன்னுடைய சொந்த பெலவீனத்தைக்கொண்டு உன்னை மூழ்கடித்துவிடவும் சாத்தான் உத்தரவு கேட்டுக்கொண்டான்" என்று பேதுருவுக்கு விளக்கினார். பின்னர், "நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" என்றும் இயேசு கூறினார் (லூக்கா 22:32). நாம் புரிந்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், அதே அன்பான ஆண்டவர் இன்னமும், அவருடைய உண்மையும், பாசமுமிக்க சகல பின்னடியார்களுக்கு, அவர்களுடைய முன்னோர் வழிவந்த பெலவீனங்கள் எதுவாயிருப்பினும், அவர்களுக்கு உதவி செய்கின்றார் என்பதேயாகும். மேலும் இத்தகையவர்கள், அவருடைய அன்பில் நிலைத்தும், தங்களுடைய வைராக்கியத்தில் தொடர்ந்தும் கொண்டிருப்பார்களானால், அவர்களைப் பலமுள்ள பாத்திரங்களாக வளர்த்திவிடவும், அவர் வல்லவர் என்பதையும் கூட நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். சகலவற்றையும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக

மாற்ற, அவர் வல்லமையுள்ளவராக இருக்கின்றார்; அதாவது உண்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் வாக்களித்துள்ள பிரகாரம், அவர்களின் முன்னோர் வழிவந்த பெலவீனங்களையும் கூட, "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை" உண்டாக்குவதற்கு ஏதுவாக நன்மையாக மாற்றுவதற்கு அவர் வல்லவராக இருக்கின்றார்.

## "சேவல் கூவுவதற்கு முன்பு"

ஆண்டவர் தம்முடைய அன்புமிக்க, அதேசமயம் சிந்திக்காமல் செயல்படும் பின்னடியானுக்குரிய ஆபத்தை உணர்ந்தவராக, சேவல் கூவுவதற்கு முன்னதாக பேதுரு தன்னுடைய ஆண்டவரை மறுதலிப்பார் என்று எச்சரித்தார். இது, பரிசுத்தவானாகிய பேதுருவுக்கு உண்மையாக இருக்க முடியாததாக தோன்றியிருந்திருக்கும்! "நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்" என்று எவ்வளவு தைரியத்துடன் பேதுரு கூறினார். "மீதமுள்ளவர்களும் அப்படியே சொன்னார்கள்" (மத்தேயு 26:35). அவர்கள் அனைவருடைய இருதயங்களும் நல்லவைகளாக இருந்தது. கர்த்தரும் அவர்களுடைய இருதயத்தைப் பார்த்தார். இப்பொழுது நம்முடைய பாடம் மத்தேயு 26:69-ஆம் வசனத்திற்குச் செல்கின்றது. ஆண்டவர் கைதுச் செய்யப்பட்டுவிட்டார். சிதறடிக்கப்பட்ட சீஷர்கள் தப்பி ஓடினார்கள். பிரதான ஆசாரியனின் குடும்பத்திற்குப் பரிசுத்தவானாகிய யோவான் நெருக்கமானவராக இருந்தபடியால், பரிசுத்தவானாகிய பேதுரு முற்றத்தில் நிற்க, பரிசுத்தவானாகிய யோவான் அரண்மனைக்குள்ளாகவே பிரவேசித்து நின்றார். அரண்மனையின் வேலைக்காரி பரிசுத்தவானாகிய பேதுருவை, இயேசுவின் சீஷர்களில் ஒருவராக அடையாளங்கண்டு, வெளிப்படையாகச் சத்தமிட்டுக் கூறினாள். ஆண்டவரின் நிலை தனக்கும் வந்துவிடும் என்று பயமடைந்த பரிசுத்தவானாகிய பேதுரு, தான் அவருடைய சீஷரில் ஒருவன் அல்ல என்று மறுத்து, அக்காரியத்தைக் குறித்துத் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் கூறிவிட்டார். கொஞ்ச நேரத்திற்குப் பிற்பாடு வேறொருவர் பரிசுத்த பேதுருவைக் குறித்து மீண்டும் அடையாளம் கண்டபோது, அவர் சத்தியம் செய்து, அதை மறுத்து, தனக்கு இயேசுவைத் தெரியாது என்றும் கூறினார். கொஞ்ச நேரத்திற்குள் முற்றத்தில் இருக்கும் அனைவர் மத்தியிலும் விஷயம் பரவத் தொடங்கி, அநேகர் வேலைக்காரியின் வார்த்தைகளை மெய் என்று ஏற்றுக்கொண்டு, பரிசுத்த பேதுருவுக்கு கலிலேயா பேச்சு வழக்கு காணப்படுகின்றது என்றும் கூறினார்கள். பரிசுத்தவானாகிய பேதுருவோ, தன்னுடைய மறுதலிப்பை உறுதிப்படுத்தும் வண்ணமாகச் சபிக்கவும் தொடங்கி, அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிடவும் செய்தார். இப்படிச் செய்த உடனே சேவல் கூவ ஆரம்பித்தது. அப்போது, பரிசுத்தவானாகிய பேதுரு, "சேவல் கூவுவதற்கு முன்னதாக நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்று தன்னோடு பேசின ஆண்டவரின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தார்.

அந்தோ பரிதாபம்! பரிசுத்தவானாகிய பேதுரு தன்னுடைய நிலைநிற்கும் தன்மையின் மீது மிகுந்த நிச்சயமும், தனது நேர்மையின்/உண்மையின் மீது மிகுந்த நம்பிக்கையும் கொண்டவராக இருந்தார். அவர் தன்னைக் குறித்துப் பெருமையாய்ப் பேசின அதே விஷயங்களிலேயே, அவர் எதிராளியானவனால் சிக்க வைக்கப்பட்டார். இயேசு திரும்பி, பேதுருவைப் பார்த்தார் என்று வேறொரு பதிவு கூறுகின்றது! அந்தப் பார்வை போதுமானதாகும். அப்பார்வையானது, பரிசுத்தவானாகிய பேதுருவின் உத்தம இருதயத்திடம், ஆயிரமாயிரமான காரியங்களை/விஷயங்களைப் பேசிவிட்டது. அது கோபத்தின் பார்வையாகவோ அல்லது இகழ்ச்சியின்/வெறுத்து ஒதுக்கும் பார்வையாகவோ இருந்திருக்காது என்பதில் நமக்கு நிச்சயமே. அது அன்புடன்கூடிய அனுதாபத்தின் பார்வையாகவே இருந்தது. அது பரிசுத்தவானாகிய பேதுருவின் இருதயத்தை உருக்கிற்று/கரையப்பண்ணிற்று. அவர் வெளியே போய், மனம் கசந்து அழுதார். எதிராளியானவனின் சோதனைகளினாலும், பெலவீனங்களினாலும், குறைபாடுகளினாலும் நெருக்கப்பட்டிருக்கின்ற, இன்றைய காலத்தில் காணப்படும் ஆண்டவரின் பின்னடியார்களுக்கு, பரிசுத்தவானாகிய பேதுருவின் அனுபவங்களிலிருந்து வரும் பாடம் எச்சரிப்பாக விளங்குகின்றது; அதாவது பின்னடியார்கள் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களாக, உதவிக்காகக் கர்த்தரையே நோக்க வேண்டுமே ஒழிய, சுய/தன்நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கக்கூடாது என்பதேயாகும். வீழ்ந்த நிலையில் இன்று காணப்படுபவர்களுக்கும், பரிசுத்தவானாகிய பேதுருவின் அனுபவங்களிலிருந்து, கர்த்தர் வைக்கும் அனுதாபம் மற்றும் இரக்கம் குறித்ததான ஒரு பாடமும் உள்ளது. வீழ்ந்த நிலையில் இருப்பவர்களும் கூடத் தங்களுடைய அக்கிரமங்களுக்காக மனம் கசந்து அழுது,

மனந்திரும்பி, தங்களுடைய அனுபவங்களின் மூலம், நன்மை (படிப்பினை) பெற்றுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

---

**R2453**

# "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்"

## யோவான் 14:1-14.

சீஷர்களுடைய பாதங்களை அவர் கழுவின பிற்பாடு, துணிக்கையானது யூதாசுக்குக் கொடுத்தப்பிற்பாடு, யூதாஸ் புறப்பட்டுப்போன பிற்பாடு, தம் நிமித்தம் அந்த இரவில் சீஷர்கள் அனைவரும் இடறலடைவார்கள் என்று சீஷர்களுக்குக் கூறின பிற்பாடு, சேவல் கூவுவதற்கு முன்னதாக பேதுரு தம்மை மூன்றுமுறை மறுதலிப்பார் என்று தெரிவித்த பிற்பாடு, பதினொரு பேரின் இருதயங்களும் பாரம் அடைந்ததாகவும், குழப்பம் அடைந்ததாகவும், நடக்கப்போகிறவைகள் குறித்த பயத்தினால் கலக்கமடைந்ததாகவும் இருந்திருக்கும் என்பதை நம்மால் அறியமுடிகிறது. ஆண்டவர் தம்மை மேசியா என்றும், இராஜ்யத்தின் சுதந்தரவாளி என்றும் மற்றும் தாங்கள் அவருடைய சிங்காசனத்தில் அவரோடு கூட இருப்பார்கள் என்றும் கூறியபோது, தாங்கள் அதைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டார்களா அல்லது தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்களா? எனச் சீஷர்கள் கலங்கினார்கள். ஐந்து நாட்களுக்கு முன்னர்தான் அவர் கழுதையின் மீது ஏறி வந்தபோது, இஸ்ரயேலின் இராஜாவாக, தேவனுடைய குமாரனாக, ஜனங்களால் ஓசன்னாக்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க, இப்பொழுது ஆண்டவர், "துக்கம் அடைவதையும்," காட்டிக்கொடுப்பது பற்றிக் கூறுவதும், சீஷர்களாகிய தாங்கள் சிதறடிக்கப்படுவது குறித்தும், தம்முடைய சொந்த மரணம் குறித்தும் கூறுவதை அவர்கள் எப்படித்தான் புரிந்துக்கொள்ள/எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கலங்கியிருந்தனர்.

இப்படியான அவர்களுடைய கலகத்தில் காணப்பட்ட எண்ணங்களுக்குத்தான், நமது கர்த்தர் யோவான் சுவிசேஷத்தின் 14, 15, 16 மற்றும் 17-ஆம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆறுதலும், தேறுதலுமான வார்த்தைகளை அவர்களிடம் கூறுகின்றார். இவ்வார்த்தைகளை அவர், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்" என்று கூறி ஆரம்பிக்கின்றார்.

அப்போஸ்தலர்கள் இயேசுவுடன் தொடர்புக்குள் வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் ஏற்கெனவே தேவனுடைய ஊழியக்காரர்கள் என, தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் ஏற்கெனவே தேவனில் நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருந்தனர். அவர்கள் கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களாக இருந்தனர். இதை நமது கர்த்தருடைய ஜெபத்தின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகிறது. அதாவது, "அவர்கள் உம்முடையவர்களாக இருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர்" (யோவான் 17:6) என்ற வார்த்தைகள் உறுதிபடுத்துகின்றது. அவர்களுடைய இருதயத்தின் கலக்கமானது, அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளின் அஸ்திபாரம் சார்பானது அல்ல, ஏனெனில் இந்த அஸ்திபாரங்கள் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தேவனை அறிந்தவர்களாகவும், தேவனில் விசுவாசம் உள்ளவர்களாகவும் மாத்திரம் இராமல், இராஜ்யம் தொடர்பான தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அந்த இராஜ்யத்தின் வாயிலாகப் பூமியின் குடிகள் அனைத்தின் மீது வரும் ஆசீர்வாதங்களையும் அறிந்திருந்தவர்களாகவும், விசுவாசித்திருந்தவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களுடைய மனங்களுக்கு முன்பாக எழும்பின கேள்வி, இயேசு தொடர்பானதேயாகும். அதாவது, இயேசு உண்மையில் மேசியாவா? அல்லது அவருடைய அற்புதமான வார்த்தைகள் மற்றும் கிரியைகளைக் கண்டு, தாங்கள்தான் தவறான சில எதிர்ப்பார்ப்புகளை வளர்த்துவிட்டார்களா? மூன்றரை வருட ஊழியத்திற்குப் பிற்பாடு, அவர் தாங்கள் கொண்டிருந்த எதிர்ப்பார்ப்பின்படி தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்துவதற்குப் பதிலாக, அவர் தம்முடைய சத்துருக்களின் கரங்களில் மரிப்பதை, இப்பொழுது எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும்? அவர், தாம் போகப்போவதாகவும், அவர் போகவில்லையெனில், தங்களால் அங்குவரமுடியாது என்றும்

கூறுகின்றார்; இதையெல்லாம் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே, அவர்களுடைய மனங்களுக்கு முன் எழும்பிநின்ற கேள்விகளாகும்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்," "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோவான் 3:3, 5) என்று கர்த்தர் தம்முடைய ஊழியத்தின் ஆரம்பக்கட்டத்தில், நிக்கொதேமுவிடம் பேசின வார்த்தைகளின் அர்த்தத்தை, இன்னமும் அப்போஸ்தலர்கள் கற்றறிந்துகொள்ளவில்லை. இவைகள் ஆவிக்குரிய சத்தியங்களாய் இருப்பதால், பெந்தெகொஸ்தே நாளில் இவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, "சகலபரிசுத்தவான்களோடு கூடத் தெய்வீகத் திட்டத்தினுடைய அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்துக்கொள்வதற்கு" அனுமதிக்கப்படுவது வரையிலும் இவைகள் சீஷர்களால் புரிந்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் அவர்களுக்கு இப்பொழுது கொஞ்சம் ஆறுதல் தேவை. ஆகவே அவர்களால் புரிந்துக்கொள்ள முடியும் அளவுக்கு உள்ள சிறப்பானதும், பலமானதுமான ஆவிக்குரிய உணவை, அறிவுரையை அவர்களுக்குக் கொடுக்க முற்பட்டார். அவர்களிடத்தில் கூறுவதற்கு அவருக்கு அநேகம் காரியம் இருந்தது; ஆனால் அவைகளையெல்லாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது, அவர்களுடைய இருதயங்களை ஆயத்தப்படுத்துவது வரையிலும், அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது மற்றும் புரிந்துக்கொள்ள முடியாது.

பிதாவிடத்திலும், அவருடைய திட்டத்திலுமுள்ள அவர்களது விசுவாசத்தை அவர்களுக்குள் புத்துயிரடையச் செய்யத்தக்கதாக, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று கூறி நமது கர்த்தர் ஆறுதல் படுத்துவதை ஆரம்பித்தார். அதாவது, "பிதாவினுடைய திட்டமனைத்தும் நிறைவேறும் என்ற உண்மையை உணர்ந்துக்கொள்ளுங்கள். மேலும் பிதாவுக்கு, வார்த்தையிலும், கிரியையிலும் நான் உண்மையாய் இருப்பதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், என்னிலுள்ள நற்கிரியைகளில் பிதாவினுடைய வல்லமை வெளிப்பட்டுள்ளதை நீங்கள் பார்த்துள்ளபடியினாலும், விசுவாசத்தினுடைய நங்கூரம் உறுதியாய் நிலைத்திருப்பதாக. என்னைத் தொடர்ந்து விசுவாசித்துக்கொண்டிருங்கள், தொடர்ந்து நம்பிக்கைக்கொண்டிருங்கள். இப்படியிருந்தால் உங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். தெய்வீகத் திட்டத்தினுடைய விரிவாகுதலுக்காகக் காத்திருங்கள். அது நீங்கள் எதிர்ப்பார்த்த உச்சக்கட்ட எதிர்ப்பார்ப்பைக் காட்டிலும், திருப்தியை அளிக்கும். நான் போகிறேன் என்று சொன்னப்படியினால், அதாவது பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று சொன்னப்படியினால் நீங்கள் குழம்பிப்போயிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுடைய நன்மைக்காகவே போகிறேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அநேக வாசஸ்தலங்களுள்ள என்னுடைய பிதாவின் வீட்டில் உங்களுக்கென ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படிக்குப் போகின்றேன். இதைச் செய்த பிற்பாடு, நான் நிச்சயமாய் மீண்டும் வந்து நாம் என்றென்றும் சேர்ந்துக் காணப்படத்தக்கதாக, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்ற விதத்தில் இயேசு கூறினார்.

இப்படியாகச் சொற்ப வார்த்தைகள் மூலம், ஆண்டவர் சுவிசேஷ யுகத்தின் வேலையை விவரித்து, தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்தும், யுகத்தின் முடிவில் சபையின் மகிமையடைதலைக் குறித்தும் சுட்டிக்காட்டினார். அவர்கள் கண்டிப்பாகக் கடந்துச்செல்ல வேண்டிய பொறுமைக்கான மற்றும் விசுவாசத்திற்கான பரீட்சைகளைக் குறித்தும் இங்கு அவர் விவரமாய் விவரிக்கவில்லை. இவைகள் குறித்து வேறே தருணங்களில், எச்சரிப்புக் கொடுத்துள்ளார் (மத்தேயு 24-ஆம் அதிகாரம்). இப்பொழுது அவர்களுடைய இருதயங்கள் கலக்கமடைந்துள்ளது. அவர் கடந்துப்போவது அவசியம் என்றும், அவரது இரண்டாம் வருகை நிச்சயமாய்க் காணப்படுமென்றும், ஆயத்தம் பண்ணப்படும் வாசஸ்தலங்களில் நித்திய காலத்திற்குமான ஐக்கியத்திற்குள் அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பது நிச்சயமானது என்றும், உள்ள வாக்குத்தத்தங்களினால் அவர்களை அவர் ஆறுதல்படுத்த மாத்திரம் செய்பவராக இருந்தார்.

பிதாவின் வீடு என்பது, உண்மையில் அண்டசராசரமாகும்; மற்றும் அடையாள வார்த்தைகளில் பேசும்போது, வானம் அவருடைய சிங்காசனமாகவும், பூமி அவருடைய பாதப்படியாகவும் கூறப்படுகிறது. தேவனுடைய புத்திரர்கள் அனைவருக்குமான நித்திய

காலத்திற்குரியதுமான ஆசீர்வாதங்களுக்குத் தெய்வீக விவேகமானது, மிகுதியான முன்னேற்பாடுகளைப் பண்ணியுள்ளது. தெய்வீக ஏற்பாடுகளில், மனிதனுடைய விழுகைக்கு முன்னதாக மனிதன் தேவனுடைய இசைவான நிலைமையில் காணப்பட்டபோது, அவனுக்கு ஓர் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது. ஆனால் பாவத்தின் காரணமாக, நீதிமான்களுக்குரிய நித்தியமான வாசஸ்தலத்தை அடைவதற்கான மனிதனுடைய உரிமைகள் அனைத்தும், பறிமுதல் பண்ணப்பட்டது. மேலும் நமது அருமையான மீட்பர் மனிதனையும், அவனால் இழக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும், உடைமைகளையும் மீட்பதற்கென உலகத்தில் காணப்பட்டவராய் இருந்தார் (லூக்கா 19:10; எபேசியர் 1:14). அவர் பேசிக்கொண்டிருந்தபோது, (மனிதனால் இழக்கப்பட்டது அனைத்தையும்) அவர் இன்னமும் விலைகொடுத்து வாங்கவில்லை... இன்னும் சில மணிநேரங்களுக்குள்ளாகக் கல்வாரியில் அனைத்தையும் நிறைவேற்றிட நமது கர்த்தர் சித்தங்கொண்டிருந்தார். இதற்கென அவர் தம்மைப் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. அதாவது ஒரு மனிதனாக, அவர் கிறிஸ்து இயேசுவாகிய மனிதனான, தம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது; மற்றும் இப்படியாகத் தம்மை ஒப்புக்கொடுத்த பிற்பாடு, மனிதர்கள் மத்தியில் அவரால் மனிதனாகக் காணப்பட முடியாது. தெய்வீகச் சித்தத்திற்கு அவர் கீழ்ப்படிந்து, மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகிய தம்மை, பலிச் செலுத்துவதன் மூலமாக ஆதாமையும், ஆதாமுடைய சந்ததியையும் மீட்டுக்கொள்வது மாத்திரமல்லாமல், தாம் மரணத்திலிருந்து மேலான தளத்திலுள்ள புதிய சுபாவத்திற்கு, திவ்வியச் சுபாவத்திற்கு உயர்த்தப்படுவதும் அவருக்கான நம்பிக்கையுமாய் இருந்தது. ஆகவே, கிறிஸ்து இயேசு எனும் மனிதனாகிய அவர், அவர்களை விட்டுக் கடந்துப்போவதும், அவரை மனுஷனாக அவர்கள் இனிமேல் காணாமல் இருப்பதும் அவசியமாயிருந்தது. ஆனால் ஏற்றவேளையில், அவருடைய இரண்டாம் வருகையின்போது, அவர்களும் மனித நிலைமையிலிருந்து, ஆவிக்குரிய நிலைமைக்கு மாறி, "அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசித்து அவருக்கு ஒப்பாயிருப்பார்கள்" (1 யோவான் 3:2).

அவர் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த பிற்பாடு, பிதாவிடம் ஏறிச்சென்று, மனுஷர் சார்பாகத் தம்முடைய பலியை, மனிதனுக்கான ஈடுபலியாக ஒப்படைப்பதும் அவசியமாய் இருந்தது. இதையும் அவர் செய்தார். பாவங்களுக்கான அந்தப் பலியானது, மனிதனின் சார்பாகப் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கும், இதன் காரணமாகவே, இயேசுவைத் தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ளும் அனைவரின் மேலும் ஆசீர்வாதம் கடந்துவருகின்றது என்பதற்கும், பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்கள் தெய்வீகச் சான்றாக/உறுதியாகக் காணப்படுகின்றது.

நம்முடைய கர்த்தருடைய மரணத்திற்கும், அவருடைய இரண்டாம் வருகையின் காலத்திற்கும் இடையிலான, இடைப்பட்ட காலமானது, எவருடைய விசுவாசக் கண்ணோட்டத்தின்படியும் நீண்ட காலம் அல்லவே. (1) இது தேவனுடைய கண்ணோட்டத்தில் நீண்ட காலப்பகுதியல்ல, ஏனெனில் அப்போஸ்தலர் பேதுரு, "கர்த்தருக்கு . . . ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும்" (2 பேதுரு 3:8) என்று கூறியுள்ளார். (2) இது உண்மையான விசுவாசிகளுடைய கண்ணோட்டத்திலும் நீண்டபகுதியல்ல, ஏனெனில் விசுவாசிகள் எவருடைய வாழ்நாட்களும், காத்திருக்கும் நாட்களும், ஐம்பது வருடங்களுக்கு மேலாக இருந்ததில்லை. இந்த இடைப்பட்ட காலப்பகுதியை, நாம் நீண்ட மற்றும் மிகவும் பொருத்தமற்றக் கண்ணோட்டத்தின் படிப் பார்க்கக்கூடாது. அதாவது, ஏதோ நாம் பதினெட்டு நூற்றாண்டுகளாக வாழ்ந்து, காத்துக்கொண்டிருப்பது போன்று பார்க்கக்கூடாது. "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்"; மணவாளன் வரும்போதும், ஒவ்வொருவனும் அவருடன் சேர்த்துக்கொள்ளப்படத்தக்கதாக, ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் பரீட்சைகளும், மெருகூட்டப்படுதல்களும், ஆயத்தப்படுத்தல்களும் போதுமானதாயிருக்கும். இப்படியாக ஆயத்தப்பட வேண்டியது ஒருவிதத்தில் ஒட்டுமொத்த சபையாக இருந்தாலும் கூட அது முக்கியமாக, கர்த்தருடைய பின்னடியார்களிலுள்ள ஒவ்வொருவரின், தனிப்பட்ட விதத்திலான ஆயத்தப்படுத்தலாகவும் இருக்கின்றது.

"நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்" (யோவான் 14:4). மூன்று வருட காலமாக நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு தம்மைத் தெரியப்படுத்திக்கொண்டிருந்தார். இன்னுமாக அவர்களுக்குப் பிதாவின் குணலட்சணத்தைக் குறித்தும் தெரியப்படுத்திக்கொண்டிருந்தார். ஆகவே, இப்பொழுது தாம் பிதாவினிடத்திற்கு, வீட்டிற்குச் செல்வதாக அவர் தெரிவித்தப்போது, அவர்கள் பிதாவை

முன்பில்லாத அளவுக்கு அறிந்துள்ளதையும், முன்பில்லாத அளவுக்கு பிதா அளிக்கும் நீதியின் மற்றும் உண்மையான சந்தோஷத்தின் வீட்டைக் குறித்து உணர்ந்துக்கொள்ள முடிகின்றதையும் உணர்த்திட வேண்டியவர்களாய் இருந்தார்கள். இன்னுமாகக் கர்த்தருடைய போதனைகள் மற்றும் வழிநடத்துதலின் கீழான அவர்களுடைய இந்த அனுபவமானது, தேவனுடைய வழியுடன் அவர்களைப் பழக்கிவைத்துள்ளது. அதாவது, அவ்வழியைத் தேவனுடைய வழி என்று அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளாதிருந்த போதிலும், அவ்வழிக்கு அவர்கள் பழக்கிவிக்கப்பட்டிருந்தனர். ஆகவேதான் நமது கர்த்தர், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கின்றேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார்.

நமது கர்த்தருடைய பலியின் மூலமாக, "ஈடுபலியின்" மூலமாக, அவருடைய பலியின் புண்ணியம் பாவிகளுக்குத் தரிக்கப்படுவதன் மூலமாக மாத்திரமே, சீஷர்கள் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் அல்லது மீண்டுமாகப் பிதாவினிடத்திலான ஐக்கியத்திற்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற விதத்தில் நமது கர்த்தர், "வழியாக" இருக்கின்றார். அவருடைய வார்த்தைகள், அவருடைய அறிவுரைகள், அவருடைய வழிகாட்டுதலின் வாயிலாக மாத்திரமே, சீஷர்கள் தேவனுடைய ஆவிக்கு, சத்தியத்தின் ஆவிக்கு இசைவுடன் வருவதற்குரிய நம்பிக்கைக் காணப்படும் என்ற விதத்தில் நமது கர்த்தர், "சத்தியமாக" இருக்கின்றார். மனுக்குலம் முழுவதும் மரித்து, தெய்வீகத் தண்டனை தீர்ப்பின் கீழ்க் காணப்படுவதால், ஜீவனுக்கான உரிமைகள் அனைத்தையும் இழந்துள்ளபடியினால், எவரும் நமது கர்த்தர் மூலம் அல்லாமல், அதாவது நமக்காக அவர் கொடுத்திட்ட ஜீவன் மூலமாக வராத எவரும், ஜீவனுக்குரிய நிலமைக்குள் மீண்டுமாக வரமுடியாது என்றவிதத்தில் நமது கர்த்தர் "ஜீவனாக" இருக்கின்றார். இப்படியாக, அவர் நமக்கான ஈடுபலியாகவும் (அ) வழியாகவும், நீதியிலும், சத்தியத்திலும் நமக்கான போதகராகவும், நமக்கு ஜீவன் கொடுப்பவராகவும் இருக்கின்றார்..."அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" (அப்போஸ்தலர் 4:12). "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்," அதாவது வேறெந்த வழி மூலமாகவும், வேறெந்த சத்தியம் மூலமாகவும், வேறெந்த ஜீவன் மூலமாகவும் பிதாவினுடைய வீட்டிலுள்ள வாசஸ்தலம் ஏதாகிலும் ஒன்றில் இடம்பெற்றுக்கொள்ளலாம் என்று, எந்த மனிதனும் எண்ணிக்கொள்ளாதிருப்பானாக என்ற விதத்தில் கர்த்தர் கூறுகின்றார் (யோவான் 14:6).

இப்படியாகவே, ஆயிரவருட யுகத்தின்போதும், கிறிஸ்துவானவர் வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் இருப்பார். கர்த்தர் தம்முடைய பலியின் மூலமாக, சுவிசேஷ யுக சபையாகிய, தம்முடைய மணவாட்டிக்கு, தேவனுடைய வீட்டிலுள்ள பரலோகப்பகுதியில் ஒரு வசிப்பிடத்தைத் திறந்து வைத்ததுபோன்று, அதே பலியின் மூலமாக, பிதாவின் வீட்டிலுள்ள பூலோகப்பகுதியில், ஒரு வசிப்பிடத்தை (அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு—அப்போஸ்தலர் 3:21) மீட்டு, மனுக்குலத்திற்குத் திரும்பக் கொடுப்பார். அந்தப் பூமிக்குரிய வசிப்பிடமோ, தேவனுடைய பரதீசாகக் காணப்படும்.

அப்போஸ்தலர்கள் அதிகமாய் ஆண்டவரை மதித்தாலும், அவருடைய பூரணம் குறித்த கருத்தை,அதாவது அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனுடைய சாயலாய் இருக்கின்றார் என்ற கருத்தை, அவர்கள் கிரகித்துக்கொள்வதற்கு, அவர்களுக்குச் சிரமமாய் இருந்தது (1 தீமோத்தேயு 3:16). "தேவன் ஆவியாயிருக்கின்றார்," மாம்சத்தில் இல்லை; ஆகவே அவரைப் பார்க்க முடியாது என்பதாக அவர் கூறியுள்ளதையும் அப்போஸ்தலர்கள் கேட்டிருந்தனர்; மற்றும் இக்கருத்தை அவர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்தும் அறிந்திருந்தனர். "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோவான் 1:18) என்பதை அவர் ஏற்கெனவே கூறியிருப்பதையும் அவர்கள் கேட்டிருக்கின்றனர். ஆனால், இயேசுவைத் தாங்கள் பார்க்கையில், தெய்வீகமானவரிடத்தில் காணப்படக்கூடிய அனைத்தையும் தாங்கள், அவரில் பார்க்கின்றார்கள்; அதாவது தெய்வீகமானவரின் பூரணச் சாயலை, மாம்சத்தில் பார்க்கின்றார்கள் என்ற விஷயத்தை, அவர்கள் அதுவரையிலும் கிரகித்துக்கொள்ளவில்லை. ஆகவேதான், "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்ற உண்மையினிடத்திற்கு அவர்களுடைய கவனத்தை அவர் திருப்ப வேண்டியிருந்தது. இவ்வார்த்தைகளை, தாம்தான் பிதா என்ற அர்த்தத்தில் அவர்களிடத்தில் அவர் கூறவில்லை. காரணம் பிதா தம்மிலும்

பெரியவர் என்றும், தாம் செய்யும் கிரியைகள் பிதாவினுடைய வல்லமையினாலே செய்யப்படுகின்றது என்றும், அவர் அநேகம் தரம் தெளிவாய் அறிவித்திருக்கின்றார் (யோவான் 14:28, 10). மேலும் தேவன் கண்களுக்குப் புலப்படாதவர் போன்று இருப்பதுபோல, தம்மைப் பார்க்கும்போது, கண்களுக்குப் புலப்படாத ஜீவியைப் பார்ப்பதாக அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமெனும் அர்த்தத்திலும் அவர் கூறவில்லை. அவர்கள் தம்முடைய குணங்களை, தம்முடைய நோக்கங்களை, தம்முடைய அன்பைப் பார்க்கும்போது, பிதாவை எல்லாவற்றிலும் உண்மையுடன் வெளிப்படுத்தும் மெய்யான தோற்றத்தின் ஒரு வெளிப்படுத்தலைக் காண்பதாகவே, அவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டுமெனும் அர்த்தத்தில் கூறினார். பிதாவுக்கும், தமக்கும் இடையே நிலவும் ஒற்றுமை குறித்தும், தம்முடைய சித்தமானது, பிதாவின் சித்தத்திற்குள் புதைக்கப்பட்டுள்ளது குறித்தும், தமக்கு வேறே சித்தமில்லை, "என் சித்தமல்ல, உம் சித்தமே ஆகக்கடவது" என்பதைக் குறித்தும் அவர்களைப் புரிந்துக்கொள்ள வைத்தார். இன்னுமாக, பிதா தம்முடைய வல்லமையின் மூலமாகவும், தம்முடைய ஆவியின் மூலமாகவும், தம்மில் வாசம் பண்ணினதால், தம்முடைய வார்த்தைகளும், கிரியைகளும் முற்றும் முழுமையாகப் பிதாவுடையதே என்றும் அவர்களுக்குப் புரியவைத்தார். தம்முடைய ஊழியத்தின் நாட்களில் அவர்களால் பார்க்கப்பட்ட கிரியைகள் அனைத்தும், தம் மீது உன்னதமானவரின் வல்லமை காணப்படுகின்றது என்பதற்கும், தம் மூலம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதற்கும் சான்றாக இருக்கின்றது என்றும் அவர்களிடம் கூறினார். இவைகள் அப்போஸ்தலர்களை முழுமையாய்த் திருப்திப்படுத்தி, அவர்களுடைய இருதயங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவந்தது.

இன்னுமாக தாம் பிதாவினிடத்திற்குப் போக வேண்டியதன் அவசியம் பற்றி விவரிக்கும் வண்ணமாக, தாம் கடந்துப்போவதினால், தம்முடைய பின்னடியார்கள், தாம் செய்ததைக் காட்டிலும் பெரிய கிரியைகள் செய்வார்கள் என்று நமது கர்த்தர் அறிவித்தார். இந்த "பெரிய கிரியைகளில்" சில, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடுச் செய்யப்படும் என்று எண்ணுவது அநேகமாகச் சரியாகவும் இருக்கலாம். அதாவது மரணம் என்னும் நித்திரையினின்று மனுக்குலத்தின் உலகத்தை எழுப்பி, விருப்பமும் மற்றும் கீழ்ப்படிதலும் காட்டுகின்றவர்களை, மனுஷீக ஜீவனுக்குரிய முழுமையான பூரணத்திற்குத் திரும்பக் கொண்டுவருவதாகிய மாபெரும் கிரியை, இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு செய்யப்படும். இது உண்மையில் முதலாம் வருகையின் போது, நமது கர்த்தர் இயேசுவினால் செய்யப்பட்ட கிரியையைக் காட்டிலும், பெரிய கிரியைதான். காரணம், முதலாம் வருகையின் போது, கர்த்தர் இயேசு மரணத்தில் நித்திரை பண்ணிக்கொண்டிருந்த சிலரை, மனித சுபாவத்திற்குரிய முழுமையான பூரணத்திற்குக் கொண்டுவராமல் வெறுமனே எழும்பப்பண்ணினதே அவருடைய பெரிய கிரியையாக இருந்தது.

ஆனால் நம்முடைய அபிப்பிராயத்தின்படி, இவைமாத்திரமே கர்த்தருடை பின்னடியார்கள், அவர்களுடைய ஆண்டவர் பண்ணின கிரியைக் காட்டிலும், செய்யும் பெரிய கிரியையல்ல. கர்த்தருடைய கிரியைகள் மாம்சீகத் தளத்திலேயே காணப்பட்டது. பரிசுத்த ஆவி அப்பொழுது அருளப்படவில்லை; அவர் ஈடுபலியைச் செலுத்தி, அதைப் பிதாவிடம் ஒப்படைத்து, அதைப்பிதா ஏற்றுக்கொள்ளாதது வரையிலும், பரிசுத்த ஆவி வருவதில்லை. இதன் காரணமாக, அவர் யாருக்கு ஊழியம் புரிந்திட்டாரோ, (அவருடைய சீஷர்கள் கூட ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை). அவர்களுக்கு அவரால் ஆவிக்குரிய கண்ணோட்டத்தின்படி போதிக்கமுடியவில்லை. அவர்களுடைய செவிகள், பூமிக்குரியது தொடர்பானவைகளினால் நிறைந்திருந்தது. பரலோகம் தொடர்புடைய காரியங்கள் பற்றி அவர்களால் புரிந்துக்கொள்ளப்பட முடியவில்லை. காரணம், "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்;" "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (1 கொரிந்தியர் 2:10, 14; யோவான் 3:12).

இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கபடாமலும், புத்திரத்துவத்திற்குரிய சிலாக்கியம் இன்னமும் அருளப்படாத நிலமையிலுமுள்ள வேலைக்காரர் வீட்டாரின் மத்தியில், நமது கர்த்தரால் பூமிக்குரிய தளத்தின் அடிப்படையிலேயே அல்லாமல், மேலான தளத்தின் அடிப்படையில் எதையும் போதிக்கவும், செய்யவும் முடியவில்லை. அதாவது

உவமைகளினாலும், மறைப்பொருள்களினாலுமே ஜனங்களிடம் போதித்தார். இவைகள் ஏற்றவேளையில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதல் கீழாக, சபை புரிந்துக்கொள்வார்கள். இதன் காரணமாகவே நம்முடைய கர்த்தருடைய அற்புதங்கள் அனைத்தும் சரீரப்பிரகாரமான நிலையிலும், எளிமையாய்ப் புரிந்துக்கொள்ளப்படும் அவரது போதனைகள் அனைத்தும், சுபாவத்தின்படியான மனிதனால் உணர்ந்துக்கொள்ளப்படும் நிலையிலும் காணப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு, அதாவது பரிசுத்த ஆவி வந்திறங்கினப் பிற்பாடு கர்த்தரால் செய்யப்பட்டவைகளைக் காட்டிலும், கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய நாமத்தில், அவருடைய பிரதிநிதிகளாக இருந்து, பெரியதும், மிகவும் ஆச்சரியமானதுமான கிரியைகளைச் செய்தார்கள். கர்த்தர் குருடர்களின் கண்களைத் திறந்தார். ஆனால் அவருடைய பின்னடியார்கள் மனிதனுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறப்பதற்குரிய சிலாக்கியத்தைப் பெற்றுக்கொண்டனர். கர்த்தர் சரீரத்தில் வியாதிப்பட்டவர்களைச் சொஸ்தப்படுத்தினார். ஆனால் அவருடைய சீஷர்கள் ஆவிக்குரிய நோயாளிகளைச் சொஸ்தப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர். கர்த்தர் சரீரப்பிரகாரமான குஷ்டரோகத்தைச் சொஸ்தப்படுத்தினார். ஆனால் ஆவிக்குரிய குஷ்டரோகமாகிய பாவத்தைச் சொஸ்தப்படுத்துவதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. நம்முடைய கர்த்தர் மரித்தவர்களை உயிர்ப்பித்தார். ஆனால் அநேகரை மேன்மையான அர்த்தத்தில் மரணத்தை விட்டு நீக்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கப்பண்ணும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குரிய சிலாக்கியம், அவருடைய பின்னடியார்களுக்கு உரியதாய் இருக்கின்றது. இந்தப் பெரிய கிரியைகளுக்கான சிலாக்கியங்கள் கர்த்தருடைய ஜனங்களுக்குக் காணப்படுகின்றது. இந்தத் தங்களுடைய பெரிய ஆசீர்வாதங்களைப் புரிந்துக்கொண்டு, பிதாவின் வேலையில் ஊக்கத்துடனும், வைராக்கியத்துடனும் ஈடுபட்டிருப்பவர்கள் பாக்கியவான்களாக இருக்கின்றனர். ஆனால் கர்த்தருடைய தாலந்தைப் பெற்றுக்கொண்டு, அதை நிலத்தில், அதாவது வேலையின கீழ், இன்பத்தின் கீழ், சமுதாயத்தின் கீழ்ப் புதைத்துப் போடுபவர்கள், ஆண்டவருடைய இரண்டாம் வருகையின் போது, அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றோ, அல்லது, "உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று அவர்களை நோக்கி கர்த்தர் கூறுவார் என்றோ எதிர்ப்பார்க்கக்கூடாது.

இன்னுமாக, சபை தொடர்புடைய அனைத்துக் காரியங்களிலும், தாம் தொடர்ந்து பிதாவினுடைய பிரதிநிதியாக இன்னமும் காணப்படுவதை, சுட்டிக்காட்டும் வண்ணமாக நமது கர்த்தர், யோவான் 14:13-ஆம் வசனத்தின் வார்த்தைகளைக் கூறி நமக்கு உறுதியளிக்கின்றார். அதாவது பிதா அனைத்தையும் குமாரனுடைய கரங்களில் ஒப்படைத்துள்ளார் என்றும், குமாரன் எல்லாவற்றிலும் பிதாவைக் கனப்படுத்தி, அவருடைய நாமத்திற்கு மகிமை சேர்ப்பார் என்றும், கூறி நமக்கு உறுதியளிக்கின்றார்.

---

**R2455**

# "வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்"

### யோவான் 14:15-27.

நமது கர்த்தர் தம்முடைய மரணத்திற்கான நினைவுகூருதலை நிறுவினப்பிற்பாடு, கலக்கமடைந்திருக்கும் தம்முடைய சீஷர்களுக்குத் தம்முடைய உரையைத் தொடர்ந்துகொண்டிருக்கையில், ஏற்றக்காலத்தில் அவர் திரும்பிவந்து அவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதாக மாத்திரம் அவர் வாக்களிக்காமல், தாம் இல்லாத இடைப்பட்ட காலத்தில் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனையும் வாக்களித்தார். அவர் தம்முடைய மனித சுபாவத்தை ஒப்புக்கொடுக்கப்போகின்றபடியால், ஒப்புக்கொடுத்தப் பிற்பாடு அவர்களோடு அவரால் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாய் இருக்கமுடியாது. அவருடைய உயிர்த்தெழுதலில், அவர் பிதாவுக்கு ஒத்த தன்மையிலான ஆவிக்குரிய ஜீவியாக வரப்போகின்றபடியால், முழுச் சபையும் நிறைவடைந்து, அவரைப்போல் (மற்றும்

பிதாவைப்போல்) ஆக்கப்பட்டு, அவரைக் கண்டு, அவரோடிருந்து, அவருடைய மகிமையில் பங்கடைவதற்குரிய காலம் வருவதுவரையிலும், பிதாவைச் சீஷர்களால் பார்க்க முடியாததுபோல, அவரையும் சீஷர்களால் பார்க்க இயலாது. உயிர்த்தெழுதலில் அவருக்கு ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக, அவர் ஒன்றில் சுவிசேஷ யுகம் முழுவதும், எவ்விதமான உதவியில்லாத நிலையில் சீஷர்களைத் தனியே விடுவதற்குரிய அல்லது வேறு ஏதாகிலும் விதத்தில் அவர்களுக்கு உதவியளிக்க ஏற்பாடு பண்ணுவதற்குரிய அவசியம் உண்டானது. நம்முடைய கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு, அவர் தம்முடைய சீஷர்களுக்கு முன்பாக சிறு கண நேரங்களில் சில முறைகள் தோன்றிக் காட்சியளித்தது என்பது, அவர் இன்னமும் மரித்த நிலைமையிலேயே இல்லையென்பதையும், அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் மற்றும் அவர் மனித சூழ்நிலைகளுடைய கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்பதையும், சீஷர்களுக்கு உறுதிப்பண்ணும் நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட அற்புதமான வெளிப்படுத்தல்களே ஆகும். அவர் தோன்றுவதற்கு எடுத்துக்கொண்ட மாம்ச சரீரங்களானது, அற்புதமாகத் தோன்றி, அற்புதமாக மறைந்தும் போனது. அவர் காற்றைப்போல் வந்து போய்விட்டார். (யோவான் 3:8; லூக்கா 24:26, 31; அப்போஸ்தலர் 1:3-4).

பரிசுத்த ஆவி என்பது வேறொரு தேற்றரவாளன், எனினும் தேற்றுதல் ஒரே வகையில்தான் காணப்படும். இங்கு இடம்பெறும் "தேற்றுதல்" (comfort) என்ற வார்த்தையானது, இவ்வசனத்தின் கருத்தாகிய பலப்படுத்தலை, தக்கவைத்தலைச் சரியாக வெளிப்படுத்துகிறதில்லை. "தேற்றுதல்" எனும் வார்த்தை கொடுக்கும் அர்த்தத்தின்படி பரிசுத்த ஆவி என்பது, வேதனைகளைத் தேற்றுகிறவராகவும், பயங்களைத் தணிக்கிறவராகவும் மாத்திரம் காணப்படாமல், பரிசுத்த ஆவியானது அவர்களது <u>புரிந்துக்கொள்ளுதலை உயிர்ப்பிக்கின்றதாகவும்</u>, அவர்களது <u>பக்தி வைராக்கியத்தைப் பலப்படுத்துகின்றதாகவும்,</u> அவர்களை நீதியில் சரிச்செய்யத்தக்கதாகவும், அவர்கள் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தை" சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாகவும் எனத் தெய்வீக விவேகமானது அனுமதிப்பவைகளைச் செய்வதற்கும் மற்றும் சகிப்பதற்கும் அவர்களை <u>உற்சாகப்படுத்துகின்றதாகவும்</u> இருக்கின்றது.

சபையினிடத்திற்கு வந்து, சபையோடு யுகம் முழுவதும் தங்கி, உண்மையுள்ளவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களை மேற்பார்வையிட்டு வழிநடத்துகிறதாகிய பரிசுத்த ஆவி அல்லது பரிசுத்தமான செல்வாக்கு என்பது, பிதா மற்றும் குமாரன் இருவருடைய பிரதிநிதியாக இருக்கின்றது. சபையின் விஷயத்தில், கர்த்தர் இயேசுவின் பிரதிநிதியாக, பரிசுத்த ஆவி காணப்படுகின்றது என்ற கருத்தானது, அநேக இடங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சில சமயம் கர்த்தரும், அவருடைய ஆவியும்/செல்வாக்கும் மாறிமாறிப் பேசப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கின்றேன்" என்று சீஷர்களிடம் இயேசு கூறுகின்றார். இன்னுமாக, "நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்; உங்களிடத்தில் (பரிசுத்த ஆவியின் மூலமாக) வருவேன்" (யோவான் 14:18). இன்னுமாக, "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் (பரிசுத்த ஆவியின் மூலமாக) நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்... அவனுக்கு என்னை (பரிசுத்த ஆவியின் வாயிலாக) வெளிப்படுத்துவேன்... நாங்கள் (பிதாவும், குமாரனும்) அவனிடத்தில் வந்து (பரிசுத்த ஆவியின் மூலமாக) அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோவான் 14:18, 20, 23).

பரிசுத்த ஆவியை, சத்தியத்தின் ஆவியை, அன்பின் ஆவியை, பிதாவின் ஆவியை, கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருப்பவர்கள், இயேசுவைப் பார்க்க உதவப்படுகின்றார்கள் மற்றும் தங்களுக்குள் புதிய ஜீவியத்தை ஆரம்பிக்கவும் பெற்றிருக்கின்றனர் (வசனம் - 19). இவர்கள் தங்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்களினால் பார்க்கின்றனர் மற்றும் இருளில் நடப்பதுமில்லை. "இதுவே வழி, இதிலே நடவுங்கள்" என்று சொல்லும் கர்த்தருடைய சத்தத்தை இவர்கள் கேட்கின்றனர். தேவனுடைய நல்ல வார்த்தைகளை இவர்கள் ருசித்து, அவர் மிகவும் கிருபையுள்ளவராய் இருப்பதை உணர்ந்துக்கொள்கின்றனர். தங்களுடைய இருதயத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்பட்டிருக்கிறதையும், அந்த அன்பு இவர்களுக்குள், சகோதரருக்கான அன்பை உண்டுபண்ணுவதையும், ஆவியின் அனைத்து நற்கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். அதாவது, சாந்தம், பொறுமை, நீடியப்பொறுமை, சகோதர

சிநேகம் அன்பாகிய ஆவியின் கனிகளை உண்டுபண்ணுகிறதையும் இவர்கள் உணருகின்றனர். (ஏசாயா 30:21; 1 பேதுரு 2:3; ரோமர் 5:5; கொலோசெயர் 3:12-13).

எனினும் இந்த அனுபவங்கள் அனைத்தும், நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வாக்களிக்கப்பட்டுள்ளது. அதாவது இவைகள் தேவனுடைய கிருபையை ஒருபோதும் கேட்காதவர்களுக்கு வாக்களிக்கப்படாமல், மாறாக தேவனுடைய கிருபையைக் கேட்டவர்களுக்கே, “தேவனாகிய கர்த்தரினால் வரவழைக்கப்பட்டவர்களுக்கே” அவருடைய கட்டளைகளைக் கேட்டு, அவைகளைச் செய்யத்தக்கதாக அன்பினால் ஏவப்பட்டவர்களுக்கே வாக்களிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கே பிதாவின் அன்பு காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களுக்கே குமாரனுடைய அன்பு காணப்படுகின்றது மற்றும் இப்படிப்பட்டவர்களுக்கே பரிசுத்த ஆவி எனும் கால்வாய் மூலம், பிதா மற்றும் குமாரன் இருவருடனும் உள்ள ஐக்கியம் காணப்படுகின்றது. இவைகள் குறித்து 15, 16-ஆம் வசனங்களும், இன்னுமாக 21, 23 மற்றும் 24-ஆம் வசனங்களிலும் தெரிவிக்கப்படுகின்றது. இருதயத்தில் விசுவாசமும், கீழ்ப்படிதலும் கொண்டிருத்தல் என்பது ஆவியில் ஜெநிப்பிக்கப்படும் நிலைமைக்குள் எவரும் வருவதற்கு முன்னதாக இருப்பது மாத்திரம் போதாது; மாறாக பரிசுத்தத்தின் ஆவியில் அல்லது பரிசுத்த ஆவியில் பிதாவுடனும், குமாரனுடனுமான ஐக்கியத்தின் ஆவியில் தொடர்ந்துக் காணப்படுவதற்கும், வளர்வதற்கும் என விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் தொடர்வதும், வளர்வதும் அவசியமாய் இருக்கின்றது.

ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது ஒரு காரியமாகவும், “ஆவியினாலே நிறைந்து” என்று அப்போஸ்தலரால் வலியுறுத்தப்படும் நிலைமையை அடைவது என்பது, வேறொரு காரியமாகவும் இருக்கின்றது (எபேசியர் 5:18). நாம் எந்தளவுக்குச் சுயசித்தத்தின் ஆவியில் காலியாகி, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் ஆவியினால் நிரப்பப்படுகின்றோமோ, அதனடிப்படையிலேயே நம்முடைய நிரப்பப்படுதல் காணப்படுகின்றது. கீழ்ப்படிதல் என்பது, அன்றாட ஜீவியத்தில் வெளிப்படுகின்றதாய் இருப்பினும், கர்த்தர் தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களிடத்தில் மாம்சத்தின் கட்டுப்பாட்டை மாத்திரமல்லாமல், நோக்கத்தின், சித்தத்தின், இருதயத்தின் கீழ்ப்படிதலையே பொருட்படுத்துபவராக இருக்கின்றார். ஆகவேதான் கர்த்தருக்கு முழுமையாக உண்மையுடன் இருக்கும் சிலருடைய இருதயங்கள், கர்த்தருக்குப் பிரியமாய்க் காணப்படும். ஆனாலோ இவர்களுடன் தொடர்புக்குள் இருப்பவர்களில் சிலருக்கு, இவர்கள் மீது பிரியம் இருப்பதில்லை. இன்னும் சிலர் வெளித்தோற்றமான நன்நடத்தையின் காரணமாக, “மனுஷர் மத்தியில் மிகவும் உயர்வாக” மதிக்கப்படலாம்; ஆனாலோ இவர்களுடைய உண்மையற்ற இருதயத்தின் காரணமாக, இவர்கள் தேவனுடைய பார்வைக்கு முன்பு அருவருப்பாய்க் காணப்படுவார்கள் (லூக்கா 16:15). எனினும், புதிய நம்பிக்கையையும், புதிய ஆவியையும் தனக்குள் பெற்றிருப்பவன், தன்னுடைய சிந்தனைகளில் மாத்திரமல்லாமல் தன்னுடைய வார்த்தைகளிலும், கிரியைகளிலும் அனைத்துக் காரியங்களிலும், உள்ளேயும் வெளியேயும் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள நாடுபவனாக இருப்பான் (1 யோவான் 3:3).

மற்றக் கிருபைகளைப் போன்று பரிசுத்த ஆவியும் பிதாவினுடையதாக இருப்பினும், மற்ற அவருடைய வரங்கள் அனைத்தையும் போன்று பரிசுத்த ஆவியும், குமாரன் மூலமாகவே நமக்கு வருகின்றதே ஒழிய, இப்பரிசுத்த ஆவியானது பிதாவுக்கும் நமக்கும் இடையே எவ்விதமான நேரடித் தொடர்பினால்/உறவினால் அல்ல என்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. நாம் வேறே பாடங்களில் பார்த்திருக்கிறபடிப் பிதாவிடம் ஏறெடுக்கப்படும் நம்முடைய ஜெபங்கள், குமாரனினாலேயே பதிலளிக்கப்படுகின்றது. “நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்” (யோவான் 14:13). ஆகவே பிதாவுக்கும், நமக்கும் இடையிலான எவ்விதமான நேரடித் தொடர்பு/உறவு காரணமாக பரிசுத்த ஆவி நமக்கு வராமல், மாறாக நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஆலோசனையின்படியாக வருகின்றது. “நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்; அப்பொழுது தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார்,” அதாவது, “என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, என்னிமித்தமாக பிதா இதை உங்களுக்குச் செய்வார்”என்ற விதத்தில் இயேசு கூறுகின்றார் (யோவான் 14:16). இதே கருத்தானது, “என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்” என்று மீண்டுமாக தெரிவிக்கப்படுகின்றது (யோவான் 14:26).

இங்கு நமக்குள்ள பாடம் என்னவெனில், பிதாவின் முன்னிலையில், நமக்கிருக்கும் ஒரே அங்கீகரிப்பானது, இதுவரையிலும் கிறிஸ்துவுக்குள் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகக் **கருதப்படுகின்ற** நிலையிலுள்ள அங்கீகரிப்பாகத்தான் காணப்படுகின்றது. கர்த்தர் இயேசு நமக்குப் பிதாவை அடையாளப்படுத்துபவராக இருக்கின்றார்; மற்றும் பிதாவுக்கு நம்மை அடையாளப்படுத்துபவராக இருக்கின்றார் என்பதேயாகும். நமக்குக் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவியின் ஆறுதலும், பலமும் பிதாவினுடையதாகும். சத்தியத்தின் ஆவி, பிதாவிடமிருந்து ஊற்றெடுக்கின்றதாய் இருக்கின்றது. அதுவும் இது நமக்கு நேரடியாய் வராமல், மாறாக நம்முடைய கர்த்தரும் தலையுமானவராகிய இயேசுவின் மூலமாக மாத்திரமே நம்மிடம் வருகின்றது. சொல்லப்போனால், பிதாவுக்கு முன்பாக நமக்கு எந்த அங்கீகரிப்பும் இல்லை; மற்றும் அவருடைய கிருபையினால் நமது கர்த்தர் இயேசு மூலமாக நாம் "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுக்குரிய சுதந்தரத்தை" அடையத்தக்கதாக ஆகி, முதலாம் உயிர்த்தெழுதலில் "மாற்றம்" அடைந்து, தெய்வீகச் சாயலாகிய அவருடைய சாயலில் பூரணமடைவது வரையிலும் நமக்கு எவ்விதமான அங்கீகரிப்பும்/ஏற்புடைமையும் இருப்பதில்லை. இதற்குப் பிற்பாடு நாம் பூரணமானவர்களாகக் கருதப்படாமல், உண்மையில் பூரணமாய் இருப்பதினால் நமக்குப் பிதாவின் முன்னதாகத் தனிப்பட்ட அங்கீகரிப்பும் காணப்படும். ஆனால் இதற்கு முன்னால் வரை இருப்பதில்லை.

ஆகவே, துணிகரமாய்ப் பாவம் செய்வதன் காரணமாக, பரிசுத்த ஆவியை இழப்பதன் மூலமாக அல்லது விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தை இழப்பதன் மூலமாக, ஒருவன் கிறிஸ்துவுடனான தன்னுடைய உறவை இழந்துப்போவானானால், அப்படிப்பட்டவன் இயேசுவினுடைய பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மறைவிலிருந்து வெளியேறி, ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுகின்றவனாய் இருக்கின்றான். ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுவது என்பது, நடந்த உண்மைகள் மற்றும் கிரியைகள் அடிப்படையில் நியாயத்தீர்ப்பையும், பூரணமற்ற சிருஷ்டிகள் அனைத்திற்கும் மரணத்தையும் குறிக்கின்றதாய் இருக்கும் (எபிரெயர் 10:31). நாம் அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்றும், தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்பட வேண்டுமென்றும், அவருடைய அன்பில் நிலைத்திருக்க வேண்டுமென்றும் வேதவாக்கியங்கள் புத்திமதிக் கூறுகின்றன (யோவான் 15:4, 6, 10; 1 யோவான் 2:24-29).

தம்முடைய அறிவுரைகளைக் கைக்கொள்வதன் மூலமாக அவரைப் பிரியப்படுத்துவதற்கு நாடாதவன், தம்மிடத்தில் அவனுக்கு அன்பில்லை என்பதை வெளிப்படுத்துகின்றவனாக இருப்பான் என்பதை நமது கர்த்தர் குறிப்பாகத் தெரிவிக்கின்றார் (23-24-ஆம் வசனங்கள்). பயபக்தியைப் பரீட்சிப்பதைக் காட்டிலும், அன்பைப் பரீட்சிப்பதற்கு வேறு சிறந்த பரீட்சை நிச்சயமாய் இராது; மற்றும் கீழ்ப்படிதலைப் பரீட்சிப்பதைக் காட்டிலும், பயபக்தியைப் பரீட்சிப்பதற்குச் சிறந்த பரீட்சை நிச்சயமாய் இராது. ஒளியூட்டப்பட்டதான நம்முடைய மனசாட்சிகளானது, ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு இருதயபூர்வமான சம்மதத்தைக் கொடுக்கின்றது மற்றும் நாமும் அப்போஸ்தலருடன் கூட, "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கின்றவர்கள் (நீதிமான்களாக்கப்பட்டு, புதிதான ஜீவனுக்குள்ளாக ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்) இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்" என்று கூறுகிறவர்களாக இருப்போம் (2 கொரிந்தியர் 5:14-15).

ஆண்டவருடைய வசனங்களை நாம் கைக்கொள்கையில், நாம் அவரை மாத்திரம் பிரியப்படுத்துகின்றவர்களாகவும், அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இராமல், இந்த அனைத்து விஷயங்களில் ஆண்டவர், பிதாவாகிய தேவனுடைய வாயாக/வாய்க் கருவியாக இருப்பதினால், நாம் ஆண்டவரைப் பிரியப்படுத்தி அவருக்குக் கீழ்ப்படிகையில், பிதாவையும் பிரியப்படுத்திப் பிதாவுக்குக் கீழ்ப்படிகின்றவர்களாகவும் இருக்கின்றோம் என்று தெளிவாக நமக்கு ஆண்டவர் சுட்டிக்காண்பிக்கின்றார். ஆண்டவர் சீஷர்களோடு இருக்கையில், இவ்வளவு மாத்திரமே அவருக்குச் சொல்ல முடிந்தது. சீஷர்கள் அறிய வேண்டுமென ஆண்டவர் விரும்பினதும், அறிவது அவர்களுக்கு அவசியமாய் இருந்ததுமான அநேக காரியங்கள் சொல்வதற்கு அவருக்கு இருந்தது. ஆனால் அவற்றையெல்லாம் அவர்களால்

தாங்க முடியாது. காரணம் பரிசுத்த ஆவி இன்னமும் அவர்கள்மேல் வராததினால், கல்வாரியில் ஈடுபலியைச் செலுத்தி, அவர் பரத்திற்கு ஏறி, அதை நமக்காக அவர் தேவனுக்கு முன்பாக ஒப்படைப்பது வரையிலும், பரிசுத்த ஆவி அவர்கள் மீது வருவது கூடாததினால் ஆகும் (யோவான் 7:39/எபிரெயர் 9:24).

நம்முடைய மீட்பரும் தலையுமான இயேசுவின் வேண்டுகோளுக்கு இணங்கி அனுப்பப்படும் இந்தத் தேற்றரவாளன் அல்லது பலப்படுத்துகிறவர், தேவனுடைய பரிசுத்த ஆவியானது நமக்குப் போதிப்பவராக இருக்கும். அதாவது நமக்கு அறிவுரைகளை/போதனைகளைக் கொண்டுவருவதற்கென, பல்வேறு கருவிகளைப் பரிசுத்த ஆவியானது பயன்படுத்தும் என்று நமது கர்த்தர் உறுதியளிக்கின்றார். தேவைக்கேற்ப அவ்வப்போது கர்த்தர் பரிசுத்த ஆவியின் மூலமாகத் தம்முடைய மந்தைக்கு அளிக்கும் சத்திய வார்த்தைகள், அப்போஸ்தலரின் நிரூபங்கள், பல்வேறு உதவிகள் மற்றும் பிரதிநிதிகளே, இந்தப் பல்வேறு கருவிகளாகும்.

வசனம் 27-இல் தெரிவிக்கப்பட்டிருக்கிறபடி, நம்முடைய அருமையான மீட்பரினால் நமக்கு விட்டுச்செல்லப்படும் சமாதானம் மற்றும் அன்பாகிய சொத்து எவ்வளவு அருமையாகவும், எவ்வளவு ஆறுதலாகவும், சீஷர்களுடைய கலங்கின இருதயங்களுக்கு இருந்தன மற்றும் நமக்கு எவ்வளவு புத்துணர்வு அளிக்கின்றதாய் இருக்கின்றது. "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27). மனித புத்திக்கு எட்டாத இந்தச் சமாதானமும், சந்தோஷமும் உலகத்திற்குக் கொடுக்கப்படவில்லை, பெயர்க்கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை, மரபு வழியை வலியுறுத்துபவர்களுக்கும், சமய சடங்குகளை வற்புறுத்துகிறவர்களுக்கும், இவர்கள் அனைவரும் எவ்வளவுதான் பக்தி வைராக்கியத்துடன் இருப்பினும், இவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. இது பரிசுத்த ஆவியின் மூலமாகக் கிருபையின் ஐசுவரியங்களைப் <u>பெற்றுக்கொண்டவர்களுக்கும்,</u> சத்தியம் மற்றும் அதன் ஆவிக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அனைத்துக் காரியங்களிலும் தங்களுடைய ஜீவனுள்ள தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒப்ப <u>வளருகின்றவர்களுக்கும்</u>தான் கொடுக்கப்படுகின்றது, மற்றும் கொடுக்க சித்தமும் காணப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களிடத்தில் சமாதானம் ஆழமாய்க் காணப்படுகின்றது. மேலும் இவர்கள் எந்தளவுக்குத் தெய்வீகக் கிருபையின் ஐசுவரியங்களை, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலம் சகல பரிசுத்தவான்களோடு உணர்ந்து, தேவனுடைய அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தை உணர்ந்துக்கொள்கின்றார்களோ, அந்தளவுக்கு இந்தச் சமாதானம் பெருகுகின்றதாகவும் இருக்கின்றது.

இது உலகத்தினுடைய சமாதானமல்ல, ஜாக்கிரதையற்றவர்கள் மற்றும் அலட்சியமானவர்களின் சமாதானமல்ல, சுயதிருப்திகொள்பவர்களின் சமாதானம் அல்ல, விதியை நம்புகிறவர்களின் சமாதானமல்ல மாறாக, இது கிறிஸ்துவின் சமாதானமாய் இருக்கின்றது. "என்னுடைய சமாதானம்" என்று ஆண்டவர் கூறுகின்றார். தேவனிடத்திலான இந்தச் சமாதானத்தை, எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவர் தக்கவைத்துக் கொண்டதை நாம் பார்க்கின்றோம். இந்தச் சமாதானமானது, தெய்வீக ஞானத்தை, அன்பை, நீதியை, வல்லமையை அப்படியே நம்புகின்ற சமாதானமாய் இருக்கின்றது; மற்றும் கர்த்தருடைய உண்மையுள்ளவர்களை எதுவும் பாதிப்பதில்லை என்றும், தேவனை அன்புகூருகின்றவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் என்றும், கர்த்தருடைய உண்மையுள்ளவர்களுக்குப் பண்ணப்பட்ட கிருபையான வாக்குத்தத்தங்களை நினைவுகூருகின்ற சமாதானமாகவும் இருக்கின்றது. இந்தச் சமாதானத்தினால், தெய்வீக விவேகம் அனுமதிக்கும் எதையும் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ள முடியும்; மற்றும் தற்கால சந்தோஷமும், சமாதானமும் முன் சுவைத்தலாக மாத்திரம் காணப்படும். கர்த்தரால் வாக்களிக்கப்பட்டுள்ள, முடிவில் வரும் ஆசீர்வாதங்களைக் கண்ணீர்கள் மத்தியில், மகிழ்ச்சியுடன் எதிர்ப்பார்த்திட இந்தச் சமாதானத்தினால் கூடும்.

---

**R3544**

# "மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி"

**யோவான்** 15:1-12.

"நீங்கள் மிகுந்த கனிகளைக்கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்."—யோவான் 15:8.

நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவின பிற்பாடு, கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதற்கு எனப் புறப்பட்டுப் போய்விட்ட யூதாஸ் தவிர, கர்த்தரும், அவருடைய சீஷர்களும் மேல் வீட்டு அறையிலிருந்து புறப்பட்டுப்போய், கெத்செமனே தோட்டத்திற்குப் போனார்கள். கர்த்தர் தம்முடைய சீஷர்களிடம் கூறின பல்வேறு காரியங்களினிமித்தமும், சமீபித்திருக்கிற தம்முடைய மரணத்தைக் குறித்து அவர் பேசினவைகளினிமித்தமும், சீஷர்களின் இருதயம் கலங்கியிருந்ததினாலும் மற்றும் தாம் சீஷர்களை விட்டுப் பிரியவேண்டியிருந்தது குறித்தும், அவர்களுடைய எதிர்க்கால அனுபவங்கள் குறித்தும் கர்த்தரும் மனதில் கொண்டிருந்ததினாலும், அவர் திராட்சச்செடியின் உவமையை அவர்களுக்குக் கூறினார். கர்த்தருடைய மற்ற உவமைகளைப் போலவே, இதுவும் அவர்கள் அனைவராலும் ஏதோ ஒன்றை வழியில் பார்த்து, இந்த உவமையின் காரியங்களைக் கூறினார் எனச் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். போகும் வழியில் காணப்பட்ட திராட்சத்தோட்டங்களானது, இவ்வுவமை பேசப்படுவதற்குத் தூண்டியிருக்கலாம் எனச் சிலர் எண்ணுகின்றனர். இன்னும் சிலர், கர்த்தரும், சீஷர்களும் மாபெரும் பொன்னினால் செய்யப்பட்ட திராட்சச்செடியை உடைய ஆலயத்தின் பொன்னினாலான நுழைவாயிலை அநேகமாய்க் கடந்துப் பிரயாணித்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்த நுழைவாயிலில் காணப்படும் பொன்னினாலான திராட்சச்செடி குறித்து **யோசப்பஸ்** அவர்கள், "அதன் குலைகள் மனிதனுடைய உயரத்திற்குரிய உயரம் கொண்டிருந்தது" என்று விவரிக்கின்றார். வேறொரு யூத எழுத்தாளர் பின்வருமாறு கூறுகின்றார் . . . "இலைகளும், மொக்குகளும் மங்கலான செந்நிற பொன்னினாலும், அதன் குலைகள் மஞ்சள் நிற பொன்னினாலும், அதன் திராட்சப்பழங்கள் விலையேறப்பெற்ற கற்களினாலும் செய்யப்பட்டிருந்தது." இன்றைய நாட்களில் ஐசுவரியவான்களால், ஆலயங்களுக்கு ஜன்னல்கள் காணிக்கையாக வழங்கப்படுவதுபோன்று, அன்று ஐசுவரியவான்களால் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பொன்னினாலான இலை (அ) கொடி (அ) குலை காரணமாக, நுழைவாயிலில் காணப்பட்ட பொன்னினாலான திராட்சச்செடியானது வளர்ந்துகொண்டிருந்தது என யூத அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாம் மெய்யான திராட்சச்செடியாக இருப்பதாகவும், தம்முடைய பிதா மெய்யான திராட்சச்செடியை நட்ட மெய்யான திராட்சத்தோட்டக்காரராக இருப்பதாகவும் மற்றும் தம்முடைய பின்னடியார்கள் அந்தத் திராட்சச்செடியின் மெய்யான கொடிகளாக இருப்பதாகவும் கர்த்தர் கூறுகின்றார். "மெய்யான திராட்சச்செடி" என்ற வார்த்தையானது, பொய்யான திராட்சச்செடி ஒன்றிருக்கின்றது எனும் கருத்தைக்கொடுக்கின்றதாய் இருக்கின்றது. மேலும் இந்தக் கருத்தானது வெளிப்படுத்தின விசேஷத்தில் அடையாளங்கள் வாயிலாகக் கர்த்தருடைய ஜனங்களுக்கு, நம்முடைய கர்த்தர் அளித்திட்ட கடைசி செய்தியில், அழுத்தத்துடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தில், "பூமியின் திராட்சப்பழங்கள்" அறுக்கப்படுவதையும், அதை இந்த யுகத்தின் முடிவில் தேவனுடைய கோபாக்கினை எனும் பெரிய ஆலையில் போடப்படுவதையும் குறித்துக் கர்த்தர் பேசியுள்ளார் (வெளிப்படுத்தல் 14:19). ஆகவே "மெய்யான திராட்சச்செடி" என்ற கர்த்தருடைய வார்த்தையை, அப்போஸ்தலர்களால் கிரகித்துக்கொள்ள முடிந்ததைக்காட்டிலும் ஆழமான அர்த்தம் காணப்பட்டிருக்க வேண்டும். பூமிக்குரிய பொய்யான பூமியின் திராட்சச்செடியும், பிதாவினால் நடப்பட்ட மெய்யான திராட்சச்செடியும், இரண்டும் வளர்ந்திருக்கிற காலப்பகுதியில் நாம் வாழ்ந்துக் கொண்டிருப்பதினால், இந்த இரண்டு திராட்சச் செடிகளுக்கு இடையிலான வித்தியாசத்தைப் பார்ப்பதற்கும் மற்றும் பூமியின் திராட்சச்செடி என்பது, பரம திராட்சச்செடிக்கான போலி என்பதைப் பார்ப்பதற்கும் உரிய வாய்ப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இந்த விஷயத்தை நாம் எந்தளவுக்குத் தெளிவாகப் புரிந்துக்கொள்கின்றோமோ, அவ்வளவுக்குக் கர்த்தருடைய (இந்தத் திராட்சச்செடி பற்றின) உவமையைப் புரிந்துக்கொள்ள நாம் உதவப்படுகின்றவர்களாய் மாத்திரமல்லாமல், அதனை நம்முடைய அன்றாட ஜீவியத்தில் செயல்படுத்தவும் நாம்

உதவப்படுகின்றவர்களாய்க் காணப்படுவோம். பொய்யான திராட்சச்செடியானது, தெய்வீகமான தோட்டக்காரருடைய பராமரிப்பின் கீழ்க் காணப்படாததால், பொய்யான திராட்சச்செடி (அ) பொய்யான கொடிகள் மற்றும் பொய்யான கொள்கைகள் மூலம் நாம் வஞ்சிக்கப்பட்டுவிடுவதற்கும், தவறாய்ப் புரிந்துகொள்வதற்கும், தவறாய்ப் பொருள் கொள்வதற்குமுரிய அபாயத்தில் நாம் இல்லை.

## "பூமியின் திராட்சச்செடி"

பூமியின் திராட்சச்செடி என்பது, பூமிக்குரிய ஞானத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பெயரளவிலான கிறிஸ்தவ அமைப்பாகும். இதன் கொடிகள், கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் கூட்டத்தினரைக் குறிக்கின்றது. இதன் கனிகளானது, ஆலயங்கள், மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள், சிறிய ஆலயங்கள், தலைமை கிறிஸ்தவ ஆலயங்கள், ஜெபக் கூடாரங்கள் முதலியவைகளையும், அரசியல் வல்லமை, மனுஷர் மத்தியில் கனம், ஆஸ்தி மற்றும் சமுதாய அந்தஸ்து என்பவைகளையும் குறிக்கின்றது. பொய்யான திராட்சச்செடியானது உலகத்தில் மகா பெரியதாகவும், செல்வாக்குமிக்கதாகவும் காணப்படுகின்றது; மற்றும் அதன் கொடிகளில், உலகத்தின் ஆவி ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த உலகத்தின் ஆவியானது, அதன் சகல காரியங்களை வழிநடத்துகின்றதாயும், முற்றிலும் மோசமானதாக இல்லை என்றாலும், முற்றிலும் உலகப்பிரகாரமாக இருக்கும் கனிகளைக் கொடுப்பதற்கு உதவுவதாகவும் இருக்கின்றது. இந்த கனிகள் உலகப்பிரகாரமாக இருப்பதினாலும், பரத்துக்குரியதாய் இருப்பதைப்பார்க்கிலும் நடைமுறை சார்ந்ததாக இருப்பதினாலும் விரும்பவும் படுகின்றது, அங்கீகரிக்கவும் படுகின்றது. இந்தப் பொய்யான திராட்சச்செடியானது அருமையாக வளர்ந்துள்ளது, 300 கொடிகளைக் கொண்டுள்ளது மற்றும் 400 மில்லியன் ஆதரவாளர்கள் இருப்பதாகவும் கூறிக்கொள்கின்றது. மேலும், அதன் கணக்கற்ற சொத்துக்களை வைத்தும், அதன் ஆதரவாளர்களை வைத்தும் பார்க்கையில், உலகத்தின் ஆஸ்திகள் மீது, அதற்கு அதிகாரம் இருக்கின்றது எனச் சொல்லப்படலாம்.

பூமியின் திராட்சச்செடியானது, மகா பெரியதாகவும், அருமையானதாகவும் மனுஷருடைய கண்களுக்குக் காணப்படுகின்றது. ஆனால், அறுவடை காலமோ, இந்தப் பெயரளவிலான அமைப்புகள், பிதாவின் வலது கையினுடைய கிரியையாகிய திராட்சச்செடி அல்ல என்பதைக் காண்பித்து விடும்; மேலும், அறுவடை காலமானது, இந்தப் பெயரளவிலான அமைப்புகள்தான், கர்த்தரால் (வெளிப்படுத்தின விசேஷத்தில், படத்தோற்றமாக விவரிக்கப்பட்டுள்ளப்படி) வேரோடு பிடுங்கப்பட்டு, அழிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ள அமைப்பு என்பதைக் காண்பித்து விடும். சமீபித்துக் கொண்டிருக்கும் மகா உபத்திரவக் காலத்தில் அதாவது, வேத வாக்கியங்கள் போதிக்கின்றன என நாம் நம்புகின்றபடி, இப்பொழுது துவங்கி உலகத்தின் மீது பத்து வருடங்கள் முழுமையாய்க் காணப்படும் எனச் சொல்லப்படும் மகா உபத்திரவக் காலத்தில், அதாவது தேவனுடைய கோபாக்கினை எனும் பெரிய ஆலையிலிருந்து வரும் பாபிலோனின் திராட்சப்பழங்களுடைய இரத்தம் என்பது, உலகத்திற்கான உபத்திரவம் மற்றும் கடுந்துயரத்தின் பெரும் வெள்ளத்தைக் குறிக்கின்றதாய் இருக்கும். எனினும் அக்கால கட்டத்தில் மெய்யான திராட்சச்செடியும், அதன் கொடிகளும் மகிமையடைந்துவிடுவார்கள் மற்றும் அவர்கள் சரியான கனிகளைக் கொடுத்ததின் விளைவுகள் என்பது, பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆசீர்வாதங்களைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

"மெய்யான திராட்சச்செடியைக்" குறித்தும், அதன் கொடிகளாக நமக்கு அதனோடு இருக்கும் உறவைக் குறித்தும், மாபெரும் தோட்டக்காரர் எதிர்ப்பார்த்திடும் கனியாகிய குணலட்சணத்தைக் குறித்துமுள்ள, நம்முடைய கர்த்தருடைய உவமைகளில் கடைசி உவமையான இது, நமக்கு மிகுந்த நன்மையைத் தரத்தக்கதாகவும், நம்மைப் பெலப்படுத்தத்தக்கதாகவும், நம்மை உற்சாகப்படுத்தத்தக்கதாகவும், அதன் நோக்கத்திற்கு ஏற்ப நமக்கு உதவத்தக்கதாகவும் நாம் கவனமாய்க் கவனிப்போமாக.

## "மெய்யான திராட்சச்செடி"

மெய்யான திராட்சச்செடியின் கொடிகள் என்பது, பிரிவுகள் கூட்டத்தாரில்லை. மேலும் கர்த்தருடைய ஜனங்களாக இருப்பவர்கள், மனுஷர்களுடைய இந்த அமைப்புகளில்

ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது, எதிராளியானவனுடைய வஞ்சனையாக மாத்திரமே இருக்கின்றது. அப்போஸ்தலர்கள் லுத்தரன்களாக, மெத்தடிஸ்டுகளாக, பிரஸ்பெட்டேரியர்களாக இராததுபோல, கர்த்தருடைய பின்னடியார்களில் எவரும் கூட இப்படியாகக் (பிரிவினர்களாக) காணப்படக்கூடாது. மேலும் எதிராளியானவனுடைய தவறான போதனைகளில் நாம் குருடாக்கப்பட்டிருந்தபடியினால், இப்படிப்பட்டதான தவறில் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் (நாம்) காணப்பட்டிருந்தோம். அப்போஸ்தலர்கள் ஒருவரோடொருவர் இணைந்துகொள்ளவில்லை. மாறாக ஒவ்வொரு அப்போஸ்தலரும் இருதயத்திலும், விசுவாசத்திலும், அன்பிலும் கர்த்தருக்கான பக்தியிலும் ஒன்றுபட்டு இருந்தார்கள். அதுபோலவே நாமும் அப்போஸ்தலர்களுடன் இணைந்துகொள்ளவுங்கூடாது. நான் பவுலைச் சார்ந்தவன், நான் பேதுருவைச் சார்ந்தவன் என்றும் கூறவுங்கூடாது. மாறாக ஒவ்வொருவரும் ஓர் அங்கமாக, ஒரு கொடியாகத் தனிப்பட்ட விதத்தில் கர்த்தருடன்தான் இணைந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் கனிக்கொடுக்கத்தக்கதாகத் திராட்சச்செடியின் உயிர்சாற்றைப் பெற்றிருக்க வேண்டும். கர்த்தர் பிரியப்படும் உண்மையான கனிகளைக் கொடுக்கும் விஷயத்திற்கு சபைப் பரிவு எனும் உயிர்ச்சாறு உதவுவதாக இராமல், மாறாக இடையூறாக மாத்திரமே இருக்கிறது. இதனால் மெய்யான திராட்சச்செடியின் எந்தக் கொடிகளும், தவறுதலாகப் பூமியின் திராட்சச்கொடியாகிய பெயரளவிலான சபை அமைப்புடன் இணைந்து இருக்காது என்று நாம் சொல்லவரவில்லை. இப்படியாகவும் கொடி இருக்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம்; மற்றும், "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படி, அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று கர்த்தருடைய குரல் அழைப்பதையும் நாம் ஒப்புக்கொள்கின்றோம். தாய் மற்றும் மகள்கள் மீது வரவிருக்கும் மாபெரும் உபத்திரவத்தை, இவ்வழைப்பில் கர்த்தர் பேசுகின்றார்.

கொடிகள் என்பது சபை பிரிவுகளையும், கூட்டத்தினரையும் குறிக்காமல் மாறாக, கர்த்தருடன் ஒன்றுப்பட்டுள்ள தனிநபர்களைக் குறிக்கின்றபடியால், இந்த உவமை போதிப்பது என்னவெனில் நமது கர்த்தர் சபை பிரிவுகளையும், கூட்டங்களையும் கிள்ளிவிடாமல், மாறாக தனிப்பட்ட கிறிஸ்தவர்களையேதான் கிள்ளிவிடுகின்றார். அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, எங்கெல்லாம் காணப்பட்டாலும் சரி, அவர்களை அவர் கிள்ளிவிடுகின்றார். "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோத்தேயு 2:19). இவ்விஷயம் தொடர்பாக, "என்னில் கனிக்கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிக்கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக்கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்" (கிள்ளிவிடுகின்றார்) என்று கர்த்தருடைய வார்த்தை காணப்படுகின்றது (யோவான் 15:2). நம்முடைய இரட்சிப்பும், கர்த்தருடனான நம்முடைய உறவு நிலையும் தனிப்பட்ட விதத்தில் மற்றும் தனிப்பட்ட காரியங்களாகவே இருக்கின்றது என வேத வாக்கியங்கள் அனைத்தும் நமக்குப் போதிக்கின்றன. நாம் சபையோராகவும், கூட்டங்களாகவும், சபை பிரிவாகவும், குடும்பங்களாகவும் இரட்சிக்கப்படுவதில்லை என்றும், மாறாக நாம் உயிர்சாற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், நாம் கர்த்தருடைய சரீரமாகிய சபையின் அங்கத்தினராகக் கருதப்பட வேண்டுமெனில், நாம் தனிப்பட்ட விதத்தில் திராட்சச்செடியுடன் இணைந்திருக்க வேண்டுமென்றும் வேதவாக்கியங்கள் நமக்குப் போதிக்கின்றன.

## "நம்முடைய ஒற்றுமைக்கான அநேக உதாரணங்கள்"

தமக்கும், தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையை விவரிப்பதற்கென, அனைத்து ரகமான உதாரணங்களையும் கர்த்தர் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இயற்கையின் கனிப்பொருள் பெரும் பிரிவிலிருந்து (Mineral Kingdom) அவர் உதாரணத்தை வழங்குகின்றார். அதாவது நாம் தேவனுடைய ஆலயமாக இருக்கத்தக்கதாக, அஸ்திபாரமும், மூலைக்கல்லாகவும் இருக்கும் தம் மேல், நாம் ஜீவனுள்ள கற்களாக ஒன்றாய்க் கட்டப்பட்டுள்ளதைக் குறித்துக் கூறியுள்ளார். மிருகங்கள் பிரிவிலிருந்தும் (Animal Kingdom) நமது கர்த்தர் இந்த ஒற்றுமைக்கான உதாரணத்தை எடுக்கின்றார். அதாவது, தம்மை நல்ல மேய்ப்பனுக்கு ஒப்பிட்டு, தம்முடைய உண்மையான பின்னடியார்களை, தம்முடைய பராமரிப்பின் கீழ், தம்முடைய ஐக்கியத்தில் ஒன்றுபட்டிருக்கும் ஆடுகளுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இந்த ஒற்றுமை குறித்த உதாரணத்தை அவர் தாவரங்களின் பிரிவிலிருந்தும் (Vegetable Kingdom) எடுக்கின்றார். அதாவது தம்மைத்

திராட்சச்செடி என்றும், தம்முடைய உண்மையான சீஷர்கள் கொடிகள் என்றும் கூறியுள்ளார். குடும்ப உறவிலிருந்து, உண்மையான கணவன் மற்றும் உண்மையான மனைவி குறித்தும் இருதயத்திலும் மற்றும் அனைத்து விஷயத்திலும் அவர்களது முற்றும் முழுமையான ஒன்றுப்பட்ட நிலையைக் குறித்தும் உதாரணமாக எடுத்துக் கூறியுள்ளார். அதே குடும்ப உறவிலிருந்து, தகப்பன் சிருஷ்டிகரைக் குறிக்கின்ற விதத்திலும், மூத்தக் குமாரன் தம்மைக் குறிகின்ற விதத்திலும், சகோதரர்கள் தம்முடைய அனைத்துப் பின்னடியார்களையும் குறிக்கின்ற நிலையிலும் இருக்கும் மற்றுமொரு உதாரணத்தை எடுத்துக்கூறியுள்ளார். மனித சரீரத்திலிருந்து நமக்கு இன்னுமொரு உதாரணமும் இருக்கின்றது. அதாவது கிறிஸ்துதாமே தம்முடைய சரீரமாக இருக்கும் சபைக்குத் தலையாக இருக்கின்றார். ஏனெனில் அப்போஸ்தலர் கூறுவதுபோல, நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் தனித்தனி அங்கங்களாக இருக்கின்றோம். இவைகளையெல்லாம் நமது விசுவாசமானது, எந்தளவுக்குக் கிரகித்துக்கொள்கின்றதோ மற்றும் இவைகளின் உண்மைத்தன்மையை நாம் எந்தளவுக்கு உணர்ந்துக்கொள்கின்றோமோ, அதேயளவுக்கு நம்மில் நற்கிரியையை ஆரம்பித்தவர், அதை நிறைவேற்றுவதற்கு விருப்பமும், வல்லமையையும் கொண்டிருக்கின்றார் என்பதில் நாம் உறுதியான விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டிருப்போம். நேர்மையான மற்றும் கீழ்ப்படிதலுள்ள இருதயம் கொண்டவன் விசுவாசம் வைக்கும்போது, தேவையானபொழுதெல்லாம், சோதனையான ஒவ்வொரு வேளையிலும் பிரச்சனையான மற்றும் குழப்பமான ஒவ்வொரு வேளையிலும், ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் தனக்குப் பலத்தையும், கிருபையையும் பெற்றிருக்கின்றான். அதாவது சமநிலையில் இருப்பதற்கெனப் (கப்பலில், இரயில் பாதையடியில்) போடப்பட்டிருக்கும் பாரம்/சரளைக்கல்லை நாம் பெற்றிருப்போம்; மற்றும் ஜீவியத்தின் சகல அனுபவங்களிலிருந்து, கசப்பிலும், தித்திப்பிலும் நன்மையை அடைய நமக்கு உதவிடும்.

தம்முடைய நாமத்தில், தம்முடைய சீஷர்களில் இரண்டு அல்லது மூன்று பேர் ஒன்றுகூடினால், அவர்கள் சபையாக (அ) கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றனர் என்றும், அவர்களுடைய இருதயங்கள் எந்தளவுக்கு நேர்மையாகக் காணப்பட்டு, தம்முடைய வழிநடத்துதலை நாடுகின்றதோ, அந்தளவுக்கு அவர்களை ஆசீர்வதிக்கத்தக்கதாக (தலையாக), தாம் அவர்களோடு காணப்படுகின்றார் என்றுமுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகளானது பின்வருமாறு எண்ணிக்கொள்ள வழிநடத்துகின்றது; அதாவது எங்கெல்லாம் அவருடைய அங்கங்கள் இரண்டு அல்லது மூன்று பேர் காணப்படுகின்றார்களோ, அங்குத் திராட்சச்செடியின் உருவகத்தை நாம் பார்க்கலாம்; மேலும் அந்த இரண்டு அல்லது மூன்று பேருக்குக் கொடிகளுக்கான ஆசீர்வாதங்கள் அனைத்தும், கனிக்கொடுப்பதற்கான சிலாக்கியங்கள் அனைத்தும் கிடைக்கும். எனினும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்கள் அடங்கிய ஒவ்வொரு சிறு கூட்டத்தார் மத்தியிலும், மெய்யான கொடிகள் மாத்திரம் காணப்படத்தக்கதாக முழுமையான கிள்ளிவிடுதல்களும், முழுமையாய் எரிக்கப்படுதலும் காணப்படும் என்று நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் எனக் கர்த்தர் விரும்பவில்லை. நம்மைத் தனித்தனியாகவும், ஒட்டுமொத்தமாகவும் கையாளுகின்றார் என்றும், அவருடனான நமது தனிப்பட்ட உறவைத் தக்கவைப்பது என்பது அவருடனான ஐக்கியம் மற்றும் உறவின் பலன்களில் ஒன்றாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதன் முலமாக, அதாவது திராட்சச்செடியின் உயிர்சாற்றைப் பெற்றுக்கொள்வதன் மூலமாக மாத்திரமே என்பதும்தான், அவர் தெரிவிப்பவைகளாகும்.

பரிசுத்த ஆவியை நாம் நல்லதும், உத்தமுமான இருதயத்திற்குள் பெற்றுக்கொள்ளும்போது, விளைவு கனிக்கொடுப்பது என்பதாக இருப்பினும், நமது கர்த்தர் கொடுத்துள்ள உதாரணமானது, சிலர் திராட்சச்செடியின் மெய்யான கொடிகளாக ஆகியும், கவனிக்கத் தவறிப்போய், கனிக்கொடுக்கும் தன்மை இல்லாமல் காணப்படுகின்றனர் என்று போதிக்கின்றது. சில சமயம் நல்ல அடித்தண்டு மற்றும் வேரிலிருந்து வளரும் ஆரோக்கியமான மற்றும் திடகாத்திரமான கொடியானது, கனிகொடுக்கும் தன்மை இல்லாமல் காணப்படுகின்றது. அனுபவமிக்க கண்களையுடைய தோட்டக்காரர், திராட்சக்குலைகளைக் கொணரும் மொக்குகளுக்கும், இலைகளை மாத்திரம் கொணரும் மொக்குகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் அறிகின்றார். கனிக்குரிய மொக்குகள் அற்றவைகள் "உறிஞ்சிகள்" என்று அழைக்கப்படுகின்றன; காரணம் இவைகள் திராட்சச்செடியின் சாற்றை மாத்திரம் உறிஞ்சிக்கொள்கின்றது மற்றும் தோட்டக்காரரால் நாடப்படும் எவ்விதமான கனிகளைக் கொடுப்பதுமில்லை. இவைகள் கிள்ளிவிடப்படுகின்றன அல்லது வெட்டிவிடப்படுகின்றன, அதாவது வெளிப்புறமான அழகு தோற்றத்திற்கெனத்

திராட்சச்செடியின் சாறு வீணடிக்கப்படாமல், மாறாக கனிக்கொடுக்கும் நோக்கத்திற்கெனச் சேமித்து வைக்கப்படத்தக்கதாகக் கிள்ளிவிடப்படுகின்றன அல்லது வெட்டிவிடப்படுகின்றன. உண்மையில் இந்த உறிஞ்சிகள் போன்று, கிறிஸ்தவர்களென அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் வகுப்பார் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களால் முடிந்தமட்டும் திராட்சச்செடியின் நீதியைச் சுயநலத்துடன் தங்களுக்குரியதாக்கிக்கொண்டு, இலைகள் அல்லது அறிக்கைகள் பண்ணுவதன் மூலமாக, உலகத்தில் வெளிவேஷமிட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் கர்த்தரால் எதிர்ப்பார்க்கப்படுகின்றதும், பலிச் செலுத்துவதன் மூலமாக மாத்திரமே உண்டாக்கப்படுகின்றதுமான கனிகளைக் கொடுக்கும், எண்ணம் கூட இல்லாதவர்களாய்க் காணப்படுவார்கள்.

## "கிள்ளிவிடப்படுவதற்குரிய நோக்கம்"

உறிஞ்சிகள் தவிர, கனிக்கான மொக்குகளைக்கொண்டிருக்கும் சில கொடிகளானது, ஒருவேளை அதன் போக்கின்படியே விடப்பட்டு, கொடிகளாக மாத்திரம் வளரும்படி விடப்பட்டால், நன்கு கனிந்த அளவிலுள்ள கனிகளை ஒருபோதும் கொடுப்பதில்லை. ஆகவே ஞானமுள்ள தோட்டக்காரர் கனிக்கான மொக்கினைக் கண்டு, அதில் மகிழ்ச்சியடைந்து, கொடிக்குப் பாதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்றில்லாமல், மாறாக அதனை அதிகமான கனிக்கொடுக்கத்தக்கதாக, ஆக்கத்தக்கதாக, கனிக்கான மொக்குகளுக்கு மேலாகக் காணப்படும் முளைகளைக் கிள்ளி எறிந்துவிடுகின்றார். இதுபோலவே விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் மூலமாகக் கர்த்தருடன் இணைந்து கொடிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டு, கர்த்தர் எதிர்ப்பார்க்கும் நற்கனிகளைக் கொடுப்பதற்கு வாஞ்சிக்கும் கொடிகளாகிய நம் விஷயத்திலும் காணப்படுகின்றது. நாம் அதிகமான கனிக்கொடுக்கத்தக்கதாகவும், நாம் கொடுக்கின்ற கனிகள் அவருக்கு மிகவும் பிரியமாகவும், பெரிய கனியாகவும், நல்ல கனியாகவும், விலையேறப்பெற்ற கனியாகவும், மனதிற்கினிய கனியாகவும் இருக்கத்தக்கதாகவும், நமக்குத் தோட்டக்காரரின் பராமரிப்பு அவசியமாய் இருக்கின்றது. கர்த்தருடைய கிள்ளிவிடுதலின் முறைகளை, அனைத்துக் கொடிகளும் புரிந்துக்கொள்ள வேண்டும்; இல்லையேல் கொடிகள் சோர்வடைந்து வாடி வதங்கி, சரியான கனிகளைக் கொடுக்கத் தவறிவிடும்.

மாபெரும் தோட்டக்காரர், சிலசமயம் பூமிக்குரிய ஆஸ்தி (அ) சொத்தை எடுத்துவிடுவதன் மூலமாக அல்லது சிலசமயம் மனதில் பேணி சீராட்டின திட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளைத் தடைப்பண்ணுவதன் மூலமாக, கிறிஸ்துவின் கொடிகளைக் கிள்ளிவிடுகின்றார். சிலசமயம் துன்பங்களை அனுமதிப்பதன் மூலமாகவும், நற்பெயரையும், நற்கீர்த்தியையும் இழக்கச் செய்வதன் மூலமாகவும் அவர் நம்மை கிள்ளிவிடுகின்றார். சிலசமயம் அவர் விரும்பும் அதிகமான கனிகளைக்கொடுப்பதற்குத் தடையான விதத்திலுள்ள, நம்முடைய இருதயத்தின் கொடிச்சுருள்கள் பலமாய்ப் படர்ந்திருக்கும் பூமிக்குரிய தோழமைகளை இழக்கச் செய்வதன் மூலம் அவர் நம்மைக் கிள்ளிவிடுகின்றார். "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்" எனத் தீர்க்கத்தரிசி கூறியுள்ளது போன்று, சில சமயம் நம்மை உபத்திரவத்திற்குள்ளாக்கும் நோய்களை அவர் அனுமதிப்பதும், இந்தக் கிள்ளிவிடுதல்களில் ஒன்றாகும். கர்த்தருடைய அருமையான ஜனங்களில் அநேகர், உபத்திரவத்தின் படுக்கையில்தான், மிகவும் விலையேறப்பெற்றதான தங்களுக்குரிய படிப்பினைகளை அடைந்திருக்கின்றனர்.

சிலர் தாங்கள் எவ்வாறு பூமிக்குரிய விஷயங்களிலும், கவனத்தை ஈர்க்கும் காரியங்களிலும் மூழ்கிக் காணப்பட்டப்படியினால், யுகங்களைக் குறித்த தெய்வீகத் திட்டத்தைப் படிப்பதற்கும், தங்களுடைய சொந்த இருதயங்களைச் செம்மைப்படுத்துவதற்கும், ஆவியின் கனிகளைக் கொணர்வதற்கும், தங்களுக்கு நேரமில்லாமல் காணப்பட்டது பற்றியும் மற்றும் எவ்வாறு கர்த்தர் அதிகமான இரக்கத்துடன் தங்களைக் கொஞ்ச காலம் ஓய்ந்திருக்கப்பண்ணி, சிந்திப்பதற்கும், கிறிஸ்தவ வளர்ச்சியை அடைவதற்கும், தாங்கள் கிருபையில் வளரத்தக்கதாக, அறிவின் வளர்ச்சியை அடைவதற்கும் தங்களுக்கு அவசியமாய் இருந்த வாய்ப்புகளைக் கொடுத்தார் என்பது பற்றியும் நமக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். தோட்டக்காரரின் இந்தக் கிள்ளிவிடுதல்கள் காயப்படுத்துவதாகவும், பாதிப்பு ஏற்படுத்துவதாகவும், உண்மையான கொடிகள் எண்ணிக்கொள்ளாமல் மாறாக அவரை அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்ற வேதவாக்கியங்களின் நல்ல வாக்குத்தத்தத்திற்கு ஏற்பவே எண்ணிக்கொள்ள வேண்டும். அதாவது, மெய்யான கனிகளைக் கொடுக்கும்

திராட்சச்செடியின் கொடிகளாக ஆக்குவதற்கே என்று எண்ணிக்கொள்ள வேண்டும். இப்படியான கிள்ளிவிடுதல்கள், சோர்வுகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, உற்சாகத்திற்குரிய ஊற்றுகளாகவே நம்மால் சரியான விதத்தில் புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். உலகமானது அதன் போக்கிலேயே விட்டுவிடப்பட்டுள்ளது என்றும், பூமியின் திராட்சச்செடிகளுக்குக் கர்த்தருடைய விசேஷித்த கிள்ளிவிடுதல்கள் இல்லை என்றும், நமக்கு இந்த விசேஷித்த கிள்ளிவிடப்படுதல்கள் காணப்படுவது என்பது பிதா நம்மை அன்புகூர்ந்து, நம்முடைய மேலான நன்மைக்கு ஏதுவாக நமக்காகப் பராமரித்துக் கொள்கின்றார் என்பதற்கான ஆதாரமாய் உள்ளது என்றும் நாம் உணர்ந்துக்கொள்கின்றோம்.

## "நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்"

இந்தப் பாடத்தைத் தம்முடைய சீஷர்களுக்குப் பொருத்தி நமது கர்த்தர், அந்தச் சரியான கிள்ளிவிடுதல் ஏற்கெனவே அந்நாள்வரையிலும் அவர்களிடத்தில் நடந்துக்கொண்டு வருகின்றது என்றும், கனியற்ற கொடியாகிய யூதாஸ் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி அவர்களிடமிருந்து அகற்றப்பட்டுள்ளான் என்றும் சுட்டிக்காட்டினார். ஆகவேதான் அவர், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்"என்று கூறினார்; அதாவது, "உங்களுடைய விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் நேர்மைக் காரணமாக, நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளபட்டுள்ளீர்கள்" என்ற விதத்தில் கூறினார் (யோவா 15:3). இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் 11 அப்போஸ்தலர்களும் எத்துணை சந்தோஷம் அடைந்திருக்க வேண்டும்; மற்றும் அதே வார்த்தைகளின் உண்மையை நமக்குப் பொருத்திப்பார்க்கும்போது, நாமும் எத்துணை சந்தோஷத்தை அடைவோம். கிறிஸ்து மூலமான தேவனுடைய தயவாகிய இந்த மாபெரும் ஈவுக்காகக் கர்த்தருக்கு நன்றி. அதாவது பாவங்களுக்கான மன்னிப்பும், அவருடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்படுதலும் மாத்திரம் அவருக்குள் நமக்கு இருக்காமல், இன்னுமாக நமக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை (அ) உபதேசத்தை ஏற்றுக்கொண்டதன் மூலமாக, சுத்தமானவர்களாக, மெய்யான திராட்சச்செடியின் கொடிகளாக அவருக்குள் நாம் பிதாவானவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்கின்றோம். இத்தோடு எல்லாம் முடியவில்லை, இது வெறும் ஆரம்பம்தான். திராட்சச்செடியுடன் கொடிகள் கொண்டிருக்கும் இந்த ஆசீர்வாதமான உறவில் நாம் தொடர்ந்து நிலைத்திருப்பதையே, இறுதியிலுள்ள நமக்கான ஆசீர்வாதமும், பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுதலும் சார்ந்துள்ளது என்ற காரியமே நினைவில் கொள்வதற்கு அவசியமானதாகும்.

ஒருவேளை நாம் கனிக் கொடுக்கவில்லையெனில், நம்மால் இந்த உறவில் நிலைத்து நிற்க முடியாது. ஒருவேளை நாம் கனிக்கொடுப்போமானால், ஒருவேளை கனிக்கொடுப்பதற்குரிய ஆவியும், மனப்பான்மையும் நாம் பெற்றிருப்போமானால் மற்றும் கர்த்தருடைய கிருபையையும், பலத்தையும், உதவியையும் வாஞ்சிப்போமானால், தேவையான பொழுதெல்லாம் அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாகக் காணப்படும் மற்றும் நம்மை அன்புகூர்ந்து நம்மைத் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வாங்கிக்கொண்டவர் மூலமாக நாம் ஜெயங்கொள்கின்றவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் காணப்படுவோம். கிறிஸ்துவுடன் இணைக்கப்படும் உறவின் காரணமாகவும், அவருடைய திருவுள்ளத்தின்படிச் செய்யத்தக்கதாக, அவருடைய ஆவி மற்றும் அவருடைய வார்த்தையின் வல்லமையானது, நம்மில் விருப்பத்தையும், செய்கையையும், உருவாக்குவதன் காரணமாகவும், அவருடைய கனி நம்மில் உருவாகுகின்றது. ஆகையால் இப்படியாகக் கிறிஸ்துவுடன் நாம் இணையவில்லையெனில், பிதா விரும்பும் கனிகளையும் நாம் கொணரமுடியாது மற்றும் நாம் அவருக்குப் பிரியமாகவும் இருக்க முடியாது. நாம் அவரில் நிலைத்திருந்தால் நாம் அதிகமான கனிக்கொடுப்போம் என்றும், அவரில்லாமல் நம்மால் எதுவும் செய்ய முடியாது மற்றும் பிதா அங்கீகரிக்கத்தக்கதான எவ்விதமான கனியும் பெற்றிருக்க முடியாது என்றும்தான் வாக்குத்தத்தம் காணப்படுகின்றது.

இந்தக் கனிக்கொடுத்தலின் தன்மை என்ன? பிதா நாடும் கனியை நாம் எப்படி அறிந்துக்கொள்ளலாம்? பூமியினுடைய திராட்சச்செடியின் தவறான வழிகாட்டுதல் மற்றும் தவறான முன்னுதாரணம் காரணமாக, கர்த்தர் நன்கு வளர வேண்டும் என விரும்பும் கனிகளானது, மாபெரும் பூமிக்குரிய ஆலயங்கள், அநாதை இல்லங்கள்

முதலானவைகளைக் கட்டுதல் என எண்ணிக்கொள்ளும் நிலைக்கு அநேகர் ஆளாகியுள்ளனர் என்று நாம் பதிலளிக்கின்றோம். இல்லை, ஒருவேளை மேற்கூறியவைதான் கனிகள் என்றால், இயேசுவும், அப்போஸ்தலர்களும் கனிகள் கொடுக்கவில்லை என்பதாகிவிடும். அவர்கள் ஆலயங்கள் (அ) சிறிய ஆலயங்கள் (அ) பெரிய ஆலயங்கள் கட்டவில்லை. அவர்கள் அநாதை இல்லங்கள் (அ) மனநோயாளிக் காப்பகங்கள் (அ) மருத்துவமனைகள் கட்டவில்லை (அ) ஸ்தாபிக்கவில்லை. ஒருவேளை மேற்கூறியவைகள்தான் பிதா நாடும் கனிகள் என்றால், அப்பொழுது கர்த்தரும், அப்போஸ்தலரும் முற்றிலும் தவறு செய்துவிட்டவர்களாக இருப்பார்களே. ஆனால், இயேசுவும், அப்போஸ்தலரும் தவறு செய்யவில்லை என்றும், தவறு வேறு இடத்தில்தான் உள்ளது என்றும் நாம் கூறுகின்றோம். உலகத்தின் ஆவியினால் வழிநடத்தப்பட்ட பூமியின் திராட்சச்செடியானது, பயனுடைமை கொள்கையைப் (utilatarian) பின்பற்றி, உலகம் அங்கீகரிக்கும் வகையான, கனிகளைக்கொணர்ந்துள்ளது என்று நாம் கூறுகின்றோம்.

## "உலகம் ஏற்பாடு செய்துள்ளது"

மருத்துவமனைகள், காப்பகங்கள் முதலியவற்றிற்கு எதிராக, ஒரு வார்த்தைக்கூட நாம் சொல்வதில்லை. இவைகளெல்லாம் மிகவும் நல்லவைகள், மிகவும் விரும்பத்தக்கவைகள், சமுதாயம் மற்றும் நாகரிகத்திற்கு ஏற்றவைகள் என்றே நாம் நம்புகின்றோம். ஆனால் இவைகளையெல்லாம் ஏற்பாடு பண்ணிட, உலகம் கூட முழுத்திறமையுடன் உள்ளது என்றும், இவைகளை ஏற்பாடு பண்ணிட உலகம் கூட ஆயத்தமாயும் இருக்கின்றது என்றும், இன்னும் சொல்லப்போனால் உலகம் கூட உண்மையில் இவைகளை ஏற்பாடும் பண்ணியுள்ளது என்றும் நாம் நம்புகின்றோம். உதாரணத்திற்குத் தூய பிரான்சிஸ், தூய யாக்கோபு, தூய ஆக்நிஸ் மருத்துவமனைகள், காப்பகங்கள் முதலியவைகள், புரட்டஸ்டண்டும் சரி, கத்தோலிக்கமும் சரி அனைத்தும், அதன் பராமரிப்பிற்கு, அரசாங்கத்தின் நன்கொடையினால் ஆதரவு பெற்றிட நாடுகின்றது மற்றும் பெற்றுக்கொள்ளவும் செய்கின்றது; மற்றும் சில கோணங்களில் பார்க்கும்போது இவைகள் அனைத்தின் மீது அரசாங்கத்திற்குப் பொறுப்பும்/அதிகாரமும் காணப்படலாம். ஆனால் இப்பொழுது எந்தளவுக்கு முற்றும் முழுமையாக இவைகள் மீது, இன்று அரசாங்கம் அதிகாரம் அடைந்துள்ளது என்பது நமக்குத் தெரியவில்லை. மெய்யான திராட்சச்செடியின் மெய்யான கொடிகளில் எதுவும், இந்தப் பூமிக்குரிய அமைப்புகளில் ஏனும் ஒன்றுடன் தொடர்புக்குள் இராது என்று சொல்ல நாம் வரவில்லை. அதேசமயம் இப்படியாக மருத்துவமனைகள், காப்பகங்கள் உருவாக்கிடுவது, கர்த்தருடைய உவமையின்படியான கொடிகளின் கனிகள் இல்லையென்றும், ஒருவேளை கொடிகள் சரீரத்தின் அங்கங்களாகவும், அதேசமயம் பாபிலோனின் அங்கங்களாகவும் இருப்பினும், பிதா விரும்பும் கனிகளையும், மற்ற நல்ல கனிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் நாம் முன்வைக்கின்றோம்.

சத்தியத்திற்கான ஊழியங்கள் அதாவது சத்தியத்தைப் பரப்புதல், சத்தியத்தை எடுத்துக் கூறுதல், சிலரை இருளினின்று சத்தியத்தின் வெளிச்சத்திற்கும் மற்றும் அறிவிற்கும் கொண்டுவருதல், சத்தியத்தை வெளிப்படுத்துவதற்கெனப் பணத்தைச் செலவிடுதல் என்பது சிலசமயம் ஆவியின் கனிகள் என்றும், கொடிகள் கொடுக்க வேண்டும் என்று கர்த்தரால் எதிர்ப்பார்க்கப்படும் கனிகள் என்றும் கருதப்படுகின்றது. கனி இதுவல்ல! இவைகளைக்காட்டிலும் மேன்மையானதாகவும், உயர்ந்ததாகவும் இருப்பவைதான் கனிகள். மேலும், இந்தக் கனிகள், அப்போஸ்தலரால் ஆவியின் கனிகள் என்று விவரிக்கப்படுகின்றது. திராட்சச்செடியின் ஆவியானது, அனைத்துக் கொடிகளிலும் ஊடுருவிட வேண்டும் மற்றும் திராட்சச்செடியின் கனிகளானது, ஒவ்வொரு கொடியிலும் காணப்பட வேண்டும். இந்த ஆவியின் கனிகள், சாந்தமாகவும், பொறுமையாகவும், நற்குணமாகவும், நீடிய பொறுமையாகவும், சகோதர சிநேகமாகவும், அன்பாகவும் பட்டியலிடப்படுகின்றது. ஒருவேளை இவைகளெல்லாம் நம்மில் காணப்பட்டு, பெருகும்போது, இவைகள் நம்மை நமது கர்த்தரும், இரட்சகருமானவர் பற்றின அறிவில் வீணரும், கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்.

இந்தக் கனிகள் அனைத்தும் ஏதோ சிலவிதத்தில் ஒன்றாகத்தான் உள்ளது. அதாவது கிறிஸ்தவனுடைய பொறுமையின் சாரம் அன்பாக இருக்கின்றது. நம்பிக்கை மற்றும் விசுவாசம் மற்றும் சந்தோஷத்தின் சாரம், நம்முடைய பிதாவுக்காகக்கொண்டிருக்கும்

அன்பாகவும், நமக்கான அவருடைய வாக்குத்தத்தத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற அவருடைய அன்பின் மீதான நமது நம்பிக்கையாகவும் இருக்கின்றது. ஆகையால் ஆவியின் இந்த அனைத்துக் கனிகளும், கிருபைகளும், அன்பு என்னும் ஒரே வார்த்தையின் மூலம் சொல்லப்படலாம். ஒவ்வொரு கொடியும், கொடிக்கான தன்னுடைய ஸ்தானத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், பிற்பாடு மகிமையடைந்த திராட்சச்செடியின் கொடியாகவும் வேண்டுமெனில், இந்தக் கனிகள் ஒவ்வொரு கொடியினிடத்திலும் காணப்பட வேண்டும். இவைகளில்லாமல் இருந்தும், மற்ற நல்ல விஷயங்கள் நம்மில் இருப்பதினால், தெய்வீகப் பரிசோதனையில் தப்பித்துக்கொள்ளலாம் என எண்ணிக்கொண்டு, நாம் நம்மையே வஞ்சித்துக்கொள்ளாமல் இருப்போமாக. மற்றவைகள் அதாவது, நல்ல கிரியைகள், அதாவது சத்தியத்தை நாடுவது, (volumes) வேதாகம ஆராய்ச்சிப்பாடங்களின் தொகுதிகளை விநியோகித்தல் என்பவைகள், நம்முடைய இருதயத்தின் கனிகளின் விளைவாக இருப்பதற்கேற்பவே, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதாய் இருக்கின்றது. இதை அழுத்தமாக அப்போஸ்தலர், "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என்று கூறுகின்றார் (1 கொரிந்தியர் 13:3).

இதே கருத்துக் கர்த்தருக்கான ஊழியத்தின் விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது. ஒருவேளை நாம் ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு மணி நேரத்தையும் அறுவடை வேலைகளில் செலவிட்டாலும், ஒருவேளை பிரதிகள் மற்றும் புத்தகங்கள் அச்சிடப்படுவதற்கென நம்முடைய பணம் அனைத்தையும் கொடுத்துவிட்டாலும் அல்லது கர்த்தருடைய நோக்கத்திற்கடுத்த ஊழியங்களுக்காக ஏதாவது விதத்தில் நம்மையே நாம் பயன்படுத்திக்கொண்டாலும், இவைகள் நம்முடைய இருதயத்தினுடைய அன்பின் விளைவாக இல்லையெனில், இவைகளினால் நமக்குப் பிரயோஜனம் எதுவும் இராது. ஆகவே நம்முடைய இருதயத்தில், பரிசுத்த ஆவியின் வரங்களாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, அன்பு முதலியவைகளை நாம் வளர்க்க வேண்டும்; மற்றும் இவைகள் கர்த்தருக்குப் பிரியமாக இருக்கத்தக்கதாகவும், "அதிகமான கனிகளைக்" கொடுக்கத்தக்கதாகவும், நாம் பெருகப் பண்ணவும் வேண்டும் என்பதே காரியமாகும். பல்வேறு வழிகளில், ஒருவேளை ஏழைகளுக்கு உதவி பண்ணுவதன் மூலமாகவும், ஒருவேளை இரத்தச் சாட்சியாக நாம் மரிக்கத்தக்கதாக, நமது சரீரங்கள் சுட்டெரிக்கப்படத்தக்கதாக, சத்தியத்தை முன் வைப்பதில் அப்படிப்பட்ட ஓர் உண்மையைக் காட்டுவதன் மூலமாகவும் சந்தேகத்திற்கிடமின்றி இந்தக் கனிகளுடைய வெளிப்படுத்தல்கள் காணப்படும். ஒருவேளை நீதியின் கொள்கைக்கான நமது உண்மையின் காரணமாகவும், கர்த்தருக்கான நமது அன்பு மற்றும் நேர்மையின் காரணமாகவும் இப்படியாக நமக்குப் பொருள் இழப்புகள் (அ) சரீரம் சுட்டெரிக்கப்படுதல் சம்பவிக்குமாயின், அப்பொழுது நாம் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

## "வாடின கொடிகள் சுட்டெரிக்கப்படுதல்"

திராட்சச்செடியின் கனிகளைக் கொடுக்காமல் இருப்பவர்கள் கொடிகள் நிலையிலிருந்து வெட்டப்பட்டு, வாடிப்போய், இறுதியில் சுட்டெரிக்கப்படுமென்று சொல்லப்பட்டுள்ள காரியமானது, இரண்டாம் மரணத்தை, அதாவது அவ்வகுப்பாரின் முழுமையான அழிவைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது உலக வகுப்பார் அல்ல, ஏனெனில், உலகம் ஒருபோதும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படவில்லை. உலகம் ஒருபோதும் திராட்சச்செடியின் கொடிகளாக இருந்ததில்லை. ஆகவே உலகம் ஒருபோதும் இவ்விதமாகப் பரீட்சையின் கீழ்க் காணப்படவுமில்லை. கர்த்தருக்கு முழுமையான அர்ப்பணிப்பைப் பண்ணிக்கொண்டவர்கள், அவருடன் முழுமையான உறவிற்குள் கடந்துவந்தவர்கள், பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்பட்டவர்களே இங்குப் போசப்படுகின்றார்கள். இவர்களைப் பற்றிப் பேசப்படும் வார்த்தைகள் எபிரெயர் 10:31-ஆம் வசனத்தில் அப்போஸ்தலரால் கூறப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு இணையாக உள்ளது; "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே."

உலகமானது ஜீவனுள்ள தேவனுடைய கரத்தில் காணப்படவில்லை. மாறாக உலகமானது தற்காலத்தில் ஆதாமுக்குள் மரித்துப்போனதாகவும், ஆதாமிற்குரிய தீர்ப்பின் கீழ்க்காணப்படுவதாகவும் கருதப்படுகின்றது; மற்றும் உலகம் கர்த்தரால், இப்பொழுது நியாயம் தீர்க்கப்படவில்லை. சபை மாத்திரமே ஆதாமின் தண்டனை தீர்ப்பினின்று விடுதலையடைந்தவர்களாகக் கருதப்படுகின்றனர் மற்றும் நியாயத்தீர்ப்பிலும்

காணப்படுகின்றது. ஆகவே சபை மாத்திரமே கிறிஸ்துவின் கரங்களிலிருந்து விழுந்து, பிதாவினுடைய கரத்திற்குள் விழுவதற்குரிய வாய்ப்பில் இருக்கின்றனர். கிறிஸ்துவிடமிருந்து அறுப்புண்டுப் போகிறவர்களுக்கு, எவ்விதமான நம்பிக்கையும் இல்லை. ஏனெனில் இப்படிப்பட்டவர்களுக்கு இரண்டாம் மரணத்தைக் காட்டிலும் வேறு எதுவும் நன்மையாக இருக்க முடியாது. இன்னுமாக நித்திய காலத்திற்குமான சித்திரவதைக் கொள்கை உண்மை இல்லை என்பதிலும் நாம் மகிழ்ச்சிக்கொள்கின்றோம். இப்படிப்பட்டவர்கள் முழுமையான அழிவிற்குள் போகும்போது, இவர்கள் தேவனால் அருளப்படும் என அறிவிக்கப்பட்ட அனைத்தையும் இழந்துவிடுகின்றவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்களது இந்த இழப்பானது, நித்திய ஜீவனை அடைவோரின் கணிப்பில் பயங்கரமானதொரு இழப்பாகத் தோன்றும்.

இப்படியாகக் கொடிகள் வெட்டப்பட்டு, வாடிப்போய், சுட்டெரிக்கப்படுவது பற்றின இவ்வார்த்தைகளானது, விசுவாச வீட்டாரிலுள்ளவர்களை, அதாவது இயேசுவை விசுவாசித்தும், ஒருபோதும் கிறிஸ்துவின் அங்கங்களாக (அ) கொடிகளாக ஆகாதவர்களைக் (பெயர்க்கிறிஸ்தவர்களை) குறிப்பதில்லை. இவ்வார்த்தைகள் திரள்கூட்டத்தாரையும் குறிப்பதில்லை. இந்த (இரண்டம் மரணம்) வகுப்பார் பற்றி வெகு சொற்பமான வேதவாக்கியங்களே பேசுகின்றன. இந்த வகுப்பாராகும்படிக்கு எவரும் அழைக்கப்படவில்லை என்று கர்த்தர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகின்றார். இன்னுமாக சிலரைக் குறித்து, "அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்" (1 கொரிந்தியர் 3:15) என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்; மற்றும் இது தொடர்பான சிறு கருத்து, கொடிகள் நிலையிலிருந்து வெட்டப்பட்டு, வாடிப்போய், சுட்டெரிக்கப்படுதல் பற்றின ஆண்டவருடைய வார்த்தைகளிலிருந்து எடுத்துக்கொள்ளப்படலாம். அதாவது 1 கொரிந்தியர் 3:15-ஆம் வசனத்தில், அப்போஸ்தலரால் குறிப்பிடப்படும் (திரள்கூட்டம்) வகுப்பார், கொடிகள் என்ற விதத்தில் சுட்டெரிக்கப்படுவார்கள்; அவர்கள் உடன்படிக்கையின் மூலம் இணைந்து கொண்டிருந்த அங்கத்துவம் அழிந்துவிடும்; ஆனால், அந்நபர் தனிப்பட்ட விதத்தில் நித்திய காலத்திற்குமென அழிந்துவிடுவதில்லை. 1 கொரிந்தியர் 3:15-ஆம் வசனத்தில் இடம்பெறும் வகுப்பார் (திரள்கூட்டத்தினர்) அக்கினியால் இரட்சிக்கப்படுவார்கள்; ஆனால் அவர்கள் கட்டினது வெந்துபோகும் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார்.

## "திராட்சச்செடியில் அங்கத்துவத்திற்கான பலன்"

இப்படியாக, தம்முடன் இணைந்திருப்பதினால் விளங்கும் பலன்கள் குறித்து, நமக்குக் கர்த்தர் சொல்லுகின்றார்:-

இவர்கள் எதையும் அவரிடத்தில் கேட்கலாம் என்பதும், இவர்கள் கேட்பது இவர்களுக்கு அருளப்படும் என்பதும்தான் முதலாம் பலனாகும். ஒரே ஒரு நிபந்தனை உள்ளது. அதென்னவெனில், இப்படியாக இவர்கள் கேட்பதற்கு/விசாரிப்பதற்கு ஆயத்தப்படுகிறதற்கு முன்னதாக, கர்த்தருடைய சித்தம் என்னவென்பதையும், அவருடைய சித்தத்திற்கேற்ப தாங்கள் கேட்க வேண்டியது என்னவென்பதையும் தாங்கள் உறுதிப்படுத்திக்கொள்ளும்படியாக, கர்த்தருடைய வார்த்தைகளுக்குத் தாங்கள் கவனம் செலுத்தத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவர்களுக்குச் சொந்த சித்தம் என்ற ஒன்று இருக்கக்கூடாது; மற்றும் தங்களுடைய தலையின் சித்தத்தையே, தங்களது சித்தமாகக் கொண்டிருக்க வேண்டும். மேலும் இவர்களுடைய (இயேசு) தலை, பிதாவின் சித்தமே, தமது சித்தமாக இருக்கின்றது என ஏற்கெனவே அறிவித்துள்ளார். நாம் பிதாவின் சித்தத்தை நம்முடைய இருதயங்களில் கொண்டிருக்க வேண்டும் என்பதும், பிதாவின் வாக்குத்தத்தங்களை நம்முடைய இருதயங்களில் கொண்டிருக்க வேண்டும் என்பதும்தான் நிபந்தனைகள் (அ) வரையறைகளாகும். இவைகளுக்கேற்ப நம்முடைய விண்ணப்பங்கள் காணப்படும்போது, அவைகளையெல்லாம் அருளிடுவதற்கு கர்த்தர் பிரியமாய் இருப்பார்.

இரண்டாவது பலன் என்னவெனில், நம்முடைய கனி பெருகுகின்றதற்கு ஏற்ப, பிதாவும் அதிகமாய் மகிமைப்படுத்தப்படுவார். பிதாவின் சித்தத்தை அறிந்துக்கொள்வதற்கும், அதன்படிச் செய்வதற்கும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம், நமது ஜீவியங்கள் வாயிலாகப் பிதாவை மகிமைப்படுத்துவதற்கும், கனப்படுத்துவதற்கும் வழக்கமாகவே நாடுவதாகிய நிபந்தனைகளின் அடிப்படையில்தான்

நம்முடைய சீஷத்துவம் தொடர முடியும். மேற்கூறியுள்ள நிபந்தனைகளில் குறைவுபடுவது என்பது நம்முடைய சீஷத்துவத்தைப் பறிகொடுப்பதாகிவிடும். நம்மிடமிருந்து அது உடனடியாகப் பறிமுதல் பண்ணப்படுவதில்லை. அதாவது ஏதோ நம்மைத் தள்ளிவிடத்தக்கதாகக் கர்த்தர் உடனடியாகச் செயல்படுவார் என்றில்லை. மாறாக நாம் கிருபையில் வளர்வதும், நாம் அறிவில் வளர்வதும் தேவனுடனான இசைவில் வளர்வதும், ஆவியின் கனிகளில் வளர்வதும், நம்முடைய உடன்படிக்கை உறவின் ஒரு பாகமாக இருக்கின்றதினால், ஒருவேளை இந்த ஒப்பந்தத்திலிருந்து நாம் பின்வாங்குவோமானால், சீஷர்களாக, அங்கங்களாக நமது உறவை, நாம் தக்கவைத்துக்கொள்பவர்களாக கருதப்படுவதில்லை.

திராட்சச்செடியுடனான இந்த அங்கத்துவம் மற்றும் கொடிகளாக நம்முடைய தொடர்சியான வளர்ச்சியின் பலனாகிய மூன்றாவது பலன், ஒன்பதாம் வசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது திராட்சச்செடியாகிய கர்த்தர் இயேசுவைப் பிதா அன்புகூருவது போன்று, நம்முடைய மீட்பரும் அவருடைய கொடிகள் (அ) அங்கங்களாகிய நம்மை அன்புகூருகின்றார். பிதா நம்முடைய ஆண்டவர் மீது கொண்டிருந்த அதே அன்பை, நமது ஆண்டவர் நம் மீதும் கொண்டிருக்கின்றார் என்பது எத்துணை ஆச்சரியமான கருத்தாய் உள்ளது! இந்தக் கருத்தை நமது விசுவாசத்தினால் எப்பொழுதும் பற்றிக்கொண்டிருக்க முடியுமானால், அதுவும் பற்றிக்கொண்டிருப்பதைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமானால், உண்மையில் நாம் பயப்படுவதற்கோ (அ) ஆசைப்படுவதற்கோ எதுவும் இராது. அதாவது நமக்கு வருடம் முழுவதும் கோடை காலமே. அடுத்தக் கருத்து என்னவெனில், கர்த்தருடைய தயவை/அன்பை அடையும் இந்த உயர்வான நிலையை எட்டிய பிற்பாடு, ஒருவேளை நாம் அவருடைய சீஷர்களாகவே இருந்து, அவர் நமக்குச் செய்துள்ளவைகளை உண்மையாய் உணர்ந்துக்கொள்வோமானால், அவருடைய அன்பில் நிலைத்திருக்க நாம் வாஞ்சிக்கிறவர்களாய் இருப்போம் என்பதேயாகும். அடுத்ததாக, இந்த அன்பில் நாம் நிலைத்ததிருப்பதற்கான நிபந்தனைகளை, அதாவது நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது பற்றி வருகின்றது.

இது நியாயமற்ற கூற்றல்ல/கருத்தல்ல என்று நமக்குக் காண்பிக்கும் பொருட்டு, இதே நிபந்தனைகளின் பேரில்தான், தம்மையும் பிதா கையாண்டார் என்று தெரிவிக்கும் விதத்தில், “நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல” (யோவான் 15:10) என்ற வார்த்தைகளைக் கூறினார். நாம் கர்த்தருடைய அன்பில் நிலைத்திருந்து, அதேசமயம் அவருடைய கட்டளைகளுக்கு அஜாக்கிரதையுடன் இருக்கலாம் என்று நாம் எதிர்ப்பார்க்கக்கூடாது. பிதாவுக்கு அவர் காண்பித்தக் கீழ்ப்படிதலானது, அவர் பிதாவின் மீது கொண்டிருந்த அன்பின் அளவாய் இருந்தது போன்று, கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிவது என்பது, நாம் அவருக்கு உண்மையாய் இருப்பதற்குரிய அளவாய் இருக்கும். இதே கருத்தும், இன்னும் கொஞ்சம் சேர்த்து, அப்போஸ்தலர், “நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம் அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல” (1 யோவான் 5:3) என்று கூறுகின்றார். நாம் கற்பனைகளைக் கைக்கொள்வது மாத்திரம் போதாது. இன்னுமாக, நாம் அன்புடனும் உண்மையுடனும், மனப்பூர்வத்துடனும் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்; மற்றும் கற்பனைகளைப் பாரமானவைகளாக எண்ணாமல், மாறாக கர்த்தருடைய நீதியான அனைத்து ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயல்படுவதிலும் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுவினால் கொடுக்கப்பட்ட நீதியான கொள்கைகள் அனைத்துடன், அதாவது அவருடைய கற்பனைகள் அனைத்துடன், முழு இருதயப்பூர்வமான இசைவுடன் இருக்கும் இந்த ஆவியை நாம் அனைவரும் அதிகமதிகமாக நாடுவோமாக.

நமது கர்த்தருடைய கற்பனைகள் என்பது, மோசேயினுடைய பத்துக் கற்பனைகள் அல்ல. ஆனால் கர்த்தருடைய கற்பனையானது ஏறக்குறைய எதிர்ப்பார்ப்பின் கண்ணோட்டத்தில்தான் காணப்படுகின்றது. (கர்த்தருடைய கற்பனைகள்) இக்கற்பனைகள் என்பது நமது மாம்சத்திடம் எதிர்ப்பார்க்கப்படும் கண்ணோட்டத்தில் அல்லாமல், நம்முடைய இருதயத்திடம் எதிர்ப்பார்க்கப்படுபவைகளாக இருக்கின்றது. சுருக்கமாக அவருடைய கற்பனை என்பது, நம்முடைய முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் பிதாவை அன்புகூருவதும், நாம் நம்மை அன்புகூருவது போன்று நம்முடைய அயலானை அன்புகூருவதுமாகும் என்று நம்மிடம் கூறுகின்றார். இது நம்முடைய பூரணமற்ற மாம்சத்திற்கு முடியாத காரியமாக இருப்பினும், நம்முடைய புதுப்பிக்கப்பட்ட

இருதயங்களுக்கு முடிகிற காரியமாகவே இருக்கின்றது. இந்தத் தேவனுடைய கற்பனைக்கு நம்முடைய இருதயங்கள் ஊழியம் செய்வதும், நம்முடைய மாம்சத்தைக் கொண்டு முடிந்தமட்டும் செய்வதும்தான், கர்த்தர் எதிர்ப்பார்ப்பதாகும்; மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் முற்றும் முழுமையாய், திருப்தியாய்க் கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதான புதிய சரீரங்கள் நமக்கும் இருக்கும் என்ற வாக்குத்தத்தம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும்"

ஏன் இந்தச் சிறியதும், அதேசமயம் மிகவும் ஆழமான பாடத்தைக் கொடுத்தார் என்பதைக் கூறி நிறைவு செய்யும் வண்ணமாக, "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" என்று பேசினார் (யோவான் 15:11, 12). ஜீவனுக்கேதுவான அற்புதமான இந்த வார்த்தைகள் பல நூற்றாண்டுகள் கடந்துவந்து, இடுக்கமான வழியில் காணப்படும் கர்த்தருடைய பின்னடியார்கள் அநேகரை உற்சாகமும், தைரியமூட்டியும் உள்ளது.

தூய்மையும், மாசற்றதுமான இந்த மார்க்கத்தை அநேகர் எதிர்த்துப்பேசுகின்றனர். சிலர் இது சந்தோஷமற்றது என்றும், வருத்தத்தைக் கொடுக்கின்றது என்றும், இருதயம் மற்றும் மூளையை விலங்கிடுகின்றது என்றும், இன்பம் எனும் ஒவ்வொரு கோயிலிருந்தும் மனுஷனைச் சாட்டையினால் அடித்துத் துரத்திவிடுகின்றது என்றும், சந்தோஷத்திற்குரிய ஒவ்வொரு களத்திற்கு முன்பாக, "இங்கு மீறி நுழையாதே" எனும் (notice post) பலகைத் தூணை நாட்டியுள்ளது என்றும், குற்றம்/குறை கூறுகின்றனர். இது தவறு என்பது நமது பதிலாக இருக்கின்றது. அதாவது இப்படியெல்லாம் கூறுகின்றவர்கள், வசனத்தில் உள்ளவைகளை அறியாதவர்கள், புரியாதவர்கள் ஆவர். கர்த்தருக்கு உண்மையாய் உடன்படிக்கைப் பண்ணியுள்ளவர்களும், அவரை உண்மையாய் ஏற்றுக்கொண்டவர்களும், அவருடைய பாதத்தில் தங்களுடைய ஜீவியங்களை உண்மையில் ஒப்புக்கொடுத்துவிட்டு, உண்மையில் அவருடைய பின்னடியார்களாக ஆகியுள்ளவர்களும், அவர் வாக்களித்துள்ளபடியே அவருடைய சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டுள்ளனர்; மற்றும் நாளுக்குநாள், வருடம் செல்லச்செல்ல, அச்சந்தோஷம் பெருகிக்கொண்டிருந்து கிட்டத்தட்ட முழுமையடையப் போகின்றது. நிறைவானது வந்து குறைவானது ஒழியும் போதும், உயிர்த்தெழுதலின் நிலைமையில் நாம், "உங்களுடைய கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்ற அவரது வரவேற்பை கேட்கும் போதும்தான், அது (சந்தோஷம்) முழுமையடையும்.

இப்பொழுது விசுவாசத்தின் மூலமாகவும், எதிர்ப்பார்ப்பின் மூலமாகவும், இருதயத்தின் இளைப்பாறுதல் மூலமாகவும், அந்தச் சந்தோஷங்களுக்குள்ளாக நாம் பிரவேசிக்கின்றோம். ஆனால் பிற்பாடே நாம் நிஜமாகவே அந்தச் சந்தோஷங்களுக்குள் பிரவேசிப்போம். இதற்கிடையில் உலகம், அதனை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. உலகம் கர்த்தருடைய சந்தோஷங்களை உணர்ந்துக்கொள்ளவில்லை. உலகம் சுயநலத்தினாலும், பொறாமையினாலும், இலட்சியங்களினாலும், வாக்குவாதத்தினாலும் நிறைந்துள்ளது. உலகம் அவரை அறியாதது போல, நம்மையும் அறிந்துக்கொள்ளவில்லை. நமது கர்த்தர் தம்முடைய ஜீவியத்தையும் பலிச்செலுத்தி, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றியதில் அனுபவித்த சந்தோஷங்களை உலகம் அறியாததுபோல, ஆண்டவருடைய ஊழியத்தில் இருக்கும் நம்முடைய சந்தோஷங்களையும் உலகம் அறியாது.

## "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல"

நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டுமென்று, கர்த்தர் கட்டளையிட்டது நம்மை வியப்படையச் செய்யவில்லை; ஆனால் "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல" என்ற வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கருத்துதான் நம்மைத் திகைக்கவைக்கின்றது. கர்த்தர் நம் ஒவ்வொருவர் மீதும் கொண்டிருந்த அன்பைப்போன்று, எவ்வாறு நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய முடியும்? என்பதுதான் நமது முதல் கேள்வி. ஆரம்பத்தில் இது சாத்தியம் அற்றதுதான். ஆனால் நாம் அதிகமதிகமாகக் கர்த்தருடைய ஆவியினால்

நிரப்பப்படும்போது, அவருடையவர்களாய் இருக்கும் அனைவரிடத்திலுமான பூரணமான அன்பின் இந்தக் கொள்கைக்கு/அளவுக்கோலுக்குக் கிட்ட நெருங்குவோம். மற்றவருக்குப் பாதகம் செய்வதற்கு மறுக்கக்கூடிய அன்பாய் மாத்திரம் இராமல், சகோதரனுக்கு நன்மை செய்வதில் நம் சொந்த நேரத்தையும், சௌகரியத்தையும் தியாகம் பண்ணி நன்மை செய்வதில் சந்தோஷமடையக்கூடிய அன்பாகிய, பூரணமான அன்பின் இந்த அளவுக்கோலுக்குக் கிட்ட நெருங்கிடுவோம். இப்படியாகவே, இயேசுவும் நம் அனைவரையும் அன்புகூர்ந்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்டார். மேலும், நாம் எந்தளவுக்கு அவரைப்பற்றின கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் கிறிஸ்துவைப்போல இருப்போம்; மற்றும் கிறிஸ்துவின் அன்பை ஒத்த அன்பைப் பெற்றிருப்போம். இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது. மேலும் சகோதர சகோதரிகளுக்காக இப்படிப்பட்ட அன்பைக் கொண்டிருப்பவர்கள், சந்தேகத்திற்கிடமின்றித் தவிக்கும் சர்வ சிருஷ்டியின் மீதும், அனுதாப அன்பை முழுமையாய்க் கொண்டிருப்பார்கள்; மற்றும் அவர்கள் சார்பில் இப்பொழுது உலகத்திற்குச் செய்ய முடிகின்ற சொற்பமானவைகளைச் செய்வதில் மகிழ்ச்சிக்கொள்வார்கள்; மற்றும் கர்த்தருடைய ஏற்ற வேளையில் ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொருவருக்கும், மாபெரும் அற்புதமான ஆசீர்வாதங்களைக் வைத்திருக்கின்றார் என்பதில் இரட்டிப்பான மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

இவைகளையெல்லாம் நாம் அறிந்திருப்பதும், கர்த்தருடைய திட்டங்களைப் புரிந்துப்கொள்வதும், அவருடைய வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கொள்கைகளைப் புரிந்துக்கொள்வதும், மிக முக்கியமானதுதான். ஆயினும் நமக்குச் சகல அறிவு இருந்தாலும், அதனை பயன்படுத்தாதது வரையிலும், நமக்கு நன்மை கிடைக்காது. எப்படி அடைய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலமாக மாத்திரம், நாம் கர்த்தருடைய கிருபையான ஏற்பாடுகளிலிருந்து நன்மை பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணாதிருப்போமாக. மாறாக தேவையான படிகளை எடுத்து வைப்போமாக... அதாவது நாம் முழுமையாய் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாகவும், நாம் அவரை நெருங்கி வாழத்தக்கதாகவும், நாம் கனிக்கொடுக்கின்றவர்களாக இருக்கத்தக்கதாகவும், அவருடைய அன்பிலும், பிதாவினுடைய அன்பிலும், அவர் இணைத்துள்ளவர்கள் மீதான அன்பிலும் நாம் நிலைத்திருக்கத்தக்கதாகவும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

---

**R4164**

# “வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி”

## யோவான் 16:4-15.

"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார்.” —யோவான் 14:16.

நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் அவர் கெத்செமனேக்குப் போகின்ற வழியில், நாம் இப்பாடத்தில் பார்க்கவிருக்கிற காரியங்களை, தம்முடைய சீஷர்களுக்குக் கூறினார். தம்முடைய சீஷர்களாக அவர்கள் எதையெல்லாம் எதிர்ப்பார்க்கலாம் என்றும், தமக்கும் மற்றும் சகோதரர்களுக்கும் காண்பிக்கும் உண்மையினிமித்தம் அவர்கள் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, நிந்திக்கப்படுவார்கள் என்றும் கர்த்தர் அவர்களுக்குக் கூறினார். "அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை” (யோவான் 16:4). "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்” என்று கர்த்தர் கூறி அவர்கள் எதிர்ப்பார்த்திருக்க வேண்டியவைகள் அனைத்தையும் குறித்து, தாம் அவர்களுக்குக் கூறவில்லையென்று தெரிவித்தார் (12-ஆம் வசனம்). இப்படியாகவே, கர்த்தருடைய சீஷர்களாகும் அனைவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. அந்தந்த நேரத்தில் ஓர் அடி எடுத்துவைப்பதற்குப் போதுமான வெளிச்சத்தைப் பார்க்கின்றனர். ஆனால் எதிர்க்காலத்தில் வரும் சோதனைகள்

மற்றும் சிரமங்களானது, இவைகளினிமித்தம் அவர்கள் அமிழ்த்தப்பட்டுப் போகாதபடிக்கு கிருபையாக மறைத்து வைக்கப்படுகின்றது. "அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." இப்படிச் செய்வதென்பது, சீஷர்களுடைய சித்தங்களுக்கு எதிராக, சீஷர்களை ஏதோ ஒன்றைச் செய்ய வைப்பதற்கென அவர்களை வசீகரிப்பதாகவும், ஏமாற்று, சதி பண்ணுவதற்காகவும் இல்லை. ஆரம்பத்திலேயே நாம் நமது சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றி வரவில்லையெனில், நாம் அவருடைய சீஷர்களாய் இருக்கமுடியாது என்று நமக்கு உறுதியாய்த் தெரிவித்துள்ளார். இந்த ஓர் அடியை நாம் உண்மையுடனும், நேர்மையுடனும் எடுத்து வைத்திருந்திருப்போமானால், இது தொடர்பாக வரப்போகின்ற உபத்திரங்களுடைய விவரம் தெரியாமல் இருந்தாலும், பல சிரமங்கள் இருப்பதை நாம் காண்போம். ஒருவேளை நமக்கு எதிர்க்காலத்தில் வரும் சோதனைகளை நாம் அறிந்துக்கொள்வோமானால், நாம் மிகவும் அமிழ்த்தப்பட்டு விடுவோம். காரணம் ஆரம்பத்தில், "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" மற்றும் "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" என்ற நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் வாக்குத்தத்தங்களின் அர்த்தத்தை நாம் குறைவாகவே புரிந்துக்கொண்டிருப்பவர்களாகவே காணப்படுவோம் (2 கொரிந்தியர் 12:9 மற்றும் 1 கொரிந்தியர் 10:13). கர்த்தருடைய ஜனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக, ஒவ்வொரு அடியை எடுத்துவைக்கும்போது, இந்த வாக்குத்தத்தங்கள் உண்மையாய் இருப்பதைக் காண்பார்கள், தாங்கள் நிலைநிறுத்தப்படுவதை உணர்வார்கள். தங்களால் தாங்கிக்கொள்ள முடிகின்றவைகளே தங்களுக்கு இருக்கின்றது என்பதை உணர்வார்கள்; மற்றும் கடந்துவந்த பாதையில், முன் காலங்களில் வந்ததைக் காட்டிலும், (இப்பொழுது வரும்) தங்களுடைய சோதனைகள் கடுமையானதாக இருப்பினும், இவைகள் கிருபையிலும், அறிவிலும் உள்ள வளர்ச்சியின் காரணமாக, ஜெயங்கொள்ளப்படலாம் என்றும் உணர்வார்கள்.

கர்த்தர் தம்முடைய சொல்லர்த்தமான, கூட இருத்தல் இல்லாத நாட்களில், தம்முடைய துன்புறுத்தப்படும் பின்னடியார்களுக்கு ஒரு வல்லமையின் மூலம் தம்முடைய உதவியை அளிக்கக்கூடிய காரியமானது, அவர்கள் புரிந்துக்கொள்வதற்குக் கடினமாக இருந்தது. அவர்கள் பொருட்டு, ஆண்டவர் தாம் செயல்படுத்தும் வல்லமையை, செல்வாக்கை, பரிசுத்த ஆவி என்று, தேவனுடைய ஆவி என்று, கிறிஸ்துவினுடைய ஆவி என்று அழைப்பதன் மூலம் விஷயத்தைத் தெளிவுபடுத்துகின்றார். சீஷர்கள் மீது செயல்படுத்தப்படப்போகிறதான செல்வாக்கானது, ஆறுதல்படுத்துகின்றதாயும், தாங்கி நிலைநிறுத்துகின்றதாயும் இருக்கப்போவதினால், இந்த வல்லமையை அல்லது ஆவியைக் கர்த்தர், ஒரு தேற்றரவாளனாக, ஒரு தாங்கி நிறுத்துபவராக, ஓர் உதவியாளராகக் கூறினார். அவர்களை நடத்துவதற்கென்று வேறொரு நபரை அனுப்புவதாகக் கர்த்தர் கூறவில்லை. அவரைக் காட்டிலும் வேறெந்த ஒரு நபராலும், அவர்களைச் சிறப்பாக நடத்த முடியாது. அவர் அனுப்பப்போவது ஓர் ஆவி, ஒரு செல்வாக்கு, ஒரு வல்லமையே ஆகும். மேலும் இந்த ஆவி பிதாவையும், தம்மையும் முழுமையாக அடையாளப்படுத்துகின்றதாயிருக்கின்றது. ஆகவே பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதன் வாயிலாக, அவர்கள் பிதாவுடன் உறவையும், குமாரனுடன் உறவையும் பெற்றிருப்பார்கள். பிதாவும், குமாரனும் ஆண்பாலில் கூறப்படுகிறது போன்று, இந்தப் பரிசுத்த ஆவியும் கூட ஆண் பாலில் பேசப்படுகின்றது.

## ‘‘பரிசுத்த திரித்துவம்’’

"இருண்ட யுகங்களினுடைய" காலப்பகுதியில், அநேக குழப்பமான கருத்துக்கள் நிலவியிருந்தது மற்றும் வேதவாக்கியங்களுடைய தெளிவான போதனைகளும் மறைந்துபோயிருந்தது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும், வேதாகமம் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது (பயன்படுத்தப்படவில்லை). "அப்போஸ்தலர் மரபு வம்சாவழி," எனும் உபதேசத்தின் கீழ், கண்காணிகள் அப்போஸ்தலர்களுக்குச் சமமானவர்களாகக் கருதப்பட்டனர். ஆகவே இவர்கள் ஆலோசனை குழுவில் கூடும்போது, ஓர் உபதேசம் பற்றின விஷயத்தில் இவர்களது முடிவு அல்லது வாக்களிப்பானது, அப்போஸ்தலர்களுடைய முடிவு என, அதிகாரப்பூர்வமானதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. நமது கர்த்தர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத்தான் தெரிந்தெடுத்தார் என்பதும், அந்த 12-பேருக்குப் பின்னர் வருபவர்கள் எவர்களையும் குறித்தும் கர்த்தர் பேசவில்லை என்பதும், வெளிப்படுத்தின விசேஷத்தில் பன்னிரண்டு அஸ்திபாரங்களை மாத்திரம் கொண்டுள்ள புதிய எருசலேமைக்

குறித்தும், அந்தப் பன்னிரண்டு அஸ்திபாரங்களில், ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய நாமங்கள் காணப்படுவதைக் குறித்தும் கூறினதின் வாயிலாக, இந்தப் பன்னிரண்டு பேருக்குப் பின் வேறு அப்போஸ்தலர்கள் இல்லையெனத் தெரிவித்துள்ளார் என்பதும், கவனிக்கத் தவறப்பட்டது (வெளிப்படுத்தல் 21:14).

இரண்டாம் நூற்றாண்டினுடைய ஆரம்பக்கட்டத்தில், சபை மீதான கிரேக்க தத்துவத்தின் செல்வாக்கானது, குறிப்பிடத்தக்க நிலையில் காணப்பட்டது; மற்றும் பல்வேறு தப்பறைகளும் பிரபலமாய்க் காணப்பட்டது. இவைகளில் ஒன்று, விசேஷமாக நமது கர்த்தரைக் கிரேக்க தத்துவ ஞானிகளுடனும், சாக்ரடீஸ் உடனும், பிளோட்டோவுடனும் சரிசமமாக வைத்துவிட்டு, நமது கர்த்தருடைய விசேஷித்த பிறப்பையும், அவர் மனிதனாக வருவதற்கு முன்னதாகவே காணப்பட்டார் என்பதையும் மறுப்பதாகவும் இருந்தது. இந்தத் தப்பறைகளுக்கு எதிர்த்துப் போராடும் வண்ணமாக, கர்த்தருக்கு உண்மையாய்க் காணப்பட்ட சிலர் எதிர்முனைக்குச் சென்று இயேசுவினுடைய சொந்த வார்த்தைகளுக்கு எதிராக அவரைப் பிதாவுக்குச் சரிசமமாக்கினார்கள் (யோவான் 10:29; 14:28). அடுத்ததாகப் பரிசுத்த ஆவி தொடர்பாக வாக்குவாதம் எழும்பிற்று. பின்னர் இயேசுவின் விஷயத்தில் எதிர்முனைக்குச் சென்றவர்கள், மூன்று கடவுட்கள் இருக்கின்றார்கள் என்றும், அவர்கள் பிதா மற்றும் குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி என்றும், இவர்கள் மூவரும் "வல்லமையிலும், மகிமையிலும் சரிசமமானவர்கள்" என்றும் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரும் சரிசமமான ஆற்றல் உள்ள, வெவ்வேறு நபர்களாய் இருக்கின்றார்கள் என்று விநோதமாய்க் கூறிக்கொண்டிருக்கும்போதே, அடுத்ததாக இவர்கள் நபரிலும் ஒன்றாக இருக்கின்றனர் என்று கூறப்பட்டது. இப்படிப்பட்ட வேதவாக்கியங்கள் தெரிவிக்காததும், காரணகாரியத்துக்கு உட்படாததுமான கருத்தானது, அதற்கே ஆதரவு அளித்திட முடியாது. ஆகவே இக்கருத்தையுடையவர்கள் பல்வேறு விதமான திருக்குமறுக்கான வாதங்களுக்குள் வழிநடத்தப்பட்டுள்ளனர். சில சமயம் இவர்களில் சிலர், ஒரு நபரில் உண்மையில் மூன்று கடவுள்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இன்னும் சிலர் ஒரு கடவுளில் மூன்று நபர்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இந்தப் பொருளற்ற சொற்களுக்கு இவர்கள் விளக்கம் கொடுக்க முடியாததினால், தவறையும், மூட நம்பிக்கையையும் மூடி மறைப்பதற்கு, வழக்கமாக பயன்படும் "இரகசியம்" எனும் வார்த்தையை கூறிவிடுகின்றனர். திருத்துவம் பற்றின காரியமானது, அவர்களும் சரி, மற்றவர்களும் சரி புரிந்துக்கொள்வதற்கு மிகவும் இரகசியமானதாக, மறைப்பொருளாக இருக்கின்றது என்று நம்மிடம் கூறுகின்றனர். ஒருவேளை இது அவர்களுக்குப் புரியவில்லை என்றால், அவர்கள் அதை விவாதிக்கக்கூடாது என்பது உண்மைதான். ஆனால் அதற்கென்று இதைப் புரிந்துக்கொள்பவர்கள், அதாவது திரித்துவம் பற்றின முழு இரகசியமும், சொந்த கற்பனை என்பதை மிகத் தெளிவாய்க் காண்பவர்கள், அதாவது இவ்விஷயம் தொடர்பான வேதாகமத்தின் போதனையானது மிகத் தெளிவாயும், எளிமையாயும், இசைவாயும், திருப்திகரமாயும் இருப்பதைக் காண்பவர்கள் விவாதிப்பதிலிருந்து தடுக்கப்படக்கூடாது.

தேவனைப் பற்றி அப்போஸ்தலர் கூறும்போது, ஒரே ஒரு ஜீவனுள்ள, உண்மையான தேவன் இருக்கின்றார் என்று கூறுகின்றாரே ஒழிய, மூன்று என்று கூறவில்லை! இந்த ஜீவனுள்ள மற்றும் உண்மையுள்ள ஒரே தேவனைப் பிதா என்றும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் இருக்கிறார் என்றும், அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 8:6). மேலும் கர்த்தர் இயேசுவைப் பிதா உயர்வாக உயர்த்தினார் என்றும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார் என்றும், பிதாவைக் கனம் பண்ணுவது போன்று, அனைவரும் குமாரனையும் கனம் பண்ணும்படிச் செய்தருளினார் என்றும் இதே அப்போஸ்தலர் தெரிவிக்கின்றார் (பிலிப்பியர் 2:9-10; யோவான் 5:23). அப்படியென்றால், இரண்டு நபர்கள் இருக்கின்றார்கள்; இல்லையேல் வேறெந்த விதத்திலும் ஒருவர் மற்றொருவரை உயர்த்தி, கனப்படுத்த முடியாது. பிதாவைப் போன்று குமாரன் கனப்படுத்தப்பட்டதானது, வேறு வேதவாக்கியங்களினால் காட்டப்படுகின்றது. அதாவது இப்பொழுது இயேசு திவ்வியச் சுபாவத்தில் பங்கடைந்தவராக இருக்கின்றார்; மற்றும் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றத்தக்கதாக, அவருடைய சொந்த ஜீவனை ஒப்புக்கொடுத்து மனுக்குலத்தை மீட்கும்படிக்கு, உலகத்திற்கு வந்ததின் வாயிலாக, பிதாவின் சித்தத்திற்கு அவர் காட்டின கீழ்ப்படிதலுக்குப் பரிசாக அவர் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார் என்று

வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றது. நாம் ஏற்கெனவே யோவான் 1:1-ஆம் வசனத்தில் பார்த்திருக்கின்றபடி, நமது கர்த்தர் உலகத்திற்கு வருவதற்கு முன்னதாக மற்றும் பிதாவின் பிரதிநிதியாகிய அவரால் உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்னதாக, அவர் லோகோஸாக, வார்த்தையாக, யேகோவா தேவனின் செய்தியாளராக இருந்தார் மற்றும் ஒரு தேவனாகவும், வல்லமையுள்ளவராகவும், தேவத்தூதர்களுக்கு மேலானவராகவும், இருந்தார் மற்றும்..."சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை."

பிதாவையும், குமாரனையும் பற்றிக் கூறுகையில், அவர்கள் இருவரையும் தனித்தனி நபர்கள் என்று அப்போஸ்தலர் தெரிவிக்கையில், அவர் பரிசுத்த ஆவியை இன்னொரு தேவன் என்றோ அல்லது தேவனுடைய மூன்றாவது பாகமென்றோ குறிப்பிடாதது கவனிக்கப்பட வேண்டும். இன்னுமாக, அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியைப் புறக்கணிக்கவுமில்லை. அவருடைய நிரூபங்கள் எங்கும் இந்தப் பரிசுத்த ஆவியை, பிதாவினுடைய ஆவி என்றும், குமாரனுடைய ஆவி என்றும், சபைக்குப் பிதாவையும், குமாரனையும் அடையாளப்படுத்துகின்றதாய்க் காணப்படுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார். "தேவன் ஆவியாயிருக்கின்றார்" என்பதை வைத்துக்கொண்டு, பரிசுத்த ஆவி ஓர் ஆவிக்குரிய ஜீவி என்று நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. மாறாக ஆவி என்னும் வார்த்தையானது, ஓர் ஜீவியின் ஆவியை, அதாவது ஒரு நபரிடத்திலிருந்து வெளிப்படும் வல்லமையை, செல்வாக்கை, சித்தத்தை, நோக்கத்தை, பலத்தைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. பரிசுத்த ஆவி என்பது, பிதா மற்றும் குமாரனிடத்திலிருந்து வெளிப்படும் செல்வாக்கு அல்லது வல்லமையாகும். மேலும் அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் அடங்கிய சபையிடத்திலான இந்தச் செல்வாக்கு அல்லது வல்லமையானது, இவர்களுடன் ஒன்று சேர்பவர்களிடத்திலும் செயல்படுகின்றதாய் இருக்கின்றது. இது எப்பொழுதும் நல்லதும், பரிசுத்தமானதுமான ஆவி அல்லது செல்வாக்காக இருக்கின்றது. ஆகவே இது உலகத்தின் ஆவியிலிருந்தும், உலகத்தின் மனப்பான்மையிலிருந்தும், உலகத்தின் செல்வாக்கிலுமிருந்தும், பாவத்தின் ஆவியிலிருந்தும், அந்தி கிறிஸ்து முதலானவைகளின் ஆவியிலிருந்தும் வேறுபட்டதாயிருக்கின்றது.

## "பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை"

துக்கத்துடனும், திகைப்புடனும், குழப்பத்துடனும் காணப்பட்டிருந்த தம்முடைய சீஷர்களிடம் நமது கர்த்தர் கனிவுடன், நிதானமாய், தம்மை அனுப்பிவைத்த பிதாவினிடத்திற்குத் தாம் திரும்பச் செல்வதைக் குறித்துக் கூறினார். எங்கே போகிறார் என்று அவர்கள் கேட்கவில்லை, காரணம் அவர் பிதாவினிடத்திலிருந்து வந்தார் என்பதும், தம்மை அனுப்பின பிதாவினிடத்தில் அவர் திரும்பப் போவார் என்பதுமான அவருடைய வார்த்தைகளை அவர்கள் நம்பினார்கள். ஆனால் துக்கம் அவர்களுடைய இருதயங்களை நிரப்பிற்று. தங்களுடன் கூடக் கர்த்தர் இல்லாமல், அவர்கள் என்ன செய்வார்கள்! ஒருவேளை கர்த்தர் போய்விடுவாரானால், இராஜ்யம் குறித்த வாக்குத்தத்தம் எப்படி நிறைவேறும்! மூன்று வருடங்களாக அவர்கள் மாய்மாலத்தைத்தான் பின்தொடர்ந்திருக்கின்றார்களா? அவர்கள் கர்த்தரைச் சந்தேகிக்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் குழம்பிப்போய் இருந்தார்கள். ஆகவே காரியத்தைச் சரியாக அவர்கள் புரிந்துக்கொண்டார்களானால், அவர்கள் கலக்கத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பதையும், உண்மையில் அவர்களுடைய நன்மைக்காகவும், அவர்களுடைய அனுகூலத்திற்காகவும், தாம் கடந்துப்போக வேண்டியுள்ளது என்பதையும் நமது கர்த்தர் அவர்களுக்கு விவரித்தார். தாம் போகவில்லையெனில், பிதா அவர்களை ஆவியில் ஜெநிப்பிப்பதும், அவர்களைத் தேவனுடைய பிள்ளைகள் என்று அங்கீகரிப்பதும் கூடாததாய் இருக்கும். இவைகள் கூடாது என்றால், அவர்கள் மனிதர்களைவிட மேலானவர்கள் ஆகுவதும், ஆவிக்குரிய ஜீவிகள் அல்லது திவ்விய சுபாவத்தையும், அதனோடு கூட அதன் மகிமைகளிலும், கனங்களிலும் பங்காளிகளாகுவதும் கூடாததாக இருக்கும். நமது கர்த்தர் பிதாவினிடத்திற்குப் போகவில்லையெனில், அவர்களால் மனிதர்களுக்குரிய திரும்பக்கொடுத்தலைக் கூட அடைய முடியாது. காரணம் சபைக்கும், உலகத்திற்குமான இரட்சிப்பின் முழு வேலையும், நமது கர்த்தர் நீதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதைச் சார்ந்துள்ளது. அடுத்த நாள் ஆதாமின் சந்ததி மேல் காணப்பட்ட ஆதாமின் பாவத்திற்காக கர்த்தர் தேவனுடைய ஆட்டுக்குட்டியாக மரித்தார் மற்றும் மூன்றாம் நாளில், பிதா தம்முடைய சொந்த வல்லமையினால் அவரை உயிர்த்தெழுப்பினார். நம்முடைய சார்பில் நிகழ்த்திய இந்த

மாபெரும் நிகழ்வில், மிகவும் முக்கியமான வேலை ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஆனால் தெய்வீக ஏற்பாட்டின் கீழ் இந்த வேலையின் பலனானது, முதலில் நமது கர்த்தர் பரத்திற்கு ஏறி, பிதாவின் முன்னிலையில் தோன்றி, தம்முடைய ஜனங்களின் சார்பாகத் தம்முடைய பலியின் புண்ணியத்தை ஒப்படைப்பது வரையிலும், சபைக்கும் மற்றும் உலகத்திற்கும் வரமுடியாது. (இயேசு 40 நாட்கள் சீஷர்களுடன் காணப்பட்டதுபோல) இயேசு ஓர் ஆவிக்குரிய ஜீவியாக, இந்த யுகம் முழுவதும் அவருடைய பின்னடியார்களுடன் கூடவே காணப்பட்டிருந்தால், ஒருவரும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட முடியாது. நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புத்திரச் சுவிகாரம் அடைவதற்கு முன்னதாக, நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக, கிறிஸ்து பரத்துக்கு ஏறி, தம்முடைய பலியின் புண்ணியத்தை ஒப்படைப்பது அவசியமாயிருந்தது.

பெந்தெகொஸ்தே அன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட போது, அவர்கள், "இதுவே தீர்க்கத்தரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டது", அதாவது "தீர்க்கத்தரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" (அப்போஸ்தலர் 2:16) என்று கூறினார்களே ஒழிய, "இவரைப் பற்றியே தீர்க்கத்தரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டது" என்று கூறவில்லை. இதை அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்று அழைத்தனர்! ஒரு நபரினால் ஞானஸ்நானம் என்பது எண்ணிப்பார்க்க முடியாத ஒரு கருத்தாக உள்ளது. பரிசுத்த ஆவி எனும் நபர், ஒவ்வொரு விசுவாசியினுடைய இருதயத்திலும், தனிப்பட்ட விதத்தில் தங்குகின்றார் என்பதும் சரியான கருத்தல்ல! ஆனால் பரிசுத்த ஆவியை நாம் தனி நபராக, பிதா மற்றும் குமாரனிடமிருந்து தனி நபராகப் பேசுவதில்லை. பரிசுத்த ஆவியானது வேதவாக்கியங்களில் தேவனுடைய ஆவியாக, தேவனுக்குரிய ஆவியாக, தேவனிடமிருந்து வருவதாகவும், கிறிஸ்துவிடமிருந்து வரும் கிறிஸ்துவின் ஆவியாகவும், அனைத்து இடங்களிலும் ஊடுருவக் கூடியதும், எந்த இடத்திலும், எத்தனை இடங்களிலும், எந்த நேரத்திலும், எவ்விதமான வேலையையும் செய்யக்கூடிய ஓர் ஆவி அல்லது செல்வாக்கு அல்லது வல்லமை என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த உண்மையான கருத்தானது, வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததும், அர்த்தமற்றதுமான கருத்துக்களைக்காட்டிலும் எத்துணை திருப்தியை அளிக்கின்றதாய் இருக்கின்றது. யோவான் 16:7-ஆம் வசனத்தில் ஆங்கிலத்தில் இடம்பெறும் "him" (அவரை) என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையானது it (அதை) என்றும் மொழிப்பெயர்க்கப்படலாம். அதாவது "அதை உங்களிடத்திற்கு அனுப்புவேன்." எனினும் அவரை என்ற வார்த்தை இடம்பெறுவதற்கும் நாம் மறுப்புத் தெரிவிப்பதில்லை. காரணம் இந்தப் பரிசுத்த ஆவி அல்லது செல்வாக்கானது பிதாவிடமிருந்தே வருகின்றது. இதுபோலவே 8-ஆம் வசனத்தில் இடம்பெறும் அவர் என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தையானது (it) அது என்றும் மொழிப்பெயர்க்கப்படலாம்.

## "உலகத்தின் ஆவி அல்ல"

பரிசுத்த ஆவியின் செயல்பாடு குறித்த பல்வேறு தவறான கருத்துக்களில் ஒன்று, அந்தப் பரிசுத்த ஆவி என்னும் நபர், பாவத்தில் இருக்கும் ஜனங்களை நம்ப வைப்பதிலும், அவர்களை நீதியினிடத்திற்கு மாற்றுவதிலும், இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் இங்குமங்குமாகச் செல்லும் வேலையில் காணப்படுகின்றார் என்பதாகும். இதையும் தாண்டிச் சிலர் நம்மிடம் தெரிவிப்பது என்னவெனில், தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அற்புதகரமான விதத்தில் பாவியின் மேல் செயல்படாதது வரையிலும், எவனும் மனம்மாற்றம் அடையான் என்பதாகும். இவைகள் உண்மை என்றால், உலகம் இன்று மனம்மாற்றம் அடையாமல் இருப்பதற்குத் தேவனே பொறுப்பாளியாக இருப்பார்; காரணம் பரிசுத்த ஆவியானது மனமாற்றுவதும், கண்டித்துத் திருத்துவதுமாகிய அதன் பாகத்தைச் செய்யத் தவறிவிட்டதாக இருக்கும். ஆனால் இவை அனைத்தும் கடுமையான தப்பறைகள் ஆகும்.

பரிசுத்த ஆவி உலகத்தாருடைய இருதயங்களில் செயல்படுவதில்லை. மாறாக நமது கர்த்தர் கூறுகின்றபடி, அந்தப் பரிசுத்த ஆவியானது, பிதாவின் ஆவியானது, குமாரனுடைய ஆவியானது, சத்தியத்தின் ஆவியானது, தெளிந்த புத்தியின் ஆவியானது, கர்த்தருடைய பரிசுத்தத்தின் ஆவியானது, அவருடைய சீஷர்களாகிய உங்களிடத்திலே காணப்படும். பரிசுத்த ஆவியினுடைய இந்தத் தன்மைகள் எதுவும் பாவமுள்ள உலகத்தாரிடம் காணப்படுவதில்லை. பரிசுத்த ஆவியின் இத்தன்மைகளானது, "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு" மாத்திரமே உரியதாகும் மற்றும் இவர்களுக்கே

திட்டமிடப்பட்டுள்ளது. தேவனுக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணித்துள்ளவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய வல்லமையானது செயல்பட்டு, அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்களைச் சுத்திகரித்து, அவர்களை உலகத்தின் ஆவியிடமிருந்து பிரித்து, அவர்களைத் தெய்வீக ஊழியங்களில் பயன்படுத்துகின்றது. உலகத்தின் ஆவி என்பது, பாவம் மற்றும் சுயநலத்தின் ஆவியாக இருக்கின்றது. கர்த்தருடைய ஆவி என்பது, தெய்வீகச் சித்தத்திற்கு என அர்ப்பணம் பண்ணும் ஆவியாகவும், பரிசுத்தத்தின் ஆவியாகவும் இருக்கின்றது.

## "அவர் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்"

நம்மிடத்தில் இருக்கும் பரிசுத்த ஆவியானது எப்படி உலகத்தைக் கண்டித்து உணர்த்தும்? உலகத்தைக் கண்டித்து உணர்த்தத்தக்கதாக, சபை அதாவது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு வெளிச்சமூட்டப்பட்ட அனைவரும், மனுஷர்கள் முன்பு தங்களது வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ண வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பது நமது பதிலாகும். சபையினுடைய பரிசுத்தமே, உலகத்தைக் கண்டித்து உணர்த்துகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய ஆவியும், கர்த்தருடைய ஜனங்களிலுள்ள அவருடைய பண்புகளும், பாவத்தில் ஜீவிப்பவர்களைக் கண்டித்து உணர்த்துகின்றதாய் இருக்கும். நம்முடைய கர்த்தருடைய விஷயத்திலும் இப்படியாகவே இருந்தது. நமது கர்த்தருடைய ஞானஸ்தானத்தின்போது, பிதாவின் ஆவி அவருக்கு அளிக்கப்பட்டது. அவர்மேல் பரிசுத்த ஆவியானது இறங்கி தங்கினதை, யோவான் சாட்சிக் கொடுக்கின்றார். அவர் பிதாவின் ஆவியை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார். காரணம் அவர் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் பூரணமானவராய் இருந்தபடியினால், அவர் பரிசுத்த ஆவியை முழுமையாய்ப் பெற்றுக் கொள்ள முடிந்தது. விழுகையின் காரணமாக பூரணமில்லாமல், குறைப்பாடுடன் காணப்படும் நாம், நம்முடைய குறைப்பாடுகளின் காரணமாகக் குறிப்பிட்ட அளவிலேயே, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல, ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் அதிகமதிகமாய் நிரப்பப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவது ஒவ்வொருவருக்கும் உரிய சிலாக்கியமாக இருக்கின்றபடியினால் தேவனுக்கு நன்றி. மனுஷர் முன்பு கர்த்தரினால், பிரகாசிக்கப்பட்ட அவருடைய ஒளியானது மாபெரும் ஒளியாக இருந்தது. அதற்கு ஒப்பிடுகையில் நம்முடைய ஒளிகளானது மங்கலானதாகத்தான் காணப்படுகின்றது. எனினும் நமது கர்த்தருடைய உதாரணத்தைப் பின்பற்றுகின்றவர்களாக நாம் காணப்பட வேண்டும்; மற்றும் அதிகமதிகமாகச் சத்தியத்தின் ஆவியினால், சத்தியத்தின் ஒளியினால் நிரப்பப்பட வேண்டும்; மற்றும் நம்முடைய செல்வாக்கின் கீழ் வருகின்றவர்கள் அனைவர் மீதும் ஞானத்துடன் அவ்வொளியைப் பிரகாசிக்கப்பண்ணுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும்.

வசனங்கள் 8-11-இல் தெரிவிக்கப்பட்டுள்ள பிரகாரம் மூன்று விதமான பலன்கள் காணப்படும்:-

(1) "அது பாவத்தைக் குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்தும்," அதாவது உலகத்திற்கு அதன் பாவநிலையைக் குறித்து உணர்த்தும். பாவத்தினுடைய, மிகுதியான பாவத்தன்மையை அதிகமதிகமாய் உலகத்திற்குக் காண்பிக்கும். நேர்மைக்கும் நேர்மையின்மைக்கும், உண்மைக்கும் போலித்தனத்திற்கும், நீதிக்கும் பாவத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்திப்பார்க்க முடியாத அளவுக்கு, உலகத்திலுள்ள அநேகர் தேவனுடைய சாயலை மிகவும் இழந்துள்ளனர்; மற்றும் மனசாட்சியையும் மிகவும் இழந்துள்ளனர். உலகமானது, அதனை கொண்டே அதனை நிதானிக்கின்ற பழக்கத்தைக்கொண்டிருக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் கிறிஸ்துவிலும், அவருடைய சபையிலும் இன்று உலகத்திற்கெனத் தேவன் புதிய கொள்கையை/நியமத்தை/அளவுகோலை நிறுவியுள்ளார். நீதி மற்றும் அன்பு தொடர்புடைய தேவனுடைய வார்த்தைகளாகிய மகிமையான நியமத்தை/அளவுகோலை/ கொள்கையை சபையானது அதன் வார்த்தைகளினால் மாத்திரமல்லாமல், அதன் கிரியைகளினாலும் உயர்த்திப்பிடிக்க வேண்டும்.

(2) பாவம் விஷயத்தில் உலகமானது குற்றவாளி எனத் தீர்க்கப்படுவது மாத்திரம் போதுமானதாகாது. உலகம் பாவத்திற்கு எதிரான நீதியைக் குறித்துக் கொஞ்சம் புரிந்துக்கொள்வதும் அவசியமாகும். ஓரளவுக்கு நீதியை நிறைவேற்றுவது கூடுகிற காரியம்

என்றும், நீதியை நிறைவேற்றுவதில் ஏற்படும் சிரமம் என்பது விழுந்துபோன சுபாவத்தினாலேயே என்றும் உலகம் புரிந்துக்கொள்வது அவசியமாகும். நீதிதான் சரியான கொள்கை என்றும், நீதியை மாத்திரமே தேவன் அங்கீகரிப்பார் என்றும், தேவனுடைய அருமையான திட்டத்தில், நீதியாய் நடப்பவர்களுக்கு மாத்திரமே நித்தியஜீவன் அருளப்படுவதற்கு அவர் ஏற்பாடு பண்ணியுள்ளார் என்றும், உலகமானது நம்ப வைக்கப்பட வேண்டும். இது தொடர்புடைய விஷயத்ததில் போதிப்பவர்களாகிய ஆவியில் வெளிச்சமூட்டப்பட்டவர்கள் என்பவர்கள், ஒருவனும் தன்னுடைய சொந்த நீதியின் கிரியைகளினால் பிதாவுக்கு இசைவாய் வர முடியாது என்றும், கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம் அருளுகின்ற, பாவங்களுக்கான மன்னிப்பும், பாவங்கள் மூடப்படுதலும் அவசியம் என்றும் தெளிவுப்படுத்திக் கூற வேண்டும்.

(3) கர்த்தருடைய ஜனங்களின் செய்திக்கும், வெளிச்சத்திற்கும், தொடர்புக்குள்வரும் அயலார்களை, கர்த்தருடைய ஜனங்களிடத்திலிருக்கும் கர்த்தருடைய ஆவியானது, தற்கால ஜீவியத்துடன் அனைத்தும் முடிவடைவதில்லை என்றும், முழு மனுக்குலத்திற்குமான ஒரு நியாயத்தீர்ப்பு, ஒரு பரீட்சையானது தேவனுடைய ஏற்பாட்டில் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ளது என்றும் நம்பவைத்திடும். இந்தச் செய்தியைக் கேட்கின்ற எவனும், இதிலுள்ள நியாயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் இப்படி ஒப்புக்கொள்வது என்பது நித்தியஜீவனை வாஞ்சிப்பவர்கள் அனைவரின் சந்தோஷத்திற்கும், நம்பிக்கைக்கும் அடித்தளமாய் இருக்கும். இப்படியான நம்பிக்கைகளால் சரியாகவும், ஆழமாகவும் செயல்படுத்தப்படுபவர்கள், தாங்களும் சபையுடன் கூடத் தங்களுடைய நியாயத்தீர்ப்பையும், பரீட்சையையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கர்த்தரை நாடித்தேடி, தற்காலத்திலுள்ள கிருபைக்கான பல்வேறு வழியைத் தேடுகிறவர்களாகவும் காணப்படுவார்கள். ஆனால் இப்படியான நம்பிக்கையினால் தாக்கம் அடையாதவர்கள், சபை மூலம் அறிவுறுத்தப்பட வேண்டும்; அதாவது எந்தளவுக்கு அவர்கள் ஒளியை அல்லது அறிவைப் பெற்றிருக்கின்றார்களோ, அவ்வளவாய் அவர்களுக்குப் பொறுப்பு உள்ளது என்று அறிவுறுத்தப்பட வேண்டும். தேவனுடைய திட்டத்தில், கர்த்தரிடத்திலான உண்மைக்கு ஏற்ப, பரீட்சிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்படத்தக்கதாக அனைவருக்கும் முழுமையான வாய்ப்பு அளிக்கப்படும் விதத்தில், உலகத்திற்கு எதிர்க்காலத்தில் ஒரு நியாயத்தீர்ப்பின் நாளை தேவன் ஏற்பாடு பண்ணியுள்ளார். தற்காலத்திலுள்ள உலகத்தாரின் நடக்கையானது, எதிர்க்காலத்திலுள்ள அவர்களுக்கான நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சையுடன் தொடர்பு பெற்றிருக்கின்றது. தற்காலத்தில் உலகத்தார் எந்தளவுக்குத் தங்களுடைய மனசாட்சிக்குக் கீழ்ப்படிய தவறி, சத்தியத்தின் வழிநடத்துதலைப் பின்பற்றுவதற்குத் தவறுகின்றார்களோ, அந்தளவுக்கு அவர்கள் எதிர்க்காலத்தில் ஜெயங்கொள்வதற்கு சிரமம் உண்டு; மற்றும் அடிகளும் அடிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் எந்தளவுக்குத் தற்காலத்திலேயே நீதிக்கு ஏற்ப வாழ்வதற்கு நாடுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் நியாயத்தீர்ப்பின் நாளில் தங்களுக்கு உதவிடும் வண்ணமாக தங்களுக்கென ஓர் ஆசீர்வாதத்தைச் சேர்க்கின்றவர்களாய் இருப்பார்கள்.

## “ஏனெனில் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை”

கிறிஸ்துவையும், பாவத்திற்கான அவருடைய கிருபாதார பலியையும் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாததினாலேயே உலகத்தார் இன்னமும் பாவிகளினுடைய தன்மையிலேயே, கோபாக்கினையின் பிள்ளைகளாகத் தொடர்ந்து காணப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பதைச் சபையிலுள்ள சத்தியத்தின் பரிசுத்த ஆவியானது, உலகத்தாருக்கு அறியச்செய்திடும். இயேசு தம்முடைய பலியை, பிதாவிடம் ஒப்படைத்தபோது, நமது கர்த்தர் இயேசுவால் பெற்றுத்தரப்பட்ட நீதி ஒன்று, அதாவது தரிபிக்கப்படும் நீதி ஒன்று உள்ளது என்று உலகத்தாருக்குச் சபையினிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானது அறியச் செய்திடும். தற்காலத்தின் ஏற்பாடுகள்/ஒழுங்குகள் தொடராது என்றும், நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகையின்போது, புதிய ஒழுங்குகள்/ஏற்பாடுகள் கொண்டுவரப்படும், காரணம் கர்த்தர் உலகத்தை ஏற்கெனவே மீட்டுக்கொண்டதன் வாயிலாக, தீமையின் தற்போதைய ஏற்பாட்டிற்கு அதிபதியாக இருக்கும் சாத்தானைப் புறம்பாக்கிப்போடுவதற்குரிய உரிமையைச் சுதந்தரித்துள்ளார் என்றும், சபையினிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானது உலகத்திற்கு அறிவுறுத்தும்.

## "அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்"

நமது கர்த்தர் தம்முடைய பின்னடியார்களுடன் கூடக் காணப்பட்ட சமயத்தைக் காட்டிலும், அவர் பரத்திற்கு ஏறிப்போன பிற்பாடே, இன்னும் அதிகமான அறிவுரைகளைக்கொடுத்து, தம்முடைய பின்னடியார்களை ஆயத்தப்படுத்தினார். இதற்குக் காரணம் பரத்திலிருந்து ஆவி வருவதுவரையிலும், அவர்கள் ஆயத்தமற்றே காணப்பட்டார்கள் என்பதே ஆகும். அதுவரையிலும் அவர்கள் சுபாவத்தின்படியான மனிதனைப்போன்றே காணப்பட்டனர். மேலும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டினது போன்று "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14). இதன் காரணமாகவே, பிற்காலங்களில் ஆவிக்குரிய விஷயம் தொடர்புடைய ஆழமான போதனைகளைச் சில அப்போஸ்தலர்கள் கொடுத்ததுப் போன்று, இயேசு (சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன்) கொடுக்கவில்லை என்று பார்க்கின்றோம். இப்படியாக ஆழமானப் போதனைகளை இயேசு கொடுக்காதது, அவருடைய சார்பிலான இயலாமையாக இராமல், மாறாக அந்தச் சத்தியங்கள் அப்பொழுது அவருடைய சீஷர்களுக்கு ஏற்றக் கால உணவாய் இராமல், அவர்களைத் திணறச்செய்து, அவர்களைப் பாதித்திருக்கும் என்பதினாலேயே ஆகும். ஆகவேதான் நம்முடைய கர்த்தருடைய போதனைகளிலுள்ள ஆழமான விஷயங்கள் உவமை பாணியில் முன்வைக்கப்பட்டது. இப்படி உவமை பாணியில் முன்வைக்கப்பட்டதின் காரணமாக, அது சீஷர்களுக்கு அச்சமயத்தில் பாதிப்பையும் ஏற்படுத்தாது மற்றும் பிற்பாடு அதன் காரியங்களை உணர்ந்து, புரிந்துக்கொள்ளப்பட முடியும். ஆகவேதான் அவர், "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லை (உங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை) பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்" என்றார் (யோவான் 3:12).

"<u>சத்தியத்தின் ஆவி</u> வரும்போது, அது உங்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும். எனினும் அது ஒரு கால்வாயாக மாத்திரமே இருக்குமே ஒழிய அதிகாரி போன்று இருப்பதில்லை. காரணம் அது உங்களுக்குத் தெய்வீகத் திட்டத்தினுடைய பல்வேறு அம்சங்களைத் தெரியப்படுத்தும். அதாவது உங்களுக்கு இன்னமும் வெளிப்படுத்தப்படாதவைகள் ஏற்றவேளையில் வசனத்தின் வாயிலாகவும், பரிசுத்த ஆவியினுடைய செல்வாக்கின் வாயிலாகவும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படும். இந்தப் பரிசுத்த ஆவியின் மூலம் (இயேசு) நான் மகிமைப்படுத்தப்படுவேன். ஏனெனில் இந்தப் பரிசுத்த ஆவியானது, உங்களுக்குக் காண்பிப்பவைகள் என்னுடையவைகளாய் இருக்கின்றது. காரணம் பிதாவினுடையவைகள் அனைத்தும் என்னுடையவைகளாய் இருக்கின்றது. ஆகவேதான் (இயேசு) நான், 'அவர்/அது என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பார்/அறிவிக்கும்' என்று கூறினேன்" என்ற விதத்தில் இயேசு கூறுகின்றார் (15-ஆம் வசனம்). இவ்வசனத்தில் பிதாவுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள்; அனைத்தும் பிதாவினுடையவைகள். ஆனால் பிதா, குமாரனைத் தம்முடன் உடன்சுதந்திரராக, தம்முடைய உடன்பங்காளியாக ஆக்கியுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் பரிசுத்த ஆவிக்கு எதுவும் சொந்தமெனச் சொல்லப்படவில்லை. காரணம் பரிசுத்த ஆவி என்பது தொடர்பு வைத்துக்கொள்வதற்குரிய, ஆசீர்வாதங்கள், அறிவுரைகள் வழங்கிடுவதற்குரிய, தெய்வீகக் கால்வாயாக மாத்திரமே இருக்கின்றது. பரிசுத்த ஆவி ஒரு நபரல்ல, மாறாக சர்வ வல்லமையுள்ள தேவன் மற்றும் அவருடைய நித்திய குமாரனுடைய ஆவி அல்லது செல்வாக்கு அல்லது வல்லமையாக மாத்திரமே இருக்கின்றது. பரிசுத்த ஆவி பற்றின விரிவான விளக்கங்களுக்கு வேதாகம ஆராய்ச்சி பாடங்களின் 5-ஆம் தொகுதியில்/volume-இல், 8-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

## "வேறொரு தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார்"

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது அருமையானதாகவும், உதவிகரமானதாகவும் காணப்படுகின்றது. இடுக்கமான பாதையிலுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குத் தேற்றும் ஆவியாக, வழிக்காட்டியாக, போதிப்பவராக, உதவியாளராகக்

கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானது, பிதாவிடமிருந்ததான அன்பளிப்பு என்று நமது கர்த்தர் விவரிக்கின்றார். இது பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம் குறித்த பதிவிலுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு இசைவாகவே இருக்கின்றது. இவ்விஷயம் குறித்து, தெய்வீக வல்லமையின் வலது கரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள நமது கர்த்தர் இந்தப் பரிசுத்த ஆவியை/வல்லமையை பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டு, பெந்தெகொஸ்தே நாளன்று தம்முடைய பின்னடியார்கள் மீது பொழியப்பண்ணினார் என்று அப்போஸ்தலர் பேதுரு விவரிக்கின்றார். இவைகள் அனைத்தும் பரிசுத்த ஆவி தொடர்புடைய சரியான கண்ணோட்டத்திற்குப் பொருந்துகின்றது. ஆனால் பரிசுத்த ஆவி ஒரு நபர் எனும் தவறான கண்ணோட்டத்திற்கு மிகவும் பொருத்தமற்றதாய் இருக்கின்றது. எப்படி ஒரு நபரைப் பொழியப்பண்ண முடியும்! அதிகாரத்தில் சரிசமமாய் இருக்கும் இருவரில் ஒருவர் மற்றொருவரை நோக்கி, இவர்கள் இருவருக்கும் சரிசமமாக இருக்கும் மூன்றாவது ஒரு நபரை, ஓர் அன்பளிப்பாக/வரமாகப் பொழியப்பண்ணுவதற்கென ஜெபம் பண்ணிட முடியும்! இந்தத் தப்பறைக்கு நம்முடைய கண்கள் திறக்கப்படும்போது, இதிலுள்ள முரண்பாடுகள் நமக்கு அருமையாய் வெளிப்படுகின்றது. ஆனால் நமது கர்த்தர் இயேசு நம்பொருட்டு, பிதாவின் முன் தோன்றி, நம் பொருட்டான அவருடைய பலியின் புண்ணியத்தைக் கிருபாசனம் மீது வைத்தவுடன், பிதா தம்முடைய பரிசுத்த ஆவியை, தம்முடைய பரிசுத்தமான செல்வாக்கை நம்மீது அனுப்பி, நம்மை அவருடைய குடும்பத்ததிற்குள் தத்தெடுத்து, நம்மை அவருடைய பிள்ளைகளென நடத்த பிரியப்பட்டதான உண்மையான கருத்து எத்துணை அருமையானதாய் இருக்கின்றது!

பெந்தெகொஸ்தே நாளன்று வந்த ஆசீர்வாதங்கள் அன்று பெற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமல்லாமல், நிழலில் காண்பிக்கப்பட்டுள்ளது போல முழுச்சபைக்கும் உரியது என்ற கருத்து எத்துணை அருமையானதாய்க் காணப்படுகின்றது! முற்காலங்களில் இராஜாக்களும், ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டு, விசேஷமான ஊழியத்திற்கெனப் பிரித்து வைக்கப்படுகின்றனர். கிறிஸ்துவும், அவருடைய சபையும், மெல்கிசெதேக்கின் முறைமையின் கீழ் உண்மையான இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருக்கின்றனர்; மற்றும் இவர்களுடைய ஊழியங்களின் கீழ்ப் பூமியின் குடிகள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும். நமது கர்த்தர் தலையாக இருக்கின்றார்; மற்றும் நாம் அவருடைய அங்கங்களாக இருக்கின்றோம். கர்த்தரை இராஜாவாக ஆக்குவதற்கும், ஆயத்தப்படுத்துவதற்கும் மற்றும் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி அவரை ஆசாரியர் ஆக்குவதற்கும், ஆயத்தப்படுத்துவதற்குமென அவர் மீது பரிசுத்த ஆவி வருவதானது, எண்ணெயினால் அபிஷேகித்தல் எனும் நிழலினால் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆகவேதான் அவருடைய அபிஷேகத்தைக் குறித்து, அது ஆரோனின் தலையில் ஊற்றப்படுகிறதும், அவருடைய தாடியில் வழிந்தோடி, அவருடைய அங்கிகளின்மேல் இறங்கியிருக்கிறதான தைலமெனத் தீர்க்கதரிசி கூறுகின்றார். இது நமது தலையாகிய கர்த்தர் இயேசுவின் ஞானஸ்தானத்தின் போது, அவர்மீது பரிசுத்த ஆவி <u>வந்ததையும்</u>, அவருடைய அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கென ஆயத்தத்துடன், காத்திருந்தவர்கள் அனைவர் மீதும் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி <u>பொழியப்பட்டதையும்</u>, அதுமுதல் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் மூலம் அவரை நம்பி, அதே சரீரத்தின் அங்கத்துவத்திற்குள் வந்துள்ள நாமும், அதே அபிஷேகத்தைப் <u>பெற்றுள்ளதையும்</u> அடையாளப்படுத்துகின்றது. “நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்ததிருக்கிறது” (1 யோவான் 2:27). இந்த அபிஷேகித்தல் என்பது, ஒரு நபரைக்குறிக்காமல், மாறாக செல்வாக்கையும், ஆசீர்வாதத்தையும் குறிக்கின்றது.

நாம் கர்த்தரால் பயன்படுத்தப்படுவதும், பரிசுத்த ஆவியின் ஜெநிபித்தல் மூலமாக அவருடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்படுவதுமாகிய சிலாக்கியத்தின் மூலமாக, எத்துணை திருப்தியும், எத்துணை ஆறுதலும் கர்த்தருடைய ஜனங்களுக்குக் கடந்துவந்துள்ளது. பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், பிதா மற்றும் குமாரனுடைய பரிசுத்தமான செல்வாக்கும், ஆசீர்வாதமும், நம்முடைய கணிப்புகளையும், நம்முடைய இருதயங்களையும் வழிநடத்தி, வேதவாக்கியங்களை நமக்குத் திறந்துகாட்டி, பூமியின் சகல குடிகளுக்குமான நமது பிதாவின் இரட்சிப்புக்கு அடுத்த மகிமையான திட்டத்தினுடைய ஆழத்தையும், நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும் அதிகமாய் உணர்ந்துக்கொள்ளும் நிலைக்கு நம்மைக்கொண்டு வந்து, நம்முடைய இருதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச்செய்கின்றது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் நிலைத்திருப்பது என்பது தற்காலிகமானதல்ல. ஒரு நாளுக்கு, ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு நிலைத்திருக்கக்கூடியதாய் அல்லாமல், யுகத்தின் முடிவுவரையிலும் காணப்படும். இப்படியாக இருப்பதின் நிமித்தம் நாம் எத்துணை மகிழ்ச்சியடைகின்றோம்! நாம் அனுபவிக்கும் போதனைகளும்/அறிவுரைகளும் மற்றும் வழிநடத்துதல்களும் எவ்வளவு ஆசீர்வாதமாய் இருக்கின்றது! நமது கர்த்தர் சொன்னதுபோல, உண்மையில் பரிசுத்த ஆவியானது, நமக்கு வரப்போகும் காரியங்களைக்காட்டி, நடந்து முடிந்தவைகளை நமக்கு விவரிக்கின்றதாய்க் காணப்படும். நம்முடைய எத்தனை ஆசீர்வாதங்கள், வரப்போகின்ற காரியங்களின் உணர்ந்துக்கொள்ளுதலாய்க் காணப்படுகின்றது. அதாவது ஆயிரவருட இராஜ்யம், பூமியின் குடும்பங்களைச் சீர்ப்பொருத்தி, தூக்கிவிட்டு, பலப்படுத்துவதற்குரிய காலங்களாகிய, வரப்போகின்ற காரியங்ளைப்பற்றின உணர்ந்துக்கொள்ளுதலாய்க் காணப்படுகின்றது.

---

**R3551**

# “நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்”

## யோவான் 17:15-26.

நமது கர்த்தர் தம்முடைய மரணத்தைக் குறித்த நினைவுகூருதலை நிறுவின இரவில், அவர் தம்மைக் குறித்தும், தமக்கு வரவிருக்கும் சிலுவை மரணத்தைக் குறித்தும் முழுமையாகச் சிந்தித்துக்கொண்டிருக்காமல், விசேஷமாகத் தம்முடைய சீஷர்களைக் குறித்துச் சிந்தனை செய்பவராகவும், அவர்களுக்காக ஜெபம் பண்ணுகிறவராகவும் காணப்பட்டார். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்” (யோவான் 16:33). "இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள் அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள் நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்” (யோவான் 17:1, 9-11).

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்” என்று சபையார் அனைவருக்கும் அப்போஸ்தலன் கட்டளையிட்ட வார்த்தைகளுக்கு மாதிரியாக, நமது கர்த்தருடைய முழு வாழ்க்கையும் காணப்படுகின்றது. நமது கர்த்தரும் கூட எப்போதும் ஜெப சிந்தனையுடன் கூடிய இருதயத்துடனே காணப்பட்டார். மேலும், ஜீவியத்தின் சகல விஷயத்திற்காகவும், பிதாவுக்குச் செலுத்துகின்ற நன்றியினால் அவருடைய இருதயம் இருந்தது. அவருடைய இருதயம், பிதாவின் பராமரிப்புடன் கூடிய பாதுகாப்பை உணர்ந்திருந்தது. அவரை விசுவாசித்தது, அவருக்குள் நம்பிக்கைக்கொண்டிருந்தது. மேலும் ஒவ்வொரு பிரச்சனையான தருணங்களிலும், பிதாவே பிரச்சனைகள் அனைத்தையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றத்தக்கதாக, இயேசுவின் இருதயம் பிதாவை நோக்கி பார்க்கிறதாகவும் இருந்தது. ஆனால், இடைவிடாமல் ஜெபம் பண்ணும் நமது கர்த்தருடைய இத்தன்மையானது, அவர் வாழ்க்கையின் அன்றாட காரியங்களிலிருந்து கொஞ்சம் திரும்பி, பிதாவோடு இரகசியமாக/தனிமையில் பேசுவதற்கெனச் சில சமயம் சுருக்கமாகவும், சில சமயம் தனிமையில் இராப்பொழுது முழுதும், ஜெபத்தில் கழிப்பதற்கென அவர் விரும்பின அவருடைய மிகுந்த தனிப்பட்ட ஜெபங்களை/தியானங்களைத் தடுத்ததே இல்லை. இயேசு, தமது சீஷர்களை அன்பு செய்தபோதிலும், அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதபடியினால், அவருடைய கண்ணோட்டத்திலிருந்து அவர்களால் காரியங்களை முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாது. பிதா மாத்திரமே முழுச் சூழ்நிலைகளையும் பற்றிப் புரியக்கூடியவராகவும், அறிந்தவராகவும் காணப்பட்டார். ஆகவே இயேசு சகல மனித உதவிகளிடமிருந்தும் புறம்பாக்கி, தனிமைப்படுத்தப்பட்ட போது, இது அவரை ஜெபத்தின் வாயிலாகப் பிதாவிடம் நெருங்கி வரவும், அடிக்கடி வரவும் செய்தது.

இப்படியாகவே, கர்த்தருடைய பின்னடியார்கள் காணப்பட வேண்டும். நாம் எந்தளவிற்கு அவருடைய குணலட்சணத்திற்கு ஒப்பாக வளருகின்றோமோ, அவ்வளவாய் நாமும் அவரைப்போன்று இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துகிறவர்களாகவும், அவரை நம்முடைய சகல நம்பிக்கை, இலட்சியம் மற்றும் சந்தோஷத்திற்கான மையமாக உணர்ந்து, நமது இருதயங்களில் பாடுகிறவர்களாகவும் இருப்போம். மேலும், அவரைப்போன்று ஏற்றவேளையில் சகாயமும், இரக்கமும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக கிருபையின் சிங்காசனத்தை அணுகுவதற்கான சிலாக்கியங்களை அதிகம் பயன்படுத்துகின்றவர்களாகவும் இருப்போம். மேலும் நம்முடைய பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய அருமையானவர்கள், நம்முடைய அனுபவங்களுக்கு அனுதாபம்/இரக்கம்/ஆறுதல் காட்ட இயலாமல் இருக்கின்றார்கள் என்று எவ்வளவாக காண்கின்றோமோ, அவ்வளவாக அப்படியான அனுபவங்களின் நேரங்களில் பூமிக்குரிய அனுதாபம்/இரக்கம்/ஆறுதல் இல்லாமையினிமித்தம் இயேசுவைப் போன்றே நன்மையும் அடைவோம். அதாவது, அம்மாதிரியான (ஆறுதல் அற்ற) அனுபவங்களானது, மாபெரும் ஆசீர்வாதம் மற்றும் சந்தோஷத்தை நமக்கு தரக்கூடியதான பரலோகத் தேற்றரளவாளனிடம் (பிதா), நம்மை அடிக்கடி/அதிகமாய்க் கொண்டுசெல்லக் கூடியதாக இருக்கும்.

## "உலகத்துக்கு அல்லாமல் சபைக்கே"

இந்த ஜெபத்திலும் சரி, வேதவாக்கியங்கள் எங்கும் சரி சபைக்கும், உலகத்திற்கும் இடையில் தெளிவான எல்லைக்கோடு போடப்பட்டுள்ளது. இதைப் பார்த்து உணராதவர்களுக்கு மாபெரும் இழப்பு நேரிடுகின்றது. ஏனெனில், இது ஆச்சரியமான விதத்தில், "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து" பார்ப்பதற்கு உதவுகின்றது. "தேவன் உலகத்தை அன்புகூர்ந்தார்;" "இயேசு தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்." இயேசு, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாவார் என்றபோதிலும், அவர் உலகத்தான் அல்லாததுபோல, அவருடைய சீஷர்களாகுபவர்களும் உலகத்தாரல்ல. "நான் உலகத்தானனல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" (யோவான் 17:16). சபைக்கும், உலகத்திற்கும் நடுவே உள்ள இந்த வேற்றுமையைக் காண தவறுவது, உண்மை கிறிஸ்தவத்திற்கு ஆபத்தான விளைவைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

உலகமானது சில வாக்குத்தத்தங்களையும், பண்டிகைகளையும், சில வழக்க முறைகளையும் தனதாக்கிக்கொண்டுள்ளதால், அது ஏறத்தாழ சபையின் கிருபைகளுக்கு ஒத்ததாகவும் அல்லது போலியாகவும் காணப்படுகின்றது. இதைச் சமுதாயப் பண்பாடு என்றே அழைக்கலாம். இவ்விதமாக உலகத்தின் பெரும் பகுதியானது, இன்று தவறுதலாகச் சபையின் பாகம் என்று அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றது. சபை என்பது, மீண்டுமாக ஜெநிப்பிக்கப்பட வேண்டும் என்றும், உயிர்த்தெழுதலின்போது, அவர்கள் மீண்டும் பிறக்க வேண்டும் என்பவைகளைப் புரிந்துக்கொள்ளாதவர்களுக்கு, இது பெரும் பாதிப்பாகும். அவர்கள் தங்களையே வஞ்சித்துக்கொண்டிருக்கின்றனர். இது உண்மை சபைக்கும், கர்த்தருடைய உண்மையான பின்னடியார்களுக்கும், தங்களுடைய புதிய சுபாவங்களைக்கொண்டு மாம்சத்தின் பெலவீனங்களோடு போராட வேண்டியவர்களுக்கும் கூடப் பாதிப்பாய் அமைகின்றது. எப்படியெனில், இவர்களுடைய மாம்சம் பொதுவான வழக்கமுறைகளைக் கொண்டு தன்னை நியாயப்படுத்த நாடுகின்றது. மேலும், பொதுவான கோட்பாடுகளைத் தாண்டி செயல்படுவது மதவெறி என்றும், மதத் தீவிரவாதம் என்றும் இவர்களுடைய மாம்சம் வலியுறுத்துகின்றது. மரணம் வரையிலுமான சுயத்தை வெறுத்த விஷயத்திலும், வாழ்க்கையின் விஷயத்திலும் இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்கள் கொண்டிருந்த கோட்பாடுகளின்படி, கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் வாழும்போது, நாம் உலகம் மற்றும் பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் கண்ணோட்டத்தின்படி மதத்தீவிரவாதிகள் என்றே கணிக்கப்படுவோம் என்பதைக் கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது கர்த்தர் உலகத்துக்காக ஜெபம் பண்ணவில்லை, ஏனெனில், உலகத்தைக் கையாளுவதற்கான கர்த்தருடைய வேளை இன்னும் வரவில்லை; அவ்வேளையானது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை தெரிந்தெடுக்கப்படுவது வரையிலும் வருவதில்லை. அவர் விசேஷமாகத் தம்முடைய அப்போஸ்தலர்களுக்காக ஜெபம் பண்ணினார். ஏனெனில், அவர்கள் உலகத்தில், தம்முடைய விசேஷமான பிரதிநிதிகளாகக் காணப்படப்

போகின்றவர்கள். மேலும், அதுவரையில் உண்மையான இருதயங்களோடு அவரை விசுவாசித்துக் கொண்டிருந்த 500 சகோதரருக்காகவும், அவருடைய ஜெபம் உள்ளடங்கி காணப்பட்டது. இவர்கள் மாத்திரமல்லாமல், (வசனம்-20) யுகம் முடியும் வரையிலும் காணப்படும் இதுபோன்ற வகுப்பார் யாவருக்குமாக, அவருடைய விண்ணப்பம் காணப்பட்டது. அதாவது அவருடைய சீஷர்களாகவும், பின்னடியார்களாகவும் ஆகத்தக்கதாக, உலகத்திடமிருந்து பிரித்து, சத்தியத்தின் இடுக்கமான வழியில் செல்லத்தக்கதாக, யார் யாருடைய விசுவாசமானது, மிகுந்த உண்மையுடனும், முழுமையுடனும் இருந்து, அவர் மேல் நம்பிக்கையுடனும் காணப்படுகின்றதோ, அத்தகையவர்கள் யாவருக்குமாக அவருடைய விண்ணப்பம் ஏறெடுக்கப்பட்டது.

## "எவைகளுக்காகக் கர்த்தர் ஜெபம் பண்ணவில்லை"

இன்றைய உலகத்திலுள்ள பெயர்க்கிறிஸ்தவச் சபையின் கண்ணோட்டத்தை நாம் எடுத்துக்கொண்டு, நம்மை ஒரு பெயர்க்கிறிஸ்தவ விசுவாசியின் ஸ்தானத்திலும், பெயர்க் கிறிஸ்தவன் அறிக்கைபண்ணுகிற விசுவாசத்தின் கண்ணோட்டத்திலும் நம்மை நாம் பொருத்திப்பார்க்க முற்படுவோமாகில், நம் கர்த்தர் தற்கால சூழ்நிலைகளுக்காகவே ஜெபித்தார் என்று நாம் எண்ணிக்கொள்வோமானால், அவருடைய ஜெபம் பின்வரும் வார்த்தைகளை உள்ளடக்கிக் காணப்படலாம்: அதாவது,

"என்னுடைய பின்னடியார்கள் எண்ணிக்கையில் மிகப் பெரிய அளவாக வேண்டும் என்றும், அவர்கள் மிகவும் செல்வ செழிப்புடனும், மிகவும் கல்வியறிவு உடையவர்களாகவும் இருந்து, இதன் மூலம் அவர்கள் உலகத்தார் மத்தியில் சிறப்பு மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்றும், நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, அவர்கள் மாபெரும் மதப் பிரிவுகளாகப் பிரிய வேண்டும் என்றும், அவர்களில் சிலர் சத்தியத்தின் ஒரு பாகத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டும், வேறு சிலர் சத்தியத்தின் பாகங்களோடு தப்பறைகளையும், முரண்பாடுகளோடு கலந்துவிடவும் வேண்டும் என்று நான் ஜெபம் பண்ணுகின்றேன். வெளித்தோற்றமான பயபக்தியும், சுயத்தில் திருப்தியும், பெருமையும்/கௌரவமும் கொண்டு, சமயக் குருமார் திருச்சபை (Episcopalians) என்று அறியப்படும் வகுப்பாருக்காக நான் ஜெபம் பண்ணுகின்றேன். வெஸ்ட் மினிஸ்டரின் அறிக்கையின்படியான விசுவாசத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்து, பிற்காலங்களில் தாங்கள் கைக்கொண்டிருந்த விசுவாசத்திற்கு நேர் எதிர்மாறான, சுருக்கமான பிற்சேர்க்கையை 1902-ஆம் வருடத்தில் வெளியிடப்போகும் கௌரவமான வகுப்பாருக்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, வெஸ்லியின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டு, தங்கள் வழிபாடுகளில் அநேக உலகரீதியான வழக்கங்களையும், கவர்ச்சிகளையும் சேர்த்துக்கொண்டு, மிகவும் செழிப்புள்ளவர்களாகி, வருடம் முழுவதும் தங்கள் சபை கட்டிடத்தைக் குறித்துப் பெருமையாகப் பேசப்போகும் மற்றொரு மாபெரும் சபை பிரிவுக்காகவும் நான் ஜெபம்பண்ணுகிறேன். இன்னுமாக, என்னுடைய நாமத்தைத் தரித்துக்கொண்டு, லூதரை பின்பற்றுகிற மற்றுமொரு மாபெரும் பிரிவு அல்லது என் பின்னடியார்களின் வகுப்பாருக்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். என்னுடைய இராஜ்யத்தைத் தன்னுடையது என்று கூறிக்கொண்டு, பூமியின் இராஜாக்கள்மேல் வல்லமையிலும், மாபெரும் மதிப்பிலும், கனத்திலும் ஆளுகை செய்வோம் என்று உரிமை பாராட்டிக்கொண்டும், தங்களுடைய தலைவர் மற்றும் பிரதிநிதிகளே என்னுடைய பிரதிநிதி என்றும், உலகத்தின் ஆவிக்குரிய சக்கரவர்த்தி என்றும் உரிமை பாராட்டப்போகும் மாபெரும் உரோம கத்தோலிக்க திருச்சபைக்காக நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, இச்சபை பிரிவானது, தன்னுடைய சூழ்ச்சியான திட்டங்கள் வாயிலாக, என்னுடைய வார்த்தைகள் பொது ஜனங்களைச் சென்றடையாத வண்ணம் பார்த்துக்கொள்ளட்டும் என்றும், இச்சபை பிரிவானது எண்ணற்ற அதன் பூசை பலிகளை, பாவத்திற்கான என்னுடைய மாபெரும் பலிக்கு அடையாளமாக வைக்கட்டும் என்றும், இப்பிரிவினர் செழித்தோங்கவேண்டும் என்றும், இவர்கள், "உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கட்டும்" என்றும் நான் ஜெபம் பண்ணுகின்றேன்.

இன்னுமாக, இந்த அனைத்து சிறு சிறு பிரிவினரும், செழித்தோங்க வேண்டும் என்றும், அந்த ஒவ்வொரு பிரிவினரும் தங்களிடத்தில் மாத்திரமே சத்தியம் இருக்கின்றது என எண்ணிக்கொண்டு, தங்கள் தங்கள் விசுவாசப் பிரமாணங்களில் திருப்தி அடைந்தவர்களாகக் காணப்பட்டு, வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும்

அறிந்துக்கொள்வதற்கென வேதவாக்கியங்களை ஆராய்வதிலிருந்து தடைபண்ணப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும், நான் ஜெபம் பண்ணுகின்றேன். இப்பிரிவினர்கள் அனைவரும் இவ்விதமாகச் சிதறடிக்கப்பட்டவர்களாகவும், பிரிந்து பிரிந்து காணப்படுகிறவர்களாகவும் இருந்து, தங்களுக்கு இடையில் ஒருவருக்கொருவர் வேலிகள் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, இப்பிரிவினர்கள் தங்களை ஒவ்வொரு பிரிவினரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு அவர்கள் மதபிரிவின் எல்லை கோடுகளைக்கொண்டிருப்பதோடு, அரசியல் ரீதியான எல்லைக் கோடுகளையும், தேசம் சார்ந்த அடிப்படையில் பிரிக்கும் எல்லைக்கோடுகளையும் கொண்டவர்களாக இருந்து, இதன் காரணமான ஒரு பிரிவை அல்லது தேசத்தைச் சார்ந்த ஆயிரமாயிரமானவர்கள், மற்றப் பிரிவினர் (அ) தேசத்தைச் சார்ந்தவர்களை அச்சுறுத்தி, யுத்தம் புரிந்து, கொன்றுபோடவும் நான் அவர்களுக்காக ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக இவர்கள் ஒருவரோடு ஒருவர் யுத்தம் பண்ணுவதற்கும் (அ) ஒருவரையொருவர் பயமுறுத்துவதற்கும், மிரட்டுவதற்கும் என ஒவ்வொரு வருடமும் படைகளுக்காகவும், ஆயுதங்களுக்காகவும், போர்க்கப்பல்களுக்காகவும், பல மில்லியன் டாலர்களைச் செலவழிக்கும் அளவிற்கு இவர்களுக்கு இடையே காணப்படும் இந்தத் தேசம் அடிப்படையிலான வித்தியாசங்கள் மிஞ்சி போவதற்காகவும் நான் ஜெபம் பண்ணுகின்றேன். இன்னுமாக, கிறிஸ்தவ மண்டலத்தார் கையாளும் என்னுடைய போதனைகளினால் உண்டாகும் மகிமையான காரியங்களைக் கண்டு அந்நிய தெய்வங்களை வணங்கும் உலகத்தார் வசீகரம் அடைய வேண்டும் என நான் ஜெபம் பண்ணுகின்றேன். மேலும், அந்நிய தெய்வங்களை வணங்கும் உலகத்தார் வசீகரிக்கப்பட்டு, நாமும் தனிக் கட்சிகளாகவும், மதப் பிரிவினரின் உறுப்பினர் ஆகலாம் வாருங்கள் என்றும், நாமும் ஆயுதம் தரித்து, யுத்தம் பண்ணலாம் என்றும், தூய்மை அற்று நடப்பதற்கும், குடிவெறிக் கொள்வதற்கும், நெறிதவறிச் சிற்றின்பங்களில் ஈடுபடுவதற்குமான பிரத்தியேக உரிமை கிறிஸ்தவத் தேசங்களுக்கு மாத்திரம் முழுமையாக இல்லை. ஆகையால், இச்செயல்களை நாமும் செய்யத்தக்கதாகக் கிறிஸ்தவத் தேசத்தாரின் வழிமுறைகளை நாமும் கற்றுக்கொள்வோம் வாருங்கள் என்றும் ஒரே குரல் எழுப்பும்படிக்கு நான் அவர்களுக்காக ஜெபம் பண்ணுகின்றேன்." இவ்வாறாகவே அவரது ஜெபம் அமைந்திருக்கும்.

## "எவைகளுக்காக நமது கர்த்தர் ஜெபம் பண்ணினார்"

நமது கர்த்தருடைய விண்ணப்பங்கள் மிகவும் வித்தியாசமாகக் காணப்பட்டது. அவருடைய சீஷர்கள் உலகத்தில் சிறுபான்மையாகவே இருப்பார்கள் என்றும், அவர்கள் உலகத்தால் வெறுக்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் எதிர்க்கப்படுவார்கள் என்றும், உலகத்தால் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அவர்களில் அநேகர் பெரியவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும், ஞானிகளாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், ஐசுவரியவான்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரபுக்களாக அநேகர் இருக்கமாட்டார்கள் என்றும், பிரதானமாக ஏழைகளாகவும், "சிறுமந்தையினராகவுமே" இருப்பார்கள் என்றும்தான் அவருடைய ஜெபத்தின் வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றது. இயேசு தனிப்பட்ட விதத்தில் தெரிந்தெடுத்துக்கொண்ட சீஷர்களிடம் காணப்பட்ட பண்புகளானது, பிற்காலங்களிலும் அவருடைய உண்மையான பின்னடியார்களென, அவரிடம் கிட்டிச்சேரும் அனைவரிடமும் காணப்பட வேண்டும்.

கிறிஸ்தவத் தேசங்கள் மற்றும் கிறிஸ்தவப் பிரிவுகளின் மக்கள் மகாத் திரளாய்க் காணப்பட்டாலும், "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." மேலும், இந்த ஜெபத்தை நாம் பார்க்கையில், இந்த யுகத்தில் அவர் தம்முடைய ஜனங்களை உலகத்திடமிருந்து பிரிக்காமல், அவர்களை உலகத்தில்தான் விட்டுச் சென்றார். அவர்கள் இருதயம் உலகத்திடமிருந்து பிரிந்திருப்பது மாத்திரமே முக்கியமானதாகும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:15). தீமையை நன்மை என்று நாம் சொல்லக்கூடாது, உலகம் தூய்மையாகிவிட்டது என்று நாம் சொல்லக்கூடாது, அது இன்னமும் தீமை நிறைந்ததாகவே உள்ளது. கர்த்தரைச் சிலுவையில் அறைந்து, அவருடைய பின்னடியார்களைத் துன்பப்படுத்திய யூத மார்க்கம் அப்போது எந்த நிலையில் காணப்பட்டதோ, அதே நிலையில்தான் இன்று கிறிஸ்தவ மண்டலமும் நடைமுறையில் காணப்படுகின்றது.

அப்போதிருந்த யூதர்களின் பிரதானமான மதப் பிரிவினர், தங்களைத் தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் (இதுவே பரிசேயர் என்ற வார்த்தைக்கான அர்த்தமாகும்) என்று தாங்களே அழைத்துக்கொண்டனர். மேலும், முழுத் தேசமும் வெளிப்புறமான ஒழுக்கம் என்னும் தளத்தில் நின்றுக்கொண்டிருந்ததை, கர்த்தர் தமது பார்வையில் நாடகமாகவே பார்த்தார். அந்தத் தலைவர்களைக் குறித்து, அவர் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்றும், உள்ளே முழுத் தீட்டு காணப்படுகின்றது என்றும் கூறினார். மேலும், அவர்கள் பாத்திரத்தின் வெளிபாகத்தைச் சுத்தமாக்கியிருக்க, உட்புறத்தை அழுக்காகவே விட்டுவிட்டார்கள் என்றும், அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கிக் கொண்டு, வீதிகளில் ஜெபம் செய்கிறார்கள் (மத்தேயு 23:5), ஆனால் அவர்களின் இருதயமோ பரிசுத்தம் (அ) அன்புக்கு மிகத் தொலைவில் காணப்படுகின்றது என்றும், கர்த்தர் கூறினார். ஒருவேளை நியாயப்பிரமாணத்தின் மேலோட்டமான கருத்து ஏழை விதவையின் வீட்டை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்குமாயின், மேலும், அப்படிச் செய்யும் போதும், அச்செயல் அதிக அளவில் பழித் தூற்றுதல் கொண்டுவருவதில்லை என்றால், தவறான விதத்தில் விதவையின் வீட்டை எடுக்க விரும்பும் அளவிற்கு, அவர்களுடைய இருதயம் பரிசுத்தத்திற்கும் (அ) அன்பிற்கும் மிகத் தொலைவில் காணப்படுகின்றது. (மத்தேயு 23:14,23-28). இன்றைய காலங்களிலும் இப்படியாகவே காணப்படுகின்றது. வெளிப்புறத்தில் பளபளப்பு (அ) பாசாங்கே காணப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் மாய்மாலமும், வெளிவேஷமான வழிபாடுந்தான் காணப்படுகின்றது; நாகரிகமான உடைகள் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றில் மூழ்கிப்போன நிலையிலும், கடுமையான பாவங்கள் மூலம் பணம் சம்பாதிக்கும் விக்கிரக ஆராதனையில் மூழ்கிப்போன நிலையிலும், இருதயம் தேவனிடத்திலிருந்து மிகத் தொலைவில் இருக்க, உதடுகள் மாத்திரமே அசைகின்றதாய் இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலைகளிலிருந்து தம்முடைய உண்மையான பின்னடியார்கள் பரலோக வல்லமையினால் விலக்கிக் காக்கப்பட வேண்டும் என்றே நமது கர்த்தர் ஜெபம் பண்ணினார். அதாவது மாய்மாலங்கள் மீது ஈர்க்கப்படுவதிலிருந்தே விலக்கி, காக்கப்படுவார்களே ஒழிய, மாய்மாலக்காரர்களிடமிருந்து பின்னடியார்கள் பிரிக்கப்படுவதில்லை. இது சுவிசேஷ யுகம் முழுவதும் உள்ள அனைவருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது என நாம் விசுவாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜெபம் நிறைவேறியுள்ளது என்றும், சிதறி ஆங்காங்கே காணப்படும் அவருடைய சிறுமந்தையானது, அதாவது மெய்யான திராட்சச் செடியின் கிளைகளானது, இருதயத்தில் ஆவிக்குரியவர்களாகத் தழைத்து ஓங்கியுள்ளனர். மேலும், உலகத்தின் ஒரு பாகமாக மாத்திரமே இருக்கும் பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரிடமிருந்து, முற்றிலும் பிரிந்த ஜீவியத்தைக் கைக்கொண்டவர்களாக இருக்கின்றனர் என்றும் நாம் நம்புகின்றோம். இன்றும் உலகத்திற்குள் இருந்தும், உலகத்தார் அல்லாததுபோன்று இருப்பவர்கள் இந்த அறுவடையின் காலக்கட்டத்தில், "என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று பாபிலோனிடமிருந்து அழைக்கப்பட்டு வருகின்றார்கள் (வெளிப்படுத்தல் 18:4). பாபிலோனிலிருந்து விடுதலைப் பெற்றுத் திரும்புவதற்கென இஸ்ரயேலர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்ட போது, 50,000 பேர் மாத்திரமே புறப்பட்டு வந்தவர்களின் இலக்கமாயிருக்க, இதைப்போன்றே எல்லாவற்றையும் விட்டுவிட்டு, சத்தியத்தையும், நீதியையும் பின்பற்ற சந்தோஷத்துடனும், தாமதம் காட்டாமலும் வருபவர்களின் எண்ணிக்கை சொற்பமானதாய் இருக்கத்தக்கதாக கர்த்தர் தப்பறைகளின் பிரபலத்தையும், சத்தியத்தின் பிரபலமின்மையையும் இதற்கேற்றாற்போல் ஒழுங்குச் செய்திருக்கின்றார்.

## "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்"

இந்த ஜெபமானது, இரண்டு காரியங்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. முதலாவதாக, ஏன் அவர்கள் காக்கப்படுவார்கள் என்றும், இரண்டாவதாக, கர்த்தருடைய பின்னடியார்கள் எப்படிக் காக்கப்படுவார்கள் என்பதுமேயாகும். (1) அவர்கள் உலகத்தார் அல்லாததினால், அவர்கள் கர்த்தருடைய பட்சமாய் நிற்போம் என்று வந்தவர்களானபடியினால், அவர்கள் பாவம் மற்றும் உலகத்திற்கு மரித்துப்போனவர்களாகக் கருதப்பட்டு, பரிசுத்த ஆவியினால் புதியதான ஜீவனுக்குள் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளபடியினால் அவர்கள் காக்கப்படுகின்றார்கள். (2) அவர்கள் உலகத்தில் இருக்கையில்

காக்கப்படுவார்கள். ஆனாலும், உலகத்தினால் காக்கப்படாமல், அவர்களுடைய இருதயத்தில் காணப்படும் சத்தியத்தின் வல்லமையினால் காக்கப்படுவார்கள். சத்தியமானது, அவர்களைப் பரிசுத்தமாக்கும் அல்லது பிரித்து வைக்கும். ஏதாகிலும் ஒரு சத்தியம் அல்ல, அனைத்துப் பெயர்க்கிறிஸ்தவ சபைகளின் சத்தியங்களும் அல்ல, மாறாக, தெய்வீகக் குணலட்சணம், தெய்வீகத் திட்டம் மற்றும் இவைகளுடனாக சபையின் தொடர்பைக் குறித்ததான தெய்வீக வெளிப்படுத்தல்கள் உடைய சத்தியமே அவர்களை காக்கின்றது. இவைகள் அனைத்தையும்தான் கர்த்தர் இரத்தின சுருக்கமாக, "உமது/என் வசனமே சத்தியம்" என்று கூறுகின்றார். அதாவது, வசனமாகிய சத்தியமே என்னுடைய சீஷர்களை உலகத்தினின்று பிரிக்கக்கூடியதாக இருக்கின்றது என்றார்.

"உபதேசங்கள்" உலகத்தின் அனைத்து மூலைகளிலும், பெயர்க்கிறிஸ்தவச் சபைகளிலும் பிரபலமற்ற நிலையில் போய்விட்டது என்று நாம் அறிவோம். இதில் எவ்வித ஆச்சரியமுமில்லை! பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தின் பல்வேறு பிரிவுகள் மற்றும் இயக்கங்களின் உபதேசங்களும், விசுவாசப்பிரமாணங்களும் தப்பறையான விஷயங்களோடு மிகவும் கலக்கப்பட்ட நிலையில் காணப்படுவதினால், இவைகள் ஆவிக்குரிய மனதினுடைய ஆவிக்குரிய புலன்களுக்கு மிகவும் வெறுப்பாயிருப்பதினால், பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் மேஜையிலிருந்து, இப்படிப்பட்டவைகளைப் பங்கெடுக்க சபை ஜனங்கள் எவ்வளவேனும் விரும்புவதில்லை. இதைக் குறித்துதான், தீர்க்கத்தரிசி, "போஜன பீடங்களெல்லாம் வாந்தியினாலும், அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது" என்று கூறுகின்றார். இருண்ட யுகத்தின் போது, உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசப்பிரமாணமும் இன்றும் அருவருக்கத்தக்கதாகவே இருக்கின்றது. ஆனால், "உமது வசனமே சத்தியம்" என்று சொல்லப்படும் சத்தியமானது ஒருபோதும் ஊசிப்போவதில்லை, ஒருபோதும் சலிப்படைவதில்லை (அ) அருவருக்கப்படும் நிலைக்குப்போவதில்லை. அது இன்னமும் பரலோகத்திலிருந்து வந்த அப்பமாகவே இருக்கின்றது. அது இன்னமும் ஜீவ அப்பமாகவே இருக்கின்றது. மேலும், சத்தியத்தில் காணப்படும் <u>அனைவராலும்</u>, கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக மாத்திரம் இருந்து, அவருடைய வார்த்தை எனும் போஜனத்தைப் புசித்து, அதனை உட்கிரகித்துக் கொண்டவர்கள் <u>அனைவராலும்</u>, பால்குடிப்பதை மறந்து, பலமுள்ள ஆகாரம் புசிக்க ஆயத்தமாக இருக்கும் <u>அனைவராலும்</u>, "தெய்வீகத் திட்டமானது எனது ஏக்கங்களைத் திருப்தி செய்த வண்ணம், வேறு எதுவும் என்னை திருப்திச் செய்ய முடியாது" என்று பாடுகிற கவிஞனோடு சேர்ந்து பாட முடியும்.

சத்தியமானது இருதயத்தின் ஏக்கங்களை நிறைவு செய்வதினால், சத்தியம் இருதயத்தைச் சுத்திகரிக்கும் வல்லமை உடையதாக இருக்கின்றது. ஒவ்வொரு இருதயத்திலும் காணப்படும் தாலந்துகள்/திறமைகள் மற்றும் விண்ணப்பங்கள் செயல்பட வேண்டுமென விரும்புகின்றது. இருதயத்தின் இந்தப் பல்வேறு தாலந்துகள் மற்றும் பண்புகளின் பசிதாகத்தைச் சந்திப்பதற்கு/திருப்திப்படுத்துவதற்கு ஏதாகிலும் கொடுக்கப்பட வேண்டும். இருதயத்தின் ஏக்கங்களை (அ) ஆர்வங்களைத் திருப்திப்படுத்துவதற்கென்று, தெய்வீக வார்த்தைகளின் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களானது, இருதயத்திற்குள் கொண்டு போகப்படவில்லை எனில், இருதயம் மற்ற விஷயங்களைக் கொண்டு திருப்தியாகிவிடும். உலகமும், மாமிசமும், பிசாசும் இருதயத்தைச் சூழ்ந்து, பல்வேறு கவர்ச்சிகரமானவைகளை அதற்கு அளித்துக்கொண்டிருப்பதினால், ஒருவேளை இருதயமானது தெய்வீக வாக்குத்தத்தங்களினால் நிரப்பப்படாமலோ, நிரப்பப்பட்ட நிலையில் காக்கப்படாமலோ விடப்படும் பட்சத்தில், கவர்ச்சியான இவைகளில் சிலவற்றை இருதயம் ஏற்றுக்கொண்டு நிரம்பிவிடும். ஆகவேதான், நமது கர்த்தருடைய உவமைகளில் இப்படியாக வருகின்றது, "அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிககேடுள்ளதாயிருக்கும் என்றார்" (மத்தேயு 12:43-45). கிறிஸ்துவின் மீதான விசுவாசம் மூலம் நீதிமானாக்கப்படுவதினால், நம்முடைய இருதயங்கள் பாவங்களிலிருந்து <u>சுத்திகரிக்கப்பட்டால்</u> மாத்திரம் போதாது, நம்முடைய இருதயத்தில் கர்த்தர் நிரம்பி இருக்கவும் வேண்டும்; மேலும், தம்மைச் சத்தியம் என அழைக்கும் கர்த்தர், உணவாக, போஷாக்காக பல்வேறு சத்தியங்களை நம்முடைய இருதயத்திற்குக் கொடுக்கின்றார்; நமது இருதயத்தை நிரப்புகின்றார்; நம்முடைய ஆர்வங்களைத் திருப்திச் செய்கின்றார். மேலும்

இப்படியாக நிரப்புவதின் மூலம், நீதியின் பால் பசிதாகம் உள்ளவர்களை அவர் பரிசுத்தப்படுத்துகின்றார். மேலும் இப்படியாக, அவர்களை முற்றிலுமாகப் பிரித்து, உலகத்திடமிருந்தும், அதன் ஆவி, அதன் நம்பிக்கைகள், அதன் நோக்கங்கள், அதன் இலட்சியங்களிடமிருந்தும் அவர்களைப் பிரித்துக்காக்கின்றார்.

## ''தேவனுடைய ஏற்ற வேளையில் செயல்படும் தேவனுடைய வல்லமை''

நீதியின் பால் நமக்கு அன்புள்ளதா? நீதியை உலகத்தில் நாம் எதிர்ப்பார்க்கவும் முடியாது. தற்கால சூழ்நிலைகளின் கீழ் நீதியை பூமியில் ஸ்தாபிக்கலாம் என்று நாம் எதிர்ப்பார்க்கவும் முடியாது. தேவனால் வாக்களிக்கப்பட்ட இராஜ்யம் அல்லாமல், வேறு எதுவும் நீதியை ஸ்தாபிக்க முடியாது என்று ஒப்புக்கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே நோவாவின் புறா போன்று நம்முடைய இருதயங்கள் நீதியின் மையமாகவும், ஊற்றாகவும் இருக்கும் கர்த்தரிடத்திலேயே திரும்புகின்றது. சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நாம் விரும்புகின்றோமா? முழு உலகமும் சந்தோஷத்தை நாடினாலும், அதைக் கண்டடையவில்லை என்று உலகத்திலிருந்தபோது, நம்முடைய கடந்தகால அனுபவங்கள் நமக்குக் காட்டியுள்ளது. கர்த்தரைக் கண்டடைந்தவர்களாகிய நாமோ சந்தோஷத்தின் இரகசியத்தை அதாவது, ஒவ்வொரு நாளையும் சந்தோஷமாகக் கழிக்கும் கிறிஸ்தவனுடைய இரகசியத்தைக் கண்டடைந்துள்ளோம். நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக நாம் வல்லமையையும், செல்வாக்கையும் விரும்புகின்றோமா? ஆனால், இவைகளைத் தற்கால சூழ்நிலையின் கீழ்ப் பெற்றுக்கொள்வது, கூடாத காரியம் என்று சத்திய வசனம் நமக்குக் கூறுகின்றது. ஆனால் நாம் ஒருவேளை உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுதலில் வல்லமை, மகிமை, கனம் மற்றும் அழியாமை பெற்றுக்கொள்ளம்போது, பூமியின் சகல குடிகளை ஆசீர்வதிப்பதாகிய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களில் நம்முடைய மாபெரும் எதிர்ப்பார்ப்புகளும், சிறந்த இலட்சியங்களும் நிறைவேற்றப்படுவதைக் காணலாம். ஐசுவரியங்கள் நம்மைக் கவருகின்றதா? வேதவாக்கியங்கள் உண்மையான ஐசுவரியங்களை உடையதாக இருக்கின்றது. இன்னும் நாம் கர்த்தரைப் பின்பற்றுகையில், இப்பொழுது விசுவாசத்தினால் அனைத்தும் நமக்குச் சொந்தமாக இருக்கின்றது; பின்னர் பரலோக இராஜ்யத்தில், நம்முடைய போதகருடன் நாம் உடன் ஊழியர்களாக ஆகும்போது, அனைத்தும் உண்மையில் நமக்கே சொந்தமாகிவிடுகின்றது என்று வேதவாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றது.

"நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்." (யோவான் 17:18). பிதா எப்படிக் குமாரனை அனுப்பினார் என்றும், குமாரன் மாம்சமாகி, நம் மத்தியில் மனுஷனாக வாசம் பண்ணுபவராக மாற்றப்படுவதற்கு முன்பு, அவருக்கு பிதாவோடு இருந்த மகிமையைத் துறந்து வந்தார் என்றுமான காரியங்களுக்கு, நமக்குப் போதுமான அளவு நிரூபணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், உலகத்தாராகப் பிறந்துள்ள நாம், எந்த விதத்தில் உலகத்திற்கு அனுப்பப்படுகின்றோம்? உண்மைதான் ஒரு காலத்தில் அப்போஸ்தலர்கள் விசேஷமாக அனுப்பப்பட்டிருந்தனர். ஆனால், கர்த்தருடைய சகல பின்னடியார்களும் ஒரு விதத்தில் அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இருதயத்திலும், சத்தியத்திலும் நாம் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாக நாம் உலகத்தினின்று, பிரிக்கப்படாதது வரையிலும், நாம் அனுப்பப்படுவதில்லை. பின்னரே, அவருடைய நாமத்தில், அவருடைய காரணத்திற்கென, ஒரு வேலை செய்யும்படிக்கு அவர் நமக்கு ஒரு கட்டளையை (அ) செய்தியைக் கொடுத்துள்ளார். அவருடைய காரணம் என்று சொல்லும்போது, அது நீதியின் பொருட்டான காரணமாகவே இருக்கின்றது. கர்த்தருடைய உண்மையான பின்னடியார்கள், தேவனுக்கான ஸ்தானாபதிகளாகவும், இயேசுவின் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றார்கள். அவர் உலகத்தில் இருந்ததுபோன்று, நாமும் உலகத்தில் இருக்கின்றோம். ஆகவே நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடக்கும்படிக்கும், நமக்குள்ளாகவே பாவத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், பாவத்திற்கு எதிராகவும், நீதி, சத்தியம் மற்றும் வெளிச்சம் ஆகியவைகளுக்கு ஆதரவாகச் சகலவிதமான நேர்த்தியான வழிகளிலும் நம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கும் அவர் நம்மை அழைக்கின்றார்.

## "சபையோடு மகிமை பங்கிடப்படுதல்"

"அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி, அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" (யோவான் 17:19, திருவிவிலியம்) இத்தருணத்தில் பிதாவின் திட்டம் குறித்துத் தெளிவான புரிந்துக்கொள்ளுதலுக்குள், நமது கர்த்தர் வந்துவிட்டார் என்பது இவ்வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. அதாவது, இராஜ்யத்தில் தம்மோடு உடன்சுதந்தரர்கள் ஆகுவதற்கும், தம்முடைய மகிமையில் பங்கடைவதற்குமான நோக்கத்திற்கெனத் தம்முடைய சீஷர்கள் வளர்த்தப்பட வேண்டும் என்பதைக் குறித்ததான பிதாவின் திட்டத்தை முழுமையாகப் புரிந்துக்கொண்டிருந்தார். இராஜ்யத்தின் இத்தகைய மாபெரும் மகிமையைப் பங்குப்போடுவது, இயேசுவின் மாபெரும் மகிமையைக் குறைத்துப் போடுவதுபோன்று, நாம் பார்க்கும் மாத்திரத்தில் நமக்குத் தோன்றலாம். அதாவது, இது மோசேயுடன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு நியாயம் விசாரிப்பதற்கென, 70 மூப்பர்கள் நியமித்த காரியமானது, மோசேயின் அதிகாரத்தை (அ) கௌரவத்தைக் குறைத்துப் போடுவதுபோன்று அதைப்பார்க்கும் மாத்திரத்தில் தோன்றியதுபோல் காணப்படுகின்றது.

ஆனால், நிழலில் மோசே மிகவும் சாந்தத்துடனும், மகிழ்ச்சியுடனும், 70 மூப்பர்களையும் தன்னுடன் பணிபுரிய வரவேற்கும் விதத்தில், "ஆண்டவரின் மக்கள் அனைவருமே இறைவாக்கினராகும்படி ஆண்டவர் அவர்களுக்குத் தம் ஆவியை அளிப்பது எத்துணை சிறப்பு!" என்று கூறுகின்றார் (எண்ணாகமம் 11:29, திருவிவிலிய மொழியாக்கம்). ஆகவே கர்த்தர் இயேசுவும், தம்முடன் கூட்டிச்சேர்க்கப்படும் சபையானது, தம்முடைய இராஜ்யத்தில் உடன்சுதந்திரர்களாக இருப்பது, தம்முடைய மகிமையைக் குறைத்துப் போடுகின்றதாய் இருக்குமே என்று எண்ணுவதற்குப் பதிலாக, அவர்களை இருதயப்பூர்வமாகத் தெய்வீகத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டார். இன்னுமாக அவர் தாம் இடம் விட்டுக் கொடுப்பதாகக் கூறுகின்றார். அதாவது, பிதாவின் பரிசாகிய மகிமை மற்றும் கனம் ஆகிய அம்சங்களில் தம்முடைய பின்னடியார்கள் பங்கடையும் படிக்கும், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மகா அருமையான வாக்குத்தத்தங்கள் மற்றும் சத்தியத்தின் வாயிலாக தங்களை அர்ப்பணித்து, இத்தகைய கனத்திற்குள் வரவும், தம்மோடு கூட உடன் சுதந்திரர்களாக இருக்கும்படிக்கும் வந்த அவர்கள் பங்கடையத்தக்கதாக, குமாரன் விலகி இடம் விட்டுக் கொடுத்தார் என்று கூறுகின்றார். இதே கருத்துதான், "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். . . என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்ற வசனங்களில் வெளிப்படுகின்றது (யோவான் 17:22, 23).

தேவனுடைய அன்பானது நம்முடைய இருதயங்களில் ஊடுருவுகையில், அதில் சுயநலம் குடிக்கொள்வதற்கு இடமே இருப்பதில்லை. நமது அன்பான மீட்பர், மற்றவர்கள் தெய்வீகச் சுபாவத்திற்குள் உயர்த்தப்பட்டு, இராஜ்யத்தின் பங்காளிகள் ஆக்கப்பட போவதைக் குறித்துப் பொறாமை கொள்வதற்குப்பதிலாக, தம்முடைய ஜெபத்தில் தாம் இத்திட்டத்திற்கு முழுமையாக ஒப்புக்கொள்ளுவதாகவும், இதற்கு இருதயப்பூர்வமான ஒத்துழைப்பையும் அருளுவதாகவும், இத்திட்டம் இப்படி இருப்பதினிமித்தம் தமக்கும் சந்தோஷமாய் இருப்பதாகவும், பிதாவிடம் அறிக்கைப்பண்ணினார். இக்காரியங்கள் பரலோக மணவாளனுக்கு ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ள, வருங்கால மணவாட்டிகளாகிய நமக்கு எத்தகைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. நம்மை நம்முடைய தாழ்மையான நிலையிலிருந்து உயர்த்தி, அவரோடுகூட, அவருடைய இராஜ்யத்தில் அவருடைய சிங்காசனத்தில், அவருடைய பிதாவின் அன்பில் பங்கடையச் செய்வதில் கர்த்தர் பிரியமுள்ளவராக இருக்கின்றார்.

அதிசயங்களிலேயே அதிசயம்! தெய்வீகக் கருணைக்கு முடிவே இல்லை! நாம் இன்னமும் பாவிகளாக இருக்க, இன்னமும் மரணம் என்னும் தெய்வீகத் தீர்ப்பின் கீழ் இருக்கையிலேயே, நாம் அன்புகூரப்பட்டுள்ளோம். மாபெரும் விலை கொடுத்து மீட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம். மீட்கப்பட்ட பின்னர் இப்பொழுது, ஒரு பரலோக சத்தத்தை நாம் கேட்கின்றோம்... "இன்னும் மேல் நிலைக்கு/உயர வாருங்கள்." ஆம், இராஜாதி இராஜாவிடத்திற்கும், கர்த்தாதி கர்த்தரிடத்திற்கும், பிதாவின் ஒரே பேறானவரிடத்திற்கும்,

கிருபையும், சத்தியமும் முழுமையாகக் கொண்டிருப்பவரிடத்திற்கும், அவரோடு கூட அவருடைய சிங்காசனத்திலும், அவரோடு உடன் சுதந்தரர்களாகவும் இருக்க வாருங்கள் என்பதேயாகும். அன்பு மற்றும் சுயநலமின்மையின், இம் மாபெரும் வெளிப்படுத்துதலை நம்முடைய மனங்களுக்கு முன்பாக நாம் என்றென்றும் வைத்திருக்கக்கூடுமானால், தேவனுடைய அருமையான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் இருக்கும்படி நாடுகின்ற அனைவருடைய மனங்களிலிருந்தும், ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் ஒவ்வொரு போட்டி மனப்பான்மையும் சிதறடிக்கப்பட்டுப் போய்விடும். மேலும் இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, சரீரத்தின் ஒவ்வொரு மற்ற அங்கமும், கர்த்தருடைய ஊழியத்தில் பயனுள்ளவர்களாக வளர்வதில் நம்மை எவ்வளவாகச் சந்தோஷம் கொள்ள செய்யும். மேலும், இப்படி நினைவில் கொண்டிருக்கும்போது, "கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்" என்ற வேதவாக்கியத்தின் விளக்கத்தை நாம் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளச் செய்து, மற்றச் சகோதரருடைய வளர்ச்சியிலும், சபைக்கான அவனுடைய பயன் அதிகமடைகையிலும், தேவன் மற்றும் மனுஷரிடத்திலும், அவன் பெற்றுக்கொள்ளும் தயவிற்கான சாட்சிகள் அதிகமாகையிலும் நம்மை மகிழ்ச்சிக் கொள்ளச் செய்யும் (ரோமர் 12:10). சரீரத்தின் உடன் அங்கங்களாகிய மற்றச் சகோதரர்களின் வளர்ச்சியில், இவ்விதமாகச் சந்தோஷம் கொள்ள முடிகிறவர்களுக்கு, மாபெரும் மகிமையான தலைக்கு ஒத்திருக்கும் சாயலில், தாங்கள் வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதற்கான சாட்சியாகவும் அமைகின்றது. இம் மனநிலையில் இல்லாதவர்கள், இதற்காக முயற்சி செய்ய வேண்டும்; மேலும், இதை அடையும் வரையிலும் முயற்சியைத் தொடர்ச்சியாகக் கொண்டிருக்க வேண்டும்.

## "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்"

வெளிநாடுகளில் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் ஆவியானது, எங்கும் பரவிக்கொண்டிருப்பதினால், அது சபைகளையும், சபை பிரிவுகளையும் இணைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தி, மாபெரும் மத நிறுவனங்கள்/அமைப்புகளாக வளர்ச்சிகொள்வதற்கு நேராக நடத்துகின்றது. மேலும், இவர்களது இத்தகைய வளர்ச்சியானது, கர்த்தருடைய உண்மையான அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஜனங்களின் சுதந்தரத்திற்கு ஆபத்தான தொந்தரவாக இருந்தாலும், இது அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகளை பாதிப்பதில்லை. இவ்வளர்ச்சிகள் கர்த்தருடைய சிறுமந்தையினருக்கு ஆசீர்வாதமாகக்கூட விளங்குகின்றது. எப்படியெனில், இவர்களுடைய இத்தகைய அமைப்பு வளர்ச்சியினிமித்தம், சிறுமந்தையினர் தங்களுடைய வேதவாக்கியங்களின் அடிப்படையிலான போதனைகளிலிருந்து மற்றப் போதனைகளை வேற்றுமையாகக் கண்டு, சத்தியத்தில் உறுதிகொண்டு, தங்களை முற்றிலும் பெயர்க்கிறிஸ்தவ அமைப்புகளிலிருந்து பிரித்துக் கொண்டவர்களாகவும் இருக்க முடிகின்றது. களைகளோ ஒன்றாகக் கட்டப்படவும் செய்கின்றது. "அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒரு போதும் காணப்படாமற்போகும்" (வெளிப்படுத்தல் 18:21).

"அவர்களெல்லாரும் ஒன்றாய் இருக்க வேண்டும்" என்ற நமது கர்த்தருடைய ஜெபமானது, யுகம் முழுவதிலும் நிறைவேறியுள்ளது. உண்மையாக அவர்களுடையவர்களாக இருக்கும் அனைவருக்கும் பிதா மற்றும் குமாரனுடன் கூட ஒரே இருதயமுள்ளவர்களாகவும், ஒரே நோக்கம் உள்ளவர்களாகவும், ஒரே ஆவி/சிந்தை உடையவர்களாகவும் காணப்பட்டுள்ளனர். பூமிக்குரிய விசுவாசப்பிரமாணங்களினாலும், சங்கிலிகளினாலும், தெய்வீகமானவர்களோடு ஐக்கியத்தை/உறவை ஏற்படுத்த முடியாது. கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் விஷயத்தில் இன்றும், என்றென்றும் இப்படியாகவே காணப்படுகின்றது. வெளித்தோற்றமான அடையாளச் சொற்களினால் அல்ல (அ) அடையாளங்களினால் அல்ல (அ) வெளித் தோற்றமாக பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பதினால் அல்ல, மாறாக, விசுவாசம் மற்றும் அன்பின் மூலமாக அவர்கள் ஒருவரையொருவர் (தேவன், குமாரன், சபை) அறிந்துக்கொண்டிருக்கின்றனர். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துக்கொள்வார்கள் என்றார்" (யோவான் 13:35). "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:14). உண்மைதான், நாம் அனைத்து மனுஷர்களையும் அன்புகூர்ந்து, வாய்ப்பு அமையும்போது, சகலருக்கும் நன்மை செய்ய நாடுகையில், அப்போஸ்தலர் அறிவித்த பிரகாரம், "விசேஷமாக விசுவாச

வீட்டாருக்கு,” அதாவது, கர்த்தரை அன்புகூர்ந்து, அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீது விசுவாசம் வைத்து, அவருக்கென்று தங்களை முழுமையாக அர்ப்பணம் செய்து, தங்களால் முடிந்தமட்டும் அவருடைய சித்தத்தைச் செய்து, நாளுக்கு நாள் அவர் சித்தம் என்ன என்று இன்னுமாக அறிந்துக் கொள்ள நாடுபவர்களாகிய விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்ய நாடுபவர்களாக நாம் இருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் இந்த ஒற்றுமையானது, (ஆள்தத்துவத்தின்) நபர்களின் ஒற்றுமையைக் குறிப்பதில்லை. கர்த்தருடைய பின்னடியார்கள் மாம்ச சரீரத்தின் விஷயத்தில் ஒன்றானவர்கள் அல்ல. மாறாக, ஆவியில்/சிந்தனையில் ஒன்றாக இருக்கின்றனர். இந்த உதாரணமே/விளக்கமே, தமக்கும், பிதாவுக்கும் இடையில் காணப்படும் ஒன்றாய் இருத்தலுக்கான விளக்கமாக அமைகின்றது எனக் கர்த்தர் விளக்குகின்றார். அவர்கள் இருவரும் ஒரு நபராக இராமல், சிந்தனையிலும், நோக்கத்திலும், சித்தத்திலுமே ஒன்றாய் இருக்கின்றார்கள். ஏனெனில், பிதாவின் பார்வைக்கும் பிரியமாய் இருக்கும் பிதாவின் சித்தத்தையே, தாம் எப்போதும் செய்கின்றதாகக் கர்த்தர் கூறுகின்றார். இவ்விதமாகவே, நாமும் பிதாவின் சித்தமாகக் காணப்படும், கர்த்தருடைய சித்தத்தைச் செய்து, அவருக்குள்ளும், அவருடைய அன்பிலும் நிலைகொண்டிருக்கின்றவர்களாகக் காணப்படுகின்றோம். மேலும், இவ்விதமாக ஆவியிலும், சத்தியத்திலும் பிதாவும், குமாரனும், மணவாட்டியாகிய சபையும் ஒன்றாயிருக்கின்றார்கள்.

## “கிறிஸ்துவோடு கூட அவருடைய மகிமையில் பங்கடைதல்”

"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்” (யோவான் 17:24). இது ஒரு விண்ணப்பம் அல்ல, மாறாக தம்முடைய சித்தம் குறித்துக் கர்த்தர் இங்கு அறிக்கையிடுகின்றார். அதாவது, பின்வருமாறு அவர் கூறுவது போன்றுள்ளது... "பிதாவே என்னுடைய பின்னடியார்கள் தொடர்புடைய விஷயத்தில், இதுவே உம்முடைய சித்தமென நான் புரிந்துள்ளேன். நானும் அதையே விரும்புகின்றேன். நீர் ஆயத்தம் பண்ணியுள்ள இந்த மாபெரும், தாராளமனமுள்ள ஏற்பாட்டிற்கு/ஒழுங்குமுறைக்கு நான் ஆட்சேபனையின்றி ஒப்புக்கொள்கின்றேன். இறுதியில், என்னுடைய பின்னடியார்கள் என்னோடு கூட, ஒரே மகிமையின் தளத்தில், என்னோடு இடம் பெற்றுக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும், உலகம் தோன்றுவதற்கு முன்பும், என்னுடைய இந்தச் சீஷர்களுக்கு ஒழுங்குகள் ஏற்பாடு பண்ணுவதற்கு முன்பும், என் மீது கொண்டிருந்த அன்பின் நிமித்தமாகவே, எனக்கு நீர் கொடுத்த மகிமைகளை என்னுடைய பின்னடியார்கள் காணவும், அதில் அவர்கள் பங்கடையும்படிக்கு அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில் நான் மகிழ்ச்சிக்கொள்வேன்” என்பதேயாகும்.

கர்த்தருடைய ஜெபத்தின் இறுதியான வார்த்தைகள் அழகாகவும், பிதாவிடத்திலும், தாம் பிதாவிடத்தில் கொண்டுள்ள உறவின் மீதுமுள்ள, கர்த்தருடைய நம்பிக்கையைக் குறித்து வெளிக்காட்டுவதாகவும் இருக்கின்றது. அவர் பிதாவை அறிந்திருந்தார். ஆகவேதான் பிதாவினால் நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், அவர் அளிக்கும் நித்திய காலத்திற்குமான ஜீவனுக்குள் நாம் பங்கடைவதற்கும் அளிக்கப்படும் மகாபெரும் சாட்சி இதுவே என்று நம்மைக் குறித்த விஷயத்தில் அவர் கூறியுள்ளார். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்” (யோவான் 17:3). "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்” (யோவான் 17:25). உம்முடைய நாமம் குறித்தும், உம்முடைய குணலட்சணம் குறித்தும், உம்முடைய மகத்துவம் குறித்தும், உம்முடைய நற்பண்புகள் குறித்தும், உம்முடைய அன்பு குறித்தும், உம்முடைய நன்கொடைகளைக் குறித்தும் நான் அவர்களுக்கு அறிவித்துள்ளேன். இன்னமும், அவர்கள் தாங்கிக்கொள்ளும் அளவிற்குத் தகுந்தாற்படி, சத்திய அறிவில் அவர்கள் வளரும்போது, அதிகமாக உம்மைக் குறித்து அவர்களுக்கு வெளிப்படுத்துவேன். இப்படியாக நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்மைக் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்துவேன் என்ற விதத்தில் கூறினார்.

தேவனுடைய இந்த அன்பும், கிறிஸ்துவினுடைய இந்த அன்பும் எத்துணை அதிசயமாய் உள்ளது! இதன் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் நம்மால் அளக்க முடியாததுபோன்று தோன்றுகின்றது! கர்த்தரைத் தங்களுடைய மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு, அவருடன் ஓர் உடன்படிக்கையின் உறவிற்குள் வந்துவிட்டு, தங்களிடத்தில் இருக்கும் கொஞ்சமான காரியங்கள் அனைத்தையும் அவருக்கென்று கொடுத்துவிட்டு, அவர் ஏற்பாடுபண்ணியுள்ள இந்த அனைத்து ஆசீர்வாதங்களில் பங்கடையும் வாய்ப்பை அவரிடத்தில் பெற்றுக்கொண்ட பிற்பாடு, பெலவீனத்தாலோ (அ) எதிர்ப்பினாலோ (அ) வேறு ஏதாவது காரணங்களினாலோ ஒருவேளை கீழே தள்ளப்பட்ட நிலையில் காணப்பட்டார்களானால், அத்தகையவர்கள், பிதா நமக்காகக் கொண்டிருப்பதும், குமாரன் பங்கிட்டுக் கொடுப்பதுமான இந்த மாபெரும் அன்பை நினைவில் கொண்டுவந்து, எண்ணிப்பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். அதாவது, நாம் பாவிகளாகவே இருக்கையில் நம்மை மீட்டுக்கொண்டது மாத்திரமல்லாமல், (ஒருவேளை) நாம் அவருக்காக பாடுபடுவோமானால், நாம் அதிசயமான ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் மற்றும் கர்த்தராகிய கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரத்துவத்தையும் அடையும்படிக்கு, நம்மை அழைத்ததுமான அன்பை நாம் நினைவில் கொண்டுவந்து, எண்ணிப் பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். ஒருவேளை நாம் அவருக்காகப் பாடுப்படுகிறவர்களாக இருப்போமாகில், இந்த அன்பானது நம்மைவிட்டு எளிதில் தள்ளிப்போவதில்லை; நாம் பின்வாங்கி இரண்டாம் மரணத்திற்குள் போவதை அனுமதிப்பதைக் காட்டிலும், இந்த அன்பானது நம்மைச் சிட்சித்துத் திருத்துகின்றது. பின்னர், இயேசுவின் மீதான விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களையும், உண்மையுள்ள வார்த்தைகளைத் தொடர்ந்துப் பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பவர்களையும், இறுதியில் இந்த அன்பானது ஒன்றில் சிறுமந்தையினராகவோ (அ) திரள்கூட்டத்தினராகவோ விடுவித்துவிடுகின்றது. ஆனால், எந்த அளவுக்கு இந்த அன்பானது, நம்மிடத்தில் செழிப்பாகக் காணப்படுகின்றதோ மற்றும் எந்த அளவுக்கு கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் குடிகொண்டு இருக்கின்றாரோ/வாசம் பண்ணுகின்றாரோ, அவ்வளவாய் பிதாவின் பார்வையில் பிரியமாகவும், நமது கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிறதுமான காரியங்களைச் செய்வதில் விருப்பமாகவுமுள்ள பதிலுக்குப் பதிலான அன்பு நம்மிடத்தில் காணப்படும்; மற்றும் அவ்வளவாய் கர்த்தருக்கும், நம்முடைய ஆத்துமாக்களுக்கும் இடையே திரையிடுகின்ற எதையும் செய்ய வெறுப்பும் நம்மிடத்தில் காணப்படும். தெய்வீக அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழம் ஆகியவற்றை நாம் இப்படியாகப் புரிந்துக்கொண்டுள்ளபடியால், நாம் புதிய தைரியம் கொள்வோமாக. மேலும், தேவனுடைய இந்த அன்பானது, அவருக்காகவும், அவருடைய காரணங்களுக்காகவும்/நோக்கங்களுக்காகவும் நாம் மாபெரும் வைராக்கியமும், பக்தியும் கொள்ளத்தக்கதாக நம்மை நெருக்கி ஏவுவதாக.

---

**R5358**

# "கர்த்தருக்கு ஒத்தக் குணலட்சணத்தின் சாயல்"

"நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் . . . அவர்களும் ஒன்றாயிருக்கும்படி . . . நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் . . . வேண்டிக்கொள்ளுகிறேன்."—யோவான் 17:9, 20-23.

இந்த வசனங்களின் வார்த்தைகளானது, நமது காத்தர் காட்டிக்கொடுக்கப் பெற்ற இரவில், பஸ்கா அனுசரிக்கப்பட்ட "மாடி வீட்டறையிலிருந்து," கெத்செமனே தோட்டத்திற்குப் போகிற வழியில், கர்த்தரினால் உரைக்கப்பட்ட வார்த்தைகளாக இருக்க வேண்டும். அவர் பதினோரு அப்போஸ்தலருக்குத்தான் இங்கு ஜெபம் ஏறெடுத்திருக்க வேண்டும். ஏனெனில், இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கர்த்தர், "கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை" என்று கூறினார் (யோவான் 17:12). ஆனால் நம்முடைய ஆதார வசனத்தின்படி, அவருடைய ஜெபமானது, சுவிசேஷ யுகம் முழுவதும் வரும் அவருடைய உண்மையுள்ள பின்னடியார்களை உள்ளடக்கி இருந்தது. "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20). தாமும், தம்முடைய பிதாவும் ஒன்றாய் இருப்பது போன்று, அதாவது ஒத்த

மனமுடையவர்களாய் இருப்பதுபோன்று, தம்முடைய பின்னடியார்களும் ஒன்றாய் இருக்கும்படிக்குக் கர்த்தர் ஜெபம் பண்ணினார்.

இவ்வசனமானது, கர்த்தர் இயேசுவும், பிதாவும் நபரில் ஒருவராக இல்லை என்பதற்கான சிறந்த நிரூபணமாக இருக்கின்றது. சபை அனைவரும், ஒரு நபராக இருக்கும்படிக்குக் கர்த்தரினால் ஜெபம் ஏறெடுக்க முடியாது. அது சித்தத்தில் ஒருமைப்பாடும், சித்தத்தில் முழுமையான இசைவும், நோக்கத்தில் ஒருமைப்பாடும் ஆகும். "என் சித்தம் அல்ல, மாறாக உம்முடைய சித்தமே நடக்கக்கடவது" என்று கர்த்தர் கூறினார். கர்த்தர் இப்படியாகப் பிதாவுடனும், பிதாவின் சித்தத்துடனும், பிதாவின் திட்டத்துடனும் முழுமையான ஒருமைப்பாட்டிற்குள்ளாகவும், இசைவிற்குள்ளாகவும் வந்தார். இது ஒன்றுபடுவதற்கென ஒருவருக்கொருவர் தங்களது சில உரிமைகளை விட்டுக்கொடுக்கும், பரஸ்பர விட்டுக்கொடுத்தல் அல்ல.

உலகத்தின் இரட்சகராகவும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் அவர் ஆகுவதற்கு முன்னதாக, மனுக்குலத்தின் உலகத்தினைக் கையாளும் விஷயத்தில் அவரது முதல் வேலை, சபையைத் தெரிந்துக்கொள்ளுதலாகும். இந்த வேலையைத்தான் கர்த்தர் இப்பொழுது ஆரம்பித்துள்ளார்; மற்றும் அவர்களிடம் சாட்சியை அளிக்கின்றார். சபை முழுவதும் நோக்கத்தில் ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும், தம்முடைய சித்தத்துடன் ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமெனக் கர்த்தர் விரும்புகின்றார். மேலும் இப்படியாக சித்தத்தில் ஒருமைப்பாடு என்பது, நம்முடைய சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுப்பதாகிய, ஒரே வழியின் மூலமாகவே அடையப் பெறக்கூடிய காரியமாக இருக்கின்றது; இந்த ஒப்புக்கொடுத்தல் என்பது வேதவாக்கியங்கள் தெரிவிப்பதுபோல, மரித்துப் போகிறவர்களாய் ஆகும்போது செய்யப்படுகின்றதாய் இருக்கின்றது.

## "வாக்குவாதத்திற்கான இரண்டு காரணங்கள்"

ஒரு மனுஷன் (அ) மனுஷியைப் பொறுத்தமட்டில், அவர்களது சித்தம் என்னவாக இருக்கின்றதோ மற்றும் அந்தச் சித்தமானது சரீரத்தையும், சூழ்நிலையையும் கொண்டு என்ன நிகழ்த்துகின்றதோ, அது அம்மனுஷனுடைய இயல்பாக இருக்கின்றது. ஆகவே நம்முடைய சீஷத்துவத்தின் ஆரம்பத்திலேயே, பார்க்கப்பட வேண்டிய முதல் காரியம், நாம் நம்முடைய சித்தங்கள் தொடர்புடைய விஷயத்தில் மரித்துவிட்டோமா என்பதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவனுடையவர்களாக இருக்கின்றோமா என்பதும்தான்; இப்படியாகச் செய்கிறவர்கள் அனைவரையும் அவர் புதிய சிருஷ்டிகளென அழைக்கின்றார். அவர் அவர்களுக்குப் புதிய மனம், புதிய சித்தம் காணப்படத்தக்கதாக, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அருளுகின்றார். அவர்கள் எந்தளவுக்குப் புதிய மனதை, புதிய சித்தத்தை உடையவர்களாய் இருக்கின்றார்களோ, அவ்வளவாய் ஒருவரோடு ஒருவருக்கு ஒருமைப்பாடும் காணப்படும்.

தேவனுடைய ஜனங்கள் மத்தியில் வாக்குவாதம் உருவாகுவதற்கான காரணம், ஒன்றில் உண்மையில் குறைபாடாக அல்லது அறிவில் குறைபாடாக இருக்க வேண்டும். ஒருவேளை உண்மையில் குறைவுப்பட்டிருந்தால், அவர்கள் படிப்படியாக பின்னாக இழுக்கப்பட்டுப் போய்விடுவார்கள். தேவன் தம்முடைய குடும்பத்தார் எவரிடமும், வற்புறுத்துதலைக் காண்பிப்பதில்லை. தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களையும், அனைத்து விஷயங்களிலும் உண்மையுள்ளவர்களையும் தேவன் தெரிந்தெடுக்கின்றார். இந்த முழுச் சுவிசேஷ யுகத்தையுமே, தேவன் இந்த வகுப்பாரைத் தெரிந்தெடுக்கும் நோக்கத்திற்காகவே ஒதுக்கியுள்ளார். இந்தத் தெரிந்தெடுக்கும் வேலையானது கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகளாக நடைப்பெற்றுக் கொண்டு வருகின்றது. இந்த வகுப்பார் சிறுமந்தையினராக இருப்பார்கள் இவர்கள் மிகவும் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாராகவே இருப்பார்கள். இவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர்.

அநேகருக்கு அந்த வழியில் நடப்பதற்கும், உலகத்தைக் குப்பையும், தூசியுமாக எண்ணுமளவுக்கும், தேவனிடத்திலும், நீதியனிடத்திலும் உண்மை கொண்டிருப்பதில்லை. உண்மையற்றவர்கள் (உண்மையுள்ளவர்களை விட்டு) இடம் விட்டுப் போய்விடும்போது, உண்மையுள்ளவர்கள் (ஒருவருக்கொருவர்) அதிகமதிகமாய் ஒன்றாய் ஈர்க்கப்பட்டு

காணப்படுகையில், இந்த உண்மையுள்ளவர்கள் மத்தியில் அதிகமதிகமாய் ஒருமைப்பாடு காணப்படும். இது எல்லா காலத்திலும், எல்லா தேசங்களின் விஷயத்திலும் உண்மையாகவே காணப்படும். முற்றும் முழுமையாக உண்மையுள்ளவர்கள் அனைவரும், பிதாவின் சித்தத்தைச் செய்கிறதற்கு விரும்புகிறவர்களாகவும், பிதாவுக்கான ஊழியத்தில் தங்களுடைய ஜீவியங்களையே ஒப்புக்கொடுத்துவிட விரும்புகிறவர்களாகவும் காணப்படுவார்கள். மேலும் இந்த விருப்பமானது, அவர்களை ஒருமைப்பாட்டில் காணப்படச்செய்யும்.

## "முதிர்ச்சி வரும்போது பிணக்குக் குறையும்"

"ஒருமைப்பாட்டில் அவர்கள் **தேறினவர்களாயிருக்கும்படிக்கு**" என நமது கர்த்தர் குறிப்பிடுகின்றார் (யோவான் 17:23). ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும் முன்னேறிச் செல்லும்போது, ஒவ்வொருவனும், தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பினைப் பயன்படுத்துவதற்கு அதிகம் தகுதியுடையவனாகுகிறான்; இப்படியாக (கிறிஸ்துவின்) சரீரமானது மிகவும் பயனுடையதாகிறது. ஆனால் இங்குக் கர்த்தர் தேறின நிலையை, முழுமையடைந்த நிலையைக் குறிப்பிடுகின்றார். கர்த்தர் யுகத்தினுடைய முடிவின்போது, வேலை நிறைவடையும்போது, முழுமையடையும்போது, அவர்கள் அனைவரும் ஒருமைப்பாட்டில் காணப்படுவதைக்குறித்தே குறிப்பிடுகின்றார். ஆனால் மகிமையான நிறைவைக் கர்த்தர் தாமே கொண்டு வருவார். நம்முடைய மாம்சத்தினுடைய வேற்றுமைகளினால், நம்மால் அனைத்திலும் இப்பொழுது முற்றிலுமாய் ஒருமைப்பாட்டுடன் காணப்பட முடியாது. இப்பொழுது நம்மால் ஏறக்குறைய தெளிவில்லாமல்தான் காரியங்களைப்பார்க்க முடிகின்றது.

இப்பொழுது நம்மால் காரியங்களை முற்றும் முழுமையாகக் காண முடியாது. இதன் விளைவாகக் கர்த்தருடைய சித்தம் செய்தவற்கெனத் தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மத்தியிலும் கூட, எப்போதும் பிணக்குகள்/உராய்வுகள் காணப்படவே செய்கின்றது. நாம் முதிர்ச்சி அடைய அடைய, இந்தப் பிணக்குகள்/உராய்வுகள் குறைந்துக் கொண்டுவர வேண்டும். நாம் இமைப்பொழுதிலே உயிர்த்தெழுதலின் மாற்றங்களை அனுபவிக்கும் மகிமையான நிறைவு அடைவதுவரையிலும், நம்மால் கண்ணார காண இயலாது. "மாம்சமும், இரத்தமும், தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை." இந்தப் பூரணமற்ற சரீரங்களில்தான் நமக்கான பரீட்சை நடைப்பெற வேண்டியுள்ளது. முடிவு பரியந்தம் உலகத்திற்கும், மாம்சத்திற்கும், எதிராளியானவனுக்கும் எதிரான போராட்டத்தில் தங்களது நேர்மையை/உண்மையைக் காண்பிப்பவர்கள், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாயிருந்து, அவருடைய இராஜ்யத்தில் பங்கடைந்து, மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிக்கும் தெய்வீகத் திட்டத்தைச் செய்து முடிப்பவர்களாய் இருப்பார்கள்.

## "பிரமிக்க வைக்கும் வாக்கியம்"

கர்த்தருடைய வெளிப்படுதலில் உள்ள, epiphania காலத்தின்போது, தேவன் சபையை வழிநடத்தும் தம்முடைய தற்போதைய வேலையை, நிறைவேற்றி முடித்தவராகக் காணப்படுவார்; மற்றும் உலகமானது வேறே யுகத்தின் கீழ்க் காணப்படுகின்றது என்று உலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கும். உலகமானது காரியங்களைக் குறித்து முழுமையாய்ப் புரிய வரும்போது, அவர்கள் அப்போது, நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் ஏறெடுத்த கடைசி ஜெபத்தில், பிதா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அன்புகூருவது போன்று, பிதா சபையையும் அன்புகூருகின்றார் என்று கூறின வார்த்தைகளிலுள்ள உண்மையை அறிந்துக்கொள்வார்கள். இது பிரம்மிக்க வைக்கும் ஒரு வாக்கியமாகும். இது நமது கர்த்தரிடத்தில் சுயநலம் எதுவும் இல்லை என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. "அவர்கள் எனக்குக் கீழாகத்தான் இருப்பார்கள். நான் கொண்டிருக்கும் மகிமையை, அவர்கள் ஒருபோதும் அடைவதில்லை"என்று கர்த்தர் கூறவே இல்லை.

மாறாக கர்த்தர் இயேசுவோ, கொள்கை மற்றும் குணலட்சணத்தின் அடிப்படையிலேயே பரம பிதா, தம்முடைய அன்பைச் செயல்படுத்துவார் என அறிந்திருந்தார். இந்த மகிமையான கூட்டத்தாரில் அங்கத்தாராய் இருப்பவர்கள் அனைவரும், நமது கர்த்தர் கொண்டிருந்த அதே மகிமையான குணலட்சணத்தைக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும்; அதாவது, வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், அவர்கள் மனதின் அடி ஆழம் வரை, உண்மையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். அவர்கள் தாங்கள்

நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுப்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்" என்றும் நாம் வாசிக்கின்றோம் (எபிரெயர் 1:9). கர்த்தர் சபை வகுப்பாரின் தலையாக இருக்கும்படிக்கு அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார். ஆனால் சபை வகுப்பார் இந்த வேதவாக்கியத்தில் (எபிரெயர் 1:9) அவருடைய தோழர்கள்/துணையாளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்; அதாவது, அவர்கள் கீழானவர்கள் என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்படாமல், ஒரே தளத்தில், அவரோடு கூட இருப்பவர்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளனர். அப்போது உலகமானது, பிதா இயேசுவை அன்புகூர்ந்ததுபோலவே, சபையையும் அன்புகூருகின்றார் என்று அறிந்துக்கொள்ளும். சபையானவள் தனது கர்த்தராகிய இயேசுவுடன் கூட, ஒரே தளத்தில் காணப்படுவாள் என்று நாம் புரிந்திருக்கின்றோம். எனினும் தேவன் கர்த்தரை, "எல்லாவற்றிற்கும் மேலான தலையாக தந்தருளினார்" என்றும், தேவன் இப்படியாக அவரை என்றென்றும் இருக்கும்படிக்கு ஆசீர்வதித்துள்ளார் என்றும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சபை ஒருபோதும் கிறிஸ்துவுக்குச் சரிசமமானவளாக இருப்பதில்லை.

நம்முடைய பரம பிதாவானவர், கிறிஸ்துவை அன்பு கூர்ந்தது போன்று, நம்மையும் அன்புகூருகின்றார் என்பதும், புளுதியில் காணப்படும் வைரத்தைக் கர்த்தர் அன்புகூருகின்றார் என்பதும் நமக்கு மிகவும் ஆச்சரியமாய் இருக்கின்றது! மனிதனுடைய பாவமாகிய சேற்றிலிருந்து, கர்த்தர் இயேசு இந்தப் பாத்திரங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வருகின்றார். கர்த்தர் இயேசு உண்மையாய் இருந்ததுபோன்று உண்மையுள்ளவர்களாகவும், முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும் இருப்பதை நிரூபித்து காண்பிக்கும் வகுப்பாரைப் பிதா, கர்த்தர் இயேசுவை அன்புகூருவதுபோன்று அன்புகூர்ந்து, தம்முடைய குமாரனுடன் கூட அவர்களையும் மகிமைப்படுத்துவார்.

---

**R2467**

# "கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார்"
## யோவான் 18:1-14

"அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் ஆவார்."—ஏசாயா 53:3.

கடைசி இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, திராட்சச்செடி மற்றும் அதன் கொடிகள் குறித்துத் தம்முடைய சீஷர்களுடன் பேசின பிற்பாடு, நமது கர்த்தர் அருமையான ஓர் ஜெபம் ஏறெடுப்பது குறித்து யோவான் 17-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அநேகமாக, நடுராத்திரி வேளையில், இயேசு பதினொரு பேருடன் எருசலேமின் நுழைவாயிலைக்கடந்து வெளியேபோய், கெதரோன் என்னும் சிறு ஆற்றைக்கடந்து, அதற்கு அப்புறத்திலுள்ள கெத்செமனே தோட்டம் என்று அழைக்கப்படும் ஒலிவமரத் தோட்டத்திற்குப் போனார். ஒருவேளை இது பொதுவான தோட்டமாக அல்லது நமது கர்த்தருடன் நட்புறவில் காணப்படும் யாரோ ஒருவருக்குச் சொந்தமான தோட்டமாகவும் கூட இருக்கலாம். இத்தோட்டமிருந்த இடமென கருதப்படும் இடமானது, இன்றும் பல நூற்றாண்டுகளாக பூங்காவாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இத்தோட்டத்தைக் காணவரும் பார்வையாளர்களை வரவேற்க விரும்பும், துறவிகள் பொறுப்பில், இத்தோட்டம் இப்பொழுதும் காணப்படுகின்றது. தற்போது இந்தத் தோட்டத்தில் ஆறு (அ) எட்டு மிகப் பெரியதும், மிகப் பழமையானதுமான ஒவிவ மரங்கள் காணப்படுகின்றது. இந்த ஒலிவ மரங்களைப் பார்க்கும்போது, குறைந்த பட்சம் ஆயிரம் வருடங்களான மரம் போன்று காட்சியளிக்கும்; ஆனால் அவைகள் இன்னும் அதிகமான வருடங்களைக் கடந்ததாகவே இருக்க வேண்டும்.

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோதும், அவர்களுக்காக ஜெபித்தப்போதும், அவர் திடமனதுடன் காணப்பட்டதாகத் தெரிகின்றது. அதாவது, அவர்களுடைய இருதயங்கள் கலங்காதிருப்பதாக என்று அவர்களுக்கு அவர் புத்திமதிக் கூறிக்கொண்டிருந்தபோது, அவருடைய சொந்த இருதயம் கலக்கம்கொள்ளாமல்தான் காணப்பட்டது. ஆனால், அந்தச் சிறுகூட்டம் கெத்செமனேயை நோக்கி நடந்துக்கொண்டிருக்கையில், நம்முடைய அருமை மீட்பருடைய உணர்வுகளை, மிகுந்த பாரம் அழுத்தினதை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது. "என் ஆத்துமா

மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" (மத்தேயு 26:38) என்று அவர் கூறினது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. தற்போது அவர் கெத்செமனேவுக்குச் சென்றுகொண்டிருப்பதென்பது, முற்காலங்களில் அவ்விடத்திற்கு அவர் சென்றதிலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருந்தது. ஆண்டவருடைய துக்கத்தைக் கண்டு, அப்போஸ்தலர்கள் சூழ்நிலையைக் கொஞ்சம் கிரகித்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லையென்றாலும், அடுத்து என்ன சம்பவிக்கப்போகின்றது என்பதைச் சற்றே புரிந்திருந்தார்கள்.

சுவிசேஷகர்கள் பதிவு செய்ததிலிருந்து நாம் அறிந்துக்கொள்வது என்னவெனில், தோட்டத்திற்கு வந்தபோது, நமது கர்த்தர் அப்போஸ்தலர்களில் எட்டு பேரைத் தோட்டத்தின் நுழைவுவாயிலிலேயே நிறுத்திவிட்டு, தமக்கு நெருக்கமானவர்களாகிய பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தம்முடன் கூட உள்ளே கூட்டிக்கொண்டு போனார் மற்றும் அது விசேஷமான சோதனைக்கான வேளையாய் இருந்தபடியினால், அவர்களனைவரும் விழித்திருந்து ஜெபம் பண்ணும்படிக்கு எச்சரித்தார். அவர்களைவிட்டு அவர் அப்புறம் சென்று, பிதாவுடன் மறைவில் உரையாடினார். அவருடைய உணர்வுகளை, அவருக்கு அன்பாய் இருந்த சீஷர்களிடம் கூட அவர் பகிர்ந்துக்கொள்ளவில்லை, கொள்ளவும் முடியாது. அவர் கடந்துப்போகின்ற பரீட்சையை/சோதனையை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியாது. அவர்கள் இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை. ஆகவே அவருடைய மிகுந்த சோதனையான வேளையில், இயேசு தனிமையிலேயே காணப்பட்டார், "ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை" (ஏசாயா 63:3).

நம்முடைய கர்த்தருக்கு இரத்த வியர்வை வருமளவுக்கு, அவருடைய நரம்பு மண்டலத்தின் மீது தாக்கம்கொள்ளத்தக்கதாகக் காணப்பட்ட அவருடைய சோதனையினுடைய உண்மையான அம்சத்தைப் புரிந்துக்கொள்வதில், பெரும்பாலானவர்களுக்கு, ஏன் கிறிஸ்தவ ஜனங்களுக்குங்கூட சிரமம் இருக்கின்றது. அநேகர் நம்முடைய <u>கர்த்தருடைய (சோதனையின்) பாதையுடன்</u>, குறிப்பிடத்தக்க தைரியத்துடன் மரணத்திற்குக் கடந்துச் சென்ற இரத்த சாட்சியாய்க் காணப்பட்ட கர்த்தருடைய <u>பின்னடியார்களில் சிலருடைய பாதையை</u> ஒப்பிட்டுப்பார்த்து, இவர்களைக் காட்டிலும் பூரணமாய்க் காணப்பட்ட நமது கர்த்தருக்கு, இன்னும் அதிகமான பாடுகள் படுவதில், கஷ்டம் இருந்திருக்காது என எண்ணுகின்றனர். உண்மையைத் தெரிந்துக்கொள்வதற்கு, அநேக விஷயங்கள் மனதில் கொள்ளப்பட வேண்டும்:—

(1) ஜீவனுக்கான உரிமையைப் பூரணமாய்ப் பெற்றிருந்த நமது கர்த்தர், தம்முடைய ஜீவனை மரணத்திற்குக் கையளிப்பதென்பது, இழந்து போகப்பட்டதும், பலவீனமான ஜீவனுமாய் இருப்பதை, அதிக காலம் வைத்திருக்க முடியாதவர்களால், அந்தப் பலவீனமான ஜீவனை மரணத்திற்குக் கையளிப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். (2) பத்தில் ஒன்பது பாகத்திலும் மரித்துவிட்ட நம்முடைய சந்ததிக்கு, ஜீவனுடைய மாபெரும் மதிப்புபற்றின உணர்ந்துக்கொள்ளுதல் மந்தமானதாகவே இருக்கின்றது. அதாவது, நம்முடைய சந்ததியினுடைய அனுபவங்கள் அனைத்தும் மரணத்துடன் தொடர்புடையதாக இருப்பதினால், நம்முடைய சந்ததி, மரணத்தை வித்தியாசமான ஏதோ ஒன்றாகக் கருதுவதில்லை. ஆனால், இப்படியாக நம்முடைய கர்த்தருடைய விஷயத்தில் இருக்கவில்லை. அதாவது, பிதாவுடன் ஆரம்பம் முதல் காணப்பட்டவரும், அனைத்தையும் உண்டுபண்ணினவருமாகிய, "ஜீவனின் அதிபதியினுடைய" விஷயத்தில் இப்படியாக இருக்கவில்லை. அவரைப்பொறுத்தமட்டில் ஜீவன் என்பது, மிகவும் விலையேறப்பெற்ற அருளாக, சிலாக்கியமாக, சந்தோஷமாக இருந்தது. ஆகவே பத்தில் ஒன்பது பாகத்தில் ஏற்கெனவே மரித்துப்போனவர்களாகவும், உணர்வுகள் அனைத்திலும் மழுங்கிப்போனவர்களாகவும் காணப்படும் நம்மைப் பார்க்கிலும், அவருக்கு மரணம் மிகவும் பயங்கரமானதாகக் காணப்பட்டது. அவர் ஒருவேளை மரணம்வரைக்கும் உண்மையுள்ளவராய் இருப்பாரானால், அவருக்கு உயிர்த்தெழுதல் கிடைக்கும் என்ற பிதாவினுடைய வாக்குத்தத்தைப் பெற்றிருந்தார் என்பது உண்மைதான்; மற்றும் அவர் பிதாவின் வாக்குத்தத்தை நம்பினார் என்பதிலும் ஐயமில்லை. அவர் பிதாவினிடத்தில் கொண்டிருந்த விசுவாசத்திற்கு, அவருடைய முழு வாழ்க்கையும் திரளான சாட்சியங்களை அளிக்கின்றது. எனினும் அவருடைய விஷயத்தைப் பொறுத்தமட்டில் நம்மைப்பார்க்கிலும், அவருக்கான விசுவாச சோதனையானது மிகவும் நெருக்கடியானதே. பறிமுதல் பண்ணப்பட்ட ஜீவனில், சிறிதளவையே நாம் ஒப்புக்கொடுக்கப்பெற்றிருக்கின்றோம். இன்னுமாக, கிறிஸ்து மூலமான எதிர்க்காலத்திற்குரிய பிதாவின் வாக்குத்தத்தம் மாத்திரம்

நமக்கிராமல், நம்முடைய அருமை மீட்பரின் உயிர்த்தெழுதலில் செயல்பட்ட பிதாவின் வல்லமைக்கான உதாரணமும் கூட நமக்கு இருக்கின்றது. ஆனால், இப்படியான தெய்வீக வல்லமைக்கான சான்றுகள் எதுவும் நமது கர்த்தருக்கு இருக்கவில்லை. தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி அவரே, "பிதாவின் சிருஷ்டிகளில் முதற்பலனானவராகவும்," "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவராகவும்" இருக்க வேண்டியிருந்தது (கொலோசெயர் 1:18; 1 கொரிந்தியர் 15:20).

ஆனால், இவைகளனைத்தும் அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அவரால் கருதப்பட்டு, மதிப்பிடப்பட்டு மற்றும் ஏற்றுக்கொள்ளவும் பட்டுவிட்டது. ஆடுகளுக்காக தாம் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுப்பது அவசியம் என்றும், தாம் அப்படியாக ஒப்புக்கொடுக்கப் போவதாகவும் அவர் ஏற்கெனவே சீஷர்களுக்குத் தெரிவித்துள்ளார் (யோவான் 10:15). ஆகவே, "பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று நமது அருமையான மீட்பர் ஜெபம் பண்ணினதை, அவர் மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்பு இருக்குமானால்... என்ற அர்த்தத்தில் கூறினார் என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. பாவத்திற்கான பலியாக, தாம் உயர்த்தப்படாதது வரையிலும், உலகம் தம்மிடத்திற்கு இழுக்கப்படாது; அதாவது, நம்முடைய பாவங்களுக்காக அவர் மரிப்பதும், அவருடைய மகிமைக்குள் பிரவேசிப்பதும் அவசியம் என்பதை அவர் ஏற்கெனவே அறிந்திருந்தார்; மற்றும் சீஷர்களுக்கும் இதை ஏற்கெனவே அறிவித்திருந்தார். (யோவான் 3:14; 12:32).

தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று அவர் வேண்டிக்கொண்ட பாத்திரமானது, அவர் நியாயப்பிரமாணத்தை மீறினதாகக்கூறி அவரைக் கைதுச்செய்து, பொதுவிசாரணை அவருக்கு நடத்தி, அவரைக் குற்றவாளி என்று தீர்ப்பிட்டு, பிற்பாடு அவரைக் குற்றவாளி/பாதகனெனச் சிலுவையில் அறையப்படுதலின் காரணமாகக் காணப்படும் அவமானத்தையும், நிந்தனையையும் குறிக்கின்றதாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய பாவங்களுக்காக, பொதுவான மனுஷர்கள் மரிப்பதுபோன்று, எவ்விதமான விசேஷித்த அவமானமில்லாமல் அவர் மரிப்பதென்பது ஒரு காரியமாகவும், அவர் இப்படி உச்சக்கட்டமான அவமானத்திலும், கனவீனத்திலும், இகழ்ச்சியிலும் மரிக்க வேண்டுமென்பது வேறு காரியமாக இருக்கின்றது. அநேகமாகப் பிதாவினுடைய ஞானத்தின்படி, இந்தக் கடைசி அம்சமானது இவைகளெல்லாம் நிறைவேறப்போகும் தருணம்வரையிலும், நம்முடைய அருமையான மீட்பருக்கு ஏறக்குறைய மறைத்தே வைக்கப்பட்டிருந்தது. மேலும், மனிதனுக்கான ஈடுபலியைச் செலுத்தும் விஷயத்தில், ஒரு பாவி பாடுபடுவதைப்பார்க்கிலும் அதிகமாய், தாம் பாடுபடுவதற்குரிய எவ்விதமான அவசியமும் இருப்பதாக நம்முடைய கர்த்தருக்குத் தெரியவில்லை. ஆகவே, "இப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்" என்று அவருடைய ஜெபம் காணப்பட்டது. அப்போஸ்தலர் கூட இந்த வித்தியாசத்தை உணர்ந்தவராக, "மரணபரியந்தம் தாழ்த்தினார்" என்று கூறிய பின்னர், "அதாவது, சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்று கூறுகின்றார் (பிலிப்பியர் 2:8).

சிலுவையின் மரணமும், அதனோடு கூட உள்ள கனவீனம், நிந்தனை முதலியவைகளும், நம்முடைய முடிந்தமட்டுமுள்ள கணிப்பின்படி, நமக்கான ஈடுபலியின் விலைக்கு அவசியமில்லை என்று காண்கின்றோம். ஏனெனில், "அதை நீ புசிக்கும் நாளிலே, நீ சிலுவையில் அறையப்பட்டு, கனவீனமடைந்து, எல்லோர் முன்பும் கொடியவனாகப் பார்க்கப்பட்டுச் சாவாய்" என்பதாக தண்டனை காணப்படவில்லை. தண்டனை மரணமாக இருக்கின்றபடியினால், நம்முடைய கர்த்தருடைய மரணம் மாத்திரமே, மனிதனுக்கான ஈடுபலித் தொகையெனப் போதுமாய் இருந்திருக்கும் (ஆதியாகமம் 2:17). எனினும், இந்த அதிகப்படியான (அவமானத்தின்) அம்சமானது, பிதாவினால் அவசியமானது என்று கருதப்பட்டப்படியால், "பாத்திரம்" நீங்கவில்லை. "தம்முடைய நேச குமாரனுடைய" இருதயத்தின் உண்மையை அதாவது, குமாரனுக்குத் தம்முடைய சொந்த சுபாவமாகிய தெய்வீகச் சுபாவத்தையும், தம்முடைய இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்தையும் கொடுத்துச் சீக்கிரத்தில் மிகுதியாய் உயர்த்தவும், மாபெரும் ஆசீர்வாதத்தையும் கொடுக்க வேண்டுமென்று, தாம் திட்டம் பண்ணியுள்ளபடியினால், குமாரனுடைய இருதயத்தின் உண்மையைத் தமக்கு மாத்திரமல்லாமல், அறிவுடைய தம்முடைய சிருஷ்டிகள் அனைத்திற்கும் நிரூபிப்பதற்கென இப்படியான உச்சக்கட்டமான கீழ்ப்படிதலை, பரீட்சையாக வைப்பது பிதாவுக்கு அவசியமாய் இருந்தது. மேலும், நம்முடைய அருமை மீட்பருடைய

உண்மையானது முழுமையாய் உறுதிப்படுத்தப்பட்டது. "அவர் அவமானத்தை எண்ணாமல்..." என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். அதாவது, பிதாவுக்குப் பிரியமாய் இருப்பதற்கு முன்பாக, பிதாவினுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முன்பாக, கர்த்தருக்கு அவமானங்கள் ஒரு பொருட்டாய் இருக்கவில்லை (எபிரெயர் 12:2). அவமானம் அடைதல் எனும் அம்சத்தை நீக்கிவிடுவதற்கான வாய்ப்புள்ளது என்ற எண்ணம் அவருக்குக் காணப்பட்டதுவரையிலும், கூடுமானால் நீங்கிவிடட்டும் என்று பதற்றத்துடன் இயேசு எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால், இப்படியாக நீக்குவது பிதாவின் சித்தமல்ல என்பதை அவர் உணர்ந்தவுடனே, "என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" என்று அவருடைய இருதயம் காணப்பட்டது. பிதாவின் சித்தம் தொர்புடைய முடிவானது, உடனடியாகப் பலத்தைக்கொண்டு வந்தது. தேவனுடைய பலத்திலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் அவர் இப்பொழுது எந்த அனுபவத்தையும் சந்திக்கத் தயாரானார்.

இதற்கிடையில், சில நாட்களுக்கு முன்னதாக இயேசுவைக் காட்டிக்கொடுப்பதாகப் பிரதான ஆசாரியனுடன் ஒப்பந்தம் போட்டிருந்த யூதாஸ், அதாவது இராப்போஜனம் முடிந்தவுடன் தன்னுடைய கொடிய திட்டத்தை நடத்தும்படிக்கு மேல் வீட்டறையை விட்டுப் புறப்பட்ட யூதாஸ், இயேசுவைக் கைதுச்செய்து, பஸ்காவிற்கு முன்னதாக அவருக்கு மரணத் தண்டனை அளிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் போர்ச்சேவகரின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு வந்தான். இந்தப் போர்ச்சேவகர்கள் அடங்கிய கூட்டத்தில், 600 உரோம போர்ச்சேவகர்கள் இருந்தார்கள் என்று பொதுவாய் நிலவிவரும் கருத்தை நாம் முற்றிலுமாக நிராகரிக்கின்றோம். இங்கு அனுப்பப்பட்ட போர்ச்சேவகர்கள், இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் போர்ச்சேவகர்கள் பொதுவாய் நடந்துக்கொள்வதிலிருந்து, வித்தியாசமாய்ச் செயல்பட்டனர். இதுவமல்லாமல், இந்தப் போர்ச்சேவகர்கள் உரோமின் பிரதிநிதிகளாகிய பிலாத்துவினால் அல்லது ஏரோதினால் அனுப்பப்படாமல், உரோம படையினுடைய கட்டளையின் கீழ்க் காணப்படாத பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களால்தான் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று அனைத்துச் சுவிசேஷகர்களும் பதிவு செய்துள்ளனர். இயேசுவைக் கைதுச் செய்த இந்தப் போர்ச்சேவகர்கள், யோவான் 7:32-46 வரையிலான வசனங்களில் இடம்பெறும் சேவகர்கள்தான் என நாம் எடுத்துக்கொள்கின்றோம்.

மத ரீதியிலான விஷயங்களில், யூத ஆலோசனை சங்கத்தாருக்கு ஓரளவுக்கு அதிகாரம் இருந்ததாகவும், கைதுச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும், ஆனால் உரோம ஆளுநரின் சம்மதமில்லாமல் யூத ஆலோசனை சங்கத்தாருக்கு, குற்றவாளிகளை மரணத் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்க முடியாது என்பது தெரிகின்றது. அப்போஸ்தலர்கள் அநேக தருணங்களில் யூதர்களுடைய இந்த (ஆலோசனை சங்கத்தாரின்) அதிகாரிகளால் கைதுச் செய்யப்பட்டுள்ளதை நாம் நினைவுகூருகின்றோம். அப்போஸ்தலர் 5:17, 18, 22, 25-40 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்.

பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களுடைய அதிகாரிகளின் கீழ்க் காணப்பட்ட இந்தச் சேவகர்களை, மத்தேயுவும், மாற்கும், "திரளான ஜனங்கள்" என்று கூறுகின்றனர். மேலும் இவர்கள், பொதுவான ஜனங்களிடம் பொதுவாய்க் காணப்படும் பட்டயங்களையும், தடிகளையும் பெற்றிருந்தார்கள் என்று இயேசுவினுடைய வார்த்தைகளிலிருந்து தெரிகின்றது. இவர்கள் உரோம சேவகர்களின் ஆயுதமாகிய ஈட்டியைக்கொண்டிருந்தார்கள் எனக் கர்த்தர் கூறவில்லை. இக்கருத்தை, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன்தான் இயேசுவின் மீது முதலாவதாகக் கைப்போட்டதன் விளைவாக, பேதுருவின் பட்டயத்தினால் தாக்கப்பட்டான் என்ற உண்மையானது இன்னும் உறுதிப்படுத்துகின்றது. ஒருவேளை உரோம போர்ச்சேவகர்கள்தான் இவ்விடத்தில் பொறுப்பேற்றிருந்திருப்பார்களானால், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனுக்கு அங்குச் செயல்படுவதற்கு அதிகாரம் இருந்திருக்காது என்பதில் ஐயமில்லை.

யூதாசின் வழிகாட்டுதலின் கீழ் இயேசுவைத் தேடி வந்த இந்தக் கூட்டத்தார், இயேசுவும், அப்போஸ்தலர்களும் சுமார் ஒருமணி நேரத்திற்கு முன்னதாகவே வெளியேறி கடந்துப் போய்விட்ட மேல் வீட்டு அறைக்குத்தான் முதலாவதாகச் சென்றிருக்க வேண்டும். இயேசுவும் பதினொரு பேரும் மேற்வீட்டறையை விட்டுக்கடந்துப் போயிருப்பதைக் கண்டபோது, அவர்களைக் கெத்செமனே தோட்டத்தில் கண்டுபிடிக்கலாம் என்பதை யூதாஸ் அறிந்திருந்தான். காரணம், "இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே

போயிருந்தார்." காட்டிக்கொடுத்த காரியம் தொடர்புடையதாய் மற்றச் சுவிசேஷகர்களால், பதிவு செய்யப்பட்ட காரியங்களை, யோவான் பதிவு செய்யாமல் விட்டுவிட்டார். அநேகமாக அன்பான சீஷனாயிருந்த யோவான், அவ்வுண்மைகளினிமித்தம் மிகவும் வெட்கமடைந்ததால், அவைகளைக்குறிப்பிட அவர் விரும்பவில்லைபோலும். யூதாசின் நம்பிக்கை துரோகம் போன்று, வெகு சில சம்பவங்களே நடந்துள்ளது. துரோகியின் ஸ்தானமானது, மிகுந்த இழிவானவர்கள் மத்தியில்தான் காணப்படுகின்றது என, தவறான மனநிலையில் காணப்படும் மனுக்குலம் கூட உணர்ந்துள்ளது. ஆண்டவருடைய இப்படிப்பட்ட அன்புக்கும், இரக்கத்திற்கும், நன்மைகளுக்கும்/நற்குணங்களுக்கும் எதிரான இப்படியான நம்பிக்கைத் துரோகச் செயல்கள், சர்வ சாதாரணமானதல்ல என்பதில் நாம் மகிழ்கின்றோம். எனினும் கர்த்தருடைய ஜனங்களின் அனுபவத்தில், இதற்கு இணையான அனுபவங்கள் காணப்படுகின்றன. அதாவது, "சகோதரர்களால் வரும் மோசங்கள்" கர்தருடைய ஜனங்களுக்கு உண்டு. இது, யூதாசின் ஆவிக்கு ஒத்ததான எதுவும் நம்முடைய இருதயங்களை அலைக்கழிக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்று நம்மில் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படிப்பட்டதான விஷயங்களில் நம்முடைய கர்த்தர், "தம்முடைய சரீரத்தின் அங்கங்களை" தம்முடன் ஒரே தளத்தில் வைத்தவராக, இந்தச் சிறியவர்களாக தம்முடைய சகோதரர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவர்கள் விஷயத்தில், இடறல் உண்டாக்குகிறவனின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி, அவனைக் கடலின் ஆழத்தில் அமிழ்த்திவிடுவது அவனுக்கு நலமாயிருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கின்றார் (மத்தேயு 18:6).

தலைக்கும், அவருடைய சரீரத்தின் உடன் அங்கங்களுக்கும் செய்யப்படும் ஒவ்வொரு செய்கையினுடைய, பின்பக்கத்திலும் நிச்சயமாக நல்ல (அ) கெட்ட நோக்கம் ஒன்று காணப்படும். வலுவான நோக்கத்தைத் தேடுவது என்பது, நம்பிக்கை துரோகத்திற்கான உறுதியான பழியிலிருந்து விலகுவதற்குரிய காரணங்களைத் தேடுவது ஆகாது. நம்முடைய அனுபவத்தையும், கணிப்பையும் வைத்துப் பார்க்கும்பொழுது, வல்லமை (அ) ஸ்தானங்கள் அடைவதற்கான இச்சையும், பேராசையும்தான், "கள்ள சகோதரர்" செய்யும் நம்பிக்கை துரோகமான செயலுக்கு ஊற்றாக இருக்கின்றது. இப்படிப்பட்ட பரிசுத்தமற்ற இலட்சியங்களை மேன்மைப்படுத்துவதற்குரிய ஆசையானது, இவ்வாசையைக்கொண்டிருக்கும் இருதயத்தைக் கண்டிப்பாய் மாசுப்படுத்திவிடும். ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்—

"ஒரு எண்ணத்தை விதைத்தால், நீ ஒரு கிரியையை அறுப்பாய்;
ஒரு கிரியையை விதைத்தால், நீ ஒரு பழக்க வழக்கத்தை அறுப்பாய்;
ஒரு பழக்க வழக்கத்தை விதைத்தால், நீ ஒரு குணத்தை அறுப்பாய்;
ஒரு குணத்தை விதைத்தால், நீ ஓர் இலக்கையே அடைந்துவிடுவாய்."

யூதாசின் எண்ணங்கள், வெளியரங்கமான பொல்லாத கிரியையின் தோற்றத்தை எடுப்பதற்கு முன்னதாக, யூதாஸ் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் பொல்லாத எண்ணங்களை விதைத்து வந்துள்ளார். யூதாஸ் ஆஸ்தி மற்றும் செல்வாக்கின் மீது பேராசைக்கொண்டிருந்தார். அவர் சீஷர்களுடைய சிறிய கூட்டத்திற்குப் பொருளாளரானார். மேலும், நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட பணத்தில் ஒரு பாகத்தைத் தன்னுடைய சொந்த காரியங்களுக்காக, யூதாஸ் திருடினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. யூதாஸ் எந்தளவுக்குப் பணத்தின் மீது ஆசை வைத்தாரோ, அந்தளவுக்கு அந்த ஆசையை நடைமுறையும் படுத்தினார். அதாவது, தனது ஆண்டவரை முப்பது வெள்ளி காசுகளுக்குக் காட்டிக்கொடுக்க விருப்பங்கொள்ளும் அளவுக்கு, பணத்தின் மீதான யூதாசின் ஆசை பெருகினது. யூதாஸ் வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்தை எதிர்ப்பார்த்ததாகவும், அநேகமாக அந்த இராஜ்யத்தில் இராஜரிக பொருளாளர் எனும் உயர்வான ஸ்தானத்தை அடைய எதிர்ப்பார்த்ததாகவும் தெரிகின்றது.

யூதாஸ், தான் காட்டிக்கொடுத்ததின் விளைவாக உண்டான நிகழ்வுகளினிமித்தம் பயங்கரமான ஏமாற்றத்தை அடைந்திருப்பார் என்பதிலும் நிச்சயமே. நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களின் கையினின்று அற்புதமான வல்லமையினால் தம்மைத் தப்புவித்துக்கொள்வார் என யூதாஸ் எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். இதைவிட பரந்த மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டத்தில், யூதாசினுடைய நம்பிக்கைத் துரோகமான செயலை எடுத்துக்கொள்ள நமக்குத் தெரியவில்லை. எனினும், இந்தப் பரந்த

மனப்பான்மையுடன்கூடிய கண்ணோட்டம் கூட, யூதாசுனுடைய செய்கையிலுள்ள கரும்புள்ளியில் கொஞ்சத்தையே துடைக்கின்றது. எனினும், பணம் விஷயத்திற்காகத் தன்னுடைய சிறந்த நண்பனை இழிவான விதத்தில் தற்காலிகமாகக்கூட பயன்படுத்த விரும்புகிறவன், பணத்தின் மீதான தன்னுடைய ஆசையுடன், தன்னுடைய அனைத்து உணர்வுகளையும் வேசித்தனம் பண்ணியுள்ளதை வெளிக்காட்டுகிறவனாய் இருக்கின்றான். கனமடைவதற்குரிய ஆசையும் கூட யூதாசுக்குக் காணப்பட்டிருக்கலாம். காரணம், நீண்ட காலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த இராஜ்யத்தை கர்த்தர் ஸ்தாபிக்கும்படிக்கு, அவர் (இயேசு) கட்டாயத்திற்குள்ளாகத்தக்கதாக அல்லது அவர் கூறியவை அனைத்தும், மற்றும் வாக்குத்தத்தங்களும் மோசடி என்று வெளிப்படுத்தத்தக்கதாக இந்த ஆபத்தைக் கொண்டுவருவதற்கு யூதாஸ் எண்ணியிருந்திருக்கலாம்.

காரியங்களை விரைவுபடுத்துவதிலும், தேவனுடைய கரு நிலையிலுள்ள இராஜ்யத்தை நிறுவுவதிலும் யூதாஸ் உண்மையில் வெற்றியடைந்தான்; எனினும் அவன் விரும்பினவிதத்திலல்ல, அதுவும் எந்தவிதத்திலும் அவனுக்குக் கனத்தையோ (அ) நன்மையையோ அளிக்கும் விதத்திலல்ல. இப்படியாகவே சத்தியத்தைப் பெற்றுக்கொண்டும், தங்களைச் சீஷர்கள் என்று அறிக்கைப் பண்ணிக் கொண்டும், அதே வேளையில் சத்தியத்தின் மீது அன்பு இல்லாமலும், தற்காலத்திலோ (அ) எதிர்க்காலத்திலோ கனத்திற்காக ஆசைப்படுபவர்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துள்ளவர்களாகிய நாம் அனைவரும், இந்த வெட்கக்கேடான பண்பின், எவ்வித அம்சங்களும் நம் எவரிடத்திலும் காணப்பட்டுவிடாதப்படிக்குக் கவனத்துடனும், விழிப்புடனும், ஜெபத்துடனும் இருக்கக்கடவோம். கர்த்தரையும், "சகோதரரையும்" காட்டிக்கொடுக்கும் விஷயத்தில் பல்வேறு இரகசியமான வழிகளும், அநேக வெளியரங்கமான வழிகளும் இருப்பதை நாம் நினைவில் கொள்வோமாக.

இயேசு தம் மீது வரவிருக்கும் அனைத்துக் காரியங்களையும் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனச் சுவிசேஷகர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், அவர் ஜெபம் பண்ணிபோது, "வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான்" என்றும் நமக்குத் தெரிவிக்கப்படுகின்றது. கர்த்தர் பட வேண்டிய பாடுகள் எவை மற்றும் அவைகள் எப்படி எதிர்ப்பார்க்கப்பட வேண்டும் என்பவை தொடர்புடைய விஷயங்களிலுள்ள, பிதாவின் சித்தத்தைப் பற்றிக் கர்த்தருக்குத் தெரிவிப்பதாக தூதனின் இவ்வூழியம் காணப்பட்டிருக்கலாம். மேலும், காரியங்கள் தொடர்பான இந்த அறிவின் காரணமாகவும், பிதா அனைத்தையும் நன்மைக்கு ஏதுவானதாக மாற்றுவார் என்ற நிச்சயத்தின் காரணமாகவும், அவருடைய இருதயம் பலப்பட்டது; மற்றும் இதற்குப் பின்னர் நடந்த காரியங்கள் அனைத்திலும், நம்மால் அவரிடம் கவனிக்க முடிந்த, மாபெரும் அமைதியையும் அவருக்குக்கொடுத்தது.

இயேசுவைக் கைதுச் செய்யும்படிக்கு வந்த "போர்ச்சேவகர்கள்", அவரை மரங்களின் மறைவுகளுக்குள்ளெல்லாம் தேட வேண்டிய நிலை தங்களுக்கு ஏற்படும் என்று எண்ணியிருந்திருக்க வேண்டும். ஆகவே அவர்கள் பந்தங்களோடும், தீவட்டிகளோடும் வந்திருந்தார்கள். நமது கர்த்தர், அவர்களிடமிருந்து தப்பி ஓடுவதற்குப்பதிலாக, அவர்களுக்கு முன்பாக எதிர்ப்பட்டு, அவர்கள் யாரைத் தேடுகின்றார்கள் என்று கேட்டதினிமித்தம், அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தப் போர்ச்சேவகர்களில் சிலருக்கும் ஏற்கெனவே கர்த்தரை, அதாவது அவருடைய அற்புதங்கள், பிசாசுகள் மீதான வல்லமைகள் முதலியவைகள் பற்றிய அறிவு இருந்திருக்க வாய்ப்பு உண்டு. மேலும், இதுகூட அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழுவதன் மூலம், தங்களது பெலவீனத்தை வெளிப்படுத்தினதற்கான காரணமாகக்கூட இருக்கலாம். இல்லையேல், தாம் அவர்களை எதிர்க்க விரும்பினால், அவர்களை எதிர்ப்பதற்கான முழு வல்லமையும் தம்மிடத்தில் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக, அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழத்தக்கதாக, அவர்கள் மீது உயர் மனதின் சக்தியைக்கூட நமது கர்த்தர் பயன்படுத்தியிருக்கவும் வாய்ப்புள்ளது.

இதே படிப்பினையானது, பேதுரு பட்டயத்தைப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரன் மீது உபயோகித்தப்போதும், கற்றுக்கொடுக்கப்படுகின்றது என நாம் நம்புகின்றோம். அப்போஸ்தலர்கள் பட்டயங்களை எடுத்துக்கொள்ளும்படிக்கு நமது கர்த்தர் அவர்களிடம் கூறினார் என்றும், இரண்டு பட்டயங்கள் இருக்கின்றது என்று சொன்னபோது, அவை "போதும்" என்று நமது கர்த்தர் கூறினார் என்றும், சுவிசேஷங்களில் ஒருவர் பதிவு

செய்துள்ளது நம்முடைய நினைவிற்கு வருகின்றது (லூக்கா 22:36, 38). தமக்காக தம்முடைய சீஷர்கள் சரீரப்பிரகாரமான யுத்தம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய கர்த்தருக்கு இல்லை. இதை அவர் பிற்பாடு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" என்று தெரியப்படுத்துகின்றார் (யோவான் 18:36). தற்காப்பிற்காக எதுவும் இல்லை என்பதினாலோ, அதேசமயம் தம்முடைய சீஷர்கள் கோழைத்தனமாய் இருப்பதினாலோ, நம்முடைய கர்த்தர் கைதுச் செய்யப்படாமல், மாறாக அவருடைய வேளை வந்தது என்பதையும், நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்து, அவருடைய மகிமையில் பிரவேசிப்பதற்குரிய வேளை வந்துள்ளது என்பதையும் அறிந்து, அவர் தம்மை முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்ததினாலேயே, அவர் கைதுச் செய்யப்பட்டார் என்பதைக் காட்டுவதற்கு இரண்டு பட்டயங்கள் போதுமானதாய் இருந்தது. லூக்கா 24:46.

அங்கு வந்துள்ள திரளான ஜனக்கூட்டத்தைத் தம்மால் முழுமையாய்ச் சமாளிக்க முடியும் என்பதையும், தாம் விரும்பினால் தம்மைப் பாதுகாக்க, பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரைக்கொண்டு வருவதற்குத் தம்மிடத்தில் வல்லமை உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டும் வண்ணமாக, இந்த ஒரு வல்லமையை வெளிப்படுத்தின பிற்பாடு (மத்தேயு 26:53), நம்முடைய கர்த்தர் தாம் கைதுச் செய்யப்படுவதற்கென முழுமையாய்த் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டு, சீஷர்கள் அவர்கள் வழியே போய்விட அனுமதிக்க வேண்டுமெனும் நிபந்தனையை மாத்திரம் வைப்பதை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட ஒரு தருணத்தில், இப்படிப்பட்ட சோதனையான சூழ்நிலையின் கீழ், தம்மைப்பற்றி முற்றிலுமாக மறந்துவிட்டு, மற்றவர்களுடைய நலனில் மாத்திரம் அக்கறைக்கொண்டிருப்பது எத்துணை அருமையான குணலட்சணமாய் உள்ளது! அவர் எப்பேர்ப்பட்டவராய் இருக்கின்றார்!

"நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது" (யோவான் 18:9). மறுபடியும் ஆண்டவருடைய நடத்தையில் இங்கு அவர் மேல்வீட்டறையை விட்டுப்போவதற்கு முன்பாகத் தம்முடைய ஜெபத்தில் கூறினதின்படியே, தம்முடைய சீஷர்களுக்கான அவருடைய பராமரிப்பிற்கு உதாரணத்தை நாம் காண்கின்றோம். அவர்களில் எவரும் இழந்துப் போகப்படக்கூடாது என்பதில், அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகள் தொடர்பான விஷயமே பிரதானமாக அவருடைய ஜெபத்தின் எண்ணமாக இருப்பினும், இது அவருடைய சீஷர்களாகும் அனைவருடைய சரீரத்திற்கடுத்த நன்மைகள் தொடர்புடைய விஷயத்திலுமுள்ள, நம்முடைய கர்த்தரின் அக்கறையை உறுதிப்படுத்தும் உதாரணமாகவும் இருக்கின்றது. அவர்களுடைய தலையிலிருந்து அவரை அறியாமல், ஒரு மயிர்கூட கீழே விழுவதில்லை; எதுவும் அவர்கள் பாதிக்கத்தக்கதாக அனுமதிக்கப்படுவதில்லை. ஜீவியத்தின் ஒவ்வொரு விஷயமும், சம்பவங்களும், அவர்களுடைய மேலான நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் (மத்தேயு 6:32, 33).

அநேகமாக இயேசுவைக் கட்டுவதற்கு ஆரம்பித்திருக்கும் போதுதான், அவரைப் பாதுகாப்பதற்கெனப் பேதுரு தன்னுடைய பட்டயத்தை உறையிலிருந்து வெளியே எடுத்திருந்திருக்க வேண்டும். ஒருவேளை தம்முடைய சீஷர்களனைவரும் அவரைக் கைவிட்டு ஓடிவிடுவார்கள் என்ற கர்த்தருடைய வார்த்தைகளும், பேதுருவாகிய தான் "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" என்று பண்ணின சத்தியத்தையும் பேதுரு நினைவுகூர்ந்திருப்பார் (மாற்கு 14:29). பெருந்தன்மையுள்ள, பக்தி வைராக்கியமுள்ள பேதுரு! அவருடைய உணர்வின் பெருந்தன்மையுடன்கூடிய வெளிப்படுத்தல்களினிமித்தமும், பேதுரு மேல் நமக்கு அன்பு உருவாகுகின்றது. இங்குள்ள பேதுருவின் செயல்பாடானது, பேதுருவின் துடுக்குத்தனத்தினால் செய்யப்பட்ட தவறுகளில் ஒன்றுதான் என அநேகர் இழிவுப்படுத்தும் வழக்கமுண்டு. அப்போதுவரை அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும், தாங்கள் அழைக்கப்பட்டிருப்பது ஆவிக்குரிய இராஜ்யம் என்பதைத் தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியாமல் இருந்தார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், நாம் பார்த்துள்ளபடி பேதுரு, பட்டயத்தை எடுத்துக்கொள்ளும்படியான கர்த்தருடைய ஆலோசனையின்படிச் செய்தவராகத்தான் இருக்கின்றார்; மற்றும் அப்பட்டயத்தைப் பயன்படுத்தினதில், அவர் தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றினவராகவே காணப்படுகின்றார். குற்றப்படுத்துவதற்கென

எதையும் நாம் பார்க்க முடியவில்லை. அனைத்தும் பாராட்டும் வண்ணமாகவே காணப்படுகின்றது. இவ்விஷயம் பேதுருவினாலும், அங்கிருந்த மற்றவர்களாலும் உணரப்பட்டதைக் காட்டிலும் மிகப் பெரிய முக்கியத்துவம் உடையதாய் இருந்தது.

இவ்வளவு தூரம் காரியங்கள் அனைத்தும் நடைப்பெறும் வண்ணமாக அனுமதித்தப் பிற்பாடு, நமது கர்த்தர், “உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ” என்று கூறி, பேதுருவைக் கட்டுப்படுத்தினார் (யோவான் 18:11). இப்படிக்கூறிக்கொண்டு, கர்த்தர் காயமடைந்த தம்முடைய சத்துருவைத் தொட்டு அவனைச் சொஸ்தப்படுத்தினார். நமது கர்த்தர் தம்முடைய சத்துருக்களிடத்தில், தம்மை முன்வந்து விரும்பிக் கையளிக்கின்றார் என்பதை சீஷர்கள் கண்டு, புரிந்துக்கொள்ள வேண்டும்; மற்றும் இதுபற்றின உறுதியும் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். ஆகவே, இப்பாடத்தை வலியுறுத்தும் வண்ணமாக அனைத்தும் நடத்தப்பட்டன.

நம்முடைய அருமை மீட்பருடைய ஊழியத்தின் சின்னஞ்சிறு விஷயங்கள் அனைத்திலுங்கூட தாழ்மையெனும் கிருபை எவ்வளவாய்ப் பிரகாசிக்கின்றது. அவர் தம்மைத் தம்முடைய சத்துருக்களிடம் கையளித்த தருணத்திலுங்கூட, தாம் விரும்பிதான் தம்மைக் கையளிப்பதாக தற்பெருமையடித்துக்கொள்ளவுமில்லை, இரத்தசாட்சிக்குரிய பாராட்டையும் நாடவுமில்லை! பிதாவினிடத்திலான தம்முடைய நேர்மைக்கான/உண்மைக்கான சான்றாக இதையெல்லாம் பிதா தம்மிடத்தில் எதிர்ப்பார்க்கின்றார் என்ற எளிய உண்மையையே வெளிப்படுத்தினவராகக் காணப்பட்டார். இயேசு தம்மைத் தேவனுடைய ஊழியக்காரர் என்றும், தாம் படுகின்ற பாடுகள் மூலமாகக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்கின்ற குமாரன் என்றும் தெரிவித்தார். “பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?” என்றார் கர்த்தர். உண்மையில் இதுதான் அவருடைய வெற்றிக்கான பலமாக இருந்தது. அதாவது, அவருடைய சித்தத்தை அவர் முழுமையாய்ப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தார்; மற்றும் பிதாவினால் நன்மைக்கேதுவாக மாற்றமுடிகின்றதை மாத்திரம் தவிர, மற்றபடி எந்தத் தேவையற்ற பொல்லாப்புகளையும் பிதா தம்மீது வர அனுமதிப்பதில்லை என்ற உண்மையை, அவருடைய விசுவாசம் பற்றிப்பிடித்திருந்தது.

இங்கு இராஜரிக ஆசாரியகூட்டத்தார் அனைவருக்கும் அதாவது, மாபெரும் பிரதான ஆசாரியனுடைய அடிச்சுவடிகளில் நடக்க நாடும் அனைவருக்கும் முக்கியமான படிப்பினை உள்ளது. நான் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க நாடுவது வரையிலும் நமக்கான ஜீவியத்தின் சோதனையான அனுபவங்களனைத்தும், நமக்கெனக் கர்த்தரால் கவனமாய்க் கருத்தில் கொள்ளப்படுகிறது. அதாவது, நமக்குத் தேவையற்றதும், நமக்கு நித்திய கனமகிமையை உண்டாக்காததுமான எந்தக் கசப்பான அனுபவங்களையும், நம்முடைய துக்கம் மற்றும் சோதனையின் பாத்திரத்தில் அவர் ஊற்றுவதில்லை என்பதை நாமும் நினைவில் கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 4:17). இந்த வாக்குத்தத்தங்கள் நிமித்தமாகவும், நமக்கு முன்னோடியும், மகிமையடைந்தவருமாகிய நம்முடைய ஆண்டவரிடத்திலான பிதாவின் உண்மைக்கான சான்றுகளின் நிமித்தமாகவும், சுவிசேஷ யுகத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைக்குள் அடைக்கலம் புகுந்துள்ள நமக்குப் பலமான ஆறுதலுள்ளது (எபிரெயர் 6:18-20).

வெட்டப்பட்ட காதைச் சொஸ்தப்படுத்தின நமது கர்த்தருடைய கடைசி அற்புதமானது, அவருடைய குணலட்சணத்திற்கும், போதனைக்குமான மிக அருமையான உதாரணமாக விளங்குகின்றது. இது, “உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்” என்ற அவருடைய வார்த்தைகளுக்கான உதாரணமாயிற்று. இது அவருடைய போதனைகள் வெளிப்படுத்தின தெய்வீக அன்பினால் அவர் நிரம்பியிருப்பதையும், அவரை இழிவான விதத்தில் நடத்தினவர்களிடத்திலும், அவரைத் துன்பப்படுத்தினவர்களிடத்திலும் அவருக்கு எந்தக் கசப்பும் இல்லை என்பதையும் காட்டுகின்றது.

நமது கர்த்தரைக் கட்டுவதற்கு அவசியமில்லை. ஆனால், இந்தப் போர்ச்சேவகர்களை அனுப்பி வைத்தவர்களுக்கு முன்பாக, இந்தப் போர்ச்சேவகர்கள் தங்களது வீரத்தை வெளிப்படையாகக் காண்பிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதினால்,

இப்படியாக அவரைக் கட்டியிருக்கலாம். இதை நமது கர்த்தர் கண்டித்ததை மாற்கு 14:48-49-ஆம் வசனங்களில் பார்க்கலாம். "இயேசு அவர்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே; ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டியதாயிருக்கிறது என்றார்." அப்பொழுதுதான் பதினொரு பேரும் அவரைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிடுகின்றனர். யூதாஸ் போர்ச்சேவகர்களுடன் கூட ஆசாரியனாகிய அன்னாவினுடைய வீட்டிற்குப் போனான். இந்த அன்னாதான் யூதாசுடன் விலைபேரம் பேசியிருந்தான். மேலும் இத்தருணத்தில்தான், ஒப்பந்தத்தின்படி நிறைவேற்றி முடித்துள்ள யூதாசுக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசுகள் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இவன் ஈனமான/கேடுகெட்ட மனுஷன்! மனுஷகுமாரனைக் குறித்து எழுதப்பட்டதுபோல அவர் மரணத்திற்குள் போனார். ஆனால், அவர் மரிக்க வேண்டியது அவசியம் எனும் காரியமானது, அவரை அவருடைய சத்துருக்களின் கைகளில் கையளித்த கொலைக்கார, பேராசை மற்றும் நம்பிக்கை துரோகத்தினுடைய கொடூரத்தின் வீரியத்தை குறைத்துக் காட்டுவதில்லை. இப்படியாகவே, கிறிஸ்துவினுடைய சரீர அங்கங்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு அவமானங்கள் வருவது அவசியமாயுள்ளது. இன்னுமாக, தலையினுடைய உபத்திரவங்களில், குறைவானதைக் கிறிஸ்துவின் சரீரமானது நிறைவேற்றுவது என்பது, தெய்வீகத் திட்டத்தின் ஒரு பாகமாக இருக்கின்றது (கொலோசெயர் 1:24). எனினும், இது இப்படியான "காட்டிக்கொடுத்தலை" செய்பவர்களின் செய்கையினுடைய பாவத்தைக் குறைத்திடாது. அதுவும் சத்தியத்தின் அறிவை அனுபவித்திருக்கும் "கள்ள சகோதரருடைய" விஷயத்தில் குறைத்திடாது. கர்த்தருக்கும் சரி, அவரோடு கூட உண்மையாய்ப் பாடு அனுபவிக்கும் அனைவருக்கும் சரி, பரீட்சைகளும், சோதனைகளும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாக இருப்பினும், யூதாசின் போக்கைத் தெரிந்துக்கொண்டு அநீதிச் செய்பவர்கள், தங்களுக்குக் கனமும், ஆசீர்வாதமும் வேண்டும் என்பதற்காக, பொல்லப்புச் செய்யும்படிக்குத் தங்களை விற்றுப்போடுகிறபடியால், தாங்கள் இச்சித்த கனங்களையும், ஆசீர்வாதங்களையும் ஒருபோதும் அடைவதில்லை.

---

**R2469**

# "மாபெரும் பிரதான ஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார்"

## யோவான் 18:15-27.

"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை"—யோவான் 1:11.

அனைத்துச் சீஷர்களும் தப்பி ஓடிவிட்டார்கள் என்று கூறப்பட்டிருப்பினும், பேதுருவும், யோவானும், சிறிது இடைவெளிவிட்டுப் பின் தொடர்ந்தார்கள் என யோவான் சுட்டிக்காட்டுகின்றார். போதகர் மீது அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த அக்கறையானது, அவர்களை தங்களுடைய வீட்டிற்குச் செல்லவிடாமல், போதகருக்கு என்ன சம்பவிக்கின்றது என்று இறுதிவரை அறிந்துக்கொள்ளவும், காணவும் ஏவிற்று. போதகருக்கு எதிராகக் கூறப்படும் அத்தகைய மாபெரும் விநோதமான பேச்சுகளை, காரியங்களை எதிர்த்து அவருக்கு உதவிசெய்ய அவர்கள் பலமற்றவர்களாக இருந்தார்கள். மேலும், உதவி பெற்றுக்கொள்வதற்குப் போதகரே மறுத்துவிட்டதால், அவருக்கு உதவிபுரிய அவர்களுக்குப் பலமும் இல்லாமல் போயிற்று என்றாலும், அவரை இன்னமும் அன்பு செய்வதில் அவர்கள் பலமற்றுப்போகவில்லை. பிரதான ஆசாரியனுடைய அரண்மனையோடு ஏதோ ஒருவிதத்தில் பழக்கப்பட்டிருந்த யோவான், தனக்கு மாத்திரமல்லாமல், பேதுருவுக்கும் சேர்த்து, உள்ளே செல்வதற்கான அனுமதியை உடனடியாகப் பெற்றுக்கொண்டார்.

ஆனால், இந்தத் தயவுகளும், சிலாக்கியங்களும் பேதுருவுக்கு பரீட்சைகளாக மாறி, அவர் கர்த்தரை மறுதலிப்பதற்கு ஏதுவாக நடத்தவும் செய்துவிட்டது. இன்றும் இப்படியாகவே சில கர்த்தருடைய பின்னடியார்களின் விஷயத்திலும் காணப்படுகின்றது. கர்த்தருடைய

பின்னடியார்கள் தனியாகவோ அல்லது தாங்கள் கொண்டிருக்கும் அதே விலையேறப்பெற்ற விசுவாசத்தில் உள்ளவர்களோடு இருக்கையில், அவர்கள் கர்த்தரை அறிக்கைப் பண்ணுவதிலும், அவருக்கு ஊழியம் புரிவதிலும் மிகவும் தைரியத்துடனும், துணிவுடனும் காணப்படுவார்கள். ஆனால், ஒருவேளை தற்செயலாக அவர்கள் அரண்மனைகளுக்குள்ளாகவோ (அ) பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தாரின் பிரதான ஆசாரியர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் காணப்பட நேரிடுகையில், சத்தியம் அறிந்திராத அந்தச் சமுதாயத்தார் மத்தியில் அனுபவித்திருந்த சிலாக்கியங்களிலிருந்து புறம்பாக்கிப் போடப்படுவார்களோ என்று கருதி, போதகரைக் குறித்து வெட்கம் அடைந்தவர்களாக, அவரை அறிக்கைச் செய்ய அச்சம் அடைகின்றனர். பரிதாபத்திற்குரிய பேதுரு பின்வருமாறுக் கூறியிருந்தால் அவருக்கு நலமாயிருக்கும், "ஆம், நான் அவர் சீஷரில் ஒருவன்தான். என்னைப்போன்ற அவருடைய சீஷர்கள் உங்கள் மத்தியில் காணப்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்று நான் புரிந்துக்கொள்ளுகிறதினால், நான் வெளியே போய்விடுகின்றேன்." இப்படி அவர் கூறியிருந்திருப்பாரானால், சகல நீதியான மனுஷர்களுடைய கண்களுக்கு முன்பாகவும், அவருடைய நடத்தை மிகவும் பாராட்டுவதற்கு ஏதுவாகவும், நேர்த்தியானதாகவும் காணப்பட்டிருந்திருக்கும். இன்னுமாக எத்துணை ஆசீர்வாதங்களையும், இது அவருக்குக் கொண்டுவந்திருக்கக்கூடும்!

சரியான முறையைக் கடைபிடிக்கத் தவறின பேதுருவை, அவரது தவறான முறையானது, இன்னும் அதிகம் சோதனைக்குரிய சூழ்நிலைக்கு அவரைப் பிற்பாடு கொண்டு போயிற்று. எப்படியெனில், பேதுரு காதை வெட்டின மனுஷனுடைய உறவினன், அவரை நோக்கி, "நான் உன்னை அவனுடனேகூட தோட்டத்திலே காணவில்லையோ?" (யோவான் 18:26) என்று கேள்வி கேட்டபோது ஏற்பட்டது. சூழ்நிலைகள் பரிதாபத்திற்குரிய பேதுருவுக்கு மிகவும் நெருக்கம் கொடுக்க ஆரம்பித்தது. கேட்கப்பட்ட இக்கேள்வியானது, பிரதான ஆசாரியனின் முற்றத்தில் இருப்பதற்கான கனத்தையும், சிலாக்கியத்தையும், குளிர் காய்வதற்கான நெருப்பையும் விட்டுச்செல்லும் இழப்பைக் காட்டிலும் அதிகமான பாதிப்பை உடைய கேள்வியாகும். இயேசுவைக் காக்கும்படிக்குப் பட்டயத்தைப் பயன்படுத்தினவன் என்ற தனது அடையாளத்தைக் குறித்ததாக இக்கேள்வி அமைந்தது. மேலுமாக, அதே இடத்தில் ஆண்டவரோடு கூடத் தானும் கைதுச் செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்படுவதற்கான சம்பவங்களைக் கொண்டுவருவதற்கு ஏதுவான கேள்வியாகவும், அக்கேள்வி காணப்பட்டது. தவறுதலாக எடுத்து வைக்கப்பட்ட ஓர் அடியானது, இயல்பாகவே இன்னொரு தவறான அடியை எடுத்து வைக்கவே நடத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே இரண்டாம் முறை கேட்கப்பட்ட கேள்விக்கு, இப்பொழுது இயேசுவின் சார்பாக, தான் உண்மையை அறிக்கைச் செய்துவிட்டால் அது, தான் பொய்யன் என்பதற்கான வெளிப்படையான சாட்சியாக அமைந்து, தன்னைக் கைதுச் செய்துவிடக்கூடிய சூழலாகவும் அமைந்துவிடும். ஆகவே தன்னைக் காக்கும்பொருட்டு, தான் மீண்டும் பொய்ச் சொல்வதோடல்லாமல், மீண்டும் ஆண்டவரை மறுதலிப்பதோடல்லாமல், தன்னைக் குற்றஞ்சாட்ட முற்படுபவர்கள் முன்பாக காரியங்களை மிகவும் உறுதியாய் நிலைப்படுத்தும் வண்ணமாக, தனக்கு இயேசுவைத் தெரியாது என்று கூறவும், சபிக்கவும், சத்தியம் பண்ணவும் முடிவெடுத்தார்.

பாவம் பேதுரு! நமது கர்த்தர் பேதுருவிடம் சாத்தான் அவரை புடமிட விரும்புகின்றான் எனக்கூறின பிரகாரம், பேதுரு இக்கட்டத்தில் மிகவும் கடுமையாகப் புடமிடப்பட்டார். பேதுரு, பெலன் கொண்டு, மனம்வருந்தி, தன்னுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட காரியமானது ஓர் அற்புதம் போன்று தோன்றுகின்றது. பேதுரு இப்படியாக மறுதலிப்பார் என்று கூறினதுடன் கூட, அவருக்காக ஜெபம் பண்ணினதாகவும் அறிவித்திருந்த நமது கர்த்தருடைய ஜெபமானது அதன் பலனைக் கொடுத்தது என நமக்குக் காட்டுகின்றது. ஏனெனில், பேதுரு இப்படியாக மறுதலித்த பிற்பாடு சேவல் கூவினதைக் கேட்டு, "சேவல் கூவுவதற்கு முன்னரே என்னை நீ மூன்று தரம் மறுதலிப்பாய்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளைப் பேதுரு நினைவுகூர்ந்தார். வெளிப்படுத்த முடியாத அளவு உணர்வுகளோடு, பேதுரு இப்பொழுது தன் நிமித்தமாக பிரதான ஆசாரியனின் இடத்தைவிட்டு வேகமாக வெளியேறினார். மனங்கசந்து அழுது, கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி, அவ்விடத்தைவிட்டு வெளியேறினார்.

இதில் நமக்கு ஒரு பாடம் உள்ளது. என்னவெனில், பேதுரு எந்த விஷயத்தில் பெலம் உள்ளவராக இருந்தாரோ, அவ்விஷயத்தில்தான் அவர் வீழ்ச்சியும் அடைந்தார். பேதுரு இயல்பாகவே தைரியமுள்ள மனுஷன்தான். தன் தைரியத்தைக் குறித்துப் பெருமையும் அடித்துக் கொண்டார். ஆயினும், தைரியம் இல்லாமையினால் வீழ்ச்சியும் அடைந்தார். "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்ற வார்த்தைகள், எவன் ஒருவன் தன்னை பலமுள்ளவன் என்று எண்ணுகின்றானோ, அவன் உண்மையில் பலவீனனாய் இருக்கின்றான் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. இதற்கு உதாரணமாக, பேதுருவின் விஷயம் காணப்படுகின்றது (2 கொரிந்தியர் 12:10). நமக்கு ஒரு தந்திரமான சத்துரு இருக்கின்றான் என உணர்ந்து/நினைவில் கொண்டு, நம்மிடம் இன்னின்ன பலமுள்ள தன்மைகள் காணப்படுகின்றன என்பதான நம்முடைய அனுமானங்களிலிருந்து விசேஷமாக நம்மைப் பாதுகாத்துக்கொள்ள நாம் அனைவரும் கற்றுக்கொள்வோமாக. எந்த விஷயத்திலும் நம்மிடம் காணப்படும் நம்முடைய பலவீனங்களை, குறைகளை நாம் உணர்ந்துக்கொண்டு, ஒவ்வொரு விஷயத்தையும் விழிப்பாய்க் கவனித்து, நமக்கு உதவி செய்யும், நம்முடைய மாபெரும் இரட்சிப்பின் அதிபதியைச் சார்ந்து நிற்கிறவர்களாகக் காணப்பட வேண்டும்.

யோவான், சம்பவத்தின் சகல அம்சங்களையும் பதிவு செய்யவில்லை. பேதுரு சபித்ததையும், சத்தியம் பண்ணுவதையும் குறிப்பிடுவதை அவர் தவிர்த்துவிட்டார். பேதுருவை பற்றிக் கர்த்தர் கூறின அக்காரியமானது நிறைவேறிவிட்டது என்று கண்டிப்பாகக் காட்ட வேண்டிய அவசியமில்லாத, அச்சம்பவங்களை, சகோதரனாகிய பேதுருவின் மீதான அன்பினிமித்தம் பதிவு செய்யாமல் விட்டுவிட யோவான் ஏவப்பட்டார். பேதுரு சபித்ததையும், சத்தியம் பண்ணினதையும் குறித்த விஷயங்களை மாற்கு, பதிவு செய்கின்றார். மாற்கு எழுதின சுவிசேஷமானது, பேதுருவினால் சொல்லப்பட, அது மாற்கினால் எழுதப்பட்டது என்று எண்ணப்படுகின்றது (மாற்கு 14:66-72).

இயேசு, பிரதான ஆசாரியனால் விசாரணை செய்யப்பட்டார். மேலும், அக்கூட்டத்தார் தீமையையும், கொலை பாதகத்தையும் இருதயத்தில் கொண்டிருந்தாலும், நீதிமுறையை வெளித்தோற்றத்திற்காகிலும் கைக்கொள்ள வேண்டும் எனக் கட்டுண்டவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால், ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்கள் மத்தியில் காணப்பட்ட பிரதான ஆசாரியனும், அவனோடு கைக்கோர்த்துள்ளவர்களும், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்க ஏற்கெனவே முடிவு செய்திருந்தார்கள் என்று பல பதிவுகள் நமக்குக் காட்டுகின்றது. காரணம், ஜனங்கள் மத்தியில் இயேசுவுக்குக் காணப்பட்ட செல்வாக்கானது, அவர்களுக்குத் தீங்கை விளைவிக்கக்கூடியதாக இருந்தது. அதாவது, இயேசுவினுடைய போதனைகள், அவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றதாகவும், அவர்களின் மாய்மாலம், மதவெறி மற்றும் வஞ்சனைகளை வெட்ட வெளிச்சமாக்குகின்றதாகவும் காணப்பட்டது. பிரதான ஆசாரியனின் கேள்விகளுக்கு நமது கர்த்தர் பதில் கொடுத்துக் கொண்டிருந்தார். அதேசமயம் அவர் எந்தக் குறிப்பிட்ட விரிவான விளக்கங்களும் கொடுக்க மறுத்தும் விட்டார். மேலும், அவர் தாம் போதித்தவைகளை, சுட்டி மாத்திரமே காட்டினார். இவ்விதமாக ஒரு யூதனாக அவருக்கு இருந்த உரிமையின் மீதே, அவர்களது கவனத்தைத் திருப்பினார். கர்த்தருடைய பதில் சரியானதும், நியாயமானதுமாக இருக்கின்றது. அவர் நியாயமான காரணம் இல்லாமல் கைதுச் செய்யப்பட்டார். மேலும், நீதிபதியோ இப்பொழுது ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்கும்படிக்கு அவரிடத்தில் தேடுகின்றான். கைதுச் செய்யப்படுவதற்கு முன்பு, கைதுச் செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏதாகிலும் காட்டப்பட்டிருக்க வேண்டும் என்று மாத்திரமே நமது கர்த்தர் சுட்டிக்காட்டினார்.

இயேசுவைத் தன்னுடைய கைகளினால் அறைந்து, பிரதான ஆசாரியனுக்கு இப்படியா தகாத வார்த்தைகளைக் கொண்டு உத்தரவு கொடுப்பது என்று இயேசுவைக் கடிந்துக்கொண்ட சேவகன், இவ்விஷயத்தில் வேண்டுமென்றே அநீதியாக நடந்துக்கொண்டான் என்று நாம் எண்ண வேண்டியதில்லை. மாறாக, பிரதான ஆசாரியனின் ஸ்தானம் மற்றும் நியாயத்தீர்ப்பை, தான் வைராக்கியத்துடன் ஆதரிக்கின்றேன் என்று தன்னைக் காண்பிக்க வேண்டும் என்ற விருப்பமே, அவனிடத்தில் தாக்கம் கொண்டு, விழுந்துபோன மனுஷனாகிய அவனுடைய சரியற்ற மனதின் மீதும் தாக்கம் கொண்டு, பொல்லாப்பு இல்லாதவற்றில், பொல்லாப்பு/தீமை இருப்பது போன்று கற்பனை செய்து கொள்ளும்படி அவனை ஏவிற்று என்றே நாம் எண்ணுக்கின்றோம். இச்சூழ்நிலையானது,

மலைப் பிரசங்கத்தின்போது, "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு," என்று நமது கர்த்தர் பேசின வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துக்கொள்வதற்கான வாய்ப்பை நமக்கு அளிக்கின்றது (மத்தேயு 5:39). சொல்லர்த்தமாக நமது கர்த்தர் தம்முடைய மறு கன்னத்தை அடிக்கிறவனிடத்தில் திருப்பிக்காட்டி, இக்கன்னத்திலும் அடி என்று கூறவுமில்லை. தாம், கன்னத்தில் அறையப்பட்டதை அமைதலுடன் ஏற்றுக்கொள்ளவுமில்லை. தாம் பேசினது தவறல்ல என்ற விஷயத்தை திருத்தம் செய்துகொள்வதற்கு ஏற்ற முயற்சியாகிலும் எடுக்கப்படாதது வரையிலும், அவர் தம்முடைய நன்னடத்தையும், சரியான வார்த்தையும், தவறாய்ப் பேசப்படுவதை ஏற்றுக்கொள்ளவுமில்லை/விரும்பிக்கொள்ளவுமில்லை. ஆகவேதான், தம்மை அடித்தவனிடம், தாம் எவ்விதத்தில் தகாததாய்ப் பேசினேன் என்று காட்டும்படிக் கேட்டுக்கொண்டார். மேலும், ஒருவேளை அவனால் தகாததைச் சுட்டிக்காட்ட முடியவில்லையெனில், தன்னால் சுட்டிக்காட்ட முடியாத தகாததற்காக அநீதியுடன் அடித்ததற்கான தன்னுடைய தவறை அவன் ஒப்புக்கொள்ள வேண்டும் என யோசனைக்கூறினார்.

இந்த உதாரணத்தின் வெளிச்சத்தில் மறு கன்னத்தைக் காண்பித்துக்கொடு என்ற கட்டளைக்கான அர்த்தம் என்னவெனில், கர்த்தருடைய ஜனங்கள் தீமையைத் தீமையினால் எதிர்க்கக்கூடாது என்பதும், மாறாக, தீமைக்குப் பதிலாக தீமை செய்வதைக் காட்டிலும், அவர்கள் அதிகமான தீமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். அதேசமயம் அவர்கள் தீமையை, நன்மையினால் எதிர்க்க வேண்டும். <u>போதகர் செய்தது போன்று</u>, <u>தீமை செய்தவர்களுக்கு நட்பு முறையில் அறிவுரை கூற</u> வேண்டும். அதாவது, வாக்குவாதம் வரும் காரியங்களில் தீமை செய்பவர்கள், சரி எது, தவறு எது என்று காணத்தக்கதாக, <u>அன்புடனும், நிதானத்துடனும் முயற்சி செய்ய வேண்டும்</u> என்று கர்த்தருடைய ஜனங்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்.

அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனும், அன்னாவின் மருமகனாகிய காய்பாவிற்கு முன்பாக, யூதர்களால் நமது கர்த்தர் விசாரணை செய்யப்பட்டார். இதே காய்பா தான், ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவராகவும் காணப்பட்டார், "ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான். இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கத்தரிசனமாய்ச் சொன்னான்" (யோவான் 11:50-53).

மாபெரும் சத்தியங்கள் எப்படி, இரண்டு எதிரெதிரான கண்ணோட்டங்களில் பார்க்கப்படக்கூடும் என்பதற்கான உதாரணமாக மேற்கூறப்பட்ட வசனங்கள் விளங்குகின்றது. காய்பாவின் தீர்க்கத்தரிசனம் மிகவும் உண்மையே. மேலும், இத்தீர்க்கத்தரிசினம் கர்த்தருடைய வார்த்தைகள் அறிவித்த சகல விஷயங்களுக்கும் மிகவும் இசைவாகக் காணப்படுகின்றது. இத்தீர்க்கதரிசனமானது, தேவன் எப்போதும் பயன்படுத்துவதில் பழக்கமுடைய கருவிகளில் (ஆசாரிய ஊழியன் ஸ்தானம்) ஒன்றின் மூலமாகவே அனுப்பப்பட்டது. ஆனால், அந்த ஸ்தானத்தில் காணப்பட்ட மனுஷனோ, தேவனுக்கு இருதய அளவில் இசைவில்லாதவனும், தெய்வீகத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களுக்கு இசைவில்லாதவனும், பொல்லாத செய்கையைத் தூண்டினவனாகவும், அச்செய்கைக்குக் கூட்டாளியாகவும் காணப்பட்டான். இப்படி இருப்பினும் இவைகள் அனைத்தும் தெய்வீக ஏற்பாடு மற்றும் முன்னறிவிற்கு இசைவாகவே நடந்துக் கொண்டிருந்தது.

தெய்வீகச் சத்தியத்தின் ஒவ்வொரு அம்சம் தொடர்புடைய விஷயங்களில் இங்குச் சகல கர்த்தருடைய ஜனங்களுக்கும் ஒரு படிப்பினை காணப்படுகின்றது. நாம் சில குறிப்பிட்ட விஷயங்களை அறிந்திருப்பது மாத்திரம் போதாது, நாம் கர்த்தருக்கு இருதய அளவிலும் இசைவுள்ளவர்களாகவும் காணப்பட வேண்டும். இல்லையெனில், <u>நாம் காய்பா போன்று காணப்படுவோம்</u>. அதாவது, கர்த்தருடைய திட்டம் நிறைவேற உதவியாய் இருப்போம். ஆனால், தெய்வீகத் திட்டத்தின் நிறைவேறுதலில் இன்னமும் செயலாற்றுகிறவர்களாய் இருப்பினும், நம்மையும், மற்றவர்களையும் கூடச்

சாபத்திற்குள்ளாக்குவதற்கு ஏதுவாக தவறான நிலையில் காணப்படுகிறவர்களாகி விடுவோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருப்பவர்களும், சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்களும், இன்னும் அதிகமதிகமாய் வெளிச்சத்திலும், ஆண்டவரின் அடிச்சுவட்டிலும் நடப்பதற்கு நாடி, யூதாஸ், பேதுரு மற்றும் காய்பாவின் விஷயங்களில் விளங்கும் தீமையின் உதாரணங்கள் என நாம் கண்டவைகளைக் கவனமாக தவிர்த்து விட வேண்டும்.

யூதர்களுக்கு முன்பாக நடத்தப்பட்ட விசாரணை, மூன்று பாகங்களை உடையதாய் இருந்தது, அவை பின்வருமாறு:-

(1) (மத) சட்டப்படி பிரதான ஆசாரியனாக இருந்த அன்னாவுக்கு முன்பாக நடத்தப்பட்ட விசாரணையானது, முற்றிலும் அதிகாரப் பூர்வமற்றதாகும். இவன் இயேசுவைக் கட்டுண்டவராக, உரோமர்களின் அதிகாரத்தின்படியான பிரதான ஆசாரியனாகியவனும், ஆலோசனை சங்கத்தின் தலைவனுமாகிய காய்பாவினிடத்திற்கு அனுப்புவித்தான். இந்தக் காய்பாவினுடைய விசாரணை அறையானது அநேகமாக அதே அரண்மனையில், பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்த நடைபாதையின் குறுக்கே காணப்பட்டிருந்திருக்க வேண்டும்.

(2) காய்பாவிற்கு முன்பு நடந்த தொடக்க விசாரணையானது, வெள்ளிக்கிழமை காலை அன்று இரண்டு அல்லது மூன்று மணிக்குள்ளாக நடந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்கப்படுகின்றது. ஏனெனில், யூதருடைய விசாரணை மன்றம் (அ) ஆலோசனை சங்கத்தாரின் அங்கங்கள், இயேசு கைதுச் செய்யப்பட்ட உடனே, செய்தி அனுப்பப்பட்டு வரவழைக்கப்பட்டனர். விடியும் வேளையில், ஐந்து மணியளவு நடத்தப்படப்போகும் சம்பிரதாயப்படியான கூட்டத்தில், இயேசு குற்றவாளி என நிரூபிக்கப்பட்டவர் என்று கூறத்தக்கதாக எக்குற்றங்களைச் சொல்ல வேண்டும் எனத் தொகுப்பதற்கும், முடிவெடுப்பதற்கும், அவரை விசாரிப்பதற்குமே இந்தத் தொடக்க விசாரணை நடத்தப்பட்டது. யூதர்களின் பிரமாணம்/சட்டப்படி, இரவில் விசாரணை செய்வது தடை செய்யப்பட்டிருந்தது (லூக்கா 22:66-71).

(3) விடியலில் ஆலோசனை சங்கத்தார் முன்பு நடத்தப்பட்ட, சம்பிரதாயப்படியான விசாரணையானது வெறும் ஓர் ஆச்சாரம் (அ) நாடகமேயாகும். இயேசுவைக் கொல்ல வேண்டும் என்ற தீர்மானமானது, அவரைக் கைதுச் செய்வதற்கு வெகுகாலம் முன்னதாகவே அவர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்க, இரண்டு காரணங்களினிமித்தமாக காரியங்கள் துரிதமாக்கப்பட்டது. (a) தங்களால் தொகுக்க மாத்திரமே முடிந்திருந்த பொய்யான குற்றச்சாட்டுகளை எதிர்த்து, இயேசுவுக்காக பொது ஜனங்கள் போராடுவார்கள் என்று பெரிய ஸ்தானங்களில் காணப்பட்ட யூதர்கள் அஞ்சினார்கள். (b) பஸ்கா அண்மையில் இருப்பதினால், அதற்கு முன்னதாக அவர் கொல்லப்பட வேண்டுமென்று விரும்பினார்கள். ஆ! அவர்களுடைய இருதயத்தின் பொல்லாத விருப்பங்களை, அவர்கள் செயல்படுத்த தேவன் அனுமதித்துள்ளார் என்று அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. மேலும், இவ்விதமாக (பஸ்கா) நிழல்களும், தீர்க்கத்தரிசனங்களும் அந்நாளில் நிறைவேறினது.

இதிலும், தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு படிப்பினை உள்ளது. அதென்னவெனில், நாம் நீதியை ஆச்சாரமாக கடைப்பிடிப்பது போதாது. இன்னுமாக தெய்வீகத் திட்டத்தைத் தந்திரமாக வெல்ல முடியாது (அ) அதன் நிறைவேறுதலைத் தடை பண்ணவும் முடியாது என்பதை நாம் முன்கூட்டியே அறிந்து வைத்துக்கொள்வது மாத்திரம் போதாது. பழிவாங்குதலின் நாளிலும், அனைத்தும் வெளியரங்கமாக்கப்படும் நாளிலும்தான், அநேகர் தாங்கள் கனமோ (அ) இலாபமோ இல்லாமல் தேவனுடைய நோக்கங்களுக்காகப் பணி புரிந்துள்ளனர் என்று உணர்ந்துக்கொள்வார்கள். அதாவது, அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, குற்றவாளி எனத் தீர்க்கப்படும் வழிமுறையில் தாங்கள் தேவ நோக்கங்களுக்காக பணி புரிந்துள்ளனர் என்று உணர்ந்துக் கொள்வார்கள். மாபெரும் எதிராளியான சாத்தானுங்கூட தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் எதிராக தன்னால் பண்ணப்பட்ட விஷயங்களானது, தெய்வீக ஞானம் மற்றும் தெய்வீக வல்லமை மற்றும், "மனுஷனுடைய கோபம் தமது மகிமையை விளங்கப்பண்ணும்" படிக்குச் செய்பவர் மூலம் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டது என்று இறுதியில் காண்பான். (சங்கீதம் 76:10). ஆயினும், இதனால் அவனுக்கு எவ்வித பாராட்டோ, ஆசீர்வாதமோ வருவதில்லை.

நீதியின் விஷயத்தை ஆச்சாரமாகக் கடைபிடிப்பதை விட, நாம் அதிகமாய்ச் செய்ய வேண்டும் என்பதே மிக முக்கியமானதாகும். நம்மிடத்தில் நீதியின் ஆவி, அதாவது, நீதியின் மீது அன்பு காணப்பட வேண்டும். அதாவது, தேவனுடைய சித்தம் எது என்று அறிந்து, அதைச் செய்வதற்கான உண்மையான வாஞ்சை காணப்பட வேண்டும். இல்லையேல், யூதர்கள் நீதியுள்ளவரைக் குற்றவாளி எனத் தீர்த்துக் கொலைசெய்து போட்டதுபோன்று, நாமும் நீதியின் ஆச்சாரமான கடைப்பிடிப்புகளினால், அவருடைய "சகோதரரை" குற்றம் தீர்த்து, காயப்படுத்துகிறவர்களாக இருப்போம். தேவன் பேரிலும், நீதியின் பேரிலும் அன்பு கொண்டிருப்பது என்பது, கர்த்தருக்கு இருதயம் முழுமையாய் அர்ப்பணம் பண்ணப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. "நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று ஆண்டவர் கூறுவதைக் கேட்க வேண்டும் என விரும்புகிறவர்களுக்கு, அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி அவருடைய சித்தத்திற்கு முழுமையாய்ச் சுயத்தை அர்ப்பணிப்பது, கர்த்தருக்கு முழுமையாய்த் தத்தம் செய்வதே சரியானதும், பாதுகாப்பானதுமான வழியாக இருக்கின்றது (மத்தேயு 25:23).

காலை மூன்றாம் மணி வேளையில், நடந்த விசாரணைக்கும், நமது கர்த்தருக்கு எதிரான செல்வாக்கு மிக்க சத்துருக்கள் காலை ஐந்தாம் மணி அளவில் நடந்திட்ட சம்பிரதாய முறையிலான குற்றம் நிரூபிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கும் கூட்டத்திற்கும் இடையிலேயுள்ள நேரத்தில்தான், மூன்று சுவிசேஷகர்களால் பதிவு செய்யப்பட்டபடி, அவர் இரண்டு மணி நேரமளவும் கேலியும், கிண்டலும் செய்யப்பட்டார் (மத்தேயு 26:67, 68; மாற்கு 14:65; லூக்கா 22:63-65). கீழான/தாழ்வான மனமுடையவர்கள் தங்களைக் காட்டிலும் பிரதானமானவர்களை, அவர்களின் இக்கட்டான நேரங்களில் கேலி செய்து மகிழ்ச்சிக் கொள்வார்கள் என்ற உண்மைக்கு உதாரணமாக, "சேவகர்கள் இக்கேலி வேலைகளைச் செய்தார்கள்" என்பது அமைகின்றது. இந்தச் சேவகர்களும், தங்களுடைய எஜமான்களாகக் காணப்படும், பிரதான ஆசாரியர்கள் மற்றும் பரிசேயர்களின் அதே சிந்தையை/ஆவியை வெளிப்படுத்தினார்கள். ஆனால், இவர்கள் முரட்டுத்தன்மையும், மடமையானவர்களாகவும் (அறிவில்லாமல்) காணப்பட்டப்படியினால் இவர்களுடைய செயல்பாடுகள், முறைகள் கொடூரமாகக் காணப்பட்டது. மாறாக, கிறிஸ்துவின் ஆவியாகிய அன்பின் ஆவியானது, கல்வியறிவு உடையவர்களிடத்திலோ (அ) அறிவில்லாதவர்களிடத்திலோ காணப்படும்போது, அது அன்பின் ஆவியாகவும், சாந்தம், அனுதாபம் மற்றும் இரக்கத்தின் ஆவியாகவே காணப்படுகின்றது. அவர்களுடைய கனிகளினால், அவர்களுடைய ஆவி இன்னது என்று அறியப்படும். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9).

---

**R5552**

# "உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி"

## மத்தேயு 26:14-25, 47-50; 27:3-10.

"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ."— மத்தேயு 26:24.

இயேசுவின் பதினொரு சீஷர்கள் கலிலேயர்களாக இருக்க, யூதாஸ் பாலஸ்தீனியாவின் தெற்குப் பகுதியைச் சார்ந்தவராக இருந்தார். வணிகத்தில் திறமைமிக்கவராக யூதாஸ் இருந்தபடியால், அவர் அப்போஸ்தலர்களின் கூட்டத்திற்குப் பொருளாளராக அமர்த்தப்பட்டார் என்று அனுமானிக்கப்படுகின்றது. இயேசுவின் நண்பர்கள், இராஜ்யத்தைக் குறித்து அறிவிப்பதற்கு, தாங்களும், இயேசுவும், தங்களுடைய முழு நேரத்தையும் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்ததான உண்மையை உணர்ந்திருந்தனர். ஆகவே அவர்களைத் தாங்கும் வண்ணமாக சிலர் தானாகவே முன்வந்து பண உதவி பண்ணினார்கள் என்று நாம் வாசிக்கையில் நமக்கு விநோதமாக எதுவும் தோன்றவில்லை.

இயேசுவும், அவருடைய அப்போஸ்தலர்களும் பணத்திற்காக கெஞ்சியிருப்பார்கள் என்றோ அல்லது பணம் வசூலிக்க முயன்றிருப்பார்கள் என்றோ நம்மால் எண்ணி கூடப் பார்க்க முடியாது. இப்படியாக, செய்யப்பட்டிருக்குமாயின், அது "சகல பொன்னும், சகல வெள்ளியும், பர்வதங்களில் திரிகிற ஆயிரமாயிரமான மிருகங்களும் என்னுடையவைகள்"

என்று பிதாவாகிய தேவன் பேசினதின் மதிப்பைக் குறைத்துப் போடுவதாகவும், உதவிக்காக அவர் கேட்டுவாங்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றார் என்பதாகவும் ஆகிவிடும். மாறாக, ஆண்டவருக்கு ஆதரவாக சிலர் தானாகவே முன்வந்து கொடுத்தார்கள் என்றே வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. ஊதாரணத்திற்கு, ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், இன்னம் சிலரும் இதைச் செய்தார்கள் என்று வாசிக்கின்றோம் (லூக்கா 8:3). இப்படியாக, முன்வந்து கொடுக்கப்பட்ட நன்கொடையின் நிமித்தம், அப்போஸ்தலரின் கூட்டத்தாருக்குப் பொதுவாக ஒரு பொருளாளர் நியமிக்க அவசியமாயிற்று. அதுவும், அந்தப் பொருளாளர் மிகச்சிறந்த வாணிக திறன்மிக்கவராகவும் இருப்பது அவசியமாயிற்று.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக இயேசு யூதாசைத் தெரிந்துக்கொண்டபோது, அவர் கேடான மனிதனாக இருந்தார் என்று சொல்வதற்கோ, நம்புவதற்கோ எவ்வித காரணங்களும் நமக்கில்லை. ஆனால் மிகுந்த சாதகமான செல்வாக்குகளின் கீழ் இருந்தபோதிலும், அதாவது, இயேசு மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் தோழமை இருந்துகொண்டிருக்கும் போதும், இராஜ்யத்தின் செய்தி தொடர்ந்து அவர் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கும்போதும், அவர் கேடான குணங்களை வளர்த்துக்கொண்டிருந்தார் என்று நம்புவதற்கு அனைத்துக் காரணங்களும் நமக்குக் காணப்படுகின்றன. எனினும் அவருடைய பின்மாற்றத்திற்கு ஓர் ஆரம்பம் இருந்தது. மேலும், யூதாசுக்கு, சுயநலம், பணத்தின் மீது பிரியம், பேராசை ஆகியவைகளின் அடிப்படையிலேயே சோதனை வந்தது என வேதவாக்கியங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன.

## "சகல தீமைகளுக்கும் வேர்"

அந்தோ! எத்தனை நேர்மையான மனிதர்கள், பணத்தின் மீதான அன்பின் நிமித்தம், நீதியின் பாதையினின்று கெடுக்கப்பட்டுப் போய்விட்டனர்! பரிசேயர்களுக்கு எதிராக, இயேசு கூறின கடுமையான குற்றச்சாட்டுகளில் ஒன்று, அவர்கள் பணப்பிரியராக இருந்தார்கள் என்பதை நாம் நினைவுகூருகின்றோம். இன்றைய காலத்திலுள்ள அநேக கிறிஸ்தவர்களுக்கும், பிரச்சனை/இடர்பாடு பணத்தின் மீதான ஆசையின் அடிப்படையிலேயே உள்ளது என்று ஒருவேளை நிரூபித்துக்காட்டப்பட்டாலும், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்பது இன்றும் உண்மையாகவே உள்ளது (1 தீமோத்தேயு 6:10). மேலுமாக அப்போஸ்தலர் (இப்பண ஆசை எனும்) வஞ்சனையின் நிமித்தம், அநேகர் வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்றும் கூறுகின்றார்; எனினும் யூதாஸ் செய்ததுபோன்று எப்போதும் மிக அபாயகரமாக இருப்பதில்லை.

யூதாஸ் தனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுகளுக்குக் காட்டிக்கொடுக்கும் அளவு பணப்பிரியனாக இருந்தார். அதாவது, கூலியின் அடிப்படையில் பார்க்கையில் முப்பது வெள்ளிக்காசு என்பது இருநூறு முதல் முன்னூறு டாலர்களுக்குள்ளான மதிப்பை உடையதாகும். இன்னும் வேறுசிலர் தங்கள் மனசாட்சியை விற்றுப்போடும் அளவிற்கு, ஆஸ்திகள் பெறும் பொருட்டு/சம்பாதித்துக்கொள்ளும் பொருட்டுப் பணப்பிரியராக இருக்கின்றனர். தப்பறைகளை ஆதரிப்பதின் மூலம், தங்கள் தொழிலில் நன்கு செழிப்படையலாம் என்று நம்பி, பணத்திற்காகச் சிலர் சத்தியத்தையும் விற்றுப்போட்டவர்களாக இருக்கின்றனர். சிலர் பணத்திற்காக, சபையையே விற்றுப்போட்டவர்களாக இருக்கின்றனர். மேலும், மனுஷனுடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, தாங்கள் வாடகைக்காக/கூலிக்காக அமர்த்தப்பட்டிருக்கும் நபராக இருப்பதினால், தாங்கள் விசுவாசிக்காததைப் பிரசங்கிக்க விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். சிலர் தங்களுடைய தேசபக்தியை, பணத்தின் மீதான விருப்பத்தின் காரணமாக வியாபாரம் செய்து, தங்கள் தேசத்தையும் விற்றுப்போட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

பண ஆசையின் ஏமாற்றுத்தனமான சதிதாக்கத்திலிருந்து, ஒவ்வொருவரும் தங்களைக் காத்துக்கொள்வது மிகவும் அவசியமாய் உள்ளது. ஆனால், நாம் பணத்திற்கும், பண ஆசைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகத் தெரிந்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், பண ஆசையே, அழிவையும் உண்டாக்கி, ஆத்துமாவை

ஏமாற்றி, சிக்கவைக்க செய்கின்றதாகவும் காணப்படுகின்றது. பணம் என்பது கடின உழைப்பையும், கூலியையும், சேர்த்து வைத்தலையும் குறிக்கின்றது. மேலும், பணத்தைக்கொண்டு செய்யப்படக்கூடிய நன்மையினிமித்தம் அதற்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். ஆனால், பணத்தின் மீது ஆசைக்கொள்வதோ, அதற்கு ஊழியம் புரிவதோ, அதனை விக்கிரகமாக பாவித்து வாழ்க்கையில் வைத்துக்கொள்வதோ, தேவனிடத்திலிருந்து நம்முடைய இருதயங்களைத் தூர விலகச்செய்யும்படிக்குப் பணத்திற்கு அனுமதிக் கொடுப்பதையோ நாம் செய்யக்கூடாது. இந்தப் பண ஆசையே யூதாசின் பயங்கரமான வீழ்ச்சிக்கான, அடிப்படை காரணம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

## "ஒரு தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதல்"

பணப்பையைச் சுமந்திருந்த யூதாஸ், ஒரு கள்வன் என்று சீஷர்கள் ஆரம்பத்தில் அறிந்துக்கொள்ளாமல், போகப்போகத்தான் அறிந்துக்கொண்டார்கள் (யோவான் 12:6). சீஷர்களுக்கென்று கொடுக்கப்பட்ட பணங்களைத் தனக்கென்று யூதாஸ் பயன்படுத்திக் கொண்டிருந்து, சில நியாயமாய்த் தோன்றும் சாக்குப்போக்குகளைக் கூறியிருக்க வேண்டும். ஏனெனில், பாவம் எப்பொழுதும் ஏமாற்றுகின்றதாய்க் காணப்படுகின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி அவர் இப்படியாகக் கூறியிருந்திருக்க வேண்டும்..."நான் பணத்தைச் சேமித்து வைத்துள்ளேன். ஏனெனில், ஆண்டவருக்கும், நம் அனைவருக்கும் மிகுந்த பணத் தேவை ஏற்படும் ஒரு காலம் வரும் என எனக்கு தோன்றினதினாலேயாகும். அப்படியான ஒரு காலக்கட்டத்தில், வருங்காலத்தைக் கருதி நான் செய்ததை உணர்ந்துக்கொள்வீர்கள்" என்பதேயாகும். இப்படியாக, அவர் சிந்தித்துக் கொண்டிருந்தது, பணத்தின் மீதான அவருடைய ஆசையை அதிகரிக்கச் செய்துவிட்டது. மேலும், இந்த ஆசையானது, இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்காக திட்டம் போடத்தக்கதாக, அவருடைய உற்சாகமான வியாபார எண்ணங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மனதை, வழி நடத்தினது.

இயேசு குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டதை அறிந்த யூதாஸ், தனது தவறுக்காக மனவருத்தம் அடைந்தவராக, பிரதான ஆசாரியர்களிடம் பணத்தைத் திரும்பக்கொண்டு போய், தான் செய்த காரியத்தை திருத்தம் செய்ய விரும்பினவராக இருந்தார் என்று பதிவுகள் உள்ளன. அவர்களோ, அவரைக் கண்டு நகைத்து, அவர் ஒருவேளை குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்துள்ளார் என்றால், அது அவர் பாடு என்றும், அதைக் குறித்துத் தங்களுக்குக் கவலை இல்லை என்றும் கூறினார்கள். திரும்பிக் கொடுக்கப்பட்ட பணமானது, "இரத்த பணமாக" இருந்தபடியினால், அவர்களால் அதை மீண்டுமாக ஆலயத்தின் நிதி இலாகாவிடத்தில் போட்டுவிடக் கூடாதிருந்தது. ஆகவே அவர்கள் அந்தப் பணத்தைக்கொண்டு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குறைந்த விலையில் குயவனுடைய நிலத்தை வாங்கினார்கள். இப்படியாக, அவர்கள் மறந்துபோனதும், எரேமியாவினால் முன்னுரைக்கப்பட்டதுமான தீர்க்கத்தரிசனம் நிறைவேறினது. "இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கத்தரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத்தேயு 27:9, 10).

இயேசு குற்றவாளிக்குரிய தண்டனை தீர்ப்பிற்குள்ளானார் என்று யூதாஸ் கேள்விப்பட்டு, ஆச்சரியம் அடைந்தார் என்பது போன்று பதிவுகள் காட்டுகின்றது. இயேசு இக்கட்டான பரீட்சையில் கொண்டுவந்து நிறுத்தப்படும்போது, அவர் தம்மை மேசியா என்று உறுதிப்படுத்திக்கொண்டு, தமது சத்துருக்கள் மேல் ஜெயங்கொள்வார் என்று யூதாஸ் அனுமானித்திருக்க வேண்டும். யூதாஸ் தனக்கும் பங்குண்டு என்று நம்பிக்கைக்கொண்டிருந்த இராஜ்யத்தின் ஸ்தாபனத்தை, இப்படியாகத் துரிதப்படுத்தலாம் என்றே அநேகமாக எண்ணியிருக்க வேண்டும். இறுதியில், தன்னுடைய தவறுக்காகக் காரணம் தெரிவிக்கும் விதமாக, "பாருங்கள் நமக்கு முப்பது வெள்ளி காசும் சேர்ந்துவிட்டது மற்றும் வேறு எந்த வழியிலும் காரியங்களை வேகமாக உச்சக்கட்டத்திற்குக் கொண்டுவர முடியாமல் இருக்க, நான் இப்படிச் செய்து உச்சக்கட்டத்திற்குக் கொண்டுவந்ததற்காக எனக்கு நீங்கள் நன்றி சொல்லலாம்" என்றே யூதாஸ் கூறியிருந்திருப்பார். இவ்விதமாக யூதாஸ் ஒரு கதாநாயகனாகவும் திகழ்ந்திருக்க முடியும். அதேசமயத்தில் பொருளாதார ரீதியில், தனக்குள்ள ஞானத்தையும், இராஜ்யத்தில் மாபெரும் பொருளாளருக்குரிய ஸ்தானத்திற்கு/பதவிக்கு, தான் சரியான நபர்/பாத்திரவான் என்பதையும் நிரூபித்திருக்க

முடியும். இப்படியாக திட்டங்கள் அவன் மனதில் இருக்க, நளதத் தைலம் குறித்த விஷயத்தில் காணப்பட்ட மரியாளின் செயல்பாட்டை இயேசு அங்கீகரித்தப்படியால், இயேசுவின் மீது யூதாசுக்குள் கொஞ்சம் கோபம் மூண்டது. இந்தக் கோபத்தினுடைய தாக்கத்தினிமித்தமாகவே, காட்டிக்கொடுப்பதற்கான ஒப்பந்தத்தைச் செய்யும்படிக்கு யூதாஸ் முதலாவதாக, ஆசாரியர்களையும், வேதபாரகர்களையும் தேடிச்சென்றார்.

## "மறக்கப்பட்டுப்போன நிலை - உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையற்ற நிலை"

யூதாஸ், பழியினின்று விலகிக்கொள்வதற்காகக் காரணங்களை நாம் இங்கு வைக்கப்போவதில்லை. தேவன் மற்றும் அவருடைய நோக்கங்களுக்கு எதிரான துரோகத்திற்கு, எவ்விதத்திலேயும் காரணங்கள்/சாக்குப்போக்குகள் வைக்க முடியாது. அக்கிரமம் பண்ணுகிற ஒவ்வொருவனும் முதலாவதாக தனது மனதில், தன்னுடைய தவறான போக்கை அங்கீகரித்துக் கொள்கின்றான் என்ற உண்மையை மாத்திரம் நாம் சுட்டிக்காட்டுகின்றோம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், பாவத்திற்கான ஒவ்வொரு அடியும் எடுத்துவைக்கப்படுவதற்கு முன்பு மனதும், மனசாட்சியும் துணிகரம் கொள்கின்றது. ஆகவேதான் இயேசு, "மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்" (மத்தேயு 26:24).

தனது நண்பனை, தனது போதகரை, தான் தேவகுமாரன் என்று அங்கீகரித்துக்கொண்டவரை, இயேசு மூலம்தான் மேசியாவின் இராஜ்யம் வரும் என்று தான் நம்பிக்கொண்டிருந்தவரை காட்டிக்கொடுத்து, ஒப்புக்கொடுப்பதற்குரிய இத்தகையத்துணிகரமும், இத்தகையத்துரோகமும், மிகவும் கேடான/அகோரமான துரோகமாகும்/நயவஞ்சகமாகும்; மற்ற அனைத்து அப்போஸ்தலர்கள் போன்று, யூதாசும், இயேசுவின் அடிச்சுவட்டில் நடந்து வரவும், சத்தியத்திற்காகக் கொண்டிருக்கும் நேர்மையினிமித்தம் இயேசுவுக்கு வரும் பாடுகள், சோதனைகள் மற்றும் ஜனங்களால் தவறாய்ப் புரிந்துக்கொள்ளப்படுதல் ஆகியவைகளில் பங்கடையவும் அழைக்கப்பட்டிருந்தார். மேலும், யூதாஸ் உண்மையாய் இருக்கும் பட்சத்தில், உலகை ஆசீர்வதிப்பதற்கான பரலோக இராஜ்யத்தில், ஆண்டவரோடு பங்கடையவும் அழைக்கப்பட்டிருந்தார். மற்றவர்களோடு, யூதாசும் இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்துள்ளார்; பிசாசுகளை துரத்தியுள்ளார், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்தினார். மேலும், இவை யாவற்றையும் அவர் இயேசுவின் நாமத்தின் மூலம் செயல்படும் தேவனுடைய வல்லமையினாலேயே செய்தார். யூதாஸ் இரட்சகரின் கூடவே இருந்துள்ளார். மேலும், இயேசுவின் வாழ்க்கையினுடைய பரிசுத்தத்தையும், இயேசு எப்படித் தேவனுக்கு உண்மையாக இருந்தார் என்பதையும், யூதாஸ் அறிந்திருந்தார். ஆகவே இந்த அனைத்து விஷயங்களும் யூதாசினுடைய தவறையும், தவறுக்கான அவருடைய பொறுப்பையும் காட்டுகின்றது.

யூதாஸ் தற்கொலை செய்துகொண்ட விஷயமும், இயேசுவின் வார்த்தைகளுடைய நிறைவேறுதலைக் காட்டுகின்றது; அதாவது தான் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று யூதாஸ் எண்ணினார். தற்கொலை செய்துகொள்ளும் ஒவ்வொருவரும், இதே வார்த்தைகளைத்தான் கூறியிருக்கின்றார்கள். எனினும், தற்கொலை செய்துள்ள மற்றவர்களுக்கு வாய்ப்பு உள்ளது. ஏனெனில், அவர்கள் அறியாமையினாலேயே இப்படிச் செய்துகொண்டார்கள். மேலும், கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்தும் உள்ளார். ஆகவே இப்போது (அறியாமையினாலே) தற்கொலை பண்ணினவர்கள், மற்றவர்களோடுகூட நித்திய ஜீவன் பெற்றுக்கொள்வதற்கான ஆசீர்வாதத்தையும், வாய்ப்பையும் நிச்சயமாகப் பெற்றுக்கொள்வார்கள்.

ஆனால் யூதாசின் விஷயத்திலோ, அவர் ஏற்கெனவே இந்த வாய்ப்புகள், சிலாக்கியங்கள் மற்றும் அறிவு பெற்றுக்கொண்டதினாலும், ஒளி மற்றும் அறிவிற்கு எதிராக பாவம் செய்துள்ளபடியாலும், இந்த அனைத்து ஆசீர்வாதங்களும், வாய்ப்புகளும் அவருக்குத் தள்ளுபடியாகிவிட்டது. யூதாஸ் தனக்கான இடத்திற்குப் போய்விட்டார் என்று வாசிக்கையில், அது யூதாஸ் (அ) வேறு எவரும் பாவத்திற்கான தண்டனையாக நித்திய காலமாய்ச் சித்திரவதை பண்ணப்படுவார்கள் என்று பொருள்படுவதில்லை. மாறாக

அவருக்கான இடம் என்பது, மறக்கப்பட்டுப்போன நிலையாகும்; நம்பிக்கை ஏதுமற்ற மறக்கப்பட்டுப்போன நிலையாகும்; அதாவது உயிர்த்தெழுதலின் வாய்ப்பற்ற நிலையாகும். அவர் சாதாரணமான புத்தியில்லாத மிருக ஜீவன் போன்று செத்துப்போனார். இன்னுமாக, இத்தகைய சிலாக்கியங்களை அனுபவித்த ஒரு நபர், எதிர்க்காலத்தில் ஏதாகிலும் வாய்ப்புப் பெற்றுக்கொள்வாரா என்ற விவாதமும் பேசப்பட வேண்டியதில்லை (அப்போஸ்தலர் 1:25).

## "இரண்டு பதிவுகளுக்கும் இடையிலான ஒற்றுமை"

யூதாசின் முடிவு குறித்து வேதவாக்கியம், அவர் போய் நாண்டுகொண்டு செத்தார் என்று கூறுகின்றது (மத்தேயு 27:5). வேறு ஒரு வாக்கியம் இப்படியாக இருக்கின்றது, "அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று" (அப்போஸ்தலர் 1:18). இந்த இரண்டு பதிவுகளையும் இசைவுபடுத்துவது எளிது. இரண்டு பதிவுகளுமே உண்மை. தூக்குப்போடுவதற்கென்று, யூதாஸ் செங்குத்தான பாறையின் மேலுள்ள மரத்தின் கிளையைத் தெரிந்துக்கொண்டார். ஒருவேளை பாரபளுவினிமித்தம் கயிறு அறுந்துவிட்டதால், யூதாஸ் தலைக்கீழாக விழுந்து, வயிறுவெடித்து, குடல் சரிந்துபோய்ச் செத்திருப்பார் என்பதை நம்மால் உணர்ந்துக்கொள்ள முடிகின்றது.

எனினும், அவருடைய மரணம் குறித்த விஷயம் அவ்வளவு முக்கியத்துவம் காட்டப்பட வேண்டியதில்லை. அவருடைய ஆத்துமா மரித்துவிட்டது என்றும், இதன் விளைவாக அவருக்குத் தேவனிடத்திலும், கிறிஸ்துவிடத்திலும் இருந்த தொடர்பை அவர் இழந்துவிட்டார் என்றும், எதிர்க்கால வாழ்க்கைக் குறித்ததான சகல நம்பிக்கையும் இழந்துவிட்டார் என்றுமான விஷயங்களைக் கவனிப்பதே முக்கியமானதாகும். எனினும், கடைசி நேரமளவும் ஆண்டவர் அவரிடத்தில் பெருந்தன்மையுடன், அவருடைய ஒவ்வொரு அடிகள் முதற்கொண்டு, கடைசி கிரியைவரை யூதாஸ் நினைத்துப் பார்ப்பதற்கும், வருந்துவதற்கும் ஏதுவான ஒவ்வொரு வாய்ப்பையும் கொடுத்தவராகவே காணப்பட்டார்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர் இயேசுவைக் காட்டிக்கொடுப்பார் என்று தேவன் ஆரம்பம்/ஆதி முதல் அறிந்தவராக இருந்தும், இரத்த பணத்தின் மூலம் நிலம் வாங்கப்படும் எனும் விஷயம் ஏற்கெனவே தீர்க்கத்தரிசனமாக முன்னுரைக்கப்பட்டிருந்தும், இவைகள் யூதாஸ் வீழ்ச்சியடைவதற்கு அவன்தான் காரணம் என்ற குற்றத்திற்கான பொறுப்பிலிருந்து, அவனை விடுவிப்பதில்லை. தேவனுடைய முன்னறிவு யூதாசைப் பாதிப்பிற்குள்ளாக்காமல், அவனுடைய சொந்த தவறான கிரியையே அவனைப் பாதிப்பிற்குள்ளாக்கிற்று. இப்படியே, அனைவருக்கும் காணப்படுகின்றது. ஆரம்பம் முதல் யார் யார் ஓட்டத்தில் நின்றுவிடுவார்கள் என்று தேவன் அறிந்திருப்பது, நம்மைப் பாதிப்பதில்லை. காரணம், நாம் மீறும்போதும், பேராசைகொள்ளும் போதும், பாவத்திற்கு நம்மை நாமே ஒப்புக்கொடுக்கும் போதும், நாம் என்ன செய்வோம் என்று மாத்திரமே தேவன் அறிந்திருக்கிறாரே ஒழிய, இப்படித் தேவன் அறிந்திருக்கிற காரியத்தினால் நமக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை.

இயேசு, தம்மை யார் காட்டிக்கொடுப்பார் என்று முன்னதாகவே அறிந்திருந்தார் என்ற சாட்சியானது, இவ்விஷயத்தை அவர் யூதாசைத் தெரிந்தெடுத்தப்போதே அறிந்திருந்தார் என்று அர்த்தமாகாது. தம்முடைய சீஷர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று வேதவாக்கியங்களில் குறிப்பிட்டிருந்ததை அவர் அறிந்திருந்தார். மேலும், யூதாசிடம் ஆரம்பம் முதலே பாவம் மற்றும் பேராசையின் திசையில் விலகிப்போகும் மனப்பான்மை தென்பட்டதினால், யூதாசுதான் நம்பிக்கை துரோகத்திற்கு ஏதுவான கிரியை செய்யக்கூடிய நபராக இருப்பார் என்று இயேசு அறிந்துக்கொண்டார் என்றபோதிலும், வார்த்தை மூலமாகக்கூட இயேசு யூதாசைத் தவறு செய்தலுக்கு நேராக நடத்தாமல், மாறாக, அவரை எச்சரிக்கவே செய்தார்.

**R2470**

# "பிலாத்துவின் முன் நல்ல அறிக்கை"

## யோவான் 18:28-40; 1 தீமோத்தேயு 6:13.

"நான் இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்."—யோவான் 19:4.

யூதேயாவுக்கு உரோம ஆளுநராக இருந்த பிலாத்துவின் கரங்களில், ஜீவன் மற்றும் மரணத்தின் அதிகாரம் இருந்தது. யூத ஆலோசனை சங்கத்தினர், யூதர்களுடைய பிரமாணங்கள் மற்றும் வழக்கத்தின்படி மத வழியில் நாட்டை ஆளுகை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், மரணத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் இருந்தது. தேவதூஷணம் பேசுகிறவர்களை (இந்தக் குற்றத்தையே இயேசு மீது செலுத்தினார்கள்) ஸ்தேவானின் விஷயத்தில் கல்லெறிந்து கொன்றது போல, இயேசுவைக் கொல்வதற்கு ஆலோசனை சங்கத்தாருக்கு அதிகாரம் இருந்தாலும், ஜனங்கள் இது அநீதியான தீர்ப்பு எனக் கோபங்கொள்வார்கள் என்று எண்ணி கல்லெறிதலைச் செயல்படுத்தவில்லை. இயேசு தமது போதகத்தினால் பெரிதளவில் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்று இவர்கள் அறிந்திருந்தபடியால், அவருடைய மரணத்தண்டனையை முடிந்த மட்டும் வெளிப்படையாக எல்லோரும் அறியத்தக்கதாகவும், அவமானப்படுத்தும் விதத்திலும் செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினார்கள். இப்படிச் செய்வதினால் இயேசுவும், அவருடைய சீஷர்களும் பெருத்த ஏமாற்றம் அடைந்து அவமானம் அடைவார்கள்; மேலும் மதம் மற்றும் அரசியலின் நியாயாதிபதிகளால் குற்றவாளி என்று வெளிப்படையாகத் தீர்க்கப்பட்டு, மரணத் தண்டனை அளிக்கப்பட்டவரின் சீஷன் நான் என்று சொல்ல யாரும் விரும்பமாட்டார்கள். இதுவே அவர்களின் நோக்கமாக இருந்தது. இப்படியாக வளர்ந்து வரும் இந்தப் புதிய மதப் போதகத்தை தடைபண்ண எண்ணினார்கள். தடை பண்ணப்படவில்லை எனில், ஜனங்கள் மீதான தங்களுடைய செல்வாக்குப் போய்விடும் என்று எண்ணினார்கள். இவ்விதமாக இந்தப் பொல்லாத செய்கைக்காரர்கள் தங்களையும் அறியாமல், தேவன் முன்னேற்பாடு பண்ணின பல ஒழுங்குகளைச் செய்து முடித்தார்கள் என்றாலும், தங்களுடைய தீய நோக்கத்திற்காகவே இவைகளை முழுமையாய்ச் செய்து முடித்தார்கள்.

நமது கர்த்தர் இயேசு விடியற்காலை ஐந்து முதல் ஆறு மணியளவில், யூதர்களின் ஆலோசனை சங்கத்தாரால் குற்றஞ்சாட்டப்பட்டு, பின்னர் எவ்வளவு வேகமாக முடியுமோ, அந்த அளவிற்கு வேகமாக உரோம போர்ச்சேவகர்கள் இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கத்தக்கதாக, அவரை விரைவாகப் பிலாத்துவின் விசாரணை அறைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். இப்படிச் செய்வதினால் ஜனங்களும் இயேசுவின் விஷயம் தாங்கள் தலையிட முடியாத வண்ணம் கைமீறிப் போய்விட்டது என்று எண்ணுவார்கள் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. பிலாத்து மரணத் தண்டனையை நிறைவேற்றுவதில் தாமதிக்க மாட்டார் என்று யூத அதிகாரிகள் நம்பினார்கள். கொடுமைக்குப் பிலாத்துப் பெயர்ப்பெற்றவராய் இருந்தார். பிலாத்துவைக் குறித்துப் **பிலோ** என்பவர் இப்படியாக எழுதுகின்றார், அதாவது "சீரழிக்கும் அவருடைய இயல்பையும், அவருடைய கர்வத்தையும், ஜனங்களை அவமானப்படுத்தும் அவருடைய குணத்தையும், அவருடைய கொடூரங்களையும், விசாரிக்காமல் மற்றும் குற்றந்தீர்க்காமல் ஜனங்களைக் கொலை செய்யும் அவருடைய இயல்பையும், அவருடைய கவலைக்கிடமான தளராத மிருகத்தனத்தையும் வேறு எவரிடமும் பார்க்க முடியாது. அவர் மிகவும் அஞ்சத் தகுந்தவரும், மிகவும் இரக்கமற்றவரும், மிகவும் பிடிவாதமானவருமான மனுஷனாவார்." யூதர்களின் அதிகாரிகள் சில சமயம், பிலாத்துவிடம் இரக்கம் வேண்டினாலும், பயனில்லாமல் போன சம்பவங்கள் உண்டு. ஆகையால் பிலாத்துவிடம் எந்தக் குற்றவாளியைக் கொண்டுவந்தாலும், மரணத்தீர்ப்புக் கொடுக்க அவர் இணங்கிவிடுவார் என்று பிலாத்துவின் இயல்புகளைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டனர்.

குற்றமற்றவரை அழிக்கும்படிக்குத் தாங்கள் கொலை ஆலோசனை செய்கையில், தாங்கள் தீட்டுப்பட்டுப் பஸ்காவைப் புசிக்க தடைவராதபடி பிலாத்துவின் விசாரணை அறைக்குள் பரிசேயர்கள் பிரவேசிக்காத சம்பவத்தை வாசிக்கையில், இவர்களைக் குறித்து நமது கர்த்தர், "நீங்கள் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்று கூறினது

நினைவுக்கு வருகின்றது. எவ்வளவு முரண்பாடுள்ளவர்களாகவும், மாயக்காரர்களாகவும் இருந்திருக்கின்றார்கள்! புறஜாதியான பிலாத்துவின் வட்டாரங்களில் சில (பாவத்திற்குரிய அடையாளம்) புளிப்புகள் இருக்கும் என்று பயந்தார்கள், ஆனால் தங்களுக்குள் பிரவேசித்துள்ள உண்மையான பாவத்தின் புளிப்பையும், தங்கள் இருதயங்கள் நன்கு கோபம், கசப்பு, பகை, பொறாமை மற்றும் கலகத்தினால் முழுவதும் நிரம்பியுள்ளதையும் உணராமல் இருந்தார்கள்.

கர்த்தருடைய ஜனங்களுக்கு இதில் எத்துணை பாடங்கள் உள்ளது, ஏனெனில் இந்த இருதய சீர்க்கேடுள்ள சதிகாரர்கள் அவர்களின் நாட்களில் உள்ள வெளிப்புறமான பரிசுத்த ஜனங்கள் ஆவர். இக்காலக்கட்டத்தில் வாழும் நாம், கர்த்தரைச் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை என்றாலும், அவருடைய "சகோதர சகோதரிகளை" அவமானப்படுத்தி, சிலுவையில் அறையும் ஆற்றல் நம்மிடம் உள்ளது; அதாவது, அவருடைய சரீரத்தின் அங்கங்களைச் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்தும் வாய்ப்பு நம்மிடம் உள்ளது. நமது கர்த்தரைச் சிலுவையில் அறைந்திட்ட பரிசேயர் மற்றும் பிரதான ஆசாரியர்களைப் போன்ற வஞ்சிக்கப்பட்ட நிலையில், சிலர் இன்றும் செயல்படுகின்றனர். உண்மைதான் பரிசேயர்கள் தாங்கள் செய்வதை அறியாமல் செய்தார்கள், "நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" என்று பேதுரு குறிப்பிடுகின்றார் (அப்போஸ்தலர் 3:17). இதைப்போலவே, இன்றும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களை அவமானப்படுத்துகின்றவர்கள், தாங்கள் செய்வதை அறியாமலேயே செய்கின்றனர். இவர்கள் கர்த்தரினால், குற்றவாளி என்று தீர்க்கப்படுவதற்கு ஏதுவாய் இருக்கின்றனர், அதாவது, "இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்...நலமாயிருக்கும்" (லூக்கா 17:2). ஆகவே ஜீவஊற்று புறப்படும் இருதயத்தைக் கவனத்துடன் நாம் ஒவ்வொருவரும் காத்துக் கொள்வோமாக.

பரிசேயரின் இருதயங்கள் சரியான நிலையில் இருந்திருந்தால், நீதி மற்றும் சத்தியத்தின் மீதான அன்பில் நிறைந்திருந்தால், உண்மையுள்ளவைகளையும், ஒழுக்கமுள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும், கற்புள்ளவைகளையும், அன்புள்ளவைகளையும், நற்கீர்த்தியுள்ளவைகளையும், புண்ணியம் உள்ளவைகளையும் உணர்ந்து, ஏற்றுக் கொண்டிருந்தால், தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரைப் புறக்கணித்துச் சிலுவையில் அறையும் தவறைச் செய்திருக்கமாட்டார்கள். இதைப்போல சகோதர சகோதரிகளுக்கான அன்பின் ஆவி யாரிடம் இருக்கின்றதோ, அவர்கள் துன்பம் கொடுக்கும் ஸ்தானத்தை எடுப்பதில்லை; இத்தகையவர்கள் மாத்திரமே சரியான விதத்தில், நிஜமான பஸ்காவைப் புசிக்க முடியும்.

பஸ்கா காலங்களில் யூதர்கள் கைக்கொள்ளும் விநோதமான வழக்கத்தை அறிந்திருந்த உரோம ஆளுநர், விசாரணை அறைக்கு வெளியே தனது ஆசனத்தைக் கொண்டுவந்து அமர்ந்தார். இயேசு விசாரணைக்கு முன்பு நிறுத்தப்பட்டார். பின்புறமாக நின்று அவர் மேலுள்ள குற்றச்சாட்டை யூதர்கள் பிலாத்துவுக்கு அறிவித்தார்கள். சிலுவையில் அறையப்படுவதற்குப் பாத்திரமாக, குற்றவாளியாக இயேசுவை முன் நிறுத்தினாலே போதும், பிலாத்துத் தீர்ப்புக் கொடுத்துவிடுவார் என்று எண்ணினார்கள். குற்றச்சாட்டுகள் சொல்வது கூட அவசியப்படாது என்றே எண்ணினார்கள். ஆதலால்தான், "இவன் குற்றவாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கமாட்டோம்" என்று பதிலளித்தார்கள் (யோவான் 18:30). பிலாத்து, பரிசேயர்களை மதிப்பதில்லை; ஆகையால், "இவன் மேல் என்ன குற்றம் சாட்டுகின்றீர்கள்" என்று பரிசேயர்களிடம் அவர் கேட்ட கேள்வியானது இயேசு, பரிசேயர்களுக்கு எதிராக குற்றம் சாட்ட, இயேசுவுக்குப் வாய்ப்புக் கொடுக்கும்படியாகத்தான் கேட்டார் என்று சிலர் கருதுகின்றனர். பல அனுபவங்கள் பிலாத்துவுக்கு இருந்தபடியால், ஒருவருடைய குணங்களைப் பார்வையிலேயே, தோற்றத்திலேயே கண்டுபிடித்து விடுவார். அவரால் நமது கர்த்தரின் தோற்றத்தில் எவ்விதமான குற்றவாளிக்குரிய அம்சம் இல்லை என்றும், அவருக்கு எதிராக குற்றம் சாட்டுகிறவர்களிடம்தான் குற்றவாளிக்குரிய அம்சம் அதிகம் இருக்கின்றது என்றும் காணமுடிந்தது.

ஆசாரியர்களும், பரிசேயர்களும் எதிர்ப்பார்க்காத வண்ணம் பிலாத்து, இயேசுவை நீங்களே நியாயம் விசாரியுங்கள் என்று திரும்ப ஒப்புக் கொடுத்துவிட்டார். "இது ஏதோ மத

ரீதியான பிரச்சனை, இதில் நான் செய்ய ஒன்றுமில்லை; நீங்கள் இவரைக் கூட்டிக்கொண்டுபோய் உங்களுடைய பிரமாணங்கள் மற்றும் வழக்கத்தின்படி அவரைச் சிறையில் அடைக்கவோ அல்லது அடிக்கவோ அல்லது உங்களுடைய பிரமாணத்தின்படி சரியான தண்டனை வேறு ஏதாகிலும் கொடுங்கள்" என்றவிதத்தில் பிலாத்துச் சொல்லிவிட்டார். ஆனால் நமது கர்த்தரை மரணத்திற்குள்ளாக்கும் வாஞ்சையினால் தங்களுடைய உண்மையான இருதய நிலையை வெளிப்படுத்தும் விதமாக, "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய...அதிகாரமில்லை" என்று கூறினார்கள் (யோவான் 18:31).

முரட்டுத்தனமானவராகவும், கொடூரமானவராகவும், இரக்கமற்றவராகவும் பிலாத்து இருந்தாலும், சூழ்நிலை என்ன என்று அதாவது, குற்றவாளிகள் குற்றமற்றவரைக் கொல்லப் பார்க்கின்றார்கள் என்று புரிந்துக் கொண்டார். தனிமையில் யோசிக்கவும், இயேசு தம்மைப் பாதுகாப்பதற்காக என்ன சொல்ல போகிறார் என்பதைக் கேட்பதற்கும் பிலாத்து யூதர்களிடமிருந்து, இயேசுவைத் தனித்து விசாரணை அறைக்குள் கொண்டு வந்தார். பிலாத்துவுக்குத் தனது ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில், சமாதானத்தைத் தக்க வைக்க வேண்டியது முதல் கடமையாக இருப்பினும், ஜீவன் மற்றும் மரணம் கொடுக்கும் அதிகாரம் அவர் கரத்தில் இருப்பினும், அவர் யூதர்களின் ஆலோசனை சங்கம் வைக்கும் மனுவைப் புறக்கணிக்கும் அளவுக்கு, நமது கர்த்தரின் தோற்றத்தில் ஏதோ ஒரு தாக்கம் பிலாத்துவிற்கு ஏற்பட்டிருக்க வேண்டும். தனது ஆளுகையின் வட்டாரத்தில் சமாதானம் நிலவ வேண்டுமெனில், அவ்விடத்தின் பிரதான மனுஷர்களோடு இணங்கி செயல்பட வேண்டும். அவ்விடத்தின் பிரதான மனுஷர்களோ, சமாதானத்தைக் குலைக்கும்படியாக ஒருவரின் மரணத்தை விரும்புகின்றனர். பிலாத்து எவ்விதத்திலும் கவனமாய்ச் செயல்பட வேண்டிய முக்கியமான ஸ்தானத்தில் காணப்பட்டார். அவர் உரோம அரசாங்கத்தைப் பிரியப்படுத்த வேண்டும், உள்ளூர் சார்ந்த அதிகாரிகளிடம் ஏற்படும் பிரச்சனைகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் இப்பொழுது இந்த உள்ளூர் அதிகாரிகள் தங்களுடைய தீமையான திட்டம் தடைப்பட்டால், பெரிய அளவில் பிரச்சனையை உருவாக்க ஆயத்தமாயிருந்தார்கள். இதே ஜனங்கள் ஆறு வருடங்களுக்குப் பின்பு பிலாத்துவை நீக்கும்படிக்கு, உரோம சக்கரவர்த்திக்கு அநேக குற்றச்சாட்டுகள் அனுப்பினார்கள்.

பிலாத்து இயேசுவுடன் தனித்து இருக்கும்போது, நீ யூதருடைய இராஜாவா? என்று கேள்வி கேட்டார். யூதர்கள் உண்மையில் இம்மாதிரியான குற்றச்சாட்டை இயேசுவுக்கு எதிராக ஏற்படுத்தவில்லை. அவர்கள் கலிலேயனாகிய இயேசுவை, யூதருடைய இராஜா என்று சொல்வதற்கு விருப்பம் கொள்ளவில்லை. மாறாக இயேசுவைத் தீமை செய்கிறவர் என்றும், கலகவாதி என்றும், தேசத்தின் சமாதானத்திற்கு அவர் மரணம் அவசியம் என்றும்தான் குற்றம் சாட்டினார்கள். இயேசு சில நாட்களுக்கு முன்பு கழுதையின் மீது ஏற்றப்பட்டு வந்ததையும், ஜனங்கள் அவரைத் தாவீதின் குமாரன் என்று வாழ்த்தியதையும் குறித்தும் பிலாத்துக் கேள்விபட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. நீராக என்னைக் குறித்து இப்படிச் சொல்லுகின்றீரா அல்லது மற்றவர்கள் கூறி இதைக் கேட்கின்றீரா என்று இயேசு பிலாத்துவிடம் கேட்டார். "இந்த விஷயத்தைக் குறித்த சத்தியம் என்னவென்று அறிந்துக் கொள்ளும் விருப்பத்தில் கேட்கின்றீரோ அல்லது கேள்விப்பட்டதை வெறுமனே விசாரிக்கின்றீரோ?" என்ற விதத்தில் இயேசுவின் கேள்வி இருந்தது. அதற்கு நான் யூதனோ? என்று பிலாத்து, பதில் கேள்வி கேட்டார். அதாவது, "உங்களுடைய யூத நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் குறித்து எனக்கு என்ன தெரியும்? நான் ஓர் உரோம ஆளுநர். நீர் இராஜாவானல் உம்முடைய சொந்த தேசத்தாரும், பிரதிநிதிகளுமே உம்மை என்னிடத்தில் ஏன் ஒப்புக் கொடுத்துள்ளனர். நீர் என்ன செய்தீர்? நீர் இராஜாவானால், என்ன காரியம் உம்முடைய பிரஜைகளை உமக்கு எதிராக திருப்பிற்று? நீர் சாந்தமாகவும், பணிவாகவும், தாழ்மையாகவும் உம்மைத் தற்காத்துக் கொள்ளாமலும் இருக்கின்றீர். உம்மால் உரோம இராஜ்யத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட போவதில்லை. உம்முடைய ஜனங்கள் உமக்கு எதிராக கூக்குரலிடுகின்றார்கள். யூதருடைய இராஜாவே, இந்த விநோதமான சூழ்நிலையை எனக்கு விவரியும்" என்ற விதத்தில் கேள்விக் கேட்டார்.

இயேசு தமது இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்றும், இல்லையேல் தம்முடைய ஊழியர்கள் தமக்காக போராடியிருப்பார்கள் என்றும், தற்போது நடக்கும் விஷயங்கள் சம்பவித்திருக்காது என்றும், தாம் சத்துருக்கள் கையில் விடப்பட்டிருக்க மாட்டார் என்றும், தம்முடைய இராஜ்யம் இன்னும் வரவில்லை என்றும், இயேசு விளக்கினார். இப்படிப்பட்ட மாபெரும் இராஜா இவ்வளவு எளிமையான சூழ்நிலையில் காணப்படுகின்றார் என்ற

அனுதாபத்தினாலும், அதிர்ச்சியினாலும், நீர் உம்மை இராஜா என்று கூறுகின்றீரோ என்று பிலாத்துக் கேட்டார். அதற்கு இயேசு நீர் கூறினபடியே நான் இராஜாதான் என்றார். "நீர் கூறுவது சரியே, நான் இராஜாதான்" என்ற விதத்தில் இயேசு பதிலளித்தார். "சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; "சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று இயேசு கூறினார்.

இப்படியாகப் பிலாத்துவுக்கு முன்பு இயேசு நல்ல அறிக்கையிட்டார் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 தீமோத்தேயு 6:13). இயேசு தமது இராஜஉரிமையையும், தெய்வீக அதிகாரத்தையும் அறிக்கையிட்டார். நமது கர்த்தர், தாம் ஒரு இராஜா என்று கூறினதைப் பிலாத்து நம்பவில்லை என்றும், இயேசுவை மதவெறி கொண்டவராகப் பார்த்தார் என்றும் நாம் எண்ணி விடக்கூடாது. இயேசுவைக் குறித்துக் கேள்விபட்டவர்களில் சிலர் மாத்திரமே, அவர் தம்மை இராஜா என்று கூறின வார்த்தையின் உண்மையை அறிந்திருந்தனர். பெயர்க்கிறிஸ்தவ மண்டலங்களிலும் கூட, சிலர் மாத்திரமே நமது கர்த்தருக்குரிய இராஜ ஸ்தானத்தை உணர்ந்துள்ளனர்! இயேசுவைப் பாடுள்ள மனுஷனாக அடையாளம் கண்டு கொண்ட அனைவரும் மற்றும் இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று உணர்ந்துக் கொண்ட சிலரும், இயேசு மனுஷனை மாத்திரம் அல்ல, முதல் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட சாம்ராஜ்யத்தையும் மீட்டுக் கொண்டார் என்பதைப் புரிந்துக் கொள்ளவில்லை. நமது கர்த்தரை ஆசாரியராகக் காண்கின்ற அநேகர், அவர் ஒரு இராஜா என்பதைக் காணத் தவறி விடுகின்றனர்; மேலும், ஆயிர வருட அரசாட்சியில், மெல்கிசெதேக்கின் முறைமையின் படியான ஆசாரியராகச் சிங்காசனத்தில், வீற்றிருப்பார் என்பதையும் காண தவறிவிடுகின்றனர். மணவாட்டியாகிய சபை இயேசுவோடு, அவருடைய ஆசாரிய மற்றும் இராஜ பணியிலும்/ஸ்தானத்திலும் பங்கடைவார்கள்.

அவருடைய ஆசாரிய பணி என்பது இரக்கம், மன்னிப்பு மற்றும் கிருபை பாராட்டுவதைக் குறிக்கின்றது. அவருடைய இராஜ பணியும், உலகத்தின் இரட்சிப்புக்கு இன்றியமையாதது. மனுஷர்கள் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டு, அவர்கள் நித்திய ஜீவனைப் பெற தகுதியடையும் பொருட்டு, இருப்புக் கோல் ஆட்சியினால் ஆளப்பட வேண்டும். தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக் கொண்டவருக்கே, இவ்வேலைகள் அனைத்தும் உரியதாகும். நமது கர்த்தருடைய உவமையில் பெரும்பாலானவைகள்,பல்வேறு நிலைகளிலுள்ள இராஜ்யத்தைப் பற்றியதாகும்; அதாவது இராஜ்யம் முதலாவது கருவாக இருந்து, படிப்படியாக வல்லமையிலும் மற்றும் அதிகாரத்திலும் உயர்ந்து, தீமையை அப்புறப்படுத்தி, பின்னர் என்றென்றும் நிலைத்திருக்கும் நீதியானது இந்த இராஜ்யத்தில் கொண்டுவரப்படுவது பற்றியதாகும்.

இந்த இராஜ்யம் சத்தியம், நீதி மற்றும் அன்பின் இராஜ்யமாக விளங்கி, அதன் பிரஜைகளின் நன்மைக்கு ஏதுவாக செயல்படும். சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுப்பதின் மூலம் அந்த இராஜ்யத்திற்கு அஸ்திபாரம் போடுவதே, முதலாம் வருகையின் போது நமது கர்த்தரின் ஊழியமாக இருந்தது; அதாவது தேவன் அன்பும், நீதியும் உள்ளவராக இருக்கின்றார் என்பதும், யாரெல்லாம் சத்தியத்தையும், நீதியையும் விரும்புகின்றார்களோ, அவர்களைத் தம்முடன் மீண்டும் சேர்த்துக் கொள்ள விருப்பம் உள்ளவராக இருக்கின்றார் என்பதுமே அந்தச் சத்தியமாக இருந்தது. நமது கர்த்தர் இந்தச் சத்தியத்திற்கு உண்மையாய் இருந்தபடியால், எதிராளியானவனினால் குருடாக்கப்பட்டவர்களிடமிருந்து அவருக்கு எதிர்ப்பு வந்தது. ஆகவே நான் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க வந்தேன் என்ற அறிக்கையானது, அவரது ஊழியத்தின் சுருக்கமாக இருந்தது. இந்தச் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க அவர் ஜீவனை இழக்க வேண்டியிருந்தது. மேலும் சத்தியத்திற்காக அவர் தமது ஜீவனைக் கொடுத்தது என்பது, மீட்பின் கிரயமாக இருந்தது. இதைப்போல் அனைத்துக் கர்த்தருடைய பின்னடியார்களும் சத்தியத்திற்கு அதாவது தேவனுடைய குணம் மற்றும் திட்டம் தொடர்பான சத்தியத்திற்கு, அதாவது உலகத்தின் மீட்பின் விஷயத்தில் முதலாம் வருகையின்போது நிறைவேறின அந்தத் திட்டத்தின் அம்சங்களைக் குறித்ததான சத்தியத்திற்கும், பாவம் மற்றும் அழிவிலிருந்து உலகம் மீட்கப்படுவதன் மூலம், இரண்டாம் வருகையின் போது நிறைவேறப் போகிற அந்தத் திட்டத்தின் அம்சங்களைக் குறித்ததான சத்தியத்திற்கும் சாட்சிக் கொடுக்க வேண்டும். இப்படியாகச் சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுக்க வேண்டுமெனில், இயேசுவின் அனைத்து உண்மையான பின்னடியார்களும் தங்களுடைய ஜீவனை, கிறிஸ்து இயேசுவின் மூலம் தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதான பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இராஜ்யத்தில் ஜீவாதிபதியோடு

உடன் சுதந்தரர்கள் ஆக விரும்பும் ஒவ்வொருவரும், சத்தியத்திற்குச் சாட்சிக் கொடுக்க வேண்டும். அதாவது இராஜ்யம் மற்றும் அதன் அஸ்திபாரம் மற்றும் முடிவில் அதன் மகிமையின் அம்சங்களைக் குறித்து, நாம் நல்ல அறிக்கை பண்ண வேண்டும்.

இப்படியான சுருக்கமான பேச்சு, பிலாத்துவுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. மத ரீதியிலான விவாதத்திற்குள் பிரவேசிக்க பிலாத்துவுக்கு விருப்பமில்லை. ஏனெனில், பேச்சு தொடர்ந்தால், தன்னுடைய கடந்த கால வாழ்க்கையின் குற்றங்கள் நினைவிற்கு வந்துவிடும் என்பதாலே, பேச்சு வார்த்தைகளைச் சடுதியாக நிறுத்தி, "சத்தியமாவது என்ன?" என்று கேட்டார்; அதாவது, "யார் உண்மையாய் இருக்கின்றார்கள்? எங்கு உண்மையான நீதி, உண்மையான சத்தியம், உண்மையான நேர்மை காணப்படுகின்றது?" என்ற விதத்தில் கேள்வி கேட்டார். பதிலை எதிர்ப்பார்க்காமலேயே பிலாத்து, இயேசுவை விசாரணை அறையிலேயே விட்டுவிட்டு, ஆலோசனை சங்கத்தாரையும், அவர்களுடைய திரளான ஊழியர்களையும் பார்க்க புறப்பட்டு வெளியேறினார்.

தான் அவரிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை என்ற தனது முடிவைப் பிலாத்து அறிக்கையிட்டார். தங்களுடைய இரை (இயேசு) தங்களைவிட்டுப் போய்விடுமோ என்று பயந்த யூதர்கள், யோசித்துக் குற்றச்சாட்டுகளை உருவாக்கினார்கள். இயேசுவின் மேல் தாங்கள் தேவதூஷணம் என்று சாட்டின குற்றத்தை இப்பொழுது கூறவில்லை. ஏனெனில் இக்குற்றச்சாட்டு, உரோம ஆளுநரின் கண்களுக்கு முன்பாக ஒரு குற்றமாக இருப்பதில்லை. மாறாக மூன்று குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்கள். அதாவது, 1) அப்போது இருக்கும் ஒழுங்குகளுக்கு எதிராக ஜனங்களைக் கலகம் செய்யத் தூண்டினார், 2) அந்நிய அதிகாரிகளுக்கு ஜனங்கள் வரிக் கொடுப்பது சரியல்ல என்று போதித்தார் மற்றும் 3) தன்னை இராஜாவாக அறிவித்தார் என்பவைகளே ஆகும் (லூக்கா 23:2).

பிலாத்து, இயேசு கலிலேயாவைச் சார்ந்தவர் என்று அறிந்த மாத்திரத்தில், இவ்விஷயத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளும் பொருட்டு, கலிலேயா பகுதிக்குப் பொறுப்பேற்றுள்ள ஏரோதிடம் இவ்விஷயத்தை விசாரிக்கும்படி கூறினார். ஏரோது அப்போது எருசலேமுக்கு வந்திருந்தார். இந்த ஏரோதுதான், யோவான் ஸ்நானகனைக் கொன்று போட்டார். (லூக்கா 23:8-ஆம் வசனத்தின்படி) இயேசுவைச் சந்திப்பதில் ஏரோது மிகவும் மகிழ்ச்சியடைந்தார் என்று வாசிக்கின்றோம். ஏரோது, இயேசுவைக் குறித்து அநேக விஷயங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியால், இயேசு தனக்கும் ஏதாகிலும் அற்புதம் செய்து காண்பிப்பார் என்று எண்ணினார். நமது கர்த்தரிடம் ஏரோது அநேக கேள்விகளைக் கேட்டார். ஆனால் எதற்கும் இயேசு பதில் பேசவில்லை. பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும் இயேசுவின் மீது அநேக குற்றச்சாட்டுகளைக் குவித்தார்கள். அதற்கு இயேசு எதையும் மறுக்காமல், பதில் கூறாமல் இருந்தபடியால், இன்னும் நிரூபிக்க ஆதாரம் தேவையில்லையென்று தங்களுக்குச் சாதகமாகக் கூறினார்கள்.

நமது கர்த்தர் நடந்துக் கொண்ட விதத்தினாலும், தான் எதிர்ப்பார்த்த சந்தோஷம் கிடைக்காததினால் ஏரோது சினம் அடைந்தார், ஏமாற்றமும் அடைந்தார் என்பதிலும் ஐயமில்லை. பின்னர் ஏரோதும், அவர் சேவகர்களும், மீட்பர் தம்மை இராஜா என்று கூறின விஷயத்தைப் பரியாசம் பண்ணி, களிக்கூர்ந்தார்கள்.

பிலாத்துக் கொடுத்த மரியாதைக்காகவும், யோவான் ஸ்நானனைக் கொன்று போட்டதினிமித்தம் ஏற்பட்ட குற்றமனசாட்சியின் காரணத்திற்காகவும், ஏரோது நமது கர்த்தரைப் பிலாத்துவிடமே அனுப்பிவிட்டார். நமது கர்த்தர், பிலாத்துவின் நியாயவிசாரணை அறைக்குக் கொண்டு வரப்பட்ட தருணமானது, யூதர்களை இறுதியாக சாந்தப்படுத்தும் தருணமாகவும், நாட்டின் சமாதானத்தைத் தக்க வைக்கும் தருணமாகவும், மேலும் தன்னால் குற்றமற்றவர் என்று கண்டுபிடிக்கப்பட்ட ஒருவரை விடுவிக்க வேண்டிய தருணமாகவும் பிலாத்துவுக்கு இருந்தது. மேலும் இயேசுவிடம் எவ்விதமான குற்றத்தை, தான் காணாதிருந்தும் அவரைக் குற்றச்சாட்டுகள் நிமித்தமாக, சவுக்கினால் அடிக்க பிலாத்துக் கட்டளையிட்டார். சவுக்கடியினால் உண்டாகும் காயத்தினாலும், இழிவினாலும் குற்றச்சாட்டுகிறவர்களிடம் காணப்பட்ட கசப்பின் ஆவி திருப்திப்பட்டு இயேசுவை விடுவிக்க சம்மதித்துவிடும் என்று பிலாத்து உறுதியாக எதிர்ப்பார்த்தார். இயேசு உரோம சேவகர்களால் உள் அறையில் சவுக்கினால் அடிக்கப்பட்டு, இராஜ வஸ்திரமும், முள்முடியும் பிலாத்துவின் கட்டளையின் பேரில் தரிபிக்கப்பட்டார். இப்படிச் செய்வது இரக்கமற்ற

போர்ச்சேவகர்களுக்குக் குதூகலமாகவும், இயேசுவுக்கு மிகவும் அவமானமாகவும் இருக்கும்; மேலும் இப்படிச் செய்வதினால் குற்றம் சுமத்தி, துன்பப்படுத்துபவர்களுக்குள் அனுதாபம் எழும்பவில்லை என்றாலும், திருப்தியாகிலும் அடைவார்கள் என்றே பிலாத்து எதிர்ப்பார்த்தார்.

இரவு நேரத்தில் அலைக்களிக்கப்பட்ட பெலவீனத்தினாலும், சவுக்கடியினாலும் பெலவீனப்பட்டுப் பரிதாப தோற்றத்தில் காணப்பட்ட இயேசுவை, பிலாத்து வெளியே கொண்டு வந்தார். முள்முடியுடனும், இரத்தம் தோய்ந்த இரத்தாம்பர வஸ்திரத்துடன் இயேசு நின்ற காட்சி அனுதாபத்திற்குரியதாக இருப்பினும், பரிபூரண மனிதனுக்குரிய உயரிய அம்சங்கள் இன்னும் இயேசுவிடம் காணப்பட்டதினாலேயே பல நூற்றாண்டுகளாக எதிரொலிக்கும், **"இதோ இந்த மனுஷன்"** என்ற வார்த்தைகளைப் பிலாத்துக் கூறினார். (யோவான் 19:5). நமது கர்த்தரின் தோற்றத்தினால் பிலாத்துக் கவரப்பட்டார். இப்படியாக ஒரு பிரமாண்டமான மனிதனை அவர் ஒருபோதும் கண்டதில்லை. அவரை யாரும் இராஜாவாக்கிவிடும் தோற்றம் அவருக்கு இருந்தது. இந்த விதமான எண்ணம்/தாக்கம், குற்றம் சாட்டுகிறவர்களிடமும் ஏற்படும் என்று பிலாத்து எதிர்ப்பார்த்தார். ஆனால் பிலாத்து எதிர்ப்பார்த்தது தவறு; கலகம் இன்னும் பெருகினது; சிலுவையில் அவரை அறையும்! சிலுவையில் அவரை அறையும்! என்று சத்தங்கள் அதிகம் எழும்பின. இதற்கிடையில் பிலாத்துவின் மனைவி தனக்கு வந்த சொப்பனத்தினிமித்தம், அந்த நீதிமானை எதுவும் செய்யாதீர்கள் என்ற ஆலோசனையைச் சொல்லி அனுப்பினாள் (மத்தேயு 27:19).

சிலுவையில் அறைவது உங்கள் நியாயப்பிரமாணமாக இருந்தால், நீங்களே அவரைக் கொண்டு போய்ச் சிலுவையில் அறையுங்கள் என்று பிலாத்து உடனடியாக யூதர்களிடம் கூறினார். உரோம ஆளுநர் இதில் தலையிட விரும்பாமல், விலகும் விதமாக இப்படிச் சொன்னதால், பரிசேயர்கள் தடுமாறினார்கள். அவர்கள் உரோம ஆளுநர் மற்றும் போர்ச்சேவகரின் கரங்களினால்தான் இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். ஏனெனில் இயேசுவின் நண்பர்களும், அவரால் சொஸ்தமாக்கப்பட்டு மற்றும் போதிக்கப்பட்டுள்ள திரளான ஜனங்களும் இயேசுவுக்கு உதவத்துணிந்து தங்களை மேற்கொண்டு விடுவார்கள் எனக் கருதினார்கள். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினபடியால், அவர் நியாயப்பிரமாணத்தின்படி சாக வேண்டும் என்று பிலாத்துவிடம் கூறினார்கள். ஆனால் ஒருவர் தன்னைத் தேவனுடைய குமாரன் என்று கூறினால், அதற்கு நியாயப்பிரமாணம் மரணம் கொடுக்க வேண்டும் என்று கூறவில்லை. நமது கர்த்தர் தம்மைப் பிதா என்று கூறியிருந்தால், அது தேவ தூஷணமாய் இருந்திருக்கும்; அவர் மரணத்திற்குப் பாத்திரமாகவும் இருந்திருப்பார். ஆனால் இயேசு தம்மை, தேவனுடைய குமாரன் என்று கூறினதில் எந்தத் தேவதூஷணமும் இல்லை. ஆனால் தங்களுடைய பிரயாசம் நிறைவேற வேண்டும் என்பதினால் நியாயப்பிரமாணத்தைத் திரித்தும் கூறிவிட்டார்கள்.

இதைக் கேட்ட மாத்திரத்தில், பிலாத்து இன்னும் எச்சரிப்பானார். இப்படிப்பட்ட தோற்றத்தை உடைய இயேசு, தேவனுடன் தமக்கு உறவு உள்ளது என்று கூறும்போது, பிலாத்துவைப் பயமடைய செய்தது. நமது கர்த்தரை விடுவிக்கும்படி, பிலாத்து இன்னும் வகை தேடினார். கடைசியில், "இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டு," கூறிப் பிலாத்துவை மிரட்டினார்கள் (யோவான் 19:12). பிலாத்து ஒருவேளை தங்களுடைய திட்டங்களைத் தடைபண்ணி, இயேசுவைச் சிலுவையில் அறையும் தங்களுடைய கோரிக்கையை மறுதலித்தால், சீசருக்கும், அவருடைய சாம்ராஜ்யத்துக்கும் பிலாத்து எதிரி என்று இராயனுக்கு அறிவிப்போம் என்றார்கள். இதற்குப் பிலாத்துவினால் ஒன்றும் சொல்ல முடியாமல், திரளான ஜனங்களுக்கு முன்பாக, "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி கையைத் தண்ணீரினால் கழுவினார். மேலும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று யூதர்கள் கூக்குரலிட்டபோது, பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்.

பிலாத்துவை நாம் குற்றஞ்சாட்ட முடியாது. அவர் ஒரு சாம்ராஜ்யத்தின் ஊழியனாக இருந்து, தனது கீழ் உள்ள ஜனங்களிடம் சமாதானத்தைக் காத்துக் கொள்ளும்படி தன்னால் முடிந்த நியாயமான விஷயங்களைச் செய்தார். ஒருவேளை முழுமையாக வெளிச்சமூட்டப்பட்டு, முழுமையாக அர்ப்பணித்த நிலையில் உள்ள பரிசுத்தவான்,

பிலாத்துவின் ஸ்தானத்தில் இருந்தால், இயேசுவை விடுவிக்கும் விஷயத்தில், பிலாத்துச் செய்ததைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்ய எதிர்ப்பார்க்கப்பட்டிருந்திருக்கும். நமது கர்த்தர் பிலாத்துவைக் குற்றஞ்சாட்டவில்லை. யூதர்களே இதற்குப் பொறுப்பானவர்கள். இதற்கான தண்டனை யூதர்கள் மேலும், அவர்களுடைய பிள்ளைகள் மேலும் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இருக்கின்றது. அவர்களின் துக்க பாத்திரம் இன்னும் முழுமையாக நிரம்பி முடியவில்லை. வரவிருக்கிற மகா உபத்திரவக் காலத்தில், "யாக்கோபின் இக்கட்டு காலம்" என்பது மிகவும் முக்கியமானதாகும். அவர்களுடைய இரட்சிப்பும், பெரு மூச்சுவிடுகிற சர்வ சிருஷ்டிப்பின் இரட்சிப்பும் அருகாமையில் இருப்பதினால், அவர்கள் சார்பில் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்ற வசனத்தின் கருத்து மற்றும் சம்பவம் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கும் (சகரியா 12:10).

---

**R1809**

# "பிலாத்துவுக்கு முன்பாக இயேசு"

## மாற்கு 15:1-15;—மத்தேயு 27:1-30; லூக்கா 23:1-25; யோவான் 18:28-40; 19:1-16.

"இயேசுவோ, அப்பொழுது உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை; அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான்."—மாற்கு 15:5.

ஆலோசனைச் சங்கத்தாருடைய வழக்கமான முறைகளை மீறி கூட்டம் கூடின காரியமானது, சூரியன் விடிவதற்கு முன்னதாகச் சட்டப்பூர்வமான தீர்ப்பை வழங்கிட முடியாது; ஆகையால் அவர்கள் காலையில் கூட்டம் கூடினதும், கலந்து ஆலோசனை பண்ணினதும், இரவில் அவர்கள் எடுத்திட்ட முடிவுகளுக்கு அதிகாரப் பூர்வமாய் உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கு மாத்திரமாகவே கூடிய கூட்டமாகும். அவர்கள் இயேசுவைக் கட்டி, பிலாத்துவினிடத்திற்கு வந்தார்கள்; மேலும், தங்களுடைய நோக்கம் நிறைவேற்றப்படத்தக்கதாக முழுக் கூட்டத்தினரும் இயேசுவோடுகூட பிலாத்துவினிடத்திற்கு வந்தார்கள் (லூக்கா 23:1).

வசனங்கள் 2-5. ஆலோசனைச் சங்கத்தார், தாங்கள் நியாயப்பிரமாணத்திற்காக மிகவும் வைராக்கியம் பாராட்டுபவர்களெனத் தங்களைக் குறித்துக் காண்பித்திட விரும்பின ஜனங்களிடம், தாக்கத்தை ஏற்படுத்தத்தக்கதாக தேவதூஷணம் எனும் குற்றத்தை முன்வைத்ததிலும், மற்றும் தங்களுடைய மதக் கருத்துகளையெல்லாம் பொருட்படுத்தாத உரோம ஆளுநராகிய பிலாத்துவின் முன்னதாக முற்றும் வேறானதும், பொய்யானதுமான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததிலும் ஆலோசனை சங்கத்தாருடைய பொல்லாப்பான நுண்ணறிவு மிகவும் தெளிவாய் வெளிப்படுகின்றது. பிலாத்துவுக்கு முன்னதாகக்கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டானது, இராஜ துரோகம் பற்றின குற்றச்சாட்டாகும்; இது உரோம அதிகாரிகளுக்குக் கோபத்தையும், எரிச்சலையும் தூண்டக்கூடிய ஒரு குற்றச்சாட்டாகும். இயேசு கலகத்தைத் தூண்டிவிடுவதாகவும், வரிப்பணம் செலுத்துவதைத் தடைப்பண்ணுவதாகவும், யூதர்களுடைய இராஜா எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டதாகவும், இப்படியாக இராயனுக்கும் மற்றும் உரோம அரசாங்கத்திற்கும் எதிராக சதித்திட்டம் பண்ணுவதாகவும் குற்றஞ்சாட்டினார்கள்.

இதிலுள்ள இரண்டாம் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானதாக இருப்பினும் (மத்தேயு 22:21), மற்ற இரண்டும் கொஞ்சம் உண்மையானது போன்று இருந்தது; மற்றும், இவைகளுடன் அநேகம் முக்கியமற்றத் தனித்தனி குற்றச்சாட்டுகளும் சேர்த்துக்கூறப்பட்டது. ஆனால் இவைகளில் எவற்றிற்கும் கர்த்தர் உத்தரவு சொல்லவில்லை;

இப்படியான அபாயமான சூழ்நிலையில், கர்த்தர் தம்மைத் தற்காத்துக்கொள்ள எந்த முயற்சியும் எடுக்காதது குறித்துப் பிலாத்து ஆச்சரியமடைந்தார்.

லூக்கா 23:6-14 வரையிலான வசனங்கள். பொறாமையின் காரணமாகவே தன்னுடைய இந்தக் குற்றமற்றக் கைதிக் கையளிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பிலாத்துக் கண்டுபிடித்து, தன்னுடைய இந்தக் குற்றமற்றக் கைதியை விடுவிப்பதற்கு எடுத்திட்ட பல்வேறு பிரயாசங்களானது, மதத்தலைவர்களினால் தூண்டிவிடப்பட்டு, இயேசு மரிக்க வேண்டுமெனக் கூக்குரலிடும் மூர்க்கத்தனமான மக்கள் கூட்டத்திற்கு முன்பாக பயனற்றதாகக் காணப்பட்டது; இயேசுவைப் பற்றின நினைவுகள் அவமானத்தினால் மூடப்படத்தக்கதாக/புதைந்துப்போகத்தக்கதாக, மிகவும் அவமானமான மற்றும் கொடூரமான முறையாகிய சிலுவையில் அறையப்படுதல் மூலமாக இயேசு மரிக்க வேண்டுமென, மதத்தலைவர்களால் தூண்டிவிடப்பட்ட ஜனக்கூட்டத்தார் கூக்குரலிட்டனர்.

லூக்கா 23:15-ஆம் வசனம். பின்னர் பிலாத்து, கொள்கைகளைக்காட்டிலும் விவேகமான நடத்தைக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தினால் தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டு, ஜனங்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று விரும்பி, இயேசு கசையடி அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்; எனினும் அதே வேளையில் தனது கைதிக் குற்றமற்றவர் என்பதைத் தெரிவித்து, இந்த நீதிமானை அவர்களுக்குக் கையளித்த விஷயத்தில், தன்னுடைய குற்றமற்ற நிலையைத் தெரிவிக்கும் வண்ணமாக, தனது கைகளைத் தண்ணீரினால் கழுவினார். பிலாத்து உரோம அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுகின்றார் என்றும், உரோம அரசாங்கத்திற்கு எதிரான கலகங்களுக்கும், சதித் திட்டங்களுக்கும் ஆதரவு தெரிவிப்பதன் மூலம், இராயனுடைய நம்பிக்கைக்குத் துரோகம் புரிகின்றார் என்றும் இராயனுக்குத் தெரிவிக்கப்படுமெனக் கலக ஜனக்கூட்டத்தார், பிலாத்துவை மிரட்டுவது வரையிலும், பிலாத்து இயேசுவைக் காப்பாற்றும் தன்னுடைய பிரயாசங்களைக் கைவிடவில்லை.—யோவான் 19:12-16; மத்தேயு 27:24, 25.

---

**R1815**

# "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்"
## மாற்கு 15:22-37;
## —மத்தேயு 27:31-66; லூக்கா 23:26-56; யோவான் 19:16-42.

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்."—ரோமர் 5:8.

மாற்கு 15:22-ஆம் வசனம். சிலுவையில் அறையப்படுவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டவுடன், சைத்தான்தனமான வைராக்கியத்தினால் காணப்பட்டிருந்த ஜனக்கூட்டத்தார் உற்சாகமடைந்து, சிலுவையில் அறையப்படும் இடத்தினிடத்திற்குக் கைதியுடன் விரைந்து, வெள்ளிக்கிழமைக் காலை ஒன்பது மணியளவில் வந்து சேர்ந்தனர். எத்துணை பயங்கரமானதொரு இரவைக் கர்த்தர் கடந்து வந்துள்ளார்; கவலைக்கிடமான நிகழ்வுகள் அவருடைய சீஷர்களுடன் அவர் கடைசி இராப்போஜனத்தை அநுசரித்த போது ஆரம்பித்தது; பின்னர் கெத்செமனேயில், அவர் மனவேதனை அடைந்திட்டார்; பின்னர் அன்னாவிடம் அவர் வேகவேகமாய் அழைத்துக்கொண்டு போகப்பட்டார், பின்னர் காய்பாவினிடத்திற்கும், பிலாத்துவினிடத்திற்கும், ஏரோதினிடத்திற்கும், மீண்டும் பிலாத்துவினிடத்திற்கும் கொண்டுபோகப்பட்டார்; அவர் இரவு முழுவதும் மிகவும் அவமானமாய் நடத்தப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், முகத்தில் துப்பப்பட்டார், குட்டப்பட்டார், தூஷிக்கப்பட்டார், ஏளனப்படுத்தப்பட்டார், தவறாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார், இறுதியில் கூர்மையான முட்களினால் முடிச் சூட்டப்பட்டு, வாரினால் அடிக்கப்பட்டார்.

இப்படியான அனுபவங்களுகுப் பிற்பாடும், சிலுவையில் அறையப்படுவதற்கு அவருக்குள் இன்னமும் ஜீவன் இருந்தது ஆச்சரியமாய்த் தோன்றலாம். கடுமையானதாகவும், நீண்ட நேரமும் காணப்பட்ட, சரீரப்பிரகாரமான பாடுகளும், களைப்பும், அசதியும், அனைத்து உடல்சக்தியையும் செலவாக்கி முடித்திருக்குமே என்று நமக்குத் தோன்றலாம்; ஆனால், நமது கர்த்தர் தம்முடைய ஊழியத்தின் வேலைகளுக்காக தம்முடைய

சரீரப் பலத்தைப் பெருமளவில் விரும்பி பலிச் செலுத்தியிருந்தாலுங்கூட, அவர் ஒரு பரிபூரண மனிதனாகக் காணப்பட்டப்படியினால், அவர் அசாதாரணமான சகிக்கும் திறனை/வல்லமையைக் கொண்டிருந்தார். சிலுவையில் அறையப்படுவதற்குரிய இடத்திற்கு, இயேசு தம்முடைய சிலுவையைச் சுமந்துச் செல்லும் விஷயத்தில், சிலுவையைச் சுமக்கும் காரியமானது இன்னொருவர்மேல் சுமத்தப்படுவதை வைத்துப்பார்க்கும்போது, இயேசு மிகவும் களைப்படைந்துள்ளார் என்பது தெரிகின்றது (லூக்கா 23:36).

மாற்கு 15:23-ஆம் வசனம். திராட்சரசமானது, வெள்ளைப்போளத்துடன் கலக்கப்பெற்று, வலி தெரியாமல் இருக்கத்தக்கதாக மயக்க மருந்தாகக் கொடுக்கப்பட்டது. உரோமர்களுடைய இந்தக் கொடூரமான முறையினால் தண்டனை தீர்ப்பை அடையும் குற்றவாளிகளுக்காக, இப்படிப்பட்டதான இரக்கத்தின் பணியானது, எருசலேமிலுள்ள சில ஸ்தீரிகளினால் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வழங்கப்பட்ட இரசத்தை ருசி பார்த்ததின் மூலமாக, இயேசு அவர்களது இரக்கத்தை அங்கீகரித்தார்; எனினும், இறுதி வரையிலும் தம்முடைய மனம் தெளிவுடனும், விழிப்புடனும் காணப்பட வேண்டுமென இயேசு விரும்பினபடியால், ருசிப்பார்ப்பதற்கு மேலாக, ரசத்தைப் பருகவில்லை. ஒருவேளை இயேசு அந்த ரசத்தைப் பருகியிருந்திருப்பாரானால், இயேசு தமது தாயை யோவானின் பராமரிப்பில் விட்டபோது வெளிப்படுத்தின அன்பையும்/பரிவையும் மற்றும் நமக்கு மிகவும் அர்த்தமுள்ளவைகளாக இருக்கும் அந்தக் கடைசி வார்த்தைகளாகிய, "எல்லாம் முடிந்தது" என்பதையும் நம்மால் உணர முடியாமலும், கேட்க முடியாமலும் போயிருந்திருக்கும். இன்னுமாகப் பேதுருவை உடனடியாக மனம் வருந்துவதற்கு நேராக வழிநடத்தத்தக்கதாக, பேதுருவுக்குக் கர்த்தருடைய அன்பையும், பேதுருவிடத்தில் அவர் அடைந்திட்ட ஏமாற்றத்தையும், வெளிப்படுத்தின கர்த்தருடைய கவலை நிறைந்த பார்வையையும், பேதுரு இழந்திருக்கக்கூடும்; இன்னுமாக, இப்படிப்பட்டதான கொடூரமான மரணத்தினுடைய துயரங்கள் மத்தியிலும், கர்த்தருடைய எண்ணங்கள் மற்றவர்கள் மீது எவ்வளவாய்க் காணப்பட்டது என்பதை நம்மால் உணர முடியாமலும் போயிருந்திருக்கும்.

மாற்கு 15:25-28 வரையிலான வசனங்கள். சிலுவையில் அறையப்படுதலானது, காலையில் ஒன்பது மணியளவுக்கு நடந்தது; மற்றும் மரணம் மாலை மூன்று மணியளவுக்குச் சம்பவித்தது. "அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" எனும் வாக்கியம் நிறைவேறத்தக்கதாக, அவர் இரண்டு கள்வர்களுக்கு இடையே சிலுவையில் அறையப்பட்டார் (ஏசாயா 53:12).

பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" என்று பரியாசம் பண்ணின வார்த்தைகளின் விஷயத்தில், அவர்கள் உணர்ந்து பேசினவைகளுக்கும் மேலாக, ஆழமான அர்த்தம் காணப்படுகின்றது. அவரால் மற்றவர்களையும் இரட்சித்து, தம்மையும் இரட்சித்துக் கொள்ளமுடியாது, ஏனெனில் அவர் தம்மைப் பலியாகக் கொடுக்கும்போது மாத்திரமே, அவரால் மற்றவர்களை இரட்சித்துக்கொள்ள முடியும்; ஆகையால், அவரே நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை, சிலுவை மரத்தில் தொங்கின அவருடைய சொந்த சரீரத்தில் ஏற்றுக்கொண்டார்; அவர் அனுமதித்ததாலேயே ஒழிய மற்றபடி எந்த மனுஷனாலும் அவரிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள முடியாத தம்முடைய ஜீவனை, அவரே விரும்பி ஒப்புக்கொடுத்தார்; மேலும், அவர் தாமே விரும்பி வந்து தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார் என்பது, அவரது நடக்கையிலேயே வெளிப்படுகின்றது; அதாவது அவர் எல்லாவற்றைம் அறிந்தவராகவே கெத்செமனேயில் காட்டிக்கொடுப்பதற்கெனக் கொடுக்கப்பட்ட முத்தத்தை ஏற்றுக்கொண்டதிலும், தம்மை உரோம சேவகர்களிடம் எளிமையாகக் கையளித்ததிலும், தம்மைக் குற்றம் சாட்டுபவர்கள் முன்னிலையில் அமைதிக் காத்துக்கொண்டதிலும், தாம் மேசியா என்பதை ஒளிவுமறைவில்லாமல் அறிக்கைப் பண்ணிக்கொண்டதிலும் (இதை அவர்கள் தேவதூஷணமாய்க் கருதிக்கொண்டார்கள்), தம்மைத் தற்காத்துக்கொள்ள முற்படாமல், சிலுவையில் அறையப்படுதல் எனும் தண்டனை தீர்ப்பை ஏற்றுக்கொண்டதிலும் வெளிப்படுகின்றது. உண்மைதான் அவர், "மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்." ஏன்? ஏனெனில், அவர் மற்றவர்களை இரட்சிக்க விரும்பினார்; மற்றும், மற்றவர்களை இரட்சிப்பதற்கு தாம் பலியாக வேண்டும் என்பதையும் அறிந்தவராக இருந்தார்.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5). "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டார்" (ஏசாயா 53:12). ஓ, எத்துணை அன்பும், சகிப்புத்தன்மையும் இங்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது! எனினும் மனிதர்களோ, "அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்டவரென்று" எண்ணினார்கள். மேலும் இது, நமது கர்த்தருக்கு இருந்த கடுமையான பரீட்சைகளில் ஒன்றாக இருந்தது; அதாவது அவர் தேவனுக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர் என்றும், அவர் தெய்வீகக் கோபாக்கினையின் கீழ்க் காணப்படுகின்றார் என்றும் கருதப்படுவதுதான் கர்த்தருக்கு இருந்த கடுமையான பரீட்சைகளில் ஒன்றாகக் காணப்பட்டது.

இதுபோலவே கர்த்தருடைய ஜனங்களுக்கு வரும் சிறுமைப்படுத்துதல்களானது, உலகத்தாராலும் மற்றும் தங்களைக் கிறிஸ்தவர்களாக அறிக்கைப் பண்ணிக்கொண்டும், ஆழ்ந்து சிந்திக்கிறவர்களாய் இல்லாதவர்களினாலும் தவறாய்க் கருதப்படுகின்றது. ஆனால் கர்த்தருடைய ஜனங்கள் சிறுமைப்படுத்தப்படும்போது, அவர்கள் "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" (மத்தேயு 10:24) என்ற வசனத்தின் வார்த்தைகளையும், தேவபக்தியாய் நடப்பவர்கள் அனைவரும் துன்பப்படுவார்கள் என்பதையும், இந்த யுகத்தில் தீமை மோலோங்குவதினால், நீதிமான்கள் துன்புறுவார்கள் என்பதையும், சாத்தானே இவ்வுலகத்தின் அதிபதியாய் இருக்கின்றான் என்பதையும், அவன் கட்டப்படுவது வரையிலும், நீதிமான் உயர்த்தப்படான் என்பதையும் நினைவில் கொள்வார்களாக. நீதிமான்கள் அதாவது, கரு நிலையிலுள்ள பரலோக இராஜ்யமானது, கொடுமையை அனுபவிப்பதற்கான காலம் இதுவே; மேலும், பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்தக்கொள்ளுகிற காலமும் இதுவே. நமது கர்த்தரும், தலையுமானவராகிய கிறிஸ்துவே பாடுப்பட்டாரானல், அவருக்காவும், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் பாடுபடுபவர்கள் அனைவரும் அவரை ஆறுதல்படுத்தின அதே தெய்வீக வாக்குத்தத்தத்தினால் ஆறுதல்படுத்தப்படுவார்களாக. "உன் நீதியை வெளிச்சத்தைப்போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு" (சங்கீதம் 37:6, 7).

தங்கள் அன்பையும், அனுதாபத்தையும் தெரிவித்த நமது கர்த்தருடைய சில நண்பர்களுங்கூட இத்தருணத்தில் காணப்பட்டனர்; இயேசுவின் தாயாகிய மரியாளும், மகதலேனா மரியாளும், கிலெயேப்பாவின் மனைவியாகிய மரியாளும், மற்ற ஸ்திரீகளும், இயேசுவுக்கு வெள்ளைப்போளமும், திராட்சரசமும் அளித்திட்ட ஸ்தீரிகளும் காணப்பட்டார்கள். "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். . . பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்;" தம்மீது காண்பிக்கப்பட்ட இதே பொல்லாத ஆவியானது, இஸ்ரயேல் தேசத்தைக் கவிழ்த்துப் போட்டு, எருசலேமை அழித்துப் போடும் கொடூரமானவர்களிடத்திலும் விளங்கும் என்பதையே லூக்கா 23:27-31 வரையிலான வசனங்களின் வார்த்தைகள் மூலம் கர்த்தர் குறிப்பிட்டார். அப்படியாகவே நடக்கவும் செய்தது; ஏனெனில், இஸ்ரயேல் ஜனங்களுக்கு, அவர்களுடைய வெளிச் சத்துருக்கள் மூலமாய் மாத்திரம் உபத்திரவம் ஏற்படாமல், அரசியல் கலகத்தினாலும் ஏற்பட்டது; ஏனெனில் ஒவ்வொரு மனுஷனுடைய கரமும், அவனுடைய அயலானுக்கு விரோதமாக இருந்தது. எருசலேம் கைப்பற்றப்பட்டபோது, பல நூற்றுக்கணக்கான யூதர்கள் உடனடியாகச் சிலுவையில் அறையப்பட்டு, பட்டணத்தின் சுவர்களில் தொங்கவிடப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

<u>மாற்கு 15:33, 34-ஆம் வசனங்கள்</u>. ஆறாம் மணி வேளையிலிருந்து, ஒன்பதாம் மணி வேளை வரையிலும், தேசத்தை மூடியிருந்த இருளானது, இயற்கைக்கு அப்பாற்பட்ட இருளாகும்; ஏனெனில் பஸ்கா காலங்களில் காணப்படும் பௌர்ணமி அன்று, சூரியக் கிரகணம் ஏற்படுவது சாத்தியமற்ற ஒன்றாகும். இது சந்தேகத்திற்கு இடமின்றி, தெய்வீகக் கோபத்திற்கான வெளிப்பாடாக இருந்தது; அதாவது, இப்படியான கிரியைகளை

நடப்பிப்பதன் மூலமாக, நீண்ட காலமாக தயவு பெற்றிருந்த தேசமானது, தேவனிடமிருந்து அந்நியராய்த் தள்ளுண்டுபோகும் காரியத்திற்கு இந்த இருளானது நிழலாய்க் காணப்பட்டது.

மாற்கு 15:34-ஆம் வசனமானது, நேரிட போகிற மரணத்தைக் குறித்த அச்சத்துடன்கூடிய உணர்ந்துக்கொள்ளுதலை வெளிப்படுத்துகின்றது. பலியை நிறைவேற்றி முடிப்பதற்குப் பிதாவினுடைய தாங்கிப்பிடிக்கும்/ஆதரிக்கும் வல்லமையானது (இயேசுவிடமிருந்து) பின்வாங்க வேண்டுவதும், பாடுகளின் பாத்திரத்திலுள்ள கடைசி கசப்பான வண்டல்களும்/அடிமண்டியும் (இயேசுவினால்) குடித்துக் காலியாக்கப்படுவதும் அவசியமானதாகும். ஆனால் இதன் முக்கியத்துவமோ, இருதயமும், மாம்சமும் தளர்வடையும் போது, உணர்ந்துக்கொள்ள சிரமப்படுகின்றது; ஆகையால்தான் திகைப்படைந்து இருதயமானது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டது. அவருடைய பாடுகள் அனைத்திலும், அதுவரைக்கும் தெய்வீகக் கிருபையானது அவரைத் தாங்கி ஆதரித்து வந்தது; ஆனால் அவருடைய தழும்புகளினால் நாம் குணம் அடையத்தக்கதாக, அவர் இப்பொழுது கோலின் கீழ் மூழ்கவும், ஜீவனை உடைய பிதாவின் கிருபையினின்று துண்டிக்கப்படவும் வேண்டியிருந்தது.

மாற்கு 15:37-ஆம் வசனம். மீதி இருந்த பலத்தையும், பயன்படுத்தி முடித்திட்ட இந்தக் கடைசிக் கூக்குரலானது, ஜெயங்கொள்ளும் விசுவாசத்தினுடைய இறுதி ஜெயமாகும். தம்மை எப்போதும் மற்றும் இதுவரையிலும் தாங்கி வந்ததான தெய்வீகக் கிருபையானது, தாம் பாவியின் ஸ்தானத்தில் பாவத்திற்கான ஈடுபலியாக நிற்கத்தக்கதாக, தம்மைவிட்டு அகல வேண்டுமென்று அவர் உணர்ந்தபோதிலும், திரைக்கு அப்பால் உணரப்படக்கூடிய தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது அவரது விசுவாசமானது உறுதியாய் நின்று, பிதாவிடம் தம்முடைய ஜீவனை நம்பிக்கையுடனும், விருப்பத்துடனும் கையளித்தது. இதை அப்போஸ்தலனாகிய பேதுரு நீதியின் நிமித்தம் பாடுபடுபவர்கள் அனைவரும் செய்யும்படிக்குக் கூறுகின்றார். "ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" (1 பேதுரு 4:19).

---

**R3374**

# "இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்"
## மத்தேயு 28:1-15.

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்."—1 கொரிந்தியர் 15:20

நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றும் முழுச்சுவிசேஷ செய்தியின் மீதான அதன் செல்வாக்கினுடைய முக்கியத்துவத்தைச் சிலர் மாத்திரமே உணர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. . . . கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே" (1 கொரிந்தியர் 15:14, 18) என்று அப்போஸ்தலர் எழுதினபோது, உயிர்த்தெழுதல் எவ்வளவு முக்கியமானது எனச் சுட்டிக்காண்பிக்கின்றார். உயிர்த்தெழுதலை உணர்ந்துக்கொள்ள தவறுபவர்களும், அதை உண்மையில் விசுவாசிக்காதவர்களுமான, கர்த்தருடைய பின்னடியார்களெனத் தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் மதத் தலைவர்கள் (clergy) மற்றும் கிறிஸ்தவ பொதுமக்களுடைய (laity) எண்ணிக்கை மிகவும் திரளாய் உள்ளது. உண்மையிலேயே விசுவாசிக்கிறவர்களுடைய எண்ணிக்கை மிகவும் சொற்பமேயாகும். பெரும்பான்மையானவர்கள், இருண்ட யுகத்தினின்று நமக்குக் கடந்து வந்திருக்கும் போதனைகளின் கீழ்க் காணப்படுவதினால், மரணம் என்பது ஜீவன் நின்றுவிடும் நிலைமை என்பதையும், "அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" என்று வேதவாக்கியங்கள் தெரிவிப்பதையும் உணர்ந்துக்கொள்வதற்கு முற்றிலுமாகத் தவறிவிடுகின்றனர். மாறாக கிறிஸ்தவ மண்டலத்தாரோ, மரணம் என்பது இல்லை என்றும், மரித்தவர்கள் மரிப்பதற்கு முன்னதாக இருந்ததைக்காட்டிலும் மிகுந்த ஜீவனுடையவர்களாய் இருக்கின்றனர் என்றும்,

நம்பும்/விசுவாசிக்கும் நிலைக்கு வந்துள்ளனர். மேலும் இந்த ஒரு கருத்தை இவர்கள், நமது கர்த்தரின் விஷயத்திலும், மற்றவர்களின் விஷயத்திலும் பொருத்துவதினால், "கிறிஸ்துவானவர் நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" என்று வேதவாக்கியங்கள் கூறும் காரியத்தை உணர்ந்துக்கொள்வதில்லை. இவர்கள் இயேசு மரித்தபோது, அவர் உயிரோடுதான் இருந்தார் என்றும், அவருடைய மாம்ச சரீரம் மாத்திரமே கல்லறையில் உயிரற்று இருந்தது என்றும், மூன்றாம் நாளில் நடந்திட்ட உயிர்த்தெழுதலானது, ஜீவனுக்கேதுவான அவருடைய உயிர்த்தெழுதலாகக் காணப்படாமல், மாறாக அவருடைய மரித்துப்போன சரீரத்தினுடைய உயிரடைதலே என்றும் எண்ணிக்கொள்கின்றனர்.

## "குழப்பத்திற்கு வழிநடத்தும் தப்பறைகள்"

இப்படியாகச் சீர்த்திருத்தவாதிகளினால், இடைப்பட்ட காலங்களிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டதும் மற்றும் இன்றைய நவீன உலகத்தாருடைய மனங்களில் ஒட்டி வைக்கப்பட்டதுமான தவறான உபதேசங்களுடைய குழப்பத்தினால், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தைப் பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்கள் உணர்ந்துக்கொள்ள முடியாமல் காணப்படுகின்றனர். ஒருவேளை இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழவில்லையெனில், நமது விசுவாசமும் விருதாவாக இருக்கும் எனவும், நமது பிரசங்கமும் விருதாவாக இருக்கும் எனவும் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளதை நம்புவதற்குப்பதிலாக, இதற்கு நேர்மாறாக பெரும்பாலான கிறிஸ்தவ மண்டலத்தார் கூறுபவர்களாய் இருக்கின்றனர்; அதாவது "ஒருவேளை இயேசுவின் சரீரமானது, கல்லறையிலேயே காணப்பட்டால், இதனால் நம்முடைய மரித்த அன்புக்குரியவர்களின் விஷயத்திலும், நாம் பிரசங்கிக்கும் விஷயத்திலும், நமது விசுவாசத்தின் விஷயத்திலும் அப்படி என்னத்தான் மாற்றங்கள் நடந்துவிடும்?" என்று கூறுகின்றனர். ஆகவே மரித்தவர்கள், மரித்துப்போய் இருக்கின்றார்கள் என்றும், மரணம் எனும் நித்திரையினின்று எழுப்பப்படுவது வரையிலும், மரித்தவர்கள் உயிரோடு இருப்பதில்லை என்றும் உணர்ந்துக்கொள்பவர்களால் மாத்திரமே, உயிர்த்தெழுதலுடைய முக்கியத்துவத்தை உண்மையாய் உணர்ந்துகொள்ள முடியும்.

ஒருவேளை இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடே எழுந்திருக்கவில்லையெனில், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நமக்கு எந்த அடிப்படையும் இருந்திருக்காது, ஏனெனில் தேவனுடைய கிருபையினால் இயேசுவின் மரணமானது, தகப்பனாகிய ஆதாமுக்கும், அவருடைய சந்ததிக்குமான ஈடுபலியாகக் காணப்படுகின்றது என்பதாகவும் மற்றும் இயேசு இப்படியாக முழுச் சந்ததிக்குமான தண்டனையைச் சந்தித்து, தம்முடைய மரணத்தின் மூலமாக, மரணத் தீர்ப்பிலிருந்து அனைவரையும் மீட்டுக்கொண்டபடியினால், ஏற்றவேளையில், அதாவது தேவனுடைய நியமிக்கப்பட்டுள்ள வேளையில் ஆதாமும், அவருடைய சந்ததியும், மரணத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பதாகவும், கிறிஸ்து மாபெரும் இராஜாவாக தம்முடைய இராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபித்து, அதன் வாயிலாக மனுக்குலத்தின் மீதிருந்த பாரமாகிய, மரணத் தண்டனையை எடுத்துப்போடுவார் என்பதாகவும், அப்போது கல்லறைகளில் இருப்பவர்கள் அனைவரும் மனுஷக்குமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, ஆயிர வருட இராஜ்யத்தின் மகிமையான வாய்ப்புகளாகிய தேவனோடு ஒப்புரவாகுவதும், விழுகையின் அனைத்துப் பூரணமின்மைகளிலிருந்து விடுவிக்கப்படுவதுமான வாய்ப்புகளினிடத்திற்கு வருவார்கள் என்பதாகவும்தான், சுவிசேஷ செய்தி காணப்படுகின்றது. இப்படியான ஒரு சுவிசேஷத்தை, இயேசு மரித்தார் என்ற உண்மையை, அதே நேரம் அவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லாமல் பிரசங்கிப்பது என்பது விருதாவாகவும், அறிவீனமான பிரசங்கமாகவும், ஜனங்களை வஞ்சிக்கத்தக்கதாகவும் காணப்படும். இப்படியான சுவிசேஷத்தை, உயிர்த்தெழுதலின் ஆதாரங்கள் இல்லாமல் நம்புவது என்பது, நம்மை அறிவீனமான பேதையினராக காண்பித்துவிடும்; மேலும், மரித்த நிலைமையிலேயே இருக்கும் கிறிஸ்துவினால், நம்முடைய மரித்த நண்பர்களுக்கு நன்மையுண்டாகும் என்று நம்புவது என்பது நகைப்புக்குரியதாகவே காணப்படும்.

இப்படியாகக் கர்த்தருடைய உயிர்த்தெழுதலுடைய முக்கியத்துவத்தையும், எப்படி இந்த மாபெரும் உண்மையின் மீது, சுவிசேஷத்தினுடைய ஒவ்வொரு அம்சமும் சார்ந்துள்ளது என்பதையும் நாம் காணும்போதுதான், இயேசு நம்முடைய பாவங்களுக்கான ஈடுபலியாக மாத்திரம் மரிக்காமல், நாம் நீதிமான்களாக்கப்படத்தக்கதாகவும், மனித குடும்பத்தின் மீது

காணப்படும் மரணத் தண்டனை மற்றும் குற்றத்திலிருந்தும் நம்மை விடுவிக்கத்தக்கதாகவும், அவர் உயிர்த்தெழவும் செய்தார் எனும் உண்மையின் அடிப்படையிலேயே, ஏன் அப்போஸ்தலர்கள் பாவங்களுக்கான மன்னிப்பைக் குறித்தும், எதிர்க்கால ஆசீர்வாதத்தைக் குறித்தும் பிரசங்கித்தார்கள் என்பதையும் நம்மால் புரிந்துக்கொள்ள முடிகின்றது. நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் தொடர்புடைய அனைத்து அம்சங்கள் பற்றின விரிவான வசனங்கள் காணப்படத்தக்கதாகவும், மிகவும் விரிவான பதிவு விவரங்கள் காணப்படத்தக்கதாகவும், நமது பரம பிதா ஏற்பாடு பண்ணினதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; சுவிசேஷகர்களும் விவரங்களை நுணுக்கமாக பதிவு செய்திருப்பதிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை; தேவனிடத்திலான அப்போஸ்தலர்களுடைய விசுவாசத்திற்கு அடிப்படையாக இருந்த உயிர்த்தெழுதல் பற்றின இந்த மாபெரும் அடிப்படையான சத்தியமானது, மிகவும் முக்கியமானதாக சபைக்கு முன்பு, அப்போஸ்தலர்களுடைய பிரசங்கங்கள் அனைத்திலும் முன்வைக்கப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கும் ஒன்றுமில்லை. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கப்படும்போது, இந்தப் பாடமானது, அனைத்துக் காலக்கட்டங்களிலுமுள்ள கர்த்தருடைய ஜனங்களுடைய ஆழமான கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்கவேண்டும்; அதாவது, இப்பொழுது இந்தச் சாட்சியை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டுள்ள விசுவாச வீட்டாருக்கு, இந்தச் சாட்சியை, இராஜ்யத்தின் வெளியரங்கமான வெளிப்படுத்தல்கள் உறுதிப்படுத்துவது வரையிலும் இந்தப் பாடம், ஆழமாய் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றதாய் இருக்க வேண்டும்.

## "அவர் மூன்றாம் நாள் எழுந்தார்"

நமது கர்த்தர் நீசான் மாதம் பதினான்காம் தியதியில் சிலுவையில் அறையப்பட்டார்; அதாவது, யூதர்களுடைய கணக்கின்படி வாரத்தின் ஆறாம் நாளில், அதாவது நாம் இன்று வெள்ளிக்கிழமை என்று அழைக்கும் நாளில் அறையப்பட்டார். பதிவுகளின்படி, நமது காத்தர் பிற்பகல் மூன்று மணிக்கு மரித்தார். எருசலேமின் வாயிலிருந்தும், ஆலயத்திலிருந்தும் பிலாத்துவின் அரண்மனையிலிருந்தும், கல்வாரி சிறு தொலைவில் காணப்பட்டது. ஆகையால் இயேசு மரித்ததைக் கண்ட பிற்பாடு, அவரை அடக்கம் பண்ண உத்தரவு பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆலோசனை சங்க அங்கத்தாராகிய நிக்கொதேமுவுக்கும், யோசேப்பிற்கும், அதிக தூரம் பிரயாணம் பண்ண வேண்டியிருக்கவில்லை; இவர்கள் இயேசுவுடன் சிநேகமாக இருந்ததாலும், இவர்கள் இயேசுவின் உரிமைப்பாராட்டுதல்களிலுள்ள உண்மையினைப் போதுமானளவுக்கு நம்பாதவர்களாய்க் காணப்பட்டனர்; அல்லது, அவரோடு கூட, தங்கள் ஜீவனையும் ஒப்புக்கொடுக்கத்தக்கதாக போதுமானளவுக்குத் தைரியம் இல்லாதவர்களாய்க் காணப்பட்டனர்; மேலும், இயேசு அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையானது சிலுவையிருந்த இடத்திலிருந்து கல்லெறியும் தொலைவில்தான் காணப்பட்டது. ஆகையால் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட அந்நாளில் தானே, அதாவது வெள்ளிக்கிழமை அன்றே பிற்பகல் நான்கு மணியளவில் அடக்கம் பண்ணப்பட்டதாக அனுமானிக்கப்படுகின்றது. நாம் சனிக்கிழமை என்று அழைக்கிறதும், யூதர்களால் ஏழாம் நாள் (அ) ஓய்வுநாள் என்று அழைக்கப்படுகிறதுமான அடுத்த நாள், யூதர்களுடைய கால அளவின்படி, வெள்ளிக்கிழமை அன்று சூரிய அஸ்தமனத்துடன் ஆரம்பித்து, சனிக்கிழமை அன்று சூரிய அஸ்தமனத்துடன் நிறைவடைந்தது; நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலானது, நம்மால் ஞாயிற்றுகிழமை என்று அழைக்கப்படும், யூதர்களுடைய வாரத்தின் முதல் நாளன்று அதிகாலமே நடைப்பெற்றது.

இவ்விதமாக நமது கர்த்தர், "மூன்றாம் நாளில்" மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அவர் வெள்ளிக்கிழமை அன்று மூன்று மணி முதல் ஆறு மணி வரைக்கும், பின்னர் தொடர்ந்த முழு இரவிலும், அடுத்த நாளாகிய சனிக்கிழமையின் பகற்பொழுது முழுவதும், பின்னர் வந்த முழு இரவிலும், அதாவது யூதர்கள் வழக்கத்தின்படி, வாரத்தின் முதலாம் நாளின் முதல் பாகமாகிய இரவிலும் மரண நிலையிலேயே காணப்பட்டார். இப்படியாகப் பார்க்கும்போது மூன்று பகற் பொழுதும், மூன்று முழுமையான இரவு பொழுதும், அதாவது எழுபத்திரண்டு மணி நேரப்பொழுது இல்லை என்றாலும், இது அவர், தாம் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழும்பப் பண்ணப்படுவார் என்று அவரால் கூறப்பட்ட காரியத்திற்கு இசைவாகவே உள்ளது. சிலர் மூன்று முழுப்பகற் பொழுதையும், மூன்று முழு இரவு பொழுதையும் எண்ணிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையில், நமது கர்த்தர் வியாழக்கிழமை அன்று மரித்ததாகக் கூறுவதற்கு வழிநடத்தப்படுகின்றனர்; இப்படிக் கணக்குப் போட்டாலுங்கூட மூன்று பகற்பொழுதும், மூன்று இரவு பொழுதுமாகிய

எழுபத்திரண்டு மணி நேரங்களின் கணக்கு வருவதில்லை. ஒருவேளை மூன்று முழுப்பகற்பொழுதும், மூன்று முழு இரவு பொழுதின் கணக்கு வரவேண்டுமாயின், நாம் இயேசு புதன்கிழமை அன்று மரித்ததாக எண்ண வேண்டியிருக்கும். இப்படிப்பட்டதான அனுமானங்களுக்கு எதிராகவும், வெள்ளிக்கிழமை அன்றுதான் மரித்தார் என்பதற்கு ஆதரவாகவுந்தான் அனைத்துச் சாட்சியங்களும் காணப்படுகின்றன. இந்த விஷயம் தொடர்புடைய காரியங்களில், எங்கள் கருத்திலிருந்து வேறுபட்ட ஒரு கருத்தை எவராகிலும் கொண்டிருந்தாலுங்கூட, நாம் அவர்களோடு போராடாப் போவதில்லை; இவ்விஷயம் என்பது முக்கியத்துமற்ற சிறிய விஷயமேயாகும்; நமது கர்த்தர் எத்தனை நாட்கள் மரண நிலையில் காணப்பட வேண்டுமென்ற காரியத்தைச் சார்ந்ததாக எந்தக் காரியமும் இருக்கவில்லை. அவர் நிஜமாக மரிக்க வேண்டும் என்பதும், அவர் மரித்துள்ளார் என்ற உறுதி காணப்படும்படி போதுமான காலம் அவர் மரண நிலையில் காணப்பட வேண்டும் என்பதும், அவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழும்ப வேண்டும் என்பதும்தான் முக்கியமான காரியமாகும்.

## “ஆலயத்தை இடித்துப்போட்டு, அதை எழுப்புதல்”

“இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்;” “அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்” (யோவான் 2:19, 21). அவர் எந்தச் சரீரத்தைக் குறித்துப் பேசினார்? அவரது மாம்ச சரீரத்தையா? பாவத்திற்காக பலிச்செலுத்தத்தக்கதாக, அவர் கொண்டிருந்த சரீரமா? அவர் மரணம் வரை அர்ப்பணித்துக் கொண்ட சரீரமா? இந்தச் சரீரத்தைத்தான் அவர் மூன்றாம் நாளில் எழுப்பப்படும் என்று குறிப்பிட்டாரா? இந்த மாம்ச சரீரம் என்பது அவரது ஆலயமாக இராமல், மாறாக அவரது கூடாரமாக மாத்திரமே காணப்பட்டது. நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சரீரத்தை யூதர்கள் அழிக்கவில்லை/இடித்துப்போடவில்லை; கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சரீரம் என்பது ஓர் ஆவிக்குரிய சரீரமாகும்; இதை யூதர்கள் ஒருபோதும் கண்டதில்லை; இந்தச் சரீத்தில் இயேசு, “அகாலப்பிறவிப்போன்ற பவுல் தமஸ்குவுக்குப் போகிற வழியில், மத்தியான வேளையில் சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளியாக” வெளிப்பட்டார்.

நமது கர்த்தர், தாம் தலையாக இருக்கின்ற சபையைத்தான் தம்முடைய சரீரமாகக் குறிப்பிட்டார் என்று நாம் எடுத்துக்கொள்வது நியாயமானதாக இருக்கும். யூதர்கள் தலையை அழித்து/இடித்துப் போட்டார்கள் மற்றும் சுவிசேஷ யுகம் முழுவதிலும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பல்வேறு அங்கத்தினர்கள், “அவரோடுகூடப் பாடுபடுவதற்கும்,” “அவரோடுக்கூட மரிப்பதற்கும்,” “சகோதரர்களுக்காக தங்கள் ஜீவனை ஒப்புக்கொடுப்பதற்கும்” அழைக்கப்படுகின்றனர். இயேசுவின் நாட்கள் துவங்கி இன்றுவரையிலும், சரீரத்தின் இந்த அழித்து/இடித்துப்போடும் பணியானது நடைபெற்றுக்கொண்டு வருகின்றது; மேலும் வெகு சீக்கிரத்தில், இந்தச் சரீரத்தின் கடைசி அங்கத்தினனும் தன்னை, “மரணம் வரையிலும் உண்மையுள்ளவனாக” நிரூபித்துக் காட்டி முடித்துவிடுவான் என்று நாம் நம்புகின்றோம். இப்பொழுது கர்த்தர் தாமே மாபெரும் அஸ்திபாரக் கல்லாகக் காணப்படும் இந்த ஆலயத்தை, கர்த்தர் எப்படி எழுப்புவார் என்று பார்க்கலாம்; இந்த ஆலயத்தில் கர்த்தருடைய உண்மையுள்ள பின்னடியார்கள் ஒவ்வொருவரும், ஜீவனுள்ள கற்களாக இருப்பார்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிடுகின்றார் (1 பேதுரு 2:4). கர்த்தருடைய கால கண்ணோட்டத்தை வைத்துப் பார்க்கப்படும்போது, “கர்த்தருக்கு ஒரு நாள் என்பது ஆயிரம் வருஷம்போல” இருப்பதினால், நமது கர்த்தர் 4161-ஆம் வருடம், உலகத்தினுடைய வருட கணக்கின்படி மரித்தார்; நான்கு நாட்கள் கழிந்த பிற்பாடு, ஐந்தாம் நாள் ஆரம்பித்தது.

ஆலயத்தின் பிரதான மூலைக்கல்லாகிய கர்த்தர் அழிக்க/இடிக்கப்பட்டது முதல், தேவனுடைய ஆலயமாகிய சபையின் அழித்து/இடித்துப்போடுதல் ஆரம்பமாகி, இதுவரை நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது; அதாவது, ஐந்தாம் நாளின் மீதி பகுதியிலும், ஆறாம் நாள் முழுவதிலும் நடைப்பெற்றது; இப்பொழுது நாம் ஏழாம் நாளின் ஆரம்பத்தில், “அதிகாலை வேளையில்” காணப்படுகின்றோம். இந்தக் காலப்பகுதியில் கிட்டத்தட்ட கர்த்தருடைய உயிர்த்தெழுதல் முழுமை அடைந்திருக்கும் என்பதாக தேவனுடைய வாக்குத்தத்தம் காணப்படுகின்றது. “அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்” (சங்கீதம் 46:5). இப்படியாகக் கர்த்தர் மூன்று நாட்கள் மரித்திருந்து, மூன்றாம்

நாளில், அதிகாலையில் உயிர்த்தெழுந்ததுபோல, முதலாம் உயிர்த்தெழுதலும் நிறைவேறித் தீரும்; கிறிஸ்துவின் முழுச்சரீரமும், மூன்றாம் நாளின் அதிகாலை வேளையில் உயிரோடு எழுப்பப்படும்.

கர்த்தருடைய உயிர்த்தெழுதல் சம்பவித்தபோது, உயிர்த்தெழுதல் பற்றின விஷயமானது அப்போஸ்தலர்களும் புரிந்துக்கொள்வதற்கு எட்டாத காரியமாகவே காணப்பட்டது. இயேசு தாம் மூன்றாம் நாளிலே மீண்டும் உயிரோடு எழுந்தருள்வார் என்று முன்கூட்டியே கூறியிருந்தபோதிலும், அவருடைய வார்த்தைகளின் அர்த்தத்தை அவர்களால் புரிந்துக்கொள்ள முடியாமலேயே காணப்பட்டனர். அவர்களில் ஒருவர்கூட, அவரது உயிர்த்தெழுதலைக் குறித்துக் கொஞ்சமும் எண்ணவே இல்லை; மாறாக அவர்கள் தங்களுடைய இறந்துப் போன அன்புக்குரிய நண்பன் (அ) சகோதரன் (அ) சகோதரியுடைய சரீரத்திற்கு காண்பிப்பதுபோலவே, இயேசுவினுடைய சரீரத்திற்குத் தங்கள் அனுதாபத்தையும், அன்பையும் காண்பிக்கத்தக்கதாக, எப்படி அவருடைய சரீரத்திற்குத் தைலம் பூசலாம் என்று மாத்திரமே எண்ணினவர்களாக இருந்தார்கள். யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வுநாளன்று எவ்விதமான வேலையும் செய்யக்கூடாது என்பதினால், அவர்களால் கல்லறைக்குப்போக முடியாமல் இருந்த காரணத்தினால், முன்கூட்டியே கர்த்தருடைய நண்பர்கள் அவர்களுக்குள்ளாகவே தீர்மானித்து வைத்திருந்தபடியே, ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாளில், அதிகாலையில், அவர்கள் கல்லறையினிடத்திற்கு வந்து கூடினர். கலிலேயாவிலிருந்து அநேகர் வந்தனர். அவர்கள் அநேகமாக பட்டணத்தினுடைய பல்வேறு பாகங்களிலுள்ள மற்ற நண்பர்களுடைய வீடுகளில் தங்கியிருந்திருக்க வேண்டும்; சிலர் பெத்தானியாவிலும் தங்கியிருந்திருக்க வேண்டும்; ஆகையால் பல்வேறு வழிகள் வழியாய்க் கல்லறையினிடத்திற்கு வந்தடைந்தர்கள். பதிவு வெவ்வேறாகக் காணப்பட்டாலும், அனைத்துமே உண்மையானதாகவும், முழுக்க இசைவானதாகவும் காணப்படுகின்றது. ஒவ்வொரு சுவிசேஷத்தின் எழுத்தாளர்களினாலும் பல்வேறு கோணங்களிலிருந்து கூறப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது; மேலும், அனைத்துமே சுவிசேஷ புத்தகங்களுடைய எழுத்தாளர்களுக்கிடையே எவ்விதமான கூட்டுச்சதியும் இல்லை என்பதை நமக்கு தெளிவுப்படுத்துகின்றது; அதாவது, அனைவரும் ஒன்றுபோலவே காரியங்களைத் தெரிவிப்பதற்கு, எவ்விதமான முயற்சியும் எடுக்கவில்லை என்பது தெளிவாகுகின்றது; ஒருவேளை, அனைத்துச் சுவிசேஷகர்களும் அப்படியே ஒன்றுபோல் பதிவு பண்ணியிருந்திருப்பார்களானால், பதிவானது கட்டுக்கதையாகப் போயிருந்திருக்கும்.

## "உண்மைக்கு எதிரான விவாதங்கள், பலமற்றதாகவேயிருக்கிறது"

சீஷர்கள் வருவதற்கு முன்பாகவும், உரோம சேவகர்கள், கல்லறையைக் காக்கும் வேலையில் நின்று கொண்டிருக்கும்போதும், கர்த்தருடைய தூதனானவர் அவ்விடத்தில் தோன்றினார்; பூமி அதிர்ச்சிப் போன்றதான அதிர்ச்சி ஏற்பட்டது; காவல் காத்தவர்கள் செத்தவர்கள் போலானார்கள், அதாவது கிட்டத்தட்ட மயங்கி போய்விட்டனர்; ஆனால் இவர்கள் மயக்கம் தெளிந்தவுடன், சம்பவம் நடந்த இடத்தைவிட்டு, தங்களை இவ்வேலைக்கென நியமித்திட்ட பிரதான ஆசாரியர்களிடம் விவரம் சொல்லப்போனார்கள். இவர்கள் நித்திரைப் பண்ணிக்கொண்டிருந்தபோது, இயேசுவின் சீஷர்கள் வந்து சரீரத்தைத் திருடிப்போய்விட்டார்களென இவர்கள் விஷயத்தைப் பரப்பி விடத்தக்கதாக, பிரதான ஆசாரியர்கள் இவர்களைத் தூண்டிவிட்டனர்; மேலும், இவர்களால் பரப்பப்பட்ட இந்தத் தகவலானது, ஒரு குறிப்பிட்ட நீண்ட காலம் நடப்பில் காணப்பட்டது; ஆகவேதான், "இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள்வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது" என்று வசனத்தில் இடம்பெறுகின்றது (மத்தேயு 28:15); அதாவது, இச்சம்பவம் நடந்து ஒன்பது வருடங்களுக்குப் பின்பாக எழுதப்பட்டதாக அனுமானிக்கப்படும் மத்தேயு சுவிசேஷம் எழுதப்படும் காலம் வரைக்கும் இப்பேச்சுக் காணப்பட்டது. சத்தியத்திற்கு எதிரான அனைத்து வாதங்கள்போல, இந்த வாதமும் பெலவீனமானதாகவே காணப்பட்டது; ஆனால், இதுவே அவர்களால் முடிந்தமட்டும் சொல்ல முடிந்திட்ட பொய்யான வாதமாகும். தாங்கள் நித்திரைப் பண்ணிக்கொண்டிருக்கும்போது, நடந்தது என்ன என்று சொல்லக்கூடிய மனிதர்களுடைய சாட்சி எத்துணை முட்டாள்தனமாய் இருக்கும்! இப்படியான பொய்யான வாக்கைக்கூறின காவலாளிகளுக்குக் கூலியாக இலஞ்சமும் மற்றும் வேலையின் நேரத்தில், வேலை செய்யாமல் தூங்கிவிட்ட உரோம சேவகருக்குரிய தண்டனைக்கு எதிரான பாதுகாப்பு பற்றின

வாக்குறுதியும் கொடுக்கப்பட்டன; ஆனால் இச்சம்பவம் நிகழ்ந்த போது, காவலாளிகள் உரோம அரசாங்கத்திற்காக வேலை புரியவில்லை; இந்தக் காவலாளிகள் ஆசாரியர்களின் நன்மைக்காகவும், ஆசாரியர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி மாத்திரமே காவல் புரிந்தவர்களாகக் காணப்பட்டனர்.

விவரங்களைத் தெரிவிக்கும்படிக்குக் காவலாளிகள் ஆசாரியர்களிடம் போய்க் கொண்டிருக்கையில், இதற்கிடையில் கர்த்தருடைய நண்பர்கள் தங்களுடைய அன்புகளுடனும், கந்தவர்க்கத்துடனும் ஒன்றுகூட ஆரம்பித்தனர். ஸ்திரீகள் கூட்டத்தினர் முதலாவதாக, இடத்தை வந்து அடைந்தனர்; இப்படியாக ஸ்திரீகள் முதலாவதாக வந்த காரியமானது, அவர்களுடைய இருதயங்களின் அன்பிற்கும், அனுதாபத்திற்கும் உறுதியளிக்கின்றதாகவும், அவர்கள் (பெண்) இனத்திற்கு மகிமைச் சேர்க்கின்றதாகவும் இருக்கின்றது.

அந்நாள் காலை முதல் ஆரம்பித்து, காத்தர் பரம் ஏறிச்சென்றதோடு முடிவடைந்த நாற்பது நாட்கள் காலப்பகுதியில், கர்த்தர் பதினொரு முறை காட்சியளித்தார்; சிலசமயம் ஒருவருக்கும், இன்னொரு சமயம் மற்றொருவருக்கும், இன்னெரு சமயம் ஒரே நேரத்தில் ஐந்நூறு சகோதர சகோதரிகளுக்கும் தோன்றிக் காட்சியளித்தார். ஆனால் பதினொரு முறைக்குப் பதிலாக அவர் அநேகமாக ஏழுமுறை மாத்திரமே தோன்றியிருந்திருக்க வேண்டும்; இந்த ஏழு முறைகளிலுள்ள, நான்குமுறை காட்சிப் பதிவுகளானது திரும்பத் திரும்ப, வெவ்வேறாக விவரிக்கப்பட்டவையே ஆகும்.

## "அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்"

ஏழு பிசாசுகள் பிடியிலிருந்து நீங்கப் பெற்றவளும், அதுமுதல் நமது கர்த்தருடைய உண்மையான பின்னடியார்களில் ஒருவளுமான மகதலேனா மரியாளுக்கு, நமது கர்த்தர் முதலாவதாகத் தோன்றிக் காட்சியளித்தார். இவள் அதிகமாய் மன்னிக்கப்பட்டிருந்தாள்; இவள் அதிகமாய்க் கர்த்தரை அன்புகூர்ந்தாள்; இவளுடைய அன்பானது, கல்லறையினிடத்திற்கு இவளை அதிகாலமே இழுத்துக்கொண்டு வந்தது. மகதலேனா மரியாள்தான், ஸ்திரீகளிலேயே கல்லறையினிடத்திற்கு முதலாவதாக வந்து சேர்ந்ததாகத் தெரிகின்றது; மேலும் கல்லறையில் இயேசு இல்லாததைக் கண்ட மாத்திரத்தில், இவள் இக்காரியத்தை யோவான் மற்றும் பேதுருவினிடத்தில் சொல்வதற்குத் துரிதமாய்ப் போனாள். மற்ற ஸ்திரீகள் கல்லறையினிடத்திற்கு வந்து, அவ்விடத்தை விட்டு, தங்கள் வழியில் புறப்பட்டுப்போன பிற்பாடே, மகதலேனா மரியாள் மீண்டுமாக கல்லறையினிடத்திற்குத் திரும்பி வந்து சேருகின்றாள்; இப்படியாக இவள் கல்லறைக்கு அருகாமையில் காணப்படும் போதுதான், இயேசு அனைத்து ஸ்திரீகளிலும் இவளுக்கே காட்சியளித்துத் தோன்றினார்; இவைகள் யோவான் 20:11-18 வரையிலான வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிற்பாடு மற்ற ஸ்தீரிகள், காரியங்களை விசுவாச வீட்டாருக்கு அறிவிக்கத்தக்கதாக போய்க்கொண்டிருக்கும் வழியில், இவர்களுக்கு கர்த்தர் எதிர்ப்பட்டார். இவர்களிடம் "வாழ்க" ('All hail!') என்று கூறினார்; வாழ்த்துவதற்குரிய இந்தக் கிரேக்க வார்த்தைக்கான அர்த்தம் "சந்தோஷப்படுங்கள்" என்பதாகும். இவர்கள் அவருடைய பாதத்தில் விழுந்து, அவரைத் தொழுது கொண்டு, எதுவாகிலும் அவரிடமிருந்து தங்களைப் பிரித்துவிடுமோ என்ற அச்சத்தில், அவருடைய பாதங்களைத் தழுவிப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். நமது கர்த்தர், இவர்கள் சகோதரருக்கு அறிவிக்கும் கடமையை/வேலையைப் பெற்றருப்பதை, இவர்களுக்கு நினைப்பூட்டினார்; அதாவது, தம்முடைய உயிர்த்தெழுதலின் நற்செய்தியினைப் பரப்ப வேண்டிய கடமையை இவர்களுக்கு நினைப்பூட்டினார். இதே படிப்பினை நமக்கும் உள்ளது; அதாவது நாம் கர்த்தரைக் கண்டுபிடித்து, சத்தியத்தை உணர்ந்துக்கொண்ட பிற்பாடு, சத்தியத்திற்காக ஊழியம் புரியும் மாபெரும் சிலாக்கியத்தினை நாம் பெற்றிட அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம்; அதாவது, நம்முடைய இருதயங்களைச் சந்தோஷிப்பித்தவைகளை, இன்னமும் அறிந்திராத சகோதர சகோதரிகளிடத்தில் (அறிவிக்கும்) ஒரு மாபெரும் கடமை நமக்கு உள்ளது. சத்தியம் நமக்கு மாத்திரமே உரியது என அதைக் கட்டிப்பிடித்து வைத்துக்கொள்ளலாமென நாம் எண்ணக்கூடாது; மாறாக, சத்தியம் மற்றவர்களுக்கும் உரியது என்பதை நாம் நினைவில்

கொள்ள வேண்டும்; ஆகவே சத்தியத்தை மற்றவர்களுக்கு வழங்குவதில் நாம் மகிழ்ச்சிக்கொள்ள வேண்டும். இப்படியாகக் கர்த்தருக்கும், விசுவாச வீட்டாருக்கும் ஊழியம் புரிபவன், இறுதியில் நிச்சயமாய் மாபெரும் ஆசீர்வாதத்தை அடைவான்.

நமது கர்த்தர் சீஷர்களை மீண்டுமாக கலிலேயாவில் சந்திப்பார் என்று சீஷர்களிடம் சொல்ல வேண்டும் என்பதாகவே நமது கர்த்தருடைய செய்தி காணப்பட்டது. ஆகவே எருசலேமில் ஐந்து (அ) ஆறுமுறை காட்சியளிடத்திட்ட பிற்பாடு, நமது கர்த்தர் தம்முடைய பின்னடியார்களுக்குத் தோன்றிக் காட்சியளிக்கவில்லை; ஆகவே பின்னடியார்கள் தங்கள் சொந்த ஊராகிய கலிலேயாவிற்கு திரும்பி, அங்கே கர்த்தர் சொன்னதுபோலவே, அவரைக் கண்டார்கள். நமது கர்த்தருடைய பெரும்பான்மையான ஊழியம் கலிலேயாவில்தான் நடைப்பெற்றது என்றும், விசுவாசிகளில் பெரும்பான்மையானவர்கள் கலிலேயர்களாய் இருந்தார்கள் என்றும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும். விசுவாச வீட்டாரில் அனைவரும், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலுக்கான சாட்சியைப் பார்ப்பதற்குரிய, ஏதாகிலும் வாய்ப்பினை அடைய வேண்டியவர்களாய்க் காணப்பட்டனர்; ஆகையால்தான் அப்போஸ்தலனாகிய பவுல், கலிலேயாவில் கர்த்தர் காட்சியளித்துத் தோன்றிய காரியத்தைக் குறித்துப் பேசுகையில், "அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் (அப்போஸ்தலன் இவ்வசனத்தை எழுதும் காலம் வரைக்கும்) இருக்கிறார்கள், சிலர் மாத்தரம் நித்திரையடைந்தார்கள்" என்று நமக்குத் தெரிவிக்கின்றார் (1 கொரிந்தியர் 15:6).

கர்த்தர் தாம் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டதான உண்மை தொடர்புடைய விஷயத்தில், தம்முடைய பின்னடியார்களுக்குக் கொடுத்திட்ட பல்வேறு வெளிப்படுத்துதல் விஷயத்தில், இரண்டு நோக்கம் கொண்டிருந்தார் என்பதை நாம் கவனமாய்க் கவனிக்க வேண்டிய அவசியம் உள்ளது. முதலாவது நோக்கம் என்னவெனில், தம்முடன் சீஷர்கள் பழகி வந்த காலத்தில், தாம் மனித நிலைமையில் காணப்பட்டதுபோல, இனி ஒருபோதும் காணப்படுவதில்லை, மாறாக அனைத்து ஆவிக்குரிய ஜீவிகள்போன்று, தம்மால் காற்றைப்போல், கண்களுக்குப் புலப்படாத விதத்தில் வரலாம், போகலாம் என்பதாகும். ஜெயங்கொள்ளுபவர்களுக்கான உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர், 1 கொரிந்தியர் 15:51, 52-ஆம் வசனங்களில் விவரிக்கின்றார்; நம்முடைய உயிர்த்தெழுதலானது, கர்த்தருடையது போன்று காணப்படும் என்றும், நாம் அவர் இருக்கிற வண்ணமாக அவரைக் காணலாம் என்றும், அவருடைய மகிமையில் பங்கடையலாம் என்றும் வேத வாக்கியங்கள் நிச்சயம் அளிக்கின்றது. நம்முடைய உயிர்த்தெழுலானது, அவருடைய உயிர்த்தெழுதலின், அதாவது முதலாம் உயிர்த்தெழுதலின் ஒரு பாகமாக உண்மையில் காணப்படுகின்றது என்றும், மகிமையான கிறிஸ்துவின் தலையாகிய இயேசு, மரணத்தின் வல்லமையினின்று எழுப்பப்பட்டு, அவர் மரித்த மூன்றாம் நாளில் மகிமைப்படுத்தப்பட்டார் என்றும், புதிய யுகத்தினுடைய அதிகாலை வேளையில், சபையும் மரணத்திலிருந்து, அவருக்கு ஒப்பான சாயலை அடைந்து, அவருடைய உயிர்த்தெழுலில் பங்கடைவார்கள் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு உறுதிப்படுத்துகின்றது (பிலிப்பியர் 3:10).

## "நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் மாற்றம்"

நமது கர்த்தர் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தைத் தம்முடைய உயிர்த்தெழுதலின் போதுதான் பெற்றுக்கொண்டாரே ஒழிய, அதற்குப் பிற்பாடு அல்ல; அப்போஸ்தலன் கூறுவதுபோல "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1 பேதுரு 3:18). நமது கர்த்தர் தாழ்த்தப்பட்டதையும், பிற்பாடு அவருடைய உயிர்த்தெழுதலின்போது அவர் உயர்த்தப்பட்டதையும் குறித்துப் பேசுகையில் அப்போஸ்தலன், நமது கர்த்தர் மனிதனாகத்தக்கதாக, தாம் பிதாவோடு காணப்பட்டிருந்தபோது பெற்றிருந்த மகிமையைத் துறந்து வந்தார் என்றும், ஏற்றவேளையில் கர்த்தர் தம்மை மரணப்பரியந்தம், அதாவது சிலுவையின் மரணப்பரியந்தம் தாழ்த்தினார் என்றும், பின்னர் தேவன் அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் என்றும் நமக்கு உறுதியளிக்கின்றார். இந்த உயர்த்தப்படுதலானது, அவருடைய உயிர்த்தெழுதலின் மாற்றம் நடைப்பெற்றபோது அவருக்கு வந்தது. கர்த்தர் எப்படி ஜென்ம சரீரத்தில் விதைக்கப்பட்டு, ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்திருந்தாரோ, இப்படியே, அவருடைய சரீரத்தினுடைய அங்கத்தினர்களுடைய விஷயத்திலும் உண்மையாய் இருக்கும்.

நமது கர்த்தருடைய இந்த ஆவிக்குரிய சரீரமானது, அவருடைய உயிர்த்தெழுதலின் தருணத்திலேயே, இப்போதும், எப்போதும் காணப்படுவதுபோன்று மகிமையுடையதாகவே காணப்பட்டது. அவருடைய ஆவிக்குரிய சரிரம் . . . கர்த்தரோடு இசைவாய் இருக்கும் ஆவிக்குரிய ஜீவிகளுக்கு ஏற்றதென வழங்கப்படும் அனைத்து வல்லமைகளையும் உடையதாய் இருந்தது. இனிமேல் அவர் முன்பிருந்த மனிதனாகிய கிறிஸ்து இயேசுவல்ல, மாறாக இப்பொழுது மகிமையின் கர்த்தராக இருக்கின்றார். ஆபிரகாமுக்கும், மற்றவர்களுக்கும் அவர் முன்பு காட்சியளித்தது போன்று, தேவைக்கேற்ப அவரால் கண்ணுக்குப் புலப்படும் விதத்தில் (அ) கண்களுக்குப் புலப்படாத விதத்தில் (அ) எரிகிற முட்செடியாய் (அ) வழிப்போக்கனாகவோ தோன்ற முடியும். இந்த மகிமையடைந்த கர்த்தர்தான், தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்குப் பிரகாசமான வெளிச்சமாகத் தோன்றினார்.

ஏன் கர்த்தர் மகிமையான விதத்தில், அதாவது பிரகாசமான வெளிச்சத்துடன் ஸ்திரீகளுக்கும், அப்போஸ்தலர்களுக்கும் தோன்றி காட்சியளிக்கவில்லை? எனச் சிலர் கேள்வி கேட்கலாம். அப்படியாக அவர் செய்திருப்பாரானால், அது அவர் கொண்டிருந்த நோக்கத்திற்குத் தடையாக இருந்திருக்குமென நாம் பதிலளிக்கின்றோம். அதுவரையிலும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத காரணத்தினால், ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ள முடியாத நிலைமையில் காணப்பட்ட சீஷர்களினால், மிகவும் பிரகாசமாய்த் தேவதூதனைப்போல் தோன்றிக் காட்சியளித்துக் கொண்டிருப்பவர்தான், தாங்கள் மூன்று நாளுக்கு முன்னதாக சிலுவையில் அறையப்பட்டவராக கண்ட கர்த்தர் இயேசு என எப்படிப் புரிந்துக்கொள்ள முடியும்? (1 கொரிந்தியர் 2:14). ஒருவேளை அன்று சீஷர்கள், பிரகாசமான தேவதூதன் போன்று காட்சியளித்துக் கொண்டிருப்பவர்தான், கர்த்தர் இயேசு எனப் புரிந்துக்கொண்டுவிட்டாலும், அன்று முதல் இன்று வரையிலுமுள்ள மற்றவர்களுக்கும், நமக்கும் என்ன சாட்சி இருந்திருக்கும்? நமது கர்த்தர் இயேசுவினுடைய சடலம், கல்லறையினின்று எடுத்து மாற்றப்படுவது என்பது, அன்று இருந்த சீஷர்களுக்கும் மற்றும் அவர்களுடைய வார்த்தைகள் மூலம் அவரை விசுவாசிக்கும் நமக்கும் விசுவாசம் ஏற்படுவதற்கு அவசியமாய் இருக்கின்றது; மற்றும் அக்காரியமானது, அனைவருக்கும் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதற்கான வெளிப்படுத்தலாகவும் இருக்கின்றது. அந்தக் குறிப்பிட்ட காலத்தின்போது நமது கர்த்தர் கொடுத்திட்டப் போதனைகளும், தீர்க்கத்தரிசனங்களுக்குக் கொடுத்திட்ட விளக்கங்களும், தீர்க்கத்தரிசனங்களைத் தமக்குப் பொருத்திக் கூறினவைகளும், விசுவாசத்திற்கு அவசியமான உறுதியான அஸ்திபாரங்களாகும். இந்தக் கர்த்தருடைய நோக்கங்கள் வேறு ஏதாகிலும் விதத்தில், அதாவது பிரகாசமான வெளிச்சத்துடன் கர்த்தர் காட்சியளித்திருந்தால் நிறைவேறியிருக்க முடியாது. நமது கர்த்தர் முதலாவதாக மரியாளுக்குத் தோட்டக்காரன் போன்று தோன்றிக் காட்சியளித்தார். இவள் அவரை அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை; இவள் முன்பு இயேசுவைப் பார்த்திருந்த பிரகாரமான, தோற்றத்தையோ, உடைகளையோ இவள் பார்க்கவில்லை. அவருடைய வஸ்திரங்கள் உரோம சேவகர்கள் மத்தியில் பங்குப் போடப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது; கல்லறையில் அவரைச் சுற்றி வைத்திருந்த துணிகளானது, கல்லறையிலேயே காணப்பட்டது; ஆனால் மரியாள் அங்குக் கண்டதோ, இந்த விசேஷித்த தருணத்திற்கென்றே ஆயத்தம் பண்ணப்பட்டு, பயன்படுத்தப்பட்ட விசேஷித்த சரீரமாகவும், விசேஷித்த வஸ்திரமாகவும் இருந்தது. இவள் குரலை வைத்து அடையாளம் கண்டுகொள்வது வரையிலும், கர்த்தரை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் காணப்பட்டாள்.

இப்படியாகவே, அதே நாளில் எம்மாவு எனும் கிராமத்திற்குப்போன இரண்டு நபர்களின் விஷயத்திலும் காணப்பட்டது. இயேசு அவர்களோடுகூட நடந்து வந்தார்; ஆனால் அவர்களோ, அவரை அறிந்துக்கொள்ளவில்லை. அவருடைய வஸ்திரம் வித்தியாசமாய் இருந்தது; அவரது சாயல் வேறாக இருந்தது; அவர்களால் அவருடைய உள்ளங்கைகளிலோ (அ) பாதங்களிலோ ஆணியின் தடயங்களைப்பார்க்க முடியவில்லை. "அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்" (லூக்கா 24:18). இயேசு இந்த வாய்ப்பினை, தம்மைப் பற்றியதான தீர்க்கத்தரிசனங்களை அமைதியாகவும், கவனமாகவும், நிதானமாகவும், அழுத்தமாகவும், மிகத்தெளிவாகவும் அவர்களோடுகூட விவாதிக்கத்தக்கதாக/ஆராயத்தக்கதாகப் பயன்படுத்தினார்; இதினிமித்தம் அவர்கள் ஸ்தீரிகளினால் அறிவிக்கப்பட்ட காரியங்கள் உண்மையிலேயே மெய்யாக இருப்பதற்கு

வாய்ப்புண்டு என்று எண்ண ஆரம்பித்தபோது, அவர்களுடைய இருதயங்கள் அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரிந்தது.

அவர்களுடைய பார்வையிலிருந்து மறைய அவர் ஆயத்தமாகுவது வரையிலும் நமது கர்த்தர், தம்மை கர்த்தர் என்று வெளிப்படுத்தவில்லை. அவர் மறைந்து போனபோது, அவருடைய மாம்சமும், அவருடைய வஸ்திரங்களும்கூட மறைந்து போய்விட்டது. அன்றைக்கு மாலையில் கதவுகள் பூட்டப்பட்டிருக்கும்போதே, எருசலேமில் மாடி வீட்டிற்குள்ளாகக் காணப்பட்ட கூட்டத்தாருக்கு முன் கர்த்தர் தோன்றினார். அங்குக் கூடியிருந்த கூட்டத்தார், அநேகமாக அன்றைய நாளின் சம்பவங்களையும், முந்தின நாளின் சம்பவங்களையும்தான் பேசிக் கொண்டிருந்திருக்க வேண்டும்; அப்பொழுது திடீரென இயேசு, அவர்கள் நடுவில் தோன்றினார். அவர் உருவம் எடுத்துக்கொண்டு அங்குத் தோன்றினார். அவர் ஆவிக்குரிய ஜீவியாக அவர்கள் நடுவில் வந்து, வஸ்திரம் உடுத்தின மாம்சமும், எலும்பும் கொண்ட முழுச்சரீரத்தை உருவாக்கிக்கொண்டு தோன்றினார். அவரால் இதை எப்படிச் செய்யுமுடியும் என்று யாராவது கேட்கின்றீர்களா? எங்களால் இதற்குப் பதில் சொல்ல முடியாதுதான்; ஆயினும், தண்ணீர் எப்படித் திராட்சரசமாக மாறியது என்ற அற்புதத்தை யாரால் புரிந்துக்கொள்ள முடியுமோ, அவர்களால் எப்படி நமது கர்த்தர், கதவுகள் பூட்டியிருக்க, மாடி அறைக்குள் தோன்றினார் என்பதைச் சுலபமாகப் புரிந்துக்கொள்ள முடியும்; மற்றும் சம்பாஷணை முடிந்த பிற்பாடு, அவர் இன்னமும் கதவுகள் பூட்டப்பட்டிருக்கவே, மர்மமான விதத்தில், அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து போனார் என்பதையும், மாம்சமும், எலும்பும், வஸ்திரமும்கூட மறைந்துபோனது என்பதையும் சுலபமாய்ப் புரிந்துக்கொள்ள முடியும். கூடி இருந்தவர்கள் யூதர்களுக்கு அஞ்சினதாலும், கர்த்தரை மரிக்கப்பண்ணுவதற்கு நாடின யூதர்களது பகைமையானது, அவருடைய பின்னடியார்கள் மீதும் திரும்பலாம் என்று எதிர்ப்பார்த்ததினாலும், கதவுகளை ஜாக்கிரதையாய்ப் பூட்டி வைத்திருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

## ''விசுவாசமற்றவர்களாய் இராதீர்கள்; மாறாக விசுவாசியுங்கள்''

அநேகமாக ஒரு வாரம் கழித்து, மீண்டுமாக வாரத்தினுடைய முதல் நாளன்று, அதேமேல் வீட்டறையில் கர்த்தர் தோன்றிக் காட்சியளித்தார். அப்போது தோமாவும் காணப்பட்டார்; முந்தின தருணங்களின்போதெல்லாம், தோமா காணப்படவில்லை; மற்றும் இவர் மற்றவர்களுடைய சாட்சிகளை நம்பவுமில்லை. தோமா தனது சந்தேகங்களை மிகவும் அழுத்தமாக வலியுறுத்தினவராகவும், மற்றவர்கள் அனைவரும் மிகவும் சுலபமாக நம்பிவிட்டார்களெனக் கூறினவராகவும் காணப்பட்டார்; ஆனால் இறுதியாக, தோமா மற்றவர்களோடுகூடக் காணப்படும்போது, இயேசு தோன்றி, ஆணியினுடைய காயங்களில் தோமா தனது விரலை இட்டுப் பார்க்கும்படிக் கூறினபோது, தோமா திருப்தியடைந்தார். நமது கர்த்தர் சிலுவையில் தொங்க விடப்பட்டிருந்தபோது, ஆணியின் காயங்களைக் கொண்டிருந்த சரீரத்தையா தோமா உண்மையில் பார்த்து, தனது கையை இட்டு பார்த்தார்? நாம் இல்லை என்றே பதிலளிக்கின்றோம்; அந்த மாம்சமும், எலும்புகளும் உடைய சரீரமானது, கதவுகள் பூட்டப்பட்டிருக்க உள்ளே வர முடியாது. மேல் வீட்டறையில் தோன்றின சரீரமானது (அத்தருணத்தில்) உருவாக்கப்பட்ட சரீரமாகும்; அச்சரீரம் மாம்சத்தினாலும், எலும்புகளினாலும்தான் உருவாக்கப்பட்டது; "நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொன்னார்" (லூக்கா 24:39). அவர்கள் பார்த்தது ஆவிக்குரிய சரீரமல்ல, அவர்கள் கண்ட சரீரம், மாம்சத்தையும் எலும்புகளையும் கொண்ட சரீரமாகும். கர்த்தர் ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார்; ஆகையால் அவர்களுடைய பார்வைக்கு மறைவாய் இருந்தார்; அவர் அவர்கள் நடுவில் இந்த மாம்சமும், எலும்புமுள்ள சரீரத்தையும் மற்றும் வஸ்திரத்தையும் உருவாக்கித் தோன்றினார்.

கர்த்தருக்கு மாம்சத்தையும், எலும்புகளையும் உருவாக்கும் வல்லமை இருப்பதை மறுப்பவர்களால், வஸ்திரங்களை அவர் உருவாக்கினார் என்பதைப் ஏற்றுக்கொள்வதிலும் சிரமப்படுவார்கள்; ஏனெனில், கதவுகள் பூட்டப்பட்டிருக்கும் அறைக்குள் வஸ்திரங்களை உருவாக்குவதை விட, சரீரத்தை உருவாக்குவது மிகவும் கடினமாக இருக்குமென யாரால் சொல்லக்கூடும்? இன்னுமாக மாம்சத்தையும், எலும்புகளையும் காற்றில் மறையப்பண்ணுவதைப் பார்க்கிலும், வஸ்திரத்தை காற்றுக்குள்ளாக மறையப்பண்ணுவது

சுலபமானது என யாரால் சொல்லக்கூடும்? இப்படிப்பட்டக் காரியங்களைச் செய்வதற்கான வல்லமை என்பது நமக்கடுத்ததுமல்ல, இக்காரியத்தை நம்மால் முழுவதும் புரிந்துக்கொள்ளவும் முடியாது. இப்பொழுது நாம் கண்ணாடியின் வாயிலாக மங்கலாய்ப் பார்க்கின்றோம், ஆனால் போகப்போக கர்த்தர் தொடர்ந்து செய்துகொண்டு வரும் வியத்தகு காரியங்களையெல்லாம், எப்படிச் செய்து வருகின்றார் என்பதை நாம் புரிந்துக்கொள்வோம். நம்மைச் சுற்றிலும் இயற்கையின் விஷயத்தில் தினந்தோறும் அற்புதங்கள் நிகழ்வதை நாம் காண்கின்றோம் அல்லவா? கோதுமையின் விதைக்குள் இருக்கும் பருப்பை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள்; ஒரு சிறு விதைக்குள்ளாக இருந்து எப்படி முளைகள் வெளிவந்து, தண்டு வந்து, முழுமையான கோதுமை மணியும் வருகின்றது? இது ஓர் அற்புதம் அல்லவா? இதை நாம் செய்வதென்பது நமக்கு அப்பாற்பட்ட வல்லமையாகவும், நம்முடைய புரிந்துக்கொள்ளுதலின் வல்லமைக்கு அப்பாற்பட்ட வல்லமையாகவும் இருக்கின்ற காரியமாக இருக்கின்றது. நம்மால் பல தனிமங்களை ஒன்று சேர்த்து, கோதுமை மணியை உருவாக்கலாம், அதுவும் கோதுமை மணியினுடைய வடிவத்திலேயே நாம் செய்துவிடலாம்; ஆனால் இயற்கையான கோதுமை மணியுடன், நமது செயற்கையான கோதுமை மணியை ஒப்பிடுகையில், நாம் உண்டுபண்ணின கோதுமை மணிகளால் முளைக்கவோ, தண்டு விடவோ, கோதுமை மணிகளை விளையப்பண்ணவோ முடியாது.

## "அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை"

ஆணிகள் ஊடுருவப்பட்ட இயேசுவினுடைய மாம்ச சரீரத்திற்கு என்னவாயிற்று என்பதைக் கூறுவது நமக்கடுத்த காரியமல்ல. இவ்விஷயத்தைக் குறித்த காரியத்தில், அச்சரீரம் அழிவைக் காண்பதில்லை என்று மாத்திரமே சொல்லப்பட்டிருக்கின்றதே ஒழிய, மற்றபடி எதுவும் தேவனால் வெளிப்படுத்தப்படவில்லை. அச்சரீரம் எங்கு இருக்கின்றது? இது பற்றியும் எங்களுக்குத் தெரியாது; எனினும் யாருமே கண்டுபிடிக்க முடியாதளவுக்கு, மோசேயின் சரீரத்தை மறைத்து வைத்தவர், இயேசுவினுடைய சரீரத்தையும் மறைத்து வைக்க வல்லவராக இருக்கின்றார் (உபாகமம் 34:5, 6). இயேசுவினுடைய இந்த அழிக்கப்படாத சரீரமானது, உலகத்திற்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் உண்மைக்கான சாட்சியாக, எதிர்க்காலம் முழுவதிலும் காணப்படத்தக்கதாக, தேவனால் கொண்டு வரப்படலாம். இஸ்ரயேலர்களால் உண்ணப்பட்ட மன்னாவானது, ஓய்வுநாள் தவிர, மற்ற நாட்களில் மீதியிருக்கும் பட்சத்தில் அதற்கடுத்த நாளில் அழிந்துவிடும் என்பதை நாம் நினைவில்கொள்கின்றோம்; இன்னுமாக வனாந்தர பிரயாணத்தின் போதான மாபெரும் அற்புதத்திற்கான ஞாபகர்த்தமாக (அ) சாட்சியாக, உடன்படிக்கைப் பெட்டிக்குள் பொற்பாத்திரத்தில் வைக்கப்பட்ட மன்னாவானது, அழிந்து போகாமலேயே இருந்தது என்பதையும் நாம் நினைவில் கொள்கின்றோம். அப்படியானால், மன்னாவுக்கு ஒப்பிடப்பட்ட இந்த வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பத்தின் (இயேசுவின்) விஷயத்தில் நாம் என்ன சொல்லலாம்? தேவன் இயேசுவின் சரீரத்தையும் சாட்சியாக, பாதுகாக்க வல்லவராய் இருக்கின்றார் அல்லவா? மாம்ச சரீரங்கள் பொதுவாக அழியக்கூடியவைகளாக இருப்பினும், இயேசுவின் இந்த மாம்ச சரீரமானது, அழிவைக் காணாமல் பாதுகாக்க தேவன் வல்லவராய் இருக்கின்றார் அல்லவா? ஆணிகள் ஊடுருவப்பட்டதும், ஈட்டியினால் குத்தப்பட்டதுமான இச்சரீமானது எதிர்க்காலத்தில் அனைவரும் பார்க்கத்தக்கதாக வெளியே கொண்டுவருவதற்காக, எங்கோ வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கிற வேதவாக்கியமும் காணப்படுகின்றது. "அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து" (சகரியா 12:10).

நமது கர்த்தர் காட்சியளித்த முதல் ஐந்து தருணங்களும், அவர் பூமியில் காணப்பட்ட நாற்பது நாட்களின் முதல் எட்டு நாட்களிலேயே சம்பவித்தது. ஆகையால் காட்சிகள் அளிக்கப்படுவதற்கு இடையே நீண்ட இடைவெளிகளும் காணப்பட்டது; மற்றும் அப்போஸ்தலர்களுக்கும் காரியங்களை எண்ணுவதற்கும், விவரமாய் ஆராய்வதற்கும் நிறைய காலமும் இருந்தது. சீஷர்களில் அநேகர் கலிலேயர்களாய் இருந்தபடியால், நமது கர்த்தர் எட்டாம் நாளில் கடைசியாக அவர்களுக்குக் காட்சியளித்த பிற்பாடு, இரண்டு வாரங்களான பின்னர், அவர்கள் எருசலேமிலேயே தங்காமல், அவரவர் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள்; ஆண்டவரை மீண்டும் பார்க்க முடியுமோ (அ) இல்லையோ என்றும், வீடுகளுக்குத் திரும்புகிற வழியில் அவர் காட்சியளித்துத் தோன்றுவாரோ (அ) இல்லையோ என்றும், அல்லது கலிலேயாவில் எதாவது மேல்வீட்டறையில் ஒன்றுகூடும்போது காட்சியளித்துத் தோன்றுவாரோ என்றும், எண்ணிக்கொண்டே வீடுகளுக்குத் திரும்பினர்.

இயேசு தங்களுக்கு முன்னதாக கலிலேயாவுக்குப் புறப்பட்டுச் செல்கின்றார் என்றும், அங்குத் தங்களைச் சந்திப்பார் என்றும், அவர் ஸ்திரீகள் மூலம் தங்களுக்கு அனுப்பின செய்தியினையும் நினைவுகூர்ந்தார்.

நம் கர்த்தராலும், அப்போஸ்தலர்களாலும் அடிக்கடி போகும் இடத்தில், நீண்ட காலம் சீஷர்கள் காத்துக் கொண்டிருக்கையில், ஜீவியத்தின் நடைமுறை சார்ந்த காரியங்கள் (தேவைகள்) இவர்களை அழுத்திட ஆரம்பித்தது. சீமோன் பேதுரு முதலாவதாக, மீண்டும் மீன்பிடிக்கும் தொழிலில் திரும்புவதற்கான தனது எண்ணத்தைத் தெரியப்படுத்தினார்; மற்ற அப்போஸ்தலர்களும் அதே தொழிலில் முன்னமே ஈடுபட்டிருந்தபடியால், இவர்களும் பேதுருவுடன் இணைந்து கொண்டார்கள்; இயேசு இவர்களை அப்போஸ்தலர்கள் ஆகும்படிக்கு அழைப்பதற்கு முன்பு, அதாவது இரண்டு வருடங்களுக்கு முன்பு, கொண்டிருந்த பழைய தொழில் ஏற்பாடு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. இப்படியான சூழ்நிலைகளையே கர்த்தர் எதிர்ப்பார்த்தார்; மேலும் அவர் உயிர்த்தெழுந்தது முதல், பரத்திற்குப்போவது முன்னதாக, நாற்பது நாட்கள் அவர் பூமியிலேயே காணப்பட்டதற்கான காரணம், இத்தருணத்தின்போது அவர்களுக்கு அவர் கொடுத்திட்ட படிப்பினைகளைக் கொடுக்க வேண்டுமென்ற, மாபெரும் நோக்கத்திற்கேயாகும் என நாம் நம்புகின்றோம். அவர்கள் எவ்வளவு சோர்வடைந்தார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்; இராஜ்யம் தொடர்பாக அவர்கள் முன்பு கொண்டிருந்த நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும், இப்பொழுதுள்ள இந்தப் புதிய சந்தர்ப்பத்தின் கீழ்க் குழப்பத்தில் காணப்பட்டது என்பதையும் அவர் அறிந்திருந்தார். தம்முடைய பின்னடியார்களுக்கு அறிவுரைகள் கொடுக்கப்படாதது வரையிலும், தாம் நோக்கம் கொண்டிருக்கும் வேலைக்குள்ளாக பின்னடியார்கள் செல்வதற்கு ஆயத்தமாக மாட்டார்கள் என்பதையும் கர்த்தர் அறிந்திருந்தார். அந்த வாரங்கள் முழுவதிலும், அவர் அவர்களோடுதான் கண்களுக்குப் புலப்படாத ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்பட்டார்; அவர்களுடைய கேள்விகளையும், அவர்களுக்குள்ளாக அவர்கள் கொடுத்திட்ட விளக்கங்களையும், அவர்கள் முன்வைத்திட்ட யோசனைகளையும், அவர்கள் இறுதியாக எடுத்திட்ட தீர்மானங்களையும் கர்த்தர் கேட்டுக்கொண்டு கவனித்துக் கொண்டிருந்தார்; மற்றும் ஏற்றவேளையில் உரிய படிப்பினைகளைக் கொடுப்பதற்கு ஆயத்தமாகவும் காணப்பட்டார்.

## "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?"

சீஷர்கள் மீண்டுமாக மீன் பிடிக்கும் தொழிலில் இறங்கி, அத்தொழிலைச் செய்வதற்குக் கர்த்தர் அனுமதித்துவிட்டார். அவர்கள் இராமுழுவதும் வேலை புரிந்தும், மீன் எதையும் அவர்களால் பிடிக்க முடியவில்லை; ஆவிக்குரிய காரியங்களிலும், பூமிக்குரிய காரியங்களிலும், தோல்வியே தங்களுக்கு ஏற்படுகின்றது என்று எண்ணி, அவர்கள் இன்னும் சோர்வடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. வாய்ப்பான தருணம் வந்தது; இயேசு வேறொரு மாம்சத்துடனான சரீரத்தில், வஸ்திரம் அணிந்தவராகக் கரையில் நின்று கொண்டிருந்தார்; இந்தச் சரீரமும், வஸ்திரமும் அவருடைய சொந்த சரீரமாகவும், அவர் வழக்கமாக அணியும் வஸ்திரமாகவும் இல்லை; மாறாக இத்தருணத்திற்கென்று விசேஷமாய் உருவாக்கப்பட்ட சரீரமாகவும், வஸ்திரமாகவும் இருந்தது. இயேசு இச்சரீரத்தில் கரையில் நின்றுகொண்டு, அப்போஸ்தலர்களிடம், மீன் இருக்கின்றதா எனக் கேட்டார்; அதற்கு அவர்கள் இராமுழுவதும் வேலை செய்தும், மீன் எதுவும் பிடிப்படவில்லை என்று கத்திக் கூறினார்கள். அவர்கள் படகின் மற்றப் பக்கமாய் வலையைப் போடும்படிக்கு அவர் யோசனைக் கூறினார். இந்த யோசனை அவர்களுக்கு அறிவீனமாய்த் தோன்றியிருந்திருக்கலாம்; ஏனெனில், அவர்களுக்கு வலையைப் போடும்படிக்குச் சொல்லப்பட்ட இடமானது, அவர்கள் ஏற்கெனவே வலை வீசின இடத்திலிருந்து, சில அடிகள் தொலைத் தூரத்தில்தான் இருந்தது. அந்த அந்நியன் (இயேசு), அவர்களை ஏதோ விதத்தில் ஈர்த்ததினால், அவர்கள் படகிற்கு மற்றப் பக்கத்தில் தங்கள் வலையினை வீசினார்கள்; உடனடியாக வலை பெரிய மீன்களினால் நிரம்பினது. பேதுருவைப் பொறுத்தமட்டில், அவர் படிப்பினையை ஏற்கெனவே கற்றிருந்தார். பேதுரு அப்போஸ்தலனாகும்படிக்கு, தான் கர்த்தரால் அழைக்கப்பட்டபோது, இதைப் போன்றதான அனுபவத்தை அடைந்திருந்ததை நினைவுகூர்ந்து, கரையில் நின்றுகொண்டிருப்பது, கர்த்தர் இயேசு என்று உடனடியாகப் புரிந்துக்கொண்டார்; இயேசு கரையில் காட்சியளிக்கத்

தோன்றியுள்ளார் என உடனடியாக புரிந்துக்கொண்டார். படகுகளுக்கோ, வலைக்கோ (அ) மீன் தொடர்புடைய வேலைக்காக நின்று கொண்டிருக்காமல், பேதுரு உடனடியாகத் தண்ணீருக்குள் குதித்து, கர்த்தரிடம் சீக்கிரமாய்ப் போய்ச்சேர வேண்டுமென்ற ஆர்வத்தினாலும், மற்றச் சந்தர்ப்பங்களில் நடந்தது போன்று, இப்போதும் இயேசுவினுடைய காட்சி சடுதியாக மறைந்துவிடும் என்று உணர்ந்ததினாலும் கரைக்கு நீந்திச் சென்றார். இன்னுமாக தான் கர்த்தரை மறுதலித்ததை நினைவில் கொண்டிருந்த பேதுரு, தன்னுடைய அன்பையும், உண்மையையும் வெளிப்படுத்துவதற்கும் ஆவலாய்க் காணப்பட்டார்.

இந்த ஒரு சந்தர்ப்பத்தின் போதுதான், இயேசு பேதுருவிடம் விசேஷமாக, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்று கேட்டார்; அதாவது இந்தப் படகுகள், வலைகள், முதலானவைகளைக் காட்டிலும், அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்று கேட்டார். பேதுருவிடம் கேட்கப்பட்ட கேள்வியானது, அனைவருக்கும் பொருந்துகின்றதாக இருப்பினும், இக்கேள்வியானது அனைவருக்கும் மூப்பனார் போன்றும், தலைவன் போன்றும் காணப்பட்டவரும், கொஞ்சம் நாட்களுக்கு முன்பதாக, "அனைவரும் உம்மைக் கைவிட்டுப் போனாலும், நான் போகேன்" என்று கூறினவருமாகிய பேதுருவுக்கே விசேஷித்த அழுத்தம் கொண்டதாய்க் காணப்பட்டது. பேதுரு கர்த்தருக்கான தன்னுடைய அன்பைத் தெரிவிக்க, ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் போஷிக்கும்படிக்கும் கூறப்படுகின்றார். இப்பாடம் பொருத்தமான வேளையில் கொடுக்கப்பட ஏற்ற பாடமாகவும், மீண்டும் சொல்லப்படுவதற்கு அவசியப்படாததாகவும் இருந்தது. நாம் அறிந்திருக்கிற வரையில், பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் பிற்பாடு, அப்போஸ்தலர்களெனத் தங்களுக்குரிய ஊழியத்தினுடைய முக்கியத்துவத்தை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை, மாறாக ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் போஷிக்கிற வேலையில் தங்கள் முழு நேரத்தையும், சக்தியையும் கொடுத்தவர்களாகவே காணப்பட்டனர். இந்த (மீனின்) அற்புதமானது, பூமிக்குரிய காரியத்தில் தங்களை ஆசீர்வதிப்பதற்குரிய (அ) தடைப்பண்ணுவதற்குரிய கர்த்தருடைய வல்லமையைக் குறித்து அவர்களுக்குச் சாட்சிப்பகர்ந்தது; இன்னுமாக அவருடைய அப்போஸ்தலர்களாகவும், பிரதிநிதிகளாகவும், தங்களுக்கான அனைத்துத் தேவைகளையும், அவர் சந்திப்பார் என்பதற்கும் சாட்சிப்பகர்ந்தது. படிப்பினையானது சரியான வேளையில் கொடுக்கப்பட்டது. ஒருவேளை இப்படிப்பினையானது முன்னதாகவே கொடுக்கப்பட்டிருக்குமாயின், இப்படிப்பினையானது அவ்வளவுக்குத் தாக்கமிக்கதாய் இருந்திருக்காது; அவர்கள் குழம்பிப்போய்க் காணப்படுவதற்கும், அவர்கள் மீன் தொழிலில் இறங்குவதற்கென முடிவு எடுப்பதற்கும், அனுமதி வழங்கப்பட்ட காரியமும், பின்னர் அவர்களின் மீன் பிடிக்கும் முதலாம் நாளிலேயே, இந்த ஆற்றல் மிக்கப் படிப்பினையைக்கொடுத்த காரியமும், (தெய்வீக) ஞானத்தினுடைய பங்காகும். அது நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதல் பற்றின ஒரு படிப்பினையாகும்; மற்றும் அது அவர் நிலைமையில் மாற்றம் அடைந்துள்ளார், அதாவது அவர் இனி ஒருபோதும் மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாகவும், மனித நிலைமைகளுக்குக் கீழ்ப்பட்டவராகவும் இல்லை என்பதை விவரித்துக் காண்பித்தது; மீண்டும் அவர் மறைந்து போய்விட்டார்; ஆனால் அடுத்ததாக அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாகக்கூறி மறைந்தார்.

இந்த அடுத்த சந்திப்புதான், அப்போஸ்தலனாகிய பவுலால் குறிப்பிட்டுள்ளபடி, ஒரே நேரத்தில் ஐந்நூறு சகோதர சகோதரிகளுக்குக் கர்த்தர் காட்சியளித்துத் தோன்றின சம்பவமாக இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. இந்தச் சந்திப்பின்போது, போதிக்கப்பட்ட பல்வேறு படிப்பினைகள் குறித்து, நமக்கு முழு விவரமும் தெரியாது என்றாலும், படிப்பினைகளானது வார்த்தைகளின் விதத்தைக் காட்டிலும், நடைமுறை விதத்தில்தான் காணப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம்; இந்தக் கர்த்தருடைய காட்சிகள், வெளிப்படுத்துதல்கள் அனைத்துமே, கர்த்தர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதையும், அவர் பூமிக்குரிய நிலைமையிலிருந்து ஆவிக்குரிய நிலைமைக்கு மாற்றம் அடைந்துள்ளார் என்பதையும் அவர்கள் நம்ப வேண்டும் என்ற நோக்கத்திற்கேயாகும்.

## "இறங்கினவரே உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்"

அடுத்ததாக நமது கர்த்தர், தாம் பரம் ஏறிச்செல்லும்போது ஒலிவ மலையில் காட்சிளித்துத் தோன்றினார். அப்போஸ்தலர்கள் அனைவரும் மற்றும், அநேகமாக

மற்றவர்களும் எருசலேமுக்கும், ஒலிவ மலைக்கும் வந்திருந்திருக்க வேண்டும்; மேலும், உன்னதத்திலிருந்து வரும் வல்லமையினால் தரிப்பிக்கப்படும் வரையிலும், அவர்கள் எருசலேமிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்குக் கூறியிருந்தார். இப்படியாகக் கர்த்தர் இறுதியான அறிவுரைகளைக் கூற அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போது, அவர் அவர்களை விட்டுப் பிரிந்தார்; அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது, இயேசுவின் உருவம் படிப்படியாக மேகங்களுக்குள்ளாக, அவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்துவிட்டது. இப்படியான முறைமையை அவர் கையாண்டதின் மூலமாக, இன்னமும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாததினிமித்தம், ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்ள முடியாமலிருந்த சீஷர்களுக்கு, முடிந்தமட்டுமான சிறந்த நன்மையையே அவர் செய்திருக்கின்றார். கண்களுக்குப் புலப்படாமல் ஆவியாய் இருந்த தம்மை, அவர் மாம்ச பிரகாரமாக வெளிப்படுத்தினார். இதை அப்போஸ்தலர்களால் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடு புரிந்துக்கொள்ள முடியும். இப்படியாக அவர்கள் நமக்குப் பதிவு பண்ணினவைகள், மாம்ச மனிதனுடைய கண்ணோட்டத்தில் அல்லாமல், ஜெநிப்பிக்கப்பட்ட கண்ணோட்டத்திலேயே நமக்குக் கடந்து வந்துள்ளது.

இப்பாடத்தினுடைய சாரமானது, "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1 கொரிந்தியர் 15:20) என்ற வசனத்தின் வார்த்தைகளில் அடங்கியவைகளேயாகும். அநேகர் மரணம் எனும் நித்திரையினின்று தற்காலிகமாக (இயேசுவின் அற்புதங்களினால்) எழுந்திருந்தும், பிற்பாடு மீண்டும் மரண நித்திரைக்குள்ளாகவே கடந்துச் செல்பவர்களாய்க் காணப்படுகின்றனர்; ஆனால் நமது கர்த்தரோ, மரித்தோரிலிருந்து முதலாவதாக எழும்பினவராகவும், நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவராகவும் காணப்பட்டார்; மேலும் அப்போஸ்தலர் கூறியுள்ளது போன்று, "மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராக" இருக்க வேண்டியுள்ளது (அப்போஸ்தலர் 26:23). அவருடைய உயிர்த்தெழுதல் என்பது ஜீவனுக்கேதுவான உயிர்த்தெழுதலாகும். அதாவது, ஆவிக்குரிய தளத்தில் பரிபூரணம்/நிறைவு அடைதலுக்கான உயிர்த்தெழுதலாகும். நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார் என்று சொல்லுகிறபோது, இப்படியாகவே மற்றச் சிலரும் நித்திரையடைந்துள்ளார்கள் என்பதையும், அப்படிப்பட்டவர்கள் இந்தப் பிரகாரமாகவே ஆவிக்குரிய ஜீவிகளாக, உயிர்த்தெழுதலில் வருவார்கள் என்பதையும் குறிப்பிடுகின்றதாய் இருக்கின்றது. முதற்பலன் என்கிறபோது, இதே வகையாக மற்றவர்களும் காணப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலே, மற்ற அனைத்து உயிர்த்தெழுதலுக்கும் முன்னதாகச் சம்பவிக்கும் எனும் விதத்தில், நமது கர்த்தர் நித்திரையடைந்தவர்கள் அனைவரிலும் முதற்பலனானவராக மாத்திரம் இராமல், அவர் அவருடைய சரீரமாகிய சபை எனும் முதற்பலன்களிலும், முதற்பலனானவராகவும் காணப்படுகின்றார். இன்னொரு விதத்தில் பார்க்கும்போது, முழு உலகத்திலேயே, தலையும், சரீரமுமாகிய கிறிஸ்துதான் ஜீவனுக்குள் வரும் விஷயத்தில் முதற்பலன்களாக இருக்கின்றனர். "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" (யாக்கோபு 1:18).

இப்படியாக முதற்பலன்களை நாம் இரு கண்ணோட்டத்தில் பார்க்கின்றோம்; உதாரணத்திற்கு, வசந்த காலத்தில் விளையும் மற்றப் பழங்களுக்கு முன்னதாக செம்புற்றுப் பழம் (Strawberry) வருவதினால் நாம் செம்புற்றுப்பழங்களை முதற்பலன்கள் என்று கூறுவோம்; இப்படியாகவே சபை தேவனுடைய சிருஷ்டிகளிலேயே முதற்பலன் என்று சொல்லும்போது, சபையும், மீதமான உலகமனைத்தும் ஒரே சுபாவத்தில் காணப்படுவார்கள் என்பதாக இராது. இன்னுமாக முதலாவதாகப் பழுக்கும்/கனியும் செம்புற்றுப் பழங்கள், செம்புற்றுப் பழங்களிலேயே முதற்பலன்கள் என்றும் நாம் கூறுவோம். இப்படியாகவே நமது கர்த்தர், சபையில் முதற்பலனானவராக இருக்கின்றார்; மேலும் சபை, ஒட்டுமொத்த சிருஷ்டிகளிலுமே முதற்பலன்களாய் இருப்பதினால், கர்த்தர் சபையில் மாத்திரமல்லாமல், ஜீவனுக்கும், பரிபூரணத்திற்கும், மரணத்திலிருந்து எழுப்பப்படுபவர்கள் அனைவரிலும் இந்தத் தலைமையான இடத்தைக்கொண்டிருக்கின்றார்.

R5587

# "சபையின் ஏற்படுத்துதல் (ORDINATION)"

## மத்தேயு 28:16-20; லூக்கா 24:36-49.

"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்." மத்தேயு 28:20.

இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலைப் பின்தொடரும் நாற்பது நாட்களளவும் கொடுத்திட்ட செய்திகள் மூலம், தம்முடைய சபையிடம் அவர் பணியை ஒப்படைப்பதுப் பற்றியே நம்முடைய இப்பாடம் அமைகின்றது. முதலாவதாக எருசலேமுக்கு அருகாமையிலான எம்மாவு என்னும் கிராமத்திற்குச் சீஷர்களில் இருவர் போய்க் கொண்டிருக்கும்போது, அந்தச் சாயங்கால வேளையில் ஆண்டவரினால் கொடுக்கப் பெற்ற வார்த்தைகளை நாம் பெற்றிருக்கின்றோம். அடுத்ததாக இயேசு தம்முடைய சீஷர்களை விட்டுப்பிரிந்து, எடுத்துக்கொள்ளப்படுவதற்குச் சற்று முன்னதாக இயேசுவினால் கூறப்பட்ட பணியின் காரியங்களையும் நாம் பெற்றிருக்கின்றோம்.

எம்மாவுக்குப் போகிற வழியிலும், அடுத்து வந்து இயேசு காட்சியளித்துத் தோன்றின தருணங்களிலும் கொடுக்கப்பட்ட படிப்பினைகள், அவ்வேளையில் காணப்பட்ட கிறிஸ்துவின் பின்னடியார்கள் யாவருக்கும் மிகவும் விலையேறப்பெற்றதாய் இருந்திருக்க வேண்டும். "அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கத்தரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துக்கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" என்று கூறினார் (லூக்கா 24:44-47).

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தை எடுத்திருக்க வேண்டிய சம்பாஷணைகளையும், வேதவாக்கியங்களின் விளக்கங்களையும், சுவிசேஷகன் சில வார்த்தைகளுக்குள்ளாக அடக்கி கூறியுள்ளார். அவர்களுடைய புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கத்தக்கதாக, என்ன விளக்கங்களெல்லாம் கொடுக்கப்பட்டது என்பது நமக்குச் சொல்லப்படவில்லை என்றாலும், அதை நாம் அனுமானிக்கலாம். இயேசு அநேகமாக வருடந்தோறும், அக்குறிப்பிட்ட காலத்தில் அடிக்கப்படும் பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய அர்த்தத்தை அவர்களுக்கு விளக்கி, தாம் அந்த ஆட்டுக்குட்டியினுடைய, நிஜமாக இருப்பதைக் காண்பித்துக் கொடுத்திருந்திருக்கலாம்; பஸ்காவினுடைய அர்த்தத்தை அநேகமாக அவர் விளக்கி இருக்கலாம்; அதாவது நிழலில் இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மரணத்திலிருந்து கடக்கப் பெற்றார்கள் என்றும், இந்த முதற்பேறானவர்கள் ஆசாரியர்களையும் உள்ளடக்கின லேவி கோத்திரத்தாரினால் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள் என்றும், இந்த முதற் பேறானவர்களுக்கான நிஜமாக, (பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாகிய முதற்பலனான) சபை காணப்படுவார்கள் என்றும், இயேசுவின் பின்னடியார்களாகிய பரிசுத்தவான்கள் இராஜரிக ஆசாரியக்கூட்டத்தினராகவும் மற்றும் நிஜமான லேவியர்கள் என்பவர்கள், மேசியாவின் இராஜ்யத்தில் மனுக்குலத்தின் உலகமானது உயர்த்தப்படும் வேலையில், இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாருக்கு வேலைக்காரர்களாகவும் இருப்பார்கள் என்றும் விளக்கியிருந்திருக்கலாம்.

ஆண்டவர் நிஜமான பாவ நிவாரண நாள் குறித்தும், விசேஷித்த பலிகள் குறித்துங்கூடச் சில விளக்கங்களைச் சீஷர்களுக்குக் கொடுத்திருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை; அதாவது, தாமே இந்த விசேஷித்தப் பலிகளை ஆரம்பித்ததாகவும், அது தம்முடைய சீஷர்களினால் தொடரப்படும் என்பதாகவும், பலிகள் நிறைவடையும்போது பிரதான ஆசாரியனிடமிருந்து, ஒப்புரவாகுதலின்/பாவ நிவாரண ஆசீர்வாதங்கள் ஆயிரம்

வருடங்கள் கொண்ட மேசியாவின் இராஜ்யத்தில் கடந்துவரும் என்பதாகவும் ஆண்டவர் விளக்கம் கொடுத்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

## "உன்னதத்திலிருந்து வல்லமை வாக்களிக்கப்பட்டது"

ஆண்டவருடைய மாபெரும் திட்டங்களில் எவைகளெல்லாம் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், ஆண்டவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அவைகளைக் கேட்பதில் ஆழமான ஆர்வத்தை அடைந்திருப்பார்கள் என்பதில் நமக்கு உறுதியே. அவர்களுடைய கவலை மறைந்துவிட்டது. ஆரம்பத்தில் அவர்கள் தங்கள் ஆண்டவரையும், அவருடைய ஆலோசனைகளையும், அவருடைய அறிவுரைகளையும் இழந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்தனர்; ஆனால் இப்பொழுதுதோ இந்தப் பிரகாசிப்பித்தலின் வாயிலாக, அவர்களுடைய இருதயங்கள் அறிவினுடைய புதிய ஏவுதலினால் கொளுந்துவிட்டு எரிந்தது. அவர்களால் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாத தெய்வீகத் திட்டத்தினுடைய உயரங்களையும், ஆழங்களையும், நீளங்களையும், அகலங்களையும் கண்டார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் தூண்டப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தும் நடைபெறுவதற்கு, இயேசுவின் மரணம் அவசியமாய் உள்ளது என்பதை அவர்கள் கண்டுகொண்டார்கள். தங்களுக்கு அவரோடு கூடப் பாடுபடுவதற்கு மாத்திரமல்லாமல், மகிமையடைவதற்குமான சிலாக்கியம் உள்ளதையும், அவர்கள் கண்டுகொண்டார்கள்.

அக்கடைசி தருணத்தின்போதான் ஆண்டவருடைய செய்தியின் நிறைவு பகுதியானது, "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்" என்பதேயாகும் (லூக்கா 24:49). கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை, அவர்களுடைய தலையாகிய இயேசுவிடமிருந்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதைப் பிதா பல்வேறு நிழல்களில் வாக்களித்துள்ளார். உதாரணமாக, இக்காரியத்திற்கு ஆரோனின் தலையில் ஊற்றப்பட்ட பரிசுத்த தைலம் நிழலாகக் காணப்படுகின்றது; ஆரோன் இயேசுவுக்கு நிழலாய் இருக்கின்றார்; மற்றும் ஆரோனின் சரீரத்தில் தைலம் வழிந்தோடின காரியமானது, சபையினுடைய அபிஷேகித்தலுக்கு நிழலாய் இருக்கின்றது.

இப்படியாகச் சபையினுடைய தெய்வீக ஏற்றுக்கொள்ளப்படுதல்/அங்கீகரிக்கப்படுதல் குறித்ததான இந்த வாக்குத்தத்தமானது மிகவும் முக்கியமான காரியமாகும். இது இல்லாமல், சீஷர்களுக்கு எந்தப் பணியும் இருக்காது, மற்றும் சீஷர்களால் தேவனுடைய ஸ்தானாபதிகளாகவும் இருக்க முடியாது. இயேசு முதலாவதாக 12-பேரையும், பிற்பாடு எழுபது பேரையும் அனுப்பி வைத்தது உண்மைதான்; ஆனால், இவர்கள் அவருடைய தனிப்பட்ட பிரதிநிதிகளாகக் காணப்பட்டனர்; அவர் தம்முடைய சொந்த ஆவியையே, தம்முடைய சொந்த வல்லமையையே இவர்களுக்குக் கொடுத்திருந்தார்; மேலும் இதை வைத்துதான் இவர்கள் அற்புதங்களைச் செய்து, பிசாசுகளைத் துரத்தினார்கள். இவர்கள் அப்போது பிதாவினால் அங்கீகரிக்கப்படவில்லை. "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை" (யோவான் 7:39). இந்தப் பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலுக்காகவும், அபிஷேகத்திற்காகவும் இவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்தப் பரிசுத்த ஆவியினால் மாத்திரமே இவர்கள் தெய்வீக ஊழியத்திற்கும், தேவனுடைய ஸ்தானாபதிகளாகவும் மற்றும் பிரதிநிதிகளாகவும் இருப்பதற்கும் தகுதிப்படுத்தப்பட முடியும்.

## "இதோ உங்களுடனேகூட இருக்கிறேன்"

நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்திட்ட ஆசியும், தம்முடைய நற்செய்தியைத் தெரிவிப்பதற்கான பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்ததும் பற்றியதான பரிசுத்தவானாகிய மத்தேயு அவர்களின் பதிவானது, நம்மை வெகுவாய் ஈர்க்கின்றது. கர்த்தர் சந்திப்பேன் என்று கூறியப் பிரகாரமாகமே, பதினொரு பேரும் அவரைக் கலிலேயாவிலுள்ள மலை ஒன்றில் சந்தித்தார்கள். அவர் கொஞ்சம் நேரந்தான் அவர்களுக்குக் காட்சியளித்துத் தோன்றினார். அவர்கள் அவரைப் பணிந்துகொண்டனர், சிலர் முழுமையாய் நம்பிக்கொண்டனர், சிலர் தடுமாற்றத்திலேயே காணப்பட்டனர். இப்படியாக தடுமாற்றத்தில் இருப்பவர்களை நம்ப செய்வதற்கே, இயேசு நாற்பது நாட்கள் பூமியில் காணப்பட்டார். பதினொரு பேரையும் நம்ப வைக்கும் தமது வேலையை, கர்த்தர்

முழுமையாய் நிறைவேற்றினார் என்பதில் நமக்கு உறுதியே; ஏனெனில், அவர்கள் மேல்வீட்டறையில், பெந்தெகொஸ்தேயின் ஆசீர்வாதங்களுக்காகக் காத்திருக்கும்போது, ஒரே இருதயமும், ஒரே மனமும் கொண்டவர்களாய்க் காணப்பட்டார்கள் என்று பார்க்கின்றோம்.

இயேசு அவர்கள் அருகாமையில் வந்து, பூமிக்குரிய காரியங்கள் மற்றும் பரலோகத்திற்குரிய காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில், தமக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இவ்விஷயத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளாதது வரையிலும், அவர்களால் சரியான விதத்தில், உலகத்திற்கு முன்னதாக அவரை அடையாளங்காட்ட முடியாது. இந்த ஓர் அதிகாரத்தையும், வல்லமையையும் அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் காலத்தில் கொண்டிருக்கவில்லை. அவர் தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தினுடைய காலப் பகுதியில், மரணம் வரையிலுமான, அதாவது சிலுவையின் மரணம் பரியந்தமுமான தம்முடைய உண்மையுடன்கூடிய நேர்மைக்கான பரீட்சையின் கீழ்க் காணப்பட்டார். ஆனால் அவர் தம்முடைய நேர்மையை நிரூபித்துக் காட்டின பிற்பாடு, பிதா அவரை மரணத்திலிருந்து மகிமையான பூரண வல்லமைக்கான நிலைமைக்கு எழுப்பினார். இப்படியாக அவர் மரணத்திலிருந்ததான தம்முயை உயிர்த்தெழுதல் வாயிலாக, வல்லமையுள்ள தேவனுடைய குமாரனாக அழைக்கப்பெற்றார். தாம் இனி ஒருபோதும் மனிதனுக்கான எல்லைகளின் கீழ் அல்லது மரண உடன்படிக்கையினுடைய எல்லைகளின் கீழ்க் காணப்படுவதில்லை என்பதை, கர்த்தர் தம் சீஷர்கள் அறிய வேண்டுமென விரும்பிட்டார். அந்த வேலையைக் கர்த்தர் நிறைவேற்றிவிட்டார். அவர் ஆசீர்வாதத்திற்குள், பலனுக்குள் இப்பொழுது பிரவேசித்திட்டார். அவர் சுபாவ மாற்றத்தை அடைந்துவிட்டார் மற்றும் இப்பொழுது அவர் பூமிக்குரிய காரியங்களில் மாத்திரமல்லாமல் பரம காரியங்களிலும் அனைத்து வல்லமையையும் பெற்றுள்ளார்.

வானோர் மற்றும் பூதலத்தார் அனைவரும் அவருக்கு முன்பாக வணங்கிடுவார்கள் என்பதாகத் தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்க்கத்தரிசனமானது நிறைவேற ஆரம்பிக்கும் நிலைக்கு அவர் வந்திருக்கின்றார். அவர் பரத்திற்கு ஏறிச்சென்றார்; அங்குத் தேவதூதர்கள் அனைவரும் அவரைப் பணிந்துக்கொண்டு, அவர் பிதாவினால் உயர்த்தப்பட்டவரென அவருக்குச் செவிக்கொடுக்கின்றனர். தீர்க்கத்தரிசனத்தின்/வாக்குத்தத்தத்தின் ஒரு பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. அதாவது, பூலோகத்தார் யாவரும் அவர் முன் வணங்கிட வேண்டுமென்ற பாகம் இன்னமும் நிறைவேறவில்லை. இப்படியாகச் சம்பவிப்பதற்கான காலம், ஆயிர வருடங்கள் கொண்ட அவருடைய மேசியாவின் இராஜ்யத்திலேயே ஆகும். ஆனால் தற்காலத்தில் இயேசு, தேவனுடைய குமாரன் என்ற அறிவிற்குள்ளாக வருபவர்கள் அனைவரும், அவர் பிதாவின் பிரதிநிதி என்ற விதத்தில், தங்கள் முழங்கால்களை அவருக்கு முன்பாக மகிழ்ச்சியுடன் முடக்குகின்றனர். இப்படியாகவே உலகமும் அவரை ஒரே பேறான குமாரன் என்று அடையாளம் கண்டுகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிவார்கள்.

இறுதியில் எல்லா முழங்கால்களும் முடங்கும், எல்லா நாவுகளும் அறிக்கைப் பண்ணும்; தெய்வீக ஏற்பாட்டின்படி, தேவனுடைய மகிமைப்படுத்தப்பட்ட குமாரனை ஏற்றுக்கொள்ள தவறுபவர்கள் அனைவரும் அழிக்கப்படுவார்கள்; அதாவது, தேவன் கிறிஸ்து மூலமாய் விழுந்துபோன சந்ததிக்கு வடிவமைத்திட்ட ஆசீர்வாதங்களையும், தேவக் கிருபைகளையும், இன்னமும் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரர்களாகக் கருதப்படுவார்கள்.

## ''ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், உபதேசம் பண்ணுங்கள்''

இங்குதான் உருவாகின்றது, ஊழிய பொறுப்பு ஒப்படைக்கப்படும் காரியம். முதலாவது இந்தப் பணி பதினொரு அப்போஸ்தலர்களுக்கு உரியதாய் இருந்தது; பின்னர், இதனுள் யூதாசுக்குப் பதிலாக வந்த பரிசுத்தவானாகிய பவுலும் இடம்பெறுகின்றார். ''மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்'' என்று பவுல் குறிப்பிடுகின்றார் (2 கொரிந்தியர் 11:5). அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்குமான வாய்க்கருவிகளாக, உலகத்திற்கு காணப்படுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு வாரிசாக, அப்போஸ்தல கண்காணிகள் காணப்படுகின்றார்கள்

எனச் சொல்லப்படுவது அனைத்தும் தவறான காரியமாகவும், வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காததுமாக இருக்கின்றது. அப்போஸ்தலர்களுக்குப் பின்வரும் அப்போஸ்தலர்கள் என்று எவரும் இல்லை; அப்போஸ்தலர்கள் இன்னமும் நம்முடன் காணப்படுகின்றனர்; இவர்கள் மூலமான ஆண்டவருடைய செய்தியானது, நமக்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16, 17). அப்போஸ்தலர்களிடமே சபையை ஆரம்பித்து வைப்பதற்கான மாபெரும் வேலை ஒப்படைக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளன்று வல்லமையினைப் பெற்றுக்கொண்டார்கள்.

இயேசு 12-அப்போஸ்தலர்களைச் சபைக்கான வாய்க் கருவிகளாக/ பிரதிநிதிகளாக விசேஷமாய் நியமித்தது, அவர்கள் பூமியிலே எதைக் கட்டுகிறார்களோ, அது பரலோகத்திலும் கட்டப்படும் என்றும், அவர்கள் பூமியிலே எதை அவிழ்க்கின்றார்களோ, அது பரலோகத்திலும் அவிழ்க்கப்படும் என்றும் தெரிவித்திருந்தாலும், சபையினுடைய ஒவ்வொரு அங்கமும் தம்முடைய பிரதிநிதியாக இருக்கத்தக்கதாகவும், அவரவருடைய வாய்ப்பு மற்றும் திறமைக்குத் தக்கதாக சுவிசேஷச் செய்தியை அறிவிக்கும் வேலையில் பங்கடையத்தக்கதாகவும் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகத்தையும், ஜெநிப்பித்தலையும் அடைந்தவர்கள், ஏசாயா 61:1-3-ஆகிய வசனங்களின்படி, அபிஷேகிக்கப்பட்ட தலையாகிய இயேசுவின் கீழ், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும் . . . அவர் என்னை அனுப்பினார்" (ஏசாயா 61:1-3). பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ள அனைவரும் இப்படியாக அவன் (அ) அவளுடைய வாய்ப்பு (அ) வரம்பு (அ) சூழ்நிலைகளுக்கு ஏற்ப பிரசங்கிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளனர். சகோதரிகள் பொதுவிடங்களில் போதிக்கக்கூடாது என்பது அப்போஸ்தலர் கொடுத்திட்ட ஒரு கட்டுப்பாடாகும் (1 தீமோத்தேயு 2:12). எனினும் அனைவருக்கும், அநேகமான வாய்ப்புகள் உள்ளது.

ஆனால் கிறிஸ்தவ மண்டலத்தின் குருமார் வகுப்பார் (clergy class), அதாவது தாங்கள் மாத்திரமே தேவனுடைய செய்தியைப் போதிப்பதற்கு (அ) பிரசங்கிப்பதற்கு அதிகாரம் உடையவர்கள் என்று தங்களைக் குறித்துக் கூறிக்கொள்பவர்களாகிய குருமார்கள், மாபெரும் தவறை செய்துள்ளனர். இயேசுவும் சரி, அப்போஸ்தலர்களும் சரி, குருமார் வகுப்பாரை (clergy) (அ) கிறிஸ்தவ பொதுமக்கள் வகுப்பாரை(laity) தங்கள் மத்தியில் கொண்டிருக்கவில்லை. மாறாக, நமது கர்த்தர், "நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். . . கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" என்றே கூறியுள்ளார் (மத்தேயு 23:8, 10). ஆண்டவரும், அவரது பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் ஆண்டவருடைய சீஷர்கள் மத்தியில் குறிப்பிட்ட வகுப்பாரை, மாபெரியவர்கள் போல் நாடுவதையும் மற்றும் குருமார் வகுப்பார் போன்ற காரியத்தையும் தடை பண்ணுகிறவர்களாகவே காணப்பட்டனர்.

## "சபைக்கான பணி"

"ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளிலிருந்தும் சீஷர்களை உருவாக்கிடுங்கள்" (சரியான மொழிப்பெயர்ப்பு) என்ற செய்தி அப்போஸ்தலர்களுக்கு வழங்கப்பட்டது. ஜாதிகளை/தேசங்களைச் சீஷராக்க வேண்டும் என்பதாக பணி கொடுக்கப்படவில்லை; மாறாக, அனைத்துத் தேசங்களிலிருந்தும், கிறிஸ்துவின் சீஷர்களாகும்படிக்கு விரும்புபவர்கள் ஐசுவரியவான்களாகவோ (அ) தரித்திரர்களாகவோ, கல்வியறிவு உடையவர்களாகவோ (அ) கல்வி அறிவு இல்லாதவர்களாகவோ, இழிவானவர்களாகவோ (அ) மேன்மையானவர்களாகவோ இருந்திட்டாலும், அவர்களைச் சேர்த்துக் கொள்வதே பணியாகும். கிறிஸ்துவின் சீஷன் என்பவன் அவருடைய

பின்னடியானவனாகவும், கற்றுக்கொள்கிறவனாகவும், பின்பற்றுகிறவனாகவும் இருக்கின்றான். இந்தச் சீஷத்துவத்தை இயேசு பின்வருமாறு விளக்குகின்றார்; அதாவது, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், (என்னுடைய சீஷனாக இருக்கவிரும்பினால்) அவன் தன்னைத் தான் வெறுத்து, (தன்னையும், தனது தாலந்துகளையும், தனது சித்தத்தையும், தனது ஆஸ்தியையும், தன்னுடைய அனைத்தையும் தள்ளிவைத்துவிட்டு, சீஷத்துவத்தை முதலாவதாக நிறுத்தி) தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24).

கிறிஸ்துவின் உண்மையான பின்னடியார்களாகவும், உண்மையான சீஷர்களாகவும் காணப்படும் அனைவரும், கர்த்தர் தங்களை வழிநடத்துகின்ற பாதை கடினமான ஒன்று என்றும், இப்பாதையில் தங்கள் சொந்த சித்தங்கள் தொடர்ந்து சிலுவையில் அறையப்பட்டு, கீழ்ப்படுத்தப்பட வேண்டும் என்றும், இப்பாதையில் தங்களுக்கு மாம்சத்தின் விஷயத்தில் எப்போதும் சிரமம்/பிரச்சனை காணப்படும் என்றும் உணர்ந்துக்கொள்வார்கள். எனினும் இறுதியில் நான் எங்கே இருக்கின்றேனோ (பரலோகத்தில் (அ) மகிமையின் இராஜ்யத்தில்) அங்கே என் சீஷர்களும் இருப்பார்கள்" என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துவினுடைய சபையின் தண்ணீர் ஞானஸ்நானமானது, உலகத்திற்கு மரித்திருக்கிற காரியத்திற்கும், சுயத்திற்கு மரித்திருக்கிறதற்கும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினராக, புதிதான ஜீவனுக்குள் எழுந்திருக்கிறதற்குமுரிய அடையாளமாகப் பார்க்கப்பட்டாலும், தண்ணீர் ஞானஸ்நானமானது வெறும் ஓர் அடையாளமே. ஆகையால் நமது பணி தண்ணீர் ஞானஸ்நானம் வழங்குவதாக இல்லாமல், மாறாக பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக கொடுக்கப்பட வேண்டிய ஞானஸ்நானமாய் இருக்கின்றது என நமக்குக் கூறப்பட்டுள்ளது. "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக ஞானஸ்நானம் கொடுங்கள்" (சரியான மொழிப்பெயர்ப்பு) எனும் வசனத்தில் இடம்பெறும் **"நாமத்திற்குள்ளாக"** எனும்போது, இது ஐக்கியத்திற்குள்ளாக ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்துவின் சீஷர்கள் அனைவரும், பிதாவினுடைய நாமம், நீதியின் சார்பில் உள்ளது என்பதை அங்கீகரிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும்; மற்றும் அவரது நாமத்தை முன்வைக்கும் கொள்கையைத் தவிர, மற்ற அனைத்துக் கொள்கைகளுக்கும் அவர்கள் மரித்தவர்களாய் இருக்க வேண்டும்; மற்றும் நீதியின், நியாயத்தின், உண்மையின் நாமத்திற்குள்ளாக அவர்கள் முற்றும் முழுமையாய் மூழ்கிக் காணப்பட வேண்டும்.

கிறிஸ்துவின் சீஷர்கள் மற்ற நாமங்களாகிய லுத்தரன்ஸ் (Lutherans) (அ) கல்வீனிஸ்ட் (Calvinist) (அ) உரோமன் கத்தோலிக்கம் (அ) கிரேக்க கத்தோலிக்கம் (அ) ஆங்கிலிக்கன் கத்தோலிக்கம் (Anglical Catholic) (அ) வெஸ்லியன்ஸ் (Wesleyans) ஆகியவைகளைப் புறக்கணித்துவிட்டு, கிறிஸ்துவின் நாமத்திற்குள்ளாக மூழ்கிட வேண்டும்; மற்றும் அவருடைய நாமத்தையும் அங்கீகரித்திட வேண்டும்; மற்றும் அவருடைய சரீரமாகவும், அவருடைய சபையாகவும், அவருடைய அங்கத்தினர்களாகவும் காணப்பட வேண்டும். இன்னுமாக அவர்கள் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாகவும் மூழ்கிட வேண்டும்; மற்றும் பரிசுத்த ஆவியை அங்கீகரித்திட வேண்டும்; அதாவது, தங்கள் சொந்த ஆவியையும், தங்கள் சொந்த சித்தத்தையும் மரிக்கப் பண்ணி, அவர்கள் பரிசுத்த ஆவியினை அங்கீகரித்திட வேண்டும். அவர்களுடைய சொந்த இலட்சியங்களும், நம்பிக்கைகளும், எதிர்ப்பார்ப்புகளும் புறக்கணிப்பட வேண்டும். தேவனுடைய பரிசுத்தமான சித்தமும், தேவனுடைய மனதும், தேவனுடைய பரிசுத்தமான நோக்கமுந்தான் அவர்களுடைய சித்தமாகவும், நோக்கமாகவும் காணப்பட வேண்டும்.

இப்படியாக எல்லா தேசங்களிலுமுள்ள, எல்லா ஜனங்கள் மத்தியில் நமது செய்தியைக் கேட்கிறதற்குச் செவியுடையவர்களிடத்தில், நமக்கான பணி காணப்படுகின்றது. நாம் அப்படிப்பட்டவர்களைச் சீஷராக்கி, அவர்களைப் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியினுடைய நாமத்திற்குள்ளாக முழுகப் பண்ணிட வேண்டும். இயேசு கட்டளையிட்டவைகளையெல்லாம் கடைப்பிடிக்கும்படிக்கு நாம் அவர்களுக்கு உபதேசத்திட வேண்டும். இதுவே நம்முடைய அதிகாரத்தினுடைய எல்லையாக இருக்கின்றது. நாம் மனித அமைப்புகளை உருவாக்கவுங்கூடாது; மற்றும் உருவாக்கிக் கொண்டு, அதனை இராஜ்யங்கள், சபைகள் என்றோ (அ) வேறு நாமத்திலோ அழைக்கக்கூடாது. நாம் இயேசுவின் பின்னடியார்களை ஆயத்தம் மாத்திரமே பண்ணவேண்டும்; தேவனோடு

ஒத்தழைக்க மாத்திரமே வேண்டும்; தமது தயவுள்ள திருவுளத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உண்டு பண்ணுபவராகிய தேவனோடு, நாம் ஒத்துழைக்க மாத்திரமே வேண்டும்.

## "உலகத்தின் முடிவு பரியந்தம்"

"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" இயேசுவின் இந்த வார்த்தைகளானது, உலகம் ஒரு முடிவிற்கு வரும் என்பதைத் தெரிவிப்பதாகப் புரிந்துக்கொள்ளப்படுகின்றது; ஆனால் கிரேக்க மொழி அர்த்தத்தின்படி பார்க்கும் போது, ஆண்டவர் யுகத்தின் முடிவு வரையிலும் தம்முடைய ஜனங்களோடு இருப்பார் என்பதே ஆண்டவர் உண்மையிலேயே கூறினவைகளாகும்; அதாவது தெய்வீக நோக்கம் நிறைவேற்றப்படத்தக்கதாக, போதுமான எண்ணிக்கையில் கிறிஸ்துவின் சீஷர்கள் சேர்க்கப்படுவதாகிய தெய்வீக நோக்கத்துடன் கூடிய பணியைச் சுவிசேஷ யுகமானது முடிப்பது வரையிலும், சுவிசேஷச் செய்தியானது, இராஜரிக கூட்டத்தாராகிய, மகிமையிலுள்ள கிறிஸ்துவின் மணவாட்டிக்கான எண்ணிக்கை நிறைவடையத்தக்கதாக, (சீஷர்களை) சத்தியத்திற்குக் கீழ்ப்படியப் பண்ணுவதன் மூலமாக (அவர்களிடத்தில்) பரிசுத்தமாக்கப்படுதலை நிறைவேற்றி முடிப்பது வரையிலும், அவர் தம்முடைய ஜனங்களோடுகூடக் காணப்படுவார். பின்னர் யுகத்தினுடைய முடிவுவரும். பின்னர் ஆண்டவர்தாமே, தம்முடைய தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதற்கும், அவர்களைத் தம்மோடுகூட மகிமைப்படுத்துவதற்கும், தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் அல்லாத மனுக்குலத்தின் உலகத்தாரை ஆசீர்வதிப்பதற்குமென வருவார்.

---

**R5588**

# "அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு..."
## லூக்கா 24:50-53; அப்போஸ்தலர் 1:1-11.

"மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?"—யோவான் 6:62.

நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, அவர் பூமியில் நாற்பது நாட்கள் காணப்பட்ட காரியம், தெய்வீக நோக்கம் நிறைவேற்றப்படுவதற்குப் போதுமான காலமாய் இருந்தது. இஸ்ரயேலையும், உலகத்தையும் ஆளத்தக்கதாக, சிங்காசனத்தில் இருக்கப்போகிறவர் என்று சீஷர்களால் அனுமானிக்கப்பட்டவர், சிலுவையில் அறையப்பட்டதினிமித்தமாக, ஆரம்பத்தில் சீஷர்களுக்கு ஏற்பட்ட குழப்பம் இப்போது நீங்கிவிட்டது. உண்மைகளை சீஷர்களுக்குத் தெரிவித்தக்காரியத்தில், தெய்வீக ஞானம் விளங்குவதை நம்மால் காணமுடிகின்றது. இயேசு பிற்பாடு, தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்குக் காட்சியளித்ததுபோல, ஒருவேளை உயிர்த்தெழுந்த காலகட்டத்தின்போது, சூரியனுடைய பிரகாசத்திலும் மேலான ஒளியில் காட்சியளித்திருந்தால், சீஷர்கள் எப்படிப் பயமுறுத்தப்பட்டிருப்பார்கள்; ஆனால் இயேசு காட்சியளித்த விதத்தில், சீஷர்கள் இப்படியாகவெல்லாம் பயமுறுத்தப்படவில்லை. சீஷர்கள் தங்களுடைய கர்த்தர் இனி ஒருபோதும் மரித்தவர் அல்ல என்றும், அவர் உயிரோடு இருக்கின்றார் என்றும், அவர் இனி ஒருபோதும் ஒரு மனித ஜீவியாக இராமல், மாறாக ஆவிக்குரிய ஜீவியாக இப்பொழுது காணப்படுகின்றார் என்றும், அவர் இனி மனிதன் போல் நடக்க வேண்டியதில்லை என்றும், மாறாக தேவதூதர்கள்போல், காற்றைப்போன்று வரலாம், போகலாம் மற்றும் விரும்பினால் தோன்றலாம், மறையலாம் என்றும் படிப்படியாகக் கற்றுக்கொண்டார்கள்.

அது மெதுவாகப் புகட்டப்பட்ட பாடமாகும். முதலாம் நாளில் மூன்றுமுறை அவர் காட்சியளித்த பிற்பாடு, அடுத்த ஓய்வுநாளில் அவர் நாலாம்முறைக் காட்சியளிப்பது வரையிலும், இடைப்பட்ட ஒவ்வொரு நாட்களிலும் அவருக்காக எதிர்ப்பார்த்துச் சீஷர்கள் காத்திருந்தனர். இந்தத் தாமதமானது, அவரைப்பற்றின அறிவிற்கான அவர்களது பசியை, தாகத்தையே தூண்டினது. இதற்கிடையில், இயேசு தம்முடைய பூமிக்குரிய

ஊழியத்தின்போது, தங்களிடம் கூறியக் காரியங்களைக் குறித்து, சீஷர்களால் சிந்தித்துப்பாக்க முடிந்தது, மற்றும் சிந்திக்கவுஞ்செய்தார்கள். தாங்கள் பரலோக இராஜ்யத்திற்குப்பதிலாக, பூமிக்குரிய இராஜ்யத்தை எதிர்ப்பார்த்ததில் தவறு செய்துள்ளார்கள் அல்லது மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தைத் தவறாய்ப் புரிந்துக்கொண்டுள்ளார்கள் என்று சீஷர்கள் உணர்ந்துகொண்டனர்.

எம்மாவு எனும் ஊருக்குப் போகிற வழியில் கொடுக்கப்பட்ட பாடமானது, மிகவும் மனதில் பதியப் பெற்றதாய்க் காணப்பட்டிருக்க வேண்டும். அந்தப் பாடமானது இயேசுவைப்பற்றின தீர்க்கதரிசனங்களைக் கையாளுகிறதாய் இருந்து, எப்படி இந்தத் தீர்க்கத்தரிசனங்கள் ஏற்கெனவே நிறைவேறிவிட்டது, அதாவது இந்தத் தீர்க்கத்தரிசனங்களில் சில எற்கெனவே நிறைவேறிவிட்டது என்பதையும், சில இன்னும் எதிர்க்காலத்தில் நிறைவேறும் என்பதையும் அவர்களுக்கு விளக்கிக் கொடுத்ததாய் இருந்தது. அவர் இந்த விளக்கங்களையெல்லாம் கொடுத்தபோது, அவர்கள் தங்கள் இருதயங்கள் கொழுந்துவிட்டு எரிந்தது என்று சரியாகத்தான் சொல்லியிருக்கின்றனர்!

## "ஒரு முக்கியமான படிப்பினை"

நான்கு முறை அவர் காட்சியளித்துத் தோன்றின பிற்பாடு, அவர் இரண்டு வாரமளவும் எவ்விதமாகவும் காட்சியளித்துத் தோன்றவில்லை. அப்போது அவர்களது பதற்றமான நிலைமை தணிந்தது; மற்றும் பூமிக்குரிய காரியங்கள் (தேவைகள்) அவர்களிடத்தில், சிலவற்றை வலியுறுத்தவும் ஆரம்பித்தன. சீஷர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? இயேசு தங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக அழைப்பதற்கு முன்னதாக, தாங்கள் பண்ணிக்கொண்டிருந்த தொழிலுக்குத் திரும்ப வேண்டுமெனச் சீஷர்கள் அவரவர் தங்களுக்குள்ளாக எண்ணிக்கொண்டிருந்தனர்; ஆனால், எவருமே இந்த முடிவை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தத்தக்கதாக பேச்சைத் துவக்கவில்லை. செய்கைக்கும், எண்ணங்களுக்கும் எப்போதும் தலைவனாக இருந்த பரிசுத்தவானாகிய பேதுரு, இறுதியில் தன்னுடைய தீர்மானத்தைத் தெரிவிக்கும் வண்ணமாக, "மீன்பிடிக்கப் போகிறேன்," அதாவது நான் மீன் பிடிக்கும் தொழிலுக்கு மீண்டும் திரும்பப்போகிறேன் என்று கூறினார். பேதுருவின் இந்த ஒரு வார்த்தைப் போதுமானதாய் இருந்தது. மற்றவர்களும் இதே மனநிலையில் காணப்பட்டபடியால், பழைய மீன்பிடிக்கும் தொழில் மறுசீரமைக்கப்பட்டது.

இப்படியான ஒரு தீர்மானம் எடுக்கப்படத்தக்கதாகவே, இயேசு தாம் பரமேறிச் செல்வதைத் தாமதித்தார். தாம் இல்லாத போதும், தம்முடைய ஆசியுடன், சீஷர்கள், மனிதர்களைப் பிடிக்கும் வேலையைத் தொடர வேண்டும் என்பதைச் சீஷர்களுக்கு காண்பித்துக்கொடுக்க கர்த்தர் சித்தமாயிருந்தார். ஆண்டவர் அவர்களது நன்மைகளுக்கடுத்த காரியங்களில் கண்ணோக்கமாய் இருந்து, அந்த இரவில், அவர்களுக்கு எந்த மீனும் அகப்படாதபடிக்குப் பார்த்துக்கொண்டார். அவர்களால் எந்த மீனையும் பிடிக்க முடியவில்லை; அவர்கள் சோர்ந்து போனார்கள், எனினும் இது அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவானதுதான்; "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்ற வசனத்தில் சொல்லப்பட்டதுபோல், இவர்களுக்குப் பண விஷயத்தில் ஏற்பட்ட சோர்வுகூட நன்மைக்கு ஏதுவானதுதான் (ரோமர் 8:28).

காலையில் இயேசு கரையில் நின்றுகொண்டு, விற்பதற்கு மீன் வைத்திருக்கின்றார்களா என அவர்களைக் கூப்பிட்டுக் கேட்டார். அவர்கள் தங்களுக்கு எதுவும் அகப்படவில்லை என்றார்கள். "நீங்கள் படகுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள்" என்று ஆண்டவர் கூறினார். இப்படியான அறிவுரை முட்டாள்தனமானது என்று அவர்கள் கூறியிருந்திருக்கலாம், ஆனால் அவர்களோ இந்தத் தங்களுடைய துரதிர்ஷடத்தை மாற்றுவதற்கு எதையும் செய்யும் மனநிலையில் காணப்பட்டனர். அவர் சொன்னபடியே, அவர்கள் வலையைப் போட்டார்கள்; உடனடியாக வலை பெரிய மீன்களால் நிரம்பிற்று. அப்போது கரையில் நின்று கொண்டிருப்பவர், தங்களுடைய உயிர்த்தெழுந்த கர்த்தரானவர், தங்களுக்குக் காட்சியளிக்க, மறுபடியும் தோன்றியுள்ளார் என்பதை அறிந்துக்கொண்டார்கள்.

அந்த மீனவர்கள் (சீஷர்கள்) கரைக்கு வேகமாய் வந்தனர். இதுபோன்ற மீன் அதிகமாய் அகப்படும் காரியத்தின் அனுபவத்தை, ஆண்டவர் முன்னொரு தருணத்தின்போது கொடுத்ததை, அவர்கள் அறிந்திருந்தனர்; இது போன்றதான அனுபவமானது, இதற்கு முன்பு ஒரே ஒரு முறைதான் அவர்களுக்கு நடந்துள்ளது. பரிசுத்தவானாகிய பேதுருவுக்காக, படகு மிகவும் மெதுவாகவே நகர்ந்தது. ஆண்டவர் மறைந்துவிடுவார் எனப் பேதுரு அஞ்சினார். பேதுரு தன் மேற்சட்டடையைக் கட்டிக்கொண்டு, கடலிலே குதித்து, கரைக்கு நீந்திச் சென்றார். ஆண்டவர் மறைந்து போகவில்லை, அவர் பரிசுத்தவானாகிய பேதுருவையும், மற்றவர்களையும், ஏற்கெனவே நெருப்பில் வைக்கப்பட்டிருந்த மீனை, காலை உணவாகப் புசிக்கும்படிக்கு, (போஜனம் பண்ணுங்கள் என்று கூறி) வரவேற்றார்.

இங்கு மாபெரும் படிப்பினைக் கொடுக்கப்பட்டது. தேவையான போதெல்லாம் தங்களுடைய ஆண்டவரால் தங்களுக்கும் சமைத்த மீனைக்கொடுக்க முடியும் என்றும், தங்களுடைய மீன் பிடிக்கும் தொழிலில், அவர் சிறந்தது/நன்மையானதெனக் காண்பதற்கேற்ப தங்களுடைய தொழிலில் ஜெயத்தை அவரால் கொடுக்க முடியும் என்றுமுள்ள படிப்பினைகள் கொடுக்கப்பட்டது. இந்தத் தருணத்தில் அவர்களுடைய தேவைகளை இவ்விதமாய்ச் சந்தித்த அவரால், இவ்விதமாகவே எதிர்க்காலத்தில் அவர்களைத் தம்முடைய நாமத்தில் பேசும்படிக்கு அதிகாரமளித்து, அனுப்பி வைக்கும் போதும் சந்திக்க முடியும். சீஷர்களில் எவரும், கரையில் நிற்கும் முன்பின் தெரியாக அந்த நபருடைய பெயர் என்ன என்று கேட்கவில்லை; ஏனெனில் கரையில் நிற்கும் நபருடைய தோற்றமும், அணிந்துள்ள வஸ்திரமும் வித்தியாசமாகக் காணப்பட்டாலுங்கூட, இனி ஒருபோதும் மனித ஜீவியாகக் காணப்படாதவரும், பல்வேறு உருவங்களை எடுத்துக் காட்சியளித்துத் தோன்றுவதற்குரிய வல்லமையை உடையவருமாகிய கர்த்தரே, இன்னொருமுறை காட்சியளித்துத் தோன்றியுள்ளார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

பாடம் கற்பிக்கப்பட்டது, இயேசுவும் மறைந்து விட்டார். இன்னொரு முறையும், அவர் தம்முடைய பின்னடியார்களைக் கலிலேயாவில் வைத்துச் சந்தித்தார். இந்தச் சந்திப்பானது, முன்கூட்டியே சொல்லி வைக்கப்பட்டு, ஏற்பாடு பண்ணப்பட்ட சந்திப்பாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில், இயேசு தம்முடைய பின்னடியார்களைச் சந்திப்பதாக முன்னமே தெரிவித்தார். கிட்டத்தட்ட ஐந்நூறு சகோதர சகோதரிகள் அவரைச் சந்தித்தாகவும், அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக இருந்ததாகவும் பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 15:6).

## "நமது கர்த்தருடைய இறுதி அறிவுரைகள்"

நம்முடைய இந்தப் பாடமானது, விசேஷமாக இயேசுவின் பரமேறுதல் பற்றியதாகும். இது எருசலேமுக்கு அருகாமையிலான பெத்தானியாவில் நடைப்பெற்றது. அவர் தம்முடைய பின்னடியார்களை, பரிசுத்த நகரமாகிய எருசலேமில் சொல்லியிருந்தபடியே, மிகவும் அதிகாலமே சந்தித்திருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது. அவர், அவர்களைப் பெத்தானியாவுக்குக் கூட்டிக் கொண்டு போகும்போதுதான், அவர்கள் அறிந்திருப்பது அவர்களுக்கு நலமானது என்றுள்ள காரியங்களையும், அவர் அவர்களை விட்டுப் பிரிவதற்கு முன்னதாகவும், அவர் இனிமேல் அனுப்பவிருக்கின்ற ஆசீர்வாதங்களுக்காக அவர்கள் ஆயத்தப்படத்தக்கதாக, சரியான விசுவாசத்தில் அவர்கள் காணப்படுவதற்கு முன்னதாகவும், அவர்கள் முற்றும் முழுமையாக நம்ப அவசியமானவைகளையும் அவர் விவரித்துக்கொண்டு வந்தார்.

அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தை எழுதின பரிசுத்தவானாகிய லூக்கா அவர்கள், நாற்பது நாட்களளவும் காணப்பட்ட இயேசுவின் போதனைகளுடைய சாரம், தேவனுடைய இராஜ்யம் பற்றியதாகும் என்று நமக்குக் கூறியுள்ளார். ஆனாலும் அவர்கள் இன்னமும் புரிந்துக்கொள்ளவில்லை; அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுவது வரையிலும், அவர்களால் முழுமையாய்ப் புரிந்துக்கொள்ள முடியாது என்பது உண்மையே. ஆகையால்தான், அவர்கள் எருசலேமை விட்டுப்போகாமலும், எவ்விதமான பிரசங்கம் பண்ணும் வேலையில் ஈடுபடாமலும் இருந்து, பிதா வாக்களித்துள்ளதாக இயேசுவினால் ஏற்கெனவே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட, பரிசுத்த ஆவி எனும் வரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகக் காத்திருக்க மாத்திரமே செய்ய வேண்டுமென்ற காரியத்தை

இயேசு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். யோவான் ஸ்நானன் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் கொடுத்தார் என்றும், ஆனால் தாமோ தம்முடைய பின்னடியார்கள் மேலான ஞானஸ்நானமும், தகுதியும் பெற்றுக்கொள்ள நோக்கமாய் இருக்கின்றார் என்று, அதாவது பெந்தெகொஸ்தே அன்று, ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள நோக்கமாய் இருக்கின்றார் என்று, இயேசு அவர்களுக்கு விவரித்தார்.

இந்தக் கடைசி தருணமாகிய, ஏழாவது காட்சியின் போது, "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரயேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" எனும் மிகவும் முக்கியமான கேள்வியைக் கேட்கும் அளவுக்குரிய நிலைமைக்குச் சீஷர்கள் வந்துவிட்டனர் (அப்போஸ்தலர் 1:6). இராஜ்யமானது யூதேயாவின் இராஜாவாகிய சிதேக்கியாவின் காலத்தில் இஸ்ரயேலிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. அப்போது தேவன், "உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்" என்ற வார்த்தைகளைக் கூறியிருந்தார் (எசேக்கியேல் 21:25-27).

சீஷர்கள் இயேசுதான் மேசியா என்று எண்ணினார்கள் மற்றும் அவருக்கு இராஜ்யத்தை அளிப்பதற்கான பிதாவின் வேளை வந்துவிட்டது என்றும் எண்ணினார்கள். ஆனால் இவைகளுக்கு நேர்மாறாக, பரலோக இராஜ்யமானது ஆளுகிறவர்களின் கையில் பலவந்தஞ் செய்யப்பட்டதையும், சிங்காசனத்திற்குரிய வாரிசானவர் கொல்லப்பட்டார் என்பதையும் அவர் மரித்தோரிலிருந்து எழுந்துள்ளார் என்பதையுந்தான் சீஷர்கள் கண்டார்கள். இராஜா என்று ஒருவர் இருப்பார் என்ற நம்பிக்கையை, அவர்கள் மீண்டும் அடைந்துவிட்டனர் மற்றும் ஆண்டவர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு இக்காலத்திலா (அ) எதிர்க்காலத்திலா வருவார் என்று இப்பொழுது அவரிடம் கேட்கின்றனர்.

"பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப்போஸ்தலர் 1:7) என்ற ஆண்டவருடைய பதிலானது அர்த்தமுடையதாகும். தம்முடைய சீஷர்கள் நியமிக்கப்பட்ட வேளையில், காலங்களையும், வேளைகளையும் குறித்து அறிந்துக்கொள்வார்கள் என்று ஆண்டவர் எற்கெனவே அவர்களுக்குத் தெரிவித்திருந்தார்; ஆனால் இக்காரியங்களையெல்லாம் அவர்கள் புரிந்துக்கொள்வதற்கு அப்போது ஏற்றவேளையாக இருக்கவில்லை. அவர்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். அவர்களுக்குள் பொறுமை வளர்வது என்பது, அவர்களுக்கு நன்மையை உண்டுபண்ணுகிறதாகவும், அவர்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்துகிறதாகவும், அவர்களுடைய குணலட்சணங்களைப் பலப்படுத்துகிறதாகவும் இருக்கும்.

மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னதாக, கிட்டத்தட்ட 19 நூற்றாண்டுகள் காலமான நீண்ட இடைவெளி காணப்படுமெனப் பிதா அப்போது தெரியப்படுத்தியிருப்பாரானால், அது ஞானமான காரியமாக இருந்திருக்காது; இன்னுமாக தங்கள் நம்பிக்கைகள் தொடர்புடைய விஷயத்தில், நீண்டகால இடைவெளி இருப்பது என்பது கர்த்தருடைய ஜனங்களைச் சோர்வடையப் பண்ணிவிடுவதினால், இக்காரியத்தைப் பிதா வெளிப்படுத்துவது, அவர்களுடைய நன்மைக்கு ஏதுவானதாகவும் இராது. அவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும் என்றும், அவர்கள் பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகித்தலை அடைவது வரையிலும் தேவனுடைய திட்டம் தொடர்புடைய எதையும் புரிந்துக்கொள்ள விசேஷமாய் எதிர்ப்பார்த்திட வேண்டாம் என்றும் மாத்திரமே ஆண்டவர் சுட்டிக்காட்டினார்.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாக இருப்பதற்கும், அவருடைய செய்தியை எடுத்துப் பேசுவதற்கும் முழுமையாய்த் தகுதியடைவார்கள்; மற்றும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர்களுக்கு, "ஏற்ற கால சத்தியம்" வழங்கப்படும். இப்படியாக அவர்கள் உலகத்தாரோடு இருளில் காணப்பட மாட்டார்கள்; இன்னுமாக கர்த்தருடைய நாளும், அவர்கள்மேல் இரவில் திருடன் வருகிற பிரகாரமாக (அ) கண்ணியாக வருவதில்லை. பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்களானது, அவர்களுடைய சுபாவக் குறைவுகளை மூடிப்போடவில்லை என்றாலும், அவர்களை ஊழியத்திற்கு முற்றும் முழுமையாய்த் தகுதிப்படுத்திற்று; ஏனெனில், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, "ஜனங்கள் அவர்கள்

படிப்பறியாதவர்களென்றும், பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (அப்போஸ்தலர் 4:13).

## "நமது கர்த்தரின் பரமேறுதல்"

நமது கர்த்தருடைய பரமேறுதல் என்பது, உலகத்தைப் பொறுத்தமட்டில் அல்லாமல், மாறாக அவருடைய சபையைப் பொறுத்தமட்டில் கவனத்தை ஈர்க்கும் ஒரு காட்சியாகும். உலகத்தைக் குறித்து, "இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்று ஏற்கெனவே கூறிவிட்டார் (யோவான் 14:19). கர்த்தர் தம்மைத் தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரமே வெளிப்படுத்தின அந்த நாற்பது நாட்களின் காலபகுதியில், உலகமானது அவரைக் காணவில்லை; ஏனெனில் அவர் தம்முடைய உண்மையுள்ள அர்ப்பணம் பண்ணிக்கொண்டவர்களுக்கு மாத்திரமே தம்மை வெளிப்படுத்தினாரே ஒழிய மற்றவர்களுக்கல்ல. அவருடைய சீஷர்களுக்கு மிகவும் உதவியாய் இருந்திட்ட, கண்கள் காணத்தக்கதாக மாம்ச சரீரம் எடுத்துக் காட்சியளித்தல் காரியமானது, கர்த்தர் பரமேறிச் சென்றதோடு நின்றுவிட்டது. அவர்கள் இன்னமும் ஆவியில் ஜெநிப்பிக்கப்படாததினால் அவர்களுடைய விசுவாசத்திற்கு உதவியாகவும் மற்றும் தம்முடைய பரிசுத்தவான்களைத் தம்மோடுகூடச் சேர்த்துக்கொள்வதற்கும், உலகத்தை ஆசீர்வதிப்பதற்கும், அவர் மகா வல்லமையுடனும், மகா மகிமையுடனும் திரும்பி வருவது வரையிலும் அவர்களால் இனி ஆண்டவரைப்பார்க்க முடியாது என்பதை அவர்கள் புரிந்துக்கொள்ளத்தக்கதாக வழிநடத்தப்படுவதற்காகவும்தான், இப்படியான பரமேறுதலின் காட்சி அவசியமாய் இருந்தது.

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, இயேசு தம்முடைய இந்தப் பரமேறுதலைக் குறித்து முன்னமே கூறியுள்ளதை நமக்கு நினைப்பூட்டுகின்றது. அவர் முன்பிருந்த இடத்திற்குத் திரும்புவது என்பது, அவர் முன்பிருந்த ஸ்தலத்திற்குத் திரும்புவதாக மாத்திரம் புரிந்துக்கொள்ளப்படக் கூடாது; அவர் உலகத்திற்கான ஈடுபலியாகத்தக்கதாக, மாம்சம் ஆகும்படிக்கு, அவர் விட்டுவந்த ஆவிக்குரிய நிலைமைக்கும் திரும்புவதாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இயேசு தம்முடைய சீஷர்களை விட்டுப்பிரிந்து அவர்கள் பார்வையிலிருந்து மேகங்களுக்குள்ளாக மறைந்த போது, அவர் காட்சியளிக்கத்தக்கதாக உருவாக்கின சரீரம் மறைந்து போயிருக்க வேண்டும். இந்தச் சரீரத்தை அவர் பயன்படுத்தினதற்கான காரணம் சீஷர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவும், இயேசு நிரந்தரமாகவே போய்விட்டார் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், அவர்கள் இனிமேல் ஏதாகிலும் விதத்தில் கர்த்தர் காட்சியளித்துத் தோன்றுவார் என்பதை எதிர்ப்பார்க்க வேண்டாம் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதற்காகவும் ஆகும். இது ஒரு நோக்கத்துடன் கூடிய படிப்பினையாகும்.

## "நமது கர்த்தருடைய திரும்பிவருதலின் விதம்"

இயேசு மறைந்துபோன பிற்பாடு, தேவதூதர்கள் தோன்றி, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப்போஸ்தலர் 1:11) என்று கூறினதாக சுவிசேஷகர்களில் ஒருவர் பதிவு செய்துள்ளார். இவ்வார்த்தைகளினிமித்தமாக இயேசு தம்முடைய இரண்டாம் வருகையின்போது, மாம்சத்தில் வெளிப்படுவார் எனச் சிலர் நம்புகின்றனர்; ஆனால் இப்படியாகப் புரிந்துக்கொள்பவர்கள் மிகப்பெரிய தவறை செய்கின்றார்கள் என்பதே நம்முடைய புரிந்துக்கொள்ளுதலாய் இருக்கின்றது. உலகம் இனி இயேசுவைக் காண்பதில்லை; சபையானது, யுகத்தின் முடிவில் தங்களின் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைவது வரையிலும், விசுவாசத்தின் கண்களினால் மாத்திரமே அவரைக் காண்கின்றவர்களாய் இருப்பார்கள். "இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." (1 கொரிந்தியர் 15:50-52; 1 யோவான் 3:2).

கர்த்தர் போன விதத்திற்கு, தேவதூதர்கள் அழுத்தம் கொடுப்பதை நாம் கவனிக்க வேண்டும்; அந்த விதத்தில்தான் நமது கர்த்தருடைய இரண்டாம் வருகையும் காணப்படும். அவர் அமைதியாய், இரகசியமாய் உலகத்திற்குத் தெரியாமல் போய்விட்டார்; அவர் இரவில் திருடன் வருகிற விதத்திலேயே திரும்ப வருவார்; மனுஷ குமாரனுடைய பிரசன்னத்திற்கான/ வந்திருத்தலுக்கான அடையாளங்களை உணரத்தக்கதாக, புரிந்துக்கொள்ளுதலின் கண்களைத் திறக்கப் பெற்றவர்களைத் தவிர, மற்றபடி எவரும் அவருடைய இரண்டாம் வருகையை அறிந்திருப்பதில்லை. இப்படியாகப் புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்றவர்கள், அவருடைய உண்மையுள்ள பரிசுத்தவான்களாகிய சிலர் மாத்திரமே ஆவர். ஆகையால்தான் தம்முடைய இரண்டாம் வருகையின்போது, நோவாவின் நாட்களில் காணப்பட்டது போன்று காணப்படும் என்றார்; அதாவது அவருடைய வந்திருத்தலை அறிந்துக்கொள்ளாமல், மனுக்குலமானது புசித்தும், குடித்தும், விதைத்தும், பெண்கொண்டும், பெண் கொடுத்தும் காணப்படும் என்றார் (மத்தேயு 24:37-39).

---

**R1415**

# “நமது கர்த்தருடைய பரமேறுதல்”

## அப்போஸ்தலர் 1:1-12.

“இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது.”—அப்போஸ்தலர் 1:9

**வசனங்கள்** 1, 2. அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தை எழுதினவர் லூக்கா ஆவார்; இதற்கு முன்பு இவர் எழுதின கட்டுரையானது, லூக்கா எழுதின சுவிசேஷம் என்று அழைக்கப்படுகின்றது.

**வசனம்** 3. லூக்கா 24-ஆம் அதிகாரத்தில், நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த நாற்பது நாட்களுடைய சம்பவங்கள், அநேகம் பதிவு செய்யப் பெற்றிருந்தாலும் அனைத்தும் சொல்லப்படவில்லை. அப்போஸ்தலர் 1-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களானது, சுவிசேஷ யுகத்தினுடைய ஆரம்ப வேலையை விவரிக்கிறதாயும் இருந்து, அந்த நாற்பது நாட்களளவும், நமது ஆண்டவரினால் கொடுக்கப்பட்டப் போதனைகள், “தேவனுடைய இராஜ்யத்துக்குரியவைகள்” என்று நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

லூக்கா அவர்கள் விரிவான விவரங்களை நமக்குக் கொடுக்கவில்லை; எனினும் சீஷர்களுக்கு அதிகமான அறிவுரைகள் தேவைப்பட்டிருக்குமென நாம் எண்ணுகின்றோம்; ஏனெனில் மேசியாவின் கீழ் இஸ்ரயேல், பூமியிலேயே பிரதான தேசமாக உயர்த்தப்படும் (இந்தத் தேசத்தை உலகத்திற்குத் தம்முடைய பிரமாணங்களை அறிவிக்கிற கருவியாக பயன்படுத்தி, இவ்விதமாக பூமியின் குடிகள் அனைத்தும், ஆபிரகாமின் சந்ததிக்குள்ளாக ஆசீர்வதிக்கப்படும்) என்று யூதர்கள் அனைவரும் கொண்டிருந்த பொதுவான நம்பிக்கையை மாத்திரம் சீஷர்கள் கொண்டிராமல், இன்னுமாகக் கர்த்தருடைய மரணத்திற்கு முன்னதாக, கர்த்தர் பண்ணின விசேஷித்த வாக்குத்தத்தங்களையும் மனதில் கொண்டவர்களாய் இருந்தனர்; அதாவது அவர்கள், அவருடைய இராஜ்யத்தில், இஸ்ரயேலின் சிங்காசனங்களில் உட்காருவார்கள் என்று கர்த்தர் கொடுத்திட்ட வாக்குத்தத்தங்களையும் மனதில் கொண்டவர்களாய் இருந்தனர். சீஷர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரர்களாகக் காணப்படத்தக்கதாக, தங்களுடைய தொழில்களைக் கைவிட்டு, சக மனிதர்களுடைய ஏளனங்களைச் சகிக்கும் அளவுக்கு, இராஜ்யத்தைப் பற்றியதான இந்த வாக்குத்தத்தங்கள், அவர்களுடைய மனதில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியதாய் இருந்தது. ஆண்டவரும் அவர்களுடைய இந்த நம்பிக்கைகளையும், விருப்பங்களையும் உற்சாகமூட்டவே செய்தார். அந்த இராஜ்யத்தில் எவன் பெரியவனாய் இருந்து, அவருடைய வலது, இடது பக்கத்தில் இருப்பான் என்பது தொடர்புடைய அவர்களுடைய வாக்குவாதங்களுக்கு எதிராக மாத்திரமே, அவருடைய கடிந்துக்கொள்ளுதலும் காணப்பட்டது (மத்தேயு 18:1-4; மாற்கு 9:33-37; லூக்கா 22:24-26).

கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டபோது, சீஷர்களுடைய இந்த நம்பிக்கைகளும், எதிர்ப்பார்ப்புகளும் நொறுங்கிபோயின. ஆகவே தங்கள் கர்த்தர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்று அவர்கள் உணர்ந்துக்கொண்ட பிற்பாடு, அவர்களுடைய நினைவுகளும், கேள்விகளும் சரி, அவருடைய போதனைகளும் சரி, தேவனுடைய இராஜ்யத்துக்கடுத்தவைகளாகவே இருந்திருக்கும். இஸ்ரயேல் தேசமானது, அவருடைய இராஜ்யத்தில் உடன்சுதந்தரர் ஆகுவதிலிருந்து, புறக்கணிக்கப்பட்டு விட்டனர் என்று சீஷர்களுக்கு விளக்குவது அவசியமாய் இருந்தது, ஏனெனில் இஸ்ரயேல் தேசத்தார் சுபாவத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாராக இருந்திட்டாலும், அவர்களிடம் ஆபிரகாமுக்கிருந்த விசுவாசம் இல்லை; ஆகையால் அவர்கள் ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தின்படி, கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களாக அங்கீகரிக்கப்பட முடியாது. கொஞ்சமாய் (கிட்டத்தட்ட ஐந்நூறு சகோதர சகோதரிகளாக) இருந்த உண்மையுள்ள சீஷர்களிடம், அவர்கள் இஸ்ரயேல் தேசத்தாரோடு சேர்ந்து புறக்கணிக்கப்படவில்லை என்றும், முன் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது வரையிலும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் தாமதிக்க வேண்டியதாய் இருப்பினும், அவர்கள் இன்னமும் இராஜ்யத்தின் சுதந்தரர்களாகவே காணப்படுகின்றனர் என்றும் தெரிவிப்பது அவசியமாய் இருந்தது. அவர்கள் கனத்திற்கும், இராஜ்யத்தினுடைய வல்லமையின் மகிமைக்கும் உயர்த்தப்படுவது தாமதமாக நடைபெறும் என்றாலும், அவர்கள் வேகமாகவே பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டு, தேவனுடைய குமாரர்களெனவும், வருங்கால கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களெனவுமான ஆவியின் ஆசீர்வாதங்கள் அருளப்படுவார்கள்.

ஆகையால், நாம் 4, 5-ஆம் **வசனங்களை** வாசிக்கிறபடி, அவர்களுக்கு யோவான் ஸ்நானனாலும், தம்மாலும் ஏற்கெனவே கூறப்பட்டவைகளைச் சுட்டிக்காட்டி, அவர்கள் எருசலேமிலேயே தங்கியிருந்து, புத்திரர்களாகவும், சுதந்தரர்களாகவும், தேவனுடைய ஆவியினால் ஜெனிப்பிக்கப்படும்படிக்கு எதிர்ப்பார்த்து, காத்திருக்கும்படி, அவர்களுக்கு அறிவுரைக் கூறினார்.

**வசனங்கள் 6-8.** "சில நாளுக்குள்ளாக" அவர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் கூட, வருங்கால உடன்சுதந்தரர்களாக தெய்வீக அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்வார்கள் என்று உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு, அவர்களுடைய இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்த கேள்வியைக் கேட்டார்கள்; அதாவது இராஜ்யத்தின் காரியம் என்ன? எங்களுடைய அங்கீகரிக்கப்படுதலோடுகூட, இராஜ்யமும் ஒரே வேளையில் வருமா? இராஜ்யமும் கொஞ்ச நாளுக்குள்ளாக வந்துவிடுமா? என்ற விதத்தில் கேள்வி கேட்டார்கள்.

ஆண்டவருடைய பதில் கடிந்துகொள்ளுதலாகவோ அல்லது அவர்களது எதிர்ப்பார்ப்பிற்கு எதிர்மாறானதாகவோ அல்லது அவர்களது எதிர்ப்பார்ப்பினைத் திருத்தும் வண்ணமாகவோ காணப்படவில்லை. தேவனுடைய இராஜ்யம் முழுமையாய் ஸ்தாபிக்கப்படுவதற்குரிய காலங்களும், வேளைகளும், பிதாவுக்கு அடுத்த காரியம் என்றும், அக்காரியங்களை அவர்கள் அப்போது அறிந்துக்கொள்வது அவர்களுக்கு ஏற்றதாய் இராது என்றும், ஆனால் அவர்கள் மீது பரிசுத்த ஆவி வரும்போது, அதாவது இனி வேலைக்காரர்கள் என்றில்லாமல், அவர்களைக் குமாரர்களென முத்திரிக்கும் புத்திர சுவிகாரத்தின் ஆவியை அவர்கள் பெற்றுக்கொள்ளும்போது, அவர்கள் தேவனுடைய ஆழங்களைப் புரிந்துக்கொள்ளும் பெலனை அடைந்து, (படிப்படியாக) சகல சத்தியத்திற்குள்ளாகவும் நடத்தப்பட்டு, வரப்போகிற காரியங்களைக் குறித்து அறிவிக்கப்பெறுவார்கள் என்று மாத்திரமே கூறினார்; இன்னுமாக அவர்கள் உலகமெங்கும் அவருக்குச் சாட்சிகளாகக் காணப்பட வேண்டும்; அதாவது, அவர் அவர்களுக்குப் போதித்த சத்தியத்திற்குச் சாட்சிகளாகக் காணப்பட வேண்டும் என்றும் கூறினார்; அதாவது இயேசு உலகத்தின் இராஜாவாக இருக்கப் போகின்றார் என்றும், பிதாவாகிய தேவனுடைய அபிஷேகிக்கப்பட்டப் பிரதிநிதியாகக் காணப்படப் போகின்றார் என்றும், அவருடைய இராஜ்யத்தின் கீழ், சகல ஜாதிகளும், இராஜ்யங்களும் பணிவிடை செய்து, அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கும் என்றுமுள்ள சத்தியங்களுக்குச் சாட்சிப் பகருபவர்களாக அவர்கள் காணப்பட வேண்டும். உலகத்தை ஆசீர்வதிப்பதற்கான அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் தொடர்புடைய, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்துமே உண்மை என்று அவர்கள் சாட்சிப் பகர வேண்டும்; இன்னுமாக இம்மாபெரும் காரியங்கள் நிறைவேற்றப்படுவதற்கு, நமது கர்த்தருடைய மரணமே வழிவகையாக இருக்கின்றது

என்றும், மனுக்குலத்தின் பாவங்கள் மற்றும் பாவத்திற்கான தண்டனைகள் இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னதாகவும், பாவிகள் ஆசீர்வதிக்கப்பட்டு, தெய்வீகத் தொடர்பிற்கும், தயவிற்கும், சீர்ப்பொருந்தப்படுவதற்கு முன்னதாகவும், மேசியா உலகத்தின் பாவங்களுக்காக மரிப்பது அவசியமானது என்றுமுள்ள சத்தியங்களை அவர்கள் சாட்சிப்பகர வேண்டும். "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலும் செய்யப்படுவதாக" என ஆண்டவர் கற்பித்துத் தந்த பிரகாரமாய், தொடர்ந்து ஜெபிப்பதற்கு விசுவாசிகளுக்கு அவர்கள் கூறவேண்டியவர்களாய்க் காணப்பட்டனர். அவருடைய வார்த்தைகளோ (அ) வாக்குத்தத்தங்களோ, எவைகளும் பொய்யானவைகள் அல்ல என்றும், வாக்களிக்கப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும் "ஏற்றவேளையில்" நிறைவேற்றப்படும் என்றும் அவர்கள் சாட்சிப்பகர வேண்டும்.

**வசனங்கள் 9-12.** நமது கர்த்தருடைய பரமேறுதலானது, எவரும் பார்க்காமலேயே நடைப்பெற்றிருக்கலாம்; ஏனெனில் அவர் உயிர்த்தெழுந்தது முதல், அவர் ஓர் ஆவிக்குரிய ஜீவியாகக் காணப்படுகின்றார்; மற்றும் "ஆவிக்கு மாம்சமும் எலும்பும் கிடையாது." அவர் மாம்சத்தில் கொலையுண்டது உண்மைதான், ஆனால் அவர் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார். அவர் ஆவியில் பிறந்திட்டார்; மரித்தோரிலிருந்து முதல் பிறந்தவரானார். மேலும் மாம்சத்தில் பிறந்தது மாம்சத்திற்குரியதாகவே காணப்படுவது போலவே, ஆவியில் பிறந்ததும் ஆவிக்குரியதாகவே காணப்படும்; மற்றும் ஆவியில் பிறந்தது, காற்றைப்போல் மனிதனுடைய கண்களுக்குத் தெரியாமலே வரும், போகும் (யோவான் 3:8). ஆனால் ஓர் ஆவிக்குரிய ஜீவியாக உயிர்த்தெழுந்திட்ட நமது கர்த்தர், தம்முடைய உயிர்த்தெழுதலை நிரூபிக்கும்படியாக பல்வேறு சரீரங்களை எடுத்து, பல்வேறு தோற்றங்களில் (சிலசமயம் சிலுவையில் அறையப்பட்டது போன்ற சரீரத் தோற்றத்திலும்) காட்சியளித்துத் தோன்றினார். ஆகவே அவர் தாம் உயிர்த்தெழுந்துள்ளார் என்ற உண்மையைத் தம்முடைய சீஷர்களுக்கு நிரூபிக்கத்தக்கதாக, அவர் பரமேறும் போதும், தம்மை ஒரு மாம்ச சரீரத்தில் அவர்களுக்குக் காண்பித்தார்.

கர்த்தர் பரமேறுவதற்கு முன்னதாக, நாற்பது நாட்களாக சீஷர்களோடு கூடவே காணப்பட்டார்; ஆனாலும் அவர்களுக்கு ஏழுமுறை மாத்திரமே கண்களுக்குப் புலப்பட்டார் என்றும், அதுவும் கொஞ்சம் நேரம்தான் கண்களுக்குப் புலப்பட்டார் என்றும், உலகத்தின் காரியத்தில் அவர் ஏற்கெனவே கூறின பிரகாரம், "இன்னும் கொஞ்சம் காலத்திலே உலகம் என்னைக் காணாது" என்பதே நடந்தது என்றுமுள்ளவைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு அவர் காட்சியளிக்கத் தோன்றின விதம் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல், "அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்... பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்" என்று விவரிக்கின்றார் (1 கொரிந்தியர் 15:6, 8). மாம்ச தோற்றத்தில், மரியாளுக்குத் தோட்டக்காரன்போல் தோன்றினவரும் இயேசுதான்; எம்மாவுக்கு இரண்டு சீஷர்கள் போய்க்கொண்டிருக்கையில்கூட அந்நியன்போல் தோன்றி வந்தவரும் இயேசுதான்; கதவுகள் பூட்டப்பட்டிருக்க, சீஷர்கள் நடுவில், ஆணி மற்றும் ஈட்டி ஊடுருவின சரீரத்தை, தம்முடைய உயிர்த்தெழுதலுக்கு நிரூபணமாக எடுத்துக்கொண்டு காட்சியளித்துத் தோன்றினவரும் இயேசுதான்; தாம் இப்பொழுது மிகவும் உயர்த்தப்பட்டுள்ளார் என்பதையும், மாம்சம் மற்றும் எலும்புகளுள்ள சரீரத்திலிருந்து வேறுபட்ட சரீரம் கொண்டுள்ளார் என்பதையும் அவர்களுக்கு காண்பிக்கத்தக்கதாக, அவர்கள் கண்கள் முன்னதாகவே மாம்சத்தையும், எலும்புகளையும் காற்றோடே கலக்கப்பண்ணி, அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து போனவரும் இயேசுதான். இனி ஒருபோதும் மாம்சமும் எலும்பும் கொண்டிராதவருமான இதே இயேசுதான், உயிர்ப்பிக்கிற ஆவியாக, தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்குக் காட்சியளித்தார்; ஆனாலும் இத்தருணத்திலோ, அவர் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தை, மாம்ச சரீரத்தைக்கொண்டு திரையிடாமல், ஆவிக்குரிய ஜீவியினுடைய மகிமையை, க்ஷண நேரம் காண்பித்தார்; இதனால் சவுல், கீழே விழுந்து, தன்னுடைய பார்வையை இழந்தவனானார் (அப்போஸ்தலர் 26:13, 14; 9:8). இவரே மரித்தோரிலிருந்து, ஓர் ஆவிக்குரிய ஜீவியாக எழுப்பப்பட்ட மகிமையடைந்த இயேசு ஆவார்; இராஜ்யத்திற்கடுத்த காரியங்களை இப்போது சீஷர்களுக்குப் போதிக்கத்தக்கதாக, அந்தத் தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தினுடைய மகிமைகளை, மாம்ச சரீரத்தின் கீழாக சீஷர்களிடமிருந்து திரையிட்டு மறைத்தார் (1 கொரிந்தியர் 15:40-44). ஆனால் அவர் தேவதூதர்கள் அறிவித்தப் பிரகாரம் மீண்டுமாக வருவார்.

அநேகர் அப்போஸ்தலர் 1:11-ஆம் வசனத்தின் காரியங்களினால் இடறல் அடைகின்றனர்; அதுவும் இரண்டாம் அட்வண்டிஸ்ட் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் நமது அருமையான சகோதரர்களே விசேஷமாய் இடறிப்போய்விடுகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் இவ்வசனம் ‘Ye shall see him come in like manner as ye have seen him go” என்று இருப்பதாக எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் வசனம் இப்படியாக இருப்பதில்லை. அன்று அவரைப் பார்த்திட்ட சீஷர்கள் எப்போதோ இறந்து போய்விட்டனர், அன்று இருந்த மற்றவர்களும் இறந்து போய்விட்டனர், ஆகையால் அவர் திரும்பி வரும்போது, இவர்களால் அவரைப்பார்க்க முடியாது. தேவதூதர்கள் அவர் வருவதை **எவர்கள்** பார்க்கப் போகின்றார்கள் என்று சொல்லவில்லை; மாறாக அவர் **எந்த விதத்தில்** போனதை அவர்கள் கண்டார்களோ, அந்த விதத்திலேயே அவர் திரும்ப வருவார் என்றுதான் தேவதூதர்கள் சொன்னார்கள்.

அவர் போன விதம் என்ன? என்று இப்போது பார்க்கலாம். அவர் பரமேறும் விதத்தில் குறிப்பிடத்தக்கதாய் என்ன இருக்கின்றது? இது எதுவாக இருப்பினும், இந்தக் குறிப்பிடத்தக்கதான விஷயமே, அவர் திரும்பி வரும்போதும் குறிப்பிடத்தக்கதாய்க் காணப்படும். அவர் உலகத்தால் பார்க்கப்படாத விதத்தில், உலகத்தால் அறியப்படாத விதத்தில், உலகத்தால் நம்பப்படாத வண்ணம், அமைதலான விதத்தில் பரமேறிச் சென்றுவிட்டார் என்பதை நாம் கவனிக்கின்றோம். எனினும் அவர் பரமேறின காரியம், சகோதரர்களால் அறியப்பட்ட காரியமே; மேலும் அவர் பரமேறின காரியமானது சகோதர சகோதரிகளால் பார்க்கப்பட்டது மற்றும் நம்பவும்பட்டது. ஆகையால் அவரது இரண்டாம் வருகையும் திருடன் வருகிற விதமாக இரகசியமாக, எவ்விதமான வெளியரங்கமாக வெளிப்படுத்துதல்கள் இல்லாமல், உலகத்தால் அறியப்படாமல், ஆனால் இருளில் இல்லாதவர்களாகவும், வெளிச்சத்தின் பிள்ளைகளென வெளிச்சத்தில் நடக்கிறவர்களாகவும் இருக்கும் சகோதர சகோதரிகளினால் மாத்திரமே அறியப்பட்டும் இருக்கும் (1 தெசலோனிக்கேயர் 5:1-5).

**ஆமென்!**

---

"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்."-வெளிப்படுத்தல் 5:12-13.